தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாம் கூட்டத்தொடர்

1978, ஜனவரி, 4, 5, 6, 7, 9, 10-ஆம் நாட்கள்

(தொகுதி 11—எண்கள் 1 முதல் 6 வரை)

©
தமிழ் நாடு அரசு
1979

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 1]

122105

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆருவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாம் கூட்டத்தொடர்.

1978, ஜனவரி 4, 5, 6, 7,9, 10 ஆம் நாட்கள்

(தொகுதி 11---எண்கள் 1 முதல் 6 வரை)
புதன்கிழமை, 1978 ஜனவரி 4.

உள்ளடக்கம்.

	பக்கங்கள்.
(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்	i—vi
(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	vi
(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்)	viii—xvi
1. அரசினர் தீர்மானம்—	
விதி 22-ஐத் தளர்த்தல்	1
2. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்	1—132
3. ஒழுங்குப் பிரச்சினை—	
திரு. க. சுப்பு 31—12—1977-ம் நாளன்று எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பு	132—134

வியாழக்கிழமை, 1978, ஜனவரி 5—தொடர்ச்சி

பக்கங்கள்.

5. அரசினர் தனித் தீர்மானம்—

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றை செலுத்த அரசு உத்திரவாத வரையறையை உயர்த்துவது குறித்து .. .. 467—471

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 472

வெள்ளிக்கிழமை, 1978 ஜனவரி 6.

1. அரசினர் தீர்மானம்—

(அ) விதி 22-ஐத் தளர்த்தல் 473

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் .. 597

2. உரிமைப் பிரச்னைகள்—

(அ) மாண்புமிகு உணவு அமைச்சர் பேரவைக்கு தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது குறித்து .. .. .. 473—478

(ஆ) முரசொலி நாளிதழில் ஓர் உறுப்பினரின் பேச்சை தவறாக வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து .. .. 478—481

3. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல் .. 481

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கேளிக்கைவரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு .. 597

(இ) பேரவை அலுவல் குறித்து 647

4. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி 482—59[illegible]

வெள்ளிக்கிழமை, 1978, ஜனவரி 6—தொடர்ச்சி

பக்கங்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு—

தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு 597

6. தனியார் அலுவல்கள்—

(அ) சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு தனியார் மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு 598

(2) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு ஒழுங்கு முறை) ரத்து செய்யும் சட்ட முன்வடிவு 598

(ஆ) தனித் தீர்மானங்கள்—

மாநிலங்களுக்குக் கூடுதல் சுயாட்சி உரிமை. .. 599—647

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 648—649

சனிக்கிழமை 1978, ஜனவரி 7.

1. அரசினர் தீர்மானம்—

விதி 22-ஐத் தளர்த்தல் 651

2. உடுக்குறியிடாத வினாக்கள் .. .. .. 651—668

3. உரிமைப் பிரச்னைகள்—

(அ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை பேரவையில் வைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் பேரவைக்குத் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது குறித்து. .. .. .. 668—671, 710—715

(ஆ) முரசொலி நாளேடு, திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசியதை திரித்து வெளியிட்டது குறித்து .. .. 671—673

புதன்கிழமை 1978, ஜனவரி 4—தொடர்ச்சி

பக்கங்கள்

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) 1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/77) .. .. .. 134—180

(ஆ) 1977 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/77) 181—182

(இ) 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/77) .. .. 183—20

(ஈ) 1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/77) .. .. 203—204

(உ) 1977 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/77) .. .. .. 205—233

(ஊ) 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/77) .. .. 233—234

(எ) 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/77) .. .. .. 234—235

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 236

வியாழக்கிழமை, 1978 ஜனவரி 5.

1. அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதி 22 ஐத் தளர்த்தல் 237

(ஆ) விதி 23 ஐத் தளர்த்தல் 238

வியாழக்கிழமை, 1978, ஜனவரி 5—தொடர்ச்சி.

பக்கங்கள்

2. அறிவிப்புகள்—

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல் .. .. .. 237—238

(ஆ) பேரவை அலுவல் குறித்து 321

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு .. 465

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் குறித்து விவாதம் (தொடர்ச்சி) .. .. 238—321
322—381

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு புயல், வெள்ள பாதிப்புப் பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண, சட்ட முன்வடிவு 381

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/78) .. 382—421

(இ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 2/78) .. 421—444

(ஈ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/78) .. 444—465

(உ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/78) .. .. 466—467

சனிக்கிழமை, 1978, ஜனவரி 7—தொடர்ச்சி

பக்கங்கள்.

(இ) அலை ஓசை நாளிதழ் திரு. க. சுப்பு அவர்கள் பேச்சை திரித்து தவறான தலைப்பு கொடுத்து வெளியிட்டது குறித்து .. 673—674

(ஈ) அண்ணா நாளிதழ் பேரவை நடவடிக்கைகளை தவறான தலைப்பு கொடுத்து, திரித்து வெளியிட்டது குறித்து 674

4. தன்னிலை விளக்கம்—

திரு. க. சுப்பு தன் உரையில் செய்யப்பட வேண்டிய திருத்தம் குறித்து அளித்த விளக்கம் 671

5. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி .. .. 675—709
715—868

6. அறிவிப்பு—

உறுப்பினர்கள் ரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றி 709

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 868

திங்கட்கிழமை, 1978 ஜனவரி 9.

1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 871—908

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 908—931

2. அறிவிப்புகள்—

(அ) மேலவையில் நிறைவேற்றப் பெற்ற சட்ட முன்வடிவுகள் பற்றி மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி 931

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1036

திங்கட்கிழமை, 1978, ஜனவரி 9—தொடர்ச்சி

பக்கங்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாக கூறப்படுவது குறித்து. 932—941

(ஆ) அவசர கால நிலையின் போது கட்டாய ஓய்வளிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் திரும்ப வேலைக்கு அமர்த்தப்படாததால் அவர்கள் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பநிலை குறித்து .. 941—947

4. அமைச்சரின் அறிக்கை—

ஒரு துணை வினாவிற்கு அளித்த விடையை திருத்தி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை .. .. 947—948

5. அரசினர் தீர்மானம்—

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் 948

6. கவன ஈர்ப்பு—

(அ) பொதுப்பணித் துறையிலிருந்து நீக்கப்பட்ட டிப்ளமா இளம் பொறியாளரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது குறித்து .. .. 948—955

(ஆ) துறிஞ்சாபுரம் நிலவள வங்கி ஆயில் இன்ஜின் வாங்கக் கொடுத்த கடனை வாங்க மறுத்த விவசாயிகளின் கடனை ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து. 956—958

(இ) இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கல் ஊராட்சி மன்றம் வீட்டுவரியை திடீரென உயர்த்தியதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து .. .. 959—961

(ஈ) வாசுதேவ நல்லூர் தொகுதியில் சில கிராமங்களில் நோயுற்ற கறவை மாடுகளுக்கு தக்க சமயத்தில் ஊசி போட மருந்து இல்லாததால் பல மாடுகள் இறந்துவிட்டதால் கறவை மாடுகள் கிடைக்க ஏற்பாடு செய்வது குறித்து. 961—964

(உ) நெல்லிக்குப்பம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் வட்டங்களில் புகையான் நோயால் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பும் விவசாயிகளின் அவதியும் குறித்து .. 964—967

திங்கட்கிழமை, 1978, ஜனவரி 9—தொடர்ச்சி

பக்கங்கள்.

7. ஒழுங்குப் பிரச்னை—

ஓர் உறுப்பினருக்கு உரிமைப் பிரச்னை எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டது குறித்து .. 968—973

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 974

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1036

(இ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டடங்கள் முறைப்படுத்துதல், நிலத்தை பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/77) .. 1036—1047

(ஈ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நிலநீர் (கட்டுப்பாடு முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/77) .. 1049—1050

(உ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/78) .. .. 1051—1078

9. 1977-78-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம் .. .. 974—1024

10. 1977-78 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு .. .. .. 1025—1035

11. ஒரு நிகழ்ச்சி குறித்து உரிமை பிரச்னையை அந்நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குப் பிறகும் அனுமதிப்பது குறித்து .. 1047—1049

திங்கட்கிழமை, 1978, ஜனவரி 9—தொடர்ச்சி:

பக்கங்கள்.

12. நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து குறுகிய கால விவாதம்—அன்றாட உபயோகப் பொருள்கள் விலையேற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுப்பது குறித்து .. .. 1078—1112

13. அரைமணி நேர விவாதம்—

(அ) தெளிப்பு முறை பாசனத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து. 1112—1121

(ஆ) நியாயவிலைக் கடைகளில் மட்டரக அரிசியே தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருவது குறித்தும், குடும்பப் பங்கிடு அட்டைகளுக்கு விநியோகம் செய்யப்படும் அரிசியின் விலை அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக உள்ளது குறித்தும் .. .. 1121—1137

14. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 1137

செவ்வாய்க்கிழமை, 1978 ஜனவரி 10.

1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1145—1173

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 1173—1228

2. தகவல் கோரல்—

(அ) போக்குவரத்துத் துறை அளித்த பாஸில் உள்ள தேதிக்கும் செயலாளர் கொடுத்துள்ள அடையாள அட்டையில் கொடுத்துள்ள தேதிக்கும் உள்ள முரண்பாடு குறித்து 1229

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து .. 1229—1232

(இ) ரத்து செய்யப்பட்ட ரயில்வே கூப்பன்களை திரும்பத் தராதது பற்றி .. 1232

செவ்வாய்க்கிழமை, 1978, ஜனவரி 10—தொடர்ச்சி.

பக்கங்கள்.

(ஈ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்க சுற்றுப்பயணம் மேற்கொள்ள விருப்பது பற்றி வந்துள்ள பத்திரிகை செய்தி குறித்து .. .. .. [illegible]

(உ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து .. .. 1236—1237

(ஊ) சித்தனுபுரம் கிராமத்திலே அரிசனங்கள் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை பற்றிய தீர்மானம் குறித்து .. 1260—[illegible]

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) 'யார் எவர்' என்ற வெளியீட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தவருகக் குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து .. .. 1233—1234

(ஆ) 'யார் எவர்' என்ற வெளியீட்டில் ஓர் உறுப்பினர் தந்தையின் பெயரை ஜாதிப் பெயர் சேர்த்து குறிப்பிட்டிருப்பது குறித்து 1235

(இ) பயணச் சீட்டுடன் அடையாளச் சீட்டையும் காண்பிக்க வேண்டியிருப்பது குறித்து .. .. 1235—1236

(ஈ) ஓர் உறுப்பினர் தமது மனைவியையும் உடன் அழைத்துச் செல்ல இப்போது வழங்கப் பட்டிருக்கும் பாஸ் செல்லாது என ரயில்வே அதிகாரிகள் கூறுவது குறித்து. 1237

4. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) 'அலை ஓசை' நாளிதழ், அவை நிகழ்ச்சிகளைத் தவருக வெளியிட்டுள்ளது குறித்து 1237

(ஆ) பொதுப் பணித் துறை அமைச்சர் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை .. .. 1238—1239

செவ்வாய்க்கிழமை, 1978, ஜனவரி 10—தொடர்ச்சி.

பக்கங்கள்.

(இ) 'அண்ணா நாளிதழ்' பேரவை நிகழ்ச்சிகளைத் தவருக வெளியிட்டது குறித்து 1239—1241

(ஈ) அலை ஓசை நாளிதழில் ஓர் உறுப்பினர் பேசிய பகுதியை வேண்டுமென்றே வெளியிடாதது குறித்து .. ..1242—1243

. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர்கள் உண்ணுவிரதம் இருப்பது குறித்து .. ..1243—1248

(ஆ) தியாகராச சாலை அரசினர் மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணுவிரதம் குறித்து .. ..1250—1254

(இ) வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து .. ..1254—1259

அலை ஓசை நாளேடு ஓர் உறுப்பினர் பேசியதைத் தவருக வெளியிட்டது குறித்து வருத்தம் தெரிவித்து திருத்தம் வெளியிட்டது குறித்த விளக்கம் ..1248—1250

அரசினர் தீர்மானம்—

(அ) விதி 41 (3) ஐத் தளர்த்தல் 1259

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து ..1361—1362

கவன ஈர்ப்பு—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் ஆலை உரிமையாளர்கள் புதிய லெவி முறையின் காரணமாக நெல் அரைக்கத் தயங்குவதால் பொதுமக்களின் பாதிப்பு ..1264—1268

செவ்வாய்க்கிழமை, 1978, ஜனவரி 10—தொடர்ச்சி.

பக்கங்கள்.

(ஆ) பூம்புகார் தொகுதி செம்பனார் கோவில் ஒன்றியத்தின் துவக்கப் பள்ளிகளுக்கு மதிய உணவு பங்குத் தொகை வழங்காததால் மாணவர்கள் பட்டினி கிடப்பது குறித்து .. .. ..1266—1268

(இ) டி. வி. எஸ். லூகாஸ் கம்பெனி நிர்வாகத்திற்கும் தொழிலாளர் தலைவருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டை நிர்வாகம் மீறியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து .. .. ..1268—1273

(ஈ) தியாகதுர்கம் யூனியன் பகுதியில் பல கிராமங்களில் மக்கள் ஆற்றுப் பாலங்கள் இன்றி அவதியுறுவதால், துரித நடவடிக்கை எடுப்பது குறித்து .. ..1273—1275

(உ) உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காததும், அரசின் மானியத்தை கல்லூரி நிர்வாகம் தவறாகப் பயன்படுத்தியதும் குறித்து .. .. ..1276—1278

(ஊ) புத்தூர் பிஷப் ஹிபர் உயர்நிலைப் பள்ளி தொடர்ந்து மூடப்பட்டதனால் பள்ளி மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது குறித்து .. .. ..1279—1280

(எ) யூனியன் கார்பைட் கம்பெனி தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து ..1280—1284

(ஏ) சிவகங்கை நகரில் குழாய் பைப்புகள் உடைந்து தண்ணீர் தேங்கி சுகாதாரக் கேடு விளைவிப்பதாக இருப்பதும் நடவடிக்கை எடுக்கத் தவறியதும் குறித்து 1284—1285

(ஐ) சென்னை மாநகராட்சி மின்சார ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்கக் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் துவக்கி இருப்பது குறித்து .. .. ..1285—1288

(ஒ) புகளூர் சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தின் பிடிவாதத்தினால் விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்திருக்கும் நிலை குறித்து .. ..1288—1291

செவ்வாய்க்கிழமை, 1978, ஜனவரி 10—தொடர்ச்சி

பக்கங்கள்.

9. அறிக்கை அளித்தல்—

அரசினர் உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல் 1291

10. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) 1978 ஆம் ஆண்டு, சென்னை பெருநகர குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் சட்ட முன்வடிவு 1292

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/78) 1292—1328

(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/78) .. ..1328—1355

11. பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள்—

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின் கீழ் திருத்தம் செய்வது பற்றி வெளியாகிய அறிவிப்பில் செய்யப்பட வேண்டிய திருத்தம் குறித்து .. ..1355—1357

(ஆ) 1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி பணி விதிகளைச் செய்வதுபற்றி வெளியான அறிவிப்பில் செய்ய வேண்டிய திருத்தம் குறித்து .. .. ..1358—1360

12. அறிவிப்பு—

மேலவையில் நிறைவேற்றப் பெற்ற சட்ட முன்வடிவுகள் குறித்து .. ..1360—1361

13. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..1362—1365

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப்பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள் நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றை தெளிவாக்கும்.

எல்லா சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'உள்ளாட்சி (கள்)', ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

அ	..	அறிக்கை
அறிவி.	..	அறிவிப்பு
அ. வி.	..	அரைமணி விவாதம்
கு. வி.	..	குறுகிய கால விவாதம்

பொ. வி.	..	பொது விவாதம்
ஆ. உ.	..	ஆளுநர் உரை
உ. பி.	..	உரிமைப் பிரச்சினை
ஒ. பி.	..	ஒழுங்குப் பிரச்சினை
க. ஈ.	..	கவன ஈர்ப்பு
க. ஈ. அ.	..	கவன ஈர்ப்பு அறிக்கை
ச. அ. நி.	..	சட்ட முன்வடிவின் அறிமுக நிலை
ச. ஆ. நி.	..	சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை— இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம். 2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வ/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
ச. பிரி. ஆ.	..	சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல்.
ச. பே.	..	சட்டமன்றப் பேரவை
ச. மே.	..	சட்டமன்ற மேலவை
த. கோ.	..	தகவல் கோரல்
த. வி.	..	தன்னிலை விளக்கம்
தீ.	..	தீர்மானம்
உ. தீ.	..	உரிமைத் தீர்மானம்.
ஒ. தீ.	..	ஒத்திவைப்புத் தீர்மானம்
த. தீ.	..	தனித் தீர்மானம்
து. மா. கோ.	..	துணை மானியக் கோரிக்கை
மி. மா. கோ.	..	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே. அ.	..	பேரவையின் அலுவல்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நலவாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்—கிராமதானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்—கனிவளம், உலகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. **மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்டமன்றம்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. **மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU.

Thiru Prabhudas Patwari.

Members of the Council of Ministers.

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief ...inister).—Public, General Administration, Matters relating to ...dian Civil Service and Indian Administrative Service Officers, ...strict Revenue Officers, Deputy Collectors, Police, Elections, ...assport, Prohibition, Health, Medicine, Religious Endowments, ...vention of Corruption, Industries, Bhoodan & Gramdan, Ex-...vicemen, Mines & Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (Minister for ...ance).—Finance, Planning, Commercial Taxes and Excise, ...venue and Legislature.

3 THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for ...c Works).—Public Works, Minor Irrigation including Special ...or Irrigation Programme Works, Iron & Steel Control and ...ricity.

. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR ...ister for Law).—Law, Courts, Prisons, Legislation on Weights ...Measures, Legislation on money lending, Legislation on Chits ...Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (Minister for ...od) :—Food, Food Production, Co-operation, Fisheries, Registra-...n, Forests including Cinchona, Youth Service Corps and Price ...ntrol.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (Minister for ...formation and Tourism) :—Information and Publicity, Film ...echnology, Tourism and Tourism Development Corporation and ...inematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education) :—Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (Minister for Local Administration) :—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDAM (Minister for Labour) :—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (Minister for Harijan Welfare) :—Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (Minister for Transport) :—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (Minister for Social Welfare) :—Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars'Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (Minister for Agriculture) :—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Handlooms and Textiles) :—Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn, Handloom and Khadi and Village Industries.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.,

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. பண்ணை கே. சேதுராம்.
2. திரு. ஆர். முத்தையா.
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. கே. கே. முத்தையா.

சட்ட மன்றப் பேரவைச் செயலாளர் :

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

துணைச் செயலாளர் :

திரு. த. இராதாகிருஷ்ணன்,

குழு அலுவலர் :

திரு. ப. சுப்பராயன், எம்.ஏ.

சார்புச் செயலாளர்கள் :

திரு. வி. சீதாராமன், பி.காம்.,
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.,
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள்,
பி.ஏ. பி.எல்.

விவாதப் பதிப்பாளர்:

திரு. கே. சுந்தரராஜன்.

எஸ்டேட் அதிகாரி :

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
1 அண்ணாமலை, திரு. எம்.	ஹரூர் (செ. வ.).
2 அப்துல் ரஜாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3 அப்துல் லத்தீப், திரு. ரி.	கடலூர்.
4 அப்புனு கவுண்டர், திரு. கா.	பெண்ணாகரம்.
5 அமிர்தராஜ், திரு. இரா.	திருச்செந்தூர்.
6 அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
7 அய்யாச்சாமி, திரு. ரா.	தாராபுரம் (செ. வ.).
8 அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ. வ.).
9 அரங்கநாதன், திரு. அ. க.	வேலூர்.
10 அரங்கநாதன், திரு. மு.	திருவல்லிக்கேணி.
11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர் (மேற்கு).
12 அருணாசலம், திரு. இரா.	நாமக்கல் (செ. வ.).
13 அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
14 அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி.
15 அன்பழகன், திரு. க.	புரசவாக்கம்.
16 அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி.
17 ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்.
18 ஆதிசுவாமி, திரு. இரா.	குளச்சல்.
19 ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
20 ஆறுமுகம், திரு. எச். ஜி.	பர்கூர்.
21 ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
22 ஆறுமுகம், திரு. எம்.	சேலம்-2.
23 ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
24 இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
26 இராசரத்தினம், திரு. து.	பூந்தமல்லி.
27 இராதா, திரு. எஸ். ஆர்.	கும்பகோணம்.
28 இராமசாமி, திரு. க. ந. க.	கோபிச்செட்டிபாளையம்.
29 இராமசாமி, திரு. எஸ். ஜே.	சோளிங்கர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
30 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
31 இராமசாமி, திரு. டி.	இராமநாதபுரம்.
32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	சாத்தூர்.
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்).	அருப்புக்கோட்டை
34 இராமச்சந்திரன், திரு. என்.	செஞ்சி.
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.	ஹோசூர்.
37 இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்.
38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா.	தல்லி.
39 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
41 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி (செ. வ.)
42 உச்சி, திரு. கே.	கூடலூர்.
43 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ. வ).
44 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டிணம்.
45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
47 எத்திராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ. வ)
48 ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பேட்.
49 ஐசரிவேலன், திரு.	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
50 கணேசன், திரு. இ.	எடப்பாடி.
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ. வ.)
53 கந்தசாமி, திரு. கே.	ஆண்டிப்பட்டி.
54 கந்தசாமி, திரு. கா. வே.	கிணத்துக்கடவு.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனு உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக் கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இடைசெறிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார — மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி நகர் கிராமத் தொழில்கள்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
55 கபாலி, திரு. டி. கே. ..	மயிலாப்பூர்.
56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
57 கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58 கருணாநிதி, திரு. மு.	அண்ணாநகர், சென்னை.
59 கருணாநிதி, திரு. தாழை. மு. ..	திருவாரூர் (செ. வ.).
60 கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62 கலியமூர்த்தி, திரு. துரை. ..	சிதம்பரம்.
63 காத்தமுத்து, திரு. கி. பெ. ..	தொட்டியம்.
64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்).	திருப்பரங்குன்றம்.
65 காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
66 காளியப்பன், திரு. இரா. ..	ஏற்காடு (ஆ. வா.).
67 கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
68 கிட்டு, திரு. ப. கோ. ..	பல்லடம்.
69 கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
70 கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா.	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.
72 கிருஷ்ணன், திரு. பி.	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவநல்லூர் (செ.வ
74 குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
75 குருசாமி, திரு. ப.	ஆண்டிபூர் (செ.வ.).
76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
77 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி.	முசிறி.
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80 கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், புலவர், கா. ..	செய்யாறு.
82 கோவேந்தன், திரு. மு. ரெ. .	பேராவூரணி.
83 சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
84 சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
85 சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
86 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
87 சண்முகம், திரு. கூத்தகுடி, ச...	திருப்பத்தூர்.
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89 சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90 சந்திரன், திரு. ப.	பெரணமல்லூர்.
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியகராயநகர், சென்னை.
92 சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபநாசம்.
95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை
96 சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.).
102 சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103 சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.).
104 சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108 சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
109 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
169 பாலகிருஷ்ணன், திரு. சோ. ..	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர் (செ.வ.).
172 பாலாஜி, திரு. க.	காஞ்சீபுரம்.
173 பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174 புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ.வ.).
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. மு...	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ.வ.).
180 பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181 பொன்னுசாமி, டாக்டர் எ. ..	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம், சென்னை.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்).	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ்... ..	எழும்பூர், சென்னை (செ. வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்).	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்.	(நியமன உறுப்பினர்).
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ..	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமி கரையாளர், திரு. சு.	தென்காசி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெய (2)
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
200 முனிரத்தினம், திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, திரு மாண்புமிகு (பேரவைத் தலைவர்).	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வீ. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து.	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. இ. ..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.).
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ.வ.).
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.
220 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. செள. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சி. மு. ..	வேடசந்தூர்.
223 வின்செண்ட், திரு. மி. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ. ..	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
114 சுப்பிரமணியம், திரு. டி.	ஆண்டிமடம்.
115 சுப்பிரமணியன், திரு. ஓ.	சிவகங்கை.
116 சுப்பிரமணியன், திரு. மா.	சின்னசேலம்.
117 சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118 சுப்பிரவேலு, திரு. கே.	சீர்காழி (செ.வ.).
119 சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120 சுப்புலட்சுமி, திருமதி	மொடக்குறிச்சி.
121 சுப்பையா, திரு. ச.	சங்கரநயினார்கோவில் (செ.வ.).
122 சுவாமிதாஸ், திரு. அ.	பத்மநாபபுரம்.
123 செங்கோடன், திரு. கா.	கபிலமலை.
124 செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125 செல்லப்பன், திரு. ஏ.	வலங்கைமான் (செ.வ.)
126 செல்வராசன், திரு. அ.	துறைமுகம், சென்னை.
127 செல்வராஜ், திரு. சீனி.	சமயநல்லூர் (செ.வ.).
128 செல்வராஜ், திரு. மு.	குறிஞ்சிப்பாடி.
129 சொக்கலிங்கம், திரு. கெ.	திருப்போரூர் (செ.வ.).
130 சோமசுந்தரம், திரு. ஓ. ப.	பொள்ளாச்சி.
131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
132 சௌந்திரராசன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133 சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
134 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.	ஸ்ரீரங்கம்.
135 ஞானசிகாமணி, திரு. தே.	விளவங்கோடு.
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
137 தங்கவேல், திரு. ர. ச.	வால்பாறை (செ.வ.).
138 தண்டபாணி, திரு, ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ.	பேரணாம்பட்டு (செ வ.).
140 தனசேகரன், திரு. ந.	தூத்துக்குடி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.).
142 தனுஷ்கோடி, திரு. கோ.	ராஜபாளையம் (செ.வ.).
143 தாமரைக்கனி, திரு. இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்).	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பே. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா).	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு.	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு.	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம.	பொன்னேரி (செ.வ.).
151 துலுக்காணம், திரு. வ.	உளுந்தூர்பேட்டை (செ. வ.).
152 தைலப்பன், திரு. டி. எம்.	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆ.	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு.	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க.	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா.	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவன், திரு. அ. ம.	மேலூர்.
162 பரமசிவம், திரு. மொ.	வானூர் (செ.வ.).
163 பழனிச்சாமி, திரு. சு.	மேட்டுப்பாளையம்.
164 பழனிச்சாமி, திரு. சொ. ந.	அவினாசி (செ.வ.).
165 பழனிமுத்து, திரு. சி.	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப.	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என்.	பழனி (செ.வ.).
168 பாண்டியன், திரு. பி. எச்.	சேரன்மாதேவி.

தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. ..	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. ..	ஒட்டப்பிடாரம் (செ.வ.).
230 ஜகதீசன், திரு. ஆனூர். ..	செங்கல்பட்டு.
231 ஜான் வின்சென்ட், திரு. மு...	நாங்குநேரி.
232 ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம். ஏ. ..	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. கே. நாராயண சாமி முதலியார்.	அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்.	அமைச்சர்.
3 மாண்புமிகு திரு. எஸ். இராகவா னந்தம்.	அமைச்சர்.
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது.	அமைச்சர்.
5 திரு. வி. பி. இராமன்	தலைமை வழக்கறிஞர்.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது சட்ட மன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1978, ஜனவரி 4, 5, 6, 7, 9, 10 ஆம் நாட்கள்

(தொகுதி II—எண்கள் 1 முதல் 6)

அ

பக்கங்கள்

அச்சகம் (அரசு)—

தலைமைச் செயலகத்தில் கிளை நிறுவுதல் .. 1187

அண்ணாமலை, திரு. எம்.—

உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்து விநியோ கிக்கப்பட்ட நிலங்கள் 659

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 218—220

கலப்புத் திருமணத் தம்பதிகள், வேலைவாய்ப்பு 910—911

அணைகள்—

பார்க்க— நீர்ப்பாசனம்

அம்பிகாபதி, திரு. மு.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 775, 781

ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு நிலைமை .. 883—891

இறைவைப் பாசனத் திட்டம் (மூலாநல்லூர்), பணி நிலைமை 875

காவிரி நீர் பங்கீடு ஒப்பந்தம் அமுலாக்குதல் .. 1193

சுயாட்சி மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த, தீ) 628—633

பக்கங்கள்

அம்பிகாபதி, திரு. மு. —தொடர்ச்சி.

- தஞ்சை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்திக் கழகம், ஒப்பந்தம் அமுல் செய்யாதிருத்தல் .. 1186—1187
- மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 153—156
- 'யார்-எவர்' என்ற வெளியீட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, உறுப்பினர்கள் தவருக குறிப்பிடப்பட்டிருத்தல் (ஏ. பி.) .. .. 1233—1234
- வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர் .. 656

அமிர்தராஜ், திரு. இரா.—

- உடன்குடியில் மின்சார துணை நிலையம் 1214
- குலசேகரன் பட்டணத்தில் மீன்பிடி துறைமுகம் .. 1215
- தீயணைப்பு நிலையம் அமைத்தல் 1197

அரங்கசாமி திரு. க. —

- அரிசனங்களுக்கு வீடுகள், நீலகிரி மாவட்டம் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் 914
- உலிக்கல் 913
- தூதூர் மட்டம் 913
- வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்யத் தகுதி .. 655—656

அரங்கநாதன், திரு. அ. க.—

- அண்ணு கலையரங்கம் (வேலூர்), திறத்தல் .. 882—883
- வேலூருக்கு அருகில் தொழிற்பேட்டை .. 1211
- வேலூர் அரசினர் கலைக் கல்லூரி .. .. 1159—1160

அரங்கநாதன், திரு. மு. —

- அண்ணு நாளிதழ் அவை நடவடிக்கைகளை திரித்து வெளியிட்டிருத்தல் (உ. பி.) 674
- அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 362—363
- மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு 1977 .. .. .. 160—164

பக்கங்கள்

அரங்கநாயகம், திரு. செ. —

- அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. 348
- திருச்சி புத்தூரிலிருக்கும் பிஷப்ஹீபர் உயர்நிலைப் பள்ளி மூடப்பட்டதனுல் பள்ளி மாணவர் பாதிக்கப்பட்டிருத்தல் (க. ஈ. அ.) .. 1279
- பூம்புகார் தொகுதி செம்பனூர்கோவில் ஒன்றியத்தில் துவக்க பள்ளிகளுக்கு மதிய உணவு பங்குத் தொகை வழங்காததால் மாணவர்கள் பட்டினி கிடத்தல் (க. ஈ. அ.) .. .. .. 1266—1267, 1268
- உத்தமபாளையம், ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காததும், அரசு மானியத்தை நிர்வாகம் தவருகப் பயன்படுத்தியதும் (க. ஈ. அ) .. 1276—1277

அரசு அலுவலர்கள்.—

- அரசு குடியிருப்பு வசதி 928
- அரசிதழ் பதிவு பெற்ற பதவிகள் 1174
- கிராம அலுவலர்கள், சம்பளம் அளிக்கப் பெருமை, தஞ்சை மாவட்டம். .. .. 1185—1186
- நீக்கப்பெற்ற பொறியாளர், வேலை கொடுத்தல் (க. ஈ.) .. .. .. 949—955
- பணியாளர் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்ட குருப் I சர்வீஸ் 662
- வேலை நிதி ஊழியர்கள், ஓய்வூதியம், ஆணை .. 876—877

அரசுப் பணி.—

- விவசாய பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு .. 1177

அரிசனங்கள்.—

- அரிசனக் குடியிருப்பு, மனவெளித் தெரு .. 1164
- காந்தி நினைவு உபகாரச் சம்பளம், மாணவர் களுக்கு வழங்குதல் 912
- நீலகிரி, வீடுகள் கட்டும் திட்டம் .. .. 914—915
- மாணவர்கள் காந்தி நினைவு உபகாரச் சம்பளம் .. 912

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

அரை மணி விவாதம்.—

- தெளிப்பு முறைப் பாசனத் திட்டம், செயல்படுத்துதல், .. 1112—1121
- நியாயவிலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும்.. 1121—1137

அழகர்சாமி, திரு. சோ.—

- அமைச்சரவை மீது நம்பிக்கையின்மை தீர்மானம்.. 514—522, 676
- கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 (ச.ஆ.நி.) .. 393
- கோவில்பட்டி—பசுவந்தனை சாலை சீர் செய்தல் .. 1165—1166
- சங்கரன்கோவில் வட்டத்தில் மின் இணைப்பு, நிறுத்தப்பட்டிருத்தல் .. 1186
- சித்தனுபுரம் கிராம அரிசனங்கள் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருத்தல் பற்றிய தீர்மானம் (த. கோ.) .. 1260—1261, 1263, 1264
- 'பி' பிரிவு ஆசிரியர்கள், பதவி உயர்வு .. 1206
- வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) .. 1010, 1012—1014
- வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள புலவர் பயிற்சி பெற்றவர்கள். .. 656—657

பல்கலைக் கழகம்

- அண்ணாமலை, ஆட்சிக்குழு, உறுப்பினர் நியமனம் (அறிவி) .. 237

அன்பழகன், திரு. க.—

- அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 103, 105, 266, 304, 319, 320, 698, 715—741
- அத்தியாவசியப் பொருள்கள் விலை ஏற்றம், நடவடிக்கைகள் .. 1107
- வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) .. 995

ஆ

பக்கங்கள்

ஆசிரியர்கள்—

- அவசரகால நிலையின்போது பணிநீக்கம் செய்யப்பட்டோர். .. 1159
- உடற்கல்வி ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளில் நியமனம் .. 891—894
- ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவச் சலுகை வழங்குதல் .. 1194
- கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்கள் .. 1215
- தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பணிவிவரம் 919—920
- 'பி' பிரிவு ஆசிரியர்கள், பதவி உயர்வு குறித்து 1206
- வேலை வாய்ப்பு நிலைமை .. 883—891

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

- திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பிரித்தல் 1188

ஆராய்ச்சி—

- சிலப்பதிகார ஆராய்ச்சி, உதவுதல் .. 1181

ஆறுமுகம், திரு. எச். ஜி.—

- வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ. வி.) 991—995

ஆறுமுகம், திரு. எம்.—

- அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 247

ஆறுமுகம், திரு. சி.—

- அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 370
- நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1978 .. 183—185
- மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து (த.கோ.) .. 1236—1237

ஆ—தொடர்ச்சி.

பக்கங்கள்

ஆறுமுகம் திரு. த.—

குடிநீர்த் திட்டம், கோமான் கிராமம் .. 664

சுக்கிரன் ஏரி, நீர் வரத்துக்கான திட்டம் 664

ஆனூர் ஜகதீசன், திரு.—

அணு உலை நிறுவுதல் (கட்டடங்களை முறைப்படுத்தல், நிலத்தை பயன் படுத்தல்) சட்டமுன் வடிவு, 1977 .. .. ..1041—1042

இ

இராகவானந்தம், திரு. எஸ்.—

யூனியன் கார்பைட் கம்பெனி தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை (க.ஈ.அ) .. ..1280—1281
1281—1282
1283—1284

டி. வி. எஸ். லூகாஸ் கம்பெனி நிர்வாகம், தொழிலாளர் தலைவருடன் ஏற்படுத்திய உடன்பாட்டை மீறியதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை (க. ஈ.அ) .. .. ..1269—1270
1271—1272
1273

நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர் உண்ணா விரதம் இருந்தல் குறித்து (ஒ.வை.தீ.)1246—1248

இராசமாணிக்கம் திரு. இரா.—

அரிசனக் குடியிருப்பு, மணவெளித் தெரு .. 1164

உடற்கல்வி, நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் நியமனம் .. .. 891—894

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977. .. .. 211—214

இராசரத்தினம் திரு. து.—

ஊராட்சி ஒன்றியக் குழு-கூட்டங்கள் .. 8—87317

இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இராதா திரு. எஸ். ஆர்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 40—49, 92, 240, 347, 843

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 449

கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. 387

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1978 197

பஸ் பாஸில் உள்ள தேதிக்கும், உறுப்பினர் அடையாள அட்டையிலுள்ள தேதிக்கும் உள்ள முரண்பாடு (து. கோ.) 1229

புயல், வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. .. ..1071—1073

முரசொலி நாளிதழ், ஓர் உறுப்பினரின் பேச்சைத் தவறாக வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுவது 479—480

'யார்-எவர்' என்ற வெளியீட்டில் ஓர் உறுப்பினர் தந்தையின் பெயரை ஜாதிப் பெயர் சேர்த்து குறிப்பிட்டிருந்தல் (ஒ. பி.) .. 1235

இராமசாமி திரு. எஸ். ஜே.—

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1977 .. .. 216—218

சென்னை நகரில் சுரங்கப் பாதைகள் அமைத்தல் 1195—1196

சென்னை—பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பாலம் 1208

நடமாடும் நீதிமன்றம், சென்னையில் பதிவான வழக்குகள் .. .. 666—607

பால்வள நிறுவனம், பயிற்சித் திட்டம் .. 908—909

இராமசாமி திரு. டி.—

புகளூர் சர்க்கரை ஆலை, விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது (க. ஈ.) .. 1288

இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இராமசாமி, திரு. து.—

வரவு செலவுத் திட்டம், 1977-78 (பொ. வி.) .. 982—986

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. 269—364, 374—380, 527, 528, 529, 530, 532, 536, 537, 538, 539, 542, 543—546, 549, 558, 559—580, 743—749, 750—753, 754—755, 756—780, 782—791, 792, 793—799, 800—803, 821—829, 845—849, 850, 852—864, 865—867.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, முதலமைச்சர் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) .. .. 710—711, 712, 713, 714—715

இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இராமச்சந்திரன், திரு. ச.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 77—78, 239

அவசரக் கால நிலையின் போது கட்டாய ஓய்வு அரசு ஊழியர்களின் குடும்பங்கள் பாதிப்பு (ஒ. தீ.) .. .. 945—947

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ.) 237, 238, 473, 948

அணு உலை நிறுவுதல் (கட்டடங்களை முறைப்படுத்தல், நிலத்தை பயன் படுத்தல்) சட்ட முன்வடிவு (ச.ஆ.நி.) 1037, 1042, 1043, 1044

நிறைவேற்றம் 1046, 1047

மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுதல் (ஒ. தீ.) .. .. 939—941

நில நீர் (கட்டுப்பாடு முறைப்படுத்தல்) சட்ட முன்வடிவு, 1977 கூட்டாய்வுக்குழு அமைப்பது குறித்து 1049

நீக்கப்பட்ட பொறியாளர் வேலை கொடுத்தல் (க. ஈ. அ.) 949, 953

இராமச்சந்திரன், திரு. செஞ்சி நா.—

ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு நிலைமை .. 883—891

உயர்நிலைப்பள்ளி நெகனூர் புதூர் .. 922

ஏரிகள் சீரமைப்பு 1193

தனியார் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல் 1179—1180

மதிப்பீடுகளுக்கு உச்சவரம்பு ஒன்றியப் பொறியாளர்களால் போடப்படுபவை 663

மாணவர் விடுதிகள், ஒதுக்குதல் .. 1185

வடலூரில் இரண்டாம் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம் 1205

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளோர் 656

இ—தொடர்ச்சி.

பக்கங்கள்

இராமச்சந்திர ரெட்டி, திரு. என்.—

வறட்சிப் பகுதி திட்டத்திற்கான நிதி உதவி மாற்றம் குறித்து 1187

இராமலிங்கம், திரு. செ.—

இனும் கிராமங்கள் ரயத்துவாரியாக மாற்றுதல் 874
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1977 231
கிளைக் கருவூலங்கள் (எண்ணிக்கை), திருவிடை மருதூருக்கு கிளைக் கருவூலம் 662
பேருந்துகள், சோழன் போக்கு வரத்துக் கழகம் .. .. 654—655
மின் இணைப்புகள், விவசாயத்திற்கு தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட்டவை .. 660—661
தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல் 1197
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு. 1977 .. .. .. 195—197

இராஜா முகமது, திரு. கே.—

அமைச்சரவை நம்பிக்கையின்மைத் தீர்மானம் 843—844, 845
கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி மாணவர்கள் வேலை நிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் .. .. ..1257—1259
புகளூர் சர்க்கரை ஆலை விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது (க.ஈ.அ) .. 1290, 1291
மதுரை மாவட்டம், உத்தமபாளையம், ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காததும், அரசு மானியத்தை கல்லூரி நிர்வாகம், தவறுகப் பயன் படுத்தியதும் (க.ஈ.அ) .. .. ..1277—1278

இளங்கோவன், திரு. கோ.—

கல்லணைப் பகுதியில் சுற்றுலா மாளிகை .. 1213
மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுதல் (ஒ.தீ.) .. .. 938—939
வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ. வி.) 974—982

ஈ

பக்கங்கள்.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. அ. ச.—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு. வி.) .. .. ..1094—1097
உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. .. 457, 459, 464
கடையம்-பாவூர் பேருந்து வழித்தடம், சேர்மாதேவி 917—918
நிலநீர்ப் பிரிவு வேலை நிதி ஊழியர் சம்பளம் 1153—1154
வேலைநிதி ஊழியர்கள், ஒய்வூதியம் .. 876—877

உ

உச்சி, திரு. கே.—

இணைப்புச் சாலைகள், நீலகிரி மாவட்டக் கிராமங்கள் 912
உருளைக் கிழங்கு சாகுபடி, ஊக்குவித்தல் .. 913
கூடலூர் பகுதியில் அகதிகளுக்கு நிலப்பட்டா 1169—1171
நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது (ஒ. வை. தீ.) .. ..1243—1244

உணவு—

அத்தியாவசியப் பொருட்கள், வழங்கும் துறை 931
அரசு தரப்பில் உள்ள நெல், அரிசி . ..1227—1228
கோதுமை விலை 1222
நியாய விலைக் கடைகள் .. .. ..1226—1227

உத்திராபதி, திரு. பொ.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 378
உரிமைப் பிரச்னை எழுப்புவது குறித்து (ஒ.பி.) 973
பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978.. 434

பக்கங்கள்

உமாநாத், திரு. ரா.

அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப் படுத்தல், நிலத்தைப் பயன்படுத்தல்) சட்ட முன்வடிவு, 1977 1044

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 550—562, 676, 718, 749, 755, 771,

அவசரகால நிலையின்போது கட்டாய ஓய்வு, அரசு ஊழியர்களின் குடும்பங்கள் பாதிப்பு (ஒ. தீ.) 942—945

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, முதலமைச்சர் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) .. .. 713—714

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன் வடிவு, 1978 418

டி. வி. எஸ்.—லூகாஸ் கம்பெனி நிர்வாகம், தொழிலாளர் தலைவருடன் ஏற்படுத்திய உடன் பாட்டை மீறியதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை (க.ஈ.) .. ..1268—1269, 1270—1271, 1272

திருச்சி புத்தூரிலிருக்கும் பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளி மூடப்பட்டதனால் பள்ளி மாணவர் பாதிக்கப்பட்டிருத்தல் (க. ஈ.) .. ..1279—1280

தெளிப்புமுறைப் பாசனத் திட்டம் செயல் படுத்துதல் (அ. வி) .. 1112—1116

நியாய விலைக் கடைகள் 1227

நியாயவிலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும் (அ. வி .. ..1121—1125

மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுதல் (ஒ.தீ.) .. .. .. 932—933

பக்கங்கள்

உரிமைப் பிரச்சனைகள்—

பார்க்க – தலைவர் தீர்ப்புரைகளும் குறிப்புகளும்.

உலோகங்கள்—

வடமாமந்தூர் கிராமம், தென்னாற்காடு .. 661

உள்ளாட்சிகள்—

ஊராட்சி ஒன்றியங்கள், கூட்டங்கள் .. 871—873
கந்தகுமரன் ஊராட்சி, பிரிப்பது குறித்து .. 1181
கள்ளக்குறிச்சி பேரூராட்சி—நகராட்சியாக்குதல் 930
(கலைக்கப் பெற்றவை) தலைவர்கள் கூட்டம் .. 896
தச்சுக் கொல்லுப் பட்டறைகள் இயங்குதல் ..1197—1198
திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பிரித்தல் 1188
திருமலையம்பாளையம் ஊராட்சி, பிரித்தல் ..1184—1185
மதிப்பீடுகளுக்கு உச்சவரம்பு, ஒன்றியப் பொறி யாளர்களால் போடப்படுபவை 663

எ

எட்மண்ட், திரு. க. உரோ—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், தடுப்பு நடவடிக்கைகள் (கு. வி.) .. ..1100—1106, 1107—1111

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 14, 16, 84—86, 264, 266, 268, 270, 317, 352, 355, 357, 358, 359, 360, 361, 362, 363, 364, 365, 370, 371, 373, 375, 376, 377, 488, 489, 494, 495

எ—தொடர்ச்சி.

பக்கங்கள்.

எட்மண்ட் திரு. க. உரொ.—தொடர்ச்சி:

ஆயில் என்ஜினுக்கான கடனை வாங்க மறுத்த விவசாயிகள் பாதிப்பு, துரிஞ்சாபுரம் (க.ஈ.அ.) .. 956

இஸ்மாயில் கமிஷனின் அறிக்கை, முதலமைச்சர் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) 670—671

கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றை செலுத்த அரசு உத்திரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. .. 467—470

திருச்சி புத்தூரிலிருக்கும் பிஷப் ஹிபர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டு உள்ளது பற்றி (க.ஈ.அ.) 1280

தெளிப்புமுறைப் பாசனத் திட்டம், செயல் படுத்துதல் (அ. வி.) .. ..1119—1121

நியாயவிலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும் (அ.வி.) .. .. ..1130—1133 1133, 1135

புயல் வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 1061

''முரசொலி'' நாளிதழ் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசியதை திருத்தி வெளியிட்டிருத்தல் (உ.பி.) .. .. .. 671—673

வட ஆற்காடு மாவட்ட ஆலை உரிமையாளர்கள் நெல் அரைக்கத் தயங்குவதால் பொதுமக்களின் எண்ணெய் பாதிப்பு (க.ஈ.அ.) .. ..1265—1266

வித்துக்கள் பயிரிடல் 1174

ஏ

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. .. 236, 648—649 868

ஏரிகள்—

பார்க்க — நீர்ப்பாசனம்.

ஐ

பக்கங்கள்

ஐசரி வேலன், திரு.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மை தீர்மானம் 256, 257, 259

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

அவசரகால நிலையின்போது கட்டாய ஓய்வு, அரசு ஊழியர்களின் குடும்பங்கள் பாதிப்பு .. 941—947

கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி மாணவர்கள் வேலைநிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து .. .. ..1254—1259

தியாகராசசாலை அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து .. ..1250—1254

நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது ..1243—1248

மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுதல் .. .. .. 932—941

ஒழுங்குப் பிரச்சினைகள்—

உரிமைப்பிரச்சினை எழுப்புவது குறித்து .. 968—973

பயணச் சீட்டுடன் அடையாள சீட்டையும் காண்பிக்க வேண்டியிருத்தல் .. ..1235—1236

'யார்—எவர்' என்ற வெளியீட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பற்றி தவறாக குறிப்பிடப்பட்டிருத்தல் .. ..1233—1234

'யார்—எவர்' என்ற வெளியீட்டில் ஓர் உறுப்பினர் தந்தையின் பெயரை ஜாதிப்பெயர் சேர்த்து குறிப்பிட்டிருத்தல் 1235

ரயில் பாஸில் உறுப்பினர் தன் மனைவியை அழைத்துச் செல்ல அனுமதி மறுக்கப்படுவது குறித்து 1237

ஓ

பக்கங்கள்

ஓய்வூதியம்—

வேலைநிதி ஊழியர்கள் ஆணை .. .. 876—877

க

கடன்கள்—

ஆயில் இன்ஜினுக்காக கடனை வாங்க மறுத்த விவசாயிகள் பாதிப்பு, துரிஞ்சாபுரம் (க.ஈ.) .. 956—958

கிள்ளை கூட்டுறவு சங்கம், பற்றி 1180

கூட்டுறவுக் கடன்கள் வசூல், கோவை மாவட்டம் . 1176—1177

கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றைச் செலுத்த உத்தரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) 467, 470

கட்டிடங்கள்—

காவல் நிலையங்களுக்கு .. 66[illegible]

கணேசன், திரு. இ—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. [illegible]

கணேசன், திரு. எஸ்—

ஆசிரியர்கள், வேலைவாய்ப்பு நிலைமை 883—891

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தச்சு, கொல்லுப் பட்டறைகள் இயங்குதல் குறித்து ..1197—1198

எலி ஒழிப்பு, தஞ்சை 924

கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டோர். 1221

குரூப் I சர்வீஸ், பணியாளர் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோர் .. 662

சிலப்பதிகார ஆராய்ச்சி, உதவுதல் 1181

சுற்றுலா சொகுசுப் பேருந்துகள் . 1195

செம்பனார்கோவில் ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்கு மதிய உணவு, பங்குத் தொகை வழங்காததால் மாணவர்கள் பட்டினி கிடத்தல் (க.ஈ.) .. 1266, 1267—1268

மீன்பிடி விசைப்படகுகள் பழுதுபார்க்கும் நிலையங்கள் 1216

விவசாயத் திட்டங்கள், ஆராய்வை மேற்கொள்ளுதல் பற்றி .. .. .. 1180—1181

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளோர் .. 656

க—தொடர்ச்சி

பக்கங்கள்

கதர்—

கதர்-கிராமத் தொழில் அங்காடிகள் 1203

கதர்-கைத்தொழில் வாரியம், பயிற்சித் திட்டம்.. 905—908

கந்தசாமி திரு. கே—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 118—125, 782

அச்சகம், தலைமைச் செயலகத்தில் கிளை நிறுவுதல். 1187

தியாகராசா கலை அரசினர் மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து (ஒ.வை.தீ.) 1251

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. 164—168

முதலமைச்சரின் அமெரிக்க சுற்றுப்பயணம் குறித்து பத்திரிகைச் செய்தி (த.கோ.) .. 1232—1233

கரியமாணிக்கம் அம்பலம் திரு. கரு. ராம—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 253

இராமநாதபுரம் மாவட்ட தலைநகரம் .. 1146—1149

கூட்டுறவுக் கடன்கள் வசூல், கோவை மாவட்டம் 1176—1177

தனியார் கல்லூரிகள், எண்ணிக்கை 1190

திறந்தவெளிப் பல்கலைக் கழகத்திட்டம், பரப்பும் ஏற்பாடு 895

பகுதி முறையில் பள்ளியிறுதித் தேர்வு ..1175—1176

பேருந்து விபத்துக்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் .. ..1213—1214

மதுரை பஸ் நிலையம், விரிவுபடுத்தல் .. 1220

வறட்சி நிவாரணப் பணிகள், இராமநாதபுரம். 658

விவசாயப் பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு .. 1177

பக்கங்கள்

கருணாநிதி திரு. மு.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 1-38, 86
245, 246
247, 257
309, 328
358, 359
360, 361
364, 369
375, 379
504, 551
556, 557
562, 579
581, 582
675, 676
678, 755—
756, 791—
792, 799
804—817
818—821
822—842
844—845
864—865

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, முதலமைச்சர் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) 668—671
711—712
713

உணவு அமைச்சர் அவைக்குத் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) .. 473

உரிமைப் பிரச்னை எழுப்புவது குறித்து (ஒ. ?.) .. 971, 972

நியாயவிலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும் (அ.வி.) 1133

கருப்பசாமி பாண்டியன் திரு. வீ—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 87—93

கருவூலங்கள்—

கிளைக் கருவூலங்கள் (எண்ணிக்கை), திருவிடை மருதூருக்கு கிளைக் கருவூலம் 682

பக்கங்கள்.

கல்லூரிகள்—

அரசினர் மகளிர்க் கல்லூரி (வட சென்னை) வசதிகள் .. 929—930

இருபாலார் சேர்ந்து பயிலல் .. .. 925—926

காவலர் பயிற்சிக் கல்லூரி, மாற்றம் குறித்து. .. 1206

சுயாதிகாரம் 927

தனியார் கல்லூரிகள், ஊழியர்களுக்குச் சலுகைகள் 916

தனியார் கல்லூரிகள், எண்ணிக்கை 1190

நிதி நிலைமை 926

பச்சையப்பன் கல்லூரி, அறங்காவலர் குழு நியமனம் .. 1174

பாடமொழிகள் .. ..1216—1217

பொறியியல், கல்லூரி மாணவர்கள் தேர்வு, ..1156—1159

மருத்துவம் (பி.டி.எஸ்.), மாணவர்கள் அனுமதி. 1205

மாணவர்களைச் சேர்த்தல் .. .. .. 1179—1180

விழுப்புரம் கலைக் கல்லூரி, நிறுவுவது பற்றி ..1190—1191

வேலூர் அரசினர் கலைக் கல்லூரி .. ..1159 – 1160

கல்வி—

உடற்பயிற்சிக் கல்வி, லோயர் கிரேடு நீக்கம் .. 894

காந்தி நினைவு உபகாரச்சம்பளம், அரிசன மாணவர்களுக்கு வழங்கல் 912

திறந்தவெளிப் பல்கலைக்கழகத் திட்டம், பரப்பும் ஏற்பாடு 895

பகுதி முறையில் பள்ளியிறுதித் தேர்வு ..1175—1176

வாரியம், அமைப்புச் செயற்குறிப்பு 920

கலையரங்குகள் —

அண்ணா கலையரங்கம் (வேலூர்), திறத்தல் .. 882—883

க—தொடர்ச்சி.

பக்கங்கள்.

கவன ஈர்ப்புகள்—

ஆயில் எஞ்சினுக்கான கடன் வாங்க மறுத்த விவசாயிகள் பாதிப்பு, துரிஞ்சாபுரம் .. 956—958

ஆற்றுப்பாலங்களின்மை, தியாகதுர்க்கம் யூனியன். 1273—1275

கறவை மாடுகள் நோயுற்று மருந்து இல்லாததால் மாண்டது, வாசுதேவநல்லூர் .. 961—964

சிவகங்கையில் குழாய் பைப்புகள் உடைந்ததால் சுகாதார கேடு இருப்பதும் நகரசபை நடவடிக்கை எடுக்கத் தவறியதும் .. ..1284—1285

செம்பனூர்கோவில் ஒன்றிய துவக்க பள்ளிகளுக்கு மதிய உணவு, பங்குத் தொகை வழங்காததால் மாணவர்கள் பட்டினி கிடப்பது குறித்து .. .. .. 1266—126

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்க உண்ணாவிரதம் இருத்தல் .. 1285—128

டி. வி. எஸ்.—லூகாஸ் கம்பெனி நிர்வாகம் தொழிலாளர் தலைவருடன் ஏற்படுத்திய உடன்பாட்டை மீறியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.1268—127

யூனியன் கார்பைட் கம்பெனி தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை. 1280—128

நீக்கப்பட்ட டிப்ளமா பொறியாளர்கள், வேலை கொடுத்தல் .. .. 949—95

பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி, திருச்சி, மூடப்பட்டதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருத்தல் .. .. 1279—128

புகளூர் சர்க்கரை ஆலை, விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது .. .. 1288—129

புகையான் நோயினால் பயிர், பாதிப்பு, நெல்லிக்குப்பம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் வட்டங்கள். .. .. .. 964—96

வட ஆற்காடு மாவட்ட ஆலை உரிமையாளர்கள் நெல் அரைக்கத் தயங்குவதால் பொதுமக்களின் பாதிப்பு .. .. 1264—126

வீட்டு வரி உயர்வு திருத்தங்கள், இ. மாவட்டம் 959—96

ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி (உத்தமபாளையம்) ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காததும், அரசு மானியத்தை நிர்வாகம் தவறாகப் பயன்படுத்தியதும் .. .. 1276—127

கா.

பக்கங்கள்.

காகித ஆலை—

கள்ளக்குறிச்சியில் 1209

கால்நடை—

கோழிப் பண்ணைகள் 1223

செயற்கை முறை இனவிருத்திப் பணி .. 1202—1203

நோயுற்ற கறவை மாடுகள் மருந்து இல்லாததால் மாண்டது, வாசுதேவநல்லூர் .. .. 961—964

காவல்—

காவல் நிலையங்கள், எண்ணிக்கை 660

காவலர் கடமை 1211

துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு .. ..1211—1212

காளிமுத்து திரு கா—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 588—595

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. .. .. 444,445, 446,462, 464,465

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1977.. 233—234

ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. 234—235

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1977. 205,227 —233

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு, 1977 .. .. .. 203—204

சிவகங்கையில் குழாய் பைப்புகள் உடைந்ததால் சுகாதார கேடு இருப்பதும் நகரசபை நடவடிக்கை எடுக்கத் தவறியதும் (க. ஈ.அ.) .. 1285

காளிமுத்து திரு. கா—தொடர்ச்சி. பக்கங்கள்.

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்க உண்ணாவிரதம் இருத்தல் (க. ஈ.) 1286—1287
சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. 1288
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1977 .. 181—182
மதுரை மாநகராட்சி (இரண்டாம்) திருத்த சட்ட முன்வடிவு, 1977 .. 183,198—202
மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. 134, 174—180
வீட்டு வரி உயர்வு, திருத்தங்கள் (க.ஈ.அ.) .. 974, 959,961

கி.

கிட்டப்பா திரு. என்—

அகழ்வாராய்ச்சி, செஞ்சிக்கோட்டை .. 923—924
அச்சகத் தொழிலாளர், குறைந்தபட்ச ஊதியம். 927
அண்ணா சமாதி பராமரிக்கும் பொறுப்பு பற்றி. 1178
அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 69—74, 792—793
அரசிதழ் பதிவுபெற்ற பதவிகள் .. 1174
அரிசன மாணவர்கள், காந்தி நினைவு உபகாரச் சம்பளம் .. 912
அழகர் அணைத் திட்டம் .. 925
இடைநிலைப் பள்ளிகளில் கட்டணங்கள் .. 1173
இந்தி, விருப்ப அடிப்படையில் கற்பித்தல் .. 1178—1179
இரவு நேரப் பேருந்துகள், சென்னை .. 653, 1217—1218
உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்து விநியோகிக்கப்பட்ட நிலங்கள் .. 659
எண்ணெய் வித்துக்கள், பயிரிடல் .. 1174

பக்கங்கள்

கிட்டப்பா திரு. என்—தொடர்ச்சி.

எலி ஒழிப்பு, தஞ்சை .. 924
ஒன்றியப் பள்ளிகள், ஆசிரியர்களுக்கு மருத்துவச் சலுகை .. 1191
கடல்பாசி வளர்க்கும் திட்டம், ஆய்வு குறித்து 1220
கட்டிடத் தொழிலாளர் ஊதியம் .. 1180
கதர் கிராமத் தொழில் அங்காடிகள் .. 1203
கலப்புத் திருமணம், ஊக்குவிக்கும் திட்டங்கள். 910
கல்லூரிகள், இருபாலார் சேர்ந்து பயிலல் .. 925—926
கல்லூரிகள், சுயாதிகாரம் .. 927
கல்வி வாரியம், அமைப்புச் செயற்குறிப்பு .. 920
குடிநீர்த்திட்டம், சேலம் .. 915
சமுதாய வடிமுனைக் குழாய்க் கிணறுகள், தஞ்சை. 1193-1194
சாலைகளை அகலப்படுத்த மரங்களை அகற்றுதல். 1166-1169
சித்த மருத்துவத்துக்கான மூலிகைகள் .. 1204
சுங்க வசூல், கொள்ளிடம் பாலம், ஆணிக்காரன் சத்திரம் .. 651—652
தமிழாராய்ச்சி, நிதி ஒதுக்கம் .. 921
தனியார் கல்லூரிகள், நிதி நிலைமை .. 926
தனியார் கல்லூரிகள், ஊழியர்களுக்கு சலுகைகள். 916
திரைப்படக் கொட்டகைகள் (குளிர்சாதன வசதியுள்ளவை), சென்னை .. 652
திரைப்படங்கள், (தமிழ்) தங்கப்பதக்கம் பெற்றவை. 878—882
தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பணிவிவரம். 919—920
நதிப்பாசன பிரதேசங்கள், தனித்தனித் தலைமைப் பொறியாளர்கள் .. 927
நீதிமன்றங்கள், தீர்ப்புகளில் தாமதம் .. 920—921
பச்சையப்பன் கல்லூரி, அறங்காவலர் குழு நியமனம் .. 1174
பட்ட மேற்படிப்பு கேந்திரங்கள் (சென்னை, திருச்சி) தமிழ்துறை, ஏற்படுத்துதல் .. 915
பாடநூல்கள், பெரியார், அண்ணா வாழ்க்கை வரலாறு .. 911
பாதாள சாக்கடைத் திட்டம், மாயூரம் .. 911
பால், சென்னைக்கு விநியோகம் .. 928

கி—தொடர்ச்சி.

பக்கங்கள்.

கிட்டப்பா, திரு. என்.—தொடர்ச்சி,

பாலம், ராஜன் வாய்க்கால், மாயூரம் ஒன்றியம் .. 911
பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் 917
பிற்படுத்தப்பட்ட கைவினைஞர்கள், உதவித் தொகை 923
பெண்கள், உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், மாயூரம். 919
மின்சாரம், கேரளத்திலிருந்து பெறுதல் .. 916—917
மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகள் .. 1210
மீனவர்களுக்கு ஆயுள் காப்பீட்டு வசதி .. 1189
ரெயில்வே அலுவலகம், அண்ணா சாலை ..1164—1165
வணிகவரி, நங்கவள்ளி சினிமா தியேட்டர்களில் சோதனை 925
வாழை ஆராய்ச்சிப் பண்ணை, ஆடுதுறை 928
விக்ரமன் ஆற்றுச் சீரமைப்பு, மாயூரம் ஒன்றியம். 651
வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளோர் 1179

கிணறுகள்—

சமுதாயக் கிணறு, பழங்கோவில் கிராமம் .. 663

கிராமங்கள்—

இனாம் கிராமங்கள், ரயத்துவாரியாக மாற்றுதல். 874

கிருஷ்ணன், திரு. ரா—

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்டமுன் வடிவு, 1978 401
சுயாட்சி, மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த.தீ) .. .. 636—647
நோயுற்ற கறவை மாடுகள் இறந்துவிட்டதால், மருந்து இல்லாததால் மாண்டது (வாசுதேவ நல்லூர்) (க. ஈ.) 961
வயலிக்குளம்—மலையடிப்பட்டிகுளம், வெட்டுதல் 874—875

கு—தொடர்ச்சி.

பக்கங்கள்

குடிநீர்—

குழாய்கள், குடிநீர் வடிகால் வாரியம் வாங்குதல், விவரம் .. ..1160—1161
கொடிவேரி குடிநீர்த் திட்டம், விரைவு படுத்துதல்.1198—1199
கோமான் கிராமம் 664
சிறுவாணித் திட்டம், பயன்பெறும் கிராமங்கள். 1199—1201
சேலம் 915
பேரூரில் குடிநீர் வசதி .. .. ..1182—1183
பார்வதிபுரம், குட்டை அமைப்புத் திட்டம் .. 1205
தன்னும்பட்டினம் கிராமம் .. .. .. 665—666
வட ஆண்டிபட்டு கிராமம் 1223

குழந்தைவேலு, திரு. ப—

துணை வினா ஒன்றிற்கான விடைக்குத் திருத்தம் (அ.) 948
புகளூர் சர்க்கரை ஆலை விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது (க.ஈ.அ.) ..1288—1289
புகையான் நோயினால் பயிர், பாதிப்பு, நெல்லிக் குப்பம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் வட்டங்கள் (க.ஈ.அ.) .. .. .. 964—967

குழு—

உறுதிமொழி:
முதல் அறிக்கை, அளித்தல் 1291

குளங்கள்—

பார்க்க-நீர்ப்பாசனம் .. .. 874—875

குறுகிய கால விவாதம்—

அத்தியாவசியப் பொருள்கள் விலை ஏற்றம், நடவடிக்கைகள் .. ..1078—1112

கூட்டுறவு—

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்திக் கழகம், ஒப்பந்தம் அமுல் செய்யாதிருப்பது பற்றி .. ..1186—1187
தண்டராம் பட்டு கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், செயல்படுதல் குறித்து 1208
விவசாயக் கடன் சங்கங்கள், அமைப்பது குறித்து. 1185

பக்கங்கள்.

கைத்தறிகள்—

குடியாத்தம் கைத்தறி கூட்டுறவு சங்கம், கோரிக்கைகள் மீது நடவடிக்கை .. .. .. 899—905

கைவினைஞர்கள்—

பிற்படுத்தப்பட்டவர்கள், உதவித்தொகை .. 923

கோதண்டராமன், திரு. வி. கே.—

அரக்குத் தொழிற்சாலை, உற்பத்தி குறித்து .. 1202

எலி ஒழிப்பு, தஞ்சை .. 924

ஏரிகள், வட ஆற்காடு மாவட்டம் .. 1214

கதர்—கைத்தொழில் வாரியம், பயிற்சித் திட்டம் .. 905—908

கலப்புத் திருமணத் தம்பதிகள், வேலைவாய்ப்பு .. 910—911

கால்நடைகள், செயற்கை முறை இன விருத்திப் பணி .. 1202—1203

காவலர் கடமை .. 1211

காவல் நிலையங்கள், எண்ணிக்கை .. 660

குளங்கள், வடாற்காடு மாவட்டம். .. 1221

கூட்டுறவுக் கடன்களுக்கான, வட்டி .. 1184

கைத்தறி கூட்டுறவுச் சங்கம் (குடியாத்தம்) கோரிக்கைகள் மீது நடவடிக்கை .. 899—905

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் சிறைகளைப் பார்வையிடல் .. 1191

தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் .. 1222

துப்பறியும் நாய்ப்படைப்பிரிவு .. 1211—1212

நீக்கப்பட்ட பொறியாளர், வேலை கொடுத்தல் (க. ஈ.) .. 952

கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன், திரு. வி.

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். .. 242, 244, 245, 246, 247, 248

பக்கங்கள்.

கோபாலன் திரு. போ—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். .. 388

கோவிந்தாசன், திரு. சி—

யூனியன் கார்பைட் கம்பெனி தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை (க.ஈ) .. 1280, 1281, 1282, 1283

புகையான் நோயினால் பயிர், பாதிப்பு நெல்லிக்குப்பம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் வட்டங்கள் (க.ஈ.) .. 964, 966, 967

புயல், வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978. .. 1077, 1087

சங்கரய்யா, திரு. என்—

அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல், நிலத்தை பயன்படுத்தல்) சட்ட முன்வடிவு, 1977. .. 1040—1041

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம், .. 322, 328

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1978. 464

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1977 .. 201

பயிரிடு குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 .. 425

புயல், வெள்ளப் பாதிப்புப்பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண சட்ட முன்வடிவு, 1978. .. 1051—1053

பக்கங்கள்.

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. 135—138

வரவு செலவுத் திட்டம், 1977/78 (பொ. வி) .. 976

சட்டம்—

நில உச்ச வரம்புச் சட்டம், எஞ்சிய நிலம் பற்றி.. 1177—1178

சட்டம் ஒழுங்கு—

கொலை வழக்குகள், குமாரப்பாளையம் காவல் நிலையத்தில் பதிவானவை .. 664

நடமாடும் நீதிமன்றம், சென்னையில் பதிவான வழக்குகள் .. 666—667

சட்டமன்றம்—

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒய்வூதியம் அளித்தல் .. 1220

சட்டமுன்வடிவுகள்—

அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல் நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1977.

ஆய்வு—தீ ..1037—1046

பிரிவு-ஆய்வு 1046—1047

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 1047

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1977—

ஆய்வு-தீ .. 205—232

பிரிவு-ஆய்வு .. 232

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 233

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978.

ஆய்வு-தீ .. 444—465

பிரிவு-ஆய்வு
நிறைவேற்றல்(தீ)
நிறைவேறறம் } .. 465

பக்கங்கள்

சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1977.

ஆய்வு-தீ .. 233

பிரிவு ஆய்வு .. 233—234

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } . 234

ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு, 1977

ஆய்வு-தீ. .. 234—235

பிரிவு ஆய்வு
நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 235

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1977

ஆளுநரின் இசைவு .. 465

ஆய்வு-தீ
பிரிவு-ஆய்வு } .. 466

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 467

கடன் நிவாரணச்சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978—

ஆய்வு-தீ .. 382—412

பிரிவு-ஆய்வு .. 412—421

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 421

திருத்தம் ஏதுமின்றி ஏற்புபற்றி மேலவையிலிருந்து செய்தி .. 931

கேளிக்கைவரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன் வடிவு, 1978

ஆளுநரின் இசைவு 597

கோயமுத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு—

ஆய்வு-தீ .. 203

பிரிவு-ஆய்வு .. 203—204

நிறைவேற்றல் (தீ)
நிறைவேற்றம் } .. 204

பக்கங்கள்

சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1977
- ஆய்வு—தீ 181
- பிரிவு-ஆய்வு .. .. 181—182
- நிறைவேற்றல் (தீ) / நிறைவேற்றம் 182

தனியார் மருத்துவ மனை ஊழியர்கள் பாதுகாப்புச்சட்ட முன்வடிவு, 1978 (தனியார் அலுவல்) அறிமுகம் 598

நகர்ப்புற நில (உச்சவரம்பு ஒழுங்கு முறை ரத்து செய்யும் சட்ட முன்வடிவு, 1979) (தனியார் அலுவல்) அறிமுகம் .. 598

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு, 1977—
- ஆய்வு—தீ .. .. .. 183— 20
- பிரிவு—ஆய்வு .. .. 201—202
- நிறைவேற்றல் (தீ) / நிறைவேற்றம் .. 202

நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு, 1978
- ஆளுநரின் இசைவு / அறிமுகம் 1036

நிலநீர் (கட்டுப்பாடு முறைபடுத்தல்) சட்ட முன் வடிவு 1977 கூட்டாய்வுக்குழு அமைப்பது குறித்து ஆய்வு 1049—1050

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1978
- ஆய்வு—தீ .. .. 421—443
- பிரிவு—ஆய்வு .. 443—444
- நிறைவேற்றல் (தீ) / நிறைவேற்றம் 444

பக்கங்கள்

சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு 1978
- அறிமுகம் .. 381
- ஆய்வு—தீ .. 1051—1077
- பிரிவு—ஆய்வு .. 1077—1078
- நிறைவேற்றல் (தீ) / நிறைவேற்றல் .. 1078

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977
- ஆய்வு தீ 134—180
- பிரிவு—ஆய்வு / நிறைவேற்றல் (தீ) / நிறைவேற்றம் .. 180

மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978
- அறிமுகம் .. 974

சண்முகம், திரு. கூத்தகுடி. ச—
- அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தெரிவிக்கும் தீர்மானம் 93—101, 243, 357, 361, 362, 363, 369, 370, 373, 731, 738, 842—843
- உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. 453—464
- ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 .. 205—207, 222, 230
- புயல், வெள்ளப்பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன் வடிவு, 1978 ..1057—1059
- ரயில்வே கூப்பன்கள், ரத்து செய்யப்பட்டவை திரும்பத்தராமை (த.கோ.) .. 1232

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சண்முகம், திரு. ப. உ. ச.—
அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப் படுத்துதல், நிலத்தை பயன்படுத்துதல்) சட்ட முன் வடிவு, 1977 .. 1037—1039, 1045—1077
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 376, 377, 482—494, 700, 706—708, 709, 767
தெளிப்பு முறைப் பாசனத் திட்டம் செயல் படுத்துதல் (அ. வி.) .. 1116, 1117–1118
முரசொலி நாளிதழ் ஓர் தறுப்பினர் பேசியதைத் திருத்தி வெளியிட்டமை (உ.பி.) .. 672, 673

சதாசிவம், திரு. செ.—
உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978. .. 450
தெளிப்பு முறைப் பாசனத் திட்டம் செயல் படுத்துதல் (அ. வி.) ..1118–1119
புகளூர் சர்க்கரை ஆலை விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது (க. ஈ.) .. 1288, 1290
புயல், வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன் வடிவு, 1978 .. 1069–1071

சந்திரன் ஜெயபால், திரு. இரா. ஏ.—
தியாகராச சாலை அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து (ஓ.வை.தீ.) 1250–1251

சம்பளம்—
நிலநீர்ப் பிரிவு வேலைநிதி ஊழியர் குறித்து .. 1153–1154
படிப்பிப்போர்கள், செய்முறை விளக்குநர்கள் சம்பளம் பற்றி .. 1190

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சமரசம் டாக்டர். கே.—
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 299
சுயாட்சி மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த.தீ) 633—636
பட்டு உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு .. 1207

சமூக நலம்—
கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டோர் .. 1221
கலப்புத் திருமணம் ஊக்குவிக்கும் திட்டங்கள் .. 910
கலப்புத் திருமணத் தம்பதிகள், வேலை வாய்ப்பு ..910—911
தொழுநோய் பிச்சைக்காரர்கள் ஒழிப்பு பற்றி .. 1189
பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் 917

சரஸ்வதி, செல்வி பி.டி.—
நோயுற்ற கறவை மாடுகள் மருந்து இல்லாததால் மாண்டது வாசுதேவநல்லூர் (க. ஈ. அ.) 963, 964

சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.—
ஆசிரியர்கள், வேலை வாய்ப்பு நிலைமை 883—891
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 214

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—
அகதிகள் கோவையில் வீடுகள் .. 1172–1173
அரசு ஊழியர்கள், குடியிருப்பு வசதி 928
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 373, 753—754
உடற் பயிற்சிக் கல்வி, லோயர் கிரேடு நீக்கம் 894
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1977.. 213
கல்லூரிகளில் பாடமொழிகள் .. .. ..1216—1217
கிண்டியில் குத்தகைக்கு விடப்பட்ட நிலம் 1155—1156
கேளிக்கை வரி குறித்த அறிக்கை .. 1183
கோதுமை விலை 1222
கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு, 1977 204

ச—தொடர்ச்சி.

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—தொடர்ச்சி.

பக்கங்கள்

கோழிப் பண்ணைகள் 1223
சுயாட்சி, மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த.தீ.) 599—614
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1977 .. 188
படிப்பிப்போர்கள், செய்முறை விளக்குனர்கள் சம்பளம் பற்றி 1190
பல்கலைக் கழகங்கள், கோவை, திருச்சியில் துவக்குதல் 922
மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1977 .. .. 151—153
வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) ..1003—1010

சாலைகள்—
அகலப்படுத்தல், மரங்களை அகற்றுதல் ..1166—1169
இணைப்புச் சாலைகள், நீலகிரி மாவட்டக் கிராமங்கள் 912
கோவில்பட்டி—பசுவந்தினை சாலை சீர்செய்வது குறித்து .. ..1165—1166
பராமரிப்பு 1212

சிறை—
சிறைக் காவலர் ஊதியம் .. 1228
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிடல் 1191

சுங்கம்—
கொள்ளிடம் பாலம், ஆணிக்காரன் சத்திரம் .. 651—652

சுந்தரராஜ், திரு. நா.—
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 49-57, 845
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 231
திருக்களம்பூரில் பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதி .. .. 1209—1210

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

சுப்பிரமணியம், திரு. எஸ்.—
எடமச்சி கால்வாய்த் திட்டம் 1210

சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு.—
அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. .. 108—112

சுப்பிரமணியம், திரு. கே. ஜே.—
மருந்தகம், சந்தவாசல் ஒன்றியம் அரசு மேற்கொள்ளுதல் 1206

சுப்பிரமணியன், திரு. ஒ.—
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 .. .. 220—222
கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி மாணவர்கள் வேலை நிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து .. .. ..1256—1257

சுப்பிரமணியன், திரு. மா.—
'அலை ஓசை' நாளிதழ், அவை நிகழ்ச்சிகளைத் தவறாக வெளியிட்டிருத்தல் (உ.பி.) ..1237—1238
காகித ஆலை, கள்ளக்குறிச்சியில் 1209
சின்னசேலம் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கட்டடம் 1189
சைக்கிள், இருவர் செல்லுதல் 912
தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பொதுப் பணித் துறை நிதி .. .. ..1196—1197
வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ளோர், தென்னாற்காடு 658

சுப்ரவேலு, திரு. கா.—
பாலம், உப்பனாற்றின் குறுக்கே 1195
பொறியியற் கல்லூரி, மாணவர்கள் தேர்வு ..1156—1159
மேல்நிலைக் குடிநீர் தொட்டிகள், தன்னும் பட்டினம் ஊராட்சி .. .. .. 665—666

பக்கங்கள்

சுப்பு, திரு. க.

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு.வி.) 1112

அலை ஓசை நாளிதழ் ஓர் உறுப்பினர் பேசியதைத் தவருக வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவித்தது குறித்து (உ.பி.) .. ..1248—1250

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 341, 344, 347, 348, 350, 351, 352, 355, 696, 697, 755, 790

உரிமைப் பிரச்னை, எழுப்புவது மறுக்கப்பட்டது (ஓ.பி.) 972, 973

உரிமைப் பிரச்சினை, குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குப் பிறகும் அனுமதிப்பது குறித்து 1047

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 .. .. 446, 449

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்டமுன்வடிவு, 1978 .. .. .. 413, 416

சுயாட்சி, மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த.தீ.) .. 599—647

தாம் ஆற்றிய உரையில் செய்யப்பட வேண்டிய திருத்தம் குறித்து (த.வி.) 671

நகர்புற நில (உச்சவரம்பு ஒழுங்குமுறை) ரத்து செய்யும் சட்ட முன்வடிவு, 1978 .. 598

நியாய விலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும் (அ.வி.) 1136-1137

புயல் வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. .. 1064-1066, 1076

சுப்புலட்சுமி, திருமதி—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 295

சுரங்கப் பாதைகள்—

சென்னை நகரில் அமைத்தல் 1195-1196

பக்கங்கள்

சுவாமிதாஸ், திரு. அ.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 74—84, 86—87, 782

நியாயவிலைக் கடைகள், அரிசி ரகமும் விலையும் (அ.வி.) 1127-1128, 1134

சுற்றுலா—

மாளிகை —

பிச்சாவரம், சுற்றுலா மையமாக்கல் .. 923

கல்லணை 1213

செங்கோட்டையன், திரு. கு. அ. —

கொடிவேரி குடிநீர்த் திட்டம், விரைவுபடுத்துதல் 1198-1199

மருத்துவமனை, சத்தியமங்கலம், விரிவுபடுத்துதல் 1198

செல்லப்பா, திரு. அ.—

இந்திய நிர்வாகப் பணி பயிற்சி நிலையம், சென்னை 1161-1164

உயர்நிலைப் பள்ளிகள் (நலத்துறை), தஞ்சை .. 653—654

குறுவை சாகுபடி, புதுரக நெல் 930

விவசாயக் கல்லூரி, தஞ்சைக்கு 930

செல்வராசன், திரு. அ. —

அரசினர் மகளிர் கல்லூரி (வட சென்னை), வசதிகள் .. .. 929—930

சைக்கிள், இருவர் செல்லுதல் 912

திரைப்படக் கொட்டகைகள் (சென்னை) குளிர் சாதன வசதி செய்தல் .. .. .. 652—653

பஸ் நிலையம், தங்கசாலை வசதிகள் 929

மின்வெட்டு, வீடுகளுக்குச் சலுகைகள் .. 929

செல்வராஜ், திரு. மு.—

கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1978 390

கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றை செலுத்த அரசு உத்திரவாத வரையரையை உயர்த்துதல் (த.தீ.) .. 468

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

செல்வராஜ், திரு. மு.—தொடர்ச்சி

நியாயவிலைக் கடைகள் 1226-1227

நெல், அரிசி, அரசு தரப்பில் உள்ளவை .. 1227-1228

விருத்தாசலம் நகராட்சி, தனி அதிகாரி பதவி பற்றி 1191-1192

சௌந்திரபாண்டியன், திரு. பெ.—

தியாகராசர் சாலை அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணுவிரதம் குறித்து (ஒ.தீ.) 1252-1254

சௌந்திரராஜன், திரு. மு. ரா.—

கொலை வழக்குகள், குமாரபாளையம் காவல் நிலையத்தில் பதிவானவை 664

சௌந்திரராஜன், திரு. திருச்சி, ஆர்.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 288

ஞ

ஞானசிகாமணி, திரு. கே.—

உயர்நிலைப் பள்ளி, கட்டடம் கடையல் .. 1209

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) 1010—1012

த

தகவல் கோரல்—

உறுப்பினர்களது தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுதல் .. .. ..1229—1232

சித்தனுபுரம் கிராம அரிசனங்கள் தாக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டிருத்தல் பற்றிய தீர்மானம் ..1260—1264

பஸ் பாஸில் உள்ள தேதிக்கும் உறுப்பினர் அடையாள அட்டையிலுள்ள தேதிக்கும் உள்ள முரண்பாடு 1229

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து .. 1236-1237

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தகவல் கோரல்—தொடர்ச்சி.

முதலமைச்சரின் அமெரிக்க சுற்றுப்பயணம் குறித்து பத்திரிகைச் செய்தி 1232-1233

ரயில்வே கூப்பன்கள், ரத்து செய்யப்பட்டவை திரும்பத் தராமை 1232

தலைவர் —

அறிவிப்பு—

உறுப்பினர்கள் இரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றி 709

வேளாண்மைப் பல்கலைக்கழகம், நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல் 481

பேரவை அலுவல் குறித்து .. .. 321, 647—648

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப் பெறும் சொற்கள்—

''அப்படி விட்டுவிட முடியாது'' என தலைவரின் தீர்ப்பை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது 'முடியாது என்று சவால் விட்டு உறுப்பினர் பேச முடியாது, முடியாது என்று சொல்வதே தவறு' எனக் குறிப்புரைத்தார். .. 969

''ஆபீசர்கள் எடுத்துக் கொடுப்பதைத் தாங்கள் படிக்கிறீர்கள்'' என ஓர் உறுப்பினர் தலைவரைப் பார்த்து குறிப்பிட்டபோது ''அப்படிப் பேசுவது தவறு; முறையல்ல; அப்படிப் பேசக் கூடாது'' என தலைவர் எச்சரித்தார் 973

'எதிர்க்கட்சியினர் மரபுகளை மீறுகிற அளவிற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதன் மூலம் தங்கள் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்' என ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்தை மற்றோர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது பேரவைத் தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

ச—தொடர்ச்சி.

பக்கங்கள்

செல்வராஜ், திரு. மு.—தொடர்ச்சி

நியாயவிலைக் கடைகள் 1226-1227

நெல், அரிசி, அரசு தரப்பில் உள்ளவை .. 1227-1228

விருத்தாசலம் நகராட்சி, தனி அதிகாரி பதவி பற்றி 1191-1192

சௌந்திரபாண்டியன், திரு. பெ.—

தியாகராசர் சாலை அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து (ஒ.தீ.) 1252-1254

சௌந்திரராஜன், திரு. மு. ரா.—

கொலை வழக்குகள், குமாரபாளையம் காவல் நிலையத்தில் பதிவானவை 664

சௌந்திரராஜன், திரு. திருச்சி, ஆர்.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 288

ஞ

ஞானசிகாமணி, திரு. கே.—

உயர்நிலைப் பள்ளி, கட்டடம் கடையல் .. 1209

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) 1010—1012

த

தகவல் கோரல்—

உறுப்பினர்களது தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுதல் .. .. ..1229—1232

சித்தனுபுரம் கிராம அரிசனங்கள் தாக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டிருத்தல் பற்றிய தீர்மானம் ..1260—1264

பஸ் பாஸில் உள்ள தேதிக்கும் உறுப்பினர் அடையாள அட்டையிலுள்ள தேதிக்கும் உள்ள முரண்பாடு 1229

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து .. 1236-1237

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தகவல் கோரல்—தொடர்ச்சி.

முதலமைச்சரின் அமெரிக்க சுற்றுப்பயணம் குறித்து பத்திரிகைச் செய்தி 1232-1233

ரயில்வே கூப்பன்கள், ரத்து செய்யப்பட்டவை திரும்பத் தராமை 1232

தலைவர்—

அறிவிப்பு—

உறுப்பினர்கள் இரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றி 709

வேளாண்மைப் பல்கலைக்கழகம், நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல் 481

பேரவை அலுவல் குறித்து .. .. 321, 647—648

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

அவையில் பயன்படுத்தப் பெறும் சொற்கள்—

"அப்படி விட்டுவிட முடியாது" என தலைவரின் தீர்ப்பை ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது 'முடியாது என்று சவால் விட்டு உறுப்பினர் பேச முடியாது, முடியாது என்று சொல்வதே தவறு' எனக் குறிப்புரைத்தார். .. 969

"ஆபீசர்கள் எடுத்துக் கொடுப்பதைத் தாங்கள் படிக்கிறீர்கள்" என ஓர் உறுப்பினர் தலைவரைப் பார்த்து குறிப்பிட்டபோது "அப்படிப் பேசுவது தவறு; முறையல்ல; அப்படிப் பேசக் கூடாது" என தலைவர் எச்சரித்தார் 973

'எதிர்க்கட்சியினர் மரபுகளை மீறுகிற அளவிற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதன் மூலம் தங்கள் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்' என ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்தை மற்றோர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது பேரவைத் தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

அவையில் பயன்படுத்தப்படும் சொற்கள்—தொடர்ச்சி.

''கனம் உறுப்பினர், அவரது உரிமையின்படி பேசியதால் அதில் தவறு ஒன்றும் இல்லை; நான் அதை அனுமதிக்கிறேன்''. .. 321

''சந்தி சிரிக்க நிற்கிறீர்கள்'' என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, மற்றோர் உறுப்பினர் ஆட்சேபம் தெரிவித்தபோது, பேரவைத்தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''இன்னார், இந்தக் கட்சி சந்தி சிரிக்க நிற்கிறது என்று சொல்லவில்லை; பொதுப் படையாகத்தான் சொன்னார்'' .. .. 253—254

''தெரியும் எனக்கு, சும்மா இருங்கள்'' என்றும் ''எனக்குத் தெரியும் உங்களைவிட; போங்கய்யா'' என்றும் ஓர் உறுப்பினர் அவைத் தலைவரைப் பார்த்து பேசியதைக் கண்டித்து தலைவர் அளித்த குறிப்புரையாவது:—

''தலைவரின் அனுமதியில்லாமல் தாங்களாகவே எழுந்திருந்து எதையாவது பேசுவது முறையில்லை; உட்கார்ந்து கொண்டே கண்ணியமற்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துவதும் முறையற்றது''. 502

'பெரிய கட்சி அல்லது வலுவானவர்கள் சொன்னால்தான் எடுத்துக் கொள்வது என்ற நிலை கூடாது', என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது 'பெரிய கட்சி' 'சின்ன கட்சி' என்றெல்லாம் பேசக் கூடாது, எனத் தலைவர் குறிப்புரைத்தார் 1260

'வெட்டுவது' என்றால் தாக்குவது என்ற பொருளில் ஓர் உறுப்பினர், ''ஒரு வெட்டு வெட்டினார்கள்'' என்று குறிப்பிட்டது, அனுமதிக்கப்பெற்றது 185

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

அண்ணா நாளிதழ் மீது—

அண்ணா நாளிதழ், அவையில் நடைபெற்ற நடவடிக்கையை வெளியிடும்போது, தவறான தலைப்பு கொடுத்து வெளியிட்டுள்ளது அவை உரிமை மீறல் செயலாகும் என ஓர் உறுப்பினர் 7-1-1978 ஆம் நாள் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது 'இது குறித்து தான் தீர விசாரித்து பிறகு தீர்ப்பளிப்பதாக' தலைவர் அறிவித்தார்.

10-1-1978 ஆம் நாளன்று அதன் மீது தீர்ப்பளிக்கையில் தலைவர் குறிப்பிட்டதாவது:—

''வெளியிடப்பட்ட தலைப்பிற்கு வருத்தம் தெரிவித்துவிட்ட காரணத்தால் மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் தேவையில்லை என்று கருதி இத்துடன் முடித்துவிடுகிறேன். பேரவையின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும்போது இம்மாதிரி தலைப்பிடாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.''

''அவை நிகழ்ச்சிகளை அப்படியே பிரசுரித்துவிட்டு ஒவ்வொரு நாளிதழும் தங்கள் கண்ணோட்டத்தில் தலைப்புகள் கொடுத்தால் அது பல கோணங்களில் கொண்டு சென்றுவிடும். மொத்தத்தில் வருத்தம் தெரிவித்துள்ளதால் இப்போது விடப்படுகிறது. எதிர்காலத்தில் பத்திரிகைகள் தங்கள் கண்ணோட்டத்தில் தலைப்புக் கொடுப்பதை நீக்க வேண்டும்''. .. .. .. 1239—1241

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

அலை ஓசை நாளிதழ் மீது—

அலை ஓசை நாளிதழ் ஓர் உறுப்பினரின் பேச்சை வெளியிடுகையில், குறிப்பிட்ட ஓர் பகுதியை வெளியிடாது, திரித்து வெளியிட்டுள்ளது அவை உரிமையை மீறிய செயலாகும் என ஓர் உறுப்பினர் 7-1-1978 அன்று உரிமைப் பிரச்னை ஒன்றை எழுப்பியபோது அன்று, இதுபற்றி தீர விசாரித்து தீர்ப்பளிப்பதாகத் தலைவர் கூறினர்.

''10-1-1978 ஆம் நாளன்று அதன்மீது தீர்ப்பளிக்கையில்பத்திரிகைஆசிரியருக்கு விளக்கம் கேட்டு, இரண்டு கடிதங்கள் எழுதியும் இதுவரை தமக்கு அவரிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை என்றும், உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்துள்ள உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல ஒரு பகுதி விடப்பட்டு, குற்றச்சாட்டு மட்டும் வெளியிடப்பட்டு இருப்பது, இப்பேரவையின் நிகழ்ச்சிகளை வேண்டுமென்றே திரித்து வெளியிடப்பட்ட குற்றத்திற்கு உள்ளாகிறதுஎன்றும்எனவேஇதில்அவைஉரிமை மீறல் குற்றம் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஏற்பட்டுள்ளது என்பதால் இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்'' என்றும் குறிப்பிட்டார்.

இதுபற்றி 9-1-1978 அன்று அப்பத்திரிகையிலேயே திருத்தம் வெளியிட்டிருப்பது பேரவைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பெற்றபோது, ''அதை உரிமைக் குழு பரிசீலிந்து முடிவு செய்யலாம்'' என்று குறிப்புரைத்தார். .. .. .. 674, 1242, 1248—1250

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்னைகள் தொடர்ச்சி.

அலை ஓசை நாளிதழ் மீது—தொடர்ச்சி.

அலை ஓசை நாளிதழ், 5-1-1978 ஆம் நாளன்று அவையில் உணவு அமைச்சர் பேசிய பேச்சைத் தவருக வெளியிட்டது குறித்து உறுப்பினரொருவர் 10-1-1978 அன்று உரிமைப் பிரச்னையொன்றை எழுப்பியபோது, சம்பந்தப்பட்ட நாளிதழ் ஆசிரியருக்கு எழுதிக் கேட்டு பின் தேவையான நடவடிக்கை எடுக்கப் பெறும் என்று குறிப்புரைத்தார் * ..1237—1238

உணவு அமைச்சர் மீது—

குறிப்பிட்ட ஒரு நபருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தவருன முறையில் பட்டு வழங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் கூறியது தவருன தகவல் என்றும் அது அவை உரிமைப்பிரச்னை என்பதன் கீழ் வரும் என்றும் ஓர் உறுப்பினர் 6-1-1978 அன்று எழுப்பிய பிரச்னையையொட்டி முதலில் துறை தமக்கு அளித்த குறிப்பில் 1962 என்பது தவருக 1972 என்று தட்டச்சு செய்யப்பெற்றிருந்த காரணத்தால் தாம் அப்படி தெரிவிக்க நேரிட்டது என்றும், அப்பிழையைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் உணவு அமைச்சர் அறிவித்துள்ளார்கள் என்று அவைக்கு தலைவர் அறிவித்தார். பின்னர் அளித்த தீர்ப்பாவது:

''உரிமை மீறல் பிரச்னைக்கு அமைச்சர் அளித்த அறிக்கையிலுள்ள பிழை அடிப்படையாக அமைய முடியாது. வேண்டுமென்றே அவைக்குத்

*22-2-1978-ம் தேதியன்று தீர்ப்பளிக்கப்பெற்றது.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

உணவு அமைச்சர் மீது—தொடர்ச்சி.

தவறான தகவலைத் தரும் நோக்கத்துடன், உண்மைக்கு மாறான தகவல் தரப் பெற்றிருப்பதாக எடுத்துக் காட்டப் பெறுவதுதான் உரிமைப் பிரச்னை என்பதன் கீழ் வரும். மற்றபடி இதுபோன்ற பிழைகள் உரிமை மீறல் பிரச்னையின் கீழ் வராது." .. 473—476

பொதுப்பணி அமைச்சர் மீது—

பொதுப்பணித் துறை அமைச்சர் மீது ஓர் உறுப்பினர், 41-வது விதியின்கீழ் ஒரு பொருள் இருக்கும்போது, அதுபற்றிய தகவல் ஒன்றை, பேரவையில் இன்றி வெளியே அமைச்சர் கூறலாமா என்பது பற்றி 31-12-1977 ஆம் நாளன்று அவையில் எழுப்பிய உரிமைப் பிரச்னையின் மீது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:—

"இது பொதுவாக ஒரு பாராளுமன்ற முறை என்று எடுத்துக் கொண்டாலும், அதை நாம் மிகக் கண்டிப்பாக கடைபிடிக்க முடியாது. சந்தர்ப்பத்துக்கும் சில சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு பொதுமுறைகளை விதிவிலக்குகளுடன் கடைப் பிடிக்க வேண்டும்."

"உண்ணாவிரதம் இருந்தவர்களுடைய உயிர் ஊசலாடிக் கொண்டு இருந்ததினாலும், எடுத்த முடிவுகள் உடனடியாக மாநிலம் முழுவதும் தெரிவிக்கப் படாவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் அல்லது தொடர் நிகழ்ச்சிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப்பிரச்சினைகள் —தொடர்ச்சி.

பொதுப்பணி அமைச்சர் மீது—தொடர்ச்சி.

வேண்டியிருந்ததாலும் அடுத்த நாள் அவையில் இதைப்பற்றி அறிவிப்பு கொடுப்பதாக இருந்தால் காலதாமதம் ஆகிவிடும் என்பதனாலும் இதைப் பற்றிய முடிவுகள் Press Release Co-ordination Committee மூலமாகத்தான் வெளியிடப்பட்டுள்ளது. அரசுத் தரப்பிலிருந்து எதுவும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

இதில் உறுப்பினர் அவர்களுக்கு 'கிரெடிட்' கிடைக்காமல் போக வேண்டுமென்று செய்யவில்லை என்றும் கூறினார்கள்.

இப்பிரச்னையில் நல்லெண்ணத்தோடு போராட்டம் நடத்துபவர்கள் அப்போராட்டத்தை நிறுத்தி வேறு விளைவுகள் ஏற்படா வண்ணம் இருப்பதற்காகவே அவர்களே அறிவித்துள்ளதால் இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்னையும் இல்லை என்றும் முடிவு கூறுகிறேன்." .. .. ..1238—1239

முதலமைச்சர் மீது—

இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைப் பேரவையில் வைப்பது குறித்து முதலமைச்சர் பேரவைக்குத் தவறான தகவல் தந்ததாகக் கூறி அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்றை ஓர் உறுப்பினர் 7-1-1978 அன்று அவையில் எழுப்பினார். இது குறித்து கட்சித் தலைவர்கள் பேசிய பிறகு, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பின்னர் தலைவர்கள் அளித்த தீர்ப்புரை வருமாறு:—

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

முதலமைச்சர் மீது—தொடர்ச்சி

''முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே எதையும் திரித்துக் கூறவில்லை. ஆகவே அவை உரிமை மீறிய பிரச்சினை இதிலே இல்லை.'' 668—671. 715

முரசொலி நாளிதழ் மீது—

''அமைச்சருடைய உறவினருக்கு அரசாங்க க்ான்டிராக்ட்-சட்டமன்றத்தில் சுப்பு அம்பலப்படுத்தினார்'' என்ற தலைப்பிட்டு ஊழல் நிரூபணமாகிவிட்டது போல், முரசொலி நாளிதழில் செய்தி வெளியிடப்பெற்றுள்ளது அவை உரிமை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் எழுப்பிய உரிமை பிரச்சினைக்கு, இதுபற்றிய தகவலைச் சேகரித்த பிறகு தீர்ப்பளிப்பதாகப்* பேரவைத் தலைவர் கூறினார் .. 480

முரசொலி நாளிதழ் ஓர் உறுப்பினர் பேசியதைத் திரித்து வெளியிட்டுள்ளதாக ஓர் உறுப்பினர் எடுத்துக் காட்டிய போது ''அதுபற்றி எழுத்து மூலமாகக் கொடுத்தால் பின்னர் எடுத்துக் கொள்ளலாம்'' என்று தலைவர் குறிப்புரைத்தார் .. .. .. 671—673

* 22-2-1978-ம் தேதியன்று தீர்ப்பளிக்கப் பெற்றது.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.—

அரசு அலுவலர்கள்—

அவசரகால நிலையின்போது, கட்டாய ஓய்வளிக்கப்பெற்று, திரும்ப வேலைக் கமர்த்தப்படாத ஊழியர்கள் நிலை குறித்து:—

பொதுப்பணித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப் பெற்றது .. .. 941—947

காவல்—

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என். வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப் படுவது குறித்து:

பொதுப்பணித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப் பெற்றது. .. .. 932—941

தொழிற் தகராறுகள்—

நீடில் இன்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் (நீலகிரி—கேத்தி) வேலையிழந்த தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதம் இருப்பது குறித்து:—

தொழிலாளர் நல அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அனுமதி மறுக்கப்பெற்றது .. .. ..1243—1248

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

மாணவர் பிரச்னைகள்—

கால்நடை மருத்துவக் கல்லூரி (வேப்பேரி) மாணவர்கள் வேலை நிறுத்தமும் கல்லூரி மூடலும் குறித்து:—

கைத்தறித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னர் அனுமதி மறுக்கப் பெற்றது .. .. 1254—1259

தியாகராசர் சாலை தி. நகர் அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து:—

அரிசன நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னர் இசைவு மறுக்கப் பெற்றது .. ..1250 – 1254

ஒழுங்குப் பிரச்னைகள்—

அவசரச் சட்டம் குறித்து அவையில் அறிக்கை வைப்பது குறித்து:

'ஆளுநர் அவசரச் சட்டம் போட வேண்டிய சூழ்நிலையை விளக்கி ஓர் அறிக்கையை பேரவை விதி 142–ஏ இன் கீழ் அவசரச் சட்டம் பிறப்பித்ததற்குப் பின் கூடும் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலேயே வைக்காதது முறைதானா', என்று ஓர் உறுப்பினர் 1977 டிசம்பர், 31 ஆம் தேதி எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை ஒன்றுக்கு தலைவர் அளித்த தீர்ப்பாவது:—

''உறுப்பினர் எடுத்துக் காட்டியது விதி 142–ஏ ஆகும். அந்த விதியின்படி அவை முன் ஏற்கனவே ஒரு சட்ட முன்வடிவு ஆய்வில் இருந்து, அவ்வாறு ஆய்வில் இருக்கும் சட்ட முன்வடிவின் பகுதிகளை

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

உள்ளடக்கியோ அல்லது அதை வேறு விதமாக மாற்றியோ ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டிருந்தால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அவசரச் சூழ்நிலையை விளக்கி ஒரு அறிக்கையை சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடும் கூட்டத் தொடரின் ஆரம்பத்திலேயே வைக்க வேண்டும்.

பேரவை விதி 91–ஏ இன்படி அவசரச் சட்டத்திற்குப் பதில் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தும்போது அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அவசரச் சூழ்நிலையை விளக்கி அறிக்கையை அவைமுன் வைத்தால் போதும்.

இப்போதுள்ள அவசரச் சட்டங்கள் அவைமுன் ஏற்கனவே உள்ள சட்ட முன்வடிவுகளுக்குப் பதிலாகக் கொண்டுவரப் படுபவை அல்ல.

இவை புதிய சட்டங்கள். ஆகவே உறுப்பினர் எடுத்துக் கூறிய பேரவை விதி 142–ஏ இதற்குப் பொருந்தாது, விதி 91–ஏ தான் சரியான விதியாகும்.

ஆகவே அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய சூழ்நிலையை விளக்கும் அறிக்கைகளை, சட்ட முன்வடிவுகள் அறிமுகம் ஆகும்போது அவைக்கு வைத்தால் போதும்.

எனவே, அவையின் முறைகள் எதுவும் மீறப்பெறவில்லை என்றும், எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு ஆதாரம் ஒன்றுமில்லை எனவும் முடிவு செய்கின்றேன்''. 132—134

தலைவர்—தொடர்ச்சி. **பக்கங்கள்**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

அறிவிப்பு கொடுக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை ஒரு ஒழுங்குப் பிரச்னைமூலம் வலியுறுத்தி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவையில் இல்லையென்றாலும் வேறு அமைச்சர் பதில் சொல்லலாமென்றும் சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தபோது தலைவர் பின் வருமாறு தீர்ப்புரைத்தார்:

"என்னுடைய கடமையெல்லாம், சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு அனுப்பி, சீக்கிரமாகத் தகவல் வந்தால், அவைகளை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதுதான். அரசுத் தரப்பிலே இருந்து இன்னும் பதில் வரவில்லை. அமைச்சர் அறிக்கை தயாரித்து வைத்திருந்தால் மற்ற அமைச்சர்களைப் படிக்கச் சொல்லலாம். ஆனால் அவர்கள் அப்படித் தயாரித்து வைத்திருக்கிறார்களா இல்லையா என்பது யாருக்குத் தெரியும்?"

விதிகளில் இத்தனை நாட்களுக்குள் பதில் கொடுக்க வேண்டுமென்று தெளிவாக இல்லை. நான் பல அமைச்சர்களுக்கும் பல இலாகாக்களுக்கும் உடனடியாகப் பதில்களைத் தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன் விவரங்கள் சேகரிக்கப்பட்டு எனக்கு வராமல் இருப்பதற்கு நான் பொறுப் பாளியல்ல 1260–1264

ஒருவரது கட்சியைப் பற்றி கூறியதற்காக ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது. உறுப்பினர் பேசும் போது தவறாகப் பேசினால், விதிகளுக்கு மாறாகப் பேசினால் ஒழுங்குப் பிரச்னை எழுப்பலாம் .. 1305

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

'யார்-எவர்' வெளியீட்டில் ஓர் உறுப் பினரின் கட்சி பற்றி தவறாக அச்சிடப் பெற்றுள்ளது குறித்து:

"வேண்டுமென்றால் 'பிழை திருத்தம்' வெளியிடலாம்; இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை" 1233–1235

விவாதத்தின்போது நடக்கிற பிரச்னையாக இருந்தால்தான் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியும். .. 481

கவன ஈர்ப்புகள்—

அறிக்கையின் மீது விளக்கங்கள்—

உறுப்பினர் கேட்கும் விளக்கங்கள் கேள்வி வடிவத்தில் இருக்க வேண்டும். மற்ற வர்களும் அத்தகைய வாய்ப்பு பெறும் படி சுருக்கமாக அமைதல் வேண்டும்; விவாதமாக இருத்தல் கூடாது. .. 1268, 1271, 1287

தகவல் கோரல்—

அறிவிப்பு கொடுக்கப்பெற்ற பிரச்னைகள் குறித்து தகவல் பெற விரும்பினால் அது பற்றி அவையிலே கேட்கக் கூடாது—அறையிலே வந்து கேட்கலாம்—அவை யிலே கேட்கும்பொழுது கூட அது என்ன ஆயிற்று என்று கேட்கலாமே தவிர அந்தக் குறிப்பிட்ட விஷயத்திற்குள் போகக் கூடாது. 1230, 1262–1264

அனுமதி மறுக்கப்பெற்ற பிரச்னை குறித்து அவையில் எழுப்புவது மரபல்ல. அது பற்றி தலைவரின் அறையிலே விவாதிக்க லாமே தவிர, அவையில் எழுப்பக் கூடாது. 1230–1232

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி.

தகவல் கோரல்— தொடர்ச்சி.

தம்முடைய ரயில்வே பாசில், தம் மனைவியையும் உடன் அழைத்துச் செல்லலாம் என விதி இருந்தும், ரயில்வே அதிகாரிகள் தமக்கு அதுபோல அரசிடமிருந்து உத்தரவு வரவில்லை என மறுப்பதாக ஓர் உறுப்பினர் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது,

"இதைப்பற்றி கவனித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படும்" என்று குறிப்புரைத்தார் .. 1237

'பேருந்து' பயணச் சீட்டுடன் அடையாளச் சீட்டையும் உறுப்பினர்கள் காண்பிக்க வேண்டுமென்று விதியில் சொல்லப் பெற்றிருப்பது குறித்து ஓர் உறுப்பினர் ஆட்சேபனை எழுப்பியபோது,

"தாங்கள் யார் என்பது அவைக்குத் தெரியும், தொழிலாளர்களுக்கு எப்படித் தெரியும்? இந்த நடைமுறை பற்றி பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று தலைவர் குறிப்புரைத்தார் .. 1235-1236

முதல்வர் அமெரிக்க சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருப்பது பற்றி பத்திரிகையில் செய்தி வந்துள்ளது குறித்து ஓர் உறுப்பினர் தகவல் கோரியபோது:

"முதலமைச்சர் அவர்களின் சுற்றுப் பயண விவரங்கள் பற்றிய தகவல் அவர்கள் முடிவு எடுத்து போகிற நேரத்தில் நிச்சயம் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும். இது மரபு கூட. அனுப்பாமல் இருப்பது கிடையாது. நிச்சயமாக அது பின்னால் உறுப்பினர்களுக்கு வந்து சேரும்" என்று தலைவர் குறிப்புரைத்தார் .. 1232-1233

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

ரத்து செய்யப்பெற்ற ரயில்வே கூப்பன்களைத் திரும்பத் தராதது பற்றி ஓர் உறுப்பினர் அவையில் தகவல் கோரியபோது:

"இத்தகைய சின்ன பிரச்னைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்தே தீர்த்துக் கொள்ளலாம். அதிகாரிகளிடம் தெரிவித்தும் தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில் அதுபற்றி எழுப்ப வேண்டிய கடைசி இடம் அவை" என்று தலைவர் தீர்ப்புரைத்தார் 1232

நடைமுறைகள்—

அடிக்கடி உரிமைப் பிரச்னைகள் எழுப்பப் பெறுவது குறித்து:

"இரு தரப்பிலிருந்தும் உரிமைப் பிரச்னைகள் கொடுக்கப்படுவதை கொடுக்க வேண்டாம் என்று சொல்ல முடியாது. எனினும் தலைவர்கள் எல்லாம் கூடி ஒரு முடிவு எடுத்து, இப்படி களங்கம் கற்பிக்கிற முறையில் குற்றம் சாட்டுகிற முறையில் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தால், முதலிலே கட்சித் தலைவரைக் கலந்து கொண்டு பிறகு பேரவைத் தலைவரைக் கலந்து கொண்டு உரிமைப் பிரச்னை கொடுக்கலாம் என்றால் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" .. 1241

அண்மையில் நடைபெற்றது அல்ல என நிராகரிக்கப் பெற்ற உரிமைப் பிரச்னை குறித்து:

அவை நிகழ்ச்சியை திரித்து வெளியிட்ட ஒரு நாளிதழ் மீது கொண்டு வரப்பெற்ற உரிமைப் பிரச்னையை 'ரீசன்ட் அக்கரன்ஸ்' அல்ல என்று காரணங்காட்டி, அனுமதி மறுக்கப் பெற்றிருப்பது சரியல்ல என்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

" இந்த அவையின் மரபாக நீண்ட நாட்களாக கடைப்பிடித்து வந்திருக்கின்ற ஒன்று என்னவென்றால், ஒருநாள் தள்ளினாலும் கூட, அது உரிமைப்பிரச்னை என்று கிளப்புவதற்கில்லை. அதிலும் ஏற்கனவே ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

" A question of privilege should thus be raised by a member at the earliest opportunity and should require the interposition of the House. Even a delay of one day might prove fatal to the notice of the privilege, provided the specific matter sought to be raised was of urgent importance at a particular time."

மேலும், மேஸ் பார்லிமென்டரி பிராக்டீஸிலேயும்,

' ....the Speaker requires to be satisfied both that privilege appears to be sufficiently involved to justify him in giving such precedence (or, as it is sometimes put, that there is a *primafacie* case that a breach of privilege has been committed); and also that the matter is being raised at the earliest opportunity '

எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

பேரவை விதியிலும் The alleged breach of privilege must refer to a matter of recent occurrence என்று இருக்கிறது. ஒருநாள் இதிலே டிலே இருந்தாலும், உரிமைப் பிரச்னை கிளப்ப முடியாது. எனவே இந்த உரிமைப் பிரச்னையை அனுமதிப்பதற்கில்லை" 968—971

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்—தொடர்ச்சி.

" அவையில் பேசக்கூடிய பேச்சின்மேல் உரிமைப் பிரசினை எழுப்புவதாக இருந்தால் தலைவர் கூறியது போல் செய்ய வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளலாம் என்றும், பத்திரிகையில் வரும்போது, அது தங்கள் கவனத்திற்கு உடனடியாக வரும் என்று கருதுவதற்கில்லையாதலால், வரும்போது தான் எழுப்ப நேரிடுகிறது என்றும், இது போல பத்திரிகையில் தவறாக வந்துள்ள தன் மேல் அந்தக் கூட்டத் தொடரில் இல்லாது, அதற்கு அடுத்த கூட்டத் தொடரில் உரிமைப்பிரச்னை கொண்டு வந்துள்ள நடைமுறையுள்ளதாகவும், எனவே எதிர்காலத்திலாவது பத்திரிகை மேல் கொண்டுவரும் உரிமைப் பிரச்னைக்கு மறுநாளே எழுப்ப வேண்டுமென்ற கட்டுப்பாடின்றி தாராளமாக அனுமதி அளிக்க வேண்டும்" என ஓர் உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

" நான் கொடுத்த தீர்ப்பு முடிவானது ; எதிர்காலத்தில் இப்படிப்பட்டவைகளை முறைப்படுத்த, உறுப்பினர்களுடைய உரிமைகள் பறிபோகாமல் காப்பாற்ற, உறுப்பினருடைய கருத்துக்கள் ஆலோசிக்கப்படும்" 1048, 1049

' ஒரு நாள் தள்ளினாலும் உரிமைப் பிரச்னை எழுப்ப அனுமதிக்க முடியாது ' எனத் தலைவர் அளித்த தீர்ப்பையொட்டி, 'வேறோர் சமயத்தில் நான்கைந்து நாட்கள் கழித்துக்கூட உரிமைப் பிரச்னை எழுப்புவதற்கு அனுமதியளிக்கப்பெற்றிருக்கிறதே', என்று எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் கேட்டபோது

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடை முறைகள்—தொடர்ச்சி.

''வேறோர் சமயத்தில் எழுப்பப்பெற்ற பிரச்னையில் உயிர் இருந்துகொண்டிருந்தது என்றும் அதற்கு அப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பெற்றிருக்கவில்லை என்றும் ஆனால் இப்பிரச்னையில் அவ்வாறு இல்லை என்றும் இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்றும் தீர்ப்புரைத்தார்'' .. 971—972

கவன ஈர்ப்பு அறிக்கைகள்—

ஒன்பது கவன ஈர்ப்புகளுக்கான அறிக்கை அவையில் அளிக்க வேண்டிய நிலை, கூட்டதொடரின் கடைசி நாள் ஏற்பட்டதால் தலைவர் நேரத்தைக் கருதி அளித்த குறிப்புரையாவது :

''கவன ஈர்ப்பு அறிக்கைகளை அமைச்சர்கள் படிக்காமல் மேசை மீது வைத்துவிட்டால், உறுப்பினர்கள் படித்துவிட்டு அதன் மேல் கேள்வியை மட்டும் கேட்பது நல்லது'' 1137

சட்ட முன்வடிவுகள்—

அவசரச் சட்டத்திற்கான சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு முன்னதாக அவசரச்சட்டத்தை ஏற்க மறுக்கும் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென உறுப்பினர் வலியுறுத்தியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்பளித்தார்.

''அமைச்சர் அவர்கள் விளக்கத்தை முதலில் சொல்லட்டும். வோட்டு எடுக்கும் போது அப்படிச் செய்யலாம்'' .. 1329

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி:

நடைமுறைகள்—தொடர்ச்சி.

துணை நிதி அறிக்கை—

வெட்டுத் தீர்மானங்கள் முறைப்படி எடுத்துக் கொள்ளப்பெற்ற பின்னரே பொது விவாதம் தொடங்கப் பெற வேண்டுமென்றும் அப்படி வெட்டுத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பெறாமல் விவாதத்தை நீட்டிக்க வேண்டுமென்றால் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே நீட்டிக்கலாமென்றும் ஓர் உறுப்பினர் சுட்டிக் காட்டியபோது மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்ற பிறகு வெட்டுத் தீர்மானங்கள் வர இருக்கின்றன ;

மானியக் கோரிக்கைகள் முன்னதாக முன்மொழியப்பெற்று, பிறகுதான் வெட்டு தீர்மானங்கள் வரும். எல்லா மானியங்களும் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு 'கில்லட்டின்' ஆகும். எனவே, எதிர்க் கட்சித் தலைவர்கள் சேர்ந்து பொது விவாதத்தை 12-30-க்குள் முடித்துக்கொண்டால் மானியம், வெட்டுத் தீர்மானம் என்று எடுத்துக்கொள்ளலாம். பொது விவாதமே 1-00 மணி வரை தொடருமானால், அதற்குப் பின் 'கில்லட்டின்' அப்ளை செய்யப்படும் என்று தலைவர் குறிப்புரைத்தார் .. 995—996

விவாதம்—

அவசரச் சட்டத்தை ஏற்க மறுக்கும் தீர்மானம்—

பொதுப்படையாக இப்படிப்பட்டவற்றை அதிகம் விவாதிப்பதில்லை. ஒன்றிரண்டு பேர் பேசிவிட்டு முடிப்பதுதான் வழக்கம். 1328

ஒத்திவைப்புத் தீர்மானம்—

எப்படி அவசர முக்கியமானது என்பதை விளக்குகிற நிலையில், நிகழ்ச்சியைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிய பிறகு அரசின் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமே தவிர இதை ஒரு விவாதமாக்கி விடுதல் கூடாது .. 935

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

ஒழுங்கு—

அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கும் போது உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு சத்தம் போடுவது அழகல்ல. 696

உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவது கூடாது. அதே சமயத்தில் பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் எழுந்து எதையாவது பேசுவது முறையல்ல 344, 363, 501

உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவது கூடாது. எழுந்து நின்று பேச வேண்டும் 106, 514

உறுப்பினர்கள் பேசும்போது தங்களுடைய இடத்திலேயிருந்து பேச வேண்டும் 453

தலைவர் நிற்கும் போது உறுப்பினர்கள் உட்கார வேண்டும் 378

ஒழுங்குப் பிரச்னை—

மறுக்கப் பெற்ற உரிமைப் பிரச்னை பற்றி ஒழுங்குப் பிரச்னை எழுப்பி மேலும் விவரங்களுக்குள் சென்று பேசுதல் கூடாது .. .. .. 968—973

காட்டப்பெறும் பொருள்—

தம்முடைய பேச்சுக்கு ஆதாரமாக அவையில், பொருள்கள் எதையேனும் காட்ட விரும்பினால் தலைவரின் முன் அனுமதி பெற்றுத்தான் காட்ட வேண்டும் 132

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

குறுக்கீடுகள்—

அமைச்சர் பேசுகையில் சொல்வதிலே தவறான கருத்து, மாறான கருத்து ஏதாவது இருந்தால் குறுக்கே எழுந்து சொல்லலாம். விவரத்திற்குள் போகக் கூடாது 697

ஓர் உறுப்பினர் பேசுகையில் குறுக்கிட்டுக் கொண்டே இருக்க வேண்டாம் .. 241

முதலமைச்சர் அவர்கள் பதிலுரையின் போது அவர்கள் சொன்னதை ஏதாவது திருத்த வேண்டும் அல்லது மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் மட்டுமே குறுக்கே எழுந்து விளக்கம் கேட்கலாம். அதற்கு மாறாக குறுக்கே எழுந்து எப்போது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசுவது முறையல்ல ... .. 781—782, 851

குற்றச்சாட்டுகள்—

ஒரு குற்றச்சாட்டை அவையில் ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, அது பற்றிய தகவல்கள் தம்மிடம் இருப்பதாகவும், முதலமைச்சரிடம் தருவதாகவும் தெரிவித்தபோது எழுந்த ஒழுங்குப் பிரச்னைகளின்மீது தலைவர் அளித்த தீர்ப்பாவது :

"இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கூறும்போது, அவற்றுக்கு உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி.

அது பற்றிய ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் முதலமைச்சரிடம் தருவதாகவும், பேசியிருப்பதால், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஆதாரங்களை, தடையங்களை எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்."

"எழுத்து மூலமாகத் தரவேண்டும் என்று சட்டமன்ற விதிகள் எதிலே இருக்கிறது?" என்று எழுந்த குறுக்கீட்டுக்குப் பதிலளிக்கையில்—

"கொடுக்கக் கூடாது என்றும் இல்லை கொடுக்க வேண்டும் என்பது அவைத் தலைவர் உத்தரவு. அவைத் தலைவர் சொல்வதுதான் முடிவு" என்று தீர்ப்பு கூறினர் .. .. 263—270, 378—381

குறிப்பிட்ட பிரச்னை குறித்து அமைச்சரவர்கள் பொறுப்பேற்று கொள்கிறேன் என்று சொன்ன பிறகு மீண்டும் பிரச்னையை எழுப்பக் கூடாது .. 362

சட்ட முன்வடிவுகள்—

அவை முன்னுள்ள பிரச்னை பற்றி மட்டும் சீக்கிரமாக ஒவ்வொருவரும் பேசி, அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் பல உறுப்பினர்களுக்கும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். 138

"எல்லா உறுப்பினர்களும் எல்லாச் சட்ட முன்வடிவுகளிலும் பேச முடியாது" 143, 144

சட்ட முன்வடிவின் மீது பேசும்போது அதையொட்டிய கருத்துக்களைக் கூற வேண்டுமே தவிர, மானியக் கோரிக்கையின் மீது பேசுவது போல் பொதுவான குறைகளைக் கூறுதல் கூடாது .. 162

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

சம்பந்தப்பட்ட பொருள் மீதே பேச வேண்டும்—

ஆளுநர் ஆற்றிய உரை மீது கருத்துக் கூறலாம்: அவர் வெளியில் சொல்லிய தான கருத்துக்களை வாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது .. 586

ஏற்கனவே சொன்ன கருத்தையே திரும்பச் சொல்லுதல் கூடாது .. 529

விதி முறைக்கு மாறுபட்டிருந்தால் உறுப்பினர்கள் எழுந்து கருத்துக்களைச் சொல்லலாம். ஒவ்வொருவரும் எழுந்து குறிப்பிட்ட பிரச்னையில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது .. 529

தீர்ப்பு குறித்து—

ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவு மறுக்கிறபோது, தலைவரால் சொல்லப் பெறும் காரணங்களைப் பற்றியெல்லாம் காமெண்ட் செய்வது அவ்வளவு நல்லதல்ல 547

"ஒரு பிரச்னை குறித்து அவைத் தலைவர் தீர்ப்பு வழங்கிய பின்னல் அதையொட்டி மேலும் பேசிக்கொண்டு, விளக்கிக்கொண்டு போவது நம்முடைய மரபுக்கு புறம்பானது" .. 478

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

நீதிமன்றத்திலுள்ள வழக்கு குறித்து—

உயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்கு குறித்து பேசாமல் இருப்பது நலம். நீதிபதிக்கு வழிகாட்டுவது மாதிரி, அறிவுரை தருவது போல் பேசக் கூடாது. 148, 149

ஒரு பிரச்னை குறித்து வழக்கு போடப் பட்டிருந்தால் அது குறித்து பேசுதல் கூடாது. .. 103

நீதிமன்றத்தின் முடிவு வெளிவரவேண்டிய நிலையில் இருக்கின்ற பிரச்னை குறித்தும், நீதிமன்றத்திற்குப் போக இருக்கக்கூடிய பிரச்னை குறித்தும் பேசக் கூடாது. 832

நீதி விசாரணையில் இருக்கின்ற பிரச்னையை ஒட்டிப் பேசக் கூடாது. .. 821

நேரம் ஒதுக்குதல்—

உறுப்பினர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப் பெற்ற நேரத்திற்குள், தங்களுடைய உரையை முடிந்துக்கொள்ள வேண்டும். 40

உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தை நிர்ணயிப்பது பேரவைத் தலைவர் உரிமை. உறுப்பினர்களுக்கு அதிலே உரிமை இல்லை. அதைப்பற்றிக் கேட்கவும் உரிமை இல்லை. பேரவைத் தலைவர் யாரை வேண்டுமானாலும் பேச அழைக்கலாம். .. .. 512—513

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

படித்தல்—.

உறுப்பினர்கள் பத்திரிகைகளைப் படித்து ஏதாவது சொல்ல விரும்பினால், முதலில் தலைவரிடம் காட்டிவிட்டுத்தான் சொல்ல வேண்டும். 1294

எந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டப்பெறுகிறது என்பதனை அவை அறியாத நிலையில், உறுப்பினர்கள் புத்தகங்களிலிருந்து மேற்கோள் எடுத்துப் படிப்பது முறையல்ல, என அளிக்கப் பெற்ற முந்தைய தீர்ப்புகள் உள்ளன ; ஒரு பத்திரிகையில் இருந்து அல்லது புத்தகத்திலிருந்து உறுப்பினர் படிக்கும் முன் அதைப் பேரவைத் தலைவரிடம் காட்டி முன் அனுமதி பெற்றே படிக்க வேண்டும். 501—507

தலைவரின் முன் அனுமதியின்றி எந்தக் கடிதத்தையும் படித்தல் கூடாது ; அதிலுள்ள விஷயங்களைச் சொன்னால் போதும். .. .. 172—173

பேச அழைத்தல்—

யாரை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பதை முடிவு செய்யும் உரிமை தலைவருக்குத்தான் உண்டு. .. 675—676, 677—678

விளக்கம் கேட்டல்—

சம்பந்தப்பட்ட உறுப்பினர் விளக்கம் கேட்க வேண்டுமே தவிர அவருக்கு வாரிசாக வேறோர் உறுப்பினர் கேட்கக் கூடாது. 1320

ஒருவர் எழுப்பிய பிரச்னையில், அவருக்காக இன்னொருவர் எழுந்து பேசுவது இந்த அவையின் மரபுக்கு அழகல்ல. 968—973

த—தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—

துணை வினா—

மூலக் கேள்வியில் குறிப்பிடப் பெற்ற பகுதியைப் பற்றி துணை வினாக்கள் கேட்க வேண்டுமேயன்றி பொதுப்படையாகக் கேட்பது கூடாது. தமிழகம் முழுமையும் இருக்கிறவற்றைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடத்தில் தகவல் இருக்காது. 1170-1171

திருவேங்கடம், திரு. பெ. சு—

ஆயில் இன்ஜினுக்கான கடனை வாங்க மறுத்த விவசாயிகள் பாதிப்பு, துரிஞ்சாபுரம் (க.ஈ.) .. 956,958,

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1978 460

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச்சட்ட முன்வடிவு, 1977 .. 223—225

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள், அமைப்பது குறித்து 1185

சமுதாயக் கிணறு, பழங்கோவில் கிராமம் .. 663

திருவண்ணாமலை செல்லும் பேருந்துகள், மாற்றம் குறித்து 1184

மீன்கள், சாத்தனூர் அணையில் பிடிக்கப்படுபவை. 667—668

வட ஆண்டாபட்டு கிராமத்தில் குடிநீர்த் தேக்கத் தொட்டி. 1223

வட ஆற்காடு மாவட்ட ஆலை உரிமையாளர்கள் நெல் அரைக்கத் தயங்குவதால் பொதுமக்களின் பாதிப்பு. (க.ஈ.) 1264,1266

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

திரைப்படக் கொட்டகைகள்—

குளிர் சாதன வசதி, சென்னை .. 652—653

திரைப்படங்கள்—

தமிழ், தங்கப்பதக்கம் பெற்றவை .. 878—882

தீயணைப்பு நிலையம்—

ஏற்படுத்துவது குறித்து 1197

தீர்மானங்கள்—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 1—132
.. 238—381
.. 482—596

விதி 11 (3)-ஐத் தளர்த்தல் 1259

விதி 22-ஐத் தளர்த்தல் 1,237,238
.. 473,651

விதி 41 (3)-ஐத் தளர்த்தல் .. 948

கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றை செலுத்த அரசு உத்திரவாத வரையறையை உயர்த்துதல் (த.தீ.) .. 467—471

பார்க்க—ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் .. 597

மாநிலங்களுக்கு கூடுதல் சுயாட்சி உரிமை (த.தீ.) 599-647

துணி—

பட்டு உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு .. 1207

துரை கலியமூர்த்தி, திரு.—

ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள், திட்டம் .. 914—915

கந்த குமாரன் ஊராட்சி, பிரிப்பது குறித்து .. 1181

கிள்ளை கூட்டுறவு சங்கம், கடன்கள் பற்றி .. 1180

தொழுநோய் பிச்சைக்காரர்கள் ஒழிப்பு பற்றி .. 1189

நியாய விலைக் கடைகள் 1227

பரவனூர் வடிகால் திட்டம் .. 122

பக்கங்கள்

துரை கலியமூர்த்தி—தொடர்ச்சி.

பள்ளிகள், பரங்கிப்பேட்டை ஒன்றியம் ஆரம்ப உயர் துவக்கப் பள்ளிகள் குறித்து .. 1199
பாசன விவசாய நிலங்கள் 1224
பிச்சாவரம், சுற்றுலா மையமாக்கல் .. 923
மனைப் பட்டாக்கள், சிதம்பரம் வட்டம் .. 1224
வெள்ளாறு மதகு 1228

துரை கோவிந்தராசன், திரு—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் (தீ.) 239

துரை முத்துசாமி திரு—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 250, 253, 254
உலோகங்கள், வடமாமந்தூர் கிராமம் .. 661
கடுக்காயில் இருந்து எண்ணெய், கல்ராயன் மலைப் பகுதி 654
கள்ளக்குறிச்சி பேரூராட்சி, நகராட்சியாக்குதல் .. 930
சாத்தனூர் அணை நீர் 1179
சைக்கிள், இருவர் செல்லுதல் 912

துரை முருகன், திரு—

இராணிப்பேட்டை நகராட்சி, கலைஞர் கருணாநிதி நகர் இணைப்பு 895
பாலம், திருவலம் 897

துலுக்காணம், திரு. வி—

ஆற்றுப் பாலங்களின்மை, தியாகதுர்க்கம் யூனியன். 1273-1274, 1275
பாலம், சித்தலூர் 666

பக்கங்கள்

தொல்பொருளியல்—

அகழ்வாராய்ச்சி, செஞ்சிக்கோட்டை .. 923

தொழிலாளர்—

அச்சகத் தொழிலாளர், குறைந்தபட்ச ஊதியம் .. 927
கட்டிடத் தொழிலாளர் ஊதியம் 1180
பஞ்சாலைத் தொழிலாளர்கள், கோவை போனஸ் பிரச்னை 1175

தொழிற்சாலைகள்—

அரக்கு உற்பத்தி குறித்து 1202
கடுக்காயில் இருந்து எண்ணெய், கல்ராயன் மலைப் பகுதி 654
மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகள் .. 1210

தொழிற்பேட்டை—

வேலூருக்கு அருகில் 1211

ந

நகராட்சிகள்—

இராணிப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர் இணைப்பு 895
குடியரசுத் தலைவர் ஆட்சியில் கலைக்கப்பட்டவை.. 919
விருத்தாசலம், தனி அதிகாரி பதவி பற்றி .. 1191-1192

நடராசன், திரு. ஆ.—

கட்டிடங்கள், காவல் நிலையங்களுக்கு .. 660
குடிநீர் வசதி, பேரூர் .. .. ..1182—1183
பல்கலைக் கழகங்கள், கோவை, திருச்சியில் துவக்குதல் 922
சுந்தராபுரம்–நாச்சிபாளையம் நெடுஞ்சாலை, விரிவு படுத்துவது குறித்து 1182

பக்கங்கள்

நடராசன், திரு. ஆ.—தொடர்ச்சி.

திருமலையம்பாளையம் ஊராட்சி, பிரிப்பது குறித்து. 1184–1185
உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்து விநியோகிக்கப்பட்ட நிலங்கள் .. .. 6?9
நில உச்சவரம்புச் சட்டம், கிடைத்த நிலம் பற்றி 1177–1178
பார்வதிபுரத்தில் குட்டை அமைப்புத் திட்டம். .. 1205
பூச்சி மருந்துகள் விற்பனை 1182

நல்லதம்பி, திரு. தி. சு.—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு.வி.) 1106, 1107
அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 307, 308

நாராயணன் திரு. ரா.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம். 270
பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம், சேலம் .. 1161
வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளோர் .. 665

நாராயணசாமி முதலியார், திரு. கே—

அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. 267
கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன் வடிவு, 197௲ .. 415, 420 421

நிதி—

தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பொதுப் பணித்துறை நிதி .. 1196–1197

நிதி அலுவல்கள்—

து. மா. கோ. 1977-78, வாக்கெடுப்பு—

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. .. 1033
ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. 1033

பக்கங்கள்

நிதி அலுவல்கள்—தொடர்ச்சி.

து.மா.கோ. 1977-78, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கதர் .. 1029
கல்வி .. 1026
காடுகள் குறித்த மூலதனச் செலவு .. 1035
கூட்டுறவு .. 1028
கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. 1028
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன 1029
சமூக நலன் .. 1030
சாலைகளும், பாலங்களும் .. 1032
சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பற் போக்குவரத்தும் .. 1032
சிறைச்சாலைகள் .. 1026
தொழில்கள் .. 1028
தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 1034
தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் .. 1029
நகர்ப்பகுதி மேம்பாடு .. 1031
நிர்வாகம், நீதி .. 1026
நுகர்பொருள் வழங்கல் .. 1081
பல்வகை .. 1033
பல்வகை மூலதனச் செலவு .. 1035
பழங்குடி மக்கள் அரிசன மக்கள் முதலியோர் நலன் .. 1030
பாசனம் .. 1031
பாசனம் குறித்த மூலதனச் செலவு .. 1034
பால் வழங்கு திட்டங்கள் .. 1025
பின்தங்கிய வகுப்பினர் நலன் .. 1030
பொதுச் சுகாதாரம் .. 1027
பொதுப்பணிகள், கட்டடங்கள் .. 1031

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நிதி அலுவல்கள்—தொடர்ச்சி.

பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் .. 1032

பொதுப்பணித்துறை—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. 1034

மருத்துவம் .. 1027

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. 1035

மாநிலஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் .. 1025

மாவட்ட நிர்வாகம் .. 1025

மீனளம் .. 1028

வேளாண்மை .. 1027

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி).. 974—1024

நிதி உதவி—

வறட்சிப் பகுதி திட்டத்திற்கான நிதி உதவி மாற்றம் குறித்து 1187

நிர்வாகம்—

இந்திய நிர்வாகப் பணி பயிற்சி நிலையம், சென்னை 1161-1164

நில உச்சவரம்பு—

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், விளைவுகள். 873—874

சட்டத்தின்கீழ் எடுத்து விநியோகிக்கப்பட்டவை. 659

நிலங்கள்—

கிண்டியில் குத்தகைக்கு விடப்பட்ட நிலம் .. 1155-1156

தும்போடு கிராமத்தில் நில ஒப்படை குறித்து. 1150-1151

நிலப் பட்டாக்கள், சிதம்பரம் வட்டம் 1224

பாசன விவசாய நிலங்கள் 1224

மெரினாவிலுள்ளது, வாடகை குறித்து 1149-1150

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நிலநீர்—

நிலத்தடி நிலநீர்க் கணக்கீடு 1192

நிலப் பட்டா—

அகதிகள், கூடலூர் பகுதியில் நிலப்பட்டா .. 1169-1171

நினைவுச் சின்னங்கள்—

பராமரிப்புச் செலவு பற்றி 1178

அண்ணா சமாதி பராமரிக்கும் பொறுப்பு பற்றி 1178

வள்ளுவர் கோட்டம், நுழைவுக் கட்டணம் .. 1174-1175

நீக்கம் 1264

நீதிமன்றங்கள்—

தீர்ப்புகளில் தாமதம் .. .. 920—921

நடமாடும் நீதிமன்றம், சென்னை, பதிவான வழக்குகள் .. .. 666—667

வடலூரில் இரண்டாம் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம் 1205

நீர்ப்பாசனம்—

அணைகள்—

அழகர் அணைத்திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் 925

இறைவை நீர்ப் பாசனம், (மூலாநல்லூர்) பணி நிலைமை 875

மாரியம்மன்கோயில் ஓடை, பாளையம் கிராமம் 565

சாத்தனூர் அணை 1179

எடமச்சி கால்வாய்த் திட்டம் 1210

ஏரிகள், சுக்கிரன் ஏரி 664

ஏரிகள் சீரமைப்பு 1193

ஏரிகள், வடாற்காடு மாவட்டம் 1214

கடனாநதி, இராமா நதி இணைப்பு 1152

பக்கங்கள்

நீர்ப்பாசனம்—தொடர்ச்சி.

அணைகள்—தொடர்ச்சி.

காவிரி நீர் பங்கீடு, ஒப்பந்தம் அமுலாக்குவது குறித்து 1193

குதிரையாறு அணைத்திட்டம் 1152-1153

குளங்கள், வடாற்காடு மாவட்டம் 1221

குளங்கள், வயலிக்குளம்— மலையடிப்பட்டி குளம், வெட்டுதல் .. .. 874—875

சமுதாய வடிமுனைக் குழாய்க் கிணறுகள், தஞ்சை. 1193-1194

நதிப் பாசன பிரதேச தனித் தனித் தலைமைப் பொறியாளர்கள் 927

பரவனூர் வடிகால் திட்டம் 1225

விக்ரமன் ஆற்றுச் சீரமைப்பு, மாயூரம் ஒன்றியம்.. 651

வெள்ளாற்று மதகு 1228

நூல்களும் வெளியீடுகளும்—

சிலப்பதிகார ஆராய்ச்சி, உதவுதல் 1181

நெடுஞ்சாலை—

சுந்தராபுரம் நாச்சிபாளையம் நெடுஞ்சாலை, விரிவு படுத்துவது குறித்து 1182

ப

பண்ணை சேதுராம், திரு. கே. —

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 303—305

அலைஓசை நாளிதழ் ஒரு உறுப்பினர் பேசியதைத் திரித்து வெளியிட்டிருத்தல் (உ.பி.).. .. .. 673—674

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான குழாய்கள் 1160-1161

பக்கிங்காம் கால்வாய், லஸ்ஸுக்கு அருகே பாலம் 897—899

பக்கங்கள்

பல்கலைக்கழகங்கள்—

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, உறுப்பினர் நியமனம் (அ.) 237

திறந்த வெளித் திட்டம் பரப்பும் ஏற்பாடு .. 895

கோவை, திருச்சியில் துவக்குதல் 922

பள்ளிகள்.—

இடைநிலைப் பள்ளிகளில் கட்டணங்கள் .. 1173

உயர்நிலைப்பள்ளி, நெகலூர் புதூர் 922

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம், உலிக்கல் .. 913

உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், தூதூர் வட்டம் .. 913

உயர்நிலைப் பள்ளிகள் (நலத்துறை), தஞ்சை மாவட்டம் .. .. 653—654

கடையல் உயர்நிலை பள்ளி, கட்டடம் .. 1209

சின்னசேலம் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கட்டடம், 1189

பள்ளிகள், பரங்கிப் பேட்டை ஒன்றியம் ஆரம்ப உயர்துவக்கப் பள்ளிகள் குறித்து .. 1199

பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் கட்டடம் .. 919

விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் 1213

பாடநூல்கள்—

பெரியார், அண்ணா வாழ்க்கை வரலாறு .. 911

பாண்டியன், திரு. பி. எச்.—

ரயில் பாஸில் உறுப்பினர் தன் மனைவியை அழைத்துச் செல்ல அனுமதி மறுக்கப்படுவது குறித்து (ஒ. பி.) 1237

பாலகிருஷ்ணன், திரு. சோ.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மை தீர்மானம்.. 101—108

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

பாலங்கள்—

உப்பனாற்றின் குறுக்கே 1195
சித்த லூர் 666
சென்னை-பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பாலம் .. 1208
சென்னை பக்கிங்காம் கால்வாய், லஸ்ஸுக்கு அருகே பாலம் .. .. 897—899
திருவலம்அருகே 897

பால் வள நிறுவனம்—

சென்னைக்கு விநியோகம் 928
பயிற்சித் திட்டம் .. .. 908—909
ராஜன் வாய்க்கால் (மாயூரம் ஒன்றியம்) .. 911

புருஷோத்தமன், திரு. து.—

அண்ணா சமாதி, பராமரிப்புச் செலவு பற்றி .. 1178
அத்தியாவசிய பொருள்கள், வழங்கும் துறை .. 931
அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 129—132, 238, 239, 240, 241
காவலர் பயிற்சிக் கல்லூரி, மாற்றம் குறித்து .. 1206
நகராட்சி மன்றங்கள், குடியரசுத் தலைவர் ஆட்சியில் கலைக்கப்பட்டவை 919
அரசு நிலம் (மெரினாவிலுள்ளது) வாடகை பாக்கி 1149—1150
மருத்துவப் படிப்பு, மாணவர்கள் அனுமதி
வள்ளுவர் கோட்டம். நுழைவுக் கட்டணம் .. 1205
வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளோர் .. 1174-1175, 656

பூச்சி மருந்துகள்—

விற்பனை குறித்து 1182

பெரியசாமி, திரு. டி. பி. மு.—

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன் வடிவு, 1978 408

ப—தொடர்ச்சி.

பக்கங்கள்

பொன்னுரங்கம், திரு. ப.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 357, 359
மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 170—174

பொன்னையன், திரு. சி.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 83
கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1978 .. 597
ஆற்றுப் பாலங்கள், தியாக துர்க்கம் யூனியன் (க.ஈ.அ.) .. .. 1274—1275
பேரவை அலுவல் வரிசையில் மாற்றம் (தீ) .. 597

போக்குவரத்து —

இரவு நேரப் பேருந்துகள், சென்னை 653
கடையம்—பாவூர் பேருந்து வழித்தடம் .. 917—918
சுற்றுலா சொகுசுப் பேருந்துகள் 1195
சேர்மாதேவி—கடையம் பேருந்து வழித்தடம் .. 918
சைக்கிள் இருவர் செல்லுதல் 912

பேருந்துகள்—

சென்னையில் இரவுப் பேருந்துகள் ..1217—1218
சோழன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் .. 654—655
பேருந்துகள், திருவண்ணாமலை செல்வதை மாற்றுதல் 1184
பேருந்து நிலையம், தங்க சாலை வசதிகள் .. 929
பேருந்து நிலையம், மதுரை, விஸ்தரிப்பது குறித்து 1220

ம

பக்கங்கள்

மணிமாறன், திரு. ஆர்.—

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 263—275

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு.வி.) 1093

அரிசன மாணவர்கள், காந்தி நினைவு உபகாரச் சம்பளம் 912

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1977 231

கலப்புத் திருமணத்தம்பதிகள், வேலைவாய்ப்பு .. 910—911

சாலைகள் பராமரிப்பு 1212

தமிழக வரலாறு எழுதும் பணிபற்றி .. 1192

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 428

புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. .. ..1053—1055

மருதாசலம் திரு. க.—

சிறுவாணித் திட்டம், பயன்பெறு கிராமங்கள் ..1199—1201

மருத்துவம்—

சித்த மருத்துவம், மூலிகைகள் 1204

சத்தியமங்கலம், மருத்துவமனை, விரிவுபடுத்துதல் 1198

சந்தவாசல் ஒன்றிய மருந்தகம், அரசு மேற்கொள்ளுதல் 1206

மனோகரன், திரு. கி.—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு.வி.) 1111

ம—தொடர்ச்சி

பக்கங்கள்

மனோகரன், திரு. கி.—தொடர்ச்சி.

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 267,312, 563,582, 595,596, 675,677, 678,705, 708—709, 820

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை, முதலமைச்சர் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது (உ.பி.) 669,670

குறிப்பிட்ட நிகழ்ச்சிநடந்த சில நாட்களுக்குப் பிறகும் அனுமதிப்பது குறித்து (உ.பி.) 1047

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி) 1010,1017, 1018,1021—1024

விதி 11(3)-ஐத் தளர்த்தல் (தீ.) 1259

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ.) 1651

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1978 1036

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 421,440

புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் சட்ட முன்வடிவு, 1978 .. 381

புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. .. .. 1051,1073, 1075,1076

மாணிக்கம், திரு. சி.—

சட்டமன்ற உறுப்பினர் (முன்னாள்) ஓய்வூதியம் அளித்தல் 1220

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் .. ..1079—1086, 1098

பக்கங்கள்

மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 103,562—588,677, 730,731, 739,817—818

கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 383

கிராம அலுவலர், தஞ்சை மாவட்டம் சம்பளம் அளிக்கப்படாதது .. ..1185—1186

குதிரையாறு அணைத் திட்டம் .. ..1152—1153

தும்போடு கிராமத்தில் நில ஒப்படை குறித்து ..1150—1151

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 193—195

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 .. 224

புயல். வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. ..1055—1057

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. 134—135

மார்க்கபந்து, திரு. ரா.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மை தீர்மானம் .. .. .. 495—501, 508—514

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1977.. 207—211

கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 385

தனியார் மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்பு சட்ட முன்வடிவு, 1978 598

பக்கங்கள்

மார்க்கபந்து, திரு. ரா.—தொடர்ச்சி

நியாயவிலைக் கடைகளில், அரிசி ரகமும் விலையும் (அ.வி) .. .. ..1128—1130

பயணச் சீட்டுடன் அடையாள சீட்டையும் காண்பிக்க வேண்டியிருத்தல் (ஒ.பி) ..1235—1236

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 430

புயல். வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு, 1978 .. .. ..1062—1064

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1977 [.. .. 142—145, 143—151

மாவட்ட நிர்வாகம்—

இராமநாதபுரம் .. ..1146—1149

மின்சாரம்—

உடன்குடியில் துணை நிலையம் 1214

குந்தா மின்திட்டம், புது ஜெனரேட்டர் பொருத்துதல் .. .. ..1208—1209

கேரளாவிலிருந்து சணல் .. .. 916—917

சங்கரன்கோவில் வட்டம் மின் இணைப்பு நிறுத்தப்பட்டுள்ளமை 1186

தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் .. 1222

பம்பு செட்டுகளுக்கு இணைப்பு 1188

விவசாயத்திற்கு தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட்டவை .. .. .. 660—661

வெட்டு, வீடுகளுக்கு சலுகைகள் .. 929

மீனவர்கள்—

ஆயுள் காப்பீட்டு வசதி 1189

ம—தொடர்ச்சி.

பக்கங்கள்

மீனளப்—

இடிந்தகரையிலுள்ள மீன் பதனிடும் நிலையம்..1154—1155

கடல்பாசி வளர்க்கும் திட்டம், ஆய்வு குறித்து.. 1220

குலசேகரன் பட்டணத்தில் மீன்பிடி துறைமுகம் அமைத்தல் 1215

சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்கள், 667—668

முத்துசாமி, திரு. ப. க. சி—

மாரியம்மன்கோயில் ஓடை, பாளையம் கிராமம், அணைகட்டும் பணி 665

முத்துசாமி கரையாளர், திரு. க.—

கடனா நதி, இராமா நதி இணைப்பு .. 1152

முருகேசன், திரு. கூ.ச—

பல்கலைக்கழகங்கள், கோவை, திருச்சி துவக்குதல்.. 922

மொழிகள்—

இந்தி, விருப்ப அடிப்படையில் கற்பிப்பது பற்றி..1178—1179

தமிழராய்ச்சி, நிதி ஒதுக்கம் 921

ய

யூசுப், திரு. யா. சை. மு—

இடிந்த கரையிலுள்ள மீன் பதனிடும் நிலையம்..1154— 1155

நிலநீர்க் கணக்கீடு 1192

பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் .. 1213

விழுப்புரம் கலைக்கல்லூரி, நிறுவுவது பற்றி..1190—1191

ர

பக்கங்கள்.

ரகுமான்கான், திரு. ஏ.—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம் நடவடிக்கைகள் (கு.வி.) 1086- 1091 1111

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 91,92 104,261, 263,264, 266,267, 268,269, 270,379, 381

உத்தமபாளையம், ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்காததும், அரசு மானியத்தை நிர்வாகம் தவறாகப் பயன்படுத்தியதும் (க. ஈ.) 1276,1277, 1278

உரிமைப்பிரச்சினை எழுப்புவது குறித்து ஒழுங்குப் பிரச்சினை 968,969

உறுப்பினர்களது தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுதல் (த.கோ.) .. ..1229—1232

கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி மாணவர்கள் வேலை நிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து .. .. .. 1254—1256

குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குப் பிறகும் உரிமைப் பிரச்சினை, அனுமதிப்பது குறித்து 1049

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்க உண்ணாவிரதம் இருத்தல் (க.ஈ.) .. 1285—1286, 1287,1288

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1977 .. .. 139—146 127

ர—தொடர்ச்சி.

பக்கங்கள்.

ரமணி, திரு. கு—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 57—69, 774

குந்தா மின்திட்டம், புது ஜெனரேட்டர் பொருத்துதல் .. .. .. 1208—1209

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு, 1977 203

கோவை நகரசபை மின்பிரிவு ஊழியர் விபத்து. 1215—1216

சிறைக் காவலர் ஊதியம் .. 1228

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், விளைவுகள்.. 873—874

நியாயவிலைக் கடைகள் அரிசி ரகமும் விலையும்(அ.வி.)1126—1127

நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது 1244—1246

பஞ்சாலைத் தொழிலாளர்கள், கோவை போனஸ் பிரச்னை 1175

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) .. 1010

ரயில்வே—

அலுவலகம், அண்ணா சாலை 1164-1165

ல

லத்தீப், திரு. எம். ஏ—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 309,310, 312,318, 321,343, 344,365

அணு உலை நிறுவுதல், கட்டிடங்களை முறைப்படுத்துதல் (நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 1039—1040

ல—தொடர்ச்சி

பக்கங்கள்.

லத்தீப், திரு. எம். ஏ.—தொடர்ச்சி.

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்ட முன் வடிவு, 1978 .. .. .. 404—408, 419,420

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு, 1977 .. .. .. 186—191, 200

வரவு-செலவுத் திட்டம், 1977-78 (பொ.வி.) .. 995, 1014—1017, 1021

வ

வடிகால்—

சேலத்திற்குப் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம் 1161

வடிவேலு திரு. கே.—

புகளூர் சர்க்கரை ஆலை, விவசாயிகள்கரும்பை ஆலைக்கு அனுப்ப மறுப்பது குறித்து (க.ஈ.).. 1288,1291

வரதராசன், திரு. என்.—

வீட்டு வரி உயர்வு திருத்தங்கள் (க.ஈ.) .. 959,960

வரலாறு—

தமிழக வரலாறு எழுதும் பணி பற்றி .. 1192

வரிகள்—

கேளிக்கை வரி குறித்த அறிக்கை 1183

வணிக வரி, நங்கவள்ளி சினிமா தியேட்டர்களில் சோதனை 925

வீட்டு வரி உயர்வு, திருத்தங்கள் (க.ஈ.) .. 959—961

வள்ளுவர் கோட்டம்—

பார்க்க:—நினைவுச் சின்னங்கள் .. ..

பக்கங்கள்.

வறட்சி—

நிவாரணப் பணிகள், இராமநாதபுரம் மாவட்டம் 658

வாசன், திரு. சி. மு.—

கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்கள் 1216

மண்ணின் தன்மை, விவரம் 1225–1225

வாரியம்—

குடிநீர் வடிகால்--பாதாள சாக்கடைத் திட்டம் மாயூரம் 911

விசைப் படகுகள்—

மீன்பிடி விசைப் படகுகள், பழுதுபார்க்கும் நிலையங்கள் 1219

விடுதிகள்—

திருக்களம்பூர் பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதி 1209–1210

மாணவர் விடுதிகள், ஒன்றுக்குதல் 1185

விபத்துக்கள்—

கோவை நகரசபை மின்பிரிவு ஊழியர் .. 1215—1216

பேருந்து விபத்துக்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் .. .. 1213—1214

விவசாயம்—

ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணை வாழை அபிவிருத்தி 328

உருளைக்கிழங்கு சாகுபடி ஊக்குவித்தல் .. 913

எலிஒழிப்பு, தஞ்சை 924

குறுவை சாகுபடி, புதுரக நெல் 930

விவசாயக் கல்லூரி தஞ்சை 930

பக்கங்கள்.

விவசாயம்— தொடர்ச்சி

புகையான் நோயினால் பயிர், விவசாயிகள் பாதிப்பு நெல்லிக்குப்பம், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் வட்டங்கள் (க.ஈ.) .. .. 964—967

மண்ணின் தன்மை, விவரம் .. .. .. 1225—1226

விவசாயத் திட்டங்கள், ஆராய்வு மேற்கொள்ளுதல் பற்றி .. .. 1180—1181

வின்சென்ட், திரு. மி. —

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் .. .. 1092—1093

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 125—129

சுயாட்சி மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த.தீ.) .. .. 623—624

விஜயராகவன், திரு. பொ.—

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 214—216

கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி மாணவர்கள் வேலை நிறுத்தமும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து (ஒ.தி) .. .. ..1256—1257

வீரப்பன், திரு. ஆர். எம்.—

அமைச்சரவை மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. 39, 264, 349, 350, 678—695, 696, 697—705, 834

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. —

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1977 .. .. 168—170

வ—தொடர்ச்சி.

பக்கங்கள்.

வேணுகோபால் திரு. த.—

ஊராட்சி மன்றங்கள் (கலைக்கப் பெற்றவை), ஊராட்சித் தலைவர்கள் கூட்டம் 896

தண்டராம்பட்டு கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், செயல்படுதல் குறித்து 1208

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு .. 1188

வேலுச்சாமி, திரு. ஓ. சோ—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 845

உறுதிமொழிக் குழு, முதல் அறிக்கை, அளித்தல் 1291

வரவு செலவுத்திட்டம், 1977-78 (பொ. வி.) 986—991

வேலை வாய்ப்பகங்கள்—

பதிவு செய்துள்ள புலவர் பயிற்சி பெற்றோர் .. 656—657

பதிவு செய்துள்ளோர் 656, 658, 1179

பதிவு செய்து கொள்வதற்கான தகுதி .. 655—656

ஜ

ஜெபமணி, திரு. ர.—

அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் 112—118, 253, 8495, 850,81,

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 228

உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1978 455

ஜெயவேலு, திரு. எம். ஏ.—

சுயாட்சி, மாநிலங்களுக்குக் கூடுதல் உரிமை (த தீ.) 614—617

ஜ—தொடர்ச்சி.

பக்கங்கள்.

ஜேம்ஸ், திரு. ஜே.—

அத்தியாவசியப் பொருள்கள் விலையேற்றம், நடவடிக்கைகள் (கு. வி.) .. .. .. 1097—1100

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் .. .. .. 371, 500, 501, 507, 522—526, 528—549, 595, 760, 780—781, 850—852, 867

அவசர கால நிலையின்போது பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் 1159

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1977 225—227

கடன் நிவாரணச் சட்டம் (திருத்த) சட்டமுன் வடிவு, 1978 399

பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1978 438

வரவு செலவுத்திட்டம், 1977—78 (பொ. வி.) 976, 996—1003, 1018

வீட்டு வரி உயர்வு திருத்தங்கள் (க. ஈ.) .. 961

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன் வடிவு, 1977 .. .. 191—193, 201

புயல், வெள்ளப் பாதிப்புப் பயிரிடு குத்தகைதாரர்கள் தற்காலிக நிவாரண சட்டமுன் வடிவு, 1978 .. ..1059—6612, 1961—1009

மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1977 .. .. .. 157—159

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1978 ஜனவரி, 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்-விடைகள் " என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்." என்று கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(2) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55(1)-ன்படி,

" மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையின் கீழ் உள்ள அமைச்சரவையின் மீது இப்பேரவை தனது நம்பிக்கையின்மையைத் தெரிவித்துக் கொள்ளுகிறது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. க. அன்பழகன் : தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

*திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுவதற்கு அலுவல் ஆய்வுக் குழுவில் இரண்டரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனையொட்டி என்னுடைய முன்மொழிதலை நான் இங்கே தொடங்குகின்றேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன்
நோக்கம் அரசு இந்த ஆறு மாத காலத்திலே செய்துள்ள
தவறுகளை எண்ணிப்பார்த்து திருத்திக்கொள்ள வேண்டும்
என்பதாகும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த
அவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அது வெற்றிபெறும்
என்ற நம்பிக்கையோடு நான் இந்தத் தீர்மானத்தை திரா
விட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கொண்டுவரவில்லை.
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை நான்
ஓரளவு சுட்டிக்காட்டி விட்டேன் என்றே நம்புகிறேன்.

இந்த அரசு ஆறு மாத காலத்திற்கு முன்பு தொடங்
கியபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
நானும் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர்
அன்பழகன் அவர்களும் அறிக்கை வாயிலாகவும் சென்னையில்
நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திலும் ஆக்கபூர்வமான
ஒத்துழைப்பை புதிய அரசுக்கு திராவிட முன்னேற்றக்
கழகம் தரத் தயங்காது என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம்.
அதற்கு எடுத்துக்காட்டாக நடந்து முடிந்த சட்ட மன்ற
கூட்டத் தொடரில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும்
இந்த அரசுக்குத் தேவையான யோசனைகளையும் இந்த
மாமன்றத்தில் எடுத்து வைக்கத் தவறவில்லை என்பதை
அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு என்கின்ற அடிப்படையில்
இங்கே நடைபெற்ற விவாதங்களைப் பார்த்து வெளியே
உள்ள சிலபேர்கள் கூட, ஏன் இந்த அவையிலே உள்ள
வேறு சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூட, விவாதங்கள்
போகிற போக்கைப் பார்த்தால், இரண்டு கட்சிகளும்
விரைவில் ஒன்றுசேர்ந்துவிடும் போல் இருக்கிறதே என்று
எண்ணுகிற அளவிற்கு நடந்து முடிந்த சட்ட மன்ற கூட்டத்
தொடரில் விவாதங்கள் நடைபெற்றன. இரண்டு
கட்சிகளும் ஒன்று சேர்ந்துவிடுமோ என்ற பயத்தில் புதிய
கட்சி தொடங்கியவர்கள் கூட அதற்கு முன்பு நாம்
முந்திக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கட்சிகளைக்
கலைத்துவிட்டு ஆளும் கட்சியோடு போய் சேர்ந்துகொண்ட
நிகழ்ச்சிகள் எல்லாம் நாட்டில் நடைபெற்றன.

ஆனால், விவாதங்களில் ஆக்கபூர்வமான யோசனைகளை
திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கே உரிய கண்ணியத்
தோடு கடமையுணர்ச்சியோடு அண்ணா வழியில் இங்கே
எடுத்துவைத்ததேயல்லாமல் இரண்டு கட்சிகளும் ஒன்று சேரு

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

வதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் கொள்கை
யளவில் அண்ணா அவர்களின் கொள்கைகளை நடை
முறைப்படுத்துவதிலே இல்லை என்பதை ஆளும் கட்சி பல
சந்தர்ப்பங்களில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

அண்ணா அவர்கள் அவசர கால சட்டத்தை அறவே
வெறுத்தவர். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு, ஜன
நாயகம் நல்ல முறையிலே வளர்வதற்கு அவசர காலச்
சட்டங்கள் தடையாக நிற்கும், அவசர காலத்தை நீடித்துக்
கொண்டு, ஜனநாயகத்தைப் பற்றியும் பேச ஒரு அரசுக்கு
தகுதியில்லை, முடியாது என்று நாடாளு மன்றத்தில்,
மாநிலங்கள் அவையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள்
எடுத்துவைத்தார்.

எனவே, அந்த வழி நின்றுதான் திராவிட முன்னேற்றக்
கழகம் நெருக்கடி கால பிரகடனத்தை, எதேச்சாதிகார
கருத்தை, அவசர காலத்தின் அடிப்படையிலே போடப்பட்ட
சட்டங்களை எதிர்த்தது. அப்படி எதிர்த்த நேரத்தில்
இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற அகில இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார், இந்திரா
காந்தியினால் போடப்பட்ட நெருக்கடி கால சட்டங்களை,
நெருக்கடி நிலையை வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்தனர்
என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

அதைப்போலவே, 1968ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா
அவர்களின் மாநில சுயாட்சி தத்துவங்களை ஆதரித்தும்,
மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு முழுமையாகச்
சுயாட்சி பெற்று விளங்கவும், மத்தியிலே ஒரு கூட்டாட்சி
என்கின்ற கருத்தை எடுத்துச் சொன்னதும் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்திலே தான்.
இங்கே அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்துவைத்து, அதைக்
கொண்டு வந்தபோது, இதை எதிர்த்து வாக்களித்ததும்
இன்றைக்கு உள்ள ஆளும் கட்சியாகும்.

எனவே, இப்படி சில பல கொள்கைகளால் ஆளும்
கட்சியாக இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று
சேருவதற்கு உரிய வாய்ப்புகள் இல்லை யென்றாலும்கூட ஒரு
அரசுக்கு, அதிலும் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு அரசுக்கு
ஆக்க பூர்வமான ஒத்துழைப்பைத் தருவது எதிர்க் கட்சிக்குத்
தலையாய ஒரு கடமை என்ற அளவிலேதான், நடந்து முடிந்த
சட்டமன்றத் கூட்டத் தொடரில் எங்கள் ஒத்துழைப்பைத்
தந்தோம்.

இப்படி ஒத்துழைப்புத் தந்ததற்குக் காரணம், அரசு சுமுகமாக நடைபெற வேண்டும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எளிதான தன்மையிலே பெற வேண்டும் என்பதற்காகத் தந்தோம். ஆனால் எங்களுடைய நல்லெண்ணத்தை எங்கள் பலகீனம் என்று ஒரு வேளை ஆளும் கட்சி கருதிக் கொண்டதோ, என்னவோ தெரியவில்லை. அதற்கேற்ப அது நடந்து கொண்டது என்பதை எடுத்துகாட்ட நான் இங்கே ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாளோடு சட்ட மன்றப் பேரவையின் கூட்டத் தொடர் முடிவடைகிறது. மறுநாள் 30 ஆம் தேதி கலைவாணர் நினைவு நாள் நிகழ்ச்சியில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் உறையாற்றுகிறார்கள். அதற்கு முன்பு இந்த சட்ட மன்றத் கூட்டத்தில் பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பற்றிப் பேசப்படுகிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வைத்த அறிக்கையிலே விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கான நோட்டீசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார் நோட்டீசு தரவில்லை, எனினும் அவர்களும் போராட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று பேசினார். ஒரு சுமூகமான சூழ்நிலையிலே இதைக் கொண்டு வர வேண்டுமென்று கருதித்தான், அனைத்துக் கட்சிச் சார்பிலும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது.

அந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைந்த பிறகுகூட, நாங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் சுமூகமான ஒரு சூழ்நிலையில் தொழிலாளர்களுடைய பிரச்சினையை நல்ல முறையிலே தீர்த்து வையுங்கள் என்றுதான் சொன்னேன். அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம், உங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள், நீங்கள் அவர்களோடு கலந்து பேசுங்கள் என்று சொன்னார்.

30ஆம் தேதி காலையில் இந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டத்திலே கலந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், வேறு பல தலைவர்களையும் என்னுடைய இல்லத்திற்கு அழைத்து, அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, இந்தப் பிரச்னையை சுமுகமான முறையிலே தீர்க்க வேண்டுமென்று அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு

நான் அவர்களிடத்திலே அறிந்த கருத்தை, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்வதற்கு காலையிலிருந்து பிற்பகல் 12 மணி வரையில் ஐந்து தடவைக்கு மேல் தொலைபேசி மூலம் அவர்களோடு பேசுவதற்காக முயற்சித்தேன். ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் அங்கில்லை, இங்கிருக்கிறார்கள் என்று ஒரு தொலைபேசி எண் கொடுக்கப்பட்டது. அந்தத் தொலைபேசி எண்களோடும் தொடர்பு கொண்டேன். அவர்கள் பிறகு பேசுவதாகச் சொல்கிறார்கள் என்றுதான் பதில் வந்தது.

[முற்பகல் 9-10]

அதற்குப் பிறகு முதலமைச்சருடைய அலுவலகத்திற்கும் அவருடைய இல்லத்திற்கும் தொடர்பு கொண்டேன். அவரும் எனக்குக் கிடைக்க வில்லை. நான் இந்தப் பிரச்சினையில் அந்தத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் தந்த கருத்தைப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்குத் தெரிவித்து சுமூக சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆக்கரீதியான பணிக்காக அவ்வளவு கஷ்டத்தை அன்றைக்கு நான் எடுத்துக் கொண்டேன்.

அதற்குப் பிறகு மாலை 4 மணி அளவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் "காலையில் ஐந்தாறு தடவை தொலைபேசி மூலமாகப் பேசினீர்களாமே, என்ன?" என்று கேட்டார். அதற்குப் பிறகு "நிலைமை இவ்வாறு இருக்கிறது; நீங்கள் இதை சுமுகமாகத் தீர்க்க அவர்கள் 50 ரூபாய் இடைக்கால நிவாரணம் தரவேண்டுமென்று நிற்பார்கள் போல் தெரிகிறது" என்று சொன்னேன்.

எப்போதும் ஒரு கோரிக்கையை வைப்பவர்கள் கொஞ்சம் அதிகமான அளவில் கோரிக்கையை வைத்தால் தான் ஓரளவு கிடைக்கும் என்று அதிக அளவில் கோரிக்கை வைப்பார்கள். "இரு தரப்பிலும் கவுரவப் பிரச்சினையாகப் பார்க்காமல் 30 ரூபாய் அளவுக்குத் தீர்த்துவிடலாம்; நீங்கள் கலந்து பேசுங்கள்; நானும் பேசட்டுமா" என்றதற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் "அதெல்லாம் முடியாது; அந்த அளவுக்கு இயலாது; அதை கொடுக்க இயலாது; 15 ரூபாய்க்கு மேல் தர இயலாது" என்று கூறிவிட்டார். ஆகவே, பேச்சை நிறுத்தி விட்டேன்.

அன்று மாலை கலைவாணர் நினைவு விழாவில் முதலமைச்சர் பேசுகிறார். அங்கு பேசும்போது "காலையில் ஒருவர் போன் செய்து எப்படியாவது 30 ரூபாய்க்கு ஒப்புக்

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

கொள்ளுங்கள் என்று கேட்கிறார்'' என்று பேசுகிறார். கலை வாணர் நினைவு நாள் விழாவில் தேவையில்லாமல், தொடர்பு இல்லாமல் இத்தகைய ஒரு பேச்சை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே எடுத்துக் கூறுகிறார்கள். ''காலையில் 30 ரூபாய்க்கு ஒத்துக் கொள்ளுங்கள் என்று ஒருவர் போன் மூலமாகக் கேட்கிறார்'' என்று எடுத்துச் சொல்வது எந்த வகையில் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க பயன் படும் என்பதைத் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதோடு மாத்திரமல்ல ; அதே விழாவில் பேசிய நம் முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் பல் பசைக்கு வரி போடலாமா என்று நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பாக வும் சில நண்பர்கள் எடுத்துக் கூறியதும், திராவிட முன் னேற்றக் கழக நண்பர்கள் எடுத்துக் கூறியதும், ஜனதா கட்சியினர் எடுத்துக் கூறியதும் பற்றிக் கலைவாணர் விழாவில் நம்முடைய முதலமைச்சர் குறிப்பிட்டு ''பல் பசைக்கு வரி போட்டோம், போடலாமா என்று கேட்கிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கை கெட்டு விடும் என்று கூறினார்கள். பல் சுத்தமாக இல்லாவிட்டால் நோய் வரும் என்று சொல் கிறார்கள். பல் விளக்க வேண்டாம் என்றா நாங்கள் சொல்லுகிறோம்? ஆலங்குச்சி, வேப்பங்குச்சி கொண்டு பல் துலக்கக் கூடாதா? பல் சுத்தமாக இருக்க வேண்டும் என்ப தில் அக்கறையிருப்பதால் கை வைக்காதீர்கள் என்று எங்கள் கட்சிக்காரர்களிடம் சொல்லியிருக்கிறோம். அவர்கள் கை வைத்தால் பல் அல்லவா போய்விடும்,' என்று முதலமைச் சர் பேசியிருக்கிறார். இது 31–8–77 தினமணி பத்திரிகை யில் வெளியிடப் பட்டிருக்கிறது.

'' எங்கள் கழகத் தோழர்கள் கை வைத்தால் பல் அல்லவா போய்விடும்'' , என்று பற்பசைக்கு வரிபோடலாமா என்று சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்டதற்கு கலை வாணர் நினைவு நிகழ்ச்சியில் முதலமைச்சர், அதுவும் இப்படி பட்ட பதிலைச் சொல்ல வேண்டுமா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதைப் போல் பஸ் தொழிலாளர்கள் போராட்டத்தைச் சுமுகமாகத் தீர்க்க முன்வந்த என்னை, என் பெயரைக் குறிப் பிடவில்லை என்றாலும்கூட நான் போக்குவரத்துத் துறை அமைச்சரோடு தொலைபேசி மூலம் பேசினேன். '' 30 ரூபாய்க்கு ஒத்துக் கொள்ளுகிறார்கள்'' என்று பேசும் இந்தப்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க நல்லெண்ணத்தோடு ஈடு படுகிறவர்களை எப்படி ஊக்குவித்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அனைத்துத் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளின்படிதான் அனைத்துக் கட்சியினரும் சென்னையிலே காங்கிரஸ் சட்ட மன்றக் கட்சி அலுவலகத்தில் கூடினோம். அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க கூடினோம். அங்கே எடுத்த முடிவின்படி 4-ஆம் தேதி அன்று கண்டனக் கூட்டங்கள் தமிழகம் எங்கும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்தக் கண்டனக் கூட்டத்தில் கூட இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தமிழ்நாடு தலைவர் அருமைத் தோழர் கல்யாண சுந்தரம் அவர்கள் பேசும்போது—''பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்கள் அரசியல் கட்சிகளைப் பயன்படுத்திக் கொண் டார்களே ஒழிய, நாங்கள் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. எங்களை அழைத்து 1-ம் தேதி பேச வைக்காமல் இருந்திருந்தால்—அன்று மாலை பவானியில் அவசர அவசர மாக 27 ரூபாய் தருகிறேன் என்று முதலமைச்சர் அறிவித் திருப்பாரா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். யார் அரசியல் கட்சியைப் பயன் படுத்திக் கொண்டது ? தொழி லாள வர்க்கம் எங்களைப் பயன்படுத்திக் கொண்டதா ? நாங் கள் தொழிலாள வர்க்கத்தைப் பகடைக்காய்களாகப் பயன் படுத்திக் கொண்டோமா ? நீங்களே புரிந்து கொள்ளுங்கள். தொழிலாள வர்க்கம் ஒன்றுபட்டிருந்தால் எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் அந்த அரசைப் பணிய வைக்க முடியும்'' என்று தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் சென்னை கடற்கரைக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

நான் 30 ரூபாய் என்று சொன்ன நேரத்தில் அவர்களை அழைத்துப் பேசி 27 ரூபாய்க்கு ஒத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருப்பார்களேயானால் விஷயம் முடிந்திருக்கும். அவ்விதம் செய்யாமல் எந்தவிதமான தேவையும் இல்லாமல் தொடர்பில்லாத ஒரு விழாவில் இதைப்பற்றி பேசி பிரச்சினையை வளர்த்து இருக்கிறார்கள்.

அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு எடுத்த பிறகு திடீரென்று முதலமைச்சர் 7 ரூபாய் கொடுக்கலாம் என்று வெளியிலிருந்து கொண்டு

அளித்த பேட்டியில் மதுரையிலே மாணவர்கள் கிளர்ச்சி நடந்தபோது ஆயுதக் கிடங்கை தனியார் நால்வர் தாக்கியிருக்கிறார்கள். அமளி நடந்த நேரத்திலே போலீசார் தனியார் நால்வரை கைது செய்துள்ளனர். இந்தத் தனியார் அந்த என்.சி.சி. ஆயுதக் கிடங்கை உடைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள், கல்லூரி காம்பவுண்டுக்குள் தனியாரை விடவில்லை என்பது அதிகாரிகளின் அறிக்கை.

ஆனால், அமைச்சருடைய அறிக்கை, தனியார் நால்வர் உள்ளே கைது செய்யப்பட்டார்கள் என்பதாகும். இதற்கொரு நீதி விசாரணை வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற வேறு பல எதிர்க் கட்சிகளின் சார்பிலும் வேண்டுகோள் விடப்பட்டது. அறிக்கைகள் விடப்பட்டன. கழக ஆட்சிக் காலத்திலே அண்ணாமலை நகர் சம்பவத்திற்கும் பாளையங்கோட்டை மாணவர்கள் சம்பவத்திற்கும், கிளைவ் விடுதி மாணவர்கள் சம்பவத்திற்கும் நீதிவிசாரணை வைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்தி மதுரையில் மாணவர்கள் மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிற இந்த நிகழ்ச்சிக்கு, அதிகாரிகளும், அமைச்சர்களும் மாறி, மாறி முரண்பட்டதான கருத்துக்களை வெளியிடுவதன் காரணமாக உடனடியாக விசாரணை தேவை என்று எடுத்துக் காட்டினேன்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை, மற்றக் கட்சிக்காரரர்கள் விடுத்த வேண்டுகோளும் ஏற்கப்படவில்லை. அதே நேரத்திலே 9 ஆம் தேதி, மறு நாள் நிதியமைச்சரவர்கள் திருச்சியிலே சொல்லியிருக்கிறார்கள், அது தினமணி பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. கல்லூரிக்குள் தனியார் சென்றது உண்மைதான் என்று சொல்கிறார்கள், இதுவும் அதிகாரிகள் மறுத்து வருகின்ற விளக்கம் தான். கல்லூரிக்குள் தனியார் சென்றது உண்மைதான், ஆனால் அவர்கள் அ.தி.மு.க. வினர் அல்ல, சர்க்காரின் பெயரை கெடுப்பதற்காக தி.மு.க. வினர்தான் உள்ளே சென்று தாக்கினார்கள் என்று சொல்கிறார்.

இயல்பாகவே நிதியமைச்சர் அவர்கள் இப்படி கேலியாக பேசுவதை வாடிக்கையாகக் கொண்டவர் என்ற காரணத்தால்உள்ளே சென்றது உண்மைதான், ஆனால் உள்ளே சென்றவர்கள் அ.தி.மு.க.வினர் அல்ல, தி.மு.க.வினர்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்

தினர் மாணவர்களைத் தாக்கினார்கள் என்ற நிதியமைச்சரின் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம்தான் மாணவர் கிளர்சசியைத் தூண்டிவிட்டது என்ற அந்தக் குற்றச்சாட்டு எப்படி உண்மையாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட முரண்பட்ட வாதங்களை வைப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு பயன்படுமே அல்லாமல் உண்மையை அறியப் பயன்படாது, எனவேதான் அதற்கொரு நீதி விசாரணை தேவை என்று எதிர்க்கட்சியின் சார்பிலே கூறப்பட்டது. அந்த நீதி விசாரணைக்கு இணங்காத காரணத்தால், இந்த மிகப் பெரிய பிரச்சனையில் இந்த அரசு நீதி விசாரணை வைக்காத ஒரு பெரும் தவறை இழைத்து விட்டது என்றகுற்றச்சாட்டை நான் அரசின்மீது சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்று. அடிபட்டுக் கிடக்கின்ற மாணவர்களைச் சந்திப்பதற்காக நான் செல்கிறேன். அப்படிச் செல்லும் நேரத்தில் மருத்துவ மனையில் இருக்கின்ற ஒரு டாக்டர், 'டீன்' என்று கருதுகின்றேன், முகம்மது கவுஸ் என்பார் என்னை வரவேற்கிறார். ஏதோ முன்னாள் முதலமைச்சர் என்ற பாவத்திற்காகவோ அல்லது இன்னமும் பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கிறானே என்பதற்காகவோ முகம்மது கவுஸ் என்ற டாக்டர் என்னை வரவேற்கிறார். அப்படி வரவேற்ற குற்றத்திற்காகவோ என்னவோ அடுத்த சில நாட்களுக்குள் 100 ரூபாய் இலஞ்சம் பெற்றார் என்ற ஒரு குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டோ, கைது செய்யப்படாமலோ வழக்கு தொடரப்படுகிறது.

அவர் இலஞ்சம் பெற்றாரா இல்லையா என்ற அந்த வழக்கில் நுழைய நான் விரும்பவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலோ அல்லது வேறு ஒரு சிறப்புக் நிகழ்ச்சியிலோ பேசும்பொழுது குறிப்பிடுகிறார் மாணவர்கள் எத்தனை பேர் அடிபட்டார்கள் என்ற கணக்கை அந்த டாக்டரிடம்-கவுஸிடத்தில் கேட்டேன், முதல் நாள் ஒரு கணக்கைச் சொன்னார். மறுநாள் ஒரு கணக்கைச் சொன்னார், இப்பொழுது அவர் மாட்டிக்கொண்டார் என்று முதலமைச்சர் சொல்கிறார் என்றால் அது நீதிமன்றத்தில் தலையிடுவது ஆகாதா என்பதுதான்......

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த வழக்கு இப்பொழுது நீதி மன்றத்திலே இருக்கின்ற காரணத்தாலே,

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 4

It is affected by sub Judice so, it cannot be raked up.

<u>திரு. மு. கருணாநிதி :</u> நான் சொன்னதை அவர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். அவர் இலஞ்சம் வாங்கினாரா அல்லவா என்ற அந்தப் பிரச்சனைக்குச் செல்லவில்லை என்று கூறிவிட்டேன். ஆனால்............

<u>மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்:</u> தலைவரவர்களே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலில் ஒரு டாக்டரைப்பற்றி சொன்னார்கள். 100 ரூபாய் லஞ்சம் வாங்கியதாக வழக்கு போடப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அதன்மீது நம்முடைய உழைப்பாளர் கட்சியின் தலைவர் ஒரு பிரசனையை கொண்டுவந்தார்கள். நீதி மன்றத்திலே அந்த வழக்கு இருப்பதால் சப் ஜூடிஸ் ஆகாதா என்று கேட்கிறார்கள். என்னுடைய கருத்தெல்லாம், அப்படி ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லியிருப்பார்களேயானால் எந்தவிதமான தவறும் இல்லை. (குறுக்கீடு) நான் விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். ஆனால், இதற்கு முன் ஒரு காரணத்தைச் சொல்கிறார். என்னை, முன்னாள் முதலமைச்சராக இருந்த காரணத்தினாலோ அல்லது இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினாலோ அவர் என்னை சந்தித்தார், அப்படிச் சந்தித்த சில நாட்களுக்குள்ளாக அவர் மீது லஞ்சக் குற்றச் சாட்டு சாட்டப்பட்டு வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று ஒரு மோட்டிவ் கற்பிக்கும் விதத்தில், குற்றச்சாட்டு கற்பிப்பதுதான் தேவையில்லை என்று உறுப்பினவரார்கள் சொல்கிறார்கள்.

[முற்பகல் 9-30]

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, இதற்கெல்லாம் முதலமைச்சரவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில், பதில் அளிப்பார் என நான் நம்புகிறேன். நான் கூறுவதெல்லாம் இப்படி ஒரு வழக்கு போடப்பட்டு பிறகு முதலமைச்சர், பேசுகின்ற ஒரு கூட்டத்தில், இந்த டாக்டர் மாணவர்கள் தாக்கப்பட்டதைக் குறித்து எனக்குத் தவறான விவரங்களைத் தந்து கொண்டிருந்தார் என்று கூறிவிட்டு, அவர் இப்பொழுது மாட்டிக் கொண்டார் என்று, முதலமைச்சர் சொல்லிவிட்ட காரணத்தினால், எங்கே அது ஒருவேளை நீதியிலே தலையிடுவதாக ஆகிவிடுமோ, நீதிபதி அவர்களை அப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுமோ என்ற அச்சத்தோடு தான் இதைச் சொல்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

கிறேனேயல்லாமல், வேறு அல்ல. நான் வழக்கினுடைய உள் விவகாரங்களுக்குச் செல்ல விரும்பவும் இல்லை, செல்லவும் இல்லை.

அடுத்த பிரச்னை, இன்று தமிழ்நாடு கடலோரங்களில் குமுறிக் கொண்டிருக்கிற மீனவர்களுடைய பிரச்னை. இந்த மீனவர்களுடைய பிரச்னைகள்பற்றி நேற்று கூட இங்கே கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதிலே, விசைப் படகுகாரர்களையும் கட்டுமரப் படகுக்காரர்களையும் சமமாக நடத்த வேண்டுமென்று எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. நான் சொல்வது, விசைப்படகுக்காரர்களையும் சாதாரணக் கட்டுமரப் படகுக்காரர்களையும் எவ்வாறு சமமாக நடத்தமுடியும், நிச்சயமாக முடியாது. ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விசைப்படகுகளை ஓட்டி, அதிக லாபம் சம்பாதிக்கிறவர்கள் விசைப்படகுக்காரர்கள். கட்டுமரக்காரர்கள் எந்த நேரத்திலும் கவிழக்கூடும் என்ற சூழ்நிலையோடு, அவர்களும் கடலுக்குள்ளே சென்று, சிறு வருவாயை மீன்களைப் பிடிப்பதன்மூலம் பெறக்கூடியவர்கள்.

ஆனால், எழுந்துள்ள பிரச்னை அதுவல்ல. இருவரும் சமமானவர்களா, அல்லவா என்பதல்ல. ஆனால், ஏற்பட்டிருகிற அமளிக்கு, உயிர்களைக் காப்பதற்கும், உடமைகளைப் பாதுகாக்கவும், அது விசைப்படகு எரிக்கப்பட்டாலும், அல்லது கட்டுமரம் நொறுக்கப்பட்டாலும், இந்தப் பிரச்னைக்கு நீண்ட நாட்களாக ஒரு தீர்வு காணமுடியாமல் இந்த அரசு இருந்து வருகிறது. அரசிலே உள்ள சிலபேர் ஓரிடத்திலே விசைப்படகுக்காரர்களையும் இன்னொரு இடத்திலே கட்டுமரக்காரர்களையும் ஆதரிப்பதானது இன்று நேற்றல்ல, நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபொழுது கூட இருந்தது.

நாங்கள் ஆட்சியிலிருந்தபொழுது, நெல்லை மாவட்ட விசைப்படகுக்காரர்களை ஆதரித்து, இன்றைக்குள்ள அமைச்சரவையிலே உள்ள ஒருவர், என்னிடத்திலே வாதாடியது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. கட்டுமரப் படகுக்காரர்களை ஆதரித்து, இன்றைய தினகரன் பத்திரிகை ஆசிரியரும், முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினருமான, கந்தசாமி அவர்கள் கட்டுமரக்காரர்களுக்குக்காக வாதாடியதாகவும் எனக்கு நினைவு இருக்கிறது. நான் பெயரையே சொல்கிறேன். நமது உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் விசைப்படகுக்காரர்களுக்காக பேசியதும் எனக்கு நினைவுக்கு வருகிறது. இருவர் வாதாடியதும், பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கத்தான் என்பதை..

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : என்னைப் பற்றி, நீங்கள் பொதுமக்கள் மத்தியிலே, குறிப்பாக, மீனவர்கள் மத்தியிலே, தவறான எண்ணத்தை உருவாக்கு வதற்காகத் தவறாகச் சொல்வதற்கு நான் பதில் சொல்லி யாகவேண்டும். நான் எந்த நேரத்திலும், கட்டுமரச் சொந்தக்காரர்களுக்காகத்தான் வாதாடியிருப்பேனே அல்லாமல், விசைப் படகுக்காரர்களுக்காக எந்தவிதத்தி லும் வாதாடியவன் அல்ல ; வாதாடத் தேவையில்லை யென்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள் கிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர், நான் விசைப்படகுக்காரர்களை ஆதரிப்பதாகச் சொல்வார்க ளானால், அதனை ஆதாரத்தோடு நிரூபிக்கவேண்டும்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் இப்படி அவ்வப்பொழுது பதில் சொல்வதாக இருந்தால், அதே உரிமை எனக்கும் தரப்படவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் பதில் சொல்லவேண்டுமென்பதற்காக அல்ல. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இந்த மன்றத்திலே— இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கிறேன், நான்— என்மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்று, கெட்ட எண்ணத்தோடு, நான் இதற்கு முன்னாலே விசைப் படகுக் காரர்களுக்கு ஆதரவு தந்தேன் என்று சொல்கின்றவர், எப்படி ஆதரவு தந்தேன் என்பதற்கான ஆதாரத்தையும் சேர்த்துச் சொல்லவேண்டும்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, களங்கம் கற் பிக்கவேண்டுமென்றும் சொல்லவில்லை, உணவு அமைச்சர் எட்மண்ட் மீது குற்றச்சாட்டும் கூறவில்லை. என்னுடைய பேச்சை நீங்கள் படித்துப் பார்த்தால் தெரியும். நான் சொல்வது, நெல்லை மாவட்டத்திலே இப்படி ஒரு பிரச்னை எழுந்தபொழுது, கட்டுமரக்காரர்களுடைய வாதத்தை, கந்தசாமி எடுத்து வைத்து வாதாடினார். விசைப்படகுக் காரர்களது கருத்தை எட்மண்ட் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இரண்டையும் இன்றைக்கிருக்கிற கவர் னர் அறையிலேதான், இருதரப்பினரையும் உட்கார வைத்து, அவர்களிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தி, இருவரும் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க உதவினார் கள்.

சுமுகமான சூழ்நிலையை அன்றைக்கு நாம் கண்டோமே, அதைப் போல், இந்த அரசு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கட்டுமரக்காரர்களுக்கும் அதைப்போலவே, விசைப்படகுக் காரர்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கிற கொந்தளிப்புக்கு ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டு மென்பதற்காகத் தான் இதை எடுத்துச் சொன்னேன்.

ஒரு சமரச ஏற்பாட்டை இருவரிடையேயும் உருவாக்கு வதற்கு இந்த அரசு இன்னும் முன்வரவில்லை என்பதைத் தான் குற்றமாகச் சொல்லுகிறேனே அல்லாமல், யார் கட்டுமரப் படகுக்காரர்களுக்கு வாதாடினார்கள், யார் விசைப்படகுக்காரர்களுக்கு வாதாடினார்கள் என்பதல்ல பிரச்னை. இந்த அரசு இன்றைக்கும் ஒரு சமரச முடிவு காண நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத்தான் என் னுடைய மிக முக்கியமான குற்றச்சாட்டாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆறு மாத காலத்திலே தொழிலாளர்கள், அவர் கள் நடத்திய வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், பொறி யாளர்கள், அவர்கள் நடத்திய வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சி கள், உண்ணா விரதங்கள், மொட்டை அடித்துக்கொண்டு நடத்திய ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் அதைப் போலவே, கல்லூரி பேராசிரியர்கள், அவர்கள் வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள்—மின்வாரியத் தொழிலாளர் கள் அவர்கள் நடத்திய போராட்டங்கள், நெசவாளர்கள், அவுஸ் சர்ஜன்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மற்றக் கல்லூரி மாணவர்கள், அரசியல் கட்சிக்காரர்கள் போராட் டங்கள் இவ்வளவும் இந்த ஆறு மாத காலத்திலே நடந்தது. ஏறத்தாழ 25,000, 30,00C பேர்கள் இந்த ஆறு மாத காலத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆறு மாத காலத்திற்கு நாங்கள் பொறுத்திருப்போம் என்று சொன்னீர்களே, அதற்குள்ளாகவே நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டீர்களே என்று கேட்டால், அன்றைக்குக் கூட, அவை முன்னவர்கூட, ஆய் வுக் குழுவிலே நேற்றே எடுத்துக் கொண்டிருக்கலாமே என்று கேட்டபோது சொன்னேன், ஆறு மாத காலம் இன்னும் முடியவில்லை; ஜனவரி 1-ந்தேதி தான் ஆறு மாதம் முடிகிறது; அதற்குப் பிறகு கொண்டு வருகிறோம் என்று அவர்களிடத்தில் விளக்கம் அளித்தேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

எனவே, இந்த 6 மாத காலத்தில் கிட்டத்தட்ட 25,000, 30,000 பேர்கள் அரசியல் கட்சிக்காரர்களிலிருந்து தொழிலாளர்களிலிருந்து, மாணவர்களிலிருந்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களிலிருந்து, அவுஸ் சர்ஜன்களிலிருந்து, கல்லூரிப் பேராசிரியர்கள் வரையில் கைது செய்யப்பட்டு, அவர்களிலே கர்ப்பிணி பெண்கள், மதுரையிலே இருந்து வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, லாரியிலே அழைத்து செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சி என்ற முறையிலே நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படி சுட்டிக்காட்டவில்லை என்றால், எங்கள் கடமையிலிருந்து தவறியவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் மாத்திரம் அல்ல. நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளைப் பற்றியும் நாம் இங்கே சிந்தித்தாக வேண்டும்.

பொதுவாக, புதிய அரசு தங்களுடைய தேர்தல் பிரகடனத்தில் ருசியான, சுவையான, கவர்ச்சிகரமான, ஈர்க்கத்தக்க, இன்பமான, எழில் வாய்ந்த திட்டங்களை அறிவித்தது. அந்தத் திட்டங்களில் எத்தனையோ, கவர்னர் அவர்களுடைய உரையில் இடம் பெறவில்லை என்ற குறைபாட்டை இந்த அவையில் நடந்த விவாதத்தில் நாங்கள் எடுத்து வைத்தோம். பிறகு கவர்னர் உரையிலே கொஞ்சநஞ்சம் இடம்பெற்ற திட்டங்கள் நிதி அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கையில் இடம் பெறவில்லை என்று எடுத்துக் காட்டினோம்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமானால், 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள், ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் ஒரு கடை திறக்கப்படும் என்று கவர்னர் உரையிலே எடுத்துச் சொல்லப்பட்டபோது, இந்த மண்டபமே அதிரும் வண்ணம், ஆளுங்கட்சித் தரப்பிலும், தோழமைக் கட்சித் தரப்பிலே இருந்தும், ஏன் எதிர்க்கட்சித் தரப்பிலும் இருந்தும் கையொலி எழும்பியது. 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்தில் வைக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

ஆக்கபூர்வமான யோசனையைச் சொல்லவேண்டும் என்ற அக்கறையோடு நான் அன்றைய தினம், இந்த மன்றத்திலே பேசும்போது இதிலே உள்ள சிக்கல்களை, சிரமங்களை எண்ணிப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டு

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

மென்று எடுத்துச் சொன்னேன். பிறகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது எல்லா விஷயங்களையும் அதிகாரிகளைக் கலந்து கொண்டுதான் செய்கிறோம் என்கின்ற வகையில் அளித்த பதில், ஏற்கனவே திட்டவட்டமாக பரிசீலித்து எல்லா நடவடிக்கைகளையும் செய்து விட்டார்கள் என்ற இனிப்பான உணர்வு எனக்கு வந்தது. பிறகு நிதி நிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில், எதிர்க்கட்சித் தலைவரே இதில் உள்ள சிரமங்களை எல்லாம் எடுத்துக் கூறிவிட்டார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் தொடர்ந்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று உணவமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[முற்பகல் 9–40]

பிறகு முதலமைச்சர் சொன்னார். இந்தக் கூட்டத்தொடர் முடிவுற்றதும் உடனடியாக அதிகாரிகளை கலந்து இந்த 16,000 நியாய விலைக் கடைகளை திறக்கும் முயற்சியில் அரசு இறங்கும் என்ற உறுதிமொழியினை இந்த மாமன்றத்தில் அவர்கள் தெளிவாக திட்டவட்டமாக அறிவித்தார்கள். ஆனால் இப்போது அளிக்கப்பட்டுள்ள துணை நிதி நிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டது? 16,000 ரெவின்யூ கிராமங்களில் நியாய விலைக் கடை திறக்கப்பட தொடங்கி விட்டோம் என்றா?, இல்லை. சில மாவட்டங்களில், நெல்லை, இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் 442 நியாய விலைக் கடைகளை தொடங்கப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்கள் அறிவித்தது 16,000 நியாய விலைக் கடைகள். இப்போது தொடங்குவதாக சொல்லி இருப்பது 442 கடைகள். கடல் வருகிறது என்று சொல்லி விட்டு கடுகு வந்து விட்டது என்று சொல்வதைப்போல் இன்றைக்கு இந்தக் கடுகைக் காட்டி பாருங்கள், பாருங்கள் நாங்கள் 442 நியாய விலைக் கடைகளைத் திறக்கத் தொடங்கி விட்டோம் என்று கூறியிருக்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளைத் திறக்க இதை விட ஏற்றதொரு காலம் என்ன என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். புயல் வீசி, வெள்ளத்தால் மக்கள் தவித்து, சீரழிந்து, விலைவாசிகள் உச்சிக்குச் சென்று இருக்கும் இந்த நேரத்தில் திறக்கப்படாத நியாய விலைக் கடைகள், தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்போல், பசிக்கு உதவாத உணவு போல், பிறகு எப்போது திறக்கப்பட்டால் என்ன? மக்கள் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் திறக்கப்பட இருக்கிற 16,000 கடைகளில் ஒரு 10,000 கடைகள் திறந்தோம், ஒரு 5,000 கடைகள் திறந்தோம் என்று சொல்வதற்கு பதிலாக ஒரு 442 கடைகள் திறந்து

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

இருக்கிறோம் என்று சொல்வது, 16,000 எங்கே, இந்த 442 எங்கே என்ற இந்தக் கேள்விக்கு இந்த அரசு என்ன பதில் சொல்ல இருக்கிறது எனறு எனக்குப் புரியவில்லை. ஆகவே, சொன்ன சொல்லைக் காப்பாற்ற இன்றைக்குத் தவறிவிட்ட இந்த அரசின் மீது இதை மற்றொரு குற்றச் சாட்டாக எடுத்துச்சொல்லி இருக்கிறேன்.

இன்னொன்று. நிதிநிலை அறிக்கையில் மிக அழகாக நிதி அமைச்சர் படித்துக் காட்டினார். கிராமப்புறங்களில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு. யார் யாருக்கு? செருப்பு தைப்போர், தையல் கலையில் ஈடுபட்டுள்ளோர், சலவைத் தொழில் புரிவோர், கருமார், தச்சர், நீர் குழாய் பணியாளர்கள், இதுபோன்ற லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறோம்.

அது மாத்திரமல்ல, அடுத்து வரும் 12 மாதங்களில் குறைந்தது லட்சம் பேருக்கு—குறைந்தது லட்சம் பேருக்கு என்றால் லட்சம் பேருக்கு மேலும் எதிர்பார்க்கலாம். குறைந்தது என்றால் மினிமம் லட்சம் பேருக்கு என்று நிதியமைச்சர் அறிவித்தார்கள். 12 மாதங்களுக்குள் என்று அறிவித்து 6 மாதம் ஓடிவிட்டது. இந்த 6 மாத காலத்தில் அந்த லட்சம் பேருக்கு கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதாகச் சொன்னீர்களே, அவர்களுக்கு எத்தனை ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது என்று இதையும் சுட்டிக்காட்டி, சொன்னபடி நடக்கவில்லை என்ற தவறை இங்கே எடுத்துக் காட்டி இந்த அரசின் மீது மற்றொரு குற்றச்சாட்டைச்சாட்ட நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அவர்களுக்கு—புதிதாக லட்சம் பேருக்கு கொடுப்பதாகச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றாதது மட்டுமல்ல, ஏற்கனவே இளைஞர் அணியில் இருந்த ஆயிரக்கணக்கான பேர் வேலையில் இருந்து அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு மாதம் ரூ. 175 முன்பு இருந்த கழக அரசு அளித்து வந்தது. அந்தத் திட்டம் கூட பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் கழக அரசுக்கு ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார். படித்துவிட்டு வேலை யில்லாமல் இருக்கும் பட்டதாரி மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் இந்த அரசு மாதம் தோறும் ரூ. 200 சம்பளம் கொடுத்தால் என்ன என்று கேட்டார். நாங்கள் கணக்கிட்டுப் பார்த்ததில் 200 ரூ. அதிகப்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

படியான தொகையாக இருக்கிறது என்று கருதி ரூ. 175 நிதி ஆதாரத்தைக் கொண்டு அளிக்கலாம் என்று கணக்கிட்டு, ரூ. 175 என்ற அளவில் கிட்டத்தட்ட ஒரு 4,000 படித்த பட்டதாரி மாணவ மாணவிகளுக்குத் தருவதாக முடிவு எடுத்து, அந்த இளைஞர் அணி உருவாக்கப்பட்டது.

இன்றைக்கு அவர்களில் பெரும்பாலோர் வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு தரப்படும் என்று இதே மன்றத்தில் நம்முடைய உணவு அமைச்சர் மாண்புமிகு எட்மண்ட் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்தார்கள். அது பரிசீலிக்கப்படும், வேறு வேலைகளில் அவர்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இன்னும் அதற்கான பரிசீலனை நடந்ததாகத் தெரியவில்லை. இன்னும் அந்த இளைஞர் அணியில் இருந்த யார் யார் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்று அறிவிக்கப்படவில்லை. ஆகவே, அதையும் நான் குற்றச்சாட்டாகக் கூற விரும்புகிறேன்.

மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் பற்றி எல்லா கட்சிக்காரர்களும் இங்கே பிரச்சினை எழுப்பினோம். அதைப்பற்றி நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் ராகவானந்தம் அவர்கள் இதே மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். மாறி மாறி பலரும் இங்கே கேள்வி கேட்ட நேரத்திலே அரசு எடுத்து நடத்துமா என்று கேட்ட போது அமைச்சர் ராகவானந்தம் விளக்கமாகச் சொன்னார்கள். அரசே மூடப்பட்ட தொழிற்சாலையை எடுத்து நடத்த நிதி ஒதுக்குவது சாத்தியமற்றதாக இருக்கிறது என்றும் அப்படி மூடப்பட்ட ஆலைகளைத் தொழிலாளர்களே எடுத்து நடத்துவது பற்றி முதல்வர் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த மன்றத்தில் சொன்னார். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? காற்றிலே கலந்த கீதம் ஆகிவிட்டதா?

அரசே எடுத்து நடத்துமா என்ற கேள்வி எந்த அடிப்படையிலே எழுந்தது? ஏற்கனவே இருந்த கழக அரசு 13-க்கும் மேற்பட்ட ஆலைகளை எடுத்து நடத்தியது. அந்த அடிப்படையிலே தான் இங்கே கேள்வி கேட்கப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர்களின் சார்பாக உறுப்பினர்கள் கேட்டார்கள். அப்பொழுது அளித்த பதில் அரசே எடுத்து நடத்த நிதி ஆதாரம் இல்லை. எனவே, தொழிலாளர்களே அந்த மில்களை எடுத்து நடத்துவதற்கு எப்படிச் செயல்படுவது என்பதைக் குறித்து முதல்வர் ஆலோசித்து வருகிறார் என்று சொல்லப்பட்டது.

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

கிட்டத்தட்ட 4, 5 மாத காலமாக இந்தப் பிரச்சினை ஆலோசனையில் இருந்து வருகிறது. சில நேரங்களில் ஆலோசனைகள் ஊறுகாய் பானைக்குள் போய்விடும். அதை வெளியே எடுத்து இலையில் பரிமாறப்பட வேண்டும் என்பதற்காகத் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாக நான் இந்தக் குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்த விரும்புகிறேன் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் முதலமைச்சர் அவர்களிடந்திலே கேட்டேன். ஏற்கனவே இருந்த அரசு விவசாயிகளுக்கு அவர்களுக்கு கட்டுப்படி ஆகின்ற விலை கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு சில நல்ல காரியங்களைச் செய்தது. மத்திய அரசு 74 ரூபாய் தான் கொடுக்க வேண்டுமென்று சொன்ன போது கூட அவர்களுக்கு போனஸ் என்று 10 ரூபாயும், போக்குவரத்துச் செலவு என்று 5 ரூபாயும் ஆக மொத்தம் 15 ரூபாயை அதிகம் கொடுத்து ஆக மொத்தம் 89 ரூபாயை அவர்கள் பெற்றார்கள், இந்த அரசு அந்த முறையை கடைப்பிடிக்குமா என்று கேட்டேன். நான் கேட்டதும் முதலமைச்சர் அளித்த பதிலும் 10–8–77 ஹிந்து பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

Intervening, the Leader of the Opposition Mr. Karunanidhi recalled that the D.M.K. Government gave as bonus and transport charges Rs. 15 more than the procurement price fixed by the Centre. He wanted to know whether the present Government would revive it. The Chief Minister Mr. M. G. Ramachandran said the Government will do whatever was in the best interest of the ryots.

MR. KARUNANIDHI : I have asked a specific question. Will the Government pay anything extra as bonus, transport charges etc., be it Rs. 15, Rs. 20 or less?

CHIEF MINISTER : The ryots will get more than what Mr. Karunanidhi expects.

எதிர் கட்சித் தலைவர் கருணாநிதி எதிர்பார்ப்பதை விட அதிகமாகவே அந்த உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு தரப்படும் என்ற வாக்குறுதியை முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அளித்ததும், அது எல்லா பத்திரிகையிலும் வந்திருக்கிறது. நான் இங்கே படித்தும்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

காட்டினேன். இதுவரையில் அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. கேட்டால் உணவு அமைச்சர், நாங்கள் கொள்முதல் செய்வதே கிடையாது. கொள்முதல் செய்தால் அல்லவா அதிக விலை கொடுக்க முடியும் என்கிறார். அடிப்படையே நீங்கள் கொள்முதல் செய்யவேண்டும் என்பது தான். அதற்கு எடுத்து வைக்கப்படுகிற வாதம் இப்பொழுது ஒரே உணவு மண்டலமாக ஆகிவிட்டது. மற்ற மாநிலங்களுக்குச் சென்று விற்றுக் கொள்ளலாம் என்ற வாதம் எடுத்து வைக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே விவசாயிகளிடத்திலிருந்து வியாபாரிகள்தான் வாங்குகிறார்கள். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயிக்காத காரணத்தால் 89 ரூபாய் அல்லது 90 ரூபாய் என்று ஒரு விலையை நிர்ணயித்து நெல்லை வாங்காத காரணத்தால் விவசாயிகளை வியாபாரிகள் ஏமாற்றமுடிகிறது. வியாபாரி குறைந்த விலைக்குக் கேட்டால் உங்களிடத்திலே போட மாட்டேன், அரசு கொள்முதல் நிலையத்திலே போடுகிறேன் என்று மிரட்டுகிற நிலைமை இருந்தால்தான் அவன் பாதுகாக்கப்படுவான்.

இதை எடுத்துச் சொன்னால் உடனே உணவு அமைச்சர், கருணாநிதி, விவசாயப் பேரணியை நடத்துகிறார், விவசாயப் பேரணியை நடத்த கருணாநிதிக்கு என்ன தகுதி இருக்கிறது, என்று கேட்கிறார். நான் தகுதியற்றவனாக இருக்கலாம். அதை எட்மண்ட் போன்றவர்கள் எடுத்துக் காட்டியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற அந்த வள்ளுவர் வாக்குப்படியும் தகுதியற்ற கருணாநிதி இந்த விஷயத்தைச் சொல்கிற நேரத்தில், சொல்லப்பட்ட விஷயம் சரியானதுதானா என்பதை எண்ணிப் பார்த்து விவசாயிகள் பிரச்சினை கவனிக்கப்படும் என்று சொல்லியிருந்தால் அந்த அளவுக்குக் கூட இந்த விவகாரம் முற்றியிருக்காது.

[முற்பகல் 9–50]

பிறகு, பேரணியை நடத்திய பிறகு, முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசிய பிறகு, மறுபடியும் இந்த அறப் போராட்ட ஆய்வுக் குழு முதலமைச்சரைச் சந்தித்த பிறகும், இன்னும் எந்த விதமான, விவசாயிகளுக்குச் சாதகமான அறிக்கை வெளி வரவில்லை. அது வெளி வரவேண்டும்

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

என்பதற்காகத் தான், முதலமைச்சர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்கின்ற இந்தக் குற்றச்சாட்டினை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

நெல் விலையை அதிகப்படுத்திக் கொடுத்தால் அரிசி விலை அதிகமாகி விடாதா என்று கேட்பவர்கள், இப்போது நெல் விலை குறைந்திருக்கிற நேரத்தில், 89 ரூபாய் இருக்கின்ற நேரத்தில் என்ன அரிசி விலை விற்றதோ, அதே தான் 77 ரூபாய் விற்கின்ற நேரத்திலும் அரிசி விலை விற்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. நாம் நெல் விலையை குறைத்திருப்பதை அதிகப்படுத்தி, அதே நேரத்தில் அரிசி விலை ஏறுவதைத் தடுக்க நியாய விலைக் கடைகளை திறக்க வேண்டும். மீண்டும் சுற்றிச் சுற்றி வந்தால், இந்த 16,000 நியாய விலைக் கடைகள் பக்கம்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. ஒரு இனிப்பான அறிவிப்பை அறிவித்துவிட்டு, அதை மீண்டும் மூடி வைத்துவிட்டு, 442 கடைகள்தான் இப்போது திறக்கப்படும் என்று சொன்னால் அது பயனுள்ள காரியமாக இருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக அரசு சார்பாக எடுத்துச் சொல்லப்படுகின்ற எந்த வாக்குறுதிக்கும், பிறகு நடைமுறைக்கும் தொடர்பு இருப்பதில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய விசாரணையின் தொடர்பாக சென்னை மத்திய சிறைச்சாலைக்குச் சென்றபோது, அங்குள்ள கைதிகள் சில தகவல்களை அந்தக் கமிஷனுக்கு தந்தார்கள் என்பதற்காக, அந்தக் கைதிகள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை விசாரிக்க யாராவது அமைச்சர்களை அங்கே யனுப்பி ஆராயச் செய்வார்களா என்று கேட்டபோது, முதலமைச்சர் சொன்னார், அமைச்சர்களை அனுப்புவது நல்லதல்ல; ஒரு நீதிபதியை நான் சிறைச்சாலைக்கு அனுப்பி விசாரித்து வரச் சொல்கிறேன் என்று சொன்னார். நீதிபதியை அனுப்பவில்லை. எங்களைத்தான் அனுப்பினார். நீதிபதி அனுப்பப்படவில்லை. நாங்கள் தான் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டோம். சொல்லி கிட்டத்தட்ட 3, 4 மாதங்கள் ஆகின்றன. 3, 4 மாதங்களில் எந்த நீதிபதி அங்கே சென்றார்? அந்த வாக்குறுதி என்னவாயிற்று? அவர் சென்று, அவர் விசாரித்து என்ன அறிக்கை தந்தார்?

1978 ஜனவரி 4] [திரு மு. கருணாநிதி]

இப்படி சட்டமன்றத்தில் சொல்லப்படுகின்ற வாக்குறுதி கவனிப்பாரற்ற நிலையில், சட்டமன்றத்தில் தானே கேட்டான், அங்கு வாக்குறுதி அளித்தால் அலட்சியப் படுத்திவிடலாம் என்று புறக்கணிக்கப்படுகின்ற நிலையில் காற்றில் போய்விடுகின்றன என்கிற குற்றச்சாட்டை தான் மீண்டும் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே, மக்களை நடத்திச் செல்கின்ற பணியைச் செய்கின்ற அரசு நிர்வாக நடைமுறைப் பணிகளையும் இந்த 6 மாதகாலத்தில் சரியாகச் செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

காரணம் சொல்லலாம். புயல் வந்துவிட்டது, வெள்ளம் வந்துவிட்டது என்று. புயல் வந்தது நவம்பர் மாதத்தில்! அந்தப்பணிகளாவது ஒழுங்காக நடைபெற்றனவா என்பதைப் பற்றி நம்முடைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் 2, 3 நாட்கள் கடுமையான விவாதம் நடைபெற்றிருக்கிறது. அரசைப் பாராட்டிப் பேச ஆரம்பித்தவர்கள் கூட பல இடங்களில் ஏற்பட்ட குறைகளைச் சுட்டிக் காட்டி, நாமினேஷன் ஏற்பாட்டில் ஊழல் புகார்கள், காண்டிராக்ட் விடப்பட்டதில் இருக்கிற ஊழல் புகார்கள், வேண்டியவர்களுக்கு காண்டிராக்ட்கள் அல்லது நாமினேஷன் தரப்பட்டிருக்கிறது என்ற ஊழல் புகார்கள், அமைச்சர்களுக்கு வேண்டியவர்களுக்கு தரப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள், இவைகள் எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இவ்வளவு கடுமையான புகார்கள் வந்த நேரத்திலும் கூட, நமது முதலமைச்சரின் கவனம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதுதான் இருந்தது. புயல் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாதித்து விடக்கூடாது என்பதற்காகவா என்றால் இல்லை.

இந்த நேரத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது என்ன குற்றத்தைச் சாட்டலாம் என்பதிலேதான் முதலமைச்சர் தன்னுடைய முழு நேரத்தையும் செலவழித்தார். டெல்லி சென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கவில்லை என்றார். பிறகு, இங்கே வந்த பிறகு, சில நாட்களுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கிறது என்று ஒப்புக் கொண்டார். அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த கூட்டுக் குழுக்களிலும், நிவாரணக் குழுக்களிலும் அவர்களை நியமிக்கக்கூடாது என்று அறிவித்தார் முதலமைச்சர். மார்க்சிஸ்ட் கம்யூ

னிஸ்டு கட்சி ஒரு அறிக்கை விட்டது. அதைக் கண்டித்து. இது நல்ல மரபாகாது என்று அறிக்கை விட்டது. அதற்காக, அந்தக் கட்சிக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். சில நேரங்களில் அந்தக் கட்சி இப்படிப்பட்ட ஜனநாயக நிலைகளை எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளது. அந்த கட்சியின் அறிக்கைக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் சேர்த்துக் கொள்ளப்படும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கிறது என்று முதல்வர் சொன்னார்.

இது கட்சிக் கொள்கையின் முடிவா அல்லது பிரதமரோ, அல்லது வேறு மத்திய அமைச்சர்களோ பதில் கொடுத்ததற்குப் பிறகு அந்த முடிவு மேற்கொள்ளப் பட்டதா? அந்த மர்மத்திற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. எப்படியோ முதலில் கலந்துகொள்ளவில்லை என்று சொன்ன முதலமைச்சர், மறுபடியும் கலந்து கொண்டதாகச் சொன்னார். நேற்று அதைப்பற்றி கட்சி உறுப்பினர் ரகுமான்கான் கேட்டபோது முதலமைச்சர் முதலில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை அது உண்மை. பிறகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அறிக்கை விட்டார்—எல்லோரும் கலந்து கொள்ளலாம் என்று—அதற்குப் பிறகு கலந்து கொண்டார்கள்—ஆகவே, நான் அதை ஏற்றுக் கொண்டேன் என்ற விளக்கத்தைத் தந்தார்கள்.

அந்த விளக்கம், அடிப்படையிலேயே ஆதாரமற்றது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், புயல் செய்தி வந்த மறு நாளே 25 ஆயிரம் ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்—அது பெரிய பணமல்ல—3 கோடி நாங்கள் சேர்த்திருக்கிறோம். இது என்ன பெரிய 25 ஆயிரம், தூசு என்று கருதக்கூடும். பெரிய பணம் அல்ல. ஆனால், கொடுமையால் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த 25 ஆயிரம் ஓரளவுக்காவது பயன்படும் என்ற அளவில் தர முற்பட்டோம். நேற்றைய தினம் பேராசிரியர் பேசும் போது குறிப்பிட்டதைப் போல திருச்சியைச் சேர்ந்த பரம தயாளன் என்ற கழகத் தோழன் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் 10 பேரைக் காப்பாற்றிவிட்டு இறுதியில் அப்பணியை மேற்கொண்டிருக்கும் போது மாண்டு போனான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தகைய நண்பர்கள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுகிறாரா என்று எதிர்பார்த்து அதற்குப் பிறகு பார்த்துக்

கொள்ளலாம் என்று இருந்தார்கள்? சிந்தாமணியில் வெள்ளத்திலே குதித்து வெள்ளத்தால் மூழ்கியவர்களைக் காப்பாற்றினார் பரம தயாளன். அதைப் போலவே கொள்ளிடத்திற்கு அருகாமையில் அரிக்குடி என்ற இடத்தில் ஒரு திட்டில் அகப்பட்டுக்கொண்ட நூற்றுக் கணக்கான கிராமப்புற அரிசனத் தோழர்களை எல்லாம் கழக ஆதரவாளர் K. B. S. மணி, சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரவேலுவைச் சார்ந்த கழக நண்பர்கள் பானையை வயிற்றில் கட்டிக்கொண்டு காப்பாற்றிய போது ஒரு கழக நண்பன் அந்த வெள்ளத்தில் மாண்டிருக்கிறான். எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கை வந்த பிறகு இவைகளையெல்லாம் அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்று இருந்தார்கள்?

தஞ்சை மாவட்டத்தில் தாழைக்குடி கருணாநிதி போன்றவர்கள், அதைப் போலவே முன்னாள் அமைச்சர் மன்னை, அன்பில் தர்மலிங்கம் போன்றவர்கள், வேடசந்தூர் பகுதியில் முத்துச்சாமி போன்றவர்கள், கரூர் பகுதியில் நல்லுசாமி பரமத்தி சண்முகம் போன்றவர்கள் உடனடியாகச் சென்று அங்கு ஆக்கப் பணிகளைச் செய்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கை வந்த பிறகு அல்ல, முன்பே செய்திருக்கிறார்கள்.

தலைமைச் செயலாளர் பணத்தை வாங்கத் தயங்கவில்லை, மறுத்தார் என்று சட்ட மன்றத்தில் பேசப்பட்டதை ஒட்டி அவர் தந்த ''நோட்டினை'', ஒரு குறிப்பினை—நிதியமைச்சர் இங்கே வெளியிட்டார். இதிலே எனக்கு இருக்கிற வேதனை என்னவென்றால். புலவரோ, மற்றவர்களோ அவரைச் சந்திக்கவில்லை—இன்னொருவரிடம் கொடுத்துவிட்டுப் போகச் சொன்னார் என்று இருக்கிறதே அல்லாமல், ''நான் வாங்கிக் கொண்டேன்'' என்று மறுத்திருக்கிறார்? ''ஒரு மாநாட்டில் உட்கார்ந்திருந்தேன். அப்போது வந்திருப்பதாகச் சொன்னார்கள். இன்னாரிடத்தில் கொடுத்து விட்டுப் போகச் சொன்னேன்'' என்றுதான் சொல்லியிருக்கிறார். என்ன பெரிய மாநாடாக இருந்தாலும், மாநாட்டில் கலந்துகொள்கிற மந்திரிகள் உட்பட, அவர்களுக்கு இயற்கை உபாதை ஏற்பட்டு கழிவிடம் செல்ல மாட்டார்களா? சிறுநீர் கழிக்கச் செல்ல மாட்டார்களா? அதைப் போல, முன்னாள் சபாநாயகர் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கழிவிடம் செல்ல, சிறுநீர் கழிக்கின்ற இடத்திற்குச் செல்வதைப் போல வெளியே

வந்து அந்தச் செக்கை வாங்கிக் கொண்டு போவதற்கு எவ்வளவு நேரமாகிவிடும்? அந்தக் கழிவிடத்தைவிட அவ்வளவு கேவலமானவரா புலவர் கோவிந்தன்? சிந்தித்துப் பாருங்கள். இது சமாதானமா? சீப் செக்ரடரி கொடுத்தது சமாதானமா? வெளியே வந்து அந்தச் செக்கை வாங்கிக் கொண்டு உள்ளே போவதற்கு எவ்வளவு நேரமாகிவிடும்? இதற்காக, ஏன் வேண்டுமென்றே ஒரு மழுப்பலான சமாதானம்? நான் வாங்கிக் கொண்டேன் என்று மறுக்கிறார்? நான் சந்திக்கவில்லை என்று கூறுவது தவறு என்று மறுக்கிறார்? அதற்கு விளக்கம் சொல்லவில்லை. தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறைச்சாலைக்கு மணியார்டர் அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டேன் என்றால், எனக்குத் தெரியும், ஏற்கனவே சிறைச்சாலை விதி இருக்கிறது, 50 ரூபாய்க்கு மேல் சிறைச்சாலையில் இருக்கிறவர்கள் கைப் பணத்தை வைத்துக்கொள்ளக் கூடாதென்று விதி இருக்கிறது. ஆனால் நான் கேட்டது வைத்துக் கொள்வதற்கான பணம் அல்லவே. அது, உடனே புயல் நிவாரண நிதிக்கு திருப்பி அனுப்ப, ரீ-டைரக்ட் செய்வதற்காகச் செய்த ஏற்பாடுதான் அந்த ஏற்பாடு. அதிகாரிகளுக்கு அது தெரிந்திருந்தும் கூட அவ்வளவு அவசரம் அவசரமாக தலைமைச் செயலகத்திலிருந்து ஒரு தாக்கீது செல்வானேன்?

[முற்பகல் 10–00]

ஆனால் மணி ஆர்டர் வந்தால் அதை அனுமதிக்காதீர்கள் என்ற தாக்கீது ஏன்? சிறையில் அடைக்கப்பட்ட எங்களுக்கு கழகத் தலைவர்களுக்கு அவர்களுடைய துணைவியார் சோறு கொண்டு வந்து பரிமாறலாம் என்ற அளவிற்கு சட்டத்தினைத் திருத்த முடியுமா என்று நான் சிறை சூப்பரின்டெண்டு அவர்களோடு பேசிவிட்டுத்தான் வந்திருக்கிறேன் என்று "இந்து"ப்பத்திரிகை விழாவில் பேசிய முதலமைச்சர், அவர்களுக்கு, சாப்பாடு பரிமாற துணைவியாரை அனுப்பச் சட்டத்தையே மாற்றலாமா என்று யோசித்தவர், நாட்டில் இருக்கிற இலட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுக்குச் சாப்பாடு போட, அவர்களுக்கு உடை வழங்கிட என்று சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் மணியார்டர்களைக் கருணாநிதி பெறக் கூடாது, என்று இருக்கிற சட்டத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட வேண்டிய அளவிற்கு, அவ்வளவு அவசியம் என்ன வந்துவிட்டது? என்று தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவேதான் பல நேரங்களிலே இப்படியெல்லாம் புண்படுத்தப்பட்ட காரணத்தினால்தான் வேறு வழியில்லாமல், மேதகு ஆளுநர் அவர்களிடத்திலே நிதியினை அளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். பேராசிரியர் அவர்களே சுட்டிக்காட்டியதைப்போல, "சீப் மினிஸ்டர்' ஸ் ரிலீஃப் பண்டு" என்றுதான் கொடுக்கப் பட்ட செக்கில் போட்டிருக்கின்றது என்று கவர்னர் அவர்களிடத்திலே சொல்லி விட்டுத்தான் அதை அவர்களிடத்திலே அளித்தோம். எங்கள் மாநில உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதற்கு அடையாளமாக, எடுத்துக் காட்டாக இப்படிப்போட்டிருக்கிறோம் என்று ஆளுநர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லித்தான் அதை அவர்களிடம் கொடுத்தோம். ஆகவே, மாநில உரிமைகளைப் புறக்கணிப்பது என்கின்ற எண்ணம் கிஞ்சிற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது என்பதனை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நாங்கள் சிறைச்சாலையில் இருந்தோம். ஏன்? திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டினோம் என்பதற்காக. திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்திலே ஏற்கப் பட்டதொன்று என்று அரசும் அறிவித்து, அதற்கு அனுமதியும் கொடுத்தது. அதற்குப் பிறகு மதுரை நகரிலே நடைபெற்ற சில சம்பவங்களையொட்டி, திடீரென்று தடை உத்திரவு என்று பிறப்பிக்கப்பட்டது. மதுரையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி திருச்சிக்கு எட்டாத நேரத்திலே, திருச்சியிலே அங்குள்ள கழகக் தலைவர்கள் தலைமையிலே கழகத்தினர் கருப்புக் கொடியோடு நின்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால் திடீரென்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். நீங்கள் இங்கு கூடியிருப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. கலைந்து செல்லுங்கள் என்று. "இல்லை, திடீரென்று நீங்கள் அறிவிக்கின்றீர்கள், நாங்கள் தடையை மீறுவதாக இருக்கிறோம்" என்று சொல்லுகின்றார்கள் கூடியுள்ள கழகத்தினர். அந்தக் கூட்டத்திற்கு இடையிலேயே கழகத் தலைவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அங்கே அப்படிப் பட்டதொரு சூழ்நிலை ஏற்பட்டதால் அமளி உருவாகிறது. பின்னர் அந்த அமளியைத் தொடர்ந்து, போலீஸாருடைய வன்முறை, வெறியாட்டங்கள், அடக்குமுறை, தடியடி பிரயோகங்கள், கண்ணீர்புகை குண்டு வீச்சு என்று இப்படியெல்லாம் திருச்சியிலே நடைபெறுகின்றன.

[திரு மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

மதுரை, திருச்சி பிறகு சென்னை, காஞ்சிபுரம் என்று எல்லா இடங்களுக்கும் தடை உத்திரவு என்கின்றார்கள். சென்னை நகரிலே எந்தெந்த இடத்திலே யார் யார் கருப்புக் கொடி காட்டுவதற்குத் தலைமை வகிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் கைது செய்யப் படுவார்களேயானால், அதற்குப் பிறகு கழகத்தின் தலைவர் களாகிய நாங்கள், நிர்வாகப் பொறுப்பில் உள்ள நாங்கள் தடையை மீறி கருப்புக்கொடி காட்டுவோம் என்று அறிவித் திருக்கின்றோம். நாங்கள் அந்த இடத்திலிருந்து அகற்றப் பட்டதாக போலீஸ் ஐ.ஜி. அவர்கள் சொல்லுகின்றார்கள். அகற்றப்பட்டதாக அவர்கள் சொல்லுகின்றார்கள். இரவு 10 மணிக்கு போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், 'வீட்டி லிருந்து உங்கள் கார்களை வேண்டுமானால் வரச் சொல்லுங் கள், நீங்கள் எல்லாம் வீட்டிற்குச் செல்லலாம்' என்று அறிவிக்கின்றார்கள். அதற்குப் பிறகு, திடீரென்று 10–30 மணி அளவில், நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றீர்கள் என்று சொல்லி, மறு நாள் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றார்கள்.

பதினான்கு செக்ஷன்கள்—சதி நடத்தினோம், இந்திரா காந்தி அவர்களைக் கொல்ல முயற்சிக்க சதி செய்தோம், என்ற வகையில்—பதினான்கு பயங்கரமான பிரிவுகள் கீழ் எங்கள் மீது வழக்குகள் போடப்படுகின்றன. இதற்கு இடையிலே தீனன், பாபு, மற்றும் ஜனதா கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணி என்ற தோழர்கள் பிணமானார்கள் துப்பாக்கி பிரயோகத்தில் என்ற செய்தி கிடைக்கின்றது. இன்னும்கூட அதிகப் பேர் செத்தார்கள் என்ற கருத்து நிலவினாலும் கூட, போலீஸ் கமிஷனர் அவர்கள் சொல்லுகின்றார்கள். 'பிரேதக் கிடங்கிலே உள்ள பிணங்கள் எல்லாம் துப்பாக்கி பிரயோகத்திலே இறந்தவர்களுடைய பிணங்கள் இல்லை, அவைகள் மின்சார இரயில் விபத்தில் இறந்தவர்களுடைய பிணங்கள்தான்' என்று அறிவிக்கின்றார்கள். அப்படி மின் சார இரயில் வண்டிகளிலே அரைபட்டு மாண்டார்கள் என்ற செய்தி அன்றோ மறுநாளோ வந்தனவா என்றால் எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை. ஆனால் அந்தப் பிணங்கள் தான் அவை என்று பத்து நாட்களுக்குப் பிறகு போலீஸ் கமிஷனர் அறிவித்து விடுகின்றார்.

எவ்வளவு பிணங்களானாலும் இருக்கட்டும், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது, துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினீர்கள், தடை உத்திரவினைப் போட்டீர்கள், எங்கள்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

மீது 307 செக்ஷன் உள்ளிட்ட பதினான்கு பயங்கரமான செக்ஷன்களைப் போட்டீர்களே, எதற்காக? இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டியமைக்காக.

அதே இந்திரா காந்தி அவர்கள் கருநாடகத்திற்குச் செல்லவில்லையா? அங்கே அவருக்குக் கருப்புக்கொடி காட்டப்படவில்லையா? அவர் மீது அங்கே கற்கள் எறியப் படவில்லையா? அதற்காக, கருநாடகத்தில், அந்த இடத் தில் தேவகௌடா அவர்கள் மீது 307 வது பிரிவின் கீழ் வழக்கு போடப்பட்டதா? வீரேந்திர பாட்டீல் தலைமை யில் அவை நடைபெற்றது என்பதற்காக அவர்மீது 307 வது பிரிவின்கீழ் வழக்கு போடப்பட்டதா? இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் முன் நின்று அவற்றை நடத்தினார்கள் என்பதற்காக அவர் மீது 14 செக்ஷன்கள் கீழ் வழக்குகள் போடப்பட்டனவா என்றால் இல்லை.

ஆனால் என் மீது, பேராசிரியர் மீது, ப.உ.சண்முகம் மீது, மற்றும் உள்ள தலைமைக் கழகச் செயலாளர்கள், உறுப் பினர்கள் 20, 25 பேர் மீது அப்படிப்பட்ட செக்ஷன்கள் கீழ் வழக்குகள் போடப்பட்டு, தமிழகத்திலே பலபகுதிகளிலே நூற்றுக்கணக்கான கழகத்தினர் மீது 307 வது பிரிவின்கீழ் வழக்கு போடப்பட்டு பெரியதொரு அடக்குமுறை இங்கே தாண்டவம் ஆடிற்று.

சென்னையிலே இருக்கின்ற நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் ஒரு அறிக்கை விடுக்கிறார், மதுரை, திருச்சி, காஞ்சி, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து நீதி விசாரணை நடைபெறும்—முதலமைச்சர் எனக்குச் சொன்னார் நான் சொல்கிறேன். அவரோடு கலந்து பேசிச் சொல்கிறேன் என்று அறிக்கை விடுக்கிறார். அது 'இந்து' பத்திரிகையில் முதல் பக்கத்தில் கட்டம் கட்டி வருகிறது

ஆனால், 10, 15 நாட்களுக்குப் பிறகு என்ன சொல்லு கிறார் முதலமைச்சர்? 'மதுரை, திருச்சி, காஞ்சி, சென்னை ஆகிய 4 இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை இல்லை நீதி விசாரணை துப்பாக்கியால் சுட்டது சரிதானா என்ற ஒரே விஷயத்திற்காக மட்டும்தான் நீதி விசாரணை' என்று தெரிவித்தார். இந்த முரண்பாடான பேச்சை எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்? இந்த முரண்பாட்டை எப்படி குற்றம் என்று சொல்லாமல் இருக்க முடியும்? இந்த முரண்பாட்டை எப்படி தவறு என்று சுட்டி காட்டாமல் இருக்க முடியும்?

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

இந்திரா காந்தி வருகிருர் ; விமான நிலையத்தில் இறங்குகிருர். முதலமைச்சர் சென்று அவரைச் சந்திக்கிருர். அங்கே இருவரும் பேசுகிருர்கள். நிருபர்கள் கேட்கிருர்கள். "வெறும் மரியாதை சந்திப்பு என்கிருர். கறுப்புக் கொடி பற்றி பேசினீர்களா" என்று கேட்கிருர்கள். 'அதைப்பற்றி அந்த அம்மையார் கவலைப்படுவதாகத் தெரியவில்லை' என்கிருர்.

அதற்குப் பிறகு டில்லிக்குச் செல்கிருர். அங்கே டில்லியில் உள்ளவர்கள் கேட்கிருர்கள். அங்கே சொல்கிருர், "தான் இந்திரா காந்தியைச் சந்தித்தது, அந்த அம்மையார் வெள்ளப் பகுதிகளுக்குச் செல்லலாமா என்று கேட்டார்கள்; பலஹீனமான (டௌன்-ட்ராடன்-பீபிள்) மக்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்லலாமா என்று கேட்டார்கள். அங்கேயெல்லாம் செல்ல வேண்டாம் என்று அவருக்கு அறிவுரை சொல்வதற்காகச் சென்றேன் என்று கூறுகிருர். ஏன் சென்னையிலே ஒரு பேச்சு, டில்லியிலே ஒரு பேச்சு?

'மக்கள் குரல்' பத்திரிகையில் வருகிறது ; 'இந்திரா காந்தி அம்மையார் மதுரையிலிருந்து முதலமைச்சருக்கு டெலிபோன் செய்தார்கள்.' என்று வருகிறது. அது மறுக்கப்படவில்லை. பிறகு-அதற்கு நீண்ட நாளைக்குப் பிறகு அது மறுக்கப்படுகிறது. ராஜ்நாராயண் அதைப் பற்றி அறிக்கை விட்ட பிறகு, ஜார்ஜ் பெர்னாண்டஸ் அதைப் பற்றி கண்டித்த பிறகு, 'இந்திரா காந்தி சொல்லித் தான் தடை உத்திரவு போடப்பட்டது' என்று சொன்ன பிறகு மறுக்கிருர். 'மக்கள் குரலில்' வந்த மறுநாளே ஏன் மறுக்கக் கூடாது? 'மக்கள் குரல்' உங்களுக்குத் தொடர்பில்லாத பத்திரிகையா? உங்களுக்கும் அதற்கும் நெடுந்தொலைவா? உங்கள் திருத்தத்தை வெளியிட்டிருக்க மாட்டார்களா? ஏன் மறுநாள் திருத்தம் வரவில்லை?

தொலைபேசியில் பேசினர்கள் என்ற செய்தி டில்லிக்குப் போன பிறகு மறுப்பு. 10 நாள் கழித்து இங்கே மறுப்பு. எனவே, இந்திரா காந்தி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தீர்த்துக் கட்ட, இந்த நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எடுத்துச் சொன்னர். அறிவுரை கூறினர்.

அடுத்து என்ன நடைபெற்றது? 30-ம் தேதி 'மினி மிசா' பயன் படுத்தப்பட்டது. நாங்கள் 'மிசா' சட்டத்தை எதிர்த்தவர்கள். இப்போது ஜனதா அரசு

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

கொண்டு வருகின்ற—தடுப்புக் காவல் சட்டம்—அதையும் நாங்கள் தாட்சணியம் இல்லாமல் எதிர்ப்பவர்கள். தடுப்புக் காவல் சட்டத்தின் பெயரால் 'மிசா' என்ருல். நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள். இங்கே 'மினி—மிசா' என்ற அளவில் தமிழகத்தில் பரவலாகப் பயன்படுத்தப் பட்டது என்பதுதான் எங்களுடைய மிக முக்கியமான குற்றச்சாட்டாகும்.

அதற்கு பிறகு நாங்கள் ரிமாண்டிலே வைக்கப்படு கிருேம். ரிமாண்டில் வைக்கப்பட்ட நாங்கள். 'ஜாமீ னில் வெளி வரலாம்; ஜாமீனில் வெளிவரலாம்', என்ற இந்த ஒரே வார்த்தையை முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் சென்ற இடங்களில் எல்லாம் சொன்னர் கள். வேறு சில தோழமைக் கட்சிக்காரர்களும். 'ஜாமீ னில் வெளி வரலாம்; ஜாமீனில் வெளிவரலாம்' என்று சொன்னர்கள்.

முதல்நாள் இவர்கள் பயங்கரக் குற்றச்சாட்டுக்கு ஆளாகி யிருக்கிருர்கள். இவர்கள் வெளியே இருப்பது ஆபத்து; ஆகவே, நீதிபதி அவர்களே. இவர்களுடைய ரிமாண்டை நீடிக்கவேண்டும்" என்று அரசுத் தரப்பு வக்கீல் வாதம். இந்த வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரிமாண்ட் நீடிக்கப் படுகிறது. மீண்டும் 15 நாட்களுக்குப் பிறகு, நாங்கள் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்படுகிருேம். அங்கே மீண்டும் அரசுத் தரப்பு வக்கீல் வாதாடுகிருர்: "இவர் கள் மிக பயங்கரக் குற்றங்கள் செய்து, அதற்கான தடயங் கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. மிக பயங்கரமாக சதி நடத்துவதற்கு சில இடங்களுக்கு தந்தி கொடுத் திருக்கிருர்கள். அந்தத் தந்திகள் கிடைத்திருக்கின்றன. வழக்கிலே வரும். அதில் தந்தி கொடுத்தோம் என்பது ஒரு குற்றச்சாட்டு. எனவே ரிமாண்ட் நீடிக்கவேண்டும் என்று அரசு வழக்கறிஞர் சொல்கிருர்.

பிறகு, 9-ம் தேதி நாடெங்கும் மறியல் என்று தலைமைக் கழகம் அறிவித்து, ஆங்காங்கே தொண்டர்கள் செயல்படத் துவங்கியதும், 8-ம் தேதி நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்படுகிருேம். அங்கே அரசாங்க வக்கீல் சொல்கிருர்: இவர்களுடைய பயங்கர சதி தமிழ் நாட்டோடு முடியவில்லை; மற்ற மாநிலங்களிலும் பரவி வேர் விட்டிருக்கிறது. ஆகவே இந்த பயங்கரவாதிகளை ரிமாண்டில் வைக்கத் தேவையில்லை". இதை விட

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

கேலிக்கூத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா? அவர்கள் வாதம், ''சதி மற்ற மாநிலங்களுக்கு பரவியிருக்கிறது' ஆகவே ரிமாண்ட் தேவையில்லை. ஜாமீனில் அனுப்பிவிட லாம்.''

[முற்பகல் 10·10]

அந்த வழக்கில் எங்கள் சார்பில் ஆஜரான பாளையங் கோட்டை சண்முகம் அவர்களும், திரு. கணபதி அவர்களும் கேட்கிறார்கள், ரிமாண்ட் தேவையில்லை என்று நீங்கள் சொன்ன பிறகு ஜாமீன் என்ற பிரச்னை எங்கே எழுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். எப்படியோ விடுவிக்கப்படு கிறோம்.

விடுவிக்கப்பட்ட பிறகு மறுநாள் நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் சம்மன் அனுப்பினால் வர வேண்டும் என்று சொல்லி அனுப்புகிறார்கள். அதில் கையெழுத்து போட்டு நாங்கள் வருகிறோம் என்று சொல்லி விட்டு வரவில்லை. டயரக்ஷன் கொடுக்கிறார்கள். ''நாட் கண்டிஷன்.'' நீதிபதி டயரக்ஷன், கண்டிஷன் போட வில்லை. நாங்கள் விடுவிக்கப்படுகிறோம்.

மறுநாள் அவசர அவசரமாக முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளரிகளிடம் செய்தி கூறுகிறார். நிருபர்களுடைய ஏக்கமே அடிக்கடி நமது முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியவில்லையே என்பதுதான். ஆனால் அன்று நிருபர்களுக்கு அடித்த அதிர்ஷ்டம் மறு நாளே அவர்களைச் சந்தித்து முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக்கை பற்றி விசாரிக்கச் சொல்லி மத்திய அரசிடமிருந்து எங்களுக்கு ஏழு குற்றச்சாட்டுக்களைப்பற்றிய விவரங்கள்வந்துவிட்டன என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன். அப்போதுதான் வந்ததா? இந்திரா காந்தியின் ஆட்சி இருந்தபோதே பாராளுமன்றத்தில் அது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக் கையில் எட்டு குற்றச்சாட்டுக்கள் பற்றி அறிக்கை தரப்பட்டி ருக்கிறது அந்த எட்டில் ஒன்று பூச்சி மருந்து தெளித்தது பற்றி. மத்திய அரசு அதில் நடவடிக்கை எடுக்கும், மிச்சமுள்ள ஏழு குற்றச்சாட்டுக்கள் பற்றி மாநில அரசுக்கு அனுப்பி யிருக்கிறோம் என்று இந்த அரசு உதயமாவதற்கு முன்பே கவர்னர் ஆட்சி நடைபெற்றபோதே பாராளு

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

மன்றத்தில் காங்கிரஸ் ஆட்சி சார்பில் அன்றே அந்த
ஆட்சியாளர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அப்
போது வந்த ஒரு அறிக்கையை ஏதோ இப்போது
வந்ததாகச் சொல்லி நடவடிக்கைகள் எடுக்கப்போகிறோம்
என்று அவர்கள் சொல்லி தொடர்ந்து அமைச்சர்கள்
எல்லாம் கருணாநிதி விடுதலையாகி விட்டார் என்று நினைக்கா
தீர்கள். கருணாநிதி விடுதலையாகிவிட்டது உண்மை. ஆனால்
பல வழக்குகளில் சிக்கப்போகிறார், அடுக்கடுக்காக அந்த
வழக்குகளைப் போடப்போகிறோம், தொடர் வழக்குகள்
போடப்போகிறோம் என்றெல்லாம் அமைச்சர்கள் பேசி
னார்கள்.

அமைச்சர்கள் எங்களைச் சிறையில் போட்டுவிட்டு
என்னென்ன பேசினார்கள்? என் அருமைத் தம்பி, இந்த
அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருப்பவர், காளி
முத்து அவர்கள் சிறைச்சாலையில் இருக்கிற கிரிமினல்
குற்றவாளிகளைவிட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர்
என்றெல்லாம் கேட்டார்கள். நான் மகிழ்ச்சியடைந்தேன்.
தம்பிக்கு இவ்வளவு வீரம் வந்திருக்கிறதே என்று நான்
மகிழ்ச்சியடைந்தேன். அப்படிச் சொன்னால்தான் அந்த
இடத்தில் இருக்கமுடியும் என்ற சூழ்நிலை ஏற்படுகிற
நேரத்தில் தம்பியாக இருந்தால் என்ன அண்ணனாக
இருந்தால் என்ன! சிறையில் இருக்கிற சாதாரணக்
கைதிகளை விட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர்
என்று கேட்கிற அளவிற்கு சிறைச்சாலையில் எங்களை
வைத்தது மட்டுமல்லாமல் எங்கள்மீது இப்படிப்பட்ட
பாணங்களைப் பொழிந்துகொண்டேயிருந்தார்கள்.

நான் கேட்கிறேன். நான் என்ன போலீஸ் ஸ்டேஷ
னுக்குப் படை எடுத்துச் சென்று அங்கே கைது செய்து
வைக்கப்பட்ட தன் மகனை போலீஸ்காரர்களிடமிருந்து
விடுவித்துக்கொண்டு வந்தாரே ஆளும்கட்சி எம். எல்.ஏ.,
அவரை விடப் பெரிய குற்றம் செய்தேனா?

நான் என்ன தேனாம்பேட்டையில் கள்ளச்சாராயம்
காய்ச்சியவர்களைப் பிடிப்பதற்காக சென்ற போலீஸ் அதி
காரிகளை கட்டிப்போட்டு கத்தியால் குத்தி அவர்களைத்
துன்புறுத்தினார்களே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்
அவர்களைவிட பெரிய குற்றவாளியா நான்?

உங்களுடைய ஆறு மாதகால ஆட்சியில் சாதனைகளைச்
சொல்வதற்குப்பதிலாக இப்படிப்பட்ட வேதனைகளைத்தான்
தந்தீர்கள். கோப்புகளைப் பார்க்கிறோம், கண்ணீர் வடிக்

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

கேலிக்கூத்து வேறு ஏதாவது இருக்க முடியுமா? அவர்கள் வாதம், ''சதி மற்ற மாநிலங்களுக்கு பரவியிருக்கிறது' ஆகவே ரிமாண்ட் தேவையில்லை. ஜாமீனில் அனுப்பிவிட லாம்.''

[முற்பகல் 10·10]

அந்த வழக்கில் எங்கள் சார்பில் ஆஜரான பாளையங் கோட்டை சண்முகம் அவர்களும், திரு. கணபதி அவர்களும் கேட்கிறார்கள், ரிமாண்ட் தேவையில்லை என்று நீங்கள் சொன்ன பிறகு ஜாமீன் என்ற பிரச்னை எங்கே எழுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். எப்படியோ விடுவிக்கப்படு கிறோம்.

விடுவிக்கப்பட்ட பிறகு மறுநாள் நீதிபதி அவர்கள் சொல்கிறார்கள், நீங்கள் சம்மன் அனுப்பினால் வர வேண்டும் என்று சொல்லி அனுப்புகிறார்கள். அதில் கையெழுத்து போட்டு நாங்கள் வருகிறோம் என்று சொல்லி விட்டு வரவில்லை. டயரக்ஷன் கொடுக்கிறார்கள். ''நாட் கண்டிஷன்.'' நீதிபதி டயரக்ஷன், கண்டிஷன் போட வில்லை. நாங்கள் விடுவிக்கப்படுகிறோம்.

மறுநாள் அவசர அவசரமாக முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் செய்தி கூறுகிறார். நிருபர்களுடைய ஏக்கமே அடிக்கடி நமது முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க முடியவில்லையே என்பதுதான். ஆனால் அன்று நிருபர்களுக்கு அடித்த அதிர்ஷ்டம் மறு நாளே அவர்களைச் சந்தித்து முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக்கை பற்றி விசாரிக்கச் சொல்லி மத்திய அரசிடமிருந்து எங்களுக்கு ஏழு குற்றச்சாட்டுக்களைப்பற்றிய விவரங்கள்வந்துவிட்டன என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன். அப்போதுதான் வந்ததா? இந்திரா காந்தியின் ஆட்சி இருந்தபோதே பாராளுமன்றத்தில் அது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காரியா கமிஷன் அறிக் கையில் எட்டு குற்றச்சாட்டுக்கள் பற்றி அறிக்கை தரப்பட்டி ருக்கிறது அந்த எட்டில் ஒன்று பூச்சி மருந்து தெளித்தது பற்றி. மத்திய அரசு அதில் நடவடிக்கை எடுக்கும், மிச்சமுள்ள ஏழு குற்றச்சாட்டுக்கள் பற்றி மாநில அரசுக்கு அனுப்பி யிருக்கிறோம் என்று இந்த அரசு உதயமாவதற்கு முன்பே கவர்னர் ஆட்சி நடைபெற்றபோதே பாராளு

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

மன்றத்தில் காங்கிரஸ் ஆட்சி சார்பில் அன்றே அந்த ஆட்சியாளர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். அப் போது வந்த ஒரு அறிக்கையை ஏதோ இப்போது வந்ததாகச் சொல்லி நடவடிக்கைகள் எடுக்கப்போகிறோம் என்று அவர்கள் சொல்லி தொடர்ந்து அமைச்சர்கள் எல்லாம் கருணாநிதி விடுதலையாகி விட்டார் என்று நினைக்கா தீர்கள். கருணாநிதி விடுதலையாகிவிட்டது உண்மை. ஆனால் பல வழக்குகளில் சிக்கப்போகிறார், அடுக்கடுக்காக அந்த வழக்குகளைப் போடப்போகிறோம், தொடர் வழக்குகள் போடப்போகிறோம் என்றெல்லாம் அமைச்சர்கள் பேசி னார்கள்.

அமைச்சர்கள் எங்களைச் சிறையில் போட்டுவிட்டு என்னென்ன பேசினார்கள்? என் அருமைத் தம்பி, இந்த அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருப்பவர், காளி முத்து அவர்கள் சிறைச்சாலையில் இருக்கிற கிரிமினல் குற்றவாளிகளைவிட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர் என்றெல்லாம் கேட்டார்கள். நான் மகிழ்ச்சியடைந்தேன். தம்பிக்கு இவ்வளவு வீரம் வந்திருக்கிறதே என்று நான் மகிழ்ச்சியடைந்தேன். அப்படிச் சொன்னால்தான் அந்த இடத்தில் இருக்கமுடியும் என்ற நிலை ஏற்படுகிற நேரத்தில் தம்பியாக இருந்தால் என்ன அண்ணனாக இருந்தால் என்ன! சிறையில் இருக்கிற சாதாரணக் கைதிகளை விட கருணாநிதி எந்த வகையில் உயர்ந்தவர் என்று கேட்கிற அளவிற்கு சிறைச்சாலையில் எங்களை வைத்தது மட்டுமல்லாமல் எங்கள்மீது இப்படிப்பட்ட பாணங்களைப் பொழிந்துகொண்டேயிருந்தார்கள்.

நான் கேட்கிறேன். நான் என்ன போலீஸ் ஸ்டேஷ னுக்குப் படை எடுத்துச் சென்று அங்கே கைது செய்து வைக்கப்பட்ட தன் மகனை போலீஸ்காரர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு வந்தாரே ஆளும்கட்சி எம். எல். ஏ., அவரை விடப் பெரிய குற்றம் செய்தேனா?

நான் என்ன தேனாம்பேட்டையில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களைப் பிடிப்பதற்காக சென்ற போலீஸ் அதி காரிகளை கட்டிப்போட்டு கத்தியால் குத்தி அவர்களைத் துன்புறுத்தினார்களே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களைவிட பெரிய குற்றவாளியா நான்?

உங்களுடைய ஆறு மாத கால ஆட்சியில் சாதனைகளைச் சொல்வதற்குப்பதிலாக இப்படிப்பட்ட வேதனைகளைத்தான் தந்தீர்கள். கோப்புகளைப் பார்க்கிறோம், கண்ணீர் வடிக்

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

கிறோம் என்று சொல்கிறார்கள். எங்கு பேசினாலும் ஊழல், ஊழல் என்ற பேச்சே தவிர அதைத் தவிர நீங்கள் வேறு எதுவும் பேசுவதில்லை. இந்த அரிய காலத்தில் எதிர்க்கட்சியினரை நீங்கள் தாக்குவதற்கு என்று பயன்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தை நாட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தியிருப்பீர்களேயானால் எங்களுடைய தூய்மையான ஒத்துழைப்பு உங்களுக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்கும்.

குடகனாறு அணை உடைந்துவிட்டது என்றால் உடைந்தது அந்த அணை கட்டியதால்தான் உடைந்தது என்கிறார்கள், எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு! அவர்கள் கட்டியதால் அந்த அணை உடைந்தது என்கிறார்கள். அதுபற்றி ப.உ.ச. அவர்களும், பேராசிரியர் அவர்களும் விளக்கமாக, தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த குடகனாறு பிரச்னை பற்றி நான் இந்த நேரத்தில் மீண்டும் விளக்க விரும்பவில்லை.

ஆனால், குடகனாறு பற்றி, அது அந்த இடத்தில்தான் கட்டப்படவேண்டும் என்பதுபற்றி அதன் ஆரம்பத்திலேயே எனது அருமை நண்பரும், இன்றைய அமைச்சருமான திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது பேசினார். பிறகு அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறிச் சென்றபோதும் அந்த குடகனாறு அணை கட்டுவதைப்பற்றி வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அந்த அணை உடைந்த பிறகு அந்த அணை உடைப்பிற்குக் காரணம் அதிகாரிகளுடைய தவறுதான் என்று ஒரு அறிக்கை விடுத்தார். அது பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையில் ஒரு பின் இணைப்பாக குடகனாறு கட்டுவதற்கு நான்தான் காரணமாக இருந்தேன் — நான்தான் என்றால் சௌந்தரபாண்டியன் — என்று ஒரு பின் இணைப்போடு சௌந்தரபாண்டியன் அவர்கள் தன் சட்டமன்றப் பேச்சையும் இணைத்தார். இதெல்லாம் பத்திரிகைக்கு வந்திருக்கிறது. என்ன காரணத்தாலோ உடனடியாக அவைகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டன. பத்திரிகை காரியாலயத்திலிருந்து.

வாபஸ் பெறப்பட்டது எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கான ஆதாரத்தை நான் கையில் வைத்திருக்கிறேன் ஆதாரத்

1978 ஜனவரி 4] [திரு. மு. கருணாநிதி]

தோடுதான் பேசுகிறேன். செய்தித்துறை மூலமாக அமைச்சர் அவர்களால் பத்திரிகாலயங்களுக்கு அனுப்பப் பட்டது பின்னால் திருப்பப் பெறப்பட்டது. காரணம், அதில் அதிகாரிகளுடைய தவறு என்று சொல்லியிருப்பது. என்பதும். இந்த அணைக் கட்டுவதற்கு நான் முயற்சித் தேன் என்றும் கூட்டிக் காட்டியிருப்பதும்தான். இவைகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த அறிக்கை திரும்பப் பெறப்பட்டது. இதை நான் பெரும் குற்றச்சாட்டாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரத்தில் ஆர். எஸ். மங்கலம் என்ற ஒரு பெரிய ஏரி. அதற்கு ஒரு பாலம் தேவை என்று அங்குள்ள பிரமுகர்கள், கழகத்தைச் சேர்ந்தவர்கள். ராமகிருஷ்ணத் தேவர் போன்ற தேசிய வாதிகள் அரசாங்கத்தினிடத்தில் முறையிட்டார்கள். வறட்சி காலத்தில் அங்கு பாலம் கட்ட வேண்டும் என்றும், தூர் எடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த பெரிய கண்மாய் தூர் எடுக்கப்படுகிறது. அதில் பாலம் கட்டப்படுகிறது. இதைப் பார்வையிட்ட போக்குவரத்து அமைச்சர் என்ன சொல்லுகிறார். இந்தக் கண்மாய் வேலையில் ஊழல் நடந்திருக்கிறது. இந்த ஊழலைச் செய்தவர்கள் யார் என்பதை வெளியில் சொல்லிவிடுவார் என்பதற்காக ஒருவன் கொலை செய்யப்பட்டான். மக்கள் குரல் பத்திரிகையில் இந்தச் செய்தி வருகிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்தியேந்திரன் அவர்களுடைய மாமனருக்கு காண்டிராக்ட் விடப்பட்டது என்று அமைச்சர் சொன்னதாகச் செய்தி வருகிறது. இதை எதிர்த்து சத்தியேந்திரன் அமைச்சர் மீதும் பத்திரிகை மீது நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். வழக்குப் போடுவதற்காக. வழக்குப் போடப்பட இருக்கின்ற காரணத்தினால் நான் இந்த விவரங்களுக்குள் செல்லவில்லை. இதைப்பற்றி நான் ராமகிருஷ்ணத் தேவர் அவர்களிடமும் விசாரித்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த யாரிடமும் இந்த காண்டிராக்ட் கொடுக்கப்படவில்லை என்றும் அதுவும் பாலம் கட்டுகின்ற வேலை முன்னாள் காங்கிரஸ்காரர் ஒருவருக்கு, அவர் எம்.எல்.ஏ. பதவிக்கு நின்று தோற்றுப் போனவர்—அவருக்குத்தான் பாலம் கட்ட காண்டிராக்ட் தரப்பட்டது என்றும், தூர் வாருகின்ற வேலை ஆயக்கட்டுதாரர்களே சேர்ந்து செய்தார்கள் என்றும் சொன்னார்கள். இப்படி எதைப் பார்த்தாலும் ஊழல், ஊழல் என்று பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்பதில் மிகவும் முனைப்பாக இருக்கிறார்கள்.

[திரு. மு. கருணாநிதி] [1978 ஜனவரி 4

அதுமட்டுமல்ல, எங்களைப் பார்த்து, அதாவது திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்தவர்கள் விளம்பரப் பிரியர்கள் என்று கூறிக்கொண்டே வருகிறார்கள், இவர்கள் விளம்பரப் பிரியர்கள், என்று எங்குப் பார்த்தாலும் பேசிக்கொண்டேயிருப்பது நாங்கள் தான் விளம்பரப் பிரியர்கள், சரி. டெல்லியில் நடைபெற்ற விழாவில் சரண்சிங் அவர்களோடு முதலமைச்சர் நிற்கிறார் என்றால் அதை எடுத்து இங்கு விளம்பரப்படுத்துகிறார்கள் என்றால் அது விளம்பரம் அல்லவா? உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் கூறி முடித்துக் கொள்கிறேன். சமீபத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு டைரியில் முதலமைச்சர் அவர்களுடைய படம் போட்டு விளம்பரப்படுத்தப்படுகிறது. இதுவரை இப்படிப்பட்ட டைரியில் என்னுடைய படம் போட்டதாக நினைவில்லை. அப்படியே போட்டிருந்தாலும்கூட ஒரு பக்கத்தில் போட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த டைரியில் ஐந்து இடத்தில் (டைரியை எடுத்துக் காண்பித்து) நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய படம் போடப்பட்டிருக்கிறது. இது விளம்பரம் அல்லவா? ஜனாதிபதியோடு கைகுலுக்குகின்ற படம், காமராஜ் அவர்களின் படம் திறந்து வைக்கப்பட்ட போது எடுத்த படம், அண்ணா சிலைக்கு மாலை போடுகின்ற நேரத்தில் எடுக்கப்பட்ட படம், மக்களிடையே பிரதிக்ஞை எடுத்துக்கொள்வது போன்ற படம் மூன்றாவது இடத்தில் வல்லபாய்படேல் படம் திறந்து வைக்கப்பட்ட போது உள்ள படம் இப்படி ஐந்து இடங்களில் முதலமைச்சருடைய படம் தோன்றுகிறதே இது விளம்பரம் அல்லவா? ஏதோ அழகானவர்களைத்தான் இப்படி படம் போடலாம் எங்களைப் போன்ற அழகற்றவர்களின் படம் போடக் கூடாது என்று எண்ணியிருப்பார்களோ என்னவோ தெரியவில்லை—இப்படி ஒரு டைரியில் ஐந்து இடங்களில் நீங்கள் உங்கள் படத்தைப் போட்டு விளம்பரப்படுத்தி விட்டு நீங்கள் மற்றவர்களைப் பார்த்து நீங்கள் விளம்பரப் பிரியர்கள், விளம்பரப் பிரியர்கள் என்று சொல்வதற்கு என்ன தகுதி படைத்திருக்கிறீர்கள்? இவ்விதம் உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் எந்தவிதப் பொருத்தமும் கிடையாது. வெறும் வாய்ச்சொல் வீரர்களாகத்தான் இருக்கிறீர்கள் என்பதை சுட்டிக்காட்டி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன்.

1978 ஜனவரி 4]

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எதிர்கட்சித் தலைவர் அவர்களின் நீண்ட நேர உரையின் போது நான் குறுக்கிட வேண்டாம் என்று தான் எண்ணியிருந்தேன்.

அவர்கள் கடைசியில் தன்னுடைய பேச்சை முடிக்கின்ற நேரத்தில், டைரியில் படம் வெளியிட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டு அவருக்கே உரிய பாணியில் கடைசியில் உச்சக்கட்டத்தில் முடிக்கின்ற பொழுது, டைரியைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு ஆவேசத்தோடு பேசி முடித்தார்கள். இதில் வெளியிடப்பட்டிருக்கின்ற படங்கள், இந்த அமைச்சரவை பதவியேற்ற பின் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய படங்கள் இவை. நமது ஜனாதிபதி அவர்கள் திரு. காமராஜ் அவர்களின் படத்தைத் திறந்து வைத்த காட்சி. இந்தியப் பிரதமர் அமைச்சரவை பதவியேற்ற காட்சி. வல்லபாய் பட்டேல் அவர்களின் படத்தைத் திறந்து வைத்த காட்சி போன்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களின் படங்களைத்தான் இதில் இணைத்திருக்கிறார்கள். டைரி என்று சொல்லும் போது லட்சக் கணக்கில் அல்ல. முன்பு பல ஆயிரக் கணக்கில் காலண்டர்களை அச்சடித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், இது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மட்டும் தருகின்ற டைரி என்பதும், இந்த ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சில நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தரப்பட்டிருக்கிறதே தவிர தனிப்பட்டவர்களின் விளம்பரத்திற்காக அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கட்சிகள் ஒவ்வொன்றின் எண்ணிக்கையின் அடிப்படையிலே நேரங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2 மணி 30 நிமிடங்கள். இதில் 1 மணி 20 நிமிடங்கள் கழிந்து விட்டது. மீதி 1 மணி 10 நிமிடங்கள் இருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு 1 மணி 15 நிமிடங்கள். சி.பி.எம். க்கு 45 நிமிடங்கள். சி.பி.ஐ. க்கு 30 நிமிடங்கள். ஜனதாவுக்கு 45 நிமிடங்கள். இந்திய தேசிய பார்வார்ட் பிளாக்கிற்கு 10 நிமிடங்கள். உழைப்பாளர் கட்சிக்கு 10 நிமிடங்கள். முஸ்லீம் லீகிற்கு 10 நிமிடங்கள்.

[பேரவைத் தலைவர்] [1978 ஜனவரி 4

பார்வேர்ட் பிளாக்கிற்கு 10 நிமிடங்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2 மணி 35 நிமிடங்கள். ஆகவே, இந்த நேரங்களை ஒட்டி அவரவர்கள் தங்களுடைய உரையைச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் எதிர் கட்சி கொடுத்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகின்ற இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பல்வேறு குற்றச் சாட்டுகளை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் குற்றச் சாட்டுகள் அனைத்தையும் நான் மறுப்பதற்கான காரணங்களையெல்லாம் இந்த மன்றத்திலே எடுத்து வைப்பதற்கான நேரமில்லை என்றாலும், அவர் தெரிவித்திருக்கின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் என்னைப் பொறுத்தவரையிலும், இந்த மன்றத்திலே புதிதாக வந்த உறுப்பினர் என்கின்ற முறையிலும், நீண்டகாலமாக அரசிலே நடக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கின்றவன் என்கின்ற முறையிலும் அவர் தெரிவித்திருக்கின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள், அடுக்கடுக்காக, அழகாக, அவருக்குரிய அந்தப் பாணியில் அவர் எடுத்து வைத்திருக்கின்ற குற்றச்சாட்டுக்களை நான் நிச்சயமாகச் சொல்வேன்——6 மாதங்களுக்குப் பின்னால் இப்படி ஒன்றைப் பேச வேண்டுமென்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற அளவுக்கு இருக்கின்றதே தவிர, ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்கள் அல்ல. அரசு இந்த வகையிலே தவறுகள் செய்துவிட்டது என்று எடுத்துச் சொல்கின்ற வகையில், அப்பேர்பட்ட குற்றச்சாட்டுக்களை இந்த மாமன்றத்திலே அறிவித்திருந்தால், நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். 6 மாத காலத்தில் இந்த அரசு பல்வேறு தவறுகளையெல்லாம் செய்திருக்கிறது என்றெல்லாம் சொல்லி விட்டு, நீங்கள் அந்தத் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறோமே தவிர, இந்தத் தீர்மானம் மூலமாக, இது நிறைவேற்றப்பட்டு இந்த அரசு போய் விடும் என்ற நம்பிக்கையில்லை என்று முன்னாலேயே சொன்னார்கள்.

1978 ஜனவரி 4] [திரு. எஸ். ஆர். இராதா]

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகின்ற நேரத்தில் நான் ஒன்றை கவனித்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இந்த மன்றத்திலே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகின்ற நேரத்திலே, ஒன்றைச் சொன்னார்கள். “நீங்கள் என்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறீர்கள்; அது எனக்கு புரிகிறது ஆனால், நீங்கள் என்னைத் தவிர யாரை நம்புகிறீர்கள்?” என்று கேட்டார்கள். நானும் அதைப்போல் திருப்பி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்ததற்குப் பின்னாலே, இந்த இயக்கத்திற்காக, இந்த இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்காக, இதை அழிக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை நிச்சயமாக நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இந்த இயக்கத்தை நீங்கள் நம்பவில்லை என்பது மட்டுமல்ல——நான் இன்னொன்றையும் சொல்வேன். இன்றைக்கு இந்த இயக்கத்தை நடத்திச் செல்கின்ற, இந்த ஆட்சியை நடத்திச் செல்லுகின்ற தலைவர் அவர்கள் மீது நீங்கள் அந்தக் கட்சியிலே அவர் இருந்த போது கூட, அவர்கள் பொருளாளராக இருந்த போது கூட நீங்கள் அவர்கள் மீது நம்பிக்கை தெரிவிக்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குத்தான் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது அல்ல. நீண்ட நெடுங்காலமாக உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது தெரியும். உங்களுடைய நம்பிக்கையின்மை காரணமாகத்தான் ஒரு புதிய அரசியல் கட்சி தோன்றி ஐந்து ஆண்டுகள் கூட முடியாத நிலையில் ஆளும் கட்சியாக மாறி, அப்படி இன்றைக்கு ஆளும் கட்சியாக மாறியதன் விளைவாக உங்களை எதிர்க்கட்சியில் உட்கார வைத்திருக்கிறது.

நீங்கள் என்னென்ன தவறு செய்தீர்கள்? ஆளும் கட்சியாக இருந்தபோது என்னென்ன தவறு செய்தீர்கள்? அத்தனையும் மறந்து இன்றைக்கு எதிர்கட்சியானதும் எவ்வளவு அழகாக, எவ்வளவு ஆணித்தரமாக சாதாரண சிறு தவறுகளைக் கூட எவ்வளவு வாதத் திறமையோடு நீங்கள் இன்றைக்கு வாதிடுகிறீர்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி——நீங்கள் எதிர்க்கட்சித் தலைவ

ராக இருப்பதற்கு முழுமையான, எல்லாவிதமான அந்தஸ்தையும் பெற்றிருக்கிறீர்களே தவிர, ஆளும் கட்சியிலே இருப்பதற்குத் தகுதி கிடையாது. அந்தத் தகுதி கிடைத்த நேரத்திலும் அந்த வாய்ப்பை இழந்து விட்டீர்கள். அந்த தகுதி தங்களுக்கு இருப்பதாக கருதவில்லை. ''நாங்கள் அரசை ஆதரிக்க ஆரம்பித்தோம் ; பல பேர் பயந்தார்கள்; சிலபேர் பயத்தின் காரணமாக—ஒரு கட்சியைக் கலைத்து விட்டுச் சென்றார்கள்'' என்றெல்லாம் பேசினார்கள்.

நான் ஒன்றைச் சொல்வேன். அந்தக் கட்சி கலைக்கப் பட்டதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது ; ஆனால் அந்தக் கட்சி தோன்றுவதற்கு யார் காரணம் என்பது எனக்குத் கொஞ்சம் தெரியும். உங்களுடைய அரசியலில் உங்களுக்கு தெரிந்த அந்தனை வித்தைகளையும் நீங்கள் கடைப் பிடித்தீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதையெல்லாம் எதிர்த்து நின்று சமாளித்ததோடு—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் அது ஒரே இயக்கந்தான் என்ற நிலையை உருவாக்கிக் காட்டியிருக்கிறோம் என்பதைப் பெருமையாகச் சொல்வேன்.

நீங்கள் குறிப்பீட்டீர்கள்—'அவசர காலச் சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம் ; இந்திரா காந்தியின் சர்வாதிகாரத்தால்வந்த அவசர காலச்சட்டத்தைப் பலமாக எதிர்த்தோம்' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த நிலைமையை நினைத்துப் பார்க்கிறேன் இன்றைக்கு. இது இன்றைக்கு அவர் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து கொண்டு பேசுகிற பேச்சு. ஆனால் அவசரச் சட்டம் வந்த நேரத்தில், 20 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட நேரத்தில் ''நாங்கள் இந்திராகாந்தியின் திட்டங்களுக்குத் துணையாக இருப்போம்; அதை எதிர்க்கவில்லை'' என்று சொன்னது மட்டுமல்ல ; அவசர காலச் சட்டத்தில் போடப்பட்ட 'மிசா' வேறு எந்த மாநிலத்திலும் பாயாத நேரத்திலே தமிழ் நாட்டிலேதான் வேகமாகப் பாய்ந்தது. எவ்வளவு பேரைக் கைது செய்தீர்கள்? கைது செய்யப்பட்டதற்குக் காரணங்கள் சொல்லவில்லை ; சொன்ன காரணங்களும் சரியல்ல. பலகாரணங்களைச் சொன்னீர்கள்; பல பேரைக் கைது செய்தீர்கள்

உங்களுடைய நினைவிற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். எங்களுடைய மாவட்ட அமைப்பாளர் 'ஜேப்பியாரை' அன்றைக்கு அவர் எங்கள் கட்சியில் தீவிரமாக இருக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் சாராயம் கடத்தினார் என்று சொல்லி காரிலே சென்று கொண்டிருந்த அவரை அவசரம் அவசரமாகக் கைது செய்தீர்கள். அப்படி கைது செய்து விட்டு இன்றைக்கு நியாயம் பேசுகிறீர்கள். இன்றைக்கு நாங்கள் அவசர காலச் சட்டத்தை எதிர்த்தோம் என்று சொல்லுகிறீர்கள்.

எவ்வளவு பத்திரிகைகளை அன்றைக்கு முடமாக்கினீர்கள்? எவ்வளவு முறை தென்னகம் பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து அவசரம் அவசரமாக அள்ளிச் சென்றீர்கள்? அது மட்டுமல்ல : அன்றைக்கு மக்கள் குரல் பத்திரிகை எவ்வளவு அல்லலுக்கு ஆளாக்கப்பட்டது என்பதையெல்லாம் நாங்கள் இன்று மறந்துவிட வில்லை. அந்தப் பத்திரிகையை நிறுத்த வேண்டுமென்பதற்காக அவசர காலச் சட்டத்தைப் பயன் படுத்தி அந்தப் பத்திரிகை உங்களுக்கு எதிராக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் அதை நிறுத்த வேண்டுமென்பதற்காக நீங்கள் முயற்சி எடுத்து அதை ஒழிப்பதற்காக நீங்கள் திட்டமிட்டதை நான் நன்றாக அறிவேன்.

இன்றைக்கு ஜனநாயகம் பேசுகிறீர்கள். இன்றைக்கு நியாயங்களை எடுத்து வைக்கிறீர்கள். இந்த நியாயங்களுக்கெல்லாம் நீங்கள் ஏதோ மிகப் பெரிய ஜனநாயகவாதி என்பதுபோல் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்த ஆறு மாத காலத்தில் தமிழ்நாட்டில் எத்தனை போராட்டங்கள் தூண்டிவிடப்பட்டன? அந்தப் போராட்டங்களுக்கு யார் காரணம்? அந்தப் போராட்டத்தின் பின்னணியிலே என்னென்ன நடந்தது? இதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள், அரசியலில் விவரம் தெரிந்தவர்கள் நிச்சயமாக மறந்திருக்கமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அன்று கிளர்ச்சிகளை அடக்கச் சொன்னீர்கள், அந்தக் கிளர்ச்சிகளை நினைவில் கொண்டு இன்றைக்கு நீங்கள் செய்திருக்கிறீர்கள். அந்தக் கிளர்ச்சிகள் நடைபெற வேண்டுமென்பதிலே நீங்கள் காட்டிய ஆவலை மறக்கவில்லை. இன்று தொழிலாளர்களுக்கு ஆதரவு, விவசாயிகளுக்கு ஆதரவு என்று பேசுகிறீர்கள். நீங்கள் உங்கள் கடந்த கால நினைவுகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 ஜ

காலங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் மாறுகிறது றைக்கு, இங்கே நடைபெற்றிருக்கக்கூடிய அத்தனை களும் கால விரயத்தினால் ஏற்பட்ட பேச்சுக்களே உங்களுடைய நியாயமான உணர்வுப் பூர்வமான பேச் நீங்கள் பேசியிருப்பீர்கள் என்று நான் உங்களை அறி வரையில் நம்பவில்லை. என்னைப் பொறுத்தவரைய நான் உங்களைத் தெரிந்து வைத்திருக்கிற வரையில், உங் ளுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை கிடையாது. ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர் நீங்கள் என்பதைத்தான் நீண்ட நெடுங்காலமாக அறிந்து வருகிறேன்.

[முற்பகல் 10-30]

நீங்கள் சொன்னீர்கள் ஏதோ 6 மாத கால ஆட்சியில் 25 ஆயிரம் பேர்கள், 30 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று, நிருபர் அதைப் போல எனக்குச் சொல்லத் தெரியும். 5 ஆண்டுக் காலத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்ததற்குப் பிறகு எத்தனை பேர்களை நீங்கள் கைது செய்தீர்கள், கைது செய்ததற்குக் கணக்காவது உண்டா? நினைத்த நேரத்திலே கைது செய்தீர்கள். போலீஸ் ஸ்டேஷனில் இருந்து உத்தரவு வராமலே பிடிக்கப்பட்டார்கள், எந்தவிதமான சார்ஜ்ஷீட்டோ, எப்.ஐ.ஆரோ இல்லாமல் உள்ளே வைத்துக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் இப்படி நடத்திய காரியங்கள் அத்தனையும் எங்களுக்குத் தெரியும். இவ்வளவையும் செய்துவிட்டு நீங்கள் இன்றைக்குப் பேசுகிறீர்கள்.

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்று சொல்வார்கள். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அந்தக் குறளின் தன்மையைப் பாருங்கள். உங்கள் பழைய நடவடிக்கைகளை நீங்கள் நினைத்துப் பாருங்கள். லட்சக்கணக்கான பேர்களை கைது செய்துவிட்டு இன்று 25, 30 ஆயிரம் என்று பேசுகிறீர்கள். 25 ஆயிரம், 30 ஆயிரம் கைது என்று சொல்கிறீர்களே, நான் கேட்கிறேன், என்ன ஆதாரம்? உங்களுக்கு வேண்டிய பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களிலே தினமென்று போடுகிறீர்கள். சட்டசபையில் தினசரி குழப்பம், என்று போட்டு வருகிறார்கள். இத்தனை ஆயிரம் பேர்கள் கைது என்று செய்தி போடுகிறார்கள். யார் கணக்குக் கொடுத்தார்கள், அவர்கள் எல்லாம் எந்த போலீஸ் ஸ்டேஷன்களிலே இருக்கிறார்கள்?

ஜனவரி 4] [திரு. எஸ். ஆர். இராதா]

க்கும் தெரியாது. ரொம்ப சர்வசாதாரணமாக உங் பத்திரிகைகள் வேகமாக செய்திகளைப் போடுகின்றன. த அந்தக் கணக்கை வைத்து நீங்கள் 25 ஆயிரம் 30 யிரம் கைது என்று வேகமாக இங்கே பேசுகிறீர்கள். த்தனையையும் மறந்துப் பேசுவதற்கு எனக்குத் தெரியும். னால் நேரமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

புயல் வெள்ள நிவாரண வேலைகளைப் பற்றி இங்கே பேசினீர்கள். எவ்வளவு வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதும் எனக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்திலே நான் இருக்கிற காரணத்தால் அங்கே எவ்வளவு வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது எனக்குத் தெரியும். வெள்ளம் வந்துகொண்டிருக்கிறது என்று மக்கள் தவித்துக்கொண்டிருந்தபோது எத்தனை பேர்கள் தாலூகா அலுவலகம் முன்பும், அரசு அலுவலகங்கள் முன்பும் மறியல் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள், இப்படி மறியல் நிலையிலும் கிளர்ச்சி நிலையிலும் நீங்கள் இருந்தீர்களே தவிர, போராட்டத்திற்குத் தூண்டுதலாக உங்கள் செயல்கள் இருந்தனவே தவிர புயல் வெள்ள நிவாரண வேலைகள் செய்யவில்லை.

பல இடங்களில் பல ஊழல்கள் செய்வதற்குத் தயாராக இருந்தார்கள். இன்றைக்கு எத்தனை எத்தனை குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு ஊராட்சித் தலைவர் கணக்குப் பிள்ளையை வைத்துக்கொண்டு வேண்டியவர்களுக்குப் பணத்தைத் தரவேண்டுமென்று சொன்னார் என்பதையெல்லாம் கூட சொல்லமுடியும். நாகப்பட்டினத்தில் ஒரு கணக்குப் பிள்ளை 17 மூட்டை அரிசியை தாசில்தாரிடம் வாங்கிச் சென்று, தன்னுடைய கட்சிக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார். அண்ணா தி.மு.க. தர்வில்லை நான் தருகிறேன் என்று சொன்னார். அதற்குப் பிறகு பல்வேறு அரசியல்வாதிகள் எப்படிப் போயிற்று என்று கேட்டார்கள். இப்படிப் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

எங்களுக்குத் தெரியும் இந்திரா காந்தியை வரவிடாமல் செய்வதற்காக என்ன முயற்சி நடைபெற்றது என்று. அந்தக் கிளர்ச்சியில் யார் தூண்டுதலாக இருந்தார்கள்? உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன். நீங்கள் கருப்புக் கொடி காட்டுவதாகச் சொல்லி தமிழ்நாட்டிலே அராஜகம் ஏற்படுத்த வேண்டுமென்று செய்த முயற்சிகள் நாட்டுக்குத் தெரியாதா?

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 ஜனவரி 4

நான் உங்களைக் கேட்பேன், அனுமதி தந்தார்கள் மதுரையிலே. சென்னையிலும், காஞ்சிபுரத்திலும் மறுத்தார்கள் என்று சொல்கின்ற நீங்கள் ஆட்சியிலே இருக்கும்பொழுது என்ன செய்தீர்கள்? நாங்கள் ஜனநாயக முடிவுப்படி அனுமதி கேட்டோம், பட்டுக்கோட்டையிலே கறுப்புக்கொடி காட்ட வேண்டுமென்று கேட்ட நேரத்தில் அங்கேயிருக்கின்ற அதிகாரி அனுமதி கொடுத்தார். அதற்கு நாங்கள் நிற்பதற்கான இடங்களை ஒதுக்கி வைத்தார். நாங்கள் கறுப்புக்கொடி காட்டுவதற்காக பட்டுக்கோட்டையிலே அமைதியாக நின்று கொண்டிருந்தோம். முதலமைச்சரவர்கள் வருவார் என்று சொன்னார்கள். பிறகு 4 மணிக்கு வர மாட்டார்கள் என்று சொன்னார்கள். பிறகு இரவு 8 மணிக்கு நிச்சயமாக முதலமைச்சரின் சுற்றுப் பயணம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்று சொல்லி கலைந்து செல்லும்படி சொன்னார்கள். அவர்கள் சொன்னதை நம்பி நாங்கள் கலைந்து சென்றோம். ஆனால், இரவு 10 மணிக்கு அவசரம் அவசரமாக வந்து முதலமைச்சரவர்கள் பொதுக்கூட்டத்திலே பேசி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இந்தத் தந்திரம் இந்திரா காந்திக்குத் தெரியவில்லை. அவரும் சொல்லியிருக்கலாம். சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டேன் என்று சொல்லிவிட்டுப் பிறகு கடற்கரையிலே வந்து பேசியிருக்கலாம். ஆனால், பாவம் அந்த அம்மையாருக்கு இந்தத் தந்திரம் தெரியவில்லை. ஆனால் உங்களுக்கு இந்தத் தந்திரம் தெரிந்திருக்கிறது. அதனால்தான் பட்டுக்கோட்டையிலே, வரவில்லை என்று சொல்லி கலைந்து போகச் சொல்லிவிட்டுப் பிறகு வந்து பேசிவிட்டுச் சென்றிருக்கிறீர்கள். அதற்கிடையே குடந்தையிலே கறுப்புக் கொடி காட்டுகின்ற நிகழ்ச்சி, அதற்காக குடந்தையிலே அனுமதி பெற்று, நிற்க வேண்டிய இடமும் கொடுக்கப் பட்டது. ஆனால், அதற்குப் பிறகு அவசரம் அவசரமாக இரவு நேரத்திலே சாதாரணமாக நாய்களைப் பிடிப்பதைப் போல போலீஸ் லாரிகளை வைத்து அவசரம் அவசரமாகப் பிடித்தார்கள். ஆயிரக் கணக்கிலே கைது செய்தார்கள். அதற்குப் பிறகு பொதுக் கூட்டத்திலே பேசும் பொழுது கறுப்புக்கொடி எங்கே, பார்க்க வேண்டுமென்று பார்த்தேன் என்று சொன்னீர்கள். கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்ற இருந்த எங்களையும் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கைது செய்து அவசரம், அவசரமாகத் திருச்சி சிறைச்சாலைக்கு அனுப்பி, எந்த விதமான வழக்கு என்று கூடக் குறிப்பிடாமல் பலபேர்மீது

1978 ஜனவரி 4] [திரு. எஸ். ஆர். இராதா]

பல்வேறு தவறான, மோசமான கேவலமான வழக்குகள் பதிவுசெய்யப்பட்டதற்கு இன்றைக்கும் ஆதாரம் இருக்கிறது.

நான் இன்றைக்குச் சொல்வேன், ஒருவர் இன்கம்டாக்ஸ் கட்டிக் கொண்டிருப்பவர். அவர் நல்ல வியாபாரி, அவரைக் கைது செய்து அவர்மீது என்ன வழக்கு போட்டார்கள் என்று பார்த்தால் தஞ்சாவூருக்குச் சென்று இரவு நேரத்திலே ஒரு கடையிலே பூட்டை ஆட்டினார் என்று போட்டிருக்கிறார்கள். இப்படி இன்கம் டாக்ஸ் கட்டுகின்ற ஒருவர்மீது வழக்கு போட்டதை யாரும் மறுக்க முடியாது. அவ்வளவு ஆதாரம் இன்றைக்கு இருக்கிறது.

அதைப்போல நான் இன்னும் சொல்லுவேன் ஆதாரத்தோடுகூட என்னால் எடுத்துவைக்க முடியும். பல்வேறுவழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மிக கேவலமான மிக மோசமான வழக்கு ஒன்றுகூடப் போடப்பட்டது. அந்த வழக்கிலே ஒரு அதிகாரி எழுதி வைத்தார். நாங்கள் கருணாநிதியை ரொம்பக் கேவலமாகப் பேசினோம் என்று ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தையை இந்த மன்றத்திலே சொன்னால் நிச்சயமாக அதை இந்த மன்றம் அனுமதிக்காது என்பது எனக்குத் தெரியும். அவ்வளவு மோசமான, கேவலமான வார்த்தையை, நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத, அந்த வார்த்தையைச் சொல்லி, கருணாநிதியை நாங்கள் இப்படிப் பேசினோம் என்று ஒரு போலீஸ் அதிகாரி வழக்கு போட்டார்.

அவ்வளவு பொய் வழக்குகளைப் போட்ட பிறகு ஆறு மாத காலத்திலே, காலத்தினுடைய வித்தியாசத்தால் இன்றைக்கு எப்படி ஜனநாயகம் என்ற வார்த்தையை அடுக்கடுக்காகச் சொல்லி, எவ்வளவு ஆதாரங்களை வைத்திருக்கிறேன் என்றெல்லாம் நீங்கள் பேசுகின்றீர்கள் என்று சொன்னால் உள்ளபடியே நான் சொல்கிறேன், காலத்தால் ஏற்பட்ட நிலைமையால், இடம் மாறி உட்கார்ந்ததும், இவ்வளவு ஞானோதயம் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் நேரத்தில் உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஞானோதயம் வரவேண்டுமென்பதால் எங்களைப் போன்றவர்கள் தியாகம் செய்தாவது இந்த நிலையை உண்டாக்க வேண்டுமென்று பல்வேறு தியாகங்களைச் செய்தோம்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 ஜனவரி 4

கடமையில்லாமல், எந்தச் சட்டத்தை இன்றையதினம் எதிர்க்கிறார்களோ, அந்தச் சட்டத்தின் மூலமாக கைது செய்திருக்கிறார்கள் என்பதைச்சொல்ல வருத்தப்படுகிறேன்.

அடுத்ததாக, ஏதோ, இந்திரா காந்தி சமூகத்திலே, பல நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு வரவில்லையென்று சொன்னார்கள். 20—அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், இந்திரா காந்தி அவர்கள். அந்த 20 அம்சத்தில் 15 அம்சத்தை நாங்கள் நிறைவேற்றி வைத்துவிட்டோம் என்று அப்பொழுது இவர்கள் தம் பட்டம் அடித்துக் கொண்டிருந்தார்கள். 8 ஆண்டுக் காலத்தில் இவற்றை அமுல்படுத்தினோம் என்றெல்லாம் சொன்னார்கள். 20 அம்சத் திட்டத்தை, அவர்கள் மனப் பூர்வமாக நிறைவேற்றியிருப்பார்களானால், அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கமுடியும். நிச்சயமாக, அதை மனப்பூர்வமாக நிறைவேற்ற அவர்கள் ஆசைப்படவில்லை. காரணம், மாநில சுயாட்சி, தமிழ் நாடு சுயாட்சி, தனித் தமிழ் நாடு என்றெல்லாம் கோஷங்களையெழுப்பி அவர்கள் அந்தக் காரியங்களிலே ஈடுபட்டார்கள்.

அடுத்ததாக, இங்கே சில தவறுகள் நடைபெற்றிருப்பதாகச் சொன்னார்கள். இவையெல்லாம், மாணவர், பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, ஆசிரியர் பிரச்சினை, மீனவர் பிரச்சனை, விவசாயிகள் பிரச்சினை, இவற்றிற்காக, இன்றைக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். மாணவன் உதயகுமார் அடித்து சாகடிக்கப்பட்டபோது, என்னுடைய மகன் அல்ல என்ற ஸ்டேட்மென்டை அவருடைய தந்தையையே சொல்லும்படியாகச் செய்து, இங்கே தாக்கல் பண்ணினார்கள். இவர்கள்தான் அவ்வாறு செய்தார்கள். இன்றையதினம் மாணவர்களுக்காக, நீலிக் கண்ணீர் போல் கண்ணீர் வடிப்பதாகத்தான் தெரிகிறதே தவிர, உண்மையாக, மாணவர்கள்மீது, இவர்களுக்கு அன்பு, பாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

விவசாயிகள் பிரச்சினையில், தமிழ்நாடு முழுவதும் பேரணி நடத்தியதாகச் சொன்னார்கள். ஆனால், 1972-லே நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இந்த 3 கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்திய நேரத்திலே, 26,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். அதிலே, 17 பேர் கோவை மாவட்டத்திலே கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்

1978 ஜனவரி 4] [திரு. நா. சுந்தரராஜ்]

கானவர்களை, போலீஸ் லாரிகளிலே ஏற்றி, 100 மைலுக்கு அப்பாலே விட்டுவிடக் கூடிய அளவுக்குச் செய்தார்கள். அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிப் பீடத்தில் இருந்தது. குறிப்பாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 26 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் பல்வேறு சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டு இன்றையதினம் மோசமான கிரிமினல் குற்றவாளிகள் என்று மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து சொன்னார்கள் என்று எதிர்கட்சித் [illegible] சொன்னார்களே அதைவிட மோசமாக எங்களை நடத்தினார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

நாங்கள் சிறையில் இருந்த நேரத்தில் குடிக்கத் தண்ணீர் கிடையாது. உணவும் சரியாகக் கொடுப்பது கிடையாது. காலை உணவு கூழ் கொடுக்கவேண்டும், காலையில் அந்தக் கேழ்வரகு கூழ் காலை உணவாக [illegible] 11—12 மணிக்குத்தான் கொடுக்கப்படும். மதியச் சா[illegible] மாலை 6 மணிக்குத்தான் கொடுக்கப்பட்டது. [illegible]வுச் சாப்பாட்டைப்பற்றி பார்க்காத நிலைமையில் இருந்தோம். அப்பொழுது சிறையில் இருந்த அருமை தோழர், பெரியவர் நெடுமாறன் தலைமையிலே அன்றையதினம் போராட்டம் நடத்தவேண்டிய சூழ்நிலை இருந்தது. அன்றையதினம் சிறையில் ஒரு பாடல்கூடப் பாடினார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, போட்டால் சாப்பாடு, அதுதான் கூப்பாடு, அண்ணன் தம்பி ஏற்பாடு என்று சொல்லி அங்கே கோஷங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்படிப்பட்ட நிலையிலும் ஒரு லட்சியத்திற்காக போராட்டத்திலே ஈடுபட்டோம் என்பதற்காகத் தாங்கிக் கொண்டோம்.

இன்றையதினம் அரசு அலுவலகங்களிலே தேவைக்கு அதிகமான தலையீடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையிலே எனக்கு இரண்டும் ஒன்றுதான். ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடம் எங்களுக்கு உடன்பாடு இல்லை, பாராளுமன்றத் தேர்தலிலே இருந்தது, பிறகு நடந்த தேர்தலிலே பல்வேறு காரணங்களினால் உடன்பாடு இல்லை. இருந்தாலும் இன்றையதினம் தலையீடு என்பது மிக மிகக் குறைவாக இருக்கிறது.

[[திரு. நா. சுந்தரராஜ்] [1978 ஜனவரி 4]

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது செக்கரடேரியட்டிலே நடைபெற்றதைச்சொல்ல முடியும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோட்ட ஆட்சித் தலைவர்கள், தாசில்தார் போன்றவர்கள், வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் சொல்கிறபடிதான் நடக்கவேண்டிய நியதி அன்று இருந்தது. பி.ஆர். ஓக்களாக இருந்தவர்கள் நடக்கின்ற செய்திகளை லைட்னிங் கால்போட்டு முரசொலிக்குத்தான் முதலிலே சொல்வார்களே தவிர, இங்கே இருக்கிற சீப் செக்ரட்டரிக்குச் சொல்லமாட்டார்கள். அந்த மாதிரி நிலைமைகள்தான் அன்றைய தினம் இருந்தன. ஆனால், இன்றைக்கு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் குறைகளை எடுத்துச் சொல்லுகின்றபோது, நல்ல பணியைச் செய்து உடனடியாக நிறைவேற்றுவதை நான் பாராட்டுகிறேன். காரணம் மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும்போது, அதன் மூலமாகத் தீர்வு காணவேண்டும் என்பதே தவிர, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதிக்கத்தில் இருக்கிறீர்கள் என்பதற்காகப் பிரச்சினையை வேறு திசை திருப்பி, லாபம் பெறக் கூடாது. அது வளரக் கூடாது. வளர்ந்துவிடக் கூடாது. அதை நாங்கள் கண்டிக்கிறோம்.

அடுத்தபடியாக, சொல்ல வேண்டுமானால், அன்றைய தினம் ஆட்சியில் இருந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சேர்ந்தவர்கள், பெரும் தலைவர் காமராஜ் அவர்களுக்கு மிகுந்த மரியாதைக் கொடுத்ததைப் போலச் சொன்னார்கள். இதே தலைவர் காமராஜ் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலிலே தோல்வி அடைந்த நேரத்தில் மதுரையிலே உள்ள பயணியர் விடுதியிலே தங்கி இருக்க ஒரு அறை தரப்பட்டது. அன்றைய தினம் யாரோ ஒரு ஜூனியர் அமைச்சர் வருகிறார் என்ற காரணத்தினால், அவருடைய அறையை அவரையும் கேட்காமல் அவருடைய சாமான்களை எல்லாம் தூக்கி வெளியே வைத்து விட்டார்கள். அத்தகைய நிலைமைதான் அன்றைய தினம் இருந்தது. இன்றைய தினம் வல்லவர், நல்லவர் என்றெல்லாம் புகழுகிறார்கள். அதை என்னால் நம்பக்கூட முடியவில்லை. அவரை சமூக வாழ்க்கையிலே இருந்து ஒதுக்க வேண்டுமென்பதற்காக, அவருடைய பெயரை நீக்க வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நான் கண்டிக்கிறேன். தலைவர் காமராஜ் போன்ற உத்தமத் தலைவர்களை ஒதுக்கினாலும், மக்கள் மனதிலே நீங்காத இடத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதிலே நான் பெருமைப் படுகிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. நா. சுந்தரராஜ்]

வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவைப் பற்றிச் சொன்னார்கள். வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா ஜனாதிபதி ஆட்சி அமல் செய்யப்பட்டிருந்த நேரத்தில் நடைபெற்றது. அது ஒரு சாதாரண விழாவாகக் காட்சியளித்தது. அதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் அதை ஒரு பெரு விழாவாக நடத்த வேண்டும் என்று திட்டமிட்டு, தமிழகத்தில் இருக்கும் லாரி, பஸ்கள், மாட் வண்டிகள் எல்லாம் சென்னை நகரில் பவனி வரவேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

[முற்பகல் 10-50]

அதிலே இன்னொன்றையும் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள். திருத்தணியில் புதிதாக ஒரு தங்கத்தேர் செய்யப்பட்டது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள அந்தத் தங்கத் தேரை அப்படியே சென்னைக்குக் கொண்டு வர இயலாது என்ற காரணத்தால், அதை உடைத்து, தனித்தனியாக ஒவ்வொரு பார்ட்டாகப் பிரித்து, அதைச் சென்னைக்குக் கொண்டு வந்து, சென்னையில் அதை ஒன்று சேர்த்து, அதில் அன்றைய முதலமைச்சர் பவனி வரவேண்டுமென்று சில அதிகாரிகளிடம் சொல்லி, அதற்கான சில காரியங்கள் நடந்து கொண்டு இருந்தன. இந்த விஷயத்தை அங்கேயிருக்கும் சில அதிகாரிகள் சொல்லி எங்களுக்குத் தெரியும். இது சம்பந்தமாக உண்மையான நிலைமை என்ன என்பதையும் இங்கே விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அந்தத் தங்கத் தேரில் வரவேண்டுமென்று விரும்பிய காரணத்தால்தான், அந்த ஆட்சி கலைக்கப்பட்டது என்று நினைக்கிறேன். அந்தக் காரியத்தை ஒரு தனிப்பட்டவர் யாரும் செய்யவில்லை, திருத்தணி முருகனே அந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறான் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

வெள்ள நிவாரணப் பணியைப் பொறுத்த வரையில், இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு உண்மையிலேயே நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் 80 ரூபாய்தான் வீடு இழந்தவர்களுக்குத் தரப்படும். இன்று அந்த நிலைமை போய் 80 ரூபாய் என்பதற்கு பதிலாக ரூ. 200 ஆகி, மேலும் ரூ. 300 கடன் கொடுத்து, அந்தக் குடியிருப்பைக் கட்டிக்

கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் வெள்ள நிவாரணப் பணியில் சில தவறுகள் இருந்து இருக்கலாம். அதற்காக அந்தச் சாதாரண தவறுகளுக்காக இந்த அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. காரணம், இந்த அரசாங்கமானது ஆட்சிப் பீடத்திற்கு வந்து 6 மாதம்தான் ஆகிறது. அதிலே வயதானவர்கள் 2—3 பேர் தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் படித்தவர்களாக, இளைஞர்களாக, என்னைப் போன்ற வயதுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரச்சினையிலும் நேரடியாகத் தலையிட்டு, பிரச்சினையை ஆராய்ந்து தீர்வுகாண, அதிகாரிகளை நேரடியாகத் தெரிந்துகொள்ள குறைந்தது 6 மாதம் ஆகும்.
—to know the facts and figures relat ng to subjects of wh ch they are incharge.
அந்த இலாகாவை அவர்கள் தெரிந்து கொண்டு துரித நடவடிக்கைகளை எடுப்பதற்கு, திட்டங்களை விரைவாக நடத்துவதற்கு, போதிய திட்டங்களைக் கொண்டு வருவதற்கு சிறிது காலம் பிடிக்கலாம்.

இந்த நிலையில் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை.

குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் இந்திரா காந்தி வந்த நேரத்தில் ஏற்பட்ட பிரச்சினை பற்றி சொன்னார்கள். மதுரையில் இந்திரா காந்திக்கு ஏற்பட்ட கொடுமையான சம்பவங்கள் தமிழகத்தின் வரலாற்றில் கருப்பு புள்ளிவிழுந்து விட்டது என்று சொல்ல வேண்டும். காரணம், அன்றைய தினம் 300 கார்கள் இந்திரா காந்தியின் காருக்குப் பின்னால் விமான நிலையத்தில் இருந்து வந்தன. அங்கேயிருக்கும் போலீஸ் அதிகாரிகள் சிலர் 6 கார்களை மட்டும் விட்டு விட்டு, மற்ற கார்களைத் திருப்பி விட்டு விட்டார்கள்.

அங்கேயிருக்கும் போலீஸ் அதிகாரிகள் அந்தக் கறுப்புக் கொடி காட்டுவதற்காக ஒதுக்கியிருந்த இடமும் தவறு. அன்றைய தினமே அதை அங்கே இருக்கும் மாவட்ட

காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சகோதரர் நெடுமாறன் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில் இருந்தால் ஏதாவது தகராறு வரும், வேறு இடத்தில் கொடுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு போலீஸ் அதிகாரிகள் ஒன்றும் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம் என்று உத்திரவாதம் அளித்திருக்கிறார்கள். நடைபெற்ற சம்பவத்திற்கு முன்னால், நெடுமாறன் அவர்கள் விமான நிலையத்திற்குச் செல்கிற நேரத்தில், அவரைக் கேவலமாக சிலர் பேசிய நேரத்தில், மாவீரன் நெடுமாறன் அவர்கள் காரை விட்டு கீழே இறங்கி, என்னப்பா நீங்கள் நடந்து கொள்கிற விதம் சரியாக இல்லை, ஏதாவது கலவரம் செய்ய திட்டமிட்டு இருக்கிறீர்களா என்று கேட்ட நேரத்தில், அதெல்லாம் ஒன்றும் இல்லை, நாங்கள் அமைதியாக இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால் நிலைமை என்ன ? இந்திரா காந்தி அந்தப் பாதையில் வருகிற நேரத்தில் அவர் தாக்கப்பட்டார். முன்னால் இருந்த கண்ணாடி விழுந்து விட்டது. இந்திரா காந்தியை மூன்று பேர் மறைத்துக் கொண்டு காப்பாற்றாவிட்டால்—மரகதம் சந்திரசேகரும், நெடுமாறனும் இந்திரா காந்தி மீது தலையணையை வைத்து காப்பாற்றியிருக்காவிட்டால், இந்திரா காந்தி இன்றைக்கு நம்மிடையே இருந்து இருக்க மாட்டார்கள். சிந்தன்—அவருக்கு இன்றும் கண் சரியாகத் தெரியவில்லை. அந்த அளவிற்குக் கொடுமைப்படுத்தப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டு இருக்கிறது. அது போன்றதொரு நீதி விசாரணையை மதுரையில் நடைபெற்ற சம்பவத்திற்கும் வைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். திருச்சியில் நடைபெற்றது என்ன? லட்சக் கணக்கான பேர் அங்கே அடிக்கப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை ஒரு அரசியல் கட்சி நடத்தும் சம்பவமாக இருக்குமா என்று சந்தேகம் இருக்கிறது. யாரோ சில காலிகள் செய்வது போல் அந்தக் காரியங்கள் இல்லை. டியூப்லைட்கள் ஒடிக்கப்பட்டு இருக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் கொடி, 92 ஆண்டுகாலமாக ஒரு பாரம்பர்யம் கொண்ட காங்கிரஸ் கட்சியின் கொடி கொளுத்தப்பட்டு இருக்கிறது. இது எல்லாம் சரிதானா, இது தான் போராட்டம் என்பதற்குப் பெயரா ?

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 ஜனவரி 4

1974-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். நாங்கள் ஒரு போராட்டத்தை நடத்தினோம். தலைவர் காமராஜர் தலைமையிலே, மதுவிலக்குப் போராட்டம், தமிழ் நாட்டிலே மதுவிலக்கு இருக்க வேண்டும். மதுவிலக்கு அமுல்படுத்த வேண்டுமென்று போராட்டம் நடத்தினோம். 50,000 பேர்கள் சிறைச் சென்றோம். எங்கேயாவது ஒரு சிறு சம்பவம் நடந்ததா? தனிப்பட்டவர்கள் யாராவது தாக்கப்பட்டார்களா? இல்லையே. காரணம் என்ன? தலைவர் காமராஜர் அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அன்றைய தினம் எல்லா பத்திரிகைகளும் அரசியல் கட்சிப் போராட்டம் என்றால் காங்கிரஸ் நடத்திய போராட்டம் தான் போராட்டம் என்று வர்ணித்தார்கள். அந்த அளவிற்கு சிறப்பாக நடத்தினார்கள். எங்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. ஒரு சிறு சம்பவமும் இல்லாமல் நாங்கள் அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோம்.

ஆனால் கண்டது என்ன? போடப்பட்ட வழக்குகள் என்ன? சதி வழக்குகள். அங்கே இரயில்வே நிலையத்தில் இருக்கக்கூடிய ரயில் தண்டவாளங்களை பெயர்த்ததாக போடப்பட்ட வழக்குகள். வன்முறையை தூண்டி விட்டோம் என்று போடப்பட்ட வழக்குகள். பயங்கரமான ஆயுதங்களை வைத்திருந்தோம் என்று வழக்குகள். இது போன்ற வழக்குகளை அன்றைய தினம் வழக்குப்போடவேண்டுமென்பதற்காகவே பொய் வழக்குகளைப் போட்டார்கள். இன்றைய தினம் பொய் வழக்குகளைப் போட்டு விட்டார்களே என்று சொன்னால் யார் நம்புவது? வன்முறைச் சம்பவம் இந்திரா காந்தி வரும்பொழுது நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது விசாரணையில் வெளியே வரத்தான் போகிறது. திராவிட முன்னேற்ற கழகத்துக்காரர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் கறுப்புக் கொடி போராட்டம் நடத்துவதாக அறிவித்தார்கள். அதற்கு முன்பாகவே, ஒரு வாரத்திற்கு முன்பாகவே சி. பி. எம்., திராவிடக் கழகத்துக்காரர்கள் அறிவித்தார்கள். இங்கே இந்திரா காந்தி வெளியே வரக்கூடாது, தமிழ் நாட்டை விட்டு டெல்லிக்குப் போகக் கூடாது என்று திட்டமிட்டு சதி நடந்தது. காங்கிரஸ் தோழர்கள் மிக மரியாதையாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் தஞ்சை, திருச்சி மாவட்டத்திலே சுற்றுப் பயணம் செய்த போது யாரும் கறுப்புக் கொடி காட்டவில்லை. நேரு வளர்த்த காங்கிரஸ், காமராஜர் வளர்த்த காங்கிரஸ், இந்திரா வளர்த்த காங்கிரஸ் அதுதான் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. நா. சுந்தரராஜ்]

அடுத்ததாக, இன்றைய தினம் இந்த அரசாங்கத்தின் மீது இந்த அமைச்சர்கள் மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது என்பது ஏதோ மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கப் போவதில்லை. கவிழ்க்க முடியாது என்பது தெரியும். சென்ஷர் மோஷன் கொண்டு வந்தால் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைத்தான் கொண்டு வர முடியும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் பல பிரச்னைகளைப் பற்றிப் பேசலாம் என்பதற்காக கொண்டு வந்தோம் என்கிறார். அவருக்குள்ள விளம்பர ஆசையின் காரணமாக அதைச் செய்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

குறிப்பாக, எங்களைப் பொறுத்த வரையில் ஆறு மாதம் என்பது சிறிய பிராயம். இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லை என்பதிலே நமக்கு கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்த அமைச்சரவையில் உள்ளவர்கள் தவறு செய்வார்களேயானால் நிச்சயமாக காங்கிரஸ் கட்சி அதைக் கண்டிக்கத் தவறாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையில்லை. இதை ஆதரிக்கத் தயாராக இல்லை என்று சொல்லி விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இன்று இங்கே விவாதிக்கப்படுகின்ற மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை நான் இன்று முன் வைக்க விரும்புகிறேன்.

தமிழக மக்கள் சரித்திரத்திலே கண்டிராத ஒரு பயங்கரமான புயல் வெள்ளத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கும்போது அந்தப் பணிகளை இந்த அரசு தீவிரமாகச் செய்து வருகிறது.

[முற்பகல் 11-00]

ஜூன் மாதம் 30 ஆம் தேதி பதவிக்கு வந்துள்ள இந்த அரசு, சென்ற 6 மாதங்களில், இரண்டு மாத காலம் அனேகமாக வெள்ளம், புயல் நிவாரண வேலையில் போயிருக்கிறது. நாடெங்கும் இந்தப் பணிகளை அரசு துரிதமாக செய்வதற்கு முற்பட்டு நடத்திக் கொண்டிருக்கிறது என்று அனைவரும்

பாராட்டுவதைப் பார்க்கிறோம். இங்கும் அங்கும் சில குறைகள் இருக்கலாம். அதிகாரிகள் பக்கத்திலிருந்து, மற்றவர்கள் பக்கத்திலிருந்து சில குறைகள் வந்திருக்கலாம். அப்படியிருந்தும் நல்ல முறையில் இந்தப் பணியை அரசு நடத்திக் கொண்டிருக்கிறது என்று அனைவரும் பாராட்டுவதை நாம் பார்க்கிறோம். நாமும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இப்படிப்பட்டசந்தர்ப்பத்தில் இந்த அரசின் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர சரியான அடிப்படையும், காரணமும் இருக்கிறதா என்பதை, தீர்மானத்தைக் கொண்டு வந்த மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரையும், நண்பர்களையும் சிந்திக்க வேண்டுமென்று நான் எங்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலையில், கட்சிகளுக்கு இடையிலே என்ன மாறுபாடுகள் இருந்தபோதிலும், ஒரு அரசு அதிகாரத்திற்கு வந்து, அதன் நடைமுறைகள் அதன் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய இறுதியான கட்டத்திற்குக் கொண்டு செல்லுகிற, அது இருக்க வேண்டுமா, இறக்கப்பட வேண்டுமா என்று சொல்லுகிற நிலை எப்போது ஏற்படும் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார். இந்தத் தீர்மானத்தை இங்கே பிரேரேபித்து, இதன் மூலம் இந்த அரசை மாற்றுவதற்குச் சாத்தியப் படாது என்று தெரிந்துதான், விவாதிக்க, விமர்சிக்க ஒரு சந்தர்ப்பமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இதைக் கொண்டு வந்தோம் என்று அவர் குறிப்பிட்டிருப்பதையும் பார்த்தோம்.

இந்த அரசு அதிகாரத்திற்கு வந்தது 1977 ஆம் வருடம் ஜூன் மாதத்தில் என்று நமக்குத் தெரியும். காங்கிரஸ் கட்சியோடு இந்த கட்சிக்கு இருந்த உறவுகளை முறித்துக் கொண்ட ஒரு புதிய சூழ்நிலையில், 1977-ம் வருடத்தில் தேர்தலில் நின்று, பெரும்பான்மையான தமிழக மக்கள் அந்தக் கட்சிக்கு வாக்களித்து அதன் அடிப்படையில் இந்த அரசு அமைந்துள்ளது. இந்த 6 மாதங்களில், 2 மாதம் வெள்ள நிவாரணப் பணிகள், மற்ற பணிகளிலும் செலவழிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ள 4 மாதங்களில்தான், இந்த அரசின்

கொள்கைகள், வாக்குறுதிகள், நடைமுறைகள் எப்படி இருந்திருக்கிறது என்று பரிசீலிக்க இடம் உள்ளது. அந்தப் பரிசீலனை செய்ய வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பிரேரேபித்து நிறைவேற்றுவதற்கான நிலைமைக்கு இடமளிக்கவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் ஆதரிப்பதற்கில்லை. அந்தத் தீர்மானத்தை நாங்கள் எதிர்க்க வேண்டியுள்ளது.

அதே சமயத்தில் அரசின் பக்கத்தில் எந்தவிதமான குறையும் தவறும் இல்லை என்பதல்ல. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்போது தவறுகள் ஏற்பட்டாலும், அவற்றைக் கொஞ்சம் கூட தயவுதாட்சண்யம் இல்லாமல் எடுத்துக் காட்டி, தமிழக மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னையை முதன்மையாக நிறுத்திக் கொண்டு பேசுவதும், அதற்கான நடைமுறை ஆலோசனைகளை முன்வைப்பதும் ஆகிய பணிகளைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட அதைச் சில சந்தர்ப்பங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த அரசு மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர். தலைமையில் அமைந்தபோது, அவர் குறிப்பிட்டுள்ள சில கொள்கைகளை, விஷயங்களை எடுத்துக் கொண்டு பார்ப்போம். ஒரு ஊழலற்ற நல்ல நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஏழை மக்கள், பலஹீன பகுதியினரான மக்கள், தொழிலாளர்கள், விவசாய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களுடைய வாழ்வுக்குத் துணையாக, பக்க பலமாக இந்த அரசு நின்று பாடுபடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையில் அரசினுடைய நடைமுறைகள் வளர்கிறதா, அல்லது வேறு விதத்தில் செல்கிறதா என்பதைப் பற்றி விமர்சனம் செய்யக்கூடிய உரிமை எல்லாக் கட்சியினருக்கும் உண்டு. ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்துதான் விமர்சனத்தை நடத்த வேண்டும் என்ற நிலைக்குப் போவது சரியல்ல என்று கருதுகிறோம்.

புயல், வெள்ள நிவாரணப் பணிகள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் சொல்ல முடியாத அளவுக்குப்பெரும் துன்பங்களைச் சகித்துக் கொண்டு, அந்த வேலைகளில் தமிழக மக்கள் அனைவரும் ஈடுபட்டுள்ளார்கள். அரசாங்க இயந்திரம் நன்கு ஈடுபட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் சில சலுகைகள் அளித்துள்ளார்கள். இன்னும் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது சில சட்டங்களைக்கொண்டு வந்து விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள். இப்படிப்பட்ட சில காரியங்கள் செய்துள்ளதை நாம் கண்ணை மூடிக்கொண்டு செய்யவில்லை என்று சொல்வது முறையாகாது.

அதே சமயத்தில் குறைகள் இருப்பதையும் எடுத்துக் காட்டவேண்டும். அந்தக் கண்ணோட்டத்துடன் குறைகளைத் திருத்திக் கொண்டு, தமிழக மக்களின் வாழ்வை முன் வைத்து அதை வளர்த்துச் செல்ல நல்ல நடவடிக்கைகளை கையாள நாம் விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் முன் வைக்க வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. அந்த முறையில் நாங்கள் பல சந்தர்ப்பங்களிலும் எங்களுடைய கடமையைச் செய்கிறோம்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சென்னையில் பல்லவன் போக்குவரத்து போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம், நீண்ட காலமாக நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து கிடைக்காத காரணத்தால் தொழிலாளியின் கடைசி ஆயுதமான வேலைநிறுத்தப் போராட்ட ஆயுதத்தைக் கையாண்டார்கள். அந்தப் போராட்டத்தின்போது அரசு கையாண்ட தந்திரம், அணுகுமுறை ஆகியவற்றை அரசு கவனிக்க வேண்டியது மிக அவசியம்.

15 லட்சம் மக்கள் வாழும்பகுதியான சென்னை நகர மக்களைப் பாதிக்கும், [illegible] ஒரே பார்வையோடு. அதை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த முயற்சி மட்டும் நிறைவேறி இருந்தால் அது வேலை நிறுத்தப் போராட்டத்தை உடைத்திருக்கும். ஆனால் தொழிலாளிகள் அதை நிச்சயமாக அனுமதிக்க முடியாது. வர்க்க ஒற்றுமையையும் போராட்ட உணர்வையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதிலே தொழிலாளர்கள் உறுதியாக இருக்கிறார்கள். கோரிக்கைகளை மக்கள் முன் வைக்கிறார்கள். எல்லாக் கட்சிகளிடமிருந்தும் ஆதரவு கிடைக்கிறது. அப்போது அரசு அதன் தந்திரத்தைக் கையாள்வதில் ஒரு மாற்றத்தை, தொழிலாளர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு கொண்டு வருகிறது. அது நல்ல அம்சம். வரவேற்கத்தக்கது. ஆனால் அதே சமயத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில்லை. அணுகுமுறையில் தந்திரங்களை மாற்றிக்கொண்டு தொழிலாளர்களுக்கு ஆரம்பத்திலே நியாயம் வழங்க வேண்டி இருக்கிறது.

அடுத்து, டி.வி.எஸ். போராட்டம். அந்தக் கம்பெனி நிர்வாகம் வெள்ளைக்கார முதலாளியோடு கூட்டாக மூலதனம் போட்டு மத்திய அரசின் சில சலுகைகளையும் பெற்றுக் கொண்டு, தமிழக அரசு சொன்னாலும் கேட்காமல், முரட்டுத்தனமாக, ரௌடிகளைக் கூட பயன்படுத்திக் கொண்டு போராட்டத்தை முறியடிக்க நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். அந்த ரௌடிகளைப் பற்றி, ரௌடியிசம் பற்றி தமிழக முதலமைச்சர் பேசியது நிச்சயமாக தொழிலாளி வர்க்கம் வரவேற்கத் தக்க ஒரு விஷயம். அரசு போலீஸ் பாதுகாப்பு கொடுத்தும் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு தான் எடுக்க முடிந்தது நிர்வாகத்தில் நிறுத்தப்பட்ட தொழிலாளர்களை திருப்பி எடுக்கும் விஷயத்தை இறுதியாக முதலமைச்சர் அவர்கள் தீர்மானிப்பது என்று முதலாளி சம்மதித்திருந்ததை பிறகு ஏற்க மறுக்கவே தமிழக அரசு தன்னுடைய போலீசை வாபஸ் பெற்றுக்கொள்ளும் என்று சொன்னார்கள். வரவேற்க வேண்டிய ஒரு விஷயம். ஆனால் போலீசை வாபஸ் வாங்க முடியவில்லை. அதிகார வர்க்கம், மற்றும் வேறுபல நிர்ப்பந்தங்களின் காரணமாக, என்ற நிலைமையைப் பார்க்கின்றோம்.

இன்றைக்கு அது ஒரு சவாலாக இருக்கிறது. பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் அனைவரையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு மாநில முதலமைச்சர் எடுத்துக் கூறி, பிரச்சினையை என்னிடம் விட்டு விடுங்கள். நான் தீர்ப்புத் தரத் தயார், யாரையும் பழிவாங்கும் உணர்வு இருக்கக் கூடாது என்று சொல்லியும் கேட்காமல் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, எங்கோ நடந்ததாகச் சொல்லப்பட்ட ஒரு கொலை விஷயத்தை இழுத்துக்கொண்டு வந்து இதில் உபயோகப்படுத்தி, ஒவ்வொரு தொழிலாளியும் மன்னிப்புஎழுதி கொடுத்து வர வேண்டும் என்று முரட்டுத்தனமாக அரசுக்கு தொந்தரவு கொடுத்து கொண்டு வருகிறது. ஒப்பந்தம் பின்தங்கிப் போய் நிற்கிறது. தகுந்த தந்திரங்களைக் கையாண்டு இந்தச் சவாலை நிச்சயம் இந்த அரசு சமாளிக்க

வேண்டும். அப்போது நான் முதலாளித்துவ வர்க்கத்தின் முரட்டுத்தனத்திற்குப் பதிலாக அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கோவை லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் போராட்டம். அது சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கு பல கடிதங்களை நானே, என் கட்சி சார்பில், தொழிற்சங்க சார்பில் எழுதி அனுப்பியது உண்டு. 5½ மாதகாலம் அப்போராட்டம் நடந்தது. மெஜாரிட்டி தொழிலாளர்களைக் கலந்து ஒப்பந்தம் செய்யாமல் மைனாரிட்டி சங்கங்களோடு நிர்வாகம் ஒப்பந்தத்தைப் போட்டு, அதன் காரணமாக ஆரம்பத்தில் இந்தப் போராட்டம் வந்தது—அப்போது இந்த அரசு இல்லை. இந்தப் போராட்டம் ஆரம்பித்தது ஜூன் 2 ஆம் தேதி—இந்த அரசு வந்தது ஜூன் 30 ஆம் தேதி. அந்த முதலாளி, மிக சாமார்த்தியமாக பல போராட்டங்களை உடைத்தவர் ஆளுங்கட்சி நண்பர்களின் சங்கத்தை தன் பக்கம் சேர்த்து கொண்டு ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி பெருவாரியான தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தை உடைக்க முற்பட்டார். தொழிலாளர்கள் அதை இறுதிவரை எதிர்த்தனர். நாங்கள் கடைசியாக தொழிலாளர்கள் சார்பாக என்ன முறையைக் கையாண்டோம் என்றால், அதை முதலமைச்சர் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம் என்ற முறையில் விட்டு விட்டோம். தொழிலாளர்களை பழி வாங்குவதை விட்டு விட்டு எல்லோரையும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற சில கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டன. சில நிறைவேற்றப்படவில்லை. அந்தப் போராட்டம் 5. மாதங்களுக்கு முன்னால் தொடங்கப்பட்டது. ஆகவே, சமரசம் செய்வதை இதற்கு முன்னாலேயே செய்திருக்கலாம்.

[முற்பகல் 11—10]

மெஜாரிட்டித் தொழிலாளர்கள் பங்கெடுத்துக்கொண்டு ஒப்புக்கொள்ளாத ஒரு ஒப்பந்தத்தை அரசாங்கத்திலுள்ளவர்களும் தொழிலாளர் இலாக்காவும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றதொரு நிலைமை வந்திருந்தால் இப்படிப்பட்டதொரு சூழ்நிலை உருவாகியிருக்காது. இதை உணர்ந்துகொள்வது அவசியம். இவையெல்லாம் தந்திரத்திலே, அணுகுமுறையிலே ஏற்படும் தவறுகள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று மின்சாரத் தொழிலாளர்களுடைய போராட்டம் நடந்தது. ‘தலைவர்களுக்குக்கூடத் தெரிவிக்காமலேயே தொழிலாளர்களை திடீரென்று போராட்டத்

தில் இறங்கிவிட்டார்கள், என்று மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களுடைய ஸ்பான்டேனியஸ் ஸ்டிரைக் என்றார்கள். இப்படி திடீரென்று ஒரு போராட்டம் ஏற்படுவது உலகிலே ஒன்றும் புதிதல்ல. அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாக பல்வேறு பிரச்சனைகள் தீர்க்கப்படாது இருக்கும்போது வேறு வழியில்லை என்கின்ற நிலையில் ஸ்டிரைக் செய்வது புதிதல்ல.

வேறு எந்த வகையிலும் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்றால், அவர்களுக்கு உள்ள ஒரே ஆயுதம் இதுதான். அந்த நிலையில் அவர்களுக்குப் பின்னால் எந்தக் கட்சி நிற்கின்றது என்று பார்க்கத்தேவை இல்லை. அவர்களுடைய கோரிக்கை தீபாவளி முன்பணம், போனஸ் என்பதெல்லாம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதொரு பிரச்சனை. அது தரவில்லை என்பதால் தகராறு ஏற்பட்டு தொழிலாளர்கள் போராட்டத்திலிறங்கினார்கள். அவர்களுடைய போராட்டம், திடீரென்று ஏற்பட்ட போராட்டம்தான். சந்தேகம் இல்லை. ‘அதற்காக, தலைவர்களுக்கும் தெரிவிக்காமல், போராட்டத்தில் இறங்கிவிட்டார்களே, அவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும்’ என்ற நிலையில் அரசு போயிருக்கக்கூடாது. அது சரியில்லை.

எனவே, அணுகுமுறையில் எப்படி தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன என்று எடுத்துக்காட்டவேதான் இதை எடுத்துக் காட்டுகிறோம். அதற்குப் பிறகு அந்தப் போராட்டத்தினை சரியான திசைக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்ற நிலையில், பொறுப்புள்ள தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து அந்தப் போராட்டத்தினை நிபந்தனையின்றித் திரும்பப் பெற்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாக தளர்த்தப்பட்டு பிறகு அத்தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குப் போயிருக்கிறார்கள். இன்னமும் அவர்கள் பேரிலே உள்ள வழக்குகள் பல வாபஸ் பெறப்படாமல் இருக்கின்றன.

ஏன் இவற்றைச் சொல்லுகிறேன் என்றால் அரசின் அணுகுமுறையில் தவறுகள் இருக்கின்றன. ஏற்கனவே உள்ள எதிரும் புதிருமான சூழ்நிலையில், அரசு தொழிலாளர்கள் எந்தப் பக்கம் சாய்ந்து நிற்கின்றார்கள் என்று பாராமல் அவர்களுக்குப் பின்னால் எந்தக் கட்சியினர் இருக்கின்றார்கள் என்று பாராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிக்கவனிக்காமல் நடவடிக்கை எடுத்தால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படும்.

அதைப்போல, மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய போராட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் அவர்கள் நூற்றுக் கணக்கில் சிறையிலிடப்பட்டார்கள். அதற்கு முன்னால் பஸ் தொழிலாளர்களுடைய போராட்டம் என்று ஏற்பட்டபோதும் நூற்றுக் கணக்கில் அவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். பின்னர் இலட்சுமி மில்ஸ் தொழிலாளர்களுடைய போராட்டம். நானூறுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள்.

பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய போராட்டம் என்ற போது, ஆரம்பத்தில் அந்தப் போராட்டத்தை ஒரு தவறான கண்ணோட்டத்தில்தான் அரசு பார்த்தது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் அவர்களை என் இப்படி சிறையில் அடைக்க வேண்டும்? பிறகு அந்தப் போராட்டம் நாடு முழுவதும் பரவி மாணவர்களும் அதிலே பங்குகொண்டு ஒரு பெரும் போராட்டமாக மாறிவிடக்கூடுமோ என்ற நிலையில் அரசு தன்னுடைய உத்தியை, தந்திரத்தை மாற்றிக் கொண்டது. பின்னர் அதற்கு ஒரு முடிவைக் காண்கின்றார்கள் அரசு சார்பில்.

பல பெண் ஆசிரியர்கள் அந்த நேரத்திலே கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்கு எடுத்துச் செல்லுவதற்கு முன்பாக, பல மணி நேரம் காவல் நிலையங்களிலே வெளியே உள்ள திண்ணைகளிலே உட்கார வைக்கப்பட்டார்கள். அது பற்றி இந்தச் சபையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றைக் கூட எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருந்தோம். ஏன் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறோம் என்றால், தொழிலாளர்கள் விஷயத்திலே, ஆசிரியர்கள் மாணவர்கள் விஷயத்திலே அரசு இப்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாம் என்றும், அரசு மிகவும் எச்சரிக்கையோடும், உஷாராகவும் இவற்றை அணுக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இதை சொல்லுகிறேன். எனவே இப்படி விமரிசனம் செய்வது சரியானது, தப்பில்லை என்று கருதுகிறேன்.

அதேபோல இன்னும் சில காரியங்களைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறோம். நிலைமைகள் இப்படியெல்லாம் இருந்தாலும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதுதான் இதற்கெல்லாம் பரிகாரமா என்றால், நிச்சயமாக இல்லை. அதற்கு மாறாக அனுபவத்தின் மூலம் அரசினை சரியானதொரு திசைக்கு எடுத்துச் செல்லுவதற்கு

நாம் உதவி செய்ய வேண்டும். நாம் சொல்லுகின்றதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாமல், அவர்களுடைய எண்ணத்தை, போக்கை மாற்றவே முடியாது என்ற நிலை ஏற்பட்டால், '' இட் ஹேஸ் பிகம் இன்காரிஜிபிள் '' என்ற நிலைமை ஏற்பட்டால் அப்போது இப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு வந்து பரிகாரம் தேடலாமேயொழிய இப்போது அவசியம் இல்லை.

மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பல்வேறு விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். பல நடைமுறை விஷயங்களை எடுத்துக் கூறி விமரிசனம் செய்தார்கள். அவருக்கு இப்படி விமரிசனம் செய்யக்கூடிய உரிமை உண்டு. மறுக்கவில்லை. அதே நிலையில்தான் நாமும் விமரிசனம் செய்கிறோம். ஆனால் நான் சொல்ல விரும்புவது எல்லாம், அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நடந்துள்ள பல்வேறு விஷயங்களை, இதே போன்ற விஷயங்களை, அவர்கள் கொஞ்சம் பின்னால் திரும்பிப் பார்த்து, அவற்றிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களைச் சற்று நினைத்துப் பார்த்து பிறகு அவர்கள் இந்த விஷயங்களுக்கு வந்திருந்தால் எவ்வளவோ நல்லதாக இருந்திருக்கும் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஏன் இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்ந்தெடுக்காமல், அதிகாரத்திலிருந்து வெளியேற்றி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்று சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். மக்களிடம் யார்எதை எடுத்துச் சொன்னாலும், யார் பதவிக்கு வந்தால் அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சனை தீர்ந்து அவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று யோசித்துப்பார்த்து, அந்தக் கட்சியைத்தான் ஆட்சிக்கு அனுப்புகின்றார்கள். அந்த நிலைமைகளை இன்றைய தமிழக அரசினுடைய நிகழ் கால பொறுப்பை மேலே கூறப்பட்ட பின்னணியுடன் கவனிக்க வேண்டியிருக்கிறது. அந்த விமர்சனத்தையெல்லாம் இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல.

தி. மு. க. ஆட்சியில் நெய்வேலி தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவில்லையா? வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தில் 900 பேர் சிறையில் அடைக்கப்படவில்லையா ? அங்கே கண்ணீர்ப்

[திரு. கு. ரமணி] [1978 ஜனவரி 4

புகை குண்டு வீச்சு, தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது அல்லவா? எதிர்க் கட்சித் தலைவர், அன்று முதலமைச்சராக இழந்த நேரத்தில் நானும், எங்கள் தோழர் வி. பி. சிந்தன் அவர்களுடன் போய், ''இந்த முறை சரியில்லை'' என்று சொன்ன போது அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்—கேரளத்தில் கொடுக்கும் கூலியை கொடுக்கிறோம் என்று ஒப்புக் கொண்டார். பிறகு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தார்கள்.

அதே மாதிரி, தஞ்சை மாவட்டம் முழுவதும் நிலச்சுவான்தார்கள் கொடுமையான ரௌடித்தனமான தாக்குதல் எப்படி நடந்தது என்பதை நாடறியும். அது தொழிலாளி வர்க்கப் போராட்டத்தை நசுக்க நடைபெற்ற தாக்குதலின் உச்சகட்டமாகத்தான்—வெண்மணியில் நடந்த அத்தனை—உயிர்களை சுட்டு சாம்பலாக்கும் நிகழ்ச்சி. அந்தப் போராட்டங்கள் நடந்த காலத்தில் எத்தனை கள்ளக் கேஸ்கள்? பொய்க்கேஸ் எண்ணற்றவர்கள் மீது போட அன்றைக்கு போலீஸ் இலாகாவை ஈடுபடச் செய்யவில்லையா?

அதே மாதிரி சென்னையில் எங்கள் கட்சித் தோழர்கள் வி. பி. சிந்தன், பி. ஆர். பரமேஸ்வரன், கே. எம். ஹரிபட் ஆகியோரை நீழ்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்த போது எங்கள் தலைவர் ராமமூர்த்தி அவர்கள் உயர் நீதி மன்றத்தில் எப்படி ஆட்சியர் தவறாக நடந்திருக்கிறார்கள் என்று வாதாடி அவர்களை விடுதலை செய்து கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதே மாதிரி சிம்சன் தொழிலாளர்கள் மீது நடந்த பிரம்மாண்டமான தாக்குதல், போராட்டம் அனைவருக்கும் தெரியும். நான் அவற்றை விளக்க நேரமில்லை.

அடுத்து விவசாயிகள் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று நடத்திய போராட்டம், அதிலே துப்பாக்கிப், பிரயோகம், பலர் சாவு.

மாணவர்கள் போராட்டம் குறித்து சில கனம் மெம்பர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், மாணவர்கள் மீது அடக்குமுறை கையாளப்பட்டது என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்தது நமக்குத் தெரியும்.

1978 ஜனவரி 4] [திரு. கு. ரமணி]

அதே மாதிரி விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டத்தை எதிர்த்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய அரசு, மாநில அரசு காரியாலயங்கள் முன்பு அறப் போராட்டம் நடத்தி ''தர்ணா'' செய்தபோது 4,000 பேர் கைது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் நிலப்பறி இயக்கத்திற்கு சென்றபோது பல ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இவைகள் எல்லாம் விமர்சனம் செய்து விவாதத்திற்கு சென்ற காலத்தில் செய்த தவறான காரியங்களை, கொள்கைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கூடிய விஷயங்கள்.

இன்னொரு விஷயம். ஒரு வித இனவெறித் தாக்குதல்—மலையாளி—தமிழன் என்ற இன வெறித் தாக்குதல், தமிழகத்தில் பல தெருக்களில் நடைபெற்றது நமக்கு நெஞ்சு வேதனை அளிக்கவில்லையா? அந்த மோசமான நிலைமைகள் எல்லாம் நடந்தது. இதற்கெல்லாம் காரணம் என்ன? எப்படிப்பட்ட கொள்கையை, அணுகுமுறையை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் கையாண்டது என்பதை இன்றைக்கு அதன் மதிப்பிற்குரிய தலைவர் சிந்தனை செய்து பார்த்து பாடம் கற்று, இந்த அரசு மக்களை சந்தித்து எப்படி சேவை செய்ய வேண்டும் என்று தானே விமர்சனம் செய்யவேண்டும். திருத்த முடியாமல் போனால்தானே இழுத்து கீழே போடுவது? அந்த முறையில் அவர்கள் தங்கள் சென்ற கால அரசாட்சியில் ஏற்பட்ட தவறான நடவடிக்கைகளை பரிசீலித்து, அந்த படிப்பினையின்படி விமர்சனம் செய்ய முன் வந்திருந்தால் அப்போது நிலைமை வேறு விதமாக இருக்கும். அந்த நிலைமை ஏற்படவில்லை. இன்றுவரை அந்தக் கொள்கை சரியா, தப்பா என்று அவர்கள் விமர்சித்து சொன்னதாக எங்களுக்குத் தகவல் இல்லை. ஆகவே, அந்தக் கொள்கைகளை எல்லாம் கையாண்டது சரிதானா என்பதை அந்த தலைவர்களும், அந்த அன்பர்களும் சிந்திக்க வேண்டுமென்று நாங்கள் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

வெண்மணியில் தீவைப்பு, உயிரோடு பலர் எரிப்பு நடந்து பல உயிர்கள் போனபோது எங்கள் கட்சி சார்பில் இதே சட்டசபையில் ஒரு தீர்மானத்தை பிரேரேபிக்கக் கூட அன்றைக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எங்கள் கட்சித் தோழர்களுக்கு. அதுவும் அன்றைக்கு நடந்தது.

[திரு. கு. ரமணி] [1978 ஜனவரி 4

ஆகவே, இப்படிப்பட்ட கொள்கைப் பிரச்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் காழ்ப்பு உணர்ச்சி கண்ணோட்டத்தில் அதை எடுப்பதில்லை. ஆழமாகப் பார்க்க வேண்டும்.

இந்த அரசுக்கு கிடைத்திருக்கிற 6 மாதத்தில் 2 மாதம் வெள்ள நிவாரணம் போன்ற மற்ற பணிகளுக்குப் போய், பாக்கி இந்த 4 மாதகாலம், அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, திட்டங்களை நிறை வேற்றுவதற்கு, ஆக்க பூர்வமான முயற்சி செய்ய முனைகிறோம் என்று எடுத்துச் சொன்ன பிறகு, அதை வெற்றி பெறச் செய்வதற்கு நம் பங்கினை நாம் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் அவர்கள் செய்கிற தப்பை எடுத்துக் காட்டக் கூடாது என்பதல்ல. ஆக்கபூர்வமான முறையில் எடுத்துக் காட்ட வேண்டும். அரசு தங்களுக்கு கொடுக்கிற வாக்குறுதிகள், போடும் திட்டங்கள் நன்மைக்காக கொண்டு வருகிறார்கள் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் ஏற்பட வேண்டும். சரியான அணுகுமுறையை கையாள வேண்டும்.

[முற்பகல் 11-20]

அதற்குத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திட்டங்களைப் பற்றிய, வாக்குறுதிகளைப் பற்றிய விஷயத்தை முதலில் சொன்னேன். அது மிகவும் பல ஹீனமான பகுதி. மக்கள் பக்கத்தில் தொழிலாளர்கள் பக்கத்தில், விவசாயிகள் பக்கத்தில், நடுத்தர மக்கள் பக்கத்தில் அவர்களின் நல்வாழ்விற்கு உறுதுணையாக நிற்போம் என்று அவர்கள் சொன்னது நடைமுறையில் செயல் படுத்தப்பட்டுவருகிறதா என்பதை நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதிகாரவர்க்கத்தினை இந்த அரசு எப்படி கட்டி மேய்க்கப் போகிறது என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அரசாங் கத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கொள்கைகளைச் சொல்கிறார்கள். ஆனால் அவை கீழ்மட்டத்திற்குப்போகிற போது அக்கொள்கைகள் சரிவர அமல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். கீழ்மட்டத்தில் செயல் படும்போது நாம் தீர்மானிக்கிற கொள்கைகளுக்கும் அதன் நடைமுறைக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்து கொள்கைகளை, திட்டங்களை சரியாக அமல் நடத்துகிறார்களா என்று அர சாங்கம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

1978 ஜனவரி 4] [திரு. கு. ரமணி]

அப்படிப் பார்க்கும்போது, விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும், தொழிலாளர்கள்பால், விவசாயிகள் பால், பொதுமக்கள்பால் கையாளக்கூடிய கொள்கைகளை நிலைமைக்கு ஏற்ப மாற்றி அமைத்து முன்னுக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து. ஆகவே இந்த நேரத்தில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது, இதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல் வதற்கு அதுதான் காரணம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந் துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அதனை யொட்டி சில கருத்துக்களை நான் இங்கே கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே குறள் பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்களும், அதற்கு பதில் அளிக்கிறவகையில் என்னுடைய இனிய நண்பரும் கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரு மாகிய திரு. ராதா அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதே திருக்குறளில்,

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்ற குறளும் இருக்கிறது என்பதை இங்கே நான் நினைவு கூர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் "எதிர்க்கட்சி இல்லாத நாடு மூக்கணாங்கயிறு இல்லாத மாடு" என்று சொன்னதை நினைவுபடுத்தி சில வார்த்தைகள் சொல்லகடமைப் பட்டிருக்கிறேன்.

முன்னமேயே எங்கள் கட்சித் தலைவர் அவர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் இந்த அரசை கவிழ்த்துவிட முடியும் அல்லது கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணத்தில் இதைக் கொண்டுவரவில்லை; கடந்த ஆறு மாத காலத்தில் நடைபெற்ற அவலநிலைமைகளை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்ற வகையில்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற் கான காரண காரியங்களையும் அவர்கள் விளக்கினார்கள்.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் சிலவற்றை இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்

[திரு. கு. ரமணி] [1978 ஜனவரி 4

ஆகவே, இப்படிப்பட்ட கொள்கைப் பிரச்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் காழ்ப்பு உணர்ச்சி கண்ணோட்டத்தில் அதை எடுப்பதில்லை. ஆழமாகப் பார்க்க வேண்டும்.

இந்த அரசுக்கு கிடைத்திருக்கிற 6 மாதத்தில் 2 மாதம் வெள்ள நிவாரணம் போன்ற மற்ற பணிகளுக்குப் போய், பாக்கி இந்த 4 மாதகாலம், அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, ஆக்க பூர்வமான முயற்சி செய்ய முனைகிறோம் என்று எடுத்துச் சொன்ன பிறகு, அதை வெற்றி பெறச் செய்வதற்கு நம் பங்கினை நாம் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் அவர்கள் செய்கிற தப்பை எடுத்துக் காட்டக் கூடாது என்பதல்ல. ஆக்கபூர்வமான முறையில் எடுத்துக் காட்ட வேண்டும். அரசு தங்களுக்கு கொடுக்கிற வாக்குறுதிகள், போடும் திட்டங்கள் நன்மைக்காக கொண்டு வருகிறார்கள் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் ஏற்பட வேண்டும். சரியான அணுகுமுறையை கையாள வேண்டும்.

[முற்பகல் 11-20]

அதற்குத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திட்டங்களைப் பற்றிய, வாக்குறுதிகளைப் பற்றிய விஷயத்தை முதலில் சொன்னேன். அது மிகவும் பல ஹீனமான பகுதி. மக்கள் பக்கத்தில் தொழிலாளர்கள் பக்கத்தில், விவசாயிகள் பக்கத்தில், நடுத்தர மக்கள் பக்கத்தில் அவர்களின் நல்வாழ்விற்கு உறுதுணையாக நிற்போம் என்று அவர்கள் சொன்னது நடைமுறையில் செயல்படுத்தப்பட்டுவருகிறதா என்பதை நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதிகாரவர்க்கத்தினை இந்த அரசு எப்படி கட்டி மேய்க்கப் போகிறது என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அரசாங்கத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கொள்கைகளைச் சொல்கிறார்கள். ஆனால் அவை கீழ்மட்டத்திற்குப்போகிற போது அக்கொள்கைகள் சரிவர அமல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். கீழ்மட்டத்தில் செயல்படும்போது நாம் தீர்மானிக்கிற கொள்கைகளுக்கும் அதன் நடைமுறைக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்து கொள்கைகளை, திட்டங்களை சரியாக அமல் நடத்துகிறார்களா என்று அரசாங்கம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

1978 ஜனவரி 4] [திரு. கு. ரமணி]

அப்படிப் பார்க்கும்போது, விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும், தொழிலாளர்கள்பால், விவசாயிகள் பால், பொதுமக்கள்பால் கையாளக்கூடிய கொள்கைகளை நிலைமைக்கு ஏற்ப மாற்றி அமைத்து முன்னுக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து. ஆகவே இந்த நேரத்தில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது, இதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்வதற்கு அதுதான் காரணம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

<u>*திரு. என். கிட்டப்பா</u> : தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அதனையொட்டி சில கருத்துக்களை நான் இங்கே கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே குறள் பற்றி எங்கள் கட்சித் தலைவர் அவர்களும், அதற்கு பதில் அளிக்கிறவகையில் என்னுடைய இனிய நண்பரும் கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு. ராதா அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதே திருக்குறளில்,

''இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.''

என்ற குறளும் இருக்கிறது என்பதை இங்கே நான் நினைவு கூர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ''எதிர்க்கட்சி இல்லாத நாடு மூக்கணாங்கயிறு இல்லாத மாடு'' என்று சொன்னதை நினைவுபடுத்தி சில வார்த்தைகள் சொல்லகடமைப் பட்டிருக்கிறேன்.

முன்னமேயே எங்கள் கட்சித் தலைவர் அவர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் இந்த அரசை கவிழ்த்துவிட முடியும் அல்லது கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணத்தில் இதைக் கொண்டுவரவில்லை ; கடந்த ஆறு மாத காலத்தில் நடைபெற்ற அவலநிலைமைகளை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்ற வகையில்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்கான காரண காரியங்களையும் அவர்கள் விளக்கினார்கள்.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் சிலவற்றை இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்

தில் இன்றையதினம் குத்தகைத்தாரர்கள் நில வெளியேற்றம் செய்யப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு உணர்ந்து அந்த வெளியேற்றம் தடை செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஒரு சட்டம் கொண்டுவர இருப்பதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒருசில நாட்களுக்கு முன்னர் நினைவுபடுத்தினார்கள். அந்தச் சட்டம் வருகிற அதே நேரத்தில் தான் தஞ்சை மாவட்டத்தில் சாரிசாரியாக குத்தகைதாரர்கள், விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் புயல் வெள்ளம்பற்றிய வெள்ளை அறிக்கைமீது இங்கே விவாதம் நடைபெற்றது. நான் குறை கூறவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நான் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் கூட அத்தகைய மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். மாயூரம் பகுதியில், பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் வீடு இழந்தவர்களுக்கு அதற்காக முன்னால் தரப்பட்டிருக்கும் தொகையை விட அதிகமாகத் தரப்பட்டிருக்கிறது என்றாலும் நியாயமாக வீடு இழந்தவர்களுக்கு எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது எவ்வளவு பேர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையை நம் அரசு திண்மையாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே கட்சி வித்தியாசம் பார்க்கப்பட்டு நடைபெற்றுவிட்டது என்று முழுக்க சொல்லமாட்டேன். திரு. ராதா அவர்கள் சொன்னதுபோல் கட்சி வித்தியாசம் பார்த்து அங்கே நடைபெற்றுவிட்டது என்று நான் சொல்லமாட்டேன். பலப்பல காரணங்களால் நடைமுறையில் கொடுத்திருக்க வேண்டிய பணம் அங்கே கொடுக்கப்படாதிருக்கிற சூழ்நிலையை அரசு நிச்சயமாக பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இதை நன்றாக அறிந்திருக்கக்கூடும் என்று கருதுகிறேன். அங்கு புயல் வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் கல்லணைக்கு அருகில் ஒரு உடைப்பு எடுத்தது. காவிரி, வெண்ணாறு, புத்தாறு இந்த இடத்தில்தான் பிரிகிறது. வெள்ளம் அதிகமாக வந்துகொண்டேயிருக்கிறது. வெள்ளம் அதிகமாக அதிகமாக அணையைத் திறந்து விடுங்கள்—திறந்து விடுங்கள் என்று அங்குள்ள பொதுமக்கள் அதிகாரிகளை சந்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ அல்லது எந்த உத்தரவை எதிர்பார்த்தோ அதிகாரிகள் திறந்து விடாததின் காரணமாக கிளிக்கூடு என்கின்ற பகுதி பாழடைந்து போயிற்று. கவுத்தரசநல்லூர் என்ற பகுதியில் கரை உடைந்தது. சாகுபடிக்கு வரவேண்டிய தண்ணீர் எல்லாம் வர முடியாமல் வீணாகப் போய்விட்டது. இப்படி ஏன் உதாசீனமாக இருந்தார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இந்த அரசின் பொதுப்பணித்துறை தான் என்கின்ற குற்றச்சாட்டை நான் சொல்லும்போது இதை நான் வேண்டுமென்று சொல்லுகிறேன் என்று கருதுவதற்கே இடமில்லை என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நெருக்கடி நிலையின்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்ட பின்னால் அறங்காவலர்கள் எல்லாம் நீக்கப்பட்டார்கள். நில வள வங்கித் தலைவர்கள் அகற்றப்பட்டார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் நீக்கப்பட்டார்கள். அதன் பின் புதிய அரசு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. இப்போது வேண்டுமென்றால் புயல் வந்திருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லக்கூடும். ஆனால் அதற்கு முந்தி ஆறு மாதமாக இந்தத் துறைகளின் மூலமாக கிடைக்கவேண்டிய எந்தவிதமான பயனையும் பெற முடியாமல் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டாமலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். முறைப்படி இவைகளை எல்லாம் அமைப்பதற்கு இந்த அரசு தவறிவிட்டது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் அரசு ஒரு உத்தரவினை அரசு ஆணையாக பிறப்பித்துள்ளது. என்ன காரணத்திற்காக இது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. கலைஞர் அவர்களையே நினைத்துக்கொண்டு பிறப்பித்திருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்த அரசு எதற்காக இதைச் செய்கிறது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. எந்த நாட்டிலும் நெருக்கடி நிலை இருந்தபோது கூட இல்லாத நிலை இன்றைக்கு வந்திருக்கிறது. தலைவர்கள் பெயரால்

[திரு. என். கிட்டப்பா] [1978 ஜனவரி 4

இருக்கின்ற அமைப்புகளில் எல்லாம் தலைவர்களின் பெயர்களை நீக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களின் பெயர் எடுக்கப்படுகிறது. ஆளும் கட்சியிலுள்ள டாக்டர் நாவலர் அவர்களின் பெயர் அகற்றப்பட்டு வருகிறது. இது மட்டுமல்ல, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களுடைய பெயர் கூட அகற்றப்பட்டு வருகிறது. இதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பது புரியவில்லை. அரசு இவ்வளவு அவசர அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது? எவ்வளவோ காரியங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் இதில் போய் இவ்வளவு அக்கறை காட்டவேண்டிய அவசியம், அவசரம் என்ன வந்து விட்டது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், புதிய அரசு அரசேற்க ஆரம்பித்த காலத்தில் சட்டசபையில் கூட இந்தக் கோரிக்கையை எனது பேச்சில் குறிப்பிட்டேன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்பட்டன. 4,000 ரூபாய் மதிப்பீட்டு அளவில் இலவசமாக வீடுகள் கட்டித் தரப்பட்டன, இப்படிப்பட்ட வீடுகள் வரிசை வரிசையாக இருப்பதை பல மாவட்டங்களிலும் நாம் பார்க்கலாம். நெருக்கடி நிலை வந்தபோது இதற்கும் நெருக்கடி வந்து விட்டது. பின்னால், இந்த அரசு வந்த பின்னால் இதைப்பற்றி கேட்டபோது, இதைப் பற்றிய கேள்விகளை எழுப்பியபோது, இதைச் செய்வோம், செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டது, ஆனால் கடந்த ஆறு மாத காலமாக எதுவும் செய்யப்படவில்லை. ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த காரியத்தை நாம் எப்படித் தொடங்குவது, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்த இந்தக் காரியத்தை எப்படி நாமும் நடத்துவது என்று நினைத்துத்தான் இந்த வீடுகள் எதுவும் கட்டப்படவில்லை என்பதை நான் ஒரு குற்றச்சாட்டாக இந்த அவையில் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11–30]

அடுத்தாற்போல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வேண்டியவர்களுக்கு வேலைகள் போட்டுத் தரப்பட்டது, அதை ஊழல் என்றெல்லாம் நமது மதிப்

1978 ஜனவரி 4] [திரு. என். கிட்டப்பா]

பிற்குரிய ஆளும் கட்சித் தரப்பிலே உள்ள நண்பர்கள் அப்போது எடுத்துச் சொன்னார்கள். இப்போதும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கருணாநந்தம் என்ற ஒருவருக்கு, மத்திய சர்க்கார் அஞ்சல் துறையிலே பணியாற்றிக் கொண்டு வந்த ஒருவருக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்தி—மக்கள் தொடர்புத் துறையில் ஒரு வேலை போட்டுத் தரப்பட்டது. அது ஒரு பெரிய குறையாக எடுத்துச்சொல்லப்பட்டது. அவர் அந்தத் துறைக்கு பொருத்தமுடையவர். அதை ஒரு பெரிய குறையாக ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் இன்றையத் தினம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஆளும் கட்சியினுடைய நிலை என்ன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பி.சி. கணேசன் என்பவரை ரூ. 1,200 சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். வேலை தெரியாதவர் என்று நான் அவரைச் சொல்லவில்லை. அவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவருக்கு இப்படி 1,200 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை போட்டுத் தரப்பட்டிருக்கிறது. அதுவும் வேலை தேடித்தரும் நிறுவனத்தின் மூலமாக அல்ல.

அதேபோல், ராமதாஸ் என்ற ஒருவருக்கு 1,000 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை தரப்பட்டிருக்கிறது.

இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், அப்போது நாங்கள் செய்தாலும்கூட, இப்போது ஆளும் கட்சியிலே உள்ள நண்பர்கள் இப்படி இதை எடுத்துச் சொல்லி வருகிறார்கள் என்பதற்காக. இப்படி தலைவர் அவர்களுக்குக்கூட தெரியாமல் சில காரியங்கள் நடந்திருக்கக் கூடும். இப்படி குறையாக எடுத்துச் சொன்னவர்கள், அதையே பின்பற்றி, வேறு எதிலும் எங்களைப் பின்பற்றாவிட்டாலும்கூட, இப்படி தவறு வருவதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

கடைசியாக இன்னும் ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பின்னரும், புதிய அரசான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியை ஆரம்பிக்கின்ற நேரத்திலும் நாட்டு மக்கள் நம்பினார்கள். இந்த

நாட்டில் நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மதுவிலக்குக் கொள்கையை தீவிரப்படுத்துவார்கள், அமுல்படுத்துவார்கள் என்று நம்பினார்கள்.

இந்த மன்றத்தின் தலைவராகிய உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியிலே உள்ள நண்பர்களை நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். உங்கள் நெஞ்சிலே கைவைத்துப் பார்த்தால், எந்த அளவுக்கு இன்றையத் தினம் இந்த மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது தெரியும். எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். உள்ளபடியே அவர் சொல்கின்றபடி, இன்றைக்கு அந்த சாராய சாம்ராஜ்யம் தான் விரிவாக, மிகவும் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு இன்றைய தினம் நாட்டிலே சாராயம் ஆறாக, வெள்ளமாக, இப்போது புயல் அடித்து வெள்ளம் ஏற்பட்டதே, அதைவிட மிக அதிகமாக தமிழ் நாட்டில் நடைபெறுகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருக்கின்றது என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் ஆளும் கட்சியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இது சம்பந்தமாக, ஆளுங்கட்சி உறுப்பினர் என்பதை மறந்து விடவில்லை, சொல்லி எங்கள் தலைவர் கையாலே குட்டுப்பட்டவன். எனவே, அந்த வகையிலே எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் இதை உள்ளபடியே சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாங்கள் 45, 47 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொள்வதில் பயனில்லை. இதற்கு வயது தேவையில்லை. நேரம் காலம்கூட தேவையில்லை. ஆனால், இது இன்றைக்கு நாட்டிலே பரவலாக இருக்கிறது. அதுவும், சட்ட மன்றம் நடக்கக்கூடிய சென்னை நகரத்திலே பரவலாக, பெரிய வியாபாரமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு சுட்டிக் காட்டி, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* <u>திரு. அ. சுவாமிதாஸ்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்திலே கலந்து கொண்டு ஒருசில கருத்துக்

களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள், தங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து, ஆளும் கட்சி செய்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்ட அதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது வழக்கம்.

ஆனால் இதை எதிர்கட்சியினருக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பாக அடிக்கடி பயன்படுத்தினாலும் அதனாலே பலதீமைகள் விளைவதும் உண்டு. பாராளுமன்றத்திலே அடிக்கடி ஆறு மாதத்திற்கு ஒரு தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த காரணத்தாலே அதிகமானவர்கள் விவாதத்தில் விருவிருப்பாகக் கலந்து கொள்ளாத நிலை உருவானதைப் பாராளுமன்றக் குறிப்புகளைப் பார்த்தால் புலப்படும்.

இந்த புதிய அரசு பொறுப்பேற்று ஆறு மாத காலம்தான் ஆகிறது. இதை முன்மொழிந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற நாங்கள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கு வரவில்லை ; ஆனால் ஆளும் கட்சியினர் செய்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைப் பயன்படுத்துகிறேன் என்று சொன்னார்கள். அதே முறையில்தான் இந்தத் தீர்மானத்தைக் குறித்து நானும் அணுகலாம் என்று ஆசைப் படுகிறேன்.

இன்று மக்கள் ஆளும் கட்சியைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் ? அமைச்சர்களைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் ? குறிப்பாக முதலமைச்சரைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் ? இவை பற்றி எல்லாம் சுட்டிக்காட்டுவது ஆளும் கட்சி வரிசையில் இருப்பவர்களுக்கு பயனுடையதாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

முதலமைச்சரைப் பற்றிச் சொல்லும்போது அவர் எதிலும் தலையிடாமல் ஒதுங்கியிருப்பவராகக் காணப்படுகிறார். யாரும் அவரை எளிதாகப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இல்லை. சட்ட மன்றத்தில் இருப்பவர்கள் என் போன்றவர்கள் பல பிரச்சினைகளை முதல்வரின் கவனத்திற்குக்

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 ஜனவரி 4

கொண்டுவந்து பேசிடவேண்டும். ஆனால் அவரைப் பார்க்க முடிவதில்லை. அவர் அதிகமாக இந்த அலுவலகத்திற்கு வருவதாகத் தெரியவில்லை. முதலமைச்சரைப் பார்த்துப் பேசமுடியவில்லை என்று மக்கள் கவலைப்படுகிறார்கள். அதை அவர்கள் மாற்றிக் கொண்டு தன்னை எல்லோரும் பார்க்கக்கூடிய அளவில் தனது பணி முறையை மாற்றி அமைத்துக் கொள்வது நல்லது.

மத்தியில் ஜனதா ஆட்சி வந்த பிறகு பெரிய மாறுதலைப் பார்க்கிறோம். அங்குள்ள அமைச்சர்களை யாரும் எந்த நேரத்திலும் எப்போதும் சென்று பார்க்கலாம். பிரதம அமைச்சரைக்கூட சென்று பார்க்கக்கூடிய அளவுக்கு வேலை முறைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கூட அந்த அமைச்சர்கள் இல்லத்திற்குச் சென்றபோது அவை அமைச்சர் இல்லங்களாகக் காட்சி அளிக்கவில்லை. மிக எளிமையாக யாரும் எந்நேரத்திலும் பார்க்கக்கூடிய அளவுக்கு கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டிருக்கின்றன.

டில்லியில் இருக்கும் அமைச்சர்கள் வெளியிலே செல்லும்போது கார்களில் கொடியைக் கூடப் பறக்க விடுவதில்லை. சாதாரணமாக எளிமையாகக் காட்சி அளிக்கிற பெரிய மாறுதலை டில்லி ஜனதா அமைச்சர்கள் முன்மாதிரியாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்களும் தாங்கள் போகிற இடங்களுக்கு காரில் கொடியை போடாமல் பொது மக்களோடு நெருங்கிப் பழகுகின்ற அளவுக்கு அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அமைச்சரவைக்கு ஒரு கூட்டுப் பொறுப்புண்டு. கூட்டாகச் செயல்பட வேண்டும். ஆனால் அத்தகைய கூட்டுப் பொறுப்பு இல்லை என்பதை என்னுடைய குறுகிய கால அனுபவத்தில் பார்க்கிறேன். முதலமைச்சர் தவிர எஞ்சி இருக்கும் எந்த அமைச்சருக்கும் எந்த ஒரு முடிவையும் எடுக்க உரிமை இருக்கிறதா என்று பார்த்தால் இருப்பதாகத் தெரியவில்லை. பயந்தது போல் மற்ற அமைச்சர்கள் காணப்படுகிறார்கள். அமைச்சராக இருக்கிறோமா? அதிகாரம் நமக்குகு ஏதேனும் இருக்கிறதா என்பதிலேயே அவர்களுக்குச் சந்தேகம் இருப்பது போல் தோன்றுகிறது. ஆறு மாத காலம் அமைச்சராக இருக்கிறோம், நமக்கும் பொறுப்பு இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது, கீழே இருக்கும் அதிகாரிகள் பேரில்

1978 ஜனவரி 4] [திரு. அ. சுவாமிதாஸ்]

கட்டளைகளைப் பிறப்பித்து அதிகாரத்தைச் செலுத்தலாம் என்பதையெல்லாம் புரிந்தவர்களாக அவர்கள் காணப்படவில்லை.

இதை நான் சொல்லும்போது சும்மா சொல்லவில்லை. பல விஷயங்களில் அமைச்சர்களோடு நெருங்கிப் பார்த்த பிறகுதான் அவர்களது உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடிந்தது. எல்லோரும் முதலமைச்சரை எக்காரியத்திற்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரியத்திற்கும் "புரட்சித் தலைவர் முடிவு செய்வார்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தென்படுகிறதே தவிர, சுயமாக இஷ்டப்படி அமைச்சரவை செயல்படுவதாகத் தெரியவில்லை.

அதிலே ஏதாவது நடங்கல் இருந்தால் அதை மாற்றிக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்து பொறுப்புகளை நிர்வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு நான் அறிந்த வரையில் உள்ளத்தில் ஏதோ ஒரு பயம் இருக்கிறது. தவறாக அமைச்சர்கள் எங்காவது அதிகாரத்தைப் பயன்படுத்திவிடுவார்களோ என்ற பயம் இருப்பது போல் தோன்றுகிறது.

(முற்பகல் 11–40)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். முதலாவதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஜனதா மந்திரிகளைப் பொறுத்தவரையில் கொடிகளைக் கூட அவர்கள் கார்களிலே போடுவதில்லை, அது உண்மையிலே எளிமையாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அப்போதே குறுக்கிட்டுச் சொல்ல வேண்டுமென்று இருந்தேன். இதைப்போன்றுதான் முதலமைச்சராக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் செய்தபோது, அப்போது இந்த மன்றத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், தேசியக் கொடியைக் காரிலே போடாமல் போகிறார்கள் என்றும் அமைச்சர்கள் தேசியக் கொடியை காரில் போடாமல் போகிறார்கள் என்றும் சொன்னார்கள். அத்தகைய குறைபாடுகள் எதுவும் வராது என்று மாண்புமிகு உறுப்பினர் இப்போது உத்திரவாதம் தரமுடியாது.

இரண்டாவதாக, அமைச்சர்கள் ஏதோ பயந்துகொண்டு முடிவுகளை எடுக்கமாட்டேன் என்கிறார்கள், எதற்கெடுத்தாலும் முதலமைச்சர் அனுமதி வேண்டும், என்று சொல்கிறார்

கள். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்பது வள்ளுவர் வாக்கு. எனவே, அஞ்ச வேண்டிய காரியங்களுக்கு அஞ்சுவது ஒரு நல்ல அமைச்சருடைய இயல்பாகும். கூடுமான வரையில் அந்த அந்தத் துறையில் அமைச்சர்கள் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து முடிவுகளை மேற்கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று ஆறு மாத காலத்திற்குள்ளாக சுமார் 30 பேர்களை சிறைச்சாலைக்குள் தள்ளியிருக்கிறது. பல போராட்டங்கள் நடந்தன. போராட்டங்கள் ஏற்படுகிறபோது அமைச்சர்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டு அவைகளைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று எண்ணியிருந்தால் அவைகளைத் தடுத்து இருக்கலாம். இவ்வளவு நீண்ட காலத்திற்கு போராட்டங்களை நடித்துக் கொண்டு போகவேண்டிய அவசியம் இருந்து இருக்காது. அந்தந்த அமைச்சர்கள் தத்தம் இலாகாவிற்கு உட்பட்டு அந்தந்த துறைகளிலே நடைபெறுகின்ற போராட்டங்களின்போது தன்னிச்சையாகச் செயல்பட்டு முடிவெடுத்து பல போராட்டங்களை தடுத்து இருக்கவேண்டும்.

பல்லவன் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களின் போராட்டத்தின்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் தன்னிச்சையாக சுதந்திரமாகச் செயல்படவில்லை என்று எனக்குத் தெரிந்தது. அதைப்போல ஆசிரியர்களுடைய போராட்டம், உடனுக்குடன் அமைச்சர் சுயமாக மனம் போல் செயல்பட்டிருந்தால் தடுத்து இருக்கலாம். எதற்கும் முதலமைச்சர் தான் தீர்மானிக்கவேண்டும், என்று நினைப்பது சரியல்ல.

நெல்லையில் சித்த வைத்தியக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அந்தக் கல்லூரி மூடப்பட்டுக் கிடக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் தலையிட்டு அதைத் தடுத்திருக்கலாம். இப்போது பெற்றோர்கள் வந்து எங்களிடம் கதறி அழுகிறார்கள், நீங்கள் அமைச்சரிடம் சொல்லக்கூடாதா என்று. கல்லூரி மூடிக் கிடக்கிறதே. நாங்கள் என்ன செய்யமுடியும் முதல் அமைச்சரிடம் பொறுப்பு இருக்கிறது. வேறு ஒரு அமைச்சரை அனுப்பி நெல்லையிலே சித்த வைத்தியக் கல்லூரி மாணவர்களையும் ஆசிரியர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி அந்தக் கல்லூரியைத் திறந்துவைக்க முயற்சிக்கலாம். ஏன் செய்யக்கூடாது ? இவ்வாறாக பலவகையிலும் உடனுக்குடன் செய்யாமல், வேகமாகச் செயலாற்றாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

அதைப்போன்றுதான் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டங்களைப் பொறுத்தவரையில் தொடக்கத்திலேயே தடுத்திருக்கலாம். எண்ணியிருந்தால் தடுத்திருக்க முடியும். ஆனால் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள், நீங்கள் கொடி கட்டாமல் போனால் நாங்கள் தவறாக எண்ண மாட்டோம். நாங்கள் கொடி போடக்கூடாது என்று சொல்லவில்லை. அமைச்சர்கள் அப்படி இருந்தால் பார்ப்பதற்கு எளிமையாக இருக்கும் என்று சொன்னேன். பட்டணங்களில் அந்தக் கொடிகளைப் பார்த்துவிட்டு மற்ற கார்களை தடுத்து நிறுத்தக்கூடாது என்ற முறையிலேதான் டில்லியில் கூட அப்படி எளிமையாக இருக்கவேண்டுமென்ற முறையிலே இந்தமாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள். எளிமையாக இருக்க வேண்டுமென்பதற்காக அப்படி இருக்கிறார்கள். நீங்களும் அப்படி இருந்தால் வரவேற்கிறோம்.

அமைச்சர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

மேதகு ஆளுநர் பட்வாரி அவர்கள் இப்பொழுது தமிழ் நாட்டின் ஆளுநராக இருக்கிறார்கள். முன்பெல்லாம் ஆளுநரைச் சந்திக்க பலவித ப்ரோடோகால் இருக்கும். கவர்னரைப் பார்க்க வேண்டுமென்றால் யாரும் எளிதில் பார்க்க முடியாது. முன்னாலேயே நேரம் குறித்து, அந்த நேரத்தில் தான் போக வேண்டும். முன்னர் அப்படி இருந்தது. ஆனால் பட்வாரி அவர்கள் ஆளுநராக வந்த பிறகு எல்லோருக்கும் ஏழை எளியவர்களுக்கும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. ஏன் அந்த மாதிரி நிலையை முதலமைச்சரவர்கள் உருவாக்கக் கூடாது? நீங்களெல்லாம் முதலமைச்சரிடத்தில் சொல்லுங்கள். காலத்திற்கு ஏற்றவாறு நிலை மாற வேண்டும். முன்னால் இருந்த அரசுகளைப் பற்றியே மீண்டும் மீண்டும் சொல்லி அதே தவறுகளைச் செய்யாமல், ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுத்து மாறுதலைச் செய்ய வேண்டும்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஜனநாயகத்திலேயே அளவு கடந்த நல்ல நம்பிக்கை கொண்டவர். எந்த அரசையும் போராட்டத்தின் மூலம் அகற்றுகின்ற ஆசை, விருப்பம் அவருக்குக் கிடையாது. எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்கிறேன்.

1972-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே பிளவு ஏற்பட்டது. கட்சிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகியது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதற்குப் பிறகு பெரிய போராட்டங்கள் அவர்கள் சார்பில் நடத்தப்பட்டன. எங்களிடத்தில் கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து, காமராஜர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து போராட்டம் நடத்தி அதைக் கவிழ்க்கக்கூடாதா என்று பலர் கேட்டார்கள். கேரளத்தில் மன்னத் பத்மனாபன் தலைமையில் இயக்கம் நடந்து நம்பூதிரிபாத் மந்திரி சபையைக் கவிழ்த்ததைப் போல் இங்கே காமராஜர் செய்திருக்கலாமே என்று பலர் விரும்பினார்கள். அப்பொழுது காமராஜ் அவர்கள் ஐந்து வருட காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்வதற்கு பொதுமக்கள் வோட்டளித்திருக்கிறார்கள். ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கீழே இறக்குவதற்காக போராட்டத்தின் மூலமோ வன்முறையின் மூலமோ முயற்சிக்கக்கூடாது. அதற்கு முன்மாதிரியாக இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி "பர்சனாலிட்டி கல்ட்" காரணமாக உடைந்தது. ஜனநாயக அமைப்பில் இன்னும் நாம் பர்சனாலிட்டி கல்டிற்கு இடம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அழகாகச் சுட்டிக் காட்டினார்கள். அரசாங்கம் வழங்கிய டைரியில் ஐந்து இடங்களில் முதலமைச்சரின் படம் போடப்பட்டிருக்கின்றது. இது எதைக் காட்டுகிறது? இங்கேயும் பர்சனாலிட்டி கல்ட் இன்னும் இருப்பதைத்தான் காட்டுகிறது. அந்த 'பர்சனாலிட்டி கல்ட்', தனி நபர் வழிபாடு முறை, ஒழிக்கப்பட வேண்டும். அது ஒழியவில்லை என்றால் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட விளைவுதான் ஏற்படும். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையிலே 1969 ஆம் ஆண்டிலே ஒரு முறை உடைத்தார்கள். இப்பொழுது 1978 ஆம் ஆண்டிலேயும் உடைத்தார்கள். அது ஒரு பெரிய கட்சி. எதிர்க்கட்சியாக இருந்து நல்ல முறையிலே செயலாற்ற வேண்டிய கட்சி இன்றைக்கு உடைந்திருக்கிற நிலையைப் பார்க்கிறோம். எனவே 'பர்சனாலிட்டி கல்ட்', தனி நபரைப் பூஜிக்கின்ற பழக்கம். தனி நபரை துதி பாடுகின்ற பழக்கம் மாற வேண்டும். இங்கேயுள்ள நம்முடைய ஆளுங்கட்சியிலேயும் அந்த நிலைமை இருக்கக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டம் 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு புறக்கணிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. அதைப் பற்றிப் பல முறை இந்த மன்றத்திலே சுட்டிக் காட்டியிருக்கிறோம். நெல்லை எங்களுக்கு எல்லை. குமரி எங்களுக்கு தொல்லை என்று மேடையிலே பேசும் பொழுது தி.மு.க.வினர் பேசுவார்கள். இந்த அரசாங்கத்திற்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1967-ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறோம். எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்கிறேன். நீர்ப்பாசன இலாக்காவிலே எட்டு இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்குகிறார்கள். நீர்ப்பாசன இலாக்காவிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத் தட்ட 225 மைல் நீளமுள்ள கால்வாய்கள் இருக்கின்றன. அது சிறிய மாவட்டமாக இருந்தாலும் சிறு சிறு கால்வாய்களையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 225 மைல் நீளமுள்ள கால்வாய்கள் இருக்கின்றன. அந்தக் கால்வாய்களைச் செப்பனிடுவதற்காக இலாகாவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எட்டு இலட்சம் ரூபாய். அந்த எட்டு இலட்சத்தில் ஆறு இலட்சம் ரூபாய் சிப்பந்திகளின் சம்பளத்திற்காகப் போகிறது. எஞ்சிய இரண்டு இலட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு கால்வாயைச் செப்பனிட வேண்டும். நாங்கள் எதிர்க் கட்சிக்காரராக இருக்கின்ற காரணத்தால் எங்கள் கோரிக்கைகளை புறக்கணித்து விடக்கூடாது. ஆளுங் கட்சியாக இருந்து யார் வேண்டுமானாலும் ஆண்டு விட்டுப் போகட்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைச்சர்கள் எங்களுக்கும் அமைச்சர்கள் தான். எங்களுடைய பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. எங்கள் மாவட்டத்தையும் கண் திறந்து பார்க்க வேண்டும். இந்த அமைச்சரவை வந்து 6 மாத காலம் ஆகிறது. ஆனால் இந்தக் கால்வாய்களைச் செப்பனிடும் பணியில் இந்த இலாக்காவினர் ஒழுங்காகச் செயல்பட்டதாகத் தெரியவில்லை.

நான் ஒரு கேள்வி கேட்கிறேன் என்றால் அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அமைச்சர் அந்தப் பதிலை அவரே நேரடியாகச் சென்று பார்த்த பிறகு அந்தப் பதிலைச் சொல்கிறார் என்று சொல்ல முடியாது. கேள்விகள் போடப்படும் பொழுது இங்கிருந்து கீழே இலாக்காவினருக்குப் போகிறது. பிறகு அங்கிருந்து பதில் வருகிறது. "கால்வாய்கள் நல்ல முறையில் இருக்கின்றன, அவைகள் செப்பனிடப்பட வேண்டிய நிலைமையில் இல்லை" என்று கீழே உள்ள அதிகாரிகள் அவர்கள் எழுதி அனுப்புவர். அதை சட்ட மன்றத்திலே அமைச்சர் படிக்கிறார்.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 ஜனவரி 4

நான் சொல்கிறேன். நீங்கள் விசாரணை வையுங்கள் அமைச்சரே எல்லா இடத்தையும் சென்று பார்க்க முடியாது நம்பகமான ஒருவரைப் போட்டு விசாரியுங்கள். ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்ட அத்தனை கால்வாய்களும் இப்பொழுது பழுதுபட்டு தண்ணீர் பாழாகப் போய்க் கொண்டிருக்கிறது. எத்தனை முறை சட்ட மன்றத்தில் கேட்டாலும் பதில் சொல்லும் பொழுது 'எல்லாம் ஒழுங்காக இருக்கிறது' என்று சொல்லப்படுகிறது. இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் கால்வாய் சீரமைப்புக்காகச் செலவழிக்கிறீர்கள். [முற்பகல் 11.50]

220 மைல் நீளமுள்ள கால்வாய்க்கு இந்த அரசு செலவழிக்கிற பணம் ரூ. 2 இலட்சம். வெறும் ரூ. 2 இலட்சம். எப்படி கால்வாய் சரியாக இருக்க முடியும்? சுட்டிக் காட்டினால் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது என்று பதில் வருகிறது. இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

டிரான்ஸ்போர்ட் அமைச்சரவர்களுக்கு ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். கட்டபொம்மன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே போராட்டத்திலே ஈடு பட்டு ஜெயிலுக்குப் போனவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை. அதன் நிர்வாக இயக்குநர், இன்னும் எமர்ஜன்சி சமயத்திலே இருந்ததைப்போல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். தான்தான் சர்வாதிகாரி என்பது போல் நடந்து கொள்கிறார். ஜனநாயகம் இருக்கிறது என்ற உணர்வே அவருக்கு கிடையாது. ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அவரைப் போய்ப் பார்ப்பதற்கு அனுமதி கூடக் கொடுக்கவில்லை. அவரை வெளியே போகச் சொல்லியிருக்கிறார். அந்த அளவுக்கு ஒரு திமிர் பிடித்த சர்வாதிகாரி அங்கே இருந்து கொண்டிருக்கிறார்.

எத்தனை மனுக்கள், விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? நானே கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறேன். ஒரு பதிலும் கிடையாது. வருகிற பதிலும், அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று வருகிறது. எத்தனை வருஷம் கவனத்தில், பரிசீலனையில் இருக்கும்? நான் சட்ட மன்றத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். வேண்டுமானால், நீங்கள் விசாரணை செய்யுங்கள். மனுவிலே கொடுத்திருப்பது சரியா என்று விசாரணை செய்யுங்கள். நாங்கள் வேண்டுமென்றே கொடுத்திருக்கிறோமா, கற்பனை செய்து கொடுத்திருக்கிறோமா, உண்மையா என்று விசாரணை செய்யுங்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால், என் சொந்தக் காரியத்திற்காக இதைச் சொல்லவில்லை.

1978 ஜனவரி 4] [திரு.அ. சுவாமிதாஸ்]

ஐம்பது பைசா டிக்கட் கொடுக்கவில்லையென்றால், நடத்துனர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். டிக்கட் கொடுக்காதது தப்பு, அதற்குவேண்டிய தண்டனை கொடுக்க வேண்டும். 15 வருஷம் சர்வீஸ் இருக்கிறது ஒருவரை திடீரென வீட்டுக்குப் போகச் சொன்னால், என்ன செய்வது? தண்டனையாக ஒரு இன்கிரிமென்ட்டை கட் பண்ணுங்கள் அல்லது ரூ. 50 அபராதம் போடுங்கள், தப்புக்கேற்ற தண்டனை கொடுக்கவேண்டும். கேட்டால், கம்பெனி சட்டம் அப்படியிருக்கிறதென்பார்கள். ஏனென்றால், அது கார்ப்பரேஷன் ஆயிற்றே. தயவுசெய்து, அந்தக் கார்ப்பரேஷனை எடுத்துவிடுங்கள். அரசாங்கமே அதை வைத்துக்கொள்ளட்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தனியார் துறையை நாம் ஊக்குவிக்கக்கூடாது என்பது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை. இந்த அரசாங்கத்தின் கொள்கையும் அதுதான் என்று நினைக்கிறேன். நல்ல பஸ் பாடி கட்டக் கூடிய ஒர்க்ஷாப் கன்னியாகுமரியில் இருக்கிறது, சென்னையில் குரோம்பேட்டையில் இருக்கிறது. ஆனால், கட்டபொம்மனில், பஸ் பாடி கட்ட, டி. வி. எஸ் ஸுக்கு அனுப்பப்படுகிறது. ஏன் அப்படிச் செய்யவேண்டும்? வேலைசெய்ய நம்மிடம் திறமையான ஆள் இல்லையா? பணம் இல்லையா? ஏன், இதை டி.வி. எஸ்ஸில் செய்யவேண்டும்? அவ்வளவு பஸ்ஸும் டி.வி. எஸ்ஸிலே பாடி கட்டித்தானே வருகின்றன. அதன் மர்மம் என்ன? விசாரிக்க வேண்டாமா? இப்படியே நடந்து கொண்டிருந்தால், இதனுடைய முடிவு என்ன? எதற்கும் போராட வேண்டும் ; போராடித்தான் தீர வேண்டுமென்ற நிலையை உருவாக்குவோமானால் அது நல்லதல்ல.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கட்டபொம்மன் எம்.டி., சீனிவாசன் அவர்களைப் பற்றி விசாரணை நடந்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன் விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

இன்றைன்று, புதிய அமைச்சரவை பதவிக்கு வந்து, கவர்னர் பெருமான் அறிக்கையிலே 16,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அப்படி

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 ஜனவரி 4

திறக்கப்படும் என்று நாங்கள் மிக ஆசையோடு எதிர்பார்த்தோம். ஏனென்றால், 16,000 நியாய விலைக் கடைகள் என்றால், 16,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று எண்ணினோம். இன்றையதினம் எவ்வளவு பேருக்கு வேலையில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் எப்படியிருக்கிறது? இப்பொழுதும் உண்ணாவிரதம் கன்னியாகுமரி கலெக்டர் அலுவலகம் முன்னால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடையாது. வேறு வேலைக்கும் போகமுடியாது. அரிசிக் கடைகளைத் திறந்தாலாவது வேலை கிடைக்கும்.

கன்னியாகுமரியில் அரிசி வியாபாரம் செய்யப் புதிதாக லைசன்ஸ் கொடுக்கிறார்கள். கலெக்டர் சொன்னார். போஸ்ட் கிராஜுவேட்டுகளுக்கு, பெரிய பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதில் முன்னுரிமை என்று எம்.ஏ., எம்.ஏ., பி.எல். படித்தவர்கள் எல்லாம் மனு போட்டிருக்கிறார்கள். அவர்கள் அரிசி வியாபாரம் செய்ய முடியுமா செய்ய முடியாதா என்பதல்ல பிரச்னை, அந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, நியாய விலைக் கடைகளைத் திறந்தால், 16,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்தோம். ஆனால், அப்படி திறக்கவில்லை. அது ஒரு பெரிய குறை. நீங்கள் அறிக்கை வெளியிடும் போதே பார்த்து செய்திருக்கவேண்டும். அந்த மாதிரி அறிக்கையை விட்டால், அது ஏமாற்றத்தைக் காட்டுகிறது.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : 16,000 கடைகள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று அரசாங்கத்தின் சார்பிலே அறிவித்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்திலே இருக்கிறார்கள். நீங்கள் கவர்னர் உரையைப் படிப்பீர்களானால் தெரியும். தமிழகத்திலே ஏறத்தாழ 16,000 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 16,000 கிராமங்களிலே, இப்பொழுதுள்ள நிலையிலே கடைகள் இல்லையென்ற நிலை இப்பொழுது இல்லை. அநேகமாக, ஏறத்தாழ 8,000 கிராமங்களில், கூட்டுறவுத் துறை மூலமாகவும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் இப்பொழுது நியாயமான விலையில் உணவுப் பண்டங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் சார்பில் கவர்னருடைய அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம், நியாயமான விலையில், உணவுப் பண்டங்கள், அத்தியாவசியமான பண்டங்கள்,

1978 ஜனவரி 4] [திரு. க. உரொ. எட்மண்ட்]

கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கும் கிடைக்கிற வகையில், இப்படி கடைகள் இல்லாத மற்ற கிராமங்களிலே இந்தக் கடைகளை ஆரம்பிக்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்ற கருத்தினைத்தான் ஆளுநர் உரையிலே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த அறிக்கையிலே விவாதம் நடந்த போதுகூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒவ்வொரு கிராமத்திலும் கடைகள் ஆரம்பிப்பது என்பதை நீங்கள் யோசித்துச் செய்யவேண்டும். அதிலே இழப்புக் கூட வரலாம். அதனாலே, சந்தேகம்கூட வருகிறது என்று தெரிவித்த காரணத்தாலே, எதிர்க்கட்சித் தலைவர் சட்ட மன்றத்திலே கூறிய கருத்துக்கு மதிப்பு கொடுக்கவேண்டும் மரியாதை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

உதாரணமாக ஒரு கருத்தைச் சொன்னார். பி.ஏ. படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னார். ஒரு பி.ஏ. பட்டதாரிக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றால், குறைந்த பட்சம் 250 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்தில் இருக்கிற கடையில் ஒரு நாளைக்கு 300 அல்லது 500 ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும். அப்படி என்றால் ஒரு மாதத்திற்கு 15,000 ரூபாய் வியாபாரம் நடக்கும். அப்படி 15 ஆயிரம் ரூபாய் வியாபாரம் நடக்கும் ஒரு கிராமத்தில் 250 ரூபாயில் ஒரு பில் கிளார்க்கு, 150 ரூபாயில் ஒரு பேக்கர், சாமான்களை பொட்டலமாக கட்டித் தருபவர் என்றெல்லாம் நியமிப்பது பெரிய காரியம்.

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியமான பண்டங்களை கொடுக்கவேண்டுமென்று அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படாத நிறுவனமாக இருக்கவேண்டும் என்பதை சில மாதங்களாக ஆலோசனை செய்து, பரீட்சார்த்தமாக பார்ப்பதற்குத்தான் முதல் கட்டமாக நெல்லை மாவட்டத்தில் 442 கடைகளை ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன். உடனே திரு. சுவாமிதாஸ் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கேட்கலாம், நெல்லை மாவட்டத்தில் 442 கடைகள்தானா? என்று. நெல்லை மாவட்டத்தில் ஏறக்காழ ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. அதில் ஏற்கனவே பல கிராமங்களில் கடைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. அப்படி இல்லாத கிராமங்களிலே 442 கடைகளை ஆரம்பிக்கப் போகிறோம். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற கடைகளிலே, அத்தியாவசியப் பொருள்களான, புளி, துவரம்

பருப்பு, உளுத்தம்பருப்பு, போன்ற பண்டங்கள் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மார்ச்சுமாத இறுதிக்குள் தென்மாவட்டங்கள் முழுவதிலும் அவை ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவமைச்சர் அவர்கள், கவர்னர் உரையைச் சுட்டிக் காட்டினார்கள். நான் கொண்டு வரவில்லை. படித்த நினைவு இருக்கிறது. அவர்கள் எட்டாயிரம் கடைகள் என்றார்கள். இல்லை 9,000 என்று அந்தப் பக்கத்தில் இருக்கிறது. ஏற்கனவே 9,000 கடைகள் இருக்கின்றன. அவைகள் போக மிச்சம் 7,000 கடைகளை வைக்கப் போகிறோம் என்று அந்த உரையிலே இருக்கிறது. ஆனால் அந்த 9,000 கடைகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டு 16,000 நியாய விலைக் கடைகள் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் அமைக்கப்படும் என்று புதிதாக அமைப்பதைப்போல சொல்லிவிட்டு, அடுத்த வரியிலேதான் 9,000 நியாய விலைக் கடைகள் ஏற்கனவே சொசைட்டிகளின் மூலமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா ரெவின்யூ கிராமத்திலும் இல்லை. சென்னை மாநகரம்கூட பல ரெவின்யூ கிராமங்களாக பிரிக்கப்பட்டு, இங்கே 400, 500 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு கடை என்பது கணக்கிலேதான் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டு அதனால்தான் கால தாமதம் செய்கிறோம் என்று தப்பித்துக் கொள்ள உணவு அமைச்சர் சொல்வது நல்லதாகாது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன யோசனையில் இதற்கு எவ்வளவு செலவாகும் அதற்கெல்லாம் வழிவகுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொன்னாரே தவிர வேண்டாம் என்ற கருத்திலே சொல்லவில்லை.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, விலைவாசி ஏறாமல் தடுப்பதற்கு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நியாய விலைக் கடைகளை திறப்பதைத் தவிர வேறு வழியில்லை.

[நண்பகல் 12.00]

பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கான தேர்தல் புதிய அமைச்சரவை வந்ததால் நிச்சயமாக ஜனநாயகம் திரும்பவும் மலரும் வகையில் விரைவில் நடத்தப்படும் என்று நினைத்தோம். ஆனால் நாள் கடந்து கொண்டே போகிறது.

முதலில் 6 மாதம் என்றார்கள். இப்போது மீண்டும் 3 மாதம் ஒத்திவைத்து இருக்கிறார்கள். 3 மாதத்திற்குள் தேர்தல் வந்தால் நல்லது. ஆகவே, அப்படி வாக்குறுதிகளை கொடுக்கும்போதே அதில் இருக்கும் சிக்கல்கள், இடையூறுகள் குறித்தும் யோசித்துப் பார்த்து வாக்குறுதி கொடுக்க வேண்டும். வாக்குறுதி கொடுத்து விட்டால் அதனை உடனடியாக நிறைவேற்றிவிட வேண்டும். அந்த வாக்குறுதியில் இருந்து தவறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய வங்கிகளிலும் இப்போது தனி அதிகாரிகள்தான் இயங்கி வருகிறார்கள். அங்கேயும் ஜனநாயகம் மலரும் வகையில், தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டு, நல்ல முறையில் இந்த அமைச்சரவை செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். யார் ஆளுகிறார்கள் என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. யாராவது ஆளட்டும். நன்றாக ஆளட்டும். நல்லாட்சி செய்யட்டும். அப்படிப்பட்ட நல்லாட்சி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நடைபெற நாங்கள் சொன்ன கருத்துக்களை மனதில்வைத்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புகழ்ச்சியைக் கண்டு ஏமாறக் கூடாது. 4 நாள் புகழ்வார்கள். பிறகு தூற்றுவார்கள். ஆகவே, புகழ்ச்சி செய்பவர்களிடத்தில் முதலமைச்சர் கவனமாக இருந்து, வெறும் வாயளவில் புகழ்பவர்களைவிட, செயல் வீரர்களை அடையாளங்கண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்து இருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதிகளை இந்த அரசு மறந்து விட்டது என்ற குற்றச்சாட்டினை இங்கே

சுமத்தினார்கள். ஆனால் அந்தக் குற்றச் சாட்டை சுமத்துவதற்கு முன்பாக புரட்சித் தலைவர் தலைமையில் இந்த அரசு அமைந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருக்கின்ற, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த தமிழகத்திற்கு விடுத்த செய்தியிலே ஒன்றைச் சொன்னார்கள். இந்த புதிய அரசு அமைந்த 6 மாத காலத்திற்கு நானோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகமோ இந்த அரசுக்கு எந்த விதமான தொந்தரவும் கொடுக்க மாட்டோம், எதையும் விமர்சிக்கமாட்டோம் அதற்குப் பிறகு அதனுடைய நடைமுறையை ஆராய்ந்து பின்னாலே எங்களுடைய செயல் திட்டங்களை வகுப்போம் என்று சொன்னார்கள்.

ஆனால், அவர்கள் 6 மாத காலம் பொறுத்தார்களா ? இன்றைக்கு நாம் எல்லோரும் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 7 வருட கால ஆட்சியில், அவர்களுடைய ஆட்சி காலத்தில் செய்யாத காரியங்களை 7 வார காலத்திற்குள்ளாக இந்த ஆட்சி செய்துவிட வேண்டுமென்று அவர்கள் எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் இன்றைக்கும் கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

இந்த ஆட்சி அமைந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக விவசாயிகள் போராட்டம், நெசவாளர்கள் போராட்டம், பின்பு பஸ் தொழிலாளர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், இப்படி தமிழகத்தில் விடிந்தால் ஒரு போராட்டத்தை அறிவித்துக் கொண்டு இருப்பது வேடிக்கையாக இருக்கிறது என்பதை தமிழகத்தில் மட்டுமல்ல, அனைத்திந்தியாவிலும், ஆசியத் துணைக் கண்டத்திலும் புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் இன்னொன்றையும் இந்த மாமன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் மிசாவை எதிர்ப்பவர்கள், அவசர நிலையை எதிர்க்கின்ற ஒரே கட்சியாக நாங்கள் இருந்து செயல்படுகிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு இந்திரா காந்தி அவர்கள் ஜூன் 26, 1975-ம் ஆண்டில் அவசர நிலைப் பிரகடனப்படுத்திய நேரத்தில் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் 20 அம்சத் திட்டத்தையும், அவசர கால நிலைமையையும் அனுமதிக்க முடியாது என்று அவர்கள் தெளிவாக அறிவித்து இருப்பார்களானால் உண்மையிலேயே நாம் அவர்களைப் பாராட்ட முடியும். அதை விட்டுவிட்டு, அவர்களுக்கு மேலே ஒரு படி போய், 20 அம்சத் திட்டத்தை நாங்கள்

ஏற்கனவே அமல் படுத்திவிட்டோம், அதைவிட மிக அழகான திட்டமான, இந்திரா காந்தியின் புதல்வரான சஞ்சய் காந்தி சொல்லிய 5 அம்சத் திட்டத்தை வரவேற்கிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால், எங்களுடைய ஒப்பற்ற தலைவர் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அவசர கால நிலை இருந்த நேரத்திலேயே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே. அன்றைய தினம் சஞ்சய் காந்தியின் கருத்தை விமர்சனம் செய்ய முடியாத சூழ்நிலை இருந்த நேரத்திலேயே கூட, நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொல்லியது போல், சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டம் நல்லதல்ல, அதை அம்மையாரின் திட்டங்களோடு சேர்த்து அறிவித்தால் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்களா என்று துணிச்சலோடு ஒரு கருத்தை வெளியிட்டவர்கள், இந்திய துணைக்கண்டத்திலேயே புரட்சித் தலைவர் ஒருவர் தான் என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதே போல் இன்னொன்றையும் சொன்னார்கள். கறுப்புக் கொடி போராட்டத்தில் அவர்கள் திட்டமிட்டு எங்களுடைய கட்சியை இந்திரா காந்தி அம்மையாருடைய ஆலோசனையுடன் அழிக்க முற்பட்டார்கள் என்று. ஆனால், இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்கு இதற்கு முன்பு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இப்படிப்பட்ட கறுப்புக் கொடி சம்பவங்களை அவர்கள் எப்படி அனுமதித்தார்கள். எதிர்க் கட்சிகள் கறுப்புக் கொடி சம்பவங்களைக் கண்ட நேரத்தில் இவர்கள் எப்படி எல்லாம் அடக்குமுறையை ஏவினார்கள் என்று விளக்கம் சொல்லித் தெரிய வேண்டிய நிலையில் இல்லை.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் நம்முடைய தமிழகத்திற்கு அவசரநிலை இருந்த காலத்திலே வருகை தந்த நேரத்தில் இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள் ஒரு கறுப்பு கொடி போராட்டத்தை அமைதியான முறையில் நடத்தினார்கள். அன்றைக்கு திராவிட முன்னேற்ற கழக ஆட்சி நடந்து கொண்டிருந்த நேரத்தில் அந்தக் கறுப்புக் கொடி காட்டிய இந்திய தேசிய காங்கிரஸ் தொண்டர்கள் எவ்வளவு படுபயங்கரமாக சென்னை வீதிகளில் தாக்கப்பட்டார்கள் என்பதை நாடு மறக்கவில்லை. அதைக் கண்டிக்கிற வகையில் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு எங்களுடைய பொதுச் செயலாளராக

[திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்] [1978 ஜனவரி 4

இருந்து வேண்டுகோள் விடுத்த நேரத்தில், இப்படிப்பட்ட வன்முறையை எதிர்த்து, இந்த ஜனநாயக அடக்குமுறையை எதிர்த்த காலத்திலே, அன்றைய தினம் நம்முடைய முதலமைச்சராக இருந்த நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செல்கிற இடங்களில் எல்லாம் கறுப்புக் கொடியை அண்ணாவின் அறவழியில் அமைதியான முறையில் காட்ட வேண்டுமென்று வேண்டுகோளை விடுத்தார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைய தினம் செங்கற்பட்டுக்குச் சென்ற நேரத்தில் எப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடைபெற்றன? ஒரே நாளில், அந்த மாவட்டத்திலே அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் சுமார் 5,000 பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள். இன்றைய தினம் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த எஸ். எம். துரைராஜ் அவர்கள் மிகப் படு பயங்கரமாகத் தாக்கப்பட்டார்கள்.

இன்றைய நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எங்களுக்கு சிறையில் மணியார்டர் அனுப்புவதற்குக் கூட இந்த அரசு ஏன் அனுமதி அளிக்கவில்லை என்று. ஆனால் அவருடைய ஆட்சிக் காலத்திலே ஒரு லட்சம் மக்களுடைய வாக்குகளைப் பெற்று சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் முதலமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலே நடு வீதியிலே அவருடைய கட்சித் தொண்டர்களால் படு பயங்கரமாக தாக்கப்பட்டிருக்கிறார். அதற்குப் பின்னால் அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார். அந்த சட்ட மன்ற உறுப்பினருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட அவரைப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கவில்லை. பிறகு அந்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்தது. அதன் முடிவாக அன்றைய தினம், செங்கற்பட்டு மாவட்ட நீதிபதி அந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு. இதற்கு அடிப்படை ஆதாரம் இல்லை அந்தக் குற்றப்பத்திரிகையை எப்படி தாக்கல் செய்தார்கள் என்பது புரியவில்லை. இந்த வழக்கு காவல் துறைக்கே ஒரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டது என்று அந்த நீதிபதி அதிலே கோடிட்டுக் காட்டினார்கள். அதற்கு அன்றைய தினம் காவல் துறை பொறுப்பை தன்னுடைய கையிலே வைத்திருந்த இன்னாள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது இன்றைய தினம் வரை கேள்விக் குறியாகவே இருந்துக் கொண்டிருக்கிறது.

1978 ஜனவரி 4] [திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்]

அதே போல் இன்னொன்றையும் இங்கே பெரியதாகச் சொன்னார்கள். விளம்பரத்திற்கு ஒரு டயரியிலே 5 படங்களை போடலாமா என்று. ஆனால் இன்றைய தமிழகத்திலே, இன்றைக்கு மட்டுமல்ல, புரட்சித் தலைவர் அவர்களுடைய படத்தைப் பார்ப்பதற்கு போட்டி போட்டுக்கொண்டு உயிர் இழந்த வரலாறு தான் தமிழகத்தின் வரலாற்றில் இருக்கிறதே தவிர, தங்களுடைய படத்தைப் போட்டுத்தான் இன்றைக்குத் தமிழகத்தில் விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் அவர் இல்லை என்பதும், யார் யார் தன்னுடைய படத்தை போடாமல் ஒரு விழாக்கூட இருக்கக் கூடாது என்று தன்னுடைய நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்தார்கள் என்பதும் நன்றாகத் தெரியும்.

அதேபோல் இன்றையதினம் இருக்கிற அரசிலே தான் எந்த உயிரோடு இருக்கிற தலைவருடைய பெயரையும் எந்தக் கட்டிடங்களுக்கும் எந்த மண்டபங்களுக்கும் வைக்கக் கூடாது என்று ஒரு உத்திரவைப் போட்டு இருக்கிறார்கள். ஒரு மாத காலத்திற்கு முன்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் குடந்தை ராதா அவர்கள் கும்பகோணத்திலே ஒரு கட்டடத்திற்கு முதலமைச்சரின் பெயரை வைக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்த நேரத்திலே அவர் மிகக் கண்டிப்பாக அதை மறுத்து, இப்படிப்பட்ட செயல்கள் அறவே இருக்கக் கூடாது என்று சொல்லி கலைவாணர் பெயரை அதற்குச் சூட்ட வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தார்கள்.........

[பிற்பகல் 12-10]

அந்த அளவுக்கு இன்றைக்கு விளம்பரமே இல்லாத ஒரு அரசாக இன்றைய தினம் நடப்பது மட்டுமல்லாமல்.....

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் விளம்பரப் பிரியர் அல்ல அவருடைய பெயரைச் சூட்டுவதை விரும்பாதவர் என்று சொன்னார். கும்பகோணம் நிகழ்ச்சியை சொன்னார். அதே கும்பகோணத்தில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அவர் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. என்பதும், அவைத்தலைவர் அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்திருக்கிறார் என்பதும் உண்மையா, தவறா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன ஒழுங்குப் பிரச்னை ?

திரு. ஏ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்தான். கும்பகோணம் நிகழ்ச்சி பற்றி அவர் குறிப்பிடுகிறார். இந்த கும்பகோணம் நிகழ்ச்சியும் தெரியுமா ? தெரியாது என்றால் தெரியாது என்று சொல்லிவிடலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, கும்பகோணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதால் நான் விளக்கம் அளிக்க வேண்டியுள்ளது. அந்தப் பள்ளியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படித்தார்கள் என்பதாலே, அந்த நிகழ்ச்சியிலே அன்றைய தினம் கலந்துகொண்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள்தான், அந்தப் பள்ளிக்கு முதலமைச்சர் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னாரே தவிர, ஏதோ அரசாங்கம் ஒரு அறிவிப்பை போட்ட மாதிரி நண்பர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனுமதி தர மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்தின் மூலமாவது அந்த அனுமதியை அளிக்க நண்பர் ரகுமான்கான் அவர்கள் சிபாரிசு செய்து பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : இதில் யார் யார் எவ்வளவு விளம்பரப் படுத்தினார்கள் என்பதைவிட, அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் நெல்லையில் கூட்டுறவு அச்சகத்தின் தலைவராக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர். இன்றைக்கு ஒரு டைரியில் முதலமைச்சர் கலந்து கொள்கிற அரசு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டதைக் கண்டிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அன்றைக்கு அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நெல்லை கூட்டுறவு அச்சகத்தின் சார்பில் ஒரு காலண்டர் போட்டார்கள். அதில் எங்களுக்குள்ள வருத்தம் எல்லாம் என்னவென்றால், பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தை ஒரு பக்கத்தில் போட்டு, இன்னொரு பக்கத்தில் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய படத்தையும் போட்டு, மத்தியில் கூட்டுறவு

அச்சகத்தின் தலைவராக இருந்தவர் படத்தையும் போட்டு, கீழே ஒரு மதுக்கிண்ணம், கிளாசில் மது இருப்பது போலவும், அதில் ஒரு பெண் துணியில்லாமல் சுழன்று ஆடிக் கொண்டிருப்பது போலவும் காலண்டர் போட்டிருந்தார்கள். அன்றைய தினம் இருந்த அரசு, கூட்டுறவு அச்சகத்தின் இப்படிப் பட்ட விளம்பரங்களை எல்லாம் அனுமதித்தார்கள். அப்படி அனுமதித்தவர்கள் இன்றைய தினம் விளம்பரத்தைப் பற்றிக் கண்டித்துப் பேசுகிறார்கள் என்பதைப் பார்க்கின்ற நேரத்தில் உள்ளபடியே நாமெல்லாம் வேதனைப்படுகிறோம்.

அதைப்போலவே, இங்கே வெள்ள நிவாரணப் பணிகளைப் பற்றிச் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இந்த அரசு வெள்ள நிவாரணப் பணிகளை சீரிய முறையில் செய்துள்ளது என்பதை வடநாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் எடுத்துக்காட்டி, இந்த அரசின் வெள்ள நிவாரணப் பணிகளை மற்ற மாநிலங்கள் முன் மாதிரியாகக் கொள்ளவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருப்பது, இந்த அரசு எவ்வளவு செம்மையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாடே உணர்ந்திருப்பதைத் தெரிவிப்பதாக அமைந்திருக்கிறது.

இந்த அளவில் இன்றைய தினம் இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பியிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்த்துப் பேசுவது மட்டுமல்லாமல், இந்தத் தமிழகத்தில் இருக்கின்ற 4½ கோடி தமிழ்ச் சமுதாயமும் இந்த அரசின்மீது தன்னுடைய முழு நம்பிக்கையை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையின் முன் முதல் எதிர் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருப்பதைப் பற்றி எங்கள் கட்சியின் நிலை என்ன என்பதை அரசும் அறியும். அவர்களும் அறிவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தமக்கே உரித்தான பாணியில், நல்ல தமிழில், சரளமான நடையில், தங்களுடைய கருத்தை வலியுறுத்தும் முறையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள்.

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1978 ஜனவரி 4

வாதத் திறமை என்று வரும்போது இங்கர்சாலின் வாதத் திறமை எனது நினைவுக்கு வருகிறது. ஒரு நாள், இங்கர்சாலுடைய சொந்த ஊரிலே ஒரு சர்ச் புயல், வெள்ளத்தால் இடிந்து விழுந்து விடுகிறது. சர்ச்சை மீண்டும் கட்ட வேண்டுமென்பதற்காக, அந்த ஊர் மக்கள், ஜனாதிபதியைக் காட்டிலும் அதிகமான வருமானம் பெறுகின்ற இங்கர்சாலிடம் சென்று முடிந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இங்கர்சால், அவர்களை ஏர்-கண்டிஷன்ட் அறையில் உட்கார வைத்து, சாப்பிடச் சொல்லிவிட்டு, மாலையில் அவர்களைச் சந்திக்கிறார். ஏன் வந்தீர்கள் என்று கேட்கிறார். உள்ளூர் பெரியவர்கள், என்னப்பா, எவ்வளவு பெரியவரானாலும், அப்படித்தான் அழைப்பது வழக்கம்—நம் ஊர் கோயில் இடிந்து விழுந்து விட்டது; அதைக் கட்டவேண்டும். பணம் வாங்க வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இங்கர்சால் சொல்கிறார். அவருக்கே உரித்தான வாதத் திறமையோடு அவர்களைக் கவர்ச்சிக்கிறார். ''கடவுள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' என்று கேட்கிறார். அவர்கள், ''என்னங்க, எங்களைப் பார்த்து...... இப்படிக் கேட்கிறீர்களே'' என்று சொல்கிறார்கள். இவர் சொல்கிறார், ''கோயில் விழுந்தது கடவுளின் செயல், கடவுளின் இஷ்டம்; அந்தக் கோயில் இருப்பதைக் கடவுளே விரும்பவில்லை; நீங்கள் ஏன் அந்தக் கடவுளின் விருப்பத்திற்கு எதிராகச் செய்கிறீர்கள்?'' இது எப்படி இருக்கிறது? ஆக வாதத் திறமையோடு நல்ல தமிழ்ச் சொற்கள் மூலமாக பொதுவான ஒரு கருத்தைச் சொல்லும்போது அதை நிதானத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலிலேயே இதை நினைவுபடுத்த இதைக் கூறினேன்.

இந்த ஆட்சி வந்த உடனேயே நாங்கள் பாராட்டிய, எல்லோரும் பாராட்டிய நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வரும். அதுதான், ஆளுநர் உரை இதுவரை இருந்தது போல ஆங்கிலத்தில் மட்டும் படிக்கப்படாமல், தமிழிலும் படிக்கப்பட்டது என்பது குறித்து பெருமைப்படுகிறோம், பாராட்டுகிறோம். இதைக் கூறும் போது, இன்னும் தமிழ் முழு அளவில் முறையாகக் கொண்டு வரப்படவில்லை என்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி தலைவர் என்ற முறையில் திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்குத் தெரியும்—அங்கு ஆங்கிலத்தில் பேசுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். தமிழில் பேசவேண்டுமென்று நான் வற்புறுத்துவேன். நான் சபைக்

1978 ஜனவரி 4] [திரு. கூத்தக்குடி ச. சண்முகம்]

குள்ளே நுழையும்போதே, ''கூத்தக்குடி சண்முகம் வந்துவிட்டார். தமிழில் பேசுங்கள்'' என்று சொல்வார். தமிழில் பேசக் கூடத் தெரியாத அதிகாரிகள் இன்னும் இருக்கிறார்கள். பெயர் குறிப்பிட நான் விரும்பவில்லை. இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு காரியமாற்றுவது என்பது சிரமமாக இருக்கிறது. ஒருவர் ஆங்கிலத்தில் பேச மற்றொருவர் தமிழில் பேச, இடையில் மொழி பெயர்ப்பாளர் இரண்டு பேச்சுக்களையும் மொழி பெயர்க்கும் நிலை இருக்கிறது. இன்று வரை இருந்தவர் இருந்துவிட்டுப் போகட்டும். இனிமேலாவது தமிழ் சரியாகப் பேசத் தெரியாத யாரையும் அதிகாரியாகப் பதவியில் போடக் கூடாது என்ற கொள்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று வரும்போது, விவகாரம், எங்கே ஆரம்பமானது என்பது அவர்களுக்கும் தெரியும், நமக்கும் தெரியும். சட்டசபை ஆரம்பமானவுடனேயே இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்தது. அது சம்பந்தமாக, ஒரு பொது வேலை நிறுத்தம் சென்னையில் உண்மையிலேயே, இலங்கைத் தமிழர்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டிக்க, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இலங்கைத் தமிழர்களுடைய உற்றார் உறவினர்கள் அதிகமாக வாழும் இராமநாதபுரம் உள்ளிட்டு, தமிழ்நாடு பூராவும் வேலை நிறுத்தம் வந்திருந்தால் ஆட்சேபனை கிடையாது, அதுதான் சரியான அணுகுமுறையாக இருக்கும். அப்படியில்லாமல் தன் கட்சிக்குச் செல்வாக்கு அதிகமாக இருக்கக் கூடிய இடத்தில் பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்னையில் மட்டும் செய்தபோதே விவகாரம் ஆரம்பமானது.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆரம்பம் எங்கே இருந்தது என்று பார்க்கும்போது இந்த அடிப்படையைப் பார்க்க வேண்டும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 6 மாதத்திற்கு முன்பு வந்திருந்தால் யோசிக்கலாம், இரண்டு மாதம் பின்பு வந்திருந்தாலும் யோசிக்கலாம், அடிப்படை இருக்குமோ என்று. நாளைக்கு சரியாக எண்ணி ஆறு மாதம் ஆகப் போகிறது என்று, நாளை எண்ணிக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதே, இதற்கு என்ன அடிப்படை இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1978 ஜனவரி 4

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு அம்சத்தை மட்டும் முதலில் சபையினுடைய சிந்தனைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொருளாதாரத்தைப் பற்றிய அணுகு முறையில் எங்களுக்கும் அவர்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் உண்டு. அது பற்றி கடைசியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு முன்பாக இந்த அரசைப் பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலுள்ள இந்த "அரசு ஊழலை ஒழிப்போம்" என்ற கோஷத்தைப் பிரதானமாக வைத்து அதிலே பெரும் கவனத்தைச் செலுத்தி வருகின்றார்கள். அது சரியாக எல்லாராலும் அமுல் நடத்தப்படுகிறதா என்பதைப் பின்னால் பரிசீலனை செய்ய வேண்டும். ஊழலற்ற அரசு அமைப்போம் என்ற வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு, பதவிக்கு வந்தவர்களிலே, பொதுப் பணித்துறை அமைச்சர் நீங்கலாக முதலமைச்சர் அவர்கள் உட்பட, எல்லாரும் பதவிக்குப் புதியவர்கள், எனவே, அவர்கள் தங்கள் அதிகாரங்களை எப்படிப் பயன் படுத்துவது, அதிகாரங்களை எப்படிப் பெறுவது என்பதைப் பற்றியெல்லாம் நன்கு அறிந்த மேதாவிலாசம் உள்ளவர்கள் என்று நாங்கள் சொல்லத் தயாராக இல்லை. சாதாரணமானவர்கள் தான். எனவே அதிகாரிகளிடத்தில் பல்வேறு விஷயங்களைத் தெரிந்து கொண்டு பணியாற்றவேண்டிய நிலையில் உள்ளவர்கள்தான்.

பதவி ஏற்றுக்கொண்ட ஆரம்ப காலத்தில் சில சில தடுமாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம். சில பிரச்சினைகளிலே காலதாமதங்கள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனாலும் ஒன்றைச் சொல்லித்தான் ஆகவேண்டும். நியாயமாக ஒன்றை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். என்ன? நான் எந்தவிதமான அசூயையாலும் உந்தப்பட்டு பேசவில்லை.

திருப்பத்தூரில் என்னை எதிர்த்துப்பேசிடும் வகையில், சுமார் 55 நிமிட நேரம் பேசினார் முதலமைச்சர் அவர்கள். அப்படியும் நான் அசூயையால் பேசவில்லை. உண்மை நிலையையே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். "சோ" அவர்களை ஆசிரியராகக் கொண்ட "துக்ளக்" பத்திரிக்கையில் வந்த ஒரு பகுதியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கேள்வி—பதில் என்ற முறையில், ஆசிரியர் சோ அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கின்றார். "இந்த ஆட்சி பற்றி உங்கள் கருத்து என்ன" என்பது கேள்வி. பதில்: "இந்த

1978 ஜனவரி 4] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

மந்திரிகள் ஆடம்பரம் இல்லாத மந்திரிகள், ஊழல் இல்லாத மந்திரிகள்" என்று சோ பதில் கொடுக்கின்றார். அந்த ஒரு அம்சத்தில் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்ற கருத்தை இந்தக் கட்டத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல இன்னும்கூட ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். சட்ட மன்றத்தில் பிரச்சினைகள் என்று வரும்போது, அகங்காரத்தோடு அவற்றை அணுகாமல் எதிர்க்கட்சிகள் கிளர்ச்சியை நடத்தும்போதும் சரி அல்லது கருத்துக்களைச் சொல்லும்போதும் சரி, முறையாக அடக்கத்தோடு நடந்துகொண்டார்களா என்று பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், உண்மையில் இந்த அரசு போராட்டம் என்றால் எப்படி அது அமைய வேண்டும் என்று எடுத்துக்காட்டுவதற்காகத்தானோ என்னவோ தெரியாது, போராட்டம் என்று ஒன்று வரும்போது, போராட்டம் நடந்தபிறகே பிரச்சினைகளை அணுகுவது என்பது நல்லதொரு பண்பாடு என்றே கருதுகிறேன். அது பல்லவன் போராட்டமாக இருந்தாலும் சரி, அல்லது எஞ்சினியர்கள்—டிப்ளமாவா. பி.ஈ. பட்டமா—என்ற போராட்டமாக இருந்தாலும் சரி, இறுதியில் முறையாக அணுகியிருக்கின்றார்கள்.

உங்களுக்கெல்லாம் நினைவிருக்கலாம் 1975-ம் ஆண்டு இப்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ள மதிப்பிற்குரிய நமது நண்பர் அப்போது முதலமைச்சராக இருந்தபோது, பி.இ. படித்த ஏறத்தாழ 160 எஞ்சினியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்கள் அன்றைக்குக் கோரிக்கை வைத்தார்கள், கேட்டார்கள், சாத்தியம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கைது செய்வோம் என்று அச்சுறுத்தினார்கள். இறுதி வரையில், சொல்லப்போனால், இன்று வரையில் அவர்கள் வேலைக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை.

இப்போது அதுபோன்றதொரு பிரச்சினைதான் வந்தது. மொட்டை அடித்துக்கொண்டு போராட்டம் நடத்தினார்கள். நாமும் அவர்களுக்காகத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை அவர்கள் ஏதோதோ சொல்லியதன் காரணமாக பிரச்சினையைத் தீர்க்க அரசு முன் வரவில்லையோ என்று கூட நாங்கள் எண்ணினோம். ஆனால், இறுதியில் அவர்களுடைய கோரிக்கை

களை, எதிர்க் கட்சிமுன் கொண்டு வந்த அவர்களுடைய கோரிக்கைகளை, நியாயத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளும் என்று அரசு அறிவித்தது மகிழ்ச்சிக்குறிய ஒன்று. கட்சி பாராமல் ஏற்றுக்கொள்ளும் பண்புடையவர்கள் என்பதற்கு மீண்டும் ஒரு உதாரணமாக இதைச் சொல்லுகிறேன்.

மற்றொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகிறேன். சட்ட மன்றத்தில் நடந்தது, உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த அணுகு முறையை அவர்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றே இதை மீண்டும் இங்கே சொல்லுகிறேன். ஐஸ் கிரீம் பேரிலே வரி விதிப்பதை எங்கள் மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் எதிர்த்துப் பேசும்போது, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்கூட, கம்யூனிஸ்டு கட்சியினர் கூடவா இந்த வரியை எதிர்க்கின்றார்கள் என்று கேட்டார்கள். அப்போது நான் சொன்னேன். கோவணத்தைக் கட்டிக் கொண்டு அரிசனச் சிறுவனும் ஐந்து பைசா கொடுத்து ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடுகிறானே என்றேன். பின்னர் நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பண்பாட்டிற்கு அவர்களைப் பாராட்டுகிறேன்.

இப்படிப்பட்டதொரு பண்பாட்டினை, எதிர்க் கட்சியினர் சொல்லுக்கு, கருத்துக்கு மதிப்பளிக்கும் இத்தகையதொரு பண்பாட்டினை இந்த ஆட்சி ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பது தமிழகத்தின் எதிர்காலத்துக்கு நல்லது என்று கருதுகிறேன். நிச்சயமாக இந்த அரசு தமிழக மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயலாற்றும் என்று உறுதியாக நம்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், அனைத்துக் கட்சியினர் கமிட்டிகளை எடுத்துக் கொள்வோம். ஆரம்பத்தில் அரசியல் மாச்சரியங்கள் வரலாம். அரசியல் மாச்சரியங்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல. இருக்கலாம். ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் பேசும்போது, எல்லோரையும் அணைத்துச் செல்லும் போக்கில், தமது உரையினை நிகழ்த்தினார் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

அந்த நேரத்திலே, கூடவே, "புதிதாக வீரம் அடைந்திருக்கக் கூடிய காளிமுத்து" என்று சொல்லத் தேவையில்லை. நான் இப்படிச் சொல்லும்போது, குத்திக் காட்டுகிற மனப்போக்கு அமைவது சட்டசபை நிகழ்ச்சியாகாது—அது சபை முன்னவராக இருக்கலாம்; வேறு சிலராக

இருக்கலாம்—இயற்கையான பேச்சு சில பேரை ஆத்திரமூட்டும் நிகழ்ச்சியாக அமையும் என்பதை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு இடம் ஏற்படவிருக்கிறது என்பது மகிழ்ச்சியாக இருக்கலாம். விட்ட குறை தொட்ட குறை வளருகிறது. அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மற்றப் போராட்டங்களைப் பற்றிச் சொல்லும்போது—உங்களுக்கு தெரியும் என்று கருதுகிறேன்—வெள்ள நிவாரணம் சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டியிருக்கிறோம். இருந்தாலும் கூட இன்னும் பல இடங்களில் அந்த 200 ரூபாய் விநியோகம் செய்யப்படாமல் இருக்கிறது. சில அதிகாரிகள் தங்கள் மனப்போக்குப்படி நடந்து கொள்கிறார்கள். அதிலே குறை காண்பார்களேயானால், அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து ஒழுங்குபடுத்தவாவது முயற்சிக்க வேண்டும். அதிலேதான் ஜனநாயகம் இருக்கிறது. அதிகாரிகள் தன்னிச்சைப் போக்காக செல்கிற நடவடிக்கையைத் தடுத்தால் உதவிகரமாக இருக்கும்.

எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அகில இந்திய அண்ணா தி.மு.க., தி.மு.க., ஜனதாகட்சி உள்ளிட்ட பலர் சேர்ந்து ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்கள். காளாப்பூர் கிராமத்திலிருந்து. இராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் விளைச்சல் பரவாயில்லை. இருந்தாலும் குறிப்பிட்ட பகுதிகளில், குறிப்பிட்ட கிராமங்களின் துன்பத்தை அரசாங்க அதிகாரிகள் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. தண்ணீருக்குள் ஒரு வாரம் பயிர்கள் நின்று அழுகியிருக்கிறது. அங்கே வசூல் செய்யும் முறை இருக்கிறது. மற்ற இடங்களைப் போல் எண்ணி இந்த இடங்களிலும் பொதுவாகப் பரிகாரம் காணவேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இராமநாதபுரத்தில் 22 கிராமங்கள் பாதிக்கப்பட்ட கிராமங்கள் இப்படிப்பட்ட இடங்களில் அதிகாரிகளின் நடவடிக்கையை "செக்-அப்" செய்யக்கூடிய முறை வேண்டும். நிச்சயம் அந்தக் காரியங்களைச் செய்யாவிட்டால் அதுவே பொதுவான போக்கு ஆகிவிடும் என்பதைச் சொல்லிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களுக்குத் தெரியும் நெசவாளர் பிரச்சினை. கொள்கையில் மாற்றம் வர வேண்டும். நெசவாளர் பிரச்சனைக்கு இந்த அரசு பல முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும்கூட "ரிபேட்" இல்லை, கொடுக்கமாட்டார்கள் என்ற அச்சம்

இருக்கிறது. உள் விவகாரத்திற்குள் போக நான் விரும்பவில்லை. பரமக்குடியில் நேற்று முந்தாநாள் பொது அர்த்தால் நடந்ததாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதை எடுத்துக் கொண்டாலும் கூட நிரந்தரமாக அதை எப்படித் தீர்ப்பது என்ற நீண்டகாலப் பார்வையுடன் சில ஏற்பாடுகள் செய்தால் கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினை தீர்ந்துவிடும். தீபாவளி வந்தால் விற்றுப் போகும்; பொங்கல் வந்தால் விற்றுப் போகும் என்ற நிலை இல்லாமல், நிரந்தரமாகப் பரிகாரம் காணவேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது—ஒரு மாற்றத்தை நிச்சயமாகப் பரிசீலிக்க வேண்டும். நெல்லுக்கு நியாய விலை என்பதை அரசாங்கக் கொள்கையாக ஏற்று முதலமைச்சர் நியாய விலை கொடுக்கிறோம் என்று ஒப்புக்கொண்ட பிறகு, இறுதிப் பிரச்சினை எதிலே அடங்கியிருக்கிறது? நியாய விலை என்பது அவர்களுக்குக் கொடுக்கும் காசு மாத்திரமல்ல. அதிலே அரிசிப் பிரச்சினையும் அடங்கி இருப்பதாகத் தெரியும். மூட்டைக்கு ரூ. 100 என்பதை 102 கொடுத்தால் கிலோ விலை ரூ. 2 லிருந்து 2.20 ஆக மாறும். ஆகையால் அது சம்பந்தமான விவாதங்களுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அரிசி விலை உயராமல், உற்பத்தியாளர்களுக்கு நியாய விலை கிடைக்க, அதற்கான முறையில் ஏற்பாடு செய்தால் கவர்ச்சிகரமாக இருக்குமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு கூட அரசாங்கம் தங்களுக்கென்று ஒரு ஸ்டாக் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசாங்கம் ஒரு மாநிலத்திற்குரிய கட்சி என்ற முறையில் அரசியல் தலையீடு வரும். மற்ற இடங்களில் தலையிடக் கருதவில்லை. மற்றக் கட்சிகள் மீதோ மற்ற அரசாங்கத்தின் மேலோ நம்பிக்கை வைக்காமலே மேடையில் பேசட்டும். இந்தச் சபையிலும் பேசட்டும். ஆட்சேபனையில்லை. ஆனால், தங்களுக்கென்று ஒரு ஸ்டாக் வைக்கவேண்டும். நெல் ஸ்டாக் வேண்டும். கொள்முதல் செய்து கையில் வைத்துக் கொள்ளாவிட்டால் மத்திய அரசிடம் கெஞ்ச வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கெஞ்சினாலும் அரிசி வருமா? முன்னர் இருந்த அரசை, அரிசிப் போராட்டம் ஆட்சியைக் கவிழ்த்திருக்கிறது. ஆகவே, அதிலே கண்டிப்பாக இருக்க வேண்டும். நமக்கென்று ஒரு ஸ்டாக் வேண்டும். அந்த நெல் ஸ்டாக்

ஒழுங்காக, முறையாக கெட்டுப் போகாமல் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–30]

அதுமாத்திரமல்ல, பல்வேறு விட்டுப் போன பிரச்சினைகள் இருந்தால் அதைத் தனியாக வேண்டுமானால் சொல்கிறேன், விட்டுப்போன பிரச்சினைகளை தீர்க்க ஒரு கூட்டு முயற்சி தேவை. அப்படி ஒரு கூட்டு முயற்சி இருந்தால்தான் நிச்சயமாக பல்வேறு காரியங்களை அமலாக்கமுடியும். ஒரு புதிய நிலை உருவாகியிருக்கிறது, வரவேற்கத்தக்கது. புயல், வெள்ளம், ஏற்பட்ட காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை கமிட்டிகளில் சேர்த்துக் கொள்ளாத ஒரு நிலை இருந்தது மாறி சேர்த்துக் கொள்ளும் ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவான பிரச்சினைகளைச் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும்.

வெள்ள நிவாரணம் சம்பந்தமாக ரூ. 128 கோடி என்று போட்டிருக்கிறோமே தவிர, ஆந்திரா சட்டசபையில் ஒரு தீர்மானம் போட்டிருப்பதைப் போல் இந்தச் சபையிலும் ஒரு தனித் தீர்மானத்தைப் போட வேண்டும். தனித் தீர்மானம் போட்டு மத்திய அரசை ரூ. 200 கோடி அவர்கள் அங்கே கேட்டிருக்கிறார்கள். அதேபோல் ஒரு தனித் தீர்மானத்தை இங்கே போட்டால்தான் நடக்கக்கூடிய வேலைகளைச் செம்மையாக நடத்த உதவியாக இருக்கும்.

ஆகவே, ஒரு தனித் தீர்மானத்தை ஆளும் கட்சியினரும் அமைச்சரவையும் சேர்ந்து ஆலோசித்து அரசாங்கத் தரப்பிலேயிருந்து இங்கு கொண்டுவந்து எல்லோரும் கூடிக் கலந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால்தான் நமது தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியும், அதில் ஊசலாட வேண்டாம், அழுத்தமாக இருக்க வேண்டும்.

நேரமாகிவிட்ட காரணத்தால், தலைவர் அவர்களுக்கு மேலும் மணி அடிக்கக்கூடாது, சபையின் ஒழுங்கை நானே முறைப்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் அமர்கிறேன். வணக்கம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பொருளாதார நிர்ணயிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 ஜனவரி 4

கொடுத்திருக்கிறார்கள். ஏதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றவுடனே பெரிய சமாச்சாரங்கள் எல்லாம் வரப்போகின்றன என்று நினைத்தேன். முந்தாநாள் அன்று இந்தத் தகவலை டெல்லியில் எங்களுக்குத் தருகிறபோது உடனடியாக அன்றே புறப்பட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வருகிறார்கள். என்னென்ன விஷயங்களையெல்லாம் இங்கே சொல்வார்களோ என்ற ஆர்வத்தோடு இங்கு வந்து பார்த்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானமே இந்தச் சபையில் ஒரு [*] என்பதை இப்போது உணர்த்திக் கொண்டிருப்பதைப் போல்—நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்றால் எக்ஸ்ட்ராடினரி ந்யூஸ் என்று சொல்வார்களே, அதை எதிர் பார்த்தால் வழக்கமாகப் பேசும்போது பேசுவதுபோல் வழ வழா கொழ கொழா என்று பேசிக் கொண்டிருக்கிற வகையில் புதிதாக எதுவுமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [*] என்ற பதத்தைத் திரும்பிப் பெற்றுக் கொண்டால் நல்லது. [*] என்று சொல்லக் கூடாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : சபாநாயகர் அவர்களின் வேண்டுகோள்படி நான் அதைத் திரும்பிப் பெற்றுக் கொள்கிறேன். இந்த அரசு வந்து ஆறு மாத காலமாகியிருக்கிறது. எங்களது தலைவர் காமராஜ் அவர்கள் அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில் ஆறு மாத காலம் அவர்களை விமர்சிக்கக்கூடாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் ஆட்சிபற்றி விமர்சனம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நல்லதொரு பாரம்பரியத்தில் வந்த காங்கிரஸ்காரர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் எங்கள் தலைவர் இந்திரா காந்தி அவர்கள் மதுரைக்கு வந்த நேரத்தில் நடந்து கொண்ட முறையை இந்த நேரத்தில் நான் கொஞ்சம் விளக்கமாகவே சொல்ல விரும்புகிறேன்.

[*]பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

978 ஜனவரி 4] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அங்கே இந்திரா காந்தி அவர்களை கொலைச் செய்யவேண்டுமென்கிற முயற்சியில் ஈடுபட்டார்கள் என்பதற்கு என்னிடம் ஆதாரங்கள் பல இருக்கின்றன. பல இடங்களில் கொலை முயற்சியில் ஈடுபடக் கூடியவர்களையெல்லாம், வன்முறைகளில் ஈடுபடுகின்றவர்களையெல்லாம் லாரி லாரியாக ஏற்றி அழைத்து வந்தார்கள். அதில் வேடிக்கை என்னவென்றால்.....................

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது பேசுகிற எந்தக் கருத்திலும் எனக்கு குறுக்கிட வேண்டும் என்ற எண்ணமில்லை. ஆனால், நீதிமன்றத்தில் இருக்கிற வழக்குகளைக் குறித்து, குறிப்பிட்டு அது தொடர்பாக அவர்களிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் ஒருவரைக் கொலை செய்ய முயன்றார்கள் என்றும் சொல்லப்படுகிற கருத்து சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெறுவது என்பது சபையின் முறைக்கு ஏற்றதாக இருக்காது. அதைத் தலைவர் அவர்கள் தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் மதுரைச் சம்பவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கமிஷன் போட்டு விசாரணை நடப்பது சென்னையில் நடந்த சம்பவத்தைப்பற்றி. ஆகவே அது சப் ஜூடிஸ் ஆகாது.

திரு. க. அன்பழகன் : மதுரையிலும் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகளுக்கு உட்பட்ட பிரச்சினைகளாகவும் இது இருக்கக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே வழக்கு போடப்பட்டிருந்தால் அதற்குள்ளே நுழைந்து பேசாமல் இருப்பது உறுப்பினர் அவர்களுக்கு நல்லது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அப்பிரச்னையை அதோடு விட்டுவிட விரும்புகிறேன். இருந்தாலும், அங்கே போலீஸ் அதிகாரிகள் நடந்து கொண்ட முறை மிகமோசமானதொரு நிலையைத் தோற்றுவித்தது. கறுப்புக்கொடி காண்பிக்க அங்கு வந்திருந்த அத்தனை பேர்களும் நடுத்தெருவில், மதுரை நகரிலுள்ள ஒரு முக்கிய தெருவில் மிகப் பெரிய தொரு கூட்டத்தைக் கூட்டி மிகப் பெரிய வன்முறையில்

ஈடுபட்டபோது போலீஸ் அதிகாரிகள் ஓரளவிற்கு மிக்க திறமையில்லாமல் நடந்து கொண்டார்கள் என்று நான் இந்த நேரத்தில் என் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் திராவிட முன்னேற்றக் கட்சி ஆட்சி காலத்தில் அவர்கள் நடந்து கொண்ட விதத்தை எடுத்துக் கொண்டால்,' அதாவது ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது, காங்கிரஸ்காரர்களும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும்'கறுப்புக்கொடி காண்பித்தார்கள். அப்போது அதை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கொடி என்று சொல்லிக்கொண்டு கையில் பெரிய தடிகளை வைத்துக் கொண்டு கம்யூனிஸ்டுகாரர்களையும், காங்கிரஸ்காரர்களையும் தாக்கியதை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன்.

இதுபோன்ற வன்முறைச் செயல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எப்போதும் ஈடுபடக் கூடியவர்கள் என்பதைப் பல சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். இங்கே சட்டமன்றத்தில் மட்டும் நாம் என்ன காண்கின்றோம்? நம்மைப் பார்த்து வெளியிலுள்ளவர்கள் அசிங்கமாக நினைக்கிறார்கள். இங்கு சட்டமன்றத்தில் பிரதிநிதிகள் நடந்து கொள்ளுகின்ற முறையைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. இனிமேலாவது அவர்கள் திருந்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அந்த அளவுக்கு வன்முறையில் ஈடுபடுகின்ற அளவில் அவர்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். நான் இந்தச் சட்டமன்றத்திற்குப் புதியவன். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற கலைஞர் போன்றவர்கள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள்................

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : பாயிண்ட் ஆப் ஆர்டர்...... திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்றப் பிரதிநிதிகள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்றும், இந்தச் சட்டமன்றத்தைப் பார்த்து மற்றவர்கள் அசிங்கமாக நினைக்கிறார்கள் என்று சொல்வது, இந்த அவைக்கு அவமானகரமாக இருக்கிறது. இப்படிச் சொல்வது சரிதானா? ..... Is it Parliamentary?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அவர் சட்டமன்றத்தைக் குறைத்து பேசவில்லை என்று நினைக்கிறேன். பொதுவாக சபையின் மரபு கெட்டுப் போவதைப் பார்த்து மனதுக்கு

என்றுதான் சொல்லுகிறார்.
வருத்தமாக இருக்கிறது என்று சொல்வதை வேண்டு
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று சொல்ல விரும்பு
மென்றால் ஆட்சேபிக்கலாம். ஆனால் அவர் கெட்டுப்போகிறது.
வது, நம்முடைய சபையில் மரபு வேண்டுகோள்தான்
அதைக் காப்பாற்ற வேண்டும் என்று
விடுக்கிறார் என்று நினைக்கிறேன்.

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : வேண்டுகோள் எங்களுக்கு மட்டும் தானா?......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர் பொதுவாகத் தான் கேட்டுக் கொண்டிருக்கிறார். சபையின் மரபு
கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும்
ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதற்கு உதாரணமாக
எடுத்துக் காட்டுகிறேன் என்றுதான் அவர்கள் சொல்லு
கிறார்கள்.

<u>திரு. க. அன்பழகன்</u> : தலைவர் அவர்களே, உங்கள் கருத்துச் சொல்ல வரவில்லை.
தீர்ப்பைப்பற்றி நான் ஒன்றும் குறிப்பேட்டில் இருக்கிறது.
உங்கள் தீர்ப்பும் அவைக் பேச்சும் அவைக்
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தாங்கள் ஒப்
குறிப்பேட்டில் இருக்கிறது. அந்தப் பேச்சை இருக்கும் என்றால்
பிட்டுப் பார்த்து விட்டு, அது சரியாக வேறுவிதமாக
அதை அனுமதியுங்கள். அவரது பேச்சு தாங்கள் முன்
இருக்குமானால் அவற்றை விலக்குவதற்குத் கொள்கிறேன்.
வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்</u> : தலைவர் அவர்களே, ஆட்சிக் காலத்தில் நடந்த
திராவிட முன்னேற்றக் கழக எடுத்துச் சொல்லி
கொடுமைகளை எல்லாம் ஒவ்வொன்றாக நேரம் வேண்டும்.
விளக்குவது என்றால் இரண்டு மணி நேரம்தான் ஒதுக்கப்பட்
எங்கள் கட்சிக்கே இரண்டு மணி
டிருக்கிறது.

பொய் வழக்குப் போடுவதில் திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியைத் தவிர வேறு எதுவும் எந்த நாட்டிலும்
கிடையாது. பரமக்குடியில் வக்கீல் ராக்கன், டாக்டர்
பலராமன். இப்போது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வில்
இருக்கும் வக்கீல் தீனதயாளன் இவர்கள் பேரில் போடப்
பட்டதெல்லாம் பொய் வழக்குகள். என்ன காரணங்கள்
சொன்னது என்றால், சால்னா சட்டியை தூக்கிவிட்டான்,
சோத்துச் சட்டியை தூக்கிவிட்டான், கொழம்புச் சட்டியை

தூக்கிவிட்டான் என்றெல்லாம் வழக்குகள் போட்டது கலைஞருடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தான்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, கொஞ்ச காலத்திற்கு இவர்கள் ஒதுங்கியிருந்தால் மரியாதையாக இருக்கும். இவர்கள் பண்ணின அக்கிரமங்களை எல்லாம் மக்கள் மறப்பதற்கு முன்னால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவர்கள் அவர்களையே தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

(திரு. சி. ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்து கொண்டே ஏதோ பேசிக் கொண்டிருந்தார்........)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் தயவுசெய்து எழுந்து நின்று பேசுங்கள்....

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்</u> : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் பட்டபாடு இருக்கிறதே கொஞ்சநஞ்சமல்ல. பல அதிகாரிகள் என்னிடமே சொல்லியிருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் நடித்த படம் ஒன்று கும்பகோணத்தில் திரையிடப்பட்டது. அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தடுத்திருக்கிறார்கள். தடுத்தவுடன் அங்குள்ள எஸ். பி. அந்தத் தியேட்டருக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறார். பின்னால் இரண்டொரு நாள் கழித்து அந்த ஊருக்கு முன்னாள் முதலமைச்சர் போகிறார். அப்போது மரியாதைக்காக இதே எஸ்.பி. போய் பார்த்தபோது, " சினிமா கொட்டகைக்குப் போய் பாதுகாப்பு கொடுக்க போங்கள், எனக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டாம்.... " என்று அவமானமாகப் பேசியிருக்கிறார். அது மட்டுமல்ல, மறுநாள் அந்த ஊரைவிட்டு இன்னொரு ஊருக்கு அதாவது செங்கற்பட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் படுத்திய பாட்டின் காரணமாக அங்கிருந்தும் மாற்றப்பட்டு இங்கே செல்வாக்கு இல்லாத ஒரு உத்தியோகத்திற்கு மாற்றப்பட்டார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நடைபெற்றன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் அதிகாரிகளுக்குத் தொல்லை இல்லை. ஆனால் அதே நேரத்தில் இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதிகாரிகளுக்கு அதிகமான சலுகைகள் கொடுத்து விடக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் அப்படிக் கூறுகின்றேன் என்றால், அதிகாரிகள் ஏழை எளிய மக்களுடைய உணர்வு எப்படி என்பதை அறிய மாட்டார்கள். காரணம், அதிகப்படியான பெரிய அதிகாரிகள் நல்ல பெரிய செல்வந்தர் குடும்பங்களிலே இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு இந்த ஏழை எளிய மக்களுடைய உணர்வுகள் தெரிவதற்கு நியாயமில்லை. ஆகவே, நம்மைப்போன்ற அரசியல்வாதிகளுக்குத்தான் அவர்களுடைய உணர்வை, உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே அரசியல்வாதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

இந்த வெள்ள நிவாரண வேலைகள் எல்லாம் நல்லமுறையிலே நடந்து கொண்டு வருகின்றன. 200 ரூபாய் கொடுப்பது என்பது, எந்தவிதமான லஞ்சம் லாவண்யம் இல்லாமல் வீடு இழந்தவர்கள் அதிகாரிகளிடம் வாங்குவதை நானே நேரில் பார்த்தேன். ஆகவே, அதற்காக நான் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இந்த வெள்ள நிவாரண வேலைகளை எல்லாம் என்ஜினியர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். உதாரணமாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கண்மாய், கால்வாய், ரோடு போன்ற வேலைகளையெல்லாம் என்ஜினியர்களிடம் விடுவதற்குப் பதிலாக, கலெக்டர் அவர்களை அழைத்து அவர்களிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தால், அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வேலைகள் நடைபெற வசதியாக இருக்கும், அதுவே நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது எங்களுடைய பகுதியிலே உள்ள ரோடுகள் வண்டி மாடுகூட போக முடியாத நிலைமையில் மிகவும் மோசமாக இருக்கிறது. அதற்கெல்லாம் அதிகப்படியான பணம் ஒதுக்கவேண்டும். வெள்ளம் வந்துஅடித்துக்கொண்டு போனால் தான், செப்பனிடப்படும் என்று சொல்லுகிறார்கள். அப்படி வெள்ளம் வராமல், 2, 3, மாதங்கள் தொடர்ச்சியாக மழை பெய்து, ரோடுகள் அரித்துப்போயிருந்தால் கிடையாது என்கிறார்கள். எனவே, இதற்காகவும் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 ஜனவரி 4

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில், இந்த ஆண்டு நல்ல மழை பெய்திருக்கிறது என்று சொன்னாலும் கூட, வெள்ளம் காரணமாகவும், பூச்சி அதிகரிப்பு காரணமாகவும் முதல் போகம் வெள்ளாண்மை இல்லாமல் இருக்கிறது. இப்போது மழை பெய்து, கண்மாய்கள் நிறைந்திருக்கின்ற காரணத்தினால், வரக்கூடிய கோடை மகசூல் நன்றாக இருக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. எனவே, இப்போது வரி வசூல், கடன் வசூல் ஆகியவற்றைத் தீவிரப் படுத்தாமல் ஒரு ஆறு மாத காலத்திற்கு தள்ளிவைத்து, ஜூன் மாதத்திற்குப் பிறகு வசூல் செய்ய உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்போது கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தேவையற்ற ஒன்று என்பதைச் சொல்லிக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்:</u> மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மான விவாதத்திலே கலந்துகொள்ள வாய்ப்பு அளித்தமைக்காக நான் முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் முடிந்தவுடனே, கிராமப்புறத்து மக்களைப் பார்த்து மந்தப் புத்திக்காரர்கள் என்றும், கோழைகள் என்றும் கூறியவர்கள், இன்று அவர்களுக்குத் தேவையான எத்தனையோ நல்ல பல திட்டங்கள் உருவாக்கி, செயல்பட இருக்கின்ற இந்த அரசுக்கு களங்கம் கற்பிக்கின்ற வகையிலே இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததோடு மட்டும் அல்லாமல் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்று, முன்னாள் முதல்வரும், இன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமானவர் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து எந்த அளவிற்கு நியாயம் என்று தெரியவில்லை.

இப்படி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலம், இந்த நாட்டு மக்கள் திசை திருப்பப்படுவதற்காக ஏதோ பெரிய தவறுகள் எல்லாம் செய்து விட்டது போலவும், அதைச் சுட்டிக்காட்டுவது போலவும் ஒரு போலித் தோற்றத்தை உருவாக்க முற்பட்டிருக்கிறார்கள். தவறுகள் புரிந்து, தவறுகளிலேயே வளர்ந்தவர்கள், இந்த அரசு நல்லது செய்ய முற்படும்போது மக்களை இப்படி திசை திருப்புவதிலே என்ன நியாயம் இருக்கின்றது என்பது தெரியவில்லை

1978 ஜனவரி 4] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

எதிர்க் கட்சி இல்லாவிட்டால் நல்ல ஜனநாயகம் இல்லை என்று ஐவார் ஜென்னிங்ஸ் தெரிவித்துள்ளதாக இங்கே தெரிவித்தார்கள். இந்தக் கருத்து நல்ல தூய்மையான களங்கம் இல்லாத தவறுகள் செய்யாத எதிர்க் கட்சிக்கே பொருந்தும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நேரத்திலே இருந்து அது ஒரு நல்ல எதிர்க் கட்சியாக செயல்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்குமானால் அந்த இயக்கத்தை வளரவிடாமல் இருப்பதற்காக, அந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கி அதனை நடத்திச் சென்ற இன்றைய முதல்வரும் எங்கள் இதய தெய்வமான புரட்சித் தலைவர் அவர்களுக்கு எத்தனை இடங்களில் அந்த நேரத்தில் துன்பங்கள் இழைக்கப்பட்டன அன்றைய அரசாங்கத்தால் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு கொடுங் கோலர்களாக இருந்தார்கள் என்பது தெரியும். இந்த ஆட்சி அமைந்த ஆறுமாதத்திற்குள் விமர்சனம் செய்கிறவர்கள் ஏழாண்டுக் காலம் ஆட்சி நடத்தியபோது ஜனநாயகப் பண்பு இல்லாமல் செங்கை மாவட்டத்தில் நடத்திய நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் சபையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய அருமைச் சகோதரர் எஸ். எம். துரைராஜ் அவர்களை அன்று எந்தக் கொடூரமான எண்ணத்தால் தாக்கினார்கள் என்று புரியவில்லை. அதே போல் வரலாற்றில் இல்லாத வகையில் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் நடுவழியில் கத்தியால் குத்தப்பட்டார் அருமைச் சகோதரர் வெங்கா. அது எந்த ஜனநாயகத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதோ தெரியவில்லை. மாவீரன் ஜேப்பியார் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டார். அந்த நேரத்தில் நாடு கடத்தப்பட்ட கைதி போல் அவரைப் பல மாவட்டங்களுக்கும் தாலூகாக்களுக்கும் அனுப்பி வேடிக்கை பார்த்ததோடு மட்டுமல்லாமல் 'மிசா' சட்டத்தைப் பயன்படுத்தி வெஞ்சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்தியது; அது எந்த ஜனநாயகத்தின் அடிப்படையில் என்று எனக்குப் புரியவில்லை.

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 ஜனவரி 4

இங்கே சட்டமன்றத்தில் நியாய விலைக் கடைகளைப்பற்றி குறிப்பிடும்போது 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக் கிறேன் என்று சொன்னீர்களே, ஏன் திறக்க வில்லை. 442 கடைகளைத்தானே திறந்திருக்கிறீர்கள் என்று சுட்டிக் காட்டி ஞர்கள். இவ்வாறு சுட்டிக் காட்டியபோது பழைய நிகழ்ச்சி கள் எனக்கு நினைவுக்கு வந்தன.

கூவம் மணக்கும் என்ருர்கள். கூவத்தின் நாற்றத்தையும் வீராணம் ஊழல்கள் வெளிப்பட்டதையும் இன்றைக்குப் பார்க்க முடிகிறது. நல்ல திட்டங்களை உருவாக்குவதாகச் சொல்லி கூவத்தை நாற்றமடிக்கச் செய்திருக்கிருர்கள் ; வீராணம் ஊழலை வெளிக்காட்டியிருக்கிருர்கள். திண்டுக் கல்லில் வத்தலகுண்டு ஆறுமுகம் எந்தவிதமாகக் கொல்லப் பட்டான் ? கண்ணைப் பிடுங்கி பூலாவாரி சுகுமாரன் எந்த முறையில் தாக்கப்பட்டான் என்பதெல்லாம் அவர்களுடைய ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் அமைத்திருக் கிருர்கள்.

இன்றையதினம் இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க பல்வேறுவகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தச்சர், கருமார், பொற்கொல்லர் ஆகிய வர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிருர்கள். அந் தத் திட்டங்கள் நன்ருக, செம்மையாக, முழுமையாகச் செயல்பட்டு வருகின்றன. இன்றைக்குப் பொறுப்பேற்றிருக் கிற அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழக அரசின் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சய மாக இந்த மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்களுடைய ஏழாண்டுக்கால ஆட்சியின் விளை வாகத்தான் அந்த ஆட்சியில் ஏற்பட்ட தவறுகளின் விளைவாக ஏற்பட்ட செயல்களை மறைக்கும் வகை யில் இன்றைக்கு அவர் விடுத்துக் கொண்டிருக்கும் போராட்டங்களின் தொகுப்பு அமைந்திருக்கிறது. அன்றைக்கு ஆட்சியைச் சீர்தூக்கிப் பார்த்து ஊழலற்ற ஆட்சியாக அமைத்திருப்பாரானல் இன்றைக்கு இந்த நிலைமை ஏற் பட்டிருக்காது. அதன் காரணமாக ஏற்பட்ட தவறுகளை நாம் திருத்தவேண்டுமென்று முற்பட்டாலும் கூட ஏறத்தாழ பத்தாண்டுக் காலம் ஆகும்.

1978 ஜனவரி 4] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

இந்த ஆட்சி அமைந்து ஆறு மாத காலத்தில் மாற்ருர் போற்றும் வண்ணம், ஏழை எளிய மக்கள் போற்றுகிற அளவில் இந்த ஆட்சி அமைந்திருக்கிறது.

சர்க்கார் பணத்தை வீணக்குகிருர்கள் என்று சொல்லு கிருர்கள். சர்க்கார் பணத்தை வீணக்குகிருர்கள் என்று இன்றைக்குப் பரிதாபப்படக்கூடியவர்கள் எல்லாம் அன்றைக்கு எப்படிச் செலவு செய்தார்கள் என்பதற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் அரிசி பேர ஊழலே சான்ருகும் என்று எண்ணுகிறேன்.

தஞ்சை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது திரு வாரூர் டி.பி. யில் உட்கார்ந்துக்கொண்டு முரசொலிக்குத் தொலைபேசி மூலமாகப் பேசியவர்கள் அன்றைக்குப் பாக்கி வைத்துவிட்டு வந்திருக்கும் பணம் ஏறத்தாழ 11 லட்சம் ரூபாய். 11 லட்சம் ரூபாயை வீணக்கியிருக்கிருர்கள். தங் களுடைய சொந்தப் பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுப் பதற்காக, சர்க்கார் பணத்தை வீணக்கியிருக்கிருர்கள்.

இன்று பல்வேறு பிரச்சினைகளை இங்கே சுமுகமாகத் தீர்க்க முற்படுகிருேம். பல்வேறு தலைவர்களும் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிருர்கள். வெள்ளச் சேதப் பகுதி களைப் பார்வையிட்ட பாரதப் பிரதமர் அவர்களும் பல்வேறு அரசியல் துறையைச் சேர்ந்தவர்களும் பல்வேறு மாற்றுக் கட்சித் தலைவர்களும் மிகவும் பாராட்டியிருக் கிருர்கள். துரிதகால நடவடிக்கையாக இந்த அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் சாலச் சிறந்ததாகும் என்று பாராட்டியிருக்கிருர்கள். ஏழை எளிய மக்கள் எல்லாம் எங்கள் தானைத் தலைவரை, புரட்சித் தலைவரை தமிழக முதல்வரைத் தெய்வமாகப் போற்றுகிருர்கள். அப்படி இருக்கும்போது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, எப்படியாவது மக்களைத் திசை திருப்பிவிட வேண்டுமென்று எந்தப் போராட்டத்தின் மூலமாகவாவது மக்களின் கவ னத்தை ஈர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை மையமாக வைத்து நல்லதைச் செய்யும் ஆட்சிக்குக் களங்கம் கற்பித் தால் மக்கள் மன்றம் சும்மா விடாது.

(பிற்பகல் 12—50)

இன்றைய ஆட்சி மேற்கொண்டுள்ள நல்ல பல திட்டங் களை உடனடியாக 6 மாத காலத்திற்குள்ளாகவே செய்து முடித்துவிட வேண்டுமென்று அவர்கள் எண்ணுகிருர்களே அது

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 ஜனவரி 4

எப்படி நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. ஏறத்தாழ 7 ஆண்டுக்காலம் ஆட்சியைக் கையிலே வைத்துக் கொண்டு என்னவெல்லாமோ அலங்கோலமான நிலையிலே இந்த நாட்டை இட்டுச் சென்று இன்றும் அந்த நிலையே தொடர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இப்படியெல்லாம் திசை திருப்புகிறார்களோ என்று எண்ணுகிறேன். தூய்மையான ஆட்சி அமைந்துவிட்டது. மக்கள் எல்லாம் தெளிவான அரசியல் உணர்வுக்கு வந்துவிடுவார்களானால் நாம் எல்லாம் தலைகாட்ட முடியாது என்ற உணர்வுக்கு அவர்கள் வந்திருக் கிறார்கள் என்று தான் அவர்களுடைய பேச்சிலிருந்து தெரி கிறது.

நாலரைக் கோடி தமிழ் மக்களின் தளநாயகன், புரட்சித் தலைவர் என்று கிராம மக்கள் நம்பிக்கை நட்சத்திரமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் பாராட்டப் படுகின்ற அரசை என்றும் யாராலும் அசைக்க முடியாது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அசைத்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்வேன். இந்த அரசை ஏழை எளிய மக்கள் தங்கள் இதயத்திலே தெய்வமாக வைத்திருக்கிறார்கள். போற்றுவோர் போற் றுங்கள், தூற்றுவார் தூற்றுங்கள் ஆனால் இந்த அரசு என்றும் நல்லதைச் செய்யும், நியாயத்தைச் செய்யும். தமிழகத்தின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடு வார். அவர்களுக்காக இந்த அரசு என்றைக்கும் பாடுபடும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை எதிர்த்து அமைகிறேன், வணக்கம்.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சியினர் கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே ஆளுங் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் இங்கே பேசினார்கள். நம்பிக்கையில்லா தீர்மானம் இங்கே வந்தபோது எதிர்க்கட்சியில் உள்ள எங்களை எல்லாம் கேட்டு வந்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. எதிர்க்கட்சிக்கு அதற் கான ஆதரவு இருந்ததால் இப்படிக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்று நினைக்கிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. ர. ஜெபமணி]

இந்தத் தீர்மானம் இங்கே வந்த காரணத்தினாலே சர்க் கார் கவிழ்ந்துவிடும் என்றோ சர்க்காருக்கு இதனால் பலத்த அடி விழுந்துவிடும் என்றோ யாரும் கருதிவிட முடியாது. அதை எதிர்க்கட்சித் தலைவரே சொல்லியிருக்கிறார். இந்த அரசாங்கம் 6 மாத காலத்தில் செய்த காரியங்களைப்பற்றி யெல்லாம் விமர்சிப்பதற்கு இதை ஒரு நல்ல வாய்ப்பாகக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறவர்களும் ஆதரிக் கிறவர்களும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருது கிறேன்.

ஜனதாக் கட்சி இதிலே கலந்து கொள்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், நாங்கள் தேசிய வாதிகள் என்ற முறையிலே, சில கருத்துக்களை சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் நல்ல, நல்ல காரியங்கள் நடக்க வேண்டும். இந்த நாடு உலகத்தில் உள்ள வளர்ச்சியடைந்த நாடுகளைவிட நல்ல முறையில் வளர்ச்சியடைய வேண்டும், இந்த நாட்டிலே உள்ள அறி யாமை, இல்லாமை, கல்லாமை ஆகிய தீயவை எல்லாம் இந்த நாட்டிலிருந்து அகற்றப்பட்டு, எல்லோரும் எல்லா வளமும் பெற்று வாழ வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் எல்லாம் இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி னோம். எங்களுடைய எண்ணம் சுதந்திரம் வாங்கிக் கொடுத் ததற்குப் பிறகு நாங்களே எப்போதும் ஆண்டுக் கொண் டிருக்க வேண்டும் என்பதல்ல. மக்களுடைய தேவைகள் எல்லாம் இந்த நாட்டிலே பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவர்கள் எல்லாம் இந்த நாட்டின் மன்னர்களாக இருக்க வேண்டும் என்று தெருத் தெருவாகப் பேசி, இந்த நாட்டிலே எது நடக்க வேண்டும் என்று நினைத்தோமோ அது நடக்கும் என்று எதிர்பார்த்தோம். மக்கள் ஏமாந்துவிடாமல் நல்ல முறையிலே அறிந்து தெளிந்து ஓட்டளிப்பார்கள். இந்த நாட்டிலே நல்ல ஜனநாயகம் நடக்கும் என்று நம்பினோம். ஆனால் மக்கள் மத்தியில் நெருங்கக் கூடியவர்கள் மக்களிடத் திலே அறிவை ஊட்டுவதற்குப் பதிலாக அவர்களுடைய அறியாமையை முதலாகக் கொண்டு இந்த நாட்டிலே ஆட்சி யைக் கைப்பற்றிக் கொண்டு 'இந்த 6 மாத காலத்திலே' என்று எதிர்க்கட்சியினர் பேசுவதும் அவர்கள் 7 ஆண்டுக் காலத்திலே ஏற்பட்டது பற்றிப் பேசு வதும் ஆக நிலைமை இருக்கிறது. 6 மாத காலமாகிவிட்டது. இந்த நாட்டிலே என்ன நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டு கொண்டிருப்பவர்களுக்கு எதிர்க்கட்சியினர் மீது தீராத கோபம். ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கு ஆள

வந்து விட்டவர்களின் மீது தீராத கோபம். இது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆகையினாலே நாட்டு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும், அதைச் சமாளிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு யாரோ ஒருவரைப் பூதம்போல நினைத்துக் கொண்டு, அதை எப்படியாவது வீழ்த்தி விட வேண்டுமென்ற எண்ணம் இரு பக்கத்திலும் இருக்கிறது. அது இந்தத் தேசத்திற்கு நல்லது அல்ல.

தேர்ந்தெடுக்கப்பட்டாகி விட்டது, ஏழை மக்கள் ஓட்டளித்து விட்டார்கள். அதன் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? இந்த நாட்டு மக்கள் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபட வேண்டுமே தவிர தவறு செய்தார்கள் தவறு செய்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அவர்கள் தவறு செய்தார்கள், நாங்களும் செய்தால் என்ன என்று வாதிப்பது சபைக்கு நல்லது அல்ல. தவறு செய்தவர்கள் தள்ளப்பட்டார்கள். இனிமேல் வரக் கூடியவர்கள் தவறே செய்ய மாட்டார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். திடீரென்று இந்த நாட்டிலே இப்பொழுது என்ன அவசரம், என்ன அவசியம் வந்ததோ தெரியவில்லை, திடீரென்று, உயிரோடு இருப்பவர்களின் பெயரால் எந்தக் கட்டிடமும் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். கனம் முதலமைச்சரவர்கள் மனத்தில் என்ன தோன்றியதோ தெரியவில்லை, ஒரு வேளை அவர் பெயரை வைக்கக் கூடிய அப்படிப்பட்ட ஒரு அக்கிரமம் நடந்துவிடுமோ என்ற பயத்தால் இருக்கலாமோ என்னவோ தெரியவில்லை. நான் அதை மறுக்கவில்லை.

ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடனேயே பயணிகள் விடுதிகளில் இருந்த காந்தி படத்தையும், காமராஜர் படத்தையும், நேருஜியின் படத்தையும், இராஜேந்திர பிரசாத் படத்தையும் தூக்கிப் போட்டு விட்டார்கள். இதற்காக நாங்கள் அப்பொழுது வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு நிற்கவில்லை. எங்கள் தலைவரின் படத்தை எடுத்து விட்டார்களா, ஐயய்யோ பாவமாயிற்றே என்று நாங்கள் நிற்கவில்லை. தலைவர்கள் உள்ளத்திலே எப்பொழுதும் இருக்கிறார்கள், உலகம் பூராவும் இருக்கிறார்கள், அவர்கள் படங்களை கண்ணாடிச் சட்டத்திற்குள்ளே வைத்தால்தான் மரியாதை என்று நினைக்கும்

அளவிற்கு எண்ணம் படைத்தவர்கள் அல்ல நாங்கள். அப்படி எடுக்க வேண்டும் அல்லது எடுக்கக் கூடாது என்பது அல்ல அதன்பொருள். அதற்கு இப்பொழுது தேவைதானா என்பது தான் இதன் பொருள்.

நாடு பெரிய பிரச்னையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் நாடு பூராவிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. படித்த வாலிபர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, படித்து முடித்த ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, இப்படி இந்த நாட்டில் வேலை இல்லை வேலை இல்லை என்று தெருத்தெருவாக அலைவதைப் பார்க்கிறோம். நம்மிடத்திலே வருகிறார்கள், காலையிலிருந்து மாலை வரையில் வருகிறார்கள், தூங்க விடமாட்டேன் என்கிறார்கள். வேலை வேண்டும் வேலை வேண்டும் என்ற பிரச்னை. இப்படியிருக்கின்ற நேரத்தில் எதிரில் யார் இருக்கிறார்கள், யாரை எப்படி ஒழிப்பது என்பதா பிரச்னை! அதைப்பின்னால் ஐந்தாண்டுகள் கழித்துப் பார்க்க வேண்டுமே தவிர இப்பொழுது பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை, இப்பொழுது அதற்கு அவசரமும் இல்லை.

நான் உங்கள் மத்தியிலே சொல்கிறேன். பிரச்னைகளை அணுகும் நேரத்தில் மந்திரிகள் ஒருமுகமான எண்ணத்திற்கு வரவில்லை. காரணம், எப்பொழுதும் அவர்களுக்கு ஒரு உறுத்தல் இருந்து கொண்டிருக்கிறது. யாரையோ நினைக்கிறார்கள் அவர்கள். திசை அங்கே திரும்புகிறது.

முதலமைச்சர் திடீரென்று சொல்லிவிடுகிறார்கள், இந்தப் போராட்டத்திற்கு யார் காரணம் என்பது எனக்குத் தெரியும் என்று. யார் என்று கேட்டால், காலம் வற்புறுத்தும்போது சொல்வேன் என்று சொல்கிறார். அப்படிச் செய்வது மக்களைக் குழப்புவதாகும். அதைவிட்டு, தைரியமாக இன்னார் தான், இவர்தான் பின்னால் இருந்தார் என்று சொல்லவேண்டும். அப்படிச் சொல்லி அதை நிச்சயமாக முறியடிக்க வேண்டும். அப்படிச் சொன்னால் தான் நல்ல காரியங்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய பொதுமக்களும் அவர்களை அடையாளங் கண்டு கொள்வார்கள். இல்லாவிட்டால் யார் என்று தெரியாமல் குழப்பம்தான் ஏற்படும். யாராக இருக்கும், ஜெபமணியாக இருக்குமோ அல்லது வேறு யாராவது இருக்குமோ என்று நினைக்கக்கூடிய நிலைமை வந்து விடும். எனக்கே கூட அந்த நிலை வந்து விடும். நான் என்னுடைய வீட்டுக்குப் போனால் வீட்டில்கூடக் கேட்கலாம், நீங்கள் இந்த காரி

யத்தில் ஈடுபட்டிருப்பீர்களோ என்று. இப்படிப்பட்ட சந்தேகம் வந்து விடக்கூடாது பாருங்கள். அதற்காகத்தான் நான் சொல்கிறேன், எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் ஆட்சியிலிருப்பவர்கள் அறுதியிட்டுக் கூற வேண்டும். இந்தக் காரியத்தை உங்கள் மத்தியிலே நாங்கள் எதிர் பார்க்கிறோம். நீங்கள் கூறுவதைத்தான் நாங்கள் முடிவாகக் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறோம். அவ்வாறு செய்ய வேண்டுமென்று நான் முதலமைச்சரவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டின் முன்னால் பிரச்னைகள் பல இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான பேர் ஜெயிலில் இருக்கிறார்கள். ஜெயிலில் இருப்பது பாவகரமான காரியம் என்பது அல்ல. இன்னும் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள், திறந்த வெளி ஜெயில் வேண்டுமென்றெல்லாம் சொல்கிறார்கள். அவைகளெல்லாம் எதற்கு ! ஆடுமாடுகளைக் கொண்டு போய்க் கட்டவா ! இப்படிச் சண்டை போட்டுக் கொள்பவர்களை மொத்தமாகக் கொண்டுபோய்த் தள்ளத்தான். போக வேண்டுமென்றால் யாரும் போக வேண்டியதுதான். அதைத் தவச் சாலையாகவும் கொள்ளலாம் அல்லது தற்கொலைச் சாலையாகவும் கொள்ளலாம்.

ஆனால் நெசவாளர் போராட்டம் என்றால், அவர்கள் எங்களுக்குத் தீபாவளிக்குப் பணம் வேண்டுமென்று கேட்டால், பெண்டு பிள்ளைகள் கேட்டால் அந்தப் பெண்டு பிள்ளைகளை ஜெயிலில் போடுவது இந்த அரசுக்கு அழகு அல்ல. திருநெல்வேலியில் சங்கரன் கோயிலில் அந்தப் பெண்டுகளையெல்லாம் கொண்டு போய்விட்டார்கள் இது முதலமைச்சருக்குத் தெரியாதா என்று கலெக்டரைக் கேட்டேன். எல்லோருக்கும் தெரியும் என்று அவர் சொல்லிவிட்டார். அந்தப் பெண்டுகளை ஜெயிலில் பார்த்தபொழுது அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். எங்கள் கஷ்டங்களைக் கேட்டால் ஓடோடி வருகின்ற தலைவர் இருக்கிறார் என்று நம்பிய அந்த பெண்டுகளை அந்த ஜெயிலில் போட்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) மாதரையும் மக்களையும் வன்கண்மையால் பிரிந்து, பிள்ளைகள் வீட்டிலே கிடக்க, தாய்மார்களெல்லாம் சிறையிலே கிடக்க இதைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

[பிற்பகல் 1·00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ர. ஜெபமணி : கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 நிமிடம்தான் உங்களுக்கு. ஆனால், 11 நிமிடம் கொடுத்தாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ர. ஜெபமணி : இப்படிப்பட்ட நிலையில், பிள்ளைகளையும், குழந்தைகளையும் பிடித்து அடைத்திருக்கிறார்கள். வண்ணாரப்பேட்டையிலே, குழந்தைகளையும் பிடித்து ஜெயிலில் அடைத்திருக்கிறார்கள். நாங்கள் டி.எஸ்.பி. யிடம் முறையிட்டுக் கேட்டோம், கலெக்டரிடம் முறையிட்டுக் கேட்டோம் அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்றால், எந்த அமைச்சர் எங்கேயிருக்கிறார் என்று எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த அவலநிலை மாறவேண்டும். பிறருடைய துன்பத்தைத் தங்கள் துன்பம் போல் பாவிக்கின்ற நிலை ஆட்சியிலிருப்பவர்களுக்கு வரவேண்டும் நீங்கள் ஆளுகிறீர்களா, நாங்கள் ஆளுகிறோமா என்பதல்ல பிரச்னை. இந்த நாட்டு மக்கள் பிரச்னை தீர்க்கப்படுகிறதா, அவைகள் தீர்ந்து அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா என்பது தான்.

நேற்று கடலிலே ஒரு சண்டை. கட்டுமரம் படகுக்காரர்களுக்கும் விசைப்படகுகாரர்களுக்கும் சண்டைக் 3 மைல் தள்ளிப்போய் விசைப்படகுகாரர்கள் மீன் பிடிக்க வேண்டும். 3 மைலுக்கு இங்கிருந்துதானே போகவேண்டும் அவர்கள் கரையிலிருந்து போவதற்கு முன்னால், சண்டை, அதற்காக, கோயாவோ, எதுவோ போட்டிருக்கிறார்களாம் அதிலே போலிஸ்காரர்களா உட்கார்ந்திருப்பார்கள் !......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜனதா கட்சிக் காரர்களுக்கு அளிக்கப்பட்ட 45 நிமிடத்தில், சுவாமிதாஸ் 20 நிமிடம் பேசினார் நீங்கள் 15 நிமிடம் கூடப் பேசுங்கள். ஆனால், நாளை உங்கள் தலைவருக்கு 10 நிமிடம்தான் கிடைக்கும்.

திரு. ர. ஜெபமணி : எங்களுடையது சின்ன கட்சி ஆகவே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சின்னக் கட்சி, ஆகவே, சிறிது நேரம். சீக்கிரம் முடியுங்கள்

[1978 ஜனவரி 4

திரு. ர. ஜெயமணி : நீங்கள் மீன் பிடிப்பவர்களுக்கு
ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்றால், விசைப்
படகுக்காரர்களுக்கு, 3 நாள், 4 நாள் வாரத்தில்,
கட்டுமரப்படகுக்காரர்களுக்கு 3 நாள், 4 நாள் வாரத்தில்
என்று யார், யாருக்கு என்று பிரித்துக் கொடுத்துவிடுவீர்
களானால், அந்தந்த நாட்களில் அவர்கள் மீன் பிடித்து
அண்ணன் தம்பியாக வாழ்வார்கள். அப்படியில்லை
யென்றால் இந்தப் பிரச்னை தீராது. அந்த ஏழை, எளிய
மீனவர்கள் வேட்டையாடுவது போல், 3 மைலுக்குள்
ளேயே சண்டை போடுவார்கள். இந்த மீன் பிடிப்பதே,
வேட்டை ஆடுபவர்கள் வேலைதான். 3 மைலுக்கு அப்
பாலே என்றால், இவர்கள் அங்கு செல்ல வேண்டும்.
இல்லையென்றால், அவர்கள் இங்கேயே இருக்க வேண்டும்.
ஆகவே, இந்தத் தொழிலே வேட்டையாடுகிற வேலை.
இந்த நல்ல வேலையில் அவர்கள் சக்தி பாழாகாமல் இருக்க
வேண்டுமென்றால், அவர்களுக்குக் குறிப்பிட்ட நாட்
களைக் கொடுங்கள், மற்ற நாட்களில் அவர்கள் ஓய்
வெடுத்துக் கொள்ளட்டும். இதனால், சண்டையும் நீங்
கும். இன்னும் நிறையப் பேச வேண்டியிருக்கிறது.
இருந்தாலும் சபாநாயகர் அவர்கள் தடுத்து நிறுத்து
கிறார்கள். அது அவருடைய உரிமை. அவருக்குப்
பணிய வேண்டியது என்னுடைய கடமை. ஆகவே, இத்
துடன் முடித்துக்கொள்கிறேன். ஜெய்ஹிந்த்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தலைவரவர்களே,
இன்று தமிழக சட்டமன்றத்தின் முன் புரட்சித் தலைவர்
தலைமையிலுள்ள ஆட்சியின் மீது, நம்பிக்கையில்லாத்
தீர்மானம் எதிர் கட்சித் தலைவர் அவர்களால் கொடுக்கப்
பட்டு, பல கட்சி உறுப்பினர்களும் இங்கே கருத்தைச்
சொல்லிக் கொண்டிருக்கும்போது, இந்திய தேசிய
பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்
களை இங்கே சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஜன
நாயகத்தில் 'Live and let live' என்பதுதான் ஜனநாயக மரபு
என்பதை நாம் அறிவோம். அதைப் போல் 'Rule and let others
rule' என்பதை நாம் கடைபிடிப்பது நல்லது என்பதை நாம்
அறிய வேண்டும். நாம் அறிந்திருக்கிறோம் என்று நான்
கருதுகிறேன்.

ஆக, ஒரு நாட்டில் மக்கள் பிரதிநிதிகள், தேர்ந்
தெடுக்கப்பட்டவர்கள், மெஜாரிட்டி பலம் கொண்டு ஆட்சி
பொறுப்பிலே அமருகிறபொழுது அத்தனை அரசாங்க

1978 ஜனவரி] [திரு. கே. கந்தசாமி]

நுணுக்கங்களையும் தெரிந்து அறிந்து அரசாட்சியிலே அமர
வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறு. அதே போல்
காரியங்கள் முதலில் கூறியபடி நடக்கவில்லையென்று
விமர்சனம் செய்வது அவ்வளவு முறையல்ல என்பதை
நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் சபையின் கவனத்திற்குச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சி
ஏற்பட்டவுடன் நாட்டின் நிலைமை என்னவென்பதை நாம்
அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிருந்து, டிஸ்மிஸ் செய்யப்பட்டு,
அதற்குப் பின்னால், ஜனதிபதி ஆட்சி சிறிது காலம் இருந்து,
நாட்டில் நமது தமிழகத்தைப் பொறுத்த அளவுக்குப் பற்றாக்
குறை பட்ஜெட் இருந்தது. இது அரசினுடைய நிலை.

மக்களுடைய நிலை என்னவென்றால், விவசாயம் மிக
வும் பாதிக்கப்பட்டு, எங்கு பார்த்தாலும் வறண்டு
போய், நாட்டின் பெரும் பகுதி வறட்சியாலே பாதிக்
கப்பட்டு, மக்கள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லையே,
தங்களுடைய உயிரை எப்படிக் காப்பது என்று அல்லல்
படக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலையிலிருந்தபோது
அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்.
அவற்றை நிவர்த்திப்பதற்கான திட்டங்களைத் தீட்ட முயலு
கிற காலத்தில், எதிர்பாராமல் என்னைப் போன்றவர்கள்
ஆண்டவன் என்று கூறுகிறோம் சிலர், இல்லையென்றால்,
இயற்கையின் சாதகப் பலனால், நாட்டில் மழை பெய்
தது; வறட்சி நீங்கியது, விவசாயம் ஓங்கி வளம் பெரு
கும் என்று எண்ணியிருந்த நேரத்தில், விட்டைக் கட்டும்
போது, அழகாக இருந்தால் கண்பட்டுவிடும் என்ற
வகையில், சுரைக்காயில் புள்ளி வைப்பது போல், சில
இடங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. (குறுக்கீடு)
பூசனிக்காயில் புள்ளி வைப்பது போல், சில இடங்களில்
வெள்ளச் சேதம் ஏற்பட்டது. அதனுடைய விளைவைத்
தாங்குவதற்கு நமது பொருளாதாரச் சக்திக்கு மேற்
பட்ட நிலையில் ரூ. 200 கோடிக்கும் மேல் சேதம் ஏற்பட்ட
நிலையில், அதற்கு மத்திய அரசு கணிசமான உதவி தர
வேண்டுமென்றாலும், இன்னும் கிடைக்காத நிலைமையில்
நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். இது இவ்வாறு இருக்
கிற நிலையில், எதிர்பாராத நிலையில் போராட்டங்கள்
தொடர்ந்து நடந்து, பலவிதமான சோதனைகள் வந்து,
அவற்றை இந்த அரசு சந்திப்பதை நாம் பார்க்கிறோம்,

[திரு. கே. கந்தசாமி] [1978, ஜனவரி 4

இயற்கை இவ்வளவு சோதனைகளை செய்கிற நேரத்தில், மக்கள் வறட்சி நீங்கிவிட்டது என்று மகிழ்ச்சி கொள்கிற நேரத்தில் வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட சேதத்தை கண்டால், கொடூர நெஞ்சம் படைத்த மனிதனும் இளகும் வகையில், ரத்தம் சொட்டுகிற அளவுக்கு மனித உடல்களை பிரேதங்களை நாங்கள் பார்த்தோம்.

குறிப்பாக வேடசந்தூர் பகுதியில் நான் உள்ளாட்சித் துறை அமைச்சருடனும், மாவட்ட ஆட்சித் தலைவருடனும் சென்று பார்த்தபோது பனை மரத்தில் 4 ஆள் உயரத்தில்—அங்கு 20 அடி 30 அடி உயரத்தில் தண்ணீர் வந்தது—எருமை கால்களைப் பரப்பிக்கொண்டு, உடம்பு முழுவதும் ஊதிப்போய் இருந்தது. ஆனால் உயிர் இல்லை. பிரேதங்கள் அனைத்தும் பீதி அடைந்த நிலையில், அதிர்ச்சியான நிலையில் கிடந்தன. 'ஆ' என்று வாயைத் திறந்த நிலையில் கிடந்தன. அங்கு முன்பு தண்ணீர் கிடைக்காமல் காலணா அரையணாவுக்கு வாங்கிக் கொண்டிருந்த இடத்தில், 20 அடி உயரத்திற்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய புயலோடு வெள்ளமும் வந்த உடன் அதிர்ச்சி தாங்காமல் உயிரை விட்டவர்களின் பிரேதங்களைப் பார்த்தோம்.

அப்படி மனித உயிர்களை குடித்து உடமைகளை, கோடிக்கணக்கான மதிப்புக் கொண்ட உடமைகளைப் பறிகொடுத்த நிலையில், அவற்றை எப்படி சமாளிப்பது, அதை எப்படி நீக்குவது அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க எப்படி பணியாற்றுவது என்ற நிலையில் அரசு தீவிரமாக ஈடுபட்டது.

இன்று கலைஞர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை நீண்ட நாள் பல சோதனைகளைச் சந்தித்து இருக்கிறார்கள். முதல்வராக இருந்தபோது பலவிதமான போராட்டங்களை சந்தித்து பல விதமான இக்கட்டுகளை தீர்த்து வைத்திருக்கிறார்கள். எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு அரசுப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் என்னதான் செய்வார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே இருப்பவர்கள் ஆளுங்கட்சியாக உள்ளவர்களுக்கு ஆலோசனை கூறவேண்டுமென்று அறிவுரை சொல்ல வேண்டுமென்று

1978 ஜனவரி 4] [திரு. கே. கந்தசாமி]

உள் எண்ணத்தோடு, வெளித் தோற்றத்திற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானமாக கொண்டு வருவதன் மூலம் அவர்களுக்கு எதிர்காலத்தில் படிப்பினை கொடுக்க முடியும். அதே நேரத்தில் நாட்டு மக்கள் மத்தியிலே நாம் எதிர் கட்சியாக இயங்குகிறோம், என்ற எண்ணத்தை ஏற்படுத்தலாம் என்கிற ஜனநாயக எண்ணத்தோடு கொண்டுவந்ததைப் பாராட்டுகிறேன். அதை விமர்சனமாகச் சொல்லாமே தவிர, ஒரு பெரும் குற்றச்சாட்டாக எடுத்து, அரசின் மீது நம்பிக்கையில்லை, ஆகவே அரசைக் கவிழ்க்க வேண்டும் என்று அவர்கள் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை என்று அவர்கள் பேச்சிலே தெரிவித்தார்கள். ஆகவே அவர்களுடைய தீர்மானத்தை நல்ல வாய்ப்பாக எடுத்துக் கொண்டு தங்கள் கட்சியிலும் மற்றக் கட்சியிலும் சொல்லப்படுகின்ற கருத்துக்களை,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் நடத்தவேண்டிய நல்ல பல திட்டங்களைத் திறம்பட நடத்துவதற்காக இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டார்கள் என்று கருதலாம். இன்று' எப்படிப்பட்ட சோதனைகள், நெசவாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஆசிரியர்கள், பேராசிரியர்கள். வங்கி ஊழியர்கள் இப்படி பல தரப்பட்டவர்களும் தொடர்ந்தாற்போல், சொல்லி வைத்தாற்போல போராட்டங்களை நடத்தினார்கள். அதை அவர்கள் நடத்துவதற்குக் காரணம் அவர்களுடைய பிரச்சினை ஆங்காங்கே இருந்தது என்பது உண்மைதான். ஏற்கனவே இருந்ததையும், புதிதாக இப்போது உள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருதியும் அவர்கள் போராடினார்கள். அதே நிலையில் அவர்கள் அரசியல் சார்பில்லாமல் நடத்தினார்களா என்றால், இல்லை என்பதுதான் என்னுடைய தெளிவான முடிவு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆட்சி என்பது ஜனநாயக சுழற்சியில் மாறி மாறி வரக்கூடியது. ஒரு அரசியல் சூழ்நிலையின் காரணமாக அன்றைய தினம் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் ஆட்சியில் அமருவதும் எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றம் அடைவதும் என்கின்ற சகஜநிலையை நாம் பார்த்தோம். அந்த அளவுக்கு ஆட்சியில் ஒரு கட்சி அமர்ந்திருக்கும்போது, ஆட்சியில் அமர்ந்திருப்பவர் எதிரியாக இருந்தாலும், பரம வைரியாக இருந்தாலும்கூட, அவர்களிடம் காண்கிற நல்ல பண்புகளை நாம் பாராட்டுகிற நல்ல எண்ணத்தையும் அதே நேரத்தில் அவர்கள் உற்ற நண்பர்களாக இருந்தாலும்

அவர்களிடத்திலே குறைகள் இருந்தால் அவற்றைக் களைந்து எறிய வேண்டுமென்று அறிவுறுத்துவது நம் கடமை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இன்று அரசியல் ரீதியாக கலைஞர் அவர்களும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் மிகுந்த பெருந்தன்மையோடு இன்னும் தாராளமாக 6 மாதம் என்பதை ஒரு வருடம் 2 வருடம் என்பதை டைம் லிமிட்டை அதிகமாகக் கொடுத்து அவர்கள் செய்கிற தவறுகளை இன்னின்ன தவறுகளை நீங்கள் செய்திருக்கிறீர்கள் [illegible] நல்லது என்று அளவில் சொல்லி, இ[illegible] போவதுதான் கொண்டு வருவோம். [illegible] கொண்டு வருவோம் என்று [illegible] இருக்கும். அதன் [illegible] ஊழல் என்று [illegible] செய்தோமே என்று [illegible]. அந்த போல் இவர்கள் செய்த [illegible] பார்க்கக்கூடாதா!

[illegible]

என் அருமை [illegible] இருக்கிறது [illegible] செய்யாதது [illegible] இப்போது அவர்கள் [illegible] வேண்டும் என்று [illegible] கொள்கிறேன்.

இன்றைக்கு [illegible] நிலைகள் அநியாயங்கள் [illegible] வருகிறது. [illegible] களைத் தவிர [illegible] வந்தவர்கள். அ[illegible] நிலையை சந்தித்துக் கொண்டு இ[illegible] அவர்கள் மன்றாடி இருக்க [illegible] இருப்பவர்கள் [illegible] மாக மக்களுக்கு [illegible] மன்றாடி [illegible] அந்த மாதிரி எப்படி [illegible] ஆளாக்கப்படுபவர்கள்.

ஆகவே, அரசியலில் [illegible] மக்கள் அவர்களுக்கு ஆள்வதற்கு வாய்ப்பு அளித்து இருக்கிறார்கள். நாம் பொறுத்து இருந்து பார்க்கக்கூடாதா என்று கேட்டுக்

கொள்கிறேன். குறிப்பாக நாம் இன்னும் பெருந் தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும். பத்திரிக்கையில் தனிப்பட்டவர்களின் குடும்பத்தையும், தனிப்பட்டவர்களையும் கடுமையாக, ஆபாசமாக விமர்சிப்பது தடுக்கப்பட வேண்டும் என்கிற கருத்தை நான், சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பலவிதமான போராட்டங்கள் நடந்தன. கடந்த காலத்தில் நடந்த, குறிப்பாக, விவசாய மக்கள் மின் கட்டண உயர்வு பற்றி கோவை மாவட்டத்தில் ஒரு போராட்டம் நடத்தினர். அதற்காக அவர்கள் வண்டியை வைத்து நடத்தினார்கள். அவர்கள் மீது தடியடி நடத்தி, அதில் 48 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்தச் சூழ்நிலைக்கான காரணங்களில் நான் போக விரும்பவில்லை. அந்தக் [illegible] கொல்லப்பட்ட பேர்கள் அனைவரும் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்கிற நியாயமான போராட்டத்தை வலியுறுத்தி செய்தனர். இ[illegible] அன்று [illegible] பிராப்ளம் எங்கே வந்தது? போலீஸ் [illegible] பிரயோகம் செய்தது? 48 பேர் விவசாயி [illegible] கள் சுடப்பட்டார்கள். திருப்பதியில் [illegible], சவ ஊர்வலம் நடத்தப்படவில்லையா? [illegible] இன்றைக்கு என்ன அதிகமாக [illegible] என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று [illegible] கொள்கிறேன்.

மாணவர்கள் [illegible] அண்ணாமலை பல்கலைக்கழகம், கும்பகோணம் போன்ற இடங்களில் மாணவர்கள் சுடப்படவில்லையா? இன்றைக்கு அந்தகைய கடுமையான போராட்டங்கள் [illegible] எத்தகைய கொந்தளிப்பு [illegible] தலைவர் அவர்கள் பொறுமையை இழக்காமல் [illegible] யோடு இருந்து அந்தக் காரியத்தில் [illegible]. கட வேண்டிய சந்தர்ப்பங்கள் [illegible] சேதம் ஏற்படுகிற நேரத்தில் [illegible] இருந்து பொறுப்போடு நடந்து [illegible] நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல விவகாரங்களில் பேச வேண்டியிருக்கிறது. நேரமில்லை.

ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறோம். இந்திரா காந்தி அவர்கள் எங்களுடைய கட்சி அல்ல. ஆனால் அவர்கள் இங்கே சுற்றுப் பயணத்திற்கு வருகிறார்கள். 11 வரு

ஷம் பிரதம அமைச்சராக இருந்தவர்கள். அவர்களுக்கு ஜனநாயகத்தைப் பறித்ததற்காக கறுப்புக்கொடி போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நடந்தது என்ன? ஒரு பெண் பிள்ளையை வரிந்து கட்டிக்கொண்டு தாக்க முற்பட்டால் எந்த ஜனநாயகத்தைப் பயன்படுத்தி அந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்று சொல்கிறார்களோ அதையே பகிரங்கமாக பிடுங்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருந்தது. நான் மதுரையில் இருந்தேன். அதைக் கண்ணால் பார்த்தேன். ஆகவே, அவர்களைக் கடுமையாக அந்த அளவிற்கு தாக்கவேண்டியது தேவைதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜனநாயகத்தைக் காக்கக்கூடிய அரசு இங்கே சில உறுதிமொழிகளைக் கொடுத்தார்கள், அதை நிறைவேற்றவில்லை. என்றார்கள். (மணியடிக்கப்பட்டது). சீக்கிரம் முடித்துவிடுகிறேன். முன்பெல்லாம் 15 நிமிடம் கொடுப்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் 15 நிமிடம் பேசிவிட்டீர்கள். இன்னும் இரண்டு பேர் பேச வேண்டியிருக்கிறது. முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி : ஆகவே, இந்த ஃபிளட் ரிலிப்பை பொறுத்த வரையில் முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு தமிழக அரசை பாராட்டுகிறவர்கள் என்றாலும் கூட மாண்புமிகு மொரார்ஜி தேசாய் உள்ளிட்ட அத்தனை அமைச்சர்களும் பாராட்டி இருக்கிறார்கள். கவர்னர்கள் பாராட்டியிருக்கிறார்கள். புயலைப் பற்றி தகவல் அறிவிக்கப்பட்ட உடனே தானாக அதிகாரிகள் அத்தனை பேரையும் அழைத்துப் பேசி உரிய காலத்திலே நடவடிக்கை எடுத்ததன் விளைவாக பல கோடி உயிர்கள், பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை காப்பாற்றியிருக்கிறார்கள். தூய நிர்வாகம் என்று வெளியேயிருந்து பேசாமல், பொறுப் பேற்று, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள்.

அனுவசியமாக ரெக்கமண்டேஷன் போகவேண்டாமென்று சொன்னார்களே தவிர, ரெப்ரசென்டேஷன் கூட வேண்டாமென்று சொல்கிற அளவிற்கு சில அதிகாரிகள் இன்டர்பிரடேஷன் பண்ணிக்கொண்டு இல்லீகல் கஸ்டடியில் இருப்பவர்களைக் கூட விடமாட்டேன் என்கிறார்கள். அருள் கூர்ந்து முதல்வர் அவர்கள் ரெக்கமண்டேஷன் தான் செய்யக் கூடாது ரெப்ரசென்டேஷன் அல்ல என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள். 15 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டு பேர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : இப்படி நல்லாட்சி நடைபெறுவதற்கு அத்தனை எதிர்க்கட்சிக்காரர்களும் பாராட்டுவதுதான் முறை. நாட்டுக்கு நல்லது. எனவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, அது தேவையில்லாத ஒன்று என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

1968-ல் அண்ணா அவர்கள் ஆட்சியில் கருணாநிதி அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில் யார் யார் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவும், யார் யார் எதிர் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துக் கொள்ளத்தான் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

அதே போல் இன்றைய எதிர் கட்சித் தலைவருக்கு எந்தெந்தக் கட்சியினர் அந்தத் தீர்மானத்திற்குத் துணையாக நிற்கிறார்கள் என்பதைப் புரிந்துக் கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதுமற்ற எந்தக் கட்சிக்கும் நம்பிக்கையில்லை என்பதை இந்தச் சபை இவ்வளவு நேரமும் எடுத்துக் காட்டிற்று. ஆறு மாதத்திற்கு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம் என்ற ஒரே காரணத்திற்காக இச்சபையின் அரசு நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்று நான் கூற ஆசைப் படுகிறேன்.

இங்கே பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாணவர்கள் போராடுகிறார்கள், தொழிலாளர்கள் போராட்டம் நடைபெற்றது. பேராசிரியர்கள் போராட்டம் நடைப்பெற்றது. பொறியாளர்கள் போராட்டம் நடைப் பெற்றது

என்று கூறினார்கள். இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு எப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறதோ, எப்படி அவர்களுக்கு சபையிலிருந்து வெளி நடப்பு செய்வதற்கு உரிமை இருக்கிறதோ அதே போல் அவர்களுக்கும் அந்த உரிமை உண்டு.

அப்படிப்பட்ட போராட்டங்கள் எல்லாம் எங்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்டால் நாட்டிலே பிரளயம் ஏற்படும் என்று கூறினார்களே அந்த வாக்கியத்திற்குள் அடங்கிக் கிடக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். போராட்டங்கள் நடைபெறுவது உண்மை. போராட்டத்தின் விளைவு என்ன என்பதைத் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று மாணவர்கள் தங்கள் உள்ளக் குமுறலை எடுத்துச் சொன்னால் அவர்களுக்கு ஏற்பட்ட நிலை என்ன மண்டைக் கபாலங்கள் பிளக்கப்பட்டன என்று சொன்னார்கள். எத்தனை மாணவர்களுடைய மண்டைக் கபாலங்கள் பிளக்கப்பட்டன, கால்கள் ஒடிக்கப்பட்டன, கரங்கள் ஒடிக்கப்பட்டன, தசைகள் முறிக்கப்பட்டன ?

ஊர்துநாதன் சாகவில்லையா? பாலசுந்தரம் சாகவில்லையா? கிளைவ் விடுதியில் ரத்த ஆறு ஓடவில்லையா? இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் இன்றைக்குத்தான் இப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெறுகிறதா என்பதை இந்த நாடு புரிந்து கொண்டிருக்கிறது. அந்த வினாவுகளுக்கு இந்த அரசு பொறுப்பல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.......

[பிற்பகல் 1-20.]

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், பார்த்தீர்களா, என்னைத்தான் சிறைக்கு அனுப்பினார்கள், 307-வது செக்‌ஷனை என் மீது போட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இன்றைய சபாநாயகர் அவர்கள் பேரிலும், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.கே. தங்கமணி பேரிலும் பொய் வழக்கு போடவில்லையா நீங்கள்? கே.டி.கே. தங்கமணி ஒரு கூட்டத்தில் பேசிய குற்றத்துக்காக, அவர்களின் மீது 307-வது செக்‌ஷனை போட்டவர்கள் இன்று வேதனையாக குறிப்பிடலாமா என்ற கேள்வியை கேட்க ஆசைப்படுகிறேன். பொய் வழக்கு என்றால் ஒன்றா இரண்டா அவர்கள் போட்டார்கள். 25,000-க்கு மேற்பட்ட பொய் வழக்குகளை அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் மீது போட்டு, அவர்களைச் சித்திரவதை படுத்தியவர்கள். சீர் குலைத்தவர்கள், இன்று வழக்குப் போடுகிறார்களே என்று கேட்கிறார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டார்கள். நிதியமைச்சர் மீது பொய் வழக்குகளைப் போட்டார்கள். எங்களுடைய அமைப்புச் செயலாளர் மீது பொய் வழக்குகளைப் போட்டார்கள். இங்கே அமர்ந்திருக்கின்ற எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களில், பெரும்பான்மையானவர்கள் பொய் வழக்குகளில் சிக்கித் தவித்தவர்கள் தான். அப்படி பொய் வழக்குப் போட்ட அவர்கள், இன்றைய தினம் எங்கள் மீது பொய் வழக்குப் போட்டுவிட்டார்களே என்கிறார்கள். எங்கள் மீது 307 செக்‌ஷனைப் போட்டு விட்டார்களே என்று இன்று குறை கூறுகிறார்கள்.

சிவகங்கையில் ஒரு வழக்கறிஞர் மீது அலுமினியம் திருடியதாக வழக்குப் போட்டார்கள். விருத்தாசலத்தில் ஒரு வழக்கறிஞர் மீது கோழி திருடினார் என்று வழக்குப் போட்டார்கள். வழக்கறிஞர் என்பவர் யார் ? அதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக கூற விரும்புகிறேன் வழக்கறிஞர் என்றால் வழக்காடுகிறவர்களா ? ஆங்கிலத்தில் சொன்னால் 'Supreme Commander of the sovereign of the State' அவர்களின் பேரில் போடப்பட்ட வழக்கு கோழி திருடினார் என்பது.

இன்னொன்றைக் குறிப்பிட்டார்கள். விசாரணைக் கமிஷன் வைக்கிறீர்களா என்று. எங்கள் துணைப் பொதுச் செயலாளரை ஏர் போர்ட்டில் கொல்வதற்கு முயற்சித்தார்களே, எங்கே விசாரணை? சேலத்தில் பாராங்கல்லை போட்டு சாகடிக்க முயற்சித்தார்களே, அதற்கு விசாரணை எங்கே ? ஆவடியில் புரட்சித் தலைவர் பேசவிருந்த கூட்டத்தில் தீ வைக்க முயற்சித்து அவர் போன காரை தீ வைக்க, நொறுக்க சதி செய்த சதிகார சண்டாளர்களை, கண்டித்து அவர்கள் யாராவது கண்ணீர் சிந்தினார்களா ? நாங்கள் இன்று கண்ணீர் சிந்துகிறோம் என்று உணர்வோடு கொட்டித் தீர்க்கிறீர்களே.

ஒரு டைரியை பற்றி சொன்னார்களோ என்னென்னவோ. எங்கள் புரட்சித் தலைவரை விளம்பரப் பிரியர். யார் விளம்பரப் பிரியர் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

[திரு மி. வின்சென்ட்] [1978 ஜனவரி 4

இந்திரா காந்தி அம்மையாரோடு கை கோர்த்து நின்று விளம்பரம் போட்டு, எல்லா மாற்றுக் கட்சிக்காரர்களும் அதை எதிர்த்துச் செய்த பிரசாரத்தின் விளைவாக, இந்திரா காந்தி அம்மையார் அவர்களே இது கண்டிக்கத்தக்கது என்று சொன்ன பிறகு அகற்றப்பட்டது எல்லோருக்கும் தெரியும்.

அது மட்டுமல்ல, முஜிபுர் ரஹ்மான் அவர்களோடு போட்டோ எடுத்து, முஜிபுர் ரஹ்மான் அவர்களே என்று விளம்பரப்படுத்தினார்கள்.

இவர்கள் புரட்சித் தலைவரை விளம்பரப் பிரியர் என்கிறார்கள். இன்னொன்றையும் வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டிலாவது இவர்கள் விளம்பரத்தை விட்டார்களா? நாம் இருவர், நமக்கு இருவர் என்று சொல்லுகிற இடத்தில் கூட தம்முடைய போட்டோவைப் போட்டுக் கொண்டவர்கள், செய்தித் துறையினுள் சென்று Edit பண்ணியவர்கள் இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது. 7 ஆண்டு கால தமிழரசைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். எந்த அமைச்சருடைய படம் அதிகமாக உள்ளது? ஒரே ஒருவர் படம் தான் விளம்பரத்தில் நின்று கொண்டிருந்தது என்பதை நாடு அறியும். கல்லாறு ஆனாலும், புல் ஆனாலும், நெல் ஆனாலும் கல்லூரி ஆனாலும் தன் பெயரை வைத்துக் கொண்டவர்கள், இன்று கேட்கிறார்கள் விளம்பரப் பிரியர்கள் என்று.

காமராசர் அவர்கள் சொன்னார்கள், வெளிப்படையாகவே சொன்னார். விளம்பரப் பிரியர் என்று கூறினார். அப்படிக் கூறிவிட்டு, நான் என்னுடைய பொழுது போக்குக்காக எப்போதாவது படம் பார்க்கப் போவேன். ஆனால் இப்போது படம் பார்ப்பதை நிறுத்தி விட்டேன். ஏனென்றால், படத்தில் எங்கே பார்த்தாலும் ஒரே ஒரு விளம்பரப் பிரியர் வருகிறார் என்று சொன்னதை இந்த நாடு புரிந்து வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வாய் ஜாலம் காட்டுகின்ற நண்பர்களைக் கேட்கிறேன்.

அடுத்து, எமர்ஜென்சியை நாங்கள் ஆதரிக்கவில்லை, மிசாவை எதிர்த்தவர்கள் நாங்கள் என்று இன்று சொல்கிறார்களே, அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்டி குறிப்பிட விரும்புகிறேன். பரோடா டைனமைட் வழக்கிலே,

1978 ஜனவரி 4] [திரு மி. வின்சென்ட்]

சி. ஜி. கே. ரெட்டி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்—

The total failure of Karunanidhi to perceive the developing situation during the last days of his Chief Ministership and his surrender to Mrs. Gandhi when she ultimately dismissed him, will remain the high water mark of his stupidity and cowardice by a shrewd politician during the Emergency.

என்பதனைத் தெரிவித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கித் தருவார்—தந்திருக்கிறார்கள்—என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை.

திரு. து. புருஷோத்தமன்: எனக்கு முன்பு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் ஐந்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறார். நீங்கள் உங்கள் பேச்சைத் துவக்குங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒட்டி அதனை ஆதரித்து, நாட்டிலே நடைபெறுகின்ற பல்வேறு குற்றங்களில் ஒருசிலவற்றை மட்டும் எடுத்துச் சொல்ல இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

ஆளுங் கட்சியினர் நாட்டிலே தேர்தலுக்கு முன்னால் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். நாட்டு மக்களும் நிறைய எதிர்பார்த்து அவர்களை இங்கே அமர்த்தி இருக்கிறார்கள். இங்கே கூட இந்த அவையிலே அவர்கள் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்து அவையாவும் இது வரையில் நிறைவேற்றப்படவில்லை என்ற நிலை இருக்கின்றது. ஆனால் இன்றைய தினம் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல கலைஞரின் பெயர் எங்கும் இருக்கக்

கூடாது என்ற ஒரே எண்ணத்தாலே ஒரு சட்டத்தைப் போட்டு, பல்வேறு தியாகங்களைச் செய்த அரசியல் தலைவர்களுடைய பெயரை எல்லாம் நீக்கிவிடுவது என்பது நிச்சயம் வேதனை தருவதாகும் என்பதை இந்த நேரத்தில் சொல்வது எனது கடமையாகும்.

என்னைப் பொறுத்தவரையில், எனது தொகுதியில் அரசாங்கப் பணியாளர்களின் குடியிருப்பிலே, அந்தப் பணியாளர்களே சேர்ந்து அமைத்த சங்கத்திலே தீர்மானம் போட்டு நிறைவேற்றப்பட்ட அந்தப் பெயரை இன்றைய தினம் எடுத்திருக்கிறார்கள். அதைப் பிடுங்கி எறிந்திருக்கிறார்கள். அதேபோல, கருணாநிதி மாளிகையில் அந்தப் பெயரை பிடுங்கி எறிந்திருக்கிறார்கள். இதற்கா உங்களை மக்கள் ஆட்சிக்கு அமர்த்தியிருக்கிறார்கள்? பொது மக்கள் இதையெல்லாம் பார்த்து தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். எனக்குச் செய்தி வந்து, நானே சென்று அங்கே கலகம் விளைவிக்கக்கூடாது என்று எடுத்துக் கூறி, அங்கிருந்த அரசாங்க ஊழியர்களுக்கும் காவல் துறையினருக்கும் ஒத்துழைப்பு தந்திருக்கிறேன். அதற்கு, இன்றைய தினம் என் மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள்—சதி வழக்கு போடப்பட்டிருக்கிறது.

ஆளுங்கட்சிக்காரர்கள் எதை எடுத்தாலும் அண்ணாவின் பெயராலே—கட்சியைப் பயன்படுத்தி இருப்பவர்கள் அக்குடும்பத்தில் அண்ணியார் ஒருவர் தான் அண்ணாவின் நினைவாக இருக்கிறார். அண்ணியாரின் பெயராலே இருக்கின்ற ராணி அண்ணாதுரை பெயரால் இருக்கக்கூடிய சமூகக் கூடத்தின் பெயரை நீக்க வேண்டுமென்று இன்றைய தினம் தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த அளவுக்குக் கொடுமை என்பதையும் அப்படிப்பட்டவர்கள் தான் அண்ணாவின் பெயரை இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, புயல்-வெள்ளம் என்று எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு பயங்கரமான சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் அமைச்சர்கள் எங்கே இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சரும், பல்வேறு அமைச்சர்களும் எல்லா நிகழ்ச்சியையும் ரத்து செய்து விட்டு நிவாரண பணிகளுக்கு உடனே சென்றிருக்க வேண்டும். அப்படிச் சென்றார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நமது முதல் அமைச்சர் அவர்களும் 8 அமைச்சர்களும் நடிகை

திருமதி லதா அவர்கள் நடிக்கும் படத்தைத் துவக்கச் சென்றிருக்கிறார்கள். முடுக்கி வைக்கிறார் காமிராவை முதலமைச்சர். அடித்திருக்கிறார் கிளாப்பை, நிதி அமைச்சர். மற்றொரு அமைச்சர் குத்து விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்க, மற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்யாமல், இன்றைய தினம் அப்படிப்பட்ட கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு சமயம், ரஷ்ய நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, இரவு முழுவதும் நடனத்தை கண்டு களித்திருக்கிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் இதைப் போல நான் பலவற்றை எடுத்துச் சொல்ல முடியும்.

[பிற்பகல் 1–30]

தலைவரவர்களே, நான் மற்றும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு சாமிதாஸ் அவர்கள் சொன்னதைப்போல, முதலமைச்சர் அவர்களையோ பிற அமைச்சர்களையோ பார்க்க முடியவில்லை. குறிப்பாக ஒன்றைச் சொல்லுவேன், ஒவ்வொரு அமைச்சரும் சுற்றுப் பயணம் செய்யும் போது கூட மக்கள் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று முயற்சித்தால் முடியவில்லை, அமைச்சர் அவர்கள் சிலம்ப ஆட்டத்திலும், கோல் ஆட்டங்களிலும், கொம்பு சுற்றிக் கொண்டிருந்தால் மக்கள் அவர்களை எப்படி சந்திக்க முடியும்? பயப்படுகிறார்கள்.

அதே போல ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை, ஒத்திவைத்துக்கொண்டே போகிறார்கள். கன்டோன்மென்டு தேர்தல் முடிவைப் பார்த்து உள்ளபடியே தேர்தல்களைக் கண்டு ஏன் பயப்படுகின்றார்கள் என்று தெரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> முடியுங்கள், முடியுங்கள்.

<u>திரு. து. புருஷோத்தமன்:</u> முடித்துக் கொள்கிறேன். அண்ணா சாலையிலுள்ள அரசாங்க நிலத்திலே ஏறத்தாழ நான்கு கிரௌண்டு நிலம் இருக்கும். அங்கே ஒரு கிரௌண்டு என்பது ரூ. 40 ஆயிரம் போகும் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே ஒரு கட்டிடத்தைக் கட்டிக்கொண்டு........

[1978 ஜனவரி 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : இதோ சில படங்கள் இருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போட்டோக்களை என்னிடம் முதலில் காண்பியுங்கள். என்னுடைய அனுமதியோடுதான்........

திரு. து. புருஷோத்தமன் : உங்கள் அனுமதியோடு தான்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலில் என்னிடம் கொடுத்து அனுமதி பெற்று இருக்க வேண்டும். இப்போது உட்காருங்கள்.

இந்த அளவோடு இன்றைய காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குத் தொடங்கும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4—00 மணி]

[பேரவை மீண்டும் மாலை 4—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் கூடியது.]

(3) ஒழுங்குப் பிரச்சினை

திரு. க. சுப்பு 31—12—77-ம் நாளன்று எழுப்பிய ஒழுங்குப்பிரச்சினைமீது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பு—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 31—12—1977-ம் தேதியன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 1977-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யும்போது திரு. க. சுப்பு அவர்கள் இரண்டு ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பினார்கள்.

ஒன்று, ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று பேரவை விதி 142-ன்கீழ் தீர்மானம் கொண்டுவர அறிக்கை கொடுத்திருக்கும்போது மேற்படி சட்டத்திற்கு சம்பந்தப்பட்ட பதில் சட்ட முன்வடிவை அமைச்சர் அறிமுகப்படுத்துவதை அனுமதிப்பது முறைதானா?

1978 ஜனவரி 4] [பேரவைத் தலைவர்]

இரண்டு, ஆளுநர் அவர்கள் அவசரச் சட்டம் போட வேண்டிய சூழ்நிலையை விளக்கி ஒரு அறிக்கை பேரவை விதி 142-ஏயின் கீழ் அவசரச் சட்டம் பிறப்பித்ததற்குப் பின் கூடும் கூட்டத்தொடரின் ஆரம்பத்தின்போதே வைக்க வேண்டும். அப்படி வைக்காமல் இருந்தது முறைதானா?

முதல் ஒழுங்குப் பிரச்சினைக்கு, சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுக்கப்படும் அதே நாளில் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்பதற்கான தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், ஆகவே சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதில் தவறில்லை என்றும் அன்றே நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன்.

இரண்டாவது ஒழுங்குப் பிரச்சினைக்கு, எனது முடிவை பின்னர் கூறுவதாக அறிவித்தேன்.

திரு. க. சுப்பு எடுத்துக் காட்டியது விதி 142-ஏ ஆகும். அந்த விதியின்படி அவைமுன் ஏற்கனவே ஒரு சட்ட முன்வடிவு ஆய்வில் இருந்து, அவ்வாறு ஆய்வில் இருக்கும் சட்ட முன்வடிவின் பகுதிகளை உள்ளடக்கியோ அல்லது அதைவேறு விதமாக மாற்றியோ ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தால் அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அவசர சூழ்நிலையை விளக்கி ஒரு அறிக்கையை சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடும் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலேயே வைக்க வேண்டும்.

பேரவை விதி 91-ஏ ன்படி அவசரச் சட்டதிற்குப் பதில் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தும்போது அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டிய அவசர சூழ்நிலையை விளக்கி அறிக்கையை அவைமுன் வைத்தால் போதும்.

இப்போதுள்ள அவசரச் சட்டங்கள் அவைமுன் ஏற்கனவே உள்ள சட்ட முன்வடிவுகளுக்கு பதிலாகக் கொண்டு வரப்படுபவை அல்ல. இவை புதிய சட்டங்கள். ஆகவே அவர் எடுத்துக்கூறிய பேரவை விதி 142-ஏ இதற்கு பொருந்தாது. விதி 91-ஏ தான் சரியான விதியாகும்.

ஆகவே அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டிய சூழ்நிலையை விளக்கும் அறிக்கைகளை சட்டமுன்வடிவுகள் அறிமுகம் ஆகும் போது அவைக்கு வைத்தால் போதும்.

எனவே, அவையின் முறைகள் எதையும் மீறவில்லை என்றும், எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனைக்கு ஆதாரம் ஒன்றுமில்லை எனவும் முடிவு செய்கின்றேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1977-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/77)

மாண்புமிகு கா.காளிமுத்து: 1977-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அமைச்சர் ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் சொல்லலாம்.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா; அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் பேரில் ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார். பிரிவு(1) சப்-கிளாஸ் (1) திருத்தத்தை இப்போதே முன்மொழிகிறாரா அல்லது ....ஏனென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை பிரிவு—1 எடுத்துக் கொள்ளும்போது எடுத்துக் கொள்ளலாம்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து ; தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட இந்த மசோதா, 6 மாத காலம் மேற்கொண்டு ஸ்பெஷல் ஆபீசருடைய காலத்தை நீடிப்பதற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த 6 மாத காலம் என்பது அக்டோபர் 31-லிருந்து என்று பார்த்தால், ஏப்ரல் முடிய வரும் என்று நான் கருதுகிறேன். அப்படியென்றால் இந்த 6 மாதங்கள் முடிந்த பிறகாவது இந்த மதுரை முனிசிபல் கார்பரேஷனுடைய தேர்தல் நிச்சயமாக நடத்தப்

@ 31—12—1977 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

படுமா? இல்லையா? இன்னும் வேறு ஏதாவது காரணங்கள் வருமானால் மேற்கொண்டும் ஒத்தி வைக்கப்படுமா என்பதற்கான பதிலை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து நான் எதிர்பார்க்கிறேன். இந்த முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து எல்லாவற்றுக்குமே தேதியை ஒத்தி வைத்து மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்படி நீட்டித்துக் கொண்டு போவது நல்லதுதானா? தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் அந்தந்தப் பிரதேசங்களில் எழுகிற பிரச்னைகளைக் கவனித்து செயல்படுவதற்குப் பதிலாக அதிகாரிகள் நடத்திக்கொண்டு போவது என்றால் நிர்வாகச் சிக்கலும், எந்தவிதமான முடிவும் எடுக்கமுடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டு, அங்கு தவறுகள் ஏதாவது இருந்தால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் இல்லாததால் அவற்றைச்சுட்டிக் காட்டி திருத்தி செயல்படுத்தப்பட முடியாத நிலை எல்லாம் இப்படி நீட்டித்துக்கொண்டு போவதால் ஏற்படுகிறது. எனவே, எந்தக் காரணமாக இருந்தாலும், எவ்வளவு சங்கடங்கள் இருந்தாலும் கூட மேலும் மேலும் இந்த மாதிரி நகராட்சிகள் ஆகட்டும், உள்ளாட்சிகளாகட்டும், ஒன்றியங்கள் ஆகட்டும், காலத்தை நீட்டித்துக்கொண்டு போவது சரியல்ல, நல்லதல்ல. எனவே, இந்தக் கால நீட்டிப்பு இதோடு இருக்கட்டும், மேலும் நீட்டித்து இந்த அவையில் மசோதா கொண்டுவர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அந்த உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டும் என்று கோரி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இந்த மதுரை கார்ப்பரேஷன் அதிகாரியின் காலத்தை நீட்டிப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ள மசோதா இது.

1977-ம் ஆண்டு அக்டோபர் முடிவடையக் கூடிய காலத்தை இப்போது ஏப்ரல் 30-ம் தேதி வரையில் நீட்டிப்பதற்கு இந்த மசோதா வகை செய்கிறது. தேவையானால் போதுமான காரணங்கள் இருந்தால் ஏப்ரல் 30க்கு முன்பே, மூன்று மாதங்களுக்கு முன்பே அந்தக் காலத்தைக் குறைத்துக்கொள்ளலாம் என்றும் இதில் வகைசெய்யப்பட்டுள்ளது.

இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் மதுரை மாநகராட்சியைப் பொறுத்து பல லட்சக்கணக்கான மக்கள் வாழக்கூடிய ஒரு பெரிய நகரத்தில் உள்ள இந்த நகராட்சியில் 65 பேர்களை தேர்ந்

[திரு. என். சங்கரய்யா] [1978 ஜனவரி 4

தெடுக்கவேண்டியிருக்கிறது. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு அத்தனை கவுன்சிலர்களும் செய்ய வேண்டிய வேலைகளை ஒரு ஸ்பெஷல் ஆபீசர் மட்டும் செய்யமுடியாமல் ஏராளமான வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. அங்கே ரோடுகள் போட வேண்டிய வேலைகள் பல இருக்கின்றன.

அதோடு என்ஜினியரிங் டிப்பார்ட்மென்டை எடுத்துக் கொண்டால் அங்கே தொழிலாளர்களின் பிரச்னைகள் பல தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

மதுரை மாநகராட்சியில் உள்ள மின்சார இலாகாவை சேர்ந்த ஊழியர்கள் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இன்று இங்கு மின்சார வாரியம் அளிக்கக்கூடிய ஊதியம் கூட மதுரை கார்பரேஷன் பகுதியைக் கவனிக்கிற ஊழியர்களுக்கு கொடுக்கப்படாத காரணத்தால் பல பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அங்கே ரோடு காங்கில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் என்.எம்.ஆர். தொழிலாளிகளாகவே பல ஆண்டுகளாக வேலை உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறார்கள்.

எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எவ்வளவு சீக்கிரமாகச் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக மதுரை கார்ப்பரேஷன் தேர்தல்களை நடத்தி முடித்துவிடவேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

பல மசோதாக்கள் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன சில மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அழைக்கப்பட்டு அந்த கூட்டத்தின் முடிவுகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஏற்பட்ட ஒட்டுமொத்தமான அபிப்பிராயம் ஏப்ரல் மாதமே இந்தத் தேர்தல்களை நகராட்சிகளுக்கு, உள்ளாட்சிகளுக்கு, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு நடத்திவிடலாம் என்பதுதான். அதிகாரிகள் அன்று அதற்கு கூறினார்கள்—வந்திருந்த ஜில்லாக் கலெக்டர்கள் கூறினார்கள்— அரசு வரி வசூல் செய்ய வேண்டிய வேலைகளும், அதேபோல் அறுவடை காலம் வருகிறது, அதோடு சட்டசபை அந்தக் காலத்தில் கூட இருப்பதால் இவற்றையெல்லாம் முடித்துக் கொண்டு ஏப்ரலில் எப்படியும் முடித்துவிடலாம் என்ற அடிப்படையில் ஒத்துக்கொண்டோம். இங்கு

1978 ஜனவரி 4] [திரு. என். சங்கரய்யா]

ஒரு இடத்தில் ஏப்ரலுக்குப் பிறகு என்று போடப்பட்டிருக்கிறது. அதைவிட்டு ஏப்ரல் மாதம் வைத்துவிடலாம் என்பது ஒட்டுமொத்தமான கருத்து.

இது பற்றியெல்லாம் விவாதித்தோம். டிசம்பரில் கிடையாது, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சட்டசபைக் கூட்டம் நடக்கும். ஆகவே, ஏப்ரல் மாதத்தில் வைத்துக் கொள்ளலாம் என்ற வகையில் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்த விளக்கக்குறிப்பைப் பார்த்தால் ஏப்ரலுக்கு பின்னால் என்று கூறும்போது திட்டவட்டமாக காலம் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கக் கூடிய அளவிற்கு போகிறது. அது சரியாக இருக்காது.

மதுரை மாநகராட்சி, மற்ற நகராட்சிகள், ஸ்தல ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தேர்தல்கள் நடத்திவிட வேண்டும். ஏப்ரல் 30-ம் தேதி என்று வரம்பு கொடுத்திருக்கிறார்கள். எனவே, ஏப்ரல் 30-க்கு முன் மதுரை மாநகராட்சிக்கும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் தேர்தல்களை நடத்திவிட ஏற்பாடு செய்வது சாலப்பொருத்தமாக இருக்கும். ஆகவே, மேற்கொண்டு இந்தத் தேதியை நீட்டிக்காமல் இந்தக் காலத்திற்குள்ளாகவே செய்து விடலாம்.

[மாலை 4—10]

அங்கு தீவிரமாக வாக்காளர்கள் சேர்க்கப்படுகின்ற வேலை எல்லாம் ஓரளவு முடிந்து இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நகராட்சித் தலைவரை தேர்ந்தெடுக்கும் நேரடித் தேர்தலை நடத்துவதற்கான மசோதாவை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிவிடலாமென்று முடிவு செய்தோம். சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், பஞ்சாயத்து தேர்தலையும், தலைவரை நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற தேர்தலையும் ஏப்ரல் மாதத்திற்குள் நடத்தி முடித்து விடலாம் என்பது எல்லாக் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த முறையில் நிர்வாகத்தில் பல காரியங்களும் நடைபெற்று முடிந்து விட்டன. வார்டுகளில் எங்கெங்கு மாற்றங்கள் செய்ய வேண்டுமோ அவற்றையும் செய்து முடித்து விடலாம். இங்கு கூறப்பட்டிருக்கும் காரணம் சரியல்ல. ஆகவே, மதுரை மாநகராட்சி தேர்தலை ஏப்ரல் 30-ம் தேதிக்குள் சரியான முறையில

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 ஜனவரி 4

காரணம் Preliminary work relating to the conduct of elections such as preparation and publication of electoral rolls have been taken by the special officer. என்று சொல்லப்பட்டிருக்கிறது. கார்ப்பரேஷன் ஆப் மதுரையைப் பற்றி It may take about six months to complete all the arrangements for the conduct of election to the Corporation of Madurai என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் மதுரை மாநகரத்தில் 65 வார்டுகளாகப் பிரித்து Work relating to the conduct of election தேர்தலை நடத்துவதற்கு Preparation and publication of electoral rolls வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு ஆறு மாதங்களாகும் என்று சொல்கிறீர்கள்.

உங்களை நான் கேட்கிறேன். இந்த 65 வார்டுகள் பிரிக்கப்பட வேண்டும், அதற்காக அரசு அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கை இந்த சர்க்காருக்கு எப்போது வந்தது? இது யாருடைய காலத்தில் வந்தது? இதற்கு முன்பாக இந்த அறிவிப்பு இல்லையா? அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு ஏற்கனவே இருந்திருக்குமானால், 65 வார்டுகளாகப் பிரிப்பதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆக வேண்டும்? இந்த வார்டுகளைப் பிரிப்பதற்கான ஒரு உத்தரவைப் பிறப்பிப்பதற்கு இவ்வளவு காலம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவரான உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக காலதாமதம் ஆகிறது என்று சொல்வது உண்மையல்ல. அது உண்மையல்ல என்று கூறுவதற்கான ஏராளமான ஆதாரங்கள் உண்டு. இந்த வேலையை விரைவிலே செய்துவிட முடியும். இதனால் காலதாமதம் ஆகாது. இன்னும் சொல்லப் போனால், எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். இந்த வேலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலேயேகூட செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. I am subject to correction.

1978 ஜனவரி 4] [திரு. ஏ. ரகுமான்கான்]

ஆகவே, இந்த மன்றத்தின் தலைவரான உங்கள் மூலமாக, அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, ஜனநாயக நாட்டில் எந்த ஒரு கட்சியும், ஆளும் கட்சியாகவோ அல்லது எதிர்க் கட்சியாகவோ வரலாம். அமெரிக்க நாட்டில், ஜனநாயகக் கட்சியும், குடியரசுக் கட்சியும் தேர்தலில் மாறி மாறி ஆட்சிக்கு வரும்.

அதைப்போல், இங்கிலாந்து நாட்டில் லேபர் கட்சியும், கன்சர்வேடிவ் கட்சியும் ஆட்சிக்கு மாறி மாறி வரும். இதுபோல் ஜனநாயகத்தில், ஒரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வரும், வராமல் போகும். அதற்காகத் தேர்தலை வெகு நாட்களுக்கு தள்ளிக்கொண்டே போக முடியாது. மாநகராட்சியில் மக்களுடைய எண்ணங்களை, குறைகளை, அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை இன்றைக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் இருக்கிறது. இதிலே அரசியலுக்கே கூட இடமில்லை.

ஆனால், நீங்கள் தேர்தலை இப்படித் தள்ளிக்கொண்டே போவதிலிருந்து, எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. கன்டோன்மெண்ட் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் 6 இடங்களில் 5 இடங்களை பெற்றிருக்கிறது. ஆளும் கட்சிக்கு ஒரே ஒரு இடம்தான் கிடைத்திருக்கிறது. அதுவும், இன்றைக்கு ஆளும் கட்சியாக நீங்கள் வந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக ஆனபிறகு சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பால், மக்கள் எந்தத் திசையில் போகிறார்கள் என்பது தெரிகிறது. ஆகவே, உங்களுக்கு இதிலே ஒரு அச்சம் ஏற்பட்டு, அதனால் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கான ஒரு காரணமாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. உங்களுக்கு அப்படியொரு எண்ணம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆகவே, இதற்கு இடம் தரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக இன்றைக்கு பியூராகிரசி அதாவது அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம் தான் இன்றைக்கு அதிகமாகி இருக்கிறது. காரணம், அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லை. மாநகராட்சியில் என்ன வேலைகள் நடக்கின்றன என்று பார்த்தால், பொது மக்களுடைய பணிகள்

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 ஜனவரி 4

எவ்வாறு நடக்கின்றன என்று பார்த்தால் ஒன்றுமில்லை. அதிகாரிகள் எதையும் தீர்மானிக்க வேண்டியிருப்பதால், இதிலே மந்தம் ஏற்படுகிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே, இப்போது அங்கே மக்கள் பிரதிநிதி இல்லை. அந்தப் பகுதியிலே உள்ள பார்டர் தோட்டம், இன்னும் லாக் நகர், சிந்தாதிரிப்பேட்டை போன்ற இடங்களுக்கு கமிஷனர் அவர்களை அழைத்துக் கொண்டுவந்து காட்டினேன். அதேபோல் ஸ்பெஷல் அதிகாரி அவர்களையும் கொண்டுவந்து காட்டினேன். அங்குள்ள குறைகளை எல்லாம் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன். அவர்களும் அவைகளைக் குறித்துக் கொண்டார்கள். அவர்கள் மீது குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால், அவர்களால் செயல்பட முடியவில்லை. காரணம், இது இப்படி இருக்கவேண்டும், நடக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்வதற்கு அங்கே மக்கள் பிரதிநிதி இல்லை. அரசாங்கமும் எவ்விதமான அக்கறையும் செலுத்துவதில்லை. ஆகவே, இந்த மக்களை பாதிக்கக் கூடிய, அதுவும் ஏழை எளிய மக்களுடைய பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு விரைவிலேயே தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-20]

அதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பதற்கு மாறாக, ஜனநாயக தீபம் தேர்தல் நடத்தாததன் மூலமாக அணைந்து விட்டது என்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் அவர்கள் அன்று சொன்னதை இன்று நாங்கள் குற்றச்சாட்டாகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய நிலை இல்லாமல், நாங்கள் அன்று தவறு செய்து விட்டோம் என்று சொல்லிவிட்டு, இன்று அதிகாரத்திற்கு வந்த பிறகு நீங்களும் அதே தவறைச் செய்யாதீர்கள் என்று சொல்லி அமைகிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்கான............ (குறுக்கீடு) மொத்தமாக இரண்டையும் சேர்த்துப் பேசலாம் அல்லவா ?

1978 ஜனவரி 4]

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பில்களைத் தனித் தனியாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பில்லிலும் பேச வேண்டிய நிலைதான் வரும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதிலே ஒரு முடிவுக்கு வாருங்கள். ஒரு மசோதாவில் பேசிய உறுப்பினர் இன்னொரு மசோதாவிலும் பேச வேண்டுமென்று கேட்கக் கூடாது. நேரம் இல்லை. நம்முடைய எதிர்க் கட்சியைச் சார்ந்த தலைவர் மாரிமுத்து அவர்கள் நகராட்சி மசோதாவின் மீதும் பேச வேண்டும், பேரூராட்சி மசோதாவின் மீதும் பேச வேண்டுமென்ற நிலை இருக்குமானால் நேரம் இல்லை. ஒரு தலைப்பில் பேசிய உறுப்பினருக்கு மறுபடியும் சந்தர்ப்பம் கிடைக்காது.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> கார்ப்பரேஷன் ஆக்ட் ஒரு செட், முனிசிபல் ஆக்ட் ஒரு செட். ஆக இரண்டு பிரிவாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> ஒவ்வொரு பில்லிலும் ஒவ்வொரு விதமான கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கும். மதுரை மாநகராட்சி மசோதாவில் பேசிவிட்ட காரணத்தால் பஞ்சாயத்து யூனியன் மசோதாவில் கருத்துக்களைச் சொல்லாமல் இருக்க முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எல்லா உறுப்பினர்களும் எல்லா பில்களிலும் பேச முடியாது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று மூன்றாகப் பிரித்துக் கொண்டு கருத்துக்களைச் சொல்லுங்கள். திரு. மார்க்கபந்து அவர்கள் இப்போது பேசிவிட்டால் மறுபடியும் பேசாத உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு நேரம் இருந்தால்தான் அவர்களுக்கு மற்ற பில்களில் பேச நேரம் கொடுக்கமுடியும்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> எனக்கு இரண்டு வாய்ப்புகள் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது கார்ப்பரேஷன் மசோதா எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிச் சொல்லிவிட்டு, பிறகு பஞ்சாயத்து மசோதாவில் வேறு விதமான கருத்துக்களைக் கூற வேண்டியிருக்கும். ஆகவே, இரண்டு வாய்ப்புத் தாருங்கள், இல்லாவிட்டால் ஒரேயடியாகக் கருத்துக்களைக் கூற வாய்ப்புத் தாருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கார்ப்பரேஷன் பற்றித் தனியாகவும், பஞ்சாயத்து யூனியன் பற்றித் தனியாகவும், பஞ்சாயத்துக்கள் பற்றித் தனியாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் என்று சொல்லும்போது கார்ப்பரேஷன் தனியாகவும், திருச்சி நகராட்சி பற்றித் தனியாகவும், கோவை நகராட்சி பற்றித் தனியாகவும், மதுரை மாநகராட்சி பற்றித் தனியாகவும், பஞ்சாயத்து யூனியன்கள் பற்றித் தனியாகவும், உள்ளாட்சித் பற்றித் தனியாகவும் பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. முடிவு செய்யும்போது தனித் தனியாக முடிவு செய்யலாம். பேசும்போது ஒரேயடியாகக் கருத்துக்களைச் சொல்லிவிடலாம்.

THIRU J. JAMES : Every Bill must be moved separately and de..lt with separately

MR. Speaker : I do understand. பேரவைத் தலைவருக்கு ஒத்துழைப்புத் தருவதற்காகத்தான் நான் யோசனை சொன்னேன். முறைப்படி, சட்டப்படி தனித்தனியாக ஒவ்வொரு மசோதாவிற்கும் விவாதம் நடத்தி அதிலே பங்கேற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது, அவர்கள் பேசிய பிறகு தான் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இங்கே இருப்பது 7 மசோதாக்கள், ஆகவே எல்லோரும் சந்தர்ப்பம் கேட்டால் எப்படி ?

திரு. ஜே. ஜேம்ஸ் : மசோதாக்களை இங்கே நிறைவேற்றுகிறபோது சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சட்டப்படி இங்கே ஒவ்வொரு மசோதாவும் பிரேரேபிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்ட பிறகு தான் நிறைவேற்றப்பட வேண்டும். அது தான் சட்டம், ஆகவே இதிலே சட்டத்திற்கு முரணாக நிறைவேற்றுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் எனக்கு இருக்கிற தர்மசங்கடம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும்

ஒவ்வொன்றிலும் அவரவர்கள் பேச வேண்டுமென்றால் என்ன செய்வது ? திரு ஜேம்ஸ் எல்லா மசோதாக்களிலும் சந்தர்ப்பம் கேட்டால் எப்படி ?

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் எல்லா மசோதாக்களிலும் பேசுவதற்கு உரிமை இருக்கவேண்டும். மாநகராட்சிகளைப்பற்றிப் பேசுகின்ற உறுப்பினர்கள் ஊராட்சிகள பற்றிப் பேசக்கூடிய நிலைமை இல்லாமல் போகக் கூடாது. அமைச்சர் அவர்கள் முன்மொழியும்போது எப்படி வேண்டுமானாலும் முன்மொழியலாம். பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லா பொருள்களிலும் பேச உரிமை வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரிகிறது. ஒவ்வொரு மசோதாவிலும் உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து நேரம் ஒதுக்குகிறேன். அந்தந்தக் கட்சி உறுப்பினர்கள், பேசாத உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி தாருங்கள்.

திரு. கே. கந்தசாமி : எல்லா மசோதாக்களையும் ஒன்றாக அமைச்சர் முன்மொழிந்து விட்டால் ஒன்றாக சேர்த்து எடுத்துக் கொள்ளலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் செய்வதற்கு இடம் இல்லை.

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு கால நீட்டிப்புக் கோரியும், சென்னை மாநகராட்சிக்கு கால நீட்டிப்புக் கோரியும் அவைகளின் ஆயுட்காலத்தை நீட்டிக்கும் மசோதாக்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே எங்கள் கட்சியின் சார்பில் ஒரு வேண்டுகோளை இந்த அரசுக்கு விட்டோம். இப்படி மாநகராட்சிகளுக்கு காலத்தை நீட்டித்துக் கொண்டே போவதால் பொதுவாக பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் இல்லாமல் போவதால் அதிகாரிகளுடைய அட்டகாசம் தாங்க முடியாத நிலைமைக்குப் போயிருக்கிறது. மக்களுக்காக ஏதாவது நிறைவேற்ற வேண்டுமானால், அதைப்பற்றி அதிகாரிகளிடம் சொன்

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 4

னால், செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கிறதே தவிர எந்த அதிகாரியும் அந்த முறையில் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை யாரும் மறுக்க முடியாது.

அதே நேரத்திலே அப்பாய்ன்ட்மென்ட் என்று வருகிற போது,கான்ட்ராக்ட்கள் என்று வருகிறபோது,ஒரு பகுதியை சீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வருகிறபோது அதிகாரிகள் அந்தப் பகுதிகளில் என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்யமுடியும், என்ன என்ன நன்மைகளைச் செய்யமுடியும் என்று பார்ப்பதில்லை. அவர்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள முக்கியஸ்தர்களை அல்லது கட்சியைச் சேர்ந்தவர்களை கேட்டு ஆலோசிப்பது இல்லை. அதை விட்டுவிட்டு தங்கள் இஷ்டம் போல் தாங்கள் நினைத்த இடத்திலே தங்களுக்கு எது ஆதாயம் கொடுக்குமோ,அதை அப்படிப்பட்ட வேலைகளுக்கு முன்னுரிமை தருவதுதான் செயல் முறையாக இருக்கிறது.

சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால் குடிசைப் பகுதிகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அதை மாற்றவேண்டுமென்று இந்த ஆட்சியும் இதற்கு முன்பு இருந்த ஆட்சியும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதே நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. குடிசைப் பகுதிகளுக்கு கழிப்பிட வசதிகளை, சாலை வசதிகளை ஏற்படுத்தித் தர இந்த மன்றத்திலே வலியுறுத்தப்படுகின்ற கருத்துக்களை அந்த அதிகாரிகள் மனதிலே கொண்டு சீர்திருத்தம் செய்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. அப்படிப்பட்ட நிலைமை தான் இருந்துகொண்டிருக்கிறது.

குறிப்பாக, ஆசிரியர்களைக் கண்காணிக்கின்ற டி.இ.ஓ.-க்கள், சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், இங்கே ஒரு எஜுகேஷனல் ஆபீசர் இருக்கிறார், தம் இஷ்டம்போல் ஒரு ஆசிரியரை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நுங்கம்பாக்கத்திலே இருந்த ஒரு ஆசிரியையை 12 மைல் தூரத்திலுள்ள அகரம்பாக்கத்திற்கு மாற்றியிருக்கிறார்கள்.

1978 ஜனவரி 4] [திரு. ரா. மார்க்கபந்து]

[மாலை 4–30]

அந்த ஆசிரியையின் கணவர் நோயினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்தப் பெண் செல்ல முடியாத நிலையில் இருக்கும்பொழுது நானாகவே பலமுறை கூட டி.ஈ.ஓ.-விடம் எடுத்துச் சொல்லி, ''கவனியுங்கள் ஐயா ; கணவர் வியாதியினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார், அவரைக் கவனிக்கக் கூட ஆள் இல்லாமல் இருக்கிறது. 12 மைல் தூரம் சென்றுவரும் நிலை இப்பொழுது இருக்கிறது'' என்று ஏறக்குறைய பத்து முறைகளுக்கு மேல் சொல்லியும் இதுவரையில் அது கவனிக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது என்று சொன்னால் என்ன ஆவது? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் குறைகளை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று சொன்னால், இப்படிப்பட்ட அதிகாரிகள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலைமை இருக்கும்பொழுது, மேலும் காலத்தை நீட்டிக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன், ஊழல் மலிந்து விட்டது, அந்த ஊழலை ஒழிப்பதற்காகத்தான் இந்த ஆட்சி வந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டது மஸ்டர் ரோல் வழக்கு. கிரிமினல் சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால் சார்ஜ்ஷீட் கொடுத்துவிட்ட பிறகு, இரண்டு மாதங்களுக்குள் அந்த வழக்கைத் தீர்க்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், போடப்பட்ட அந்த வழக்கு என்ன ஆனது என்றுகூட நாம் அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது.

* * * *

ஊழல் மலிந்த ஆட்சி இந்த சென்னை மாநகராட்சியிலிருந்து அகற்றப்பட்ட பிறகு, அதற்காகப் போடப்பட்ட வழக்கு இத்தனை காலமும் தீர்க்கப்பட முடியவில்லை என்றால் மீண்டும் ஒரு தேர்தல் வருகிறது என்று சொல்லுங்கள். மக்களை அணுகி எனக்கு வாக்கு தாருங்கள் என்று கேட்கின்றபொழுது மக்களுக்குத் தெரியும். அவர்கள்....

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 ஜனவரி 4

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது. அதன் உள்ளே சென்று பேசுவது கன்டெம்ப்ட் ஆப் கோர்ட் ஆக வரும், அவர்கள் பெரிய வழக்கறிஞர், அவர்கள் அதை உணர்வார் களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: நான் வழக்கை உணர்ந்து தான் பேசுகிறேன். வழக்கிற்கு உள்ளே நான் போகவில்லை. அந்த புரசிஜரைத்தான் சொல்கிறேனே தவிர....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் நீதிபதிக்கே வழிகாட்டுவது மாதிரி பேசக்கூடாது. நீதிபதிக்கு அறிவுரை தருவதுபோல் இருக்கக்கூடாது. இதுபற்றி உயர்நீதிமன்றத் தில் இருப்பதால் இதைப்பற்றிப் பேசாமல் இருப்பது நலம்.

திரு. ரா. மார்க்கபந்து : As a lawyer I am expected to express my view, because there should not be undue delay in disposal of cases. That is the trend of the Central Government as well as the trend of the Judges also...................... காலத்தை நீட்டிக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் வேக மாகப் பேசுவதால் என்ன ஆகும் என்பதை மறந்து விட் டார்கள். பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்று எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. வழக்குமன்றத்தில் வழக்கு இருக்கும்பொழுது நீதிபதியைப்பற்றிக் கூட நாம் பேசுவதற்கு உரிமை உண்டு என்று சொல்லக் கூடாது.

திரு. ரா. மார்க்கபந்து : நான் அந்தக் கருத்தில் சொல்ல வில்லை. அந்தக் கருத்தில் நான் வெளியிடவும் இல்லை. வழக்கின் கால அளவைக் குறைத்துக்கொண்டு சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். இது மத்திய அரசாங்கத்தின், மத்திய அமைச்சர்களின் கொள்கையாகக் கூட இருக்கிறது. வழக்குகள் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் முடிகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் நியாயம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது மத்திய அர சாங்கத்தின் கருத்தாக இருக்கிறது என்றுதான் சொன்னேனே

1978 ஜனவரி 4]. [திரு. ரா. மார்க்கபந்து]

தவிர வழக்கிற்கு உள்ளே நுழையவோ, அல்லது அதன் சாதக பாதகங்களைச் சொல்லி வழக்கிற்குக் குந்தகத்தை விளைவிக்கும் எந்தக் கருத்தையும் நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரிந்ததை நான் சொல்லுகிறேன். மத்திய அரசானது எல்லா வழக்கு களையும் காலங்கடந்து நீடிக்காமல் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் மாநகராட்சி மஸ்டர் ரோல் வழக்குக்கு என்று தனியாகச் சொல்லவில்லை. ஒரு நீதிபதிக்கு, சீக்கிரம் முடியுங்கள் என்று அறிவுரை சொல் வது போல் உள்ளது நீங்கள் பேசுவது. எனவே, இதைச் சொல்லாமல் மற்ற விவரங்களுக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தயவுசெய்து மன்னிக்க வேண்டும். எந்தவொரு வழக்கும் சீக்கிரமாக முடிக்கப்பட வேண்டும். நான் கூட அந்தக் கருத்திலேதான் சொல் கிறேனே தவிர, வேறல்ல.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, தாங்கள் ஒரு ரூலிங் கொடுத்தீர்கள். நீதிபதி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவது தான் தவறு என்று சொல்லியிருக்கிறீர்கள், வழக்கு துரித மாக முடிக்கப்பட வேண்டுமென்பதில் ஆட்சேபணை இல்லை.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அதைத்தான் நான் சொல்கிறேன், அதைச் சொல்லக் கூடாது.

திரு. ரா. மார்க்கபந்து : நான் சொல்வது, வழக்குகளை நீடித்துச் செல்லாது உடனடியாக முடித்துவிடவேண்டுமென் பதுதான். நான் எந்த நீதிபதிக்கும் அறிவுரை தருவதாக இல்லை. வழக்குகளை நீடிக்க வேண்டாம், சீக்கிரமாக முடித்து, தீர்ப்பு தாருங்கள் என்றுதான் தெரிவிக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலே பாய்ன்ட் ஆப் ஆர்டர் ?

திரு. எஸ். ஆர். இராதா: பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரிடமிருந்து பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன் ?

திரு. எஸ். ஆர். இராதா ; உறுப்பினரிடமிருந்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரிடமிருந்து நீங்கள் கேட்கவேண்டுமா ? சரி.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். இதே வழக்கறிஞர்களே, வழக்குகளை விரைவாக முடிக்காத அளவு, தமிழ்நாட்டு சரித்திரத்திலே வழக்கறிஞர்களே இழுக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : On a point of order. I am a lawyer. இங்கே சட்ட மன்றத்திலே அநேக வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு ராதா அவர்கள் வழக்கறிஞர்கள் தங்களது கடமைகளை மறந்து அல்லது தட்டிக் கழிக்கிற வகையில் வாய்தா கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள். அப்படி நடப்பதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : கடைசியாக, என்னுடைய ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிறவர்கள், எந்த மாநகராட்சி மன்றத்திலிருந்தாலும், வழக்குமன்றங்களிலே குற்றம் சாட்டப்பட்டு, பொதுச் சொத்துக்களை ஊழல் செய்த காரணத்திற்கு எந்த ஒரு மனிதனும் ஆளாக்கப்படுவான் என்று சொன்னால், அவனுடைய சொத்துக்கள் முழுவதும் பறிமுதல் ஆக்கப்பட வேண்டுமென்ற நியதியை

நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கிற இரண்டு மசோதாக்கள் பேரிலே—ஒன்று, மதுரை மாநகராட்சி திருத்த மசோதா ; அடுத்தது, சென்னை மாநகராட்சி திருத்த மசோதா—என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். மதுரை மாநகராட்சி பொறுத்தவரையிலே, நண்பர் ரகுமான்கான் அவர்கள் தனது கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, சென்னை மாநகராட்சி திருத்த மசோதாவின் மீது மட்டும் நான் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், தேர்தல் நடத்துவதை 6 மாதத்திற்கு நீட்டிக்கவும், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், ஓராண்டு நீட்டிக்கவும் மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

மதுரை மாநகராட்சியில் 6 மாதத்தில் தேர்தல் நடத்தலாம் என்றால், சென்னை மாநகராட்சியிலும் 6 மாதத்தில் தேர்தல் நடத்தலாம். ஆனால், ஒரு வருஷம் என்று மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஜனநாயகத்தில் தேர்தல் என்பது மிக முக்கியமானது. தற்போது, தேர்தல் இல்லாததால், சென்னை மாநகராட்சி மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லை. சென்னை மாநகரத்திலே, எம். எல். ஏக்களைவிட, கவுன்சிலர்களுக்குத்தான் அதிகப் பணியிருக்கிறது. மக்களுடைய பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண அதிக வாய்ப்பிருக்கிறது. அந்த வகையிலே சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

150 டிவிஷன்களைப் பிரிக்கவேண்டும்; ஆகவே, காலம் வேண்டுமென்று ஒரு குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆனால், எங்களுக்குக் கிடைத்திருக்கிற குறிப்பின்படி, ஏற்கெனவே எலக்ட்டோரல் ரோலை ரிவைஸ் பண்ண நடவடிக்கை எடுக்கப்

[1978 ஜனவரி 4

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலே பாய்ன்ட் ஆப் ஆர்டர் ?

திரு. எஸ். ஆர். இராதா: பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரிடமிருந்து பாய்ன்ட் ஆப் இன்பர்மேஷன் ?

திரு. எஸ். ஆர். இராதா ; உறுப்பினரிடமிருந்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரிடமிருந்து நீங்கள் கேட்கவேண்டுமா ? சரி.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். இதே வழக்கறிஞர்களே, வழக்குகளை விரை வாக முடிக்காத அளவு, தமிழ்நாட்டு சரித்திரத்திலே வழக் கறிஞர்களே இழுக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : On a point of order. I am a lawyer. இங்கே சட்ட மன்றத்திலே அநேக வழக்கறிஞர்கள் இருக் கிறார்கள். மாண்புமிகு ராதா அவர்கள் வழக்கறிஞர்கள் தங்களது கடமைகளை மறந்து அல்லது தட்டிக் கழிக்கிற வகையில் வாய்தா கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள். அப்படி நடப்பதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர் களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : கடைசியாக, என்னுடைய ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கிறவர்கள், எந்த மாநகராட்சி மன்றத்திலிருந்தாலும், வழக்குமன்றங்களிலே குற்றம் சாட்டப்பட்டு, பொதுச் சொத்துக்களை ஊழல் செய்த காரணத்திற்கு எந்த ஒரு மனிதனும் ஆளாக்கப் படுவான் என்று சொன்னால், அவனுடைய சொத்துக்கள் முழுவதும் பறிமுதல் ஆக்கப்பட வேண்டுமென்ற நியதியை

1978 ஜனவரி 4] [திரு. ரா. மார்க்கபந்து]

நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு. என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கிற இரண்டு மசோ தாக்கள் பேரிலே—ஒன்று, மதுரை மாநகராட்சி திருத்த மசோதா ; அடுத்தது, சென்னை மாநகராட்சி திருத்த மசோதா—என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்பு கிறேன். மதுரை மாநகராட்சி பொறுத்தவரையிலே, நண்பர் ரகுமான்கான் அவர்கள் தனது கருத்துக்களைச் சொல்லி இருக் கிறார்கள். ஆகவே, சென்னை மாநகராட்சி திருத்த மசோ தாவின் மீது மட்டும் நான் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை மாநகராட்சியைப் பொறுத்த மட்டில், தேர்தல் நடத்துவதை 6 மாதத்திற்கு நீட்டிக்கவும், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், ஓராண்டு நீட்டிக்கவும் மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

மதுரை மாநகராட்சியில் 6 மாதத்தில் தேர்தல் நடத்த் லாம் என்றால், சென்னை மாநகராட்சியிலும் 6 மாதத்தில் தேர்தல் நடத்தலாம். ஆனால், ஒரு வருஷம் என்று மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஜனநாயகத்தில் தேர்தல் என்பது மிக முக்கியமானது. தற்போது, தேர்தல் இல்லாததால், சென்னை மாநகராட்சி மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லை. சென்னை மாநகரத்திலே, எம். எல். ஏக்களைவிட, கவுன்சிலர் களுக்குத்தான் அதிகப் பணியிருக்கிறது. மக்களுடைய பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண அதிக வாய்ப்பிருக்கிறது. அந்த வகையிலே சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

150 டிவிஷன்களைப் பிரிக்கவேண்டும்; ஆகவே, காலம் வேண்டுமென்று ஒரு குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆனால், எங்களுக்குக் கிடைத்திருக்கிற குறிப்பின்படி, ஏற்கெனவே எலக்ட்டோரல் ரோலை ரிவைஸ் பண்ண நடவடிக்கை எடுக்கப்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 ஜனவரி 4

பட்டிருக்கிறது. சர்வகட்சிக் கூட்டம் நடத்தியபொழுது, நாம் விசாரித்தோம். அப்பொழுது, கோவை நகராட்சியிலே இருக்கிற அதிகாரி அவர்கள் ஏற்கெனவே, எலெக்ட்டோரல் ரோல் எல்லாம் பிரின்ட் ஆகிவிட்டது என்றுகூடச் சொன்னார்கள். இந்த 120 டிவிஷன்களை, 150 ஆகப் பிரிக்க வேண்டுமென்பதற்காக ஓராண்டு காலதாமதம் செய்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்த வரையில், குடிநீர்ப் பிரச்னை, மின்சார விளக்குகள் பிரச்னை, குப்பை அகற்றும் பிரச்னை, சாக்கடை நீரை அகற்றும் பிரச்னை, ஆகிய பல பிரச்னைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் நல்ல முறையில் தீர்க்கமுடியும்.

சென்னை மாநகராட்சிக்குச் சிறப்பு அதிகாரியாக, சீத்தாராம் தாஸ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, க்ரீவன்ஸஸ் டே என்ற அளவிலே, ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந்த நாளில், அந்த டிவிஷனுக்குத் தானே நேரில் சென்று, க்ரீவன்ஸஸ்—ஐ ரிட்ரஸ் செய்ய, விரைவாக ரிட்ரஸ் செய்ய ஏற்பாடு செய்தார்கள். அது நல்ல திட்டம். க்ரீவன்ஸஸ்—ஐ ரிட்ரஸ் செய்ய அதில் நல்ல வாய்ப்பு இருக்கிறது. நான் கூட, அவ்வாறு கூட்டிய இரண்டு கூட்டங்களுக்குப் போய் இருந்தேன். அங்கு சொன்ன குறைகளைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அது நின்றுவிட்டது; மேலே இருந்து உத்தரவு வந்தது என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. மக்களுடைய குறைகளைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி, அதிகாரிகளுக்குத் தெரிவிக்க, இந்த க்ரீவன்ஸ்-ரிட்ரஸ் டே தேவையாக இருந்தது. அந்த ரிட்ரஸ் டே நடத்துவது சரியல்ல என்று சொல்வது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 4—40)

Mass contact programme எதிர்பார்த்த அளவுக்கு நடைபெறவில்லை, என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு சென்னை மாநகரத்திலே சமீபத்தில் பெய்த

1978 ஜனவரி 4] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கொடுமையான மழையின் காரணமாக சாலைகள். எல்லாம் பாழடைந்து விட்டன. பாழடைந்த சாலைகளை செப்பனிடுவதற்காக, நம்முடைய தனி அதிகாரி அவர்கள் 7 கோடி ரூபாய் அரசாங்கம் கொடுத்தால்தான் சீர் செய்ய முடியும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக ஒரு கோடி ரூபாய்தான் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். அந்த மன்றத்திலே மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால் அரசாங்கத்தோடு வாதாடி போராடி அந்த 7 கோடி ரூபாயை பெற்றிருப்பார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் செய்கிறார்கள். அதிகாரிகள் வைத்ததுதான் சட்டமாக இருக்கிறது. ஊழல் ஊழல் என்று சொல்லுகிறார்களே அந்த ஊழலுக்குக் காரணமாக அந்த அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். அம்மாதிரியான இடங்களில் மக்களுடைய பிரதிநிதிகள் இருப்பார்களேயானால், அவர்கள் அந்த ஊழலை கண்டிக்க ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, தேர்தல் விரைவாக நடைபெறவேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும்.

இங்கே மதுரை மாநகராட்சிக்கு ஒரு சட்டம், சென்னை மாநகராட்சிக்கு ஒரு சட்டம் என்று பாரபட்சம் இருப்பதை நான் சுட்டிக்காட்டி கண்டிக்க விரும்புகிறேன். சென்னை, நகரத்தில் சில சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் ஸ்பெஷல் ஆபிசர் நிர்வாகம் நடைபெறுகிறது மக்கள் தங்கள் தொகுதி குறைகளைச் சொல்ல வாய்ப்பில்லை. எனவே இங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழு அமைத்து மாதந் தோறும் சந்தித்து பரிகாரம் கண்டால் ஒழிய வேறு பரிகாரம் காண முடியாது. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு, இந்த சென்னை மாநகரத்தினுடைய தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கூறி, இந்த மசோதாவை நிறைவேற்றக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்து நான் என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை தள்ளி வைப்பதற்காக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவைப்பற்றி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. மு. அம்பிகாபதி] [1978 ஜனவரி 4

குறிப்பாக, ஜனநாயக நாடுகளில் தேர்தல் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். தேர்தல் நடத்தப்பட்ட நாடுகளிலே கூட சில சமயங்களில் தனி நபர் ஆதிக்கம் மேலோங்கி சர்வாதிகார நிலைமையைப் பெறுவதையும் நாம் பார்க்க முடியும். மாநகராட்சிகள் துரிதமாகவும், துல்லியமாகவும் ஒழுங்காகவும் செயல்பட்டு, சாலைகள் முறையாக செப்பனிடப்பட்டு, ஒளிவிளக்குகள் முறையாக எரிகிறதா என்பதைப் பற்றி தெரிந்து கொண்டு, அங்கே இருக்கிற நகரசுத்தி ஊழியர்களுடைய பிரச்சினை, மஸ்டர் ஊழியர்களாக இருக்கட்டும், மின்சார ஊழியர்களாக இருக்கட்டும், அவர்கள் பிரச்சினைகளை துல்லியமாகவும் துரிதமாகவும் நடவடிக்கை எடுக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் இருப்பது மிகவும் சரியானதாகும்.

ஆனால் இன்றைக்கு, ஏப்ரல் மாதத்தைத் தாண்டிச் செல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அடுத்து பட்ஜெட் வரப்போகிறது. அறுப்பு வரப்போகிறது. ஜூன் மாதத்திலே மழை வந்தாலும் வரலாம், சொல்ல முடியாது. புயல் வந்தாலும் வரலாம். இதற்கிடையில் மே மாதத்திலே நடத்த வேண்டும் (குறுக்கீடு) புயல் வந்தாலும் வரும். வருமா, வராதா என்று சொல்ல முடியாது. எனவே, அதிகாரத்தைத் தனி நபரின் கையிலே ஒப்படைப்பது என்பது ரொம்பவும் தவறான காரியம். அவர்களை அறியாமலேயே தவறு செய்கிறார்கள்.

தோழர் லெனின் சொன்னதைப்போல் ப்யூராக்ரசியிடம் அதிகார வர்க்கத்திடம் பைல் எல்லாம் குவிந்து போனால் நிதி குவிந்து போனால் கண் தெரியாமல், என்ன செய்கிறோம் என்று பார்க்காமல், யாரை மாற்றுகிறோம் என்று தெரியாமல், யாரை சஸ்பெண்டு செய்கிறோம் என்று தெரியாமல் அவர்கள் அறியாமலேயே தவறுகள் செய்கிறார்கள். அவர்கள் தெரிந்து செய்யவில்லை. தெரியாமலேயே செய்கிறார்கள். அதிகாரிகள் சுமை இவற்றை எல்லாம் செய்ய வைக்கும்.

ஆகவே, ஒரு சர்வ கட்சி கமிட்டி போட்டு மாநகராட்சிகளிலும் பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் சர்வ கட்சி கண்காணிப்புக் குழுக்கள், அல்லது ஸ்பெஷல் அட்வைசரி போர்டு அமைக்க வேண்டும் என்று போன முறை கூட நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். அவற்றை அமல்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

1978 ஜனவரி 4] [திரு. மு. அம்பிகாபதி]

தனி அதிகாரியிடம் விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு விசேஷ அதிகாரங்கள், யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறியது போல் எம். எல். ஏ.க்கள் ஒரு நியாயமான விஷயத்தை எடுத்துச் சொல்லி கணவன் மனைவி இருவரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட, அவர்கள் கேட்காமல் இருக்கலாம்.

இப்படிப்பட்ட விசேஷ அதிகாரத்தை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். அது பயிற்சியின் காரணமாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவிக்கு வந்து 6 மாத காலம் ஆகியிருக்கலாம். பல அதிகாரிகள் வந்து 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருக்கிறது. அவர்களில் நிரம்பப் பேர் அதிகாரத்தில் ஊறியிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை மதிக்கத் தயாராக இல்லை.

இந்த அரசாங்கம் மக்களால், மக்களுக்காக, மக்களாலேயே நடத்தப்படுகிறது. இது ஏழை எளியவர்கள் வசதி நன்மை பெறுவதற்காக இருக்கக்கூடிய அரசாங்கமாக இருக்க வேண்டும். மக்கள் வாக்களித்தால் தான் மந்திரி, இல்லையென்றால் எந்திரி, மக்கள் சக்தி, மகாசக்தி. அந்த ஜனசக்தி படைத்தவர்கள் வாக்களித்து சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உருவாக்கப்படுகிறார்கள். அந்த அமைச்சர்கள் இந்த நாட்டை ஆள்கிறவர்கள் என்கிற எண்ணம் அதிகாரிகளுக்கு இருக்கிறதா? யார் கையில் இருந்து அந்த அதிகாரம் பெறப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் ஏழைகளின் குடிசையா, வரி செலுத்த வில்லையா, உடனே கதவைப் பிடுங்கு, பெரிய மில் முதலாளியா, 1½ கோடி ரூபாய் 2 கோடி ரூபாய் வரி பாக்கியா பரவாயில்லை, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், கொஞ்சம் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளுங்கள் என்று இருக்கும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏழை எளியவர்களுக்கு ஆத்திரம் ஊட்டும் வகையில் இருக்கின்றன.

சாதாரண ஏழை என்கிரோச்மென்ட் செய்தால், உடனே கார்ப்பரேஷன் லாரி வரும். அதைத் தூக்கிப் போட்டுக் கொண்டு லாரி போகும். ஆனால் ஒரு பணக்காரன் மெயின் ரோடில் என்கிரோச்மென்ட் செய்து இருந்தாலும் ரிமூவ் செய்வதற்கு காலதாமதமாகும். இன்றைக்கு இந்த முறை இருப்பதற்குக் காரணம் ஒரு தனி அதிகாரியின் கையில்

[திரு. மு. அம்பிகாபதி] [1978 ஜனவரி 4

அதிகாரம் இருப்பது தான். அதிக நாட்களுக்கு இந்த நிலைமை நீள்வதற்கு விடக்கூடாது. அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பல நகராட்சிகளில் விளக்குகள் எரிவது இல்லை. நம்முடைய சட்ட மன்றத்தில் தொங்குகிற 6 விளக்குகளில் ஒரு விளக்கு எரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இங்கே இருக்கிறது என்றால், கிராமப் புறத்தில் எப்படியிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, இந்த மாதிரி நிலைமைகளைப் போக்க ஒன்றியங்களில் இடைக்கால மாக சர்வ கட்சிக் குழுக்கள் அமைக்க வேண்டும். அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். பல நகராட்சி மன்றங்களில் விளக்கு எரியாமல் இருப்பதால் சாலை முடுக்குகளில் மிகுந்த சிரமம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கேயிருக்கிற 6 விளக்கும் நீங்கள் பேசுவதற்கு முன்னால் எரிந்தன. நீங்கள் பேச ஆரம்பித்தவுடன் தான் அணைந்தது !

திரு. மு. அம்பிகாபதி : புயல் வீசிய பகுதிகளில் இருக்கும் நகராட்சி மன்றங்களில், குறிப்பாக, நாகப்பட்டினம், மன்னார்குடி, திருவாரூர், அதிகமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நகராட்சிகளுக்கு விசேஷ நிதி அளித்து அந்தப் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாகப்பட்டினம், மன்னார்குடி, திருவாரூர், பகுதிகளில் ஒளிவிளக்குகள் அமைக்க ஸ்பெஷல் அட்டென்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய மன்னார்குடி நகராட்சிக்கு இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அதை அதிகரித்துத் தரவேண்டும்.

நாம் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை சிறப்பாக எடுக்க, தேர்தலை இனியாவது தள்ளிப் போடாமல்—திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலைக் கண்டால் கிலி பிடித்து இருந்ததால், ஒத்திப் போட்டுக் கொண்டு வந்தது—அதே முறையை நீங்களும் கடைப்பிடிக்காமல், விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

1978 ஜனவரி 4]

[மாலை 4–50]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி திருத்த மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மாநகராட்சிக்கு 1975 ஏப்ரல் 30-ம் தேதிக்குள் ஏற்கெனவே இருந்த சட்டத்தின்படி தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால், அந்தச் சட்டத்தை திருத்தி இரண்டு ஆண்டுக்கு ஆயுட் காலத்தை நீட்டி 1977 ஏப்ரல் 29-ம் தேதிக்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று அந்தச் சட்டம் திருத்தப்பட்டது. அடுத்த சட்டத்திருத்தம் இன்னும் ஆயுள் காலத்தை 6 மாதங்கள் நீட்டி 1977 அக்டோபர் 31-ம் தேதிக்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு 6 மாத காலத்திற்கு மாநகராட்சியின் ஆயுள் காலம் நீட்டப்பட்டது. ஆகையால், ஏற்கெனவே மூன்று தடவை சட்டம் திருத்தப்பட்டது. மூன்று தடவை மாநகராட்சியின் ஆயுள் காலம் நீட்டப்பட்டு இன்னும் மேலும் ஆயுள் காலம் நீட்டப்பட வேண்டுமென்று சொன்னால் உண்மையிலேயே இப்பொழுதும் எனக்கு ஏற்பட்டிருக்கின்ற ஐயப்பாடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டிக்கொண்டிருக்கிற அந்த 6 மாத காலத்திற்குள் நிச்சயமாக அந்தத் தேர்தல் நடைபெறாது என்பது தான் என்னுடைய ஐயப்பாடு. அந்த ஆறு மாத காலத்திற்குள் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்துவதாக இங்கே உறுதிமொழி அளிப்பதாக இருந்தால் இந்த மாமன்றத்தில் யாருக்கும் இந்த மசோதாவைப் பற்றி எதிர்ப்பு சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் நிச்சயமாக இந்த ஆறு மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நடைபெறுவதற்குள்ள சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறுகிற போது 1975-ம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய பாராளுமன்ற தேர்தலை இன்னும் ஓராண்டு கூட நீட்டி, அந்தக் காலத்துக்கு நெருக்கடி நிலையை பிரகடனம் செய்த போது இந்த நாடு ஜனநாயகத்தை விரும்புகின்ற நாடு என்ற கருத்தினை இந்த நாட்டு மக்கள் தெரிவித்து, பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற போது ஜனநாயகத்தை விரும்பியும், சர்வாதிகாரத்தை எதிர்த்தும் இந்த நாட்டு மக்கள் வாக்களித்ததை இந்த மாமன்றத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆகையால் 1975-ம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய
இந்த கார்ப்பரேஷன் தேர்தலை இன்னும் நீட்டிக் கொண்டே
போவது நிச்சயமாக சரியல்ல. மத்திய அரசு அடிக்கடி
மாநில அரசுகளுக்கு வேண்டுகோள் விட்டுக் கொண்டே
இருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கு உடனடியாக
தேர்தல் நடத்த வேண்டுமென்ற வேண்டுகோள் விடுவது
மட்டுமல்ல, ஜனதா ஆட்சி மத்தியில் அமைந்த உடன் இந்த
நாட்டிலே ஜனநாயகம் பிழைக்க வேண்டும், எல்லா
மாநிலங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்லி,
மூன்று மாதத்திற்குள்ளாக இந்த தேசத்தில் பல மாநிலங்
களுக்கு தேர்தல் நடத்தியதையும் நான் இங்கே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு
கிறேன்.

ஜனநாயகத்தை விரும்புகிற அரசு என்று சொன்னால்
உண்மையிலேயே உடனடியாக தேர்தலை நடத்துவதற்குள்ள
காரியங்களைச் செய்யவேண்டும். இப்பொழுது நடைபெறு
வது மக்களாட்சி என்று கூறுவதற்கில்லை. துரைத்தனம்
தான் இங்கே ஆண்டு கொண்டிருக்கிறது. பல்வேறு இலாக்
காக்களைப் பார்க்கும் பொழுது இங்கே அதிகாரிகள் தான்
இந்த நாட்டை ஆளுகிறார்களே தவிர—மாநகராட்சிகளுக்கு
ஸ்பெஷல் ஆபீசர்களை வைத்து அவர்களுக்கு அதிக அதி
காரங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், நிர்
வாகம் எந்த அளவுக்கு சீர்கேடாக, ஏழை எளியவர்களுக்கு
பயனற்றதாக நடைபெற்றது என்று நான் சொல்லத் தேவை
யில்லை. காரணம், அதற்குப் பரிகாரம் இல்லை என்பதை
நான் உணருகிறேன். ஆகையால் மக்கள் ஆட்சியிலே ஜன
நாயகத்தில் நம்பிக்கை இருக்கும் என்று சொன்னால், ஒரு
வேளை பல்வேறு நகராட்சிகளில், பல்வேறு பஞ்சாயத்துக்
களில் ஆளுகின்ற கட்சிக்கு பெரும்பான்மை வராமல் இருக்
கலாம் என்ற சந்தேகங்கள் இருந்தாலும் கூட ஜனநாயகத்
தில் நம்பிக்கை இருக்கிற காரணத்தால் இன்று நாம் ஆள
லாம், நாளை இன்னொரு கட்சி ஆளலாம் என்ற நோக்கத்
துடன் உடனடியாக தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சி திருத்த மசோதா மீது
கூட ஒரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது
மதுரை மாநகராட்சிக்கு 6 மாதத்திற்குள் தேர்தலை நடத்து

வதற்கு நிச்சயமாக சாத்தியமில்லை என்றாலும் கூட 6 மாத
காலம் கேட்டிருக்கிறீர்கள். சென்னை மாநகராட்சிக்கு மட்
டும் ஓராண்டு கேட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், ஆளு
கிற கட்சிக்கு சென்னை மாநகராட்சியில் இப்பொழுது அதிக
மாக செல்வாக்கு இல்லாமல் இருக்கிற காரணத்தினால் இன்
னும் சற்று காலத்தை நீட்டிக் கொண்டு செல்வது தவறு.
செல்வாக்கு பெற்ற பிறகு தேர்தலை நடத்தலாம் என்று
உள் நோக்கம் இருக்குமேயானால் அது வரவேற்கத்தக்கது
அல்ல.

ஆகவே, சென்னை மாநகராட்சிக்கும் ஆறு மாதம் தான்
கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.
அதோடு இங்கே கூறப்பட்டுள்ள காரணத்தை பார்க்கும்
போது சட்ட மன்ற தேர்தலுக்குத் தயாரிக்கப்பட்ட ரோல்
கள் எல்லாம் தவறானவை என்று மக்கள் கருதுகிறார்கள்
என்று நினைக்கும்படி தோன்றுகிறது. அந்த ரோல்கள்
தப்பு என்று சொன்னால் அந்த ரோல்களின் அடிப்படையிலே
நடைப்பெற்ற தேர்தலைப் பற்றித் தான் இந்த அரசு
உள் நோக்கம் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிந்து
கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நான் கூறுவதெல்லாம்
சென்னை மாநகராட்சி மட்டுமல்ல இந்த நாட்டில் இருக்
கின்ற அனைத்து ரோல்களும் ஒழுங்காகத் தயார் செய்
யப்பட்டிருக்கிறது. இதைக் காரணமாகக் காட்டி இருந்தால்
நிச்சயமாக இந்த நகரசபைக்கும், மாநகராட்சிக்கும் தேர்
தல் நடத்த முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன்.

ஆகவே அந்த அடிப்படையில் கூறும்போது, அனைத்து
நகராட்சிகளுக்கும், மாநகராட்சிக்கும் ரோல் திருத்தப்பட
வேண்டும் அவைகளைச் செய்து தேர்தலை நடத்தினால்,
இன்னும் பல திருத்தங்கள் கொண்டு வரவேண்டியிருக்கும்.
எனவே, தற்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்
தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆக சட்டம் நிறை
வேறத்தான் போகிறது. ஓராண்டு கெடு இருந்தாலும்,
அதற்குள்ளாக, 6 மாதத்திற்குள்ளாக மதுரை நகராட்சித்
தேர்தலை நடத்தும்போது, சென்னை மாநகராட்சித் தேர்
தலையும் நடத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே சென்னை மாநகராட்சியினுடைய ஆயுட்காலத்தை ஓராண்டு நீடித்து, சிறப்பு அலுவலரின் பொறுப்பையும் நீடிக்கக்கூடிய சட்ட வடிவம் உள்ளாட்சித் துறை அமைசசர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சென்னை மாநகரத்தின் நிலையைக் கருதி, இந்த ஓராண்டு கால நீடிப்பை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். 1973-ஆம் ஆண்டில், சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னால், சிறப்பு அலுவலர் பொறுப்பு ஏற்ற பின்னால், ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தேர்தல் வருமா, வருமா என்று பொதுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் காட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினிடமிருந்த மாநகராட்சியை முன்னாள் முதல்வர் அவர்கள் கலைத்தார்கள் என்றால், தவறு எங்கிருந்தாலும், தவறைச் செய்தவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், மாநகராட்சி எந்தக் கட்சியின் பொருப்பிலிருந்தாலும், நீதியினுடைய நிலையில் நின்று மாநகராட்சியிலிருக்கிற சில பல தவறுகளுக்காக அதைக் கலைத்தார்கள். கட்சிக் கண்ணோட்டமில்லாது, மாநகராட்சியில் தூய்மை நிலவ வேண்டுமென்பதற்காகக் கலைத்தார்கள். அந்த நிலைக்குப் பின்னால், இந்த ஓராண்டு காலத்தில், இடையிலே அவசர கால சட்டம் வந்த நிலையிலே, மாநகராட்சியிலே பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன் அந்தத் தவறுகளை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன், அதற்கு என்று குழு போட்டால், என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொறுப்பில் 1973-ல் இருந்த காலத்தில் வந்த வருவாயையும், இன்றைய வருவாயையும் கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், இன்றைக்கு உபரியான வருவாய் மாநகராட்சியில் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள், மாநகராட்சியில் வரியைக் கூட்டி கசக்கிப் பிழிகிறார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக அது நடைபெறுகிறது. ஏழை, எளிய மக்கள் வரி கொடுக்கவில்லையென்றால், மாநகராட்சி வருவாய்த் துறை அலுவலர்கள் வான்களை எடுத்துக் கொண்டு போய் பொருள்களை 'ஸீஸ்' செய்கிறார்கள்.

அப்படி மக்களிடமிருந்து வரியை கசக்கிப் பிழியும் அதே நேரத்தில், மக்களுக்கு வசதிகள் பெருகியிருக்கின்றனவா என்றால் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பில் சென்னை மாநகராட்சி இருந்த நேரத்தில் பல கோடி ரூபாய் ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பலர் சொன்னார்கள். அதே நேரத்தில் சென்னை மாநகரம் ஜகஜ்ஜோதியாக ஒளி வீசிக் கொண்டிருந்தது. சாலைகள் மிகவும் பிரகாசமாக இருந்தது. எங்கே பார்த்தாலும் ஒளி விளக்குகள் அழகாக மின்னிக் கொண்டிருந்தன. மூலை முடுக்குகளில் எல்லாம் மின் விளக்குகள் பொறுத்தியிருந்தார்கள்.

இன்றைக்கு வருவாய் கூடி, தனி அதிகாரி பொறுப்பிலிருக்கும் மாநகராட்சியில் முன்னாள் உறுப்பினர்கள் தலையீடு இல்லாமல் நிர்வாகம் நடைபெறுகிறது என்ற பெயர் எடுத்துள்ளது என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில், மாநகரத்தின் நிலைமையைப் பார்த்தால் மிகக் கேவலமாக இருக்கிறது. சாலைகளைச் சென்று பாருங்கள். எவ்வளவு கேவலமாக இருக்கிறது. வருவாய் கூடியிருக்கின்ற நேரத்தில் அபிவிருத்திப் பணிகள் கூடியிருக்க வேண்டும். மாநகராட்சியின் வருவாய் கூடியிருக்கின்ற நேரத்தில், ஒளி விளக்குகள் முன்னால் மாநகராட்சி ஊழலாக இருந்த நேரத்தில் இருந்ததைவிட, பல மடங்கு கூடியிருக்க வேண்டும். அப்படி இருக்கிறதா என்றால் இல்லை. இந்த நிலைமைக்கு எந்த அதிகாரிகள் காரணம்? இப்போது இந்த ஊழலைச் செய்யக் காரணமாக இருக்கிறவர்கள் யார் என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வடிகால் பிரிவை எடுத்துக் கொள்ளுங்கள். சென்னை மாநகரில் அமைச்சர்கள் வருகின்ற பாதையானாலும், வெளிநாட்டுத் தலைவர்கள் வருகின்ற பாதையானாலும், அப்படிப்பட்ட மெயின் ரோடுகள் தவிர, இன்டீரியர் ரோடு என்று சொல்லப்படுகிற சாலைகளில் சென்று பாருங்கள். இன்றைக்கும் பாண்டிச்சேரியில் வடிகால் திட்டம் ஏற்படுவதற்கு முன்னால் சாலை ஓரங்களில் எப்படி கழிவுநீர் போய் நாற்றம் நாறிக் கொண்டிருந்ததோ, அந்த அளவுக்கு இன்றைக்குச் சென்னை மாநகரம் ஆகிவிட்டது.

(மாலை 5.00)

இன்றைக்குப் போய்ப் பாருங்கள், திருவல்லிக்கேணியிலே உள்ள ஜானிஜான்கான் ரோடு, மனிதன் நடக்க முடியுமா என்று போய் பாருங்கள், அதே போல டாக்டர் நடேசன் ரோடு. . . . .

[1978 ஜனவரி 4

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசும்போது பேசுங்கள். மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது வேண்டுமானால் தெருவில் இருந்து சந்து வரை குறைகளைச் சொல்லலாம். இந்த மசோதாவில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அவற்றை மட்டும் இப்போது சொல்லுங்கள்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> வடிகால் பிரிவில் மிகக் கேவலமான நிலைமை இருக்கிறது. இதில் நான் ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன். இன்று ஆளுங்கட்சிக்கு இருக்கின்ற மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு ஒரு ஆண்டு காலம் நீடிப்பதை விட்டுவிடப் போவதும் இல்லை, தேர்தலை நடத்தப் போவதுமில்லை. ஒரு ஆண்டு காலம் நீட்டிக்கப்படுகின்ற காரணத்தால், சில யோசனைகளைச் சொல்கிறேன். வடிகால் பிரிவிலிருக்கின்ற தொழிலாளர்களுக்கு இருக்கிற மிகப் பெரிய கொடுமை என்னவென்றால்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மானியக் கோரிக்கையின் மீது பேசுவதைப் போல பேசுகிறீர்கள். மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும். இரண்டு நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> சென்னை மாநகரத்தின் முக்கியமான பிரச்சினை. சில யோசனைகள் ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அரங்கநாதன், ஏற்கனவே திரு. சாதிக் பாட்சா பேசியிருக்கிறார். இன்னொரு உறுப்பினர் பேசியிருக்கிறார். இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு தாங்கள் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> நான் பேசுவதற்கே காரணம் நான் மாநகராட்சியிலிருந்தவன் என்ற காரணத்தால் பல்வேறு பிரச்சினைகளைத் தெரிந்தவன் என்ற காரணத்தால் அவற்றை அமைச்சருக்குத் தெரிவிக்கின்ற ஒரு வாய்ப்பாக, சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். ஆகவே ஐந்து நிமிடங்கள் மேலும் தர வேண்டுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மன்னிக்க வேண்டும் இரண்டு நிமிடங்கள் தான்.

1978 ஜனவரி 4]

<u>திரு. மு. அரங்கநாதன்:</u> இன்றைக்கு வடிகால் பிரிவிலே இருக்கின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை. வடிகாலில் இறங்கி மூழ்கி மலங்களோடு வெளிவரும்போது அத்தொழிலாளிக்கு சரியான பாதுகாப்பு இல்லாத காரணத்தால் அண்மையில்கூட சில உயிர்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இத்தகைய அபாயகரமான நிலைமைகளை மாற்ற தக்க வழி வகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், இதற்கு ஒரு குழு நியமிக்க வேண்டுமென்று என் கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள 120 வட்டங்களை 150 ஆக திருத்தி அமைப்பதுதான் தேர்தல்கள் நடத்தாதற்கு மூல காரணம் அன்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார், எனக்குத் தெரிந்த மட்டில், மாநகராட்சி நிர்வாகத்தில் அடுத்த வாரமே தேர்தலை வைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். வதற்கான வேலைகள் எல்லாம் பூர்த்தி அடைந்துவிட்டன, ஆகவே, தேர்தலை நடத்தாதற்கு இதைக் காரணம் காட்டுவது சரியல்ல என்பதையும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எல்லா வட்டங்களும் முறையாக ஒழுங்காக பிரிக்கப்படடு அது தொடர்பான வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன.

1972—73-ல் நான் சுகாதாரக் குழுவின் தலைவராக இருந்த போது இந்த மாமன்றத்திலும், நகர மன்றத்திலும் சில யோசனைகளைச் சொன்னேன், இன்றைக்கு இருக்கிற முனிசிபல் ஆக்ட், ஹெல்த் ஆக்ட், டவுன் பிளானிங் ஆக்ட், ஆகிய மூன்று சட்டங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன. இந்த முரண்பாடுகளை வைத்துக்கொண்டு பொது மக்கள் சில தவறுகளைச் செய்கிறார்கள். ஒருவர் ஒரு கறி கடைக்கு உரிமம் பெறுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த உரிமத்தைப் பெறுவதற்கு மனு போடுகின்ற நேரத்தில் சுகாதாரப் பிரிவிலிருந்து ஆய்வு செய்கின்ற நேரத்தில் சட்டப்படி கட்டடம் அனுமதி பெற்றிருக்கிறதா என்று ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்த மசோதா தேர்தல் சம்பந்தப்பட்டது. நீங்கள் மாநகராட்சி மன்ற மசோதாவின் மீது பேசுவதைப் போல் பேசுகிறீர்கள்.

அந்தச்சட்டம் வரும்போது அதைப் பேசிக்கொள்ளலாம். தேர்தல் மசோதாவை ஒட்டிப் பேசுங்கள். அவற்றைப் பேசுவதற்கு இது நேரமல்ல.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, மாமன்றம் தற்போது இல்லாத காரணத்தால் சென்னையைப் பொறுத்தவரையில் எம்.எல்.ஏ. தான் கார்ப்பரேஷன் கவுன் சிலர் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சென்னை யைப் பொறுத்த வரையில் அந்தப் பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. அதனால் தான் இவைகளை இங்கே சொல் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்ட ஐந்து நிமிடங்களும் ஆகிவிட்டன முடியுங்கள். 2 நிமிடம் என்று சொல்லி நீங்கள் கேட்ட 5 நிமிடங்களும் முடிந்து விட்டன.

திரு. மு. அரங்கநாதன் : இந்த மூன்று சட்டங்களிலும் சிக்கல்கள் இருக்கின்றன. இந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைத்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த தொடர்க் கூட்டத்தில் பேசும்போது மாநகராட்சி ஆலோசனைக் குழு ஒன்றைப் போடலாம் என்ற அனைத்துக் கட்சியினரும் ஆலோசனையைச் சொல்லி அதன் அடிப்படை யில் ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குழுவைப் போட்டிருக் கிறார்கள். கட்சி சார்பற்ற முறையில் பிரச்சினைகளை அணு குகிறோம் என்றும் நாங்கள் எதையும் பொது நோக்கோடு தான் பார்க்கிறோம் என்று சொல்கின்ற அரசு ஐந்து பேர்களில் ஒருவராக, அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த அப்துல் கபூர், எம்.பி.ஐ அந்தக் குழுவில் போட்டிருக்கிறார் கள். (மணி அடிக்கப்பட்டது). இது எந்த வகையில் நியாயம்.............. (மணி அடிக்கப்பட்டது) என்ற என் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இந்த அவையின் முன்பு மதுரை நகராட்சியின் ஆயுட்காலத்தை ஆறு மாத காலத்திற்கும் சென்னை மாநக ராட்சியின் ஆயுட்காலத்தை ஒரு ஆண்டு காலத்துக்கும் நீட் டிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் மீது விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. எனக்கு முன்னதாகப் பேசிய

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், இந்நகராட்சிகளுக்கான தேர்தல்களை அதிக நாட்களுக்குத் தள்ளிப்போட வேண்டிய அவசியம் இல்லை, விரைவாகத் தேர்தல்களை நடத்துவதன் மூலம் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும். தற்போது மக்களால் தெரிந்து எடுக் கப்பட்ட உறுப்பினர்கள் மாநகராட்சிகளில் இல்லாது இருக் கும் காரணத்தினால் அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் நிலை இருக்கிறது. மக்கள் நலன்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக் கின்றேன்.

மதுரை மாநகரத்தைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்திருந்தபோது கூடச் சொன்னோம். நாடெல்லாம் வெள்ளமென தண்ணீர் பெருக் கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும் நேரத்திலே மதுரையில் இன்னும் 'க்யூ' வில் நின்றுதான் தண்ணீரைப் பிடிக்க வேண் டிய நிலை இருக்கிறது. நாள் முழுவதும் தண்ணீர் கிடைத்து வந்த அந்நகரிலே இப்போது மூன்று மணி நேரமே தண்ணீர் விடப்படுகிறது, அதையும் 'க்யூ'வில் நின்று பிடித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். இதைப் பற்றி அதிகாரிகள் எதையும் செய்யத் தயாராக இல்லை;

மக்களின் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், அதிகாரிகள் தன்னிச்சையாக நடந்துகொள்ளும் போக்கு இருக்கிறது, இவர்கள் இஷ்டத்துக்கு மக்களின் நலன்களைப் புறக்கணித் துச் செயல்படுகின்றார்கள் என்ற நிலையை மாண்புமிகு அமைச் சர்களும் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். எனவே மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு விரைவில் தேர் தலைக் கொண்டு வருவது நலம்தான் என்றாலும் அரசின்சார் பில் சொல்லப்படும் காரணங்களும் நியாயமானவைதான் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய அவசியத் தில் இருக்கிறோம்.

'பயந்து தானோ என்னவோ தேர்தலை நடத்தவில்லையோ' என்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையில் மாநகராட்சித் தேர்தலை ஒரு ஆண்டு காலத் திற்கு மேலும் தள்ளிப் போடுவதற்கான காரணம் ஆளும் கட்சியினருக்கு நகரில் செல்வாக்கு இல்லை என்பது அவர்

[திரு. கே. கந்தசாமி] [1978 [illegible]

களுடைய வாதம். பொதுவாக ஜனநாயக [illegible] எதிர்க்கட்சியாக உள்ளவர்கள், மக்களின் நன் ம[illegible] பெற்று, மெஜாரிட்டி பலத்தைப் பெற்று ஆளும் [illegible] பிற்கு வருவது என்பது எதிர்ப்பார்க்கக் கூடிய ஒன்று. [illegible] முறையில், அண்மையிலேயே நடைபெற்ற பொதுத் [illegible] லிலே மக்களின் நன்மதிப்பினைப் பெற்று, மக்களின் பெ[illegible] நம்பிக்கையோடுதான் இவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வ[illegible] திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். நம்பிக்கையுடன் வாக்களித்த மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யத் தவறி விடுவோம், இந்த ஆட்சி ஆளும் கட்சியில் உள்ளோருடைய சுய நலத்திற்கே பயன்படும் என்று நினைத்திருந்தால் தேர்தலை வைத்தால் என்ன நேருமோ என்று அஞ்சி தேர்தலை நடத்தாது தப்பித்துப் போயிருக்கலாம் என்று நினைக்கலாம். மாறாக, இந்த அரசு மக்களின் நலன்களுக்காகப் பாடுபடுகிற அரசு, நியாயத்திற்காகப் பாடுபடுகிறது, மக்களுக்கு நியாயத்தைச் செய்ய வேண்டும், நல்லதைச் செய்ய வேண்டும், அதன் மூலம் பெரும்பாலான மக்களின் நன்மதிப்பினை, நம்பிக்கையினை மேலும் பெற்று பணியாற்ற வேண்டும் என்ற நம்பிக்கையோடு உள்ள அரசு. எனவே மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லுவது எப்படி ஏற்றுகொள்ளக் கூடியதாகும் என்று அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, தேர்தலுக்கான ''எலெக்டோரல் ரோல்'' பற்றிக் குறிப்பிட்டார்கள். எல்லாம் தயாராக இருக்கின்றது என்று கூடச் சொன்னார்கள் அதிகாரிகள் என்றும் குறிப்பிட்டார்கள். அதிகாரிகளைக் கேட்டால் எதுவும் தயார் என்று தான் சொல்லுவார்கள்; அந்த அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சொல்லும் அதிகாரிகளும் இருக்கின்றார்கள். நமக்குத் தான் தெரியும். ' தேர்தலை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்றால் அன்று திராவிட முன்னேற்றக் கழக அரசினை டிஸ்மிஸ் செய்து, 75-ல் அரசு நீக்கப்பட்டுவிட்டது, அதற்குப் பிறகு ஜனநாயகம் குலைந்து வேறுவிதமான ஆட்சி நடந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலேயே வாக்குச் சீட்டுக்கள் தயாராகிவிட்டன' என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அப்படியே தயாராக இருந்திருந்தாலும், அன்றைக்கு இன்று இரண்டரை ஆண்டு காலம் ஆகிவிட்டது. அன்றைக்குப் பட்டியலில் இடம் பெறாதவர்கள் எல்லாம், அன்று 18 வயது நிரம்பப்பெறாதவர்கள் இப்போது 20 வயதினை அடைந்து வாக்களிக்கும் தகுதியினைப் பெற்று இருப்பார்கள்.

1978 ஜனவரி 4]

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே வாக்காளர்களின் பட்டியல் தயாராகிவிட்டது என்று சொன்னதாகக் குறிப்பிடுகின்றார். நான் சொன்னதெல்லாம், அன்றே தயாராகிவிட்டதா, தயாராக வில்லை என்றால், எப்போது தயாராகும் என்ற விளக்கத்தைத் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன்.

(மாலை 5-10)

திரு. கே. கந்தசாமி: அப்படி இல்லையென்றால் பாதகமில்லை. அவர்கள் அந்தக் கருத்துப்பட சொன்னார்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: நானாக இல்லை என்று சொல்லவில்லை. அவராக முடிவுக்கு வந்து இல்லை என்று சொல்லுவது ''மிஸ்ரெப்ரசென்டேஷன்''.

திரு. கே. கந்தசாமி: I do not have any intention to misrepresent please. ஆகவே, நீண்ட நாட்களுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட வாக்காளர் ஜாபிதாவை ''அப்டு-டேட்'' செய்திருக்கிறார்கள். அப்போது உயிரோடு இருந்தவர்கள் இப்போது பலர் இருக்க மாட்டார்கள். அப்போது வாக்குப் பதிவு உரிமை பெறாதவர்கள் பலர் இப்போது அந்த உரிமை பெற்றிருப்பார்கள், உயிரோடு இல்லாதவர்களை இருப்பதாகக் கருதுவதும் துஷ்பிரயோகம், வாக்குரிமை இருப்பவர்களுக்கு அதை மறுப்பதும் துஷ்பிரயோகம். இன்று முதல் விரைவாக தேர்தல்களை நடத்துவதற்கு ''ரீசென்ட்-பாஸ்ட்'' என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே, ஆகவே, சமீப காலத்தில் வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது மிகச் சிறந்தது. ஆகவே ஒரு நல்ல காரியத்தை சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவுபடுத்த வேண்டும்.

நம் நாடு விவசாய நாடு. ''ஹார்வெஸ்ட் சீஸன்'' அறுவடைக் காலம் மாசி-பங்குனி. ஆகவே, அதை விரைவில் எடுத்துக்கொள்ளலாம். சென்னையைப் பொறுத்தவரை 6 கோடி ரூபாய் ரோடு ரிப்பேருக்கு ஆகும் என்று சொல்லுகிறார்கள். இந்த ரிப்பேர் நடக்கட்டும். ஆனால் அதை அதிகாரிகளுடைய சர்வாதிகாரத்துக்கு விட்டு விடாமல் மக்கள் குழு—சர்வ கட்சி பிரதிநிதிகள் குழு—அமைத்து அவர்கள் கண்காணிப்பில் செய்ய அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ ''அட்வைசர்ஸ்'' சொல்லி, ''செத்தவன் காதில் சங்கு ஊதின'' மாதிரி இல்லாமல், மக்கள் குழு, அதிகாரம் உடைய குழுவாக, சர்வ கட்சிப் பிரதிநிதிகளை வைத்து நடத்துவதன் மூலம் மக்கள் குறைகள் தீர்க்கப்பட, அதற்குரிய வேலைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையை பொறுத்தவரை அதிர்ஷ்டவசமாக பெருமைக்குரிய திரு. சீதாராமதாஸ் அவர்கள் இருக்கிறார். மதுரையில் இருக்கும்போது ''க்ரீவன்சஸ் டே '' வைத்து மக்கள் குறைகளை கேட்டறிந்தார். எதிர்க் கட்சித் தலைவர்களும் அவரைப் பாராட்டுகிறார்கள். அந்த ''கிரீவன்சஸ் டே'' தொடர்ந்து அவர் மக்களை சந்திப்பதற்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இப்போது குறிப்பிட்டுள்ள ''பீரியட்''டுக்குள்ளாவது தேர்தலை விரைவில் நடத்த வேண்டும். இதற்கு மேல் தள்ளிப் போடுவது நல்லதல்ல, என்று தெரிவித்து, இந்த திருத்தத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

*திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவரவர்களே, மதுரை மாநகராட்சிக்கும், கோவை நகராட்சிக்கும், ஏனைய நகராட்சிகளுக்குமான தனி அதிகாரிகளுடைய காலத்தை நீடிப்பது பற்றிய இப்போது வந்துள்ள மசோதாவின் கீழ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தைக் கூற விரும்புகிறேன்.

மதுரை நகரத்தைப் பற்றி எனக்கு முன் பேசிய எங்கள் கட்சி தோழர் என். சங்கரய்யா அவர்கள் தெளிவாக விவரமாகக் கூறிவிட்டார்.

கோவை நகரம் சம்பந்தப்பட்டவரை, அந்நகராட்சி கலைக்கப்பட்டு இரண்டரை ஆண்டு காலத்திற்கு மேலாகிறது. நகராட்சியிலிருந்து மாநகராட்சி ஆக்கப்போகிறோம் என்ற அடிப்படையில் கலைக்கப்பட்டது. தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். மேற்கொண்டு தேர்தல் நடத்தி அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமைப்பு உருவாக்கப்படவில்லை. அந்த நகரத்துக்கு, எந்த நோக்கத்திற்காக கலைக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையில் கோவை நகரத்தையும் அதன் சுற்றுப்புற ஊர்களையும் இணைத்து தேர்தல் நடத்தஅரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதைத் தவிர

தனி அதிகாரியின் காலத்தை நீடிக்கவேண்டுமென்று கொண்டு வரப்பட்ட நிலை சுமார் 9 மாத காலத்திற்கு அனுமதி கோருவது நீண்ட காலமாக இருக்கிறது. அந்தக் காலம் அதிகமாக இருக்கிறது. தனி அதிகாரியின் நேரடிப் பொறுப்பின் கீழ் இன்றைக்கு கோவை நகரத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் நடைபெறுமலும் கோவை நகரத்தில் நகராட்சிக்கு வருகின்ற மக்களின் முறையீடுகள் தீர்வு காணப்படாமல் காலம் கடத்துவதும் நீடிக்கிறது. அதனால் மக்களுக்கு பெருமளவில் கஷ்டங்கள் ஏற்படுகிறது. அதைப் போக்குவதற்கு கோவை நகராட்சிக்கும், மதுரை மாநகராட்சியைப் போல் அதேகாலத்தில் தேர்தல் நடத்துவதற்கு குறிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோருகிறேன். கலைக்கப்பட்ட இதர நகராட்சிகள் சம்பந்தப்பட்டவரை காலாகாலத்தில் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு தனி அதிகாரிகளின் நேரடிப் பொறுப்பில் இருக்கும் பல்வேறு நகராட்சிகளில், அங்கே நிர்வாக நடவடிக்கை மக்கள் திருப்திபடும் அளவுக்கு இல்லை என்பது இருக்கக்கூடிய யதார்த்தமான நிலைமை.

சிங்காநல்லூரில் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த அதிகாரியின்கீழ் நடக்கும் நிர்வாகம் குறித்து, அங்குள்ள, அந்த நகராட்சியில் மக்களுக்கு எந்த அளவிற்கு அதிருப்தியை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கு எந்தவிதமான ரோடுவசதியும் சரியான அடிப்படையில் இல்லை. சாக்கடை வசதி இல்லை. வீதி விளக்குகள் இல்லை. கக்கூஸ் வசதி இல்லை. பஞ்சாயத்துக்கள் இருந்தபோது கட்டப்பட்ட 71 கக்கூஸ்களும் இன்று உபயோகப்படுத்தப்பட முடியாத நிலையில் மக்கள் ஆண்களும், பெண்களும் ரோட்டின் இரு ஓரங்களிலும் மலம் கழிக்கவேண்டிய அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் ஆஸ்பத்திரிகள், ஹோட்டல்கள் போன்றவற்றை சோதனையிடத் திடீரெனச் செல்கிறார்களே அதேபோல் அமைச்சர் அவர்கள் காலை 5 மணி அளவில் சிங்காநல்லூர் பகுதிக்குச் சென்று பார்த்தால் அங்குள்ள யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளமுடியும். ஆண்களும் பெண்களும் வெட்கத்தை மறந்து, மானம், வெட்கம் இல்லாமல் இன்றிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே,

[திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு] [1978 ஜனவரி 4

இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் போக்குவதற்கு அரசு உடனடியாக தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தனி அதிகாரியின் பொறுப்பு என்று விடக்கூடாது. உடனடியாக தேர்தல்களை நடத்தவேண்டும்.

மதுரை மாநகராட்சிக்கு எப்போது தேர்தல்கள் நடத்தப் படுகிறதோ அந்தக் காலத்திற்குள்ளேயே மற்ற நகராட்சிகளுக்கும் தேர்தல்களை நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மதுரை மாநகராட்சியானாலும் சரி, கோவை நகராட்சியானாலும் சரி, மற்ற எந்த நகராட்சிகளானாலும் சரி, தனி அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்க என்று சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ராஜ்ய சபா உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கன்ஸல்டேட்டிவ் கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் பொறுப்பின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் பேசும்போது, **

என்று நீதிபதிக்கு அறிவுரை சொல்வது போல் இருக்கிற அந்த வாசகத்தை நான் நீக்கிவிடுகிறேன். கடைசியில், திரு. சாதிக் பாட்சா அவர்கள் **

என்று சொன்ன அந்த வாக்கியங்களையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களை வைக்க அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, கடந்த

** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1978, ஜனவரி 4] [திரு. ப. பொன்னுரங்கம்]

பொதுத் தேர்தல்கள் முடிந்த பிறகு நான் என் தொகுதிக்கு செல்லும் போது மக்கள் பிரதிநிதிகள் வேண்டும் என்பதற்குரிய காரண காரியங்கள் ஏற்பட்டதை நடந்த சில சம்பவங்களைக் இங்கே குறிப்பிட்டு வைத்து ஆகவே தேர்தல்கள் எவ்வளவு அத்தியாவசியம் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக எனக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐந்து நிமிடங்களுக்கு மேல் இல்லை. தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தேர்தல்கள் முடிந்து நான் நன்றி சொல்ல செல்கிற நேரத்தில் பார்த்த விபரங்களை சொல்ல விழைகிறேன். அமைச்சர் அவர்கள் என் தொகுதிப் பக்கம் வருகிற போது பார்த்தால் தெரியும். ராயபுரம் பாலம் இருக்கிறது. அதன் பக்கத்தில் செட்டித் தோட்டம் என்ற பகுதி இருக்கிறது. அங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள். அந்த மக்களுக்காகக் கட்டப்பட்டிருக்குகிற ஒரு கக்கூஸ் அதைச் சுற்றியிருக்கிற கால்வாய்களையெல்லாம் பார்க்கிறபோது சகிக்க முடியாத நிலையில் அங்கே கழிக்கப்படுகிற மலஜலங்கள் எல்லாம் தேங்கியிருப்பதை நான் என் கண்ணால் கண்டு இது எப்போதும் இப்படித்தான் இருக்குமோ என்று கேட்டேன். அவர்கள் எனக்குச் சொன்ன பதில், மக்கள் பிரதிநிதி இருக்கும்போது, அதாவது நகரமன்ற உறுப்பினர் இருக்கும்போது அவர்கள் வாரம் இரண்டு அல்லது மூன்று முறை வருகிறபோது சானிட்டரி இன்ஸ்பெக்டரை அழைத்து வருவார், ஏ. எச். ஓ., மற்றும் அதிகாரிகளையும் அழைத்து வருவார், அதையெல்லாம் களைவார்கள் என்று சொன்னார்கள். இப்போது அவர்கள் இல்லாததால் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். அதை யொட்டித்தான் மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தில் மாநகராட்சியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் கலந்து கொண்டு அந்த நிகழ்ச்சி என் தொகுதியில் நடைபெற்றது.

[மாலை 5-20]

அந்த நிகழ்ச்சியில் இதை மனத்தில் வைத்துக் கொண்டு பேசினேன். இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இதுவே நிரந்தரமான பரிகாரமாக இருக்க முடியாது.

மக்களின் பிரதிநிதிகள் நிச்சயமாக இருந்தாக வேண்டும். தேர்தலை விரைவில் நடத்தியாக வேண்டும் என்று அந்த இடத்தில் என்னைப் பேச அழைத்ததால் நானும் சொன்னேன். இந்த நிகழ்ச்சியில் பெரிய மனது வைத்து என்னையும் அழைத்தார்கள். நானும் இதைப் பேசினேன். அங்கு அமைச்சர் அவர்களும் பேசினார்கள், அதில் இனிமேல் காலம் கடத்தப்படாமல் விரைவில் தேர்தல் நடைபெறும் என்று மக்களின் மத்தியில் அமைச்சர் அவர்களே அறிவித்தார். அவரது அறிவிப்பும், என்னுடைய வேண்டுகோளும் அன்றைய தினம் சென்னை வானொலியும் ஒலிபரப்பியது என்பதையும் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கின்ற ரோடுகள் விளக்குகள் எல்லாம் என்ன நிலைமையில் சீர் கெட்டு இருக்கின்றன என்பதை யெல்லாம் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் தங்களால் முடிந்த அளவுக்கு இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதையொட்டி நானும் சில கருத்துக்களை சொல்லி என் பேச்சை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். மக்கள் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்கு பிரதிநிதிகள் இல்லாததின் காரணமாக அதிகாரிகளிடம் தொடர்பு கொள்கிறார்கள், அவ்விதம் தொடர்பு கொள்ளுகின்ற நேரத்தில் அதிகாரிகள் உரிய மரியாதையை தருகின்றார்களா, உரிய முறையில் பதில் அளிக்கிறார்களா, சொல்லப்படுகின்ற குறைகளை நிவர்த்தி செய்கிறார்களா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாததன் காரணமாக பொது மக்கள் நேரடியாக அதிகாரிகளைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக ஒரு கடிதத்தை தலைவர் அவர்களின் அனுமதியோடு படித்துக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் அனுமதி பெறவில்லையே, நான் அதை பார்வையிட்டு அனுமதி தர வேண்டுமென்றால் அரை மணி நேரமாகும். ஆகையால் கடிதத்தை படிக்க வேண்டாம், அதிலுள்ள விஷயங்களை மட்டும் நீங்கள் சொல்லிவிட்டால் போதும்.

திரு. ப. பொன்னுரங்கம் : அதில் ஸ்பெஷல் ஆபீஸர் சார்பில் வாட்டர் வொர்க்ஸ் சூப்பிரன்டென்டிங் எஞ்சினியர் 28—9—1977-ல் இந்த கடிதத்தை எழுதியிருக்கிறார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதன் மீது பேசாதீர்கள், அதைப் படிப்பதற்கு நான் அனுமதிதரவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : அதிகாரியை பார்க்க வேண்டும் என்று பொது நல சேவா சங்கத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு வந்த பதில் கடிதத்தைத் தான் குறிப்பிட்டார். இந்தச் சங்கத்தில் சர்வக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். இந்தக் கடிதத்தின்படி அதிகாரியை நேரில் போய் பார்ப்பதற்கு அவர்கள் போய் முயற்சி செய்திருக்கிறார்கள். கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி உரிய நேரத்தில், உரிய நாளில் போய் மணிக் கணக்காக காத்திருந்தும், இவர்களை காக்க வைத்துவிட்டு போய்விட்டார், இவர்களைப் பார்க்க நேரம் கொடுக்கவில்லை. இது வரை நேரம் கொடுக்கவில்லை. ரிமைண்டரும் அனுப்பியிருக்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாததால் தான் நேரடியாக அதிகாரிகளிடம் தொடர்ப்பு கொள்ளுகின்ற நேரத்தில் பொதுமக்களின் குறைகளை கேட்பதற்கோ நேரடியாக சந்தித்துப் பேசுவதற்கோ அதிகாரிகள் தயாராக இல்லை என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, மக்களுக்காக இருக்கின்ற வாய்ப்புக்கள் இப்போது ஒவ்வொன்றாக அகற்றப்பட்டு வருகின்றன. முந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ' சைல்ட் வெல்பேர் சென்டர் ' மூடப்பட்டது. என்னுடைய தொகுதியில் ஒன்று மூடப்பட்டன. கம்யூனிட்டி சென்டர் அதாவது சிறிய திருமணக் கூடங்கள் பல கலைஞர் ஆட்சியில் பரவலாக கட்டப்பட்டன. அதற்கு இப்போது என்ன நிலைமை வந்திருக்கிறது என்று பார்த்தால்—ஆபட்சுபரி போன்ற பெரிய திருமணக் கூடங்கள் இருக்கின்றன என்று சொன்னால்—வசதி படைத்தவர்கள் அவற்றை பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால் ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் இது போன்ற சிறிய திருமணக் கூடங்களுக்கு கட்டணம் முன்பு ஒரு மடங்கு இருந்தது என்றால் இப்போது மூன்று மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. மாநகராட்சியின் தனி அதிகாரி தான் இந்த முயற்சியை எடுத்திருக்கிறார் என்பதையும் அதே நேரத்தில் அரசாங்கத்திற்கு கூடுதலான வருவாய் எதுவும் கூடுதலாக கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். வேண்டுமென்றால் ஓரளவு வருவாய் அதிகமாகும் என்பதை

ஒத்துக்கொள்ளலாம். நினைக்கின்ற அளவுக்கு அதிகமாக வருவாய் வருகின்றதா என்று பார்த்தால், இல்லை, காரணம் ஏழை மக்கள் இதைப் பயன்படுத்த இப்போது போவதில்லை. இவற்றில் இப்போது என்கேஜ்மென்டே கிடையாது.

அது மட்டும் அல்ல, தங்களுடைய அனுமதியோடு, 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் வெளிவந்ததை படித்துக் காட்டுகிறேன்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இதையெல்லாம் படித்துக் காட்டுவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை, உங்களுக்கு ஐந்து நிமிடம் கொடுத்தேன். நீங்கள் அதிகமான நேரத்தை எடுத்தாய் விட்டது. தி. மு. க. வைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களுக்கு இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்து இருக்கிறேன். நான் இவ்வளவு தாராளமாக இருந்திருக்கிறேன். தயவு செய்து என்னோடு ஒத்துழையுங்கள். விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் அதை படிக்கவில்லை. மேலும் அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் எல்லாம் தனி அதிகாரியின் கீழ் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு சங்கடங்கள் அந்த ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர் பெயர் கனகராஜ், அவர்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இப்போது விவாதத்திற்கு பதில் சொல்லலாம்,

திரு. ப. பொன்னுரங்கம் : உங்கள் அனுமதியோடு நான் இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை தொடர்பாக 7 மசோதாக்கள் இங்கே, இந்த அவையிலே எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. அதிலே, முதல் மசோதாவை நான் இங்கே முன் மொழிந்திருக்கிறேன்.

யிலே தான் இந்த அரசாங்கம் முனைந்து வேலைகளை மேற்கொண்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த உள்ளாட்சித் தேர்தலை எப்போது நடத்தலாம் என்று சிந்திக்கவில்லை என்பதை நான் பணிவன்போடு மாண்மிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் தட்பவெட்ப நிலைமைகளைப் பார்த்த பிறகு, அதற்குத் தகுந்தாற்போல் தேர்தலை நடத்துவது என்ற எண்ணம் ஆளும் கட்சிக்கு உறுதியாக இல்லை. ஆனால் பொதுவாக நாட்டின் நிலை, மக்களின் நிலை ஆகியவற்றின் அடிப்படையிலே இந்தத் தேர்தல் அமைய வேண்டுமென்ற காரணத்தினால்தான், அனைத்து கட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது, குறிப்பிட்டார்கள். நாம் எல்லாம் பேசும்போதும், மழைக்காலம் முடிந்த பிறகு, அறுவடைக் காலம் முடிந்த பிறகு, பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பிறகு தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்று பேசினோம். இப்போது ஏப்ரலுக்குப் பின்னாலே வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பட்ஜெட் கூட்டத் தொடருக்குப் பின்னாலே, தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்று கருதினாலும், பட்ஜெட் கூட்டத் தொடர் ஏப்ரலுக்கும் போகக்கூடும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே தான் அரசு இதைச் சிந்திக்கிறது. நான் இன்னொன்றையும் ஒட்டுமொத்தமாக இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சியிலே இருப்பதுபோல், மதுரை மாநகராட்சியிலும் இருக்கலாமே என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், வாக்காளர் பட்டியலிலே இருக்கின்ற குறைபாடுகள் நீக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் சீர்திருத்தி, அப்படி முறைப்படுத்திய பிறகு தேர்தலை நடத்தினால், நல்லமுறையில் அமையும், அந்த முறையிலே இந்தத் தேர்தலை நடத்துவது என்று அரசு கருதி, அதற்காக எவ்வளவு செலவானாலும் கவலையில்லை என்ற எண்ணத்தின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் இந்த வாக்களர் பட்டியலை நல்லமுறையிலே தயாரித்து, அந்த முறையிலே வாக்காளர் பட்டியலை உருவாக்குவதற்கு இந்த அரசு ஆணை பிறப்பிக்க இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978, ஜனவரி 4] [திரு. கா. காளிமுத்து]

மதுரை மாநகராட்சியைப் பற்றியது அந்த மசோதா. இன்னும், சென்னை மாநகராட்சியைப் பற்றிய மசோதா இருக்கிறது, நகராட்சி மன்றங்களைப் பற்றிய மசோதா இருக்கிறது, கோவை நகராட்சியைப் பற்றிய மசோதா இருக்கிறது, ஊராட்சி ஒன்றிய மன்றங்களைப் பற்றிய மசோதா இருக்கிறது. ஊராட்சிகள் இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு மசோதா இருக்கிறது, ஊராட்சிகள் சட்டத்தில் செய்யப்பட்ட மூன்றும் திருத்தம் பற்றிய மசோதா இருக்கிறது, இப்படி இதிலே ஏழு மசோதாக்கள் இங்கே ஆய்வுக்கு வர இருக்கின்றன. இதிலே மதுரை மாநகராட்சியைப் பற்றிய இந்த சட்ட முன்வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல், சென்னை மாநகராட்சியைப் பற்றியும் இங்கே உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஆரம்பத்திலேயே ஒட்டு மொத்தமாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சற்று விளக்கமாகவே சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாக்கள் அனைத்தையும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை மாநகராட்சியைப்பற்றியும் இங்கே பேசி விட்டார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாக்களின் நோக்கமே தேர்தல் நடத்துவதற்கு அவகாசம் கேட்பதுதான் என்பதை ஒளிவு மறைவு இல்லாமல் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தேர்தலைத் தள்ளிப் போட்டமைக்கு என்ன காரணம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்திலே, ஏற்கனவே தனி அதிகாரிகளிடம் இருந்த ஊராட்சி அமைப்புகளில், அந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் முடிவதற்கும், இந்த அரசு பொறுப்பேற்பதற்கும் சரியாக இருந்தது. ஆகவே, மீண்டும் அவர்களது பதவிக் காலத்தை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமையை நேரிட்டது. அதற்குப் பிறகு தேர்தலை நடத்த வேண்டும். அந்தத் தேர்தலை முறையான தேர்தலாக, ஒழுங்கான தேர்தலாக, குறைபாடுகள் அற்ற தேர்தலாக நடத்த வாக்காளர் பட்டியலை தயாரிப்பது என்ற அடிப்படை

1978 ஜனவரி 4] [திரு. கா. காளிமுத்து]

[மாலை 5-30]

அதிலும் இப்போது வெள்ளம் ஏற்பட்டிருக்கும் பகுதி களில் சில ஊர்களின் வடிவம் மாறியிருக்கிறது. சிலபேர் எங்கெங்கோ குடியேறியிருக்கிறார்கள். ஏற்கனவே வாக்காளர் பட்டியலைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நிலை, இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை இவ்வளவையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது புதிதாக வாக்காளர் பட்டியலை உருவாக்கு வது அவசியம் என்று அரசு கருதுகிறது. 1—1—1978 அன்று 21 வயது பூர்த்தி அடைந்த அவ்வளவு பேரும் வாக்கா ளராகச் சேரத்தக்க அளவுக்கு வாக்காளர் பட்டியலை உரு வாக்குமாறு ஆங்காங்கு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது ; பிறப்பிக்கப்பட இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சிக்கு ஆறு மாதம், சென்னை மாநக ராட்சிக்கு ஏன் ஒரு வருஷம்? இது மாற்றாந்தாய் மனப் பான்மை இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சாதிக் அவர்கள் கேட்டார்கள். அவர்களுடைய பேச்சிலே அதற்கான பதிலையும் அவர்கள் அறியாமலே தெரிவித்தார்கள். 150 டிவிஷன்களாக சென்னை மாநராட் சியைப் பிரிக்க வேண்டுமென்ற வகையில் அதிகாரிகள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல குடிசைப் பகுதிகள் சரியாகச் சேர்க்கப்படவில்லை ; தொடர் எண்கள் கொடுக்கப்படவில்லை ; கதவிலக்கங்கள் தரப்பட வில்லை, என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அந்த வகையில் 150 டிவிஷன்களாக ஒழுங்குப்படுத்தி கதவிலக்கங்கள், தொடர் எண்கள் கொடுக்கப்பட்டு சரியான வகையில் வாக்காளர் பட்டியலை உருவாக்கவேண்டிய காரணத்தால் சென்னை மாநகராட்சிக்குக் கொஞ்சம் அதிகக் கால அவகாசம் பிடிக்கிறது. வேலை தொடர்ந்து நடக்கிறது.

மதுரையை 65 வார்டுகளாகப் பிரிக்க வேண்டுமென்று கருதி பிரிக்கப்பட்டு முடிந்து விட்டது. அருமைச் சகோதரர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்— 65 வார்டுகளாக மதுரை மாநகராட்சியைப் பிரிக்க எப்போது கோரிக்கை வந்தது? அந்தக் கோரிக்கை ஏன் கவனிப்பா ரற்றுக் கிடந்தது? பிரிக்க ஏன் இவ்வளவு காலதாமதம் ஆயிற்று என்று சந்தேகப்படுகிறேன் என்று கேட்டார்,

[திரு. கா. காளிமுத்து] [1978 ஜனவரி 4

சந்தேகப்படுவது அவருடைய கடமை; விளக்கம் அளிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தொகைக் கணக்கை எடுத்துப் பார்த்து, மதுரை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டிருக்கும் புறநகர்ப் பகுதிகளையும் கணக்கில் எடுத்து 60 வார்டுகளாகப் பிரித்தால் என்ன என்ற கருத்துத் தெரிவிக்குமாறு அரசாங்கம் மதுரை மாநகராட்சிக்கு அனுப்பிற்று. அந்த மாநகராட்சி மன்றம் 65 வார்டுகளாகப் பிரிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குத் திரும்ப பதில் அனுப்பிற்று. மாநகராட்சி அனுப்பிய விவரங்களில் ஒரு வார்டில் மக்கள் தொகை இறக்கமாகவும், இன்னொரு வார்டில் அதிகமாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்டி மறுபடியும் பரிசீலிக்குமாறு மாநகராட்சி மன்றத்திற்கு அரசாங்கம் அனுப்பிற்று. இதற்கிடையில் தேர்தல் கமிஷன் 31—12—1974-க்குப் பின், சட்டசபைத் தொகுதி பிரிவினை ஆணை வெளியிட்ட பின் உள்ளாட்சி அமைப்புகளில் மாறுதலை அறிவிக்கக்கூடாது என்று கூறிற்று. 23—2—1976-ல் தொகுதி பிரிவினை ஆணை வெளியிடப் பட்டது. அதற்குப் பிறகு பாராளுமன்றத் தேர்தல்கள், சட்டசபைத் தேர்தல்கள் வந்த காரணத்தால் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றம் செய்யக்கூடாது என்று தடை செய்யப்பட்டது. 21—7—1977-ல் தடை நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு 4—10—1977-ல் 65 வார்டுகளாகப் பிரித்து முடிவான ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, அரசாங்கம் அவசியமின்றி, காரணமின்றி இதிலே காலம் கடத்தவில்லை என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மசோதாவிலே பேசுவதற்குரிய வாய்ப்புகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கும் குறைபாடுகள்பற்றி அருமைச் சகோதரர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். திரு. அரங்கநாதன் அவர்கள் மிகுந்த மனிதாபிமான அடிப்படையில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சிபற்றிச் சுட்டிக் காட்டி அந்தக் கருத்தைக் கூறியதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரில் துப்புரவுத் தொழிலாளர்கள் சாக்கடைக் குழிக்குள்ளே இறங்கி மலத்திற்கிடையே புகுந்து சுத்தம் செய்யும்போது மூச்சுத் திணறி இறந்து விடுகிறார்கள் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு

1978 ஜனவரி 4] [திரு. கா. காளிமுத்து]

ஏற்கனவே வந்தது. நான் மிகுந்த பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு உடல் முழுவதும் மூடக்கூடிய பிளாஸ்டிக் அங்கி தரவேண்டுமென்றவகையில் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிளாஸ்டிக் அங்கி மூச்சு விட பிராணவாயு கொண்ட அமைப்பில் உருவாக்கி வழங்க ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த மசோதாக்கள் உண்மையாகவே நல்ல முறையில் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அந்த அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாக்கள். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். ஜனநாயக தீபத்தை அணைத்து விடாதீர்கள் என்று கல்லூரி பட்டி மண்டபத்தில் பேசுகிற பாணியில் குறிப்பிட்டார்கள். நான் அன்போடு குறிப்பிடுகிறேன்—தீபத்தை அணைக்க அல்ல; தீபத்திற்கு எண்ணெய் வார்க்க இந்தக் கால அவகாசத்தை அரசாங்கம் கேட்கிறது. இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வெங்கிடுசாமி அவர்கள் கோவை மாநகராட்சி பற்றிக் கருத்துத் தெரிவித்தார்கள். அவர்கள்கூட அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சில பகுதிகளை அரசாங்கம் மாநகராட்சிப் பகுதியாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதனையும் சீர்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு இன்னும் இந்த ஆய்விலே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்ததற்கு பிறகு அதற்கும் நேரம் இருந்தால் பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/77)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1977 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே' கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

In sub-clause (1) of Clause 1, for the expression 'Madurai City Municipal Corporation (Second Amendment) Bill, 1977" substitute the expression "Madras City Municipal Corporation Amendment Bill, 1978".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, " 1977 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/77) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 16/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ' 1977 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/77) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ". என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்களும், திரு. பி. பொன்னுரங்கம் அவர்களும் அவையில் இல்லாததால் அவர்கள் கொடுத்த திருத்தங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

In sub-clause (1) of Clause 1, for the expression 'Madras City Municipal Corporation (Amendment) Bill, 1977", substitute the expression " Madras City Municipal Corporation (Amendment) Bill, 1978."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

*31—12—1977 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, திருத்தப் பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ''1977 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/77) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[மாலை 5—40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்காவது இனமாக கோயம்புத்தூர் நகராட்சி பற்றி வருகிறது. எனவே, மூன்றாவதாக வருகின்ற தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை நிறைவேற்றி விட்டு பிறகு கோயம்புத்தூர் பற்றி சட்ட முன் வடிவை நிறைவேற்றலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். 1 ஆவது, 2 ஆவது இனங்கள் நிறைவேறிவிட்டன. மூன்றாவதாக, தனி அதிகாரிகளை நியமித்தல் பற்றிய சட்டமுன் வடிவு வருகிறது. எனவே, இதிலே வாக்கெடுப்பு நடத்திவிட்டு, பிறகு கோயம்புத்தூர் பற்றி உள்ளதை எடுத்துக்கொண்டு, அதன் பிறகு ஊராட்சி. ஒன்றியங்கள் பற்றி உள்ளதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ஆறுமுகம் : கோயம்புத்தூரை முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இடையிலே மூன்றாவதாக இது வருகிறது. எனவே, நீங்கள் பேசும் போது நகராட்சியைப்பற்றி மட்டும் பேசினால் போதும்.

(இ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 19/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

> '' தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தொடக்கத்திலேயே என்னைக் கூப்பிடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் ஒரு சில கருத்துக்களை நகராட்சிகளும், ஊராட்சிகளும் சேர்ந்திருப்பதால் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட நாட்களாகத் தேர்தல்கள் மாறிமாறித் தள்ளி வைப்பதால் மக்களோடு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் மட்டும் சொல்லவில்லை, எனக்கு முன்னே பேசிய நண்பர்களும் கூறினார்கள், தொடர்ந்து பேசுகின்ற நண்பர்களும் தெரிவிக்க இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

தனி அதிகாரிகளை நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும், போட்டு விட்டு கேள்வி கேட்கக்கூட ஆள் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்குச் செக் புத்தகங்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள். பல சட்ட மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கக்கூடும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பி.டீ.ஓ., ஈ.ஓ.பி., ஆகிய இந்த இரண்டு பேர்களும் சேர்ந்துதான் அந்த ஒன்றியங்களைச் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், தற்பொழுது. ஆகவே, நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த, மசோதா நிறைவேறிய உடனேயே ஒரு கமிட்டியை அந்தந்த பிளாக்குகளுக்கும் போட வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது இருக்கிறார்கள். ஒன்றியப் பெருந்தலைவர் இப்பெழுது இல்லை. (குறுக்கீடு). ஒன்றியங்களையும் பற்றிச் சேர்த்துப் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) சரி, நகராட்சியைப்பற்றி மட்டுமே பேசி

*31—12—1977 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

விடுகிறேன். பேரவைத் தலைவரவர்களே, நகராட்சியைப்பற்றி மட்டுமே பேச வேண்டுமென்று நமக்குச் சொல்வதற்கு ரெடியாக முன்னாலே இருப்பவர்கள் இருக்கிறார்கள்.

நகராட்சியைப் பொறுத்த வரையில் நூற்றுக்கும் மேற்பட்ட நகராட்சிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. தனி அதிகாரிகள் அதற்கு இருக்கிறார்கள். நாம் ஒவ்வொரு நகராட்சிக்கும் சென்று பார்த்தால் கார்கள் போக முடியாத அளவிற்கு இருக்கிறது. குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற நகராட்சிகளை எடுத்துக்கொண்டால், காஞ்சிபுரம் நகராட்சி இருக்கிறது, திருவள்ளூர் நகராட்சி இருக்கிறது. திருவொற்றியூர் நகராட்சி இருக்கிறது, தாம்பரம் நகராட்சி இருக்கிறது, ஆலந்தூர் நகராட்சி இருக்கிறது, மதுராந்தகம் நகராட்சி இருக்கிறது. இதைப்போன்ற நகராட்சிகள் சமீபத்தில் பெய்து முடிந்த மழையினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எந்த நகராட்சியை எடுத்துக் கொண்டாலும் விளக்குகள் இல்லை.

மேலும் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், விசேஷ அதிகாரி என்ன சொல்கிறாரோ அதற்குக் கட்டுப்பட்டாக வேண்டும், ஏனென்றால், வேறு மக்கள் பிரதிநிதிகள் அங்கு இல்லை. அவர் விசேஷ அதிகாரி-ஸ்பெஷல் அதிகாரி—அவர் என்ன சொல்கிறாரோ அதைக் கேட்க வேண்டும் என்ற முறையில் இருக்கிறது. யார் என்ன செய்கிறார்கள் என்ற தொடர்பே இல்லை. நான் சொல்வதைக்கூட நீங்கள் நம்ப வேண்டாம். ஆளுங் கட்சி உறுப்பினர்கள்கூட எங்கேயாவது ஒரு விசேஷ அதிகாரியிடம் சொன்னால் நடக்கிறதா என்றால் நடக்கவில்லை. அதற்கு என்ன காரணம்? அங்கே நான் அஃபிஷியல்ஸ் இல்லை. எல்லாக் காரியங்களையும் அங்கே அதிகாரிகளை வைத்துக் கொண்டு முறையாகச் செய்து கொள்கிறார்கள். எவ்வளவு வருமானம் வந்தாலும் சரி, விளக்குகள் கிரியாக எரிவது இல்லை, சுகாதார வசதி சரியாக இல்லை. சப்படிப்பட்ட நிலையில் அங்குள்ள மக்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவசரக் காலத்தில் அதிகமான கட்டணத்தை ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டிருக்கிறார்கள். அதற்கு யாரையும் கேட்க முடியவில்லை. அவசரக் காலத்தில் போடப்பட்ட வரியைக் குறைக்க வேண்டும். எப்படிக் குறைப்பது? ரெவின்யூ அதிகாரி ஒருவர் வருவார் அவரைப் பார்த்தால் அந்த வரி குறையும், பார்க்கவில்லை என்றால் வரி கூடும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இதெல்லாம் ஏற்கனவே தெரிந்த விவகாரங்கள். திறமையுள்ள உறுப்பினர் புதியதாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : தலைவருக்கு என்ன கோபம், ன்றால், அவருடைய தாம்பரம் நகராட்சியைப் பற்றி சால்லவில்லையே என்பது. அவரே, தாம்பரம் நகராட்சியில் பல்லாண்டு காலம் தலைவராக இருந்தவர். தனி அதிகாரிகளைப் போட்டுவிட்டு, நாம் தொடர்ந்து நகராட்சிகளை நடத்துவது சரியல்ல. நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத், தெரிவிப்பது, மக்களிடம் மிகுந்த கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் போய் பார்க்கவே முடியவில்லை, கேட்கவே முடியவில்லை. நல்ல காரியத்தைச் செய்யவே முடியவில்லை. பேரவைத் தலைவருக்கே அது தெரியும். அவர் தாம்பரத்தைச் சேர்ந்தவர்.

இடையிலே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் அம்பிகாபதி அவர்கள் ஒரு வெட்டு, வெட்டினார்கள். கடைசியாக, நாங்கள் பயந்துகொண்டு தேர்தலை நடத்தவில்லை, எங்களுக்குக் கிலி பிடித்துக் கொண்டது என்று ஒரு வெட்டு வெட்டினார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வெட்டு வெட்டுவது என்பதை எந்தக் கருத்திலே சொன்னீர்கள்.

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : வெட்டு வெட்டுவது என்றால், எங்களைத் தாக்குவது என்று அர்த்தம். ஆகவே, அந்தக் கருத்தை வைத்துத் தேர்தல் வேண்டாமென்று சொல்லவில்லை. கேரளாவிலே, 15 ஆண்டுகளுக்குத் தேர்தல் நடந்ததா? எங்களுக்கா பயம்? கிலி? எங்களைக் கிலி பிடிக்கவில்லை. யாராக இருந்தாலும் சரி, மனதில் பட்டதை, நினைத்ததைச் சொல்லும் தைரியம் இருக்கிறது.

ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தப் பக்கத்திலிருந்து, எவ்வளவு வேகமாகப் பேசியிருப்பார்கள்? நான் அந்தப் பக்கத்திலேயிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் தேர்தலைப் பயந்து கொண்டு தள்ளி வைக்கிறீர்கள், பயந்து கொண்டு தள்ளி வைக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார். தேர்தலுக்குப் பின்னால் வெற்றி யாருக்கு என்பது வேறு விவகாரம். எங்களுக்கு மக்கள் எப்படித் தீர்ப்பு அளித்தார்களோ, அதைப் போல், தீர்ப்பை யாருக்கு அளிக்கிறார்களோ, அதை ஏற்றுக் கொள்கிறோம் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்தத் திருத்த மசோதாவின் மீது ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மையமான கருத்து, ஜனநாயகத்திற்கே அடிப்படையாக அமைந்திருக்கிற தேர்தல்கள் அடிக்கடி ஒத்தி வைக்கப் பெற்று, மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அதிகாரிகளை வைத்துக் கொண்டே, நிர்வாகத்தை நடத்துவது, ஜனநாயகத்திற்கே ஒரு ஆபத்தை விளைவிக்கும் என்று சொல்லப்பட்ட கருத்தாகும். அந்தக் கருத்துக்கு நானும் என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு மாநிலங்களிலே 12 ஆண்டுகள் தள்ளி வைத்தார்கள், 15 ஆண்டுகள் தள்ளி வைத்தார்கள், பஞ்சாயத்துக்களுக்கும், மாநகராட்சிகளுக்கும் தேர்தலே நடக்கவில்லையென்று இங்கே குறிப்பிடப்பட்டது. அது ஒரு உதாரணமாகக் காட்டப் பெற்று, அதன் அடிப்படையில், தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதாக நான் கருதவில்லை. இப்பொழுது நகராட்சிகளுடைய நிர்வாகம் அதிகாரிகளிடத்திலே இருப்பதை மேலும் நீடித்துத் தருவதற்கான ஒரு திருத்தம் இது. அரசாங்கத்திற்கு என்னதான் இதிலே பிராக்டிக்கல் டிபிகல்டீஸ்—அனுபவபூர்வமான கஷ்டங்கள் இருந்தாலும்—கொள்கை அளவிலே நான் இதை வன்மையாக எதிர்க்கிறேன்.

இன்று நாட்டிலே என்ன நடக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும், எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வேறுபல நல்ல கடமைகள் இருந்தும், இன்றைக்கு அவர்கள் என்ன கடமைகளை ஆற்றக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்றால், அங்கே குப்பை எடுக்கவில்லை. இங்கே துப்புரவாக இல்லை, இங்கே மின் விளக்குகள் எரியவில்லையென்று மக்கள் சொல்வதைப் பார்க்க, வார்டு, வார்டாகப் போய், அதைச் செய்யத்தான் சட்ட மன்ற உறுப்பினர்கள் இப்பொழுது முழு நேரம் எடுத்துக்கொள்கிறார்கள், வேறு கடமையாற்ற அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. மற்ற காரியங்களைக் கவனிக்க முடியாத அளவிற்கு, இன்றைக்கு நகராட்சிகளுடைய நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. 70 சதவிகிதம், 80 சதவிகிதம் தெரு விளக்கு எரிவதில்லை. 8 வாரம், 9 வாரம் ஆனாலும், துப்புரவு நடைபெறுவதில்லை.

மாநகராட்சிகளால், அங்கே மருத்துவ மனைகள் நடத்தப் படுகின்றன என்றால், போர்ட் இருக்கும். டாக்டர்கள் இருக்கமாட்டார்கள். சில சமயங்களிலே டாக்டர்கள் தரி

சனம் காட்டுவார்கள். சில சமயங்களில், நர்சுகளே, டாக்டர்களுடைய வேலைகளைச் செய்வார்கள். ஆனால், டாக்டர்கள் இருந்தாலும், நர்சுகள் இருந்தாலும் மருந்து இருக்காது.

இந்த நிலைமைகள் நீடித்துக்கொண்டு போகுமானால், மக்கள் இன்றைக்குக் கிளர்ச்சிகளைச் செய்யும் அளவு உணர்வுகளைப் பெற்றிருக்கிறார்கள். இந்த மாதிரியிருக்கிற நிலைமைகளைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது சம்பந்தமாக நான் ஒரு குறிப்பே கூட வைத்திருக்கிறேன். இரண்டு நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன.

(மாலை 5—50.)

தனி அதிகாரிகளுக்கு குறிப்பே அனுப்பியிருக்கிறேன். நகல்களை மேலதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறேன். துறைத் தலைவருக்கும் அனுப்பியிருக்கிறேன். யாரிடமிருந்தும் பதிலே வரவில்லை. என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ. தெரியவில்லை. தயவு செய்து அதனைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் ஒரு நிகழ்ச்சி. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாணியம்பாடிக்கு வருகை தந்தார். அங்கே வரவேற்பு. வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப் படுகிற நிகழ்ச்சி. அதற்கு யார் தலைமை வகிக்கிறார் என்றால், சப்-கலெக்டர் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள். தனி அதிகாரி அவர்கள் வரவேற்பிதழ் வாசித்து கொடுக்கிறார்கள். மக்கள் பிரதிநிதி சட்ட மன்ற உறுப்பினர் யாரோ விருந்தாளியைப்போல் உட்கார்ந்துக் கொண்டு வரவேற்பிதழ் கொடுப்பதைப் பாராட்டக்கூடிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இது என்ன ஜனநாயகம் என்று என்னாலே தெரிந்து கொள்ள முடியவில்லை.

பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம் நகராட்சிகளில் தேர்தலை தள்ளிப்போடுவது கட்டாயம் என்றிருந்தால், அதற்காக காரணம் இருக்குமானால், மக்கள் பிரதிநிதிகளுக்கு உரிய மரியாதை கொடுங்கள் தனி அதிகாரி, தனி அதிகாரி என்று எதோ ஒரு சில காரணங்களினால் அவர்களை வைத்து நிர்வாகத்தை நடத்த

வேண்டுமென்ற கட்டாயம் இருக்குமானால், நிர்ப்பந்தம் இருக்குமானால், மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒரு மரியாதை வேண்டாமா மக்கள் பிரதிநிதி அங்கே இருக்கிறார். ஒரு மாநிலத்தினுடைய நிதி அமைச்சர் அங்கு வருகிறார். சட்டமன்ற உறுப்பினர் அங்கே பொம்மை போல் உட்கார்ந்திருக்கிறார் என்று சொன்னால் என்ன ஜனநாயகம்?

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே அதிகாரிகள் மதிப்புக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அப்படி சொன்ன அதிகாரி யார் என்று அறியலாமா?

திரு. எம். ஏ. லத்தீப் : நான் அதைத் தான் சொன்னேன். வாணியம்பாடி நகரத்தின் தனி அதிகாரி, திருப்பத்தூர் துணை ஆட்சித் தலைவர்.

அடுத்து 31ம் தேதி ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்கள், அவர்கள் அழைத்தார்கள். ஒரு நகராட்சியிலே காசோலை தரவேண்டும். சிலருக்கு 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தின் கீழ் காசோலை தரவேண்டும். துணை ஆட்சித் தலைவர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் உரியவர்களுக்கு காசோலையை வழங்குவார்கள் என்று அழைப்பிதழ் அச்சிடப்பட்டு எல்லோருக்கும் விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. நான்கூட போவதற்குத் தயாராக இருந்தேன். திடீரென்று ஒரு தந்தி வந்தது. துணை ஆட்சித் தலைவர் வர மறுத்துவிட்டார். ஏன் அவருடைய தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் காசோலை கொடுத்தால் அந்த மாட்சிமை பொருந்திய மகானுபாவனுக்கு அவமரியாதை. அதனால் அவர் வர மறுத்துவிட்டார். இது மக்கள் பிரதிநிதிக்கு அவமானம் இல்லையா? இவ்வளவு பெரிய அவமரியாதை இந்த நாட்டிலே மக்கள் பிரதிநிதிக்கு ஏற்படுகிறது என்றால் தனிப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை விட்டுவிடுங்கள் இந்த நாட்டிலே ஜனநாயக தத்துவம் என்ன ஆவது? நான் போய் காசோலை தந்தால் தான் எனக்கு மரியாதை இல்லை. ஏன்பது எனக்குள்ள மரியாதை எனக்கிருக்கிறது...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடல் நிலை சரியில்லாதவர்கள் அமைதியாகப் பேசுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : என்ன செய்வது. தங்களிடம் இருந்து பெற்ற பயிற்சிதான். இதிலே எல்லாம் உணர்ச்சி வராவிட்டால் வேறு எதற்குத்தான் வரும்? இதற்குத்தான் உணர்ச்சி வரவேண்டும். மக்களெல்லாம் கொதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான் தயவுசெய்து கேட்டுக் கொள்வது தனி அதிகாரியின் பதவிக்காலத்தை நீட்டித்துக் கொள்ளுங்கள். அதற்கான காரணங்களைச் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் சென்ற சட்டமன்ற கூட்டத்திலேயே சொல்லி இருக்கிறோம். ஒரு சாதாரண பஞ்சாயத்துத் தலைவருக்கு இருக்கிற எக்சிகூடிவ் பவர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதா? எங்கே சென்றாலும், ஐயா போடுங்கள், ஐயா உத்தரவு தாருங்கள் என்று சொல்லக்கூடிய நிலை தான் இருக்கிறது. எக்சிகூடிவ் அதிகாரம் என்ன இருக்கிறது? மக்களுக்கு கடமை ஆற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அதிகாரமும் இல்லாமல் இருக்கிறார்கள். அதிகாரிகள் எங்கோ உட்கார்ந்து கொண்டு அவர்கள் தர்பார் நடத்துகிறார்கள். அந்த தர்பாரிலே நாம் கைக்கட்டி ஆட்சி செய்யப்படுகிறோம் என்ற நிலைமை இருக்குமானால், எந்த நகராட்சிக்கும், ஊராட்சிகளுக்கும் நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு எங்களை அழைக்கா தீர்கள். நாங்கள் மக்களிடம் சொல்லத் தயாராக இருக்கிறோம், வராமலிருப்பதற்கு.

எங்களுக்கு இவ்வளவு அவமரியாதை ஏற்பட்டு இருக்கிறது. காசோலை அளிக்கப்படுகிற நிகழ்ச்சிக்கு இன்விடேசன் கூட டிஸ்டிரிபியூஷன் செய்தாகிவிட்டது. ஆனால் பிறகு வேண்டாம் என்று அந்த தனி அதிகாரி எனக்குத் தந்தி கொடுக்கிறார். காரணம் என்னவென்றால் அங்கேயிருக்கும் சப்-கலெக்டர் சொல்லிவிட்டாராம், நான் அங்கே வரவில்லை, சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுப்பதாகத் தானே சொல்லியிருக்கிறாய், நீயே அவர்களிடத்தில் கொடுத்துக்கொள் என்று சொல்லிவிட்டாராம். இது தான் ஜனநாயக நாட்டில் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு தனி அதிகாரி கொடுக்கும் மரியாதை. நான் அவர்களிடத்தில் ஒன்றும் கேட்காமல், இதைச் சொல்லவேண்டிய இடத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 ஜனவரி 4

நேற்றைதினம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வந்தார்கள், அவர்களிடத்தில் கொடுத்து விட்டார்கள். அப்போது கூட நிதி அமைச்சர் அவர்களுக்கு தனி அதிகாரிதான் வெல்கம் அட்ரஸ் படித்துக் கொடுக்கிறார். சப்-கலெக்டர் அதற்குத் தலைமை தாங்குகிறார். அந்த நிகழ்ச்சியில் பாலா பழனூர், எம். பி. அவர்கள் கூட இருந்தார்கள். அவர்கள் கூட இப்படி சட்டமன்ற உறுப்பினர் மதிக்கப்படவில்லையே என்று வருத்தம் தெரிவித்தார்கள். நான் கூட நிதி அமைச்சர் அவர்களிடத்தில் கூறினேன். அவர்கள் பேசுகிற நேரத்தில் இப்படி அவர்கள் காசோலை கொடுத்ததற்காகப் பாராட்ட வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு தனி அதிகாரி மக்கள் கொடுத்த பணம் என்று சொல்வதை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி பார்த்துக்கொண்டு இருந்து பாராட்ட வேண்டுமா? என்ன நியாயம்?

அவர்களுடைய பதவிக் காலத்தை நீடித்துக்கொள்ளுங்கள். அதற்காக சில காரண காரியங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொல்லுகிறபோது ஒரு காலக்கெடு சொல்லுங்கள் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக அந்தக் காலக்கட்டம் வரையில் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தனி அதிகாரி செய்யும் காரியங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிக்க வேண்டுமா? இந்த ஒரு பாயின்டைத்தான் நான் திருப்பி திருப்பிச் சொல்வதற்குக் காரணம், இது உங்கள் மனதில் பதியவேண்டும். இந்த நிலைமையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என்று கூறிக்கொள்கிறேன். அந்த தனி அதிகாரி இருக்கும் இடங்களில், மக்கள் குழுக்களைப் போடுங்கள். அந்த மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், அதில் போடுங்கள். அவர்கள் தனி அதிகாரிக்கு ஆலோசனை வழங்குகிற முறையைக் கொண்டு வாருங்கள். ஆனால் அந்த தனி அதிகாரிகள் ஜனநாயகத்திற்கு வேட்டு வைக்கிற முறையில் நடந்து கொள்வதை தடுக்க நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி, ஆம்பூர் நகராட்சியில் இன்றைக்கு இருக்கும் அசுத்தம் பற்றியும், அதற்கான காரண காரியங்களைப் பற்றியும் நான் ஏற்கனவே எடுத்துச் சொல்லி

1978 ஜனவரி 4] [திரு. எம். ஏ. லத்தீப்]

அமைச்சர் அவர்களிடத்திலும் கூறியிருக்கிறேன். 10 வருஷம் 6 வருஷத்திற்கும் மேலாக அந்தப் பகுதியில் சானிடரி இன்ஸ்பெக்டர்கள் யாராக இருந்தாலும், அவர்களைத் தொடாநது அங்கே இருக்கவிடாமல், மாற்றம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இதை ஒரு குற்றச்சாட்டாகவே சொன்னேன். அங்கேயிருக்கும் கீழ் நிலை ஊழியர்களுக்கு அவர்கள் சம்பளத்தைத் தராமல் அவர்கள் சம்பளத்தை வாங்கிக்கொண்டு, வட்டிக்குக் கொடுத்து, வட்டிக்கு வாங்கி, பெரிய முதலாளிகளைப் போல், அவர்களுக்கு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வாரத்திற்கு ஒரு முறை அதைத் தருகிறார்கள் இதன் காரணமாக அவர்கள் அந்த ஊரில் நல்ல பங்களா கட்டிக்கொண்டு வசதியாக வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காலம் நீடிப்புத் தேவை என்பதை நானும் உணர்கிறேன். ஆனால் இந்த நீடிந்த காலத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அவமரியாதை வேண்டாம், அதற்குத் தக்க வகையில் நீங்கள் நடடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, திருத்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன்.

[மாலை 6—00]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த நகராட்சி ஸ்பெஷல் ஆபீசர்ஸ் பதவி காலத்தை நீட்டுவதற்கு கொண்டு வந்திருக்கிற மசோதாவை நான் எதிர்க்கிறேன். காரணம், இந்த மசோதா ஜனநாயகக் கொள்கைக்கும், கோட்பாட்டிற்கும் முரண்பட்டது. மத்திய அரசு இப்பொழுதெல்லாம் டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ் என்ற கொள்கையை தீவிரமாக செயல்படுத்துவதற்குமுனைந்து நிற்கிறது என்பதை இந்த அரசு நன்றாக அறியும் என்று எண்ணுகிறேன்.

இந்த அரசும், இதற்கு முன்னதாக இங்கே இருந்த அரசும் மாநில சுயாட்சி இல்லை என்று சொல்லி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டே வந்தார்கள். அந்த கோரிக்கையை இன்றைய தினம் மத்தியிலே ஆட்சி செய்கின்ற ஜனதா அரசு மாநிலங்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 ஜனவரி 4

களுக்கு மட்டுமல்ல, உள்ளாட்சிகளுக்கும் நகராட்சியானாலும் சரி, ஊராட்சியானாலும் சரி, பேரூராட்சிகளானாலும் சரி இவற்றிற்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும். இவை ஏதோ அரசு வகிக்கிற முறையில் செயல்படுவது மட்டுமல்ல, உள்ளாட்சி, நகராட்சிகளுக்கும் வருவாயை பெருக்கிக் கொள்கிற அதிகாரம் வழங்க வேண்டுமென்று திட்டத்தை வகுத்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் அறிந்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்த அளவிற்கு நாட்டில் ஜனநாயகம் விருத்தியடைந்து ஜனநாயகக் கொள்கைகளை அமுல்படுத்த விரும்புகிறபோது இந்த அரசு ஜனநாயகக் கொள்கைக்கு முரண்பட்ட முறையில் ஸ்பெஷல் ஆபீசர்கள் தான் இந்த நகராட்சிகளை ஆளவேண்டும் என்று, இன்னும் தேர்தலை ஒத்திப் போட்டு, மக்களாட்சி தேவையா என்ற ஐயப்பாட்டை உண்டாக்கக்கூடிய அளவில் செயலாற்றுகின்ற அடிப்படையிலே தான் இருக்கிறது. இங்கே கூறப்பட்டுள்ள காரணங்களைப் பார்க்கும் பொழுது ஏதோ மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆல் பார்ட்டி கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். ஆல்பார்ட்டி கூட்டத்தை கூட்டியது எதற்காக என்று சொன்னால் உடனடியாக தேர்தலை நடத்த இருக்கிறேன்; இந்தத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது, மாநிலம் முழுவதும் ஒரே நாளில் நடத்துவதா அல்லது இரண்டு கட்டங்களாக நடத்துவதா அல்லது ஊராட்சிகளுக்கு ஒரு கட்டமாகவும், நகராட்சிகளுக்கு ஒரு கட்டமாகவும் நடத்துவதா என்ற காரணங்களை ஆலோசிப்பதற்காகத்தான். அதோடு உடனடியாக நடத்த வேண்டுமா, எந்த மாதத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக கூட்டினரே தவிர, ஆறு மாத காலம் அல்லது ஓராண்டுக்குப் பிறகு நடத்த வேண்டுமென்ற கோரிக்கை அங்கே வைக்கப்படவில்லை.

ஆனால் இங்கே கூறப்பட்டிருக்கிற ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்-ஐப் பார்க்கிறபோது ஏதோ ஆல்பார்ட்டி கூட்டத்தைக் கூட்டி நீண்ட நாள் கழித்து தேர்தலை நடத்தஆலோசித்து அனைத்துக் கட்சிகளும் ஏப்ரல் 1968-க்கு அப்புறம் வைத்துக் கொள்ளலாம் என்று விருப்பம் தெரிவித்தார்கள் என்றுசொன்னால், ஏப்ரல் 1968-க்கு அப்புறம் என்று சொன்னால் ஏப்ரல் 1969 ஆக இருக்கலாம், 1970 ஆக இருக்கலாம். இந்த முறையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அரசுக்கு அதிகாரத்தை கொடுத்ததாக இந்த ரீசன்ஸ் அண்டு ஆப் ஜெக்ட்டில் கூறியிருப்பதை நிச்சயமாக......

1978 ஜனவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏப்ரல் 68 என்று சொன்னீர்கள். ஏப்ரல் 68 அல்ல. ஏப்ரல் 78 என்று திருத்திக்கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : உண்மையிலே அப்படி அல்ல என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் அங்கே எடுத்துக்கொள்ளப்பட்ட முடிவு உடனே தேர்தலை நடத்த வேண்டும். ஏப்ரல் 78-க்கு முன்னதாகவே நடத்த வேண்டுமென்று தெரிவித்தார்கள். அரசும் கூட ஏப்ரல் 78-க்கு முன்னதாக நடத்துவதாக அங்கே கூறினார்கள். நான் மட்டும் இருந்து, சூழ்நிலையை பார்க்கிற போது ஏப்ரல் 78-க்கு முன்னால் நடத்தமுடியாது. ஆகையால் பட்ஜெட் செஷனுக்கு அப்புறம் நடத்துவது முறையாக இருக்கும் என்ற கருத்தைக் கூறினேன். ஆனால் இங்கே கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால் எப்பொழுதுதான் இந்த தேர்தல் நடைபெறுமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

இன்னும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால் பல்வேறு நகராட்சிகள் எல்லாம் ஊராட்சிகளை விட சிறிய அளவில்—ஜனத்தொகையானாலும் சரி, அதனுடைய தேவையைப் பார்த்தாலும் சரி—அங்கேயிருக்கிற நிர்வாகச் செலவுகளுக்குக் கூட அங்கே வருவாய் போதாத நிலையில் மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, ஊராட்சியை நகராட்சியாக மாற்றிக்கொள்ளலாம் என்றால் அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அங்கே இருக்கிற மக்களின் நன்மையைக் கருதி அந்த நகராட்சிகளை எல்லாம் பேரூராட்சிகளாக மாற்றுவது சாலச்சிறந்ததாக இருக்கும். அதனால் மக்களுக்கு வரிப்பளு குறையும். அரசாங்கத்திலிருந்து பல் வேறு சலுகைகள் கிடைக்கும். ஆகையால் இந்த அளவில் இதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது சில முனிசிபல் கவுன்சில்களில் ஸ்பெஷல் ஆபீசர்களின் பதவிக் காலத்தை 9 மாதத்திற்கு நீட்டிப்பது என்று இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏப்ரலை ஒட்டி தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கத்தால் உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது; அந்த உறுதிமொழிப்படி, 9 மாதத்

[திரு ஏ. ஆர். மாரிமுத்து] [1978 ஜனவரி 4

திற்கு நீடிக்க வேண்டும் என்ற நிலையில் இல்லாமல் விரைவில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில சிரமங்கள் இருக்கலாம். பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிடிகள் தேர்தலை எந்த நேரத்திலும் நாம் நடத்தியாகவேண்டும். இதற்கு ஏதோ சிரமம் வருகிறது என்று கால தாமதப்படுத்துவது நல்லதல்ல. நிர்வாகத்தில் குறைபாடுகள், சங்கடங்கள் ஏற்படத் தான் செய்யும். இப்போது எடுத்துக் கொண்டால், புயல் அடித்து ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன பல முனிசிபாலிடிகளில்.

நாகப்பட்டினம் முனிசிபாலிடி தமிழ்நாட்டில் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ரோடுகள் செப்பனிடப்பட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் தான் தகுந்த கவனம் செலுத்தி காரியங்கள் செய்ய முடியும். அதிகமான செலவு என்றால், மேலே இருக்கின்ற அதிகாரிகள் என்ன சொல்வார்களோ என்ற பயத்தில் நகராட்சியில் பொறுப்பில் இருக்கிற அதிகாரிகள் ஏதோ ஒரு தொகையை போடுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இருந்தால், அந்த வேலைக்குத் தேவையான தொகை இவ்வளவு வேண்டும் என்று வாதாடுவார்கள். அதிகாரிகளால் வாதாட முடியாது.

நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். நாகப்பட்டினத்தில் வரி வசூலை மிகக் கடுமையாக ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற மகஜர் எனக்கு வந்திருக்கிறது. எந்த இடத்தில் எப்போது வசூல் செய்வது? வீடுகளை இழந்து, அனைத்தையும் இழந்திருக்கின்ற நாகை நகரில் முனிசிபல் வரி ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரும்போது வரி வசூலைக் கடுமையாகச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் தான் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தான் அமைச்சர் அவர்களையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்வேன். 9 மாத காலம் என்றிருந்தாலும், 9 மாதத்திற்குத் தள்ளிப் போட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் கூடாது. ஏப்ரலை ஒட்டி தேர்தலை முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த இடைக் காலத்தில் முனிசிபாலிடியாக இருந்தாலும், பஞ்சாயத்தாக இருந்தாலும் அட்வைசரி கமிட்டி போடவேண்டும். ஆங்காங்கு இருக்கின்ற பகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு ஏற்படவில்லை என்றால், அதிகாரிகள் தாங்கள் வைத்தது தான்

1978 ஜனவரி 4] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

சட்டம் என்ற நிலை ஏற்படும். ஆகவே ஆங்காங்கு பஞ்சாயத்தாக இருந்தாலும், முனிசிபாலிடியாக இருந்தாலும் அட்வைசரி கமிட்டி போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, நகர மன்ற தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் மசோதாவை எதிர்க்கின்ற முறையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நகராட்சிகளுக்கு தனி அதிகாரிகள் இன்றயதினம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், ஒரு நகராட்சிக்கு ஒரு தனி அதிகாரி என்றிருந்தாலாவது இருக்கின்ற குறைகளை ஓரளவுக்காவது கண்காணிக்க முடியும். ஆனால் இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரிகள் நான்கைந்து நகராட்சிகளுக்கு ஒரு தனி அதிகாரி என்ற முறையில் தான் நியமிக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு உள்ளாட்சித் துறையில் தகுந்த அதிகாரிகள் இல்லையா? ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்றிருந்தால் அனைத்து நகரசபைகளையும் அவரே சிறந்த முறையில் நிர்வாகம் செய்துவிட முடியுமா?

நான் உதாரணத்திற்குக் கூறுகிறேன். இன்றைய தினம் குடந்தையில் நகரசபை நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை. அங்கே இருக்கின்ற மின் விளக்குகள் எல்லாம் அணைந்து கிடக்கின்றன. இங்கேயிருக்கின்ற அந்தந் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ராதா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றையதினம் குடந்தை மேம்பாலத்தில் ஒரு விளக்கு கூட எரியவில்லை என்பதை ஒத்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். காரணம், அந்த அளவுக்கு அங்கே நிர்வாகம் சீர்கேடான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அங்கே இருக்கின்ற தனி அதிகாரி தான், தஞ்சை நகராட்சிக்கும் தனி அதிகாரியாக இருக்கிறார். நாகையில் இருக்கின்ற நகராட்சிக்கும் அவரே தனி அதிகாரியாக இருக்கிறார். அவருக்குப் பயணப்படி, மாத ஊதியத்தில் இரண்டு பங்கு கிடைக்கிறது என்று கேள்விப்

படுகிறேன். அது உண்மையாக இருக்குமேயானால் தயவு செய்து அதைப் பரிசீலிக்கும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் குடந்தை நகராட்சியின் கீழ் பணி யாற்றும் ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்களா அல்லது நகராட்சி ஊழியர்களா என்று உறுதியாகச் சொல்ல முடி யாத இரண்டாங்கெட்டான் நிலைமையில் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த புயல் வெள்ள நிவாரணத்திற்கு அரசாங்க ஊழியர்களுக்கெல்லாம் உதவிப் பணம் வழங் கப்பட்டிருக்கிறது.

[மாலை 6-10]

அரசாங்க ஊழியர்களுக்கு முன் பணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நகராட்சி ஊழியர்களை அரசாங்கம் அரசு ஊழியர்களாகக் கருதி நகராட்சியில் பணி புரியும் ஊழியர்களுக்கும் இந்த முன் பணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சி ஆசிரியர் களுக்கு, 'சீலிங்' என்று சொல்கிறார்கள். இவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்களா, இல்லையா என்று தெரியவில்லை.

அடுத்து, 'கேர்' நிறுவனத்தாரால் வழங்கப்பட்ட உணவு புயல் வெள்ள நேரத்தில் நகர மன்றங்களால் விநியோகிக்கப் பட்டதாக நான் அறிகிறேன். அவை சரியான முறையில் விநி யோகிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடந்தையைப் பொறுத்தவரையில் தனி அதிகாரியாக வந்திருப்பவர் முதன்முதலாக எடுத்த நடவடிக்கை அண்ணா சிலைக்குப் பொருத்தப்பட்டிருந்த ஃபோகஸ் லைட்டை அகற்றினார். ஒரு மாதம் வரை அது போடப்படவில்லை. நான் அவரைக் கேட்டபோது, அது ரிப்பேர் ஆகிவிட்டது. ரிப்பேரை சரிசெய்து மீண்டும் பொருத்துவதாகச் சொன் னார். இது வரையில் பொருத்தப்படவில்லை. அதைப் பொருத்துவதற்கு, இதை அரசு பரிசீலித்து தக்க நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனி அதிகாரிகளாக இருக்கிறவர்கள், ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்பந்த வேலைகளைக் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவை பிறப்பிக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். காரணம், தனி அதிகாரிகளும் பொறியாளர்களும் சேர்ந்து கொண்டு யாருக்கு வேண்டு மானாலும் இந்த வேலைகளைக் கொடுப்பது என்ற நிலை யில் ஊழல் ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் குடந்தை போன்ற நகராட்சிகளில், காங்க் கூலிகளை வைத்து தன்னிச்சையாக வேலையை எடுத்துச் செய்வதாக நான் அறிகிறேன். இத்தகைய குறைகளை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியிலிருக்கின்ற மகப்பேறு மருத்துவ மனை களில் தேவையான மருந்து வழங்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. இந்த மருத்துவ மனைகள் சரியான முறையில் இயங்க தேவையான மருந்துகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள் குடந்தை வந்திருந்த போது, குடந்தை மக்கள் சார்பாக ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கின்ற எம்ஜியார் அவர்கள் படித்த துவக்க பள்ளிக்கு எம்ஜியார் துவக்கப்பள்ளி என்று பெயர் சூட்டினார்கள். பேரவைத் தலைவருக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். திரு. இராதா அவர்களுக்கும் தெரியும். பேரவைத் தலைவர்தான் திறந்து வைத்தார். இன்றைய தினம், எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் பெயரைத் தாங்கியிருக்கும் இடங்களில் அவரது பெயரை இந்த அரசு நீக்கியிருக்கிறது. இந்த ஆட்சியாளர்கள் பிறப்பித்த இந்த ஆணைக்கு அவர்களே மதிப்பளிப்பார் கள் என்று கருதுகிறேன். அந்த துவக்கப் பள்ளியின் பெயர்ப் பலகை உடனடியாக அகற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் பொதுமக்கள் அகற்றுவார்கள் என்று கூறி இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமருகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத்தலைவர் அவர் களே, நண்பர் ராமலிங்கம் அவர்கள் மீண்டும் அந்தத் துவக்கப்பள்ளியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார் கள். காலையில் இதைப்பற்றி விவாதிக்கப்பட்ட போது அவர் இல்லை என்று கருதுகிறேன். காலையில் நான் குறிப் பிட்டேன், ஒரு சாதாரண ஆரம்பப் பள்ளிக்கு அவரது பெயரை வைக்க வேண்டும் என்று பழைய சட்ட மன்ற

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 ஜனவரி 4

உறுப்பினர் காசிராமன் அவர்களும், பழைய நக
ராட்சித் தலைவராக இருந்த ஏ. ஆர். ராமசாமி அவர்களும்
வலியுறுத்திச் சொன்னார்களே தவிர, ஏதோ,
அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு, அரசு உத்தரவு பிறப்
பித்ததாகக் கருதிக்கொண்டு இங்கே பேசப்படுவது
சரியான தகவல் ஆகாது. அதிலே தங்களையும் இணை
திருக்கிறார்கள். தாங்களே விளக்கம் சொல்லியிருந்தால்
நன்றாக இருந்திருக்கும். நண்பர் ராமலிங்கம் தெரி
வித்தபோது மற்ற இடங்களில் இருக்கின்ற பெயர்களை
அழிக்கின்ற அல்லது எடுக்கின்றதை இணைத்துப் பேசி
னார்கள். ஒரு ஆரம்பப் பள்ளிக்கு, அதிலும் முதலமைச்
சர் அவர்கள் படித்த பள்ளிக்கு அவரது பெயரை
வைக்க வேண்டும் என்ற அடிப்படையின் மீது, முத
லமைச்சர் அவர்களே அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்
என்று தான் சொல்லிக் கொண்டிருக்கிறாரே தவிர,
பெயர் வைத்துவிட்டதாகக் கருத வேண்டாம் என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: என் சார்பில்
தாங்கள் விளக்கம் சொன்னதற்காக நன்றி.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u>: தலைவரவர்களே,
இந்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பி
னர்கள் தங்களுடைய அறிவுரைகளை வழங்கி, நகராட்சி
யின் நிர்வாகம் சீர்படுவதற்கு உரிய வழிவகைகளையும்
எடுத்துக் கூறியமைக்காக அவர்களுக்கு நன்றியினைத் தெரி
வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஆரம்பத்திலேயே சொன்னதைப் போல தேர்
தலை நீண்ட காலத்திற்குத் தள்ளிப் போடுவது என்பது
உள்ளாட்சி அமைப்பு என்ற தத்துவத்திற்கே உலை
வைப்பதாகும் என்பதை நான் மறந்துவிடவில்லை.
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆற்றிப் பொறுப்பில்
இருக்கிற நேரத்தில் செய்யக் கூடிய அளவிற்கு காரியங்களை
அரசு அதிகாரிகள் சுலபமாகச் செய்வதற்கு இயலாது என்
கின்ற உண்மையையும் நான் மறைக்க விரும்பவில்லை.
ஆனாலும் என்னென்ன காரணங்களுக்காக தேர்தல் தள்ளிப்
போடப்படுகின்றது என்கின்ற உண்மைகளை நான் ஏற
கெனவே தெரிவித்திருக்கிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. கா. காளிமுத்து]

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிடும் போது "அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் தேர்தலை நீண்டகாலம் தள்ளிப் பேடுவதற்கான அனுமதியை கோரிப் பெறுவதற்கான நோக்கத்துடன் அதைக் கூட்டினீர்களா" என்ற வினாவினை எழுப்பினார். நான் சொல்ல விரும்புவது, அவர்களுக்கே மிக நன்றாகத் தெரியும், அந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலிலேயே, 'தேர்தலை எப்போது நடத்துவது என்ற கருத்தினையும் சொல்ல வேண்டும்' என்று கேட்டிருந்தோம். கட்சி சார்பாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தலாமா என்று சொல்ல வேண்டும் என்று கேட்டிருந்தோம். ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்தலாம் என்று திரு. ஜேம்ஸ், திரு. மாரிமுத்து போன்றவர்களும் குறிப்பிட்டார்கள். 'இல்லை, இல்லை உடனடியாக நடத்த வேண்டும்' என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சாதிக் போன்றவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, பல்வேறு கருத்துக்கள் அங்கே எடுத்து வைக்கப்பட்டன. எனவே, அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஒரு ஆதாரமாகக் கொண்டு, அதிலே தேர்தலை தள்ளிப் போடுவதற்கான காலக்கெடு வினைக் கேட்கவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் மிகுந்த ஆத்திரத்தோடு, ஆவேசத்தோடு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர் குறிப்பிட்ட குறைகளை, அந்தத் தனி அதிகாரி செய்த தவறுகளைப் பற்றி இங்கே வந்த போது என்னிடம் தெரிவித்திருக்கலாம். ஆனால் முன்னதாகச் சொல்லிவிட்டால் பேச்சு 'எஃபக்ட்'டாக இருக்காது என்று கருதினார்களோ என்னவோ தெரியவில்லை. அவற்றை சட்டப் பேரவை நடவடிக்கைகளின் போது குறிப்பிட்டார்கள்.

அடிப்படையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி நிர்வாகத்தில் ஆலோசனைகளைச் சொல்லத்தக்க அளவிற்கு, அவர்களுடைய அறிவுரைகளை நகராட்சிகள் பெறத்தக்க அளவிற்கு நிலைமைகள் ஏற்பட வேண்டும் என்ற முறையில், அப்படிப்பட்டதொரு 'மக்கள் குழு' நகராட்சிகளில் அமைந்துவிடும் அளவிற்கு 1977ஆம் ஆண்டு

டிசம்பர் மாதம் 29ஆம் நாள் அன்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது என்பதனையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவே மாநகராட்சிகளுக்கு தேர்தல்கள் முடிந்து, முறையாக மக்களின் பிரதிநிதிகள் அமர்ந்து செயல்படும் வரையில், இந்த ஆலோசனைக் குழுக்கள் உரிய வகையில் தன் கடமையைச் செய்யும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது போன்று திரு லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பொது நிகழ்ச்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாகத்துக்குச் சொல்லப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தலைவரவர்களே, தனி அதிகாரி அல்லது ஆணையரைத் தலைவராகக் கொண்டு, அதிலே பாராளுமன்ற சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர் போன்றவர்கள் மேலும் எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் உட்படாத நண்பர்களை உறுப்பினர்களாகக் கொண்டதொரு குழுவாக அக்குழு அமையும் என்று தெரிவித்துக் கொண்டு, இச்சட்ட முன்வடிவினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு அமருகின்றேன்.

திரு எம். ஏ. லத்தீப் : இப்படிப்பட்ட 'மக்கள் குழு'வினால் தனி அதிகாரியோ அல்லது கமிஷனரோ தலைவராக இருப்பதைவிட வேறு யாராவது இருக்கலாம்....

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : டி.டி.சி. கூட்டத்திற்கு எப்படி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவராக இருக்கின்றாரோஅந்த முறையில் தனிஅதிகாரி அல்லது கமிஷனர் இக்குழுவிற்குத் தலைவராக இருந்தால், உரிய கருத்துக்களைக் கொடுப்பதற்கு முடியும் என்ற அடிப்படையில்தான் இதைச் சொல்லுகிறோமே தவிர வேறு எந்த அடிப்படையிலும் இல்லை.

Thiru M. A. LATHEEF: D.D.C. is a statutory body and the powers conferred upon the Presiding Officer, the Collector of the district, are different. He is vested with certain powers including the right of presiding over the deliberations of the District Development Council. That is a statutory body, but this is an advisory body. This is constituted under the Government Order. Therefore, the people's representative must be the President. This is quite different from this.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, டி.டி.சி. கூட்டத்திற்கே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கும் முறையை மாற்றவேண்டும் என்று நாம் சொல்லி வருகிறோம். அரசுகூட இதுபற்றி பரிசீலனை செய்து வருகின்றது. அது ஸ்டாட்சுடரி பாடி சட்டத்தினைத் திருத்தினாலொழிய நடைமுறையில் உள்ள இந்த முறையை இப்போது மாற்ற முடியாது. ஆனால் இப்போது அமைக்கும் இந்தக் குழு 'ஸ்டாட்சுடரி பாடி' யாக இல்லாத காரணத்தினால், ஸ்பெஷல் ஆபீஸரைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினரோ, சட்டப் பேரவை உறுப்பினரோ தலைவராக இருக்கவேண்டும் என்று அமைத்தால் அது முறையாக இருக்கும். எனவே, இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[மாலை 6—20]

திரு என். சங்கரய்யா : மற்றொன்று, பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் போக, பாக்கி தண்டனைக்குள்ளாகாத நண்பர்கள் என்று சொன்னால், விரிவான வரையறுப்பாக போய்விடும். அதற்கு மாறாக, இந்தியாவில் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அதன் சார்பாக அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் ஒரு பிரதிநிதி கொடுங்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். தண்டனைக்குள்ளாகாத நண்பர்கள் என்ற அடிப்படையில் சரியாக வராது.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இந்தத் திருத்தம் உறுப்பினர் அவர்கள் சொல்லும் கருத்தில் தான் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி, '' தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 19/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1978 ஜனவரி 4

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

In sub-clause(1)of Clause 1,for the expression 'Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Bill, 1977'' substitute the expression 'Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers') Amendment Bill, 1978''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவரவர்களே,

-' தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 19/77) திருத்தப்பெற்றபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்.''

என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) 1977-ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/77)

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றப் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 20/77) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''.

என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

திரு கு. ரமணி : அமைச்சர் அவர்கள் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டு திருத்தத்தை நான் பிரேரேபிக்கவில்லை,

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

In sub-clause (1) of Clause 1, for the expression 'Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Bill, 1977 substitute the expression 'Coimbatore Municipal Conncil (Appointment of Special Officer) Amendment Bill, 1978.,

* 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட திருத்தம் இப்போதுதான் கொடுக்கப் பெற்றது. அது பற்றி கருத்து சொல்ல விரும்புகிறேன் நாங்கள் முன்னரே திருத்தம் கொடுக்கமுடியவில்லை. இப்போது கொடுக்கப்பட்டுள்ள திருத்தம் ஏற்கெனவே Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Bill. 1977 என்று இருப்பதை Coimbatore Municipal Council (Appointmcnt of Special Officer) Amendment Bill, 1978 என்று திருத்த—இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள், முதலாவது என்னுடைய ஆட்சேபனை 78 என்று திருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இந்த மசோதா சபையில் பிரேரேபிக்கப்பட்டது 1977-ல்,. எனவே, 1977 என்று இருப்பதில் தவறில்லை. 1978 சரியானது. அப்படித் திருத்தம் வந்தாலும் கூட second Amendmtnt Bil 1977 என்று இருக்கிறது. இது First Amendment Bill, 1978 என்று இருக்க வேண்டும். இதே பில்லில் L. A. Bill 1'78 என்று சேர்க்க வேண்டும். இதற்கு ஆட்சேபனையை நான் கிளப்புகிறேன்

(அமைச்சர்— பதில் இல்லை).

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு, 1 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "1977-ஆம் ஆண்டு, கோயபுத்தூர் நகராட்சி மற்றும் (தனி அதிகாரியை நியமித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/77.) திருத்தப்பெற்றப்படி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.". என்று முன்மொழிகிறேன.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றப்படி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(உ) தமிழ்நாடு, 1977-ம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/77.)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1977-ம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.17/77.) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் இறுதியாகப் பேசுகிறார்கள் என நினைக்கிறேன். கூத்தக்குடி சண்முகம். திரு.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, வழக்கமாக கிராமங்களை கடைசியாக எடுத்துக்கொள்வது என்பது இதுவரை இருந்து வருகிற முறை, உள்ளாட்சித் துறையில்கூட பேரூராட்சி, நகராட்சி, பெரிய நகராட்சி மன்றங்கள் இவை எல்லாம் முடிந்து இது வருகிறது, இந்தச் சட்டங்களில் கூட, ஊராட்சி ஒன்றியங்களையும், ஊராட்சிகளையும் வேண்டுமென்றே செய்திருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. அப்படி வருவது தொடர்பாக வரும் இயல்பாக மாறிவிட்டது. இது சம்பந்தமாக நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஒன்பது மாத காலம் என்று சொன்னால் அது அதிகம். ஒன்பதுமாதம் என்றால் மழைக்காலம் இதெல்லாம் வருகிறது. ஆகவே தேர்தல்கள் ஏப்ரல் மாதம் இல்லாவிட்டாலும் மே மாதமாவது அனைத்தையும் முடித்து விட வேண்டும். ஒன்பது மாதம் என்பது அடிக்காடி போட்டுக்கொள்ளாமல் இருப்பதற்கு என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியாது. இந்த அவையில் மே அல்லது ஜூன் மாதம் முதல் வாரத்திற்குள்ளாக

*31-12-77ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1778 ஜனவரி 4

தேர்தல்களை முடித்துவிடுவோம் என்று ஒரு வாக்குறுதி தந்துவிடுவது அவசியம். இடைக்காலத்தில் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நிச்சயமாக இன்று தலைவர்கள் இல்லாவிட்டாலும் பஞ்சாயத்து தலைவர்கள் உறுப்பினர் என்ற முறையில் பதவியை இழக்கவில்லை, இருக்கிறார்கள். அது ஒன்றியத்தில் ஜனநாயக முறையை ஏற்படுத்த வசதியாக இருக்கிறது. மாதம் ஒரு முறை விசேஷ அதிகாரி அல்லது பீ.டி.ஓ. ஒன்றியக் கூட்டத்தைக் கூட்டி வைத்து ஆலோசனைகள் பெறும்முறையில் கமிட்டிகள் போட்டு ஜனநாயக முறையில் பின்பற்றுகிறோம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அப்படி நடத்த டி.டி.ஸி. கூட்டத்தில் ஒத்துக்கொண்டு அந்தக் கமிட்டி ஆரம்பமாகியிருக்கிறது. வற்புறுத்திய இடங்களில் என்றில்லாமல் எல்லாயிடங்களிலும் இப்படி கமிட்டிகள் அமைக்க ஒரு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். ஜனநாயக முறைகள் கடைப்பிடிக்கபட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர குறைகளுக்குள்ளே நுழைய விரும்பவில்லை, அதைப்பற்றி பின்னால் பேசுகிறேன்.

ஏற்கெனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பொதுவான காரியங்களில் ஈடுபடுவதற்காக ஒன்றிய ஜீப் ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்ததாக கேள்வி, இப்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தகவலை அளித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். மகிழ்ச்சிக்குரியது. ஒரு நாள் என்பதற்குப் பதிலாக மாதம் இரண்டு நாட்களுக்கு என்று இருக்க வேண்டும்.

மற்றொரு தகவலையும் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்வி. அதை அவையில் சொல்லி ஒழுங்குப்படுத்த ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சாதாரண ஆட்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். புயல், வெள்ள வேலைகளைக் கவனிக்க வாகனத்திற்காக எனக்கே ரூ. 1,100 செலவாயிற்று. எனவே மக்கள் பிரதிநிதிகள் வாகனங்களைக் குறிப்பிட்ட நாட்கள் உபயோகப்படுத்திக் கொள்ளும் முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உண்மையிலே பல்வேறு அம்சங்களுக்கு அவசியம். இப்போது சேர்மன் இல்லை. அந்த ரூம் இருக்கிறது. சட்டசபை உறுப்பினர்கள் ஒன்றியத்திற்கு வந்து தங்குவதற்கும், சில விஷயங்கள் ஏற்பாடு செய்வதற்கும் அங்கே ஒரு அறை ஒதுக்குவதற்குரிய ஏற்பாட்டை இந்த இடைக்காலத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

[மாலை 6-30]

ஆகவே இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், இப்படிப்
பட்ட வசதி இருந்தால் தான் நல்ல முறையில் வேலை செய்ய
முடியும். இப்போது பல சிரமங்கள் இருக்கின்றன. இடைக்
காலத்தில் பல்வேறு காரியங்களை சட்டமன்ற உறுப்பினர்கள்
ஸ்பெஷல் ஆபீசரோடும் மற்ற அதிகாரிகளோடும் கலந்து
பேசி காரியங்களைச் செய்வதற்கு உதவியாக இருக்கும், ஆகவே
இடைக்காலத்தில் இந்த உதவிகளைச்செய்து கொடுக்க வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு விஷயம், ஒன்று, ஜூன் முதல் வாரத்திற்கு மேல்
தேர்தல் நடத்துவது தாண்டக் கூடாது. இரண்டாவது,
இடைககாலத்தில் இப்படிப்பட்ட வசதிகளையும் ஏற்பாடுகளை
யும் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தை ஆத
ரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு.ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, முதலாவ
தாக இந்த காலத்தை நீடிப்பதை நான் தேவையில்லாத
ஒன்று என்று கருதுகிறேன். காரணம், முன்னால் சொல்லிய
படி இப்போது அந்தந்தப் பஞ்சாயத்து கமிஷனர்கள் தங்க
ளுக்கு இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு தாங்
கள் தான் They are the monarchs of Panchayat Union.
என்கின்ற முறையில் செயலாற்றி வருகின்றனர்.

டி.டி.ஓ.வை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு எல்லா
விதமான அதிகாரங்களும் தரப்பட்டிருக்கின்றன. பஞ்சா
யத்து நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இந்த அதிகாரி
கள் வைப்பது தான் சட்டம். இந்த அக்கடமிக் ஆண்டு
ஆரம்ப காலத்தில் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் போடுவதற்
காகக் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் இஷ்டம்
போல் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு, தங்களுடைய
விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டு, அவர்களாகவே தங்க
ளுக்கு வேண்டியவர்களுக்கு போட்டுக்கொள்கின்ற நிலைமை
இருப்பதால், அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களோ அல்
லது எம்.பிக்களோ சொல்வதற்கு எந்தவிதமான மதிப்பும்
அளிக்காது, தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு வேலை கொடுக்
கலாம்; இல்லையென்றால் இல்லை என்று நினைக்கின்ற நிலைமை
இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி பஞ்சாயத்து யூனி
யன்களில் எந்த வேலைக்கு ஆள் எடுப்பதாக இருந்தாலும் சரி,

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 4

அதற்கென்று ஒரு செலக்ஷன் கமிட்டியானது அமைக்கப்பட
வேண்டும். அந்தந்த தொகுதிகள் அடங்கிய எம்.எல்.ஏக்கள்
எம்.பிக்கள் இந்தக் கமிட்டியில் இடம் பெற்ருல் தான் யார்
யாருக்கு செலக்ஷன் கிடைக்கவேண்டும் என்ற கருத்துக்களை
சொல்ல முடியும். இப்படியில்லாமல் அதிகாரிகளே இருக்
கின்ற காரணத்தினுல் அவர்களே சிலபல தில்லுமுல்லுகளைச்
செய்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும்
யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள் அதிகாரிகளை
பயன்படுத்திக்கொள்கிருர்களே தவிர, 'டிஸர்விங்
கேன்டிடேட்'க்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை
ஏற்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு, நான் குறிப்பிட்ட
குழுவை நியமிக்க்வேண்டும் என்று அமைச்சர் அவர்களை
வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி அமைக்கப்
படும் செலக்ஷன் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட
மன்ற உறுப்பினர்களும் எம்.பி.க்களும் இடம் பெற
வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், பஞ்சாயத்துத் தலைவர் கை கட்டி நிற்கின்ற
நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாயத்து
நிதியை எடுத்து மக்களுக்காக செலவு செய்யவேண்டுமென்
ருல்-25 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டுமென்ருல்—
அல்லது குறிப்பிட்ட ஒரு வேலையை 500 ரூபாய் அல்லது
1,000 ரூபாய் செலவு செய்து முடிக்கவேண்டுமென்ருல் குறிப்
பிட்ட பஞ்சாயத்து ஈ.ஓ.வைப் போய் இவர் பார்க்கவேண்டும்.
அவர் அனுமதி தந்து செக் தந்தால் தான் டிரா செய்ய
முடியும். அதன் பின்னுல் தான் இப்படிப்பட்ட வேலைகளைச்
செய்ய முடியும். அப்படியே பஞ்சாயத்துத் தலைவரே முன்
கூட்டியே அந்த வேலையைச் செய்து விட்டால், வேலைக்கான
மெஷர்மென்ட் எடுப்பதற்கும், கட்டணம் அல்லது மாமூல்
கொடுத்தால் தான், பஞ்சாயத்துத் தலைவர் செய்த வேலை
முடியும். பஞ்சாயத்துத் தலைவரே லஞ்சம் கொடுத்தால்
தான் காரியம் நடக்கும் என்ற கட்டாயமான அளவுக்கு
தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து தலைவர், அந்த ஊரி
லுள்ள மக்களின் நன்மைக்காக ஒரு வேலையை செய்துவிட்டு
அதற்கான பணத்தைப் பெறுவதற்கு, அரசாங்கத்தால் நிய
மிக்கப்படுகின்ற யாரோ ஒருவருக்கு லஞ்சம் கொடுத்துத்
தான் ஆகவேண்டும் என்கின்ற நிலமை இருந்தால், லஞ்சம்
கொடுப்பதற்கு அந்த பஞ்சாயத்துத் தலைவர் பணத்திற்கு
எங்கே போவார்? இப்படிப் பஞ்சாயத்துப் பணத்தை திருடு
வதற்கு இந்த அதிகாரிகள் மூலமாக பஞ்சாயத்து தலைவர்கள்
நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிருர்கள். கடைசியில் பதவியிலிருந்து

1978 ஜனவரி 4] [திரு. ரா. மார்க்கபந்து]

போன பின்னுல் சர்சார்ஜ் என்று போடுகிருர்கள்........
misapplication of the funds or waste of Panchayat funds.
என்று சொல்லுகின்ற முறையில், அந்தப் பதவிக் காலம்
முடிந்த பின்னுல், அவரிடத்தில் போய் சமாதானம் கேட்
கிருர்கள். அவரிடம் சர்சார்ஜ் சர்டிபிகேட் இஷ்யூ செய்
கின்ருர்கள் என்று சொன்னுல், அவர்களிடமிருந்து ஐந்து
ஆண்டுகளுக்குள்ளாக வசூலிக்கவேண்டிய நிலைமை வருகிறது.
இப்படி கிராம மக்களுக்கு செய்யவேண்டிய வேலையும் செய்ய
முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படு
கின்ற தலைவர் பஞ்சாயத்து நிதியை எடுத்து கிராமத்திற்கு
வேண்டிய ஒரு வேலையை செய்யலாம் என்று சொன்னுல் , . .
there must be a supervisory authority ஒரு
ஐநூறு ரூபாய் பஞ்சாயத்துத் தலைவரே எடுக்கக்கூடிய
நிலைமையும் ஏற்பட்டு, அதற்கு குறிப்பிட்ட வேலைகளை செய்
திருக்கிருர் என்று சொன்னுல் அதை மேற்பார்வை செய்வ
தற்கு சூப்பர்வைஸிங் அத்தாரிட்டி இருக்க வேண்டும்.

அப்படி சூப்பர்விஷன் என்று வருகின்றபோது, அதிலும்
இந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தக்கமிட்டி
யிலே அங்கம் வகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோன்று, இப்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்
காக பணம் ஒதுக்கியிருக்கிருர்கள். அப்படி ஒரு பஞ்சாயத்து
யூனியனுக்கு பணம் தருகிருர்கள் என்ருல், அந்தப் பஞ்சா
யத்திலே இருக்கின்ற பி.டீ.ஓ. நினைத்தால் அல்லது ஈ. ஈ.
அல்லது ஏ.ஈ. நினைத்தால் அவர்கள் எந்தப் பகுதிக்கு ரோடு
போடவேண்டுமென்று எண்ணுகின்ருர்களோ, அந்தப்
பகுதிக்கு ரோடு போடப்படுகின்றது. இப்படி அந்தப்
பஞ்சாயத்து கமிஷனர், ஏ.ஈ., டீ. ஈ. நினைத்தால் அந்த
இடத்திற்கு ரோடு போட பணம் தருகின்ற நிலைமை
இருக்கின்ற காரணத்தினுல், 'அன்சர்வ்ட் ஏரியா' வாக
சொல்லப்படுகின்ற இடங்களுக்கு பணம் ஒதுக்க முடியாத ஒரு
நிலைமை இருக்கின்றது. ஆனுல் பஞ்சாயத்துத் தலைவர்
இருக்கிருர். அவரையோ அல்லது மற்றபடி யாரையோ
கலந்துகொண்டு, இந்தப்பகுதிகளுக்குச் செய்ய வேண்டு
மென்ற நிலைமை இல்லை.

இதுபோன்ற ஒரு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, யூனி
யன் கிராண்ட்ஸ் கொடுக்கின்றது. அப்படி யூனியன்
கிராண்ட்ஸ் கொடுத்தாலும், அந்தப் பஞ்சாயத்துத் தலை
வருக்கோ அல்லது யூனியன் தலைவருக்கோ அல்லது யாருக்கு
செல்வாக்கு இருக்கின்றதோ அவர்களுடைய கிராமத்திற்கு

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 4

மட்டுமே ஒன்றிற்கு நான்காக வேலை நடக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி செல்வாக்கு இல்லாமல் இருக்கின்ற, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் ஊமையாக ,செயலற்றுத்தான் இருக்க வேண்டும். அப்படியே அவர் கேட்டுக் கொண்டாலும், அந்தக் கிராமத்திற்கு வேண்டிய நன்மை கிடைப்பதில்லை. ஆகவே, யூனியன் கிராண்ட்ஸ் தருகின்றபோது, குறிப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் இவ்வளவு என்று, there must be apportionment of funds on the basis of Panchayats இருக்கவேண்டும். அந்த முறையிலே இந்தப் பணத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் போன்ற நிலைமை நடந்திருக்கின்றது. பஞ்சாயத்து யூனியன்களிலே பி. டீ. ஓ. க்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக, வேலூர் நகர மன்றத் தொகுதியிலே, பனவட்டம் என்னும் கிராமத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கட்டிடத் திறப்பு விழாவிற்கு வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்தை கலெக்டர் அவர்கள் தலைமையில் திறந்துவைத்திருக்கிறார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அங்கே, அந்தத் தொகுதியைச் சேர்ந்த எம். எல். ஏ. -வுக்கு அவர்கள் எந்தவிதமான ஒரு இடமும் அளிக்கவில்லை.

இதுபோன்று, என்னுடைய தொகுதியிலும்கூட, அமைச்சர் பி. டி. சரஸ்வதி அவர்கள் ஒரு விழாவிற்கு வந்தார்கள். அதிலும், கலெக்டர் அவர்களுடைய தலைமையிலே திறந்து வைத்திருக்கிறார்கள். அன்றைக்கும் அந்த இடத்திலே அந்தத் தொகுதி எம். எல். ஏ. வுக்கு எத்தகைய இடமும் தரவில்லை.

ஆகவே, ஒரு பஞ்சாயத்து யூனியனிலே ஒரு நிகழ்ச்சி நடக்கின்றது என்று சொன்னாலும் கூட, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். பி., அல்லது எம். எல். ஏ. அழைக்கப்படுவதில்லை. They must have the power to supervise and control. They must have some power to dictate these people to do certain things. Otherwise there is no scope for any of the MLAs or MPs. ஆகவே, இந்த மசோதாவில் இதையும் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில், கலெக்டர் ஒரு தலைமை இடத்தில் இருக்கின்றார். அந்தத் தலைமை இடத்திலே இருக்கின்ற கலெக்டரைப் பார்ப்பதற்காக, வட ஆற்காடு என்று

1978 ஜனவரி 4] [திரு. ரா. மார்க்கபந்து]

சொன்னால், இந்த மாவட்டத்திற்குள் எந்த மூலையிலே ஒரு பி. டீ. ஓ. இருந்தாலும், அல்லது ஆர். ஐ. அல்லது ரெவின்யூ அதிகாரிகள் கலெக்டரைப் பார்ப்பதற்காக வருகின்றார்கள். அதே போன்று அந்த மாவட்டத்திலுள்ள எஸ். பி. யைப் பார்ப்பதற்காக, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற அத்தனை போலீஸ் அதிகாரிகளும் அரசாங்கச் செலவிலேயே, அவர்களிடம் உள்ள ஜீப்பிலேயே வந்து, அந்த மாவட்டக் கலெக்டர் அல்லது எஸ். பி. யைப் பார்த்துவிட்டுப் போகின்றார்கள். அதற்காகச் செலவாகும் பணம் யாருடைய பணம்? மக்களுடைய வரிப் பணம் அல்லவா? யாருடைய அனுமதியைப் பெற்று, மக்கள் பணத்தில் மேலதிகாரிகளைப் பார்க்க வருகின்றார்கள். இதையெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 6-40]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஊராட்சி மன்றங்களுக்குத் தனி அதிகாரியை நியமிப்பது சம்பந்தமான மசோதாவின் பேரில் நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையத்தினம், ஊராட்சி ஒன்றியங்களில் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் நடைபெறவேண்டிய வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. இதுபற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய சாலைகள் எல்லாம் இன்றையத்தினம் பழுது பார்க்கப்படாமல் போக்கு வரத்துக்கு லாயக்கில்லாத வகையில் கவனிப்பாரற்றுக் கிடக்கக்கூடிய நிலைமையைக் கண்டு வருகிறோம். அதோடு மட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றிய அளவில் மக்களுடைய பிரதிநிதிகள் இருக்கவேண்டியதைப் பற்றி முன்னாலே நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத்தில் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் எடுத்துச் சொன்னோம். நான் பேசுகிறபோது கூட, அன்றைய தினம்—ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்படாமல் இருக்கின்றன. ஊராட்சித் தலைவர்கள் அப்படியே இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கூப்பிட்டு வைத்து அவர்களுடைய ஆலோசனைகளின்பேரில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட வேண்டும் என்று நான் கூட பேசியிருக்கிறேன்.

ஆனால் அதற்குப் பின்னால்—இரண்டு மாதத்திற்கு முன்னாலே என்று கருதுகிறேன், பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. ஊராட்சி ஒன்றியங்களுக்காக ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரும், சம்பந்தப்பட்ட எம். எல். சி, எம். பி. , முன்னாள் பெருந்தலைவர், துணைத்தலைவர் கொண்டு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்தது. அதற்குப் பின்னால் என்ன காரணத்தாலோ அந்தக் குழுக்கள் செயல்படாமல் இன்றைய தினம் வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஊராட்சித் தலைவர்கள் வந்தால் கிராமத்தில் செயல்பட வேண்டிய நல்லபல திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல முடியும். அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் ஊராட்சி தலைவர்களையும் குழுவில் அங்கம் வகிக்கச் செய்தால் நலமாக இருக்கும். தனி அதிகாரி இருக்கிற காரணத்தால்தான் பல ஆண்டுகளாக செய்யக் கூடிய வேலைகள் எல்லாம் நல்ல வேலைகள் செய்யப்படாமல் இருக்கின்றன; காலதாமதமாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குத்தாலம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் 7 பெரிய பாலங்களைக் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்தப் பாலங்கள் கட்டி முடிக்கப்படவில்லை. நான் கேட்கிற போதெல்லாம், அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஊராட்சி ஒன்றிய அளவில் போதுமான நிதிவசதியும் இருக்கிறது. அந்த ஏழு பாலங்களும் முக்கியமான பாலங்கள். இப்போது கோடை காலமாக இருக்கிறது. அரசாங்கம் அனுமதி கொடுத்தால் ஹைவேஸ் இலாகா மூலமாகச் செய்யப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவை கட்டி முடிக்கப்பட ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குடவாசல் ஒன்றியத்தில் அச்சுதமங்கலம் வயலூர் சாலை இருக்கிறது. ஆறு கிலோ மீட்டர் சாலை. எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இல்லாமல் மக்கள் நடந்து கூடச்

செல்ல முடியாத அளவுக்குச் சாலை பழுதாகி இருக்கிறது.
ஒன்றிய ஆணையருக்கு சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறை
யில் பல முறை எழுதியும் " அந்தச் சாலை செப்பனிடப்படும்
அல்லது செய்ய முடியாது " என்று ஏதாவது ஒரு பதிலைக்கூட
எழுதத் தயங்குகிறார்கள். அதற்கு பின்னாலே பேரவையிலே
ஒரு கேள்வி எழுதிக் கொடுத்தேன். அச்சுதமங்கலம் வயலூர்
சாலை பழுதடைந்திருக்கிறது, அதனைப் பழுது பார்க்க அரசி
டத்தில் திட்டம் உண்டா? என்று கேட்டேன். அந்தக்
கேள்வியை எனக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அது
ஒன்றியச் சாலையாக இருக்கும் காரணத்தால், ஒன்றிய வரம்
புக்குட்பட்ட காரணத்தால் கேள்வி மறுக்கப்படுகிறது
என்று கூறி திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இங்கும் பதில்
கிடைக்கவில்லை. ஆணையரிடத்திலிருந்தும் பதில் கிடைக்
வில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவு செய்து கேள்வி
யைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்று பேசக் கூடாது.
உறுப்பினர் அவர்கள் பொறுப்போடு விதிகளுக்கு உட்பட்டு
பேசவேண்டும்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : பதில் இங்கும் கிடைக்க
வில்லை. அங்கும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்.
என்ன செய்வது ? பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கம்
கிராண்ட் கொடுக்கிறது. கேள்வியைக் குறிப்பிட்ட துறைக்கு
அனுப்பி பதிலைப் பெறலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முன்னாள்
அமைச்சர், இப்போது உறுப்பினர் பேசும்போது நான் திருப்பி
அனுப்பியதாக என்னைக் களங்கப்படுத்தி இங்கே பேசலாமா ?
அப்படிப் பேசக்கூடாது.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம்</u> : அப்படி ஒரு குறை
சொல்வதற்காக நான் சொல்லவில்லை. தனி அதிகாரிகள்
துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்
என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஊராட்சி ஒன்றியங்
களிலே இன்றையத் தினம் ஆசிரியர்களை மாற்றுவதற்கு
ஆணை பிறப்பிக்கிறார்கள். அப்படி மாற்றுவதற்கு இது
தகுந்த நேரமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்
பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்
களை இந்த நேரத்திலே மாற்றுவது நல்லதல்ல. நிறைய

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1978 ஜனவரி 4

ஆசிரியர்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கோடை விடுமுறைக்கு பிறகு மாற்றலாம் என்று ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரெ. வீ. சவுந்திரராசன் : ஆன் ஏ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார், திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசியபோது ஊராட்சி ஒன்றியங்களுக்கு அட்வைசரி கமிட்டிகள் போட்டிருப்பதாக பேப்பரிலே வந்ததாகக் கூறினார்கள். பேப்பரில் வந்தது மட்டுமல்ல. அதற்கு உத்திரவே போட்டார்கள். அந்த உத்திரவு வந்த அன்றைக்கு அதைக் கேன்சல் செய்யும் உத்திரவும் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டியவை. உறுப்பினர் பேசினால் அவர்கள் பதில் சொல்வார்கள். இதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் கிடையாது.

*திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று எண்ணுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்களை தள்ளி போடுகிற வகையில் இப்படி தனி அதிகாரிகளை நியமனம் செய்து 9 மாத காலத்திற்கு பிறகு தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்று சொல்வது ஜனநாயக மரபுகளுக்கு முரணானது என்பதை எல்லோருமே ஒத்துக் கொள்வார்கள். அந்த வகையில் எவ்வளவு விரைவாக தேர்தல்களை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில் ஊராட்சித் தலைவர்கள் தனி அதிகாரிகளுடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து தனி அதிகாரிகளுடைய ஏவலுக்குட்பட்ட அடிமைகள் போல் அவர்களுடைய ஆணைக்குட்பட்ட

1978 ஜனவரி 4] [திரு. பொ. விஜயராகவன்]

வர்களாக நடத்தப்படுகிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்
டாமல் இருக்கமுடியாது. தனி அதிகாரிகள் விருப்பு வெறுப்
புக்குட்பட்டுத்தான் ஊராட்சிகள் இயங்க வேண்டுமென்ற
சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எவ்வளவு
விரைவாக தேர்தலை நடத்தவேண்டுமோ அந்த அளவுக்குத்
தான் ஜனநாயக மரபுகளைக் காக்கிறோம் என்று பொருள்.

இங்கே திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்
கள். ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஜிப்புகள் மாதம்
ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினர்கள் சென்று வருவதற்குக்
கொடுக்கப்படுவது 2 நாளாகக் கொடுக்கப்படவேண்டுமென்று
குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி நிலைமை
எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பதாகத்
தெரியவில்லை. அங்கே அதைப்பற்றிக் கேட்டபோது,
சட்ட மன்ற உறுப்பினர்கள் அவைகளைப் பயன்படுத்தலாமா
என்று கேட்டார்கள். இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்
திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியா
குமரி மாவட்டத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்
ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறுகின்ற வேலைகளையும்
தொகுதிகளையும் சுற்றிப் பார்க்கின்ற நிலைமையை ஏற்படுத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியங்களிலே பஞ்சாயத்துத் தலைவர்
ஊராட்சி மாதம் ஒரு முறை தனி அதிகாரி
களுடைய கூட்டத்தை எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்.
கூட்டி முடிவுகளை மாவட்டத்தில் அப்படிப்பட்ட
ஆனால் கன்னியாகுமரி மாதம் ஒரு முறை ஊராட்சித்
நிலை இல்லை. அதையும் சட்டமன்ற உறுப்பினர்களையும்
தலைவர்கள் மட்டுமல்ல, ஆலோசனைகளைக் கேட்கின்ற
அழைத்து ஆக்கப்பூர்வமான முறையிலே கூட்டங்
வகையிலே திட்டங்களை வகுக்கின்ற கேட்டுக்கொள்ளுகிறேன்.
களைக் கூட்டவேண்டுமென்று

[மாலை 6–50]

தனி அதிகாரியைத் தலைவராக வைத்து அந்த
நடத்தியோ அல்லது அங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத்
தலைவர்களில் ஒருவரைத் தலைவராக வைத்தோ அந்தக்
கூட்டத்தை நடத்தி மக்களின் பிரச்சனைகள் தீர வழிவகை
களைச் செய்ய வேண்டும். ஏனென்றால் பலயிடங்களில்
சாலைகளை அமைத்தல், பாலங்களைக் கட்டுதல் போன்ற
வற்றிற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சி
களுக்கும் உள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து செய்யப்பட
வேண்டியிருக்கிறது. அந்தப் பணிகளை தனி அதிகாரி
களின் தயவை எதிர்பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 ஜனவரி 4

ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டு இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு எவ்வளவு விரைவில் தேர்தல் வைக்க முடியுமோ அவ்வளவு விரைவில் வைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இன்றைக்குப் பல ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமை மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தால் அங்கே பல வேலைகளுக்குத் தனி அதிகாரிகளைக் கேட்கும்போழுது பலவிதமான சாக்குபோக்குகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு உண்மையிலேயே கிராம மக்கள் முன்னேற வேண்டுமென்ற நினைவை மனத்திற்கொண்டு இந்தத் தேர்தல்களை வெகுவிரைவில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

*திரு. எஸ்.ஜே. இராமசாமி: சட்டமன்றத் தலைவரவர்களே, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த பதவிக்காலத்தை நீட்டித்தல் மசோதாவிற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, அத்துடன் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நேரடியாக ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசாங்கம் கருதிக்கொண்டிருந்தாலும்—கருதிக் கொண்டிருக்கிறது—அந்த ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய பில் இன்னும் அறிமுகப்படுத்தி அறிவிக்கப்படாமல் இருக்கிறது. அதை இந்த மன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவ்வாறு அதை அறிவித்துவிட்டு ஒரு செலக்ட் கமிட்டி போட்டு, அந்த செலக்ட் கமிட்டி சொல்லுகின்ற கருத்துக்களைக் கேட்டு, அந்தக் கமிட்டியினுடைய யோசனையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இதற்காக, ஒரு செலக்ட் கமிட்டி போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பி.டி.ஓ. ஆபீஸ்களில்—பஞ்சாயத்து ஒன்றியங்களில்—அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி என்று இருக்கிறது. அதில் பி.டி.ஓ.-வும் இன்னொரு அதிகாரியும் ஆக இருவரும் சேர்ந்து ஆசிரியர்கள் போன்ற பதவி போட்டுக்கொண்டு வருகிறார்கள். அதிலேயும் சட்டமன்ற

1978 ஜனவரி 4] [திரு. எஸ். ஜே. இராமசாமி]

உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள அமைச்சரவர்கள் முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகக்கூடிய நிலைமைகள் ஏற்படலாம், அதனால் ஊழல்கள் கூட ஏற்படுகிறது. எனவே, இவர்களை மட்டும் வைத்துக்கொண்டு அப்பாயிண்ட்மெண்ட் செய்யக் கூடாது. சட்ட மன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்கின்ற இந்த யோசனையையும் அரசாங்கம் இந்த பில்லிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை இந்த பில்லிலே சொல்ல விரும்புகிறேன். வாக்காளர் பட்டியலை வீடு வீடாகச் சென்று தயாரிப்பதாக இந்த மசோதாவிலே அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒரு தவறும் இல்லாமல், நன்றாக, ஒவ்வொரு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அதை ஆசிரியர்கள்கூட செய்கிறார்கள். என்றாலும் அதற்கென்று ஒரு குழுவை நியமித்து வாக்காளர்களுடைய பட்டியலை நல்லமுறையிலே தயாரிக்கவேண்டும். சில பேரை விட்டுவிட்டு, வீட்டிலேயே இருந்து கொண்டு ஜாபிதாவையெல்லாம் தயாரித்துக்கொள்கிறார்கள். அப்படியெல்லாம் இருக்கக் கூடாது. எனவே அதற்காக கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகள் தவறுகள் செய்யாமல் இருக்க மாட்டார்கள். சில பி.டி.ஓ.-க்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தட்டிக் கேட்பதற்கோ, அவர்களுக்குச் சுட்டிக் காண்பிப்பதற்கோ இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட அதிகாரம் கிடையாது. அனைலும், பல அதிகமான செலவுகள், இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றிக் கேட்க வேண்டுமென்றால் கலெக்டர்தான் கேட்க வேண்டுமே தவிர, நாம் சஜஷன் தான் சொல்லலாம். அவ்வாறு இருப்பதை, பஞ்சாயத்து ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற அதிகாரத்தை, எல்லாம் —தலைவர்களெல்லாம்கூட இருக்கிறார்கள். அவர்களை வைத்து, அதோடு யூனியன்களுடைய சபையை நடத்துவதற்கு எம்.எல்.ஏ.-க்களையும் போட்டு—தேர்தல் நடை

[திரு. எஸ். ஜே. இராமசாமி] [1978 ஜனவரி 4

பெறுவதற்குள்—இப்படி வழி செய்தால் அதிகாரிகளின்
தன்னிச்சையான போக்கைத் தடுத்து நிறுத்தும் சூழ்நிலை
ஏற்படும் என்று கருதுகிறேன்.

பொதுமக்களின் குறைகள் அதிகாரிகளிடம் சொல்லப்
பட வேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான்
சொல்வார்கள். அந்த முறையில் சொல்ல வேண்டிய
மக்களுடைய குறைகளை இன்றைக்குச் சட்டமன்ற உறுப்
பினர்கள்தான் சொல்லவேண்டிய நிலைமை இருக்கிறது.
ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒரு பிரதிநிதி
யாக எடுக்க வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் ஏற்
படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

இன்னொன்று, இன்றைக்கு இருக்கக்கூடிய பி.டீ.ஓ.-க்கள்
இருக்கிற திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு போவார்
களே தவிர, அந்த மக்களுடைய உண்மையான நிலைமை
களை எடுத்துக்கொண்டு செய்யமாட்டார்கள். ஏனென்
றால், அவர்கள் மேலதிகாரிகளுக்குப் பதில் சொல்ல
வேண்டும். அதற்குத் தகுந்தமாதிரிதான் அவர்களது
போக்கு இருக்குமே தவிர, மக்களுக்குத் தேவையான
வற்றிற்கு ஏற்றாற்போல் இருக்காது. அதனால், சில
காலதாமதம் ஏற்படுகிறது.

ஆகவே, இந்த மசோதாவைக் கொண்டு வரும்போது,
அமல் நடத்தும்போது, ஜாக்கிரதையாக அணுகி, எந்தெந்த
முறைகளைக் களையவேண்டுமோ, அவற்றைக் களையவும்,
அதிகாரிகளது தற்போதைய நிலையைப் போக்கவும் இந்த
மசோதாவிலே இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே,
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், தனி அதிகாரி நியமனங்கள்
திருத்த மசோதாவின் பேரில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில், கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

1978 பிப்ரவரியிலிருந்து 9 மாதக் காலத்திற்கு நீட்டிக்க
வேண்டுமென்று காரண விளக்கம் கொடுக்கப்பட்டதைக்
கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தத் தேர்தலை ஏப்ரல்
30-க்குள் முடிக்கவேண்டுமென்ற எங்களது அபிப்பிராயத்தை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 ஜனவரி 4] [திரு. எம். அண்ணாமலை]

எப்படி சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும்
அரிசனங்களுக்கு ஒரு விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்
கப்படுகிறதோ அந்த முறையில் இந்த ஊராட்சி ஒன்றியத்
தேர்தல்களிலும் அரிசனங்களுக்குத தனி இடம் ஒதுக்க
வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் இது சம்பந்தமாக, கடந்த பட்ஜெட் தொடர்
கூட்டத்திலேயே, எங்களுடைய கட்சி உறுப்பினர் தோழர்
கிருஷ்ணன் அவர்களும், அதை ஒட்டிப் பேசினார்கள். இப்
பொழுது, எங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர்,
தோழர் சங்கரய்யா அவர்களும் இதைக் குறிப்பிட்டார்
கள். அமைச்சரவர்கள் மற்ற பிரச்னைகளில் ஒவ்வொன்றுக்
கும் ஒவ்வொரு தெளிவான விளக்கம் கொடுத்தார்கள்.
இது குறித்து ஒரு விளக்கமும் கொடுக்கப்படாததைப் பார்த்து
ஒருவேளை இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லையோ
என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, அமைச்சரவர்கள் இது
சம்பந்தமாக, இந்தச் சந்தர்ப்பத்திலேயாவது, சொல்ல
வேண்டு மென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதே நேரத்தில் இந்த இடைப்பட்ட காலத்தில், எனக்கு
முன்பு பேசிய உறுப்பினர்களும் ஆலோசனை சொன்னபடியே
எம். எல். ஏக்கள், எம். பிக்களைக் கொண்ட, அங்கீகரிக்கப்
பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோ
சனைக் குழு அமைத்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்
பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு, எம். எல். ஏக்கள் எவ்வளவு சிரமத்திற்
கிடையிலேயும் பணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது என்று
எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் பேசிவிட்ட காரணத்
தினால், ஒன்றைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறேன். ஊராட்சி
ஒன்றியத்தைப் பொறுத்த மட்டிலும், மக்களுடைய முதல்
தேவைகளான, கல்வி, சுகாதாரம், ரோடு வசதி, விளக்கு,
குடிநீர் இதுபோன்ற மிக அத்தியாவசியமான தேவைகளைப்
பூர்த்திசெய்யக்கூடிய ஒரு அமைப்பாகும். அந்த அமைப்
பைப் பார்க்கும் போது, அதனுடைய பெயரைப் பார்த்
தால், ஊராட்சி ஒன்றியம் என்று சொல்லப்படுகிறதே
யொழிய அதனுடைய நடைமுறை விளைவுகளைப் பார்த்தால்,
ஒரு நபர் ஆட்சியாகத்தான் கடந்த காலம் நடை பெற்றது
என்பதுதான் நடைமுறை விளைவு. அதனால் எண்ணற்ற
இன்னல்கள் ஏற்படுகின்றன. ஆசிரியர்கள் சாலைப் பணியாளர்

கள், ஆகியவர்களுக்கு இதுபோன்ற மற்றும் பல்வேறு ஊழியர்களுக்கும் இன்னல்களைக் கொடுக்கக்கூடிய அமைப்பாகக் கடந்த கால நடைமுறை இருந்தது. அந்த நடைமுறையிலேயிருந்து மாறுதலைக் கொண்டு வரவேண்டுமென்றும் இது போன்ற குழுக்கள் மூலமாக நிவாரண ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லிக் கொள்கிறேன்.

[இரவு 7-00]

ஊராட்சி ஒன்றியங்களிலே இன்றைக்குப் பல்வேறு நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நேரடியாக சென்று சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பார்வையிட்டு அந்தத் திட்டங்கள் முறையாக செயல்படுகிறதா என்பதையும் திட்ட அனுபவங்களை அமைச்சர்களிடத்திலோ அதிகாரிகளிடத்திலோ எடுத்துக் கூறி சீரான திட்டங்களை உருவாக்குவதற்கு வசதி அற்று நேரடியாகப் பார்க்க சந்தர்ப்பம் இல்லாத நிலையில் இருக்கிறது. இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மாதம் இருமுறையாவது ஊராட்சி ஒன்றியத்துக்குச் சொந்தமான ஜீப்களை சட்டமன்ற உறுப்பினர்கள் உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பொது மக்களை அன்றாடம் அவர்களுடைய பிரச்சினைகளுக்காக இன்றையதினம் ரோடுகளிலோ அல்லது மரங்களின் கீழே நின்று கொண்டு அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிற நிலைமை இருக்கிறது. எனவே ஊராட்சி மன்றக் கட்டிடத்தில் சட்டமன்ற உறுப்பினருக்காக ஒரு அறை ஒதுக்கி அதில் பொதுமக்களுடைய பிரச்சினையைப் பற்றி கவனிக்க வாய்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுருங்க, பச்சையாச் சொல்லப்போனால் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியம் ஒரு ஜமீன் மாதிரி இருக்கிறது. ஆள் மாறி இருக்கிறதே தவிர, அங்கே உள்ள நடைமுறை மாறவில்லை. (மணி அடிக்கப்பட்டது.) இந்த அமைப்புகள் சரிவர மக்களின் நலனைக் கருதி நடைபெறவில்லை என்பதைச் சொல்லிக்கொண்டு (மணி அடிக்கப்பட்டது), எனக்கு அளிக்கப்பட்ட இந்தச் சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். பொதுமக்களால் தேர்ந்

தெடுக்கப்படாத அமைப்பு இல்லாததால் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றி ஒரு சில சொல்ல ஆசைப்படுகிறேன். சமீபத்தில் நடந்த புயல் நிவாரண காரியங்களை அதிகாரிகள் செய்தார்கள். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் காலம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அதிகாரிகள் மேலதிகாரிகளுக்குப் பயந்து மிகக் குறைந்த அளவிலே சேதத்தின் மதிப்பைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலை மீண்டும் தொடர்வதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்குச் சர்க்காரால் கிடைக்கப்படக்கூடிய பல்வேறு நன்மைகள் தடைப்படுகிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தப் புயல் நிவாரண வேலையை ஒப்படைக்கும்போது அதை இன்ஜினிரிங் டிப்பார்ட்மெண்டிடம் ஒப்படைக்கிறோம். அந்த இன்ஜினியருக்கு அந்த பஞ்சாயத்தில் அதிக விவரம் தெரிந்திருக்காது. மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சி ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர்களுக்குத்தான் சரியான அளவுக்கு விவரம் தெரியும்.

இப்போது என்ன நடக்கிறது என்றால் பணம் ஒதுக்கப்படும்போது தேவையான இடத்திற்கு தேவையான பணம் ஒதுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிற இடங்களுக்கு அதிகமான பணம் ஒதுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அதைக் கண்காணிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏக்கள், எம். பிக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு கமிட்டியை அமைத்து, தேர்தல் நடந்து தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரையில் இடைக்காலத்திலே ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்தால் பல்வேறு தவறான செய்கைகளைத் தடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

உதாரணமாக என்னுடைய பஞ்சாயத்து யூனியனிலேயே பல்வேறுவிதமான ரஸ்தாக்கள் பஞ்ச நிவாரண திட்டத்தின் கீழ் போடப்பட்டு, இப்போது அவை முழுதும் பெய்த

[திரு. ஓ. சுப்பிரமணியம்] [1978 ஜனவரி 4

மழையின் காரணமாக அடித்துச் செல்லப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்து ரஸ்தாக்களுக்கு என்ன ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று தெரியாத நிலையில் அந்தப் பகுதியில் சாதாரண பஞ்சாயத்துக்களுக்கு அதிகப்படியான பணம் ஒதுக்கிடப்படாத காரணத்தினால் இந்த மராமத்து வேலைகளை விரைவாக எடுத்துச் செய்ய முடியவில்லை. ஆகவே இதற்கு அதிகப்படியான பணம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது ஏற்பட்டு இருக்கின்ற கஷ்டங்கள் மாகாணம் முழுவதும் இருந்தாலும்கூட ஒரு சில பகுதிகளில் இந்த பாதிப்பு அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் வரி வசூலை கண்டிப்பாக செய்யாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் நடந்து இருக்கிறது என்னவென்றால், அசெம்பிளி கூடாமல் இருக்கும் நேரங்களில் கவர்னர் சில சட்டங்களை பிறப்பிப்பதுபோல், தேர்தல்கள் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிற இடைக்காலத்தில் வரியைக் கூட்டியிருக்கிறார்கள். சாதாரணமாக எங்கள் பஞ்சாயத்து யூனியனில் 1 ரூ. 10 பைசாவாக இருந்த செஸ்ஸை 2½ ரூ. என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இதுவரையில் இது அந்தப் பகுதி மக்களுக்கே தெரிய வாய்ப்பு இல்லை. அவர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கவும் வாய்ப்பு கிடையாது. ஆகவே, பஞ்சாயத்துகள் சிறப்பாகவும், முனைப்புடனும் காரியங்களைச் செய்வதற்குத் தேர்தல் நடத்துவதற்குக் காலத்தை அதிக நாள் நீட்டாது, தேர்தல் நடக்கும் வரையில் ஒரு ஆலோசனைக்குழுவை நியமிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவரவர்களே, இந்த இடைக்காலத்தில் வரியை அதிகரித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதன் காரணமாக இந்த அரசின் மீது ஒரு தவறான அபிப்பிராயத்தை மக்கள் மனதில் ஏற்படுத்துகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 ஜனவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது எழுப்பலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்கள் மசோதா மீது என்னுடைய சில கருத்துக்களை உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒன்பது மாதங்களுக்கு ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒன்றியக் குழுக்கள் கலைக்கப்பட்டு ஏறக்குறைய 11 மாதங்கள் ஆகின்றன.

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நாம் 7 மணிக்கு முடிக்கவேண்டும். இருந்தாலும் தொடர்ந்து நடத்திக்கொண்டு போகிறோம். காலையில் 1-30 மணி வரையில் நடத்தலாம் என்று சொல்கிறோம். ஆகவே, இப்போது அதிகப்படியாக நடத்தும் நேரத்திற்கு ஓவர்டைம் அளிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எந்த விதியின், எந்தப் பிரிவின் கீழ் கேட்கிறார்கள் என்றால், நான் பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: கிராமங்களில் இன்றைய தினம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் கூறியது போல் வளர்ச்சிகள் அடியோடு ஸ்தம்பித்து இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கூறியது போல், சென்ற கூட்டத் தொடரின் போது பல்வேறு உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும் ஒன்றியத்தின் வளர்ச்சிகளை கவனிப்பதற்காக ஒன்றிய அளவிலே ஒரு ஆலோசனைக் குழு அமைக்க இருப்பதாக அரசாங்கம் இருக்கிறது என்பதைச் சொன்னார் என்று பத்திரிகையிலும், வானொலியிலும் தரப்பட்டு, அதற்காக உத்தரவுகள் அதிகாரிகளுக்கு வருவதற்கு முன்னதாகவே அந்தக் குழுவின் நடவடிக்கைகளை ஒத்தி

வைக்கிறோம் என்ற உத்தரவுநான் முன்னதாக வந்தது என்று சொல்லப்படுகின்றது. நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன காரணத்திற்காக அது ஒத்தி வைக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்தில் அறிவிப்பார்கள் என்று மாண்பு மிகு உறுப்பினர்கள் ஆர்வமாக இருந்தாலும் இன்னும் ஒரு 10 மாத காலம் ஒன்றியக் குழுவின் நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் இது போன்ற ஒரு ஆலோசனைக் குழுவை ஒன்றிய மட்டத்தில் நிறுவி, கிராம வளர்ச்சிகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், அரசும் ஆவன செய்யவேண்டும் என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் தனி அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. என்றாலும் ஒவ்வொரு கோட்டத்திலும் 9 ஒன்றியங்கள், 10 ஒன்றியங்கள் அடங்கியிருக்கின்றன. ஏற்கனவே கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு நிரம்ப வேலை இருக்கிற காரணத்தால் இன்றையதினம் அவர்களால் அந்த 9 ஒன்றியங்கள், 10 ஒன்றியங்களில் இருக்கும் 100-க்கணக்கான குழுக்கள் செய்யும் கிராம வளர்ச்சிப் பணிகளை தனிப்பட்ட அதிகாரியாக இருந்து நடத்துவது சாத்தியக்கூறாக இல்லை என்பதை நாம் அனுதினமும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

ஆகவே, ஒன்றிய ஆலோசனைக் குழுவை அமைக்க இந்த அரசு தவறினால் அந்த கிராமங்களின் வளர்ச்சி அடியோடு ஸ்தம்பித்து விடும் என்பதை இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் வருகிறது வருகிறது என்று சொல்லி கிராமங்களிலே இருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவர்கள், அல்லது புதிதாக அந்தத் தேர்தலில் நிற்க ஆர்வம் கொண்டவர்கள், அவர்கள் ஒரு பக்கத்திலே கிராமத்திலே இருக்கும் வளர்ச்சிப் பணிகளை விட்டுவிட்டு இந்தத் தேர்தல் வரும் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேர்தல் வரப்போகிறது என்று சொல்லி தேர்தல் வேலைகளை, அரசாங்க வேலைகளையெல்லாம் விட்டு விட்டு பல நாட்கள் அவர்கள் அதற்காக செலவழித்து இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் வாக்குகளை எல்லாம் கணக்கிட்டு அனுப்பிவிட்டு இருக்கிறார்கள். ஆகவே, மேலும் இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பது முறையானதாக

இல்லாவிட்டாலும் அரசாங்கம் ஒத்தி வைத்திருக்கிறது. இதை அதிக நாட்கள் விடாமல், குறைந்தது 6 மாத காலத்திற்குள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கும், ஒன்றியத் தலைவர் பதவிக்கும் தேர்தல் கட்டாயம் நடத்தியாகவேண்டும் என்று நான் பணிவோடு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது, பல்வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு உறுப்பினர் தொகுதியின் வளர்ச்சிப் பணிகளை, இப்போது ஏற்பட்ட வெள்ளச் சேதப் பகுதிகளை பார்வையிடுவதற்காக அவர்களுக்கும் ஒன்றியத்திலே மாதத்திற்கு ஒரு நாள் அந்த ஒன்றியத்தில் இருக்கும் ஜீப்புகளை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, அளித்து, வளர்ச்சி அதிகாரிகளையும் அனுப்பி, அவற்றை கவனிக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, அதே நேரத்திலே பல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கை தமிழ்நாடு முழுவதும் இருந்து வந்து இருக்கிறது. ஆகவே, தேர்தலுக்கு முன்னதாக அப்படி பிரிக்கப்படவேண்டிய ஊராட்சி ஒன்றியங்களையும், ஒன்றியங்களையும் பிரித்து தேர்தல் நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[இரவு 7-10]

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: தலைவர் அவர்களே, அவை முன் வைத்திருக்கிற மூன்று மசோதாக்களையும் எதிர்த்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

ஒன்று பஞ்சாயத்து யூனியனில் முடியும் வரையில் அப்பாயின்ட்மெண்ட் கமிட்டியில் பி.டி.ஓ., டி.டி.ஓ. இருப்பதைப் போல அவர்களோடு கூட எம்.எல்.ஏ-க்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அடுத்ததாக தேர்தல் வருகிற வரையில் எந்த வரிகளையும் இப்பொழுது இருப்பதற்கு மேலாக உயர்த்தக் கூடாது. சாத்தூர் பகுதியிலே திருத்தாங்கல் பஞ்சாயத்திலே பல நாட்களாக வரி உயர்வை எதிர்த்து உண்ணாவிரதம், மறியல் போன்ற போராட்டம் நடைபெற்று நூற்றுக்கணக்கான நபர்கள் சிறை சென்றிருக்கிறார்கள். ஆகையால் இது போன்ற வரி உயர்வுகள் இருக்கக் கூடாது.

மூன்றாவதாக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இப்பொழுது ஏதோ மாதத்திற்கு ஒரு முறை ஒரு நாள் ஜீப் கொடுக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாதம் இரண்டு தினங்களுக்கு ஜீப் வழங்க வேண்டும். இது சம்பந்தமாக ஒரு ஜீ. ஓ. நிறைவேற்றப்பட வேண்டும்.

அடுத்தது, கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்பொழுது இருக்கிற பஞ்சாயத்து அமைப்புகள் எல்லாம் சில ஆண்டுகளுக்கு முன்னதாக அங்கே இப்பொழுது இருக்கின்ற ராஜ்ய சபா மெம்பரால்—அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்—திடீரென்று ஒரு நாள் அவருக்கு வசதியாக பஞ்சாயத்துக்கள் எல்லாம், 64 பஞ்சாயத்துக்கள் ஏற்கனவே இருந்தது. அதை 128 பஞ்சாயத்துக்களாக, அவைகள் வயபிள் யூனிட்டுகளாக இல்லாமல் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை தேர்தலுக்கு முன்பாக மாற்றி அமைக்கவேண்டும். அது சம்மந்தமாக கலெக்டர் அவர்களிடமிருந்து ஒரு பிரபோசல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஆகையால் அவற்றை தேர்தலுக்கு முன்பாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இந்த ஊராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிக்கூடங்களை பார்க்கிற போது மற்ற பள்ளிக்கூடங்களுக்கும் இந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுககும் அதிக வித்தியாசம் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் எல்லாம் ஊராட்சிப் பள்ளிக்கூடங்களுக்கு போவதில்லை. கான்வென்ட்டிற்கு போகிறார்கள். இந்த நாட்டிலே வசதியற்ற மாணவர்கள் படிப்பதற்காக இந்தப் பள்ளிக்கூடங்கள் இருப்பது போல் இருக்கிறது. நிர்வாகத்தை மாற்றினால் இதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தப் பள்ளிக்கூடங்களை அரசே நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, மாவட்டங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், ஊராட்சி மன்ற பள்ளிக்கூடங்களில் படிக்கிற மாணவர்களுக்கும் இடையே இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை மாற்ற வேண்டும்.

ஆக, இந்த நிலைமையை மற்ற மாவட்டங்களில் ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு ஆசிரியர்களை நியமிப்பதற்கும், மாறுதல் தருவதற்கும் இருக்கின்ற முறை நியாயமாக மாற்றப்பட வேண்டும், ஆசிரியர்களை நியமிக்க இப்போது இருக்கின்ற குழுவானது முறைகேடுகள் பல செய்வதாக வதந்தி வந்து கொண்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியத்தில், ஆசிரியர் பதவிக்கு படித்திருக்கின்ற அனைவரின் பட்டியலையும் எடுத்து, வயதின் அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு எங்கள் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய சேவிகா பெண்கள் பல ஆண்டுகளாக தர்மபுரி, செங்கற்பட்டு மாவட்டத்தில் வேலை செய்து வருகிறார்கள். அவர்களின் கணவர் ஒரு பகுதியிலும், இவர்கள் ஒரு பகுதியிலும் நீண்ட நாட்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் தங்கள் கணவர் இருக்கின்ற இடத்தில், மாற்றம் கொடுத்து சௌகரியமாக வாழ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்புத் தர பரிந்துரை செய்த அங்கத்தினர்களின் வேண்டுகோளுக்கிணங்க.......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர்களின் கருத்துக்களையும் ஒன்றுகூட்டி நீங்களே பேசுவதாக எண்ணியிருக்கிறீர்களா? அப்போதும் ஐந்து நிமிடம் தான் கொடுக்க முடியும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : எனவே இவைகளை எல்லாம் செய்யாததால் இந்த மசோதாவை வன்மையாக எதிர்க்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : தலைவரவர்களே இந்த மசோதாவின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி அமைப்புக்கள் சீராக செயல்படுவதற்குரிய நல்ல ஆலோசனைகளை தந்து, குறைபாடுகளை கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு அரசு உரிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளும் என்கின்ற உறுதியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நண்பர் ஜேம்ஸ் அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களில் நியமனங்கள் செய்வதில் முறைகேடுகள் ஏற்படுகின்றன, அவை சீர்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆங்காங்கு இருக்கின்ற சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கலந்து கொண்டு அந்த நியமனங்களை முறைப்படுத்த உரிய வகையில் ஏற்பாடு செய்வதற்கு அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவுரை கூறும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகள் சீரோடு செயல்படுவதற்கு அந்தந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று இந்த அரசு உணர்கிறது. ஆகவே, இங்கே பேரவை உறுப்பினர்கள் பலர் சொன்னதைப் போல மாதம் ஒரு முறை ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டு, ஆணையரும் மற்றவர்களும் அதில் உடன் சென்று ஆங்காங்கு இருக்கின்ற கோரிக்கைகளைத் தெரிந்து கொள்ளத் தக்க அளவுக்கு நிலமையை மேற்கொள்ளும்படி அரசு அறிவுறுத்தும். மாதம் இரண்டு முறை கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல அண்ணன் கூத்தக்குடி சண்முகம் பேசும் போது, இப்போது சேர்மன் இருக்கிற அறை காலியாக இருக்கிறது. அதில் நாங்கள் நுழைந்து கொள்கிறோம் என்றார்கள். சேர்மன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும், சட்டப் பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற நிரந்தரமாக ஒரு அறை ஒதுக்கப்படுவதற்கு அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு எடுத்துச் சொல்லும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் சகோதரர் ராஜமாணிக்கம்........

திரு. ர. ஜெபமணி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினருக்காக ஒரு அறை ஒதுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒரு சிறு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் மூன்று யூனியன்கள் இருக்கின்றன. அங்கு 3 அறைகள் நிச்சயமாக ஒதுக்க வேண்டும். ஆனால் அங்கே ஒரு யூனியனில் நாங்கள் இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். அப்படியானால் இரண்டு அறைகள் ஒதுக்க வேண்டி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாற்காலிக்கு இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் அங்கே சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பெரியவர் ஜெபமணி வசதியாக தங்கும் வகையில் குஷன் வைத்த சீட் ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[இரவு 7–20]

ஆலோசனைக் குழுவின் அவசியத்தைப் பற்றி அரசு ஏற்கெனவே உணர்ந்து இருக்கிறது. இங்கே சகோதரர் ராஜமாணிக்கம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஏற்கெனவே வந்த அறிவிப்பில் ஒரு சிக்கல் இருக்கின்ற காரணத்தால் அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருத்து அரசின் கவனத்தில் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மேலே தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, நீதிமன்றங்களில் கூட வழக்குகள் தொடரப்பட்டு பதவி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆக, ஒட்டு மொத்தமாக அறிவிக்கும்போது அவர்களது மேலாதிக்கம் உருவாக வழிவகை செய்யக்கூடாது என்பதற்காக அது மாற்றப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வேறொரு ஆலோசனைக் குழு அமைப்பது பற்றி டிசம்பர் 8 ஆம் தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து கருத்துக்களை பரிமாறிக்கொள்வது ஒன்றிய வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரியும் என்று. அப்படிப்பட்ட ஓர் அறிவுரையை அரசு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் அதில் பரவலாக பலரும் கருத்துக்களைப் பேச ஒரு வாய்ப்பை இந்த ஆலோசனைக் குழு உதவும். அதிகமான உறுப்பினர்களை இது உள்ளிட்டதாக இருக்குமானால் அதன் நடவடிக்கைகள் தடைபடும் என்ற காரணத்தால் இந்த ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. அண்ணாமலை அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். ஏற்கெனவே அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் சங்கரய்யா குறிப்பிட்டார்கள். அரிசனப் பெரு மக்களுக்கு தனி ஒன்றியங்கள் ஒதுக்குவது பற்றி அரசு யோசித்து முடிவெடுக்கும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1978 ஜனவரி 4

இன்னும் பல்வேறு குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பேரூராட்சி தொடர்பாக, அனைத்துக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களையும் அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். பேரூராட்சியில் வரிவிதிப்பு தொடர்பான கருத்துக்களை சட்ட மன்ற உறுப்பினர் ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரோடு நான் பேசியிருக்கிறேன். அது இப்போது சுமுகமாக தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேறு எத்தகைய குறைபாடுகள் இருப்பினும் அவைகளை பேரவை உறுப்பினர்கள் சட்டமன்றம் கூடுகின்ற நேரத்தில் மட்டுமல்லாமல் மற்ற நேரங்களிலும் எனக்குத் தெரிவிப்பார்களேயானால் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவேங்கடம் அவர்கள் தெரிவித்ததைப் போல சில ஊராட்சி ஒன்றியங்களை பேரூராட்சி ஒன்றியங்களாக மாற்றுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு 36 பேரூராட்சியில் பேரூராட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 203 சிற்றூர்களில் 138-க்கு அமைப்புகள் முடிவு செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, தேர்தல் நேரத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அது மே-யில் நடக்குமா ? ஜூனில் நடக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1978 மத்தியில் தேர்தல் உறுதியாக நடக்கும். நான் ஏற்கெனவே சொன்னதைப் போல புதிய வாக்காளர் பட்டியல் இயல்பாக தயாரிக்க நேரம் தேவைப்படுகிறது. புதிய பெயர்களைச் சேர்ப்பது போன்ற வேலைகள் முடிந்த பிறகு தேர்தல் நடத்துவது பற்றி அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றியப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு விட்டன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 ஜனவரி 4]

திரு. நா. சுந்தரராஜன் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற தலைவர்கள் சட்டப்படி கவுன்சில் உறுப்பினராக இல்லாவிட்டாலும் கூட இன்றைக்கு அவர்கள் முடிவுகள் எடுத்து நிறைவேற்றுவதற்கு ஒன்றியத்திலிருந்து அல்லது ஊராட்சியிலிருந்து ஒப்புதல் பெற வேண்டி இருக்கிறது. சில நேரங்களில் ஊராட்சி மன்றங்களுக்குத் தெரிவிக்காமல் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

அது மட்டுமல்ல. ஒரு ஒன்றியத்தின் மொத்த செலவுகளில் 80 சத விகிதம் செலவானதற்குப் பிறகு தான் இன்னொரு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிக்கிறார். இது அரசின் உத்தரவா ? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட குறைகளைக் களைய அரசு முன்வருமா என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உங்கள் கருத்தினை அரசு ஆய்விற்கு எடுத்துக் கொண்டு அதைப் பற்றி பின்னர் முடிவெடுக்கும்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, தனி அதிகாரி மூலமாக நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை. குறிப்பிட்ட கால கட்டத்தில் நடைபெற்ற வேலைத் திட்டங்களைப் பரிசிலனை செய்வதற்கு, இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்டதொரு குழுவினை அமைத்து அவற்றைப் பரிசீலிப்பதன் மூலமாக நல்ல பலன்களைக் காணமுடியும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற இருக்கின்றாரா ?

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, சில வேலைத் திட்டங்களில், உதாரணமாக பாலங்கள் கட்டப்பட்டது என்றெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். அவற்றைப் பார்ப்பதற்கு ஊராட்சி ஆணையரைச் செயலாளராகவும், டி.டி. ஒக்களைத் தலைவராகவும் கொண்ட குழு இருக்கின்றது. அப்படிப்பட்ட வேலைத் திட்டங்கள் சரிவர நடைபெற்று இருக்கின்றனவா என்று பார்ப்பதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்டதொரு குழுவினை அமைப்பதற்கு ஏதாவது யோசனை இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சட்ட மன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகத்தான் அந்தக் குழு அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/77) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1,

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தினை முன் மொழிகின்றேன்:

In clause *1*, for the expression "Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, *1977*", substitute the expression "Tamil Nadu Panchayat Bnion Councils (Appointment of Special Officers) Amendment Bill, *1978*.,.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப் பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/77) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.,, என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 18/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.,. என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தினை முன் மொழிகின்றேன்.

---

* 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. கா. காளிமுத்து] [1978 ஜனவரி 4

In clause 1. for the expression "Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Second Amendment Bill, 1977," substitute the expression "Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Amendment Bill, 1978."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1. திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 18/77) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறை வேற்றப்பெற வேண்டும்"

என்று வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(எ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/77) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

* 1977 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ம் தேதி தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1978 ஜனவரி 4]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தினை முன் மொழிகின்றேன்.

In sub-clause (1) of clause 1, for the expression "Tamil Nadu Panchayats (Third Amendment) Bill, 1977, substitute the expression "Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1978"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றும் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 21/77) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(5) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

248. Notification issued in G.O. Ms. No. 568, Co-operation, dated 25th October 1977 in regard to an amendment to rule 13 of the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. (Laid on the Table of the House under section 38A (2) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934)).

B. *Reports, Notifications and other papers.*

@ 29. The Tamil Nadu Nuclear Installations (Regulation of Buildings and Use of Land) Bill, 1977 (L.A. Bill No. 13 of 1977).

@ 30. Annexure to the Tamil Nadu Local Authorities Laws (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 3 of 1978).

@ 31. Annexure to the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 4 of 1978).

@ Despatched to Members on 2-1-1978.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1978 சனவரி 5

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 22ஐத் தளர்த்தல்.

<u>மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, " சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணிநேரம் : வினாக்கள் - விடைகள் " என்றுள்ள சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும் ".

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்பு.

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கு தேர்தல்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (அண்ணாமலை யூனிவர்ஸிட்டி செனட்) கீழ்க்கண்ட மூவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன.

1. செஞ்சி திரு. என். இராமச்சந்திரன்
2. திரு. மா. சுப்பிரமணியம்
3. திரு. கே. சௌந்திரராசன்

[பேரவைத் தலைவர்] [1978 சனவரி 5

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட மூவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(1) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 23—ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசுகிறபோது ஒரு ஊழல் குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னேன். அண்ணா சாலையிலுள்ள சைதாப்பேட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரிக்கு எதிரில் சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலை அண்ணா சாலை கூடுகிற இடத்தின் அருகில் நான்கு கிரவுண்டுக்கு மேல் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அதை ஆக்கிரமித்தவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு தனிப்பட்ட நபர். அதற்கு அண்ணா சித்த மருந்தகம் என்று அவர்கள் பெயர் வைத்திருக்கிறார்கள். ஒரு பெரிய கொட்டகையைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கொட்டகை இடம் பிடிப்பதற்கு மட்டும் போடப்பட்டதாகத் தெரிகிறது. வலுவானதாக, நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று ஓலை இல்லாத அளவில் போட்டிருக்கிறார்கள் இதைக் கவனிக்க வேண்டும். அதற்கு ஆதாரமாக, உங்கள் அனுமதியோடு, இரண்டு புகைப் படங்களை இங்கே காட்டிக் காட்ட நான் ஆசைப்படுகிறேன்.

1978 சனவரி 5] [திரு. து. புருஷோத்தமன்]

அடுத்து, இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு மொத்தம் இருப்பதாக நான் அறிகிறேன். அதேபோல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா சித்த மருந்தகம் என்ற பெயரால் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் யார் என்பதையும் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அவரிடம் ஆதாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*திரு. து. புருஷோத்தமன் : ஆதாரம் இருக்கிறது. ஆலந்தூர் தர்மராஜா கோவில் தெருவில் இருக்கிற பால கிருஷ்ணன், அ.இ.அ.தி.மு.க. நண்பர் அந்தயிடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அதுபற்றி மேல் இடத்திற்குத் தகவல் தெரிவித்திருக்கிறோம்.

அடுத்து அசோக் நகருக்குப் போகிற வழியில் கோவிந்தன் சாலையிலுள்ள சென்ன கேசவப் பெருமாள் கோவில் எதிரிலே மதில் சுவரையொட்டியதைப்போல் எம்.ஜி.ஆர். மன்றம் கட்டியிருக்கிறார்கள். அதைக் கட்டியவர் யார் என்று அமைச்சர் அவர்கள் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுவும் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கட்டியதுதான். பக்தர்களுக்கு கோவிலுக்குள்ளே செல்வதற்குக் கூட வழியில்லை. கோவிலில் விழா எடுக்கிற நேரத்தில் கூட அது தடங்கலாக இருக்கிறது என்ற நிலையில் பக்தர்கள் அங்கே கொதிப்படைந்திருக்கிறார்கள்.

கோடம்பாக்கம் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் அ.இ.அ.தி.மு.க.வினர் எம்.ஜி.ஆர். மன்றம் கட்டியிருக்கிறார்கள். இப்படி நாடு முழுவதும் ஆக்கிரமிப்பு ஊழல்கள் அதிபதிகளாக அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அ.இ.அ.தி.மு.க., அ.இ.தி.மு.க. என்றுசொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல, சரியான பெயர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்ல வேண்டும்.

<u>திரு து. புருஷோத்தமன் :</u> அடுத்து, நிவாரணப் பணிகளைச் செய்கின்ற முறையிலும் எந்த அளவு ஆளும் கட்சியினர் ஊழல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். வேளச்சேரி சாலையில் இருக்கின்ற நேரு நகர் என்ற இடத்தில் இருபது ஆண்டுகளாக குடிசைகளை போட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள் இருக்கின்றார்கள். இதில் 25 சதவீத மக்கள் தாம்பரம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். 75 சதவீத மக்கள் சைதாப்பேட்டை தொகுதியைச் சேர்ந்தவர்கள். இப்படி இருப்பவர்களில் தாம்பரம் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு 200 ரூபாயும், சைதாப்பேட்டை தொகுதி மக்களுக்கு 80 ரூபாயும், 40 ரூபாயும் என்கின்ற அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது பாதிக்கப்பட்ட மக்களுக்கு 200 ரூபாய் கொடுப்பதைப் பற்றி உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் தொகுதி வித்தியாசம் பாராமல் அதே தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யாருக்கு 80 ரூபாய் யாருக்கு 40 ரூபாய் என்று தீர்மானிப்பது அங்கு இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் முடிவு செய்கிறார். ஆளும் கட்சிக்கு ஆதரவாக உள்ளவர்களுக்கு ரூ. 80. தி.மு. கழகத்தை சார்ந்தவர்களுக்கு, ரூ. 40 என்று முடிவு செய்திருக்கிறார். இதிலும் பணம் எப்படி கொடுக்கிறார்கள் என்றால், அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர் டோக்கன் போன்று கையெழுத்துப் போட்டு சீட்டுக் கொடுக்கிறார்கள். அதை தாசில்தார் பார்த்துவிட்டு நிவாரணமாக புடவை, வேட்டி கொடுக்கிறார். இப்படி அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். . . . .

<u>திரு எஸ். ஆர். இராதா :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீண்டும் மீண்டும், முன்னால் சொல்லிக் கொண்டிருப்பதைப் போலவே சொல்லிக் கொண்டிருக்கிறார். அதிலே மகிழ்ச்சியடைகிறார். நான் சொல்ல விரும்புவது, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை எங்கள் கட்சியின் பெயரோடு இணைத்துவைக்கப் பட்டுத்தான், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. அவருக்கு இந்தக் கட்சியின் மீது கோபம் இருக்குமென்றாலும் இந்தப் பெயரிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை மட்டும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> பத்திரிகையில் எல்லாம் இப்படித்தான் வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியின் பெயரை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. அந்தக் கட்சியே தீர்மானம் போட்டு வேறு பெயரை வைத்துக் கொண்டால், அதை எங்கள் கட்சியின் தலைமையில் கேட்டு அதைப் போன்று சொல்லுகிறேன். (திரு எஸ். ஆர். இராதா எழுந்திருந்தார். . . . .)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> தயவு செய்து பேசுவதற்கு இடம் விடுங்கள். இப்படி குறுக்கிட்டுக் கொண்டே இருக்க வேண்டாம்.

<u>திரு து. புருஷோத்தமன் :</u> தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் 80 ரூபாய். தி.மு.க. ஆதரவாளர்களுக்கு 40 ரூபாய் என்று கொடுக்கப்பட்டது. இப்படி நிவாரணம் பெறுகிறவர்களிடமிருந்து ஒவ்வொருவரிடமிருந்தும் ஐந்து ரூபாய் பெற்று "எம். ஜி. ஆர். வருகிறார், நீங்கள் உதவி செய்ய வேண்டும்" என்று வசூலித்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழல் நடைபெற்றிருக்கிறது. அதுபோல் பல்வேறு இடங்களில் ஊழல் நடைபெற்றிருப்பதை ஆதாரத்தோடு சுட்டிக்காட்ட முடியும்.

ஆகவே, இந்த ஆட்சியின்மீது பொது மக்களுக்கு நம்பிக்கையில்லை. அதுபோல் டாக்டர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள். (இஞ்சினியர்கள்) பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியவர்களெல்லாம் இந்த ஆட்சி மீது நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள்.

நீறுபூத்த நெருப்பு போன்று அரசாங்க அலுவலர்கள் எல்லாம் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப் பெறாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டம் எப்போது வரும் என்று சொல்ல முடியாது.

அதுபோல் நாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லை. ஏதோ இங்கு அதிகமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு இந்த ஆட்சி இருந்தாலும், மக்களுக்கு இந்த ஆட்சிமீது நம்பிக்கை இல்லை என்பதைக் கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

[1978 சனவரி 5

திரு பி. கோதண்டராமன் என்கிற முசிறிப்புத்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது நம்பிக்கை இல்லையென்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். நம்பிக்கை இல்லை. நம்பிக்கை இல்லை என்கிற இந்த ஒலி, 1972-ல் அவர்களுக்கு புரட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லை என்று வந்தபோது அதாவது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மீது நம்பிக்கை இல்லை என்று வந்தபோது, மக்களுக்கு எம். ஜி. ஆர். மீது நம்பிக்கை இருக்கிறது என்று ஆகிவிட்டது. இல்லையில்லை எங்களுக்குத்தான் நம்பிக்கை இருக்கிறது. வாருங்கள் பார்க்கலாம் என்று நான்கு இடங்களில் பார்த்தார்கள்.

முதலாவது திண்டுக்கல்லில் வைக்கப்பட்டது. அதில் அவர்கள் ஒரு பிரச்னையை எடுத்து வைத்து இவர்கள்மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தார்கள். அதன் பின்னர் பாண்டிச்சேரியில் சொன்னார்கள், பின்னால் கோவையில் சொன்னார்கள். பின்னால் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அதிலும் இப்படியே சொன்னார்கள்.

ஆனால், மக்களுக்கு இவர்கள் பேரில் நம்பிக்கை இல்லை என்பதையும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மீது தான் நம்பிக்கையிருக்கிறது என்பதை எடுத்து வைத்தார்கள். அது மட்டுமல்ல, மக்களுக்கு இவர்கள் மீது தான் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது என்பதையும் எடுத்து வைத்தார்கள்.

இந்த நம்பிக்கையில்லை என்கிற கூச்சல் எந்த அடிப்படையில் வருகிறது என்பதை அவர்கள் தங்கள் பேச்சில் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள்.

(முற்பகல் 9—10)

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மொத்தமாக நம்பிக்கை இல்லை என்று பேசினார்களே தவிர, எங்காவது புரட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கின்ற நன்மைகளைப் பற்றி ஒருசில வார்த்தைகளாவது பேசினார்களா என்று பார்த்தால், அப்படி ஒன்றிரண்டு இடங்களில்

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்] 1978 சனவரி 5]

கூட அவர் செய்த நல்ல காரியங்களைப் பற்றிப் பேசவில்லை. அவர் பேசிய பேச்சைக் கூர்ந்து கவனித்தாலும், மொத்தமாக மோசமாக இருக்கிறது என்று பேசினார்கள். அந்த அளவுக்குத்தான் பேசியிருக்கிறார்கள்.

ஆனால், புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்தன்மையைப் பற்றி விளக்கிக் காட்ட ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சுதந்திர தினத்தன்று அவர் கோட்டையில் கொடியை ஏற்றிப் பேசுகின்றபோது, இந்தக் கொடியை நான் ஏற்றுகிறேன் என்று சொன்னால், இந்தக் கொடியை ஏற்றுகின்ற பெருமையைத் தேடித் தந்தவர், அந்த உரிமையை வாங்கித் தந்தவர் கலைஞர்தான் என்று சொன்னார்கள்.

அதேபோல், மொத்தமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்று நாங்கள் சொல்ல மாட்டோம். அவர்கள் ஓரளவுக்குச் செய்திருக்கிறார்கள். அதைவிட அதிகமாக நன்மைகளைச் செய்ய, பலமாகவும், விரிவாகவும், தமிழுக்குச் செய்ய நாங்களும் இருக்கிறோம் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

ஆனால், கலைஞர் அவர்களுடைய பேச்சைக் கூர்ந்து கவனித்தபோது, அப்படி ஏதாவது இரண்டொரு இடத்திலாவது பெருமை தேடித்தரும் விதத்தில் அமைந்திருக்கின்றதா என்று பார்த்தால், புரட்சித் தலைவர், புரட்சித் தலைவர்தான். கலைஞர், கலைஞர்தான் என்று சொல்லுகின்ற அளவுக்குத் தான் அந்தப் பேச்சு இருந்தது.

மொத்தமாக, இரண்டு நாட்களாக நாம் இங்கு இதை பற்றிப் பேசயிருக்கிறோம். எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்களுடைய மனப்பான்மை எல்லாம் எப்படியிருக்கின்றது என்று சொன்னால், அவர்கள் பேசுவது எதிர்க் கட்சித் தோரணையில் அல்ல; எதிரிக் கட்சித் தோரணையில் பேசுகின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால்; நம் சென்னையிலே..............

கூத்தகுடி திரு ச. சண்முகம்: எதிர்க் கட்சி மொத்தமாக இப்படிப் பேசுவது நல்லதல்ல.

[1978 சனவரி 5

திரு பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : பிரதான எதிர்க் கட்சியின் மனப்பான்மை எப்படியிருக்கிறது என்று சொல்ல வேண்டும். சென்னையிலே பொது மருத்துவ மனையைப் பார்த்திருப்பீர்கள். அந்தப் பொது மருத்துவ மனையிலே உள்ள எல்லோருடைய கவலையும், அங்குள்ளவர்கள் எல்லோரும் நலமாக வீடு திரும்ப வேண்டுமென்பதுதான். ஆனால், அவ்வளவு பெரிய மருத்துவ மனைக்குப் பக்கத்திலே, 7வது அல்லது 8வது கேட் என்று நினைக்கிறேன், அந்த கேட்டிற்கு அருகில் ஒரு குதிரை வண்டி நிற்கும். அந்த குதிரை வண்டியில் ஒருவன் உட்கார்ந்து கொண்டிருப்பான். அவனுடைய கவலையெல்லாம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு ஏதாவது 2 கேஸ்களாவது தேர மாட்டார்களா என்றுதான் இருக்கும். பொது மருத்துவ மனையிலே உள்ளவர்களுடைய நோக்கமெல்லாம் எல்லாம் நலமாக வேண்டுமென்ற நோக்கத்திலே இருக்கும். ஆனால், இந்த ஒரே ஒரு ஆள் மட்டும் சவக் கிடங்கிற்கு அருகில் குதிரை வண்டியில் உட்கார்ந்து கொண்டு இன்றைக்கு இரண்டு பேர்களாவது தேர மாட்டார்களா என்பதிலே இருக்கும். அதுபோலத்தான் இந்த பிரதான எதிர்க்கட்சியின் மனப்பான்மையும் இருக்கிறது. எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், அவற்றைக் குத்திப் பேசுவது, இடித்துப் பேசுவது, பாராட்டிப் பேச வேண்டியவைகளைக்கூட பாராட்டிப் பேசும் மனம் இல்லாமல் கலைஞர் அவர்களுடைய பேச்சு இருந்தது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புயல்-வெள்ள நிவாரணப் பணிகளுக்காக புரட்சித்தலைவர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்தியத் துணைக் கண்டமே பாராட்டியிருக்கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டினார்கள். பிரதம அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். மற்றெல்லோரும் பாராட்டினார்கள். முதலில் 80 என்று சொல்லி பின்னர் 100 ரூபாய், 200 ரூபாய் என்று ஏற்படுத்தி மிகவும் வேகமாகப் பணிகளை புரட்சித் தலைவர் அவர்கள் செய்தபோது, இந்த 200 ரூபாய் என்று சொன்னவுடனே, ஏற்கனவே இருந்ததைப் போல் மூன்று மடங்காக தமிழ்நாட்டில் இடிந்த வீடுகளின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது. அந்த அளவுக்கு நிவாரணப் பணிகள் நடந்தது. புடவைகள் வந்தன ; வேட்டிகள் வந்தன ; கோதுமை வந்தது ; அரிசி வந்தது. இப்படிப்பட்ட உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டு, நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்பட்டதை மத்திய

[திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]
1978 சனவரி 5]

அரசே பாராட்டினார்கள். அதைப் பற்றியாவது ஒரு வரி பாராட்டியிருந்தால் நான் மிகுந்த, மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

கலைஞர் அவர்கள் 6 மாத காலம் கெடு கொடுத்தார்கள். அது முடிந்தது. எனவே, ஜனவரியில் நாங்கள் இந்தப் பிரச்னையைக் கிளப்புகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த 6 மாத காலம் என்பது, நம்முடைய எதிர்க் கட்சி தோழமைக் கட்சியிலே உள்ளவர்கள் சொன்னதுபோல் இந்த 6 மாத காலம் என்பதில் ஏறத்தாழ இரண்டு மாத காலம் நம்முடைய சபை நடந்தது, இந்த புயல்-வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 2 மாத காலம் ஆகிவிட்டது. எனவே, இந்த அரசுக்கு 'பிரீத்திங் டைம்' என்று சொல்வார்களே அதைப் போல் சிந்திப்பதற்கே நேரம் இல்லாத அளவுக்கு ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து ஆக்கப்பணிகள் செய்வதிலே நம்முடைய அரசு ஈடுபட்டு, அந்தக் காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருந்தது. ஒன்றையும் உடனடியாக நிறைவேற்றவில்லையே என்று சொல்கிறார்கள்.

நான் பிரதான எதிர்க் கட்சியைக் கேட்டுக் கொள்கிறேன் நீங்கள் வீராணம் என்று ஒரு திட்டம் போட்டு, அந்த வீராணம் திட்டம் மூலம் சென்னைக்கு வேண்டிய குடிதண்ணீர் வருமென்று சொன்னீர்கள். அந்தத் திட்டத்தை துவக்குகிற போது கோடம்பாக்கத்திலிருந்து ஒரு குமரியைக் கொண்டு வந்து சைதாப்பேட்டையில் குடத்தைக் கொடுத்து நிறுத்தினார்கள். அந்தக் குடத்தில் கார்ப்பரேஷன் தண்ணீரை கனெக்ஷன் கொடுத்து, அந்தக் குடத்திலிருந்து நீர் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆரம்ப விழா நீர் வரப் போகிறது என்று, அந்த கோடம்பாக்கம் மங்கை கையில் குடத்தை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

*திரு. மு. கருணாநிதி : கோடம்பாக்கம் மங்கை என்று கேலியாகச் சொல்லுகிறார்கள். அதுவும் முசிறிபுத்தன் பேசும் போது என்ன பொருளில் சொல்கிறார் என்று புரிகிறது. அந்த மங்கை சிலைத் திறப்பு விழா, நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா காலத்தில்தான் செய்யப்பட்டது.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : அவர் வைத்த சிலை அல்ல. பின்னாலே 2 வருஷம் கழித்து அதை எடுத்துவிட்டு வேறு ஒரு சிலை வைத்தார்கள்.

[1978 சனவரி 5

திரு. மு. கருணாநிதி : அது பின்னாலே வைக்கப்பட்ட சிலையல்ல. இந்த சிலைக்கு ஒரு விசாரணைக் கமிஷன் கூட வைக்கலாம். அண்ணா அவர்கள் திறந்து வைத்த அதே சிலை தான் இன்றும் அங்கே வைக்கப்பட்டிக்கிறது.

திரு. பி. கோதண்டராமன் (என்கிற) முசிறிபுத்தன் : போகட்டும். அந்த சிலையை காவேரித் தாய் என்று சொன்னார்கள். கையிலே குடத்தோடு நின்று கொண்டிருந்தாள். இந்த வருஷம் வரும் ; அடுத்த வருஷம் வரும் என்று காட்டிக் கொண்டிருந்தார்கள். இரண்டு வருடம் கழித்து காவிரித் தாய் கையிலிருந்த குடத்தை யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். ஒரு வருடம் போயிற்று. 2 வருடம் ஆயிற்று. எங்கே காவிரித் தாய் என்று பார்த்தால் அவரையும் யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள்.

வீராணம் திட்டம் என்ன ஆயிற்று என்று பார்த்தால் தெரியும்—6 மாத காலத்தில் நடத்தவில்லையே என்று சொல்கிறார்கள். சென்னை நகருக்கு காவிரி நீர் வந்ததா ? வீராணம் திட்டம் என்னவாயிற்று என்று அவர்கள் ஒரு கணம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றும் சொல்கிறார்கள். இப்போது புதிதாக அவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் மீது பக்தி வந்து விட்டது. பக்தி என்றால், ஜெபமணி அவர்களுக்கும், ஜேம்ஸ் அவர்களுக்கும் இல்லாத அளவுக்கு பக்தி வைக்கிறார்கள். ஆனால், பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு எந்த அளவு மதிப்பு தந்தார்கள் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

அவருக்கு ஒரு முறை பிறந்த தின விழா வந்தது. அதில் புரட்சித் தலைவர் அவர்கள் போய் பேசினார்கள். பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் பற்றி, அந்த விழாவில் பேசலாமா என்று ஒரு பெரிய சர்ச்சையை நடத்தினார்கள். அண்ணா அவர்கள் அப்போது வெளிநாடு சென்றிருந்தார்கள். அந்த அளவுக்குப் புரட்சித் தலைவரை அன்றே கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டுமென்ற அளவுக்கு பரபரப்போடும், பதட்டத்தோடும் காரியங்கள்செய்தார்கள்.

அதுமட்டுமல்ல. சோஷலிச பிதா என்று காமராசரைப் போற்றினார்கள். அது மட்டுமல்ல. பெருந் தலைவர் காமராசர் அவர்கள் மதுரையிலே தங்கியிருந்தார்கள். ஒரு சின்ன மந்திரி வருகிறார் என்று சொல்லி இரவோடிரவாக

[திரு. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]
1978 சனவரி 5]

அவருடைய பெட்டி படுக்கையைத் தூக்கிக் வெளியே வைத் தார்கள். காமராசர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் இறக்கு கும் வரை தமிழ்நாடு அரசின் எந்த சுற்றுலா விடுதியிலும் அதற்கு பிறகு தங்கவில்லை. அதற்குக் காரணம் மதுரைச் சம்பவம்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெருந் தலைவர் காமராசர் அவர்கள் தமிழக அரசின் எந்த சுற்றுலா விடுதியிலும் தங்கவில்லை என்று சொல்லுகிறார். காமராசர் அவர்கள் '' தமிழகம் '' என்கிற உதகையில் உள்ள தமிழக அரசு மாளிகையில் தங்கினார்கள். அவருடைய பாராளு மன்ற உறுப்பினர் '' லெட்டர் பேடில் '' கையெழுத்துப் போட்டு கடிதம் அனுப்பினார். லெட்டரே தேவையில்லை. எவ்வளவு நாள் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளலாம் என்று சொன்னோம். அவர் அதில் 20 நாட்களுக்கு மேலாக தங்கியிருந்தார். பல்வேறு சர்க்கார் சுற்றுலா விடுதிகளில் அவர்கள் தங்குவதற்கு அரசு அனுமதித்திருந்தது. எங்கோ நடந்த ஒரு சம்பவத்தை வைத்துக் கொண்டு, பொதுவாக காமராசருக்கு இடம் தர வில்லை என்று முன்பிருந்த அரசு மீது குற்றம் சாட்டுவது முறையல்ல.

திரு. எம். ஆறுமுகம் : 1968-ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் ஆத்தூரில் சுற்றுலா மாளிகையில் பெருந்தலைவர் அவர்கள் தங்க ஏற்பாடு செய்தோம். அப்போதிருந்த உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருவதாகச் சொல்லி, அவருக்கு ஒதுக்கப்பட்ட '' ரிசர்வேஷனை கான்சல் '' செய் தார்கள். ஆனால், சம்பந்தப்பட்ட மந்திரி வரவில்லை. காம ராசருக்கு கொடுக்கப்பட்ட இடம் மறுக்கப்பட்டது. ஆனால், சுற்றுலா மாளிகை காலியாக இருந்தது. அன்றைய தினம் காமராசர் அவர்கள் எங்களை இனிமேல் சுற்றுலாத் துறையின் விடுதியில் இடம் போட வேண்டாம் என்று கடிந்து கொண் டார்கள்.

திரு. கோதண்டராமன் (என்கிற) பி. முசிறிபுத்தன் : இதைவிட வேறு ஒரு சான்று தேவையில்லை என்று கருது கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அவர்கள் 1968 என்று குறிப்பிட்டார் கள். அவர் அப்போது மதுரையிலே நடைபெற்ற சம்பவம் என்று சொன்னார்கள். மதுரையில் நடைபெற்ற சம்பவம், என்றால் அதற்குக் காரணம் என்னவென்று அறிந்து கொள்ள

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 5

லாம். அப்போது முன்பிருந்த ஆட்சி அண்ணா அவர்கள் ஆட்சி, நாமெல்லாம் ஒன்றாக இருந்த காலம்—இதை நண்பர் முசிறி புத்தன் கவனத்தில் வைத்துக்கொண்டு பேச வேண்டும்.

திரு. கோதண்டராமன் (என்கிற) முசிறிபுத்தன் : அந்த அளவுக்கு பெருந்தலைவர் காமராசர் மீது பக்தியும் பாசமும் இப்போது வந்திருக்கிறது.

[முற்பகல் 9-20]

அடுத்து, பொய் வழக்குப் போட்டு விட்டார்கள், 25,000 பேரைக் கைது செய்து விட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். கடந்த இரண்டு வருஷ காலமாக எதிர்க்கட்சித் தரப்பிலே அவருடைய பத்திரிகையிலே நன்கொடை அறிவிப்புகள் பல்லாயிரக்கணக்காக வருகிறது; சாவு எண்ணிக்கைக் கணக்குக் கூட ஆயிரக் கணக்கில் சொல்லப்படுகிறது; அதே போன்று 25,000 பேரைக் கைது செய்துவிட்டார்கள், பொய் வழக்கு போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதற்குள்ளே நான் புக விரும்பவில்லை. இதுபோன்ற கைதுகளை உங்கள் ஆட்சியில் நீங்கள் செய்யவில்லையா? எப்படி வழக்குகளை நீங்கள் ஜோடித்தீர்கள் என்பதைப்பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் எல்லாத் தரப்பு சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள்.

நம்முடைய அருமைச் சகோதரர் ஜேப்பியார் அவர்கள மீது போடப்பட்ட பொய்வழக்குகள் எத்தனை எத்தனை? ஒரு கட்டத்தில் '' மிசா '' கைதி என்ற அளவுக்குக் கொண்டு போனார்கள். ஜேப்பியார் ஏழடி உயரம், ஆஜானுபாகுவானவர். அவர் இவ்வளவு வழக்குகளிலும் வட்டம் தோறும், மாவட்டம் தோறும் ஓடி, ஓடி கலந்து கொண்டார்.

என் மீதும் வழக்குப் போட்டார்கள். என்ன வழக்கு என்று சொன்னால், கலைஞர் அவர்கள் சில செக்ஷன்களைச் சொன்னார்களே அந்த செக்ஷன்களிலே கொலைக் குற்றம் சாட்டினார்கள். மாலை 6 மணி—நான் கொலை முயற்சி பண்ணினேன். மவுண்ட் ரோடு வெல்லிங்டன் தியேட்டர் எதிரில்—இடம் எங்கே? மவுண்ட் ரோடு வெல்லிங்டன் தியேட்டர் எதிரில் மாலை 6 மணிக்கு வேணு செட்டியார் என்ற தோழரை நான் கத்தி எடுத்துக்கொண்டு போய் வெட்டப் போக, நான் வெட்டப் போனவுடன் அவர் இறங்கி ஓட,

1978 சனவரி 5]

[திரு. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்]

நான் பிச்சுவாக் கத்தியுடன் செட்டியாரை நோக்கி ஓட, செட்டியார் ஓட, நான் ஓட (சிரிப்பு) அவர் இராயப்பேட்டையில் புகுந்து கொண்டார். இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் முறையிடப்பட்டது என்பது வழக்கு. நான் கத்தி எடுத்தேன் என்பது ஒருபுறம் இருக்கட்டும்; எவ்வளவு தூரம் நான் அவரை விரட்டிப் போக முடியும்? வேணு செட்டியாரை நான் வெட்டுவதற்காக இராயப்பேட்டை வரை விரட்டிக் கொண்டு போனேன் என்று என் மீது வழக்குப் போட்டார்கள். இது போன்ற பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். இந்தப் பொய் வழக்குகள் எல்லாம் வழக்கு மன்றத்தில் எந்த அளவுக்கு முடிந்தது என்பது அந்தத் தீர்ப்புக்களைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்து கறுப்புக் கொடி காட்ட வேண்டுமென்று சொன்னபோது அதற்காக பாதுகாப்புக் கொடுத்து உங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால், அன்று செங்கற்பட்டில் நடந்த கதை என்ன? உங்களுக்கே நன்றாகத் தெரியும். எங்களுடைய கட்சி நண்பர் எஸ்.எம். துரைராஜ் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் என்ன பாடுபட்டார்கள்; அவர்கள் இரயில் நிலையத்திலிருந்து இறங்கி ஊருக்குள்ளே போக எவ்வளவு சிரமம் ஏற்பட்டது என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். நான் சொல்வதெல்லாம் இன்று எதிர்க்கட்சி என்ற அளவுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுங்கள்.

ஏதோ புரட்சித் தலைவரை விளம்பரம் செய்து விட்டதாகச் சொன்னார்கள். ஏதோ மூன்று படத்தைப் போட்டு விட்டதாக, புரட்சித் தலைவர் படத்தைப் போட்டு விட்டதாகச் சொன்னார்கள். 1954-ல் இருந்து இன்று வரை அவருக்குப் புதிதாக விளம்பரம் ஒன்றும் தேவையில்லை. இன்றைக்கு காலையில் பிறந்த ஒரு குழந்தை, பிறந்து முதலில் பேசுவது அம்மா: பிறகு அப்பா, மூன்றாவது எம். ஜி. ஆர். என்று சொல்லுகிற அளவுக்குப் புரட்சித் தலைவர் பெயர் அந்த அளவுக்கு நாடெங்கிலும் விளங்கி வந்திருக்கிறது. இப்போது புதிதாக இந்த டயரியில் புரட்சித் தலைவர் படத்தைப் போட்டுத்தான் அவருக்கு விளம்பரம் அளிக்க வேண்டுமென்ற நிலை இல்லை. இன்றைக்கு அவருக்கு இருக்கின்ற விளம்பரம் இன்னும் ஐம்பது ஆண்டுக் காலம், 100 ஆண்டுக் காலம் ஆனாலும், கொடிக்குத் தேர்

[திரு. கோதண்டராமன் என்கிற பி. முசிறிபுத்தன்]

சந்த பாரியைச் சொல்வார்களே, அதே போல் இந்தப் பறங்கிமலைப் பாரியின் புகழ் காலமெல்லாம் நாட்டு மக்கள் இதயங்களிலே இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

எதிர்த் தரப்பில் கொஞ்சம் படப்படப்போடு பேசுகிறார்கள். நாங்கள் ஆளும் கட்சியில் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கும் குறுக்கும் நெடுக்குமாக எழுந்து பேசத் தெரியும். ஆகவே, எதிர்த் தரப்பில், கலைஞர் அவர்கள் இந்த அவை ஒழுங்காக, அமைதியாக நடைபெற ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்து 6 மாத காலம்தான் ஆகிறது. அதே நேரத்திலே ஒரு அரசின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர வேண்டுமானால் இந்த அரசில் நிர்வாகக் கோளாறு அல்லது நிர்வாகத்தில் திறமையற்றிருக்கிறது என்ற வகையில் தான் கொண்டு வரவேண்டும், இல்லையென்றால் இந்த அரசு கொண்டுவந்த கொள்கையில் தவறிவிட்டது ஆகவே நம்பிக்கையில்லை என்று கொண்டு வரவேண்டும். அப்படியில்லை என்றால் மக்கள், அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்று கொண்டு வர வேண்டும்.

ஆனால் இங்கே வந்திருக்கிற நம்பிக்கையில்லாத்தீர்மானம் ஆதாரமற்ற அஸ்திவாரமற்ற அடிப்படையற்ற தீர்மானம் என்று சொன்னால் மிகையாகாது. ஏனென்றால் தங்களுக்குள்ள கோப தாபங்களை ஒட்டி இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அரசு மீது கொண்டுவந்துவிட்டு, நெருக்கடி நிலையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் நெருக்கடி நிலையைப் பற்றி இதிலே பேசுவதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். மதுரையிலே அடிபட்டவன் மானாமதுரையிலே போய் கோபித்துக் கொண்டான் என்று ஒரு பழமொழி இருக்கிறது.

[திரு. துரை முத்துசாமி]

இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது என்று சொன்னால் அதற்கும் நெருக்கடி நிலைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நெருக்கடி காலத்திலேதான் தமிழகத்திலேயும் சரி அகில இந்தியாவிலேயும் சரி, கல்லூரிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் அனைத்தும் ஒழுங்கான முறையிலே முறையாக நடைபெற்றது என்று சொன்னால் அதை யாரும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது. இன்று ஜனநாயகம், சுதந்திரம் பேசிக் கொண்டிருக்கலாம். இந்த அரசு மட்டுமல்ல, அகில இந்திய அரசுக்கும் ஏற்பட்டிருக்கிற தலைவலி எல்லாம் இந்தப் பிரசனைகளைச் சமாளிக்க முடியாமல் அதனால் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைக் கூடச் செய்ய முடியாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

நெருக்கடி காலத்திலே அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பாதுகாப்பு இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. அப்போது சட்டம் இருந்தது, பாதுகாப்பு இருந்தது என்று அரிசன மக்கள் எல்லாம் தைரியமாக வாழ்ந்துகொண்டு இருந்தார்கள். அதே நிலைமை இப்போது இருக்கிறதா என்றால் ஆங்காங்கே நடைபெறுகிற சம்பவங்களைப் பார்க்கிறபோது ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் பாதிக்கப்பட்ட நிலைமைகளைத்தான் பார்க்கிறோம். அரசாங்கம் அவர்களைப் பாதுகாக்கவில்லை.

இதைப் போன்றே விலைவாசியை எடுத்துக்கொண்டால் அந்த நேரத்தில் விலை வாசிகள் குறைந்து இருந்தன. பெண்கள் பாராட்டினார்கள். குறித்த விலையில் குறித்த இடத்தில் குறித்த பொருட்களை வாங்கக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு நினைத்த விலைக்கு நினைத்த பொருட்களை விற்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அமைக்கத்தான் நெருக்கடி நிலைமை பயன்பட்டது. இன்றைக்கு நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்து நெருக்கடி நிலைமையைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று தெரியவில்லை.

எங்களுடைய கட்சித் தலைவர் பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் இங்கு வந்த நேரத்திலே நடந்த சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க

முடியாது. எலக்ட்டிரிக் டிரெயினிலே தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் அவர்களோடு கிண்டி வரையில் வந்தார்கள். அந்த டிரெயின் டிரைவரை அடித்து நொறுக்கி காயப்படுத்தினார்கள் என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். நாம் பத்திரிகைகளிலே பார்த்தோம். கிண்டி வரையில் வந்தவர்கள் ரயிலை விட்டு தொடர்ந்து கடுமையான செயல்களில் இறங்கினார்கள். தொழிலாளர்களுக்கு பரிந்து பேசுகின்றவர்கள்—அந்த டிரைவரும் யார்? தொழிலாளர்தானே—அவரை அடித்துக் காயப்படுத்தினார்கள்.

அது மட்டுமா ? கேரள அமைச்சர் முகமது கோயா தன்னுடைய மனைவி உடல்நலம் இல்லாமல் இருக்கிறார்கள், அவர்களைப் பார்ப்பதற்காக வந்து பார்த்துவிட்டு தமிழக அரசின் காரிலே விமான நிலையத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார். வெளி மாநிலத்தினுடைய அமைச்சர் என்று தெரிகிறது. தமிழக அரசின் கார் என்று தெரிகிறது. அவரை அந்த நேரத்திலே அடித்து காயப்படுத்தியிருக்கிறார்கள். இதை எல்லாம் நாம் பத்திரிகையிலே பார்த்தோம்.

கறுப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை என்பதை யாரும் மறுக்க முடியாது. நாங்களும் காட்டியிருக்கிறோம். இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே கறுப்புக்கொடி காட்டினார்கள். ஆனால் காந்திய வழியிலே காட்டினார்கள். இந்த கறுப்புக் கொடி காட்டுவது என்ற பெயரால் வருவோர் போவோரையெல்லாம் காயப்படுத்துவது, வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களை அடித்தார்கள் என்றெல்லாம் பத்திரிகையிலே பார்த்திருக்கிறோம். நாட்டு மக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

(முற்பகல் 9–30)

இப்படிப்பட்ட காரியங்களுக்கு நான் ஜனநாயக உரிமையா ? கறுப்புக்கொடி காட்டுவதற்கு அனுமதி அளித்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதேபோல் மிசாவைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள் எதிர்க்கட்சித் தலைவரவர்கள். கள்ளக் கடத்தல்காரர்களை, கறுப்புப்பண முதலைகளை, சமூகவிரோதிகளை மிசாவிலே உள்ளே போட்டார்கள். இது தவறா? அவ்வாறு செய்ததன் காரணமாகத்தான்

விலைவாசி குறைந்து இருந்தது. அதே நேரத்தில் அந்த ஆறுமாத காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டுக்கொண்டிருந்ததே. . . . .

திரு. ர. ஜெபமணி : சபாநாயகரவர்களே, சமூக விரோதிகளைப் போட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்களே, நானும் மிசாவிலே உள்ளே இருந்தேன். நான் எந்தத் துரோகத்தைச செய்தேன் என்று அவர்கள் விளக்குவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி : நான், கள்ளக் கடத்தல்காரர்களை, கறுப்புப் பண முதலைகளை உள்ளே போட்டார்கள் என்று சொன்னேன். சமூக விரோதிகள் என்பதற்கான விளக்கம் இது.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, மிசாவுக்கு அவர்கள் விளக்கம் சொன்னார்கள். மிசாவில் என்னையும் உள்ளே போட்டார்கள். நான் எந்த சமூகத் துரோகத்தைச் செய்தேன் என்றுதான் அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர் பதில் சொல்லவில்லை.

திரு. துரை முத்துசாமி : பொதுவாக மிசாவிலே போடப்பட்டவர்கள் கள்ளக்கடத்தல்காரர்கள், கறுப்புப் பண முதலைகள் போன்ற சமூக விரோதிகள். ஆனால் உறுப்பினர்களை எதிலே பிடித்துப்போட்டார்கள் என்று தெரியவில்லை. போட்டவர்களைத்தான் கேட்க வேண்டும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே போட்டவர்கள் யார் என்றே அவருக்குத் தெரியாது. போட்டவர்களுக்கு தெரியாது, உள்ளே போனவர்களுக்கும் தெரியாது. அந்த சமூக துரோகமான காரியத்தைச செய்தவர்கள் இப்பொழுது சந்தி சிரிக்க நிற்கிறார்கள் என்பதை உங்கள் மூலம் சொல்லிக்கொண்டு அமர்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அதேபோல், 1972-ஆம் ஆண்டிலே இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவர்கள், முன்பு முதலமைச்சராக இருந்த நேரத்தில் . .

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, சந்தி சிரிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அவ்வாறு சொல்வது சரியானதுதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னார், இந்தக் கட்சி சந்தி சிரிக்க நிற்கிறது என்று சொன்னாரா? பொதுப்படையாகத்தான் சொன்னார். எனவே, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. துரை முத்துசாமி : இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த நேரத்திலே, 1972-ஆம் வருஷத்திலே, எங்களுடைய கள்ளக்குறிச்சி பகுதிக்கு வந்தார்கள். அந்த நேரத்திலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக்கொடியை அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் காட்டினார்கள். ஆனால் அங்கே எந்த விதமான சிறு சம்பவம்கூட நடைபெறவில்லை. ஆனால் இருபதுக்கும் மேற்பட்டவர்கள்மீது, இப்பொழுது அவர்கள் சொல்கிறார்களே அவர்கள் மீது வழக்கு போட்டதாக, அதேபோன்று இ.பி.கோ. 307-இன் கீழ் கொலை முயற்சி என்று குற்றஞ்சாட்டப்பட்டது. கறுப்புக்கொடி காட்டிய அவர்கள் முறையாக அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் காட்டினார்கள். அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. பிறகு அது தள்ளுபடியாக்கப்பட்டது பொய்வழக்கு என்று.

இப்படிச் செய்தவர்கள் இன்றையதினம் சொல்கிறார்கள், நாங்கள் கறுப்புக் கொடி காட்டியது தவறு என்று. கறுப்புக்கொடி காட்டிய நேரத்தில் இப்படிப்பட்ட 16 செக்ஷன்களின் கீழ் வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அன்றைக்கு ஏழை எளியவர்கள், அதிலும் குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த தொண்டர்கள் மீது இப்படிப்பட்ட வழக்குகளை இவர்கள் போட்டார்கள்.

அடுத்து, விளம்பரப் பிரியர் என்று சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் இங்கே ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே கண்ணொளி வழங்கு விழா நடத்தினார்கள். கலைஞர் கண்ணொளி வழங்கு விழா என்று நடத்தப்பட்டது எல்லோருக்கும் தெரியும். அப்பொழுது நான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தேன். நான் அரசாங்கத்திற்குக் கூட கடிதம் எழுதினேன். ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றி

லிருந்தும் தனியாக நிதியைக் கேட்டு அரசாங்கத்தினுடைய கண்ணொளி வழங்கு விழா என்று நடத்தியிருந்தால் பரவாயில்லை, ஆனால் கலைஞர் கண்ணொளி வழங்கு விழா என்று சொல்கிறார்களே, அது அவர்களுடைய சொந்தப்பணமா, சொந்தப்பணத்தின் மூலமா இந்த நாட்டு ஏழை எளியவர்களுக்குக் கண்ணொளி வழங்குகின்றார்கள், எனவே, இப்படிப்பட்ட பெயரில் விழா நடத்துவது முறை அல்ல, சரியல்ல என்று கடிதம் எழுதினேன். ஆனால் அதற்குப் பதில் வரவில்லை. அது அரசாங்கத்தின் பணம்தான், பொதுமக்களின் பணம்தான். ஆனால் அவர்கள் கலைஞர் கண்ணொளி வழங்கு விழா என்று எங்கெங்கு நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் மறக்க முடியுமா?

அதைப்போல எங்கள் கடலூர் பகுதியிலே, 1972-ஆம் ஆண்டு அரியாங்குப்பம் தேர்தலுக்குப் பிறகு, மாபெரும் விழாவை, அங்கே தேவர்கள் கொலு வீற்றிருப்பதைப் போல விழா நடத்தினார்கள். 250 கட்டிடங்களுக்கு கல்நாட்டு விழா என்று நடத்தியிருக்கிறார்கள். எந்த ஊராட்சி ஒன்றியங்கள், எந்தந்தக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றனவோ, கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றனவோ, அத்தனை கட்டிடங்களுக்கும் கல் அடித்து, கடலூரிலே விழா நடத்தினார்கள். அந்த விழாவை நடத்திய பிறகு அந்தந்தக் கற்களை அவைகளுக்குச் சொந்தமான ஒன்றியங்களுக்கு எடுத்துச் சென்று அந்தக் கட்டிடங்களுக்கு வைப்பது என்ற முறையில் 250 கட்டிடங்களுக்கும் நடத்ியதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. அரியாங்குப்பத்திலே வெற்றி பெற்றுவிடுவோம் என்ற மமதையிலே அவர்கள் அங்கே அதற்கு மறுநாள் விழாக்கோலம் பூண்டு 250 கட்டடங்களை அங்கே திறந்தார்கள். இப்படி விளம்பரத்தைச் செய்து கொண்டவர்கள் இன்று இந்த அரசைப் பார்த்து, நம்பிக்கையில்லையென்று சொல்கிறார்கள். விளம்பரப் பிரியர்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். கரும்பு விலை நிர்ணயத்தில் மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாக, சட்டமன்றத்திலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கரும்புக்கு, ஒரு டன்னுக்கு ரூ. 120-ஐ கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்

கொடுக்கும் என்று சொன்னார்கள். ஆனால், கள்ளக் குறிச்சியிலே, டன்னுக்கு ரூ. 114தான் நிர்ணயித்திருக் கிறார்கள். அந்தப்பாகுபாடு இருக்கிறது. எப்படிச் சட்ட மன்றத்திலே வாக்குறுதி கொடுத்தார்களோ அதேபோல், எல்லா கூட்டுறவு ஆலைகளிலேயும் ரூ. 120 கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். பல பிரச்னைகளை நீங்கள் சொல்லமுடியும். நான் ஆதாரங்களைச் சொல்கிறேன். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையிலே, 1974–75-லே, 8.63 சதவீதம்தான் ரெக்கவரியிருந்த நேரத்திலேகூட, ரூ. 126 தான் டன்னுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று 10.6 சதவீதம் ரெக்கவரி இருக்கின்ற நேரத்திலே இப்பொழுது கொடுப்பது ரூ. 114.

அதே நேரத்திலே, பாரதி கமிஷனால் குற்றம் சாட்டப் பட்ட சாந்தலிங்கம் என்பவர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சாலையில் இருக்கிறார். என்னுடைய பகுதியிலே அவர் இருந்தவர், மதுராந்தகத்திலே இருந்தவர், பல குற்றச் சாட்டுகள் அவர்மீது பாரதி கமிஷனால் சுமத்தப்பட்டுள் ளது. அப்படிப்பட்டவரை அவரது இலாகாவிற்கு அனுப்பாமல், கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குள்ளேயே போட்டிருக்கிறார்கள். அவர் ஊழல் பேர்வழி என்று தெரிகிறது. நாங்களும் சொல்கிறோம், இந்த அமைச்சர் களும் சொல்கிறார்கள். இவைகளையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பதட்டமாகவும், அவசரமாகவும் சில காரியங்களைச் செய்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). இந்தத் தீர்மானத்தை நிராகரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. ஐசரி வேலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின்மீது கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லா தீர்மானத்திலே அவர் பேசுகின்ற பொழுது, "இந்த அவையிலே பல விஷயங்களைப்பற்றி பேச வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. அந்தப் பல விஷ யங்களை எந்த விதியின்கீழ் பேசுவது என்று நாங்கள் ஆலோ சித்துப் பார்த்தோம். எந்த விஷயங்களை வேண்டுமானாலும் பேசுவதற்கு ஒரே விதிதான் இருக்கிறது. அந்த விதிதான், நம்பிக்கையில்லா தீர்மானம் என்கிற விதியின்கீழே பேசலாம்

என்றிருக்கிறது. ஆகவேதான், இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திலே அவர்களுக்கே நம்பிக்கையிருக்கிறதா என்பது எனக்குச் சந்தேகமாக இருக் கிறது. எதை, எதையோ, பேச வேண்டுமென்பதற்காக இந்த ஒரு தீர்மானத்தின் விதியை அவர்கள் பயன்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை வரே இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். எந்தக் காரணத் திற்காக, இந்த அரசின்மீது நம்பிக்கையில்லையென்று அவர் 1 1/2 மணி நேரம் பேசிய பேச்சின் சாராம்சத்தையெல்லாம் பார்க்கும்போது, 6 மாத காலத்திலே கொடுத்த வாக்குறுதி களையெல்லாம் நிறைவேற்றவில்லையென்று அவர் குறிப்பிட் டார்.

குறிப்பாக, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இந்த அரசு அமைந்த ஓராண்டுக் காலத்திலே, கிராமப் புறங்களிலே ஒரு இலட்சம் பேருக்கு நாங்கள் வேலை வாய்ப்பு கொடுப்போம் என்று கூறினார். அந்த 1 இலட்சம் பேரிலே, 6 மாத காலத் திலே எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டது என்கிற வினாவை எழுப்பினார். இந்தக் கேள்வியை ஓராண்டு முடிந்து கேட்டிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்போம். அதற்கு அவருக்கே வாய்ப்பு கிடைத்திருக்கும் என்று கருது கிறேன். திருமணமாகி 10 மாதம் கழித்துத்தான் குழந்தை பிறக்கும். அது ஒரு முறை. அதற்கு மேலும் போகலாம் ஆனால், 6 மாத காலத்திலே எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு என்று சொல்வது.......

திரு. மு. கருணாநிதி : குழந்தை 10 மாதம் கழித்துப் பிறக்கும் என்றாலும், கருத்தரித்திருக்கிறதா இல்லையா என்பது 5, 6 மாதத்தில் தெரிந்து விடும்.

(முற்பகல் 9-40)

திரு. ஐசரி வேலன் : அது எல்லோருக்கும் தெரியாது. அந்தக் குழந்தையை ஈன்றெடுத்தவர்களுக்குத் தெரியும், அல் லது தெரியப்படுத்தி இருந்தால் அவருடைய கணவனுக்குத் தெரியும். கண்டவர்களுக்குத் தெரியாது 10 மாதங்கள்

பொறுத்துத்தான் தெரியும் என்ற நிலை இருக்கும்போது ஐந்து மாதத்திலே அரைக் குழந்தை இருக்கிறதா என்று கேட்பது எனக்கு விந்தையாக இருக்கிறது.

நாம் அவர் கூறியதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தேன். அவர் கூறியதிலே ஒரே ஒரு உண்மை இருப்பதாக எனக்குத் தெரிந்தது. ஒன்றே ஒன்று அவர்கள் சொன்னார்கள். நாங்கள் வெள்ள நிவாரண நிதியை கொடுப்பதற்கு தலைமைச் செயலாளரை அணுகினோம், அவர் வெளியே வரவில்லை என்று சொன்னார்கள். அவர் அப்படி வெளியே வந்திருக்கலாம், எங்களைப் பார்க்க வராவிட்டாலும், கழிவு நீரைப் கழிப்பதற்காகவாவது வெளியே வருவார்கள், அப்படியாவது கழுதி அவர்கள் வெளியே வந்திருக்கலாம். அப்படி அவர்களைக் கழிவு நீராக கருதிக் கொண்டதிலே அவர்களுக்கு வருத்தமாக இருந்ததோ இல்லையோ எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. காரணம், கழிவு நீராலே நாட்டிற்குப் பல நன்மைகள் உண்டு. அவர்களாலே நன்மைகள் இருக்கின்றன. அவர்கள் கழிவுநீர் நன்மையாக நாட்டிற்குப் பயன்படாமல், அவர் நல்ல குடிநீர், நன்மையாக நாட்டிற்குப் பயன்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்பிக்கை இல்லை, நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு நம்பிக்கையில்லை, இந்த நேரத்திலே அண்ணா அவர்கள் சொன்ன ஒரு கதை எனக்கு நினைவிற்கு வருகிறது. ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போன ஒரு நரி, உலகமே போச்சு, உலகமே போச்சு என்று ஊளையிட்டதாம். கரை ஓரமாக போன வழிப்போக்கன் ஒருவன், ஆற்றிலே போய்க்கொண்டிருந்த நரி உலகமே போச்சு, உலகமே போச்சு என்று அழுகிறதே என்று பரிதாபப்பட்டு அந்த நரியை ஆற்றிலே இறங்கி காப்பாற்றினான். காப்பாற்றிய பிறகு, அந்த நரியைப் பார்த்துக் கேட்டான். உலகமே போச்சு என்று சொன்னாயே எங்கே போயிற்று, எப்படி போயிற்று என்று கேட்டான். அதற்கு அந்த நரி, நான் அந்த ஆற்றோடு போயிருந்தால் என்னைப் பொறுத்தவரையில் உலகமும் போச்சு, ஊரும்போச்சு என்று சொன்னதாம். அதைப்போல மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையில் நம்பிக்கையில்லை நம்பிக்கையில்லை என்று குறிப்பிட்டார்கள.

மேலும் அவர்கள் குறிப்பிட்டார்கள். கறுப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தினோம். எங்களை எல்லாம் கைது செய்துவிட்டார்கள். இதே போராட்டத்தை ஆந்திராவிலும் நடத்தினார்கள் அங்கே மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களுடைய காதை அறுத்தார்கள், அங்கே எல்லாம் வழக்குப் போட்டார்களா, கர்நாடகத்திலே வழக்குப் போட்டார்களா, என்றும் கேட்டார்கள். ஆந்திராவிலே என்ன நடைபெறுகிறதோ, அதுதான் தமிழ்நாட்டிலே நடைபெற வேண்டுமென்று விரும்புகிறார்களா, ஆந்திராவிலே அங்கே அந்த அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்பட்டது. இங்கே டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறார்களா ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆந்திராவிலே இல்லை, கர்நாடகத்திலே தான் டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

திரு. ஐசரிவேலன் : மன்னிக்கவும். ஆந்திராவிலே, கர்நடகத்திலே குடிப்பது சட்டப்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஏன் குடிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லையென்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே ஆந்திராவிலே இருக்கிறது, கர்நாடகத்திலேயிருக்கிறது. அதெல்லாம் தமிழகத்திலே இருக்கவேண்டுமென்று அவர் விரும்புவதிலே நியாயமும் இல்லை. அர்த்தமும் இல்லையென்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றும் சொன்னார்கள், அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டங்களெல்லாம் ஊறுகாய் பானைக்குள்ளேபோய் முடங்கி விடக்கூடாது என்று சொன்னார்கள். ஊறுகாய்ப் பானைக்குள்ளே போய் முடங்கிக் கொள்கிற திட்டங்களை இந்த அரசு என்றும் கொண்டு வராது. ஊறுகாய் பானைக்குள்ளே போய் முடங்கிக்கொள்கிற திட்டங்களை இந்த அரசு கொண்டு வருகிறது என்று யாராவது சொல்வார்களானால், அவர்கள் உளறுவாயர்களாக இருப்பார்களே தவிர, உண்மையை உணர்ந்தவர்களாக இருக்கமுடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுவது எல்லாம் விளம்பரப் பிரியர்கள் நாங்கள் என்று மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். இந்திய சரித்திரத்திலேயே இந்திய துணைக்கண்டத்திலேயே எந்த ஒரு மாநில அரசாவது அந்தந்த அமைச்சர்களை, அதிலும் குறிப்பாக முதலமைச்சர் அவர்களை விளம்பரப்படுத்தி

இருக்கிறதா என்று சொன்னுல், தமிழகத்திலே இதற்கு முன்னுலே ஆண்டு கொண்டு இருந்த மதிப்பிற்குரிய இன்றைய எதிர்கட்சித் தலைவரை விட அதிகமாக விளம்பரம் செய்து கொண்ட முதலமைச்சர் எந்த மாநிலத்திலேயும் இல்லை என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது.

நான் அவர்கள் ஆட்சி காலத்தில் வெளியிடப்பட்ட தமிழக திரைப்பட துண்டு விளம்பரங்களை எல்லாம் பார்ப்பது உண்டு. குறிப்பாக நம்மை ஆளாக்கிய சுய மரியாதைமிக்க தந்தை பெரியார் அவர்களுடைய மறைவுக்குப் பின்னுலே அவர்களுடைய இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அந்த இறுதி ஊர்வலத்திலே மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அழுவது போன்றும் கதறுவது போன்றும், அடித்துக்கொள்வது போன்றும், அங்கே படம் எடுக்கப்பட்டது. இந்த ஊர்வலத்திலே அந்த இறுதிச்சடங்குகளிலே எல்லாம் இன்றைய முதலமைச்சர், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு இருந்தார்கள். ஆனுல் அவர்களுடைய படம் அங்கே இணைக்கப்படவில்லை, அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது, மறுக்கப்பட்டது. இன்னமும் குறிப்பாகச் சொல்லப் போனுல் இங்கே வெளியிடப்பட்ட அந்த டைரியிலே 5 படங்களிலே புரட்சித் தலைவர் இருக்கிறது என்ற குறையைச் சொன்னுர்கள். அதற்கு மதிப்பிற்குரிய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக விளக்கம் அளித்தார்கள். அது எல்லாம் சரித்திரப் புகழ்வாய்ந்த, சரித்திரப் பிரசித்திப் பெற்ற விழாக்கள், அந்த விழாவிலே அவர்கள் கலந்து கொண்டதிலே எடுக்கப்பட்ட படங்கள், அதில் இருந்து அவர்களை தனித்து எடுக்க முடியாது என்று எல்லாம் சொன்னுர்கள். அதை நாம் எல்லாம் கேட்டும் இருக்கிருேம்.

இங்கே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசிய எதிர்கட்சித் தலைவர் கூறியதில் ஒரு உண்மை இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மதுரை மருத்துவ மனைக்கு மாணவர்களைப் பார்க்க அவர் சென்ற போது அந்த மருத்துவ மனை அதிரி இவரை வரவேற்ருர். எதற்காக வரவேற்ருர் என்பதற்கு அவரே

காரணம் சொல்கையில், 'நான் முன்னுள் முதலமைச்சர் என்ற பாவத்திற்காகவோ என்னவோ என்னை வரவேற்ருர்' என்று சொன்னுர். அதுதான் உண்மை. மற்றவைகள் எல்லாம் உண்மை அல்ல என்ற உண்மையைச் சொல்லி எனக்கு வாய்ப்பு அளித்தற்கு நன்றி செலுத்தி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவரவர்களே, ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.ஜி.ஆர்., அவர்கள் தலைமையில் இயங்குகிற இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்து இருக்கின்ற தீர்மானத்தின் பேரில் நான் சார்ந்து இருக்கும் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை உங்கள் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நாங்கள் கொண்டுவரலாமா, அலாவுதீன் அற்புத விளக்கா எங்களிடத்தில் இருக்கிறது, 6 மாதத்திற்குள் சாதித்துவிட முடியுமா, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் சரியானது தானு என்று ஆளும் கட்சித் தரப்பில் இருந்து உறுப்பினர்கள் கேட்கிருர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொழுது போக்குக்காகவோ, அல்லது வேறு தவருன காரணங்களுக்காகவோ, இங்கே கொண்டுவரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரசுக்கு எதிராக, இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எதற்காகக் கொண்டு வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஜனநாயக விரோத அரசாக இந்த அரசு இருக்கிறது, சோசலிச விரோத அரசாக இந்த அரசு இருக்கிறது. தந்தை பெரியார் காலமெல்லாம் எந்த தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்று போராடிப் பெற்ருர்களோ அந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தில் நம்பிக்கை அற்று, ஐயா அவர்களின் பாதைக்கு விரோதமாக நடந்து கொண்டு இருக்கிற இந்த சர்க்காருக்கு எதிராக இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிருேம்.

அண்ணா அவர்கள் காலம் எல்லாம் வற்புறுத்தி வந்த மாநில சுயாட்சி கொள்கைக்கு விரோதமாக, அது மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு விரோதமாக, விவசாயிகளுக்கு விரோதமாக, தொழிலாளர்களுக்கு விரோதமாக, பதுக்கல்காரர்களுக்கு பாதுகாவலராக, கறுப்புப் பணக்காரர்களுக்கு கண்ஜாடை காட்டுகிறவர்களாக, லஞ்ச லாவண்ய அரசாக, விலைவாசி ஏற்றத்திற்கு நடவடிக்கை எடுக்காத சர்க்காருக்கு எதிராக, மக்களுடைய உள்ளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஜனநாயகக் கடமைகளை ஆற்றும் வகையில் இந்த மாமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இங்கே நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம்.

இங்கே ஆளும் தரப்பில் இருக்கும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். உதயகுமார் என்ற மாணவனைக் கொல்லவில்லையா, வத்தலகுண்டு ஆறுமுகம், பாலசுந்தரம் கொலை செய்யப்படவில்லையா, பூலவாரி சுகுமாறன் கொலை செய்யப்படவில்லையா ?

(முற்பகல் 9-50)

நான் அவர்களைக் கேட்கிறேன். இப்படி எல்லாம் நீங்கள் சொன்னீர்கள். இப்படிச் சொல்லியதற்குப் பிறகு அதே தவறை அதே ரத்த ஆறுகளை நீங்கள் வீதிகளில் ஓடவிடுவதற்கு இடம் கொடுக்கலாமா. நான் திருப்பிக் கேட்க ஆசைப்படுகிறேன். திருவொற்றியூர் மணி போலீஸ் காவலில் எப்படிச் செத்தார் ? அதே போன்று வண்ணாரப்பேட்டையில் இருபன் எப்படி மாண்டான் ? நெல்லிக்குப்பத்தில் ராமலிங்கம் எப்படி மாண்டான் ? முத்துச்சாமி எப்படி மாண்டான் ? இவைகள் எல்லாம் போலீஸ் காவலில் நடக்கின்ற நிலைமை எப்படி ஏற்பட்டது ? திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார் எந்தத் தவறைச் செய்தது என்று மக்களிடத்திலே சொல்லி வாக்குகளைப் பெற்று நம்பிக்கையைப் பெற்று நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்களோ, வந்ததற்குப் பிறகு அதே தவறைச் செய்கிறீர்கள்.

ஜமீலா கற்பழிக்கப்பட்டாள் என்று ஆளும் கட்சியினர் எல்லோரும் ஊர் ஊராகப் பேசினார்கள். நான் கேட்கிறேன் நம்முடைய உறுப்பினர் சாதிக்பாட்சா

தொகுதியிலே வசந்தா கற்பழிக்கப்பட்டாள். திருப்பத்தூரிலே இரண்டு அண்ணா தி.மு.க. ஆதரவு உள்ளவர்கள் ஒரு முஸ்லீம் பெண்ணை கற்பழித்தார்கள். காவல் நிலையத்தில் கம்ப்ளெயின்ட் கொடுத்தார்கள். இதன் மீது இந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அந்த முஸ்லீம் சகோதரி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். ஆதாரத்தோடு நான் வந்திருக்கிறேன்.

<u>திரு. ஆர். மணிமாறன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் ஏதோ சம்பவம் நடந்து விட்டதாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். அதிலே பங்கு கொண்டிருக்கிறவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழககத்தைச் சேர்தவர்கள் என்ற வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். இதைச் சரியான முறையில் நிரூபிப்பதற்கு உறுப்பினர் தயாராக இருக்கிறாரா என்பதை அறியவிரும்புகிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> நான் அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். அந்த முஸ்லீம் சகோதரி கற்பழிக்கப்பட்ட அவளே அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறாள். அதனுடைய காப்பியை இங்கே நான் பிரசுரிக்க பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறேன்.

அடுத்து சபாநாயகர் அவர்கள் மூலமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். , இந்த ஆட்சியிலே இந்திரா நகரில் பிரேமா கொலை செய்யப்பட்டாள். நான் கேட்கிறேன், தமிழ் நாட்டினுடைய காவல் துறை சக்தி வாய்ந்த காவல் துறை. நான் சந்தேகிக்கவில்லை. பிரேமா கொலையில் ஏன் துப்பு துலக்கவில்லை ? அதிலே இருக்கக்கூடிய பின்னணி என்ன ?

நான் பகிரங்கமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், நான் சொல்லுகிற குற்றச்சாட்டிற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். ஒரு மிகப் பெரிய புள்ளிக்கு அதிலே பங்கு உண்டு. நான் ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அந்தப் புள்ளி யார் என்பது வெளியே தெரியாத வரைக்கும் நிச்சயமாக பிரேமா கொலை வழக்கில் பிரேமாவைக் கொன்றது யார் என்று கண்டிப்பாகக் கூற முடியாது. மலேசியா மகாலிங்கம் கொலை செய்யப்பட்டதில் பின்னணி இருக்கிறது

என்றும், நீதிவிசாரணை வேண்டுமென்றும் கேட்கிறார்கள். இங்கே நீதித் தேவன் ஆட்சி நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நீதித் தேவன் மயக்கம் தான் இருக்கிறது. பிரேமா கொலை செய்யப்படுவதற்கு பின்னணியாக இருக்கிற நபர் யார் என்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்டமுறையில்—இந்தச் சபையில் கூட வேண்டாம்—சொல்லத் தயாராக இருக்கிறேன். மிகப் பெரிய புள்ளி அதிலே சம்பந்தப் பட்டிருக்கிறார். இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக இன்னும் துப்பு கண்டுபிடிக்க வில்லை என்ற பிரச்சினையை கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த குற்றவாளி யார் என்பது தனக்குத் தெரியும் என்று நிச்சயமாக, உறுதியாக சொல்கிறார். அவர் இந்தச் சட்டப் பேரவையினுடைய உறுப்பினர். ஒரு பொறுப்பு வாய்ந்த கட்சியினுடைய உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறவர். இந்த நாட்டிலே பொது நன்மையைக் கருதி ஒரு சமுதாயக் குற்றவாளியை ஏன் இவ்வளவு காலமாக சொல்லாமல் இருக் கிறார், அதிலே அவருக்கு என்ன பங்கு இருக்கிறது என்று இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் அமைச்சருடைய கவனத் திற்குக் கொண்டு வருகிறேன், இந்தக் கொலையில் சம்மந்தப் பட்டிருக்கிற நபர் தடுக்கப் பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் என்பதை இந்தப் போலீசார் எடுத்துக்கொண்ட நட வடிக்கைகளின் அடிப்படையிலே எனக்குத்தெரிய வந்ததற்குப் பிறகுதான் இந்த புலன் விசாரணையில் ஈடுபட்டுக் கொண் டிருக்கிறவர்கள் கொடுத்த முக்கியமான தகவலின் பேரில்—இந்தத் தகவல் நேற்று கிடைக்கவில்லை. முந்தாநேற்று கிடைக்கவில்லை. இன்றுதான் கிடைத்தது. இத்தகைய ஆதாரங்களைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்கிறேன் என்று வந்திருக்கிறேன். அடுத்தப் பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் பேசிக் கொண்டிருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். அவர் ஒரு

தவறைப் பற்றி குறிப்பிட்டார். அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளி யார் என்பதை இந்த நாட்டினுடைய குடிமகன் யாருக்குத் தெரிந்தாலும் அவர் சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தகவல் கொடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் இது இரண்டு மூன்று நாளைக்கு முன்பு தகவல் கிடைக்கவில்லை, எனக்கு இப்போது தான் கிடைத்தது என்று உறுப்பினர் சொல்லு கிறார்கள். இந்த அவை காலை 9 மணிக்கு ஆரம்பித்தது. அவர் பேசுகிற நேரம் இப்போது 9-50 மணியைத் தாண்டி யிருக்கிறது. ஆகவே, கிடைத்த தகவலை இந்த மன்றத் திற்கு நுழைவதற்கு முன்னால் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே 50 நிமிடம் கழித்து தனக்குக்கிடைத்த தகவலை இந்த மன்றத்திற்கு சொல்லி விளம்பரம் பெற்றுக்கொள்ள வேண்டு மென்ற எண்ணத்தில் சொல்லுகிறார்களே யொழிய அதை சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்ல வேண்டும்வேண்டுமென்ற அக்கறை நிச்சயமாக அவருக்கு இல்லை.

இன்னொன்றும் சொன்னார். இந்த வழக்கைப் பற்றி விசா ரணை நடத்திக் கொண்டிருக்கிறார்களே அதில் முக்கியமான வர் என்னிடத்தில் சொன்னார்கள் என்று சொன்னார். வழக்கறிஞராக இருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப் பினருக்கு, 'இன்வெஸ்டிகேஷன் ''பண்ணுகிற எந்த காவல் துறைஅதிகாரியும் அந்த ''இன்வெஸ்டிகேஷனில்'' கிடைக்கிற தகவல்களை தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க கூடாது என்று விதிகள் இருக்கின்றன. என்பதும் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட விதிமுறைகளை மீறிதகவல் கொடுத் தது பெரிய தவறு என்பதும் வழக்கறிஞராக உள்ள எதிர்க் கட்சி உறுப்பினருக்குத் தெரியும். இந்த 'இன்வெஸ்டி கேட்டிங் ஆபிசர்' இந்தத் தகவலை அவருக்குக் கொடுத்தார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையில் சொன்னார்.

எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் ''இன்வெஸ்டி கேஷன் '' பண்ணுகிறவர்கள் 'இன்வெஸ்டிகேஷன் '' பண்ணவேண்டுமே ஒழிய இதில் சம்பந்தப்பட்ட ஒரு தனி நபருக்கு இந்தத் தகவலை கொடுக்கும் 'இன்வெஸ்டிகேஷன் ஆபிசர்' நிச்சயமாக நேர்மையான முறையில் நாணயமான முறையில் அந்த 'இன்வெஸ்டிகேஷனை' நடத்துவார் களா என்ற சந்தேகம் இந்த அரசுக்கு எழுவதில்

நியாயம் இருக்கிறது. ஆகவே, எந்த 'இன்வெஸ்டிகேட்டிங் ஆபிசர்' இந்தத் தகவலை கொடுத்தார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு ஏ. ரகுமான்கான் : நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு வழக்கறிஞர். நான் சொன்ன குற்றச்சாட்டுக்கள் அவையின் 'புரோசீடிங்ஸ்' ஐப் படித்தால் தெரியும். பிரேமா எப்படி கொலை செய்யப்பட்டார், அதில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது, அதன் பின்னனியில் மிகப்பெரிய புள்ளிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், ஆகவே விசாரணை தடைப்படுத்தப்படுகிறது என்று 'இன்வெஸ்டிகேஷனில்' சம்பந்தப்பட்ட காவல் துறையினர் சொல்லுகிறார்கள் என்று எனக்குத்தகவல் கிடைத்திருக்கிறது. முதலமைச்சர் தனிப்பட்ட முறையில் கேட்டால் சொல்லுவேன். என்றுவிளக்கம் சொன்னேனே தவிர நான்கண்ணால் கொலைசெய்வதைப் பார்த்தேன்..................

மாண்புமிகு திரு க. உரொ எட்மண்ட் : நான் வழக்கறிஞர் என்பதை ஏதிர்க்கட்சி உறுப்பினர் நினைவுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இப்போது நான் அமைச்சராகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். என்றைக்கு நான் அமைச்சர் ஆனேனோ அன்றிலிருந்து நான்வழக்கறிஞர் தொழிலில் இல்லை.

தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை எல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரவர்கள் இந்தக் கொலை பற்றிய தகவல் மாத்திரமல்ல, கொலை செய்த குற்றவாளி யார் என்பது தனக்குத் தெரியும், அதை 'இன்வெஸ்டிகேசன் ஆபிஸர்' சொல்லியிருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் சொன்ன பிறகு அவர்களைப் பற்றிச் சொல்வதில் தவறில்லை, அந்தக் குற்றவாளி யார் என்பது பற்றி இந்த மன்றத்தில் சொல்வதும் தவறில்லை. எனவே இதை நிரூபிக்க உண்டான பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு க. அன்பழகன் : இதில் இடைப்பட்டு ஒரு கருத்தை தெரிவிக்க தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். ஒரு உறுப்பினர் மிகப் பெரிய ஒரு பிரச்சினை குறித்து இங்கே பேசுகிறபோது தனக்குத்தெரியும், வேண்டுமானால் முதலமைச்

சருக்குத் தெரிவிக்கிறேன் என்று சொல்வதற்குக் காரணமே சட்டமன்றத்தில் வெளிப்படையாக அதைப் பேசுவதற்கு அவர் தயாராகவும் இல்லை, அவசியமும் இல்லை, தேவையும் இல்லை என்ற காரணத்தால் தான். சிலவற்றைத் தான் வெளிப்படையாகப் பேச முடியுமே தவிர, அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமானால் முதலமைச்சர் அவரைக் கூப்பிட்டு கேட்க வேண்டுமே தவிர அதற்கு மேல் இந்த அவையில் சொல்லித் தீரவேண்டும் என்று கேட்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. சொல்ல வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை என்பதை தலைவர் அவர்களிடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கருத்தை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். அவர் சொன்ன கருத்து சரியாக இருக்குமானால் உறுப்பினர் இந்தக் கருத்தை இங்கே சொல்லி இருக்கக்கூடாது. அவர் நேரடியாக முதலமைச்சரிடம் தெரிவித்திருக்க வேண்டும். சபையில் தெரிவித்ததற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் கேட்ட கேள்வி நியாயத்தின் அடிப்படையில் எழுகிறது என்று கூறிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் பற்றிய விவரங்கள் உறுப்பினருக்குத் தெரிந்திருந்தால் உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். இது ஒன்று. இரண்டாவது, "முதலமைச்சரிடம், கேட்டால், தருகிறேன்" என்று முதலில் பேசியிருக்கிறார். இதற்கு பொறுப்பேற்றுக் கொண்டு பேசுவதாக இருந்தால் பொறுப்பேற்றுக்கொண்டு பேசுங்கள். இல்லாவிட்டால் மற்ற விஷயத்திற்குப் போங்கள். இதை இத்தோடு விட்டுவிடுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : தங்களுடைய கட்டளைப்படி முதலமைச்சரை சந்தித்து ...

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Speaker, Sir, on a point of order and as matter of clarification I would like to bring to the notice of this august House and the

[திரு. கே. நாராயணசாமி முதலியார்] [1978 சனவரி 5

Hon. Member Mr. Rahmankhan, the importance of Section 39 of the Criminal Procedure Code and the duty laid on him as a citizen of this country under Section 39 of Cr. P. C. Under that section, every person, aware of the commission of, or of the intention of any other persons to commit any offence punishable, under any of the following sections of the Indian Penal Code, namely, sections 302, 303 and 304 (I omit other sections), shall in the absence of any reasonable excuse, the burden of proving which excuse, shall lie upon the person so aware, forthwith give information to the nearest Magistrate or police officer of such commission or intention.

So, it is the bounden duty of a citizen of this country to respect the law of the land which is laid down under Section 39 of the Criminal Procedure Code and give the correct information, to the nearest Magistrate or Police Officer, of such commission of offence, which lies within his knowledge.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் தெளிவாகவே கூறியிருக்கிறேன்

I come to understand from reliable sources which is investigating the present matter.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு தலைவரவர்களே, ''ஐ கம் டு அண்டர்ஸ்டாண்ட்'' என்று முதலில் சொல்லவில்லை முதலில் பொறுப்பேற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டார். அதிகாரி, புலன் விசாரணை செய்யும் அதிகாரி என்று சொல்லி விட்டு, அது மாத்திரமல்ல, ஒரு பெரிய புள்ளி ஒருவர் கூட தலையிட்டிருக்கிறார் என்று பேசியிருக்கிறார். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் இப்படிப் பேசக் கூடாது. உறுப்பினர் பேசியது 'புரொசீடிங்ஸ்'—இல் பதிவேடுகளில், நடவடிக்கைக் குறிப்பில் ஏறியிருக்கிறது. படித்துக் கூட காண்பிக்கிறேன். மெம்பரே குறிப்பிட்டார். ''முதலமைச்சரிடம் தருகிறேன். அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன், புலன் விசாரணை செய்யும் அதிகாரி என்னிடம் தகவல் தந்ததைச் சொல்கிறேன்'' என்று சொல்லி இருக்கிறார்கள்.

1978 சனவரி 5] [திரு. க. உரோ. எட்மண்ட்]

எதிர்க்கட்சி மெம்பர், ஆரம்பத்தில் பேசும்போது, எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல் என்று சொல்லவில்லை; குறிப்பிட்டுச் சொன்னார். இன்வஸ்டிகேஷன் நடத்துகின்ற இன்வஸ்டிகேஷன் ஆபிஸர் என்று. (குறுக்கீடு). இந்த வழக்கின் விசாரணையை ஏற்றுக் கொண்டிருக்கிற இன்வஸ்டிகேடிங் ஆபீசர் என்னிடம் இந்தத் தகவலைச் சொன்னார் என்று இந்த அவையில் மெம்பர் சொல்லியிருக்கிறார். நிச்சயம் மறுக்க முடியாது. அவர் பேசியது குறிப்பேட்டில் ஏறியிருக்கிறது.

நான் சொல்வதெல்லாம், இந்த வழக்கை விசாரணை செய்கின்ற, பொறுப்புள்ள இன்வஸ்டிகேடிங் ஆபீசர் இந்தத் தகவலை அவரிடம் கொடுத்திருக்கிறார் என்று கூறியிருக்கிறார். எந்த ஒரு பொறுப்புள்ள இன்வஸ்டிகேடிங் ஆபீசரும் இன்வஸ்டிகேஷன் சம்பந்தப்பட்ட விஷயங்களை அவர் தான் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அல்லது அவருக்கு மேற்பட்ட அதிகாரிக்குத் தெரிவிக்கலாமே தவிர அரசுக்கோ, அந்தத் துறைக்கோ சம்பந்தமில்லாத மாண்புமிகு ரகுமான்கானிடம் சொல்வது என்பது எந்தவிதமான நியாயமும் அல்ல. ஆகவே, இன்வஸ்டிகேடிங் ஆபீசரை இந்த அரசு ஒரு வேளை சந்தேகிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவேதான், நான் இதைச் சொன்னேன். இந்தச் சட்டமன்றத்தில், இந்த அவையில், ''இன்வஸ்டிகேஷன் பண்ணுகிற அதிகாரி சொன்னார்'' என்று சொன்ன பிறகு, சொல்லப்பட்ட விவரங்களை, சொன்ன அதிகாரியை இந்த அவையில் தெரியப்படுத்துவது தான் முறையானது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இதுகுறித்து, ஒரு தகவலைச் சொல்ல விரும்பினேன். புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிற அதிகாரி இது குறித்து எனக்குக் கொடுத்த தகவலை நான் முதலமைச்சரிடம் தனியாகக் கொடுக்க............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது உரையின் தொடக்கத்திலே சொல்லப்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 5

பட்டதாகக் குறிப்பிடும் கருத்து, பேரவையின் குறிப்பேட்டிலே இருக்கும். பேரவைத் தலைவர் அவர்கள் அதனைப் படித்துப் பார்த்து, பேரவையின் உறுப்பினரி இங்கே சொல்லக்கூடாது என்று இருக்கும் கருத்தினை, ஆதாரங்களை, தயவு செய்து என்னிடம் எழுத்து மூலமாகத் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு ஏற்ற வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதனைப் படித்துப் பார்த்து, அவர் இதைச் செய்வதற்கான வேண்டுகோளை அல்லது ஆணையை அல்லது கட்டளையை இடும்படி, மாண்புமிகு உறுப்பினர் இந்த பணியினைச் செய்யும்படி நீங்கள் சொல்ல வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பிரச்சனையை எழுப்பி 20 நிமிடங்கள் ஆகின்றன. பின்னர் குறுக்கிடுகின்றார்கள் என்று சொல்லுவதிலே நியாயமில்லை. இரண்டு நிமிடங்கள் தருகிறேன். பின்னர் அமர வேண்டும். அதற்குள் முடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஆரம்பித்தது 9-47க்கு என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் பேசவில்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பெயரைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடம் கேட்டிருக்கின்றார். நான் அதைப் பார்த்து அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதோடு இதை விட்டுவிடுங்கள்.

திரு. ரா. நாராயணன் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் நேற்று கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நேற்று பேசிய எதிர் கட்சித் தலைவர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எடுத்துக் கூறினார்கள். குறிப்பாக இந்திரா காந்தி அவர்கள் தமிழகத்துக்கு வந்த நேரத்தில், 'மினி மிசா' போன்ற ஒரு சட்டத்தை உபயோகித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினை அழிக்க வேண்டும் என்ற கருத்தோடு இந்த ஆட்சி பல கொடுமைகளைச் செய்தது,

1978 சனவரி 5] [திரு. ரா. நாராயணன்]

எங்கள் மீது பல வழக்குகளைத் தொடர்ந்து, பல வன்முறைகளை ஏவிவிட்டது என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கறுப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக் கொண்டுள்ள முறைதான் என்றாலும் அதை அடக்கத்தோடு, அமைதிக்குப் பங்கம் இல்லாத முறையில் செய்ய வேண்டியதுதான் நியாயம். ஆனால் அதை விட்டு விட்டு பயங்கரமான முறையில், கலகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்திரா காந்தி அவர்களை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு கறுப்புக் கொடி காட்டுவது என்ற போர்வையில் திராவிட முன்னேற்றக்கழகம் துணிந்தது.

இந்திரா காந்தி அவர்கள் சென்னையிலிருந்து மதுரைக்குச் சென்றார்கள். மதுரை விமான நிலையத்தில் பல்லாயிரக் கணக்கானவர் அவரை வரவேற்றார்கள். அவரது காருக்குப் பின்னால் சுமார் 300 கார்கள் தொடர்ந்து வந்தன. கறுப்புக் கொடி காட்டுவதற்கு என திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஒரு இடத்தை ஒதுக்கியிருந்தார்கள். அந்த இடத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது வேறு எந்த பொது மக்களோ இருக்கக்கூடாது, என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே இருக்கவேண்டும் என்றும் போலீஸார் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். அந்த இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் மட்டுமே இருந்தார்கள்.

அந்த இடத்துக்கு இந்திரா காந்தி அவர்கள் காரில்வந்த நேரத்தில், அவருடன் இரண்டு கார்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, வேறு கார்கள் வரக்கூடாது என்று வழியில் திருப்பி விட்டார்கள். இந்த மூன்று கார்கள் மட்டுமே அந்த இடத்துக்கு வருகிறது. அங்கே பொது மக்களும் இல்லை, காங்கிரஸ்காரர்களும் இல்லை. அங்கேதான் வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டன. இந்திரா காந்தி அவர்களுக்கு காயங்கள் ஏற்படுத்தப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டுமே உள்ள அந்த இடத்தில் இப்படி நடந்திருக்கின்றது என்றால், இது யாரால் செய்திருக்க முடியும் என்று தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். வேறு யாருமே கூடியிராத இடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டுமே கூடியுள்ள அந்த இடத்தில் இந்திரா காந்தி அவர்களுக்கு இப்படி ஏற்பட்டது என்றால், அவரது

[திரு. ரா. நாராயணன்] [1978 சனவரி 5

உயிருக்கு ஆபத்தினை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசினை டிஸ்மிஸ் செய்தார்கள் என்ற காரணத்துக்காக அவரது உயிரைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அந்த இடத்தில் பல வன்முறைகளைச் செய்தனர்.

அதைப் போலவே கார்களிலே வந்த காங்கிரஸ்காரர்களுக்கும் பலத்த காயத்தை உண்டாக்கியிருக்கின்றார்கள். ஒரு இடத்திலே இப்படிப்பட்ட வன்முறையை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்த காரணத்தினால்தான், நாட்டின் பல்வேறு இடங்களிலே 144 தடை உத்திரவினைப் பிறப்பித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்திருக்கின்றவர். அவர் நியாயமாக சட்டத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 144 தடை உத்திரவு என்று இருக்கும்போது, அந்தத் தடைச் சட்டத்தையும் மீறுவோம் என்று சொல்லி மீறிய காரணத்தினால், மீண்டும் வன்முறைச் சம்பவங்களிலே இறங்கிய காரணத்தினால்தான் அரசு அவர்கள் பேரிலே வழக்குகளைப் போட்டார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த ஆட்சி செய்தது தவறு என்று நான் கேட்கிறேன்.

[முற்பகல் 10—10]

குறிப்பாக, இந்த ஆட்சி, அந்தக் கட்சியின் தி.மு.கவின் நடவடிக்கைகளை அறிந்து பொதுக் கூட்டத்தை தடுக்க வேண்டுமென்று அவர்கள் முயன்றதால் 144 தடை விதித்தது. இந்திரா காந்தி செல்லும் இடங்களில் எல்லாம் அமைதி காக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 144 தடை விதித்தது. அதைப் பற்றி நாங்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக பாராட்டுகிறோம். குறிப்பாக இஃதொன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் 16,000 கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறப்போம் என்று சொல்லியிருந்தார்கள்: இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 442 கடைகள் திறக்கிறோம் என்று சொல்லிவிட்டு, மற்ற இடங்களைப் பற்றி குறிப்பிடவில்லை, என்று சொன்னார்கள். தமிழகத்தில் எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகள் நடந்து கொண்டு இருக்கின்றன, குறிப்பாக 16,000 கிராமங்களில் சர்க்கரை, அரிசி போன்ற அத்யாவசியப் பண்டங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 3, 4 பஞ்சாயத்துக்களை

1978 சனவரி 5] [திரு. ரா. நாராயணன்]

இணைத்தாற்போல் 4 மைல் நடந்து சென்று வாங்கும் அளவிற்கு சர்க்கார் விநியோகம் செய்துவருகிறது. அந்தந்த பஞ்சாயத்திலேயே சர்க்கரை விநியோகம் செய்ய வேண்டும். சர்க்காரிலே தற்போதுள்ள 8,000 கடைகளுக்குப் பதிலாக 16,000 கிராமங்களில் அந்தந்த பஞ்சாயத்திலேயே நியாய விலைக் கடையில் சாமான்களை வழங்க ஏற்பாடு செய்கிறோம் என்று அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், கடந்த ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில் இந்த நியாய விலைக் கடைகள் எப்படி நடந்தன என்று பார்க்க வேண்டும். சிறிய நீரேற்றப் பாசன சங்கம், 'ஆயில்- மாங்கர்ஸ் சொசைட்டி' என்று பல சங்கங்கள் வைத்து அந்த நேரத்தில் செய்தார்கள். அப்போது தி.மு.க. வில் இருப்பவர்களுக்கு சர்க்கரை பர்மிட் கொடுத்து அந்த சர்க்கரை எல்லாம் 'பிளாக்-மார்க்கெட்டில்' கள்ள மார்க்கெட்டில் விற்று கொள்ளையடித்தார்கள் என்பதை நாடு அறியும். யாரும் மறந்துவிட மாட்டார்கள்

அதே நேரத்தில் சிறிய நீரேற்றப் பாசன சங்கத்திற்கு நியமனம் செய்யப்பட்ட பல கழக நண்பர்களைக் கொண்டு, கூட்டுறவு சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளை கைப்பற்றி மத்திய வங்கியிலிருந்தும் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் அவர்கள் கொள்ளையடித்தது கொஞ்ச நஞ்சமல்ல. அதை நாடு மறந்து விடாது.

இப்படி பல தவறுகள் செய்து கொண்டிருந்தார்கள். தி.மு.க. ஆட்சியில் காரியாலயங்களிலும், காவல் நிலையங்களிலும், கல்லூரி அட்மிஷன்களிலும் அவர்கள் எவ்வளவு அக்ரமம் செய்தார்கள் என்பதை நாடறியும். குறிப்பாக விவசாயிகள் 72-ம் ஆண்டில் அமைதியாக அடக்கத்தோடு அர்த்தால் செய்தார்கள் ஒரு பைசா மின் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று. அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து பெத்தநாயக்கன் பாளையத்திலும், பெருமாநல்லூரிலும் 22 விவசாயிகளை உயிர்பலி வாங்கினார்கள். இப்படி பல சம்பவங்களை குறிப்பிட முடியும்.

கீழ்வெண்மணியில் உயிரோடு அந்த அரிஜன மக்களை கொளுத்தினார்கள். பாளையங்கோட்டையில் மாணவர்களை இம்சித்தார்கள். வன்முறை செய்து அவர்களைப் பழிவாங்கினார்கள். திருச்சி க்ளைவ் ஹாஸ்டலில் மாணவர்கள் மீது வன்முறையை ஏவினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்

கழகத்தில் வன்முறைச் செயல்கள் செய்தது மட்டுமல்லாமல் தன் மகனை, பெற்ற பிள்ளையை தன்னுடைய பிள்ளை இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு செய்த பல தவறுகளையெல்லாம் இந்த நாடு மறக்கவில்லை. அப்படிப்பட்ட பழியை தி.மு.க. சர்க்கார் ஆட்சியிலே செய்திருக்கிறார்கள்.

அதுபோல் இந்த சர்க்காரிலும் நடக்காமல் பல நல்ல காரியங்களை செய்வோம் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். இதைப் புரிந்து கொண்டு பல நன்மைகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அந்த அவகாசத்துக்குள்—குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுத்து—இந்த ஆட்சியில் சர்க்கார் என்ன செய்கிறார்கள் என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகள் பிரச்சினை; நெசவாளர்கள் பிரச்சினை, மாணவர் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் நல்ல முறையில் தீர்வுகாண வேண்டும்.

குறிப்பாக நம் முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் லஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று எல்லா கட்சிகளும் அதை வரவேற்க வேண்டும். இந்த நாட்டில் லஞ்சம் வேரூன்றி இருக்கிறது. லஞ்சத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்றால் அத்தனை பேரும் லஞ்ச லாவண்யத்தை ஒழிக்க ஒத்துழைப்பு கொடுத்தால் தான் லஞ்சத்தை ஒழிக்க முடியும்.

குறிப்பாக நான் கேட்டுக் கொள்வது இன்று விவசாய மக்களுக்குள்ள குறைகளைப் போக்குவதற்கு குழு ஒன்று நியமித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள், எப்படி அறிக்கை கொடுக்கிறார்கள் என்று பார்த்து விவசாயிகள் பிரச்சினையை தீர்க்க வேண்டும். நெசவாளர் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும்.

நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வாங்கிய கடனை திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அந்தக் கடன்களையும் ஒத்தி வைக்க வேண்டும். இன்னும் மற்ற பிரச்சினைகளை சர்க்கார் நல்ல முறையில் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, உணவு கொடுப்பவனும், உடை கொடுப்பவனும் இன்று உருக்குலைந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியில் அவர்களுக்கு நல்ல காரியங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக எதிர்க் கட்சி தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக எதிர்த்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். மணிமாறன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பிரதான எதிர்கட்சியினுடைய தலைவர் அவர்கள் முன்மொழிந்து கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அதை எதிர்த்துப் பேசுவதற்கு ஆளும் கட்சி சார்பில் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரப்போகிறது வரப் போகிறது என்று தெரிந்து ஏதோ புலி வருகிறது, புலி வருகிறது என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் வந்தது புலி அல்ல பூனையாகத் தெரிந்து கொண்டிருக்கிறது; பூனையாகக் கூட அல்ல, பூனைக் குட்டியாகத் தெரிந்து கொண்டிருக்கிறது; பூனைக் குட்டியாகக் கூட அல்ல, பிஞ்சுக் குட்டியாக இன்றைய தினம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இது சிறைப் பூனையா அறைப் பூனையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் பூனையை உதாரணமாகச் சொல்வதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆத்திரப்படக்கூடாது என்று பணிவன்போடு அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில பலகீனங்களை முன் உதாரணமாக வைத்துக் கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பலகீனங்கள் எப்படிப்பட்டவை என்பதை இந்த சபை நன்கு தெரிந்து வைத்திருக்கிறது. ஆகவேதான் பலகீனத்தின் உச்சகட்டத்தில் இருக்கிறவர்களுக்கு பண்பாட்டின் எல்லைக் கோடுகள் தெரியாது என்று சொல்வார்கள். ஆகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம்பிக்கைத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு நான் சிலபல கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சிலபல குற்றச் சாட்டுக்களை அடுக்கடுக்காக அழகு தமிழில் எடுத்து வைத்தார்கள்.

ரூ. 25,000-யை எடுத்துக் கொண்டு சீப் செகரட்டரியைப் பார்ப்பதற்காகப் போனோம், ஆனால் அவர்கள் வாங்க வில்லை, வாங்குவதற்குண்டான சூழ்நிலை உருவாகவில்லை. அவர்கள்

மறுத்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிச்சயமாகக் கிடையாது. அந்த அதிகாரி வேறு ஒரு அதிகாரியைக் கையைக் காட்டினார்கள், நாங்கள் திரும்பி வந்துவிட்டோம், இது எதிர்கட்சித் தலைவரின் கூற்று. நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அந்த அதிகாரியைப் பார்க்க அவர்கள் அறைக்குப் போவதற்கு உங்களுடைய கால்களுக்கு வழி தெரியும், அந்த அதிகாரியுடைய கதவுகளைப் பார்ப்பதற்கு உங்களுடைய கண்களுக்கு வெளிச்சம் வரும், அந்த அதிகாரியின் அறைக் கதவைத் தட்டுவதற்கு உங்கள் கைகள் நீளும், ஆனால் அந்த காசோலையை முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுப்பதற்கு உங்கள் கைகள் நீளாதா? நீண்டிருக்கக் கூடாதா? இந்த நாட்டில் ஒரு முதல் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற ஞாபகம் உங்களிடம் இல்லையா? பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள், முதல் அமைச்சர் அவர்களுக்கு வேலை இருக்கும். ஆகவே தான் நாங்கள் விட்டு விட்டோம் என்று போலித்தனமான, ஒரு சப்பைத்தனமான சமாதானத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் முதல் அமைச்சர் அவர்களை மதிப்பதற்கு அவர்கள் தயாராயில்லை. முதல் அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டால் நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் கொடுத்திருக்கலாமே. மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். இந்த 14 அமைச்சர்களையும் மனிதர்கள் என்று அவர்கள் கருதவில்லை. அவர்களை மண் பொம்மைகளாக நினைத்துக் கொண்டுதான் பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு ஆளுநர் அவர்களைக் கூட்டி வைத்து நான்கு லட்சம் ரூபாயை ஆளுநர் அவர்கள் கையில் கொடுத்து, எங்களுடைய தியாகத்தை, அவதாரத்தைப் பார்த்தீர்களா, நாங்கள் செய்கிற தியாகம் உங்களுக்குப் புரிகிறதா என்ற வாதப் பிரதிவாதத்தைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை இந்தச் சபையில் எதிர்கட்சித் தலைவர் அவர்கள்மீது சுமத்தக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். நீங்கள் ஆளுநர் அவர்களை உட்கார வைத்துவிட்டு அரசியல் பேசியிருக்கிறீர்கள். அரசியல் வாதத்தை எடுத்து வைத்திருக்கிறீர்கள். ஆளுநர் அவர்களை வைத்துக்கொண்டு, நீங்களும் நாங்களும் ஒரே ஜாதி,

ஜனநாயகத்தைக் காப்பதில் ஒரே ஜாதி, சர்வதிகாரத்தை எதிர்த்ததில் நாம் ஒரே ஜாதி என்று அரசியல் பிரச்னைகளை வெளியே இருந்துகொண்டு ஒரு மாநில ஆளுநரை வைத்து கொண்டு நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

நீங்கள் சிறைக் கூடத்திற்குள்ளே இருந்தது வாஸ்தவந்தான். நான் இல்லை என்று மறுக்கவில்லை. போராட்டத்தில் இறங்கினீர்கள், சிறைக்கூடத்தில் இருந்தீர்கள். அப்போது புயல் வெள்ளம் வந்து மக்கள் மாய்க்கப்பட்டார்கள், பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் என்ன செய்திருக்க வேண்டும்? வெளியே இருக்கிற போராட்ட வீரர்களைப் போராட்டம் நடத்த வேண்டாம் என்று அறைகூவல் விடுத்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு உள்ளேயிருந்து கொண்டே போராட்டத்திற்குத் தூபம் போடும் பணியில் ஈடுபட்டீர்கள். உங்களுக்கு மக்கள்மீது நம்பிக்கை இருக்குமென்று சொன்னால், உங்களுக்கு மக்கள் மீது நப்பாசை இருக்குமென்று சொன்னால் அந்த வாதத்தை சிறைக்கூடத்தில் இருந்து கொண்டு வைத்திருக்க வேண்டும்.

அவசர நிலை இருந்தபோது நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிறையில் வதைக்கப்பட்டார்கள், சிறையில் மிதிக்கப்பட்டார்கள், துவைத்துப் புரட்டப்பட்டார்கள் என்று இப்போது சொல்கிறார்கள், அப்போது இந்தப் போராட்டக் கணைகள் உங்கள் உதயத்திலிருந்து புறப்பட்டு வரக்காணோம். அப்போது போராட்டம் நடத்த வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு நிச்சயமாக வரவில்லை.

[முற்பகல் 10·20]

இவர்கள் சிறைக் கூடத்தில் இருக்கிற நேரத்தில் வெளியே தொண்டர்களைப் போராட்டம் நடத்துங்கள், மறியல் நடத்துங்கள் என்று தூண்டிவிடுகிறார்கள். அவசர நிலையிருந்த போது மிசாவில் ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான பேர்கள் உள்ளே இருந்தார்கள். நீங்களும் புள்ளி விவரங்களைக் கொடுத்தீர்கள். அந்த நேரத்தில் இறந்து போனவர்களின் கணக்கையும் கொடுத்தீர்கள். காட்டூர் பாலகிருஷ்ணன், சிட்டிபாபு இவர்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள் என்று அடுக்கு அடுக்காகச் சொன்னீர்கள். அந்த சோகத்தில் நாங்களும் பங்கு கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

ஆனால், நீங்கள் வெளியே இருந்த போது நூற்றுக்கணக்கான பேர்கள் சிறையில் இருந்தார்கள். அப்போது நீங்கள் எந்தவிதமான போராட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும்

என்று சொல்லவில்லையே. அப்போது நீங்கள் ஏன் தயாராக வில்லை? அப்போது உங்களுடைய வீரம் எந்த வட்டிக்கடையில் அடகு வைக்கப்பட்டிருந்தது? அந்த வட்டிக்கடையின் விலாசத்தைத் தயவு செய்து சுட்டிக் காட்டுங்கள். நாங்களும் சற்று தெரிந்து கொள்கிறோம்.

பேரறிஞர் அவர்கள் வேலூர் சிறைச்சாலையில் இருந்த போது, சீன படையெடுப்பு ஏற்பட்ட நேரத்தில், தன்னு டைய தொண்டர்களுக்குச் சொன்னார். உங்களுடைய ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு சீனப் படையெடுப்புக்கு எதிராக இந்திய துணைக்கண்டம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக உங்களுடைய நேசக் கரத்தை நீட்டுங்கள் என்று சொன்னார்கள்.

சீன ஆக்கிரமிப்பைப் போன்று தான் புயல் ஆக்கிரமித்தது. சீனப்படையெடுப்பைப் போன்றதுதான் வெள்ளத்தின் படை யெடுப்பும். இரண்டும் ஒரே நிலையில் தான் நடைபெற்றிருக் கிறது. இப்படிப்பட்ட நிலையில் அண்ணா வழியில் தான் நாங் களும் நடக்கிறோம் என்று சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே, தொண்டர்கள் எப்போதும் போராட வேண்டும். அவர்கள் எப்பாடு பட்டாகிலும் போராட்டம் நடத்த வேண்டும். மறியல் நடத்த வேண்டும். பலனை மட்டும் அனுபவிப்பவர்கள் வேறு ஆட்கள். சாவு தொண்டனுக்கு, சரித்திரம் தலைவனுக்கு என்று உங்கள் அரசியல் பயணத்தை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

கறுப்புக் கொடி காட்டுவது என்பது ஜனநாயக மரபு தான். அதில் வேறுபாடு யாருக்கும் கிடையாது. அதில் எந்த விதமான வேறுபட்டமனப்பான்மையும் யாருக்கும்கிடையாது. ஆனால், வரலாற்றில் எங்குமே இல்லாத முறையில் கறுப்புக் கொடிப் போராட்டம் என்கிற பெயரில், நடத்தப்பட்ட போராட்டத்தைப் பார்த்தால், கறுப்புக்கொடி காண்பிக்கின் றவர்கள் அடிபடக்கூடும். ஆனால் கறுப்புக்கொடி யாருக்குக் காண்பிக்கிறோமோ அவர்களே அடிபடுகிறார்கள். இப்படிப் பட்ட சரித்திரம் எங்காவது நடந்திருக்கிறதா? கறுப்புக் கொடி காண்பிக்கப்படுகின்றவர்கள் அடிபடுகிற நிகழ்ச்சி எந்த வரலாற்றிலாவது இருக்கிறதா? மதுரையில் நடந்தது. அங்கே ஜனநாயகம் அவமானப்படுத்தப்பட்டது. ஜனநாயகம்

தலை குனிந்தது. அதனால் ஏற்பட்ட தேம்பலும், விசும் பலும் இப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது என் பதை நான் இங்கு சொல்லிக் கொள்ள வேண்டிய தேவை யில்லை.

அடுத்ததாக, நாங்கள் எமர்ஜென்சியை எதிர்த்தோமே தவிர ஆதரிக்கவில்லை என்றும், எதிர்த்துத் தீர்மானம் போட் டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். தீர்மானம் போட்டீர்கள் என்றால் உங்கள் கட்சிக்குள் போட்டுக்கொண் டீர்களே தவிர, அதைப்பற்றி பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டீர்களே தவிர, சட்டமன்றத்தில் எமர்ஜென்சியை எதிர்த்துத் தீர்மானம் போட்டதாக சரித்திரம் உண்டா? ஏதோ போலித்தனமாக பாசாங்குத்தனமாக, வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டு, நாங்களும் அவசரநிலைப் பிரகட னத்தை எதிர்த்தோம் என்று சொல்லிக்கொண்டு, அதை உண்மையிலேயே நீங்கள் பயன்படுத்திக் கொண்டீர்கள். அதைப் பயன்படுத்தி பழிவாங்க முயற்சி எடுத்துக் கொண் டீர்கள். நீங்கள் அவசர நிலைப் பிரகடனத்தை எதிர்த்து எதுவும் செய்யவில்லை என்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் என்ன சொல்லிக் கொண்டீர்கள் ? மத்திய சர்க் காரிலிருந்து அவசர நிலையையொட்டி ஏதேனும் தாக்கீதுகள் வந்தபோது .அதை எதிர்க்க முழுமுயற்சியில் ஈடுபட்டோம் என்று நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் பத்திரிக்கையில் வந்தது என்ன? "செயற்குழு இந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறதே அல் லாமல் இப்படிப்பட்ட தாக்கீதுகள் டெல்லியிலிருந்து வந்தால் அதை நிறைவேற்ற வேண்டாம் என்று எனக்கு செயற்குழு சொல்லவில்லை " என்று தெரிவித்தேன் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது பத்திரிக்கையில் வந்திருக்கிறது.

அந்த வகையில் பார்த்தால், "இந்த இரண்டு மூன்று மாதங்களில் டெல்லியில் தாக்கீதுகள் இந்த அவசரச் சட்டத் தின் காரணமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் என்ற முறை யில் இந்த அரசுக்கு வந்தன. கடத்தல் பேர்வழிகளைக் கைது செய்வதாக இருந்தாலும், மிசாக்களைப் பயன்படுத்துவதாக இருந்தாலும், சில கட்சிகளைத் தடைபடுத்த வேண்டும். அவை களின் கிளை இங்கே இருந்தால் தடை செய்யப்பட வேண்டும்

என்று வந்தாலும் நாங்கள் இவைகள் எதையும் புறக்கணிக்காமல் நிர்வாக மோதுதல் இல்லாமல் நடத்து வந்திருக்கிறோம்''....என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவசரகால நிலையை எப்படிப் பயன்படுத்திக் கொண்டீர்கள்? ஆர்.எஸ்.எஸ். காரர்களை உள்ளே வைத்தீர்கள். ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள், ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறை பிடிக்கப்பட்டார்கள். தீவிர முஸ்லீம் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறை பிடிக்கப்பட்டார்கள். சர்வோதய சங்கத்தைச் சேர்ந்த ஜகந்நாதன் கைது செய்யப்பட்டார். எஸ்.ஆர். சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார். இத்தனையும் இங்கே நடத்திவிட்டு டெல்லியில் வேறுவிதமாகப் பேசினார்கள் டெல்லியில் ஒரு பேச்சு. சென்னையில் ஒரு பேச்சு இது சரிதானா? என்று கேட்டார்கள், நான் கேட்கிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு சட்டமன்றத்தில் ஒரு பேச்சு, வெளியில் ஒரு பேச்சா?

ஆகவே, இடத்திற்குத் தகுந்தமாதிரி பேசுவது நீங்களே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல.

அது மட்டுமல்ல. அவசர காலத்தில் நீங்கள் என்னவெல்லாம் நடத்தினீர்கள்? பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தீர்கள். தமிழகத்திலுள்ள பல பத்திரிகைகளின் குரல்வளையை நெறிப்பதற்கு உங்களுடைய கோரக் கரங்கள் எழுந்தன என்பதைப் பகிரங்கமாகச் சொல்லிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

'தென்னகம்' தடைப்படுத்தப்பட்டது. 'மக்கள் குரல்' தடைப்படுத்தப்பட்டது : 'இந்து' பத்திரிகை தடைப்படுத்தப்பட்டது. : 'குமுதம்' பத்திரிகை தடைப்படுத்தப்பட்டது. இன்னும் 'இல்லஸ்ட்ரேட் வீக்லி' 'பிளிட்ஸ்' போன்ற பத்திரிகைகள் எல்லாம் கூட தடைப்படுத்தப்பட்டனவா இல்லையா ஒரு புறத்திலே பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று பேசப்படுகிறது. அப்படிப் பத்திரிகை தர்மத்தைப் பற்றி ஒரு புறம் பேசிவிட்டு, அவைகள் அடித்து நசுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்

காலத்திலே நடத்தப்பட்டதா இல்லையா என்பதை நான் இங்கே பகிரங்கமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடக்குமுறை தாண்டவம் ஆடுகின்றது; அராஜகம் அணி வகுத்து நிற்கின்றது என்றெல்லாம் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த அடக்குமுறையின் மொத்த உருவமே எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள்தான் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரையிலே ஒரு ஆர்ப்பாட்டம் நடந்தது; அங்கே இரண்டு நிறைமாத கர்ப்பிணிகளை கொண்டுபோய் சிறையிலே வைத்தீர்களே என்று கேட்டார்கள். இப்படி இவர்கள் சொல்கின்ற நேரத்தில், 1972-ம் ஆண்டு 1,028 ஆசிரியர்கள் 18 நாள் சிறையிலே வைக்கப்பட்டார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியிலேகூட இப்படி ஆசிரியர்கள் கைது செய்யப்படவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேகூட ஆசிரியர்கள் கைது செய்யப்படவில்லை.

ஆனால், ஆசிரியர்கள் இப்படி கைது செய்யப்பட்ட கொடுமை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களது ஆட்சிக் காலத்திலே தான் முதன்முதலாக நடைபெற்றது. அதிலும் ரொம்ப பரிதாபமானது. அப்படி கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் 18 நாட்கள் சிறையிலே வைக்கப்பட்டார்கள். என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

அதே போல், 1973-ஆம் ஆண்டு 4,000 பட்டதாரி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு, சிறையிலே வைக்கப்பட்டதும், இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அது மாத்திரம் அல்ல. அப்படி கைது செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை கட்டாயப்படுத்தி அவர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கப்பட்டது. அப்படி எழுதி வாங்கப்பட்ட கடிதங்களை, அவர்களுடைய சர்வீஸ் பதிவேட்டில் அந்த ஒரு குற்றச்சாட்டாகவும் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு சிவப்பு அடையாளத்தையும் அவர்கள் மேல் ஏற்படுத்தினார்கள்.

[திரு ஆர். மணிமாறன்] [1978 சனவரி 5

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்த 15-ஆம் நாளிலேயே, அந்தக் குறிப்புகளை எல்லாம் அந்தப் பதிவேடுகளிலே இருந்து நீக்கியது; எடுத்துவிட்டது. ஏன்? ஆசிரியர்கள் இந்த நாட்டினுடைய கண்களாக இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிய புரிந்துவைத்திருக்கின்ற அடிப்படையிலேதான் இந்தக் குறிப்புகள் பதிவேடுகளிலே இருந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நீக்கியிருக்கிறார்கள்.

உங்கள் கோரிக்கைகள் எல்லாம் கோரக் கைகளாகக் காட்சி அளிக்கின்றன என்று ஆசிரியர்கள் மாநாட்டில் எடுத்துச் சொன்னவர் யார்? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் அப்படி கோரிக்கைகள் எல்லாம் கோரக் கைகளாகக் காட்சி அளிக்கின்றன என்று சொன்னார்கள்.

மதுரையிலே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்தபோது, அங்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதாகவும் அங்குள்ள மக்கள் அடித்து, மிதித்து, நசுக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானார்கள் என்ற புகாரை, குற்றச்சாட்டை எதிர்க் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப் படித்துக் காட்டுகிறேன்.

"அவமானப்படுத்தப்பட்டதை ஆயுதம் தாங்கித் தான் தீர்த்துக் கொள்வது என்ற பண்பாட்டில் ஊறிப்போன இந்தச் சமுதாயம்"

இதை யார் எழுதினார்கள்? நாங்கள் எழுதவில்லை; முதல் அமைச்சர் அவர்கள் எழுதவில்லை; நிதி அமைச்சர் அவர்கள் எழுதவில்லை. பின்னே யார் எழுதினார்கள்? 'அவமானப் பட்டதை ஆயுதம் தாங்கித்தான் தீர்த்துக் கொள்ளவேண்டும்' என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் 'நெஞ்சுக்கு நீதி' என்பதிலே எழுதியிருக்கிறார்கள். எனவே, 'அவமானப் பட்டதற்கு, ஆயுதத்தைத் தாங்கித் தான் தீர்த்துக் கொள்வது' என்கின்ற முறையிலே இந்தப் போராட்டம் மதுரையிலே நடத்தப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1978 சனவரி 5] [திரு. ஆர். மணிமாறன்]

'இந்து' பத்திரிகையிலேகூட, அதற்கு நான்கைந்து நாட்கள் கழித்து அரிவாள் வைத்துக் கொண்டு, ஆயுதத்தைத் தாங்கிக் கொண்டு ஒரு படம் காணப்பட்டது. அதைப் பற்றி எங்களுக்குத் தெரியாது, அவர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு என்றுகூட கேட்கலாம். ஆனால், அந்தக் கட்சிக்கு இதைப்பற்றி நிச்சயமாகத் தெரியும். அன்றைக்கு அவர்கள், 'அவமானப்படுத்தப்பட்டதை ஆயுதம் தாங்கித் தான் தீர்த்துக் கொள்வது' என்பதுபோல் தீர்த்துக் கொண்டார்கள் என்பதை பகிரங்கமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படி ஒரு கோரத் தன்மையான போராட்டத்தை நடத்தியவர்கள் அவர்கள்தான் என்ற குற்றச்சாட்டை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதல்அமைச்சர் அவர்கள் சொல்வதுசரியல்ல வென்றும், அவர்செல்லுகின்ற வழிசரியல்ல என்றும்,பல குற்றச்சாட்டுக்களை அடுக்கு அடுக்காக அடுக்கி இந்தச் சபை முன்பு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துவைத்தார்கள்.

[முற்பகல் 10-30]

எங்கள் முதலமைச்சரைப் பொறுத்தவரை சுற்றுப் பயணம் செய்கிற நேரத்தில் எந்த இடத்திலாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னால் உடனடியாக கையெழுத்துப் போட்டு அவசரக் கோலத்தில் முடிக்கிற முதலமைச்சர் இந்த முதலமைச்சர் அல்ல. அதை அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செய்தார்கள். செய்துவிட்டு கோட்டைக்கு வந்து ஒப்புதல் கொடுத்துவிட்டேன். எப்படியாவது நிறைவேற்றியாக வேண்டுமென்று தலையைச் சொரிகிற காட்சியைக் கடந்த காலத்தில் பார்த்தோம்.

முதலமைச்சர் விளம்பரம் செய்ததாகக் குற்றம் கூறினார் விளம்பரப் பிரியராக, விளம்பர வெறியராக, விளம்பர மோகத்திலே ஊறித் திளைத்தவர் யார் என்பது மவுண்ட் ரோட்டில் வெல்லிங்டன் தியேட்டருக்கும் பிளாசா தியேட்டருக்கும் இடையிலுள்ள இடி அமீனை நினைவுபடுத்துகிற உருவச் சிலையைப் பார்த்தாலே தெரியும். அது ஊருக்கும் தெரியும் உலகத்திற்கும் தெரியும். உண்மையிலேயே விளம்பரப் பிரியராக யார் இருக்கிறார் என்பது நாட்டு மக்களுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

இயற்கையிலே உருவான புயலை மாத்திரம் அல்ல, செயற்கையாக உருவாக்கப்படுகிற புயலையும் இந்த முதலமைச்சர் சமாளிப்பார். சந்திப்பார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை

வர் அவர்கள் நெஞ்சுக்கு நீதியை அறிமுகம் செய்தார்; ஆனால், எங்களுடைய முதலமைச்சர் நீதிக்கு நெஞ்சை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, நம்பிக்கையற்றவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது, நான் என்னுடைய கருத்துக்களைத் தமிழகத்தின் மக்களின் கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். நல்லவர்கள் எதிர்க்கிறார்கள். நாடு எதிர்க்கிறது. 5 கோடி தமிழ் மக்களும் எதிர்க்கிறார்கள் என்பதை நேற்றும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்திலிருந்து தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டமே அறியும்.

நாட்டு மக்களாலே தூக்கி எறியப்பட்டவர்கள், அரசுக் கட்டிலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர்கள். தமிழகத்தில் புரட்சித் தலைவரது தலைமையில் அமைந்துள்ள சீரிய ஆட்சியைக் கண்டு பொருமுகிறார்கள். பொறாமைப்படுகிறார்கள். அங்கலாய்க்கிறார்கள், ஆர்ப்பரிக்கிறார்கள். இருந்ததை இழந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஓலமிடுகிறார்கள். அவர்களுக்காக நாம் பரிதாபப்படலாமே தவிர, அனுதாபப் படலாமே தவிர, ஆதரவு அளிக்க முடியுமா ?

நமது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்ற எதிர்க்கட்சிகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டு ஆங்கில நூலிலிருந்து மேற்கோள்களைக் காட்டி எதிர்க்கட்சி—ஆளும் கட்சி ஆகியவைகளுக்குள்ள பொறுப்புக்களைப்பற்றி மிகவும் அழகாகப்பேசினார்கள். எனக்கு அந்த அளவிற்கு ஆங்கிலம் தெரியாது. ஆங்கில நூல்களிலிருந்து அரசியலைக் கற்றவனுமல்ல. ஆனால், ஒன்றை மட்டும் மிகப் பணிவன்போடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கடந்த சில நாட்களாக நமது சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் எப்படி நடைபெற்று வருகின்றன என்பதைக் கண்கூடாகக் கண்டு வருகிறீர்கள். அதில் பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர்களாக இருக்கின்ற நமது அருமை தி. மு. க. நண்பர்கள் எந்த அளவிற்கு பேரறிஞர் பெருந்தகை, அறிவுக மேதை, அறிவுக் கடல், வங்கக் கடலில் நீங்காத் துயில் கொள்ளும் பேரறிஞர் பெருந்தகை, தென்னாட்டு பெர்னாட்சா,

இந்நாட்டின் இங்கர்சால், பெருமை மிகு அண்ணா அவர்கள் காட்டிய வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகள் தவறாத வண்ணம் நடந்து கொண்டு வருகிறார்கள், நடந்து வந்திருக்கிறார்கள் என்பதை எல்லோரும் நல்ல முறையில் அறிவோம். ஒரு வேளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்த ஆங்கில நூலில் எதிர்க்கட்சிகள் நமது தி.மு.க.வைப் போல்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறதோ என்னவோ ? அது எனக்குத் தெரியாது.

ஏனென்றால், நான் ஆங்கில நூல்களைப் படித்து அரசியலைக் கற்றவனல்ல. எனினும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரசியல் கண்ணியத்தைப் பற்றியும், அரசியல் நாகரிகத்தைப் பற்றியும் பேசுகிற போது, ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. அது " சாத்தான் வேதம் ஓதுகிறது " என்று சொல்வார்களே, அதைப் போல் இருக்கின்றது.

பொன்மனச் செம்மலின் ஆட்சியை, புரட்சித் தலைவரது ஆட்சியை, நாடு போற்றும் உத்தமரது ஆட்சியை உழைப்பாளர்களது உண்மை நண்பனாகவும், பாட்டாளிகளின் நெஞ்சத்திலே பால் வார்ப்பதற்கென்றே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற எங்களது குலவிளக்கு குடும்பத் தலைவரது ஆட்சியை, இதன் மாட்சியை நாடு போற்றுகிறது. நல்லவர்கள் போற்றுகிறார்கள். மத்திய அமைச்சர்களும், இதர மாநில முதல்வர்களும், இந்த ஆட்சியையும் புரட்சித் தலைவரையும் போற்றுகிறார்கள்.

ஆனால் தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் தி.மு. கழகம் மட்டும் இந்த ஆட்சியின் பேரில் நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது. ஒரு வகையில் அதுவும் நல்லதுதான். " உன்னுடைய நண்பன் யார் என்று சொல், உன்னைப் பற்றி நான் சொல்கிறேன் " என்று ஒரு பழமொழி உண்டு. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம்பிக்கையைப் பெறுகின்ற வகையில் ஒரு ஆட்சி அமைந்தால் அது எப்படிப்பட்ட ஆட்சியாக இருக்கும்—இருக்க முடியும் என்பதை நான் சொல்லி இந்தப் பேரவை தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை. எனவே தி.மு. கழகத்தின் நம்பிக்கையைப் பெறாத வகையில் நாம் ஆட்சி நடத்துகிறோம் என்றால் அது நாட்டுக்குத் தேவையான ஆட்சி, நாட்டு மக்களுக்கு ஏற்ற ஆட்சி, கூட்டு கொள்ளையடிக்காத ஆட்சி என்றுதான் பொருள்படுமே தவிர இந்த ஆட்சி மோசம் என்று யாரும் கருத மாட்டார்கள்.

[திரு. இ. கணேசன்] [1978 சனவரி 5

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்ருல், வீராணம் போன்ற திட்டத்தை தீட்டி, சத்தியநாராயணு சகோதரர்கள், ஈஸ்ட் கோஸ்ட் கம்பெனி போன்ற கான்ட்ராக்டர்களுக்கு வேலையை ஒப் படைத்து கோடி கோடியாக ஊழலை செய்து பல மாடிக் கட்டடங்கள் பல்வேறு இடங்களிலே கட்டியிருக்க வேண்டும், வெள்ள நிவாரணப் பணிகளில் தி.மு.க. பாணியைப் பின் பற்றி இருக்க வேண்டும்.

1973-ம் ஆண்டில் வறட்சி நிவாரணம், அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. வறட்சி நிவாரணத்திற் கென்று மாநில அரசும், மத்திய அரசும் வழங்கிய நிதியை, மாவட்டங்களும், வட்டங்களும் பங்கு போட்டுக் கொண்ட தைப் போல், வெள்ள நிவாரணப் பணிகளிலும் அத்தகைய முறைகேடுகளை அனுமதித்திருக்க வேண்டும். பாவம், புரட்சித் தலைவருக்கு இதெல்லாம் பழக்கமுமில்லை, பயிற்சியு மில்லை.

கொள்முதல் விலையை கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று நீலிக் கண்ணீர் வடிக்கவும் வேண்டும். அதே நேரத்தில் 1974-ம் ஆண்டில் செய்ததைப் போல, இரவோடு இரவாக அண்டை மாநிலங்களுக்கு லாரி லாரியாக நெல் மூட்டையை அனுப்பவும் தெரிந்திருக்க வேண்டும். அதற்கென்று நிலப் பிரபுக்களிடம் பேரம் பேசவும், இரகசிய உடன்படிக்கை செய்து கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், வர்த்தக இயல் பட்டப்படிப்பாக இருந்தாலும், கால்நடைக் கல்லூரியாக இருந்தாலும், இவற்றில் நுழைய நுழைவுக் கட்டணம் நிர்ணயித்து அதனைப் பெற்றுத் தருவதற்கு ஏஜண்டுகளை நியமிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

அரசு தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவதற்கென்று ஒரு தனிக் கட்டணம் வசூலிக்கத் தெரிந் திருக்க வேண்டும். சமயநல்லூர் போன்ற அனல் மின்சார நிலையங்களை குறைந்த விலையில் விற்கவும் தெரிந்திருக்க வேண்டும். அதனை உடனடியாக அதிக விலைக்கு விற்க செய்யவும், அதிலிருந்து கணிசமான தொகையைப் பெறவும தெரிந்திருக்க வேண்டும்.

1978 சனவரி 5] [திரு. இ. கணேசன்]

இவ்வளவையும் செய்யத் தெரியாத புரட்சித் தலைவரது ஆட்சியின் பேரில் நம்பிக்கை இல்லை என்று தி.மு. கழகம் சொல்லுவது அவர்களது இலக்கணத்திற்கு மிகவும் பொருத்தமுடையதுதான் என்பதில் எந்தவிதமான ஐயத் திற்கும் இடமில்லை.

இதைச் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. புரட்சித் தலைவர் சும்மாவாவது இருக்கக் கூடாதா? திராவிட முன்னேற்றக் கழகத்து அரசு செய்த ஊழல்களை, தவறுகளை, மோசடிகளை, முறைகேடுகளை, அம்பலப்படுத்தாமலாவது இருக்கக்கூடாதா? அடுக்கடுக்காக விசாரணைக் கமிஷன் களை அமைத்து, அந்தப்புரத்திலே நடைபெற்ற அட்டூழியங் களை அம்பலத்திற்குக் கொண்டுவரலாமா? அன்பு காட்டக் கூடாதா? அனுதாபம் காட்டக்கூடாதா? என்று அடுக் கடுக்காக நெஞ்சத்தில் அலைமோதும் உணர்வுகளின் வடிவமே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்த நமது மரியாதைக்கும், மதிப்பிற்கும் உரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாணவர்களுக்காகவும், விவசாயிகளுக் காகவும், கல்லூரி ஆசிரியர்களுக்காகவும் மின்சாரத் தொழி லாளர்களுக்காகவும், பொறியாளர்களுக்காகவும் போக்கு வரத்துத் தொழிலாளர்களுக்காகவும் கண்ணீர் வடித்த தோடு, அவர்களுக்கு இந்த அரசு துரோகமிழைத்து விட்டது என்று கூறி நம்பிக்கையின்மையைத் வெளிப்படுத்தி யிருக்கிருர்.

நிலைக்கண்ணுடிக்கு முன்னுலே நின்று பேசவேண்டிய வற்றை நிலை தடுமாறி இந்த அவையிலே பேசிவிட்டார். பாவம்!

பூலாவரி சுகுமாரனையும், அவரது தந்தையையும் கொன்று அந்த இரத்தத்திலே குளித்து எழுந்து வந்தவர்கள், உதய குமாரனை உருத்தெரியாமல் ஆக்கி பெற்ற தந்தை யையே தனது மகன் அல்ல என்று சொல்ல வைத்தவர்கள், அண்ணுமலை பல்கலைக் கழகத்து மாணவர்களையும் கிளைவ் ஹாஸ்டல் மாணவர்களையும், ஓட ஓட விரட்டி அவர்களது குருதியை வீதியிலே ஓடச் செய்தவர்கள், விவசாயப் பெருங் குடி மக்களின் குருதியை விவசாய நிலங்களுக்கு உரமாக வழங்கி மகிழ்ந்தவர்கள், தொழிலாளர்கள், பொறி யாளர்கள் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிய பெருமைக்குரிய புண்ணியவான்கள், இந்த ஆட்சி யின் பேரில் நம்பிக்கை இல்லை என்கிருர்கள்.

[திரு. இ. கணேசன்] [1978 சனவரி 5

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார் களே, அவர்கள் எந்த நாளும் எங்களிடத்திலே நம்பிக்கை வைத்ததுமில்லை. அவர்களது நம்பிக்கை எங்களுக்குத் தேவையுமில்லை. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவதற்கு ஒரு நல்லவர், நாணயமானவர் கூடவா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைக்க வில்லை.

(முற்பகல் 10-40)

கறைபடாத கரத்தையும், மாசுபடாத இதயத்தையும் கொண்டுள்ளவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும். எனவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன், இந்த நாடு எதிர்க் கிறது, நல்லவர்கள் எதிர்க்கிறார்கள், ஐந்து கோடி தமிழ் நாட்டு மக்கள் எதிர்க்கிறார்கள் என்று கூறி, வாழ்க திராவிடப் பெரியாரின் கொள்கை, வாழ்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், வளர்க புரட்சித் தலைவரின் பணி என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு திருச்சி ஆர். சௌந்திராராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் புரட்சித் தலைவரவர்களின் அரசின் மீது கொண்டு வந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நம்பிக்கையில்லாத் தீர் மானத்தைக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னவுடன் வீராதி வீரர் ஆயிற்றே, சூராதி சூரர் ஆயிற்றே, அலங்காரச் சொல் அழகர் ஆயிற்றே, ஏதோ இங்கே பூகம்பம் வெடிக்கப் போகிறது; எரிமலை குமுறப் போகிறது, பீரங்கி முழங்கப் போகிறது என்றெல்லாம் நினைத்தேன். ஆனால் நான் மட்டும் அல்ல, இந்தச் சபையிலே இருந்தவர்கள் மட்டுமல்ல வெளியிலே இருந்தவர்களெல்லாம் கூட ஏமாறுகின்ற அள விற்கு யானை குட்டி போட்ட கதையைப் போல இங்கே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

நானே சுற்றிச் சுற்றிப் பார்த்தேன், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே எங்கேயாவது ஒரு நல்ல கருத்து அமைந்திரு கிறதா என்று. ஆனால் கருத்து என்று சொல்லக் கூடிய

1978 சனவரி 5] [திரு. திருச்சி ஆர். சௌந்திராராஜன்]

[illegible]விற்கு இல்லாவிட்டாலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமானது எலும்புக்கூடாகவாவது காட்சியளிக்குமா என்ற நிலைமையைப் பார்த்தேன். ஆனால் அதுகூட செல்லரித்த எலும்புக்கூடாகத்தான் இருக்கிறதே தவிர, [illegible]திய முறைகளுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு [illegible] எலும்புக்கூடாக கூட இந்த நம்பிக்கை இல்லாத் தீர் [illegible]மையில்லைஎன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் பேசியிருக்கிறார், இந்திரா காந்திக்கு கறுப்புக் கொடி காட்டியது ஜனநாயக மரபு என்று. எது ஜன நாயகம்? நான் ‘எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் பணி வோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், ஜன நாயகத்திலே பதவியிலே இருப்பவர்களுக்கு பாதிக்கப் பட்டவர்கள் கறுப்புக்கொடி காட்டுவது என்பது முறை. ஆனால் எல்லாவற்றையும் இழந்து நிராயுதபாணியாக இந்த நாட்டிற்கு வந்த அம்மையாருக்குக் கறுப்புக்கொடி காட்டியது எந்த வகை ஜனநாயகம் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சுட்டிக்காட்டியாக வேண்டும். அவருக்கு எல்லாக் கதையும் தெரியும். இராவணன் எல்லாவற்றை யும் இழந்து நிராயுதபாணியாக நின்றபொழுது, இராமனே, இன்றுபோய் நாளை வா என்று கூறினான். இதற்குக் கூட அவர்கள் சொல்லலாம், இராமர் அவதாரம், நான் மனிதன் என்று. அந்த மனிதனாக இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மனிதாபிமானத்தோடு இந்திராகாந்தி அம்மையார் வந்தபொழுது நடந்துகொண்டிருக்கலாமே என்பதைத் தான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்காக கண்ணீர் விடுகிறார்கள், பேரணி நடத்துகிறார்கள். போராட்டம் நடத்துகிறோம் என்று அறிக்கை விட்டார்கள். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன், முதலைக் கண்ணீர் வடிப்பது உங்களுடைய தொன்றுதொட்டு வந்த வழக்கமாக இருக்கிறது.

உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1970ஆம் ஆண்டிலே விவசாயிகள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள் ஐயம்பாளையத் திலே என்ற குற்றச்சாட்டைச் சாட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி இறந்தவர்களில், மாரப்ப கவுண்டர், ஐயக் கவுண்டர், இராமசாமி, சுப்பையா போன்றவர்கள் உங்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். விவசாயிகள் தடியால் அடிக்கப்பட்டு, தெருவிலே புரண்

டார்கள். நான் படங்களாகக்கூட அவைகளை வைத்திரு கிறேன். தேவைப்படும்பொழுது அவற்றைத் தருவதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு ஆசிரியையைக் கைது செய்து கொண்டு போனார்கள். அவர் கர்ப்பிணி என்று சொன்னார்கள். நான் அவரைப் பார்த்து கேட்கிறேன், அன்றைக்குச் சுகுமாரனுடைய நிலைமை என்ன? சுகுமாரனும், அவர் தந்தையும் கொலை செய்யப்பட்ட பிறகு அவருடைய தாய் கதறி அழுதார்கள், அந்த நேரத்தில் அவர் தங்கைகள் நான்கு பேரும், தந்தையை இழந்துவிட்டோம் அண்ணனை இழந்துவிட்டோம் என்று அழுத நேரத்தில், அந்தப் பிஞ்சு குழந்தைகளின்மேல் வழக்குகள் போட்டு, காவல் மன்றத்திற்கு அழைத்துச் சென்றீர்களே. எனவே, நீங்கள் ஜனநாயகத்தைப்பற்றி பேசலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரமத்தி வேலூர் சம்பவத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். பரமத்தி வேலூருக்கு வர வேண்டாம், மக்கள் கொந்தளித்திருக்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், அவ் வாறு சொன்ன அரசாங்க அலுவலர்களைப் பார்த்து, நீங்கள் வளையலை மாட்டிக்கொள்ளுங்கள், புடவையைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று இன்றைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அன்றையதினம் அரசு அதிகாரிகளைப் பார்த்துச் சொல்ல வில்லையா ? வேலூருக்கு போகாமல் இவர் திரும்பிய பின் எத்தனை தாய்மார்கள் இழிவு படுத்தப்பட்டார்கள், கற்பழிக்கப் பட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கரந்தைக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் தாக்கப் பட்டார்கள் என்பதை நாடு மறந்து விடுமா ? பரமத்தி வேலூர் என்பதே தமிழகத்தினுடைய அந்த மேப்பில் இருக்காது என்று சொன்னவர்தான் இன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவராக இருப்பவர். அவர் இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார். ஆண்டால் தமிழ் நாட்டை நான் ஆள்வேன். வேறுயாரையும் ஆளவிட மாட்டேன் என்று சொன்ன இந்த எதிர்க் கட்சித் தலைவர் தான் இன்றைக்குப் பேசுகிறார் ஜன நாயகத்தைப் பற்றி. நான் வேதனைப்படுகிறேன். வெட்கப் படுகிறேன்.

அதுமட்டுமல்ல, நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். திட்டங்கள் 'காற்றிலே கலந்து விட்ட கீதமாக மாறிவிடக் கூடாது' என்று அழகாகச் சொன்னார், தனக்கே உரிய பாணியிலே. அவருக்குத் தெரியாதது அல்ல, கீதம் என்பது காற்றிலே கலந்ததுதான். அப்படி கலந்தால்தான் வெளியிலே பாயுமே தவிர, அது கல் கரையா நிலையில் இருந்தால், கிணற்றிலே விழுந்த கல்லாகுமே தவிர, கீதமாக இருக்க இயலாது. 'தாகத்தைத் தீரா தண்ணீராக இருக்கக்கூடாது'—வார்த்தை ஜாலத்தை ஆடிக் காட்டினார். தாகத்தை எல்லாத் தண்ணீரும் தீர்க்கும். ஆனால், தாகத் தைத் தீர்க்கின்ற தண்ணீரில், நோய் பரவாத அளவுக்கு மருந்து கலந்து விடப்படவேண்டும். அதைப் போல், நோய் பரவாத அளவுக்குத் தண்ணீரில் மருந்து கலந்து விடத்தக்க ஆட்சித்தான் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி, யாரும் மறந்து விடக் கூடாது.

சொன்னார், சீரணியில் சேர்க்கப்பட்டார்கள், 4,000 பேர். அந்த 4,000 பேரில், 1,000 பேர் வேலை இழந்திருக் கிறார்கள். நீங்கள் ஒரு இலட்சம் பேரை வேலையில் சேர்ப்பதாகச் சொன்னீர்கள், எத்தனை பேரைச் சேர்த்திருக் கிறீர்கள் என்று. நான் அவருக்குச் சொல்கிறேன், 4,000 பேரை நீங்கள் யோசித்து வேலையில் சேர்த்திருந்தால், 1,000 பேர் வேலையை இழந்திருக்க வேண்டியதில்லை. திட்ட மிட்டு 4,000 பேர் வேலையில் சேர்க்கப்பட்டிருந்தால், 1,000 பேர் வேலையை இழந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. எங்கள் புரட்சித் தலைவர், 1 இலட்சம் பேரைச் சேர்க்கத்தான் போகிறார். சேர்த்ததற்குப் பின்னாலே, 20,000 பேர் வெளியே வந்தார்கள் என்று சொல்லமுடியாத அளவுக்கு, சட்டத்தை மட்டும் பார்க்கா மல், எல்லாவற்றையும் யோசித்து, சிந்தித்து, அவசரக் கோலம், அள்ளித் தெளித்த கோலமாக இருக்கக்கூடாது என்ற முறையிலே புரட்சித் தலைவர் திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றி பேசுகிற எதிர்க் கட்சித் தலைவரைக் கேட்கிறேன், மறந்து விட்டீர்களா, உங்கள் ஆட்சிக் காலத்திலே, 25,000 அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. மறந்து விட்டீர்களா ? எத்தனை நெஞ்சங்கள் துடித்தன ? எத்தனை தாய்மார் கள் குமுறினார்கள் ? கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்,

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1978 சனவரி 5]

பிஞ்சுமகன், 12 வயதுக்குச் சொந்தக்காரன் கண்ணமங்கலத்திலே கொல்லப்பட்டது, அந்தத் தாய் அழுதாளே—யார் அந்தக் கண்ணீரைத் துடைக்க முடியும்? அந்தக் கண்ணீருக்குச் சொந்தக்காரரான, எதிர்க்கட்சித் தலைவரா ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது? சாத்தான் வேதம் ஓதுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர் மீது நம்பிக்கையில்லை என்ற காரணத்தாலே, மக்கள் அவரை ஒதுக்கி வைத்திருக்கிற நேரத்திலே, மக்கள் நம்பிய அரசின்மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார் என்று சொன்னால், அவர் விளம்பரத்திற்காகக் கொண்டு வந்தாரே தவிர, வேறு அல்ல என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'விளம்பரப் பிரியர்' என்று சொன்னார். யாரைப் பார்த்து? இன்றைக்குத் தமிழக முதல்வராக இருக்கிற புரட்சித் தலைவரைப் பார்த்துச் சொன்னார். சந்தனத்திற்கு யாரும் மணம் கொடுப்பதில்லை. சந்தனத்திற்கு மணம் தானாகவே வரும். அது தேடிப்போய் மணம் பெறத் தேவையில்லை. பலாப்பழத்தைத் தேடி ஈ தானாகவே வரும், அது ஈயைத் தேடிப் போவதில்லை. அவர் உண்மைப் பலாப்பழத்தைப்பார்த்துப் பழக்கப்பட்டவர் அல்ல. பொம்மையாகச் செய்த பலாப்பழத்தைப் பார்த்துப் பழக்கப்பட்டவர் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்.

எங்களிடம் இனிப்பாகக் கனி இருக்கிறது. அது வண்டு துளைத்த கனி அல்ல, வண்டு துளைக்காத கனி என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே புரட்சித் தலைவர், இன்றைக்கு எல்லோருடைய வீட்டிலும் இருக்கிறாரே தவிர, எல்லோருடைய இதயங்களிலும் இருக்கிறாரே தவிர, பிறக்கிற மழலைகளுடைய நெஞ்சங்களிலே இருக்கிறாரே தவிர இன்றைக்கு அவருக்கு விளம்பரம் தேவையென்று யாரும் சொல்லத் தேவையில்லை.

நான் ஒரே ஒரு உதாரணம் சொல்லுகிறேன், பலஅரசினர் பிரயாணிகள் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. அங்கே வள்ளுவர் படம் மாட்டப்பட்டிருக்கிறது. அந்தப் படத்தில் வள்ளுவர் என்ற பெயரைவிட, கருணாநிதி என்ற பெயர் பெரிதாகப் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பிரயாணிகள் தங்குகிற சின்ன இடத்திலே கூட,

[1978 சனவரி 5] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

யாருடைய படம் என்ற பெயரைக் குறிப்பதைக் கூடக் குறைத்துவிட்டு, தன்னுடைய பெயரைப் பெரிதாகப் போட்டிருக்கிற இந்த விளம்பரப் பிரியர் இன்றைக்கு நம்மைப் பார்த்துச் சொல்கிறார், விளம்பரப் பிரியர் என்று.

[illegible] ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எதிர் காலத்[illegible], ஒரு அகராதி எழுதப்படுமானால், விளம்பரம் என்ப[illegible] என்ன பொருள் என்றால் கருணாநிதி என்று சொல்கிற அளவுக்கு, விளம்பரம் கருணாநிதி இரண்டும் ஒன்றோடொன்று கலந்துகொண்டிருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். இவற்றை எதற்காகக் கோடிட்டுக் காட்டுகிறேன் என்று சொன்னால், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் வேறு வகையில் சொல்லமுடியாதவைகளைக் குறித்துச் சொல்லவேண்டுமென்ற வகையிலே சொல்லிக் காட்டி, இந்த ஆட்சிக்குக் களங்கத்தை ஏற்படுத்திக் காட்டுகிறார்கள்.

ஆனால் ஒன்றைமட்டும் சொல்கிறேன். இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள், ஆட்சிக்குத் துணை இருப்பவர்கள், டிவோஷனோடு மட்டுமல்ல, டியூட்டியிலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இன்றைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10–50]

16 ஆயிரம் நியாய விலைக் கடைகளைத் திறக்கப்போகிறோம் என்று சொன்னீர்களே என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கனவே திறந்துவிட்ட கடைகள் போக மீதி இருக்கிற 7,000, 8,000 கிராமங்களிலே திறப்பதாகச் சொன்னார்கள். அதைத் திறப்பதற்காகத் திட்டங்களை வகுத்த நேரத்திலேதான் பலவிதமான போராட்டங்களைச் சந்திக்கின்ற நிலைமை வந்தது. வெள்ளத்தாலும் புயலாலும் தமிழகம் பாதிக்கப்பட்டிருந்தது, என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்கு முன்னோடிதான் 442 கடைகளைத் திறப்பதாக அறிவித்திருக்கிறோமே தவிர, அந்த 442 கடைகளோடு நிறுத்திவிட்டோம் என்பதல்ல. அதைத் தொடர்ந்து அறிவித்தபடி கடைகள் திறக்கப்படும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1978 சனவரி 5

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்
றைய தினம் பேசுகிற போது, மதுரைக்குச் சென்றேன்
மாணவர்கள் என்னை அழைத்தார்கள் நான் போய் மருத்துவ
மனையிலே பார்த்தேன் என்று பேசினார்கள். நான் கேட்
கிறேன் மாணவர்களுக்காக நீங்களா பரிந்துகொண்டு வரு
கிறீர்கள் என்றுதான் மாணவர்கள் கேட்பார்கள். எத்தனை
மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். மாணவன் உதய
குமாருடைய சரித்திரம் ஒன்று போதாதா, பெற்ற மகனையே
இல்லை என்று தந்தையைச் சொல்லவைத்த மாபெருந்தலைவர்
அல்லவா தாங்கள், அது ஒன்று போதாதா தி. மு. கவிற்கு
என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
தோன்றிய நேரத்திலே எங்களுடைய தலைவர்கள் எல்லாம்
எத்தனை முறை பழிவாங்கப்பட்டார்கள்? ஒன்று சொல்லட்
டுமா, இரண்டு சொல்லட்டுமா? எத்தனையோ சொல்ல
முடியும், அன்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினராக
இருந்த இந்த அவையின் முன்னவர் அவர்கள் தாக்கப்பட்டார்
கள்—எங்கே தெரியுமா? விமான நிலையத்திற்குப் போகின்ற
நேரத்திலே, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற புரட்சித்
தலைவர் அவர்களை காங்கேயம் பக்கத்தில் வந்தால் லாரியை
வைத்து இடித்துக் கொல்வதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்
டது. பத்திரிக்கைகள் எழுதியவைகளை நாம் மறந்துவிடுவ
தற்கில்லை.

ஆகவே இப்படிப் பல பேர்களுடைய உயிரைக் குடிப்
பதையே தனது நோக்கமாகவும், பலர் ரத்தம் சிந்துவதைப்
பார்த்துக் களிப்பது தனது பொழுது போக்காகவும், பலரு
டைய சாவிலே மட்டுமல்ல, பலருடைய வேதனைக் குரல்க
ளிலே தனது மாளிகையை அமைத்துக் கொண்டு, இன்றைக்
குத் தமிழக மக்களால் விதவையாக ஆக்கப்பட்ட எதிர்க்
கட்சித் தலைவர் இன்றைக்கு நம்முடைய அரசின் மீது
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்
கிறார்கள்.

இது நம்பிக்கையில்லாத் தீர்மானமே அல்ல, ஒரு விதத்
திலே நம்பிக்கையைத் தெரிவிக்கும் தீர்மானம் என்று கருது
கிறேன். ஆக, இதிலே கூட புரட்சித் தலைவரைத் திட்டினால்
விளம்பரம் அதிகம் கிடைக்கும் என்று தெரிந்து இப்படிப்
பட்ட தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று
நான் கருதுகிறேன்.

1978 சனவரி 5] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

எனக்கு பகவத்கீதை நினைவுக்குவருகிறது. அதிலே
கண்ணன் சொன்னான், எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாத
தல்ல, கலியுகத்திலே என்னைப் போற்றுபவர்களைவிட என்னைத்
தூற்றுகிறவர்களுக்குத்தான் அதிக நேரம் இருக்கிறது.
போற்றுகிறவர்களுக்கு அதிக நேரம் இருக்காது, காரணம்
கலியுகத்திலே அவர்களுக்கு நிறைய ஆசைகள். அபிலா
ஷைகள் இருக்கின்றன. ஆகையினாலே அவர்கள் என்னை
மறந்து விடுவார்கள். ஆனால் என்னைத் திட்டுகிறவர்கள்
என் நினைவாகவே இருப்பார்கள் ஆகவே அவர்களுக்குப்
புண்ணியம் கிடைத்துவிடும், என்று சொன்னான்.

அதைப் போல நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு
வேறு எதையும் நினைப்பதற்கு நேரம் இல்லை. எனவே
அவர்கள் புரட்சித் தலைவரைத் திட்டுகிறார்கள். அதனால்
அவை பேப்பரிலே தினம் வரும், அதனால் அவர்கள் விளம்ப
ரம் அடைகிறார்கள்.

மேலும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். தமிழக
முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களைச் சந்திப்பது
இல்லை. இது ஒன்றே போதுமே தமிழக முதல்வர் விளம்
பரத்தை விரும்பாதவர் என்று சொல்வதற்கு. இதை எதிர்க்
கட்சித் தலைவர் அவர்களே சொல்கிறார், அதைச் சொல்லி
விட்டுச் சொல்கிறார், முதல்வர் விளம்பரப் பிரியர் என்று.
அவர் விளம்பரப் பிரியராக இருந்தால், தினமும் 3 முறை
யும் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்திருக்க மாட்டாரா ?

ஒரு காலத்திலே எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக
இருந்த போது, பத்திரிகை நிருபர்கள் எல்லாம் எந்த வீட்
டிலே இருந்து போன் வருமோ, எங்கு போகவேண்டுமோ
என்று இருப்பார்கள். இன்று அப்படியில்லை. காரணம்
தேவைப்பட்டபோது பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கிறார்.
ஆகவே, தேவை என்கிற நேரத்தில், இன்றைக்கு மக்களுக்
குத் தேவையான காரியங்களைச் செய்து முடிக்கிற ஆற்றல்
பெற்ற புரட்சித் தலைவர் ஆட்சியின்மீது கொண்டு
வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் எதிர்த்து
அமைகிறேன். வணக்கம்.

*திருமதி சுப்புலட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மா
னத்தை எதிர்த்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

[திருமதி சுப்புலட்சுமி] [1978 சனவரி 5

பதவி இல்லையே என்ற ஏக்கம், நம்முடைய போராட்டங்கள் எல்லாம் தோல்வி ஆயிற்றே என்ற ஆதங்கம், இவைகளின் மொத்த உருவம் தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது என்னுடைய ஏகோபித்த கருத்து.

எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிற போது நெருக்கடி நிலையை எதிர்த்ததாகக் கூறினார்கள். ஆனால் நெருக்கடி நிலையின் ஆரம்ப காலத்தில் இந்திரா காந்தி அவர்களை அவர் எவ்வாறு ஆதரித்தார், அந்த நெருக்கடி நிலையின் சவுக்கை தமிழகத்தில் எப்படி அதிகமாகப் பயன்படுத்தி விட்டார்கள் என்பதை தமிழக மக்கள் இன்றளவும் மறந்து விடவில்லை.

இன்று விவசாயப் பேரணி, போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் அன்றைக்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருமாநல்லூரில் துப்பாக்கிக் குண்டுகள் கொண்டு பேசப்பட்டபோது அங்கேயிருந்த நிலையை அங்கேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றும் மறந்து விடவில்லை. அப்படிப்பட்ட அவர்கள் இன்று விவசாயிகளுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதைப் பார்த்து எங்களுடைய கொங்கு மாநாடே கைகொட்டிச் சிரிக்கிறது.

கல்லூரிப் பேராசிரியர்கள் கைது செய்யப்படுகிறார்களே, அதுவும் கர்ப்பிணிப் பெண்களை லாரியில் ஏற்றிக்கொண்டு செல்கிறார்களே என்று இன்றைக்கு வேதனைக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் அன்று 1973-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி மாநிலம் தழுவிய பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்தின் போது ஒவ்வொரு மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பும் ஒரு நாள் உண்ணாவிரதம், ஊர்வலம் நடந்தது. அந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட கர்ப்பிணிப் பெண்களில் நானும் ஒருத்தி. அன்றைக்கு கலைஞர் அவர்கள் எத்தனை கர்ப்பிணிப் பெண்கள் உண்ணாவிரதம் இருந்தனர், எத்தனை கர்ப்பிணிப் பெண்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்று கணக்கு எடுக்கவில்லையே? ஆனால் இன்றைக்கு பேராசிரியர்கள் போராட்டத்திற்கு நியாயம் கிடைத்து இருக்கிறது. கல்லூரிப் பேராசிரியர்கள் கோரிக்கையை மனதில் கொண்டு இன்றைக்கு அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டு இருக்கிறது.

1978 சனவரி 5] [திருமதி சுப்புலட்சுமி]

... அப்போது நடந்தது என்ன? மாநிலத் தலை
...வர்கள், மாவட்டத் தலைவர்கள் ஆகியவர்களை
...செய்து, சிறையில் அடைத்து விட்டு, அவர்களுக்கு
... நடக்கும் செய்தி தெரியாமல்;
... என்ன திட்டமிடுகிறார்கள் என்று தெரி
... உள்ளே இருப்பவர்களிடத்தில் போராட்டம் வாபஸ்
...ப்பட்டது என்று சொல்லியும், வெளியே இருப்பவர்
...த்தில் தலைவர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக்
கொடுத்து விட்டார்கள் என்று சொல்லியும், விளம்பரம்
செய்து போராட்டத்தை முறியடித்தார்கள். அந்த
சமயத்தில் 'குமுதம்' ஒரு கருத்துப்படம் வெளியிட்டதை
யாரும் மறந்து இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஒரு
கிளியைக் கூண்டில் அடைத்து விட்டு, சில நாள் கழித்து,
இறக்கைகளை வெட்டி, அந்தக் கூண்டிலே இருந்து அந்தக்
கிளியை விடுதலை செய்வது போல் ஒரு கருத்துப்படம் வெளி
வந்து இருக்கிறது. அப்படிப்பட்ட ஜனநாயக மரபு அன்
றைக்கு பின்பற்றப்பட்டது. அவர்கள்தான் இன்று
நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருக்
கிறார்கள்.

அது மட்டுமா? எங்களுடைய ஜனநாயக உரிமையைப்
பறிப்பது போன்று ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கி
னார்கள். அந்த மன்னிப்புக் கடிதத்திலே நாங்கள் போராட்
டத்தில் கலந்து கொண்டோம், இனி இப்படிப் போராட்டத்
தில் கலந்து கொள்ள மாட்டோம் என்று மன்னிப்புக் கடிதம்
எழுதி வாங்கியவர் இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்
மானம் கொண்டு வந்து இருக்கிறார்.

கறுப்புக்கொடிப் போராட்டம் என்று மதுரையில் நடை
பெற்ற சம்பவம் பெண் குலத்தை அவமதித்த சம்பவம்
ஆகும். புயல், வெள்ள நிவாரண நிதியைத் திரட்டச்
சென்ற நேரத்தில் இசையரசி மூதாட்டி கே. பி. சுந்த
ராம்பாள் அவர்களைக் காண நேர்ந்தது. அவர்கள் அப்
போது சொன்னார்கள், இந்தப் புயல், வெள்ளம் எதனால்
ஏற்பட்டது தெரியுமா? தாய்க்குலத்தை அவமதித்தார்கள்,
அதை இயற்கையன்னை தாங்காமல் புயல், வெள்ளம் அடித்
தது என்று அம்மையார் சொன்னது இன்றும் என் காதில்
ஒலித்துக் கொண்டு இருக்கிறது. இத்தகைய வன்முறையை
நடத்தியவர்கள் ஜனநாயகம் காக்க, ஜனநாயக மரபுப்படி
நடக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

[திருமதி சுப்புலட்சுமி] [1978 சனவரி 5

அது எல்லாம் போகட்டும். இன்னும் கூட கேட்பீரானால், தமிழகத்தில் ஜனநாயக தீபம் ஏற்றி வைத்ததாகக் கூறுபவர்கள், தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் இந்த அவையில் நடந்து கொண்டது எப்படி? இங்கே பெண்கள் இருக்கிறார்கள் என்று கூட கவலைப்படாமல், ஒரு உறுப்பினர் நடந்து கொண்ட விதம், அவர் உபயோகித்த வார்த்தைகள், நான் வெளியே கூட அப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கவில்லை, அப்படிப்பட்ட வார்த்தைகளை இங்கே உபயோகித்து, இங்கே ஒரு வன்முறையை சபையில் உருவாக்கினார்கள். அதற்காக அந்தக் கட்சியின் தலைவர் வருத்தம் தெரிவித்தாரா என்றால், இல்லை.

ஆனால் நல்லவர் என்று மக்களாலே போற்றப்படுகிற அளவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்ற புரட்சித் தலைவர் அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். அண்ணாவின் கொள்கைக்கு எதிராக தமிழகத்திலே சாராயக் கடைகளை ஓடவிட்டு, அதனால் ஒரு தலைமுறையைப் பாழ்படுத்திய அவர்கள் இன்று நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள்.

கலைஞர் அவர்கள் பேசிய நேரத்தில் ஒரு குறளைச் சொன்னார்கள். ''எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்று சொன்னார்கள். அந்தக் குறளில், அந்த வள்ளுவன் வாய்மொழியில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. எப்பொருள் யார் யார் வாயில் இருந்து நல்ல பொருளாக வரும், யார் யார் வாயில் இருந்து பொய்யான பொருள் வரும் என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்து கொண்டுள்ளோம்.

[முற்பகல் 11–00]

புயல், வெள்ள நிவாரண நிதி குறித்து தன்னுடைய கழகக் கண்மணிகளுக்குக் கட்டளையிட்டதாகக் கூறினார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே முறைப்படி அவர்களுக்கு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அழைப்பிதழ் அனுப்பினோம். கூட்டத்திற்கு அவர்கள் வரவில்லை. அங்கே நிதி திரட்டுவதற்குக் கூட அங்கேயிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் கலந்துகொள்ளவில்லை. ஆனால் முதல்வர் அவர்களிடத்திலே அந்த நிதியை அளிக்கிற போது சர்வ கட்சி என்ற பெயரில் அரசியல்

[illegible] [திருமதி சுப்புலட்சுமி]

[illegible] அந்த அளவிற்கு அரசியல் [illegible] ஜனநாயக மரபையும் பார்க்காத [illegible] நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழகமே [illegible] கொட்டி நகைக்கிற அளவுக்குக் கொண்டு வந்திருக்[illegible].

[illegible]மிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து [illegible]ம்பரப் பிரியர் என்று கூறினீர்கள். மா மன்னரைப் போல் மலர் கிரீடம் வைத்துக் கொண்டு தமிழகத்திலே இருக்கிற பட்டிதொட்டி எல்லாம் போஸ்டர் ஒட்டியவர்களுக்கு விளம்பரப் பிரியர் யார், விளம்பரத்திலே பிரியம் இல்லாதவர் யார் என்பது நன்றாக தெரிந்திருக்கும்.

மாணவர்கள் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாணவர்களை மிரட்டியவர்கள், விவசாயிகளைக் கொன்று குவித்தவர்கள். நாட்டிலுள்ள நல்லவர்கள் அத்தனை பேரையும் தீய வழியிலே மிரட்டி, கடுங்காவலில் வைத்தவர்கள் இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுதாவது உங்களுக்கு விவேகம் வந்து சிந்தாமணி படிப்பதைப் பாராட்டுகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசின் மீது பழைய முதல்வரும் இன்றைய எதிர் கட்சித் தலைவரும் கொண்டு வந்திருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'சங்கு வெண்தாமரைக்கு தந்தை தாய் ரவி தண்ணீர், அங்கதை கொய்துவிட்டால் அழுகச் செய்து அந்நீர் கொல்லும். துங்கவன் கரையில் போட்டால் சூரியன் காய்ந்து கொல்வான், தங்களின் நிலையைக் கேட்டால்—இப்படித் தயங்குவாரே' என்ற தமிழ் பாடலுக்கு ஏற்ப கலைஞரின் நிலை இப்படி ஆகியிருப்பதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன்.

[டாக்டர் வே. சம்பத்] [1978 ஜனவரி 5

கலைஞர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த நேரத்திலே பீரங்கி வெடிக்கும் என்று எதிர் பார்த்தோம் அது பெருமாள் கோவில் வெடியாகப் போய் விட்டதைக் கண்டு நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன். அவர் கூறுகிற நேரத்தில் எல்லாம் சொன்னது போராட்டங்களைப் பற்றி மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆசிரியர்கள் போராட்டம் என்று சொன்னார்கள். இன்ஜினியர்கள் மொட்டை அடித்துக் கொள்ளும் போராட்டம் என்று சொன்னார்கள். இன்னும் பல போராட்டங்களைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்.

நான் அவரை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன் இந்தப் போராட்டங்கள் ஏற்படுவதற்கு மூல காரணம் யார்? இந்த அரசு ஏற்படுத்தப்பட்டது எப்பொழுது? இந்த போராட்டம் உருவாக்கப்பட்டது எப்படி? போராட்டத்தை உருவாக்கக் கூடிய மூல கதாநாயகர்கள் யார் என்பதை அவர் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஆற்றோடு வெள்ளத்தில் அடித்துச் சென்ற குள்ள நரி உலகம் போச்சு, உலகம் போச்சு என்று சொல்வதைப் போல் பழைய முதல்வர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததைப் பார்த்து வேதனைப் படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கையில்லை என்று சொன்னார். அப்படிச் சொல்வதுகூட விளம்பரம் தான். அவருடைய பேச்சை யார் யார் பேச மறுக்கிறார்களோ அவர்கள் எல்லாம் தம்மைப் பற்றி பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக இருப்பதற்குக்கூட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பார்களோ என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசும் பொழுது ஊழலைப் பற்றிச் சொன்னார். பிச்சைக்கார மறு வாழ்வுத் திட்டத்திற்கு நிதி திரட்ட 8 அணாவிற்கு ஒரு அட்டையை அச்சடித்தார்கள். அதற்கு நம்பரே இல்லை. பிச்சைக்கார மறு வாழ்வுத் திட்டத்திற்கு வசூல் செய்ய நம்பர் இல்லா அட்டையை வெளியிட்ட கருணாநிதிக்கு புயல், வெள்ள நிவாரண நிதியைப்பற்றி பேசுவதற்குத் தகுதி இருக்கிறதா? இந்த நேரத்தில் எப்படி எப்படி வெள்ள நிவாரணப் பணிகளை கையாள வேண்டு மென்று வணக்கத்துக்கு உரிய புரட்சித் தலைவர் அவர்கள் நடத்தி கொண்டார்கள் என்பது தெரியும். 'கற்றைக் குழல்

[illegible]] [டாக்டர் வே. சம்பத்]

பிடித்து கன்னிலான பெற்றெடுத்தோன் பற்றினுக்குரிய
பாண்டவரும் பார்த்திருந்தார். கொற்றத் தனித்திருக்கும்
கோவிந்தா நீ இன்றி அன்றைக்கும் என் மானம் ஆர் வேறு
காத்தாரோ ' என்று வணக்கத்துக்குரிய புரட்சித் தலைவர்
அவர்களை வாழ்த்தி வரவேற்றுக் கொண்டிருக்கும் வேளையில்
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரலாமா என்று
நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொன்றையும் சொன்னார். கூட்டுறவுத்
துறை நல்ல முறையில் இயங்கவில்லை என்று சொன்னார்.
ரேஷன் கார்டு, சர்க்கரை விநியோகம் பற்றியும், 16 ஆயிரம்
நியாய விலைக் கடைகள் திறக்காதது பற்றியும் சொன்னார்
கள். சர்க்கரை எப்படி வினியோகிக்கப்படவேண்டுமென்ற
சம்பிரதாயத்தையே மாற்றியமைத்திருக்கிறார் முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள். சம்பள அடிப்படையில் வினி
யோகிக்கப்பட்ட சர்க்கரையை, எல்லோரும் ஓர் இனம்,
எல்லோரும் ஓர் குலம் என்ற அடிப்படையில், உலகம் சம
நிலை பெறவேண்டும், உயர்வு தாழ்வு இல்லா நிலை வேண்டு
மென்ற அடிப்படையில், சட்டத்தைத் திருத்தியிருக்கிற
ஆட்சியின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டுவர
லாமா என்று கேட்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த ஆட்சி எதையும் தாங்கும்
இதயத்தோடு நடந்து கொண்டிருக்கிறது. முதலமைச்சர்
எம். ஜி. ஆர். அவர்கள் எதையும் தாங்கும் இதயம் வேண்டு
மென்று அண்ணாயிசத்தின் கருத்தை உள்ளடக்கி ஆட்சியை
நடத்திக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஆட்சியின்
மீது, இதையும் தாங்க ஏது அண்ணா எமக்கிதயம் என்று
இப்போது கலைஞர் கருணாநிதி அவர்கள் நம்பிக்கையின்மைத்
தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்.

அது மட்டுமல்ல, இதற்கு முன்பு போக்குவரத்து என்று
சொன்னால் இத்தனை ஆயிரம் கொடுத்தால்தான் ரூட் கிடைக்
கும் என்ற நிலை இருந்தது. இப்போது காசு பணத்திற்கு
இடம் இல்லாமல், யாரிடமும் காசு வாங்காமல்
தொழிலாளர்களுக்கு கூட்டுறவுத் துறையில் யார் நடத்திக்
கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து
பல வகையில் லஞ்ச லாவண்யத்தை ஒழித்து ஆட்சி நடந்து
கொண்டிருக்கிறதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.
இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை
அருமை கலைஞர் அவர்கள் கொண்டு வரலாமா என்பதைத்
தீவிரமாக சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1978 ஜனவரி 5

இன்னும் சொல்லப்போனால் பரமன்மீதுள்ள பாம்பானாலும் பக்தர்களையே கடிக்க படமெடுத்தால் அதனை அடித்து நொறுக்கும் ஆண்மை பெற்றிருக்கும் புரட்சித் தலைவர்மீது அந்த ஆட்சியின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வருவது சரிதானா ?

சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கிவிடுகிற ஆட்சியின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லலாமா?

ஊராட்சி மன்றத் தேர்தல், நகராட்சி மன்றத் தலைவர் தேர்தல்களில், ஆள் தூக்கிச் செல்லும் நிலைமையை அனுமதிக்கும் சட்டத்தை மாற்றி மக்களே வாக்களித்து தேர்ந்தெடுக்கக்கூடிய நிலையில் திருத்தத்தைக் கொண்டு வந்த மக்கள் ஆட்சியின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லலாமா?

இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் பாரதத்தில், பஞ்ச தந்திரக் கதைகளில் வருவது போல், கூனி, சகுனி இவர்களின் மொத்த உருவமாக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் இந்த ஆட்சியைப் பற்றிக் குறைகூறிப் பேசலாமா? என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் திட்டம், மின்சார பூர்த்தி விழா, கூவம் திட்டம், சக்தி பைப் என்ற பல திட்டங்கள் சம்பந்தமாக ஏற்கெனவே இருந்த பழைய அரசு எந்த எந்த வகையில் தவறு இழைத்திருக்கிறது என்று சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில், அதற்காக கமிஷனே அமைத்துள்ள சூழ்நிலையில் அவர்கள் அரசின்மீது இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டு வரலாமா?

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றிப் பேசினார்கள். அங்கே தமிழர்களைக் கொடுமைப்படுத்திவிட்டு, ஆனால் இங்கே வந்த இலங்கை பிரதமருக்கு லாலிபாடி மாலை அணிவித்த கருணாநிதி அவர்கள் இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொண்டு வரலாமா? கள்ளுச் சாராயக் கடையைக் காணாத பாவிக்கு கைலாசம் ஏது என்று பாடிக் கொண்டு அநாகரிகமாக ஆடிக்கொண்டிருக்கிறவர்கள், மது. மதியைக் கெடுக்கும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவர் ஆட்சியின்மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வரலாமா?

ஜனவரி 5] [டாக்டர் கே. சமரசம்]

பணத்தை இரும்புப் பெட்டியில் வை, நம்பிக்கையை யோக்கியனிடத்தில் வை என்று அறிஞர்கள் சொன்னார்கள். மக்கள் இந்த அளவில் நம்பிக்கையை யாரிடத்தில் வைக்க வேண்டுமோ அவர்களிடத்தில் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லலாமா?

அருமைக் கலைஞர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மாட்டைக் கொடுத்து, ஆட்டை வாங்கி, ஆட்டைக்கொடுத்து கோழி வாங்கி, கோழியைக் கொடுத்து டீ வாங்கிக் குடித்து விட்டார்கள் இவர்கள் கட்சித் தொண்டர்கள். அப்படிப் பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்ட இவர்கள் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வரலாமா என்று உணர்ந்து பார்த்து மக்களின் மகிழ்ச்சிக்கு மாசு கற்பிக்கும், ஆட்சியின் புகழுக்கு புள்ளி வைக்கும் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு இதனை ஓர் திருஷ்டி பரிகாரமாக கருதிக் கொண்டு இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை எதிர்த்து அமருகிறேன் வணக்கம்.

[முற்பகல் 11-10]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே முன்மொழிந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில், முதலிலேயே அவரது கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறினார். இந்தத் தீர்மானத்தில் நம்பிக்கையில்லை, இந்தத் தீர்மானம் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் நான் இங்கே இதைக் கொண்டு வரவில்லை, ஜனநாயகத்தின்மீது இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையில் இதை எடுத்து வைத்திருக்கிறேன் என்று கூறினார்கள். தேர்தலில் நிற்கின்ற நேரத்தில்கூட, மக்கள் மீது நம்பிக்கை இல்லை என்று கூறி அந்த அடிப்படையில், நம்பிக்கை இல்லாமலே இங்கே வந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இயங்குகிற நாங்கள் எங்களுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க வேண்டும் என்

புதைத் தவிர வேறில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். ஜனநாயகத்தின் சிற்பி என்ற முறையில் அவர் கோடிட்டுக் காட்டியதை நாம் உணரவேண்டும்.

1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-வது நாள் இந்த சட்ட மன்றத்திலே இரண்டு சபாநாயகர்களை வைத்து இரண்டு சட்ட சபைகளை நடத்திய ஜனநாயக சிற்பி கலைஞர் கருணாநிதி என்பதை இந்த நாடு மறந்து விடாது. இப்படி இரண்டு சட்ட மன்றங்களை வைத்து நடத்திய ஜனநாயக சிற்பி தான், ஜனநாயகத்திற்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு இங்கே பேசினார் என்பது வேதனைக்குரிய ஒன்று. அன்றைய தினம் நாங்கள் இரண்டு சட்ட மன்றங்களை, இரண்டு சபாநாயகர்களை வைத்து இங்கே நடத்தினோம், ஆனால் நீங்கள் 3 சட்ட மன்றங்களை இங்கே நடத்தி விட்டீர்கள், ஆகவே, நம்பிக்கை இல்லை என்று சொல்லி இருந்தால் நிச்சயமாக வரவேற்றிருப்போம்.

இரண்டாவதாக, எதிர்க்கட்சித் தலைவர் பல குற்றச்சாட்டுகளை அடுக்கியடுக்கி வைப்பார் என்று எதிர் பார்த்தோம். மணிமாறன் சொன்னதைப் போல, புலி வரும், புலி வரும் என்று எதிர் பார்த்தோம். புலி வருவதற்குப் பதிலாக பூனை வந்தது என்பதைத்தான் நாங்கள் பார்த்தோம்.

அவர்களுடைய ஆட்சியிலே 7 ஆண்டு காலத்திலே, எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில், மருத்துவக் கல்லூரி இடங்கள் 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று ஏலம் விடப்பட்டது. அப்படி எங்கள் ஆட்சியில் 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று இருந்தது, உங்கள் ஆட்சியில் 25 ஆயிரமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறி இருப்பாரேயானால் நிச்சயமாக நாங்கள் வரவேற்றிருக்கலாம். அப்படிப்பட்ட பெரிய குற்றச்சாட்டுகளை அவர் கொடுக்கவில்லை.

மூன்றாவதாக, நாங்கள் எதிர்பார்த்தோம், * * * என்ற குற்றச்சாட்டை எடுத்து வைத்திருப்பாரேயானால் அதை வரவேற்றிருக்கலாம். ஆளுங்கட்சியாக வந்த ஆறு மாதத்திற்குள், நான்கைந்து நீதிபதிகளை உங்கள் கட்சிக்காரர்களை நியமித்திருக்கிறீர்கள் என்றால் வரவேற்றிருக்கலாம்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, உறுப்பினர் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவரைக் குற்றம் சாட்டலமே தவிர, நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 11-12) அகற்றப்பெற்றது.

* * என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தலாமா, அது ஏற்புடையது தானா என்பதைத் தலைவரவர்கள் ஆலோசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீதிபதிகளைப் பற்றிக் குறிப்பிட்டு அவர்கள் மீது தவறான அபிப்பிராயம் ஏற்படும் வகையில் உறுப்பினர் பேசியிருந்தால் அந்த வார்த்தைகளை நீக்குவது பற்றி உத்தரவிடுகிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவரவர்களே, நான் நீதிபதிகளைப் பற்றி குற்றம் சாட்டவில்லை. நீதிபதிகள் நியமனம் பற்றித் தான் குறிப்பிட்டேன். * * * என்ற ஒரு குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்திருப்பீர்களேயானால் வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்று தான் கூறினேன். எனவே இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுதுவதற்கு இடமில்லை என்பதை பேராசிரியர் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்பதை நான் சொல்கிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள், தலைமைச் செயலாளர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு கழிப்பிடத்துக்குக் கொடுக்கும் மரியாதையைக் கூடக் கொடுக்கவில்லை என்று. கழிப்பிடத்துக்குச் சென்றால் ஒரு நிமிடம் ஆகாது, அந்த அளவிற்கு நேரத்தை எடுத்துக் கொண்டு புலவர் கோவிந்தன் அவர்களிடம் பேசியிருக்கலாம், ஆனால் செய்யவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மாண்பு முன்னவரும் மற்றவர்களும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்குத் தக்க பதில்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பார்கள் என்று அதையும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தமுறை கொடுக்கும்போது, அன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் இருந்திருக்கின்றார்கள், ஆனால் அவர்களிடம் கொடுக்கா

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் (முற்பகல் 11-14) ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கே. பண்ணை சேதுராம்] [1978 சனவரி 5

மல் கவர்னர் அவர்களிடமே கொடுக்க வேண்டிய கால கட்டத்துக்கு வந்திருக்கின்றார்கள் என்றால், உண்மையிலேயே அவர்களை ஒரு வழியில் பாராட்டுகிறேன். இன்றையதினம் மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில்கூட மாநில சுயாட்சிக் கொள்கை இன்னும் எங்களிடம் இருந்துகொண்டுதான் இருக்கின்றது என்று.

டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்கிறேன், ஒரு காலத்தில் கவர்னர் பதவியே இருக்கக்கூடாது என்று சொல்லி, கவர்னர் அவர்களுடைய பேச்சு இந்த மாமன்றத்தில் இருந்தால், நாங்கள் 'வாக் அவுட்' செய்வோம் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் தான் இப்போது அந்த கவர்னர் அவர்களுக்குக் காவடி எடுத்துக் கொண்டு போகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள் அவர்கள்? பயங்கரமான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ள அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இப்போது இந்த அரசின் மீது எடுத்து வைக்கும் குற்றச்சாட்டுகள் என்ன? இவர்களால் என்ன குற்றச்சாட்டுகளை எடுத்து வைக்க முடிந்தது? ஆனால் இந்த ஆறு மாத காலத்திலே எவ்வளவு போராட்டங்களை அரசுக்கு எதிராக உருவாக்கிக் காட்டினார்கள்? மாணவர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம்—இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் இந்தக் குறுகிய காலத்திலே இவ்வளவு பெருமளவிற்குப் போராட்டங்களை அங்குள்ள எதிர்க்கட்சிகள் நடத்தவில்லை. பிற மாநிலங்களிலே சட்டமும் ஒழுங்கும் அமைதியாக முறையாக இருக்கின்றன, தமிழகத்திலே மட்டும் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு அடைந்து விட்டது என்று சொல்லியிருந்தால் கலைஞர் அவர்களைப் பாராட்டியிருப்பேன். ஆனால் கலைஞர் அவர்களால் எந்தவிதமான குற்றச்சாட்டையும் எடுத்து வைக்க முடியாத ஒரு பரிதாபகரமான நிலைமையில் இருக்கின்றார்.

எதிர்க்கட்சியினர், குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் அவசரகால நிலையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே அவசரகால நிலையை எதிர்த்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான், ஒரே மாநிலம் தமிழகம்தான் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். உண்மையில் சொல்லப்போனால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே அவசர நிலையை எதிர்த்து நின்ற ஒரே மாநிலம்

1978 சனவரி 5] [திரு. கே. பண்ணை சேதுராம்]

குஜராத் மாநிலமீதான். அங்கேதான், அவசர நிலையின் அடிப்படையில் மத்திய அரசிலிருந்து எந்தத் தாக்கீது வந்தாலும் அதைச் செயல்படுத்த மாட்டோம் என்று தைரியமாகச் சொல்லிவிட்டார்கள்.

ஆனால் நமது தமிழகத்திலே, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, சாராயக் கேஸ்களைப் போடுவதற்குக்கூட அவசர கால நிலையைப் பயன்படுத்தினார்கள் என்று சொன்னால், இவர்கள் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தவர்கள் என்று சொல்ல என்ன தகுதி இருக்கிறது என்று அவர்களே நெஞ்சில் கைவைத்து எண்ணிப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) ஒரு நிமிஷம், முடித்துக் கொள்ளுகிறேன். எனவே நான் சொல்ல விரும்புவதெல்லாம், நமது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியினை பிற மாநிலத்தவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு அரசியல் நிபுணர்களால் பெருந்தலைவர்களால், பாராட்டப்படுகிறது புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சி. உதாரணத்துக்குச் சொல்லுகிறேன். மதுரை கோட்ஸ் நிறுவனத்தின் நிர்வாகஸ்தர் இலண்டன் மாநகரில் இருக்கின்றார். அவர் அண்மையில் சென்னைக்கு வந்திருந்த நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். 'We never believed that an Actor l ke M G. R. would prove to be the best administrator' என்ற வகையில் வெளிநாட்டவரே புகழ்ந்திடத்தக்க அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைப் பாராட்டிப் பேசியிருக்கின்றார் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி இத் தீர்மானத்தினை எதிர்த்து அமருகிறேன்.

<u>திரு. சு. நல்லதம்பி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய நேரத்தில் குறுக்கிட வேண்டாம் என்று இருந்து, இப்போது ஒரு 'இன்ஃபர்மேஷனை' அவையின் முன் வைக்க விரும்புகிறேன். உறுப்பினர் அவர்கள் 'எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தில் மெடிகல் காலேஜ்—மருத்துவக்கல்லூரி...............

[1978 சனவரி 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;—தயவு செய்து நீங்கள் இப்போது உட்காருங்கள். உறுப்பினர் பேசிய பேச்சில் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று ஏதாவது இருந்தால் கேளுங்கள். இப்போது இது வேண்டாம். அவர் பேசிய பிறகு சுப்பு அவர்கள் பேச இருக்கின்றார்கள். திரு ப.உ. சண்முகம் அவர்கள் பேச இருக்கின்றார்கள். அவர்கள் பதில் சொல்லுவார்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. சு. நல்லதம்பி : என்னை உட்காரச் சொல்லுகின்றீர்கள். ஆனால் நான் சொல்ல விரும்பும் கருத்தினை சுப்பு அவர்களால் நான் விரும்புவதைப் போல சொல்ல முடியாது. நான்தானே தெரிவிக்க வேண்டும். மருத்துவக் கல்லூரியில் அட்மிஷன்போது பணம் வாங்கவில்லை என்று சொல்லுகின்றார்கள். பணம் வாங்கியிருக்கின்றார்கள்-இந்த அரசில் உள்ளவர்கள் வாங்கியிருக்கின்றார்கள். எனக்குப் பேச சந்தர்ப்பம் இல்லை. இருந்திருந்தால் அதற்கான ஆதாரங்களை இங்கே கொண்டு வந்து காண்பித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுங்கள். ஆனால் அவற்றைச் சபைக் குறிப்புகளிலிருந்து எடுத்துவிடச் சொல்லிவிடுவேன்.

(முற்பகல் 11·20)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : துணை சபாநாயகர் அவர்களே,

தங்களது ஒப்புதலின் பேரில் ஒரு விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் பேசும் போது (* * * *) என்று அவர்கள் பேசிய பேச்சை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னவர் சொன்னது போல் . அவர் பேசிய அந்தப் பேச்சை குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன். அந்தப் பகுதியை மட்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 11·12) அகற்றப்பெற்றது.

1978 சனவரி 5]

திரு எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நம்பிக்கை இல்லாமல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையிலே முன் மொழிந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிச்சயம் வெற்றி பெறாது; அதற்கு வாழ்வு இல்லை என்ற நம்பிக்கையோடு அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில் நானும் . நம்பிக்கை வைத்து ஒரு சில வார்த்தைகள் என்னுடைய கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும், தேசத்திற்கு தேவையான சில நன்மை பயக்கக் கூடிய விஷயங்களை சபையிலே எடுத்துச் சொல்வதற்கு மட்டும் இந்த நம்பிக்கை (இல்லா) தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்வது உண்மையாக இருந்தாலும், பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர் என்ற முறையில், இந்த அவையில் உள்ள மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள், இன்னும் உறுப்பினர்களையும் கலந்து கொண்டு, கொண்டு வருவது தான் நல்ல ஜனநாயக மரபாக இருந்திருக்கும்.

ஆனால் அதை விடுத்து, இன்றைக்கு எதிர்க் கட்சிகள் எல்லாம் கூடி, ஆளும் கட்சியோடு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கின்ற அளவுக்கு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லும் அளவிற்கு, இந்தத் தீர்மானத்தை தன்னிச்சையாக, "யார் சொல்லி என்ன, சொல்லாவிட்டால் என்ன? அவர்களை என்ன கலந்து கொள்வது?" என்ற முறையில் அவர்கள் கொண்டு வந்திருப்பது அவ்வளவு நல்லதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக கலைஞர் அவர்கள் அறிவுகூர்மை படைத்தவர்கள். அதை நான் எப்போதுமே ஒத்துக் கொள்வதுண்டு. ஆனால் இந்த விஷயத்தில் தவறி விட்டாரோ என்று எண்ணும் அளவிற்கு..................

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் லத்தீப் அவர்கள் எல்லா எதிர்க் கட்சிகளையும் கலந்து கொண்டு இதைக் கொண்டு வந்திருக்க வேண்டும்; அது தான் ஜனநாயகம் என்று சொன்னார்கள். இந்த ஆட்சியை எப்படியாவது அகற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்

திருக்குமேயானால் அப்போது எல்லாக் கட்சிகளையும் சேர்த்து, ஆள்களைச் சேர்த்து அதிக வோட்டு வாங்கும் பெரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பேன்.

ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பேரவையின் விதிமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டு பல பிரச்சினைகளை இந்த அரசுக்கு நினைவூட்டி அவர்களை விடுவிக்க இந்தத் தீர்மானம். ஆகவே, ஆள் சேர்த்து, அணிதிரட்டி, அரசாங்கத்தை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்பதை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அதிலே தான் அடிப்படைக் கோளாறே இருக்கிறது என்பது என்னுடைய வாதமாகும். எந்த மருந்தை எது எதற்குப் பயன்படுத்த வேண்டுமோ அதை அதற்குத்தான் பயன்படுத்த வேண்டும். 'டைபாய்ட்'டுக்கு கொடுக்க வேண்டிய மருந்தை 'ஹார்ட் டிரபிளுக்கு', அல்லது ரத்த அழுத்தத்திற்குக் கொடுக்க வேண்டிய மருந்தை கொண்டு போய் ஜுரத்தில் துடித்துக்கொண்டிருக்கிற ஒருவனுக்குக் கொடுப்பது மருத்துவ முறைப்படியும், மற்ற முறைப்படியும் தவறு என்ற முறையில் அந்தந்த மருந்தை அந்தந்த வியாதிக்குத்தான் தரவேண்டுமே தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதாகச் சொல்லி, இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை; அதை அகற்ற வேண்டும் என்பதற்காகத் தான் கொண்டுவரவேண்டுமே தவிர—அதை அகற்ற வேண்டும் என்பது மட்டுமல்ல; அவர்களை அகற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம் 'ஆல்டர்னேடிவ் கவர்ன்மெண்ட்' என்று, அவர்கள் இன்றைக்கு ஆட்சியிலே இத்தனை தவறுகள் செய்திருக்கிறார்கள். ஆள்வதற்குத் தகுதியில்லை. அவர்களை அகற்றிவிட்டு நாங்கள் வருவதற்கு தகுதி உள்ளவர்களாக இருக்கிறோம். ஆளத் தயாராயிருக்கிறோம் என்ற ஒரு ஆல்டர்னேடிவ், ஒரு மாற்றுத் திட்டத்தோடுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமே தவிர ஏதோ இந்த அவையில் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும் அதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன் என்று அவர்களாகவே சொல்வதில்தான் அடிப்படையில் தவறு இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேனே தவிர வேறு அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஒரு கடைசி ஆயுதம். அந்தக் கடைசி ஆயுதத்தை மிக ஜாக்கிரதையாக நாட்டு நன்மையை உத்தேசித்து, இந்த அவையினுடைய நேரத்தைக் கருதிக் கொண்டுவரவேண்டும்.

நாட்டிலே இன்று இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் கவனிக்க வேண்டிய கடப்பாடுகள், கடமைகள் அத்தனையும் தள்ளி வைத்துவிட்டு— இன்று புயல், வெள்ளம் சேதங்களைப் பற்றி பேசுகிறோம், அதனால் ஏற்பட்ட பாதகங்களைப்பற்றி ஆய்வு செய்து நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய கட்டாயம் இருந்தாலும் இவைகளை எல்லாம் தள்ளிவைத்துவிட்டு மிகவும் அவசர அவசரமாக இந்த ஆட்சியை அகற்றுவதற்கு, இந்த ஆட்சி ஒரு நிமிடம் இருந்தாலும் நாட்டுக்கு ஆபத்து. ஆகவே அவர்களை அகற்றிவிட்டுநாங்கள் வரத்தயாராகியிருக்கிறோம் என்ற அடிப்படையில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வரவேண்டுமே தவிர ஏதோ நான் விரும்பினேன், ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதற்காக அல்ல, நான் விரும்பினேன். சில 'விஷயங்களைச் சொல்லுவதற்காக'க் கொண்டு வந்திருக்கிறேன், ஆகவே உங்களையெல்லாம் கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் சொல்வார்களேயானால் அது அவர்கள் நல்லெண்ணத்தை, அவர்களுடைய அந்த உணர்வுகளை நாம் தெரிந்துகொள்ளலாமே தவிர இந்த அவையில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய மரபுகளுக்கு அது ஆக்கமும் ஊக்கமும் அளிக்காது, அது ஜனநாயக முறைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்காது என்பதை மிக்க பணிவன்புடன் எனது பெரு மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர், கலைஞர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவேதான் நான் முன்பே சொன்னேன், அவர்கள் மிக கூர்மையான புத்தி படைத்தவர்கள், மிகச் சிறந்த அறிவாளி, நிர்வாகி, ஜனநாயகத்தில், இந்த அவையின் மரபுகளின் மிகப் பெரிய பயிற்சி பெற்றவர்கள், ஆனால் ஏனோ தெரியவில்லை இதில் தவறிவிட்டார்.—யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே, அதேபோல் இதில் அவர்களுக்கு அடி சறுக்கிவிட்டது— என்றுதான் சொன்னேனே தவிர வேறு அல்ல.

நேற்றைய தினம் அவர்கள் இந்த அவையில் ஒரு குறிப்பினை கொடுத்தார்கள். ஐவர் ஜென்னிங்க்ஸை அவர் தமக்கு ஆதரவாக இங்கு எடுத்துக்காட்ட சில விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். ஐவர் ஜென்னிங்க்ஸ் அவர்கள் ஒரு மாபெரும் மேதை, ஐவர் ஜென்னிங்க்ஸ் அவர்கள் பார்லிமென்ட் என்ற இந்த நூலில் மிக அழகாகக் குறிப்பிடுகிறார்கள்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 சனவரி 5

'The Opposition is compelled by the logic of the parliamentary system 'to adopt a responsible attitude. It is not only His Majesty's Opposition but also His Majesty's alternative Government. . .'.

மாட்சிமைதங்கிய மன்னர் அரசாங்கத்தின் எதிர்க்கட்சிமட்டுமல்ல, மாட்சிமை தங்கிய மன்னர் அரசாங்கத்தின் மாற்று அரசாங்கம் என்பதை எதிர்க்கட்சி வரிசையில் பிரதான எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் உணர்ந்தாக வேண்டும். அந்த உணர்வில் அவர்கள் செயல்படவேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் படித்த அந்தப் புத்தகத்தை நானும் படித்தேன். அந்தப் பகுதி போதாது. அதற்கு மேல் இருக்கிற பகுதியையும் படிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அதற்கும் போகின்றேன்.

'It presents itself to the electorate in that capacity'

இது மாற்று சர்க்கார் என்ற உணர்வு மட்டுமல்ல, அது எப்போதைக்கெப்போது செயல்படுகிறதோ அப்போதெல்லாம் தன்னுடைய 'தூய்மையான நியாயமான செயல்கள்' வாயிலாக நாட்டு மக்களுக்கு நாங்கள் மாற்று சர்க்காரை அமைக்க தகுதி படைத்தவர்கள் என்ற வகையில் அவர்கள் அவர்களது செயல் திட்டங்களை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

'It asks for a mandate to govern. It must, therefore show its capacity to govern in the parliamentary arena'......

பார்லிமெண்டரி எரினா. ஆளுவதற்கான தகுதியை நாங்கள் படைத்திருக்கிறோம் என்பதை அவையிலே அவர்கள் நிருபணம் செய்ய வேண்டும். அப்படி நிருபணம் செய்வது என்பது வார்த்தைகளால் அல்ல. தங்களுடைய நடத்தை இந்த அவையில் மரபுகளைக் காக்கிற வகையில், இந்த அவையின் நெறிமுறைகளைக் காக்கிற வகையில், இந்த அவையின் மாண்புகளை உயர்த்துகிற வகையில் அவர்கள் செயல்களின் வாயிலாக நிருபணம் செய்ய வேண்டும். பொறுப்புள்ள எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் என்று ஐவர் ஜென்னிங்க்ஸ், அந்த மாமேதை தெளிவாகச் சொல்கிறார்கள்.

1978 சனவரி 5] [திரு. எம். ஏ. லத்தீப்]

(முற்பகல் 11-30)

'It must, therefore, show its capacity to govern in the parliamentary arena. Premises sown and *broadcast* produce a harvest that has to be reaped' . . . . . .

எந்த விதையை விதைக்கிறார்களோ, அதைத்தான் அறுவடை செய்ய வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதை நான் எடுத்துச் சொல்வதற்கு காரணம், இங்கு நீண்டபெற்ற இத்தரப்பிலிருந்து பேசப்பட்ட பேச்சுக்களும், அத்தரப்பிலிருந்து பேசப்பட்டபேச்சுக்களும் அந்த அளவுக்கு இருந்தன. இதில் என்னென்ன குற்றச்சாட்டுகளை சொல்லுகின்றார்களோ அதற்கு 'ரிபட்' செய்கின்ற அளவில், நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளை மறந்துவிட்டு, எந்தெந்த வழிகளில் எல்லாம் முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் வன்முறை செயல்களில் ஈடுபட்டார்கள். இதனால் யார் யாரெல்லாம் பாதிக்கப்பட்டார்கள், யார் யாரெல்லாம் எப்படிப்பட்ட சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள் என்கின்ற கடந்த கால நிகழ்ச்சிகளை எல்லாம் தெரிவிக்க ஆளும் கட்சிக்காரர்கள் கடமைபட்டிருக்கிறார்கள் என்கின்ற முறையில் பதில் தரக்கூடிய கட்டாயத்திற்கு ஆக்கப்படுகிறார்கள் என்பதுதான் இந்த அவை எடுத்துக் காட்டுகிறதே யொழிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதை எதை சொல்லி இன்னின்ன காரணங்களுக்காக இன்னின்ன செயல்கள் செய்யப்படவில்லை என்கின்ற அடிப்படையில் கொண்டுவராத காரணத்தினால், அடிப்படையில்லாத தீர்மானமாக கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால்—அதுவும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆட்சியை கவிழ்த்துவிடலாம் என்று இதைக் கொண்டு வரவில்லை. ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னதிலிருந்தே இந்தத் தீர்மானத்தின் மாட்சிமை, இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவம் போய்விட்டது, அவர்கள் கொண்டு வந்தது அவர்களாலேயே கொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி பிறந்தவுடனேயே அது இறந்துவிட்ட காரணத்தினால் அதற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். . . . .

'Wild obstruction frightens the timid into calmer waters All Oppositions are, to their opponents, factious and irresponsible, but the word goes round whether they are good or bad.

The Opposition's appeal is inevitably to the electorate...'

இங்கே இது மக்களுக்கு சில விஷயங்களை, எலக்டரேட் அதாவது அடுத்து வருகின்ற தேர்தலில் ஆதரவு பெருக வேண்டும் என்று எண்ணி சில விஷயங்களை சொல்லுவது அவர்களுடைய உரிமை. அடுத்த தேர்தலில் (எலக்ஷனில்) அவர்கள் எடுத்துச் சொன்னவைகளை—அவர்களுடைய எண்ணங்களை செயல்படுத்தியதையும், அதற்கான ஆதாரங்களையும் எடுத்து வைத்து சொல்ல சர்க்கார் கட்சி கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்சினையை அணுகியிருப்பது சரியாக இல்லை, இன்னின்ன பிரச்சினைகளை சரியான முறையில் சர்க்கார் எடுத்துச் கொள்ளவில்லை, மக்களுடைய வாழ்வு உயர்வதற்கு இன்னின்ன செய்ய வேண்டும். அதைச் செய்ய இவர்கள் தவறிவிட்டார்கள் என்று சொல்லி அதற்குரிய ஆதாரங்களை எல்லாம் எடுத்துக்காட்டினால் அதை நான் பாராட்டியிருக்க முடியும்.

ஆனால், இங்கே வந்திருப்பது என்ன ? சொந்தக் காரியங்கள். சொந்த முறையில் என்னென்ன தவறுகள் நடைபெற்றன யார் யாரை ஜெயிலில் போட்டார்கள், எதற்காக இதெல்லாம் நடந்தது, என்கின்ற விஷயங்களை பற்றியெல்லாம், நாட்டு மக்களை மறந்துவிட்டு, நாட்டுப் பிரச்சினைகளை மறந்துவிட்டு, சொந்தக் காரியங்களுக்காக ஏற்பட்ட ஆத்திரங்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருப்பதை இந்த அவையில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது ஒரு நல்ல முறை அல்ல என்பதை நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதை நாம் அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நமது நாட்டில் புயல் வந்திருக்கிறது, இந்த ஆட்சி

கதவடைப்புகள், எத்தனை வேலை நிறுத்தங்கள், எத்தனை போராட்டங்கள், கிளர்ச்சிகள், நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அமளி துமளிகள், இப்படியெல்லாம் இருக்கும் போது ஒரு நாட்டிலுள்ள சர்க்கார் செய்ய வேண்டிய வேலையை எப்படிச் செய்ய முடியும் ? ஒரு சர்க்கார் செய்ய வேண்டிய வேலை, நாட்டு மக்களுக்கு சாப்பாடுபோட வேண்டும், அதற்கு பொதுவாக நாட்டில் அமைதி இருக்க வேண்டும். தொழில் உற்பத்தி பெருக வேண்டும் என்றும் தொழில் துறையில் அமைதி இருக்கவேண்டும் நாட்டில் கல்வி பெருக வேண்டுமென்றால், பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் அமைதி இருக்கவேண்டும். நாட்டு மக்கள் அமைதியாக இருக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியது ஒவ்வொரு சர்க்காருடைய கடமை என்ற முறையில். . .

இன்றைக்கு இந்த சர்க்கார் எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. அதற்கான காரியங்கள் ஆற்றவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு வேலை தருகிறோம் என்று சொன்னார்கள், அதைச் செய்யவில்லை. இதைச் செய்கிறோம் அதைச் செய்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள் ; ஆனால் எதையும் செய்யவில்லை செய்யவில்லை என்று சொல்கிறார்களே, அதற்கான என்ன ஆதாரங்கள் உங்களிடத்திலே இருக்கின்றன ? என்ன ஆதாரங்களை இந்த அவையின் முன் வைத்திருக்கிறீர்கள் ? நீங்கள் பேசுகின்ற பேச்சுத்தான் ஆதாரம் என்று சொன்னால், அந்தப் பேச்சையே நாம் ஆதாரமாக எடுத்துக் கொள்வதா ? எனவே, நல்ல ஆதாரங்கள் வேண்டும்.

நான் சொல்கிறேன், இந்த ஆறு மாத காலத்தில் இந்த சர்க்கார் எத்தனையோ பிரச்சினைகளைச் சமாளித்து, அவர்கள் செயல் பட்டிருக்கின்றதைப் பார்க்கின்றபோது, பிரமிப்பாக இருக்கிறது. இப்படி இந்த அரசு செயல் பட்டுக் கொண்டிருப்பதை, யாரும் மறுத்து விடமுடியாது. அதையே அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

'Alternative Government. Shadow Cabinet. Opposition is the Shadow Cabinet, Opposition Leader is the Shadow Chief Minister.'

என்று சொன்னால், எப்படி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து கொண்டு, மிகுந்த அக்கறையோடும், கடமையோடும் நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றிக் சிந்தித்துச் செயல்படுகிறார்களோ, அந்த

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 சனவரி 5

அளவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் பொறுப்புண்டு.

The Leader of the Opposition is, for all practical purposes, the person who declares himself as an alternative Chief Minister. The Leader of the Opposition is the person who declares and presents himself to the people as the Leader of the alternative Party to form a Government and take up the onerous responsibility of guiding the destiny of the Nation. If that is so, he should have, as the Leader of the Opposition also, the same sense of responsibility which the Hon. Chief Minister has and possesses. He is also obligated to the people of the State. It is for him to see along with the Hon. Chief Minister and along with the Members of the Treasury Benches to maintain normalcy in the State, to see that law and order in the State is safeguarded, to see that the rights of the working people are safeguarded, to see that the industries do work, to see that educational institutions do function in the normal way and to see that the normal rights, the day-to-day rights of the Citizens of the State are safeguarded. It is for him, as the Leader of the Opposition, to give his unflinching co-operation to the Government. Instead of that, we see all sorts of hurdles, and all sorts of obstacles are being caused in the way of the Government to implement the schemes.

The Government have declared on the floor of the House, through the Governor's Address, that they are wedded to the development schemes which ought to be implemented if the prosperity and development have to be sustained in the industrial and economic fields of our State. But no co-operation is coming forth from the Opposition. Instead of that, the Opposition wants the Government to go away. But I would like to pose the question ; 'If this Government go away, who is the alternative Leader to form the Government ? Do you want anarchy ?

இந்த மாநிலத்திலே இந்த அரசாங்கம் இல்லையென்றால் அதற்கான மாற்றுத் திட்டம் என்ன? அப்படி மாற்று அரசாங்கம் நடத்த நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் அதற்குத் தயாரா? ஆனால், நீங்களே சொல்கிறீர்கள். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இதைக் கொண்டு வரவில்லை என்று சொல்லும்போது,

1978 சனவரி 5] [திரு. எம். ஏ. லத்தீப்]

You have neither capacity nor numerical strength or the political base to form an alternative Government in the State. At the same time, you ask the Hon. Chief Minister and other Members of the Treasury Benches to go out. If the Government go out who is there and who has got the capacity to sit on the Treasury Benches? This Motion is only a media to attract the attention of the people of the State, the electorate.

(முற்பகல் 11-40)

That image should be used in the best interests of the State. He should see that the follies, the mistakes, the omissions and commissions of the Government are brought to the notice of this House and also the people. After all, should not this Government be given an opportunity ? No opportunity has hitherto been given to this Government. That is my charge.

I hold the Opposition guilty for not giving an opportunity to this Government. Without giving an opportunity to them, you have brought forth the extreme steps, I would say, in order to misuse the legislative machinery, to hamstring the working and functioning of this House, from the way in which it ought to function.

There are problems. Mr. Speaker, like the suffering of the people and the Hon. Leader of the Opposition and the members of his party do not have any sense of responsibility to redress the sufferings of the people of the State. Instead of giving helping hand of co-operation and assistance to the members of the treasury benches who have got . . .

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் நல்ல முறையில் தன்னுடைய உரையை ஆற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் குறுக்கிடுவதற்காக உண்மையிலேயே வருந்துகிறேன். அவர் தன்னுடைய பேச்சிலே ஒரு கருத்தைச் சொல்லும்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், வெளியிலே இருக்கும் மக்களைப் பற்றிக் கவலையில்லாமல் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்ற வார்த்தையை ' இர்ரெஸ்பான்சிபிள் ' என்ற வார்த்தைச் சொன்னார்கள்........

திரு. எம். ஏ. லத்தீப்: I never said like that. I will be the last man to say that.

நான் அப்படிச் சொல்ல மாட்டேன், அப்படிச் சொல்லுவதில் நான் கடைசியாக இருப்பேன், பேசுவதை பொறுப்பற்ற பேச்சு என்று சொல்லவில்லை. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை, உரிமைகளை பொறுப்பற்ற முறையில் பயன்படுத்தலாமா என்பதைத்தான் கேள்வியாக வைக்கிறேனே தவிர வேறல்ல.

என்னைப் பொறுத்தவரையில் சரியான திட்டங்களோடு இந்த நாட்டு மக்களுடைய நன்மைக்காக—இந்த நாட்டிலே இன்றைக்கும் எத்தனையோ பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களாகவே எவ்வளவோ பிரச்சினைகளைச் சொல்லுகிறார்கள். அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைக்கவேண்டுமென்று சொன்னால் நாம் பொறுப்புள்ள முறையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? யார் அந்த பிரச்சினைகளைத் தீர்க்க கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்களோ, பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அந்தக் கடமையைச் செம்மையாக நிறைவேற்ற, முழுமையாக நிறைவேற்ற, திடமாக நிறைவேற்ற, தடங்கல் இல்லாமல் நிறைவேற்ற நாம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

அப்படி அவர்கள் நிறைவேற்றுகிற நேரத்தில் தவறுகள் இருக்குமானால் சுட்டிக்காட்டுவதிலே நாம் தயங்கக்கூடாது என்று சுட்டிக்காட்டக்கூடிய கடமை நிச்சயமாக எதிர்க்கட்சிக்கு உண்டு. இதை யாரும் மறுக்கவில்லை. எதிர்க்கட்சிகள் இதன் வாயிலாக சில அம்சங்களை எடுத்துச் சொல்லி அரசாங்கத்தின் மீது ஒருவிதமான எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்த அது கடைசி நேரத்தில் ஓராண்டு, இரண்டாண்டுக்குப் பிறகு என்று இல்லாமல் இப்போதிலிருந்தே ஆரம்பித்துவிடலாம் என்று நினைத்து இதை அவர்கள் கொண்டுவந்திருப்பார்களானால்......

to draw attention and influence the minds of the electorate, if the Leader of the Opposition had brought this no-confidence motion, then I would say with all sense of regret that the Leader of the Opposition has miserably failed in his attempt to draw the attention of the electorate of the State of Tamil Nadu. Therefore, Mr. Speaker, I submit with all sense of

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்
தீர்மானம் குறித்து விவாதம்

responsibility, on my behalf and on behalf of the party to which I have the honour to belong, that this motion of no-confidence is in effect a motion of no-confidence in all the established principles, precedents and conventions that are to be observed by responsible members of this House. It is a no-confidence motion against these conventions, which the Leader of the Opposition has now brought. You know what will be the fate of this no-confidence motion and as such I am not in a position neither to appreciate nor to understand nor to support the resolution that is now moved by the Leader of the Opposition. This is an exercise in futility. This has been brought with a narrow motive, a narrow political motive or there may be some other reasons best known to the Leader of the Opposition himself. I do not want to travel in those areas. It is not for me to travel in those areas but let me say that so long as I have the right to oppose the motion, I will oppose it. I differ from the Leader of the Opposition and I will continue to differ, so long as I have the right to differ because the right to differ is the basis upon which the Parliament and Legislatures function and it is not only a question of difference but it is a question of misunderstanding of the privileges and misapplication of the rights and as such it is not worthy of any notice and therefore it should be dismissed *in limine*. With these words, I would like to end.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கே இதுவரையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுஅளவிலே எதிர்க்கவும் மறுக்கவும் கண்டிக்கவும் எல்லா உரிமைகளையும் பெற்றவர். ஆனால் சட்டமன்றத்திலே உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள், privileges are used in a wrong manner, என்ற கருத்துப்பட அவர்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னது சட்டமன்ற உரிமைகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பிலே உள்ள அவைத் தலைவர் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாக இருக்கிறது. சட்ட மன்ற உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்வது, அரசியலிலே லாபம் இருக்கலாம், இழப்பு இருக்கலாம்; அது பயன் தரலாம், பயன் தராமல் இருக்கலாம்; சிலருக்கு விருப்பமாக இருக்கலாம், சிலருக்கு வெறுப்பாக இருக்கலாம்; வேறு என்ன என்னவோ காரியங்களுக்காக அது இருக்கலாம். ஆனால்

சட்டமன்ற உரிமையை, நடைமுறையை தவறாகப் பயன் படுத்தினார்கள் என்று திரும்பத் திரும்ப அவர்கள் சொல்வது அவை உரிமையை மீறுவதாக ஆகாதா என்பதையும் அதை அவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> திரு அன்பழகனோடு எனக்கு ரொம்ப பழக்கம். மகிழ்ச்சியாக இருக்கிறது. We were colleagues in Parliament for number of years. அங்கே கூட அடிக்கடி நோ கான்பிடன்ஸ் மோஷன்கள் வரும். அப்போது ரூலிங் பார்டியிலே ஒரு பதிலைச் சொல்வார்கள். அந்த உரிமையை துர்விநியோகம் செய்கிறார்கள் என்றுதான் சொல்வார்கள். அப்படிச் சொல்வதிலே தவறு ஒன்றும் இல்லை. அது அன்பார்லிமெண்டரியா என்று அவர்கள் கேட்பது சரியல்ல. You can defend always. உங்கள் சார்பாக உங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினர் உரிமையைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டார் கள் என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறது சொல்லட்டும். ஆனால் இங்கே சட்டமன்ற உரிமைகளை மரபுகளை மீறுகிற அளவிற்கு கொண்டுவந்திருக்கிறார்கள் என்று பேசப்பட்டு இருக்கிறது. அதைத் தாங்கள் படித்துப்பார்த்து சட்டமன்ற மரபுக்கு விதிகளுக்கு முரண்பாடாக இருக்குமானால் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். இப்படி நம்பிக்கை யில்லாத்தீர்மானம் கொண்டுவருவது ஜனநாயக முறையிலே ஒரு வாய்ப்பு ஆக இருக்கிறது. எத்தனையோ முறைகள் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்து எப்போதுமே வெற்றியடைந்திருப்பதாக உலகத்திலே எந்த பாராளுமன்றத்திலேயும் நடைபெற்றதில்லை 100-க்கு 99 முறைகள் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தோல்வியுற்றுத்தான் போகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதும் இப்படிப்பட்ட நம்பிக்கை யில்லா தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. ஆனால் நண்பர் லத்தீப் அவர்கள் எப்போதுமே நம்பிக்கை யில்லாத்தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொறுப்பை ஆற்றியிருக்கிறார். அவர் சொன்ன வாசகங்கள் பேரவையின் மரபுக்கு, விதிகளுக்கு முரணாக இருக்குமானால் தாங்கள் படித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் ;</u> That is why I told the House that there is right to differ. This is my opinion. I do not cast any aspersion. I have the right to differ. I have mentioned it. He understands it in a different way. I understand it in a different way. He always understands in a different way. That is his right. I do not oppose it. He says that I am there always to defend no-confidence motion. I am a confident man. I never have no-confidence. நான் எப்போதும் நம்பிக்கை உள்ளவன். நம்பிக்கையிலே நம்பிக்கை வைத்து இருக்கிறவன். அவருக்குச்சில நேரங் களிலே நம்பிக்கையில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பு இல்லை. இந்த நம்பிக்கையில்லாத, நம்பி, கையில்லாத தீர்மானத்தை நான் எதிர்த்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கனம் உறுப்பினர் அவர் கள் உரிமையின்படி பேசியதால், இதில் தவறு ஒன்றும் இல்லை என்பதால் நான் அதை அனுமதிக்கிறேன்.

(முற்பகல் 11·50)

(2) <u>அறிவிப்புகள்</u>—தொடர்ச்சி.

(ஆ) <u>பேரவை அலுவல் குறித்து</u>.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவுகளைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நாளை (6–1–1978) முற்பகலில் நடைபெறும்.

2. நாளைய தினம் வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

3. நாளை பிற்பகல் 4 மணி முதல் தனியார் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

4. மற்ற நாட்களின் நிகழ்ச்சிகளில் மாறுதல் இல்லை.

[1978 சனவரி 5

(3) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் இந்த மந்திரிசபையின்மீது நம்பிக்கை இல்லை என்று கொடுத்த இந்தத் தீர்மானத்தைப்பற்றிய விவாதத்தில் ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசிய தோழர் ரமணி அவர்கள் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்பதற்கில்லை, இதை நாங்கள் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இன்றைக்கு இங்கே பேசும்பொழுதும் குறிப்பிட்டார்கள், இந்தப் பேரவை விதிகளிலே அரசாங்கத்தினுடைய பொதுவான கொள்கைகள், நடைமுறைகளைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதிப்பதற்கு வேறு வழிகள் இல்லாத காரணத்தினால் அப்படிப்பட்ட ஒரு விவாதத்தை நடத்துவதுதான் இதனுடைய நோக்கம் என்பதைக் குறிப்பிட்டார்கள்.

நான் சொல்வது என்னவென்றால், இப்படிப்பட்ட ஒரு அரசாங்கத்தினுடைய பொதுவான கொள்கைகள், நடைமுறைகளைப்பற்றி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பதைக்கொடுக்காமலேயே, காலாகாலங்களில் விவாதிப்பதற்கு வழிமுறைகளை நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்படுத்தினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொடுத்துத்தான் ஒரு அரசாங்கத்தினுடைய பொதுவான கொள்கைகளையும், நடைமுறைகளையும் விவாதிக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்படாது. அதை நம்முடைய அனுபவத்தின் அடிப்படையிலே நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

ஆனால் இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருப்பதில் அதற்கான ஆதாரங்கள் போதுமான ஆதாரங்களாக இல்லை என்ற காரணத்தால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதை எதிர்க்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் ஜனநாயக இயக்கம், மக்களுடைய ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும், அந்தப் போராட்ட இயக்கம் பலபட வழிவகை வேண்டும் என்பதுதான் எங்க

1978 சனவரி 5] [திரு. என். சங்கரய்யா]

ளுடைய கட்சியின் குறிக்கோளாகும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, எதிர்க்கட்சித் தலைவரவர்களால் இங்கே கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திலேயே அந்தக் கட்சியினர் தங்களது சில கொள்கைகளைப்பற்றி மறுபரிசிலனை செய்வார்களேயானால், இம்மாதிரியான விமர்சனங்களைச் செய்வதற்குக்கூட அவர்களுக்கு மேலும் கூடுதல் சக்தி இருக்கும்.

ஆனால் நான் அடுத்தாற்போல் குறிப்பிடக்கூடிய பல இனங்கள் இருப்பதால் அவர்கள் சொல்லும் பல வாதங்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன என்பதை நான் மிகுந்த நட்பு முறையிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவது பிரச்னை, திருமதி இந்திராகாந்தி தமிழ்நாட்டிற்கு வந்திருந்த பொழுது, சென்னையிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும், அதில் சில நண்பர்கள் இறந்து தியாகிகள் ஆனார்கள் என்று கூறப்படுவது பற்றியும். ஆனால்வாஸ்தவத்திலேயே அரசியல் மொழியிலே சொல்ல வேண்டுமென்றால், ஒரு அவசரகால நிலைமைப் ரகடனத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் பிரதம அமைச்சருக்கு எதிராக ஜனநாயக உரிமையைப் பெறுவதற்காக நடந்த இயக்கத்தில் அவர்கள் இறந்தார்கள் என்று சொன்னால் அரசியல் ரீதியிலே அது நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்களில் பலபேர்கள் பிரசங்கங்களிலும், பத்திரிகைகளிலும், இது முதலாவது தமிழனின் பலி, இரண்டாவது தமிழனின் பலி, மூன்றாவது தமிழனின் பலி என்று தமிழர்களுடைய பலியாகத்தான் அது சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இந்தியா பூராவும் இந்த அவசரகால நிலைமை கொண்டு வந்ததை எதிர்த்த இந்திய மக்களுக்கு இதில் பங்கு இல்லையா ? தமிழனின் பலி என்றால் என்ன ? அதைச் சொல்லாமல் விடுகிறார்கள்.

இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக் கூடிய முதலமைச்சர் வேறொரு இனத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஆட்சியிலே இவ்வாறு தமிழர்கள் பழி

[திரு. என். சங்கரய்யா] [1978 சனவரி 5

வாங்கப்பட்டார்கள் என்று பொருள்படும் முறையிலே, பல மொழிகளைப் பேசும் மக்கள் மத்தியிலே விரோத உணர்ச்சி ஏற்படும் அளவிற்கு இந்தப் பிரச்சாரம் நடைபெறுகிறது. இன்றைக்கு முதலமைச்சராக இருக்கக்கூடிய தலைவர் 1972ஆம் ஆண்டு வரையில் திராவிடமுன்னேற்றக் கழகத்தினுடைய பெருந்தலைவர்களில் ஒருவராக இருந்த பொழுது இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை. அப்பொழுது இந்த இனப் பிரச்னையோ, மொழிப் பிரச்னையோ ஏற்படவில்லை. அந்தக் கட்சியில் பிளவு ஏற்பட்ட பிறகு இப்படி ஒரு ட்விஸ்ட், இன்றைக்கு அரசியல் ரீதியிலே ஒரு நிலைமையை உண்டாக்குவதற்காக இதைச் சொல்வதன் மூலம் என்ன ஏற்படுகிறது?

தமிழ் நாட்டிலேயுள்ள மக்கள் மத்தியிலே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் என்பது, ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு வன்முறை என்பதற்குப் பதிலாக அதை ஒரு இன வெறி உணர்ச்சி என்று தூண்டக் கூடிய அளவுக்குத் தமிழ் நாட்டிலே வாழக்கூடிய மலையாள மக்களுக்கு எதிரான ஒரு உணர்ச்சியாகத்தான் அது பயன்படும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இப்பொழுது உள்ள அந்த உணர்ச்சி அவர்களுடைய நிலையைப் பலப்படுத்தாது.

அதே போல், இலங்கைத் தமிழர் பிரச்னை. அந்தப் பிரச்னையிலே இறுதியாகப் பார்த்தால், அத்தமிழர்கள் இலங்கையிலே வாழ வேண்டியவர்கள். அவர்கள் இங்கே வந்து தமிழகத்திலே வாழ முடியாது. ஆகவே, அங்கேயிருக்கிற சிங்கள மக்களோடு சேர்ந்து தான், அந்தத் தமிழர்கள், சிறுபான்மையினர், தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். அதற்கொப்ப, பக்குவமான, விவேகமான, நிதானமான போக்கில் நாம் போகும்போது, அவர்கள் அந்தப் பிரச்னையையும், தமிழனா, சிங்களவனா, என்ற சிறிய கோணத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, அதிலே, தற்காலிகமாக தமிழ்நாட்டு மக்களுடைய இன உணர்ச்சிகளைக் கிளப்பலாம் என்று எண்ணினார்கள். ஆனால், அதன் மூலம் என்ன செய்யமுடியும்? இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்கள் உரிமையை, இங்கே நடக்கக்கூடிய ஆர்ப்பாட்டங்களால் நிறுத்த முடியுமா? அங்கே தமிழர்கள் கொடுமையாக நடத்தப்பட்டார்கள், தமிழர்கள் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கொலை செய்யப்பட்டார்களென்று

1978 சனவரி 5] [திரு. என். சங்கரய்யா]

பிரச்சாரம் செய்தால், சிங்கள மக்களுக்கெதிராக வெறியைத் தூண்டுதலாகும். எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் அனுஷ்டித்த கொள்கை இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்யவில்லை. ஆனால், பாதகம் தான் ஏற்படுத்தியது என்பதையும் நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

நடைமுறையிலே பார்த்தால், ''கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்து எழுந்து'' என்று மனோன்மணீயத்திலே, சுந்தரம் பிள்ளை பாடியிருக்கிறார். அப்படி எல்லாம் ஒன்று என்று பேசக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை கடந்த காலத்திலே அப்படித்தான் நடந்து வந்தது. ஆனால், இப்பொழுது எப்படி நடந்து வருகிறது? பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் தொழிற்சாலையிலே, அங்கீகரிக்கப்பட வேண்டிய சங்கத்தைத் தேர்ந்தெடுக்க, தொழிலாளர்களே தேர்ந்தெடுக்கக்கூடிய இரகசிய வாக்கெடுப்பு நடந்தது. அப்பொழுது சி.ஐ.டி.யூ. போட்டியிட்டது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கம் போட்டியிட்டது. ஜனதா தொழிற் சங்கம் போட்டியிட்டது, திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது. அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பிரச்சாரம் செய்தார்கள். என்ன பிரச்சாரம் செய்தார்கள்? சி.ஐ.டி.யூ. முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு வாக்கு போடாதீர்கள் என்று பேசியிருந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் வரவேற்கலாம் ஆனால், அவர்களுடைய பேச்சினுடைய சாராம்சம் என்னவென்றால், சி.ஐ.டி.யூ. தலைவர் யார் தெரியுமா? கே. ரமணி. அவர் ஒரு எம். அதாவது எம். என்றால் அவர் ஒரு மலையாளி. சி.ஐ.டி.யூ.வின் மாநிலப் பொதுச் செயலாளர் யார் தெரியுமா? தோழர் உமாநாத். அவர் ஒரு எம். அதாவது அவர் ஒரு மலையாளி. சென்னையிலே இருக்கிற சி.ஐ.டி.யூ. தொழிற் சங்கத் தலைவர் யார் தெரியுமா? வி. பி. சிந்தன். அவர் ஒரு எம். அதாவது, அவர் ஒரு மலையாளி. ஆகவே, பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸில் இருக்கிற தொழிலாளர்களே, இந்த சி.ஐ.டி.யூ. என்ன தெரியுமா? எம்.களைக் கொண்டது (குறுக்கீடு) மார்க்சிஸ்ட் என்று சொல்லியிருந்தால்தான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்போமே.

[திரு. என். சங்கரய்யா] [1978 சனவரி 5

திராவிட நாட்டில் இந்த இனத்தவர்கள் உள்ளடங்கியுள்ளார்கள் என்ற வகையில் தான் அண்ணா அவர்கள் தலைமையிலே ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். ஒன்றுபட்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அப்படிப்பட்ட இயக்கத்திலே திராவிட மொழிகளைப் பேசுகின்ற, இவர்களைப்பற்றி இவ்வாறு பேசப்பட்டது. தோழர் வி. பி. சிந்தனும், தோழர் ரமணியும், தோழர் உமாநாத்தும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்புமாவதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்பே எங்களோடு சேர்ந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சிறைத் தண்டனை பெற்றவர்கள். தோழர் ரமணி அவர்கள், அப்பொழுதே, கோவையிலே பஞ்சாலைத் தொழிலாளியாக வேலையிலிருந்து தொழிற்சங்கம் ஆரம்பித்து, சகல பகுதி மக்களுடைய ஆதரவைப் பெற்று, தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார். அதே போல்தான் மற்ற தலைவர்கள்.

இன்றைக்கு நான் கேட்க விரும்புகிறேன், நம்முடைய தொழிலாளிகள், தமிழ் நாட்டிலே இருக்கிறவர்கள், வேறு எங்கும் போவதில்லையென்று நினைப்பது தவறு. பத்தான்கோட்டிலே தமிழர்கள் வேலை செய்கிறார்கள். அஸ்ஸாம் எண்ணெய் வயல்களிலே தமிழர்கள் வேலை செய்கிறார்கள். வங்காளத்தில், தமிழர்கள் வேலை செய்கிறார்கள். பம்பாயிலே வேலை செய்கிறார்கள். சிவ சேனை பம்பாயில் தமிழர்களைத் தாக்கியபோது எவ்வளவு கடுமையாகச் சாடினோம். சிவாஜி சேனையின் தூண்டுதலால், மராட்டியர்கள், மலையாளிகளுக்கு, தமிழர்களுக்கு, தெலுங்கர்களுக்கு, கன்னடத்தவர்களுக்குக் கொடுமைகள் இழைக்கிறார்கள், அவ்வளவு கொடுமையான இயக்கத்தை நடத்துகிறார்கள். இது என்ன ஒருமைப்பாட்டுக்கு விரோதமானது இல்லையா ? இதை அனுமதிக்க முடியுமா என்று மாபெரும் போராட்டம் நடத்தியிருக்கிறோம்.

அப்படியானால், பிற மொழிகளைச் சேர்ந்த மக்களைப் பாதுகாப்பது நம் கடமை என்பதைப் பார்க்க வேண்டாமா ? நாம் இந்த உணர்ச்சியை ஏற்படுத்தினால், மற்ற மாநிலங்களிலே இருக்கிற தமிழர்கள் கதி என்ன ஆவது ? திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்திலே என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தது என்பதைப் பொறுத்து, அந்த அடிப்படையிலே, 1967லே எங்கள் கட்சி, அவர்களோடு உறவு கொண்டது, 1977 மார்ச்சில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே உறவு கொண்டோம். அப்படி என்ன அவர்

1978 சனவரி 5] [திரு. என். சங்கரய்யா]

களிடம் எதிர்பார்க்கிறோம் என்றால், இனவெறி நீங்கி ஜனநாயக உணர்வோடு, இந்நாட்டு மக்கள் அனைவருக்காகவும் போராட வேண்டுமென்பதுதான். அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

ஆகவே, உழைப்பாளிகள் மத்தியிலோ, மற்றவர்கள் மத்தியிலோ, மலையாளி-தமிழன் என்ற பிரச்சனையை ஏற்படுத்தினால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன ஆதாயம் கிடைக்கும் ? சிறு பெட்டிக் கடைக்காரர்கள் மத்தியில், சாதாரணத் தொழிலாளிகளுக்கெதிராக, இந்தப் பிரச்சாரம் நடந்தால் எவ்வளவு கடுமையான வன்முறை சம்பவங்கள் ஏற்படும் ? அதோடு முடியாது அது. கேரளாவிலே இருக்கிறார்கள், தமிழர்கள். தோட்டங்களில் வேலை செய்கிறார்கள், திருவனந்தபுரத்திலே கணிசமான தமிழர்கள் இருக்கிறார்கள்.

[நண்பகல் 12–00]

கோழிக்கோட்டிலே வியாபாரம் செய்கிறார்கள். அங்கே ரிட்டாலியேஷன்—எதிர்ப்பு வராதா ? ஆகவே, இது இரண்டு பக்கங்களும் கொண்டுள்ள ஒரு வாள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். இதனால் நீங்கள் அரசியல் ரீதியாக பலவீனப்பட்டுவிடுவீர்களே தவிர, அது கொஞ்சம்கூட பலத்தை ஏற்படுத்துவதாக இல்லை.

இன்றைக்கு தயவு செய்து அவர்கள் இந்த இன உணர்ச்சியை வளர விடக் கூடாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் குற்றஞ் சாட்டுவதற்குக் காரணம் எதுவாக இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை, சமுதாயக் கொள்கை. அதை விட மிகத் தெளிவானக் கொள்கையை தீவிரமான கொள்கையை நீங்கள் முன் வைத்துப் போராடினால் சரியாக இருக்குமே அல்லாது, எதிர்க்கட்சி என்ற முறையிலே இப்படிப்பட்ட காரணங்களை வைத்துக் கொண்டு போனால் மக்கள் மிகவும் கோபப்படுவார்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

ஏகபோக முதலாளிகளுக்கு எதிராக, பெரும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக போராட வேண்டிய இந்த நேரத்தில், இப்படிப்பட்ட காரியங்கள் மக்களுக்கு உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதே போலத்தான் இந்த " எம் " என்ற பிரச்சினை. 1967-லே உமாநாத் அவர்கள் புதுக்கோட்டைப் பாராளு மன்றத்தொகுதியிலே போட்டியிட்டார்கள். அப்போது இந்த " எம் " இல்லை. நாகப்பட்டினத்தில் வி.பி. சிந்தன் அவர்கள் போட்டியிட்டார்கள். அப்போது இந்த " எம் " இல்லை. ரமணி அவர்கள் கோவை பாராளுமன்றத்தொகுதியிலே போட்டியிட்டார்கள் அப்போதும் இந்த " எம் " இல்லை. தேர்தல் உடன்பாடு இருக்கும்போது ஒன்றும் இல்லை.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்கள், மாண்புமிகு நண்பர் சங்கரய்யா அவர்கள் தேர்தல் உடன்பாடு நேரத்தில் எதுவும் இல்லை என்று சொன்னார். அது ஓரளவு அவருடைய கட்சியைப் பொறுத்த வரையில் உண்மைதான். அவர்கள் பேசும்போது 1972-லே இன்றைய முதலமைச்சர் கட்சியிலே இருந்து வெளியேறியபோது அல்லது வெளியேற்றப்பட்ட போது, அதற்குப் பிறகுதான், இந்த இன உணர்ச்சிகள் தூண்டி விடப்பட்டன என்று அவரே சொன்னார். அப்படி இன உணர்ச்சியை தூண்டிவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம் என்று தெரிந்த பிறகு, 1977-லே நடந்த பாராளு மன்றத் தேர்தலிலே உடன்பாடு கொண்டார்களே, என்ன காரணம், தேர்தல் உடன்பாடு தானா ?

*திரு. என். சங்கரய்யா : அதற்குத் தெளிவான பதில் உண்டு. தி.மு.க. என்பது ஒரு மாகாணப் பிரச்சினை என்று கருதுகிறோம். அகிலஇந்தியாவில் எமர்ஜென்சியைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற பின் னணியிலே, இந்தப் பிரச்சினை எங்களுக்கு சாதாரணப் பிரச் சினையாக இருந்தது. அந்தப் பொது எதிரியை வீழ்த்துவதற் காக உடன்பாடு கொண்டோம். தமிழ்நாட்டிலே எந்த அரசாங்கம் வேண்டும் என்ற பிரச்சனை வரும்போது கவ னித்துக் கொள்ளலாம் என்றுதான் முடிவெடுத்தோம். 1977-லே சட்டமன்றத் தேர்தல் வரும்போது கடந்தகால ரெக் கார்டுகளைப் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் அந்த சமயத்திலே ஒன்றும் பேசவில்லை. ஆகவே, உங்கள் ஒத்து ழைப்பை எடுத்துக் கொண்டு, ஜனதா கட்சியினருடைய ஒத் துழைப்பையும் எடுத்துக் கொண்டு, இந்திரா காந்தி தலை மையிலான காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வேண்டுமென்பது தெரிந்துதான் முடிவெடுத்தோம்.

இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை ஜீரணித் துத்தான் நாங்கள் முடிவெடுத்துக் கொண்டோம். ஆனால், நாங்கள் அடுத்து வந்த சட்ட மன்றத் தேர்தலின்போது ஏன் தி.மு.க.வுடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை ? சட்ட மன்றத் தேர்தலுக்கு குறைந்த சீட்டுகள் கொடுக்கிறீர்கள் என்பதற்காகவா பேச்சுவார்த்தை நடத்தவில்லை ? அதற்குக் காரணம் 1972-ல் உங்கள் மீது குற்றச் சாட்டுக்கள் வந்த போது, எங்கள் மாநிலக் குழு கூடியது. மத்திய சர்க்காருக்கு உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கொடுத்திருக்கிறார் கள். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியை வைத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்களே முன் வந்து ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து விட்டால் உங்கள் மீது யாரும் குற்றம் சொல்ல முடியாது என்று கூறினோம். அந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆக வே தான் 1969-ஆம் ஆண்டிலிலேயிருந்து தமிழகத்திலே மக்களுக்கு விரோதமான கொள்கைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று எங்கள் கட்சியின் சார்பாக சொல்லிவந்தோம். ஆக வே, இதில் முரண்பாடு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாடியிலே தொழிலாளர் பிரச்சினை வந் தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த முன்னணியினர் என்ன பேசினார்கள்? இந்த சட்ட மன்றத் திலே கூட இது சி.ஐ.டி.யூ. செய்யக்கூடிய பலாத்காரம் என்றுதான் பேசினார்களே தவிர, பாதிக்கப்பட்ட தொழி லாளர்கள் பிரச்சினை வந்தபோது என்ன செய்தார்கள்? இப் போது பாருங்கள் அங்கே 100 தொழிலாளர்களை சஸ்பெண்டு செய்து இருக்கிறார்கள்.

முதலமைச்சர், லேபர் டிபார்ட்மெண்டு முதலியவர் களோடு பேசியபொழுது நாங்கள் விசாரிப்போம், ஆனாலும் இறுதியாக அரசாங்கத்தின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள் கிறோம் என்று முதலாளிகள் சொன்னார்கள். மறுநாள் அங்கே ஒரு கொலை—ஒரு தொழிலாளி கொலை செய்யப்பட்டார். உடனே, முதலாளிகள் சி.ஐ.டி.யூ.தான் அந்தக் கொலைக்குப் பொறுப்பு என்று சொன்னார்கள். ஆகவே, அரசாங்கத் திடம் ஏற்பட்ட ஒப்பந்தத்தை வாபஸ் பெறுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கொலைக்கு சி.ஐ.டி.யூ. பொறுப்பு இல்லை. கொலை செய்யப்பட்டவர் சகோதரத் தகராறில் கொலை செய்யப்பட்டார் என்று தெரிய வந்தது.

அது இப்போது புரிந்து போய்விட்டது. அந்த முதலாளி பெரிய போஸ்டர் போட்டு, வி. பி. சிந்தன் கொலை செய்தார், சி.ஐ.டி.யு. கொலை செய்தது என்றெல்லாம் போஸ்டர் ஒட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தனது சக்தியை திரட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரத்தை பலப்படுத்தி, இன்று பாடியில் இருக்கும் தொழிற்சாலைகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை திரும்ப வேலைக்கு எடுக்கவும், அவர்கள் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ரத்து செய்யவும், அந்தத் தொழிற்சாலையில் இருக்கும் சிக்கலுக்கு இறுதித் தீர்வை அளிக்கும் பொறுப்பை மாநில அரசுக்கு வழங்கவும், முதலமைச்சர் அவர்களின் கரத்தை பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பேரணியை நடத்தினார்கள். அவர்கள் விவசாயப் பேரணியில் வைத்து இருக்கும் தீர்மானம் என்ன? தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏழை விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மற்றும் தொழிலாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு துணையாக இருக்கிறார்கள் என்பது தெரியும். அவர்களின் அடித்தளமாக இருக்கிறார்கள் என்பது தெரியும். அந்த விவசாயப் பேரணியில் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி, நியாயமான கூலி பற்றி அந்தப் பெட்டிஷனில் கேட்டு இருந்ததா?

தமிழ்நாட்டில் இருக்கும் குத்தகை-வார விவசாயிகள், உழக்கூடிய நிலங்களை அவர்களுக்கு நில உடைமையாக்க வேண்டுமென்று கோரிக்கை இருந்ததா? தமிழகத்திலே இன்று ஏராளமான நிலப் பிரபுக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் என்று உச்சவரம்பு என்று சொன்ன போதிலும், 100-க் கணக்கான ஏக்கர் நிலங்களை பினாமியாக வைத்துக் கொண்டு இருக்கிறார்களே, அவர்களிடமிருந்து 15 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குமேல் இருக்கும் நிலங்களை அரசாங்கம் எடுத்து ஏழை எளிய விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை இருந்ததா? அதற்குப் பதிலாக மேல் தட்டு விவசாயிகள் அப்படி ஒரு பகுதி இப்போது உருவாகியிருக்கிறது—மேல் தட்டு நிலப்பிரபுக்கள், அதாவது பல்வேறு டிராக்டர்கள், ஏராளமான பம்ப்செட் வைத்து இருக்கிறவர்கள், அரசாங்க நிறுவனங்களில் இருந்து கடன் பெற்று லட்சக் கணக்கில் பணம் வைத்து விவசாயம் செய்பவர்கள், அவர்களுக்கு சாதகமாக அந்தக் கோரிக்கை அமைந்து இருந்தது.

உதாரணமாக மின்சாரக் கட்டணத்தை 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்று இருந்தால் 2 பைசா குறைக்கப்பட்டு இருக்கிறது. நாம் வற்புறுத்தி அதைக் குறைத்து இருக்கிறோம். அந்தக் குறைப்பை எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் அந்தப் பெட்டிஷனில் கொடுத்து இருக்கிறீர்கள். தமிழ் நாட்டில் இருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் அந்தக் குறைப்பு வர வேண்டும் என்று சொன்னால், 100-க் கணக்கான பம்ப்செட்டு வைத்து இருப்பவர்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏற்கனவே அரசாங்கம் பல கோடி ரூபாய் நஷ்டத்தில் தொழிற்சாலைகளுக்கு கன்சஷன் கொடுத்து இருக்கிறது.

ஆகவே, ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியாக இருப்பவர்கள் நீங்கள் என்ன செய்து இருக்க வேண்டும்? இந்த அரசாங்கம் கொடுக்கும் கன்சஷன் ஏழை எளிய விவசாயிகளுக்குப் போக வேண்டும். என்றால், நீங்கள் எப்படி கோரிக்கை வைத்து இருக்க வேண்டும்? 2½ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை என்றால் 2 பைசா குறைத்து இருக்கிறீர்களா, அவர்களுக்கு மேலும் இரண்டு பைசா மின் கட்டணத்தில் சலுகை கொடுங்கள் என்று கேட்டிருந்தால் நன்றாக இருந்து இருக்கும்.

ஆகவே, நீங்கள் சிறு விவசாயிகள், சாதாரண தொழிலாளர்கள், மற்ற மற்ற கீழ்த்தட்டத்தில் இருப்பவர்களை இணைத்துக் கொண்டால்தான் மக்களுக்குத் தேவையான சமுதாய பொருளாதார கோரிக்கைகளை வைத்து நீங்கள் போராட்டத்தில் ஈடுபட்டால்தான் தமிழக மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைமையை உருவாக்கிக் கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு சிலவற்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இந்திரா காந்தி கைது செய்யப்பட்டபோது, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்து இருக்கின்றன. அப்போது போலீஸ் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. எங்களுக்கு அது குறித்து ஆதாரமான தகவல்கள் வந்து இருக்கின்றன. இப்படி ஒரு விஷயம் நடந்து இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவ்வாறு போலீஸ் அதிகாரிகள் மௌனமாக இருந்ததற்குக் காரணம் என்ன? இந்திரா காந்தியைக்

கைது செய்தால் தமிழ் நாட்டில் பெரிய ஆட்சேபனை ஏற்பட வேண்டும் என்று சில அரசியல் கட்சிகள் கருதி, இந்த ஏற்பாட்டைச் செய்தார்களா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

அடுத்தாற்போல் எங்கே வருகிறது என்றால், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம். நாங்களும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினோம் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக. இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம் என்று சொன்னால், அந்தக் கறுப்புக் கொடி காட்டப்படுகிறவர்களுக்கும் காட்டுகிறவர்களுக்கும் எந்தவிதமான அசௌகர்யமும் வரக் கூடாது. கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் என்பது ஜனநாயகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு எதிர்ப்பு வடிவம் என்று நாங்கள் ஏற்றுக் கொண்ட காரணத்தால், அதைச் செய்தோம். அப்படி கறுப்புக்கொடி காட்டுவதற்காக அரசாங்கமே ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு இரண்டு மணி நேரத்திற்கு முன்பு அந்த இடம் இல்லை, அனுமதி ரத்து செய்யப்பட்டது என்று அறிவித்து விட்டார்கள். நான் மதுரையைச் சார்ந்தவன். மதுரையில் நடந்தது என்ன? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்படி அனுமதி அளிக்கிற நேரத்தில் போலீஸ்காரர்கள் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காமல் கறுப்புக்கொடி காட்ட நடவடிக்கை மேற்கொண்டு இருக்க வேண்டும். அப்படி செய்யப்பட்டதா? அங்கே என்ன காரணத்தால் வன்முறை சம்பவம் நடைபெற்றது என்பதை விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10.)

திருச்சியிலே எங்களுடைய தோழர்கள் நின்று கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் நின்று கொண்டிருந்தார்கள். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது, எனவே கூடினார்கள். கூடியதற்குப் பிறகு அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். டியர்கேஸ் போடப்பட்டது. இவ்வாறு ஏற்பட்டதன் விளைவாக—நான் என்ன சொல்கிறேன் என்னுடைய கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்சியும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களும் இதைச் செய்திருக்கிறார்கள்.

அரசியல் ஆட்சேபனை வடிவம் என்ற விதத்தில் இதை நீங்கள் அனுமதித்திருந்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாமல் போய் இருக்கலாம்.

ஏனென்றால் இப்பொழுது என்ன சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால், இவைகள் அனுமதிக்கப்படாத காரணத்தால் மக்கள் மத்தியிலே ஆத்திரம் ஏற்பட்டது. அவர்களுடைய நியாயமான உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட மறுத்ததன் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டன என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நான் மீண்டும் நட்பு முறையில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதே போலத்தான், மைசூரிலே, ஆந்திராவிலே அந்த முதலமைச்சர்கள் பார்த்தார்கள். சில நிகழ்ச்சிகள் நடந்த பிறகு நிலைமை மோசமாக இருக்கிறது என்று சொல்லி மற்ற நிகழ்ச்சிகளை ரத்து செய்து விட்டார்கள். அப்படியாவது செய்திருக்கலாம் அல்லவா? காஞ்சீபுரத்திலுள்ள மாவட்ட கலெக்டர் அவர்கள் திருமதி இந்திரா காந்தி மோட்டாரில் போகும்போது நிலைமை சரியாக இல்லை, உங்களுடைய நிகழ்ச்சிகளை ரத்து செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். அதனால் பிரச்சினை எழவில்லை. கறுப்புக் கொடி யாருக்கு காட்டப்படுகிறதோ அவர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படக்கூடாது. அதனால்தான் இங்கே கேட்கிறோம். எங்களுடைய கட்சி ஏற்கனவே அறிக்கை விட்டிருக்கிறது. அது தொடர்பாக ஏற்பட்டிருக்கிற அனைத்து வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டும். வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், நான் சொல்ல முடியும் 1967-ம் ஆண்டிலே அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே திருப்பூர் மொழி கிளர்ச்சி சம்மந்தமாக ஒரு இன்ஸ்பெக்டர் மரணம் அடைந்தார். அந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். நாங்களும் அதை ஆதரித்தோம். எந்த ஸ்டேஜிக்கு அது போயிருந்தாலும் வழக்குகள் அனைத்தும் வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்தோம். அதேபோல் தேவராஜ் அர்ஸ் அவர்கள் காங்கிரஸ் கட்சி முதலமைச்சர்தான். அங்கே இப்படி வழக்கு போடப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால்தான் கேட்கிறேன். எமெர்ஜென்சியை மையமாகக் கொண்டு இந்த ஆட்சியின் பிரதமராக இருந்தவரை எதிர்த்து கறுப்புக் கொடி காட்டியதற்காக தொடுக்கப்பட்ட அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நான் சொல்ல விரும்புவது—அதாவது இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது—இங்கே பலப் பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறோம். பார்லிமென்டில் கன்செல்டேடிவ் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். ரொம்ப சௌகரியமாக இருக்கிறது இங்கே என்ன ஏற்படுகிறது? நம்முடைய வீட்டு வசதி வாரிய அமைச்சர் ஒரு கூட்டத்தைக் கூட்டி ஆலோசிக்க நினைக்கிறார். அப்பொழுது ஒவ்வொரு கட்சித் தலைவரும் கூடவேண்டியிருக்கிறது. இதனால் பல தொந்தரவுகள் ஏற்படுகிறது. அதிலே ஒருவர்தான் போக வேண்டியிருக்கிறது. அதற்கு பதிலாக நாம் ஸ்பெஷலைஸ் பண்ணலாம். பல்வேறு உறுப்பினர்கள் அந்தந்த மினிஸ்டிரியினுடைய ஆலோசனைக் குழுக்களில் நெருக்கமாக விவாதிக்க முடியும். பட்ஜெட் காலத்திலே வருகிற பாலிசி பேப்பரிலே பல விஷயங்கள் வருவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தினால் பல விஷயங்களை விவாதிக்க முடியும்.

அடுத்ததாக இந்த விசைப் படகு. பல ஆண்டுகளாக இந்த மீனவர்கள் படகுகளை வைத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். விசைப்படகு வைத்திருப்பவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள் அல்ல. கடலில் மீன் பிடிப்பவர்கள் அல்ல. அவர்களையும், இவர்களையும் சமமாகப் பாவித்து இந்த பிரச்சினையைத் தீர்ப்பது இப்பொழுது சாத்தியமல்ல. தமிழகத்திலே இருக்கக் கூடிய இந்த ஏழை எளிய மீனவர்களுடைய குடும்பங்களை பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கை தேவை. உருப்படியான கொள்கை தேவை என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, தமிழகத்தில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகள், விவசாயத் தோழர்கள். ஏற்கனவே மத்திய அரசு தீவிரமான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வாருங்கள் என்று கூறுகிறது. இங்கே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று உத்திரவு போட்டதாகச் சொல்கிறார்கள். எல்லாம் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். அது முடியவில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கக் கூடிய ஒவ்வொரு பெயரிலும் 15, 15 என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே பினாமியாக இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு விரோதமாக வைத்து இருக்கக் கூடிய நிலங்களை கண்டு பிடித்து, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரை ஒதுக்கிவிட்டு, பாக்கி நிலங்களை நிலப்பசியால் துடிக்கக் கூடிய ஏழைகளுக்கு கொடுக்க இந்த அரசாங்கம் நிலச் சீர்திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் ....

அதேபோல் தான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கத்தினர்கள் பலர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கடன் ஒத்திவைப்புச் சட்டம், குத்தகை பாக்கி ஒத்திவைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குத்தகை பாக்கியை ஒரு வருஷம் தள்ளி வைக்கப்பட்டிருப்பதற்கான மசோதாவை கொண்டுவந்ததற்காக குத்தகை விவசாயிகள் சார்பிலும் என்னுடைய கட்சியின் சார்பிலும் அரசாங்கத்தைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்போது குத்தகை பாக்கியை ஒத்தி வைக்கும் சட்டம்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1979ல் ஐந்து வருஷ காலம் வந்து விடும். மறுபடி கடனை திருப்பிக் கொடுக்கவேண்டிய காலம் வந்துவிடும்.

நாம் இப்போது 'பேமெண்ட்' ஐ ஒத்தி வைக்கிறோம் ரத்து பண்ணவில்லை. நாம் கூறுகிறோம், சிறு நிலக்காரர்கள், ஏழை விவசாயிகள், சிறு வருமானம் உள்ளவர்கள்? இவர்கள் எப்படி இந்தக் கடனைச் செலுத்துவார்கள் ராஜாஜி அவர்கள் ஆட்சி காலத்தில் கொண்டு வந்த மாதிரி, ஒத்தி வைப்புச் சட்டம் காலம் முடிவதற்குள், இந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்ற சட்டத்தையும் இந்த அரசு கொண்டு வரவேண்டும்.

பெருநிலக்காரர்களுக்கு அவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. சிறுநிலக்காரர்கள் என்ற 'டெபனிஷன்' இருந்தால் போதும். விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் இவர்கள் தாங்கள் வாங்கியிருக்கும் கடனை, அசலை செலுத்தியிருந்தால், அவர்களைப் பொறுத்தவரைக்கும் இந்தக் கடன்களை ரத்து செய்ததாகக் கருதப்படும் என்ற சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்தால் தான் நிச்சயமாக இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவசரநிலை காலத்தில் மாநில சர்க்கார் ஊழியர்கள் 1,500 பேர் கட்டாய வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இவர்களுக்கு அவசரநிலை காலத்தில் நியாயம் வழங்கப்படவில்லை என்று இதைப் பரிசீலனை செய்ய 'ஹை பவர் கமிட்டி' ஒன்று அமைக்கப்பட்டு அது நூற்றுக்கு 98 பேர் விஷயத்தில் கட்டாய ஓய்வை ஏற்றுக் கொண்டது என்று சொல்லப்படுகிறது. அந்தப் பிரச்சினை மறுபடியும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று கேட்கின்றனர். இன்றைக்கு ஏற்கனவே இந்த அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. நியாயம் எங்கு இருந்தாலும் ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் தயங்காது என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவ்வாறு கட்டாய ஓய்வு, வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிற அரசு ஊழியர்கள் பிரச்னையை மறு பரிசீலனை செய்து குற்றமற்றவர்கள் என்று அரசாங்கம் கருதக்கூடியவர்களை அவர்களுக்குத் தக்க நிவாரணம், வேலையில் மறுபடியும் சேர்த்துப் பணியாற்றுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு பிரச்னை கைத்தறியைப் பற்றியது; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். புதிய முறையில் கச்சாப் பொருள்களுக்கு மானியம் கொடுப்பதா என்ற யோசனை இருந்து வருகிறது. இப்போதுள்ள 20 சதவீத ரிபேட்டை 10 சதவீதமாகக் குறைத்துவிட்டார்கள். மதுரை கூட்டுறவு சொசைட்டிகளில் ரூ. 1½ கோடி பெறுமான துணி தேங்கிக் கிடக்கிறது. முதலில் இப்போது இருக்கக்கூடிய இந்த சகாயத்தை நீடித்தால்தான் புயலால் பாதிக்கப்பட்ட கைத்தறியாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற காரணத்தால் இந்த ரிபேட்டை மாத்திரம் மாற்றுச் சட்டம் கொண்டு வருகிறவரையில் நீடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக அரசாங்கத்தின் இந்தப் புயல் நிவாரணப் பணிகளை நான் பாராட்டுகிறேன். தி.மு.க. தலைவர்கள் அதில் பெருங்குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கெல்லாம் நிவாரணம் நடக்கவில்லையோ அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு

வரலாம் என்று சொன்னார்கள். சிதம்பரம் வட்டத்திலிருந்து ஒரு புகார் வந்திருக்கிறது. உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களிடம் அந்த மனுவைக் கொடுத்திருக்கிறேன். அதில் பல கிராமங்களில் சேதம் அடைந்த வீடுகளின் பட்டியலில் 30 சதவீதம் விடுபட்டிருக்கிறது. இது பற்றி கலெக்டரிடம் மனுவும் கொடுத்திருக்கிறார்கள். சிதம்பரம் பகுதியில் பட்டியலில் விடப்பட்ட கிராமங்களில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசாங்கம் அனுதாபத்துடன் பரிசீலித்து அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் ஒன்பதாவது வார்டு குருவிக்காரன் சாலையில் 250 வீடுகள் சேதம் அடைந்திருக்கின்றன.

(பிற்பகல் 12·20)

தாசில்தார் வந்து பார்த்திருக்கிறார். ஆனால் நிவாரணத் தொகை இதுவரை கொடுக்கப்படவில்லை என்று. கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

அருப்புக்கோட்டை கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பிரச்னை. அ.இ.அ.தி.மு.க. தொகுதி அமைப்பாளர் உட்பட கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். முதலாளிகள், ஏற்றுக்கொண்ட கூலியைக் கொடுக்கவில்லை என்று ஒரு இயக்கம் நடத்தினார்கள். சர்வ கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் நடத்தினார்கள். அதன் தொடர்பாக போலீஸ் வழக்குகள் போடப்பட்டுள்ளன. இதுவரை வாபஸ் வாங்கப்படவில்லை. அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை கலெக்டர் ஆபீசில் அந்த ஆபீசுக்கு வருகின்ற பார்வையாளர்களுக்குப் பாஸ் சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். இந்தப் பாஸ் சிஸ்டம், பிரிட்டிஷ்காரர் காலத்தில் கூட அல்ல, காங்கிரஸ் ஆட்சியில் அல்ல, தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்டது. இது எவ்வளவு தூரம் சரி என்று பார்க்க வேண்டும். ஒரு மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் அப்படி என்ன ராணுவ ரகசியங்கள் இருக்கும்? யாராக இருந்தாலும் உறவு அதிகாரியிடம் சென்று, எதற்காக, யாரை ஏன் பார்க்க வேண்டும் என்று சம்பிர

தாயங்களை முடிப்பதற்குள் எதற்காக வந்தாரோ அந்த விஷயமே முடிந்து விடுகிறது. எனவே, இந்த பாஸ் சிஸ்டத்தை வாபஸ் பெற வேண்டும்.

கூத்தக்குடி சண்முகம் குறிப்பிட்டது போல, இராமனாத புரத்தில் கலெக்டர் அலுவலகத்தில் இந்தப் பாஸ் சிஸ்டம் இல்லை. மதுரையில் கலெக்டர் ஆபீஸில் மட்டும் இருக்கிறது. நான் இதைக் கூறும்போது, மற்ற கலெக்டர்கள் இந்த முறையைக் கொண்டு வந்து விடக்கூடாது. அந்த ஒரு ஆபத்தும் நான் இதைச் சொல்லும்போது இருக்கிறது. கலெக்டர் ஆபீசுக்குச் சிலர் தான் சென்று அதிகாரிகளைப் பார்ப்பார்கள். அதிகாரிகளுக்கு அதிக வேலை ஒன்றும் இருக்காது. அதைத் தெரிந்துகொண்டு விடக்கூடாது என்பதற்காகத் தான் இதைச் செய்கிறார்களோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது.

ஒரு மாவட்ட கலெக்டர், தன்னை வீட்டில் வந்து யாரும் சந்திக்கக் கூடாது என்றே உத்தரவு போட்டிருக்கிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும் எம்.எல்.ஏ-க்கள் கூட பார்க்கக் கூடாது என்று போட்டிருக்கிறார். மக்கள் வந்து சந்திப்பதில் அவர்களுக்கு என்ன சிரமம் இருக்க முடியும்? அப்படி சிரமம் என்றால் அவர்களுக்கு வேறு வேலை கொடுத்து விடலாம். (குறுக்கீடு). வாபஸ் பெற்றுவிட்டதாகக் கூறினார்கள். இதுவரையில் அப்படிப்பட்ட உத்தரவு எனக்கு வரவில்லை.

நான் கூறிய யோசனைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியிருக்கிறார்கள். அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் சிறுவனாக இருந்தபோது கேட்டிருக்கிறேன். எந்த அளவுக்கு இணக்கமாக இருக்குமோ, அந்த அளவுக்கு இல்லாமல், தாழ்ந்து போய்விட்டது, ஏன் இந்தத் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணிகொண்டேன். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று சொல்வார்கள். எதிர் கட்சித் தலைவர் நேற்று கொண்டு வந்து பேசிய நம்பிக்கையிக்காத் தீர்மானத்தில் எடுத்துச்

சொன்ன குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை, ஒளி இல்லை, உள்ளத்திலே ஒளி இல்லாத காரணத்தால், அந்தக் குற்றச்சாட்டுகள் ஒளி அற்றதாக ஒளி குன்றியதாக இருக்கின்ற நிலையைப் பார்த்தேன். ஒரு எதிர்க்கட்சி ஆளுங்கட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும்போது, மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பு இருக்கும். மக்கள் ஆர்வத்தோடு இதைப் பார்க்கின்ற நிலை இருக்கும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பற்றி மக்கள் என்ன பேசுகிறார்கள் என்றால், "ஏன் இவர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்? இப்படி ஆறு மாதத்திற்குள்ளாக அவசரம் அவசரமாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன?" என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்த அரசு ஆறு மாத காலத்திற்குள் என்னென்ன பணிகளை ஆற்றி இருக்கிறது, என்னென்ன குறைகளைச் செய்திருக்கிறது என்று பட்டியல் போட்டுக் காண்பித்தார்கள். பழைய அரசினால் ஏற்பட்டிருக்கிற, செய்துவிட்டுப் போயிருக்கிற அழுக்கை நீக்குவதற்கே இந்த ஆறு மாதம் போதாது என்ற நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு முந்தைய அரசு செயல்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த ஆறு மாத காலத்திற்குள், தி.மு.க. இந்த அரசுக்கு எந்தெந்த வகையில் இடையூறு கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒவ்வொரு நிகழ்ச்சியாக, கட்சிச் சார்பில் நடத்திக்காட்ட வேண்டும் என்பதில் உற்சாகமாக இருந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த வகையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஜனவரி மாதத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

இந்த ஆறு மாத காலத்திற்குள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட எடுக்கப்பட்ட அத்தனை நடவடிக்கைகளும் மக்களால் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. நல்லவை என்று ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டிலே மக்கள் பெருவெள்ளத்தினால், பயங்கரமான புயலால் பாதிக்கப்பட்டு பெரும் அவதிக்குள்ளாகியிருந்த நேரத்தில், மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் தங்கள் பணிகளைச் செய்யவொட்டாது, அந்த நேரத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலெக்டர்

[திரு. போ. கோபாலன்] 1978 சனவரி 5

அலுவலகங்களின் முன்பு மறியல் போராட்டம் செய்யவேண்டும் என்று அதற்காகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். காரணம், அதிகாரிகள் தங்கள் பணிகளைச செய்யவொட்டாது தடுக்கப்பட்டுவிட்டால், ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படக்கூடும் என்ற அந்த உள்நோக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவற்றைச் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டை நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஆடம்பரம் இல்லாத அரசு, தங்களைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொள்ளாத அரசு, எளிமையான அமைச்சர்களை, தொண்டர்களைக் கொண்ட அரசு என்பதை நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். தலைவர்களும் தொண்டர்களும், அரசின் அதிகாரிகளும் புரட்சித் தலைவரது ஆட்சியில், அவரது தலைமையில், அனைவரும் மக்கள் உள்ளிட்டு அனைவரும் ஒன்றுபட்ட சிப்பாய்களைப் போலப் பணியாற்றி வருகின்றார்கள். நாங்கள் ஆறுமாத காலத்திற்குத்தான் பயிற்சிபெற்று இருக்கிறோம் இதுவரையில். இன்னமும் ஆறு மாத காலம் பயிற்சி பெற்ற பின்னர், எத்தகைய போர்த் தளவாடங்களைக் கொண்டுவந்து எங்களை எதிர்த்தாலும் அவை அனைத்தும் தவிடுபொடியாகிவிடும். அந்த அளவிற்கு நாங்கள் திறமையைப் பெறுவோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆட்சிக் காலத்தில்தான், இந்த ஆறு மாத காலத்திலே, தொழிலாளர்கள் பிரச்சனை, மாணவர்கள் பிரச்சனை என்று எத்தகைய பிரச்சனைகள் வந்தபோதிலும், அவ்வளவையும் அனுதாபத்தோடு அணுகி பின்னர் அவர்களே பாராட்டத்தக்க விதத்தில் அவற்றைத் தீர்த்து வைக்கின்றன என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

அதிகாரிகளைக் கேட்டால், எந்தத் துறையில் எந்த அதிகாரியைக் கேட்டாலும் இந்த ஆறு மாத காலத்தில் ஆளும் கட்சியினருடைய தலையீடு இந்த ஆட்சிக் காலத்தில் எந்த அளவிற்குக் குறைந்து இருக்கின்றது என்பதை அவர்கள் மகிழ்ச்சியோடு சொல்லுகிறதைக் கேட்கலாம் நீங்கள்.

எனவே சொல்லுகிறேன், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது உங்களுக்கும் நம்பிக்கையில்லை என்பதைப் போலவே எங்களுக்கும் நம்பிக்கை இல்லை என்று கூறி இந்தத் தீர்மானத்தை வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி என் உரையினை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1978 சனவரி 5]

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்கள் தலைவரவர்கள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதிலே பிற எதிர்க்கட்சியினர் பேசுவதற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நாங்கள் பேசுவதற்கும் அடிப்படை வித்தியாசம் இருக்கின்றது. அவர்களிலே யாருமே இந்த அரசின் அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையில் உடன்பாடு காண முடியாது. நடைமுறையில்தான் உடன்பாடு காணமுடியும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில், கொள்கையில் வித்தியாசம் காண முடியாது. ஆனால் நாங்கள் ஆட்சியின் நடைமுறையில் வித்தியாசத்தைக் காண்கிறோம். அதிலே நாங்கள் உடன்பட்டு வரமுடியாது. இதுதான் அடிப்படை வித்தியாசம்.

திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவது என்ற முடிவிற்கு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகமும் காண்பிக்க முடிவெடுத்தது. இடது கம்யூனிஸ்டு கட்சியினரும் முடிவெடுத்தார்கள். ஆனால் பின்னால் அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நடவடிக்கை எடுத்தார்கள், மார்க்ஸீய கம்யூனிஸ்டு கட்சியினர் மீது நடவடிக்கை எதையும் அரசு எடுக்கவில்லை. காரணம் அவர்கள் ஆட்சியின் நடைமுறையில் ஒத்துப் போகின்றார்கள் என்பதுதான். அது நடைமுறையில் இந்த அரசாங்கத்துக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு. ஆனால் நமக்கு உள்ள வித்தியாசம் காரணமாக நம்மீது வழக்கு. ஆகவே அவர்கள் இந்தத் தீர்மானத்தின்மீது அந்தப் பாணியில் பேசினார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

அதேபோல இன்றைக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஆதரிக்க முடியுமா? ஆதரிக்க முடியாது. தேர்தலில் ஆதரித்து நின்றது தவறு என்று இப்போது ஒப்புக் கொள்ளுகின்றார்கள். இப்போது அதற்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து இருக்கின்றார்கள். எனவே, இன்று தவறான கொள்கையைப் பின்பற்றும் அரசினை அவர்கள் ஆதரிக்க முடியாது.

அதேபோலத்தான் காங்கிரஸ் கட்சியும். இரண்டு கட்சிகளுமே அந்த நேரத்தில், எமெர்ஜென்சி என்று வந்த நேரத்தில் ஒன்றாக வேலை செய்தார்கள். ஆனால் இப்போதுள்ள நடைமுறைகளை அவர்கள் ஆதரிக்க முடியுமா என்றால், முடியாது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகமும் கொள்கையில் ஒன்றுபட்டவர்கள்.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், கெடுப்பாரிலானும் கெடும்' என்ற வள்ளுவன் சொல் அவையின் முன்னவர் அவர்களுக்குத் தெரியும். அதேபோல, 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்பதும் தெரிந்திருக்கும். இங்கே நான் இன்னமும் இடிக்கவில்லை. கேட்டேன். பேசுகின்றேன். அவ்வளவுதான். நான் பேசுவதற்கே நீங்கள் இவ்வளவு வருத்தப்பட்டால், பின்னர் இடிக்க ஆரம்பித்தால் நீங்கள் என்ன நிலைமைக்குப் போவீர்கள் என்று புரியவில்லை.

ஆனால் நான் இப்படிப் பேசும்போது, நான் ஆளும் பொறுப்பிலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசுவதாக எண்ணாமல் உள்ள நியாயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொள்கைக்கு அப்பால், நடைமுறையில் தான் வேறுபாட்டைக் காண்கிறோம். கொள்கையில் இல்லை. கொள்கை இரண்டு பேருக்கும் ஒன்றுதான். அதிலே இரண்டுபேரும் உட்படுகின்றவர்கள்: வேறு யாரும் இருக்க முடியாது. எனவே, அந்த முறையில் பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் விமரிசனத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்கக் கூடாது. உங்களுக்கும் அண்ணாதான், பெரியார்தான். இங்கேயும் அந்தக் கொள்கைதான். எனவே நாங்கள் விமரிசனம் செய்கிறோம் என்பதற்காக கழகத்தினை ஏசுவதற்கு எந்த அடிப்படையில் நியாயம் இருக்க முடியும்? நடைமுறைகள் வேறுபடும். அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

(பிற்பகல் 12-30.)

அது தான் பார்லிமெண்டில் நியாயம். சட்டமன்றத்தில் நியாயம். 'எமர்ஜென்சி'யில் நியாயத்தின் வாதங்கள் வேறுபடும். ஆனால் நாங்கள் எங்கள் நிலைமையை எடுத்துச் சொல்வதை யாரும் தவறு என்று சொல்ல மாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். திராவிட

முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை — எங்கள் மீது வழக்குப் போட்டதை நான் சொல்லவில்லை — வழக்கு, பொய் வழக்கு என்று, உலகமே தவறு என்றும் சொல்லும் அளவிற்குப் பொய் வழக்குப் போட்டிருக்கிறார்கள் — ஒரே நிலைமைதான்; திராவிடர் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது வேறு வழக்கு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வேறு வழக்கு. உங்கள் பகை உணர்ச்சியைக் காட்டுவதற்கு வேறு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருந்தால் — சஞ்சய் காந்தியின் சகாக்கள் எங்கேயும் இருக்கலாம்; அண்ணா தி.மு.க. வில் இருக்கலாம்; வெங்கல் ராவ் ஏற்றுக்கொண்டார் என்று மதிப்புக்குரிய மாண்புமிகு மனோகரன் அவர்கள் ஏற்றுக் கொள்வார்; சாத்தியம் என்று நாங்கள் முன்கூட்டியே யூகத்தோடு சொல்கிறோம்.

இன்றைக்குப் பேசிய நண்பர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கலாமா என்று லத்தீப் கேட்டார்கள். அதே வார்த்தைகளைத்தான் அவர்கள் முன்னாடியும் பயன்படுத்தினார்கள். ''நம்பி—கை'' என்ற வார்த்தையை அவர்கள் 'ஸ்டாண்டர்ட்' ஆக வைத்திருக்கிறார்கள். ஒரே மாறுதல். நாங்கள் அன்றைக்குக் கை தட்டினோம். இன்றைக்கு நீங்கள் தட்டுகிறீர்கள். அவ்வளவு தான். அவர் நிலையான கொள்கை உடையவர். அந்த அடிப்படையில்........

(திரு. லத்தீப் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'பாயின்ட் ஆப் ஆர்டரா?' தயவு செய்து சொல்லுங்கள். சீக்கிரமாகச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: எப்போதுமே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார். இன்றும் அப்படிச் சொன்னார். அன்றைக்கு நாங்கள் கை தட்டினோம்; இன்றைக்கு 'நீங்கள் கைதட்டுகிறீர்கள்', என்று சொன்னார். இந்த வாதங்களையெல்லாம் உங்களுடைய அரசாங்கத்திற்கு வைக்க அன்றைக்கு உங்கள் அரசாங்கம் இருந்தது என்பது அந்த நிலைமை. இந்த அரசாங்கம் அந்த 'ஆர்குமெண்டை' வைத்துச் செய்ய வேண்டும். அதே 'ஆர்குமெண்டை' அன்றைக்கே வைத்தேன். நான் பேசிய

பேச்சை திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'வெரி ஸாரி'. தயவு செய்வு உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் உட்காருங்கள்.

(திரு. லத்தீப் உட்கார்ந்து கொண்டே ஏதோ கூறினார்).

திரு. க. சுப்பு : உங்கள் கட்சி மட்டும் உடையவில்லையா ?........

திரு. எம். ஏ. லத்தீப் : நான் எப்போதுமே முஸ்லீம் லீக்-காரன். அந்தக் கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்குத் தாவவில்லை.

திரு. க. சுப்பு : கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்குப் போவது வீரம் ஆக முடியும் என்றால் ஆளும் கட்சியில் உள்ளவர்களை அது பாதிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனுபவம் பெற்ற திரு. லத்தீப் அவர்கள் இப்படி அனுமதியில்லாமல் பேசுவது சபையின் நேரத்தைக் குறைக்கும்.

திரு. க. சுப்பு : எதிர்க் கட்சிகளைக் கலந்து கொண்டு கொடுக்க வேண்டும் என்ற நிலைமை அன்றைக்கு இருந்தது. —திராவிட முன்னேற்றக் கழக அரசின் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்றால் நிலைமை அப்படி இருந்தது. அதனால் அவர்களுக்குக் கை எங்கேயிருந்து வரும் என்று பார்க்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றைக்கு எங்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது, நாங்களே கொண்டு வர முடியும் என்று. '' டபிள் நோ-கான்பிடென்ஸ் '' கொடுக்க, '' டபிள் ஸீட்ரெங்த்'' கொடுத்திருக்கிறார்கள். அந்த விதிமுறையைப் பயன்படுத்திக் கொண்டு வந்திருப்பதை, தவறு என்று சொல்வது தவறு.

பொதுவான பிரச்சினைகளுக்குச் சொல்ல வருகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரை டெலிபோனில் 'டாப்' (Tap) செய்வது என்ற வழக்கத்தைக் கைவிட

வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். காரணம், மத்திய சர்க்காரே அந்த வழக்கத்தை கைவிட்டு விட்டது. எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர், ஆகியோரது போனை 'டாப்' செய்கிறார்கள். அது அவர்களுடைய 'ப்ரைவேட் அஃபேரை' உணர இருக்கலாம். அது தவறு, டெலிபோனை டாப் செய்த நிக்ஸன் என்ன ஆனார் ? அவரை விடவா 'மைட்டி எம்பையர்' நடத்துகிறார்கள் ? இதை ஆளும் கட்சி நிதானமாக யோசிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையை ஒப்புக்கொண்டு உறுதியாக டெலிபோனை இந்த மாதிரி 'டாப்' பண்ணும் முறையை விட்டுவிடுங்கள்.

பரிசுச் சீட்டு சமாசாரத்தில் நம்பர் இல்லாத பரிசுச் சீட்டு வந்தது என்ற உண்மையை ஆந்திரப் பிரபாவிலிருந்து எடுத்து முரசொலி போட்டது. அப்படி அதிலிருந்து எடுத்து முரசொலியில் போட்டதால் முரசொலிக்கு போலீஸ்காரர்களை அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அப்படி ஆந்திர பிரபாவிற்கு அனுப்புவீர்களா அல்லது 'ஹிந்து' விற்கு அப்படிப் போலீஸை அனுப்புவீர்களா ? ஆகவே, எதிர்க்கட்சி என்பதால் அப் பத்திரிகைக்கு அப்படிப் போலீஸை அனுப்புவது என்பது சரியல்ல. அப்படி போலீஸ் அனுப்பி டி.ஐ.ஜி. யிடம் விசாரணைக்கு வா என்று சொல்வது சரியல்ல. எமெர்ஜென்ஸியில் இருந்தபோதே அந்தச் சோதனைகளைத் தாங்கிக் கொண்டோம். இப்போது தாங்க முடியாதா ? உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்.

நீங்கள் தோல்வியடையும் காரியங்களில் திரும்பத் திரும்ப இறங்குகிறீர்கள். இந்திரா காந்தி வெற்றி பெறாத காரியங்களில் நீங்கள் இறங்கவேண்டாம். 307-வது செக்ஷன் கீழ் வழக்குப் போடுவதில் இவ்வளவு அபார நம்பிக்கை, ஆசை ஏனோ இவர்களுக்கு வந்துவிட்டது. இந்திரா காந்தி வராத இடத்தில் ஏன் 307-ன் கீழ் வழக்குப் போட வேண்டும்? இந்திரா காந்தியைக் கொலை செய்ய திட்டமிட்டார்கள் என்று சொல்கிறார்கள், யார் புகார்கள் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. சென்னையில் 307-ன் கீழ் வழக்குப் போட்டார்கள். ஏன் எதற்கு இந்த 307 செக்ஷன் வருகிறது ? இதெல்லாம் சட்ட விரோதமான முறைகள். அதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிடில் மக்கள் பரிசீலனை செய்வார்கள்.

இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் எங்களுக்குள்ள ஆசையால் கொண்டு வந்ததல்ல.

அது வெளியே இருக்கக்கூடிய இயக்கங்களைப் பிரதிபலிக்கிறது. அப்படிப் பிரதிபலிக்க வேண்டியது எதிர்க்கட்சியின் கடமை. எங்களுக்கு வந்திருக்கிற கடிதங்கள், தகவல்கள் எல்லாவற்றையும் கொடுப்பது என்றால் நேரமாகும். மக்கள் எங்களுக்குத் தகவல்கள் அனுப்புகிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் தலையீடுயில்லை என்று சிலர் சொன்னார்கள். தலையீடு இல்லாத கட்சி இது ஒன்றுதான். மக்களுக்கு நியாயம் வழங்குவதற்குத் தலையிட வேண்டிய அவசியம் இருக்கிறது. அமைச்சர்களாக இருந்தாலும் சரி அல்லது சட்டசபை உறுப்பினர்களாக இருந்தாலும்சரி ஏழை மக்களுக்காகச் செய்கிறோம் என்று ஏற்றுக் கொண்டுள்ள காரியங்களில் தலையிடுவதில் தவறு இல்லை.

தவறான காரியங்களில் தலையீடு கூடாது. எம்.எல்.ஏ.-க்கள் தலையிடக் கூடாது என்று சொன்னால் மக்கள் யாரிடம் தங்கள் குறைகளைச் சொல்வார்கள்? நியாயமான காரியங்களில் தலையிடுவது என்பது சரியல்ல என்று சொல்லமாட்டேன்.

விருகம்பாக்கத்தில் 50 ஏழை மக்களின் குடிசைகளை சட்ட விரோதமாகப் பிரித்துவிட்டார்கள், அதற்கு பந்தோபஸ்துக்கு 100 போலீஸ்காரர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர், இதனை ஏன் பிரித்தீர்கள் என்று கேட்டார். உடனே அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் என்றால் வரமாட்டார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்குப் பாதுகாப்புவேண்டாமா? அதையெல்லாம் நான் தலையீடு என்று சொல்ல மாட்டேன். பொது மக்களின்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஆளும்கட்சியினர்போகக் கூடாது என்று சொல்வது தவறு. அப்படியானால் ஜனநாயகமே வேண்டாம், அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்கள். அதிகாரவர்க்கத்திற்கு இடம் கொடுத்தால் அவர்கள் சமுதாயத்திற்கு மேலே உட்கார்ந்து விடுவார்கள். ஏழை மக்களின் இன்னல்களைத் துடைக்க சர்க்கார் இயந்திரத்தைப் பயன்படுத்துவதில் தவறு கிடையாது.

பொது மக்களின் நன்மைக்காக அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். நாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, கொள்கைகளை நிறைவேற்ற அரசு இயந்திரத்தைப் பயன்படுத்துவதில் தவறு இல்லை. சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

நான் சொல்வதற்காக என் அருமை நண்பர் திரு. ராதா அவர்கள் வருத்தப்படக் கூடாது. அவர்கள் ஊரில் ஒரு திருட்டு கேஸ். ஒரு ஆளைப் பிடித்திருக்கிறார்கள். டி.எஸ்.பி. சொல்லி சப் இன்ஸ்பெக்டர் அரெஸ்ட் செய்திருக்கிறார்கள். மேல் இடத்திலிருந்து டி.எஸ்.பி.-க்கு போன் போகிறது. அந்த சப்-இன்ஸ்பெக்டர் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறார். இது கொடவாசலில் நடைபெற்றது. இது திருட்டு கேஸ். இத்தகைய தலையீடுகள் கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : என்னை சம்பந்தமில்லாமல் இழுத்தார்கள். என் ஊர் என்று சொல்லிவிட்டு கொடவாசலுக்குப் போய்விட்டார் திடீரென்று. கொடவாசலில் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு கொடவாசல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : நான் திரு. ராதா அவர்களிடம் மதிப்பு வைத்திருப்பவன். தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லாப் பிரச்னைகளும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் கவனத்திற்கு வரும். டி.எஸ்.பி. சொல்லி ஒரு வழக்குப் போட்டது தப்பு என்று மேலிடத்திலிருந்து ஒரு உத்தரவு வந்தால் ராதா அவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? அந்நிலையில்தான் சொல்கிறேன். அப்படிப்பட்ட தவறுகள் திருத்தப்பட வேண்டும். அதில் இந்தச் சர்க்காருக்கு அக்கறையிருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, சேலத்தில் முதன்மை கல்வி அதிகாரி ஒரு இன்டர்வ்யூ நடத்துகிறார். தன்னைவிட எல்லாவிதமான தகுதிகளிலும் குறைந்திருக்கக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மு. சரஸ்வதி வொய்ப் ஆப் கும்பேஸ்வரன் எம்.ஏ., பி.டி. அது குமுறி எழுதப்பட்ட கடிதம். தன்னைவிட எல்லாவிதமான தகுதிகளிலும் தாழ்ந்து இருக்கக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை, இது என்ன நியாயம் என்று

கேட்டு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அல்லற்பட்டு ஆற்றாது வடிக்கிற ஒரு தாயின் கண்ணீர் கடிதம். அதனால் என்ன விடிவு, முடிவு வரும் என்பது உங்களுக்குத் தெரியும்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் குற்றச்சாட்டை அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பார்களேயானால் அது பற்றி விசாரித்துச் சொல்வதற்குத் தயார்.

<u>திரு. க. சுப்பு :</u> அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் கவனத்திற்கு வந்திருக்காது. இன்றுதான் எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. பத்திரமாக வைத்திருக்கிறேன், உங்களிடம் கொடுக்கிறேன். புளிக்காட்டு உயர்நிலைப் பள்ளி, பழவேற்காடில் ஒரு ஹெட்மாஸ்டர் ஒரு குழந்தையிடம் ஒரு ஆசிரியர் தவறாக நடந்து கொண்டார் என்பதாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு ஹெட்மாஸ்டர் விசாரணை செய்து அவரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார். பின்னால் அந்த ஹெட்மாஸ்டர் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள். நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டு அந்த ஆசிரியர் மறுபடியும் அந்த இடத்திற்கு திரும்பி வருகிறார். இப்படிப்பட்ட நிலைமைகளை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[பிற்பகல் 12-40]

இதில் உங்கள் பெயரை சம்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். அதனால் தான் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏதோ இதில் தலையீடு இருக்கிறது என்று சொல்லப்படுவதால் தான் இதை நான் இங்கே சொல்ல முன் வந்திருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றே ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமான ஒரு குற்றச்சாட்டு, முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால் அதைச் சொல்லிவிடுகிறேன். பி.ஜி. ஆர்த்தோபிடிக்-க்கு செலக்ஷன் நடக்கிறது. அதாவது அந்த டாக்டரின் பெயர் எம். துரைசாமி என்பது. இவர் சரித்திரத்தைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அக்டோபர் 73-ல் பூந்தமல்லியில் ஹெல்த் ஆபிஸராக இருக்கிறார், பின்னால் 15-9-1976ல் ஊஸ்ட் செய்யப்படுகிறார். பின்னால் 16—9—1976-ல் பி.எச்.ஸி. யில் அஸிஸ்டன்ட் சர்ஜனாக குறுவாடுகுப்பம் என்ற இடத்திற்கு மாற்றப்படுகிறார்.

பின்னர் உப்பிலியா புரத்திற்கு 29—10—1976-ல் மாற்றப் படுகிறார்—இப்படி பலவிதமான—ஏகப்பட்ட—சார்ஜஸ் இவர் மீது இருக்கிறது. என்கொயரி நடந்து கொண்டிருக்கிறது. இப்போது பி.ஜி. கோர்ஸ்-க்கு செலக்ஷன் பண்ணப் போவதாகத் தெரிகிறது. இதற்கு ஐந்து வருடம் எக்ஸ்பீரியன்ஸ் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இவருக்கு மூன்று வருடம்தான் எக்ஸ்பீரியன்ஸ் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்டவருக்கு பி.ஜி. ஆர்த்தபெட்டிக் செலக்ஷன் எப்படிக் கொடுக்கப்பட இருக்கிறது என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டது, பெரிய திட்டங்களுக்காக நாம் எவ்வளவோ பணத்தை ஒதுக்குகிறோம். ஆகவே இப்படிப் பட்ட விஷயங்களில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவருடைய தொகுதியில் நடைபெற்ற வேலையில் டெண்டர்கள் விடாமலேயே 'ஆஃபர் வொர்க்ஸ்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையாக இருக்கும் என்று நான் கருதவில்லை. உண்மையாக இருக்கக் கூடாது என்று தான் நானும் நினைக்கின்றேன். ஆஃபர் வொர்க்ஸ் யாருக்கு விடப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் அமைச்சர் அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரருக்கு இந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. அதை நான் ரிக்கார்டு பண்ண விரும்பவில்லை. ஏன் இதற்குள் அநாவசியமாகப் போகவேண்டும். நாம் எல்லோரும் சகோதரர்கள், ஆனால் எல்லோருக்கும் ஒன்று விட்ட சகோதரர்களாக ஆகிவிட முடியாது.....

<u>மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற விஷயங்களுக்கு ஏதாவது பதில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் தகவல்களைத் தருகிறாரா என்பது புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதை இங்கு புரிந்து கொள்ள முடிகிறதா? என்ன பேசுகிறார்கள் என்பது ஐயமாக இருக்கிறது, அந்த ஐயத்தைத் தீர்த்து விட்டு விளக்கமாகப் பேசுவார்கள் என்று நம்புகிறேன்.....

[1978 சனவரி 5

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்கள் தனது இன்ஃப்ளுயன்ஸைப் பயன் படுத்தி இரண்டு நிமிட நேரம் வாங்கித் தருவதாக இருந்தால் எல்லாவற்றையும் விளக்கமாகப் பேசுகிறேன், நேரமில்லையே, நான் என்ன செய்வது?

கடைசியாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.... அதாவது ஹ்றான்ட்லூம் டெக்ஸ்டைல் துறை மூலமாக சில்க் காட்டன் வாங்கப்படுகிறது. ஒரு கிலோ 12 ரூபாய் 75 காசு விலையில் வாங்கப்படுகிறது, இப்படி 3000 பேல்கள் வாங்கப்பட்டிருக்கிறது, இதில் பாதி காட்டன் பேல்களாகவும், பாதி சில்க் காட்டன்களாகவும் வாங்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது. இவை எங்கெங்கு இருக்கின்றன என்கின்ற விவரங்களையும் சொல்லுகிறேன், தாமதமில்லாமல் உடனடியாக—நான் சொல்வது அல்லது நான் தருகின்ற தகவல் சரியாக இருந்தாலும் சரி, தவறாக இருந்தாலும் சரி, நான் சொல்லுகின்ற டிப்போக்களில் சோதனையிட்டுப் பார்க்க வேண்டும். இது போன்ற பேல்கள் அண்ணாசாலையிலுள்ள காதி இலாக்காவின் டிப்போவில் இந்த நூல் இருக்கிறது, திருமழிசையிலுள்ள கைக்குத்தல் அரிசி சங்கத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிறது, சாந்திநகரில் திருவொற்றியூரில் இருக்கிறது. இப்படி 3000 பேலுக்குக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள், இதனால் சர்க்காருக்கு ஏற்படுகின்ற நஷ்டம் ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 500 ரூபாய். இது மிகவும் ஏழை நாடு. நமது மந்திரிகளுக்கு வேண்டுமென்றால் இது சாதாரணத் தொகையாக இருக்கலாம். இந்த விவரங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்குச் சற்று கசப்பாக இருக்கலாம்...

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் என்பது மந்திரிகளுக்கு வேண்டுமென்றால் சாதாரணத் தொகையாக இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள் அதாவது முன்னாள் மந்திரிகளுக்கு என்று சேர்த்து சொல்ல வேண்டுகிறேன்.

திரு. க. சுப்பு : யார் செய்தாலும் தப்பு, தப்புதான். அந்த வகையிலேதான் நான் இதைச் சொல்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் ஏழையல்ல என்று கருத்துப்பட தெரிவித்தார்கள்.

1978 சனவரி 5] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தவறு இருந்தால் அந்தக் குறிப்பிட்ட தவறை எடுத்துச் சுட்டிக் காட்ட வேண்டும். தவறு இருந்தால், அதைக் கண்டிப்பதற்கு அமைச்சரவைக்கு உரிமை இருக்கிறது. அதற்கு தண்டனை அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆனால், தவறு என்று சொல்லிவிட்டு, அதற்கு ஒரு முடிவையும் அவர்களே சொல்லி, அதோடு அமைச்சர் அவர்களுக்கு இந்த ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் என்பது சாதாரணமாக இருக்கலாம் என்று சொல்வதற்கு இந்தப் பேரவை இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொன்னது முடிவல்ல ; கருத்துதான். அந்தக் குற்றச்சாட்டிற்கு சற்று 'எபெக்ட்' இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் அதைத் தவறாகக் கருதக் கூடாது. என்னைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்கு சந்தோஷப்படுகிறேன்.

Furnishing wrcng information to the House.

என்று அமைச்சர் கூடச் சொல்லலாம். அந்த வகையிலே நான் இங்கே சில தகவல்களைச் சொல்கிறேன்.

ரூரல் ரோட் ஓர்க்சின் கீழ், தம்பிப்பேட்டையிலிருந்து திருமதுரன்குப்பம் வரை ஒரு எஸ்டிமேட் போடப்பட்டது. 1,50,000 ரூபாய்க்கான அந்த எஸ்டிமேட் டெண்டருக்கு விடப்பட்டது. அதை சின்னச்சாமி என்ற ஒருவருக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர் அமைச்சர் அவர்களின் ஒன்று விட்ட தம்பி என்று சொல்லப்படுகிறது.

அதே போல், மற்றொரு எஸ்டிமேட் காட்டுக் கூடலூரிலிருந்து வசனன் குப்பம் வரையில் 53,750 ரூபாயில் போடப்பட்டது. அந்த டெண்டரும் ஏனப்பன் என்கின்ற ஒருவரால் எடுக்கப்பட்டிருக்கிறது. இவரும் அமைச்சர் அவர்களின் ஒன்று விட்ட தம்பி என்று சொல்லப்படுகிறது.

இந்த மாதிரியான தகவல் வந்திருக்கிறது. இதையெல்லாம், இம்மாதிரியான தவறுகளையெல்லாம் எதிர்க் கட்சியிலே இருக்கின்ற நாங்கள் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறோம். இதிலே, தவறு இருக்குமானால் அந்த ஆர்டரை, டெண்டரை கான்சல் செய்து விட்டு, மீண்டும் 'ஓபன் டெண்டர்' போடலாம் என்கின்ற முறையிலேதான் இவைகளை யெல்லாம் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறோம். தவறுகள் இருந்தால்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகி விட்டது. சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. சுப்பு : ஆகவேதான், இந்தப் பேரவையின் முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் மீது குற்றஞ் சாட்டுகிறோம்; இது நடை முறையைப் பொறுத்தது; மற்ற கட்சிகளும் கொள்கைகளை எடுத்துச் சொல்கிறார்கள் ஆனால், இன்றைக்கு நாங்கள் இப்படிக் கொண்டு வரும்போது, அதை வேறுபடுத்திக் காட்டுகிறீர்கள். எங்கள் மேல் இரண்டு செக்ஷன் போடுகிறீர்கள். ஆகவே, நாங்கள்தான் இப்படிக் குறைகளை எடுத்துச் சொல்ல முடியும். வேறு யார் சொல்ல முடியும் ? ஆனால், ரூல் 42, 55-ன்படி கொண்டு வந்து பேசுகிறோம்.

எப்போதும் ஆளும் கட்சியின் மீது ஒத்தி வைப்புத் தீர்மானம், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் போன்றவைகளை எதிர்க் கட்சிகள் கொண்டு வரும். அதை ஒரு 'பர்சனல் அட்டாக்' ஆக எடுத்துக் கொள்ளக் கூடாது. எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த போது, இதே போன்று எத்தனையோ முறைகள் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முறையில் நாங்கள் கொண்டு வந்திருப்பது இந்த அரசாங்கம் செய்துள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவதற்கும், இவைகளை மக்களுடைய பிரச்னையாக எடுத்துக் கொண்டு, திருத்துவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க முன் வருவதற்கும், இன்னும் சொல்லப் போனால் இதன் மூலம் எங்களை நீங்கள் திட்டுகிறீர்கள். அப்படி நீங்கள் திட்டுவதற்கும் நாங்கள் இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம் என்பதற்காக இன்றைக்கு இதன் மீது யார் யார் பேசுகிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் நன்றி செலுத்தவேண்டும்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய முக்கிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் இந்த அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை

யொட்டி எனது சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன்.

இரண்டு நாட்களாக இந்த அவையிலே நடந்து கொண்டிருக்கின்ற இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது இந்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எதிர்க் கட்சித்தலைவர் அவர்களும், அந்தக் கட்சியிலே இருக்கின்ற பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்தில், நான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு துறைகளைப் பற்றியும், அந்தத் துறைகளிலே நடைபெறுகின்ற தவறுகளைப் பற்றியும் அவர்கள் சொல்லியிருக்கின்ற காரணத்தினால், அவற்றிற்கு நான் விளக்கம் சொல்லவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்கின்ற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மான விவாதத்தில் கலந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் பல்வேறு தரப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்கு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே விளக்கம் தர இருக்கிறார்கள் என்றாலும், என்னுடைய துறையைப் பற்றி சில விளக்கங்களை நான் இங்கே சொல்வது நல்லது என்ற எண்ணத்தில் நான் இந்த அவையில் சில கருத்துக்களைத் தெளிவாகக் கூற முன்வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50).

நேற்றைய தினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன் மொழிந்து இநத அவையில் தன்னுடைய விவாதத்தை ஆரம்பித்து வைத்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையிலே பல்வேறு குற்றச் சாட்டுக்களைச் சொல்லுகிற நேரத்தில் தமிழகத்திலே அண்மையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற, மீனவர்கள் மத்தியில் இருக்கிற பிரச்சினையைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த மீனவர் பிரச்சினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட காலம் முதல் மாத்திரம் எழுந்துள்ள பிரச்சினை அல்ல.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 சனவரி 5

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, தன்னுடைய உரையிலே பேசும்போது இப்பேர்ப்பட்ட ஒரு பிரச்சினை அவர் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்திலும் இந்த நாட்டிலே எழுந்தது என்றும் அப்போது நானும் இன்னொரு சட்ட மன்ற உறுப்பினரும் தலையிட்டு சமரசம் செய்து வைக்கும் முயற்சியில் ஈடு பட்டதாகவும் அவர் சொன்னார். மீன்வர்கள் மத்தியில் எழுந்துள்ள இப்பேர்ப்பட்ட தகராறு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் இருந்திருக்கிறது என்பதை அவரே ஏற்றுக் கொண்டதற்காக நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அவருடைய குற்றச் சாட்டெல்லாம் இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கட்டுமரத் தொழிலாளர்களுக்கும் விசைப் படகுத் தொழிலாளர்களுக்கும் இடையே தகராறு இருக்கிறது என்றும் அந்தத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு அக்கறை காட்டவில்லை என்றும் ஒரு பயங்கரமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதன் மூலம் இந்த அவைக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த அரசைப் பொறுத்த மட்டில், இந்த அரசு நியாயத்தின் பக்கம் இருக்கிறது. இருக்க விரும்புகிறது என்பதே தவிர, அது தனிப்பட்ட மீன்வர்களுடைய பிரச்சினைகளுக்குள்ளே நுழைந்து கட்டு மரத்து மீனவர்கள் பக்கமோ அல்லது விசைப் படகுச் சொந்தக்காரர்கள் பக்கமோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் தகராறுகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால் இப்பேர்ப்பட்ட தகராறுகள் தமிழகத்தினுடைய கடற் கரைப் பகுதியில் நடைபெற்ற நேரத்தில், அதிலும் குறிப்பாக சென்னையை ஒட்டிய கடற்கரைப் பகுதியில் நடந்த நேரத்தில் இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடு கலந்து கட்டு மரத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்து, விசைப் படகுச் சொந்தக் காரர்களையும் அழைத்து, இரு சாராரையும் கூட்டி வைத்து ஏறத்தாழ மூன்று நாட்கள்

1978 சனவரி 5] [திரு. க. உரோ. எட்மண்ட்]

தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி இரு சாராரையும் ஒரு உடன்பாட்டுக்குக் கொண்டு வருகிற முயற்சியிலே இந்த அரசு வெற்றி கண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிற இந்த நேரத்தில் அதற்கான ஒப்பந்தம் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி நடந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்வது அவசியமாகும்.

இரண்டு நாளைக்கு முன்னாலே கூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது நான் என்னுடைய அறிக்கையை இந்த அவையில் வைத்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு க. சுப்பு அவர்கள் என் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை இங்கே வைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே பேசுகிறார்களே தவிர, சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளுக்கு....

திரு. க. சுப்பு : ஏற்கெனவே உரிமைப் பிரச்சினை கொடுத்துப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பற்றி பேசியிருக்கிறேன். தலைவர் தீர்ப்புச் சொல்லுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தீர்ப்பு பெண்டிங்காக இருக்கும்போது அந்த உரிமைப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவது எந்த அளவுக்கு முறையானது ? நாங்களும் அப்படிப் பேச முடியும். ஆகவே, இதை விட்டுவிடுவது நல்லது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுடைய உரிமைப் பிரச்சினைக்குப் பதில் சொல்லவில்லை. அந்த உரிமைப் பிரச்சினை பேரவைத் தலைவர் அவர்களுடைய கையிலே இருக்கிறது. அந்த உரிமைப் பிரச்சினை இந்த அவையிலே எழுப்பப்படுமானால் அப்போது அந்த உரிமைப் பிரச்சினையிலே என்னுடைய பதிலைச் சொல்ல இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இப்போது சொல்வதெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சொன்னார்கள். மீனவர்கள் பிரச்சினை தொடர்கதையாக நடந்து இந்த அரசு அதிலே அக்கறை

எடுத்து அதிலே எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ள எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்பதைச் சொன்னார்கள். அதற்குத்தான் என்னுடைய பதிலைச் சொல்லுகிறேனே தவிர, மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு நிச்சயமாக இல்லை. அந்தப் பதிலை உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளும்போது நிச்சயமாகச் சொல்ல இருக்கிறேன்.

ஆகவே, ஒப்பந்தம் 1977-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதியில் கையெழுத்தாகியிருக்கிறது. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட தகராறுகள் தொடர்ந்து நடந்ததன் காரணமாக மீண்டும் இரண்டு தரப்பினர்களின் பிரதிநிதிகளையும் அழைத்து பல்வேறு முடிவுகளை இந்த அரசு எடுத்து அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவுகள் தாற்காலிகமான முடிவுகள் தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரமான முடிவு காணுகின்ற வகையில் தான் இந்த அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுமானால் மீனவர்களிடையே நடைபெற்றுக்கொண்டு வருகிற சச்சரவுகளுக்கு இடம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீனளத் துறையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே, உணவுத் துறையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதைப் போலவே விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்தாக வேண்டுமென்று சொன்னார்கள். இளைஞர் அணியினருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் துவக்கி வைத்துப் பேசும் போது அவர்கள் சொன்னார்கள். எந்தப் பிரச்சினைகளை இன்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் எழுப்பியிருக்கிறார்களோ இந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படை காரண கர்த்தாக்களே இதற்கு முந்திய அரசு என்பதை ஆதாரத்தோடு சுட்டிக் காட்டக் கடமை பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு நான் மீனளத் துறையைப் பற்றிச் சொல்கிறேன். கட்டுமரத் தொழிலாளர்களுக்கும் விசைப் படகுத் தொழிலாளர்களுக்கும் இடையே தமிழகத்தின் கடலோரப் பகுதிகளிலே சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குக் காரணம் இதற்கு முந்தைய அரசு விசைப் படகுகளை வழங்குகிற நேரத்திலே உண்மையான மீனவர்களுக்குக் கொடுத்து இருப்பார்களானால் இப்படிப்பட்ட சச்சரவுகளுக்கு இன்றைக்கு இடம் இருக்காது.

<u>திரு. ப. பொன்னுரங்கம்</u>: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள் முந்தைய தி.மு.க. அரசு மீனவர்களுக்குப் படகுகள் வழங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு பெரிய குற்றச்சாட்டு. பிஷர்மென் கோஆப்ரேடிவ் சொஸைடி ஆதரைஸ் பண்ணிய பிறகுதான் அந்த அப்ளிகேஷன்கள் கன்சிடர் செய்யப்பட்டு வழங்கப் பட்டிருக்கின்றன. அதுதான் உண்மை. ஆகவே, உண்மைக்கு மாறான பதிலை அமைச்சர் தருவது சரியல்ல.

<u>மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்</u>: உண்மைக்கு மாறான தகவலை நான் கொடுத்தால் அதற்கும் நீங்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை கொண்டுவரலாம். அதற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். என்னிடம் ஆதாரம் இருக்கிறது. தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு எத்தனை விசைப்படகுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பெற்றவர்கள் யார் யார் என்பதற்கும் அவர்களிலே எத்தனை பேர்கள் மீனவர்கள் என்பதற்கும் எத்தனை பேர்கள் மீனவர்கள் அல்லாதவர்கள் என்பதற்கும் ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. யாருக்குப் படகுகள் வழங்கப்பட்டனவோ அவர்களில் எத்தனை பேர்கள் உரிமையாளர்களாக இருக்கிறார்கள், எத்தனை பேர்கள் மீனவர்கள் அல்லாதவர்களுக்கு கைமாற்றியிருக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரம் இருக்கிறது. எத்தனை பேர்கள் பினாமி என்ற பெயரில் விசைப் படகுகள் வாங்கியிருக்கிறார்கள் என்பதற்கும் என்னிடம் ஆதாரம் இருக்கிறது.

<u>திரு. மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, பொன்னுரங்கம் எடுத்துக் காட்டியதைப் போல மீனவர்கள் என்ற அந்த அடிப்படையிலேதான் தரப்படுகிறது. மீனவர்கள் வாங்கி பினாமியாக வேறு ஒருவருக்கு விற்றால் நாம் அதற்கு பொறுப்பாக முடியாது. மீனவர்கள் அல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் தான் நாம் பொறுப்பாக முடியும். மீனவர்கள் வாங்கி மீனவர் அல்லாதவர்களுக்கு கொடுத்திருப்பதற்கு நாம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது.

<u>திரு. கூத்தக்குடி ச. சண்முகம்</u>: இந்த அவையிலே தகவல் தரவேண்டுமென்ற முறையில் எங்களுக்கு அந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டும், உதாரணத்திற்கு 1, 2 பெயர்களையாவது சொல்ல வேண்டும்.

[1978 சனவரி 5

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> சில காரணங்களால் நான் இப்போது அந்தப் பெயர்களைச் சொல்லத் தயாராக இல்லை. மீனவர்கள் அல்லாதவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

<u>திரு. மு. கருணாநிதி :</u> பொறுப்புள்ள அமைச்சர் பெயர்கள் இருக்கின்றன என்று சொன்ன பிறகு திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பெயர்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டதுபோல் பெயர்களைச் சொல்வது தவறல்ல. சொல்வதனால் அபாயம் விளைந்துவிடும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவது பொருத்தமான பதில் இல்லை. பெயர்களைச் சொல்லிவிடுவது நல்லது.

(பிற்பகல் 1–00)

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்பதாலே நான் அந்தப் பெயர்களை இப்பொழுது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐ. பி. 490 என்ற படகு எஸ். வேணுகோபால் அலையஸ் மாறன் என்பவருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அவர் மீனவர் இல்லை என்ற தகவல் வந்திருக்கிறது. இப்படிச் சொல்ல வேண்டுமென்றால் பட்டியலே இருக்கிறது. அவைகளை வாசிப்பதற்கு நேரம் இல்லை.

<u>திரு. மு. கருணாநிதி :</u> அந்த வேணுகோபால் அல்லது மாறன் என்பவர் மீனவர் அல்லவா ?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> மீனவர் இல்லை என்று நான் சொல்லுகிறேன். மீனவர் என்பது, உங்களுடைய அரசாங்கத்தின் கணக்குப் பிரகாரம், அவர் ஜாதியில் மீனவராக இருந்தாலும் போதும். தொழில் செய்யும் மீனவர்களுக்குப் படகுகள் கொடுக்கப்படவில்லை. அதனால்தான் தகராறே வருகிறது.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, இதுவரையிலே உணவு அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது நாங்களெல்லாம் புரிந்து கொண்டது, மீனவ சமுதாயத்திலே பிறக்காத ஒருவருக்கு அந்தப் படகுகள் தரப்பட்டதாக நாங்கள் புரிந்து கொண்டோம். ஆனால் இப்பொழுது அவர்கள், மீனவத் தொழிலில் ஈடுபடாதவர்களுக்குப் படகுகள் கொடுக்கப்பட்டது என்று தெளிவுபடுத்துகிறார்கள்.

1978 சனவரி 5]

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மீனவ சமுதாயம் என்று யாரைச் சொல்கிறார்கள் என்று புரிந்துக்கொள்ள முடியவில்லை மீனவ சமுதாயம் என்று இருக்கிறது என்று சொல்லி, அந்த விசைப்படகுகளை அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னால், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே விசைப்படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய சமுதாயத்தினர் மீனவர் அல்ல. அவர்கள் மீனவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப் படமாட்டார்கள். மீனவர்கள் என்றால் அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள்தான் மீனவர்கள். இன்றைக்கு பிரச்சினைக்கான அடிப்படை காரணமே, தொழிலிலே ஈடுபாடு கொள்ளாத மீனவர்களுக்கு விசைப்படகுகளைக் கொடுத்ததால்தான் இந்தத் தகராறே வருகிறது.

<u>திரு. ப. பொன்னுரங்கம் :</u> தலைவரவர்களே, . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> குறுக்கிட வேண்டாம். தயவு செய்து அமருங்கள்.

THE HON. THIRU G. R. EDMUND: Sir, I am not yielding.

<u>திரு. மு. கருணாநிதி:</u> ஒரு பெரிய பிரச்சினையை இங்கே இந்த அவையிலே நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியபொழுது, விசைப்படகுக்காரர்களுக்கும் கட்டுமரக்காரர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்த அரசு தவறிவிட்டது, விரைவிலேயே அதற்கான எல்லா சூழ்நிலைகளையும் உருவாக்கவேண்டுமென்றுதான் குற்றஞ்சாட்டினேன். அதற்கு உணவு அமைச்சரவர்கள் சட்டமே கொண்டுவரப்போகிறோம் என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி கூட தெரிவித்துக்கொள்ள வேண்டும், இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்ததன் காரணமாக இந்தப் பதிலைச் சொன்னார்கள் என்று. இந்தப் பிரச்சினையில், மீனவர்கள் அல்லாதவர்களுக்குப் பழைய அரசில் படகுகள் தரப்பட்டன என்று சொல்லும்பொழுது, ஒருவேளை மாறன் என்று சொல்வதால் வெளியிலே இருப்பவர்கள் யாரையாவது மனதில் நினைத்துக்கொள்ளட்டும் என்று சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இப்பொழுது, மீனவ சமுதாயத்தில் இருந்தால் மட்டும் போதாது, மீனவத் தொழி

விலும் ஈடுபட வேண்டும் என்று கூறுகிறார்கள். அந்தப் பட்டியலை முழுவதும் படிக்கவேண்டும். அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் பெயரும் இருக்கிறதா இல்லையா என்று தெரிவிக்கட்டும்.

மாண்புமிகு திரு. க. உரொா எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மீனவர்களுக்குத்தான் படகுகளை வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். மீனவர் என்ற ஜாதி இருக்கிறது, அந்த ஜாதியினருக்குத்தான் நாங்கள் விசைப்படகுகளைக் கொடுத் தோம் என்று சொன்ன காரணத்தால் எனக்கும் சந்தேகம் ஏற்பட்டது. மீனவர் என்ற ஜாதியினர் தமிழ் நாட்டில் குமரி முதல் சென்னை வரையிலே பரவியிருக்கிறார்கள், உள் நாட்டு மீனவர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் மீனவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஒவ்வொரு ஜாதியாக அவர்கள் பெயர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திரா விட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இஸ்லாமிய சமுதாயத் தைச் சேர்ந்தவர்களுக்குப் படகுகளை கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. மு. கருணாநிதி; வேணுகோபால் என்பவருக்கு, தகுதியற்ற, எலிஜிபில் இல்லாத ஒருவருக்குப் படகு வழங்கி யதாக உணவு அமைச்சரவர்கள் அறிவித்தார்களே, அது எந்த ஆண்டு ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, எந்த ஆண்டு என்பதற்கு எந்தவிதமான (சிரிப்பு) ஏன் சிரிக்கிறீர்கள் ? எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்பதற் கான அந்த புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. அது உங்களுக்கு வேண்டுமென்றால், அதற்கான மானியம் வருகிற அந்த நேரத்திலே சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒன்றை முன்னாள் முதலமைச்சரவர் கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். நீங்கள் விசைப்படகு களை மீனவர்களுக்குக் கொடுக்கவில்லை, கரையிலே இருக்கின்ற முதலாளிகளுக்குக் கொடுத்து இருக்கிறீர்களே தவிர மீனவத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கவில்லை என்பதுதான் இந்த அரசின் குற்றச்சாட்டு.

திரு. மு. கருணாநிதி: நீங்கள் நிச்சயமாக ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்கள் காலத்தில் மீனவ சமுதாயத் திலே உள்ளவர்களுக்குத்தான் அந்தப் படகுகள் தரப்பட்டிருக்

[illegible] என்று முன்பே சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளாமல் மீனவர்கள் அல்லாதவர்களுக்குத் தரப்பட்டது என்று உணவு அமைச்ச ரவர்கள் திசை திருப்பினார்கள்.

திரு. [illegible]குடி ச. சண்முகம்: எங்கள் மாவட்டத்திலே [illegible] சமுதாயத்தினரும் மீன்பிடிக்கிறார்கள். இராமேஸ் [illegible] கரையிலே படகு வைத்தும் பிடிக்கிறார்கள். [illegible] மீனவர்கள் என்றால் மீன் பிடிக்கிறவர்கள் என்று [illegible]கிறார்களா என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதை [illegible] சொல்லிவிட்டு . . .

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: ஏதோ ஒரு மாறன் என்று சொல்வதற்காகச் சொல்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலைவர் தனக்கே உரித்தான தன்மையோடு சொல்ல வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். வேணு கோபால் என்கிற மாறனுக்கு விசைப்படகு கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர் ஐ.ஓ.பி. பாங்கிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் மீன்பிடி தொழிலிலே ஈடுபடுவ தில்லை. அவருக்குப் படகு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் படகு கொடுத்திருப்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். 1969-லேயிருந்து, 1976-க்குட்பட்ட ஆட்சியில் அது கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: 1969-லேயிருந்து, 1976 வரை நடைபெற்றதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று முதலமைச்சர் கூட ஒத்துக் கொள்ளமாட்டார். ஏனென்றால், 1967-லேயிருந்து நடைபெற்றதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆகவே தான் கேட்டிருக்கிறேன், 1969-க்கு முன்பா, 1967-லேயா, 1969-லேயா, 1970-லேயா, 1972-லேயா என்று தெளிவாகச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: 1967-லிருந்து 1969 வரையிலே அண்ணா அவர்கள் தலைமையிலே நடை பெற்ற பொன்னான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பற்றி, புரட்சித் தலைவருடைய இந்த அரசு நிச்சயமாக என்றைக்கும் குறை சொல்லாது.

திரு. மு. கருணாநிதி: நான் கேட்பது இந்த வார்த்தை விளையாட்டல்ல. திட்டவட்டமாக எந்த ஆண்டு கொடுக்கப் பட்டது என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

[1978 சனவரி 5

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இந்த படகு 1969-க்குப் பிறகு, 1976-க்குட்பட்ட இடைக்காலத்தில் கொடுக்கப்பட்டது என்று நிச்சயமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் இந்த நாள், இத்தனை மணி, இந்த நேரம் என்று கேட்டால், அந்த விவரத்தைச் சேகரித்துத்தான் சொல்ல முடியும்.

(திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. ப. பொன்னுரங்கம், திரு. மு. அரங்கநாதன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொன்னபிறகு, தயவு செய்து எழுந்து மீண்டும் எழுப்பாதீர்கள்? அமைச்சர் தொடர்ந்து பேசட்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஆகவே, இன்றைக்கு இருக்கிற பிரச்னைகளுக்கெல்லாம் மூல காரணம் இதுதான் என்று இந்த அரசு கருதுகிறது. ஆகவே, இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இப்பொழுது தற்காலிக நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டாலும், நிரந்தர பரிகாரங்களைக் கொண்டு வர இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். ...

திரு கூத்தக்குடி ச. சண்முகம்: அந்த மாதிரி தவறாகப் பெற்றவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, விசாரித்து, அதன்மேல், இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: அதையொட்டி ஒன்று சொல்கிறேன். அப்படி விசைப்படகு வாங்கியவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கும்போது, விசைப்படகு வாங்கியவர்கள் இன்றைக்கு விற்றுவிட்டிருக்கிறார்கள். அப்படி வாங்கியதைச் சட்டப்படி விற்கக்கூடாது. நான் குறிப்பாக சொல்ல வேண்டுமானால், பாலன் ஜேப்பியார் விற்றிருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சண்முகம் எழுந்து பேசியதற்கு அமைச்சர் பதில் சொல்வார், நானே சொன்ன பிறகு அவர் பேசியிருக்கிறார். நீங்கள் பேரவைத் தலைவரைப்பற்றிக் கவலையில்லையென்ற வகையில் எழுந்து பேசுகிறீர்கள்.

திரு. மு. அரங்கநாதன்: அதையொட்டித்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் எழுந்து பேசுவதே எனக்குப் பிடிக்கவில்லை. இங்கே ஒருவர் ஒரு பிரச்னையை எழுப்பினால், அமைச்சரோ, நானோ பதில் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், நீங்கள், இவ்வாறு பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் எழுந்து பேசக் கூடாது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுடைய பக்கத்திலேயிருந்து எதிர்க்கட்சித் தலைவர் வாதாடுவதாலே, மற்றவர்களுக்கு வேண்டாம் என்று குறிப்பிட்டேனே தவிர, (குறுக்கீடு) ஆகவேதான் வேறு கட்சியைச் சேர்ந்திருக்கிற உறுப்பினர்கள் சந்தேகத்தை எழுப்ப அனுமதித்தேன். உங்கள் சார்பிலே எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். சிலர் படகுகளை வாங்கி விற்றுவிட்டார்கள். அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டார். விற்றவர்கள் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், மீனவர்கள் அல்லாதவர்களிடம் இருக்கின்ற விசைப் படகுகளை என்ன செய்வது என்று இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நான் இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மீனவர்கள் அல்லாதவர்களிடம் உள்ள விசைப் படகுகளைத் திரும்பப் பெற என்ன செய்யலாம் என்பதை இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மீன்பிடி தொழிலிலே ஈடு படாதவர்கள் வைத்திருக்கிற விசைப்படகுகளை என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், நாங்களெல்லாம் பல மீன பிடி தொழில் செய்கிறவர்களுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

[1978 சனவரி 5

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மீன்பிடி தொழிலை ஈடுபடாதவர்கள் பலர் விசைப் படகுகளை வைத் திருக்கிறார்கள். பலர் விற்று விட்டார்கள். அவற்றை விற்ற வாகளை இந்த அரசு ஒன்றும் செய்ய முடியாது. விசைப் படகுகளை வாங்கியவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடாமல் இருந்தால் என்ன செய்வது என்பதைப் பற்றி இந்த அரசாங் கம யோசித்துக்கொண்டிருக்கிறது. அவற்றைத்திரும்பப் பெறுவது பற்றிய சட்ட நுணுக்கங்களைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். கூடுமானவரையில், அடுதத நிதி நிலை தொடர் கூட்டத்திலே, அதற்குண்டான சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

(பிற்பகல் 1-10)

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உணவு அமைசசா மதாிவததை கருத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். மீன் பிடி படகுகளை வாங்கி விற்றுவிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாது என்று சொன்னார்கள். ஏறகெனவே கவர்னர் உரையிலோ அல்லது நிதி நிலை அறிக் கையிலோ வரிகட்டாதவர்களைக் கூட விளம்பரப்படுத்த இருக் கிறோம் என்று இந்த அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டது. அப்படி விற்றுவிட்டவர்கள் பட்டியலை விளம்பரப்படுத்தினால், மற்றவர்கள் இனிமேல் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யா மல இருக்க வேண்டு மென்பதற்காக விளம்பரப்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அதைப்பற்றி இந்த அரசு யோசித்து, தேவைப்படுமானால் நிச்சயமாக அந்தப் பெயர்ப்பட்டியலை அரசு அறிவிக்கும்.

திரு. மு. கருணாநிதி : அவர் திட்டவட்டமாக சரி என்று சொல்லவில்லை. தேவையானால் என்று சொல்லி தப்பிக்கப் பார்க்கிறார். இதற்கு முதல் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் சொல்வது அரசின் கொள்கை. அந்த இலாகா அவருடைய பொறுப்பில் இருக்கிறது. ஆகவே அவர் அதைப்பற்றி சிந் தித்து சொல்வேன் என்று சொல்ல அவருக்கு உரிமை இருக் கிறது. ஆனாலும், எங்களுடைய கொள்கையை அவர் ஏற்றுக் கொண்டார் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் ஏற்றுக் கொள் வார் என்று கருதுகிறேன்.

1978-சனவரி 5]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இஸ்லாமிய மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மீனவர்கள் அல்ல என்று அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கி றார்கள். பிறகு அதற்கு விளக்கம் தருகின்ற போது மீன்பிடி தொழிலிலே ஈடுபட்டவர்கள் மீனவர்கள் என்று குறிப்பிட் டார்கள். அப்படியானால் மீன் பிடி தொழிலிலே ஈடுபட் டுள்ள இஸ்லாமியத் தோழர்கள் மீனவ சமுதாயத்தைச்— சேர்ந்தவர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுவார்களா, அதன் படி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மீன் பிடி தொழிலிலே ஈடுபட்டுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் மீன வர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். அந்தச்சலுகை கள் அவர்களுக்கும் நிச்சயமாகக் கொடுக்கப்படும் ; என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நியாய விலைக் கடைகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் உண்மையிலேயே அவர்களுக்கு இந்த நியாய விலைக் கடைகளைப் பற்றி பிரச்சினையைப் பற்றி கூறியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் கொள்கை அளவில் அவர்கள் ஒத்துக் கொண்டார் கள். ஆனால் அவர்களுக்கிருக்கின்ற கோபம் எல்லாம் அறி விக்கப்பட்ட அந்தக் கடைகள் எல்லாம், 6 மாதம் ஆகியும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையே என்ற கோபமே தவிர வேறு எந்தக் கோபமும் இல்லை என்றுதான் நான் கருது கிறேன்.

அந்த அளவுக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்கு இந்த அரசை நடத்துகின்ற புரட்சித் தலைவர் அவர் களின் திறமையின் மீது ஆழ்ந்த நம்பிக்கை இருப்பதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேதான் ஆளுநர் உரை யிலே அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் இன்னும் ஏன் ஆரம்பிக்கவில்லை என்றுதான் சொன்னார்கள் என்று எடுத்துக் கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளை ஆரம்பிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. முன்னாலே உணவு அமைச்சராக இருந்த ப. உ. சண்முகம் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 சனவரி 5

நான் நம்புகிறேன். அந்த அளவுக்குப் பல சிக்கல்கள் இருக் கின்றன. நியாய விலைக் கடைகளை ஆரம்பித்து விட்டபிறகு, விற்கப்படுகின்ற சாமான்கள் அநியாய விலைக்கு விற்கப்படு மானால் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஆகவே, நியாய விலைக் கடைகளுக்காக பண்டங்களை உற்பத்தி செய்கிற இடங் களில் சென்று எங்கே மிகக் குறைவான விலையில் வாங்க வாய்ப்பு, வசதி இருக்கிறதோ அங்கே வாங்கினால்தான், ியாயமான விலைக்குத் தேவையான பண்டங்களை விற்க அப் ்டிப்பட்ட கடைகளை ஆரம்பிக்க முடியும். 16 ஆயிரம் நியாய விலைக் கடைகளை ஆரம்பிப்பதன் மூலமாக இந்தஅரசு அத்தியாவசியமான பொருள்களான அரிசி, கோதுமை, எண்ணெய் போன்ற பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யும் என்று அறிவித்திருக்கிறோம்.

ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கின்ற 16,000 கிராமங் களில் ஏறத்தாழ 9,000 கிராமங்களில் இன்றையதினம் கடைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்த 9,000 கடைகளில், 5,800 கடைகள் பெரும்பாலாக கிராமப் புறங்களில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. அந்தக் கடைகளில் இன்றையதினம் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பண்டங்கள் இன்றையதினம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, 16,000 கிராமங் களுக்கும் நியாய விலைக் கடைகள் இருக்கவேண்டும் என்று நாங்கள் சொன்ன நேரத்தில் ஏற்கெனவே இருக்கின்ற 9,000 கடைகளை நீக்கி இன்னமும் 7,000 கடைகள் பல்வேறு பகுதிகளில் ஆரம்பிக்கவேண்டிய நிலை இருக்கிறது.

இந்த 7,000 கடைகளை நியாய விலைக் கடைகளாக ஆரம்பிக்கிற காலத்தில் ஏற்கெனவே தமிழகத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிற 9,000 கடைகளையும், நியாய விலைக் கடைகளாக மாற்றும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது. இருக்கின்ற 9,000 கடைகளில் இப்போது அரிசி, கோதுமை, சர்க்கரை மாத்திரம் அளிக்கப் படுவதற்குப் பதிலாக அந்தக் கடைகளிலே மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களாக உள்ள மசாலா சாமான்கள், எண்ணெய், புளி, வெங்காயம் போன்ற பண்டங் கள் அங்கே குறைந்த விலையில் நியாயமான விலையில் அளிக்க ஏற்பாடு செய்கிறோம் என்றால், அந்த 16.000 கடைகளுக்குத் தேவையான அவசியமான பண்டங்கள் இந்த அரசால் நிச்சயமாக சேமித்து வைத்துக்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

1978 சனவரி 5] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அப்படிச் சேமித்து வைக்கப்பட வேண்டும் என்று சொல் கிற நேரத்தில், இங்கேயுள்ள மொத்த வியாபாரிகளிட மிருந்து அதை வாங்கி, சேமித்து, அதன் மூலம் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றுநான் நிச்சயமாக நம்புகிறேன். அந்த அடிப்படை யிலேதான் அந்த அத்தியாவசியப் பண்டங்கள் எந்தெந்த மாநிலங்களில் அதிகமாக விளைச்சல் பெறுகிறதோ அந்தந்த மாநிலங்களுக்கு நம்முடைய ஆட்களை அனுப்பி, குறைந்த விலையில் கொள்முதல் செய்து, அந்தப் பண்டங்களை கை யிருப்பில் வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு இந்த 16,000 கடைகளிலும் அந்தப் பண்டங்களை வினியோகம் செய்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, அதை எப்படி நிறைவேற்றினால் நஷ்டம் இல்லாமல் லாபம் இல்லாவிட்டாலும், அதே நேரத்தில் பொது மக்களுக்கு இப்படிப் பட்ட அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் கொடுப்பதற்குண்டான முறையில் செய்வதற்கு முடியுமா என்பதை பரிட்சார்த்தமாகப் பார்ப்பதற்குத்தான் திரு நெல்வேலி மாவட்டத்தில் 442 கடைகள் ஆரம்பிக்கப் போகிறோம். அந்தக் கடைகள் அங்கே நடத்தப்படுகிற நேரத்தில், அந்தக் கடைகளால் நாட்டு மக்களுக்குப் பயன் அளிக்கிறதா, அதே நேரத்தில், அரசுக்கு லாபம் இல்லா விட்டாலும் நஷ்டம் இல்லாமல் அந்தக் கடைகள் நடத்தப் படுமானால், அதைப் பின்பற்றி இந்த ஆண்டு இறுதிக் குள்ளாக-இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக என்று சொல்வது, இந்த நிதி ஆண்டு இறுதிக்குள்ளாக—மார்ச் மாதத்திற் குள்ளாக—எல்லா மாவட்டங்களிலும் நிச்சயமாக இப்படிப் பட்ட கடைகள் ஆரம்பிக்கப்படும்.

இதிலே இத்தகைய பிரச்னை இருக்கிறது. நாங்கள் ஆரம்பிக்கக் கூடாது என்று இல்லை. அதற்கு எந்தவிதமான முயற்சியும் நாங்கள் எடுக்காமல் இல்லை. இந்த 4—5 மாதங் களில் எடுக்காமல் இல்லை. ஆகஸ்ட் மாதத்தில் தெளிவாக அறிவிக்கப்பட்டது. 4 மாதங்கள் முடிந்து இருக்கிறது. இந்த 4 மாதங்களில் சிந்தித்துப் பார்த்து நெல்லையில் ஆரம் பித்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும், இந்த அவையில் இருக்கும் உறுப்பினர்களுக்கும் நான் இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இளைஞர் அணியைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு ஏறத்தாழ இந்தத் திட்டம் 1971–ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் காலத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1976-ல் அவர்கள் வேலை இழந்து இன்றைக்குப் போராட்டம் நடத்தினார்கள். அதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்து வைத்து இருக்கிறார்கள். இந்த இளைஞர் அணியை ஆரம்பிக்கிற நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சர், எந்த நோக்கத்தில் ஆரம்பித்தார்கள், எந்த நிபந்தனையோடு ஆரம்பித்தார்கள் என்பதை இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் நான் அதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1971-ஆம் ஆண்டு பட்டதாரிகளை இளைஞர் அணியில் சேர்ப்பது என்று எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சர், திட்டம் ஆரம்பித்த நேரத்தில் சொல்வது, பட்டதாரிகள் இளைஞர் அணியில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு மாதாமாதம் ரூ. 175 கன்சாலிடேட்டட் சாலரி என்ற வகையில் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சில பணிகளை ஒதுக்கினார்கள். ஒதுக்கியதோடு மாத்திரமல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் அன்றைய முதலமைச்சர் ஒரு நிபந்தனை விதித்தார்கள், ஓராண்டு காலத்திற்குத் தான் என்று சொன்னார்கள். பின்னர் அதை இன்னொரு ஆண்டு என்று நீட்டித்தார்கள்.

ஆனால் 1972-ஆம் ஆண்டில் இன்னொரு செட்டையும் எடுத்தார்கள். அவர்களும் ஓராண்டு காலத்திற்குத்தான் எடுக்கப்பட்டார்கள். பின்னர் இரண்டு செட்டுகளுக்கும் ஓராண்டு நீட்டித்தார்கள். இப்படி ஓராண்டு என்று நீடித்துக் கொண்டிருந்தார்களே தவிர அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை நிரந்தரமாகவும் இருக்க வேண்டும், போதுமானதாகவும் இருக்க வேண்டும் என்ற நினைப்பு அவர்களுக்கு 1976 சனவரி 31-ஆம் தேதி வரைக்கும் ஆட்சியில் இருந்தார்களே, அப்போது எண்ணிப்பார்த்தது உண்டா?

[பிற்பகல் 1-20]

நீங்கள் செய்த சில காரியங்கள் இன்றையதினம் அரசுக்குத் தொல்லை கொடுக்கிற சில காரியங்களாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்றாலும், இன்றைக்கு வேலை இல்லாமல் வெளியே இருக்கிறவர்கள் 1,300 பேர்கள் தான் வேலையில்லாமல் வெளியே இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் மாற்று வேலை கிடைக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதன் பேரில், இன்றைக்குப் பல்வேறு துறைகளில் அங்கெங்கே வேலை காலி வரும்போது அவர்களுக்கு நிரந்தரமான வேலை— எக்ஸ்டன்ஷன் இயர்லை இயர் அல்ல—நிரந்தரமாகவே வேலை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த அரசு அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஆண்டு கழக ஆட்சியிலே இப்படி நடந்ததாகக் கூறப்பட்டது. இடையில் நிரந்தரமான வேலை தர வேண்டுமென்பதற்காகத் தான் நீடித்துக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட வேலைகள் வரும்பொழுது முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கழக அரசு திட்டமிட்டிருந்தது. நான் கேட்பதெல்லாம் அப்படி நிரந்தரமான வேலை கிடைக்கிற வரையில் நீடித்து இந்த 175 ரூபாயைக் கொடுக்கக் கூடாதா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: அது 1976ஆம் ஆண்டு நம்முடைய குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்த நேரத்தில் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

திரு. மு. கருணாநிதி : குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் அண்ணா படமும், தந்தை பெரியார் படமும் அகற்றப்பட்டன. இந்த அமைச்சரவை வந்தபின் அவைகளை வைக்கவில்லையா? அதைப் போல் இந்த இளைஞர்கள் ஈடுபட்டிருக்கிற அதை மீண்டும் ஏன் இயங்கச் செய்யக் கூடாது?

திரு கூத்தகுடி ச. சண்முகம் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் அவருக்கு அந்த நினைவு இருக்கலாம். அவர் காலத்திலே எத்தனை பேர்களை நிரந்தரமாக ஆக்கினார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : ஆளும் கட்சிக்காரர்களுக்குத் துணையாக இருக்கிறீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தயவு செய்து சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், ஆளும்கட்சிக்குத் துணை என்று சொல்லாதீர்கள். நீங்கள் இரண்டு பேரும் கொள்கையில் ஒன்று என்று சொல்லுங்கள். அப்படி இருக்கிற போது விவரங்களைத் தெரிந்துக் கொள்வதில் அவருக்கு என்ன வந்தது ?

மாண்புமிகு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கருத்தை சொன்னார்கள். இந்தத் திட்டத்தை ஓராண்டுக்கு மேலே நீடித்து, வாய்ப்பு வரும்பொழுது அவர்களுக்கு நிரந்தரமான பணியில் அவர்களைச் சேர்க்க யோசித்தோம் என்று. உண்மையிலேயே நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் நடைப்பெற்றது என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1971ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தை ஆரம்பித்து சில இளைஞர்களை அந்தப் பணியில் அமர்த்தினார்கள். அடுத்த ஆண்டு நீங்கள் புதியதாக ஆட்களை நியமனம் செய்தீர்கள். முந்திய ஆண்டு நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நிரந்தரமான வேலையை அத்தனை பேருக்கும் கொடுத்துவிட்டு அல்லவா நீங்கள் அடுத்த ஆண்டு ஆட்களை எடுக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லையே. முதல் ஆண்டிலே சேர்ந்தவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் நிரந்தரமான வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு அடுத்த ஆண்டு வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்களா ? அந்த அடிப்படையிலே தான் இன்றையதினம் அத்தனை பேருக்கும் உடனடியாக வேலையைக் கொடுப்பது என்பது முடியாத காரியம். ஒரு ஆண்டுக்கு கோடி ரூபாயை ஒதுக்கி இந்த இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று செய்தார்கள். ஆனால் இந்த அரசின் நோக்கம் அவர்களுக்கு வேலை கொடுப்பதாக இருந்தால் ஏதாவது ஒரு துறையில் நிரந்தரமாக வேலை கொடுக்க வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கத்தின் பெருந்தன்மையைப் பாராட்டி, வரவேற்று. அதுவரையிலாவது இந்த 175 ரூபாய் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். 175 ரூபாயை நிச்சயமாக இந்த அரசால் கொடுக்க முடியாது. அவர்கள் தங்களுக்கு வாய்ப்பு வரும் வரையில் நிச்சயமாக காத்திருக்க வேண்டும். கூடிய விரைவில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது இளைஞர் அணிக்கு ஆட்கள் நியமிக்கிறபோது திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறு செய்தது என்று கூறினார்கள். ஆனால் இப்பொழுது அவர்களை வேலையிலிருந்து நீக்குகின்றபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிச்சயமாகத் தவறு செய்யாது என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஏனென்று சொன்னால் அந்த அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே உறுதியை அளித்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒரு இன்பர்மேஷனைக் கேட்க விரும்புகிறேன். அந்த இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதாக இருந்தால் அவர்களை இப்பொழுது ஏன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் டெஸ்ட் எழுதவேண்டும் என்று கேட்கிறார்கள்? ஒரு வேளை அந்த டெஸ்டில் சிலர் ஒப்பேறவில்லை என்று சொன்னால் அவர்களுடைய கதி என்ன ஆகும்? ஆகவே, அதற்கு ஒரு மாற்றுப் பரிகாரம் காணவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் முன்னால் இருந்த முறைதான். அவைகளை எல்லாம் நடைமுறையில் செய்ய முடியுமா என்பதைப் பற்றி தற்போது ஒன்றும் சொல்ல முடியாது. அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

அடுத்தாற்போல் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலை கொடுப்பதைப் பற்றி இங்கே பேசி இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு நியாயமான கொள்முதல் விலை கொடுக்கத் தவறிவிட்டதென்று அவையில் எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் மோட்டா ரகத்திற்கு மூட்டை நெல்லுக்கு ரூ. 89 அதாவது நிர்ணயம் செய்யப்பட்ட விலை ரூ. 74 உடன் சப்போர்ட்டு பிரைசாக, போனஸ் என்று ரூ. 15-ம் சேர்த்து ரூ. 89 கொடுத்தார்கள். மாண்புமிகு

வேண்டுமென்று கருதுகிறது என்று ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்புமா [illegible] விரும்புகிறேன்.

[பிற்பகல் 1—30]

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> [illegible] தலைவர் அவர்களே, தமிழக அரசைப் [illegible] இந்த அரசு அப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவே[illegible] ஒட்டு மொத்தமாக தமிழக மக்களுடைய எ[illegible] யுறுத்த, மத்திய அரசுக்கு எடுத்துக்கூற, நிச்சயம் [illegible] என்பதையும், அதற்குப் பின்வாங்காது என்பதையும் [illegible] மிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்[illegible] வித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> தலைவரவர்களே, மாண்புமி[illegible] அமைச்சர் அவர்கள், மத்திய அரசிலிருந்து 77 [illegible] மேல் கூடுதலாக நெல் விலையைக் கூட்டக் கூடா[illegible] தாக்கீது வந்திருப்பதாகக் கூறினார்கள். அதே [illegible] தஞ்சையில் ரூ. 92-க்கு நெல்லை விற்றுக்கொண்டிருப்பதா[illegible] கூறினர். அந்த விலையை ஒட்டி இந்த அரசாங்கம் ரூ. 92-க்கு விவசாயிகளிடமிருந்து அரசு கொள்முதல் செய்யத் தயார் தானா? தயங்குவதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். அதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்காது என்று எண்ணுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வியாபாரிகளின் போக்கைப் பயன்படுத்தி, உழைக்கின்ற விவசாயிகள் பயன்பெறக்கூடிய சூழ்நிலைகள் தோன்றும் போது, அது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்ற நிலையில், அதைப்பற்றி சட்டசபையில் நாம் விவாதிக்கின்ற நிலையை எடுத்துச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் —ஜனதா கட்சியைச் சேர்ந்த தலைவர் ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசினுடைய அறிவிப்பை, அவர்களுடைய விருப்பத்தை எதிர்த்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் ஆலோசனை கூறுவது பொருத்தமுடைய[illegible] எனக்குத் தோன்றவில்லை. ஆகவே எந்தெந்த வ[illegible] சுமுகமாக, சட்டத்திற்குப் புறம்பு இல்லாத வகையி[illegible] சாயிகளுக்கு நல்ல பலனை ஏற்படுத்த நம்மால் [illegible]

அந்த வகையில் நிச்சயமாக, பயன் ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்றுகூடி முயற்சி எடுத்து, நல்ல வெற்றி பெற முடியும், நல்ல காரியத்தை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவையின் அனுமதியுடன் அவையின் நேரம் சில நிமிடங்கள் நீட்டிக்கப்படுகிறது. இப்போது அமைச்சர் எட்மண்ட் அவர்கள் தொடர்ந்து பேசுவார்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவரவர்களே, இன்றுள்ள நிலைமையைப் பற்றியும் அன்றுள்ள நிலைமையைப் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவாகள் 69ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். 1969ஆம் ஆண்டு அவர்கள் மோட்டா ரகத்திற்குக் கொடுத்த விலை ரூ. 43—45 குவிண்டாலுக்கு. 1969-லிருந்து 1974 ஜனவரி குறுவை வரைக்கும் இந்த விலையைத்தான் கொடுத்தார்கள். 1974-லே ரூ. 66 கொடுத்திருக்கிறார்கள். அதே ஆண்டு அக்டோபர் மாதம் ரூ. 90 கொடுத்திருக்கிறார்கள். 1975-லிருந்துதான் ரூ. 15 போனஸ் கொடுக்க ஆரம்பித்தார்கள். இதில் எங்கள் தப்பு ஒன்றும் இல்லை. நீங்கள் செய்த தவறால்தான் மத்திய அரசு எங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறது. 15 மாதம் கொடுத்தீர்கள். அதற்குப் பிறகு காலி செய்து விட்டுப் போய்விட்டீர்கள் (ஆரவாரம்) அல்லது காலி செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு ஆடிட் அப்ஜக்ஷன் வந்தது....

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, உணவு அமைச்சர் பேசும்போது வரம்பு மீறிப் பேசுவது முறையல்ல. எல்லோருக்கும் பேசத் தெரியும். ஆளுங்கட்சியினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய வேண்டுமென்று இப்படிப் பேசுவதை எல்லோராலும் பின்பற்ற முடியும். காலி செய்து விட்டார்கள் என்றார் எதை காலி செய்து விட்டார்கள்? அதை விசாரிக்கத் தயாரா? அந்த விசாரணையின் முடிவை உணவு அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா? எதை காலி செய்தோம் என்பதை விளக்க வேண்டும். 89 கொடுத்தோம் என்றால் அரசாங்கப் பணத்தைக் கொடுத்தோம் என்றால் . . .

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : எதிர்க் கட்சித் தலைவர் 'அதை' காலி செய்ததாகச் சொல்லவில்லை. இடத்தைக் காலி செய்து விட்டுப் போனார் என்று தான் சொன்னேன்.

திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் கூடுதல் விலைக்கு வாங்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதைப் பற்றி சென்ற முறை பேசும் போது தெளிவாகச் சொன்னேன். கார்ப்பரேஷன் ஒரு அடானமஸ் யாடி. கார்ப்பரேஷன் வாங்குவதை தடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பது தான் கேள்வி. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்குகிறது. நாம் உபயோ கிக்கிறோம். நெல்லை வாங்கி, அரைத்து அரிசி ஆக்கி கட்டுப் படியாகும்படியான விலைக்கு விற்கிறோம். மத்திய அரசு ஆட்சேபிப்பதற்கு என்ன இருக்கிறது ?

மத்திய அரசுக்கு நாங்கள் வைத்திருந்த 8 லட்சம் டன்னை கொடுக்கும்போது மத்திய அரசு 15-ஐ கொடுக்க மாட் டோம். நாங்கள் போட்ட விலையைத்தான் கொடுப்போம். போனஸ் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிற்று மத்திய அரசு. அப்போதுதான் ஆட்சேபனை எழுந்தது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இப்போது கூட ரூ. 100-க்கு வாங் கிக் கொள்ளலாம். மத்திய அரசு ஆட்சேபிப்பதற்கில்லை.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் இரண்டு கருத்தினைக் குறிப்பிட்டார்கள். ரூ. 15 போனஸ் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். கொடுத்தார்கள், இல்லை என்று சொல்லவில்லை. அதற்குப் பிறகுதான் அந்த அடி வந்தது. அதைக் காட்டித்தான் இன்றைய தினம் மத்திய அரசு, எந்த மாநிலத்திலும் எந்தக் காரணத்தைக் கொண்டும், 77 ரூபாய்க்குக் கூடுதலாகக் கொடுக்கக்கூடாது என்று உத்திரவினைப் போட்டு இருக்கின் றார்கள்.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்கினால் என்ன அதற்கு என்ன ஆட்சேபனை என்று. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்பது ஒரு அரசுக்குக் கட்டுப்பட்ட நிறுவனம் இல்லை, அது அரசோடு பெருமளவிற்குத் தொடர்பு கொண்டுள்ள ஒரு

வியாபார ஸ்தாபனம் என்றுதான் எடுத்துக்கொள்ளவேண் டும். ஆனாலும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதற்குக் கட்டுப்படியாகக் கூடிய விலைக்குத்தான் வாங்க முடியுமே தவிர கட்டுப்படியாகாத விலைக்கு நிச்சயமாக அது வாங்க முடியாது. குறுவை விளைச்சலில் வந்த நெல்லின் தன்மை பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரி யும். அடித்த புயலிலே, வந்த பெரு வெள்ளத்தில், குறுவை நெல் எந்த நிலைமைக்குப் போய்விட்டது என்பது அவர் களுக்கு நன்கு தெரிந்திருக்கும். அங்கெல்லாம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வியாபாரிகளுக்குக் கட்டுப் படியாகக் கூடிய விலையில் எந்த நேரத்தில் எந்தவிதமான நெல்லை எங்கே வாங்கினால், அக்கார்ப்பரேஷனுக்கு லாபம் என்று இல்லாவிட்டாலும் நஷ்டம் இல்லாமல் அதை நடத்த முடியும் என்பது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு நன்கு தெரியும். அப்படிப்பட்ட நேரத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லாவிட்டாலும், விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகக் கூடிய அளவிற்கு சிவில் சப்ளைஸ் அந்த நெல்லை நிச்சய மாக வாங்குவதற்கு முன்வரும் என்று மட்டும் இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நாளைய தினம் சிவில் சப்ளைஸ் பற்றி மட்டும்தான் பேசுவ தாக இருக்கின்றேன். ஆனால் இப்போதே அதுபற்றி பிரச்சனை எழுப்பப்பட்டுவிட்டது. நான் சொல்ல விரும்புவது மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தகவல்கள் முழுவதையும் சேக ரித்து வைத்துக்கொண்டு பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டால், பின்னர் கார்ப்பரேஷன் வாங்குகிறதைத் தடுக்கமுடியாது.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனச்சாட்சியில் கைவைத்துப் பேச வேண்டும். அவர்கள் இப்போது அறுவடையாகின்ற குறுவை நெல்லை ரூ. 89-க்கு கொடுக்க முடியுமா என்கின்றார். நெல் லின் தரத்தைக் கொண்டு, தரமுள்ள நெல்லை வாங்குவதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தயாராக இருக்கிறது என்று இந்த நேரத்தில் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்டார் கள், ஏன் நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை என்று. இதிலே பல்வேறு இடை யூறுகள் இருக்கின்றன. நேரடியாக அவர்களிடமிருந்து

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 சனவரி 5

கொள்முதல் செய்வது என்றால், ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒவ்வொரு மண்டலமாக ஆக்கவேண்டும். அப்படிச் செய்தால்,விவசாயிகள் போட்டிவிலையில் தங்கள் விளைபொருட்களை விற்க முடியாது. எனவேதான், அவர்களுடைய நலன்களைக் கருத்தில் கொண்டுதான் அவர்களிடமிருந்து நேரடியாக நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை. குவிண்டால் 77-க்குக் குறைந்த நேரத்திலும்கூட, விவசாயிகளுக்கு சிரமங்கள் ஏற்படக்கூடாது என்றுதான் தஞ்சை மாவட்டத்தில், பிற இடங்களில், 60 வாங்கும் நிலையங்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்திற்று.

பத்திரிகைகளில் கூட படித்துப் பார்த்து இருப்பீர்கள். 20, 25 தினங்களுக்கு மேலே அப்படிக் கொள்முதல் செய்தும், மொத்தத்தில் 600 டன்தான் கொள்முதல் செய்ய முடிந்தது என்றால், இதிலே விவசாயிகள் உற்சாகம் காட்டுகின்றார்களா என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள முடியும். எனவே, விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் அரசாங்கம் அறிவித்துள்ள திட்டங்களை நிச்சயமாக செயல்படுத்த வேண்டிய நேரத்தில் செயல்படுத்தும், அதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சனையை, கனம் ரெகுமான்கான் அவர்கள் பேசும்போது எழுப்பினார்கள். அதற்கு என் பதில் வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசும்போது, தஞ்சை மாவட்டத்தில் 600 டன்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரச்சனையில்லை. இப்போது. தயவு செய்து அமருங்கள். நாளைக்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது, அப்போது இதுபற்றிக் கேட்டுக் கொள்ளலாம்.

நான் நிற்கும்போது நீங்கள் உட்கார வேண்டும்.

1978 சனவரி 5] [பேரவைத் தலைவர்]

(பிற்பகல் 1-40)

நான் அவருடைய(ரகுமான்கான்) பேச்சை, உரையை படித்துப் பார்த்தபோது,—

"பிரேமா கொலையில் ஏன் துப்புத் துலக்கவில்லை ? அதிலே இருக்கக்கூடிய பின்னணி என்ன ? நான் பகிரங்கமாக இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நான் சொல்கிற குற்றச்சாட்டிற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்."—

என்று சொல்லி இருப்பதால் கனம் உறுப்பினர் அவர்கள், முதலமைச்சருடைய ஒழுங்குப் பிரச்னைக்கு ஏற்ப, ஆதாரங்களை, தடையங்களை அவரிடத்தில் எழுத்து மூலமாகக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு மு. கருணாநிதி : எழுத்து மூலமாகத் தரவேண்டும் என்று சட்டமன்ற விதிகள் எதிலே இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கக் கூடாது என்றும் இல்லை. கொடுக்கவேண்டும் என்றும் இல்லை. அவைத் தலைவர் உத்தரவு தான். அவைத் தலைவர் சொல்வதுதான் முடிவு. அப்படி கேட்கக் கூடாது என்ற விதி இருந்தால் நீங்கள் என்னை கட்டுப்படுத்தலாம். கொடுக்க வேண்டும் என்றும் இல்லை. கொடுக்கக் கூடாது என்றும் இல்லை. என்னுடைய முடிவுதான் இறுதி. ஆகவே எழுத்து மூலமாக முதலமைச்சருக்கு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு. . . . . . .

திரு. ஏ. ரகுமான்கான் : நீங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு நான் குறுக்கிடுவதாக தவறாக கருதக்கூடாது. உங்களிடத்தில் விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு சட்ட மன்ற உறுப்பினர், தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். பொறுப்பு ஏற்றுக் கொள்கிறபோது, அந்த ஆதாரங்களை நிரூபிப்பது என்ற அடிப்படையில் சொல்லும்போது — அது Documentary evidence ஆக இருக்கலாம். ; Direct evidence ஆக இருக்கலாம். Indirect evidence ஆக இருக்கலாம் ; Circumstantial evidence ஆக இருக்கலாம். ஆக, சாட்சி

யங்கள், தகவல்கள் என்று சொல்வது எந்த அடிப்படையில் அமைகிறது என்றால் அது 'ரிட்டன் ஸ்டேட்மெண்ட்' ஆக இருக்கலாம். 'டாகுமெண்டாக' இருக்கலாம்; 'ஓரல் எவிடென்சாகவும்' இருக்கலாம். எதை எதை நான் ஆதாரமாக பயன்படுத்துகிறேனோ அவைகள் எந்த எவிடென்சாகவும், ஆதாரமாக இருக்கலாம், என்றும் சொன்னேன். அப்படி இருக்கும்போது ஒன்றை மட்டும் குறிப்பிட்டு 'ரிட்டன் ஸ்டேட்மெண்ட்' கொடுக்க வேண்டும் என்று சொல்வது என்ன நியாயம்?

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: அவைத் தலைவர் அவர்களே, நான் பேசவேண்டாம் என்றுதான் கருதினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "விசாரணை செய்து கொண்டிருக்கும் அதிகாரியே சொல்லியிருக்கிறார்கள் அதற்கு முழுப் பொறுப்பு நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று அவர்கள் சொல்லும்போது, அவர் சொல்வது போல், சந்தர்ப்ப சாட்சியங்கள், வாய் மூலமான சாட்சியங்கள், ஆதாரப்பூர்வமான, எழுத்துபூர்வமாக என்று பிரித்துப் பார்த்தாலும், நாங்கள் விசாரணையை, முறைப்படி அதை செயல்படுத்த முனையும்போது, இங்கே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்கிற வகையில் நான் விரிவாகவும், விளக்கமாகவும் சொன்னேன்; எழுத்து மூலமாகத் தர வேண்டும் என்று சொன்னேன். தருகிறேன் என்ற வகையில் "சொன்னதை பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். பதிவேட்டில் இருக்கிறது. ஆகவே நிச்சயமாக யார் எந்த குற்றத்தை செய்திருந்தாலும் அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு நீங்கள் விடக்கூடாது; வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதை ஆதார பூர்வமாக எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தால் விசாரணை செய்வதற்கு அதுதான் உதவி செய்யும் என்று நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கு நான் பதில் சொல்லுகிறேன். ஒரு குற்றச் சாட்டு சொல்லும்போது உறுப்பினர், அவருக்கே திருப்தி ஏற்பட்டதா? தகுந்த ஆதாரங்கள் அதிலே இருக்கின்றனவா என்ற திருப்தி அவருக்கு இருந்து, பிறகுதான் அதை எழுப்பவேண்டும். அதுமட்டுமல்ல நீங்கள் சொன்னது, "நான் முதலில் சொன்ன அந்த முறையில், சம்பந்தப்பட்டவர்களை

தடுக்க பார்த்துக் கொண்டிருக்கிறார்; யார் என்பதை போலீசார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் அடிப்படையிலே எனக்கு தெரிய வந்ததற்கு பிறகு தான் புலன் விசாரணை போடப்பட்டு என்னிடம் கிடைத்த முக்கிய தகவலின் பேரில்' —என்று சொல்லியிருக்கிறீர்கள்.

திரு ஏ. ரகுமான்கான்: I come to understand— என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் மாலை 4 மணிக்கு கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

(மாலை 4-00)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் பேரவை மீண்டும் மாலை 4 மணி அளவில் கூடியது.)

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு, 1978ஆம் ஆண்டு, புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1978-ஆம் ஆண்டு, புயல், வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவை" இப்பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை இப்பேரவையின்முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[1978 சனவரி 5

(ஆ) தமிழ் நாடு, 1978ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/78.)

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I move: "That the Tamil Nadu Debt Relief Laws (Amendment) Bill*, 1978 (L.A. Bill No. 1 of 1978) be taken into consideration".

In moving the Bill, I wish to say that liquidation of Rural Indebtedness is an important welfare measure. By the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Act, 1976 (President's Act 15 of 1976) and the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Act, 1976 (President's Act 16 of 1976) as amended, suits for the recovery of debts due from agriculturists and other indebted persons and applications for the execution of decrees for payment of money passed in any such suit have been barred, up to the 15th January 1978. By section 12-A of the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943) as substituted by the Tamil Nadu Indebted Agriculturists and Indebted Persons (Special Provisions) Act, 1976 (President's Act 17 of 1976) and as subsequently amended, the sale by the pawnbrokers of the pledges pawned with them, has also been barred up to the 15th January 1978.

As the House is aware, many parts of Tamil Nadu were recently affected by severe cyclone and devastating floods resulting in widespread loss to standing crops besides loss of life and property. The agriculturists and other indebted persons in this State are therefore unable to rehabilitate themselves and pay back all their dues. Since it is reasonable that they be granted some more time to rehabilitate themselves, it is considered that the moratorium on recovery of debts should be extended by another six months, that is, upto and inclusive of 15th July 1978. It is also considered that the ban on the sale by the pawnbrokers of pledges pawned with them should also be further extended upto and inclusive of the 15th July 1978. The bill seeks to achieve the above objects.

Sir, I request the House to accept the motion.

*Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 2nd January 1978.

1978 சனவரி 5]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின் பெயரால் கொண்டு வந்திருக்கும் திருத்தங்கள் பற்றி எனது கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், விவசாயி அல்லாதவர்களுக்கு கடன் நிவாரணச் சட்டம், நகை ஈட்டு கடன்கள் பற்றிய சட்டம் தள்ளி வைப்பது, அல்லது ரத்து செய்தல் போன்ற சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு காலக்கெடு நீடிக்கப்பட்டு தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள்.

கடன் தொல்லையில் விவசாயிகள், விவசாயிகள் அல்லாதவர்கள் மீள முடியாத தொல்லையில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். விவசாயிகள் நாள்தோறும் கடன் வாங்கிக்கொண்டேதான் இருக்கிறார்கள். கடன் வாங்காமல் வாழ முடியாது என்கின்ற அளவில், அதிகப்படியான வட்டியில் கடன் வாங்கி அழிந்து போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம். கடந்த 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், விவசாயிகளுடைய கடனை ரத்து செய்வதற்கும், நிவாரணம் கொடுப்பதற்கும் பல்வேறு சட்டங்கள் இயற்றப் பட்டிருக்கிறது என்பதும் நம் எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படுகிறது, வட்டி ரத்துச் செய்யப் பட்டிருக்கிறது, அசலும் சில நேரங்களில் ரத்து செய்யப் பட்டிருக்கிறது. பல்வேறு கால கட்டங்களில் விவசாயிகளுக்கு நன்மை அளிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் இப்பொழுது கடனை ஒத்தி வைத்துக்கொண்டு போகிறோமே தவிர கடனிலிருந்து எந்தவிதமான நிவாரணமும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. கடன் கொடுத்தவர்—வேறு எந்தவிதமான வழிகளிலும் வசூல் செய்யக்கூடாது என்று தடையை விதித்து இருக்கிறோம். இதன் மூலமாக தற்காலிகமாக ஏற்படுகின்ற தொல்லைகள் ரத்து செய்யப் பட்டு வருகிறதேயொழிய அதிலிருந்து இவர்களுக்கு நிவாரணம் என்ன? இப்படி தள்ளி வைக்க, தள்ளி வைக்க வட்டி மட்டும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

சென்ற முறை இத்தகைய மசோதா இங்கு சட்டமாக்கப்பட்ட போது, நாம் கூறினோம். மேலும், மேலும் இப்படி தள்ளி வைத்துக்கொண்டு போவதால், எந்தவிதமான நிவாரணமும் ஏற்பட்டு விடப்போவதில்லை. நிரந்தரமாக நிவாரணம் கிடைக்கக்கூடிய அளவுக்கு கடன்களை ரத்து செய்து ஒரு புதிய மசோதாவை புதிய ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால், மேலும், மேலும் இப்படி ஒத்தி வைக்காமல், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கின்ற வகையிலும், பணம் கொடுத்தவர்களும் ஏதோ வாங்கினோம் என்கின்ற அளவில் கடனை முடித்து ரத்து செய்கின்ற அளவில் நிவாரணச் சட்டம் கொண்டு வருவது மிக மிக அவசியம். இதை அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து எப்படி இதற்கு நிவாரணம் அளிப்பது என்று சிந்தித்து விரைவில் வேறு ஒரு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று அரசை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பான் புரோக்கர்ஸ் ஆக்ட் அதாவது நகையை வைத்து கடன் வாங்கியவர்களுக்கு என்று நிவாரணச் சட்டம் கொண்டு வந்தோம். இது சட்டமாயிற்று. ஆனால் அவர்கள் கோர்ட்டுக்கு சென்றிருக்கின்ற காரணத்தால், நகையை மீட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட பணம், அவர்களுக்கும் பணம் போய் சேரவில்லை, இவர்களுக்கும் நகை கிடைக்கவில்லை. எல்லாம் கோர்ட்டில் இருக்கிறது. இது கோர்ட் அளவில் முடிவுசெய்ய வேண்டிய காரியம். அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், கோர்ட்டுக்கு போகாதவர்களுடைய கேஸ்களில் முடிவுசெய்து விடுவோம், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். என்ன நடவடிக்கை இதுவரை எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நகை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவல்.

ஆகவேதான் அரசாங்கத்தை நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்வது, விவசாயிகளை கடன் தொல்லையிலிருந்து விடுவியுங்கள், அப்போதுதான் கொடுத்த கடன் ரத்து ஆகும். கடன் கொடுத்தவனும் சரி, வாங்கினவனும் சரி, இதோடு முடிந்தது என்ற நம்பிக்கை வரக்கூடிய வகையில், விவசாயிகளுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் இதற்கு முடிவு செய்யவேண்டும். இவ்வாறு இரு சாராருக்கும்

நன்மை ஏற்படக்கூடிய வகையில்ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன். வணக்கம்.

(மாலை 4-10)

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது 3 சட்டங்கள் அமுலிலே இருக்கின்றன. ஒன்று, விவசாயிகள் சம்பந்தப்பட்ட அக்ரிகல்சுரல் டெட் ரிலீப் ஆக்ட்; அதேபோன்று, டெட் ரிலீப் ஆக்ட், அதாவது கடன் நிவாரணச் சட்டம் இருக்கிறது; இன்னொன்று ஆக்ட் 31 ஆப் 1975 என்ற வகையிலே வாங்கிய கடன்களை முழுமையாக ' வைப் ஆப் ' செய்வதற்கு வழிவகை செய்கின்ற வகையிலே 3 கடன் நிவாரணச் சட்டம் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

சென்ற கூட்டத் தொடரில்கூட, இந்த மூன்று சட்டங்களைப் பற்றி நான் பேசுகின்றபோது சொன்னேன், இந்தக் கடன் பட்டவர்கள் மீது, கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டுக்குச்செல்வார்களானால், அந்தக் கோர்ட்டுகளிலே நடக்கும் கேஸ்களின் மீது ' ஸ்டே ஆப் புரொசீடிங்ஸ் ' வாங்கி ? அந்த வழக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கோர்ட்டுகளிலே நிறுத்தி வைக்கப்பட்ட வழக்குகள், அதற்கான ஸ்டே காலம் முடிந்தபிறகு, நடவடிக்கை எடுக்கின்றபோது, அதிலே ' கான்ட்ராக்ட் ' படி குறிப்பிட்ட வட்டித் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது.

" Interest on the contract rate "

என்று சொல்வார்களானால் அது அப்படியே வளர்ந்துகொண்டு வருகிறது. இப்படி வளருகின்ற காரணத்தினாலே, இன்று கடன்பட்டவர்கள் ஓராண்டு காலமானாலும், இரண்டு ஆண்டுகள் ஆனாலும் அல்லது எத்தனை ஆண்டுகள் காலமானாலும்கூட அவர்கள் கொடுக்க வேண்டிய கடன் வளர்ந்துகொண்டேதான் இருக்கிறது. வட்டியோடு சேர்த்துத் தர வேண்டியிருக்கிறது. இப்படித் திருப்பித் தரவேண்டிய வழியிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்திலே கோர்ட்டுகளுக்குச் சென்றுள்ள வழக்குகள் அனைத்திற்கும், அதற்கென்று ஒரு குறிப்பிட்ட காலவரை வைத்து, அந்த அளவிலே அதற்கான வட்டிகள் தள்ளுபடி செய்யப்படும், அசல் மட்டும் கொடுத்து விட்டால் போதும் என்ற ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரில்கூட இதைப்பற்றி நான்

சொன்னேன். ஆனால், இது வரைக்கும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இப்படி எக்ஸ்டென்ஷன் செய்யப் பட்ட இந்த 6 மாத காலத்திலேகூட, இதைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டும், இதைப் பற்றி பரிசீலிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்திலே மற்றொன்றையும் சொன்னேன். ஏறக் குறைய எல்லா வழக்குகளும் கோர்ட்டுக்குச் செல்லக் கூடியது என்ற நிலைமையை மாற்றியமைப்பதற்காக, ஆயிரம் ரூபாய் வரை கடன் கொடுத்துள்ளவர்கள் கோர்ட்டுக்குச் செல்லக் கூடாது, என்கின்ற ஒரு விதிமுறையை வைத்து, அதற்கு மேல் தொகைகள் கொடுத்துள்ளவர்கள் கோர்ட்டுக்குச் செல் வார்களானால், அதனைத் திருப்பித் தருவதற்கு ஏற்கனவே தமிழகத்தில் ஒரு சட்டம் (ஆக்ட் 1 ஆப் 1955) இருக்கிறது. அந்தச் சட்டப்படி திருப்பித்தர டிகிரியாகி, அப்பணத்தை நான்கு ஆன்யுவல் இன்ஸ்டால்மெண்டுகளாக, தவணைகளாக வசூல் செய்யலாம் என்றிருக்கிறது. அந்தச் சட்டம் அமு லாக்கப்பட்டதையும் சொன்னேன். அதே நேரத்தில் இந்தச் சட்டமும் இருக்கிறது. இதன்படி யாரும் கோர்ட்டுகளுக்குச் செல்லக் கூடாத ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தையும் எடுத்துச் சொன்னேன்.

விதவைகள் இருக்கின்றார்கள். கணவனை இழந்த விதவை களுக்கு அரசாங்கமே 10,000 ரூபாய் தருகிறார்கள். அப்படிப் பட்ட விதவைகள் அந்தப் பணத்தை வாங்கி, கடன் கொடுத்து அந்த வட்டியை வைத்துக் கொண்டு சாப்பிடக்கூடிய நிலைமை இருக்கலாம். வேறு வருமானம் எதுவும் இல்லாத ஒரு நிலைமையும் இருக்கலாம். எனவேதான், இந்த வகையிலே அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொன்னேன்.

அதேபோன்று, ஓய்வூதியம் பெறுபவர்கள் இருக்கலாம். அப்படி பென்ஷனை வாங்குகின்றவர்கள் தங்களுக்குக் கிடைத்த பணத்தை வட்டிக்கு கொடுத்து, அந்த வருமானத்தில் சாப் பிடக் கூடிய நிலைமை இருக்கலாம். அல்லது ஏதோ கைமாற் ருகக் கடன் கொடுத்திருக்கலாம்.

அப்படி பென்ஷன் வாங்குகிறவர்கள்கூட கொடுக்கின்ற பணத்தை வாங்கி அதன் மூலம்—சப்சிஸ்டன்ஸ்—தங்கள் உயிர் வாழச் செய்யும் வகையில் அதற்குவேண்டிய வழிமுறைகளுக்

கான திருத்தங்களைச் செய்யவேண்டும். அவர்கள் இந்தத் தொகையின் மூலமாகத்தான் வாழ்க்கை நடத்த வேண்டு மென்றமுறையில் இருக்கிறார்கள்.

The persons are mainly depending upon the only source of the money

என்ற நிலையில் இருப்பவர்களுக்கும் இந்தச் சட்டத்தில் வழி வகைகள் செய்ய வேண்டுமென்ற கருத்தினை சென்ற முறையே சொன்னோம். இன்னும் அது கவனிக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தச் சட்டங்களை நீடித்துக் தருவது வரவேற்கத்தக்கது தான். அதே நேரத்தில் கிராமப் புறங்களில் சிறு சிறு விவ சாயிகளாக இருப்பவர்களும், பயிரிடுபவர்களும் மாத வருமானம் பெறுகிறவர்கள் அல்ல. அவர்கள் கடன் வாங்கும் நிலைமை இருக்கும்போது அவர்களுக்கு வசதி ஏற்படுகிற வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலமாக வாங்குகிறவர்கள் கொடுக்கிறவர்களுக் கிடையே சுமுகமான சூழ்நிலையை சரியான முறையில் ஏற்பாடு செய்யவேண்டு மென்று சொன்னோம். பத்து ஏக்கர் பதினைந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கும் மிராசுதாரர் களானாலும் சரி—

If a person is holding a land he comes under the category of the agriculturists,

அதிகமான நிலம் வைத்திருப்பவர்கள், திருப்பிச் செலுத்த சக்தியுடையவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புப் பெற்றுக்கொண்டு நலிந்தவர்களிடத்திலே சிறிய தொகையை வாங்கி வைத்திருப்பவர்கள், வசதியுடையவர்கள் திருப்பிக் கொடுக்கின்ற வகையில் சட்டத்தில்திருத்தங்களைக் கொண்டு வந்து நாட்டுக்கு நல்லது செய்வோம் என்று சொல்லி முடிக் கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : துணைத்தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவிக்கிறேன்.

ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக இந்தச் சட் டத்தின் மூலமாக அவர்களுக்கு நிவாரணம் தரவேண்டுமென் பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையும் அனுதாபமும் கொண்

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 சனவரி 5

டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக இந்த மசோதா
அமைச்சர் அவர்களாலே இங்கே கொண்டு வரப்பட்டிருக்
கிறது.

அதே போல் நகையீட்டுக் கடனையும் ஒத்தி வைக்கிற
சட்டத்தின் மூலமாக ஆறு மாத காலத்திற்கு அந்தக் கடன்
கள் எல்லாம் ஒத்தி வைக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்
பட்டிருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர்
மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள்—சாதாரண ஏழை
களுக்கு, விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தால் ஒத்தி வைக்
கின்ற நிவாரணந்தான் கிடைக்கிறதே தவிர, நிரந்தரமாக
அவர்களுக்குப் பரிகாரம் காண்கின்ற வகையிலே சட்டத்தைக்
கொண்டு வரவேண்டுமென்று அரசை அவர்கள் கேட்டுக்
கொண்டார்கள்.

இப்போது இதனை ஒத்தி வைக்கின்ற காரணத்தால் பல்
வேறு ஏழைகள் பயன்பெறுகிறார்கள். இருந்தாலும் கடன்
கொடுத்தவர்கள் நிலையையும் கடன் வாங்கியவர்கள் நிலையை
யும்—இரண்டையும் அரசு பரிசீலித்து அவர்களுக்கு எந்த
வகையிலே உதவி செய்வது என்று பார்த்து இந்த ஆறு மாத
கால அவகாசம் இருந்தாலும் அடுத்து வருகிற நாட்களிலே
அவர்களுக்குச் சரியான அளவுக்கு உதவி செய்யவேண்டிய
நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் சாதாரணமாக கடன் கொடுத்தவர்கள் அவர்க
ளிடத்தில் சாமான்களைப் பெறுகிற நேரத்தில் பல்வேறு இடங்
களில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சங்கடங்களை
மாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. தொடர்ந்து
இதை ஒத்தி வைத்துக் கொண்டிருக்கும் காரணத்தால் கடனை
திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் பல பேருக்கு
வருவதில்லை. சில மாநிலங்களில் 50 ரூபாய், 100 ரூபாய்
என்று வாங்கிய கடன்களைத் தள்ளிவிட்டு அவற்றைத் திருப்
பித் தருவதற்கான வகைகள் செய்யப்பட்டிருப்பதை நான்
உணர்ந்திருக்கிறேன்.

1978 சனவரி 5] [திரு. எஸ். ஆர். இராதா]

(மாலை 4-20)

அந்த வகையில் ஏழைகளுக்கு நாம் துணை செய்ய வேண்டும்.

அதே நேரத்திலே இப்படிக் கடன்கள் கொடுத்தவர்களைப் பொறுத்தவரையில் பல இடங்களில் வட்டிக்கடைகளை வைத்துக்கொண்டு கிராமங்களிலே உள்ள மக்களுக்குக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சட்டத்தின் மூலமாக அது தடுக்கப்பட்டிருக்கிறது. அது தடுக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்றால் நிச்சயமாக வேண்டியது தான், ஆனால் பல இடங்களில் வட்டிக் கடைகள் ஏராளமாக வட்டி வாங்கக் கூடிய பழக்கம் இருந்தது. சட்டத்தையும் மீறி பல தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வட்டிக்குக் கொடுத்தவர்கள் பெரிய பணக்காரர்களா, மிகப் பெரிய முதலாளிகளா என்றால் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று எடுத்துக்கொள்ள முடியாது.

இன்றைக்கு 10 ஆயிரம், 15 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அளவில் பணத்தை வைத்துக்கொண்டு வட்டிக் கடைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தொழில் நடத்த முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அரசுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இந்த அரசு ஏழை எளிய மக்கள் கடன்கள் பெறுவதற்கு ஏற்ற முறையிலே அவர்கள் தங்கள் பொருள்களைக் கொடுத்துக் கடன் வாங்குவதற்கு வசதி செய்தாக வேண்டும். கூட்டுறவு சங்கங்களிலே அப்படிப்பட்ட வசதிகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவைகள் முழுமையான வசதிகளாக இல்லை. பல கிராமங்களிலே பொருள்களை வைத்துக் கொண்டும் தங்க நகைகளை வைத்துக் கொண்டும் மக்கள் பல்வேறு காரியங்களைச் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வழி செய்தாக வேண்டும்.

அதே நேரத்திலே திரு. மார்க்கபந்து அவர்கள் சொல்லியதைப் போல பல பேர்கள் மூலதனத்தை வைத்துக்கொண்டு பணத்தை வைத்துக்கொண்டு 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று வைத்துக் கொண்டு தொழில் செய்ய முடியாத நிலைமையிலே உள்ளவர்கள் வட்டிக்குக் கொடுக்கிற பழக்கம் இருக்கிறது. இன்றைக்கு அது தடுக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தடுப்பதைவிட கூட்டுறவு முறையிலே தொழில்கள் ஆரம்பிக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

இந்த அரசின் மூலமாக ஒரு சட்டம் இயற்[illegible] வைத்திருக்கிறவர்கள் 10, 15 பேர்கள் சேர்ந்து ஒரு கூட்[illegible] சங்கம் அமைத்து அந்த ஊரிலே இருக்கின்றவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய முறையை ஏற்படுத்தி அதை அதிகாரிகள் கண்காணிக்கிற அளவிற்கு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் அதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமானால் அந்த 10, 15 பேர்கள் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு 2, 3 லட்சம் ரூபாய் சேர்த்து ஒரு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்திக் கொண்டு அந்த ஊரிலே உள்ளவர்களுக்குக் கடன் கொடுக்க வழிவகை செய்தால்—பல பேர்கள் அதற்குத் தயாராக இருப்பார்கள்—ஏழை எளிய மக்களுக்குக் கடன் வசதிகளை அதிகரிக்க முடியும்.

இப்படி வசதி செய்து கொடுத்தால் எத்தனை சதவீதம் வட்டி வாங்க வேண்டுமென்று அரசு நிர்ணயிக்கிறதோ அதை கூட்டுறவு இலாகா அதிகாரிகளை வைத்துக் கொண்டு கண்காணித்து, அந்த வட்டியின் மூலம் வரும் பணத்தில் கொஞ்சத்தை அதிகாரிகளின் பணிகளுக்கான செலவைச் சரிசெய்து கொண்டு அதற்கு மேலே உள்ள பணத்தை அவர்கள் அத்தனை பேர்களும் பகிர்ந்து எடுத்துக் கொள்ளலாம். இப்போது அப்படிப்பட்டவர்களிடம் உள்ள பணம் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதைவிட அந்தத் தொகையை அரசாங்கத்தின் கண்காணிப்பின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு கடன்களாக வழங்க ஏற்பாடு செய்யலாம்.

இப்போது வங்கிகளிலே அதிகமாக வட்டி வாங்கப்படுகிறது. வட்டிக்கடைகளிலேயும் கூட அதே தொகை வட்டி வாங்கப் படுகிறது. கூட்டுறவு முறையிலே அப்படி ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு அதை அரசாங்கம் கண்காணிக்கிற முறையிலே 10, 15 பேர்கள் சேர்ந்து அமைக்கிற ஒரு ஏற்பாட்டைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. மு. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற கடன் நிவாரணச் சட்ட நீட்டிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற கூட்டத் தொடரிலேயே 6 மாத காலத்திற்கு நீடிப்பு தரவேண்டுமென்று சொல்லிய போது, அதை ஒரு வருடமாக நீட்டிக்க வேண்டுமென்று எங்களுடைய தரப்பிலே இருந்து திருத்தங்கள் கொடுக்கப்பட்டது.

ஆனால் இதற்கு ஒரு மாற்று யோசனையை வைத்திருக்கிறோம், உடனடியாக நிவாரணம் அளிக்கப் போகிறோம் என்று சொல்லி, ஆறு மாதங்களுக்கு நீட்டித்துத் தந்தார்கள். மீண்டும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு கேட்கிறார்கள். இது சம்பந்தமாக இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்கவேண்டும், ஓராண்டுக் காலமாவது நீட்டித்துத் தர வேண்டுமென்பது தான் எங்களுடைய கோரிக்கை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களும் அதே கொள்கையைத்தான் எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, கடன் நிவாரணச் சட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு நாம் நீட்டித்துக் கொடுப்பதன் மூலமாக நன்மையைச் செய்கின்ற போதும், கடன் கொடுத்தவர்கள் கோர்ட்டுகளிலே தாவாக்கள் தொடருகின்ற பொழுது வட்டியையும் சேர்த்துத்தான் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஏழை எளியவர்களுக்குப் பூரணமாக நன்மை கிடையாது, தற்காலிகமாக ஆறு மாத் காலத்திற்கு கடன் கொடுத்தவர்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் தடுத்து நிறுத்துகின்ற அளவில் இதுவொரு தற்காலிக ஏற்பாடேயொழிய நிரந்தரமான ஏற்பாடு என்று சொல்ல முடியாது. அதே நேரத்தில் அந்த வட்டியையும் தவிர்த்து, நிரந்தரமாகப் பயனளிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் தெரிவித்தது மாதிரி, இந்தச் சட்டத்தால் கிராமத்திலுள்ள ஏழை எளியவர்கள் சிறு தொகைகளைக் கூட கடனாகப் பெற முடியாமல் இருக்கிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், கடன் கொடுக்கின்றவர்கள் கடன் கொடுத்தால் நாளைக்குக் கோர்ட்டுக்குச் செல்ல முடியாது, வசூலிக்க முடியாது என்று கருது

இன்ற நிலைமையில்தான் இருக்கிறார்கள். அதற்கு நாம் மாற்றுத் திட்டத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உடனடியாகக் கடன் கிடைக்கின்ற அளவிற்கு, கிராமங்களில் இருக்கின்ற கூலி வேலை செய்கின்றவர்களுக்கு, விவசாயிகளுக்கு, குறைந்தபட்சம் சிறு விவசாயிகளுக்குக் கடன் தருகின்ற அளவிற்கு 'பர்சனல் சூரிட்டி'யின் மேல் கடன் கிடைக்கும் வகையில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சவரர்கள் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், கூட்டுறவு அர்பன் வங்கிகளில் 'பர்சனல் சூரிட்டி'யின்மேல் பணம் 50 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அதுவும் கேட்கின்ற அனைவருக்கும் முழுத் தொகையைக் கொடுக்க முடியவில்லை. குறிப்பிட்ட இடங்கள் வரையில்தான் நகர வங்கிகள் வைக்கப் பட்டிருக்கின்றன. எனவே கேட்கின்றவர்களுக்கு முழுத் தொகையையும் கொடுக்க முடிவதில்லை. அந்த நிலைமை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு வேண்டிய நிதி ஆதாரங்களை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இன்றைய தினம் கேட்டுக்கொள்கிறேன்.

புயல் வெள்ளப் பகுதிகளிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் நீட்டித்துத் தரப் போகிறோம் என்று அரசின் சார்பிலே மாண்புமிகு முன்னவரவர்கள் இங்கே சட்டத்தை அறிமுகம் செய்து வைத்திருக்கிறார்கள். இதைவிட வேறு சந்தர்ப்பம் கிடைக்காது நம்முடைய அரசுக்கு. இந்தச் சந்தர்ப்பத்தில், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், கடன்கள் அத்தனையையும் ரத்து செய்து நிவாரணம் அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எந்த நிவாரண நடவடிக்கையானாலும் சரி, அல்லது அரசாங்கத்தின் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளானாலும் சரி, ஏழை எளிய விவசாயிகளுக்கு மேலும் மேலும் சுமையை ஏற்படுத்தும் அளவிற்கு இருக்கிறதே தவிர, கடன்களை ஒட்டு மொத்தமாக ரத்து செய்யக் கூடிய அளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு மார்க்கபந்து அவர்கள் குறிப்பிட்டதைப் போல, புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, இராஜாஜி காலத்தில் கொண்டு வந்ததைப் போல், கொண்டு வந்து, எல்லா விவசாயிகளுக்கும் ஒரு வரம்பை வைத்து, இந்த அளவிற்கு மேல் இருக்கின்ற கடன்களை ரத்து செய்கிறோம்

என்று அறிவித்தால் கூட அதற்காக இந்த அரசைப் பாராட்டுவார்கள். அந்த முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், பொதுவாக இதை நீட்டிப்பதன் மூலம் ஏழை எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளிகள் போன்ற பல்வேறு தரப்பினருக்கும் மாற்றுத் திட்டத்தின் மூலம் கடன் தருவதற்கு வழிவகை காண வேண்டும், இந்தச் சட்டத்தை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கும் அளவிற்கு மாற்றி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, முடிக்கிறேன்.

(மாலை 4—30)

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்தக் கடன் நிவாரண மசோதா இனி 6 மாதங்களுக்குக் கடனை வசூல் செய்ய வேண்டாமென்று காலத்தைத் தள்ளக் கூடிய மசோதா. ஆக, இப்படியாக 2½ வருடமாகத் தொடர்ந்து. கடனை வசூல் செய்வதை மட்டும் 6 மாதம், 6 மாதமாகத் தள்ளிக் கொண்டு போகிறோமேயொழிய, அதற்குண்டான வட்டி, அசல் சேர்ந்து கொண்டே வருகிறது. ஆகவே ஒரு நாள் மொத்தமாகக் கடனை, வட்டி சேர்த்துக் கொடுக்க வேண்டுமேயென்று, கடன் வாங்கியவர்கள் எல்லாம், கடன் நீடிக்கிற காலம் வரையிலும் ஒவ்வொருவரும் பதறிக் கொண்டே என்ன செய்வது என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் இந்தச் சட்டம் இருப்பதன் காரணமாகப் புதிதாகக் கடன் கிடைப்பதில்லை; இருக்கிற பொருள்களை அடகு வைத்திருக்கிறோம். அதைத் திரும்பப் பெறவும் முடியவில்லை, விற்கவும் முடியவில்லையென்று கடன் வாங்கியவர்கள் வேதனைப்படுவதாகச் சொன்னார்கள். கடன் கொடுத்தவர்கள் எல்லாம் பெரிய மாநாட்டைப் போட்டு, நாங்கள் உலகத்தைக் காப்பாற்றக் கடன் கொடுக்கிறோம்; நாங்கள் உலகை காப்பாற்றுகிறோம். ஆகவே நியாயமான முறையிலே கடனை வசூல் செய்ய அனுமதி வேண்டும், ஜப்தி செய்ய அனுமதி வேண்டுமென்று பெரிய மாநாடு போடுகிறார்கள். நியாயமான வட்டி என்றால் அவர்கள் சொல்வது ரூ.100-க்கு ரூ. 10 ரூ. 20 ஆகும். ஆனால், எழுதிக் கொள்வது, ரூ.100—க்கு ரூ. 1

என்றுதான். ஆனால் ரூ. 100-க்கு ரூ. 10-வட்டி வாங்கிக் கொள்கிறார்கள். அதில், ஒன்றிரண்டு விதிவிலக்கு இருக்கலாம். அதிகமாக, தனியார் செய்யக்கூடிய லேவாதேவி பூராவுமே, நியாயமான, ரூ. 1 வட்டி ரேட்டில் வசூல்செய்வது என்பது அறவே கிடையாது.

அது மட்டுமல்ல, கொடுக்கிற தொகை எவ்வளவோ, அந்தத் தொகைக்கு ரெக்கார்ட், டாக்குமெண்ட் செய்வது கிடையாது. ரூ. 100-கொடுத்தால், ரூ. 200-என்று எழுதுவார்கள். ரூ. 1,000-கடன் வாங்கினால், ரூ. 2000-த்துக்குத் தான் புரோநோட் எழுதுவார்கள். அதுதான் வழக்கமாக இருக்கிறது. எதற்காக அந்த வழக்கம் வந்தது என்பது அமைச்சருக்குத் தெரியும்.

ஆரம்ப காலத்திலே, இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு சட்டம் கொண்டுவந்து 5½ சதவிகித வட்டி என்று கொண்டு வந்தார்கள். அப்பொழுது ரூ. 100-அசல் என்றால், ரூ. 200-என்று எழுதிக் கொள்வார்கள். வட்டியை ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டு வந்தால் சரி. வட்டியைக் கொடுக்க வில்லையென்று கோர்ட்டுக்குப் போனால், வட்டிக்கு வட்டி போட்டு, அசல் 2 மடங்கு, 3 மடங்கு உயர்ந்து போகும். ஆகவே, வட்டியைத் தள்ளி விடுவார்கள். ஆகவே, வட்டியில்லாவிட்டாலும் பரவாயில்லை, அசலைக் கொடுத்தால் போதும் என்று தீர்ப்பாகும். கோர்ட்டில் என்ன தீர்ப்பு வருகிறது? இதை எழுதிக் கொடுத்தாயா, உன் கையெழுத்துதானா என்று தான் கேட்பார்கள். உன்னுடைய பேரேட்டிலே, நீ கொடுத்ததற்கு உண்டான கணக்கு இருக்கிறதா, நீ கடன் கொடுத்ததற்கான ரெக்கார்ட் இன்கம் டாக்ஸ் ஆபீஸில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் கேட்பதே கிடையாது. ஆகவே, ரூ. 200-என்று எழுதிக் கொடுத்திருந்தால், ரூ. 200-கட்டி விடுங்கள். இல்லாவிட்டால், கட்ட முடியவில்லையென்றால், உன் சொத்து ஜப்தி. இப்படித்தான் போகிறதே தவிர, அது உண்மையான தொகையா என்று பார்ப்பதில்லை.

நானும் தொடர்ந்து, இரண்டு வருடமாக, ஒவ்வொரு தடவையும் இதற்கு நிவாரணச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று சொன்னேன். முன்னாலேயிருந்த சர்க்கார

சட்டம் கொண்டுவந்தார்கள்; ஆனால் நிவாரணம் கொடுக்கவில்லை. அவர்கள் நிவாரணத்திற்குப் பதிலாக, 5½ சதவிகிதம் என்றிருந்த வட்டியை 9 சதவிகிதம் என்று உயர்த்தினார்கள். 4 சதவிகித வட்டியை உயர்த்தினார்களே தவிர, நிவாரணம் கொடுக்கவில்லை. முன்னாலே, இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கொண்டுவந்த சட்டப்படி இத்தனை வருஷத்திற்கு வட்டி செலுத்தியிருந்தால், அதற்குப் பின்னாலே, வட்டி செலுத்த வேண்டியதில்லையென்று சொல்லி, 5½ சத விகிதத்தை, 9 சத விகிதமாகத் தான் உயர்த்தி சட்டத்தைத் திருத்தினார்களே தவிர, கடன் வாங்கியவர்களுக்குக் கூடக் கொஞ்சம் பளுவை ஏற்றினார்கள். எனக்குத் தெரிந்த புள்ளி விவரங்களைச் சொல்கிறேன், பத்திரிகையிலே படித்ததை வைத்து—இந்தியாவிலேயே, கடன் பளு, அதிகமாகத் தமிழ்நாட்டிலே தானிருக்கிறது. ஆகவே, நிவாரணம் கொடுக்காமல், விடுதலை கொடுக்காமலிருந்தால், கடன் வாங்கியவர்கள் முன்னேறவே முடியாது.

புயல், வெள்ளம், வறட்சி ஆகிய காரணங்களால், இந்தச் சட்டத்தை 6 மாதம் நீடித்துக் கொண்டு போவதால், 6 மாதம் கழித்து, அவர்களுக்குக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி வந்து விடுமா? புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், 6 மாதம் பொறுத்து, கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியைப் பெற்று விடுவார்களா? எப்படி வரும்? இது காலத்தை நீட்டிக்கின்ற சட்டம்தான்.

ஆகவே, கடன் சுமையை நீக்கி, அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, உண்மையான கடன் எவ்வளவு என்று ஏதாவது ஒரு வழியில் கண்டுபிடியுங்கள். எங்களைக் கேட்டால், நான் சொல்வது, பஞ்சாயத்து லெவலில் ஒரு கமிட்டி, ஒன்றிய லெவலில், ஊராட்சி ஒன்றிய லெவலில் ஒரு கமிட்டி நியமியுங்கள். அவர்கள் அந்த ஊர்க்காரர்களாக இருக்கட்டும். அவர்கள் இவ்வளவுதான் தொகை. இவர் கொடுத்திருந்தால், சரியாகத்தான் எழுதுவார். இவர் கொடுத்திருந்தால், இரண்டு பங்கு எழுதுவார். இவர் இத்தனை பங்கு எழுதுவார். இவர் இவ்வளவுதான் வட்டி

[திரு. சோ. அழகர்சாமி] [1978 சனவரி 5

போடுவார், இது சரிதான் என்று அவர்கள் சிபாரிசு பண்ணி ஞல், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு மேல், டிரிபியூனல் டிக்கிரி பண்ணலாம், வசூல் பண்ணலாம்.

ஏதாவது ஒரு வகையில் நிவாரணம் அளிக்க வேண்டும். ஏனென்றல், பல கடன் கொடுத்த லேவாதேவிக்காரர்கள், கோபத்திலே இருப்பதை நாம் பார்க்கிறேம். நாளைக்கு இந்தமாதிரி செய்து கொண்டிருக்க முடியும்? நீ எத்தனை ஜனவரி மாதம் 15-ம் தேதி வரட்டும், கோர்ட்டிலே போட்டு, ஜப்தி பண்ணுகிறேஞ, இல்லையா பாருங்கள் என்று சொல் கிருர்கள். இப்பொழுது 6 மாதம் நீட்டிக்கப்படுகிறது. ஜுலை, கழிந்து, ஆகஸ்டு வரட்டும் என்று சொல்வார்கள். ஆகவே, உண்மையான நிவாரணம் வேண்டும்.

வறட்சி, வெள்ளம், புயல் போன்றவற்ருல் பாதிக்கப் பட்ட இடங்களில் வட்டியைத் தள்ளி விடவேண்டும். ஒரு வன் ரூ. 1,000—கடன் வாங்கியிருந்தால், அசலை 10 வருஷத் திலே, ரூ. 100—வீதம் வசூல் பண்ணட்டும். அதற்கு ஒரு நிவாரணச் சட்டம் கொண்டுவரட்டும்.

இதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி இந்தப் புயல், வெள்ளத்தாலே, நிலம் எல்லாம் அடித்துப் போய் விட்டது. பல இடங்களிலே, நிலமே கிடையாது. கிணறுகளே கிடையாது. கடன் வாங்கியவர்களிலும், ஒரு வீட்டில் 4 பேர் இருந்தால் 3 பேர் வெள்ளத்தால் அடிக்கப்பட்டுப் போய்விட்டார்கள். அந்த மாதிரி பகுதி களில், எந்தக் கடஞக இருந்தாலும், அது தனியார் கடஞக இருந்தாலும், கூட்டுறவு சொஸைட்டி கடஞக இருந்தாலும் ரத்துச் செய்யவேண்டும்.

பின்னலே ஒரு சட்டம் வரப்போகிறது. அதிலே புயல் அடித்த இடங்களிலும் வெள்ளத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்ட இடங்களிலும், எல்லாக் கடன்களையும் தள்ளிவிட வேண்டும். பணம் கொடுத்தவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்று கருதினல் அரசு அதற்குத் தக்க நட வடிக்கை என்னென்ன எடுக்க வேண்டுமோ அதைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும்.

சிறிய விவசாயிகளுக்கு $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம் உள்ள வர்களும், 5 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளவர்களும், ஒரு யூனிட் நிலம் வைத்திருப்பவர்களும் கடன் வாங்கியிருந்தால்

1978 சனவரி 5] [திரு சோ. அழகர்சாமி]

அந்தக் கடனை ரத்துச் செய்ய வேண்டும். கடன் கொடுத்த வர்கள் மாநாட்டில் உரையாற்றிய முத்தையா செட்டியார் அவர்கள் பேசினர்கள். கடன் நிவாரணச் சட்டம் பற்றி கவர்னரிடத்திலே போய்ச் சொன்னதும், அவர்கள் தாசில் தாரிடம் சொல்லி நிவாரணமளிப்பதில் வேகப்படுத்த வேண்டாமென்று சொல்லுவதாக, கவர்னர் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள் என்று சொன்னர்கள். இப்போது தான் புரிகிறது ஏன் தாசில்தார்கள் வேகப்படுவதில்லை என்று. 200 ரூபாய் மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டாமென்று ஒரு சட்டம் இருக்கிறது. ஒரு மாவட்டத்தில் 3,000 பேர்கள் மனுப் போட்டால் அதில் 200 மனுக்கள் பைசலாகி விட்டது. மீதி மனுக்கள் பைசலாகவில்லை. எப்படி பைசல் செய்கிருர்கள் என்றல், கணவனை, அழைக்கிருர்கள் உனக்கு என்ன வேலை என்கிருர்கள் விவசாயக்கூலி என்று சொல்கிருன் சரி போ என்கிருர்கள். மனைவியைக் கூப்பிடுகிருர்கள் அவளையும் அதே மாதிரிக் கேட்டு, போ என்று சொல்லிவிடு கிருர்கள். சர்க்கார் சட்டப்படி விவசாயக் கூலி நாளைக்கு ரூ. 5 சம்பளம். ஆகவே மாதம் 300 ரூபாய் வருடத் திற்கு 3,600 ரூபாய். இப்படிப்பட்டவர்களின் மனுவை இப்படித் தள்ளுபடி செய்திருக்கிருர்கள். கடனைத் தள்ளுபடி செய்யவில்லை. மனுக்களைத் தள்ளுபடி செய்திருக்கிருர்கள்.

இன்றைக்கு ஒரு நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட சட்டத்தை ஒழுங்காக அமல்படுத்தவேண்டும். அதற்கு ஒரு மக்கள் குழு அமைக்க வேண்டும். அதிகாரிகள் தலைமை யில் இருந்தாலும் பரவாயில்லை. அந்தக் குழு பரிசீலனை செய்து சிபாரிசு பண்ண வேண்டும்.

இங்கே எனக்குத் தெரிந்த ஒருவர் 10,000 ரூபாய் கடன் வாங்கியிருந்தார், அது இப்போது ஒரு லட்சம் ரூபாய்க்கு வந்துவிட்டது. சிறு விவசாயிகள் 100, 200 ரூபாய் என்று வாங்கியவர்கள், வட்டிக்கு வட்டி என்று நோட்டு எழுதி வாங்கிக் கொள்கிருர்கள். எனவே கடன் சட்டப்படி 200 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்கள் கடனைத் தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும்.

இந்த மாதிரி வரக்கூடிய முறையிலே சட்டங்களைத் திருத்து வதற்கும், ஒரு 6 மாத காலத்திற்குள்ளாவது கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1978 சனவரி

இங்கு கூட்டுறவு அமைச்சர் கூட இருக்கிறார்கள். கிராமத் கூட்டுறவு சங்கங்களிலும் நிறையக் கடன் வாங்கி இருக்கிறார் கள். நேஷனலைஸ்டு வங்கிகளில் கடன் வாங்கி இருக்கிறார்கள். அதைப் பற்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது. மாநில அரசு சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளிலும் கடன் வாங்கி இருக்கிறார்கள். நிறையக் கடன் வாங்கி 3 ஆண்டுகளாக மூன்று தடவை தள்ளி வைக்கப்பட்டு அதைக் கட்டவேண் டியிருக்கிறது. ஆகவே, எல்லாக் கடனையும் மொத்தமாகச் சேர்த்து,—அதாவது நிலவள வங்கிக் கடன், கூட்டுறவு வங்கிக் கடன்—இவைகளை மொத்தமாகச் சேர்த்து, அதைப் பத்துத் தவணைகளாகவோ அல்லது 7, 8 தவணைகளாகவோ ஆக்கி அவர்கள் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்றவகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். அந்தக் கடன்களை மொத்தமாகவும், ஒன்றாகவும் கட்ட முடியாது.

ஆகவே கூட்டுறவுக் கடன்களையும் நிலவள வங்கிக் கடன்களையும் இரண்டு கடன்களையும் ஒன்றாக்கி அதைத் தவணைமுறையில் கட்டு என்று சொல்லிவிட்டால் சரியாக இருக்கும். அதற்கு ரிசர்வ் பாங்கி காரண்டியும் உயர்த்திக் கூட்டுறவுக் கடன் மூலமாகச் செய்யலாம். அதனால் ஒழுங்காக வசூலாகும், அதை திரும்பவும் கடன் கொடுக்க ஏற்பாடு பண்ணலாம். கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக வும் கடன் கொடுக்கலாம், பாங்கிலேயும் கடன் வாங்க முடியும். இப்போது வைத்திருக்கிற நகைகளையும் திரும்பப் பெற முடியவில்லை. இப்போது கேட்டால் ஜனவரி மாதம் வரை பொறுங்கள் என்று சொல்லுகிறார்கள். கொண்டு வருகிற சட்டம் மக்களுக்கு நிவாரணம் கொடுக்கிற மாதிரி இருக்கவேண்டும். இதற்கு முன்னாலே கொண்டுவந் துள்ள சட்டத்திலே நிவாரணம் கிடைக்கவில்லை.

[மாலை 4-40]

இதற்கு முன்னால் இருந்த அரசு நிவாரணம் அளிப்பதற்கு பதிலாக பழைய சட்டத்தில் இருந்த 5½ சதவீத வட்டியை 9 சதவீத வட்டி என்று உயர்த்தினார்கள். அதன் காரண மாக 1,000—2,000 என்று வட்டி அளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது.

1978 சனவரி 5] [திரு. சோ. அழகர்சாமி]

ஆகவே, வட்டிக் கணக்கை வைத்து முடிவு செய்யக் கூடாது. நியாயமான கடன் எவ்வளவு என்பதை கண்டு பிடிக்க மக்கள் குழு அமைக்கப்படவேண்டும். பஞ்சாயத்து நிலையில் ஒன்றும், ஒன்றிய அளவில் ஒன்றும் என்று இரண்டு குழுக்கள் அமைக்கப்படவேண்டும். ஒரு கமிட்டி செய்தது சரியில்லையென்றால், மற்றொன்றுக்கு அப்பீல் செய்யலாம். ஆகவே, அந்த மாதிரி உண்மைக் கடன் எவ்வளவு என்பதை நிர்ணயிக்க அப்படிப்பட்ட குழுக்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டு, இந்த 6 மாதத்திற்குள் அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தத் திருத்தச் சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கடன் நிவாரண திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களை கூறவி ம்பு கிறேன்.

இந்தச் சட்டம் உண்மையிலேயே ஏழைகளுக்கு நிவா ரணம் அளிக்குமா என்பதை எண்ணுகிறபோது இதுமக்களை ஏமாற்றுவதற்காக நாம் வைத்து இருக்கிறோமே தவிர இந்தச் சட்டத்தால் மக்களுக்கு பலன் அடையக்கூடிய தாக இல்லை என்பதை நான் கூறுவதற்கு விரும்புகிறேன். காரணம் ஏற்கனவே ஒரு வசதியும் இல்லாதவர்களுக்கு பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் பல நிவாரணங்கள் இருக்கின்றன. சிவில் ப்ரோசிஜர் கோடில் செக்ஷன் 51-ல் ஒரு வழி இருக்கிறது. அந்த செக்ஷன் 51-படி ஒரு மனுவை நீதி மன்றத்தில் தாக்கல் செய்தால் வேறு ஒரு வசதியும் இல்லாதவர்களை கைது செய்யக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் கிடைக்க வழிகள் இருக்கின்றன.

ஆனால் இந்த அவைமுன் இருக்கின்ற கடன் நிவாரண சட்டத்தைப் பார்க்கிறபோது கடன்கொண்டுள்ளோருக்கு நிவாரணம் இல்லாமல் அது சற்று வசதி உள்ளவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கிறதே தவிர மற்றபடி இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். வசதி உள்ளவர்களும் கடனைத் திரும்பக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளவர்களும் கூட இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படாத நிலை இருக்கிறது என்று சொன்னால், கிராமங்களில் இருக்கும் பொருளாதார சூழ்நிலை எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதையும் இந்த அரசு

நன்றாக உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே கிராமத்தில் வாழ்கிறவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றால் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டியது. ஏழைகள் வசதி அற்றவர்கள் கடன் இருந்தால், அந்தக் கடனை ரத்து செய்கிறோம் என்று இருக்க வேண்டும். அப்படி செய்தால் தான் அவர்கள் அந்தக் கடன் தொல்லையில் இருந்து நிவர்த்தி செய்யப்படுவர் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக கடன் பட்டவர்களைவிட வசதியுள்ள கடன் வாங்கியவர்கள் திரும்ப வேண்டியது இல்லை என்று சொன்னால், அதனால் பலருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகையால் உண்மையிலேயே இந்தச் சட்டத்தால் பலன் கிடைக்கவேண்டுமானால், இந்த சட்டத்தைத் திருத்தி ஏழைகள் பட்ட கடனை திரும்பப் தரவேண்டியதில்லை என்று சொல்லி, ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் கடன் கொடுப்பதும், வாங்குவதும், நின்றுவிட்டது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், ஒரு தடவை கடன் கொடுத்தவர்கள் திரும்பப் பெறுவதற்குள்ள மார்க்கம் இல்லை என்று சொன்னால் அவர்கள் திரும்பக் கொடுக்கமாட்டார்கள் என்பதை நான் இங்கே கூறித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கடன் வாங்குவதற்கு வசதி இல்லாது இருக்கும் பொழுது அரசாங்கம் வேறு ஏதாவது வழியாக ஏழைகளுக்கு கடன் கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் உண்மையிலேயே இல்லை. ஆகையால், இந்தச் சட்டத்தால் ஏழைகள் படுகின்ற அவஸ்தை இன்னும் தீர்ந்தபாடில்லை.

பாங்குகளில் சென்றால் கூட வசதி உள்ளவர்களுக்கு கடன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதே தவிர சொத்து இல்லாத ஏழைகளுக்கு கடன் கொடுக்க பாங்குகள் கூட தயங்குகின்றன. பாங்கில் அதற்கு செக்யூரிட்டி வேண்டும். ஜாமின் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, ஏழைகளுக்கு சொத்து இல்லை என்று சொன்னால் பாங்கிலே கடன் வாங்க வசதியில்லை. ஆக மொத்தத்தில் இந்த கடன் நிவாரணச் சட்டத்தைப் பார்க்கிற போது இது ஏழைகளுக்காக இயற்றப்பட்ட சட்டமாக கருதுவதற்கு வாய்ப்பு இல்லை. சொத்து உள்ளவர்களுக்கு பாதுகாப்பு

கொடுக்கக்கூடிய சட்டமாகத் தான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆலோசித்து அதற்கு ஒரு பரிகாரம் காணுகிற வகையில், கால தாமதம் இல்லாமல் இந்தச் சட்டம் ஒழுங்கான முறையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து பான் புரோக்கர்கள் சம்பந்தமாக பல மனுக்கள் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் எங்களைப் பார்த்து, எதிர்க் கட்சியிலே இருக்கிற எங்களைப் பார்த்து அவர்களுடைய சங்கடங்களை எல்லாம் தெரிவித்தார்கள். அதை நன்றாக பரிசீலனை செய்து, உண்மையிலேயே அவர்கள் சொல்லுகிற காரணங்கள் உண்மையாக இருக்குமேயானால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்கிற முறையில் அவற்றை ஆலோசித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி இந்தச் சட்டத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி அமர்கிறேன்.

*திரு ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார்களிடம் பெற்றிருக்கிற கடன்களை வழக்குமன்றங்கள் மூலமாக வசூல் செய்தவை தற்போது தடை செய்யும், ஆறு மாத காலத்திற்கு ஒத்திப்போடுகிற இந்த சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

இந்தச் சட்டத்தில் ஏதோ நிவாரணம் அதிகமாக இருப்பதாக நிச்சயமாகச் சொல்ல முடியாது. காரணம் என்னவென்றால் எந்தவிதமான மாரடோரியமும் கிடையாது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே மற்ற மாநிலங்களில் குறிப்பாக ஆண்டுக்கு 2,400 ரூபாய் வருமானம் இருந்தால் அவர்கள் பெற்ற கடனை ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று ஒரு குறிப்பிட்ட அளவு அதாவது ஆயிரம் ரூபாய் கடன் இருந்தால்—அந்தக் கடனை ஒட்டுமொத்தமாக ரத்து செய்கின்ற சில சட்டங்கள், சில மாநிலங்களில் உருவாக்கப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்டச் சட்டத்தை இந்த மாநிலத்தில் இயற்றுவதற்கு தயாராக இல்லை என்பதையும் அந்தச் சட்டத்தை நிச்சயமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1978 சனவரி 5

குறைந்த வருமானமுள்ளவர்களிடமிருந்து கடன் பெற்றிருந்தால் அப்படி பெற்ற கடனை அரசே கொடுப்பதற்கு முன்வரவேண்டும். அல்லது ஓரளவு வசதி உள்ளவர்களிடமிருந்து கடன் பெற்றிருந்தால் அதில் பாதியை அரசு செலுத்தி, மீதி பாதியை தவணை முறையில் வசூலிக்கிற ஒரு முறையை அமுல்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்தொகையை அரசு எப்படிக் கொடுக்க முடியும்? என்று நீங்கள் கேட்கலாம். மத்திய அரசு, பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கக் கூடிய கடன்களில் ஓராண்டிற்கு 100 கோடி முதல் 200 கோடி ரூபாய் வரையில் ''பேட் டெட்'' என்று தள்ளுபடி செய்கிறார்கள்.

அப்படி பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கிற அதே நேரத்தில் சாதாரண விவசாயிகளுக்கு அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இப்படி ஒரு 'பேட் டெட்' என்று தள்ளுபடி செய்யக் கூடிய அளவுக்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக அப்படிப்பட்ட காரியங்கள் செய்வதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து சில உதவிகளைப் பெறுவதற்கு மத்திய அரசை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஓராண்டுக்கு 400 கோடி ரூபாய் கடன் கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. இந்த 400 கோடி ரூபாயில் 100 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய நிறுவனங்கள்—குறிப்பாக கோவாப்ரேடிவ் சங்கங்கள்—மூலமாக அல்லது வங்கிகள் மூலமாக கடன் பெறுகிறார்கள். மீதி 300 கோடி ரூபாயை தனியார் இடத்திலிருந்து கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக, இந்த கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுக்கின்ற சட்டங்களினால் இந்த ஊற்று; கடன் வாங்குகின்ற ஊற்று அடைக்கப்படுகிறது. ஆகையால் தனிப்பட்டவர்களிடமிருந்து கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது என்ற சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

[மாலை 4—50]

[illegible] [திரு. ரா. கிருஷ்ணன்]

[illegible] கோர்ட்டுகளுக்கு போகவேண்டு [illegible] இருப்பவர்களுக்குத்தான் இச்சட்டம் தடை [illegible] கிராமப்புறங்களில் உள்ள நிலைமை [illegible] கோர்ட்டையும் மதிக்கத் தயாராய் [illegible] இப்படிப்பட்ட சட்டங்களை மதிக்காத [illegible] இன்றைக்கும் இருப்பதையும் நாம் பார்க்கலாம்.

[illegible] ரெவின்யூ ஸ்டாம்பை ஒட்டிய வெள்ளைத் [illegible] கையெழுத்து வாங்குகிறார்கள். ரூ. 100 வாங்கி [illegible] ரூ. 200—அல்லது ரூ. 300-க்கு புரோநோட்டு வாங்குவது அல்லது அடமானங்கள் வாங்குவது என்பது சர்வசாதாரணமாக இருக்கக்கூடியது. அதைப் போன்று எந்தவிதமான நோட்டு, அடமானம் இல்லாமல் வசூல் செய்யக்கூடிய நிலைமை கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சர்வ சாதாரணமாக உள்ளது.

ஆகவே இப்படிப்பட்ட சட்டங்களை மதிக்கக் கூடியவர்களுக்குத்தான் இச் சட்டம் தடையாக இருக்கிறதே யொழிய எந்தவிதமான சட்டத்தையும் மதிக்காதவர்கள், அடிதடி நடத்தி கட்டாயமாகச் சுரண்டுகிற நபர்களுக்கு இச் சட்டத்தில் என்ன தடை இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு வலுக்கட்டாயமாக வன்முறை மூலமாக வசூல் செய்கின்ற நபர்களை நிச்சயமாகக் கண்காணிக்க வேண்டியது அரசின் கடமையாகும். குறிப்பாக இப்படிப் பட்ட நடவடிக்கைகள் ஏமாற்றுவதன் அடிப்படையில் இருப்பதால், அதை 'காக்னிசபிள் அபன்ஸ்' என்ற முறையில், தனி நபர் இப்படிப்பட்ட அடிதடி நடத்தி வட்டித் தொழில் பார்க்கிற கந்துவட்டிக்காரர்களால் பாதிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட நபர் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுத்தால் உடனடியாக அவர்களை கைது செய்யக் கூடிய அளவுக்கு ஒரு சட்டம் இருந்தால்தான் இப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே குறைந்த வருமானமுள்ளவர்கள், அதாவது 'வில்லேஜ் ஆர்ட்டிசான்ஸ்' ரூ. 200-க்கும் குறைவாக வருமானமுள்ளவர்கள் தனி தாசில்தாருக்கு மனுச் செய்து

குறைந்த வருமானமுள்ளவர்களிடமிருந்து கடன் பெற்றிருந்தால் அப்படி பெற்ற கடனை அரசே கொடுப்பதற்கு முன் வரவேண்டும். அல்லது ஓரளவு வசதி உள்ளவர்களிடமிருந்து கடன் பெற்றிருந்தால் அதில் பாதியை அரசு செலுத்தி, மீதி பாதியை தவணை முறையில் வசூலிக்கிற ஒரு முறையை அமுல்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்தொகையை அரசு எப்படிக் கொடுக்க முடியும்? என்று நீங்கள் கேட்கலாம். மத்திய அரசு, பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கக் கூடிய கடன்களில் ஓராண்டிற்கு 100 கோடி முதல் 200 கோடி ரூபாய் வரையில் ''பேட் டெட்'' என்று தள்ளுபடி செய்கிருர்கள்.

அப்படி பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கிற அதே நேரத்தில் சாதாரண விவசாயிகளுக்கு அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இப்படி ஒரு 'பேட் டெட்' என்று தள்ளுபடி செய்யக் கூடிய அளவுக்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக அப்படிப்பட்ட காரியங்கள் செய்வதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து சில உதவிகளைப் பெறுவதற்கு மத்திய அரசை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஓராண்டுக்கு 400 கோடி ரூபாய் கடன் கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. இந்த 400 கோடி ரூபாயில் 100 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய நிறுவனங்கள்—குறிப்பாக கோஆப்ரேடிவ் சங்கங்கள்—மூலமாக அல்லது வங்கிகள் மூலமாக கடன் பெறுகிருர்கள். மீதி 300 கோடி ரூபாயை தனியார் இடத்திலிருந்து கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக, இந்த கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுக்கின்ற சட்டங்களிஞல் இந்த ஊற்று; கடன் வாங்குகின்ற ஊற்று அடைக்கப்படுகிறது. ஆகையால் தனிப்பட்டவர்களிடமிருந்து கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது என்ற சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

[மாலை 4—50]

அதோடு இந்தச் சட்டத்தை மதிப்பவர்கள் தான் இப்படிப்பட்ட கடன்களை ஒத்திப் போடக்கூடிய அளவுக்கு நடந்து கொள்ள முடியும். புரோநோட் மூலமாகவோ அட

[illegible] மூலமாகவோ கோர்ட்டுகளுக்கு போகவேண்டு மென்று [illegible] இருப்பவர்களுக்குத்தான் இச்சட்டம் தடையாக இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள நிலைமை [illegible] எந்தவிதமான கோர்ட்டையும் மதிக்கத் தயாராய் இல்லாதவர்கள், இப்படிப்பட்ட சட்டங்களை மதிக்காத [illegible] இன்றைக்கும் இருப்பதையும் நாம் பார்க்கலாம்.

குறிப்பாக ரெவின்யூ ஸ்டாம்பை ஒட்டிய வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்குகிருர்கள். ரூ. 100 வாங்கியிருந்தால், ரூ. 200—அல்லது ரூ. 300-க்கு புரோநோட்டு வாங்குவது அல்லது அடமானங்கள் வாங்குவது என்பது சர்வசாதாரணமாக இருக்கக்கூடியது. அதைப் போன்று எந்தவிதமான நோட்டு, அடமானம் இல்லாமல் வசூல் செய்யக்கூடிய நிலைமை கிராமப்புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் சர்வ சாதாரணமாக உள்ளது.

ஆகவே இப்படிப்பட்ட சட்டங்களை மதிக்கக் கூடியவர்களுக்குத்தான் இச் சட்டம் தடையாக இருக்கிறதேயொழிய எந்தவிதமான சட்டத்தையும் மதிக்காதவர்கள், அடிதடி நடத்தி கட்டாயமாகச் சுரண்டுகிற நபர்களுக்கு இச் சட்டத்தில் என்ன தடை இருக்கிறது என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

இவ்வாறு வலுக்கட்டாயமாக வன்முறை மூலமாக வசூல் செய்கின்ற நபர்களை நிச்சயமாகக் கண்காணிக்க வேண்டியது அரசின் கடமையாகும். குறிப்பாக இப்படிப் பட்ட நடவடிக்கைகள் ஏமாற்றுவதன் அடிப்படையில் இருப்பதால், அதை 'காக்னிசபிள் அபன்ஸ்' என்ற முறையில், தனி நபர் இப்படிப்பட்ட அடிதடி நடத்தி வட்டித் தொழில் பார்க்கிற கந்துவட்டிக்காரர்களால் பாதிக்கப் பட்டால் பாதிக்கப்பட்ட நபர் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுத்தால் உடனடியாக அவர்களை கைது செய்யக் கூடிய அளவுக்கு ஒரு சட்டம் இருந்தால்தான் இப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே குறைந்த வருமானமுள்ளவர்கள், அதாவது 'வில்லேஜ் ஆர்ட்டிசான்ஸ்' ரூ. 200-க்கும் குறைவாக வருமானமுள்ளவர்கள் தனி தாசில்தாருக்கு மனுச் செய்து

அந்தக் கடனை ரத்து செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. கேள்வி நேரத்தில் சட்ட அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது அப்படிப்பட்ட வழக்குகள் முறையாக நடத்தப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மைதான். காரணம் கிராமங்களில் கந்து வட்டிக்குக் கொடுப்பவர்கள் நல்ல பணவசதி உடையவர்களாக உள்ளதால், சாதாரணமாக தாசில்தாரிடம் சென்று அந்த மனுவை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குத்தகை விவசாயிகள் நிச்சயமாக இப்போது குத்தகையை செலுத்த முடியாது என்ற நிலைமையை மனதிற்கொண்டு அதனையும் ரத்து செய்ய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரண திருத்தச் சட்டத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகளை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டம் எல்லோராலும் வரவேற்கக்கூடிய சட்டம் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி முழுமையான ஆதரவு தெரிவித்து பேசியதிலிருந்து நாம் உணரலாம். சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற கேடுகளில் வட்டிக்கு கடன் கொடுப்பதும் ஒன்று என்பது காலகாலமாக எல்லோரும் கண்டிக்கிற ஒரு நிலையாக இருந்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொன்னதுபோல் எவ்வளவுதூரம் இந்தக் கடன் பளுவால் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்ற கணக்கு இருக்குமானால் அது பொருளாதாரத் துறையிலும் மற்றும் சமூகமேம்பாட்டிற்கு முன்னேற்றத் திட்டங்களை வகுக்கிற துறைகளிலும் நமக்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். அதற்கான ஒரு முறையான திட்டத்தை முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டும்.

[illegible] எவ்வளவு தூரத்திற்கு கடன் பளு இருக்கிறது [illegible] இன்டெட்டெட்னஸ் எவ்வளவு? நகர்ப்புறங்களில் [illegible] எவ்வளவு? எவ்வளவுதூரம் மக்கள்கடன் பளுவால் [illegible]ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? The quantum of [illegible] indebtedness என்ன என்பதை முறையான கணக்கெடுத்துப் பார்த்தால் நாட்டிலே இருக்கின்ற [illegible] விளைவுகள் சரியாக, தெளிவாகப் புரியும் என்பதை [illegible] எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இச் சட்டம், தனியார் கொடுத்திருக்கின்ற கடன்களைத் தள்ளி வைக்கக்கூடிய சட்டம். அதற்கு நாம் சொல்லிருக்கக்கூடிய காரணம், அண்மையில் நிகழ்ந்த புயல் வெள்ளத்தால் மக்களின் பொருளாதாரம் சீர்குலைந்திருக்கிறது, மக்களுடைய வாங்கும் சக்தி குறைந்து பலகீனமாகி இருக்கிறது என்பதுதான். ஆகவே, மேலும் ஆறு மாதம் தள்ளிக் கொடுப்பது அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால், தனியாருக்கு மட்டும் இந்தக் காரணத்தைச் சொல்லி, கோவாப்ரேட்டிவ் சொசைடிகள் போன்ற பொது துறையினரால் வழங்கப்பட்ட கடன்களை உடனடியாக வசூல் செய்வது, அதில் மிகுந்த தீவிரம் காட்டுவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தனியாருக்கு ஒரு நியதி, அரசாங்க சார்பு நிறுவனங்களுக்கு ஒரு நியதி; அரசாங்கத்தார் வசூல் செய்யப் போகும்போது எப்படி பலகீனமானவர்கள் பலகீனமற்றவர்களாக சக்தி உள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அரசு நிறுவனத்தார் வழங்கிய கடன்களை வசூல் செய்வதையும் ஆராய்ச்சி செய்து இந்தத் துறையிலேயும் மக்களுக்கு சலுகை அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வது நியாயத்தின்பாற்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடன்கள் இரண்டு விதமானவைகளாக இருக்கலாம். ஒன்று, வட்டியால் பணக்காரர்களாகி, வட்டி வாங்குவதையே தொழிலாகக் கொண்டுள்ள வர்க்கத்தினர். மற்றவர்கள், அரிசி [illegible] ஜீவனத்திற்காக, தங்கள் கணவன்மார்கள் வியாபாரம் போன்ற தொழில் செய்து, அவர்கள் இறந்து விட்ட

பிறகு அவர்கள் வைத்துச் சென்ற சில நூறு ரூபாய்களை, ஆயிரம் ரூபாய்களை செலவழித்துவிட்டால் வாழ வேறு வழியில்லை என்ற காரணத்தால் அவற்றை வட்டிக்கு விட்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிற ஏழை விதவைகள் போன்றவர்கள். இந்த இரண்டையும் பிரித்துப் பார்க்க வேண்டும். ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் வசூலிக்கக் கூடாது, ஆறு மாதத்திற்குப் பிறகு வசூலிக்கலாம் என்ற நிலையை இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வருவது நல்லதல்ல என்ற முடிவுக்கு அரசு வர வேண்டும்.

இப்படி எல்லாக் கடன்களையும் ஆறுமாதத்திற்கு தள்ளிப் போடுவது என்பது நான் குறிப்பிட்டதுபோல வட்டிக்கு விடுவதை தொழிலாகக் கொள்ளாமல், வாழ்க்கையை நடத்துவதற்காக வட்டிக்கு விட்டுப் பிழைக்கும் ஏழை மக்களுக்கு இது மிகுந்த இன்னலைக் கொடுக்கும். அதே சமயம், அதிக வட்டிக்கு விட்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டிருக்கும் பெரிய பணக்காரர்களுக்கு மரண அடி கொடுக்கின்ற வகையில் ஒரு நல்ல முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன் அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால், குறைந்தபட்சம், கடனில் 75 சத வீதம் அல்லது 50 சத வீதம் கொடுத்தால் போதும் என்ற வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். சிவில் கோர்டில்கூட ஒரு பிரசம்ப்ஷன் என்ற அடிப்படையில் காபூலிவாலாக்களிடம் வாங்கப்பட்ட கடனில் 50 சத வீதம் தான் கொடுப்பது என்ற அனுமானத்தின் அடிப்படையில் டிகிரி செய்வார்கள். அந்த முறையை ஏன் அரசாங்கம் செய்யக் கூடாது? சட்டத்திற்கு உட்பட்டு நடக்க கூடிய நீதிமன்றங்களே, 'பிரசம்ப்ஷன்' என்ற அடிப்படையில் கடனை வசூல் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்ற முறையில் இயங்குகிறபோது சமுதாயத்தில் சில நல்ல நிலைமைகளை உருவாக்க, பொருளாதார சீர்திருத்தத்தை நாட்டில் உருவாக்க, பலவீனமான மக்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு இத்தகைய சட்டத்தைக் கொண்டுவரக்கூடாதா? ஏனென்றால், ஆறு மாதத்திற்குப் பிறகும் இதே நிலைமைதான் ஏற்படும். ஜூலை 15-ஆம் தேதி வந்தால் விவசாயப் பெருங்குடி

மக்களுக்கு மீண்டும் தொடர்ந்து இந்த நிலைதான் இருக்கும். இப்படிப்பட்ட நிலை வேண்டாம் என்று தான் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வேன்.

[மாலை 5-00]

இன்னும் ஒன்று. இதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகளை அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ... அரசாங்கம் செலாவணியிலிருந்து தேக்கி வைத்திருக்கிறோம். ... பணத்தைச் செலாவணியிலிருந்து தேக்கி வைத்திருக்கிறோம். அப்பணத்தை இப்போது, ஒரு காலவரை கொடுத்து, பின்னர் அப்பணத்தை திடீரென்று செலாவணிக்கு வரலாம் என்று அரசாங்கம் இந்தச் சட்டத்தின் மூலம் சொல்லி, பெருமளவிற்குப் பணம் புழக்கத்துக்கு வரும்போது அதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகளைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்றுதான் மீண்டும் சொல்லுகிறேன். ஏன் என்றால் It affects the currency policy—திடீரென்று இவ்வளவு திடீரென்று புழக்கத்துக்கு வரும்போது அதன் விளைவுகளை யோசிக்க வேண்டும். இதைச் செய்ய மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டுமா? அவர்கள் செய்தால் சில நன்மைகளைச் செய்யலாம். அப்படிச் செய்தால் அந்த நன்மை நமக்குக் கிடைக்கும் வழி இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது கடன் நிவாரணம் என்ற பெயரில், கடன்கள் தள்ளிப் போடப்பட்டு, தள்ளிப்போடப்பட்டு, கொடுத்தவர்கள் கடனையே மறந்து விட்டார்கள் என்று சொல்லலாம். அது மறந்ததாகவே இருக்கட்டுமே. இன்று அடகு பிடிப்பவர்கள் அடகு வாங்கிய அந்தப் பொருட்களை வைத்திருக்கின்றார்களா என்பதே சந்தேகம்தான். ஒரு ஏழைப் பெண்மணி தன் புடவையை அடகு வைத்துக் கடன் வாங்கியிருக்கக்கூடும். பல ஆண்டுகளுக்கு முன்பு வைத்த அந்த சேலை என்ன கதியில் இருக்கும். ஆகவேதான் சொன்னேன், அடகு பிடித்த பொருள்களை வைத்திருக்கின்றார்களா, தெரியவில்லை என்று.

இதே நேரத்தில் சமுதாயத்தில் பலவீனமான பகுதியினர் ரிடையர்டு ஆனவர்கள், கணவனை இழந்த ஏழைப் பெண்கள் இதை வைத்துக் கொண்டு பிழைக்கின்றார்கள். அவர்களுக்கு

எப்படி ஒரு நிவாரணத்தைக் கொடுக்கலாம் என்றும் அரசு எண்ணிப் பார்த்து, முறையாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு, இன்றைக்குள்ள சூழ்நிலைக்கு இந்த நிவாரணம் வரவேற்கத்தக்க நிவாரணம் என்பதையும் சொல்லிப் பாராட்டி, இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து அமருகிறேன்.

<u>திரு. டி. பி. மு. பெரியசாமி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது இந்திய தேசீய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக ஆதரவினைத் தெரிவித்து, என் கட்சி சார்பாக சில கருத்துக்களை, ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நிவாரணம் கொடுக்கிறோம் என்ற பெயரில் இப்படி இந்தச் சட்டத்தை அவ்வப்போது நீட்டிக்கொண்டேபோவது உண்மையில் அவர்களுக்கு உதவி செய்வதாக அமையாது. மேலும் மேலும் அவர்களுடைய வட்டிதான் அதிகமாகி விவசாயிகளுடைய பளுதான் அதிகரிக்கிறது. கிராமப்புறங்களில் பார்த்தால் தெரியும், அங்குள்ள ஏழை எளியவர்கள் கடனை வாங்கிவிட்டு, பின்னர் அதை அடைப்பதற்கு எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்று. அரசு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் அவர்கள் ஏதோ நிவாரணத்தைப் பெற்று விட்டார்கள் என்ற ஒரு அற்ப மகிழ்ச்சியை வேண்டுமானால் இப்போது பெறலாமே தவிர அது அவர்களுக்கு உண்மையான, நிரந்தரமான நிவாரணத்தை அளிக்கிறதா என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். மேலும் மேலும் அவர்களுக்கு வட்டியும் முதலுமாக வளர்ந்து கொண்டே போகிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால் அவர்களுக்கு உள்ள சிறு சொத்துக்கள்கூட இறுதியில் அதையொட்டிப் போய் விடுமோ என்று பயப்படுகின்றார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின்மீது பேசுகிற போது கடன் கொடுப்பவர்களில் லைசென்ஸ் பெற்று கடன் கொடுப்பவர்களும், லைசென்ஸ் பெறாமல் கடன் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள்; அரசாங்கம் கடனை இப்படி 3 பிரிவாகப் பிரித்து இந்த 3 பிரிவினரிடத்திலும் வாங்கிய கடன்களை [illegible] திருப்பிச் செலுத்துவதற்கு அரசு உரிய நிவாரணம் [illegible]வேண்டும், வழி வகை செய்[illegible]வண்டும் என்று கேட்[illegible]

கொள்கிறேன். தனிப்பட்டவர்களிடம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கு 6 மாத காலம், மேலும் 6 மாதம் என்று நீட்டிக் கொண்டு போவதைவிட, அந்த கடனுக்கு நிரந்தர தீர்வு காண முடியாதா என்பதை ஒட்டு மொத்தமாக அனைத்து உறுப்பினர்களும் சொன்னதைப் பார்த்தோம். அதேபோல் அரசாங்கம், கூட்டுறவு நில வங்கியில் பெற்ற கடன், குறுகிய காலக் கடன், மத்திய கால கடன், நீண்ட கால கடன் போன்றவை தொடர்ந்து வாங்கி வைத்திருக்கிறார்கள்.

ஒரு விவசாயி மீது குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்டகாலக் கடன் என்று இப்படி 3 விதக் கடன் சுமத்தப்பட்ட நேரத்தில், இயற்கையின் சீற்றத்தால் புயலும் வெள்ளமும் வந்து அவர்கள் துயரத்திற்கு ஆளாகி இருக்கும் இந்த நேரத்தில் 6, 6 மாதமாக நீடித்துக் கொடுக்கும் முறை நிரந்தர அமைதி செய்ததாகாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்க கூடிய நிவாரணத்தை அரசாங்கம் கொடுத்த கடனுக்கும்—கூட்டுறவுத் துறை மூலமாக இருந்தாலும் சரி அல்லது பாங்குகள் மூலமாகக் கொடுத்திருந்தாலும் கூட—இந்த நிவாரணம் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அந்தக் கடன்— குறுகிய காலக் கடன், நடுத்தர காலக்கடன், நீண்ட காலக்கடன்— அதை ஒட்டு மொத்தமாகச் சேர்த்து, புதிதாக விவசாயம் செய்வதற்கு உண்டான வகையில், அவன் என்ன பயிர் செய்கிறானோ, நெல் பயிரானால் குறுகிய காலக் கடன், வாழை பயிர் செய்தால் மத்திய காலக் கடன், கரும்பு பயிர் செய்தால் நீண்ட காலக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்து, விவசாயி ஒரு தவணை கட்டுவதற்கு செய்ய வேண்டுமே தவிர, தள்ளி வைப்பதன் மூலமாக ஜூலை மாதம் ஒரு குறுகிய காலக் கடனுக்கு ஒரு தவணை ; மத்திய காலக் கடனுக்கு ஒரு தவணை, நீண்ட கால கடனுக்கு ஒரு தவணை என்று இப்படி ஜூலை மாதம் ஒரு கடன், ஆகஸ்ட் மாதம் ஒரு கடன் ; செப்டம்பரில் ஒரு கடன் என்று தொடர்ந்து 3 மாதம் 3 தவணை செலுத்த வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள் என்று சொல்கிற அதே நேரத்தில் ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பேசுகிற நாம், வெளியே பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காக சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்று பேசுகிறோம். அமைச்சரவை ஒரு முடிவு கட்ட வேண்டும்—யார்

பெரிய விவசாயி, யார் சிறிய விவசாயி என்று முடிவு கட்ட வேண்டும். 2 1/2 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்கள் சிறிய விவசாயி என்று முடிவு கட்டுகிறோம். இந்த மாமன்றத்தில் பலர் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். 2 1/2 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் வைத்திருக்கும் சிறிய விவசாயிகள் படும் தொல்லைகள் அதிகமாகப் போனதைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் 10 ஏக்கர் வைத்திருக்கிற ஒரு விவசாயி சாதாரணமாக அனுபவிக்கும் நன்மை தீமைகளைக் காட்டிலும் சாதாரண பெட்டிக்கடை வைத்திருக்கும் வியாபாரி குடும்பங்கள் அனுபவிக்கிற வசதி நன்மையைப் பார்க்கும்போது நிச்சயம் 10ஏக்கர் வைத்திருப்பவர் பெட்டிக்கடைவைத்திருப்பவர் அனுபவிக்கும் சுகபோகத்தை அனுபவிக்க முடியவில்லையே என்று சுட்டிக்காட்டி, சிறிய விவசாயி யார், பெரிய விவசாயி யார் என்பதற்குக் கமிட்டி அமைத்து ஒரு நல்ல முடிவெடுத்து விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்க்கையில் நிரந்தரமாக இருந்து வரக்கூடிய கடன் தொல்லையை நிவர்த்தி செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்றுசொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Speaker, Sir. I am really grateful to the Hon. Members of the House for their very valuable suggestions and for their very valuable thoughts which they have expressed for the purpose of evaluating the total extent of the rural indebtedness and taking the necessary measures for solving the various problems that arise from such a widespread and prodigious amount of rural indebtedness, which according to the views of the members is so widely prevalent in the State of Tamil Nadu.

(மாலை 5–10)

I am particularly grateful to the hon. Members ThiruMarimuthu, Thiru Margabandhu, Thiru S. R. Radha, Thiru Selvaraj, Thiru Alagirsami, Thiru James, Thiru Kshnan, Janab Latheef, [illegible] Thiru Periyasami, for their various suggestions. Most of [illegible]

universally expressed their wholehearted assent to the extension of this legislative measure. although the objective to be achieved by this legislation is strictly delimited rather.

The very purpose of this legislation is only to extend the benefit that is accruing to the various debtors for another period of six months. It may be remembered when this Government took office on 30th June, we inherited this legislation and within two to three weeks we were in a tremendous amount of hustle and haste to extend it for another period of six months time. The Budget Session lasted nearly for a good length of time, ending on the 29th August 1977 and there was barely much of time left for us to make serious consideration and contemplation of the various measures that go to give necessary relief to the debtors of this State. Unfortunately for us, cyclone hit us, flood hit us leaving a trail of devastation, trail of misery, trail of depression and trail of derelict homes. The result has we were literally, physically and figuratively reiling under the shock administered by this natural and national calamity as it were. Therefore. hon. Members will pardon us for our—what I call–inevitable inability in not bringing appropriate legislation within so short a time.

But I can assure the hon. Members that every thought of yours, every suggestion made by the hon. Members will receive the most earnest consideration from this Government and every effort will be made to help the poor indebted debtors of this State.

I have got to answer one important point made by one or two speakers in this House regarding the loans to be collected by the co-operative societies. May I just respectfully submit to this House that this subject does not fall within my jurisdiction and that this is a subject which the Hon. Minister for Co-operation has got to answer. All that I can say is that the co-operative societies, the operation of the co-operative societies is placed beyond the jurisdiction of this legislation.

We have also taken certain pains to get necessary materials, parallel Acts from other States, so that we can get help, aid and assistance for shaping beneficial legislation in the interests of the

(Thiru K. Narayanaswamy Mudaliar) [1978 சனவரி 5

debtors of this State. We are examining them and I suppose that within the next six months time, we hope to be in a position to bring in necessary legislation.

While I do not propose to give any assurance in the sense that I am responsible for the entire thing, I do claim that the entire legislation has got to be carefully scrutinised, carefully weighed and—what is more—it has to be carefully balanced, in respect of various interests which are likely to cast against each other in making further amendments to this legislation.

As I said earlier, it is only a heritage for us and we are extending the time. We will look into the matter very deeply and bring about amendments for the relief of indebtedness in the State. Certainly during the next 6 months, we will bend our energies towards this desirable end and desideratum. Thank you, Sir,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 1/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்—ஆதரிப்போர் ' ஆம் ' என்க, மறுப்போர் ' இல்லை ' என்க........................

' ஆம் ' என்போர் அதிகம், ' இல்லை ' என்று யாரும் சொல்லவில்லை— ஆகவே தீர்மானம் நிறைவேறியதாகக் கருதப் படுகிறது.

<u>திரு. க. சுப்பு :</u> ' இல்லை ' என்று யாரும் சொல்லவில்லை என்று நீங்கள் சொல்லியிருக்கக் கூடாது, நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்......யாரும் இல்லை என்று சொல்வது சரியல்ல...... I have given an amendment. Technically, it is wrong.

<u>மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ' இல்லை ' என்று ஒருவரும் சொல்லாததால்தான் நான் அப்படிச் சொன்னேன்

978- சனவரி 5]

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சட்டமுன் வடிவு
ரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்
படுகிறது.

பிரிவு 2.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. சுப்பு
வர்கள் இதற்குத் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். திரு
ப்பு அவர்கள்....

<u>திரு. க. சுப்பு :</u> என் பேரால் கொடுக்கப்பட்டிருக்கிற
ருத்தத்தை நான் முன் மொழிகிறேன்................

In sub–clause (a), for the words 'two years and six
onths,' "substitute the words", "three years".

In sub-clause (b), for the words "two years and six
onths", substitute the words "three years".

In sub-cluse (c), for the words "two years and six
onths", substitute the words "three years."

THIRU P. S. THIRUVENGADAM : I second the
endments.

<u>திரு. க சுப்பு :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
ன் கொடுத்திருக்கின்ற திருத்தம் சாதாரணமான திருத்தம்
ான். ஆறு மாதம் என்றிருப்பதை ஓராண்டு காலம் என்று
டித்துக் கொள்ள வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறேன்.
ராண்டுக் காலம் என்று நீடித்துவிட்டால் மட்டும் நிவாரணம்
டைத்துவிடப் போகிறதா என்ன, ஆறு மாதம்
ன்றாலும் கிடைக்கப் போவதில்லை, ஓராண்டு என்று சொன்
லும் கிடைக்கப் போவதில்லை, ஆகவேதான், இதில் ஆறு
தம் என்றிருப்பதை ஓராண்டு என்று வைத்துக் கொள்ள
ம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு
மைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு ஒவ்வொரு
றையும் இப்படித் திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறை
ற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தின்
ாக்கம் ' அச்சீவ் ' ஆகிறதா என்றால் இல்லை, ஆனால் எதற்

[திரு. க. சுப்பு] [1978 சனவரி 5

காகவோ கொண்டு வருகிறோம். ஏதோ சட்டப் புத்தகத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர ஏதாவது நிவாரணம் கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. . . . .

இப்போது கூட 'Prevention of Corruption Act' என்று சட்டம் இருக்கிறது. ஆனால் கரப்ஷன் இல்லாமல் இருக்கிறதா என்றால், இல்லை. இருந்து கொண்டேதான் இருக்கிறது. அது போல் கடனும் இருக்கும். நிவாரண சட்டமும் இருக்கும். இப்படி ரயில்வே தண்டவாளம் போல் போய்க் கொண்டே இருக்கிறது. ஏதோ ஜனவரி 15 ஆம் தேதியோடு முடிவடைகிறது. அதற்காக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நான் எதிர்க்கவில்லை.

இன்னும் வேகமாக இது நடத்தப்பட வேண்டும் என்கின்ற அளவில்தான் எனது திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன். திருத்தம் கொடுப்பது இரண்டு வகையிலும் கொடுக்கலாம், எதிர்ப்பதற்கும் கொடுக்கலாம். வேகமாக நடைமுறைபடுத்துவதற்கும் கொடுக்கலாம். எப்படியிருந்தாலும் இந்த நோக்கம் நிறைவேறுகிறதா என்றால் இல்லை. எதற்காக இப்படி அடிக்கடி ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்றால், ஏதோ விவசாயிகளுக்கு ஆதரவாக சட்டம் கொண்டு வந்திருக்கிறோம், அது முடியக் கூடிய காலத்தில் 'ரீப்ளேஸ்' செய்திருக்கிறோம் என்று சொல்லலாமே ஒழிய எதார்த்த நிலைமை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். கடன் கொடுப்பது என்ன பாவமா என்ன, பெரிய பாங்குகள் கூட வட்டிக்குத்தான் கடன் கொடுக்கிறது. அதுவும் நேஷனலைஸ்ட் பாங்குகளே வட்டிக்குத்தான் கடன் கொடுக்கிறது. கடன் கொடுப்பது, வாங்குவது என்பதை 'ஒரு' பிஸினஸ் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். கடன் கொடுப்பது, வாங்குவது என்பது ஒரு ரியாலிட்டி.

ஆனால் இதில் இருக்கின்ற கஷ்டங்களை நிவர்த்தி செய்வது யதார்த்த முறையில் எப்படி முறைப்படுத்துவது என்பதைத்தான் நாம் ஆலோசிக்க வேண்டும். போட்டிருக்கின்ற சட்டங்களால் நிவாரணம் வந்து விடப் போவ

1978 சனவரி 5] [திரு. க. சுப்பு]

தில்லை. இப்போது நிலைமை என்ன, வெளியில் கிடைத்துக் கொண்டிருக்கின்ற கடனும் கிடைக்காமல் போகும்.

அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படும் கடனை எடுத்துக் கொண்டால் ஒரு தாலூகாவுக்கு ஒரு கூட்டுறவு வங்கி என்று வைத்துக் கொண்டிருந்தால் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. யதார்த்த நிலைமையில் இப்படிப் பட்ட சட்டத்தினால் யார் பாதிக்கப்படுவார்கள் என்றால், கீழ் நிலையில் இருக்கின்ற கடன் வாங்குபவர்கள் இன்னும் அதிகமான வட்டிக்கு, அதாவது கடன் வாங்கப் போகும் போது மூன்று மாத வட்டியையும் சேர்த்து எடுத்துவிட்டுத் தான் கடனே கொடுப்பார்கள்.

தனி நபர் லோன் என்று போனால் செக்யூரிடி இல்லாமல் கடன் கொடுக்க மாட்டார்கள். செக்யூரிடி கொடுக்கவும் யாரும் வர மாட்டார்கள். நகர்ப்புறங்களில்-டெட்டார்ஸ் ரிலீப் வந்திருந்தாலும் கூட, செக்யூரிடிட் இல்லாமல் கடன் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

(மாலை 5—20.)

இதிலேயும் எனக்கு ஒரு சந்தேகம். 'ரெஸ்பான்சிபிலிடி'யை 'இவேட்' பண்ணுகின்ற முறையிலே, சர்க்காரே பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக இப்படிக் கொண்டு வருகின்றார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அது கூட்டுறவுக் கடனாக இருந்தாலும், சர்க்கார் கடனாக இருந்தாலும் இதிலே 'கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி' இருக்க வேண்டுமே தவிர, 'இவேட்' பண்ணுகின்ற முறையிலே இருக்கக் கூடாது. இதைப் பற்றியெல்லாம் 'டிஸ்கஸ்' பண்ணி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

*THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I am sorry I cannot trespass into the domian of my brother Minister even according to the Business Rules of the Government under one of the Articles of the Constitution.

திரு : க. சுப்பு : இன்றே செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சுலபமாக அவருடைய இலாக்கா என்று இவர் சொல்லி விடலாம். இவரைக் கேட்டால், அது அவருடைய இலாக்கா என்றும் சொல்லி விடலாம். இவர் மட்டும் என்ன ? நிவாரணம் அளிக்கப் போகிறேன் என்று சொல்லப் போகிறாரா, என்ன ? கிடையாது. இந்தக் கூட்டுறவு கடனுக்கு நிவாரணம் அளிக்கின்ற முறையிலே கொண்டு வரப்படும் என்று சொல்லப்படுகிறது. இதிலே சில சிரமங்களும் இருக்கின்றன. இந்தக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய வேண்டும். அந்த வகையிலேதான் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

கூட்டுறவுக் கடனைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்கின்ற போது, 'நேஷனல் கலாமிடி' என்றும், 'நாசுரல் காலமிடி', 'ஆக்ட் ஆப் காட்' என்றும் சொன்னார்கள். இதற்குக் கடவுளைத்தான் குற்றம் சொல்ல வேண்டும்.

கடன் வாங்குகிறவன் கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறான் என்று சொல்ல முடியாது. அது ஒரு புறம் இருக்க, இப்போது பெய்த மழையாலும், வெள்ளத்தாலும் பல இடங்களில் இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கின்றது. இந்தக் கடனை ரத்து செய்து விடவும் முடியாது. 'நாஷனல் கலாமிடி' என்று பிரதம மந்திரி அவர்களே கூடச் சொல்லியிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நாம் நிவாரணம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அந்த மாதிரி பாதிக்கப்பட்ட பகுதிகளில், இப்போது கடனை ரத்து செய்ய வேண்டும். இதை யாரும் சொல்லிச் செய்ய வேண்டியதில்லை. நீங்களாகவே செய்திருக்க வேண்டும். இந்தச் சட்டம் ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய கடனாக இருந்தால், நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று சட்டம் கொண்டு வந்து விடுகிறீர்கள்.

ஆனால் சர்க்கார் கடனாக இருந்தால், கூட்டுறவுக் கடனாக இருந்தால், 'நாசுரல் கலாமிடி' அல்லது 'நாஷனல் கலாமிடி' யாக இருந்தாலும்கூட, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒன்றும் செய்ய மாட்டோம் என்கிறீர்கள். இதை அமைச்சர்

அவர்கள் உடனே செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே சட்டத்தை மாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட தொந்தரவுகள் இல்லாமல், ஜனங்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

நண்பர் கிருஷ்ணன் அவர்கள்கூடச் சொன்னார்கள். கொடுக்கக்கூடிய ஊற்றுக் கண்களை அடைத்து விடாதீர்கள் என்று சொன்னார்கள். அப்படி அடைத்துவிட்டால், நம்முடைய கண்களை நாம் அடைத்திருக்கிறோம் என்று அர்த்தம். அந்த ஊற்றுக் கண்களை அடைத்து விடாமல், சட்டத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். இதை நாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியிருக்கிறோம். போன தடவை சொன்னதைத்தான் இப்போதும் சொல்கிறோம்.

நீங்கள் பார்த்து தனியார் கடனாக இருந்தாலும், கூட்டுறவுக் கடனாக இருந்தாலும் அவைகளை ரத்து செய்ய வேண்டும். 'நாஷனல் கலாமிடி' என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். நீங்களே இப்படி ஒரு 'கன்க்ளூஷனுக்கு' வந்திருக்க வேண்டும். மறுபடியும் தள்ளிப் போடுவதிலே அர்த்தமில்லை. 6 மாதம் என்பதை ஒரு வருஷம் என்றுகூடப் போடுங்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் 6 மாதங்களுக்கு ஒரு முறை கொண்டு வந்து பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது எங்களுக்குப் பேசுவதற்கு சான்ஸ் கிடைக்கிறது. அதுமாதிரி இதையும் 6 மாதங்களுக்கு ஒரு முறை தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறீர்கள். அதனால் எங்களுக்குப் பேசுவதற்கு சான்ஸ் கிடைக்கிறது. ஒரு சான்சுக்குப் பதிலாக இரண்டு சான்ஸ் கிடைக்கிறது.

We can reiterate our stand after 6 months.

அவ்வளவுதான் செய்யப் போகிறோம். வேறு என்ன நாங்கள் செய்யப் போகிறோம். 6 மாதங்களுக்கு ஒரு முறை பேசுவதற்கு எங்களுக்கு சான்ஸ் இருக்கிறது. இதனால் எங்களுக்கு இரண்டு சான்சுகள் கொடுக்கிறீர்கள். இருந்தாலும் உங்கள் நோக்கம் அதுவாக இருக்காது.

ஆகவே, 6 மாதம் என்பதை ஒரு வருஷமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் கடன் கொடுக்கின்றவர்களும், ஒரு வருஷத்திற்கு நிம்மதியாக இருப்பார்கள். வக்கீல்கள் இப்போது இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த புரோ-

நோட்டுகளைக் கட்டிப் போட்டு வைக்கலாம். மக்களும் ஒரு வருஷத்திற்கு சர்க்கார் நமக்கு அவகாசம் கொடுத்திருக்கிறது என்று நிம்மதியாக இருக்கலாம். அந்த அடிப்படையிலே நான் கொண்டு வந்த திருத்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : இந்த அமெண்டுமெண்டை ஏற்பதற்கில்லை. இந்தச் சட்டத்திலே எந்தவிதமான நிவாரணமும் இல்லை என்று கனம் சுப்பு அவர்கள் சொன்னார்கள். இப்போது 6 மாதம் மேலும் நீடிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர் ஒரு வருடம் நீடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நிவாரணம் இல்லை என்று சொல்லிவிட்டு, ஒரு வருடம் நீடிக்க வேண்டுமென்று சொல்வது ' கான்பிலிக்ட் ' ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரும் இதிலே வித்தியாசம் ஒன்றுமில்லை, இரண்டும் ஒன்றுதான் என்று ஏற்கனவே சொல்லிவிட்டார்கள்.

திரு. ரா. உமாநாத் : அதிலே ஒரு ப்ராப்ளம் இருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு ஆல்டர்நேட்டிங் பினான்ஷியல் அரேன்ஜ்மென்ட்ஸ் இல்லாததால் மறுபடியும் கடன் வாங்குவதற்கு அதே லேவாதேவிக்காரர்களிடம் போகிற நிலைமைதான் இருக்கிறது. இந்தச் சட்டத்தால் நீங்கள் எந்தக் கடனை ஒத்தி வைக்கிறீர்களோ அந்தக் கடனை அவன் கறாராக வசூல் பண்ணுகிறான். ஒரு பக்கம் சட்டம், மறு பத்தத்தில் ஆல்டர்னேட்டிவ் அரேஞ்மென்ட்ஸ் இல்லாத காரணத்தால் கறாராக வசூல் பண்ணுகிறான், இல்லையென்றால் பாத்திரத்தைத் துக்கிக்கொண்டு போகிற நிலைமைகூட இருக்கிறது. அவன் கோர்ட்டுக்குப் போகலாம்; ஆனால் கோர்ட்டுக்குப் போகக் காசு இல்லை. இதிலே ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லாம்.

Let him go to the court. He has no business to take the law into his own hands.

என்னிடம் வந்து சொன்னவர்களுக்கு நானே போலீஸ் ஸ்டேஷனில் முறையிட்டுப் பண்டம் பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கின்றேன். எல்லோரும் இப்படி வந்து சொல்லமாட்டார்கள்;

கனம் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு வேண்டுகோள்—அடுத்த செஷன் வரும் வரையில் காத்திருக்காமல் இதிலிருந்து ப்ரொடெக்ஷன் கொடுக்கிற, ரிடக்ஷன் அல்லது கான்செலேஷனுக்கு ஒரு ஆர்டினன்ஸை இடைவெளியில் கொண்டு வந்து அடுத்த செஷனில் மசோதாவைக் கொண்டு வரலாம். இதைப் பற்றி சீரியசாக யோசிக்க வேண்டும்.

Whatever it is, in the next session it can be regularised.

THIRU M.A. LATHEEF: Sir, the Hon. Minister for Law has opined that he has no authority or right to enter into the realm of the Co-operative Department. But, what we know is that before a Bill is introduced it gets the approval of the Cabinet and the decision is taken by the Cabinet jointly and that is called joint responsibility.

Now the point is that because of the harassment........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; தயவு செய்து உட்காருங்கள் இந்த அமென்ட்மென்ட் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம். வேறு விஷயங்களைப் பற்றிப் பேசக்கூடாது.

THIRU M. A. LATHEEF : My point arises out of the point raised by the Hon. Member and the answer given by the Hon. Minister. What I am raising is......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அவருடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிந்துவிட்டது. நீங்கள் மேலும் விவாதிப்பதற்கு இது நேரமல்ல. அவருடைய அமென்ட்மென்ட் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்,

THIRU M. A. LATHEEF : The point is that a lot of complaints have been received from different parts of the State about the harassment in the collection of Co-operative loans..

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மூலமாக வழங்கப்பட்ட க்டன்களை ஒத்தி வைக்க சட்டத்திலே வழிவகைகள் செய்ய வேண்டுமென்று சட்ட அமைச்சர் அவர்களை

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1978 சனவரி 5

மாண்புமிகு லத்தீப் அவர்கள் நெருக்குகிறார்கள். கூட்டுறவுக் கடன்கள் கொடுப்பது வேறு தனிப்பட்ட சட்டத்தின் அடிப் படையில்தான். இந்தக் கடன்களை ஒத்தி வைப்பதோ அல்லது அவற்றை எல்லாம் தள்ளுபடி செய்வதோ ரிசர்வ் வங்கி அனுமதி கொடுத்துத்தான் செய்யவேண்டும். இதற்கும் சட்ட அமைச்சர் அவர்கள் இப்போது கொண்டு வந்திருக்கும் மசோதாவுக்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

THIRU M. A. LATHEEF : I wanted only relaxation......

The Hon. Thiru G.R. EDMUND: Even relaxation or postponement of collection has to be approved by the Reserve Bank.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: I hope after hearing my observations in regard to this matter, the Hon. Member. Thiru Suppu may withdraw his amendment seeking the extension of period to one year instead of six months. In this connection, I am reminded of a joke. In the Yerawada Jail Mahatma Gandhi and Sardar Patel were lodged together. Patel with his serious visage and look was always a great man of humour. In fact he was considered to be a gentleman and he had got the greatest sense of humour even in a great crisis.

So. one evening when Mahatma Gandhiji was taking groundnut kernels. he was counting 1, 2, 3, 4.. Then Mr. Patel asked Mahatmaji "why not 5" and then Mahatmaji replied "Mr. Patel. why not 6". So may I ask Mr. Suppu if it is for one year. why not six months.

I am grateful to Mr. Umanath's suggestion. It will be very sympathetically and deeply considered by Government when we undertake the next piece of legislation.

திரு. க. சுப்பு அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப் பெற்றது.

பிரிவு 2. பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

1978 சனவரி 5]

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டாவது பிரிவிற்கான உங்கள் திருத்தம் திரும்பப் பெறப் பெற்று விட்டதால் மூன்றாவது பிரிவிற்கான திருத்தம் பேரவை முன் கொண்டு வரமுடியாது. எனவே அது நிராகரிக்கப் பெறுகிறது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Sir, I move :—"That the Tamil Nadu Debt Relief Laws (Amendment) Bill, 1978 (L. A. Bill No. 1 of 1978) be passed into law".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/78).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

---

*1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 3-ம் தேதியன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கி. மனோகரன்] [1978 சனவரி 5

துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை அவையின் முன்னே வைத்திருக்கிறேன். இதுகுறித்து அவை உறுப்பினர்களின் கருத்துக்களை நான் தெரிந்து கொண்டதற்குப் பிறகு இறுதியிலே என்னுடைய பதிலைச் சொல்ல இருக்கிறேன் என்று கூறி, மற்றைய உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்பதற்குத் தாங்கள் வழிவகை செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள், குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்ட திருத்த மசோதாவை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் தான் என்றாலும்கூட, இந்தக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புக்கு அடிப்படையிலே என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யாமல் இதை எத்தனை நாட்களுக்கு ஒத்திப் போட்டுக்கொண்டே போவது என்பதைப் பற்றித் தயவு செய்து அரசு சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே பல ஆண்டுகளாக இந்தக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குத்தகைதாரர் என்று ஒருவர், நிலச்சொந்தக்காரர் என்று ஒருவர். இந்தக் குத்தகைதாரருக்குக் குத்தகை சாகுபடி செய்வதால் நஷ்டம் ஏற்படுவதால் குத்தகை கொடுக்க முடியாத நிலை, சிறு நில சொந்தக்காரர்கள் குத்தகைக்கு விட்டு அந்த வருமானத்தைக்கொண்டு சாப்பாட்டுக்கு நெல் வாங்கி, தன்னுடைய குறைந்த வருவாயோடு இதையும் ஒரு உதவி வருவாயாகச் சேர்த்துக்கொண்டு வாழ்பவர்கள், தங்களுக்கு நெல்லே கிடைக்கவில்லை, தங்களுக்குக் குத்தகையே வரவில்லை என்று ஒரு பக்கத்திலே கூக்குரல் போட வேண்டிய நிலையை எத்தனை நாளைக்கு நீடித்துக் கொண்டிருக்கப் போகிறோம்.

இதை நீண்ட நாட்களுக்கு நீடித்துக்கொண்டே போவ. நாட்டிற்கு நல்லதா என்பதைப் பற்றிச் சிந்தித்து பார்க்க வேண்டும். ஒரு பக்கத்திலே குத்தகைதாரர்

1978 சனவரி 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

களுக்கு இருக்கின்ற சாகுபடி செலவுகள், வேறு செலவுகள், உரம் போன்ற இவைகளுக்கு முதலீடு செய்ய முடியாமல் சரியான விளைச்சல் எடுக்க முடியாமல் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சொந்தமாக சாகுபடி செய்யாவிட்டாலும் விளைய வைத்தோம் என்பதைத் தவிர அவர்கள் பெரிய ஆதாயத்தை அதிலிருந்து எடுத்துக்கொள்ளவில்லை. குத்தகைதாரர்களிடத்திலே இருக்கின்ற நிலம் போதிய வருவாயைக் கொடுப்பதற்கோ, போதிய உற்பத்தியைச் செய்வதற்கோ இல்லை. நாட்டிலே பொதுவாக உற்பத்திக்குப் பங்கம் ஏற்படுகிறது. பொது உற்பத்தி குறைகிறது. ஆகையினாலே ஒரு நிலத்தின் பேரிலே இரண்டுவிதமான உரிமைகளை நாம் எத்தனை காலத்திற்கு வைத்துக்கொண்டிருப்பது? நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலத்தை எடுத்துக் கொள்ள முடியாது, குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம்.

குத்தகைதாரர்களுக்கும் அது சொந்தம் இல்லை, அதனால் வேறொருவரிடத்தில்,கடன் வாங்கியோ அல்லது அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கியோ முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடையாது. இரண்டு விதமான உரிமைகளை நீண்ட நாளைக்கு வைத்துக் கொண்டிப்பதாலே நிலச்சொந்தக்காரர்களும் நஷ்டப்படுகிறார்கள், குத்தகைதாரர்களும் நஷ்டப்படுகிறார்கள், பொதுவாக தேசமே நஷ்டப்படுகிறது. ஆகவேதான், இந்த குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக்காரர்கள் என்ற பாகுபாடு அற்ற நிலையிலே முடிவு கட்டியாக வேண்டும். அரசுக்கும் சாகுபடியாளருக்கும் இடையிலே யாரும் இருக்க வேண்டாம், நேரடியாகத்தான் இருக்க வேண்டும் என்ற கருத்து புதிதாகப் பேசப்படவில்லை, பல ஆண்டுகளாகப் பேசப்படுகிறது. முன்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசிலே இதற்குச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு, அது ஏதோ ஒருவகையிலே அமலாக்கப்பட முடியாமல் போய்விட்டது.

[மாலை 5·40]

ஆகையினாலே, இம்மாதிரி இருக்கிற சங்கடம், தேசத்தினுடைய அபிவிருத்திக்கே, தேசத்தினுடைய முன்னேற்றத்திற்கே, பல்லாயிரக்கணக்கான குத்தகைதாரர்கள் முன்னேற்றத்திற்கே, இடைஞ்சலாக இருக்கிற காரணத்தாலே,

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 சனவரி 5

இந்தக் குத்தகை நிலங்கள், குத்தகை நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற நிலையை மாற்றி, குத்தகைதாரர்களுக்கு அந்த நிலங்கள் சொந்தமாக, அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும். ஆனால், இன்றைக்கு எத்தனையோ சங்கடங்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு இன்னொரு மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. கே. பண்ணை சேதுராம் தலைமை)

அது வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட பகுதிகளில் குத்தகையைத் தள்ளி வைக்கக்கூடிய மசோதா. எத்தனை ஆண்டுகளுக்கு இந்த மாதிரி, தள்ளி, தள்ளி, வைத்துக்கொண்டே போவது என்று யோசிக்க வேண்டும்.

இப்படி, தள்ளி, தள்ளி வைத்துக்கொண்டே போனால், எப்படி குத்தகைதாரர்கள் கொடுக்க வேண்டிய பாக்கியைக் கொடுப்பார்கள் என்பதையும் யோசிக்க வேண்டும். 4, 5 ஆண்டுகள் சேர்ந்து விடுமானால், அந்த நெல்லையும் சேர்த்து அளக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த ஆண்டு குத்தகையை அந்த ஆண்டே கொடுக்கமுடியாத சூழ்நிலையிருக்கும்போது, இம்மாதிரி பாக்கியைத் தள்ளி வைத்துக்கொண்டே போவது சரியாக இருக்கமுடியாது.

குத்தகை பாக்கி இருந்து கொண்டிருக்கிற நிலையில், கோயில்களை நடத்த முடியவில்லையென்ற கருத்து வேறு இருக்கிறது. ஆகவே, இதில் நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும். அரசாங்கம் சிந்தித்து, இதற்கு முன்னாலே இயற்றப்பட்ட சட்டம் எல்லாவற்றையும் பரிசீலித்து, ஒட்டுமொத்தமாக இந்தக் குத்தகைதாரர்கள் என்ற நிலையை ஒழித்து, குத்தகைதாரர்களுக்கு அவற்றைச் சொந்தமாக்க வழிமுறைகளைச் செய்தாக வேண்டும். யாரோ ஒருவருடைய நிலம் என்றல்ல. அதோடு நிலத்தை இழக்கிறவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.

நிலத்தை இழக்கிறவர், சிறு நிலக்காரராக இருக்கலாம், அவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும். அவர்கள் ஆசிரியர்களாக இருக்கலாம், அரசாங்க உத்தியோகஸ்தர்களாக இருக்கலாம், கடைக்கார

1978 சனவரி 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ராக இருக்கலாம்; வருஷத்திற்கு 10 மூட்டை, 20 மூட்டை-இதில் வரும் நெல்லை நம்பியிருக்கலாம். அவர்களுக்கும் பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது. முன்னாலே சட்டம் வந்த பொழுதுகூட நாங்கள் எதிர்தரப்பிலே பலமாக எடுத்துக் கூறினோம். ஆனால் அரசு அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது என்று கூறிவிட்டது.

அதேமாதிரி கோயில்களுக்கும் குத்தகைகள் சரியாக வருவதில்லையென்று நான் கருதுகிறேன். இந்த மாதிரி சட்டத்தைக் கொண்டு வரும்போது, அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவே முடியாது. நடுநிலையிலிருந்து அதைத் தீர்த்துக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. அந்தச் சட்டத்திலே அதைச் செய்யாத காரணத்தால் தான் அதை அமுலாக்க முடியாத நிலை ஏற்பட்டது—குடியரசுத்தலைவர் சம்மதம் கிடைக்காத நிலை ஏற்பட்டது. ஆகவே, இம்மாதிரி சங்கடங்கள் ஏற்படாத நிலையில், புதிய சட்டம் இயற்றி, இதற்குத் தீர்வு காணவேண்டும்.

எத்தனை ஆண்டுகளாக இதைத் தள்ளி வைக்கிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. எத்தனை ஆண்டு பாக்கியாக இருக்கிறது? (குறுக்கீடு) 2 ஆண்டு பாக்கி. வெள்ளம், புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட தஞ்சை போன்ற மாவட்டங்களில் இதைத் தள்ளி வைக்கப் போகிறோம். ஆகவே, 3 பசலிகளுக்கு நாம் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னால், இது சரியல்ல.

முன்பு, அண்ணா அவர்கள், 4, 5 பசலி பாக்கியிருந்தபோது, அதைத் தள்ளி பாக்கியைக் கொடுக்கவேண்டுமென்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அந்த மாதிரி குறைத்து, நிலச் சொந்தக்காரர்களுக்குச் சிரமம் இல்லாத வகையிலே, குத்தகைதாரர்களுக்கும் சிரமம் இல்லாத வகையிலே, அரசாங்கம் விரைவிலே நிவாரணம் கொண்டுவர பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இங்கே பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல் சட்டத்தைப் பற்றி சில முக்கிய கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவருடைய கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. இந்தக் குத்தகைதாரர்கள் பிரச்சினையிலே அவர்களை இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து, கோவில் நிலங்களிலேயும், மற்றபடியும் இருக்கக்கூடியவர்களை அந்த நிலத்திற்கு உரிமையாளர்களாக ஆக்கக்கூடிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்பது மிக அவசியம்.

அதற்கு முன்னாலே இந்தக் குத்தகைதாரர்கள் யார் யார் என்பதை பதிவு செய்திருக்கவேண்டும். ஆனால் சரியாகச் செய்யப்படவில்லை. எனவே, எந்த ஒரு சட்டத்தை பின்னாலே இது சம்பந்தமான உரிமைகளைக் கொடுக்க முன் வருவதற்கு முன்னால் இந்தக் குத்தகைதாரர்கள், பதிவாளர்களின் எண்ணிக்கையை சரியான முறையிலே பதிவு செய்து மீண்டும் தொடர வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் அதைச் செய்யக்கூடிய நேரத்திலே இப்போது கொண்டுவரக்கூடிய சட்டம் 1978 ஜூன் மாதம் 15-ந் தேதி வரைதான் அது பாதுகாப்பு கொடுக்கிறது. அதுவும் 2 பசலிகளுக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. 1384-ம் பசலி, 1385-ம் பசலி அதாவது 30—6—1974, 30—6—1976 வரையிலும் உள்ள இரண்டு பசலிகளுக்குப் பாதுகாப்பாக இந்த மசோதா இருக்கிறது.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் ஒரு வேளை இந்தச் சட்டம் அன்றைக்கு கொண்டு வரப்பட்டபோது 76ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு சட்டமாக இருந்து காலம் வரையறுக்கப்பட்டது. ஆனால் இன்று 1978ஆம் ஆண்டிலே இருக்கும்போது 1386-ம் பசலிக்கு, அதாவது 30—6—77 வரையுள்ள இந்த ஆண்டு குத்தகை பாக்கிக்காக பல வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டுகளில் இருக்கின்றன.

ஆக இப்போது நடைமுறையிலே ரெவின்யூ கோர்ட்டிலே உள்ள வழக்குகள் ஏற்கனவே இந்த பாதுகாப்பு சட்டம் இருந்த காரணத்தினால் அவர்கள் 1976 வரை உள்ள அந்த பாக்கிகளுக்காக போடாமல் அதற்குப் பிறகு 1977க்கு பிறகு ஏற்பட்ட பாக்கிக்காக அந்த வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் 1386ஆம் பசலி என்று சொன்னால், அதை

ரசாங்கமே ஒரு வறட்சி ஆண்டு என்று ஏற்றுக்கொண்டிட்டது. அந்த 1386ஆம் பசலி ஆண்டு காலத்திலே மிழகம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்திலே தண்ணீரை நீர்ப்பாசனத்திற்குக் ட தர முடியவில்லை. அரசாங்கத்ினுடைய கணக்குப் டியே ஒரு ஏக்கருக்கு 12 முதல் 15 கலத்துக்கு மேல் ற்பத்தி கிடையாது என்று அரசாங்கமே ஏற்றுக்கொண்ட ண்மை. இன்றைக்கு இந்த பாதுகாப்புச் சட்டத்தில் 1386 ம் பசலி ஆண்டுக்கான குத்தகை பாக்கிக்காக இருக்கக் டிய எதையும் இந்தச் சட்டத்திற்குள்ளே சேர்த்தால்தான் ன்று நடைமுறையிலே ரெவின்யூ கோர்ட்டுகளிலே, காடுக்கக்கூடிய இந்த நில வெளியேற்ற வழக்குகளிலிருந்து ந்த குத்தகைதாரர்களையும் விவசாயிகளையும் நாம் ாப்பாற்ற முடியும்.

அது மட்டுமல்லாமல், இந்த சிவில் கோர்ட்டுகளிலே இந்த த்தகை பாக்கிக்காக நிலச்சுவான்தார்கள் கொடுக்கக்கூடிய வழக்குகளில் அவர்கள் பயிர்களை எடுக்கக்கூடாது என்று உத்தரவாதம் செய்யப்படவேண்டும். இந்தக் குத்தகை பாக்கிக்காக பயிர்கள் சேர்க்கப்படக்கூடாது. அட்டாச் பண்ணக்கூடாது என்பதையும் நாம் உறுதியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இன்றைக்குப் புயல் வெள்ள நிவாரணத்திற்காக கொண்டு வரக்கூடிய சட்டத்திலே குத்தகை பாக்கி ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ஆனால் இந்தச் சட்டத்திலே மாத காலத்திற்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இந்தப் புயல் வெள்ள நிவாரண தடுப்பு சட்டத்திலே இன்றைய துயரைப் போக்கவும், இதற்கு முன்னாலே இருக்கிற சிக்கலைப் போக்கவும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இதற்கு முழு பாதுகாப்பு இன்றைக்குவரையில் கிடைக்கவில்லை. ஆனால் இந்த சட்டம் அப்படி இல்லாத காரணத்தினால், 1386-ம் பசலி ஆண்டின் வழக்குகளை தடை செய்வதற்கு ஏற்பாடு இல்லாத வகையில் இருக்கிறது. ஆகவே, 1386-ம் பசலிக்கான பாக்கிகளை

யும் இந்த மசோதாவின் வரம்புக்குள் கொண்டு வர வேண்டும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5-50]

<u>திரு. மா. மணிமாறன்</u> : மாமன்றத்தின் மாற்றுத் தலைவரவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வந்து இருப்பதன் நோக்கம், காரணம் விளக்கப்படுகிற நேரத்தில் நல்ல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அந்தக் காரணங்கள், புயல், அதன் தொடர்பாக ஏற்பட்ட பல உயிர் சேதம், அதன் தொடர்பாக பல கால்நடைகள் நாசம், இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு இடையே விவசாயிகள் குத்தகைப் பாக்கியை செலுத்த முடியாது என்பது பொருத்தமாக இருக்கிறது. இதன் காரணமாக குத்தகைதாரர்கள் நிலத்தில் இருந்து வெளியேற்றப்படுவது தடுக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது; இது நல்ல காரணம் தான்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விளைச்சல் அதிகம் இல்லை. ஓரிரு இடங்களில் பச்சையாக தென்பட்டாலும், அதிக இடங்களில் விளைச்சல் இல்லை. அதன் தொடர்பாக பல வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டில் நடைபெற்று, அதில் முடிவு அறிவிக்கப்பட்டு, உயர்நீதி மன்றத்திற்குக் கூட வழக்குகள் விவசாயிகளைப் பாதிக்கும் அளவிற்குச் சென்று இருக்கின்றன.

இப்போது இந்தச் சட்டத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி வரையில் பாதுகாப்பு தரப்பட்டு இருக்கிறது. 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதிக்குப் பின்னாலே அவர்கள் எவ்வாறு அந்தக் குத்தகைப் பாக்கியை திருப்பித் தரப்போகிறார்கள், அப்படி அவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் அவர்கள் நிலை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் அந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்படுவார்களோ என்று ஐயப்பாடு இருக்கிறது. ஒரு பயம் தரும் மசோதாவாக இது இருக்கிறது என்றும் கூறிக்கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு அவர்களால் குத்தகைப் பாக்கியை செலுத்த முடியாது. காரணம், 6—7 மாதமாக தஞ்சை மாவட்டத்தில், தமிழகம் பூராவும் இருந்தாலும், அங்கே வளர்ச்சி இல்லை. அதுவும் ஒரு இரண்டாண்டு காலமாக செலுத்தப்பட வேண்டிய குத்தகை பாக்கியை இந்த 6 மாதத்தில் கிடைக்கும் உற்பத்தியால் தீர்த்து வைக்க முடியாது. ஆகவே, ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொல்வதை விட, அந்தப் பழைய பாக்கிகளை அறவே ரத்து செய்து விடுகிறோம் என்று சொல்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் இந்த ஆண்டும் அதிகமான பாதிப்பு இருப்பதால், விவசாயிகள் கையில் எந்தவிதமான வசதியும் இருக்காது ஆகவே, அந்த 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி வரை பாதுகாப்பு என்று இருப்பதை விட, அறவே குத்தகை பாக்கிகள் ரத்து செய்யப்படுகின்றன என்று திருத்தம் கொண்டுவந்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சிறிய சிறிய கோவில்கள், பெரிய பெரிய கோவில்கள் இருக்கின்றன. அவற்றிற்கு இருக்கும் நிலங்களில் இருந்து வருமானம் வராத காரணத்தால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் சிறிய கோவில்களில் பணியாற்றும், சிப்பந்திகள், அர்ச்சகர்கள், மெய்க்காப்பாளர்கள் ஊதியம் பெற முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள்

மற்றொரு பக்கத்தில் சிப்பந்திகள் கஷ்டப்படுகிறார்கள். அர்ச்சகர்கள பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், மெய்க் காப்பாளர்கள் இன்னல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சிறிய கோவில்களுக்கு பெரிய கோவில்களில் இருந்து வருமானத்தை அளித்து, அந்த சிப்பந்திகளின், அர்ச்சகர்களின், மெய்க்காப்பாளர்களின் துயர்துடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகை பாக்கியைப் பொறுத்தவரையில் ரத்து செய்யப்பட்டது என்று அறிவித்து விட்டாலும் கூட, நிலச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு நல்லதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதே மன்றத்திலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்து கொண்டிருந்த நேரத்தில், ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் கூடச் சொன்னார்கள், என்ன காரணத்தாலோ மத்திய அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மறுபடியும் அந்தச் சட்டத்தை இந்த மன்றத்திலே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி அதற்கு ஒப்புதல் பெற்று, விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் சொன்னதுபோல், அரசே பொறுப்பேற்றுக் கொண்டு நிலங்களை, கோவில் நிலங்களை விவசாயிகளுக்கு கொடுப்பார்களானால் அது அவர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பை அளிக்கும் என்று சொல்லி, அப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டம் பாதுகாப்புச் சட்டம் என்று இருந்தபோதிலும் ஒரு பயமுறுத்தும் சட்டமாகவும் இருக்கிறது என்று எடுத்துக்கூறி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களை பாதுகாப்பதற்கும், அவர்களுக்கு ஏற்கெனவே சட்டத்திலே அளிக்கப்பட்டிருக்கின்ற

பாதுகாப்பை இன்னும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இங்கே நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நான் சேர்ந்த உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்திலே இருக்கின்ற சில குறைகளை மட்டும் சொல்ல விழைகின்றேன். குறிப்பாக நாம் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தின் மூலமாக பலன் பெறுகிறவர்கள் யார்? குறிப்பாக ஒரு முதலாளி ஒருவன் இருக்கிறான் என்று சொன்னால் அவன் ஏறக்குறைய அதிகமான நிலங்களுக்குச் சொந்தக்காரராக இருக்கிறவன், தன் ஏழை வேலை செய்கிறவர்களுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று பயிரிடுவதற்கு ஒதுக்கித் தருகிறார்கள். அவன் பயிரிடுகிறான். குத்தகையும் தருகிறான்.

ஆனால், மெயின்டனன்ஸ் ஆப் டெனன்சி ரிக்கார்ட்ஸ் என்று 1969-ம் ஆண்டிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் மூலமாக குத்தகை பயிரிடுகிறவர்களுடைய பெயர்கள் பதியப்பட வேண்டும். அப்படி பதியப்பட்டிருந்தால் தான் அவனுக்கு இந்தச் சட்டப்படி அவர் குத்தகைதாரராகக் கருதப்படுவார் .... அப்படி பதியவில்லை என்று சொன்னால் அவர் கல்டிவேடிங் டெனட் குத்தகையாளர்தான் என்பதைக் கூட தீர்மானிக்க முடியாத நிலையில் இருக்கக் கூடும்.

நான் சேர்ந்த கிராமத்தில் ஒருவர் இருக்கிறார். தட்சிணாமூர்த்தி முதலியார் என்று பெயர். அவருக்கு ஏற்கெனவே 50 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. என்னுடைய கிராமத்தைச் சேர்ந்த ஒரு ஹரிஜன் பயிரிட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய குடும்பமே அவனுடைய தகப்பனார் முதற்கொண்டு அவனும் 20 ஆண்டுகளாக அவரிடத்திலே வேலை செய்து வந்தான். இன்று இந்த

சட்டத்தைக் காட்டி அவன் விரட்டி அடிக்கப்பட்டிருக்கிறான். அவன் என்னை வந்து கேட்டான். எப்படியாவது உதவி செய்யுங்கள் என்று. நான் தாசில்தாரை அணுகி இவன் 20 வருஷ காலமாகப் பயிரிட்டிருக்கிறானே, அவனுக்கு ஏதாவது பாதுகாப்பு தர முடியுமா என்று கேட்ட போது அவர்கள் இந்தச் சட்டத்தைக் காட்டி, இந்தச் சட்டப்படி குத்தகைதாரர் என்று பெயர் வரவில்லையே எப்படி பாதுகாப்பு தர முடியும் என்ற நிலையில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக பயிரிட்டவன் துரத்தி அடிக்கப்பட்டிருக்கிறான். நிலம் சொந்தக்காரன் இடத்திலே இருக்கிறது.

இதற்கெல்லாம் யார் காரணம்? இந்த உரிமைச் சட்டத்திலே ரெவின்யூ ரிக்கார்டுகளில் பெயர்களை பதிவு செய்கிறவர்கள் யார்? இந்தக் கர்ணம், கணக்குப்பிள்ளை, அந்தக் கர்ணம் மனது வைத்து அந்த ரிக்கார்டுகளில் பதிவு செய்தால் தான் அவனுக்கு சட்டப் பூர்வமான பாதுகாப்பு வருகிறது. இல்லையென்று சொன்னால் அந்தப் பாதுகாப்பு இருப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் வருகிற போது இந்தக் கர்ணத்தைப் பற்றி மற்றவர்களுக்கு ரிப்போர்ட்டு செய்கின்றபோது அதை அந்த ரெவின்யூ அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டு உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை சாதாரண விசாரணை மூலமாகக் கண்டிபிடித்து அந்த கர்ணங்களுக்கு, அந்த கணக்குப்பிள்ளைகளுக்கு ஏதாவது தண்டனை தருவதன் மூலமாக அதைத் திருத்த முடியும். இதே போல் அந்த ரெவின்யூ ரிக்கார்டுகள திருத்தப்படுகின்ற வகையில் முயற்சிகள் இருக்கிறன்றன. இதை திருத்தப்பட வேண்டும் அமுல்படுத்த வேண்டும் என்பது எழுத்தளவிலே இருந்தால் மட்டும் போதாது, அது நடவடிக்கையிலே வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்..

(மாலை 6-00)

அதே போன்று ஒரு நிலத்தினுடைய சொந்தக்காரர் அந்த நிலத்தில் பயிரிடுகிறவனைத் தன்னுடைய பண பலத்தாலோ ஆள்பலத்தாலோ அவனை துராக்கிரமமாக வெளியேற்ற நினைத்தால் அந்தப் பயிரிடுகிற குத்தகையாளர் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும், கோர்ட்டுக்குச் செல்லுகிறபோது,

He can sue only for an injunction.

தடை உத்தரவை மட்டும் தரவேண்டுமென்று தாவா தாக்கல் செய்ய வேண்டும். தான் ஒரு 'கல்டிவேட்டிங் டெனன்ட் என்று 'டிக்ளரேஷன்' வாங்கி அதாவது தான் ஒரு குத்தகையாளன் என்று உத்தரவு பிறப்பித்து, தடை செய்ய வேண்டும். இரண்டையும் கேட்டால் தாவா கோர்ட்டில் நிற்பதில்லை. ரெவின்யு கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்று தாவா தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆகவே, சட்டமுறைகளில், பயிரிடுகிறவன் கோர்ட்டுக்குச் சென்று, also has to file a suit and have an injunction என்ற முறையில் முயற்சிகள் எடுப்பது நலமாக இருக்குமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். செக்ஷன் 4(ஏ) என்பது—

The cultivating Tenants Protection Act Section 4.(A)—Right of landlord to resume land for personal cultivation—(1) Not withstanding anything contained in any other provision of this Act. A landlord shall be entiled to resume possession from any cultivating tenant possession for purposes of personal cultivation of lands not exceeding one half of the extent of lands leased out to the cultivating tenant.

ஏற்கெனவே இந்தச் சட்டத்தில் செக்ஷன் 4 (எ) அமெண்டுமெண்டு மூலமாக ஒருவன் தன் நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்து சொந்த உபயோகத்திற்கு பயிரிடவேண்டுமென்றால் விடப்பட்ட மொத்த ஏக்கர் நிலத்திலிருந்து பாதியை அவர்களுக்குப் பயிரிடுவதற்கு ஒதுக்கித் தரலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் இப்போது அவைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

ஆகையால் ஒரு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு இருக்கிறவன் இப்படி அனுபவித்துக் கொள்ளலாம். ஒருவன் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறான். அவனுக்கு கிராமத்தில் இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது. ரிட்டயர் ஆகி வீட்டுக்குச் செல்லுகிறான். அதன் பிறகு தன்னுடைய

நிலத்தைப் பயிரிடவேண்டுமென்றால் இந்தச் சட்டம் குறுக்கே நிற்கிறது. அந்த நிலத்தைத் திரும்ப வாங்க முடியாத நிலையில் இருக்கிறான்.

குறிப்பாக ராணுவத்தில் பணி புரிகிறவர்கள் 15 ஆண்டுக் காலம் பணி புரிந்து விட்டு 35 வயதில் வீட்டுக்குத் திரும்பி வந்து அவனுக்குச் சொந்தமாக உள்ள இரண்டு ஏக்கர்க்கு நிலத்தை தான் ஊரில் இல்லாத காரணத்தால் மற்றவனுக்கு குத்தகை விட்டிருந்தால், வேலையை விட்டு விட்டு வீட்டுக்கு வரும்பொழுது அவனுக்கு நிலம் கிடைக்க இந்தச் சட்டம் தடையாக இருக்கிறது.

அதே நேரத்தில் 10, 15 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். ஒருவரிடம் நிலத்தை குத்தகைக்கு வேறு எடுக்கிறார்கள். இப்படி 15 ஏக்கருக்குச் சொந்தக்காரர்கள் கோவில் நிலங்களையும் மற்றும் தனிப்பட்ட நபர்களிடமிருந்தும் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்று சொன்னால் அவர்களையும் இந்தச் சட்டத்தின் மூலமாக வெளியேற்ற முடியாத நிலையில் இருக்கிறது.

ஆகவே, இந்தச் சட்டத்தில் பாதுகாப்புகள் தேவை. ஐந்து ஏக்கர் நிலச் சொந்தக்காரர்கள் யாராக இருந்தாலும், 'பெர்சனல் கல்டிவேஷன்' சொந்தப் பயிர் செய்கிறவர்களாக, ஐந்து ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்க இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டு இந்த திருத்தங்களைச் செய்வதன் மூலமாக நல்ல பலனை எதிர்பார்க்கலாம் என்ற கருத்தைச் சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

*<u>திரு பொ. உத்திராபதி</u> : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சரவர்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய குத்தகை பாக்கிகளை இன்னும் 6 மாத காலத்திற்கு ஒத்திப் போடுவது என்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று நான் சில யோசனைகளைச் சொல்ல விரும்புறேன்.

இந்த விவசாயிகளைப் பாதுகாக்கின்ற சட்டம், ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் 5 லட்சம் விவசாயிகள் ஒன்று திரட்டி, இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியும் இன்றைக்கு திருத்துரைப்பூண்டியில் ராஜ்யசபாவில் உறுப்பினராக இருக்கக் கூடிய ராமமூர்த்தி கலந்து கொண்டு கொடுத்த கோரிக்கையை அன்றைக்கு தமிழக முதலமைச்சராக இருந்த பெருமைக்குரிய ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஏற்றுக் கொண்டு இந்தப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைய தினத்திலிருந்து இன்று வரையிலும் 23 ஆண்டுகளாக விவசாயிகளை பாதுகாத்துக் கொண்டு வருகிறோம். இந்தப் பாதுகாப்புத் தன்மையின் பேரால் தமிழகத்தில் லட்சக் கணக்கான விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அந்தச் சட்டத்திலே இருக்கக் கூடிய ஒருசில ஓட்டைகளினால் தான் இது நடைபெற்றிருக்கிறது.

இப்படி தொடர்பாக, 23 ஆண்டு காலத்தில் லட்சக் கணக்கான விவசாயிகள் இன்றைக்கு நிலத்தை விட்டு வெளியேறி விவசாயிகள் விவசாயக் கூலிகளாக மாறியிருக்கிறார்கள். இந்த நிலைமையை இன்றைக்கு இருக்கக் கூடிய அரசு தீர்க்கமாக பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளைப் பொறுத்த வரையில் 85, 86 பசலி வறட்சி என்று அரசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு ஆண்டுகளில் விவசாயிகளால் அடைக்கப்படாத, சாகுபடி செய்யப்பட முடியாத விவசாயிகள் கோயில் நிலங்கள், மடத்திற்குச் சொந்தமான நிலங்கள், தனியார் நிலங்கள் வாரத்திலும், கை வாரத்திலும், நெல் வாரத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு நிலையில் உள்ளது. இந்த விவசாயிகள் லட்சக் கணக்கான வழக்குகளை சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த வழக்குகளில் ஒரு பகுதி ரெவின்யு கோர்ட்டிலும், ஒரு பகுதி முனிசிபல் கோர்ட்டிலும் டிக்ரி நிறைவேற்றப்பட்டு இருந்து கொண்டிருக்கிறது.

இதன் விளைவாக, மன்னார்குடி தாலூகாவில் களப்பால் கிராமத்தில் அறுவடையைத் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். அங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி அந்த விவசாயிகளை பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இரண்டு.

[திரு. பொ. உத்திராபதி] [1978 சனவரி 5

கோர்ட்டுகளிலும் விவசாயிகள் அல்லலுற்றுக் கொண்டிருக் கிறார்கள். விவசாயிகள் குறைந்த அறுவடையின் காரண மாக பாதிக்கப்பட்டிருப்பதோடு, கோர்ட்டுகளுக்கும், மாதம் மூன்று முறை அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்குகின்ற வரையில் குத்தகையை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டி யுள்ளது.

அதேபோல முனிசிபல், ரெவின்யூ கோர்ட்டுகளையும் வாபஸ் பெற தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயிகளை உற்சாகப்படுத்த, ஊக்கமளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் நான் பேசிக்கொண்டிருக்கும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் புன்னகையோடு சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயம் நான் நம்புகிறேன், அடுத்த சட்டமன்றத் கூட்டத் தொடருக்கு முன்னால் விவசாயிகளுக்கு 23 ஆண்டு காலமாக அல்லல் பட்டுக்கொண்டு துன்பப்படுகிற விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்குகின்ற ஒரு சட்டத்தைத் கொண்டு வருவார் என்று நம்பிக்கையில் இதை கூறுகிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு நெல் விலையை கூடுத லாக்க வேண்டும். கூட்டுறவு அமைச்சர் காலையில் கூறினார் கள். 600 டன் தான் கொள்முதல் என்று...சமீபத்தில் நிகழ்ந்த புயல் வெள்ளத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, 5 வேலி, 3 வேலி, என்று வைத்திருக்கக்கூடியவர்கள், அறுவடை செய்ய முடியாமல் டிராக்டரை வைத்து அடித்து விட்டார்கள். சாகுபடிக்கு என்று உழுதார்கள். ஆனால் தண்ணீர் வாராததால் தாளடி நடமுடியாமல் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள். ஆகவே தான் கொள்முதலுக்கு தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் மீது இருக்கக் கூடிய 10, 15 சதவிகிதம் நெல்லைக் கொள்முதல் செய்யத் தவறுமே யானால் நிச்சயமாக தனியார் விலையைக் கூட்டி விடுவார்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் நடுநிலையிலுள்ள விவசாயிகள் தான் இப்போது கொள்முதலுக்கு நெல்லைக் கொடுக்கிறார்கள். பெரிய பணக்காரர்கள் பதுக்கி வைத்து விடுவார்கள்.

இப்படித்தான் 1974-ஆம் ஆண்டு தி.மு.க. தடையை நீக்கிய காலத்தில் நெல் பூராவையும் பதுக்கி ஒரு மூட்டை நெல் ரூ. 120க்கு ஆடி மாதத்தில் விற்றார்கள். ஆனால் 1975-ஆம் ஆண்டு ஒரு வருஷம் மட்டிலும் நெல்லைக் கண்ட் ரோல் விலைக்குக் கொள்முதல் செய்தார்கள்.

1978 சனவரி 5] [திரு. பொ. உத்திராபதி]

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

[மாலை 6–10]

தஞ்சை மாவட்டத்தில் இருந்துவந்த அந்தக் கட்டுப் பாடு நீக்கப்பட்டவுடன் மூட்டை 120க்கு மேலே விற்றது. யார் அதன் பலனை அனுபவித்தார்கள்? பெரும் பண்ணை யார்கள், பணக்கார விவசாயிகள், லட்சக்கணக்கான மூட்டையைக் கொள்முதல் செய்து பதுக்கிவைத்தவர்கள் தான் அதன் பலனை அனுபவித்தார்கள். அன்றைக்கு அந்த ஒரு நிலைமைக்கு அரசு பாதுகாப்பு அளித்தது.

அப்படிப்பட்ட நிலைமையை இந்த ஆண்டு உருவாக் காமல், சிவில் சப்ளைஸ் மூலம் கொள்முதல் செய்து, இந்த ஆண்டு சம்பாவிற்கு எந்த விலையை நிர்ணயம் செய்கின் றார்களோ அதே விலை அடுத்த ஆண்டுக்கும் இருக்கும்படி செய்யவேண்டும் என்று கேட்டு, அடுத்து போலீஸ் தலை யீட்டைப் பற்றி ஒரு வார்த்தை.

விவசாயிகள் பிரச்சனையில், நீதி மன்றத்தில் டிக்ரீ என்று வாங்கிவிட்டால், உடனே போலீஸ் வந்துவிடுகிறது. நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். நேரம் இல்லை. இந்த ஆட்சியாவது விவசாயிகள் விஷயத்தில் போலீஸ் கெடுபிடி இல்லாமல் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவேண்டும். சேலம் மாவட்டத்தில் அரிசன விவசாயி ஒருவர் நெல் விதைத்திருந்தார். அதையெல்லாம் நிலப்பிரபு ஒருவர் டிராக்டரைக் கொண்டு அழித்துவிட்டார். அதற்கெல்லாம் போலீஸ் பாதுகாப்பு. அரசுக்கு இதெல்லாம் தெரியும் என்று சொல்லவில்லை, ஆனால் அங்குள்ள போலீஸ் அதற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து, விவசாயிகளுக்கு நன்மை செய்யும் வகையில் குத்தகை பாக்கிகளையெல்லாம் தள்ளி, அவர்கள் பேரிலுள்ள வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்று அவர்கள் நலன்களைப் பாதுகாக்க வேண்டும்.

இந்த 23 ஆண்டுகளாக விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றி வந்தாலும், இனியும் அப்படிப்பட்ட நிலை ஏற்படாதவாறு செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு, 12 ஆண்டு கால குத்தகையை ஒரே தடவையி

கட்டினால் அந்த நிலம் அந்த விவசாயிக்கே சொந்தமாக்கப் படும் என்றது. ஆனால் அந்தச் சட்டம் குடியரசுத் தலைவ ருக்குப் போய் திரும்பி விட்டது.

அந்த மாதிரி இல்லாமல், நிலத்தை குத்தகைதாரருக்கே சொந்தமாக்கி, அதற்குரிய பணத்தை அரசிடம் 20 அல்லது 30 ஆண்டு காலத்தில் கட்டலாம் என்றவாறு ஒரு ஏற்பாட் டைச் செய்து, அது பெரிய நிலப்பிரபுக்களாக இருந்தால் அவர்கள் விஷயத்தில் அரசு அவர்களுக்கான பணத்தைப் பத்திரங்களாகவும், சிறு நிலச் சொந்தக்காரர்களாக இருந்தால் பணமாகவும் கொடுத்து, நிலத்தை உழுகின்ற விவசாயிகளுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று கேட்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இதைக் கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த அவைத் தலைவர் அவர் களுக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவைமுன்னுள்ள இக்குத்தகை பாதுகாப்பு மசோதா மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குத்த கைக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்க விதத்தில் பல்வேறு சட்டங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. உண்மை யிலேயே நாம் கருதுவது, குத்தகைக்காரர்கள் என்று சொல்லும்போது actual tiller of the lands, that is, நிலத்தை நேரடியாக உழுது பயிரிடும் விவசாயிகளையே சொல்லுகிறோம். அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திடும் வகையில் பல்வேறு சட்டங்களை நாம் நிறைவேற்றியிருக் கிறோம். இவற்றிலே எந்தச் சட்டமாக இருந்தாலும், உழு கின்றவர்களுக்கே நிலம் சொந்தமாக இருக்கவேண்டும் என் பதுதான் அடிப்படையாக இருந்திருக்கிறது. இருந்தும் அப்படி உழுகின்றவர்களுக்கு அவற்றின் பலன்கள், நன்மை கள், பாதுகாப்புகள் கிடைத்திருக்கின்றனவா என்று பார்த்தால், அதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

'டெனன்ட்ஸ்' என்று கூறுகிற போது ஒரு பகுதி விவசாயம் செய்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தைப் பொறுத்த மட்டில் சில மாவட்டங்களை-குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால்—Tenants are not the

actual tillers of land.— அவர்கள் குத்த கைக்கு எடுத்திருக்கிறார்கள், குத்தகைக்கு எடுத்து அந்த நிலத்தை 'சப்-லீஸ்' செய்கிறார்கள்.

Sub-lessees are the actual tillers of the soil; but the benefits under this Act do not go to the actual tillers, i.e., sub-lessees.

ஆகவே, இந்தச் சட்டங்களை இயற்றும்போது உண்மை மையிலேயே உழுபவனுக்கு அந்த நன்மைகள் கிடைக்கின்ற னவா என்பதைக் கருத்தில் கொண்டு சட்டத்தை இயற்றி னோம் என்றால் நமது நோக்கம் நிறைவேறும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போதுள்ள சட்டங்களினால் நாம் ஏற்றிருக்கின்ற கொள்கைக்கு மாறாக சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து பலர் நன்மை அடைகிறார்களே தவிர, என்க்கு முன்னால் பல நண்பர்கள் எடுத்துக் காட்டியது போல, நிலத்தை உழுகிறவர்கள் பலருக்கும் இந்தச் சட்டத்தின் வாயிலாக நன்மைகள் வரவில்லை.

அது போல், "Record of Tenancy Act"— என்று இருக்கிறது. ஆக, அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்னதாகவே, சட்டம் வருகிறது என்று கேள்விப்பட் வுடன் பல்வேறு குத்தகைதாரர்கள் நிலத்திலிருந்து அகற்றப் பட்டார்கள் என்பது மட்டுமல்ல ; இப்போதெல்லாம், அந்தச் சட்டத்தை அமல்நடத்துகின்ற முறையைப் பார்க் கும்போது, அங்கே லஞ்ச ஊழல் நிறைந்திருக்கிறது. அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்படவில்லை. உண்மை யிலேயே, "லேண்ட்-லார்ட்ஸ்" வசதி படைத்தவர் களாக இருப்பார்கள். ஆக, குத்தகைக்காரர்களாக இருந் தாலும் கூட, யார் குத்தகைக்காரர்களாக இருக்கிறார் களோ, அவர்களை 'ரிகார்டில்' பெயர் பதிவு செய்வதற்குப் பதிலாக, அவர்கள் அகற்றப்படும் சூழ்நிலை இப்போது இருக் கிறது.

ஆக, நாம் கருதும் நோக்கம் நிறைவேற வேண்டு மென்று சொன்னால், உழுபவனுக்கு நன்மை வரவேண்டு மென்று சொன்னால், இப்போது, இருக்கின்ற பல சட்டங் களையும் ஒன்றாகச் சேர்த்து, இருக்கின்ற கோளாறுகளை எல்லாம் அகற்றி, ஒரு விரிவான சட்டம், விவசாயிகளுக்கு

குத்தகைக்காரர்களுக்கு நன்மை தரக்கூடிய அளவில் மாற்றி அமைத்தாலொழிய இப்போது இருக்கின்ற சட்டங்களால் நாம் எதிர்பார்க்கின்ற நன்மை விவசாயிகளுக்கு வரவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி, இதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல முறையில் ஒரு Comprehensive Legislation கொண்டு வருவாரேயானால், இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு நன்மை செய்ததாக இருக்கும் என்று சுட்டிக் காட்டி அதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி அமருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் முன்மொழிந்த 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல் திருத்தத்தைப் பற்றி நமது உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் ஆரம்பத்தில் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேசியவர்களில் பலர் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொன்னபோது உழுபவனுக்கே நிலம் என்ற நிலைமை நமது மாநிலத்தில் வரவேண்டும் என்று உற்சாகத்தோடு எடுத்துச்சொன்னார்கள். குத்தகைதாரர்கள் அனுபவிக்கிற கொடுமைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்த நமது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உத்திராபதி அவர்கள், அவர்களின் வேதனையைப் பற்றி பேசிக் கொண்டிருந்த போது-பேசிக்கொண்டே என்னை திருப்திப்படுத்துவதற்காகவோ என்னவோ தெரியவில்லை 'நமது நிதியமைச்சர் புன்னகை பூத்துக் கொண்டிருக்கிறார்' என்று குறிப்பிட்டார். நானும் வேதனையோடு தான் அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நிச்சயமாக நான் தெரிவிக்கின்றேன். இந்த அரசின் இறுதி லட்சியம் 'உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும்' என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[மாலை 6-20]

அந்த எல்லையை நோக்கி அல்லது அந்த இறுதிக்கட்டம் நோக்கி பயணத்தை மேற்கொண்டிருக்கிற இந்த அரசு தனது இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடையிடையே துணை புரிகிற கருவிகளாக இப்படிப்பட்ட மசோதாக்கள்

கொண்டுவரப்படுகின்றன என்பதை நான் முதன் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஓர் இறுதிச் சட்டம் என்றோ அதற்குப் பிறகு, எந்தவிதமான மாற்றமும் இருக்காது என்றோ உறுப்பினர்கள் யாரும் சந்தேகப்படுவதற்குத் தேவையில்லை.

ஏனென்றால் நமது ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும் போதும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. உத்திராபதி அவர்கள் பேசும்போதும், அங்கு எனது அருமை நண்பர் மணிமாறன் அவர்கள் பேசும்போதும் இது ஒரு இறுதி இலட்சியமாக இல்லாமல், இறுதி இலட்சியம் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அவர்களது கருத்துக்களை இந்த அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும், அதை எந்த நேரத்தில் செய்வது, எப்படிப்பட்ட முறைகளில் அவைகளை நாம் நிறைவேற்றிக்கொள்வது என்பதைத்தான் நாம் யோசித்துக்கொண்டிருக்கிறோமே தவிர உழுபவனுக்கு நிலம் இருக்கக்கூடாது என்ற இலட்சியம் இந்த அரசுக்கு இல்லை என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இங்கே கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவின் ஆப்ஜெக்ட்ஸ் அல்லது நோக்கங்கள்பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். இதைக் கொண்டுவருவதற்குக் காரணமே குத்தகைதாரர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடி. இரண்டு வகையான நெருக்கடிகள் அவர்களைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்று, வசூல் கெடுபிடி அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் அந்தத் தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, அண்மையில் வீசிய பெரும் புயல், ஏற்பட்ட பெரும் வெள்ளம், உருவாக்கிய சேதங்கள் இவற்றினால் அவர்கள் திருப்பிக்கொடுக்க முடியாத அளவிற்கு அவதிப்படுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு எதிராக நமது அருமை நண்பர் உத்திராபதி என்று கருதுகிறேன், ஏராளமான பேர்கள், நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்றார்கள். அதிலிருந்து தாற்காலிகமாக குத்தகைதாரர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தின் அடிப்படையில் இது தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட மசோதா என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 ஜனவரி 5

There would be a spate of petitions before the courts for realisation of arrears of rent after the 15th January 1978 and it will not be possible for the cultivating tenants to pay all the past arrears of rent. Further, the recent cyclone and widespread flood have caused loss of human lives and cattle and damage to property and standing crops in many areas. Under the circumstances the cultivating tenants are not in a position to pay all the arrears of rent. Therefore, it is considered necessary to extend the protection given by the Tamil Nadu Cultivating Tenants (Protection from Evication) Act, 1976 (President's Act 36 of 1976), for a further period of 6 months, that is, up to and inclusive of the 15th July, 1963.

எதற்காக கொண்டுவரப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு பிரச்சனையை எழுப்பியவர்களின் கருத்துக்களை நான் கூர்ந்து கவனித்தேன். அருமை நண்பர் மார்க்கபந்து அவர்கள் பாதி நிலம் சொந்தக்காரர்கள் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 4(எ)பிரிவு நீக்கப்பட்டு விட்டது என்றும் அதன் காரணமாக ஓய்வு பெற்றுவருகிறவர்களுக்கு, இராணுவத்திலிருந்து வருகிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் 4(எ)பிரிவு 1976ஆம் ஆண்டு சொந்தக்காரர்கள் சொந்த பயிர் செய்யும் பேரில் குத்தகைதாரர்களை அதிக அளவில் வெளியேற்ற உபயோகப்படுத்தியதால் நீக்கப்பட்டது. யார் யாருக்கு மறுபடியும் இந்த உரிமைகள் வழங்கவேண்டும் என்பதை குத்தகைதாரர்களுக்கு நிலத்திற்கு சொந்த உரிமை வழங்கும் திட்டத்தை உருவாக்குகிறபோது இது நிச்சயமாக பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதை திரு. மார்க்கபந்து அவர்களுக்கு நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு இங்கே குத்தகைதாரர்களுக்கு நிலத்தை சொந்தமாக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்த நண்பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்ட மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட நேரத்தில் அதற்கு அங்கோ

1978 ஜனவரி 5] [திரு. கி. மனோகரன்]

ரம் பெருமலேயே திருப்பி அனுப்பப்பட்டது. பின்னல் அது ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டது. பின்னல் 1976-ல் சட்டசபை கலைக்கப்பட்டது. ஆகவே, இதை எந்த வகையில் சட்டமாகக் கொண்டு வரலாம் என்பது அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு சங்கரய்யா அவர்கள் பேசும்போது, குத்தகைதாரர் பாதுகாப்பு பற்றி சொல்லும்போது கூறிய கருத்துக்கு, 1385-ஆம் பசலிக்கு முந்திய ஆண்டுகளின் பாக்கிகளிலிருந்து குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. 1386, 1387-ஆம் பசலிகளுக்கு இந்தச் சட்டம் அறிமுகம் செய்த நாளிலிருந்து பாதுகாப்பு அளிக்க வகை செய்யும் என்றும், 1386-ஆம் பசலிக்கு முன்பு சட்டப்படி குத்தகைதாரர்கள் வெளியேற்றப்பட்டிருந்தாலும், தஞ்சை, தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்களில் அமலாகும்போது, பாதிக்கப்பட்ட நிலத்தில் குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு (Restoration) அளிக்கும் வகையில்தான் இப்போது ஆறு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பிறகு, இங்கே உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் நினைவில் வைத்து எப்படி ஒரு " காம்பரஹன்சிவ் லெஜிஸ்லேஷன் " கொண்டு வரலாம் என்பதைப் பற்றி இந்த அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இது அவசரமாக கொண்டுவர வேண்டிய மசோதாவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இது இப்போது அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த அவை இந்த மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தரும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இதில் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து

பாதுகாத்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள பெறவேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : தலைவர் அவர்களே,

> '' தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும் ''

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/78).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> ''தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

---

*3-1-78 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்துக்கள் சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையைப் பொறுத்த வரையில் இந்த மசோதாவும் இன்னொரு மசோதாவும் இப்பேரவையின் முன்னால் வந்திருக்கின்றன. இவற்றை மன்றத்தின் உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

முதல் மசோதா, தீண்டாமை குற்றத்திற்காக தண்டனை பெற்றிருந்தால், அவர்கள் உள்ளாட்சி மன்ற தேர்தல்களில் நிற்கக் கூடாது என்று சட்ட மன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தல் விதிகளில் இருக்கிறது. அதேபோன்று உள்ளாட்சி மன்ற தேர்தல் விதிகளிலும் இணைக்க வேண்டும் என்பதுதான் இதன் அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா.

அடுத்தது, உள்ளாட்சி மன்றங்களுக்கு தலைவர் தேர்தல் நேரடியாக நடத்த வேண்டும் என்பது. அதாவது உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்களைப் பொது மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வகைசெய்யும் மசோதா. இது அரசாங்கத்தின் கொள்கையாக முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குரியவகையில் வகைசெய்கின்ற முறையில் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றின்மீது மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டதற்குப் பின்னால் என் கருத்துக்களைக் கூறுகிறேன் என்று தெரிவித்து அமர்கிறேன்.

[மாலை 6-30].

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இரண்டு மசோதாக்களின்மேலும் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால், அதற்கு அமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பிறகு இந்த மசோதாக்கள் இரண்டையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றி விடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாக்களின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். இதிலே இந்தத் தேர்தல்களையெல்லாம் தள்ளி வைக்க வேண்டுமென்பதற்கான காரணங்கள் ஏற்கனவே சொல்லப்பட்டதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிவில் ரைட்ஸ்—ஐப் பற்றிப்பேசுங்கள்.

திரு. க. சுப்பு: சிவில் ரைட்ஸ்-ஐப் பற்றி மட்டும் சொல்லவா? சரி. இந்த சிவில் ரைட்ஸ் புரொடெக்ஷன் ஆக்டைப் பற்றி எங்களுடைய கட்சியிலே இருந்து இரண்டொருவர் பேசியிருக்கின்றார்கள். 'டிஸ்-குவாலிபிகேஷன்' என்று சொல்கிறார்கள். அப்படி 'டிஸ்-குவாலிபிகேஷன்' உள்ளவர்களுக்குத் தகுதியில்லை என்று சொல்லியதற்குப் பிறகு, இந்த சர்க்கார் பார்த்து தகுதி உடையவர் என்று எப்படிச் சொல்லலாம் என்று எனக்குத் தெரியவில்லை. கோர்ட்டுதான் இப்படி தீர்ப்பு வழங்கி, தண்டனை கொடுத்ததற்குப் பிற:, சர்க்கார் நினைத்தால் தேர்தலிலே நிற்கலாம் என்று உரிமை அளிக்கக்கூடிய அதிகாரம் ஏன் இருக்கிறது என்று தெரியவில்லை. தீண்டாமைக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு வழக்குகள் அதிகமாக இப்போது வருவதில்லை. ரொம்ப ரேராகத்தான் வருகிறது. அது உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அடுத்து நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யும்போது, தீர்ப்பு வேறு விதமாக வந்து விட்டால் என்ன செய்வது? அதற்காகத்தான் அந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு: சட்டத்திலே அப்படி 'ஆப்ஜெக்ட்' இருப்பதாகத் தெரியவில்லை. சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது பாராளுமன்றத்திலே கூட பார்த்தோம். இந்திரா காந்தி கேசிலே 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொண்டு வந்து பாஸ் செய்தார்கள். அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுத்தால், இப்படியெல்லாம் நிலைமை வரும்.

தீண்டாமை வழக்குகள் இப்போது அதிகமாக வருவதில்லை. கிராமங்களிலே இன்னும் சிறட்டையில் தான் காப்பியை ஊற்றிக் கொடுக்கிறார்கள். ஆனால், கோர்ட்டுக்கு யாரும் போவதில்லை. பாண்டிச்சேரியிலும் அப்படித்தான். குறும்பேட்டிலும் அப்படித்தான்; தமிழ் நாட்டிலும் அப்படித்தான். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் அப்படியத் தான் நிலைமை இருக்கிறது. இந்தக் கொடுமைகள் நாடு பூராவிலும் இருக்கின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இதற்காக ஒரு இயக்கத்தையே நடத்தினார்கள். தமிழ் நாட்டிலே உள்ள யதார்த்தமான நிலைமையை எடுத்துப் பார்த்தால், அப்படிப்பட்ட அடக்குமுறைகள், கொடுமைகள் ஆகியவற்றை எதிர்த்து சட்டம் கொண்டு வரப்படவில்லை. சிவில் ரைட்ஸ் புரொடெக்ஷன் ஆக்டின்படி நம்முடைய சர்க்கார் எத்தனையோ வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அதிகமில்லை. அதனால் இப்போது அந்தக் கொடுமைகள் இல்லை என்று அர்த்தமா? இப்போது வழக்குகள் போடுவது ரொம்ப ரேராக இருக்கிறது. வழக்கு போடக் கூடியவர்களே போடுவது கிடையாது. சட்டத்திலே எழுதி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். ஆனால், இம்பிளிமென்டேஷன் செய்வதிலே இன்னும் மனப்பான்மை மாறவில்லை. இன்னும் அந்தப் பழைய நிலைமைதான் இருக்கிறது. இன்னும் சிறட்டையில் தான் காப்பியைக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

நகராட்சித் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்களில் இப்படிப்பட்ட குற்றங்களைப் புரிந்தவர்கள் நிற்கக் கூடாது என்று சொல்லலாம். ஆனால் அதைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஒரு சேவிங்ஸ் கிளாஸ் ஏன் கெடுக்க வேண்டும்? சர்க்கார் பார்த்து அப்படிச் செய்யலாம் என்றாலும், சர்க்கார் மட்டும் என்ன? நாமே 1%/2% தான் வந்திருக்கிறோம். தீண்டத் தகாதவர்களுடைய ஆட்சி நடக்கிறது என்று சொன்னால், சொல்வது சரி. ஆனால் அவாகளுக்கே நாம் ரெப்ரசென்டேசன் கொஞ்சம் கம்மியாகத்தான் கொடுத்திருக்கிறோம். இந்த நிலையில் அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட உரிமைகளைக் கொடுத்தால், தவறாகப் பயன்படுத்துவதற்கு வழியிருக்கிறது. ஆகவே, இந்த சேவிங்ஸ் கிளாஸ் வேண்டியதில்லை, லோகல் அட்மினிஸ்ட்ரேஷனிலே அப்படி ஒரு ஆள் வேண்டியதில்லை தண்டிக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் மேலும் தேர்தலுக்கு நிற்கலாம் என்று சர்க்காருக்கு ஏன் அதிகாரம் கொடுக்கவேண்டும்?

அது நம்மைப்பற்றிய தவருன அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். அந்த சேவிங்ஸ் கிளாசை எடுத்துவிடலாம். கோர்ட்டில் தண்டனை கொடுத்து விட்டால் அதோடு விட்டு விட வேண்டும். இன்றைக்கு இருக்கும் சமுதாய அமைப்பில் அப்படி கோர்ட்டில் வழக்குப் போட்டு தண்டனை பெறுவதே அபூர்வம். இன்றைக்கு தாழ்த்தப்பட்டவன் லாக்கப்பில் சாகிருன் என்ருல் யாரும் சீரியசாக எடுத்துக் கொள்வதே இல்லை. தாம்பரத்தில், குளும்பேட்டையில், பாண்டிச்சேரியில் நடந்திருக்கிறது. வெண்மணியோடு நின்று விட்டது என்று நினைக்க முடியாது. ஆகவே கோர்ட்டில் தீண்டாமைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட பிறகு சர்க்கார் தலையிடுவது முறையற்றது. ஆகவே, அதை எங்களால் ஆதரிக்க முடியாது.

அடுத்து, நேரடியாகத் தேர்தலைக் கொண்டு வருகிரும் என்கிருர்கள். அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். ஆனல், நடைமுறையில் சிக்கல்கள் வரக்கூடிய முறையில் இருக்க வேண்டுமா ? அமெரிக்காவில் பிரசிடென்டை நேரடியாகத் தேர்ந்தெடுக்கிருர்கள். அவருடைய காபினெட்டை அவரே நாமினேட் செய்கிருர். ஆனல் பஞ்சாயத்து யூனியன் பிரசிடென்டை நேரடியாகத் தேர்ந்தெடுத்து விட்டு வரக்கூடிய கவுன்சிலர்கள் அந்த பிரசிடென்டுக்கு விரோதமாக இருந்தால் பஞ்சாயத்து யூனியன் ஃபங்ஷன் பண்ணவே முடியாத சூழ்நிலை ஏற்படும்.

இப்போது ஸ்பெஷல் ஆபீசர்கள் இருக்கிற நிலையில் யார் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிருர்கள் ? பினமியாக இருக்கும் காண்டிராக்டர்கள் அந்த இஞ்சினியர்கள், ஸ்பெஷல் ஆபீசரோடு தொடர்பு வைத்துக்கொண்டு பர்சன்டேஜ் பேசிசில் அவர்களுக்கும் இவர்களுக்கும் அண்டர்ஸ்டாண்டிங் வைத்துக் கொண்டு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

நாளைக்கு சேர்மன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சேர்மனுக்கு அதிகாரம் இல்லாத முறையில் கடைசியில் கவுன்சிலர்களின் தயவில்தான் சேர்மன் இருக்கவேண்டுமே தவிர, சேர்மன் தயவில் யாரும் இல்லை. சேர்மன் எந்த வேலையையும் எஃபக்டிவ் ஆகச் செய்ய முடியாது. அதற்கு அதி-

காரத்தைத் தருகிற வகையில் திருத்தியிருக்கிரேமா என்ருல் இல்லை. அதிகமான அதிகாரம் தர வேண்டுமென்பதற்காக முதலமைச்சர்கள் எல்லாம் உள்ளிட்ட ஒரு கமிட்டி அகில இந்திய அளவில் அறிவித்திருக்கிருர்கள். அதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், பாதல் ஆகியவர்களை எல்லாம் போட்டிருக்கிருர்கள். நீங்கள் எலக்ஷனை நடத்தாமல் அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று எப்படி நீங்கள் போய்ப் பேச முடியும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். மந்திரி வாக்குறுதி கொடுத்தால் போதும். எவ்வளவோ வாக்குறுதிகள் ! நிலையான வாக்குறுதியாகக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு பஞ்சாயத்து போர்டு இல்லை, உள்ளாட்சி மன்றங்கள் கிடையாது, உள்ளாட்சிகள் கிடையாது, சேர்மன் கிடையாது, மேயர் கிடையாது ; இதனல் அமைச்சருக்கே வேலை இல்லாத நிலைமை ஆகிவிட்டது. சட்டத்தைத் திருத்தி அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் ; ஆந்திராவில் சமிதி பிரசிடென்ட் தலைவராக இருக்கிருர் ; இங்கு டி.டி.சி.ல் கலெக்டர்தான் தலைவர்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : ஊராட்சி மன்றங்கள் நடந்து கொண்டிருப்பதாக நினைக்கிறேன். அவர்கள் கிடையாது என்று சொல்லுகிருர்கள்.

<u>திரு. க. சுப்பு</u> : ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இயங்க முடியாமல் இருக்கின்றன. பிரசிடென்ட் ஒரு பக்கம் இருப்பார். மெம்பர்கள் வேறு பக்கம் இருப்பார்கள். 'மீசா' பிரசிடென்ட்களை ரெஸ்டோர் பண்ணவில்லை. இராமநாதபுரம் கோர்ட்டில் இருக்கிறது ; திருநெல்வேலியில் இருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : தலைவர் அவர்களே, ஏதாவது அப்படி இருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. க. சுப்பு</u> : இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்ருல் அவரை வரவேற்க கமிஷனர் ஒரு மாலையை வைத்துக் கொண்டு நிற்பார். அவர் எல்லோருக்கும்

மாலை போடுவார். கவுன்சில் இருந்து மாலை போட்டால் அதுதான் பெருமை. இதையெல்லாம் ரீகான்ஸ்டிடியூட் செய்ய வேண்டும்.

[மாலை 6—40]

எந்த ஒரு நல்ல கருத்தும் எதிர்த்தரப்பிலிருந்து வந்தது என்பதாலேயோ என்னவோ அது ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை.

அட்வைசரி கமிட்டி போடுவதாக அமைச்சர் அறிவித்தார். இன்னும் போடவில்லை. இனிமேல் தான் வரும் என்கிறார்கள். அதற்குள் தேர்தலே வந்துவிடும். ஆகவே, அதிகமான அதிகாரங்களை உள்ளாட்சிக்கு வழங்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே இப்படிச் சிக்கல்கள் வந்தால் என்ன செய்ய போகிறோம் என்பதையும் சொல்ல வேண்டும். வாக்குறுதி கொடுத்ததை இப்போது நிறைவேற்றவேண்டும். அதற்கு மேலே நாம் அமைச்சரிடம் அதிகமாக எதிர்பார்க்க முடியாது. ஆகவே நாங்கள் சொல்கிற கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற வகையிலே சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தல் சம்பந்தமான திருத்த மசோதாவை நான் ஆதரித்தாலும் எல்லாக் கட்சியினரும் இதை வரவேற்கின்ற நேரத்திலே இந்த முறை செயல்படுகின்ற நேரத்திலே சில சிரமங்கள் ஏற்படும். அவைகளையெல்லாம் நிவர்த்திக்க ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது பஞ்சாயத்துக்களிலே தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், அதைப்போல பஞ்சாயத்து யூனியன்களிலும் நேரடியாக மக்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பெறுகிற முறையை இங்கே சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம். பஞ்சாயத்துக்களிலே தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது அவர்கள் தங்களுடைய எல்லைக்குள்ளே தங்களுடைய வரம்பிற்குள்ளே உள்ள எல்லா மக்களையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரு பஞ்சாயத்திலே தொடர்பே இல்லாத

ஒருவர் யூனியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் நிர்வாகத்திலே பொறுப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படும். இருந்தாலும் போகிற காலத்திலே அது சரிநிகராகிவிடும். அப்படி நிவர்த்திக்கப்படுகிற காலம் வரையிலும் பஞ்சாயத்துக்களின் யூனியன் நிர்வாகத்தை அரசு உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

அடுத்து, தேர்தல் சமயத்தில் கட்சிகளின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்துவது என்ற முறை கொண்டுவரப்படுகிற நேரத்திலே தேர்தல் நடக்கிற முறையை நாம் கவனிக்க வேண்டும். ஒரு வார்டிலே 3, 4 உறுப்பினர்களைக் கொண்ட தொகுதியில் போட்டியிட்டு தேர்தல் நடைபெறும்போது கட்சிச் சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. சின்னங்கள் கொடுக்கிற நேரத்திலே பல்வேறு கட்சிக்காரர்கள் அவர்களால் ஓட்டெடுக்கப்படுகிற முறை எப்படி செய்யப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ஓரளவிற்கு அதிக அதிகாரங்களை வழங்கவேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் அந்தப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள பல்வேறு காரியங்களைச் செய்வதற்குத் திட்டமிடுகிற நேரத்திலே அவர்கள் தங்களுடைய பே ஆர்டரைக் கொடுக்கிற நேரத்திலே சிரமமான சூழ்நிலை அமைந்திருக்கிறது. அவர்கள் தங்கள் பஞ்சாயத்து வரம்பிற்குள் வேலைகளைச் செய்கிறபோது மதிப்பீட்டை யூனியன் இஞ்சினியர்களிடமிருந்து வாங்குகிறார்கள், காரணம் மதிப்பீட்டுத் தொகைக்கு வரம்பு மீறி எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கக்கூடாது என்பதற்காக. அதற்குப் பிறகு ஆடிட் ஆபிஸர் பஞ்சாயத்து அதிகாரிகளிடத்திலிருந்து அனுமதி பெறுகிறார்கள். அதற்குப் பிறகு கமிஷனரிடத்திலிருந்து வேறு அனுமதி வாங்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அது தேவையில்லை. இப்படி மூன்று பேர்கள் இருப்பதால் பஞ்சாயத்துத் தலைவர்கள் போய் காத்திருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதோடு வரம்புக்கு மீறி எடுக்கமுடியாத நிலை இருக்கிறது என்பதாலும் அந்தத தலைவருடைய சூழ்நிலையை மாற்றவேண்டும் என்பதாலும் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கவேண்டும்.

அந்தப் பகுதியிலே இருக்கும் தொகைக்கு அனுசரித்து அவர்கள் தங்கள் பஞ்சாயத்து மூலமாக நிர்வகிக்கும் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதற்கான வரம்பை, தன்னிச்சையாக ஈடுபடுவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பிரதிநிதிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களிலே உள்ள தலைவர்கள் மதிப்பிற்குரிய சுப்பு அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்—நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் நேரத்தில், பெருந்தலைவருக்கும் அங்கு வரும் அங்கத்தினர்களுக்கும் இடையே சரியான முறையிலே உறவு ஏற்படாவிட்டால் பஞ்சாயத்து யூனியன்கள் சரியாக அமையாது. இந்தச் சட்டத்திலேகூட அதற்கு மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் தங்களுடைய குறைகளைத் தெளிவாக அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடத்திலே தெரிவிப்பார்களேயானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வழிவகை செய்திருக்கிறார்கள்.

ஆனால் ஜனநாயக அமைப்பிலே பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு தலைவரை, குறிப்பாக பஞ்சாயத்து யூனியன் சேர்மனை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்தபடியாக மதிக்கும் நிலைமையைக் கொண்டு வர வேண்டும். ஒரு சட்டமன்றத் தொகுதியிலே இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் அமையும் நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் அதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை எப்படி அந்த வரம்புக்குள் கொண்டு வர முடியும் என்று யோசித்து அதற்குரிய வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் பஞ்சாயத்து நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால், பஞ்சாயத்து இராஜ்யம் அமைத்து நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்றால் அதற்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கான வழிவகைகளை அளிக்க அமைச்சரவர்கள் முற்படுவார்கள் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது.

தேர்தலை வெகு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும். பொதுமக்களின் பிரதிநிதியாக இருக்கும் பஞ்சாயத்தை அதிகார வர்க்கத்திலிருந்து நீக்கி, இந்தத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்ற கருத்தைக் கூறி இந்த மசோதாவின் மூலமாக பஞ்சாயத்துத் தேர்தலை உடனடியாக கொண்டு வர வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்:</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே....

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவருடைய சீட்டிலிருந்து பேசாமல் வேறு இடத்திலிருந்து பேசுவது முறைகேடாகும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> உங்களுடைய இடத்திலேயிருந்துதான் நீங்கள் பேச வேண்டும். உங்களுடைய இடத்திலேயிருந்து பேசுங்கள்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்:</u> மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் ஞாபகப்படுத்தியதற்காக நன்றி.

மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே, மக்கள் நேரடியாக ஊராட்சி ஒன்றியத் தலைவரைத் தேர்ந்து எடுக்க வேண்டுமென்ற ஒரு குறிப்பு இருந்தது. அதுவும்கூட அதிலே ஒட்டப்பட்டிருந்தது. அப்படி ஒட்டியதை எடுத்துவிடாமல், இந்த அரசாங்கம் அவ்வாறு தேர்தலை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியது அநேகமாக உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். உண்மையிலேயே, ஜனநாயகம் வலுவுள்ளதாக ஆக்கப்படுவதற்கு, மக்களே நேரடியாக ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கொண்டு வந்திருக்கிற இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அது அசிங்கங்களை எடுத்து விடுகிறது. ஏராளமான தலைவர்களை, சாதாரணமாக கோழிக் குஞ்சை பருந்து தூக்குவதுபோல போட்ட காட்சிகளெல்லாம் நமக்குத் தெரியும். அதுவும் வலுவுள்ள தலைவர்களே அப்படிப் போடப்பட்ட நிகழ்ச்சி நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1978 சனவரி 5

நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஜனநாயக முறை
யிலே மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று
கொண்டு வந்திருப்பது அவசியமானது. உண்மையிலேயே
இதை நான் சாதாரண நிகழ்ச்சியாகக் கருதவில்லை. மேலும்
மக்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கும் இந்த
மரபை வைத்திருப்பதால் எனக்கு இருந்த அச்சமும் போய்
விட்டது. ஒட்டியது எங்கே எடுபட்டு விடுமோ என்று
அஞ்சிக்கொண்டிருந்த எனக்கு அது உருவிலே வருவது
அறிந்து மகிழ்ச்சி ஏற்படுகிறது.

தீண்டாமைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களை
அரசாங்கம் விரும்பினுல் நிறுத்தலாம் என்பது சரியல்ல.
ஏனென்ருல், நிச்சயமாக உள்ளாட்சித் துறை அமைச்சரவர்
கள் கூறியதைப்போல, அப்பீல் இருக்குமானுல் போட்டி
ருக்கிறோம் என்று சொன்னுர்கள். அப்படியென்ருல்
அப்பீலுக்குப் போய் ஸ்டே வாங்குபவர்கள் நிற்கலாம் என்ற
நிலை வந்து விடும். ஆகவே, அதற்கு அவசியமில்லை. விதிவிலக்கு
என்று வரும்பொழுது, மேல்ஜாதி இந்துக்கள் அரசாங்க
இயந்திரத்தைத் தன்னிச்சையாக்கிக்கொள்ளலாம் என்ற
சந்தேகத்தை ஏற்படுத்தும். அந்தச் சந்தேகத்திற்கு இடம்
தரக்கூடாது என்பதை அழுத்தமாகச் சொல்ல விரும்பு
கிறேன்.

(மாலை 6-50)

ஏன் இப்படி சொல்கிறேன் என்ருல், ஏற்கனவே, பொது
வாக, யார், யார், தேர்தலிலே நிற்கக் கூடாது என்று
சட்டம் இருக்கிறது. அதிலே, இப்படி ஏதாவது விதிவிலக்கு
இருக்கிறதா என்ருல், இருக்கக்கூடிய சாத்தியம் இல்லை.
ஆகவே, நிச்சயமாக, கவுரவப் பிரச்னையாக பார்க்காது,
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பிரச்னை சரி என்ருல்
ஒத்துக்கொள்வது என்ற முறையில், நிச்சயமாக நீக்கிவிடு
வது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி
அதிகமாக வாதாட நான் விரும்பவில்லை.

மற்ருென்று நான் சொல்ல விரும்புவது, ஊராட்சிகளிலே
வார்டுகள் பிரிப்பது பற்றியது. இப்பொழுது, 4 பேர்,
5 பேர் நிற்பதாக இருக்கிறது. அதனுலே, 50 சதவிகிதத்
திற்கு மேல் உள்ள ஒரு ஜாதிக்காரர்கள் அல்லது பகுதியினர்
நினைத்தால் , எல்லா உறுப்பினர்களும் அவர்களே வரக்

1978 சனவரி 5] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்த அளவு ஜன
நாயக மதிப்புள்ள அரசாங்கம், ஒரு ஜாதியினருக்கு ஒரு
வார்டு என்ற முறையிலும், இதனுல் மைனுரிட்டிகளுக்கும்
வாய்ப்பு கிடைக்கும் முறையில் பஞ்சாயத்துக்களை உருவாக்க
வேண்டுமென்ற ஆலோசனையைச் சொல்லி, அதை கட்டாயம்
இந்த அரசாங்கம் செய்யும் என்று நம்பி அமர்கிறேன்,
வணக்கம்.

*திரு. ர. ஜெபமணி: துணைத் தலைவரவர்களே, தீண்டா
மைக் குற்றத்தினுல் தண்டிக்கப்பட்டவர்கள் தேர்தலிலே
நிற்கக் கூடாது என்று கனம் அமைச்சரவர்கள் முன் மொழிந்
தார்கள். அதிலே, பல சட்டச் சிக்கல்கள் வரும் என்பது
நம் எல்லோருக்கும் தெரியும். அதைத் தீர்க்கமாக ஆலோ
சித்துத்தான் நீங்கள் சேர்த்துக்கொள்ளவேண்டும். குற்றம்
செய்தவர்கள் எப்படியும் தப்பித்துக்கொள்ள சுப்ரீம் கோர்ட்
வரை போவார்கள். ஆகையினுலே, நாம் மிகவும் ஜாக்கிரதை
யாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்னென்றையும் சேர்த்துக் கொண்டால் நல
மாக இருக்கும். தமிழகத்திலே மதுவிலக்கைத் தீவிரமாக
அமுல் நடத்துவதாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். முதலமைச்சரவர்
கள் போகிற இடமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறுர்கள்.
நிச்சயமாக நீங்கள் அமுல் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை
இருப்பதாலே, மது பர்மிட் வைத்திருப்பவர்களும், மது
குடித்து தண்டனை பெற்றவர்களும், அந்தத் தேர்தலிலே
நிற்கக்கூடாது என்று நாம் சட்டம் கொண்டு வரவேண்டும்.
அப்பொழுதான் இந்த நாட்டிலே, நேர்மையான, நீதியான,
நிலையான, ஒழுங்கான கிராமத் தலைவர்களை நாம் தேர்ந்
தெடுக்க முடியும். இல்லாவிட்டால், ஏழை அப்பாவிகளுக்
குத்தான், கிராமத்திலே எப்படி மதுக் கஷாயம் குடித்துச்
சாகிறுர்களோ, அவர்களுக்குப் பீப்பாய் சாராயத்தை
ஊற்றிக் கொடுத்துவிடுவார்கள். அந்த ஊர்ப் பஞ்சாயத்து
ஒரு பீப்பாய் சாராயத்தில் முடிந்து விடுகிறது. இப்
பேர்பட்ட நிலையில்லாமல் இருக்கவேண்டும் என்ருல், இந்த
மது அருந்துகிறவர்களே வராமல் நாம் பார்க்கவேண்டும்.
அதை நிச்சயமாக, நமது முதலமைச்சரவர்கள் செய்வார்
கள். அதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நிச்சய
மாக துணை இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.
அதை நீங்கள் நிச்சயமாகச் செய்யவேண்டும்.

அதற்குப் பிறகு, ஒன்றியத் தலைவர்களை எல்லோரும் ஒன்று சேர்ந்து தேர்தெடுக்கவேண்டுமென்ற முறை இருக்கிறதே, அது நமக்கு ஆரம்பப் படிப்பாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால், வருங்காலத்தில் முதலமைச்சரைக்கூட, நாட்டுமக்கள் தேர்ந்தெடுக்கிற முறை வந்தால், அது, இதிலிருந்து ஒரு பாடமாக இருக்கவேண்டும். அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்றால் மிக ஜாக்கிரதையாக நிர்வகிக்க வேண்டும். இங்கேதான் குற்றவாளிகள் யார், என்னென்ன குற்றங்கள் செய்தவர்கள் இந்தத் தேர்தலில் நிற்கக்கூடாது என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து நீங்கள் விளம்பரப்படுத்தினால், கிராமத்திலுள்ள மக்கள் நன்றாக அடையாளம் கண்டுகொள்வார்கள்.

இப்படியெல்லாம் வருவதன்மூலம், கிராமம்தான் இந்த நாட்டின் ஜீவநாடி, அங்கிருந்துதான் ஜீவனமும் அதிகாரமும் பிறக்கும், நாட்டு வளத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்றெல்லாம் சொல்வது நடைமுறைப்படுத்தப்படும். ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தக் கிராமத்திலே நாம் நேரடித் தேர்தலை நடத்தி முடித்து விடுகிறோம். ஆனால், முடிந்தபிறகு, இப்பொழுது எத்தனை பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். ஏன் கலைக்கப்பட்டவ என்று பார்த்தால், கொள்ளை அடித்தார்கள், கலைத்தார்கள், சென்னைக் கார்ப்பரேஷனைக் கலைத்தார்கள், கொள்ளை அடித்தார்கள். அங்கே கொள்ளை அடித்தார்கள், இங்கே கொள்ளை அடித்தார்கள், இப்பொழுது அதிகாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள் என்று நாம் நன்றாகப் பேசுகிறோம். அதிகாரிகள் யார்? அவர்களும் நம்முடைய நண்பர்களே, அவன் எங்கு போனாலும் கொள்ளைதான் அடிப்பான். ஆகவே, கொள்ளை அடிப்பது நீக்கப்பட வேண்டுமானால், கொஞ்சம் அவசரமாக, நிவாரணம் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரத்தைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்துக்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை நாங்களும் எல்லா அதிகாரங்களும் வேண்டுமென்று கேட்கிறோம். எம்.எல்.ஏ-க்களுக்கு அதிகாரம் இல்லை. ஊராட்சி ஒன்றியத்தில் உட்கார இடம் இல்லை., அனாதைகளாக இருக்கிறோம், மனுக்கள் வந்தால் நாங்கள் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து வாங்க

வேண்டும், அமைச்சர்கள் வந்தால் நாங்கள் ஒரு ஓரத்தில் இருக்கவேண்டும். அதிகாரிகள் பக்கத்தில் இருப்பார்கள். என்றெல்லாம் சொல்கிறோம். ஒருவன் கையிலே, ஆயுதம் இருக்கலாம். ஆனால், அவன் எப்படி பிரயோகிக்கிறான் என்பதுதான் பிரச்னையே தவிர, அதிகாரம், என்பது ஒருவன் கையிலே இருக்கிற ஆயுதத்தைப் போல ஆகவே, அதிகாரம் இருக்கவேண்டும்.

ஆனால் பஞ்சாயத்து யூனியன் என்பது நாட்டு மக்களுக்குப் பக்கத்தில் அணுகக்கூடிய இடம். அங்கேயே அவர்களுக்குத் தீர்ப்புக் கொடுக்கக்கூடிய நல்ல ஒழுக்கம் தேவை. பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்குப் போனால் தாலூகா ஆபீசுக்குப் போ என்கிறார்கள், தாலூகா ஆபீசுக்குப் போனால் கலெக்டர் ஆபீசுக்குப் போ என்கிறார்கள். கலெக்டர் ஆபீசுக்குப் போனால் அந்த ஆபீசுக்குப் போ, இந்த ஆபீசுக்குப் போ என்று சொல்லுகிறார்கள். அவன் காரியத்தையும் கை விட்டு கையிலிருக்கும் காசையும் கைவிட்டு அம்போ என்று வீட்டுக்கு போகிறான். அவர்களுடைய பிரச்னைகள் முழுவதும் தீர்க்கப்பட வேண்டும்.

அதனால்தான் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஜில்லா போர்டு என்று இருந்தாலும் எல்லோரும் ஜில்லா தலைநகருக்கு போக முடியாது, அவர்களுக்கு இருக்கிற வீட்டுப் பிரச்னை, அடுப்பங்கரைப் பிரச்னை, விளக்குப் பிரச்னை, பள்ளிக்கூடப் பிரச்னை, குடி தண்ணீர் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக, பக்கத்திலே அந்த யூனியன் அலுவலகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு பஞ்சாயத்து யூனியனை நம்பவேண்டும். நம்புவோம். நம்பியவர்களை கைவிட்டது கிடையாது. அவர்களுக்கு நல்ல அதிகாரத்தைக் கொடுங்கள். அந்த அதிகாரத்தை நீங்கள் கொடுத்தால்தான் டெல்லியிலிருந்து உங்களுக்கு அதிகாரம் கிடைக்கும் என்று தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தீண்டாமை திருத்த மசோதாவிலே தீண்டாமை குற்றத்திற்காக தண்டிக்கப் பட்டவர்களைப் பற்றி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏற்கனவே எனக்கு முன்பு பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தீண்டாமைக் குற்றத்திற்காக தண்டனைக் கொடுக்கப்பட்டிருந்தால் அரசு விதி விலக்கு அளிக்கலாம் என்ற திருத்தத்தை நீக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அந்தக் கருத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உடன்பாடு இருக்கிறது. ஏன் என்று சொன்னால் அரசிலே இருப்பவர்களுக்குக்கூட ஒரு சங்கடமான நிலையை அந்த ஷரத்து ஏற்படுத்தும். அரசிடம் வந்து அந்தக் குற்றத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று அவர்களுக்கு நண்பர்கள் வற்புறுத்துகின்ற அபாயம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல இன்னொன்றையும் சொல்கிறேன், யாரும் தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம். அத்தகைய ஒரு விதிவிலக்கு இருக்குமானால் நிச்சயமாக ஒரு பாகுபாடு காட்டக்கூடிய ஒரு நிலை சில சந்தர்ப்பங்களில் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், பெருந்தலைவர் காமராஜ் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட விதி விலக்குக் கோரி இரண்டு மனுக்கள் அவரிடம் வந்தன. ஆனால் விதிவிலக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவருக்கு அளிக்கப்பட்டது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவருக்கு மறுக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விதி விலக்கு மறுக்கப்பட்டவர் வேறு யாரும் அல்ல நானேதான். தீண்டாமை வழக்கல்ல. சதிவழக்கு, எனக்கு மறுக்கப்பட்டது, திரு. கோசல்ராம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. ஆகவே காமராஜ் போன்றவர்கள் ஆட்சியிலே கூட இப்படிப்பட்ட சங்கடமான ஒரு நிலை ஏற்பட்டதைப் போல இந்த அரசுக்கும் வரக்கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு, சொல்கிறேன். அதனால் அரசுக்கு இருக்கிற அதிகாரத்தை பாதிப்பதாக யாரும் நினைக்கவேண்டாம்.

இரண்டாவதாக நேரடித் தேர்தலைப் பற்றி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி நிலையை ஏற்கெனவே உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து இந்த பில்லை கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே 70ஆவது

ஆண்டிலே ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சொன்ன காரணம்தான். அந்தக் காரணம் மக்களுக்கு நன்மையைப் பயக்குமோ என்னவோ, என்று பலர் பயந்தனர். ஊராட்சி மன்ற மெம்பர்களை கடத்துவதிலிருந்து அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்திருக்கிறது.

[இரவு 7-00]

அந்த அனுபவத்திற்குப் பிறகு இன்று இந்தத் தீர்மானம் கொண்டுவருவதன் மூலமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக ஊராட்சித் தலைவரைக் கடத்துவதிலிருந்து தடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஒத்துழைப்பாக இருக்கிறது என்ற வகையிலும் ஒன்றியத் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்க வாய்ப்பளிப்பதாலும் அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

மூன்றாவதாக, அன்றைக்கு நடைபெற்ற சர்வ கட்சித் கூட்டத்திலேயே எனது கட்சி ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டியது. அதாவது இந்தத் தேர்தல் நடக்கக்கூடிய காலத்தில் 3 வாக்குகள் அளிக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஒன்று பஞ்சாயத்து மெம்பருக்கு, மற்றொன்று ஊராட்சித் தலைவருக்கு, மற்றொன்று ஒன்றியத் தலைவருக்கு. ஆக 3 வாக்குகள், எப்படி நகராட்சிகளுக்கு, சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி சின்னங்கள் அளிக்கப்படுகிறதோ, அதே அடிப்படையில் அந்த ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி ஒன்றிய தேர்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சின்னங்களை அங்கீகரித்த கட்சிகளுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : குறிப்பாக, பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என தனி ரிசர்வ் தொகுதிக்காக இடம் ஒதுக்கப்பட்டு இருப்பதுபோல், இந்த பஞ்சாயத்து ஒன்றிய தேர்தல்களிலும், ரிசர்வ் தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டும் என்று

[திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்] [1978 சனவரி 5

இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். மாநிலம் முழுவதும் பழங்குடி, அரிசன வகுப்பினருக்கு எப்படி இடம் ஒதுக்கப்படுகிறதோ அதே விகிதாச்சார அடிப்படையில் இடங்களை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவரே பல பதவிகளில் இருக்கக்கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. சில நேரங்களில் ஊராட்சி ஒன்றிய தலைவர்களே எம்.எல்.ஏ.க்களாகவும், ஊராட்சித் தலைவராகவும் இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த முறை இந்தச் சட்டத்தால் மாற்றப்படுகிறது என்கிற காரணத்தால் இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று அந்த [illegible] குறித்த சட்டத்தில் தண்டனை [illegible] விலக்களிக்கும் அந்த இருக்கத்தக்க மாத்திரம் [illegible] என்று சொல்லி [illegible] கட்சியின் சார்பில் என் கருத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய தேர்தல் ஊராட்சி மன்றத் தேர்தல் எல்லாம் ஏறக்குறைய 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய இந்த அரசு பெருந்தலைவர் தேர்தலை மக்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வழிசெய்யும் வகையில் இந்தச் சட்டத்தை கொண்டு வருவது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இதிலே சில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது ஒன்றியத்தின் பெருந்தலைவர்கள் பதவியில் ஒருவரே இருக்கக்கூடாது என்று இந்த சட்டத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாம் பார்க்கிறோம், சட்டமன்றத்திற்கு நிற்பவர், பாராளுமன்றத் தேர்தலிலும் நிற்கலாம். ஆனால் இரண்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஏதாவது ஒன்றை ராஜினாமா செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. அதேபோல ஒரு விதியை இந்தச் சட்டத்தில் கொண்டுவருவது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைவிட்டு ஒருவர் ஒரு பதவிக்கு மேல் போட்டி போடக்கூடாது என்று இருப்பது ஜன

1978 சனவரி 5] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

நாயகம் ஆகாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று ஏற்கனவே ஊராட்சிமன்றத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மேல் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எப்படி கொண்டுவர வேண்டும் என்று பழைய சட்டப்படி விதி இருக்கிறதோ அதையே இன்றைய தினம் இந்தச் சட்டத்தில் கொண்டுவந்து இருக்கிறார்கள். நடைமுறையில் நாம் பல சிரமங்களைப் பார்க்கிறோம். ஊராட்சி மன்றத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே பல்வேறு கருத்துக்கள் ஏற்பட்டு இன்றையதினம் சில ஊராட்சி மன்றங்கள் நடைபெறாத சூழ்நிலையில் இருந்து வருகின்றன.

ஆனால் இந்தச் சட்டத்திலே பெருந் தலைவர் மீது நம்பிக்கையில்லை என்கிற தீர்மானத்தைக் கொடுண்டுவரலாம். ஆனால் அப்படி கொண்டுவருகிறபோது மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அதிலே கையொப்பமிட வேண்டுமென்ற விதியைச் சேர்த்திருக்கிறீர்கள். கொடுக்கிறபோது பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொடுக்கலாம். தீர்மானமாக நிறைவேற்றுகின்ற நேரத்தில் வேண்மானால் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினர்கள் தேவை என்கிற அந்த விதியை சேர்த்திருப்பீர்களேயானால் ஒன்றியம் ஓரளவு நியாயமாக நடைபெறும் என்று கருதுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு பெருந்தலைவர் அவர்கள் மீது சொல்லப்படுகின்ற குறைபாடுகளுக்கு பதில் அளிக்கிறார்கள். பதில் அளித்ததற்குப் பிறகு அதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமலே விட்டுவிடலாம் என்கிற ஷரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஒன்றியக் குழுவிலே ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஒரு பெருந்தலைவர் மீது கொண்டு வருகிற பிரச்சினை ஏறக்குறைய நியாயமான பிரச்சினையாகத்தான் இருக்கும். அந்த ஒன்றியக்குழு நியாயமாக நடைபெற வேண்டுமானால் அதன் தலைவர் மீது கொண்டுவரப் படுகிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்கலாம், எடுக்காமலும்

[திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்] [1978 சனவரி 5

இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். மாநிலம் முழுவதும் பழங்குடி, அரிசன வகுப்பினருக்கு எப்படி இடம் ஒதுக்கப்படுகிறதோ அதே விகிதாச்சார அடிப்படையில் இடங்களை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவரே பல பதவிகளில் இருக்கக்கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. சில நேரங்களில் ஊராட்சி ஒன்றிய தலைவர்களே எம்.எல்.ஏ.க்களாகவும், ஊராட்சித் தலைவராகவும் இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த முறை இந்தச் சட்டத்தால் மாற்றப்படுகிறது என்கிற காரணத்தால் இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று அந்த தீண்டாமை குறித்த சட்டத்தின் தண்டனை [illegible] விலக்களிக்கும் அந்தத் திருத்தத்தை மாத்திரம் [illegible] என்று சொல்லி [illegible] [illegible] சார்பில் என் கருத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு பெ. சு. திருவேங்கடம் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய தேர்தல் ஊராட்சி மன்றத் தேர்தல் எல்லாம் ஏறக்குறைய 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய இந்த அரசு பெருந்தலைவர் தேர்தலை மக்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வழிசெய்யும் வகையில் இந்தச் சட்டத்தை கொண்டு வருவது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் இதிலே சில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது ஒன்றியத்தின் பெருந்தலைவர்கள் பதவியில் ஒருவரே இருக்கக்கூடாது என்று இந்த சட்டத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நாம் பார்க்கிறோம், சட்டமன்றத்திற்கு நிற்பவர், பாராளுமன்றத் தேர்தலிலும் நிற்கலாம். ஆனால் இரண்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஏதாவது ஒன்றை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. அதுபோல ஒரு விதியை இந்தச் சட்டத்தில் கொண்டுவருவது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதைவிட்டு ஒருவர் ஒரு பதவிக்கு மேல் போட்டி போடக்கூடாது என்று இருப்பது [illegible]

1978 சனவரி 5] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

கொள்கிறேன்.
நாயகம் ஆகாது என்றும் தெரிவித்துக்
இதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று கேட்க ஆசைப்
படுகிறேன்.

ஊராட்சிமன்றத் தலைவர்
அதேபோன்று ஏற்கனவே
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மேல் நம்பிக்கை
இல்லாத் தீர்மானம் எப்படி கொண்டுவர வேண்டும் என்று
பழைய சட்டப்படி விதி இருக்கிறதோ அதையே இன்றைய
தினம் இந்தச் சட்டத்தில் கொண்டுவந்து இருக்கிறார்கள்.
நடைமுறையில் நாம் பல சிரமங்களைப் பார்க்கிறோம்.
ஊராட்சி மன்றத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடை
யே பல்வேறு கருத்துக்கள் ஏற்பட்டு இன்றையதினம் சில
ஊராட்சி மன்றங்கள் நடைபெறாத சூழ்நிலையில் இருந்து
வருகின்றன.

ஆனால் இந்தச் சட்டத்திலே பெருந்தலைவர் மீது நம்பிக்
கையில்லை என்கிற தீர்மானத்தைக் கொண்டுவரலாம்.
ஆனால் அப்படி கொண்டுவருகிறபோது மூன்றில் இரண்டு
பங்கு உறுப்பினர்கள் அதிலே கையொப்பமிட வேண்டும்
மென்ற விதியைச் சேர்த்திருக்கிறீர்கள். கொடுக்கிறபோது
பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொடுக்கலாம். தீர்மா
னமாக நிறைவேற்றுகின்ற நேரத்தில் வேண்மானால்
மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினர்கள் தேவை என்கிற
அந்த விதியை சேர்த்திருப்பீர்களேயானால் ஒன்றியம் ஓரளவு
நியாயமாக நடைபெறும் என்று கருதுவதற்கு வாய்ப்பு இருக்
கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு பெருந்
தலைவர் அவர்கள் மீது சொல்லப்படுகின்ற குறைபாடு
களுக்கு பதில் அளிக்கிறார்கள். பதில் அளித்ததற்குப் பிறகு
அதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமலே விட்டு
விடலாம் என்கிற ஷரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு
ஒன்றியக் குழுவிலே ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஒரு
பெருந்தலைவர் மீது கொண்டு வருகிற பிரச்சினை ஏறக்குறைய
நியாயமான பிரச்சினையாகத்தான் இருக்கும். அந்த ஒன்றி
யக்குழு நியாயமாக நடைபெற வேண்டுமானால் அதன் தலைவர்
மீது கொண்டுவரப் படுகிற நம்பிக்கையில்லாத்
தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுக்கலாம், எடுக்காமலும்

விட்டுவிடலாம் என்கிற ஷரத்து நியாயமாக ஒரு ஒன்றியக் குழு நடைபெறுவதற்கு உதவியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அதேபோல் அதன்மீது நடவடிக்கை எடுத்தாலும் ஒன்றியக்குழு நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றினுல் அந்த அதிகாரி அரசாங்கத்துக்கு அதை அனுப்புவார். அரசாங்கம் விரும்பினுல் அவரை பதவியிலிருந்து நீக்கலாம். அரசாங்கம் அதன் மீது நடவடிக்கை எடுக்காமலேயேகூட விட்டுவிடலாம் என்று சொல்லிருர்கள். ஏற்கெனவே சொல்லியபடி ஒருவர்மீது நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலையும், இன்னொருவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையும் அரசாங்கத்திற்கு ஏற்படலாம். அப்படிப்பட்ட வார்த்தைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

அதேபோன்று இங்கே பேசிய நம்முடைய மாற்றுக் கட்சி நண்பர்கள் கூட ஹரிஜனங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று சொன்னுர்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே போன்று அவர்களுக்கு எந்தெந்த விகிதாச்சாரத்திலே ஹரிஜனங்களுக்கு ஒன்றிய பெருந்தலைவர் ஊராட்சிமன்றத் தலைவர் தேர்தலில் வருவதற்கு வேண்டிய வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 1958-லே கூட இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற போது அப்பொழுது பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் கூட சர்வகட்சித் தலைவர்களை அணுகி சட்டத்தை எப்படி எப்படி இயற்றலாம் என்று ஆலோசித்துத்தான் 1958-லே இந்தச் சட்டத்தை இயற்றினுர்கள். பிறகு 1978-லே அந்தச் சட்டத்தைத் திருத்தும்பொழுது நம்முடைய அரசு சர்வ கட்சித் தலைவர்களைக் கூட்டி, ஒரு பொறுக்குக் கமிட்டியை அமைத்து இந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்து அதன் பிறகு நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கட்சியின் சார்பாக கருத்தைச் சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த மசோதாவைப் பற்றித் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

நேரடித் தேர்தலைப் பொறுத்த அளவில் உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியதைப் போல உள்ளாட்சித் துறை தேர்தலிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு மிகப்பெரிய முன்னேற்றம் என்று சொல்வது மிகையாகாது. ஊராட்சித் தலைவர்களை உள்ளடக்கிய [illegible] ஒன்றியக் குழுவில் அவர்களை வாக்காளர்களாக கொண்டு ஒன்றியத்தின் பெருந் தலைவரை தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் அதனுல் எத்தகைய சங்கடங்கள் ஏற்பட்டன என்பதை எல்லாம் நாம் அறிவோம்.

இங்கே நண்பர்கள் சொன்னதைப்போல் கடத்திச் செல்வது, [illegible] தாண்டவம் ஆடுவது போன்றவைகளைப் பார்த்ததற்குப் பிறகு—பிருத்விராஜ் சம்யுக்தையை தூக்கிக் கொண்டு சென்றதைப் போன்று, பிரசிடெண்டுகள் மெம்பர்களைத் தூக்கிச் செல்கிறதைப் பார்த்த பிறகு—இவைகளை முடிக்க நேரிடையாக மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முடிவை எடுத்திருக்கிருேம்.

இந்த இரண்டு மசோதாக்களிலும் அரசுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். சட்டங்கள் செய்கிற நேரத்தில் இப்படிப்பட்ட விதிமுறைகளை வகுப்பது மரபே தவிர அரசாங்கம் அதைத் தவருகப் பயன்படுத்தாது என்று நான் கூறத் தேவையில்லை.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த வரையில் இப்பொழுதுள்ள அரசாங்கம் செவிலித்தாயைப்போல் இருந்து அவைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பிலே, அவைகள் இன்னும் வளர்ச்சி அடைகின்ற நேரத்தில் இன்னும் ஜனநாயகம் மலர்ச்சி அடைந்து உள்ளாட்சி அமைப்புகள் இன்னும் அதிக அதிகாரம் பெறுகிற நேரத்தில் இத்தகைய விதிமுறைகள் எல்லாம் தாஞக இற்றுப்போகும் என்று நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆகையால் இப்பொழுதுள்ள நிலைமையில் அரசாங்கம் தவருக நிச்சயமாக பயன்படுத்தாது. பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அன்றி மிக மிக அவசியமான ஏதாவது ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலொழிய அதிலே ஒரு விதி இருக்கிறது என்கிற காரணத்திற்காக அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளைப் பொம்மைகளாக வைத்துக்

கொண்டு பொம்மலாட்டம் நடத்தும் என்று கருத வாய்ப்பு இல்லை என்ற உறுதியை நான் மிகத் தெளிவாக தெரிவிக் விரும்புகிறேன்.

[இரவு 7–10]

ஆகவே, உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய வளர்ச்சியாக மலர்ச்சியாக இருக்கிற இந்த நேரடித் தேர்தல் முறையை ஆதரித்துக் கருத்துக்களைச் சொன்ன உறுப்பினர்களுக்கு அரசின் சார்பாக நன்றி தெரி விக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சகோதரர் திருவேங்கடம் அவர்கள் இதில் இருக்கிற சிக்கல்களைப் பற்றி அவருடைய கருத்தைச் சொன்னார்கள். நான் இந்தச் சட்டம் தான் முழுமையான சட்டம், இறுதி யான சட்டம், இதில் மாற்றமே இருக்காது என்று நிச்சய மாகச் சொல்ல மாட்டேன்.

நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் தான் என்ன சிக்கல் கள் இருக்கின்றன என்பதைக் காணமுடியும். அப்படிச் சிக்கல்கள் தோன்றினால் அவைகளைக் களைவதற்குரிய வழி முறைகளைச் செய்வதற்கு நிச்சயமாக முடியும் என்கிற வகை யில் இந்த இரண்டு மசோதாக்களையும் நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு என். சங்கரய்யா: ஹரிஜனங்களுக்கு ரிசர்வ் தொகுதி ஒதுக்குவது போல் பஞ்சாயத்து யூனியன் தலைவர் களுக்கும் ஒதுக்குவது பற்றி அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: பரிசீலனையில் இருக் கிறது என்று நேற்றுக்கூடத் தெரிவித்திருக்கிறேன்.

திரு கூத்தக்குடி ச. சண்கம்: ஒட்டுப் போடுவதற்கு உதவிகரமாக இருக்குமென்று சொன்னேன்.

திரு. அ. ச. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஒரு இனாரிபிகேஷன். சிம்பலைப் பற்றி. அங்கீகரிக்கப்பட்ட அர சியல் கட்சியின் சின்னங்களைப் பஞ்சாயத்து தேர்தலிலும் ஒதுக்க வேண்டுமென்ற பிரச்னையைக் கிளப்பியிருக்கி றேன். அது பற்றிக் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர்கள் கூட் [illegible] அடிப்படையில் தீர்மானிக் [illegible] வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் [illegible]: "தமிழ் நாடு 1978-ம் ஆண்டு உள்ளாட்சி [illegible] சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட [illegible] பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1978) ஆய்வுக்கு [illegible] கொள்ளப்பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேர வையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "1978 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1978) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 4/1978). ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர் கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 4/1978).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1978) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறை வேற்றப் பெற்று சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1.

THE HON. THIRU K. KALIMUTHU: Sir, I move—"That in sub-clause 1 of clause 1, for the expression "Tamil Nadu Panchayats Amendment Act, 1978 substitute the expression" Tamil Nadu Panchayats (Second Amendment) Act 1978."

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

---

*1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/78) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(5) அரசினர் தனித் தீர்மானம்.

தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் பெறும் கடன்கள், வட்டி இவற்றை செலுத்த அரசு உத்திரவாத வரையறையை உயர்த்துவது குறித்து

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, "தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பெறும் குறுகிய காலக்கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன் ஆகியவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கும், அவற்றின் மீதான வட்டியைச் செலுத்துவதற்கும், தமிழ் நாடு அரசின் உத்திரவாத உயரளவு வரையறை ரூ. 80,40·00 இலட்சமென கூட்டுறவுத் துறையின் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாளிட்ட 466 ஆம் எண் அரசாணையில் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாலும்,

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் உயரளவு உத்திரவாத வரையறையை ரூ. 91,40·00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் என்று கருதப்படுவதாலும்,

தமிழ் நாடு, 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 53/1961) 73-D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உத்திரவாத வரையறையை ரூ. 91,40.00 இலட்சத்திற்கு உயர்த்த இப்பேரவை தீர்மானித்துள்ளது" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

[1978 சனவரி 5

திரு. மு. செல்வராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் குறித்து ஓரிரு நிமிடங்கள் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற கூட்டத் தொடரில்கூட நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போதிருந்த நெருக்கடியின் காரணமாக இந்த ஆவையில் நீண்ட காலக் கடனாக மாற்றியதன் காரணமாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநில வங்கிகள், நிலவள வங்கிகளின் நீண்டகாலக் கடனை ஒத்திப் போடுவதன் காரணமாக, சர்க்காரின் காரண்டி தேவைப்படுகிறது என்று கேட்டார்கள். ரூ. 80 கோடியிலிருந்து ரூ. 91 கோடி ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று இப்போது கேட்டிருக்கிறார்கள். உயர்த்துவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆண்டுக்கு ஆண்டு இப்படிப்பட்ட முறையை இந்த மாமன்றம் கையாண்டு கொண்டு வருகிறது. விவசாயிகளின் கடனுக்கு நிரந்தரமான பரிகாரம காணவிட்டாலும் தற்காலிகமாக, இப்படி மூன்று ஆண்டு உயர்த்துவதால், சென்ற ஆண்டு வாங்கி இருக்கின்ற கடன், இந்த ஆண்டு வாங்கியிருக்கிற கடன் என்று மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிக் கொண்டே போவதால் திரும்பவும் கடன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இப்படி திரும்பப் பெறுகின்ற போது, அடுத்த ஆண்டு கடனைச் செலுத்துகின்ற போது மூன்று ஆண்டுக் கடன்களும் ஒன்றாகச் சேர்ந்து கடன் பளு அதிகமாகிறது. இதுவரை, 2, 3 முறை தள்ளி கொடுத்திருக்கிறோம். அதனால் கடன் சுமை விவசாயிகளுக்கு அதிகரிக்கிறது.

[இரவு 7.20)

இதெல்லாம் ஒன்றாகச் சேரும்போது விவசாயிகளுக்குப் பெரிய சுமையாக ஆகிவிடுகிறது. எனவே, இதை மாநில அரசே பொறுப்பேற்று, இதை நீண்டகாலக் கடனாக, குறைந்தது 15 ஆண்டுகாலமாவது தள்ளி வைக்க வேண்டும். அல்லது இதை ரத்து செய்துவிட்டு, மாநில அரசே அந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு அப்பணத்தைக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இந்த மாமன்றத்திலே கடன் நிவாரணச் சட்டத்தின் மீது பேசும்போது சொன்னார்கள், இப்படிப்பட்ட ஏற்பாட்டை

[... சனவரி 5] [திரு. மு. செல்வராஜ்]

... வங்கி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று. ...ர்வ் பாங்கிக்குத் தேவையானது அவர்களுடைய பணமும் வட்டியும்தான். வாங்கிய கடன்களைக் கொடுக்க வேண்டும், வட்டியைக் கொடுக்கவேண்டும் என்பதிலே ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது, இப்படி ஆண்டுக்கு ஆண்டு தள்ளிக்கொண்டே போவதால், விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை. ஆகவே ஒட்டுமொத்தமாக பரிகாரம் காணவேண்டும் என்பதிலே அக்கறை செலுத்த வேண்டும் என்று இந்தக் கருத்தைச் சொல்லுகிறேன்.

எனவே, நிரந்தர பரிகாரம் காணும் வகையில்; இப்போதுள்ள கடன்களை நீண்டகால, 15 ஆண்டு கால கடன்களாக மாற்ற வேண்டும். மேலும் இப்போது இப்படி நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பதே புயல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டதால்தான். அதற்கு அனாவாரி சர்டிபிகேட்டை ரெவின்யூ அதிகாரிகள் கொடுக்க வேண்டும். சில இடங்களிலே அதிகாரிகள் சரிவர செயல்படவில்லை என்றால் கிராமமே பாதிக்கப்பட்டு விடும் அபாயம் இருக்கிறது. விவசாயிகள் பாதிக்கப்படும் நிலையைத்தான் குறிப்பிடுகிறேன்.

அது மட்டுமில்லாமல், எனக்குக் கிடைத்த தகவலின்படி, தென்னாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்ட அதிகாரியே அறிவித்திருக்கின்றார். அதே நேரத்திலே தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகள் புயலால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. அங்கெல்லாம் இந்த சான்றிதழைப் பெறுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. எனவே ஒட்டுமொத்தமாக இப்படிப்பட்ட அனாவாரி சான்றிதழை மாவட்ட ஆட்சித் தலைவரே வழங்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டால், ஆங்காங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, திரும்பவும் பயிரிட விவசாயிகளுக்கு உதவி அளித்து, மகசூலை விற்று பணத்தைத் திரும்பச் செலுத்த ஏதுவாக அமையும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u> : பேர துணைத் தலைவரவர்களே,

ஏற்கெனவே அரசு பொறுப்பேற்று இந்தத் தொகை அண்மையில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்ப விவசாயிகளுக்கு மேலும் கொஞ்சகாலம் கழி செலுத்தலாம் என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை இ அரசின் சார்பில் முன்மொழிந்திருக்கிறேன். இதற்கு மா மிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவினைத் தந்தமைக்க நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், ம பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தி செல்வராஜ் அவர்கள் 2 ஆலோசனைகளைச் சொன்னார்கள் ஒன்று, நாம் எப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற் னாலும், தமிழகத்திலுள்ள விவசாயிகள் மேலும் மே கடனாளிகளாகின்றார்கள் என்றார்கள். அதிலே அரசுக் எந்த விதமான முரண்பாடுள்ள கருத்தும் இல்லை.

என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவ கள் சொல்லிய கோரிக்கையை நிறைவேற்றுவதில் எவ்வள பெரிய சிக்கல் இருக்கிறது என்பதை அவர்களே அறிவா கள். காரணம் கூட்டுறவுத் துறையில் நீண்டகால அனுபவ பெற்றவர் அவர். அந்த அடிப்படையில் 15 ஆண்டுகால துக்கு இந்தக் கடனைத் தள்ளி வைப்பது என்பதோ அல்ல இருக்கிற கடனை ரத்து செய்து, ரிஸர்வ் பாங்கிக்குக் கொடு வேண்டிய தொகையை அரசே கொடுக்க வேண்டு என்பதோ இப்போதைக்கு முடியாத காரியம் என்ப அவருக்கே தெரியும்.

காரணம் அவ்வளவு பெரிய தொகை இன்று வரவேண்டி பாக்கியாக இருக்கிறது; என்றாலும் மாண்புமிகு உறுப்பின சொன்ன யோசனையை கருத்தில் ஏற்றுக் கொண்டு அ எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அதைச் செய்வோம் என் உத்தரவாதத்தை அவருக்கு கொடுத்து, இந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்குமாறு கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் முன்னுள்ள கேள்வி. "தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பெறும் குறுகிய காலக்கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன் ஆகியவற்றை திருப்பி செலுத்து

தற்கும், அவற்றின் மீதான வட்டியை செலுத்துவதற்கும், மிழ்நாடு அரசின் உத்தரவாத உயரளவு வரையறை 80,40·00 இலட்சமென கூட்டுறவுத் துறையின் 77 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாளிட்ட 466 ஆம் அரசாணையில் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தாலும் ;

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் உயரளவு உத்திரவாத வரையறையை ரூ. 91,40.00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் என்று கருதப்படுவதாலும்;

தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73 D பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் உத்திரவாத வரையறையை ரூ. 91,40.00 இலட்சத்திற்கு உயர்த்த இப்பேரவை தீர்மானித்துள்ளது."

அரசினர் தனித்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் இரவு 7-27 மணிக்கு பேரவை ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

249. Notification issued in G. O. Ms. No. 291, Prohibition & Excise, dated 14th October 1977, in regard to certain amendments to the Tamil Nadu Distillery Rules, 1960: [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

B. Reports, Notifications and other papers.

*32. The Madurai City Municipal Corporation (Second Amendment) Bill, 1977 (L. A. Bill No. 15 of 1977).

*33. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1977 (L. A. Bill No. 16 of 1977).

*34. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1977 (L. A. Bill No. 17 of 1977).

*35. The Tamil Nadu Panchayats (Extension of Term of Office) Second Amendment Bill, 1977 (L. A. Bill No. 18 of 1977).

*36. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Bill, 1977 (L. A. Bill No. 19 of 1977).

*37. The Coimbatore Municipal Council (Appointment of Special Officers) Second Amendment Bill, 1977 (L. A. Bill No. 20 of 1977).

*38. The Tamil Nadu Panchayats (Third Amendment) Bill, 1977 (L. A. Bill No. 21 of 1977).

---

* Despatched to Members on 3rd January 1978.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1978, ஜனவரி 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, " சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றையதின தேதியிட்ட வினாக்கள் பட்டியல் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) மாண்புமிகு உணவு அமைச்சர் பேரவைக்கு தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்களிடம் உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்கள்மீது ஒரு உரிமைப் பிரச்சினையை அளித்திருக்கின்றேன். அதை இங்கே எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறேன்.

''1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 5 ஆம் நாள் காலை சட்டமன்றத்தில் மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது மீனவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் விசைப் படகுகள் வழங்கப்பட்டன என்று குற்றஞ்சாட்டினார். அப்போது நான் குறுக்கிட்டு அதற்கு உதாரணம் கூற முடியுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் தன்னிடம் அதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருப்பதாகவும் அதில் ஒன்றிரண்டை கூறுவதாகவும் கூறிவிட்டு ஒரு விவரத்தைச் சொன்னார்கள்.

வேணுகோபால் என்கிற மாறன் என்பவருக்கு தி.மு.க. ஆட்சிக்காலத்தின்போது விசைப்படகு வழங்கப்பட்டது என்றும் அவர் மீனவர் இல்லை என்றும் குறிப்பிட்டார். விளக்கம் கேட்டபோதும் அவர் மீனவ வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரே நேரடியாக மீன் பிடிக்கும் தொழிலில் இல்லை என்று குறிப்பிட்டார். தி.மு.க. ஆட்சிக்காலம் என்றால் எந்த ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது என்று நான் மீண்டும் கேட்டேன். அப்போது 1967 முதல் 1969 வரை உள்ள புனிதமான அண்ணாவின் ஆட்சியில் இல்லை, அதற்குப் பின்னர் 1969-க்கும் 1976-க்கும் இடையே நடைபெற்ற தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் இவ்வாறு வழங்கப்பட்டது என்றும் இந்தக் குற்றச்சாட்டிற்கு தான் முழு பொறுப்பு ஏற்றுக் கொள்வதாகவும் ஆணித்தரமாகக் கூறினார்.

அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிற்குப் பொறுப் பேற்றுக் கொள்கிறேன் என்று கூறிவிட்டபடியால், அதில் மேலும் விவாதம் தேவை இல்லை என்று கூறி முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

உண்மையில் வேணுகோபால் என்ற மாறனுக்கு விசைப் படகு வழங்கப்பட்டது 1969-லிருந்து 1976 வரை என்ற காலத்திற்குள் இல்லை என்பது அரசு ஆவணங்களின் மூலமாகப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும். அமைச்சர் அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இருந்தும் தற்காலிகமான வெற்றியை மனதில் கருதிக்கொண்டு, 1969-க்கும் 1976-க்கும் இடையேதான் நடைபெற்றதாக அழுத்தந் திருத்தமாக உண்மைக்குப் புறம்பான ஒன்றை அவையில் கூறி உறுப்பினர்களை திசை திருப்பியிருக்கிறார்.

அவைக்கு வேண்டுமென்றே தவறான தகவல்களைத் தருவது அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. வேணுகோபால் என்ற மாறன் என்பவருக்கு எப்போது விசைப்படகு வழங்கப்பட்டது என்ற விவரத்தை அவரே கைப்பட எனக்கு எழுதியுள்ள கடிதத்தின் நகலை இத்துடன் தங்கள் பார்வைக்கு இணைத்திருக்கிறேன்.''

அதில் கூறியிருப்பது, 1962-ல்தான் வேணுகோபால் என்ற மாறனுக்கு விசைப்படகு வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கடிதம்—''இன்று சட்டமன்றக் காலை நிகழ்ச்சியில் (5—1—1978) நான் மீனவனே இல்லை என்று மாண்புமிகு மீன் இலாக்கா அமைச்சர் அவர்கள் கூறியதைக் கேட்டு வருந்தி தங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

நான் மீனவ குடியில் பிறந்தவன். என் தந்தை தூண்டியில் மீன் பிடித்து தொழில் செய்து வாழ்ந்து வந்தோம். எனக்கு 1962 ஆம் ஆண்டில் மீன் இலாக்காவினால் ஐ.பி. 66 என்ற விசைப்படகு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு மீன் இலாக்காவிலிருந்து எவ்வித படகும் நான் வாங்கவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

வேணுகோபால் என்னும் மாறன்.''

இதை அவையின் முன் வைத்து இதை உரிமை மீறுகிற நிலையில் உணவு அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்து தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் இந்த அவையிலே கூறிய வாதத்தின்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதன்பேரில் நான் சில தகவல்களை இந்த அவையில் கொடுத்தேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை மறுத்துக் கூறியதன் காரணமாக நான் என்னுடைய அறைக்குச் சென்ற பின்னால் அதைப்பற்றி நான் விசாரித்த நேரத்தில் எனக்குக் கிடைத்த தகவல்படி திரு. வேணுகோபால் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் 1962-ல் இந்தப் படகைப் பெற்று

இருக்கிறார். ஆனால் திரு. வேணுகோபல் என்பதற்குப் பதிலாக திரு. பாலசுப்பிரமண்யம் ஈ. ஐ. டி. பாரி கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர் 1973-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே படகைப் பெற்றிருந்த காரணத்தினாலே, தவறாக நிலையை புரிந்துகொண்டு, திரு. வேணுகோபால் என்கிற மாறன் இதை 1972-லே பெற்றிருப்பதாக நேற்று அவை யிலே என்னுடைய உரையில் சொல்லியிருக்கிறேன். ஆகவே, பிழை என்று தெரிந்தவுடன் தங்களுக்கு என்னுடைய பேச் சின் திருத்தத்தை எடுத்துக்கூறி, சட்ட மன்ற விதி 82-ன் கீழ் அறிக்கை அதாவது ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கி றேன். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் முடிவு எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர் களுடைய ஸ்டேட்மெண்டில்,

"இன்று காலையில் நான் திரு. வேணுகோபால் என் கின்ற மாறனுக்கு 1-பி, 66 படகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வழங்கப்பட்டதாகக் கூறினேன். தகவல் களை சரிப் பார்த்ததில் அந்தப் படகு 1962 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. 1972 என தட்டச்சுப் பிழை ஏற் பட்டதால் அதுபோன்று கூறினேன். குறிப்பில் மேற் கூறிய படகு 1962-ல் வழங்கப்பட்டது என திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்" என்று அறிவித்துள்ளார். நான் இதில் தீவிரமாக ஆராய்ந்ததில்,

Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie, if it can be substantiated, that would certainly bring the offence within the meaning of a breach of privilege. Other lapses, the mistakes do not come under this category, because every day we find that Ministers make their statements in which sometimes they make mistakes and which they correct afterwards. ஆகவே, இந்த உரிமைப் பிரச்னையை நான் இத்துடன் தள்ளி விடுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதிலே இல்லை. என்னுடைய தீர்ப்பிற்குப் பிறகு கிடையாது.

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங் களுடைய தீர்ப்புக்கு மாறாக நான் எதையும் சொல்ல விரும்ப வில்லை. அப்படிச் சொல்வதும் முறையல்ல என்பதை, அந்த மரபின் நிலை உணர்ந்தவன் என்கிற அளவில் நான் நிச்சய மாக இதைப் புரிந்து கொண்டிருக்கிறேன். எனினும், ஒரு அமைச்சர் தருகிற தகவல் தவறாகி விட்டது, எனவே அது 'இன்கரக்ட் ஸ்டேட்மென்ட்'.

ஆனால், திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் கேட்ட நேரத்திலும், நான் கேட்ட நேரத்திலும் அமைச்சர் அவர் கள் திரும்பத் திரும்ப அண்ணா ஆண்ட, அந்தப் புனிதர் ஆண்ட, இரண்டு ஆண்டு காலத்திலே அல்ல, 69-லிருந்து 76 ஆம் ஆண்டிற்குள்ளாகத் தான் இந்த தவறு நடைபெற் றது என்பதைத் திரும்பத் திரும்ப சொன்னார்கள். ஆகவே, அதை 'இன்கரெக்ட் ஸ்டேட்மெண்டு' என்று சொல்லிவிட முடியாது. வேண்டுமென்றே முன்பிருந்த கழக ஆட்சியைக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சொல் லப்பட்டது. எனவேதான் இதை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டுவந்தேன்.

தங்கள் தீர்ப்பிற்குப் பிறகு, அண்ணா அவர்களுடைய வழி வந்தவன் என்கின்ற முறையில் பெருந்தன்மையோடு, இந்த அளவில் விட்டுவிடுவதற்கு ஒத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பதில் சொல்கின்றபோது ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்மீது வேண்டுமென்றே குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு சொன்னதாக எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் சொல்கி றார்கள். ஆனால், நான் ஒன்றை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்போது ஆதாரங்கள் சேர்த்து வைத்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் இம்மாதிரி கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படிப் படகுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : இப்படி தகுதியற்றவர்களுக்கு கழக ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்டது என்று சொன்னதாலேதான் தகராறே ஆரம்பமாயிற்று. நேற்று அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னைக்கு விளக்கம் சொன்னார்கள். அதற்குமேல் சென்றிருக்கத் தேவையில்லை. நான் ஏழை எளிய மீனவர்களின் சர்ச்சையை சமரசமாக தீர்த்து வைக்க இந்த அரசு தவறிவிட்டது என்று சொன்னேன். அதற்கான முயற்சிகளை இந்த அரசு தீவிரமாக எடுக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதோடு நிறுத்தியிருக்கலாம். இந்த நிலை ஏன் ஏற்பட்டது தெரியுமா என்று அவரே குற்றஞ்சாட்டத் தொடங்கி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலே இப்படி தவறான முறையிலே படகுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லத் தொடங்கினார். ஆனால், இப்போது இந்த வேணுகோபால் என்பவருக்கு பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் ஆண்ட காலத்திலே இந்த விசைப் படகு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்டுவதோடு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே குறைகள் ஏற்பட்டது என்ற நோக்கத்தோடு பேசினார். அதனால்தான் இந்தத் தர்க்கமே நடைபெற்றது.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைத் தலைவர் தீர்ப்பு வழங்கிய பின்னால் அதையொட்டி மேலும் பேசிக் கொண்டு, விளக்கிக் கொண்டு போவது நம்முடைய மரபுக்குப் புறம்பாக இருக்கும். ஏற்கெனவே சொன்னேன். இன்னொன்றும் கூட இருக்கிறது; படித்துச் சொல்ல முடியும். வேண்டாம். தயவு செய்து, எதிர் கட்சித் தலைவர் அவர்கள், அலுவல் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பவேண்டாம்.

(ஆ) முரசொலி நாளிதழில் ஓர் உறுப்பினரின் பேச்சை தவறாக வெளியிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எஸ். ஆர். இராதா அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை 6—1—1978 முரசொலி நாளிதழில், 5—1—1978 அன்று பேரவையில் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் திரு. சுப்பு அவர்

கள் பேசிய பேச்சைப் பத்திரிகையில் பிரசுரிக்கும்போது 'அமைச்சரின் உறவினருக்கு அரசாங்க காண்டிராக்ட்' என்று கொட்டை எழுத்தில் தலைப்புக் கொடுத்து பொது மக்கள் மனதில் தவறாக, உண்மைக்கு மாறாக பிரசுரிக்கப் பட்டுள்ளது. இது அவையின் உரிமையைப் பாதிக்கக்கூடிய உரிமை மீறல் பிரச்சினை' என்று கொடுத்திருக்கிறார்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் பேசும்போது பல்வேறு விவரங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அவர் சொல்லுகிற விவரங்களை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அமைச்சருடைய உறவினருக்குக் காண்டிராக்ட் கொடுத்தார்கள் என்பதைச் சொல்லுகிற நேரத்தில், 'அப்படி இருக்கலாம். நான் அப்படி அதை நம்பிக் கொண்டிருக்கலாம். அப்படி இருக்கக்கூடாது என்று ஆசைப்படுகிறேன்' என்றெல்லாம் அவர் வார்த்தையை மிக ஜாக்கிரதையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். நான் அந்த நேரத்தில் இந்த மன்றத்தில் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜை அழைத்து ஏதோ அவரிடத்தில் சொல்லி, அவர் சுப்பு அருகில் போய் உட்கார்ந்து கொண்டு, அவர் பேச்சை ஆரம்பித்த பின்னால்.......

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. நான் அவையில் செல்வராஜை அழைத்து ஏதோ சொல்லிக் கொடுத்து சுப்பு அவர்களிடம் சொல்லச் சொன்னேன் என்ற பொருள்பட பேசுவது முறையா? இதையெல்லாம் தாங்கள் அனுமதிக்கலாமா?

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வந்தேன் என்பதைச் சொல்வதற்குள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய சந்தேகம் என்னவென்றால், அவர் சொல்லி சுப்பு அவர்கள் சொல்லுகிறார் என்பதல்ல; சுப்பு அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார். 'அமைச்சரின் உறவினருக்குத் தந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்; சந்தேகப்படுகிறேன்; அப்படி இருக்கக் கூடாது என்று விரும்புகிறேன்' என்று சொன்னார். நான்

பல்வேறு அமைச்சர்களையும் கேட்டுப் பார்த்தேன். அப்படி ஏதாவது காண்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டுப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறப்பட்டிருக்கிற பிரச்சினை என்ன, அது எவ்வாறு மீறப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மட்டும் பேசிவிட்டு அமருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா ; இன்று காலை முரசொலி பத்திரிகையில் கொட்டை எழுத்தில் 'அமைச்சருடைய உறவினருக்கு அரசாங்க காண்டிராக்ட்' என்ற தலைப்புப் போட்டு 'சட்டமன்றத்தில் சுப்பு அம்பலப்படுத்தினார்' என்ற பெரிய தலைப்பிட்டு இன்றைக்கு முரசொலி பத்திரிகையில் வந்திருக்கிறது. இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்னும் முடிவு பெறாத நிலையில் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு முரசொலி பத்திரிகைச் செய்தியை சாதாரணமாக யார் படித்தாலும் சரி—அம்பலமாகிவிட்டது; ஊழல் நிருபணமாகிவிட்டது, சட்டமன்றத்தில் சொல்லி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று நினைக்கக்கூடிய வகையில் தவறான தகவலை வெளியிட்டிருக்கிறார்கள். இப்படி அவையின் உரிமையை மீறுகிற வகையில் இந்தச் செய்தி போடப்பட்டிருக்கும் காரணத்தால் இது அவை உரிமையை மீறிய பிரச்சினை என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஒரே ஒரு வார்த்தை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம். உங்களைப் பற்றி அல்ல.

திரு. க. சுப்பு : ஒரு சிறு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையின்மீது தான் உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. அதிலே உங்களுக்குச் சம்பந்தம் இல்லை.

திரு. இராதா அவர்கள் அவையின் உரிமையைப் பாதிக்கக் கூடிய வகையில் முரசொலி பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது என்று உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதுபற்றிய தகவலைச் சேகரித்த பிறகு தீர்ப்பளிக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினை ஒன்றுமே நடக்கவில்லை. உரிமை மீறல் முடிந்துவிட்டது.

திரு. சி. ஆறுமுகம் : பேசவிட்டால்தானே என்ன என்று சொல்லலாம். இதர அலுவல்களுக்குப் போவதற்கு முன்பு பி.ஏ.சி. யில் செய்யப்பட்ட முடிவுகளைப் பற்றி அவை முன்னவரால் தீர்மானம்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் சொல்லியாகிவிட்டது. இதிலே ஒழுங்குப் பிரச்சினை இல்லை. உட்காருங்கள்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நேற்றைய தினம் இங்கே உறுப்பினர் திரு. ரகுமான் கான் பேசியபோது சென்னையில் நடந்த ஒரு கொலை வழக்கில் தனக்குத் தகவல் தெரிந்ததாக குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. உட்காருங்கள். இங்கே நடக்கிற பிரச்சினையாக இருந்தால்தான் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முடியும்.

(3) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. அ.மா. பரமசிவன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. அ.மா. பரமசிவன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

(4) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற எங்கள் கட்சித் தலைவரின் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் நான் பேசியபோது உணவுத் துறையை பற்றி பேசுவதாக இருக்கிறேன் என்று சொன்னேன். ஒருவேளை உணவு அமைச்சர் வெளியே சென்று இருந்தாலும் அவை முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், என் பேச்சை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவுத் துறைப்பற்றி நான் சொல்வதற்கு முன் 2,3 வரிகளிலே சிலவற்றைச் சொல்லி விட்டு பிறகு என் பேச்சைத் துவக்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய முன்தினம் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சென்னையிலே நடைபெறுவதாக இருந்த வள்ளுவர் கோட்ட விழாவினையொட்டி திருத்தணியிலே தயாரிக்கப்பட்டு வந்த தங்கத் தேரை சென்னையிலே பவனி விட்டு அன்றைய முதலமைச்சர் அந்த தங்கத் தேரிலே ஊர்வலமாக வரவேண்டுமென்று திட்டம் போட்டு இருந்தார்கள் என்று ஒரு தவறான தகவலைத் தந்தார்கள். அப்படிப் பட்ட எந்தத் திட்டமும் இல்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அந்த தங்கத் தேர் செய்யும் வேலை பூர்த்தியடையவே இல்லை. இன்னொரு காரணம் அப்படி அது பூர்த்தி அடைந்திருந்தாலும் ஆள் ஏறி உட்கார்ந்து வருகிற அளவிற்கு உள்ள தங்கத் தேராக இல்லை. உற்சவ மூர்த்திகள், விக்கிரகங்கள் வைத்து ஊர்வலமாக வருகின்ற நிலையில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இப்படிப்பட்ட தவறான பிரச்சாரத்தைச் செய்ய வேண்டாமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–20]

ஏதோ எங்கள்மீது குற்றஞ்சாட்டிவிட்டார்களே என்பதற்காக திரும்ப குற்றஞ்சாட்ட வேண்டும் என்ற எரிச்சலால், அந்த உணர்ச்சியால் நான் உந்தப்படவில்லை. நடைபெற்றிருக்கின்ற சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்வதின் காரணமாகஅவற்றைத்தீர்த்துக்கொள்வதற்கானவாய்ப்பு ஏற்படும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். ஆனால் எனது பேச்சின் முடிவில் நான் ஆளும்கட்சி வரிசையிலிருந்து இதைப் பேசுவதாகவும், அமைச்சர் அவர்கள் எதிர்கட்சி வரிசையில் இருந்திருப்பார் என்ற நினைப்பிலும் அவர்களே முடிவு செய்து பாருங்கள். இந்த ஆட்சியில், தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் தேதி கலைக்கப்படுகிறது. (மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கலைக்கப்பட்டது, ஜனவரி 31-ம் தேதி. 3-ம் தேதி கமிஷன் அமைக்கப்பட்டது) ஆம், ஜனவரி 31-ம் தேதி கலைக்கப்பட்டது, நமது சுற்றுலாத் துறை அமைச்சர் பிப்ரவரி 3-ம் தேதி என்று குறிப்பிட்டது—கமிஷன் போட்டதை சொல்கிறார்கள். கமிஷனைப் பற்றியும் சொல்லுகிறேன், அதைப்பற்றி பேசுவதற்கு இப்போது நேரமிராது, நேரம் இருந்தால் அதைப்பற்றியும் பேசுவேன்.

இப்படி ஜனவரி 31-ம் தேதி தி. மு. க. அரசு கலைக்கப்படுகிறது. இதற்கு முன்னால், 1967-ம் ஆண்டு கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே உணவுத் துறையில் ஒன்றை செய்தார்கள், அதாவது லெவி சர்க்கரை மட்டும் போதாது, வெளி சர்க்கரையும் வாங்கி வைக்க வேண்டும் என்ற தவறான கொள்கையின் அடிப்படையில் வாங்கி வைக்கப்பட்டது, பின்னால், தேவைக்கும் மீறி மிஞ்சி விட்டதால், வாங்கப்பட்ட வெளி சர்க்கரையை நஷ்டத்திற்கு விற்றார்கள். அப்படி விற்றதையும் டெண்டர்கள் எதுவும் கோரப்படாமல், நான்கு பேர்களை—தனிப்பட்ட வியாபாரிகளை கூட்டி வைத்துக் கொண்டு நேருக்கு நேர் விலை பேசி விற்று விட்டார்கள். அது கூட ஆச்சரியம் இல்லை. இது சம்பந்தமாக அன்றைய தினம் இருந்த பைலையே காணோம், நான் உணவுத் துறை பொறுப்பு ஏற்றுக்கொண்ட நேரத்தில் அந்த பைல் கிடைக்குமா என்று துருவித் துருவிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. அந்த பைலையே தீர்த்து விட்டார்கள் என்று தெரிந்தது. அந்தக் குற்றச்சாட்டை இப்போது சுமத்த விரும்பவில்லை, அந்த அளவுக்கு இந்த உணவுத் துறையில் இருந்தவர்களுக்கு வெளி சர்க்கரையை வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி இருந்தது.

[1978 ஜனவரி 6

(4) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற எங்கள் கட்சித் தலைவரின் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைய தினம் நான் பேசியபோது உணவுத் துறையை பற்றி பேசுவதாக இருக்கிறேன் என்று சொன்னேன். ஒருவேளை உணவு அமைச்சர் வெளியே சென்று இருந்தாலும் அவை முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், என் பேச்சை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவுத் துறைப்பற்றி நான் சொல்வதற்கு முன் 2,3 வரிகளிலே சிலவற்றைச் சொல்லி விட்டு பிறகு என் பேச்சைத் துவக்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய முன்தினம் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சென்னையிலே நடைபெறுவதாக இருந்த வள்ளுவர் கோட்ட விழாவினையொட்டி திருத்தணியிலே தயாரிக்கப்பட்டு வந்த தங்கத் தேரை சென்னையிலே பவனி விட்டு அன்றைய முதலமைச்சர் அந்த தங்கத் தேரிலே ஊர்வலமாக வரவேண்டுமென்று திட்டம் போட்டு இருந்தார்கள் என்று ஒரு தவறான தகவலைத் தந்தார்கள். அப்படிப் பட்ட எந்தத் திட்டமும் இல்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அந்த தங்கத் தேர் செய்யும் வேலை பூர்த்தியடையவே இல்லை. இன்னொரு காரணம் அப்படி அது பூர்த்தி அடைந்திருந்தாலும் ஆள் ஏறி உட்கார்ந்து வருகிற அளவிற்கு உள்ள தங்கத் தேராக இல்லை. உற்சவ மூர்த்திகள், விக்கிரகங்கள் வைத்து ஊர்வலமாக வருகின்ற நிலையில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இப்படிப்பட்ட தவறான பிரச்சாரத்தைச் செய்ய வேண்டாமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1978 ஜனவரி 6] [திரு. ப. உ. சண்முகம்]

[முற்பகல் 9–20]

ஏதோ எங்கள்மீது குற்றஞ்சாட்டிவிட்டார்களே என்பதற்காக திரும்ப குற்றஞ்சாட்ட வேண்டும் என்ற எரிச்சலால், அந்த உணர்ச்சியால் நான் உந்தப்படவில்லை. நடைபெற்றிருக்கின்ற சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்வதின் காரணமாகஅவற்றைத்தீர்த்துக்கொள்வதற்கானவாய்ப்பு ஏற்படும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். ஆனால் எனது பேச்சின் முடிவில் நான் ஆளும்கட்சி வரிசையிலிருந்து இதைப் பேசுவதாகவும், அமைச்சர் அவர்கள் எதிர்கட்சி வரிசையில் இருந்திருப்பார் என்ற நினைப்பிலும் அவர்களே முடிவு செய்து பாருங்கள். இந்த ஆட்சியில், தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் தேதி கலைக்கப்படுகிறது. (மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கலைக்கப்பட்டது, ஜனவரி 31-ம் தேதி. 3-ம் தேதி கமிஷன் அமைக்கப்பட்டது) ஆம், ஜனவரி 31-ம் தேதி கலைக்கப்பட்டது, நமது சுற்றுலாத் துறை அமைச்சர் பிப்ரவரி 3-ம் தேதி என்று குறிப்பிட்டது—கமிஷன் போட்டதை சொல்கிறார்கள். கமிஷனைப் பற்றியும் சொல்லுகிறேன், அதைப்பற்றி பேசுவதற்கு இப்போது நேரமிராது, நேரம் இருந்தால் அதைப்பற்றியும் பேசுவேன்.

இப்படி ஜனவரி 31-ம் தேதி தி. மு. க. அரசு கலைக்கப்படுகிறது. இதற்கு முன்னால், 1967-ம் ஆண்டு கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே உணவுத் துறையில் ஒன்றை செய்தார்கள், அதாவது லெவி சர்க்கரை மட்டும் போதாது, வெளி சர்க்கரையும் வாங்கி வைக்க வேண்டும் என்ற தவறான கொள்கையின் அடிப்படையில் வாங்கி வைக்கப்பட்டது, பின்னால், தேவைக்கும் மீறி மிஞ்சி விட்டதால், வாங்கப்பட்ட வெளி சர்க்கரையை நஷ்டத்திற்கு விற்றார்கள். அப்படி விற்றதையும் டெண்டர்கள் எதுவும் கோரப்படாமல், நான்கு பேர்களை—தனிப்பட்ட வியாபாரிகளை கூட்டி வைத்துக் கொண்டு நேருக்கு நேர் விலை பேசி விற்று விட்டார்கள். அது கூட ஆச்சரியம் இல்லை. இது சம்பந்தமாக அன்றைய தினம் இருந்த பைலையே காணோம், நான் உணவுத் துறை பொறுப்பு ஏற்றுக்கொண்ட நேரத்தில் அந்த பைல் கிடைக்குமா என்று துருவித் துருவிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. அந்த பைலையே தீர்த்து விட்டார்கள் என்று தெரிந்தது. அந்தக் குற்றச்சாட்டை இப்போது சுமத்த விரும்பவில்லை, அந்த அளவுக்கு இந்த உணவுத் துறையில் இருந்தவர்களுக்கு வெளி சர்க்கரையை வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி இருந்தது.

நான் உணவு இலாகாவை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இப்படி ஓப்பன் மார்க்கட்டில். வெளி சர்க்கரையை வாங்கக் கூடாது என்று உத்தரவிட்டேன். நான் உணவு அமைச்சர் என்கின்ற முறையில் அப்போதிருந்த முதலமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு அந்த உத்தரவைப் போட்டேன். ஆனால், அதற்குப் பின்னால் தமிழக அரசு ஓப்பன் மார்க்கட்டில் வாங்கியிருக்கிறார்கள். ஏறக்குறைய 2000 டன் வாங்கியிருக்கிறார்கள். தனியார்களிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். சித்தூருககுப் போய் வாங்கியிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது டெண்டர்கள் போட்டார்களா என்றால் இல்லை. ஆலைக்கு ஆலை சென்று அவர்கள் நினைத்த விலைக்கு 490, 493, 494 இப்படி 2000 டன்னுக்கு மேலாக வாங்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் நான் அதை ஊழல் என்று சொல்லியிருக்க முடியாதா? ஊழல் என்ற வார்த்தை என்ன எங்கள் வாயில் நுழையாதா ? என்ன எங்கள் வாயில் நுழையக்கூடாத வார்த்தையா ? வேண்டுமென்றால் இதை ஊழல் என்று சொல்லியிருக்க முடியாதா ? லஞ்ச லாவண்யம் நடைபெற்றிருக்கிறது என்று கூறிவிட முடியாதா ? இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை நிச்சயமாக விசாரித்தாக வேண்டும். இப்படி வாங்கப்பட்ட 490 ரூபாய், 493 ரூபாய், 494 ரூபாய் என்று வாங்கப்பட்ட சர்க்கரையை—இங்கே மிகத் துடிப்பான பல இளைஞர்கள் இருக்கிறார்கள்—பண்ணை சேதுராமன் போன்றவர்கள், வின்சென்டைப் போன்றவர்கள், கூத்தகுடி சண்முகம் போன்றவர்கள், ஆம், எதையும் துருவித் துருவி பார்க்கக்கூடியவர் கூத்தகுடி சண்முகம் அவர்கள், அவர்களைப் போன்றவர்கள், மணிமாறனைப் போன்றவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள், அவர்களுக்காக சொல்லுகிறேன், இப்படி வாங்கப்பட்ட வெளி சர்க்கரையை இன்றைய தினம் 310 ரூபாய்க்கு விற்கிறார்கள். மூட்டைக்கு 185 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, யார் இதற்குப் பொறுப்பு ? நாங்களா இதற்கு பொறுப்பு; என்று இந்த இலாகா தட்டிக் கழிக்க முடியாது.

இப்படி நடைபெற்ற தவறை இதற்கு முன் இந்த அவையில் சொல்லியிருக்கலாம், இது தொடர்பான விவாதங்கள் வந்தபோது குறிப்பிட்டிருக்கலாம், எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், இப்போது நான் கூறுகின்றவைகளுக்கு பதில் கிடைக்குமா ? மூட்டை 310 ரூபாய்க்கு என்று 185 ரூபாய் நஷ்டத்தில் சர்க்கரையை விற்றிருக்கிறார்கள், சர்க்

கரையை எங்கே போய் வாங்கியிருக்கிறார்கள் ? தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளே இல்லையா ? சித்தூரில் போய் வாங்க வேண்டியதின் அவசியம் என்ன வந்துவிட்டது? தமிழ்நாட்டில் கூட்டுறவு ஆலைகளே இல்லையா, ஏன் தனியார்களிடத்தில் போய் வாங்கவேண்டும் ? தமிழ்நாட்டில் இருக்கின்ற கூட்டுறவு ஆலைகளில் கொஞ்சம் வாங்கியிருக்கிறார்கள், நான் மறுக்கவில்லை. சித்தூரில் ஏன் வாங்க வேண்டும் ? ஆந்திரா மாநிலத்திலேயிருந்து வாங்குவதற்கு என்ன காரணம்? அதை யார் கேட்பது ? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இது நடந்திருந்தால், இம்மாதிரி தவறு நடந்திருந்தால் இந்நேரம் எத்தனைக் குற்றச் சாட்டுக்கள் வந்திருக்கும், எவ்வளவு விசாரணைகள் வந்திருக்கும், என்னென்ன பாய்ந்திருக்கும் இந்தப் பாவியின்மீது? ஆனால் இன்றையதினம் இதைப்பற்றி சொல்வதற்கு. கேட்பதற்குக்கூட நாட்டிலே நாதியில்லாமல் போய் விட்டதே. எவ்வளவு ரூபாய் நஷ்டம்? இந்தப் பெருத்த நஷ்டத்திற்கு காரணம் யார்? பொறுப்பாளி யார்?

இதுமட்டுமல்ல. குழந்தைகளுக்குத் தேவையான ம் பவுடரை, பேபி ஃபுட் ஸ்டாக் வைத்தார்கள். அதை மது. காலத்தில் விற்காமல். அவ்வளவு ஸ்டாக்கும் ல்லை. unfit for human consumption என்று ெ சர்ட்டிபிகேட் கூட கொடுத்த பிறகு ஆலை அதிபர்களை க்கச் பிட்டு, நீங்கள் ஓப்பன் மார்க்கெட்டிலே விற்றுக் கொ நல் கள் என்று. ஃப்ளவர் மில் அதிபர்களைக் கூப்பிட்டு கோது ? யை ஓபன் மார்க்கெட்டிலே விற்றுக் கொள்ளுங்கள் எ சொல்லி, அதற்குக் கைம்மாறாக இதை ஆலை விலைக்கு எடுத்து கொள்ளுங்கள் என்று எவ்வளவு டப்பாக்களை வாங்கிக் கடலிலே கொட்டினார்கள், மண்ணிலே கலந்தார்கள்? அது தேசிய சேதம் மட்டுமல்ல. இவ்வளவு தவறுக்கு இடம் கொடுத்தது யார் ?

இன்றையதினம் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன், திராவிடமுன்னேற்றக் கழகப் ஆட்சியிலே இருந்தபொழுது 1975-ஆம் ஆண்டு, அமைச்சரவையைக் கூப்பிட்டு வைத்து விவாதித்து, millets வாங்கலாம், சிறுதானியங்களை, சோளம், கம்பு, கேழ்வரகு, ஆகியவற்றை மற்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கிக் கொள்ளலாம்

காக வாங்கி வைத்தோம். பிறகு ஆட்சி இரண்டு மாதங்களிலே கலைக்கப்பட்டு விட்டது. அப்படி வாங்கி வைத்த உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படவில்லை. அது எங்களுடைய குற்றம் இல்லை. அவ்வாறு விநியோகித்திருந்தால் அவைகள் பாழாகியிருக்காது, மண்ணாகியிருக்காது. அவ்வளவு பொருட்களும் மண்ணானதற்குப் பிறகு சல்லடை போட்டுச் சலித்து எடுத்துவிட்டு மிச்சமிருப்பதை டெண்டர் கேட்டு விற்றிருக்கிறார்களா? யாரையாவது நான்கு பேர்களை கூப்பிட்டு டெண்டர் கேட்டார்களா? என்ன விலைக்கு எடுத்து கொள்கிறீர்கள் என்று கேட்டார்களா? அப்படி கேட்கவில்லையே, என்ன காரணம்? மைசூரிலே இருக்கின்ற ஒரு வியாபாரியைக் கூப்பிட்டு, இந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கொடுப்பதற்கு என்ன காரணம் ? ஏன் அவ்வாறு நடந்தது ? எப்படிச் செய்யலாம் இந்தக் காரியத்தை ? இதற்குப் பொறுப்புள்ளவர்கள் பதில் சொல்லித் தீர வேண்டும். நான் ஸசொல்வதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன், சொந்த விசாரணையிலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், பெற்ந்கார்டுகள் இருக்கின்றன, ஆதாரங்களை மறுக்க முடியாது.
சம்பந்த
தாக வேலைட்டுமல்ல, Wheat by-products அதையும் ஸ்டாக்
ரூபாய், 4ர்கள். அதையும் consumption–க்குப் பயன்படுத்த
இங்கே மீது, சாப்பிட்டால் விஷம் என்று சொல்லி அவ்வள
பண்ணை வாரி குப்பையிலே கொட்டினார்கள்.
வர்கள்,
யும் துனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த இலாக்காவில்
அவர்கட்ட நஷ்டம் ரூபாய் ஐந்து கோடிக்கு மேல். இப்படி
போண் கோடிக்கு மேல் ஏற்பட்ட நஷ்டத்திற்குப் பொறுப்பாளி
சொ ? அதைக் கண்டு பிடிக்க வேண்டும். எங்கே குற்றம்
இன்டபெற்றாலும், எங்கே ஊழல் நடைபெற்றாலும், எங்கே
1 தவறு நடைபெற்றாலும் விட மாட்டோம். கண்டுபிடிப்போம், கண்டுபிடிப்போம் என்று சொன்னவர்கள் இந்தத் தவறுக்குக் காரணமானவர்களையும் கட்டாயம் கண்டு பிடித்துத் தீர வேண்டும்.

நான் இன்னும் ஒன்றை தங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இதை யாரோ செய்திருக்கக்கூடும் என்று ஒருவேளை பதில் சொல்லக்கூடும். நேற்றையதினம் இங்கே நடைபெற்ற விவாதத்தில் கடுமையாக வாக்குவாதங்கள் நடைபெற்றது. நெல்லுக்கு விலை கொடுப்பதைப்பற்றி. 89 ரூபாய் கொடுப்பீர்களா, அதற்கு

மேல் கொடுப்பதாக முதலமைச்சர் சொன்னாரே கொடுப்பீர்களா என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் எட்மண்ட் அவர்கள் பதில் சொல்லும் போது மத்திய அரசாங்கம், அரசாங்கம் வாங்கக்கூடாது என்று உத்தரவிட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அரசுக்குத்தான் அந்த உத்தரவே தவிர, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கருதினால் வாங்கியிருக்கலாம், கொடுக்கலாம், கொடுக்க முடியும். நீங்கள் வாங்கியிருந்தாலும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம்தான் வாங்க வேண்டும். அதை ஆட்சேபிக்க முடியாது. ஆடிட் அப்ஜெக்ஷன் எப்பொழுது வந்தது என்றால், இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், நெல்லை, அரிசியை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கும்பொழுது, கொடுத்த போனஸ், வண்டிச் செலவு ஆகியவற்றை நாங்கள் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி ஏன் கொடுத்தீர்கள் என்று வந்ததே தவிர வேறல்ல. தைரியத்தோடு ஒத்துக்கொள்ளலாம், விவசாயிகளுக்குக் கொடுத்தோம் என்று. அதில் தவறுகூட இல்லை, அதில் எந்தக் குற்றமும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பழியை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. அதே பழியை ஏற்றுக்கொள்வதிலே தவறு இல்லை.

நான் இந்த அவைக்குச் சொல்கிறேன். அதை மறுக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம் இந்த இலாக்காவை. நெல் வாங்கியிருக்கிறார்கள், எங்கே? தமிழ்நாட்டிலேயா ? அரியானாவில், ஒரிசாவில் நெல்லையும், அரிசியையும் வாங்கி வைத்திருக்கிறார்கள், என்ன விலைக்கு ? என்னுடைய குற்றச்சாட்டு அதுதான். டெண்டர் கேட்டார்களா ?

(முற்பகல் 9-30.)

யார் போய் வாங்கியது ? திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் வாங்கியிருந்தால் இந்நேரம் சும்மா விட்டிருப்பார்களா ? இந்த அவையே அதிர்ந்திருக்காதா ? மகஜர் போயிருக்காதா ? தந்திகள் பறந்திருக்காதா ? வாங்கியது யார் ? எவ்வளவு வாங்கினார்கள் ? அரியானாவிலிருந்து 15,000 டன் நெல் வாங்கினார்கள். என்ன விலையில் ? ஒரு குவிண்டால் ரூ. 91-லிருந்து, ரூ. 93வரையில். நெல் ரூ. 91-லிருந்து ரூ. 93 வரையில். அரியானாவில், நவம்பர்,

டிசம்பரில்—சென்ற நவம்பர், டிசம்பரில் இரண்டு மாதங்களுக்கு முன்பு. நியாயம்தானா? முறைதானா? தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ரூ. 89 கொடு என்று கேட்டால் முடியாது என்கிறார்கள். நேற்று உணவு அமைச்சர் என்னைக் கேட்டார். மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும்; குறுவைக்கு ரூ. 89 கொடுக்கலாமா என்று கேட்டார். நீங்கள் கொடுத்தது குறுவைக்கு—நெல்லுக்கு. இன்றைய தினம் மனச்சாட்சியைத் தொட்டு அவர் சொல்லட்டும். அரியானாவிலிருந்து வாங்கியது நியாயம்தானா? எப்படி அது நியாயமாக இருக்கும்? அந்த நெல்லைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவருவதென்றால், குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 வண்டிச்சத்தம் குறைந்த பட்சம் ஆகிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அரியானாவிலிருந்து ரூ. 91க்கு வாங்கியதாகச் சொன்னார்கள். ரூ. 91-க்கு வாங்கவில்லை. அவர்கள் அங்கே ரூ. 91-க்கு வாங்குவதற்குப் பதிலாக, தமிழ்நாட்டிலிருந்து இருக்கிற குறுவை நெல்லை, இங்கேயிருக்கிற விவசாயிகளிடமிருந்து வாங்கக் கூடாதா என்று—ஒரு பிரச்னையைக்—கேட்டார்கள். நாங்கள் வாங்கவில்லையா? நாங்களும் குறுவையைத் தானே வாங்கினோம் என்று அவர்கள் வாதிட்டார்கள். 1975ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருந்த காலத்தில், ரூ. 15 போனஸ் கொடுத்து, 74-லே வாங்கினார்கள். 74-லே அவர்கள் வாங்கிய குறுவையும் இப்பொழுது 77 இறுதியிலே அறுவடை செய்திருக்கும் குறுவை நெல்லும் ஒரே தரம் உள்ளது தானா என்பதை மாண்புமிகு உறுப்பினர் முதலிலே சொல்லட்டும். He is placing different angles of argument அதற்காகத்தான் நான் சொல்கிறேன். 1974-லே அவர்கள் குறுவை நெல்லை வாங்கும்போது நாட்டிலே வெள்ளம் இல்லை. தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம் பாய்ந்து, விளைந்த நெல், தண்ணீருக்குள் அமுக்கப்பட்டு, 10 நாட்கள், 15 நாட்கள் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கவில்லை. நெல்லினுடைய ஈரம் அதிகமாக இல்லை. நெல்லினுடைய கலர்—நிறம்—மோசமாக இல்லை; ஆகவே நீங்கள் ரூ. 89 கொடுத்து வாங்கினீர்கள். ஆனால். இன்றைக்குக் குறுவை நெல்லை அந்த விலை கொடுத்து வாங்க முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என்னுடைய காலத்தை, பேசுகின்ற நேரத்தை, தயவுசெய்து குறைத்து விடாதீர்கள். நான் இப்பொழுதுள்ள நெல்லை வாங்குவதற்கு என்ற பிரச்னைக்குள்ளே அதிகமாக நுழையவில்லை. அமைச்சர் இழுத்துவிட்ட காரணத்தால் சொல்கிறேன். நெல் வாங்கும்போது மாய்ஸ்ச்சர் கட்டும் போடுகிறோம், சேதாரத்திற்கு இவ்வளவு என்று குறைக்கிறோம். மாய்ஸ்ச்சர் கட்டும், சேதாரத்திற்கு இவ்வளவு என்று போட்டு விட்டது..........

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட்: உங்கள் காலத்திலே, ஈரப்பசைக்கு, சேதாரம் கொடுத்தது 15 சதவிகிதம் நாங்கள், தஞ்சையிலே, உள்ள நிலைமையைக் கணக்கிட்டு, 30 சதவிகிதம் வரை ஈரப்பசைக்கு, சேதாரம் என விஸ்தரித்திருக்கிறோம்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நீங்கள் 15 சதவிகிதம் குறைத்திருக்கிறீர்கள், நாங்கள் 30 சதவிகிதம் குறைத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் குறைத்ததைவிட அதிகமாகக் குறைத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, தாராளமாக இங்கே வாங்கியிருக்கலாம். அமைச்சரே வம்பிலே வந்து மாட்டுகிறார்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நான் வம்பிலே மாட்டவில்லை. உறுப்பினர் அவர்கள் தான் வம்பிலே மாட்டுகிறார். நீங்கள் 15 சதவிகிதம் கழிவு கொடுத்தீர்கள். இன்றைக்கு 30 சதவிகிதம் ஈரக் கழிவு —மாய்ஸ்ச்சர் 30 சதவிகிதம் வரையிலே இருக்கலாம் என்று விதிமுறை வகுத்திருக்கிறோம். நீங்கள் 15 சதவிகிதம் வரையிலேதான் இருக்கலாம் என்று நெல்லுக்கு விதிமுறை வகுத்தீர்கள். என்றாலும், 30 சதவிகிதம் கொடுத்திருக்கும்போது ஏன் வாங்கக் கூடாது என்று கேட்பதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நெல்தான் இன்றைக்கிருக்கிறது. அது குறைந்த விலைக்குப் போகக் கூடாது என்பதற்காக, அப்படியிருந்தாலும், இந்த அரசு வாங்க வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. பிறகு மாண்புமிகு முதலமைச்சர், பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டியிருக்கிறது.

(குறுக்கீடு) உங்களுக்காகச் சொல்லவில்லை. எதிர்க்கட்சி வரிசையிலே 7 பேர் பேச இருக்கிறார்கள். பிறகு மாண்புமிகு முதலமைச்சர். பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேச இருப்பதால், அதற்கேற்றவாறு சுருக்கிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, என்னை மன்னிக்கவேண்டும். நான் பேசிக்கொண்டு வரும்போது, அமைச்சர்கள் தங்கள் மீது குற்றம் இருப்பதாகக் கருதிக் கொண்டு வருகிற காரணத்தால், திருப்பி நாங்கள் விளக்கம் சொல்வதற்கு நேரம் ஆகிறது. ஏனோ அமைச்சர் அவர்கள் அவசரப்படுகிறார்கள். நான் ஒன்றும் ஊழல் நடந்து விட்டது, அமைச்சர் எட்மண்ட் லஞ்சம் வாங்கினார் என்று சொன்னேனா? சொல்லவில்லையே, ஏன் இந்த ஆத்திரம் அவசரம்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நீங்கள் ஊழல் நடந்து விட்டதாக சொல்வதாக நினைத்துக் கொண்டு நாங்கள் ஒன்றும் ஆத்திரப்படவுமில்லை, வருத்தப்படவுமில்லை. காரணம், இங்கே ஊழலுக்கு இடமே இல்லை. அதனால் வருத்தப்படவேண்டிய அவசியமும் இல்லை. இது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். தவறான தகவலை இந்த அவையிலே தருகிறார்கள். ஏற்கெனவே தவறான பிரச்சாரத்தை வெளியிலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மின்சாரக் கட்டணத்தைக் கூட்டியது யார் என்றெல்லாம் விவசாயிகள் மத்தியிலே பிரச்சாரம் செய்து, இந்தப் பிரச்சினையை வைத்து போராட்டம் நடத்துகிறார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: நான் என்னுடைய பேச்சின் துவக்கத்திலேயே சொன்னேன். நம்மை அழிப்பதற்குக் காத்துக் கொண்டிருக்கிற கழுகுகளுக்கு நாம் தீனி போட்டு விடக்கூடாது என்று எச்சரிக்கையோடு நான் பேசுகிறேன் என்று சொன்னேன். என்னைத் தூண்டி விட்டு, என்னையே மீண்டும் இழுக்கப் பார்க்கிறார்கள். நான் திரும்பவும் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: எதிர்கட்சிகளை அழிப்பதற்காக சக்திகள் இருக்கிறது என்கிறார்கள். அந்த சக்தி யார் என்பதை வெளிப்படுத்தினால் நலமாக இருக்கும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே இரண்டு பெரிய கட்சிகளை கழுகுகள் அழிக்க முடியுமா என்பது ஒரு சந்தேகம். இரண்டாவது அப்படி கழுகுக் கட்சிகள் என்று சொல்லி இருந்தால்கூட புரிந்து கொள்ள முடியும். ஆகவே கழுகுகள் அழிக்க முடியும் என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. ஆகவே அந்தக் கழுகுகள் யார் என்பதையும், தெரிந்து கொள்வதோடு, அண்ணா அவர்கள் காலத்திலேயே இந்த சீனி வாங்கியதில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், அதே தவறை இப்போதும் செய்திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றியும் இப்போது விளக்கவேண்டும்.

திரு. ப. உ. சண்முகம்: நேரம் இல்லை, நேரம் இருந்தால் விளக்குகிறேன். நான் சொல்வதில் தவறு இருந்தால் (குறுக்கீடு) அண்ணா வளர்த்தது புறா, மேலே பறப்பது கழுகு. இதுதான் சாதாரண விளக்கம். 91 ரூபாய்க்கு வாங்கவில்லை என்று அமைச்சர் எட்மண்ட் அவர்கள் கூறுகிறார்கள். அது தேவையற்றது, சொல்லியிருக்கத் தேவையில்லை. நான் இப்போது கேட்கிறேன். என்ன விலைக்குத்தான் வாங்கினீர்கள்? நான் மறுபடியும் கட்டாயப்படுத்தப்பட்டு விட்டேனே. விலையைச் சொன்னேனே? என்னுடைய ஆதாரத்தை நீங்கள் மறுக்க முடியுமா, மறுத்துவிட்டேன் என்று சொல்லிப் பயன் இல்லை. தமிழ்நாட்டிலே நீங்கள் கொடுக்கிற விலை (குறுக்கீடு) என்னை மறுக்கின்ற அமைச்சர் இன்ன விலைக்கு வாங்கினோம் என்று சொல்லவேண்டும். ஆதாரத்தை வைத்துக் கொண்டு தான் பேசுகிறேன்.

நெல் குவின்டாலுக்கு 91 ரூபாயிலிருந்து 93 ரூபாய் வரை என்று 15,000 டன் அரியானாவிலிருந்து வாங்கியிருக்கிறீர்கள். மீடியம், நடுத்தர அரிசி. 160-லிருந்து 168 ரூபாய் அடக்கம் ஆகிறது. ஒரிசாவிலிருந்து 10 ஆயிரம் டன் அரிசி, சன்ன ரகம், 185 ரூபாய் என்று வாங்கப்பட்டது. யாரைக்கேட்டு வாங்கப்பட்டது? எந்த அதிகாரியை அனுப்பி வாங்கினீர்கள்? வாங்கியதை எந்த முறையிலே வாங்கினீர்கள்? டெண்டர் கோரியிருக்கிறீர்களா, டெண்டர் கோரவில்லை. கேட்கவில்லை. தனிப்பட்ட முறையிலே வாங்கியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்களிடம் வாங்குகிற நெல் 78 ரூபாய். அரிசி விலை என்ன? புள்ளிவிவரக் கணக்கின்படி 1½ குவின்டால் நெல் ஒரு குவின்டால் அரிசிக்குச் சமானம்.

ஒரு குவின்டால் 78 ரூபாய் அரை குவின்டால் 39 ரூபாய். Incidental Charges Rs. 1½ miling Charges Rs. 4. storage loss Rs. 1¼ transit loss Rs. 1½ interest Rs. 3 storage Charge Rs. 2 administrative Charges Rs. 2½ and transport charges Rs. 7· ஆக மொத்தம் 140 ரூபாய் அரிசிக்கு அடங்குகிறது. அதை 160 ரூபாய்க்கு விற்கிறோம். ஒரு கிலோ 1·60 என்று விற்கிறோம். 20 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அது ஒரு பெரிய குற்றம் என்று சொல்லவில்லை. 140 ரூபாய்க்கு வாங்குகிற குறுவை 160 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் 185 ரூபாய், 168 ரூபாய் என்று அரியானாவிலும், ஒரிசாவிலும் வாங்கி, மூட்டை ஒன்றுக்கு 15 ரூபாய்க்கு மேல் கொடுத்து தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து விற்பது என்று சொன்னால் எப்படிப் பொருந்தும்? 91 ரூபாய் என்று சொன்னால், நான் கணக்குக் காட்டுவது தவறு என்றால் அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் கொடுத்து மறுக்கட்டும். 91 ரூபாய் ஒரு குவின்டால் நெல் அரியானாவில், அது தமிழ்நாட்டுக்கு வரும்போது அரசுக்கு அடக்கம் 168 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது நியாயம்தானா?

(முற்பகல் 9-40)

ரூ. 140 தமிழ்நாடு அரிசி. ரூ. 168 அரியானா அரிசி. இதில் ஏன் இந்த அரிசிக்கு மட்டும் தனி மகத்துவம்? எப்படி அதை வாங்கலாம்? வாங்கியது குற்றம் அல்லவா? நான் இவ்வளவு சொல்வது அமைச்சரவையின் மீது குற்றம் சொல்வதை விட அந்த இலாகாவிற்கு யோசனை சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் தவறான யோசனை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த இலாகா மீது குற்றம்சாட்டினால் அமைச்சரோ அமைச்சரவையோ செய்து இருக்கிறார், என்றல்ல. ஆனால் அதற்கு முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் அமைச்சர்கள்தான் என்றாலும் அங்கே போய் வாங்கிக்கொண்டு வந்தவர்கள் அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன்.

எங்கள் ஆட்சியில் ஊழல் நடக்காது என்பதற்கு நான் பதில் சொல்ல வரவில்லை. நாங்கள் ஊழல் பேர்வழிகள்தான் என்று நீங்கள் சொல்லிவிட்டதாலே அப்படியே அது பலித்து விடப்போவது இல்லை. நீங்கள் என்ன விஸ்வாமித்திரரா? நீங்கள் சொன்னீர்களே, சர்க்காரியா கமிஷன்

அறிக்கை, அதை இந்த சட்டமன்றத்தின் முன் போடுங்கள், கிழி கிழி என்று கிழித்து விடுகிறேன். தைரியமாகச் சொல்கிறேன்.

வாதத்திற்காக நான் சர்க்காரியா கமிஷன் பற்றிச் சொல்கிறேன். அவர் அறிக்கை கொடுத்து இருப்பது 8 குற்றச்சாட்டுகளுக்கு. அதிலே ஒன்று, மத்திய அரசாங்கத்தின் சி.பி.ஐ. யிடம் கொடுத்து இருக்கிறார்கள், பூச்சி மருந்து தெளிப்பது பற்றியது. மற்ற 7-ல், 7 என்றாலும் அதுவும் 8 தான்—8-பி என்று போட்டு இருக்கிறார்கள், ஆகவே, அதையும் சேர்த்துக்கொண்டால் 8 குற்றச்சாட்டுகளுக்கான அறிக்கை ஆகிறது. ஒப்புக்கொள்கிறேன். அந்த 8-ல் 5 ஊழலுக்கு என்ன அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் " இட் ஹேஸ் நாட் பீன் சப்ஸ்டான்ஷியேடட் ". ஆதாரம் இல்லை. சர்க்காரியா எழுதியிருக்கும் அறிக்கை புத்தகத்தை படித்துப் பார்க்கவில்லையா?

குற்றம் என்று சொல்லியிருப்பது மூன்றுக்குத்தான். ஒன்று, நாதன் பப்ளிகேஷனுக்குக் கொடுத்தது. இன்னொன்று, கந்தப்பன் மாமனாருக்கு கடன் கொடுத்தது. மற்றொன்று ' பிராட்வே டைம்ஸ் ' வழக்கு திரும்பப் பெற்றது அதுதானே? ' பிராட்வே டைம்ஸ் ' பத்திரிகை மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெறுவதில் என்ன தவறு இருக்கிறது? இந்த அரசாங்கம் வாங்காதா? எத்தனை வாங்கியிருக்கிறது? நாதன் பப்ளிகேஷன் விவகாரத்தில் யார் யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்? வெளியே சொல்ல வேண்டுமா? நான் அதற்குள்ளே போகவிரும்பவில்லை? ஆகவே, அதைக் காட்டி என்னை வம்புக்கு இழுக்க விரும்பாதீர்கள். நெல்லுக்குள் போனால் அரிசி இருக்கும், அரிசிக்குள் போனால் இந்த விலை இருக்கும். அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

நான் சொல்லிய குற்றச்சாட்டு, சர்க்கரை வாங்கியது யார், மூட்டை ஒன்றுக்கு தமிழக அரசுக்கு இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுத்தியது யார்? அதேபோல், பேபி புட்டை காலத்தில் விற்காமல் மண் ஆக்கியது யார்? வீட் பை பிராடக்ட்ஸை (ஹியுமன் கன்சம்ஷனுக்கு) மனிதர்கள் சாப்பிடுவதற்கு லாயக்கற்றது என்று கொட்டியது யார்? அதேபோல், தேங்கிவிட்ட ' மில்லட்டுகளை ' டென்டர் கோராமல், அப்படியே ஒரு லாரியில் எடுத்துக்கொண்டு போகச் சொன்னது யார்? இந்த அரிசி வாங்கியது முறைதானா? இப்படி வாங்கலாமா?

இன்னொரு ரகசியமும் சொல்கிறேன், நெல்லை தமிழ்நாட்டில் இருக்கும் ஆலை அதிபர்கள் எடுக்க மறுக்கிறார்கள். அது கெட்டுப்போய் இருக்கிறது, அது வெறும் பதராக இருக்கிறது. இங்கே யாராவது மில் சொந்தக்காரர்கள் இருந்தால் தெரியும். மனச்சாட்சியோடு அவர்கள் சொல்லவேண்டும். நான் சொன்ன இந்தக் குற்றச்சாட்டுகள் இந்த இலாகா மீது சாட்டப்படுவதாகக் கருதி, இப்படி தவறுகள் நடந்து கொண்டு இருக்கின்றன, திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பாகக் கருதிச் சொல்கிறேன். இப்போது இருக்கின்ற குறுவை நெல் வேண்டாம். ஆனால் இப்போது சம்பா நெல் அறுவடை வந்து இருக்கிறது. இதற்காவது போனஸ், வண்டி சத்தம், சேர்த்துக் கொடுக்கலாம். இப்போதாவது நெல்லை ஹரியானாவுக்குப் போய் வாங்காமல் தமிழ்நாட்டில் வாங்குங்கள். நஷ்டம் ஏற்பட்டால் பரவாயில்லை. தமிழ்நாடு அரசு தாங்கிக் கொள்ளும் என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் ஹரியானாவிலே போய் வாங்கலாமா என்று இங்கே குறைப்பட்டுக் கொண்டார்கள். ஏன் அங்கே வாங்கக் கூடாது என்பது எனக்குப் தெரியவில்லை. அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது தென் உணவு மண்டலம் என்று ஒன்று இருந்தது. அன்றைய தினம் தமிழ்நாட்டிலிருந்து நெல் அல்லது அரிசி இந்த மாநிலத்திலிருந்து கேரளாவுக்கு போகக் கூடாது. அது போகக் கூடிய இடமெல்லாம் பாண்டிச்சேரிக்கு போக முடியும். அல்லது ஆந்திர மாநிலத்திற்குப் போகமுடியும் அல்லது கர்நாடகத்திற்கு போக முடியும். தமிழ்நாட்டிலே விளைகின்ற அரிசியும் நெல்லும் ஆந்திர மாநிலத்திலோ அல்லது பாண்டிச்சேரியிலோ தேவையில்லை. காரணம் அங்கே போதுமான விளைச்சல் இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் ஆந்திராவிலிருந்துதான் தமிழ்நாட்டுக்கு நெல் வந்து கொண்டிருந்தது. தற்பொழுது இந்தியாவை ஒரே உணவு மண்டலமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாட்டிலே விளைகிற நெல் தமிழ் நாட்டிலிருந்து வேறு மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. (குறுக்கீடு). நீங்கள் சொல்வதற்குத்தான் நான் விளக்கம் சொல்கிறேன். நான் மறுத்துப் பேசவில்லை. நீங்கள் ஏன் வாங்குகிறீர்கள் என்று கேட்டதற்குத்தான் விளக்கம் தருகிறேன்.

<u>திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, நவம்பர், டிசம்பர், மாதத்திலே தான் மத்திய அரசு ஏக மண்டலமாக அறிவித்தது. அப்படி அறிவித்த உடன் அவசர அவசரமாக அங்கே போய் வாங்கினார்கள். ஏன் ஆந்திராவிலே இல்லையா? நான் சொல்வது ஆளுக்கு ஒரு நியாயம் என்று பிரித்துக்கொள்ளாதீர்கள். அதே இடத்தில் நான் இருந்து என்னுடைய இடத்திலே திருவாளர் எட்மண்ட் அவர்கள் இருந்தால் திருவாளர் ப. உ. சண்முகத்தை என்னென்ன கேட்டிருப்பார் ?

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :</u> இப்பொழுது இருக்கிற திருவாளர் ப. உ. சண்முகம் அவர்கள் மாண்புமிகு ப. உ. சண்முகமாக இருந்தபொழுது என்ன சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியும். அன்று நான் எதிர்க்கட்சியில் இருந்திருக்கிறேன். ஆகவே, அப்பொழுது என்ன பேசினார் என்பது எனக்குத் தெரியும். நான்சொல்வதெல்லாம் இன்றைக்கு ஒரே உணவு மண்டலமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே விளையக்கூடிய நெல் இன்றைக்கு கேரளாவுக்கு போகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம், அது பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. இன்றையதினம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் ஏன் வாங்கக்கூடாது என்று கேட்கிறார்கள். நான் சொல்கிறவிளக்கம் எல்லாம் அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நெல்லையோ, அரிசியையோ வாங்கி இங்கே சேமிப்பு கிடங்குகளில் சேமித்து வைத்தால், இங்கே மக்களுக்கு புழக்கத்திற்கு வருகிற அரிசியினுடைய அளவு குறைந்து போகும். அதனால் விலை ஏறும். அதைத் தடுக்க வேண்டுமென்றால் இங்கே விளைகிற நெல்லை இங்கே விற்பனைக்கு வருகிற அதே நேரத்தில் எந்த அளவுக்கு வாங்கி வைக்க முடியுமோ அந்த அளவுக்கு உணவு நெருக்கடி நிலைமை வராமல் தடுப்பதற்காகத்தான் நாம் வெளி மாநிலத்திலிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அமைச்சரவையின் மீது இந்த தமிழகத்திலே தாங்கள் தான் ஒரே எதிர்க்கட்சி என்று சொல்கிற அளவிற்கு கருத்துப் படைத்தவர்களாக நினைத்துக் கொண்டு கொடுக்கப்பட்டு இருக்கின்ற குற்றச்சாட்டுக்களை இந்த அவையில் வைக்

ின்ற போது எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற நாங்களும் கூர்ந்து கவனித்துக் கொண்டு தான் இருந்தோம். அப்படிச் சொல்கிற....

<u>திரு. க. சுப்பு :</u> பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே நாங்கள் அப்படி நினைத்துக் கொண்டிருக்கவில்லை. இதை அவர் புரிந்துக் கொள்ள வேண்டும். இதற்கு நீங்கள் ஒரு ரூலிங் கொடுக்க வேண்டும். அதை திசை திருப்புவது போல் பேசுவது சரிதானா என்று சொல்லவேண்டும். அதற்குள் விவகாரம் வந்துவிடும்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பு அவர்கள் நாங்கள் மட்டும் தான் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மற்றவர்கள் எல்லாம் அங்கீகரிக்கப்படாதவர்கள் என்று சொல்வது சரியா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பிரதான எதிர்க்கட்சி, அவ்வளவு தான்.

*<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தாங்கள் தான் ஒரே ஒரு எதிர்க் கட்சி என்றும் மற்றவர்கள் எதிர்க்கட்சியே அல்ல என்று சொல்கிற அளவுக்கு அவருக்கு உரிமை இருப்பதாகக் கருதிக் கொண்டு பேசுகிறார்களே, அதை மறந்துவிட வேண்டும். காரணம், இங்கே இருக்கிறவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், ஜனதா கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சிறிய சிறிய கட்சிகளாக நாங்கள் மூன்று கட்சிக்காரர்கள் இருக்கிறோம் என்று தெளிவு படுத்திக் கொள்ளுகிறேன்.

இங்கே முதலில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, முன்மொழிந்து பேசுகிற காலத்திலே முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே ஜனநாயகத்திற்கு ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். ஐவர் ஜென்னிங்ஸ் என்கிற ஆசிரியர் எழுதிய புஸ்தகத்திலிருந்து ஒரு மேற்கோளை இங்கே காட்டினார்கள். அந்த ஆசிரியர் பின்னால் எழுதிய "On Parl ment" என்று ஒரு புஸ்தகத்திலிருந்து எதிர்க்கட்சிகள் என்றால் என்ன, அந்த எதிர்க் கட்சிகளுக்கு இருக்க வேண்டிய கடமைகள் என்ன என்பதை எல்லாம் அதற்குப் பின்னால் எழுதிய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். அதிலிருந்து ஒரு சில வார்த்தைகளை இங்கு படிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

In truth, opposition is an essential part of democratic Government. Oppositions cannot be effective enough to paralyse the Goverment because then the opposition must become the Government. What is expected from an opposition is effective criticism.

ஒரு எதிர்கட்சி என்று சொல்லுகிற பொழுது அந்த எதிர்
கட்சி ஆளுகிற கட்சியை செயலற்ற முறையில் ஆக்கிவிடக்
கூடிய நிலையில் இருக்குமானால், அந்த எதிர்க்கட்சி ஆளும்
கட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டிய நிலையில் உள்ளவர்கள்
ஆகிவிடுவார்கள் அப்படி இல்லாமல் குற்றச்சாட்டுக்
களைச் சொல்லுகிறபொழுது, 'எபக்டிவ் கிரிட்டிசிசம்'
ஆக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.
அதைக் கருத்திற்கொண்டு இங்கே கூறப்பட்ட குற்றச்
சாட்டுக்களை துருவித் துருவி பார்க்கிற நேரத்தில் அவைகள்
'எபக்டிவ் கிரிட்டிசிசம்' ஆக இல்லை என்று கூறி அந்தக்
குற்றச்சாட்டுக்களை மறுக்க வேண்டிய அவசியத்தில் இருக்
கிறேன். அதற்குமாறாக ஐவர் ஜென்னிங்ஸ் வேறு ஒருபகுதி
யில் சொல்லுகிறார்கள். அதையும் படிக்க விரும்புகிறேன்.

The post is indeed one of resp)nsibility. Our constitution assumes that at any moment if the Governme-t resigns or is defeated or breakes up an alternative can be form d from the opposition. Irresponsible opposition is not part of democratic Government though many democratic States have never learned that lesson.
என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய தமி
ழாக்கத்தைப் படிக்க வேண்டுமென்றால் எதிர்க்கட்சி என்பது
பொறுப்பு வாய்ந்தது. ஒரு அரசாங்கம் எந்த சமயத்திலும்
ராஜினாமா செய்தாலும் அல்லது தோற்கடிக்கப்பட்டாலும்
அல்லது உடைந்து விட்டாலும் மாற்று அரசாங்கம் அமைக்
கும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்க வேண்டும். பொறுப்
பற்ற எதிர்க்கட்சி ஜனநாயக அரசின் அங்கம் அல்லவென்றும்
இந்த படிப்பினையை பல ஜனநாயக நாடுகள் புரிந்து கொண்
டது இல்லை என்று ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களே கூறு
கிறார்கள்.

இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறபொழுது, நம்பிக்கையில்லா தீர்மானத்தை சொல்லுகிற பொழுது தாங்கள் கொண்டு வருகிற தீர்மானம் இந்த அவையில் வைக்கப்பட்டு வெற்றி பெற்று விடும் என்ற நம்பிக்கையில் வைக்கவில்லை என்பதையும் விளக்கமாகச் சொன்னார்கள்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 6]

அருமைச் சகோதரர் வத்திப் பேசுகிற பொழுது இந்த குற்றச்சாட்டுக்களை இங்கே நிருபிக்க முடியவில்லையென்று அவைகளை இங்கே வைக்காமல் இருப்பது மேல் என்று சொன்னார்கள். இங்கே வரிந்து கட்டிக்கொண்டு விவசாயிகளின் பாதுகாவலர்கள் நாங்கள் தான், எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்லிக் கொண்டு இப்போது ஒரு பேரணியை நடத்தினார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தப் பேரணியானது எந்த ஒரு காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்டது, அது நடத்தப்பட்டு பிசுபிசுத்துப் போய்விட்டதே அதனுடைய காரணங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 ஆம் ஆண்டில் நான் வேலூரில் இருந்தேன். என்னுடைய வழக்கறிஞர் பணியை உட்கார்ந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன், இரவு இரண்டு மணிவரையிலும். அன்று 2½ மணிக்குப் படுக்கச் செல்கிறேன். 3 மணி அளவில் போலீஸ் வேன் வருகிறது. என்னைக் கைது செய்து அழைத்துச் செல்கிறார்கள். எதற்காக என்னைக் கைது செய்கிறீர்கள் என்று கேட்டேன். அன்று இரவுவரைக்கும் காரணம் சொல்லவில்லை. மறுநாள் சொல்லுகிறார்கள். அங்கே இருக்கிற 'அன்சோஷியல் எலிமென்ட்ஸ்' என்ற ரௌடிகளையும் என்னுடன் சேர்த்து அந்த குரூப்புக்கு தலைவனாகப் போட்டு ரெட்டியப்ப முதலி தெருவில் உள்ள என் வீட்டுக்கு முன்னால் 10 பேர்களை வைத்துக் கொண்டு சதி ஆலோசனை செய்து கொண்டு இருந்தேனும், ஓடுகிற ரயிலைக் கவிழ்ப்பதற்கு சதி ஆலோசனை செய்து கொண்டிருந்தேன் என்ற பெயரில் வழக்குப் போட்டு கோர்ட்டில் நிறுத்தி ஏழு நாள் சிறையில் வைத்து இருந்து விடுதலை ஆக்கப்பட்டேன்.

அன்று தமிழகத்தில் போடப்பட்ட வழக்குகள் எத்தனை? எத்தனை பேர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்கள். 23,000 பேர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்களே அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் என்ன? ரயில்கள் எங்கு எங்கு ஓடவில்லையோ, ரயில் பாலம் 10 மைல் 20 மைல் தொலைவில் அப்பால் உள்ள இடங்களில் கைது செய்யப்பட்டவர்கள் மீதும் ஸ்டீரியோ டைப் ஆக எப். ஐ. ஆர். இப்படித்தான் எப்.ஐ.ஆர். போடவேண்டுமென்று ரயிலைக் கவிழ்க்க சதி செய்கிறார்கள் என்று சொல்லி, தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 23,000 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடுத்தார்களே அது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

1978 ஜனவரி 6] [திரு. ரா. மார்க்கபந்து]

இப்போது சொல்கிறார்கள். பொய் வழக்குகளைப் போட்டு விட்டார்கள். 307-வது செக்ஷன்கீழ் வழக்கு போட்டுவிட்டார்கள் என்று. முன்பு என்ன நடந்தது? எதிர்க்கட்சிக்காரர்களின் வாயிலிருந்து ஒரு சத்தம் வந்தாலும், பேச்சுக்கள் வந்தாலும், 307-அட்டெம்ப்ட்டு மர்டர் என்று கோர்ட்டுகளில் வழக்குகளைப் போட்டார்களே, அவைகளை எல்லாம் மறந்து விட்டீர்களா?

கே. டி. கே. தங்கமணி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிறார், அதன் பலனாக அவர் சிறையில் அடைக்கப்படுகிறார், 307-வது பிரிவின்கீழ் வழக்கு—தொடர்பாக சாட்சிகள் எல்லாம் விசாரிக்கப்படுகிறார்கள்—அந்த வழக்கு நீதி மன்றத்தில் தவிடு பொடி ஆக்கப்படுகிறது.

விவசாயிகளுக்காக பரிந்து பேசுகின்ற கனவான்கள் அவர்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் பஞ்சம்—வெளி மாநிலங்களுக்கு நெல், அரிசி செல்லக் கூடாது, அப்படிச் சென்றால் தமிழகத்தில் பஞ்சம் வந்து விடும் என்று '' ரைஸ் மூவ்மெண்ட் கண்டிரோல் '' இருந்தது அப்போது. திடீரென்று ஒரு நாள் தஞ்சை மாவட்டம் முழுவதும் லாரிகள் வந்து நிற்கின்றன. திடீரென்று அரசின் அந்த ''ரைஸ் மூவ்மெண்ட் கண்டிரோல்'' உத்தரவு நீக்கப் படுகிறது—தளர்த்தப்படுகிறது. உடனே தஞ்சை மாவட்டத்திலுள்ள அரிசி முழுவதும் காலியாகிவிடுகிறது. இரண்டு மூன்று நாட்களுக்குள் மீண்டும் அந்தச் சட்டம் அமலுக்கு வருகிறது. ஏன் அந்தச் சட்டம் தளர்த்தப்பட்டது? எப்படித் தளர்த்தப்பட்டது? இதுவரையில் காரணம் யாரும் சொல்லவில்லை. அன்றைய தினத்திலிருந்து எதிர்க்கட்சிக்காரர்கள் மேடைதோறும் சொல்லி வந்தார்கள். அதற்கான காரணங்களை அன்றைக்கு அரசு பொறுப்பிலிருந்தவர்கள் சொல்லி இருக்கிறார்களா? அது ஒரு ஊழல் இல்லையா? ஊழல் வாடை வீச-வில்லையா என்பதை அன்றைக்கு ஆட்சியிலிருந்த இன்றைய எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் புயல்-வெள்ள நிவாரணம் பற்றி ஒரு குறிப்பைச் சொன்னார்கள். புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக துயர் துடைக்கின்ற பணியிலே கட்சியின் சார்பாக ரூ. 25 ஆயிரத்தை எடுத்துச் சென்றதைக் குறிப்பிட்டு ஒன்றைக் கூறினார்கள். அதற்காக நான் பரிதாபப்படுகிறேன்.

உங்கள் கட்சியைச் சேர்ந்த புலவர் கோவிந்தனை
கழிவறைக்குப் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தி
இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த
உதாரணம் தேவைதானா? கழிவறைக்கு அடிக்கடி செல்ல
வேண்டிய அவசியம் சிலருக்கு இருக்கலாம், சிலருக்கு
இல்லாமல் இருக்கலாம். நிவாரண நடவடிக்கை ஒரு
போர்க்கால நடவடிக்கை என்ற முறையிலே இந்த நிவா
ரணப் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களிடம் அந்தத்
தொகையைக் கொடுக்க வேண்டுமென்றால், வேண்டுமானால்
முதலமைச்சரிடம் கொண்டு போய்க் கொடுத்திருக்கலாம்
அல்லது அரசுத் துறையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட வேறு
யாரிடமாவது கொடுத்திருக்கலாம். ஆனால் அப்படிச்
செய்யாமல், நாட்டு மக்களின் கவனத்தைத் திசை திருப்ப
வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுகிற காரணங்கள்
ஏற்றுக் கொள்ளத் தக்கவையாக இல்லை. ஜனநாயகத்தின்
பேராலே இந்த நாட்டிலே அமைந்திருக்கின்ற, நாட்டு
மக்கள் அளித்த வாக்கின் பேராலே முதலமைச்சரால்
நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களை
எல்லாம் மந்திரிகளாக ஏற்றுக் கொள்ளவில்லையா? அல்லது
இந்த நாட்டு மக்கள் வாக்குப் போட்டு அதனால் அமைந்திருக்
கிற இந்த அரசை ஜனநாயக அரசாக ஏற்றுக் கொள்ள
வில்லையா? இல்லை என்றால், அவர்கள் ஜனநாயகத்தைப்
பற்றிப் பேசுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதை
அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த நேரத்திலே, ஜனநாயகம் என்றால் என்ன என்
பதைப் பற்றி ராஜாஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்:
" அரசாங்கம் என்பது அடுப்பிலே ஏற்றி வைக்கப்பட்ட
உலையைப் போன்றது. அதை வேக வைக்க இருக்கின்ற
விறகு போன்றது மக்களின் நல்லெண்ணம். ஐந்தாண்டுக்கு
ஒரு முறை தேர்தல் வரும். அரிசியை அடுப்பின் மேலே
வைத்துவிட்டு அடிக்கடி விறகை எடுக்க மாட்டாள் சோறு
சமைக்கின்ற வீட்டுப் பெண்மணி. அப்போதுதான் அரிசி
ஒழுங்காக வேகும்—சரியான முறையில் மக்களுக்குப் பயன்
படுகிற வகையில் வேகும். ஆனால் இடையில். . .

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு
அங்கத்தினர் ராஜாஜி கூறியதாக ஏதோ எழுதி வைத்துப்
பேசிக் கொண்டிருக்கிறார்? ராஜாஜி அவ்வாறு எங்கே

கூறினார்? அது எந்தப் புத்தகத்தில் அச்சடிக்கப்பட்டிருக்
கிறது? அவர் படிப்பது அந்தப் புத்தகத்திலிருந்து தானா
என்பதை அறிவிப்பீர்களா?

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவரவர்களே, ராஜாஜி
அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார். எதிர்க்கட்சிக்காரர்
கள் என்பவர்கள், விறகைஅடுப்பிலிருந்து இழுத்து விட்டுக்
கொண்டே இருப்பார்களானால் அடுப்பு எரியாது, சோறு
வேகாது. மக்களுக்குப் பயன்படாது, குழந்தைகளுக்குப்
பயன்படாது என்ற கருத்தை ராஜாஜி அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00.)

இன்று அந்த முறையில்தான் நான் சொல்லுகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பேரவைத் தலைவரவர்களே, நீங்கள்
இரண்டு தினங்களுக்கு முன்னதாகத்தான் புத்தகத்திலி
ருந்து படித்தால், தங்களிடம் முதலில் கொடுத்து, நீங்கள்
அதனைப் பார்த்த பிறகே அதை ரெஃபர் செய்யலாம் என்று
சொன்னீர்கள். இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்
கள் ஒரு புத்தகத்தில் எழுதியிருந்ததாக ஒன்றை வைத்துக்
கொண்டு படிக்கின்றார். அது எந்தப் புத்தகத்தில் இருக்
கின்றது என்பது இந்த அவைக்குத் தெரியவில்லை. அது
எந்தப் புத்தகத்தில் இருக்கின்றது என்ற வினாவினை நான்
எழுப்பினேன். ஆனால் அதற்கான ஏற்பாடுகள் எதையும்
நீங்கள் செய்யவில்லை.

<u>திரு. க. சுப்பு :</u> அவர்கள் ஆளும் கட்சிக்கு ரெஸ்பான்
ஸிபிள் அப்போஸிஷன் கட்சி எனவே பேசலாம். மற்றவர்
கள் இர்ரெஸ்பான்ஸிபிள் கட்சி என்று அவர் நினைக்கிறார்
போல் இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> என்ன சொல்ல வேண்
டும்? நீங்களே சொல்லுங்கள், உட்கார்ந்து கொண்டே
சொல்லுங்கள்! என்ன இது? ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்
என்று கேட்டாவது சொல்ல வேண்டாமா? எனக்கு யோசனை
சொல்லுகிறமாதிரி. . . (திரு. சுப்பு அவர்கள் எழுந்தார்.)
நீங்கள் இப்போது உட்காருங்கள். உங்கள் இஷ்டம் போலப்
பேச உங்கள் வீடு இல்லை இது. எழுந்திருந்து பேச வேண்டும்.
இது சரியில்லை. தயவு செய்து நீங்கள் இப்படி நடந்து
கொள்ளுவது முறையில்லை. என்னைக் கேட்காமல் நீங்களாக
எழுந்து எதையாவது பேசுவது முறையில்லை.

திரு. க. சுப்பு : தெரியும் எனக்கு. சும்மா இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன தெரியும்? என்ன தெரியும்? இப்படித்தான் பேசுகிறதா? இப்படி ஒரு சபாநாயகரிடம் பேசுகிறதா? இது முறைதானா? நீங்கள் படித்த வழக்கறிஞர், பெரிய அரசியல் தலைவர், நீங்கள் இப்படி பேசுவது முறையில்லை. ஒரு ரெஸ்பான்ஸிபிள் அப்போஸிஷன் என்று சொல்லுகிறவர்—உங்களை அப்படி ஒப்புக்கொள்ள முடியவில்லை.

திரு. க. சுப்பு : இர்ரெஸ்பான்ஸிபிளாக நீங்கள் பேசினால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை விடவா இர்ரெஸ்பான்ஸிபிள்? ஒரு அவைத் தலைவர் முன்பு பேசத் தெரியாமல் இருக்கின்றார்கள். ஒரு உறுப்பினர், வழக்கறிஞர் எதை வேண்டுமானாலும். . .

திரு. க. சுப்பு : எனக்குத் தெரியும் உங்களை விட நீங்கள் தான் சுப்ரீம்கோர்ட்டு. . . . போங்கய்யா. எதற்கும் முறை இருக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவது, இப்படிக் கண்யமற்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துவது முறையற்றது. உங்களுடைய அதே வேதனை எல்லோருக்கும் இருக்கிறது. உறுப்பினர் சுப்புவிற்கு மட்டும் இருப்பதாகக் கருதாதீர்கள். உங்களுக்கு உள்ள வேகம், கோபம் எல்லோருக்கும் உண்டு . . . நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். எழுந்திருக்கக்கூடாது. நீங்கள் உறுப்பினர்தான் என்பதையே இந்த மன்றத்தில் தெரிந்தாக வேண்டும். இல்லையென்றால் கண்டபடி எழுந்திருக்காமல், உட்கார்ந்து கொண்டே பேசாமல் எழுந்துதான் பேச வேண்டும். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன சொன்னேன்? தவறான வார்த்தைகளை உபயோகித்தேனா? உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது என்கிறேன்.

திரு. க. சுப்பு : உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள். எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் சொல்வதைக் கொண்டு . . . .

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய ஆணையை ஏற்றுக் கொண்ட சூழ்நிலை வரும்போதுதான் அதோடு பிரச்சனை முடிந்ததாகக் கருதி அடுத்த ஆணையை இடுவார்கள். ஆனால், ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து துணைத் தலைவர் அவர்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும். நான் என்ன சொல்லுகிறேன்? ஜேம்ஸ் அவர்கள் மறுபடியும் புத்தகத்திலிருந்து வாசிப்பது பற்றிய பிரச்சனையை கேட்டதற்கு நான் எழுந்து சொல்ல ஆரம்பிக்குமுன்பாகவே அவர் இப்படிப் பேசுவது உட்கார்ந்துகொண்டே பேசுவது அனுமதி இல்லாது பேசுவது, இது என்ன நியாயம்?

திரு. க. கந்தசாமி : 'மை ஹம்பிள் ரெக்வெஸ்ட்' தலைவரவர்களே, சபையினுடைய மரபைக் கட்டிக் காப்பாற்றுவதில் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும் என்ற முறையில் ஒரு மரபினை வகுத்தோம், அதனை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். அப்படி இருக்கும் போது ஒரு சபையின் உறுப்பினர் மாண்புமிகு சுப்பு அவர்களும் ரகுமான்கான் அவர்களும் சபையை மதிக்காமல், அனுமதி இல்லாது, உட்கார்ந்து கொண்டு பேசுவதும், இன்னொரு உறுப்பினர் இர்ரெஸ்பான்ஸிபிளாகப் பேசுகின்றார் என்றுசொல்லி அவரைக் களங்கப் படுத்துகின்றார். அந்த அளவிற்குப் பேச நீங்கள் அனுமதித்தால் அது முறையாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவலாய்வுக் குழுவில் நான் குறிப்பிட்டேன், பேரவையில் சில நேரங்களிலே சிலர் அத்துமீறிப் பேசுகின்றார்கள், வரம்பு மீறிப் பேசுகின்றார்கள். அப்போது என்ன நடவடிக்கை எடுப்பது என்று கேட்டபோது, 'நாங்களே பார்த்து கொள்கிறோம்' என்ற முறையில் அந்தந்தக் கட்சித் தலை

வர்களே பார்த்துக் கொள்ளுகிறோம் என்றார்கள். இப்போது அந்தக் கட்சித் தலைவர்களால்கூட கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் .. .. ..

<u>திரு. மு. கருணாநிதி</u> : பேரவைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் இந்த மன்றத்தில் இருக்கின்ற கட்சித் தலைவர்களும் முன்னவரும் உங்களிடம் கலந்து பேசி முடிவுகளை எடுத்திருக்கிறோம். ஆனால் அந்த முடிவுகளை அலுவலாய்வுக் குழுவில் கலந்துகொண்ட தலைவர்களே மீறும் நேரத்தில்தான் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைத் தங்களுக்கு மிகத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்களுக்குத்தான் தகுதியிருப்பதாக இங்குள்ள எதிர்கட்சித் தலைவர் ஒருவர் பேச ஆரம்பித்த காரணத்தினால்தான் நண்பர் சுப்பு அவர்களும் அவர்களை அனுமதிக்கின்றீர்களே, திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிதானே என்று கேட்டார். மற்றபடி பிற எதிர்க்கட்சியினர் பொறுப்பற்ற முறையில் பேசியதாக சுப்பு அவர்கள் பேச்சில் இல்லை என்றே கருதுகிறேன். மற்றவர்கள் அப்படி அதில் இருப்பதாக நினைத்துக்கொண்டு பேசுவதும் முறையில்லை. எனவே உறுப்பினர்களோடு கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவு செய்து எதிர்க்கட்சித்தலைவர் நான் கேட்ட பிரச்னையை விட்டு விட்டார். ஆரம்பத்தில் அவர் பேசியதற்கு சொல்கிறார். உட்கார்ந்து கொண்டே, " உட்காரய்யா ! போய்யா ! " என்று சொல்கிற முறையை எல்லாம் அக்கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்கிறாரா?

<u>திரு. மு. கருணாநிதி</u> : உட்கார்ந்து கொண்டே அப்படி பேசுவதை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கவில்லை. அதை நான் மறுக்கிறேன். ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைப் பணிவன்புடன் தெவித்துக் கொள்கிறேன். பேசுவது என்றால் ' கேட்டுக்கொண்டு ' எழுந்து பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். அது மிகவும் கஷ்டம். கேட்டுக்கொண்டு பேசுவது கஷ்டம். எழுந்து "பாயின்ட் ஆப் ஆர்டர்" என்று சொன்ன பிறகு தான் நீங்கள் பேச அனுமதிக்க வேண்டும். கேட்டுக் கொண்டுதான் எழுந்து பேசவேண்டும்.

என்பது கஷ்டமான காரியம். உட்கார்ந்து கொண்டு எந்த உறுப்பினர் பேசுவதையும் நான் நிச்சயம் ஏற்றுக் கொள்ளவில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர், அவர் சார்ந்திருக்கின்ற, அவர் தலைமையிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட நிலைமையை ஏற்கவில்லை என்று சொன்னதற்கு இந்த மன்றம் உண்மையிலேயே மகிழ்ச்சி அடையக் காரணம் இருக்கிறது. ஆனால் 'கேட்டுக் கொண்டு' என்பதற்கு நான் கருதுகின்ற பொருள், இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட, கையை உயர்த்திக் காட்டி, சபாநாயகர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அவர் சொன்ன பிறகு பேசும் மரபைக் காண்கிறோம். அதைப் பின்பற்ற வேண்டும் என்ற பேச்சிலே பொருள் இருக்கிறது என்று கருதுவோமே தவிர, உட்கார்ந்து கொண்டு நான் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் நிலைமை இல்லை; அந்தக் கருத்தைத்தான் சொன்னார்கள் என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவு செய்து, உட்கார்ந்து ' பேசவேண்டும் ' என்று கேட்டாலே போதும். அவ்வளவு கூட இல்லையே. எழுந்த உடனே, அதுவும் பேசும் வார்த்தை கூட சரியில்லை.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : அடிக்கடி, ஒவ்வொருவரும் தங்கள் கட்சித் தலைவர்கள்—அறிஞர் அண்ணா இந்த மாதிரி சொல்லியிருக்கிறார் என்று சொல்வதும், லெனின் இந்த மாதிரி சொல்லியிருக்கிறார் என்பதும், பெருந்தலைவர் காமராசர் இப்படி சொல்லியிருக்கிறார் என்று சபையிலே பேசப்பட்டு வந்தது. அது போல், மார்க்கபந்து, 'ராஜாஜி இப்படி சொல்லியிருக்கிறார்' என்றார். அது இப்படி மேற்கோள்காட்டி பேசும்போது எப்படி பேசவேண்டும் என்று தலைவர் மரபை சொன்னால் தேவலை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர் பேசலாம். கேட்டு பேசவேண்டும்; அவைத் தலைவர் அனுமதியுடன் பேசவேண்டும். அது எந்தப் புத்தகம், அனுமதிக்கப்பட்ட புத்தகம் தானா என்று புத்தகத்தைக் காட்டி அதை அவர் சொல்லியிருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன் : புத்தகத்தை மேற்கோள் காட்டிப் பேசுகிறபோது 'contributory factors' என்கிற அளவுக்கு தனது பேச்சுக்கு மேலும் வலிவும் ஆதாரங்களும் காட்ட புத்தகங்களை படிப்பது தவறாகாது. ஆனால் 'condemnation' என்கிற அளவுக்கு வரும்போது உங்கள் அனுமதியுடன் புத்தகத்தைப் படிக்கவேண்டும் என்பது நான் தெரிந்த மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நினைப்பது, வலியூட்டுவதாக இருப்பினும் அல்லது அதிலே பிரச்னை எழக்கூடியதா? அது நம் மரபுக்கு புறம்பானதாக இருக்கிறதா என்று முன்கூட்டி நான் தெரிந்துகொண்டால் தானே அனுமதிப்பதற்கு? பேசி விட்டு, பிறகு 'அது சரியில்லை, நீக்க வேண்டும்' என்று சொல்வதைவிட, 'கொடேஷன்' எழுதி வைத்துக் கொண்டு படிக்கலாம். ஆனால் ஒரு புத்தகத்தையோ, பத்திரிகையையோ படிக்கும்போது, அதை என்னுடைய பார்வைக்குக் கொண்டு வந்த பிறகு தான் அதைப் படிக்கவேண்டும்.

[முற்பகல் 10-10.]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தன் பேச்சுக்கு மேற்கோள்கள் காட்ட புத்தகங்களிலிருந்து கொட்டேஷன் படிக்கவேண்டியது அவசியம். அப்படிப் படிக்கிறபோது தங்களிடம் காண்பித்து விட்டுத்தான் படிப்பது என்பது இயலாது. இன்ன புத்தகத்திலிருந்து படிக்கிறேன் என்று குறிப்பிடவேண்டுமே தவிர தங்களிடம் காட்டி விட்டுத் தான் படிக்க வேண்டும் என்று சொல்வது சாத்தியம் அல்ல.

MR. SPEAKER : Extracts from books: Members should not quote during a debate extracts from books of which the House is not aware.

என்று முந்தைய பேரவைத் தலைவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தமிழில் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத் : இந்த அவை அறியாத புத்தகத்திலிருந்து கோட் செய்கிறார்கள். கோட் செய்யும்போது இன்ன புத்தகம் என்று சொல்லவேண்டும், அதன் ஸோர்ஸ் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்ன புத்தகம் என்று சொல்வது எனக்குத்தானே. அப்போது அதை அனுமதிப்பதாகப் பொருள்.

திரு. ரா. உமாநாத் : ந்யூஸ் பேப்பரிலிருந்து கொட்டேஷன் கொடுக்கும்போது, அந்த ந்யூஸ் பேப்பரின் சோர்ஸ் சொல்லவேண்டும். சார்ஜ் இருக்குமானால் உங்கள் ப்ரையர் பெர்மிஷன் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புத்தகத்தைச் சொல்லுங்கள், போதும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தமிழில் சொல்லுங்கள். நாங்கள் எல்லாம் புரிந்துகொள்ள வேண்டும் அல்லவா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு முக்கியமான காரியத்தை இது சம்பந்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இராஜாஜி அவர்கள் அல்லது இன்னொரு பெரியார் பெயரைச் சொல்லி இப்படிச் சொன்னார்கள் என்று சொன்னால் அது அவைக்குறிப்பில் ஏறுகிறது. ஆனால் அவர்கள் சொல்லாத வார்த்தைகளாக இருந்து இன்னார் சொன்னார் என்று சொன்னால் இனிமேல் வருகிற சந்ததியினர் அதைப் படிக்கும் போது புத்தகத்தில் இராஜாஜி கூறியதாகத்தான் இருக்கும். ஆகவே இராஜாஜி அவர்கள் கூறினாரா இல்லையா என்பதை நாம் அறிந்து அந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்றால் நலமாக இருக்குமே தவிர இல்லையென்றால் அது பேராபத்தாக முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராஜாஜி அவர்கள் எழுதியது என்ன புத்தகம் என்று மார்க்கபந்து அவர்கள் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : எனது நேரத்தை இடையிடையே பறித்துக் கொண்டதை என் நேரத்திலிருந்து கழிக்காமல் எனக்கு நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழக.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புத்தகத்தின் பெயரைச் சொல்லுங்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : இராஜாஜி
செய்து இராஜாஜி இப்படிப் பேசியதைக் கேட்டே
நான் சொல்கிறேன். அதை எப்படித் தடுப்பது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொ
நான் அனுமதிக்கிறேன். புத்தகத்தின் பெயரை
ளுல் போதும்.

திரு. ரா. மார்க்கபந்து : நான் புத்தகத்தை
படிக்கவில்லை என்று சொல்லி, அதேநேரத்தில் 1973ம்
ஆகஸ்ட் 23-ம் தேதி இந்த அவையிலே பேசியது
உங்கள் முன்னால் வைக்கிறேன் என்று சொ
தொடர்ந்து பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று நிமிட
முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : இடையிடையே
செய்த நேரத்தைக் கழிக்கவேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள்
திற்குள் சேர்ந்ததுதான்.

திரு. ப. உ. சண்முகம் : பாயிண்ட் ஆப் ஆ
1973ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இராஜாஜி இந்த அவை
எப்போது பேசினார் ? அதையும் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : பேச்சு என்னிடம் இருக்
1973-ம் ஆண்டு Assembly proceedings
அவர்களே, இன்று நிவாரணப் பணிகளை தா
தான் செய்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறவர்க
ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கின்றோம் எ
சொல்லுகின்றார்கள். நிவாரணப்பணி நடைபெற்
கொண்டிருந்த நேரத்தில் இவர்கள் சிறையில் இருந்தார்
தமிழகத்தில் ஏற்பட்ட புயல் நிவாரணப் பணிக்கு ம
யார்டர்களாக நிதியை சிறைக்கு அனுப்புங்கள் எ
எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுகிறார். மணியார்
சிறைக்குச் செல்லுகிறது. சிறைச்சாலைகள் விதிகளின்
அங்கு இருக்கின்றவர்கள் யாரும் மணியார்டர்க
பெற்றுக்கொள்ள முடியாது என்று இருக்கின்ற உத்தர

மாண்புமிகு முன்னாள் முதல்வராக இருந்திருக்கின்ற காரணத்
தால்சிறையிலிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அறிந்திருப்
பார்கள். பல ஆண்டுகளாக முதலமைச்சராக இருந்தவர்
இந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். ஆகவே,
இதையெல்லாம் தெரிந்து கொண்டுதான் தனக்கு
மணியார்டர் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்
களா என்பது தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னணி
வீரர்கள் எல்லாம், தலைவர்கள் எல்லாம் சிறைச்சாலையில்
இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்
புக்களை புலவர் கோவிந்தன் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்
தார்கள். அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற தமிழக மக்க
ளுக்கு நிதி அளிக்கவேண்டும் என்று இருந்தால் அதை
பொறுப்பை வகித்துக்கொண்டிருக்கிற புலவர் கோவிந்தன்
அவர்கள் பெயருக்கு மணியார்டர் அனுப்புங்கள் என்று இவர்
கள் கேட்டுக் கொண்டிருந்தால், உத்தரவிட்டிருப்பார்களே
யானால், அது நியாயமுடையதாக இருந்திருக்கும். புலவர்
கோவிந்தன் அவர்கள் பொறுப்பில் நியமித்துவிட்ட பிறகு
மணியார்டர்களை அவருக்கு அனுப்ப வேண்டாம். எனக்கு
அனுப்புங்கள் என்று சொல்வதானது, வீரியம் பெரிதா அல்
லது காரியம் பெரிதா என்பதைக் காட்டுவதாகும். இந்த
நாட்டு மக்கள், சிறையிலிருக்கும் எனக்கு எவ்வளவு பணம்
அனுப்புகின்றார்கள் என்பதைக் காட்டுகின்ற வகையில்தான்
அப்படிச் சொல்லியிருக்கின்றார்கள் என்று நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

அதே நேரத்தில், இங்கே சிறையில் இருக்கின்றவர்கள்
சீக்கிரமாக விடுதலை பெற்று, அதாவது ஜாமீனில் வெளியே
வந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு உதவி
யிருக்கலாம், அதற்கு மாறாக, சிறையிலிருந்து தலைவர்களை
விடுதலை செய்ய வேண்டுமென்று போராட்டம் நடத்துவதற்கு
வெளியே இருக்கின்ற தொண்டர்களைப் பார்த்து சொல்வது
எந்த முறையில் நியாயம் என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்
புகிறேன். அப்படி என்று சொன்னால் ஒருவர் கிரிமினல் வழக்
கில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்ட பிறகு
அதற்கான 'பிரைமாபேஸி' கேஸ் இருக்கிறது என்று
தெரிந்து கோர்ட்டில் எப்.ஐ.ஆர். கொடுக்கப்பட்டு சார்ஜ்
கொடுத்து வழக்கை தாக்கல் செய்வார்கள். அதுவரைக்
கும் குற்றத்திற்கு ஆளானவர்கள் சிறையில் இருக்கிறார்கள்.
அப்படிச் சிறையிலிருப்பவர்களை விடுவிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்வது என்ன நியாயம் ?

Criminal Procedure Code has laid down procedure for release of criminals.

அப்படியிருக்கின்றபோது, அவர்களை எல்லாம் விடுவி வேண்டும் என்று போராட்டம் நடத்துங்கள் என்று சொ வதும், அதை அனுமதிப்பதும் முதல்வராக இரு ஒருவர் கடைப்பிடிப்பது அழகா என்று கேட்டுக்கொ கிறேன். இந்த நாட்டில் யார் யார் தவறு செய்கின்ற களோ அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் வை கப்படுகிருர்கள். அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வே டும் என்று சொன்னல் இந்த நாட்டில் சட்டம் இருக்கா இப்படி விடுதலை செய்வது சரியா, நடந்தது தவரு இல்லை என்கின்ற விவரத்திற்குள் நான் போக விரும்பவில்லை . . . .

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவ களே, போராட்டம் நடத்துங்கள் என்று சிறையிலுள்ள தலைவர்கள் சொன்னார்கள் என்று மாண்புமிகு உறுப்பின அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். வெளியே இருந்தவர்கள்தான் போராட்டம் நடத்தவேண்டுமென முடிவு எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : அப்படியென்ருல் போராட் டத்தை நடத்துவதற்கு அனுமதிக்கலாமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நாட்டில் நடைமுறையில் இருக் கின்ற சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் கட்சிக்காரர்கள் ஈடுபடுவதை அனு மதிக்கலாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இங்கே விளம்பரப் பிரியர்கள் நாங்கள் அல்ல நீங்கள் தான் என்று சொல்லப்பட்டது. நான் யாருக்கும் வக்காலத்து வாங்கி பேசுவதாக எண்ணிக்கொள்ள வேண் டாம். இங்கேயிருக்கின்ற ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாப் முதலமைச்சராக இருந்த குர்னும்சிங் அவர்கள் திருச்சிக்கு வந்திருந் தார்கள். அவர்களுக்கு திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் வாழ்த்துப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டது. ஆயில் பெயிண்டால் எழுதப்பட்ட அந்தப் பத்திரம் துணியால் மூடப்பட்டு கொண்டு வரப்பட்ட கொண்டு வரப்பட்டபோது, அங்கே கலந்து கொண்ட அ வரும் அது எப்படியிருக்கும் என்பதை ஆவலோடு எதி பார்த்துக் கொண்டிருந்தார்கள். நமது பழம்

பெருமைகளைக் கூறும் பரிசுகள் ஏதாவது இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். பின்னல் அந்தச் சல்லாத் துணியை எடுத்துப் பார்த்தால், அதில் இருந்தது முன்னள் முதல்வ ருடைய படம் தான்.

(முற்பகல் 10-20)

இது விளம்பரம் இல்லையா?

மற்ருென்றையும் நான் சொல்ல விழைகிறேன். இந்தப் பகுதியில் மூர் அங்காடியின் அருகில் ஓர் கட்டிட திறப்பு விழா நடைபெறுகிறது. சென்னை கார்ப்பரேஷன் சார்பிலே கட்டப்பட்ட அந்தக் கட்டிடத்தை திறந்துவைக்க அப்போது அமைச்சராக இருந்த மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமை தாங்குகிருர்கள். அவர் பேசி முடித்துவிட்டு, இந்தக் கட்டிடத்திற்கு கருணுநிதியின் பெயரை வைக்கவேண்டு மென்று சொல்லுகின்ருர். இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பு தரப்படுகிறது. இதைக் கண்ட கமிஷனர், மற்றுமுள்ள அதிகாரிகள் அங்கலாய்த்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று சொன்னல், ஏதோ டைரியில் ஒரு சில நிகழ்ச்சிகளைப் போட்டு விட்டதற்காக அதைக் குறை கூறுகின்றவர்கள், இதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதே நேரத்திலே, ஏதோ வழக்குகள், வழக்குகள் என்று சொல்கிருர்கள். பல்லாயிரக்கணக்கான வழக்குகள் போடப்பட்டதாகச் சொன்னர்கள். இந்த ஆறு மாதத் திற்குள் இந்த தமிழக அரசு சாதித்தது என்ன என்றெல்லாம் கேட்கிருர்கள். நான் ஒன்றை இந்த நேரத்தில் சொல்ல விழைகிறேன். இவர்களும் தமிழகத்திலே ஆட்சி நடத்தி ஞர்கள். சென்னைக்கு தண்ணீர் கொண்டு வர வீராணம் திட்டம் என்று சொன்னர்கள். அந்த குடிதண்ணீர்த் திட்டம் போட்டு முடிக்கப்பட்டதா? அதேபோல், கூவம் சீரமைக்கப் பட்டு, அங்கே உல்லாசப் படகுகள் ஓடும், அங்கே காதலர் பவனி வருவார்கள் என்றெல்லாம் சொன்னர்கள், அந்த கூவம் சீரமைக்கப்பட்டதா? ஒரு திட்டம் என்று சொன்னல் ஒரு குறிப்பிட்ட ஐந்தாண்டு அல்லது ஏழாண்டிற்குள் முடித்து நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காகத்தான் ஒரு திட்டத்தை இன்ட்ரடியூஸ் செய்கிருேம். அதை அமுல் படுத்துவதில் சில நேரங்களில் காலதாமதம் ஏற்படக் கூடும். ஆனல், இங்கே 4 மாத காலத்திற்குள், ஆட்சிக்கு வந்தவர்

கள் ஒன்றுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகளைச் சாட் வது என்பது வலுவில்லாததும், பலஹீனமானதும் ஆகு என்பதைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன். ஐவ ஜென்னிங்ஸ், It must be an effective critici குற்றச்சாட்டுகள் என்பது பலமுள்ளதாக இருக்க வேண் மென்று சொல்கிறார்.

மற்றும், இருக்கின்ற பிரச்சினைகளைச் சற்று எடுத்து பார்க்க வேண்டும். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்ன தமிழகத்திலே எத்தனை பிரச்சினைகளைச் சந்தித்து, எத்தனை போராட்டங்களைச் சந்தித்தது என்பதையெல்லாம் எண்ணி பார்க்க வேண்டும். அதை எண்ணிப் பார்க்கும்போது இந்த நாட்டிலே தமிழக அரசு பெருமைப்படக் கூடி முறையிலேதான் நடந்திருக்கிறது என்பதைச் சொல் கொள்ள விழைகிறேன்.

<u>திரு. கோ. இளங்கோவன் :</u> ஆன் ஏ பாயிண்ட் ஆ ஆர்டர்,.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் என் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கப் போகின்றீர்கள் என்ப எனக்குத் தெரியும். இவருக்கு மட்டும் இவ்வளவு நேர கொடுக்கிறீர்களே என்று கேட்கப் போகிறீர்கள். ஆளு கட்சியிலே உள்ள இரண்டு பேர்கள் தங்களுடைய நேரத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்த நுணுக்கம் எனக்குத் தெரியு எனவே அமருங்கள்.

(மீண்டும் திரு. கோ. இளங்கோவன், திரு. க. சுப் எழுந்து நின்றனர்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது என்னுடை உரிமை. இதிலே உங்களுக்கு உரிமை இல்லை. நேர கொடுப்பது, யார் பேசுவது என்பதை நிர்ணயிக்கு அதிகாரம் எனக்கு இருக்கிறது. உங்களுக்கு கிடையா அமருங்கள். தலைவர்கள் கேட்டால் எனக்கு விளக்கத் தெ யும். தாங்கள் கேட்கத் தேவையில்லை. அமருங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> 'ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர்'.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது உட்கா கள்.

(திரு. க. சுப்பு இருக்கையில் அமர்ந்தவுடன் பேச அனுமதிக்கப்பட்டார்.)

<u>திரு. க. சுப்பு :</u> பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை. பொதுவாக ஒவ்வொருவரும் இவ்வளவு நேரம் பேசுவது என்று முடிவு செய்வது நல்லது. எதிர்க் கட்சியிலே உள்ளவர்களுக்கு, ஆளும் கட்சியிலே இருப்ப வர்கள், 10, 15 நிமிடங்கள் பேசுவதற்கு விட்டுக் கொடுப்பது என்று சொன்னால், அது முறையா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தக் கேள்வியைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை, உட்காருங்கள். அது எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை. நான் யாரை வேண்டுமானாலும் பேச அழைக்கலாம். இன்னும் சொல் கிறேன், இந்த அவையின் தலைவர் என்கின்ற நிலையிலே, யாரைப் பேச அழைப்பது, கொடுக்கப்பட்டுள்ள நேரத்தைக் கட்டுப்படுத்துவது, சரி செய்வது போன்றவைகளைச் செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. அதைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. தயவு செய்து நேரத்தை வீணாக்க வேண்டாம். அரை மணி நேரமாகிவிட்டது. அமருங்கள். மாண்புமிகு திரு. அழகர்சாமி.............

(திரு. சோ. அழகர்சாமி பேச அழைக்கப்பட்டார்.)

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மாண்புமிகு உறுப் பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் தனது பேச்சை முடிக்க வில்லை. அருள்கூர்ந்து அவரது பேச்சை முடிப்பதற்கு மட்டும் அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> மந்திரத்தில் மாங்காய் விழாது. புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று என்னென்ன செய்யவேண்டு மென்று பார்த்துச் செய்து கொண்டிருக்கிற நிலையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது முறையாகுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏதோ மாணவர்களுடைய போராட்டங்கள், தொழிலாளர்களுடைய போராட்டங்கள், ஆசிரியர்களுடைய போராட்டங்கள், மருத்துவர்களுடைய போராட்டங்கள் என்று இப்படி வரிசையாகச் சொன்னார்கள். அந்தப் போராட்டங்களில் பின்னணியைப் பார்க்கும்போது

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 ஜனவரி 6

கள் ஒன்றுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகளைச் சாட்டுவது என்பது வலுவில்லாததும், பலஹீனமானதும் ஆகும் என்பதைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன். ஐவர் ஜென்னிங்ஸ், It must be an effective criticism. குற்றச்சாட்டுகள் என்பது பலமுள்ளதாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்.

மற்றும், இருக்கின்ற பிரச்சினைகளைச் சற்று எடுத்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னும் தமிழகத்திலே எத்தனை பிரச்சினைகளைச் சந்தித்து, எத்தனைப் போராட்டங்களைச் சந்தித்தது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதை எண்ணிப் பார்க்கும்போது, இந்த நாட்டிலே தமிழக அரசு பெருமைப்படக் கூடிய முறையிலேதான் நடந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர்,.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கப் போகின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். இவருக்கு மட்டும் இவ்வளவு நேரம் கொடுக்கிறீர்களே என்று கேட்கப் போகிறீர்கள். ஆளும் கட்சியிலே உள்ள இரண்டு பேர்கள் தங்களுடைய நேரத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்த நுணுக்கம் எனக்குத் தெரியும். எனவே அமருங்கள்.

(மீண்டும் திரு. கோ. இளங்கோவன், திரு. க. சுப்பு எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்னுடைய உரிமை. இதிலே உங்களுக்கு உரிமை இல்லை. நேரம் கொடுப்பது, யார் பேசுவது என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது. உங்களுக்கு கிடையாது. அமருங்கள். தலைவர்கள் கேட்டால் எனக்கு விளக்கத் தெரியும். தாங்கள் கேட்கத் தேவையில்லை. அமருங்கள்.

திரு. க. சுப்பு : 'ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உட்காருங்கள்.

[1978 ஜனவரி 6]

(திரு. க. சுப்பு இருக்கையில் அமர்ந்தவுடன் பேச அனுமதிக்கப்பட்டார்.)

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை. பொதுவாக ஒவ்வொருவரும் இவ்வளவு நேரம் பேசுவது என்று முடிவு செய்வது நல்லது. எதிர்க் கட்சியிலே உள்ளவர்களுக்கு, ஆளும் கட்சியிலே இருப்பவர்கள், 10, 15 நிமிடங்கள் பேசுவதற்கு விட்டுக் கொடுப்பது என்று சொன்னால், அது முறையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை, உட்காருங்கள். அது எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை. நான் யாரை வேண்டுமானாலும் பேச அழைக்கலாம். இன்னும் சொல்கிறேன், இந்த அவையின் தலைவர் என்கின்ற நிலையிலே, யாரைப் பேச அழைப்பது, கொடுக்கப்பட்டுள்ள நேரத்தைக் கட்டுப்படுத்துவது, சரி செய்வது போன்றவைகளைச் செய்ய எனக்கு உரிமை இருக்கிறது. அதைக் கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. தயவு செய்து நேரத்தை வீணாக்க வேண்டாம். அரை மணி நேரமாகிவிட்டது. அமருங்கள். மாண்புமிகு திரு. அழகர்சாமி..............

(திரு. சோ. அழகர்சாமி பேச அழைக்கப்பட்டார்.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கபந்து அவர்கள் தனது பேச்சை முடிக்கவில்லை. அருள்கூர்ந்து அவரது பேச்சை முடிப்பதற்கு மட்டும் அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : மந்திரத்தில் மாங்காய் விழாது. புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று என்னென்ன செய்யவேண்டுமென்று பார்த்துச் செய்து கொண்டிருக்கிற நிலையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது முறையாகுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏதோ மாணவர்களுடைய போராட்டங்கள், தொழிலாளர்களுடைய போராட்டங்கள், ஆசிரியர்களுடைய போராட்டங்கள், மருத்துவர்களுடைய போராட்டங்கள் என்று இப்படி வரிசையாகச் சொன்னார்கள். அந்தப் போராட்டங்களில் பின்னணியைப் பார்க்கும்போது

அந்தக் கோரிக்கைகள் எப்போது உருவாக்கப்பட்டன? அந்தக் கோரிக்கைகள் இந்த ஆட்சி வந்த பிறகுதான் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது அந்தக் கோரிக்கைகள் பல்லாண்டு காலமாக புழுங்கிக் கொண்டிருந்தனவா என்ற பின்னணியைப் பார்க்கவேண்டும். பல்லாண்டுகளாக இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உழைப்பாளர் கட்சித் தலைவர் அவர்கள் எத்தனை முறை மணியடித்தாலும் பேசிக்கொண்டே இருக்கிறார். திரு. அழகர்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(திரு. அரங்கநாதன் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவது நியாயந்தானா? இதுதான் நல்ல ஜனநாயக முறையா? இப்படிப் பேசுவதுதான் சட்டமன்ற மரபா? சட்ட மன்றத்தின் மரபைக் கடைப்பிடிப்பது நம்முடைய கடமை இல்லையா? இப்படி உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள்.

*திரு சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

இன்று இந்தச் சபையிலே இடங்கள் மாறிய உடனே நியாயங்களும் மாறி விடுகின்றன என்று நினைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளும் கட்சியாக இருக்கும்போது அவர்கள் என்ன காரியங்களை மிகத் தீவிரமாக 'அதுதான் சரி' என்ற வாதத்தைத் தீவிரமாகச் செய்தவர்கள் இப்போது அதைச் செய்யலாமா, அது நியாயமா, அது தவறு அல்லவா என்று சொல்லக்கூடிய நிலையும், இங்கு எதிர்க்கட்சியில் இருக்கும்போது நீங்கள் எதைத் தவறு என்று சொன்னீர்களோ அது சரி என்று வாதிடக்கூடிய நிலையும் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய ப.உ.ச. அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். 'நம் இரண்டு பேரையும் ஒரே கட்சி மாதிரி எண்ணிக்கொண்டு நம்மை அழிக்கவேண்டுமென்று ஏதோ கழுகுகள் முயற்சிக்கின்றன; நீங்கள் உஷாராக இருக்க வேண்டும்' என்று ஆளும் கட்சியைப் பார்த்து எச்சரிக்கை செய்தார்கள். இதைப் பார்க்கும்போது எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு பெரிய சந்தேகம் ஏற்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் எதிர்க்கட்சி வரிசைக்கு வந்து உட்கார்ந்தது என்பதைப் பற்றித் தயவு செய்து சிந்தனை செய்து பார்க்கவேண்டும். கழுகு என்று சொன்னால் தூரப் பார்வை கொண்டது என்று ஓரளவு புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். தூரப் பார்வை காரணமாக— திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் உட்கார்ந்தால் தமிழகத்திலுள்ள கோடிக்கணக்கான மக்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஏனைய உழைக்கக்கூடிய மக்கள், நிம்மதியாக இருக்க முடியாது? அவர்களுக்கு எதிர்காலத்தில் நிம்மதியான ஒரு வாழ்க்கையை அவர்கள் அமைத்துத் தரமாட்டார்கள்.

அன்று நன்றாக விளைந்த காலத்தில் உணவுப் பொருள் அரிசி ஒரு கிலோ ஐந்து ரூபாய்க்கு மேல் விற்கப்பட்ட நிலை, அரிசி கிடைக்காத நிலைமை எல்லாம் ஏற்பட்டது பற்றியும், அதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றியும் நன்றாக அறிவோம். அப்படிப்பட்ட நிலைமை மேலும் வந்து விடுமோ என்ற பயத்தில், அந்தக் கொடுமைகளைத் தாங்க முடியாது என்ற காரணத்தால்தான் அவர்களை எதிர்க் கட்சியில் உட்கார வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் பொறுப்புக்கு வந்து ஆறு மாத காலந்தான் ஆகிறது. வாஸ்தவந்தான். இரண்டு மாத காலம் சரித்திரமே காணாத புயல் வெள்ளம். இது வரை இத்தகைய புயல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நடந்ததில்லை. இவ்வளவு பயங்கரமான புயலை, வெள்ளத்தை என்னுடைய 50, 55 ஆண்டு காலத்தில் நான் கேள்விப் பட்டதும் இல்லை. பார்த்ததும் இல்லை. அதன் காரணமாக அவ்வளவு பேரும் சேர்ந்து நிவாரணப் பணிகள் என்னென்ன செய்ய வேண்டும். மக்கள் உயிரிழந்திருக்

[திரு. சோ. அழகர்சாமி] [1978 ஜனவரி 6

கிறார்கள், உடைமைகளை இழந்திருக்கிறார்கள்; எதிர்காலத்தில் தமிழக பொருளாதார வளர்ச்சியே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலங்கள் எல்லாம் பாழாகியிருக்கின்றன. மோசமான அளவில் தஞ்சைத் தரணி பாதிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

அடுத்த ஆண்டு விலையேற்றத்திற்கும் அதே நேரத்திலே மத்திய சர்க்கார் மண்டலக் கொள்கையை வைத்துக்கொண்டு நீங்கள் இதைச் செய்யக் கூடாது என்று மேலே இருந்து சொல்லிக்கொண்டு, அதன் காரணமாக இந்த நாட்டிலே உள்ள உழைப்பாளி மக்களின் நலனுக்குப் பாதகமாக விரோதமான கொள்கைகளை ஜனதா அரசாங்கம் அறிவித்துக் கொண்டு இருக்கிறபோது விலைவாசிகள் ஏறக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதன் காரணமாக எதிர்காலத்திலே உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு விலைவாசிகள் என்ன அளவிற்கு உயர்ந்துவிடுமோ என்று மக்கள் எல்லாம் பயந்துபோய் இந்த அரசாங்கம் எப்படிச் செய்யப்போகிறதோ என்ற ஒரு ஏக்கத்திலே தயக்கத்திலே இருக்கிற நேரத்திலே, இப்படி புயலால், வெள்ளத்தால், ஏற்பட்ட சேதாரங்களை நீக்குவதற்கும், தேவையான நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதற்கும் என்ன செய்ய வேண்டுமென்று இந்தச் சட்டசபையிலே விவாதிப்பார்கள் என்றும் அவர்கள் நமக்கு நல்ல முடிவைத் தருவார்கள் என்றும் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்திலே இங்கே இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். முதலிலேயே நான் இந்தத் தீர்மானம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆறு மாத காலத்திலே பல விஷயங்கள் நடந்துவிட்டன. மாணவர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், இஞ்சினியர்கள் போராட்டம் என்று பல போராட்டங்கள் வந்துவிட்டன. அரசாங்கம் பழைய ஆளுங்கட்சி அனுஷ்டித்த கொள்கையைத்தான் அனுஷ்டித்திருக்கிறது என்று நினைக்கிறேன், அது கூடாது. ஏன் என்றால் எந்தப் பிரச்னையாக இருந்தாலும் நான் பார்த்தேன், போராட்டம் ஆரம்பிக்கிறார்கள் என்றால் இவர்கள் நம்மை எதிர்க்கிறார்களோ, நம்மை கவிழ்க்க நினைக்கிறார்களோ என்று நினைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது, அது எந்தப் போராட்டமாக

1978 ஜனவரி 6] [திரு. சோ. அழகர்சாமி]

இருந்தாலும் சரி, பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டமாக இருந்தாலும் சரி, விவசாயிகள் போராட்டமாக இருந்தாலும் சரி, இஞ்சினியர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, நெசவாளர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, அந்தப் போராட்டத்தின் கடைசியிலேதான் முடிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். போராட்டம் போராடி அசந்து போகிற நிலைமையில்தான் பேசி முடிக்க சர்க்கார் வருகிறார்கள்.

இந்த நிலைமை கூடாது, போராட்டம் நடத்துகிறார்கள் என்றால் அதிலே நியாயம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, யாரும் தூண்டுகிறார்களா என்று பார்க்கவேண்டியதில்லை. அதுவும் இப்போது மத்திய சர்க்கார் அனுஷ்டிக்கக்கூடிய கொள்கையின் காரணமாக விலைவாசி ஏறக்கூடிய நிலைமை இருக்கிறது. மக்கள் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற உரிமைகளைக் கேட்டு வலியுறுத்தி போராட்டங்களை ஆரம்பிக்கிறார்கள் என்றால் அவர்கள் கோரிக்கைகள் என்ன, அவை நியாயந்தானா என்றுதான் பார்க்கவேண்டுமே தவிர யாரோ தூண்டுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை பழைய தி.மு.க. அரசாங்கத்தின் அணுகுமுறை போன்று இருந்துவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழைய அரசாங்கம் போராட்டத்தின்போது என்ன செய்தது? விவசாயிகள் அப்போது போராடியபோது பெத்தநாயக்கன் பாளையத்தில் 5 பேர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். அதற்குப் பதில் அளிக்கிற முறையிலே இந்தக் சட்டசபையிலே போலீசாரைத் தாக்க முயற்சித்தார்கள், ஆகவே துப்பாக்கிச் சூடு நடந்தது என்று சொன்னார்கள். அந்த ஊரிலே போலீஸ் ஸ்டேஷன் கிடையாதே என்று கேட்டதற்கு விளக்கம் கிடையாது. அந்தக் காலத்திலே கருப்புக் கொடி காட்டுகிறபோது எப்படி பாதுகாக்கப்பட்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பார்க்கவேண்டும்.

குருஞ்சாகுளம், எட்டயபுரத்திலே முதலமைச்சர் வருகின்ற நேரத்திலே அதற்கு முன்னாலேயே அங்கே வைத்து இருக்கிற மற்ற கட்சிக்காரர்களுடைய படங்களையெல்லாம் நொறுக்கி கலகம் நடத்தினார்கள். கருப்புக் கொடி காட்டுகிற முறை, விவசாயப் போராட்டத்திலே அந்த அரசு

நடவடிக்கை எடுத்ததைக் கண்டித்து, குறிஞ்சாகுளத்திலே விவசாயிகள் கருப்புக் கொடி காட்டினுர்கள். அப்போது முன்னுலேயே ஆட்களை அனுப்பி அவர்களை அடித்து நொறுக்கி இருக்கிருர்கள். இப்படியெல்லாம் நடந்திருக்கிறது.

கருப்புக் கொடி காட்டலாம், அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கிற முறையிலே காட்டலாம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் சொன்னதைப்போன்று காட்டலாம். ஆனுல் யாருக்குக் காட்டுகிருர்களோ அவருக்கு ஆபத்து ஏற்படாமல் காட்டக்கூடிய பொறுப்பை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மதுரையிலே என்ன நடந்தது. நான் மறுநாள் போய்ப் பார்த்தேன், மதிப்பிற்குரிய முன்னுள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சித்தன் அவர்களையும் நெடுமாறன் அவர்களையும் நான் மருத்துவ மனையிலே போய்ப் பார்த்தேன். அவர்கள் கண்களைத் திறக்க முடியாமல், ஒரு கண்ணுக்கு ஆபத்து வரும் நிலையிலே சித்தன் தாக்கப்பட்டிருக்கிருர், நெடுமாறனுக்கும் மண்டையிலே சரியான அடி. இவ்வளவு பெரிய தாக்குதல்களை நடத்த வேண்டுமென்பதற்காக, கறுப்புக் கொடி காட்ட வேண்டுமா என்று யோசிக்க வேண்டாமா ? கறுப்புக்கொடி காட்டுவதற்கு உரிமை இல்லை என்று சொல்வது நியாயம்தானு? இதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆளும் கட்சியிலே இருக்கும் பொழுது என்ன காரியங்களை அநியாயம் அநியாயம் என்று சொன்னுர்களோ அதே காரியங்களை இப்பொழுது செய்கிருர்கள். சுப்புகூட சொல்கிருர்கள். அவரைக் கேட்டால் சொல்வார், யார் செய்தாலும் தவறுதான் என்று.

மத்திய அரசு அனுசரிக்கின்ற பொருளாதாரக் கொள்கையின் காரணமாகப் பல போராட்டங்கள் எழலாம். பல பிரச்சனைகளுக்காக, கோரிக்கைகளைவைத்து உண்ணுவிரதத்தில் ஈடுபடலாம். அவைகளைச் சுமூகமாகத் தீர்க்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு சில நேரங்களில் முயற்சி செய்கிறது. இருந்தாலும் அது போதாது. கொஞ்சம் பதட்ட நிலை இருக்கிறது அவர்களுக்கு. எஞ்சினியர்கள் மொட்டையடித்துக்கொண்டு, பிறகு எட்டு நாட்கள் கழித்துத்தான் அந்தப் பிரச்சனை முடிவுக்கு வருகிறது. அதேபோல் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம். ஹையர் செகண்டரி எஜுகேஷன் வருவதால் அவர்கள் தாங்கள் பாதிக்கப்படுவோமோ என்று ஆசிரியர்கள் பயப்படு

ருர்கள். வேலை போய்விடும் என்று பயப்படுகிருர்கள். 30, 13 தனியார் கல்லூரிகளில் அவர்களுக்கு ஒழுங்காகச் சம் ளம் கொடுப்பது கிடையாது, ஒரு வருஷத்திற்கு மேல் ாக்கி இருக்கிறது. 600 ரூபாய் சம்பளத்திற்கு 300 ரூபாய் தான் கொடுக்கிருர்கள். திடீரென்று வீட்டிற்குப் போகச் சொல்கிருர்கள். இதற்கெல்லாம் பாதுகாப்பு வேண்டும், எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் நீங்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிருர் கள். ஹையர் செகண்டரி எஜுகேஷன் வருவதால் வேலை இழந்து விடுவோமோ என்று அஞ்சுகிருர்கள். எனவே, அவர்களைக் கூப்பிட்டுப்பேசி முடிக்கவேண்டுமே தவிர சட்டம் காரியத்தைச் செய்யும் என்ற முறையில் பேசக்கூடாது. அவ்வாறு செய்தால் ஆத்திரம் மூட்டத்தான் பயன்படும், பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படாது.

அதேபோல் மீனவர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம் போன்ற எந்தப் போராட்டமாக இருந்தாலும், அந்தக் கோரிக்கைகளை வைக்கக் கூடியவர்களை அழைத்துக் கேட்கவேண்டும். தொழிலாளர்கள் பிரச்சனை இன்றைக்குச் சுமூகமாக முடிக்கப்படுகிறது. மேலும், பேச்சு வார்த்தை முடிந்து அதிலுள்ள நியாயத்தை ஒத்துக்கொள்ள வேண்டும்.

இவைகளையெல்லாம் ஏன் நான் சொல்கிறேன் என்ருல், முதலிலேயே சொன்னேன், எனக்கிருக்கின்ற சந்தேகத்தைச் சொல்கிறேன். தூரப் பார்வையுள்ள கழுகுகளைப்போல், இருக்கிருர்கள். இவ்வாறு கழுகுகள் என்று நான் யாரைச் சொல்கிறேன் என்ருல், உழைப்பாளிகள், பொதுமக்கள் தூரப்பார்வையோடு இருக்கிருர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த ஆட்சி நமக்குச் சாதகமாக இருக்குமா, அனுசரணையாக இருக்குமா, நம்முடைய இன்னல்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று பார்க்கிருர்கள். அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்யவில்லை என்ருல், அவர்களை நம்பினேம், இவர்களை நம்பினேம், இவர்களும் நமக்கு விரோதமாக இருக்கிருர்களோ என்று எண்ணும் நிலையை ஏற்படுத்தக் கூடாது. கோடிக் கணக்கான உழைப்பாளி மக்கள் இந்த அரசாங்கத்தை நம்பி நமக்கு நல்ல வாழ்வு கிடைக்கும் என்று எண்ணி வாக்களித்திருக்கிருர்கள். அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வகையிலே பல காரியங்களைச் செய்யவேண்டும்.

புயலின் பொழுது செய்த காரியங்களைப் பாராட்ட வேண்டும். தஞ்சை மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் கூடுமான வரையில் பல கிராமங்களுக்கும் போனேன். பலயிடங்களில் மிகவும் திறமையாக, ஐந்தாறு நாட்களுக்குள்ளாகவே அதிகாரிகள் வேகமாகப் பல காரியங்களை ஆற்றியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஒருசில இடங்களில் குறைபாடு இருக்கலாம், ஆனால் பெரும்பகுதி இடங்களில் நல்லமுறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, முன்பிருந்ததைவிட அதிகமாக்கி 200 ரூபாய் என்று அதிகமான உதவித் தொகையை அளித்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து வாங்கி 300 ரூபாய் என்று வாங்கிக் கொடுப்பது என்று பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, காலாகாலத்திலே செய்தார்கள். அவர்களிடம் கேட்டோம் என்றால், உதவி வந்தது என்று திருப்தியோடு சொன்னார்கள். அந்தமாதிரியான செயல்களை மேலும் செய்வதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு மீனவர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், எஞ்சினியர்கள் போராட்டம் போன்ற இம்மாதிரியான போராட்டங்களில் வழக்குகள் தொடர்ந்திருந்தால் அந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக இந்திய மருத்துவக் கல்லூரி நீண்ட நாட்களாக மூடப்பட்டிருக்கிறது. அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும், இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது.

சென்ற முறை பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. முன்பு டெண்டல் ஹைஜினிஸ்ட்கள் வேலையில்லாமல் இருக்கிறோம், வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டு உண்ணாவிரதம் இருந்தார்கள், இந்த மாநிலத்தின் பல பகுதியிலேயிருந்தும் வந்து சென்னை மருத்துவக் கல்லூரி அருகில் உண்ணாவிரதம் இருந்தார்கள். எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் அமைச்சரிடத்தில் சொல்லி, அமைச்சரும் வாக்குறுதி கொடுத்தார்கள். ஒரு ஆண்டுக்கு 20 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்குத் திட்டமிடுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு

அம்மாதிரியான உத்திரவு இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்று அவர்கள் புகார்கள் சொல்கிறார்கள். ஆண்டுக்கு 20 பேர்கள் வீதம் வேலை தருகிறோம், 100 பேர்தான் இருக்கிறார்கள், ட்ரெயினிங் கொடுத்திருக்கிறோம், வெளியிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று சொன்னதை இதுவரையில் செய்யவில்லை. எனவே, கொடுத்த வாக்குறுதிகளை, சொன்ன கொள்கைகளை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதிலே, பழைய அந்தப் போக்கை நீங்கள் கடைப்பிடிக்கக் கூடாது. ஏனென்றால், ஆட்சிக்கு

[முற்பகல் 10-40]

வருவதற்கு முன்னாலே என்னென்னவோ சொன்னார்கள். ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பல காரியங்களை நேர்மாறாகச் செய்தார்கள். நேர்மாறாகச் செய்தது மட்டுமல்ல, அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏழைகளுக்குப் பல துன்பமும், துயரமும் இருந்தது. அதனால், இன்றைக்குத் தூரப் பார்வையோடு இருக்கிற கழுகுகள் இந்தப் பக்கம் தூக்கி வைத்தன. ஆகவே, நீங்கள் அதைப் படிப்பினையாகப் பெற்று, காரியங்களை ஆற்றவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட அவர்களுடைய, கோரிக்கைகளையும் தொடர்ந்து வைத்திருக்கிறோம். அதையும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட பலவிதமான சட்டங்கள் போட்டிருக்கிறோம். அது, கிராமப்புறத்திலேயிருக்கிற பெரும்பகுதி மக்கள் பிரச்சனை. நேற்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அழகான கொள்கையைச் சொன்னார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். இந்த அரசாங்கத்தின் கொள்கை உழுகிறவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்பது. அதுதான் எங்கள் இலட்சியம். அதை நோக்கி, கொஞ்சம், கொஞ்சமாகப் போகவேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், அதற்கு முன்னதாக நிலத்தைவிட்டு வெளியேற்றுகிற காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, என்னுடைய மாவட்டத்தில் கோடரங்குளம், வெள்ளார்குளம் என்ற ஊர்களிலே, பலவிதமான இடங்களிலே இன்னும் நிலவெளியேற்றம் நடக்கிறது. முதலில், நிலத்திலிருந்து வெளியேற்றுவதை தடுத்து நிறுத்திவிட்டு பிறகு அவர்களுக்கே சொந்தமாக ஆக்க வேண்டும். நிலத்தை விட்டு வெளியேற்றுவது எந்த ரூபத்திலே வந்தாலும், கோர்ட்டுகளின் மூலம் வந்தாலும், ரெவின்யூ கோர்ட்டுகளின் மூலம் வந்தாலும், வேண்டுமென்றே ஆட்களை வைத்து வெளியேற்றுகிற நிலையிருந்தாலும், யாரையும் வெளியேற்றக் கூடாது என்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அதோடு விலை சம்பந்தப்பட்டமட்டில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் விளைச்சல் எல்லாம் குறைச்சல். வெளியிலேயிருந்து வாங்கி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதெல்லாம் நியாயம்தான். மத்திய அரசாங்கம் குறுக்கே நிற்கிறது. நான்கு மாநிலங்களைச் சேர்த்து, மண்டலமாக வைத்ததால் விலைவாசிகள் உயரும். விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லையென்று சொல்கிறோம். சாதாரண விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில், அதிகமாக ஸ்டாக் வைத்திருக்கிறவர்களுக்கு, விலை அதிகமாகப் போகப் போகிறது, ரூ. 100-க்குப் உயரப் போகப் போகிறது. ஆகவே, சர்க்கார் இப்பொழுதே விலையைக் கூட்டிக் கொடுத்தாலும் பரவாயில்லை, ஸ்டாக் வைத்துக்கொண்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, 16,000 நியாய விலைக் கடைகளைத் திறந்து, உணவுப் பொருள்களையெல்லாம் சேர்த்து வைத்து விநியோகம் செய்யவேண்டும். இல்லாவிட்டால், வரும் காலங்களில், அரசாங்கத்திற்கும் நெருக்கடி வந்து சேரும், பொது மக்களும் கஷ்டப்படுவார்கள், மத்திய சர்க்காரும் கையை விரிக்கும். ஆகவே, இந்த நடவடிக்கையை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே எதிர்த்து முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது இந்த மாமன்றத்திற்கு நம்பிக்கையில்லையென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், ஜனதா கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதங்களைப் பார்க்கும்போது, ஒருவேளை, ஒருவெளி மாநிலத்திலேயிருந்து அல்லது நம்மோடு அதிகத் தொடர்பில்லாத எவராகிலும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதங்களைப் பார்ப்பார்களானால், ஏதோ இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் இங்கே விவாதிக்கப்படுகின்றன என்ற எண்ணம் தோன்றக்கூடிய அளவில் விவாதங்கள் அமைந்து கொண்டேயிருக்கின்றன. ஒன்று, இன்று ஆளுகின்ற அரசின்மீது நம்பிக்கையில்லை யென்ற தீர்மானம். மற்றொன்று, ஏற்கனவே இந்த மாநிலத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கையில்லையென்ற அடிப்படையில் அந்த ஆட்சியின்போது ஏற்பட்ட பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிற முறையில் இந்த விவாதம் அமைகிறது. ஆனால் பாராளுமன்ற முறைப்படி, ஒருவேளை, எனக்கு அந்த அளவு அனுபவம் இல்லையென்று சொன்னாலும், அது முறையாக இருக்கிறதா என்பது என்னுடைய ஐயப்பாடு. காரணம், இங்கே இருக்கிற தீர்மானத்தையொட்டி நாம் விவாதிப்பது நலமாக இருக்கும். ஆளுகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டு இருக்கிறவர்களுக்கும் அது உதவியாக இருக்குமென்ற முறையிலே அது அமையும். அதற்கு மாறாக இரண்டு தீர்மானத்தை ஒட்டிப் போவதுபோல, ஒன்று 'போஸ்ட்மார்ட்டம்' இன்னொன்று இப்பொழுது இருக்கின்ற 'ஆபரேஷன்' போல் அமைவது நிச்சயமாக வரவேற்கத் தக்கதல்ல என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஆளுங்கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அடிப்படையிலே எந்த விதமான வித்தியாசமும் இல்லை ; ஆனால் அன்றாட நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாகப் பேசினார்கள். இன்றைய தினம் கூட மாண்புமிகு எதிர்க்கட்சி அங்கத்தினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் ஆளுங்கட்சிக்கும், முக்கியமான எதிர்க்கட்சிக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்கிறது. அவர்களை மற்றவர்கள் அழிக்க சதி செய்வது போல் பொருட்பட இங்கே குறிப்பிட்டார்கள்.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாங்கள் ஏற்கனவே சென்னையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலேயே சொன்னோம். இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுதான். கொள்கை

அடிப்படையிலே வித்தியாசமே இல்லை என்று அந்தக் கட்சி தோன்றிய காலம் முதல் கூறி வருகிறோம். ஆக என்னைப் பொறுத்தவரையில் கொள்கை ரீதியாகவும், நடைமுறை முறைகளாலும் இந்த அரசின் மீது இருக்கிற பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது, அவகாசம் இருக்கிறது என்பதனை முதற்கண் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது—அவர் பாராளுமன்ற முறைகளைப் பற்றி மிகத் தெரிந்தவர்கள், முறையாகச் செயலாற்றுகிறவர்கள், அதிலே நம்பிக்கை உள்ளவர்கள். அவர்கள் ஒரு முக்கியமான எதிர்க்கட்சியாக இருக்கிறார்கள் என்று இருந்தாலும் கூட, பாராளுமன்ற முறைப்படி எதிர்க்கட்சியையும், இங்கே இருக்கிற இதர எதிர்க்கட்சிகளையும் கலந்து ஆலோசித்துக் கொண்டு வருகின்ற முறையைக் கைவிட்டு விட்டார்கள். அது உண்மையிலேயே வருந்தத் தக்கதாகும்.

ஆகவே, என்னைப் போன்றவர்கள் பெரிய வாய்ப்பினை இழந்திருக்கிறோம் என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ள எண்ணிக்கை பலம் இருக்கிறது என்று நினைக்கலாம். ஆனால் உண்மையிலேயே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தினுடைய ரிசல்ட், இந்த அரசு மீது நம்பிக்கை இல்லை என்பதால் இந்த அரசை மாற்றி அமைக்க வேண்டும் என்று விரும்பினால், திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருக்கும் சக்தி மட்டும் போதாது. இங்கே இருக்கின்ற அனைத்து எதிர்க் கட்சியினரையும் சேர்த்துக் கொண்டு ஆளுகின்றவர்களில் சிலரைச் சேர்த்தால் தான் எதிர்பார்ப்பது நடக்கும். ஆகவே, அந்தச் சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற நிலை, இந்த அரசை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இல்லை என்று நான் கருதுகின்றேன்.

என்றாலும் கூட எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசித்துக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதனை மீண்டும் கூறிக் கொள்கிறேன். அதே போல ஆளுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்களுக்கு அவர்கள் தருகிற அந்தத் தீர்மானத்தை எதிர்க்கக்கூடிய மிருக பலத்தை—அந்த எண்ணிக்கையைப் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு) தப்பில்லை,

பார்லிமெண்டரிதான். ஆனால் அவர்கள்கூட இந்தத் தீர்மானத்தைச் சர்வசாதாரணமாக நினைக்கிறார்கள். ஒன்றைக் கூற விரும்புகிறேன். குறைகளைக் கூறுவதற்காக அல்ல. இந்த மாநிலத்திலே இருக்கிற மக்களுடைய எண்ணம் இந்த அரசின் மீது எந்தவகையிலே இருக்கிறது என்பதனை இந்த அரசு சிந்திப்பதற்குச் சில காரணங்களை எடுத்துக் கூற இந்தத் தீர்மானம் வழி செய்கிறது என்பதனைக் கூறிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாகவே, இந்த நாட்டில் எவரும் விரும்பாத நெருக்கடி நிலையை ஆதரித்தார்கள். இந்த தேசத்தில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்ற போது சர்வாதிகார ஆட்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஜனநாயகத்தின் மீது தேவையான நம்பிக்கை இல்லை என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பாராளுமன்றத் தேர்தலில் கூட இந்த சர்வாதிகார ஆட்சியை நடத்திய அந்தக் கட்சியோடு உடன்பாடு செய்து கொண்டு அவர்கள் தேர்தலில் நின்ற நிகழ்ச்சியை நாம் மறக்க முடியாது.

ஆனால் இந்த அரசுக்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பாராளுமன்றத் தேர்தலில் ஜனதா கட்சி வெற்றி பெற்று, மத்தியில் ஜனதா ஆட்சி வரவில்லை யென்றால், உண்மையிலேயே இங்கே இன்றையதினம் முதலமைச்சராக வீற்றிருக்கும் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், இங்கே நிதி அமைச்சராக இருக்கும் மனோகரன் அவர்கள் முதலமைச்சராக, நிதியமைச்சராக முறையே இருந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்குமா என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் நீங்கள் அதை மறந்து விட்டீர்கள். மறந்ததால் என்ன வருகிறது என்றால் உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை. சர்வாதிகாரத்தில் நம்பிக்கை இருக்கிறது என்பதைத்தான் அது சுட்டிக் காட்டுகிறதே தவிர மற்றது இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இந்திரா காந்தியோடு அன்று மிக நெருங்கிய உறவு வைத்துக் கொண்டு இருந்தீர்கள். பரவாயில்லை. அந்த உறவு இன்றும் நீடித்து இருப்பது உங்களுக்கு நல்லது அல்ல.

நாட்டுக்கும் நல்லது அல்ல என்பதையும், நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன் :</u> தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நம்முடைய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தேர்தல் வைத்த காரணத்தால்தான் தற்போது மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதம அமைச்சராக இருக்கிறார் என்பதை நான் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இந்த நாட்டிற்கு ஜனநாயகம் வேண்டுமா அல்லது சர்வாதிகாரம் வேண்டுமா என்ற ஒரே கேள்வியைத் தான் மக்களிடையே வைத்து இந்தப் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திருமதி இந்திரா காந்தி அம்மையார் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தபோது நீங்கள் அவர்களை வரவேற் றீர்கள். நான் குறைகூறவில்லை. காரணம் அந்தத் தனி மனிதரை இன்னொருவர் வரவேற்பதற்கோ பாராட்டு வதற்கோ தனி உரிமை இருக்கிறது. ஆனால் திருமதி இந்திரா காந்தி சாதாரண மனிதராக தமிழ் நாட்டிற்கு வந்தபோது அவர்கள் இந்த தேசத்தின் பிரதம அமைச்சர் அல்ல. அவர் ஒரு சாதாரண திருமதி இந்திரா காந்திதான் என்பதை நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் மறந்து இருக்கமாட் டார்கள் என்றுதான் கருதுகிறேன்.

ஆனால் அவர்கள் இங்கே வருகின்றபோது தமிழகத்தில் நிலை எப்படி இருந்தது என்பதை தமிழகத்தில் முதலமைச்ச ராக இருக்கிற மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நிச்சயமாக மறந்து இருக்கமாட்டார்கள். ஏன் என்று சொன்னால், அம்மையார் அவர்களுடைய 19 மாதகால சர்வாதிகார ஆட்சியில் மக்கள் பாதிக்கப்பட்டு கொந்தளிப்பு உணர்ச்சியோடு இருந்த சூழ்நிலை மட்டுமல்ல, பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் இந்த தேசத்திற்கு நெருக்கடி நிலையை அன்றைய பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த 100—வது நாள் மனம் நொந்து இறந்தார்கள் என்பதையும் தமிழகம் மறக்க முடியாது. அது

மட்டுமல்ல, ஜனநாயக அடிப்படையில் அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஜனநாயகம் கொலை செய்யப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் மக்கள் உள்ளம் கொதித்து எழுந்து இருக்கின்ற நேரத்தில், * * *என்று சொன்னால் அது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய கட்சி ஆளுகின்ற கேரள மாநிலத்தில். . . . .

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மதிப்பிற் குரிய எதிர்க்கட்சி தலைவர்களில் ஜனதா கட்சித் தலைவராக இருக்கின்ற திரு. ஜேம்ஸ் அவர்கள் கருத்தினைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நான் ஏன் போய்ப் பார்த்தேன் என்பதற்கு முன்பே இந்த அவையில் விளக்கம் தெரிவித்திருக் கிறேன். தயவு செய்து ஒரு முறை அதைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். * * * அதை குறிப்பில் அனுமதிக்கக் கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.* * * * வந்தவர்களை பொறுப்பிலே இருக்கிற அரசு வருகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலே இருக்கிற அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைத் தான் செய்தது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> * * என்ற வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> முதலமைச்சர் அவர்கள் நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்கு விளக்கம் அளித்தபோது திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தது பற்றி முன்பே விளக்கம் அளித்ததாகச் சொன்னார்கள். எப்பொழுது ?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்தது பற்றி அல்ல. நான் மீண்டும் சொல்கிறேன், அவசர காலச் சட்டத்தை நாங்கள் ஏன் ஆதரித்தோம் என்பதைப் பற்றித் தான்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: அவைத் தலைவர் அவர்களே, இந்திரா காந்தி அவர்களைப் பற்றி இவ்வளவு கடுமையாக சர்வாதிகாரத்தைத் தாக்கிப் பேசுவதற்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதில் வீரராகத் திகழ்ந்தவர். அவர் இதைக் கண்டு இறந்து விட்டார் என்று சொல்வதற்கு சங்கடமாக இருக்கிறது. அதைப்பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இது சம்பந்தமாக விளக்கம் கூற வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொன்னார்கள். அதற்கு மேலேயும் சொன்னார்கள். இருந்தாலும் கூட இது நம்பிக்கையில்லாத் திர்மானம் என்று வருகிறபோது அரசால் செய்யப்பட்ட பல காரியங்களை இங்கே சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை என்று நினைக்கிறேன்.** ஏர் போர்ட்டிலே சொன்னார், திருமதி இந்திரா காந்தியைப் பார்த்துவிட்டு உடனே அவர் சொன்னார். எனக்கு எப்போழுதுமே இந்திரா காந்தி மீது மரியாதை உண்டு. அதற்காகத் தான் நான் போய்ப் பார்த்தேன் என்று கூறினார்கள். ஆனால் பின்பு ஒரு முறை அந்த அறிக்கைக்கு மாறுபட்ட கருத்தில் அம்மையார் அவர்கள் இங்கே வருவது சரியல்ல என்று கூறுவதற்காகத்தான் போனேன் என்று சொன்னார்கள். அது எதுவாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. நான் கூறுவதெல்லாம்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, எனது மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் பேச்சுக்களுக்கிடையிலே என்னென்ன பேசி இருக்கிறேன் என்பதை எல்லாம் விட்டு விட்டு அவருக்குத் தேவையான முதல் இரண்டு வார்த்தைகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஒற்றுமைப்படுத்தி பேசுவது பொருத்தமுடையது ஆகிவிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள்* இதிலே என்ன இன்பர்மேஷன் கேட்க வேண்டியிருக்கிறது? உங்களுக்கு ஒன்றும் கேட்க வேண்டியதில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றம் பெற்றது.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கூறுவதெல்லாம் தமிழ் நாட்டிற்கு அம்மையார் அவர்கள் அன்றைய தினம் வராமல் இருந்திருந்தால் தமிழ் நாட்டில்........

(திரு. ஏ. ரகுமான்கான் எழுந்தார் ....)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது ஏதாவது விதிமுறைக்கு மாறுபட்டிருந்தால் நீங்கள் சொல்லலாம். ஒவ்வொருவரும் எழுந்து உங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் அதிகம் ஆகிகொண்டே இருக்கும். உட்காருங்கள்.

[முற்பகல் 11-00]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: துணைத் தலைவர் அவர்களே' உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை உன்னிப்பாக கவனித்துக்கொண்டு வருகிறேன். பின்னால் பதில் சொல்லலாம். பேசுவதற்குக் குறுக்கீடாக இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜே. ஜேம்ஸ்: நான் கூறுவதெல்லாம், அம்மையார் அவர்கள் இங்கே வராமல் இருந்தால் அவர்களை இந்த அரசு அம்மையாரோடு ஏற்கெனவே இருந்த நல்லுறவின் காரணமாக, வருவதைத் தடுத்திருந்தால் இங்கே நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுமல் இருந்திருக்கும். காஞ்சிபுரத்திற்கு அம்மையார் போகிற வழியில் அங்கே இருந்த கலெக்டர் அவர்கள் அம்மையாரைத் தடுத்து நிறுத்தி உள்ளே போகக்கூடாது, விரும்பத் தகாத காரியங்கள் எல்லாம் நடைபெற இருக்கின்றன. திரும்பிப் போங்கள் என்று கூறினதும் அம்மையார் அவர்கள் திரும்பிப் போனார்கள். அதை மீறி துணிந்து போவதற்கு அம்மையார் அவர்களுக்கு தைரியம் இல்லை. நிச்சயமாக நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தக் கருத்துப்படி காரியம் ஆற்றியிருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் மீண்டும் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். எனது மதிப்புக்குரிய ஜேம்ஸ் அவர்கள் சட்டம்

படித்தவர், என்னைவிட அதுபற்றி நிறைய அவருக்குத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் இந்த அவையில் அதிகமாக இருந்து பழக்கப்பட்டவர்கள். அந்த வகையில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் முதலமைச்சர் அனுமதி பெறாமல் வெளிமாநிலத்திலிருந்து பிரதமராக இருந்த ஒருவர் வந்து காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்குச் செல்லும் பொழுது வேறு பாதையில் அழைத்துச் செல்வது என்கிற நிலைமை எப்படி அவராகச் செய்ய முடியும் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுபோலவே தான் பாதுகாப்பு கொடுப்பதும், பாதுகாப்புக் கொடுத்தும் பாதுகாப்பு நிச்சயமாக வெற்றி பெறாத நேரத்தில் வேறு வகையில் பாதுகாப்புக் கொடுத்து திருப்பி அனுப்பவேண்டிய பொறுப்பும் ஒரு அரசுக்கு உண்டு என்பதும் அதை நிறைவேற்றக்கூடியவர்களாக ஆங்காங்கே இருக்கிற அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்பதும், செயல்பட மறுக்கின்றவர்கள் பின்னால் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாகிறார்கள் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு, ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொண்டாலும், அவர்களைவிட நான் அறிவு செறிந்தவ என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அளவுக்கு இந்த மாநிலத்தின் முதலமைச்சரை மரியாதையோடு தான் வைத்திருக்கிறோம். அது தவிர மற்ற கருத்துக்களை எல்லாம் முதலமைச்சர் என்ற முறையில் விளக்கம் கூறினார்கள். அதை அங்கே விட்டு விடுகிறேன்.

நான் கூறுவதெல்லாம் கேரளாவில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே அம்மையார் போகவில்லை. ஆந்திர மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கும் அவர்கள் போகவில்லை. ஆனால் கர்நாடக மாநிலத்தில் அங்கே முதலமைச்சர் தேவராஜ்அர்ஸ் இருந்த காரணத்தால் அங்கே போனார்கள். நான் இதைக் கூறுகிறபொழுது அதிக விளக்கமாக கூறுவதற்கு காலம் இடம் கொடுக்காது என்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு ரசிக்கக்கூடிய சக்தியுள்ளவர் என்பதால் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இந்த அளவுக்கு நம் உடன் பிறப்புக்கள் பலர் உயிர் இழக்கக்கூடிய நிகழ்ச்சிகள் எல்லாம் நடை

பெறுவதற்கு அந்த அம்மையாரின் வருகைதான் காரணமாக இருந்தது என்பதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். கறுப்புக் கொடி காட்டப் பட்டது. ஜனதா கட்சியைப் பொறுத்தவரையில் கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் நாங்கள் இல்லை.........

திரு. துரை முத்துசாமி : பாய்ண்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து அமருங்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் அனைத்தையும் கவனித்துக்கொண்டு அவர் பேசும்பொழுது பதில் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார் கள். அந்த அடிப்படையில் நீங்கள் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தமிழ்நாடு ஜனதா கட்சியின் சார்பில் கறுப்புக்கொடி நிகழ்ச்சியில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்று ஒரு அறிக்கை விட்டிருந்தோம். ஜனதா கட்சித் தொண்டர்கள் கறுப்புக் கொடி நிகழ்ச்சி யில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் எத்தனை ஜனதா கட்சித் தொண்டர்கள் மீது பொய் வழக்குகள் சுமத்தப் பட்டிருக்கின்றன ? மதுராந்தகம், கும்பகோணம், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் பல வழக்குகள் ஜனதா கட்சித் தொண்டர்கள் மீது செக்ஷன் 307, இன்னும் கான்ஸ்பிரசி போன்ற அபாண்டமான குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

நான் முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே ஜனதா கட்சியைப் பொறுத்தவரையில் இதில் இல்லை என்று சொன்னால், ஏதோ போலீஸ் ஒரு வேளை முதலமைச்சர் அவர்களின் சம்மதம் இல்லாமல் நடந்திருக்க லாம். ஆங்காங்கிருக்கிற போலீஸ் அதிகாரிகள் இந்திரா காந்தியிடம் நெருக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் மட்டுமல்ல, ஹை லெவலில் இருக்கிற அதிகாரிகள் கூட இருக்கின்றார்கள். ஆக அவர்கள் செய் கின்ற காரியத்தை தடைபடுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, இந்திரா காந்தி அம்மையாரை மத்திய அர சாங்கம் டெல்லியில் கைது செய்தபோது தமிழ் நாட்டில் எத்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன ? எவ்வளவு தூரம்

வன்முறை தாண்டவம் ஆடிற்று என்பதை இந்த அரசு மறந்திருக்க முடியாது. அக்டோபர் 3, 4 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாதிரி வரலாற்றிலேயே நடந்திருக்கிறதா என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப்பட்டால் தமிழ் நாட்டில் மட்டும் ஏன் இத்தனை ஜனதா கொடிகள், கம்பங்கள் வெட்டி தகர்க்கப்பட வேண்டும்? தீக்கிரையாக்கப்பட வேண்டும்? மற்ற மாநிலங்களில் ஏன் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> அவைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களில் ஏன் நடக்கவில்லை என்று என்னைக் கேட்டால் நான் எப்படி பதில் சொல்ல முடியும் என்பதை தயவுசெய்து அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, நான் நன்றாக சிந்தித்து தான் மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தனைக்கு இவற்றைக் கூறினேன். நான் கூறுவதெல்லாம், மதுரையில் இந்திரா காங்கிரஸ் கமிட்டி தலைவருடைய தலைமையில், ஏற்பாட்டில் நடைபெற்ற ஊர்வலத்தில் சென்றவர்கள் பயங்கரமான ஆயுதங்களைத் தாங்கிச் சென்று கொண்டிருந்தபோதும், அங்கே நின்றிருந்த போலீஸ், அத்தனையையும் பார்த்துக் கொண்டு நின்றார்கள் என்று சொன்னால் இது சம்பந்தமாக இந்த அரசு என்ன விளக்கத்தை கூறவிருக்கிறது என்றுதான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் காரியங்கள் எல்லாம் இந்த அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே பல முறை கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக, ஜனதா கட்சியின் சார்பில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக, இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது என்று கேட்க விரும்புகிறேன். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றால், இந்த அரசின் அனுமதியோடு தான் அந்தப் போலீசார் நடந்து கொண்டார்கள் என்று நான் குறிப்பிடுவது நிச்சயமாக பொருத்தமானதாக இருக்கும் என்பதை கூறவிரும்புகிறேன்.

அன்றையதினம் ஊர்வலம் தெரு வீதியாகச் சென்றது. வன்முறையாளர்களால் அங்கே இருக்கிற பல கடைகளை அடைக்க பலாத்காரப்படுத்தப்பட்டார்கள். அடைக்க மறுத்த கடைகள் எல்லாம் தாக்கப்பட்டன, கடைக்காரர்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை இந்த அரசு நிச்சயம் மறந்திருக்க முடியாது. காந்தி ஜெயந்தி பந்தலும், பல்வேறு ஜனதா கட்சி சார்பில் அமைக்கப்பட்டிருந்தவைகள் எல்லாம் இழுத்து கீழே தள்ளப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன என்பதை இந்த அரசு முன்பே அறிந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இது சம்பந்தமாக, மதுரையில் சி. 1, பி. 4, பி. 7 காவல் நிலையங்களுக்கு தகவல்கள் கொடுத்திருக்கின்றோம். ஏன் இதுவரையில், இது சம்பந்தமாக அரசால், போலீஸ் இலாக்காவால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

எத்தனை ஜனதா கட்சித் தொண்டர்கள் காயமுற்றார்கள், எத்தனை பேர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்கள் என்பதை நிச்சயம் இந்த அரசு மறந்திருக்க முடியாது. காமராஜர் இளைஞர் எழுச்சி மன்றம், மதுரையில் வன்முறையாளர்களால் தாக்கப்பட்டது. ஜனதா கட்சி சார்பில் ஒரு ஊர்வலம் ஆரம்பிப்பதற்கு மேற்கு வீதியில் கூடியபோது அங்கே கூடிய ஜனதா கட்சித் தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். சோடா பாட்டில்களால், சைக்கிள் செயினால் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டார்கள். போலீஸாருடைய முன்னிலையில், அவர்கள் பார்த்துக்கொண்டு நின்றிருந்தபோது இத்தனை நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. போலீசார் குற்றவாளிகளை கைது செய்யவோ நடவடிக்கை மேற்கொள்ளவோ செய்யாமல், ஜனதா தொண்டர்களின் மீது லத்தி சார்ஜ் நடத்தியிருக்கிறார்கள். இதை இந்த அரசு அனுமதிக்கின்றதா, அல்லது நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

இன்று நிச்சயமாக காவல் துறையினர் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்கின்றார்கள், அதற்கு இந்த அரசுதான் பொறுப்பு என்று இங்கே நான் குற்றச்சாட்டாக கூற விரும்புகிறேன்.

அது மட்டுமில்லை. இந்திரா காந்தி அவர்கள் கைது செய்யப்பட்ட நேரத்திலே, தென்காசியில் நெல்லை மாவட்ட கலெக்டரே இந்திரா காங்கிரஸ்காரர்களைக் கூப்பிட்டு, "தலைவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார், நீங்கள் என்ன தூங்குகின்றீர்களா, உடனே ஊர்வலங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்யக்கூடாதா" என்று கேட்கின்றார். இதை பொறுப்புணர்ச்சியோடுதான் சொல்லுகிறேன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து நான் கூற விரும்புவதெல்லாம், இங்கே மக்கள் ஆட்சி நடைபெறவில்லை. நெருக்கடி காலத்தில் எப்படிப்பட்ட முறையில் அதிகாரிகளால் அரசு நடத்தப்பட்டதோ அதே போல, துரைத்தனத்தாரால்தான் இன்றைய ஆட்சி நடைபெறுகிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தேர்தல் நடைபெற்ற பின்னர் மக்கள் ஆட்சி நடக்கிறது என்றால், There must be an elected Government. Elected Government represented by Ministers என்று இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக இப்போது நடைபெறுவது உயர்மட்ட அதிகாரிகளால் நடைபெறும் ஆட்சியாகத்தான் இருக்கிறது. நடைபெறும் ஆட்சி ஜனநாயக ஆட்சியில்லை, மக்கள் ஆட்சி நடைபெறவில்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) துணைத் தலைவரவர்களே, நேற்றையதினம் எங்கள் கட்சியின் சார்பிலே யாரும் பேசவில்லை. இரண்டுநாள் ஒதுக்கியிருந்தும் கூட நாங்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. எனவே சற்று தாராளமாக எனக்கு நேரத்தை வழங்கினால் நலமாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்போது நடைபெறுவது மக்கள் ஆட்சியில்லை, அதிகாரிகளுடைய சர்வாதிகார ஆட்சிதான் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் அவர் இந்த மந்திரிசபையை அங்கீகரிக்கவில்லையா ? அமைச்சர்களுடைய ஆட்சி நடைபெறுகின்றது என்று அவர்கள் கருதவில்லையா என்று விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நண்பர் அவர்கள் நான் கூறியதைப் புரிந்து கொள்ளவில்லை. நான் விரும்புவதெல்லாம், அமைச்சர்கள் முழுப் பொறுப்போடு

They are alone competent to conduct the administration of this State.

What I subm't is the Government means in a democratic set up elected body represented by Council of Ministers. They alone are competent to do the administration of the State.

அதற்குப் பதிலாக இங்கே அதிகாரிகள் ஆட்சி நடைபெறுகிறது என்றுதான் சொல்லுகிறேன். அடுத்தபடியாக, இந்த ஆறுமாத கால ஆட்சியில் இந்த மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு. . . . .

திரு. மு. அம்பிகாபதி : ஸார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தேர்தல் நடைபெற்று, சட்டமன்றம் கூடி ஆட்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றார்கள். ஆனாலும் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் திரும்பத் திரும்ப அதிகாரிகளுடைய ஆட்சிதான் நடைபெறுகிறது என்று வலியுறுத்துவதன் உள்நோக்கம் என்ன என்று அவர் தெளிவுபடுத்தவேண்டும். இந்த அமைச்சரவையை அவர் புறக்கணிக்கின்றாரா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடுத்தபடியாக, தேர்தல் நேரத்தில் மட்டுமில்லை. . . .

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய சுதந்திரா கட்சி— மன்னிக்க வேண்டும், ஜனதா கட்சியைச் சார்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே அதிகாரிகள் ஆட்சிதான் நடப்பதாகத் திருப்பித் திருப்பிக் கூறுகின்றார்கள். மதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் அவர்கள்கூட, அதிகாரிகள் செய்யக்கூடிய நியாயமான முடிவுகளில் அமைச்சர்கள் அதிகமாகத் தலையிடக்கூடாது. மாறாக கொள்கை அடிப்படையில் அதாவது அரசின் கொள்கைக்கு மாறுபட்டதாக இருக்குமானால்தான், அவற்றிலே அமைச்சர்கள் தலையிட்டு முடிவெடுக்கலாம் என்ற குறிப்பினை கனம் உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. இதன் மூலம் அமைச்சர் அவர்கள் இங்கே நடந்துகொண்டுள்ள முறையை உண்மைதான் என்று ஒப்புக்கொள்ளுகின்றார்கள். அது பிரதமர் அவர்கள் கூறிய முறையில் அமைந்திருக்கின்றது என்று அவர் விளக்கம் சொல்லுகின்றார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் கேட்ட கேள்வி, "அதிகாரிகள் செயல்படும்போது அதிகம் யாரும் தலையிடக் கூடாது" என்று, பிரதம அமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள் என்ற கருத்தை இங்கே வெளியிட்டார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டால், 'அதிகாரிகளுடைய ஆட்சி இங்கே நடைபெறுகிறது' என்பதை அமைச்சர் ஒப்புக் கொள்கிறார்கள் என்பது போல் பதில் சொல்கிறார்கள். அவரே அதைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பிரதமர் அவர்கள், 'அதிகாரிகள் செயல்படும்போது அமைச்சர்கள் தலையிடக் கூடாது' என்று சொன்ன கருத்தை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். இந்த அமைச்சர்கள் தலையிடாமல் இருந்தால் நல்லது தான், அது வேறு விவகாரம். தலையிடுகிறார்களா என்பதை சந்தர்ப்பம் வரும்போது கூறிக்கொள்ளலாம். நான் சொல்வது,

The Officers are only servants of the Government. Government means the elected body.

ஆக, அரசு என்று கூறும்போது நான் கூறுவது முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், அவர்களோடு இருக்கின்ற அமைச்சர்களும்தான் மிகத் திறமையாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குப்பதிலாக அந்த இடத்தில் இன்னொருவர் செயலாற்ற நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தான் சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தப் பிரச்னை எங்கோ போகிறது. அவர் சொல்வது அமைச்சர்கள், அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்பட அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதைச் சொல்லி, அமைச்சர்கள் அல்லாமல் வேறு யாருக்கும் அதைக் கொடுத்துவிடக்கூடாது என்றால், இடையிலே யாரோ இருக்கிறார்கள் என்று அவர் கருதுவது போல் இருக்கிறது. அவர்கள் யார் என்று தெரிந்து தயவு செய்து தெரிவித்தால் எனக்கு உதவியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் சொன்ன முறையில் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்றோ என்னவோ தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் முதலிலேயே சொன்னேன் ; என்னை அதிக புத்திசாலி என்றோ, நான் படித்தவன் என்றோ சொல்லிக் கொள்ளவில்லை. என்னை விட ஜேம்ஸ் அதிலே தேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியும். அவர் சொன்னது எனக்கு புரிய முடியாமல் போயிருக்குமானால், புரியும் வகையில் அவர் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறியது, புத்திசாலி என்ற வார்த்தையை கூறவில்லை. நான் சொன்ன முறை—நான் ஜாக்கிரதையோடு வார்த்தையைப் போட்டேன்—விளக்கமாக 'முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் அவர்கள். . .' என்று சொன்னேனே தவிர, நான் சொன்னதை முதலமைச்சர் புரிந்து கொள்ளவில்லை என்று நிச்சயம் எப்போதும் கூற மாட்டேன், கருத மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 'அதிகாரிகள் ஆட்சி நடைபெறுகிறது' என்று திருப்பித் திருப்பிச் சொல்வதால் பலர் அதிலே குறுக்கிட வேண்டியிருக்கிறது. அதிகாரிகள் அவர்கள் இஷ்டம் போல் நடக்கிறார்கள் என்ற பொருள்பட இல்லாமல் அல்லது மாற்றியோ வேறுமாதிரி சொல்லியிருந்தால் பிரச்னை முடிந்திருக்கும் இந்நேரம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: என்னுடைய முதல் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. இடையில் இன்னொரு கேள்வி வந்தது. அதற்கு ஆளாக்கப்பட்டேன். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே சிலர்—'வேறு யாருக்கும் அந்த வாய்ப்பு, அதிகாரத்தைகொடுத்துவிடக் கூடாது' என்பது போல் பேசினார்கள். அவர்கள் யார் என்பதை நான் புரிந்து கொள்ளும்படி எனக்குச் சொல்ல கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குத் தெரிந்த அளவு நான் தெளிவாகச் சொல்ல முனைகிறேன். Government means, elected bo lv, Cabinet. The officers are only servants of the Government.

அதாவது, அரசு என்று கூறினால், அமைச்சரவை—தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை; அதிகாரிகள் அமைச்சரவையின் "சர்வென்ட்ஸ்" ஊழியர்கள்—அதுதான் நா

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் கேட்ட கேள்வி, "அதிகாரிகள் செயல்படும்போது அதிகம் யாரும் தலையிடக் கூடாது" என்று பிரதம அமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள் என்ற கருத்தை இங்கே வெளியிட்டார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டால், 'அதிகாரிகளுடைய ஆட்சி இங்கே நடைபெறுகிறது' என்பதை அமைச்சர் ஒப்புக் கொள்கிறார்கள் என்பது போல் பதில் சொல்கிறார்கள். அவரே அதைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பிரதமர் அவர்கள், 'அதிகாரிகள் செயல்படும்போது அமைச்சர்கள் தலையிடக் கூடாது' என்று சொன்ன கருத்தை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். இந்த அமைச்சர்கள் தலையிடாமல் இருந்தால் நல்லது தான். அது வேறு விவகாரம். தலையிடுகிறார்களா என்பதை சந்தர்ப்பம் வரும்போது கூறிக்கொள்ளலாம். நான் சொல்வது,

The Officers are only servants of the Government. Government means the elected body.

ஆக, அரசு என்று கூறும்போது நான் கூறுவது முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், அவர்களோடு இருக்கின்ற அமைச்சர்களும்தான் மிகத் திறமையாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குப்பதிலாக அந்த இடத்தில் இன்னொருவர் செயலாற்ற நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தான் சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்தப் பிரச்னை எங்கோ போகிறது. அவர் சொல்வது அமைச்சர்கள், அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்பட அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது மட்டுமல்லாமல், அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதைச் சொல்லி, அமைச்சர்கள் அல்லாமல் வேறு யாருக்கும் அதைக் கொடுத்துவிடக்கூடாது என்றால், இடையிலே யாரோ இருக்கிறார்கள் என்று அவர் கருதுவது போல் இருக்கிறது. அவர்கள் யார் என்று தெரிந்து தயவு செய்து தெரிவித்தால் எனக்கு உதவியாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் சொன்ன முறையில் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்றோ என்னவோ தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் முதலிலேயே சொன்னேன் ; என்னை அதிக புத்திசாலி என்றோ, நான் படித்தவன் என்றோ சொல்லிக் கொள்ளவில்லை. என்னை விட ஜேம்ஸ் அதிலே தேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியும். அவர் சொன்னது எனக்கு புரிய முடியாமல் போயிருக்குமானால், புரியும் வகையில் அவர் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறியது, புத்திசாலி என்ற வார்த்தையை கூறவில்லை. நான் சொன்ன முறை—நான் ஜாக்கிரதையோடு வார்த்தையைப் போட்டேன்—விளக்கமாக 'முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் அவர்கள். . .' என்று சொன்னேனே தவிர, நான் சொன்னதை முதலமைச்சர் புரிந்து கொள்ளவில்லை என்று நிச்சயம் எப்போதும் கூற மாட்டேன், கருத மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 'அதிகாரிகள் ஆட்சி நடைபெறுகிறது' என்று திருப்பித் திருப்பிச் சொல்வதால் பலர் அதிலே குறுக்கிட வேண்டியிருக்கிறது. அதிகாரிகள் அவர்கள் இஷ்டம் போல் நடக்கிறார்கள் என்ற பொருள்பட இல்லாமல் அல்லது மாற்றியோ வேறுமாதிரி சொல்லியிருந்தால் பிரச்னை முடிந்திருக்கும் இந்நேரம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: என்னுடைய முதல் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. இடையில் இன்னொரு கேள்வி வந்தது. அதற்கு ஆளாக்கப்பட்டேன். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே சிலர்—'வேறு யாருக்கும் அந்த வாய்ப்பு, அதிகாரத்தைகொடுத்து விடக் கூடாது' என்பது போல் பேசினார்கள். அவர்கள் யார் என்பதை நான் புரிந்து கொள்ளும்படி எனக்குச் சொல்ல கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குத் தெரிந்த அளவு நான் தெளிவாகச் சொல்ல முனைகிறேன். Government means, elected body, Cabinet. The officers are only servants of the Government.

அதாவது, அரசு என்று கூறினால், அமைச்சரவை—தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை; அதிகாரிகள் அமைச்சரவையின் "சர்வென்ட்ஸ்" ஊழியர்கள்—அதுதான் நா

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 ஜனவரி 6

கூறுவது. அரசு நடத்துகிற பொறுப்பை மக்கள் அமைச்சரவைக்கு அளித்திருக்கிறார்கள். அமைச்சரவை—காரணத்தை இப்போது நான் கூற விரும்பவில்லை—அந்தப் பொறுப்பை ஏற்று செயல்படவில்லை. அதற்கு பதிலாக அதிகாரிகளை செயலாற்ற நீங்கள் விடுகிறீர்கள். நான் உங்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே வேறு ஒருவர் இருப்பதாக நான் கூறவில்லை. நீங்கள் இருக்கும் இடத்தில் அதிகாரிகள் இருக்கிறார்கள். That is not proper. அப்படித் தான் கூறுகிறேன். ஆகவே,.............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் இடையே பேசக் கூடாது என்பது என்னுடைய விருப்பமாக இருந்தது. ஆனால் நிர்வாகத் துறையில் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இருந்தாலும் அவர் சொல்கிற கருத்து, அவர் எண்ணுகின்ற கருத்துக்கு ஏற்ப வெளிப்படுத்தப்படுகிறதா என்பதிலே எனக்கு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளை, அமைச்சர்கள் இடத்தில் வைத்து, அவர்களுடைய பணிகள் செய்யக் கூடிய வாய்ப்பை அவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று அவர்கள் சொல்வார்களானால்—நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—இந்த அதிகாரிகளிலே பல தரப்பினர், பல தகுதியினர் இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-20].

யார் யாருக்குச் சொல்லி அவர் இவருக்குச் சொல்லி அவர் தன் கீழேயுள்ளவர்களுக்குச் சொல்லி இப்படி வரிசையாகச் செயல்படுத்தவேண்டும் என்ற வரைமுறை இருக்கிறது. யாராவது கீழ் மட்டத்தில் தவறு செய்தால் அவரை அதற்கு மேல் உள்ள அதிகாரி கேட்பார். அவர் தவறு செய்தால் அதற்கு மேல் உள்ள அதிகாரி கேட்கிறார். இவர்கள் எல்லோருக்கும் மேல் உள்ள உச்சகட்டத்தில் இருப்பவர்கள் தவறு செய்தால், அப்படிப்பட்ட பெரிய அதிகாரிகள் தவறு செய்வார்களேயானால் அதைத் தட்டிக் கேட்க அமைச்சர்கள் முன்வரவேண்டும் என்று அவர்கள் விரும்புவார்களானால், இப்படித்தான் அவர்கள் கருத்து இருக்குமென்றால் அப்படிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கூறியதெல்லாம், Officialdom should not prevail. Officialdom should not dominate. Am I clear?

1978 ஜனவரி 6]

திரு. ரா. உமாநாத்: முதல் அமைச்சர் அவர்கள் க்ளாரிபிக்கேஷன் கேட்கிறார்கள். அவர்கள் மறுபடியும் சொல்கிறார்கள். நான் புரிந்துகொண்டது, 'elected representatives with all powers' அதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். அதிகாரிகள் ரெஸ்பான்ஸிபிலிட்டியோடு செயல்படவேண்டும். அதை ஒத்துக் கொள்கிறார்கள். உங்கள் பெயரால் நீங்கள் அதிகாரிகளுக்கு ரெஸ்பான்ஸிபிலிட்டீஸையும், பவரையும் ஒப்படைத்து விட்டீர்கள்.

That is all what he says.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் என்ன எதிர்பார்த்தேனோ அதை உமாநாத் அவர்கள் மூலம் வெளிப்படுத்த ஜேம்ஸ் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். எனக்கு மிக்க மகிழ்ச்சி. கூத்தக்குடி சண்முகம் எல்லாம் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசியதன் காரணமாக பதில் சொல்லும்போது நான் சொல்கிறேன். இந்தப் பதிலைத்தான் நான் எதிர்பார்த்தேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், உமாநாத் அவர்களுக்கும், எனக்கும் இந்த மொழிப்பிரச்னையில் கொஞ்சம் சிக்கல் உண்டு. (சிரிப்பு.) அதைப்பற்றி நான் இப்போது அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் நான் ஆங்கிலத்தில் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர்களும் மற்றவர்களும் புரிந்துகொண்டார்கள். இருந்தாலும் உமாநாத் அவர்கள் என்னைக் காப்பாற்ற வந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை தேர்தல் அறிக்கைகள் மூலமாகவும் இம்மாமன்றம் மூலமாகவும், இதற்கு முன்கூடியபோது, பல வாக்குறுதிகளை இந்த நாட்டு மக்களுக்கு அரசு அளித்தது. ஆனால் அத்தனை வாக்குறுதிகளும் இன்றைய தினம் காற்றில் பறக்க விடப்பட்டதாகத் தெரிகிறதே தவிர ஒரு காரியத்தையாவது இந்த அரசு செய்ததாகத் தெரியவில்லை.

குறிப்பாக சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல நண்பர்கள் கூறிவிட்டார்கள். மாநிலத்தில் 16,000 நியாயவிலைக் கடைகள் திறப்பது. 10,000 போலீஸ்

ளாரர்களை நியமனம் செய்வது, பல நாட்களாக உண்ணாவிரதம் இருந்து, நாலைந்து பெண்கள் உட்பட உண்ணாவிரதம் இருந்து உடனடியாக உண்ணாவிரதத்தை நீங்கள் கைவிட்டால் நாங்கள் உங்களுக்கு வேலை தருகிறோம் என்று வாக்குறுதி அளித்த அந்த டென்டல் மெக்கானிக்ஸ் 20 பேர்களுக்கும் இதுவரை வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து இளைஞர் அணி பிரச்சினை. அடுத்து, இறந்து போன மீனவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற ரூ. 10,000 இன்னும் மரத்திலிருந்து விழுந்தவர்களுக்கு ரூ. 5,000 போன்ற பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருக்கிறீர்கள். இதுவரை இவற்றில் ஒரு வாக்குறுதிகூட நிறைவேற்றப்படவில்லை.

அடுத்து, தேர்தல் காலத்தில் நடைபெற்ற பல்வேறு வழக்குகள், தேர்தல் சம்பந்தமாக வழக்குகளை, எல்லாம் வாபஸ் வாங்குவது என்று நீங்கள் இங்கே அறிவித்தீர்கள். இதுவரை நடக்கவில்லை.

அடுத்து, ஆறு மாத கால ஆட்சியில் தமிழகத்தின் நிலை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பொறுப்புள்ள அனைத்து அங்கத்தினர்களும் நோக்கக்கடமைப்பட்டிருக்கிறோம். படித்த இளைஞர்கள், பட்டதாரிகள், பி. டி. ஆசிரியர்கள், தமிழ் பண்டிட்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், தினசரிக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் போன்று லட்சோபலட்சம் மக்கள் இன்றைய தினம் வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கிறார்கள். எல்லோருக்கும் உடனடியாக வேலை கொடுத்துவிடமுடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, இந்தப் பிரச்னைக்கு ஏதாவது ஒரு திட்டம் வைத்திருக்கிறீர்களா, at least, is there any attempt to solve this problem? அதைத்தான் நான் கேட்கிறேன்.

இந்தப் பிரச்னை இன்றையதினம் இந்த அளவுக்கு உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறது என்றால் இன்னும் இந்த நாடு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது என்பதை நிச்சயமாக இந்த அரசுக்கு கூற விரும்புகிறேன். இன்னும் இந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை என்று சொன்னால் இந்த நாட்டில் புரட்சி வெடிக்கும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்

திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த அளவுக்கு பிரச்னை வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், 1967-க்கு பின் இருந்த அரசாக இருந்தாலும் சரி அல்லது அதற்கு முன்னால் இருந்த அரசாக இருந்தாலும் சரி, இந்தப் பிரச்னையை தேசிய உணர்வோடு தீர்த்து வைக்கத் திட்டங்கள் தீட்டப்படவில்லை.

முன்னதாக இருந்த அரசு கொண்டு வந்த மொழிப் பிரச்னைக்கு கொண்டு வந்த திட்டமானது ஆபத்தானது என்பதை இந்த அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். நான் இதை அரசியல் ரீதியாக நிச்சயமாக கூறவில்லை. நான் சொல்வதைத் தவறுதலாக நினைக்கவேண்டியதில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விட்டுவிடலாம், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களை எடுத்துக் கொள்ளலாம். அவர் ஒரு மலையாளி என்று கருதுகிறேன்......

திரு. ஆர். உமாநாத் : நான் ஒரு கொங்கணி

திரு. ஜே. ஜேம்ஸ் : சரி, அவர் தமிழகத்திற்கு வந்து தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டதின் காரணமாகத் தான் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்க முடிகிறது. அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை நன்றாக கற்றுக்கொண்டதன் காரணமாக இன்றைய தினம் தமிழ் நாட்டுக்கு முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே இது போன்ற நமது நாட்டிலுள்ள மக்கள் வெளியே போய் இது போன்றநல்ல வேலைவாய்ப்புக்களை பெறக்கூடாது என்கின்ற அளவில் இப்போதுள்ள திட்டம் இருக்கிறது. இன்றைக்கு இந்தி மொழி தெரிந்திருந்தால் வெளியே போய் பல்வேறு மாநிலங்களிலும் வேலைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இன்னும் சொல்லப் போனால் நமது முதலமைச்சர் அவர்களைப் போல் நம்முடைய மக்களும் வெளி மாநிலங்களுக்குச் சென்று முதலமைச்சராக ஆவதற்கு வாய்ப்பு இல்லாமல் இப்போதுள்ள நிலைமை ஆக்குகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி சொன்னார்கள், இதை தடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி செய்தது? இதற்கு வடக்கே காட்டமாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. இதுவரை விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்ததாக தெரிய

வாளர்களை நியமனம் செய்வது, பல நாட்களாக உண்ணாவிரதம் இருந்து, நாலைந்து பெண்கள் உட்பட உண்ணாவிரதம் இருந்து உடனடியாக உண்ணாவிரதத்தை நீங்கள் கைவிட்டால் நாங்கள் உங்களுக்கு வேலை தருகிறோம் என்று வாக்குறுதி அளித்த அந்த டென்டல் மெக்கானிக்ஸ் 20 பேர்களுக்கும் இதுவரை வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து இளைஞர் அணி பிரச்சினை. அடுத்து, இறந்து போன மீனவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற ரூ. 10,000 இன்னும் மரத்திலிருந்து விழுந்தவர்களுக்கு ரூ. 5,000 போன்ற பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருக்கிறீர்கள். இதுவரை இவற்றில் ஒரு வாக்குறுதிகூட நிறைவேற்றப்படவில்லை.

அடுத்து, தேர்தல் காலத்தில் நடைபெற்ற பல்வேறு வழக்குகள், தேர்தல் சம்பந்தமாக வழக்குகளை, எல்லாம் வாபஸ் வாங்குவது என்று நீங்கள் இங்கே அறிவித்தீர்கள். இதுவரை நடக்கவில்லை.

அடுத்து, ஆறு மாத கால ஆட்சியில் தமிழகத்தின் நிலை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பொறுப்புள்ள அனைத்து அங்கத்தினர்களும் நோக்க கடமைப்பட்டிருக்கிறோம். படித்த இளைஞர்கள், பட்டதாரிகள், பி. டி. ஆசிரியர்கள், தமிழ் பண்டிட்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், தினசரிக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் போன்று லட்சோபலட்சம் மக்கள் இன்றைய தினம் வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கிறார்கள். எல்லோருக்கும் உடனடியாக வேலை கொடுத்துவிடமுடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, இந்தப் பிரச்னைக்கு ஏதாவது ஒரு திட்டம் வைத்திருக்கிறீர்களா, at least, is there any attempt to solve this problem? அதைத்தான் நான் கேட்கிறேன்.

இந்தப் பிரச்னை இன்றையதினம் இந்த அளவுக்கு உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறது என்றால் இன்னும் இந்த நாடு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது என்பதை நிச்சயமாக இந்த அரசுக்கு கூற விரும்புகிறேன். இன்னும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று சொன்னால் இந்த நாட்டில் புரட்சி வெடிக்கும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த அளவுக்கு பிரச்சினை வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், 1967-க்கு பின் இருந்த அரசாக இருந்தாலும் சரி அல்லது அதற்கு முன்னால் இருந்த அரசாக இருந்தாலும் சரி, இந்தப் பிரச்னையை தேசிய உணர்வோடு தீர்த்து வைக்கத் திட்டங்கள் தீட்டப்படவில்லை.

முன்னதாக இருந்த அரசு கொண்டு வந்த மொழி பிரச்னைக்கு கொண்டு வந்த திட்டமானது ஆபத்தானது என்பதை இந்த அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். நான் இதை அரசியல் ரீதியாக நிச்சயமாக கூறவில்லை. நான் சொல்வதைத் தவறுதலாக நினைக்கவேண்டியதில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விட்டுவிடலாம், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களை எடுத்துக் கொள்ளலாம், அவர் ஒரு மலையாளி என்று கருதுகிறேன்......

திரு. ஆர். உமாநாத் : நான் ஒரு கொங்கணி

திரு. ஜே. ஜேம்ஸ் : சரி, அவர் தமிழகத்திற்கு வந்து தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டதின் காரணமாகத் தான் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்க முடிகிறது. அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை நன்றாக கற்றுக்கொண்டதன் காரணமாக இன்றைய தினம் தமிழ் நாட்டுக்கு முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே இது போன்ற நமது நாட்டிலுள்ள மக்கள் வெளியே போய் இது போன்றநல்ல வேலைவாய்ப்புக்களை பெறக்கூடாது என்கின்ற அளவில் இப்போதுள்ள திட்டம் இருக்கிறது. இன்றைக்கு இந்தி மொழி தெரிந்திருந்தால் வெளியே போய் பல்வேறு மாநிலங்களிலும் வேலைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இன்னும் சொல்லப் போனால் நமது முதலமைச்சர் அவர்களைப் போல் நம்முடைய மக்களும் வெளி மாநிலங்களுக்குச் சென்று முதலமைச்சராக ஆவதற்கு வாய்ப்பு இல்லாமல் இப்போதுள்ள நிலைமை ஆக்குகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி சொன்னார்கள், இதை தடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி செய்தது? இதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. இதுவரை விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்ததாக தெரிய

...ளர்களை நியமனம் செய்வது, பல நாட்களாக உண்ணாவிரதம் இருந்து, நாலைந்து பெண்கள் உட்பட உண்ணாவிரதம் இருந்து உடனடியாக உண்ணாவிரதத்தை நீங்கள் கைவிட்டால் நாங்கள் உங்களுக்கு வேலை தருகிறோம் என்று வாக்குறுதி அளித்த அந்த டென்டல் மெக்கானிக்ஸ் 20 பேர்களுக்கும் இதுவரை வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து இளைஞர் அணி பிரச்சினை. அடுத்து, இறந்து போன மீனவர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற ரூ. 10,000 இன்னும் மரத்திலிருந்து விழுந்தவர்களுக்கு ரூ. 5,000 போன்ற பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருக்கிறீர்கள். இதுவரை இவற்றில் ஒரு வாக்குறுதிகூட நிறைவேற்றப்படவில்லை.

அடுத்து, தேர்தல் காலத்தில் நடைபெற்ற பல்வேறு வழக்குகள், தேர்தல் சம்பந்தமாக வழக்குகளை, எல்லாம் வாபஸ் வாங்குவது என்று நீங்கள் இங்கே அறிவித்தீர்கள். இதுவரை நடக்கவில்லை.

அடுத்து, ஆறு மாத கால ஆட்சியில் தமிழகத்தின் நிலை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பொறுப்புள்ள அனைத்து அங்கத்தினர்களும் நோக்க கடமைப்பட்டிருக்கிறோம். படித்த இளைஞர்கள், பட்டதாரிகள், பி. டி. ஆசிரியர்கள், தமிழ் பண்டிட்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், தினசரிக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் போன்று லட்சோபலட்சம் மக்கள் இன்றைய தினம் வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கிறார்கள். எல்லோருக்கும் உடனடியாக வேலை கொடுத்துவிடமுடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, இந்தப் பிரச்னைக்கு ஏதாவது ஒரு திட்டம் வைத்திருக்கிறீர்களா, at least, is there any attempt to solve this problem? அதைத்தான் நான் கேட்கிறேன்.

இந்தப் பிரச்னை இன்றையதினம் இந்த அளவுக்கு உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறது என்றால் இன்னும் இந்த நாடு தாங்க முடியாத நிலையில் இருக்கிறது என்பதை நிச்சயமாக இந்த அரசுக்கு கூற விரும்புகிறேன். இன்னும் இந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை என்று சொன்னால் இந்த நாட்டில் புரட்சி வெடிக்கும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்

திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த அளவுக்கு பிரச்னை வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், 1967-க்கு பின் இருந்த அரசாக இருந்தாலும் சரி அல்லது அதற்கு முன்னால் இருந்த அரசாக இருந்தாலும் சரி, இந்தப் பிரச்னையை தேசிய உணர்வோடு தீர்த்து வைக்கத் திட்டங்கள் தீட்டப்படவில்லை.

முன்னதாக இருந்த அரசு கொண்டு வந்த மொழிப் பிரச்னைக்கு கொண்டு வந்த திட்டமானது ஆபத்தானது என்பதை இந்த அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். நான் இதை அரசியல் ரீதியாக நிச்சயமாக கூறவில்லை. நான் சொல்வதைத் தவறுதலாக நினைக்கவேண்டியதில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விட்டுவிடலாம், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களை எடுத்துக் கொள்ளலாம், அவர் ஒரு மலையாளி என்று கருதுகிறேன்......

திரு. ஆர். உமாநாத் : நான் ஒரு கொங்கணி

திரு. ஜே. ஜேம்ஸ் : சரி, அவர் தமிழகத்திற்கு வந்து தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டதின் காரணமாகத் தான் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்க முடிகிறது. அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை நன்றாக கற்றுக்கொண்டதன் காரணமாக இன்றைய தினம் தமிழ் நாட்டுக்கு முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே இது போன்ற நமது நாட்டிலுள்ள மக்கள் வெளியே போய் இது போன்றநல்ல வேலைவாய்ப்புக்களை பெறக்கூடாது என்கின்ற அளவில் இப்போதுள்ள திட்டம் இருக்கிறது. இன்றைக்கு இந்தி மொழி தெரிந்திருந்தால் வெளியே போய் பல்வேறு மாநிலங்களிலும் வேலைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இன்னும் சொல்லப் போனால் நமது முதலமைச்சர் அவர்களைப்போல் நம்முடைய மக்களும் வெளி மாநிலங்களுக்குச் சென்று முதலமைச்சராக ஆவதற்கு வாய்ப்பு இல்லாமல் இப்போதுள்ள நிலைமை ஆக்குகிறது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றி சொன்னார்கள், இதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்ன முயற்சி செய்தது? இதை வடக்கே காட்டமாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த அரசுக்கு பொறுப்பு இருக்கிறது. இதுவரை விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்ததாக தெரிய

வில்லை: உணவு அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளைப் பற்றி சொன்னார்கள். மத்திய அரசு ஒரே உணவு ஸோனாக ஆக்கிவிட்டதுதான் இதற்குக்காரணம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிலுள்ள அத்தனை மனிதர்களும் ஒன்று, என்ற தேசிய உணர்வோடு இதை நாம் பார்க்க வேண்டும். உணவுப்பிரச்னை என்பது ஒரு தேசீய பிரச்னை, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், அனைவருக்கும் விலைவாசி ஏறாத அளவில் அதற்காக அடிப்படையாக ஒரே ஸோன் என்றிருக்க வேண்டும்என்றுஅப்படி ஆக்கினார்கள். ஆனால்இந்தஅரசுஅதை ஏற்றுக் கொள்ளவில்லை, அது வேறு விஷயம், தமிழ்நாட்டை ஒரு ஸோனாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இன்னும் இந்த நெல் பிரச்னை, உணவுப் பிரச்னை தீராமல் இருக்கிறது. இது தீர வேண்டுமானால் நமது அரசு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மத்திய அரசு 72 ரூபாய்க்கு நெல்லுக்கு விலை என்று கட்டளையிட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய அரசு எதற்காக இப்படிக் கட்டளையிட்டிருக்கிறார்கள்? இந்தியாவிலுள்ள அனைத்து விவசாயிகளும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஒரே சீரான விலை கிடைக்க வேண்டும் என்ற முறையில் தான் இப்படி விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஒரே ஸோன் என்று அனுமதித்துவிட்டால் வெளி மாநிலங்களுக்கு அதாவது கேரள மாநிலத்திற்கு நம்முடைய நெல் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி வந்தால் நாம் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் சீரான முறையில் விநியோகத்தையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட உங்கள் உணவுக் கொள்கையால் தான் விவசாயிகள் இங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் .. ..

<u>மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்:</u> அவைத்தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசை சுட்டிக் காட்டி விடாதீர்கள் என்று சொல்லுகிற நேரத்தில் கோதுமைக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதை நமது உணவு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னார்கள் அது நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

மேலும், இந்தியை கட்டாய பாடமாக, தமிழ்நாட்டிலும் ஆக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கையா என்பதையும், தயவு செய்து விளக்குவார்களேயானால் நன்றாக இருக்கும்.

[முற்பகல்—11.30]

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: இந்தி கட்டாயப் பாடமில்லை என்பதை நான் மட்டுமல்ல. இன்றையதினம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மத்திய அரசுகூட அதைக் கட்டாயப் படுத்தாது. யாரும் விரும்பினால் இந்தியைக் கற்றுக் கொள்ளலாம். அது இப்போது நடைபெறவில்லை. இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்றைச் கூற விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் கல்வி நேரத்திற்கு வெளியே, அதாவது 4 மணிக்குப் பின்பு, தேவைப்படுகின்ற மாணவர்கள் இந்தி படிப்பதற்கு ஏற்பாடு இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அந்த வாயில் மூடப்பட்டது.

<u>மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்</u>: தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். இந்த இரு மொழித் திட்டம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்த அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஜேம்ஸ் அவர்கள் விரும்புகிறார்களா ? அப்படி அவர்கள் விரும்பினால், விரும்புகின்றவர்களுக்கு இந்தி மொழி கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையை மாற்ற வேண்டுமென்று நான் சொன்னாலும், ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாக தெரியும். குறைந்தபட்ச கோரிக்கையாக, யாராவது படிக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் படிக்கக்கூடாது என்று கட்டாயப் படுத்தக் கூடாது. அதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: தலைவர் அவர்களே, இங்கே ஜேம்ஸ் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு தந்திருக்கின்ற உறுதிமொழிகளை நிறை

விலை: உணவு அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளைப் பற்றி சொன்னார்கள். மத்திய அரசு ஒரே உணவு ஸோனாக ஆக்கிவிட்டதுதான் இதற்குக்காரணம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிலுள்ள அத்தனை மனிதர்களும் ஒன்று, என்ற தேசிய உணர்வோடு இதை நாம் பார்க்க வேண்டும். உணவுப்பிரச்னை என்பது ஒரு தேசீய பிரச்னை, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், அனைவருக்கும் விலைவாசி ஏறாத அளவில் அதற்காக அடிப்படையாக ஒரே ஸோன் என்றிருக்க வேண்டும்என்றுஅப்படி ஆக்கினார்கள். ஆனால்இந்தஅரசுஅதை ஏற்றுக் கொள்ளவில்லை, அது வேறு விஷயம், தமிழ்நாட்டை ஒரு ஸோனாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இன்றும் இந்த நெல் பிரச்னை, உணவுப் பிரச்னை தீராமல் இருக்கிறது. இது தீர வேண்டுமானால் நமது அரசு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மத்திய அரசு 72 ரூபாய்க்கு நெல்லுக்கு விலை என்று கட்டளையிட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய அரசு எதற்காக இப்படிக் கட்டளையிட்டிருக்கிறார்கள்? இந்தியாவிலுள்ள அனைத்து விவசாயிகளும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஒரே சீரான விலை கிடைக்க வேண்டும் என்ற முறையில் தான் இப்படி விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஒரே ஸோன் என்று அனுமதித்துவிட்டால் வெளி மாநிலங்களுக்கு அதாவது கேரள மாநிலத்திற்கு நம்முடைய நெல் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி வந்தால் நாம் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் சீரான முறையில் விநியோகத்தையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட உங்கள் உணவுக் கொள்கையால் தான் விவசாயிகள் இங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் .. ..

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: அவைத்தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசை சுட்டிக் காட்டி விடாதீர்கள் என்று சொல்லுகிற நேரத்தில் கோதுமைக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதை நமது உணவு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னார்கள் அது நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

மேலும், இந்தியை கட்டாய பாடமாக, தமிழ்நாட்டில் ஆக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கையா என்பதையும், தயவு செய்து விளக்குவார்களேயானால் நன்றாக இருக்கும்.

[முற்பகல்—11.30]

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தி கட்டாயப் பாடமில்லை என்பதை நான் மட்டுமல்ல. இன்றையதினம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மத்திய அரசுகூட அதைக் கட்டாயப் படுத்தாது. யாரும் விரும்பினால் இந்தியைக் கற்றுக் கொள்ளலாம். அது இப்போது நடைபெறவில்லை. இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்றைச் கூற விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் கல்வி நேரத்திற்கு வெளியே, அதாவது 4 மணிக்கு பின்பு, தேவைப்படுகின்ற மாணவர்கள் இந்தி படிப்பதற்கு ஏற்பாடு இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அந்த வாயில் மூடப்பட்டது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். இந்த இரு மொழித் திட்டம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்த அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஜேம்ஸ் அவர்கள் விரும்புகிறார்களா? அப்படி அவர்கள் விரும்பினால், விரும்புகின்றவர்களுக்கு இந்தி மொழி கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையை மாற்ற வேண்டுமென்று நான் சொன்னால், ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். குறைந்தபட்ச கோரிக்கையாக, யாராவது படிக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் படிக்கக்கூடாது என்று கட்டாயப் படுத்தக் கூடாது. அதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இங்கே ஜேம்ஸ் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு தந்திருக்கின்ற உறுதிமொழிகளை நிறை

விலை: உணவு அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளைப் பற்றி சொன்னார்கள். மத்திய அரசு ஒரே உணவு ஸோனாக ஆக்கிவிட்டதுதான் இதற்குக்காரணம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிலுள்ள அத்தனை மனிதர்களும் ஒன்று, என்ற தேசிய உணர்வோடு இதை நாம் பார்க்க வேண்டும். உணவுப்பிரச்னை என்பது ஒரு தேசிய பிரச்னை, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், அனைவருக்கும் விலைவாசி ஏறாத அளவில் அதற்காக அடிப்படையாக ஒரே ஸோன் என்றிருக்க வேண்டும்என்றுஅப்படி ஆக்கினார்கள். ஆனால்இந்தஅரசுஅதை ஏற்றுக் கொள்ளவில்லை, அது வேறு விஷயம், தமிழ்நாட்டை ஒரு ஸோனாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இன்றும் இந்த நெல் பிரச்னை, உணவுப் பிரச்னை தீராமல் இருக்கிறது. இது தீர வேண்டுமானால் நமது அரசு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மத்திய அரசு 72 ரூபாய்க்கு நெல்லுக்கு விலை என்று கட்டளையிட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய அரசு எதற்காக இப்படிக் கட்டளையிட்டிருக்கிறார்கள்? இந்தியாவிலுள்ள அனைத்து விவசாயிகளும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஒரே சீரான விலை கிடைக்க வேண்டும் என்ற முறையில் தான் இப்படி விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஒரே ஸோன் என்று அனுமதித்துவிட்டால் வெளி மாநிலங்களுக்கு அதாவது கேரள மாநிலத்திற்கு நம்முடைய நெல் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி வந்தால் நாம் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் சீரான முறையில் விநியோகத்தையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட உங்கள் உணவுக் கொள்கையால் தான் விவசாயிகள் இங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் .. ..

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: அவைத்தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசை சுட்டிக் காட்டி விடாதீர்கள் என்று சொல்லுகிற நேரத்தில் கோதுமைக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதை நமது உணவு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னார்கள் அது நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

மேலும், இந்தியை கட்டாய பாடமாக, தமிழ்நாட்டில் ஆக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கையா என்பதையும், தயவு செய்து விளக்குவார்களேயானால் நலமாக இருக்கும்.

[முற்பகல்—11.30]

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தி கட்டாயப் பாடமில்லை என்பதை நான் மட்டுமல்ல. இன்றையதினம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மத்திய அரசுகூட அதைக் கட்டாயப் படுத்தாது. யாரும் விரும்பினால் இந்தியைக் கற்றுக் கொள்ளலாம். அது இப்போது நடைபெறவில்லை. இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்றைச் கூற விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் கல்வி நேரத்திற்கு வெளியே, அதாவது 4 மணிக்கு பின்பு, தேவைப்படுகின்ற மாணவர்கள் இந்தி படிப்பதற்கு ஏற்பாடு இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அந்த வாயில் மூடப்பட்டது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். இந்த இரு மொழித் திட்டம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இதே அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஜேம்ஸ் அவர்கள் விரும்புகிறார்களா? அப்படி அவர்கள் விரும்பினால், விரும்புகின்றவர்களுக்கு இந்தி மொழி கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையை மாற்ற வேண்டுமென்று நான் சொன்னாலும், ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். குறைந்தபட்ச கோரிக்கையாக, யாராவது படிக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் படிக்கக்கூடாது என்று கட்டாயப் படுத்தக் கூடாது. அதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இங்கே ஜேம்ஸ் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று வந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு தந்திருக்கின்ற உறுதிமொழிகளை நிறை

விலை: உணவு அமைச்சர் அவர்கள் சில நடவடிக்கைகளைப் பற்றி சொன்னார்கள். மத்திய அரசு ஒரே உணவு ஸோனாக ஆக்கிவிட்டதுதான் இதற்குக்காரணம் என்றும் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிலுள்ள அத்தனை மனிதர்களும் ஒன்று, என்ற தேசிய உணர்வோடு இதை நாம் பார்க்க வேண்டும். உணவுப்பிரச்னை என்பது ஒரு தேசிய பிரச்னை, அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், அனைவருக்கும் விலைவாசி ஏறாத அளவில் அதற்காக அடிப்படையாக ஒரே ஸோன் என்றிருக்க வேண்டும்என்றுஅப்படி ஆக்கினார்கள். ஆனால்இந்தஅரசுஅதை ஏற்றுக் கொள்ளவில்லை, அது வேறு விஷயம், தமிழ்நாட்டை ஒரு ஸோனாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இன்றும் இந்த நெல் பிரச்னை, உணவுப் பிரச்னை தீராமல் இருக்கிறது. இது தீர வேண்டுமானால் நமது அரசு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மத்திய அரசு 72 ரூபாய்க்கு நெல்லுக்கு விலை என்று கட்டளையிட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய அரசு எதற்காக இப்படிக் கட்டளையிட்டிருக்கிறார்கள்? இந்தியாவிலுள்ள அனைத்து விவசாயிகளும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஒரே சீரான விலை கிடைக்க வேண்டும் என்ற முறையில் தான் இப்படி விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். நமது உணவு அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், ஒரே ஸோன் என்று அனுமதித்துவிட்டால் வெளி மாநிலங்களுக்கு அதாவது கேரள மாநிலத்திற்கு நம்முடைய நெல் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி வந்தால் நாம் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் சீரான முறையில் விநியோகத்தையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட உங்கள் உணவுக் கொள்கையால் தான் விவசாயிகள் இங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் .. ..

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: அவைத்தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அதை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசை சுட்டிக் காட்டி விடாதீர்கள் என்று சொல்லுகிற நேரத்தில் கோதுமைக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதை நமது உணவு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னார்கள் அது நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

மேலும், இந்தியை கட்டாய பாடமாக, தமிழ்நாட்டில் ஆக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கையா என்பதையும், தயவு செய்து விளக்குவார்களேயானால் நன்றாக இருக்கும்.

[முற்பகல்—11.30]

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தி கட்டாயப் பாடமில்லை என்பதை நான் மட்டுமல்ல. இன்றையதினம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மத்திய அரசுகூட அதைக் கட்டாயப் படுத்தாது. யாரும் விரும்பினால் இந்தியைக் கற்றுக் கொள்ளலாம். அது இப்போது நடைபெறவில்லை. இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்றைச் கூற விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் கல்வி நேரத்திற்கு வெளியே, அதாவது 4 மணிக்கு பின்பு, தேவைப்படுகின்ற மாணவர்கள் இந்தி படிப்பதற்கு ஏற்பாடு இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன், அந்த வாயில் மூடப்பட்டது.

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். இந்த இரு மொழித் திட்டம் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்த அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஜேம்ஸ் அவர்கள் விரும்புகிறார்களா? அப்படி அவர்கள் விரும்பினால், விரும்புகின்றவர்களுக்கு இந்தி மொழி கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையை மாற்ற வேண்டுமென்று நான் சொன்னாலும், ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். குறைந்தபட்ச கோரிக்கையாக, யாராவது படிக்க வேண்டுமென்று விரும்பினால், நீங்கள் படிக்கக்கூடாது என்று கட்டாயப் படுத்தக் கூடாது. அதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இங்கே ஜேம்ஸ் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று வந்திருக்கிறது. எனவே, அவர்களுக்கு தந்திருக்கின்ற உறுதிமொழிகளை நிறை

வேற்ற வேண்டும், அதைக் காப்பாற்ற வேண்டுமென்ற அந்நிலையிலே, அதிகாரிகளுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொன்னது போல், இதிலும் மக்களுக்கு நாங்கள் வாக்குறுதிகள் கொடுக்கும்போது என்ன சொன்னோமோ அதை உறுதிப்படுத்தும் வகையிலே இந்த அரசு இருக்கிறது. அதை நாங்கள் மாற்றிக் கொண்டால், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறியது ஆகாதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நீங்கள் மக்களுக்கு என்ன வாக்கு கொடுத்தீர்கள் என்ற பிரச்னை எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது நீங்கள் இரு மொழிக்கொள்கையை வைத்திருக்கிறீர்கள். ஆகவே, அதை மீறியோ அல்லது மாறியோ நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அன்புக்குரிய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுடைய கருத்திற்கு நான் நன்றி கூறுகிறேன். அப்படியானால், நான் மலையாளி என்ற காரணத்தால், தமிழ் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று வேலைவாய்ப்பு பெறுகின்ற ஒரு சூழ்நிலையைத் தகர்க்கிறேன், முயற்சிக்கிறேன் என்ற ஒரு குற்றச்சாட்டிற்கு எங்கே இடமிருக்கிறது என்ற கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை நான் விட்டு விடுகிறேன். ஆனால், நண்பர் உமா நாத் அவர்களை எடுத்துக் கொள்ளுங்கள். உமாநாத் அவர்கள் இந்த மாநிலத்திற்கு வந்து, தமிழைக் கற்றுக் கொள்ள வில்லை என்றால், அவர் இந்த மன்றத்திலே அங்கத்தினராக இருந்திருப்பாரா என்பது என் ஐயப்பாடு. அதுபோல் இந்த மாநிலத்திலே....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் பேசியது, நான் பின்பு அதிகமாக பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டிய அளவுக்கு இல்லாமல், நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். [illegible]ம் மீண்டும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

தமிழ் தெரியாதவர்கள் இந்த அவையில் இருந்து ஆங்கிலத்திலே பேசியிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய நினைவுக்கு கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதுண்டா? என்று நான் கேட்கிறேன். ஏனெனில், என்னைவிட இந்த அவையில் அவருக்கு அதிக அனுபவம் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் அதை நினைத்துச் சொல்லவில்லை. நான் கூறியது எல்லாம், நண்பர் உமாநாத் அவர்கள் தமிழ் பேசுவதற்கும், படிப்பதற்கும் நன்றாகக் கற்றுக் கொண்ட காரணத்தினாலே, அவர் தமிழ் நாட்டிலே உள்ள மக்களோடு அளவளாவி, மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்று, நம்பிக்கையைப் பெற்று அங்கத்தினராக இருக்கிறார். இதுபோல் நமது மாநிலத்திலே இருக்கின்ற மற்றவர்கள், தமிழைவிட மற்றொரு மொழியைக் கற்றுக் கொள்வதால் நல்லது ஏற்படுமே தவிர, வேறு ஒரு தீமையும் வந்து விடாது. அது பிற மாநிலங்களிலே வேலைவாய்ப்புக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி தனியாகப் பேசினால், நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பேசியது அவர் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்புக்குப் பொருத்தமாக அமைந்திருந்தது. ஆனால் இந்த ஒரு வார்த்தை மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. தனியாகப் பேசினால் நான் ஒன்று சொல்வேன் என்று அவர் நம்பிக்கைப்படுகிறார். இதுவரை அப்படி அவர் தனியாகப் பெற்றது என்ன? கொள்கைக்கு மாறாக என்னிடம் எதையாவது அவர் பெற்றிருக்கிறாரா? ஏதாவது சலுகையைப் பெற்றிருக்கிறாரா? ஏதாவது ஆதரவைப் பெற்றிருக்கிறாரா? அதையாவது சொல்ல வேண்டும். இல்லையென்றால் வேறு யாரிடமாவது என் கொள்கையை விட்டு அப்படிப்பட்ட காரியங்களுக்கு ஆதரவு காட்டியிருக்கிறேன் என்பதற்கு ஆதாரம் இருந்தால் விளக்கிட வேண்டும். அப்படி கொள்கையை விட்டு தன்னுடைய வாழ்க்கைக்கும் பின்னால் தனியாகப் பேசும்போது அங்கத்தினர்களிடம், அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஒரு முதல் அமைச்சர் நடந்து கொள்வது நிச்சயமாகப் பொருந்தாது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, தயவு செய்து இப்படிப்பட்ட குற்றச்சாட்டை என் மீதோ, மற்றவர்கள் மீதோ சுமத்து

[illegible]ற்கு முன் நினைத்துப் பார்த்துக் கூறுங்கள். தயவு செய்து எங்கள் மனதைப் புண் படுத்த வேண்டாம். எங்கள் கொள்கைப் பிடிப்பை நீங்கள் நன்கு புரிந்திருக்கிறீர்கள் என்று முதலிலேயே சொன்னீர்கள். பிரதான எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கும் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் கொள்கை ஒன்றுதான் என்று சொன்னீர்கள். அதையும் ஒப்புக்கொண்டு அந்தக் கொள்கைப்படி நடக்கிறார்கள் என்று சொன்ன வார்த்தையை [illegible] குறுக்கிடவில்லை. கொள்கையை மாற்றிக் கொள்ள முடியாது என்று வற்புறுத்திச் சொல்லிவிட்டு அதற்குப் பின்னால் தனியாகப் பேசினால் ஒத்துக் கொள்வார்கள் என்று கூறுவார்களானால் அது இந்த மன்றத்திற்குப் பொருத்தமுடையதாகுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நான் ' தனியாக ' என்று சொன்னது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட பொருள்பட இல்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில் விபரீதங்கள் இல்லையென்று சொன்னார்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : விபரீதங்கள் என்ற பிரச்சினை எங்களுக்குக் கிடையாது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம்— It is only a provincial party. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அகில இந்தியக் கட்சியாக மாறியிருக்கும் சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையில் நான் கூறுகிற கருத்துக்களின் அடிப்படையில் [illegible] என்று ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி அரசு அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறது. கண்டிப்பாக அமல்படுத்தியிருக்கிறோம் என்றெல்லாம் கூறுகிறார்கள். இன்று நடைபெறுகிற நிலைமையைப் பார்க்கும்போது பட்டினங்களில் எல்லா வார்டுகளிலும் கள்ளச் சாராயம் தாராளமாக விற்பனையாகிறது. [illegible] இது குடிசைத் தொழிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டத்தில் [illegible] சாராயம் குடித்து ஐந்து பேர் இறந்து விட்டார்கள். [illegible] பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள்.

[illegible]த்தமாக ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். [illegible] அரசாங்கத்தின் அன்றாட அலுவலுக்கு உட்பட்டது என்று [illegible] தள்ளப்பட்டது. சாராயம் குடித்துச் சாவதை [illegible]சாங்கம் அன்றாட நிகழ்ச்சி என்று ஏற்றுக் கொள்கிறதா ?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத் தள்ளுவதற்காக பேரவைத் தலைவரால் சொல்லப்பட்ட காரணங்களைப் பற்றியெல்லாம் காமென்ட் [illegible] அவ்வளவு நல்லதல்ல.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நண்பர் லத்தீப் அவர்கள் நேற்றைய [illegible] உரையாற்றுகிறபோது இந்த மன்றத்தில் கடந்த ஆறு [illegible] காலத்தில் அமைதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டதற்குத் திராவிட முன்னேற்றக் கழகந்தான் காரணம் என்று சொன்னார்கள்.

(திரு. துரை முத்துச்சாமி எழுந்தார்).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : தயவு செய்து உட்காருங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : கடந்த ஆறு மாத காலத்தில் [illegible] ஏற்பட்ட அமைதியின்மை நிலையை நிச்சயமாக [illegible] மறுக்காது. இதற்குக் காரணம் யார் என்பதற்கு [illegible] பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். Responsibility is only on the Government. Nobody else can shoulder the responsibility என்று நான் கூற விரும்புகிறேன்.

[illegible]வர்கள் கிளர்ச்சி சம்பந்தமாக கடந்த 26-9-77-ம் தேதி முதல் 6-10-77-ம் தேதி வரையிலும் மதுரை நகரில் நடந்த காரியங்களைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு மாணவர்கள் கிளர்ச்சியை இந்த அரசு அணுகுமுறையில் தவறு [illegible] செயல்பட்டார்கள், அதன் காரணமாகச் சிறிய காரியம் [illegible] இருந்தது பெரிய பிரச்சினையாக மாறியது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[முற்பகல் 11·40]

முதன் முதலில் தியாகராசர் கல்லூரியில் ஒரு சிறிய கலாட்டா காரம் ஏற்பட்டு அது மதுரைக் கல்லூரியிலும், அமெரிக்கன் கல்லூரியிலும் சென்று எத்தனை மாணவர்கள் போலீசாரா லும் சமூக விரோதிகளாலும் தாக்கப்பட்டார்கள் என் பதைச் சுட்டிக் காட்டுகிறபோது இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏதாவது ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், ஒரு கிளர்ச்சியை அடக்கவேண்டுமென்று சொன் னால் இப்படி சமூக விரோதிகளைத் தூண்டிவிட்டு இம்மாதிரி செய்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சிகளில் போலீசார் அடக்கு முறை நடத்தியிருக்கி றார்கள், மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், மாணவர் கள் காயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், அநேக மாணவர்கள் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது சம் பந்தமாக நான் விரிவாகப் பேசவில்லை என்றாலும் அரசு இது சம்பந்தமாக நீதி விசாரணை நடத்தியாக வேண்டும். கல்லூரியில் விளாகத்தில், ஹாஸ்டலுக்குள் கல்லூரி முதல் வர் அனுமதியில்லாமல் போலீசார் நுழைந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றால் இதனை ஏற்றுக்கொள்ள முடி யாது. இம்மாதிரி செயல்பட்ட அதிகாரிகள்மீது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, போலீஸ் இலாகாவைப்பற்றி மட்டும் ஒரு கருத்தைக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கி றேன். இது வரையில் இந்த மாநிலத்தில் பல்வேறு கட்சிகள் ஆட்சி நடத்தியது. ஆனால் இப்படி புனிதமாக அரசியல் தலையீடு இல்லாமல் புனிதமாகச் செயல்படக்கூடிய ஆட்சி இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது என்று போலீஸ் அதி காரி அறிக்கை விட்டிருப்பதைப் பார்த்தேன். அவர் மனச் சாட்சியோடு சொல்லியிருக்கிறாரா அல்லது வேறு விதமான முறையில் சொல்லியிருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.

நேற்றைய தினம் பேசிய உறுப்பினர்கூட இங்கே சொன் னார். இந்திரா நகரில் நடந்த ஒரு கொலைவழக்குப்பற்றிச் சொன்னார்கள். ஏன் புலன் விசாரணைசெய்யப்பட்டு நட வடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை விளக்கிச் சொல்ல வேண்டாமா?

சிவகாசியிலே ஒரு மாதத்திற்கு முன்பாக சுந்தரம் டிரான்ஸ் போர்ட் முதலாளி தாக்கப்பட்டு எத்தனை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. எம்.எல்.ஏக்கள் தலையிட்டதாகப் புகார் வந்தி ருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையத்தில் ஒரு ஏழை புறம்போக்கு நிலத்தில் ஒரு குடிசையை அமைத்து இருக்கி றார். அங்கே ஆளுங் கட்சியைச் சேர்ந்த எம். பி. ஒருவர் பக்கத்திலே சொந்தமாக நிலம் வைத்திருக்கிறார். அவருக்கு இந்த நிலமும் தேவைப்படுகிறது. அதை எடுப்பதற்காக அந்தக் குடிசையை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகப் புகைப்படங்களைக் கூட எனக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அரசு சிந்தித்துப் பார்த்து நட வடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசைப்பற்றிக் கூற வேண்டியதைக் கூறுவதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாய்ப்பளித்திருக்கிறது என்று சொல்லி வாய்ப்பளித்த தலை வருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அடுத்து, திரு. உமாநாத்.

திரு. துரை முத்துசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் கிளா ரிபிகேஷன் சார், திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகின்றபோது தனியாக முதலமைச்சரிடம் சொன்னால் ஒத்துக்கொள்வரா் கள் என்று சொன்னார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். அவர் பேசி அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லி விட்டார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி இருக்கிறது. மௌனம் என்பதும் பேசாமல் இருப்பது என்பதும் ஏற்றுக்கொண்ட தாகப்பொருள் என்று.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் இன் னும் பேச ஆரம்பிக்கவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: கூத்தகுடி சண்முகம்
அவர்கள் கூறினார்கள் என்ற வார்த்தையோடு முடிக்கா
கள் என்பதால், அமைச்சர்களுக்குப் பதில் அதிகாரிகள் [illegible]
கிறார்கள் என்று நானும் சொன்னதாகக் கருத்துப்பட [illegible]
புரிந்து கொள்வதாக இருக்கிறது, அதைப்பற்றி விளக்கம்
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதிகாரிகள்
ஆட்சியாக இருக்கிறது என்று சொன்னதாக மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது சொல்லவில்லை, உங்
கள் பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் கூட பேசியிருக்கிறார்
கள், பதில் சொல்லும்பொழுது பேசுகிறேன் என்று சொன்
னார்களே தவிர, உங்களைக் குறிப்பிட்டுப் பேசவில்லை.

திரு. ரா. உமாநாத்: உதவி சபாநாயகர் அவர்களே,
ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷனோடு ஆரம்பித்து விடுகிறேன்.
நான் கொங்கணி குடும்பத்திலே பிறந்தவன். இது நம்பர்
ஒன்று. பாய்ன்ட் நம்பர் இரண்டு, நான் ஒரு இந்திய மகன்.
பாய்ன்ட் நம்பர் மூன்று, 37 ஆண்டுக் காலமாக முழு நேர
ஊழியனாகத் தமிழ் நாட்டில் பணியாற்றிக்கொண்டிருப்பவன்.
தமிழ்நாட்டு மக்கள் என்னை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
That is all my personal explanation

இப்படிப்பட்ட தீர்மானத்தின்மீது நான் பேசுகின்ற
பொழுது நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், எதிர்க்
கட்சித் தலைவரவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு
வருவதற்கு உரிமை உண்டா என்றால் நிச்சயமாக சட்டசபை
விதிகளின்படி அவருக்கு உரிமை உண்டு. ஆனால் He
has lost the moral right to move the No Confidence Motion.
அதாவது தமிழிலே சொல்வது என்றால், அதற்கான தார்மீக
உரிமையை அவர்களும், அவர்களுடைய கட்சியும் இழந்து
விட்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து.

ஏழாண்டுக் காலம் அவர்களுடைய அரசாங்கம் மேற்
கொண்ட போலீஸ் கொள்கைகள், பெரும் முதலாளிகளுக்கு
ஆதரவு, தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதக் கொள்கை,
விவசாயி விரோத கொள்கை, மாணவர்கள் விரோத
[illegible] அனைத்தும் தார்மீக உரிமையை இழக்கச் செய்திருக்
[illegible] என்று நான் சொல்லுவதற்குக் காரணம் ஆகும்.

இருந்தும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பயன்படுகிறது
தற்கு என்று சொன்னால் சுய பரிசோதனைக்கு, யாருக்கு?
அரசாங்கத்தைவிட அவருக்கும் அவருடைய கட்சிக்கும் சுய
பரிசோதனை செய்துகொள்ள இந்த நோ கான்பிடன்ஸ் மோஷ
ன்மீது நடக்கும் இந்த டிஸ்கஷன் உதவும் என்று நான் நம்பு
கிறேன். அப்படி ஒரு வேளை ஏற்பட்டால் அது இந்
கட்சிக்கும் நல்லது, தமிழ்நாட்டிற்கும் நல்லது என்று கருது
கிறேன்.

அடுத்தபடியாக ஒரு கதை. ஒரு சிங்கம் கிணற்றில் எட்டி
ப் பார்த்ததாம். இன்னொரு சிங்கம் இருக்கிறது என்று
நினைத்து அதைப் பார்த்துக் குதித்தது. அவ்வளவுதான்.
[illegible] என்றால் அது சிங்கம் அல்ல, அதனுடைய நிழல்தான்
[illegible] என்று தெரியவில்லை அதற்கு. அந்த மாதிரி எதிர்க்
கட்சித் தலைவரவர்கள் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்
கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது கிணறு. எட்டிப்
பார்க்கிறார். அதற்குள்ளே வேறொரு முகம் இருக்கிறது
என்று நினைக்கிறார். எம்.ஜி. ஆர். முகம்—முதலமைச்சரின்
முகம்—இந்த சர்க்காரின் முகம் என்று பார்க்கிறார். குதிக்
கப் பார்க்கிறார். தயவுசெய்து குதிக்காதீர்கள். உங்களு
டைய முகம்தான் அது.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுங் கட்சி
யின் சார்பில் என்னை பூனை என்றும், எலி என்றும் வருணிக்கின்ற
நேரத்தில், நண்பர் உமாநாத் அவர்கள் முன் வந்து என்னை
சிங்கம் என்று ஒத்துக் கொண்டதற்காக நன்றி.

திரு. ரா. உமாநாத்: நான் பூராவும் சொல்வதைக்
கேளுங்கள். அவரோ, அவருடைய கட்சியோ சிங்கம் இல்லை
என்று சொல்லப் போனேன். அது தெரிந்தோ என்னவோ
அவரே முந்திக்கொண்டு விட்டார் போல் இருக்கிறது.
[illegible] வைத்திருக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம்
சிங்கம் என்று நான் கூறவில்லை என்று நான் அதைச் சொல்
வதற்குள்ளே சொல்லி விட்டார்கள். பரவாயில்லை. Any-
way, let us take it sportingly.

அடுத்தபடியாக, எதிர்க் கட்சித் தலைவரவர்களை நான்
பணிவோடு கேட்டுக் கொள்வது என்னவென்றால், கொடுத்த
வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று அவர் சொல்லி
யிருக்கிறார், பல குறிப்புகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்,
நான் ஒன்றைக் கேட்கிறேன், கொடுத்த வாக்குறுதிகளை

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: கூத்தகுடி சண்முகம் அவர்கள் கூறினார்கள் என்ற வார்த்தையோடு முடித்தார்கள் என்பதால், அமைச்சர்களுக்குப் பதில் அதிகாரிகள் [illegible] இருர்கள் என்று நானும் சொன்னதாகக் கருத்துப்பட [illegible] புரிந்து கொள்வதாக இருக்கிறது, அதைப்பற்றி விளக்கம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதிகாரிகள் ஆட்சியாக இருக்கிறது என்று சொன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது சொல்லவில்லை. [illegible] கள் பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் கூடப் பேசியிருக்கிருர்கள், பதில் சொல்லும்பொழுது பேசுகிறேன் என்று சொன்னுர்களே தவிர, உங்களைக் குறிப்பிட்டுப் பேசவில்லை.

திரு. ரா. உமாநாத்: உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷனேடு ஆரம்பித்து விடுகிறேன். நான் கொங்கணி குடும்பத்திலே பிறந்தவன். இது நம்பர் ஒன்று. பாய்ன்ட் நம்பர் இரண்டு, நான் ஒரு இந்திய மகன். பாய்ன்ட் நம்பர் மூன்று, 37 ஆண்டுக் காலமாக முழு நேர ஊழியனுகத் தமிழ் நாட்டில் பணியாற்றிக்கொண்டிருப்பவன், தமிழ்நாட்டு மக்கள் என்னை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். That is all my personal explanation

இப்படிப்பட்ட தீர்மானத்தின்மீது நான் பேசுகின்ற பொழுது நான் சொல்ல விரும்புவது என்னவென்றுல், எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு உரிமை உண்டா என்றுல் நிச்சயமாக சட்டசபை விதிகளின்படி அவருக்கு உரிமை உண்டு. ஆனல் He has lost the moral right to move the No Confidence Motion. அதாவது தமிழிலே சொல்வது என்றுல், அதற்கான தார்மீக உரிமையை அவர்களும், அவர்களுடைய கட்சியும் இழந்து விட்டிருக்கிருர்கள் என்பது என்னுடைய கருத்து.

ஏழாண்டுக் காலம் அவர்களுடைய அரசாங்கம் மேற்கொண்ட போலீஸ் கொள்கைகள், பெரும் முதலாளிகளுக்கு ஆதரவு, தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதக் கொள்கை, விவசாயி விரோத கொள்கை, மாணவர்கள் விரோத கொள்கை, பல ஊழல்கள், எட்செட்ரா, எட்செட்ரா. இவைகள் அனைத்தும் தார்மீக உரிமையை இழக்கச் செய்திருக்கின்றன என்று நான் சொல்லுவதற்குக் காரணம் [illegible]

இருந்தும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பயன்படுகிறது. எதற்கு என்று சொன்னுல் சுய பரிசோதனைக்கு, யாருக்கு? அரசாங்கத்தைவிட அவருக்கும் அவருடைய கட்சிக்கும் சுய பரிசோதனை செய்துகொள்ள இந்த நோ கான்பிடன்ஸ் மோஷனின்மீது நடக்கும் இந்த டிஸ்கஷன் உதவும் என்று நான் நம்புகிறேன். அப்படி ஒரு வேளை ஏற்பட்டால் அது இந்த நாட்டுக்கும் நல்லது, தமிழ்நாட்டிற்கும் நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக ஒரு கதை. ஒரு சிங்கம் கிணற்றில் எட்டிப் பார்த்ததாம். இன்னொரு சிங்கம் இருக்கிறது என்று நினைத்து அதைப் பார்த்துக் குதித்தது. அவ்வளவுதான். ஏன் என்றுல் அது சிங்கம் அல்ல, அதனுடைய நிழல்தான் நிழல் என்று தெரியவில்லை அதற்கு. அந்த மாதிரி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இப்பொழுது கொண்டு வந்திருக்கிருர்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது கிணறு. எட்டிப் பார்க்கிருர். அதற்குள்ளே வேருெரு முகம் இருக்கிறது என்று நினைக்கிருர். எம்.ஜி. ஆர். முகம்—முதலமைச்சரின் முகம்—இந்த சர்க்காரின் முகம் என்று பார்க்கிருர். குதிக்கப் பார்க்கிருர். தயவுசெய்து குதிக்காதீர்கள். [illegible] னுடைய முகம்தான் அது.

திரு. மு. கருணுநிதி: தலைவரவர்களே, ஆளுங் கட்சி சார்பில் என்னை பூனை என்றும், எலி என்றும் வருணிக்கின்ற நேரத்தில், நண்பர் உமாநாத் அவர்கள் முன் வந்து என்னை சிங்கம் என்று ஒத்துக் கொண்டதற்காக நன்றி.

திரு. ரா. உமாநாத்: நான் பூராவும் சொல்வதைக் [illegible] கேளுங்கள். அவரோ, அவருடைய கட்சியோ சிங்கம் இல்லை என்று சொல்லப் போனேன். அது தெரிந்தோ என்னவோ அவரே முந்திக்கொண்டு விட்டார் போல் இருக்கிறது. [illegible] வைத்திருக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் சிங்கம் என்று நான் கூறவில்லை என்று நான் அதைச் சொல் [illegible] அதற்குள்ளே சொல்லி விட்டார்கள். பரவாயில்லை. Anyway, let us take it sportingly.

அடுத்தபடியாக, எதிர்க் கட்சித் தலைவரவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வது என்னவென்றுல், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று அவர் சொல்லியிருக்கிருர், பல குறிப்புகளையெல்லாம் சொல்லியிருக்கிருர், நான் ஒன்றைக் கேட்கிறேன், கொடுத்த வாக்குறுதிகளை

நிறைவேற்றுவதற்குக் கொஞ்சம் சரித்திரத்தைப் பார்க்க
வேண்டும். காங்கிரஸ் கட்சிக்கு, கொடுத்த வாக்குறுதி
களை நிறைவேற்ற முயற்சிக்க—நிறைவேற்ற என்று கூடச்
சொல்லமாட்டேன்—முயற்சிக்க 20 ஆண்டுகள் கொடுக்கப்
பட்டன. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சரா
இருந்த அரசாங்கத்திற்கு ஏழாண்டுக் காலம் அந்த வாய்ப்
பாக்க் கொடுக்கப்பட்டது. இந்தச் சர்க்காருக்கு
தாண்டு கூடவா கொடுக்கக் கூடாது? எனவே, அந்த
திலே என்ன நியாயம் இருக்கிறது? நியாயம் இல்லை என்று
சொல்ல விரும்புகிறேன். ஒரு வித்தியாசம் இருக்கிறது.
இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில். அப்பொழுது
உதயகுமார் கொல்லப்பட்டார். அப்பொழுது எந்தப்
போலீஸ் அதிகாரியின்மீதும் 302-வது செக்ஷன்கீழ் மர்டர்
சார்ஜ் அன்றைக்குச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை...
அதேபோல் மூங்கில்தரப்பட்டு ஆறுமுகம் கொல்லப்பட்டார்.

திரு. கே. சுப்பிரவேலு: பாயின்ட் ஆப் கிளாரிபி
கேஷன். தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு
உமாநாத் அவர்கள் பேசும்பொழுது ஐந்தாண்டுக் காலம்
அவகாசம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஐந்
தாண்டு கழித்துத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம்
கொண்டு வரப்பட வேண்டுமா?

திரு. ரா. உமாநாத்: Sir, I am not yielding. இன்
பர்மேஷன் என்றால் நான் அனுமதித்துத்தான் கேட்க வேண்
டும். கிளாரிபிகேஷன் என்றாலும் நான் இடம் கொடுத்தால்
தான் கேட்க வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால்
உங்களுடைய அனுமதி வேண்டும். I do not want to yield
on this point. ஆகவே, மூங்கில்தரப்பட்டு ஆறுமுகம் இறந்த
பொழுது 302-செக்ஷன்கீழ் எந்த போலீஸ் அதிகாரியின்
மீதும் சார்ஜ் செய்யப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

ஜமீலா என்ற பெண் கற்பழிக்கப்பட்டு போலீஸ் லாக்கப்
பிலே கொல்லப்பட்டபொழுது எந்தப் போலீஸ் அதிகாரியின்
மீதும் 302-செக்ஷன்கீழ் சார்ஜ் செய்யப்படவில்லை.

(முற்பகல் 11-50.)

ஆனால், சீராளன் என்பவர், இந்த ஆளுங்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே கொல்லப்பட்டார். அப்பொழுது எமர்ஜன்ஸி இருந்தது. அதை இன்னும் லிப்ட் பண்ணவில்லை. அப்பொழுது அவர் போலீஸ் கஸ்டடியில் கொல்லப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவரும், நாங்களும் பலரும், விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டோம். விசாரணை நடத்தினார்கள். நடத்திய பிறகு, போலீஸ்காரர்கள் கொலை செய்ததாக ருசு உண்டு என்று முதலமைச்சர் சொல்லி, அந்த போலீஸ் அதிகாரிகள் 302-வது செக்ஷனிலே இன்றைக்குக் கூண்டிலே ஏற்றப் பட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரை, இங்கு இதுதான் முதல் தடவையாக Police officers are being prosecuted and are going to be arrested. ஒரு வேண்டுகோள். அந்தப் போலீஸ் அதிகாரிகள் யார் என்று தயவுசெய்து அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டும். அவர்கள் எப்படிக் கொன்றார்கள் சீராளனை என்பதையும் முதலமைச்சர் பதில் சொல்லும்போது சொல்லி, சார்ஜ் ஷீட்டையும் இங்கே வைத்து (குறுக்கீடு)

Though it may be *Sub-judice* he can say within the limit of the charge-sheet

அந்தப் போலீஸ் அதிகாரிகளைக் கைது செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, அன்று கேள்வி கேட்கிற பொழுது முதலமைச்சர் சொன்னார். . . . .

Thiru A. RAHMAN KHAN: Sir, on a point of information.

Thiru R. UMANATH: No information please.

அன்று பதில் சொல்கிறபொழுது, தகவல் வரவில்லையென்று சொன்னார். எதனால் அரஸ்ட் பண்ணப்பட்டது என்று கேட்கப்பட்டது. அதற்கு அவ்வாறு பதில் சொன்னார். கேஸ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது, 302-வது செக்ஷன்படி என்று சொல்கிறபொழுது, தகவல் நிச்சயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அப்படி கிடைத்திருக்கும்போது, அந்தத் தகவலைக் கொடுக்காமல் இருக்கிற அதிகாரி யார், கலெக்டர் யார் என்று முதலமைச்சர் பரிசீலனை பண்ணி, அவர் பேரிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சஸ்பென்ட் கூட பண்ண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1978 ஜனவரி 6

இது ஒரு புதிய கட்சி. திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு அவர்கள்பேரில் நம்பிக்கையில்லை. But it is a fact. பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான [illegible] அவர்கள்மீது நம்பிக்கையிருக்கிறது. Let us give [illegible] அதற்காக, அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்போம் [illegible] கள் நடவடிக்கைகள் நல்ல வகையிலே இருந்தால் [illegible] ழைப்போம்; தவறுகள் செய்தால் சுட்டிக் காட்டி [illegible] குறைகளைத் தவிர்ப்போம், திருத்தப் பார்ப்போம் [illegible] வில்லையென்றால் மக்களிடம் சொல்வோம். அப்படியும் திருந்தவில்லையென்றால், மக்களை நிர்ப்பந்தப்படுத்தி ஒன்று பட்டுத் திருப்புவோம். அந்த முறையில் செய்வதுதான் சரி யாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தீர்மானத்தைப் பற்றி பேசுகிறபொழுது அவர்கள் கட்சி சார்பாக ஒன்று சொன்னார்கள், ஆட்சியைக் கவிழ்ப் பதற்காக, அல்லது, குற்றம் சாட்டுவதற்காகக் கொண்டு வரவில்லை. அப்படி அல்ல. சில வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை, அவற்றை விவாதிப்பதற்கு, கொள்கை சம்பந்தமாக விவாதிப்பதற்கு வாய்ப்பு வேண்டும். அதற் காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ப.உ. சண்முகம் அவர்கள் இருவரும் ஒரே இயக்கம், எங்களை அழிக்கக் கழுகுகள் பார்க்கின்றன என்ற முறையிலே சொன் னார்கள். ஆதலே, நீக்கவேண்டுமென்ற நோக்கத்திலே கொண்டு வரவில்லையென்று சொன்னார்கள்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அப்படியென்றால் பாண்டிச்சேரியிலே எலக்ஷன் நடந்த பொழுது, எலக்ஷன் முடிந்து—நீங்கள் மறந்திருக்கலாம், நான் மறக்கவில்லை— முதன்முதலாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் ஆட்சியை அமைக்க இருக்கிறது. ஒரே, இயக்கம், கழுகு காத்துக் கொண்டிருக்கிறது என்று சொல் கிறீர்கள். அங்கே அவர்களை விட்டிருக்க வேண்டுமல்லவா? முதல் நாளே, உங்கள் 3 ஓட்டைப் போட்டு, கவிழ்த்து விட்டீர்களே?

Not even six days were given.

(Thiru S. J. SADIQ PADSHA: Very interesting). I welcome it. I take it sportingly. That is quite right.

1978 ஜனவரி 6] [திரு. ரா. உமாநாத்]

அந்த மாதிரி ஸ்போர்ட்டிங்காக எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் அட்டாக் பண்ணுகிறபொழுது, நம்மை அட்டாக் பண்ணுவதை ரிசீவ் பண்ணவும் தயாராக இருக்க வேண்டும். ரிசீவ் பண்ணத் தயாராக இல்லையென்றால்,

Do not attack but keep silent.

முதல் நாளே அனுமதிக்கவில்லையே, பாண்டிச்சேரியிலே உங்களுடைய ஒரே இயக்கம் தானே, முதல் நாள், அஷ்யூ ரன்ஸ் தரக்கூட, வாய் திறக்கக் கூட, வாய்ப்பு தரவில்லையே. அன்றைக்கு அஷ்யூரன்ஸ் பிரச்னை வந்தது, அதனால் சொல் கிறேன். ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், அப்படி நீங்கள் விளக்குவது, it does not tally.

நேற்று சுப்பு அவர்கள் சொன்னார்கள், சி.பி.எம்.—— சமயத்திற்குச் சமயம் மாறுவார்கள், என்று. அவர், பேசு கிற திறமையோடு சொன்னார். We have got ''லட்சியம்''.

எங்களுக்கு ஒரு அரசியல் நோக்கம் இருக்கிறது. அந்த அரசியல் லட்சியத்தை மையமாக வைத்து எந்தெந்தக் கட்சிகளுடன் எப்போது சேரலாம் என்று பேசி மையமாகக் கொண்டுதான் சேருவோம். That is a principled decision. ஆனால் திரும்பிப் பாருங்கள் உங்களுடைய அலையன்சை. (சிரிப்பு) It is not a partisan affair. 1967-ஆம் ஆண்டிலே காங்கிரசை தி. மு. க. எதிர்த்தது. ஆனால் 1971-ஆம் ஆண்டிலே அந்த காங்கிரசுடன் தி.மு.க. சேர்ந்தது. (குறுக்கீடு) இந்திரா காங்கிரஸ் தான். எப்படி இருந்தாலும் காங்கிரஸ்தான். ஆனால் 1974-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். மின்சாரக் கட்டணப் பிரச்னை வருகிறபோது, நான் ஹவுசிலே இல்லை, புரொசீடிங்கை படித்துப் பார்த்தேன். கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, இந்த காங்கிரசுடன் சேர்ந்தேன், எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும் என்று அவர்கள்தான் சொன்னார்கள். அதற்குப் பிறகு பாண்டிச்சேரியிலே சர்க்காரைக் கவிழ்ப் பதற்கு இதே காங்கிரசோடு சேர்ந்தார்கள். காங்கிரஸ் காரர்களுடைய 3 ஓட்டு கிடைக்கவில்லை என்றால் கவிழ்த் திருக்க முடியாது. But next time also you joined them. அந்த முறையிலே அதைப் பண்ணுகிறீர்கள்.

70-ஆம் ஆண்டிலே சொன்னீர்கள், ஜனநாயகத் தொட்டிலிலே பிறந்த குழந்தை இந்திரா காங்கிரஸ் என்று. ஆனல் 75லே இந்திராகாந்தி சர்வாதிகாரி என்று சொன்னீர்கள். அந்த பாயின்டில் எனக்கும் அக்ரிமென்ட் உண்டு. 70-லே அப்படிச் சொல்லி 75-லே இப்படிச் சொல்லிய மிஸ்டர் சுப்பு..............

The boot is on the other leg.

THIRU K. SUPPU : Unfortunately I have no opportunity to interfere in your speech.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாகவே அமைச்சர்கள் ஆனாலும், கட்சித் தலைவர்களானாலும், உறுப்பினர்களானாலும், இந்த அவையில் பேசும்போது, 'தலைவர் அவர்களே' என்று விளித்துவிட்டு, 'உங்கள் மூலமாகச் சொல்லுகிறேன்' என்று சொல்வது மரபாக இருக்கிறது, 'உங்களைச் சொல்கிறேன் என்று சொன்னாலே அது ஒழுங்குப் பிரச்சினைக்கு ஆட்படுத்தப்படுவது மரபு. ஆனல் நண்பர் உமாநாத் அவர்கள் பேசும்போது திரும்பத் திரும்ப மிஸ்டர் சுப்பு, மிஸ்டர் சுப்பு என்று பின்னாலே திரும்பிப் பேசுகிற முறை உருவாகுமானல் தொடர்ந்து இந்த அவையிலே அது கடைப்பிடிக்கப்படக்கூடிய தேவையற்ற நிலை ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். I have no difference on the question. ஆனல் அவசர நிலையை எதிர்த்ததாகப் பறைசாற்றிக் கொண்டீர்கள். அதை நான் அப்ரிஷியேட் பண்ணுகிறேன். எமர்ஜென்சியில் நீங்கள் எடுத்த முடிவை நான் அப்ரிஷியேட் பண்ணுகிறேன். ஆனல் எனக்கு ஒரு கிரிடிசிசம் இருக்கிறது. பல இடங்களிலே உங்கள் பொறுப்பான தலைவர்கள் சொல்லுகிறார்கள் நீங்கள்தான் முன்னணியில் இருந்தீர்கள். எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். நீங்கள் என்ன செய்தீர்கள் என்று. நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு அவசர நிலை வரும் என்று one-party dictatorship வரும் என்பதை முதலில் தெரிவித்ததே 1972-ல் எங்கள் கட்சிதான் என்பதை தயவு செய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்த நேரத்திலே அவர்களோடு உங்களுக்கு அலையன்ஸ் இருந்தது என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1969-ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனதிபதி தேர்தலில் நானும், மேற்கு வங்கத்தினுடைய துணை முதல் அமைச்சர் ஜோதிபாசு அவர்களும், கலந்து பேசி, அன்றைக்கு ஒன்றுபட்ட திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்ருக இருந்த பொழுது, தமிழ்நாடு மாளிகையில் அன்றைக்குப் பேசி, இந்திரா காந்திக்கு ஆதரவாகத்தான் அந்த முடிவை எடுத்தோம். 1969-லே இந்திரா காந்தியை ஆதரித்தோம்.

[நண்பகல் 12–00]

திரு. ரா. உமாநாத்: ஆதரித்தோம், மறுக்கவில்லை. அதற்கும் பிறகு நிலைமை என்ன? அது சின்டிகேட், இண்டிகேட் என்று பிளவுபடுகிறபோது What should be prevented என்று குவஸ்ச்சியன் வருகிறபோது, அதற்குப் பிறகு 'ஒன் பார்ட்டி டிக்டேடர்ஷிப்' என்று வருகிறபோது, அதற்கான வார்னிங் வருகிறபோது நீங்கள் எந்த போர்சில் இருந்தீர்கள் என்பது பாயின்ட். I will take it in that spirit. அடுத்தது, 1975-ல் தான் உண்மையிலேயே நாம் எல்லோரும் எமர்ஜென்சியின் கஷ்டங்களை அனுபவித்தோம், அதுவும் semi-fascist terror நாம் கஷ்டங்களை அனுபவித்தோம். ஆனல் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்கத்திலே 72-லேயே இந்த 'செமி-பாசிஸ்ட் டெர்ரர்' நாங்கள் அனுபவித்தோம். இருவர் இங்கே இறந்தார்கள். உண்மையிலேயே எனக்கு ரொம்பவும் வருத்தம்.

சிறையிலே இருந்த சிட்டிபாபு என்னுடைய பர்சனல் பிரண்டு, பாராளுமன்றத்தில் என்னுடைய கொலிக். மேற்கு வங்கத்திலே 1972–74-ல் 20,000 பேர் இறந்து இருக்கிறார்கள். ஆனல் நான் சொல்ல விரும்புவது, அதனுடைய விளைவுகளைப் பார்க்கிறோம். எங்கள் கட்சிக்கு ஏற்பட்ட இழப்புகள் வேறு எந்தக் கட்சிக்கும் ஏற்படவில்லை.

கவர்னர் உரையின்போது நீங்கள் பேசுகிற நேரத்தில் எமர்ஜென்சியை, அந்தப் பாயின்டை டிபென்டு செய்கிற நேரத்தில் முதலமைச்சர் சொன்னார், பீகார் மக்களை கலகத்திற்குத் தூண்டினார்கள். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். அதை எல்லாம் டிபென்ட் செய்ய

முடியாது என்று அந்த முறையில் அவசர நிலையை
நாங்கள் ஆதரித்தோம் என்று சொல்லி நியாயப்படுத்து
கிறீர்கள். ஆனால் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால்
ஜெனரல் எலெக்ஷன் நாடு பூராவும் நடைபெறுகிறபோது
அதே பீகார் மக்கள் அங்கேயிருந்து அவசர நிலையை அமுல்
படுத்திய காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்கச் செய்து
விட்டார்கள். அந்த மக்கள் அந்த நிலையை ஆதரிக்க
வில்லை, எதிர்த்தார்கள் என்றுதான் இதற்கு அர்த்தம்.
சி. பி. ஐ. கூட தீர்மானம் போட்டு இருக்கிறார்கள்,
நாங்கள் அவசர கால நிலையை ஆதரித்தது தவறு என்று
சொல்லி.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பிரம்மானந்த ரெட்டி
அவர்களும், சவான் அவர்களும் அந்த எமர்ஜென்சி
தவறு என்று கூறிவிட்டார்கள். அது மட்டுமல்ல, கான்ஸ்டி
டியுஷன் அமெண்ட்மெண்ட் வருகிறபோது அவர்கள்
செய்தது என்ன, எக்ஸ்டர்னல், இன்டர்னல் எமர்ஜென்சி
கூடவே கூடாது என்று சொல்லி, சவானும், பிரம்மானந்த
ரெட்டியும் சொல்லியிருக்கிறார்கள்.

ஷா கமிஷன் சில விவரங்களை வெளியிட்டு இருக்
கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் [illegible]
கதி என்ன என்பது தெரியும். இவ்வளவுக்கும் பிறகு
நடந்த தேர்தலில் பெருவாரியான நாட்டு மக்கள் அந்த
எமர்ஜென்சியை தவறு என்று முடிவு சொல்லிய பிறகு
அதை நியாப்படுத்துவது சரியல்ல என்று கருதுகிறேன்.
ஒட்டுமொத்தமாக இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற
போது தவறானது என்று மக்கள் சொல்லியிருக்கிறபோது
அதை நியாயப்படுத்துவது முறைதானா என்று கேட்க
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்
அவர்கள் ஒட்டுமொத்தமாக இந்தியத் துணைக்கண்டமே ஒரு
கட்சியை ஆட்சியிலிருந்து வீழ்த்திவிட்டது என்றும் அது
அவசர காலச் சட்டத்தை அமுல் படுத்தியதால் தான்
என்றும், குறிப்பிட்டார்கள். நான் இந்த அவையில்
சொல்லியிருக்கிறேன், அவசரகாலச் சட்டம் கொண்டு வந்த
தைப் பற்றி இங்கே பேசியும், அவசர காலச் சட்டத்தால்
ஏற்பட்ட சாவுகள், துன்பங்கள், குறைகள், இவைகள் அத்
தனையும் ஏற்பட்டதன் விளைவாகத்தான் இந்த நிலை மாறு

பட்டது இருக்கிறது என்றும் சொல்லி அதற்குப் பிறகும் அவசர கால நிலை நியாயப்படுத்துவது முறைதானா என்று சொல்கிறார்கள். நான் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். பீகார் நிலையைப் பற்றி நியாயம் என்று சொல்லி ஏற்றுக்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லி நியாயப்படுத்தியதையும் ஏன் நம்பவில்லை என்பதை எனக்குப் புரியவில்லை.

திரு. ரா. உமாநாத் : பீஹாரில் நடந்ததை நான் ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லவில்லை. நேர்மாறாகத் தான் சொன்னேன். அந்த மாநிலத்தில் இருக்கிறவர்கள் எல்லோரும் மெஜாரிட்டியில் காங்கிரஸ் பார்டியை டிபீட் பண்ணியது. எமெர்ஜென்சியை தவறு என்று அந்த மக்களே இம்பிளை செய்த பிறகு.........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு உறுப்பினர் அவர்கள் என்னைத் தவறாக கருதிக்கொள்ளக் கூடாது. பீஹார் மக்கள் தேர்தலிலே வாக்களித்து அவர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்ளுகிறேன். உணர்ந்தும் இருக்கிறோம். அன்றைய தினம் நடந்த காரியங்கள் எப்படி என்பதும், எப்படிக் காரியங்கள் நடைபெற வேண்டாமென்று நாகரீக அரசியலை விரும்புகிறவர்கள் நம்புவார்களோ—அதைச் சரி என்று சொல்லவில்லை—அவைகள் அங்கே நடந்தன என்பதைத் தான் நான் சுட்டிக்காட்டினேன். அவைகளைத் தடுக்க அவசியமான சில சட்டங்களைக் கொண்டு வர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறபோது அதை நாங்கள் அமைதியான சூழ்நிலையில், விவாதத்தின் வழியிலே, அமைதியான சூழ்நிலை உருவாக்குவதற்கு அமைதி விரும்புகிறவர்கள் முன்னால் நின்று ஒரு நல்ல முடிவினை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதைத் தான் அமரர் அண்ணா அவர்கள் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற பாடமாகும்.

திரு. ரா. உமாநாத் : நான் அந்த பாயின்டை நீடிக்க விரும்பவில்லை. வி ஹேவ் டு டிபர். எங்களுக்கு அபிப்பிராய வித்தியாசம் உண்டு.

போலீஸ் கொள்கையைப் பொறுத்த வரையில் முதலமைச்சரை நான் கேட்டுக்கொள்வது எக்ஸ்டிரா விஜிலெண்டாக இருக்க வேண்டும். உதாரணமாக நான் ஒரு

திரு. மு. கருணாநிதி : அப்படி ஆளும் கட்சியின் சார் பில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதை முதலாவதாக வரவேற்கக்கூடிய கட்சியாக திராவிட முன் னேற்றக் கழகம் இருக்கும் என்பதை நண்பர் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எண்ணெய், பருப்பு மலிவாக கிடைக்க வேண்டும். ஆனால் எடிபிள் ஆயில்ஸ் இராஜஸ் தானிலிருந்து வர வேண்டும். பருப்பு உத்திரப் பிரதேசத் திலிருந்து வரவேண்டும். அது ஹோல்சேலர் கையில் விடப்பட்டிருக்கிறது. புரொக்கியூர்மெண்ட் கிடையாது. அவர்கள் நாடு பூராவும் உள்ள நெருக்கடியைப் பார்த்து கார்னர் பண்ணுகிறார்கள். இதில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து மத்திய சர்க்காரை அணுகி மெயின் சோர்ஸ் எடிபிள் ஆயில்ஸ், சமைய லுக்கு உபயோகப்படுத்துகிற எண்ணெ, பருப்பு போன் றவை, இவைகளில் மத்திய சர்க்கார் தலையிட்டு புரொக்கியூர்மெண்டை ஹோல் சேலர்களிடம் விடாமல் மற்ற மாநிலங்களுக்கு டிஸ்ட்ரிபியூட் செய்ய முயற்சி எடுக்கும்படியாக நம் மாநில அரசாங்கம் முன் முயற்சி எடுக்க வேண்டும். நாமும் அதற்கு ஆதரவு கொடுக்க லாம்.

அப்படி கன்ஸ்டிரக்டிவ் ஆக போகவில்லையானால், நோ கான்பிடன்ஸ் தீர்மானம் பற்றி வேறு முறையில் நண்பர்கள் பேசுவார்கள். இவர்களுக்குப் பொறுக்கவில்லை. அதிக்க மோகம், பொறுமை என்று பல செக்ஷன்ஸ் நினைக்கக்கூடும். அதுமாதிரி நினைப்பதற்கு இடம் அளிக்காமல் ஆக்கபூர்வமாக பார்வையிடல் செய்வதற்கு நாம் எல்லோரும் முன்வரவேண் டும். அந்த முறையில் இந்த நோ கான்பிடன்ஸ் தீர் மானத்தை வாபஸ் வாங்குவது தான் நல்லதாக இருக்கும் என்று யோசனை கூறுகிறேன். அதை ஏற்றுக்கொள்வதை யும் எதிர்ப்பதையும் அவர்களிடம் விட்டுவிடுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களாக மதிப்புக்குரிய எதிர்கட்சித் தலைவரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் பேரில் வாதங்கள் நல்ல முறையில் நடந்து வந்திருக்கின்றன. இந்தத் தீர்மானத்தின் பேரிலே என்னுடைய கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்லு

வதற்கு முன் வந்திருக்கிறேன். மதிப்புக்குரிய சட்டசபை ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இங்கே சில கருத்துக்களை வெளி யிட்டார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் ஆதரிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் நான் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினேன் என்று கற்பனை செய்து கொண்டு பேசுகிறார். அந்த வார்த்தையை நான் உபயோகிக்கவில்லையென்ற விளக்கத்தைக்கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே; கனம் உறுப்பினர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தை ஆதரிக்கப்போவதில்லை என்ற உணர்வை வெளிப் படுத்தியதற்குப் பிறகு தயவுசெய்து அவரைக் குறை சாட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நம்பிக்கையில் லாத் தீர்மானத்தின் மீது இங்கே விவாதம்தான் நடை பெற்றிருக்கிறது. முடிவு என்னவாகும் என்பதை மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நம்பிக் கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய ஜனதாக் கட்சித் தலைவரவர்கள் நான் கூறியது போல, அவர் ஆதரிக்கிறேன் என்றோ எதிர்க்கிறேன் என்றோ சொல்லவில்லை. ஆகையால் தான் அதைக் குறிப்பிட்டேன். ஆதரிக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு அதை விட்டு விடுகிறேன்.

அவர்கள் பேசுகின்றபோது மதிப்பிற்குரிய பெரும் தலைவர் காமராஜரைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டபோது எங்களது கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் பெருந் தலைவர் பற்றி அப்படிப் பேசலாமா, அது குறிப்பில் இருக்க லாமா என்று கேட்டார்கள். என்னைக் கேட்டால், அது இருக்க வேண்டும். பின்னால் உள்ள தலைமுறையினர், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருந்தலைவர் காமராஜரைப் பற்றி என்ன கருதினார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள

திரு. மு. கருணாநிதி : அப்படி ஆளும் கட்சியின் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதை முதலாவதாக வரவேற்கக்கூடிய கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்பதை நண்பர் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எண்ணெய், பருப்பு மலிவாக கிடைக்க வேண்டும். ஆனால் எடிபிள் ஆயில்ஸ் இராஜஸ்தானிலிருந்து வர வேண்டும். பருப்பு உத்திரப் பிரதேசத்திலிருந்து வரவேண்டும். அது ஹோல்சேலர் கையில் விடப்பட்டிருக்கிறது. புரொக்கியூர்மெண்ட் கிடையாது. அவர்கள் நாடு பூராவும் உள்ள நெருக்கடியைப் பார்த்து கார்னர் பண்ணுகிறார்கள். இதில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து மத்திய சர்க்காரை அணுகி மெயின் சோர்ஸ் எடிபிள் ஆயில்ஸ், சமையலுக்கு உபயோகப்படுத்துகிற எண்ணெ, பருப்பு போன்றவை, இவைகளில் மத்திய சர்க்கார் தலையிட்டு புரொக்கியூர்மெண்டை ஹோல் சேலர்களிடம் விடாமல் மற்ற மாநிலங்களுக்கு டிஸ்ட்ரிபியூட் செய்ய முயற்சி எடுக்கும்படியாக நம் மாநில அரசாங்கம் முன் முயற்சி எடுக்க வேண்டும். நாமும் அதற்கு ஆதரவு கொடுக்கலாம்.

அப்படி கன்ஸ்டிரக்டிவ் ஆக போகவில்லையானால், நோ கான்பிடன்ஸ் தீர்மானம் பற்றி வேறு முறையில் நண்பர்கள் பேசுவார்கள். இவர்களுக்குப் பொறுக்கவில்லை. ஆதிக்க மோகம், பொறாமை என்று பல செக்ஷன்ஸ் நினைக்கக்கூடும். அதுமாதிரி நினைப்பதற்கு இடம் அளிக்காமல் ஆக்கபூர்வமாக பார்வையிடல் செய்வதற்கு நாம் எல்லோரும் முன்வரவேண்டும். அந்த முறையில் இந்த நோ கான்பிடன்ஸ் தீர்மானத்தை வாபஸ் வாங்குவது தான் நல்லதாக இருக்கும் என்று யோசனை கூறுகிறேன். அதை ஏற்றுக்கொள்வதையும் எதிர்ப்பதையும் அவர்களிடம் விட்டுவிடுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களாக மதிப்புக்குரிய எதிர்கட்சித் தலைவரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் வாதங்கள் நல்ல முறையில் நடந்து வந்திருக்கின்றன. இந்தத் தீர்மானத்தின் பேரிலே என்னுடைய கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்லு

வதற்கு முன் வந்திருக்கிறேன். மதிப்புக்குரிய சட்டசபை ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இங்கே சில கருத்துக்களை வெளியிட்டார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் ஆதரிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினேன் என்று கற்பனை செய்து கொண்டு பேசுகிறார். அந்த வார்த்தையை நான் உபயோகிக்கவில்லையென்ற விளக்கத்தைக்கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே; கனம் உறுப்பினர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கப்போவதில்லை என்ற உணர்வை வெளிப்படுத்தியதற்குப் பிறகு தயவுசெய்து அவரைக் குறை சாட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இங்கே விவாதம்தான் நடைபெற்றிருக்கிறது. முடிவு என்னவாகும் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய ஜனதாக் கட்சித் தலைவரவர்கள் நான் கூறியது போல, அவர் ஆதரிக்கிறேன் என்றோ எதிர்க்கிறேன் என்றோ சொல்லவில்லை. ஆகையால் தான் அதைக் குறிப்பிட்டேன். ஆதரிக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு அதை விட்டு விடுகிறேன்.

அவர்கள் பேசுகின்றபோது மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜரைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்டபோது எங்களது கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்கள் பெருந்தலைவர் பற்றி அப்படிப் பேசலாமா, அது குறிப்பில் இருக்கலாமா என்று கேட்டார்கள். என்னைக் கேட்டால், அது இருக்க வேண்டும். பின்னால் உள்ள தலைமுறையினர், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருந்தலைவர் காமராஜரைப் பற்றி என்ன கருதினார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள

வேண்டும். அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டவுடன் காமராஜ் அவர்கள் மிகவும் மனம் நொந்து இறந்து விட்டார் என்று குறிப்பிட்டார். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் திடமான உள்ளம் படைத்தவர். வெள்ளைக்காரர் களை எதிர்த்துப் போராடி எத்தனையோ கசையடி பட்டவர். சிறையில் கிடந்து உழன்றவர், எதையும் தாங்கக் கூடிய திடமான உள்ளத்தைப் படைத்தவர்— அப்படிப்பட்டவர், இதனால் இறந்து விட்டார் என்றால், அவர் திடமில்லாதவர் என்ற கருத்தை உருவாக்கக்கூடிய முறையில்தான் அவ ருடைய பேச்சு அமைந்திருந்தது என்பதைப் பார்க்கும் போது நான் மிகவும் வருத்தப்படுகிறேன் என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சில சம்பவங்களைப் பற்றி மதிப்பிற்குரிய திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய முன்னாள் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கைது செய்யப்பட்டபோது மதுரையிலே பெரிய பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்கள். மதிப் பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்றபோதும் கூட குறிப்பிட்டார்கள் மதுரையில் நடந்த சம்பவங்கள் எப்படி ஏற்பட்டன என்பதையும், பின்னால் என்னென்ன நடந்தன என்பதையும் சொல்ல மறந்து விட்டார் என்று கருதுகிறேன்.

ஆரம்பத்திலேயே காங்கிரஸ்காரர்கள் தாக்கப்பட்டார் கள் அங்கே. அதை அவர்கள் தெரிந்திருக்க முடியாது. அவர்களிடம் வந்து சொன்னவர்கள் ஒருதலைப்பட்சமாகத் தான் சொல்லி இருப்பார்கள். அவர்கள் தரப்பில் இருக் கின்ற செயல்பாட்டை அவர்கள் சொல்லி இருக்க மாட் டார்கள். அதனால்தான் அவர்கள் அப்படிக் குறிப்பிட் டார்கள் என்று கருதுகிறேன். தமிழ்நாடு பூராவும், ஏன், இந்தியா பூராவும் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. அமைதியான முறையில்தான் அவை நடந்திருக்கின்றன. மதுரையில் என்ன நடந்தது என்றால் இம்மாதிரி கேள்விப்பட்டவுடனே, காங்கிரஸ்காரர்களின் கட்சி அலுவலகத்திலிருந்து வெளியே வருகின்றபோது அவர் கள் தாக்கப்பட்டார்கள். அதன் பிறகு ஏதோ நடந் திருக்கலாம். ஆனால் அதன் பிறகு, அதைக் கண்டித்து பின்

தேதிகளில் அங்கே ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டி, ஜனதா கட்சித் தோழர்கள் என்னென்ன வன்முறைச் சம்ப வங்களை நடத்தினார்கள் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சி அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக் கொடிகள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இது எந்த ஜனநாயகத்தை, ஜனநாயக மரபைச் சேர்ந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கும்பகோ ணத்தில் கூட காங்கிரஸ் கட்சித் தலைவரின் வீடு அடித்து நொறுக்கப்பட்டது. இன்னொரு முக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவரின் வீடும் அடித்து நொறுக்கப்பட்டது. இவ்வளவு எல்லாம் நிகழ்ந்திருக்கின்றன என்பதையும் மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு முன்னாள் பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்தார்கள் என்றும் அழைக்க வேண்டிய அவசியம் என்ன என்றும் கேட்டார்கள். திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சென்னைக்கு வரும்போது பிரதம அமைச்சராக இல்லை. எந்தப் பொறுப் பிலும் இல்லை, அதிகாரத்திலும் இல்லை. காங்கிரஸ் கட்சி அழைத்தது, அவர்கள் வந்தார்கள் அவ்வளவு தான். இதைத் தவறான கோணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்தார் என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–20)

அடுத்து, மதிப்பிற்குரிய மார்க்ஸிய கட்சி உறுப்பினர் நண்பர் உமாநாத் பாராளுமன்ற நியதிப்படி இந்த அவை யில் மிக கவனத்தோடு சில கருத்துக்களைக் கூறினார்கள். 'இந்த நாட்டிலே ஒரு கட்சிச் சர்வாதிகாரம் நடந்தது' என்று. அது எப்போது நடந்தது என்று எனக்கும் தெரிய வில்லை. அவரும் குறிப்பிடவில்லை. ஒருகால் அவசர கால நிலையை ஒரு கட்சிச் சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டார் களோ என்னவோ.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 ஜனவரி 6

நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், உலக
நாடுகளிலே ருஷ்ய நாட்டிலே, சீன நாட்டிலே, இன்னும் ஒரு
சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே உள்ள அரசைப் பற்றி
முதலாளித்துவ நாடுகளில் விமரிசிக்கப்படுவதெல்லாம், அங்கே
ஒரு கட்சிச் சர்வாதிகாரம் நடப்பதாகத்தான் குறிப்பிடு
வார்கள். ஆனால் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் அங்கே
நடப்பதெல்லாம் ஒரு கட்சிச் சர்வாதிகாரம் இல்லை. அது
ஒருவகையான ஜனநாயகம் என்றுதான் சொல்லுவார்கள்.
என்னுடைய கருத்தும் அதுதான். அங்கெல்லாம் ஒரு
சர்வாதிகாரம் இருப்பதாக நானும் கருதவில்லை, அது ஒரு
வகையான ஜனநாயக முறை. ஒரு கட்சிச் சர்வாதிகாரம்
என்பது இந்திய நாட்டில் சாத்தியமில்லை. இது அவர்
களுக்கே தெரியும். அது மார்க்ஸிய கட்சியாக இருந்தாலும்
இந்திய கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, இந்திய
நாட்டிலே பாராளுமன்ற ஜனநாயகம் தான் நடைபெற
முடியுமே தவிர ஒரு கட்சிச் சர்வாதிகாரம் என்ற அமைப்பு
இங்கே செயல்பட முடியாது என்பதை ஒப்புக்கொள்ளு
வார்கள். முந்நாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட
அவசரகால நிலையின்போது குறிப்பிட்டார்கள். இந்தியா
வில் ஒரு கட்சி ஆட்சி முறை என்பது சாத்தியமே இல்லை.
இப்படிப்பட்ட பரந்துவிரிந்து கிடக்கும் நாட்டிலே பாராளு
மன்ற ஜனநாயகம்தான் சாத்தியம், அந்த அமைப்புதான்
நன்கு செயல்பட முடியும் என்று சொல்லியிருக்கின்றார்.
அப்படிப்பட்ட ஒரு பாராளுமன்ற ஜனநாயக முறை இந்தியா
வில் செயல்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலே, அதற்கு
விரோதமாக நிலைமைகள் வளர்ந்து அந்த முறை எங்கே
அழிந்துவிடுமோ என்று பயப்படவேண்டிய நேரத்தில்தான்
ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்
பட்டது. அதுதான். எமர்ஜென்ஸி, அவசரகால நிலை என்பது.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சவான்
அவர்கள் அவசர நிலை தவறு என்று சொன்னதாகக்
குறிப்பிட்டார்கள். அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர்
சொன்னதெல்லாம் அவசரகால நிலை ஏற்பட்ட பின்னர்
தவறுகள் சில ஏற்பட்டுவிட்டன என்பதுதான் என்று மட்டும்
நண்பர்களுக்கு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அவசரகால நிலைமைகளைப் பற்றி குறிப்பிட்ட
ஜனதா கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளில், இனியும்
இந்த நாட்டிலே அவசர நிலை பிரகடனம் செய்ய
முடியாத அளவிற்கு அரசியல் சட்டத்தை திருத்துவோம்

1978 ஜனவரி 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

என்றார்கள். பார்லிமெண்டில் இதுபற்றி விவாதம் வந்த
போது, உள்நாட்டில் எந்த நிலை ஏற்பட்டாலும் அவசர
நிலையை பிரகடனம் செய்யக்கூடாது என்று சொன்னவர்கள்
இப்போது 42-வது திருத்தச் சட்டம் பற்றி அவர்கள் இறுதி
யாக எடுத்துக்கொண்டுள்ள முடிவில், ஆயுதம் தரித்த உள்
நாட்டுப் போராட்டம் ஒன்று ஏற்படுமானால்
'இண்டேர்னல் எமர்ஜென்ஸி'யைக் கொண்டு வரலாம்
என்று இப்போது கூறுகின்றார்கள். இந்த நிலையை
எதிர்க்க வேண்டும். ஏன் என்றால், ஆட்சியிலுள்ள கட்சி
தான் அது பற்றி முடிவெடுக்க வேண்டும். ஏதோ ஒரு
இடத்தில் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு, அதைக் கைப்பற்றி
விட்டதாகச் சொல்லி, அதை ஆயுதம் தரித்த புரட்சி என்று
அவர்கள் சொல்லிவிடக்கூடும். ஆகவே எந்த நிலைமையி
லும் அது கூடாது என்று காங்கிரஸ் கட்சி இப்போது
கூறுகிறது. அது தானே தவிர, வேறு ஒன்றுமல்ல. அவர்கள்
மறைமுகமாக இந்த 'எமர்ஜென்ஸி'யை திரும்பக் கொண்டு
வருவதற்கான வாய்ப்பில் அதைக் கொண்டு வருகிறார்கள்,
அதை காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.

இங்கே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
அவர்கள் சில கருத்துக்களை பேசினார்கள். இந்த நம்பிக்கை
யில்லாத் தீர்மானத்தை அரசைத் தோற்கடிக்க வேண்டும்
என்றோ வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்திலோ
நான் கொண்டு வரவில்லை என்று அவர்கள் சொல்ல
வில்லை என்றாலும், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம்
நிறைவேற்றப்பட முடியாது. அதுதான் சூழ்நிலை, யதார்த்
தம். அவர்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும்,
முயற்சித்தாலும், முயற்சிக்கவில்லை என்றாலும் கூட, இந்த
அவையிலே பெரும்பான்மையான பலம் ஆளும் கட்சி
பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, இந்த நம்பிக்கை
யில்லாத் தீர்மானம் நிறைவேற முடியாது. ஆனால்
ஒன்று மட்டும் நான் உறுதியாகச் சொல்ல முடியும்.
இன்றைக்கு ஏதோ ஒரு ஓட்டு வித்தியாசத்திலாவது
இந்த அரசை தோற்கடிக்கக் கூடிய வாய்ப்பு மதிப்பிற்
குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்குமானால்
அந்தச் சந்தர்ப்பத்தை நிச்சயமாக நழுவ விட மாட்டார்
கள். அதிலே ஒன்றும் சந்தேகம் கிடையாது என்பதை
மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பல தவறுகள், அரசாங்கத்தின் பேரிலே கூறப்பட்டன. பொதுவாக ஆட்சிக்கு வந்து 6 மாத காலத்திலே 2 மாதம் புயல், வெள்ளம் என்ற அவசர [illegible] மான நிலை, நிவாரண வேலை செய்ய [illegible] 4 மாதத்தில் பெரிய வேலை செய்ய முடியவில்லை என்றாலும் கூட இந்த ஆட்சி தூய்மையாக இருக்க [illegible] என்பதிலே மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பது பல்வேறு [illegible] னர்கள்—எதிர்த் தரப்பிலேயிருந்தும் [illegible] யிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது, அது கடைசிவரையிலும் அமுலாக்கப்பட வேண்டும்.

ஒரு நேர்மையான தூய்மையான நிர்வாகம் இருந்தால்தான் நாம் நினைக்கிற நேர்மையான லட்சியங்களை நிறைவேற்ற முடியும். அந்த அளவிற்கு அவர்களை [illegible] பாராட்டலாம். அதிலே பல குறைகளை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் கூறப்பட்டிருந்தாலும் கூட, இதிலே அவர்களுக்கு முக்கியமான குறை [illegible] பெரிய குறையாக இங்கே சொல்ல வில்லையென்றாலும் — கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை இந்த [illegible] அனுமதிக்கவில்லை முழுமையாக என்பது. அந்தக் குறை [illegible] அவர்கள் கொள்வதற்கு நியாயம் இருக்கிறதா? [illegible] என்பதைப் பற்றி நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஜனநாயகம் எல்லோருக்கும் சில உரிமைகளை அளிக்கிறது. ஜனநாயகத்தின் பெயராலே யார் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று சொல்ல முடியாது. ஆகையினாலே சில சட்ட திட்டங்களைப் போட்டு, அந்த சட்டதிட்ட வரைபாடுகளுக்கு உட்பட்டு ஒரு மனிதன் நடந்து கொள்ள உரிமை இருக்கிறது. இந்த உரிமையை யாரும் மீறமுடியாது. அந்த உரிமை [illegible] படுகிற போது சட்டம் தன்னுடைய வேலையை செய்கிறது. இது தான் உண்மை. சட்டத்திற்கு புறம்பாக, சட்டத்தினுடைய கட்டுப்பாட்டிற்கு புறம்பாக யாரும் நடக்க முடியாது. நடக்கக் கூடாது. நடந்தால், ஒருவருடைய ஜனநாயக உரிமை பாதிக்கப்படுகிறது. இந்த ஜனநாயக உரிமையை மதித்து இந்தக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதா? அந்த ஆர்ப்பாட்டத்திலே இந்த ஜனநாயக உரிமையை காப்பாற்றினார்களா என்பது தான் கேள்வி. காப்பாற்றவில்லை என்பது என்னுடைய கருத்து—குற்றச் சாட்டும் கூட.

(பிற்பகல் 12-30.)

தலைவர் அவர்களே, அவசர நிலை பிரகடனத்திற்குப் பிறகு நடந்து முடிந்த தேர்தலில் ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தது. வந்தவுடன் அவர்கள் சில சீர்திருத்தங்களைச் செய்தார்கள். ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்து நடந்து ஒன்பது மாதங்களாக என்ன சாதனைகளைச் செய்திருக்கிறார்கள் என்று யாராவது கேட்டால், நாங்கள் இழந்த உரிமைகளை மீட்டுத் தந்தோம், ஜனநாயக உரிமைகள் மீட்டுக் கொடுக்கப்பட்டன என்று அழுத்தந்திருத்தமாக அதையே மதிப்பிற்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் முதற்கொண்டு மதிப்பிற்குரிய ஜனதா கட்சியிலுள்ள அத்தனை பேர்களும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் என்ன செய்தார்கள் என்பதற்குள் போகவில்லை.

பொதுமக்களுக்கு ஜனநாயக உரிமைகளை நாங்கள் தான் வாங்கிக் கொடுத்தோம் என்று சொல்கிறார்கள். வாங்கிக் கொடுப்பதற்கு அது எங்கே போயிருந்தது என்பது வேறு. இவர்களே வாங்கிக் கொடுத்ததாக வாதத்திற்கு எடுத்துக் கொண்டாலும் கூட, அந்த உரிமை காங்கிரஸ்காரர்களுக்கும் உண்டல்லவா? அந்த உரிமை அவர்களுக்கு மட்டுந்தானா, காங்கிரஸ்காரர்களுக்கும் உண்டா? இந்த நாட்டிலுள்ள அத்தனை குடிமக்களுக்கும் உண்டா இல்லையா என்பதுதான் கேள்வி. மகாத்மா காந்தி அடிகள் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார்கள். சுதந்திரப் போராட்டத்தை நடத்திய காலத்தில் சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்தவர்களும் இருந்தார்கள். இல்லை என்று யாரும் கூற முடியாது. ஆனால் சுதந்திரம் வந்த பிறகு அப்போது எதிர்த்தவர்களுக்கும் சேர்ந்தே சுதந்திரமே தவிர எதிர்த்தவர்களுக்கு சுதந்திரம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அப்படி இருக்கவும் முடியாது.

அடுத்தபடியாக, மத்தியில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். இது இரண்டாவது சுதந்திர நாள் என்று சொன்னார்கள். இந்தியாவிலுள்ள மக்களுக்கு முதல் சுதந்திர நாள் வெள்ளைக்காரனிடமிருந்து பெற்றது, இரண்டாவது சுதந்திர நாள் காங்கிரஸ் கட்சியிடமிருந்து ஆட்சியைப் பிடித்தது. அதற்கு என்ன பொருள் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. இது இரண்டாவது சுதந்திர

நான் என்றார்கள். வாதத்திற்காக அதை எடுத்துக் கொண்டாலும் அது அவர்களுக்கு மட்டும்தான் சுதந்திரமா வேறு யாருக்கும் கிடையாதா? என்பதை ஆய்வு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு கட்சி பொருளாதார மாற்றத்திற்கு அல்லது ஒரு இலட்சியத்திற்காக பாடுபடுகிறபோது, அந்த இலட்சியம் நிறைவேறுகின்றபோது அது அந்தக் கட்சிக்குமட்டும் சொந்தம் அல்ல. எல்லோருக்குந்தான் சொந்தம், இந்த உரிமை மதிக்கப்பட்டிருக்கிறதா என்றால் மதிக்கப்படவில்லை. இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் கருத்து இந்திரா காந்தி அம்மையார் இந்த நாட்டில் பெரிய தீமையைச் செய்து விட்டார், அவர் வரக்கூடாது இங்கே தமிழகத்திற்கு என்பது. ஏன் வரக்கூடாது? வரக் கூடாது என்று தடை ஏதாவது இருக்கிறதா? யாரால் தடுக்க முடியும்? சட்டம்தானே தடுக்க முடியும். இப்படிப் பட்ட சட்டத்தைப் போட்டு ஜனதாக் கட்சி ஏதாவது இந்த அம்மையார் எங்கேயும் போகக்கூடாது என்று தடை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இங்கே அவர்களை தீவிரமாக தி.மு. கழகத்தவர்கள் எதிர்க்கிறார்கள்.

வடக்கே, அவர்கள் எல்லா மாநிலங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, குஜராத் மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்கள். உத்திரப்பிரதேசத்தில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். அங்கு பார்த்தது என்ன? இலட்சக்கணக்கான மக்கள் அவர்களுடைய கூட்டத்திற்கு வந்து அவர்களை வரவேற்றிருக்கிறார்கள் என்பதை பத்திரிகைச் செய்திகள் மூலம் பார்க்கிறோம்.

ஆகவே, அரசியல் ரீதியாக, அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் சிலருக்கு சில காழ்ப்புணர்ச்சிகள் இருந்தாலும்கூட பொதுவாக மக்களிடத்தில் அவர்கள் பேரில் ஒரு பெரிய வெறுப்புணர்ச்சி இன்றைக்கு இருப்பதாகக் கூறமுடியாது. தேர்தலின் போது எதிர்த்து வாக்களித்திருக்கலாம். அது வேறு. ஆனால், இந்த ஒன்பது மாத காலத்திற்குப் பிறகும் மக்கள் வெகுண்டெழுந்து எதிர்க்கிறார்கள் என்று

[illegible] மிகத் தவறான கருத்து. இந்த நாட்டிலுள்ள [illegible] குடிமகனுக்கும் இந்த நாட்டிலுள்ள எல்லாயிடத்திற்கும் போக, மக்களோடு தொடர்புகொள்ள தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவதற்கான உரிமை எந்த வகையிலும் பறிக்கப்பட முடியாது. சட்டத்தின் மூலமாகவோ அல்லது கோர்ட் மூலமாகவோதான் அதைத் தடை செய்ய முடியுமே தவிர, வேறு யாராலும் அதைத் தடை செய்ய முடியாது.

ஆகையினால், அவர்கள் இங்கே வருவதை திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி தடுக்க முடியும் என்றுதான் நான் கேட்கிறேன். இப்போது கறுப்புகொடி காட்ட வேண்டும் என்று அவர்கள் சொன்னதை, அவர்களுக்கு உரிமை இல்லை என்று நான் கூற வில்லை, எங்கள் கட்சித் தலைவர்களும் சொல்லவில்லை. கறுப்புக் கொடி காட்டுவதின் பேரால் வன்முறைத் தாக்குதல் நடத்துவது என்பது நான் கேள்விப் படாத ஒன்று. அதைச் சட்டம் அனுமதிக்கிறதா, ஜனநாயக நெறிமுறை இதை அனுமதிக்கிறதா என்றால் நிச்சயமாக அனுமதிக்க முடியாது. இன்றைக்குக் கறுப்புக் கொடி காட்டுகிறேன் என்று சொன்னால் அதற்கு யாரும் எதிர்ப்பு சொல்ல மாட்டார்கள்.

ஆனால், கறுப்புக் கொடி காட்டுகிறோம் என்கின்ற சொல்லின் பெயரால், கறுப்புக் கொடிகளை கம்பிகளிலே தாங்கிக் கொண்டு, தடிகளிலே தாங்கிக்கொண்டும் தாக்குவதற்கு எந்த ஜனநாயக முறை அனுமதிக்கிறது எந்த நெறி முறை அனுமதிக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மதிப்பிற்குரிய முன்னாள் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்கு வருகிறேன் என்றோ, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தை தடை செய்ய வேண்டும் என்பதற்காக—வரவில்லை அவ்விதம் தடை செய்வதற்குரிய அதிகாரம் இப்போது அவர்களிடம் கிடையாது. அவர்கள் சாதாரண குடிமகன் என்ற முறையில்—காங்கிரஸ் கட்சியிலுள்ள முக்கிய பெரும் தலைவர்களில் ஒருவர் வருகிறார் என்றால் இவர்களுக்கு என்ன தீமை ஏற்பட்டுவிட போகிறது என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் சில உண்மைகள் இருக்கின்றன. வட மாநிலங்களிலே ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு தனது பிற்போக்கு பொருளாதாரக் கொள்கையின் விளைவாக பல எதிர்ப்புக்கள் அங்கு தோன்றியிருக்கின்றன. அந்த இடங்களில் முன்னாள் பிரதமர்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 ஜனவரி 6]

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில் அங்குள்ள மக்களை சந்திக்கின்ற நேரத்தில் அவர்களை தடை செய்வதற்கு முடியவில்லை. அதை தடுப்பதற்கு அங்குள்ள ஜனதாக் கட்சி ஆட்சி சக்திபெற்றதாக இல்லை. இதை அவர்கள் செய்வார்களேயானால் ஜனதா கட்சிக்கு மக்களிடையே எதிர்ப்பு தோன்றும். ஆகவே அங்கு சுற்றுப் பிரயாணங்கள் செய்யும் போதெல்லாம் இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறார்களோ இல்லையோ என்னவோ, மக்கள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள்.

அந்த முறையில் பல இலட்சக்கணக்கான மக்களை சந்தித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, வடக்கே ஏதோ இழந்த செல்வாக்கை, திரும்ப பெறுவதற்காக தன்னுடைய செல்வாக்கை தென் மாநிலங்களில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தான் இங்கு வருவதற்கு திட்டமிட்டிருக்கிறார் என்று திராவிட முன்னேற்றக் கழகம், எப்படியாவது திருமதி இந்திராகாந்தியின் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்ற கருத்து இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், இது எப்போது ஏற்பட்டது? 27-ஆம் தேதி ஏற்பட்டது? 29, 30 இந்த தேதிகளில் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சுற்றுப் பிரயாணம் மேற்கொள்ளப்போவதாக தெரிவிக்கப்படுகிறது. 22-ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் போடுகிறது. என்ன தீர்மானம்? இந்திராகாந்தி அம்மையாருக்கு கறுப்புக் கொடி காட்டுவோம் என்று தீர்மானம் போட்டார்கள். அதற்கு அவர்கள் சில காரணங்களை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இவர்களுக்கு ஆறு நாட்கள் கழித்து திடீரென்று ஒரு கருத்து உதயமானது. திடீரென்று கறுப்புக்கொடி காட்டும் முடிவை எடுத்தார்கள். இதற்கு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. வேறு யாரோ ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆலோசனையை மிக வேகமாக நிறைவேற்றுவதற்கான முயற்சியை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்கொண்டது. இந்த திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று முடிவு செய்து, அந்த முயற்சியின் பயன் என்ன எதிர்பார்க்கப்பட்டது? பயன் இல்லாமல் யாரும் எந்த காரியங்களையும் செய்வதில்லை. இப்படிப்பட்ட செயல்பாடுகள் ஒரு பயன் நோக்கித்தான் செய்யப்படுகிறது. கறுப்புக் கொடி காட்டுவதென்றால் அது ஏன்?

1978, ஜனவரி 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

[முற்பகல் 12-40]

இப்போது எனக்கு ஒரு ஐயப்பாடு ஏற்படுகிறது. இந்தக் கறுப்புக் கொடி காட்டும்போது, அந்த அம்மையார் ஏதாவது பதவியில் இருந்தார்களா என்றால், அப்படி எந்த ஒரு பதவியிலும் இல்லை. அப்படியென்றால், இந்தக் கறுப்புக் கொடி காட்டுவதிலே, ஏதாவது ஒரு நோக்கம் இருக்க வேண்டும். அப்படி நோக்கம் இல்லாமல் யாரும் காரியம் செய்ய மாட்டார்கள்,

ஆகவே, நான் கருதுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை இந்தக் கறுப்புக் கொடி காட்டுவதன் மூலம் தங்களுக்கு ஏதாவது பயன் இருக்குமா என்ற கருத்தின் அடைப்படையில்தான் இந்தக் கறுப்புக் கொடியைக் காட்டியிருக்க வேண்டும். சரி, அப்படியே, பயனில்லை என்று சொன்னால், தலைவர் போன்றவர்கள் ஒரு 200 பேர் கூடி அந்தக் கறுப்புக் கொடியைக் காட்டியிருக்கலாம், அந்த வகையிலே தங்களுடைய எதிர்ப்பு உணர்ச்சியைத் தெரிவித்திருக்கலாம். ஆனால், என்ன செய்யப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இவர்களுக்கு ஒரு இலட்சியம் இல்லையென்று சொன்னால், 100 அல்லது 50 பேர்கள் சேர்ந்து இந்தக் கறுப்புக் கொடியைக் காட்டியிருக்க முடியாதா? இதையெல்லாம் பார்க்கின்றபோது, அவர்கள் ஒன்றைக் கருதித்தான் இதைச் செய்திருப்பார்கள் என்பது என் கருத்து. இந்திராகாந்தி அவர்களைத் தடுத்து, திருப்பி அனுப்பி விட்டால் மத்திய அரசிலே இருந்து தங்களுக்கு ஏதாவது சாதகம் கிடைக்குமா என்பது ஒன்று.

மற்றொன்று, சரி அதையும் மீறி நடந்து கொண்டால் தமிழகம் பூராவும் போராட்டங்கள் என்று ஆரம்பித்தால், பலர் கைது செய்யப்பட வேண்டியிருக்கும், அதனால் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்படும், அதனால்அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்து விடலாம், கவிழ்த்து விடலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டு, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் அடித்து விடலாம் என்ற நிலையில்தான் இதைச் செய்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இந்தத் தீர்மானத்தை 27ஆம் தேதி போட்டு, 28-ஆம் தேதி அதற்கான விளக்கக் கூட்டத்தை நடத்தினார்கள். எந்த இலட்சியத்திற்காக இந்தக் கறுப்புக்கொடி, அறிவிக்கப்பட்டது என்பதை 28ஆம் தேதிக் கூட்டத்திலே பேசினார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "கிளாரிபிகேஷன் கிடையாது. பாயின்ட் ஆப் ஆர்டர்தான். உட்காருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டங்களிலே என்ன பேசினார்கள் என்பதைப் பற்றி, இதற்கான அறிவிப்பு எப்படி கொடுக்கப்பட்டது என்பதைப்பற்றி உங்களுடைய அனுமதியின் பேரிலே நான் இதைப் படிக்க இருக்கிறேன். 28ஆம் தேதி விளக்கப் பொதுக் கூட்டத்திலே பேசியது, "முரசொலியில்" செய்தியாக வந்திருக்கிறது. பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசியது. "மீண்டும் இந்திராகாந்தி ஆட்சி வந்தால் சர்வாதிகாரம் வரும்" என்பதைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்ட கறுப்புக்கொடி என்று அறிவித்தோம். இந்திரா காந்தி அம்மையார் தமிழகத்திற்கு வருவதே போராட்டம் நம்மைத் தேடி வருவதைப் போன்றது தான். இது எப்படி என்று தெரியவில்லை. இப்படிப் போராட்டம் வன்முறையில் போவதற்கு அவர்களுடைய பேச்சு எவ்வளவு தூண்டுகோலாக இருந்தது, எப்படி தூண்டுகோலாக இருந்தது என்பதை இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 28 ஆம் தேதி, 'முரசொலி' யிலே, 'நமது கறுப்புக் கொடி நிகழ்ச்சி இந்தியாவிற்கே முன் உதாரணமாக இருக்க வேண்டும்' என்று போடப்பட்டிருக்கிறது. எப்படி இந்தக் கறுப்புக் கொடி போராட்டம் ஒரு முன் உதாரணமாக இருக்க முடியும்? கறுப்புக் கொடி காட்டுவது வன்முறையாகப் போகவேண்டும், இதுதான் முன் உதாரணம்.

அதேபோல், மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பேசியது, 'முரசொலி' யில் வந்திருக்கிறது, அதையும் படிக்கிறேன். "தாயாக வரலாம், கோகுலத்தில் இருக்கின்ற கண்ணனை கொல்ல வந்த பூதகிகூட அழகான தாய் வடிவத்திலேதான் வந்தாள். அதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள். ஆகவே, பெண் வடிவத்தில் வருவதெல்லாம் தாய்தான் என்று எண்ணிவிடாதீர்கள்" ஏன் இவ்வளவு கடுமையான வார்த்தைகள். அவர்கள் தாயாக வரவில்லை, பெரிய பூதமாகத்தான் வருகிறார்கள். அவர்களை அடித்து விடுங்கள் என்று தானே அர்த்தம். சாதாரணமாக, ஒரு தொண்டன் இதைப் படித்தால், அவனுக்கு என்ன தோன்றும்?

இதிலே என்ன கருத்து தோன்றும் என்பதைத்தான் தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து 29 ஆம் தேதி முரசொலியில் 'கழகக் காளையே, தன்மானத் தமிழனே, கறுப்புக் கொடியுடன் வா! அநியாயமாக ஆட்சியைக் கவிழ்த்து அட்டகாசங்கள் செய்தால் இனி தமிழ்நாட்டுப் பக்கம் தலை வைத்துப் படுக்க முடியாது என்ற உணர்வினை ஏற்படுத்தும் வகையில் கறுப்புக்கொடி போராட்டம் தொடரட்டும்' என்று முரசொலியில் வந்திருக்கிறது.

இம்மாதிரி முரசொலியில் மிகத் தீவிரமாக எழுதப்பட்டு பேசப்பட்டு, லட்சக் கணக்கில் திரண்டு வாருங்கள், கறுப்புக் கொடியைக் காட்டுங்கள் என்று இரண்டு நாளில் மிகத் தீவிரமாக பிரச்சாரம் செய்தார்கள்.

மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் சென்னைக்கு வந்து மதுரைக்குச் சென்றார்கள். நானும் அவர்கள் கூடச் சென்றேன். மதுரையில் நடந்த சம்பவங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. மதுரையிலே மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் விமான நிலையத்தில் இறங்கிய போது அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது இருந்ததை விட மிக அதிகப்படியாக மக்கள் கூடியிருந்தார்கள், வரவேற்றார்கள். வரவேற்பு முடிந்து அவர்கள் தங்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். மிக அதிகமான கார்கள் வந்திருக்கின்றன. நானும் ஒரு காரில் ஏறிக் கொண்டு போகிறேன். ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யவேண்டுமென்று பலமான ஏற்பாடுகள். முஸ்தீபுகள் செய்திருக்கிறார்கள். கறுப்புக்கொடி காட்டுவதற்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் சரியான இடமல்ல. ஏதாவது சம்பவங்கள் ஏற்பட்டால் தடுத்து நிறுத்த தகுதியான இடமல்ல.

முரசொலியிலே லட்சம் பேர்கள் கூடியிருந்தார்கள் என்று எழுதியிருந்தார்கள். என்னுடைய மதிப்பு 3,000-ல் இருந்து 5,000 வரை தென் மாவட்டங்களில் இருந்து சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் எண்ணிக்கை. அவர்கள் ஒரு பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். அங்கு போலீஸ்

காரர்கள் காங்கிரஸ்காரர்கள் யாரையும் அனுமதிக்கவில்லை. ஒருவருக்கொருவர் கைகலப்பு ஏற்பட்டுவிடும் என்று தடுத்து நிறுத்திவிட்டார்கள். ஆனால் அங்கு வந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆயுதங்களை வைத்திருந்தார்கள், கம்புகள், கம்பிகள் போன்றவற்றை வைத்திருந்தார்கள். இதைப் பற்றிக் காங்கிரஸ்காரர்கள் போலீஸ்காரர்களிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் சொன்ன பதில்—'அவர்கள் எங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் ; திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் எந்தவிதமான வன்முறைச் சம்பவமும் நடக்காது என்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை, எல்லாம் ஒழுங்காக நடக்கும்' என்று கூறிவிட்டார்கள். போலீஸ் அங்கு அதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அவர்களுடைய வார்த்தையை நம்பியிருக்கலாம். ஆனால் போதிய பந்தோபஸ்து ஏற்பாடுகள் இல்லையென்பதுதான் அங்கு இருந்த நிலை.

முதலிலே பத்திரிகை நிருபர்கள் கார் போனது. பின்னாலே ஒரு காரிலே திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் போகிறார்கள். அவர்களுடன் மதிப்பிற்குரிய நண்பர் நெடுமாறன், சித்தன், பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.வி. சாமிநாதன் போன்றவர்கள் அதிலே பிரயாணம் செய்கிறார்கள். ஊருக்குள்ளே போனவுடன் முதல் காருக்கு அடி. அதிலே இருந்தவர்களுக்கு காயம் ; ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். பத்திரிகை நிருபர்—ஒரு அம்மையார் அவர்கள் அடிப்பட்டார்கள். பின்னால் இந்திரா காந்தி அம்மையார் வந்த காருக்கு அடி. போலீசார் கலவரத்தைத் தடுத்து நிறுத்த என்ன முயற்சி செய்தும் குறைந்த அளவு போலீசே இருந்த காரணத்தால் தடுக்க முடியாமல் அடிக்கப்பட்டது. அவர்கள் என்னென்ன வன்முறை செயல்களைச் செய்ய முடியுமோ. அவ்வளவையும் செய்து விட்டார்கள்.

[பிற்பகல் 21.58]

என்னுடைய காரும் அடிக்கப்படுகிறது. அது ஒரு பெரிய கார், எப்படியோ அங்கே நின்றது அதிலே நான் ஏறினேன். பெரிய இம்பாலா கார் அது. நான் ஏறி உட்காருகிறேன். மற்றவர்களும் உட்காருகிறார்கள். அந்த இடத்திலே வந்தவுடன் முன்னும் பின்னும் கற்களை எறிகிறார்கள். சர், சர்

என்று கற்கள் வந்து விழுகின்றன. என் கூட உட்கார்ந்திருந்தவர்களுக்கு அடி. இப்படி வன்முறைச் சம்பவம் நடந்ததை நான் நேரிலே பார்த்தேன். இது திட்டமிட்டு நடந்திருக்கிறதே தவிர எதிர்பாராமல் நடந்ததல்ல. ஏனென்றால் எதிர்பாராமல் நடைபெறுவதற்கு அங்கே எந்தவிதமான சூழ்நிலையும் ஏற்பட்டுவிடவில்லை. காங்கிரஸ்காரர்கள் யாரும் அங்கே அனுமதிக்கப்படவில்லை. தி.மு.க. தோழர்கள் தான் அங்கே இருந்தார்கள். அவர்களுக்குக் கோபம் வருகிற அளவிற்கு எதுவும் அங்கே நடக்கவில்லை, இதர மாநிலங்களிலே இருந்து வந்த பத்திரிகை நிருபர்கள் எதுவும் செய்வதற்கு இல்லை, மற்றவர்களும் எதுவும் செய்யவில்லை. இதை எப்படி நியாயப்படுத்துகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இந்தச் சம்பவம் நடந்தபிறகு திரு. சித்தன் அவர்களுக்கு பலமான காயம் கண்ணிலே ஏற்பட்டு இருந்தது. திரு. நெடுமாறன் அவர்களுக்குத் தலையிலே அடி விழுந்துள்ளது.

திரு. துரை முருகன் : மதிப்பிற்குரிய அண்ணன் மாரிமுத்து அவர்கள் இந்திரா காந்தி தமிழ்நாட்டிற்கு வந்ததைப் பற்றி ரேடியோவிலே நேர்முக வர்ணனை போல் அந்த நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர்கள் இப்போது இந்திரா காங்கிரஸா அல்லது ரெட்டியார் காங்கிரஸா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இப்போது அது தேவையில்லை என்று நான் சொல்கிறேன். அங்கே இன்னும் பல பேர்களுக்கு அடி. எல்லோருக்கும் ஆஸ்பத்திரியிலே கட்டு போடப்படுகிறது. இன்னொருவர்கூட அடிபட்டு கண்ணே கெட்டுப்போய்விட்டது என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு நாங்கள் எல்லாம் அவர்கள் தங்கியிருக்கிற இடத்திற்குப் போய்ப் பார்த்தால் இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடைய புடவையெல்லாம் ரத்தக்கறை, நெடுமாறனுக்கும் நல்ல அடி. துணியைப் போட்டு மூடி காப்பாற்றியிருக்கிறார்கள் என்று எழுதினார்கள். உயிரைக் காப்பாற்றியது தப்பா, ஆகவே எந்தக் கருத்திலே எழுதினார்கள் என்று தெரியவில்லை.

அதற்குப் பிறகு இன்னும் சுற்றுப் பயணம் நடக்கவேண்டியிருக்கிறது. மதுரையிலே இப்படி நடந்தால் இன்னும் மற்ற இடங்களிலே எப்படி ஏற்பாடு செய்திருப்பார்களோ என்று

எனக்கு உத்தேசம். சென்னையிலே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியைச் சொல்வதற்கு நான் தொலை
பேசி மூலமாக தொடர்புகொண்டேன், ஒன்றிரண்டு முறைகள்
தொடர்பு கிடைக்கவில்லை. பிறகு கிடைத்தார்கள். நான்
கூறினேன், மதுரையிலே சம்பவம் மிகவும் மோசமாகிவிட்டது.
எந்தவிதக் காரணமும் இல்லாமல் முன்கூட்டியே திட்டமிடப்
பட்டு அடிக்கப்பட்டிருக்கிறார்கள், தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
தெய்வாதீனமாக இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்
தப்பித்து இருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரியான வன்முறை
களைத் தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்
டும், அடுத்து திருச்சிக்குப் போகவேண்டும், அங்கு என்ன
திட்டமிட்டு இருக்கிறார்களோ எங்களுக்குத் தெரியாது,
ஆகவே போதுமான பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்
டுக்கொண்டேன். இங்கே சிலர் பேசினார்கள். மதுரையிலே
யிருந்து இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் போன்
செய்து தடை பண்ணு என்று சொன்னதாகச் சொன்னார்கள்.
அவர்கள் ஏன் சொல்லவேண்டும்? அது தவறு. நானே
தான் முதலமைச்சரோடு பேசினேன். அரசுதான் அதற்கு
நடவடிக்கை எடுக்கவேண்டும். இம்மாதிரிச் சம்பவம் நடை
பெறாமல் தடுப்பது அரசாங்கத்தினுடைய கடமை.

இங்கே பேசியபோது பல உறுப்பினர்கள் சொன்னார்கள்.
இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஏன் இங்கே—அவ
ருக்கு எதிராக நிலைமை இருக்கும்போது—வரவேண்டும்,
அவர்களை ஏன் வர அனுமதிக்க வேண்டும் என்று. அவர்கள்
மதுரைக்கு வந்தபோது லட்சக்கணக்கான மக்கள் திரண்டி
ருந்தார்கள், கூட்டங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள் என்ப
தைப் பார்த்தால் மக்கள் அவர்களை ஆதரிக்கிறார்களா அல்லது
எதிர்க்கிறார்களா என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

மதுரையிலே ஐயாயிரம் பேர்களுக்கு உட்பட்டவர்கள்
இந்த வன்முறைகளைச் செய்தார்கள். ஆனால் பல இலட்சக்
கணக்கான மக்கள் பல பகுதிகளிலேயிருந்தும் அங்கே வந்
திருக்கிறார்கள். அதை மறுக்க முடியாது. அந்தச் சம்பவத்
திற்குப் பிறகு பொதுக்கூட்டம் நடந்த பொழுது பல
இலட்சக் கணக்கான மக்கள் இங்கே இருந்தார்கள். அந்தச்
சம்பவம் நடந்த, கறுப்புக்கொடி காட்டுவதற்காக ஒதுங்கி
இருந்த இடத்தை தவிர மற்றபடி தெருக்களிலும், எல்லா
இடங்களிலும் ஆண்களும் பெண்களும் மிகத் திரளாகக் கூடி

யிருந்து வரவேற்றார்கள். அவர்களைப் பாராட்டினார்கள்.
அதே சந்தர்ப்பத்திலே, இந்தச் சம்பவம் பற்றிய செய்திகள்
காதிலே விழுந்தவுடன் எந்த அளவிற்கு திராவிட முன்னேற்
றக் கழகத்தைப் பற்றி அந்த மக்களெல்லாம் பேசினார்கள்
என்பதை முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அங்கு இருந்
திருந்தால் புரிந்து கொண்டிருக்க முடியும். அதனால் உங்க
ளுக்கு என்ன பலன் கிடைத்தது? உங்களின் ஆதரவாளர்
களாக இருந்தவர்கள்கூட வெறுத்து ஒதுக்குகின்ற நிலையைத்
தான் நான் அங்கே பார்த்தேன். அதுதான் இருக்கின்ற
நிலைமை.

அடுத்து, அங்கிருந்து புறப்பட்டு மாலையிலே மதுரையிலே
பொதுக்கூட்டம். பிறகு ஒத்தக்கடைக்கு வந்தார்கள். பிறகு
மேலூருக்கு வருகிறார்கள். மதுரையிலே பல லட்சம் மக்களைக்
கொண்ட கூட்டம் என்றால், மேலூரிலே குறைந்தபட்சம்
30,000—க்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள், ஆண்களும்,
பெண்களுமாக. அடுத்தபடியாக, கொட்டாம்பட்டி
என்ற ஊருக்கு வருகிறார்கள். அங்கே, 50,000 பேர்களுக்கு
மேல் இருக்கிறார்கள். அவ்வளவு பெரிய கூட்டம். நேரத்தை
யும் பார்க்காமல் ஆண்களும், பெண்களும் திரளாகக் கூடி
யிருந்து வரவேற்ற நிலைமையை நான் பார்த்தேன். பிறகு
துவரங்குறிச்சிக்கு வருகிறார்கள். திருச்சிராப்பள்ளி எல்லை
யிலே இருக்கும் ஊர். அங்கே கிட்டத்தட்ட 50,000—க்கும்
மேற்பட்டவர்கள் கூடியிருக்கிறார்கள். அதற்குள்ளாக திருச்சி
யிலே உள்ள அதிகாரிகள் தவறான தகவலைக் கொடுத்து,
இருக்கிறார்கள். திருச்சி பக்கமே வரவேண்டாம், எல்லாம்
மோசமாகப் போய் விட்டது என்று. ஆகவே, அவர்கள்....

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திருச்சிக்கு வர
வேண்டாமென்று அதிகாரிகள் தவறான தகவலைக் கொடுத்
தார்கள் என்று காங்கிரஸ் கட்சித் தலைவரவர்கள் சொல்
கிறார்கள். ஏற்கெனவே ஜேம்ஸ் அவர்கள் பேசும்பொழுது
முதலமைச்சரவர்கள் குறுக்கிட்டு, காஞ்சிபுரத்திற்கு வர
வேண்டாமென்று அதிகாரிகள் தகவல் கொடுக்கவில்லை, நான்
தான் தகவல் கொடுத்தேன், முதலமைச்சர்தான் தகவல்
கொடுத்தது என்று சொன்னார்கள். திருச்சிக்கு வர வேண்டா
மென்று அதிகாரிகள் தவறாகக் கொடுத்த தகவல் முதல
மைச்சரால் கொடுக்கப்பட்டதா ?

[1978 ஜனவரி 6

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அவைத் தலைவரவர்களே, திருச்சியிலிருந்து எனக்குத் தொலைபேசி மூலமாகக் தகவல் வந்தது. இங்கே கறுப்புக் கொடி காட்ட வந்திருக்கிறார்கள். மதுரையிலேயிருந்து எனக்குச் செய்தி வந்திருக்கிறது, நான் என்ன செய்ய வெண்டுமென்றுகேட்ட பொழுது, கூடுமானவரையில் பாதுகாக்க முடிந்தால் அவர் களுக்கு வாய்ப்பு கொடுங்கள், இல்லையென்றால் அவர்களை வர வேண்டாமென்று நீங்கள் சொல்லலாம் என்று நான் சொன்னேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, ஆகவே, அதைப்போல மணப்பாறையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். ஆனால் அவர்கள் அங்கே செல்லவில்லை. நேராகத் திண்டுக்கல்லுக்கு வந்து, அவர்கள் இரயில் ஏறி னார்கள். ஆனால் திருச்சியிலே இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்து கொண்டு, அவர்கள் வந்துதான் ஆக வேண்டும் என்ன ஆனாலும் என்று வற்புறுத்தினார்கள். ஆகவே, அவர்கள் திருச்சியிலே இறங்கி இரவு ஒரு மணிக்கு அங்கே போய் கூட்டத்திலே பேசுகிறார்கள். எதற்காக நான் இதையெல்லாம் கூறுகிறேன் என்றால், ஏதோ ஆயிரம் பேர், ஐநூறு பேர் சேர்ந்து கொண்டு தங்களுடைய காழ்ப்புணர்ச்சி யைக் காட்டி அவர்களுக்கு எதிரிடையாக இருக்கிறார்கள் என்பதால் நாடு பூராவிலும் அப்படித்தான் இருக்கிறார்கள் என்று கொண்டுவிடக்கூடாது.

ஆகவே, பெரும்பாலான மக்கள் இந்திரா காந்தியைத் தமிழ்நாட்டிலே வெறுக்கவில்லை, இதர மாநிலங்களிலும், வெறுக்கவில்லை என்பதை சுற்றுப் பயணம் செய்யும்பொழுது பார்க்கின்றோம். ஆகவே, திருச்சியிலே சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர்கள் வந்த இரயிலிலிருந்து மாறி அடுத்த இரயிலிலே வருகிறார்கள். எனக்கு நான் முதல் இரயிலிலேயே ரிசர்வ் செய்து விட்டதால் நான் முதல் இரயிலிலேயே வந்து விட்டேன். முதலில் இருந்த ஏற்பாடு, நான் வந்த இரயிலிலேயே அவர்களும் வருவதாகத்தான் ஏற்பாடு. சென்னைக்கு நான் வந்து சேர்ந்தவுடனே என்ன நடந்தது என்பதெல்லாம் அரசுக்குத் தெரிந்திருக்கும், உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். சென்னைக்கு நான் வந்த இரயில் வந்து சேர்கின்றபொழுதே எதிர்கோஷங்கள் எல்லாம் போடப்பட்டு, அப்பொழுதுதான் அந்த வன்முறைச் சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

(மணியடிக்கப்பட்டது).

1978 ஜனவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12—15 மணிக்கு நீங்கள் ஆரம்பித்தீர்கள். இன்னும் அமைச்சர் பேசவேண்டும். எனவே, இன்னும் ஐந்து நிமிடங்களிலே முடித்து விடுங்கள்.

[பிற்பகல்—1·00]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வந்த எதிர்க்கட்சிக்கு நேரம் மிகக் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதை எதிர்த்துப் பேசுகின்ற கட்சிகளுக்கு அதிக நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தாங்கள் அறிவீர்கள். இந்தக் குறையைக் களையவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்வது, பி. ஏ. சி. நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், மொத்தம் ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு என்று கணக்குப் போட்டு, 9 மணி நேரம் இருக்கிறது என்று சொன்னவுடன், 5 மணி நேரம் ஆட்சிக் கட்சிக்கும், 4 மணி நேரம் எதிர்க் கட்சிக்கும், அதிலே, குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2½ மணி நேரம் என்று ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு, நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள், இந்த நேரம் போதாது என்று. நான் உடனடியாகச் சொன்னேன், ஆட்சிக் கட்சிக்கு 4 மணி நேரம் இருக்கட்டும் ; நீங்கள் 2½ மணி நேரம் எடுத்துக் கொள்ளுங்கள், மற்றைய நேரத்தை, மற்றக் கட்சிகள் பகிர்ந்துகொள்ளட்டும் என்று கேட்டுக் கொண்டேன்.— அதற்குப் பிறகும் நேரம் போதாது என்று மற்ற உறுப்பினர்கள் சொன்னதற்கு, ஆட்சிக் கட்சிக்கு 3 மணி நேரம் போதுமானது, மீதி நேரத்தை எல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று எங்கள் நேரத்தைக் குறைத்துக் கொண்டு, பரந்த மனப்பான்மையோடு பேசியதை இந்த அவைக்குச் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவரவர்களைப் பிரார்த்திக்கிறேன். தயவுசெய்து தவறான கருத்தைச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவை முன்னவருடைய பரந்த மனப்பான்மையைப் பாராட்டுகிறேன். ஆனால், நிர்ணயிக்கப்பட்ட கால வரையறை பறந்து விட்டது. எனவே, அதைத்

தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உற்றுக் கவனித்து, உரிய நேரத்தை எதிர்க்கட்சிக்கு வழங்க அனுகூலமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரிடமிருந்து கொஞ்சம் சமஸ்கிருத வார்த்தைகளைக் கற்றுக் கொண்டேன். அதற்காக, அவருக்கு நன்றி. இப்பொழுது இருக்கிற நிலைமைப்படி நேரத்தை எப்படி, எவ்வெவ்வாறு பகிர்ந்து கொள்வது என்று சபாநாயகர் அவர்களோடு கலந்து பேசி, எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி நாம் முடிவு செய்யலாம். ஆகையால், நேரம் கிடைக்கவில்லையென்று நாம் யாரும் வருத்தப்படத் தேவையில்லை. ஏற்றமுறையில், உரிய முறையில், நாம் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று வரையிலே உறுப்பினர்கள் பேசிய விவரங்கள் என்னிடம் இருக்கிறது. இன்றைக்குப் பேசுவதையும் சேர்த்து இணைத்திருக்கிறேன். குறிப்பாக, சில கட்சிகள், தங்களுடைய நேரத்தை மிக அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆளுங் கட்சியிலே, பேரவை முன்னவர் சொன்னதைப்போல், அவர்கள் எடுத்துக் கொண்டது 3 மணி 19 நிமிடம்தான் இந்த இரண்டு நாளைக்கு. இன்றைக்கு ஆளுங் கட்சித் தரப்பிலே யாரும் பேசவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நேற்றைக்கு முன்தினம் ஒதுக்கிய நேரம் 2 மணி 30 நிமிடம். அவர்கள் பங்கெடுத்துக் கொண்டது 2 மணி 24 நிமிடம். அதிலே அவர்களுக்கு இன்னும் 6 நிமிடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு ப. உ. சண்முகம் அவர்கள் 31 நிமிடம் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு 45 நிமிடங்கள் இன்னும் இருக்கின்றன. இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லாததாலே, 45 நிமிடங்கள் இருக்கின்றன. நாளைக்கு கேள்வி நேரம் இருப்பதாலே, இன்னும் ஒரு மணி நேரம் சேர்த்தால், 1 மணி 45 நிமிட நேரம், இன்றைக்கும் நாளைக்கும் இருக்கிறது. இதிலே, எதிர்க்கட்சித் தலைவர் எவ்வளவு எடுத்துக் கொள்கிறார் என்று எனக்குத் தெரியாது. ஆளுங்கட்சித் தரப்பிலே இன்னும் நேரம் இருந்தாலும், இன்று அவர்கள் யாரும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மற்ற கட்சிக்காரர்கள் கூடுதலாக எடுத்துக்கொண்டது உண்மை. இரண்டு நாளும் சேர்த்து, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 24 நிமிடம் தான் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு மாரிமுத்து 51 நிமிடங்கள் பேசியிருக்கிறார். அதையும் சேர்த்து அவர்களுக்கு இன்னும் 15 நிமிடங்களுக்கு மேல் இல்லை. திரு. மாரி

முத்து (குறுக்கீடு). இதுவரையில் 50 நிமிடம் பேசிவிட்டீர்கள். நீங்கள் 12.15—க்குப் பேச ஆரம்பித்தீர்கள், இங்கே இருக்கிறது குறிப்பு. இன்னும் 5 நிமிடத்தில் நிறுத்திக் கொண்டீர்களானால், நிச்சயம் நாளைக்குப் பேசுபவர்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து ; நான் கூடுமான விரைவிலே முடித்துக் கொள்கிறேன். சென்னையிலேதான் அதிகமான வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ரெயில்கள் கொளுத்தப்பட்டன. அது மட்டுமல்ல, டி.எம்.பி. 3003 என்ற கார் நொறுக்கப்பட்டது. அதிலே கேரளக் கல்வி அமைச்சர் மாண்புமிகு கோயா அவர்கள் சென்றார்கள். அந்தக் கார் அடித்து நொறுக்கப்பட்டது. அந்தக் காரை அடித்து நொறுக்கியதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால், விசாரித்தபொழுது, டி. எம். எக்ஸ். 3003 என்ற கார் நிதியமைச்சர் பயன்படுத்துகிற கார் என்று தெரிகிறது. அதனாலே, ஒரு வேளை அவர்கள் நிதியமைச்சர் கார் என்று நினைத்து, அவர்தான் வருகிறார் என்று நினைத்து, அடித்தார்களா என்பது எனக்குத் தெரியாது. எழும்பூரில் இறங்கிய மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் கெஸ்ட் ஹவுசுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கொஞ்ச நேரம் பொறுத்து நான் காரிலே சென்றேன். என் காரின்மீதும் கற்கள் அடிக்கப்பட்டன. அம்மாதிரி வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை யாரும் மறுக்க முடியாது.

அதற்குப் பிறகு காஞ்சீபுரத்திற்குப் புறப்பட்டார்கள். காஞ்சிபுரத்திற்கு சென்ற பொழுது, கலெக்டர் அவர்களும், சூப்பரின்டென்ட் ஆப் போலீஸ் அவர்களும், அங்கே வந்து கூட்டத்திற்குப் போகக் கூடாது என்று சொன்னார்கள். ஏனென்று கேட்டால் அங்கே ஒரு ஆயிரம் பேர்கள் கம்பும், தடியும் வைத்துக் கொண்டு எங்கே வருகிறார் இந்திரா காந்தி என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குப் போதிய போலீஸ் இல்லாத காரணத்தால் உங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க முடியாது, வன்முறை தலை தூக்க ஏதுவாக இருக்கும், எனவே நீங்கள் போவது அவ்வளவு உசிதம் அல்ல என்று சொன்னார்கள். இதைக் கேள்விப்பட்ட இந்திரா காந்தி அவர்கள், நான் போவதானால் வன்முறை ஏற்படும் என்றால் அங்கே போக வேண்டாம் என்று

திரும்பிவிட்டார்கள். அதை தி. மு. க.வினர் வெற்றியாகக் கருதுகிருர்கள். திருமதி இந்திரா காந்தியை காஞ்சீபுரத்திலே நுழைய விடாமல் தடுத்து விட்டோம் என்பதை தி. மு. கழகத்தினர் ஜனநாயகத்தின் வெற்றி என்று கூறுகிருர்கள். அப்படியாஞல் திருமதி இந்திரா காந்தி பேசவே முடியாமல் திரும்பிவிட்டாரே அது ஜனநாயகத்தின் தோல்வி அல்லவா? ஒருவர் பேச முடியாமல் திரும்பிவிட்டது ஜனநாயகத்தின் தோல்வி. உங்களுடைய கருத்துப்படி அது ஜனநாயகத்தின் வெற்றியா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரி ஒருவர் அவருடைய கருத்தை எடுத்துச் சொல்வதை தடுப்பதன் மூலம் வன்முறையைத் தூண்டிவிடுவது என்று நினைத்தால், இன்றைக்கிருக்கிற எதிர்க் கட்சியில் உள்ள தலைவர்கள் யாராவது வெளியே போக முடியுமா? ஏன் எதிர்க் கட்சித் தலைவரான நீங்களே போக முடியுமா? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் கருத்துக்களைச் சொல்லலாம். எந்தக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன என்பதை தேர்தல்தான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, கம்பை வைத்து நிர்ணயிக்கக் கூடாது. அது சாத்தியமும் அல்ல. சரித்திரத்திலும் இப்படி கிடையாது.

இம்மாதிரி வன்முறைச் சம்பவங்களிஞல் ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்குமேல் மத்திய, மாநில அரசினுடைய சொத்து, பொதுமக்களின் சொத்து நாசமடைந்திருக்கிறது. ஆஞல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இதைப் பற்றி கண்டித்திருக்கிருர்களா? அதைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை. இம்மாதிரி வன்முறைச் சம்பவம் நடந்தது நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை. நடந்து விட்டது. நாங்கள் இம்மாதிரி நடக்கும் என்று கருதவில்லை, ஆகவே நாங்கள் கண்டிக்கிருேம். ஆகவே, நாங்கள் கருப்புக் கொடி காட்டுவதைத் தடுத்து நிறுத்துகிருேம் என்று சொல்லி இருந்தால் ஏற்றுக் கொள்ள முடியும்.

மகாத்மா காந்தி அடிகள் கூட சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்திஞர்கள். சத்தியாக்கிரகப் போராட்டம். அந்தப் போராட்டத்தின்போது சில இடங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்ததைக் கேள்விப்பட்டு உடனடியாக அந்த சத்தியாக்கிரகத்தை ரத்து செய்து விடுகிறேன் என்று கூறிஞர்கள். ஆஞல் இங்கே, தி. மு. க. தலைவர்கள் அவர்கள் சரியாக கருப்புக் கொடி காட்டவில்லை. நான் தலைமை தாங்கிக் காட்டுகிறேன் என்று சொன்ஞர்கள். யோசனை செய்து பாருங்கள், நீங்கள் அப்படிச் சொல்லவில்லை என்று கூறலாம். ஆஞல்

அதற்கு இதுதானே பொருள். சரி இவ்வளவு சம்பவம் நடந்ததே, மத்தியில் இருக்கிற ஜனதா கட்சிக்காரர்களாவது கண்டித்தார்களா, அவர்களும் கண்டிக்கவில்லை. ஆஞல் ஒன்றை நான் பாராட்டுகிறேன்.

திருமதி இந்திராகாந்தியின் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடந்ததைக் கேள்விப்பட்ட பிரதம அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தமிழக முதல்வருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வன்முறைச் சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி சொன்ஞர்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆஞல், தமிழகத்திலே இருக்கிற ஜனதா கட்சிக்காரர்கள் என்ன செய்தார்கள். உடனடியாக அன்றைக்கு ஒரு கண்டனம், அடுத்து ஒரு மௌன ஊர்வலம் நடத்திஞர்கள். கண்டிப்பது யாரை, வன்முறை சம்பவங்கள் நடந்ததற்குக் காரணமாக இருந்த தி. மு. க. வினரை கண்டித்தார்களா? இல்லை என்ருல் வன் முறை நடக்கவேண்டாம் நடவடிக்கை எடுங்கள் என்று சொன்ன பாரதப் பிரதமரை எதிர்த்தா? இரண்டையும்

[பிற்பகல் 1—10]

விட்டு விட்டு இந்த வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்திய அரசாங்கத்தைக் கண்டித்து இருக்கிருர்கள். நாங்கள் சுற்றுப் பயணம் செய்கின்ற உரிமையை அவர்கள் கண்டிக்கிருர்கள் என்ருல் ஜனநாயகத்தில் தமிழகத்தில் இருக்கும் ஜனதா கட்சித் தோழர்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்து இருக்கிருர்கள், எந்த அளவுக்கு அதனைப் புரிந்து கொண்டு இருக்கிருர்கள் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் போய் மகஜர் கொடுத்தார்கள். அவர் என்ன கருத்தைத் தெரிவித்தார்? சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட்டு இருக்கிறது. சட்டம் ஒழுங்கு அமைதியை தமிழக அரசு சரியான முறையில் நடத்த நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்,

இந்த மாதிரி சம்பவங்கள் எல்லாம் நடந்து இருக்கிற போது இடையில் மற்ருென்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜனதா கட்சி ஜனநாயகத்திற்காகப் பாடுபடுகிருேம் என்று சொல்கிருர்கள். அந்த அடிப்படையில் பார்க்கிற போது, மத்தியில் இருக்கும் மொரார்ஜி தேசாய், பிரதமர்

அவர்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய மத்திய தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே வந்திருந்தபோது ஒரு அறிக்கைவிட்டார்கள்.

திரு. க. சுப்பு : ஒரு ஒழுங்குப் பிரச்னை. விவாதத்தின்போது நம்முடைய வாதத்திற்காக கவர்னர் அவர்களுடைய கருத்தை பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. ஆகவே, மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் ஆளுநர் கூறிய கருத்தை எடுத்து தன்னுடைய வாதத்திற்கு வலுவூட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இது நாம் கடைபிடிக்கிற முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவர்னர் ஆற்றிய உரைமீது நாம் கருத்துக் கூறலாம். அவர் சொல்லிய கருத்துக்களை நாம் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அவரைப் பற்றி குறைதான் சொல்லக்கூடாது. இருப்பினும் நீங்கள் தவறு என்று சொல்லிவிட்டால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

மத்திய தொழில் அமைச்சர் ஒரு அறிக்கை விட்டார்கள். அவர் தமிழ்நாட்டில் இருக்கும் ஜனதா கட்சிக்குத்தான் அறிக்கை விட்டார்கள். உத்திர பிரதேசத்தில் இருக்கும் ஜனதா கட்சிக்குச் சொல்லவில்லை. குஜராத்தில் இருக்கும் ஜனதா கட்சிக்குச் சொல்லவில்லை. இங்கே தமிழகத்தில் இருக்கிற ஜனதா கட்சிக்குச் சொல்கிறார்கள், மேலும் இங்கே தான் அவர்கள் சொல்லைக் கேட்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் அவர்கள் சொல்லைக் கேட்கிற கட்சி இல்லை.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர்கள் கண்டனம் தெரிவிப்பதற்கு நான் மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஜனதா கட்சிக்குச் சொல்லி திராவிட முன்னேற்றக் கழகம் அதைச் செய்தது என்று சொல்கிறபோது, அவர் மத்தியில் இருக்கும் ஜனதாகட்சியைக் கண்டிக்கிறாரே தவிர எங்களை அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நானும் பொறுத்து, பொறுத்துத் தான் பார்த்தேன். நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசும் போது குறுக்கிட்டுப் பேச வேண்டாம் என்று நினைத்தேன்.

அது எல்லை தாண்டி எங்கோ போகிறது. அவர் மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொல்லி, இம்மாதிரி நடந்தது என்று உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேசுவது உண்மைக்கு மாறானதாக இருக்கிறது. குறிப்பாக அவர்களைப் பொறுத்த வரையில் கண்ணியமான தலைவர் என்று நாங்கள் வைத்துக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பது சிக்கலாக இருந்தாலும் அவர்கள்மீது தனிப்பட்ட முறையில் எங்களுக்கு—மாரிமுத்து என்று சொன்னால் மரியாதை கௌரவம் இருக்கும். ஆனால் அவர் இப்படிக் கூறுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதை அவர்கள் மாற்றிக்கொள்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, நான் என்றைக்கும் யாரையும் மரியாதைக் குறைவாகப் பேச வேண்டுமென்று நினைத்தது கிடையாது. நினைக்கப் போவதும் கிடையாது. சம்பவங்களைச் சொல்கிறேன். இங்கே சர்வாதிகாரம், பாசிசம் என்றெல்லாம் பேசப்பட்டது. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது. எங்கேயாவது ஒரு சர்வாதிகார ஆட்சியிலே ஜனநாயக முறைப்படி தேர்தல் வைத்து சர்வாதிகார ஆட்சி அகற்றப்பட்டதாக சரித்திரத்தில் இருக்கிறதா? சர்வாதிகாரி ஜனநாயக முறைப்படி அகற்றப்பட்டதே கிடையாது. மக்கள் எழுச்சியால் அகற்றப்பட்டிருக்கிறார்களே தவிர ஜனநாயக முறைப்படி அகற்றப்படவில்லை. காங்கிரஸ் அகற்றப்பட்டிருக்கிறது என்றால் அது தான் ஜனநாயகம்.

அடுத்து நான் அதிகமாகப் பேசிக்கொண்டே போனால் தலைவர் அவர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படும். ஆகவே தான் என்னுடைய உரையை முடித்துக்கொள்வதற்கு முன்பாக இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டும். ஆனால் பின்னால் சந்தர்ப்பம் கிடைக்கிறபோது பல கருத்துக்களைச் சொல்லுவேன். தலைவர் அவர்களுக்கு சங்கடம் இல்லாமல், ஒன்றை மட்டும் கூறி நான் அமர விரும்புகிறேன்.

ஜனநாயகம் என்றால் என்ன, அதனுடைய விளக்கம் என்ன, என்பதை ஒருவர் ஒரு அறிஞர் இடத்திலே கேட்டார். அந்த அறிஞர் சொன்னார் 'நீங்கள் சொல்வதை நான் ஏற்றுகொள்ளவில்லை. ஆனால் நீங்கள் சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை யாராவது பறிப்பார்களேயானால் அல்லது மறுப்பார்களே

யானால் என்னுடைய உயிரைக் கொடுத்தாவது அந்த உரிமையை உங்களுக்கு நான் வாங்கித் தருவேன்'. இது தான் ஜனநாயக மரபு என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அருமை அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக பதில் அளிக்கின்ற வகையில் சில பொதுவான எண்ணங்களை மிகச் சுருக்கமாக எடுத்து வைக்கக் கருதுகிறேன்.

இதே பேரவையில் 1972-ல் கலைஞர் அவர்களுடைய ஆட்சியின் மீது புரட்சித் தலைவர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஒலி பெருக்கியிலே பேச முடியாமல் பேசியதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். இதே பேரவையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியின் மீது கலைஞர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஒலிபெருக்கியிலே பேசியதை ஒப்பிட்டுப் பார்க்கிறேன். கால மாற்றம், இடமாற்றம் இவ்வளவையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு சிந்தித்துப் பார்க்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் வெப்பமும், கொதிப்பும் சில நேரத்தில் ஏற்பட்டாலும், ஆளுகின்ற பொறுப்பை ஏற்று இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அதை எப்படி அணுகுகிறது என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாக்கிய நாயனார் சிவபெருமானை கல்லைவிட்டு எறிந்து அர்ச்சனை செய்ததைப்போல் ஆளும் கட்சியின் மீது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு வகையில் அஞ்சலி செலுத்துவதாகத் தான் அமைச்சர் என்ற வகையிலே நான் எடுத்துக்கொள்ளக் கருதுகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பல்லாண்டுகளாக எழுதுகிற கருத்துக்களையும், அவர்கள் பேசி பத்திரிகையிலே வருகின்ற பேச்சுக்களையும் இளம் வயது முதற்கொண்டே படித்து வரக் கூடியவன் நான் என்பதை அவர்கள் மறந்தாலும், அவர்களுக்கு மறந்து போயிருக்கிற பல கருத்துக்கள் கூட என்னுடைய நினைவிலே நிற்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

12, 13 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் நடத்திய 'முத்தாரம்' பத்திரிகையிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிய நேரத்தில் அவர்கள் விடுத்திருந்த பதில் இன்னும் எனக்கு பசுமையாக நினைவில் நிற்கிறது. 'அரசியல் எதிரிகள் உங்களை தூற்றுகிற போது நீங்கள் என்ன நினைப்பீர்கள்' என்று கேள்விக்கு அவர் அளித்திருந்த பதில் 'அவர்களும் போற்றுகின்ற அளவுக்கு நான் உயரவில்லையே என்று வருத்தப்படுவேன்' என்று பதில் சொல்லியிருந்தார்கள். எத்தகைய பக்குவத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி செய்கிற கருத்து எனக்கில்லை. ஆனால் அந்தப் பக்குவத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு பெற்றிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் தாக்குதல் தொடுக்கப்பட்டாலும் அந்தத் தாக்குதல்களுக்கு இடையிலே இந்த ஆட்சிக்குப் பயன்படக் கூடிய நல்ல கருத்துக்கள் இருக்குமானால் அவைகளை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயங்காது என்பதையும் நான் தெரிவிக்கக் கருதுகிறேன். கலைஞர் அவர்கள் இங்கே பேசுகிற போது என்னுடைய அருமைத் தம்பி கூட இப்படித் தாக்குதலை தொடுக்கலாமா என்ற ஒரு கருத்தினைச் சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே திருப்பிக் கேட்க விரும்பவில்லை. இதே அருமைத் தம்பி 72-லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திலே சேர்ந்து, நம்முடைய உணவு அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து திருநெல்வேலி மாவட்டத்திலே சுற்றுப்பயணம் போகும்பொழுது, கார் உடைக்கப்பட்டு, தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதை இந்த மன்றத்திலே சொன்ன போது, இந்தத் தம்பியை தாக்கியவர் யார் என்று என்னுடைய அண்ணனுக்குக் கேட்கக் கூட மனமில்லையே என்று நான் கேட்க விரும்பவில்லை.

(பிற்பகல் 1-20)

உண்ணாவிரதம் இருந்து உயிருக்குப் போராடுகிற நேரத்திலும் தம்பி உயிருக்குப் போராடுகிறான் என்ற நிலைமையிலும் இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாரே என் அண்ணன் அவரைக் கேட்க விரும்பவில்லை.

தம்பி தாக்குகிறன் என்று எண்ணுகிறபொழுது அருமை அண்ணன் ஆயிரக் கணக்கான இதயங்களில் அழித்து ஒழித்து விட முடியாத ஓவியமாக இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் மீது என்ன தாக்குதல்களைத் தொடுத்தார்கள் என்று இதய தராசில் எடைபோட்டுப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் ஆகி விட்ட காரணத்தாலே முற்றும் கற்று முழுத் தகுதியும் பெற்றவன் என்று சொல்ல விரும்பவில்லை. கொதிப்பின் காரணமாக, வயதின் காரணமாக பேசினாலும் அதைக் கண்டிக்கிற அளவுக்கு எங்களுடைய தலைமை உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு வேளை இருக்கிற இடத்தைக் காப்பாற்றுவதற்காக என்னுடைய தம்பி அப்படி பேசுகிறனே என்ற சந்தேகம் அண்ணன் எதிர்க்கட்சித் தலைவருக்கு வரக்கூடும். அப்படிப் பட்ட இலக்கணம் கடந்த காலத்தில் இருந்திருக்கக் கூடும். நிச்சயமாக இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் அது இல்லை என்பதை மிகுந்த தன்னடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களும், ப.உ.ச. அவர்களும், பேராசிரியர் அவர்களும், சாதிக் அவர்களும் அமர்ந்திருக்கிற கோலத்தைப் பார்த்த பிறகு மந்திரிப் பதவி சதம் என்று நினைக்கிற பயித்தியக்காரர்களாக இருக்க மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். எங்களுடைய தலைவர் கட்டளைக்கு கட்டுப் பட்டு ஒரு பொறுப்பை ஏற்கிறோம். அமைச்சராக இரு என்று சொன்னாலும் அந்தமான் தீவில் கிளைக் கழக உறுப்பினராக இருந்து செயலாற்று என்று சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளுகிற மனப்பக்குவம் பெற்றவர்களாக இருக்கிறோம் என்பதை மிகுந்த தன்னடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலில் ஒன்றைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ மக்களுடைய வாக்குகளை வழிப்பறி செய்து கோட்டைக்கு சுரங்கப்பாதையில் வந்து குந்திக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை மிகத் தெளிவாக அறிவார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் மனச்சாட்சிக்கு கிடைத்த ஒரு வடிவம். உருவாகியிருக்கிற அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மக்களுடைய உணர்வின் எதிரொலி. இதனைச் சரியாக புரிந்து கொண்டால்தான் அரசாங்கத்தைப்பற்றி அணுகுமுறைகள் சரியாக இருக்க முடியும், என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1976 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டதற்குப் பிறகு எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளை நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை கொஞ்சம் காலச் சக்கரத்தை பின்னோக்கிச் சுழற்றி அவர்களும் கருதிப் பார்க்கவேண்டும் என்பதற்காக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1972 ஆம் ஆண்டு அக்டோபரில் புரட்சித் தலைவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலக்கப்பட்டதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டு ஜனவரியில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கப்படுகிறவரைக்கும் முழுக்க முழுக்க நிர்வாக இயந்திரத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கப்பயன்படுத்தினார்களா இல்லையா என்பதை இதய சுத்தியோடு எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இயக்கத்தை அரும்பிலே கருக வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையா ? அடக்குமுறைகள் ஏவி விடப்படவில்லையா ? 1967-லும் 1971-லும் திராவிட முன்னேற்றக் கழக அரசை உருவாக்கவேண்டும் என்பதற்காக பசைச் சட்டியை ஏந்தி பாடுபட்ட தோழர்கள் பலன்களை எதிர்பார்க்காமல் எம்.ஜி.ஆர். மன்றத் தோழர்கள் வேட்டையாடப்படவில்லையா ? புரட்சித் தலைவர் அவர்களும் சரி நாஞ்சிலாரும் சரி, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சரி, வன்முறை வெறியாட்டத்திற்கு பலியாக வேண்டுமென்ற அளவில் நிலைமைகளும் ஏற்படவில்லையா ? அவைகளைக் கொஞ்சம் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிசாவை சந்தித்தவர்கள் நாங்கள் என்று திராவிட முன்னேற்றக்கழகத்தினர் சொல்லும்பொழுது அதில் நான் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. மிசாவை நீங்கள் சந்தித்தவர்கள் தான். மிசா உங்கள் மேல் பாய்ந்தது என்ற நிலைமை அது இரண்டாவது கட்டம். மிசாவை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது இவர்கள் பயன் படுத்தினார்களே அது முதற் கட்டம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பது பணிவான கோரிக்கை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1978 ஜனவரி 6]

கடற்கரையில் கூட்டத்தைக் கூட்டி கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தைக் காப்போம் என்ற சபதத்தை எடுத்தார்கள். கட்சிக் கூட்டத்தில் அவசரநிலையை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றினார்கள்—அதை நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் ஆட்சியின் சார்பாக தீர்மானம் போடப்படவில்லை என்ற தன்மையைக்கூட சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நாற்காலியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நடத்தப்பட்ட நாடகம் என்று கூட சொல்ல விரும்பவில்லை.

நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். பெரும் தலைவர் காமராஜர் போன்றவர்கள், இந்தியாவில் தமிழகம் ஒன்றுதான் ஒரு ஜனநாயகத் தீவாக இருக்கிறது, பதவியில் இருங்கள் என்று சொல்லி இருக்கிறார் என்று சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். நான் அதைக்கூட குறிப்பிட்டுக் காட்டிச் சொல்லவில்லை. ஆனால், அதற்குப் பிறகு, அரசு கலைக்கப்பட்ட பிறகு சஞ்சை காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்திற்கு நீங்கள் பாராட்டு தெரிவிக்கவில்லையா ? அதையும் பெரும் தலைவர் அவர்கள் சொன்னார்களே. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அவசர நிலையை எதிர்த்து இருக்கிறது. இன்றைக்கு ஜனதா கட்சித் தலைவர்களாக இருப்பவர்கள் எதிர்த்திருக்கிறார்கள். அவர்கள் சஞ்சை காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்தை புகழ்ந்து உரைத்தார்களா ? அதையெல்லாம் கூட மேற்கோளாகக் காட்டிச் சொல்ல விரும்பவில்லை. அதற்கு நீங்கள் என்ன விளக்கம் தந்தாலும், என்ன பேசினாலும் அதை வீரம் என்று ஒப்புக்கொள்ள முடியுமா என்பதை மட்டும் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றை சுட்டிக் காட்டினார்கள். இங்கே, தமிழகத்தில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வலுப்பெற்றுக்கொண்டு இருந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பில் நீங்கள் இருந்தீர்கள். அப்போது, திட்டம் போட்டு ஆளுங்கட்சியில் ஒரு பகுதி, வகுப்பு வெறி, இன வெறிப் பிரச்சாரத்தில் இறங்கவில்லையா ? எந்தப் பாவமும் செய்யாத சிறு கடைக்காரர்கள் தாக்கப்படவில்லையா ? நீங்கள் நினைத்துப்பாருங்கள். இந்தப் பேரவையின் பெருமைக்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். எப்படிப்பட்ட இனக் கலவரத்தைத் தூண்டினார்கள் ? அதற்கு ஆட்சியாளர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

1978 ஜனவரி 6] [திரு. கா. காளிமுத்து]

டெல்லியிலே ஒரு இனவெறிக் கலகம் நடந்தது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு ஜீப்பில் செல்லும்போது வழியில் சில இனவெறிக்காரர்கள், ஒரு முஸ்லீம் சகோதரரை தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். போலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பார்த்த, மனம் பொறுக்காத ஜவஹர்லால் அவர்கள் அந்த ஜீப்பிலிருந்து குதித்து, ஆவேசமாக இறங்கி அங்கிருந்த போலீஸ்காரரிடமிருந்த தடியை எடுத்துக்கொண்டு கலகக் காரர்களைத் தாக்குகிறார். அப்படி, சிறுபான்மை இனத்தார்க்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்த நீங்கள், உங்கள் காலத்தில் அந்த மரபு மண்ணாக்கப்பட்டது என்பதை, புண்பட்ட உண்மையை எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அது இன்னும் தொடருகிறது, என்பதையும் கொஞ்சம் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வெளியிலே அகில இந்திய அண்ணா தி.மு.க.-வை தி.மு.க. எந்தெந்த வகையில் விமரிசிக்கிறது என்பதை பார்க்கும்போது 'திராவிட' என்ற வார்த்தையை தன்னுடைய கட்சியின் பெயரில் வைத்திருக்கிற எதிர்க்கட்சியின் தலைவர் இதைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கூறுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

எங்கேயாவது தவறுகள், அல்லது லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது, ஊழல் நடக்கிறது என்று சொல்ல முடியுமா ? தவறுகள் நடந்திருந்தால் கூறுங்கள், திருத்திக்கொள்கிறோம் இன்று கூட ப.உ. சண்முகம் போன்றவர்கள் சுட்டிக் காட்டினார்கள். தவறிருந்தால் திருத்திக்கொள்கிறோம். அதற்காக வாதப்பிரதிவாதம் செய்து மறுக்கவில்லை. கூறப்படுகிற குற்றச்சாட்டுகளில் உண்மை இருந்தால் அதைக் கண்டுபிடித்து போக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதில் நல்ல நோக்கத்தோடு, தூய எண்ணத்தோடு இருக்கிறார். நல்ல நிர்வாகம் நடக்க வேண்டுமென்பதை மனமார விரும்புகிறார் என்பதை இதய சுத்தியோடு நீங்கள் ஒப்புக்கொள்வீர்களானால், அந்த வன்முறையை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளப் பகுதிக்கு நீங்கள் போகிறீர்கள். அங்கே இருக்கிற மக்களுக்கு ஆறுதல் சொல்கிறீர்கள். அந்த மக்களிடம் உங்களுக்கு அதிகமான அக்கறை இருக்கலாம். அதை

நான் குறைகூறவில்லை. விமரிசிக்க விரும்ப வில்லை, ஆனால் என்ன சொல்லப்பட்டது ? '' நாம் ஒரே ரத்தம் — தமிழ் ரத்தம் — அதனால்தான் நான் ஓடி வந்திருக்கிறேன்'' என்று சொல்லுவது இனவெறி உணர்ச்சியை தூண்டி விடுவ தாக இல்லையா ? இனப்பற்று, இனவெறியாக இன்னும் உங்களிடம் பதுங்கி இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இல்லையா ?

இந்த மண்ணோடு, இந்த மண்ணின் மக்களோடு பல்லாண்டு காலமாக கலந்து பழகி, இதயத் துடிப்போடு ரத்தத்தின் ரத்தத்தோடு ஒன்றிவிட்ட தமிழ் மக்களின் இதயத்திலே உயர்ந்துவிட்ட ஒருவரை அரசியல் ரீதியாக சந்திக்க முடியாத ஒருவரை எதிர்ப்பதற்காக, மரபுக்கு ஒவ்வாத முறையில் இப்படிப்பட்ட இனவெறிப் பிரச்சாரம் செய்வது அரசியல் சூழ்ச்சி என்றுதான் வருணிக்கவேண்டி இருக்கிறது என் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தின் மரபு காப்பாற்றப்படவேண்டும். யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், தமிழ் மண்ணின், தமிழ் இனத்தின், தமிழின் புகழை எதிர் காலத்தில் நிலைநாட்ட பாடுபடக்கூடிய வகையில் கடமை யைச் செய்யவேண்டும். அந்த வகையில் கடமைப் பட்ட இனவெறிப் பிரசாரத்தை தடுத்து நிறுத்த வேண்டு மென்று உரிமையோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற திருப் பெயரைத் தாங்கியிருக்கிற இயக்கம் முதல் சொல்லையே மூளி ஆக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று இதயம் திறந்து தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-30.)

அதிலும் சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து அந்த உணர்வுகளிலே ஊறிவளர்ந்த, அந்த உணர்வினை எங்களுக் கெல்லாம் ஊட்டிய டாக்டர் கலைஞரைப் போன்றவர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொண்டு, நீங்கள் கொண்டுவந்துள்ள இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம், கலைஞர் அவர்களுடைய தமிழிலே விமரிசனம் செய்யவேண்டுமானால், இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம், ஏமாற்றத்தின் காரணமாக ஏற்பட்ட எரிச்சலின் பிரதிபலிப்பு; இந்த நம்பிக்கையில்லாத் தீர் மானம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஏற்பட்ட

அங்கலாய்ப்பு; இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட வெகுளியின் எதிரொலி என்று சொல்லி அமருகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இதன் தொடர்பாக நாளை கேள்வி நேரம் முடிந்தவுடன், மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர் களும், பிறகு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்களும், இவர்களுக்குப் பிறகு விளக்கம் தரவேண்டுமானால், மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களும் பேசி இது முடிக்கப்படும். பேசி முடித்துவிட்டு, நேரம் இருக்குமானால், நாம் ஏற் கெனவே முடிவெடுத்தபடி சப்ளிமெண்டரி பட்ஜெட்டை எடுத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் பிஸினெஸ் அட் வைஸரி கமிட்டி கூட்டி, இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு ப்ரிவெலெஜ், ஸார். நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் எடுத்த முடிவிற்கும் இப்போது பேரவையில் அறிவிக்கப் பட்ட முடிவிற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. அப்படி யானால், இது யாரால் எப்போது மாற்றப்பட்டது ? இந்த மாற்றத்தை அலுவல் ஆய்வுக்குழுவிற்கும் தெரிவிக்காமல் செய்திருக்கின்றார்கள். இதுபற்றி தயவு செய்து விளக்கம் தரவேண்டும். அலுவலாய்வுக்குழுவின் முடிவுகளை அக் குழு தான் மாற்றமுடியுமே தவிர வேறு யாரும் மாற்றக் கூடாது. எனவே இது பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியின் முடிவுகளை மீறுவதாக இருக்கின்றது. எனவே 'திஸ் இஸ் எ மேட்டர் ஆப் ப்ரிவெலெஜ்' என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவ ரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் கிளப்பிய பிரச்சனைக்கு நான் எதிராகக் கருத்தினைத் தெரிவிக்கின்றேன் என்று அவர் கருதத்தேவையில்லை. இப்படி ஒரு மாற்றம் செய்து கொள்ளலாம் என்று நானும் எதிர்கட்சித் தலைவரவர்களும் பேசி, சபாநாயகர் அவர்களிடம் தெரிவித்து, இந்த முடிவினை மற்றவர்களுக்கெல்லாம் சொல்லலாம் என்று நாங்கள் இருந்தோம். உங்களையெல்லாம் சந்தித்து, இதை நான்

முன்னமே செய்திருக்கவேண்டும், தவறிவிட்டேன் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நாளைக்குக் காலை வேண்டுமானால் அலுவல் ஆய்வுக்குழுவினைக் கூட்டுங்கள். விலை உயர்ந்த உங்கள் கருத்துக்களை அங்கே வாரிவாரி வழங்குங்கள். ஆகவே ஜேம்ஸ் அவர்கள் தயவுசெய்து, இது குறித்து வருத்தப்படாமல், நாளைக்கு நாம் சந்திப்போம், முறையாகக் காரியங்களை நடத்துவதற்கு முயற்சிப்போம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னவர் அலுவல் ஆய்வுக் குழு நாளைக்குக் கூடலாம் என்றார்கள். ஆனால் நாளைக்கு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கலந்துகொள்ள முடியாது என்று நினைக்கிறேன். எனவே இன்று மாலை 4 அல்லது 5 மணி அளவில் கூடலாம் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, இன்று மாலை 5 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை வைத்துக் கொள்ளுவதற்கு யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்துத் தலைவர்களும் ஒப்புக்கொண்ட காரணத்தினால், இன்று மாலை 5 மணி அளவில் அதை வைத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுபெறுகின்றன. மீண்டும் மாலை நிகழ்ச்சிகள் இன்று மாலை 4 மணி அளவில் தொடரும் என்று அறிவிக்கிறேன்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒற்றிவைக்கப் பட்டது.

[மாலை 4-00]

பேரவை மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.

1. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே ''இன்றைய நிகழ்ச்சி நிரலில் நிதியமைச்சரின் பெயரால் அறிமுகம் செய்யப்பட கடைசியில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று பேரவையின் விதி 23(3)-ன் கீழ் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள்நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு, கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

6. தனியார் அலுவல்கள்.

(அ) சட்ட முன் வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, தனியார் மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் அவை முன் வைத்துள்ள தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, தனியார் மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. ரா. மார்க்கபந்து : தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு தனியார் மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(2) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு ஒழுங்கு முறை) ரத்து செய்யும் சட்ட முன் வடிவு.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு ஒழுங்கு முறை) ரத்து செய்யும் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்போரே, அதிகம். தீர்மானம் நிறைவேறியது).

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

திரு. க. சுப்பு: தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு ஒழுங்குமுறை) ரத்து செய்யும் சட்ட முன் வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தனித் தீர்மானங்கள்.

மாநிலங்களுக்கு கூடுதல் சுயாட்சி உரிமை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள ''மாநிலங்களுக்கு கூடுதல் சுயாட்சி உரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்த இப்பேரவை மாநில அரசுக்கு பரிந்துரை செய்கிறது '' என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. என். கிட்டப்பா : மேற்படி தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அலுவல் நாளாகிய இன்றைய தினம் தனியார் தீர்மானம் என்ற முறையில் இன்றைக்கு நான் கொடுத்த தீர்மானம் விவாதத்திற்கு வந்திருப்பதற்காக தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தனியார் தீர்மானங்கள் பற்றி முடிவு எடுக்கும்போது சீட்டு குலுக்கிப் போட்டு அதில் எந்தத் தீர்மானம் முதலாவதாக வருகிறதோ அந்த வகையில்தான் அனுமதிக்கப்படுவது முறையென்றிருக்கிற காரணத்தால் அப்படி சீட்டுக் குலுக்கிப்போடுவதில் எனக்கு நம்பிக்கை இல்லையென்றாலும் கூட அதிருஷ்டவசமாக முதலாவதாக இந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் கொண்டுவந்திருக்கிற தீர்மானம் ஆங்கிலத்தில் கொடுத்திருக்கிறேன்.

"That th s House recommends to the Government to urge upon the Union Government to take necessary steps to amend the Constitution so as to g.ve greater autonomy to the States."

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும். மாநில சுயாட்சி உரிமை வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இன்று மாநில சுயாட்சி என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாக விவாதிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உறுப்பினர் திருசுப்பு அவர்கள் ஒரு தீர்மானத்தை இங்கே பிரேரேபித்தார்கள். அந்தத் தீர்மானத்தை ஏற்போர் 'ஆம்' என்க என்று சொன்னீர்கள், எதிர்ப்போர் 'இல்லை' என்க என்று சொன்னீர்கள், சொல்லிவிட்டு ஏற்போரே அதிகம் என்று சொன்னீர்கள். அது எப்படி என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதாவை அறிமுகம் செய்யும்போது என் காதுக்கு எட்டியது 'ஏற்போரே' அதிகம் ; ஆகவே 'ஏற்போரே' அதிகம் என்று சொன்னேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநிலச் சுயாட்சி இன்றைக்கு பரவலாக பேசப்படுகிற முக்கியமான அரசியல் பிரசாரமாக இருப்பதைப் பார்க்கிறோம். மாநில சுயாட்சி என்பது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதாகும். மத்திய அரசிடம் குவிந்து கிடக்கிற அதிகாரங்கள் பரவலாக்கப்படவெண்டும் என்ற அடிப்படையில் மாநில சுயாட்சி கோரிக்கை கிளப்பப்பட்டது.

இன்று மத்திய அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. ஜனதாக் கட்சித் தலைவர்கள் பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜனதாக் கட்சியின் கொள்கையே 'டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ்' என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்பது ஜனதாக் கட்சியின் கொள்கை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காலம் கனிந்திருப்பதாகக் கருதுகிறேன். மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே இந்த சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வந்து ராஜமன்னார் குழு அறிக்கையோடு விவாதிக்கப்பட்டு இதே தமிழக சட்டமன்றத்தில் 1974ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி அன்று விவாதம் நடைபெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில சுயாட்சி பற்றி குறிப்பிடும்போது அறிஞர் அண்ணா அவர்கள் கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ளக் கடமைப் பட்டவர்கள் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தனது 1967ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் இது பற்றி குறிப்பிட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா

அவர்கள் இந்த மாநில சுயாட்சி கருத்தைப் பற்றிச் சொல்லும் போது திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"ஒருமைப்பாடு என்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டுவரும்போது, அது ஒரு பகுதியினர் பிற பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகிவிடாமல், பாதுகாத்திடும் பொறுப்பை தி.மு.கழகம் மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளது.

மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒருசீராக எல்லா மாநிலங்களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும் தி.மு. கழகம் பொறுப்புடன் பணியாற்ற உறுதி கொண்டிருக்கிறது.

மாநில உரிமைகளைப் பாதுகாத்திடும் முறையிலும், குறிப்பிடப்படாத எஞ்சிய அதிகாரங்கள் (ரெஸிட்யூவரி பவர்ஸ்) மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முறையை மாற்றி அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்காகவும் கழகம் பாடுபடுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தை திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது."

தி.மு கழக தேர்தல் அறிக்கையில் 1967ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டு மாநில சுயாட்சிக்காக, அதிக அதிகாரங்கள் பெற தி.மு. கழகம் பாடுபடும் என்றும் அதை ஏற்றுக்கொள்கிற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார்கள். அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இன்று மாநில சுயாட்சி பற்றி நாம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[பிற்பகல் 4—10]

1967ஆம் ஆண்டில் இது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. பின்னால் 1971–72-ஆம் ஆண்டிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக வந்திருக்கிறது. அண்ணா அவர்கள் சொன்னது போல் மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. concentrati n of powers என்கின்ற வகையில் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினிடத்தில் குவிந்து கிடக்கின்றன. அந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம். உலகத்தில் இருக்கின்ற அமெரிக்கா போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால், கனடா போன்ற

நாடுகளை எடுத்துக்கொண்டால், ரெஸிட்யூவரி பவர்ஸ் எல்லாம் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். இந்தியாவில் மட்டும் இந்த ரெஸிட்யூவரி பவர்ஸ் மாநிலங்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்படவில்லை மூன்று பட்டியல்களாக தயாரித்து, ஒன்று யூனியன் லிஸ்ட் என்றும், இன்னொன்று ஸ்டேட் லிஸ்ட் என்றும், மூன்றாவது கன்கரன்ட் லிஸ்ட் என்றும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, சில அதிகாரங்கள் யூனியனுக்கும், சில அதிகாரங்கள் மாநிலங்களுக்கும் கொடுக்கப் பட்டிருப்பதோடு அல்லாமல் சில அதிகாரங்களை மத்திய அரசாங்கமும் செயல்படுத்தலாம், மாநிலங்களும் செயல்படுத்தலாம் என்றும் இதை கன்க்கரன்ட் லிஸ்ட் என்றும் வைத்திருக்கிறார்கள்.

ஆனால் மத்திய சர்க்காருடைய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது, மாநில அரசாங்கம் இந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஏதாவது சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினாலும் கூட அதே அதிகாரத்தை பயன்படுத்தி மத்திய அரசாங்கம் இன்னொரு சட்டத்தை இதற்கு மேலே கொண்டு வருவார்களேயானால், மத்திய அரசாங்கத்தினுடைய சட்டத்திற்குத்தான் முன்னுரிமை என்று இருக்கிறது. அதாவது மத்திய சர்க்காருக்கு இதில் முழு உரிமையும் என்று இருக்கிறது. இப்படியாக அதிகாரங்கள் தேங்கியிருக்கின்றன.

ஆகவே தான் நாம் வற்புறுத்துவது இப்படி குவிந்து கிடக்கிற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவ வேண்டும். இப்படி அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவவேண்டுமென்று சொல்லும்போது, இது ஏதோ தனிப்பட்டவர்களுக்காக கேட்பது அல்ல. மாநிலங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கு இப்படிப்பட்ட அதிகாரங்கள் தேவை என்று கேட்கக்கூடிய காலம் வந்துவிட்டது. ஆகவே தான் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம்.

ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சி கூட மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. 1945ஆம் ஆண்டில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி, 1945-ம் ஆண்டு இந்திய மக்கள் முன் வைத்த பிரகடனத்தில் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது.

" இந்தியக் கூட்டாட்சி என்பது, அதன் பல்வேறு பகுதிகளின்—விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிகப்பட்ச சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்த பட்ச அதிகாரத்தைக்

கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும், தேவைப்படும் பகுதிகள் (அதாவது மாநிலங்கள்) விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப்பட்டியலும் இருக்கலாம்" என்று தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கோரப்பட்டிருப்பதையும் நம்மால் காண முடிகிறது.

அதைத் தொடர்ந்து நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அதாவது 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுக்குப் பிறகு, அன்றைய அரசியல் நிர்ணய சபையில் ஜவகர்லால் நேரு அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 1947-ல் அரசியல் நிர்ணய சபையில் நேரு அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்படும் அதிகாரங்களைத் தவிர மற்ற எல்லா அதிகாரங்களும் சுயாட்சி உள்ள மாநிலங்களுக்கே உண்டு என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தீர்மானத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்..........

" இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும் 'இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப் பகுதிகளும் வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும் அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கும்படியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்போதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் (ரிஸிடியூரி பவர்ஸ்) அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும் "......

என்று நேரு அவர்கள் தீர்மானத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். எஞ்சிய அதிகாரங்களும் அதாவது ரிஸிடியூரி பவர்ஸ் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நேரு அவர்கள் குறிப்பிட்டதாக அமைந்திருக்கிறது. காலப்போக்கில் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் அன்றைக்கு இருந்த சூழ்நிலை காரணமாக அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கின்ற வகையில் நிறைவேற்றி விட்டார்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : நேரு குறிப்பிட்டதாகச் சொன்ன பகுதியில் மாநில சுயாட்சி என்று இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன், நான் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன்.

சுயாட்சி என்று சொல்வதற்கான அர்த்தம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தால் ரொம்ப மகிழ்ச்சி அடைவேன். சுயாட்சி என்கின்ற அந்த

தமிழ் வார்த்தைக்கு நேரு அவர்கள் உபயோகித்த ஆங்கில வார்த்தையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, மாநில சுயாட்சி என்று சொன்னால், தனித்து பிரிந்து போவது என்று அர்த்தமல்ல. பரவலாக அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறோம். தாங்கள் அதைத் தவறாக, மிஸ்-அன்டர்ஸ்டாண்டிங்காகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : அதற்கான நேருவின் ஆங்கிலச் சொல்லை, அதற்கான வாசகத்தை வேண்டுமென்று கேட்டேன். இருந்தால் சொல்லுங்கள், இல்லாவிட்டால் வேண்டாம்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதம் அல்ல. கூத்தகுடி சண்முகம் அவர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். மாநில சுயாட்சி என்பது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்று சொல்லப்படுகிறது. தனி ஆட்சி, சுயாட்சி என்பதற்கு என்னைவிட திரு. சண்முகம் அவர்களுக்கு நன்கு தெரியும். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அதைப் பார்க்கும்போது, தன் ஆட்சி என்றால் என்ன, சுயாட்சி என்றால் என்ன என்பதைப்பற்றி நான் விளக்கத் தேவையில்லை. யு.எஸ்.எஸ்.ஆர். அரசியல் சாசனத்தைப் படித்துப் பார்த்தால், இதைவிட பிரிந்து போவதற்கு அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : தலைவர் அவர்கள் மூலமாக நான் விளக்கம் ஒன்றைக் கேட்டேன், அதற்கு அவர்கள் விளக்கம் கொடுக்கவில்லை. மறுபடியும் சொல்கிறேன். நான் ஒன்றே ஒன்றைத்தான் கேட்டேன். நேரு அவர்கள் சுயாட்சி என்பதற்கு உபயோகப்படுத்திய வார்த்தை ஆங்கிலத்தில் எப்படியிருக்கிறது என்பதைத் தவிர, வேறு எவ்வித மான விளக்கமும் எனக்குத் தேவையில்லை.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : திரு. சண்முகம் அவர்கள் பேசும்போது வாய்ப்பு இருக்கும். என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். அடிக்கடி குறுக்கிட்டால் நான் எப்படி என் கருத்தைச் சொல்வது ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கூத்தகுடி சண்முகம் அவர்கள் தாராளமாக நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது அவர்கள் பேசுவதை கிரகித்துக் கொண்டு, பின்னால் பதில் சொல்லுங்கள்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u> : நேரு அவர்கள் உபயோகித்த ஆங்கிலச் சொல்லைத்தான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விருப்பப்பட்டால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் மேலே தொடர்ந்து பேசலாம்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u> : நேரு அவர்களுடைய அந்தத் தீர்மானத்தின் பகுதியாவது :—

" இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும் இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப் பகுதிகளும், வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்பொழுதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் சட்டத்தின்கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் (Residuary powers) அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும். "

தனித்து சுயாட்சி பகுதிகளாகச் செயல்படும் என்று கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொல்வதற்கு அதிகமாகவே நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். பிரிவினை வாதமல்ல.

(திரு. ரா. உமாநாத், மற்றும் சில உறுப்பினர்கள் ஏதோ கூறிக் கொண்டிருந்தனர்.)

THIRU. S. J. SADIQ PASHA ; Please permit me to rooeed on my own lines.
p

இந்த அதிகாரங்களைப்பற்றி நாங்கள் சொல்கிறபோது, இப்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இல்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னோம். நான் முதலில் பேச விரும்புவது, இந்தச் சட்ட மன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

சட்ட மன்றமாகும். ஜனநாயக அடிப்படையிலே உருவாக்கப்பட்ட சட்ட மன்றமாகும். அந்த முறையிலேதான், இந்த மன்றத்திற்கு நானும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறேன். திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்ட மன்றத்தை ஒரு காரணத்தையும் காட்டாமல், மத்திய சர்க்கார் கலைத்து விடுவதற்கு உரிமை இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம், 356-வது பிரிவின்கீழ், ஒரு மாநில சர்க்காரை எந்தவிதமான காரணமும் சொல்லாமல், கலைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Article 356 —If the President on receipt of a report from the Governor of a State or otherwise, is satisfied that a situation has arisen in which the Government of the State cannot be carried on in accordance with the provisions of this Constitution, the President may by proclamation ..

என்று அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[மாலை 4-20.]

ஒரு மாநில சர்க்காரைக் கலைத்து விடுகிற அதிகாரம் 356-வது பிரிவின்படி இருக்கிறது. கவர்னர் கொடுக்கிற அறிக்கையின்பேரில் ஜனாதிபதி ஒரு மாநில சர்க்காரைக் கலைத்து விடலாம் என்று இருக்கிறது. இப்போது நடைபெற்ற கவர்னர்கள் மாநாட்டில் கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கவர்னர்கள் யார்? கவர்னர்கள் மத்திய சர்க்காரின் ஏஜண்டுகள் என்ற முறையில் பணியாற்றுகிறார்கள். இந்தச் சபையில் ஆளும் கட்சிக்கு அதிகமான மெஜாரிடி இருந்தாலும் கூட காரணம் சொல்லாமல் கலைத்து விடலாம் என்ற அதிகாரத்தை மத்திய சர்க்கார் பெற்றிருக்கிறது. இந்த அதிகாரம் தேவையா? இந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருக்க வேண்டுமா? மத்திய சர்க்கார் இது போன்ற சர்வாதிகார அடிப்படையில் நினைத்ததைச் செய்யக் கூடிய நிலை இருக்கலாமா? ஆர்ட்டிகிள் 356—5-வது பிரிவின் Notwithstanding anything in this Constitution, the satisfaction of the President mentioned in clause (1) shall be final and conclusive and shall not be questioned in any court on any ground.

கவர்னர் அறிக்கையை அனுப்பி அதன் பேரில் ஜனாதிபதி சட்டசபையைக் கலைத்துவிட்டால் அதைக் கேட்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. அந்தக் காரணங்கள் நியாயமான காரணங்களா என்று ஆராயக் கூட அதிகாரம் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை இந்த 356-வது ஆர்ட்டிகிள்படிதான், மெஜாரிடி இருந்தும் எந்தவிதமான காரணமும் சொல்லாமல் கலைத்தார்கள். நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றோம். உயர்நீதிமன்றத்தில் வழக்கின் முடிவு என்ன? ஆர்ட்டிகிள் 356 (5)ன்படி இதைப்பற்றிக் கேட்க முடியாது. உரிமை கிடையாது என்று சொன்னார்கள். இதுபோன்று உரிமைகள் பறிக்கப்படும் வகையில் அதிகாரங்கள் மத்திய சர்க்காரில் குவிந்து இருக்கக் கூடாது.

இன்றைக்கு என்ன நிலைமை? கர்நாடகத்தில் கலைத்திருக்கிறார்கள். நான் சட்டப் பிரச்சினையைப் பேசுகிறேன். இன்றைக்கு அந்த முதலமைச்சருக்கு சட்டசபையில் மெஜாரிடி இருக்கிறதா என்று பார்க்க வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. பத்திரிகை ஆசிரியர் திரு. குல்தீப் நய்யார் கூட எழுதியிருக்கிறார். சட்டசபையில் மெஜாரிடி இருக்கிறதா என்பதைப் பார்க்க கர்நாடக முதலமைச்சர் அர்சுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கலாம். இரண்டு நாளைக்குள் ஒன்றும் மூழ்கிப் போய்விடாது என்று அவர் எழுதியிருக்கிறார்.

அதேபோல் பல ஆண்டுகளுக்கு முன்னால் நம்பூதிரிபாட்டின் கேரள அரசாங்கத்தைக் கலைத்தார்கள். அப்போதும் இந்த ஆர்ட்டிகிள் 356-ஐப் பயன்படுத்தித்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருக்கக் கூடாது. சட்டசபை ஜனநாயக முறையில் நடக்கிறது. ஆகவே, ஆர்ட்டிகிள் 356-ன்கீழ் உள்ள அதிகாரம் அதற்குப் பொருத்தமல்ல, நியாயம் அல்ல என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அவையிலே கூட இரண்டு முக்கியமான பிரிவுகளில் விவாதம் நடைபெற்றது. ஒன்று, நம்முடைய நண்பர் திரு. ஜேம்ஸ் என்று கருதுகிறேன், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற நிலைமையைச் சொன்னார்கள். நம்முடைய திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் எனக்கு இல்லை. மத்திய சர்க்காருக்குத்தான் விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது. அவர்கள் சொல்லுகின்ற விலையைத்தான் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய நியாயவிலையைக் கொடுக்க அரசாங்கம் விரும்பினாலும் கூட, உணவு அமைச்சர் அவர்களுக்கு அந்த எண்ணம் இருந்தும் கூட அந்த அதிகாரம் நம்முடைய சர்க்காருக்கு இல்லாமல் மத்திய சர்க்காரிடம் இருக்கிற காரணத்தால் மாநில அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாத நிலையைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். மவுண்ட் ரோடிலுள்ள பாட்டா ஷூ கம்பெனிக்குச் சென்று காலணி வேண்டுமென்று கேட்டால் அதிலே ஒரு விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அந்த பாட்டா ஷூ கம்பெனிக்கு இருக்கும் அதிகாரம் கூட மாநில சர்க்காருக்கு இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. தமிழ்நாட்டின் உற்பத்திப் பொருட்களான சர்க்கரை, சிமிண்ட், அலுமினியம் இவைகளையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ள முடியாது. தமிழ்நாட்டிலே உர உற்பத்தி இருக்கிறது. அந்த உரத்தை நாம் தமிழ்நாட்டு மக்களுக்காக எடுத்துக்கொள்ள முடியுமா என்றால், முடியாது. இப்படிப்பட்ட அதிகமான அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்குத் தேவை தானா? இதை இந்த நேரத்திலே நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரிலே சில அதிகாரங்கள் முக்கியமான அதிகாரங்கள், பாதுகாப்பு, கம்யூனிகேஷன்ஸ், கரன்ஸி வெளியிடுவது, வெளிநாட்டுத் தொடர்பு போன்ற சில அதிகாரங்கள் அவர்களுக்குப் போதும் என்ற கருத்தைத் தான் நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அதிகாரங்கள் மட்டும் மத்திய சர்க்காரிடத்தில் இருந்தால் போதும்.

இப்போது மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே பல கருத்துக்களை பலர் எடுத்துத் தெரிவித்திருக்கின்றனர். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு வீரேந்திர பாட்டீல் அவர்கள் ஒரு கடுமையான கருத்தைத் தெரிவித்தார்கள்.

It is feared at this rate there may be urgent demands for more autonomy by the States and a day might come when the different Houses and Bhavans of the States in Delhi are constrained to assume the character of Embassies

இப்போது டில்லியில் இருக்கிற மாநிலங்களின் இல்லங்களும் கெஸ்ட் ஹவுஸ்களும் தனித்தனி தூதுவர் இடங்களாகப் போய்விடும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சராக இருந்தவர்கள் இப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்தார்கள். மாநில அதிகாரத்திலே அவர்கள் அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போன்றே பி. சி. ராய் அவர்கள் மேற்கு வங்காள முதலமைச்சராக இருந்தவர்கள், முதலமைச்சராகப் பணியாற்றியவர்கள், அவர்கள்கூட மாநில சுயாட்சிக் கருத்தை மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. சந்தானம் போன்ற அறிஞர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அண்ணா போன்றவர்களும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவைகளுக்கு எல்லாம் ஒரு அடிப்படையான காரணம் மாநிலங்களுக்குப் போதிய அதிகாரங்கள் இல்லாத நிலையில் காரியங்களைச் செய்ய முடியாது. உதாரணத்திற்கு நான் நெல் விலையைப்பற்றிச் சொன்னேன். இன்னொன்றையும் சொல்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிகமான வருவாயைத் தருகின்ற இனம் சேல்ஸ் டாக்ஸ் தான். அதிலிருந்து மாநிலத்திற்கு 200 கோடி முதல் 250 கோடி ரூபாய் வரையில் வருவாய் கிடைக்கிறது. மாநில அரசின் செலவைச் சரிக்கட்டக்கூடிய ஒரே இனமாக அது இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசாங்கத்திலே ஒரு குழுவை அமைத்து சேல்ஸ் டாக்ஸை மத்திய அரசாங்கம் நிர்வகிக்கலாமா என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வந்தால் மாநிலங்கள் பஞ்சாயத்துக்கள் போன்ற அளவிற்குத்தான் இயங்க வேண்டி வரும்.

இன்றைக்கு இங்கே வருகின்ற ஆகாய விமானங்களுக்கு ஹை ஸ்பீட் டீசல் ஆயில் பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய சென்னையிலே வருகின்ற போது ஹை ஸ்பீட் டீசல் ஆயில் போடுகிறபோது அதற்கு விற்பனை வரி செலுத்தவேண்டும். 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய சர்க்கார் தமிழ்

நீரு சர்க்காருக்கு ஒரு கருத்தைத் தெரிவித்தது. ஹைஸ் பீட் டீசல் ஆயில் விலை அதிகமாக ஆகியிருக்கிறது என்று சொல்கிருர்கள். ஆகவே, அதற்கு விலையைக் கட்டுப்படுத்துவதற்காக நீங்கள் அதன்மீது போடும் வரியைக் குறைக்க வேண்டுமென்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அன்றைக்கு இருந்த மாநில அரசாங்கம் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஹைஸ்பீட் டீசல் ஆயிலுக்குப் போடப்படுகிற விற்பனை வரியின் மூலமாகக் கணிசமான வருவாய் வருகிறது. நாங்கள் அதை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. ஒருவேளை மத்திய சர்க்கார் அந்த வருவாயை ஈடுகட்டுமானுல், அப்படி ஒரு உறுதிமொழி கொடுத்தால் அந்தச் சலுகையைக் காட்டத் தயாராக இருக்கிருேம் என்று தெரிவித்தது. மத்திய சர்க்கார் அப்படிச் செய்கிருேம் என்று வாக்குறுதி தந்தார்கள். மத்திய சர்க்கார் அதிகாரத்தைப் பயன்படுத்தி சேல்ஸ் டாக்ஸ் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் என்று விதித்துவிட்டால் அவர்கள் என்ன வசூலிக்கிருர்களோ அதைத்தான் நாமும் வசூலிக்க வேண்டும், அதிகமாக வசூலிக்க முடியாது.

(மாலை 4-30)

உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். ஹைஸ்பீட் டீசல் ஆயிலுக்கு நம்முடைய மாநில சர்க்கார் 5 சதவிகிதம் போடுவதாக வைத்துக் கொள்வோம். எவ்வளவு என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை. 5 சதவிகிதம் என்று வரி விதிப்பதாக வைத்துக் கொள்வோம். மாநில சர்க்காரின் வரி அதிகம் என்று மத்திய சர்க்கார் சொல்லி, அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி, வருவாய் போதாத காரணத்திருலே, சேல்ஸ்டாக்ஸ் முக்கியமான வருவாய் என்பதால் குறைக்க முடியாது என்று சொன்ன பிறகு, அவர்கள் என்ன சொல்கிருர்கள் என்ருல், 5 சதவிகிதம் என்று இருக்கின்ற விற்பனை வரியை சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 2½ சதவிகிதம் என்று வரி விதிக்கிருர்கள். எனவே, நமக்கு வருவாயும் குறைகிறது, அதிகாரமும் பறிக்கப்படுகிறது.

அதுபோலவே, தமிழ் மாநிலத்தில் தொழில்கள் முன்னேற வேண்டுமென்ருல், பெரிய தொழிற் சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ருல் மத்திய சர்க்காரின் தயவை நாடித்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

அதைப்போல முக்கியமாக கடந்த இரண்டு மூன்று மாதங்களாக இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி அடிபடுகிறது. 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்கிற அந்தத் திட்டத்தைப்பற்றி இன்றைக்குப் பரவலாக விவாதிக்கப்படுகிறது. கல்வி என்பது மாநில சர்க்காரைப் பொறுத்த விவகாரம். ஆனுல், மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் உரிமையை எடுத்துக் கொண்டு இப்படித்தான் நடக்க வேண்டுமென்று வற்புறுத்துவது நியாயம் அல்ல; இப்படியே சென்ருல் காலகட்டத்திலே என்னவாகும்? அதிகாரங்கள் மத்திய சர்க்காருக்குத்தான் போய்ச்சேரும்.

அதைப்போல மத்திய சர்க்கார் விரும்பினுல் மாநிலத்திற்கு ரிசர்வ் போலீஸ் படையை அனுப்பலாம் என்ற வாய்ப்புகள் இருந்தன. இப்பொழுது இந்தச் சட்டத்தைத் திருத்தி விட்டார்கள். மத்திய சர்க்கார் விரும்பினுல் சென்ட்ரல் ரிசர்வ் போலீசை அனுப்பலாம் என்று இருந்தது. அவ்வாறு செய்வது மாநில சர்க்காரின் நிர்வாகத்தில் தலையிடுவதாகும். ஆனுல் இன்றைக்கு ஜனதா சர்க்கார் அதை மாற்றியிருப்பதை நான் பாராட்டுகிறேன், அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளைச் சுட்டிக்காட்டத்தான் நான் விரும்புகிறேன்.

அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இல்லாததால் நாம் மக்களுக்குச் செய்ய வேண்டிய பல காரியங்களைச் செய்வதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்ருல், கூடலூர் ஜென்மி எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தை 1969 ஆம் ஆண்டிலே நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்புகின்றபொழுது மத்திய சர்க்கார் உடனடியாக இந்தச் சட்டத்தை சேர்க்காததால் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று செல்லுபடியாகாது என்று தீர்ப்பளித்தார்கள். இப்பொழுது காலம் கடந்து விட்டது. இப்படி மக்களுக்குப் பயன் தருகின்ற வகையில் நிறைவேற்ற முயற்சித்தாலும் அவைகளைச் செய்ய முடியவில்லை.

அடுத்து, மால்கோவை எடுத்துக் கொள்வோம். மால்கோவைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று 1973-74-லே இந்தச் சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. ஆனுல் அதைத் தேசிய மயமாக்குவதற்குரிய அதிகாரம் மத்திய சர்க்காருக்குத்தான் உண்டு. ஏன் மத்திய சர்க்கார் இது வரையில் எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை? மாநில

சர்க்கார் விரும்பி இப்படி வருமானம் தரத் தக்க தொழில் களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத் தாலும் மத்திய சர்க்காரின் அனுமதியில்லாமல் செய்ய முடியாது.

இதே சட்ட மன்றத்திலே நமது முதலமைச்சரவர்கள், பிளாக் க்ரேனைட் தொழில் தேசிய மயமாக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், அது அவ்வளவு சுலப ரமாக முடியக்கூடிய காரியமா என்றால், இல்லை. மத்திய சர்க் கார் விரும்பி அனுமதித்தால்தான் இவைகளைச் செய்ய முடியுமே தவிர, நாம் விரும்பி நம்முடைய மாநில மக்களின் முன்னேற்றத்திற்காக காரியங்களைச் செய்யும் முறையிலே அதை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினாலும் அது சாத்தியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, அற ஆலயங்களிலே, கோயில்களிலே அரி சனங்களை அர்ச்சகர்களாக நியமிக்கலாம் என்ற சட்டத்தை மாநில சர்க்கார் மத்திய சர்க்காரின் அனுமதிக்காக அனுப்பி வைத்தார்கள். இங்கே அதிகாரம் இல்லாத காரணத்தினால் நம்முடைய சட்டமன்றத்திலே சட்டத்தை நிறைவேற்றினா லும், மத்திய சர்க்கார் அனுமதியைப் பெற்றுத்தான் நடை முறைக்குக் கொண்டுவர முடியும் என்ற நிலை இருப்பதால் மத்திய சர்க்கார் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஒரு சமுதாயச் சீர்திருத்தம் என்ற முறையில் கோயில்களில் அர்ச் சகர்களாக அரிசனங்கள் நியமிக்கப்படலாம் என்ற சட்டத்தை இன்றைய அளவிற்கு மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை, ஏன் மத்திய சர்க்காரில் அதிகாரங்கள் குவிக் கப்படுகிறது? அந்த அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டு மென்ற எண்ணத்தைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, இன்றைக்கு நேஷனல் ஹைவேஸ் இருக் கிறது. நேஷனல் ஹைவேஸ்ஸைப் பராமரிப்பதற்கான செலவை மத்திய சர்க்கார் கொடுக்கிறது. ஆனால் நிர்வகிக் கின்ற பொறுப்பு தமிழ்நாட்டுச் சர்க்காருக்கு உண்டு. ஆனால் நேஷனல் ஹைவேஸில் அதற்கு குறுக்கே குடிநீர்த் திட்டத் திற்காக பைப் போட வேண்டுமென்றாலோ வேறு எதாவது முக்கியமான காரியத்தை மாநில சர்க்கார் ஏதாவது செய்ய

வேண்டுமென்றாலோ அப்படிச் செய்ய அதிகாரம் இல்லை. இங்கே அதிகாரம் இல்லாத நிலையில் இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவுக்கும் காரணம் என்ன என்று பார்க்கும்போது, மத்திய சர்க்காரிலே அதிகாரம் தேங்கியிருப்பதாலே, தமிழ் நாட்டு மக்களுக்கு நாம் போதிய அளவு காரியம் செய்ய முடியவில்லை. இந்தப் பிரச்னை ஒரு சாதாரணப் பிரச்னை அல்ல.

இன்றைக்கு, காஷ்மீர் பிரதம அமைச்சராக இருக்கிற ஷேக் அப்துல்லா அவர்கள், மாநில சுயாட்சி பற்றி கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதே போல், மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் இது விஷயமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார் கள். மேற்கு வங்கத்தின் சார்பாக நிதியமைச்சர் அவர் களும் முதலமைச்சர் அவர்களோடு கருத்துத் தெரிவித்திருக்கி றார்கள். அதிலே, ஜோதி பாசு அவர்கள், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுவது பற்றி, மாநில சுயாட்சி பற்றி, ஆலோசனை செய்வதற்காக, அதைப் பற்றி கருத்து தெரிந்து கொள்வதற்காக எல்லா மாநில முதலமைச்சர்களுக் கும் கடிதம் எழுதியிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார் கள். நம்முடைய முதலமைச்சருக்கு அந்தக் கடிதம் வந்தி ருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி வந்திருந்தால், அதின் மீது அரசாங்கத்திற்கு என்ன கருத்து என்று தெரி விக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநில சுயாட்சி என்பது, அதிக அதிகாரம் என் பது அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நம்மால், ஏற்றுக்கொள்ளப்பட்டு. இந்தக் கருத்துக்கள் பற்றி பல நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிற நிலையில், இந்த மாநில சுயாட்சிபற்றி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற அடிப்படையில் கருத்துக்கள் பரிமாற்றப்பட வேண்டும். அந்த அடிப்படையிலே அரசியல் சட்டத்திலே, எந்த எதைத் திருத்துவது என்பதை விளக்க வாய்ப் பிருக்கும்.

எனவே, அரசியல், சட்டத்திலே, தேவையான நிலையிலே திருத்தங்களைக் கொண்டு வந்து, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்கான நிலையில் திருத்த வேண்டு

மென்ற வகையில், என்னுடைய தீர்மானத்தை முன்மொழி கிறேன். நம்முடைய நண்பர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் ஆங்கிலத்திலே நேரு அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டார்கள்.

In dealing with this question, it is important to begin with a reference to the historical objectives resolution of Pandit Jawaharlal Nehru, which was adopted by the Constituent Assembly on the 22nd January 1947, the material of which runs as follows:

"Wherein the territories that now comprise British India, the territories that now form the Indian States, and such other parts of India as are outside British India and the States, as well as such other territories as are willing to be contituted into the Independent Sovereign India, shall be a Union of them all; and

"Wherein the said territories, whether with their present boundaries or with such others as may be determined by the Constituent Assembly, and thereafter according to the law of the Constitution shall possess and retain the status of autonomous units, together with residuary powers, and exercise all power and functions of government and administration, save and except such powers and function as are vested in or assigned to the Union, or as are inherent or implied in the Union or resulting therefrom"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தைத் தெரிவித்து, என்னுடைய தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன்.

<u>திரு. எம். ஏ. ஜெயவேலு</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை எதிர்த்து இங்கே சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை பிரிவினையைக் கைவிட்டோம், கட்டுண்டு வாழ்வோம், சமநிலையில் இணைவோம் என்பதுதான். அதாவது, ஆங்கிலத்திலே, neither dependence, nor-independence but inter-dependence என்பதே. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கொள்கையைப் பின்பற்றி வந்தார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

ஆனால், கடந்த கால வரலாற்றை நோக்குகின்ற நேரத்தில், எந்த அளவு 1969 முதல் 1976 வரை திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கு இருந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கிற நேரத்திலே இத்தகைய சட்டங்களை, அதிகாரங்களை மேலும் அதிகமாக வழங்கி இருந்தால் எந்த அளவு ஆபத்தாக இருக்கும் என்பதை அவர்கள் மேல் போடப்பட்ட வழக்குகளிலேயிருந்து தெரிகிறது. இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டே கோடிக்கணக்கிலே கொள்ளை அடிக்கிற ஒரு சூழ்நிலை இருந்தது. அதிகாரம் இன்னும் அதிகமாக வேண்டும், வேண்டும் என்று கேட்டதற்கு என்ன பொருள்?

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: நண்பர் ஜெயவேலு அவர்கள் வழக்கறிஞராக இருக்கிறவர். அதிலும், அவர் பப்ளிக் பிராசிக்கியூட்டராக இருந்தவர். அவர், இவ்வாறு பிறர் மனம் புண்படும்படியாகப் பேசக் கூடாது. இந்த மாநில சுயாட்சிபற்றி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன? அவர் எங்கோ போய்க் கொண்டிருக்கிறார்.

இதே மன்றத்திலே மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் பேசும்பொழுது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினரும் வக்கீலாயிற்றே, அவர் கொஞ்சம் விளக்கினால் நன்றாக இருக்கும்,

[மாலை 4-40.]

<u>திரு. எம். ஏ. ஜெயவேலு</u>: எங்கள் கொள்கையை முதலிலேயே தமிழிலேயும், ஆங்கிலத்திலேயும் இரு முறை நான் குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, கடந்த கால வரலாற்றை பார்க்கிறபோது 1969-லிருந்து 1976 வரை நடந்த. . . .

(திரு. ஏ. ரகுமான்கான் எழுந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்போது மறுப்பு தெரிவித்துப் பேசுங்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u>: அவர் பேசுவதற்கு சௌகர்யமாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : 1969-லே இருந்து 1976 வரை இந்தத் தமிழகத்தில் இருந்த அரசு, இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அதை எந்த அளவுக்கு துஷ்பிரயோகம் செய்தது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் ஒரு தீர்மானத்தை இந்தச் சட்டசபையில் போட்டு அனுப்பினுர்கள். அந்தத் தீர்மானத்தின் பின்னணி இப்போதுதான் புரிகிறது. அவர்கள் ஆட்சிக் காலத்திலே எவ்வளவு பேர்கள் அதிகாரத்தை, ஆட்சியில் இருந்தவர்களும் ஆட்சிக்கு வெளியே இருந்தவர்களும் கொள்ளை அடிக்க இந்த அதிகாரம் பயன்பட்டது என்பதைப் பார்க்கும்போது அதிக அதிகாரம் கொடுப்பதுகூட தவறு என்பதை நாம் எல்லோரும் உணர்கிருேம். ஆனுல் இந்தக் கோஷம் நீண்ட நாட்களாக போடப்பட்டிருந்தும் கூட சிறிது காலத்திற்கு விடப்பட்டிருந்தது. அவசர நிலை இருந்த காலத்திலே இந்தக் கோரிக்கை என்ன ஆயிற்று என்பது நமக்குப் புரியவில்லை.

மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் சொன்னுர்கள். கலைக்கின்ற அதிகாரம் சட்டசபைக்கு இருக்க வேண்டும். மாநில ஆட்சிக்கே இருக்க வேண்டுமென்று சொன்னுர்கள். அதை எந்த அளவுக்கு செயலிலே ஆற்ற முடியும் என்பது உண்மையிலேயே வேடிக்கையாகத்தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு கலைக்கின்ற அதிகாரம் இருக்கக் கூடாது. மாநில அரசுக்குத்தான் இருக்க வேண்டும் என்ருல் அது நடக்கக் கூடாத கருத்தை, போகாத ஊருக்கு வழி காண்பது போல் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இந்தியாவிலே ஒரு புதுவித மாறுதல் ஏற்பட்டு இருப்பதை நாம் எல்லாம் நன்ருக அறிவோம். மத்தியிலே ஜனதா அரசு இருக்கிறது. ஜனநாயகத்தைக் காப்போம், கட்டிப் பேணுவோம் என்கிற நிலையில் அவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்து 8, 9 மாதங்கள்தான் ஆகின்றன. இப்படி மாறுபட்ட சூழ்நிலையில் இத்தகைய அதிகாரத்தை கேட்பது நல்லதல்ல, பொறுத்திருந்து பார்ப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு அதிகாரம் கொடுத்தாலும் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே உள்ள இந்த அரசு அந்த அதிகாரங்களை நல்லமுறையிலே நாட்டு மக்களுக்குப் பயன்படுத்தும் என்று அறிந்த போதிலும் நாம் கேட்டுத்தான் இத்தகைய அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதை விட, அவர்களாகவே கொடுப்பார்கள் என்ற ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்குவதிலே கவனம்

செலுத்த வேண்டுமென்று கூறி, இத்தகைய தீர்மானம் இப்போது தேவையில்லை என்பதைக் கூறி, அகில இந்திய அண்ணுதிராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை Inter-dependence அதாவது சமநிலையில் இணைவது தான் என்பதைக் கூறி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்களால் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும் அல்லது அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லும்போது, ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. இது ஒரு தேசீயப் பிரச்னை. திராவிட முன்னேற்றக் கழகம் இந்தக் கோரிக்கையை இங்கே வைத்து இருந்தாலும், அதே கோரிக்கையை மேற்கு வங்கத்தில் இருக்கும் ஜோதிபாசு அவர்களும் வைத்து இருக்கிருர்கள். தமிழ்நாட்டில் ‘ மாநில சுயாட்சி மாநாடு ’ நடத்தியிருக்கிருேம். இந்திய வரலாற்றிலேயே தமிழ் நாடு ஒரு வழி காட்டியாக இருந்து ஒரு வரலாற்றினை இந்த மாநில சுயாட்சி குறித்து ஏற்படுத்தியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரலாற்று உண்மையை யாரும் மறுத்து மதிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.

மாநிலங்களுக்கு சுயாட்சி, அல்லது அதிக அதிகாரங்கள் என்று சொல்வது புதிதானதல்ல. தேசீயப் போராட்டக் காலத்தில் இருந்து இப்படிப்பட்ட தேவையை நாடு, உணர்ந்து இருக்கிறது. இந்தியாவில் வெள்ளைக்காரர்கள் சுதந்திரம் கொடுக்க வந்தபோது அது முழுமையாக இல்லை. முழுமையான சுதந்திரம் வேண்டும் என்று கோரிக்கை, எழுப்பப்பட்டது. முதல் கட்டமாக அவர்கள் லோகல் செல்ப் கவர்ன்மென்ட்டில் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று நிலை வந்தபோது, ‘ ரிப்பன் எங்கள் அப்பன் ’ என்று சொல்லி, அந்த வகையில் நம்முடைய குழந்தைகளுக்காக பாடங்களில் கூட அதைச் சொல்லிக் கொண்டு இருந்து இருக்கிருேம். இந்தியர்களுக்கு ஆளத் தகுதி இல்லை, ஆகவே நாங்கள் ஆள்வோம் என்று வெள்ளைக்காரர்கள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். 6,000 மைல்களுக்கு அப்பால், இருந்து வந்தவன் நம்மை ஆண்டு கொண்டு இருந்தபோது தான் குறிப்பாக இந்த நிலை ஏற்பட்டது.

சுதந்திரம் கேட்டு இயக்கம் நடந்த காலத்தில் [illegible] பரிபூர்ண சுதந்திரம் வேண்டும் என்கிற நிலையை [illegible] கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நேர[illegible] சொன்னார்கள், இப்படி அதிகாரம் மையம் [illegible] இருக்காமல், பல்வேறு அதிகாரங்களைப் பரவலாக [illegible] கொடுத்தால் நாட்டின் வளர்ச்சி சீராக இருக்கும், நாட்[illegible] ஒற்றுமை காக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சாதிக்பாட்சா அவர்[illegible] சோவியத் ரஷ்யாவில் இருக்கும் அரசியல் சட்டத்[illegible] ப்ற்றிக் கூறினார்கள். அங்கே இருக்கும் அரசியல் சட்டத்[illegible] பிரிந்து போகும் உரிமை இருக்கிறது. காரணம், அங்[illegible] கட்டாயம் கிடையாது. அப்படிப்பட்ட நிலையில் பொருளா[illegible] தார ஏற்றத் தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்[illegible] முடிகிறது. யாரையும் வறுமையில் வாட விடவில்லை. 'ரைட் [illegible]டு ஓர்க்' பண்டமெண்டல் சட்டத்தில் வாய்ப்பாக அளிக்கப்[illegible] பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்பு சோவியத் ரஷ்யாவில் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அவசியம் ஏற்பட்டால், மாநிலங்கள் தேவை என்று கருதினால், பிரிந்து போகும் நிலையும் இருக்கிறது. ஆனால் அதற்காக அவர்கள் பிரிந்து போய் விடவில்லை. தேவையை ஒட்டி அங்கே [illegible] நிலைமைகள் பார்க்கப்படுகின்றன. இங்கே ஒரு கட்சி ஆட்சி[illegible]யில் இருக்கும்போது வேண்டும், இல்லாவிட்டால் வேண்டாம் என்று சொல்வது இருக்கிறது.

இன்றைக்கு மக்கள் பிரச்னைகளைப் பற்றி தீர்வு காண வேண்டும் என்றால் மாநில சர்க்காருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. நாம் நேரடியாக மத்திய சர்க்காரை கூற முடியாமல், சுற்றி வளைத்து மாநில அரசைச் சொல்லி மத்திய அரசைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே இருக்கும் விவசாயப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியுமா? இங்கேயிருக்கும் விவசாயிகளுக்கு அதிக விலை நெல்லுக்குக் கொடுக்க வேண்டும் என்று பிரச்னை வருகிறபோது நம் கண்ணில் படுவது உணவு அமைச்சர் எட்மண்ட் தான். மத்திய அரசு விலைக்கு கட்டுப்பாடு வைத்து இருக்கிறது என்று நாம் சுற்றி வளைத்துத்தான் சொல்ல முடிகிறதே தவிர நேரடியாகச் சொல்ல முடியவில்லை.

இப்படி ஒரு 'டீயல் கன்டிரோல்' இருக்கிறது. இதைத் [illegible] நண்பர் ஜெயவேலுவும் சொல்லியிருப்பார் என்று [illegible]கிறேன். அவர் சொல்வது 'சம நிலையில்' இணைவது [illegible] நாங்கள் சொல்வதை விட ஒரு படி மேலானது. சம[illegible] [illegible] இருக்கிறது ?

லா அண்ட் ஆர்டர் என்பது மாநில அரசாங்கத்தின் பொறுப்பு என்று இருந்த போதிலும், நாம் ஒரு போலீஸ் வைத்து அதைச் செய்து வருகிறோம்.

ஆனால் இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் என்று வருகிறபோது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்காமல் போலீஸ் படை அனுப்பும் நிலை இருக்கிறது.

கல்வி என்று எடுத்துக் கொண்டாலும் அது முன்பு மாநில அரசில் இருந்தது. நெருக்கடி நிலையின் போது பல உரிமைகளை மாநிலத்தில் இருந்து எடுத்துக் கொண்டு விட்டார்கள். அதிலே இதுவும் ஒன்று. இதையும் கன்கரன்ட் லிஸ்ட்டில் சேர்த்து விட்டார்கள். அதன் காரணமாக கல்வியிலும் 'டீயல் கன்டிரோல்' வருகிறது.

இதே மாதிரி எல்லா நிலையிலும் இருக்கிறது. மாநிலத்தில் போலீஸ் என்றால், மத்தியில் சி.ஆர்.பி. வைத்து இருக்கிறார்கள். இந்த நிலை இருக்கிற காரணத்தால் மாநில அரசின் கை கட்டப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக எந்த ஒரு பிரச்னையிலும் மாநில அரசு நேரடியாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதற்குத் தீர்வு காண முடியவில்லை. அவர்கள் சொன்னார்கள், 'இட் ஈஸ் நெய்தர் இன்டிபென்டென்ட், நார் டிபென்டென்ட், பட் இன்டர் டிபென்டென்ட்' என்று சொன்னார்கள்.

ஆகவே தான் சொல்கிறோம், மாநில மக்களின் நேரடித் தொடர்புள்ள பிரச்னைகளில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும். வெளிநாட்டு உறவு, எல்லைப் பாதுகாப்பு, தபால்-தந்தி, போன்றவைகள் மத்திய அரசின் கையில் இருக்கட்டும். இந்தக் கொள்கையில் மாறுபாடு கிடையாது. ஆனால் கொடுக்கும் வியாக்யானத்தில் தான் வேறுபாடு இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இருக்கிறபோது, நீங்கள் தவறு செய்யலாம், ஆகவே நாங்கள் மாநில சுயாட்சி கேட்கமாட்டோம் என்று சொன்னீர்கள். இப்போது என்ன உங்களுக்குப் பயம் ? எங்களைத் தானே நீங்கள் அடக்கி வைக்க முடியும் ? இருந்தாலும் பரவாயில்லை காரணம், மக்களுக்குச் சேவை செய்யும் அதிகாரங்கள் உங்கள் கையில் இருக்கிறது என்று நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

[மாலை 4-50]

இந்திரா காந்தி அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பூராவும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்தார்கள். அதைத்தான் அந்த அம்மையார் சொன்னார்கள். நான் கான்ஸ்டிடூஷனுக்கு உட்பட்டுத்தான் செய்திருக்கிறேன். இப்படி கான்ஸ்டிடூஷனை மாற்றி அமைத்து, அதிலே தேவையான அதிகாரங்களைப் பெற்றால், நம்முடைய உரிமைகளை எல்லாம் பறி கொடுத்துவிட்டு எப்படிச் செயலாற்ற முடியும்?

இங்கே வெள்ளம் வந்தது. புயல் வந்தது. இங்கேயிருக்கிற மாநில அமைச்சர்கள் நேரிடையாகப் போகவில்லை. அங்கேயிருந்து மத்திய அமைச்சர் வந்து லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் என்று அறிவித்தார். திரு. பகுகுணா அவர்கள் வந்து மருந்தைக் கொடுத்துவிட்டுப் போகிறார். இங்கேயிருக்கிற அமைச்சர்கள் இடத்திற்குக் கொடுக்க முடியுமா? முதலமைச்சர் நிவாரண நிதி என்று இருக்கிறது. அவ்வளவுதான்.

தென்னகம் பத்திரிகையிலே பார்த்தேன் அவர்கள் கூட நேரிடையாகச் சொல்ல முடியாத அளவுக்கு எழுதியிருந்தார்கள். மத்திய சர்க்காரிலே இருக்கக்கூடிய பிரதமர் அவர்களே எல்லா உதவிகளையும் செய்வோம் என்று சொன்ன பிறகு, நிர்வாகம் இயந்திரம் அதைத் திட்டக் கணக்கிலே கழித்துக்கொள்வோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? கேட்டால் நாங்கள் அப்படித்தான் கொடுப்போம், அட்வான்சாகக் கொடுக்கிறோம். அதைக்கழித்துக்கொள்வோம் என்று சொன்னால் நம்முடைய மாநில திட்டங்களுக்கு எங்கே போவது?

மாநில அரசுதான் எல்லாவற்றிற்கும் நேரிடையாகப் பொறுப்பு. அப்படிப் பொறுப்பு இருக்கக்கூடிய சர்க்காருக்கு பைனான்சியல் கன்ட்ரோல் கூடக் கிடையாது.

சேல்ஸ் டேக்ஸ்சை எடுத்தால் மாநில சர்க்கார் ஒரு டாக்ஸ், மத்திய சர்க்கார் ஒரு டாக்ஸ் என்று இருக்கிறது. அதனுடைய விளைவு மாநில சர்க்கார் ஊழியர்களும், மத்திய சர்க்கார் ஊழியர்களும் ஒரே தகுதி, ஒரே வேலை. ஆனால் சம்பள வித்தியாசம். நானும் ஜூனியர்

அசிஸ்டெண்ட், அவரும் ஜூனியர் அசிஸ்டெண்ட். எனவே மாநில சர்க்கார் ஊழியர்கள் என்ன கோரிக்கை கேட்கிறார்கள்? மத்திய சர்க்கார் ஊழியர்களைப் போல் எங்களுக்கும் சம்பளம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இந்த சர்க்காருக்கு கொடுக்க ஆசை இல்லையா? ஆசை இருக்கிறது. ஆனால் கையிலே காசு வேண்டுமே? காசு இங்கேயில்லை. மத்திய சர்க்காரிடத்திலே அதிகமான வழி வகைகள் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சட்ட அமைப்பு முறையில் அதிக வருமானம் ஈட்டக்கூடியது மத்திய சர்க்கார். அதனால் அவர்கள் அவர்களுடைய ஊழியர்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள்.

நீங்கள் கொடுக்க முடிந்ததெல்லாம் மத்தியச் சிறை சப்ஜெயில் இவைகள் தான். நான் தப்பு என்று சொல்ல மாட்டேன். இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய பொறுப்பு இருக்கிறது.

நான் கேட்கிறேன். இங்கே இருக்கிற மாநில சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க முடியுமா? விலைவாசியைக் குறைக்க முடியுமா? பிறகு எதற்காக இருக்கிறீர்கள்? நீங்கள் கேட்கின்ற அதிகாரம் கொள்ளையடிப்பதற்காக என்கிறார்கள். கத்தியிருக்கிறது என்றால் அதைக் கொண்டு காய்கறியையும் நறுக்கலாம், கழுத்தையும் நறுக்கலாம். ஆகையால் கத்தியே கூடாது என்று சொல்ல முடியுமா? மக்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று சொல்லியிருக்கிறோம். அப்படி அதிகாரம் இல்லை என்றால் எப்படிச் சர்க்கார் நடத்தப் போகிறீர்கள்?

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க இந்த சர்க்கார் என்ன செய்யப் போகிறது? ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது. எங்களுக்கு இதிலே காழ்ப்பு உணர்ச்சியில்லை. இன்னும் சொல்லப் போனால் மாநில சுயாட்சிப் பற்றி நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். இந்தக் கொள்கை சரிதான். திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இருக்கிறபோது அதிக அதிகாரத்தைக் கொடுத்தால் அதைத் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்றார்கள். இன்றைக்கு என்ன ஆபத்து?

இன்றைக்கு நீங்கள் அடக்குமுறையைக் கொண்டு வந்தாலும் நாங்கள் வரவேற்கிறோம். இப்படிக் கேட்ட உடனே கொடுக்கப் போவதில்லை. அது வேறு விஷயம்.

[திரு. க. சுப்பு] [1978 ஜனவரி 6

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜோதிபாசு அவர்கள் கூட
கேட்டிருக்கிருர்கள். ஷேக் அப்துல்லா கூட கேட்டிருக்
கிருர். அப்படி பொறுப்பு மிக்க ஒரு தலைவர், பொறுப்பு
மிக்க ஒரு கட்சி இதெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கக்
கூடிய நிலையில் அதைக் கொண்டு வருவது யார் என்று
பார்க்கக் கூடாது............. அப்படியானால் ' சப்
ஜக்ட்டிவ் ' ஆகப் பார்க்கவேண்டும். ' அப்ஜக்டில் அவுட்
லுக் ' இல்லை. இந்தப் பிரச்னையை அணுகவேண்டிய
முறை எப்படி என்று அண்ணு திராவிட முன்னேற்றக்
கழகம் பொறுப்புணர்ச்சியுடன் பார்க்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் திராவிட
முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சி மக்கள் தேவை
களை நிறைவேற்றுவதற்கு, மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு
அவைகளைச் சரி செய்வதற்கு எந்த அதிகாரங்கள் தேவையோ
அந்த அதிகாரங்கள் தேவை, அதைப் பெற வேண்டும்
என்பதுதான்.

இல்லாவிடில் எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக்
காட்டிக் கொண்டிருக்கிருர்கள் என்ற குற்றச்சாட்டுதான்
உங்களுக்கும் வரும். நாங்கள் இருக்கும்போதும் அப்படித்
தான் சொன்ஞர்கள், எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்
காரைக் காட்டுகிருர்கள் என்று. இவ்வாறு சொல்லி அகில
இந்திய கட்சிக்காரர்கள் எல்லாம் வருத்தப்படுவார்கள்.
மத்திய சர்க்கார் வைத்திருக்கிற அதிகாரங்களை வைத்துக்
கொண்டு செயலாற்றவில்லை யென்ருல் அதைச் சொல்லலாம்.
உரிமையோடு போராடக்கூடிய வகையில் மாநில சர்க்கா
ருக்கு அதிக அதிகாரம் தேவை.

' ரைட் டு ஒர்க் ' வேலை செய்கிற உரிமை அடிப்படை
உரிமைகளில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை ஜனதா
கட்சித் தேர்தலுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்
ருகும். இதை அடிப்படை உரிமைகளில் ஒன்ருகச் சேர்த்து
விடுவதால் ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. அரசியல்
சட்டத்தில் அதை எழுதி வைத்துவிட்டால் மட்டும் வந்து
விடுமா ? அரசியல் சட்டத்தில் ' டைரக்டிவ் பிரின்சி
பில்ஸ் 'ல் இருக்கின்ற பிரச்னைகள் பல வரவில்லை. ' ரைட்
டு ஒர்க் ' என்பதை ' பண்டமெண்டல் ரைட் 'டில் சேர்த்து
விட்டால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. ஆனலும்
' மாரல் ரெஸ்பான்சிபிலிட்டி ' ' டூட்டி ' அரசாங்கத்திற்கு
வந்துவிடுகிறது.

1978 ஜனவரி 6] [திரு. க. சுப்பு]

அப்படித் தேர்தலுக்கு முன்னல் வாக்குறுதி கொடுத்த
போதிலும் இன்று ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு
அது பற்றி பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை.

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து வேலையில்லாதவர் எத்தனை
பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிருர்கள். நிவாரணம்
என்ன கொடுத்தார்கள். ' ரைட் டு ஒர்க் ' ஐ ' பண்ட
மெண்டல் ரைட்ஸ் ' இல் சேர்ந்திருக்கிறீர்களா என்று
கேட்க முடியுமா ?

மாநில சர்க்காரை திடீரென்று டிஸ்மிஸ் பண்ணிவிடுவார்
களோ என்ற நிலைமை இருக்கிறது. மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட மாநில சர்க்கார் எப்போது பார்த்தாலும்
அச்சத்தின் அடிப்படையில் செயலாற்றிஞல் எப்படி
பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் ? எமர்ஜன்சி காலத்தில்
நீதி மன்றங்களிலும் ' ரூயல் கன்ட்ரோல் '. மத்திய சர்க்
கார் ஒரு தனி விசாரணை நடத்தும், மாநிலத்தில் உள்ள
கோர்ட்டின் அதிகாரங்களைப் பிடுங்கி வைக்கக்கூடிய முறை
யில் ' அரகண்ட் ஆட்டிட்யூட் ' தனி நபருக்கு
சாத்தியமாக இருக்கிறது. அதைத் தவிர்க்க கூடிய முறையில்
தான்.........................

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே,
42-வது அமெண்ட்மென்ட் மூலம் மாநில அரசிடமுள்ள
சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருந்தன. ஆனல் அந்த
42-வது அமெண்டுமெண்டை மாற்ற 43-வது அமெண்டு
மெண்ட் இதற்கு முன்னல் நடந்த பாராளுமன்றத் தொடரில்
இந்த அரசு கொண்டு வந்தது. கொண்டு வந்த
நேரத்தில் பறிக்கப்பட்ட உரிமைகளைத் திரும்பக்
கொடுப்பதற்கு அரசியல் திருத்தச் சட்டத்தின்மீது
ஓட்டெடுப்பு நடைபெற்றது. அந்த நேரத்தில் இங்கே
மாநில சுயாட்சி வேண்டுமென்று குரல் எழுப்புகிற
வர்கள் அவர்களின் கட்சியின் சார்பாக அங்கே
ஒருவர் இருக்கிருர். ஆனல் அவர் அந்த ஓட்டெடுப்பில்
கலந்து கொள்ளவில்லை. ஆதலால் அடுத்து நடைபெறும்
பாராளுமன்றத் தொடரில், 'எடுக்கேஷனை' ஸ்டேட் லிஸ்
டிலிருந்து கன்கரண்டு லிஸ்டுக்கு கொண்டு போய்விட்டார்
கள் 42-வது அமெண்டுமென்டின் மூலம். எனவே
எடுக்கேஷன் ஸ்டேட் லிஸ்டில் இருக்க வேண்டுமா அல்லது
கன்கரண்ட் லிஸ்டில் இருக்கவேண்டுமா என்பதற்கு

ஓட்டெடுப்பு நடைபெற இருப்பதாக அறிகிறேன். எனவே இங்கே மாநில சுயாட்சியைப் பற்றி வெகு அக்கறை காட்டுகிற அவர்கள் கட்சியின் சார்பாக முன்னால் ஓட்டெடுப்பில் ஓட்டுப் போட மறந்தவர் இப்போது ஓட்டெடுப்பில் கலந்து கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 42-வது திருத்தங்களை பலவற்றை அகற்றுகிற முயற்சியை மேற்கொண்ட பொழுது பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இருக்கிற ஒருவர் ஓட்டளித்தாரா என்று உறுப்பினர் கேட்டார். ஓட்டு அளித்தாரா இல்லையா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. இல்லையென்றாலும் அவர் ஒருவர் சென்று ஓட்டளிக்காமல் போய்விட்டால் அந்தத் தீர்மானம் தோற்றுவிடும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்குமானால் நிச்சயமாக அவர் சென்றிருப்பார். ஆனால், அதே நேரத்தில் இன்னொன்றையும் ஞாபகப்படுத்துகிறேன்.

[மாலை 5-00 மணி]

ராஜ்ய சபாவில் இருந்த நேரத்தில் அன்றைய தி.மு.க எம்.பி. இன்றைய ஜனதா அரசுக்குச் சார்பாக வாக்களித்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தை விட மாநிலங்கள் அவையில் தான் இந்த ஓட்டுப் பிரச்சனையில் மிகுந்த நெருக்கடி. ஏனென்றால் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு அபரிமிதமான வாக்குகள் கிடைக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால் ராஜ்யசபாவில் 2,3, ஓட்டு வித்தியாசத்தில் தான் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை இருந்தது. அந்த நேரத்தில் தி.மு.க.வைச் சேர்ந்த எம்.பி. வாக்களித்து ஆளுங் கட்சிக்குச் சார்பாகத் திருத்தத்தை அனுப்பியிருக்கிறார்கள் — அந்தத் திருத்தத்தை அகற்றுகின்ற முயற்சியைக் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, வெற்றியா, தோல்வியா என்பது பிரச்சினையல்ல. ஒரு வாக்கா அல்லது....

திரு க. சுப்பு: நல்லது. தடுக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்தால் அது வரவேற்க வேண்டியது தான். இம்மாதிரித் திருத்தங்களைத் தடுக்க வேண்டுமென்பது தான் சரி. ஆனால் சிலர் இப்படிப்பட்ட வாக்கெடுப்பு

வரும்போது பாத் ரூம்க்குப் போய்விடுவதால் விபத்து ஏற்படுகிறது. அப்படிப்பட்ட ஆட்களை அங்கு வைத்துக் கொண்டு தி.மு.க. மீது குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. சமயத்தில் பாத்ரூமுக்குப் போகிற ஆட்களை நாங்கள் வைத்திருக்கவில்லை. மன்னர் மானிய ஒழிப்பு ராஜ்யசபாவில் இந்த ஒருவரின் ஓட்டினால்தான் தோற்றுப் போய்விட்டது — நண்பர் ராஜேந்திரனால் வந்த கதி.

திரு. துரை கோவிந்தராசன்: அப்படி ஓட்டுப் போட மறந்தவர் அப்போது தி.மு.க.வில்தான் இருந்தார்.

*திரு மு. கருணாநிதி: என்ன செய்வது? நாங்கள் தான் வைத்திருந்தோம். பிறகு நீங்கள் சேர்த்துக் கொண்டீர்களே, இப்போது.

திரு க. சுப்பு: இதில் பிரச்சினை என்னவென்றால், கொள்கை என்று வரும்போது வேறுபாடு அதிகமாக இருப்பதற்குக் காரணம் இல்லை.

திரு. மி. வின்சென்ட்: திரு. ஆசைத்தம்பி அவர்கள் இப்போது உங்கள் கட்சியில் இருக்கிறார். நாளைக்கு வேறு கட்சிக்குச் சென்று விடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சம்பந்தமில்லாத கேள்வி. திரு சுப்பு, தொடர்ந்து பேசுங்கள்.

திரு க. சுப்பு: தயவு செய்து சைட் டிராக்ட் பண்ண வேண்டாம். ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான, மக்களுடைய வாழ்க்கையோடு இணைந்து இருக்கக் கூடிய, அதிகாரங்கள் நாம் பெற்றாக வேண்டும் என்பது தான் முக்கியம்.

செய்தி-ஒலிபரப்பு இலாக்காவை வைத்திருக்கும் திரு. ஆர். எம். வீரப்பன் அத்வானியைப் பார்த்து, அவரைப் பாராட்டிப் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனென்றால் அவரது தயவு தேவைப்படுகிறது. நமக்கே அதிக அதிகாரங்கள் இருந்தால் அவரைப் பாராட்ட வேண்டிய அவசியம் இல்லை. பாராட்டியதை நான் தவறு என்று சொல்லவில்லை. அந்த நோக்கம், எப்படியாவது காரியம் நடக்க வேண்டுமென்று பாராட்ட வேண்டியிருக்கிறது.

*<u>மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் :</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், நான் மத்திய அமைச்சர் திரு அத்வானியைப் பாராட்டுவது ஏதோ காரியம் நடைபெறுவதற்காக என்ற பொருள்படும்படி பேசுகிருர்கள். மத்தியில் இருந்தாலும், மாநிலத்தில் இருந்தாலும், இந்த நாட்டின் அமைச்சர்தான். நாம் இப்படிப் பேசுகின்ற காரணத்தால் தான் மாநில சுயாட்சி உரிமை பற்றி ஆரம்பத்திலேயே சந்தேகிக்கிற, சந்தேகக் கண்ணோடு பார்க்கக் கூடிய நிலையை உருவாக்கி இருக்கிருர்கள். ஆகவே, மத்திய அமைச்சர் பொறுப்புள்ளவர், இந்தத் துறையைப் பற்றி அதிக அக்கறை செலுத்துபவர் — ஆகவேதான் அவரைப் பாராட்டினேன், மேலும் நல்ல நோக்கத்திற்காக வாதாடுகிறபோது மக்களின் உணர்வுகளை உள்ளடக்கி வெளிப்படுத்தினல் தான் பலன் அளிக்கும்.

<u>திரு க. சுப்பு :</u> தலைவரவர்களே, பாராட்டக் கூடாது என்பதல்ல. நான் கூறுவது, பாராட்டு உங்களுக்கு வந்திருக்க வேண்டியது. செய்தி ஒலிபரப்பில் முழுமையான அதிகாரம் இருந்தால் எல்லாக் காரியங்களையும் நீங்களே செய்து பாராட்டுப் பெற முடியும். நாமே அந்த வேலைகளை எல்லாம் செய்ய முடியும். ஆனல், வேலை நடக்க வேண்டும். அதுவும் நீங்கள் பாராட்டுவது வரவேற்க வேண்டிய விஷயம். சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்பதற்காக எடுத்திருக்கக் கூடிய முடிவு — வரவேற்க வேண்டியதுதான்.

இதில் என்னுடைய கருத்து என்னவென்ருல் மாநிலத்திற்கு அதிகமான அதிகாரங்கள் இருந்தால் பாராட்டுகிற வேலையில்லாமல், பாராட்டுப் பெறுகிற வேலையை நீங்கள் செய்யலாம். என்னுடைய விருப்பம், நீங்கள் பாராட்டுப் பெற வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில் இந்த இலாக்காவில் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்று கூறுகிறேன்.

இதைப்போல இன்னும் பல சட்டங்கள். குறிப்பாக, இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் — சென்ட்ரல் ஆக்ட். தொழிலாளர்கள் பிரச்சினை — சென்ட்ரல் ஆக்ட் — அவர்களைப் பார்த்துச் செய்ய வேண்டும். நாம் பரிந்துரை செய்வதோடு சரி. அங்கே ஒரு தொழிலாளர் நல மந்திரி. இங்கே ஒரு தொழிலாளர் நல மந்திரி. இங்கே இருக்கிற மந்திரிக்கு அதிக வேலை இல்லாமற் போகிறது. என்ன வேலை என்று வரையறுக்கப்பட வேண்டும்.

பல பெரிய பெரிய மத்திய அரசின் நிறுவனங்களெல்லாம் இங்கே இருக்கின்றன. பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் என்ருல் மத்திய சர்க்கார் கண்ட்ரோல். நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் என்ருல் மத்திய சர்க்கார் கண்ட்ரோல், என்று இப்படி ஏராளமான நிறுவனங்கள் இங்கே இருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதிலே இருக்கின்ருர்கள். அவர்களுடைய பிரச்சனைகள் என்று வரும்போது நாம் ஒன்றும் செய்வதற்கு இல்லை. காரணம் அதிகாரம் நமது மாநில அரசுக்குப் போதிய அளவிற்கு இல்லை என்பதுதான்.

இதோ இங்கே 'மால்கோ' நிறுவனத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னேம். நமக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. அனுமதி கிடைக்கவில்லை. இன்றும் ஸ்டேட் லிஸ்டு, சென்ட்ரல் லிஸ்டு, கன்கரெண்டு லிஸ்டு என்று இப்படிப்பட்ட பிரிவுகள். மத்திய சர்க்கார் நினைத்தால்தான் சட்டம் இயற்றலாம் நாம். இப்போது மாநிலத்திற்குரிய லிஸ்டுகளிலும் அவர்கள் கை வைக்கும் நிலை வந்துவிட்டது. எனவேதான் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்லத்தக்க நிலை வந்திருக்கிறது.

இப்படி நாம் கோரும்போது, இதிலே அரசியல் கட்சிகளின் வித்தியாசம் பாராமல், மாநிலங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் இருந்தால்தான் மக்களுக்கு இன்னும் அதிக அளவில் பணியாற்ற முடியும். நேற்றுகூட நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'நிலம் உழுகிறவனுக்குத்தான் சொந்தமாக வேண்டும், என்று. ஆனல் என்ன ஏற்பட்டது? நாம் ஏற்கனவே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆனல் அந்தச் சட்டம் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. பல்வேறு துறைகளிலே மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று நாம் சட்டங்களைக் கொண்டு வர நினைக்கிருேம். சாதாரணமாக சட்டத்தைக் கொண்டு வருவதற்கே நாளாகிறது. பிறகு அந்தச் சட்டத்தை நமது சபையில் நிறைவேற்றி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினல், ஒப்புதல் கிடைப்பதற்குப் பல நாட்கள் ஆகின்றன. இவ்வளவு நாளில் அது திருப்பி அனுப்பப்படவேண்டும் என்ற நியதி இல்லாத காரணத்தினல், பல காலம் இருந்தாலும் கேட்க முடியவில்லை. எப்படியோ சில சட்டங்களை ஒப்புதலுக்கு அனுப்பினலும், எப்படியோ அது அங்கே தூங்கிவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

[திரு. க. சுப்பு] [1978 ஜனவரி 6

இப்படியே பல சட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை யில், நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்ற முடியவில்லை. எனவே, நான் இப்போது கேட்க விரும்புவதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்று எண்ணுமல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் அப்போதுதான், நம்முடைய அரசுக்கு அதிக அதிகாரம் இருந்தால்தான், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் என்ற முறை யில், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்ருர்கள். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானம் என்று இராமல் தனியார் தீர்மானம் என்றுதான் வந்திருக்கிறது. எனவே இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்,

*<u>திரு. மு. அம்பிகாபதி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. சாதிக் பாட்சா அவர்க ளுடைய, மாநில சுயாட்சி பற்றிய, தனிநபர் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாநிலங் களுக்கு அதிக அதிகாரம் தேவைதான் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் ஏற்றுக் கொள்கிறது. எந்தெந்தத் துறையில் கூடுதலாக இன்னும் என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பதைத் தெளிவாக திட்டத்தை வைத்துக் கொண்டு இதை விவாதித்தால் இந்த விவாதம் பலன்தரத் தக்க விவாதமாக இருக்க முடியும்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாடு மிகவும் அவசியம். அதே நேரத்தில், மாநிலங்களுக்கு, தமிழகத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதும் அவசியம். மாநில அளவில் பார்த்தால், பல்வேறு பிரச்சனைகளில் அதிகாரம் குறைந்துதான் இருக் கிறது. இன்று சோவியத் யூனியனை எடுத்துக் கொண்டால், அங்கே சுரண்டுகிற வர்க்கமும் இல்லை, சுரண்டுவதற்கான தேவையும் இல்லை. இப்போது அந்த நாட்டைப் பிறிதொரு நாடு தாக்குவதற்கான சக்தி வேறு எந்தநாட்டுக்குமே இல்லை என்ற அளவுக்கு பலம் பொருந்திய நாடாக இருக்கிறது. அந்த நாட்டிலே உள்ள மாநிலங்கள் பிரிந்துபோகும் உரிமை யுடன் கூடிய மாநிலங்களாக இருக்கின்றன.

இதே நேரத்தில், இந்திய நாட்டை எடுத்துக் கொண் டால், மத்தியிலே ஜனதா கட்சி ஆட்சி. காஷ்மீரத்திலே திரு. ஷேக் அப்துல்லா அவர்களுடைய ஆட்சி. மேற்கு வங்கத்தில், மார்க்ஸீய கம்யூனிஸ்டு கட்சியின் அரசு,

1978 ஜனவரி 6] [திரு. மு. அம்பிகாபதி]

தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகஅரசு, கேரளத்திலே காங்கிரஸ்—இந்திய கம்யூனிஸ்டு— முஸ்லீம் லீக் இவை இணைந்த அரசு. வேறு சில மாநிலங்களில் காங்கிரஸ், கருநாடகத்தில் கலைக்கப்பட்டிருக்கிறது, காங்கிரஸ் ஆட்சி இருந்தது. இப்படி, கடந்த 30 ஆண்டு காலத்தில் இந்திய நாட்டின் அரசியல் படம், மாநிலத்துக்கு மாநிலம் மாறுபட்டு, இன்று மொத்தத்தில் பெரும் மாறுதல் ஏற்பட் டிருக்கிறது. இப்படி மாறுபட்டுள்ள நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தத் தீர்மானம் முன் மொழியப்பட்டிருக்கிறது என்ருல், ஒரு சிலருக்கு சந்தேகம் ஏற்படக்கூடும். காரணம் நீண்ட நெடுநாளாக தி.மு. கழகம், ஆந்திரமும், கன்னடமும், கேரளமும், தமிழகமும் இனவழி இணைந்து மொழி வழி பிரிந்து என்று ஆர்வத்துடன் கூறிக்கொண்டு வந்த சப்தம் இன்னும் நாட்டை விட்டு அகல வில்லை.

[மாலை 5-10]

இப்படிப்பட்ட ஓசையோடு மட்டுமல்ல. மாநில சுயாட்சி என்பதே பிரிவினைதானே என்ற கருத்து நாட்டிலே இருக் கிறது. இப்படிப்பட்ட ஒரு கருத்து, மக்களின் மத்தியில், திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி என்று சொல் கிறபோது, பிரிவினையாக இருக்குமோ என்ற அச்சமும் வரு கிறது.

இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண் டிருக்கக் கூடிய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய அண்ணு திராவிட முன் னேற்றக் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்குமென்று நம்புகிறேன்; அவர்களும் இன்றைக்கு இந்திய ஒருமைப்பாட்டில்தான் தமிழகத்தினுடைய வளர்ச்சியே இருக்கிறது.

கங்கையும், காவிரியும் இணைக்கப்பட வேண்டுமா? இந்திய ஒருமைப் பாட்டில்தான் அது சாத்தியம். இந்திய நாட்டினுடைய தொழில் துறை வளர்ச்சியைப் பார்க்க வேண் டுமா? இந்தியாவினுடைய ஒருமைப்பாடு, பல்வேறு தொழில் வளங்களை ஒன்ருக்குவதற்கான நடவடிக்கைகள் எடுப் பதற்கு இந்திய ஒருமைப்பாடு என்பது மிகவும் அவசியம். மத்தியில் வருகிறவர்கள் மாநிலத்தை ஏதோ தாங்கள் இட்ட பணியை செய்கிறவர்களாகக் கருதக் கூடிய நிலைமை உருவாகக் கூடாது.

குறிப்பாக கவர்னருக்கு இருக்கக் கூடிய அதிகாரம் என்பது நிச்சயம் குறைக்கப்பட வேண்டும், என்பதும் அவசியம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மிக முக்கியமான ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது பேசும்போது நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய 356-வது பிரிவை—நிச்சயம் அந்தப்பிரிவை—நீக்கவேண்டும். மத்திய அரசாங்கம் நினைத்தால், அரசியல் சட்டத்தின் 356 விதியில் 5ஆவது பிரிவின்படி ஆளுநரிடம் அறிக்கை கேட்டு, ஒரு மாநில அரசாங்கத்தைக் கலைக்கலாம். இன்றைக்கு அந்த அதிகாரம் அரசியல் சட்டத்தின்படி மத்திய அரசாங்கத்தினிடத்தில் இருப்பது ரத்து செய்யப்பட வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை.

குறிப்பாக மைசூர் மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டிருக்கிறது. ஒரு அரசாங்கம் கலைக்கப்படுமானால், அங்கே ஆளுநரை வைத்து தங்களுடைய ஆட்சியை—எந்தக் கட்சி ஆட்சி மத்தியிலே இருக்கிறதோ, அவர்களுடைய ஆட்சியை—அமுல்படுத்துவதற்கு தந்திர உபாயமாக அது கையாளப்படுகிறது. ஒரு அரசு கலைக்கப்பட்டால் உடனடியாக தேர்தல் நடத்துவதற்கு திட்டம் வேண்டும். ஒரு மந்திரி சபை கவிழ்ந்து போகிறது. மைசூரிலே சட்டசபையை கூட்டச் சொல்லியிருக்க வேண்டும். மந்திரிசபை (சட்டசபை) கூடிய பிறகு கவிழ்ந்திருக்க வேண்டும். தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். கலைப்பது என்பது சரியல்ல. 356 செக்ஷன் நீக்கப்பட வேண்டும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு மத்திய அரசினுடைய கொள்கை இந்த மாநிலத்தின் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறது. நெல்லுக்கு இருந்த கட்டுக்கோப்பை நீக்கி, '' ஸோனல் சிஸ்டம் '' அதை அகற்றி எங்கு வேண்டுமோ எவ்வளவு வேண்டுமானாலும் நெல் போகலாம் என்று—சுதந்திர வர்த்தகம் கொள்ளை அடிக்கலாம் என்பதற்கு பெயர் தான் '' சுதந்திர வர்த்தகம் ''. எங்கு வேண்டுமோ, யார் வேண்டுமோ, சுதந்திரமாக கொள்ளையடிக்காலம் என்பதற்கு பெயர்தான் சுதந்திர வர்த்தகமே தவிர, அரசாங்கமே உணவு தானிய வர்த்தகத்தை ஏற்று நடத்த வேண்டும்; நியாய விலையை நிர்ணயிக்க வேண்டும். கரும்புக்கு 8.5 சதவீதம் ''ஷுகர் கன்டென்ட் '' இருந்தால் 85 ரூபாய் தான். இது மத்திய அரசாங்கத்தின் நிலை. இன்றைக்கு தமிழக அரசாங்கம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ. 125 என்றாலும், பல [illegible] ஆலைகள் ரூ. 85-க்கு, ரூ. 90-க்கு மேல் தான் [illegible] இன்றைக்கு சிரமமாக இருக்கிறது.

குறிப்பாக, இன்றைக்கு மத்தியில் '' விவசாய விளைபொருள் விலை நிர்ணயக் கமிஷன் '' என்ற ஒரு கமிஷன் இருக்கிறது. ஊரிலே நடப்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. ஒரு பொருளினுடைய விற்பனை விலையில், அதை உற்பத்தி செய்வதற்கு ஆகக்கூடிய செலவை அந்தக் கமிஷன் பரிசீலித்து—ஒரு துணி என்றால், பஞ்சு, அது நூற்பதற்கு செலவு, தொழிலாளர்கள் சம்பளம், அதற்கு கொடுக்க வேண்டிய '' டேக்ஸ் '' இத்தனையும் போட்டு இலாப நஷ்டத்தைப் போட்டு '' சீல் '' போட்டு விற்கிறார்கள். அதே நேரத்தில் நெல், கரும்பு, கடலை, மிளகாய், புகையிலை, பருத்தி இவற்றிற்கு கட்டுபடியான விலை நிர்ணயிக்க நமது அரசுக்கு உரிமையில்லை. '' வரலட்சுமி '' என்ற அதிக உற்பத்தி தரும் பருத்தி போடுவதற்கு ரூ. 10,000 ஆகும்—என்றால் கட்டுப்படியான விலை கிடைக்காததால், எங்கள் தலைவர் அழகிரிசாமி சொன்னதுபோல் அதோடு பொருளாதாரத்தில் '' க்ளோஸ் '' கிட்டதட்ட ரூ. 20,000 அதோடு நட்டப்பட்டு விட்டார். பருத்தியை இங்கு உற்பத்தி செய்கிற விவசாயிகளிடம் வாங்காமல் மத்திய அரசு ஸ்வீடன் போன்றயிடத்திலிருந்து பருத்தியை கொள்முதல் செய்திருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : எங்கள் தலைவர் அழகர்சாமி க்ளோஸ் என்று சொல்லி நிறுத்தி விட்டார்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பைனான்ஷியலி க்ளோஸ் என்று சொன்னார்கள், உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, மிகச் சரியாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு பருத்தி விவசாயிகள், கரும்பு விவசாயிகள், கடலை விவசாயிகள் இப்படிப்பட்டவர்களின் நிலை, அவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? மத்திய அரசின் உணவுக் கொள்கை, இன்டஸ்ட்ரியல் பாலிஸி இவற்றினால், உணவுக் கொள்கையின் விளைவினால் நாம் பெரிய அளவிற்கு தாக்கப்பட்டிருக்கிறோம். விலைவாசி ஏறப்போகிறது, கடுமையான விலையேற்றத்தால் விவசாயிகள் மீளவே முடியாது. மூன்றாண்டுக் கடன் சுமந்திருக்கிறது.

ரிசர்வ் வங்கிக்கும் நமக்கும் தகராறு நடந்துகொண்டிருக்
கிறது. தஞ்சை மாவட்டத்தில் புயல் வீசியது என்றால்,
புயல் வீசுவது என்றால் சாதாரண விஷயமா?
ரூ. 33,91,00,000 மத்திய அரசு கொடுத்திருக்கிறார்கள்,
கொடுத்து விட்டு இதை உங்கள் முதல் திட்டத்திலிருந்து
பிடித்துக்கொள்வோம் என்கிறார்கள்—ரொம்ப தாராளம்.
ஒரு மத்திய சர்க்கார் என்று சொன்னால் புயலால் ஏற்பட்ட
சேதங்களுக்கு இப்படியா தீர்வு காண்பது? பொறுப்பான
பல நடைமுறைகள் உள்ளன. அதிகாரங்கள்பற்றி விவா
திக்கும்போது இவைபற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

தொழில்துறை கொள்கை எந்த நொடித்த மில்லையும்
எடுக்கமாட்டோம், தொழிலாளர்களே நடத்துங்கள்,
நொடித்ததை நடத்தி நீங்களும் நொடித்துப் போய் மில்லை
மூடிவிட்டுப் போங்கள், தொழிலாளர்களைப் பழிவாங்க இப்
படி ஒரு அருமையான திட்டம்.

இன்று விவசாயக் கொள்கையானாலும் சரி, தொழில்
துறை கொள்கையானாலும் சரி, புயல் வெள்ளத்தினால் ஏற்
பட்ட பிரச்னையானாலும் சரி—இதற்குப் பெயர் இயற்கையின்
சீற்றம்—இவை ஏழை மக்களின் மேல்தான் பாய வேண்டுமா?

திரு. கோ. இளங்கோவன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.
மத்திய அரசின் அதிகாரங்களைப் பொறுத்த வரையில் பேசிக்
கொண்டிருக்கிறோமா அல்லது பாலிஸி பற்றி பேசிக்கொண்டு
இருக்கிறோமா?

திரு. மு. அம்பிகாபதி: இப்படிப்பட்ட அதிகாரங்கள்
இருந்தால் இவற்றை எல்லாம் செய்ய முடியும் என்று கூறு
கிறேன். எல்லாம் அதில் அடங்கும். இன்று மத்திய அரசின்
விவசாயக் கொள்கை, தொழில்துறை கொள்கை இவற்றினால்
சகலவிதமான விதத்திலும் நமக்கு சிரமமாக இருக்கிறது.
இந்த சிரமத்தைப் போக்கக்கூடிய வகையில் நமக்கு அதிக
அதிகாரங்கள் வேண்டும் என்பது மிகவும் முக்கியமான விஷ
யம்.

நம்முடைய தொழில்துறை வளரவும், விவசாயிகளின்
வேதனை நீக்கப்படவும் இன்றைக்கு புயல், வெள்ளம் இவற்
றின் சீற்றம் காரணமாக—இயற்கையின் சீற்றம் என்று சொல்
கிறார்கள்—இயற்கையின் சீற்றம் கூட ஏழை எளிய மீனவர்
களின் குப்பங்களில், விவசாயிகள், விவசாயத் தொழிலாளி
கள் இவர்களின் வீடுகளைப் பார்த்துத்தான் அடிக்கிறது.

ஏழடுக்கு மாளிகை, எட்டடுக்கு மாளிகை, ஏர் கண்டிஷன்
ரூம்ஸ் உள்ளவை இங்கெல்லாம் புயல் போகமாட்டேன் என்
கிறது. இயற்கையின் சீற்றம் அங்கே எட்டிப்பார்க்க
மறுக்கிறது. இயற்கையின் சீற்றம்கூட, கடவுள் நான்
இருக்கிறேன் என்பதைக்காட்டிக் கொள்ள 20,000 பேர்கள்
சாக வேண்டும், பத்து லட்சம் தென்னை மரங்கள், பத்து
லட்சம் குடிசைகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டு நிர்
மூலமாக்கிவிட்டு, பக்தா, நான் இருக்கிறேன், பார்த்துக்
கொள்ளடா, மறந்துவிடாதே என்று கூறி 20,000 பேர்களைக்
கொன்றது. கடவுள் செயலா? புயல் வந்தபோதுகூட
நம் உரிமைகளைப் பெறுவதற்கு, மத்திய அரசு தேவையான
உதவிகளைச் செய்யத் தயங்குகிறது.

இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு நம்முடைய இந்தப்
பேரவையிலிருந்து ஒரு சர்வ கட்சி கமிட்டி அமைத்து எந்
தெந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை, எந்தெந்த
அதிகாரங்கள் மத்தியில் இருக்க வேண்டும், இந்திய ஒருமைப்
பாட்டோடு தமிழகத்தின் வளர்ச்சியையும் கணக்கில்கொண்டு
இப்பிரச்னை அணுகப்பட வேண்டும். பாரத நாடு
பழம்பெரும் நாடு, நீ அதன் புதல்வர், இந்நினைவகற்றாதீர்
என்கிறான் பாரதி. பாரதி கூறிய அந்த ஒருமைப்பாட்டின்
படி காவிரியையும் கங்கையையும் இணைப்போம், இந்திய
ஒருமைப்பாட்டினை வளர்ப்போம் என்றார்கள். அந்த
ஒருமைப்பாட்டோடு இந்திய நாட்டில் ஓடப்பராயிருக்கும்
ஏழையப்பரை மாற்றும் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க
ஒரு வளமான தமிழகத்தை சிருஷ்டிக்க எந்தெந்த அதிகாரங்
கள் மாநிலத்திற்குத் தேவை எந்தெந்த அதிகாரங்கள் மத்தி
யில் இருக்க வேண்டும் என்பதை தெளிவாகவும் துல்லிய
மாகவும் விவாதித்து முடிவு எடுக்க ஒரு சர்வகட்சி குழுவை
அமைப்பது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்
கையாகக் கோரி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[மாலை 5-20.]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா
அவர்கள் கொண்டுவந்துள்ள மாநிலங்களுக்கு கூடுதல் அதி
காரங்கள் வேண்டும். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில்
கூட்டாட்சி என்ற அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் வேண்டும் என்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற
தனித் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை
சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு முன்னால் இந்த விவாதத்தில் பேசிய மதிப்பிற்
குரிய சுப்பு அவர்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்த
தற்காக அவருக்கு நன்றி. மதிப்பிற்குரிய ஜெயவேலு அவர்
கள் பேசிய பேச்சுக்கு விளக்கம் கொடுத்தார். அது எப்படி
இருக்கிறது என்றால், வள்ளுவர் சொல்லுக்கு பரிமேலழகரும்
உரை எழுதியிருக்கிறார். டாக்டர் மு. வ. அவர்களும்
உரை எழுதியிருக்கிறார், டாக்டர் கலைஞர் அவர்களும் உரை
எழுதியிருக்கிறார். அது போல் தான் இருக்கிறது. இந்த
இடத்தில் எது தேவையோ அதற்குத் தக்கபடி அந்த
பேச்சை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அதாவது தவறு என்பது வேறு, குற்றம் என்பது வேறு,
இந்த இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ,
அதுபோல் தான் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி
என்பதற்கும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்
டும் என்பதற்கும் இருக்கின்ற வித்தியாசம் என்பதை மாண்பு
மிகு மன்றத்தின் உறுப்பினர்களுக்கு சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய கொள்கை என்ன, அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை
என்ன என்றால், 'கட்டுண்டு வாழ்வோம், பிரிவினை நாடோம்,
சமநிலையில் இணைவோம்' என்பதுதான் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று சொல்லு
கின்ற போது, சுப்பு அவர்கள் ஒரு கருத்தை இங்கே எடுத்துச்
சொன்னார்கள். முன்னால் வேண்டுமென்றால்
ஆதரிக்கவில்லை, இப்போது வேண்டுமென்றால் நீங்கள்
தீர்மானம் கொடுக்கலாமே என்று கேட்டார்கள். நாங்
களும் கேட்கிறோம், இப்போதுள்ள அதிகாரங்கள் போதாது,
மேலும் அதிகாரங்கள் வேண்டும் என்று சொல்லுகிறோம்.
ஆனால் கேட்கின்ற வழிமுறைகளில்தான்—எடுத்து வைக்
கின்ற நியாயங்களில்தான்—எங்களுக்கும் உங்களுக்கும் வித்தி
யாசம்—கத்தி என்றிருந்தால் எதற்கும் பயன்படுத்திக்
கொள்ளலாம், கசாப்புக் கடைக்காரனும் பயன்படுத்துகிறான்,
காய்கறிக்கடைக்காரனும் பயன்படுத்துகிறான், ஆனால் இரண்
டுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது என்பதை மதிப்பிற்
குரிய நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு ஆபத்து வருகிறது என்றால், கப்பல் வழி
யாகவும் வரலாம், தரை வழியாகவும் வரலாம். இப்போது
அதிகாரம் அதிகமாக வேண்டும் என்று கேட்கின்றவர்கள்
முன்னால் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? ஆட்டுக்கு
தாடி, நாட்டுக்கு கவர்னர் என்று சொல்லிக்கொண்டிருந்த
வர்கள், ஆனால் இன்றைக்கு அரசியல் சட்டத்தின்
கீழ் நாம் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.
ஆகவே இவர்கள் கேட்பதில் உள்நோக்கம் ஏதாவது
இருக்கும். இப்போது கேட்பது எந்த அடிப்படையில்
என்பதை மிக தெளிவாக இந்திய துணை கண்டம் உணர்ந்து
இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாநிலத்திற்கு மேலும்
அதிகாரங்கள் தேவை என்றால், அதில் யாருக்கும் கருத்து
வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் இதைக் கேட்பதில்,
நமக்கும் எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு, இது எப்படியிருக்க
வேண்டும் என்பது தான். மாண்புமிகு சுப்பு அவர்கள்
சொல்லும்போது, இது தற்காலிகமானது தான் என்று
சொல்லும்போது, இது நியாயமானது என்றும் நிலையானது
என்றும் சொல்லலாம், கடவுள் இல்லையென்றும் விவாதிக்க
லாம், கடவுள் உண்டு என்றும் விவாதிக்கலாம். இரண்
டிலும் நியாயம் இருந்தாலும், இதிலுள்ள அடிப்படையான
நியாயம் எப்படி முடிகிறது என்பதை அனைவரும் உணர்ந்து
வைத்திருக்கிறோம்.

சில நேரங்களில் பொடி வைத்து இணைக்கிறோம். செய்
னில் பொடி வைத்து இணைக்கிறோம், தோடு, கம்மல் இவை
களில் எல்லாம் பொடி வைத்து இணைக்கிறோம். சில நேரங்
களில் சிலவற்றை வார்ப்படமாக செய்கிறோம். சுப்பு அவர்
கள் சொல்வது பொடி வைத்து இணைப்பது போல்தான்,
நாங்கள் சொல்வது வார்ப்படம் போன்றது. அனைத்திந்திய
அண்ணா தி.மு.க. வார்ப்படம், தி.மு.க. பொடி. பொடி
வைத்து இணைத்தது என்றால் சட்டென்று போய்விடும்.
வார்ப்படம் கெட்டியாக அப்படியே இருக்கும்.

இந்திய ஒருமைப்பாட்டை நாம் ஏற்றுக்கொண்டிருக்கி
றோம். இந்த நிலையில் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில்
சுயாட்சி என்று வந்துவிட்டால், வெறும் துக்ளக் ஆட்சி
யாக மாறிவிடும் என்கின்ற கருத்து இருக்கக்கூடிய காரணத்
தினால் தான் இந்த கோரிக்கையில் நாங்கள் மாறுபட்டு

நிற்கிறோம். இன்றைய இந்தியா என்பது பல தேசங்களாக விளங்கியதுதான் ''சீர்கொண்ட நெடிய கடல் சூழ்கின்ற உலகத்தில் ஜெய்ஹிந்து வாழ்கின்ற சுய ஹிந்து தேசத்தில் சிந்தை மகிழுங்கமொடு வங்கம், கலிங்கம், கொந்தணம், குந்தளம், குடகு, காஷ்மீரம், செங்கார மலையாள, நேபாள, மாளவம், செப்பறியும் ஆந்திரம், திராவிடம், மராடம், பற்பறம், கூர்ஜரம், விதர்ப்பம், விராடம், தீதில்லா கர்நாடக, காம்போஜர், முதலான ஓதும் ஐம்பத்தாறு தேசங்கள்....''

இப்படி 56 தேசங்களாக இருந்ததுதான், ஆனால் விக்டோரியா மகாராணி அரசுக்குப் பிறகு, இந்தியா என்பது ஒரே கண்டமாக ஆகியிருக்கிறது. இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொண்டு தான் நாம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறோம். ஆகவே நமக்கு தேவையான உரிமைகளைக் கேட்டுப் பெற வேண்டும் என்பதில், அதைக் கேட்பதில் யாருக்கும் வேறுபாடு கிடையாது. ஆனால், நாங்கள் தேசீய ஒருமைப்பாட்டின் கீழ் ஒன்றாக இருப்போம். சர்க்கஸ் விளையாட்டில் தான் யானை, புலி, சிங்கம், ஆடு, நரி, போன்றவை சிறிது நேரம் ஒன்றாக இருக்கும், பின்னால் பிரிந்து அது அது கூண்டிற்குள் போய்விடும். அது அதன் சக்தியில் வேலை செய்யும். நாங்கள் சொல்வது இந்தியா என்பது சம நிலையிலே இருக்கக்கூடிய, அதாவது ஒரே வார்ப்படமாக அது அமைய வேண்டும் என்ற வகையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்.

ஆகவே, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்பது சரியல்ல. மேலும் மாநிலத்திற்குத் தேவையான அதிக அதிகாரத்திற்கான வழிவகைகளை எப்போதும் எடுக்கத் தயாராக இருக்கும். கங்கை—காவேரி இணைப்பைப் பற்றிப் பேசுகிறோம்; தேசீய நெடுஞ்சாலைகளின் இணைப்பைப் பற்றிப் பேசுகிறோம்; கிருஷ்ணா நதி திட்டத்தைப் பற்றிப் பேசுகிறோம்; காவிரியிலிருந்து தஞ்சைக்குத் தண்ணீர் வரவேண்டுமென்று பேசுகிறோம். எனவே, மாநில சுயாட்சி ஏன்பது பயனளிக்காத ஒன்று என்று சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ரா. கிருஷ்ணன் : பேரவை சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சியைப் பற்றி இங்கே பேசுகின்ற நேரத்தில் மாநில சுயாட்சி என்பது பிரிவினை-

வாதமல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய ஒற்றுமையைக் கட்டிக் காக்க, இந்த மாநில சுயாட்சி மிகமிக அவசியம் என்பது ஏற்கெனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை. மக்கள் ஜனநாயக இந்தியாவில் விரிவான மாநில சுயாட்சி நிலவும் என்பது எங்கள் கட்சியின் திட்டமும் ஆகும் என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்தியா ஒரு தேசமல்ல; இதிலே பல்வேறு தேசங்கள் இணைக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால், பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒரே மொழி, ஒரே பண்பாடு இருக்கின்றது. அங்கே ஒரு அரசாகவும் அது இருக்கின்றது. ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையில் முதிர்ச்சியும், செழுமையும், பண்பட்ட பல மொழிகள், தனித்தனி பண்பாடுகள் இங்கே ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றது. இப்படி இணைக்கப்பட்டதென்றால், இது வெள்ளைக்காரன் ஆட்சியிலே அவர்கள் லாப நோக்கத்தோடு, சுரண்டுவதற்காக, வருமானத்தை ஒருமைப்படுத்துவதற்காக இப்படியெல்லாம் ஒன்றுபடுத்தப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாநில சுயாட்சி என்பது ஏதோ இன்றைக்கு, நேற்று எழுந்த பிரச்னை அல்ல. இந்திய தேசீய விடுதலைப் போராட்ட காலத்திலே 1942-ஆம் ஆண்டு 'குவிட் இந்தியா மூவ்மெண்ட்' அதாவது வெள்ளையனே வெளியேறு என்று சொல்லிய நேரத்திலே, ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.

''This Constitution according to the Congress view should be a federal one with the largest measure of autonomy for the federating units and with the residuary powers vesting in these units.''

காங்கிரசின் கண்ணோட்டத்தில் இந்திய அரசியல் சாசனத்தில் சமஷ்டியில் இணையும் அங்கங்களுக்கு, அதாவது மாநிலங்களுக்கு மிகமிக அதிகபட்ச அளவு சுயாட்சி அந்தச் சமஷ்டியில் இருக்க வேண்டும். மற்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும் என்று 1942-லேயே விடுதலை இயக்கப் போராட்டக் காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, 1946 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட,

"In order to give the maximum of freedom to the constituting units, — that is 'units' என்பது States — there may be a minimum list of common and essential federal subjects which will apply to all units, and a further optional list of common subjects, which may be accepted by such units as desire to do so .... etc."

ஆக, குறைந்தபட்ச பொதுவான, முக்கியமான சில அதிகாரங்களை மட்டும்தான் மத்திய அரசு வைக்க வேண்டுமென்றும், ஆனால் பொதுவாக மக்களுக்குச் சாதகமான பல்வேறு அதிகாரங்களையும், அதுவும் ஒரே ரெசுடரி (பவர்-சை) அதிகாரங்களை மாநிலங்கள் விரும்பினால் அந்த மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும், காங்கிரஸ் கட்சி 1946 ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 5-30]

அதோடு 1969-ம் ஆண்டில் அட்மினிஸ்ட்டேடிவ் ரிபார்மஸ் கமிஷன்—நிர்வாகச் சீரமைப்புக்குழு திரு. ஹனுமந்தையா தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் ரிப்போர்ட்டில் என்ன சொல்லுகிறார்கள் என்றால்—

"At the administrative level, over concentration of authority should be avoided. Unnecessary accumulation of administrative powers increases not only delays, but also causes irritation and friction."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, தாமதம் இல்லாத ஒரு நிர்வாகமும், எரிச்சல் இல்லாத ஒரு நிர்வாகமும் இருக்க வேண்டுமென்றால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதமல்ல என்று முதல் முதலிலேயே சொன்னேன். தேசியம் என்று கூறப்படுவதெல்லாம் முதலாளி வர்க்கம் சந்தையில்தான்

தேசியத்தைக் கற்றுக் கொள்கிறது என்று தோழர் ஸ்டாலின் கூறியிருக்கிறார். அந்த அடிப்படையில் தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்க அதிக அதிகாரம் குவிய வேண்டுமென்ற ஆசை பெருமுதலாளிகளுக்கு இருக்கிறது. அதைப்போன்று மாநில முதலாளிகள் அந்தந்த மாநிலங்களில் லாப வேட்டை ஆடுவதற்காக லைசென்ஸ் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கருதி, இனம், மொழி என்ற பிரச்சினையை மையமாக வைத்துக் கிளப்பிவிட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கிளப்பி விடுகிறார்கள். அதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவைப் பொறுத்தவரை பல்வேறு இனங்கள், மொழிகள் இருந்தாலும் கூட இந்த மாநிலங்கள் அனைத்தும் மொழிவாரி மாநிலமாக ஆக வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தீர்மானம் இருந்தாலும்கூட, தெலுங்கு பேசுகிற ஆந்திரா பிரிய வேண்டுமென்று அந்த மக்கள் விரும்புகிறபோது அதை உடனே பிரித்துக் கொடுக்கவில்லை. ஆந்திரா பிரிய வேண்டுமென்று ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து இறக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூட விருதுநகரில் சங்கரலிங்கம் என்பவர் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட வேண்டியிருந்தது. மகாராஷ்டிரம் தேசிய இனம் பிரிய வேண்டுமென்பதற்காக பம்பாயில் துப்பாக்கிச் சூடுகள், ரத்தக் களறி ஏற்படுத்தப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு அதனுடைய மானிபெஸ்டோவில் எப்படி இருந்தாலும்— power corrupts, and absolute power corrupts absolutely என்ற அடிப்படையில் அதிகார போதை இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக் கூறுகிறபோது மாநில சுயாட்சி வந்து விட்டால் மாநிலங்கள் பிரிந்து விடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் கான்சன்ட்ரேஷன் ஆப் பவர்—அதிக அதிகாரக் குவியல் இருக்கும்போது பிரிய வாய்ப்பு இல்லையா என்று கேட்கலாம். நிச்சயமாகப் பிரிய வாய்ப்பு இருக்கிறது. பக்கத்திலுள்ள பங்களாதேஷை எடுத்துக் கொண்டால்—அதற்கு முன்னால் அதிகமான அதிகாரக் குவியல் (Centralisation of Power) பாகிஸ்தானில் இருந்த காரணத்தால் ஏற்பட்டது. சோடா பாட்டிலில் மிக அதிகமான காசை வைத்து அடைத்தால் படீரென்று வெடித்து விடுகிறது. அதிகமான அதிகாரங்களை ஒரு இடத்தில் குவிக்கும்போதுதான் இப்படிப்பட்ட உடைப்புகள் ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இன்றைக்கு ஆட்சிக்கு வந்துள்ள ஜனதா கட்சி மானிபெஸ்டோவில் ''Decentralisation of economic policy on Gandhian Principle'' என்றுதான் கூறியிருக்கிறார்கள். அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய பிரதமர் மொரார்ஜிதேசாய் சொன்னார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருந்தால்தான் மத்திய அரசு மிக மிக அதிகமான சக்தி வாய்ந்ததாக இருக்க முடியும் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஹனுமந்தையா அவர்களின் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் கூட சொல்லப்பட்டிருக்கிறது.

காந்தியின் கொள்கையாகச் சொல்லுகிறார். காந்தி என்ன சொல்லுகிறார்? பரந்து விரிந்த அடிப்படையுள்ள பிரமிட்டுகள் எப்படி அடிப்படையை மிக அகலமாகவும், உச்சி மிகவும் மெல்லியதாகவும் இருக்கிறதோ அதைப் போன்று மாநில அதிகாரங்கள் பரந்து விரிந்து இருக்க வேண்டும்; மத்தியில் மிகவும் சன்னமாக இருக்க வேண்டும். இதுதான் காந்தியின் பிரின்சிபிள். காந்தியின் பிரின்சிபிள்படி இருக்கக்கூடிய மொரார்ஜி அவர்கள் மாநிலங்களுக்கு அதிகாரம் தர, மாநில சுயாட்சியை ஏற்படுத்த தயாராக இருக்கிறாரா என்பதைத்தான் கேட்கிறேன். ஆக அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கனவே அவர்கள் தேர்தல் அறிக்கையில் ஒப்புக்கொண்டபடி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், தன்னாட்சி வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை, இந்த தன்னாட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சி என்பதே இருக்கக் கூடாது, சட்டசபையில் பெரும்பான்மை இழந்தாலும் அல்லது சில நெருக்கடி காலங்களில், மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டாலும், 6 வார காலத்திற்குள் அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்த 6 வார காலத்திற்கு கவர்னர் ஆட்சி இருக்க வேண்டும்.

அடுத்து, கவர்னர் என்பவர் எப்படி இருக்க வேண்டுமென்பதை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உள்ள நிலையில் கவர்னர் மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜண்ட் தான். மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியின், ஆளுங்கட்சியின் பொம்மைதான் அவர். மத்திய அரசு விரும்பினால் ஒரு கட்சியிலே சில எம்.எல்.ஏ.க்கள் தான் இருந்தாலும் அந்தக் கட்சியை அழைத்து மந்திரிசபையை அமைக்கச் சொல்லலாம். நாம் இதை நன்றாக அறிவோம், பார்த்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, கட்சி மாறுவதற்கும் கவர்னர் வழிவகை செய்கிறார். இங்கே முன்பு கவர்னராக இருந்த கே. கே. ஷா அவர்கள் தி.மு.க.வைப்பற்றி கலைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்புகூட புகழ்ந்து பேசினார், வாழ்த்தினார், ஆனால் பிறகு கவிழ்த்தார். ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்சியைப் போற்றி வாழ்த்தினார், மறுவாரத்தில் தூற்றுகிறார். நான் அந்தக் காரணங்களுக்குள்ளே போகவில்லை. இப்படி மத்திய அரசு என்ன சொல்கிறதோ அந்த அடிப்படையிலே பொம்மையாக ஆடக்கூடிய நடைமுறைதான் இருக்கிறது. நாம் பார்க்கிறோம்.

இப்போது கவர்னர் மத்திய அரசால் நியமனம் செய்யப் பட்டிருக்கிறார். மாநில சட்ட மன்றம்தான் கவர்னரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சட்டமன்றம் விரும்பினால் அவரை நீக்கக்கூடிய அதிகாரமும் சட்டமன்றத்திற்கு இருக்க வேண்டும். சட்டமன்றத்திற்குத்தான் ஒரு மாநிலத்திலே அதிக அதிகாரம் இருக்க வேண்டுமே தவிர, கவர்னருக்கு அல்ல என்பதை நிலைநிறுத்த வேண்டும். கவர்னர் எதற்காக இருக்கிறார் என்றால் 6 வார காலத்திற்கு அந்த ஆட்சியை பார்த்துக் கொள்வதற்காகத்தான் இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் ஏஜண்டு ஆக இருக்கக்கூடாது.

ஹைகோர்ட்டுகளிலே ஜட்ஜஸ் அப்பாயின்ட் செய்கிறபோது மாநில அரசுக்கு அதிலே உரிமையில்லை. மத்திய அரசு, அல்லது ஜனாதிபதிதான் நியமனம் செய்ய முடியும். அந்த அந்த மாநிலங்களிலே உள்ள சட்டங்களும் உணர்வுகளும் மத்தியிலே உள்ள ஜனாதிபதிக்கு எப்படித் தெரியும்? ஆகவே, ஹைகோர்ட்டுகளிலே ஜட்ஜஸ் எல்லாம் மாநிலங்கள் தான் போட வேண்டும். அந்த அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும். அதற்கு சட்டமன்ற ஒப்புதலும் பெற வேண்டும். தேவையானால் சட்டமன்றம் அல்லது அந்த அரசு விரும்பாவிட்டால் அந்த ஜட்ஜ்களை நீக்கலா[illegible] அதிகாரம் இருக்க வேண்டும்.

இன்றைக்கு ஆட்சிக்கு வந்துள்ள ஜனதா கட்சி மானிஃபெஸ்டோவில் ''Decentralisation of economic policy on Gandhian Principle'' என்றுதான் கூறியிருக்கிறார்கள். அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய பிரதமர் மொரார்ஜிதேசாய் சொன்னார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருந்தால்தான் மத்திய அரசு மிக மிக அதிகமான சக்தி வாய்ந்ததாக இருக்க முடியும் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஹனுமந்தையா அவர்களின் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் கூட சொல்லப்பட்டிருக்கிறது.

காந்தியின் கொள்கையாகச் சொல்லுகிறார். காந்தி என்ன சொல்லுகிறார்? பரந்து விரிந்த அடிப்படையுள்ள பிரமிட்டுகள் எப்படி அடிப்படையை மிக அகலமாகவும், உச்சி மிகவும் மெல்லியதாகவும் இருக்கிறதோ அதைப் போன்று மாநில அதிகாரங்கள் பரந்து விரிந்து இருக்க வேண்டும்; மத்தியில் மிகவும் சன்னமாக இருக்க வேண்டும். இதுதான் காந்தியின் பிரின்சிபிள். காந்தியின் பிரின்சிபிள்படி இருக்கக்கூடிய மொரார்ஜி அவர்கள் மாநிலங்களுக்கு அதிகாரம் தர, மாநில சுயாட்சியை ஏற்படுத்த தயாராக இருக்கிறாரா என்பதைத்தான் கேட்கிறேன். ஆக அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கனவே அவர்கள் தேர்தல் அறிக்கையில் ஒப்புக்கொண்டபடி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், தன்னாட்சி வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை, இந்த தன்னாட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சி என்பதே இருக்கக் கூடாது, சட்டசபையில் பெரும்பான்மை இழந்தாலும் அல்லது சில நெருக்கடி காலங்களில், மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டாலும், 6 வார காலத்திற்குள் அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்த 6 வார காலத்திற்கு கவர்னர் ஆட்சி இருக்க வேண்டும்.

அடுத்து, கவர்னர் என்பவர் எப்படி இருக்க வேண்டுமென்பதை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உள்ள நிலையில் கவர்னர் மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜண்ட் தான். மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியின், ஆளுங்கட்சியின் பொம்மைதான் அவர். மத்திய அரசு விரும்பினால் ஒரு கட்சியிலே சில எம்.எல்.ஏ.க்கள் தான் இருந்தாலும் அந்தக் கட்சியை அழைத்து மந்திரிசபையை அமைக்கச் சொல்லலாம். நாம் இதை நன்றாக அறிவோம், பார்த்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, கட்சி மாறுவதற்கும் கவர்னர் வழிவகை செய்கிறார். இங்கே முன்பு கவர்னராக இருந்த கே. கே. ஷா அவர்கள் தி.மு.க.வைப்பற்றி கலைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்புகூட புகழ்ந்து பேசினார், வாழ்த்தினார், ஆனால் பிறகு கவிழ்த்தார். ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்சியைப் போற்றி வாழ்த்தினார், மறுவாரத்தில் தூற்றுகிறார். நான் அந்தக் காரணங்களுக்குள்ளே போகவில்லை. இப்படி மத்திய அரசு என்ன சொல்கிறதோ அந்த அடிப்படையிலே பொம்மையாக ஆடக்கூடிய நடைமுறைதான் இருக்கிறது. நாம் பார்க்கிறோம்.

இப்போது கவர்னர் மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். மாநில சட்ட மன்றம்தான் கவர்னரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சட்டமன்றம் விரும்பினால் அவரை நீக்கக்கூடிய அதிகாரமும் சட்டமன்றத்திற்கு இருக்க வேண்டும். சட்டமன்றத்திற்குத்தான் ஒரு மாநிலத்திலே அதிக அதிகாரம் இருக்க வேண்டுமே தவிர, கவர்னருக்கு அல்ல என்பதை நிலைநிறுத்த வேண்டும். கவர்னர் எதற்காக இருக்கிறார் என்றால் 6 வார காலத்திற்கு அந்த ஆட்சியை பார்த்துக் கொள்வதற்காகத்தான் இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் ஏஜண்டு ஆக இருக்கக்கூடாது.

ஹைகோர்ட்டுகளிலே ஜட்ஜஸ் அப்பாயின்ட் செய்கிறபோது மாநில அரசுக்கு அதிலே உரிமையில்லை. மத்திய அரசு, அல்லது ஜனாதிபதிதான் நியமனம் செய்ய முடியும். அந்த அந்த மாநிலங்களிலே உள்ள சட்டங்களும் உணர்வுகளும் மத்தியிலே உள்ள ஜனாதிபதிக்கு எப்படித் தெரியும்? ஆகவே, ஹைகோர்ட்டுகளிலே ஜட்ஜஸ் எல்லாம் மாநிலங்கள் தான் போட வேண்டும். அந்த அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும். அதற்கு சட்டமன்ற ஒப்புதலும் பெற வேண்டும். தேவையானால் சட்டமன்றம் அல்லது அந்த அரசு விரும்பாவிட்டால் அந்த ஜட்ஜ்களை நீக்கலாம், [illegible] அதிகாரம் இருக்க வேண்டும்.

அடுத்து ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் எல்லாம் மத்திய சர்க்காரால் போடப்படுகிருர்கள். அவர்கள் மாநில சர்க்காருக்கு கட்டுப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் தன்னிச்சையாக இருக்கலாம், மாநில அரசுக்கு எந்தவிதமான கட்டுப்படுத்தும் அதிகாரமும் கிடையாது. இந்த கேட்டகரியே இல்லாமல் இருப்பது நல்லது. மத்திய அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதுதான் நமக்குத் தெரிகிறது.

[மாலை 5–40]

ஆக, இப்படிப்பட்ட ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். அதிகாரிகள் இங்கே இருக்கக்கூடாது என்பது நம்முடைய கருத்து.

அடுத்து, சபைகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் லோக் சபை என்றும், இராஜ்ய சபை என்றும் இரண்டு சபைகள் இருக்கின்றன. லோக் சபாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் இருக்கிருர்கள். இராஜ்ய சபையைப் பொறுத்தவரையில் சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்று போகக்கூடிய எம். பி.க்கள் இருக்கிருர்கள்.

இராஜ்ய சபாவைப் பொறுத்தவரையில் எல்லா மாநிலங்களுக்கும் சம அளவுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும். உத்தரப் பிரதேசததில் பத்தரை கோடி ஜனங்கள் இருக்கலாம், அந்த மாநிலத்திலிருந்து 10 எம். பி.க்கள் அனுப்பப்படுகிருர்கள் என்று சொன்னுல், அதைப்போல 4 கோடி மக்கள் இருக்கின்ற தமிழ்நாட்டிலிருந்தும் 10 எம்.பி.க்கள் அனுப்பப்பட வேண்டும். அதைப்போல 1½ கோடி மக்கள் இருக்கின்ற கேரள மாநிலத்திலிருந்தும் 10 எம்.பி.க்களை அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு சம அளவுள்ள உறுப்பினர்கள் மாநிலங்களிலிருந்து இராஜ்ய சபாவுக்கு அனுப்பப்பட்டு, ஏதாவது சட்டங்கள் வந்தால் லோக் சபாவிலும், அதைப் போன்று இராஜ்ய சபாவிலும் அங்கீகாரம் பெற வேண்டும், பெரும்பான்மை இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மாநிலங்களுக்கு சம அந்தஸ்து என்று கூறப்படும். ஆக அந்த அடிப்படையில் அந்தச் சபை அமைய வேண்டும்.

அடுத்தபடியாக, ஆட்சிமொழியைப் பொறுத்தவரையில் இந்தியின் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து

வழங்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரில் ஏதாவது சட்டங்கள் இயற்றப்பட்டால் எல்லா மொழிகளிலும் அந்தச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அப்படி எல்லா மொழிகளிலும் அந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டால்தான் எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கிடைக்கும். தனியாக எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பது இப்பொழுது பிரச்னை இல்லை. இந்தியாவில் 14 மொழிகள் இருக்கின்றன என்ருல் அந்த 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்.

பார்லிமெண்டில் பேசக்கூடிய நேரத்தில் அத்தனை மொழிகளிலும் பேசுவதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். சட்டங்கள் இயற்றப்படுகின்றபொழுது அத்தனை மொழிகளிலும் இயற்றப்படக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். காலப் போக்கிலே மக்களால் தீர்ப்பளிக்கப்படும்பொழுது அந்த மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலைகள் இருக்க வேண்டும். அதுதானே தவிர இன்னொரு மொழித் திணிப்பு இருக்கக் கூடாது, அவ்வாறு இருந்தால் அதை எதிர்ப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிருேம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகாரப் பங்கீட்டைப் பொறுத்தவரையில், சேப்டர் 11, ஆர்ட்டிகிள் 248 (1) 'ரெசிடுயரி பவர்ஸ்' அதாவது எஞ்சிய அதிகாரங்கள் என்பது மாநிலங்களுக்குக் கிடையாது, அது மத்திய சர்க்காரில் இருக்கக்கூடியதாகும். சென்ட்ரல் லிஸ்ட் என்றும், ஸ்டேட் லிஸ்ட் என்றும், கன்கரன்ட் லிஸ்ட் என்றும் இருக்கின்ற இந்த மூன்றிலும் அடங்காமல் ரெசிடுயரி பவர்ஸ் என்று இருக்கிறது. கன்கரன்ட் லிஸ்டிலே உள்ள 47 அதிகாரங்களிலும் கூட மாநில சர்க்கார் விரும்பினுல் செய்ய முடியாது. ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகாரங்களெல்லாம் டீசென்ட்ரலைஸ் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டியது மிகமிக அவசியமாக இருக்கிறது. உதாரணமாக, நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி, தொழிலாளர்கள் பிரச்னையில் இங்கே ஒரு லேபர் டிபார்ட்மெண்ட், மத்திய சர்க்காரிலே ஒரு லேபர் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. இங்கே உள்ள லேபர் டிபார்ட்மெண்ட் தன்னிச்சையாகச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதைப்போலவே, உணவுத் துறை என்ருலும், இங்கே ஒரு அதிகாரம், அங்கே ஒரு அதிகாரம்,

உணவு மண்டலத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக்கூடிய ஜனதா சர்க்கார் ஒரே உணவு மண்டலமாக ஆக்கி விட்டது. ஆனுல் தமிழக அரசு நிச்சயமாக கொள்கை அளவில் எதிர்க்கிறது. அதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் அளவிற்கு இன்றைக்கு நிச்சயமாகத் தயாராக வேண்டும்.

இப்படிப்பட்ட அதிகாரங்கள் மேலோங்கி ஆதிக்கம் செலுத்தும் அளவிற்கு உள்ள அதிகாரங்கள் நிச்சயமாக அகற்றப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

அடுத்தபடியாக, அறநிலையங்கள் இருக்கின்றன, இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்டில் இருக்கின்ற நிலங்களை எல்லாம் நிலங்களில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு, அந்த நிலத்தின் விலையை 12 ஆண்டு தவணைகளில் செலுத்தி விட்டால் அந்த நிலம் விவசாயிகளுக்குச் சொந்தம் என்று ஏற்கனவே ஒரு சட்டம் இங்கே போடப்பட்டது. அது மத்திய அரசாங் கத்திற்குக் கையெழுத்துக்காக அனுப்பப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்குக் கையெழுத்துக்காக அனுப்பப்பட்ட சட்ட மானது ஒப்புக் கொள்ளப்படவில்லை.

ஆக, இங்கே இருக்கக்கூடிய ஆட்சியினுடைய உணர்வு கள், மக்களின் உணர்வுகள் இதை எல்லாம் கணக்கெடுத்துத் தான் சட்டம் இயற்றப்படுகிறது. ஆனுல் மத்திய அரசாங்கம் அதை மறுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு போக்கு நிச்சயமாக இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதோடு, இப்படிப்பட்ட ஒரு போக்கை தடுக்க வேண்டுமென்ருல் மாநிலங்களுக்குத் தன்னுட்சி, அதா வது சுயாட்சி வேண்டும். அப்படியிருந்தால்தான் நம்மு டைய இஷ்டத்திற்கு இப்படிப்பட்ட மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப ஆட்சி நடத்த வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆயுதங்களைப் பொறுத்த வரையில் எல்லா ஆயுதங்களையும் மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டி யிருக்கிறது. சிறு ஆயுதங்களைச் செய்வதற்கு இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் வேண்டும். இன்றைக்குத் திட்டங் களைப் பொறுத்தவரையில் 100 கோடி ரூபாய் மூலதனம் போடும் தொழில்களை மத்திய சர்க்காரே செய்யலாம். அல்லது கச்சாப் பொருள் பல்வேறு மாநிலங்களில் கிடைக் கின்றன என்ற நிலை இருந்தால் அந்தத் தொழிலை மத்திய

சர்க்காரே செய்யலாம். ஆனுல், எல்லாத் தொழில்களையும் மத்திய சர்க்காரே எற்றுக் கொள்ளவதென்ருல் அது சரி யல்ல. தோட்டங்கள் (எஸ்டேட்ஸ்), சினிமா, சுரங்கங்கள், இவை பூராவாக மத்திய சர்க்காரிடம் இருப்பது கூடாது.

அதோடு இன்னென்று 42-வது திருத்தத்தில், கல்வி, மருத்துவம், இவற்றில் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்திருக்கி ருர்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையை நிச்சயமாக மாற்ற வேண்டும்.

வரிகளைப் பொறுத்தவரையில், எக்ஸைஸ், சுங்கவரி, கம் பெனிகள் மீது போடக்கூடிய வரி, இவைகளெல்லாம் மத்திய சர்க்காருக்கு உரித்தாக இருக்கின்றன. சுங்க வரியே மாநிலத்திற்குக் கிடையாது. எக்ஸைஸ் வரியில் 5-ல் 1பங்கு தான் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. வருமான வரியிலே, 4-ல் 1 பங்குதான் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. (மணி யடிக்கப்பெற்றது).

திரு. ரா. உமாநாத் : இப்பொழுது பிரைவேட் மெம் பர்ஸ் சப்ஜக்ட் எடுத்திருப்பதிலே, நேரத்திலே கட்டுப்பாடு இருக்காது என்று பேரவைத் தலைவர் கூறினுர்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஆகவே, போடக்கூடிய வரி களைப் பொறுத்தவரையில், இந்த எக்ஸைஸ் வரி, சுங்க வரி, இவைகளிளெல்லாம் கிடைக்கக் கூடிய வருமானங்களில் உரிய பங்கு இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால்தான் மத்திய சர்க் காரை நம்பியிருக்கிற சூழ்நிலையிருக்காது. எதையெடுத்தா லும் மத்திய சர்க்காரை நம்புகிற சூழ்நிலை இருக்கக் கூடாது. ஆகவே, மாநில சுயாட்சிக்கு வழி இருக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையிலே, இராஜராஜ சோழன் சிலையை, தஞ்சை பெரிய கோவிலுக்குள் வைக்கிற உரிமை இல்லை. அதனுலே, மாநில சுயாட்சி வேண்டுமென்று சிலர் கொச்சைப்படுத்திச் சொல்வது சரி யல்ல. தன்னுட்சி இதற்காகத்தான் என்று மேலோங்கி இருக்க வேண்டுமென்ருல், சரியல்ல. சிலை வைக்கக்கூட உரிமையில்லை. ஆகவே, மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்பது சரியல்ல.

மூட நம்பிக்கை ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்கி ருேம். சொத்து உரிமைகள் இருக்கும் வரையில் மூட நம் பிக்கைகள் இருக்கத்தான் செய்யும். சொத்துரிமைகள்

அழிக்கப்படும்போது, இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வு கள் அழிக்கப்படும்போது, இந்த மூட நம்பிக்கை தாளுகவே மறையும் என்பதையும் நான் இந்த நேரத்திலே கவனப் படுத்திக்கொள்கிறேன்.

மாநிலத்திலே உழைக்கும் மக்கள் வளம் பெற சுயாட்சி தேவை என்பது மேலோங்கி இருக்க வேண்டுமேயொழிய, தனிப்பட்ட முறையில் சிலை வைப்பது மேலோங்கி இருக்கக் கூடாது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இருக்கும் அதிகாரத்திலுலேயே, இலஞ்சம் இந்த மாதிரி இருக்கிற தென்ருல், மாநில சுயாட்சி இருந்தால் எப்படி என்று கேட்க லாம். ஆகவே இலஞ்சமற்ற ஆட்சியிருந்தால், மாநில சுய ஆட்சியை வரவேற்க இங்கே உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற் படும். ஆகவே, இருக்கிற அதிகாரத்திலேயே, மாநிலத்திலே இவ்வளவு இலஞ்சம் இருக்கிறதே, இன்னும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்தால், அதிகமாகக் கொள்ளை அடிப் பார்களோ என்று அச்சம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில், சாதாரண உழைக்கக் கூடிய மக்களுடைய நல்வாழ்வுக்கே, மேம்பாட்டுக்கே இந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையிருந்தால், இந்த மாநில சுயாட்சி பெரிதும் பயன்படக்கூடியதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

ஆகவே, மேற்கு வங்க முதலமைச்சர் தோழர் ஜோதி பாசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கூறி யிருப்பது மட்டுமல்லாமல், சுயாட்சி வேண்டுமென்று காங் கிரஸ் எம். எல். ஏக்கள் உட்பட ஆதரித்திருக்கிற வகையில், மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி, எல்லா மாநிலங்களுக்கும் அந்தத் தீர்மானத்தை அனுப்பியிருக்கிறுர்கள். காஷ்மீர் பிரதம அமைச்சர் ஷேக் அப்துல்லா ஏற்கனவே இந்தக் கொள்கையை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

ஆக, சாதாரண உழைக்கக் கூடிய மக்களுடைய மேம் பாட்டுக்காக இந்த மாநில சுயாட்சி வேண்டுமென்ற வகையில், இந்த மாநிலத்திலேகூட, சட்டமன்றத்தின் மூலமாக, இந் தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவது மிகமிக அத்தியாவசியமாகும். அதற்கு ஆளுங்கட்சியும் உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இன்றைக்கு மத்தியில் என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் ? பாதுகாப்பு இருக்கவேண்டும், அதோடு தபால் தந்தி இருக்க வேண்டும், நாணய அச்சடிப்பு இருக்க வேண்டும், வெளிநாட்டு உறவு இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்லாமல், அதிகாரங்கள் அனைத்துமே குவியலாக இருந்தால், எப்படி சோடா பாட்டிலில் காஸ் மிக அதிக மானுல் பாட்டில் உடைந்து சிதறுகிறதோ எப்படி பங்களா தேஷ் உடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டதோ, அப்படிப் பட்ட அபாயம் ஏற்படும் என்பதை எடுத்துக்கூறி, மாநில சுயாட்சி அவசியம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

[மாலை 5—50]

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் அலுவல் ஆய்வுக்குழு கூடி, பேரவையின் நிகழ்ச்சி நிரல் குறித்துக் கீழ்க்கண்ட முடிவுகளைச் செய்துள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

7—1—1978 .. (சனிக்கிழமை)	வினுக்கள்—விடைகள் நேரம் இல்லை. நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீது விவாதம்.
8—1—1978 .. (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
9—1—1978 .. (திங்கள்)	துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் மானியக் கோரிக்கைகள் மீது வாக் கெடுப்பு. நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு அறிமுகம். மற்ற அரசினர் சட்ட முன்வடிவுகள்.
	பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை.
	பேரவையின் 57-வது விதியின் கீழ் விவாதம் பேரவையின் 40-வது விதி யின் கீழ் 30 நிமிட நேர விவாதம். மற்றுமுள்ள அலுவல்கள்.

10—1—1978 .. நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு மற்ற
(செவ்வாய்) அரசினர் சட்ட முன்வடிவுகள்.
தேவை இருப்பின் 11—1—1978,
அன்றும் கூடும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதி அன்றுவது கேள்வி நேரம் இருக்குமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1978ஆம்
ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் அன்றே கேள்வி
நேரம் உண்டு. நாளைய தினம்தான் இல்லை. இந்த தனி
யார் விவாதத்தின் தொடர்ச்சி, அடுத்த தனியார்
அலுவல் விவாதத்தன்று எடுத்துக் கொள்ளப்படும்.
பேரவையின் மாலை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவடை
கிறது. நாளை காலை 9—00 மணி அளவில் பேரவை மீண்டும்
கூடும்.

பின்னர் பேரவை மாலை 5·52 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

250. Notification issued in G. O. Ms. No. 1338, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 14th November, 1977, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Assistant Librarian and Library Assistant in the Tamil Nadu Archieves within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320(5) of the Constitution of India.]

251. Notification issued in G. O. Ms. 977, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 4th Angust 1977 ei regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the posts of Deputy Director and Assistant Director of Ex-Servicemen's Welfare from the Commission's purivew. [Laid on the Table of the House under Article 320(5) of the Constitution of India.]

B. Reparts, Notifications and other papers.

*39 The Tamil Nadu Debt Relief Laws (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 1 of 1978).

*40. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Bill, 1978 (L. A. Bill No. 2 of 1978).

*41. The Tamil Nadu Local Authorities, Laws (Amendment) Bill, 1978 (L. A. Bill No. 3 of 1978).

*42. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1978 (L. A. Bill No. 4 of 1978).

*Despatched to Members on 4th January 1978.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1978 சனவரி 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றையதினம் தேதியிட்ட வினாக்கள் பட்டியல் 9-1-1978 திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்படும்.

(2) உடுக்குறியிடாத வினாக்கள்.

விக்ரமன் ஆற்றுச் சீரமைப்பு.

வினா 41.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், விக்ரமன் ஆற்றின் சீரமைப்புக்கு 1976-77 ஆம் ஆண்டில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு ?

விடை.—1976-77ஆம் ஆண்டு விக்ரமன் ஆற்றின் சீரமைப்புக்கு செலவழித்த தொகை ரூ. 3,47,541 ஆகும்.

கொள்ளிடம் பாலத்தில் சுங்க வசூல்.

வினா 42.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆணிக்காரன் சத்திரம் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக சுங்கம் வசூலிக்கும் முறை எந்த ஆண்டு முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) 1974-75 ஆம் ஆண்டில் சுங்கம் மூலம் வசூலிக்கப் பட்ட தொகை எவ்வளவு ?

விடை.—(அ) 1-9-1972 முதல் ஆணைக்காரன் சத்திரம் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக சுங்கம் வசூலிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

(ஆ) 1974-75ஆம் ஆண்டு சுங்கம் மூலம் இப்பாலத்தில் ரூ. 1,15,032 வசூலிக்கப்பட்டது.

(a) The right of collection of tolls for the bridge across Coleroon near Anaikaranchatram was entrusted to the Kollidam Panchayat Union with effect from 1-9-1972.

(b) A sum of Rs. 1,15,032 was collected as tolls during 1974-75 on this bridge.

குளிர்சாதன வசதியுள்ள திரைப்படக் கொட்டகைகள்.

வினா 43.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை மாநகரில் குளிர்சாதன வசதியுள்ள திரைப்படக் கொட்டகைகள் எத்தனை உள்ளன ?

விடை.—சென்னை மாநகரில் குளிர் சாதன வசதியுள்ள திரைப்படக் கொட்டகைகள் 28 (இருபத்தெட்டு) உள்ளன.

The number of air-conditioned cinema theatres in Madras City is 28 (twenty eight).

வினா 44.—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகர சினிமாக் கொட்டகைகள் அனைத்தும் குளிர்சாதன வசதி (A.C.) செய்யப்படவேண்டும் என பல ஆண்டுகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், எஞ்சியுள்ள கொட்டகைகளையும் குளிர் சாதன வசதி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை.—(அ) & (ஆ) இல்லை. திரை அரங்குகள் அனைத்தையும் குளிர்சாதன வசதி செய்யப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்த, தமிழ்நாடு சினிமா (ஒழுங்குபடுத்தல்) சட்டம் 1955-லும் அதன் கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளிலும் விதி முறைகள் ஏதுமில்லை. ஒரு திரை அரங்கை குளிர்சாதன வசதி செய்வது, அதன் உரிமையாளரின் விருப்பத்தைப் பொறுத்தது.

(a) and (b) No. There is no provision in the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955, and the rules made thereunder to compel the Cinema theatres to provide air-condition facilities. It is left to the owner of a theatre to provide air-condition facilities in his theatre.

சென்னையில் இரவு நேரப் பேருந்துகள்.

வினா 45.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை நகரத்தில் இரவு நேரங்களில் முழுமையும் பல்லவன் கழக டவுன் பஸ்களைவிட ஏற்பாடாகியுள்ளதா ?

விடை.—இல்லை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நலத்துறை உயர்நிலைப்பள்ளிகள்.

வினா 46.—திரு. ஏ. செல்லப்பன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசு நலத்துறையிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அந்தப் பள்ளிகளுக்கென அரசு ஆண்டுதோறும் செலவிடும் தொகை என்ன ?

விடை.—(அ) தஞ்சை மாவட்டத்தில் இரண்டு நலத்துறை உயர்நிலைப் பள்ளிகள் முறையே கீழப்புனவாசல் (தஞ்சை வட்டம்) மற்றும் நெடுங்குளம் (நன்னிலம் வட்டம்) என்ற இடங்களில் உள்ளன.

(ஆ) மேற்படி பள்ளிகளுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு :—

பள்ளியின் பெயர். (1)	ஆண்டு. (2)	செலவுத் தொகை. (3) ரூ.
1. நலத்துறை உயர்நிலைப்பள்ளி, கீழப்புனவாசல்.	1975	82,292.75
	1976	82,091.70
2. நலத்துறை உயர்நிலைப்பள்ளி, நெடுங்குளம்.	1975	73,949.55
	1976	86,948.00

கடுக்காயில் இருந்து எண்ணெ எடுத்தல்.

வினா 47.—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா கல்ராயன் மலையில் கிடைக்கும் கடுக்காயில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அப்பகுதியில் அமைக்கும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன ?

விடை.—(அ) & (ஆ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் கிடைக்கும் கடுக்காயிலிருந்து ரூ. 36.18 இலட்சம் மதிப்பிட்ட செலவில் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினா 48.—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எத்தனை தடங்களில் பேருந்துகளை இயக்கி வந்தது ?

(ஆ) 1975-76-ல் பேருந்துகள் ஓடிய தடங்கள் மொத்தம் எவ்வளவு ?

(இ) தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை.—(அ) 1975-ம் ஆண்டு சனவரி மாதம் வரை சோழன் போக்குவரத்துக் கழகம் 286 தடங்களில் பேருந்துகளை இயக்கி வந்துள்ளது.

(ஆ) 1975-76-ல் பேருந்துகள் ஓடிய சராசரி தடங்கள் 296.

(இ) செப்டம்பர் 1977-ல் பணியாற்றிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,672.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

வினா 49.—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு தேடித்தரும் அலுவலகங்களில் எந்த அடிப்படையில் வேலையில்லாதவர்கள் பெயர் பதிவு செய்யப்படுகிறார்கள் ?

(ஆ) அதற்கான விதிமுறைகள் என்ன ?

விடை.—(அ) வேலை தேடித்தரும் பொருட்டு எந்த ஒரு இந்தியக் குடிமகனும் அவன் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொள்ளுவதற்கு வயது வரம்போ அல்லது தகுதியோ இருக்கவேண்டுமென்று அவசியமில்லை. பதிவு செய்துகொள்ள கட்டணம் ஏதும் இல்லை.

(ஆ) இதற்கான விதிமுறைகள் தேசிய வேலை வாய்ப்புப் பணி கையேட்டிலும் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் சுருக்கம் வருமாறு :—

1. ஒரு இந்தியக் குடிமகன், தான் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பகத்தில் வேலை தேடித்தரும் பொருட்டு, பதிவு செய்து கொள்ளலாம். சில சமயங்களில் மாநில வேலை வாய்ப்புத்துறை இயக்குநர் அல்லது மத்திய அரசு வேலை வாய்ப்புத்துறை இயக்குநர் அனுமதி பெற்று வசிக்காத வேறு மாவட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

2. வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டவர் அவருக்கு வேலை கிடைக்கும் வரை ஆண்டுக்கு ஒருமுறை தன்னுடைய பதிவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

3. வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்படும் வேலை, வாய்ப்புகளுக்கு தகுந்த மனுதாரர்களை அவர்களது வயது, கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகளைப் பொறுத்து வரிசைக் கிரமத்தில் இவ்வலுவலகங்கள் பரிந்துரை செய்கின்றன.

வினா 50.— திரு. து. புருஷோத்தமன், திரு எஸ். கணேசன், திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன், திரு. ரா. நாராயணன், திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் ~~பயிற்சி பெற்ற~~ இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பி. டி. ஆசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் எத்தனை பேர் வேலை வேண்டி ~~வேலைவாய்ப்பு~~ அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர் ?

விடை.—தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் வேலை வேண்டி பதிவு செய்துள்ள பல்வேறு ஆசிரியர்களின் விபரம் 31-10-1977 அன்றைய நிலவரப்படி கீழ்க்காணு மாறு :—

1.	இளநிலை ஆசிரியர்கள்	913
2.	முதுநிலை (இடைநிலை) ஆசிரியர்கள்	24,613
3.	பி. டி. ஆசிரியர்கள்	9,258
4.	தமிழ்ப் புலவர்கள்	2,918

வினா 51.— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ் கல்லூரிகளில் புலவர் பயிற்சி பெற்று வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் (Employment Office) பதிவு செய்துள்ளவர் மொத்தம் எத்தனை பேர் மாவட்டவாரியாக ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் பெண்கள் ?

விடை.—(அ) 31-10-1977 அன்றைய நிலவரப்படி மாவட்ட வாரியாக விபரம்

வரிசை எண்.	மாவட்டம்.	ஆண்.	பெண்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	வட ஆற்காடு ..	189	44	233
2	தென் ஆற்காடு ..	196	153	349
3	செங்கல்பட்டு ..	101	39	140
4	கோயம்புத்தூர் ..	126	125	251
5	தர்மபுரி	95	27	122
6	கன்னியாகுமரி ..	60	188	248
7	சென்னை	78	116	194
8	மதுரை	91	158	249
9	நீலகிரி	27	21	48
10	புதுக்கோட்டை ..	36	23	59
11	இராமநாதபுரம் ..	73	82	155
12	சேலம்	192	71	263
13	தஞ்சாவூர்	328	32	360
14	திருச்சிராப்பள்ளி ..	146	17	163
15	திருநெல்வேலி ..	46	38	84
	மொத்தம்..	1,784	1,134	2.918

(ஆ) 1,134 பேர்கள்.

[1978 சனவரி 7

வினா 52.—திரு. மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் 1977 ஜூன் முடிய வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் மொத்தம் எத்தனை பேர்? அதில் பட்டதாரிகள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இன்னும் வேலை கிடைக்காமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

விடை.—(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டோரின் எண்ணிக்கை பின்வருமாறு:—

	மொத்தம். (1)	பட்டதாரிகள். (2)
1975	24,538	2,495
1976	25,992	1,111
1977 (ஜூன் முடிய) ..	9,344	855

(ஆ) 30—6—1977 அன்று வேலை கிடைக்காமல் செல்லும் பதிவேட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கை 39,595.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்.

வினா 53.—திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்ச நிவாரண வேலைகளுக்கென எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டது, தாலுகாவாரியாக?

விடை.—பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப் பெற்றுள்ளது.

* 869பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1978 சனவரி 7]

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

வினா 54.—திரு. ஆ. நடராசன், திரு. எம். அண்ணாமலை, திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசுக்குக் கிடைத்த நிலம் எவ்வளவு? மாவட்டவாரியாக?

(ஆ) அதில் நிலமற்றவர்களுக்கு எவ்வளவு வழங்கப்பட்டது?

விடை.—(அ) மற்றும் (ஆ) நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசுக்குக் கிடைத்த நிலம் 88,223 சாதாரண ஏக்கர்களில் 81,361 ஏக்கர்கள் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டவாரியாகக் கிடைத்த நிலங்கள் வழங்கப்பட்ட விஸ்தீரணங்கள் பின்வருமாறு:—

	கிடைத்த நிலங்கள். (1) (ஏக்கர்.)	வழங்கப் பட்ட நிலங்கள். (2) (ஏக்கர்.)
செங்கல்பட்டு	4,860	4,851
வட ஆற்காடு	974	974
தென் ஆற்காடு	3,355	3,224
சேலம்	604	540
தருமபுரி	1,020	981
கோயம்பத்தூர்	7,080	7,073
தஞ்சாவூர்	27,484	22,858
திருச்சி	7,608	7,605
புதுக்கோட்டை	3,623	3,609
மதுரை	7,967	7,064
இராமநாதபுரம்	7,814	6,984
திருநெல்வேலி	15,661	15,571
கன்னியாகுமரி	173	27
மொத்தம் ..	88,223	81,361

காவல் நிலையங்களுக்கான கட்டிடங்கள்.

வினா 55.—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சொந்தக் கட்டடம் இல்லாத காவல் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இவைகளுக்கான கட்டடங்களை கட்டும் திட்டம் உண்டா ?

(இ) ஆம் எனில், இவ்வாண்டு எவ்வளவு கட்டடங்கள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—(அ) சொந்தக் கட்டடம் இல்லாத காவல் நிலையங்களின் எண்ணிக்கை 367.

(ஆ) இவைகளுக்கான கட்டடங்களை கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

வினா 56—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை காவல் நிலையங்கள் உள்ளன ?

(ஆ) எத்தனை புற காவல் நிலையங்கள் உள்ளன ?

விடை—(அ) 862 (எண்ணூற்று அறுபத்திரண்டு) காவல் நிலையங்கள்.

(ஆ) 185 (நூற்று எண்பத்து ஐந்து) புறக்காவல் நிலையங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள்.

வினா 57—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு 1976-77-ல் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் எவ்வளவு ?

(ஆ) 1975-76-ல் கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் எவ்வளவு ?

விடை—தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத்திற்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் :—

(அ) 1976-77-ல் 1,454
(ஆ) 1975-76-ல் 1,417

வடமாமந்தூர் கிராமத்தில் கிடைக்கும் உலோகங்கள்.

வினா 58—திரு. துரைமுத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுக்கா, வடமாமந்தூர் கிராமத்திற்கு அருகில் உலோகங்கள் கிடைக்கின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதை விரிவுபடுத்தும் திட்டம் உண்டா ?

விடை—(அ) ஆம். தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக் குறிச்சி வட்டம், மாமந்தூர் கிராமத்தில் தாமிரம், துத்தநாகம், ஈயம் மற்றும் வெள்ளி ஆகியவைகளின் தாதுப்பொருட்கள் பூமிக் கடியில் இருக்கின்றன.

(ஆ) மாநில அரசு அவ்விடத்தில் தீவிர ஆராய்ச்சி செய்
யவும் கனிப்பொருட்களை தோண்டியெடுக்கவும் முதலில் திட்ட
மிட்டாலும், அவ்வாறு தோண்டியெடுப்பதற்குப் போதுமான
வசதிகள் கிடைக்கவில்லை. இதற்கிடையில், இந்திய அரசின்
பாரத தங்கச் சுரங்க நிறுவனம் அவர்களுக்குப் போதுமான
அனுபவமும், தேவையான கருவிகளும், வல்லுநர்களும் இருக்
கின்ற காரணத்தால், இந்த இடத்தில் உள்ள கனிப்பொருட்
களைத் தோண்டியெடுப்பதில் ஆர்வம் காட்டினர். இதனை மாநில
அரசு ஏற்றுக்கொண்டது. இப்போது பாரத தங்கச் சுரங்க
நிறுவனத்தினர் இந்த இடத்தில் ஒரு நிலையான தொழிலை உருவாக்கு
வதுபற்றி முடிவு செய்யும் பொருட்டு, கனிப்பொருட்களை
அகழ்ந்தெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

(a) Yes, Ores of copper zinc, lead and silver are available near Mamandur Village, Kallakurichi Taluk, South Arcot District.

(b) A scheme was originally proposedfor undertaking a detaliled investigation including exploratory mining to establish the viability of the mult-metal deposit project by the State Government. However, the infrastructure facilities specially recorded for taking up exploratory mining were not available to enable, the State Government to take up this project. At this juncture, the Bharat Gold Mines Limited, evinced considerable interest in the development of Mamandur deposit as part of their diversified activities. Their claim was that they have adequate mining facilities and drilling equipments experince in shaft sinking besides trained and experienced personnel. and This offer was accepted by the State Government and Bharat Gold Mines Limited have not now stepped into the area and commenced exploratory mining operations to establish the viability of the Project.

பணியாளர் கழகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

வினா 59.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973, 1974, 1975, 1976, 1977 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷனில் குரூப் I சர்விசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் ? தாழ்த்தப்பட்டோர் எத்தனை பேர் ?

விடை.—கேட்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :—

ஆண்டு.	பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.	தாழ்த்தப்பட்டோர்கள்.
(1)	(2)	(3)
1973-74	16	5
1974-75	9	3
1975-76	13	2
1976-77	13	3

கிளைக் கருவூலங்கள்.

வினா 60.—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கிளைக்கருவூலங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) திருவிடைமருதூரில் ஓர் கிளைக்கருவூலம் அமைக்க அரசுக் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது துவங்கப்பெறும் ?

விடை.—(அ) தமிழகத்திலுள்ள மொத்த கிளைக்கருவூலங்கள் 149.

(ஆ) மற்றும் (இ) திருவிடைமருதூரில் ஓர் கிளைக் [illegible] அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரை ஒன்று [illegible] அளிக்கப்பட்டுள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

பழங்கோவில் கிராமத்தில் சமுதாயக் கிணறுகள்.

வினா 61.—திரு. பெ. சு. திருவேங்கடம் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள பழங்கோவில் கிராமத்தில் சமுதாயக் கிணறு தோண்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எவ்வளவுத் தொகை செலவழிக்கப்பட்டுள்ளது ?

(இ) தற்சமயம் அது எந்த நிலையில் உள்ளது?

விடை.—(அ) ஆம். 1969—70 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தில் தோண்டப்பட்டுள்ளது. 1973 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி வேலைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 11,586.

(இ) சமுதாயக் கிணறும், மோட்டார் அறையும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. சமுதாயக்கிணறு நல்ல நிலையில் உள்ளது. மேற்படி கிணறு ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாமையால் கிணற்றில் குழாய் அமைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை. இருப்பினும் விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஒன்றியப் பொறியாளர்களால் போடப்படும் மதிப்பீடுகள்.

வினா 62.—திரு செஞ்சி நா. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒன்றிய பொறியாளர்களால் போடப்படும் மதிப்பீடுகளுக்கான உச்ச வரம்பினை ரூ. 5,000 மாக உயர்த்தும் உத்தேசம் உண்டா?

விடை.—ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 21-1-1977 நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் பஞ்சாயத்து யூனியன் ஒன்றிய பொறியாளர்களால் போடப்படும் மதிப்பீடுகளுக்கான உச்சவரம்பினை ரூ. 3,000 த்திலிருந்து ரூ. 5,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது.

கோமான் கிராமக் குடிநீர் திட்டம்.

வினா 63.—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் வட்டம், திருமானூர் வட்டாரம் கோமான் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் இருக்கிறதா?

விடை—இல்லை. ஆனால், கோமான் கிராமம் உவர் நீர் கிடைக்கும் இடமாக (இரண்டாவது வகை) வகை செய்யப்பட்டுள்ளதால், ஊரகக் குடிநீர் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் (1977-78) இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்கப்படும்.

No. But Koman Village will be provided with drinking water supply during the current year (1977-78) under Rural Water Supply Programme since it has been classified as a village with non-potable water source (Category-2).

சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து

வினா 64.—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரியலூர் வட்டத்திலுள்ள சுக்கிரன் ஏரிக்கு மழைத் தண்ணீரை கொண்டு வரும் திட்டங்களுக்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை.—இல்லை. No.

குமாரபாளையம் காவல் நிலையத்தில் பதிவான வழக்குகள்.

வினா 65.—திரு. மு. ரா. சௌந்திரராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1974-75 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், குமாரபாளையம் காவல் நிலையப் பகுதியில் கொலை வழக்குகள் எத்தனை பதிவாகியது?

(ஆ) அதில் எத்தனை வழக்கில் தண்டனை தரப்பட்டது?

(இ) எத்தனை வழக்கில் விடுதலை தரப்பட்டது?

விடை.—(அ)	1974	..	2 வழக்குகள்.
	1975	..	5 வழக்குகள்.
(ஆ)	1974	..	1 வழக்கு.
	1975	..	1 வழக்கு.
(இ)	1974	..	1 வழக்கு.
	1975	..	4 வழக்குகள்.

பாளையம் கிராமத்திற்குப் பாசன வசதி.

வினா 66.—திரு. ப. க. சி. முத்துசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோயில் ஓடை குறுக்கே அணை கட்டி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டப்பணி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) தற்போது அந்த வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஈ) இதுவரை அந்த வேலைக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? மேற்கொண்டு எவ்வளவு செலவாகும்?

(உ) எப்போது அந்த வேலை முடிவடையும்?

விடை.—(அ) 1966 ஆம் ஆண்டு.

(ஆ) திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தபோது ரூ. 1.99 இலட்சம்.

(இ) முக்கியமான வேலைகள் எல்லாம் முடிவடைந்து விட்டது. மட்ட அளவுகள் மாத்திரம் சரிபார்த்து நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

(ஈ) ரூ. 2.471 இலட்சம்.

(உ) டிசம்பர் 1977 இறுதிக்குள்.

தன்னும் பட்டினம் ஊராட்சியில் மேல்நிலை குடிநீர் தொட்டிகள்.

வினா 67.—திரு. கா. சுப்பிரவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், தன்னும் பட்டினம் பஞ்சாயத்து எல்லைக்குள் எத்தனை மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் எத்தனை இயங்குகின்றன?

கோமான் கிராமக் குடிநீர் திட்டம்.

வினா 63.—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் வட்டம், திருமானூர் வட்டாரம் கோமான் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் இருக்கிறதா ?

விடை—இல்லை. ஆனால், கோமான் கிராமம் உவர் நீர் கிடைக்கும் இடமாக (இரண்டவாது வகை) வகை செய்யப்பட்டுள்ளதால், ஊரகக் குடிநீர் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் (1977–78) இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்கப்படும்.

No. But Koman Village will be provided with drinking water supply during the current year (1977-78) under Rural Water Supply Programme since it has been classified as a village with non-potable water source (Category-2).

சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து

வினா 64.—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரியலூர் வட்டத்திலுள்ள சுக்கிரன் ஏரிக்கு மழைத் தண்ணீரை கொண்டு வரும் திட்டங்களுக்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை.—இல்லை. No.

குமாரபாளையம் காவல் நிலையத்தில் பதிவான வழக்குகள்.

வினா 65.—திரு. மு. ரா. சௌந்திரராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1974-75 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், குமாரபாளையம் காவல் நிலையப் பகுதியில் கொலை வழக்குகள் எத்தனை பதிவாகியது ?

(ஆ) அதில் எத்தனை வழக்கில் தண்டனை தரப்பட்டது ?

(இ) எத்தனை வழக்கில் விடுதலை தரப்பட்டது ?

விடை.—(அ)	1974	..	2 வழக்குகள்.
	1975	..	5 வழக்குகள்.
(ஆ)	1974	..	1 வழக்கு.
	1975	..	1 வழக்கு.
(இ)	1974	..	1 வழக்கு.
	1975	..	4 வழக்குகள்.

பாளையம் கிராமத்திற்குப் பாசன வசதி.

வினா 66.—திரு. ப. க. சி. முத்துசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம் கிராமத்திலுள்ள மாரியம்மன் கோயில் ஓடை குறுக்கே அணை கட்டி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டப்பணி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) தற்போது அந்த வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஈ) இதுவரை அந்த வேலைக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? மேற்கொண்டு எவ்வளவு செலவாகும் ?

(உ) எப்போது அந்த வேலை முடிவடையும் ?

விடை.—(அ) 1966 ஆம் ஆண்டு.

(ஆ) திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தபோது ரூ. 1.99 இலட்சம்.

(இ) முக்கியமான வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டது. மட்ட அளவுகள் மாத்திரம் சரிபார்த்து நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

(ஈ) ரூ. 2.471 இலட்சம்.

(உ) டிசம்பர் 1977 இறுதிக்குள்.

தன்னும் பட்டினம் ஊராட்சியில் மேல்நிலை குடிநீர் தொட்டிகள்.

வினா 67.—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், தன்னும் பட்டினம் பஞ்சாயத்து எல்லைக்குள் எத்தனை மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன ?

(ஆ) அவைகளில் எத்தனை இயங்குகின்றன ?

விடை.—(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி ஒன்றியம் தண்ணும்பட்டினம் பஞ்சாயத்து எல்லைக்குள் ஏழு மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) அவைகளில் ஒன்று இயங்கி உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஏனைய ஆறு மேல்நிலைத் தொட்டிகளில் ஐந்து தொட்டிகளில் மின்விசை பழுதுற்றதாலும் எஞ்சிய ஒரு தொட்டிக்கு மின்விசை இன்னமும் அளிக்கப்படாததாலும் இவைகள் இயங்கவில்லை. இவைகள் இயங்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சித்தலூரில் புதிய பாலம்.

வினா 68.—திரு. வ. துலுக்கானம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் சித்தலூர் கிழக்குப் பகுதி கிராமங்களும், மேற்குப் பகுதி கிராமங்களும் இணைப்பதற்கு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எப்போது பாலம் கட்டப்படும் ?

விடை.—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை நடமாடும் நீதிமன்றத்தில் பதிவான வழக்குகள்.

வினா 69.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1974 முதல் இன்றுவரை சென்னை நகரத்தில் நடமாடும் கோர்ட்டுகளில் எத்தனை நபர்கள் விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர் ?

(ஆ) தண்டனை அடைந்தவர்களிடம் எவ்வளவு ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது? எத்தனை வழக்குகள் சிறை தண்டனையில் முடிந்தது ?

(இ) எத்தனை வழக்குகள் தள்ளப்பட்டன ?

விடை—(அ) 1974-ம் ஆண்டு முதல் செப்டம்பர் 1977 முடிய சென்னை நகரத்தில் நடமாடும் கோர்ட்டுகளில் 84,238 நபர்கள் குற்றம் சாட்டப்பட்டனர்.

(ஆ) தண்டனை அடைந்தவர்களிடம் அபராதமாக ரூ. 7,82,118.00 வசூலிக்கப்பட்டது, இந்த வழக்குகளில் சிறைத் தண்டனை அளிக்கப்படவில்லை.

(இ) தள்ளப்பட்ட வழக்குகள் இல்லை.

(a) 84,238 persons were charged in the Mobile Courts in Madras City from 1974 to September, 1977.

(b) A sum of Rs. 7,82,118.00 was collected towards fine from the persons convicted. No person was sentenced to imprisonment in these cases.

(c) No case was dismissed.

சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்கள்.

வினா 70—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலையிலிருந்து, சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது ?

(இ) அதனால் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது?

(ஈ) உள்ளூர் மக்களுக்கு மீன் விற்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை.—(அ) ஆம்.

(ஆ) மேற்கு வங்காளத்திலுள்ள கல்கத்தாவுக்கு மட்டும்.

(இ) 1967-68 முதல் ஒவ்வொரு வருடமும் கிடைத்த வருமானம் கீழ்வருமாறு :

1967-68	..	38,004.51
1968-69	..	44,976.90
1969-70	..	96,718.82
1970-71	..	1,06,274.41
1971-72	..	1,04,980.33
1972-73	..	1,09,278.99
1973-74	..	1,12,163.49
1974-75	..	2,26,526.50
1975-76	..	2,83,705.10

(ஈ) சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்கள் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு உள்ளூர் மக்களுக்கு விற்பனை செய்யவும் மீதி உபரியாக உள்ள மீன்களை கல்கத்தா மத்திய மீன் கழகத்திற்கு விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தினந்தோறும் சுமார் 40 கிலோ மீன்கள் உள்ளூர் மக்களுக்கு விற்கப்படுகிறது.

(3) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை பேரவையில் வைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் பேரவைக்குத் தவறான தகவல் தந்ததாகக் கூறப்படுவது குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 184-ன் கீழ் அடியிற்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது எழுப்புவதற்கு தங்களுடைய அனுமதியை வேண்டுகிறேன்.

கடந்த 31—12—1976 அன்று சட்டமன்றத்தில் நான் ஒரு பிரச்சினையை, அதாவது, சென்னை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த மிசா கைதிகள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்ற அடிப்படையில், மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் அமைக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷனுடைய அறிக்கை இன்னும் இந்த அவையில் வைக்கப்படவில்லை, அது எப்

போது வைக்கப்படும் என்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ‘ அது ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரைவில் இந்த அவையில் அது வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்’ என்று பதிலளித்தார். ஆனால் அந்த அறிக்கை ஆளுநருக்கு இதுவரையில் அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, முதலமைச்சரின் பதில் வேண்டுமென்றே தவறாக இந்த அவையின் உறுப்பினர்களை ஐயப்படச் செய்யக்கூடிய வகையில் அமைந்தது. ஆகவே, இது அவையின் உரிமையை மீறிய செயலாகும்.

மேலும், முதலமைச்சரின் பதில் தவறாகச் சொல்லியிருந்தால் தவறைத் திருத்திக்கொண்டு, 82-ம் விதியின் கீழ் அறிக்கை தந்திருக்கலாம். ஆனால் அதுவும் செய்யப்படவில்லை. ஆகவே, வேண்டுமென்றே இது அவையின் உறுப்பினர்களை திசை திருப்புகின்ற செயல் என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையின் உரிமையை மீறி இருக்கிறார். ஆகவே, அவர் மீது உரிமையை மீறிய காரணத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் வந்த பிறகு பதில் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் இந்தப் பிரச்சினையை முதலில் எழுப்பவேண்டிய பிரச்சினையாக இருப்பதால்...........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சரின் மீது கொண்டுவந்துள்ள உரிமை மீறல் பிரச்சினை பற்றி நான் கருத்துத் தெரிவிக்க விரும்பாவிட்டாலும், அவர்கள் தெரிவித்து இருப்பது ஆளுநருக்கு போய் சென்று சேர்ந்ததாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்........

திரு. மு. கருணாநிதி : அவை முன்னவர் மேலும் ஒரு தவறான முறையில் விளக்கம் தருவதற்காக வருந்துகிறேன். அது எப்போது வைக்கப்படும் என்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘அது ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரைவில் இந்த அவையில் அது வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று பதிலளித்தார்.’ ஆனால் அந்த அறிக்கை ஆளுநருக்கு இதுவரையில் அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. இதை நான் சொல்கிறேன். முதலமைச்சர் சொல்லவில்லை. முதலமைச்சர் சொன்னது ‘தினமணி’ பத்திரிக்கையிலும் கூட வந்திருக்கிறது. ‘இஸ்மாயில் கமிஷன் மீது நடவடிக்கை என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார், முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் பதில் அளிக்கையில் அறிக்கை இப்போது ஆளுநருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது, விரைவில் வைக்கப்படும் என்று தெரிவித்தார்’ என்று வந்திருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆளுநருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது என்று முதலமைச்சர் சொன்னார். ஆனால் அனுப்பப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிகிறது என்று எதிர்கட்சித் தலைவர் தெரிவிக்கிறார். ஆளுநருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவருக்குத் தெரியும். ஆளுநருக்கு அனுப்பப்படும்போது எவ்வளவு ப்ராசஸ்கள் இருக்கின்றன என்று ஆனாலே, அவர் உரிமை மீறல் பிரச்னையா என்பதில் அவருக்கே நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது. 'அனுப்பப்படவில்லை என்று அவர் கருதுவதாகச் சொல்கிறாரே தவிர 'அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள், ஆனால் அனுப்பப்படவில்லை' என்று ஏதாவது ஒரு நிலையை அவர் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : கவர்னர் அலுவலக வட்டாரத்தில் இருந்து கிடைத்த தகவலைச் சொல்கிறேன். அது ஆளுநருக்கு அனுப்பப்படவில்லை. அது அவருக்குச் சென்று சேரவில்லை என்பதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய அலுவலக வட்டாரத்திலிருந்து செய்தி சேகரிக்கும் வேலையில் நமது எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து விசாரித்த பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்களே இந்த அவையில் ஒரு சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தனக்கு ஆளுநர் அலுவலகத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தகவல் எழுத்து மூலமாக வந்திருக்கிறதா, வாய்மொழியாக வந்திருக்கிறதா ?. எழுத்து மூலமாக வந்திருந்தால் ஆதாரத்தை அவையின் முன் வைப்பாரா ?

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் அதைப் பற்றி தீர்ப்பு அளிப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். அதைப் பற்றித் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அதுவல்ல பிரச்னை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புகள் இருக்கின்றன. அந்த முடிவுகள் ஆளுநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதன் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரும்போது, அப்படி அனுப்பப்படவில்லை என்று நிலையா

யாக அவரே நம்பாத நிலையில் எப்படி உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வரமுடியும் ? அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. அனுப்பப்படவில்லை என்று கருதப்படுகிறது என்ற அடிப்படையில் அவையில் உரிமை மீறல் பிரச்னை கொண்டுவரக் கூடாது. பொறுப்புள்ள முதலமைச்சர் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை விசாரித்து பிறகு தீர்ப்பு அளிக்கிறேன் என்று ஏற்கெனவேயே சொல்லிவிட்டேன்.

4. தன்னிலை விளக்கம்.

திரு. க. சுப்பு தன் உரையில் செய்யப்பட வேண்டிய திருத்தம் குறித்து அளித்த விளக்கம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, 81-வது விதியின் கீழ் தங்களுடைய அனுமதியின் பேரில் 'எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன்' அளிக்க விரும்புகிறேன். நேற்று முன் தினம் இந்த அவையில் பேசும்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மீது காண்டிராக்ட் ஊழல் என்று நான் தெரிவித்ததாக பத்திரிக்கையில் செய்தி வந்து ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நான் சட்டப் பேரவையில் இருக்கிற குறிப்புகளில் பார்த்தேன். போக்குவரத்து அமைச்சர் என்று தான் பேசியிருக்கிறேன். அவர் 5 ஆண்டு காலமாக போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காரணத்தால், அதே நினைப்பில், பொதுப்பணித் துறை அமைச்சர் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக போக்குவரத்து அமைச்சர் என்று சொன்னவிட்டேன். ஆகவே போக்குவரத்து அமைச்சர் என்று கூறி விளக்கம் சரியானதல்ல. அதை பொதுப்பணித்துறை அமைச்சர் என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2. உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(ஆ) முரசொலி நாளேடு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசியதை திருத்தி வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அவையில் நடப்பதை சில பத்திரிக்கைகள் வெளியிடும்போது திரித்துக் கூறுகின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு வந்திருக்கிற முரசொலியை நான் இப்போது தான் பார்த்தேன். ஆகவே அதன் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவர முடியவில்லை என்பதை அவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்தப் பத்திரிக்கையில் வந்திருப்பதை . . . .

[1978 சனவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் திங்கட்கிழமை எழுத்து மூலமாகக் கொடுங்கள். எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: தலைவரவர்களே, அவர் அதை உரிமை மீறல் பிரச்னையாக இப்போது கொண்டு வரவில்லை. இப்போது தான் முரசொலி பத்திரிக்கை கிடைத்திருக்கிறது. ஆகவே தான் அவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறார். அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திங்கட்கிழமை எழுதிக் கொடுங்கள். நான் எடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, நேற்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்
பினர் ப. உ. சண்முகம் அவர்கள் இந்த அவையில் பேசும்போது, முந்தைய அரசு, அதாவது ஆளுநருடைய ஆட்சிக்காலத்தில், அப்
போதிருந்த அரசு வெளிசந்தையிலிருந்து சர்க்கரையை வாங்கி நஷ்டத்திற்கு விற்றார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு
முரசொலி பத்திரிக்கையில் வந்திருக்கின்ற செய்தி முழுதும் திரித்துப் போட்டிருக்கிறார்கள். அ.இ.அ.தி.மு.க. அரசு பதவி ஏற்ற
பிறகு லெவி சர்க்கரை வாங்கியது போதாது என்று வெளியில் சர்க்கரை வாங்கி, பின்னர் வெளியில் வாங்கிய சர்க்கரையை
நஷ்டத்திற்கு விற்றார்கள் என்று முரசொலியில் செய்தி போட்டிருக்கிறது. அப்படி ப. உ. சண்முகம் அவர்களே பேசவில்லை
என்றாலும் ஏதோ ஒரு தற்காலிக மனத்திருப்தி அடைந்துகொள்ள வேண்டும், அ.இ.அ.தி.மு.க. அரசின் மீது களங்கம் கற்பிக்க
வேண்டும் என்ற போக்கில் இப்படிப்பட்ட பத்திரிக்கைகள் வேண்டுமென்றே செய்தியைத் திரித்துப் போடுகின்றன. இப்படிப்பட்ட
பத்திரிக்கைகளை தாங்கள் கண்டித்து வைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தன்னிலை விளக்கமாகச் சொல்கிறேன். நான் நேற்று மாலை 7 மணியிலிருந்து 7½
மணி வரையில் சட்டமன்ற நடவடிக்கைகள் என்று வானொலி ஒலிபரப்பிய செய்தியைக் கேட்டேன். அதிலும் இதே தவறான
செய்திகளைச் சொன்னார்கள். ஆகவே முரசொலியின் மீது நடவடிக்கை யெடுத்தால், வானொலியின் மீதும் நடவடிக்கை எடுக்க
வேண்டிவரும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: தலைவரவர்களே, முரசொலியில் வந்த செய்தி தவறானது என்பதை ஒத்துக்கொண்டதற்காக ப. உ. சண்முகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரியாக இனியாவது அந்தப் பத்திரிகை செய்யாமல் என்று வருதுகிறேன்.

1978 சனவரி 7]

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அகில இந்திய வானொலியே சிறு தவறு செய்யும்போது, பத்திரிக்கையில் சிறு
தவறு வந்ததற்காக நான் கூட அதை தவறு என்று ஒத்துக் கொள்கிறேன். நான் பேசும்போது சொன்னேன். அப்போது
வாங்கப்பட்ட சர்க்கரை, பிறகு நஷ்டத்திற்கு விற்கப்பட்டது என்று தெளிவாகச் சொன்னேன்.

[முற்பகல் 9.10]

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, நேற்று அங்கத்தினர் சுப்பு அவர்கள் சொன்னபோது டிரான்ஸ்போர்ட்
அமைச்சர் என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்னதோடு வேறு ஒன்றையும் சொன்னார்கள். அந்தத் தகவல் சரி
யாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம், தவறாக இருந்தால் பேரவை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஜாக்கிரதையாகச்
சொன்னார்கள். அந்த அடிப்படையில் வராமல் அலை ஓசையிலும் முரசொலியிலும் வேறு விதமாக வந்திருக்கிறது. அவர் சொன்ன
தையும் சேர்த்து முறையான செய்தியை பத்திரிக்கையில் போட ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: அவர் சொன்னது 'சப்ஜுடிஸ்'. உரிமை பிரச்னை அவையின் தீர்ப்பில் இருக்கிறது. நான் பேசினதை
ஒத்துக்கொள்கிறேன். பத்திரிக்கையில் போட்டது சரிதான். போக்குவரத்து அமைச்சர் அல்ல, பொதுப்பணித் துறை அமைச்சர்
தான்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அவர் பேசிய குறிப்பு இருக்
கிறது. நான் சொன்னபடி குறிப்பு இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து இதற்கு முற்றுப் புள்ளி வையுங்கள்.

(இ) அலை ஓசை நாளிதழ் திரு. க. சுப்பு அவர்கள் பேச்சை திரித்து தவறான தலைப்பு கொடுத்து வெளியிட்டது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு உறுப்பினர்
சுப்பு பேசுகிற நேரத்தில் 'அமைச்சர் பொன்னையன் சகோதரர்
கள் காண்டிராக்ட்' என்று சொல்லி அதில் தவறான தகவலும்
இருக்கிறது. கிடைத்த தகவல் சரியாகவும் இருக்கலாம் என்று
குறிப்பிட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்னை
மீது தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொல்லிவிட்டேன். உரிமைப்
பிரச்னை என்னிடம் வந்திருக்கிறது. அதைப் படித்து விட்டு
அமருங்கள். விளக்கம் சொல்லக் கூடாது. எது அவசியமோ
அதைப் படியுங்கள்.

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> 6-1-1978 அலை ஓசையில் சட்டப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் 6-1-1978 பேசிய பேச்சு வெளியிடப்பட்டிருக்கிறது. 'மந்திரி பொறுப்பில் சகோதரர்கள் காண்டிராக்ட், சுப்பு புகார்' என்ற தலைப்பில் வெளி வந்தது. அவர் கொடுக்கும் தகவல் தவறாகவும் இருக்கலாம் என்பது பத்திரிகையில் வெளியிடப்படவில்லை, அதை திருத்திக் கூறியிருக்கிறார்கள். இது அமைச்சர் மீது தவறான கருத்தை வெளியிட்டு தவறான அபிப்ராயம் ஏற்படும்படி செய்வதாக இருப்பதால் இது அவை மீறிய செயலாகும் என்று 184 விதியின் கீழ் குறிப்பிடுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதையும் தீர விசாரித்து தீர்ப்பு அளிக்கிறேன்.

<u>(ஈ) அண்ணா நாளிதழ் பேரவை நடவடிக்கைகளைத் தவறான தலைப்பு கொடுத்துத் திரித்து வெளியிட்டது குறித்து.</u>

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> 31-12-1977 நாள் இதழில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகாலத்தில்........,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேப்பரில் உள்ளதை விளக்குகிறார். எழுதியதை அப்படியே படியுங்கள்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> சட்டமன்றத்தில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் அவர்களிடையே நடைபெற்ற வாதத்தையொட்டி அண்ணா நாளிதழ் சென்னை 31-12-1977 வெளியூர் 1-1-1978, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகாலத்தில் 'கருணாநிதி துரோகம்' பன்ருட்டி அம்பலப்படுத்தினார், 'கருணாநிதி ப. உ. ச. ஒப்புதல்' என்ற தலைப்பிட்டு முதல் பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. செய்தித் தலைப்பை பார்க்கிற யாருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் கழகத் தலைவர்கள் மீதும் ஒரு தவறான கருத்தை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் தலைப்பு உள்ளே வந்திருக்கிற செய்திக்கு தொடர்பு இல்லாது இருந்தாலும் சட்டமன்ற நடவடிக்கையை உள் நோக்கத்தோடு வேண்டுமென்று திரித்து வெளியிடப்படுகிறது. இது ஒரு உரிமைமீறல் செயலாகும். இது குறித்து உரிமை பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது குறித்து நான் தீர விசாரித்து பிறகு தீர்ப்புச் சொல்கிறேன். அடுத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம். பேராசிரியர் பேசுவார்.

<u>(5) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்</u>—தொடர்ச்சி.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக்குழு 5 மணிக்கு நடைபெறும் என்று அறிவித்தார்கள். நண்பர் ஜேம்ஸ் தன்னை கலந்து கொள்ளவில்லை என்று வருத்தப்பட்டார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வந்திருந்தால் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம் என்று சொன்னார். அவை முன்னவர் வரவில்லை. நாங்கள் மட்டும் வந்திருந்தோம். அப்போது எடுக்கப்பட்ட முடிவு இன்று காலை கேள்வி நேரம் இல்லை. அடுத்து முதலாவதாக அமைச்சர் வீரப்பன் பேசுவார்; அடுத்து பேராசிரியர் அவர்கள் பேசுவார். அடுத்து முதலமைச்சர், பிறகு நான் பதில் அளிப்பது என்ற வகையில் நேற்று முடிவெடுத்தோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை, இல்லை, யார் யார் பேசவேண்டும் என்றே முடிவு செய்தோம். எந்த வரிசையில் அவர்களைப் பேச அழைப்பது என்று முடிவு செய்யவில்லை. யாரை முதலில் பேச அழைப்பது என்கிற முடிவை பேரவைத் தலைவர் எடுக்கிறார். அந்த முறையில், பேராசிரியரை பேசச் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மன்னிக்க வேண்டும். நான் பேரவைத் தலைவரிடம் தெரிவித்துத்தான் போனேன். எனக்கிருந்த சில அலுவல் காரணமாக பிஸினஸ் அட்வைசரி கமிட்டிக்கு நேற்று வரமுடியாது இருந்த சூழ்நிலையை எடுத்துச் சொல்லிவிட்டுப்போனேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> அந்தத் தகவலை அவை முன்னவர் அவர்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை. அதனால்தான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> சபாநாயகரைக் கேட்டிருக்கலாம்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> பேரவைத் தலைவர்களைத் தான் கேட்டோம். 'வரவில்லை, தெரியவில்லை' என்று சொன்னார்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவு என்ன என்பது பற்றி பேரவைத் தலைவரவர்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எதிர்க்கட்சித் தலைவர், எப்படி அவைத் தலைவரைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமென்று விரும்புகிறார் என்று தெரிகிறது. என்னைப் பற்றிய பிரச்னை எழவில்லை. மூன்று அமைச்சர்கள் வரவில்லை என்ற

தான் சொன்னேன். குறிப்பிட்டு, பேரவை முன்னவரைப் பற்றி கேள்வி எழவில்லை. அது பிரச்னை இல்லை. பேரவை முன்னவர் என்னிடம் சொல்லிவிட்டுப் போனது ... அமைச்சர்கள் இருக்கிறார்கள். மூன்றுபேரும் ... என்பதுதான் பேச்சு.

எதிர்க்கட்சித் தலைவர் நீண்ட கால அனுபவம் உள்ளவர். எனவே பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமையை அவர் கட்டுப் படுத்த முடியாது.

நான் யாரைப் பேசச் சொன்னாலும் பேசவேண்டும். அமைச்சர் முதலில் பேசவேண்டும் என்று சொல்வது மரபு தானா? பேரா சிரியரை நான் பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : உங்கள் தீர்ப்பை மதித்து, பேரா சிரியர் பேச வேண்டுமானால் பேராசிரியர் பேசட்டும். நாங்கள் யாரும் உங்கள் ஆணைக்குக் குறுக்கே நிற்கவில்லை. இந்த அவையில் உறுப்பினர்கள் உங்களுக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள். ஆனால் அலுவல் ஆய்வுக்குழுவிலிருந்து தி. மு. கழகத்தை விலக்கிக் கொள்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. எனவே அலுவல் ஆய்வுக் குழுவிலிருந்து இன்றிலிருந்து எங்களை விடுவித்துக்கொள்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலையில் அலுவல் ஆய்வுக் குழுவில் நீண்ட நேரம் விவாதம் நடந்தது. தலைவருக்குத் தெரியும், யார் யார் பேசவேண்டும் என்று விவாதித்தோம். எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுவது போல முதலில் அமைச்சர் பேசியதற்குப் பிறகு பேராசிரியர் பேசுவது, பிறகு முதலமைச்சர் பேசுவது, கடைசியாக எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது என்று தீர்மானித்தோம். இன்று விவாதத்தை முடிக்கவேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவின்படி நடக்க நாங்கள் தயாராக இருக் கிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆய்வுக் குழுவி லிருந்து விலகிக் கொள்ளுகிறேன் என்று மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதை அடுத்து, நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழு வில் உண்மையில் யாருமில்லை—நாங்கள் தான் இருக்கிறோமே தவிர ஒரு அமைச்சராவது வந்திருக்க வேண்டும். யார் யார் பேசவேண்டும், எப்படிப் பேசவேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர் முடிவு செய்வார். எதிர்க்கட்சித்தலைவர் இதற்காக அலுவல் ஆய்வுக் குழுவிலிருந்து விலக முடிவு செய்வது என்பது வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரைக் கேட்டுக்கொள்வது தயவு செய்து அலுவல் ஆய்வுக் குழுவிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்று சொல்ல வேண்டாம். தயவு செய்து கலந்துகொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இது ஒரு பெரிய பிரச்னை இல்லை. அலுவல் ஆய்வுக் குழு பேசி எடுத்த முடிவினை நிறைவேற்றுவது தலைவரின் கடமை. உரிமை இருக்கலாம். இல்லை என்று சொல்ல வில்லை. முதலில் அமைச்சர் பேசுவது, பிறகு பேராசிரியர் பேசுவது, மூன்றாவதாக முதலமைச்சர் பேசுவது என்று இப்படி முடிவெடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே பேசுகின்ற அத்தனை யும் நடைமுறைக்கு வருவது என்பது இயலாத காரியம். அங்கே எதையும் பேசலாம். கடைசியில், நான் அழைத்தவர் தான் பேச வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா, இல்லையா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நீங்கள் எடுத்த முடிவு என்ன என்பது, இங்கே பேசிய அழகிரிசாமி அவர் களும் மாரிமுத்து அவர்களும் பேசியதிலிருந்து, வரிசையாக ஒழுங்கு படுத்தப்பட்டதாக எனக்குத் தெரிகிறது. முதலில் அமைச்சர், அதற்கு அப்பால் துணைத் தலைவர், அதற்கு அப்பால் எதிர்க் கட்சித் தலைவர், முடிவாக முதலமைச்சர் கடைசியாகப் பதில் சொல்வது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே தயவு செய்து இதை வளர்த்திக் கொண்டு போகாமல் அமைச்சரைப் பேச அழைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன், அப்படி, பேரவைத் தலைவருக்குள்ள இந்த நிலைமையை, நீங்களும் எனக்கு வழி காட்டிக் கொண்டே போவீர் களானால் அதை நான் பாராட்டுகிறேன். நான் அதைத்தான் சொல்கிறேன். அமைச்சர் பேசலாம், பேராசிரியர் பேசலாம் என்று அப்படிப் பேசப்பட்டதே தவிர, கடைசியாக வரையறுக்கப் படவில்லை. எழுத்து மூலம் எதுவும் முடிவெடுக்கப்படவில்லை. இந்த நிலையில், இன்னார் பேச வேண்டும் என்று நான் சொல்வது —இதில் எந்த உள்நோக்கமும் எனக்கு இல்லை—யார் பேசலாம் என்று அனுமதிக்கின்ற உரிமை எனக்கு இருக்கிறது. அந்த எனது உரிமைக்குள் தலையிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர் தான் பேச வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தா தீர்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இதை நான் வலியுறுத்துவதற்குக் காரணம், அலுவல் ஆய்வுக் குழுவி லிருந்து விலகிக் கொள்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலைவர் வேதனைப் பட்டுச் சொன்னார். அந்த வேதனையைப் போக்குவதற் கான சிறிய ஆலோசனை—அலுவலாய்வுக் குழு ஒரு முடிவை மேற் கொண்ட காரணத்தால், தயவு செய்து அந்த உரிமையைப் பயன் படுத்தி, அமைச்சர் அவர்களை நீங்கள் பேசுவதற்கு அழைக்கக் கோருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனது உரிமையை நீங்கள் பறிக்கக் கூடாது என்று சொன்னீர்கள். அதோடு, இன்னொன்றையும் கூறினீர்கள். எடுக்கின்ற முடிவை அப்படியே அமல் நடத்த வேண்டும் என்றால் அது முடியாது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங் கள். அந்தக் குழுவில் நாம் என்னென்னவோ விவாதிக்கலாம், பேசலாம். அலுவல் ஆய்வுக் குழுவில் நானும் நீங்களும் அப் பாற்பட்ட பல விஷயங்களைக் கூட சிரித்துக்கொண்டே பேசி யிருக்கலாம். நடவடிக்கைக்கு அப்பாற்பட்ட சொந்த விஷயங் களைக் கூட பேசியிருக்கலாம். அதை அப்படியே நடைமுறைப் படுத்த இயலாது. அவையில் நான் பேச அழைத்தவர் பேச வேண்டுமென்ற உரிமையை எனக்கு விட்டு விட்டு, இதை இத்தோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இப்போது நீங்கள் அமைச் சரை அழைக்கப் போவதாகக் கருதுகிறேன். அதற்கு முன் பாக, நான் எதிர்க்கட்சித் தலைவரை விரும்பிக் கேட்டுக் சொள்கிறேன். நீங்கள் ஏற்கனவே தெரிவித்தீர்கள். அந்த முடிவிலிருந்து மாறி, அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொள் வேன் என்ற உறுதியை சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவை முன்னவரு டைய அன்பான உள்ளத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே அறிவித்த அந்த முடிவினை அலுவல் ஆய்வுக் குழுவிலிருந்து விடுவித்துக்கொள்கிறேன் என்ற அந்த முடிவினை—திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அமைச்சரவையின் மீது கொண்டு வந்திருக் கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத் துக்களை இங்கே வைப்பதற்கு அனுமதி அளித்த உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பேசுவதற்கு முன்பே நான் பேசுவதே ஒரு பிரச்சினை ஆக்கப்பட்டு அதற்கு ஒரு நல்ல முடிவு கிடைத்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய நம் பிக்கை இல்லாப் பிரேரணையை இங்கே கொண்டு வந்து பேசு கின்ற பொழுது அவர்கள் தன்னுடைய நம்பிக்கை இல்லா பிரேரணையினுடைய வாசகங்களை கீழ்கண்டவாறு அமைத்திருக்

கிறார்கள். 'மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையின் கீழுள்ள அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையின்மையை தெரிவித்துக்கொள்கிறது.' மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் அவர்கள் தலைமையிலே ஒரு அமைச்சரவை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் இந்தச் சட்டப்பேரவையிலே அதிகாரபூர்வமாக ஒத்துக் கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இது அமைந்திருக்கிறது என்ற அளவிலே நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். காரணம், இந்த அரசு அமைந்து 6 மாதங்கள் ஆகின்றன என்று இங்கே பேசப்பட்டது. இந்த 6 மாதகாலத்தில் இந்த அவையில் அமைச்சரவையைப் பற்றி எப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்பதும்; இந்த அவைக்கு வெளியே இந்த அமைச்சரவை பற்றியும், குறிப்பாக மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும் ஒரு நாட்டின் அரசியல் சட்டப்படி மக்களாலே வாக்களிக்கப்பட்டு, பெரும் பான்மை கட்சியாக மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தக் கட்சியின் தலைவராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப்பான முதலமைச்சர் பதவியை, இந்த நாட்டு மக்கள் அனைவரும், நாட்டு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சட்டப்பேரவையிலே அங்கம் வகிக்கின்ற அனைத்துக்கட்சி பிரதிநிதிகளும் ஏற்று மதிப்பளிப் பதன் மூலம் தான் ஒரு ஜனநாயகத்திற்கு நல்ல மரபைக் கட்டிக் காக்க முடியும் என்கின்ற உணர்வை எல்லாம் இந்தச் சட்டப் பேரவைக்கு வெளியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி எப்படி குறிப்பிடுகிறார்கள் என்றெல்லாம் அறிந்து இருக் கின்ற நான் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் மிக அன்போடும், பெருந்தன்மையோடும் இந்த தீர் மானத்தை இங்கே முன்மொழிந்து, முன்மொழிவதற்கான காரணங்களை அவர்கள் விளக்குவதற்கு எடுத்துக் கொண்ட நேரத் தில் ஒரு குறிப்பிட்ட வாதத்தை வைத்தார்கள். 'நான் இந்த அமைச்சரவையை வீழ்த்த இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வில்லை, அப்புறப்படுத்துவதற்கு முன்மொழியவில்லை; ஆனால் 6 மாதகாலத்தில் நடைபெற்றிருக்கின்ற கொடுமைகளை குற்றச் சாட்டுகளாக அடுக்கி வைப்பதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்கிறேன்' என்று எடுத்துவைத்தார்கள்.

அந்தக் கருத்தைப் பற்றி இங்கே இருக்கின்ற பல்வேறு கட்சிகளின் மாண்புமிகு உறுப்பினர்களும், அந்தந்த கட்சிகளு டைய தலைவர்கள் பலரும், ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக் கிறார்கள். இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும், உறுப்பினர்கள் பலரும் ஒரு புதிய அரசு அமைந்து, புதிய அரசு என்று நான் சொல்கிறபோது, இதற்கு முன்னாலே ஆளுகின்ற பொறுப்பிலே இல்லாத ஒரு கட்சியின் அரசு, புதிய அரசு அமைந்து 6 மாதகாலம் தானே ஆகின்றது, அதற்குள்ளாகவே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமா என்று பல எதிர்க்கட்சித்

தலைவர்கள் கேட்டார்கள். அதிலே சில தலைவர்கள் இன்னும்
விளக்கமாகச் சொன்னார்கள். 6 மாதகாலத்திலே 2 மாதங்களைப்
புயல் எடுத்துக்கொண்டுள்ளது; வெள்ளம் எடுத்துக்கொண்
டுள்ளது. மீதி 4 மாதகாலம் தானே. இதற்குள்ளேயே நம்
பிக்கையில்லா தீர்மானமா என்று கேட்டார்கள்.

ஆனால் மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ்
அவர்கள் மாத்திரம் ஒரு கருத்தைக் கொஞ்சம் மாற்றிச்
சொன்னார்கள். அவர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை
ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா என்பதைப் பின்னாலே
தெரிவிக்க இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அவர்
கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எங்களைக் கலந்து கொண்டு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்க
வேண்டும், அல்லது, கொண்டு வந்திருக்கலாம் என்று கூறினார்
கள். அதோடு அவர்கள் நின்றுவிட்டிருந்தால் கூட எனக்கு
வேறு பிரச்னை எழாது. இன்னொரு கருத்தையும் அவர்கள் குறிப்
பிட்டார்கள். 'எங்களோடு சேர்ந்து கலந்திருந்தால் வேறு
சில காரியங்கள் நடைபெற்று இருக்கலாம்' என்று வேறு கருத்து
தொனிக்கிற வகையிலே—தெளிவாக இல்லை—சொன்னார்கள்.

[முற்பகல் 9.30]

ஆகவே, அவர்களோடு கலந்து பேசப்பட்டிருந்தால் என்ன
விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்பதையும், அந்த விளைவுகள்
ஒருவேளை எதிர்க்கட்சிக்கு லாபகரமான விளைவாக இருக்கு
மானால் அந்த லாபத்தையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் இழந்துவிட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் எடுத்துக்
கொண்டேன்.

ஆனால், நான் இங்கே இந்தப் பேரவையில், பேரவைத் தலை
வர் அவர்களே, தங்கள் மூலம் எடுத்து வைக்க விரும்புவது
என்னவெனில் காலண்டர் கணக்குப்படி ஆறு மாதம் ஆகிறது
ஆட்சி துவங்கி. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு எதிர்
கட்சித் தலைவர் அவர்கள், 'ஆறு மாதம் எப்போது முடிகிறது.
1-ம் தேதி எப்போது விடிகிறது என்று நான் காத்துக்கொண்
டிருந்தேன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே
கொண்டுவருவதற்காக' என்று சொன்னார்கள். நான் இந்தப்
பேரவை முன்னால் வைக்க விரும்புகிறேன். ஜுன் மாதம் 30ம்
தேதி பதவி ஏற்றது இந்த புதிய அரசு, அதை மனதில் வைத்
துக்கொள்ளவேண்டும். ஜுலை, ஆகஸ்ட் திங்கள் இறுதிவரை
யிலும் சட்டமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது. நிதிநிலை
அறிக்கை தொடர் கூட்டம் முடிவுற்றபோது ஆகஸ்ட் தாண்டு
கிறது. இடையில் செப்டம்பர், அக்டோபர். நவம்பர் துவங்கு
கிறபோது புயல் நம்மைத் தாக்கிவிட்டது. நவம்பர், டிஸம்
பர் புயலில்போகிறது. இடையில் இருந்தது இரண்டே மாதங்
கள்தான். அந்த இரண்டு மாதங்களிலே எதிர்நோக்கியுள்ள

பிரச்னைகள், கிளப்பப்பட்ட பிரச்னைகள், உருவாகிய பிரச்னைகள், அந்தப் பிரச்னைகளுக்குப் பின்னால் தோற்றுவிக்கப்பட்ட கிளர்ச்சிகள் இவைகளை எல்லாம் சந்திப்பதற்கு இந்த அரசுக்கு இரண்டுமாத காலத்தில் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும் எண்ணிப்பார்த்தால் இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு அதிகாரபூர்வமான அங்கீகரிக்கப்பட்ட—நேற்றே இது பற்றி விவாதம் நடைபெற்றது—முதல் எதிர்க் கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிற ஒரு எதிர்க்கட்சி தன்னுடைய கட்சிக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்தின் மூலம் கிடைத்திருக்கிற ஒரு பெரிய வாய்ப்பை, கடைசி ஆயுதத்தை எடுத்து களத்தில் இறங்கியவுடனே அவர்கள் வீச ஆரம்பித்தார்கள் என்பதுதான் இன்றைக்கு இந்தப் பேரவையும் இந்தப் பேரவை நடவடிக்கைகள் மூலம் இந்த நாடும் சந்தித்துக்கொண்டிருக்கிறது.

இது ஒரு பிரதான எதிர்க்கட்சியினுடைய ராஜதந்திரத்திற்குரிய நடவடிக்கை ஆகுமா ஆகாதா? அதைப் பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை. அது அவர்களுடைய உரிமை. என் கையில் கிடைத்த ஆயுதம் எதுவானாலும் எடுத்து நான் தாக்குவேன் என்று சொல்வதற்கு ஒருவருக்கு உரிமை இருக்கிறது. அது சட்டப்படி தரப்பட்டிருக்கிற ஆயுதம். அதைத்தான் நேற்று இங்கே பேசியபோது மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சட்டம் உரிமை தந்திருக்கிறது, வாஸ்தவம்தான். ஆனால் நீங்கள் தார்மீக உரிமையை இழந்துவிட்டீர்கள் என்று எடுத்துச் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் பற்றி கொஞ்சம் நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிந்தித்திருப்பார்களேயானால் அவர்கள் காலையில் இந்த தீர்மானத்தை இங்கே முன் மொழிவதற்கு முன்னால் மீண்டும் ஒருமுறை சிந்தித்திருப்பார்களானால்—அவர்களுடைய கருணையான உள்ளமும் அன்புள்ளமும் எனக்குத் தெரியும், ஏனென்றால் இந்த ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்குக் கிஞ்சித்தும் இல்லை என்று அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்தத் தீர்மானம் இப்போது தேவையா என்று அவரே கூட மீண்டும் பரிசீலித்து சே, இது வேண்டாம் இதை விட்டுவிடலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கக்கூடும்.

ஆனால் அவர்கள் இங்கே கொண்டுவந்துவிட்டார்கள். ஆனால் இந்த ஆறுமாத காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு புதிய ஆட்சி, புதிய கட்சியின் ஆட்சி இரண்டு மாத காலம் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து அந்த நிலையில், இரண்டு மாத காலம் இதுவரை இந்த நாடே சந்தித்திராத கோரமான, புயல் வெள்ளம் தாக்குதலுக்கு உள்ளான மக்களுக்கு நிவாரணப் பணி

களை மேற்கொள்வதில் ஈடுபட்டிருக்கிற ஒரு ஆட்சியின் மீது
இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு
வருவதற்கு அவர்களுக்கு எப்படி மனம் வந்தது என்று நான்
கேட்க விரும்பவில்லை. உரிமை இருக்கிறது. இதனுடைய
விளைவுகள் என்ன என்று அவர்களே சொல்லிவிட்டார்கள்.

இந்த அரசு இந்த நெருக்கடி நிலைமைகளில் இந்தக் குறுகிய
காலத்திலேயும் நான் முன்னாலே சொன்ன பிரச்னைகளில்—
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து அடுக்கடுக்காக வைத்
தார்களே, அந்தப் பிரச்னைகளில் எந்தப் பிரச்னையை இந்த
அரசு சந்திக்கத் தவறி இருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பேரவையில் எடுத்து விளக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றில் எந்தப்
பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது, அல்லது எந்தப் பிரச்னை
எடுக்கப்படாமல் இருக்கிறது, அல்லது எந்தப் பிரச்னையைச்
சந்திக்காமல் இருக்கிறது இந்த அரசு?

பட்டியல் போட்டுக் காண்பித்தார்கள். நான் மீண்டும்
சொல்ல விரும்பவில்லை. பல்லவன் போக்குவரத்துத் தொழி
லாளர்கள் போராட்டம்; மருத்துவர் போராட்டம்; மாணவர்
போராட்டம்; விவசாயப் போராட்டம்; டிப்ளமா பொறியாளர்
போராட்டம். இப்படிப் பல்வேறு போராட்டங்களை அடுக்கிச்
சொன்னார்களே, அத்தனைப் போராட்ட உணர்வுகளும், கிளர்ச்சி
உணர்வுகளும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறதா இல்லையா என்
பதைப் பார்த்தால், அத்தனையும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது
என்பதை நான் உங்கள் மூலமாக இந்தச் சட்டப் பேரவை
உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்
கிறேன்.

பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம்
தடுத்து நிறுத்தப்பட்டதா, இல்லையா? அதற்கான விவரங்கள்
இங்கே வைக்கப்பட்டன. நான் அதிலே நுழைய விரும்பவில்லை.
ஆனால், அரசு அதைச் சந்தித்தது. அரசு அந்தப் போராட்டக்
காலங்களில், வேலை நிறுத்தக் காலங்களில் எப்படி சேவை
செய்தது என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். இங்கே
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னதுபோல், தலைவர்கள் சொன்
னதைப்போல் பழிவாங்காத உணர்வோடு, தொழிலாளர்கள்
பக்கத்திலே தாய் அன்போடு, தாய் உள்ளத்தோடு, அவர்
களுடைய கஷ்டங்களை உணர்ந்து., நெருக்கடியான பொருளா
தார நிலையையும் மறந்துவிட்டு, இந்த அரசு அவர்கள் பிரச்
னைக்கு தீர்வு கண்டதா, இல்லையா? அந்தப் பிரச்னை தீர்க்கப்
பட்டதா, இல்லையா? பற்றுக்குறை நிதி நிலை இருந்தும்
கோடி ரூபாய் அளவிலே உதவி அளித்து அவர்கள்
போராட்டத்தைத் தடுக்க, அவர்களுடைய பிரச்னைகளை ஏற்று
[illegible]டதா, இல்லையா?

நான் நேற்று இரவு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒரு பிரசங்கத்தைப் படித்தேன். 1975 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநாட்டிலே செய்யப்பட்ட பிரசங்கம் 1969 ஆம் ஆண்டு அவர்கள் முதல் அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆறு ஆண்டுகள் கழித்துப் பேசுகிறார். இந்த 6 ஆண்டு காலத்திலே நடந்தவைகளை எடுத்து வைக்கிறார்கள். நாட்டு மக்களிடத்திலே இந்த அரசுக்கு எவ்வளவு கஷ்டங்கள் தெரியுமா? அண்ணா மறைந்து விட்டார்கள்; அதற்குப் பின்னாலே போராட்டங்கள் நடைபெற்றன. விவசாயப் போராட்டம் என்று வர்ணிக்கிறார். பின்னர், ஏதோ துப்பாக்கிச் சூடு என்று சொல்லி, அதை ஒரு வார்த்தையில் முடித்திருக்கிறார், 1969லே தொடங்கி, 6 ஆண்டுகள் கழிந்து 1975லே விளக்கம் சொல்கிறார் துப்பாக்கிச் சூட்டைப் பற்றியெல்லாம்.

அன்றைக்கு ஒரு போக்குவரத்துப் போராட்டம் நடைபெற்றது. அதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை திடீரென்று செய்தார்கள். அப்போது பஸ்ஸே ஓடாது என்று எதிர்க்கட்சிக்காரரர்கள் சொன்னார்கள். ஆனால் பஸ்ஸை ஓட்ட வைத்தோம் என்று பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்த முதல் அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அப்படி பேசியிருக்கிறாரா, சொல்லுங்கள். ஆனால் பஸ்ஸை ஓட்டிக் காட்டினார்கள். அது வேறு விஷயம். நிர்வாகத்திலே இருக்கின்றவர்கள் செய்து தீரவேண்டும். எனவே, அதை ஓட்டிக் காட்டினார்கள். ஆனால் சொன்னார்களா? அல்லது அதில் சவால் விட்டார்களா? தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் பிரச்னை வந்தபோது, 20, 30 பிணங்கள் வீழ்ந்தன, அதைத் துப்பாக்கிச் சூடு என்று ஒரே வார்த்தையில் முடித்து விட்டார்கள்.

ஆனால், இங்கே இந்த விவசாயிகள் பிரச்னை வந்தபோது இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தபோதிலும், இரண்டு காசுகளை இந்த ஏழை எளிய விவசாயிகளுக்குக் குறைத்துக் காட்டியது. அந்த வகையிலே 2½ கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. அந்தப் பேச்சிலே அதையும் வைத்திருக்கிறார்கள். அந்த மாநிலத்திலே 16 காசு, அஸ்ஸாம் மாநிலத்திலே 17 காசு அல்லது வேறு மாநிலத்திலே 14 காசு, ஆகவே இங்கே குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் மத்திய அரசு விவசாயத் துறையிலே, விவசாய முனையிலே நீங்கள் வரி விதிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், நாங்கள் எப்படிக் குறைப்போம், துப்பாக்கியை எடுப்போம் என்பதைச் சொல்லாமல் சொல்லி, இங்கே படித்துக் காட்டியிருக்கிறார்கள்.

நான் இவைகளை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்த பலர் பேசினார்கள். என்ன இந்தச்

சட்டப் பேரவையிலே, ஆளும் கட்சியாகிய அனைத்திந்திய
அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், எதிர்க் கட்சி
வரிசையிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்களுக்கும் இப்படி பேச்சு மாற்றங்கள், விவாதங்கள்
நடைபெற்றிருக்கிறதே, இதெல்லாம் நியாயம் தாஞ என்று
கேட்டார்கள். நான் அதைக் கவனத்தில் வைத்து, இங்கே ஒன்
றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுகின்ற கட்சிக்கு அடக்கம் வேண்டும்; பண்பாடு வேண்டும்;
பணிவு வேண்டும்; பொறுமை வேண்டும். இதைவிட தலையாய
எதிர்க் கட்சிக்கு அடக்கம் வேண்டும்; பண்பாடு வேண்டும்; பணிவு
வேண்டும் பொறுமை வேண்டும். இன்னும் இதைவிட ஒருபடி அதிக
மாக, ஆளுகின்ற பொறுப்பிலே இருந்து, எதிர்க் கட்சிக்கு
தள்ளப்படுகின்றுர்களே, அந்தக் கட்சிக்கு இன்னும் அதிகமான
அடக்கமும், பொறுமையும், பணிவும் வேண்டும். இல்லையாஞல்
ஜனநாயகத்தை உருவாக்க முடியாது கட்டிக் காக்க முடியாது

[முற்பகல் 9.40]

ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுகள் ஒரு ஆளுகிற கட்சியாக
இருந்து எதிர்க்கட்சி வரிசையிலே வந்து உட்கார்ந்த காரணத்தா
லேயே கடந்த கால வரலாறுகளை இந்த நாட்டு மக்கள் மறந்து
விடுவார்கள், அல்லது கடந்த கால சட்ட மன்ற நிகழ்ச்சிகளை
எல்லாம் இந்தச் சட்டப் பேரவை மறந்து விடும் என்று எண்ணிக்
கொண்டு குற்றச் சாட்டுகளை எடுத்து அவைமுன் வருகிறபோது
ஆளுகிற பொறுப்பில் இருக்கிற எந்தக் கட்சியாஞலும் நீங்கள்
இருந்த அந்தக் காலத்தில் என்ன செய்தீர்கள். யார்ட் ஸ்டிக்
என்ன, எப்படி நீங்கள் அணுகினீர்கள் என்று பதில் சொல்ல
வேண்டிய கட்டாயத்திற்கு ஆளும் கட்சி தள்ளப்படுமா? மாட்
டாதா? என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அந்த விவாதம் வரத்தான் செய்யும். ஏனென்றுல் ஆண்ட
வர்கள், ஏழாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர்கள்,
ஒன்பதாண்டுக் காலம் அமைச்சரவையில் இருந்தவர்கள், அனைத்
துப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டிருந்தவர்கள், ஆளும்
கட்சித் தலைவராக விளங்கியவர்கள், இன்றைக்கு எதிர்க் கட்சி
யில் உட்கார்ந்து கொண்டு மூச்சுவிட நேரம் இல்லாமல் அரசு
இருக்கிற நேரத்தில் 'நீங்கள் இதைச் செய்தீர்களா? அதைச்
செய்தீர்களா?' என்று கேட்கிறபோது, வரலாறுகளை எடுத்து
உங்கள் முன்ஞல் வைத்து பல்லவன் போக்குவரத்துத் தொழி
லாளர்களுக்காக வாதிட்டீர்களே, சரி; உங்கள் காலத்தில் என்ன
நடைபெற்றது? நாங்கள் பதில் கேட்க மாட்டோமா?

ஆகவே, பிரச்சினையை விவாதிக்கிற உணர்வுகள் எந்தக் கட்சி
[illegible]ஞலும், மாநிலமாஞலும், அது மத்தியிலாஞலும் நடை
[illegible]க்கொண்டுதான் இருக்கும். இதை மாற்ற முடியாது. இது
[illegible] தந்திருக்கிற ஒரு மரபு, வழி காட்டுதல். ஆகவே,

இந்தப் பிரச்சினைகளிலே எதிர்க்கட்சி நண்பர்கள், மாண்புமிகு
உறுப்பினர்கள்இந்த அடிப்படையை உணர்ந்து கொள்ளவேண்டும்.
அந்த உணர்விலே சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க
விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
இந்தத் தீர்மானத்தை ஏன் இவ்வளவு விரைவில் கொண்டு வந்
தார்கள்? அதற்குரிய காரணம் என்ன அல்லது அவசரம் என்ன
என்றெல்லாம் இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர்களும்
உறுப்பினர்களும் கேட்டார்கள். நான் ஒன்றைத் தெளிவுபடுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டமன்ற வரலாற்றில்
ஒரு ஆறு மாத காலத்திற்குள்ளே ஒரே ஒரு முறைதான் ஒரு
அமைச்சரவை அமைந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வரப்பட்டிருக்கிறது; 1957ஆம் ஆண்டிலே, பெருந்தலைவர்
காமராஜர் தலைமையில் அமைந்த ஆட்சியை எதிர்த்து அன்றைக்கு
ஒரு தீர்மானம் ஆறுவது மாதத்திலே கொண்டு வரப்பட்டிருக்
கிறது. அதற்கு ஒரு விதிவிலக்கு என்னவென்றுல் 1957-ல் புதிதா
கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் என்றுலும் அவர் முன்ஞலே
இந்த நாட்டை, மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த முதலமைச்
சர்—முன்ஞலே இருந்த காங்கிரஸ் அமைச்சரவையின் முதல்
அமைச்சர்.

இப்போது புதிதாக இந்த அரசிலே ஒரு அமைச்சரவை
அமைந்திருக்கிறது. இந்த அமைச்சரவையை அமைத்திருக்கும்
அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின்
மீது அவசரம் அவசரமாக—நான் ஆத்திரமாக என்று சொல்ல
வில்லை, சொல்லமாட்டேன்; ஏனென்றுல் 'நான் ஆத்திரப்
படவில்லை' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி
விட்டார்கள். அல்லது ஆட்சியைக்கவிழ்க்க என்று சொல்ல
மாட்டேன் அதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆஞல்
ஏன் கொண்டு வந்தார்கள் என்பதற்கான காரணங்களை இங்கே
எடுத்து விளக்கியிருக்கிறுர்கள்.

இதற்கு முன்ஞலே கொஞ்சம் உங்கள் கவனத்தை திருப்பி
ஐந்து ஆண்டுக் காலத்திற்குப் பின்ஞலே சென்று பார்க்க விரும்பு
கிறேன். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாள், இன்
றைக்கு ஆளுகிற கட்சியாக உரிமை பெற்றிருக்கும் இந்த நாட்டு
மக்களால் உரிமை வழங்கப்பட்டிருக்கும் இந்தக் கட்சி தோன்றிய
நாளில் இருந்து இதை அழித்து ஒழிப்பதற்கு அன்றைய முதல
மைச்சர் அவர்கள் திட்டமிட்டார்கள். அதைவிட இன்னென்றும்
சொல்லுகிறேன். ஒரு கட்சி ஆட்சியில் இருக்கிறபோது தேர்தல்
முடிந்து எந்தக் கட்சி ஆட்சிக்கு வரப்போகிறது என்பது நாட்டு
மக்கள் தர வேண்டிய தீர்ப்பு. ஆஞல் அன்றைய முதலமைச்சர்
அந்த உரிமையைத் தன்னுடைய கையிலே எடுத்து வைத்துக்
கொண்டு இந்த மாநிலத்தை எம். ஜி. இராமச்சந்திரன் ஆள
முடியும் என்று எண்ணுகிறுர்; நான் கீழே இறங்கிஞல் இந்த

நாட்டை காமராஜர் ? ஆளுவாரே தவிர, இராமச்சந்திரன் அல்ல என்று சொன்னார். அது அவர்களுடைய உரிமை; அந்த உரிமையில் குறுக்கிடவில்லை. ஆனால் அவர் இன்றைக்கு அவசரமாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. அண்ணா அவர்களுடைய அமைச்சரவை மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்களாலே கொண்டுவரப்பட்ட போது அண்ணா அவர்கள் ஆரம்பத்திலேயே சொன்னார்கள்.

'' நீங்கள் என்றைக்குத்தான் நம்பினீர்கள், இன்றைக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதற்கு '' என்றார். ஆகவே அண்ணா அவர்கள் சொன்ன வாதத்தையே தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் என்றைக்குமே எங்களை நம்பவில்லை, இருந்தாலும் இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஜனநாயக மரபின்படி, பெரும்பான்மையின்படி ஆளுகிற கட்சியின் தலைவராக முன்னாள் முதல்வராக இருந்தவர்கள் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர் சொல்லுகிறார் பொதுமக்களிடத்தில் '' நான் இறங்கினால் மீண்டும் நான் தான் வருவேன் ''. அப்படி சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால், '' நான் இறங்கினால் எம். ஜி. ஆர். வரமுடியாது. காமராஜர் தான் வருவார்கள் '' என்று சொன்னார்கள். ஆனால் நாட்டு மக்கள் வேறு விதமாக தீர்ப்பு அளித்து விட்டார்கள். அதை அவர்களுடைய கனிவான இதயம் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறது. இல்லையென்றால் இன்றைய ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து, தொடர் சங்கிலி போல் பல சம்பவங்கள் நடந்து கொண்டிருப்பதை எண்ணிப் பாருங்கள். அந்த நடவடிக்கைகளை எண்ணிப் பாருங்கள்.

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது பொழுது—நான் ஜேம்ஸ் அவர்களுக்கும் சொல்லுகிறேன். மாண்புமிகு லத்தீப் அவர்களுக்கும் சொல்லுகிறேன்—எங்களை கலக்காமல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டார்கள் என்று சொன்னீர்கள்—அன்றைக்கும் சட்டசபை நடந்துகொண்டிருக்கும் போது, இலங்கை தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். அங்கே வதைக்கப்படுகிறார்கள். இந்த நாட்டுக்குரிய குடிமக்கள் எல்லோரும் கிளர்ந்து எழுகின்ற நேரத்தில், இந்த நாட்டின் இதயம் போன்று இருக்கின்ற சட்டமன்றம் நடந்து கொண்டிருந்த நேரத்தில்தான்—உங்களை எல்லாம் கேட்காமல்—எங்களை கேட்கமாட்டார்கள்—நான்தான் அதற்குரிய காரணத்தைச் சொல்லிவிட்டேன்—ஆனால் உங்களைக் கேட்காமல் பேரணியை நடத்திவிட்டு இங்கே வந்து அமர்ந்தார்.

என்ன காரணம் ? அவர்களால் இந்த ஆட்சியை தாங்கிக் கொள்ள முடியவில்லை. விட்டேனா பார், எனக்கு என்ன சக்தி

இருக்கிறது என்று பாருங்கள் என்று காண்பிப்பதற்கு அன்றைக்கு துவங்கிய சம்பவங்கள் தான் தொடர் சம்பவங்களாக—திருமதி இந்திரா காந்திக்கு கறுப்புக் கொடி—அதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் பின்னால் சொல்லுகிறேன். அதவுடைய இறுதிகட்டமாக சட்டமன்றம அனுமதிக்கின்ற சட்ட பூர்வமான உரிமையை, தலையான உரிமையை எடுத்துக் கொண்டு அமைச்சரவை மீது—எல்லா முயற்சிகளும் தோற்றுவிட்டதற்குப் பிறகு கடைசி முயற்சியாக—நம்பிக்கையில்லை என்று நாட்டுக்கு அறிவிக்கிறோம் என்று சொல்லுகிற அந்த உரிமையை கையில் எடுத்துக் கொண்டு அந்த கணையை எடுத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே இதனுடைய விளைவுகளை பற்றி நான் விரிவுபடுத்திக் கொண்டிருக்க விரும்பவில்லை. இந்த அரசின் நடவடிக்கைகளைப் பற்றி சில பலவற்றைஎடுத்து வர்ணித்தார்கள் பத்திரிக்கைத் துறையை எடுத்துக்கொண்டு ஒரு அறிக்கையை தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் மாண்புமிகு சௌந்தரபாண்டியன் அவர்கள் குடகனாறு பற்றிய அறிக்கையை அனுப்பினார்கள். அந்த அறிக்கை பின்னால் திரும்பப்பெறப்பட்டது, என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிட்டதால் அதைப்பற்றி என்ன நடந்தது என்பதைப் பற்றி சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. அமைச்சர் அவர்கள் குடகனாறு பகுதிகளுக்கும் திருச்சி பகுதிகளுக்கும் புயல் ஏற்பட்ட நேரத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு. ஒரு அறிக்கையை அரசுக்கு தருவதற்காக அறிக்கையை தயாரித்து கொடுத்து, அதை ரோனியோ பண்ணச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை பத்து பக்கத்திற்கு மேற்பட்டது. ஆனால் செய்தித் துறையினர் அதை பத்திரிகைகளுக்கெல்லாம் கொடுத்துவிட்டார்கள். பின்னால் அது பத்திரிகை செய்தி அல்ல. முதலமைச்சர் அவர்களுக்கு தர வேண்டிய அறிக்கை என்று சொல்லி அதை வாங்கியிருக்கிறார்கள். இதில் ஒளிவு மறைவு ஒன்றுமே கிடையாது.

இதற்கு முன்னால் நடைபெற்ற சம்பவங்களையும் எண்ணிப் பார்க்கவேண்டும், அவர்கள் பேசுகிற போது ஒரு செய்தியை குறிப்பிட்டு இது வெளி வந்த ஒரு பத்திரிகை உங்களுக்கு அதிகமான நெருங்கிய பத்திரிகை தானே, உடனடியாக மறுப்பு தெரிவித்திருக்கலாமே என்று சொன்னது மாத்திரமல்ல, வேறு பிரச்னைகளுக்குப் பதில் அளிப்பதற்கு பத்திரிகையாளர்களையும் சந்தித்தார்கள். பத்திரிகையாளர்களுக்கு அன்றையதினம் பெரும் மகிழ்ச்சியாகவும் இருந்தது என்று சொன்னார்கள்.

[முற்பகல் 9-50]

பத்திரிகைகாரர்களுக்கு எதிலே மகிழ்ச்சி வருகிறது, எதிலே மகிழ்ச்சி இல்லை என்று எங்களால் தெரிந்து கொள்ள முடியாது. நாங்கள் நடைபெற வேண்டிய காரியங்களை ஒழுங்காக நடத்திக்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 சனவரி 7

கொண்டு இருக்கிறோம். அவர்களைச் சந்திக்க வேண்டிய நேரத்
திலே முதலமைச்சர் அவர்கள் சந்திக்கிறார்கள் அல்லது மற்ற
அமைச்சர்கள் சந்திக்கிறார்கள். சந்திக்க வேண்டிய அவசியம்
இல்லை என்றால் துறையினர் மூலமாக அறிக்கைகள் தரப்படு
கின்றன. இதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது.
அறிஞர் அண்ணா அவர்கள் கூட பத்திரிகைகாரர்களை எப்
போதுமே சந்தித்துக் கொண்டிருக்கவில்லை. பத்திரிகைகாரர்
களைச் சந்திக்காத மிகப் பெரிய தலைவர்களிலே அறிஞர்
அண்ணா அவர்களும் ஒருவர். அந்த வழியைப் பின்பற்றி அடக்க
உணர்வோடு, பண்போடு தேவையானால் பத்திரிகையாளர்களைச்
சந்திக்கவேண்டுமென்ற ஒரு கருத்தை இந்த அரசு கடைப்
பிடித்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விருப்பம் என்ன
என்று எனக்குத் தெரியாது. அவர்களும் சொல்வார்கள். நீங்
கள் அடிக்கடி பத்திரிகைகாரர்களைச் சந்திக்க மறுக்கிறீர்கள்
என்ற குற்றச்சாட்டை, இங்கல்ல, வெளியிலே கூறுகிறார்கள்,
மறுக்கிறார்கள், சந்திக்கப் பயப்படுகிறார்கள் என்று எல்லாம்
சொல்லியிருக்கிறார்கள். இப்படித்தான் சட்டமன்றத்தைச் சந்
திக்கப்பயப்படுகிறார்கள் என்று சொல்லிக் கொண்டு வந்த
வரலாற்றை இந்த நாட்டிலே உள்ள மக்கள் பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு சம்பவத்திற்கு உடனே
காரணங்களைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். பத்திரிகைகாரர்
களைச் சந்திக்க வேண்டுமென்று இன்றைக்குச் சொல்கிறவர்கள்
அவர்கள் ஆட்சி செய்தபோது இந்தப் பத்திரிகைகளின் வாயை
எப்படி அடைத்தார்கள் என்பதை நான் பேரவைத் தலைவர்
அவர்களே, தங்கள் அனுமதியோடு சொல்ல விரும்புகிறேன்.

1975 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் ஒரு நாள்
காலையிலே திடீரென்று எல்லா பத்திரிகையாளர்களையும் தொலை
பேசி மூலம் அழைக்கிறார். எல்லோரும் முதலமைச்சர் அழைக்
கிறாரே என்று ஓடிவருகிறார்கள். உடனே அவர்களிடம் ஒரு
செய்தியைத் தருகிறார்கள். நான் தி.மு.க. தலைவர்
பதவியிலிருந்தும் இந்த முதலமைச்சர் பதவியிலிருந்தும் ராஜி
னாமா செய்யப் போகிறேன் என்று பத்திரிகைகளுக்குச் செய்
தியைச் சொல்லிவிடுகிறார்கள். உடனே அது பறக்க ஆரம்
பித்து விடுகிறது. அதற்குள்ளே கட்சி நண்பர்கள் தோழர்கள்
இது என்ன, அவசரப்பட்டு சொல்கிறீர்களே என்று கேட்டார்
கள், இப்படி உடனே அறிவித்திருக்கிறார்கள், அது அவர்களு
டைய இயல்பு. எப்போதும் உடனே முடிவெடுத்து அறிவிக்கும்
முதலமைச்சர் என்று பெயர் பெற்றவர் ஆயிற்றே. திரு
ஜெயப்பிரகாஷ் நாராயண் பரிசுச் சீட்டை நிறுத்துங்கள்
என்று கூட்டத்திலே சொன்னவுடனே சட்டமன்றத்தைக் கூடக்
[illegible]மல் கேபினட்டைக் கேட்காமல் அறிஞர் அண்ணா அவர்கள்

1978 சனவரி 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பரிசு சீட்டைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்
பதைக் கூட உணராமல், இந்தா விபீஷணா, பிடி இலங்காபுரி
ராஜ்யம் என்று ராமன் கொடுத்தது போல் அறிவிப்பதிலே அவர்கள்
வல்லவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் இப்படி அவசரப்பட்டு
ஒரு முடிவைத் தெரிவித்து விட்டீர்களே என்று நண்பர்கள் கேட்ட
தும் உடனடியாக முடிவு மாற்றிக் கொள்ளப்படுகிறது. அது
இயல்பு. ஒரு முடிவு எடுப்பதும் அந்த முடிவை மாற்றிக்
கொள்வதும் இயற்கை. உடனே என்ன செய்தார் என்றால் பத்
திரிகைகாரர்கள் அந்தச் செய்தியை பத்திரிகைகளிலே போடக்
கூடாது என்று அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தித் தெரிவித்து
இருக்கிறார்கள். பத்திரிகைகளின் காரியாலயங்களுக்கு போலீஸ்
காரர்கள் செல்கிறார்கள், என்ன சேதி, இன்று சாயந்திரம் ஏதா
வது வரப்போகிறதா ஏன் தொல்லை கொடுக்கிறீர்கள் என்று
கேட்கிறார்கள். இது இரண்டாவது சுதந்திரப் போராட்ட வீரர்கள்
என்று தங்களை வருணித்துக் கொள்கிற தி. மு. க. அந்த
அவசர நிலையினுடைய அனுமதிகளை வைத்து பலன்களை பெற்றுக்
கொண்டிருந்த நேரத்திலே நடைபெற்றது. அவசர நிலையின்
மூலம் பெறப்பட்ட அதிகாரம் அங்கே பயன்படுத்தப்பட்டது.
பத்திரிகையாளர்கள் எல்லாம் தடுக்கப்படுகிறார்கள். செய்தி
யைப் போட்டால் சாயந்திரம் உங்களுடைய பத்திரிகை மார்க்
கெட்டில் வராது. நடைபெற்ற சம்பவம் தெரியுமா? ஒரு நாள்
பத்திரிகை வராவிட்டால் என்ன நஷ்டம் ஆகும் தெரியுமா?
சூடுகண்ட பூனையே ஜாக்கிரதை என்று மிரட்டுகிறார்கள். அங்கே
உள்ள பத்திரிகையாளர்களின் வாய் அடைக்கப்படுகிறது. அவசர
நிலை தந்த அதிகாரத்தின் மூலம் இந்த நிலை ஏற்பட்டது. ஆனால்
டில்லியில் இருக்கிறவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.
ஒரு பத்திரிகை அந்தச் செய்தியைப் போட்டவுடன், மறுநாள்
டில்லியிலிருந்து அந்த பத்திரிகை வருகின்ற காரணத்தாலே
குறைந்த அளவிலே தான் வருகிறது. அங்கே
போகிறது போலீஸ். பறிமுதல் செய்வதற்கான அர
சாங்கத்தினுடைய உத்தரவைப் பெற்றுக் கொண்டு போலீஸ்
சென்று அந்தப் பத்திரிகைக் கட்டுகளைப் பறிமுதல் செய்து
கொண்டு வருகிறது.

தயவுசெய்து ஒரு சம்பவத்தை நான் இந்தச் சட்டப்
பேரவைத் தலைவரவர்கள் மூலம் இந்த நாட்டிலே இருக்கின்ற
பத்திரிகையாளர்களைக் கேட்க விரும்புவதெல்லாம், இந்த
ஆறு மாத காலத்திலே இந்தச் செய்தியை இப்படிப் போடுங்கள்
என்று யாராவது, எந்த அமைச்சராவது சொல்லியிருக்கிறார்
களா? நான் முதலமைச்சரவர்களுடைய சார்பிலே தெரி
வித்துக் கொள்கிறேன். அந்தத் துறையைப் பொறுப்பேற்றுக்
கொண்டிருக்கின்ற காரணத்தால் பிறரை அடக்க முடியும் என்று
போட்ட செய்திகளை நிறுத்துங்கள் என்று மிரட்டியது உண்டா?

தாக்கி எழுதிய குமுதம் தாக்கப்பட்ட வரலாற்றை இந்தச்
சட்டமன்றம் அறிந்து வைத்திருக்கிறது. தாக்கி எழுதிய

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 சனவரி 7

காரணத்தால் ஆனந்தவிகடன் தாக்கப்பட்ட செய்தியை இந்தச்
சட்டமன்றம் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச்
ஒத்துழைக்காமல் மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிக்கிறது அரசோடு
காரணத்தால் நூற்றாண்டுக்கால பாரம்பரியத்தை வைத்துக் என்ற
டிருக்கின்ற இந்து நாளேடு என்ன துன்பங்களுக்கு கொண்
பட்டது என்பதையும் இந்தச் சட்டப்பேரவை ஆளாக்கப்
கொண்டிருக்கிறது. தெரிந்து வைத்துக்

நான் பத்திரிகையாளர்களை இந்தச் சட்டப்பேரவையின் மூல
மாக, தலைவரவர்களின் மூலமாகக் கேட்கிறேன். அப்படி யாராவது
இந்த ஆறுமாத காலத்திலே மிரட்டப்பட்டார்களா? தடை போடப்
பட்டதா? சொல்லுங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை
அமைக்க, சட்டம் வழங்கியிருக்கின்ற ஒரு மாண்புமிகு முதலமைச்
சரவர்களை எப்படியெல்லாம் வருணித்துக் கொண்டிருக்கிறார்கள்,
செய்தி போடுகிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நாங்கள்
கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோமா?

ஆகவே, இந்தப் பத்திரிகைப் பிரச்னையில் இவர்கள் உள்ளே
நுழைந்து இந்தப் பத்திரிகையில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்,
அதில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று சொன்னதன் தொடர்
விளைவாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு
அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற பொழுது ஒரு
பரிசுச் சீட்டு விவகாரத்திலே முரசொலி அலுவலகத்திற்குள்ளே
போலீஸ் நுழைந்து தகவல்களைக் கேட்டது. நடக்கலாமா?
என்று கேட்டார்கள். தலைவரவர்களே, இங்கே கூட ஒரு
தகவலைச் சொன்னார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது எழுப்பப்பட்ட ஒரு
உரிமைப் பிரச்னைக்கான தகவல் எங்கேயிருந்து யார் மூலம்
வந்தது என்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது இந்த மாநிலத்
தினுடைய ஆளுநர் அலுவலக வட்டாரத்திலிருந்து எனக்குக்
கிடைத்தது என்று தெரிவித்தார்கள். இப்படி அவர்களால்
உருவாக்கப்பட்டு, இன்றைக்கும் இந்த அரசுக்கு விசுவாசமாக
நடந்து கொள்ளாமல்—அது உண்மையா பொய்யா என்பதை
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவிக்க இருக்கிறார்கள்—
ஆனால் அவர்கள் சொன்னதன் அடிப்படைக் கருத்தைத்தான்
கவனிக்கவேண்டும். எந்த ஆட்சி மாறினாலும், அமைக்கப்
பட்டிருக்கின்ற மெஷினரி எப்படிக் கறைப்படுத்தப் பட்டிருக்
கிறது என்பதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே
இங்கே சான்று தந்திருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் வெங்கடாத்திரி கமிஷனுடைய ஒரு அறிக்கை
தரப்பட்டிருக்கிறது. அதை நாங்களெல்லாம் கூட பார்க்க
வில்லை. அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் பார்த்திருக்
கிறார்கள் அல்லது முதலமைச்சரவர்கள் பார்த்திருக்கலாம். எங்

1978 சனவரி 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

களுக்கு அவசியம் வருகிற பொழுது அது வரும். நாங்கள் பார்க்
கிறோம். அதிலே தரப்பட்டிருக்கின்ற ஒரு பகுதியை ஜஸ்டிஸ் நீதிபதி
—வெங்கடாத்திரி அளித்திருக்கின்ற அறிக்கையிலேயிருந்து ஒரு
பகுதியை டைப் செய்து மேலவையிலே படிக்கிறார்கள். அதிலே
என்ன இருக்கிறது? அதை இந்தச் சட்டப்பேரவையும்,
மேலவையும் விவாதிக்க இருக்கிறது. புலி வருகிறது, புலி
வருகிறது என்று சொல்கிறார்களே அந்தப் புலி அட்டைப் புலியா
அல்லது உண்மையான புலியா? அந்த அட்டைப் புலியைத்
தயார் செய்தது யார்? மாண்புமிகு அமைச்சரவர்கள் மீது
குற்றம் சொன்னவர்கள் இன்றுவரையில் கிடைக்கவில்லை. அந்த
நீதிபதி ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டப்பேரவை
சந்திக்க இருக்கிறது. நான் அதைப்பற்றி தலையிட விரும்ப
வில்லை.

ஆனால் நிர்வாகத்திலே இப்படிப்பட்ட சிலபேர் இருக்
கிறார்கள் என்பதையும், இவைகளையெல்லாம் உள்ளடக்கிய நிர்
வாக இயந்திரத்தையும் இந்த ஆட்சி சந்தித்துக் கொண்டிருக்
கிறது என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு
வருவதற்காகச் சொல்கிறேன்.

அருமை நண்பர்களே, (குறுக்கீடு) மன்னிக்கவும், அருமை
பேரவைத் தலைவரவர்களே, பரிசுச் சீட்டு பற்றிய ஒரு குற்றச்
சாட்டு, பரிசுச் சீட்டைப்பற்றி ஒரு தவறு நடைபெற்றிருப்பதாகச்
செய்தி வருகிறது. அது தவறு என்பது உண்மையானால் யாரும்
ஏற்றுக் கொள்ளலாம், அதிலே யாருக்கும் கருத்து மாறுபாடு
கிடையாது. ஆனால் பரிசுச் சீட்டு என்ன முதலமைச்சருடைய
அச்சகத்திலேயா அடிக்கிறார்கள்?

[முற்பகல் 10·00]

அல்லது முதலமைச்சர் பார்வையிலே நடைபெறுகிறதா,
அல்லது நிதி அமைச்சர் மேற்பார்வையிலே நடைபெறுகிறதா?
போன தடவை ஒரு விவாதத்திற்கு முன்னாள் முதலமைச்சர
வர்கள் பதில் சொன்னார்கள். நிதி இலாகாவினுடைய பொறுப்
பிலே இருக்கிற நிதி அமைச்சர் கையெழுத்து போட்டு பணம்
எடுக்கக்கூட முடியாது என்ற தகவலை எங்களுக்குக் கற்றுத்
தந்தார்கள்.

அதைப் போல், இதிலே, இலட்சக்கணக்கிலே அச்சடித்து
விற்பனை செய்கிற பரிசுச் சீட்டில் மாண்புமிகு முதலமைச்சருக்கோ
நிதி அமைச்சருக்கோ அல்லது இந்த அரசுக்கோ நேரடிப்
பொறுப்பா இருக்கிறது? தவறு இருந்தால், அரசின் கவனத்
திற்கோ, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கோ அல்லவா
தெரிவித்து இருக்க வேண்டும்? ஏனென்றால் நாட்டு மக்களுடைய
நன்மையைக் கருதுவதற்காக, நாட்டு மக்களாலே தேர்ந்தெடுக்
கப்பட்ட பிரதிநிதிகள் அல்லவா நாம்? ஆனால், இதை

வாங்கி வைத்துக் கொண்டு அது எப்படி வந்திருக்கிறது
என்பதை நான் தலைவரவர்களுடைய அனுமதியோடு படிக்க
இருக்கிறேன் ; வாங்கி வைத்துக் கொண்டு—அந்தப் பரிசுச்
சீட்டு குலுக்கல் நாள் அன்று காலையிலே ' கிளைமாக்ஸ் ' போல்,
' பரிசுச் சீட்டில் ஊழல்! ', அதுவும் இரண்டு வண்ணத்திலே
அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதுவும் என்ன ஊழல் ?
அவசரத்திலே, இலட்சக்கணக்கிலே அச்சடிக்கும்போது, இரண்
டாவது சீட்டு அச்சடித்து விட்டார்கள் என்று அப்படி நடந்
திருந்தாலும், அதிகாரிகள் பேரிலே, பொறுப்பானவர்கள்
பேரிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், இந்த
செய்தியைப் பார்த்த பிறகு இந்த அரசுக்கு என்ன எண்ணம்
ஏற்பட்டது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. பேரவைத்
தலைவர் அவர்களே, உங்களுக்கு என்ன எண்ணம் ஏற்பட்டது
என்பதைச் சொல்லுங்கள். இந்தப் பரிசுச் சீட்டை ஒருவர்
திருச்சியிலே வாங்குகிறார். நான் ஒரு சம்பவத்தைச் சொல்லி
விட்டு மேலே தொடருகிறேன். பரிசுச் சீட்டு வாங்குகிறவன்,
ரூ. 1-க்கு வாங்கினால், இலட்சம் கிடைக்கும் என்ற அந்த
எண்ணத்திலேதான் வாங்குகிறான்—அதில் பரிசுச் சீட்டி
னுடைய அந்த எண்தான் முக்கியம். ரூ. 1 கொடுத்து அந்தச்
சீட்டை வாங்கியவுடனே எவனுடைய பார்வையும் ' நம்பர் '
எண் மீதுதான் செல்லும். எவனுடைய பார்வையும், ரூ. 1
கொடுத்து, 1 இலட்சம் பெறுவதற்கு நுழைய வேண்டுமானால்
அவன் எண் என்ன என்றுதான் பார்ப்பான். ஆனால், முர
சொலிக்குத் தகவல் தந்தவர் அதைப் பார்க்கிறாரா ; திருச்சியிலே
வாங்குகிறார் ; சரி, வாங்கியதற்குப்பிறகு எண்ணைப் பார்க்க
வேண்டும். தவறு என்றால், உடனே என்ன செய்யவேண்டும் ?
கடைக்காரனிடத்திலே போய் கொடுக்கவேண்டும்.
அங்கேயும் கொடுக்கவில்லை. சரி ; அடுத்தபடியாக சென்னைக்கு
வந்து விட்டார். அவர் சென்னையிலே இருக்கிறவர், திருச்சியிலே
வாங்குகிறார், அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ஐயா,
இப்படி ஒரு எண் இல்லாமல் ஒரு சீட்டு
இருக்கிறது என்று சொல்லியிருக்கவேண்டும். அதையும் செய்ய
வில்லை. நேரே, உடனடியாக, முரசொலி காரியாலயத்திற்குக்
கடிதம் எழுதுகிறார். முரசொலி என்ன பரிசுச் சீட்டு இயக்குநர்
அலுவலகமா என்பதை நான் பேரவைத் தலைவர் மூலம் கேட்க
விரும்புகிறேன். அவர் என்ன எழுதுகிறார், இது குறித்து.
' உதாரணமாக பக்கத்திலே இருக்கும் பரிசீச் சீட்டு 19—10—77
அன்று குலுக்கப்படவிருக்கும் சீட்டு ஆகும். இதில் AK
என்று வரிசைதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, எண்கள்
இல்லை. இது திருச்சி பேருந்து சந்திப்பில் விற்பனைக்கு வந்த
சீட்டாகும். இந்தச் சீட்டை வாங்கிய நபர் அதில் எண்கள்
இல்லாததைக் கவனிக்கவில்லை. இது குறித்து திரு. விஜய
குமாரன் என்பவர் முரசொலிக்கு—சென்னைக்கு— கடிதம்
[illegible]கிறவர் எண் இல்லாததைக் கவனிக்கவில்லையாம். ' இது
[illegible] திரு. ஆர் விஜயகுமாரன் என்பவர் முரசொலிக்கு எழுதி

யிருக்கும் கடிதத்தின் விவரமாவது : '' நான் கடந்த 15-ம் தேதியன்று திருச்சி பஸ் நிலையத்தில் ஒரு தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினேன். ஆனால், அந்தப் பரிசுச் சீட்டில் AK என்று வரிசை மட்டும் தான் இருந்தது. ஆனால் எண்கள் இல்லை. ஒரு சமயம் எனக்குப் பரிசு விழுந்தால் எப்படி நான் வாங்குவது ? இல்லாவிட்டால் இதுவும் ஒரு ஊழலா ?............... '' எப்படி பரிசு வாங்குவது என்று கேட்கவேண்டியவர்களிடத்திலே, சொல்ல வேண்டியவர்களிடத்திலே அல்லவா சொல்ல வேண்டும். இது ஒரு குற்றச்சாட்டு.

அதிலே இன்னொன்று வருகிறது. இங்கே தான் எப்படித் தகவல்கள் வருகின்றன என்பதை வைத்து, பேரவைத் தலைவர் அவர்களே அரசின் முடிவு எப்படி இருக்கவேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும்.

அடுத்தாற்போல் ஒரு குற்றச்சாட்டு. இவரும் எங்கே வாங்கியிருக்கிறார் ? யாரிடத்திலே குற்றம் சாட்டுகிறார் ? இது தான் குற்றச்சாட்டு. இம்மாதிரி திருச்சியிலே, பரிசுச் சீட்டு வாங்கி ஏமாந்த சென்னைத் தோழர் முரசொலிக்குத் தகவல் தந்து இருக்கிறார். முரசொலியில் என்ன வருகிறது ? '' திருச்சியில் மட்டும் இப்படி நடந்திருந்தால் ஏதோ விபத்துபோல தவறுதலாக ஒரு சீட்டு இப்படி ஆகிவிட்டது—என்று கருதலாம். இதனால் இந்தியா முழுவதிலும் இத்தகைய எண்கள் இல்லாத பரிசுச் சீட்டுகள் விற்பனையாகியிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன''. பெங்களூரில் ஒன்று. முதலில் திருச்சியில் ; அடுத்தாற்போல் பெங்களூரில்.

'' பெங்களூரில் மல்லேசுவரம் பகுதியில் வாழ்கின்ற ஒருவர் ஒரு ரூபாய் கொடுத்து பரிசுச் சீட்டை வாங்கி, வீட்டில் சென்று பார்த்தால் ''— அவர்கூட அங்கேயே நம்பரைப் பார்க்கவில்லை—'' வீட்டில் சென்று பார்த்தால் அதில் ஏ. கே. என்று மட்டும் அச்சிடப்பட்டிருக்கிறதே தவிர எண்கள் இல்லை. இது குறித்து ''................... பாருங்கள் அவருக்கும் தெரிவிக்க வேண்டிய இடம்—நபர் யார் என்று தெரியவில்லை—திருச்சியிலே வாங்கியவர் தெரிவிக்க வேண்டிய இடம் முரசொலி. இந்த மல்லேசுவரத்திலே சீட்டு வாங்கியவர் தெரிவித்த இடம் எது தெரியுமா ? '' இது குறித்து சித்தூர் நகர தி. மு. க. முன்னாள் அவைத் தலைவர் திரு. கே. எர்ரையா நமக்கு எழுதி இருக்கும் கடிதத்தில் குறிப்பிட்டதாவது.........'' அவர் குற்றச்சாட்டை சித்தூருக்கு அனுப்புகிறார். சித்தூரில் இருக்கும் நபர் இங்கே இருக்கும் முரசொலிக்கு அனுப்புகிறார். எவ்வளவு அக்கறை பாருங்கள்!

நாட்டிலே தவறு நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்டுபிடித்து தவறை நீக்கவேண்டுமென்று அக்கறை கொண்டவர்கள், ஒரு ரூபாய் கொடுத்து ஒரு பரிசுச் சீட்டு வாங்குகிறார்.

லட்சம் ரூபாய் போய்விடப் போகிறதே என்று பரிதாபத்திற்குரிய. அந்த நபர் எங்கெங்கெல்லாம் ஓடி அலைகிறார் பாருங்கள்! பெங்களூரிலிருந்து சித்தூருக்கு வந்து முரசொலிக்குப் போகிறது. ஏன் முரசொலிக்குப் போலீஸ் வருகிறது. என்பதற்காகத்தான் சொல்கிறேன். இங்கே இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதைப் போடுகிறது முரசொலி. நான் கேட்கிறேன். முதலிலே பெயரே இல்லை என்று சொன்னீர்கள், அல்லவா. இங்கே வருகிறார்கள். '' இதை பெங்களூர் மல்லேசுவரம் பகுதியில் வாழ்கின்ற.............என்பவர் ஒரு ரூபாய்க்கு வாங்கி வீட்டில் பார்த்தால் ஏ. கே. வரிசையாகிய இந்தச் சீட்டில் நெம்பர் இல்லை. இந்தச் சீட்டு கள்ள நோட்டுக்களை அச்சடிக்கும் கோஷ்டியினர் அச்சடித்ததா? அல்லது அரசாங்கம் அச்சடிக்கிற இடத்தில் ஊழல் நடந்திருக்குமா ? என்று சந்தேகிக்கப்படுகிறது.

இன்னொன்று மூன்றாவது வருகிறது, அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசியிருக்கிறார்கள். '' அதுபோலவே சித்தூரிலிருந்து திரு. எஸ். முனிரத்தினம் என்பவரும் நமக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்''. யாருக்கு ? டைரக்டருக்கு அல்ல. முரசொலிக்கு ! '' இந்தச் செய்தி ஆந்திர மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது '' தற்போது ஏற்பட்ட புயலைவிட பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது! '' ஆந்திராவில் பிரபல தெலுங்கு ஏடான ' ஆந்திரப் பிரபா ' இதுபோன்ற எண்கள் இல்லாத பரிசுச் சீட்டை படமெடுத்து வெளியிட்டுக் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறது.

''கனவோ, உண்மையோ, கடவுளின் மாயமோ, யாராவது செய்ததோ, ஒன்றுமே தெரியவில்லை. ஆனால், நேற்று ஒரு ஆச்சரியமான விஷயம் வெளிவந்தது. மல்லேசுவரத்தில் குடியிருக்கும் கே. ஆர். ஜெகன்னாத செட்டி என்ற நபர் ''............'' அவர் ஆந்திர பிரபாவுக்குச் சொன்னாராம். அதுவும் யார் மூலமாக, இன்னொரு திராவிட முன்னேற்றக் கழக பிரமுகர் மூலமாக. '' மல்லேசுவரத்தில் குடியிருக்கும் கே. ஆர். ஜெகன்னாத செட்டி என்ற நபர் நகரத்தில் ஒரு ரூபாய் கொடுத்து 19—10—77-ல் குலுக்கவிருக்கும் தமிழ்நாடு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்கினார். வாங்கினவரை நன்றாய் இருந்தது. '' ஒரு அற்புதமான கற்பனை இங்கே வருகிறது. அங்கே அவருக்கு நம்பர் இருந்ததாம்—சமாளிக்கிறார். வாங்கிய இடத்திலே சரியாக இருந்தது. '' சீட்டு வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்று பார்த்ததும் அதில் வரிசை எண் காணவில்லை. அதில் ... கே. என்ற எழுத்து மட்டும் இருந்தது. நம்பர் இல்லாமல் ...சீட்டு அச்சாவது தப்புதானே ? அவர் நம்பர் இல்லாத ...டைப் பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்தார். பைத்தியம் ...த்தது'' நல்லவேளை சாகவில்லை! சமீபத்தில் நடந்ததைப் ...ால.

'' வெங்கடேசப் பெருமாளே ஏன் இப்படி நடந்தது ?'' என்று அசந்து உட்கார்ந்து விட்டார். அச்சில் ஏதாவது தவறு நடந்திருக்கலாம் என்று தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டார் அரசாங்கத்தின் தவறாக இல்லாவிட்டால் இது டூப்ளிகேட்டாக இருக்கலாம். இதுபோல் திருட்டு லாட்டரி சீட்டு அடிக்கிற கும்பல் ஒன்று இருக்கிறதா ? கள்ள நோட்டு அடிப்பது போல, பரிசுச் சீட்டு அடிக்கிற கும்பலும் இருக்கிறதோ என்று எண்ணிக் கொண்டாராம். நண்பர்களே, இது வந்தது காலையிலே, மன்னிக்கவேண்டும். சபாநாயகர் அவர்களே, இதைப் பார்த்த உடனேயே தமிழக அரசு உடனடியாக அந்த குலுக்கலை அன்றைக்கு நிறுத்த உத்திரவிட்டது. ஏனென்றால் இதற்குள்ளே நுழையவில்லை. அதற்கு பின்னாலே என்ன கதை இருக்கிறது? அதை எல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை. ஒன்றாகட்டும், இரண்டாகட்டும் மூன்றாகட்டும். தவறு நடந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்ட உடனே தமிழக அரசு அந்த குலுக்கலை நிறுத்தி வேறு தேதி வெளியிட்டு, அப்படி யாரிடத்திலேயாவது அப்படிப்பட்ட சீட்டு இருந்தால் உடனே அரசுக்குத் தெரிவித்து மாற்றுச் சீட்டுகள் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னது.

[முற்பகல் 10.10]

அதையொட்டி, குற்றச்சாட்டு சொல்லியவர்களிலே ஒருவர் அல்லது வேறு ஒருவர், இருவர் மொத்தம் ஒரு 4—5 சீட்டுக்காரர்கள் தான் என்னிடத்தில் நெம்பர் இல்லாத சீட்டு இருக்கிறது என்று சொல்லி மாற்றிக்கொண்டு சென்று இருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இப்படிப்பட்ட ஒரு தவறு நடந்தது என்று சொல்கிறபோது அந்த ஆதாரங்களை அரசுக்குத் தரவேண்டுமா, வேண்டாமா ? அந்தக் குற்றவாளி யார் என்று அரசு எப்படி கண்டுபிடிப்பது ? இதற்காக போலீசார் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் உதவியாக இருக்கும் வகையில், முரசொலி அலுவலகத்திற்குச் சென்று, ஐயா முரசொலி ஆசிரியர் அவர்களே, நிர்வாகிகளே, இப்படி ஒரு செய்தி வெளியிட்டு இருக்கிறீர்களே, அதற்கான ஆதாரங்களைத் தாருங்கள், எப்படி நடைபெற்றது என்று கண்டுபிடிக்க உதவியாக இருக்கும் என்று சொல்லி அங்கே சென்றால், நாங்கள் மிசாவிற்கே அஞ்சாதவர்கள், இதற்கா அஞ்சப்போகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்........

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> தலைவரவர்களே,......

<u>திரு. க. சுப்பு :</u> தலைவரவர்களே,............

(மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் நின்று கொண்டிருந்தார்)

திரு. க. சுப்பு : கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எனக்கு ரெஸ்ட் வேண்டுமானால் தலைவரிடம் கேட்டுக் கொள்ளத் தெரியும். பேசுகிறபோது வார்த்தைகளை அளந்து பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான், உட்கார்ந்துகொண்டு சத்தம்போடுவது அழகல்ல. பரவாயில்லை என்று வாளா இருந்தேன். நானும் கொண்டு நீங்கள் பேசுவது என் காதில் விழுகிற அங்கேயிருந்துக் இருக்கிறது. உட்கார்ந்து பேசவேண்டாம். அளவிற்கு பேசிக்கொண்டு இருக்கிறார், கேட்கவேண்டியவர்கள் அமைச்சர் பதில் சொல்லவேண்டியவர்கள் சொல்வார்கள். கேட்டு

திரு. க. சுப்பு : தலைவரவர்களே,......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. சுப்பு அவர்கள் கேட்பது, பாயின்ட் ஆப் ஆர்டரா, அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா ? ஏனென்றால், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் இல்லை என்று நீங்கள் ஏற்கெனவே சொல்லி இருக்கிறீர்கள்.

திரு. க. சுப்பு : இரண்டுமே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு என்று பெயர் சொன்ன உடனேயே எழுந்து பேச ஆரம்பித்து விடுகிறீர்கள். ஏதாவது சொல்ல இருந்தால், அடுத்து பேராசிரியர் பேச இருக்கிறார். அவர் பதில் சொல்லிவிட்டுப் போகிறார். உங்கள் பெயரைச் சொன்ன உடனே எழுந்து, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பேசவேண்டும் என்று எழுந்தால், நேரம் வீணாகிக்கொண்டே போகும்.

திரு. க. சுப்பு : நீங்கள் சொன்னதற்கு நான் வருத்தப் படுகிறேன். நான் என் பெயரைச் சொன்ன உடனா எழுந் திருந்தேன் ? தங்கள் அனுமதி கேட்கத்தான், ஒரு விளக் கத்தைச் சொல்வதற்காக எழுந்து இருக்கிறேன். அந்த அடிப் படையில் ஒரு குற்றச்சாட்டு சொன்னதற்கு விளக்கம் சொன் னார்கள். அவர் அளித்த விளக்கத்திற்குள் போகவில்லை. அப் படிப்பட்ட செய்தி முரசொலி பத்திரிக்கையில் மட்டும் வரவில்லை. ஆந்திரப்பிரபாவிலும் வந்து இருக்கிறது. அப்படி செய்தி வந்திருக்கிறபோது, அதைப் பற்றி விளக்கம் தருகிறபோது, அதற்கான தகவல் கொடுப்பது என் கடமை.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர் ஏதாவது இருந்தால் பேசவேண்டும். விளக்கம் கொடுப்பது என்று

சொன்னால், எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நானும் எழுந்து என் சந்தேகங்களை கேட்டுக் கொண்டே இருக்கவேண்டி இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பர்சனல் எக்ஸ்பிளா நேஷனாக அவர் அமைச்சர் அவர்களுக்கு சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்.

திரு. க. சுப்பு : காவல் துறையினர் முரசொலிக்கு போன் செய்து அந்தத் தகவல்களைக் கேட்டார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொன்னதிலே தவறான கருத்து, மாறான, கருத்து ஏதாவது இருந்தால் சொல்ல லாம். இப்படி விவரத்திற்குள் போகக்கூடாது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, ஏதாவது அதிலே ஒழுங்குப் பிரச்னை இருந்தால் மாத்திரம் நான் ஏற்றுக்கொள்ள முடியும். விளக்கம் சொல் வதற்கு நேரம் ஒதுக்க இயலாது என்பது தங்களுக்குத் தெரியும். இந்த முரசொலி பரிசுச் சீட்டு விவகாரத்தை எப்படி வெளி யிட்டது? மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், அது ஆந்திர பிரபா, அல்லது வேறு பத்திரிக்கையாக இருந்தாலும் சரி. அரசு உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக, அந்தக் குற்றச் சாட்டு உண்மையா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, அந்தக் குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, அந்தக் குற்றத்தை யார் சாட்டியிருந்தாலும் அரசு அதைக் கருத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த பரிசுச் சீட்டு ஊழல், இரண்டு வண் ணத்தில் இருக்கும் ஊழல், பின்னாலே எப்படி இருக்கிறது என்றால், எனக்கு ஏற்பட்டு இருக்கும் சந்தேகத்தை உங்கள் மூலம் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆளுநர் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்க ஆள் இருப்பதைப் போல், அல்லது சட்டத் துறையிலே வெங்கடாதிரி கமிஷன் ரிப்போர்ட்டை டைப் செய்து கொடுக்க ஆள் இருப்பதைப் போல், இந்த பரிசு சீட்டு அச்சடிக்கின்ற அலுவலகத்திலே இப்படி ஒரு 4 சீட்டுகளை நெம்பர் இல்லாத சீட்டாக எடுத்துக் கொண்டு வந்து, ஒன்றை திருச்சியிலே, இன்னொன்றை மல் லேஸ்வரத்திலே, கொடுப்பதற்கும் யாராவது ஆள் இருக் கிறார்களோ என்ற ஐயம் இந்த அமைச்சரவைக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் உங்கள் மூலமாக நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் பேசுவதில் குறுக்கிடுவதற்காக அல்ல, அவர் பேசுகிற வாதம் எங்கே கொண்டு போகிறது என்பதை நிதானித்துப் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் பேசுகிற வாதம் எதிர்க்கட்சியைக் குற்றம் சாட்டுவதாக ஆகாது. அரசாங்கம் அப்படி நடக்கிறது, உள்ளே அச்சிட்டு வெளியே கொண்டு போகிறார்கள் என்று அமைச்சர் அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்படி தவறு செய்கிறவர்களை எடுத்துக் காட்ட எதிர்க்கட்சிக்கு மாத்திரம் தான் உரிமையுண்டு, ஆளுகின்ற கட்சியில் இருப்பவர்களுக்கோ, அமைச்சர்களுக்குகோ உரிமையில்லை என்று பொருள் அல்ல. குற்றவாளி எங்கும் இருக்கின்றான் ; அது யாராலோ தயார் செய்யப்படுகிறது என்பதைத் தான் இந்த அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் மூலம் சட்டப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரத்தைப் பார்க்கிறீர்கள். எனக்குத் தெரிகிறது. நான் விரைவிலே முடித்துக் கொள்கிறேன்.

இதையொட்டி அவர்கள் இங்கே மினி மிசாவைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் விரிவாக அதற்கு பதில் தருவார்கள். ஆதலால் நான் அதிகம் அதில் ஈடுபட விரும்பவில்லை. ஆனால் எனக்கு ஏற்பட்ட ஒரு கருத்து, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கட்சியினுடைய தலைமைப் பொறுப்பையும், ஆட்சிப் பொறுப்பையும் 1969-ல் ஏற்றுக்கொண்ட பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள், முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு, நம்மை அனாதைகளாக ஆக்கிவிட்டு அவர்கள் மறைந்ததற்குப் பிறகு, அவர்கள் அந்தக் கட்சியின் தலைவராகவும், முதலமைச்சராகவும் இருந்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு ஓர் எதிர்க்கட்சியை தலைமை ஏற்று நடத்துகின்ற வாய்ப்பும், எதிர்க்கட்சித் தலைவராக வந்து அமர்கின்ற வாய்ப்பும் இப்போது தான் கிடைத்திருக்கிறது. அதனால் அந்தக் கட்சி எவ்வளவு வலிவுள்ளது என்பதை நாட்டுக்கு எடுத்துக் காட்டுக்கின்ற முறையிலே அவர்கள் சிலத் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையொட்டித் தான், என்றைக்கோ கறுப்புக்கொடி காட்டியிருக்க வேண்டிய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு, இவர்கள் சமீபத்திலே கருப்புக்கொடி காட்டுகின்ற முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான மாண்புமிகு பட்டுக் கோட்டை மாரிமுத்து அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்

அதற்குக் காரணத்தைச் சொன்னார்கள். நான் அதில் நுழையவில்லை. ஆனால் இவர்கள் முடிவெடுத்து அறிவிக்கின்ற போது, முரசொலி பத்திரிக்கையிலே அதைப்பற்றிய ஒரு 'பாக்ஸ்'-பெட்டிச்செய்தி போடுகிறபோது, அதில் பல கருத்துக்களைச் சொல்லி, ஒரு கருத்தை தடித்த எழுத்துக்களில் போட்டிருக்கிறார்கள். ''ஒன்பது ஆண்டு காலம் ஆளுங்கட்சியாக இருந்ததால் நம் போராட்ட உணர்வு மறந்துப்போகவில்லை என்பதை கழக மறவர்களே மாநிலம் அறிந்திடச் செய்வீர்' என்று போட்டிருக்கிறார்கள். சரி,

இந்தச் சந்தேகம் அவர்களுக்கு ஏன் வருகிறது என்று கேட்டால், நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே ஆளுங்கட்சியாக அவசரநிலைக் காலத்தில் இருந்தபோது, மிகுந்த நேசத்தோடு, நட்போடு இருந்த சி.ஜி.கே. ரெட்டி அவர்கள் சமீபத்திலே, செப்டம்பர் மாதத்தில் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். '' Baroda Dynamite Conspiracy-The Right to Rebel ''என்ற புத்தகம். அந்தப் புத்தகத்தில் அவர்கள் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதையெல்லாம் படிக்க விரும்பவில்லை, அன்றைக்கு அவசரநிலை பிரகடனப்படுத்தியவுடனே, அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்களை நாங்கள் மலைபோல நம்பியிருந்தோம். அவர்கள் எப்படி எங்களை கீழேதள்ளி விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு குற்றச்சாட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி, அவர்கள் ஏன் இந்த முடிவை அன்றைக்கு எடுத்தார்கள் என்று. ஏனென்றால், சி.ஜி.கே. ரெட்டி போன்றவர்களும், மற்றவர்களும் அன்றைக்கே இந்திராவை எதிர்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கான திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டிருக்கின்றன. அது பத்திரிக்கையில் வெளிவந்துவிட்டது. சபை உறுப்பினர்கள் படித்துக்கொள்ளலாம். அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வரும் முன்னர் அது ஒரு போராட்ட இயக்கமாக இருந்துவந்தது. பதவிஏற்ற பின்னர் அது தேர்தல் இயந்திரமாக ஆகி மக்களிடமிருந்து நீண்ட தொலைவிற்கு நீங்கிவிட்டது. லஞ்ச ஊழல், வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுதல், தேர்தலில் அதிகாரங்களைப் பயன்படுத்துதல், வேண்டியவர்களுக்கு காண்டிராக்டுகளை வாரி வழங்குகிற சாதனமாக மாறிவிட்டது. அசைக்க முடியாத வகையில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த காரணத்தால் தாங்கள் என்றென்றும் நிலையாக அதிகாரத்தில் நீடிப்போம் என்ற மயக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை இருந்ததாகத் தெரிகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை சொல்லி விட்டு ....

[முற்பகல் 10.20]

அதற்குப் பின்னால் எடுத்த முடிவுகளில் எப்படி எல்லாம் ஏமாந்தார், முன்னாள் முதலமைச்சர் சரண் அடைந்தார் என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். அவைகளில் நான் நுழைய விரும்பவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மன்னிக்கவும், அமைச்சர் அவர்கள் புத்தகத்தைப் படித்தார்கள். நானும் அந்த புத்தகத்தைப் படித்தேன். அந்த பரோடா டைனமைட் புத்தகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை சந்தித்து என்ன என்ன செய்யவேண்டுமென்று கேட்டார்கள், எப்படி மறுத்தார்கள் என்ற விவரம் எல்லாம் இருக்கிறது. அதைச் சொன்னால் பரவாய் இல்லை. அமைச்சர் அவர்கள் அவசரத்தில் சொல்லாமல் விட்டுவிட்டால் நான் சொல்லுகிறேன். டைனமைட் வைக்கிற சம்பவத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் உடந்தையாக இருப்பதாக சொல்லுகிறார்கள். அது மறுத்தது. மறுத்ததற்காக குற்றவாளி என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ரகசியமாக நடை பெற்றது தெரியவில்லை. நாட்டுக்குத் தரப்பட்ட விவரங்களில் சில பகுதிகளைச் சொல்லுகிறேன். மதுரையில் அடிபட்டவனுக்கு மானாமதுரையில் மீசை துடித்தது என்பதற்கேற்ப 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளு மன்ற தேர்தல் முடிந்து 1977-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் முடிந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களுக்கு இந்த உணர்வு ஏன் வந்தது என்பதற்கு எனக்கு இருக்கிற உரிமையின் காரணமாக தெரிந்த கருத்துக்களை வைத்து இந்தக் கட்சி போராட்ட உணர்ச்சி உள்ள கட்சி தான் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டுவதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சரி, மற்ற விஷயங்களில் நுழைய விரும்பவில்லை.

அண்ணா வழியை மீறிவிட்டது இந்த அரசு என்பது நமது மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய குற்றச்சாட்டு. அண்ணா வழி முறையை நான் அந்தப் பள்ளியில் 37 ஆண்டு காலம் படித்து நல்ல மாணவன் என்ற பெயரையும் பெற்றவன். பகுத்தறிவுத் தந்தை பெரியார் பள்ளியிலும் பயின்றிருக்கிறேன். ஆகவே அண்ணாவின் வழி முறையை நான் தெரிந்து வைத்திருக்கிறேன். நான் தெரிந்து வைத்திருக்கிறேன் என்பதைவிட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மிகத் தெளிவாக தெரிந்து வைத்துக்கொண்டு அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள்.

கறுப்புக் கொடி நிகழ்ச்சி நடந்தது. திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் மிக முக்கியமான சம்பவங்கள் மூன்று கறுப்புக் கொடி நிகழ்ச்சிகள். அதில் முதற் கறுப்புக்கொடி அன்றைய மத்திய அமைச்சர் திவாகருக்கு,

இரண்டாவது கறுப்புகொடி உள்துறை அமைச்சராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு. அந்தக் கறுப்புக்கொடி நிகழ்ச்சிகளில் நான் கறுப்புக் கொடியைத் தூக்கிச் சென்றவன் அதனால் சொல்கிறேன். ராஜாஜி அவர்களுடைய முதல் நிகழ்ச்சி சென்னைக் கோட்டை ரயில் நிலையத்துக்கு எதிரே ஒய். எம். சி. ஏ. பாய்ஸ் டவுனைத் திறக்க வருகிறார். கறுப்புக்கொடி காட்டப்பட்டது. கறுப்புக் கொடி காட்டிய நாங்கள் யாரையும் அடிக்கவில்லை. போலீஸ்காரர்கள் எங்களை அடித்து விரட்டினார்கள். அதில் பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் தாக்குண்டார்கள். அதைப் பார்த்துக் கலங்கிய பேரறிஞர் அண்ணாவுடைய முகம் இன்றைக்கும் என் மனதிலிருந்து அகலவில்லை.

மூன்றாவது நிகழ்ச்சி 1958-ம் ஆண்டு ஜனவரியில் தமிழகத்தினுடைய வரலாற்றிலே முதல் முறையாக அன்றைய இந்திய பிரதமர், ஏகச்சக்ராதிபதி, ஆசியாவின் ஜோதி பண்டித நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டுகிற தீர்மானத்தை அறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றி அமல்படுத்துகிறார்கள். நானும் அங்கே கலந்து கொண்டேன். மீனம்பாக்கம் விமான நிலையம் எரித் திடலில் நின்று கறுப்புக் கொடி காட்டினோம். ஆனால் கறுப்புக் கொடி காட்டுகிற பொழுது எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை. கறுப்புக் கொடி நிகழ்ச்சி முடிந்ததற்குப் பின்னால் கலைந்து செல்லுகிற பொழுது போலீஸ்காரர்கள் கூட்டத்தைக் கலைக்கத் தாக்கினார்கள். அதையொட்டி. பண்டித நேரு அவர்கள் மாலை ராஜாஜி மண்டபத்திற்கு வருகிறார். பாரதப் பிரதமர் அங்கே வருகிறபொழுது கூட்டத்தில் நெரிசல் காரணமாக பல சம்பவங்கள் நடைபெற்றன அன்றைக்கும் வன்முறை சம்பவம் நடைபெறவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே எழுதிக் காட்டியிருக்கிறார்கள். வரலாற்றைப் படைத்து தந்திருக்கிறார்கள். எப்போது திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக்கொடி காட்டினாலும் நம்முடைய எதிர்ப்பைக் காட்டினாலும் அது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதைக் கெடுக்காது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நெஞ்சுக்கு நீதி என்ற புத்தகத்தில் சொல்லுகிறார். அண்ணா வழி எது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இரண்டு சம்பவங்களைச் சொல்லுகிறேன்.

அந்தப் புத்தகத்தில் கூறியிருப்பதாவது :—

> ''தலைவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டதால், கறுப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சி 6-ம் தேதி நடக்குமோ என்று அனைவரும் அஞ்சினோம். ஏனென்றால் நாங்கள் வெளியில் இருக்கும் போதே தோழர்களின் உணர்ச்சி கட்டுப்படாமல் ததும்பித் தது. கவிஞர் கண்ணதாசன் அவர்கள், தமது 'தென்றல்' இதழில் கறுப்புக் கொடி நிகழ்ச்சிப் பற்றி வெளியிட்ட

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 சனவரி 7

கவிதை, தமிழ் நயம் சொட்டுவதாகவும், அதே
சமயம் வன் முறையைத் தூண்டுவதாகவும் இருந்தது.
அதனைக் கண்ணுற்ற அறிஞர் அண்ணா அவர்கள்,
அந்த இதழ் வெளியில் வரக்கூடாது என்று கண்டிப்
பாகச் சொல்லி விட்டார். அச்சான அத்தனை
இதழ்களும் கவிஞர் கண்ணதாசன் அவர்களால்
எரிக்கப்பட்டு, வேறு கவிதையைத் தாங்கி அவ்வார
இதழ் வெளி வந்தது.''

இது அண்ணா அவர்கள் பத்திரிகையில், எழுதுகின்ற கவிதை
யில் கூட வன்முறையைத் தூண்டும் உணர்ச்சி வரக்கூடாது தலை
தூக்கக் கூடாது என்பதற்கு எவ்வளவு எச்சரிக்கையாக இருந்
தார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். பின்னர் அடுத்தக் கட்டத்
திற்கு வருகிறார்கள். சம்பவங்கள் எல்லாம் நடந்து முடிந்து,
சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார். அங்கே, செய்தி
களைப் படிக்கிற போது சொல்லுகிறார்.

''கழகத் தோழர்கள் தாம் கைது செய்யப்பட்டும்,
காயப்பட்டும் அவதியுற்றனரே தவிர, எதிர்த்
தரப்பில்—அதாவது அடக்கு முறையைப் பிர
யோகித்த அரசாங்கத் தரப்பில் எந்த விதமான
சேதமோ வன்முறையால் உண்டாகக் கூடிய
இழப்போ ஏற்படவில்லை என்பதை நினைத்து
எல்லாரும் திருப்தியுற்றோம். எங்களுக்குத் தேவைப்
பட்டது இது தான். எங்களில் பலர் மாண்டா
லும் பாதகமில்லை. அரசாங்கத்தின் ஆட்களுக்கோ
சொத்துக்கோ அபாயம் நேருவதாக அமையக்கூடாது
என்று விரும்பினோம்.''

அண்ணா விரும்பினாரா? தெரியவில்லை. எங்களுக்குத்
தெரியும். ஆகவே கறுப்புக் கொடி நிகழ்ச்சி என்பது நடை
பெற்றது. கறுப்புக்கொடியை காட்டுகிறவர்கள் தாக்கப்
பட்டிருக்கிறார்கள். அதைத் தான் எடுத்துக் காட்டி இருக்கி
றார்கள்.

ஆகவே, இந்த ஒரு பிரச்னையை நடத்திக் காட்டுகிற
வாய்ப்பு அறிஞர் அண்ணா அவர்கள் இல்லாத காலத்தில், நம்
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வந்தது.
அவர் ஆளுகிற கட்சியாக இருந்த போதும் வந்தது. அவர்
அடிக்கடி சொல்லுவார். ''எதிர்கட்சித் தலைவருக்கு கறுப்புக்
கொடி காட்டுகின்ற ஒரு முறையை காங்கிரஸ்காரர்கள்
ஏற்படுத்தி விட்டார்கள்,'' என்று சொல்லுவார்.

1978 சனவரி 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் ஆளுகிற
அமைச்சராக இருந்த போது, இதே அண்ணா திராவிடமுன்னேற்றக்
கழகம் தோற்றுவிக்கப்பட்ட போது, அண்ணா அவர்களின்
இலட்சியத்தைக் காப்பாற்றுவது, அண்ணா அமைத்த அரசையே
மீண்டும் அமைப்பது, ஊழலற்ற அரசை அமைப்பது என்று
அக்கட்சி சூளுரை எடுத்துக்கொண்ட குற்றத்திற்காக, பொது
வாழ்வில் லஞ்சம், ஊழலை அனுமதிக்கமாட்டோம் என்று
சொன்னதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சியில் இருந்த
போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு
கறுப்புக் கொடி காட்டுகிற முறையை ஆரம்பித்தார்

ஆவடிக்கு செல்லுகிறார் இன்றைய முதலமைச்சர். கம்
யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள்கூட
செல்லுகிறார். அங்கே இவருக்கு ஆளுங்கட்சியினர் கறுப்புக்
கொடி காட்டுகிறார்கள், போலீஸ் பாதுகாப்போடு.

இன்றைக்கு எவ்வாறு நடைபெற்றது என்று தெரியாது.
அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. ஆனால் அன்றைக்கு
கறுப்புக் கொடி என்ற பெயரால், கைகளில் ஆயுதங்களை
எடுத்து வைத்துக்கொண்டு, இன்றைய தினம் முதலமைச்ச
ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவரை அன்று தாக்கினார்கள்.
ஆனால், அவர் தப்பினார். எப்படித் தெரியுமா? குண்டு
காயத்திலிருந்து, துப்பாக்கிக் குண்டிலிருந்து அவர் தப்பினார்.
ஒரு அற்புதம். அதைப் போலவே அவரைத் தாக்க வைத்த
குறி, அவர் வழக்கமாகப் போகின்ற 2248 என்ற வேன்.
அதில் வருவாரென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பூந்தமல்லி அருகில்
வருகிறபோது ரிப்பேராகி விட்டது. அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும் தமிழ்நாடு
கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளரும் நல்ல வேளையாக
வரவில்லை. வேறு காரில் மாறி வருகிறார்கள். இந்தக்
காரை விட்டு விட்டார்கள். இந்தக் காரில் இருப்பவரை
அவர்கள் பார்க்கவில்லை. ஆனால், கார் தாண்டிய பிறகு,
''இதோ போகிறார்கள்' என்று காரைப் பின்னால் அடித்தார்கள்
தாக்கினார்கள். இப்படி அன்றைக்கே எதிர்க் கட்சித்
தலைவருக்கு, கறுப்புக் கொடி பிடிக்கலாம். அதுவும் ஆட்சியில்
இருக்கிற போது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பிடிக்கலாம்
என்பது நம்முடைய இன்றைய மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர், அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில்
அறிவிக்கப்பட்ட ஒன்று.

அதைத் தொடர்ந்துதான், பிரதமர் இந்திரா காந்தி
வந்தபோதும் சம்பவங்கள் நடைபெற்றன.

அதிலே ஒன்றை மட்டும் நான் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் எப்படிச் சொன்னார் என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நேற்று எதிர்க்கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள்.

[முற்பகல் 10.30]

ஆனால் முரசொலியிலே மதுரையிலே நடைபெற்ற சம்பவத்தை—முன்னாலே போகவில்லை, பின்னாலே போகவில்லை எப்படி அந்த வன்முறைச் செயல்களுக்கு ஊக்கப்படுத்தப் படுகிறது என்ற வார்த்தையை மாத்திரம் சொல்கிறேன். 'முக்காடு போட்டுக் கொண்டார் முன்னாள் சர்வாதிகாரி'. மதுரைச் சம்பவத்தைப் பற்றி சமாச்சார் தந்த சில தகவல்களை முன்னாலே விட்டுவிட்டார்கள். தாக்குதல் தீவிரமானதும் தாக்குதல் கறுப்புக் கொடி காட்டுதல் அல்ல. இங்கே அவர்களெல்லாம் எடுத்துச் சொல்லியதுபோல ஆட்கள் மேல் தாக்குதல். இந்திரா காந்தி சுற்றுப் பயணத்தின் போது அவர் தாக்கப்பட்ட போது காங்கிரஸ்காரர்கள் ஒரு பெரிய துணியைக் கொண்டு இந்திரா காந்தியை மூடிக்கொண்டார்கள். இது தான் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பிலே —அறிஞர் அண்ணா காட்டிய வழி அன்றைக்கு, அப்படி—இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காட்டுகின்ற வழி இப்படி. இதைத் தான் 'மினி மிசா' என்றெல்லாம் சொல்லி அவர்கள் இங்கே வர்ணித்தார்கள். தலைவர் அவர்களே அவசர காலத்திலே பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. 38 பத்திரிகைகள் பறிமுதல் செய்திருக்கிறார்கள், இவர்கள் ஆட்சியிலிருந்த 6 மாத காலத்தில். அதற்குப் பின்னாலே 15 இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. எப்படியெல்லாம் பேச்சுரிமை, எழுத்துரிமை வழங்கப்பட்டது, இவர்கள் ஏன் இந்த உணர்வுகளுக்கு ஆளாகி இருந்தார்கள் என்பதை நான் விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை.

கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியபோது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள், எந்த அமைச்சர்களுக்கும் உரிமைகள் இல்லை என்று. நான் ஒன்றை உதாரணமாக கூறி முடிக்க அனுமதி கோருகிறேன். ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டைரியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் அளித்துள்ளேன். அந்த டைரி போடப்பட்ட போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு 'என்னுடைய படம் எந்த இடத்திலும் வரக்கூடாது' என்று

சொல்லிவிட்டார்கள். நான் அவர்களிடத்தில் வாதாடி 'இந்த அமைச்சரவை தோன்றி, ஒரு மாநிலத்தில் ஒரு புதிய கட்சி, என்றும் இல்லாத முறையில் அமைச்சரவை அமைகிறது என்று வரலாறு அறிவித்திருக்கிறபோது அந்தச் சம்பவம் நாட் குறிப்பில் இருக்கவேண்டும். இந்த டைரி என்பதே நினைவாக வைத்திருப்பதுதான். ஆகவே லட்சோப லட்சம் மக்கள் ஓட்டுப் போட்டு ஆட்சிக்கு வந்த இந்த அமைச்சரவையின் பதவியேற்பு நிகழ்ச்சியையும், குடியரசுத் தலைவரின் அந்த நிகழ்ச்சியையும் அந்த டைரியில் போட அனுமதி கேட்டு, அதைப் பெற்றுந்தான், டைரியை வெளியிட்டேன். காலண்டரிலே கூட கன்யாகுமரி காட்சிதான் தரப்பட்டிருக்கிறதே தவிர வேறு யாரும் அதில் இடம்பெறவில்லை. 5 வயது குழந்தையிடம் 50 படங்களைக் கொடுத்து இதில் முதலமைச்சர் யார் என்று கேட்டால் 'அது எம்.ஜி.ஆர். தான்' என்று அவருடைய படத்தை காட்டுகிற அளவிற்கு உள்ள, பேரறிஞர் அண்ணாவின் இதயக் கனியாக உள்ள அவரை இப்படி படம் போட்டுத் தான் காட்ட வேண்டிய நிலையில் இல்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, இந்தத் தீர்மானம் தேவையற்றது; இந்தச் சபையில் நம்பிக்கை அதற்கு கிடைக்கப் போவதில்லை என்று தெரிந்தே கொண்டு வந்தது, தேவையற்றது என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, நான் பேசப் போவதில்லை. உங்கள் அனுமதியோடு, பரோடா டைனமைட் கான்ஸ்பிரசி—The Right to Rebel என்ற புத்தகத்தை எழுதிய சி. ஜி. கே. ரெட்டி அவர்களின் அந்தப் புத்தகத்தின் ஒரு பகுதியைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இங்கே நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மிஸாவையே சந்தித்த எங்களுக்கு மினி மிஸா எம்மாத்திரம் என்று கேட்டார். அவர் தெரியாமல் அப்படிக் கேட்டார் என்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்.

"It is a great pity that the D.M.K. despite several meetings we had with their leadership and the promises they made, did nothing to organise the people of Tamil Nadu, prepare them for resistance against Mrs. Gandhi. The total failure of Karunanidhi to perceive the developing situation during the last days of his Chief Ministership, and his surrender to Mrs. Gandhi when she ultimately dismissed him, will remain the high water-mark of stupidity and cowardice by a shrewd politician during the Emergency."

Thank you, Sir.

திரு. ப. உ. சண்முகம் : இதே புத்தகத்தில் நான் வேறு சில பகுதிகளை எடுத்துக் கொடுத்து அவற்றையும் படிக்குமாறு முன்னவரை கேட்டுக்கொண்டேன். அப்படி முன்னவரிடத்தில் எடுத்துக் காட்டிய பிறகும் கூட அவர், "Stupidity" என்று எழுதியதை—எதிர்க் கட்சித் தலைவரை "Stupidity" என்று எழுதியதை, அவருக்கே உரித்தான பாணியில் எடுத்துக் காட்டினார். நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. இது விவாதத்திற்கு வந்து விட்டதற்குப் பிறகு—அவைத் தலைவர் கொஞ்சம் மன்னித்துக்கொள்ள வேண்டும்—நான் இதையும் சுட்டிக் காட்ட வேண்டி இருக்கிறது.

சி. ஜி. கே. அவர்களின் அந்தப் புத்தகத்தை தி. மு. க. ஏற்றுக்கொள்ளவில்லை. முழுவதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதில், பரோடா வழக்கு உண்மையானது என்றும், அதில் அவர், "ஜார்ஜ் பெர்னாண்டசும் நானும் வெடிகுண்டுகளைத் தயாரித்தோம்" என்றெல்லாம் எழுதி இருக்கிறார்கள். அதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அமைச்சர் வீரப்பன் அவர்களுக்கு வருத்தம் வரத் தேவையில்லை என்று கேட்டுக் கொள்கிறேன். 'ஸ்டுபிடிடி' என்று எழுதியதை சுட்டிக் காட்டினார்கள். யார் யாருக்கு வேண்டுமானாலும் அதை வைத்துக்கொள்ளலாம். சி. ஜி. கே-யின் விருப்பத்திற்கு நாங்கள் இணங்கி வரவில்லை என்ற உடனே, 'ஸ்டுபிடிடி' என்று எழுதியிருக்கிறார். அவரே, இன்னொரு பக்கத்தில்

THE HON. THIRU K. MANOHARAN. Excuse me, Mr. Speaker, Sir. Very clearly C.C.K. Reddy has pointed out that "despite several meetings we had with their leadership and the promises they made...."

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தி. மு. க. தலைமையை சி. ஜி. கே. ரெட்டி அவர்களும் ஜார்ஜ் பெர்னாண்டசும் சந்திப்பதற்காக விரும்பினார்கள் என்றும் அந்த விருப்பம் நிறைவேறவில்லை என்று அவர்கள் சொன்னதாகவும் சொன்னார்கள். நான் துவக்கத்திலேயே சொன்னேன். அந்தப் புத்தகம் தி. மு. க. விற்கு ஏற்புடையதல்ல. முழுமையாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை

மாண்புமிகு திரு கி. மனோகரன் : யூ. ஆர். வீக்.

திரு. ப. உ. சண்முகம் : இல்லை. நாங்கள் வீக்-ஆக இல்லை. அந்தப் புத்தகத்தை படித்துக் காட்டுகிறேன்.

"My contacts in the Government tipped me off to the impending dismissal of the D.M.K. ministry almost a fortnight before it happened. I went down to Madras in mid-January to warn the D.M.K. Although they become rattled they did not use the information to prepare themselves for the axe. Some weak noises and attempts were made by them a couple of days before the D-Day. The Day of dismissal. Even these ended in a whimper-Karunanidhi whimpering in his farewell statement to the people of Tamil Nadu. A couple of days before the dismissl of D.M.K. ministry, a close confidant of Karunanidhi desperatly wanted to have a meeting with George Fernandez. With some difficulty it was arranged in Delhi. Although it was rather late in the day, it was decided at that meeting that immediate action must be taken to send the D.M.K. leadership underground and that we would help in positioning our own people and such resources as were required in Tamil Nadu to organise the resistance in a big way........"

இங்கேதான் இருக்கிறது. இதையெல்லாம் செய்வதற்கு தி. மு. க. தயாராக வேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ரா. உமாநாத் : தொடர்ந்து மேலே படியுங்கள்.

திரு ப. உ. சண்முகம்:

"The confident was not to return to Madras, but to stay in Bangalore or Hyderabad. I was to contact him from Madras on the 1st February. Meanwhile Karunanidhi should make a statement vehemently protesting against his dismissal by the President and calling upon the people of Tamil Nadu to resist the unjustified action by the Centre.

Arrangements from outside were completed against heavy odds. Karunanidhi's representative who had been a party to this decision did in fact position himself in Bangalore to be ready to act. I went down to Madras on February 1, as planned."

But it was not done.

அவ்வளவுதான் முடிந்து விட்டது. பெங்களூரிலிருந்து கொண்டு, ஹைதராபாத்திலிருந்து கொண்டு இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்யலாம். கருணாநிதியை சந்திக்க தூதுவர்கள் ஏற்பாடு செய்து முடித்தாகிவிட்டது, ஆனால் அவர்கள் வரவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். அந்தத் தூதுவர்கள் எங்கே பேசினார்கள் என்று தலைவர்தான் விளக்க

வேண்டும். இதில் நான் தெரிவித்த கருத்து என்னவென்றால், இந்த டைனமைட் வழக்கில், எங்களை இழுக்கப்பார்த்தார்கள். நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். அதைத்தான் சொல்லி இருக்கிறார்கள் (குறுக்கீடு) லெட் மீ கம்ப்ளீட் இட். பொதுவாக, அவர்களின் புத்தகத்தை முழுவதுமாகப் படித்தால், 'வெடி குண்டுகளைத் தயாரித்தோம், சேமித்து வைத்தோம், ஆங்காங்கே அனுப்பத் திட்டமிட்டோம், அனுப்பி, ஆங்காங்கே வைத்து தகர்ப்பதற்கு ஏற்பாடு செய்தோம் என்றெல்லாம் எழுதி இருக்கின்றார்கள். சதிகாரர்கள் அப்ரூவர்களாக மாறிவிட்டார்கள் என்று எழுதியிருக்கிறார்.

(முற்பகல் 10.40)

நான் இதன் தொடர்பாக கருணாநிதியைச் சந்திக்க முயற்சித்தேன். டெல்லியில் வந்து சந்தித்தார் என்று தொடர்ந்து எழுதிக் கொண்டு போகும் போது இதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயாராயில்லை என்று பொருள் பட கூறியிருக்கிறார்கள். அதைத்தான் சொன்னேன்.

திரு ரா. மார்க்கபந்து : அவரவர்களுக்கு வேண்டியதை ஆளும் கட்சியில் இருப்பவர்களும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் பரிமாறிக்கொள்கிறார்கள். நாங்கள் முழுமையாக அதை அறிந்து கொள்ள வாய்ப்பு தரும்வகையில் அந்தப் புத்தகத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்க வகை செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நூலகத்தில் இந்தப் புத்தகம் இருக்கிறது. எல்லோரும் படித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : திரு மார்க்கபந்து அவர்கள் அரசுக்கு அதிகப்படியான செலவினத்தை உண்டாக்காமல் வாசக சாலையில் வைக்கப்பட்டிருக்கிற இந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்து அவர்கள் படித்துவிட்டு அவருக்கு உட்பட்ட நண்பர்களுக்கும் தர கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிடும்போது சொன்ன வார்த்தையைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் ஒன்றும் குற்றஞ் சாட்டவில்லை. ஏனென்றால் சி. ஜி. கே. ரெட்டி சொன்னதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர்கள் சொன்னதற்குப் பிறகு இது இறுதியாக அவர்கள் எடுத்துக்கொண்ட முடிவாக நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சண்முகம் அவர்கள் படித்ததிலிருந்து, அவர் எப்படிச் சொல்லியிருந்தால் நான் ஏற்றுக்

கொண்டிருப்பேன் என்றால், 'ரெட்டி போன்றவர்கள் பெங்களூரில் இருந்துகொண்டு இந்தக் காரியத்திற்கு நீங்களெல்லாம் தயாராகவேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, வெடி குண்டு வைப்பதற்கும் அதற்கு மேல் இந்திரா சர்க்காரைத் தகர்ப்பதற்கும் நாங்கள் மேற்கொண்ட இந்தச் சதித் திட்டத்தில் நீங்கள் பங்குகொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது இது சதித்திட்டமானால் நாங்கள் அதில் பங்கு கொள்ளமாட்டோம்' என்று எழுதியிருப்பார்களானால், என்று அவர் சொன்னதுபோல் இதில் இருந்திருக்குமானால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். மாறாக Although they became rattled டிஸ்மிஸ்ஸல்ஆனதற்குப் பிறகு துடிதுடித்துப் போவது, நடுங்கிப் போவது, அதனுடைய விளைவுதான் இதுவே தவிர நீங்கள் சொல்வதைப்போல் விளக்கம் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் மிஸாவிற்கே பயப்படாத நாங்கள் மினி மிஸாவிற்கா பயப்படப் போகிறோம் என்று சொல்கிறீர்களே, அவ்வளவு வாய் வீரத்தைக் காட்டவேண்டிய அவசியமில்லை என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ப. உ. சண்முகம் : எங்களை "rattled" என்று சொல்லிவிட்டார்.

But I say, we are prepared to battle against them

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : Rattle, battle, what is it? ஏதோ சொல்கிறார், எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ரெட்டிக்கு பதில் சொல்கிறார்.

6. அறிவிப்பு.

உறுப்பினர்கள் இரத்ததானம் செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. இரத்தம் வழங்குவதைச் சேகரிக்கும் சேமிப்பகம் இரத்த சேமிப்பு அமைப்பொன்று இங்கு நாங்கள் கூடும் அறையில் இன்று நடக்கிறது. இரத்த தானம் செய்ய விரும்பும் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தாராளமாக முன்வந்து இரத்த தானம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து ஏற்கனவே பேரவைத் துறை செய்தித்தாள் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ) இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை பேரவையில் வைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் பேரவைக்கு தவறான தகவல் தந்ததாக கூறப்படுவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்கள் அவையில் இல்லாதபோது எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னையைக்
கொண்டுவந்து கொடுத்தார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர்
அவர்கள் வந்தபிறகு கேட்டுவிட்டு பதில் கூறுகிறேன் என்று
சொன்னேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்த
உரிமை மீறல் பிரச்னை குறித்து ஏதாவது கருத்துக்கள் சொல்ல
வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதிலிருக்கிற குற்றச்சாட்டு
முழுவதையும் நான் படிக்கவில்லை.

திரு. ரா. உமாநாத்: மன்னிக்கவேண்டும். உரிமைப்
பிரச்னை என்னவென்று தெரியவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர், சபையில் ஒரு
விஷயத்தைப் பற்றி விவாதிக்கும்போது, அவையில் இருக்கின்ற
அங்கத்தினர்களுக்கு என்ன விவாதிக்கப்படுகின்றது, என்ன
நடக்கிறது என்பதை தெரிவிப்பது தான் முறை. இப்போது
என்ன விவாதத்திற்கு வந்திருக்கிறது என்று எந்த மெம்பருக்கும்
இந்தக் காரியத்தைப்பற்றிப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
ஜேம்ஸ் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது. இந்த
உரிமைப்பிரச்னையை காலையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
கொடுத்தார்கள். அதை படித்தார்கள். உறுப்பினர் அவர்கள் அப்
போது சபையில் இல்லாமல் இருந்திருக்கலாம். அதைப் படித்தார்
கள். அப்போது நான், முதலமைச்சர் அவர்கள் வரட்டும். தீர்ப்பு
அளிக்கிறேன் என்று சொன்னேன், அந்த முறையில் தான்
இப்போது முதலமைச்சர் அவர்களை அதைப்பற்றி பேசுமாறு
கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்
களே, நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அளித்த தீர்ப்பு
என்ன ஆயிற்று என்று இங்கு கேள்வி கேட்டபோது, அது
ஆளுநர் அவர்களுடைய பார்வைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது

என்று நான் சொன்னேன். அவர்களுடைய பார்வைக்
காக அனுப்புவதற்காக அலுவலக செயலாளர் மூலமாக
அனுப்பப்படுவதற்காக நான் கையெழுத்திட்டு என்னிடமிருந்து
அது இலாகாவுக்குப் போய்விட்டது, அல்லது கொண்டு சென்றி
ருக்கக்கூடியவர்கள் கொண்டு சென்றிருக்கவேண்டும், நான்
கையெழுத்து இட்டுவிட்டால் கொண்டுபோகப்படவேண்டும்
என்பது முறையாகும் என்பது முன்னாள் முதல்வருக்கு நன்றாகத்
தெரியும் என்று கருதுகிறேன். அந்த வகையில் என் கையெழுத்
தைப் பெற்று அந்தக் குறிப்பு ஆளுநர் அவர்களுக்குப் போய்ச்
சேரவேண்டும் என்கிற முறையில் அனுப்பப்பட்டிருக்கிறது என்று
சொல்லப்பட்டது. அதைத்தான் அவையில் அனுப்பப்பட்டு
விட்டது என்று சொன்னேன்.

அது மட்டுமல்ல, என்னிடம் அக்குறிப்பு கொடுக்கப்பட்டு,
அந்தக் குறிப்பை நான் கையெழுத்திட்டு, உடனே அனுப்ப
வேண்டும் என்று அனுப்பிய பிறகு இலாகாக்கள் சார்பில்
பரிசீலனை நடந்து அவர்களுடைய பரிந்துரைகளின் மீது மீண்டும்
அனுப்ப முயற்சிப்பது இயற்கையாகும், வழக்கமாகும் என்பது
முன்னாள் முதல்வர் அவர்களுக்கு தெரியும்.

என்னைப் பொறுத்தவரையில் அனுமதிக்கப்பட்டு பரிசீலனைக்
குப் பிறகு மீண்டும் அனுப்பவேண்டும், அனுப்பித்தான் தீர
வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் விரும்பினால் அதுவும்
அனுப்பப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட
மன்றத்தில் பொய்யைச் சொல்லி இது இன்னும் கையெழுத்
திட்டு அனுப்பப்படவில்லை என்று சொல்வதை என்னால்
வேதனையோடு ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் மனம் வருத்
தப்படுகிறேன். அப்படி ஒரு பொய்யைச் சொல்லி எப்படியா
வது சமாளித்துக் கொள்ள வேண்டும் என்ற தேவையில் நாங்கள்
இல்லை, இதை நான் பல முறை சொல்லியிருக்கிறேன். நான்
இன்னமும் சொல்கிறேன், நான் கையெழுத்திட்டு சில நாட்
கள் ஆகிவிட்டன. உத்தரவும் நான் அளித்துவிட்டேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அன்று நான்
கேட்டது, இஸ்மாயில் கமிஷன் கொடுத்த அறிக்கை சபையில்
எப்போது வைக்கப்படும் என்று கேட்டதற்கு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதில், அது ஆளுநர் அவர்
களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்ததும் விரைவில்
சபையில் வைக்கப்படும் என்றும் சொன்னார்கள். அனுப்பப்
பட்டு விட்டது என்று சொல்வது கடந்த காலத்தை குறிப்ப
தாகும். அன்றைக்கே இதைத் தெளிவாக சொல்லியிருப்பார்
களேயானால், ஆளுநர் அவர்களுக்கு அனுப்புவதற்காக
நான் உத்தரவிட்டிருக்கிறேன். அது சென்று திரும்பி வந்த

பிறகு சபையில் வைக்கப்படும் என்று சொல்லியிருந்தால்
இந்தப் பிரச்ஜேயே வந்திருக்காது. ஆளுநர் அவர்களுக்கு
அனுப்பப்பட்டு இன்னும் ஆளுநர் திரும்ப அனுப்ப
வில்லையா என்ற கவலையின் காரணமாகத்தான் இந்த உரிமைப்
பிரச்ஜே ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்
களே, முன்னள் முதல்வர் அவர்களுக்கு, இலாக்காக்கள் எப்படி
செயல்படுகிறது என்பது, ஏழு ஆண்டுகளாக முதல்வராக
இருந்த காலத்தில் தெரிந்திருக்கும், என்னைவிட நன்றாகத்
தெரிந்திருக்கும். கட்டளையிடுவது என்பதும் நான் நேரடியாக
ஆளுநருக்கு அனுப்புவது என்பதும் வேறு விஷயம். கையெழுத்
திட்டு விட்டால் அதன் பேரில் செயல்படுத்த வேண்டும் என்பது
அவர்களுக்குத் தெரியும், அப்படி செயல்படுத்தப்படா விட்டால்
யார் அந்த தவறுக்கு காரணமாக இருக்கிருர்களோ—அதை
நிச்சயமாக விசாரித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்
பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்ற நேரத்தில்—நான்
இன்னமும் நம்புகிறேன், அலுவலர்கள் அலட்சியமாக இருக்க
முன் வர மாட்டார்கள் என்று—அனுப்பப்பட்டிருக்கிறதா இல்லை
யா என்பதையும், அனுப்பப்பட்டது ஆளுநருக்கு சேரவில்லையா
என்பதையும் இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் தெரிந்து
கொள்கிற அளவுக்கு, இருக்கின்ற நேரத்தில் ஆறு மாதமாக
முதலமைச்சராக இருக்கின்ற எனக்கு அந்த வாய்ப்பு இல்லை
என்று சொல்லும்போது, சூழ்நிலை எப்படியிருக்கிறது என்பது
உலகுக்கும் இந்த மாமன்றத்திற்கும் தெரியக்கூடிய வாய்ப்பு
கிடைத்திருக்கிறது, என்ற அந்த வகையிலே நிச்சயமாக நான்
நன்றி கூறிக்கொள்கின்ற போது, என்னை எச்சரிப்பதற்கு, உதவி
யாக இருக்கும் வகையில், இப்படிப்பட்ட முயற்சிகளின் மூல
மாக என்னுடைய கடமையை செய்யவேண்டும் என்பதை
தூண்டிவிடுவதற்கு உதவியாக இருக்கிறது.

[முற்பகல் 10.50]

அது மட்டும் அல்ல. இந்த அமைச்சர் அவையில் நாங்கள்
பணியாற்றும்போது, எப்படிப்பட்ட ஊழியர்கள் இருக்கிருர்கள்
என்பதை இந்த அரசாங்கம் உணருகிறது. எப்படிப்பட்ட அலு
வலர்கள் இருக்கிருர்கள், அவர்கள் உயர்தர அதிகாரிகளா,
அதற்குக் கீழே உள்ளவர்களா, அல்லது கோப்பை எடுத்துக்
கொண்டு போகக்கூடிய சாதாரண நபர்களா என்பது எனக்குத்
தெரியாது. இப்படிப்பட்ட வகையிலே எல்லாம் எச்சரிக்கை
யாக கவனித்துக் கொள்ளவேண்டிய ஒரு நல்ல வாய்ப்பை
எனக்கு ஏற்படுத்தித் தந்ததற்கு, நான் எதிர்க் கட்சித் தலைவர்
அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். முன்னள் முதல் அமைச்சர் அவர்களுக்கு இதெல்லாம் தெரியாமல் இருக்க நியாயம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினர்கள். நான் முதல் அமைச்சராக இருந்தபோது ஆளுநர் அவர்களுக்கு ஒரு கோப்பு அனுப்பப்பட வேண்டுமானல், முதல் அமைச்சர் கையெழுத்திட்டப் பிறகு உடனடியாக அன்று மாலையோ அல்லது மறுநாளோ அந்தக் கோப்பு கவர்னர் மாளிகைக்கு அனுப்பப்படுவது என்பது நியதியாக இருந்திருக்கிறது. ஆனல், இங்கே அந்தக் கோப்பு அனுப்பப்படவில்லை என்று சொல்கிருர்கள். அப்படி அனுப்பப்படாதவர்கள் மீது.....................

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அனுப்பப்படாமல் இருந்திருக்கிறது என்று நான் இன்னும் சொல்லவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை விசாரிப்பேன் என்று சொல்கிறேன்.

திரு. மு. கருணநிதி: அப்படி விசாரித்து, கையெழுத்து போடப்பட்ட பின்னரும் அனுப்பப்படாமல் இருக்குமானல் அந்த அதிகாரி மீது ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பீர்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் முதலிலேயே சொன்னேன். மீண்டும் அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அழுத்தமாகவே சொல்லிக்கொள்கிறேன். தாங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலாகவே இதைச் சொல்கிறேன். சட்ட முறைப்படி எப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ, அப்படி நான் எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகு மேற்கொண்டு.......................

திரு. ரா. உமாநாத்: எங்களுக்கு இதிலே கைடன்ஸ் வேண்டும். தாங்கள் எதிலும் கறாராக இருக்கிறீர்கள். இதைக் கொண்டு வந்து விளக்குவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறீர்கள். ஆனல், இப்போது பேரவையில் நடப்பதைப் பார்த்தால், பிரைமாபசி கேஸை எஸ்டாப்லிஷ் பண்ணுவதற்காகப் பேசலாம் என்று ரூல்ஸ் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசி விட்டார்கள். அதன்பேரிலே முதல் அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லியிருக்கிருர்கள். நாங்கள் அம்மாதிரி எழுப்பினல், அதற்குமேலே விவாதம் கூடாது என்று கறாராக நிறுத்தி விடுகிறீர்கள். ஆனல் இப்போது அனுமதித்திருக்கிறீர்கள். இது

ஒரு புரோசிஜர். இதை நான் ஆட்சேபிக்கவில்லை. அந்தப் புரோசிஜரை எல்லோருக்கும் அப்ளை செய்ய வேண்டும். இதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எல்லோருக்கும் இதை அப்ளை செய்ய வேண்டுமென்று, ஒரு வேண்டுகோளாகத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையிலும் நான் பதில் சொன்னவுடனேயே பேச்சுக்கள் முடிந்திருக்க வேண்டும். என்றாலும், இது ஒரு நிர்வாகப் பிரச்னையாக ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், அதிலும் இந்த அமைச்சர் அவையினுடைய பொறுப்பை நிறைவேற்றும்போது, அதைச் சரிவர நிறைவேற்ற முடியாது அப்படிப்பட்ட நபர்கள் ஏதோ, எந்த சூழ்நிலையிலோ இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டிய நிலைமையிலே இருக்கின்ற நாங்கள், எப்படியும் அவர்களையெல்லாம் வேலையை விட்டு நீக்கவேண்டிய நிலையில், அதற்கான நடவடிக்கை எடுத்து செயல்படுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் கிடைத்திருக்கிறது என்பது மட்டுமல்ல.

ஒன்றை நான் இங்கே தலைவர் அவர்கள் மூலமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவர் திரு. உமாநாத் அவர்களுக்கு பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது எங்கள் இருவருக்கும் இடையே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்னையாகக் கருதி நான் பேசவில்லை. இந்த மாமன்றத்தில் முறைகளுக்கு மாறுபட்டிருக்கின்ற நிலைமை வந்து அது ஒரு செய்தியாகக் கொடுக்கப்பட்டு, சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு நான் விளக்கம் தரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், மீண்டும் சொல்கிறேன். யார் யார் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டமோ அல்லது வேறு வகையிலே தடைகள் இருந்தாலும், அவைகளை மாற்றி இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த மாமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு ஒரு கேள்வியை எழுப்பி, அதன் மூலமாக உரிமையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அப்படிப்பட்டவர்களின்மீது நாங்கள் எந்த தயவு தாட்சண்யமும் இல்லாமல் நடவடிக்கை எடுப்போம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சராக அவர்கள் இருந்தபோது ‘நான் கையெழுத்திட்ட உடனேயே, அன்று மாலையே ஆளுநருக்குப் போய்ச் சேர்ந்துவிடும்; இதுதான் நியதியாக இருந்திருக்கிறது’ என்று அவர்கள் சொன்னார்கள். அவர் காலத்தில் அப்படி நடந்திருக்கலாம்; மகிழ்ச்சியுறுகிறேன். அந்த நிலைமை தொடர ஏதோ தடங்கல்கள் இருக்கின்றன. அந்தத் தடங்கல்களைத்

தவிர்க்க இந்த அமைச்சரவை, இந்த மாமன்றத்தின் ஆதரவோடு இங்கே தந்திருக்கிற இந்த வாய்ப்பை நாங்கள் நிச்சயமாகப் பயன்படுத்தி தவறு செய்தவர்களின் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து விலக்குவோம், சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வேறு எந்த நிலைமைக்கும் கொண்டு போகாமல், முன்னால் இருந்த மரபையே தொடர வேண்டுமென்று இதை எக்ஸெப்ஷனல் கேசாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தலைவர் உமாநாத் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினையில் முதலிலேயே எல்லாவற்றையும் விவாதிக்கக்கூடிய நிலை இல்லை, இது முக்கியமான பிரச்னை; முக்கியமான தலைவர்கள் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் இந்நாள் முதலமைச்சர் மீது கொண்டு வந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் எங்கோ நிர்வாகத்தில் தவறோ தடங்கலோ ஏற்பட்டிருக்கிறது அதைப்பற்றி அறிந்து கொள்வதற்குத் துணையாக இந்தப் பிரச்சினை இருந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே எதையும் திரித்துக் கூறவில்லை; ஆகவே, அவை உரிமையை மீறிய பிரச்சினை இதிலே இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(5) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும்தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆளும் கட்சியின் மீது, அதனுடைய முறை, நிர்வாகம் ஆகியவற்றின் மீது எதிர்க்கட்சியாக இடம் பெற்றிருக்க உரிமை பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து அதன் மூலமாகப் பல கருத்துக்கள் முதல் இரண்டு நாட்கள் வாதிக்கப்படுவதாக இருந்து, இப்போது நான்காவது நாளாக வாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது சட்ட மன்றத்திலோ பாராளுமன்றத்திலோ கொண்டு வரப்படுகிற நேரங்களில் அதைக் கொண்டு வருகிற கட்சிக்கு அதைக் கொண்டு வருவதற்கான உரிமை இருக்குமானால் அதைக் கொண்டு வருவதன் மூலமாக சிலபல கருத்துக்களை வலியுறுத்துகிற, எடுத்துக் காட்டுகிற வாய்ப்பாக அது பயன்படுகிறது என்ற வகையிலேதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே அது அவசியமா என்று கேட்கப்பட்டது. ஆளும் கட்சி சொல்லப்பட்ட காரணங்களை மறுக்கலாம்; இந்தக் காரணங்களைச் சொன்னீர்கள்; அவை தவறானவை என்று வாதிடலாம். ஆனால் அதைக் கொண்டு வரலாமா என்று கேட்பது தவறு. இன்னும் சொல்லப் போனால் எதிர்க்கட்சிகளாக இருக்கும் பல கட்சிகளைச் சார்ந்தவர்கள் ‘நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த

[திரு. க. அன்பழகன்] [1978 சன

வர்கள்; எங்களை எல்லாம் கலந்து 'கொள்ளவில்லை' என்று சொல் கிறபோது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் சொன்னதுபோல் ஒருவேளை அப்படிக் கலந்து கொள்வது ஏதோ ஒரு வகையான பயனை ஜனதா கட்சி எதிர்பார்த்தது என்று அவர் சொன்னது போல் தவருகக் கருத இடம் தரும். ஒருவேளை ஆளும் கட்சியினரோடு உறவுடையவர்களாக, தொடர்புடையவர்களாக உள்ளவர்கள் எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்று சொன்னவுடன் ஆளும் கட்சியிடத்தில் பேசி அதிலே ஒரு செல்வாக்கு பெறவும் பயன் படக்கூடும். ஆகவே, அந்த வகையான தவருன கருத்திற்கும் இது இடந் தரலாம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஒரு கருத்தை விளக்க அல்லது ஆளும் கட்சியின்மீது சில தவறுகளைச் சுட்டிக்காட்ட, சில குறைகளைப் பேச நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வருவது என்பது மிகச் சாதாரணமானது. அதே போல் அப்படி வருகிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்படுவது என்பதும் உலகமெல்லாம் தொடர்ந்து நடை பெற்று வருகிற ஒன்று. 100-க்கு ஒன்று இரண்டு வேண்டுமென்ருல் நிறைவேறி இருக்லாம்; 100-ல் 99 தோற்கடிக்கப்பட்டுத்தான் இருக்கும். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியாக இருந்தா லும் சரி, அறிஞர் அண்ணு ஆட்சியாக இருந்தாலும் சரி. டில்லி நாடாளுமன்றமாக இருந்தாலும் சரி, உலகத்திலே உள்ள வேறு எந்தப்பாராளுமன்றமாக இருந்தாலும் சரி நூற்றுக்கு 99ல் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டிருக் கின்றன. ஆகவே, கொண்டுவரப்பட்ட தீர்மானமே ஏதோ மிகப் பெரிய தவறு என்பதுபோல் கூறுவது சரியல்ல.

முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 'மிகக் கூர்ந்த நுண்ணறிவு உடையவர்கள் கலைஞர் அவர்கள்; இந்த விஷயத்தில் மட்டும் ஏனோதவறி விட்டார்கள்' என்று சொன்ஞர்கள்.

[முற்பகல் 11.00]

எனவே அவர்களின் கூர்ந்த நுண்ணறிவு அவருக்குப் புரிந் திருக்கிறது என்பதற்காகப் பாராட்ட விரும்புகிறேன். ஆனல் பல தடவைகள் புரிந்திருப்பது இந்த ஒரு தட்வை புரியவில்லையே அவருக்கு என்று வருந்துகிறேன்.

இருந்தாலும் ஒரு எதிர்க் கட்சி தன்னுடைய கடமையைச் செய்வதற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஒரு கருவி, அந்தக் கருவியைப் பயன்படுத்தும்போது அதிலே தனிப்பட்ட மாறுபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு அருமையான கற்பனையை இங்கே காட்சியாகக் காட்டிஞர்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம்

1978 சனவரி 7] [திரு. க. அன்பழகன்]

என்பது ஒரு கிணறு. அந்தக் கிணற்றின் கரையிலே இருந்து பார்த்தால் சிங்கமோ அல்லது அவர் விருப்பப்படி வேறு எதுவாக இருந்தாலும் பார்த்தால் முகம் தான் தெரியும், சிங்கம் பார்க்கிறது உடனே பாய்ந்துவிடுகிறது என்ற கற்பனை யைச் சொல்லி, எனவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு கதை என்றெல்லாம் சொன்ஞர்கள். நம்பிக்கையில்லா தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு கிணறு என்று கருதியிருக்கிறது என்று நான் எண்ணவில்லை. நம்பிக்கை யில்லா தீர்மானம் ஒரு கிணறும் அல்ல, ஆளுங்கட்சிக்கு வெட்டப் படுகிற ஒரு குழியுமல்ல. அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தமது ஆளுங்கட்சியைப்பற்றிய பல கருத்துக்களைப் பேச தங்களுக்கும் இதிலே வாய்ப்புக் கிடைத் திருக்கிறது என்று தான் சொன்ஞர்கள் அந்த முறையிலேதான் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமே தவிர, எங்களுடைய கருத்துக் களே தவருகக் கூட இருக்கலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் வால்டேர் பற்றிச் சொன்ஞர்கள். கருத்துக்களை இதன் வாயிலாக எடுத்துச் சொல்கிருேம். உன் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனல் உன்னுடைய கருத்தை எடுத்துச் சொல் வதற்கே உரிமையில்லை, நீ எடுத்துச் சொல்லக்கூடாது என்று யாரும் தடுக்கமுடியாது. எங்கள் கருத்துக்களை நாங்கள் எடுத்துச் சொல்லுகிறபோது நீங்கள் அதை எதிர்க்கலாம், கண்டிக்கலாம், காரணங்களை விளக்கலாம், அதன் மூலம் நாட்டிற்கு உண்மை தெரியக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது எனவே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதே தவறு என்று சொல்ல முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துவக்கத்திலே இதைப்பற்றிச் சொன்ஞர்கள்.

திரு. மாரிமுத்து அவர்கள் சர்வாதிகாரமாக இந்திரா காந்தி நடந்துகொண்டதை மறந்துவிட்டு அவர் நடத்திய எதேச்சாதி காரத்தை மறந்துவிட்டு நாடு இருப்பதைப்போல் கருதிக் கொண்டு அவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவதா, என்று ஏதோ அவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவதே மிகப் பெரிய பாவத் தைப் போல் பேசிஞர்கள். இந்திரா காந்தியைவிட இந்தியா விலேயே இவ்வளவு பெரிய கொடுமைகளைச் செய்தவர், வேறு யாருமே இல்லை. சட்டத்தின் பெயரால், முறை என்ற பெய ரால், நீதிமன்றத்தைத் தூக்கியெறிந்துவிட்டு கொடுமைகளைச் செய்தவர் வேறு யாருமில்லை, அவருக்கு கறுப்புக்கொடி காட்டுவது தவரு? அவருக்குக் கறுப்புக்கொடி காட்டியதில் பலாத்காரம் ஏற்பட்டது என்றெல்லாம் இவ்வளவு தூரம் பேசி ஞர்கள். அப்படிப்பேசுவதற்கு வாய்ப்பளித்தது இந்த நம்பிக்கை யில்லா தீர்மானம்தான். மக்களுடைய எண்ணங்களை வெளிப் படுத்துகிற ஒரு வாய்ப்புத்தான் இது என்று கருத வேண்டும். நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவந்தவரே அந்த

எண்ணத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்படி
யிருக்கிற போது திரு. உமாநாத் அவர்கள் 5 ஆண்டுகளுக்குப்
பிறகு தான் இப்படிப்பட்ட வாய்ப்பு தரப்படவேண்டுமென்று
சொன்னார்கள்.

திரு. ரா. உமாநாத் : சார், நான் சொன்னது ஐந்தாண்டு
களுக்குப் பிறகுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வரவேண்டுமென்று அல்ல. அஷ்யூரன்சஸ் அமல்படுத்தவில்லை என்று
சொன்னீர்களே, அதற்குத்தான் நான் சொன்னேன். அஷ்யூ
ரன்சை அமல்படுத்த காங்கிரஸுக்கு 20 ஆண்டு, உங்களுக்கு
7 ஆண்டு, இவர்களுக்கு 5 ஆண்டுகள் கூட கொடுக்கக்கூடாதா
என்றுதான் கேட்டேன்.

திரு க. அன்பழகன் : உங்களுக்கு ஐந்தாண்டும் தருகிறோம்
நீங்கள் நிறைவேற்றுங்கள், ஆனால் பகல் உணவு கிடைக்க
வில்லை என்று சொல்கிறபோது சமையல் ஆகிற வரையில்
நேரம் ஆகும் என்பது தானாக எழும். உணவு கிடைக்கவில்லை
என்ற உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். நீங்கள்
உங்கள் எண்ணத்தைச் சொல்கிறீர்கள், அதைத் தொடங்க
வேண்டும், தொடங்கி நிறைவேற்ற வேண்டும், தொடங்கக்
கூட இல்லை என்று சொல்வதற்கு இந்தத் தீர்மானத்தைப்
பயன் படுத்தலாம்.

அரசியல் கோணத்திலே எந்தக் கட்சியோடு சேருவது,
யாரோடு சேர்ந்தால் இந்த நேரத்திலே நமக்கு வாய்ப்பு
இருக்கும் எப்படி வோட்டு கிடைக்கும் என்று எல்லா அரசியல்
கட்சிகளும் அவ்வப்போது எண்ணிப் பார்ப்பதற்கு 5 ஆண்டுக்
காலம் இருக்கிறது. ஆனால் இந்த மன்றத்திலே இப்படி
விவாதிப்பதற்கு ஐந்தாண்டு காலம் முக்கியமல்ல. இதைச்
சொல்வதற்கு இந்த ஆறு மாதமே போதும், இன்னும் 3 மாதம்
தரலாம், 6 மாதம் தரலாம், இந்த ஆண்டு வரவு செலவுத்
திட்டத்திலே என்ன என்ன நிறைவேற்றுவோம் என்று சொன்
னீர்களோ அதை நிறைவேற்றுவதற்கு ஏன் தவறினீர்கள்,
செய்கிறபோது நீங்கள் செய்த தவறுகள் என்ன, குறைகள்
என்ன நிறைவேற்றாமல் இருப்பதற்கு வேறு என்ன காரணம்
என்று அறிந்து கொள்வதற்கும் அதைப்பற்றி விளக்குவதற்
கும் ஒரு வாய்ப்பு தான் இது.

இந்த வாய்ப்பைத் தவறு என்று, இன்னும் சொல்லப்
போனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சொல்லப்பட்ட
கருத்துக்கள் எப்படித் தவறு என்று சொல்வதைவிட,
நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததே தவறு என்று
வாதாடிக் கொண்டிருக்கும்பொழுது உண்மையாகவே எதிர்க்
கட்சிகளில் பல ஆளுங்கட்சியின் கருத்துக்களை ஆதரித்திருக்
கின்றன என்று நம்ப முடியவில்லை, சாதனைகளை ஆதரித்திருக்

கின்றன என்று நம்ப முடியவில்லை. எதிர்க்கட்சிகள் எதிர்க்க
வேண்டிய கடமையைப் பெற்றிருக்கின்றன என்பதை உணர
முடிகிறது. ஆளுங்கட்சிக்கு நீங்கள் தருகின்ற வாக்குகள்
மட்டுமல்ல, கருத்துக்கள் எந்த அளவிற்கு ஆதரவு தருவதாக
இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்
பொழுது ஆளுங்கட்சிக்கு உங்களுடைய வாக்குகள் தேவைப்
படவில்லை. எனவே வாக்குகள் அல்ல பிரச்னை. திராவிட
முன்னேற்றக் கழகத்தால் சொல்லப்படுகின்ற கருத்துக்கள்
எப்படி மறுக்கப்படுகின்றன, திராவிட முன்னேற்றக் கழகம்
சொன்ன கருத்துக்கள் ஓரளவுக்குத்தான் உண்மை அல்லது
இன்னும் சொல்லப்போனால் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து
நிறைவேற்றப்படக்கூடியவை, ஆகவே இன்றைக்கு முடிவெடுக்க
கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, சொன்ன
கருத்துக்கள் எப்படித் தவறு ஆகும்? அதையும் இந்த
அவையிலே உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஏதோ ஒரு ஆளுங்கட்சியின்மீது எதிர்க்
கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது பாவம்
என்பதுபோல் சொல்லக்கூடாது. அங்கே 120 பேர்களுக்கு
மேல் இருக்கிறார்கள், இங்கே 48 பேர்கள்தான் எண்ணிக்கை.
அங்கே 120 பேர்களுக்கு மேல் உள்ளவர்களுக்குக் கிடைத்த
வாக்குகள் 52 இலட்சம், 48 பேர்களுக்கு உள்ள கட்சிக்கு
ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் ஏறத்தாழ 42 இலட்சம்
வாக்குகள். எனவே, நண்பர் உமாநாத் அவர்களுக்குச்
சொல்லிக்கொள்கிறேன், இது 52 இலட்சத்தை 42 இலட்சம்
கேட்பதற்கு அடையாளமான ஒரு காரியமே தவிர, வெறும்
இந்தச் சட்டமன்றத்திலிருக்கின்ற எண்ணிக்கைக்கு மட்டுமல்ல
என்பதையும், இந்த 42 இலட்சத்திற்கு ஏற்படக்கூடிய
குமுறல்களையும், உணர்ச்சிகளையும். அவர்களுக்குத் தோன்று
கின்ற உணர்ச்சிகளையும், வருத்தத்தையும் தெரிவிக்க, அல்லது
பொதுவாக மக்கள், வாக்காளர்கள் ஒரு நேரத்தில் ஒரு
கட்சிக்கு வாக்கு அளித்திருக்கலாம், ஆனால் நடப்பைப்
பார்க்கும் பொழுது பொதுவாக அந்த மக்களுக்கு வேறு
எண்ணங்கள், வேறு உணர்ச்சிகள் ஏற்படலாம், அவைகளையும்
எடுத்துக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பு இது.

அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால், இந்த அரசு
கவிழ்க்கப்பட வேண்டுமென்பது எங்களுடைய ஆசை அல்ல.
இந்தச் சட்டமன்றத்தில் இவ்வரசை தோற்கடித்து விடலாம்
என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. 48 பேர்தான் இந்தத்
தீர்மானத்தை ஆதரிக்கப் போகிறோம். அது எங்களுக்கு மிக
நன்றாகத் தெரியும். அதிலும் கூட ஒருவர் இருவர் ஊருக்குப்
போயிருந்தால், அவர்கள் கட்டாயம் வர வேண்டுமென்று
தெரிவிக்கவில்லை. ஆனாலும் பேசுகிறோம். அதைப் பாராட்ட

எண்ணத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்படி யிருக்கிற போது திரு. உமாநாத் அவர்கள் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தான் இப்படிப்பட்ட வாய்ப்பு தரப்படவேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ரா. உமாநாத் : சார், நான் சொன்னது ஐந்தாண்டு களுக்குப் பிறகுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று அல்ல. அஷ்யூரன்சஸ் அமல்படுத்தவில்லை என்று சொன்னீர்களே, அதற்குத்தான் நான் சொன்னேன். அஷ்யூ ரன்சை அமல்படுத்த காங்கிரஸுக்கு 20 ஆண்டு, உங்களுக்கு 7 ஆண்டு, இவர்களுக்கு 5 ஆண்டுகள் கூட கொடுக்கக்கூடாதா என்றுதான் கேட்டேன்.

திரு க. அன்பழகன் : உங்களுக்கு ஐந்தாண்டும் தருகிறோம் நீங்கள் நிறைவேற்றுங்கள், ஆனால் பகல் உணவு கிடைக்க வில்லை என்று சொல்கிறபோது சமையல் ஆகிற வரையில் நேரம் ஆகும் என்பது தானாக எழும். உணவு கிடைக்கவில்லை என்ற உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். நீங்கள் உங்கள் எண்ணத்தைச் சொல்கிறீர்கள், அதைத் தொடங்க வேண்டும், தொடங்கி நிறைவேற்ற வேண்டும், தொடங்கக் கூட இல்லை என்று சொல்வதற்கு இந்தத் தீர்மானத்தைப் பயன் படுத்தலாம்.

அரசியல் கோணத்திலே எந்தக் கட்சியோடு சேருவது, யாரோடு சேர்ந்தால் இந்த நேரத்திலே நமக்கு வாய்ப்பு இருக்கும் எப்படி வோட்டு கிடைக்கும் என்று எல்லா அரசியல் கட்சிகளும் அவ்வப்போது எண்ணிப் பார்ப்பதற்கு 5 ஆண்டுக் காலம் இருக்கிறது. ஆனால் இந்த மன்றத்திலே இப்படி விவாதிப்பதற்கு ஐந்தாண்டு காலம் முக்கியமல்ல. இதைச் சொல்வதற்கு இந்த ஆறு மாதமே போதும், இன்னும் 3 மாதம் தரலாம், 6 மாதம் தரலாம், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே என்ன என்ன நிறைவேற்றுவோம் என்று சொன் னீர்களோ அதை நிறைவேற்றுவதற்கு ஏன் தவறினீர்கள், செய்கிறபோது நீங்கள் செய்த தவறுகள் என்ன, குறைகள் என்ன நிறைவேற்றாமல் இருப்பதற்கு வேறு என்ன காரணம் என்று அறிந்து கொள்வதற்கும் அதைப்பற்றி விளக்குவதற் கும் ஒரு வாய்ப்பு தான் இது.

இந்த வாய்ப்பைத் தவறு என்று, இன்னும் சொல்லப் போனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எப்படித் தவறு என்று சொல்வதைவிட, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததே தவறு என்று வாதாடிக் கொண்டிருக்கும்பொழுது உண்மையாகவே எதிர்க் கட்சிகளில் பல ஆளுங்கட்சியின் கருத்துக்களை ஆதரித்திருக் கின்றன என்று நம்ப முடியவில்லை, சாதனைகளை ஆதரித்திருக்

கின்றன என்று நம்ப முடியவில்லை. எதிர்க்கட்சிகள் எதிர்க்க வேண்டிய கடமையைப் பெற்றிருக்கின்றன என்பதை உணர முடிகிறது. ஆளுங்கட்சிக்கு நீங்கள் தருகின்ற வாக்குகள் மட்டுமல்ல, கருத்துக்கள் எந்த அளவிற்கு ஆதரவு தருவதாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப் பொழுது ஆளுங்கட்சிக்கு உங்களுடைய வாக்குகள் தேவைப் படவில்லை. எனவே வாக்குகள் அல்ல பிரச்னை. திராவிட முன்னேற்றக் கழகத்தால் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் எப்படி மறுக்கப்படுகின்றன, திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன கருத்துக்கள் ஓரளவுக்குத்தான் உண்மை அல்லது இன்னும் சொல்லப்போனால் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து நிறைவேற்றப்படக்கூடியவை, ஆகவே இன்றைக்கு முடிவெடுக்க கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, சொன்ன கருத்துக்கள் எப்படித் தவறு ஆகும்? அதையும் இந்த அவையிலே உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஏதோ ஒரு ஆளுங்கட்சியின்மீது எதிர்க் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது பாவம் என்பதுபோல் சொல்லக்கூடாது. அங்கே 120 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள், இங்கே 48 பேர்கள்தான் எண்ணிக்கை. அங்கே 120 பேர்களுக்கு மேல் உள்ளவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் 52 இலட்சம், 48 பேர்களுக்கு உள்ள கட்சிக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் ஏறத்தாழ 42 இலட்சம் வாக்குகள். எனவே, நண்பர் உமாநாத் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், இது 52 இலட்சத்தை 42 இலட்சம் கேட்பதற்கு அடையாளமான ஒரு காரியமே தவிர, வெறும் இந்தச் சட்டமன்றத்திலிருக்கின்ற எண்ணிக்கைக்கு மட்டுமல்ல என்பதையும், இந்த 42 இலட்சத்திற்கு ஏற்படக்கூடிய குமுறல்களையும், உணர்ச்சிகளையும். அவர்களுக்குத் தோன்று கின்ற உணர்ச்சிகளையும், வருத்தத்தையும் தெரிவிக்க, அல்லது பொதுவாக மக்கள், வாக்காளர்கள் ஒரு நேரத்தில் ஒரு கட்சிக்கு வாக்கு அளித்திருக்கலாம், ஆனால் நடப்பைப் பார்க்கும் பொழுது பொதுவாக அந்த மக்களுக்கு வேறு எண்ணங்கள், வேறு உணர்ச்சிகள் ஏற்படலாம், அவைகளையும் எடுத்துக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பு இது.

அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால், இந்த அரசு கவிழ்க்கப்பட வேண்டுமென்பது எங்களுடைய ஆசை அல்ல. இந்தச் சட்டமன்றத்தில் இவ்வரசை தோற்கடித்து விடலாம் என்பது எங்களுடைய நோக்கம் அல்ல. 48 பேர்தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப் போகிறோம். அது எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அதிலும் கூட ஒருவர் இருவர் ஊருக்குப் போயிருந்தால், அவர்கள் கட்டாயம் வர வேண்டுமென்று தெரிவிக்கவில்லை. ஆனாலும் பேசுகிறோம். அதைப் பாராட்ட

வேண்டும். தோழமைக் கட்சிகள், அல்லது மற்றக் கட்சிகள் ஆதரவு தருகிறதா என்பது அல்ல, முன்பு லத்திப் அவர்கள் எங்களுக்கு நம்பிக்கையாக இருந்தார், தேர்தல் வருகிற பொழுது அவர் எங்களுக்கு நம்பிக்கையாக இல்லை. இப்படிப் பட்ட ''கைகளெல்லாம்'' ஒதுக்கினாலும், தனித்து நிற்க முடியும், திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து தேர்தலைச் சந்தித்து அதன் விளைவுகள் எதுவாக இருந்தாலும் மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளலாம், மக்களின் தீர்ப்புப்படி தனியாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு ஆதர கிடைக்கிறதோ கிடைக்கட்டும் என்று சட்டமன்றத் தேர்தலிலே தின்றதைப் போலத்தான் இந்தத் தீர்மானத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பொறுப்பிலே கொண்டு வந்திருக்கிறதே தவிர அரசியல் முறையில், பல்வேறு கட் களின் உறுப்பினர்கள் எப்படி இந்தக் கருத்தை வரவேற்க வேண்டுமென்ற முறையிலே அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று. இந்த ஆட்சியின்மீது நம்பிக்கையில்லை என்று தெரிவிப்பதற்கு எத்தனையோ காரணங்கள் தேவையில்லை. ஒரு சுருக்கமான காரணம், நாங்கள் நம்புகின்ற காரணம், ஜனநாயகத்தில் உங்களுக்கு முழு நம்பிக்கையில்லை, ஆகவே எங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கையில்லை. ஜனநாயக முறையிலே தவறுகளை யாரும் செய்திருக்கலாம். ஆனால் ஜனநாயக முறையைக் கெடுக்கின்ற முறையில் வேண்டுமென்றே செய்த, இந்திராகாந்திக்குக் கடைசி வரையில் துணை நின்ற கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் உமாநாத் அவர்கள்கூடச் சொல்லலாம், 69-லே நாங்கள் சொன்னோம், இந்திரா காந்தி சர்வாதிகாரப் பாதைக்கு அடி வகுத்துச் செல்கிறார் என்று சொன்னோம் என்று சொல்லலாம். இந்திரா காந்தி சர்வாதிகாரப் பாதையில் போகிறாரா இல்லையா என்பதை அப்பொழுது எங்களால் தீர்மானிக்க முடியவில்லை.

அவர்களுடைய கட்சியின் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். திரு. இராமமூர்த்தி மட்டும் சொல்லியதோடு இல்லை, இன்றைக்குக் குடியரசுத் தலைவராக இருக்கின்ற திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர் அவர்கள் என்னை அழைத்து இந்திரா காந்தி சர்வாதிகார பாதைக்குப் போகிறார், அவரை எதிர்ப்பதற்கு ஒன்று சேர வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். அப்பொழுது எங்க ளுடைய கண்ணோட்டத்தில் அவர் சர்வாதிகாரி ஆவார் என்று எதிர்பார்க்க வில்லை. அது தவறாகக் கூட இருக்க லாம். ஆனால் அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு, இந்திராகாந்தி அவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டது செல்லாது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்

பட்டதற்குப் பிறகு, அதைப் பாதுகாப்பதற்காக அவர் எடுத்த நடவடிக்கைகள், 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட நெருக்கடி காலப் பிரகடனம், அந்த நெருக்கடி காலப் பிரகடனம் எவ்வளவு பெரிய நெருக்கடியை உண்டாக்கி, நாட்டிலே எதிர்க் கட்சித் தலைவர்களெல்லாம் சிறையிலே தள்ளப்படு கின்ற நிலைமையை அந்த நெருக்கடி காலப் பிரகடனத்தின் மூலம் செய்தார்கள் என்ற நிலைமை. அப்பொழுதுதான், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திராகாந்தி ஜனநாயகப் பாதையிலே சோஷலிசவாதியாக, சமதர்மவாதியாக ஏதோ மிகப் பெரிய கடமையைச் சாதிப்பதற்காகச் செய்கிறார் என்று எண்ணியிருந்த — உள்ளபடியே நம்பிக்கொண்டிருந்த—எங்க ளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

[முற்பகல் 11.10]

சந்தேகம் ஏற்படுகிறபொழுது கூட திட்டவட்டமாகக் குற்றம் சாட்டுகிற நிலைமைகள் எங்களுக்கு ஏற்படவில்லை. ஆகவே, அன்றைய தினம் அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பிலே வந்ததையொட்டி, இந்திராகாந்தி நடந்துகொள்வதைப்பற்றி எப்படி நடந்து கொள்வார் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைக் கேட்டபொழுது, அவர் கூறினார், 'அவர் மற்றவர் களுக்கெல்லாம் முன் உதாரணமாக நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்' என்று அவர் சொன்னார். தீர்ப்பினுள்ள வாறு இந்திரா காந்தி அவர்கள் நடந்து கொள்வார். மற்றவர் கள், அவர் ஒரு தவறு செய்து, அதே தவறைச் செய்ய மாட்டார்கள் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு எதிர்பார்க் கிறேன் என்று சொன்னார். சொன்னது மட்டுமல்ல; இன் றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லாத பல நண்பர்கள் அப்பொழுது அதில் இருந்தார்கள், செயற் குழுவிலே இருந்தார்கள். அவர்களை அழைத்தோம். எல்லோரு மாக, செயற்குழுவிலே, 7, 8 மணி நேரம் கலந்து பேசி, இந்திரா காந்தி கொண்டு வந்த அவசர நிலைமையைக் கண்டித்து அந்த நிலைமை நாட்டுக்கு நல்லதல்ல, 60 கோடி மக்கள் வாழ்கிற இந்தியாவினுடைய ஜனநாயகத்திற்கே களங்கம் என்று தெரிவித்து, அதனைக் கண்டித்து, தீர்மானம் நிறை வேற்றினோம். திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தீர்மானத்தை அப்பொழுதே நிறைவேற்றி விட்டது.

ஒரு வேளை திராவிட முன்னேற்றக் கழகம் கோழைக் கட்சியாக இருந்தது என்றால், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் வீரமானதாயிற்றே? தீர்மானம் போட்டதா? வேறு எந்த ஒரு கட்சி அன்றையதினம் நாட்டிலே தீர்மானம் போட்டது? ஆளுங்கட்சியாக இருந்தபோதுகூட அன்றைய

[திரு. க. அன்பழகன்] [1978 சனவரி 7

இனம் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் போட்டவுடன்,
பெருந்தலைவர் காமராஜ் அவர்கள், எங்களிடம் என்ன
சொன்னார்? அவசர நிலையைக் கண்டித்து ஒரு தீர்மானம்
போட்டிருக்கிறீர்கள். அதுவே போதுமானது; அதற்கு
மேல் அவசரப்பட்டு அடுத்த அடி எடுத்து வைக்காதீர்கள் என்று
எச்சரித்தார். அவர், அப்பொழுதும் மேலும் என்ன சொன்னார்?
இந்தியா முழுவதும் இந்திரா காந்தியினுடைய சர்வாதிகாரத்தின்
காரணமாக, ஒவ்வொரு மாநிலத்திலும் அவருடைய ஆட்களை
வைத்து ஆட்சி நடத்துகிற நிலைமை இருக்கிறது. ஒரு கொடுங்
கோன்மை நடந்து கொண்டிருக்கிறது. நான் 5 ஆண்டுகளுக்கு
முன்பே, இந்திரா இப்படி சர்வாதிகாரத்தை நோக்கிப்
போகிறார் என்று சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகம்
அப்பொழுது புரிந்து கொள்ளவில்லை. இப்பொழுது புரிந்து
கொண்டீர்கள். இப்பொழுதாவது, ஆட்சியை ஏமாந்து போய்
விட்டு விடாதீர்கள் என்று சொன்னார்.

அந்த நிலைமையிலேநெருக்கடி நிலைமை எங்களை எந்த நேரத்
திலும் எதுவும் செய்யலாம் என்று தெரிந்ததற்குப் பின்னால்,
இந்திரா காந்தி எதுவும் செய்யலாம் என்று தெரிந்ததற்குப்
பின்னால், எங்களை எப்பொழுதும் ஆட்சிப் பீடத்திலிருந்து தூக்கி
எறியலாம், சட்டமன்றத்தை எப்பொழுதும் கலைக்கலாம், வேண்டு
மென்றால், எங்களைக் கைது கூடச் செய்யலாம் என்பதற்குப்
பிறகு, அவ்வளவு அதிகாரத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள்
என்று தெரிந்ததற்குப் பிறகு, ஒரு மாநிலத்தினுடைய கவர்
னரைக் கூட கைது செய்கிற அளவுக்கு அதிகாரம் இருக்கிறது
என்று மத்திய சர்க்காரிலே உள்ள சில அதிகாரிகள் சொல்கிற
அளவுக்கு நிலைமை வந்தபிறகு, சிறையிலே தள்ளப்பட்டவர்களைப்
பற்றி யாரும் விசாரிக்க முடியாது; அவர்களைச் சுட்டுக்
கொல்லக்கூடிய நிலைமை வந்தால்கூட யாரும் விசாரிக்க முடியாது
என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மத்திய சர்க்காரினுடைய
மிகப் பெரிய வழக்கறிஞர் தெரிவித்ததற்குப் பிறகு, இவ்வளவு
பெரிய கொடுமைகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு
எதிர்ப்புச் சக்தியாகத்தான் இருந்ததே தவிர, இந்திரா காந்தி
யின் பின்னாலே ஒட்டிக் கொள்கிற, ஒடுகிற சக்தியாக இல்லை.

இன்னும் சொல்லப் போனால், அரசியலிலே ராஜதந்திரம்
மிக முக்கியமான தேவை. யாரோ சிலர் ராஜதந்திரம் தேவை
யில்லை என்று சொல்கிறார்களே என்பதால், அரசியல்வாதி மாறி,
ராஜதந்திரத்தை விட்டுவிடமாட்டார்.

இந்திரா காந்திக்குப் பக்கத்திலே இருந்த ஒருவரை,
இவ்வளவு பயங்கர நிலைமை இந்திரா காந்தியால் நாட்டில் ஏற்
பட்டுள்ளது; அதை எதிர்ப்பதற்கு நீங்கள் வழி காட்டுகிறீர்
களா என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டபொழுது,
அந்த மிகப் பெரிய அமைச்சர் சொன்னார்—பெயரைச் சொல்ல

1978 சனவரி 7] [திரு. க. அன்பழகன்]

இப்பொழுது அவசியமில்லை; கடைசியிலே இந்திராவை எதிர்த்து
வெளியேறியவர், மக்களிடத்திலே இந்திராவை எதிர்த்து ஒரு
நல்ல எண்ணத்தைத் தோற்றுவித்தவர்—அப்படிப்பட்ட ஒரு
தலைவர் சொன்னார். இந்திரா காந்தியினுடைய சர்வாதிகார,
கொடுங்கோன்மைப் போக்கு புயல் வேகமாகப் போகிறது. இப்
பொழுது நேரம் சரியாக இல்லை; கொஞ்சம் பொறுமை காட்
டுங்கள்; சந்தர்ப்பம் வரும், சர்வாதிகாரத்தை வீழ்த்துங்கள்
என்று சொன்னார். ஆனால், அப்பொழுதிருந்த சந்தர்ப்பம்
பற்றித் தெரியாத ரெட்டி எழுதுகிறார், ஏதோ திராவிட முன்
னேற்றக் கழகம் அப்பொழுது இந்திரா காந்தி எந்த நேரத்திலும்
எதைச் சொன்னாலும் அதைக் கேட்டு ஆடியதைப் போல் எழுது
கிறார். ஒரு ரெட்டி சொல்வதை ஒரு செய்தியாக எடுத்துக்
கொள்ளலாமே தவிர, பல பேர்கள் (குறுக்கீடு) ரெட்டி
என்றால், பிரம்மானந்த ரெட்டி அல்ல, சஞ்சீவ ரெட்டி அல்ல;
இங்கே, யாராவது ரெட்டியிருந்தால் அவர்களை அல்ல. நான்
சொல்வது, சி. ஜி. கே. ரெட்டியை, எழுத்தாளர் ரெட்டியை.
வரலாற்று வீரர்களாக, இருப்பவர்களைப்பற்றி, அரசியல்வாதி
களைப்பற்றி, மற்றவர்களைப் பற்றி புள்ளி விவரம் வெளியிடு
பவரை நாம் பெரிதாகக் கொள்ள முடியாது. நாட்டிலே மத்திய
சர்க்காரது அராஜகமான ஆட்சியை எதிர்க்கின்ற மனப்பான்மை
யோடு இந்த ஆட்சி மாறவேண்டுமென்று, இந்தக் கொடுமை
களிலிருந்து நாடு விடுபட வேண்டுமென்று, எண்ணத்தோடு
மகாநாட்டுக்கு மகாநாடு, இந்திரா காந்திக்கு வேண்டுகோள்
மூலமாக தூது செல்வோம் என்று அறிவிப்பதன் மூலமாக,
சிறையிலேயுள்ள தலைவர்களைச் சந்திக்க எங்களை அனுமதிப்பதன்
மூலமாக, அமைதியை நிலைநாட்ட நாங்கள் தயாராக இருக்
கிறோம் என்று எல்லாம் தெரிவித்தோம் என்றால், நாங்கள்
கோழைகளாக இருக்கலாம், ஆனால் புத்திசாலிகளாக இருந்தோம்.

ஆனால் நாட்டிலே உள்ளவர்கள் சொல்லட்டும். அன்று
வீரத்திற்கும் கோழைத்தனத்திற்கும் வேற்றுமை தெரியாத
காரணத்தால், புத்திசாலித்தனத்தை இழந்துவிட்டவர்கள் இருந்
தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் ' சிவாஜி கண்ட இந்து சாம்
ராஜ்யம் ' என்ற நாடகத்தில் காகபட்டராக நடிக்கும்போது,
அவரிடத்தில் சீடனாக இருந்த சீட்டிஸ் என்பவனைப் பார்த்து ஒரு
தந்திரமான யோசனையைச் சொன்னார். அந்த யோசனையை
அவன் கேட்கவில்லை, என்ற உடன் அவர் சொன்னார், ' உனக்குப்
புத்தி இருக்கும் என்று பார்த்தேன், ஆனால் உனக்கு அது இல்லை
என்று தெரிந்து கொண்டேன் ' என்று சொன்னார். அண்ணா
அவர்கள் சொன்ன தந்திரத்தை அவன் செய்ய முடியாது என்று
சொல்கிறபோது அவர் சொன்னார், ' அப்படிப்பட்ட காரியத்தை
உன்னால் செய்ய முடியவில்லை. ஒரு சிறு நரிக்குக்கூட புத்தி
யிருக்கும் உனக்குப் புத்தியில்லை ', என்று சொன்னார்.

ஆகவே, இந்த நேரத்தில் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகிறேன், புத்தி மிகத் தேவை. சர்வாதிகாரம், கொடுங்கோன்மை, அது சிங்கமாக அல்ல புலியாக இருக்கிறது. ரத்த வெறி பிடித்த புலியாக இருக்கிறது. அந்த நேரத்திலே கொண்டு வரப்பட்ட 20 அம்ச திட்டத்தைக் கூட, திராவிட முன்னேற்றக் கழகம் ஓரளவு நிறைவேற்றி இருக்கிறது. மேலும் நிறைவேற்ற எங்களுக்கு நிதி தேவை என்று தான் சொன்னோம். அன்றையதினம் இங்கே கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், மிக திட்டவட்டமாக சொன்னார்கள். நீங்கள் சொல்கிற 20 அம்சத் திட்டங்களில் பலவற்றை நாங்கள் நிறைவேற்ற ஏற்கனவே முன் வந்திருக்கிறோம், இன்னும் நிறைவேற்ற பணம் எங்கே, நிதி எங்கே, நிதி இல்லையே நிறைவேற்றுவதற்கு என்று கேட்டார்கள்.

அப்படி எதிர்ப்பை தெரிவிக்கவேண்டிய அளவுக்குத் தெரிவித்தோம். கருத்து மாறுபாட்டை உணர்த்தினோம். அதே நேரத்தில் ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப்படுகிறது. உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்ற நிலையில், அண்ணா அவர்கள் சொன்ன அந்த தந்திரம் மக்களின் அடிப்படை வாழ்வுக்குத் தேவை என்று நாங்கள் இருந்தோம். விளக்குவதற்கு இன்னும் ஏராளமான ஆதாரங்களை வைத்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இந்தியாவிலேயே ஒரே ஒரு கட்சிதான் ஆளுங்கட்சியாக இருந்த காலத்திலே, மத்தியிலே இந்திரா காந்திக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்ததால் வரக்கூடிய ஆபத்தைக் கூட எண்ணிப்பார்க்காமல் திட்டவட்டமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தியா முழுவதிலும் நெருக்கடி நிலை வரக்கூடிய சூழ்நிலையிலே, '' அன் ஐ டு இண்டியா ''என்ற புத்தகத்தில் ஒரு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டேவிட் சேல்போர்ன் என்பவர் ஒரு நல்ல ஆராய்ச்சி பாளர், நெருக்கடி நிலைமையில் நடந்த அத்தனையும் புத்தகமாக அல்ல, கதை யாக அல்ல, கொட்டேஷன்களாக எழுதியிருக் கிறார். அதிலே அவர் குறிப்பிடுகிறார்.

In the book 'An Eye to India' (Pelican Books), Mr. David Selbournea has stated—

"Thus on 27th June 1975, immediately after the declaration of emergency the executive committee of the D.M.K. under the State's Chief Minister M. Karunanidhi, was 'pained to note the recent approach by the ruling Congress". It considered, too, that the methods practised by the Prime Minister have tended to put out the light of democracy and led the country into the gloom of dictatorship, declarations sealing i's cwr doom and setting in train 6 months of inevitable reprisal. The D.M.K. spoke

both quickly and incautiously (as silence descended on the rest of India) but with sufficiently telling judgement, of the image of truth hidden,and ludicrous and strange arguments adduced in justification of the emergency. It spoke of schemes for stifling the opposition parties and of casting on 26th June 1975 an everl sating slur on the Indian people. It spoke of the ruling faction going in search of imaginary reasons, alling anything and everything consp'racy and reaction, whil eitself standing in the shadows of falsehood. These wesre all to seem ironies in view of what was identically to overtake and wamp the D.M.K. itself, by way of explanation for its own removal...."

அவர் எழுதிய ஏட்டிலிருந்து இன்னும் எத்தனையோ பகுதிகளைப் படிக்கலாம். தொடர்வது அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும். ஆனால் திட்டவட்டமாக இந்தியாவிலேயே ஒரு கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் அப்படித் தீர்மானம் நிறைவேற்றியது என்பதை அகில இந்தியாவிலேயும் நிகழ்ந்த வரலாற்றைப் புரட்டிப் பார்த்தவர்கள் அப்படிச் சொன்னார்கள்.

அன்றைக்கு குஜராத்திலே இருந்த முதலமைச்சர் அவர்கள், அப்போது அவர் முதலமைச்சராகத்தான் இருந்தார். அவர் சொன்னார், ' நாங்களும் உங்களைப்போல் ஒருதீர்மானத்தைப் போடுவதுபற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறோம் ' என்றார். இங்கே கூட ஒரு நண்பர் சொன்னார் குஜராத்திலே மட்டும்தான் ஒருவிதமான எதிர்ப்பு உணர்ச்சி இருந்தது, என்றார். அது வேறு உணர்ச்சி, காங்கிரசுக்கே எதிர்ப்பு உணர்ச்சி அங்கே இருந்தது. இங்கே இருந்தது காங்கிரசுக்கு எதிர்ப்பு அல்ல. ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக, இந்திராகாந்தியை எதிர்த்து, அவருடைய சர்வாதிகாரத்தை எதிர்த்து போராடுகிற அப்படிப்பட்ட ஒரு நல்ல உணர்ச்சியாகத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆயிரம் தவறுகள் செய்த கட்சியாக இருக்கட்டும். ஆனால் அந்த நல்ல உணர்ச்சிக்கு இன்றைய ஆளும் கட்சி எந்த வகையிலே துணை நின்றது.

[முற்பகல் 11-20]

இன்னும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் பேசிய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், இந்தியாவில் கொண்டு வரப்பட்ட நெருக்கடி நிலை நியாயமானது என்று கருதினோம். எங்களுக்கு இன்னின்ன காரணங்களால் நெருக்கடி நிலை சரி என்று பட்டது என்று சொன்னார்கள்.

இன்றைக்கு உள்நாட்டில் இந்திரா காந்தி தேர்தல் செல்லாது என்று தீர்ப்பளித்தார்கள், அதற்காக நெருக்கடி நிலை கொண்டு வந்தார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமா?

நாளைக்கு கருணாநிதி தேர்தல் செல்லாது என்று சொன்னால்
சட்டத்தை மாற்றிக்கொள்ளமுடியுமா? அந்த அளவிற்கு அடிப்
படை நியாயங்களை மாற்றி அமைத்து, ஒரு அக்கிரமமான
நிலையில் நெருக்கடி நிலை கொண்டு வரப்பட்டது. பீகாரில்
கிளர்ச்சி ஏற்பட்டது என்று சொன்னார்கள். தமிழ் நாட்டிலும்
தான் கிளர்ச்சி ஏற்படுகிறது. முதலமைச்சருக்கு அதிகாரம்
கொடுத்தால் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யத் தயாரா?
ஒரு கிளர்ச்சி நடந்தது என்று சொன்னால், தொழிலாளர் கிளர்ச்சி
யாக இருந்தால், அவர்களிடத்தில் சென்று போராட்டத்தை
நிறுத்திக்கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறி அந்தப் பிரச்னையை
சமாளிக்கலாமே தவிர அதற்காக நெருக்கடி நிலை கொண்டு வர
வேண்டும் என்று சொன்னால் ஒப்புக் கொள்ள முடியுமா?

நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சிதலைவர் மாரிமுத்து அவர்கள்
பேசியபோது சொன்னார்கள். நெருக்கடி நிலை கொண்டு வந்ததில்
தவறு இல்லை. பின்னாலே தவறு ஏற்பட்டு விட்டது என்றார்கள்.
இது என்ன நியாயம்? கொண்டு வரப்படுகிறபோதே விவரம்
தெரியாதா? இந்திரா காந்திக்கு நெருக்கடி நிலை கொண்டு
வந்தால் எவ்வளவு அதிகாரம் யார் கையில் குவியும் என்று
தெரியாதா? சஞ்சய் காந்தி இந்நாட்டில் முடிசூடா மன்னனாக
பவனி வருவார் என்று தெரியாதா? அந்த நிலைமைகளைத்
தெரிந்து தான் இந்திராகாந்தி அவர்கள் நெருக்கடி நிலையைக்
கொண்டு வந்தார்கள். இந்திரா காந்தி அவர்கள் குடும்பத்தை
அழைத்து பிரதம மந்திரியாக இரு என்று சொன்ன காரணத்
தால் தான் நாட்டின் தலைவிதி இந்த நிலைமைக்கு வந்தது.
அந்த நெருக்கடி நிலையைக் கண்டிக்கத் தெரியவில்லை என்பதோடு
மட்டுமல்ல.

1965-ம் ஆண்டு என்று கருதுகிறேன். அறிஞர் அண்ணா
அவர்கள் ராஜ்ய சபையில் பேசியதைக் குறிப்பிடுகிறேன். அப்
போது நெருக்கடி நிலைமை இருந்தது. அதாவது டாஸ்கண்ட்
ஒப்பந்தத்திற்குப் பின்னாலே பேசியிருக்கிறார்கள். (1966) டாஸ்
கண்ட் பிரகடனத்திற்கு முன்னால் பாகிஸ்தானுக்கும் இந்தியா
விற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் காரணமாக
இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. உள்
நாட்டுப் பிரச்னைக்காக இல்லை. வெளிநாட்டு அபாயம் என்ற
பிரச்னைக்காக நெருக்கடி நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு
இந்திராகாந்தி கொண்டுவந்தது உள்நாட்டு நெருக்கடி நிலை
பிரகடனம். வெளிநாட்டு நெருக்கடி நிலை இருந்தபோது, அறிஞர்
அண்ணா அவர்கள் பேசிய பேச்சு இது. அவர் அங்கே தமிழிலே
பேசியிருக்கிறார். அது பின்னாலே ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்
பட்டு வெளியிடப்பட்டு இருக்கிறது. ஏன் இதைச் சொல்
கிறேன் என்றால் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பின்னால் கேட்
கட்டும், அவர் எப்படிப் பேசினாரோ அதைப் படியுங்கள் என்று.
அதற்காகத்தான் சொல்கிறேன். அண்ணா பேசியிருக்கிறார்....

"As far as the President's Address is concenred, it is woeful that no
mention has been made about the emergency and the D.I.R. (Defence
of India Rules) in it. We find that the determined judgements of the
jurists are discarded, that political advice given by eminent constitutional
lawyers is arrogated against the sum total of political wisdom of these in
power and this Government is still keeping the emergency and the D.I.R.
I am not asking them to lift the emergency and the D.I.R. because
I am apprehensive of any political consequence for this or that party;
we can take it, we have taken it. The continuation of the emergency
and the D.I.R. even after the Tashkent Declaration will be misconstrued
there is no doubt about it-that we have not taken it to our heart; the
Tashkent spirit itself. Therefore, at least in the name of that great
soul who has passed away, I would request and demand of this Govern-
ment to repeal this emergency and this D.I.R. They have got enough
powers with the laws that they have, to deal with any mischief, with
any anti-social element. Have we not seen the whole nation rising as
one man forgetting all differences of opinion, giving up even agitations,
when this country was confronted with danger? Why are they appre-
hensive of their own people? Why should they distrust the people of
this land when they have demonstrated amply and nobly that they can
stand up if this country is confronted with dangers? This Government
and those who are running this Government should not arrogate to
themselves that they have got a monopoly of patriotism and that others
do not have patriotic instincts at all. Therefore. I would demand of
this Government that they should forwith lift this emergency and this
D.I.R. and release those who are kept in Jail for a long number of
years years...." ;

1966-ல் அண்ணா அவர்கள் வெளிநாட்டு படையெடுப்பை
யொட்டி அறிவிக்கப்பட்ட எமர்ஜென்சியை உடனடியாக நீக்
குங்கள், யாரையும் சிறையில் வைக்காதீர்கள், நாட்டுப்பற்று,
தேசப்பற்று ஆளுகின்ற உங்களுக்கு மட்டும்தான் சொந்தமான
தல்ல என்று அன்றைக்கு அறிவித்தார்கள்.

இப்போது 1975 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட
எமர்ஜென்சியை, உள்நாட்டு நெருக்கடி நிலையை, அதை திராவிட
முன்னேற்றக் கழகம் தன்னுடைய சக்திக்கு ஏற்ற அளவுக்கு
எதிர்த்தது என்றால், அகில இந்திய கட்சியா திராவிட முன்னேற்
றக் கழகம்? ரெட்டி அவர்களே சொன்னது போல, நாங்கள்
புரட்சி நடத்தி, பலாத்காரம் நடத்தி, வெடி குண்டு வைத்துப்
பழக்கப்பட்டவர்களா? சில இடங்களில் பலாத்காரம் வரலாம்.
மனிதன் பலாத்காரத்திற்கு ஆள்பட்டு விடுகிறவன்தான், ஆளுங்
கட்சியில் பலாத்கார உணர்ச்சிக்கு ஆளாகாதவர்களா இருக்
கிறார்கள்? எனக்கு அவர்களில் பல பேரைத் தெரியும். நானே
பலாத்கார உணர்ச்சிக்கு ஆளாகாதவனா? அறிவு முந்திக்

[திரு. க. அன்பழகன்] [1978 சனவரி 7

கொண்டால் பலாத்காரம் சரிகிறது. அறிவு பிந்திக் கொண்டால் பலாத்காரம் தலையெடுத்து விடுகிறது. அவ்வளவு தான் மனிதன் இயல்பு.

ஆனால் பலாத்காரத்தை முறையாக வைத்துக் கொண்டு, ஆட்சியைக்கவிழ்க்க, மாற்ற, ஆட்சியைக்கைப்பற்ற, அல்லது நடைபெறுகிற ஆட்சியை தாக்குவதற்காக பலாத்காரத்தைக், கையாள யார் முன்வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல, வாக்குகளை நம்பியிருப்பது திராவிட முன்னேற்றக்கழகமே தவிர, வேட்டுகளை நம்பியிருப்பதல்ல.

திராவிட முன்னேற்றக் கழகம் ஓட்டு முறையைத்தான் நம்புகிறது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அடிப் படையிலே தான், கருத்தின் அடிப்படையிலே தான், எதிர்ப் பைத் தெரிவித்ததே தவிர, பலாத்காரத்தை ஆதரிக்கவில்லை. அதற்காக இந்தியா முழுவதும் சில ஏற்பாடுகளைச் செய்யலாம் என்றார்கள். எங்களுடைய நண்பர்கள் சில பேர் எங்களிடத்தில் அதைத் தெரிவித்தார்கள்: இப்போது எங்களோடு அவர்கள் இல்லை. அப்படி தெரிவித்தபோது, இந்தியா முழுவதும் செய்வது என்பது கருத்தளவில் மட்டும் தான் திராவிட முன்னேற்றக் கழகம் செய்ய முடியுமே தவிர, அதுவும் கூட வாயில் துணியை வைத்து அடைத்துவிட்டு, அன்பழகன் நல்ல பேச்சாளன், இன் றைக்கு இவனை பேசச் சொல் பார்க்கலாம் என்று கையைப் பிடித்துக்கொண்டு மிரட்டினால் பேச்சா வெளியே வரும்?

நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டபோது, மாரிமுத்து அவர் களின் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்த போது, பொதுமக்கள் தங்களுடைய கருத்தை வெளியிடமுடியாமல் வாயில் துணியை வைத்து அடைத்த காரியம். அந்தக் கொடுமை சாதாரணமானதா ஆட்சியை எதிர்த்து முயற்சி நடைபெற்றது சரியா தவறா என்பது வேறு, ஆனால் முயற்சி எந்த அளவுக்குப் பயன்பட்டது என்பது வேறு, ஆனால் அதற்காக ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்துவிட்ட, அந்தக் காரியம் இந்தியாவில் நடைபெற்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மூச்சு விட வாய்ப்பு கிடைத்த போது எதிர்த்துச் சொன்னோம். கழகத் தோழர்கள் பலபேர் சிறையில் தள்ளப்பட்டிருந்தார்கள். அதைத் தான் கலைஞர் அவர்களோ, மற்றவர்களோ மிசாவுக்கு அஞ்சவில்லை என்று சொல்கிறோம். மிசாவைத் தாங்கிக் கொண்டோம். மிசா வருகிறது என்றால் அஞ்சியவர்களா நாங்கள்?

எதற்கு மிசா? மிசா சட்டம் என்பது அரசியல் கைதிகளை எந்த நேரத்திலும் தொடாது என்று பாராளுமன்றத்தில் உறுதிமொழி கொடுத்தார் இந்திரா காந்தி அவர்கள். அதற்குப்

1978 சனவரி 7] [திரு. க. அன்பழகன்]

பிறகு லட்சம் பேர் அரசியல் வாதிகள், அவர்கள் தொண்டர்களாக இருக்கலாம், தலைவர்களாக இருக்க லாம். சிறையில் தள்ளப்பட்டார்களே மிசா சட்டத்தின் மூலமாக நம்முடைய முதலமைச்சராக இருக்கிற, மக்களுடன் தொடர் புடைய எம். ஜி. ஆர். அவர்கள் அதைக் கண்டிக்க—அதற்குப் பின்னராவது வாய்ப்புக் கிடைத்தவுடன் நீங்கள் நேற்று வரையில் நெருக்கடி நிலையை வைத்திருந்தீர்கள்; கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பில்லை; இன்றைக்குச் சொல்லுகிறேன், அது அக்கிரமம் என்று சொன்னாரா? நம்முடைய சட்ட அமைச்சர் உயர்திரு நாராயணசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், நெருக் கடி நிலைமை போடப்பட்டது நீதிமன்றத்திற்கு அநீதி இழைக் கப்பட்டது என்று சொன்னார்களே, அப்படிச் சொல்ல முடியாமல் நெருக்கடி நிலைமையை ஆதரிக்கின்ற நிலைமையில் எம். ஜி. ஆர். அவர்கள் இருக்கிறார்கள் என்றால், அவரை ஆதரிக்க விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர் உமாநாத், 'ஐ பெக் டு டிஃபர்' என்று சொல்ல வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கும்—அப்படியானால் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று சொல்ல உரிமைஎங்களுக்குக் கிடையாதா?

ஆகவே ஜனநாயகத்திற்கு உட்பட்டுதான்-ஜனநாயகத்தில் மூன்று, ஒன்று, ஜனநாயக சக்கரத்தில் எல்லோரும் சிக்கிக்கொண்டு தாங்கிக்கொண்டிருக்கிறோம். இரண்டாவது ஜனநாயக கடமை களைச் செய்கிறோம், மூன்றாவது ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம், எதிர்க்கிறோம். இந்த ஆட்சி ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறதா. திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள நாங்கள் தவறு செய்திருக்கலாம். நீங்கள் முடிந்தபோது, அதற்கான வழக்கைப்போட்டு தண்டியுங்கள் யார் தவறு செய்தாலும் தண்டிக்கப்படட்டும். அது வேறு பிரச்னை.

ஆனால், ஜனநாயகத்தில் அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது என்று ஒரு மாநில அரசு உலகிற்கு உணர்த்த வேண்டாமா? ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்து விட்டால், மாநில அரசாக இருக்கிற நமக்கு என்ன உரிமை இருக்கிறது. மத்தியில் இருக்கிற அரசு, தான் நினைக்கிறபடி காரியம் செய்ய ஆரம்பித்தால் இன்றைக்கு ஜனதா அரசு, அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் கொள்கை காரணமாக மாநில அரசிற்கு மரியாதை காட்டலாம் நாளைக்கு இன்றைய அரசு மாறுகிறது. ஜனநாயக உரிமையை இழந்து விடுகிறோம். அப்போது இருக்கிற மத்திய அரசு மாநில அரசின் ஜனநாயக உரிமையைப் பறிக்கிறது. பறிக்கிற போது நாம் ஜனநாயகவேட்கையை வளர்க்காவிட்டால் எப்படிப் பாதுகாப்பது?

ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் கட்சியின் நடைமுறைக் கொள்கையல்ல. ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கை முறை.

வைத்துக்கொண்டு கறுப்புக்கொடி காட்டுவது என்று நின்று அவைகள் காரில் பட்டது. டிரைவர் மீதும் பட்டது. டிரைவரால் நான் தப்பினேன். அப்போது போலீஸ் பாதுகாப்பு இல்லை.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நான் ரயிலுக்கு ஏறச் சென்றேன். அப்போது அரசியலில் பொறுப்பு எதுவும் இல்லை வெறும் பாராளுமன்ற உறுப்பினர் அப்போது இறங்கி வந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இன்றைக்கு தலைவராக இருக்கிறவர் அன்றைக்கு தொண்டர் தலைவராக இருந்தவர், திராவிட முன்னேற்றக் கழகக் கொடி காரில் பறப்பதைப் பார்த்தவுடன், அண்ணா ஆட்சிக்கு வ்ந்த ஆத்திரத்தில் காரை அடித்தார்கள், என்னுடன் வந்த நண்பர் ஒருவரையும் அடித்தார்கள். அன்றைய தினம் ரயிலுக்குப் போவதை மறந்து இரண்டு மணி நேரம் கழித்துச் சென்றோம். இதை அண்ணாவிடம் சொல்லி வருத்தப்பட்டேன். இதைப் பிரச்னையாக ஆக்க விரும்பாமல் சாதாரணமாக ஏற்றுக்கொண்டு சொல்கிறேன்.

கருணாநிதி அவர்கள் 1975-ல் அமைச்சராக இருந்த போது கறுப்புக்கொடியை நெய்வேலியில், கோவையில் காட்டவில்லையா? கறுப்புக்கொடி என்பது கொடுக்கப்பட்ட முறை, முறை தவறும் போது அதன் விளைவுகளை சிந்திக்கவேண்டும். போலீசார் கடமைகளை பாராட்டினோம். நேற்றைய தினம் முதலமைச்சர் சொல்லுகிறபோது கலெக்டரை கலந்துகொண்டு, காஞ்சீபுரத்திற்கு இந்திரா காந்தி வருவதா, வேண்டாமா என்று சொல்லுகிற யோசனையை நிறைவேற்றினோம் என்று சொன்னார். முன்னர் இது போன்ற எவ்வளவோ பிரச்னைகள் இருக்காதா ?

அப்படியே இருந்தாலும், முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் முடிவு கறுப்புக்கொடி காட்டுவது இந்திராகாந்திக்கு என்று தெரிவிக்க விரும்பினோம். இருக்கட்டும். கொலை செய்ய முயற்சித்தோமா ? அதற்காக சூழ்ச்சி செய்தார் அன்பழகன், ப. உ. சண்முகம் என்றார்கள். அப்படி கொலை செய்ய முயற்சித்தோமா? இந்திரா காந்தி ஜனநாயகத்துக்கு விரோதி என்று நாங்கள் சொல்லுகிறோம். தனிப்பட்ட முறையில், எங்களுக்கு ஆதாரம் உண்டு. ஒரு பிரச்னை வருகிறபோது, எதிரியை கொலை செய்ய முயற்சிப்போம் என்ற சந்தேகம் முதலமைச்சருக்கு வரலாம். அவரிடம் யாராவது சொல்லியிருக்கலாம். சதியையோ, நடந்த கலவரத்தையோ, கொலை செய்யும் அளவுக்கு தமிழ்நாட்டில் யாரும் செய்யமாட்டார்கள். வட நாட்டில் அப்படி சிலர் இருக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டில் யாரும் எதிர்க்கட்சித் தலைவரை கொல்லுகிற அளவுக்கு மனப்பான்மை கொண்டிருக்க மாட்டார்கள். அப்படியே வழக்கு வந்தால் அது வேறு. அதைப்பற்றி உள்ளே செல்ல அவசியமில்லை.

அதே நேரத்தில், இந்த அரசாங்கத்தில் நடைபெற்ற போராட்டங்களை எல்லாம் திரு வீரப்பன் அவர்கள் சொன்னார்கள். எப்படி, எப்படி நடைபெறுகிறது என்று, நடைபெற்றதைப் பற்றித் தான் பேச்சு. இப்படியே நடைபெற்றாலும் பேசலாமா என்று.

பி. டி சி. தொழிலாளர் போராட்டம் நடத்தியபோது, சில தோழர்கள் வீடு புகுந்து அடிக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் வெளியில் பேசப்பட்ட பேச்சு என்ன ? போராட்டம் நடத்துகிறவர்களை தாக்காமல் மக்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் இந்த இரண்டையும் சம்பந்தப்படுத்தும் நிலை ஏற்படுத்தக் கூடாது.

சென்னையில் சில மாணவர்கள், ஊர்வலமாக சென்று, தகராறு ஏற்பட்டு, மாணவர்களும் போலீசாரால் மட்டும் தாக்கப் படவில்லை. வேறு சிலராலும் தாக்கப்பட்டார்கள். பள்ளி மாணவர்கள் என்ற முத்திரையை குத்தி கூறும் அளவுக்கு எதிர் பாராமல் தாக்கினார்கள் என்று ஒரு வேளை சொல்லக்கூடும். இந்த முறைகள் அவ்வளவும் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் இருந்தவையே. அதே மாதிரி தான் இதுவும். எங்களை விட நீங்கள் எப்படி உயர்ந்தவர்கள்? நாங்கள் எப்படிச் செய்தோமோ அப்படியே தான் நீங்களும் செய்கிறீர்கள் என்று ஒரு வாதம் வருவதாக வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் செய்ய வேண்டியதல்ல என்பதை மறுபடியும் சொல்லுகிறோம். நாங்கள் செய்ததாக சொல்லுகிற போது, அதற்கு மறுப்பை நாங்கள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். உரிமை இருக்கிறது. ஏற்றுக் கொள்ளுங்கள்.

திரு. ர. உமாநாத் : தவறு செய்திருக்கிறீர்கள் என்பதை இப்போதாவது Have you reviewed the Position at least.

திரு. க. அன்பழகன் : ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் பேசுகிறபோது வாதம் முழுமையாக நடக்கவில்லை. சட்டமன்றத்தில் பேசுகிற போது ஏமாளியாகப் பேசவில்லை. பைத்தியக் காரத் தனமாக மறுக்கவும் இல்லை.

நடைபெற்றதில் தவறு இருக்கலாம். உண்மையாகவும் இருக்கலாம். தி. மு. க. ஆட்சியைப் பற்றி பேசி இருக்கிறார்கள். இன்று என்ன நடைபெறுகிறது? கல்லூரி ஆசிரியர்கள் அரசாங்க சம்பளம் பெற்று, அவர்களுடைய கடமையை ஒப்புக்கொண்டு உள்ளார்கள். எல். டி. ஆசிரியர்கள் ஏற்கனவே தீர்மானம் போட்டு, நாங்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று செய்தார்கள். தி.மு.க. ஆட்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டு, எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ?

அரசியலில் ஒரு உண்மையை உணர்த்த விரும்புகிறேன். மாணவர்கள் ஒரு சக்தி, அந்த சக்தியை அடிக்கடி மோத விடக்கூடாது. அது போல தொழிலாளர்களும் ஒரு சக்தி. ஆசிரியர்களும் ஒரு சக்தி. சில நாடுகளில் மத குருமார்களும் ஒரு சக்தி. நம் நாட்டில் நல்ல வேளையாக அவர்கள் பெரிய சக்தியாக இல்லை. அந்த நிலைமையில் இந்த மக்கள் சக்திகளைப் பிரதிபலிக்கக் கூடிய அமைப்பு, இலட்சியம் என்ற அடிப்படையில் நடந்து கொள்ளுகிறோம். எனவே, அப்படி நடந்து கொண்டு, மாறாக நம்பிக்கை இல்லை என்று சொல்லி விடுவது எந்த விதத்தில் தவறு? இன்னும் வெளிப்படையாகக் கேட்க விரும்புகிறேன். இந்த அரசாங்கம் நெருக்கடி நேரத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற அக்கிரமங்களில் எந்த அக்கிரமத்தை மாற்றியது. நீங்கள் ஆட்சிக்கு வந்து ஆறு மாதமாகிறது.

யார், யார் அட்வைசராக இருந்தார்களோ அவரவர் குடும்ப நினைப்புப்படி ஆட்சியை நடத்த வேண்டும், இது புரிந்தது. அந்த ஆட்சியை மாற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லை. தேர்ந்து எடுக்கப்பட்ட அரசையே தமிழகத்தில் குழி தோண்டிப் புதைத்தார்கள். அவ்வளவு அக்கிரமம் செய்தார்கள்.

[முற்பகல் 11.40]

பிற்பட்ட வகுப்பிற்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக அவர்கள் உயர்தர பதவிகளுக்கு தேர்வுகள் எழுதி தேர்ந்தெடுக்கப்பட 31 வயதானாலும் தேர்ந்தெடுக்கலாம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த நடைமுறைச் சட்டத்தை அட்வைசர் ஆட்சி அதை தூக்கி எறிந்தது. அதை நீங்கள் மாற்றினீர்களா? 31 வயது காலம் என்ன, 25 வயது கொண்ட பிற்பட்ட வகுப்பார்க்கும் அதே நிலை ஏற்படுகிறது. முற்பட்ட வகுப்பாரோடு அவர்களால் போட்டியிட முடியுமா? நாமெல்லாம் ஞானிகளாக பிறந்து விட்டோமா? செல்வாக்கான சூழ்நிலையில் பிறந்து விட்டோமா?

இன்னும் சொல்லப்போனால் குரூப் 4 சர்வீஸிலே தமிழ் கட்டுரை என்ற பகுதியும், தமிழில் ஆங்கிலத்தை மொழி பெயர்ப்பது என்ற பகுதியும் கழக ஆட்சிக் காலத்தில் இருந்ததே. அதை அட்வைசர் ஆட்சி காலத்தில் நீக்கினார்களே. ஏன் நீக்கினார்கள்? அப்படி நீக்குகிறார்கள் என்றால் அதற்கு என்ன உள்நோக்கம்? இந்த ஆட்சி வந்த பிறகாவது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அழைக்கப்பட்டு, 4-வது குரூப்பிலே, எழுத்தாளர்க் பதவிக்கு வருகிறவர்கள் தமிழ் அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்க வேண்டாமா? இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நடைபெற்ற தேர்விலே கூட அப்படி எந்தவித மாற்றமும் இல்லாமல் தானே நடை பெற்றிருக்கிறது.

இன்னும் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு முழுதும் உள்ள 200 ரூபாய்க்கும் குறைவான ஊதியம் வாங்குகிற அரசு ஊழியர்கள் 10 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கப்படாமல், 200-க்கு மேலே, ஆயிரம், 2 ஆயிரம் வரை பெறுகிறவர்களுக்கு மட்டும் அந்தக் கொடுத்தால் 200-க்கும் குறைவான ஊதியத்தைப் பெறுகிறவர்கள் அதை கேட்கமாட்டார்களா? இப்படி கேட்டால் 200-க்கும் கூடுதலாக ஊதியம் பெறுகிறவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமான அலவன்ஸ் பெறவேண்டும் என்பதற்காக 10 ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் 200-க்கும் குறைவான ஊதியம் பெறுகிறவர்கள் ஏற்கனவே மத்திய அரசு ஊழியர்களின் அலவன்ஸுக்கு சமமான அலவன்ஸைப் பெறுகிறார்கள்; ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள்.

அதே நேரத்தில் இதை ''இன்டெரிம் ரிலீபாக'' கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கிறபோது அதை ஏன் அவர்களுக்கும் கொடுக்கக்கூடாது. அவர்கள் திரும்ப, திரும்ப வேண்டுகோள் விடுகிறார்கள். முதலமைச்சர் அவர்களைப் பார்க்க காத்திருந்து, பேச விரும்பி எவ்வளவோ முறை முயன்றும், டெலிபோனிலே தொடர்பு கொண்டும் பேட்டி கிடைக்கவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு விளக்கம் தேவையில்லையா? ஏதோ போராட்டம் என்று கூறுகிறார்கள். தயவுசெய்து நான் தூண்டுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டுகிறது என்று நினைக்காதீர்கள். தயவு செய்து அவர்களை தூண்டிவிடுகிற அளவிற்கு நான் இல்லை, திராவிட முன்னேற்றக் கழகமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், அவர்கள் 200 ரூபாய் போதும் என்று சொல்வார்களேயானால், நான் அவர்களுக்காக இங்கே எடுத்துச் சொல்வதைக்கூட நிறுத்திக் கொள்கிறேன். இன்னும் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

ஆளுங்கட்சிக்காரர்கள் எல்லா இடங்களிலுமே தூய்மையாக இருக்கிறார்கள்; குற்றமே செய்யவில்லை என்று முதலமைச்சர் நம்புகிறாரா? நான் கேட்பது, இந்த 48 பேர்களும் தவறு செய்தவர்கள் என்று சொல்வது இருக்கட்டும். அது வேறு விஷயம். ஆனால் ஆளுங்கட்சிக்காரர்கள் தவறே செய்யவில்லை என்று முதலமைச்சர் உறுதி சொல்வாரா? சில இடங்களில் தவறுகள் நடைபெறத் தான் செய்கிறது. ஒருவேளை அவர்களின் காதுக்கு அது வரவில்லையோ என்னமோ, திருச்சியிலே இருந்து கடிதம் வருகிறது. ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் சொல்லியது போல 'யாரோ எழுதியிருக்கிறார்கள். அதை முழுதும் படித்தால் அரசாங்கத்தின் மேல் குற்றச்சாட்டே இல்லையே' என்று கூட குறிப்பிடப்பட்டது. இன்னும் கூட நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேரம் இல்லை என்றாலும் சொல்கிறேன்.

முரசொலிப் பத்திரிக்கையில், முரசொலி
லிருந்து ஏதோ அச்சிடப் பட்டது, ஆதாரம் இருக்கிறது என்றால்
அரசு எப்படிக் கேட்க வேண்டும் ? டெலிபோனில் கேட்டார்கள்.
நான் முரசொலிக்காக வாதாடவில்லை, நடைமுறைக்காக வாதாடு
கிறேன். ஒரு கடிதம் எழுதி அனுப்புங்கள், அந்த ஆதாரத்தை
வைத்து அனுப்புகிறோம் என்றார்கள். அதற்காக, வழக்கு
போடுவதா ? இவ்வளவு பெரிய செகரடரியேட் அலுவலகத்தி
களுக்கு வேறு வழி இல்லை. நேரம் இல்லை என்று சொல்வார்களா?
அதற்காக போலீசாரையா அனுப்புவது ? ஒரு அலுவலர்
அலுவலகத்தில் ஒரு போலீஸ்காரர் போய் விசாரிக்கக்கூடிய நிலை
எமர்ஜன்ஸி காலத்தில் இருந்தது. நாகரீகமுள்ள ஒரு பத்திரிகை
கையின் ஆசிரியர் எழுத வேண்டிய பதிலை எழுதியிருக்கிறார்.
தவறு என்றால் நீங்கள் சொல்லுங்கள். ஒரு பத்திரி
அனுப்புகிறார். ஏன் ஆதாரம் தரவில்லை என்று கேளுங்கள்.
ஆனால் போலீசார் எழுதிக் கேட்டபோது நீங்கள் ஆதாரம் இருந்தால்
சரியல்ல என்றபோது கடிதம் எழுதிக்கொண்டு வருவது
பதிலாக சம்மன் அனுப்புகிறார்கள். ஒவ்வொரு வருவதற்கு
ஆசிரியருக்கும் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து பத்திரிகை
கொண்டு போய்த் தான் அரசாங்கம் நடக்க சம்மன்
அரசாங்கமா இது ? வேண்டுமென்றால்

ஐந்து டிக்கெட்டுகள் எண்ணிக்கை இல்லாத டிக்கெட்டுகள்
அதற்குப் பின்னால் வந்தது என்றால் 60 லட்சம் டிக்கெட்டுகள்
5 டிக்கெட்டுகள் இருந்தால் அதை எந்த விதத்தில் டிக்கெட்டுகளில்
படுத்த முடியும் ? தவறாகத் தயாரித்திருந்தாலும், நியாயப்
அதைக் கொண்டு வரலாம் ? ஐந்து டிக்கெட்டுகள் எப்படி
போதாதா ? சோறு சாப்பிடும்போது இடையில் ஒரே இருந்தால்
புழு, பூச்சி இருந்தால் போதாதா ? அவ்வளவும் புழு பூச்சியா
என்று கேட்பது ? ஒரு அமைச்சர் சொல்லும்போது, ஒரு
நடக்காமல் அரசாங்கம் நடக்காது என்று சொல்லுங்கள், தவறு
கொள்கிறேன். எழுதுகிற எழுத்தில், பேசுகிற பேச்சில் ஏற்றுக்
ஏற்படவில்லையா ? குறிப்பை வைத்துக் கொண்டு படிக்கும் தவறு
போதே தவறு எழவில்லையா ? மனோகரன் யாரோ எழுதிய
புத்தகத்திலிருந்து 'ஸ்டுபிடிடி' என்று சொல்ல வேண்டிய அவ
சியம் வரவில்லையா ? தவறே நடக்காதா ? எல்லாம் நியாயம்
என்று வாதாடுவதா ? இந்த அரசாங்கத்தைச் சுற்றி தவறே
நடக்கவில்லை என்று முதலமைச்சர் நம்புகிறாரா ? தவறு நடக்
கிறது. எல்லா நிர்வாகத்திலும் நடந்திருக்கிறது. எங்கள்
நிர்வாகத்திலும் நடக்கிறது என்று சொல்லுங்கள். இன்று ஆளுங்
கட்சியின் தவறான காரியங்களுக்கு உடந்தையாக இந்த அரசு
நடக்கிறதா இல்லையா ? தவறுகள் நடக்கின்றன என்று மக்கள்
பேசவில்லையா ?

இப்படிப்பட்ட தவறுகளை விளக்க ஒரு சந்தர்ப்பத்தை
எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நம்

பிக்கையில்லாத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறோமே தவிர, நம்
பிக்கையில்லாத் திர்மானம் கொடுத்தது ஒரு பாவம் என்று
யாரும் கருதமுடியாது.

டயரியில் முதலமைச்சரின் படம் வந்திருப்பதை எதிர்க்
கட்சித் தலைவர் காட்டினார்கள். ஏன் ? கலைஞர் கருணாநிதி தான்
விளம்பரப்பிரியர் என்று சுட்டிக் காட்டப்பட்ட காரணத்தாலே
தானே தவிர வேறல்ல. அவர் மட்டும் தான் விளம்பரப்
பிரியரா ? விளம்பரத்திற்கு விருப்பமில்லாதவன் எவனாவது
இருப்பானா ? சட்டமன்றத் தேர்தலின் போது விளம்பரம்
செய்யப்படவில்லையா ? அப்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கு
நாமும் உடந்தை இல்லையா ? ஒவ்வொருவரும் விளம்பரம்
பண்ணாமலா ஓட்டு வாங்கினோம் ? ஒவ்வொரு கட்சியும்
ஒவ்வொரு விளம்பரம் செய்தன. எம்ஜியாருக்கு நிரந்தரமான
விளம்பரம்—செலவில்லாமல் யார் தயவில்லாமல் நடக்கிறது.
அதைக் குற்றம் என்று சொல்லவில்லை. அதைக் குற்றம் என்று
சொன்னால் நான் அரசியல்வாதி அல்ல. அண்ணா சொன்னார்,
20 ஆண்டுகளுக்கு முன்னதாக—சுயமரியாதைப் பிரச்சாரம்,
பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்கிற நேரத்தில், விளம்பரம் தேவை
தான் என்று சொன்னார். என்னை அறிஞர் என்று சொன்னால்
வேடிக்கையாக இருக்கிறது—ஆனால் அந்த விளம்பரம் கூடத்
தேவைப்படுகிறது என்றார். தந்தை பெரியாரை, தோழர்
ஈ.வி.ஆர். என்று பட்டுக்கோட்டை அழகிரி குறிப்பிட்டபோது
அண்ணா அவர்கள், பெரியாருக்கு, தந்தை பெரியார் என்ற
விளம்பரம் தேவை தான் என்றார்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் புரட்சித் தலைவர் என்று
சொல்லும்போது ஒரு ஊக்கம் பிறக்கிறதா, இல்லையா ? அந்த
ஊக்கம், கலைஞர் என்று சொல்லும்போது இன்னொரு கட்சிக்குப்
பிறப்பதில் என்ன பெரிய பாவம் ? பெரியாருக்கு, அண்ணாவுக்கு
அந்த விளம்பரத்தை நியாயம் என்று சொன்னால், ஏன்,
கோயிலில் இருக்கிற பூசாரிக்கு இருக்கிற விளம்பரம், ஒரு
அரசியல்வாதிக்கு இருக்கக் கூடாதா ? விளம்பரம் தவறு அல்ல.
நியாயம் தான். நீங்கள் ஆளுங்கட்சி, விளம்பரம் கொடுத்திருக்
கிறீர்கள். இவ்வளவு சிறிய டயரியில்—அதில் ஐந்து பக்கங்கள்
கொடுக்கிறீர்கள். இதைத் தவறு என்று சொல்லவில்லை. ஏற்
கெனவே நடந்திருக்கிறது. ஆகவே, தவறா அல்லவா என்ற
பிரச்சினை வேண்டாம்.

எம்ஜியார் முதலமைச்சராக இருக்கிறார். அவர் நடிக்கிற
படங்கள் எல்லாமே அவருக்கு விளம்பரம். எவ்வளவு பெரிய
உருவத்தைப் பார்க்கிறோம் ? அவரைப் போல் 50 மடங்கு
இருக்கும். அதைத் தவறு என்று சொல்ல முடியுமா ? சினி
மாவில் நடிக்கும்போது அது கூட இல்லாமல் எப்படி விளம்பரப்

விபரீத எண்ணம் வரும் என்று நினைத்து அதை கைவிட்டுவிட்டார்
கள்.

இந்த அரசின் உத்தரவு, முதல் அமைச்சர்கள், வேறு
அரசியல் கட்சித் தலைவர்கள் யாருடைய பெயரும் ஏற்கனவே
பொதுயிடங்களுக்கு, நிலையங்களுக்கு, கட்டடங்களுக்கு, சாலை
களுக்கு இவற்றிற்கு வைக்கப்படுமானால் அப்படி வைக்கப்பட்டிருக்
கிற பெயர்கள், யாருடைய பெயரானாலும், அவர் உயிரோடு
இருப்பார்களேயானால்—நல்லவேளை அவர்கள் செத்திருந்தால்,
பெயர் நீடித்திருந்திருக்கும்—அவர்கள் பெயர்கள் எடுக்கப்பட
வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருப்பது நியாயந்
தானா, எந்த வகையில் அது நியாயம்? பெயர் வைப்பது தவறு
என்றால், இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைப்படி
உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்கக்கூடாது. அது
தவறு என்றால், ஒருவேளை நான் என் மருத்துவமனைக்கு இந்திரா
காந்தியின் பெயரை வைத்தால்—அவர்கள் கொள்கை எனக்கு
ஏற்புடையதல்ல என்றாலும்—அரசு ஒரு உத்தரவு போட்டு
இந்திரா காந்தியின் பெயரை எடுக்கலாமா? அப்படி நாட்டில்
எந்தவிதமான பொது இடங்களுக்கும் அப்படிப் பெயர் வைக்க
வேண்டாம் என்று நீதிமன்ற தீர்ப்பு வாங்க யாராவது முன்வரு
வார்களென்றால் கருணாநிதிக்கு பெயர் வேண்டுமானால் அதைக்
கொண்டுவருவதற்கு அவருக்குத் தெரியும். இந்தப் பெயர்களைப்
பத்து இடங்களில் எடுத்தால் நூறு இடங்களில் எப்படி நிலைத்து
வைக்கமுடியும் என்று அவருக்குத் தெரியும். அந்த விதத்தில்
நான் அவருக்குச் சொல்லித் தரத்தேவையில்லை.

முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் பெயர், 75
வயது, இரண்டு இடங்களில் இருக்கிறது. நீங்கள் அவற்றை
எடுத்துவிட்டால் அது நீங்கள் அவருக்குக் காட்ட வேண்டிய
மரியாதையா? அவர் ஆட்சியை எதிர்த்தவன் நான். அது
வேறு விவகாரம்.

நெடுஞ்செழியன் பெயரில் ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப்
பெயரை எடுப்பதா? யார் யார் பெயர்களிலோ இருக்கின்றன?
ஒரு ஒன்றியத் தலைவர் பெயரில் இருக்கிறது. அந்தப் பெயரை
எடுப்பதா? ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சின்னராஜி என்பவர்
பெயரில் இருப்பதை, அந்தப் பெயரை எடுப்பதா?
இல்லையென்றால் பெயர் வைத்த மறுநாளே அவர்கள் எல்லாம்
செத்துவிட வேண்டும் என்று உத்தரவையாவது போடுங்கள். அந்த
வகையில் மறுபரிசிலனை செய்தீர்களா? அப்படி மறுபரிசிலனை
செய்ய முன்வராத உங்களிடம் நம்பிக்கை இல்லை என்று சொல்லு
வதில் என்ன தவறு இருக்கிறது.

ஏதோ எங்களால் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடம் என்ப
தற்காக கட்டிடங்களை எல்லாம் இடித்துவிட முடியுமா? வேண்டு
மென்றால் எங்கள் காலத்தில் நடைபெற்ற நிர்வாகத்திலுள்ள

குறைகளைச் சொல்லுங்கள், நாங்களும் உங்கள் நிர்வாகத்திலுள்ள
குறைகளைச் சொல்லுகிறோம். ஆனால் ஒரு ஆட்சி காலத்தில்
வைத்த பெயர்களை எடுத்துவிடவேண்டும் என்று சொல்வதில்
எவ்வளவு தவறு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்திர்களா.

முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு தன்னுடைய
பெயர் எங்கும் இருக்கவேண்டாம் என்பதில் உறுதியாக இருக்
கிறார்கள், அதற்காக நான் பாராட்டுகிறேன். அவர்களுடைய
பெயர் இனிமேலா வைக்கவேண்டும்? அவருடைய பெயர் இல்லாத
இடமேயில்லை. எதற்காக அவருடைய பெயர் வைக்க
வேண்டும்? இந்த இராமச்சந்திரனுடைய பெயர் வைக்காவிட்டா
லும் அந்த இராமச்சந்திரனுடைய பெயரில் பல ஏற்றுக் கொள்ளப்
பட்டிருக்கின்றன. அன்பழகன் என்று எத்தனையோ பேர்கள்
பெயர் வைத்திருக்கிறார்கள். அதை யெல்லாம் எடுத்துவிட
முடியுமா? ஏதோ தப்பித் தவறி நான் அன்பழகன் என்று
முன்னாலேயே வைத்துக்கொண்டேன். அதற்குப் பிறகு (திரு.
ப. உ. சண்முகம்: இங்கு கூட சட்டமன்ற உறுப்பினர் 'அன்பழகன்'
என்று ஒருவர் இருக்கிறார்) சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறார்,
பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள், டாக்டர்களாக
இருக்கிறார், இவர்களுடைய பெயர்களை எல்லாம் எடுத்துவிட
வேண்டும் என்று சொல்லிவிட முடியுமா? ஏதோ ஒரு உணர்ச்சி
யைக் காட்டவேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட பெயர்களை
எல்லாம் எடுத்துவிட வேண்டும் என்று சொல்லுவது எந்த
விதத்தில் நியாயமாகும்? சிலை நிற்குமா என்று கேட்கிறார்கள்,
ஆளும் கட்சி நினைத்தால் சிலையைக் கூட எடுத்துவிடலாம், ஆனால்
அது ஆளும் கட்சிக்கு அழகா? உங்களால் அதை எடுத்துவிட
முடியாதா? நீங்கள் நினைத்தால் எடுத்துவிட முடியும். முன்னால்
உள்ளவர்கள் கட்டிய கட்டிடம் என்பதற்காக கட்டிடங்களை
இடித்து விட முடியுமா? அந்த நிலையில் தான் இவைகளை
சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற காலங்களில் எங்கள் நிர்வாகத்தில் ஏற்பட்ட குற்றங்
களை சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருந்தது, எங்கள் ஆட்சி
யில் ஏற்பட்ட குற்றங்களை சொல்லித்தான் நீங்கள்
இன்றைக்கு ஆளும் கட்சியாக வந்திருக்கிறீர்கள். மக்களிடத்தில்
நாங்கள் செய்த குற்றங்களைச் சொல்லி நீங்கள் ஆட்சிக்கு வந்
திருக்கிறீர்கள். அப்படி ஆட்சிக்கு வந்திருக்கின்ற உங்கள் மீது
உங்களிடத்தில் இருக்கின்ற குற்றங்களைச் சொல்லி, இவற்றை
யெல்லாம் எண்ணிப்பாருங்கள் என்று கேட்டுக்கொண்டு.....
மிக முக்கியமான ஒரு கருத்தை சொல்லத் தவறிவிட்டேன்.

அதாவது, பாளையங்கோட்டையில் நடைபெற்றுவரும் இந்திய
சித்த மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தம்
குறித்து குறிப்பிட விரும்பினேன்... சென்னையில் அறிஞர் அண்ணா
பெயரில்—தமிழுக்குச் செய்யும் ஒரு சேவை என்ற முறையில்,
சித்தமருத்துவத்தை உள்ளபூர்வமாக மனதார விரும்புபவன்

[திரு. க. அன்பழகன்] [1978 சனவரி 7

நான்—அந்த அளவில் சென்னையில் நடைபெற்று வந்த அந்தக்
கல்லூரி, இப்போது பாளையங்கோட்டையில் சித்த யுனானி மருத்
துவக் கல்லூரி என்ற முறையில் நடைபெற்று வருகிறது. அந்தக்
கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், என்னைக்
கேட்டுக்கொண்டு செய்யவில்லை. நான் இந்தத் துறையை பொறுப்
பேற்றிருந்த நேரத்திலும் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.
அவர்கள் சில குறைகளைப் போக்கிக் கொள்வதற்காக சில கோரிக்
கைகளை அரசின் முன்னால் வைக்கிறார்கள். இப்படிப்பட்ட சில
உதவிகளை செய்து கொடுப்பதன் மூலமாக, இன்னும் சித்த
மருத்துவத்தின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இதில் படிக்
கின்ற 40, 50 பேர்கள் ஐந்து ஆண்டுக்கொருமுறை படித்து
பட்டம் பெற்று வெளிவருகின்ற நிலைமை இருக்கிறது.
இவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி முதலமைச்சர் அவர்க
ளிடத்திலும் சொல்லிவிட்டார்கள். நிதி அமைச்சர் அவர்க
ளிடத்திலும் சொல்லிவிட்டார்கள். பின்னால் ஓரளவு பிரச்னை
தீர்க்கப்பட்டது என்றும், மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டபோது
மாணவர்கள் மன்னிப்புக் கடிதம் தரவேண்டும் என்று கூறப்
பட்டது. பின்னால் அது மறுக்கப்பட்டதின் காரணமாக, மூன்று
ஆண்டு காலத்திற்கு மூடப்படும் என்று உத்தரவு போட்டுவிட்
டார்கள்.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையில், அதைக் காப்
பாற்றுவது என்பது தமிழர்களுடைய பண்பாடு, அவர்களுடைய
அறிவாற்றல் இவற்றையெல்லாம் காப்பாற்றுவதற்கு இருக்கின்ற
ஒரே வாய்ப்பு என்கின்ற வகையில், இப்போது இருப்பதை விட
இன்னும் அதிகமாக இரண்டு லட்சம் செலவானாலும் பரவாயில்லை,
இதை எப்படியாவது நீடித்து நடத்துவதற்கு முயற்சிக்கவேண்டும்
என்று நிதி அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்திச்சொன்
னேன். மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த மாண
வர்களுக்கு நான் எடுத்துச் சொன்னேன், சித்த மருத்துவத்தி
லுள்ள முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை
அதற்கான வாய்ப்பு அமைச்சர்களுக்கு இல்லை, நீங்கள் படித்துக்
கொண்டிருப்பதோ 50 அல்லது 60 பேர்கள், வேலை நிறுத்தத்தில்
நீங்கள் ஈடுபட்டால், படிக்கின்ற மாணவர்கள் மிகவும் குறைவாக
இருக்கின்ற காரணத்தால் மூடியே விடலாம் என்ற முடிவுக்கு
வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடும், நீங்கள் படித்து பட்டதாரி
யாக வரவேண்டும் அது தான் முக்கியமே தவிர உங்கள் பிரச்னை
மட்டும் முக்கியமல்ல என்றும் நான் சொன்னேன். அவர்கள்
கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன, இப்போது கல்லூரி மூடி
யிருக்கிறது.

பாளையங்கோட்டை தொகுதியின் பிரதிநிதி என்ற முறையில்
நமது நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் திரும்பத்திரும்ப
இதைக் கவனிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த
மாணவர்களுடைய பெற்றோர்களின் பிரதிநிதிகள் மிகவும் வருத்
தத்துடன் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக

1978 சனவரி 7] [திரு. க. அன்பழகன்]

முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசியும் இதில் அழுத்தமான ஒரு முடிவு சொல்லவில்லை. அது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் முக்கியமாக இருப்பது, மன்னிப்பு கொடுக்கவேண்டிய பிரச்னைதான் முக்கியமான பிரச்னையாக ஆகியிருக்கிறது. மற்றக் கல்லூரிகளில் எல்லாம் இப்படி மன்னிப்புக் கடிதம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோமா, மன்னிப்புக் கடிதம் இல்லாமலேயே மாணவர்கள் கல்லூரிக்கு திரும்பியிருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் இதில் கவனம் செலுத்தி, கடந்த ஆறு மாதங்களாக தீர்க்கப்படாமல் இருந்து வருகின்ற இந்தப் பிரச்னையை தீர்த்து வைத்தாக வேண்டும். இந்த சித்த மருத்துவக் கல்லூரி இதனால் அழிந்து விடுமானால், இந்த அரசுக்கு அது ஒரு பழியாகும் என்பதைக் கூறி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அமைச்சர் அவையின்மீது நம்பிக்கை இல்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இங்கே மன்றத்தில் வைத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கேள்விகளை அடுக்கடுக்காகக் கூறி, இதனால் நம்பிக்கை இல்லை, இதனால் குற்றஞ்சாட்டுகிறேன், இப்படிப்பட்ட குற்றத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்றெல்லாம் இங்கே விரிவாக, தனக்கே உரிய பாணியில், நாமெல்லாம் மதிக்கின்ற நல்ல தமிழில் அவர்கள் பேசியதைக் கேட்டு, உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைந்தேன் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருதல், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருதல், கண்டனத் தீர்மானம் கொண்டு வருதல், இவைகளுக்கு எல்லாம் வாய்ப்போ அல்லது அவைகளுக்கெல்லாம் நாட்கள் ஆகும் என்கின்ற நிலைமை இருக்குமென்ற காரணத்தினாலோ, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், எல்லாக் கொள்கைகளாலும் வேறுபட்டிருந்தாலும், எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ளவும், கருத்துரைகளை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கும் நல்லதொரு வாய்ப்பை பெற வேண்டுமென்கின்ற நோக்கத்தில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்கின்ற கருத்தினை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் மிகமிக உறுதியாகவும், ஆத்திரப் படாமலும், அவசரப்படாமலும், நிதானமாகவும் என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க நான் விரும்புகின்றேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

அதற்கு முன்பாக இங்கே கதைகளை எழுதுகின்றவர்களுக்குத்
தெரியும். அதிலே பங்குகொள்கிறவர்களுக்கும் தெரியும். ஒரு
கதையைத் தொடங்கினால், அதற்கு ஒரு உச்சகட்டம் இருக்கும்.
அந்த உச்ச கட்டத்திற்குப் பிறகு, அமைதியை நோக்கிச்
செல்கின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்படும். அதை கிளைமாக்ஸ்,
ஆன்டி-கிளைமாக்ஸ் என்பார்கள். அதுபோன்ற நிலையில்,
உச்சகட்ட நிலைக்கு நான் போகிறேன். அந்தச் சூழ்நிலையில் ஒரு
அமைதியை நோக்கிச் செல்வதற்கு என்னுடைய வாதமும், கருத்
துக்களும், எனக்குத் தெரிந்த விளக்கத்தையும், நாங்கள்
எந்தெந்த குற்றம் செய்யவில்லை என்று நம்புகின்றோமோ, அதைத்
தெளிவுபடுத்தவும், தெளிவுபடுத்துகின்ற நேரத்தில் யாருடைய
மனத்தையும் புண்படுத்தாமல், எங்களை எப்படிச் சிந்திக்க
வேண்டுமென்று மற்றவர்கள் விரும்புகிறார்களோ, அதைப்
போலவே எங்களைப் பற்றியும் மற்றவர்கள் கவனித்து சிந்திக்க
வேண்டும், அவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டுமென்ற நிலையில்
என்னுடைய பேச்சை, என்னுடைய கருத்தை தெளிவுபடுத்தும்
வகையில் அமைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஒட்டுமொத்தமாகப்
பிரித்துப் பதில் சொல்வதைவிட, கொள்கை அளவில் பதில்
சொல்வது பொருத்தமுடையதாக அமையும் என்று என்னைப்
பொறுத்த வரையில் நான் கருதுகிறேன்.

ஒரு உண்மையை நான் ஏற்றுக் கொள்வதில் பின் வாங்கத்
தயாராக இல்லை. எங்களை ஆதரிக்கின்ற எதிர்க்கட்சியாக இருந்
தாலும், எங்களை எதிர்க்கின்ற எதிர்க்கட்சியாக
இருந்தாலும், யாராய் இருந்தாலும் இந்த மாமன்றத்தில் நான்கு
நாட்களாக நடந்த விவாதத்தில் அவர்கள் சொன்ன கருத்துக்கள்
எந்த அளவில், எந்த வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்டன
என்பதை நான் உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்ததில், நாங்கள்
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையிலே அமர்ந்து,
தமிழகத்திற்கு எதையெதைச்செய்தால், எந்தெந்தக் காலத்தில்
செய்தால், எப்படி எப்படிச் செய்தால், எந்தெந்த வகையில்
அமல்படுத்தினால் அவை சிறப்பாக அமையும்; தமிழக மக்களுக்கு
நம்மை நம்பிய அந்த மக்களுக்கு நன்றி கூறுவதாக அமையும்
என்கின்ற நோக்கத்தில் கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதை
நான் மனமுவந்து வரவேற்கிறேன். அவர்கள் அனைவருக்கும்,
நான் உங்கள் சார்பாக நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்கை என்று எடுத்துக்கொள்ளும்போது, ஆட்சிக் கட்சி
யிலே இருக்கின்ற எங்களுக்கும், பிரதான எதிர்க்கட்சியாய் இருக்
கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அடிப்படைக் கொள்
கையில் வேறுபாடு இல்லையென்று தமிழகம் முழுவதும் மட்டுமல்ல.
இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மட்டுமல்ல; இதைப்
பற்றிப் புரிந்து கொண்டுள்ள வெளிநாடுகளில் கூட இந்தக்

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கருத்தினைத் தெளிவாகச்சொல்லிக் கொண்டு வருகிறார்கள் என்
பதில் ஐயமில்லை.

இங்கே எங்களை ஆதரித்தவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று சொன்னவர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையா என்று கேட்டவர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏன் கொண்டு வரவேண்டுமென்று கேட்டவர்கள், இந்தத் தீர்மானத்தை நிச்சயமாக முறியடிப்போம் என்று சொன்னவர்கள், இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கமாட்டோம், முறியடிப்போம் என்று சொன்னவர்கள், அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் கூட இந்த மாமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்துப் பேசும்போது, தங்களுடைய கருத்துக்களை வெளியிடும்போது அவர்களுக்குள்ள குறைகளையும், அவர்களுக்குள்ள பிரச்னைகளையும், இந்த அரசு எப்படி, எந்த அணுகு முறையில் அதை நிறைவேற்ற முயலவேண்டுமென்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலும் இந்த அமைச்சரவையின் சார்பாக, தலைவர் அவர்கள் மூலம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்பது இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அல்ல என்று அவர் சொல்லுவதை நாங்கள் நம்புகிறோம் என்று நிச்சயமாக, உளமார சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதிலே எனக்குச் சந்தேகம் இல்லை ஆனால் அதைக் கொண்டு வந்ததன் விளைவாக எனக்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைத்தது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வராமல் இருந்தார்களானால், இந்த மாமன்றத்தில் இருக்கிற இத்தனை உறுப்பினர்கள் மனதில் எவ்வளவு பிரச்னைகள், எவ்வளவு சிக்கல்கள் வெளியே தெரிவிக்க முடியாமல், சட்ட மன்றத்தை விட்டு வெளியில் பேசத் துணிவு இருந்தால் கூட, சட்ட மன்றத்தில் சொல்வதன் மூலம் நல்ல பயன் பெற வேண்டுமென்ற கடமை உணர்வோடும் அதே நேரத்தில் அழுத்தமாகவும், திருத்தமாகவும் எடுத்துக் காட்டக்கூடிய வாய்ப்புப் பெற்றதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மிக, மிக உதவி செய்தது என்பதிலே எனக்கு அதைக் கொண்டுவந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் நிச்சயமாக ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. மகிழ்ச்சி ஏற்படுகிறது; மதிப்பு ஏற்படுகிறது.

[பிற்பகல் 12.10]

குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் நிச்சயமாகத் தட்டிக் கழித்துவிட முடியாது, தட்டிக்

கழித்துவிட முடியாது என்பது மட்டுமல்ல, தட்டிக் கழித்துக்
கொண்டு தப்பி ஓடவும் முயலக் கூடாது. குறைகள் இருந்தால்
அந்தக் குறைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பாங்கும், துணிவும்
பொறுப்பிலே இருப்பவர்களுக்கு இருந்தாக வேண்டும்.
•

அது மட்டுமல்ல, எந்தக் கொள்கை பற்றி யார் பேசினாலும்
ஆத்திரப்படுவது என்ற நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக இந்த
மாமன்றத்திலிருந்து வெளியேறி, அப்படிப்பட்ட ஆத்திர
உணர்வுகள், போட்டி உணர்வுகள்—விவாதத்திலே இறங்குகின்ற
போது போட்டி உணர்வுகள் இருக்கலாம்—ஆனால் ஒருவரைக்
குறைகூறி, அப்படிக் குறை கூறப்பட்டவர் அதனால் அவமானப்
படுத்தப்படுவதைப் போன்ற குறுகிய அளவுக்கு எண்ணம் நமக்கு
இருக்காது என்று கருதுகிறேன். இனி வரவும் கூடாது என்பது
இந்த நேரத்திலே நான் வேண்டிக் கொள்கின்ற முதல் வேண்டு
கோள் ஆகும்.

இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து
அனுமதிக்கின்ற அளவுக்கு எத்தனை முறை கொண்டுவந்தாலும்
என்னைப் பொறுத்தவரையில் எங்களைப் பொறுத்தவரையில் இந்த
ஆட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் மன நிறைவோடு வர
வேற்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

எப்படியாவது மக்களின் பிரதிநிதிகள் ஆக வந்திருக்கிறவர்கள்
தங்கள் கருத்தினை, தங்கள் உள்ளத்திலே உள்ள குமுறல்களை
எடுத்து வைப்பதற்கு நல்ல ஒரு வாய்ப்பாக அமைவதற்கும்
நாட்டிலே உள்ள மக்கள் பத்திரிகை ஏடுகளிலே வருகின்ற செய்தி
களைப் பார்த்து இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருந்திருக்
கின்றனவா, இவைகள் எல்லாம் 6 மாதங்களில் நடந்தப்
பட்டனவா, நல்ல காரியங்களைச் செய்வதாகச் சொல்லி மக்கள்
மத்தியிலே வாக்குகளைப் பெற்றவர்கள் இந்தக் குறுகிய காலத்தில்
இவ்வளவு கொடுமைகளைச் செய்திருக்கிறார்களா இவ்வளவு தவறு
களைச் செய்வதற்கு எப்படி வாய்ப்புக் கிடைத்தது என்றெல்லாம்
எண்ணுவதற்கு ஒரு சூழ்நிலை உருவானாலும், அதே நேரத்திலே
நாங்கள் அன்றைக்கு வந்தபோது இந்த நாட்டில் நிலைமை என்ன?
இந்த ஆட்சிக்கு வந்தபோது ஆட்சி அமைப்புக்களிலே இருந்த
நிலைமை என்ன? நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது இந்த ஆட்சி
யிலே இருந்த நிதிநிலைமை என்ன? நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது
எத்தனை மாதங்களுக்குப் பிறகு நாங்கள் இடைக்காலத்தில்
பதவியேற்றோம்? இந்த ஆறு மாத இடைக்காலத்தில்
ஒரு அமைச்சரவை மற்றவர்கள் நினைப்பது போல் அனுபவம்
இல்லாத, இங்கே இருந்த ஒன்றிரண்டு அமைச்சர்களைத் தவிர,
அனைவரும் இந்தப் பதவிக்குப் புதியவர்கள், அப்படிப்பட்டவர்கள்
இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளும்போது இந்த நாட்டில் எந்த
எந்த இடங்களில், எந்த எந்தப் பகுதி மக்களில் எந்த ...ப்
பணியை ஏற்றுக்கொண்டு செயல்படுகின்றவர்களுக்கு இடையே

இருந்து ஏமாற்றங்கள் அவர்களுக்கு இருந்தது, ஆத்திரம் இருந்
தது, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எதை எதிர்பார்த்தார்
களோ அது கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்திலிருந்த நிலைமை.

இவைகளால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலைகளையும், அவைகளைச்
சந்திக்கவேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது என்பதை
யும் நாட்டுமக்கள் நன்கு புரிந்து கொள்வதற்கு, அதை விளக்கு
வதற்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எனக்கு ஒரு நம்
பிக்கையைத் தந்திருக்கிறது என்று நான் தெளிவுபடச் சொல்லிக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாங்கள் எந்தெந்தப் பொறுப்புக்களிலே, இலாக்காக்களிலே
எங்களுடைய பொறுப்பில் நாங்கள் கவனத்தைச் செலுத்த
வேண்டியிருக்கிறது என்று சொல்வதற்கு முன், சில பிரச்னைகளைப்
பற்றி ஒட்டுமொத்தமாக வைத்து, சில விளக்கங்களை முதலில் தர
நான் விரும்புகிறேன். நாங்கள் பதவிக்கு வந்தபொழுது, ஆறு
மாத காலம் முடிந்துவிட்ட நேரம், அதுமட்டுமல்ல இதற்கு
முன்னால் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட
திட்டங்கள், அதனுடைய தொடர்பாக வந்த செலவு, அதோடு
எந்தெந்தச் செலவுகள் ஏற்படுத்தப் படவேண்டுமோ,
புதிதாக நாங்கள் செய்ய வேண்டுமென்று
விரும்பினோமோ அதைச் செய்வதற்கான நிதி நிலைமை அது
எங்களுக்குச் சாதகமாக இருந்ததா என்பது இங்குள்ள அனைவருக்
கும் தெரியும், குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு
நிச்சயமாக அது தெரியும்.

ஆனாலும், இந்த ஆறுமாத காலத்தில் நாங்கள் என்னென்ன
தவறுகளைச் செய்தோம் என்று சுட்டிக்காட்டியவர்களிலே
மருத்துவமனையில், அதாவது மதுரையிலே டீனைப் போன்றவர்களை
நாங்கள் பழி வாங்கினோம் என்று சொல்லுகின்ற அளவிற்குப்
பேசப்பட்ட கருத்துக்கள் பேச்சுக்களைத் தொடர்ச்சியாக இங்கே
வெளியிடாமல் முன்னால் ஒரு வார்த்தையையும், பின்னால் ஒரு
வார்த்தையையும் இணைத்து ஒன்றாக்கிப் பேசுகின்றபொழுது
ஏற்படுகின்ற விளைவுகளை வெளியிடுகின்ற நிலைமை.

அதுபோன்று உணவுப் பிரச்னை, அதுபோன்று தொழிலாளர்
கள் பிரச்னை, அதுபோன்று மாணவர்கள் பிரச்னை, காவல்துறை
பிரச்னை இவைகளையெல்லாம் உள்ளடக்கி, இப்படியெல்லாம்
ஒன்றுகொன்று தொடர்பு கொண்டு இந்த ஆட்சி எந்தெந்த
பிரிவுகளில் எந்தெந்த நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்த
முடிந்திருக்கிறது என்பதையும், செயல்படுத்த முயன்றோமா,
அதில் நாங்கள் தோல்வி கண்டிருக்கிறோமா அல்லது அந்த முனைப்
பிலே ஏதாவது நாங்கள் அலட்சியம் காட்டியிருக்கிறோமா என்பதை
யெல்லாம் நாங்கள் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்
கிறோம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

பேச்சுக்களில் கருத்துக்களை வெளியிடும்பொழுது, நேரங்களில் ஒரு சில குறைபாடுகளைப் பற்றிச் சில திலே பேசும் பொழுது, புள்ளி விவரங்களை சட்டமன்றத் வைத்துக்கொண்டு பேச வேண்டிய கடமை உண்டு. ஒழுங்காக கூட. அதே நேரத்தில், மக்கள் மத்தியிலே சில கருத்துக்களை நியதியும் எடுத்து வைக்கும் பொழுது, அதிலும் குறிப்பாக விஞ்ஞான ரீதியில் அறிவியல் கொள்கையில், அதுபோல் ஆசிரியர்கள் மத்தியில் மாணவர்கள் மத்தியில் தொழிலாளர்கள் மத்தியில் கருத்துக்களை வெளியிடும்பொழுது கொஞ்சம் மிகைப்படுத்திச் சொன்னால் அவர்கள் இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டமாட் டார்களா என்று எண்ணுவதும், அதேபோல இதற்கு முன்னால் இருந்தவர்கள் அப்படிப்பட்டவைகளைப் பேசி, அதன் விளைவாக சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கு வதற்கு முயன்றிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லும்பொழுது, தற்காப்புக்காக எதையோ ஆயுதத்தைத் தேடிக்கொண்டு செல்வதாகக் கருத மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். காவல்துறை நாங்கள் வந்தபிறகு உருவாக்கப்பட்ட ஒரு காவல்துறை அல்ல, உணவுத்துறை, மருத்துவத்துறை, இதுபோன்ற ஒவ்வொன்றும் நாங்கள் வந்து புதிதாக அதற்கு ஆட்களைச் சேர்த்து, தேர்ந் தெடுத்து அங்கே அமரவைத்து, இது எங்களுடைய கொள்கை, இந்தக் கொள்கைக்காகத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். இப்படிச் செயல்படுங்கள் என்று சொல்லக்கூடிய வாய்ப்பு எங்க ளுக்கு இல்லை, இதற்கு முன்னால் இருந்தவர்களுக்கும் இருந்திருக்க முடியாது. அது தவிர்க்க முடியாதது.

[பிற்பகல் 12-20.]

அப்படிப்பட்ட நிலையில் நாங்கள் வந்த 6 மாத காலத்தில், இங்கே ஆளுநருக்கு அனுப்பிய, விசாரணை நடத்தியவர்களுடைய தீர்ப்பை, இஸ்மாயில் அவர்களது தீர்ப்பை, நான் கையெழுத் திட்ட பிறகும் அது போய்ச் சேரவில்லையென்பதை நான் அறிந்து கொள்கின்ற நிலையில் புதிய நிலைமை ஏற்படுகின்றதென்றால் நான் முன்பே குறிப்பிட்டேன். சூழ்நிலை எப்படியிருக்கிறதென்பதை இங்கே மாமன்றத்திலே உள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டு மென்ற வகையிலே வெளியிடுவதற்கு நான் அதைப் பயன் படுத்துகிறேன்.

இந்த அளவில் சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக் கின்றன. காவல் துறையினரைப்பற்றி, காவல் துறையினரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிற குற்றங்களில் ஒன்றிரண்டை நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். முழுவது மாக இல்லை; பின்னால் எனக்கு நேரம் இருந்தால், இன்னும் ஃபைலிலே வைத்திருப்பதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன் ஆனால், குறிப்பிட்ட சிலவற்றைச் சொல்கிறேன்.

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தூத்துக்குடி ஆசிரியர் பிரச்னை. 6-12-1977 அன்று தூத்துக் குடியில் செயின்ட் மேரீஸ் கல்லூரி, மகாலட்சுமிகல்லூரி ஆகியவை களைச் சேர்ந்த பெண் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர். அன்று கைது செய்யப்பட்ட மொத்த ஆசிரியர்கள் 54 பேர். அவர்களில் 25 பேர் பெண்கள். கர்ப்பிணி ஆசிரியர்கள் இருவர் —ஜாமீனில் போக மறுத்து விட்டனர். கைது செய்யலாமா என்பது வேறு. கைது செய்கின்ற போலீஸ் அதிகாரிகள் சட்டத்தை மதித்து செயல்படுகிறவர்களே தவிர, கொள்கையை எண்ணி செயல்பட முடியாத நிலையிலே இருப்பவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இங்கே ஒன்றை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினர் ஆகாதிருந்த காலத்தில், அமரர் அண்ணா அவர்களும் நாவலர் போன்றவர்களும் கைது செய்யப்பட்டு, கமிஷனர் அலுவ லகத்திலே வைக்கப்பட்டிருந்த நேரத்தில் நானும் முன்னாள் மேயர் முத்தண்ணன் அவர்களும் அங்கே சென்று மேலேயிருந்த ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தவர்களிடம் கேட்டேன். நான் என்றைக்கு இந்தப் போராட்டத்தில் இறங்குவது என்று கேட் டேன். அங்கிருந்து அவர்கள் சொன்னார்கள், 'நீங்கள் போங்கள், பிறகு சொல்கிறோம்' என்று சொல்வது போல், கையை ஆட்டினார் கள். அப்பொழுது கர்ப்பிணியாக இருந்த சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். மறுநாள் அவர்களை விடுதலை செய்து அனுப்பிவிட்டார்கள்.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அதையேதான் இவர்கள் செய்ய வேண்டுமா—என்று உத்தரவிட்டிருக்கிறீர்களே —என்று அல்ல பொருள். அதிகாரிகளைப் பொறுத்தவரையில் சட்டத்தை அமுல் படுத்துகிறார்கள். அப்படி அமுல் படுத்துகிற நேரத்தில், சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் செயல்பட்டால், நிச்சயமாக இந்த மாமன்றத்தில் எடுத்துக் காட்டுவார்களானால், நான் தலைவர் மூலமாகச் சொல்கிறேன், இந்த அரசு எப்படிப்பட்ட அதிகாரிகளாக இருந்தாலும், எத்தனை பெரிய அனுபவம் பெற்ற வர்களாக இருந்தாலும், நாங்கள் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: கர்ப்பிணியாக இருந்தவர்கள் ஜாமீன் கொடுக்கப்பட்டும் அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள் என்பது நீங்கள் சொன்னது. நான் தூத்துக்குடியிலேயிருந்து வெரிஃபை பண்ணிச் சொல்கிறேன், 8 மாதக் கர்ப்பிணி ஒருவர் ஜாமீன் மனுக் கொடுத்து, வெளியிலே போய், மறுநாள் பிரசவம் ஆகியிருக் கிறது என்று சொல்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : முதலில் மறுத்தவர்கள் மறுநாள் ஒத்துக்கொண்டார் என்று உமாநாத் அவர்கள் கருதுகிறார்கள் என்று கருதுகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> வெரிஃபை பண்ணிச் சொல்லுங்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : நான் சொல்வது, எனக்குக் கொடுத்திருக்கிற குறிப்பிலேயிருந்து பேசுகிறேன் அந்தக் குறிப்புகள் தவறு என்று வருமானால், இந்தத் தவறான குறிப்பை இங்கே வெளியிடுவதற்குக் காரணமான இருந்தவர்கள், நிச்சயமாக சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாவார்கள் என்பதை நான் இங்கே மீண்டும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒரு சந்தேகம் என்று நான் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். காங்கிரசைச் சேர்ந்தவர்களுக்குச் சாதகமாக நாங்கள் நடந்து கொண்டதைப் போன்ற ஒரு எண்ணம் பலருக்கு இருப்பதாகக் கருதவேண்டிய நிலையில் பேச்சுக்கள், கருத்துக்கள் இங்கே வெளியிடப்பட்டன. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 3-10-1977 அன்று திருமதி இந்திராகாந்தி அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் காங்கிரசார் நடத்திய அர்த்தால், மறியல், போராட்டம், போன்றவற்றில், மொத்தம் 1,200 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், கைது செய்யப்பட்டவர்களில் 1,097 பேர்களின் மீது பஸ்கள், கடைகள் முதலியவற்றின் மீது கல் எறிதல் போன்ற குற்றங்களுக்காக தமிழ் நாடு முழுவதும் 80 வழக்குகள் இ.பி.கோ. 147, 148, 323, 324, 336, 341, 379, 426, 427, 447, 448, 506 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. Indian Railways Act, 122-வது செக்ஷன் கீழும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அவற்றில் 3 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டது. 45 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கின்றன. 28 வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றன. 4 வழக்குகள் ஆதாரம் இல்லை என்று கைவிடப்பட்டன. ஆகவே காவல் துறை காங்கிரஸ்காரர்களுக்கு, அவர்களுக்கு அனுதாபம் காட்டி அவர்கள் செய்கின்ற தவறுகள் ஏதாவது இருந்தால் அவர்களை விட்டுவிட்டு, வேறு கட்சியினர் மீது ஏதோ பழிவாங்குகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கின்ற எண்ணம் எப்படியோ தவறாக வெளியிடப்பட்டு விட்டதோ என்ற ஐயத்தில் இவைகளை நான் இந்த மன்றத்திலே சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றேன்.

மேலும், மதுவிலக்கைப் பற்றி இங்கே பேசினார்கள். மதுவிலக்கு முன்பிருந்ததைவிட இப்போது அமுல் படுத்துகின்ற முறை

யில் குறைபாடு உள்ளது என்ற வகையிலேயும், கள்ளச் சாராயம் அதிகமாக விற்கப்படுகிறது என்றும் இங்கே குற்றம் சாட்டினார்கள். எங்கெங்கே குற்றச் சாட்டுகள், குறைகள் சொல்லப்படுகின்றனவோ அங்கே எல்லாம் தீவிரமாக இந்த அரசு தனது கடமையை காவல் துறையின் மூலம் நிறைவேற்ற முயல்கிறது என்ற வகையில், எடுத்துக் காட்டுகிற வகையில், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, தன்னுடைய பேச்சில் குறிப்பிடும் போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே இதில் கலந்துகொண்டிருப்பது போலவும், அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தது, கருத்து வெளியிட்டது எங்களுக்கு சாதகமாகவே இருக்கிறது என்பதை நான் தெளிவுபட கூறிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

நான் பல முறை மேடைகளில் பேசியிருக்கிறேன். யார் எந்த குற்றம் செய்தாலும் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்பு நடந்த சட்டமன்றக் கூட்டத்திலேயே நான் பேசும்போது ஒரு காவல் துறையைச் சேர்ந்தவர் எப்படி பதில் சொன்னார் என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதை நான் இங்கே இப்போது குறிப்பிட தேவையில்லை என்றாலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில அதிகாரிகள் பழக்கத்தின் காரணத்தாலே ஆங்காங்கே நிரந்தரமாக பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்த காரணத்தாலே தொடர்பு கொண்டு அடிமட்டத்தில் இருக்கிறவர்கள் சிலரும், சில அதிகாரிகளும் லாபத்தைக் கருதி தங்களுடைய பொறுப்பை மறந்து செயல்படுகிறார்கள் என்கிற அளவுக்கு எங்களுக்குத் தகவல்கள் வருகின்றன. அவ்வப்போது அவைகளை எல்லாம் நாங்கள் கவனித்து யார் யார் மீது எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நாங்கள் செயல் படுத்தும்போது சட்டம் ஒழுங்கு முறையோடு அந்த நடவடிக்கை மக்களுக்கு பயன் உள்ளதாக அமையவேண்டும் என்று கருதுகிற அந்த வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதையும், சிலரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவது என்ற முறையையும், சிலரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து விசாரணை செய்வது என்ற முறையையும், சிலரை வேலையிலிருந்து நீக்கி நடவடிக்கை எடுப்பது என்ற முறையிலும் நாங்கள் இயங்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதிலே எனக்கு தந்து இருக்கும் புள்ளி விவரத்தை இங்கே சொல்வது பொருத்தம் உடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தப் புள்ளி விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் பரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னால், நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்

என்று சொல்லும்போது இப்போது இருக்கும் சட்டம், இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள், கள்ளச் சாராயம் விற்பனை செய்பவர்கள், அதனால் ஏற்படுகின்ற விளைவுகள், அப்படிப்பட்டவர்கள் மீது எல்லாம் கடுமையாக நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டம் அமைந்தால் ஒழிய இதிலே பாதுகாப்பு வராது. இருக்கின்ற சட்டத்தை வைத்து அவர்களை தடைப்படுத்த முடியாது என்ற சூழ்நிலையில் அதுவும் ரூ. 25, ரூ. 50 அபராதம் போடுவதோடு வெளியே அனுப்பும் நிலை இருக்கிற வரையில், இதற்கு ஒரு நல்ல முடிவைக் காண முடியாது என்ற நிலையில், இந்த அமைச்சரவை இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று விரும்பி இருக்கிறது. அதற்கான சட்டம் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. விரைவில் இந்த மன்றத்திலே வைத்து உங்களது ஆதரவோடு அதை நிறைவேற்றி இப்படிப்பட்ட கொடுமைகளை செய்து நாட்டு மக்கள் சாவதற்கு காரணமாக இருப்பவர்களை தூக்கு மேடைக்கு வேண்டுமானாலும் அனுப்புவதற்கு முறை செய்கிற அளவுக்கு, அல்லது அதிக ஆண்டுகள் தண்டனை அடைந்து சிறைச்சாலையிலிருந்து, நாம் செய்த துன்பங்களுக்கு இதைப் பார்க்கிறோம் என்று நினைக்கிற அளவிற்கும், வெளியே தவறு செய்யலாம் என்ற நம்பிக்கையோடு இருப்பவர்களுக்கு இது இந்த நிலையில் கொண்டு போய் விடும் என்று அச்சத்தை அறிவிக்கும் அளவிற்கு உதவியாக இருக்கும் நிலையில் அமைத்து இந்த மாமன்றத்தின் அனுமதியோடு அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நாங்கள் விரும்பி இருக்கிறோம். அதை அந்த வகையில் நிறைவேற்ற விரும்புகிறோம்.

1977 ஏப்ரல் முதல் 1978 மார்ச் முடிய கள்ளச் சாராயம் காய்ச்சுதல் என்ற நிலையில் 59,762 பேர்களை பிடித்திருக்கிறார்கள். 1977 ஏப்ரல் முதல் 1977 நவம்பர் வரை இவர்களில் தண்டிக்கப்பட்டவர்கள் 34,202 பேர்கள். கள்ளச் சாராயம் அல்லது தாராவி விற்றல் 10,522. கள்ளத்தனமாக மதுவை எடுத்துச் செல்லுதல் 10,569. உரிமம் இல்லாது மதுவிற்பனை செய்தல் 436. தாராவி அல்லது சாராயம் வைத்திருத்தல் 1,87,141. பல்வகை குடிபோதை வஸ்துக்கள் 1,05,125 போலி உரிமங்களை நீக்குவதற்காக வருவாய்த்துறை வாரியம், மதுவிலக்கு ஆயத் தீர்வை படிவத்தில் உள்ள உரிமங்களை தீவிரமாக சோதனை செய்து 17,75,300 லிட்டர் அளவு உள்ள இயல்பு மாற்றப்பட்ட தாராவி தொடர்பான உரிமங்களை ரத்து செய்தது. வார்னிஷ் தவறாகப் பயன்படுத்தப்படுவதை ரத்து செய்யும் பொருட்டு, மதுரையில் உள்ள அரக்கு தொழிற்சாலையும், அம்பத்தூரில் உள்ள டான்சி நிறுவனத்தில் இந்த மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்ய, வார்னிஷ் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் வார்னிஷுக்காக பயன்படுத்துகிற போதைப் பொருட்களை, வெவ்வேறு வகையில் பயன்படுத்தி நாட்டு மக்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்வதற்கும், பணத்தை தாராளமாக சம்பாதிப்பதற்கும் வழியிருக்கிறது என்பதை தடைசெய்ய இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆக,

எந்தெந்த வகையில் இவைகளை தடுப்பதற்கு ஒரு அரசால் முடியுமோ, இயலுமோ, அந்த அளவில் இந்த மது விலக்கு கொள்கையில் அக்கறை காட்டுகிறோம் என்பதற்கு சில உதாரணங்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறேன்.

புதுவை, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய அண்டை மாநிலங்களில், தமிழ்நாட்டுக்கும் அவைகளுக்குமிடையே 5 மைல் தூரத்திற்கு இடைவெளி ஏற்படுத்தப்பட்டு, அங்கே இந்த மது அருந்துகிறவர்கள் அருந்தக் கூடாது என்ற சட்டத்தை எல்லையைச் சுற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று டில்லியில் நடந்த ஒரு மாநாட்டில் பேசும்போது நான் வற்புறுத்திச் சொன்னேன். அதை அங்கேயிருந்த பொறுப்புள்ளவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அந்தந்த மாநிலத்தில் இருப்பவர்களோடு கடித போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம். சரியான ஒப்புதல் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆக இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் சொல்லுவதன் மூலம், மத்திய அரசு புரிந்து, மத்திய அரசில் இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடுமேயானால், அந்த நடவடிக்கையில் அவர்கள் இறங்குவதற்கு என்னுடைய கருத்தை வெளியிடுவது நல்ல பயன் உள்ளதாக அமைந்தால் உண்மையிலேயே நான் மகிழ்ச்சி பெறுவேன்.

அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலன்றி, வெளியிலிருந்து கொண்டுவருவது கொஞ்சம் தடுக்கப்பட்டுள்ளது என்றிருந்தாலும் பெரிய போர்கள் நடைபெறும்போது ஒரு பக்கத்தில் படைகளை வைத்து தடுத்துக் கொண்டிருக்கும்போது, இன்னொரு பக்கத்தில் நுழைகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறதே, அதைப்போலத்தான் ஏற்பட்டுவிடும் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது. வேடிக்கைக்கு சொன்னார்கள். ஒரு எல்லைக் கோட்டில் நின்று கொண்டிருக்கிற ஒருவர் குடிப்பாராம். குடித்துவிட்டு, கையில் மது பாட்டிலை வைத்துக் கொண்டு வந்து, எல்லையில் நிற்பாராம். காவல்துறையினர் அருகில் சென்றவுடன் எல்லையைத் தாண்டி அந்தப் பக்கம் நின்றுகொண்டு, இப்போது என்ன செய்வாய் என்று கேட்பாராம். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறவரையில், நாம் இதற்காக ஏதாவது வேறு வகையில் வழி செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். அதை அந்தந்த மாநில அரசு ஒப்புக்கொள்ள வேண்டும், அதைப்போல மத்திய அரசும் அதற்கு துணைநின்றாக வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைத்துள்ளதை. இங்கே மீண்டும் வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.40]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைத் தந்தார்கள். அவைகளைப் பார்க்கும்பொழுது இவ்வளவு கள்ளச்சாராயம் உற்பத்தி ஆகிறதே இது குடிப்பதற்குத் தான் போகிறது. அப்படி குடிப்பவர்கள் மீது எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

விவரம் தர முடியுமா? குடிப்பவர்களை பிடிக்க வேண்டாம் என்று சொல்லியிருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அப்படி இல்லையென்றால் வாக்குறுதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: குடிப்பவர்களைப் பிடிக்க வேண்டாம் என்று இந்த அரசு சொல்லவில்லை என்று தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னது எல்லாம் குடிப்பவர்களை முதலில் தண்டிப்பதைவிட குடிப்பழக்கத்துக்கு ஆளாக்கப்படுகிற சூழ்நிலையை உருவாக்குகிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று சொன்னேனே அன்றி குடிப்பவர்களை விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை.

அது மட்டுமல்ல. இப்போது இன்னொன்றும் சொல்லுகிறேன். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னேன் அபராதம் போட்டு விட்டுவிடுகிறார்கள் என்று. முதலில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு முதலீடு செய்கிறவர்கள், அந்தக் கள்ளச் சாராயத்தை விற்கிறவர்கள், இவர்களை முதலில் தடை செய்தாக வேண்டுமென்ற நிலையில் அவைகளைச் சொன்னேன் என்பதை இங்கே தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

இன்னொன்று. சீராளன் கொலை சம்பந்தமாக யார் யாரைக் கைது செய்திருக்கிறார்கள், எப்படி கொலை செய்யப்பட்டார் என்று மாண்புமிகு உறுப்பினர் ரா. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். யார் யார் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்லும்பொழுது ஒரு பிரச்னை எழுகிறது. நான் தெரிந்து கொண்ட வகையில் தனிப்பட்டவர் ஒரு வழக்குப் போடும்பொழுது நிலைமை வேறு. அரசு வழக்கு தொடரும்பொழுது நிலைமை வேறு என்று சட்டப் பிரிவு அமைப்பு தகவல் கொடுத்திருக்கிறது.

அந்த வகையில் இந்த வழக்கை விசாரணை செய்யவேண்டுமென்று சொன்னபோது மாவட்ட துணை ஆட்சியாளர் அவர்கள் விசாரித்து இந்த வழக்கு தொடர வேண்டியிருக்கிறது என்று சொன்னதை வைத்து நான் அனுமதி கொடுத்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்திருக்கிறார்கள். ஆகவே, கைது செய்வதற்குப் பதிலாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் இப்போது கைது செய்யப்படவில்லை என்றாலும் யார் யார் சம்பந்தப்பட்டவர்கள் என்ற புள்ளி விவரத்தை இங்கே சொல்வது என்னுடைய பொறுப்பு என்று கருதுகிறேன்.

திரு. காசிநாதன், தலைமைக் காவலர், எண் 2174, தற்சமயம் காட்பாடியில் இருக்கிறார்.

திரு. ராமசாமி, காவலர், எண் 670, வேலூர் தாலூகா காவல் நிலையம்.

திரு. சிவலிங்கம், காவலர், எண் 1902, வந்தவாசி காவல் நிலையம்.

திரு. ஏ. ஆர். வீரபாண்டியன், டி.எஸ்.பி., திண்டிவனம், முன்னாள் டி.எஸ்.பி., திருப்பத்தூர்.

திரு. ஹென்றி ஜோசப், ஆய்வாளர், ஆரணி, முன்னாள் வேலூர் கிளை ஆய்வாளர்.

கைது செய்யப்படாமல் இவர்கள் மீது இலாகா நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. ஜனார்த்தனன், ஆய்வாளர், குடியாத்தம் ரூரல், முன்னாள் ஆய்வாளர், வாணியம்பாடி.

திரு. ஏ. கண்ணன், ஆய்வாளர், திருப்பத்தூர் நகரம்.

திரு. ரா. உமாநாத்: இந்தக் கைது செய்வது சம்பந்தமாக 302 செக்ஷன் போட்டிருப்பதால், இவர்கள் அரசாங்க அதிகாரிகளாக இருப்பதால் கைது செய்ய முடியாது என்று ஏதாவது ரூல்ஸ் இருக்கிறதா, அல்லது கைது செய்வதற்கு வேறு ஏதாவது புரொசிஜர் இருப்பதால் டிலே ஆகிறதா என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: புரொசிஜர் என்று சொல்லுகிற முறையில் தான் அது செய்யப்படாமல் இருக்கிறதே தவிர, வழக்கு தொடரப்பட்டு, விசாரணையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எப்படி கொலை செய்யப்பட்டார் என்பதை இங்கே நான் வெளியிடுவது வழக்கிற்குச் சாதகமாக இருக்காது, ஆகவே, நான் சொல்ல விரும்பவில்லை.

திரு. க. சுப்பு: பேரவை துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்காகக் கேட்கிறேன். புரொசிஜர் என்று வருகிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் தான் அந்தப் புகாரை நீதி மன்றத்தில் தாக்கல் செய்கிறார். அரசாங்கம் தான். மாவட்ட ஆட்சித் தலைவர் பிரைவேட் நபர் அல்ல. ஆகவே, கலெக்டர் தாக்கல் செய்தவுடன், கோர்ட்டால் தான் எது என்று ஏற்க வேண்டும். வேறு அல்ல. சட்டப்படி இது செய்யப்பட்டது. சட்ட சம்மதத்தில் தான் செய்தது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய நிலையை நான் விளக்கி விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொன்ன பிரச்னையை நான் மறந்துவிட மாட்டேன் என்று தலைவர் மூலமாக அவருக்கு உறுதி கூறுகிறேன். நிச்சயமாக, அந்த ஒரு வழி கொடுக்கப்படுமானால், அப்படி சட்டம் உதவுமானால் நிச்சயமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் இந்த விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சருக்கு கிடைத்ததாகச் சொல்லுகிறார். என்னைப் பொறுத்த வரையில் சொல்ல வேண்டுமென்றால், சட்டத் துறை ஒரு தவறான விளக்கத்தை

மாண்புமிகு முதலமைச்சருக்கு அளித்து இருக்கிறது. கொலை
முயற்சி என்ற குற்றச்சாட்டு 307-வது பிரிவின் கீழ் கைது செய்த
போது—கொலை செய்தார் என்று 302-வது செக்ஷனின் கீழ்
கைது செய்யப்பட்டார் என்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த
மாதிரி தவருன யோசனை எடுத்துச் சொல்லப்பட்டிருந்தால்,
தெரிவித்தவர் மீது நடவடிக்கை எடுப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தவருக
தகவல் கொடுத்தவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்
பேன். தலைவர் அவர்களே, இன்னொரு பிரச்னை. நமது எதிர்க்
கட்சித் தலைவர் சொன்னது, 144 தடையை மீறியதற்காக நாங்கள்
கைது செய்யப்பட்டோம் என்ற நிலையிலிருந்து திடீரென்று மறு
நாள், சதிக் குற்றம் போன்று, பெரிய அளவுக்கு, பயங்கரமான
வகையில் செக்ஷனைப் போட்டு கைது செய்து ரிமாண்டில் வைத்
திருந்தார்கள், ஜாமீன் கொடுக்க வேண்டும் என்று நாங்கள்
கேட்கவில்லை, ஜாமீனில் வெளி வரலாம் என்று சொல்லப்பட்டது.
ஆனால், ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அதே
நேரத்தில் மற்ற மாநிலங்களுக்கும் இங்கே இருப்பவர்களுக்கும்
இடையில் தொடர்பு இருக்கும் என்ற பயங்கர சூழ்நிலை இருப்ப
தாகச் சொல்லப்பட்ட நேரத்தில், எந்த வித நிபந்தனையும்
இல்லாமல் விட்டிருக்கிருர்கள் என்று சொன்னார்கள். நிபந்தனை
இல்லாமல் என்று சொல்லுவதற்கு என்ன அர்த்தம். நீதிபதி
யின் முடிவின்படி தான் கைது செய்யப்பட்டவர்களை வெளியில்
அனுப்புவதோ உள்ளே அனுப்புவதோ இருக்கிறதே தவிர வழக்கு
போட்டவர்கள் விருப்பப்படி வெளியில் அனுப்ப முடியாது என்று
நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. உள்ளே வைப்பதாக இருந்தாலும், காரண
மின்றி அல்லது அதற்குரிய நியாயத்தைச் சொல்லி, நீதிபதி
ஒப்புக்கொள்ளுகிற நிலை உருவானலன்றி அது சரியல்ல என்று
சொல்லப்படுகிறது. அந்த வகையில் நான் சொல்லுகின்றேன்.
வெளியில் அனுப்பப்பட்டிருப்பது, நீதிபதியின் உத்தரவின் பேரில்
தான். நீதிபதி ஏற்றுக்கொண்டு அனுப்பி இருக்கிருர்கள்.
நீதிபதி என்ன நினைத்தார், எதற்காக அனுமதித்தார் என்று
சொல்லுவதை விட, எப்போது வர வேண்டுமென்று அழைக்கப்
படுகிருர்களோ அப்போது வர வேண்டும் என்கிற நிபந்தனை
அதிலேயே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

அது மட்டுமல்ல. வழக்கறிஞர் எந்தக் கருத்தை இங்கே
வெளியிட்டிருக்கிருர்கள். எது உண்மை என்பதை இந்த வழக்கு
சம்பந்தப்பட்டவரை பார்க்கலாம். இங்கே இருக்கின்ற
அமைச்சர்கள் யாராக இருந்தாலும் சரி, நான்
ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். பழி
நோக்கத்தோடு, யார் மீதாவது ஒரு பழியைப் போட்டு, அவரைச்
சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டுமென்ற ஆசை நிச்சயமாக
எங்களுக்குக் கிடையாது என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த
விரும்புகிறேன்.

இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் நமது
ப.உ. சண்முகம் பேசும்போது சொன்னார்கள், சர்க்காரியா கமிஷ
னுடைய அறிக்கையை கொண்டு வாருங்கள், கிழி கிழி என்று
கிழித்து எறிந்து விடுகிறேன் என்று சொன்னார்கள். அவர்களுக்கு
எவ்வளவு ஆத்திரம் இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது.
அந்தத் தீர்ப்பின் மீது ஆத்திரமா, அல்லது அந்தக் கடிதத்தின்
எழுத்தின் மீது ஆத்திரமா, எனக்குத் தெரியாது.

ஆனல் ஒன்றைச் சொல்கிறேன். 1974ஆம் ஆண்டு—இந்த
அவையிலே அதைச் சொல்வதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள்
என்னைத் தவருக கருதக் கூடாது என்பதை தலைவர் மூலமாகக்
கேட்டுக் கொள்கிறேன்—ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
1974ஆம் ஆண்டு 8-ம் தேதி அக்டோபர் மாதம் நான் பொதுக்
கூட்டத்தில் பேசியபோது இப்பொழுது நான் என்ன சொல்கி
றேனே இந்தக் கருத்தைத்தான் அன்றைய தினம் நான் மக்கள்
மத்தியில் சொன்னேன் என்பதை இங்கே நான் வெளியிட விரும்பு
கிறேன். ''குற்றஞ் சாட்டப்பட்டு இருக்கின்றீர்கள், எதிர்க்கட்சி
யைச் சேர்ந்தவர்கள் சொல்கிருர்கள். திராவிட முன்னேற்றக்
கழகத்திலே இருப்பவர்கள் குறை கூறப்படுகின்ற அளவிற்கு
ஆளாக்கப்பட்டிருக்கிருர்கள். லஞ்சம் வாங்கியிருக்கின்ருர்கள்;
சிபாரிசு செய்கிருர்கள் என்பது மட்டுமல்ல, அவர்களை பணக்காரர்
களாக ஆக்கிவிட்டார்கள்; அவர்களை காண்டிராக்டர்களாக
ஆக்கிவிட்டார்கள்; இப்படி எல்லாம் பல்வேறு குற்றச் சாட்டுக்
கள், அதை விளக்க நான் விரும்பவில்லை. இப்படியெல்லாம்
குற்றம் சொல்கிருர்கள். அப்படிப்பட்டவர்கள், குற்றஞ் சொல்
லப்படுபவர்கள் யாராவது இருப்பார்களேயானல் அவர்களை
விசாரிக்க, அப்போது நானிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்
தின் பொதுக்குழு நீதி மன்றம் போல ஒரு விசாரணை குழுவை
அமைக்கவேண்டும்; அது பரிசீலனை செய்து கட்சியில் யாராவது
தவறுகளுக்கு ஆளாகி இருந்தால் அவர்களை மக்கள் முன் நிறுத்த
வேண்டும்; கட்சியை விட்டு நீக்க வேண்டும்''. அதோடு
இன்னும் ஒன்றையும் நான் சொன்னேன். ''ஒருவேளை அப்படி
குற்றம் அற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அப்படிப்பட்ட
வர்களை மக்கள் முன்னல் நிறுத்தி, மாலையிட்டு, பாராட்டி, இதோ
பார்த்தீர்களா; எங்களிடம் எவ்வளவு பேர்கள் நிரபராதிகளாக
இருக்கிருர்கள் என்று பாருங்கள்'' என்று பேசிய என் கருத்தினை
நான் இப்போது குறிப்பிடுகிறபோது, சர்க்காரியா கமிஷனுக்கு
என்னிடம் கிடைத்த தகவல்களை நான் அரசாங்கத்திற்கு
கொடுத்து, அது அரசாங்கத்தின் மூலமாக சர்க்காரியா கமிஷ
னுக்குப் போயிருக்கிறது. அதிலே விஷயம் தெரிந்தவர்கள்
சொல்லியிருக்கலாம்; தெரியாதவர்கள் ஒதுங்கி இருக்கலாம்.

என்னைப் பொறுத்தவரையில் மிகவும் அழுத்தம் திருத்தமாக
சொல்கிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே வந்து
உட்கார்ந்திருந்தாலும் ஒரு காலத்தில் அவர்கள் என்னோடு

தோளோடு தோள் நின்றவர்கள். அவர்கள் என்னுடைய கஷ்டத்தில் பங்கு கொண்டவர்கள். அன்றைய ஆட்சியிலே எல்லோரும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்கள். நான் கூட 1967-லே சுடப்பட்டேன். அண்ணாவின் கொள்கையைச் சொன்னேன் என்பதற்காக அன்றைய தினம் நான் சாகிற நிலைக்கு ஆளாக்கப் பட்டவன். நான் சொல்லிக்கொள்கிறேன் இங்கே குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நிரபராதிகள் என்று சொல்கிற காலத்தை நான் எதிர்பார்க்கிறேன். அந்த வாய்ப்பு கிடைத்தால் உண்மையிலே நான் பெருமைப் படுவேன். உண்மையிலேயே அப்படிப்பட்ட மகிழ்ச்சி அடைகிறவர்கள் என்னைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாது. அன்றைக்கு அப்படிப்பட்ட பழிக்கு நானும் உட்பட்டவன் என்பதால்தான் என்னையும் சேர்த்துச் சொன்னேன். என்னையும் விசாரணைக்கு ஆட்படுத்துங்கள் என்று சொல்லியதை நான் மறந்துவிடவில்லை. வார்த்தைகள் வேறாக இருக்கலாம். ஆனால் கருத்து இதுதான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். இங்கே வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் மக்களின் நம்பிக்கைக்கு உட்பட்டுத் தான் இங்கே வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் அல்ல என்று சொல்லும்போது தான், அதற்கு உரிமை உள்ளவர்கள் நாங்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய உரிமைக்கு நாம் அனைவரும் வருகிறபோது தான் தமிழகம், அண்ணாவின் தமிழகமாக, நாங்கள் விரும்புகிற உண்மையான தமிழகமாக, மக்கள் மத்தியில் பாராட்டுப் பெறுகிற, அனைத்து இந்தியத் துணைக் கண்டமும் பாராட்டக்கூடியநிலையில் நாம் பழைய நிலையை எய்தவேண்டும் என்று மன நிறைவோடு சொல்கின்றேன். இதிலே எனக்கு பாரபட்சம் இல்லை.

அந்த நிலையில், மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன்—அவர்களை நாங்கள் வேறு கண்ணோடு பார்ப்பதாகவோ மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்களை வேறு கண்ணோடு பார்ப்பதாகவோ கருதினார்களானால் நிச்சயமாக நான் பொறுப்பல்ல.

ஒன்றை நான் உறுதியாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய, காலம் சென்ற காமராஜ் அவர்கள் பாண்டிச்சேரியிலே தேர்தலில் திருமதி இந்திரா காந்தியாரோடு பங்கு கொள்ளும்போது அதை நாங்கள் எதிர்த்தவர்கள். அதே காங்கிரசை எதிர்த்தவர்கள். இது போன்று அவ்வப்போது அரசியலில் பல்வேறு பிரச்சினைகளில், பல்வேறு நேரங்களில், பல்வேறு பாதையை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறோம்.

இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் எந்தக் காரணத்தாலும் எங்களுடைய கொள்கையை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இதையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்தக் குற்றச் சாட்டுகளையும் எங்கள் மீது சுமத்துங்கள். நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் இதுவரையில் எந்த ஊழல் குற்றச் சாட்டுக்கோ, அல்லது லஞ்சம் வாங்கியதற்கோ பொறுப்பானவர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை உருவாகவில்லை என்று அனைத்து உறுப்பினர்களும், ஒரே வகையில், ஒரே எண்ணத்தோடு செயலாற்றியதை மன நிறைவோடு ஏற்றுக்கொள்கிறேன். அப்படி, யாராவது, எங்கள் நண்பர்கள், எங்கள் உறுப்பினர்கள், தவறு செய்திருப்பதை சுட்டிக் காட்டுங்கள்—ஆதாரத்தோடு சொல்லுங்கள்—நடவடிக்கை எடுக்க எங்கள் கட்சியும் நானும் நிச்சயமாகத் தயாராக இருக்கின்றோம்.

இன்னொன்றையும் சொல்வேன். இந்தக் கொள்கை என்பது இன்று நேற்று ஏற்பட்ட கொள்கை அல்ல என்பதை நான் சொல்லி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சமதர்மத் தத்துவத்தின் அடிப்படையில், ஜாதி இல்லாத, மதத்தின் பேரால் நாட்டில் பிளவுகள் ஏற்பட்டு அமைதியற்ற ஒரு சூழ்நிலை அற்ற ஒரு சமுதாயம் ஏற்பட வேண்டுமென்றும், தமிழகத்தில், தமிழ்மொழி தான் ஆட்சி மொழியாக வேண்டும் என்றும், இந்தியத் துணைக் கண்டத்தில் முழுமையாக இல்லாவிட்டாலும். 14 மொழிகளும் ஆட்சி மொழியாக வையுங்கள் என்ற கொள்கையை மாமன்றத்தில் பேசியவர் அண்ணா அவர்கள் . . . . அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் என்பதை தெரிவிக்கின்றபோது, இந்தக் கொள்கையிலிருந்து இந்த அரசு, இந்த ஆட்சி எப்போதும் பின்வாங்காது என்பதையும் தெளிவாக பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்கள். இந்தி மொழியை கற்றுக் கொள்ளவிடாமல்—அவர்கள் சொன்னதை நான் சொல்ல விரும்புகிறேன்—முதலமைச்சரை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாமென்று விட்டு, கொங்கணி என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உபாநாத் அவர்களை உண்டாக்கி, சொல்லியதைச் சொல்லிக் காண்பித்தார்கள், ஒரு மலையாளி முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால் தமிழக மக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று பிழைக்க முடியாத ஒரு நிலைமையை இங்கே ஏற்படுத்திவிடுவார்களோ என்ற அச்சம் இருப்பது போன்று அவர்கள் இங்கே பேசினார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் நான் கூறியதை, கூறிய பொருளை ஒட்டிப் பேசவில்லை என்று கருதுகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்தவர் இங்கே முதலமைச்சராக இருக்கின்றார் என்றால், அது, அவர் இன்னொரு மொழியைக் கற்றதால் முதலமைச்சராக இருக்க முடிகின்றது. ஆகவே, தமிழர்கள், இன்னொரு மொழியைக் கற்றுக் கொண்டால், பிற மாநிலங்களுக்குச் சென்று வேலை வாய்ப்புகள் பெறுவதற்கும், இதைப் போன்ற பதவிகளில் அமருவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை இங்கே கூறி, இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிப்பதை தடுக்கக் கூடாது என்று கூறினேனே அல்லாமல் மற்றபடி அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் ஒன்றைச் சொல்கின்றேன். இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கின்றது.

இரண்டு கேரளாக்கள் இருக்கலாமா என்று கேட்டவர்கள்— என்னுடைய நண்பர்கள்—இங்கே இருக்கிறார்கள், உறுப்பினர் களாக இருக்கிறார்கள் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்காது.

[பிற்பகல் 1-00]

இதுவரையில் என்னைப்பற்றி பல்வேறுயிடங்களில் பேசினாலும் இந்த மன்றத்தில் அதை வெளியிட வேண்டிய அவசியத்திற்கு என்னை ஆளாக்கியதற்காக நான் மிக மிக மகிழ்ச்சியைத் தெரிவித் துக்கொள்கிறேன். அதைச் சொல்வது மூலமாகத்தான் இந்த முதல் அமைச்சர் பதவியைப் பெறுவதற்கு நான் தகுதி உள்ளவன் என்று மக்கள் தேர்ந்தெடுத்தார்கள், என்னையும் எங்கள் கட்சியை யும் தேர்ந்தெடுத்தார்கள் என்று சொல்லிக் கொள்ள நான் தயாராயில்லை.

ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்க ளுக்காக தொண்டு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், மக்களுக்காக வாழ்கிறான் என்ற நம்பிக்கை பெற்று மக்கள் ஒரு முடிவு எடுத்தால் அது எந்தளவிற்கு சக்தி மிக்கதாக இருக்க முடியும் என்பதற்கு ஒரு அடையாளம் நான் இங்கே முதல் அமைச்சராக இருப்பது என்பதைச் சொல்லும்போது ஒன்றை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

—

நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருக்கும் போது, அண்ணா அவர்கள் இருந்தபோது, அவர்களோடு பேசி, அண்ணா அவர்களின் உத்தரவு பெற்று, மருதமலையில் விளக்கு களைப் போட்டு அதை முடுக்கி வைக்கவேண்டும் என்று தேவர்

என்ற படத்தயாரிப்பாளர் அழைத்தபோது, அவர் அனுமதியோடு சென்றேன். அங்கே மன்றாடியார் அவர்கள்—மன்றாடியார் யார் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்—அவர்கள் அப்போது அமைச்சராக இருந்தார்கள், அவர் தலைமை வகித்தார். அங்கே ஒரு பிரச்சினை வந்தது. நான் யார் என்று கேட்கப்பட்டது, என் பூர்வாங்கம் என்ன என்று கேட்டார்கள். நான் சில விவரங் களைத் தெளிவுபடுத்தினேன். நான் மன்றாடியார் குடும்பத்தைச் சார்ந்தவன், இப்போது மன்றாடியார் என்று அழைக்கப்படுபவர் கள் கேரளத்தில் இருக்கிறார்கள். அவர்கள் சில நூறு ஆண்டு களுக்கு முன் தமிழகத்தில் இருந்து கேரளாவிற்குச் சென்று குடி யேறியவர்கள் என்பதையும் நான் சொன்னால் ஒருவேளை நான் மலையாளி அல்ல, நான் தமிழன் என்று சொல்லி இதற்குச் சொந்தக் காரனாகப் பார்க்கிறேன் என்று மற்றவர்கள் கருதலாம், இதை அவர்களே வெளியிட்டார்கள்.

ஆக, தமிழனாகப் பிறந்து அந்தப் பரம்பரையில் வந்து கேரளாவில் வளர்ந்து பிறகு சில நூற்றாண்டு களுக்குப் பிறகு அங்கிருந்த பெண்களைத் திருமணம் செய்து— கொடுக்கல் வாங்கல் என்றுசொல்வார்கள், கொடுப்பது வாங்கு வது என்பார்கள்—அந்த முறையில் தொடர்பு கொண்டு என் தாய் அங்கே மலையாளியாகப் பிறந்தவர். அதற்கு நான் குற்றம் செய்தவன் அல்ல. நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்பு கிறேன். இந்த ஒரு நிலையை வைத்துக்கொண்டு என்னை ஒரு எதிரியாகக் கருதுவது என்றோ அல்லது இந்த ஒரு ஆயுதத்தைப் பயன்படுத்தி என்னை தமிழக மக்களிடம் இருந்து பிரித்து விட வேண்டுமென்றோ இனியும் யாரும் கருதமாட்டார்கள், இனியும் சந்தேகப்படமாட்டார்கள். தமிழ் பரம்பரையில் பிறந்து கேர ளாவில் குடியேறி சில நூற்றாண்டுகளுக்கு பிறகு நான் மலையாளி யாக இங்கே வந்திருக்கிறேன். அதே தமிழகத்திற்கு வந்திருக் கிறேன். நான் பிறந்த இடம் கண்டி. சிலர் சொல்வார்கள் எங்கே பிறந்தானோ அந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் என்று, என்னை தயவு செய்து ஸ்ரீலங்காவிற்குப் போ என்று சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, இந்தளவில் இதுபோன்ற பிரச்னைகளைப் பேசும்போது, இப்படிப்பட்ட மொழிப் பிரச்னையில் இறங்கி மொழிப் பிரிவுகளை ஏற்படுத்தி இங்கு பாதுகாப்பு இல்லாமல், யாரோ செய்த குற்றம் அல்லது யாரோ பிறந்த குற்றம் என்று ஒருவனுக்காக பல லட்சக் கணக்கான குடும்பங்கள் வாழ்வதற்குக் கஷ்டப்படுவதற்கு யாரும் காரணமாக இருந்துவிடக்கூடாது என்பது தான் என் பணிவான வேண்டுகோள்.

இதைப்பற்றிப் பேசிய நண்பர்களுக்கும் அவர்களைச் சார்ந்த தலைவர்களுக்கும் சொல்லிக்கொள்வேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஜாதி, மதம் இவற்றிக்கப்பால் நின்று நிச்சய மாக தன்னுடைய பணியை ஆற்றும் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்திச் சொல்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

இவைகளையெல்லாம் சொன்னது சரிதான். உன்மீது சாட்
டப்பட்ட குற்றம், இந்த ஆறு மாதக் காலத்தில் என்ன செய்தாய்
என்று கேட்டோம், அதற்கு சிலவற்றைச் சொல்லிவிட்டு மற்ற
வற்றை விட்டுவிட்டாய், ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி பிறக்க
லாம். அதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும்.

அதற்கு முன்பாக மதுரை டீன் பிரச்னையை நான் எடுத்துக்
கொள்ளவேண்டியிருக்கிறது. அதில் கொஞ்சம் வேறுபாடு வரு
கிறது. இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறவர்கள்
அங்கே போய் பார்த்தார்கள் என்று நான் குற்றச்சாட்டு சொன்ன
தாக யாரும் கருதமுடியாது என்று கருதுகிறேன். பார்ப்பது,
உதவி செய்யவிரும்புவது, அதிலும் எதிர்க்கட்சி, பிரதான எதிர்க்
கட்சியாக இருக்கிறவர்கள் அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக்
கொண்டுவருவது தவறு என்று நான் சொல்லவில்லை.
என்ன நடந்தது என்றால், நான் போவதற்கு முன் அவர் சுற்றுப் ஆனால்
பயணம் சென்றவர், தொடக்கத்தில் சொன்னதுபோல், ஆறுமணி
நேரம் தாமதயாகிவிட்ட நிலையில் வற்புறுத்தி அழைத்துச் சென்று
பார்த்தேன். அதற்குப் பிறகு இதுபற்றி ஒரு நீதி விசாரணை
வேண்டுமென்று கேட்டேன், இதற்கு அதிகாரிகள் பதில் சொன்
னார்கள் என்று சொல்கிறார்கள்.

எப்படி பேசப்பட்டது, எப்படி பேசினார்கள் என்பதை
தெரிந்து கொள்வதற்காக அதிகாரிகளோடு தொடர்பு கொண்
டேன். எதையும் மறைக்காமல் என்ன நடந்ததோ அவற்றை
—எங்களை திருப்திப் படுத்தவேண்டும் என்பதற்காக எதையும்
சேர்க்காமல்—உங்கள் கண் முன்னாலே எது நடந்ததோ, என்ன
பேசப்பட்டதோ அவற்றை அறிக்கையாக தரவேண்டும் என்று
சொன்னேன். அதிகாரிகள் புள்ளிவிவரங்களோடு அறிக்கையைச்
சொல்லித் தீரவேண்டும் என்ற அளவில் அறிக்கையை கொடுத்தார்
கள். ஆனால் அதை வேறு திசை திருப்புகின்ற அளவில் பயன்
படுத்தப்பட்டு, மீண்டும் குழப்பங்கள் வருவதற்கு காரணமாக
இருந்தது என்கின்ற சிலவற்றைச் சொன்னார்கள்.
என்ன குற்றம் சொல்லுகிறார்கள் என்றால், அவர்கள்
கட்சித் தலைவர் அவர்கள், அதிகாரி ஒரு தகவலைக் கொடுத்தார். இங்கே எதிர்க்
எதற்கு அந்தத் தகவலைக் கொடுத்தார்? அதில் அண்ணா தி.மு.க.
வைச் சேர்ந்தவர்கள் உள்ளே புகுந்து மாணவர்களை தாக்கினார்கள்
என்று அந்த அறிக்கையில் இருப்பதாக சொல்லப்பட்டது. பிற்பாடு
அந்த அறிக்கையை நான் பார்த்தேன், அவருக்கு வேறு சில
செய்திகள் சொல்லப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. ஆகவே
இதைப்பற்றி விசாரணை செய்யவேண்டும் என்றும் சொல்லப்
பட்டது.

ஆனால் கல்வி அமைச்சர் அவர்களும் நானும் சென்றிருந்தோம்.
கல்வி அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து விசாரித்தபோது.
தெரிந்த தகவலிலிருந்து பின்பக்கமாக ஒரு சிலர் புகுந்து என்.சி.சி.
அறைக்குள் புகுந்து அறையில் இருந்த துப்பாக்கியை எடுத்தார்கள்

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்றும், இப்படி இரண்டு மூன்று பேர்கள் வந்தார்கள் என்று
செய்தி அவருக்குச் சொல்லப்பட்டது. அதை அவர் பத்திரிகை
நிருபர்களைச் சந்தித்தபோது, அவர்களிடம் கேள்விகள் கேட்ட
போது பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த உண்மையைப்பற்றி
கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லப்பட்டது உண்மை.
முதலில் சொல்லப்பட்டதும் உண்மை. இவைகள் எல்லாம்
வழக்கு மன்றத்தில் இருக்கின்ற காரணத்தால், விரிவாகப் பேசா
மல் இவையெல்லாம் வழக்குமன்றத்தில் நிச்சயமாக வெளிவரும்
என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர்,
சில நடவடிக்கைகளைச் சொன்னார்கள். மாணவர்கள் மீது போடப்
பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்றார்கள்.
இது அவர்களுக்கு நல்லெண்ணத்தின் அடிப்படையில் தோன்றிய
கருத்தாகும். இதை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை.
ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாணவர்கள் என்ப
வர்கள் எந்தக் காரியத்திலும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப தங்க
ளுடைய கல்லூரியிலோ, பள்ளிகளிலோ உருவாக்குவது இன்றைக்கு
ஒருவேளை பாதகமாக இருந்து மற்றவர்களுக்கு சாதகமாக இருந்
தாலும், முன்புள்ள ஆட்சியில் பாதகமாக இருந்தது என்பதை
நினைவில் கொண்டு எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்
பட்டு நாம் யாராவது அமைப்புகளை வைத்திருந்தால் கூட அவை
களைக் கலைத்துவிட்டு, அவர்கள் தங்களுக்குள் ஒரு தலைவர் தங்கள்
விருப்பம்போல் அவர்களே தேர்ந்தெடுத்து முடிவு செய்து காரி
யங்களை ஆற்றக்கூடிய நிலைமைக்கு, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை
உருவாக வேண்டும் என்று வருமானால் அதை நான் முழு மனதோடு
வரவேற்கிறேன்.

இதைச் சொல்வதற்குக் காரணம், நமது எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் குறிப்பிடும்பொழுது, மாணவர்களுக்கு நெருக்கடி ஏற்
படும்பொழுது, வேறு பிரச்னைகள் ஏற்படும்பொழுது, எதிர்க்
கட்சித் தலைவர்களை சந்தித்து நிலைமைகளைச் சொல்லி வழிமுறை
களைப்பற்றி, யோசனை கேட்பது வழக்கம், அது இயற்கை, அது
இயல்பு என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. தேவை
தான். பொறுப்பிலிருந்து அனுபவப்பட்டவர்களிடமிருந்து,
அதிலும் நாட்டில் தியாக பரம்பரைக்குச் சொந்தக்காரர்கள்
என்று தகுதியுள்ளவர்கள் என்றிருப்பவர்களிடமிருந்து யோசனை
கேட்பது, அல்லது யோசனை சொல்வது தவறு என்று சொல்ல
வில்லை. ஆனால் அந்த முறைகளில், எல்லாத் தலைவர்களும் சரி
யான முறையில் சொல்கிறார்களா, சரியான வழியை மாணவர்
களுக்கோ, தொழிலாளர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ
அல்லது அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கோ சொல்லப்
படுகிறதா என்பதில் நான் சந்தேகப்படுகிறேன்.

ஒரு முதல் அமைச்சர் ஆதாரமில்லாமல், சந்தேகப்படுகிறேன் என்று சொல்லலாமா என்று கேட்கலாம். அதை இந்த இடத்தில் சொல்லவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதைப்பற்றி மேலும் கட்டாயப்படுத்த மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். எங்கெங்கோ, யார்யாரோ சில நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார் கள் என்கின்ற அளவுக்குப் பேசப்பட்டது. சொல்லப்பட்டது. இவைகளையெல்லாம் நான் வற்புறுத்திக் கூறும்போது, ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தொழிலாளர் பிரச்னையை எடுத்துக் கொள்ளலாம்; மாணவர் பிரச்னையை எடுத்துக் கொள்ளலாம். என்னைக் கேட்கிறார்கள். நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ? இந்த 6 மாத காலத்தில் என்ன செய்தீர்கள் ? என்ன செய்ய முடிந்தது ? எதையும் செய்யவில்லை. பலரை வீட்டிற்கு அனுப்புகிறீர்கள். பலரை மொட்டையடிக்க வைக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்களே தவிர, இதற்கெல்லாம் என்ன காரணம், இது எந்த ஆண்டிலிருந்து தொடர்ந்தது என்பதைத் தயவுசெய்து மனதிலே கைவைத்து ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இது 1973-ம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட பிரச்னை. எங்களுக்கு ஏன் இந்த ஸ்கேலில் பணம் கொடுக்கவில்லை, அந்த அளவுக்குத் தரவில்லை என்று ஆசிரியர்கள் கேட்டார்கள். 200 ரூபாய்க்கு கீழே வாங்குகிறவர்களுக்கு 10 ரூபாய் கொடுக்கக் கூடாதா என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு கொடுக்கின்ற அளவுக்கு அவர்களுடைய சம்பளம் சமமாக இருந் தாலும், ஏன் அதைக் கொடுக்கக் கூடாது என்று அவர்கள் கேட்டார்கள். அதை நான் அவர்களுக்குப் பதிலாகச் சொல் வேன். அவர் அப்படிக் கேட்ட கேள்வியே, அதற்குப் பதிலாக அவரது பேச்சே அமைந்ததற்காக நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இந்தப் பிரச்னை எங்கேயிருந்து தொடர்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

1972-73-லே இருந்து இந்தப் பிரச்னை தொடர்கிறது. யாருமே கவனிக்கவில்லை. சிந்திக்கவில்லை. அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால், இந்தப் பிரச்னை தீர்க்கப் படவில்லை. மத்திய அரசு ஓரளவுக்கு பணம் கொடுக்கும்போது மாநில அரசும் சேர்த்துக் கொடுக்கும்போது, அவர்களுடைய தேவை பூர்த்தியாகும். அப்படி இரண்டு ஆண்டுகள் கொடுத்த பிறகு, அவர்கள் கொடுக்கவில்லையானால், மேலும் 5 கோடி கொடுக்கவேண்டிய மாபெரும் பொறுப்பு நம் தலையில் விழும். இதை எண்ணிப் பார்த்துதான், 1973-ம் ஆண்டிலிருந்து சிந்தித்துப் பார்த்து, இதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இதைத் தள்ளிப் போட்டுக்கொண்டு, ஆளுநர் ஆட்சிக் காலத்திலும், ஜனாதிபதி ஆட்சி நடந்த காலத்திலும் இது கவனிக்கப்படாமல் விடப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டிருந்தது. ஏதோ நாங்கள்

வந்தோம். 6 மாத காலமல்ல. 1, 2 மாதத்திலேயே ஆரம்பித் தார்கள். அது எங்கே போய் முடிந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் எப்படியோ இந்த அளவுக்கு ஒத்துக்கொண் டிருக்கிறோம். அதற்கான புள்ளி விவரங்களை கல்வி அமைச்சர் சொல்லியிருப்பார்கள். நான் படிக்க விரும்பவில்லை. தேவை யிருந்தால் பதில் சொல்லும்போது படித்துக் காட்டுகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு அமைதியாக நீங்கள் இல்லையானால், இவ்வளவு நேரம் விரிவாக பிரச்னைகளை எடுத்து நான் பேசியிருக்க முடியாது. சண்டையும், சச்சரவும், கேள்வியும், பதிலுமாக இருந்திருந்தால், அதிலேயே நேரம் போய் இருக்கும். சொல்லவேண்டியதைச் சொல்வதற்கு நேரம் இருந்திருக்காது.

இதுபோல் தான் நாடும். ஒரு காரியத்தை திட்டமிட்டு செயல்பட வேண்டுமானால், நாட்டிலே அமைதி இருக்கவேண்டும். திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அதைச் செயல்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு உரிய வாய்ப்புகள் கொடுத்தாக வேண்டும். காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் திருடனைப் பிடிக்கப் போகின்ற போது, அதற்கு அப்பாலுள்ள ஒரு தொழிலாளரைப் பிடித்துக் கொண்டு போய் வை என்று சொன்னால், அந்தப் பணி எங்கள் தலைமேல் விழவேண்டிய நிலைமை வருமானால், திருடனை எப்படிக் கண்டுபிடிப்பது? போலீசார் திருடனை எப்படிக் கண்டுபிடிக்க முடியும் ? இத்தகைய நிலைமையில் அவர்களால் எப்படி சமூக சேவை செய்ய முடியும் ? அது போலத்தான், இந்த 6 மாத காலத்தில் எத்தனைப் போராட்டங்கள் நடைபெற்றன என்பதை தயவுசெய்து ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாங்கள் பதவி ஏற்ற தேதி ஜூன் 30, 1977.

8—7—1977-ல் சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்.

12—7—1977-ல் நான்கு நாட்களுக்குள் சென்னை பச்சையப் பன் கல்லூரி மாணவர்கள் போராட்டம்.

26—7—1977, 27—7—1977 சென்னை புதுக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி. அரசினர் கலைக் கல்லூரி, நந்தனம் மாண வர்கள் போராட்டம்.

இவை பதவி ஏற்ற முதல் மாதத்தில்.

அதுமட்டுமல்ல ; அதற்கடுத்து 13—8—1977 வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம், குழப்பம்.

16—8—1977 சென்னையில் எம். சி. ராஜா விடுதி மாணவர்கள் கிளர்ச்சி, போராட்டம்.

18—8—1977 சென்னையில் 600 சட்டக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி, போராட்டம்.

23—8—1977 சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், ஊர்வலம்.

25—8—1977 பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சுமார் இரண்டாயிரம் பேர், ஊர்வலம், போராட்டம், மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம், அதனால் சில விளைவுகள்.

30—8—1977 தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மாணவர்கள் ஊர்வலம், போராட்டம், மறியல்.

1—9—1977 செமஸ்டர் முறையை எதிர்த்து அம்பாசமுத்திரம் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம், போராட்டம்.

அதே தேதியில் 1—9—1977 இலங்கை தமிழர் பிரச்னை யாதவர் கல்லூரி மாணவர்கள் மதுரையில் ஊர்வலம், கிளர்ச்சி.

2—9—1977 உலக பல்கலைக் கழக சர்வீஸ் சென்டரின் மாணவர்கள் டைரக்டரை நீக்கக் கோரிப் போராட்டம்.

5—9—1977 தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் போராட்டம், கல்லூரி மூடப்பட்டது. கல்லூரி விடுதியைத் திறக்கக் கோரி மதுரைக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம்.

6—9—1977 புத்தகங்கள் வழங்கக் கோரி மதுரை சௌராஷ்டிரா பள்ளி மாணவர்கள் ஊர்வலம், கிளர்ச்சி.

8—9—1977 சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம்.

16—9—1977 திண்டுக்கல் ஜி.டி.என். மாணவர்கள் தகராறு காரணமாகக் கல்லூரி மூடப்பட்டது.

23—9—1977 சட்டக் கல்லூரி மாணவர்கள் செமஸ்டர் முறையை நீக்கக் கோரி பல்கலைக் கழகத் துணை வேந்தரைக் காணச் சென்றார்கள், அவர்கள் வன்முறையில் இறங்கி, துணை வேந்தர் அறையில் நுழைந்து சாமான்களை உடைத்த நிகழ்ச்சி நடந்தது. பதிவாளர்கள் தாக்கப்பட்டார்கள், இது பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

27—9—1977 சட்டக் கல்லூரி மாணவர்கள் கால வரையறை இன்றி போராட்டம்.

(பிற்பகல் 1-20)

29—9—1977 நந்தனம் கலைக் கல்லூரி மாணவர்கள் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வகுப்புகளுக்குச் செல்லவில்லை. சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம் தொடங்கினர்.

1—10—1977 சுமார் 800 மருத்துவக் கல்லூரி மாணவர்களும் டாக்டர்களும் ஊர்வலமாக வந்தார்கள், பிரச்னை உருவாகியது.

29—10—1977 சைதாப்பேட்டை எம். சி. ராஜா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம், போராட்டம்.

2—12—1977 கைது செய்யப்பட்ட ஐ.டி.ஐ. மாணவர்களை விடுவிக்கக் கோரி, கிண்டி, அம்பத்தூர் ஐ.டி.ஐ. மாணவர்கள் தலைமைச் செயலகம் நோக்கி ஊர்வலம்.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்களோடு மோதல்.

6—12—1977 பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாக நந்தனம் கலைக் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை, போராட்டம்.

இங்கே இருக்கின்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு 6 மாத காலத்தில் இத்தனை போராட்டங்கள் இங்கே உருவாக்கப்பட்டன என்று நான் சொல்வது, உருவாக்கப்பட்டன என்று சொல்வது என்னுடைய பொறுப்புக்கு பொருந்துவதாக இல்லை. உருவாகியது ஏன் உருவாகியது என்பதை வெளியிடுவதைவிட இவைகள் நடந்தன என்பதையும் இவைகளை எல்லாம் சமாளிப்பதற்காக காவல் துறையைத் தவிர வேறு யாரை இந்தப் பணியில் ஈடுபடுத்துவது என்பதையும் . . . . . .

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: இப்படி தொடர்ச்சியாக மாணவர்களுடைய போராட்டங்களினுடைய எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கிறது. அதற்குரிய காரணங்கள் என்ன என்பது முதல்வர் அவர்களுடைய பதிலில் விடுபட்டிருக்கிறது என்று கருதுகிறேன். போராட்டங்களுக்குக் காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்து 'கோட்' வகுத்து ஒழுங்குபடுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: விளக்கம் கோரி இருக்கிறார்கள், இது கேள்வியல்ல என்று நினைக்கிறேன். நான் அப்படி எடுத்துக்கொள்கிறேன். நான் எதற்காக மேலெழுந்தவாரியாகச் சொன்னேன் என்றால்—அதற்கேற்ற விபரங்கள் இருக்கின்றன—அவைகளைப் படித்து (சிரிப்பு) அதற்காகத்தான் மற்றவர்கள் பேசும்போது நான் பேசாமல் இருந்தேன் பிரச்சினைகள் அதிகமாக உருவாகியது என்று சொல்லும்போது ஒன்றிரண்டு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மாணவர்கள் போராட்டம். தொழிலாளர்கள் போராட்டத்தைப் பற்றி நான் கொஞ்சம் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

4—7—1977 கோவை நூற்பாலைத் தொழிலாளர்கள் போராட்டம்.

23—7—1977 கோவை லட்சுமி மில்ஸ் தொழிலாளர்கள் போராட்டம்.

11—8—1977 பல்லாவரம் எல்லோரா என்ஜினியரிங் தொழிலாளர் போராட்டம்.

21—8—1977 வடசென்னை பீடித் தொழிலாளர் ஊர்வலம், போராட்டம்.

24—8—1977 பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், ஹோட்டல் தொழிலாளர்கள் ஊர்வலம்.

26—8—1977, 27—8—1977 — பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் வேலை நிறுத்தம், இது எவ்வளவு பெரிய பிரச்சினை என்பது எல்லோருக்குமே தெரியும்.

27—8—1977 பழனி போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டம்.

31—8—1977 தமிழ்நாடு கிராம அதிகாரிகள் ஊர்வலம் போராட்டம்.

2—9—1977 சம்பள பாக்கி கோரி சக்தி பைப்ஸ் தொழிலாளர் போராட்டம்.

4—9—1977-இல் எஞ்சினியரிங் தொழிற்சாலையைத் திறக்க உண்ணாவிரதம்.

8—9—1977-இல் என்ஃபீல்ட் தொழிற்சாலையைத் திறக்கப் போராட்டம்.

20—9—1977-இல் பல்லாவரம் இங்கிலீஷ் எலக்ட்ரிக் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம்.

அதே தேதியில் சாந்தி விகார் தொழிலாளர்கள் ஊர்வலம்.

அதே தேதியில், 24-ஆம் தேதியில் டி. வி. எஸ். தொழிற்சாலையில் காவல் புரியும் மத்திய போலீசை நீக்க மின் தொழிலாளர்கள் ஊர்வலம், போராட்டம்.

கல்கி, கோகுலம் பத்திரிகையாளர்கள் சட்ட விரோதமாக நுழைவதாகப் போராட்டம், அதே 24-ஆம் தேதி.

அதே தேதியில் கூட்டுறவு வங்கித் தொழிலாளர்கள் பதவி உயர்வு, தனித்தன்மையைக் கோரி வேலை நிறுத்தம்.

25—9—1977-இல் போனஸ் கோரி தொழிலாளர்கள் போராட்டம்.

28—9—1977-இல் கன்ஸ்ட்ரக்ஷன் எலக்ட்ரிஃபிகேஷன் தொழிலாளர்கள் போராட்டம்.

4—10—1977-இல் பி. அண்ட் சி. ஊழியர்கள் ஊர்வலம்.

9—10—1977-இல் டி. வி. எஸ். ஸ்தாபன கொள்கையைக் கண்டித்து போராட்டம்.

28—10—1977-இல் வருவாய்த்துறை அதிகாரிகள் வேலை நிறுத்தம், நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம்.

1—11—1977-இல் பிராவிடன்ட் ஃபண்ட் ஊழியர்கள் ஊதிய உயர்வு கேட்டு ஆர்ப்பாட்டம். அதற்கு விளக்கங்கள் உள்ளன. என்ன என்பதையும் சொல்லலாம்.

இந்த நிலைமைகளுக்கு இடையில்தான் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுகின்ற அளவில் இல்லாமல் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று குற்றஞ்சாட்டி, நீங்கள் எதையுமே செய்யவில்லை என்பதற்கான காரணங்களைக் கேட்கிறார்கள். இப்பொழுது இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களுக்கு, என்னென்ன போராட்டங்கள், ஊர்வலங்கள் என்று எல்லா விவரங்களையும் சொல்லவில்லை. மதுரை போராட்டங்கள் இருக்கின்றன. அதுபோன்று இன்னும் இந்திராகாந்தி அம்மையார் வந்த பிறகு ஏற்பட்ட விளைவுகள், என்ன போராட்டங்கள் என்று அவைகள் உள்ளன. இவைகள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்து இந்த ஆறுமாத காலத்தில் ஓர் அரசு என்ன செய்ய முடியும் என்பதை விவரங்களைத் தெரிந்தவர்கள், அனுபவப்பட்டவர்கள், இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு புரிந்துகொள்ளமுடியும் என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உறுப்பினர் சிற்றுண்டி கூட வேண்டுமென்று சொன்னார். அதுவும் கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது பேரவையின் காலை நிகழ்ச்சி இத்துடன் முடிவடைகிறது. மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர், பேரவை, பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(மாலை 4-00)

மாலை 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் <u>திரு. முனு ஆதி</u> தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, போராட்டங்களுக்கு இடையில், மாணவர்கள் போராட்டம் தொழிற் சங்கங்களில் போராட்டம் இவைகளுக்கு இடையில், மற்ற பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் போராட்டங்களுக்கு இடையில், நாங்கள் தொழிற்துறை சம்பந்தமாக, மூடியிருந்த மில்களில் ஏறத்தாழ 159 மில்கள் என்று இருந்த நிலையில், நாங்கள் பதவிக்கு வந்து 141 மில்களைத் திறப்பதற்கு ஒத்துழைத்து ஆவன செய்து, அந்த வகையிலே எங்கள் கடமைகளை ஆற்றி, ஏறத்தாழ லட்சத்து முப்பதாயிரம் பேர்கள் என்ற அளவிற்கு மீண்டும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி நாங்கள் எங்கள் கடமையை இந்த 6 மாத கால தொல்லைகளுக்கு இடையில் நாங்கள் நிறைவேற்ற முயன்று, அதிலே ஓரளவிற்கு எங்கள் பணியை செய்து இருக்கிறோம் என்பதை நான் முன்னாலேயே குறிப்பிட்டு இருக்கிறேன்.

இப்போது நாங்கள் பதவிக்கு வந்தபோது மூடியிருந்த தொழிற்சாலைகள் எத்தனை என்பதையும், சிக் மில் என்று அழைப்பார்களே, அந்த அளவிற்கு நடைபெறமுடியாத நிலையை எய்தியிருந்த மில்கள் எத்தனை என்பதையும், இந்த 6 மாத காலத்திற்குள் அந்த மில்களில் எத்தனை மில்கள் செயல்படக்கூடிய நிலையில் நாங்கள் எங்கள் கடமையைச் செய்து செயல்படுமாறு இயங்க வைத்தோம் என்பதையும் இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஜூன் மாத இறுதி வரையில், தமிழகத்தில் 8 பஞ்சாலைகள் நிதி நெருக்கடி காரணமாக மூடிக் கிடந்தன. மூடிக்கிடந்த ஆலைகளின் விவரம் :

1. சுமார் 120 தொழிலாளர்[illegible] பத்மா ஆலை கடந்த 9—4—1976 முதல் மூடிக்கிடந்தது.

2. சுமார் 187 தொழிலாளர்களைக் கொண்ட சோமசுந்தரர் நூற்பு ஆலை 30—7—1976 முதல் மூடிக்கிடந்தது.

3. சுமார் 917 தொழிலாளர்களைக் கொண்ட கோவை லோடஸ் ஆலை 7—8—1976 முதல் மூடிக்கிடந்தது.

4. சுமார் 125 தொழிலாளர்களைக் கொண்ட மதுரை ராஜா ஆலை 23—11—1976 முதல் மூடிக்கிடந்தது.

5. சுமார் 95 தொழிலாளர்களைக் கொண்ட திருப்பூர் பனியன் தொழிற்சாலை 21—11—1976 முதல் மூடிக்கிடந்தது.

6. சுமார் 106 தொழிலாளர்களைக் கொண்ட நெல்லை சிவகுமார் நூற்பாலை 18—12—1976 முதல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

7. சுமார் 99 தொழிலாளர்களைக் கொண்ட மதுரை லட்சுமி நூற்பாலை 31—3—1977 முதல் மூடிவைக்கப்பட்டிருந்தது.

8. சுமார் 404 தொழிலாளர்களைக் கொண்ட கோவை ரிகாசா ஆலை 15—5—1977 முதல் மூடிவைக்கப்பட்டிருந்தது.

இந்த 8 ஆலைகளில் மதுரையிலுள்ள லட்சுமி மில், திருநெல்வேலியில் உள்ள சிவகுமார் மில், கோவையில் உள்ள பிரகாஷ் மில் ஆகிய மூன்று ஆலைகளும் மீண்டும் செயல்பட துவங்கிவிட்டன. இந்த ஆறு மாத காலத்தில் இதை நாங்கள் எங்கள் தொழில் முயற்சியில் பொறுப்பேற்றுச் செய்த, எங்களுடைய கடமைகளில் இயக்கிய பணியாகும்.

மதுரையில் உள்ள ராஜா ஆலையை, அங்கையா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனம் வாங்கியுள்ளது. புதிய நிர்வாகம் ஆலையை விரைவில் மீண்டும் துவங்கும் என்று தெரிகிறது.

கோவையில் உள்ள லோட்டஸ் ஆலையைத் திறப்பதற்காக அரசு தக்க உத்திரவாதமும், கடன் உதவியும் கொடுத்துள்ளது. ரூபாய் 85 லட்சத்திற்கு உத்திரவாதமும், ரூ. 20 லட்சத்திற்கு கடனும் தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எனவே இந்த ஆலை விரைவில் மீண்டும் செயல்படத் துவங்கும்.

சோமசுந்தரம் நூற்பு ஆலையை மத்திய அரசின் அனுமதி பெற்று, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் சென்ற மாதம் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த ஆலையின் இயந்திரம் சுத்திகரிக்கப்பட்டு விரைவில் செயல்படத் துவங்கும்.

இப்படி 6 மில்களை நாங்கள் இந்த ஆறு மாதத்திற்கு இடையிலே செயல்பட எங்களாலான வகைகளிலே முயன்று, எங்கள் கடமையைச் செய்திருக்கிறோம். மீண்டும் நினைவூட்டுகின்றேன். எத்தனை போராட்டங்கள்? எத்தனை சோதனைகள்! இவைகளுக்கிடையில் 141 மில்களில் இருந்த சர்ச்சைகளை நீக்கி, அவற்றை

இயங்க வைத்தோம். ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அங்கே கிடைக்க ஏற்பாடு செய்தோம். அதைப் போலவே, மூடப்பட்ட மில்கள் 8-ல் 6 மில்களை நாங்கள் இயங்க வைத்திருக்கிறோம். இந்த அளவில் நாங்கள் . . . .

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மூடப்பட்ட பஞ்சாலைகள் விஷயமாக தமிழகத்தில் இருக்கிற அனைத்துத் தொழிற்சங்க பிரதிநிதிகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டு பேசிய காலத்தில், மூடப்படுகின்ற ஆலைகளை தொழிலாளர்களே ஏற்று நடத்த வேண்டும் என்ற மாதிரி அவர்கள் சில கொள்கைகளை எங்களுக்குச் சொன்னார்கள். இப்போது அவற்றை அரசு நடவடிக்கை எடுத்து ஒட்டி வருவது வரவேற்கத் தக்கது. அந்தக் கொள்கையில் மாற்றம் இருக்கிறதா, தொழிலாளர்களே அந்த ஆலைகளை எடுத்து ஓட்டமுடியாது என்பதை அரசு உணர்ந்து, கொள்கையை மாற்றி இருக்கிறதா என்று அறிந்துகொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சொல்ல இருந்ததை, அதற்கு முன்பாகவே அவர்கள் கேள்வி கேட்டு பதில். வாங்க முயன்றிருக்கிறார் என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நான் திரும்பத் திரும்ப இந்த அவையில் சொன்னதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மில் மூடப்பட்டு அது நஷ்டத்தில் மூடப்பட்டு, நஷ்டத்திற்குக் காரணமானவர்கள் அதில் பங்குதாரர்களாக இருந்து செயல்படுகிறார்கள் என்ற நிலைமையிருந்தால், அங்கு பங்குதாரர்களை நீக்கி, தொழிலாளர்கள் ஒரு பங்கு தங்கள் பிராவிடெண்ட் பண்டிலிருந்து அதில் செலுத்தி, தொழிலாளர்களும், அது போல மாநில அரசும், மத்திய அரசும், அல்லது மாநில அரசும், தொழிலாளர்களும் அல்லது தொழிலாளர்கள் மட்டும் என்று இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தி இயங்க வேண்டும் என்பது ஆசை. அதைத் திரும்பச் சொல்லுகிறேன். தொழிலாளர்களே எடுத்து நடத்துவதானால், அவர்களே நிர்வாகத்தை ஏற்று நடத்துவதானால், இந்த அரசு மிக்க மகிழ்ச்சியடையும். இந்தக் கொள்கையை நாங்கள் இங்கே வற்புறுத்துகிற நேரத்திலே, இதைப் போன்ற கொள்கையை மத்திய அரசும் வெளியிட்டிருக்கிறது என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட கொள்கையை நாங்கள் ஒரு கட்சியைச் சேர்ந்திருந்தாலும், மத்தியிலிருப்பவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்திருந்தாலும், இந்த நிலைமை நல்லது செய்ய செயல்பட உதவும் என்கின்ற வகையில், இது பயன்தரத் தக்கதாகத் கருதப்படுமேயானால், அந்த நேரத்தில் மத்திய அரசு கூட உதவி செய்ய முன்வரலாம். அல்லது தமிழக அரசு எடுக்கிற முடிவுக்கு அவர்கள் ஒத்துழைப்புத் தரலாம். சட்டபூர்வமாக சிக்கல் இல்லாதிருக்கும் என்று கருதுகிறோம். அப்படி ஏதாவது சிக்கல் இருந்தால் அதையும் மாற்ற அவர்கள் தயாராக இருப்

பார்கள் என்கின்ற வகையில், நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கிறேன், தொழிலாளர்களே எடுத்து நடத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதில் எங்களுக்கு எந்தவித மாற்றமுமில்லை.

(மாலை 4-10)

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகவை சோமசுந்தரா மில்லை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஏற்றுள்ளது என்று கூறினார்கள். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இதே போல் நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன், நொடித்துப் போன மில்களை எடுத்து தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, தொடர்ந்து இதுமாதிரியான கொள்கையை அமல்படுத்த அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கையைச் சொல்லும்படி எங்களை வற்புறுத்துகிறார்கள். எங்கள் கொள்கையில் இருக்கிற அடிப்படைத் தன்மையை நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். உழைப்பவர்களுக்குத் தகுந்த உரிமை அவர்களுடைய தொழிலிலே கொடுக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவித கருத்து மாற்றமும் கிடையாது. ஆனால் அனைத்து மில்களையும் அரசு ஏற்றுக்கொள்வது என்பது பொருளாதாரப் பிரச்னையையும் பொறுத்தது, அந்த மில்களின் நிலைமைகளையும் பொறுத்தது என்று இங்கே சொல்லும்பொழுது எட்டு மில்களில் மீதியிருக்கிற இரண்டு மில்கள் நிச்சயமாக யார் நடத்தினாலும் அது நட்டத்திற்குரியதாகத் தான் இருக்குமென்ற கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 97 பேர் என்று குறைந்த எண்ணிக்கையாக இருந்தாலும் 97 பேர்களிலே ஒருவருக்கு வேலையில்லை என்றாலும் இந்த அரசு வேதனைப்படும் என்று சொல்லும்பொழுது நான் வற்புறுத்திக் கூறுகிறேன், இதைப்பற்றி எதிர்காலத்தில் ஒரு நல்ல திட்டவட்டமான முடிவை செயல்படுத்துகிற வகையில் அமைக்க வெறும் கொள்கை அளவிலே இருக்கிற நம்பிக்கையைச் சொல்வதால் மட்டும் எந்தப்பயனும் தராது என்கிற நிலையில் அந்தக் கொள்கையை கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றி முழுமை பெறத்தக்க வகையில் எந்தத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவது, எப்படி உருவாக்குவது என்பதற்காக எந்த எந்த வகையில் முயல வேண்டுமோ அவைகளுக்கு எல்லாம் நாங்கள் முன்னுரிமை கொடுத்து செயல்படுவோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இயங்க வைத்தோம். ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அங்கே கிடைக்க ஏற்பாடு செய்தோம். அதைப் போலவே, மூடப்பட்ட மில்கள் 8-ல் 6 மில்களை நாங்கள் இயங்க வைத்திருக்கிறோம். இந்த அளவில் நாங்கள் . . . .

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மூடப்பட்ட பஞ்சாலைகள் விஷயமாக தமிழகத்தில் இருக்கிற அனைத்துத் தொழிற்சங்க பிரதிநிதிகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கண்டு பேசிய காலத்தில், மூடப்படுகின்ற ஆலைகளை தொழிலாளர்களே ஏற்று நடத்த வேண்டும் என்ற மாதிரி அவர்கள் சில கொள்கைகளை எங்களுக்குச் சொன்னார்கள். இப்போது அவற்றை அரசு நடவடிக்கை எடுத்து ஓட்டி வருவது வரவேற்கத் தக்கது. அந்தக் கொள்கையில் மாற்றம் இருக்கிறதா, தொழிலாளர்களே அந்த ஆலைகளை எடுத்து ஓட்டமுடியாது என்பதை அரசு உணர்ந்து, கொள்கையை மாற்றி இருக்கிறதா என்று அறிந்துகொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சொல்ல இருந்ததை, அதற்கு முன்பாகவே அவர்கள் கேள்வி கேட்டு பதில். வாங்க முயன்றிருக்கிறார் என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நான் திரும்பத் திரும்ப இந்த அவையில் சொன்னதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மில் மூடப்பட்டு அது நஷ்டத்தில் மூடப்பட்டு, நஷ்டத்திற்குக் காரணமானவர்கள் அதில் பங்குதாரர்களாக இருந்து செயல்படுகிறார்கள் என்ற நிலைமையிருந்தால், அங்கு பங்குதாரர்களை நீக்கி, தொழிலாளர்கள் ஒரு பங்கு தங்கள் பிராவிடெண்ட் பண்டிலிருந்து அதில் செலுத்தி, தொழிலாளர்களும், அது போல மாநில அரசும், மத்திய அரசும், அல்லது மாநில அரசும், தொழிலாளர்களும் அல்லது தொழிலாளர்கள் மட்டும் என்று இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தி இயங்க வேண்டும் என்பது ஆசை. அதைத் திரும்பச் சொல்லுகிறேன். தொழிலாளர்களே எடுத்து நடத்துவதானால், அவர்களே நிர்வாகத்தை ஏற்று நடத்துவதானால், இந்த அரசு மிக்க மகிழ்ச்சியடையும். இந்தக் கொள்கையை நாங்கள் இங்கே வற்புறுத்துகிற நேரத்திலே, இதைப் போன்ற கொள்கையை மத்திய அரசும் வெளியிட்டிருக்கிறது என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட கொள்கையை நாங்கள் ஒரு கட்சியைச் சேர்ந்திருந்தாலும், மத்தியிலிருப்பவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்திருந்தாலும், இந்த நிலைமை நல்லது செய்ய செயல்பட உதவும் என்கின்ற வகையில், இது பயன்தரத் தக்கதாகக் கருதப்படுமேயானால், அந்த நேரத்தில் மத்திய அரசு கூட உதவி செய்ய முன்வரலாம். அல்லது தமிழக அரசு எடுக்கிற முடிவுக்கு அவர்கள் ஒத்துழைப்புத் தரலாம். சட்டபூர்வமாக சிக்கல் இல்லாதிருக்கும் என்று கருதுகிறோம். அப்படி ஏதாவது சிக்கல் இருந்தால் அதையும் மாற்ற அவர்கள் தயாராக இருப்

பார்கள் என்கின்ற வகையில், நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கிறேன், தொழிலாளர்களே எடுத்து நடத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதில் எங்களுக்கு எந்தவித மாற்றமுமில்லை.

(மாலை 4-10)

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகவை சோமசுந்தரா மில்லை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஏற்றுள்ளது என்று கூறினார்கள். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இதே போல் நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன், நொடித்துப் போன மில்களை எடுத்து தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, தொடர்ந்து இதுமாதிரியான கொள்கையை அமல்படுத்த அரசு முன்வருமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கையைச் சொல்லும்படி எங்களை வற்புறுத்துகிறார்கள். எங்கள் கொள்கையில் இருக்கிற அடிப்படைத் தன்மையை நாங்கள் பலமுறை சொல்லிருக்கிறோம். உழைப்பவர்களுக்குத் தகுந்த உரிமை அவர்களுடைய தொழிலிலே கொடுக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு ந்தவித கருத்து மாற்றமும் கிடையாது. ஆனால் அனைத்து மில்களையும் அரசு ஏற்றுக்கொள்வது என்பது பொருளாதாரப் ரச்னையையும் பொறுத்தது, அந்த மில்களின் நிலைமைகளையும் பொறுத்தது என்று இங்கே சொல்லும்பொழுது எட்டு மில்களில் திழிருக்கிற இரண்டு மில்கள் நிச்சயமாக யார் நடத்தினாலும் து நட்டத்திற்குரியதாகத் தான் இருக்குமென்று கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 97 பேர் என்று குறைந்த எண்ணிக்கையாக இருந்தாலும் 7 பேர்களிலே ஒருவருக்கு வேலையில்லை என்றாலும் இந்த அரசு வதனைப்படும் என்று சொல்லும்பொழுது நான் வற்புறுத்திக் றுகிறேன், இதைப்பற்றி எதிர்காலத்தில் ஒரு நல்ல திட்டவட்டான முடிவை செயல்படுத்துகிற வகையில் அமைக்க வெறும் காள்கை அளவிலே இருக்கிற நம்பிக்கையைச் சொல்வதால் ட்டும் எந்தப்பயனும் தராது என்கிற நிலையில் அந்தக் கொள்கையை கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றி முழுமை பறத்தக்க வகையில் எந்தத் திட்டத்தை அடிப்படையாகக் காண்டு செயல்படுவது, எப்படி உருவாக்குவது என்பதற்காக ந்த எந்த வகையில் முயல வேண்டுமோ அவைகளுக்கு எல்லாம் ங்கள் முன்னுரிமை கொடுத்து செயல்படுவோம் என்பதை ட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

இது போல நாங்கள் பல்வேறு பிரச்னைகள் பற்றி தொழில்
களைப்பற்றி பேச வாய்ப்பு இருந்தாலும் அதிகமான சோதனையை
எங்களுக்கு இந்த ஆறு மாத காலத்தில் இயற்கையும் செயற்கை
யும் தந்திருந்தாலும் நாங்கள் மற்றவர்களுக்கு இந்த நேரத்தில்
அப்படிப்பட்ட சோதனையை அதிகமாக்குவது கூடாது என்று
கருதுகிறோம். அந்த வகையில் ஒரு சிலவற்றைக் கோடிட்டு
காண்பித்துவிட்டு இப்படி நாங்கள் ஆறுமாத காலத்தில் எந்தத்
துறையில் என்ன பணியாற்றினோம், எங்களுக்குகிடைத்த
வாய்ப்பை எப்படி பயன்படுத்திக் கொண்டோம் என்பதை சொல்
வதற்கு உதாரணமாக, சிறு தொழில்கள் துவங்கவிரும்புகிறவர்
களுக்கு தமிழக தொழில் முதலீட்டு கழகத்தின் மூலமும் தேசிய
வங்கிகளின் மூலமும் குறிப்பாக பாரத் ஸ்டேட் வங்கி, இந்தியன்
வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவைகள் மூலம் பண உதவி
பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

1—7—1977 முதல் 30—9—1977 வரை புதிய தொழில்கள்
வியாபாரங்கள் தொடங்க நிதியுதவி பின்வருமாறு அளிக்கப்
பட்டது. மொத்த பண உதவி பெற்ற நிறுவனங்கள், சிறு
தொழில்கள் 1,724. சிறு வியாபாரம் 10,110. மொத்தம்
11,834. மொத்தம் தரப்பட்ட கடனுதவி 11, 12.75 லட்சம்.
சிறு தொழிலுக்கு, சிறு வியாபாரத்திற்கு 2,23.50 லட்சம் ஆகும்.
ஆக, 13,36.25லட்சம் மொத்தம் கடனுதவியாக தரப்பட்டிருக்
கிறது. தோராயமாக உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள்
8,220 பேர்களுக்கு சிறு தொழிலில், சிறு வியாபாரத்தில்
20,220 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக,
ஏறத்தாழ 28,840 பேர்கள் இதனால் பயன் பெற்று, வேலை
வாய்ப்பு பெற அவர்களுக்கு நல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருக்
கிறது என்பதை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

இந்த ஆறு மாதங்களில். போக்குவரத்துத்துறையின் சார்பாக,
என்னென்ன பண்ணினோம் என்று உங்களுக்குத் தெரியும். ஏற்
பட்ட நெருக்கடிகளும், அப்படி இருந்தும் என்னென்ன பணிகளைச்
செய்ய நாங்கள் முற்பட்டோம் என்பதை இங்கே குறிப்பிட நான்
விரும்புகிறேன். கோடிட்டுக் காட்டுகிறேன்.

விரைவுப் பேருந்து கட்டணத்தை கிலோ மீட்டருக்கு 6 பைசா
விலிருந்து 5.5 காசாகக் குறைத்து பணியாளருக்கும் சலுகை
அளித்தது. போக்குவரத்து பணியாளர்களின் குழந்தைகளுக்கு
பள்ளிக்குச் சென்று வர இலவச அனுமதி தந்தது. வேலையில்
இருக்கும் போது இறந்துபோனால், சட்டபூர்வமான வாரிசு
ஒருவருக்கு கழகத்தில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்தது.
1—9—1977 முதல் 42,000 பணியாளர்களுக்கு மாதம் ரூ. 27
தனி ஊதியம் அளித்தது. இந்த ரூ. 27-ஐ தனி ஊதியமாக
அளித்ததைப்பற்றி, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
கூறினார். நான் ரூ. 30 கொடுங்கள் என்று பேசினேன். நான்
பேசும்போது, அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரிடம் பேசி
னேன். அவர் மாற்றிச் சொல்லி இருப்பார் போல் இருக்கிறது.

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால், இங்கே நான் பேசும்போது, இதைக் குறித்து மழுப்பிப்
பேச முயன்று, நான் பேசவில்லை என்பதாகவோ, அல்லது அலட்
சியம் செய்ததாகவோ, இதைப்பற்றி வித்தியாசமாகப் பேசி,
அதனால் பெருமை தேடிக்கொள்ள விரும்புவதாகவோ, அந்த
கருத்துப்பட ஒன்றிரண்டு வார்த்தைகள் இங்கே கூறினார்கள்.

நான் ஒன்றைச் சொல்லுகிறேன். இப்படி 30 ரூபாய் கேட்
டார்கள். 30 ரூபாய் கொடுங்கள் என்று சொன்னேன். ஆகவே,
அவர்களை நான் அலட்சியம் செய்துவிட்டு, நான் 27 ரூபாய்
கொடுத்து, அரசுக்கு 3 ரூபாய் லாபம் சம்பாதித்துக் கொடுத்
தேன் என்று சொல்லிக்கொள்ள உண்மையிலேயே நான் ஆசைப்
படவில்லை. எந்தெந்த வகையில் எந்தக் கருத்து மாறுபாடுகள்
இருந்தாலும், எந்தச் சூழ்நிலையிலும் ஒவ்வொரு இடத்தில் நான்
எடுத்துச் சொல்லும்ஒன்றை நான் எப்போதும் நினைவில் வைத்துக்
கொள்ளுகிறேன். நான் பேசும், சொல்லுகிற வார்த்தை,
மேடையானாலும் சரி, என் வழக்கநிலை யானாலும்சரி
எல்லோரும் என்னை விட புத்திசாலிகள் அல்ல என்றோ,
எனக்குத்தான் எல்லாம் தெரியுமென்றோ, நான் என்
வழக்கமாக அமைத்துக்கொள்ளுவது கிடையாது. நான் பேசும்
போது, சில நேரங்களில் நகைச் சுவையாகப் பேசும்போது
சொல்லுவது உண்டென்றாலும், உண்மையிலேயே ஒவ்வொருவர்
ஒவ்வொரு வகையில் திறமைசாலியாக இந்த நாட்டில் இருப்பார்
கள் என்பதில் எனக்கு நிச்சயமாக நம்பிக்கை உண்டு. அதைப்
பற்றி பேசும் போது, நான் வானொலியில் பேசி இருக்கிறேன்.
ஒலிபெருக்கியைச் சரியாக உருவாக்கித் தருகிறவர்கள், மைக்கை
அமைத்துத்தருகிறவர்கள், அதைத் செய்தவர்கள் என்னைவிட
அந்தத்துறையில் அவர் புத்திசாலி, திறமை உள்ளவர். ஆகவே
அந்தத்துறையில் எனக்கு அனுபவமில்லை, தெரியாது. என்னைவிட
அந்த வகையில் அவர் சிறந்தவர் என்று நான் சொல்லி இருக்
கிறேன்.

[மாலை-4 20]

அதுபோல என்னை விட 7 வருடம் முதலமைச்சராக இருந்த
ஒருவர், போக்குவரத்துத் துறையிலே எவ்வளவோ பிரச்னைகள்
சந்தித்திருக்கிற ஒருவர், முதலமைச்சராக இருந்தவர் அப்படிப்
பட்ட சமாதானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வரும்போது,
அதை என்னிடம் சொன்னார்கள் என்று வெளியே சொல்லி,
அதன் விளைவாக நான் பெருமை தேடிக் கொள்வேன் என்று
அந்த எண்ணம் எப்படி வருகிறதென்று தெரியவில்லை. சொல்லப்
பட்ட பிறகுகூட சொல்லவேண்டுமானால் 'பேச்சுவார்த்தை
நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை
சொல்கிறார்கள்' என்ற கருத்தில் வெளியிடப்பட்டதே தவிர
வேறு யாரையும் புண்படுத்தவோ, அலட்சியப்படுத்தவோ,
அவர்களுக்கு தெரியாது என்று சொல்வதன் மூலமாக அவர்களை
நான் ஏமாற்றி விட்டதாக சொல்வதாகவோ, நாங்கள் தான்

உயர்ந்தவர்கள் என்று காட்டிக்கொள்ளவோ நான் நிச்சயமாக அதனை பயன்படுத்திக்கொள்ள மாட்டேன் என்பதை எதிர் கட்சித்தலைவர் அவர்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அந்த வகையில் 27 ரூபாய் என்று நான் இங்கே சொல்லாமல் பவானியிலே ஒரு பொதுக் கூட்டத்தில் ஏன் பேசினேன் ; ஏன் பேசவேண்டும் ; அதை இங்கே சொல்லியிருக்கக் கூடாதா என்று எல்லாம் கேட்கப்பட்டது. 30 ரூபாய் என்று கோரிக்கை வைத்து, அதற்காகப் போராடுவோம் என்று வந்தவுடன், அதன் விளைவாகத் தான் 27 ரூபாய் கிடைத்தது என்று சொல்வார்களேயானால், நான் நிச்சயமாகச் சொல்லிக்கொள்கிறேன். போராட்டத்தின் மூலமாக ஒரு அரசை ஸ்தம்பிக்க வைத்து விட முடியும் என்று நான் நம்பவில்லை. மக்களின் நல்லெண்ணம் அந்த அரசின் பக்கம் இருக்குமேயானால் வேண்டாத, மக்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடிய ஒரு போராட்டத்தில் யார் இறங்கினாலும் அதை நிச்சயமாக மக்கள் அதை எளிதாக ஏற்றுக்கொண்டு அந்த அரசின் மீது அவநம்பிக்கை கொள்வார்கள் என்று நான் நம்பவில்லை.

அப்படியானால் இந்த 7 ஆண்டு காலத்தில் பல்வேறு பிரச்னைகள் வந்திருக்கின்றன. அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 5 ஆண்டுகாலம் நாங்கள் போராடி இருக்கிறோம். இரண்டு ஆண்டு காலம் நான் அவர்களோடு இருந்தபோது கூட போராட்டம் வராமல் இருந்ததில்லை. விவசாயிகளின் போராட்டத்தின்போது பலபேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று சொல்லப்படாமல் இல்லை ஆங்காங்கே வண்டிகளை நிறுத்தி, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தார்கள் என்பதை நான் மறந்துவிடவில்லை. போலீஸ்காரர்களை இழுத்துச் சென்று கொலை செய்ய முயன்று, ஆகவே போலீஸ்காரர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள சுடவேண்டியிருந்தது ; அந்த பஸ்ஸை விடவேண்டியிருந்தது என்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லியபோது, ஆங்காங்கே கூட்டங்கள் போட்டு, இவ்வளவு பெரிய போராட்டம் நடத்தியபோது மக்கள் அந்த அரசை தூக்கி எறிந்துவிடவேண்டும் என்று சொல்லவில்லை என்பதை நான் கண்டிருக்கிறேன்.

ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் பொதுமக்களுக்கு தாங்கள் செய்கிற அன்றாடவேலைகளுக்கு இடைஞ்சல் இல்லாமல் அமைதியாக, நிம்மதியா ஒரு இடத்திலே இருந்து புறப்பட்டால் இன்னொரு இடத்திற்கு போய் சேருவோம் என்ற நம்பிக்கையோடு போய் வருகிற அளவிற்கு இந்த தமிழ்நாட்டில் அமைதி இருக்குமேயானால், அந்த அமைதி இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு அரசு நடவடிக்கை எடுக்குமேயானால் நிச்சயமாக மக்கள் அதை வெறுக்கமாட்டார்கள் என்பதற்கு இதைப்போல பல உதாரணங்களை சொல்லலாம்.

கீழ்வெண்மணி பிரச்சனையின்போது, அண்ணா இருந்தபோது எவ்வளவு பிரச்னைகள் இருந்தன ? அண்ணா எவ்வளவு நாட்கள்

தூங்காமல் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவரோடு நெருங்கி இருந்தவர்கள் ; அவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தெரியும். ஆனால் அன்றைக்கு அண்ணாவின் மேல் நம்பிக்கை கொண்ட மக்கள் 'அண்ணா அவர்கள் நிச்சயமாக இதில் உடன்பட்டிருக்கமாட்டார்கள்' என்று நம்பினார்கள் என்பதால் 'அண்ணா அவர்கள் அதற்கு பொறுப்பில்லை அங்கே இருந்த ஜாதி வெறி, பண ஆதிக்கத்தின் அகந்தை அப்படிப்பட்ட வகையில் அவர்கள் அந்த காரியத்தைச் செய்திருக்கிறார்கள், என்பதுதான் வெளிப்பட்டிருக்கிறதே தவிர, அண்ணா மீது, நம்பிக்கை இல்லை என்று மக்கள் சொல்லவில்லை. ஆகவே, எப்படிப்பட்ட நிலையிலும் மக்கள் அமைதியாக தங்கள் பணிகளைச் செய்வதற்கு எப்படி வாய்ப்பு தரப்படுகிறதோ அதையே மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மட்டும் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்வேன். அதற்காக, எதற்கெடுத்தாலும் யாரையும் அலட்சியப்படுத்தி நாம் காரியம் செய்து விடுவோம் என்று சொன்னால் அதுவும் தாங்காது என்பதை பல உறுப்பினர்கள் சொல்லும்போது குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

மன்ற உறுப்பினர்களில் ஒருவர் சொன்னார், ''தனி மனிதன் எதையும் செய்துவிட முடியாது. அதே போல அவரவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர செய்தால் அவர்கள் என்றும் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக இருக்க முடியும்'' என்ற கருத்தைச் சொன்னார். பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு கிட்டப்பா என்று நினைக்கிறேன். அவர் சொன்னார், ''எதற்கும் முதலமைச்சர் ஒதுங்கி இருந்து விடக் கூடாது'' என்று. மன்னிக்க வேண்டும்—மாண்புமிகு திரு. சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் மறுக்க மாட்டார் என்று கருதுகின்றேன். நான் தவறு செய்திருக்கலாம். ''எதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஒதுங்கி இருக்கக் கூடாது'' என்று சொல்லுகின்ற நேரத்தில் இன்னொரு மன்ற உறுப்பினர் சொன்னார். ''தனித் தன்மையோடு அமைச்சர்கள் பணியாற்ற வேண்டும்'' என்று. (நான் எழுதியதைப் பார்த்து விடுகிறேன்—குறிப்பைப் பார்க்கிறார்) அதிலே, தனித் தன்மை என்பதற்கு எவ்வாறு பொருள் கொள்ள முடியும் ? ஒரு அமைச்சரவை கூட்டுப் பொறுப்போடு செயல்பட வேண்டி இருக்கிறது. சில நேரங்களில் ஏதோ, நான் ஊரில் இல்லாத காரணத்தாலோ, கோப்புகளைப் பார்க்க முடியாத நேரத்திலோ அமைச்சர்கள், தவிர்க்க முடியாத நிலையில், கூட்டுப் பொறுப்பில் பேசி, இந்நேரத்தில், சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வரும்போது அவர்கள் செய்கின்ற முடிவு எதுவாக இருந்தாலும் அதற்கு முழுப் பொறுப்பை ஏற்றுக்கொளவேண்டியவன் நான் என்பதை நான் மறுக்கவில்லை. அப்டிப்பட்ட கூட்டுப்பொறுப்பில் தான் ஒரு அமைச்சரவை இருந்து ஆக வேண்டும். அந்த வகையில் ஒதுங்கி

இருக்கிறேன் என்றால் என்னுடைய கடமையிலிருந்து ஒதுங்கி விட்டேன் என்று சுவாமிதாஸ் அவர்கள் நினைக்கமாட்டார் என்று நினைக்கிறேன்.

கடமைப்படி, இப்படிப்பட்ட முறையில் செயல்படுவது. பிரச்னைகள் வரும்போது ஒன்றாக நின்று பிரச்னைகளைத் தீர்க்க முற்படுவது என்ற முறையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

இந்த ஆறு மாத காலத்திற்குள் இத்தனை பிரச்சினைகளையும் சந்தித்த நாங்கள், திட்டம் வகுக்காமலோ அல்லது கலந்து கொள்ளாமலோ அல்லது செயல்படாமலோ, நாங்கள் ஒதுங்கி இருக்கவில்லை என்பதை மட்டும் தயவு செய்து மாண்புமிகு உறுப் பினர்கள்—குறிப்பாக மாண்புமிகு சுவாமிதாஸ் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுவேன்.

சுவாமிதாஸ் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர் தான் சொன்னதாக எனக்கு நினைவு. ''கொடிகள் எல்லாம் கட்டிக்கொண்டு வருகிறார்கள், கொடிகள் கூடாது'' என்று சொன்னார் என்று நினைக்கிறேன். எந்தக் கொடி என்று எனக்குத் தெரியாது. நான் எனக்குத் தெரிந்த வரையில் அமைச்சர்கள் சுதந்திரக் கொடியை—தேசியக் கொடியை கட்டிக்கொண்டு வருகிறார்கள்—எம்ப்ளத்தை வைத்துக் கொள்கிறார்கள். இதே பிரச்சினையில் இந்த மாமன்றத்தில் அவரது கட்சியைச் சேர்ந்த ஜேம்ஸ் அவர்கள் என்று நினைவு—அவர் முன்பே பேசி இருக்கிறார் அப்போது இங்கே அமைச்சரவையிலிருந்த நண்பர் மாதவன் அவர்கள் கொடி போட்டுக்கொண்டு வராமல் வந்திருக்கிறார். அந்தப் பிரச்சினையை எழுப்பி, அமைச்சர் ஏன் கொடியைப் போட்டுக்கொண்டு வரவில்லை என்று கேட்டிருக்கிறார். அதற்கு மாதவன் பதில் சொல்லும்போது அவர் சொன்னார், ''நான் வந்த வண்டி ரிப்பேராகி விட்டது. ஆகவே அவசரமாக இன்னொரு வண்டியில் ஏறி வர வேண்டி இருந்தது. ஆகவே அப்படி வந்து விட்டேன். இந்தத் தவறு இனிமேல் வராமல் பார்த்துக் கொள்கிறேன்.'' என்ற குறிப்பை நான் படித்தேன். ஆகவே, சுவாமிதாஸ் அவர்கள்..........

[மாலை 4-30]

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நண்பர் சுவாமிதாஸ் அவர்கள் கூறியது, இப்போதெல்லாம் மத்திய அரசில் பொறுப்பிலுள்ள அமைச்சர் கள் தேசியக் கொடி அல்லது எந்தக் கொடியையும் இட்டுக் கொண்டு காரில் சுற்றுப்பயணம் செய்வதில்லை. அந்தளவிற்கு ஸிம்ப்ளிஸிட்டி செய்து கொண்டார்கள். அந்த நோக்கத்தில்தான் அம்பாஸிடர் காரை உபயோகிக்கிறார்கள். ஆடம்பரங்களை விரும்பவில்லை. அவர்கள் வீடுகளில் கூட போலீஸ்காரர்கள்

நிற்பதில்லை என்ற பொருள்படத்தான், ஸிம்பிள் லைப் என்ற முறையில்தான் கூறினாரே தவிர தேசியக் கொடியை அமைச்சர் கள் எப்போதுமே உபயோகிக்கக்கூடாது என்ற பொருள்பட கூறினார்கள் என்று நான் நினைக்கவில்லை.

(திரு. மு. அம்பிகாபதி, திரு. கே. கந்தசாமி, திரு. கூத்தக்குடி சண்முகம் இவர்கள் எழுந்திருந்தனர்.)

<u>மாண்புமிகு பேரவைத்தலைவர்</u> : எல்லோரும் எழுந்திருந்தால் எப்படி ? யாராவது ஒருவர் பேசுங்கள்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு நாற்பது லட்சம், ஐம்பது லட்சம் மக்களைத் திரட்டச் செய்து பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அங்கு நடந்திருக்கிறது ஒரு விழா. தமிழ்நாட்டில் அப்படி ஒன்றும் காணோம். அமைச்சர்கள் கொடி போடாமல் போகக்கூடாது, அமைச்சர்கள் வீடுகளில் காவல் இல்லாமல் இருக் கக்கூடாது என்று இன்றைக்கு டெல்லியில் காவல் இருக்கிறது. அண்மையில் நான் டெல்லி போயிருந்தேன். அமைச்சர்களின் வீடு களில் காவல் உண்டு, இங்கே இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் என்றால் அங்கே 20, 30 போலீஸ்காரர்கள் காவல் இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் கள் பிரச்னைகளை நீங்களே கிளப்பாதீர்கள். டெல்லியில் எவ்வளவு லட்சம் செலவாயிற்று என்று நமக்குக் கவலையில்லை. இங்கே யிருக்கிற பிரச்னையைப்பற்றி பேசுங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : மாண்புமிகு உறுப்பினர் அம்பி காபதி அவர்கள் கூறுவது சரியல்ல. நானும் டெல்லி சென்றி ருக்கிறேன். அமைச்சர்கள் வீடுகளைப் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள், எனர்ஜி மினிஸ்டர், வீட்டில் போலீஸ்காரர்கள் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன், டெல்லியில்.

(திரு. கே. கந்தசாமி, திரு. ஏ. சுவாமிதாஸ் எழுந்திருந் தார்கள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவுசெய்து என் கருத் தைக் கேளுங்கள். முதல் அமைச்சர் அவர்கள் உரையில் தங்க ளுக்கு விளக்கங்கள் மேலும் தேவை என்றால் அல்லது அவர்கள் பேசியதிலிருந்து வேறுவிதமாக அவர்கள் பேசுகிறார்கள், நான் அப்படிப் பேசவில்லை என்று திருத்த வேண்டியிருக்கிறதுஎன்றால் வேண்டுமென்றால் அவர்கள் மட்டும் பேசவேண்டுமே தவிர, நீங்கள் ஒன்றைக் கிளப்பி சுவாமிதாஸ் அவர்கள் நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்ல, அம்பிகாபதி ஒன்று சொல்ல அதற்கு ஜேம்ஸ் அவர்கள் பதில் சொல்ல, அதற்கு மறுபடியும் இவர் பதில் சொல்ல என்று இப்படிச் சொல்வது நன்றாகயில்லை.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதைத் திருத்த வேண்டும் அல்லது மேலும் ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சிக்கனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தேசீயக் கொடியை அரசாங்கக் கார்களில் கட்டாமல் போவது சிக்கனமா ? அதோடு ஜனதா தலைவர்கள், மந்திரி சபையில் இருப்பவர்கள் தேசீயக் கொடியை காரில் கட்டிக்கொண்டு போவது ஒரு 'ஸிம்பாலிக் ரெப்ரசென்டேஷன்' அது தேசத்திற்கு ஒரு மரியாதை, கௌரவம் கொடுப்பதாகும். அப்படி அவர்கள் தேசீயக்கொடி கட்டாமல் போவதாகச் சொல்கிறார்களே, அது தேசத்தை மதிக்கக்கூடாது என்ற எண்ணமா அல்லது சிக்கனம் என்பதா என்பதை விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : அமைச்சர்கள் தேசியக்கொடியை தங்கள் கார்களில் கட்டக்கூடாது என்பதல்ல என் கருத்து. நான் குறிப்பிட்டதன் உள்நோக்கம் எல்லாம் மத்திய சர்க்காரிலுள்ள ஜனதா கட்சி அமைச்சர்கள் வெளியே புறப்படும்போது அமைச்சர்கள் என்று ஒரு பெருமையான மதிப்பை வெளிக்காட்டாதவாறு எளிமையாக கொடியில்லாத கார்களில் போகிறார்கள். அதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். அதைத்தான் சுட்டிக்காட்டினேனே தவிர தேசீயக் கொடி போட்டுக்கொண்டு போவது தவறு என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசிலுள்ள, ஜனதா அரசிலுள்ள அமைச்சர்கள் தாங்கள் அமைச்சர்கள் என்று வெளியே காட்டிக் கொள்ளாதவாறு நடந்து கொள்கிறார்கள். நேரடியாகப் பார்த்த உண்மையைத்தான், நான் குறிப்பிட்டேனே தவிர மற்றபடியல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கொடிப்பிரச்னை இப்படிப்பட்டதொரு பிரச்னையாக இருக்கும் என்று தெரிந்திருந்தால் நான் இந்தக் கொடியைப்பற்றி பேசியிருக்க மாட்டேன். ஆனால் கொடிப் போராட்டம் என்று சொல்லும்போது எனக்கு ஒரு நினைவு. இங்கே முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள், இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சில நண்பர்களும், மற்றவர்களும் தங்களது கட்சிக் கொடியை தங்கள் கார்களின் பக்கத்தில் போட்டுக் கொண்டார்கள் என்பதற்கு எவ்வளவு காங்கிரஸ்காரர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று எனக்கு நினைவிற்கு வருகிறது.

நீங்கள் இந்தக் கொடியைப் போட்டுக்கொள்ளவேண்டாம் என்று முடிவுசெய்வதாக இருந்தால் நாங்கள் எங்கள் கொடிகளைப் போட்டுக்கொண்டு சாதாரண தொண்டனாக வருவதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறோம். இந்தத் தகராறுகளுக்கு இடமில்லாமல் எங்கள் பணியை செய்து கொண்டிருக்கலாம் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான வேறுபாடான கருத்தும் இல்லை.

ஆனால் வழிவழி வந்த முறைப்படி செய்கிறார்கள். காலையில் 6 மணிக்கு கட்டுகிறார்கள். மாலை 6 மணிக்கு திரும்பவும் அவிழ்த்து கட்டி வைத்து விடுகிறார்கள். இப்படி நடவடிக்கை நடக்கிறது. இதில் தேசீயக் கொடிக்கு மரியாதை கொடுப்பது என்கின்ற வகையிலும் கட்சிக்கு அப்பாற்பட்டு இந்த அமைச்சரவை செயல்படவேண்டும் என்று நினைவுபடுத்துகின்ற வகையிலும் இது இருக்கிறது என்று நாம் நினைப்போமானால், அதை மற்றவர்களும் உணர்ந்து கொள்ளுவார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

இன்னொன்றையும் நான் சொல்வேன், அவரவர்களுக்கு ஏற்படுகிற அனுபவம் தான் எல்லை கோடாக அமைய முடியும். அப்படித்தான் இருக்க முடியும். மாண்புமிகு மத்திய அமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள் இல்லத்திற்குப் போயிருந்தேன். அவர்கள் இல்லத்தில் போலீசாரே இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், அப்படி போலீஸ் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டின் நிலைமையில், பொறுப்பில் இருக்கின்றவர்களுக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது. நான் அண்ணா அவர்கள் ஆட்சி செய்த காலத்திலும், இங்கே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் முதலமைச்சராக இருந்த காலத்திலும், நான் சிறு சேமிப்புத் துறை துணைத்தலைவராக பணியாற்றியவன் என்கின்ற நிலையில் நான் சுடப்பட்ட பிறகு அமரர் அண்ணா அவர்கள் எனது வீட்டுக்கு போலீஸ் காவலும், எனக்கு செக்யூரிட்டியும் இருக்கவேண்டும் என்பதற்காக தகுந்த அதிகாரிகளை நியமித்தார்கள். அதைத் தொடர்ந்து நான் கட்சியைவிட்டுப் பதவியிலிருந்து வெளியேறுகிற வரையில் அந்தப் பாதுகாப்பு எனக்கு கொடுக்கப்பட்டிருந்தது. காரணம் நாட்டிலுள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் நான் இங்கிருக்கின்றவர்கள் யாரையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் அல்லது அவர்களில் சிலர்—எதிர்க்கட்சி என்று சொல்லும்போது இங்கே இருக்கின்றவர்கள் யாரையும் குறிப்பிடவில்லை—இந்த மன்றத்திற்கு வெளியே இருப்பவர்கள் எல்லோரும் இங்கே இருப்பவர்களை போல தங்களை கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய அனுபவ ஆற்றலும், பெருந்தன்மையும் கடமை உணர்வும் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாத ஒன்று என்பதற்காக நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

நான் சுடப்பட்டது ஒன்று, அதே நாளுக்கு மறுநாள் என்று கருதுகிறேன், இதே எதிர்க்கட்சித் தலைவரை கொலை செய்வதற்கு முயற்சி செய்து, அதிலிருந்து ஓடி, குடிசையில் பதுங்கி உயிரைக் காப்பாற்றிக்கொண்டதும் என் நினைவுக்கு வருகிறது. இப்படிப் பட்ட நிலைமை எங்கு இருந்தாலும் எந்த மாநிலத்தில் இருந்தாலும் அதை நாம் உணர்ந்து தக்கவர்களுக்கு பாதுகாப்புத்தர வேண்டியது முக்கியமான கடமை என்று நான் எண்ணுகிறேன். நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நான் ஆட்சிக்கு வந்தபிறகு நான் ஒரு நீதிபதி அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது கேட்டேன், உங்களுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறதா என்றுகேட்டேன், இல்லை என்றார்கள், எனக்கு அச்சம் ஏற்பட்டது. வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது மாஜிஸ்ட்ரேட்டை தாக்கக் கூடிய அளவுக்கு குற்றவாளிக்கூண்டில் நிற்கின்றவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று செய்திகளை கேள்விப்படுகிறோம். அப்படியிருக்கின்ற நேரத்தில் தீர்ப்பு அளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதற்கான தீர்ப்பு வழங்கிய பிறகு அவர்கள் வீட்டுக்கு வந்த பிறகும், அவர்கள் பத்திரமாக இருக்கவேண்டும், பத்திரமாக இருப்பார்கள் என்பதற்கு உத்தரவாதம் தந்தால் தான் நீதியை அவர்கள் எந்தவிதமான அச்சத்திற்கும் இடமில்லாமல் தீர்ப்பை ஒழுங்காக வழங்கமுடியும். அந்த வகையில் அவர்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் நீதிபதிகளுக்கு போலீஸ் காவல் போடும்படி ஏற்பாடு செய்தேன்.

இதைச் செய்ததற்குக் காரணம் இதனால் அவர்களுக்கு உயர்வு வந்துவிடும் என்பதல்ல. இந்த நாட்டுக்கு தேவையானவர்கள் என்பதற்கும், அவர்களது அறிவும் ஆற்றலும் நீதியை வழங்க பயன்படவேண்டும். அந்த வகையில் தான் அமைச்சர்களாக இருந்தாலும் , எதிர்க்கட்சியாக இருந்தாலும் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதும் பொதுத்துறையில் இருப்பவர்கள் அவர்கள் செல்லுகின்ற இடங்களில் அவர்களின் உயிருக்கு பாதகம் விளைவிக்கவேண்டும் என்று நினைக்கின்ற நேரத்தில் என்னென்ன செய்வார்கள் என்பதை நாம் கண்டிருக்கிறோம்.

[மாலை 4-40]

ஆகவே, அந்த வகையில் இங்கிருக்கின்ற இந்த மன்ற உறுப்பினர்களுக்கு வேறு வகையில் பாதுகாப்பு கிடைக்கக்கூடிய காரியங்களைச் செய்வதற்கு என்ன வழி என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் . இங்கே பேசவேண்டிய நிலையில் இருந்த பிரச்னைக்காக இவ்வளவு நீண்டநேரம் நான் பேசியதற்காக வருத்தப்படுகிறேன்என்றாலும், ஒரு நல்ல பிரச்னையாக மாறிற்று என்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். அதோடு, மற்ற அமைச்சர்கள் வீட்டிற்கும் நான் சென்றிருக்கிறேன். டெல்லியில் பாதுகாப்பு இருக்கிறது.

அது மட்டுமல்ல. நானும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அவர்களும் ஒரு விழாவிலே கலந்துகொள்ள சென்றபோது, எவ்வளவு பாதுகாப்பு தரப்பட வேண்டியிருந்தது என்பதை நான் கவனித்தேன். அங்கே மக்கள் முந்திக்கொண்டு அவரிடம் முண்டியடித்துக்கொண்டு நெருங்கி வருகின்றபோது அதற்காக அதிகாரிகள் எவ்வளவு செக்யூரிடி ஆட்களைப் பாதுகாப்பாகக் கொடுத்தார்கள் என்பதை நான் கண்டேன். ஆகவே அப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்கவேண்டுமென்பது என் ஆசை.

இது செலவைக் குறைக்கின்ற வேலையாக இல்லையே என்று கூறலாம். ஒருவர் ஒரு பொறுப்பிலே வந்த பிறகு, அவர்கள் உயிர் இந்த நாட்டுக்குச் சொந்தமாகிறது. பொறுப்பிலே இல்லாதவரை அவர் ஒரு தனி மனிதர். ஒரு பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த நாட்டினுடைய, நாட்டு மக்களுடைய சொத்தாக அமைகிறார்கள்.

நான் இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இப்போது இங்கு கொண்டு வந்தாலும், அது வெற்றி பெறுமா, பெறாதா, அதைப்பற்றி முடிவு செய்யக்கூடாது என்றாலும், நான் ஒன்றைச் சொல்வேன். இந்த நாட்டில் இந்த அரசு ஒன்றைத் தீர்மானிக்கிறது. அது இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானமாக அமுல்படுத்தப்படுகிறது என்றால், அரசைச் சேர்ந்தவர்கள் மட்டும் மெஜாரிட்டியாக இருந்தாலும் கூட, இந்த மன்றம் முழுவதும் சேர்ந்து எதிர்த்தாலும் கூட, அதற்கு பங்கு பெறவேண்டிய பொறுப்பு இங்குள்ள அனைவருக்கும் உண்டு. இந்த அரசு என்பது நாங்கள் மட்டுமல்ல. இங்கேயுள்ள அனைவரும் சேர்ந்ததுதான் தமிழக அரசு என்ற எண்ணத்தில் தான் இந்தக் கொள்கையை இங்கே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தது, ஐந்தாண்டுகளில் அமைக்கப்பட்டு, நட்டத்தில் ஓடும் கழகங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டப்படி போனஸ் தரப்பட வேண்டியதில்லை. இருந்தாலும், அத்தொழிலாளர்களுக்கு நிச்சயமாக ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கருதி, அவர்களுக்குத் தனி வெகுமதியாக சுமார் 7½ லட்சம் ரூபாய் அளித்தது. போக்குவரத்துக் கழகங்களில் புதிதாக 995 நபர்களுக்கு பல பதவிகளில் வேலைவாய்ப்பைத் தந்துள்ளது. லட்சம் பேர்களுக்கு வேலை தர முடியும் என்று இந்த அரசு சொல்லிற்றே, எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு தந்தீர்கள்? என்ற கேள்வி எழுகிறது. லட்சம் பேர்கள் என்று சொல்லும்போது, இந்த ஆறுமாதம் என்பதை எப்படி கணக்கில் எடுத்துக்கொள்வது என்பது தெரியாது.

ஆனால், இங்கு இன்னொரு குறிப்பிலே நான் படிக்கும்போது புரிந்து கொள்வீர்கள் என்று கருதுகிறேன். ஏறத்தாழ ஐந்தாண்டில் 4 லட்சத்திற்கு மேலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை, அதை ஒரு தொடர் திட்டமாக நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சொல்கிறீர்கள், நிறைவேற்றுகிறீர்களா ? ஏதேதோ சொல்கிறீர்கள், அவைகளை உங்களால் நிறைவேற்ற முடிகிறதா ? 16,000 நியாய விலைக் கடைகளை நீங்கள் தொடங்க போகிறோம் என்று சொன்னீர்களே என்ன ஆயிற்று? 444 ஆகக் குறுகிபோய் விட்டதே, ஏன் என்றெல்லாம் கேட்கிறார்கள். எட்டாயிரம் இருந்ததிலே 444 தொடருகிறது என்பதைப்பார்க்க வேண்டும்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

இதிலே இன்னொன்றையும் சொல்லுகிறேன். மற்ற மாவட்டங்களிலும் இதைத் தொடரப் போகிறோம் என்பதையும் அதையொட்டிப்பார்த்தால் இருக்கின்ற ரெவினியூ கிராமங்களில் இதனை நிறைவேற்றுவதற்குரிய வகையில் செயல்படுத்தும்போது, நடைமுறைப்படுத்தும்போது எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் என்பதையும், இந்த உணவு மண்டலம் மாத்திரம் எவ்வளவு பெரிய ஏமாற்றங்களை, தொல்லைகளைத் தந்திருக்கிறது என்பதையும் அனைவரும் உணருவார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணவு மண்டலக் கட்டுப்பாட்டை மாற்றுகிறார்கள் என்று தெரிந்த உடனேயே அறிக்கை வெளியிட்டார்கள். 16,000 நியாய விலைக் கடைகளை உருவாக்கும் எந்த அடையாளத்தையும் காணோமே என்ற கேள்வியைப் போட்டார்கள். இப்படி உணவு மண்டலத்தை மாற்றியதன் காரணமாக, நிச்சயமாக தமிழகத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படப்போகிறது என்று எச்சரித்தார்கள். நான் மறுக்கவில்லை, குறை கூறவில்லை. அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களில் ஒன்றாக இருக்குமென்று எச்சரித்திருக்கலாம்.

ஒன்றைச் சொல்லுகிறேன். எந்த நோக்கத்தில் சொன்னாலும் இப்படிப்பட்ட எச்சரிக்கைகள், அனுபவத்தில் இருந்தவர்கள் சொல்வது எனக்கு மிக உதவியாக இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் எங்களைப் பொறுத்தவரை நாங்கள் இட்ட திட்டங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது இப்போது கைத்தறி நெசவாளர்கள்என்ற வகையில் ஆங்காங்கு சிறு தொழில்கள் என்ற முறையில் ஏறத்தாழ 25,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காதி சிறு தொழில் திட்டத்தில் அது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி ஒவ்வொன்றிலும் எங்களால் ஆனவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் எதுவுமே செய்யவில்லை, எதையுமே செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். நான் நேரில் பெற்ற தகவல்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பிறகு தேவையானால் அந்தப் புள்ளி விவரங்களை எடுத்துப் படிப்பதில் நிச்சயமாக எனக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் ஒன்றைமட்டும் சொல்வேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையிலும் 'நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்று கேட்பதற்குப் பதிலாக 'இவ்வளவு தானா செய்தீர்கள்?' என்று கேட்டிருந்தால் நான் கொஞ்சம் புரிந்து கொண்டிருக்கமுடியும். ஆனால் நான் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குறை கூறுகிறார்களே என்று ஆத்திரப்படுவதில்லை. நீங்கள் குறை கூறுவது அவ்வளவும் எங்களுக்கு மூலதனம் என்று

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

எடுத்துக் கொள்வேன். நீங்கள் நல்ல எண்ணத்திலே சொன்னாலும், எங்கள் மீது குறை காண வேண்டுமென்று சொன்னாலும், இல்லை, குற்றம் இருக்கிறது என்று ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினாலும் ஒரு அமைச்சரவைக்குத் தேவையான நல்ல காரியத்தை நீங்கள் அனைவரும் செய்கிறீர்கள் என்று நானும் இந்த அமைச்சரவையும் ஏற்றுக் கொள்ளுவோம் என்ற உறுதியைத் தருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடித்துக் காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். கூடவே இன்னொரு வார்த்தையையும் சொன்னார்கள். அதை நான் இங்கே கூற விரும்பவில்லை. இடித்துக் கூறுவது என்று சொல்லும்போது உள்ளத்தில் பதியாமல் சொன்னால் அந்த உள்ளம் ஏற்றுக் கொள்ளுமா? அந்த உள்ளத்தில் சொல்லுவது தைக்குமா? 'நுள்ளிக் கொடு, கிள்ளிக் கொடு தள்ளிவிடு' என்ற மூன்று வார்த்தைகள் பழமொழியில் உண்டு. ஆரம்பத்தில் செடி தோன்றும்போது செடி ஆபத்துக்குரியது என்றால் நகத்தால் பிய்த்து எறிந்துவிடுவது; அதுவும்பெரிதாகி விட்டால் கிள்ளி விடுவது; அதையும் விட மோசமாகப் போய் விட்டால் தள்ளிவிடு. அழித்து விடு; இல்லாமல் செய்துவிடு என்று பொருள். அந்த வகையில் எங்களிடம் உள்ள குற்றம் குறைகளைச் சொல்லட்டும்; ஆறுமாத காலத்திலே இவ்வளவு பெரிய குற்றச் சாட்டுகளைச் சொல்ல நேரம் இல்லாமல் இருந்தாலும் உங்கள் தலைவர் மூலமாக எடுத்துக் காட்டியதன் விளைவாக நாங்கள் மகிழ்ச்சியோடு சொல்லுகிறோம். மன நிறைவோடு சொல்லுகிறோம். இன்னும் நிறையப் பேசுங்கள். ஆனால் அமைதியாகச் சொல்லுகிறார்கள் என்பதிலே எனக்கு ஒரு ஆச்சரியம். இந்தத் தொடர் கூட்டத்திலே நான் கவனித்துக் கொண்டு வந்தேன்.

[மாலை 4-50]

கூடுமான வரையில் நான் இங்கே உட்கார்ந்து மதிப்போடு மரியாதையோடு கவனிப்பது உண்டு. இந்தத் தொடர் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எவ்வளவு அமைதியாக எவ்வளவு பொறுப்போடு சொல்லவேண்டியவைகளை நாசூக்காகச் சொல்லி என்ன நினைக்கிறாரோ அவைகளை எடுத்துச் சொல்லி மற்றவர்கள் குறுக்கிடா வண்ணம் அதே நேரத்தில் மற்றவர்கள் அதைப்பற்றிச் சொன்னாலும் உணரும் வண்ணத்தை உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு திறமையையும் வைத்துக்கொண்டு அவர்கள் ஏன் வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள் என்ற எண்ணம் எனக்கு. எனக்கு அக்கறை உண்டு. கேலியில்லை யாராக இருந்தாலும் நலத்தோடு இருக்கவேண்டுமென்ற எண்ணம் என்னிடத்தில் வளர்ந்துவிட்டது. உணர்ச்சி வயப்படுவதால் நாம் நம்முடைய உடலைக் கெடுத்துக் கொள்கிறோமே தவிர வேறு இல்லை. உங்களுக்கு சட்ட நுணுக்கம் தெரிகிறது. தொழிற் சங்க பிரச்சினைகள்

தெரிகிறது. எப்படி ஒரு சட்டம் கையாளப்பட வேண்டுமென்ற
நுணுக்கம் தெரிகிறது. எந்தக் குற்றச் சாட்டை யார் சொன்ன
லும் யாருக்கும் ஆத்திரம் வரவில்லை. வேண்டுமென்றே மனத்
தைப் புண்படுத்துவதற்காக வார்த்தைகளைத் தேடி அலைந்து
பேசினால் யாருக்கும் பலஹீனம் அதிகமாக இருந்தால் ஆபத்து
என்ற வகையிலும் இல்லாவிட்டால் தொல்லை என்ற வகையிலும்
அமைந்துவிடுகிறது. ஆனால் நல்ல வேளையாக உங்கள் கருத்துக்
களை நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள், வரவேற்கிறேன்.

எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள்
இந்திய மருத்துவக் கல்லூரி பற்றிப் பேசினார்கள். 3 ஆண்டு
களுக்கு மூடி வைத்து விடுவோம் என்று நான் சொன்னதாக
அவர்கள் சொன்னார்கள். ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க
வேண்டும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்.
ஆனால் மாட்டைக் கொன்றுவிடக் கூடாது, நிச்சயம் நான் அந்தப்
பாவத்தைச் செய்யமாட்டேன்.

ஒன்று சொல்கிறேன். அந்த வேலை நிறுத்தம் அவர்களால்
எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் தொடங்கப்பட்டது. தொடங்
கியது மட்டுமல்ல, பிரச்சினைகள் மாறுபட்டுப் பல்வேறு பிரச்சினை
கள் ஏற்பட்டிருக்கின்றன. பிறகு அதற்குக் காரணமானவர்கள்
பற்றி அந்த அதிகாரிகளிடமிருந்து தகவல் வந்தது. அவர்களுக்கு
எப்படியாவது அறிவுரை கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்
டேன். அதற்குப் பிறகு மாணவர்கள் ஒத்துக்கொண்டார்கள்.
பெற்றோர்கள் ஒத்துக் கொண்டார்கள். மன்னிப்புக் கடிதம்
வாங்கவில்லை, வருத்தக் கடிதம் தான், மன்னிப்புக் கடிதம் அல்ல.
இதுபோன்ற காரியங்களில் ஈடுபடாமல் ஒத்துழைத்து நாங்கள்
பணி செய்வோம் என்று பெற்றோர்கள் முன்னிலையில் சொன்னார்
கள். ஆனால் அவர்களிலே சிலர் இங்கே வந்து பயமுறுத்தி எழுதி
வாங்கினார்கள் அச்சுறுத்தி எழுதி வாங்கினார்கள் என்று சொல்லும்
போது அங்கே நடந்தது என்ன இங்கே சொல்வது என்ன,
அங்கே பொறுப்பிலே இருக்கிறவர்கள் என்ன கூறுகிறார்கள் என்
பதைப் பார்க்க வேண்டும். பெற்றோர்களும் இருந்தார்கள்
அதற்குப் பிறகு எழுதிக் கொடுத்தார்கள். பாதிப் பேர்கள்
எழுதிக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். மூன்றில் ஒரு
பங்குப் பேர்கள் எழுதிக் கொடுத்திருக்கலாம். பயமுறுத்தல்
என்று சொன்னார்கள். இம்மாதிரி முடிவுகளை எடுப்பதிலே
தடை ஏற்படுகிறதே தவிர இந்திய மருத்துவக் கல்லூரி எந்த
வகையிலும் பாதிக்கப்படாத வகையில் யார் யாருக்கு அனுபவம்
இருக்கிறதோ யார் யாருக்கு திறமை இருக்கிறதோ
அதைப்பற்றிச் சொல்லக்கூடிய அனுபவமும் ஆற்றலும் இருக்
கிறதோ அவைகளை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு இந்த
மருத்துவத் துறை நிச்சயமாக அறிஞர் அண்ணா அவர்கள் பேசி
யதுபோல், பேராசிரியர் நம்புவதுபோல் இந்த அமைச்சரவை
அதற்கு ஒத்துழைக்கும். வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்
என்பதை உத்தரவாதமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மீனவர்களுக்கும், விபத்திலே இறந்தவர்களுக்
கும் நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்களே, என்னென்ன செய்தீர்
கள், ஆறுமாத காலத்தில் அப்படிப்பட்ட நிலைமைகளில் இறந்தவர்
களுக்கு ஏதாவது செய்தீர்களா? நீங்கள் கொடுத்த வாக்குறுதி
களை என்ன நிறைவேற்றினீர்கள் என்று கேட்கிறார்கள். இப்
பொழுதுதான் எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. யாரும் தவறா
கக் கருத வேண்டாம். எனக்கு விளம்பர ஆசை இல்லை என்பது
இங்கே என் முன்னால் இருக்கின்ற அவர் முதலமைச்சராக இருந்த
பொழுது நெருங்கிய நண்பராக இருந்தார். இன்றைய தினமும்
நான் உண்மையிலேயே அவருடைய நல்வாழ்வில் நம்பிக்கை
உள்ளவன், விருப்பம் உள்ளவன் என்ற வகையிலே இங்கே
சொல்கிறேன், தெளிவாகச் சொல்லுகின்றேன். விளம்பரத்
திலே எனக்கு ஆசை கிடையாது என்பதையும்,
யாரோ சிலர் யாரோ ஒருவருக்குப் பிறந்த நாள்
விழா கொண்டாடுகிறார்கள் என்றவுடன் எல்லோரும் சென்று
அவர் அன்றுதான் பிறந்ததைப் போல கொண்டாடியபொழுது,
கொண்டாட விரும்பியபொழுது நான் ஒருவருக்குத்தான் அந்த
நிலைமையிலே பேசுவேன், மற்றவர்களுக்கு நான் வரமாட்டேன்,
அந்தப் பழக்கம் வரக்கூடாது என்று சொன்னவன் இந்த எம். ஜி.
இராமச்சந்திரன் என்பதை மாண்புமிகு முதலமைச்சராக இருந்த
இன்றைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உள்ளத்திற்குத் தெரியும்
என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். அப்படித் தனிப்பட்டவர்
களுக்கு ஏதாவது இப்படிப்பட்ட விளம்பர ஆசைகள் ஏற்பட்டு,
அதன் விளைவாக ஏதாவது விபரீதங்கள் விளைந்து, யார் யாருக்கு
பெரியவன், யார் யாரைவிட மூத்தவன், யார் யாரைவிட அறிவிற்
சிறந்தவன் என்பது போல் ஒரு கட்சியிலே ஆரம்பித்தால், அதுவும்
ஆட்சியிலே வர ஆரம்பித்தால் என்னவாகும் என்ற அச்சத்தால்
நான் ஒதுங்கி நிற்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அதுமட்டுமல்ல, நான் அருப்புக்கோட்டைக்குச் சென்ற
பொழுது ஒரு நிகழ்ச்சிக்குக் கலந்துகொள்ளச் சென்றேன். அங்கே
ஒரு பொருட்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கே
என்னுடைய ஒரு படம் வைக்கப்பட்டிருந்தது. நடு மத்தியிலே
கொஞ்சம் பெரியதாக வைக்கப்பட்டிருந்தது. நான் அதிகாரி
களைக் கூப்பிட்டுச் சொன்னேன். இந்த மாதிரி பொருட்காட்சி
யில் என்னுடைய படத்தை வைக்கக் கூடாது என்று நான் சொல்லி
விட்டு வந்தேன். அதற்கு ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது.
நான் சொன்னதை ஒத்துக்கொண்டு மாற்றி விட்டோம் என்று
சொன்ன கடிதமும் இருக்கிறது. எதற்காக நான் இதைச் சொல்
கிறேன் என்றால், எனக்கு விளம்பரத்தில் புதிதாக ஆசை வர
வேண்டிய அவசியமில்லை.

அதுமட்டுமல்ல, விளம்பரத்தை நான் தேடிக்கொள்ள
வேண்டிய அவசியமில்லை. என்னை அறியாமலேயே நான் நடித்த
படங்கள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு சுப்பு அவர்கள்

ஆரூர் கூட்டிய கூட்டத்தில் ஒரு சிறந்த ஆலோசனையைச்சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மை என்றால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லையென்றால் மறுத்துக்கொள்ளலாம். இப்பொழுது முதலமைச்சராக இருக்கின்ற எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மக்கள் மத்தியிலே புகழ் பெற்றவராக இரு[illegible] அவர் நடித்தாரானால் இன்னும் கொஞ்சம் அதிகமாகப் ப[illegible] சேர்க்க முடியும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். உண்மையா ?

<u>திரு. க. சுப்பு :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, கொஞ்ச நேரம் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். அந்தக் கூட்டத்திலே பேசும்பொழுது சொன்னேன், தேவையில்லாமல் 4 வேட்டி, 4 துண்டு கொடுப்பவர்களுக்கு விளம்பரம் கொடுக்க வேண்டாம். 5 ரூபாய், 10 ரூபாய்க்கு ஒரு துண்டையும் வேட்டியையும் கொடுத்துவிட்டு 10 போட்டோக்களை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே நான் அப்பொழுது சொன்னேன், முதலமைச்சரவர்கள் மக்கள் செல்வாக்கு படைத்தவர். அவர் ஒரு கூட்டத்தில் போய்நின்றால் அந்தக் கூட்டத்தில் வசூலாகிவிடும், இரண்டு நாடகத்தில் நடித்தால் வந்துவிடும். அதை விட்டுவிட்டு மற்றவர்களைக் கூப்பிட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று ஏன் கேட்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் டிராமாவிலே போய் நின்றால் வசூலாகிவிடும் என்ற கருத்தைச் சொன்னேன். அது உண்மைதானே ? இன்றைக்கு நடித்தால்கூட வசூலாகிவிடும்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்கள் கூறியது நல்ல யோசனை. அதற்கேற்றவாறு, சட்டத்திற்கேற்றவாறு, நான் முதலமைச்சராக இருந்தாலும் மக்களுக்காக நான் நடிக்கிறேன். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனாலும் ஒன்றைச் சொல்லுகின்றேன். இதிலிருந்து ஒரு தேவை எனக்குத் தெரிகிறது. இன்றையதினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவரவர்களும், நண்பர்களும் இந்தப் புள்ளி விவரங்களை மக்களுக்கு வெளிப்படையாக நானோ அல்லது அலுவலகத்திலே இருக்கின்றவர்களோ விளக்கமாகவும், வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்தாத காரணத்தாலோ என்னவோ நாங்கள் ஆறுமாத காலமாக எதையுமே செய்யவில்லை என்ற நிலைமைகளுக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள், ஆகவேதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்ற

[மாலை 5.00]

சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. இங்கே இருக்கின்ற புள்ளிவிவரங்கள், இப்பொழுது நான் படிக்கப் போகின்றவை, இவைகளையெல்லாம் நான் பகிரங்கமாக, விளக்கமாக விளம்பரப்படுத்திக்

கொள்கிற அளவுக்கு காசு கொடுத்த அளவில் அல்ல, பத்திரிகை நண்பர்களைச் சந்திக்க வேண்டுமென்று சொல்கிறார்களே, அந்த வகையிலாவது, இவைகளை நான் பயன்படுத்தி அதைச்செய்திருந்தேனானால் இந்த 4-30 மணி நேரம், 5 மணி நேரம், நானும் எதிர்க் கட்சித் தலைவரும் இதை விவாதிக்கிற நிலைமை இங்கே ஏற்பட்டிருக்குமா என்று ஐயுறுகிறேன். இதைப் பயன்படுத்தி, நல்ல ஆலோசனையைப் பயன்படுத்தி ஒதுங்கியிருக்கிறேன் என்று சொன்னது அதற்காகத்தானோ என்னவோ அதையும் நான் புரிந்துகொள்கிறேன். இப்படி புரிந்து கொள்கிறேன்—இவைகளையெல்லாம் மக்களுக்கு விளம்பரப்படுத்தித் தருகின்ற வகையில், கூடுமான வரையில், அரசின் பணத்தை அதிகமாகப் பயன்படுத்தாமல், எப்படி மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமோ, அப்படி தெரிவிக்க முயற்சிப்பேன். அவைகளையெல்லாம் செய்வேன் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்களுக்கு ரூ. 5,000, ரூ. 10,000 என்று நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். அதே நேரத்தில் இறந்தவர்கள், எந்த நேரத்தில் எப்படி இறந்தார்கள் என்பதையும் கவனிக்க வேண்டிய நியதியிருக்கிற காரணத்தால், எங்களுடைய எண்ணங்களைச் சொல்லி, திட்டங்களாக அதை உருவாக்கும்போது, சில நிர்ப்பந்தங்கள் தவிர்க்கமுடியாமல் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால், சொன்ன வார்த்தைகளிலிருந்து நாங்கள் பின்வாங்கவில்லை. கொடுக்கிறோம் என்று சொன்ன பணம் நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், விரைவாகக் கிடைக்கவில்லை. இறந்தவர்கள் மீனவர்கள்தானா, எந்தச் சூழ்நிலையில் இறந்தார்கள் என்று விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டு, அந்த விசாரணையின் அடிப்படையிலே, உடனடியாக அந்தந்த வகையிலே கொடுங்கள் என்று நாங்கள் சொன்னபொழுது, புதுக்கோட்டை 2 பேர்கள்— இறந்த தேதி 31-5-1977 —ரூ. 1,000 கொடுக்கப்பட்டிருக்கிறது ; நிவாரணம் அளித்த தொகை இது. இராமநாதபுரம்— ரூ. 1,000, திருநெல்வேலி— ரூ. 5,000. அது போல், அங்கேயே இன்னொருவருக்கு ரூ. 1,000. அந்த ரூ. 5,000, அதற்கு முன்னால் இராமநாதபுரத்திலே இந்த ரூ. 2,000 என்றால், அங்கே அவர்கள் நிச்சயமாக மீனவர்கள்தான் அந்த மீனவர்கள் இந்த விபத்தில்தான் இறந்தார்கள் என்ற நிலைமை ஏற்பட்டபிறகு, அதற்குமுன் சொன்னபடி பணம் கொடுத்திருக்கிறார்கள். மற்ற தொகையும் தகுந்த நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே போல், கன்னியாகுமரி, ரூ. 1,000, ரூ. 1,000, ரூ. 1,000, ரூ. 1,000, ரூ. 1,000, ரூ. 1,000 என்று சென்னை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல். தென்னாற்காடு மாவட்டத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த ரூ. 1,000 இறந்துபோன மீனவர்களுடைய குடும்பங்களுக்குத் தருவது என்கின்ற முறை, கழக ஆட்சிக் காலத்திலே;

நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு ஆளாக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த அரசு அந்த அளவை ரூ. 5,000 ஆகத் தருவதாக அறிவித்தது. அதுதான் தரப்படவில்லையென்று நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார். அதற்கு என்ன விளக்கம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மீனவர்கள்தான் இறந்தவர்கள் என்ற நம்பிக்கை வரும்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 1,000 வீதம் 5 மீனவக் குடும்பங்களுக்கு 1-7-1977-க்குப் பின் ரூ. 5,000 வழங்கப்பட்டது. தஞ்சையில், நவம்பர் 1977-ல் ரூ. 42,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திய புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 62,000 கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது போக, எதிர்பாராத விதமாக மின்வல், இடி, தீ விபத்து முதலிய காரணங்களால் இறந்தவர்களின் எண்ணிக்கையும், அவர்களுக்கு இந்த அரசால் ஒதுக்கப்பட்ட தொகையும், 1-7-1977 முதல் இதுவரை, இராமனாதபுரம் 7,500, தென்னாற்காடு 11,000 வடாற்காடு 1,000, நீலகிரி 200, மதுரை 5,000, தருமபுரி 1,000, தரங்கம்பாடி 1,000. எதற்காக சொல்கிறேன் என்றால், நீங்கள்என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள், அறிவித்தீர்களே என்று சொல்கிறபோது, எந்தெந்த வகையில், யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறபோது அவர்களுக்கு அதற்கு ஏற்ப நாங்கள் சொல்லியவற்றை நிறைவேற்ற முற்படுகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

குத்தகைதாரர்களை வெளியேற்றக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் இங்கே சொன்னார்கள். அது கரெக்ட் தான். குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படக் கூடாதுதான். நான் அவர்களுக்குச் சொல்கிறேன், அடுத்த 6 மாத காலத்திற்கு அப்படிப்பட்ட நிலை ஏற்படுத்தக் கூடாது என்று இந்த அரசு கட்டளையிட்டு இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, ஒன்றைச் சொல்வேன். அதைத் தொடர்ந்து எந்த வகையில் எந்தெந்த நிலையில் அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு கொடுப்பது என்பதைப்பற்றி இந்த அரசு நிச்சயமாக சட்டத்தின் மூலம் பாதுகாப்பு கொடுப்பதற்கு முயன்று கொண்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற பாதுகாப்பைப் பற்றிக் குறிப்பிட்டு, இப்போது சட்டத்தின் மூலம் ஒத்திவைத்ததைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மிக்க நன்றி. அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் 81-ம் பசலிக்கு குத்தகை பாக்கி கட்டி

விட்டால் போதும், அதற்கு முன்னாலே எவ்வளவு பாக்கி இருந்தாலும் குத்தகைதாரர்கள் கட்டவேண்டி இருந்தாலும், அவை அத்தனையும் ரத்து செய்கிறோம் என்று இந்த அவை முன் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. அதைப் போல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2 ஆண்டு காலமாக மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இதுவரையில் அவர்கள் தரவேண்டிய குத்தகை பாக்கி அத்தனையும் ரத்து செய்வதற்கு மனம் உவந்து சட்டம் கொண்டுவர ஆவன செய்ய முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கேள்வி கேட்டே பழகிய மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் அதே முறையில் அவர்கள் கேள்வியாக வைத்ததற்கு நான் மகிழ்ச்சியுறுகிறேன். இந்த விவசாயத் துறையில் இருக்கின்ற குத்தகைதாரர்களானாலும் சரி. வேறு வகையில் இருப்பவர்களானாலும் சரி, உழைக்கின்றவர்களானாலும் சரி, பினாமி நிலங்களை ஒழித்து அவர்களுக்குச் சொந்தமாக்கும் வேலையை நாம் முதலில் நிறைவேற்றியாக வேண்டும். இதிலே இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களும் எந்தவித கருத்து வேறுபாடும் இருக்காது என்று நான் கருதுகிறேன. 700 ஏக்கர், 700 வேலி, 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு ஆங்காங்கு பினாமியாக நிலங்களை வைத்துக்கொண்டு, ஏழைகளைப் பயன்படுத்தி, உதவிப் பணம் வரும்போது எல்லாம் அவர்களையே கேட்கச் சொல்லி, அந்தப் பணத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் கொடுமையை நாட்டிலே இருக்கும் மக்கள் இங்கே பல்வேறு வகையில் தெரிவித்த பிறகும், இதை நாங்கள் உடனடியாக அதற்கு ஒரு மாற்று யோசனை, அதற்கு ஒரு நிரந்தரமான முடிவு ஏற்படும் வழிமுறைகளையெல்லாம் நாம் சொல்லி, பேசி, முடிவு எடுத்து சட்டமாக்குவது மிக மிக அத்தியாவசியத் தேவை என்று இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி கருதுகிறது என்பதை நான் இங்கே தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பதற்கும், இங்கே செயல்படுவதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? தேர்தல் அறிக்கையில் சொன்னீர்களே, அவைகளையெல்லாம் நிறைவேற்றினீர்களா என்றெல்லாம் கேட்பதற்கு, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் உள்ளத்தைக் கடினமாக்கிக் கொண்டு கேட்டார்கள். இந்த 6 மாத காலத்தில், இவ்வளவு பேராட்டங்களுக்கு இடையில், நிதிநிலை பற்றாக்குறை இருக்கின்ற நேரத்தில், ஏறத்தாழ இங்கேயிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் சொன்னது போல வெள்ள நிவாரணத்திற்கு புயலால் ஏற்பட்ட துன்பங்களைப் போக்குவதற்கு,ஓரளவுக்குப் போக்குவதற்கு 200, கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லுகின்ற அளவில் இருக்கும்

போது, கணக்குப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மற்றவர்கள் தருகின்ற விவரத்தை எடுத்துக்காட்டி தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கின்ற அமைச்சரவை, அதை எடுத்துச் சொல்லி எவ்வளவு கிடைக்கும் என்று நாங்கள் முயன்று கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்த பினாமிகளை நீக்காமல், பினாமிகளை ஒழிக்காமல், உண்மையாக நிலத்துக்குச் சொந்தக்காரனை இன்றைய தினம் நிலமில்லாதவன் ஆக்கப்பட்டாலும், அது ரெக்கார்டுகளில் இருக்குமே தவிர, உண்மையில் உரிமை இல்லாத நிலையில் அடிமை வாழ்வு நடத்துகின்ற அவர்களுக்கு விடுதலை வாங்கித்தராது என்பதால், அப்படி அவர்களுக்கு விடுதலை வாங்கிக்கொடுக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டியது, நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது உறுதியான கடமையாகும் என்று நான் கருதுகிறேன். நல்லெண்ணத்துடன் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்திருந்தாலும், அதை நிறைவேற்றும் வகையில் யாராவது உண்மையிலே செயல்படுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. இன்னமும் பெரிய பணக்காரர்கள், மிட்டா மிராசுகள் தங்கள் கையில் நிலத்தை வைத்துக்கொண்டு, அடிமை வாழ்வு நடத்தும்படியாக விவசாயிகளை வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்தும், எப்படிச் செயல்படுத்துவது என்று தெரியாமல் திகைக்கின்ற நிலையில் இருப்பதால், அதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, இப்படித்தான் இருக்க வேண்டும், இதைத்தான் இந்த நாடு செயல்படுத்தியாக வேண்டும் என்று ஒருமுகத்தோடு, ஒருமனதோடு ஒன்றுபட்டு நிறைவேற்றத் துடித்தோமேயானால், செயல்பட இறங்கினோமேயானால், அரசும், எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து இவைகளில் கவனம் செலுத்துவோமேயானால், நிச்சயமாக பினாமிகளை ஒழித்து, இந்த நாட்டில் உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என்கின்ற நிலைமையை, நல்ல நிலைமையை, உருவாக்க முடியும் என்பது எங்களின் திடமான நம்பிக்கை. அந்த வகையிலே செயல்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

இன்னும் நிறையப் பிரச்னைகள் இருக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பிறகு நேரமிருந்தால் அவைகளில் சிலவற்றை கோடிட்டுக் காண்பிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகவே, நான் மேலெழுந்தவாரியாக பேச வேண்டிய நிலைமைக்கு நேரம் ஆளாக்கியிருக்கிறது.

ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளும் போது குடிசைகள் அடித்துக்கொண்டு போகப்பட்டு விட்டன. குடிசையிலிருந்த பொருட்கள் எல்லாம் போய்விட்டன. குடிசைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன என்றெல்லாம் சொல்லும்போது, குடிசைகளைக் கட்டிக் கொடுப்போம் என்கின்ற எண்ணத்தில் திட்டம் தீட்டுகிறோம். ஆனால்,

கட்டிடத்தில் வசிக்கிறவர்கள், அவர்களில் ஒரு நண்பர் என்னிடம் சொன்னபடி, முன்பு அவர்கள் பணக்காரர்களாக இருந்திருக்கலாம். இன்றைய தினம் வேலையில்லாமல், ஏழைகளாகி, கட்டடம் மட்டும்தான் அவர்கள் பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறதே தவிர, அந்தக் கட்டடமும் எப்போது இடிந்து விழும் என்ற ஆபத்தை இந்தப் புயலும் வெள்ளமும் உருவாக்கியிருக்கிறது என்று அவர்கள் சொல்லும்போது நாங்கள் அலட்சியப் படுத்த முடியாது. ஆகவே, அதற்கு என்று திட்டம் தீட்டி, அதற்கு எந்த வகையில், வங்கியிலிருந்தோ அல்லது வேறு வகையிலோ, பணம் கொடுக்க ஏற்பாடு செய்வது என்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கே புயல் நிவாரணத்தைப் பற்றி பேசும்போது, ஆங்காங்கு குறைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்குப் பெயர் ஊழல் என்றாலும் சரி, தவறுகள் என்றாலும் சரி, குறைகள் என்றாலும் சரி. பாதிக்கப்பட்ட இடங்களில் என்னென்ன வேலைகள் நடைபெறவேண்டுமோ, அவை நடைபெற்றனவா என்றார்கள். முதலமைச்சர் விமானத்தில் சுற்றிப் பார்த்தால் போதுமா, பிரதம அமைச்சர் அவர்களுக்கு வரைபடத்தைக் காட்டினால் போதுமா என்றெல்லாம் சொன்னார்கள். நான் பணிவோடு மீண்டும் சொல்கிறேன். யுத்த காலத்தில் ஒரு நாட்டைப் பிடிக்க வேண்டும் என்று திட்டம் தீட்ட, அல்லது நம் எல்லையைக் கட்டிக் காத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிற ராணுவ தளபதி, ராணுவ அதிகாரி போய் பார்ப்பது உண்டு. எப்படி எப்படி இருக்கவேண்டும் என்று சொல்வதுண்டு. நான் மறுக்கவில்லை. எப்படி யுத்தம் தொடங்குவதற்கு முன்பு, போர் தொடங்கிய பிறகு கட்டளை எப்படி பிறப்பிக்கப்படுகிறது என்று வரைபடத்தைப் பார்த்து இங்கிருந்து இத்தனை மைலில் இந்தப் படை இந்த எண் உள்ள படை, அங்கே போய்க் கொண்டிருக்கிறது, அங்கே இன்ன இடைஞ்சல் உள்ளது என்று, விமானப்படையை அனுப்பு, டாங்கிப் படையை அனுப்பு, இல்லை போர் வீரர்களை அனுப்பு என்று இப்படி எல்லாம் திட்டமிட்டு சொல்வதைப் பார்க்கிறோம், படிக்கிறோம். நான் என்னை ஒரு பெரிய ராணுவ தளபதி என்று சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நான் சென்னையிலிருந்து உடனடியாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ அவைகளுக்கு கட்டளையிடுவதுபோல், உத்தரவு போட வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன் என்பதையும் தண்ணீரில் இறங்குவதற்கோ, மழையில் நனைவதற்கோ நிச்சயமாகக் கவலைபடுபவன் நான் அல்ல என்பது எதிர்க்கட்சித் தலைவர் நமது கலைஞர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

திருச்சியில் மாநாடு நடந்தபோது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. மாவட்ட மாநாடு என்று கருதுகிறேன். அந்த மாநாட்டில் திடீரென்று மழை வந்து மழையில் நனைந்து விழுந்த பந்தலைத் தாங்கிப் பிடித்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன், தாய்மார்களை எல்லாம் பாதுகாத்து ஒரு இடத்திற்கு அனுப்புகிற வகையில் நண்பர் அன்பில் தர்மலிங்கத்துடன் நா[illegible] நின்று கொண்டிருந்தவன் என்பதையும், மழை பெய்து கொண் டிருக்கிறபொழுதே நிவாரணப் பகுதிகளுக்குச் சென்று அரிசி மூட்டை வாங்கிக் கொடுத்தவன் என்ற முறையிலும், தொண்டர்களுக்கு தொண்டராக வேலை செய்வேன் என்று இன்னும் நம்பிக்கையிருக்கிறது. நான் பயப்பட்டுக் கொண்டு போகாமல் இருக்கவில்லை.

விமானத்தில் சுற்றிப் பார்த்த பிறகு திருச்சியில் இறங் கினேம். திருச்சியில் இறங்கி செல்லவேண்டும். வெள்ளப் பகுதியைப் பார்க்கவேண்டுமென்று சொல்லும்பொழுது அந்தப் பகுதிக்குப் போக வழியில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் களும் மற்றவர்களும் சொன்ன பிறகு வேறு வழியின்றி ரெவி னியூ போர்டு மெம்பர் நடராஜன் அவர்களை அழைத்து பொறுப் பை அவரிடம் ஒப்படைத்து, தலைமைச் செயலாளரும் இருந்தார் கள், ராணுவ அதிகாரியையும் வைத்துக் கொண்டு ஒரு எண்ணத் தைச் சொன்னேன். நீங்கள் திட்டமிட்டு செயல்படவேண்டு மென்ற கருத்தைச் சொன்னேன். முதலில் லாரியானாலும் சரி, ஜீப் ஆனாலும் சரி, ராணுவ வண்டிகளானாலும் சரி, அதை உடனே பெற்று முதலில் இடத்திற்குப் போய் சேருவதற்கு என்ன வசதிகளைப் பெறவேண்டுமோ அந்த வசதிகளைப் பெறக் கூடிய கருவிகளை அந்த முதல் வண்டியில் வைத்து போக வேண்டும். இரண்டாவது, உணவு கொண்டு போகவேண்டும். சமைத்துக் கொண்டு போகாதீர்கள், ரொட்டி பிஸ்கட் போன்ற வைகளைக் கொண்டு போங்கள். கொடுக்க வேண்டியதற்கு அதிகமாகக் கொண்டு போங்கள், மிச்சப்பட்டால் திரும்பிக் கொண்டு வந்துவிடலாம், பற்றாக்குறையில் போகாதீர்கள் என்று சொன்னேன். அதற்கடுத்த வண்டியில் மருத்துவர்கள் செல்ல வேண்டும், தடுப்பு ஊசி போடவேண்டும், அவர்களுக்கு பாது காப்பு கொடுக்கவேண்டுமென்று சொல்லி, அதற்கடுத்தபடி யாக அங்கிருப்பவர்களை திரும்ப வேறு பாதுகாப்பான இடத் திற்கு கொண்டுவரும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டிய பொருள்களை, கருவிகளை வைத்துக் கொள்ளுங்கள், அதையே எடுத்துச் செல்லுங்கள் என்று பிரித்துக் கொடுத்து தஞ்சையில் நாகைக்கும், வேடசெந்தூர் பகுதிக்கும் போவதற்கு எந்த எந்த வழிகளைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்து 1, 2 நாட்களில் அங்கிருந்து தகவல் வந்ததும், அமைச்சர்களை ஆங்காங்கு பிரித்து அனுப்பி வைத்தேன்.

தென்னாற்காடுக்கு நமது ஒர்க்ஸ் மினிஸ்டர், கரூருக்கு ஹரி ஜனத்துறை அமைச்சர், வேடசெந்தூர் பகுதிக்கு அமைச்சர் காளிமுத்து, தஞ்சாவூருக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் [illegible]

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இங்கே சொன்னார்கள். பெயரைக் குறிப்பிட எனக்கு ஆட்சேபனை இல்லை. நண்பர் ஜெய்சங்கர் ஏதோ என்னைப் பார்த்து பணம் கொடுக்க வந்ததாகவும் நான் வாங்க மறுத்து விட்டதாகவும் சொன்னார்கள். இது எனக்கு திகைப்பாக இருக்கிறது. பணம் எங்கிருந்து எப்போது கொடுத்தாலும் வாங்கவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிற நான் பணம் கொண்டு வந்து கொடுப்பவர்களை அலட்சியம் செய்து திருப்பி அனுப்புவது என்ற அந்த நிலைக்கு எப்படி வரமுடியும் என்று கற்பனை செய்கிறார்கள் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

[மாலை 5-20]

நான் சொன்ன நேரம் 10.30. 11 மணி அளவில் தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும், மரியாதைக்குரிய பெரியவர் பீ. ஆர். போன்றவர்களை வரவழைத்துப் பேசிக் கொண்டிருக்கிற நேரம். அவருக்கு 11 மணி நேரம் என்று குறித்திருந்தேன். ஆனால், ஜெய்சங்கர் வந்தது 11.15 மணிக்கு மேல். இங்கே நான் எப்படிப் பணத்தைச் சேர்ப்பது, தொழிலாளர்களிட மிருந்து எப்படிப் பணத்தைக் கேட்பது, யார், யார் எந்தெந்த பொறுப்பை ஏற்பது என்று பேசிக்கொண்டிருந்த காரணத்தால் சொல்லி அனுப்பினேன். நிதியமைச்சரைப் பார்த்துக் கொடுக் கச் சொல்லுங்கள். 10.30-க்கு நேரத்தை ஒதுக்கி, 11.15-க்கு வந்து, நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது அவர்களை உள்ளே அழைத்தால், உட்கார்ந்திருப்பவர்கள், உட்கார வைக்கப்பட்டிருப்பவர்கள்—அப்படி மரியாதையோடு அவர்களை நடத்துவது என்று அவர்கள் நினைப்பார்கள் என்பதில் வேறு அச்சம் இருந்தது. இவைகளை முடித்துவிட்டு, வேறு பல நண்பர் களைப் பார்க்க வேண்டி இருந்ததால், நான் இதைச் சொன்னேன். அவர் அங்கே போகாமல், நான் மறுபடி எப்போது நேரம் சொன்னாலும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடுவேன் என்று எண்ணினாரோ என்னவோ, அதற்குப் பிறகு, எனக்கு எந்தவித தகவலும் கிடையாது. தொலை பேசியிலும் கிடையாது. அன்பர்களுக்கும் சொல்லவில்லை. இங்கே வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும் இல்லை. நடிகர்கள் மூலமாகவும் எனக்கு எந்தவிதமான தகவலும் கொடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல. நான் முதலமைச்சரானேன் என்பதற்காக விழா எடுத்தது நடிகர் சங்கம். அந்த மாபெரும் மாநாட்டில் லட்சக்கணக்கான மக்களுக்கு முன்னால், எனக்கு மிகப் பெரிய மாலையை, என் வாழ்க்கையிலேயே நான் பெற்றுக் கொள்ளாத ஒரு மாலையை கொண்டு வந்து போட்டு, எனக்கு நன்றி சொல்லி வணக்கம் தெரிவித்தார் ஜெய்சங்கர் அவர்கள். அவர்களைப் பற்றி, நான் இப்படிப்பட்ட ஒரு கருத்து கொள்ளுவதற்கு என்ன நியாயமிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

அது மட்டுமல்ல. அவர் தஞ்சைக்குப் போனபோது, அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதைப்பற்றி இங்கே மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூட சொல்லி இருக்கிறார்கள். நான் விளக்க விரும்பவில்லை. ஒன்றைச் சொல்லுவேன். அவர் தானாகச் சென்று, அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளாமல் கொண்டு போய் கொடுத்ததன் விளைவாக எத்தனை துணிகள் வரும், எத்தனை கிடைக்கும் என்று நம்பி வந்தவர்கள், கொடுக்க முடியாமல் போனவர்கள், அவர்கள் வந்த பிறகு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்ற செய்தி மட்டும்தான் எனக்கு வந்தது. விளைவுகள் மோசமாக உருவாக்சப்படவில்லை. அதுவரை எனக்கு மகிழ்ச்சி.

இவைகளைச் சொல்லுவதற்குக் காரணம் அமைச்சர்கள் மீது குற்றம் காணுவதை நாங்கள் யாரும் வெறுக்கவில்லை. அவர் சொல்லுவது தவறு, சொல்லவே கூடாது என்று நான் எண்ணுகிறவன் அல்ல. ஆனால் சொல்லும்போது, தயவு செய்து நேர்மையோடு சொல்லுங்கள். உங்களுக்கு யாராவது தவறாக தகவல் கொடுத்திருந்தால் அதை நன்றாக விசாரித்துத் தெரிந்து கொண்டு சொல்லுங்கள் என்பதுதான் என் வேண்டுகோள். அரிசன நலத்துறை, வேளாண்மைத் துறை இருக்கிறது. இதுபோன்ற பல்வேறு துறைகள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி எல்லாம் புள்ளிவிவரங்கள் சொல்லிக் கொண்டிருப்பதை விட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, நானே முதல் இந்தத் தமிழக அரசு—இந்த ஆறு மாதங்களில் என்னென்ன சாதனைகளைச் செய்தது, என்னென்ன கடமையைச் செய்ய முடிந்தது, அதை எப்படிச் செய்தது என்பதை விளம்பரப்படுத்துவதில் அக்கறை காட்டாமல், அரசு எப்படிச் செயல்பட்டது என்பதைச் சொல்ல இது எனக்கு நல்லதொரு வாய்ப்பை தந்திருக்கிறது. இன்னமும் எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பிறகு, எனக்கு சில புள்ளிவிவரங்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பு கிடைக்குமானால், அவர்கள் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு மேலும் பேச வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அதிகமாக நீட்டிக்கொண்டு போகாமல், அந்தப் புள்ளிவிவரங்களைப் பின்னால் சொல்லுகிறேன் என்று கூறிக்கொண்டு, தவறுகள் இருந்தால் எடுத்துக்காட்டுங்கள்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்லுவேன். ஒரு பி.டி.ஓ. அவர்கள் என்ன செய்திருக்கிறார் என்றால், எங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை அழைத்து, நீங்கள் ஏன் பேசாமலிருக்கிறீர்கள், நீங்கள் ஒரு காண்டிராக்ட் எடுங்கள், நான் அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் சொல்லி இருக்கிறார், அது கூடாது, அப்படிச் செய்யக் கூடாது என்று. இல்லை, இல்லை. நீங்கள் சொல்லலாமா? முன்னால் இருந்தவர்கள் கூடாதென்று சொல்லுகிறார்களே தவிர, நீங்கள் சொல்லலாமா? எழுதிக் கொள்ளுங்கள் என்ற

கொடுத்ததாக தகவல் வந்தது. அப்படி எழுதிக்கொடுக்க வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து, அப்படிப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதை இங்கே நான் தெளிவுபடச் சொல்லிக்கொள்கிறேன்.

இப்படி எனக்கு தருகின்ற எவைகளையும், எந்த கோரிக்கைகளையும், குற்றச்சாட்டுகளையும் நிச்சயமாக நான் கண்டிப்பாக விசாரித்து, இப்படிப்பட்ட அதிகாரிகள் எப்படி, எதற்காகச் செய்கிறார்கள் என்பதை நான் கவனித்து, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்களே அவர்கள் இருக்கும்போது கோப்புகள் எதையும் கையெழுத்துப் போட்டு, உடனே ஆளுநருக்கு போய்விடும், ஆனால் இன்று போகவில்லை என்றால் ஏன் போகவில்லை, அதை கவனியுங்கள் என்று சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன். இது எனக்கு திகைப்பாக இருக்கிறது. நான் மதிய உணவிற்குப் போகிறபோது 'ஏன் போகவில்லை' என்று கேட்டேன். அது இன்னும் ஆளுநருக்கு போகவில்லை; இங்கே தான் இன்னும் பரிசீலனையில் இருக்கிறதென்று கூறினார்கள். ஆனால் ஆளுநரிடம் போகவில்லை என்று* எதிர்க்கட்சித் தலைவருக்கு தகவல் வருகிறதென்று சொன்னால் அது எப்படி வருகிறதென்று எனக்குப் புரியவில்லை. இப்படி தாமதமாகிறது என்ற உண்மையை தெரிந்துகொள்வதை நான் தவறென்று சொல்லவில்லை. ஆனால் இப்படி ஒரு ஃபைல் போகவில்லை என்று வெளியே தகவல் போகிற அளவிலே அதிகாரிகள் இருப்பார்களேயானால், நான் வேதனையோடு கேட்கிறேன். தமிழகம் முழுவதும் எத்தனை பேர்கள் இருப்பார்கள். அத்தனை பேர்களையும் நாங்கள் நம்பித்தான் திட்டம் போட வேண்டியிருக்கிறது.

<u>*திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, காலையில் கூட அவை முன்னவர் தவறாகப் புரிந்து கொண்டு ஒன்றைச் சொன்னார்கள். அதை மேலும் வளர விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஏதோ கவர்னர் அலுவலகத்திலே, ஆங்காங்கே எனக்கு தகவல் கொடுக்கிறார்கள் என்கிற வகையில் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. 31-ம் தேதி அன்று முதல்வர் அவர்கள் 'ஆளுநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்; அது இங்கே வைக்கப்படும்' என்று சொல்லிய காரணத்தால் ஆளுநருக்கு அது அனுப்பப்பட வேண்டுமா என ஒரு பிரச்சனை; ஆளுநரேதான் இந்த கமிஷனைப் போட்டார். அப்படியிருக்க அது ஏன் இன்னும் அரசிற்கு அனுப்பப்படவில்லை என்ற தகவலை கவர்னர் மாளிகையிலிருந்து தெரிந்துக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிமை உண்டென்ற அடிப்படையிலே தான் அதை விசாரித்தேன். ஆகவே அங்கேயிருந்து யாரோ தகவல் கொடுக்கிறார்கள், கொடுக்கிறார்கள் என்று தவறாக கருதவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 சனவரி 7

உண்மையிலேயே நாங்கள் எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறோம். காரணம், சில சமயங்களில் நெளிந்து கொடுத்துச் செல்வதாலே, அதை பலஹீனம் என்று கருதி விடக் கூடாது, என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல, நாங்களும், வளைந்து கொடுக்கிறோம் என்பதாலே கையாலாகாதவர்கள் என்று யாரும் கருதி விட மாட்டார்கள் என்று மட்டும் நிச்சயமாக கருதுகின்றேன்.

இங்கே சொல்லப்படுகிற, சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் முழுமையாக, புள்ளி விவரங்களைச் சொல்லி நேரத்தை நீட்டிக்க விரும்பவில்லை. வேளாண்மைத் துறையிலேயும், செய்தி-சுற்றுலாத் துறையிலேயும், மின் துறையிலேயும் பொதுப்பணித் துறையிலேயும், உள்ளாட்சித் துறை, சமூக நலத்துறை, மற்றும் எந்தத் துறையாக இருந்தாலும் எங்களுடைய கடமைகளை ஒட்டுமொத்தமாக எந்தெந்த வகையில் செய்து இருக்கிறோம் என்பதற்கு புள்ளி விவரங்களைக் கோடிட்டுக் காண்பித்திருக்கிறேன்.

மீண்டும் இந்த அவைக்குச் சொல்கின்றேன், மாதத்திற்கு நான்கைந்து போராட்டங்கள் அல்லது ஏழெட்டு போராட்டங்கள் வெவ்வேறு வகையான போராட்டங்கள் ஆகியவற்றை சந்திக்க வேண்டிய நிலையில், நான் இன்று இங்கு இவ்வளவு நேரம் $1\frac{1}{2}$ மணி நேரம் பேசிவிட்டு மறுபடியும் பதில் சொல்லத் தயாராக இல்லாமல், மேலும் மற்ற கையெழுத்துப் போட வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது 6 ஆயிரம் பேர்கள் வந்திருக்கிறார்கள், பேராசிரியர்கள்—ரூ. 700-க்குக் கீழே சம்பளம் வாங்குகிறவர்கள் இடைக்கால நிவாரணம் ரூ. 10 வாங்க ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். ஆகவே, பார்க்க வேண்டும் என்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் தொழிலாளர்களைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை, தொழிலாளர்கள் எங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பேராசிரியர் அவர்களும், என்னையொட்டி அவர்கள் வரவில்லை, அவர்களையொட்டி நான் பேசினேன் என்று சொல்லுகிறார்கள். அப்படியிருந்தாலும் சரி இப்படியிருந்தாலும் சரி நானும் அந்தக் கட்சியில் இருந்தவன்தான்.

ஆகவே, சொல்கிற கருத்துக்கள் நல்லவிதமாகப் பயன்படுகின்றன என்றால் அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் எப்படி சாத்தியம் என்று சிந்திக்க முன்னாள் அமைச்சர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அதுவும் இந்த நேரத்தில், பற்றாக்குறை பட்ஜெட் உள்ள நேரத்தில், அதிலும் வாழ்வு இழந்து இடக்கிற, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் வசதி செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட கோரிக்கைகள் வருவது மிக மிக அவசியந்தானா? நாலைந்து மாதங்கள் கழித்து இதைக் கேட்கக் கூடாதா? இடைக்கால பத்து ரூபாய் நிவாரணத்தால் எவ்வளவு வசதியைப் பெற்றுவிட முடியும் இந்த நகரில் என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்தால் அவர்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கவேண்டும் என்ற நிலைமையில்தான் எல்லோருடைய உள்ளத்திலும் அந்த எண்ணம் பிறக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அவர்களுக்கு நிறையப் பேசுவதற்கு இருக்கிறது, எல்லோருக்கும் பதில் சொல்லி, நான் சொல்லிய பதிலில் குறை இருந்தால் அதற்கு மாற்று சொல்லி, அவர்கள் சொல்லியது நியாயந்தான், தீர்மானம் கொண்டுவந்தது சரிதான் என்று அதற்கு ஆதாரங்கள் காட்டிச் சொல்லவேண்டிய வாய்ப்பும் அவர்களுக்கு வேண்டியிருப்பதால் அதற்குப் பிறகு இன்னும் சொல்லித்தான் அவர்கள் உள்ளத்தில் நாங்கள் என்னென்ன செய்தோம் என்று பதிய வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டால் மீண்டும் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொல்லி கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1978 சனவரி 7] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் விளைவாக நாட்டு மக்களுடைய கவனம் முழுவதும் இங்கே ஈர்க்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. இரண்டு நாட்களில் முடிந்துவிடும், இல்லை, மூன்றாம் நாள், அப்பா! இன்றுதான் கடைசி நாள் என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது. இந்த அளவிற்கு இந்தப் பேச்சு நீளுகிறது, கருத்துக்கள் வெளிவருகின்றன என்பதால் இங்குள்ளவர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வேன், இங்கே பேசியவர்கள் எல்லோரும்—நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களைப் பற்றிச் சொன்னேனே அதேபோல் அமைதியாக பேசியிருப்பதை, அவர்களுக்கு இருப்பதை வேறு யாராவது நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று எடுத்திருக்கலாம், எடுத்து அவர்கள் என்ன சொல்லியிருப்பாரோ அதேபோல் நானும் பேசமுடியாதா என்று யாராவது பேசியிருக்கலாம், ஆனால் அவைகளைப் பொருள்படுத்தாமல் அந்த வார்த்தைகளிலுள்ள கடுமைகளைக் கூட பொருள்படுத்தாமல் கருத்துக்களில் இருந்து வருகிற உண்மையை, நியாயத்தை மனதிற்கொண்டு நாம் ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று சொல்லும்போது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களைப் பாராட்டி நன்றிகூறும்போது தன்னுடைய உள்ளக்கிடக்கையில் இருக்கிற அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் எங்களை உன்னிப்பாக அக்கறையோடு செயல்படுவதற்கு ஒவ்வொருவரும் அவர்கள் கடமையைச் செய்திருப்பதற்கு நன்றி கூறி அவர்கள் பேசி முடிந்த பிறகு இறுதியாக என் கருத்தைச் சொல்லுகிறேன் என்று கூறி அமைகிறேன்.

*திரு. மு. கருணாநிதி: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கொண்டு வந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தையொட்டி இறுதி நாளாக விவாதம் நடைபெற்று முடிவுறுகிற இந்தக் கட்டத்தில் மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒரு மாமன்றத்தில் கொண்டுவருவது என்பது அதிசயமான ஒன்றல்ல என்பதையும் மாமன்ற விதிமுறைகளால் தரப்பட்டுள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக அதனை ஏற்றுக்கொள்கிறது என்பதனையும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோதே நான் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் எத்தனையோ அமைச்சரவைகள் மாறி மாறி இருந்திருக்கின்றன என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்த அமைச்சரவைகள் மீதெல்லாம் முறையோடு கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு முடிவுற்றிருக்கின்றன என்பதும் இந்த அவையினுடைய வரலாற்றுப் புத்தகம் நமக்கு எடுத்துக்காட்டுகிற ஒரு செய்தியாகும். முறையற்ற தன்மையிலே வருகின்ற எந்த ஒரு தீர்மானமானாலும் அதை அவை நிராகரிக்கும் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல.

எனவே, முறையோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் ஆராய்ந்து பார்த்த பிறகு அதை முன் மொழிய எத்தனை பேர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்கின்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டு அதற்கு பிறகு அலுவல் ஆய்வு குழுவில் அமர்ந்து ஆராய்ந்து நேரம் கணிக்கப்பட்டு விவாதம் வளர்ந்த காரணத்தினால் நேரம் கொஞ்சம் நீடிக்கப்பட்டு இந்த தீர்மானத்தின் மீது எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சியில் இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். அன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த பிரதான எதிர்க்கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகிற நேரத்தில் மானம் மரியாதையிருந்தால் உடனடியாக இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்ய வேண்டும் என்கின்ற கடுமையான சொற்றொடர்களை கூறி முடித்திருக்கிறார்கள் என்பதை அவை நடவடிக்கை குறிப்பை எடுத்துப்பார்த்தால் அவைகளை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

நான் துவக்கத்தில் எடுத்துக்காட்டியதைப் போல், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததையொட்டி இந்த அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடவோ அல்லது அதிகமான வாக்குகளைப் பெற்று இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடோ, கொண்டு வரப்படவில்லை என்று சுட்டிக் காட்டி விட்ட காரணத்தினால், முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது மானம் மரியாதை இருந்தால் ஒழுங்காக ராஜிநாமா செய்யுங்கள் என்று சொன்னதை போன்ற வார்த்தைகளை நாங்கள் பயன்படுத்த தேவையில்லை பயன்படுத்தவும் மாட்டோம்—பயன்படுத்தவில்லை என்பதை இந்த அவைக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் உள்ள, குறிப்பாக ஜனதா கட்சியைத் தவிர மற்றவர்கள் அனைவருமே, திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்கிற சொல்லை பயன்படுத்தி தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் எதிர்க்கிறோம் என்றும் சொல்லாமல், ஆதரிக்கிறோம் என்றும் சொல்லாமல் இந்தத் தீர்மானத்தை பயன்படுத்திக்கொண்டு அரசு எவ்வகையில் தங்களுடைய பாதையை செப்பனிட்டுக் கொள்ளவேண்டும், எவ்வகையில் அந்த வழி செம்மையாக இருந்திட வேண்டும், எந்தெந்த குறைகள் களையப்பட வேண்டும் என்கின்ற கருத்துக்களை எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்காட்டியதோ, அதைப்போலவே ஜனதாக் கட்சியை சார்ந்தவர்களும் அவர்களுடைய கொள்கைகளுக்கேற்ப தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றை நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு கவனிக்கிறேன். நண்பர் ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக் காட்டியது போல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு காலத்தில் தோழமைக் கட்சிகளாக ஆக முடியும் என்று எண்ணுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையின்மை தீர்மானமோ என்று ஐயுறுகின்ற அளவுக்கு இந்தத் தீர்மானத்தின் மீது பேசியவர்கள் மிகக் கடுமையாக விமர்சித்ததை இந்த மாமன்றமும் நன்கு அறியும், நாட்டுக்கும் நன்கு தெரியும்.

ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். ஆறு மாத காலத்திற்குள்ளாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவைதானா, அதை திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே கொண்டு

வரலாமா என்கின்ற பிரச்சினையை பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். இதற்கு இந்த அவையில் முன் மாதிரி இருக்கிறது என்பதை இன்று காலையில் பேசிய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் கூட எடுத்துக் காட்டினார்கள்.

ஆனால், அதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு என்று சுட்டிக் காட்டினார். நான் அந்த விதிவிலக்கிற்குள் நுழைய விரும்பவில்லை.

1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து, அதற்கு முன்பு கேரள மாநிலப் பகுதிகளும், ஆந்திர மாநிலப் பகுதிகளுமாக ஒருங்கிணைந்த சென்னை ராஜதானி, சென்னை ராஜ்யம் என்று அந்த பகுதிகள் இணைந்த ஒரு மாநிலமாக நம்முடைய தமிழகம் இருந்தபோது, மாநில அளவில் மொழிவாரியாக அவைகள் பிரிக்கப்பட்டு, மொழிவாரி மாநிலம் என்ற வகையிலே, மாநிலங்கள் ஒரு தனி ஸ்டேட் என்கிற அந்த உரிமையைப் பெற்று, 1957 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று முடிந்து, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் அமைச்சர் அவை 13—4—1957 ஆம் ஆண்டு தோன்றுகிறது. அப்படி 13-4-57 அன்று தோன்றிய காமராஜ் அவர்களுடைய அமைச்சர் அவையை எதிர்த்து 28—10—57 அன்று 6 மாத காலத்தில் என்னுடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த மன்றத்திலே முன்மொழிந்தார்கள் என்பது அவைக் குறிப்பிலே காணக்கிடக்கின்ற ஒரு தகவல் ஆகும்.

அது மாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகு, 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி நான் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். 10 ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொள்கிறேன், இந்த மன்றத்திலே அதற்கு 15 நாட்கள் கழித்து, 25 ஆம் தேதி இந்த அமைச்சர் அவையின் மீது காங்கிரஸ் கட்சி ஒரு கண்டனத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தது. மாதக் கணக்குகூட இல்லை; நாள் கணக்கில், அதுவும் அண்ணா அவர்களை இழந்துவிட்டு, எப்படி அந்த ஆட்சிச் சக்கரத்தை சுழற்றப் போகிறோம் என்று தவித்துக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த நேரத்தில், எண்ணி 15 ஆம் நாள் இந்த அமைச்சர் அவையின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் இந்த மாமன்றத்தில் வந்திருக்கிறது. அப்படி வரலாமா என்று நான் கேட்கவில்லை. அப்படி வரலாமா என்று கேட்டவர்களுக்கு, ஏற்கனவே முன் உதாரணங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காகச் சொல்கின்றேனே அல்லாமல், அவற்றையெல்லாம குறைகூற விரும்பவில்லை.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றும் தோழமை கட்சிக்காரர்கள், இவர்கள் எல்லாம் பேசுகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த

போது, என்னென்னத் தவறுகளை செய்தது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டுவதற்குத் தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் தங்களுடைய நேரத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் ஒன்றை நான் நன்றி உணர்ச்சியோடு பாராட்டுவேன். அவர்களுடைய பேச்சிலே பெரும் பகுதி, இந்த அரசுக்கு அவர்கள் சொல்லவேண்டிய அறிவுரைகளை, தர வேண்டிய எச்சரிக்கைகளை ஆளும் கட்சிக்கு தோழமைக் கட்சிக்காரர்களும், மற்றுமுள்ள எதிர்க்கட்சிக்காரர்களும் தந்தமைக்காக நான் அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறிக் கொள்கிறேன். அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தங்களால் முடிந்த அளவுக்குத் தாக்கினார்கள். அதற்காகவாவது குறைந்தபட்சம் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்த எனக்கு ஒரு நன்றியாவது தெரிவித்திருக்கலாம். அதைக்கூட அவர்கள் தெரிவிக்க மனம் இல்லாமல் போய் விட்டார்கள் என்பதை எண்ணி நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

ஒரு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதை நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இன்றைக்கு ஆளும்கட்சியிலே இருக்கின்றவர்கள் அன்றைக்கு எடுத்த முயற்சிகளையெல்லாம் கடந்த கால வரலாறு நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு பிளவு ஏற்பட்டு, அதன் காரணமாக ஒரு அமளி தோன்றி, அதன் பிறகு, அந்த அடிப்படையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் நாட்டில் எந்த அளவிற்குப் பெருகின. எத்தனை பேருந்துகள் உடைக்கப்பட்டன?

[மாலை 5-50]

எத்தனையோ லாரிகளும், பேருந்து வண்டிகளும் என்னுடைய இனிய நண்பர், இன்றைய முதலமைச்சர் படத்தை ஒட்டிக் கொண்டால்தான் தெருவிலே போகலாம், சாலைகளிலே ஓடலாம் என்ற அளவுக்கு வழிமறித்துத் தாககப்பட்டன. அன்று அமைச்சராக இருந்த மன்னை நாராயணசாமி இராமநாதபுரம் கூட்டங்களுக்குச் சென்றபோது எப்படி தாக்கப்பட்டு காயமுற்றார்கள்? நாங்கள் சென்ற இடங்களில் எந்த அளவுக்கு அமளிகள் நடைபெற்றன என்பதையெல்லாம், கடந்த காலத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் அவைகளையும் இணைத்துப் பார்க்க வேண்டுமென்று கடந்த காலத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரணி நடத்தப்பட்டது—திராவிட முன்னேற்றக் கழ
ஆட்சியை எதிர்த்து. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பின
வீட்டுக்கும் ஊர்வலங்கள் எடுக்கப்பட்டன. 'இந்த அர
லஞ்ச லாவண்ய அரசு நீ இந்த அரசில் சட்டமன்ற உறு
பினராக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழக சட்ட
மன்ற உறுப்பினராக இருந்தால் நீயும் அந்த லஞ்ச லாவண்
யத்திற்கு ஒப்புதல் தருகிறாய் என்று பொருள்; எனவே
அந்தக் கட்சியிலிருந்து விலகி விடு' என்ற அளவுக்கு
எம்.எல்.ஏ.க்கள் வீடுகளுக்கு மனுக்கள் தருகிற வகையில் எல்லா
எம்.எல்.ஏ. க்கள் தொகுதிகளிலும் 170 எம்.எல்.ஏ.க்களுடைய
வீடுகளுக்கும் அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக நண்பர்கள் ஊர்வலம் எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

பேரணி எடுத்து இங்குள்ள கவர்னரிடத்தில் புகார் மனு தரப்
பட்டது. அந்தப் புகார் மனு வரலாறு என்னவென்றால்—
திராவிட முன்னேற்றக் கழகத்திலே கழகப் பொருளாளர் வெளி
யேற்றப்பட்ட பிறகு, அவருடைய ஸ்டுடியோவில் பல கூட்டங்
களில்பேசிய நேரத்தில் பேசியதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி
வந்தது. அப்போது கழகப் பொதுக் குழு நடைபெற்றுக் கொண்
டிருக்கிறது. அவர் பேசியதாக சுதேசமித்திரன் பத்திரிகையில்
வந்த செய்தி என்னை வெளியேற்றிய இந்த மந்திரிகளுடைய
ஊழலை அம்பலப் படுத்துவேன்' என்று பேசியதாக கொட்டை
எழுத்தில் மித்திரன் பத்திரிகையில் செய்தி வந்தது. அந்த
பத்திரிகை வந்த அடுத்த இரண்டொரு நிமிஷத்திற்குள்ளாக
அவரிடமிருந்து ஒரு தந்தி, தந்தியின் நகலும் கிடைத்தது.
சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து 'நான் அப்படிப்
பேசவில்லை. மந்திரிகள் ஊழல் என்ற வார்த்தையைப் பயன்
படுத்தவில்லை. நீங்கள் செய்தியைத் தவருகப் போட்டிருக்
கிறீர்கள்' என்று சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து
தந்தியின் நகல் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்
செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனக்கும்
அனுப்பி வைத்தார்கள். பொதுக் குழுவில் கூட அந்தத் தந்தி
படித்துக் காண்பிக்கப்பட்டது. இந்த விளைவு ஏற்பட்டு, பொரு
ளாளர் கட்சியில் இருந்து வெளியேறிய அந்தக் காலம் வரை,
வெளியேறிய பிறகும் சுதேசமித்திரன் பத்திரிகைச் செய்தியை
மறுக்கிற வகையில் இப்படிப்பட்ட புகார்கள் எழவில்லை.

ஆனால் யார் எந்த வகையில் முயற்சித்தார்களோ, அந்த
ஆராய்ச்சிகளுக்குள் செல்ல விரும்பவில்லை—அவர்கள் பெற்ற
வெற்றியின் அடையாளமாக புகார்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது.
அந்தப் புகார்ப் பட்டியலை எடுத்துச் சென்று ராஜ்பவனத்தில் ஆளு
நரிடம்தரப்பட்டது. ஆளுநர் தான் அதைப் பெற்றுக் கொள்கிற
உரிமை படைத்தவரா என்ற பிரசினையை எழுப்பிய பிறகு
குடியரசுத்தலைவரிடம் புகார் மனு கொண்டு போய்க் கொடுக்கப்பட்டது.
அதைத்தொடர்ந்து பல்வேறு கூட்டங்களில் இப்படிப்பட்ட ஊழல்
செய்கிற ஆட்சி தமிழகத்தில் இருக்கக் கூடாது. அகற்றப்பட

வேண்டுமென்று தொடர்ந்து, அந்தப் போராட்டம் நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி அம்மையார் ராஜபவனத்திற்கு வந்த போது அவரிடத்தில் மனுக் கொடுத்து, ஆட்சியை அகற்றுங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு வெடித்தது.

அவைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பழி வாங்கு கிற முறையில் இந்த ஆட்சியை ஐந்து ஆண்டுகளுக்குள் கவிழ்த்து விட வேண்டுமென்ற கெடு நினைப்பு திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு நிச்சயமாக ஏற்படாது என்பதை இந்த மாமன்றத்தில் அறிஞர் அண்ணாவின் படத்திற்கு முன்னால் நின்றுகொண்டு நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பை பிறகு மக்களேதான் திரும்பப் பெற வேண்டும். மக்கள் தான் அப்படித் திரும்பப் பெற வேண்டுமே தவிர, கிளர்ச்சிகள் மூலமாக, புரட்சிகள் மூலமாக, அமளிகள் மூலமாக, கலவரங்கள் மூலமாக, சட்டம் ஒழுங்கைக் கெடுத்து விடுவதன் மூலமாக ஒரு அரசைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற மனப்பான்மை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகளைப்பற்றி விமர்சிக்கிற நேரத்திலே இங்குள்ள கட்சியினுடைய தலைவர்கள், வேறு பல கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் உங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா உங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா என்று கேட்பது இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற தவறுகளுக்கு சமாதானமாக ஆகி விடாது என்பதை மாத்திரம் நான் கோடிட் டுக் காட்ட விரும்புகிறேன். நான் எடுத்து வைத்த குற்றச் சாட்டுகளை மறுப்பதற்குப் பதில் முன்பு இவைகளையெல்லாம் நீங் கள் செய்யவில்லையா என்று விவாதிப்பதாக இருந்தால் பிறகு நீங்களே தொடர்ந்து ஆட்சியிலே இருந்திருக்கலாம் இவர்கள் ஏன் வரவேண்டும் என்று தான் கேள்வி நடுநிலையாளர்கள் உள்ளத்திலே எழும். ஏற்கனவே இருந்த ஆட்சி தவறுகளைச் செய்திருந்தால் அதே தவறுகளைச்செய்ய இந்த ஆட்சி தேவைதானா என்று நிச்சய மாக நடுநிலையாளர்கள் உள்ளத்தில் கேள்வி எழும்.

குறிப்பாக, இங்கே விவசாயிகள் போராட்டத்தைச் சொன் னார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் என் சார்பிலே நல்ல பதிலை அளித்து விட்டார்கள் என்று நம்புகிறேன். விவசாயி கள் போராட்டத்திலே ஒரு பைசா கட்டணத்தைக் குறை என் பதற்காக அவ்வளவும் நடைபெற்றதாக அவர்கள் சொன்னார் களேயல்லாமல் உண்மையிலே சொல்ல வேண்டுமானால் மின் கட்டணத்தை 1 பைசா ஏற்றியதற்காகத் தான் அவ்வளவும் நடைபெற்றது என்றுதான் திருத்திப் படித்தாக வேண்டும். ஒரு பைசா ஏற்றியதற்காக இவ்வளவும் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் கோவை மாவட்டத்திலே கட்டை வண்டிகள் கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ மூன்று நாட்கள் கோவை நகரத்திலே வீதிகளிலே, தெருக்களிலே,

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7]

சந்து பொந்துகளிலே எல்லா இடங்களிலும் நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சலைப் பயங்கரமாக ஏற்படுத்திய போதும் காவல் துறை பொறுமையோடு இருந்தது, என்று முதலமைச்சர் அவர்களே அதையும் எடுத்துச் சொன்னார்கள். போலீசார் ஜீப்பிலே சென்றபோது அவர்கள் கொல்லப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டபோது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்தது என்று அன்றைக்கு நாமெல்லாம் ஒன்றாக இருந்த நேரத்திலே விளக்கி இருக்கிறோம் என்பதை முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டார்கள். விவசாயிகள் போராட்டத்திலே இப்படியெல்லாம் அமளி ஏற்படவில்லையா என்று கேட்ட நண்பர்களுக்கு அது தகுந்த பதிலாக அமையும்.

கீழ்வெண்மணிச் சம்பவம்பற்றி இங்கே திரு. ரமணி அவர்கள் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா காலத்திலே அந்தச் சம்பவம் நடைபெற்றது என்று எடுத்துச் சொல்லி அன்றைய தினம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த திரு. ராமமூர்த்தி அவர்கள் அண்ணா அவர்களைச் சந்தித்து என்ன என்ன முறைகளை கீழ்வெண்மணி சம்பவத்தையொட்டி கடைப்பிடிக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்களோ அவைகளையெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் எடுத்தார்கள், நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்தோழர் திரு. உமாநாத் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், கழக அரசு தொழிலாளர் நல விரோத அரசு ஆக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். கழக அரசு தொழிலாளர்நல விரோத அரசாக இருந்திருக்குமேயானால் கோவையிலே மூடப்பட்ட ஆலைகளை—கதவுகளுக்கு வெளியே நின்று கதறிக் கொண்டிருந்த ஆலைத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்காக இந்தியாவிலேயே எந்த மாநிலமும் தராத அளவிற்கு 5 லட்சம் ரூபாயை நிவாரணமாகக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தது கழக அரசு தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதைப் போலவே நெருக்கடிநிலை என்ற பெயரால் தொழிலாளர்களுக்கு போனஸ் தரஇயலாது என்று சொல்லப்பட்ட போது அந்தத் தொழிற்சங்கங்களை நடத்துகிறவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆக இருந்தாலும்கூட, அவர்கள் எங்களிடத்திலே எடுத்துச் சொல்லி, போனஸ் என்ற பெயரால் கொடுக்காவிட்டாலும் எப்படியோ தொழிலாளர்களுக்கு அந்தப் பணம் வந்து சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதற்குப் பிறகு நானும் அப்போது தொழிலாளர்நல அமைச்சராக இருந்தவரும் கோவைக்குச் சென்று ஆலை முதலாளிகளையும் தொழிற் சங்கநண்பர்களையும் அழைத்து—அப்போது திரு. ரமணியும் இருந்தார்என்றுநினைவு—உட்கார வைத்துப் பேசி போனஸ் கொடுக்கா விட்டாலும் தொழிலாளர்களுக்கு ஒரு முன்

[1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

...பணம் கொடுக்கச் சொல்லி ...கொடுங்கள் என்று முன்பணம் கொடுக்கச் சொல்லி ...த்தில் சந்து பொந்துகளைக் கண்டுபிடித்து அந்தத் தொழி...ர்களுக்கு நன்மையைச் செய்யலாம் என்று நன்மை செய்து ...அதிபர்களிடமிருந்து முன் பணத்தை வாங்கித் தந்த ...சாக தி.மு.க. அரசு இருந்தது என்பதை நான் தெரிவித்துக் ...காள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 6-00]

மாணவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் பேசிய ...ாரணத்தினால் அடிக்கடி இந்த அவையிலே உச்சரிக்கப் ...டுகின்ற உதயகுமாரினுடைய பெயரும், பாளையங்கோட்டை ...ம்பவமும், திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவமும் பல உறுப் ...னர்களால் எடுத்து மீண்டும் மீண்டும் விளக்கப்பட்டன. நான் ...ந்த அவையிலேயே கடந்த கூட்டத்தொடரில் மிக விளக்கமாக, ...ாளையங்கோட்டை சம்பவத்தைப்பற்றி வைக்கப்பட்ட நீதி ...சாரணையின் நீதிபதி என்ன அறிக்கை தந்திருக்கிறார்கள் என் ...தைப் படித்துக் காட்டினேன். அந்தச் சம்பவத்திலே சில ...திகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள், அவர்கள் தண்டிக்கப்பட ...வண்டுமென்ற குறிப்பு இருந்து அவ்வாறு நடவடிக்கை எடுக்கப் ...பட்டது என்பதையும் சொன்னேன். லூர்துநாதன் சம்பவத் ...திற்குப் போலீசார் காரணம் அல்ல, அவன் ஓடுகின்ற நேரத் ...தில் ஆற்றிலே விழுந்து இறந்து விட்டான் என்று நீதிபதி சொன்ன ...குறிப்பையும் படித்துக் காட்டினேன். இதைப் போலவே ...அன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சியும், திராவிட முன்னேற்றக் ...கழகமும் ஒன்றாக இருந்த நேரத்திலே ஏற்பட்டது. அண்ணாமலைப் ...பல்கலைக் கழக சம்பவம், உதயகுமார் சாவு அந்த நேரத்திலே ...அந்த சாவைப் பற்றி எதிர்க்கட்சிக்காரரர்கள் பேசிய நேரத்தில் ...அதற்குத் தகுந்த பதில் அளித்துக் கொண்டிருந்தவர் இன்றைக்கு ...திரிலே வீற்றிருப்பவர்.

[பேரவைத் தலைவர் தலைமை]

அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கும் நீதி ...விசாரணை வைக்கப்பட்டு உதயகுமார் சாவுக்கு காவல்துறையினர் ...பொறுப்பு அல்ல, மற்ற சம்பவங்களுக்கு நீதிபதியின் குறிப்பு ...அடங்கிய அறிக்கையைப் படித்துக் காட்டினேன். அந்த அறிக்கை ...அப்பொழுதே அவையிலே வைக்கப்பட்டது. கிளைவ் ஹாஸ்டல் ...சம்பவத்தில் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள், ...அங்கே உள்ள பஸ் தொழிலாளர்களும், போலீசாரும் சேர்ந்து ...கொண்டு மாணவர்களை அடித்தார்கள் என்ற வகையிலே நீதிபதி ...யின் முடிவு அறிக்கையின் சார்பில் வெளியிடப்பட்டது. அதையும் ...சொல்லியிருக்கிறேன். இவ்வளவுக்கும் பிறகும் திரும்பத் திரும்ப ...உதயகுமார், லூர்துநாதன், கிளைவ் ஹாஸ்டல் என்று பேசிக் ...கொண்டிருப்பது அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்த பிறகுப் ...அல்லது விளக்கியதற்குப் பிறகும் முறையாகாது என்பது என் ...னுடைய எண்ணம்.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

நான் கேட்பதெல்லாம் மதுரையிலே நடைபெற்ற மாணவர்கள் கிளர்ச்சிக்கு ஏன் நீதி விசாரணை வைக்கக் கூடாது என்று கேட்டால் அதற்குச் சரியான விடையளிக்காமல், ஓர்துநாதன், பாளையங்கோட்டை என்று பேசிக் கொண்டிருந்தால் போதாது. கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டதா இல்லையா? பாளையங்கோட்டை சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டதா இல்லையா? அண்ணாமலைப்பல்கலைக் [illegible] சம்பவத்திற்கு கழக அரசில் நீதி விசாரணை வைக்கப்பட்டதா அல்லவா? அதைப் போல மதுரையில் மாணவர்களுடைய சம்பவத்திற்கு அமைச்சர்கள் ஒரு வகையான அறிக்கையும், அதிகாரிகள் ஒரு வகையான அறிக்கையும், ஏடுகளில் ஒருவகை யான செய்தியும் வந்ததால் கேட்கிறேன், அங்கே தாக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, இரத்தக் காயங்களோடு மாண வர்கள் வேதனைக்கு ஆளானார்களே. அதற்காக ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளினுடைய கோரிக்கையை, முன்னேற்றக் கழகத்தினுடைய கோரிக்கை மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களுடைய கோரிக்கையை ஏன் இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய மற்றொரு குற்றச்சாட்டாகும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே திராவிட முன் னேற்றக் கழகத்தைப் பற்றி பேசிய பேச்சுகளுக்கெல்லாம் கூட எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறார்கள் என்று இங்கு குறிப்பிட்டார்கள். அப்படியொன்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது கழக அரசின்மீது இப் பொழுது கூறிய இந்தக் குறைகளைவிட வேறு குறைகள் எதையும் சொல்லித் தாக்கிவிடவில்லை என்பதையும் நான் மாண்புமிகு முத லமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ வள்ளுவருடைய கோட்டத் திறப்பு விழாவைப் பெரிய ஆடம்பரமாக நடத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்டமிட்டது என்றும், அதற் காகத் திருத்தணியிலுள்ள தங்க ரதத்தைக் கொண்டு வந்து, அந்தத் தங்க ரதத்தைச் சென்னை வீதியிலே இழுத்து வருவது என்றும், அந்த ரதத்திலே அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த கருணாநிதி பவனி வருவது என்றும் ஒரு திட்டம் போடப் பட்டது, அந்தக் காரணத்தால் தான் ஆட்சி கவிழ்க்கப்பட்டது என்றெல்லாம்கூட இங்கே சில உறுப்பினர்கள் காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். திருத்தணி ரதம் எப்படிப்பட்டது என் பதைப்பற்றி மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அதிலே அங்கே உள்ள உற்சவ மூர்த்தியை மட்டும் தான் வைக்க முடியும். அதுவும் தங்க ரதம் என்றால் திருவாரூர் பெரிய தேர் போல நிச்சயமாக இருக்காது. அப்படிப்பட்ட ஒரு தேரைச் செய்வதற்கு எவ்வளவு தங்கம் வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் இப்படி தங்க ரதங்கள், தங்க வாகனங்கள் இப்படிபட்ட விழாக்களுக்குக் கொண்டு வரப்படுவது

[1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

இல்லை. அதற்கு முன்மாதிரியும் இருக்கிறது. இங்கு [illegible] அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் உலகத் [illegible] மாநாடு நடைபெற்றது. அந்த உலகத் தமிழ் [illegible]ட்டிற்குப் பல ஆலயங்களிலிருந்து வெள்ளி ரிஷப வாகனங் [illegible] தங்க ஆட்டுக்கடா வாகனங்கள், வெள்ளி யானை வாகனங் [illegible] வரவழைக்கப்பட்டு அந்த யானை வாகனத்திலே அண்ணா [illegible]களோ அல்லது குதிரை வாகனத்திலே நாவலர் அவர்களோ, [illegible] ரிஷப வாகனத்திலே நானோ அல்லது ஆட்டுக்கடா [illegible]னத்திலே பேராசிரியர் அன்பழகன் அவர்களோ உட்கார்ந்து கொண்டு எப்படி ஊர்வலத்திலே உலகத் தமிழ் மாநாட்டிலே செல்லவில்லையோ அதைப் போல எப்படி அந்த வாகனங்கள் பெரிய லாரிகளிலே வைத்து காட்சிப் பொருளாக ஊர்வலத்திலே எடுத்துச் செல்லப்பட்டனவோ அதைப் போல திருத்தணி ரதமும் ஊர்வலத்திலே எடுத்து செல்லப்படலாமா என்று அப்பொழு இருந்த அரசால் யோசிக்கப்பட்டதேயல்லாமல், ஏதோ தங்க ரதத்தைக் கொண்டு வந்து கருணாநிதி பவனி போக வேண்டு மென்ற பெரிய முயற்சி ஏற்பட்டது என்று அதையும் சதித் திட்டம் போல வெளியிட்டார்கள்.

நல்ல வேளை, அதற்கு ஒரு '307' போடப்படவில்லையென் [illegible]ன்ற வகையிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதைப் போன்ற குற்றச் சாட்டுக்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றி இங்கே பேசிய நண்பர்களால் சுமத்தப்பட்டதேயல்லாமல் வேறு ஒன்றும் அல்ல. அவைகள் நாங்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திசை திருப்புகின்ற வகையிலே அமைந்திருக்கின்றனவே அல்லாமல் வேறு அல்ல. நான் எடுத்துச் சொன்ன குற்றச் சாட்டுக்களை நம்பிக்கையில்லா தீர் மானத்தை நீங்கள் ஆதரிக்காவிட்டாலும், அந்தக் குற்றச் சாட்டுக்கள் சரியானவைதான், அவைகளை இந்த அரசு ஆலோ சித்து தக்க முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அந்த நண்பர்கள் பேசியிருப்பார்களானால் நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அவசரக் காலச் சட்டத்தை எதிர்த்ததைப் பற்றிச் சொன் னார்கள். 20 அம்சத் திட்டத்தை எதிர்க்கலாமா, 5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கலாமா என்று கேட்டார்கள். நான் இன்றைக் கும் சொல்கிறேன், 5 அம்சத் திட்டத்தை 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்க தவறமாட்டோம். ஏனென்றால் 20 அம்சத் திட்டத்திலே சொல்லப்பட்ட விஷயங்களானாலும், 5 அம்சத் திட்டத்திலே சொல்லப்படுகிற விஷயங்களானாலும் அவைகள் எது வும் புதிதாக இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலோ அல்லது அவர்கள் புதல்வர் சஞ்சய் காந்தி அவர்களாலோ அறிவிக்கப் பட்டு விட்ட திட்டங்கள் அல்ல. நம்முடைய நிதியமைச்சர் மனோகரன் அவர்கள், அந்த நேரத்திலே எடுத்துக் காட்டியதைப் போல, சஞ்சய் காந்தியினுடைய ஐந்து அம்சத் திட்டங்கள் பெரியார் ராமசாமி அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட திட்டங்கள் என்ற அளவிலே, அதைப் போல, இந்திரா காந்தி

யாரால் எடுத்துச் சொல்லப்பட்ட 20 அம்சத் திட்டங்கள் ஏற்
கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் இங்கே நிறை
வேற்றப்பட்டு நடைபெற்று வருகிற திட்டங்கள் என்கின்ற வகை
யில்தான் இருக்கின்றன.

20 அம்சமானாலும், 5 அம்சமானாலும் இன்னும் 5 அம்சத்
தைச் சேர்த்து, 30 அம்சமானாலும் எத்தனை அம்சங்களானாலும்
மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களாக இருந்தால், பொரு
ளாதாரத் திட்டங்களாக இருந்தால், அவைகளை திராவிட முன்
னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறது
என்றுதான் அறிவிக்கப்பட்டது. 20 அம்சத் திட்டம் அறிவிக்கப்
பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்தோம். 5 அம்சத்
திட்டம் அறிவிக்கப்பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்
தோம். ஆனால் எங்களுடைய கேள்வியெல்லாம்,
20 அம்சத் திட்டம், 5 அம்சத் திட்டம் இவைகளை நிறைவேற்ற
ஒரு அவசரச் சட்டம் தேவைதானா ? இதுதான் எங்கள் கேள்வி.
நீங்கள் எத்தனை அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்
கள். 100 அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள்
ஆனால், அவைகளை நிறைவேற்ற ஒரு அவசரச் சட்டம்
தேவைதானா என்று தான் எங்கள் செயற்குழுவிலே நாங்கள்
தீர்மானம் நிறைவேற்றினோம். உங்களுடைய சமதர்மத் திட்டங்
களை நிறைவேற்ற இன்றைக்கிருக்கிற எந்தச் சட்டங்கள் குறுக்கே
நிற்கின்றன? அப்படி இல்லாதபோது இந்த அவசரச் சட்டம்
தேவைதானா என்று எங்களுடைய செயற் குழுவிலே தீர்மானம்
போட்டுக் கேட்டோம். எங்களுடைய பொதுக் குழுவிலே கூட
தீர்மானமாக நிறைவேற்றினோம். இது பற்றி எங்கள் மாநாட்
டிலும் தீர்மானம் போட்டுக் கேட்டோம். எனவே, 20 அம்சத்
திட்டம் மீதோ, 5 அம்சத் திட்டம் மீதோ எங்களுக்கு எந்த
விதமான குறைபாடும் கிடையாது.

ஆனால், ஒரு நண்பர் கூடப் பேசினார். 20 அம்சத் திட்டத்தை
எதிர்த்தீர்கள். ஆனால், சஞ்சய் காந்திக்குப் பயந்து கொண்டு
5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கவில்லையா என்று ஒரு நண்பர்
கூடப் பேசினார். ஆனால், இன்றைய முதலமைச்சர் அன்றைய
தினம் அந்த சஞ்சய் காந்தியினுடைய திட்டத்தை எதிர்த்தார்
என்றுகூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், உண்மை
என்னவென்றால், உடுப்பியிலே நடைபெற்ற படப்பிடிப்பு நிகழ்ச்
சிக்குச் சென்ற முதலமைச்சர் இருபது அம்சத் திட்டம் ஐந்து
அம்சத் திட்டம் என்று பிரிப்பதையே நான் ஏற்கவில்லையென்று
கருத்தை நிருபர்களிடம் சொன்னார்கள். அதை அவர் சொன்ன
தும், சென்னையிலே இங்குள்ள பெரியவர் பக்தவச்சலம்
அவர்கள் அதைக் கண்டித்து ஒரு அறிக்கை விடுத்தார்கள். அந்த
அறிக்கை வந்தவுடனே இன்றைய நமது நிதி அமைச்சர் மனோகரன்
அவர்கள் ஒரு விளக்கம் தந்து பேசி அது பத்திரிகையிலும் வந்
திருக்கிறது.

[illegible] தலைவரை பத்திரிகை நிருபர்கள் உடுப்பியில் சந்
[illegible]. அப்போது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தையும்
[illegible] காந்தியின் 5 அம்சத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து
[illegible] அம்சத் திட்டமாக அறிவித்திருக்கலாம் அல்லவா என்று
[illegible] கேட்டனர். சஞ்சய் திட்டத்தில் கலாச்சாரப் புரட்சிக்
[illegible] இருக்கிறதா என்றும் கேட்டனர்.

பிரதமர் இருபது அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
[illegible] காந்தி ஐந்து அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
இவை இரண்டையும் ஒன்றாக அறிவித்திருக்கலாம் என்றார்.
ஏனெனில் எதிர்க் கட்சிகளுக்கு எந்த வகையிலும் எந்தப் பிரச்
சாரத்திற்கும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பதில் புரட்சித்
தலைவர் மிகக் கூர்மையாக இருக்கிறார். அவர் திட்டத்தை
விமர்சிக்கவில்லை; எதிர்க்கவில்லை; ஆலோசனை— நல்ல நோக்
கோடு கூறினார்.

மனச்சாட்சி, அரசியல் தெளிவு உள்ளவர்கள் இதில் என்ன
தவறு காண்பார்கள் ? இதற்காக சஞ்சய் காந்தியை எதிர்ப்பதாக
சஞ்சய் காந்தியைப் பார்க்காத சின்னஞ்சிறார்கள் கூறுகிறார்கள்''
என்று மனோகரன் அவர்கள் சொன்னார்கள். அவர் எப்போதுமே
மற்றவர்களை சின்னஞ்சிறார்கள் என்று வாடிக்கையாகக் கூறுவ
தைப் போல் கூறியிருக்கிறார்.

[மாலை 6-10]

அவர் மீண்டும் பேசுகிறார், ''நான் மூன்று முறை சஞ்சய் காந்தி
யைச் சந்தித்திருக்கிறேன். புரட்சித் தலைவர் இரண்டு முறை
சந்தித்திருக்கிறார். சஞ்சய் காந்தியின் கருத்துக்களை, திட்டங்
களை, திறமையை புரட்சித் தலைவர் பாராட்டியிருக்கிறார். இளைஞ
ராக உள்ள சஞ்சய் காந்தியை புரட்சி தலைவருக்கு மிகவும்
பிடித்துப் போயிற்று. பிரச்சினைகளைப் புரிந்து, தெரிந்து
வேகத்தோடு செயல்படுகின்ற சஞ்சய் காந்தியின் திறமை என்
னைக் கவர்ந்தது'' என்று புரட்சித் தலைவர் கூறினார். பெரியவர்
பக்தவச்சலம் அனாவசியமாக வம்பை வளர்க்கிறார். அவருக்குக்
கோபம் வருகிறது. சஞ்சய் காந்தியின் வளர்ச்சியைக் கண்டு
புரட்சித் தலைவர் பொறாமைப் படுகிறாராம். சஞ்சய் காந்தியை
இவர்கள் ஏமாற்ற முடியாது. இவர்களுடைய திறமை அவருக்கு
நன்றாகத் தெரியும். வரதட்சணை ஒழிப்பு, மரம் நடுதல்,
குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை, அறியாமை ஒழித்தல்
இவைகளை நாங்கள் வரவேற்கிறோம். இவைகள் எல்லாம்
பெரியார் சொன்ன திட்டங்கள்தான்'', என்று எனது அருமை
நண்பர், இன்றைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் பேசி அது
அப்போது ஏடுகளிலே வந்து—அவர்கள் கட்சி ஏடுகளிலே வந்த
குறிப்பைத்தான் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

ஆகவே நான் மீண்டும் சொல்கிறேன். 20 அம்சத் திட்ட
மானாலும் சரி, அல்லது 5 அம்சத் திட்டமானாலும் சரி திட்டங்

மக்களுடைய நல்வாழ்வுக்கு தேவை என்கின்ற வகையில் நாங்கள் அன்றைக்கும் எதிர்க்கவில்லை இன்றைக்கும் எதிர்க்க வில்லை. அவைகளை நிறைவேற்ற மக்களுடைய உரிமைகளைத் தட்டிக் கழித்துவிட்டு, உரிமையைக் கேட்பவர்களின் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு, காலையிலே பேராசிரியர் கூறியதைப் போல ஒரு சர்வாதிகாரச் சூழ்நிலையில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து விட்டு, நிறைவேற்ற வேண்டுமா?

பாசன வசதியைப் பெருக்க நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு ? அதைப் போலவே மின் விளக்குகளை அதிகப்படுத்த நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு ? வருமான வரியை 6,000 ஆண்டு வருமானத்திற்கு என்ற உச்ச வரம்பை 8,000 ரூபாய் என்று மாற்றுவதற்கும் நெருக்கடி நிலைக்கும் என்ன தொடர்பு? இந்தக் கேள்விகளைத்தான் அன்றைக்குக் கேட் டோமே அல்லாமல் 20 அம்சத் திட்டத்திற்கும், 5 அம்சத் திட்டத்திற்கும் அன்றைக்கும் விரோதிகள் அல்ல, இன்றைக்கும் விரோதிகள் அல்ல. ஆனால் அவசர கால சட்டத் திற்கு, அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் விரோதமாக இருக்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்ற, சர்வாதிகாரத்தைப் புறங்காண திராவிட முன் னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கும் என்பதை நான் மிக, மிக திட்டவட்டமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய முன்னுரையில் இந்திரா காந்தி அவர்களுடைய தமிழக வருகையைப் பற்றியும், அப்போது நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துரைத்திருந்தேன். அதைப் பற்றி என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சி யினுடைய தலைவர் மாரிமுத்து அவர்கள் மிகத் தெளிவாக, விரிவாக—இப்போது இசை விழா நடக்கின்றது, அதையொட்டி சொல்ல வேண்டுமானால், விஸ்தாரமாக (குறுக்கீடு) நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமானால் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சென்னை யிலே வந்து இறங்கியதிலிருந்து, மதுரைக்குச் சென்று பிறகு திருச்சி வந்தடைந்து, காஞ்சிக்குள் நுழைந்ததிலிருந்து மீண்டும் சென்னைக்கு வந்தது வரையில் அவர்கள் எடுத்துரைத்து திராவிட முன்னேற்றக் கழகம் பெரியதொரு வன்முறையில் இறங்கிவிட்டது. மதுரை சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று கூட எடுத்துச் சொன்னார்கள்.

காலையிலே பேசிய எங்கள் கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகிற நேரத்திலே குறிப்பிட்டார்கள் அங்கே முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் போலீஸ் அதிகாரிகளை அணுகி—ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் அதை முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கக் கடமைப்பட்டிருக் கிறார்கள் என்பதற்காக சொல்லுகிறேன்—அங்கே முன்னேற்றக்

கழகத்தினர் போலீஸ் அதிகாரிகளை அணுகி இந்திரா காந்தி வருகிறபோது நாங்கள் கறுப்புக்கொடிக் காட்டுவதாக இருக்கிறோம் எனவே அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள்—போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள்—நாங்கள் உங்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பது எங்களுடைய கடமை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது அந்த போலீஸ் அதிகாரி நான் சில கான்ஸ்டேபிள்களை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். ஏதோ 50, 60 பேர்கள் கருப்புக் கொடி காட்டப்போவதாக என்று எண்ணிக்கொண்டு சில கான்ஸ் டேபிள்களை அனுப்பி வைப்பதாக அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாரிமுத்து அவர்களின் கணக்குப்படி 3,000 ஆனால் விமான நிலையத்தில் அம்மையாரை வரவேற்க வந்தவர்கள் லட்சம் பேர். கறுப்புக்கொடி காட்டியவர்கள் 3000 என்று சொன்னார்கள். அந்த மக்கள் தொகை எண்ணிக்கை கட்சிக்கு கட்சி, பத்திரிகைக்குப் பத்திரிகை வேறுபடும். அதிலே நுழைந்து நாம் ஆராய்ச்சி நடத்தத் தேவையில்லை. என்ன நடந்தது? திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் மற்றவர்களும் எங்கே கறுப்புக்கொடி காட்டுவதற்கு இடம் அளிக்கப்பட்டதோ அந்த இடத்திற்கு அருகாமையிலேயே இந்திரா காந்தியை வரவேற்க காங்கிரஸ் கட்சிக்கும் இடம் ஒதுக்கப்பட்டது.

மிக மிக அருகாமையில் இடம் ஒதுக்கப்பட்ட நேரத்தில், ஜீப்பில் ஏறிக்கொண்டு மதுரையில் இருக்கும் கங்கிரஸ்காரர் கள், சில முக்கியமான பிரமுகர்கள் ஜீப்பில் ஏறிக்கொண்டு அங்கும் இங்கும் செல்லுவது, கறுப்புக்கொடி ஏந்தி நிற்கும் கழகத் தோழர்களைப் பார்த்து கேலி புரிவது, என்று இப்படிப் பட்ட சேட்டைகளில் அவர்கள் ஈடுபட்ட காரணத்தால் சில குழப்பம், குமுறல் வெடித்து, குமுறி, ஒரு சூழல் ஏற்பட்டபோது மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் போலீஸ்காரர்களே கேட்டுக்கொண்ட காரணத்தால் போலீஸ் வேனில் ஏறி, யார் என்ன சொன்னாலும், தயவு செய்து நீங்கள் அமைதியாக இருங்கள் என்று கறுப்புக்கொடி காட்ட இருந்த தோழர்களிடத்தில் பலமுறைசென்று அவர்கள் அறிவிப்பு செய்து இருக்கிறார். அந்த அளவிற்கு அமைதியாக நடக்கவேண்டு மென்று மதுரை மாவட்ட தலைவர்களும், மற்ற மாவட்டத்தி லிருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அந்தந்தப் பகுதி தலைவர்களும் அக்கறை காட்டினார்கள். மிள காய்ப்பொடி தூவவில்லை என்று மாரிமுத்து அவர்கள் சொன்னார் கள்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : நான் மீண்டும் மீண்டும் எதிர் கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், கறுப்புக் கொடி காட்டுவதற்கு திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுக்கு ஒதுக் கப்பட்டிருந்த இடத்தில் காங்கிரஸ்காரர்கள் அனுமதிக்கப்படவே இல்லை. இந்திரா காந்தி அம்மையாருக்கு வரவேற்பு கொடுப்ப

தற்கு விமான நிலையத்திற்குச் சென்றார்களே தவிர அந்த கறுப்புக் கொடி காட்டிய இடத்தில் கூடி இருக்கவில்லை என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவர் தரப்பு வாதம் அவர் எடுத்து வைக்கிறார். எனக்குத் தெரிந்த உண்மையை நான் சொல்கிறேன், அவ்வளவு தான். ஒரு போலீஸ் அதிகாரி கூட காங்கிரஸ்காரர்கள் ஜீப்பில் மிளகாய்பொடி இருந்தது என்று சொல்லி, அது பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. பிறகு என்ன காரணமோ, 2 நாள் கழித்து நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுப்பு அறிக்கை விட்டு விட்டார்கள். இடையில் நடந்தது என்ன என்று ஆராய நான் விரும்பவில்லை. அதைப்பற்றிய சர்ச்சைக்கும் நான் வர எண்ணிடவில்லை.

கழகம் வன்முறையில் நம்பிக்கை அற்றது என்பதையும், வன்முறையை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளாது என்பதையும் இன்றல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்தே எடுத்துச் சொல்லி, நாங்கள் செயல்பட்டு வந்து இருக்கிறோம். ஆனால் வன்முறை சில நேரங்களில் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது என்பதை இப்போது நடைபெற்ற போராட்டங்களில் மாத்திரம் அல்ல, உலக உத்தமர் அமைதியின் சொரூபம், காந்தியடிகள் நடத்திய சௌரி சௌரா போராட்டத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு தீ வைக்கப்பட்டு, அந்த காவல் நிலையத்தில் இருந்த அனைத்து காவலர்களும் தீயினால் இறந்தார்கள் என்று வன்முறை சம்பவம் காந்தி அடிகள் காலத்திலேயே நடைபெற்று இருக்கிறது.

அதைப்போலவே, ‘ வெள்ளையனே வெளியேறு ’ என்று காந்தியடிகள் போராட்டம் நடத்திய நேரத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு எல்லாம் காந்தியடிகள் தான் காரணம், அவர்களுடைய பேச்சும் எழுத்தும் தான் காரணம் என்று அப்போது வைஸ்ராய்யாக இருந்த லார்ட் லின்லித்கோ தெரிவித்தார். அந்த வைஸ்ராய் சொன்னதற்கு காந்தியடிகள் பதில் தந்தார் ‘‘ என்னையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்த காரணத்தால் மக்களுடைய உணர்ச்சிகள் தூண்டப்பட்டு அதன் காரணமாக வன்முறை ஏற்பட்டன ’’ என்று காந்தியடிகள் அப்போதே அந்த வைஸ்ராய் சொன்னதற்கு பதில் அளித்து இருக்கிறார். இதைச் சொல்கிற காரணத்தால் காந்தியடிகள் காலத்தில் வன்முறை நடைபெற்றது. இப்போது நடைபெறக் கூடாதா என்று நான் வாதிடுவதாக தயவு செய்து யாரும் கருதிடத் தேவையில்லை.

பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் நடத்திய போராட்டம் பற்றி நண்பர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் நடத்திய போராட்டம், அவர்கள் நடத்திய பேரணி வன்முறை இல்லாமல் நடைபெற்றது என்று சொன்னார்கள். அந்தப் பேரணியில் சென்னை மாநகர வீதியில், அண்ணா சாலையில் காமராஜர் முன் அமர்ந்து ஊர்வலம் சென்றபோது பின்னால் வந்த ஊர்வலப்

பகுதியினர் பல தியேட்டர்களை அடித்து நொறுக்கி பெரும் சேதத்தை விளைவித்தார்கள் என்ற செய்தியும் மறுநாள் பத்திரிக்கையில் வந்தது. அதற்கு பெரும் தலைவர் காமராஜர் பொறுப்பாளி என்று சொல்லமாட்டேன்.

அது மாத்திரமல்ல. மதுவிலக்கை மீண்டும்அமல் நடத்தவேண்டுமென்று அவர் நடத்திய போராட்டமானாலும், விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் போராட்டமானாலும், அந்தப் போராட்டங்கள் இத்தனை நாள் நடைபெறுகிறது என்று தெரிந்து கொண்டு, அத்தனை நாள் அவர்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். 12-13 நாள் போராட்டம் நடத்ினார்கள் என்றால், போராட்டம் முடிந்ததும் விடுவிக்கப்பட்டார்கள். அதற்கிடையில், திருச்சி சிறைச்சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கே இருந்த வார்டர்களோடு ஒரு அமளியில் ஈடுபட்டு அங்கே இருந்த டவர்—கோபுரம்—அந்த சிறைச்சாலைக்குள்ளே இருந்த டவர் பகுதிக்குச் சென்று, அங்கே மேலே ஏற்றப்பட்டு இருந்த தேசியக் கொடியைச் சுழற்றிஎறிந்து விட்டு, காங்கிரஸ் கட்சியின் கொடியை டவரில் பறக்க விட்டார்கள். அப்படி செய்ததற்காக 50 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் திரும்பப் பெற்றுக்கொண்டது என்ற அந்தச் செய்தியையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[மாலை 6.20]

இங்கே வன்முறையை திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டவில்லை ; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தான் வன்முறை தூண்டப்பட்டது. ஆளுங்கட்சிக்காரர்கள் தங்களுடைய முழு பலத்தையும் காட்டி, இனிமேல் யாரும் இங்கேயிருக்கின்ற ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது என்ற வகையில், இந்திரா காந்தியினுடைய வருகையைப் பயன்படுத்திக் கொண்டுவன்முறை பிளான் செய்யப்பட்டது என்று சொல்லுகின்ற அளவுக்கு, வன்முறை, அடக்குமுறை இவைகளில் ஈடுபட்டார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும். நாங்கள் கைது செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறதோ அல்லது அகற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ, அந்த இடத்தில் நடைபெற்றது என்ன ? சென்னை மாநகரத்தில், இந்திரா காந்தி வருவதாக ஒரு வழி சொல்லப்பட்டது. ஆனால் காஞ்சீபுரத்திற்கு அந்த அம்மையார் செல்ல பூவிருந்தவல்லி வழியை விட்டுவிட்டு வேறு வழியாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்படி பூவிருந்தவல்லி வழியாகச் செல்லுவதாக இருந்தது ரத்து செய்யப்பட்டது என்று அங்கே உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், பூவிருந்தவல்லி தோழர்கள் கறுப்புக்கொடி காட்டுவதற்கு அந்த அம்மையார் அந்தப் பக்கம் வரவில்லை என்றதும்,யார் மீதும் கல் எறிந்ததாகவோ, யாரும் வன்முறைக்கு இடம் கொடுத்தார்கள் என்றோ, எந்தச் செய்தியும்கிடையாது. அமைதியாகக் கலைந்து சென்றார்கள். அந்த அம்மையார் அந்த வழியாக வரவில்லை என்று அறிவிக்

பட்ட காரணத்தால். அதைப்போல சென்னையில் கிண்டி பகுதியில் அந்த அம்மையார் அந்த வழியாகச் செல்லவில்லை என்று அறிவிக்கப்பட்டதா என்றால் அறிவிக்கப்படவில்லை. அங்கே கூடியிருந்த மக்கள் கூடுகின்ற வரையில் அனுமதிக்கப்பட்டார்கள். பிறகு தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், 2 பேர் மாண்டார்கள் என்ற செய்தி வருகிறது.

அந்தச் செய்தியைத் தொடர்ந்து கறுப்புக்கொடி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கின்ற சீதாபதி, வீராசாமி, நீலநாராயணன் இவர்கள் கைது செய்யப்பட்டதாக செய்தி வருகிறது. அவர்கள் கைது செய்யப்பட்டால், அடுத்த அணிக்கு நாங்கள் தலைமை வகிக்க வேண்டும்—நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப. உ. ச.-வும், ஆசைத்தம்பியும் என்று அறிவித்திருந்தோம். அதன்படி செல்லுகிறோம். நாங்கள் செல்வதற்கு முன்பு திராவிடக் கழகத் தலைவர் மணியம்மையார் அவர்கள் அங்கே செல்லுகிறார்கள். அன்னை மணியம்மையார் அவர்களை காவற் துறையினர் எவ்வளவு கூறத் தகாத வார்த்தைகளை எல்லாம் இந்த மன்றத்தில் மீண்டும் சொல்லமுடியாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்திப் பேசினார்கள் என்பதையும், அவைகளை மீண்டும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது அழகாக இருக்காது என்பதையும் நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதைப் போல, வீராசாமி, நீலநாராயணன், சீதாபதி மற்றவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப.உ. ச.-வும் காரில் செல்லுகிறோம். நாங்கள் மறைமலை அடிகள் பாலத்திற்கு மத்தியில் செல்லுகின்ற நேரத்தில் போலீசார் எங்களை வளைக்கிறார்கள். வளைத்து அங்கே நிறுத்துகிறார்கள். காரைத் திருப்பச் சொல்கிறார்கள். கார் திருப்பப்பட்டு நிறுத்தப்படுகிறது. காரை திருப்பி நிறுத்தி வைத்துவிட்டு, எங்களை எங்கே அழைத்துச் செல்ல வேண்டும் என்று போலீஸ் அதிகாரிக்கு ஆணையிடாமல், அல்லது எங்கள் காரைஓட்டி வந்த காரோட்டிக்கும் உத்திரவு பிறப்பிக்காமல், காரை அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டு, எங்களுடைய கார் முணியம்மையார், வீரமணி போன்றவர்கள் காரை எல்லாம் வைத்துவிட்டு. . . .

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே, என்குயரி கமிஷன் ஒன்று அமுலில் இருக்கும்போது, தயவு செய்து அதில் நுழைவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீதி விசாரணைக் கமிஷனிலும் இவைகள் எல்லாம் சொல்லப்படக் கூடிய வெளிப்படையான விஷயம் தான். நீதிமன்றத்தில் இருக்கிற விஷயமாக இருந்தால், சப்ஜுடீஸ் என்பதால் அதில் நுழைவது தவறாக இருக்கலாம். நான் பொதுப்படையான விஷயங்களைச் சொல்லுகிறேன். நிலைமையைச் சொல்லுகிறேன். எங்களுடைய காரை சுற்றி கண்ணீர்ப் புகை வெடிகள் வெடித்துக் கொண்டிருந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினை வழக்கு மன்றத்திற்கு சென்றிருப்பதைப் பற்றி நீதி விசாரணையில் இருப்பதையொட்டி பேசக்கூடாது என்பது தான் பொதுவான மரபு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இது பற்றி கிரிமினல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருவதால், இந்த விஷயங்கள் இங்கே கூறப்படக் கூடாததுதான்.

திரு. மு. கருணாநிதி : கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. எப். ஐ. ஆர். என்ற நிலையில் பேசலாம் அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமானால் நாளை ஆராய்ந்து அதைத் தலைவர் தீர்ப்புச் சொல்லலாம்.

THRU R. MARGABANDU F.I.R. has been filed and investigation is going on and it will hamper investigation. So it is *subjudice*.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இதைப்பற்றி சிந்தித்து என்ன முடிவு பெற வேண்டுமோ அதை நாளை மறுதினம் தரலாம் என்றார்கள். அதுவரையில் இதைப்பற்றி செய்தி ஏடுகளில் வராமல் இருந்தால் தான் தலைவர் தீர்ப்பு என்ன என்பது சரியாக அமையும். ஏனெனில் தலைவர் தீர்ப்பு வரட்டும் என்று சொல்லும்பொழுது தீர்ப்பு வருகிறவரையில் இந்தப் பிரச்னை வெளி வர வேண்டாம் என்பது தான். அதையொட்டிய தீர்ப்பு வந்த பிறகு அனுமதிக்கலாம் என்றால் பத்திரிகையில் வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்றைச் சொல்லுகிறேன். 68-ல் 5-வது பிரிவு 'மோஷன்' ஆனாலும், 'ரிசொலூஷன்' ஆனாலும்,

"No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved" :

"Provided that the Speaker may, in his discretion, allow such matter"

என்று இருப்பதால், முதலில் யோசித்தேன் மேலோட்டமாக பேசுகிறார் என்று. ஆனால் நடந்த வரலாற்றையே சொல்லுகிறார்கள். அது விசாரணைக்கு குந்தகமாகலாம். இன்வெஸ்டிகேஷன் ஆகி சார்ஜஸ் போடுவதற்கு இடையூறு ஏற்படலாம். தயவு செய்து எதிர்க்கட்சித் தலைவர் அதை விட்டுவிட்டு வேறு விஷயத்திற்குப் போகலாம்.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மாத்திரம் விசாரணை என்ற காரணத்தால் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தைப் பற்றி பேசலாம் என்று பேசினேன். இருந்தாலும் தங்களுடைய தீர்ப்பிற்கிணங்க மேலும் விரிவாக நான் பேச விரும்பவில்லை. ஆனால் போலீசாரால் தாக்கப்பட்ட அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினர் அவையில் இருக்கிறார். வேறு இடத்திலோ கைது செய்யப்பட்ட இளம்பரிதி எம்.எல்.சி., எலமந்தா எம்.எல்.சி. இவர்கள் எல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்த இடத்துப் பிரச்னைக்கு சம்பந்தப்பட்டதல்ல. கைது செய்யப்பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப்பட்டார்கள். மிகக் கொச்சையான வார்த்தைகளால் இழிவான வார்த்தைகளால் போலீஸ் அதிகாரிகளால் அர்ச்சிக்கப்பட்டார்கள். எங்களுடைய தோழன் வான்மதி தன்னுடைய காலை இழக்கிற ஒரு கொடுமை நிகழ்ந்திருக்கிறது. பல தோழர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். 144 தடை உத்தரவு போடப்பட்டது உண்மை. நான் கேட்பதெல்லாம் 144 தடை உத்தரவு என்றால் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுக்கு மாத்திரம் தானா? 144 தடை உத்தரவில் காங்கிரஸ் கட்சிக்கு விதி விலக்கு அளித்துள்ளார்களா? 144 தடை உத்தரவை போடும்பொழுது 5 பேருக்கு மேல் போகக் கூடாது அல்லது 5 பேருக்கு மேல் ஒரு இடத்தில் கூடக்கூடாது என்கிற பொதுவான உத்தரவு பிறப்பிப்பார்கள். அதற்கு விதிவிலக்கு போடுவார்கள் என்றால் சவ ஊர்வலம், கல்யாண ஊர்வலம், மதச் சடங்குகளுக்கு 144 உத்தரவில் விதிவிலக்கு இருக்கும். ஆனால் இங்கே திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் 144 தடை உத்தரவைப் போட்டுவிட்டு காங்கிரஸ் கட்சி கூட்டம் நடத்தலாம் காங்கிரஸ் கட்சியின் ஊர்வலம் நடைபெறலாம் என்கிற அளவிற்கு நிலைமையை உருவாக்கினார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திருமண விழாவிற்கு தலைமை வகிக்க வந்திருப்பார்களேயானால் நான் இந்தப் பிரச்னையை எழுப்பமாட்டேன். சவ ஊர்வலம் ஏதாவது நடைபெற்றதா என்றால் அந்தச் சவ ஊர்வலம் எங்கள் கட்சியின் சார்பில் செத்துப்போன தீனன், பாபு, ஜனதாக் கட்சியைச் சேர்ந்த குண்டடிப்பட்ட சுப்பிரமணி ஆகியோருக்கு சவ ஊர்வலம் நடைபெற்றது. அல்லது காங்கிரஸ் கட்சி மத ஸ்தாபனமா என்றால் அதுவும் இல்லை.

[மாலை 6.30]

இந்த மூன்றிலும் இடம் பெறாத ஒரு கட்சிக்கு 144 பொது உத்தரவில் எப்படி தனியாக ஒரு விதி விலக்கு அவர்களுக்குத் தரப்பட்டது என்பது தான் எனக்குப் புரியவில்லை. இப்படி மக்களின் உரிமைகளை, தங்கள் இஷ்டத்திற்கு பாரபட்சமான நிலையில் அவர்களுடைய உரிமைகளைப் பறித்துக்கொள்ளுகிற ஒரு

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

போலீஸ் ராஜ்யம் என்று பெயர் சூட்டத் தக்க அளவுக்கு ந்திரா காந்தி அம்மையார் இங்கே வந்த நேரத்தில் நடை றைகள் இருந்தன என்று சொன்னால் அது தவறாகாது என் தே என்னுடைய கருத்தாகும். அதற்கெல்லாம் சிகரமாகத் ான் 307-வது பிரிவு அங்கிங்கெனாதபடி எங்கும் இன்று பாடப்படுகின்றது. மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் ரண் சிங் அவர்கள் இரண்டு மூன்று முறை எச்சரித்து இருக்கிறார். ாவல் துறைக்கு அறிவுரை வழங்கி இருக்கிறார். சட்ட ரோதமான உத்தரவுகளை போலீசார் நிறைவேற்றத் தேவை ல்லை என்ற அளவுக்கு இன்றைய மத்திய உள்துறை மைச்சர் சரண்சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு எத்தனை பொய் வழக்குகள் 307-வது ிரிவின் கீழ் தி.மு.க. வினர் மீது போடப்பட்டிருக்கின்றன என் தை எண்ணிப் பார்க்க வேண்டும். கொலை முயற்சிக்குச் சதித் ிட்டம் என்று வழக்கு. சதிசெய்வது என்பது, கொலை செய்ய தி செய்தார்கள் என்றிருக்கும். கொலை முயற்சிக்குச் சதித் ிட்டம் என்ற வகையில் எங்கள் மீது வழக்கு போடப்பட்டி ருக்கிறது. குற்றப்பத்திரிகை இன்னமும் தாக்கல் செய்யப் படவில்லை. அது தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடை பெறுகிற நேரத்தில், பல விஷயங்கள் வெளி வர இருக்கின்றன.

ஆனால், நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி, நாங்கள் மாத்திர மல்ல. இங்கே உள்ள ஏடுகள் மட்டுமல்ல. இந்தியன் எக்ஸ் பிரஸ் என்ற இங்கே உள்ள இந்தியன் எக்ஸ்பிரஸை சொல்ல வில்லை—என்ன காரணமோ, இங்கே அந்தச் செய்தி வெளி யிடப்படவில்லை—டில்லியிலுள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரி கையில், இந்திரா காந்தி வந்திருந்த போது போலீசார் நடந்து கொண்ட விதத்தை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். ''இந்திரா காந்திக்குக் கொடுக்கப்பட்டிருந்த போலீஸ் பந்தோபஸ்து, அவர் அவசர நிலையின் போது முடி சூடா மகாராணியாக வந்த போது இருந்ததைவிட பன் மடங்கு அதிகமாக இருந்தது. அன்று காலை 6 மணி முதல் எழும்பூர் ஸ்டேஷனை வளைத்துக் கொண்டு, உள்ளே இருந்து யாரும் வெளியில் செல்லவும், வெளியிலிருந்து யாரும் உள்ளேயும் செல்ல யாரும் அனுமதிக்கப் படவில்லை. எழும்பூர் இரயில் நிலையமே போலீசாரால் வளைத்துக்கொள்ளப்பட்டு, ஸ்டேஷன் முன் செல்ல எவரும் அனு மதிக்கப்படவில்லை. பந்தோபஸ்து என்ற பெயரால், டெபுடி கமிஷனர் ஒருவர் இருந்தார். நகர் முழுவதுமே அவசர கால நிலை இருந்தது போலவும், போலீஸ் அதிகாரிகள் மட்டும் செல்ல வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தது. அரசிடமிருந்து அடையாளச் சீட்டு வாங்கிய பத்திரிகையாளர்கள் கூட அங்கே அனுமதிக்கப்படவில்லை''. இது டில்லியில் இருந்து வரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தி. இங்கே உள்ள எக்ஸ்பிரஸ் அல்ல.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

அது போலத்தான் டைம்ஸ் ஆப் இந்தியாவும்.
நாட்களுக்கு முன் நிதியமைச்சருக்கு, புயல் நிவாரணப் பணி இரண்டு
கள் பற்றி புகழ் ஆரம் சூட்டி இருக்கிறது, என்று எடுத்துப்
படித்துக் காட்டினார். அந்தப் பத்திரிகை என்ன சொல்லு
கிறது என்றால், தமிழ்நாட்டில் திருமதி இந்திரா காந்தி
சென்ற இடமெல்லாம் ஏற்பட்ட வன்முறைகளைப் பரந்த
அளவில் ஏற்பட்ட கலவரங்களைப் பார்க்கிற போது, அவற்றை
இங்கே இருக்கிற மக்களின் வெறுப்பிற்கு அடையாளம் இல்லை
என்று விலக்கி விட முடியாது. இந்திரா காந்தியின் அதிகார
பூர்வமான ஆசீர்வாதத்தோடு காட்சியளித்த மக்களிடையே
எத்தகைய கடும் கோபத்தை இது ஏற்படுத்தும் என்பதை தமிழ்
நாட்டின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உணரவில்லை. ''டைம்ஸ்
ஆப் இந்தியா'' தலையங்கம், பம்பாய் 8-11-1977-ல் இன்றும்
இருக்கிறது. இதற்கு என்ன காரணம்?
யோடு உறவும், அதே நேரத்தில் இந்திரா ஜனதா கட்சி
பிரதமராக இருந்த காலத்தில் காந்திக்கும் அவர்
மாபெரும் வரவேற்பு. நான் கேள்விப் தந்ததைப் போன்று
காந்தியை டில்லியில் நமது முதலமைச்சர் படுகிறேன் இந்திரா
என்னுடைய நண்பர்கள் பலம் சந்தித்த நேரத்தில்,
எனக்கு பயப்படுவார்கள். உள்ளவர்களாக இருந்தால்தான்
கொண்டும் அவர்களிடம் எனவே எந்தக் காரணத்தைக்
கொள்ளாதீர்கள். நேரடியாக இப்போது பகைத்துக்
யார் சொன்னதாக நட்பாக இருங்கள் என்று அந்த அம்மை
அல்லவோ. நடைமுறையைக் கேள்விப் பட்டோம். அது உண்மையோ
சொல்லி இருக்கக் கூடும் காண்கின்ற நேரத்தில் அப்படிச்
இல்லாவிட்டால், என்ற சந்தேகம் கூட எனக்கு எழுகிறது.
இன்றைய ஆளும் சர்வாதிகாரம் நடைபெற்ற நேரத்திலும்
இன்று இந்தியாவில் கட்சிக்காரர்கள் ஆதாயம் பெற்றார்கள்.
கார முறையில் தமிழகத்தை ஜனநாயகம் வந்த நேரத்திலும் சர்வாதி
ஏற்படுத்தி இருக்கிறார்கள். 'One canno eat the cake and keep it also'
என்பது போல அப்பத்தை அருந்தி விட்டு அதை அப்படியே வைத்
திருக்கவும் முடியாது என்று சொல்லுவார்கள் ஆனால், சர்வாதிகார
ஆட்சியிலும் இன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சிக்காரர்களுக்கு
லாபம். இன்றைக்கு இந்தியாவில் நடைபெறுகிற ஜன
நாயக ஆட்சியிலும் தமிழ்நாட்டை ஒரு சர்வாதிகாரத்
தீவாக வைத்துக் கொண்டு லாபம் பெறுகிற ஒரு நிலை இருக்
கிறது.

இல்லை என்றால் இந்த வழக்குகளுக்காக திராவிட
முன்னேற்றக் கழகத்தின் அலுவலகத்திற்குள் நுழைந்து,
அறிவகம், அன்பகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சட்டமன்ற கட்சி அலுவலகம் இவைகளிலெல்லாம் நுழைந்து
அங்கு இருக்கின்ற கணக்குப் புத்தகங்கள் எடுத்துச் செல்ல
பட்டிருக்கின்றன; செயற்குழு, பொதுக்குழு மினிட்ஸ் புத்
கங்கள் எடுத்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. இது நெருக்க

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

காலத்தில் இந்திரா காந்தி அம்மையாரால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு காரியம். இன்று நெருக்கடி தீர்ந்த பிறகும் இந்தியாவில் ஜனநாயகம் இருப்பதாக எண்ணுகின்ற நேரத்தில் ஒரு கட்சி அலுவலகத்தில் போலீசார் நுழைந்து அந்த கட்சியின் கணக்கு ஏடுகளை, என்றைக்கோ நடந்து முடிந்த தேர்தலுக்குச் செலவான கணக்குகளைக் கொண்ட ஏடுகளை இந்த வழக்கோடு சம்பந்தப்படுத்த எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்றால் அதை நான் மிகமிக வன்மையாக கண்டிக்கிறேன். செயற்குழு மினிட்ஸ் புத்தகம், பொதுக்குழு மினிட்ஸ் புத்தகம் இவைகளை எடுத்துச் செல்கிற அளவிற்கு இங்கே நெருக்கடி நிலையினைப் போன்ற ஒரு ஆட்சி நடக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள் கறுப்புக் கொடியை இந்திரா காந்தி அம்மையாருக்கு எதற்காக காட்டவேண்டும் என்று கேட்டு விட்டு, அதற்கு உள் நோக்கம், இரண்டு காரணங்களையும் சொன்னார்கள். ஒன்று, இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கம் என்று சொன்னார்கள். நான் நண்பர் திரு. மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசைக் கவிழ்க்கிற நோக்கம் எங்களுக்கு இல்லை. நாங்கள் கறுப்புக் கொடி காட்டியது இந்திரா காந்திக்குத்தான்; அதுவும் தனிப்பட்ட இந்திரா காந்திக்கு அல்ல, சர்வாதிகார கோலோச்சிய இந்திரா காந்திக்கு. நாங்கள் இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தால், 'திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியை எதிர்த்து போர் கொடி உயர்த்தி இருக்கிறோம்' என்று சொல்லி இருப்போம். நாங்கள் மக்களாட்சி மீண்டும் மற்றொரு மக்களாட்சியால்தான் மாற்றப்பட வேண்டும் என்ற புனிதமான எண்ணம் கொண்டவர்கள். எனவே, ஒரு அரசை இடையிலே கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

திரு. மாரிமுத்து அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஒன்று இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கமாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் மத்தியிலே இருக்கிறவர்களின் சலுகைகளைப் பெற வேண்டும் என்ற ஆசையாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அவர்களே தன்னுடைய பேச்சிலேயே மறுப்பும் அளித்திருக்கிறார்கள். என்ன? இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு இவைகளை அடக்குங்கள்; வன்முறைகளுக்கு இடம் தராதீர்கள்' என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு டெலிபோன் மூலமாக தொடர்பு கொண்டு கூறினார்கள் என்று சொல்லியிருந்தார். இதற்கும் மத்திய அரசிலே உள்ளவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்

பதை நண்பர் திரு. மாரிமுத்து ஒப்புக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தக் காரியத்தைச் செய்துதான் நாங்கள் மத்தியிலே இருப்பவர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இந்த சங்கடத்திற்கு ஆளாகாமல் நாங்கள் அவசரகாலத்தை கொண்டு வந்தபோது இந்திரா காந்திக்கு 'ஆமாம்' போட்டிருந்தால் அன்றைக்கு மத்திய அரசினுடைய செல்வாக்கைப் பெற்றிருக்க முடியும். எனவே, இன்றைக்கு இந்திரா காந்திக்கு கறுப்புக் கொடி காட்டியிருக்க வேண்டியதில்லை. அன்றைக்கு அவசர காலச் சட்டத்தை கொண்டு வந்த போதே 'நன்று, நன்று' என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு அந்த அம்மையாரிடம் ஆளுகின்ற அண்ணா தி.மு.க. பெற்றிருக்கின்ற நற்சான்றினை விட அன்றைக்கே அதிக நற்சான்றை நாங்கள் பெற்றிருக்க முடியும்.

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சியே அவசர காலச் சட்டத்தை ஆதரிக்கிறதென்று பெருமைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். நாங்கள், அவசர காலச் சட்டத்தை மறைமுகமாக ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு இந்திரா காந்தியின் பதிலே போதுமானது என்று கருதுகிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள். இந்தியாவிலே எனக்கு எதிராக இரண்டு தீவுகள் இருக்கின்றன. ஒன்று தமிழ்நாடு; மற்றொன்று குஜராத் என்று சொல்லியதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கு எவ்வளவு எதிர்ப்பாக இருக்கிறது என்பதை அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

கறுப்புக் கொடி காட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் திடீரென்று முடிவு எடுத்தது என்று ஒரு கேள்வி. இந்திரா காந்தி வருவதாக அறிவித்திருந்தபோது இங்கே பெருமழையாக இருந்தது; ஆகவே அவர் வருவார் என்பது நிச்சயிக்கபடாமல் இருந்தது. அவர் நிச்சயமாக வருகிறார் என்று தெரிந்தவுடன் தான் திடீரென்று கழகத்தின் செயற்குழு கூட முடிவெடுத்தது. இப்படி கழகம் கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று முடிவெடுத்தது அன்றைக்கு. அதற்கு மறுநாள் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கறுப்புக் கொடி காட்ட முடிவெடுத்தது.

[மாலை 6.40]

எப்படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மத்தியிலிருந்து, ஜனதா கட்சியிடமிருந்து எந்தத் தூண்டுகோலும் வரவில்லையோ, அதே போல தி.மு.க.-விற்கும் மத்தியிலுள்ள ஜனதா கட்சிக்காரர்களிடமிருந்து எந்தத் தூண்டுதலும் வரவில்லை. மற்றவர்களுடைய தூண்டுதல்களால் காரியங்கள் செய்பவர்கள் அல்ல நாங்கள் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்காரியா பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷனுக்கு குற்றச் சாட்டுகளைத் தந்தேன். ஜனாதிபதியிடத்தில் தந்தேன்.

நான் பொருளாளராக இருக்கும்போது பேசப்பட்டது—அதைத் தான் பிறகு குற்றச் சாட்டுகளாக படித்துக் கொடுத்தேன். அந்தக் குற்றச் சாட்டுகளிலிருந்து எதிர்க்கட்சிக்காரர்கள் நிரபராதிகளாக மீண்டும் வருவார்களேயானால் மெத்த மகிழ்ச்சி அடைவேன் என்று மிக உருக்கமாக நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அப்படிச் சொல்லும்போது எனது உள்ளத்தைக்கூட தொடும் அளவுக்கு, பழைய கால எண்ணங்கள் நெஞ்சைத் தொடுகிற அளவுக்கு இருந்தது. ஆனால், நெஞ்சில் குத்திவிட்டு, எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டுமென்று சொல்வதைப்போல, குற்றச் சாட்டுகளை அடுக்கடுக்காக அள்ளித் தந்து விட்டு, அதுவும் ஜனாதிபதியிடத்தில் தந்துவிட்டு, குற்றச்சாட்டுகள் போதாது என்று மீண்டும் மதுரைக்கு வந்த இந்திரா காந்தியாரிடத்தில் தரப்பட்டது. மகஜர் தயாரித்து, ரெயிலில் சென்று, ரெயில் தாமதமான காரணத்தால், போய்ச் சேர முடியாமல், விமானத்தில் பறந்து இந்திரா காந்தியிடத்தில் கொடுத்து 54-க்கு மேற்பட்ட குற்றச் சாட்டுகளை, கருணாநிதி, நெடுஞ்செழியன், சாதிக் பாட்சா, ப. உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மாதவன், இப்படி பல அமைச்சர்களை அதிலே ஈடுபடுத்தி, இவர்கள் எல்லாம் ஊழல் புகாருக்கு உள்ளானவர்கள், லஞ்ச ஊழல், பேர்வழிகள், என்று நெஞ்சில் குத்தி விட்டு நாங்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மூச்சு போய்க்கொண்டு இருக்கிற நேரத்தில், குத்தியவர் எதிரில் வந்து, நான் குத்தியது உண்மைதான். நீ எப்படியாவது பிழைத்துக் கொண்டால் மகிழ்ச்சி அடைபவர் என்னைவிட வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்வதைப் போல, எனது இனிய நண்பர், புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நீங்கள் நிரபராதிகளாக வந்தால் மகிழ்ச்சி அடைவோம்' என்று சொல்கிறார் என்று எண்ணுகிறேன்.

அந்தக் குற்றச் சாட்டுகள் யாரால், எப்படி தயாரிக்கப்பட்டன? எனக்குத் தெரியும். இப்போது சொன்னார்கள். கவர்னர் மாளிகையில் ஆட்கள் இருக்கிறார்கள். இப்படித் தகவல்கள் வருகின்றன, என்று. கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே, மத்திய அமைச்சர்கள் சிலர் இங்கே உள்ள அவர்களுடைய ஆட்களைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கே இருக்கிற பைல்களை எல்லாம் தேடிப் பிடித்து, எந்தக் குற்றச் சாட்டில் சிக்க வைக்க முடியும் என்று குற்றச்சாட்டுகளை தயாரித்து அவைகளை நம்முடைய இன்றைய முதலமைச்சரிடத்திலே பெற்றும், வேறு சிலரிடத்திலேயும் தந்து கையெழுத்துக்களைப் பெற்றார்கள். அந்தக் குற்றச் சாட்டுகள் அங்கே சென்றன. அந்தக் குற்றச் சாட்டுகள் அங்கே போனபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எழுதிக் கொடுத்தார்.

"This Petition is written by me with all responsibility and sense of duty...."

என்று. அதற்குப் பிறகு சர்க்காரியாவுக்கு தந்த அபிடவிட்— வாக்கு மூலத்தில்

"I most respectfully submit that it is absolutely true.
I have no personal knowledge...."

சொன்ன சங்கதி அத்தனையும் உண்மையா என்று எனக்கு ஒன்றும் நேரடியாகத் தெரியாது என்று சொன்னார். இங்கே ரகுமான் கான் இளித்தவாயன் கிடைத்து விட்டான். பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக்கொண்டு எழுதித்தர வேண்டுமென்று கேட்கின்றார்கள். அப்படிக் கேட்கிற முதலமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவருக்கும் எங்களைப் பற்றி எழுதிக் கொடுத்த மனுவில்

"This petition is written by me with all responsibility and sense of duty...."

என்று எழுதிச் கொடுத்துவிட்டு, சர்க்காரியா கமிஷன் வந்ததும் அதில் எழுதிக் கொடுக்கிறார்,

"I have no personal knowledge about this"

என்று எழுதிக் கொடுக்கிறார்.

இந்த சர்க்காரியா கமிஷன் விசாரணையின் போது, இன்று மனம் உருகப் பேசினாரே, எண்ணிப் பார்க்க வேண்டும், என்னென்ன காரியங்கள் நடைபெற்றன ? எத்தனை விதமான சோதனைகள் நடைபெற்றன ? நான் ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் முரசொலி அலுவலகத்தில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த நேரத்தில்—அப்போது நான் அங்கே எழுதிக் கொண்டிருக்கிறேன்—என் எதிரில் சோதனை நடந்து கொண்டிருக்கிறது. பீரோக்கள் உடைக்கப்படுகின்றன. மேஜைகள் உடைக்கப்படுகின்றன. அங்கே இருக்கிற பூட்டுக்கள் உடைக்கப்படுகின்றன. என்னைச் சுற்றி அதிகாரிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை சூழ உட்காரவைத்துவிட்டு எழுதிக்கொண்டிருக்கிறேன். இப்படி என்னுடைய இல்லத்தில், எங்களுடைய அலுவலகங்களில், கட்சிப் பணிமனைகளில், எங்களுடைய கழகத் தோழர்களின் இல்லங்களில், எங்களுக்கு எங்கேயாவது தொலைவிடத்து உறவினர்கள் இருக்கிறார்களா, தொலைதூர உறவினர்கள் இருக்கிறார்களா என்று அந்த வகையில் எல்லாம் சோதனைகள் நடைபெற்றன.

குற்றச்சாட்டுக்களைக் கொடுத்துவிட்டீர்கள். கொடுக்கும் போது நீங்களேகூட இது இவ்வளவு கொடூரமாக வரும் என்று எண்ணியிருக்க மாட்டீர்கள். உங்களுடைய நல்ல உள்ளம் கூட உடைந்திருக்கும். என்னென்ன நடைபெற்றன

என் மனைவி—இங்கே இருக்கிற சகோதரிகள் மன்னித்துக்கொள்ள வேண்டும்—எனக்கு நேராக முக்கால் நிர்வாணமாக்கப்பட்டு தன் உடலில் எங்கேயாவது வைரமோ தங்கமோ பதித்து வைத்திருக்கிறாளோ என்று என்னுடைய இரண்டாவது மனைவியின் வீடு சோதனையிடப்பட்டு அவள் சோர்ந்து களைப்படைந்து விழக்கூடிய விதத்தில், கீழே விழுந்து துடிதுடித்துப் போன காட்சியை எனது அருமை நண்பர் ப.உ.ச. அவர்கள் நேரில் பார்த்தார்கள்.

அதிகாரிகள் பல விவரங்களை விசாரிக்கிறார்கள். பலபேர்கள் சென்னையைச் சேர்ந்த அதிகாரிகள். விசாரித்துவிட்டு கேட்கிறார், அரை மணி நேரத்திற்கு பிறகு கேட்கிறார், சார் உங்கள் பெயர் என்ன என்று கேட்கிறார். அதிலும் என்னை அவமானப் படுத்த வேண்டுமாம், களங்கப்படுத்த வேண்டுமாம். இவ்வளவு அக்கிரம வெறியாட்டங்கள் அன்றைய நெருக்கடி காலத்தில் நடைபெறுகிற அளவிற்கு அன்றையதினம் நீங்கள் தந்த குற்றச்சாட்டுக்களை, புகார்களை அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். இன்னும் அந்தப் புண் ஆறவில்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது எங்கே போய் முடியுமோ நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் நாங்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடனே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிருபர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். மற்ற விசாரணைகள் பற்றி, ஏழு குற்றச் சாட்டுகள் பற்றி விசாரிக்கச் சொல்லி தங்களுக்கு தாக்கீது வந்திருப்பதாக. ஏற்கனவே வந்த தாக்கீதுகளைத்தான் சொல்கிறார்கள். உடனே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பித்துவிடமுடியாது, அடுக்கடுக்காக வழக்குகள் போடப்படும் என்று அவர் சொல்கிறார். அதே போல் நம்முடைய அருமை நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பவே முடியாது, அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. அதை, ஒரு தலைப்பாக வந்ததை வைத்துக் கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று நான் சொன்னதில்லை.

<u>திரு. மு. கருணாநிதி:</u> ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம். ஏதோ அவர் விரும்புகிற காலம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தளவிற்குச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த சர்க்காரியா கமிஷனின் ஏழு குற்றச்சாட்டுகள் மாநில அரசுக்கு அனுப்பப்

பட்டன. அந்த ஏழு குற்றச்சாட்டுகளில் சர்க்காரியா என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள்? ஒரு குற்றச்சாட்டு நாதன் பப்ளிகேஷன்ஸ். அதிலே என்ன அவர்கள் முடிவுரை தெரியுமா?

"The Minister, Shri Nedunchezhiyan, was directly responsible for irregularities......"

அது அவர்களுடைய முடிவுரை. அடுத்ததாக, 'Loan to the father-in-law of Thiru S. Kandappan'

அதில் என்ன முடிவுரை தெரியுமா?

"Shri Madhavan, the then Minister for Industries, had exercised pressure on the officials of the Corporation at the time of the sanction and disbursement of the loan as well as for delaying the follow-up action on the Board's Resolution of foreclosure....."

இது சர்க்காரியாவின் முடிவுரை. இந்த இரண்டு பேர்கள் மீது தான் குற்றச்சாட்டுகளை அவர்கள் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, க்ளோப் தியேட்டர். க்ளோப் தியேட்டர்பற்றிச் சொல்லும்போது,

"It has not been established beyond all manner of doubt that the Respondent had received any illegal gratification from Shri Varadaraja Pillai......":

என்பது முடிவுரை.

அடுத்தபடியாக, திரு. ஏ. எல். ஸ்ரீனிவாசன், மறைந்து விட்டார், பாவம். அவர்பேரில் புகார் கொடுத்தது. நம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, ஆனால் அந்தப் புகாரில் இருந்தது. அதற்குக் கூட

"This part of the allegation has thus not been substantiated...."

அதாவது நிரூபிக்கப்படவில்லை.

அடுத்து, ப்ராட்வே டைம்ஸ் பத்திரிகை மீது ஒரு வழக்கு போடப்பட்டது. பிறகு அந்த ஆசிரியர் வருத்தம் தெரிவித்த பிறகு வாபஸ் பெறப்பட்டது. அது உண்மைதான் என்று சர்க்காரியா சொல்கிறார்கள்.

பிறகு ஆறாவதாக, ட்ராக்டர். என்னுடைய நிலத்திற்கு லண்டனிலிருந்து கொடுத்த ட்ராக்டரைக் கொண்டுபோய் திருவாரூர், காட்டூரில், நிலத்தை உழுதேன் என்பது ஒரு

குற்றச்சாட்டு. லண்டனிலிருந்து கொடுத்தவுடனே அதை நான் கோவை விவசாயக் கல்லூரிக்கு பரிசாகத் தந்துவிட்டேன். அது சென்னை துறைமுகத்திற்கு வந்து கோவைக்குச் சென்று நானும், கவர்னர் ஷா அவர்களும், மற்ற அமைச்சர்களும் சென்று அதைப்பரிசாகத் தந்துவிட்டோம், அங்கு நடைபெற்ற ஒரு விழாவில்.

[மாலை 6.30]

ஆனால் அது திருவாரூருக்கு கொண்டு செல்லப்பட்டது என்பது புகார். அந்த விவகாரங்களுக்குள் நான் நுழைய விரும்பவில்லை. திருவாரூரில் எனக்கு 12 ஏக்கர் நிலம் இருக்கிறது. 12 சாதாரண ஏக்கர், ஸ்டான்டர்டு ஏக்கர் அல்ல. இந்த 12 ஏக்கர் நிலத்தை உழுவதற்கு டிராக்டரால் உழ வேண்டும் என்றால் ஒரு நாள் வேண்டும் அதற்கு சென்னையிலிருந்து ஒரு டிராக்டரை எந்த முட்டாளும்—காலையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்களே—'ஸ்டுபிடிடி' என்று—அதைப்போல் எந்த முட்டாளும் சென்னையிலிருந்து 250 மைல் அளவுக்கு ஒரு டிராக்டரை திருவாரூருக்குக் கொண்டு செல்ல மாட்டான் அங்குள்ள பஞ்சாயத்து யூனியனிலே 40 ரூபாய் நாள் ஒன்றுக்கு வாடகை கொடுத்தால் எளிதாக வாங்கி கொள்ள முடியும். இதில் சர்க்காரியா என்ன எழுதுகிறார்.........

I hold that allegation (Sl. No. 3) has not been substantiated.

இது நிரூபிக்கப்படவில்லை. ஆனால் இன்னொன்றை அதில் சர்க்காரியா எழுதியிருக்கிறார். "இந்த நிலத்தில் டிராக்டர் ஒன்று உழுதிருக்கிறது, அது லண்டன் டிராக்டர் ஆக இருக்கலாம்".. முதலமைச்சருக்கு சாதகமாக சொல்லியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் என்னுடைய நிலம் இருக்கின்ற காட்டூருக்கு வந்திருக்கிறார், ஆனால் என்னுடைய நிலத்தை பார்த்தது கிடையாது. அப்படியிருக்கும்போது அங்கு ஏதோ ஒரு டிராக்டர் உழுதிருக்கிறது, அதைப் பார்த்து விட்டு லண்டன் டிராக்டர் என்று எண்ணியிருக்கலாம் என்று எதை நினைத்துக் கொண்டு சர்க்காரியா எழுதினாரோ தெரியவில்லை.

அடுத்தது, தாத்தாச்சாரியார் புகார். அன்பில் தர்மலிங்கத்தைப் பற்றியது.

The allegation that Shri Anbil Dharmalingam helped Shri Tatachariar, a landlord to evict his tenants forcibly from the lands in their possession has not been substantiated.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை.

அடுத்தது, ஜங்கமராமபுரம் மர்டர் கேஸ்......

The evidence adduced before the Commission has not been sufficient to establish the fact beyond doubt.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் நிரூபிக்கப்பட்டது இரண்டு; அந்த இரண்டும் எங்கே இருக்கிறது?.... அங்கு இருக்கிறது. ஆனால் அந்த இரண்டும் அங்கேயிருக்கின்ற காரணத்தால் சர்க் காரியா கமிஷன் சொல்லியிருப்பது—அப்போதிருந்த நிலையில், அப்போதிருந்த சூழ்நிலை நெருக்கடியில், எப்படி ஸ்டென்ஸில் போட்டு தயாராக வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் கை யெழுத்து எப்படியெல்லாம் வாங்கப்பட்டன என்பதையெல் லாம் நாம் அறிவோம்.... எனவே நாவலர் நெடுஞ்செழியன் மீதும், மாதவன் மீதும் சர்க்காரியா தெரிவித்திருக்கும் அறிவிப்புகளை கூட அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் எப்படியெல்லாம் அமைந்திருக்கும் என்பதால், அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பது தான் நிலைமை. இந்த வகையில் சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜூடிஷியரியில் பென் டிங்காக இருக்கும்போது இதையெல்லாம் 'ரெபர்' பண்ண லாமா?...............

திரு. மு. கருணாநிதி: நான் குறிப்பிட்டது சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டாக இருந்தாலும் இதை ரெபர் பண்ணலாமா என்ற சந்தேகம் எனக்கு வருகிறது........ முன்னால் உள்ள ரூலிங்கை வாசிக்கிறேன்..........

You should not refer to any matter on which a judicial decision is pending. The matter has been referred for judicial decision. You are a Doctor. You may not know the Law of Contempt, which operates not from the moment the case starts, but from the moment the possibility of a judicial enquiry arises.

என்று டாக்டர் ஹாண்டே எழுப்பியதற்கு ரூலிங் கொடுக்கப் பட்டிருக்கிறது.

The Law of Contempt with which we are now concerned starts from the time when the possibility of the enquiry arises and the possibility has already arisen.

அதனால் ஜூடிஷியரி என்கின்ற நிலைக்கு போக இருக்கக்கூடிய வைகளைப்பற்றி நாம் பேசக்கூடாது என்றும், ஜூடிஷியரிக்கு போகக்கூடிய விவகாரம் என்கின்ற நிலை இருந்தால் கூட நாம் அதைப்பற்றி பேசக்கூடாது என்று இருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: அதனால் தான் நான் குறிப்பிட்டேன், இதில் அமைந்திருக்கின்ற சாட்சியம், அதுபற்றிய விவரங் களை எல்லாம் நான் சொல்லவில்லை. எந்தெந்தக் குற்றச்சாட்டு

கள் அவற்றிலுள்ள தவறுகள் என்ன என்று விசாரித்த சர்க் காரியா கமிஷன் தந்த அறிக்கை 26 ரூபாய்க்கு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அப்படி விற்பனை செய்யப்படுகின்ற புத்தகத்திலுள்ள தகவலைத்தான் தந்தேனே அல்லாமல் வேறு எதுவும் அல்ல.

இப்படிப்பட்ட பெரிய குற்றச்சாட்டுக்களை சாட்டியவர்கள், தங்களுடைய ஆட்சி எப்படி நடத்தப்படவேண்டும் என்பதற் காக சொல்லப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலாக, சொல்லப் பட்ட குற்றச்சாட்டுகளையே திரும்பத் திரும்ப அதையே எங்கள் மீது சுமத்திக்கொண்டு, அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு ஊழல் ஊழல் என்று கூறி, நாங்கள் எல்லாம் உத்தமபுத்திரர்கள் என்று தங்களை கூறிக்கொள்கின்ற நேரத் தில், ஒன்றை மறந்து விடக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்கள், பிரதமரிடத்திலும், ஜனதிபதியிடத் திலும் ஆளுநர் அவர்களிடத்திலும் ஒரு மகஜரை தந்திருக்கிறார் கள். இந்திரா காந்தியின் காக்கஸ் அமைப்பில் சுதிர்சரீன் என்பவர்—யஷ்பால் கபூரின் உறவினர்—மாப்பிள்ளையின் தம்பி—தமிழ்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற நேரத்தில்—45 இலட்சம் ரூபாய் தமிழ்நாட்டுக்கு வருகிறது. இதில் 25 இலட்சம் ரூபாயை சுதிர்சரீன் இங்கு வந்து செக் மூலமாக தருகிறார்.

அது மாற்றப்படுகிறது. பிறகு 20 லட்சம் ரூபாய் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக வருகிறது. அப்படி வந்த ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மாற்ற முடியவில்லை. உடனே, டெல் லிக்குத் தகவல் பறக்கிறது சென்னையிலே இருந்து. அங்கேயிருந்து சென்னையிலே உள்ள ஜார்ஜ் டவுனிலே உள்ள தேசிய மய மாக்கப்பட்ட வங்கியோடு தொடர்பு கொள்ளுங்கள். அங்கே இந்த 20 லட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் மாற்றிக் கொள்ளலாம் என்கின்ற ஆலோசனை பிறப்பிக்கப்படு கிறது. உடனடியாக அந்த வங்கிக்குச் செல்கிறார்கள். 20 லட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் சின்னச் சிறு நோட்டுக்களாக அங்கே மாற்றப்படுகின்றன. இதைப் பற்றி ஒரு புகார். இதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக் கிறார்கள், யாருக்கு அந்தப் பணம் அனுப்பப்படுகிறது என்கிற புகார் உள்துறை அமைச்சர், பிரதம அமைச்சர், கவர்னர், குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் களால் கையெழுத்திட்டு தரப்பட்டிருக்கின்றது. எனவே தான், பொதுத் தேர்தலிலே இப்படி 45 லட்சம் ரூபாய் பேரம் நடத்திவிட்டு, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது ஊழல், ஊழல் என்று பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

அது மாத்திரமல்ல, 'பாவா' என்ற ஒருவரோடு லட்சக் கணக்கான ரூபாய்க்கு இங்கேயும், அங்கேயும் பேரம் நடைபெற்றிருக்கிறது. அந்த பாவா என்பவர் யார் என்பது போன்ற விஷயங்கள் எல்லாம் வெளிவரத்தான் போகின்றன. எனவே, ஊழலைப் பற்றிப் பேசுகின்றவர்கள், நாணயம், நேர்மை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றவர்கள், ஏற்கனவே இருந்த கழக ஆட்சி நேர்மையற்றது, நாணயமற்றது என்று பேசுகின்றபோது, இவைகளையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வெங்கடாத்திரி கமிஷனைப் பற்றி காலையிலே சொன்னார்கள் அந்த வெங்கடாத்திரி கமிஷன் அமைக்கப்படுகிறது. விசாரணையும் நடக்கிறது. அப்படி விசாரணை நடக்கும்போது, புகாரைக் கொடுத்தவரைக் காணவில்லை என்று சொன்னார்கள். இந்த மாதிரி புகாரைக் கொடுக்கின்றவர்கள், காணாமல் போவது தமிழ்நாட்டிலே சகஜம். அப்படிப் புகாரைக் கொடுக்கின்றவர்கள் விசாரணைக்கு வரமாட்டார்கள். அதுபோல் அவர்கள் வராவிட்டாலும், சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்றது. அதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. புகாரைக் கொடுத்தவர்கள் நேரில் வராமல் போனாலும், கமிஷன் விசாரணை நடக்கும். அந்த முறையிலே வெங்கடாத்திரி கமிஷன் விசாரணை நிற்கலாமா? ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டுவிட்டார் என்று வெங்கடாத்திரி குறிப்பு அனுப்பிய பிறகு, அது பென்டிங்கில் இருக்கின்ற நேரத்திலே, சட்ட மன்றத்திலே அந்தச் சட்டத்தை ரத்து செய்கிறார்கள் என்றால், ஒரு அமைச்சரைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட காரியம் நடைபெறுகிறது என்று நாடு எண்ணாதா?

புதுக்கோட்டையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் வெள்ள நிவாரண வேலைகளுக்காக, கட்டாயப்படுத்தி பணம் வசூலித்தார் என்று.....................

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் வெங்கடாத்திரி கமிஷனிலே புகார் சொன்னவர் இருக்கின்றாரா என்பதே சந்தேகமாக இருக்கிறது. விளம்பரம் கொடுக்கப்பட்டும் ஆள் கிடைக்கவில்லை. அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். புகார் கொடுத்திருக்கின்றவர் சட்டபூர்வமாக விசாரணைக்கு வருவதா, வேண்டாயா என்ற சட்டப் பிரச்னை வேறு. அந்த அடிப்படையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது என்பதைத்தான் எடுத்துக்காட்டப்பட்டது. புகார் கொடுத்த ஆள் இல்லை என்பதுதான் உண்மை நிலை.

1978 சனவரி 7]

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் சொல்வது புகார் கொடுத்தவரைப் பற்றி அல்ல. ஏற்கனவே விசாரிக்கப்பட்டு, வழக்கு பாதியிலே நிற்கிறது. அந்த நேரத்திலே, இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டு, அந்தக் குழுவே காலியாக்கப்படுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். யாரைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தை ரத்து செய்தார்கள்? பொதுமக்கள் பிரதிநிதிகள் தவறுகள் புரிந்தால், அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கின்ற சட்டத்தை நீங்கள் ரத்து செய்து விட்டீர்கள்.

நான் புதுக்கோட்டை பற்றிச் சொன்னேன். அங்கே மாவட்டக் கலெக்டர் அவர்கள் வெள்ள நிவாரண வேலைகளுக்காக பணம் வசூலிக்கிறார். அப்படி வசூலிக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள், அப்பணத்தைத் திருப்பித் தரச் சொல்கிறார். அது பாராட்டக் கூடியதாக இருக்கலாம், நான் அதற்குள்ளாக நுழைய விரும்பவில்லை. அது அரசாங்கத்தைப் பொறுத்த நிர்வாக விவகாரம்.

ஆனால், அதே நேரத்தில் திருச்சியிலே நடந்த நிகழ்ச்சிக்கு பல அமைச்சர்கள் சென்று, நேரடியாக பணம் வசூலித்திருக்கிறார்கள். அது எந்த வகையிலே நியாயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே போல் அமைச்சர்கள் பழனிக்குப் போய், அங்கே உள்ள வியாபாரிகளை நேரிலே வரச் சொல்லி யார் யார் எவ்வளவு இன்கம்-டாக்ஸ் கட்டுகிறார்கள் என்பதை பார்த்து, அவர்களிடத்தில் அதற்குத் தகுந்தாற் போல் கட்சிக்காக நிதி வசூலிக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மக்களுக்காக வெள்ள நிவாரணத்திற்காக வசூலிக்கப்பட்டதைத் திருப்பித் தர சொன்ன முதல் அமைச்சர் அவர்கள், இதிலே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[இரவு 7.00]

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காலையில் பேராசிரியரும் குறிப்பிட்டார். ஆளும் கட்சியின் சார்பாகத் தவறே நடைபெறவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்காதீர்கள்; அவை எல்லாம் வெளிவரும் காலம் அண்மையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

விசைத் தறிகளுக்கு நார்ப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. அந்த விநியோகத்தை முன்பு தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி செய்தது. இப்போது இவ்வளவு கொடுக்கலாம் என்று தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி ஒதுக்கீடு செய்கிறது. இத்தனை கதிர் உள்ளவர்களுக்கு இவ்வளவு கிலோ நார்ப்பட்டு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கிறது. டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன், காந்திபுரம், குமாரப்பாளையம்.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

முன்பு ரீஜினல் கமிட்டி அதற்கு மூன்று மாதத்திற்கு செய்த அலாட்மென்ட் 700 கிலோ. அப்படியானால் ஒரு மாதத்திற்கு 234 கிலோ சுமாராக. இதுதான் தரலாம் என்று முன்பு சிபாரிசு செய்தது தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி. ஒரு மாதத்திற்கு 234 கிலோ நூல் தரலாம் என்று சிபாரிசு செய் கிறது.

ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ்— ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு இப்போது அந்த அசோசியேஷ னுக்கு ஒதுக்கியது எவ்வளவு தெரியுமா? 2,780 கிலோ. 234 கிலோ ஒதுக்கலாம் என்ற நிலை எங்கே? ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு ஒதுக்குகிற 2,780 கிலோ எங்கே? 2,546 கிலோ ஒவ்வொரு மாதத்திற்கும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது, மாதந் தோறும். அவர்கள் கேட்டதைவிட, அவர்களுக்கு உரியதை விட அதிகமாக ஒதுக்கப்பட்டது 2,546 கிலோ. கன்ட்ரோல் விலைக்கும் வெளி மார்க்கெட் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை வைத்துப் பார்த்தால் ஒரு கிலோவுக்கு ஆறு ரூபாய் லாபம் வருகிறது. ஒரு மாதத்திற்கு அந்த குமாரப்பாளையம் அசோசியேஷனுக்கு 2,547×6=15,282 ரூபாய் லாபம் தரும். இது குமாரப்பாளையம் சம்பவம்.

சேலத்தில், சேலம் ஹாண்ட்லூம்ஸ்கிளாத் மான்யுபாக்சரிங் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேஷனுக்கு விசைத் தறிக்கு தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி முன்பு ஒரு மாதத்திற்கு 12,700 கிலோ ஒதுக் கியது. ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் இப்போது ஒதுக்கியிருப்பது 23,610 கிலோ—அதிகமாக 10,910 கிலோ. இதிலே மாத லாபம் 65,640 ரூபாய் வரும். இதிலே தங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று ஏழை விசைத் தறியாளர்கள் இப்படி யாருக்கோ அதிகப்படுத்திக் கொடுத்து விட்டார்கள், எங்களுக்குக் கதிர்கள் கிடைக்கவில்லை, நூல் கிடைக்கவில்லை என்று முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந் திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இங்கே எந்தச் செல்வாக்கு பயன்பட்டது? அமைச்சரின் செல்வாக்கா? ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்களின் செல்வாக்கா என்பதை முதலமைச்சர் அவர் கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் யார் ஈடுபட்டு குமாரப்பாளையம் சம்பவம் நடைபெற்றிருக்கிறது, எப்படிப்பட்ட சிபாரிசுகள் சென்றிருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலும் சரி, வெளியிலும் சரி, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பேசுகின்ற பேச்சுக்கள்— முதலில் ஒன்று பேசுவது; மீண்டும் மறுப்பது என்ற முறை யில்தான் அமைந்து கொண்டு போகின்றன; நேற்றைக்குக் கூட இந்த அவையில் நம்முடைய உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள். வேணுகோபால் என்ற ஒருவருக்கு, மீனவர்

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

அல்லாதவருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு விசைப்படகு ஒதுக்கினார்கள் என்று சொன்னார்கள். கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எழுந்து "எல்லோர் பட்டியலையும் தர முடியுமா?" என்று கேட்டார். நான் எழுந்து "எந்த ஆண்டு" என்று கேட்டேன். தலைவர் அவர்களே, உங்களுக்கு நிச்சய மாகத் தெரியும். 1972 ஆம் ஆண்டு என்று அவர் சொல்ல வில்லை; அவர் சொன்னதெல்லாம் 1969-ல் இருந்து 1976 வரையில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் என்றார். நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன், "அண்ணா ஆண்ட இரண்டாண்டு தி.மு.க. ஆட்சி என்று ஒத்துக்கொள்ளாமல் இருப்பது வேடிக் கையாக இருக்கிறது' என்று சொன்னேன். இதிலே எட்மண்ட் சொன்னார்—"அண்ணா ஆண்ட இரண்டு வருஷங்களும் புனித மான ஆண்டுகள். அதற்குப் பிறகு 1969-ல் இருந்து 1976 வரையிலும் உள்ள காலத்தில்தான் தவறு நடைபெற்றிருக் கிறது; தகுதியற்ற ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார். திரும்பத் திரும்ப நாங்கள் கேட்டோம். அந்தப் பட்டியல்களை வெளியிட முடியுமா என்று கேட்டோம் அப்போது திரும்பத்திரும்ப 1969 முதல் 1976 வரை என்றுதான் சொன்னாரே தவிர 1972 ஆம் ஆண்டு என்று அவருடைய நாவால் உச்சரிக்கப்படவில்லை. ஆனால் இங்கே அவர்கள் தனக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தில் அச்சுப் பிழை நேர்ந்து விட்டது '62 என்பது 72 என்றுபோட்டுவிட்டார்கள்' என்று எழுதியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

நான் கேட்கிறேன். அறுபத்திரண்டோ எழுபத்திரண்டோ இங்கே பேசப்பட்டதா? ஆனாலும் தவறாகச் சொல்லிவிட்டு வீண் பழி சுமத்துகிற எண்ணத்தில் என்மீது குறை சொல்லி விட்டு, நாங்கள் இறுக்கிப் பிடித்துக் கேட்கிற நேரத்தில் நான் இப்படிச் சொன்னேன், அப்படிச் சொன்னேன் என்று சமாளிப்பது அமைச்சர்களுக்கு அழகல்ல என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னால் திருந்திக் கொள்கிறோம், சொன்னால் திருந்திக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள், பால சுப்பிரமணியம் என்பவரைத் தான் அப்படிச் சொல்லிவிட்டேன் என்கிறார். வேணுகோபால் என்பதற்கும் பாலசுப்பிரமணியம் என்பதற்கும் வேறுபாடு தெரியாமல் சொல்லியிருக்கிறாரா? அந்த பாலசுப்பிரமணியமே எழுதியுள்ள கடிதத்தில் குறிப் பிட்டிருக்கிறார், "ஆறாம் தேதி அன்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மீது கொண்டு வந்த உரிமைப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையில் பாரிக் கம்பெனியில் பணிபுரியும் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது. அவர் மீனவர் அல்லாதவர். அந்தத் தொழிலுக்கே செல்லாதவர் என்று தெரிவித்து இன்று காலை பத்திரிகைகளில் கண்டு வியப்புற்றேன். நான் வழிவழியாக

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

மீனவர் இனத்தைச் சேர்ந்தவன், கட்டுமரமும் வைத்து மீன் பிடித்து வந்தவன். இன்றும் கட்டு மரம் வைத்து மீன் பிடிப்பவன்தான் நான். பாரிக் கம்பெனியில் பணி புரிவதால் மீனவர் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் சொல்லுகிறாரா? அல்லது மீனவர்கள் பாரிக் கம்பெனி போன்ற நிறுவனங்களில் பணிபுரியக் கூடாது. அவர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்று 1967 இல் ரூ. 500 காப்புத் தொகை கட்டி மீனிலாகாவிற்கு முறைப்படி விண்ணப்பித்து 1972 ஆம் ஆண்டு இறுதியில் நடந்த குலுக்கலில் விழுந்த விசைப் படகு—(கழக ஆட்சியில் அலாட்மெண்ட் என்று சொல்வதைவிட 100 பேர்கள் தகுதியுள்ளவர்கள் கேட்டால் லாட் போட்டுத்தான் தரப்பட்டது) ஒரு மீனவன் என்ற முறையில் வழங்கப்பட்டுள்ளது'' இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே எழுபத்திரண்டா அறுபத்தி ரண்டா என்ற பிரச்சினை கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் சொல்லுங் கள் திருத்திக்கொள்கிறோம் என்று. ஆனால் அவர்கள் சொல்வதைத் திருத்திக்கொள்ளுகிறார்களா என்றால் அங்கே தான் கௌரவப் பிரச்சினை எழுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒரு விஞ்ஞானக் கருத்தரங்கிலே பேசினார்கள். அவர்களுடைய பேச்சு ரசிக்கத் தக்க பேச்சு. விஞ்ஞான கருத்தரங்கிலே முதலமைச்சர் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். அது அண்ணா பத்திரிக்கையிலே வந்திருக் கிறது. இந்துப் பத்திரிக்கையிலே கூட பெட்டி கட்டி அது செய்தி யாக வந்திருக்கிறது.

Only with the Centre's aid of Rs. 368 crores, medical and other welfare schemes were being implemented for the benefit of four and half crores of people in the State.

என்று செய்தி வந்திருக்கிறது. நாலரைக் கோடி மக்களுக்கு மத்தியஅரசு தருகிறதொகை 368 கோடி ரூபாய் மானியத்திலிருந்து நாம் உதவிகளை நல்வாழ்வுத் திட்டங்களைப் போடுகிறோம்.

இதைப் படித்தவுடனே நான் திடுக்கிட்டேன். ஏனென் றால் 368 கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து நமக்கு மானியமாக வருகிறது என்று நான் நிதியமைச்சராக இருந்த பொழுது தெரியவில்லை. என்னுடைய நண்பர் திரு. மனோகரன் நிதியமைச்சராக இருக்கும் பொழுது அதை அவரும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அந்த 368 கோடி ரூபாய் மானியமாக வரவில்லை. நம்முடைய மாநிலத் தின் மொத்த வருமானம் நிதியமைச்சர் இங்கே வைத்த நிதி நிலை அறிக்கையின்படி 633.24 கோடி ரூபாய். வணிக வரியின் மூலம் கிடைப்பதுதான் 368 கோடி ரூபாய். நான்- டாக்ஸ் ரெவின்யூ என்பது 83 கோடி ரூபாய். நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசால் வருமான வரி, மற்றும் தீர்வை வரி ஆகியவற்றிலிருந்து வரவேண்டியது, கொடுத்தே தீர வேண்டும் என்பது 136.98 கோடி ரூபாய். மத்திய அரசு

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

நமக்கு மானியமாகக் கொடுப்பது 44.73 கோடி ரூபாய்தான். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு என்ன ஆகிவிடும்? 368 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் நமக்கு மானியம் தருகிறது என்றால் நாம் அவர்களிடத்திலே பணம் கேட்கவே அருகதையற்றவர்களாகி விடுவோம். அதன் காரணமாகப் பணம் கிடைக்காமல் போய்விடும்.

முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், தவறு களை சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறோம் என்று. அந்த வகையிலேதான் நான் ஆக்கப் பூர்வமான ஆலோசனை சொல்லி ஒரு அறிக்கையை விட்டேன். முதலமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லை. நம்முடைய நிதியமைச்சராவது மறுப்பார் என்று எண்ணினேன். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அவர் ஊரில் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியாது. அவரும் மறுக்கவில்லை. 368 கோடி ரூபாய் மானியமாக நமக்குத் தருவதில்லை. திருத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது. இது வரையிலும் திருத்திக்கொள்ள வில்லை. அன்று நான் சொன்னது தவறாகிவிட்டது என்று திருத்திக் கொண்டால் என்ன ஆகிவிடும்.

[இரவு 7.10]

இந்து போன்ற பத்திரிக்கையில், அண்ணா போன்ற பத்திரிக்கை யில் வெளி வந்திருக்கின்ற செய்தி அது. பத்திரிக்கையாளர் கள் தவறிப் போட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது. அதைத் திருத்திக் கொள்வதில் என்ன தவறு? வாய் தவறிச் சொல்லிவிட்டேன், பார்க்காமல் சொல்லி விட்டேன், அல்லது எழுதியவர் ஏட்டைக் கெடுத்தார் என்பதுபோல் எழுதிக் கொடுத்தவர்கள் அப்படிக் குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார் கள் என்று சொல்லி, மாநில மக்களுடைய நல்வாழ்விற்காக, மக்களுடைய நல்ல உரிமைக்காக, அந்த உண்மையை ஒப்புக் கொண்டால், எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறாரே என்று ஒப்புக்கொண்டால் என்ன கௌரவம் பாதித்து விடும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் முந்தைய அரசு கட்டிடங்களுக்கு வைத்த உயிரோடு உள்ள தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் எடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது, இது நியாயம்தானா, தேவைதானா என்ற ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காகச் சிலைகள், உயிரோடு உள்ளவர்ககளுக்கு எதற்காகப் படத் திறப்பு விழாக்கள், உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காக மன்றங்கள், இப்படிக் கேட்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. நம்முடைய

முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்த காலத்திலே எம்.ஜி.ஆர். மன்றங்கள் வைக்கப்பட்டபோது கூட இன்றைக்கு அவருடைய கட்சியிலே மிகத் தீவிரமாக இருக்கின்ற நண்பர் நம்முடைய எஸ். ஆர். இராதா போன்றவர்கள் நண்பர் சம்பத் அவர்களோடு சேர்ந்து கொண்டு மன்றங்களை உயிரோடு இருப்பவர்களின் பெயரால் திறக்கக்கூடாது என்று மிக முனைப்பான அரசியல் முன்னணி வீரராகத் திகழ்ந்தார்கள். ஆனாலும் எம்.ஜி.ஆர். மன்றங்கள் ஆயிரக்கணக்கில் வைக்கப்பட்டன. இது அரசியல் கட்சி விவகாரம்.

ஆனால் ஆட்சி என்ற முறையிலே பார்த்தாலும்கூட இவைகளை வைப்பதிலே என்ன தவறு? நான் என்னுடைய பெயர் வைக்கப்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை, என்னுடைய பெயரை எடுத்து விடுகிறார்களே என்ற கவலையால் சொல்லவில்லை. நான் உளம்திறந்த ஒரு அறிக்கையே விட்டேன். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் பெரியார் சிலை திறப்பு விழாவில் பேசுகின்ற பொழுது கருணாநிதி சிலை பற்றிப் பிரச்சினைகள் வந்திருக்கின்றன, நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று பேசியிருக்கிறார்கள். அதைக்கூட எதிர்பார்க்க வேண்டாம், தயவு செய்து இப்பொழுதே எடுத்து விடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அந்தச் சிலை இருப்பதால் தான் கருணாநிதியின் பெயர் இருக்கும் என்றால் அப்படிப்பட்ட ஒரு சிலை எனக்கு தேவையில்லை.

அதைப்போலத்தான் இப்பொழுது உயிரோடு உள்ளவர்களின் பெயர்கள் கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ, பாலங்களுக்கோ இருந்தால் எடுத்து விட வேண்டுமென்று அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. அண்ணா அவர்கள் காலத்திலே அண்ணா அவர்களின் பெயரால் கல்லூரி அமைந்தது, காமராஜ் அவர்களுடைய காலத்திலேதான் காமராஜ்சாகர் வைக்கப்பட்டது. காமராஜ் அவர்களுடைய காலத்திலேதான் காமராஜருடைய சிலை அவர் உயிரோடு இருந்த பொழுதுதான் திறக்கப்பட்டது. காமராஜர் மின்சார நிலையம் என்று திருச்சியில், வேலூரில், பலயிடங்களில் மின்சார நிலையங்களுக்கு, அலுவலகங்களுக்கு காமராஜர் பெயரால் அவர் உயிரோடு இருந்தபொழுது அந்தப் பெயர் இடம்பெற்றிருக்கிறது. திருச்சியில் காமராஜ் வளைவு அவர் உயிரோடு இருந்தபொழுதுதான் வைக்கப்பட்டது. இங்கேயிருக்கின்ற இராஜாஜி ஹாலுக்கு இராஜாஜி அவர்கள் உயிரோடு இருந்தபொழுதுதான் அந்தப் பெயரைச் சூட்டினார்கள்.

இவைகளையெல்லாம் நான் வாதிடுவது என் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. என்னுடைய பெயரை எடுத்து விடுங்கள். என்னுடைய பெயரின் அடிச்சுவடே இல்லாமல் அழித்து விடுங்கள், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனால் எனக்கு முன்னால் பேசிய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பல ஆண்டுக்காலம் தேசத்திற்காகத் தொண்டாற்றிய பெரியவர் பக்தவச்சலம்போன்ற பெரியவர்களின் பெயர்கள் நீக்கப்பட வேண்டுமா? பேரறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் துணைவியார் அன்பிற்குரிய அண்ணியார் அவர்களின் பெயரைத் தாங்கி இராணி அண்ணா என்ற பெயரில் இருந்தால் அந்த மண்டபங்களின் பெயர்கள் மாற்றப்பட வேண்டுமா? எனக்கும் நாவலருக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம், ஆனாலும் அவரை நடமாடும் பல்கலைக் கழகம் என்றும், அவர் நல்ல தமிழ் அறிந்தவர், அவர் ஒரு முன் மாதிரி என்ற வகையிலும், நாவலர் நெடுஞ்செழியன் முன்மாதிரி அரசினர் பள்ளி என்ற பெயரை நானேதான் சூட்டினேன். அதை எடுத்துவிட வேண்டுமா?

இவைகளையெல்லாம் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும். பெரியாருக்காகக் கட்டப்பட்டிருக்கிற இடம் இருக்கிற வகையில் காமராஜருக்காகக் கட்டப்பட்டிருக்கிற இடம் இருக்கிற வகையில் காமராஜருக்காகக் கட்டப்பட்டிருக்கிற சதுக்கம் இருக்கிற வகையில், இராஜாஜிக்காக கிண்டியிலேயிருக்கிற ஆலயம் இருக்கிற வகையில், பூம்புகார் இருக்கிற வகையில், பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டப்பட்டிருக்கிற கட்டபொம்மன் கோட்டையிருக்கிற வகையில், நுங்கம்பாக்கத்திலே இருக்கிற வள்ளுவர் கோட்டம் இருக்கிற வகையில், அங்கேயெல்லாம் கருணாநிதி என்ற பெயர் இருந்துதான் கருணாநிதி விளம்பரம் ஆகவேண்டுமென்று இல்லை. நான் அவைகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால், உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயர் வைக்கப்பட வேண்டுமா என்பதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இராஜ்ய சபையிலே பேசினார்கள். அதுவும், இராமச்சந்திரன் அவர்கள் வெளியிட்ட புத்தகம். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"........For the last six years we have been controlling the Madras Corporation, and yet we were not politically peevish enough to create any sort of political bickering. It was during the regime of the D.M.K. in the Corporation of Madras, that we have put up a statue for the All-India Congress President, Shri Kamaraj and also a statue for the late lamented Shri Satyamurthi, who adorned the other House many years ago. We have passed a resolution, I think the first of its kind in the whole of India, that the Corporation would shortly install a statue of the late lamented Lal Bahadur Sastri. Do you think this is political peevishness? No. But what is the ruling party doing there?

In a distant town Madam Deputy Chairman,

என்று விளித்துவிட்டுச் சொல்கிறார்.

in Tamil Nadu, a bus-stand is opened and it is named after a D.M.K. leader unfortunately me. And the whole Congress machinery of Tamil Nadu gets so inflamed, that injunction orders are obtained the board there has been removed, the bill books that had been printed have been taken back and the case is proceeding. And the President is asking us for a spirit of co-operative endeavour........"

என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். அண்ணா அவர்களுடைய பெயரால் ஒரு பஸ் ஸ்டாண்டுக்குப் பெயர் வைக்கப்பட்டதை அன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எதிர்த்தார்கள் என்பதை அண்ணா அவர்கள் இராஜ்ய சபாவிலே சுட்டிக்காட்டிப் பேசினார்கள் என்றால், உயி ருள்ள அவர்கள் பெயரால் எந்தக் கட்டிடமும் இருக்கக்கூடாது என்பதற்காகப் பேசிய பேச்சு அல்ல அது என்பதை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே, பேராசிரியர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நானும் சொல்கிறேன், என்னுடைய பெயர்களை, எங்கிருந்தாலும் அங்கே எடுத்து விடுங்கள். நான் அவைகளைப் பற்றிக் கவலைப்பட வில்லை. இந்த ஒரு பெயரை எடுப்பதற்காக, மற்ற பெயர்களை அழிக்கின்ற காரியத்திலே இந்த அரசு தயவுசெய்து ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பெயரை எங்கே அழித்தாலும் ஓய்வில்லாது உழைத்த ஒரு தமிழன் இங்கே ஓய்வெடுத்துக் கொள்கிறான் என்று அங்கே என்னுடைய கல்லறை யிலே எழுதப்படுகிற அந்தப் பெயரை ஒருவேளை கடல்கொண்டு அழிக்கலாமே தவிர, வேறு யாரும் அழிக்கமுடியாது. எனவே அந்தப் பெயர் நிலைத்தால் எனக்குப் போதும் என்கின்ற அந்த உணர்ச்சியோடு இதைச் சொல்லி—இந்த நம்பிக்கையில்லாத் தீர் மானத்தில் பல கட்சித் தோழர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்பட்ட தவறுகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். தவறுகளுக்கு நாங்கள் ஆளாகியிருப்போமானால், அதற்காகத் திருந்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எனவே, அந்தக் கட்சி நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஆளுங்கட்சியினர் இதைக் கொண்டு வந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் ஆற்றிய உரைக்காக அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இந்த அளவில் என்னுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து அமை கிறேன், வணக்கம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: உயிரோடு இருக்கிறவர் களுடைய பெயர், மற்றவர்களுடைய பெயர் இருக்கும்போது கலைஞர் அவர்களுடைய பெயர் இருக்கக்கூடாது என்று கருது கிறவன் அல்ல நான். எடுத்தால், மொத்தமாக எடுக்கவேண்டு

மென்று விரும்புகிறவன். ஒரு விளக்கம் தேவை. என்னுடைய தாயார் என்பவர் மரியாதைக்குரியவர், திருப்பத்தூர் தாலு காவிலே, மாதவன் அமைச்சராக இருந்தபொழுது, அவர்களுடைய தாயாருடைய பெயர் ஒரு தெருவுக்கே—சுந்தரம் நகர் என்ற பெயர் வைக்கப்பட்டதாலே, மிகப் பெரிய ஆட்சேபனை வந்தது. அதேபோல், கலைஞர் அவர்களுக்கு ஒரு மதிப்பு உண்டு. அதற்குப் பதிலாக—அவருடைய தாயாரைக் குறை சொல்வ தாகக் கருதக் கூடாது. அதற்காக நான் சொல்லவில்லை— 'அஞ்சுகம் பாசிப்பயிர்' என்று வைக்கப்பட்டிருந்ததே அதற்கான விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் பேசுகையில் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது சம்பத் அவர் களோடு சேர்ந்துகொண்டு தீவிரமாக எம். ஜி. ஆர். மன்றங் களை எதிர்த்தேன் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், அவருக்கு நிச்சயமாக, உறுதியாகத் தெரியும், அந்தக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தில், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள் இணைந்ததற்குப் பின்னால் அவருடைய பெயரில் மன்றங் கள் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக எவ்வளவு தீவிரமாகக் கலைஞர் அவர்கள் ஈடுபட்டார்கள் என்பதும், அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லாமல், அன்றைக்கு அனைவரும் ஒத்த கருத்தோடு ஈடு பட்டார்கள் என்பதையும் அவர் நிச்சயமாக மறுக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும். நான் அதை அந்த நேரத்திலே என்றைக்கும் எதிர்த்ததில்லை. அதிலே தகராறு வந்தது எப்போ தென்றால், நான் நகரச் செயலாளராக இருந்தபொழுது, மு. க. முத்து மன்றம் ஆரம்பிக்க வேண்டுமென்று கடிதம் வந்த தற்குப் பின்னால்தான் நாங்கள் முதன் முதலிலே அதை எதிர்த்து அப்படிப்பட்ட மன்றங்களை ஆரம்பிக்கக்கூடாது என்று எதிர்த் தேனே தவிர, எம். ஜி. ஆர். மன்றம் என்பது அன்றைக்குக் கழகத்திற்குத் துணையாக, கழகத்திற்கு ஆக்கம் தேடுகின்ற அந்தப் பணிக்குப் பயன்படுகிற மன்றமாக இருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[இரவு 7-20]

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் முன் மொழியப்பட்ட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பதிலளித்து பேசும்போது நான் மேலவைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த காரணத்தினால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. எனவே உங்கள் அனுமதியோடு அவர் எழுப்பிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, சலத்திலே செயற்கைப்பட்டுவிநியோகம் என்பது.
அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலம் தொட்டு Volun-
tary agreement என்ற பெயரிலே செயற்கைப் பட்டை உற்பத்தி
செய்கின்ற மில் முதலாளிகள், வியாபாரிகள், நெசவாளர்கள்
என்று சொல்லி, அவர்களாகவே ஒரு சென்ட்ரல் கமிட்டியையும்,
தமிழகத்திற்கு விநியோகம் செய்வதற்கு ஒரு வட்டார கமிட்டி,
ரீஜினல் கமிட்டி என்று சொல்லி, அரசாங்கத்தினுடைய தொடர்பு
இல்லாமலேயே அவர்களாகவே விநியோகித்து வந்த-
நிலையிலே ஊழல் ஏற்பட்டபோது, மார்க்கட்டிலே விற்பனை செய்ய
கூடிய விலையை விட, குறைவாக விற்க முடியாமல் இந்த ரீஜினல்
கமிட்டி பதுக்கி வைத்துக்கொண்டு நெசவாளர்களுக்கு செயற்கை
பட்டு கிடைக்காத காரணத்தால், சேலம் பகுதியிலே இருந்து குறிப்
பாக சின்னாளப்பட்டி பகுதியிலே இருந்துநெசவாளர்கள் இந்தத்
தமிழகத்திலே இருந்து டெல்லி மாநகருக்கு சென்ற அந்தக் கோரக்
காட்சியை நான் நினைவுபடுத்துகிறேன். அதைத் தவிர்க்கவேண்
டும் என்றும் இங்கே உள்ள நெசவாளர்களுக்கு நியாயமான
விலையில் நூல் கொடுக்கவேண்டும் என்றும் நாங்கள் ஒரு முடி
வெடுத்து இந்த விநியோகத்தை அரசினுடைய துறையின் மூலமாக
கைத்தறித்துறையின் மூலமாக விநியோகிக்க நாங்கள் முடிவெடுத்து
அந்த முடிவை அந்த ரீஜினல் கமிட்டியிலே இருந்தவர்கள் எதிர்த்து
வழக்குப் போட்டிருச்கிறார்கள். காரணம், அந்த ரீஜினல்
கமிட்டியிலே இருந்தவர்கள் அதைப் பதுக்கி வைத்துக் கொள்ளை
லாபம் அடித்ததற்கு அன்றைய தி. மு. க. அரசுதான் காரணமாக
இருந்தது என்ற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன்.
அந்த ஊழலை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும், நெசவாளர்
களுக்கு நியாயமான விலையில் கிடைக்கவேண்டுமென்பதற்காகவும்
இந்த ஏற்பாட்டை செய்தோம். அதனால் பாதிக்கப்பட்ட முத
லாளிகள்தான் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். அந்த
முதலாளிகளுக்கு ஆதரவாகத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் பேசியதற்கு நான் உள்ளபடியே பரிதாபப்படுகிறேன்.

அடுத்து குமாரபாளையத்தில் நூல் விநியோகத்தைப்பற்றி
அவர்களுக்குக் கிடைத்த தவறான தகவலை வைத்துக் கொண்டு
2,500 கிலோ தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள்
என்று சொன்னார்கள். தவறுதலாக அந்த மாதிரி நிச்சயமாக
நடந்திருக்க முடியாது. காரணம், ஏற்கனவே திட்டவட்டமாக
உத்தரவிட்டிருக்கிறோம். தவறுதலாக அப்படி நடந்திருக்கு
மானால் அது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த
அரசு தயங்காது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே என்னிடத்திலே
போட்டோ ஸ்டெட் காப்பியே இருக்கிறது. நான் நம்பிக்கை
யில்லாத் தீர்மானம் கொண்டுவந்தாலும் கூட முதலமைச்சரை
நம்பி அவரிடத்திலே, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்
மூலமாகக் கொடுக்கிறேன்.

(எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
களிடம் கடிதங்களைக் கொடுத்தார்.)

அதிலே 424 ஸ்பின்டில்கள்தான் குமாரபாளையத்தில் கேட்
டிருக்கிறார்கள். அந்த அசோசியேஷனில் கேட்டது 424 ஸ்பின்
டில்கள்தான்: ஆனால் அங்கிருக்கிற ஏ. டி. எச். அவர்கள்
9,133 ஸ்பின்டில்களை 2,780 கிலோ சாங்ஷன் செய்கிறார்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அப்படி தவறு
நடந்திருந்தால் யாராக இருந்தாலும் இந்த அரசு நடவடிக்கை
எடுக்கும் என்று நான் கூறிக் கொள்கிறேன். நான் கேட்பது
சேலம் விநியோகத்தைப்பற்றியது. முதலாளிகளுக்காக அவர்
பேசியிருக்கிறார்களே, அதைப்பற்றித்தான் நான் கேட்க விரும்பு
கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத்தலைவர் அவர்களே,
மாண்புமிகு கலைஞர் அவர்கள் சௌரி சோரா சம்பவத்தைப்
பற்றி பேசினார்கள். அப்போது குறுக்கிடக்கூடாது. கடைசியில்
விளக்கம் கேட்கலாம் என்று இருந்தேன். முதலில், மதுரை
வன்முறைச் சம்பவத்தையும் சௌரி சோரா சம்பவத்தையும்
அவர்கள் ஒப்பிட்டுப் பேசியதற்காக நன்றி. சௌரி சோரா
சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து காந்தியடிகள் உண்ணா
விரதம் மேற்கொண்டார்கள். மதுரை வன்முறைச் சம்பவத்தில்
காங்கிரஸ் தலைவர்கள், நெடுமாறன், என். எஸ். வி. சித்தன்
போன்றவர்கள் படுகாயம் அடைந்து இருக்கிறார்கள். அதற்கு,
அந்த வன்முறைச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்காவிட்
டாலும், கலைஞர் வருத்தத்தையாவது தெரிவித்து இருக்கிறார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, பெரும் தலைவர்
காமராஜர் இருந்த நேரத்தில் திருச்சி சிறைச்சாலையில் நடை
பெற்ற சம்பவத்தை பற்றி எதிர்க்கட்சித்தலைவர் சொன்னார்.
அங்கு நடைபெற்ற சம்பவத்தில் தேசியக்கொடி கிழித்து எறியப்
படவில்லை. காங்கிரஸ் கொடி ஏற்றப்பட்டதே தவிர தேசியக்
கொடி கிழித்து எறியப்படவில்லை. இப்படி காங்கிரஸ் கட்சியினர்
மீது தவறான கருத்தை உண்டாக்கிடும் வகையில் உள்ள அந்த
வாக்கியங்களை அவைக்குறிப்பில் இருந்து, தலைவர் அவர்களே,
நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்
களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பதிலில்
மிகப் பெரிய விளக்கங்களையும் குற்றச் சாட்டுக்களையும் மீண்டும்
எடுத்து வைத்து, அவர்கள் சொல்லி, உண்மையான தகவலைச்
சொல்கிறபோது கூட ஆட்சியில் இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ள
மறுக்கிறார்களே, ஒத்துக்கொள்வதற்கு நாணப்படுகிறார்களே
என்று எல்லாம் சொன்னார்கள்.

நான் என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டு இருக்கிறேன். சில இடங்களில் சில செய்திகளைச் சொல்கிறபோது கொஞ்சம் மிகைப் படுத்தி சொல்வதனால் நல்ல பலன் ஏற்படும் என்று கருதி, நான் மட்டுமல்ல, பல்வேறு பேச்சாளர்கள், தலைவர்கள் கூறுவது உண்டு என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஏதோ 368 கோடி மானியம் என்று சொன்னதாகவும், 300 கோடிதான் வருகிறது என்று சொன்னதாகவும் இங்கே குறிப் பிட்டார்கள். அதனுடைய அடிப்படை நோக்கத்தை விட்டு விட்டு வெறும் புள்ளி விவரங்களை மட்டும் கணக்கில் வைத்து நம்முடைய உரிமை பணத்தைத்தான் இந்தியப் பேரரசில் இருக்கும் அரசு தருகிறது என்பதில் கவனம் செலுத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது நான் மறுக்க வில்லை.

நான் ஏற்கனவே குறிப்பிட்டேன், என்ன குறிப்பிட்டேன் என்பதைப்பற்றி நான் சொல்லியாகவேண்டும். அடிப்படை நோக்கம் என்ன ? அங்கேயிருக்கின்ற, இருந்த நிபுணர்கள் இந்த நாட்டிலே ஏழ்மையில் இருக்கின்றவர்களுக்கு நல்லதொரு வழி காட்ட எந்தெந்த வகையில் தங்களது அறிவு, திறமையை பயன் உள்ளதாகச் செய்ய முடியுமோ அதைச் செய்யவேண்டும். அதைச் செய்ய வைக்க வேண்டும் என்ற நோக்கம் அடிப்படைக் கருத்து என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். நான் பேசிய பேச்சுக்கள், அங்கே சொன்ன கருத்துக்கள், வெளிப் படுத்தப்பட்ட வார்த்தைகள், அத்தனையும் அந்த அடிப்படை கொண்டவை.

ஒரு கருத்து கூறினேன், இத்தனை லட்சம் ரூபாய் மட்டும் சம்பளம் கொடுக்கவேண்டுமானால், மீதியுள்ள தொகையை எப்படி, எந்த வகையில் நாம் மற்ற திட்டங்களை நிறைவேற்று வதற்கு பயன்படுத்த முடியும் என்பது என்னுடைய அடிப்படைக் கேள்வி. அதை மனதில் வைத்துக்கொண்டு விமர்சனம் செய்ய வேண்டுமே தவிர புள்ளி விவரங்கள் தவறாக இருக்கிறது. இதுதான் சரியான புள்ளி விவரம், நாளை பட்ஜெட்டில் இதுதான் வருமா என்று கணக்கிட்டுப் பார்த்து, அதைக் குற்றச்சாட்டாகச் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[இரவு 7-30]

ஆனால் ஒன்றைச் சொல்லுவேன். நான் அவர்களின் நல் லெண்ணத்தை மதிக்கிறேன். மத்திய அரசு மானியம் கொடுக் கிறது என்று சொன்னால், இனிமேல் நமக்கு தேவையானதைப் பற்றிச் சொல்லும்போது அவர்கள் தவறாகக் கருதமாட்டார்களா என்று கேட்டார்கள். ஏழு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இவ்வளவு தெளிவாகப் புள்ளி விவரங்களைச் சொல்லும்போது, அங்கேயிருப்பவர்கள் மட்டும் புள்ளி விவரம் தெரியாமல் நாம் தூக்கிக் கொடுத்து விடுவோம் என்று நினைத்து விடுவார்கள் என்று கருதுவது வாதத்

திற்கு அழகாக இருக்கலாம். ஆனால், உண்மைக்குப் பொருத்த முடையதாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். அங்கேயும் கணக்குப் பார்த்துத் தான் பேசுகிறார்கள். 34 கோடி ரூபாய் தருகிறார்கள் என்றால், அது உதவி நிதியா அல்லது பின்னால் தரப்போகிற பணத்திலிருந்து முன்பணம் கொடுத்திருக்கிறார்களா என்ற கேள்வியெல்லாம் கேட்கப்பட வேண்டிய அளவுக்கு அவர் கள் எச்சரிக்கையாக இருக்கின்ற நிலையில், அவர்கள் இவைகளை எல்லாம் புரியாதவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் எதிர் பார்ப்பதற்கில்லை.

ஒன்றை நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். மீண்டும், மீண்டும் சொல்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலின்போது மைலாப்பூர் கூட்டத்தில் என்ன சொன்னேனோ, அந்த அடிப் படையிலே, பாவர்டி லைனுக்குக் கீழே உள்ளவர்களுடைய பர்சன்டேஜ் என்ன என்பதை மறந்துவிடக் கூடாது. என்னிடத்தில் தரப் பட்டிருக்கின்ற குறிப்புகளின்படி, ஏறத்தாழ இப்போது 50 அல்லது 55 சதவிகித மக்கள் தமிழகத்தில் பாவர்டி லைனுக்கு கீழே இருக்கிறார்கள்.

இந்த நிலையில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சராசரி மனிதனுடைய கணக்கைப் பார்த்து, 100 பேர்கள் வசிக்கிறார்கள் என்றால், அதில் 55 அல்லது 50 சதவிகிதத்தினர் ஒரு வேளை உணவுக்கு கஷ்டப்படுகின்ற மக்களுக்கும் கீழே இருக்கின்ற நிலையில் இருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் சொல் லுமேயானால், இது எத்தனை நாளைக்கு, இந்த நாட்டை, நம்மை, வாழ்கின்ற மக்களை ஒழுங்காக அவரவர்கள் கடமையைச் செய்ய அனுமதிக்கப் போகிறது. அனுமதிப்பார்கள் என்பதை சிந்திக்க வேண்டுமென்பது தான் என்னுடைய பேச்சின் முழு நோக்கமாகும். இன்றும், அதைத் தான் சொல்கிறேன். இங்கேயும் அதைத் தான் சொல்கிறேன்.

மனிதன் சம்பாதிக்க வேண்டிய தொகைக்கு எல்லைக் கோடு இப்போதில்லை. வருமான வரி என்று சொல்லி அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள் என்று சொன்னாலும், சொத்துகளுக்கு வரி போடுகிறார்கள் என்று சொன்னாலும், எப்படி எப்படி எந்த அளவுக்கு வருமானம் பெறுவது. எவ்வளவு வாங்கிக் கொள்வது என்பதற்கு எல்லைக் கோடு இல்லை. வருமானத்திற்கு வரி விதிக் கிறார்கள். அந்த வருமானம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்கு எல்லைக் கோடில்லை.

ஆனால் அதைப்போல, ஒரு மனிதனுக்கு இவ்வளவாவது கிடைத்துத் தீர வேண்டும் என்ற எல்லைக் கோடு இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. இந்த நிலைமையை எத்தனை நாளைக்கு தமிழகத்திலும், இந்திய துணைக் கண்டத்திலும் உழைக்கின்ற மக்கள், வேதனைப்படுகிற மக்கள், வறுமையில் இருக்கிற மக்கள், வேலையில்லா திண்டாட்டத்தில் இருக்கிற மக்கள்,

அதுவும் கிராமப் புறத்தில் இருக்கிற மக்கள் பொறுத்துக் கொள்ளு
வார்கள் என்பதைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டாமா?
இதனுடைய அடிப்படையில்தான் என்னுடைய பேச்சு அங்கே
இருந்தது.

நான் மீண்டும் இங்கே வற்புறுத்திச் சொல்லுவேன். 363
கோடி ரூபாய் தமிழகத்திற்கு நேரடியாக வருமானம் வருவதாக,
புள்ளி விவரத்தை சரியாகப் புரிந்து வைத்துக் கொண்டு பேசுவ
தாக வைத்துக் கொள்ளுவோம். இதில் ஏறத்தாழ 300 கோடி
ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது என்று வருமேயானால்,
இந்த 300 கோடி ரூபாயை வாங்குகிறவர்கள் 7 லட்சம் பேர்கள்
என்று சொன்னால், அது அவர்களுக்கு நிரந்தரமாக் கிடைக்கக்
கூடிய வகையில் இருக்கிறது, ஓய்வு பெறுகின்ற வரையில்
கிடைக்கிறது என்று இருக்குமேயானால், இந்த பாவர்ட்டி லைன்,
வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே இருக்கின்றவர்கள் என்று
சொல்லுகிறார்களே, அவர்கள் 50 சதவிகிதம் என்று வைத்துக்
கொண்டால், மற்றவர்கள் எல்லாம் பொறுத்துக் கொள்ளுகிறார்கள்
என்று வைத்துக் கொண்டால், இந்த 4½ கோடி மக்களில் 2¼
கோடி மக்கள் எத்தனை நாளைக்கு பட்டினியைப் பொறுத்துக
கொண்டிருக்கப் போகிறார்கள். இதை நாம் சிந்தித்துப் பார்க்க
வேண்டாமா? வாக்குகள் போட்டார்கள், இங்கே வந்து விட்
டோம். அவர்களுக்கு 42 லட்சம், எங்களுக்கு 52 லட்சம்
என்று சொல்வதில் புதுமையில்லை.

மறைந்து போன அமரர் காமராசர் இருந்தபோது இந்தப்
பிரச்னை எழுந்தது. 134 இடங்களைப் பெற்று அண்ணாவின்
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அடுத்தபடி வந்தபோதே
கேட்டார்கள். இது என்ன அக்கிரமம். இப்படி ஒரு
ஜனநாயகமா என்று மேடையில் அவர் பேசியது உண்டு. அண்ணா
பகிரங்கமாகச் சொன்னார்கள். புரொபோர்ஷனேட் என்று
சொல்கிற அளவுக்கு ரெப்ரசென்டேஷன் இருந்தால் நான் அதை
எதிர்க்கத் தயாராக இல்லை. நான் அதை விரும்புகிறேன் என்று
சொல்லியிருக்கிறார்கள், விகிதாச்சார பிரதிநிதித்துவம்
வேண்டாம் என்று அண்ணா அவர்கள் சொல்லவில்லை. இங்கே
இருக்கின்ற நாங்களும் சொல்லவில்லை.

எங்களுக்கு முன்னால் நம்பிக்கையில்லாத் தீர்மானம்
கொண்டு வந்திருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்களும்
இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், நண்பர் ப. உ. சண்முகம்
அவர்களும், யாரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள்.
சாதிக் பாட்சா அவர்கள் அமைதியாக இருக்கிறவர் அவரும்
சொல்லவே மாட்டார். ஏனென்றால் கொள்கையை வைத்துக்
கொண்டவர்கள்தான் பேசியிருக்கிறோம். விதாச்சாரப் பிரதி
நிதித்துவம் வந்தால்தான் இந்த தனிப்பட்டவர்கள் செல்வாக்கு
மூதலிலே மறையும். கொள்கைக்குச் சொந்தக்காரர்களை கட்சி
தேர்ந்தெடுக்கும். அப்படி தேர்ந்தெடுக்கிற நிலைமை வரும்

பொழுது இங்கே ஆட்சியில் அமருகிறவர்கள் சில பேர்களுடைய
தயவில் வாழ்கிற அவசியம் இல்லை. கூட்டாட்சி நிலைமை
வரும் என்பதால் தான் அதை ஏற்றுக் கொண்ட அண்ணா அவர்கள்
பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்கள். அதில் எங்களுககு எந்தவித
வேறுபாடும் இல்லை.

42 லட்சம், 52 லட்சம் இங்கிருக்கிறவர்கள் 32 லட்சம் என்ற
அந்தக் கணக்கில் புக விரும்பவில்லை. கொள்கையைப் பொறுத்த
வரையில் கவனித்தாக வேண்டும். இந்த வாக்குகளை
பெறுகிறோமே, பெற்று வந்திருக்கிறோமே, அந்த மக்களுக்கு
நாம் என்ன உறுதி கொடுக்கிறோம், என்ன உறுதியைத் தந்
திருக்கிறோம்? அமரர் அண்ணா அவர்கள் இருந்தபொழுது 20
ஆண்டு காலம் இருந்த காங்கிரஸ் கட்சி முழுமையாக இருந்த
பொழுது அவர்களை மாற்றி அமரர் அண்ணாவை உட்கார
வைத்தார்கள் என்றால் ஒழுங்கு முறையோடு உள்ள ஆட்சி
வேண்டும், களங்கமற்ற ஆட்சி வேண்டும், ஊழலற்ற ஆட்சி
வேண்டும், லஞ்சம் வாங்காத ஆட்சி வேண்டும், தங்களுடைய
நண்பர்கள், சொந்தக்காரர்களுக்கு சொத்து சேர்க்கிற, பதவி
கொடுக்கிற முறையில்லாமல் இருக்க வேண்டும். நாட்டுக்காக
நாட்டு மக்களுக்காக உழைக்கிறவர்கள் இங்கே வர வேண்டும்
என்கிற ஒரே காரணத்திற்காக அதுவும் மூதறிஞர் ராஜாஜி அவர்
களும் சொன்னார்கள். ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம்.
ஒரு மாற்றத்தைச் செய்து பார்ப்போம் நாம் ஆதரிக்கலாம்
என்று சொல்லுகிற அளவில் அந்த நிலை ஏற்பட்டது என்பதை
மறந்துவிடக் கூடாது. அந்த நிலைமை எதிர் கட்சிக்காரர்களால்
நாட்டிலே உள்ள மற்ற மக்களால்..........

திரு. ர. ஜெபமணி: கனம் சபாநாயகர் அவர்களே,
1967-ல் அண்ணாதுரை அவர்களை
முதலமைச்சர் அவர்கள் காரணங்களைச் சொன்
முதலமைச்சராக கொண்டு வந்ததற்குரிய மன்னித்தருள வேண்டும்.
னார்கள். நான் இதில் குறுக்கிடுவதற்கு மிக மோசமாக ஊழ
ஏதோ காங்கிரஸ் ஆட்சி 20 ஆண்டுகளில் ஆட்சியைக் கொண்டு வர
லாக இருந்ததாகவும், உத்தமர்கள் ஆசைப்பட்டதாகவும், சொன்னார்கள்.
வேண்டுமென்று மக்கள் வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு வாதத்தை
அதைப் பற்றிப் பேச ஏழை எளிய மக்களை ஏமாற்றி வந்
வைத்துக் கொள்ளலாம். போடுவேன், போடாவிட்டால்
தார்கள். மூன்று படி அரிசி என்று சொன்னார்கள்
முச்சந்தியில் சவுக்கால் அடியுங்கள் ரப்பர் செய்வோம், என்று
அண்ணாதுரை. தேங்காய் நாரில் அல்வா செய்வோம் என்று
சொன்னார்கள். கடல் பாசியில்
சொன்னார்கள்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்.

முன்னால் இங்கே நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் பல்வேறு தனி நபர்கள் சொத்து, சுதந்திரத்தை சம்பாதித்துக் கொண்டார்கள். ஆகவே, மக்கள் மாற்று அரசை அமைக்க வேண்டுமென்று, எங்களை அகற்றி மக்கள் தி.மு. கழகம் அரசை அமைப்பதற்கு ஒரு வாய்ப்பு அளித்து, அதன் காரணமாக இங்கே தி. மு. கழகம் ஆட்சி பீடத்தில் அமர வாய்ப்பு கிடைத்தது என்ற அந்தப் பொருள்பட கூறினார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஜனதாக் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது, இங்கே அவரை வாதம் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. அவருடைய கருத்தைச் சொல்ல அவருடையபெயரை பேரவைத் தலைவரிடம் சொல்லவில்லை. நீங்களே அவருக்கு வழி காட்டலாமா? நான் என்ன சொல்கிறேன் என்றால் 1967 சரித்திரம் பற்றிய பிரச்சினை இப்போது எழவில்லை.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1967-க்கு முன்னால் உள்ள பிரச்சினையை எழுப்பினார்கள். அன்றைய தினம் ஆட்சியிலிருந்த கட்சி தவறு செய்தது என்று சொல்லிய காரணத்தால் தான் அவர் பேச எழுந்தார் என்று கூறிக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> அவைத் தலைவரவர்களே, என்னுடைய பிரச்சனையை, கருத்தினை வெளி... பிரச்னைகளை தீர்த்துக் கொள்வதற்காக நான் பல ...மைகளை வெளியிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப் ...டிருக்கிறேன்.

சர்க்காரியா கமிஷன் அமைவதற்கு எப்படியெல்லாம் வேலை செய்யவேண்டுமோ, அதை செய்து விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்று பார்த்தீர்கள் என்று எதிர்க்கட்சித்தலைவரவர்கள் சொல்லியிருப்பதால் நான் அந்த நிலைக்கு எப்படி ஆளாக்கப்பட்டேன் என்று சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன். அதற்காகத்தான் 1967-க்கு முன்னால் நிலைமையை குறிப்பிட்டேன். ஒரு ஆட்சியை மாற்றி இன்னொரு ஆட்சியை கொண்டு வருகிறபோது முந்திய ஆட்சியில் எந்த குறைகளைக் கண்டார்களோ, எந்த ஒழுங்கீனங்களைக் கண்டார்களோ; எந்த நிர்வாகத்தின் தலையீடுகளை பார்த்தார்களோ அவைகளெல்லாம் தவறு என்று மக்கள் உணர்ந்தார்கள். மக்களின் பணம் வேண்டாதவர்களுக்கு சொந்தமாகிறது என்று கண்டு, அது நியாயமற்ற செயல் என்று கண்டார்கள். யார், யாரோ காண்டிராக்டர்கள் ஆகிறார்கள். யார் யாரோ முதலாளிகள் ஆகிறார்கள், பங்குதாரர்கள் ஆகிறார்கள் என்று அன்றைய தினம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. மேடையிலே பேசியிருக்கிறார்கள். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்தின் விளைவாக, மக்களின் கருத்தின் விளைவாக அறிஞர் அண்ணாவை நம்பி, அண்ணாவின் கொள்கைகள் இந்த நாட்டிற்கு பயன் தரும், அண்ணாவின் கொள்கைகளில் களங்கமில்லாதது இருக்கிறது என்பதையெல்லாம் நம்பி அவர்களை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தினார்கள் என்பதை நான் சொல்லும் போதுதான் நான் அந்தக் கட்சியிலே இருந்து அமரர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு பொறுப்பிலே இருக்கும்போது அமரர் காமராஜ் போன்றவர்கள் பலவித குற்றச்சாட்டுக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சுமத்தியபோது நான் அதற்கு பதில் சொல்லியவன். மாநாடுகளிலே மக்களிடம் கேட்டிருக்கிறேன். 'நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் லஞ்சம் வாங்கினோமா சொல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டிருந்தவன். அப்படிப்பட்ட நிலையில் இருந்த நான் மக்கள் பேசுகிறார்கள், சொல்கிறார்கள் என்று பத்திரிகைகள் வெளியிடக்கூடிய நிலை அதிகமாகிக் கொண்டுவருகிற போது நம்மை நாமே மக்கள் மத்தியில் யார் என்று காட்டிக் கொள்ள வேண்டும் என்று நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, நான் என்னையும் மற்ற எல்லோரையும் சேர்த்து விசாரணைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்று கட்சியின் தலைமையை நான் வேண்டிக் கொள்ள முன் வந்த நேரம் இப்போது அதை யார் வேண்டுமானாலும் மறுக்கலாம்.

ஆனால் அன்றைக்கிருந்த மாவட்டத் தலைவர்கள் என்னிடம் இதைக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைக்கு நான் ஆளாக்கப்பட்ட பிறகு அதை மக்கள் மத்தியில் சொன்னேன் என்பதற்காக வெளியேற்றப்பட்ட பிறகு நான் விசாரணை வேண்டும் என்று கூறினேன். முன்பு கட்சிக்குள்ளே இருந்தேன், அதனால் பொதுக் குழுவால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னேன். கட்சிக்கு வெளியே வந்த பிறகு அந்தக் கட்சியைப் பார்த்து குழு அமையுங்கள் என்று சொல்ல எனக்கு அதிகாரமில்லை.

ஆகவே, மக்கள் அண்ணா அவர்கள் இருந்தபோது எந்த நம்பிக்கையோடு அவரை ஆட்சிக்கு தேர்ந்தெடுத்தார்களோ, அந்த நம்பிக்கையை இழக்கக் கூடாது என்ற காரணத்தால் 67-லே 138 பேர்களை எப்படி தேர்ந்து எடுத்தார்களோ அந்தப் பிரச்சனைக்கு நான் ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. யார் கொடுத்தார்கள்; எங்கிருந்து கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். எப்படியெப்படி வந்ததென்று அவர்கள் சொன்னார்கள்.

நான் ஒன்றைச் சொல்வேன். எனக்குக் கடிதங்கள் வந்தன: பல நண்பர்கள் தந்தார்கள். பல கட்சித் தோழர்கள் தந்தார்கள். மாற்றுக்கட்சி தோழர்கள் தந்தார்கள். அவைகளை ஒன்று சேர்த்து கொடுத்தேன் என்பதைத் தெரிவித்துக்

சொல்கிறேன். உண்மையும் அது தான். அண்ணா அவர்கள் கொள்கைக்கு மாறாக நடப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, இங்கே இருக்கிற அமைச்சர்கள் யாராக இருந்தாலும் சரி, மற்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி மக்கள் மன்றத்திலே விசாரிக்கப்பட வேண்டும். அந்த வகையில் தான் இந்த

[இரவு 7-50]

விசாரணை தேவை என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு, பிறகு உச்ச மட்ட வழக்கு மன்றத்தில் இருக்கின்ற நீதிபதி வேண்டும் என்று நான் கேட்டேன். என்னோடு சி.பி.ஐ.-யைச் சேர்ந்தவர்கள், கல்யாணசுந்தரம் அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து இந்தக் கோரிக்கையை வெளியிட்டோம். இது செல்லாக் காசு என்று சொல்லப்பட்டது. ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பிலே கூட ஒன்றுமே இல்லை என்றார்கள். யாராவது குற்றச்சாட்டுக்கு ஆளாவார்கள் என்றால் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்று கூட குறிப்பிட்டார்கள். வழக்கு எடுக்கப்படும்போது, விசாரணைக்கு வரும் போது, என்கூட இருக்கிறார்களா, அல்லது நானாக இருக்கிறேனா என்று பார்க்கப் போவதில்லை என்று நான் இங்கே மனம் விட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையில் தான் அந்தப் பொறுப்புக்கு ஆளாக்கப்பட்டு, மனச் சாட்சியின் காரணமாக ஒரு நிலை ஏற்பட்டது. அதை சொன்னதற்காக நாங்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சம் அல்ல. அண்ணா தி.மு.க. ஆரம்பித்தேன் என்ற காரணத்திற்காக உயிரைப் பணயம் வைத்து, தொண்டு செய்ததற்குப் பிறகு, அன்று இளைஞர்களின் கையை வெட்டி, காலை வெட்டி, கழுத்தை அறுத்து, சுட்டுக் கொல்வதற்கு பதிலாக குத்திக் கொன்று, எத்தனை பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை எல்லாம் வரலாறு கண்டிருக்கிறது. இப்படிச் சொன்னால், ஊர்துநாதன் உதயகுமார் ஆகியவர்களைப் பற்றி சொல்வது வழக்கமாகிவிட்டது என்று எண்ணலாம்.

பாலசுந்தரம் என்ற மாணவர் முதல் நாள் என்னைப் பார்த்து பேசி விட்டுப் போகிறார். நான் எச்சரிக்கிறேன். நீங்கள் தனியாக இருக்காதீர்கள். நீங்கள் விடுதியில் இருந்தாலும்கூட துணைவர்களோடு இருங்கள் என்று சொல்கிறேன். நான்காம் நாள் தகவல் வருகிறது—விடுதிக்குள்ளே நுழைந்து அவரைத் துரத்தி துரத்தி வெட்டிக் கொன்றிருக்கிறார்கள் என்றால் எதற்காக? அவர் அண்ணா தி.மு.க.-வில் இருந்தார் என்பதற்காக.

இந்தக் கொள்கையை நாம் சொன்னோமே, அதற்காக அப்படிப்பட்ட நிலையில் எத்தனை உயிர்கள் மடிந்தன?

இன்றைய தினம் இங்கே இருக்கின்ற பேராசிரியர் வேடிக்கையாகச் சொன்னாரே, என் பெயரை வைத்திருக்கிறார் என்று அதே அன்பழகன் என்பவர்—இப்போது எம்.பி. ஆக இருக்கிறார்——அவரை அடித்துக் கொன்று குற்றுயிராகக் கிடத்தி, அவர் செத்து விட்டார் என்று சப்பாத்திக் கள்ளியில் கிடத்தி, அப்போது கூட்டத்தை முடித்து விட்டு வந்த ராஜேந்திரன் என்பவரை வேல் கம்பால் குத்தி செத்துக் கிடக்கிறான் என்று எண்ணி தூக்கிப் போட்டு விட்ட கொடுமைகளை எல்லாம் இந்த நாடு கண்டிருக்கிறது. ஆகவே, இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போதிலும் எங்கள் நெஞ்சில் ஈரம் இருக்கிறது என்றால் இன்னும் கொஞ்ச அனுதாப உணர்வு இருக்கிறது என்றால், நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த செத்துவிட்டவர்களின் குடும்பங்கள், தாலி அறுக்கப்பட்டவர்கள், வேறு வகையில் மகன்களை இழந்து விட்டவர்கள், வீடுகளை எல்லாம் எரிய விட்டுவிட்டு சாப்பாட்டிற்கில்லாமல் திண்டாடுகிறவர்கள்—ஆகியவர்களை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திண்டுக்கல் தேர்தல் எப்போது? எத்தனை பேர்கள் மீது வழக்கு போடப்படுகிறது? எந்த வருஷம் அந்த வழக்கு முடிகிறது? எத்தனை பேர்கள் கோவையிலிருந்தும், திருச்சியிலிருந்தும் காஞ்சியிலிருந்தும் வழக்குக்கு போக வேண்டி இருந்தது? எத்தனை பேர்கள் மீது வழக்கு? 60, 70 பேர்கள் மீது அத்தனை பேர்களும் வேலை செய்கிறவர்கள். அன்றாடக் கூலிகள் வியாபாரத்தில், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், தொழிலாளர்கள், இவர்கள் எல்லாம் எப்படி ஒன்றாக சேருவது? இவர்களில் ஒருவர் வராவிட்டாலும் வழக்கு தள்ளிப் போடப்படும். 3, 4 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கானவர்கள் துன்பம் அடைந்து அவர்களால் தாங்க முடியாத நிலை ஏற்பட்டது என்ற போது, கொள்கைக்காக நாங்கள் போராடத் தொடங்கி எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக போராட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டோம். அந்த விளைவுகள் இன்றைக்கு வேறு மாதிரியாக மட்டும் ஏற்பட்டிருக்குமானால்; அண்ணாவின் கொள்கை, அண்ணாவின் நோக்கம், விளைவுகள் என்னவாகி இருக்கும்? யார் மீதும் எங்களுக்கு காழ்ப்புணர்ச்சி இல்லை என்பதை மட்டும் மீண்டும் நான் வற்புறுத்திக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒன்றை மட்டும் வற்புறுத்திச் சொல்வேன். யாராக இருந்தாலும், அது நானாக இருந்தாலும் 'என்னால் தான் ஏதும் நடத்த முடியும். நான் ஒருவன் தான் அதற்குத் தகுதியானவன்' என்று யார் நினைத்தாலும் வரலாற்றில் அவர்களுக்குச் சோதனைகள் தான் ஏற்படும் என்பதை அண்ணா அவர்கள் மிகவும் உறுதியாக சுட்டிக் காட்டி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

முதலிலே எனக்கு என்று தோன்றும். நான் என்று தோன்றும். நான் மட்டும் என்று தோன்றும். எனக்கு மட்டுமே என்று தோன்றும். நான் தான் எனக்குத்தான் என்று தோன்றுகின்ற அளவிற்கு அதிகாரங்கள் அல்லது வசதி வாய்ப்பு கிடைக்கும் போது ஒரு மனிதன் அந்த இடத்திற்குப் போய் விடுவான் என்று அமரர் அண்ணா அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு யாரும் போகக் கூடாது என்பதை நான் ஒவ்வொரு வட்டத்திலும், ஒவ்வொரு நேரத்திலும் இங்கு மட்டுமல்ல எங்குமே அதை மனதில் வைத்துக் கொண்டு தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அவர்களை ஏதோ நான் குத்திவிட்டதாகவும் அதை போக்கக்கூடிய அளவிற்கு நல்லுணர்வுகள் இருப்பதுபோல் காட்டி கண்ணீர் வடிப்பதாகவும் சொன்னார்கள். நான் மனிதனைக் குத்தவில்லை. கொள்கையில் தவறு இருந்தால் அந்தக் கொள்கையைத் தாக்கியிருப்பேனே தவிர, தவறான கொள்கைகள் குத்தப்பட்டிருந்தால் அது அண்ணாவின் கையாக கருத வேண்டுமே தவிர ராமச்சந்திரன் கை என்று தயவுசெய்து நினைத்துவிடாதீர்கள். அதற்காகத்தான் போராட்டம் வந்தது. வேறு எதற்காக? அதை மக்களிடையே சொன்னோம். என்ன சொல்லியிருக்கிறோம். சொல்லப்பட்டிருக்கிற குறைகளைப் பொறுத்து எவ்வளவு விரைவில் நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அப்படி நிச்சயமாக எடுப்போம் என்று இம்மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்கு தங்கள் மூலம் உத்தரவாதம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோடு மட்டுமல்ல, இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் ஒரு பிரச்னையைச் சொல்கிறார்கள். இந்த முதல் அமைச்சர் அவர்கள் நகரத்திற்கு எதிரி, நகரத்தில் உள்ள மக்களுக்கு எதிரி, கிராமபுற மக்களுக்குத் தான் அவர்கள் ஏதோ செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று சொல்லி அதன் வாயிலாக நகர மக்களிடையே எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிவிட்டு இவர்கள் உங்கள் எதிரிகள் என்றளவிற்கு அவர்கள் செயல்பட விரும்புகிறார்கள் என்றெல்லாம் உணர்வுகளை தூண்டி விடுகிறார்கள்.

நான் மிக மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவோ ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளம் அதிகாரிகள் வாங்கினாலும் எனக்கு அதிலே நிச்சயமாக பொறாமை கிடையாது. ஏனென்றால் என்னைவிட அதிகமான அளவிற்கு சம்பளம் வாங்குகிறார்கள் என்ற உணர்வோடு இந்தப் பதவிக்கு நான் வரவில்லை. எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்குத் தெரியும், நான் எவ்வளவு சம்பாதித்துக் கொண்டிருக்க முடியும் என்று. இப்போதும் சினிமா தொழிலுக்குப் போயிருந்தால் ஓரளவு இங்கே வருகிற சம்பளத்தைவிட பன்மடங்கு பெற முடியும் என்று அவர்

களுக்குத் தெரியும். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு முடிவிற்கு வந்து நாம் இங்கே வருகிறோம். தொல்லைகள் அனுபவிக்கிற சூழ்நிலை இருந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ளத் தயாராய் இங்கு வருகிறோம். இங்கு வந்த பிறகு வசதியைப் பெறுவதற்காக, நாங்கள் அந்த நிலைமையில் இங்கே இல்லை. அப்படியிருக்க வேண்டாம் என்று வற்புறுத்திக் கூறிக் கொண்டிருக்கிறேன்.

ஒரு உதாரணம் சொல்கிறேன். பெருமைக்காக அல்ல. கார்கள் பழுதுபட்டுவிட்டன. பல ஆண்டுகளாக ஓடி ஓடி தேய்ந்து விட்டன. ஆகவே பழுதுபட்ட கார்களை வைத்துக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது. என்று அமைச்சர்கள் தெரிவித்தார்கள். நான் எழுதியனுப்பினேன். இதுகூட இல்லாமல் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதைவைத்துக்கொண்டு கொஞ்சம் ஒப்பேற்றிப்போகலாம் என்ற [illegible] எழுதியவன் நான் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேறு வழியில்லை என்றால் யார் யாருக்கு உண்மையாகத் தேவை என்று பொறியாளர்களை, தலைமை அதிகாரிகளை போன்றவர்களைக் கூப்பிட்டு பரிசிலனை செய்யச் சொல்லி அந்தக் கார்கள் நிச்சயமாக மாற்றப்பட வேண்டிய கார்கள் தானா என்று சொல்லக்கூடிய அளவிற்கு எச்சரிக்கையாக இருக்கிறோம்.

தொலைபேசியில் பேச வேண்டும் என்றால், வெளியூர்களுக்குப் போகும்போது, சொந்த விஷயமாகப் பேசினால் நீங்கள் உங்கள் கணக்கில் எழுதிக் கொள்ள வேண்டும், ஆட்சி சம்பந்தமாகப் பேசினால் ஆட்சிக் கணக்கில் எழுதலாம் என்றளவிற்கு நாங்கள் ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொண்டு, நாங்கள் ஒத்துக் கொண்டு செயல்பட முனைந்திருக்கிறோம்.

எந்தக் குறைகள் வந்தாலும் நிச்சயமாக அவற்றைத் தீர்த்துக் கொள்ளத் தயார் என்று சொல்லும்போது குறைகள் வந்து கொண்டேயிருக்கும். நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற குறைகளை நீங்கள் சொல்லிக் கொண்டிருங்கள், நாங்கள் [illegible] கிறோம் செய்கிறோம் என்று நாள் கடத்தி விடுவோம் என்று [illegible] செய்து யாரும் கருத வேண்டாம்.

ஊழல் ஊழல் என்று சொல்கிறார்கள். நான் [illegible] வேண்டாம் என்று கருதினேனே, எதையெல்லாம் [illegible] கூட வேண்டாம் என்று கருதினேனே அவற்றைச் [illegible] சொல்லாவிட்டாலும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். [illegible] சீட்டு பற்றி இங்கே பேசினார்கள். அந்த எண்களை [illegible] போது படித்துக் காட்ட நேரம் இல்லை. இவைகள் [illegible] அந்தப் பரிசுச் சீட்டு எண்கள். தவறான எண்கள் [illegible] பிடப்பட்டவையும் இதிலே அந்த டிக்கட்டுகள் இருக்கின் [illegible]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 [illegible] 7

[illegible] [இரவு 8-00]

[illegible] எல்லாம் வேண்டுமென்றே செய்தார்கள் என்று [illegible] வேண்டுமா? யாரோ செய்த தவறுக்காக எல்லோருமே [illegible] இல்லாமல் இருந்து விட்டார்கள் என்று சொல்ல [illegible]? இப்படி ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லிக் [illegible] டிருந்தால், எப்படித்தான் வேலைகளைக் கவனிப்பது, எப்போது தான் வேலைகளை கவனிப்பது, போராட்டங்களையே நடத்திக் [illegible] டிருந்தால் எப்போது தான் நாம் திட்டங்களை போடுவது, எப்போது தான் திட்டங்களை நிறைவேற்றுவது. ஏற்பட்டிருக்கிற [illegible] எல்லாம் எழுதி தந்திருக்கிறார்கள். அந்த பகுதிக் [illegible] டேயிருக்கலாம்..........

திரு. எஸ். ஆர். இராதா: எப்போது நடைபெற்றிருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: எப்போது என்பது முக்கியமல்ல, 1973-ல் 1975-ல் இப்படி இருக்கின்றன. தவறுகள் நேருகின்றன என்றால் யார் பொறுப்பு என்பதைத் [illegible] வேண்டியது தான்.

1972-ல் நான் வெளியேற்றப்பட்டேன். நாங்கள் வெளி யேற்றப்பட்டோம் அல்லது வெளியே வந்தோம், அதற்கு முன் [illegible] தேர்தலில் வெற்றி பெற்று 69-ம் ஆண்டில் முதலமைச்சராக 1971-ல் முதலமைச்சராக இன்றைய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் வந்த பின்னால் தான், 1973-ல் 1975-ல் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, ஆனால் இவையெல்லாம் எத்தனை ஆண்டு களுக்குப் பிறகு நடைபெற்றிருக்கின்றன, ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களில் இப்படிப்பட்ட ஒரு தவறு ஏற்பட்டிருக்கிறது என்றால், இந்த ஆறு மாதங்களில் இந்த அரசு இயந்திரங்கள் எப்படி செயல்படுகின்றன. எப்படி இயங்குகின்றன என்பதைக் கூட இன்னும் முழுவதுமாக தெரிந்து கொள்ள முடியவில்லை. எந்த எந்த [illegible] நிர்வாகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை சரியாக தெரிந்து கொள்வதற்கு நேரம் இல்லை. எல்லாக் கோப்புகளையும் கூட பார்ப்பதற்கு நேரம் கிடைக்க வில்லை. அப்படியிருக்கின்ற நிலையில் சில பள்ளி விவரங்களை இங்கே தருகிறோம் என்றால் அந்த அளவுக்கு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அவை [illegible] முன்னுக்குப் பின் முரணாக பேச வேண்டிய அவசியமில்லை.

நாட்டில் 'பாவர்ட்டி' என்கிற எண்ணம் வரும்போது, மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. நாமெல்லாம் நாகரிக [illegible] வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்தில், நமக்கு [illegible] வசதிகள் போதும், இதையே காப்பாற்றிக் கொள் [illegible], மற்றவர்கள் ஒன்றும் இல்லாமல் இருக்கிறார்களே என்று

[illegible] 7] [திரு. [illegible] இராமச்சந்திரன்]

[illegible] இருக்க முடியவில்லை என்பது நாம் [illegible] வசதிகளை பெருக்கிக் கொள்ள வேண்டும் என [illegible] தேவைகள் எல்லாம் இம்மியளவும் குறை செய்தாக வேண்டும்.

[illegible] இதைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் நான் [illegible] விட சற்று உணர்ச்சி வசப்பட்டு பேச [illegible] [illegible] இருந்தேன், அந்த அளவுக்கு [illegible] நாட்டில் [illegible] துன்பங்களை பார்க்கின்ற நேரத்தில் அப்படிப்பட்ட [illegible] என்றால் தாங்கிக் கொள்ள [illegible] அப்படிப்பட்டவர்கள் என்னைச் கொதிப்பு அடைவார்களோ என்ற அச்சம் எனக்கிருக்கிறது. முதலமைச்சர் [illegible] இப்படி தாண்டி விடலாமா என்று மற்றவர்கள் எண்ணக்கூடும். ஆனால் மற்றவர்கள் இதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பது [illegible] வேண்டுகோளாகும்.

ஒரு அலுவலகத்தில் நாற்காலிகள் வாங்கி [illegible] எல்லாம் போட்டு ஏற்பாடு செய்துவிட்டு, 23 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்பட்டது என்றும் அதை ஏற்குமாறும் எனக்கு கோரிக்கை [illegible] போது, அதை ஏற்க நான் மறுத்தேன். இது ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படிப்பட்ட வசதி நமக்கு தேவைதானா? இந்த அலுவலகத்திற்கு, மக்களுடைய பணத்திலிருந்து இந்த [illegible] தேவையில்லை என்று கோப்புக்களில் நான் எழுதினேன். [illegible] செய்து முடித்தாகிவிட்டது. [illegible] அதிகாரிக்கு எருமானம் வரக் கூடிய அளவுக்கு [illegible] திருப்பிக் கொடுக்கவும் வழியில்லை. சரி, போகட்டும், [illegible] கொள்ள வேண்டிய இந்த நிலையில் இருக்கிறேன்.

[illegible]னுடைய வேதனைகள் யாவும், தனிப்பட்ட மனிதனைப் பற்றியோ, அல்லது அரசியல் கட்சிகளைப் பற்றியோ அல்ல. நாட்டிலுள்ள மக்களை எண்ணி உண்மையிலேயே வேதனைப்படு கிறேன். அந்த வேதனையைத் தீர்த்துக் கொள்ளுகின்ற நேரத்தில், [illegible] மக்களுக்கு சில செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. [illegible] மக்களுக்கு என் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. [illegible] வீடுகள் கட்டி கொடுக்க வேண்டும் என்றால் 10 ஆயிரம் [illegible] ஒரு குடும்பத்திற்கு என்கிறார்கள். இன்னும் குறைத்து [illegible] கட்டி அதிகமான ஆட்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு 6,000 ரூபாய் என் [illegible]. அதையும் குறைத்து கட்ட முடியுமா என்று பாருங்கள் [illegible] கட்டினால் 5,000 ரூபாய் என்கிறார்கள். அதையும் குறைக்க முடியுமா என்றால் 4,000 ரூபாய் ஆனால், ஒரு குடும்பம் [illegible] முடியாது. எனவே மாடி வீடுகள் வேண்டாம், [illegible] எல்லோருக்கும் மாடுகள் கட்ட வேண்டும், [illegible] போட வேண்டும், கனி வேண்டும், இதற்கு

நாங்கள் எங்கே போவது? இதற்கு ஏதாவது செய்யுங்கள் என்று கிராமங்களிலுள்ளவர்கள் கேட்கிறார்கள். இதற்காக சில யோசனைகளை சொல்ல வேண்டியிருக்கிறது.

அப்படி வரும்போது, சில முரண்பட்ட கருத்துக்களாக இருக்கின்றன என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே நேரத்தில் மக்களுடைய பணம் வீணாகாமல் பார்த்துக் கொள்வதும் முக்கியம், அதே நேரத்தில் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு மாடல்களையும் பரிசீலித்து, இத்தனை ரூபாயில் வசதி மிக்க வீடுகளை கட்டி கொடுக்கின்ற நேரத்தில், குடிசைகள் இருந்த இடத்திலேயே வசதியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டிக் கொடுங்கள் என்று சொல்லுகின்றோம்.

திட்டம் வைத்திருக்கிறோம். அது தயாராக இருக்கிறது. அதை செயல்படுத்த இருக்கிறோம். நான் இப்படிச் சொல்லும் போது, இங்கு ஒரு பிரச்னையை தலைவர் அவர்கள் மூலமாக இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்களின் மனதிலே பதிய வைக்க நான் விரும்புகிறேன்.

ஒரு ஆண்டுக்கு 10,000 வீடுகள், 20,000 வீடுகள் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு கட்டிடங்கள் கட்டயிருக்கிறோம். அதே நேரத்தில் குடியான மக்களுக்கு 200 ரூபாய்க்கு குடிசைகள் கட்டிக் கொடுக்க இருக்கின்றோம். இந்தப் பிரச்னையும் இதோடு நின்று விடுமென்று நான் கருதவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் கல் வீடு அதிலும் 6,000 அல்லது 7,000 ரூபாயிலே கட்டுகிறீர்களே என்று கேட்கலாம். தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு இல்லாதவர்கள். அதே போல் குடியானவர்களுக்கும் வீடுகள் இல்லையே, அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்கக் கூடாதா என்று கூட கேள்விகள் எழும். இதைப் பற்றியெல்லாம் சிந்தித்துக் கொண்டுதான் செயல்பட வேண்டி யிருக்கிறது.

இப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் பூதாகாரமாக கிளம்பத் தான் போகின்றன. அவைகளுக்கெல்லாம் கூட நாம் கருத்த முறையில் செயலாற்றித் தீரவேண்டும். இந்தத் திட்டங்களைச் செய்யும் போது, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது, இப்படிப் பட்ட பல பிரச்னைகளை நினைத்துப் பார்த்துத்தான் திட்டங்கள் போட வேண்டியிருக்கிறது அப்படித் திட்டங்கள் போட்டால், அதற்குரிய பணம் தேவை. பணம் இல்லையென்றால் எங்காவது கடன் வாங்கலாம் என்று சொல்வார்கள். அப்படியே கடன் வாங்கினால் இந்த அரசு இவ்வளவு கடன் வாங்கிவிட்டதே என்றும் குற்றம் சாட்டப்படலாம். ஆகவே, இந்த உணர்வுகளை மனதிலே வைத்துப் பார்க்கும்போது தான், இந்த வறுமைக் கோட்டிற்கும் கீழே ஒரு வேளை, இரண்டு வேளை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல்

இருக்கும், தொழில் இல்லாமல் இருக்கும் இந்த 4 1/4 கோடி மக்களுக்கு இடையே 7, 8 லட்சம் பேருக்கு 300 கோடி ரூபாய் சம்பளமாகப் போகிறது என்ற நிலை அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்தால், இந்த நாட்டிலே இருக்கும் அவர்கள் எங்களுக்கும் உரிமை உண்டு. நாங்களும் இந்த நாட்டின் சொந்தக்காரர்கள், நாங்களும் உழைக்கத் தயார், எனவே, எங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொகை கொடுத்தாகவேண்டும், உயர்ந்த அளவுக்கு நீங்கள் கொடுக்கா விட்டாலும், குறைந்த அளவுக்கு எவ்வித வருமானமும் இல்லாத எங்களுக்குத் தந்தாகவேண்டும், நாங்களும் உழைக்கத் தயார் என்று கேள்வி கேட்பார்களானால், இப்பிரச்னையிலே இறங்குவார்களானால் இந்தப்பிரச்சனையை சமாளிப்பது என்பது சாதாரணமான விஷயமல்ல, அதற்கு ஒரு அமைச்சர் அவை மட்டும் இருந்து திட்டம் நிறைவேற்றமுடியும், தமிழ்நாட்டுக்கு வருகின்ற அந்தப் பணத்தை மட்டும் செலவு செய்து அதனை சரிப்படுத்த முடியும் என்று கருதியும் நான் இதிலே இறங்கவில்லை. ஒட்டு மொத்தமாக இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனைபேரும் தங்கள் அனுபவத்தை, அறிவை, அவரவர்களுக்கு இருக்கும் பகுத்தறிவை, விஞ்ஞான அறிவை எல்லாம் ஒன்றாக்கி எல்லோரும் ஒன்று சேர்ந்து, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நாம் முடிவு எடுத்தால், நாம் நிச்சயமாக இந்த நாட்டை நல்ல நிலைமைக்கு ஐந்தாண்டுகளில் கொண்டுவர முடியாவிட்டாலும், ஒருவேளை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நாங்கள் வரமுடியாவிட்டாலும், இந்தத் திட்டங்கள் 20 ஆண்டுகளுக்குள், 25 ஆண்டுகளுக்குள் நல்ல அளவிலே, அதாவது இன்றைக்கு குழந்தையாக இருக்கின்ற ஒருவர், நாளை வாலிபனாகி, குடும்பம் நடத்துகின்றபோது, அவர்கள் பாதுகாப்போடு உள்ள வாழ்க்கையை இந்தச் சமுதாயத்திலே கிடைக்கும் என்ற நிலைமையை உருவாக்கும் திட்டமாக இருக்கும் இந்தத் திட்டம்.

ஐந்தாண்டுகள் இருக்கிறோம். இதுவரையில் செய்யப்பட்ட; முடிந்த திட்ட வேலைகளை, விளம்பரப்படுத்துகின்ற அளவிலே; தேர்தல் காலத்திலே இதைக் கட்டுகிறோம், அதைக் கட்டுகிறோம்; குளத்தைத் தோண்டுகிறோம் என்றெல்லாம் அறிவித்துவிட்டு; ஆட்சிக்கு வந்த பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்ற அளவிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் கிடையாது. இந்த எண்ணத்தில் செயல்பட விரும்பாமல், எங்களால் இயன்ற அனைத்தையும் அந்த அளவுக்குச் செய்திருக்கிறோம் என்பதையும், இந்த 6 மாத காலத்திற்கும் என்ன செய்யலாமோ அதிலே கவனம் செலுத்தியிருக்கிறோம். செய்திருக்கிறோம், மற்றவைகள் நேரமில்லாத காரணத்தினால், விளம்பரம் என்று மற்றவர்கள் கருத மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், நாங்கள் அவற்றை வெளியிட இருக்கிறோம் என்று சொல்லும்போது, ராஜாஜி அவர்கள்

இங்கே சிலர் முதலமைச்சரை பார்க்கமுடியவில்லை, முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை என்று சொன்னார்கள். முதலமைச்சரைப் பார்க்க வருகிற சிலர் எப்படி வருகிறார்கள் என்று எண்ணிப்பார்த்தால் உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. அப்படி நம்மவர்கள் இருக்கக்கூடாது.

உண்மையில் சொல்லுகிறேன்—ஒரு பக்கத்தில் சாராயக் கடைகளை மூடிவிட்டீர்கள் என்று சொல்லுகிறீர்கள்; ஆனால் கள்ளச் சாராயம் அதிகமாக வளர்ந்துவிட்டது என்று சொல்லும்போது நம்மவர்கள் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்வார்களானால் அதைவிட வேதனை இருக்க முடியாது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையே கைது செய்யச் சொல்லியிருக்கிறேன். வழக்குப் போட்டிருக்கிறோம்.

யாராக இருந்தாலும் இப்படிப்பட்ட குற்றங்கள் செய்வார்களேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் இந்த ஆட்சி பின்வாங்காது என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

அமைச்சரவை மீது என்ன குற்றங்களைச் சொல்லவேண்டுமென்று நினைத்து இருப்பார்களோ அவைகளைச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பில் எது எதை விளக்க முடியுமோ அவைகளை விளக்கி இருக்கிறோம். மற்றவைகளைப் பற்றி மீண்டும் சொல்வோம். அவர்கள் பேசியதிலிருந்து பட்டியல் போட்டு, அதற்கான விளக்கங்களை வாரத்திற்கு ஒரு முறை பத்திரிகைகளுக்கு—காசு கொடுத்தல்ல—எப்படியாவது செய்திகளைப் போடவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வோம். நிச்சயமாகச் செய்வோம். அதே நேரத்தில் இங்கே சட்டங்கள், பில்கள் வரும்பொழுது மதுவிலக்குச் சட்டம் போன்றவைகள் வரும்போது அவைகள் கொஞ்சம் கடுமையாக இருக்கிறதோ என்று யாராவது சொன்னால் கொஞ்சமும் நீங்கள் தயவு தாட்சண்யம் காட்டாமல் உங்கள் மனத்திலே இரக்கம் காட்டாமல் இளகிவிடாமல் நிறைவேற்றித் தாருங்கள்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, முதலமைச்சர் தங்கள் பேச்சை முடிக்கிற நேரத்திலே மீண்டும் மதுவிலக்கு பற்றிச் சொன்ன காரணத்தினாலே அவர்கள் காலையிலே சொன்னது குறித்து ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். குடித்தவர்கள் மீது வழக்குப் போடவேண்டாம் என்று சொல்லியிருப்பதாக திரு. சாதிக்பாட்சா அவர்கள் சொன்னபோது அப்படி இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் காவல் துறை அதிகாரி கடித எண். 147250 / 12—3—77 தேதி 30—7—77. இது அனைத்து மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும் சென்னை மாநகர ஆணையருக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. அதிலே சொல்லப்பட்டிருக்கிற குறிப்பு : 'உண்மையான ஆதாரங்களோடு

மக்களுக்குத் தொல்லை கொடுத்து வன்முறையில் ஈடுபட்டு மது அருந்தியவர்களைத் தவிர ஏனைய அனைத்து மதுவிலக்குக்கு எதிராக மது அருந்திய வழக்குகளும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று கூறப் பணிக்கப்பட்டுள்ளேன்' இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருப்பது ''கள்ளத்தனமாக காய்ச்சுவோர் வியாபாரம் செய்வோர் அனைவருக்கும் அதிகமான தண்டனை எதுவோ அதை அவர்கள் பெற சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடப் பணிக்கப்பட்டுள்ளேன் காவல் துறையின் சார்பாக' இதிலே முதலிலே உள்ளதுதான் பிரச்னைக்குரியது, 'உண்மையான ஆதாரங்களோடு மக்களுக்குத் தொல்லை கொடுத்து வன்முறையில் ஈடுபட்டு மது அருந்தியவர்களைத் தவிர ஏனைய அனைத்து மதுவிலக்குக்கு எதிராக மது அருந்திய வழக்குகளும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்று கூறப் பணிக்கப்பட்டுள்ளேன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறை தலைமை அதிகாரிகள் அனுப்பியுள்ள கடிதம் இது.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தவறான கருத்திலே வெளியிடப்பட்ட சுற்றறிக்கை என்று கருதுகிறேன். அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். எங்களுக்கு அப்படிப்பட்ட கொள்கை இல்லை. குடிக்கிறவர்கள் அறியாத் தன்மையில் குடிக்கிறார்கள் என்பதை விட மது விற்கப்படுகிறது என்று, வாங்குகிறவர்கள் குடிப்பதன் மூலம் குடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. குடிக்கிறவர்கள் மீது வழக்குகளை வாபஸ் வாங்குங்கள் என்று சொல்லவில்லை..

<u>திரு. மு. கருணாநிதி :</u> மன்னிக்கவும் இரண்டாவது முறை குறுக்கிடுவதற்காக, நேரம் அதிகமாகிவிட்டது. அரசுத் துறை செயலாளர் 95882 காவல் 677 காவல்துறை உள்துறை செயலாளர். தலைமைச் செயலகத்தில் உள்ள அதிகாரியால்—அந்த இலாகாவும் முதலமைச்சர் அவர்களிடத்திலேதான் இருக்கிறது—போடப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய கையெழுத்து இல்லாமல் அந்த பைல் போயிருக்க முடியாது. அந்த பைல் எப்படிப் போயிற்று?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> அதைப் பரிசீலனை செய்து உங்கள் முன் வைக்கத் தயாராக இருக்கிறோம். எப்படி இந்தக் கருத்து மாற்றம் ஏற்பட்டது என்பது எனக்கு ஐயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்னைகள் நிச்சயமாகக் கவனிக்கப்படும். இது போன்றவைகளை எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது நாட்டிற்கு நன்மை பயக்கும். எப்படி வந்தது என்று நான் கேட்க மாட்டேன். நாங்கள் தெரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி நடவடிக்கை எடுக்க அது உதவி செய்கிறது. இலாக்காக்கள் மற்ற அமைப்புக்கள் எல்லாம் எப்படி எப்படிக் கருதுகிறார்கள் என்பதைப் பற்றி எண்ணுகிற

போது திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் இங்கே ஒரு கருத்தை சொன்னார்கள். தமிழ் தெரிந்த அதிகாரிகளை வேலையில் அமர்த்துங்கள் என்று சொன்னார்கள்.

[இரவு 8.20]

அதை நான் நிச்சயமாகக் கவனிக்க வேண்டிய கட்டாயத்திற்கு இந்தக் கடிதம் எனக்கு அறிவுறுத்துகிறது. ஆகவே, நிச்சயமாக நான் இதைக் கவனிப்பேன் என்பதையும், தமிழ் தெரியாதவர்களை நிச்சயமாகப் பதவியில் இருத்துவதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் அவர்களுக்குச் சொல்லி, இங்கே இவ்வளவு நேரமானாலும் பொறுமையோடிருந்த இந்தப் பிரச்னைகளைக் கவனித்த ஒவ்வொருவருக்கும், அக்கறை செலுத்திய ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்ற வேளையில், எந்த எண்ணத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதோ அந்த அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்கு நிறைவேறியிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, இந்த தீர்மானத்தைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று எனக்குத் தெரியாவிட்டாலும், ஆனால் அதைப்பற்றி என்ன முடிவு செய்கிறார்கள் என்பதை அவர்தான் சொல்லவேண்டும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் மீண்டும் சொல்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள்களின் கொள்கையிலிருந்து வழுவி எந்தத் தவறையும் செய்ய நாங்கள் முன்வர மாட்டோம், அப்படி முன் வருகின்றவர்களை அனுமதிக்க மாட்டேன் என்பதையும் சொல்லி, இந்த அளவிற்கு பெரிய வாய்ப்பு தந்த எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும், துணைத்தலைவரவர்களுக்கும், இங்கே பொறுமையோடு இருந்து, வாதப் பிரதிவாதங்களில் கலந்துகொண்டு, சூடான கருத்துக்களைப் பரிமாறினாலும், அதைப் பற்றி ஒதுக்கி வைத்து, அதைப் பிரச்னையாக்கிப் போராட்டத்தை ஏற்படுத்தாமல், அமைதியாக இருந்து என்ன சொல்கிறார்கள், என்ன செய்திருக்கிறார்கள், இனிமேல் என்ன செய்யவேண்டும்மென்பதைப் பற்றிச் சிந்திக்க அனைவரும் பொறுமை காட்டியதற்காக நன்றி கூறுகிறேன். முடிவை எதிர்க்கட்சித் தலைவரவர்களிடம் விட்டுவிடுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே ஒரு அரசு ஆணையைப் படித்தார்கள். அதில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், நேரம் அதிகம் ஆகிவிட்டது. பலபேர் ஊருக்குப் போக வேண்டியவர்கள் இருக்கிறார்கள், நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். பிடிவாதமாக நின்றுகொண்டுதான் இருப்பேன், என்று சொல்லாதீர்கள். இதற்கு மேலே தயவு செய்து பேச்சு இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். இனிமேல் விளக்கமெல்லாம் கிடையாது. இது முடிந்து போய்விட்ட விவகாரம். உங்களுடைய பிரச்னைகளைப் பற்றி முதலமைச்சர் எழுப்பவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள், எனக்குத் தெரியும். சொந்த கருந்துக்கள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1967ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த சில காரியங்களைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: கிடையாது. வேறு ஏதாவது சொல்லவேண்டுமா! விளக்கங்கள் இனி இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: விளக்கங்கள் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு இல்லாததால் நாங்கள் வெளியேறுகிறோம்.

(ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

''மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையின் கீழ் உள்ள அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையின்மையைத் தெரிவித்துக் கொள்கிறது.''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-24 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

A. STATUTORY RULE AND ORDERS.

252. Notification issued in G.O. Ms. No. 1337, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 14th November 1977 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the post of Gazetted Manager, Rajaji Hall and Seerani Arangam at Madras, from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320(5) of the Constitution of India.]

253. Notification issued in G. O. Ms. No. 1202, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 1st October 1977 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the posts of Supervisor and Mechanic sanctioned for the course in Welding Technology, Government Polytecnic Tiruchirappalli, within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320(5) of the Constitution of India].

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

43. The Tamil Nadu Ground Water (Control and Regulation) Bill, 1977 [L.A. and Bill No. 14 of 1977].

44. List of unstarred questions and answers from Nos. 41 to 70.

45. Additional information with reference to Question No. 151 answered on the floor of the House on 3rd January 1978.

இணைப்பு I.

658ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 53-க்கான விடையைக் காண்க.]

விடை.—

1976-77ம் வருடத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட்ட வேலைகளுக் கென செலவு செய்யப் பட்ட பணத்தின் விவரம் தாலூகா வாரியாக.

வரிசை எண், தாலுகாவின் பெயர்.	செலவினம் ரூ.
(1)	(2)
1 இராமநாதபுரம்	10,73,627
2 முதுகுளத்தூர்	22,29,389
3 திருவாடானை	14,98,922
4 திருப்பத்தூர்	5,89,712
5 காரைக்குடி	6,91,491
6 சிவகெங்கை	21,93,211
7 பரமக்குடி	22,25,536
8 ஸ்ரீவில்லிபுத்தூர்	23,51,584
9 இராஜபாளையம்	17,68,014
10 சாத்தூர்	56,33,259
11 அருப்புக்கோட்டை	32,51,442
மொத்தம் ..	2,35,06,187

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1978 ஜனவரி 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

ஊராட்சி ஒன்றியக் குழு கூட்டங்கள்

குறுகிய கால வினா 1. திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சி ஒன்றிய கூட்டம் மாதந்தோறும் நடத்த வேண்டுமென்று அரசு உத்தரவு இட்டும் இதுவரை கூட்டம் கூட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அவ்விதம் அரசு உத்தரவு இல்லை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 47-வது பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டங்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டவேண்டும். தற்சமயம் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தனி அலுவலர்களின் நிர்வாகத்தில் உள்ளது. தனி அலுவலர்கள் கூட்டத்தை மாதம் ஒரு முறையாவது கூட்டினால் நலம் என்று ஊரக வளர்ச்சி இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிதாக போடப்பட்டிருக்கிற குழுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழுக்கள் எந்த மாதத்திலிருந்து செயல்படும்? அதன் மூலமாக ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக அமையுமா என்பதை அமைச்சர் அறிவாரா? அதற்கு விடை அளிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதற்கான ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக முயற்சி எடுக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, இப்பொழுது சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று, இங்கே நாமெல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம். ஆனால், மாவட்டங்களிலே அபிவிருத்தி கவுன்சில் கூட்டம் முன்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடந்த 6, 7 மாதங்களாக அவை நடைபெறவில்லை. அவை விரைவிலே நடத்தப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, சில மாவட்டங்களில் ஏற்கனவே நடக்க ஆரம்பித்து விட்டது. நடைபெறாத மாவட்டங்களிலும் அது நடைபெற, அரசு ஏற்கனவே அறிவிப்பு செய்து இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கூட்டம் சம்பந்தமாக அரசாணை ஏதாவது பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா? அப்படியென்றால், எந்தத் தேதியில் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது? அந்த ஆணையை அமுல் நடத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது? ஊராட்சிகளுக்குக் குழுக்கள் இருப்பதைப் போல், நகராட்சிகளுக்கும் குழுக்களை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா? ஏனென்றால், பல நகராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெறாமல், மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், உரியமுறையில் நகராட்சிகளில் நடைபெற வேண்டிய பணிகளைச் செய்ய இயலாத நிலையில் நகராட்சிகள் இருக்கிற காரணத்தினால், நகராட்சிகளுக்கும் அத்தகைய குழுக்களை நியமிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சி ஒன்றிய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கடந்த 29-ம் தேதி டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், நகராட்சி மன்றங்களுக்கும் இப்படி ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் 31-ம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. அ. இராசரத்தினம்: தலைவரவர்களே, ஏற்கனவே அரசாணை, ஜி. ஓ. எண் 1583, செப்டம்பர் 1977-ல் ஒரு உத்தரவு போடப்பட்டு இதுவரை அமல் நடத்தாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது ஆணை அல்ல. சுற்றறிக்கை. அப்படி ஒரு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, இதற்கு முன்பே அந்தந்தத் தொகுதி எம். பி., எம். எல். ஏக்கள், ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய முன்னாள் துணைப் பெருந் தலைவர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, உத்தரவு போடப்பட்டது. அவைகள் என்றைக்கு வந்தனவோ, அந்த உத்தரவு அன்றைக்கே கான்சல் ஆகிவிட்டன. அதற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்மிகு திரு. கா. காளிமுத்து: இது தொடர்பாக, சட்டமுன் வடிவு வந்தபொழுதே திரு. சவுந்திரராஜன் கேட்டு அதற்கு நான் பதில் சொன்னதாக ஞாபகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள், மத்திய நிதி அமைச்சரோடு கலந்துறையாட வேண்டியிருக்கிற காரணத்தால், அவரது கேள்விகளைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவை தள்ளி வைக்கப்படுகின்றன.

நகர்ப்புற நில உச்சவரம்பு.

*164 வினா **திரு. கு. ரமணி:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், பிறப்பிக்கப்பட்டதிலிருந்து நகரங்களில் உள்ள காலி நிலங்களை விற்கவோ, வாங்கவோ, தடை ஏற்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை வீடுகட்ட விரும்புவோருக்கு விற்பனை செய்ய அரசு அனுமதி வழங்குமா?

(இ) மேற்கண்ட நிலைமையினால் கட்டட வேலைகள் ஸ்தம்பித்துப் போய் கட்டடத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பிழந்து கஷ்டப் படுவது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை* ஒன்று சட்டப் பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள இனும் கிராமங்கள்

*165 வினா.—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள இனும் கிராமங்கள் எத்தனை?

(ஆ) அவைகளை ரயத்துவாரிகளாக மாற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) 409.

(ஆ) அவைகளில் 399 இனும் கிராமங்கள் ரயத்துவாரியாக மாற்றப்பட்டு விட்டன. மீதியுள்ள பத்து இனும்கள் நீதி மன்ற தடையாணைக்குட்பட்டோ அல்லது உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையிலிருப்பதினாலோ அரசால் மேற்கொள்ள முடிய வில்லை.

மலையடிப்பட்டிகுளம்

*166 வினா.—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன் கோவில் தாலுக்கா, வயலிக்குளம்—மலையடிப் பட்டிகுளம் வெட்டுவதற்கு அரசு ஒப்புதல் கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1138-1139 பக்கங்களில் இணைப்பு-I, ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே திருநெல்வேலி மாவட்டத்தில், எப்போதும்வென்றான் என்ற ஊரில் ஒரு பெரிய குளம் வெட்டி அதில் அதிகமான நீர்ப்பாசனம் செய்கின்ற அளவுக்கு இருக்கிறது, அதைப்போலவே இந்தப் பகுதியிலும் வேறு எந்த வித நீர் வசதியும் இல்லாமல் இருப்பதால், இதைச் செய்வதற்கு மறு பரிசீலனை செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டில் சுமார் 5 லட்சம் ரூபாயில் இது திட்டமிடப் பட்டது. அப்போதே இது சிக்கனமற்ற திட்டம் என்று கைவிடப் பட்டது. இப்போது கேட்டதில் இது 7.33 லட்சம் ரூபாய் மதிப்பீடு ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்போதும் இது சிக்கன மற்ற திட்டமாக இருக்கிறது. இருந்தாலும் அரசு இதைப் பரிசீலித்து வருகிறது.

மூவாநல்லூர் பாசனத்திட்டம்

*167 வினா.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தாலுகா மூவாநல்லூர் பம்பிங் இரிகேஷன் திட்ட வேலை எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்பொழுது முடியும்?

(இ) அதன் மூலம் பாசனம் பெறும் நிலப்பரப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 70 சதவீத வேலை முடிந்துவிட்டது.

(ஆ) 31-3-1978-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் மூலம் 659 எக்கர் ஒருபோக பாசன வசதி பெறும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவாகவும், துரிதமாகவும் செயல் படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விரைவாகத்தான் வராது, ஆனால் விரைவு படுத்த அரசு முன் வரும்.

[1978 சனவரி 9

வேலைநிதி ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

*168 வினா.—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டு பொங்கல் பரிசாக தமிழக வேலைநிதி ஊழியர்கள் 31-12-1976 முதல் ஓய்வில் செல்பவர்களுக்கு பென்ஷன் வழங்கப்பட ஆளுநர் அறிவித்ததனை நடைமுறைப்படுத்தப் பட்டதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர்களுக்கு ஓய்வு கால ஊதியம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: (அ) மற்றும் (ஆ) பொதுப்பணித்துறையில் 24-11-1970 அன்று தான் பெரும்பாலான வேலைநிதி ஊழியர்கள் மாநில சேவையாக்கப்பட்ட பணிக்கு கொண்டுவரப்பட்டனர். மாநில சேவையாக்கப்பட்ட வேலைநிதி ஊழியர்கள் 1-1-1977 முதல் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் களாக ஆக்கப்பட்டுள்ளனர். ஓய்வூதியம் பெற, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் மாநில சேவையாக்கப்பட்ட பணியில் இருத்தல் வேண்டும். ஆகையால் 24-11-1970-லிருந்து மாநில சேவையாக்கப் பட்டு 1-1-1977 முதல், முறையான பணியமைப்புக்கு கொண்டுவரப் பட்டு, 23-11-1980 அன்றும் அதற்கு பின்னரும் பணியில் இருந்து ஓய்வு பெறும் ஊழியர்கள்தான் ஓய்வூதியம் பெறத் தகுதியுடை யவர்களாகின்றனர். எனவே, தகுதிப்பணி பத்து ஆண்டுகளுக்கு குறைவாகவுள்ள ஊழியர்கள் ஓய்வூதியம் பெறும் வகையில் அவர்கள் தங்களுடைய மாநில சேவையாக்கபடாத பணிக் காலத்தையும் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கும் ஆய்வுக் குறிப்பு ஒன்றும் சம்பளக் கமிஷன் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, தகுதி இல்லாதவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இதையும் கூட அந்த அனுதாபத்தோடு கவனித்து அவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

1978 சனவரி 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே புரொவின்ஷயல் கேடருக்கு, 10 ஆண்டுகள் இருந்தால்தான் பென்ஷன் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள் 24-11-1970-ல் தான் புரொவின்ஷியல் ஆகி இருக்கிறார்கள். எனவே 24-11-1980-க்குப் பிறகு ஓய்வு பெறுகிறவர்களுக்குத்தான் இப்போது உள்ள விதிமுறைகளின்படி பென்ஷன் தர முடியும். அதற்கு முன்னாலே ரிட்டையர் ஆகிறவர்களுக்கு அவர்கள் கேட்பது புரொவின்ஷியல் ஆகாமல் இருந்தவர்களுக்கு, அதற்கு முன்னாலே 'ஒர்க் சார்ஜடாக' இருந்த அந்த சர்விசையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள். அது தற்காலிக சர்வீஸ் என்பதால் அதை பென்சனுக்கு சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது அரசினுடைய கருத்தாகும். எனினும் இது மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நிரந்தரம் ஆகாமல் அவர்கள் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் 5 ஆண்டுகளுக்கு முன் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட் டிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே அவர்களுக்கு உள்ள சர்வீஸ் 10 ஆண்டுகளுக்கும் மேலே ஆகும். ஆகவே அந்த மாதிரி இருப்பவர் களுக்கு வேண்டிய ஓய்வு ஊதியம் கொடுத்து உதவ, வேறு ஏற்பாடுகள் செய்யப்படுமா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது உண்மை. ஆனால் 'ஒர்க் சார்ஜடு' அல்லது 'கண்டிஜென்டு எஸ்டாபிளிஷ்மென்ட்' பணிகளிலே இருப்பவர்கள் சர்விசை, அதை ரெகுலர் சர்வீசாக எடுத்துக் கொள்வது இயலாது. ஏனென்றால் பல்வேறு துறைகளிலே அது போல தற்காலிகமாகப் பணியாற்றுகிற வர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் இது குறித்து ஒரு கொள்கை ரீதியான முடிவினை, சம்பளக் கமிஷன் தரவேண்டும் என்று அது கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தங்கப் பதக்கம் பெற்ற தமிழ்த் திரைப்படங்கள்

*** 169—வினா திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77 ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ்த் திரைப்படங்கள் எவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஒன்றுமில்லை.

(முற்பகல் 9-10)

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, திரைப்படங்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிற நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று தெரிகிறது. தமிழ் நாட்டில் அத்தகைய தங்கப் பதக்கம் பெறும் அளவுக்குத் திரைப்படங்கள் தயாரிக்கப்படவில்லையா? அந்த நிலையை மாற்ற புரட்சி தலைவர் ஆட்சியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தங்கப்பதக்கம் பெறும் அளவிற்குப் படங்கள் தயாரிக்க ஊக்கம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தங்கப் பதக்கங்களை வழங்குவதற்கு எந்த விதமான நிர்ணயமோ, விதிமுறைகளோ வகுத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு வழிகாட்டும் முறைகளும் இல்லை. படங்கள் உருவாக்கப்படுவது அவரவர்கள் உணர்வு, ஆற்றல், திறமையைப் பொறுத்தது. அதற்கு பரிசு கொடுப்பது என்பது அதற்காக அமைக்கப்பட்ட குழுவின் முடிவைப்பொறுத்தது. அவர்கள் எந்தப் படத்திற்கு தங்கப் பதக்கம் அளிக்கலாம் என்று முடிவு செய்கிறார்களோ அந்தப் படம் தங்கப் பதக்கம் பெறும் தகுதியைப் பெறுகிறது.

ஆகவே, எந்தப் படம் தங்கப் பதக்கத்திற்கு உரிய படம் என்று உருவாக்குகிறபோது சொல்ல முடியாது. என்றாலும் தங்கப் பதக்கம் பெற்றால்தான் அது சிறந்த படம் என்று இல்லை. அந்தக் குழுவில் 8-10 பேர் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கருத்தில் எந்தப் படம் தகுதியான படம் என்று முடிவு எடுக்கிறார்களோ அந்த முடிவுக்குக் கட்டுப்பட்டு அரசாங்கம் தங்கப் பதக்கம் தருகிறது.

ஆகவே, தங்கப் பதக்கம் பெறாததாலேயே தமிழ் படங்கள் தரம் குறைந்த, தகுதி அற்ற படங்கள் என்று கூறிவிடமுடியாது. என்றாலும், பரிசு பெறும் அந்த நிலைக்கு தமிழக கலை உலகம் உயர்வதற்கு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அந்த முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, திரைப் படங்களுக்கு தங்கப் பதக்கம் வழங்குவதற்கான அடிப்படையில் அதற்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அத்தகைய குழுவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்தக் குழு ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசால் அமைக்கப்படுகிறது. அதிலே திரைப்படத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம் பெறுகிறார்கள் என்று தெரிகிறது. இந்தக் கேள்வியை தனிக் கேள்வியாகப் போட்டால் அந்தத் தகவலை பெற்றுத் தரமுடியும். இப்போது தகவல் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, பம்பாயில் இயங்குகிற பிலிம் இன்ஸ்டிடியூட்டில் நல்ல தரமான படங்களைத் தயாரிக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுவதுபோல், சென்னை அடையாறு பிலிம் இன்ஸ்டிடியூட் நல்லவிதமாக பணி செய்யும் அளவிற்கு அது மேலும் திறம்பட புதிய கலைஞர்களை உருவாக்குகின்ற அளவிற்கு செயல்படச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தரமான படங்கள் வெளியிடுவதற்கும் புதிய கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. நம்முடைய தமிழ் நாட்டின் தொழில் நுட்ப வளர்ச்சிக் கல்லூரியில் பயின்றவர்கள் பலபேர் இந்திய அரசின் பரிசைப் பெற்று இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, 1976-77-க்கு முன்பு வெளியிடப்பட்ட தமிழ் திரைப்படங்களில் எந்தப் படத்திற்கு தங்கப்பதக்கம் கிடைத்து இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தங்கப்பதக்கம் இதுவரையில் எந்தத் தமிழ் படத்திற்கும் கொடுத்து இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, படங்களுக்கு தங்கப் பதக்கம் மட்டும் தான் கொடுக்கப்படுகின்றதா, அல்லது வெள்ளிப் பதக்கங்கள், தாமிரப் பதக்கங்கள் ஆகியவையும் கொடுக்கப்படுகின்றனவா? தமிழ்ப் படங்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் அல்லது தாமிரப் பதக்கங்கள் ஆகியவை கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அகில இந்திய அளவில் 3 பரிசுகள் தரப்படுகின்றன. ஆனால் இதுவரையில் அகில இந்திய அளவில் பாராட்டுப் பத்திரங்களைத்தான் தமிழ் படங்கள் பெற்று இருக்கிறதே தவிர, பதக்கங்களை பரிசாகப் பெற்றதாகத் தகவல் இல்லை. விவரமாக அறிய வேண்டுமானால் தனிக்கேள்விபோட்டால் தகவல் தெரிந்து கூற முடியும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவரவர்களே, வழிகாட்டி நெறிகள் தங்கப் பதக்கம் வழங்குவதற்கு இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சில சார்புடையவர்களுக்கு இவ்வாறு தங்கப் பதக்கங்களைக் கொடுத்து வருகிறார்கள், திறமையில்லாவிட்டாலும் என்ற புகார் நாட்டில் இருக்கிறது. ஆகவே, 1976, 1977 ஆண்டுகளில் தங்கப் பதக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய படங்கள் தகுதி உள்ளவைகளா, அல்லது தகுதியற்றவைகளா என்பதை மாநில அரசு சொல்ல இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட முடிவுகளில் மாநில அரசு தலையிடுவது என்பது இயலாத காரியம். அந்த ஆண்டிலே சோமனதுடி என்ற கன்னடப் படத்திற்கு தங்கப் பதக்கம் கிடைத்திருக்கிறது. அதையொட்டி தங்கப் பதக்கம் பெறமுடியாத மற்ற மொழிப் படங்களின் பிரதிநிதிகள் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கக்கூடும்.

ஒரு குழு அமைத்து, முறைப்படுத்தி, அவர்களுடைய முடிவுதான் ஏற்கக்கூடியது, அமல்படுத்தக்கூடியது என்று அரசு முடிவு எடுத்துவிட்ட பிறகு, அந்தக் குழுவின் முடிவில் யாரும் தலையிட்டு, அதற்கு நோக்கங்கள் கற்பிக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: மாண்புமிகு தலைவரவர்களே, மலைக்கள்ளன் போன்ற நல்ல படத்திற்கு தங்கப் பதக்கமோ, ஜனாதிபதியின் பரிசோ கிடைக்கவில்லை என்றால், எப்போதுதான் இதுபோன்ற நல்ல படங்களுக்கு தங்கப் பதக்கம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னாலேயே சொன்னேன், தங்கப் பதக்கம் பெறுவது ஒன்று தான் படங்களின் திறமைக்கோ, சிறப்புக்கோ அளவுகோல் இல்லை என்று. மலைக்கள்ளன் படத்திற்கு பிராந்திய அளவில் பரிசு கிடைத்தது அன்றைக்கு என்று கருதுகிறேன். வேறு தகவல் இப்போதில்லை.

திரு. (திருச்சி) ஆர் சௌந்திரராஜன்: தலைவரவர்களே, மத்திய அரசில் தங்கப் பதக்கம் கொடுப்பது போல, தமிழக அரசின் சார்பில் குழுவை ஏற்படுத்தி சிறந்த படங்களுக்கு, சிறந்த நடிகர்களுக்கு, சிறந்த தயாரிப்பாளர்களுக்கு, சிறந்த பொறியியல் வல்லுநர்களுக்கு ஏதாவது பரிசு வழங்க ஆவன செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1967-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டு, பின்னால் நிறுத்தப்பட்டுவிட்ட பரிசு அளிக்கும் திட்டம் மாநில அரசின் சார்பில் மீண்டும் துவக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தின் முன்னால் அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, இதுவரையில் தமிழ்ப் படங்களுக்கு தங்கப் பதக்கம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். தங்கப் பதக்கம் படத்தின் பெயரில்தான் வந்திருக்கிறது. நமது அமைச்சரவர்கள் சிறப்பான தயாரிப்பாளர்

ஆவார்கள். அவருடைய முயற்சியில் தங்கப் பதக்கம் தமிழ்ப் படத்திற்குக் கிடைக்கத் தக்க வகையில் ஒரு படத்தைத் தயாரிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதைத்தான் முன்னால் சொன்னேன். எந்தமாதிரியான படத்திற்கு தங்கப் பதக்கம் தருவார்கள் என்று தெளிவாகச் சொன்னால், அந்த முயற்சிகளில் யாரும் ஈடுபட இயலும். ஆனால் அதற்கு வரைமுறையோ, முன்மாதிரியோ, வழிகாட்டி கொள்கைக் குறிப்புகளோ கிடையாது என்று முன்னால் தெரிவித்தேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்களால் தமிழக அரசின் சார்பாக சிறந்த படங்களுக்கு தமிழ்நாட்டுப் பரிசு அளிக்கப்பட்டு வந்தது, பின்னால் நிறுத்தப்பட்டு விட்டது என்றார்கள். எப்போது நிறுத்தப்பட்டது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எனக்குச் சரியாக நினைவில்லை. 1971 ஆம் ஆண்டோடு நிறுத்தப்பட்டு விட்டது என்று கருதுகிறேன். அதுபற்றிய விவரங்களை தகவல் தெரிந்து தான் சொல்ல முடியும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, தங்கப் பதக்கம் என்ற படம் வெளி வந்ததே, அந்தப் படத்திற்காவது தங்கப் பதக்கம் அளிக்க முன்வந்தார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அவர்கள் அந்தப் படத்திற்கு தங்கப் பதக்கம் என்று பெயரை வைத்து திருப்தி பட்டிருக்கிறார்களே, அதற்குப் பிறகு எதற்கு அதற்கு தங்கப் பதக்கம் ?

அண்ணா கலை அரங்கம், வேலூர்.

* 170 வினா—திரு. அ. க. அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள அண்ணா கலை அரங்கம் மீண்டும் எப்பொழுது திறக்கப்பட உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : புதுப்பிக்கும் பணிகள் முடியும்தறுவாயிலிருக்கின்றன. எல்லாப் பணிகளும் முடிந்தவுடன் விரைவில் திறக்கப்படும்.

ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்.

* 171 வினா—திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்
திரு. எஸ். கணேசன்
திரு. செஞ்சி என். இராமச்சந்திரன்
திரு. மு. அம்பிகாபதி
} மாண்புமிகு

கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகிய நான்கு வகை ஆசிரியர்களில் ஒவ்வொரு வகை ஆசிரியர்களிலும் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் ?

(ஆ) அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ் நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்பு அற்றவர்களாக செல்லுபடிப் பதிவேட்டில் பதிவு செய்திருந்த ஆசிரியர்கள் விவரம் 30—9—77 அன்றைய நிலவரப்படி செகண்டரி கிரேடு 24,348; பி.டி. அல்லது பி.எட் 8,880; தமிழாசிரியர் 4,045; உடற்பயிற்சி ஆசிரியர் 2,955 ஆகும்.

(ஆ) இனி வரும் ஆண்டுகளில் அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்கு கூடுதலாக ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசிரியர் பயிற்சிக்குச் சேரும் மாணவர் எண்ணிக்கையைத் தக்கவாறு கட்டுப்படுத்துவதன் மூலமும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையைப் படிப்படியாக அரசு தீர்க்க முயற்சி எடுக்கும்.

[முற்பகல் 9.20]

திரு. செ. வீ. சவுந்திரராஜன் : செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், 1971 இல் பாஸ் செய்தவர்கள் இன்னும் வேலையற்றிருக்கிறார்கள். நாலைந்து ஆண்டுகளாக மாநில அரசிலிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அனுப்பப்பட வேண்டிய அலாட்மென்ட் கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டு அதிகப்படியாக செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் அலாட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் இவர்களை 350 குழந்தைகள் உள்ள ஒவ்வொரு நடுநிலைப் பள்ளியிலும் ஒவ்வொரு வகையிலும் ஒரு ஆசிரியர் வீதம் நியமித்தால் இந்த வேலைவாய்ப்பில்லாத பிரச்சனை ஓரளவு நீங்கும். எனவே அதை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கூடுதல் பதவிகள் ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. எஸ். கணேசன் : வேலையில்லாதிருக்கிற புலவர் பெருமக்களை ஆலயங்களில் நியமித்து தேவாரம், திருவாசகம் போன்ற பக்தர்களுக்கு அந்தப் பாடங்களைக் கற்றுத் தருவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று கூறப்பட்டது. அது குறித்து இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை அத்துறை சம்பந்தமான அமைச்சர் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. என். இராமச்சந்திரன் : எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்புண்டா? அப்படிச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்க முடியுமே, அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி ஒரு செயற் குறிப்பு இப்போது அரசாங்கத்திடம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : பல ஆண்டுகளாக படித்து விட்டு வேலையற்றிருக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள் இவர்களுக்கு அரசாங்கத்தில் இருந்து மாதத்திற்கு

குறைந்தபட்ச அலவன்ஸ் அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இருபது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்து இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் ஆசிரியர்கள் பயிற்சி கட்டுப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதிலிருந்து ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் மூடப்படுமோ என்ற சந்தேகம் எழுகிறது, அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலையில்லாதவர்களுக்கு பணம் தருவது என்பது இன்றைய நிலையில் சாத்தியம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கூடுதல் பதவிகளை ஏற்படுத்த அரசு நிதிநிலைக்கேற்ப எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேருகிற மாணவர்களைக் கட்டுப்படுத்துவது என்பது இப்போது நிறையப் பேர்கள் படித்து பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தால் நமது தேவைக்கேற்ப அம்மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொள்கை கடந்த நாலைந்தாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : புலவர் படிப்பு படித்து விட்டு வேலையில்லாமல் அல்லலுறுகிற தமிழ் ஆசிரியர்களுக்கு இந்த அரசு உடனடியாக வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முதலிலேயே கேட்டார்கள். அதை ஆலயங்கள் பணியைச் சார்ந்தவர்கள் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன் : கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற போது ஆலயத் துறை, அறநிலையத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம், அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் கவனிப்பார்கள் என்று சொன்னார்கள். நல்லவேளையாக அந்தத் துறை இன்றையதினம் முதல் அமைச்சர் அவர்களிடம்தான் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்த ஒரு கருத்துதான், ஆலயங்களில் தமிழ் ஆசிரியர்களை நியமித்து அவர்களின் சமயம் வழிபாட்டிற்குப்

பயன்படுகிற தேவாரம் போன்ற நூல்களை மக்களிடையே பரப்பலாம் என்ற கருத்து. அதுபற்றி அமைச்சரவையில் கலந்து ஆலோசிக்கப்பட்டதா அல்லது அதுபற்றி தமிழ் ஆசிரியர்களிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டதா என்று அமைச்சர் அவர்கள் அறிந்தால் அறிவிப்பார்களா?

— —

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: 1965 ஆம் ஆண்டு தென் இந்திய ஆசிரியர்கள் யூனியன் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் பற்றி நடத்திய சர்வேபோல் இப்போது சர்வே நடத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க சிபார்சு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் பெரும்பாலான அளவில் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை நான் சொன்னேன்.

— —

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் நீண்ட நாளாக வேலையில்லாமல் அதிகமான ஆட்கள் இருக்கிறார்கள், இவர்களுடைய வயதும் ஏறிக்கொண்டே போகிறது. அதே நேரத்தில், குறிப்பிட்ட வயதைத் தாண்டியவர்களுக்கு நாம் வேலை கொடுக்க முடியாத நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு வயது தாண்டியிருந்தாலும் அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கு ஏற்றவாறு விதிகளைத் தளர்த்திக் கொடுக்கின்ற அளவில் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுடைய வயது வரம்பு இப்போது 30 என்றிருப்பதை 35 வயது என்று ஆக்கலாமா என்கின்ற குறிப்பு இப்போது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்புத் தேடி தரும் அலுவலகங்களில் நடைபெறுகின்ற சில முறைகேடுகளின் காரணமாக 1960-70 இல் பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்காமல்

வேலை கிடைக்கிறது. இந்த நிலைமையை மாற்ற சீனியாரிட்டி அடிப்படையில் வேலை கிடைக்கின்ற அளவில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேநேரத்தில் கல்விக்கூடங்கள் இல்லாத இடங்களில் புதிதாக கல்விக்கூடங்களை அமைத்து வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் தேடித்தரும் அலுவலகத்தில் முறைகேடுகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியிருக்குமானால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அப்படிப்பட்ட முறைகேடுகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்க துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: ஹையர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்காததால் அந்த வேலைகளுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களை ஏன் நியமிக்கக் கூடாது? 24 ஆயிரம் பேர், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் வேலை இல்லாதிருந்து வருவதாகத் தெரிகிறது, ஆகவே இந்த நிலைமையை மாற்ற ஹையர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குப் பதில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை அதில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஹையர் கிரேட் பயிற்சி பெற்றவர்களே 776 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கு தனியார் பள்ளிகளை திறந்து அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியத்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 40,000 பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக இவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் சொன்னார்கள். ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் தேறியவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை, அந்த நேரத்தில் சமீபத்தில் தேறியவர்களுக்கு வேலை கிடைத்து விடுகிறது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சிமன்ற பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி, அவைகளில் ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஒரு சீனியாரிட்டியை அமைத்து, மாவட்ட அளவிலோ அல்லது வட்ட அளவிலோ சீனியாரிட்டி ஏற்படுத்தி அதன் அடிப்படையில்தான் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற ஒரு கட்டாயமான உத்தரவை அரசு பிறப்பித்து, புதிதாக வருகின்றவர்களுக்கு வேலை உடனடியாக கொடுக்கப்படாமல் பழைய ஆட்களுக்கு வேலை கிடைப்பதற்கும் ஏற்ற வழியில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சீனியாரிட்டி அடிப்படையில் எடுக்க வேண்டும் என்று வருமானால், ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரமே அவர்களுக்குப் போய்ச் சேரும். தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமை அதற்கான அதிகார வாரியத்தின் நின்று தேர்ந்தெடுக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களாக இருந்து யார் ஓய்வு பெறுகின்றார்களோ அவர்களுடைய செல்வங்களுக்கு உதவி செய்கின்ற முறையில், ஓய்வு பெறுகின்றவர்கள் எந்தெந்த அலுவலகங்களில் வேலை செய்தார்களோ, அந்த அலுவலகங்களிலே அவர்களுடைய குழந்தைகளுக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? இரண்டாவது. சென்னை மாநகராட்சியில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பணி செய்ய வேண்டிய இடங்களில் பி. டி. ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது

அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அந்த பி. டி. ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய ஊதியத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஓய்வு பெற்றவர்களின் குழந்தைகளுக்கு அதே இடத்தில் வேலைவாய்ப்பு தருகின்ற எண்ணம் இப்போது அரசினிடத்தில் இல்லை. பி.டி. ஆசிரியர்களுக்கு அதற்கேற்ப சம்பளம் தரவேண்டும் என்பது நியாயம் தான் என்றாலும், அவர்கள் வேலை செய்கின்ற இடத்திற்குத் தருகின்ற சம்பளம்தான் தரப்படுமே தவிர அவர்கள் பெற்றிருக்கின்ற தகுதிக்கு அல்ல.

(முற்பகல் 9-30)

திரு. மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வகுப்பில் இப்போது 70 அல்லது 80 மாணவர்களை அனுமதிப்பதால், எல்லா மாணவர்களையும் ஆசிரியர்களால் கண்காணிக்க முடிவதில்லை. இதை மாற்றி 30 அல்லது 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் போட்டால், அதிகமான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும், அவர்களும் மாணவர்களை நன்கு கவனித்து மாணவர்களின் தரத்தை உயர்த்துவதற்கு முடியும். அதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா, அப்படிச் செய்ய முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த விகிதத்தைச் சொன்னதே அரசுதான். அதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. ஆனால், இன்றைக்குள்ள நிதி நிலைக்கு ஏற்ப, அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி இப்போது நிறுத்தப்பட்டுள்ளதாக உணருகிறேன். அந்த அளவிலே இருக்கின்ற ஹையர் கிரேடு ஆசிரியர்களை நியமிக்கின்ற நேரத்திலே பல்வேறு பள்ளிகளுக்கு செல்லுகின்றார்கள். ஆனால், குறிப்பிட்ட இடத்திற்கு ஹையர் கிரேடு ஆசிரியர்களை அழைக்கும்போது, அவர்கள் வருவதில்லை. எனவே இந்த இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தற்போது தாற்காலிகமாக அதிகமாக இருப்பதால்

அவர்களை அந்த ஹையர் கிரேடு இடங்களில் நிரந்தரமாக நியமிக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு பதவியில், செகண்டரி கிரேடு ஆசிரியர்களை அமர்த்துவது என்கின்ற அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு கொஞ்சம் அதிகரித்து, இந்த அடிப்படையில் நிறைவு செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறுபட்ட நிலையிலிருந்து பல்வேறு வகையான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று, வேலையில்லாமல் இருப்பதால், அது அரசுப் பள்ளியாக இருந்தாலும் சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும் சரி அவர்கள் 55 வயதிற்குமேல் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்ய இந்த அரசு முன்வருமா? அது மட்டுமல்லாமல், அப்படி ஓய்வு பெறுகின்ற இடங்களில் தாற்காலிகமாக பணியாற்றும் ஆசிரியர்களை அமர்த்தி, அவர்களை நிரந்தரமாக்க இந்த அரசு முயற்சிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்ற வயது 58 ஆகவும், இன்றுள்ள நிலையில் அவர்கள் ஓராண்டின் இடையில் ஓய்வு பெற நேரிடு மானால், அந்த ஆண்டின் இறுதிவரை நீடிக்கின்ற ஒரு நிலைமையும் இருக்கின்ற காரணத்தால், ஆசிரியர்கள் பதவியை விட்டு ஓய்வு பெறுவது குறைந்துகொண்டிருக்கிறது. ஆனால், இதை மாற்று வதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் இளங் கோவன் அவர்கள் சொல்வதுபோல் எடுக்க நேரிட்டால், ஆசிரியர்கள் தரப்பிலே இருந்து எதிர்ப்பு வரும் என்கின்ற காரணத்தால், இதை அரசு உணர்ந்து அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலும், தனியார் பள்ளிகளி லேயும் பணியாற்றுகின்ற பி.டி. ஆசிரியர்களுக்கு பி.டி. ஸ்கேல் கொடுக்கப்படுமா? அதோடு பல பி.டி. ஆசிரியர்கள்

இந்நிலையிலே இருப்பவர்களை, நடுநிலைப் பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க இந்த அரசு உத்தரவு பிறப்பிக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளிலே பி.டி. ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலை நடுநிலைப் பள்ளிகளில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால், பி.டி. படித்து பதவியில் இருப்பவர்களுக்கு அதற்கான சம்பளம் தரக்கூடிய நிலை இன்றைக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 100 ரூபாய் சம்பளத்தில் அப்ரென் டிசாக ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்றைக்கு ஒன்றியங்களிலே முதலிடம் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றிருக் கின்ற காரணத்தினால், அவர்களுக்கு முதலுரிமை கொடுத்து காலியாகும் இடங்களில் அவர்களை அமர்த்தி முழுச் சம்பளம் பெறவும், நிரந்தரமாக்குகின்ற யோசனையும் இந்த அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் முழுச் சம்பளம் பெறக்கூடிய தகுதி பெற்ற ஆசிரியர்களாகவே வெளிவருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுத்து, பிறகு அவர் களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கின்ற நிலை எழவில்லை.

*** 172. வினா—திரு. இரா. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடற் கல்வியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்கும் அடிப்படையில் எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் உடற்கல்வி ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால் எந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இதுவரை எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் தனியான உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அவற்றில் மட்டுமே உடற்பயிற்சி கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள சுமார் 5,700 உயர்தொடக்கப் பள்ளிகளில், சுமார் 500 பள்ளிகளில் அவ்வாறு கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இனி வருங்காலத்தில் பிற உயர் தொடக்கப் பள்ளிகளில் படிப்படியாக உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் பொழுது அப்பள்ளிகளிலும் உடற் பயிற்சிக் கல்வி படிப்படியாகக் கட்டாய பாடமாக ஆகும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: இப்போது உடல் பயிற்சி ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் நியமிக்கும்போது இரண்டு ஏக்கர் நிலமும், 400 பிள்ளைகளும் குறையாமல் இருக்க வேண்டுமென்ற விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த விதியைத் தளர்த்தி எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பதற்கு முன்னால் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டுத் திடல் இருக்க வேண்டுமென்பது அதைவிட மிக அவசியமாக இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஆனால் மற்ற நிலைகளைத் தளர்த்துவது பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. இராசமாணிக்கம்: விளையாடும் இடம் இருக்க வேண்டியது அவசியம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். விளையாடும் இடம் இல்லாத பள்ளிகளுக்கு கட்டாயமாக விளையாடும் இடத்தைப் பெற ஆவனச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. ரா. மார்க்கபந்து: உடல் பயிற்சி கல்வியைப் பெற்றவர்கள் 30 வயதடைந்துவிட்ட பிறகு வயது வரம்பை மீறியவர்கள் என்ற நிலையில் வேலை இல்லையென்று அரசு உத்தரவு இருக்கிறது. இப்போது ஏராளமான பேர் படித்துவிட்டு 30 வயதைக் கடக்

கின்ற நிலையில் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 30 வயது என்று இருப்பதைத் தளர்த்தி வேலை வாய்ப்புகள் தருவதற்கு அரசு ஆணைகள் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் முதலில் குறிப்பிட்டது போல் அப்படி ஒரு செயற்குறிப்பு ஆய்வில் இருக்கிறது.

திரு. போ. கோபாலன்: பல பெரும்பாலான பள்ளிகளில் பெண்களுக்கு உடற்பயிற்சி சொல்லிக் கொடுக்க ஆண் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அங்கெல்லாம் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப் படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பதில்களைத் தந்து கொண்டிருக்கிறேன். பெண்களாக தனியாக பெண் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பது பற்றி பள்ளிகளின் நிலைமைகளுக்குக்கேற்ப பரிசீலித்து முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும்.

திரு. துரை முத்துசாமி: பல்லாண்டுகளாக பல்லாயிரக் கணக்கான உடற்பயிற்சி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது சமீப காலமாக இந்தியா முழுவதும் இருந்து வேலைக்காக துபாய் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் அப்படிப் பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்கள் வெளிநாடு செல்ல மனுச் செய்துள்ளார்களா? அவர்களை அரசு அனுப்ப உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப் போகின்றவர்களைத் தடை செய்கிற எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை.

திரு. ஒ. ப. சோமசுந்தரம்: ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளுக்காக தனியாக உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. ஆரம்பப் பள்ளியில் இருந்தே குழந்தைகள் உடற் பயிற்சியைக் கற்றுக் கொண்டு வந்தால் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு நன்றாக இருக்கும். ஆகவே, ஆரம்பப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: [illegible] உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப் பட்ட பின்னால் இது எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. சௌந்தரராஜன்: பல பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் இருந்தும், மாணவர்கள் இருந்தும், உடற் பயிற்சி செய்ய இடம் இல்லாத காரணத்தால் உடற் பயிற்சிக்கான விளையாட்டுப் பொருள்கள் இல்லாத காரணத்தால் உடற் பயிற்சி, பள்ளிக்கூடங்களில் சரியானபடி நடைபெறுவதில்லை. அதை இந்த அரசு கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதை இந்த அரசு கவனிக்கும்.

*173. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள உடற்பயிற்சிக் கல்லூரிகளில் உடற் பயிற்சிக் கல்வியில் லோயர் கிரேடு சான்றிதழ் பயிற்சிப் படிப்பை நிறுத்தி வைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) லோயர் கிரேடு (உடற்பயிற்சி) சான்று பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அநேகர் வேலையின்றி இருப்பதாலும் உடற்பயிற்சி கல்வியில் போதனைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத் திலும் அப் பயிற்சி முறை ஆலோசனைக்குப்பிறகு 1977-78 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை நகராட்சி.

*174. வினா—திரு. துரை முருகன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டையில் 'சிப்காட்' அமைந்திருக்கும் கலைஞர் கருணாநிதி நகரை இராணிப்பேட்டை நகராட்சியோடு இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த இணைப்பு எப்போது முதல் அமுல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) இன்னும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திறந்த வெளிப் பல்கலைக்கழகத் திட்டம்.

*175. வினா—திரு. கரு. இராம. சுரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திறந்த வெளி பல்கலைக் கழகத் திட்டத்தை மக்களி டையே பரப்புமாறு நகரசபை கமிஷனர்களையும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களையும் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் என்றால் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) மதுரைப் பல்கலைக் கழகத்தால் 1977 ஆம் ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்ட "திறந்த வெளி பல்கலைக் கழகக் கல்வித் திட்டத்தை" பற்றிய செய்திக்கு நல்ல விளம்பரம் கொடுக்குமாறு, மதுரை பல்கலைக் கழகத்தினர் கேட்டுக் கொண் டதற்கிணங்க, அத்தகைய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

ஊராட்சி மன்றத்தலைவர்கள் கூட்டங்கள்.

***176. வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்ட பிறகு இரு மாதங்களுக்கு ஒரு முறை ஊராட்சி மன்றத் தலைவர்களின் கூட்டம் கூட்டுவதற்கு தனி அதிகாரிகளுக்கு உத்திரவு வழங்கப்பட்டிருந்தும் இதுவரை கூட்டம் நடத்தப்படாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்ட பிறகு இரு மாதங்களுக்கு ஒரு முறை ஊராட்சி மன்றத் தலைவர்களின் கூட்டம் கூட்டுவதற்கு தனி அதிகாரிகளுக்கு உத்திரவு எதுவும் வழங்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவரும், துணைப் பெருந்தலைவரும் சட்டமன்ற உறுப்பினரும் ஆகிய உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் தனி அதிகாரி அவர்களால் கூட்டப்படவேண்டுமென்று சமீபத்திலே வானொலி மூலமாக அறிவிக்கப்பட்டது, செய்தித்தாளிலும் தெரிவிக்கப்பட்டது. அப்படியிருந்தும் இன்னும் அந்தக் கூட்டம் கூட்டப்பட வில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அப்படி ஆணை பிறப்பிக்கப்பட வில்லை. ஒரு ஆலோசனை தான் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரால் தெரிவிக்கப்பட்டது. இப்போது ஊராட்சி ஒன்றியங்களிலே மக்கள் குழு அமைப்பதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திருவலம் அருகே புதிய பாலம்.

***177. வினா—திரு. துரைமுருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருவலம் அருகில் உள்ள பழுதுபட்டுள்ள இருப்புப் பாலத்திற்கு அருகில் புதிய பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வட ஆற்காடு மாவட்டத்தில் திருவலம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் கி.மீ. 122-ல் பொன்னியாற்றின் குறுக்கே தற்போது உள்ள பாலத்திற்கு பதிலாக ஒரு புதிய பாலம் கட்டுவதற்கான ஒரு திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்ததும் விரிவான ஆய்வு வேலையும மற்றும் தொடர்ந்து வேலை மேற்கொள்ளப்படும்.

பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம்.

***178. வினா—திரு. கே. பண்ணை சேதுராம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை லஸ்ஸுக்கு அருகில் ராமகிருஷ்ண மடச் சாலையில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே புதுப் பாலம் அமைக்கும் செயற்குறிப்புகள் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ரூ. 12.62 இலட்சம் மதிப்பீடு கொண்டது. இப் பணியை மேற்கொள்வதற்கான மறு ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைப் பொறியாளரால் முடிக்கப்பட இருக்கின்றன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, இது ஏற்கனவே இருந்த பல காண்ட்ராக்டர்களுக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டுள்ளது. இனிமேல் சர்க்காரின் புதிய திட்டப்படி காண்ட்ராக்ட் இல்லாமல் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 19—12—1975 அன்று 19.62 இலட்ச ரூபாய்க்கு நேஷனல் கம்பெனிக்கு கான்ட்ராக்ட் விடப்பட்டது. ஆனல் அந்தக் கம்பெனி 20.17 சதவிகிதம் அதிகமாக ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டுமென்று கேட்ட காரணத்தினலே அந்த டெண்டர் நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 6—10—1976 அன்று 42.48 சதவீதம் அதிகம் ஆக ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டதால் அரசு அதையும் நிராகரித்துவிட்டது. அதற்குப் பிறகு மறு ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்படும். அதன் பிறகுதான் முடிவு எடுக்கப்படும். அதற்குள் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் துவக்கப்படுமானல் மாண்புமிகு உறுப்பினர் ஆலோசனைப்படி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இந்தப் பாலம் இருக்கிறது. முள்ளிக்குப்பம், திருவான்மியூர் இணைப்புப் பாலம் பாழடைந்து 2 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அதைக்கட்டுவதற்கும், திருவள்ளுவர் சிலை சாலை முண்டகக்கன்னியம்மன் இணைப்பு பாலத்தையும் புதிதாக கட்டுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இராமகிருஷ்ண மடத்தின் அருகில் உள்ள பாலத்தைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றிய விவரங்களைக் கொடுக்கலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டுவதற்கு டெண்டர்கள் கேட்கப்பட்டபோது 20 சதவீதம் அதிகமாகக் கேட்டதால் கொடுக்கவில்லை என்றும் பிறகு ரிடெண்டர் கேட்டபோது அதைவிட அதிகமாகக் கேட்டதால் கொடுக்கவில்லை என்று சொன்னர்கள். ஆனல் இதைப் போல் வேறு இலாகாவில் கொடுத்திருக்கிறர்களே, இப்படி இலாகாவிற்கு இலாகா வேறுவிதமாக செய்யப்படுவதால் இந்த கொள்கையை மாற்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: எந்தத் துறையில் அப்படி அதிகமாகக் கொடுக்கப்பட்டது என்ற தகவலை அவர்கள் தந்தால் அதுபற்றி பதில் சொல்லலாம்.

குடியாத்தம் கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் முறையீடுகள்.

*179. **வின—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 19—7—1977 தேதி குடியாத்தம் கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அவர்களின் 5 அம்ச குறைகளைப் பற்றி மனு கொடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) குடியாத்தத்தில் இயங்கிவரும் 7 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டாக கடந்த ஜூலை மாதம்,

(1) நூல் விலை சாயப் பொருட்கள் விலை குறைப்பது பற்றி;

(2) நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உற்பத்தியாகும் துணிகளை அரசாங்கம் கொள்முதல் செய்வது பற்றி;

(3) அரசாங்கத்திடமிருந்து வரவேண்டிய தள்ளுபடி மானியத் தொகை வழங்குதல்பற்றி;

(4) அரசாங்க தள்ளுபடி தொடர்ந்து கூட்டுறவு சங்கங்களுக்குக் கிடைக்க ஆவன செய்வது பற்றி;

(5) அரசாங்க மானியத்தில் நெசவு கருவிகளான அச்சு விழுது போன்ற தறி சாமான்கள் வழங்கக் கோருதல் பற்றி ஆகிய 5 அம்சக் குறைகளைப்பற்றி மனு கொடுக்கப்பட்டது.

இக் கோரிக்கைகள் ஐந்தும் பொதுவாக இம் மாநிலத்திலுள்ள எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் நிலவியிருக்கும் பிரச்சனைகள் ஆகும். இருப்பினும் அவர்களின் கோரிக்கைகள் மீது உடனே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு சிலவற்றில் தீர்வும் காணப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஐந்து கோரிக்கைகளைக் கொண்டு அவர்கள் கொடுத்ததன் அடிப்படையிலே ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் இப்பொழுதுள்ள நிலைமை. அந்த சாய விலையும் இறங்கவில்லை. நூல் விலையையும் குறைத்துக் கொடுக்கின்ற அளவில் நிலைமைகள் இல்லை. அவர்கள் உற்பத்தி செய்யும் துணி அவ்வளவும் கொள்முதல் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அது இருபது சதவிகிதம்தான் அப்படிக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நிலைமைகள் நீடிக்குமேயானால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களிடையே மேலும் மோசமான நிலைமைகள் இருக்கும் என்ற அடிப்படையில் இந்த அரசு நூல் விலையைக் குறைத்துக் கொடுக்கக் கூடிய அளவில் இல்லை என்றாலும், சாய விலையைக் குறைத்துக் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை என்றாலும், மத்திய சர்க்காரை வலியுறுத்தி குறைந்த விலைக்குக் கொடுக்கக் கூடிய அளவில் ஒரு நிலைமையை உண்டாக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த ஐந்து அம்சக் கோரிக்கையின்மீது எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இந்தக் கோரிக்கை ஜூலை மாதம் கொடுக்கப் பட்டது. அதற்குப்பிறகு இரண்டு முறை ரிபேட் அறிவித்து கிட்டதட்ட அன்றைக்கு உற்பத்தியாக்கப்பட்ட துணிகளை யெல்லாம் கொள்முதல் செய்திருக்கிறோம். நவம்பர் மாதம் வரையில், 19—11—1977 ஆம் தேதி வரையில் அங்கே 7 கூட்டுறவுச் சங்கங்களில் 4 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள்தான் தேங்கியிருக்கிறது. அதற்குப் பிறகு ஒருவேளை டிசம்பர் மாதத்தில் உற்பத்தியாகும் துணிகளெல்லாம் தேக்கத்தில் இருந்திருக்கலாம். அவைகள் பொங்கல் காலத்தில் தள்ளுபடி செய்வதால் அவைகளும் கொள்முதல் செய்யப்படும்.

நூல் விலை, சாய விலையைப்பற்றி அவர்கள் கருத்து தெரிவித் திருக்கிறார்கள். மத்திய அரசோடு கலந்து எடுக்க வேண்டிய முடிவுகள் எது எதுவோ அதை மாநில அரசு நிச்சயமாக எடுத்து வருகிறது. நூல் விலையை ஸ்திரப்படுத்துவதற்காக, ஏற்கனவே 15 பேர் கொண்ட கமிட்டியை நிறுவி, இன்றைக்கு நூல் விலை உயர்ந்துபோய் விடாமலும், சரிந்துபோய் உற்பத்தி யாளர்களைப் பாதிக்காமலும் ஓரளவுக்கு ஸ்திரப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நூல் விலையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு போதிய கவனம் செலுத்தி வருகிறது என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சாயப் பொருட்களைப் பொறுத்தவரையில், மூலப் பொருட் களில் 90 சதவிகிதம் இந்தியாவிலே கிடைத்தாலும் சில பெரிய முதலாளிகளின் ஆதிக்கத்திலே அந்த உற்பத்தி இருப்பதால் செயற்கைப் பற்றாக்குறை போன்றவை நிலவி வருகிறது. அதைப்போக்கும் வகையில் தமிழக அரசு வானவில் டையிங் கெமிகல்ஸ் என்று ஆறு கோடி ரூபாய்க்கு மேல் உள்ள ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதைச் செயல் படுத்துகின்ற நிலையிலே நாம் முன்னேற்றங்கள் கண்டிருக் கிறோம். அது முடியும்பொழுது தமிழகத்திலே சாயப் பொருட்கள் கட்டுப்படியான விலைக்குக் கிடைக்கும் என்பதை உறுப்பினரின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய துயர்களைத் துடைக்கும் வகையிலே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட அமைச்சர்களும், உறுப்பினர்களும் கைத்தறி ஆடைகளை அணியும் உத்தேசத்திற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்ட நேரத்தில் செய்வார்கள் என்று அமைச்சரவர்கள் உறுதி அளித்திருக்கின்றார்கள். எனவே, அது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, அப்பொழுதுகூட, சட்டமன்ற உறுப்பினர் களுக்கெல்லாம் எதாவது கைத்தறித் துணி வழங்கப்படுமா என்று கேட்டார்கள். நான் ஒரு நல்ல திட்டத்தை அப்பொழுது அறிவித்தேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்

இலவசமாகக் கொடுக்க முடியாவிட்டாலும், அவரவர்களின் ஒரு மாத ஊதியத்தை வசூலித்துக்கொண்டு நல்ல விலையுயர்ந்த துணிகளைக் கொடுக்க முடியும் என்று சொன்னேன். அந்த முறையில் உறுப்பினர்கள் முன்வந்தால் பொங்கல் திருநாளை முன்னிட்டு வகைவகையான துணிகள் எல்லா விற்பனை நிலையங்களிலும் இருக்கிறது, நானே இருந்து வாங்கிக்கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அருப்புக்கோட்டை, பரமக்குடி, சின்னாளப்பட்டி, மதுரை போன்ற கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களிடம் அதிகமான ஸ்டாக் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதையாவது தற்காலிகமாகக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு, எங்கெங்கே இப்படிப்பட்ட தேக்கங்கள் அதிகமாக இருக்கிறதோ அதைப்போக்கும் வகையில், பொங்கல் திருநாளுக்கான கொள்முதல் வேலை தீவிரமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அந்தப் பகுதியையும் கவனத்திற்கொண்டு அந்தத் தேக்கத்தைப் போக்கும் வகையில் பெருமளவில் கொள்முதல் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சொஸைட்டியிலே அங்கத்தினர்களாக போடப்படக் கூடிய இவர்களுக்கு, இங்கிருந்து, கவர்ன்மெண்ட் கண்ட்ரோலில் இருக்கக்கூடிய சொஸைட்டியிலே சப்ளை பண்ணக்கூடிய நூலினுடைய விலை, வெளி மார்க்கெட் விலையைவிடக் கூடுதலாக இருக்கிறது என்பது ஒரு உண்மை, எல்லா வீவர்ஸும் சொல்கிறார்கள். சொஸைட்டி வைத்ததனாலே, வெளி மார்க்கெட் விலையைவிடக் குறைந்த விலையில் விற்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால், ஜஸ்ட் ஆப்போசிட்டாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? அதை நிவர்த்திக்க ஏதாவது செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே. வெளி மார்க்கெட்டிலே இருக்கிற நூல் விலைக்கும், கூட்டுறவு நூற்பாலைகளிலே விற்கின்ற நூல் விலைக்கும் இருக்கிற விலை வித்தியாசத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். சில நேரங்களிலே அது உண்மையாக இருக்கிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. காரணம், நாம் ஒவ்வொரு வாரமும் விலையை நிர்ணயம் செய்கிறோம். ஆனால், மார்க்கெட்டில் காலையிலே ஒரு விலை, மாலையிலே ஒரு விலை, மறுநாள் ஒரு விலை என்று விற்கிறது. நாம் ஒரு வாரத்திற்கு ஓவர்ஹெட் சார்ஜஸ் உட்பட என்ன செலவாகி இருக்கிறதோ, அதை வைத்து விலையை நிர்ணயிக்கிறோம். அப்படி விற்கின்றபொழுது வெளி மார்க்கெட் விலையை விடக் குறைவாக விற்பனை செய்கிறோம். சில நேரங்களிலே, நம்முடைய விலைக் கொஞ்சம் கூடுதலாக வந்துவிடுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு நாம் முயற்சி எடுத்து வருகிறோம். அதற்குக் காரணம், ஒரு வகையிலே 40 கவுண்ட் உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னால், அது முழுமையாக, நூற்றுக்கு நூறு 40 ஆம் நெம்பர் பருத்தியை வைத்துக்கொண்டே உற்பத்தி செய்கிறோம். ஆனால், தனியார் 40 ஆம் நெம்பர் நூலைத் தயாரிக்க 40 ஆம் நெம்பர் பருத்தி 50 சதவிகிதமும் 60 ஆம் நெம்பர் 10 சதவிகிதமும், 30 ஆம் நெம்பர் கவுண்டை மீதத்திற்குச் சேர்த்து, கலந்து 40 ஆம் நெம்பர் என்று தயாரித்து அளிக்க முடிகிறது. ஆகவே, அவர்கள் மாறுகின்ற விலையிலே அப்படி விற்க முடியும்.

ஆனால், கூட்டுறவுத் துறையிலே நடத்தப்படுவது அரசாங்கக் கண்காணிப்பிலே நடைபெறுவதால், 40 ஆம் நெம்பர் என்றால், 40 கவுண்ட் பருத்திதான் உபயோகிக்கப்படுகிறது; 100 ஆம் நெம்பர் என்றால் 100 கவுண்ட் பருத்திதான் உபயோகிக்கப் படுகிறது. இப்படி நாம் சில வரைமுறைகளை வைத்துக்கொண்டு செய்கிறோம். எனவே, விலையிலே சில வேறுபாடுகள் இருந்தாலும் கூட, பொதுப்படையாக இலாப நோக்கில்லாமல் நாம் செய்து வருகிறோம். ஆகவே, நாம் 90 சதவிகிதம் வெளி மார்க்கெட்டை விடக் குறைந்த விலைக்குத்தான் விற்கிறோம். ஆனால், சில சமயங்களிலே வேறுபாடு வந்துவிடுகிறது. அதைத் தவிர்க்க முயற்சி செய்கிறோம்.

[1978 சனவரி

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, அவசர நிலை காலத்தின் போது, 2½ வருடம் வேலை செய்தவர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் வேலையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களா? பொங்கலுக்குக் கைத்தறிக்கு எத்தனை சதவீதம் ரிபேட் தருவார்கள் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே அவசர நிலை காலத்தின்போது வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தனியாகச் சொன்னால் அது உண்மையாக இருக்குமானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ரிபேட் இப்பொழுதும் இருந்து வருகிறது. நாங்கள் ரிபேட்டை எடுத்துவிடுகிறோம் என்ற தவறான எண்ணத்திலே உறுப்பினர்கள் இருந்தால், ஒன்றைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். இப்பொழுது, ஒவ்வொரு வகை துணிக்கும் ஒவ்வொரு வகையான ரிபேட் வழங்கப்படுகிறது. முன்னாலே, எல்லா வகையான துணிகளுக்கும் ஒரே வகையான ரிபேட் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த அரசு வந்தபிறகு, எந்த நேரத்திலும் மக்கள் வாங்குகிற துணிகளுக்கு ரிபேட் தேவையில்லையென்று முடிவெடுத்திருக்கிறது.

உதாரணமாக, பட்டுப் புடைவைகள், வருடத்தின் எல்லா காலங்களிலும், முகூர்த்த நாட்களிலும், மற்ற சிறு சிறு பண்டிகைக் காலங்களிலும் வாங்கப்படுகிறது. ஆகவே, அவற்றிற்கு ரிபேட் தேவையில்லை.

அதேபோல், நாகர்கோவிலிலேயுள்ள வடசேரியில் தயாராகும் வேஷ்டி எப்பொழுதும் வாங்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் அதற்குத் தேவையிருக்கிறது. இங்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதும், எல்லாக் காலத்திலும் அதற்குத் தேவையிருக்கிறது. அவைகளுக்கு ரிபேட் தேவையில்லை, அல்லது அந்த ரிபேட்டைக் குறைத்துக்கொண்டு, விற்பனை ஆகாமல் தேங்கியிருக்கின்ற துணி களுக்கு அதிக ரிபேட் கொடுத்து, அந்த வகையில், ரிபேட்டை ரேஷனலைஸ் செய்து வருகிறோம். அந்த அடிப்படையிலே, 5 சதவீதம், 10 சதவீதம், 20 சதவீதம் என்று பல்வேறு

1978 சனவரி 9]

வகையாக, பருத்திக்கு அந்த ரிபேட்டைக் கொடுத்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், முன்னால், கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய ஆர். வெங்கட்ட ராமன் இதே மன்றத்திலே கூறினார்கள், இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை வைக்க வேண்டுமென்பதில் அரசினுடைய நோக்கமே, அந்த மில்களுடைய அடக்க விலைக்கு அந்த நூலை கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கத்தான், என்று. அந்த அடிப்படையிலே, கூட்டுறவு மில்களிலே உற்பத்தி ஆகக்கூடிய நூலை அடக்க விலைக்காவது விற்க அரசு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். நாம் லாபத்திற்கு அதை விற்கவில்லை. அதிலே இருந்த அடக்கவிலைக்குத்தான் நாம் விற்பனை செய்கிறோம். சில நேரங்களில் அடக்க விலை, கொள் முதல் விலையைவிட குறைத்துக்கூட போகிறது. பருத்தி மார்க்கெட்டில் ஸ்திரத்தன்மை இருக்கிற காரணத்தால், கூடுமானவரையில், அரசு அடக்க விலைக்கு, நியாயமான விலைக்கு கொடுத்துக்கொண்டு வருகிறது. அதைத் தொடர்ந்து செயல் படுத்தும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர்—கைத்தொழில் வாரியத்தின் பயிற்சித் திட்டம்.

*180. வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாடு அரசு கதர்—கைத்தொழில் வாரியத்தின் சார்பில் 1974 நவம்பர் முதல் 1975 மே முடிய எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) அதற்காக ஏற்பட்ட செலவு எவ்வளவு?

(இ) அவ்வளவு பேர்களுக்கும் வேலை கொடுத்தாகிவிட்டதா?

(ஈ) இல்லை என்றால் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) 49 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) இப்பயிற்சிக்கு ரூபாய் 55,868.87 செலவிடப்பட்டது.

(இ) இல்லை.

(ஈ) பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி பெற்ற நபர்கள் அவரவர்கள் ஊருக்குச் சென்று தொழில் நடத்தி வருகிறார்கள். அவர்களில் சிலர் தனியார் நடத்தும் மட்பாண்டத் தொழிற் சாலைகளிலும், பீங்கான் தொழிற்சாலைகளிலும் தானாகவே வேலை தேடி அமர்ந்துள்ளனர். வாரியம் பயிற்சி முடிந்தபின் வேலை தருவதாக உத்தரவாதம் அளிக்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பயிற்சி பெற்று எந்த வேலையும் இல்லாமல், எந்தத் தொழிலிலேயும் ஈடுபடாமல் வேலை இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலைமையிலே இப்போது வேலை கோரிக் கேட்டிருக்கிறார்கள், என்று சொன்னால் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை ஏற்கனவே அரசு தயாரித்து, காதி வாரியத்தினுடைய கூட்டங்களிலேயும், காதி ஆணைக் குழுவினிடமும் அதிகாரம் பெற்று, ஆணை பெற்று, தமிழக அரசிடமும் ஆணைப் பெற்று செயல்படுத்த வேண்டு மென்று இருந்த அந்தத் திட்டம் இடையிலே கைவிடப்பட்டது. இப்போது இப்படிப்பட்ட கோரிக்கை திரும்ப வந்ததினாலே, இந்தத் திட்டத்தை மீண்டும் காதி வாரியத்தினுடைய கூட்டங்களிலே வைத்து, காதி ஆணைக் குழுவிடம் ஒப்புதல் பெற்று, தமிழக அரசின் ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். புதிதாகத் தொழில் துவங்குகிற போது, இந்தப் பயிற்சியாளர்களைக் கவனத்தில்கொண்டு, அவர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கா. கு. தண்டபாணி மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமக் கைத்தொழில் வாரியத்தில் தனியார் களுக்குப் பயிற்சி அளிப்பதைப்போல, அந்த வாரியத்தில் பணி

புரிகிறவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா ? அவர்களுக்கு என்னென்ன வகையான பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்காக செலவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பில்லை என்றாலும், பதில் கையிலே இருக்கிற காரணத்தால் இதற்குக்கூட பதில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, வேதியியல் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம், பஞ்சாலை நிலையம், உணவகக் கழகம் போன்ற கழகங்களில் 47 பேர்களுக்கு வாரியத்தில் பணியாற்றுகிறவர் களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. மொத்தமாக சுமார் 10,000 ரூபாய் செலவாகி இருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி காதி போர்டுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்களில் பல பேர்கள் இன்றைக்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற வகையில் இன்னும் பல்வேறு இடங்களில் கதர் துணிகளை விற்பதற்கும் கைத்தறித் துணிகளை விற்பதற்கும் விற்பனை நிலையங்களைத் துவக்கு வதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். அதை ஒட்டித்தான் திரு. இராதா அவர்களும் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, காதி ஆணைக் குழுவிடம் ஆணைப்பெற்று, தமிழக அரசிடம் ஒப்புதல் பெறுவதற்கான குறிப்பு இருந்தது. அது கைவிடப்பட்டது. மீண்டும் அது மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது. காதி ஆணைக் குழுவின் அனுமதிபெற்று, தமிழக அரசின் அனுமதி பெற்று அந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருடைய பொருளாதாரக் கொள்கையில், இந்த காட்டேஜ் இண்டஸ்டிரீசை அதிகம் வளர்க்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது சம்மந்தமாக இனிமேல் செய்ய வேண்டிய வேலைகளைத் துரிதப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று, மத்திய சர்க்காரிடம் இருந்து ஏதாவது தாக்கீது வந்ததா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, இதற்கு முன் 200-க்கு மேற்பட்டவை சிறுதொழில்கள் என்று வைக்கப்பட்டிருந்தது. இப்போது 500-க்கும் மேற்பட்டவை சிறு தொழில் என்று மத்திய அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது. கிட்டத்திட்ட 500-518 சிறு தொழில்கள் இன்று மத்திய அரசால், தன்னுடைய தொழிற்கொள்கை திட்டத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இது குறித்து அங்கேயுள்ள அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு தொடர்பு கொண்டுள்ளோம். எந்தெந்த வகையான சிறுதொழில் என்பதுபற்றி குறிப்பு இன்னும் வரவில்லை. அது வந்ததற்குப்பிறகு நான் அவைகளைத் தருகிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

பால்பண்ணை குறித்த பயிற்சி

வினா 71.—திரு. எஸ். ஜே. இரமசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1975, 1976-ம் வருடங்களில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினரால் படித்துப் பட்டம் பெற்ற, பட்டப்படிப்பில் தவறிய மாணவர்களுக்கு பால் பெருக்கும் முறைகளில் பயிற்சி வகுப்புகள் எவையேனும் நடத்தப்பட்டதா?

(ஆ) அதனால் அந்நிறுவனத்திற்கேற்பட்ட செலவுத் தொகை என்ன?

(இ) பயிற்சி பெற்றவர்கள், எத்தனை பேர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கென எவ்வளவு பணம், எந்தெந்த வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டது?

(ஈ) அதில் திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு.

(உ) அதனால் பால் உற்பத்தி எந்த அளவுக்கு பெருகியுள்ளது?

விடை—(அ) 1973-74-ம் ஆண்டில் ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ், 69 பட்டதாரிகளுக்கு பால்பண்ணை சம்மந்தமான 3 மாதம் பயிற்சி மாதவரம் பால் பண்ணையில் நடத்தப்பட்டது.

1974-75 ஆம் ஆண்டில், 'வேலை வாய்ப்பு அபிவிருத்தி திட்டத்தின்' கீழ், 50 பட்டதாரிகளுக்கும், 41 பட்டதாரியல்லாதவர்களுக்கும் பால் பண்ணைகள் சம்மந்தமான பயிற்சி, இரண்டு மாதங்களுக்கு அளிக்கப்பட்டன.

(ஆ) அதனால் இந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ. 0.97 லட்சம்.

(இ) பயிற்சி பெற்றவர்களில் 58 பட்டதாரிகளும், 5 பட்டதாரி அல்லாதவர்களும் பால்பண்ணை அமைத்துள்ளனர். ஒரு பட்டதாரி தன் சொந்த மூலதனத்துடன் கறவை மாடுகள் வாங்கி பால்பண்ணை அமைத்துள்ளார்.

பயிற்சி பெற்று பால் பண்ணை அமைத்துள்ளவர்கள் மொத்தம் ரூ. 34.62 லட்சம், கீழ்காணும் வங்கிகளிலிருந்து கடனைப் பெற்றுள்ளனர் :—

1. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா
2. இந்தியன் பாங்க்
3. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்
4. கனரா பாங்க்

35 பட்டதாரிகளும், 4 பட்டதாரி அல்லாதவர்களும் சொந்த நிலத்திலும், 24 பட்டதாரிகளும், 1 பட்டதாரி அல்லாதவரும், மாதவரம பால் பண்ணையிலும் பண்ணை அமைத்துள்ளனர்.

(ஈ) திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 3,91,671.37.

(உ) இத்திட்டத்தின் மூலம் தற்போது சுமார் 1,640 லிட்டர் பால் தினமும் உற்பத்தி செய்யப்படுகிறது.

[1978 சனவரி 9

கலப்புத் திருமணங்கள்.

வினா 72.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு அரிஜன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வருபவர்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன ?

விடை—தற்போது கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு கீழ்காணும் சலுகைகளும் பரிசுகளும் அளிக்கப்படுகிறது :—

1. $1\frac{1}{2}$ சவரன் (14 காரட்) மதிப்புள்ள தங்கப்பதக்கம், பாராட்டுச் சான்றிதழ்.

2. 200 ரூபாய் ரொக்கப்பரிசு.

3. சென்னை நகர் தவிர பிற மாவட்டங்களில் அரிசனங்களுக்கென்று வீட்டு மனைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்று சென்ட் பரப்புள்ள வீட்டுமனை ஒப்படை செய்தல்.

4. சென்னை நகரில் மாதம் ரூபாய் 250-க்கு குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் ஒவ்வோராண்டும் 10 குடியிருப்புகளை தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித்தரும். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தாழ்த்தப்பட்டவர்க்குள்ள 10 சதவிகிதம் ஒதுக்கீட்டில் வீட்டுமனைகள்/வீடுகள் கலப்பு மணத்தம்பதியர்களுக்கும் ஒதுக்கித்தரும். இதற்காக தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கும், தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கும் கொடுக்கவேண்டிய தொகையில் ரூபாய் 1,200-க்கு மேற்படாமல் அரசு மான்யமாக வழங்கும்.

வினா 73.—திரு. மா. மணிமாறன்,
திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு
திரு. எம். அண்ணாமலை

மாண்புமிகு அரிசஜன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978 சனவரி 9]

கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் வேலை வாய்ப்பிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

விடை—இல்லை.

ராஜன் வாய்க்காலின் குறுக்கே பாலம்.

வினா 74.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் முடிகண்டநல்லூர் பஞ்சாயத்துப் பகுதியில் ராஜன் வாய்க்காலுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—ஆம்.

பாட நூல்கள்.

75. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் பாட நூல்களில் பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் இடம் பெற அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—ஆம். பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது வாழ்க்கை வரலாறு பாட நூல்களில் இடம் பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

76. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—ஆம்.

[1978 சனவரி 9

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி.

77. **வினா—திரு. அ. செல்வராஜன் :**
திரு. எம். சுப்பிரமணியம்:
திரு. துரைமுத்துசாமி: } மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் உத்தேசம் இல்லை.

காந்தி நினைவு உபகாரச் சம்பளம்.

78. **வினா—திரு. மா. மணிமாறன்:**
திரு. என். கிட்டப்பா } மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவ—மாணவியர்களுக்காக அரசு அளித்து வந்த காந்தி நினைவு உபகாரச் சம்பளம் தொடர்ந்து அளிக்கப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒரு மாணவனும், ஒரு மாணவியும் ஆண்டு தோறும் பயன் பெறுகின்றனர். 1970 ஆம் ஆண்டு முதல் இது வரையில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 650 ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் இணைப்புச் சாலைகள்.

79. வினா—**திரு. கே. உச்சி**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் இணைப்பு சாலைகள் போட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

1978 சனவரி 9]

விடை— தற்சமயம் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் இணைக்க 'இணைப்புச் சாலை' அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

உரம், பூச்சி மருந்துகள் விலை.

80. வினா—**திரு. கே. உச்சி**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உரத்திற்கான விலையை குறைக்கவும், பூச்சிக் கொல்லி மருந்துகள் பாதி விலையில் கிடைக்கவும் வகை செய்ய உத்தேசித்துள்ளதா ?

விடை—இல்லை.

தூதூர் மட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

81. வினா—**திரு. க. அரங்கசாமி**: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தொகுதியிலுள்ள பேலூர் கிராமம் தூதூர் மட்டத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நடப்பாண்டில் போதுமான கட்டிட வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இதுவரை கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

உலிக்கல் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

82. வினா—**திரு. க. அரங்கசாமி**: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதியில் உள்ள உலிக்கல் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—இல்லை.

[1978 சனவரி 9

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி.

77. **வினா—திரு. அ. செல்வராஜன் :**
திரு. எம். சுப்பிரமணியம்:
திரு. துரைமுத்துசாமி:
} மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் உத்தேசம் இல்லை.

காந்தி நினைவு உபகாரச் சம்பளம்.

78. **வினா—திரு. மா. மணிமாறன்:**
திரு. என். கிட்டப்பா
} மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவ—மாணவியர்களுக்காக அரசு அளித்து வந்த காந்தி நினைவு உபகாரச் சம்பளம் தொடர்ந்து அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒரு மாணவனும், ஒரு மாணவியும் ஆண்டு தோறும் பயன் பெறுகின்றனர். 1970 ஆம் ஆண்டு முதல் இது வரையில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 650 ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் இணைப்புச் சாலைகள்.

79. வினா—**திரு. கே. உச்சி**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் இணைப்பு சாலைகள் போட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

1978 சனவரி 9]

விடை— தற்சமயம் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் இணைக்க 'இணைப்புச் சாலை' அமைக்கும் திட்டம் எதும் இல்லை.

உரம், பூச்சி மருந்துகள் விலை.

80. வினா—**திரு. கே. உச்சி**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உரத்திற்கான விலையை குறைக்கவும், பூச்சிக் கொல்லி மருந்துகள் பாதி விலையில் கிடைக்கவும் வகை செய்ய உத்தேசித்துள்ளதா ?

விடை—இல்லை.

தூதூர் மட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

81. வினா—**திரு. க. அரங்கசாமி**: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தொகுதியிலுள்ள மேலூர் கிராமம் தூதூர் மட்டத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நடப்பாண்டில் போதுமான கட்டிட வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இதுவரை கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

உலிக்கல் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

82. வினா—**திரு. க. அரங்கசாமி**: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதியில் உள்ள உலிக்கல் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—இல்லை.

[1978 சனவரி 9

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி.

77. வினா—திரு. அ. செல்வராஜன் :
திரு. எம். சுப்பிரமணியம்:
திரு. துரைமுத்துசாமி:
} மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—சென்னை நகரில் சைக்கிளில் இருவர் செல்ல அனுமதிக்கும் உத்தேசம் இல்லை.

காந்தி நினைவு உபகாரச் சம்பளம்.

78. வினா—திரு. மா. மணிமாறன்:
திரு. என். கிட்டப்பா
} மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவ—மாணவியர்களுக்காக அரசு அளித்து வந்த காந்தி நினைவு உபகாரச் சம்பளம் தொடர்ந்து அளிக்கப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒரு மாணவனும், ஒரு மாணவியும் ஆண்டு தோறும் பயன் பெறுகின்றனர். 1970 ஆம் ஆண்டு முதல் இது வரையில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 650 ஆகும்.

நீலகிரி மாவட்டத்தில் இணைப்புச் சாலைகள்.

79. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் இணைப்பு சாலைகள் போட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

1978 சனவரி 9]

விடை— தற்சமயம் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் இணைக்க 'இணைப்புச் சாலை' அமைக்கும் திட்டம் எதும் இல்லை.

உரம், பூச்சி மருந்துகள் விலை.

80. வினா—திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உரத்திற்கான விலையை குறைக்கவும், பூச்சிக் கொல்லி மருந்துகள் பாதி விலையில் கிடைக்கவும் வகை செய்ய உத்தேசித்துள்ளதா ?

விடை—இல்லை.

தூதூர் மட்ட உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

81. வினா—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தொகுதியிலுள்ள பேலூர் கிராமம் தூதூர் மட்டத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நடப்பாண்டில் போதுமான கட்டிட வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இதுவரை கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

உலிக்கல் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

82. வினா—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதியில் உள்ள உலிக்கல் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான கட்டிட வசதி செய்து கொடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—இல்லை.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி.

83. வினா—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) அரிசன வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1974-75, 1975-76 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் 520 வீடுகள் இலவசமாக கட்டப்பட்டு வழங்கப்பட்டன. இதில் 10 வீடுகள் ஆதிவாசி மக்களுக்கு (தோடர்கள்) வழங்கப்பட்டன. 1976-77-ல் 125 வீடுகள் கட்டப்பட்டன. இதில் ஆதிவாசி மக்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை. நடப்பு நிதியாண்டில் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது. ஆணை வழங்கப்பட்ட பின் நீலகிரி மாவட்டத்தில் கட்டப்பட வேண்டிய வீடுகள் எண்ணிக்கை முதலியவை பற்றி முடிவு செய்யப்படும்.

84. வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அமலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் கட்டித்தரப்படுகிறது?

விடை—(அ) ஆம்.

(ஆ) வீடுகள் கட்டுவதற்கு கிராமங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத்து அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு பரிந்துரை செய்கின்றனர். கழகம் இவற்றை பரிசீலனை செய்து அரசு ஒப்புதலளித்துள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, வீடுகள் கட்டுவதற்கான கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அரசுக்கு ஒப்புதலளிக்க அனுப்புகின்றது. அரசு இதனை ஏற்று ஆணை வழங்கிய பின் கழகம் வீடு கட்டும் பணியைத் துவங்கும். தேவையான நிதியையும் அரசு வழங்குகிறது. இவ்வீடுகள் பெரும்பாலும் ஏற்கனவே அரிசன நலத் துறையால் அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட பட்டா நிலங்களிலேயே கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

சேலத்திற்கு குடிநீர்த் திட்டம்.

85. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர குடிநீர்த் திட்டத்திற்கான புதிய திட்டம் எதையேனும் மாநில அரசு அங்கீகரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

பட்ட மேற்படிப்புக் கேந்திரங்களில் தமிழ்த்துறை.

86. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருச்சியிலுள்ள பட்ட மேற்படிப்பு கேந்திரங்களில் தமிழ்த் துறையை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1978 சனவரி 9

தனியார் கல்லூரி அலுவலக ஊழியர்களுக்குச் சலுகைகள்.

87. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரி அலுவலக ஊழியர்களுக்கு அரசாங்கக் கல்லூரி அலுவலக ஊழியர்களுக்குக் கிடைக்கும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுகிறதா ?

(ஆ) இல்லையெனில், அச்சலுகைகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) அரசாங்கக் கல்லூரி அலுவலக ஊழியர்களுக்கு கிடைக்கும் முக்கிய சலுகைகள் கீழ்க்கண்டவையாகும்.

1. இரண்டாவது ஊதியக்குழு சம்பள விகிதங்கள்.
2. ஓய்வூதியம்.
3. விடுப்பு.

மேற்குறித்த சலுகைகள் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

(ஆ) முக்கிய சலுகைகள் வழங்கப்பட்டாலும் அரசாங்கக் கல்லூரி ஊழியர்களுக்குக் கிடைக்கும் சில சலுகைகள் தனியார் கல்லூரி அலுவலக ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. அவை கீழே தரப்படுகிறது.

1. பணிக்கொடை.

2. குடும்ப நற்பயன் நிதி. இச்சலுகைகள் கிடைக்க அரசு ஆவன செய்யும்.

கேரளத்திலிருந்து மின்சாரம் பெற மின் பாதை.

88. வினா—**திரு. என். கிட்டப்பா.** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு வசதியாக கேரளாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் மின் இணைப்பு வேலை (சப்ளை லைன் அமைப்பு) ஏதேனும் தொடங்கப்பட்டு உள்ளதா?

1978 சனவரி 9]

(ஆ) ஆம் எனில், அவ்வேலை எப்போது முடியும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கேரளத்திலிருந்தும் பம்பாவிலிருந்து தமிழ் நாட்டிலிருந்தும் கயத்தாற்றிற்கு 230 கிலோவாட் மின்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. கேரளப் பகுதியில் காட்டிலாகாவினர் பாதையின் கீழுள்ள மரங்களை நீக்கும் பணி முன்னேற்றமடைந்து வருகிறது. விரைவில் இம்மின் பாதை இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்.

89. வினா—**திரு. என் கிட்டப்பா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தற்பொழுது எத்தனை பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் உள்ளன?

(ஆ) அவற்றில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?

விடை—

(அ) பிச்சைக்காரர்களுக்கு அரசு நடத்தும் ஒரு காப்பு இல்லமும், நகராட்சி, மாநகராட்சிகள் நடத்தும் ஏழு இல்லங்களும், அரசு மானியம் பெற்று நடத்தும் தனியார் நிறுவனம் ஒன்றுமாக ஒன்பது இல்லங்கள் தமிழ் நாட்டில் உள்ளன.

(ஆ) 841.

கடையம்-பாவூர் பேருந்து வழித்தடம்.

90. வினா—**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையத்திலிருந்து பாவூருக்கு, புலவனூர் வழியாக பஸ் விட வேண்டுமென மக்கள் அரசைக் கோரியுள்ளார்களா ?

[1978 சனவரி 9

(ஆ) ஆம் எனில், அரசு இந்தத் தடத்தில் பஸ்விட என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஏற்கனவே சில வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகளை வழித்தட மாற்றங்கள் செய்து, கடையத்திலிருந்தும் பாவூர் சத்திரத்திலிருந்தும், புலவனூருக்கு வந்து போவதற்கு ஏற்பாடு செய்யும்படி 10-8-1977-ல் வந்த ஒரு மகஜரைத் தவிர, கடையத்திலிருந்து புலவனூர் வழியாக பாவூர் சத்திரம் செல்ல பேருந்து வசதிகள் செய்து தருமாறு பொதுமக்களிடமிருந்து எவ்வித தனிப்பட்ட கோரிக்கை மனுவும் வரவில்லை.

(ஆ) இப்பகுதியில் சாலைகள் பேருந்துகள் விடுவதற்கு ஏற்றபடி இல்லையாதலால் புலவனூருக்கு உடனடியாக பேருந்து வசதி செய்ய இயலவில்லை.

சேர்மாதேவி—கடையம் பேருந்து வழித்தடம்.

91. வினா—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேர்மாதேவியிலிருந்து பிரமதேசம் வழியாக கடையம் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்கள் ஓடவில்லையென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தடத்தில் உடனடியாக பஸ்கள் விட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஆம். மேற்படி வழித்தடத்தில் ஓடிக் கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று அதன் உரிமம் திரும்ப ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் ஓடவில்லை.

(ஆ) அதை ஈடு செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மற்றொரு தனியார் வண்டிக்கு தற்காலிக உரிமம் வழங்கப்பட்டு, தற்சமயம் ஒரு பேருந்து மேற்படி வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

1978 சனவரி 9]

குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது கலைக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள்.

92. வினா—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் நிர்வாகச் செயல் திறன் இன்மை காரணமாகக் கலைக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள் எத்தனை?

விடை—

ஒன்றுமில்லை.

மாயூரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

93. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாயூரம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தத்தில் கட்டிடம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

மாயூரம் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியின் ஒரு பகுதி சொந்தக் கட்டிடத்திலும், மற்றொரு பகுதி தனியார் கட்டிடத்திலும் நடைபெற்று வருகிறது. இப்பள்ளிக்குக் கூடுதலாக சொந்தத்தில் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு கல்வித் துறையின் பரிசீலனையிலுள்ளது.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

94. வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்விப் பணி தவிர வேறு பணிகள் தரப்படுவதைத் தவிர்த்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

நடைமுறையிலுள்ள நண்பகலுணவுத் திட்டத்தில் பணி புரிவதைத் தவிர தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு தற்போது வேறு பணி தரப்படுவதில்லை. இப்பணியை தவிர்த்திடுவது குறித்து செயற்குறிப்பு எதும் இல்லை.

கல்விக்கென தனி வாரியம்.

95. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித்துறைக்கென தனியே வாரியம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை. கல்வித்துறையை நிருவாகம் செய்ய தனி வாரியம் அமைப்பது என்பது நடைமுறைக்குகந்த கருத்து அல்ல.

நீதி மன்றங்களில் தீர்ப்பு வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்தல். —

96. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதி மன்றங்களில் தீர்ப்புகள் வழங்கப்படுவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்திட அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை என்ன ?

விடை—

வழக்குகளில் வாக்குவாதங்கள் முடிந்த 14 தினங்களுக்குள் நீதிபதிகள் (மாவட்ட நீதிபதிகள் உட்பட) தமது தீர்ப்புகளை வழங்குதல் வேண்டுமென்று உயர் நீதிமன்றம் வரையறுத்துள்ளது. இக்காலக்கெடுவை கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குற்ற வழக்கு நீதி மன்றங்களில் வழக்குகளின் விசாரணை முடிந்த மூன்று தினங்களுக்குள் சாதாரணமாக தீர்ப்புகள் வழங்கப்படல் வேண்டுமென்ற நிலை உண்டாக்கப்பட்டுள்ளது.

In order to avoid the delay in delivering judgments by courts after the hearing of arguments, the High Court has prescribed that judgments should be delivered by all Judicial Officers, including District Judges, within a period of 14 days after the close of arguments. All subordinate courts are made to follow this rule strictly. The judgments in criminal courts should normally be delivered within 3 days after conclusion of the trial.

தமிழ் இலக்கியம் முதலியன குறித்த ஆராய்ச்சி.

97. வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் இலக்கியம், கலை, வரலாறு, தொல்பொருள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் தனியே நிதி ஏதேனும் ஒதுக்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தமிழ் நாடு ஆவணக்காப்பகத்தில் தென்னிந்திய வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும், தொல்பொருள் ஆய்வுத்துறையில் தமிழ் இலக்கியம், கலை வரலாறு, தொல் பொருள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்வதற்கும் தொல்பொருள் பாதுகாப்புப் பணிக்கும் தனியே நிதி ஒதுக்கப்படுகின்றது.

(ஆ) விவர அறிக்கை * ஒன்று பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

1139—1141 பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

கோவை, திருச்சி பல்கலைக்கழகங்கள்.

98. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

திரு. கூ. ச. முருகேசன் :

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை , திருச்சி பல்கலைக்கழகங்களைத் துவங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்தத் தேதியிலிருந்து ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இது இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நெகலூர் புதூரில் உயர்நிலைப்பள்ளி.

99. வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வல்லம் ஒன்றியத்தில் நெகலூர் புதூரில் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த பொது மக்களிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்கல்

வினா 100.—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சாவரம் காடு அதைச் சேர்ந்த நீரோடைப் பகுதியைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு ஏதேனு முள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பிச்சாவரத்தைச் சுற்றுலா மையமாக மேம்படுத்த அங்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், படகு வீடு, தோணித்துறை ஆகியவற்றை அமைக்கலாம் என்ற திட்டம் பரிசீலனையில் உள்ளது.

கைவினைஞர்களுக்கு உதவித்தொகை.

*101. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்ட ஏழை கைவினைஞர்களுக்கு அரசு ஏதேனும் உதவித் தொகை வழங்கி வருகின்றதா ?

விடை—

சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோர்களுக்கும் தொழில் செய்வதற்காக தற்போது இலவசமாக கருவிகள் வழங்கப்படுகின்றன. மற்ற ஏழைக் கைவினைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை.

செஞ்சிக்கோட்டையில் அகழ்வாய்வு.

வினா 102.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னார்காடு மாவட்டம் செஞ்சிக்கோட்டையின் அகழ் வாராய்ச்சி செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட குறிப்புகளின் விவரங்கள் யாவை ?

விடை—

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டையில் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வாராய்ச்சி செய்தது பற்றி அரசுக்கு ஏதும் செய்திகள் அனுப்பவில்லை. எனினும் அறிக்கை ஒன்று பெறப்பட்டு அதன் விவரம்* இணைப்பகுதியாக அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் எலி ஒழிப்புத்திட்டம்.

103. வினா—திரு. என் கிட்டப்பா,
திரு. வி. கே. கோதண்டராமன்,
திரு. எஸ். கணேசன்,

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், வேளாண்மையை நாசப்படுத்தும் எலித் தொல்லையினை அகற்ற அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை யாது ?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் எலிகளை ஒழிக்க கீழ்க்கண்ட திட்டங்களை வேளாண்மைத்துறை செயல்படுத்துகின்றது.

1. உணவுப் பொருட்களுடன் கலந்துவைக்கும் துத்தநாகப் பாஸ்பைடு என்னும் நச்சு மருந்தும், வளைகளினுள் இருக்கும் எலிகளைக் கொல்ல போரேட் 10 சதக்குருணை மருந்து 50 சதக் குறைந்த விலையில் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 20,000 ஏக்கர் பரப்பளவு பயன் பெறும்.

2. அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகள் 50 சதக்குறைந்த விலையில் 20,000 ஏக்கர் அளவுக்கு வழங்கப்படும்.

3. மேலும் பயிர் விளைச்சல் அல்லாத காலங்களில் எலி ஒன்றுக்கு 10 காசு வீதம் பணமாகக் கொடுத்து 2,00,000 எலிகள் பிடிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*1142—1143 பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டு உள்ளது.

நங்கவள்ளியில் வணிகவரித்துறை சோதனை.

வினா 104.—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8—7—1977 அன்று மேட்டூரை அடுத்த நங்கவள்ளியில் சினிமா தியேட்டர் ஒன்றில் வணிகவரி பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டார்களா ?

(ஆ) ஆம் எனில், சோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டவை யாவை ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 7—7—1977 அன்று இரண்டாம் காட்சியின்போது சோதனைக்காக வாங்கிய நுழைவுச் சீட்டுக்களை 8—7—1977 அன்று மேற்சொன்ன சினிமா தியேட்டர் பாரம்—II (Form II—Register) பதிவேட்டில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகள் கணக்கில் காண்பிக்கப்படவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதோடு ஒரே எண்களுள்ள போலியான நுழைவுச் சீட்டுகள் விற்று இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

அழகர் அணைத்திட்டம்.

வினா 105.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அழகர் அணைத்திட்டத்தினை நிறைவேற்றிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

ஆம்.

இருபாலரும் சேர்ந்து பயிலும் கல்லூரிகள்.

வினா 106.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பல்கலைக் கழக பொது மேற்பார்வைக் கமிஷன் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள எந்தெந்த அரசினர் கல்லூரிகள் ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து பயிலலாமென பரிந்துரை செய்துள்ளது ?

[1978 சனவரி 9

(ஆ) எந்தெந்த கல்லூரிகளில் இம் முறை மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆண்கள் கல்லூரிகளில் பெண்களை சேர்க்கும் பொருள் பல்கலைக் கழக பொது மேற்பார்வை கமிஷனின் பரிந்துரைக்கு விடப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் கல்லூரிகளின் நிதி நிலை.

வினா 107.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் பொது மேற்பார்வைக் கமிஷன் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள தனியார் கல்லூரிகளில் நிதி நிலைமைகளை ஆய்வு செய்ததா ?

(ஆ) ஆமெனில் எந்தெந்த கல்லூரிகளின் நிலைமை மோசமாக உள்ளது ?

விடை

(அ) ஆம்.

(ஆ) கீழே குறிப்பிட்டுள்ள கல்லூரிகளின் நிதிநிலை திருப்திகரமாகயில்லை என்று பல்கலைக் கழக பொது ஆய்வுக் குழு குறிப்பிட்டுள்ளது :

திருச்சி மாவட்டம்—

1. ஜமால் மொஹமது கல்லூரி, திருச்சி.
2. நேஷனல் கல்லூரி, திருச்சி.
3. புனித ஜோஸப் கல்லூரி, திருச்சி.
4. ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சி.
5. நேரு நினைவுக் கல்லூரி, புதனம்பட்டி, திருச்சி ஜில்லா.

புதுக்கோட்டை மாவட்டம்—

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலை-சிவபுரி.

1978 சனவரி 9]

கல்லூரிகளுக்குச் சுயாதிகார அந்தஸ்து.

வினா 108.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 ஜூன் முடிய நமது மாநிலத்தில் எந்தெந்த கல்லூரிகளுக்கு சுயாதிகார அந்தஸ்து தரப்பட்டுள்ளது?

விடை—

கல்லூரிகளுக்கு சுயாதிகார அந்தஸ்து தருவதுபற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. விரைவில் முடிவெடுக்கப்படும்.

நதிப்பாசனப் பிரதேசங்களுக்குத் தலைமைப் பொறியாளர்கள்.

109. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு பாசன நதிப் பிரதேசத்திற்கும் ஒரு தலைமைப் பொறியாளரை நியமித்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை

(அ) & (ஆ) நதிப் பாசனப் பள்ளத்தாக்கு அடிப்படையில் நீர்ப்பாசனத் துறையை மாற்றியமைப்பதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

அச்சகத் தொழிலாளர் ஊதியம்.

110. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சகத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை நகரில் பால் வழங்கல்.

111. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் பால்வள நிறுவனத்தின் மூலமாக நாளொன்றுக்கு எத்தனை லிட்டர் பால் நுகர்வோருக்கு வழங்கப்படுகிறது ?

விடை—

சென்னை நகரில் பால்வள நிறுவனத்தின் மூலமாக நாளொன்றுக்கு 2,20,000 லிட்டர் பால் நுகர்வோருக்கு வழங்கப்படுகிறது.

ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணை.

112. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், ஆடுதுறையில் வாழை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று இயங்கி வருகின்றதா ?

விடை—

ஆம்.

அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி.

113. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் உள்ள அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை அரசு நிறைவேற்றி வருகிறதா ?

விடை—

ஆம், நிறைவேற்றி வருகிறது.

மின் சக்தி வழங்கல்.

114. வினா—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மின் வெட்டு நேரங்களில் பல குடும்பங்கள் வசிக்கும் வீடுகளுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 60 யூனிட் என்ற அளவில் நிர்ணயம் செய்து, அபராதத் தொகை கட்டுவதை நிறுத்த ஆவன செய்யப்படுமா ?

விடை—

தற்போது மின் வெட்டு அமுலில் இல்லை. மின்வெட்டு மறுமுறை ஏற்பட்டால், இப்பரிந்துரை பரிசீலிக்கப்படும்.

தங்கசாலை பேருந்து நிலையத்தை மேம்படுத்தல்.

115. வினா—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை தங்கச்சாலை பஸ் நிலையத்தில் பயணிகள் தங்க ஓய்வு அறை ஒன்றும் பஸ் நிலையத்தைச் சுற்றி கடைகளும் கட்டி வாடகைக்கு விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

இல்லை.

அரசினர் மகளிர் கல்லூரி, வடசென்னை.

116. வினா—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட சென்னையில் அமைந்துள்ள அரசினர் மகளிர் கல்லூரிக் கட்டடத்தைப் புதுப்பித்து, அங்கு மாணவியருக்கு வேண்டிய நூலகம், விளையாட்டுத் திடல், குடிநீர் ஆகிய வசதிகளைச் செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

[1978 சனவரி 9

விடை—

வட சென்னை அரசினர் மகளிர் கல்லூரியில் விளையாட்டுத் திடல் மற்றும் போதிய குடிநீர் வசதிகள் உள்ளன. கூடுதல் கட்டிடங்களும் நூலகத்திற்கான தனியான ஒரு கட்டிடமும் கட்டுவது பரிசீலனையில் உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி.

117 வினா—திரு. எ. செல்லப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்கின்ற உத்தேசம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

விடை—இல்லை.

குறுவை சாகுபடிக்கு புது ரக நெல்

118 வினா—திரு. எ. செல்லப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கென புது ரக நெல் எவையேனும் அரசு அறிமுகம் செய்துள்ளதா?

விடை—இல்லை.

கள்ளக்குறிச்சி பேரூராட்சி.

119 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) & (ஆ) இப்பொருள் ஊரக வளர்ச்சி இயக்குநர், நகராட்சி ஆய்வாளர் ஆகியோரின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அரசுக்கு இன்னும் வரவில்லை.

1978 சனவரி 9]

சென்னை நகரில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல்.

வினா 120.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள T.U.C.S. கடைகள் ரேஷன் பொருள்கள் விற்பனை செய்வதை சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடமே ஒப்படைத்து விட்டனவா?

(ஆ) ஆம் எனில் காரணம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

(a) No.

(b) Does not arise.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-00)

2. அறிவிப்புகள்.

அ. மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் பற்றி மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 1/78), மற்றும், தமிழ்நாடு 1978-ம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் வெளியேற்றுவதினின்று பாதுகாத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/78) ஆகியவை, 6—1—1978-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் திருத்தம் ஏதுமின்றி ஏற்பளிக்கப்பட்டன என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவை துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(3.) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்ட மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினரும், தஞ்சை மாவட்ட விவசாய சங்கத்தின் தலைவருமான தோழர் என். வெங்கடாசலம் அவர்கள் 21—9—1977-ம் தேதி இரவு சோழகம்பட்டி ரயில் நிலையத்தின் அருகில், விவசாயிகள் இயக்கத்தின் விரோதிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற புகார் குறித்து குற்றவாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப் படாததால் ஏற்பட்டுள்ள பரபரப்பு மிக்க அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், கே. ரமணி, வி. கே. கோதண்டராமன், என். வரதராசன், ஆர். வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, சி. கோவிந்தராசன், கோ. இளங்கோவன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அளவிற்கு அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவரவர்களே, தோழர் வெங்கடாசலம் கொலையைப் பற்றி, நீங்கள் படித்ததிலிருந்து பார்க்கலாம். அது உண்மையிலேயே ஒரு சோகமான விஷயமாகும். அது கொடுமையான விஷயமாகவும் இருக்கிறது. இந்தப் பிரச்னையில் தமிழ் நாட்டில் இருக்கும் பல்வேறு பிரிவினர்களின் உயிர் பாதுகாப்புப் பிரச்னை அடங்கி இருக்கிறது என்பதால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாகும்.

அவரைப் பொறுத்தவரையில், அவர் ஆற்றியுள்ள பணி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்ன விரும்புகிறார்களோ, அதாவது அரிசன மக்களுக்கு தலைமைப் பதவிகள் தரப்பட

வேண்டும் என்றும், கிராமப்புற ஏழை எளிய மக்கள் மீது கவனம் செலுத்தவேண்டும் என்றும் அந்தப் பணியில் தோழர் வெங்கிடாசலம் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்கள்.

அப்படிப்பட்ட தோழர் 21-ம் தேதி அன்று பூதலூர் ஸ்டேஷனில் இருந்து சாயங்காலம் டிரெயின் ஏறி ஊருக்கு வந்ததை பார்த்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர் வீட்டிற்குத் திரும்பவில்லை. எங்களுக்குக் கிடைத்த தகவல், அவரைப் பெருமாள் என்ற எதிரி—வருகிற வழியில் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் அவரது ஷெட்டில் அவரை அடித்து, அவர் கழுத்தை நெறித்து கொலை செய்து, ஒரு நாள் அந்தக் குடிசையில், அந்த ஷெட்டில் வைத்து பிறகு மறு நாள், அதை எரித்து, அது குறித்து எந்தவிதமான தடயமும் இல்லாத நிலையை உண்டாக்கி இருக்கிறார்.

இந்தத் தகவலைக் கேட்டவுடன் நானே நேரில் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, அங்கேயிருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள அதிகாரிகள், டி.எஸ்.பி., மற்றவர்களின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லாததால் நான் திருச்சிக்கு வந்து, முதலமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தகவல் கொடுக்கவேண்டுமென்று எஸ்.டி.டி.யில் காண்டாக்ட் செய்தேன். உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கேயுள்ள நிலை எனக்குத் திருப்தியாக இல்லை, மெட்ராசிலிருந்து ஸ்பெஷல் டீம் அனுப்பவேண்டுமென்று கோரிய உடனே 5 நிமிடத்திலே முடிவு எடுத்து, அங்கே இருந்து ஒரு டீமை, ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீமை முதலமைச்சர் அவர்கள் மறுநாள் அனுப்பி வைத்தார்கள். அந்த விசாரணை எல்லாம் நடந்து இருக்கிறது. மூன்று மாதம் ஆகிவிட்டது. ஒரு துப்பும் கிடைக்கவில்லை. பல்வேறு துப்புகளை நாங்கள் தந்தும் கூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது ஒரு பயங்கரமான நிலையாக இருக்கிறது. நாங்கள் போலீசுக்கு நிறைய துப்பு கொடுத்து இருக்கிறோம். விசாரணைக்கு அவர்களுக்கு துப்பு இல்லாததால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்ல முடியாது. அவர் பஞ்சாயத்து பிரசிடென்டாக இருக்கிறார். எப்போதுமே அவரை எதிர்த்து பெருமாள் தான் தகராறு செய்வார். 1971-ம் ஆண்டில்

(குறுக்கீடு) அதே இடத்தில், அதே பாதையில் பெருமாள் அவரைத் தடுத்து தகராறு செய்த நேரத்தில், வெங்கடாசலத்தோடு கூட இரண்டு பேர் இருந்ததால் எதிர்த் தாக்குதல் நடத்தி, தகராறு செய்து, சத்தம் போட்டதால், பெருமாள் ஓடிவிட்டார். மறு நாள் டி.எஸ்.பி. வந்து பெருமாளைக் கூப்பிட்டு, இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லி முச்சிலிக்காவில் விடுதலை செய்து விட்டார்.

அங்கே ரெக்கார்டு இருக்கிறது. பெருமாளைப் பொறுத்த வரையில், அந்த ரெக்கார்டை பரிசீலனை செய்தார்களா என்று தெரியவில்லை. ரொம்ப சர்பிரைசிங் திங் என்னவென்றால், மெட்ராசிலிருந்து முதலமைச்சர் அவர்களே அங்கே போலீஸ் நாயை வரவழைத்தார்கள். நாயை 3 கிலோ மீட்டர் தூரம் வெங்கடாசலத்தின் வீட்டிற்குக் கொண்டு போய், வெங்கடாசலத்தின் துணியைக் கொடுத்து மோப்பம் பிடிக்கச் செய்து விட்டுவிட்டார்கள் அந்த இடத்தில். அது ஓடோடி நேராகப் போய், வயலுக்குள் நுழைந்து பெருமாள் ஷெட்டுக்குள் நுழைந்து கரெக்டாக பூட்டை ஆட்டியிருக்கிறது. இது வரையில் பூட்டை உடைத்ததாகத் தகவல் இல்லை. மேலும் துப்பு கொடுத்திருக்கிறோம்.

அதே 21-ம் தேதி, வெங்கடாசலம் பூதலூர் ஸ்டேஷனில் 11 மணிக்கு ரயில் ஏறுவதற்கு முன்னால், வரகூர் டீக்கடையில் அரிசனங்களைக் கூட்டிவைத்து, வரகூர்—செந்தலை பஞ்சாயத்தில் அரிசன மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள், ஆகவே ஒரு அரிசனப் பிரதிநிதியை பிரசிடெண்டாக நிறுத்த வேண்டும் என்று பேசியிருக்கிறார். இந்தத் தகவல் செந்தலை-வரகூர் பிரசிடெண்டுக்கு தெரிவிக்கப்பட்டு, அவரும், அவருடைய சகோதரரும், இவர்களை ஃபாலோ பண்ணியிருக்கிறார்கள். முருகானந்தம் என்ற அன்றைய இன்வெஸ்டிகேடிங் ஆபீசருக்கு இந்தத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் இதுபற்றி ஏதாவது செய்தாரா என்பது தெரியவில்லை. பெருமாள் திரும்பி வந்தவுடன் நாங்கள் தகவல் கொடுத்து போலீஸ் கைது செய்திருக்கிறது. கைது செய்து கடைசியில் அவரை விட்டு விட்டார்கள். இந்த மாதிரி நடந்திருக்கிறது.

வெங்கடாசலம் கொலை செய்யப்பட்ட பிறகு 26—9—1977 அன்று அவர் பேருக்கு லெட்டர் வந்திருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது. என்ன எழுதிப் போட்டிருக்கிறார்கள் என்றால், எங்கள் சம்பிரதாயத்தை நிறை வேற்றிவிட்டோம் என்று எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் கலெக்டர் ஆபீஸ் போஸ்டாபீசில் போஸ்ட் செய்யப் பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் போலீசிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது.

அவர் தலைமறைவாக இருந்தபோது, எமர்ஜென்சி காலத்தில் பூதலூர் எ.எஸ்.ஐ. அவர் வீட்டில் போய் சொத்துக்களை அள்ளி வந்திருக்கிறார். தலைமறைவிலிருந்து வெளியே வந்த பிறகு, அவர் இந்த எ.எஸ்.ஐ. பேரில் ஷா கமிஷனுக்கு புகார் கொடுத் திருக்கிறார். ஷா கமிஷன் எ.எஸ்.ஐ-யை விசாரணைக்குக் கூப்பிடும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று போலீசிடம் துப்பு கொடுத்திருக்கிறோம். 8—9—1977 அன்று கலெக் டருக்கும் வெங்கடாசலத்திற்கும் சண்டை. முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, இந்த ஜில்லாவில் பினாமி நிலங்களுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று வெங்கடாசலம் கலெக்டரிடம் பேசியிருக்கிறார். பினாமி நிலங்களின் பட்டியலைத் தயார் செய்து, அரிசனங்களுக்கு நிலத்தைப் பங்குபோட திட்டம் போட்டார் அவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்களை ஏற்கனவே சொல்லி விட்டீர்கள். நிகழ்ச்சியைப் பற்றி சுருக்கமாகச் சொல்லிய பிறகு, அரசின் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமே தவிர, இதை ஒரு விவாதமாக வைத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ரா. உமாநாத் : ‘ஐ வில் பி ஃபிரிப்’. பிரச்னையின் தன்மையால் சொல்கிறேன். முடித்துவிடுகிறேன். ஆக, 8—9—1977 அன்று அவருக்கும் கலெக்டருக்கும் சண்டை நடந் திருக்கிறது. பினாமி வேண்டுமென்றே பினாமி ஆட்களுக்கு நிலத்தைப் பங்கு போடுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சண்டை வந்தவுடன், கலெக்டர் சொல்லியிருக்கிறார், நீங்கள்

(குறுக்கீடு) அதே இடத்தில், அதே பாதையில் பெருமாள் அவரைத் தடுத்து தகராறு செய்த நேரத்தில், வெங்கிடாசலத்தோடு கூட இரண்டு பேர் இருந்ததால் எதிர்த் தாக்குதல் நடத்தி, தகராறு செய்து, சத்தம் போட்டதால், பெருமாள் ஓடிவிட்டார். மறு நாள் டி.எஸ்.பி. வந்து பெருமாளைக் கூப்பிட்டு, இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லி முச்சிலிக்காவில் விடுதலை செய்து விட்டார்.

அங்கே ரெக்கார்டு இருக்கிறது. பெருமாளைப் பொறுத்த வரையில், அந்த ரெக்கார்டை பரிசீலனை செய்தார்களா என்று தெரியவில்லை. ரொம்ப சர்பிரைசிங் திங் என்னவென்றால், மெட்ராசிலிருந்து முதலமைச்சர் அவர்களே அங்கே போலீஸ் நாயை வரவழைத்தார்கள். நாயை 3 கிலோ மீட்டர் தூரம் வெங்கடாசலத்தின் வீட்டிற்குக் கொண்டு போய், வெங்கடாசலத்தின் துணியைக் கொடுத்து மோப்பம் பிடிக்கச் செய்து விட்டுவிட்டார்கள் அந்த இடத்தில். அது ஓடோடி நேராகப் போய், வயலுக்குள் நுழைந்து பெருமாள் ஷெட்டுக்குள் நுழைந்து கரெக்டாக பூட்டை ஆட்டியிருக்கிறது. இது வரையில் பூட்டை உடைத்ததாகத் தகவல் இல்லை. மேலும் துப்பு கொடுத்திருக்கிறோம்.

அதே 21-ம் தேதி, வெங்கடாசலம் பூதலூர் ஸ்டேஷனில் 11 மணிக்கு ரயில் ஏறுவதற்கு முன்னால், வரகூர் டீக்கடையில் அரிசனங்களைக் கூட்டிவைத்து, வரகூர்—செந்தலை பஞ்சாயத்தில் அரிசன மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள், ஆகவே ஒரு அரிசனப் பிரதிநிதியை பிரசிடெண்டாக நிறுத்த வேண்டும் என்று பேசியிருக்கிறார். இந்தத் தகவல் செந்தலை-வரகூர் பிரசிடெண்டுக்கு தெரிவிக்கப்பட்டு, அவரும், அவருடைய சகோதரரும், இவர்களை ஃபாலோ பண்ணியிருக்கிறார்கள். முருகானந்தம் என்ற அன்றைய இன்வெஸ்டிகேடிங் ஆபீசருக்கு இந்தத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் இதுபற்றி ஏதாவது செய்தாரா என்பது தெரியவில்லை. பெருமாள் திரும்பி வந்தவுடன் நாங்கள் தகவல் கொடுத்து போலீஸ் கைது செய்திருக்கிறது. கைது செய்து கடைசியில் அவரை விட்டு விட்டார்கள். இந்த மாதிரி நடந்திருக்கிறது.

வெங்கடாசலம் கொலை செய்யப்பட்ட பிறகு 26—9—1977 அன்று அவர் பேருக்கு லெட்டர் வந்திருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது. என்ன எழுதிப் போட்டிருக்கிறார்கள் என்றால், எங்கள் சம்பிரதாயத்தை நிறைவேற்றிவிட்டோம் என்று எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் கலெக்டர் ஆபீஸ் போஸ்டாபீசில் போஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் போலீசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது.

அவர் தலைமறைவாக இருந்தபோது, எமர்ஜென்சி காலத்தில் பூதலூர் எ.எஸ்.ஐ. அவர் வீட்டில் போய் சொத்துக்களை அள்ளி வந்திருக்கிறார். தலைமறைவிலிருந்து வெளியே வந்த பிறகு, அவர் இந்த எ.எஸ்.ஐ. பேரில் ஷா கமிஷனுக்கு புகார் கொடுத்திருக்கிறார். ஷா கமிஷன் எ.எஸ்.ஐ-யை விசாரணைக்குக் கூப்பிடும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று போலீசிடம் துப்பு கொடுத்திருக்கிறோம். 8—9—1977 அன்று கலெக்டருக்கும் வெங்கடாசலத்திற்கும் சண்டை. முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, இந்த ஜில்லாவில் பினாமி நிலங்களுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று வெங்கடாசலம் கலெக்டரிடம் பேசியிருக்கிறார். பினாமி நிலங்களின் பட்டியலைத் தயார் செய்து, அரிசனங்களுக்கு நிலத்தைப் பங்குபோட திட்டம் போட்டார் அவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரங்களை ஏற்கனவே சொல்லி விட்டீர்கள். நிகழ்ச்சியைப் பற்றி சுருக்கமாகச் சொல்லிய பிறகு, அரசின் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமே தவிர, இதை ஒரு விவாதமாக வைத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ரா. உமாநாத்: 'ஐ வில் பி ஃபிரிப்'. பிரச்னையின் தன்மையால் சொல்கிறேன். முடித்துவிடுகிறேன். ஆக, 8—9—1977 அன்று அவருக்கும் கலெக்டருக்கும் சண்டை நடந்திருக்கிறது. பினாமி லேண்டுலார்ட்ஸ் பினாமி ஆட்களுக்கு நிலத்தைப் பங்கு போடுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சண்டை வந்தவுடன், கலெக்டர் சொல்லியிருக்கிறார், நீங்கள்

(குறுக்கீடு) அதே இடத்தில், அதே பாதையில் பெருமாள் அவரைத் தடுத்து தகராறு செய்த நேரத்தில், வெங்கிடாசலத்தோடு கூட இரண்டு பேர் இருந்ததால் எதிர்த் தாக்குதல் நாக்கி, தகராறு செய்து, சத்தம் போட்டதால், பெருமாள் ஓடிவிட்டார். மறு நாள் டி.எஸ்.பி. வந்து பெருமாளைக் கூப்பிட்டு, இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லி முச்சிலிக்காவில் விடுதலை செய்து விட்டார்.

அங்கே ரெக்கார்டு இருக்கிறது. பெருமாளைப் பொறுத்த வரையில், அந்த ரெக்கார்டை பரிசீலனை செய்தார்களா என்று தெரியவில்லை. ரொம்ப சர்பிரைசிங் திங் என்னவென்றால், மெட்ருசிலிருந்து முதலமைச்சர் அவர்களே அங்கே போலீஸ் நாயை வரவழைத்தார்கள். நாயை 3 கிலோ மீட்டர் தூரம் வெங்கடாசலத்தின் வீட்டிற்குக் கொண்டு போய், வெங்கடாசலத்தின் துணியைக் கொடுத்து மோப்பம் பிடிக்கச் செய்துவிட்டுவிட்டார்கள் அந்த இடத்தில். அது ஓடோடி நேராகப் போய், வயலுக்குள் நுழைந்து பெருமாள் ஷெட்டுக்குள் நுழைந்து கரெக்டாக பூட்டை ஆட்டியிருக்கிறது. இது வரையில் பூட்டை உடைத்ததாகத் தகவல் இல்லை. மேலும் துப்பு கொடுத்திருக்கிறோம்.

அதே 21-ம் தேதி, வெங்கடாசலம் பூதலூர் ஸ்டேஷனில் 11 மணிக்கு ரயில் ஏறுவதற்கு முன்னால், வரகூர் டீக்கடையில் அரிசனங்களைக் கூட்டிவைத்து, வரகூர்—செந்தலை பஞ்சாயத்தில் அரிசன மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள், ஆகவே ஒரு அரிசனப் பிரதிநிதியை பிரசிடெண்டாக நிறுத்த வேண்டும் என்று பேசியிருக்கிறார். இந்தத் தகவல் செந்தலை-வரகூர் பிரசிடெண்டுக்கு தெரிவிக்கப்பட்டு, அவரும், அவருடைய சகோதரரும், இவர்களை ஃபாலோ பண்ணியிருக்கிறார்கள். முருகானந்தம் என்ற அன்றைய இன்வெஸ்டிகேடிங் ஆபீசருக்கு இந்தத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் இதுபற்றி ஏதாவது செய்தாரா என்பது தெரியவில்லை. பெருமாள் திரும்பி வந்தவுடன் நாங்கள் தகவல் கொடுத்து போலீஸ் கைது செய்திருக்கிறது. கைது செய்து கடைசியில் அவரை விட்டு விட்டார்கள். இந்த மாதிரி நடந்திருக்கிறது.

வெங்கடாசலம் கொலை செய்யப்பட்ட பிறகு 26—9—1977 அன்று அவர் பேருக்கு லெட்டர் வந்திருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது. என்ன எழுதிப் போட்டிருக்கிறார்கள் என்றால், எங்கள் சம்பிரதாயத்தை நிறைவேற்றிவிட்டோம் என்று எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் கலெக்டர் ஆபீஸ் போஸ்டாபீசில் போஸ்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் போலீசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த லெட்டரில் கையெழுத்துக் கிடையாது.

அவர் தலைமறைவாக இருந்தபோது, எமர்ஜென்சி காலத்தில் பூதலூர் எ.எஸ்.ஐ. அவர் வீட்டில் போய் சொத்துக்களை அள்ளி வந்திருக்கிறார். தலைமறைவிலிருந்து வெளியே வந்த பிறகு, அவர் இந்த எ.எஸ்.ஐ. பேரில் ஷா கமிஷனுக்கு புகார் கொடுத்திருக்கிறார். ஷா கமிஷன் எ.எஸ்.ஐ-யை விசாரணைக்குக் கூப்பிடும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று போலீசிடம் துப்பு கொடுத்திருக்கிறோம். 8—9—1977 அன்று கலெக்டருக்கும் வெங்கடாசலத்திற்கும் சண்டை. முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி, இந்த ஜில்லாவில் பினாமி நிலங்களுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று வெங்கடாசலம் கலெக்டரிடம் பேசியிருக்கிறார். பினாமி நிலங்களின் பட்டியலைத் தயார் செய்து, அரிசனங்களுக்கு நிலத்தைப் பங்குபோட திட்டம் போட்டார் அவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்களை ஏற்கனவே சொல்லி விட்டீர்கள். நிகழ்ச்சியைப் பற்றி சுருக்கமாகச் சொல்லிய பிறகு, அரசின் தரப்பில் பதில் கொடுக்க வேண்டுமே தவிர, இதை ஒரு விவாதமாக வைத்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ரா. உமாநாத் : 'ஐ வில் பி ஃபிரிப்'. பிரச்னையின் தன்மையால் சொல்கிறேன். முடித்துவிடுகிறேன். ஆக, 8—9—1977 அன்று அவருக்கும் கலெக்டருக்கும் சண்டை நடந்திருக்கிறது. பினாமி லேண்டுலார்ட்ஸ் பினாமி ஆட்களுக்கு நிலத்தைப் பங்கு போடுவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சண்டை வந்தவுடன், கலெக்டர் சொல்லியிருக்கிறார், நீங்கள்

அரிசனங்களை நிலத்தில் இறக்கினால், நான் அவர்களை இறங்கச் சொல்ல வேண்டிவரும் என்று. அதுவும் ஒரு 'சர்கம்ஸ்டன்ஸ்' ஆகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

8—9—1977-க்குப் பிறகு அங்கே நடந்திருக்கிற ஆச்சரியம் என்னவென்றால், அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை தஞ்சாவூர் கலெக்டர் ரத்து செய்துவிட்டார். அவர் காணாமல் போன பிறகு, ஸ்தல போலீஸ் விசாரணையைத் தாமதப்படுத்தியிருக்கிறது. பூதலூரில் கம்பிளைண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது, கொலை நடைபெற்றிருக்கிறது என்று. உடனே அவர்கள் விசாரணையில் இறங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கம்பிளைண்டை ரயில்வே போலீசுக்கு அனுப்பிவிட்டார்கள். ரெயில்வே போலீசாவது அந்தக் கம்பிளைண்ட் கிடைத்தவுடன் விசாரணையில் இறங்கியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதை துவரங்குறிச்சி போலீசுக்கு அனுப்பினார்கள். துவரங்குறிச்சி போலீஸ் அதை மீண்டும் ரெயில்வே போலீசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். "தே ஆர் கோயிங் ஆன் ரிடர்னிங்; எவ்வெரி டே பாசஸ் 'மீன்ஸ்'' இருக்கிற எவிடென்ஸ் போய் விடும். அப்படி கால தாமதப் படுத்தியிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு வந்திருக்கிறது ஆபத்து. ஒரு நாள் இரவு திருச்சியில் என் வீட்டை ஒரு ஆள் வாட்ச் பண்ணியிருக்கிறான். மேலும் கீழுமாகச் சென்று பார்த்திருக்கிறான். மறுநாள் அதே ஆள் வந்து என் வீட்டை வாட்ச் செய்து வெயிட்டரிடம் நான் எங்கே என்று தேடியிருக்கிறான். அவனைப் பிடித்து விட்டேன். எனக்குச் சந்தேகம். அவனைக் கேட்டேன். போலீசா என்றேன் இல்லை என்றான்.

(முற்பகல் 10-10)

நான் ஒரு கான்ஸ்டேபிள் என்று சொன்னார். போலீஸ் ஸ்டேஷனுக்கு வா என்றேன். அங்கே ஹெட் கான்ஸ்டேபிள் உளவுத்துறையாகிரி யார் என்று கேட்டவுடன் நான் போலீஸ் காரன் என்று சொன்னேன். என்ன தகவல் தெரியுமா? அங்கு கொலை செய்யப்பட்டவரின் மனைவி பொட்டழித்து அழுது

கொண்டிருக்கிறாள். அப்படியிருக்க விசாரணைக்குப் பதிலாக ஸ்தல போலீஸ் நான் தான் அவரை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று—இது ஒரு பயங்கரமான விஷயம்—நான்தான் அவரை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று ஸ்தல போலீஸ் என்னை 'வாச்' செய்கிறது என்றால் அதைவிட

Outrageous act, can there be any other act more outrageous than this?

நான் அதைப்பற்றி டி.ஐ.ஜி. (சி.ஐ.டி.)-க்கு எழுதினேன். இது உங்களுக்கு தெரிந்து நடந்ததா அல்லது ஸ்தல போலீசே செய்ததா என்று கேட்டேன். டி.ஐ.ஜி. யிடமிருந்து பதில் இல்லை. ஆகவே, ஸ்தல போலீசின் நோக்கம் நான் அவரை மறைத்து வைத்துள்ளேன் என்று ஜோடித்து புலன் விசாரணையைத் திசை திருப்பி உண்மைக் கொலைக்காரன் மறைத்து வைப்பது என்ற நோக்கம் ஸ்தல போலீசுக்கு இருக்கிறது என்று பலமான சந்தேகம் இருக்கிறது.

ஸ்தல போலீஸ் அதற்காக முதல் அமைச்சர் அவர்கள் அமைத்திருக்கக்கூடிய டீமிற்கு ஒத்துழைப்பு கொடுத்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். பல ஆண்டுகளாக ஆடு மாடுகளை திருடுவது, ஒரு டாக்டர் மகனை திருச்சியில் நான்கு வருடங்களுக்கு முன்பு கொண்டுபோய் விட்டார்கள். 'பார் ரான்சம்'. முப்பது வருடங்களாக அந்த காங் இருக்கிறது. ஸ்தல போலீஸ் அதை லிக்விடேட் செய்யவில்லை. ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள், அந்தக் கொள்ளையில் இவர்களுக்கும் பங்கு இருக்கிறது என்று.

ஆகவே, இது சீரியஸ் பிரச்னையாக இருப்பதால் சீராளன் விஷயத்தில் முதல் அமைச்சர் அவர்கள் எப்படி உறுதியான நடவடிக்கைகள் எடுத்தார்களோ—ஹரிஜன மக்கள் அழுது கொண்டிருக்கிறார்கள், அவர் மனைவி அழுது கொண்டிருக்கிறார்கள், ஹரிஜன மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள்—அதே போல் இதிலும் நடவடிக்கை எடுக்க முதல் அமைச்சர் அவர்களுக்கு வலிவு உண்டு என்று நம்புகிறேன். ஆகவே, இந்தச்

[திரு. ரா. உமாநாத்] [1978 சனவரி 9

சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஏறத்தாழ முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாக பொதுத்தொண்டு ஆற்றி வந்த அருமைத் தோழர் வெங்கடாசலம் அவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் பொதுவாழ்வில் பணியாற்றுகிற எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பெற்றவராவார்கள். அவர்கள் என் தொகுதியைச் [illegible]ந்தவர் என்ற முறையில் நான் நெடுநாட்களாக நன்கு [illegible]களை அறிவேன்.

அது மட்டுமல்ல. தொடக்க காலத்தில் அவர் திராவிடர் இயக்கத்தில் இருந்த காரணத்தினால் என்னுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார்கள்.

அதுமட்டுமல்ல. மிசா காலத்தில் ஏறத்தாழ ஓராண்டுக் காலம் என்னைப்போன்ற நண்பர்களுடன் உண்டிருக்கிறார்கள், உறங்கியிருக்கிறார்கள், உறவாடியிருக்கிறார்கள். ஆகவே அவரைப் பற்றி தெளிவாகச் சொல்லலாம், ஒரு நல்ல தொண்டர். ஒரு நல்ல தொண்டருக்கு பல முனைகளிலிருந்து எதிர்ப்புகள் இருப்பது இயல்பு என்று தோழர் உமாநாத் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அவர்கள் பூதலூர் புகைவண்டி நிலையத்தில் ஏறியிருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். சோழகம்பட்டியில் இறங்கியிருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் வீட்டுக்கு வந்து சேரவில்லை. போலீசில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலே உள்ள காவல் துறையைச் சார்ந்தவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்கள் என்றாலும் சரியான முடிவு தெரியவில்லை. அவரது துணைவியார் அவர் இறந்துவிட்டார் என்பதை நம்ப மறுக்கிறார்கள். இருந்தாலும் போலீசிலிருந்து செய்தி

1978 சனவரி 9] [திரு. கோ. இளங்கோவன்]

வந்த பிறகு பொட்டு அழிக்கப்படுகிறது. "கணவனை இழந்தவருக்கு காட்டுவது இல்" என்பதுபோல் எதைக் காட்ட முடியும்? இந்தச் சூழ்நிலையில் இது ஒரு பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது, பதட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

அது மட்டுமல்ல. தேவையில்லாமல் பலர் மீதும் சந்தேகப் படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

அதன் காரணமாக பெரிய காழ்ப்புணர்ச்சி வளர்ந்து வருகின்ற காரணத்தால் இதைத் தொடர்ந்து பல சம்பவங்கள் பரவக் கூடுமோ என்கின்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. பொது வாழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கே யாரும் முன் வர மாட்டார்கள், அந்த அளவுக்கு அஞ்சுகின்ற நிலையும் எந்த விதமான பாதுகாப்பும் இல்லாத நிலைமையும் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், இந்த அவையை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் வெந்தயம்பட்டியைச் சேர்ந்த மணிராசன் என்பவர் 25—9—1977 அன்று பூதலூர் காவல் நிலையத்தில் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் திரு. என். வெங்கடாசலம் என்பவரை 21—9—1977 இரவிலிருந்து காணவில்லை என்று ஒரு புகாரினை அளித்தார். அவர் கடைசியாக 21—9—1977 அன்று இரவு செங்கோட்டை பாசஞ்சர் ரயிலில் அய்யனாபுரம் ரயில் நிலையத்தில் காணப்பட்டார் என்றும் கூறி உள்ளார். பூதலூர் போலீசார் ஒரு வழக்கினை பதிவு செய்து உடன் அவரை தேடும் பணியில் ஈடுபட்டனர். மாவட்ட காவல் துறை மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், உள்ளூர் மார்க்சிஸ்ட் தலைவர்களிடம் தீவிர புலன் விசாரணை நடத்துவதையும் விளக்கி உள்ளார்கள்.

இந்த நிலையில் திரு. வெங்கடாசலம் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு அவருடைய சேவையின் மூலம் மிராசுதார்களின் வெறுப்பை தேடிக் கொண்டதாகவும், ஆகவே அவர்களின் கையாட்கள் மூலம் திரு. வெங்கடாசலம் கடத்திச் செல்லப்பட்டு

கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற ஒரு புகாரும் அரசுக்கு வந்தது. தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கங்களிடமிருந்தும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் இப் புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அரசுக்கு பல மனுக்கள் வரப்பெற்றன.

இந்தப் புகார்களின் அடிப்படையின் பேரில் விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அதற்காக இவ்வழக்கினை மாவட்ட போலீஸ் இலாகாவிடமிருந்து துப்பறியும் இலாகாவிற்கு மாற்றப் பட்டுள்ளது. சந்கேத்திற்குரிய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சில மிராசுதாரர்களை புலன் விசாரணை செய்யப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் திரு. வெங்கடாசலத்தாலும் பின்பு அவரது உறவினர்களாலும் பயமுறுத்தல் கடிதங்கள் பெறப் பட்டுள்ளன. இவையெல்லாம் அம்மாவட்டத்தைச் சேர்ந்த சில மிராசுதாரர்களின் தூண்டுதலின் பேரில் நடத்தப்பட்டவை என சந்தேகமுறப்படுகிறது. திரு. வெங்கடாசலம் மிராசுதார் களிடம் உள்ள உபரி நிலங்களை நிலமில்லா ஏழை எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வழங்க முயற்சி மேற்கொண்டதின் விளைவாகவே, இந்த மிராசுதாரர்கள் அவருக்கு எதிராக செயல்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.

தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் கண்டு பிடிக்கப் பட்டு அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று உறுதி கூறுகிறேன். புகார் இன்னும் விசாரணையில் இருந்து வருவதால் சம்பந்தப்பட்ட மிராசுதார்களின் பெயர்களை அவையில் அறிவிப்பது சரியாக இராது.

மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசும்போது பல தகவல்களை குறிப்பிட்டு ஒரு குறிப்பிட்ட காவல் நிலையம் இந்த வழக்கைப் பொறுத்தவரையில் சரியாக இருக்காதோ என்றும், அரசியல் ரீதியாக தன்னைக்கூட கண்காணித்தார்கள் என்றும், வழக்கு விசாரணை இப்படிப்பட்ட காரியங்களால் திசை திருப்பப்பட்டு விடுமோ, அதற்கான முயற்சிகள் நடைபெற்றிருக்குமோ என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப் போல் இதில் யார் குற்றவாளி என்பதை நிச்சயமாக கண்டுபிடித்து அவர்கள் நீதி மன்றத்திற்கு முன் நிறுத்தப்படுவார்கள். ஒரு அரசாங்கத்தின் முதல் கடமை, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு உயிருக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதை நாங்கள் நன்றாக உணருகிறோம். அரசியல் பொதுத் தொண்டில் ஈடுபடுகின்றவர் களுடைய—நண்பர் இளங்கோவன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல்—ஏழை எளிய மக்களுக்காக சேவை செய்யும் மக்களுக்கு —அப்படிப்பட்ட ஒருவருக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்—அது சாதாரண விஷயம் அல்ல.

என்னைப் பொறுத்தவரையில் தமிழக போலீசாரின் திறமைக்கு இது ஒரு சோதனை என்றுதான் எடுத்துக் கொள்வேன். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய தேவை யில்லை என்பதை தலைவர் அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால், இத்தீர்மானத் திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) அவசரகால நிலையின்போது கட்டாய ஓய்வளிக்கப்பட்ட அரசு ஊழியர்களை திரும்ப வேலைக்கமர்த்தப்படாததால் அவர்கள் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, "அவசர கால நிலையின்போது 1,500-க்கு மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் வலுக்கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யப்பட்டு அவசரக்காலம் நீக்கப்பட்ட பின்னும், திரும்ப வேலைக்கு அமர்த்தப்படாததன் விளைவாக நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு துன்பம்

ஏற்பட்டுள்ளது பற்றி" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி, (1) திரு. ஆர். உமாநாத், (2) திரு. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நீங்கள் கூறியபடி 1,500 பேர்கள் கட்டாயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தால்அல்ல, ஆனால் அதற்கு முன்னாலே அவசர காலத்தில் ஏற்பட்ட அரசாங்கம் செய்தது தான். ஆனால், இப்போது இதிலே சம்பந்தப்பட்டவர்களை திரும்ப வேலைக்கு எடுக்கின்ற பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு வருவதால், நான் இந்த தீர்மானத்தை, பிரச்னையை கிளப்பியிருக்கிறேன். அவசரகால நிலையைப் பயன்படுத்தி செயல்பட்ட இந்தச் சட்டத்தின்கீழ், செப்டம்பர் 1975 வரைக்கும் யாரையும் பிரிமெச்சூர் ரிடையர்மெண்ட் செய்யப்படவில்லை. 1975 ஆம் ஆண்டிலே பிரதமர் டெல்லியிலே தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டி, சப்ஜக்ட் டு கரெக்ஷன், அந்தக் கூட்டத்திலே தமிழ் நாட்டில் இன்னும் இந்த மாதிரி செய்யவில்லையே, நீங்கள் இப்படிச் செய்யாமல் இருப்பது சரியல்ல என்று சொல்லி, வற்புறுத்தியதின் பேரிலே, அதற்குப் பிறகு செப்டம்பர் 1975-லிருந்து ஜனவரி 1976-க்குள் 150 பேர்கள் தான் வேலையிலிருந்து பிரி-மெச்சூராக வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள்.

ஆனால், பிப்ரவரி, 1976-லிருந்து ஏப்ரல் 1977-க்குள் 1,400 பேர்கள் ஒல்-சேலாக, எவ்விதக் காரணமும் இல்லாமல், விளக்கமும் கேட்கப்படாமல் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி 'இந்து' பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கிறேன்,

"is evident from the representation to the Government a few days ago that these retirements were undertaken just to provide statistics in compliance with the political decision to create fear and terror in the minds of the employees. It has been now decided to

reinstate Central Government employees. It has asked the State Governments to review, as quickly as possible, the cases of the staff who have been discharged without going through the due process of law, by giving them a chance to defend themselves,"

இப்படி 'இந்து' பத்திரிகையிலே இதற்கு என்ன நோக்கம் என்பதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். நான் அதிலே ஜாஸ்தி போக விரும்பவில்லை.

ஆனால், இதன் விளைவாக 1,500 பேர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற ஹியூமன் ஆஸ்பெக்டை நாம் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு இதன் விளைவாக மகாதேவன் என்கின்ற ஒருவருக்கு இருதய மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டார். அதேபோல் ஒரு குடும்பத்திலே உள்ள ஒரு மனைவிக்கு ஹிஸ்டிரியா வியாதி ஏற்பட்டு இன்றைக்கு பைத்தியம் பிடித்து வீட்டில் இருக்கிறார். பலருடைய குடும்பங்களிலே மேரேஜ் அலையன்சுகள் நின்று போகக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

பின்னால் சென்றாக ஒரு ரெவியூ கமிட்டி என்ற ஹை லெவல் கமிட்டி ஒன்று போடப்பட்டது. இந்தக் கமிட்டியிலே யார் இருக்கின்றார்கள் என்று பார்த்தால், இப்படி பிரி-மெச்சூராக வீட்டுக்கு அனுப்புவதற்குக் காரணமாக இருந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தான் ஜாஸ்தியாக இருக்கின்றார்கள். அப்படியிருந்தால் இந்த கேஸ்கள் எல்லாம் பிழைக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த ரெவியூ கமிட்டி இதைச் செய்வதற்கு 2½ ஆண்டுகள் எடுத்துக் கொண்டது. அதற்குள் 60 சதவிகிதம் பேர்கள் ரிடையர் ஆகி விட்டார்கள். மிச்சம் இருக்கின்றவர்களிலே 98 சதவிகிதம் பேர்களை வீட்டிற்கு அனுப்பியது சரி என்று சொல்லிவிட்டார்கள். இது மாதிரியான நிலைமைதான் இங்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1978 சனவரி 9

ஆனால், இப்போது புதிதாக வந்துள்ள அரசு இவர்களையெல்லாம் திரும்ப எடுத்துக் கொள்ளலாம் என்று மாநில அரசாங்கங்களுக்கு அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி இன்றைக்கு கேரள அரசாங்கத்திலே பூரா பேர்களையும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் மேற்கு வங்காளம் எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உத்தரபிரதேசம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஜம்மு காஷ்மீர் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நம் சர்க்கார் இன்னும் எடுக்காமல் இருக்கிறார்கள். இதிலும், மற்றவர்களைப் போல் நம் அரசாங்கம் எடுத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

நம் அரசாங்கத்திலும் இதைப்பற்றி இரண்டு அமைச்சர்கள் ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 14 ஆம் தேதி தினத்தந்தியில் அமைச்சர் ராஜா முகமது அவர்கள் இந்த மாதிரியாக வீட்டுக்கு அனுப்பியவர்களை நாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மேலும் அப்படிப் பழி வாங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். அதேபோல் அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் மதுரையிலே இதைப்பற்றி ஆதரவாக கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைப் பற்றிகூட இந்தப் பேரவையின் தோழர் திரு. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார்கள்.

எனவே, அவர்கள் எல்லாம் எப்படி திருப்பி வேலைக்கு எடுத்து [illegible] நிலைமையைச் சமாளித்திருக்கின்றார்களோ, அதேபோல் நாமும், நம் சர்க்காரும் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். [illegible] நாம் எல்லோரும் ஒருமைப்பாடாக ஒன்றுபட்டு, [illegible] வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை [illegible] சொல்லுகிறேன். இது சம்பந்தமாக தீர்மானத்தை [illegible] அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உங்கள். .

1978 சனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே எல்லோருக்கும் ஒருமைப்பாடு இருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். ஆகவே, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத்: கடைசியாகச் சொல்லுகிறேன். இதிலே [illegible]க்கு இடம் இல்லை. [illegible], ஆர். அருணாசலம், செங்கோடன் ஆகியவர்கள் எல்லாம் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே சர்க்கார் எடுத்த முறை சரியா அல்லவா என்பது பற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் பேச அழைக்கப்பட்டு பின்னர் அவர் தீர்மானத்தில் [illegible] உறுப்பினரும் அவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர் என்ற நிலையில் மாண்புமிகு அமைச்சர் அழைக்கப்பட்டார்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கட்டாய ஓய்வுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை 1,500 என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். நல்ல வேளையாக அது 1,500 என்று இல்லாமல் 651 பேர்தான் என்பதில் அவர்கள் மனநிறைவு கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த 651 பேரில் அரசிதழ் பதிவு பெற்றவர்கள் 257 பேர்; அரசிதழ் பதிவு பெறாதவர்கள் 394 பேர். ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதியிலிருந்து நெருக்கடி நிலை காலத்தில் இவர்கள் எல்லாம் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறார்கள். அடிப்படை விதி ஃபண்டமென்டல் ரூல்ஸ் 56-டி யின்படி இந்தக் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதி மூன்று அம்சங்களைச் சொல்லுகிறது.

ஒன்று, நேர்மையாக இருந்தாலும்கூட அந்த அதிகாரி உடல்நிலை காரணமாகவோ, மனநிலை காரணமாகவோ தான் வகிக்கக்கூடிய பொறுப்பை நிறைவேற்ற முடியாத நிலைக்கு ஆளாகியிருக்கும் அத்தகையவர்கள். இரண்டாவது, அடிக்கடி லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கோ அல்லது ஊழல் புகார்களுக்கோ உள்ளாக்கப்பட்டிருக்கும் அத்தகையவர்கள். அதற்கு அடுத்த

படியாக, கீழ்நிலையில் திறமையாகப் பணியாற்றினாலும்கூட மேல் நிலையில் தாங்கள் வகிக்கின்ற பொறுப்புகளுக்கேற்ப திறமை போதாது இருக்குமானால் 'இன்-அடிக்வசி' அத்தகையவர்கள் அந்தப் பொறுப்பில் தொடர்ந்து மூன்று, ஐந்து ஆண்டுகள் இருந்தால் அவர்கள் கட்டாய ஓய்வுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

கட்டாய ஓய்வுக்கு ஆளாக்கப்படுகிறவர்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று கருதினால் அந்த முறையில் உத்தரவு கொடுத்தவுடன் ஒரு மாதத்திற்குள் மேற்கொண்டு அப்பீல் போடலாம். அதற்காக அரசாங்கத்தின் சார்பில் ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றாலும் தலைமைச் செயலாளர், செகண்ட் செகரடரி, உள்துறைச் செயலாளர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அவர்களுடைய முறையீட்டின்பேரில் ஆய்வு செய்யப்படுகிறது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடக்கூடாது, வேறு யாரையாவது போடலாம் என்று வந்துவிடுமானால் அரசியல் காரணங்கள் பிற்பாடு வந்துவிடக்கூடும்.

திரு. ரா உமாநாத் : எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்களை வெளியே அனுப்பினாரோ அதே அதிகாரிகளைப் போடக்கூடாது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உயர்மட்டக் குழுவில் அந்த நிலைமை இல்லையென்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் 391 பேர் தங்களை வெளியே அனுப்பியதுபற்றி மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று விண்ணப்பங்களை அனுப்பி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்டுக் கொள்ளப்பட்ட மனுக்களில் 248 மனுக்கள் இந்த உயர் மட்டக் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 41 பேர் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 207 பேர் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மறு ஆய்வு செய்ய வேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 143.

இதற்கிடையில் இந்திய அரசானது அண்மையில் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. தரம் என்று நிர்ணயிக்கும் போது 'ஓவர் ரிகரஸ் ஸ்டாண்டர்ட்ஸ்'—அதிகமான தகுதியையும் தரத்தையும் எதிர்பார்த்து அதன் காரணமாகக் கட்டாய ஓய்வுக்கு ஆளாக்கப்பட்டிருந்தாலும், அல்லது தனிப்பட்ட அல்லது அரசியல் காரணங்களுக்காக—பர்சனல் ஆர் பொலிடிகல்—பழிவாங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகையவர்கள் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நம்முடைய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இதற்காகத் தனியாகக் குழு போட்டு பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. மத்திய அரசின் இந்த யோசனை அரசின் ஆய்விலுள்ளது. இந்த விஷயங்கள் அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்ற காரணத்தால், இதிலே அவசரமோ, பொதுமுக்கியத்துவமோ அமைந்துவிடவில்லை; ஆகவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கப்படத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10-30]

(4) அமைச்சரின் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கு அளித்த விடையை திருத்தி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2—1—1978 தேதியன்று பேரவையில் வினா எண் :139, 140 ஆகியவற்றிற்கு விடையளிக்கப்பட்டபோது எழுப்பப்பட்ட துணை வினாவுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அளித்த விடையைத் திருத்தி அறிக்கை ஒன்றை அவர்கள் அளிப்பார்கள்.

[1978 சனவரி 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 2—1—1978 அன்று சட்டமன்றப் பேரவை வினா எண்கள் 139, 140 விடையளிக்கப்பட்டபோது எழுப்பப் பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 125 விலை அளிப்பதாகக் கூறினேன். சேலம், அமராவதி. ஆம்பூர் கூட்டுறவுக் கரும்பாலைகள் முறையே ரூபாய் 125, ரூபாய் 125, ரூபாய் 127 டன் ஒன்றுக்கு கொடுக்க உத்திரவு இடப்பட்டுள்ளது. மற்றக் கூட்டுறவு ஆலைகள் அளிக்கக்கூடிய விலை இன்னும் பரிசீலனையிலிருந்து வருகிறது. உத்திரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(5) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 41 (3) இன் கீழ் ஓரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக்கூடாது என்று விதியை இன்று தளர்த்த வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(6) கவன ஈர்ப்பு

(அ) பொதுப்பணித்துறைலிருந்து நீக்கப்பட்ட டிப்ளமோ இளம் பொறியாளரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து 12 உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய

1978 சனவரி 9] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பெயர்களை நான் படித்துவிட்டு அந்த அறிவிப்பையும் நான் படித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு கேள்வி கேட்கலாம்.

திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், மு. அம்பிகாபதி,
ஏ. ஆர். மாரிமுத்து, ரா. உமாநாத், எஸ். ஜே. சாதிக் பாட்சா,
துரை முத்துசாமி, கு. ரமணி, ஜே. ஜேம்ஸ், ர. ஜெபமணி,
சி. பழனிமுத்து, க. கந்தசாமி, ஏ. ரகுமான்கான் ஆகியோர்
"பொதுப்பணித் துறையில் பணியாற்றி, வேலை நீக்கம் செய்யப்
பட்ட 165 டிப்ளமோ இளம் பொறியாளர்களை மீண்டும் வேலைக்கு
எடுத்துக்கொள்ள வேண்டியது பற்றி" ஒரு அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்
கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பொதுப்பணித் துறையில், உதவிப் பொறியாளர்கள் (பட்டம் பெற்றவர்கள்) மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் (தகுதிப் பட்டயம் பெற்றவர்கள்) பதவிக்கானத் தேர்வு, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் செய்யப்பட விருக்கின்றன. எங்கு தேர்வு ஆணைக் குழுவினால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் கைவசமாக இல்லையோ, அங்கு அப்பதவிகள் எல்லாம், தமிழ் நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிமுறைகளின் விதி 10- அ (1)-ன்படி தாற்காலிக அடிப்படையில் பூர்த்தி செய்யப் படுகின்றன. இவ்விதியின் கீழ் இவ்வாறு தாற்காலிகமாகப் பதவியிலமர்த்தப்பட்டவர்கள், முறைப்படி தேர்ச்சிப் பெற்ற வர்கள் வருகின்ற பொழுது, அவர்களால் ஈடு செய்யப்படுவார்கள். தாற்காலிகமாகப் பணியிலமர்த்தப்பட்டவர்களுடைய பணிகள், எந்தகைய அறிவிப்பும், காரணங்களின்றியும், எந்நேரத்திலும் முடிவு எல்லைக்கு உட்படுத்தப்படும் என்று இவ்விதி மேலும்

பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் முறைப்படி தேர்ச்சிப் பெற்றவர்கள் போதிய அளவு இல்லாமையினால், தற்காலிக அடிப்படையில் இளநிலைப் பொறியாளர்களையும், உதவிப் பொறியாளர்களையும் நியமித்துக் கொண்டேயிருக்கிறார். 3—4—1971-ல் வகையிலான தற்காலிக உதவிப் பொறியாளர்களும், இளநிலைப் பொறியாளர்களுமாக மொத்தம் 903 பேர் இருந்தனர். 12—2—1971 தேதியிட்ட, பொதுப்பணித்துறை அரசு ஆணை 440-ன் படி, பொதுப்பணித் துறையில் தாற்காலிகமாகப் பணியாற்றுகின்ற இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர்களுக்குத் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் சிறப்புத் தேர்வு நடத்துவதற்கு, அரசு வகை செய்தது, துறையில், ஓராண்டிற்கு குறைவில்லாமல் பணியாற்றியவர்களுக்கே இச் சிறப்புத் தேர்வு என அரசு வரையறுத்தது. அதன் விளைவாக, அப்போது துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த 903 பேரில், 532 பேர் மட்டுமே, இச் சிறப்புத் தேர்வுக்கு செல்லத் தகுதியுடையவர்களாய் இருந்தார்கள். அதிலும், சிறப்புத் தேர்வுக்கு வருகை தந்த 470 பேர்களுள், 450 பேர் மட்டுமே தேர்ச்சிப் பெற்றார்கள். இவ்வாறாக இருந்த போதிலும், இம் முறைப்படி தேர்வு பெறாதவர்களும் தொடர்ந்து தாற்காலிகமாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். மேலும், தாற்காலிக நியமனமும் தொடர்ந்து செய்யப்பட்டு வந்தன.

1971 ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 1974 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினரால் முறைப்படியான தேர்வும் நடத்தப்பட்டது. அவ்வமயம், 453 பேர் துறையில் தாற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். 398 பேர் தேர்வாணைக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; அவர்களுள் 340 பேர் துறையிலேயே தாற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்.

மறுபடியும், 1975 ஆம் ஆண்டு சனவரித் திங்களில், தலைமைப் பொறியாளரால் 590 காலியிடங்களுக்கு முறைப்படி தேர்வு நடத்துவதற்குத் தேர்வு ஆணைக்குழு கேட்டுக் கொள்ளப்

ட்டது. அவ்வமயம், துறையில், தாற்காலிகமாகப் பணியாற்றுவர்கள் 693 பேர் இருந்தனர். 584 பேரைத் தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுக்க, அவர்களுள் 246 பேர் துறையிலேயே தாற்காலிகமாகப் பணியாற்றுபவர்களாக இருந்தார்கள். தேர்வாணைக்குழு, தலைமைப் பொறியாளருக்கு, இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுள் தேர்ச்சியுற்றோர் பட்டியலை முறையே 1—1—1977, 10—6—1977 ஆகிய நாட்களில் தெரிவித்தது. 10—6—1977-ல் பதவியேற்ற இன்றைய அரசுக்கு, இவ்வாறாக, முறைப்படி தேர்ச்சிப் பெற்றவர்களைப் பதவியில் நியமிப்பதைத் தவிர வேறு எவ்வித விருப்ப உரிமைக்கும் இடமில்லாமல் போய் விட்டது. தேர்வாணைக் குழு 444 உதவிப் பொறியாளர்களையும் 40 இளநிலைப் பொறியாளர்களையும் ஒதுக்கீடு செய்தது: இதில் 45 உதவிப் பொறியாளர்களும், 101 இளநிலைப் பொறியாளர்களும் ஏற்கனவே துறையில் தாற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்; எஞ்சிய 299 உதவிப் பொறியாளர்களும், 39 இளநிலைப் பொறியாளர்களும் வெளியிலிருந்து வந்தவர்கள். இவ்வாறு வெளியிலிருந்து வந்த 338 பேரைப் பணியில் அமர்த்துவதற்காகத் துறையிலுள்ள காலியிடங்களுக்கான கணக்கீடுகளுக்குப் பின்னர், 79 தாற்காலிக இளநிலைப் பொறியாளர்களை ஆட்குறைப்பு செய்ய வேண்டியிருந்தது.

பெரியாறு, வைகை புதுப்பிக்கும் திட்டத்தின் பொருட்டு, கூடுதலான பதவியிடங்களை ஏற்படுத்தியதன் விளைவாக, ஆட்குறைப்புக்கு ஆளான இளநிலை பொறியாளர்களை மறுபடியும் பதவியில் சேர்த்துக் கொள்ள, அரசு இப்பொழுது (தற்சமயம்) முடிவெடுத்திருக்கின்றது. விகிதாச்சார முறைப்படி, தகுதிப் பட்டயம் மற்றும் பட்டம் பெற்றவர்களைப் பணியில் எடுத்துக் கொள்ளுவதற்கான முடிவெடுப்பு நிலுவையிலேயே உள்ளதால், இத்தாற்காலிகப் பணியாளர்களின் பணித் தொடர்ச்சி, அதற்கென அமைக்கப்பட்ட இத்தாற்காலிக அமைப்பிலேயே முற்றிலும் அமைந்துள்ளது.

இதிலே, என்ன நேர்ந்து விட்டது என்றால், ஒவ்வொரு முறையும் தேர்வு நடந்தபொழுது, அப்பொழுதே தற்காலிகமாக வேலையில் அமர்த்தப்பட்டவர்களை அனுப்பிவிட்டிருக்கவேண்டும். 1971-லே தேர்வு நடந்திருக்கிறது, 1974-லே தேர்வு நடந்திருக்கிறது, 1975-லே தேர்வு நடந்திருக்கிறது. அப்படி நடந்திருந்தும், இன்றைக்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக, 6 ஆண்டுகளுக்கு மேலாக, தற்காலிகமாக இருக்கிறார்கள் என்றால், அப்படித் தற்காலிகமாக இருந்தவர்களை அப்படியே வைத்துக்கொண்டிருந்து விட்டார்கள். இப்பொழுது என்ன நிலைமை என்றால், கிட்டத்தட்ட 750 பேர்கள் இன்றைக்கும் தற்காலிகமாக இருக்கிறார்கள். அவர்களை எந்த அளவு கூடுதல் பணியிலே, மேற்கொள்கின்ற திட்டங்களிலே அவர்களைத் தற்காலிகமாக வைத்துக்கொள்ள முடியுமோ, அந்த அளவு அப்படியே வைத்துக்கொண்டு, இதிலே, சிலர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களையும் வைத்துக்கொண்டு—நாங்களும் அந்த எண்ணிக்கையைக் குறைத்துக் குறைத்துப் பார்த்து, இறுதியில் 79 பேரை ஒன்றும் செய்ய முடியாத நிலையிலேதான், அவர்களை அனுப்பவேண்டி வந்ததே தவிர, வேறல்ல.

அதுவும், உண்மையைச் சொல்வதானால், அந்த 79 பேரிலே 5 ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் உள்ளவர் 11 பேர்; 4 ஆண்டுகளுக்கு மேல் 5 பேர்; 3 ஆண்டுகளுக்கு மேல் 18 பேர்; 2 ஆண்டுகளுக்கு மேல் 14 பேர்; ஒரு வருடத்திற்கு மேல் ஒருவர். ஆக, இந்த 79 கூடக் குறிப்பாக, 1974, 1975 ஆண்டுகளிலே அதிகமான அளவுக்கு எடுத்திருக்கிற காரணத்தாலே, அப்படியிருக்கிறது. இதை எந்த அளவுக்குத் தீர்க்க முடியும் என்பதைப்பற்றியும், இந்த மாதிரி நிலைமையிலே நிறைய பேர் இருந்துவிடக் கூடாது என்பதைப் பற்றியும், இன்னும் சொல்லப்போனால், 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் இப்படி தற்காலிகமாக வேலை செய்தவர்கள் பின்னால், நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர்களுக்கு அந்தத் தற்காலிக வேலைக் காலம், பணிக் காலம் கூட கிடைக்காத காரணத்தால், அதைப் பற்றி நன்றாக ஆலோசித்து, இந்த டிப்ளமா துறைகளுக்கு வருபவர்கள், டிகிரி துறைகளுக்கு வருபவர்கள் ஆகியோரது பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை நிதி நிலை அறிக்கையை 1 மணிக்குள் முடித்தாகவேண்டும். இதிலே, கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிக்கை கொடுத்திருக்கிற அத்தனைபேர்களும் ஒவ்வொருவரும் ஒரு சந்தேகத்தை எழுப்புவார்களானால், அதுவே 1 மணி நேரத்தை எடுத்துக் கொள்ளும். தயவு செய்து, அவர் சொன்ன முழுமையானவிளக்கத்திற்குப் பிறகு எந்தக் கேள்வியும் எழ நியாயம் இல்லை. தயவுசெய்து ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும்.

திரு. மு. அம்பிகாபதி: எனக்கொரு சந்தேகம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா சந்தேகங்களுக்கும் தான் அவர் விளக்கம் கொடுத்துவிட்டார். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் பட்டியலில் உங்களுடைய பெயரும் நிச்சயமாக இருக்கிறது. ஆகவே, உங்களுடைய பெயர் நிச்சயமாக இதிலே வரும். உங்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்த்து, இதை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நீலகிரி மாவட்டத்திலே, கே. டியிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி தாங்கள் 8.55-க்குதான் அறிவிப்பு தந்தீர்கள். அதை விளக்கத்திற்காக அனுப்பியிருக்கிறேன். நாளை எழுப்புங்கள் என்று சொன்னேன். நாளைக்கு அது இங்கே வருவதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். நாளைக்கு வரும் என்று உங்களிடம் ஏற்கனவே சொன்னேன். நாளைக்கு வரும். தயவுசெய்து அமருங்கள்.

திரு. சி. ஆறுமுகம்: ஆன் எ பாயிண்ட் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதையும் கொடுக்கவில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டருக்கே நியாயம் இல்லை.

(ஆ) துரிஞ்சாபுரம் நிலவள வங்கி ஆயில் இன்ஜின் வாங்க கொடுத்த கடனை வாங்க மறுத்த விவசாயிகளின் கடனை ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, "1976-77 ஆம் ஆண்டுகளில் திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம் நிலவள வங்கிகளில் விவசாய வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்ட கடன்களில் மின் இணைப்பு கிடைக்காததன் காரணமாக ஆயில் என்ஜின் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டும் வாங்க மறுத்த விவசாயிகளின் மொத்த கடனையும் ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படுவதால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க தக்க நடவடிக்கை எடுப்பது குறித்து" மாண்புமிகு வருவாய் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கடன் தவணைகளை மூன்று மாதங்களுக்கு மேல் உபயோகப் படுத்தாமல் இருக்கும் இனங்களில் அதிக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டது. ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள கடன்கள், அவ்வாறு உபயோகப்படுத்தப்படாமலோ அல்லது முடிவு கட்டப் படாமலோ இருந்தால் மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களுக்கு அளிக்கும் உதவியை நிறுத்திவிட ரிசர்வ் வங்கி உத்தேசித்தது. ஆகையால், ரிசர்வ் வங்கியின் யோசனைப்படி, ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள கடன்களில் மாநிலம் முழுவதும் எல்லா நிலவள வங்கிகளும் நடவடிக்கை எடுத்தன.

மின்சார பம்புசெட்டுகளுக்குக் கடன் வழங்குவது கடுமையான மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக 1973 அக்டோபரிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீண்டும் தொடங்கப்பட்டது. அதன்படி மின் பம்புசெட்டுக்கான மூன்றாவது தவணைக் கடன் ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப் படுத்தப்படாமல் இருந்தால் இந்த இனங்களில், தொழில் நுட்ப ரீதியாக டீசல் பம்புசெட்டு பொருத்துவது சாத்தியமானால்,

கடன்தாரர் அவ்வாறு பொருத்தலாமென்றும், அது முடியா விட்டால் அக்கிணற்றைக் கபிலைக் கிணறாக மாற்றுவது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்றும்; கடன்தாரர் சம்மதித்தால் மட்டுமே மேற்சொன்ன இரண்டு நடவடிக்கைகள் எடுக்கலாமென்றும் அறிவுறுத்தப்பட்டது. இவ்விரண்டு வழிகளும் சாத்தியப்படாவிட்டால், அந்த பம்புசெட்டுகளுக்கு முதலிடம் கொடுத்து மின் இணைப்பு கொடுக்கலாமென்று அறிவுரை வழங்கப்பட்டது.

டீசல் செட்டுகளைப் பொருத்துவதற்கோ, அல்லது கிணறுகளைக் கபிலைக் கிணறுகளாக மாற்றுவதற்கோ கடன்தாரர்கள் விருப்பப்படாவிட்டால், மின் இணைப்புப் பெறுவதற்காக அவர்களுக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுக்கலாமென அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட மூன்று வழிகளுக்கும் அவர்கள் தயாராக இல்லாவிட்டால், அவர்களது கடன்கள் முடிவு கட்டப்படும். அவ்வாறு முடிவு கட்டப் பட்டாலும் மின் பம்புசெட்டுகளுக்கு மின் வாரியத்தால் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டால் அக்கடன்களைத் திரும்ப வழங்க முடியும்.

30—6—1975 அன்று, டீசல் செட்டுகளைப் பொருத்துவதற்கோ அல்லது கபிலைக் கிணறுகளாக மாற்றுவதற்கோ தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமாக இருந்தும், திருவண்ணாமலை நிலவள வங்கியில் 93 கடன்தாரர்களும், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 23 கடன்தாரர்களும் ஓராண்டுக்கும் மேலாக அதற்கு இணங்காமல் இருந்தனர். இவற்றில், திருவண்ணாமலை நிலவள வங்கியில் 35 கடன்களும், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 2 கடன்களும் தீர்க்கப்பட்டன. மின் இணைப்பு பெற்றதால், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 5 கடன்கள் திரும்ப வழங்கத் தயாராக உள்ளன. மீதமுள்ள இனங்களில் இவ்விரு வங்கிகளிலும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 30—6—76 அன்று முடிந்த ஆண்டில் இம்மாதிரி கடன்கள் இவ்விரு வங்கிகளிலும்

(ஆ) துரிஞ்சாபுரம் நிலவள வங்கி ஆயில் இன்ஜின் வாங்க கொடுத்த கடனை வாங்க மறுத்த விவசாயிகளின் கடனை ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, "1976-77 ஆம் ஆண்டுகளில் திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம் நிலவள வங்கி களில் விவசாய வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்ட கடன்களில் மின் இணைப்பு கிடைக்காததன் காரணமாக ஆயில் என்ஜின் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டும் வாங்க மறுத்த விவசாயிகளின் மொத்த கடனையும் ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படு வதால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க தக்க நடவடிக்கை எடுப்பது குறித்து" மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கடன் தவணைகளை மூன்று மாதங்களுக்கு மேல் உபயோகப் படுத்தாமல் இருக்கும் இனங்களில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக்கொண்டது. ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள கடன்கள், அவ்வாறு உபயோகப்படுத்தப்படாமலோ அல்லது முடிவு கட்டப் படாமலோ இருந்தால் மாநில நிலவள வங்கியின் கடனீட்டுப் பத்திரங்களுக்கு அளிக்கும் உதவியை நிறுத்திவிட ரிசர்வ் வங்கி உத்தேசித்தது. ஆகையால், ரிசர்வ் வங்கியின் யோசனைப்படி, ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள கடன்களில் மாநிலம் முழுவதும் எல்லா நிலவள வங்கிகளும் நடவடிக்கை எடுத்தன.

மின்சார பம்புசெட்டுகளுக்குக் கடன் வழங்குவது கடுமை யான மின்சாரப் பற்றுக்குறையின் காரணமாக 1973 அக்டோபரி லிருந்து நிறுத்தி வைக்கப்பட்டு, 1976 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீண்டும் தொடங்கப்பட்டது. ஏதன்பேரில் மின் பம்புசெட்டுக் கான மூன்றாவது தவணைக் கடன் ஓர் ஆண்டுக்கு மேல் உபயோகப் படுத்தப்படாமல் இருந்தால் இந்த இனங்களில், தொழில் நுட்ப ரீதியாக டீசல் பம்புசெட்டு பொருத்துவது சாத்தியமானால்,

கடன்தாரர் அவ்வாறு பொருத்தலாமென்றும், அது முடியா விட்டால் அக்கிணற்றைக் கபிலைக் கிணறாக மாற்றுவது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்றும்; கடன்தாரர் சம்மதித்தால் மட்டுமே மேற்சொன்ன இரண்டு நடவடிக்கைகள் எடுக்கலாமென்றும் அறிவுறுத்தப்பட்டது. இவ்விரண்டு வழிகளும் சாத்தியப்படாவிட்டால், அந்த பம்புசெட்டுகளுக்கு முதலிடம் கொடுத்து மின் இணைப்பு கொடுக்கலாமென்று அறிவுரை வழங்கப்பட்டது.

டீசல் செட்டுகளைப் பொருத்துவதற்கோ, அல்லது கிணறுகளைக் கபிலைக் கிணறுகளாக மாற்றுவதற்கோ கடன்தாரர்கள் விருப்பப்படாவிட்டால், மின் இணைப்புப் பெறுவதற்காக அவர்களுக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுக்கலாமென அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட மூன்று வழிகளுக்கும் அவர்கள் தயாராக இல்லாவிட்டால், அவர்களது கடன்கள் முடிவு கட்டப்படும். அவ்வாறு முடிவு கட்டப் பட்டாலும் மின் பம்புசெட்டுகளுக்கு மின் வாரியத்தால் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டால் அக்கடன்களைத் திரும்ப வழங்க முடியும்.

30—6—1975 அன்று, டீசல் செட்டுகளைப் பொருத்துவதற்கோ அல்லது கபிலைக் கிணறுகளாக மாற்றுவதற்கோ தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமாக இருந்தும், திருவண்ணாமலை நிலவள வங்கியில் 93 கடன்தாரர்களும், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 23 கடன்தாரர்களும் ஓராண்டுக்கும் மேலாக அதற்கு இணங்காமல் இருந்தனர். இவற்றில், திருவண்ணாமலை நிலவள வங்கியில் 35 கடன்களும், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 2 கடன்களும் தீர்க்கப்பட்டன. மின் இணைப்பு பெற்றதால், துரிஞ்சாபுரம் நிலவள வங்கியில் 5 கடன்கள் திரும்ப வழங்கத் தயாராக உள்ளன. மீதமுள்ள இனங்களில் இவ்விரு வங்கிகளிலும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 30—6—76 அன்று முடிந்த ஆண்டில் இம்மாதிரி கடன்கள் இவ்விரு வங்கிகளிலும் இல்லை.

958 துரிஞ்சாபுரம் நிலவள வங்கி ஆயில் இன்ஜின் வாங்க கொடுத்த கடனை வாங்க மறுத்த விவசாயிகளின் கடனை ஒரே தவணையில் செலுத்த வற்புறுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து

நிலவள வங்கிகள் மின் வாரியத்துடன் இணைந்து செயல்பட்டு பம்புசெட்டுகளின் ஆதாயத் தன்மையை அறிந்த பிறகு மின் பம்பு செட்டுகளுக்கான கடன்களை வழங்குகின்றன. 1976-77 ஆம் ஆண்டு, திருவண்ணாமலை துரிஞ்சாபுரம் நிலவள வங்கிகள் டீசல் பம்புசெட்டுகளுக்கு 122 கடன்களும், மின் பம்புசெட்டுகளுக்கு 9 கடன்களும் ஆக 131 கடன்கள் வழங்கியுள்ளன. இந்த வங்கிகள் கடன்தாரர்களை டீசல் செட்டுகள் வாங்குவதற்குக் கட்டாயப் படுத்தவில்லை. மின் வாரியம் மின் இணைப்புக் கொடுக்க முடிந்தால் நிச்சயமாக இந்த வங்கிகள் கடன்தாரர்களுக்கு மின்சார பம்புசெட்டுகளுக்காக கடன் வழங்கும்.

(முற்பகல் 10-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் மின் இலாகாவால் அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முடியாத சூழ்நிலையால், ஏற்கனவே அந்தப் பகுதியில் இரண்டு மூன்று ஆண்டுகளாக இருந்த வறட்சி காரணமாக சில விவசாயிகள் மற்ற வேலைகள் செய்வதில் காலதாமதம் செய்து விட்டார்கள். இந்த ஆண்டு மழை பெய்து இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அப்படிப்பட்ட விவசாயிகளின் பட்டியலைப் பெற்று அவர்களுக்கு மின் இணைப்பு தருவதற்கு முன் உரிமை அளிக்க மின்சார வாரியத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, அந்த மின் இணைப்பு தடைபட்டதால், அங்கே ஆயில் இன்ஜின் வாங்க மறுத்த விவசாயிகளை பெற்ற கடனைச் செலுத்த அதிகமான தவணை கோருகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு கடனைக் கொடுக்கவும், கடன் தவணையை நீட்டவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரே நேரத்தில் அந்தக் கடனை வசூலிக்க ஆரம்பித்தால் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் கட்ட முடியாமல் கஷ்டப்படுவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கல் ஊராட்சி மன்றம் வீட்டு வரியை திடீரென உயர்த்தியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கல் ஊராட்சி மன்றம் வீட்டு வரியை திடீரென உயர்த்தியதின் காரணமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திருவாளர்கள் நா. பழனிவேல், என். வரதராசன், கோ. ராமசாமி, ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொண்டு வந்துள்ளனர்.

***திரு. என். வரதராசன்:** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் திருத்தங்கல் ஊராட்சி மன்றம் வீட்டு வரியை திடீரென உயர்த்தியதன் காரணமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, திருத்தங்கல் ஊராட்சி 1966 ஆம் ஆண்டில் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1968-69-க்குப் பின்னர் வீட்டு வரி திருத்தி அமைக்கப்படவில்லை. 1976-77 இல் வீட்டு வரி திருத்தி அமைக்கப்பட்டது. ஆண்டு வாடகை மதிப்பின் மீது வரி விதத்தை 10 சதவிகிதம் அதிகரிப்பதன் மூலம் வீட்டு வரி மதிப்பிடப்பட்டது. வீட்டு வரி மதிப்பீடு செய்யும்போது, குடிசைகள், ஓட்டு வீடுகள் ஆகியவை விட்டுவிடப்பட்டன. இவ்வாறாக ஏழை மக்களுக்கு வரி விதிக்கப்படவில்லை, 1,440 மறு ஆய்வு மனுக்கள் வீட்டு வரி திருத்தி அமைப்பதற்காக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சிவகாசி, கோட்ட வளர்ச்சி அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டு, உண்மையாகவே வரி குறைக்கப்பட வேண்டியவர்களுக்கு வரியைக் குறைத்தார். திருத்தங்கல் பேரூராட்சியில் வீட்டு வரியை உயர்த்தியது முறையாக உள்ளது. வரியைத் திருத்தியமைக்காமல் பேரூராட்சியின் அன்றாட நிர்வாகத்தை நடத்த இயலாமல் போனதால் அதன் நலனைக் கருதியே வீட்டு வரி உயர்த்தப்பட்டது.

சாத்தூர் வட்டத்தில் வரி செலுத்துவோர் சங்கத்தின் ஒரு பகுதியினரும், அரசியல்வாதிகளும் ஏற்படுத்திய அனைத்துக் கட்சிக் குழு ஒன்று, திரு. வி. கே. வேதமூர்த்தியின் தலைமையில் 27—12—77 அன்று கடையடைப்பு செய்யப் போவதாகவும், 28—12—77 அன்று பேரூராட்சி அலுவலகம் முன்பாக மறியல் நடத்தப் போவதாகவும் தெரிவித்து துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டது. சிவகாசி வருவாய்க் கோட்ட அதிகாரியும், சிவகாசி கோட்ட வளர்ச்சி அதிகாரியும் குழுப் பிரதிநிதிகளை திருத்தங்கல் பேரூராட்சி அலுவலகத்தில் 26—12—77 அன்று சந்தித்தனர். அவர்களுடைய குறைகளும், முறையீடுகளும் மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்றும், குறைகளைப் போக்க அவர்கள் தனித்தனியே மனுக்கள் கொடுக்கலாம் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், குழுவில் இருந்தவர்கள் இதற்குச் செவி சாய்க்காமல், 27—12—77 அன்று ஊர்வலம் எடுத்தனர். 28—12—77, 29—12—77, 30—12—77, 31—12—77 அன்று மறியல் செய்தனர். அதற்குப் பிறகு நிலைமை அமைதியாக இருப்பதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். அவருடைய அடுத்த அறிக்கையில் கிளர்ச்சி 1—1—78 அன்று நிபந்தனையின்றி கைவிடப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. என். வரதராசன்: தலைவரவர்களே, பேரூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டு அவர்கள் இதைச் செய்வது முறையாக இருக்கும். பேரூராட்சிகள், இன்றையதினம் ஒரு பேரூராட்சி என்ற காரணத்தாலேயே தங்களுடைய வரவு-செலவை நிறைவு செய்து கொள்ள முடியாத நேரத்தில் இப்படிப்பட்ட வரிகளை உயர்த்துகிறது. இதைப் பற்றியெல்லாம் ஆலோசிக்க ஓரளவு இன்னும் குறைந்தது 6 மாத கால அளவுக்கு தள்ளிப் போட அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இருவர் கேள்வி கேட்டவுடன் அமைச்சர் விளக்கம் சொல்லலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, வீட்டு வரி சம்பந்தமாக தனித்தனியாக மனுக்கள் கொடுக்கப்பட்டது. அவைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன என்றார்கள். தண்ணீர் வரி உயர்வும் அதோடு சேர்ந்த ஒரு விவகாரம். ஆக தனித் தனியாக மனுக்களைக் கேட்டு அந்தக் காரியத்தை நடத்துவதை விட, மொத்தமாக டாக்ஸ் ரிவிஷன் செய்வதற்கு உள்ள உத்திரவை அரசாங்கம் போட்டால், தனித் தனியாக ஒவ்வொரு மனுவிற்கும் 1 ரூபாய், 2 ரூபாய் என்று கட்டணம் கட்ட வேண்டியதை தவிர்க்க முடியும். ஆக, மொத்தமாக 'டாக்ஸ் ரிவைஸ்' செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நியாயத்திற்கு விரோதமாக வரி உயர்த்தப்பட்டிருந்தால் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம் என்பதை அரசு உணரும். ஆனால் குறிப்பிடப்பட்டிருக்கிற திருத்தங்கல் பேரூராட்சி வரி உயர்வைப் பற்றியது. அதை நானே நேரடியாகப் பரிசீலித்துப் பார்த்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், பேரூராட்சித் தலைவரிடமும், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடமும் இது குறித்துப் பேசியிருக்கிறேன். அங்கே ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டது போல, தண்ணீர் வரி உயர்வைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து முடிவெடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் மொத்தமாக வரியைக் குறைப்பது நடைமுறைக்கு ஒத்துவராது.

(ஈ) வாசுதேவநல்லூர் தொகுதியில் சில கிராமங்களில் நோயுற்ற கறவை மாடுகளுக்கு தக்க சமயத்தில் ஊசி போட மருந்து இல்லாததால் பல மாடுகள் இறந்துவிட்டதால் கறவை மாடுகள் கிடைக்க ஏற்பாடு செய்வது குறித்து

திரு. ஆர். கிருஷ்ணன்: பேரவைத் தலைவரவர்களே, "கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக வாசுதேவநல்லூர் தொகுதியில் விஸ்வநாதபேரி, தென்மலை, வடுகப்பட்டி, இனாம் கோவில்பட்டி, துரைசாமிபுரம், இராயகிரி போன்ற

இருப்பினும், கடலூர், அண்ணாகிராமம், குறிஞ்சிப்பாடி, கோலியனூர், கண்டமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 14 ஊர்களில், இங்குமங்குமாக 540 ஏக்கர் பரப்பளவில் இப்பூச்சியினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புதுத் தகவல் கிடைத்துள்ளது. இக்கிராமங்களில், பூச்சியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை மேற்கொண்டுள்ளது.

வேளாண்மைத் துறை தக்க நேரத்தில் பூச்சியின் தாக்குதலைக் கண்டு பிடித்ததாலும், கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொண்டதாலும், இப்பூச்சியினால் பயிரின் அழிவு மிகவும் குறைக்கப்பட்டது. மற்ற பகுதிகளிலும் இப்பூச்சி புதிதாக தோன்றுகிறதா என, வேளாண்மைத் துறையினர் விழிப்பாய் உள்ளனர்.

திரு. சி. கோவிந்தராசன்: அமைச்சர் அவர்கள் 540 ஏக்கரில் புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி கிட்டத்தட்ட அவர் கூறிய வட்டங்களிலும் சிதம்பரம் வட்டத்திலும் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கருக்கு மேல் இந்தப் புகையான் வியாதியால் பயிர்கள் நாசமாகியிருக்கின்றன. அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகள் குத்தகைதாரர்களாக இருந்தால் இந்த ஆண்டு அவர்கள் குத்தகை பாக்கியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அதோடு அவர்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கிற கடன்களை குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றுவதோடு, ஒரு ஏக்கருக்கு ரூ. 3 கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த ரூ. 3 என்பது மிகவும் அற்பமான தொகை. எனவே ஒரு ஏக்கருக்கு ரூ. 3 என்பதற்குப் பதிலாக ரூ. 100 என்று கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வேளாண்மைத் துறைக்குக் கிடைத்த தகவல்படி தென் ஆற்காடு மாவட்டத்தில் 540 ஹெக்டேர் இந்தப் புகையான் பூச்சியால் புதிதாகத் தாக்கப் பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்துள்ளது. அதற்குத்

தகவல்படி உடனடியாக நடவடிக்கைகள் வேளாண்மைத் துறை சார்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் கொடுக்கக்கூடிய மானியம் ரூ. 3 போதாது அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த மானியம் மாநில அரசு கொடுக்கும் மானியம் அல்ல. இந்த மானியம் மத்திய அரசால் கொடுக்கப்படுகிற மானியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்கு இப்படி மான்யம் கொடுக்கும் உத்தேசம் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குத்தகை விவசாயிகளுக்கு உரிய குறைபாடுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறித்துச் சொன்னார்கள். அதுவும் அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: குறுகிய கால கூட்டுறவு கடனை நீண்ட கால கடனாக மாற்றுவதற்காவது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய கால கடனை மத்திய கால கடனாக மாற்றுவதற்கு அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளது. நீண்ட கால கடனாக மாற்ற முடியுமா என்பதைப் பற்றி அரசு கவனிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது உரிமைப் பிரச்சினை சம்பந்தமானது. திரு. ரகுமான்கான். . .

திரு. ஆர். மார்க்கப்பந்து: தலைவர் அவர்களே, இது விவசாயத்தைப் பற்றியது. ஒன்றிரண்டு கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள். [illegible] வேண்டாம். நீங்கள் ஒரு வழக்கறிஞர், நீங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். தயவுசெய்து அமருங்கள். திரு. ரகுமான்கான்.

(7) ஒழுங்குப் பிரச்னை

ஓர் உறுப்பினருக்கு உரிமைப் பிரச்னை எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டது குறித்து

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற விதி 83 இன் கீழ் ஒரு பிரச்னையை இந்த மாமன்றத்தின் முன் கொண்டு வர முடியும் என்று இருக்கிறது. 83 ஆவது விதியில் 3 ஆவது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ...

"A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்றபோதும் இந்தப் பிரச்னையை கிளப்பலாம். . . இதில் இருப்பது. . .

". . . . Interpretation or enforcement of these rules".

சம்பந்தமாக. இதில் தங்களுடைய அதிகாரத்தைப் பற்றி, தங்களுடைய உரிமைகளைப் பற்றி 84 ஆவது விதியில் சொல்லப் பட்டிருக்கிறது. . . அதில். . .

"The Speaker shall have all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder."

ஆக உங்கள் அதிகாரத்திற்குட்பட்டு, தரப்பட்டிருக்கின்ற உரிமைப் பிரச்னை டிஸ்-ஆர்டராக இருக்கிறது என்று அனுமதிக்கப்படாமல் அதை மறுத்துவிட உங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகின்ற உரிமைப் பிரச்னை சம்பந்தமாக—உரிமை மீறல் எந்தவிதத்தில் இருக்கிறது. . . என்பதைப் பற்றி 187 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. .

"The right to raise a question of privilege shall be subject to the following restrictions, viz.,

(1) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence;"

அந்த 'ரீஸன்ட் அக்கரன்ஸ்' அதாவது சமீப கால நிகழ்ச்சி அல்ல என்று என்னுடைய உரிமைப் பிரச்னை தவறாக

இன்டர்ப்ரிட்' செய்யப்பட்டு, மறுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் நான் உங்கள் மன்றத்திற்கு கொண்டு வர விரும்புவது, 30—12—77 'மக்கள் குரல்' பத்திரிகையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள், மறுக்கப்பட்ட விவரத்திற்குள் போக வேண்டாம். . . . .

திரு. ஏ. ரகுமான்கான்: இந்த விதியின் கீழ் 'இன்டர்ப்ரட்' செய்யப்பட்டிருப்பதைப் பற்றித்தான் நான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னென்ன டீட்டெயில்ஸ் என்னென்ன கன்டன்ட்ஸ் என்பதற்குள் போக வேண்டாம். . . இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். . . .

திரு. ஏ. ரகுமான்கான்: அப்படி விட்டு விட முடியாது. அதை நான் விளக்கித்தான் ஆக வேண்டும். அப்போது தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள். ஒழுங்குப் பிரச்னை மறுக்கப்பட்டது என்று சொன்னால், அதைப் பற்றி மேலும் விவரத்திற்குள் சென்று பேச வேண்டாம் என்று சொன்னால், 'அது முடியாது' என்று சவால் விட்டு நீங்கள் பேச முடியாது, அது முடியாது என்று சொன்னால் என்ன பொருள்? அது முடியாது என்று சொல்வதே தவறு. . .

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் அப்படி சொல்லவில்லை, சபாநாயகர் அவர்கள் தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. இங்கே பல்வேறு ஒழுங்கு பிரச்னைகள் வருகின்றன. குறிப்பிட்ட என்னுடைய உரிமைப் பிரச்னை எப்படி மறுக்கப்பட்டது. என்பதற்கான விளக்கத்தை சொல்லுங்கள் என்று கேட்டு இருக்கிறீர்கள். அதற்கான விளக்கத்தைத் தான் நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. நான் சுருக்கமாக முடித்துவிடுகிறேன். அதைக் கேட்டுவிட்டு தாங்கள் தங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள்.

[திரு. எ. ரகுமான்கான்], [1978 சனவரி 9

அந்த அடிப்படையில், இங்கு மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தைப் பற்றி பேசும்போது, எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்கு சில விளக்கத்தை அளித்தார்கள். ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பது போன்ற குற்றச்சாட்டை அவர்கள் அப்போது சொல்லவில்லை. ஆனால் 30—12—77 தேதி 'மக்கள் குரல்' பத்திரிகையில் 'வள்ளுவர் கோட்டத்தில் ஊழல்' இரட்டிப்புச் செலவு', 'கருணாநிதியின் ரகசிய ஆணை' என்றெல்லாம் வேண்டுமென்றே எதிர் கட்சித் தலைவரை களங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் செய்தியை திரித்து வெளியிட்டிருக்கிறது. வெளி வந்தது, 30—12—77 இல், இதுபற்றி 2 ஆம் தேதியே கொடுத்திருக்க வேண்டும், ஆனால் நீங்கள் 7 ஆம் தேதி தான் சொல்லியிருக்கிறீர்கள். இது 'ரீஸன்ட் அக்கரன்ஸ்' அல்ல என்று காரணம் கூறி மறுக்கப்பட்டிருக்கிறது. நான் கூற விரும்புவது, 'ரீஸன்ட் அக்கரன்ஸ்' என்று சொல்லும்போது, சபை நடக்கும் போது எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்பது தான். ஆகவே இந்த விதத்தில் என்னுடைய உரிமைப் பிரச்சினை மறுக்கப்பட்டிருக்கிறது. . .

[முற்பகல் 11.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையின் மரபாக நீண்ட நாட்களாக கடைப்பிடித்து வந்திருக்கின்ற ஒன்று என்னவென்றால், ஒரு நாள் தள்ளினாலும்கூட, அது உரிமைப் பிரச்சினை என்று கிளப்புவதற்கில்லை. அதிலும் ஏற்கனவே ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"A question of privilege should thus be raised by a member at the earliest opportunity and should require the interposition of the House. Even a delay of one day might prove fatal to the notice of the privilege, provided the specific matter sought to be raised was of urgent importance at a particular time."

அது மட்டுமல்ல, மேஸ் பார்லிமெண்டரி புரோசிஜரிலேயும் இன்னொரு 'கொடேஷன்' இருக்கிறது. அதையும் படிக்கிறேன்.

1978 சனவரி 9]

". . . the Speaker requires to be satisfied both that privilege appears to be sufficiently involved to justify him in giving such precedence (or, as it is sometimes put, that there is a *prima faciee* case that a breach of privilege has been committed); "and also that the matter is being raised at the earliest opportunity".

ஒரு நாள் இடைவெளி இருந்தாலும், உரிமைப் பிரச்சினை கிளப்ப முடியாது. எனவே, ரகுமான்கான் உரிமைப் பிரச்சினையை அனுமதிப்பதற்கில்லை. இதுவே என் முடிவு.

அது மட்டுமல்லாமல், [illegible] 187 (1) விதியிலே,

"The alleged breach of privilege must refer to a matter of recent occurrence."

என்று இருக்கிறது. எனவே, ஒரு பாகத்தை நீங்கள் 'ரீசன்ட் அக்கரன்ஸ்' என்ற நோக்கத்தோடு வற்புறுத்தக் கூடாது. ஒரு நாள் தள்ளினால் கூட உரிமைப் பிரச்சினை கிளப்ப வேண்டுமென்ற அவசியமில்லை. அந்த அளவிலேதான் நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு உரிமை மீறல் அல்ல என்று தீர்ப்புக் கூறினேன். எனவே, அமருங்கள்.

திரு. மு. கருணாநிதி: 'மக்கள் குரல்' மீது நாங்கள் தந்த தீர்ப்பு அண்மையில் நடைபெறவில்லை. மறுநாளே கொண்டு வந்தாக வேண்டுமென்று சொன்னீர்கள். அந்த அடிப்படையிலே பார்த்தால், முதல் அமைச்சர் 31 ஆம் தேதியன்று இந்த அவையிலே இவ்வாண்டின் [illegible] அறிக்கை வைக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். அதை நான் அதைப் பற்றி மறுநாளே அல்ல. நான்கைந்து நாட்கள் கழித்து அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவந்தபோது, அந்த அனுமதி கொடுத்தீர்கள். அந்த அடிப்படையில் ரகுமான்கான் கொண்டு வந்ததையும் ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] இவ்வாண்டின் [illegible] அறிக்கை [illegible]. [illegible] இங்கே வைக்கப்படவில்லையே என்பதால், அந்த முதல் அமைச்சர்

அவர்கள், வந்தவுடன் வைக்கப்படும் என்று சொன்னார்கள். இதிலே இன்னும் பயிர் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. ஆனால் இப்பிரச்சினை வேறு. நீங்கள் எழுப்பிய பிரச்சினை, அனுப்பப்பட்டு விட்டதா என்பதாகும். அவர் வந்தவுடன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். கவர்னரிடமிருந்து வந்தவுடன் இந்த அவையிலே வைக்கிறேன் என்று சொன்னார்களே தவிர, வைக்கவில்லை என்பதல்ல. ஆகவே, இதிலே உரிமைப் பிரச்சினை இல்லை.

திரு. மு. கருணாநிதி: அதனுடைய கருப்பொருள் விவாதத்திற்குரிய ஒன்று. வந்தவுடன் என்று சொல்லவில்லை. அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னார். பேரவையில் வைக்கப்படும் என்று. . .

மாண்புமிகு பேரவை தலைவர்: நீங்கள் எழுப்பியது, அனுப்பப்படவில்லை, அனுப்பியாகி விட்டதாகச் சொன்னது தவறு என்று சொல்லி உரிமைப் பிரச்சினை கொடுத்தீர்கள். ஆனால், இந்த உரிமைப் பிரச்சினை அப்படியல்ல. அமைச்சர் விரப்பன் அவர்கள் பேசாததைப் பேசியதாக 'மக்கள் குரல்' பத்திரிகை வெளியிட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். அமைச்சர் விரப்பன் அவர்கள் சொன்னதை திரித்து வெளியிட்டிருக்கிறார்கள், என்று அது உரிமை மீறல் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் சொன்னது, அனுப்பாமல் அனுப்பியதாகச் சொல்கிறார்களே என்று சொன்னீர்கள். இதற்கும், அதற்கும் சம்பந்தம் கிடையாது. எவ்வளவோ வேறுபாடு உண்டு.

திரு. க. சுப்பு: தாங்கள் இப்படி விளக்கம் சொல்வது சரியல்ல. எழுதுவது ஒரு புத்தகத்தின் ஓரத்திலே இருக்கின்ற ஒன்றை எடுத்துக்காட்டி, இது நான் படித்த ஆகிவிட்டது என்று சொல்வது சரியல்ல. கவர்னர் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்பது எங்களுக்கு எப்போது தெரியும்? நான்கைந்து நாட்களுக்குப் பிறகுதான் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படி அவர்கள் தேதிவாரியாக எல்லாம் தெரிந்தவர்; நான் புத்தகத்தை வைத்துக் கொண்டு பேசுகிறேன். தயவுசெய்து இப்படிப்பட்ட முறையில் பேச வேண்டாம்.

திரு. க. சுப்பு: புத்தகத்தில் இருப்பதைத்தான் தாங்கள் சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். அதிலே உரிமைப் பிரச்சினை இல்லை என்பது என்னுடைய முடிவு; என்னுடைய தீர்ப்பு அது.

திரு. க. சுப்பு: அந்தத் தீர்ப்பில்தான் சந்தேகத்தை எழுப்புகிறேன். ஆபீசர்கள் எடுத்துக் கொடுப்பதைத் தாங்கள் படிக்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசுவது தவறு, முறையல்ல, அப்படிப் பேசக்கூடாது. தாங்கள் எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றவர்; உங்கள் அளவுக்குத் தேர்ச்சி பெற்றவன் நான் அல்ல.

Thiru K. Suppu: . " Hon'ble Speaker is guided by the office . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் பேசக் கூடாது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கலாம். நீங்கள் எல்லாம் கற்ற நிபுணர்களாக இருக்கலாம். எனக்குப் புத்தகத்தில் இருப்பதைத்தான் படிக்க முடியும். ஒருவர் எழுப்பிய பிரச்சினையில் இன்னொருவர் இப்படி எழுந்து பேசுவது இந்த அவையின் மரபுக்கு அழகல்ல.

திரு. பொ. உத்திராபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மதுராந்தகம், செங்கம், குப்பம் அரிசனங்கள் அநியாயமாகக் கொடுமைப்படுத்தப்பட்டதைப் பற்றி 29 ஆம் தேதி தீர்மானம் கொடுத்திருக்கிறேன். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நாளை காலை எடுத்துக் கொள்ளப்படும்.

அவர்கள், வந்தவுடன் வைக்கப்படும் என்று சொன்னார்கள். இதிலே இன்னும் உயிர் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. ஆனால் இப்பிரச்னை வேறு. நீங்கள் எழுப்பிய பிரச்னை, அனுப்பப்பட்டு விட்டதா என்பதாகும். அவர் வந்தவுடன் வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். கவர்னரிடமிருந்து வந்தவுடன் இந்த அவையிலே வைக்கிறேன் என்று சொன்னார்களே தவிர, வைக்கவில்லை என்பதல்ல. ஆகவே, இதிலே உரிமைப் பிரச்னை இல்லை.

திரு. மு. கருணாநிதி: அதனுடைய மூலப் பொருள் விவாதத்திற்குரிய ஒன்று. வந்தவுடன் என்று சொல்லவில்லை. அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னார். பேரவையில் வைக்கப்படும் என்று. . . .

மாண்புமிகு பேரவை தலைவர்: நீங்கள் எழுப்பியது, அனுப்பப்படவில்லை, அனுப்பியாகி விட்டதாகச் சொன்னது தவறு என்று சொல்லி உரிமைப் பிரச்னை கிளப்பினீர்கள். ஆனால், இந்த உரிமைப் பிரச்னை அப்படியல்ல. அமைச்சர் விரப்பன் அவர்கள் பேசாததைப் பேசியதாக 'மக்கள் குரல்' பத்திரிகை வெளியிட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் விரப்பன் அவர்கள் சொன்னதை திரித்து வெளியிட்டிருக்கிறார்கள், என்று அது உரிமை மீறல் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் சொன்னது, அனுப்பாமல் அனுப்பியதாகச் சொல்கிறார்களே என்று சொன்னீர்கள். இதற்கும், அதற்கும் சம்பந்தம் கிடையாது. எவ்வளவோ வேறுபாடு உண்டு.

திரு. க. சுப்பு: தாங்கள் இப்படி விளக்கம் சொல்வது சரியல்ல. எதாவது ஒரு புத்தகத்தின் ஓரத்திலே இருக்கின்ற ஒன்றை எடுத்துக்காட்டி, ஒரு நாள் முதலே ஆகிவிட்டது என்று சொல்வது சரியல்ல. தவறாக செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்பது எங்களுக்கு எப்போது தெரியும்? நான்கைந்து நாட்களுக்குப் பிறகுதான் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுப்பு அவர்கள் தேர்ந்தவர்கள் எல்லாம் தெரிந்தவர்; நான் புத்தகத்தை வைத்துக் கொண்டு பேசுகிறேன். தயவுசெய்து இப்படிப்பட்ட முறையில் பேச வேண்டாம்.

திரு. க. சுப்பு: புத்தகத்தில் இருப்பதைத்தான் தாங்கள் சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர். அதிலே உரிமைப் பிரச்சினை இல்லை என்பது என்னுடைய முடிவு; என்னுடைய தீர்ப்பு அது.

திரு. க. சுப்பு: அந்தத் தீர்ப்பில்தான் சந்தேகத்தை எழுப்புகிறேன். ஆபீசர்கள் எடுத்துக் கொடுப்பதைத் தாங்கள் படிக்கிறீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிப் பேசுவது தவறு, முறையல்ல, அப்படிப் பேசக்கூடாது. தாங்கள் எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றவர்; உங்கள் அளவுக்குத் தேர்ச்சி பெற்றவன் நான் அல்ல.

Thiru K. Suppu: . " Hon'ble Speaker is guided by the office . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் பேசக் கூடாது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கலாம். நீங்கள் எல்லாம் கற்ற நிபுணர்களாக இருக்கலாம். எனக்குப் புத்தகத்தில் இருப்பதைத்தான் படிக்க முடியும். ஒருவர் எழுப்பிய பிரச்சினையில் இன்னொருவர் இப்படி எழுந்து பேசுவது இந்த அவையின் மரபுக்கு அழகல்ல.

திரு. பொ. உத்திராபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மதுராந்தகம், செங்கம், குப்பம் அரிசனங்கள் அநியாயமாகக் கொடுமைப்படுத்தப்பட்டதைப் பற்றி 29 ஆம் தேதி தீர்மானம் கொடுத்திருக்கிறேன். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நாளை காலை எடுத்துக் கொள்ளப்படும்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி அளிக்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(9) 1977-78 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கைமீது பொது விவாதம்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகள், விரிவான துணை மதிப்பீடுகள் அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றி என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் மட்டும் அவைமுன் வைக்கப்படவில்லை; ஏறத்தாழ 81 வெட்டுத் தீர்மானங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கைகளும், மதிப்பீடுகளும் ஏட்டளவில் மட்டும் இருந்தால் போதாது. அவை நல்ல முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களில் ஒன்று தஞ்சை வட்டார். பூதலூர், திருவையாறு ஒன்றியப்

பகுதிகள் அனைத்தையும் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என அறிவிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்ய வேண்டியது பற்றி விவாதிக்க என்பதாகும். இதுபோன்ற வெட்டுத் தீர்மானங்களை நான் மட்டும் கொண்டு வரவில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் மட்டும் கொண்டு வரவில்லை; எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கொண்டு வந்திருக்கிருர்கள். இன்னும் சொல்லப்போனால் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தால் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்கூடக் கொண்டு வந்திருப்பார்கள். அதற்குக் காரணம் வெள்ள நிவாரணப் பணிகள் சரியாகப் நடைபெறவில்லை என்பதாகும்.

எங்கள் பகுதியைப் பொறுத்து திருக்காட்டுப்பள்ளி வட்டாரத்தில் திருப்பராய்த்துறை, திருவையாறு வட்டாரப் விவசாயப் பெருங்குடி மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தூதாகச் சென்று நிலைமையைச் சொல்லியிருக்கிருர்கள். இன்னும் சொல்லப் போனால் முதலமைச்சர் அவர்களுக்கும் தொடர்பான அமைச்சர்களுக்கும் நிச்சயமாக தீர்மானங்களை அனுப்பியிருப்பார்கள் என்று நம்புகிறேன். இருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்ற ஐயம் எழுந்திருக்கிறது.

'உற்ருன் அளவும் பிணியளவும் காலமும்
கற்ருன் கருதிச் செயல்'.

என்ற வள்ளுவர் கருத்துக்கேற்பச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கரும்பு, வாழை பயிரிடுபவர்களுக்கு ஏக்கருக்கு 100 ரூபாய் கொடுப்பதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஜனதா கட்சித் தலைவர் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள்கூட அவ்வாறு தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள்.

(திரு. கே. பன்னை சேதுராம் தலைமை.)

[திரு. கோ. இளங்கோவன்] [1978 சனவரி 9

[முற்பகல் 11-20]

கரும்புக்கு மட்டும் அல்ல, வாழைக்கு மட்டுமல்ல, கொடிக் காலுக்கும் . . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்த சப்ளிமென்டரி பட்ஜெட்டிலே நாங்கள் கட்மோஷன்ஸ் கொடுத்திருக்கிறோம். சாதாரணமாக விவாதம் தொடங்குவதற்கு முன்னதாக கட்மோஷன்களை மூவ் செய்வது வழக்கம். இப்போது கட்மோஷன்கள் எடுத்துக்கொள்ளப்பட வில்லை, எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்): முதலிலே ஜெனரல் டிஸ்கஷன், அதற்குப் பிறகு கட்மோஷன் வரும் போது எடுத்துக் கொள்ளலாம்.

THIRU M. A. LATHEEF: Sir, only on the cut motions, the Members can speak. That is the general practice....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்): அவரவர்கள் கொடுத்த கட்மோஷன்கள் எல்லாம் வர இருக் கிறது.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணைகள் கொடுத்ததிலே ஒரு சிலதான் சேர்த்துக்கொள்ளப் பட்டு இருக்கின்றன, மற்றவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை, ஏன் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்): எந்த எந்த ஐட்டங்களில் பணம் ஒதுக்கப்படுகிறதோ அது சம்பந்தப்பட்டவைதான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதுதான சப்ளிமெண்டரி டிமாண்டிலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: அதுபோல் கரும்பு, வாழை, கொடிக்கால் பயிர்களுக்கும் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட எவ்வளவு குறைவாக இருந்தாலும் குறைந்த பட்சம் ஆயிரம் ரூபாயாவது ஆகும். அதைப்போன்றே ஒரு

1978 சனவரி 9] [திரு. கோ. இளங்கோவன்]

ஏக்கர் பயிரிட எவ்வளவு குறைவாக இருந்தாலும் 2 ஆயிரம் ரூபாயாவது ஆகும். அதைப்போல் கொடிக்காலுக்கு 5 ஆயிரம் ரூபாயாவது ஆகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 100 ரூபாய் ஒரு ஏக்கருக்கு தருகிறார்கள் என்றால் அந்த இழப்புக்கு ஆளானவர்கள் நெஞ்சு எரிகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் கூரை விழுந்தால் கூட 200 ரூபாய் கொடுக்கப்படுகிறபோது ஒரு ஏக்கர் வாழை அழிந்துபோனால் 100 ரூபாய் தான் என்பது நியாயந்தானா? இது போன்ற பத்திரி கைகளில் கூட அந்த வாழைத் தோட்டங்கள் எப்படிப் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்று படம்போட்டுக் காட்டியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மனதிலே வைத்து அந்த தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்த அவையிலே 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று அறிவிப்புத் தரப்பட்டிருக்கிறது. இப்போது நானூற்றுச் சில்லரை நியாய விலைக் கடைகள் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் திறக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புயலால் பாதிக்கப் பட்ட நாகை போன்ற பகுதிகள், மன்னை, திருச்சி, கரூர் போன்ற பகுதிகளுக்கும் இந்த மூன்று மாவட்டங்களிலும் திறக்கிறார்கள் வரவேற்கிறேன்.—அதே நேரத்திலே மற்ற மாவட்டங்களிலேயும் குறிப்பாக எந்த எந்தப் பகுதியில் புயலால் பாதிப்பு ஏற்பட்டி ருக்கிறதோ அந்தப் பகுதிகளிலேயும் உடனடியாகத் திறக்கப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நாகை யிலே ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டது என்பதை பத்திரிகைகளிலே செய்தியாகப் பார்த்திருப்பீர்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட கடைகளைத் திறக்கவில்லையென்றால் அரசு தன்னுடைய கடமையை நாட்டு மக்களுக்குச் செய்யத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் சுமத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. கோ. இளங்கோவன்] [1978 சனவரி 9

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே உடைப்புகள் ஏற்பட்டதைப்பற்றிய புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. என்னுடைய பகுதியிலே காவிரிக்கு அருகாமையிலே ஏற்பட்ட ஒரு உடைப்பைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்த உடைப்பினால் ஏறத்தாழ 1½ மாதம் 2 மாதகாலத்திற்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த உடைப்பு இப்போது மாத்திரம் ஏற்பட்டதல்ல. 1964-ஆம் ஆண்டிலேயும் அங்கே உடைப்பு ஏற்பட்டது. இப்படி அந்தப் பகுதி உடைப்பு ஏற்படுகிற பகுதியாக இருக்கிறது. அதற்கு நிரந்தரமாக ஒரு பரிகாரம் காணத்தக்க வகையிலே கல்லணையிலே ஒரு பெல்ட் அமைத்து மணல் போக்கி ஏற்பாடு செய்து வெள்ளம் வந்தால் தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்ய திட்டம் உருவாக்கப்படவேண்டும். அதற்கான திட்டம் இங்கே கொடுக்கப்படவில்லை.

குடிசைகள் பாழாகின்றன. பல இடங்களில் குடிசைகள் பாழாகியிருக்கின்றன. குடிசைக்கு 200 ரூபாய் வீதம் பணம் தரப்படுகிறது. நான் அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும் அந்தப் பகுதிகளிலே நிவாரணப் பணிகள் நியாயமாக நடைபெறுகின்றனவா என்பதை அரசு கண்காணிக்க வேண்டும்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நமது சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அவரவர்களுடைய தொகுதிகளுக்குச் சென்று வருகிறார்கள். நான் சென்றபோது குறைபாடுகள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையில் ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். வெள்ளத்தில் இடிந்த வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடியாத வீடுகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடியாத வீடுகளுக்குக் கொடுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல.

அதிலே என்ன குறை என்னவென்றால், ஒரு தோழர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம், "ஸ்ரீ ராம ஜெயம், ஸ்ரீ இளங்கோவன் அவர்களுக்கு" என்று ஆரம்பமாவதால் அவர்

1978 சனவரி 9] [திரு. கோ. இளங்கோவன்]

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் அல்ல என்பதை தெளிவாக அறிகிறேன். 93 கல்யாணபுரம் வட்டத்தில் சர்வே 17/1-இல் 1 ஏக்கர் 7 சென்ட் எனக்கு இருக்கிறது, ஆனால் குடிசை போட்டுக்கொண்டு யாரும் இருக்கவில்லை, 83 கல்யாணபுரம் முதல் சேத்தியைச் சேர்ந்த ஒருவருக்குப் பணம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைத் தந்திருக்கிறார்கள். இது போன்ற குற்றச்சாட்டுகள் வாராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தவறுகள் ஏன் நடைபெறுகின்றன என்றால், அந்த இடத்தில், முன்பு குடிசை போட்டிருந்தார்கள் என்று ஊர்ஜிதம் செய்வதற்கு அந்த அதிகாரி உறுதுணையாக இருந்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டை கூறுகிறேன். அந்தக் குற்றச்சாட்டை என்னால் நிரூபிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம், எந்த நபருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் தேர்தலின் பொழுது வாக்காளராக 83 கல்யாணபுரம் முதல் சேத்தியில் இருந்திருக்கிறார். வாக்காளர் பட்டியல் பக்கம் 15-இல் 899-நம்பரில் அவருடைய பெயர் இருக்கிறது. 900-இல் அவருடைய மனைவியின் பெயர் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக, மின் வாரியத்திற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். புயல் நேரத்தில் மின் இயந்திரங்களின் சாதனங்கள் மிகப் பழுது பட்டது என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது இப்பொழுது ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. குறிப்பாக, என்னுடைய பகுதியில் மின்இணைப்பு எங்கிருந்து எங்கு தரப்படுகிறது என்றால் முன்பு சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனிலிருந்து தரப்பட்டது, கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனிலிருந்து தரப்பட்டது, டால்மியாபுரத்திலிருந்து, காவிரி கொள்ளிடத்தைக் கடந்து மின்இணைப்பு தரப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் அவைகளெல்லாம் ஒழுங்கான நிலைக்கு வரவேண்டுமென்றால் இந்தப் பணம் போதாது.

[திரு. கோ. இளங்கோவன்] [1976 சனவரி 9

அடுத்து, குடிநீர் வழங்கு திட்டத்திற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கிய நேரத்தில் முன்பே குடிநீர்த்திட்டத்தில் கட்டப்பட்டதற்கு மின்இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவைகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பழங்குடியினர், அரிசனங்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு பி.யு.சி. க்குப் படிப்புக் கட்டணம் இல்லை. அதுபோல மதம் மாறியவர்களுக்குக் கட்டணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே அவர்களுடைய பெற்றோர்களுடைய அல்லது காப்பாளர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 2,500-க்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதேபோல் ஆணை முன்பு பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிறது. இந்தக் காலத்தில் ஆண்டு வருமானம் 2,500 ரூபாய் என்பது மிகமிகக் குறைவாகும். எனவே அதை உயர்த்தி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆதரவற்ற விதவைகள் 279 பேர்களுக்கு ராட்டைகளும், சாதனங்களும் வழங்கி நிலையான வேலை வாய்ப்பு தரப்பட வேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அவர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கொடுக்கலாம், ஆனால் நிரந்தரமான வாழ்வு கிடைக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். ராட்டைக்குப் பதிலாக அவர்களுக்குத் தையற் கருவிகளை வழங்கினால், பாரதிதாசன் பாடினாரே,

"ஆடிக்கொண்டிருக்கும் தையற்பொறியினை அசைக்கும் ஓர் கை

ஓடிக்கொண்டிருக்கும் தைத்த உடையினை வாங்கும் ஓர் கை,

பாடிக்கொண்டே இருக்கும் பாவையின் தாமரை வாய்
நாடிக்கொண்டே இருக்கும் குடித்தன நலத்தை நெஞ்சம்"

என்ற இப்படிப்பட்ட காட்சியைக் காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும், வழியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

1976 சனவரி 9] [திரு. கோ. இளங்கோவன்]

அடுத்தபடியாக, இளநிலை ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்படும் என்று 1-4-1975 இல் ஆணையிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவைகள் நிறைவேற்றப்படவேண்டும். உண்மையிலே, அதிகாரிகள் ஒருசில குறைகளைச் செய்வதாக இங்கே புகார் வந்திருக்கிறது. அது என்னவென்று கேட்டால், 1971 இல் பத்தாண்டுகள் நிறைவு பெறுமானால் அடிப்படைத் தேர்வு நிலை ஊதியம் 1971-லிருந்து தொடங்க வேண்டும். அதற்கு மாறாக 1974-லிருந்து கணக்கிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளைக் களைய வேண்டும்.

இந்த நேரத்தில் ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இளநிலை ஆசிரியர்கள் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். அவ்வாறு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் பயிற்சிப் பள்ளிகளை மூடியிருக்கிறார்கள். எனவே, இளநிலை ஆசிரியர்கள் இல்லாத சூழ்நிலையை உடனடியாக இல்லாவிட்டாலும் படிப்படியாகக் கொண்டு வந்து அத்தகைய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வியமைச்சரவர்கள் ஆசிரியராக இருந்தவர். அந்தக் குறைபாடுகளை அறிந்தவர் என்ற காரணத்தால், அதை நான் இந்த அவைமுன் மீண்டும், மீண்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11.30)

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். பல கல்வி நிலையங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிதி ஒதுக்கப்பட்ட நேரத்தில், தனியார் பள்ளிகள், அரசுப் பள்ளிகள் என்று வேறுபாடு பார்க்காமல், அரசுப் பள்ளிகளுக்கும், தனியார் பள்ளிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாலைகள் பராமரிப்புக்காக பல கோடி ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அது போதாது. அதற்கு இன்னும் அதிகப் பணம் ஒதுக்குவதோடு, வேலைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக, மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 5 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 14 இருப்பதாகக் கருதுகிறேன். இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, சராசரியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 50 இலட்சம் கூட வராது. ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியின் கீழும், குறைந்தது 250 நாணயச் சங்கங்களாவது இருக்கும். அந்தக் கணக்கை வைத்துப் பார்த்தால், ஒரு நாணயச்சங்கத்திற்கு ரூ. 50,000 கூட நீங்கள் ஒதுக்கவில்லை. எனவே, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு உதவித் தொகையை எப்படி நீங்கள் கொடுக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அதையும் கவனித்து, அதிகத் தொகை ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல திட்டங்களை நிறைவேற்ற உத்தேசித்திருக்கிறார்கள், அதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், ஒதுக்கியிருக்கிற தொகை போதவில்லை. நான் சொல்லியிருக்கிற குறைகளை, ஏதோ எதிர்க்கட்சிக்காரன் சொல்லி இருக்கிறான் என்று நினைக்காமல், அந்தக் குறைகளைக் கவனித்து, இனிமேல் இவ்வாறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. து. இராமசாமி: மாமன்றத் துணைத் தலைவரவர்களே, கடந்த நவம்பர், அக்டோபர் மாதங்களில் தமிழகத்தைத் தாக்கிய புயல், பெரும் வெள்ளம், தொடர்ந்து இரண்டு மாதங்களாகப் பெய்த பெருத்த மழையின் காரணமாக ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காகவும், தாக்குதலுக்கு ஆளான பகுதிகளைச் சீரமைப்பதற்காகவும் நமது நிதியமைச்சர் அவர்களாலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்தமைக்காக நான் முதற்கண் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியைப் பொறுத்தமட்டில், பெரிய கண்மாய் என்ற ஒரு ஏரி, வைகை அணைக் கட்டிலே உள்ளடக்கிய ஏரியிருக்கிறது. அந்த ஏரி, 142 மைலுக்கு அப்பாலே வைகை அணைக்கட்டிலேயிருந்து இராமநாதபுரம் கிழக்குப் பகுதியிலே கடைசிக் கண்மாயாக வந்து நிற்கிறது. அந்தக் கண்மாய் 7,000 ஏக்கருக்குப் பாசன வசதி செய்யக் கூடிய கண்மாய். அந்தக் கண்மாயைத் தூர் வார, 1975-ம் ஆண்டு, வறட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த நேரத்தில், ரூ. 32 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அந்த ஏரியைத் தூர் வார வேண்டும், ஆழப்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகைதான் அந்த ரூ. 32 இலட்சம்.

ஆனால், ஒதுக்கப்பட்ட தொகை முறையாக செலவழிக்கப்படவில்லையென்பது அந்தப் பகுதி மக்களுடைய குற்றச்சாட்டாக இருக்கிறது. பெருத்த அளவிலே அந்தக் கண்மாய் இன்றைய தினம் உடைந்துள்ளது. அதனால், பல நல்ல ஏரிக் கால்வாய்கள் உடைந்து விட்டன. ரூ. 32 இலட்சம் ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டாலும், அந்த ரூ 32 இலட்சத்திற்கு வேலை நடந்திருக்காது என்பது அந்த ஆயக்கட்டுக்காரர்களுக்கு குறையாக இருந்தது. அந்தக் கண்மாய் வேலை செய்யப்படுகிற நேரத்தில் தூர் வாரப்படுகிற நேரத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதிலே கவனம் செலுத்தவில்லை. நாமினேஷனை கொடுக்கின்ற ஆயக்கட்டுக்காரர்கள், அந்த நண்பரிடத்திலேதான், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வேலை சரியாக நடக்கிறதா என்பதைக் கண்காணிக்க முடியாமல் அவர்களுடைய கைகள் கட்டப்பட்டிருந்தன என்பதனை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 32 லட்சம் ரூபாய்களும் இந்த கண்மாயில் செலவிடப்பட்டிருக்குமேயானால், அந்தக் கண்மாய், எவ்வளவு பெரிய வெள்ளம் வந்திருந்தாலும் அந்த இராமநாதபுரம் கண்மாய் இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் வெள்ள நிவாரணப் பணிகளைக் காண எங்கள் இராமநாதபுரம் பகுதிக்கு பார்வையிட வந்தார்கள்.

[திரு. அ. இராமசாமி] [1978 சனவரி 9

அந்தப் பகுதியிலே இருக்கிற ஆயக்கட்டுக்காரர்கள் அவா களிடத்திலே புகார் சொன்னார்கள். அந்தக் கண்மாயைச் சரி செய்ய 32 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். விவசாயிகளுடைய நன்மையைக் கருதி ஒதுக்கப்பட்ட அந்தப் பணம், காண்டிராக்ட் எடுத்தவர்கள், அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, முறையாகச் செய்யவில்லை என்றும், அதற்குப் பதிலாகத் தனிப்பட்டவர்களின் வீடுகளுக்குப் போய் சேரக்கூடிய அளவுக்கு, அதிகாரிகள் துணை புரிந்தார்கள் என்று தெரிவித்தார்கள். அந்த ஊழலை சொன்னதற்காக ஒரு குடும்பத்தில் ஒரு கொலையே நடந்திருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன். பெரிய கண்மாய்க்குப் பக்கத்தில், ஒரு கிராமம், அது இராமநாதபுரத்திலே இருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. அந்த கிராமத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளராக என். முருகேசன் என்ற தோழர் இருந்தார். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட காலமாக முழு மூச்சுடன் அமைப்பாளராகப் பணியாற்றிக் கொண்டு வந்தார். 1972 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் முறைகேடாக செலவு செய்யப்பட்டது என்பதை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்களிலே கண்டித்து வந்தார்.

எதிர்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சிறையில் இருந்த நேரம். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நீங்கள் எல்லாம் கடை அடைப்பு செய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வியாபாரிகளைக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பிறகு கடை அடைக்கின்ற முயற்சியிலே ஈடுபடுகின்றபோது ஏற்பட்ட கலவரத்தில் போலீசார் தலையிட்டு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்தியேந்திரன் அவர்களும், அவர்களுடைய நண்பர்களும் சிறையிலே அடைக்கப்பட்டார்கள். பிறகு சிறையிலே இருந்து வெளியே வந்த பிறகு, கருணாநிதியை விடுதலை செய்யவேண்டுமென்று நோட்டீஸ் அடித்தார்கள். அப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அமைப்பாளராக இருந்த முருகேசன் ஒரு நோட்டீஸ் வெளியிட்டார். "பெரிய கண்மாய் தூர் வாரும் திட்டத்தில் 32 லட்சம் கொள்ளை அடித்த கூட்டமே, உங்களுக்கு விடுதலை ஒரு கேடா"

1978 சனவரி 9] [திரு. அ. இராமசாமி]

என்று கேட்டார்கள். இதை ஒட்டி ஒரு தகராறு நடக்கிறது. அந்தத் தகராறை யார் செய்கிறார்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தகராறு செய்கிறார்கள். போலீஸ் அந்த இடத்திலே வந்து கலவரத்தை அடக்கியபின் கலவரக்காரர்கள் கலைந்து சென்றார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர், இராமநாதபுரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் தனது ஊருக்கு இரவு 8, 9 மணிக்குத்தான் போவார்கள். ஆனால் முருகேசனை நாங்கள் போகவிடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அங்கே கலவரம் செய்கிறார்கள், நோட்டீஸ் போட்டதற்காக உங்களைப் பழிவாங்கி விடுவார்கள் என்று முருகேசனை போக வேண்டாம் என்று சொன்னோம். அதன் பிறகு அவருடைய தாய்மாமன், உடன் பிறந்தவர்கள் மற்றவர்களோடு அவர்கள்

(முற்பகல் 11.40)

ஊருக்குப் போகிறார்கள். அவர்கள் அந்த கிராமத்தின் இருட்டுப் பகுதியில் பொதுவழியில் நின்று கொண்டு அந்தக் காண்டிராக்ட் எடுத்தவர்கள், அதோடுசேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகத்தினர் சேர்ந்து கொண்டு அரிவாளால் தாக்குகிறார்கள். தாக்கப்படுகிறபோது முருகேசன், தட்சிணாமூர்த்தி, அவருடைய தம்பி ஆகியோர் தாக்கப்படுகின்றனர். இந்தக் கலவரம் சரியாக 10 மணிக்கு நடைபெறுகிறது. போலீசுக்குத் தகவல் தெரிவித்து போலீஸ் லாரி வருகிறது. வெட்டியவர்கள் ஓடி விடுகின்றனர். வெட்டப்பட்டவர்கள் ரத்த வெள்ளத்தில் இருக்கிறார்கள். அவர்களை போலீஸ் வானில் ஏற்றிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்கிறார்கள். பின்னர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ மனைக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, மறுநாள் காலையில், வாக்குமூலம் வாங்குகிறார்கள். அந்த வாக்குமூலத்திலே அவர்கள் யார் யார் வெட்டினார்கள் என்று போலீசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தட்சிணாமூர்த்தி மருத்துவ மனையிலேயே இறந்து போகிறார் என்ற செய்தி வருகிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏழை எளிய மக்களுக்காக, விவசாய மக்களுக்காக இந்த அரசாங்கம் ஒதுக்குகிற பணம் வீணாக்கப்படுகிறது, வீணாகச் செலவு செய்யப்படுகிறது, அந்தப் பணம்

[திரு. து. இராமசாமி] [1978 சனவரி 9

முறையாகச் செலவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு துண்டு அறிக்கை போட்டதற்காக இப்படி வெட்டப்பட்டு இறந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், திருநெல்வேலி மாவட்டத்தில் 424 நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கப் பட்டதைபோல் நியாயவிலைக்கடைகள் துவங்கப்படும் என்று அறிவித்த திட்டத்தை நான் மிக மிக வரவேற்கிறேன். இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு அன்றாடம் உழைக்கின்ற மக்களுக்கு, விவசாய மக்களுக்கு உதவ எடுத்துக்கொண்டு இருக்கிற நடவடிக்கைகளுக்கு, புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகிற இந்த நல்லெண்ணம் கொண்ட அரசுக்கு, நம்பிக்கை கொண்ட அரசுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1977-78 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையை நாம் பார்ப்பதற்கு முன்பு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வெள்ளை அறிக்கையிலே ரூபாய் 154.72 கோடி நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த துணை மானியக் கோரிக்கை குறைந்தது ரூபாய் 150 கோடி இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இங்கே ரூபாய் 94.35 கோடிதான் கேட்கப்பட்டு இருக்கிறது. இதிலே வெள்ள நிவாரண வேலைக்கு 46.32 கோடி ரூபாய் என்று குறைந்த அளவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை நாம் பார்த்தோம் என்றால் இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இன்று பாரதம் முழுவதும் ஒரு பொதுவான பொருளாதார மந்த நிலை 'ஸ்லாக்னெஸ் இன் எகானமி' ஏற்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம், மத்தியிலே இருக்கும் அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான். சமீபத்திலே பேசிய மத்திய

1978 சனவரி 9] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

நிதி அமைச்சர் கூட, மத்திய அரசின் பட்ஜெட் ஒரு பற்றுக்குறை பட்ஜெட்டாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே அவர்களுடைய பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மத்திய அரசின் கீழே இந்த மாநில அரசுகள் செயல்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே தான், 128 கோடி ரூபாய் கேட்டதற்கு 33.91 கோடி ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள். அதிலும் திட்டச் செலவில் முன்பணமாக 29 கோடியே 85 லட்சம் ரூபாய் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது மிக மிகக் குறைந்த தொகை, எனவே தான் இங்கே 46.32 கோடி ரூபாய் என்ற ஒரு குறைந்த தொகையை இந்த வெள்ள, புயல் நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் பார்க்கின்றபோது, ஒரு ஆங்கிலப் பழமொழி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. பாதிப் பார்வை தெரிந்தவனை, முழுப் பார்வையும் தெரியாதவன் வழி நடத்திச் செல்வது போல "The blind leading the blurred blind"; இன்று மத்திய அரசு ஒரு தவறான பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தான், இந்தத் துணை மானியக் கோரிக்கை மூலம் ஒரு குறைந்த தொகையைக் கொடுக்க வேண்டிய நிலையில் இந்த அரசு இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமையில் விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், விவசாயிகளுக்கு மட்டும் 47.14 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் மானாவாரி விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் இந்த வெள்ளை அறிக்கையில் ஒரு குறிப்பு கொடுத்திருக் கிறார்கள். "பயிர்களின் வயதுக்கேற்ப, புன்செய் பயிர்களின் விளைச்சல் கூட பல்வேறு அளவுகளில் பாதிக்கப்படும் நிலையிலுள்ளன; இந்நிலையில் மதிப்பிடுவது கடினமாக இருந்த போதிலும், விளைச்சல் கணிசமான அளவிற்குக் குறையும் என்பதை எதிர்பார்க்க வேண்டியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே மானாவாரி விவசாயிகளைப்

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1978 சனவரி 9

பொறுத்த வரையில், 1973 ஆம் ஆண்டிலே எப்படி இங்கே, மழையில்லாத சூழ்நிலையில் விவசாயிகள் கஷ்டப்பட்டார்களோ, அதுபோலவே பயிர்கள் எல்லாம் அழிந்து மானாவாரி விவசாயிகள் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். கம்பு, சோளம், கேழ்வரகு பயிர்கள் எல்லாம் அழிந்து போய்விட்டன என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நிலையிலே நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில். கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் பருத்தி மகசூலை தீவிரப்படுத்த வேண்டுமென்பதற்காக, தீவிர பருத்திச் சாகுபடி திட்டத்தின்கீழ் 2,500 ஏக்கர் பருத்திச் சாகுபடி செய்திருக்கிறார்கள். இந்த 2,500 ஏக்கருக்கு ஐந்து லட்சம் ரூபாய் மத்திய அரசிலிருந்து மானியம் கொடுப்பதாகச் சொல்லி, இரண்டு லட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முதலில் விதை வாங்கிச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 80 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 3 லட்ச ரூபாய் கொடுத்தால்தான், ஏக்கருக்கு 120 ரூபாய் விதம் பூச்சி மருந்து வாங்கி விவசாயிகள் விவசாயத்தைத் தீவிரப்படுத்த முடியும் என்பதையும் அரசிற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால் போக்குவரத்துத் துறைக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம், ரோடுகள், கிராமப்புற சாலைகள், நெடுஞ்சாலைகள் ஆகியவைகள் பழுதுபட்டு, அதன் விளைவாக ஏற்பட்டுள்ள நஷ்டம் 30 கோடி ரூபாய் என்று இந்த புயல், வெள்ள நிவாரண அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளுக்காக 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசிற்கு ஒரு தெளிவான கொள்கை இருக்க வேண்டும்.

சாலையமைப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசிற்கு ஒரு தெளிவான கொள்கை இருக்க வேண்டும். நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால், கிராமப்புறச் சாலைகளை எடுத்துக்கொண்டால், அந்தப்

1978 சனவரி 9] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

பணிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று சொல்லமாட்டேன்; போதுமான நிதி அதற்கு ஒதுக்கப்பட வில்லை என்று மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'அதர் ரோட் ஸ்கீம்ஸ்' மற்ற ரோடு திட்டங்கள் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு போதுமான நிதி ஒதுக்கப்பட வில்லை. நெடுஞ்சாலைகளுக்கு அதிக தொகை ஒதுக்குவதைவிட 'அதர் ரோட்ஸ் ஸ்கீம்ஸ், ரூரல் ரோட்ஸ் ஸ்கீம்ஸ்' மற்ற சாலை திட்டத்திற்கும், கிராமப்புறச் சாலைத் திட்டத்திற்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோவில்பட்டி ஒரு வியாபார ஸ்தலம். தூத்துக்குடி ஒரு தொழில்—துறைமுக நகரம். கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு நேரடியாக நல்ல ரோடு அமைக்கப்படவில்லை. இப்போது இருக்கக்கூடிய சாலையை நல்ல முறையில் போட்டால், நல்ல ரோடு கிடைக்கும். அந்த ரோடு பசுவந்தானை, ஓசனூத்து, கைலாசபுரம் வழியாக தூத்துக்குடி தட்டப்பாறை வரையில் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தக் குறை பெரிய குறையாக நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 11.50)

அடுத்தபடியாக, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் கல்வித்துறையில் இன்று உயர் ஆதாரக் கல்வி என்று 11 வகுப்பு 12-வது வகுப்பு என்று சொல்லி இரண்டு வகுப்புகளை இன்று உயர்நிலைப் பள்ளிகளுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த உயர் ஆதாரக் கல்வி பெரும்பகுதியும் நகராட்சிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்குத்தான் கொடுக்கபடுகிறதே தவிர கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற உணர்வு கிராமப்பகுதி மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. எனவே ஒவ்வொரு தாலுகாவிற்கும் குறைந்தது ஒரு உயர் ஆதாரக் கல்விப் பள்ளியை ஏற்படுத்தவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் ஒரு தனி தாலுகாவாக இருக்கிறது.

ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. பெயரால் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியிலாவது இந்த உயர் ஆதாரக் கல்வியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வி சம்பந்தமான ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது அரசினால். அதாவது, ஐந்தாண்டு அனுபவம் பெற்ற ஆசிரியர்கள்தான் ஆரம்பப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராக இருக்கவேண்டும் என்று ஒரு ஆணை, ஒரு ஜீ. ஓ. இருக்கிறது. ஆனால் பெரும்பகுதி பள்ளிகளில் தேடிப்பார்த்தாலும் ஐந்தாண்டு அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே, இந்த விதியை ஆரம்ப பள்ளிகளைப் பொறுத்தாவது தளர்த்தவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை நீக்கிவிடுகிறார்கள், ஏதாவது ஒரு காரணம் சொல்லி ஆசிரியர்களை நீக்கிவிடுகிறார்கள். அந்த ஆசிரியர்கள் நடுவர் மன்றம் வரை சென்று, 'ட்ரிப்யூனல்' அங்கே உத்தரவு பெற்று வருகிறார்கள். மறுபடியும் அவர்களை நியமனம் செய்யவேண்டும் என்று நடுவர் மன்றம் தீர்ப்பு கூறியும், மறுபடியும் அவர்களை நியமிக்காத சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். அந்தப் பள்ளிகளையாவது அரசாங்கம் தற்காலிகமாக எடுத்து அந்த ஆசிரியர்களை மறுபடியும் நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் மேற்கு வங்கத்தில் இருப்பதைப்போல் நேரடியாக அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை இந்த அரசிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் துறையைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் நெல்லை மாவட்டத்தின் வடபகுதிக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்டஸ்ட்ரியலி பாக்வோர்ட் ஏரியா என்று அந்த மாவட்டம் முழுவதையும் அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் நெல்லை மாவட்டத்தின் வட பகுதியை எந்தக் கோணத்திலிருந்து பார்த்

தாலும் இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்றே வறட்சியான பகுதியாகத்தான் இருக்கிறது. தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாகத்தான் இருக்கிறது. நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியில் நான்குநேரி போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாகத்தான் இருக்கின்றன. அப்பகுதிகளையும் தொழில்துறையில் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கவேண்டும் என்று கோருகிறேன். அடுத்தபடியாக, ஹரிஜனநலத் துறையைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு தாலுகாவிலிருந்தும் ஒரு ஹரிஜன மாணவிகள் விடுதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், கிராமங்களில் இருக்கக்கூடிய இந்த ஏழை மக்களின் குழந்தைகள், மாணவ, மாணவிகள் கல்வி கற்க தலைநகரங்களில்தான் அவர்களைக்கொண்டு விட வேண்டியிருக்கிறது. ஓட்டப்பிடாரம் போன்ற பின்தங்கியப் பகுதிகளில், அது தலைநகராக இருந்தாலுங்கூட, விடுதியில்லாத சூழ்நிலையில் மாணவ மாணவிகள் கல்வி கற்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தக் குறைபாட்டையும் நீக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம், நன்றி.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977—78-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின்மீது பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள புயல்—வெள்ளம் காரணமாக, மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருச்சி மாவட்டம் இவ்விடங்களில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அரசும் உதவிகள் செய்துள்ளதுபற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பாக நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்து புயல் வெள்ளம் இல்லை என்றாலும் கடும் மழை பெய்த காரணத்தால் அங்கே கிராமப் புறங்களில் உள்ள பஞ்சாயத்து ரோடுகள் அவ்வளவும் பழுதடைந்திருக்கின்றன. சைக்கிள்கள், ஏன் நடந்துகூட போக முடியாத நிலையில் அந்த ரோடுகள் இருக்கின்றன.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1978 சனவரி 9

தர்மபுரி மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக அரசு அறிவித்திருந்தாலும்கூட எந்த அரசு வந்தாலும் தர்மபுரி மாவட்டத்தை ஒதுக்கிக்கொண்டே செல்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டம் மலைப்பகுதிகள் நிரம்பிய மாவட்டம். அது காடுகள் நிறைந்த மாவட்டம். மலைப்பகுதி நிறைந்த மாவட்டமாக இருப்பதால் அங்கே மழை பெய்தால் காட்டாறு களில் அதிகமாக வெள்ளம் வந்து சிறு, சிறு கிராமங்கள் எல்லாம் அடித்துச்செல்லப்படுகின்றன, அப்படி அடித்துச் செல்வதை நான் நேரிலே கண்டிருக்கிறேன்.

அதனால் இங்கே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கின்ற நிதியை அதிகப்படுத்தி அங்கே வருகின்ற ஆறுகளில் சிறிய, சிறிய அணைகளை, கட்டித்தரவேண்டும் என்று தர்மபுரி மாவட்ட மக்களின் சார்பாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நோக்கில் ஒட்டப்பட்டியில் கல்லாறு என்ற ஆறு ஓடு கிறது. 1974-ம் ஆண்டு பெய்த பெரும் மழையில் அந்த ஆற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக நரிப்பள்ளி என்ற ஊரே அடித்து செல்லப்பட்டு விட்டது. இதன் காரணமாக அங்கேயுள்ள மலைஜாதியினர் மிகவும் கஷ்டப்பட்டனர். இப்பொழுதும் அந்த மலைஜாதி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆகவே கல்லாற்றின் குறுக்கே ஒரு அணையை கட்டுவதின் மூலமாக அங்குள்ள மலைஜாதியினருக்கு வேலை வாய்ப்பை தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு 1970-ல் காடுகளை எல்லாம் காண்டிராக்ட் விடுவதற்காக ஏலத்தில் விட்டார்கள்; மூங்கிலையும் ஏலத்தில் விட்டார்கள். இப்போது ஏழு ஆண்டுகாலமாக காண்டிராக்ட் விடவோ ஏலத்தில் விடவோ செய்யவில்லை. இதனால் அங்குள்ள ஏழை மலைவாழ் மக்கள் வேலை எதுவுமின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த கல்லாறு அணையைக் கட்டுவதின் மூலமாக அந்த மலைஜாதியினருக்கு வேலை கிடைக்கும் என்பதையும் இந்த நோக்கில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1978 சனவரி 9] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

அடுத்து, எனது தொகுதியாகிய பாகூர் தொகுதியில், பல கிராமங்களிலும், பாதைகள், ரோடுகள் பாழடைந்து இருக்கின்றன. ஆகவே பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கி கிராமப் பகுதியிலுள்ள ரோடுகளை எல்லாம் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சாம்பல்பட்டியிலிருந்து திருப்பத்தூர் போகும் பாதையில் குன்னத்தூர் என்ற இடத்தில் ஒரு பாலம் அமைக்கப் பட வேண்டும் என்று முன்பே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு வந்திருந்த முன்னாள் அமைச்சர் ப.உ.ச. அவர்கள் பாலம் நிச்சயமாக கட்டப்படும் என்று அங்குள்ள மக்களிடத்தில் உறுதி சொல்லியிருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர் ப.உ.ச. அவர்கள் அங்கு வந்திருந்தபோது, இதைப் பார்வையிட்டு விட்டு உடனடியாக இந்தப் பாலம் கட்டித்தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அந்தப் பாலம் கட்டித்தரப்பட வில்லை என்று அங்குள்ள மக்கள் குறையாக என்னிடம் சொன் னார்கள். ஆகவே கிராமப் பகுதிகளிலுள்ள ரோடுகள் சீர்கேடு அடைந்திருக்கிறது, இந்த குன்னத்தூர் பாலமும் இல்லை, இதன் காரணமாக பஸ்கள் போகாமல் இருக்கிறது, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கின்ற நோக்கில் இந்த குன்னத்தூர் பாலத்தைக் கட்டித்தரவேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் விண்ணப்பமும் கொடுத்திருக்கிறேன். விரைவில் அந்தப்பாலத்தைக் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டம் காவேரிபட்டினம் தொகுதியில் தான் வெற்றிலைத் தோட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு பெய்த கடும் மழையினால், வெற்றிலைத் தோட்டங்கள் எல்லாம் பாழாகியிருக்கின்றன. அந்த வெற்றிலைத் தோட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் இன்னும் மானியம் அதிகமாக கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் புயலாலும், வெள்ளத்தாலும் விவசாயிகளுக்கு கரும்புத் தோட்டங்களுக்கும், வாழைத் தோட்டங்களுக்கும், மண்மேடிட்ட இடங்களுக்கும் சீர்செய்வ

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1978 சனவரி 9

தற்காக அரசாங்கம் மானியங்கள் கொடுத்திருப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், அரூரிலிருந்து சித்தேரிப்பாக்கம் என்ற இடத்திற்கு போகும் பாதையை வனத்துறை பொதுப்பணித் துறைக்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அதே போன்று அரூரிலிருந்து கீரப்பட்டி வழியாகப் போகும் பாதையை செப்பனிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வேப்பனப்பள்ளி என்ற யூனியன் பகுதியில், பல காட்டாறுகள் செல்லுகின்றன. இவற்றில் பெருமழை பெய்யும்போது, தண்ணீர் வந்து பாழாகிறது, ஆகவே இதில் சிங்கனப்பள்ளியில் கங்கனப்படுவு என்ற இடத்தில் ஒரு அணையை கட்டித்தருமாறும் அதற்கு அரசு ஏற்பாடு செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதேபோல், பர்கூர் தொகுதியில் சிந்தகம்பள்ளி என்பது ஆந்திராவினுடைய எல்லைக்கு அருகாமையில் இருக்கிறது. எனவே, கந்திக்குப்பத்திலிருந்து, சிந்தகம்பள்ளி வரைக்கும் இரண்டு பாலங்கள் கட்டினால், குருவிநாயக்கன் அள்ளிக்கும், ஆந்திராவிலுள்ள குப்பம் என்ற ஊருக்கும் செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். இந்தப் பாதைகளைச் செப்பனிட, இந்த வேலைகளைப் பொதுப்பணித் துறையிடத்திலே ஒப்படைத்து, இவைகளைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே இதுவரையிலும் எந்தவிதமான தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில், ஓசூரில் தனியார் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு தருவதில்லை, எனவே, தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு குறைந்தபட்சம் 40% அங்கே வேலை கிடைப்பதற்கு அந்தத் தொழிற்சாலையிலே வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த அரசாங்கம் ஒரு உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்தால்தான், தர்மபு[illegible]

1978 சனவரி 9] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

மாவட்டத்திலே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்புத் தர முடியும் என்பதை இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொண்டு, எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்புக்கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிதெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையில் ஒரு மணி வரை பொது விவாதம் நடைபெறும். அதற்குப்பிறகு மானியக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு நடைபெறும். அப்போது வெட்டுத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானம் முறைப்படி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளப்படாமல், விவாதத்தை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணம் பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்குமானால், அவையிலுள்ள உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நீட்டிக்கலாம். அந்த முறையில் நீட்டிப்பதுதான் இந்த அவையின் உரிமையைப் பாதுகாப்பதாக ஆகும்.

Mr. Deputy Speaker : At one o'clock guillotine will be applied. That is the position.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, பொதுவாக விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால், வெட்டு தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு, பொது விவாதத்திலே வெட்டுத் தீர்மானங்கள் மீது பேசுவது என்பதுதான் இந்த மன்றத்தின் முறையாக இருந்திருக்கிறது. அப்படி மாற்றுவதானால் அவையின் அனுமதியோடு, கால நேரத்தை உத்தேசித்து, வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிவதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது டிமாண்டு முன்னதாக மொழியப்பட்டு, பிறகுதான் வெட்டுத் தீர்மானம் வரும். ஆனால் இங்கே வெட்டுத் தீர்மானமே எடுத்துக் கொள்ளப்படவில்லை. அப்படி எடுத்துக்கொண்டு அதன்பேரிலே பேச வேண்டுமென்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. அப்படி யானால், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து, பொது

விவாதத்தை 12.30 மணிக்குள் முடித்துக்கொண்டால், அதன்பிறகு அரை மணி நேரம் பேசலாம். ஆனால், பொது விவாதம் 1.00 மணி வரை தொடருமானால், அதற்குப் பின்னால் 'கில்லட்டின் அப்ளை' செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையின்முன் வைத்திருக்கின்ற முதல் துணை மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே 1977-78 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ரூ. 633 கோடி அளவில் இந்த அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறோம். ஆனால், 1977—78-ஆம் ஆண்டிற்கு நிறைவேற்றப்பட்ட நிதி நிலை அறிக்கை வாயிலாக இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்துள்ள மானியத்தில் எந்த அளவு செலவு செய்திருக்கிறோம் என்பதை எண்ணுகின்றபோது, நிச்சயமாக மேலாக ஒரு துணை மானிய கோரிக்கையை இந்த அரசாங்கம் கொண்டு வருவதற்கு, ஏற்கனவே இந்த அரசாங்கம் அறிவித்த திட்டங்களுக்கு அப்பால், வேறு திட்டங்கள் ஏதாவது இந்த அரசாங்கம் அறிவித்து, அதை இந்த மன்றம் ஏற்றுக்கொள்கின்ற நிலையிலே இருக்கின்றதா என்று பார்த்தால், அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிலை, ஏற்கனவே எத்தனையோ திட்டங்களை இந்த அரசாங்கம் அறிவித்தது.

ஏற்கனவே நிதி நிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் அந்தத் திட்டங்களில் பெரும்பாலான திட்டங்கள் இன்னும் அமல்படுத்தப்படவில்லை, அமல் படுத்த இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் டென்டல் மெக்கானிக்ஸ் என்ற பிரிவினர் உண்ணாவிரதம் இருந்து வேலை வேண்டுமென்று கேட்டபோது மாமன்றத்தில் அறிவித்தார்கள்—20 மாணவர்களுக்கு உடனடியாக வேலை வழங்கப்படும் என்றும் மீதியுள்ள

வர்களுக்குப் படிப்படியாக வேலை கொடுக்கப்படும் என்றும் உறுதியைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இதுவரை ஒரு மாணவனுக்காவது வேலை கொடுக்கக் கூடிய நிலைமை இல்லை என்றால் அது இந்த மாமன்றத்தையே அவமதிப்பதாகக் கருதப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவை எல்லாம் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒரே ஒரு பாலம் கட்ட அரசு முன்வந்தது. அதற்காக 3.5 லட்சம் ரூபாய் ஏற்கனவே உள்ள நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அரசு அந்தத் திட்டத்திற்கு ஆணை கூடப் பிறப்பிக்கவில்லை என்பதை எண்ணும்போது அது வருந்தத்தக்க நிலை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டமானது மூவாற்று முகம், கோட்ட வாரம், பாரதப் பள்ளி ஆகிய இரண்டு கிராமங்களை இணைக்கின்ற வகையில் பாலியாற்றின் குறுக்கே கட்ட வேண்டிய பாலம். இதற்கு ஜீ. ஓ. கூடப் பிறப்பிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

மரமேறும் தொழிலாளர்கள் மரத்திலிருந்து விழுந்து அகால மரணம் அடைந்து விட்டால் 5,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதுசம்பந்தமாகவும் அரசு இதுவரை எண்ணிக் கூடப் பார்க்கவில்லை. எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை.

இன்றையதினம் மாநிலத்தில் இருக்கும் சில பர்னிங் ப்ராப்ளம்ஸ் பற்றிச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பத்திரிகையில் பார்க்கும் போது சென்னையில் இருக்கும் ஒரே ஒரு கல்லூரியான வெட்டரினரி காலேஜ் இன்டெபினிட்டாக மூடப்பட்டிருக்கிறது. மாணவர்கள் பிரச்சினை இன்று எங்கும் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, தேசத்தில் மட்டுமல்ல, அகில உலகத்திற்கும் பொதுவான பிரச்சினையாக மாணவர் பிரச்சினை இருக்கிறது. கல்லூரி மாணவர்கள் பிரச்சினையை நியாயமாகப் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக சாதாரணமாகக் கல்லூரிகளை இன்டெபினிட்டாக மூடுவது போல் இந்தக் கல்லூரியையும் மூடுவது நிச்சயமாக

[திரு. ஜெ. ஜேம்ஸ்] [1978 சனவரி 9

வரவேற்கத்தக்கது அல்ல. நமது மாநிலத்திலேயே இது ஒரே ஒரு கல்லூரி தான் இருக்கிறது. அதை மூடுவதற்குப் பதிலாக அந்தப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து அரசு அந்தக் கல்லூரியைத் திறந்து செயலாற்றச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தொகுதியில் தென் மாவட்டங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரே ஒரு இந்திய மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி கூட இப்போது மூடப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு அது நிச்சயமாக மூடப்பட்டுவிடும் என்று ஆணை கூடப் பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ஏற்கனவே வேலை நிறுத்தம் செய்து அந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு ஒழுங்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது மாணவர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் மூன்று ஆண்டுகளுக்கு மூடப்படும் என்று ஆணை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக, அது நிதியமைச்சர் அவர்கள் தொகுதியில் இருக்கும் கல்லூரி. அதில் நிதியமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனம் செலுத்தி அதைத் திறப்பதற்கான முயற்சிகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு கவனம் செலுத்தி உடனடியாகக் கல்லூரியை திறக்க வழிவகைகள் காணவில்லை என்றால் இந்திய மருத்துவமே அழிந்து போகக்கூடிய நிலை இருக்கிறது; அதில் பயிலுகிற ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

200 ரூபாய்க்குக் கீழ் சம்பளம் உள்ளவர்களுக்குப் பஞ்சப்படி பத்து ரூபாய் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை அரசாங்கத்தின் பரிசீலனையில் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. 50,000-க்கும் அதிகமான ஊழியர்கள் வந்து முதல்வர் அவர்களிடத்தில் மனு கொடுத்ததையும் அறிவோம். அவர்களுக்கும் பத்து ரூபாய் பஞ்சப்படி கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டில்லியில் நடைபெற்ற விவசாயப் பொருட்காட்சிக்காக நம்முடைய மாநிலத்தின் சார்பில் அரங்கு அமைக்க 7 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொருட்காட்சிக்கு

1978 ஜனவரி 9] [திரு. ஜெ. ஜேம்ஸ்]

நானும் சென்று பார்த்தேன். அந்தப் பொருட்காட்சி சாலையில் அனைத்தும் மாநிலங்களிலிருந்தும் அகில இந்திய அளவில் அரங்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே எல்லாம் மிகவும் மோசமாக, எல்லோரும் எள்ளி நகையாடக்கூடிய அளவில், தாம் தாழ்ந்த நிலையில் இந்த அரசின், சார்பில் அமைக்கப்பட்ட அரங்கு அமைந்திருந்தது. அதற்கு ஏழு லட்சம்

[பிற்பகல் 12.10]

ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே குறிப்பிடப்பட்டது 12 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும், செலவு ஆகும் என்பது. ஆனால் உண்மையிலேயே குறைவாகத்தான் செலவு செய்யப் பட்டிருக்கிறது, அது வருந்தத்தக்கது. டெல்லியிலே தேசத்தின் தலைநகரிலே நடைபெறுகிற பொருட்காட்சியிலே தமிழ்நாடு ஏளனம் செய்யப்படத் தக்க வகையில் அங்கே அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. இதற்குப் பொறுப்பு யார் என்பதைக் கண்டறிய வேண்டும். அங்கே உள்ள கொட்டகையிலே இரட்டை இலை வைத்திருந்தார்கள். ஆளுங்கட்சியின் சின்னமான இரட்டை இலையை அங்கே வைத்திருந்தார்கள். இப்படி அரசாங்கப் பணத்தைச் செலவு செய்து கட்சி சின்னத்திற்கு விளம்பரம் செய்யக் கூடாது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நகர்ப்புற நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவரப் பட்டிருக்கிறது, அதிலே பல்வேறு பிரச்னைகள் எழுகின்றன. அந்தச் சட்டத்தினால் பல ஏழைத் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுப்பதற்கு இடையூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகத்திற்காக பல லட்சம் ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகளுக்கு 5 ரூபாய் சம்பளம் கூட்டிக் கொடுக்கப் போவதாகவும் அதற்கு மானியம் கேட்கப்பட்டும் இருக்கிறது. கிராம அதிகாரிகளுக்கு இப்போது கொடுக்கப்படுகிற ஊதியம் போதாது. அவர்களுக்கு வேலைப் பளு

[திரு. ஜெ. ஜெம்ஸ்] [1978 ஜனவரி 9

அதிகமாக இருப்பதன் காரணமாக ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்குத் தங்கள் கையிலிருந்து பணத்தைக் கொடுத்து வேலை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிறவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும். இப்போது இருக்கின்ற முறையைப் பார்க்கிறபோது அவர்கள் கையில் இருந்து மற்றவர்களை நியமித்து வேலை வாங்கி பணம் கொடுப்பதால் லஞ்சம் சாதாரணமாக நடக்கிறது. அதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கிராம அதிகாரிகளுக்கு 5 ரூபாய் உயர்வு கொடுக்கிறார்கள். அதோடு கூடுதலாக கர்ணங்களையும், வில்லேஜ் முன்சிப்புகளையும், தலையாரி போன்றவர்களையும் நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி தாலுகாவைப் பொறுத்தவரையில் நிலவரி வசூலிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஏற்கனவே இருந்த நிலவரியை விடப் பன்மடங்கு அதிகமாக வசூலிக்கக்கூடிய ஏற்பாடு களைச் செய்து வருகிறார்கள். ஒரு ஏக்கருக்கு 125 ரூபாய் வரி வாங்கக்கூடிய நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. இது ஏற்கனவே இருந்ததைவிடப் பல மடங்கு அதிகம் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அவர்களும் மறுபரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். இதுவரையில் எதுவும் செய்யப்படவில்லை. அதைக் கவனிக்க வேண்டும். காரணம் என்னவென்றால், குறிப்பாக அங்கே உள்ள விவசாயிகள் எல்லாம் நிலச்சுவான்தார்கள் அல்ல, ஏழை விவசாயிகள் தான் 25 சென்ட், 50 சென்ட் நிலம் தான் வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு மனைப்பட்டா வழங்குவதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் வந்து வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்ததாக கேள்விப்பட்டேன். வசதி யுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விளவன்கோடு

1978 ஜனவரி 9] [திரு. ஜெ. ஜெம்ஸ்]

தாலுகாவிலே பெட்ரோல் பங்க் வைத்திருக்கிறவருக்கும் தோட்டங்கள் வைத்திருக்கிறவருக்கும் பட்டாக்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. எண்ணற்றவர்கள் நிலப்பட்டா இல்லாமல் [illegible] இடங்களில் குடியிருக்கிறார்கள். அவர்களை நிலச் சுவான்தார்கள் வெளியேற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர் களுக்கும் நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். ஹைவேஸ் ரோடு ஓரங்களில் இருக்கிற ஏழைகளை விரட்டுவதற்காக அந்த இலாகா முயற்சிக்கிறது. ஆனால் மாற்று இடம் கொடுக்காமல் அவர்களை அப்புறப்படுத்துவதானால் நிச்சயமாக அது நியாயமாக இருக்காது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிக்காரன் கோணம் என்ற இடத்தில் 300-க்கும் அதிகமான குடிசைகள் ரோடு ஓரத்திலே இருக்கின்றன. அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்பட வேண்டும். அதோடு ஏழைகள் குடியிருக்கும் இடங்களில் அவர்களுக்குச் சுடுகாடு இல்லாமல் பெரும் அவஸ்தைப்படுகிறார்கள். அதற்கு அரசு முன் நடவடிக்கை எடுத்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கல்வி இலாக்காவைப் பொறுத்தவரையில் இங்கே மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலே ஹையர் செகண்டரி பள்ளிகளுக்கு வழங்கியிருப்பதைப் பார்க்கும்பொழுது, கிராமப் பகுதிகளுக்கு இது வழங்கப்படவில்லை. பட்டணங்கள், நகரங்களில் அதிகமான பள்ளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே ஒரு பள்ளிக்கூடமாவது வழங்கி யிருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஒரு பஞ்சாயத்து யூனியன் ஏரியாவுக்கு ஒரு ஹையர் செகண்டரி பள்ளி என்று கொடுப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். அதை நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கனவே நான் சொன்னேன். இந்தி படிப்பதற்கு பள்ளிக்கூட நேரத்திற்கு வெளியே outside School hours என்று கூறினேன். அதற்கு இங்கே பணம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. ஏறக்குறைய 10 இலட்சம்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 சனவரி 9

ரூபாய் மத்திய அரசாங்கத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கு இங்கே மானியக் கோரிக்கை வைத்திருப்பதாகவும் தெரிகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் பணம் ஒதுக்கியது மட்டும் போதாது. உடனே இந்த மாநிலத்திலுள்ள மாணவர்களில் விரும்புகின்றவர்கள் அனைவரும் படிக்க வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை மருத்துவமனைகளில் மருந்து இல்லாத காரணத்தால் தொண்டை அடைப்பான் நோயினால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துபோயின. எங்கள் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கறவைமாடுகள் இறந்து போயின. மருந்து இல்லாத காரணத்தால் அவ்வாறு இறந்து போயின. அமைச்சரவர்கள் இன்று காலையில் கூறும்பொழுது எல்லா மாவட்டங்களிலும் மருந்து இருந்தது என்று கூறினார்கள். அது நிச்சயமாக உண்மைக்கு மாறான செய்தி என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அன்றையதினம் மருந்து இல்லாத காரணத்தால்தான் ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்துபோயின. இந்த நிலை மேலும் இருக்கக்கூடாது. ஆகவே, எல்லா மருத்துவமனைகளிலும் எப்பொழுதும் மருந்து இருக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில், இந்தப் புயல் நிவாரணத்தின் அடிப்படையில் நாம் அதைச் செய்து வருகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமச் சாலைகள், லிங்க் ரோடுகள் ஏற்கனவே அரைகுறையாகப் போடப்பட்ட நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்தச் சாலைகள் பாழாகக் கூடிய நிலையில் இருக்கின்றன. அப்படி அரைகுறையாக இருக்கும் சாலைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக திருவட்டார் போன்ற இடங்களில் அவ்வாறு இருக்கின்றன.

1978 ஜனவரி 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இப்பொழுது கூட்டுறவு சொசைட்டிகளில் நாமினேஷன் மூலம் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி தேர்தல் முறை மூலம் செய்ய வேண்டும். கோவாப்பரேட்டிவ் பேங்க், கோவாப்பரேட்டிவ் மில், ஸ்பின்னிங் மில் போன்றவைகளுக்குத் தேர்தல் வைத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாம்கர் ஃபெடரேஷன் சில காலமாகச் செயலற்றிருக்கிறது. அதற்கு ஒரு போர்டை அமைத்து பனையேற்றத் தொழிலாளர்களுக்குப் பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கையின் சீற்றத்தால் பல்வேறு மாவட்டங்களில் நாம் பல்வேறு வேலைகளை மேற்கொண்டிருக்கிறோம். மழையினால் கன்னியாகுமரி மாவட்டத்திலே பாசன வசதிகள் பெரிதாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை ஓர்க்ஸ் மினிஸ்ட்டர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எனக்குக் கிடைத்த பதில், அவற்றை இலாக்காவிற்கு அனுப்பியிருக்கிறேன் என்பது. அதற்கு அப்புறம் எந்தத் தகவலும் வருவதில்லை. ஆகவே, இலாக்கா கவனித்து அது சம்பந்தமாக மேல் நடவடிக்கை என்ன எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுபற்றி அரசாங்கம் எங்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்பதனைக் கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 12.20)

* **திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கையின் பேரில் என் கருத்துக்களைச் சொல்வதன் மூலமாக நடைபெற்றுவிட்ட சில குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவைகளைக் கவனித்து, நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில், அண்மையில் ஏற்பட்டு விட்ட புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டமைக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, குடிசைகள் சேதப் பட்டுள்ளன. அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது

[திரு. எல். ஜே. சாதிக்பாட்சா] [1978 சனவரி 9

ஆனால், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களும் புயலால் பாதிக்கப்பட்டும், மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டதைப் போல், அங்கு ஒதுக்கப்படவில்லை. மற்ற மாவட்டங்களைப் போல், இந்தச் செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்கள் பாதிக்கப்படவில்லையென்றாலும், அவைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இவ்விரு மாவட்டங்களிலும் குடிசைப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஆயிரம் விளக்குப் பகுதியிலே, 3,190 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு, சாதாரண காலத்தில் கொடுக்கப்படும் உதவி கூட கொடுக்கப்படவில்லை. குறிப்பாக, 103-வது வட்டத்தில் கங்கை கரைப் பகுதியிலே 300 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், ஆயிரம்விளக்கு தொகுதியில் 109 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆலையம்மன் கோயில் பகுதியிலே 700 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஜி. கே. வேல் பங்களா பின்புறத்திலே 200, காவேரித் தோட்டத்திற்குப் பின்புறம் 200, ஏரிக்கரையிலே 250 குடிசைகள்; அதுமட்டுமல்லாமல், மேலும் சில பகுதிகளில் குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, மொத்தம் 3,190 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, பழுதடைந்திருக்கின்றன, சேதம் அடைந்திருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் சாதாரண காலத்தில் கிடைக்கும் உதவிகூடக் கிடைக்கவில்லை. அரசு அதிகாரிகள் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று குறை சொல்லப்பட்டிருக்கிறது, மற்ற பகுதிகளிலும், உதாரணமாக, திருவல்லிக்கேணி பகுதியிலும் அதேமாதிரி குடிசைகள் பாழடைந்திருக்கின்றன. ஆனால், நிவாரண உதவி சரியாகக் கொடுக்கப்படவில்லையென்ற குறை சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தின் சார்பாக, புயல். வெள்ளத்திற்குப் பலியானவர் குடும்பத்திற்கு ரூபாய் 2,000 அளிக்கப்படும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். ஆனால், என்னுடைய ஆயிரம் விளக்குப் பகுதியிலே, புயல், வெள்ளத்திற்குப் பலியான சாகிப் பாய் என்பவருக்கு இந்த உதவி கிடைக்கவில்லை. அவருடைய குடும்பத்திற்கு இந்த உதவி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 சனவரி 9] [திரு. எல். ஜே. சாதிக்பாட்சா]

சிறுபான்மை சமுதாயத்தினர், லிங்குவிஸ்டிக் மைனாரிட்டிஸ், ரிலிஜியஸ் மைனாரிட்டிஸ், ஆகியோர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று அரசியல் சட்டம் கூறுகிறது. அதன் அடிப்படையில்தான் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில், நேஷனல் ஹாலிடேஸ் என்ற வகையில், சில விடுமுறைகள் விடப்பட்டிருக்கின்றன. அவற்றில், கிறிஸ்துமஸ் போன்ற விழாக்களுக்கு பி.டி.சி. விடுமுறை அளித்திருக்கிறது. ஆனால், ரம்சான், பக்ரீத், மிலாடி நபி போன்ற பண்டிகைகள் விடுமுறைப் பட்டியலில் இணைக்கப்படவில்லையென்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதனையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நந்தனம் அரசாங்கக் கலைக்கல்லூரியிலே உருதுப் பிரிவு இருந்து வருகிறது. அதை எடுப்பதற்கான நிலை இருந்து வருவதாகச் சொல்லி வருகிறார்கள். மாணவர்கள் குறைந்துவிட்ட நிலையை வைத்து, இந்த உருது பிரிவை எடுப்பதாக நான் அறிகிறேன். அண்ணா அவர்கள் காலத்தில் இப்படி ஒரு பிரச்னை வந்தபிறகு, மாணவர் எண்ணிக்கையைக் கவனத்திலே கொள்ளாமல், ஒரு மொழிக்கு ஆதரவு என்ற வகையில், அந்தப் பிரிவு நீடிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தாகள். அந்த வகையிலே, இப்பொழுதும் அந்தப் பிரிவு நீடிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பண்ருட்டியிலே நடந்த ஒரு சம்பவத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அங்கே, கூட்டுறவுக் கடன் கொடுக்கப்படுகிறது, மற்ற பகுதிகளைப் போல். நான்கு சகோதரர்களில், இரண்டு சகோதரர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்ற வகையில்—நான் கடனைத் திருப்பி வசூலிப்பதைத் தவறு என்று சொல்லவில்லை ஆனால்—அவர்கள் வீட்டில் இல்லாத நேரத்தில், அதுதான் நான் சொல்கின்ற குற்றச்சாட்டு, கோஷாப் பெண்களிடம் தவறாக நடந்துகொண்டு, ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது தவறு என்று சொல்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 ஜனவரி 9

அதேபோல், ரகுமான்கான், ஒரு முஸ்லீம் பெண் சுற்பழிக்கப் பட்டதைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டார். ஆகவே மைனாரிட்டி சமூகத்தினருக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக் கிறது. இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம். அதற்காக, கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்ட் கொண்டு வருகிறோம். ஆனால் தாராபுரம் தொகுதியில் கனியூர் கிராமத்திலே, 237, 238 சர்வே எண்களி லுள்ள சாகுபடிதாரர்கள், அரசாங்கத்தினுடைய சட்டங்களுக்கு விரோதமாக, கோர்ட்டுகளிலே பெற்றிருக்கிற இன்ஜங்ஷன் உத்தரவுகளுக்கு எதிராக, வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கி றார்கள். வெளியேற்றத்திற்குப் போலீஸ் அதிகாரிகள் பாதுகாப் பாக இருந்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இதுபோன்ற காரியங்களிலே முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இனி அவ்வாறு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடுமலைப்பேட்டையிலே வெங்கடாசலம் பிள்ளை காலனி இருக்கிறது. அந்தக் காலனியில் பல அரிசனங்கள் பல்லாண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களைத் திடீரென்று அப்புறப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிகிறேன். அவர்களுக்குப் பக்கத்திலே வேறிடம் தராமல், காலி செய்யச் சொல்வதாக நான் அறிகிறேன். அதையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் பிரச்னை பற்றி இங்கு பேசப்பட்டது. மாணவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படும் என்று சொல்லியும்கூட வாபஸ் பெறப்படவில்லை. குறிப்பாக, உடுமலை அரசாங்கக் கலைக் கல்லூரியிலே, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பெற்றோர் சங்கங்களைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி, மாணவர்கள்மீது போட்ட வழக்குகளை வாபஸ் பெறுவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், அந்த

1978 ஜனவரி 9] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாணவர் தலைவர் சந்திரசேகரன் உட்பட 4, 5 மாணவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வாக்குறுதி நிறைவேற்றப் படவேண்டும். இதுபோல், வழக்குகளை வாபஸ் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இடைநிலை, ஓவியம், கைத்தொழில் போன்றவற்றில் தேர்வுபெற்ற பின்னர், தமிழ் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்தார்கள். கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாவட்டத்திலே மாத்திரம் இங்கே இருக்கிற மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள் 13 பேர்களை, 10, 12 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியர்களை வேலைக் குறைப்பு செய்து, வேறு ஆசிரியர்களை நியமனம் செய்து இருக்கிறார்கள். அந்த ஆட்குறைப்பை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில், கோவையிலே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் 1385 ஆம் பசலியில் நஞ்சை சாகுபடி செய்வதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் தண்டத் தீர்வை போடப்பட்டது. அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கட்ட வேண்டிய பணத்தில் 25 சதவிகிதம் கட்டிவிட்டால், மீதி இருக்கும் பணம் தள்ளுபடி செய்யப் படும் என்று சொன்னார்கள். அதை நம்பி ஏராளமான பேர்கள் அந்த 25 சதவிகிதம் பணத்தைக் கட்டிவிட்ட பிறகும் மீதி பணம் தள்ளுபடி செய்யப்படவில்லை. மாறாகத் தண்டத் தீர்வைக் கட்டப்படவேண்டுமென்றும், கட்டவில்லை என்றால் ஜப்தி நடவடிக்கையும் நடக்கிறது. அதை இந்த அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதைப்போல 1386 ஆம் பசலி, இப்போது மழை பெய்திருக்கிற காரணத்தினால் புஞ்சை சாகுபடி செய்ய முடியாது. நஞ்சைதான் சாகுபடி செய்ய முடியும். ஆனால் அதற்கும் தண்டத் தீர்வை போடுகிறார்கள், அரசு இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ரகுமான்கான், ஒரு முஸ்லீம் பெண் கற்பழிக்கப்பட்டதைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டார். ஆகவே மைனாரிட்டி சமூகத்தினருக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம். அதற்காக, கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்ட் கொண்டு வருகிறோம். ஆனால் தாராபுரம் தொகுதியில் கனியூர் கிராமத்திலே, 237, 238 சர்வே எண்களிலுள்ள சாகுபடிதாரர்கள், அரசாங்கத்தினுடைய சட்டங்களுக்கு விரோதமாக, கோர்ட்டுகளிலே பெற்றிருக்கிற இன்ஜங்ஷன் உத்தரவுகளுக்கு எதிராக, வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றத்திற்குப் போலீஸ் அதிகாரிகள் பாதுகாப்பாக இருந்திருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இதுபோன்ற காரியங்களிலே முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இனி அவ்வாறு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உடுமலைப்பேட்டையிலே வெங்கடாசலம் பிள்ளை காலனி இருக்கிறது. அந்தக் காலனியில் பல அரிசனங்கள் பல்லாண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களைத் திடீரென்று அப்புறப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிகிறேன். அவர்களுக்குப் பக்கத்திலே வேறிடம் தராமல், காலி செய்யச் சொல்வதாக நான் அறிகிறேன். அதையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் பிரச்னை பற்றி இங்கு பேசப்பட்டது. மாணவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படும் என்று சொல்லியும்கூட வாபஸ் பெறப்படவில்லை. குறிப்பாக, உடுமலை அரசாங்கக் கலைக் கல்லூரியிலே, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பெற்றோர் சங்கங்களைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி, மாணவர்கள்மீது போட்ட வழக்குகளை வாபஸ் பெறுவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், அந்த

வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாணவர் தலைவர் சந்திரசேகரன் உட்பட 4, 5 மாணவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டும். இதுபோல், வழக்குகளை வாபஸ் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இடைநிலை, ஓவியம், கைத்தொழில் போன்றவற்றில் தேர்வுபெற்ற பின்னர், தமிழ் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வந்தார்கள். கிட்டத்தட்ட 10, 12 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாவட்டத்திலே மாத்திரம் இங்கே இருக்கிற மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள் 13 பேர்களை, 10, 12 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியர்களை வேலைக் குறைப்பு செய்து, வேறு ஆசிரியர்களை நியமனம் செய்து இருக்கிறார்கள். அந்த ஆட்குறைப்பை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில், கோவையிலே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் 1385 ஆம் பசலியில் நஞ்சை சாகுபடி செய்வதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் தண்டத் தீர்வை போடப்பட்டது. அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கட்ட வேண்டிய பணத்தில் 25 சதவிகிதம் கட்டிவிட்டால், மீதி இருக்கும் பணம் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். அதை நம்பி ஏராளமான பேர்கள் அந்த 25 சதவிகிதம் பணத்தைக் கட்டிவிட்ட பிறகும் மீதி பணம் தள்ளுபடி செய்யப்படவில்லை. மாறாகத் தண்டத் தீர்வைக் கட்டப்படவேண்டுமென்றும், கட்டவில்லை என்றால் ஜப்தி நடவடிக்கையும் நடக்கிறது. அதை இந்த அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல 1386 ஆம் பசலி, இப்போது மழை பெய்திருக்கிற காரணத்தினால் புஞ்சை சாகுபடி செய்ய முடியாது. நஞ்சைதான் சாகுபடி செய்ய முடியும். ஆனால் அதற்கும் தண்டத் தீர்வை போடுகிறார்கள், அரசு இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1978 சனவரி 9

லோயர் பவானி ப்ராஜக்ட்டிலே இப்போது 112 அடி தண்ணீர் இருக்கிறது. இங்கே உரம்பு எடுத்து விவசாயத்திற்குப் புஞ்சை சாகுபடி செய்ய முடியாத நிலை இருக்கிறது. நஞ்சை சாகுபடியும் செய்ய முடியாமல் இருக்கிறது. என்றாலும் அவர்களுக்கு நஞ்சை சாகுபடிக்கு அனுமதி கொடுப்பதோடு, தண்டத் தீர்வை விதிக்கக் கூடாது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இங்கே வாழக்கூடிய மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், உதாரணமாக இராஜஸ்தானி, குஜராத்தி போன்ற பகுதியிலே இருந்து வந்தவர்களையும் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். சாந்தோம் ஹைரோட்டில் ஒரு கடை வைத்திருக்கிறார் ராஜஸ்தானியைச் சேர்ந்தவர். அந்தக் கடையின் உரிமையாளா பெயர் ரோக்கட் சந்த் என்பதாகும். 119-ஏ, சாந்தோம் ஹை ரோட்டில் கடந்த 6—12—1977 அன்று ஒரு கலவரம் நடத்தியிருக்கிறார்கள். போலீசாருக்குப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இவர்களைப் போன்றவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலையிலேகூட உமாநாத் அவர்கள் பேசும்போது சொன்னார், 'கம்பல்சரி ரிட்டையர்மென்ட்' பற்றிப் பேசினார்கள். இந்தப் பிரச்சினை இன்னும் முடிக்கப்படாமல் இருப்பது வேதனையாக உள்ளது. கம்பல்சரி ரிடையர்மென்ட் செய்தவர்களை மீண்டும் வேலையில் அமர்த்திக்கொள்ள அதிகாரிகள் கொண்ட ஒரு கமிட்டி போடப்பட்டு, அந்த அதிகாரிகள் பரிசீலனை செய்து சிலரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், சிலரை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால், அமைச்சரவை சார்பாக ஒரு கேபினட் சப் கமிட்டி போட்டு தள்ளிவைக்கப்பட்டவர்களை மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 சனவரி 9] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

அரிசனங்களுக்காக வாதாடுகிறோம், பிற்பட்டவர்களுக்காக வாதாடுகிறோம் என்று சொன்னார்கள். தியாகராயர் நகர் பகுதியிலே ஒரு அரிசன ஆஸ்டல் இருந்தது. 15 ரூபாய் அதிகமாகச் செலவிடலாம் என்று அரசாங்க ஆணை இருந்தாலும் அவர்களுக்கு அது வழங்கப்பட வில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்ட மக்கள் குறைகளை அலட்சியப்படுத்தப்படுவதாக நான் அறிகிறேன்.

குறிப்பாக வந்தவாசி மருத்துவமனையிலே உள்ள ஒரு லேடி டாக்டர், சிகிச்சைக்குக் கொண்டு வரப்பட்ட சரஸ்வதி என்ற பெண்ணை சரியாகக் கவனிக்காத காரணத்தால் அந்த சரஸ்வதி என்ற பெண் உயிரிழந்திருக்கிறார். அதைப் பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு வந்தவாசி மருத்தவமனையில் இருக்கிறது. இங்கே இருந்து ஒரு உயர் அதிகாரி அங்கு சென்று விசாரிக்க வேண்டும். மாறாக அங்கே உள்ள மாவட்ட துணை மருத்துவ அதிகாரியைச் சென்று விசாரிக்கச் சொன்னால் உண்மை வெளி வராது என்று தெரிவிக்க விரும்புகிறேன். இதையும் கவனிக்க வேண்டும்.

ஏற்கனவே போடப்பட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் ரத்து செய்வதை நாம் பார்க்கிறோம். உடுமலைப்பேட்டை அருகில் உள்ள ராவணாபுரத்தில் ஒரு பாலம் கட்ட 3 லட்சம் ரூபாய் அனுமதித்திருப்பதாக 1973-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இப்போது அந்தப் பாலம் கட்டப்பட முடியாத நிலை இருக்கிறது. அதை ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானால் இன்னொரு பாலம் கட்டிக் கொடுங்கள். ஆட்சேபணை கிடையாது. ஆனால் இந்தப் பாலத்தைக் கட்டுங்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இதிலே நான் பொதுவாகச் சொல்ல விரும்புகிறேன். இன்று சிறுபான்மை சமுதாயத்தின் மத்தியில் ஒரு பாதுகாப்பான நிலைமை இல்லாது இருக்கிறது. திருப்பூர் வழக்கைக் கட்டாயம்

விசாரிக்க வேண்டும். முதலமைச்சர் கூடச் சொல்லியிருக்கிறார், குற்றச்சாட்டு யார் மீது இருந்தாலும் விசாரிக்கப்படும் என்று. ஒரு முஸ்லீம் பெண் கற்பழிக்கப்பட்டு இருக்கிற நிலைமை இதிலே இருப்பதால், இது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அளவிற்கு கருத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாமன்ற தலைவரவர்களே, இங்கே விவாதத்திலே. . . . .

திரு. சோ. அழகர்சாமி : இந்த விவாதம் முடிந்து விட்டதா? இது விஷயமாக மற்ற கட்சிக்காரர்களும் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் கருத்து சொல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஒரு மணிக்கு ஓட்டெடுப்பு இல்லெட்டின் எடுக்க வேண்டும். மற்ற நிகழ்ச்சிகளில் நேரம் குறைத்துக்கொண்டால், அத்தனை பேரும் பேசலாம் என்று ஏற்கனவே நான் சொன்னேன். இப்போது நிதி அமைச்சர் பேசினால், ஓட்டெடுப்பு ஒரு மணிக்கு எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும்.

திரு. கு. ரமணி: எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் பெயரும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் இன்னும் பேசவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில், எனக்கு 15 நிமிடம் போதும் மீதி 15 நிமிடங்களை அவர்களுக்கு நீங்கள் அளியுங்கள். ஆனால் உத்தரவாதம் பெறுங்கள். மீதி 15 நிமிடத்திற்குள் அந்த மூன்று பேரும் முடிக்க வேண்டும். மீதி 15 நிமிடத்தை நான் எடுத்துக் கொண்டு, ஒரு மணிக்கு என்பேச்சை முடித்து விடுகிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கை மீது என் மாவட்டத்தில் உள்ள ஒரு சில பிரச்னைகளைப் பற்றி மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எனது மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் குடும்பக் கார்டு மூலமாக அரிசி வினியோகிக்கப்பட்டு வந்தது. ஏகமண்டலமாக ஆன பிறகு அந்தக் குடும்பக் கார்டு முறை மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்திற்கு 6 கிலோ அரிசி வீதம் கொடுக்கப்படுகிறது. அதனால் 100-க்கு 75 மக்கள் அதிக விலை கொடுத்து வாங்கி அரிசி சாப்பிட வேண்டியிருக்கிறது. அரசாங்கம் குடும்பக் கார்டு மூலம் கொடுக்கும் அரிசியின் விலை ரூ. 1.60, ரூ. 1.85. ஆனால் வெளி மார்க்கெட்டில் அரிசி விற்கப்படும் விலை ரூ. 2.25 ஒரு கிலோ. ஆகவே, குடும்பக் கார்டு மூலம் கொடுக்கப்பட்டு வந்த நிலை மாற்றப்பட்டதால் அங்கேயுள்ள மக்கள் விலை அதிகம் கொடுத்து வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கிறது. ஆகவே, முன்பு கொடுத்ததுபோல் குடும்பக் கார்டு மூலமாக அந்த முழு அரிசியையும் அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டு, அதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 200 வருவாய்த் துறை ஊழியர்கட்டு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, கடலோரப் பிரதேசத்தில் சுமார் 10,000 கயிறு தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பச்சைத் தொண்டு என்ற மூலப்பொருள் கேரளாவில் இருந்து வந்து கொண்டு இருந்தது. இப்போது அதைக் கேரளா மாநிலத்தில் இருந்து எடுத்து வரக்கூடாது என்று சொல்லி, அதற்காக செக்போஸ்ட் போட்டு விட்டார்கள். அதன் காரணமாக 100 தொண்டின் விலை ரூ. 4 என்று விற்றுக்கொண்டு இருந்தது இப்போது ரூ. 8 என்ற அளவிற்கு உயர்ந்து விட்டது. ஆகவே, கயிறு தொழிலாளர்களுக்கு அங்கே வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, விலையைக் கட்டுப்படுத்தி அதைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாங்கி, கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால், அங்கேயுள்ள 10,000 தொழிலாளர்கள் பட்டினி கிடக்கவேண்டியிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பனை மரத்தொழிலாளர்களுக்கு மத்திய அரசு மானியமாகவும், கடனாகவும், வழங்கியுள்ள பணத்தை எங்கள் ஜில்லாவில் இருக்கும் பனைமரத் தொழிலாளர்கள் வாங்கிக்கொள்ள

[திரு. தே. ஞானசிகாமணி] [1978 சனவரி 9

முடியாத நிலை இருக்கிறது. அங்கே பாங்கர் ஃபெடரேஷன் என்று கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தன. அவையும் இப்போது சரியாகச் செயல்படவில்லை. அது மட்டுமல்ல. அதிலே பல்வேறு ஊழல் நடந்ததால், பல கூட்டுறவு சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் புதிதாக சொசைடிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தக் கமிட்டிகளில் தொழிலாளர்கள் மட்டும் அமர்த்தப்பட வேண்டும். பணத்திற்கான பொறுப்பை அரசாங்க அதிகாரிகளே ஏற்க வேண்டும். விபத்து நேர்ந்தால் 500 ரூபாய், அல்லது 1000 ரூபாய் இருந்ததை நிதியமைச்சர் 5,000 ரூபாய் ஆக்குவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கேயிருப்பவர்கள் அதற்கு ஆர்டர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அதை உடனடியாக அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, பனைமரத் தொழிலாளர்களுக்கு சொசைடிகள் ஆரம்பிக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது அவசரமான பிரச்னை.

அங்கேயிருக்கின்ற முந்திரி ஆலை திறக்கப்படவில்லை. கச்சா முந்திரி வரவழைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மத்திய அரசிடமிருந்து முந்திரிச் செடிகள் வளர்க்க பல கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கடிதம் கிடைத்திருக்கிறது. அதில் தமிழகத்திலிருந்து அதற்கான திட்டங்கள் வரத்து அனுப்பவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்து அனுமதியும் வேண்டியவை செய்யப்படும் என்று அந்தக் கடிதத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

(மணியடிக்கப்பெற்றது.)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர்களே, இந்தத் துணை மானியத்தில் பெரும்பகுதி, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் துடைக்கச் செய்ய வேண்டிய பணிகளுக்காகக் கேட்கிறார்கள். மொத்தம் ரூ. 154.72 கோடி அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்

1978 சனவரி 9] [திரு. சோ. அழகர்சாமி]

கிறது. ஆனால் இந்த வெள்ள, புயல் நிவாரணப்பணிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி மிகக் குறைவாக இருக்கிறது. அடுத்து வரவிருக்கும் பட்ஜெட்டில் அதிகமாக ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது ஒதுக்கியிருக்கின்ற தொகை போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் கருணை உதவி என்று சொல்லி, இறந்தவர்களின் குடும்பத்திற்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லி, சில பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல பேர்களுக்கு விடப்பட்டிருக்கிறது.

நாகப்பட்டினத்தில் உள்ள பிரதாபராமபுரம் கிராமத்தில் 47 பேர் இறந்திருக்கிறார்கள். அதில் 6 பேருக்குத்தான் இந்த 1,000 ரூபாய் உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தில் வருமானம் ஈட்டக் கூடியவர்கள் இறந்திருந்தால் மட்டும், இந்த 1,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தில் வேறு ஆட்கள் வருமானம் வரக்கூடியவர்கள் இருந்தால் கிடையாது என்கிறார்கள். ஒரு நேரத்தில் அவ்வளவு பேரும் இறந்துவிட்டார்கள். ஒரு பையன் தான் மிச்சம். அவன் வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி இல்லாமல், குடும்பத்தில் இறந்துபோனவர்கள் போக, யார் இருந்தாலும் உதவி கிடைக்கிற மாதிரி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் புயல், வெள்ளத்தால் மட்டுமின்றி, தமிழகம் பூராவும் அதிகமான மழையால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் வருமானம் குறைந்து, மீண்டும் விலைவாசி பெருகுவதற்கு நெருக்கடி நிலைமை ஏற்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியம், கடனுதவிக்காக 2 கோடி ரூபாய் என்று சொல்லி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கப்பட்ட கடன்களுக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புயல், வெள்ளம் இல்லாத இடத்தில் மழையின் காரணமாக மகசூல் பாதிக்கப்பட்டு, வருமானம் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் ஏகப்பட்ட ஜப்தி நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, ஜப்தி

நடந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜப்தியை நிறுத்தி, அந்தக் கடன்களை எப்படி வசூல் செய்வது என்பதற்கு ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் ஏகப்பட்ட பாக்கியை 10 ஆண்டுகளாக நிறுத்தி வைத்துக் கொண்டு வருகிறோம். அதை வசூல் செய்ய ஒரு கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அடுத்து இன்னொருவர் பேசவிருக்கிறார். அவருக்குப் பின்னால் மற்றொருவர் பேச வேண்டும். 12.45-க்குள் எல்லோரும் பேசிமுடித்து அமைச்சர் பதிலளித்து ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும். ஒரு மணிக்கு மேல் போகக்கூடாது.

(பிற்பகல் 12.40.)

ஆகவே இந்தக் கடன்களை வசூல் செய்வதில் ஒரு கொள்கை வகுக்கப்படவேண்டும். ஜப்தி போன்றவற்றை எல்லாம் நிறுத்தி வைக்கவேண்டும். குறுவைக்கு மட்டுமல்லாது சம்பாவிற்கும் கடன் போதிய அளவிற்கு கொடுக்க வேண்டும். பின்னர், ஆடு மாடுகளை இழந்தவர்களுக்கு அவைகளைத் திரும்பி வாங்குவதற்குக் கடன்கள் கொடுக்கவேண்டும். அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும். மத்திய சர்க்காரிடம் 200 கோடி ரூபாய் வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்.

பொதுவாக, இன்று மாநில அரசுகளுக்கு அடிக்கடி நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. அப்படி அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டு வருகிற பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று மத்திய அரசு எல்லா மாநில அரசுகளையும் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் நம் மாநிலத்திற்கு நிதிக் கமிஷன் வருவதாக அறிகிறேன். அந்த நிதிக் கமிஷன் வரும்போது இந்த மாநிலத்திற்கு அதிகமான நிதியை, நிரந்தரமாகப் பற்றாக்குறையைத் தீர்க்குமளவிற்கு எந்த அளவிற்கு நிதியைப் பெற முடியுமோ அந்த அளவிற்கு அதிகப்படி நிதியை வாதாடிப் பெறவேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் நிதி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவின் சமஷ்டி முறைக்கே வேட்டு வைக்கும் முறையில் எப்போதுமே மாநில அரசுகள் மத்திய அரசினுடைய தயவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது என்பது வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஆகவே நாம் உரிமைக் குரலை எழுப்புகிற இந்த நேரத்திலே வருகிற நிதிக் கமிஷனிடம் வாதாடி சரியான முறையில் தமது பங்கினைப் பெற அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வெள்ள நிவாரணம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற பாங்கினை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் அடிக்கடி அவையில் சொல்லப்படுகிறது. வெள்ள நிவாரண நிதி கொடுக்கச் செல்கிறபோது அதிகாரிகள் பாராமுகமாக நடந்து கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இந்த அவையில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. நமது தலைமைச் செயலாளரைப் பற்றிக்கூட ஒரு குறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று இதுபோன்றதொரு புகார் கோவை மாவட்ட கலெக்டரைப்பற்றி வந்திருக்கிறது. சென்ற மாதம் 30-ம் தேதி சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து ஒரு கணிசமான தொகை வசூல் செய்து கலெக்டரிடம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்து அவரிடம் சொல்லப்பட்டு, சத்தியமங்கலத்தில் வந்திருந்த ஆய்வு மாளிகையில் அவர்கள் இருந்தும் மறுநாள் காலை சர்வகட்சிக்காரர்களும் அந்தத் தொகையை அவர்களிடம் கொடுக்கச் சென்றால் கலெக்டர் அதை வாங்காமல் வேறு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்று விட்டார்கள் என்ற ஒரு புகாரை எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கையெழுத்து

இட்டு தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். கோவை மாவட்ட கலெக்டர் இப்படி நடந்து கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. இதை அரசு கவனிக்க வேண்டும். ஏன் இப்படி நடந்துகொண்டார்கள் என்று கவனித்து அவர்மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெள்ளச் சேதங்கள் அதிகமாக அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு என்ன வழி என்பதை அரசு கண்டுபிடிக்க வேண்டும். நீர் ஆதாரங்கள், குறிப்பாக கால்வாய்கள் எல்லாம் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் இப்படிப்பட்ட வெள்ளச் சேதங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. நம் மாநிலத்தில், குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில், நீர்ப்பாசனத்திற்கு ஆதாரமாக இருப்பவை ஏரிகள்தான். அந்த ஏரிகள், நீர் ஆதாரங்கள், கால்வாய்கள் எல்லாம் ஆக்கிரமிப்பிற்கு இன்று உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நிரந்தரமாக அகற்றுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்பட மாநில அளவில் ஒரு கமிஷனைப் போட வேண்டுமென்று கடந்த காலத்தில் கேட்டுக் கொண்டிருந்தோம். நிர்த்தாட்சண்யமாக தயவு தாட்சண்யம் பாராமல், யார் யார் அவற்றை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆற்றுப்படுகைகளில் வீடுகள் கட்டிக் கொண்டிருப்பவர்களை உடனடியாக அகற்ற வேண்டும். அதில் தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. ஏழைகளாக இருந்தாலும் மழை வரும்போது அவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்களை அங்கேயிருந்து வெளியேற்றி வேறு இடத்தில் மனை கொடுத்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாணியம்பாடி, ஆம்பூர் நகர்கள் பற்றி ஏற்கனவே நான் இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சுகாதாரக் கேடு இருக்கிறது. நிர்வாகக் கேடு இருக்கிறது. அதைத் தீர்க்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று

சொல்லியும் இதுவரையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படவில்லை. ஆம்பூர்-பேரணம்பட்டு இடையே பாலாறு இடையே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை இருந்துவருகிறது. அந்தப் பாலத்தைக் கட்டித்தர நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தயவுசெய்து அந்தப் பாலத்தைக் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டியப்பனூறு, ஆலங்காயம், வெள்ளக்கட்டு கானாறு திட்டம் இவை நிறைவேற்றப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்ப இந்த ரிகார்டைப் போட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தத் திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனதாக் கட்சி மத்தியில் அரசுப் பொறுப்பேற்றுக் கொள்ளும் போது ஒரு மைனாரிட்டி கமிஷன் அமைப்போம் என்று சொல்லி விட்டு வந்தார்கள். ஆனால் இதுவரையில் அது ஏற்படவில்லை. குறைந்தபட்சம் இந்த மாநிலத்திலாவது தமிழக சர்க்கார் ஒரு மைனாரிட்டி கமிஷனை உடனடியாக ஏற்படுத்தி—மைனாரிட்டி மக்களைப் பொறுத்து பல குறைகள் இருக்கின்றன, சர்க்கார் உத்தியோகங்களில் விகிதாசாரப்படி உத்தியோகங்கள் கிடைப் பதில்லை என்றெல்லாம் குறைகள் இருக்கின்றன—மைனாரிட்டி மக்களின் குறைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு ஒரு மைனாரிட்டி கமிஷன் மாநில அளவில் நியமித்து மைனாரிட்டி சமுதாய மக்களின் குறைகளை நிரந்தரமாகப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் துணை மானியக் கோரிக்கையின் மீது தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இதில் நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. குறிப்பாகச் சில உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லி, ஒப்புதலைப் பெற விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய நண்பர் உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் 'டென்டல் மெக்கானிக்கல் ஸ்கீம்'

[திரு. இ. மனோகரன்] [1978 [illegible]

அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றும், இந்த இந்திய மருத்துவக் கல்லூரி விரைவில் திறப்பதற்கான முயற்சியில் இந்தச் சர்க்கார் ஈடுபடும் என்பதையும் நான் மெத்தப் பணிவன்போடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசியவர்கள் எல்லாம் பொதுவாக இருக்கின்ற நிலைமைகளைப் பற்றிப் பேசினார்கள். இன்னும் சொல்லப் போனால், வெள்ளை அறிக்கையிலே பேசப்பட்ட கருத்துக்களைப் பற்றியும் பேசினார்கள். வெள்ளை அறிக்கையிலே பேசப்பட்ட கருத்துக்களையும், இத்துடன் இணைத்தும் பேசினார்கள். இன்னும் சொல்லப் போனால், அதிலே பேசியதையே திருப்பித் திருப்பி இப்போதும் பேசினார்கள். பட்ஜெட் [illegible] சொல்லி, அதன் அடிப்படையிலே பல துறைகள் சம்பந்தப்பட்ட பல அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட அத்தனை கருத்துக்களையும் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். அத்தனையையும், அந்தந்த அமைச்சர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, 200 ரூபாய் என்பது குறைவு என்றும் அதற்கு மேலே கொடுக்கலாமே என்றும் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு 200 ரூபாய் அளவிற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேலே வழங்கவேண்டுமென்று ஆட்சி கருதினாலும், [illegible] ஆதாரம் போதுமான அளவுக்கு இல்லை என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். நமது லத்தீப் அவர்கள் பேசும் போது, கொஞ்சம் ஆவேசமாகவே பேசுகிறார்கள்.

மத்திய சர்க்காரிடமிருந்து எப்படியும் 200 கோடி ரூபாய் வாங்கியாக வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்கள் உணர்வை நான் பாராட்டுகிறேன். நமது கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறோம். இன்றைக்கு மத்திய அரசின் நிதி அமைச்சர் திரு. எச். எம். படேல் அவர்கள் வந்தார்கள். அவரிடம் நம் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து நிதி உதவி கிடைக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். அப்படிக் கிடைக்காமல் போனால் என்ன [illegible] [illegible]. அப்படிக் கிடைக்காமல் போனால், நிதி [illegible]

[illegible]] [திரு. இ. மனோகரன்]

[illegible] பெறுவது என்பதற்கு நாம் வழி கண்டாக வேண்டும். அப்படியென்றால், என்னென்ன வழிகள் என்பதை, அதற்கான [illegible] லத்தீப் போன்றவர்கள் கருணை உள்ளத்தோடு தெரிவிக்க வேண்டும். 'எடு வாளை, தொடு போரை' என்று அவர்கள் அறிவுரை வழங்கமாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நமக்கு உரியவற்றை . . . .

திரு. எம். ஏ. லத்தீப்: இங்கே நிதிக் கமிஷன் வரயிருக்கிறது.

[illegible] திரு. இ. மனோகரன்: அடுத்து, அதற்கு [illegible] கருதுகிறேன். நமக்கு கிடைக்க வேண்டியவற்றை நிச்சயமாக [illegible] கேட்போம்.

அடுத்து, சென்னை நகருக்கு நிதிக் கமிஷன் வரயிருக்கிறது. இந்த மாதம் 16, 17-தேதிகளில் அந்தக் கமிஷன் முதல் முறையாக தமிழகத்திற்கு வரயிருக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமை தருகின்ற ஒன்று என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கமிஷன் வந்தவுடன், நமது கருத்துக்களை அந்தக் கமிஷன்முன் மீண்டும் வைப்போம்.

அது மட்டுமல்ல, நமது சாதிக் பாட்சா அவர்கள் சொன்ன போது, சென்னை நகரத்திலே பல பகுதிகளில், ஆயிரம்விளக்குப் பகுதியில்தான் அப்படிப்பட்ட நிலைமை என்றில்லை, எந்த [illegible] ரோடுகள் பழுதடைந்து கிடக்கின்றன என்பதை [illegible] பார்த்திருப்பீர்கள். அதற்கு 8 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு 8 கோடி ரூபாயை எப்படிக் கொடுப்பது என்றும் தெரியவில்லை. அதற்கும் [illegible] ஆக வேண்டும். நமக்கு மத்திய சர்க்காரிடமிருந்து [illegible] கிடைத்திருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் [illegible] நான் அவர்களிடம் கோரியதில் கிட்டத்தட்ட [illegible] நிதிக் கமிஷன் வரயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் எந்த அளவிற்குப் பெற முடியுமோ, அந்த அளவிற்கு பெறுவதற்கான காரியங்களை இந்தச் சர்க்கார் செய்யும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. [illegible]] [[illegible]]

அதற்குப் பிறகு, இங்கே இன்னொரு கருத்தையும் தெரிவித்தார்கள். புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, யார் செத்தாலும் சரி, அவர் பிரட்-வின்னராகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை, யாராக இருந்தாலும் சரி, அவருடைய குடும்பத்திற்கு உதவிப் பணம் வழங்க வேண்டுமென்று கருணை உள்ளத்தோடு குறிப்பிடப்பட்டது. அப்படிக் கொடுக்க வேண்டுமென்பதிலே எங்களுக்கும் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அவர்களுக்கெல்லாம் கொடுக்கின்ற அளவிற்கு நமக்கு நிதி இருக்கின்றதா என்பதையும் கருணை உள்ளத்தோடு கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று, இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை கொடுக்கக் கூடாது என்பது அரசின் முடிவல்ல. எண்ணம் இருக்கிறது. ஆனால், அவர்களுக்கெல்லாம் கொடுக்கின்ற அளவுக்கு பணம் எங்கே இருக்கின்றது, அதற்கான யோசனைகளையும் நீங்கள் சொல்லக் கூடாதா என்று மிகத் தாழ்மையுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இருக்கிற சிக்கல் வளராமல் இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அந்தக் காரியங்களில் ஈடுபடுவதுதான் நியாயமாக இருக்கும். எந்த அளவிற்குச் செலவைக் குறைத்து, எந்த அளவிற்கு வளத்தைப் பெருக்க வேண்டும் என்று நாம் எண்ணித் திட்டமிடுகிறோமோ அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்றால் கடுமையான முறையில் சில சிக்கன நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். அப்படி எடுப்பதன் மூலந்தான் லட்சியத்திலே வெற்றி பெற முடியும் என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

பேசுகிற அத்தனை உறுப்பினர்களும் தங்கள் ஆர்வத்தைக் காட்டுகிறார்கள். தங்கள் தொகுதியின் நிலைமைகளையும் தேவைகளையும் எடுத்துச் சொல்லுகிறார்கள். மொத்த தமிழகத்தைப் பற்றி ஒட்டுமொத்தமாக எடுத்துப் பார்த்து அந்தத் தமிழகத்தைத் [illegible] நிமிரச் செய்ய, பொருளாதாரத் துறையில் என்ன வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி கலெக்டிவ் ஆக, [illegible]

[[illegible] 9] [திரு. [illegible]]

மொத்தமாகச் சேர்ந்து நிற்போமானால் அதன் மூலம் கிடைக்கும் பலன் இந்த அரசுக்கு மிக உதவியாக இருக்குமென்று நம்புகிறேன். அந்த யோசனைகளை உறுப்பினர்கள் தருவதற்குப் பதிலாக எந்த அளவுக்கு நிதியை அதிகமாகச் செலவு செய்ய வேண்டுமோ அந்த யோசனைகளைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள். இது பாசிட்டிவ் யோசனை என்று ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை.

அதே நேரத்திலே அதிலே இருக்கிற நெகட்டிவ் ஆஸ்பெக்டை மறந்துவிடக் கூடாது. நீங்கள் யோசனைகள் வழங்கும்போது இரண்டையும் வழங்க முயற்சிக்க வேண்டும். பத்து லட்சம் ரூபாய் செலவு செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். பத்து லட்சம் ரூபாய்க்கு எங்கே போகிறது என்று திருப்பி திருப்பிக் கேட்கும்போது 'இதோ ஆதாரங்கள் இருக்கின்றன' என்று சுட்டிக் காட்டினால் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தத் துணை மானியக் கோரிக்கை—உங்களுக்குத் தெரியும்—கிட்டத்தட்ட 94.35 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உங்களிடம் அனுமதி கோரி வைக்கப்பட்டிருக்கிறது. இது மூன்று மாதங்களுக்குள்ளாக நாம் செலவு செய்யவேண்டிய தொகை என்பது உங்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையில் இது உங்கள் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் துணை மானியக் கோரிக்கை. மற்றத் திட்டங்கள் விடப்பட்டுப் போயிற்றே, போயிற்றே என்று கேட்கக் கூடும். இந்த 'ஸ்பில் ஓவர்' இருக்கிறதே அது அடுத்த பட்ஜட்டில் எந்த அளவுக்கு இடம் பெறும் என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சில விடப்பட்டுவிட்டன என்று கவலைப்படக் காரணம் இல்லை.

ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எதிர்பாராமல் நடந்த பெரிய விபத்து காரணமாக இவ்வளவு கோடி செலவைச் சந்திக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு உறுப்பினர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் நான் அமர விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே பங்கு பெற்றுப் பேசிய அவ்வளவு உறுப்பினர்களும் தங்களது பொறுப்பணர்ச்சியையும், தங்களது கடமை உணர்ச்சியையும் காட்டிப் பேசினார்கள். அதற்காக என்னுடைய

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1978 சனவரி 9

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

துணைமானியக்கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

'துணை மானியக்கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

'துணை மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள். என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

'துணை மானியக்கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 90,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

1978 சனவரி 9]

துணை மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 18 — மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 68,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,64,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண்.21—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 52,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 59,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 27—கதர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப் பின்கீழ் ரூ. 20,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண்.28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 29—தொழிற்சாலை களும் தொழிலாளர் நலனும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'.

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 30—சமூக நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதிலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக்கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

'துணை மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப் பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 34—நகர் பகுதி மேம்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி மேம்பாடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 60,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,23,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 36—பாசனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,78,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள் —கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,06,25,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக்கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திர சாதனங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,85,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 40—சாலைப்போக்குவரத்துப் பணிகளும், கப்பற் போக்குவரத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியப் கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பற் போக்குவரத்தும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,20,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,80,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித்துறை —கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித் துறை—கட்டடங்கள் குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. [illegible],00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்."

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 55—காடுகள் குறித்த மூலதனச்செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 55—காடுகள் குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,72,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 56—பல்வகை மூல தனச்செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 56—பல்வகை மூல தனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,56,47,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 43,85,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[1978 சனவரி 9

துணை மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித்துறை—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித் துறை—கட்டடங்கள் குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. [illegible],00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

1978 சனவரி 9]

துணை மானியக் கோரிக்கை எண். 55—காடுகள் குறித்த மூலதனச்செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 55—காடுகள் குறித்த மூலதனச்செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 56—பல்வகை மூலதனச்செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,56,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

துணை மானியக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"துணை மானியக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 43,85,33,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

துணை மானியக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு **ஓர் அறிவிப்பு.** தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. இ. மனோகரன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

இன்னும் 20 நிமிடங்கள் இருக்கின்றன. பேரவை அனுமதித்தால், ஒரு மசோதாவை எடுத்துக் கொள்ளலாம்.

(இ) தமிழ்நாடு 1977-ம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டடங்களை முறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/77.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கல்பாக்கம் அணு உலை நிறுவுதல் சம்பந்தமான ஒரு சிறிய மசோதா இருக்கிறது. அதை எடுத்து, இப்பொழுது நிறைவேற்றிவிடலாம் என்று கருதுகிறேன்.

தலைவரவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டடங்களை முறைபடுத்துதல், நிலத்தைப் பயன் படுத்துதல்) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முனவடிவு எண். 13/77) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் மாமல்லபுரத்திற்கு அருகே கல்பாக்கத்தில் அணு மின் நிலையத்தை அமைத்ததனால் அணுசக்தி விபத்து எதுவும் ஏற்பட்டால் பொது மக்களுக்கும் சொத்துக்களுக்கும் கடுமையான சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் 'ரியாக்டர்' அமைந்துள்ள பகுதியிலும் அதைச் சுற்றிலும் மக்கள் அதிக அளவில் வந்து குடியமர்வதைக் கட்டுப்படுத்துவது அல்லது தடுப்பது அவசியமென கருதப்பட்டுள்ளது. எனவே, அணு மின் நிலையம் பகுதியில் கட்டிடங்கள் கட்டுவதை அல்லது மீண்டும் கட்டுவதைக் கட்டுப்படுத்தவும் அப்பகுதியில் உள்ள நிலத்தைப் பயன் படுத்தவும் தனிச் சட்டம் ஒன்றை இயற்ற முடிவு செய்யப் பட்டுள்ளது. இயற்றக் கருதியுள்ள இச்சட்டம் முதலில் கல்பாக்கம் அணு மின் நிலையப் பகுதிக்குப் பொருந்தும். அதன் பின்னர் அரசு குறிப்பிடக் கூடிய பிற அணு மின் நிலையப் பகுதிக்கும் நீட்டிக்கப்படலாம்.

மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க இம்மசோதா விழைகிறது. இந்த மசோதாவிற்குப் பேரவை ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்த மசோதாவின்மீது என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். கல்பாக்கத்தில் அமைய இருக்கிற அணு மின் நிலையத்தைச் சுற்றி ஒருவேளை விபத்து ஏற்பட்டால் யாரேனும் குடியிருக்கின்றவர்கள்

*29—12—1977 தேசிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்திற்காக ஒரு எல்லையைவரையறுத்து, அந்த எல்லைக்குள் யாரும் குடியேற ஒட்டாதவாறும் அல்லது பயிர் செய்ய ஒட்டாதவாறும் இன்றைக்கு இந்த மசோதா வந்திருக்கிறது என்று அமைச்சர வர்கள் விளக்கம் கொடுத்தார்கள். இப்பொழுதே நாம் கல்பாக்கம் நிலையத்தைச் சுற்றி ஃபென்ஸ்—வேலி— போட்டிருக்கிறோம் என்று கருதுகிறேன். ஆனால், வேலியைத் தாண்டி எத்தனைச் சதுர மைலுக்கு இந்தத் தடுப்புச் சட்டம் வருகிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதற்காக நிலத்தை கையகப்படுத்தவோ அல்லது, தனியார் வீடுகள் கட்டியிருந்தால், நஷ்டஈடு கொடுக்கவோ, அல்லது பயிர் செய்திருந்தால், அவற்றிற்கு நஷ்ட ஈடு கொடுக்கவோ அவைகளைப் பற்றி ஏதேனும் சொல்லப்பட்டிருந்தால், அதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதுதான் மிகமுக்கியமானது. அது பற்றி மேலும் அமைச்சரிடமிருந்து பதில் அறியவிரும்புகிறேன்.

இப்படி அணுசக்தி நிலையத்தைச் சுற்றிக் கட்டுபாடு விதிப்பதால், மாநில அரசுக்கும் பொதுமக்களுக்கும், நாம் கிழக்குக் கடற்கரைப் பாதை போடுகிற நேரத்தில் இடைஞ்சலும் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துவது இந்த நேரத்தில் என் கடமை என்று நான் கருதுகிறேன்.

இப்பொழுது மாநில அமைச்சர்கள் போக வேண்டுமென்றால், அணு சக்தி நிலையத்தினுடைய நிர்வாகிகளிடத்தில் அனுமதி வாங்கி, அதன்பிறகுதான் அந்த வழியாக போகமுடியுமே தவிர நாம் புராஹிபிட்டட் ஏரியாவுக்குள் போகுமுன் யாரும் நுழைந்து விடக் கூடாது என்று தடுத்து வைத்திருக்கிறார்கள். நான் அந்த பாதை வழியாக இரண்டு மூன்று முறை செல்லும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். உள்ளே மத்திய அரசாங்கத்திற்கு என்று கட்டப்படுகிற அணு மின் நிலையத்திற்காக வேலைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. வேலை துரிதமாக நடைபெற வேண்டும் அது வேறு பிரச்சினை. அது இந்த மசோதாவில்

அடங்காது. என்றாலும் எவ்வளவு மைல் சுற்றளவுக்கு இப்படித் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வரபோகிறீர்கள். இதன் காரணமாக, வீட்டை இழக்கப் போகிற, நிலத்தை இழக்கப் போகிற மக்களுக்கு நஷ்டஈடு தரத் தயாராக இருக்கிறீர்களா, இப்படித் தடுக்கப்பட விருக்கின்ற இடங்களைச் சுற்றிலும் ஒரு வேலி கூட இல்லாமல் போய்விடுமானால் பொதுமக்கள் தெரியாமல் இந்த இடங்களுக்குப் போகக் கூடும். அப்படி ஏற்படாமல் தடுக்க அரசாங்கம் விரும்புகின்ற அந்த எல்லையைச் சுற்றி, மற்ற வர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக, ஒரு வேலி அமைத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன். அதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவி னுடைய நோக்கம் வரவேற்கக்கூடிய மிக முக்கியமான ஒரு ஸ்ட்ராட்டஜிக் பிளேஸ் என்று சொல்லக்கூடிய இடத்தில் பொது மக்களுடைய சஞ்சாரம் அதிகமாக இருக்கக்கூடாது என்பதற் காகவும் ஆபத்துக்களை விளைவிக்கக்கூடிய வரையறைக்குட்பட்ட இடங்களில் பொதுமக்களுடைய நடமாட்டம் இருக்கக்கூடாது என்பதற்காகவும் பொது மக்களுடைய நன்மையைக் கருதி, நாட்டினுடைய நன்மையை உத்தேசித்து இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல வரையறை என்ன என்பதை அரசு பிறகு அறிவிக்கும் என்று சொல்வதை விட இப்போதிருந்தே ஒரு அறிவிப்பு தந்துவிட்டால், மேற் கொண்டு அங்கே வீடுகள் கட்டுவதற்கும், நிலம் பயிர் செய் வதற்கும் மக்கள் முன் வர மாட்டார்கள். ஏற்கனவே இப்போது கல்பாக்கம் டவுன்ஷிப் பக்கத்திலே பெரிய பட்டணம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பெரிய பட்டணத்தில் கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகஸ்தர்களும், பொதுமக்களும், வியாபாரிகளும் பெரும்பான்மையாக வாழ் கிறார்கள். விவசாயம் செய்கிற விவசாயப் பெருங்குடி மக்களும் இந்த பெரிய பட்டணத்தில் வாழ்கிறார்கள். அது கல்பாக்கத்தை ஒட்டிய ஒரு பகுதியாக இருக்கிறது. இப்போது உத்தேசித்துள்ள தடுப்பு ஏற்பாடு செய்வதாக இருந்தால் அந்த பெரியபட்டணம் நிச்சயமாக பாதிக்கப்படும். ஆகவே பெரிய

பட்டணத்தை அந்த வரையறைக்குட்படுத்துவது நிச்சயமாக அங்குள்ள மக்களைப் பாதிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா என்பது நியாயமான கேள்வியாகும். அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும், என்று நான் கருதுகிறேன். மற்ற வகையில் இந்த சட்டம் வரவேற்கப்படத் தக்க ஒரு சட்டம்தான். ஆனால் இதையும் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தெளிவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் நானும் பேச எழுந்தேன் என்று தெரிவித்து அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் any order or decision என்று போடப்பட்டிருக்கிறது. இதிலே சிவில் கோர்ட்டுகளுக்குப் போகக்கூடாது என்று போட்டிருப்பதோடு No order or decision shall be liable to be questioned in any Court of law.
என்று போடப்பட்டிருக்கிறது. இப்போது நாட்டிலே விவாதிக்கப்படுகிற பொதுவான பிரச்னை, கடந்த காலத்திலே சொல்லப்பட்ட பிரச்னை, இம்மாதிரி கோர்ட்டுகளுக்குச் செல்ல வழி வகுக்கக் கூடாது என்று இருப்பதன் விளைவாகத் தவறான முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லக்கூடிய முறையிலே—இன்று போடப்பட்டிருக்கிற சட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்; ஆனால்—போடப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் முறையாக அமல் படுத்தப் படவில்லை என்று யாராவது அபிப்பிராயப்பட்டால், நிவாரணத்திற்காக எந்தக் கோர்ட்டுக்கும் போகக்கூடாது என்று இதில் சொல்கிறார்கள். உண்மையிலேயே வீடுகளைக் கட்டி இருப்பவர்கள் ஏற்கனவே நிலம் வைத்து இருப்பவர்கள், இந்தச் சட்டத்திற்குப் புறம்பாகக் கூட, அதிகாரிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கருதினால், எந்த நேரத்திலேயும் அவர்கள் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொன்னால் அது அவர்களைப் பாதிக்காதா என்பதைப் பார்க்கவேண்டும்.

•

(பிற்பகல் 1-20)

மற்றொரு விஷயம். இதிலே "ஸ்டேட்டஸ்கோ" என்று இருக்கிறது. அதாவது, ஏற்கனவே இருக்கக்கூடியவைகள்.

அதைக்கூட இன்றைக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அனுமதித்து விட்டு பிறகு நீக்கி விடலாம் என்பதற்கும் மசோதாவிலே அரசாங்கம் வழிவகை கேட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கனவே இருக்கும் கம்பெனிகளைப் பொறுத்தவரையில் கடுமையாக இருக்கவேண்டுமென்று ஒப்புக்கொள்கிறேன். பாக்டரிகள், கம்பெனிகளைப் பொறுத்தவரையில் கடுமையான நடவடிக்கை எடுப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் ஒரு ஓலைக்குடிசை, மாட்டுத் தொழுவம், அல்லது வேறு பார்மர்ஸ் ஷெட் போட்டு இருந்தாலும், அது எல்லாம் வரையறுப்பில் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, சாதாரண மக்கள் குடிசை போட்டிருக்கும் நேரத்தில் அதிலே அவர்களையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக அதிகாரிகள் தடுக்கக்கூடாது. லோகல் அதாரிட்டி கடுமையாக நடந்து கொள்ளக்கூடாது. அதற்கு நம்முடைய அரசு என்ன உத்தரவாதம் செய்கிறது. மாவட்ட கலெக்டர் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு ஒருவன் மனு செய்வதற்கு கொடுக்கப்பட்டு இருக்கும் அவகாசம் போதாது என்று கருதுகிறேன். ஒருவேளை மாவட்ட கலெக்டரிடத்தில் ஏதோ ஒரு காரணத்தால், அவன் மனு செய்யத் தவறிவிட்டால், அவன் அரசாங்கத்திற்கு பின்னர் அப்பீல் செய்யமுடியாது. அது சரியாகத் தோன்றவில்லை. ஆகவே, இந்த அம்சங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆனூர் ஜகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, இதில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் பேச வேண்டி இருக்கிற காரணத்தாலே ஓரிரு கருத்துக்களைச் சொல்லி முடிக்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் நான் முழுமனதோடு வரவேற்றாலும் கூட, இந்த கல்பாக்கம் அணு மின் நிலையப் பகுதியான சதுரங்கப்பட்டினம், புதுப்பட்டினம், மகாபலிபுரம் ஆகிய 3 பகுதிகளில் வாழும் மக்களையோ அல்லது அங்கே பல காலமாக குடியிருந்து வரும் விவசாயிகளையோ எந்த விதத்திலும் பாதிக்காமல் இருப்பதற்கும், அந்த பகுதியில் இருக்கும் மக்களுக்கு எல்லா விதமான சௌகர்யங்களையும் செய்து கொடுப்பதற்கு இந்த மசோதாவிலே

வழிவகை இருக்கவேண்டுமென்று கேட்டு, இதனால் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் இருக்கக்கூடாது என்று கூறி என் கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அணுமின் நிலைய உற்பத்தித் திட்டம் நமக்கு அளிக்கப்பட்ட போது, இந்திய அரசினுடைய அணுமின் நிலையத்துறை சில நிபந்தனைகளை விதித்தது. இந்தத் திட்டம் அமைக்கப்பட்ட ஒரு மைல் சுற்றளவு 'எக்ஸ்குளூசன் ஏரியா'. அதாவது ஒரு மைல் சுற்றளவில் எந்தத் தொழில் நடந்தாலும், அது அணுமின் நிலையத்திற்கு ஓரளவிற்கு பாதத்தை விளைவித்துவிடும், ரேடியோ ஆக்டிவிடி மக்களைப் பாதித்துவிடும், விவசாயம் செய்தால், விவசாயப் பயிர்களை பாதித்துவிடும். அதன் மூலம் அந்த உணவை அருந்துகிறவர்களைப் பாதித்துவிடும். ஆகையால் ஒரு மைல் சுற்றளவிற்கு, ஒரு மைல் ரேடியஸ் எக்ஸ்குளூசன் ஏரியா நிர்ணயம் செய்ய வேண்டும்.

அடுத்தது மூன்று மைல் ரேடியஸுக்கு ஒரு ஏரியா. அதை ஸ்டெரிலைஸ்டு (steriliged) என்று ஏரியா நிர்மானித்திருக்கிறார்கள். அதாவது காப்புப் பகுதி என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அங்கும் ஓரளவிற்குக் கண்காணிப்புத் தேவை. மூன்றாவது 'அவுட்லையிங் ஏரியா', 10 மைல் சுற்றளவிற்கு 10,000 மக்கள் தொகை கொண்ட நகரங்கள் இருக்கக்கூடாது என்பது மூன்றாவது விதி. நான்காவது விதி, 25 மைல் சுற்றளவிற்கு ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட பகுதி கூடாது என்பதாகும். இப்போது இந்தச் சட்டத்தில் நாம் கொண்டு வருவது 'எக்ஸ்குளூசன்' ஏரியா அன்று 'ஸ்டெரிலைஸ்டு ஏரியா' இரண்டைப் பற்றியாகும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் எடுத்துச் சொன்னது போல, சாதாரணமாக எல்லாப் பகுதிக்கும் அதில் காப்பு அமைந்திருக்கிறது. அங்கே வேலியும் போட்டு வைத்திருக்கிறார்கள். அதே நோக்கில், ஏதாவது ஆக்ஸிடெண்ட்டோ, எமர்ஜென்சியோ ஏற்பட்டுவிடுமேயானால், ஒரு மைல் சுற்றளவிற்கு இருக்கின்ற மக்களை அப்புறப்படுத்த,

அவர்களைக் காப்பாற்ற வழிவகை செய்ய வேண்டும். ஆனால் ஒரு மைல் சுற்றளவுக்கு இருக்கிற பகுதியில் விவசாயம் முதல் எந்தத் தொழிலைச் செய்தாலும் செய்யலாம். ஆனால் அதற்கு நாம் இந்தச் சட்டத்தின் மூலம் உருவாக்குகிற 'நியூக்கிளியர் இன்ஸ்டலேஷன் லோக்கல் அதாரிட்டி' அவர்களுடைய அனுமதியைப் பெற்றுச் செய்ய வேண்டும். ஆகையால் நாம் அவர்களைச் செய்யக் கூடாது என்று தடைபடுத்தப் போவதில்லை. பாதுகாப்பையொட்டி அவர்களுடைய அனுமதியைப் பெற்று செய்ய வேண்டும் என்பது அந்த விதி. அதே போல் மூன்று மைல் பகுதிக்கு விவசாயம் செய்ய அனுமதி பெற வேண்டியதில்லை. ஆனால் விவசாய நிலத்தை மாற்றி தொழில் நிலமாகவோ அல்லது வேறு காரியத்துக்கோ மாற்றுவார்களானால், அதற்கு அனுமதி வேண்டும்.

(*a*) erect or re-erect a building on any land; or

(*b*) put to use any agricultural land to any non-agricultural purpose; or

(*c*) carry out any engineering, mining or other operation on any land;

ஆகவே அந்த மூன்று மைல் ரேடியஸில் இருக்கிற பகுதிகளுக்கு அவர்கள் பயன்படுத்துகிற நோக்கத்திலிருந்து மாற்றும்போது 'நியூக்கிளியர் இன்ஸ்டலேஷன் லோக்கல் அதாரிடி' யிடமிருந்து அனுமதி பெறவேண்டும். இது தற்காப்பு நடவடிக்கையாக எடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் மக்கள் தொகை வளர்ந்து, அதனால் பாதகம் அதிகம் ஆகிவிடக் கூடாது, பொது நிறுவனங்கள் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இருக்கிற எந்த இடங்களுக்கோ, மனைகளுக்கோ, வீடுகளுக்கோ ஆபத்தில்லை. அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும். ஏனென்றால் இருக்க இருக்க வளர்ந்து கொண்டு போய்விடுகிறது. மேம்பாடு திட்டத்தை ஏற்படுத்தி விட்டால் பாதகம் ஏற்பட்டு விடும் என்பதற்காக 'ரெஸ்டிரிக்டிவ் பவர்' எடுத்துக் கொள்ளப் படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் சங்கரையா பேசும்போது குறிப்பிட்டார்கள். சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் வழங்காமல் இருப்பது நல்லதல்ல என்றார். ஆனால் கோர்ட்டுக்கே போக முடியாது என்பதல்ல. நியூக்ளியர் இன்ஸ்டலேஷன் லோக்கல் அதாரிட்டி அனுமதி பெற வேண்டும். அங்கே அநீதி இழைக்கப்பட்டால் கலெக்டரிடம் மனு செய்யலாம். கலெக்டரிடம் நியாயம் கிடைக்கவில்லை என்றால், அரசிடம் மனுச் செய்யலாம். இரண்டு இடத்தில் அப்பீல் ரிவிஷன் புரொவிஷன் இருக்கிறது. அரசு உத்தரவு சரியில்லை என்றால், ஹைகோர்ட்டுக்குப் போகலாம். சிவில் கோர்ட் ஜூரிஸ்டிக்ஷன் இதில் தடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட கலெக்டரிடம் அப்பீல் போட்ட பிறகுதான் அரசாங்கம் பரிசீலிக்கலாம் என்று சட்டத்தில் இல்லை. அரசாங்கமே 'சுவோ மாட்டோவாக' பரிசீலிக்கலாம். ஆனால் மனு முதலில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் போட வேண்டும். நேராக அரசாங்கத்திற்கு வந்துவிடக் கூடாது. அதே நேரத்தில் அரசாங்கமே 'சுவோ மாட்டோவாக' பரிசீலிக்கலாம். அரசாங்கத்திற்கு அந்தப் பவர் ஏற்கனவே இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நேராக அரசாங்கத்திற்கு மனு வராவிட்டால், அரசாங்கத்திற்கு எப்படி தெரியும்? அப்படி வராமல் எப்படி 'சுவோ மாட்டோவாக' டிசைட் செய்ய முடியும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசாங்கமே நேரடியாக மனுவை வாங்கி, நாமே தீர்ப்போம் என்ற நிலைமை வந்துவிட்டால் யாரும் கலெக்டரிடம் போக மாட்டார்கள். எல்லா மனுக்கள் எல்லாம் அரசாங்கத்திற்கே வந்துகொண்டிருக்கும். But the Government can examine this on suo mottu basis

அந்த பவர் அரசாங்கத்திற்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். சில இடங்கள் பாதிக்கப்படும் என்று சொல்லி, பழைய பட்டினத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது ஒன்றும் பாதிக்கப்படாது.

ஆனால் அவர்கள் மேற்கொண்டு ஏதாவது செய்ய வேண்டுமானால், அனுமதி பெறவேண்டும் என்பதுதான் இருக்கிற நிலை. இவ்வளவும் தற்காப்புக்காக செய்யப்பட்டிருக்கின்ற நடவடிக்கை. இதனால் பாதகம் வந்துவிடாது. ரேடியோ ஆக்டிவிடியைப் பொறுத்த வரையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்கு நான் இந்தச் சட்டம்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எனக்கு இருக்கிற சந்தேகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக தங்கள் மூலம் அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன். ஒரு மைல் சுற்றளவுக்கு ரேடியோ ஆக்டிவிடியால் மக்கள் பாதிக்கப்படக் கூடும், வைக்கிற பயிர் பாதிக்கப்படக்கூடும். பயிரை உண்ணும் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று இவ்வளவு ஆபத்தான ஒன்றைச் சொல்லி, அதை அனுமதி வாங்கிக்கொண்டு செய்யலாம் என்றார்கள். அனுமதி வாங்கி பயிர் செய்தால் ரேடியோ ஆக்டிவிடி பாதிக்காது என்று உத்திரவாதம் இருக்காது. ஏனென்றால் ரேடியோ ஆக்டிவிடி யாரையும் கேட்டுக்கொண்டு பாதிப்பதல்ல. ஒரு வேளை கல்பாக்கம் அணுமின்நிலையம் காரியம் செய்த பிறகு தடுக்கப்படும் என்று கருதுகிறேன். அதுவரையில் பயிரை அனுமதிப்பார்கள். மேற்கொண்டு டெவலப்மெண்ட் வேண்டாம் என்று சொல்லும் கட்டுப்பாடு கட்டிவிட்டால் நஷ்டம் அதிகமாக ஏற்பட்டுவிடும் என்பதற்காக தடுக்கின்ற உரிமை இருப்பது நியாயம். அதன்படியாக அமைச்சர் சொன்னார்கள். 25 மைல் சுற்றளவுக்குக் கூட பின்னால் இன்னொரு வளையம் போட்டார்கள்.

[பிற்பகல் 1-30]

25 மைல்கள் என்று போடும்போது துர்ப்பாக்கியகரமாக நம் மகாபலிபுரம் கூட வந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. சென்னை விரிவடைந்து கொண்டே போவதால், மகாபலிபுரத்தைச் சுற்றி ஒரு செக்டர் என்பது சாதாரணமாக வந்துவிடக்கூடும். அந்த ஆபத்தைத் தடுக்க முன்கூட்டியே அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதைப்பற்றி ஏதாவது யோசித்து வைத்திருக்கிறார்களா அல்லது பின்னால் யோசித்து சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மணி 1-30 ஆகிறது. சபையின் அனுமதியோடு நேரத்தை சிறிது நிமிடங்கள் நீடிக்கிறேன்.

[1977 ஜனவரி 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 10 மைல், 25 மைல் அளவு என்று இப்போது சட்டத்தில் கொண்டுவரவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கவேண்டுமென்று, இந்த அணு மின் நிலைய உற்பத்தி தொடங்க அனுமதி வழங்குவதற்கு முன்னால் அட்டாமிக் ரிசர்ச் சென்டரைக் கேட்டு அந்த அடிப்படையில்தான் அந்த இடமே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. 'எக்ஸ்ளூஷன் ஏரியா'வைப் பொறுத்தவரையில் அல்லது 'ஸ்டர்லைஸ்ட் ஏரியா'வைப் பொறுத்தவரையில் சாதாரணமாக ரேடியோ ஆக்டிவிட்டி வராது. இப்போதே எல்லாப் பாதுகாப்பும் இருக்கிறது. வந்துவிட்டால் என்ன செய்வது என்பதற்காக அந்தப் பாதுகாப்பே தவிர சாதாரணமாக ஒரு மைல் அளவு பகுதிக்கு பாதகம் வராது. இன்றே பாதகம் வருகிறமாதிரி வெளியே ஒரு கருத்து வரத் தேவையில்லை. accident, under normal circumstances வராது. "Any emergency" அதற்கும் பாதுகாப்பு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி வளர, மேம்பாடு அடைய நிறையப் பேர்கள் பாதிப்பிற்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக we are taking the precautionary measures என்பதை தெளிவாக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி. "தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை முறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1977). ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 21 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "பிரிவு 1 இச்சட்ட முன்வடிவின் பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Speaker, Sir, I move.

1978 சனவரி 9]

In sub-clause (i) of Clause 1, for the figures '1977' substitute the figures '1978'.

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

Clause 1, as amended, was put and carried.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, I move:

"That the Tamil Nadu Nuclear Installations (Regulation of Buildings and use of land) Bill, 1977 (L.A. Bill No. 13/77), as amended, be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் மாலை 4 மணியளவில் கூடும்.

[மாலை 4-00]

மாலை 4-00 மணியளவில்—பேரவை மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியது.

(11) ஒரு நிகழ்ச்சி குறித்து உரிமைப் பிரச்னையை அந்நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்கு பிறகும் அனுமதிப்பது குறித்து

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். இன்று காலையில் தாங்கள் ஒரு தீர்ப்பை தந்திருக்கிறீர்கள். நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஒரு சம்பவம் நடக்கும்போதே அதைப்பற்றி உடனடியாக, உரிமைப் பிரச்னை கொடுக்கவேண்டுமானால் அடுத்த நாளைக்கே கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அமைச்சர்கள் இங்கு பேசக் கூடிய பேச்சைப்பற்றி வேண்டுமென்றால் தாங்கள் கூறியது போல் செய்யவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அமைச்சர்களின் பேச்சு பத்திரிகைகளில் எதிர்போது, தவறாக வெளியிடும்போது, அவை உடனடியாக எங்கள் கவனத்திற்கு வந்துவிடும் என்று தாங்கள் கருதமாட்டீர்கள். அடுத்த நாள் என்றில்லாமல் சில நாட்கள் கழித்து அப்படி தவறுதலாக வெளியிட்ட பத்திரிகை

மீது தான் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறோம். **ஆகவே** இதையும் அடுத்த நாளைக்கே கொண்டுவரவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதை தளர்த்தி, எங்கள் கவனத்திற்கு அது கொண்டு வந்த பின்னால் அப்படிப்பட்ட உரிமைப்பிரச்சினையைக் கொண்டு வரலாம் என்றிருந்தால் தான் எங்களைப் போன்றவர்களுக்கு உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். முன்னாள் அமைச்சராக இருந்த ஆதித்தனார் அவர்களுக்கும் ஆனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கும் நடந்த விவாதம் பற்றி பத்திரிகையில் தவறாக வந்ததை உடனடியாக உரிமைப்பிரச்சினை இங்கு கொண்டு வரப்படவில்லை. அடுத்த செஷனில் தான் கொண்டுவரப்பட்டது, அப்போது சட்டப்பேரவைத் தலைவரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மரபுகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இப்போது இதில் நீங்கள் தீர்ப்புச் சொல்லிவிட்டீர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் கூறவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட உரிமைப் பிரச்சினைகளை கொண்டு வருவதற்கு தாராளமாக அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தான் எனது வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் சுப்பு அவர்கள் நல்ல வழிகாட்டலாக இருக்கின்ற வகையில் எடுத்துச்சொன்னவைகளை நான் கவனிக்கிறேன். அதே நேரத்தில் ரகுமான்கான் அவர்கள் இதைச் சொல்வதற்குப் பதிலாக அவர்களுடைய சார்பாக முன் கூட்டி தாங்களே இதைச் சொல்லியிருக்கிறீர்கள். இதை ரகுமான் கான் அவர்கள் கூறுவார்கள் என்று நினைத்தேன். எதிர்காலத்தில் இப்படிப்பட்டவைகளை முறைப்படுத்த, உறுப்பினர்களுடைய உரிமைகள் பறிபோகாமல் எப்போதும் காப்பாற்றிக்கொள்வதற்கும் திரு. சுப்பு அவர்கள் சொன்ன கருத்துக்கள் ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, சபையின் மரபுகள் முக்கியமாக காப்பாற்றப்பட வேண்டும். என் பக்கத்து திரு. சுப்பு அவர்களிடமிருந்து அல்லது அவர்கள் சொன்னவைகளிலிருந்து இந்த அவை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஒரு முறை தாங்கள் ஒரு பிரச்சினையின் மீது தீர்ப்பு அளித்தபிறகு, அந்தத் தீர்ப்பின் மீது விவாதம் நடைபெறுவதோ அல்லது அதைப்பற்றி விளக்க

மான ஆராய்ச்சிகள் நடப்பதோ நமது மன்றத்தின் மரபுக்கு ஏற்றது தானா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். Speaker's Ruling can never be challenged by anybody. That is the accepted Parliamentary Practice

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கொடுத்தது தீர்ப்பு, தீர்ப்புதான். நான் சொல்வது, இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அப்படிப்பட்ட ஒரு மரபு கடைப்பிடிக்கப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்துச் சொல்கிறேன் என்று சொன்னேனே தவிர, கொடுத்த தீர்ப்பு தீர்ப்புதான்.

இப்போது இங்கே இன்னும் மூன்று மசோதாக்கள் இருக்கின்றன. அவைகளை முதலில் எடுத்துக் கொள்ளலாமா, அல்லது விதி எண் 57-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளவைகளை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு இரண்டு மணி நேரத்திற்கு (1, ½, ½) பொது விவாதம் வைத்துக் கொள்ளலாமா?

திரு. ஏ. ரகுமான்கான் : விதி எண் 57ன் கீழ் நம்முடைய மாரிமுத்து அவர்கள் கொடுத்திருக்கின்ற விலைவாசி ஏற்றத்தைப் பற்றிய பொருள் குறித்து முதலிலே விவாதித்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்டர் பிரகாரம் மசோதாக்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு ஜாஸ்தி நேரம் ஆகாது. எனவே, அவைகளையே முதலில் எடுத்துக் கொள்ளலாம்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு நிலநீர் (கட்டுப்பாடு, முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 14/77).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு நிலநீர் (கட்டுப்பாடு முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/77) ஆய்வு செய்வதற்காக 36 உறுப்பினர்கள் அடங்கிய (24 சட்டமன்றப் பேரவை

*31—12—1977 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களும், 12 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

1. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்.
2. திரு. எஸ். ஜெ. இராமசாமி.
3. திரு. கே. பண்ணை சேதுராம்.
4. திரு. பி. காசியப்பன்.
5. திரு. கே. நாச்சிமுத்து.
6. திரு. என். குப்புசாமி,
7. திரு. செ. கிருஷ்ணன்.
8. திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்.
9. திரு. என். பெருமாள்.
10. திரு. துரை. கோவிந்தராசன்.
11. திரு. சி. இராமநாதன்.
12. திரு. டி. இராமசாமி.
13. திரு. வி. ஆர். ஜெயராமன்.
14. திரு. கே. வடிவேலு.
15. திரு. கே. சுப்பவேலு.
16. திரு. எம். செல்வராஜ்.
17. திரு. சி. ஆறுமுகம்.
18. திரு. எ. ஆர். மாரிமுத்து.
19. திரு. ஆர். வி. சுரேந்திரராசன்.
20. திரு. என். சங்கரய்யா.
21. திரு. சோ. அழகர்சாமி.
22. திரு. ப. சந்திரன்.
23. திரு. ஜெ. ஜேம்ஸ்.
24. திரு. க. கந்தசாமி.

(தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(உ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/78).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குத்தகைதார விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், அவர்களுடைய குத்தகை பாக்கிகளை வசூலிப்பதற்காக ஒரு வருட காலத்திற்கு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, அப்படி கொண்டு வரப்படுகின்ற ஒரு மசோதாவை, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்கிறேன் ; ஆதரிக்கிறேன்.

(மாலை 4-10)

ஏற்கனவே பல அரசியல் கட்சிகளின் சார்பில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், ரெவின்யூ போர்டு உறுப்பினர்களும் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்த நேரத்தில் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சட்டமன்றத்திலே பல உறுப்பினர்களால் வற்புறுத்தப்பட்டதற்கிணங்க அரசாங்கம் இந்தக் கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக தமிழகத்தில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தனை பகுதிகளிலும் இருக்கக் கூடிய குத்தகை விவசாயிகளுக்கு நிவாரணத்தை அளிக்க முன் வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

---

* 5—1—1978 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட உடனேயே இதை அமல்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்றும், இது சட்டமன்றம் என்ன நோக்கத்திற்காக சட்டமாக்கப்படுகிறதோ அதனுடைய உண்மையான உணர்வோடு நிறைவேற்ற வேண்டிய அதிகாரிகள், நிறுவனங்கள் எல்லாம் அரசாங்கத்தினுடைய முடிவுக்கேற்ற வகையில் ஒத்துழைக்க வேண்டும். டெக்னிகல் காரணங்களைக் காட்டி, சட்ட நுணுக்கங்களைத் தெரியப்படுத்தி இந்தக் குத்தகை வார விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காமல் செய்யவோ, குறுக்கு வழியில் மீறி பாக்கிகளை வசூலிக்கவோ, சிவில் கோர்ட்டுகள் மூலம் அல்லது ரெவின்யூ கோர்ட்டுகள் மூலம் அல்லது வேறு எந்த வகையிலோ குத்தகை விவசாயிகளின் பயிர்களை ஜப்தி செய்யவோ முடியாதபடி கண்டிப்பான முறையில் அரசாங்கம் விதிமுறைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் ஒரு நல்ல அம்சம் இந்தச் சட்டம் அமலுக்கு வரக்கூடிய தேதியிலிருந்து இதற்கு முன்னால் உள்ள அவ்வளவு பாக்கிகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டம் சில ஆண்டுகளுக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கிறது. அந்த வகையில் இதற்கு முன்னால் உள்ள எல்லா பாக்கிகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் இது கொண்டு வரப்பட்டிருப்பதால் இது முக்கியமான மசோதாவாகும்.

சிதம்பரம் தாலுகா போன்றவை சேர்க்கப்படவில்லை. அதைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று தோழர் கோவிந்தராஜன் அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்க மசோதாவிலேயே குறிப்பிட்டிருப்பது அல்லாமல் கிராமங்கள் விடுபட்டிருக்குமானால் பின்னால் சேர்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. சட்டமாக்கப்பட்ட பிறகும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் என்னென்ன என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அவற்றைச் சேர்க்க தேவையானதைச் செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

குத்தகை வார விவசாயிகளைப் பொறுத்தவரை முக்கியமான வேறு ஒரு பிரச்சினை இருக்கிறது. கடந்த இரண்டு நாட்களில் நான் மதுரைக்குச் சென்றிருந்தபோது அந்த விவசாயிகள்

தாங்கள் அறுவடை செய்த பயிரை மத்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைக்குக் கூட வாங்க ஆள் இல்லாமல் தவிக்கிறார்கள் என்பதைக் கண்டேன். அதையும் விட பத்து ரூபாய் குறைவாக மார்கெட் இருக்கிறது. பெரிய நிலக்கிழார்கள் நெல்லைச் சேமித்து வைக்கிறார்கள். ஆனால் குத்தகை வார விவசாயிகள் தாக்குப் பிடிக்க முடியவில்லை. டிஸ்ட்ரெஸ் சேல் என்ற அடிப்படையில் விற்கின்ற அபாயகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, மாநில சர்க்கார் குறுக்கிட்டு மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையை விடக் குறைவான விலையில் வியாபாரிகள் வாங்கிக் கொண்டிருக்கும் இடங்களில் அல்லது வியாபாரிகள் வாங்க முன்வராத இடங்களில் இந்த அரசாங்கமே வாங்க முன்வரவேண்டுமென்று உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால் குத்தகை வார விவசாயிகளும், சிறு நிலக்கிழார்களும் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள் என்று கூறி, இந்த மசோதாவை நான் ஏற்கனவே சொன்னது போல், பின்னால் கிராமங்களில் சில விடுபட்டிருக்கின்றன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அவற்றையும் சேர்த்துக் கொள்ள வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் அது தொடர்பான சிக்கல்களைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

இந்த மசோதாவை நம்முடைய அமைச்சர் அவர்கள் தாற்காலிகமாகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். 1979-ல் இது முடிவுறுகிறது என்று சொல்லுகிறார்கள். எதற்கெடுத்தாலும் தாற்காலிக நிவாரணம் தற்காலிகப் பாதுகாப்பு என்று இருப்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஆக, இந்தத் தற்காலிகத்தைத் தயவு செய்து நீக்கிவிட்டு, பெர்மனென்ட் மெஷராக எடுத்தால்தான் விவசாயிகளுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு மட்டும் பாதுகாப்பு என்று கூறமாட்டேன். உயிரினங்கள் இழப்பைப்பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், மனிதனுடைய இழப்புகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், ஸ்டாண்டிங் கிராப்ஸ் இழப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்தச் சிக்கல்களுக்கு உள்ளாகியிருக்கிற விவசாயப் பெருமக்கள் ஒரு வருடத்திற்குள் அதைச் சரிக்கட்டுகின்ற வளர்ச்சியை அடைந்துவிட முடியாது. எனவே இதற்கு முன்னாலேயே தள்ளிவைக்கப்பட்டு இருப்பதையும், இப்போது தள்ளிவைக்க இருப்பதையும் இந்த அரசு தள்ளுபடி செய்யவேண்டும்.

இப்போது முன்கூட்டியே சம்பா சரியாக இருக்காது, தாளடி சரியாக இருக்காது என்ற நிலைக்கு அரசு வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்த நோக்கிலேயும் இவைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலைமைவரும். எனவே இந்தக் கடன்களை மட்டும் தள்ளி வைப்பதால் நிலைமை சீராகிவிடாது. சிறு விவசாயிகள் இருக்கிறார்கள், விதவைகள் இருக்கிறார்கள். சிறு பகுதி நிலத்தை வைத்துக்கொண்டு தன்னுடைய குழந்தைகளுக்கு போஷாக்கு அளித்துக்கொண்டிருக்கிற பெண்கள் இருக்கிறார்கள். ஆகவே, இவைகளைத் தள்ளிவைப்பது போதாது. அரசே பொறுப்பேற்றுக் கொண்டு அவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்து, உணவுக்கும் மற்றச் செலவுகளுக்கும் கூட்டுறவுத் துறையின் மூலமாக சிறு கடன்களைக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டங்களில் தள்ளிவைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கே உள்ள நிலச்சுவான்தார்களுக்கு நிவாரணம் தேவை. அதேபோன்று குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் தேவை. எனவே அவர்களின்கீழ் வேலைசெய்கிற கூலிகளுக்கும் நிவாரணம் இருக்காது. அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த நிலைமையை மாற்றுவதற்காக வெள்ள நிவாரணத்திற்காக இப்போது ஒதுக்கப்பட்ட தொகை போதாது. அடுத்த நிதிநிலை அறிக்கையிலும் போதுமான தொகையை இதற்காக ஒதுக்கி அவர்களுக்கு வேலைகளைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குத்தகைதாரர்கள் பாக்கிகளை தள்ளிவைப்பதோடு மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கக் கடன்களைத் தள்ளிவைப்பதோடு மட்டுமல்லாமல் அவைகளை எல்லாம் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளை எல்லாம் செய்தால் தான் நிரந்தரம் பெர்மனன்ட் ரிலீப் அளிக்கும். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் 2 நாட்களுக்கு முன்னதாக குவிண்டால் ஒன்றுக்கு 92

ரூபாய்விலை கிடைக்கிறது என்று சொன்னார்கள். உள்ளபடியே அந்த விலை ஏற்படாவிட்டாலும் 85 ரூபாய் அளவிற்காவது உற்பத்தியாகிற பொருளை வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள், குத்தகைதாரர்கள் இழந்த கால்நடைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிவகைகளைச் செய்யவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் இதற்கான தகுந்த ஏற்பாடுகள் இல்லை. கூட்டுறவுத் துறையில் ஒரு தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டு அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துக்களை வைத்தேன், அவைகளை அரசு கவனிக்கவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை ஒத்திவைப்பு மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இன்றைக்கு வெள்ளத்தாலும் புயலாலும் அதிகமாக விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் அரசு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. குத்தகை பாக்கிகள் எல்லாம் இதன் மூலம் ஒத்திவைக்கப்படுகிறது. அதன் மூலமாகத் தற்காலிகமாக ஒரு நிவாரணம் கிடைக்கும் என்றாலும் கடந்த பசலி வேறு ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த பசலிக்கும் ஒத்திவைக்கிறபோது மிக அதிகமான பாரம் விவசாயிகள் மீது சுமத்தப்படுகிறது.

(மாலை 4-20)

ஆகையினாலே இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்வது, ஒரு சிறு விவசாயி, குத்தகை விவசாயி தன் வாழ்க்கைக்கே போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அவனுக்கு மூன்று பசலிகளுக்கான குத்தகை பாக்கி தேங்கிவிட்டால் அவன் எந்தக் காலத்திலேயும் திருப்பிச் செலுத்துவதற்குச் சக்தியுடையவனாக இருக்க மாட்டான். ஆகவே, அந்தக் குத்தகை பாக்கிகளைக் கணிசமான அளவிற்குக் குறைத்து தள்ளுபடி செய்து

நிவாரணம் அளிக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்விதம் செய்யவில்லை என்றால் மேலும் மேலும் தொடர்ந்து அவனுக்குப் பல சங்கடங்கள் தோன்றி முதலீடு செய்வதற்குச் சக்தியற்ற நிலைமை உண்டாகும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குத்தகை பாக்கியை நாம் ஒத்தி வைத்து விட்டாலும் கூட அந்த நிலங்களின் பெயரால் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களும் ஒத்தி வைக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளுமே பாதிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கிராமமும் பாதிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. முதலில் தண்ணீர் இல்லாததால் காலதாமதமாகச் சாகுபடி செய்யப்பட்டது. அப்படி காலதாமத சாகுபடியில் கதிர் அறுவடைக்குக் காலதாமதம் ஆயிற்று. பிறகு மழையினால் பாதிக்கப்பட்டு அறுவடை பாதிக்கப்பட்டது. அதிகமாக வெள்ளம். வெள்ளத்தில், இருந்த பயிரும் அழிந்து விட்டது. பிறகு வெள்ளம் வந்து போனவுடன் காய்ந்து விட்டது, தண்ணீர் இல்லை என்ற பிரச்னை. பூமி வெடித்து கதிர் முகத்தில் காய்ந்துள்ளது. நாளைக்கு அறுவடை செய்யும்பொழுது 20 சதவிகிதம், 25 சதவிகிதம் கிடைக்குமா என்று சந்தேகப்பட வேண்டிய அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே அந்தக் கூட்டுறவுக் கடன்களை ஒத்தி வைக்கும்பொழுது அதை நீண்ட காலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ மூன்று ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்வதால் சங்கடங்கள் இருக்கின்றன. முன்பு இரண்டு தடவைகள் கடன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னால் அடுத்த தடவை மூன்று தவணைகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி மூன்று தவணைகளைச் சேர்ந்தாற்போல் கொடுக்க வேண்டுமென்றால் அது சாத்தியமே இல்லை, முடியாது. ஆகவே, விவசாயிகள் மத்தியில் இருக்கின்ற கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

ரிசர்வ் பேங்கிலே வாங்கிய கடனை சர்க்கார் எப்படி ரத்து செய்ய முடியுமென்பது பிரச்னைக்குள்ளே இருக்கிற பிரச்னை. ஆனால் அவர்கள் தங்களுக்குள்ள சங்கடங்களை உங்களுக்கு இவ்விதத்திலே எடுத்துச் சொல்கிறார்கள். விவசாயிகள் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றால் ஏதோ சொல்லிவிட்டோம், ரத்து செய்தவுடன் இலாபம் அடைந்து விடுவோம் என்பதாக அல்ல, அவர்கள் அவ்வளவு சிரமங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ரிசர்வ் பேங்க் கடன்களை நாம் ரத்து செய்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. பேங்கிலே வாங்குவது என்றால் டெபாசிட்டின் மீது வாங்கிக் கொடுக்கப்படும் கடன், நோட் அடித்துக் கொடுப்பதில்லை. அது நமக்குத் தெரிகிறது. சொசைட்டியில் கொடுக்கப்படும் கடனும் நோட் அடித்துக் கொடுக்கப்படுவது அல்ல. ஆனால் விவசாயிகள் தங்களுக்குள்ள சங்கடத்தின் காரணமாக அப்படி ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் இதில் அரசுக்கு உள்ள சங்கடம் தெரிகிறது, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள்கூடச் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை ஸ்டேட்டுக்கு இல்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்டே கூட செய்ய முடியாது, அது ரிசர்வ் பேங்க் கடன்.

ஆனால் ஒன்றை நீங்கள் செய்யலாம். ரிசர்வ் பேங்க் விதிக்கும் வட்டியை மட்டும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கலாம். குத்தகைதாரர்களும் இந்தக் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் பரிசீலித்து அவர்களுக்கு எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்க முடியுமோ அந்த அளவிற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கோரி, இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த மசோதாவை வரவேற்கிறபொழுது ஒரு அம்சத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நிவாரணம் அளிக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்விதம் செய்யவில்லை என்றால் மேலும் மேலும் தொடர்ந்து அவனுக்குப் பல சங்கடங்கள் தோன்றி முதலீடு செய்வதற்குச் சக்தியற்ற நிலைமை உண்டாகும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குத்தகை பாக்கியை நாம் ஒத்தி வைத்து விட்டாலும் கூட அந்த நிலங்களின் பேரால் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களும் ஒத்தி வைக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளுமே பாதிக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கிராமமும் பாதிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. முதலில் தண்ணீர் இல்லாததால் காலதாமதமாகச் சாகுபடி செய்யப்பட்டது. அப்படி காலதாமத சாகுபடியினால் கதிர் அறுவடைக்குக் காலதாமதம் ஆயிற்று. பிறகு மழையினால் பாதிக்கப்பட்டு நாறுவை பாதிக்கப்பட்டது. அடுத்தபடியாக வெள்ளம். வெள்ளத்தில், இருந்த பயிரும் அழிந்து விட்டது. பிறகு வெள்ளம் வந்து போனவுடன் காய்ந்து விட்டது, தண்ணீர் இல்லை என்ற பிரச்னை. பூமி வெடித்து கதிர் முகத்தில் காய்ந்துள்ளது. நாளைக்கு அறுவடை செய்யும்போது 20 சதவிகிதம், 25 சதவிகிதம் கிடைக்குமா என்று சந்தேகப்படவேண்டிய அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே அந்தக் கூட்டுறவுக் கடன்களை ஒத்தி வைக்கும்போது அதை நீண்ட காலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ மூன்றாண்டுகளுக்கு ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்வதால் சங்கடங்கள் இருக்கின்றன. முன்பு இரண்டு தடவைகள் கடன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னால் அடுத்த தடவை மூன்று தவணைகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி மூன்று தவணைகளைச் சேர்த்தாற்போல் கொடுக்க வேண்டுமென்றால் அது சாத்தியமே இல்லை, முடியாது. ஆகவே, விவசாயிகள் மத்தியில் இருக்கின்ற கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

ரிசர்வ் பேங்கிலே வாங்கிய கடனை சர்க்கார் எப்படி ரத்து செய்ய முடியுமென்பது பிரச்னைக்குள்ளே இருக்கிற பிரச்னை. ஆனால் அவர்கள் தங்களுக்குள்ள சங்கடங்களை உங்களுக்கு இவ்விதத்திலே எடுத்துச் சொல்கிறார்கள். விவசாயிகள் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றால் ஏதோ சொல்லிவிட்டோம், ரத்து செய்தவுடன் இலாபம் அடைந்து விடுவோம் என்பதாக அல்ல, அவர்கள் அவ்வளவு சிரமங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ரிசர்வ் பேங்க் கடன்களை நாம் ரத்து செய்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. பேங்கிலே வாங்குவது என்றால் டெபாசிட்டின் மீது வாங்கிக் கொடுக்கப்படும் கடன், நோட் அடித்துக் கொடுப்பதில்லை. அது நமக்குத் தெரிகிறது. சொசைட்டியில் கொடுக்கப்படும் கடனும் நோட் அடித்துக் கொடுக்கப்படுவது அல்ல. ஆனால் விவசாயிகள் தங்களுக்குள்ள சங்கடத்தின் காரணமாக அப்படி ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் இதில் அரசுக்கு உள்ள சங்கடம் தெரிகிறது, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள்கூடச் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை ஸ்டேட்டுக்கு இல்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்டே கூட செய்ய முடியாது, அது ரிசர்வ் பேங்க் கடன்.

ஆனால் ஒன்றை நீங்கள் செய்யலாம். ரிசர்வ் பேங்க் விதிக்கும் வட்டியை மட்டும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கலாம். குத்தகைதாரர்களும் இந்தக் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் பரிசீலித்து அவர்களுக்கு எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்க முடியுமோ அந்த அளவிற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கோரி, இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த மசோதாவை வரவேற்கிறபொழுது ஒரு அம்சத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உழவடைதாரர்களைப் பாதுகாப்பதற்காகக் கொண்டு வரக் கூடிய மசோதா என்றாலும் கூட, ஒன்றிரண்டு இடங்களிலே உழவடைதாரர்களை அரசாங்க அதிகாரிகளே வெளியேற்றுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை தாலுகாவில் நடேசபுரம் என்ற கிராமத்திலே அரிசன விவசாயிகள் 100 ஆண்டுகளுக்கு மேல் உழுது கொண்டு வருகிறார்கள். அவர்கள் உழவடைப்பட்டா வாங்கிவிட்டார்கள். ரசீதுகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் காளியாறு சப்-இன்ஸ்பெக்டரும், சிவகங்கை தாசில்தாரும் அனுத்தா வாரம் தருகிறேன் என்று உழவடைதாரர் சொல்லியும் கூட, நிலச்சுவான்தார், நெல் தனக்கு வேண்டுமென்று சொல்கிறார். அந்த நிலச்சுவான்தாருக்குச் சாதகமாக, அந்த அதிகாரிகள் நெல்லைக் கொடுத்து விடுகிறார்கள். அந்த உழவடைதாரர்களுக்கு அரசாங்கப் பட்டா இருக்கிறது, ரசீது இருக்கிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில், இந்த ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தவோ, என்னவோ, காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைக் குறிப் பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் கூட நான் சொல்வேன், நான் ஸ்தலத்திற்குப் போகாமல் இருந்திருந்தால், உழவடைதாரர்களைக் கைது பண்ணி யிருப்பார்கள். நானும் போய் என்னையும் கைது செய் என்று சொன்ன பிறகுதான் போலீஸ் அதிகாரியும் தாசில்தாரும் விட்டு விட்டார்கள். அரசாங்கம் முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிற இந்நேரத்தில், நிலச்சுவான்தார் உழவடைதாரர்களுக்கு எதிராக கோர்ட்டில் தாக்கல் செய்த அப்பீல் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும், ஒரு ஆர்.டி.ஓ.வும் போலீஸ் அதிகாரியும் நெல்லையே கைப்பற்று கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அரசாங்கத்தினுடைய உழுகிறவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சட்டங்கள் வருகிறபொழுது,

அவர்கள் வைத்திருக்கிற நெல்லையே கைப்பற்றக்கூடிய சூழ்நிலையில் சில அதிகாரிகள் காரியங்கள் செய்கிறார்கள் என்றால், அது எவ்வளவு அக்கிரம்மானது என்பதைச் செல்ல விரும்புகிறேன்.

மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் கூறியதை, அரசாங்க விலைக்காவது அவர்களுக்கு நெல் கிடைக்கப் பாதுகாப்பு செய்ய வேண்டுமென்பதை நானும் வற்புறுத்தி, மற்ற பல்வேறு அம்சங்களில் இது சரியானதாகவும் முற்போக்கானதாகவும் இருக்கிறது என்பதால், இதை வரவேற்று அமர்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, குத்தகைதாரர் பாது காப்பு மசோதா அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அதனை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவை வரவேற்கிற வேளையில் இங்கே கொடுக்கப் பட்டிருக்கிற லிஸ்ட்டானது விரிவாகப் போடப்படவில்லை. லிஸ்டில் சேராத பல பகுதிகளும் நமது மாநிலத்தில் பாதிக்கப்பட் டிருக்கின்றன. ஆனால், ஒருவேளை, இந்த மசோதாவில் சேரவில்லை யென்று கருதினால், நிவாரணப் பணிகளில் அந்தப் பிரதேசங் களுக்கு மறுக்கப்படக் கூடாது. ஆகவே, அவ்வப்பொழுது அரசின் கவனத்தில் கொண்டு வருகிறபொழுது, இந்த மசோதாவில் சேர்க்கப்படாத பிரதேசங்களும் இந்தப் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், அந்தப் பிரதேசங்களையும் இந்த லிஸ்டில் சேர்த்துக்கொள்வதற்குரிய வகை செய்யப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் தாலுகா மழையால், வெள்ளத்தால்—கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயலினால்—அதிகமாக பாதிக்கப்பட்டிருப்ப தாக நான் கேள்விப்படுகிறேன். ஆக, அந்தப் பிரதேச மக்களுக்கும் இந்தச் சட்டத்தினால் நன்மை வரக்கூடிய விதத்தில், இந்த லிஸ்டைத் திருத்துவதற்கான வழிவகைகளைக் காண வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சில பிரதேசங்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இருக்கிற மசோதா வில், செங்கல்பட்டில் எந்தக் கிராமமும் சேர்க்கப்படவில்லை.

ஆகவே, அதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவையில், கடந்த 5, 6 நாட்களாக விவாதித்துக் கொண்டிருக்கிற காரியம் பற்றி இன்று அவையில் தெளிவாக இங்கு அங்கத்தினர்கள் கூறினார்கள். தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற ரூ. 77 கொடுத்துக் கூட, நெல் வாங்க வியாபாரிகள் தயாராக இல்லை. ஆகவே, விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டுகிறபொழுது இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் பழியைப் போட்டுத் தப்பித்துக் கொண்டது என்று சொன்னால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், இதுவரையில் மாநில அரசு கூறிவந்த காரணம், மக்களாலும் கூட ஏற்கக்கூடாத நிலைமையில் இருக்கிறது என்பதனை நாம் அறிவோம்.

ஆகவே, தஞ்சாவூரில், மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற ரூ. 77க்கு நெல்லை வாங்க வியாபாரிகள் தயாராக இல்லையென்று சொன்னால், இந்த மாநில அரசு சற்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன், மத்திய அரசு இப்பொழுது கொண்டிருக்கிற கொள்கை, அதாவது, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரே சோனாக இருக்க வேண்டும். அப்படி என்று சொன்னால், இந்தத் தேசம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும், அதனால் நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்ற கொள்கையை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

(மாலை 4-30)

ஆனால் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கைகளை மாநில அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராகயில்லை. தமிழகத்தை மட்டும் ஒரு 'ஜோன்' ஆக வைத்திருப்பது, தமிழகத்து வியாபாரிகளைத் தவிர, மற்ற வியாபாரிகள் வாங்கத் தடை இருக்கிறது. ஆகவேதான் இன்றையதினம் தஞ்சையில் 77 ரூபாய்க்குக் கூட வியாபாரிகளும் மற்றவர்களும் வாங்கத் தயாராக இல்லை . . . .

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே, கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த பில்லுக்கும் உங்கள் பேச்சுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. என்றாலும், வெளி மாநிலங்களிலே இருக்கின்ற வியாபாரிகள் இந்த மாநிலத்திலே இருந்து நெல்லை வாங்கிக் கொண்டு போக இந்த அரசாங்கம் தடை உத்தரவிட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி செய்ய முடியாது.

இந்தியத் துணைக் கண்டம் ஒரே உணவு மண்டலமாக இருக்கிற காரணத்தினால் வெளி மாநிலங்களுக்கு நமது மாநிலத்தில் இருந்து வாங்கிக் கொண்டு போவதற்கு தடை விதிப்பதென்பது முடியாத காரியம். அப்படித் தடை விதித்தால் மத்திய அரசாங்கம் குறுக்கே வரும். நாங்கள் செய்திருக்கிற சட்டம் எல்லாம், இந்த மாநிலத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகிற நெல்லுக்கு 20 சதவிகிதம் லெவியும், அரிசிக்கு 10 சதவிகிதம் லெவியும் கொடுத்துவிட்டு எங்கே வேண்டுமானாலும் கொண்டு போகலாம் என்று தான் போட்டிருக்கிறோம். அதை எதற்காக வைத்திருக்கிறோம் என்றால், நமக்கு தேவையான, ஒதுக்கீட்டை நிர்ணயம் வைத்துக் கொள்ளவேண்டுமென்றுதான் வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதையெல்லாம் வெள்ளை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது பேசி விட்டீர்கள். இப்போது அமைச்சரும் பேசியிருக்கவேண்டிய அவசியம் இல்லை, மற்றவர்களுக்கும் நேரம் கிடைத்திருக்கும். நீங்கள் கடன் நிவாரணத்தைப் பற்றிய கருத்துக்களை மட்டும் சொல்லி அமருங்கள். பல பேர்கள் பேசவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்கனவே பேசிய அங்கத்தினர்கள் இதைப்பற்றிப் பேசியதால் அதை ஒட்டிக் கருத்துக்களை சொன்னேன். இந்த பில்லுக்கும், என்னுடைய பேச்சுக்கும் சம்பந்தமில்லை என்பது எனக்கும் தெரியும், எனக்கு முன்னே பேசியவர்கள் இது சம்பந்தமாக பேசியதால் அதற்கு விளக்கம்

கொடுக்கவேண்டுமென்றுதான் பேசினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம் தடை இல்லை என்று சொன்னார்கள். அதனால் நெல் கூடுதல் விலையில் விற்பதற்கு நல்ல சாத்தியக் கூறு இருக்கிறது என்பதைக் கூறிக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

* **திரு. ரா. மார்க்கபந்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற மசோதாவின் மீது நான் சார்ந்திருக்கிற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அதே நேரத்தில் ஒரு சிறிய வருத்தம். ஏனென்றால் குறிப்பாக வெள்ளத்தினால் ஏரிகள் உடைந்து பயிர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் இந்த சட்டம் பொருந்துகிற வகையில் சில இடங்கள் இந்த சட்டத்திலே இடம் பெற்றிருக்கிறது. அந்த வகையிலேயும் நான் சார்ந்திருக்கிற வடார்க்காடு மாவட்டத்திலே பல கிராமங்கள் மழை வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டிருக்கின்றன. அதை மாவட்ட கலெக்டர் அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பிய குறிப்பில் இருந்து பார்க்கும்போது எவ்வளவோ சேதம் ஏற்பட்டிருக்கிறது. சேதத்தின் அளவு என்ன என்று கவனித்துக் கொள்ள முடியும். அது எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் என்ற அடிப்படையிலே, அருள் கூர்ந்து இந்த அரசானது வடார்க்காடு மாவட்டத்திலும் எந்தெந்த கிராமங்கள் சேதத்திற்கு ஆட்பட்டிருக்கிறதோ அவ்வூர்களை இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வர வேண்டும். குறிப்பாக நான் சார்ந்திருக்கிற அணைக்கட்டு தொகுதியைச் சேர்ந்த, ஊசூர் கிராமத்திலே 10 கிராமங்களில் பயிர்கள் எல்லாம் அழிந்து விட்டன. ஆகவே அந்தக் குறிப்புகளை எல்லாம் எடுத்து. அந்தப் பயிர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், சட்டத்தைத் திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெறுமனே சட்டத்தைப் பாஸ் செய்து விடுகிறோம் என்று, குரல் வாக்கெடுப்பின் மூலம் பாஸ் செய்வது கூடாது என்பதற்காக அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று என்னுடைய கருத்தையும் சேர்த்துக் கொண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குரல் வாக்கெடுப்பு கூடாது என்றால் வேறு எப்படித்தான் அவையிலே முடிவெடுப்பது.

திரு. ரா. மார்க்கபந்து: நான் அப்படிச் சொல்லவில்லை. காரைப் ஜேம்ஸ் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். நான் வடார்க்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன். அதையும் சேர்த்து இந்த சட்டத்தைப் பாஸ் செய்யுங்கள் என்று எனது கோரிக்கையை வைக்கிறேன்.

மற்றும், ஏற்கனவே கல்டிவேடிங் டெனன்ட் ப்ரொடக்ஷன் ஆக்டிலே சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன்பு வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் நேரத்தில் ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த குறிப்பிட்ட பசலிக்கு உண்டான தொகையைக் கட்டி விட்டால் ஏற்கனவே இருக்கும் பாக்கிகள் வைப்-அவுட் ஆகிவிடும் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தக் குறிப்பிட்ட தேதியில் கொடுக்கத் தவறிவிட்டால் எல்லாவற்றையும் கட்டவேண்டும் என்றும் அதிலே விதி இருந்தது.

ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தொகை கட்டிவிட்டால் அதற்கு முன்னால் கட்டவேண்டிய பாக்கி இருந்தாலும் கூட அது வைப்-அவுட் ஆகிவிடும் என்று இந்தச் சட்டத்தில் திருத்தம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளை அறிக்கையில் பேசும்போது குறிப்பிட்ட அந்தக் கருத்தை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட பயிருக்காக குறுகிய கால லோன் கொடுத்திருக்கிறார்கள்.

சொல்வதற்கு பதிலாக அதை ரத்து செய்வதற்கு பதிலாக வழக்குப் போடுவதினின்று தவிர்க்க இந்தச் சட்டத்தை மிகக்கருணையோடு இந்த காருண்யம்மிக்க சர்க்கார் கொண்டு வந்து இருப்பது என்ன சைகாலஜி என்று எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அதற்கு விளக்கம் சொன்னால் நல்லது.

வழக்குப் போட்டாலும் அவனைக் கட்ட முடியாது. அவனை நிலத்தில் இருந்தும் வெளியேற்ற முடியாது. விளைந்திருந்தால் அவன் தரமுடியும். விளைச்சல் இல்லை என்கிறபோது கட்டு குத்தகை எங்கே வருகிறது. ஆகவே, இந்தச் சட்டம் ஒரு அநியாயச் சட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரையில் இப்படிப்பட்ட புயல் வெள்ளம் வரவில்லை. நீங்களே சொல்கிறீர்கள், வரலாறு காணாத அளவுக்கு வந்தது என்று நீங்களே சொல்கிறீர்கள். அப்படியிருக்கிறபோது நீங்களே அதை ரத்து செய்யவில்லை என்றால் நாங்கள் யாரிடத்தில் போய் சொல்வது. ஆகவே, உடனடியாக இங்கேயே அதை ரத்து செய்கிறோம் என்று சொல்லவேண்டும். இதற்கு பரிசீலனை கூட செய்கிறேன் என்று சொல்லக்கூடாது. கோர்ட்டுக்குப் போகக்கூடாது, சரி. ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதை ஓராண்டு காலத்திற்குத்தான் என்று சொல்வது அநியாயம் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இந்த வருடம் என்ன ஸ்பெஷலா? அடுத்த ஆண்டு அவனுக்கு இருப்பதையும் ஸ்டாக் பண்ணி எடுத்துக்கொள்ளவா. இது நியாயமா? ஆகவே இந்த ஆண்டு கட்டவேண்டிய குத்தகையை ரத்து செய்கிறோம் என்று அறிவிக்க வேண்டும். அதற்குப் பின்னால் இந்த மசோதாவை பாஸ் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அநியாயம் என்று சொல்லி முடிக்கிறேன்.

1067, 68 இல்லை

(மாலை 4-40)

திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். காரணம் என்னுடைய தொகுதியிலே 53 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 53 கிராமங்களில், இந்தப் புத்தகத்தில் வந்திருக்கின்ற 23 கிராமங்களும் அடங்கியிருக்கின்றன என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்குப் பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து வந்தவன் என்பதை முன்னே கூறினேன். இப்போதும் கூறுகிறேன்.

ஆகவே, விவசாயிகளுக்கு குத்தகையை ஒத்திப்போட கூடிய அடிப்படையோடு மட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற நிலைமையையும் அரசாங்கம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது விவசாயம் செய்து அழிந்து போன குத்தகைதாரர்களுக்காக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆனால் அந்த பகுதியிலிருக்கக்கூடிய நிலங்கள் 3,000 ஏக்கர் மணல் மேடிட்டு அழிந்துள்ளதோடு மட்டுமல்லாமல், 1,500 ஏக்கர் விவசாயத்திற்கே லாயக்கு இல்லாத அளவிற்கு நாசமாகியுள்ளது.

இனிமேல் எந்த விவசாயமும் செய்யமுடியாத நிலையில் பல விவசாயிகள் இருக்கிறார்கள். குடகனாறு பகுதியில் இருக்கிற விவசாயிகள் பம்பு செட்டுக்கள் போட்டு, செப்பனிட்டு நல்ல முறையில் விவசாயம் செய்து வந்த நிலங்கள் அழிந்து விட்டன. அப்படி வாங்கப்பட்ட பம்புசெட்டுகள் எல்லாம் கூட்டுறவு நிலவள வங்கி மூலமாக வாங்கப்பட்டு. இப்போது அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் மாரிமுத்து அவர்கள் கூறுகின்ற நேரத்தில் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யமுடியாது என்ற அடிப்படைத் தத்துவத்தை சொன்னார். அதை உணர்ந்தவர்கள் தான் நாங்கள். ஆனால் ரிசர்வ் வங்கியால் அதற்கு வேண்டிய உதவியை செய்யமுடியும் என்று நாங்கள் கூறவில்லை. இருந்தாலும் இப்போது

இருக்கின்ற நிலையில், இதுபோன்ற பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகளுக்கு நன்மை செய்ய நிலவள வங்கிகளும், மாநில கூட்டுறவு வங்கியும் வாராக்கடன் நிதி, ரிசர்வ் பண்டில் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி வைத்து, இந்த சூழ்நிலையில் அவை அப்படியே இருக்கின்றன. இதை நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசிடமிருந்து நிவாரணம் கேட்கிற போது, இந்த நிதியைப் பயன்படுத்த இது நல்ல சந்தர்ப்பம். இதைத் தவிர வேறு எந்த நேரத்திலும் பயன்படுத்த வசதியில்லை. ஆகவே இந்த நிதியிலிருந்து பெருந்தொகையை எடுத்து, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

புஞ்செய் நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் 25 பைசாவுக்கு கீழே நிலவரி மகசூல் கணக்கில், அடங்கல் கணக்கில் வருமேயானால், தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கருத்து நிலவுகிறது. ஆனால் போர்ட்ஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் அந்தக் கருத்து இருப்பதாகக் கூறுவது பற்றி எங்கள் ஜில்லாவில் மாறுபட்ட கருத்திருக்கிறது. 25 பைசாவுக்குக் கீழே அடங்கல் கணக்கில் வைத்தால், அவைகளுக்கு எல்லாம் நிலவரி தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்ற உத்தரவை அமைச்சர் அவர்கள் இடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதிருக்கின்ற நிலையில் நெல்விலை குறைந்து விட்டது என்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் கூறினார்கள். நெல் விலை குறைந்தது என்றால், வாங்க ஆள் இல்லை என்பதால் தான். வேறு எந்தவிதமான அடிப்படையிலும் குறையவில்லை. மழையினால் பாதிக்கப்பட்ட நெல் அரிசி ஆகிற சூழ்நிலையில் இல்லை. அப்படியிருப்பதால் தான் யாரும் வாங்க முன்வரவில்லையே தவிர, மத்திய அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்தின் காரணமாக வந்துவிட்டது என்று நான் கருதவில்லை. (மணியடிக்கப்

படுகிறது). ஆகவே, கனம் நிதியமைச்சர் அவர்கள் நல்ல மனது வைத்து எங்கள் பகுதியில் நல்ல கண்ணோட்டம் செலுத்தி கவனிக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இந்த புயல் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அப்படி வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒன்றை பணிவுடன் கேட்டுக் கொள்வேன். இன்று புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இடங்கள் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களை வைத்துக்கொண்டு சில பகுதிகளை புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்திருக்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாக, குடந்தை வட்டத்தையும் பாபநாசம் வட்டத்தையும் இந்தப் பாதிப்புப் பகுதிகள் என்பதிலிருந்து அறிவிக்கத் தவறியதின் விளைவாக இன்று கூட்டுறவில் வாங்கிய கடன்களை எல்லாம் வசூலிப்பதற்கு மத்திய பாங்கியிலிருந்து வேகமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதால் அங்குள்ள விவசாயிகள் இன்று பயந்து கொண்டிருக்கிறார்கள். நாளைய தினமே ஜப்திக்கு வந்துவிடுவார்களோ நடவடிக்கைகள் எடுத்து விடுவார்களோ என்று பயந்து குடந்தை தாலுகாவிலும் பாபநாசம் வட்டத்தில் உள்ள பல விவசாயிகள் இன்று சென்னை நகரத்தை நோக்கி அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக வேண்டி வந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான கட்சி வித்தியாசமும் இல்லாமல் எல்லாக் கட்சிகளைச் சார்ந்த விவசாயிகளும் இன்று நம் தலைநகரை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு இந்த நேரத்தில் ஒன்றை தெரிவித்துக் கொள்வேன்.

இருக்கின்ற நிலையில், இதுபோன்ற பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகளுக்கு நன்மை செய்ய நிலவள வங்கிகளும், மாநில கூட்டுறவு வங்கியும் வராக்கடன் நிதி, ரிசர்வ் பண்டில் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி வைத்து, இந்த சூழ்நிலையில் அவை அப்படியே இருக்கின்றன. இதை நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசிடமிருந்து நிவாரணம் கேட்கிற போது, இந்த நிதியைப் பயன்படுத்த இது நல்ல சந்தர்ப்பம். இதைத் தவிர வேறு எந்த நேரத்திலும் பயன்படுத்த வசதியில்லை. ஆகவே இந்த நிதியிலிருந்து பெருந்தொகையை எடுத்து, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

புஞ்செய் நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் 25 பைசாவுக்கு கீழே நிலவரி மகசூல் கணக்கில், அடங்கல் கணக்கில் வருமேயானால், தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கருத்து நிலவுகிறது. ஆனால் போர்ட்ஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் அந்தக் கருத்து இருப்பதாகக் கூறுவது பற்றி எங்கள் ஜில்லாவில் மாறுபட்ட கருத்திருக்கிறது. 25 பைசாவுக்குக் கீழே அடங்கல் கணக்கில் வைத்தால், அவைகளுக்கு எல்லாம் நிலவரி தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்ற உத்தரவை அமைச்சர் அவர்கள் இடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதிருக்கின்ற நிலையில் நெல்விலை குறைந்து விட்டது என்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் கூறினார்கள். நெல் விலை குறைந்தது என்றால், வாங்க ஆள் இல்லை என்பதால் தான். வேறு எந்தவிதமான அடிப்படையிலும் குறையவில்லை. மழையினால் பாதிக்கப்பட்ட நெல் அரிசி ஆகிற சூழ்நிலையில் இல்லை. அப்படியிருப்பதால் தான் யாரும் வாங்க முன்வரவில்லையே தவிர, மத்திய அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்தின் காரணமாக வந்துவிட்டது என்று நான் கருதவில்லை. (மணியடிக்கப்

படுகிறது). ஆகவே, கனம் நிதியமைச்சர் அவர்கள் நல்ல மனது வைத்து எங்கள் பகுதியில் நல்ல கண்ணோட்டம் செலுத்தி கவனிக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இந்த புயல் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அப்படி வரவேற்றுப் பேசுகிற நேரத்தில் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒன்றை பணிவுடன் கேட்டுக் கொள்வேன். இன்று புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இடங்கள் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களை வைத்துக்கொண்டு சில பகுதிகளை புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்திருக்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாக, குடந்தை வட்டத்தையும் பாபநாசம் வட்டத்தையும் இந்தப் பாதிப்புப் பகுதிகள் என்பதிலிருந்து அறிவிக்கத் தவறியதின் விளைவாக இன்று கூட்டுறவில் வாங்கிய கடன்களை எல்லாம் வசூலிப்பதற்கு மத்திய பாங்கியிலிருந்து வேகமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதால் அங்குள்ள விவசாயிகள் இன்று பயந்து கொண்டிருக்கிறார்கள். நாளைய தினமே ஜப்திக்கு வந்துவிடுவார்களோ நடவடிக்கைகள் எடுத்து விடுவார்களோ என்று பயந்து குடந்தை தாலுகாவிலும் பாபநாசம் வட்டத்தில் உள்ள பல விவசாயிகள் இன்று சென்னை நகரத்தை நோக்கி அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக வேண்டி வந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான கட்சி வித்தியாசமும் இல்லாமல் எல்லாக் கட்சிகளைச் சார்ந்த விவசாயிகளும் இன்று நம் தலைநகரை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு இந்த நேரத்தில் ஒன்றை தெரிவித்துக் கொள்வேன்.

இந்த அரசு அந்த பகுதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன். எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், வட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் எடுத்துக்கொண்ட கணக்கு என்னவெனில் ஒரு தாலுகா பாதிக்கப்பட்டது. ஒரு தாலுகா பாதிக்கப்படவில்லை என்று கும்பகோணமும், பாபனாசமும் பாதிக்கவில்லை என்று விட்டுவிட்டார்கள். கும்பகோணம் தாலுகாவில் கடைசி ஊர் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அருகில் இருக்கும் இன்னொரு கிராமம் பாதிக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு, சட்டத்தின் மூலம் எங்களுக்கும் அந்த நிவாரணத்தைத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுப்பு அவர்கள் வேகமாக பேசினார்கள். இந்த நிவாரணம் என்ன பெரிய நிவாரணம், இது அநியாயமான சட்டம் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் எனக்கு அவர் பேசியதுதான் அநியாயமாகத் தெரிந்ததே தவிர சட்டத்தில் எந்தவிதமான அநியாயமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர் பேசிய பேச்சில், வேகமாக பேசினார், அவர்களும், சங்கரய்யா அவர்களும் இங்கே காட்டுகிற வேகத்தைவிட அதிக தீவிரமாக, வேகமாக நானும் பேசுவேன். ஒரு ஆண்டு கழிந்த பிறகு அவர்கள் கேட்பார்களே என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். இந்த முறையே வேண்டாம், குத்தகைதாரர்கள் நிலத்தை பயிரிடுவதால் தானே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், அதையே எடுத்துவிட்டால் இந்த பிரச்னை வராது, அதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்னைக்கு வாருங்கள். நீங்கள் நிதானமாக இருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: உடனடியாக நிவாரணம் தர வேண்டும் என்று இந்த அரசு ஒரு ஆண்டு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு தந்திருக்கிறது. இந்த வாய்ப்பை ஏழை எளிய

விவசாயக் குத்தகைதாரர்கள் மகிழ்ச்சியோடு இதை வரவேற்கிறார்கள். சுப்பு அவர்கள் சொன்னமாதிரி எதுவுமே தர வேண்டாம் என்றால் எங்கள் பகுதியில் உள்ள மிராசுதார்கள் திடீரென்று செத்தாலும் செத்துவிடுவார்கள். சட்டத்தைப் போட்டு சாகடித்துவிடாதீர்கள், எங்களுக்கு வந்த புயல் வெள்ளத்தை விட இது பெரிய புயலாக இருக்கிறதே என்று நினைப்பார்கள். பிறகு மாற்றிக்கொள்ளலாம் என்றால் வரவேற்கலாம் என்று கூறி இந்தச் சட்டத்தை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாலை 4-50)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ம் ஆண்டு, புயல், வெள்ளப் பாதிப்பு பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) மசோதா தாக்கல் செய்திருப்பதின்மீது தங்களது கருத்துக்களை பல்வேறு கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் மாரிமுத்து அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சங்கரய்யா அவர்களும், அதற்குப் பிறகு பேசிய சதாசிவம் அவர்களும், மார்க்கபந்து அவர்களும், இவர்கள் எல்லாம் இந்த மசோதாவை வரவேற்று வாழ்த்தி சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

வழக்கம்போல் எதையும் எதிர்த்து பழக்கப்பட்ட நமது சுப்பு அவர்கள் இந்த மசோதாவையும் எதிர்த்து பேசிவிட்டு, நல்லவேளையாக இந்த மசோதாவில் நிலச்சுவான்தார்கள் வழக்குமன்றத்திற்கு போகாமல் இருப்பதற்கு வழிசெய்யப் பட்டிருக்கிறது என்று அப்படி தெரிவித்த ஒன்றே அவர் காலப் போக்கில் சில சந்தர்ப்பங்களில் நல்லதை பாராட்டுகின்ற மனவளத்தை பெறுவார் என்று மனதார நம்புகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 சனவரி 9

சுப்பு அவர்கள் தெரிவித்தது உடனடியாக ரத்து செய்யுங்கள், இது ஏன் ஒரு வருடத்திற்கு தள்ளி வைக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சுப்பு அவர்களுடைய உணர்வுகளை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் அவர் பேசுகிற தோரணையில், பேசுகின்றபோது, இது ஒரு சுலபமான பிரச்னை என்று கருதிக் கொண்டு, அதையும் ரத்து செய், கிழித்து எறி, தூக்கி வீசு என்று ஏதோ திடீரென்று செய்கின்ற முறையில் ஒரு அரசு இயந்திரம் செய்துவிட முடியுமா என்பதை விவரம் தெரிந்த அருமை சுப்பு அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். ரத்து செய்யவேண்டும் என்று மாரிமுத்து அவர்களும்தான் கேட்டார்கள். மாரிமுத்து அவர்களிடம் கேட்டேன். இதை உடனடியாக ரத்து செய்து விட முடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா என்று கேட்டேன். ரத்து செய்ய முடியாது, அது எனக்குப் புரிகிறது என்று தெரிவித்தார்கள். ரத்து செய்யவேண்டும் என்றும் சொல்கிறார்கள். இதனுடைய இயலாமைபற்றியும் தெரிவிக்கிறார்கள். இருந்தாலும் ரத்து செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். இதில் இருக்கிற லாஜிக் என்ன என்பது எனக்குப் புரியவில்லை.

ரத்து செய்யவேண்டும் என்றால் ரிசர்வ் பாங்குக்குப் போக வேண்டும். அவர்களுடைய அனுமதி பெற வேண்டும். அதற்கு ரிசர்வ் பாங்கு ஒத்துக்கொள்ளாது என்றும் சொல்லுகிறார்கள். அப்படியும் கூறிவிட்டு ரத்து செய்யுங்கள் என்று சில ஆதாரங்களையும் தந்து விட்டு சொல்லுகிறார்கள். நண்பர் சுப்பு அவர்கள் ரத்து செய்யுங்கள் என்று கூறியதற்கு எந்த ஆதாரமும் கொடுக்கவில்லை. ரத்து செய்யுங்கள் என்று அவர்கள் சொன்னதற்கு காரணம், புயலாலும், வெள்ளப் பெருக்காலும், பாதிக்கப் பட்டு துடிதுடித்து வேதனையில் துவண்டு கொண்டிருக்கும் மக்களுக்கு இதைக் கூட செய்யக்கூடாதா என்று மிக அனுதாபத்தோடு கேட்டபோது, எனக்கு அழுகைகூட வரும்போல் இருந்தது.

ஆனால் இருக்கின்ற நிலைமையை, இருக்கின்ற சிக்கல்களை புரிந்து கொள்ளும்படி சுப்பு அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ரத்து செய்யாமல் இருப்பதற்கு இது

1978 சனவரி 9] [திரு. கி. மனோகரன்]

தான் காரணமே தவிர ரத்து செய்யவேண்டும் என்ற மனவளம் நமக்கு இல்லையென்றோ ரத்து செய்யவேண்டும் என்று நாங்கள் எண்ணவில்லை என்றோ நீங்கள் கருதாதீர்கள் என்பதை நான் மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் இப்பேர்ப்பட்ட ஒரு வளையத்தின் உள்ளே அடைக்கப்பட்டு, எத்தகைய—எவ்வளவு கடன்கள் இருந்தாலும் என்ன அவற்றையெல்லாம் சர்க்கார் ரத்து செய்யும் என்று எண்ணக்கூடிய மனப்போக்கை ஆராய்ந்து நாம் அதை உருவாக்கி விடாமல் இருக்கவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும்.

ஒரு குடிமகன் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்து கொள்ளுகின்ற முறையில், தனக்குள்ள பங்கினை ஆற்றிட முன் வர வேண்டும். நீ வரியே கட்டவேண்டாம், வரி கட்டாமல் அல்லது வரி கொடுக்காமல் ஆட்சியை நடத்த முடியுமா என்கின்ற அதிதீவிரமான தத்துவத்தின், அல்லது அப்படிப்பட்ட புரட்சிகரமான தத்துவத்தின் எல்லைக்கோடாக இருக்கலாமே ஒழிய, இது தங்க மாளிகையில் இருந்தால் சரியாக இருக்குமே தவிர, நடைமுறையில் ஒத்துவருமா என்பதையும், முடிந்த அளவுக்கு கொடுக்க முடிந்த சக்தியுள்ளவர்கள் கொடுக்க முடியுமானால், அவர்கள் கொடுப்பதற்கு நாம் ஏன் தடையாக இருக்கவேண்டும்.

இந்தப் பணம் சர்க்காருக்குத்தானே வருகிறது, திருப்பி அந்தப் பணம் அவர்களுக்குத்தானே போகப் போகிறது என்று தயவு செய்து அந்த மனப்பான்மை, அந்த மனப்பக்குவம், சைகாலஜி உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது ஜேம்ஸ் அவர்கள், இன்றைக்கு வேண்டுமென்றே பேசியிருக்கிறார்கள். நன்றாகவே பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போதும், திரு. மார்க்கபந்து அவர்கள் பேசும்போதும், அதற்குப் பிறகு பேசிய சிலர் பேசும்போதும், சில பகுதிகள் விட்டுப் போயிற்று என்று குறிப்பிட்டார்கள். அதற்கு என்று ஒரு திருத்தத்தை நமது கோவிந்தராஜன் அவர்கள் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு காலையிலே இங்கேயே அந்தப் பொருள் பற்றி விவாதிக்கப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்டம் சேர்க்கப்படவில்லை என்றும், அந்த மாவட்டம் வெள்ளத்தாலே சேதப்படவில்லையா என்றும், அந்தப் பகுதியை நீக்கியிருக்கிறார்களே என்றும் குறிப்பிட்டார்கள்.

அதேபோல், சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, ஆயிரம் விளக்குப் பகுதி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டது என்றும், சென்னை நகரம் பாதிக்கப்படவில்லையா என்றும் சொல்லப் பட்டது. அதையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கருதினால் சேர்த்துக் கொள்ளலாம். அதேபோல், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நமது நண்பர்கள், உறுப்பினர்கள் பேசும்போது, எங்கள் பகுதிகளிலே புயல் வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகள், சேர்க்கப்பட வேண்டிய கிராமங்கள் ஏராள மாக இருக்கின்றன என்றும், அவைகளையெல்லாம் சேர்க்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

ஆனால் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போதும், மார்க்கபந்து அவர் கள் பேசும்போதும் இந்தக் கிராமங்களையெல்லாம் சேர்க்கின்ற அளவுக்கு இந்தச் சட்டத்திலேயே திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சட்டத்திலே இதற்கு விதி இருக்கிறது. விதி 10-ஐப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன்படி இதனைத் திருத்துவதற்கு அதிகாரம் இருக்கிறது. மாநில அரசு அவ்வப்போது அறிவிப்புகள் வெளி யிட்டு, அதன் மூலம் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி களை இந்த விவர அட்டவணையில் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே, அந்த வகையிலே இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட வேண்டுமென்று மாவட்டவாரியாக இந்த சர்க்காருக்கு அனுப்பப்பட்டால், இந்த ஆட்சிக்கு கொடுக்கப்படு மானால், அவைகளைப் பரிசீலனை செய்து, சேர்க்கப்பட வேண்டிய வற்றை சேர்ப்பதற்கு இந்த அரசு நிச்சயம் தயாராக இருக் கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வீட்டின் உள்ளே நுழைந்து அங்கிருந்த நெல்மணிகளைக் கைப் பற்றிச் சூறையாடிச் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த ஆர்.டி.ஓ. யார்? அந்த தாசில்தார் யார்? பெயர்களைக் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் இங்கே சொல்லவேண்டாம்; தனியாகச் சொல்வார்களானால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதி என்பதை சண்முகம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சில அதிகாரிகள் இருக்கிறார்கள். எனக்கே தெரியும். அரசாங்கத்திற்கு கெட்ட பெயரை உருவாக்க பயமுறுத்தி அந்த நெல்லை அவர்களே கொள்ளையடித்து அவர்களுடைய குடும்பத்தை வாழ வைக்கும் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க சண்முகம் போன்றவர்கள் யோசனை இந்த சர்க்காருக்குத் தேவை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடி எண் 5/578) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை.

திருச்சி சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நான் கொடுத் திருக்கக்கூடிய திருத்தம் சிதம்பரம் வட்டத்தில் பல கிராமங் களும், கடலூர் வட்டத்தில் இரண்டு கிராமங்களும்; பண்ருட்டி

(திரு. சி. கோவிந்தராசன்) [1978 சனவரி 9

வட்டத்தில் இரண்டு கிராமங்களும் சேர்க்கப்பட வேண்டுமென்பது. அமைச்சர் அவர்கள் பேசும்போது இவை எல்லாம் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறிய காரணத்தால், அவை பரிசிலிக்கப்படும் என்ற நோக்கத்தோடு என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்தவில்லை.

திருத்தம் முன்மொழியப்படவில்லை.

அட்டவணை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு புயல், வெள்ளப் பாதிப்புப் பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/578) நிறைவேற்றப் பெறவேண்டும்."
என முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(12) நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து குறுகிய கால விவாதம்.

அன்றாட உபயோகப் பொருள்கள் விலையேற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து குறுகிய கால விவாதம் (சட்டமன்றப் பேரவை விதி எண் 57)-ன் கீழ் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் கீழ்க்கண்ட பொருள்குறித்து விவாதத்தைத் துவக்கி வைப்பார்—

1978 சனவரி 9] (பேரவைத் தலைவர்)

"அன்றாட உபயோகப் பொருள்களின் விலைகள் ஏற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்க அரசு எடுத்த, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து".

அமைச்சர் அவர்கள் 15 நிமிஷ நேரம் வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் 45 நிமிஷத்திற்குள் சுருக்கி அடக்கிக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நாட்டிலே இன்றைக்கு அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி யெல்லாம் உயர்ந்து சாதாரண மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நிம்மதியாக நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அவையிலே உள்ள அனைவரும் உணர்வார்கள். இப்படி விலைவாசி ஏற்றத்தை இப்படித்திறந்து போகவிட்டுக் கொண்டே இருப்பார்களானால் அன்றாடம் வேலைசெய்து சாப்பிடக் கூடியவர்கள், குறிப்பிட்ட வருவாய் உள்ளவர்கள் இவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பாதிக்கப்படும் என்பதை நான் எடுத்துச் சொல்லத் தேவை கிடையாது.

இந்த பத்து மாத காலமாக படிப்படியாக விலை ஏறிக் கொண்டே போகிறது, விலை இறங்கவில்லை அரிசியை தவிர. எல்லாச் சாமான்களும் உணவுப் பண்டங்களும் அனைத்தும் விலை யேறிப் போய் இருக்கின்றன. மசாலாச் சாமான்களின் விலை அதி வேகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது. சீரகம் ஒரு கிலோ 35 ரூபாய், எண்ணெய் விலை கீழே இறங்குகிறது, ஏறுகிறது, என்றைக்கு இறங்குகிறது, என்றைக்கு ஏறுகிறது என்று சொல்ல முடியாத அளவுக்கு விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. என் இப்படி ஏறுகிறது? இதைக் கட்டுப்படுத்த முடியாதா என்று பார்க்கவேண்டும்.

மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் வியாபாரிகளைப் பார்த்து சாமான்களின் விலைகள் குறையவில்லை என்றால் சாமான்ய

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 சனவரி 9

மாக விடமாட்டேன் என்று சொல்கிறார்கள். விடமாட்டேன் என்று சொல்வது ரொம்ப காலமாக நடந்த சமாச்சாரம், நன்மை ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்கள் விலையை ஏற்றிக் கொண்டே போகிறார்கள்.

மத்திய அரசின் அமைச்சர்கள் எல்லாம் நாங்கள் உற்பத்தியைப் பெருக்குகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். பெருக்கட்டும், யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. உற்பத்தியைப் பெருக்குவது என்பது ஒரு நீண்டகாலத் திட்டம். இன்றைக்கு அல்லது அடுத்த மாதம் அல்லது 6 மாதங்களில் உற்பத்தியைப் பெருக்கி விலைவாசியை இறக்கிவிட முடியுமா? எனவே அது நீண்டகாலத் திட்டம், அதை நாம் குறைசொல்லவில்லை. ஆகவே, அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் டிமாண்ட் அண்ட் சப்ளை சரியாவதற்கு—மார்க்கட்டிலே போதிய பொருட்கள் இல்லை. தேவையான சாமான்கள் மார்க்கட்டிலே வந்துவிட்டால் விலை தானாகவே இறங்கிவிடும் என்று சொல்கிறார்கள். இதைச் சொல்வதற்கு ஒரு அரசாங்கம் வேண்டுமா என்ன? மார்க்கட்டில் சாமான்கள் வந்துவிட்டால் விலை தானாகவே இறங்கி விடும் என்ற முறையிலே சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெளியிலிருந்து அன்னியச் செலாவணி அதிகமாக வந்து நம்முடைய கையில் இருக்கிறது. அதை வைத்து சாமான்களை இறக்குமதி செய்யப் போகிறோம் என்று சொல்கிறார்கள். எதைச் செய்தாவது அன்றாடப் பொருட்களின் விலையைக் குறைத்தாக வேண்டும். நமக்குத் தேவையான பொருட்கள் மார்க்கட்டிலே வந்தால் விலையைக் கட்டுப்படுத்த முடியும். உண்மைதான், மறுக்கவில்லை. நம் நாடு ஒரு பரந்த நாடு, ஒரு பக்கத்திலே வெள்ளம் அடிக்கிறது, ஒரு பக்கத்திலே புயல் அடிக்கிறது, ஒரு பக்கத்திலே வறட்சி. இப்படி ஏதோ ஒரு வகையிலே உற்பத்தி பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அது மட்டுமல்லாமல் நமக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தியானாலும் அதை தனக்கு அதிகமாக்கிக் கொள்ள சில சமூக விரோத சக்திகள் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறார்கள். அவர்

1978 சனவரி 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

களுக்கு பய உணர்ச்சி கிடையாது. எதை வேண்டுமானாலும் செய்யலாம், யாரும் ஒருவேளை பிடித்துவிட்டால் கூட ஜாமீனில் வெளியே வந்துவிடலாம் என்று நினைக்கக் கூடிய முறையிலே அவர்களுக்கு குளிர் விட்டுபோய் விட்டது. நமக்கு பொருட்கள் குறைவாக இருந்தாலும் சமமாக அதைக் கட்டுப்படுத்தி பகிர்ந்து விநியோகிப்பது அரசின் கடமையாகும்.

இன்றைக்கு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களைப் பிரயோகித்து பிளாக்மார்க்கட்டிங் இல்லாமல் கட்டுப்படுத்தி அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் விற்கப்படக் கூடிய ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இன்றைக்கு இன்ப்ளேஷன் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அன்னியச் செலாவணி அதிகமாக வந்துவிட்டதால் உள்நாட்டிலே இன்ப்ளேஷன் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற காரணத்தினால் உள்நாட்டிலே போதுமான அளவிற்குத் தேவைக்குத் தகுந்தபடி சாமான்களைக் கொடுக்க முடியவில்லையென்றால் இன்ப்ளேஷன் வரும். அதற்கு அவர்கள் என்ன யோசனை சொல்கிறார்கள் என்றால் தங்கத்தை இறக்குமதி செய்ய வேண்டும் கையில் இருக்கிற பணத்தைக் கொடுத்து தங்கத்தை வாங்கி அந்தத் தங்கத்தை வைத்து மணி சர்க்குலேஷனைக் கட்டுப்படுத்தி விலையைக் குறைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். பத்திரிகைகளிலேகூட அதைப்பற்றி ஆதரித்து எழுதியிருக்கிறார்கள். தினமணியிலே ஒருநாள் தலையங்கமே

[மாலை 5-10]

எழுதிவிட்டார்கள், மிகவும் அருமையான யோசனை என்று 1,000 கோடி ரூபாய்க்குத் தங்கத்தை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து விற்றால் குறைந்த விலையில் மக்களுக்கு பண்டங்களை கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். 1,000 கோடி ரூபாய்க்கு மெஷினரிகளை வாங்கி தொழிற்சாலை அமைத்தால் உற்பத்திப் பெருக்கத்திற்குக்கூட ஏற்பாடு செய்யலாம். ஆனால் யோசனை எப்படிப் போகிறது என்று பார்க்க வேண்டும். முதலாளித்துவ மனம்போக்கோடு பிரச்னையை நேர்வழியில் அணுகுகின்றார்கள், யோசனை பண்ணுவதில்லை. உற்பத்தி பெருகினால்தான் விலை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 சனவரி 9

குறையும். இறக்குமதி செய்ய வேண்டுமென்றால் எதை இறக்குமதி செய்வது, தங்கத்தையா? இம்மாதிரி பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இன்னும் என்னென்ன அனர்த்தங்கள் தேசத்தில் ஏற்படப்போகிறதோ, தெரியவில்லை. நிதியமைப்பில் எச். எம் பட்டேல் சொல்லியிருக்கிறார்கள், தங்கம் இறக்குமதி செய்வதால் விலையை கட்டுப்படுத்த முடியுமென்று நினைக்கவில்லை என்று. ஆகையினாலே இந்த பணவீக்கத்தை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். இன்ஃப்ளேஷனைக் கட்டுப்படுத்தினால்தான் உற்பத்தி பெருகும். இதைச் செய்தாலொழிய நாம் விலைக் குறைப்பை செய்ய முடியாது. அதற்காக சோஷலிஸ்ட் நாடுகளிலே எந்த அளவிற்கு பொருள்கள் இருக்கின்றனவோ அந்த அளவிற்கு நியாயமாகக் கிடைக்க வழி செய்து விடுகிறார்கள். அதற்கான அமைப்புகள் அங்கே இருக்கின்றன. நாம் அத்தகைய அமைப்புகளை உருவாக்கவில்லை.

16,000 நியாய விலைக் கடைகள் என்று அறிவித்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் நானூறுக்கும் அதிகமான நியாய விலைக் கடைகள் ஆரம்பித்தாகிவிட்டது, அடுத்து மற்ற ஜில்லாக்களில் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுகின்றபொழுது பல்வேறு நடவடிக்கைகள் அது சம்பந்தமாக எடுக்க வேண்டும். இல்லையென்றால் அத்தியாவசியப் பண்டங்களைக் கிடைக்கச் செய்வது சிரமமாக இருக்கும். இந்த அத்தியாவசியப் பண்டங்களுக்கு ஹோல்சேலர்களையோ அல்லது தனியார்களையோ நம்பி எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. எந்தெந்தப் பொருட்கள் எங்கே விளைகிறதோ அங்கங்கே கொள்முதல் செய்வதற்கான அமைப்புகளை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தப் பொருட்களை நியாய விலைக்கு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளைச் செய்ய முடியும்.

நியாய விலைக்கடைகள் என்று சொல்லுகின்றபொழுது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை வைத்திருக்கிறோம். அந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இந்தப் பொறுப்பை எடுத்துச் செய்ய வேண்டும். இல்லையென்றால் கோவாபரேட்டிவ் டிப்பார்ட்மெண்டாவது செய்ய

1978 சனவரி 9] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வேண்டும். அல்லது இரண்டு பேர்களுமே சேர்ந்து ஒருசிலவற்றை ஒருவரும், மற்றும் ஒருசிலவற்றை மற்றொருவரும் என்று பிரித்துப் பங்கிட்டுக்கொண்டு செய்தால் செய்யலாம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் அரிசியை கொள்முதல் செய்கிறோம். எப்படி? ஐந்து லட்சம் டன்னாவது ஸ்டாக் வைத்திருந்தால்தான் அரிசி விலையைக் கட்டுப்பாட்டில் வைக்க முடியும். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் என்னவாயிற்று? பெரிய விளைச்சல் ஒன்றும் வந்துவிடவில்லை. ஏதோ நியாயமான விளைச்சல்தான் வந்திருக்கிறது. ஆனால் நெல் விலை குறைந்துவிட்டது. சர்க்கார் எப்படி யோசனை செய்தார்களோ தெரியவில்லை. மழை பெய்து கொண்டேயிருக்கிறது. தொடர்ந்து 45, 50 நாட்கள் பெய்து கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் குறுவையிலே லெவி கொள்முதல் செய்யச் சொல்லியது அவ்வளவு நல்ல முடிவு அல்ல. குறுவையை அறுத்தவுடன் அன்றாடம் மார்க்கெட்டில் விற்றால்தான் நல்லது, இல்லாவிட்டால் ஈரம் இருந்து முளைத்து விடும். வியாபாரிகள், லெவி என்று வந்தவுடன் சர்க்காருக்கு இந்த நெல்லை லெவியாக கொடுக்க முடியவில்லை, ஆகவே வெளியிலே அனுப்ப முடியவில்லை. விலை 60 கிலோ, 65 கிலோ கொண்ட மூட்டை 30 ரூபாய் 35 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலை. அதிக விலையாக 38 ரூபாய். அதற்கு மேல் போகவில்லை.

அரசை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், குறுவை நெல்லை ஸ்டாக் வைப்பது என்பது சாத்தியமே இல்லை, ஆகவே லெவி கொள்முதலை குறுவை காலத்தில் வைக்கக்கூடாது. ஒரு வருஷம் லெவி கொள்முதல் செய்யப்பட்டது. அந்த வருஷம் மழையே கிடையாது, நெல் ரொம்பச் சுத்தமாக, காய்ந்ததாக வந்தது. வாங்கியதில் கெடுதல் இல்லாமல் போய்விட்டது. ஆனால் மழைக்காலத்தில் குறுவையைக் கொள்முதல் செய்தால் அதனால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கும் நஷ்டம், விவசாயிகளுக்கும் நஷ்டம், இப்படி எல்லா நஷ்டமும் சேர்ந்துவிடும். ஆனால் சர்க்கார் நியாய விலை கொடுத்து, அதிகபட்ச விலை கொடுத்து வாங்கினால் ஆட்சேபணை இல்லை.

நெல் விலையைப்பொறுத்தவரையில், அறுவடை காலத்திலே கீழே இறக்கி விடுகிறார்கள். 83 ரூபாய், 84 ரூபாய் என்ற அளவையொட்டித்தான் ஐ.ஆர். 20 ஃபர்ஸ்ட் சார்ட் தஞ்சையில் விலை போயிற்று. இப்பொழுது கூடியிருக்கிறதோ, குறைந்திருக்கிறதோ தெரியவில்லை. 60 கிலோ கொண்ட மூட்டை 50 ரூபாய் விற்றது. இன்றைக்கு என்ன விலை என்று தெரியவில்லை. இந்த நேரத்தில் நீங்கள் மார்க்கெட்டில் வாங்க வேண்டியதுதானே. இதற்கு லெவி வைத்து இன்னும் 40 ரூபாய் என்று வாங்கும்படி செய்துவிடக்கூடாது. உங்கள் சர்க்கார் ரேட்டை ஒட்டிக் கிட்டத்தட்ட வருகிறது. இதை நீங்கள், அங்கே வாங்கலாம். அவர்கள் 20 சதவிகிதம், 30 சதவிகிதம் வைக்க வேண்டியதில்லை.

அரசை நான் கேட்டுக்கொள்வது, ஃபர்ஸ்ட் சார்ட் ரூ. 65, ரூ. 75 என்பது நெல் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியாக வில்லை. இவ்வளவு குறைச்சலான விலை கொடுத்து கொள்முதல் செய்து, விற்கும்போது, குறைத்து விற்கிறீர்களா என்றால், இல்லை. வாங்குகிற விலைக்கும் விற்கிற விலைக்கும் 30 சதவிகிதமும், 40 சதவிகிதமும் மார்ஜின் வைக்கிறீர்கள். அந்த மார்ஜினை ஏன் குறைக்கக்கூடாது. அது, இது என்று போட்டு, ஏன் இந்த அளவு மார்ஜினை வைக்கிறீர்கள்? அதைக் குறைக்கக்கூடாதா? நீங்கள் கொள்முதல் செய்கிற விலை விவசாயிகளுக்குக் கட்டுபடியாகவில்லை; விற்கிற விலை வாங்கி சாப்பிடுபவர்களுக்குக் கட்டுபடியாகவில்லை. (குறுக்கீடு) அது, இது என்றால், கோடவுன் சார்ஜஸ், வட்டி, ஓவர்ஹெட் சார்ஜ், லாரியில் ஏற்றுகிற சார்ஜ் இறக்குகிற சார்ஜ் இவைகள்தான். ஆகையினால் இந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டும். கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத்தைப் போக்க வேண்டும். இதில் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் விற்பனையும் மோசமாகிவிடும். இதனால் சீசன் முடிந்தவுடன் மார்க்கெட்டில் விலை ஏறிவிடும். அரசாங்கம், விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். வாங்கும்போது, அரசாங்கம் கொஞ்சம் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கொடுக்கச் சொன்ன விலைதான் என்று சொன்னால், விவசாயிகள் இத்துடன் குளோஸ். அதே நேரத்தில் விற்கும்போது, நியாய விலைக்கு விற்க வேண்டும்.

அடுத்து, ஓட்டல் பண்டங்களின் விலையை ஏற்றியுள்ளார்கள். அதைக் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சென்ட்ரல் கவர்ன்மென்ட் கன்கரன்ஸ் வந்துவிட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தமாக என்னவாயிற்று? விலைக் கட்டுப்பாடு இருந்தால், ரூ. 1 இருந்தால் போதும், டிஃபனை முடித்துவிடலாம். இட்டிலி, காஃபி சாப்பிடலாம் என்ற நிலையிருந்தது. 50 காசு இருந்தால், 5 இட்டிலியைச் சாப்பிட்டால் போதும். வீட்டிலே போய் தண்ணீர் குடித்தால் போயிற்று என்ற நிலைமையிருந்தது. (குறுக்கீடு) ஜனத்தொகை இப்பொழுது எங்கே ஏறியது, 3 மாதத்திற்குள்ளே. ஆகவே ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேண்டுமானால், அவர்கள் ஸ்பெஷல் ஐட்டம்ஸ் வைத்துக் கொள்ளட்டும். ஏதோ, 3, 4 ஐட்டங்களை இந்த விலைக்குத்தான் இந்த அளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்து விடுங்கள். பொங்கல், உப்புமா, இட்டிலி, தோசை, அப்புறம் ஏதாவது சேர்த்துக் கொள்ளுங்கள். அதிலே, ஓட்டல்காரர்களை ரொம்ப ஹாரஸ் பண்ணுகிறார்கள்; போலீஸ்காரர்கள், அதிகாரிகள் ஹாரஸ் பண்ணுகிறார்கள் என்பதையும் பார்த்து, அதற்கு என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த விலைவாசி ஏறிக்கொண்டே இருப்பதை எப்படியாவது தடுத்தாக வேண்டும்.

மத்திய சர்க்காருக்குத்தான் பொறுப்பு என்று நாமும் கருத முடியாது. ஆனால், மத்திய சர்க்கார் ஸ்டேட்தான் இதைச் செய்ய வேண்டுமென்று சொன்னாலும், அவர்களும் இந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களுடைய பொறுப்பை யாரும் தட்டிக் கழிக்கக் கூடாது.

பத்திரிகையிலே பார்த்தேன். மத்திய சர்க்காருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை, மாநில சர்க்காருக்குத்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் பொறுப்பு என்று பிரதம அமைச்சர் பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அவர் அந்த சென்சிலே

சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. இதில், எல்லாமே மத்திய சர்க்காருக்குத் தான் பொறுப்பு. அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும், மாநில சர்க்கார் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று மாநில சர்க்கார் நினைக்கக்கூடாது என்று எண்ணித்தான் அப்படிச் சொல்லியிருப்பார் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலையில் கிடைக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(மாலை 5-20)

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அன்றாட உபயோகப் பொருள்களின் விலைகள் ஏற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்க அரசு எடுத்த, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு நான் சார்ந்துள்ள கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவாதத்தினுடைய நோக்கம் விபத்தை ஏற்படுத்துவது அல்ல, வெளிச்சத்தை ஊட்டுவது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. அத்தியாவசியமான பொருள்களின் விலைவாசி ஏற்றம் குறித்து இரண்டுபட்ட கருத்துகள் இருக்க இடம் இல்லை என்று கருதுகிறேன். அன்றாட அத்தியாவசியமான பொருள்களின் விலை ஏற்றம் என்பது மக்களுடைய பிரச்சினையாக இருக்கிறது. அத்தியாவசியமான பொருள்களின் விலைகள் குறைக்கப்படாமல் இருக்குமேயானால் அது நாட்டு மக்களின் தலை எழுத்தோடும், வாழ்க்கையோடும் விளையாடுகின்ற நிலைதான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் கூட, அந்த மக்களின் அத்தியாவசியத் தேவையான பொருள்களின் விலைவாசியைக் குறைக்காமல், அந்தப் பிரச்சினையைத் தீர்க்காத போது, அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏறுகிறபோது அதைத் தீர்க்க முறையான நடவடிக்கை

எடுக்காத போது, மக்கள் புகையும் எரிமலையாக மாறி, ஆர்ப்பரிக்கும் கடல் அலையாக மாறி, ஆட்சியைக் கவிழ்த்திருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மை. இன்றைக்கு வரலாற்றுப் புத்தகங்களும் சரி, நடைமுறையிலும் சரி பல இடங்களில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி வழங்கி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசி ஏறாது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு புதிய சமுதாயத்தை ஒரு புரட்சி சமுதாயத்தை உருவாக்கப் போகிறோம் என்று வாக்குறுதி கொடுத்து வந்ததற்குப் பிறகு, ஆளுகிற பீடத்திலே இருப்பவர்கள், ஆளுகிற கட்சிக்காரர்கள் இந்தப் பொறுப்பிலே இருப்பவர்கள் இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண கடமைப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக உணவு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது இந்த விலைவாசி ஏற்றத்தை ஒரு காரணமாக காட்டி இருக்கிறார்கள். அவர்கள் அப்போது பேசிய பேச்சினை, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து அன்றைய முதலமைச்சர் பக்தவச்சலத்திற்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எந்தக் காரணத்திற்காகக் கொண்டு வந்தீர்களோ அதே நிலைதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. நாட்டிலே விலைவாசி ஏறியிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குறைக்கப்பட்ட விலைவாசி, அவர்கள் மறைந்த பின்னால் மீண்டும் தலைதூக்கி நிற்கிறது. எந்த அளவுக்கு விலைவாசி ஏறியிருக்கிறது என்பது இந்த அமைச்சரவையிலே இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அமைச்சர் அவர்களுக்கு, அவருடைய வார்த்தையிலேயே உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். " ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் அதை மறுக்க மாட்டார்கள் என்று

நம்புகிறேன். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் விலைவாசி ஏறியிருக்கிறது. மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன்படும் பொருள்களின் விலைகூட பலமடங்கு ஏறியிருக்கிறது என்ற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்கொண்டு வந்த போது, பல்வேறு காரணங்களில், தலையாய காரணமாக விலைவாசி ஏற்றத்தைப் பற்றி அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அதே போல இன்றைக்கு இந்த அரசு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அரசு விலைவாசியைக் கட்டுபடுத்துகின்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும் விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள். இன்றைக்கு ஆளுகிற பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் அண்ணாவின் பெயரிலே கட்சியை நடத்துகிறார்கள். அண்ணாவின் படத்தைக் கொடியிலே போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அண்ணாவின் வழியிலே நடப்பதாகச் சொல்லுகிறார்கள். அண்ணா அவர்கள் மாநில அரசை எதிர்த்து விலைவாசிப் போராட்டத்தை நடத்தினார்கள். அப்படியானால் விலைவாசி உயருவதற்கு முழுக்க முழுக்க மாநில சர்க்கார்தான் பொறுப்பு என்று காரணம் சொல்லவில்லை. விலைவாசி ஏற்றத்துக்கு என்ன காரணம் என்று ஆராய்வோமானால், பொருளாதார மாணவன் என்ற முறையிலே நான் சொல்ல முடியும், விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம், இந்த நாட்டிலே கருப்புப்பணம் தான் காரணமாக இருக்கிறது. கருப்புப் பணம் வாங்குகிறவர்களை நாட்டிலே சரியாக அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களிடத்திலே இருக்கிற கறுப்புபணம் முழுவதையும் வெளியே கொண்டுவந்து, அத்தகைய சமூக விரோதிகளை அடையாளம் காட்டுகிற வரையில் அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லுகின்ற அரசானாலும், அண்ணாயிசத்தைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகின்ற அரசானாலும், நிச்சயமாக இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. அடுத்து நோட்டு அச்சடிப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது.

விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் கறுப்புப் பணம், நோட்டு அச்சடிப்பு; மத்திய அரசின் வரி விதிப்புக்கொள்கை, அதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. மத்திய அரசின் ஏற்றுமதி இறக்குமதி கொள்கை விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. பொருள் உற்பத்தி குறைவாக இருந்து பணம் புழக்கம் அதிகமாக இருக்குமானால் அதுவும் இன்றையதினம் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு விலையைக் கட்டுப்படுத்த பங்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்து விட முடியாது. இன்று நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தால் ஒரு யதார்த்த உண்மையை இன்று மறுக்க நாங்கள் தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்தில் மாநில சர்க்காருக்கு அந்த அதிகாரம் இல்லையா என்று கேட்கிறபோது இல்லவே இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால், என்னை நீங்கள் இருட்டறைக்கு அழைத்துப் போகிறீர்கள், தவறான தகவலைத் தருகிறீர்கள், என்று பொருள். உங்கள் மூலமாக நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எசன்ஷியல் கம்மாடிடிஸ் ஆக்ட்—அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அவர்களுக்குத் தெரியாதது அல்ல—அதிலே மத்திய சர்க்காரின் நிலை என்ன, மாநில சர்க்காரின் நிலை என்ன என்று சொல்கிறபோது; பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த மாநில சர்க்காருக்கு இருக்கிறது என்று அந்தச் சட்டத்தின் பிரிவுகள் சொல்கின்றன.

Power to control production and dist·ibution of such essential commodities.

If the Central Government is of the opinion that it is necessary...

செக்ஷனின் எண் சொன்னால் போதும் என்று கருதுகிறேன். செக்ஷன் 3 (சி)-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

for regulating by licence permits or otherwise, production or manufacture of any essential commodity.

என்ன விலைக்கு வாங்குவது, என்ன விலைக்கு விற்பது என்பதையும் மாநில சர்க்கார் சொல்லமுடியும்.

நம்புகிறேன். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் விலைவாசி ஏறியிருக்கிறது. மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன்படும் பொருள்களின் விலைகூட பலமடங்கு ஏறியிருக்கிறது என்ற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்கொண்டு வந்த போது, பல்வேறு காரணங்களில், தலையாய காரணமாக விலைவாசி ஏற்றத்தைப் பற்றி அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அதே போல இன்றைக்கு இந்த அரசு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அரசு விலைவாசியைக் கட்டுபடுத்துகின்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும் விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள். இன்றைக்கு ஆளுகிற பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் அண்ணாவின் பெயரிலே கட்சியை நடத்துகிறார்கள். அண்ணாவின் படத்தைக் கொடியிலே போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அண்ணாவின் வழியிலே நடப்பதாகச் சொல்லுகிறார்கள். அண்ணா அவர்கள் மாநில அரசை எதிர்த்து விலைவாசிப் போராட்டத்தை நடத்தினார்கள். அப்படியானால் விலைவாசி உயருவதற்கு முழுக்க முழுக்க மாநில சர்க்கார்தான் பொறுப்பு என்று காரணம் சொல்லவில்லை. விலைவாசி ஏற்றத்துக்கு என்ன காரணம் என்று ஆராய்வோமானால், பொருளாதார மாணவன் என்ற முறையிலே நான் சொல்ல முடியும், விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம், இந்த நாட்டிலே கருப்புப்பணம் தான் காரணமாக இருக்கிறது. கருப்புப் பணம் வாங்குகிறவர்களை நாட்டிலே சரியாக அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களிடத்திலே இருக்கிற கறுப்புபணம் முழுவதையும் வெளியே கொண்டுவந்து, அத்தகைய சமூக விரோதிகளை அடையாளம் காட்டுகிற வரையில் அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லுகின்ற அரசானாலும், அண்ணாயிசத்தைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படுகின்ற அரசானாலும், நிச்சயமாக இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. அடுத்து நோட்டு அச்சடிப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது.

விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் கறுப்புப் பணம், நோட்டு அச்சடிப்பு; மத்திய அரசின் வரி விதிப்புக்கொள்கை, அதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. மத்திய அரசின் ஏற்றுமதி இறக்குமதி கொள்கை விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. பொருள் உற்பத்தி குறைவாக இருந்து பணம் புழக்கம் அதிகமாக இருக்குமானால் அதுவும் இன்றையதினம் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்காருக்கு விலையைக் கட்டுப்படுத்த பங்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்து விட முடியாது. இன்று நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தால் ஒரு யதார்த்த உண்மையை இன்று மறுக்க நாங்கள் தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்தில் மாநில சர்க்காருக்கு அந்த அதிகாரம் இல்லையா என்று கேட்கிறபோது இல்லவே இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால், என்னை நீங்கள் இருட்டறைக்கு அழைத்துப் போகிறீர்கள், தவறான தகவலைத் தருகிறீர்கள், என்று பொருள். உங்கள் மூலமாக நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எசன்ஷியல் கம்மாடிடிஸ் ஆக்ட்—அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அவர்களுக்குத் தெரியாதது அல்ல—அதிலே மத்திய சர்க்காரின் நிலை என்ன, மாநில சர்க்காரின் நிலை என்ன என்று சொல்கிறபோது; பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த மாநில சர்க்காருக்கு இருக்கிறது என்று அந்தச் சட்டத்தின் பிரிவுகள் சொல்கின்றன.

Power to control production and dist·ibution of such essential commodities.

If the Central Government is of the opinion that it is necessary...

செக்ஷனின் எண் சொன்னால் போதும் என்று கருதுகிறேன். செக்ஷன் 3 (சி)-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

for regulating by licence permits or otherwise, production or manufacture of any essential commodity.

என்ன விலைக்கு வாங்குவது, என்ன விலைக்கு விற்பது என்பதையும் மாநில சர்க்கார் சொல்லமுடியும்.

for controlling the price at which any essential commodity may be bought or sold

for regulating by licence permits or otherwise, production or manufacture of any essential commodity.

எங்கே சேகரிப்பது transport, distribution for prohibiting or withholding from sale of any essential commodity finally kept for sale

எந்தெந்த ரோடுகளில் போகலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

For requiring any person holding stock

அத்யாவசியப் பொருள்களை பதுக்கி வைத்துக்கொண்டிருந்தால் அதைத் தடுக்க மாநில சர்க்கார் உத்தரவு போடலாம். அது மட்டுமல்லாமல் அவற்றை ப்ரொகியூர்மென்ட் செய்கிறோம்.

For requiring any person holding any stock of essential commodity to sell whole or specified part of the stock to the Central Government or State Government or to an officer or agent of such Government or to such other persons or colleection of persons and in such circumstances as may be specified in the order

அது தான் மிக முக்கியமான செக்ஷன். துணை சபாநாயகர் அவர்களே, நாங்கள் உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இது மிக, மிக முக்கியமான செக்ஷன். மாநில சர்க்காருக்கு விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இருக்குமானால், பதுக்கல்காரர்களை பாதுகாக்கக்கூடாது என்று நான் ஏற்கனவே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் சொல்லியதைப்போல், பதுக்கலை வளர்ப்பதற்கும் வர்த்தகச்சூதாடிகளை வளர்க்கின்ற ஒரு தவறான பொருளாதார கொள்கையை, நெருக்கடியை உண்டாக்கி விடக்கூடாது. ஆகவே, மாநில அரசு நெல்லை ப்ரொக்யூர் செய்வதைப்போல் மற்ற பொருள்களையும் ப்ரொக்யுர் செய்ய முடியும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விலைவாசி அதிகமாக இருந்தது என்று சொன்னார்கள். நான் இங்கே ஒரு புள்ளி விவரத்தைச் சொல்கிறேன். சப்ஜெக்ட் டு கரெக்ஷன் — தவறாக இருக்குமானால் நம்முடைய அமைச்சர் தெரிவிக்கலாம், திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அன்றாடப் பொருள்களின் விலை என்ன? திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் மத்திய சர்க்காரால் கவிழ்க்கப்படுகிற போது விலை என்ன என்று ஒப்புநோக்குவதற்காக உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மிளகாய் ரூ. 7 ஒரு கிலோ, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ. 11.20 ஒரு கிலோ, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி இருந்த இருந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ. 10.75 ஒரு கிலோ. துவரம் பருப்பு ரூ. 2.75 ஒரு கிலோ, தனியா ரூ. 9. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், ரூ. 5.25 ஒரு கிலோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். உப்பு — அதற்குக் கூட 5 பைசா கூடியிருக்கிறது — 15 பைசா ஒரு கிலோ திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில். மக்களை நாங்கள் வெளிச்சத்திற்கு அழைத்துப்போகிறோம் என்று சொல்கிற ஆட்சியில், புரட்சி சமுதாயத்தை நிர்மாணிக்கிறோம் என்று சொல்கிற ஆட்சியில் இன்று கிலோ 35 பைசா. கடலை எண்ணெய் விலை கிலோ ரூ. 5 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தற்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கிலோ ரூ. 8. இப்படி விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. திராவிட முன்னேற்றக்கழக சர்க்காரைப் பார்த்து விலை ஏறலாமா என்று கேட்டு விட்டு, இப்போது விலைவாசி ஏறுகிறதே இதற்கு என்ன சொல்கிறீர்கள்? வேங்கையின் கண்ணில் புள்ளிமான் சிக்கக்கூடாது என்றால் அது வேட்டைக்காரன் கையிலும் சிக்கக் கூடாது என்பது நியாயம் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

(மாலை 5.30)

*திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயற்கைச் சூழ்நிலையால் விலைவாசி ஏற்றம் ஏற்படாது என்பதனை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக்கபூர்வமான பணிகளை நடத்துவதற்கு முடியாமல், விலைவாசி ஏற்றம் ஏற்படு கின்ற நிலைமை புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏற்படாது என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு உழைத்து உழைத்து உருக்குலைந்து போன உழைப்பாளர்கள் உண்பதற்கு உணவில்லாமல், ஒட்டிய வயிற்றுக்குச் சொந்தக்காரர்களாக மாற்றப்பட்டிருந்த நேரத்தில், செயற்கையாக விலைவாசி ஏற்றத்தை உருவாக்கியவர்கள். ஆட்சி பீடத்தில் ஏறி ஆறு மாதங்களே ஆகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பார்த்து விலைவாசி ஏறிவிட்டது என்று பேசுவதற்கு உரிமையற்றவர்கள் என்பதே என்னுடைய கருத்தாக இந்தச் சபையில் நான் தெரிவிக்கிறேன்.

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அரிசியைக் கொண்டு போகக்கூடாது என்று 1974-ம் ஆண்டு சட்டம் இருந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் கட்டுப்பாட்டை ரத்து செய்கிறோம் என்று உத்திரவு பிறக்கிறது. உத்திரவு பிறப்பதற்கு முன்னால், 10 ஆயிரம் லாரிகளில் நெல் மூட்டைகளும், அரிசி மூட்டைகளும் ஏற்றப்படுகின்றன. உத்திரவு பிறக்கும் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் லாரி டிரைவர்களுக்குத் தான் தெரிந்திருந்தது. உத்திரவு பிறந்தன. லாரிகளும் உடனே பறந்தன. இதனை நான் குறிப்பிடுவதாக எண்ணக் கூடாது. நெல்லை மாவட்டத்தில் இருக்கும் பொருளாதார நிபுணர் நடராசன் என்பவர், நான் ரோடு ஓரத்திலிருந்து கொண்டு மரத்தடியில் நின்று இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று பின்னால் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல லாரிகளில் நெல்லும், அரிசியும் மாயமாக மறைந்ததும், உத்திரவு திரும்பவும் ரத்து செய்யப்படுகிறது. முதல் நாள் கட்டுப்பாடு, இரண்டாவது நாள் கட்டுப்பாடு ரத்து

செய்யப்படுகிறது. மூன்றாவது நாள் திரும்பவும் கட்டுப்பாடு பிறப்பிக்கப்படுகின்றன. இப்படி நாடகம் நடத்தி செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கியவர்கள், இன்று விலைவாசி உயர்ந்துவிட்டது என்று எந்த அடிப்படையில் பேசுகிறார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இத்தகைய செயற்கைப் பஞ்சங்கள் ஏற்படாது.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். கட்டுப்பாட்டை தளர்த்தியது தமிழகத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு போக உதவியாக இருந்ததா, தமிழ் நாட்டிற்குள்ளேயே போக உதவியாக இருந்ததா என்பதை உறுப்பினர் விளக்குவாரா?

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சத்தை உருவாக்கியவர்கள் பொறுப்பிலிருந்த நேரத்தில், ஒரு மாநிலத்தை விட்டு, இன்னொரு மாநிலத்திற்குப் போகக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஆனால் இடத்திற்கு இடம் இந்த மாநிலத்திலே அரிசியும், நெல்லும் கடத்தப்படக்கூடாது என்று கட்டுப்பாடு இருந்த நேரத்தில், நெல்லும் அரிசியும் கடத்தப்பட்டதால் பஞ்சம் ஏற்பட்டது என்பது என்னுடைய கருத்து.

இந்த ஆட்சியில் இன்று விலைவாசி ஏறியிருக்கிறது என்றால் தேர்தல் நடந்து முடிந்த நேரம். தேர்தல் நேரத்தில் பணப் புழக்கம் அதிகம். அது ஒரு காரணம். இன்னொரு காரணம், மிக முக்கியமான காரணம், புயலாலும், வெள்ளத்தாலும் நமக்கு ஏற்பட்ட சேதத்தின் விளைவாக இன்று காய்கறி விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அதை மற்ற கட்சி நண்பர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதோடு மத்திய அரசின் உணவு மண்டலக் கொள்கையும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறதே தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் ஆக்கப் பணிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன என்றும் அதன் காரணமாக அதன் தொடர்பாக இன்று விலைவாசி ஏறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. அ. ச. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விலைவாசியேற்றம் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன்.

இன்றைய விலைவாசியேற்றம்பற்றி பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் மேல் [illegible] நடைபெற்ற கூட்டத்திலும் விலைவாசி சில பொருள்களின்மீது ஏறியிருக்கிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்வது என்னவென்றால், சிலபொருள்களின்மீது இரண்டு மடங்கு அளவிற்குக் கூட விலை ஏறியிருக்கிறது.

உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோமேயானால், சீரகத்தின் விலை மூன்று மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ. 20 என்றிருந்தது இன்று ரூ. 42-க்கு விற்கப்படுகிறது.

அதேபோல் அரிசியை எடுத்துக்கொண்டால் மோட்டா ரகம், கிலோ ஒன்றுக்கு ரூ. 1.80 என்று விற்கப்பட்டது இன்றைக்கு ரூ. 2-15-க்கு விற்கப்படுகிறது.

நைஸ் ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2 என்று விற்றுவந்தது இன்று ரூ. 2-65-க்கு 65 பைசா அதிகமாக விற்கப்படுகிறது.

மிளகாய்வத்தலை எடுத்துக்கொண்டால் கிலோ ஒன்றுக்கு ரூ. 6-க்கு விற்றது இன்று ரூ. 11 என்ற வகையில் இரண்டு மடங்கு விலை ஏறியிருக்கிறது.

இறைச்சியை எடுத்துக்கொண்டால் கிலோ ரூ. 10 என்று விற்றது இன்றைக்கு ரூ. 14, ரூ. 15 என்றளவிற்கு விற்கக்கூடிய அளவிற்கு விலை ஏறியிருக்கிறது.

துவரம்பருப்பு நான்கு மாதங்களுக்கு முன்னால் ரூ. 2.80 கிலோ என்றிருந்தது இன்று ரூ. 5.70-க்கு விற்கப்படுகிறது.

உளுத்தம்பருப்பு கிலோ ரூ. 2.80 என்றிருந்தது இன்று ரூ. 4 என்று விற்கப்படுகிறது.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம், நேரம் அதிகம் இல்லாததால் இத்துடன் இதை முடித்துக்கொள்கிறேன்.

அரிசியைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே மத்திய அரசைப் பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பின் அடிப்படையில் பார்த்தால் 10½ கோடி டன் என்றிருந்தது இன்று 12 கோடி டன்னாக உற்பத்தி பெருகியிருக்கிறது என்று மத்திய அரசு கூறுகிறது. நம் மாநிலத்தைப் பொறுத்து, ஏற்கனவே இருந்த உற்பத்தி 55 லட்சம் டன். சமீபத்தில் உணவு அமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் பார்த்தால் 80 லட்சம் டன் அளவிற்கு உணவு உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறினார்கள்.

அந்த அடிப்படையில் பார்த்தால் 25 லட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகிற இடத்தில் அரிசியின் விலை ஏறியிருக்கிறது என்றால் அது செயற்கை பஞ்சம் சிருஷ்டிக்கப்படுகிறது என்றுதான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எண்ணெய் விலையை எடுத்துக் கொண்டால் தேங்காய் எண்ணெய் கிலோ ரூ. 11.50-க்கு விற்றது இப்போது ரூ. 16 என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

கடலை எண்ணெய் விலை முன்பிருந்ததைவிட 37 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இந்தியா பூராவும் 80 லட்சம் டன் உற்பத்தியான கடலை எண்ணெய் இப்போது 120 லட்சம் டன்னாக உற்பத்தி அதிகரித்திருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அப்படியிருந்தும் இன்று கடலை எண்ணெய் விலை கிலோவிற்கு ரூ. 2 அதிகமாக ஆகியிருக்கிறது.

இதேபோல் காய்கறிகளின் விலைகளும் ஏறியிருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக விறகு விலை 1½ மடங்கு ஏறியிருக்கிறது.

இந்த விலைவாசி ஏற்றத்தை அரசாங்கம் கவனித்து கட்டுப்படுத்தா விட்டால், அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் இந்த விலைவாசிகள் மேலும் ஏறும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்நிலையில் மத்திய அரசு சொல்லியிருக்கிறது. பொருள்களை அதிக விலைக்கு விற்றால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அடிக்கடி எச்சரித்து வருகிறார்கள். மாநில அரசும் கூட

[திரு. அ. ச. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]
[1978 சனவரி 9

மாறி மாறி எச்சரிக்கைகள் விடுகிறார்கள். ஆனால் வியாபாரிகள் இந்த எச்சரிக்கைகளுக்கெல்லாம் பயப்படுகிறவர்கள் அல்ல என்பது நமக்குத் தெரியாததல்ல.

நமது பழைய மாண்புமிகு பிரதமர் நேரு அவர்கள் [illegible] வியாபாரம் செய்கிற வியாபாரிகளை, கடத்தல்காரர்களை [illegible] ஏற்றவேண்டும் என்று சொல்லிப் பார்த்தார்கள், அவர்களை [illegible] வைத்து சவுக்கினால் அடிப்பேன் என்று சொல்லி பயமுறுத்திப் பார்த்தார்கள். அதற்கெல்லாம் வியாபாரிகள் மசிந்து விடுவார்களா? அவர்கள் பல ஆட்சிகளைப் பார்த்தவர்கள். இந்த எச்சரிக்கைகள் எல்லாம் பயன்படாது.

ஒரே மண்டலமாக ஆக்கப்பட்டதன் விளைவாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே ஒரே மண்டலமாக்கியது சரியல்ல. ஒவ்வொரு மாநிலத்தையும் ஒவ்வொரு உணவு மண்டலமாக ஆக்க வேண்டும் என்று ஐந்து மாநில உணவு அமைச்சர்கள் கூறிய தையும் அதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டிய

[மாலை 5-40]

தையும் வரவேற்கிறோம். அதே நேரத்தில் மத்திய அரசாங்கத்தோடு மீண்டும் ஒவ்வொரு மாநிலமும் ஒரு மண்டலமாக இருக்க வேண்டும் என்று இந்த சட்டமன்றம் கேட்டுக்கொள்ள வேண்டும். இடைக்காலத்தில் ஒருசில ஏற்பாடுகளை செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலத்தில் இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு உதாரணமாக மேற்கு வங்காளத்தில் அப்படி சில ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள். அது போன்று சில அதிகாரங்களைப் பெற்று சில ஏற்பாடுகளை நாமும் செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது) சீக்கிரமாக முடித்துக் கொள்கிறேன். பெரிய நிலச்சுவான்தாரர்களிடமிருந்து தேவை போக மீதமுள்ள எல்லா நெல்லையும் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், சிறிய விவசாயிகளிடமிருந்து அவர்கள் தானாக கொடுக்க முன் வரக்கூடியவர்களிடமிருந்து கட்டுப்படியாகக்கூடிய விலையும் போனஸ் பணமும் கொடுத்து வாங்கி

1978 சனவரி 9]
[திரு. அ. ச. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]

பாதுகாத்து வைக்கவேண்டும். அதே போன்று மற்ற உணவுப் பண்டங்களையும், சேமித்து வைத்து விவசாயிகளுக்கு என்று மட்டுமில்லாமல் பொதுவாக தேவைப்படும் பொதுமக்கள் அனைவருக்கும் அரிசி, பருப்பு, எண்ணெய் வகையறாக்கள் போன்றவற்றையும் அரசாங்கமே வாங்கி ஸ்டாக் செய்து 500 குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை திறந்து அதன் மூலம் விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அப்படி விநியோகம் நடைபெறும்போது, நல்ல முறையில் விநியோகம் நடைபெறுகிறதா என்பதை சர்வ கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு கண்காணிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் உண்மையிலேயே விலைவாசி ஏற்றத்தால் மனவேதனைப்பட்டு இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார்களா அல்லது வேறு ஏதோ எரிச்சலை காண்பித்துக் கொள்வதற்காக கொண்டு வரப்பட்டதா என்று இந்த விவாதத்தில் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கையாண்ட முறையை பார்க்கின்ற போது நமக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. மக்கள் மீது அக்கறை காட்டி, மக்களுக்கு விலைவாசி ஏறிவிட்டது என்பதற்காக அவர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால் அதை வரவேற்கிறேன். அவர்களுடைய உள் எண்ணத்தை பாராட்டுகின்றேன்.

ஆனால் அவர்கள் கூறுகின்ற பொழுது, இன்றையதினம் மத்திய அரசு மேற்கொண்டுள்ள பொருளாதாரக் கொள்கை, தொழில் கொள்கை போன்றவற்றை விமர்சனம் செய்தார்கள். பாராட்டுகின்றேன். இன்றையதினம் மத்திய சர்க்காரில் நிதி அமைச்சராக இருக்கின்ற எச். எம். பட்டேல் அவர்கள் இந்திய துணை கண்டத்திலேயே ஒரு பொருளாதார நிபுணர் என்று பல்வேறு அரசியல் கட்சிகளாலும், சில நீங்கலாக—பல தலைவர்களாலும் பாராட்டப்பட்டவர்கள் ஆவார்கள். அவர் தஞ்சாவூரில் வந்து பப்ளிக் ஃபைனான்ஸ், எகனாமிக்ஸ் இவைகள் எல்லாம் வந்து

படிக்கவேண்டும், என்று கேட்டுக்கொண்டார். அந்த அளவுக்கு வேறு யாராவது செய்வதற்கு இருப்பார்கள். ஆனால் அவருக்கு அந்த நிலை வரவில்லை.

டிமாண்ட் அன்ட் சப்ளை என்பது ஒருபுறம் இருந்தாலும் விலை ஏறுமுகமாக இருந்து கொண்டிருந்தால் டிமாண்டும் குறைவாகத்தான் இருக்கும். இந்த தத்துவத்தைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் இனிமேல் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு பாடத்தைச் சொல்லிக்கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

1962-லிருந்து வறுமையை ஒழிப்போம் என்று சொன்னவர்கள் இத்தனை ஆண்டுகள் இருந்தும், வறுமை ஓடிப்போகவில்லை. வறுமையை ஒழிப்போம் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இப்போது எங்கேயிருக்கிறார்கள் என்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலையிருக்கிறது, அந்தக் கட்சியும் இல்லை. அவர்களுடைய கோஷங்கள் நிச்சயமாக ஏழை எளியவர்களுக்கு நிச்சயமாக பயனளிக்கவில்லை. ஆகவே இந்த கோஷங்களை விட்டுவிட்டு . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நான் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி குறிப்பிட்டபோது, 'இன்ஃப்ளேஷன்' பற்றி சொன்னேன். ஆனால் இப்போது அவர்கள் அரசியலைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி போனால் அது எங்கோ கொண்டுபோய்விடும். நான் இப்போதும் சொல்லுகிறேன். பொருளாதாரத்தைப் (எக்னாமிக்ஸ்) பற்றி பாடம் சொல்லுவதற்கு நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இன்றையதினம் உலகத்தில் இன்பிளேஷன், பண வீக்கம் 15 சதவிகிதம் வரையிலும் ஏற்பட்டிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றார்கள். ஆனால், நமது காங்கிரஸ் தலைவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது இந்த நாட்டிலே இருக்கின்ற ஒரு உண்மை;. ஆனால், உலகத்தில் 15 சதவிகிதம் என்று சொன்னாலும், இந்தியாவைப் பொறுத்த மட்டில் 5 சதவிகிதம் தான் இந்த பணவீக்கம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அந்த அளவுக்குச் சில பொருட்களின் விலை

ஏறுவது சகஜம். அதனை மத்திய அரசாங்கம் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. உங்களிடம் தப்பித்துக் கொள்வதற்காக, அதை மறைக்க நான் தயாராக இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே விலைவாசி ஏற்றத்தைப் பற்றித் தீர்மானம் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் என்னென்ன பொருட்களின் விலை, எந்தெந்த அளவுக்கு ஏறியிருக்கிறது என்பதைப் பட்டியல் போட்டு வைத்து, கூறியிருப்பார்களானால், அதனை நானும் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கும். இந்த தேச மக்களும் அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கும். ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அரசும், அதற்கேற்ற நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். அதற்குப் பதில், ஏதோ பல காரியங்களைப் பற்றிக் கூறினாரே தவிர, இதைப்பற்றி கூறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் இதிலே தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. விலைவாசி ஏறுகிறது என்று சொன்னால், லட்சக் கணக்கான மக்களை சிறையிலே தள்ளி விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்கின்ற நிலையிலே இன்றைக்கு இருக்கின்ற அரசு இல்லை என்பதைக் கூறிக்கொள்வேன். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

நிச்சயமாக இப்போதெல்லாம், தஞ்சாவூரிலே நெல் விலை ஏறியிருக்கிறது என்று நாம் கூறுவதற்கில்லை. நமது காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்கள் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தாலும்கூட, தஞ்சாவூரிலே இன்றைக்கு என்ன விலைக்கு நெல் விற்கின்றது என்பதைப் பார்த்தால், நெருக்கடி காலத்தில் இருந்த விலையைவிட இப்போது குறைந்திருக்கின்றது என்கின்ற உண்மை நிலையை அறியலாம்.

அதோடு, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் சில பகுதிகளிலே ரேஷன் கடைகள் மூலம் அரிசி விநியோகம் செய்கிறோம். ஆனால், அங்கே விற்கப்படுகின்ற அரிசியின் விலை, ஓபன் மார்க்கெட்டிலே விற்கின்ற விலையைவிட அதிகமாக இருக்கின்றது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 ஜனவரி 9

இப்படி ரேஷன் கடையிலேயே விலை அதிகமாக விற்றால், நாம் எப்படி ஓபன் மார்க்கட் விலையைக் கட்டுப்படுத்த முடியும்? எனவே, இதனால் ஓபன் மார்க்கெட்டின் விலை ஏற்றம் ஏற்படுகின்றது என்பதை நான் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எங்கள் பகுதியில் கிலோ ரூ. 2.25-க்கு ரேஷன் கடையில் அரிசி விற்கப்படுகின்றது. விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனால், ஓபன் மார்க்கெட்டில் கிலோ ரூ. 1-60-க்கு விற்கப்படுகின்றது என்று சொன்னால், இதற்குக் காரணம் மாநில அரசின் கொள்கைதான். எனவே, இதிலே தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏழு மணிக்கு சபையை முடிக்கவேண்டும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி என்று முன்னால் விநியோகம் செய்துகொண்டு வந்தார்கள். ஆனால், இப்போது ஒரு குடும்பத்திற்கு 6 கிலோ என்று விநியோகம் செய்யப்படுகின்றது. எனவே, இந்தக் காரியங்களை எல்லாம் ஒழுங்காகச் செய்வதற்கு இப்போது நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தப் போவதாக இந்த அரசு சொல்லி வருகிறதே, அந்த நியாயவிலைக் கடைகளை உடனடியாக ஏற்படுத்தி, அவைகளில் அத்தியாவசியப் பண்டங்களை அனைத்தும் நமது மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையிலே விநியோகம் செய்தால், நிச்சயமாக விலைவாசி குறையும், நாம் விலையேற்றத்தைத் தடுக்க முடியும், எனவே அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கூறி, முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அரிசி, மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏற்றத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்க, அந்தப் பண்டங்களின் விலை ஏற்றத்தை அரசு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று அரசுக்கே உண்டான நியாயமான பொறுப்பை, பணியை உணர்த்துகின்ற வகையிலே, காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் இந்த அவையிலே

1978 சனவரி 9] [திரு. க. உரோ. எட்மண்ட்]

இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்ததற்காக, அரசின் சார்பில் நான் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-50)

அவர் கொண்டு வந்துள்ள இந்தப் பிரச்சினையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும், ஆளும் கட்சி சார்பில் மதிப்பிற்குரிய நாஞ்சில் வின்சென்ட் அவர்களும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மதிப்பிற்குரிய சொர்ணம் அவர்களும், ஜனதா கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களும் தங்களுடைய நல்ல ஆலோசனைகளை இந்த அரசுக்கு எடுத்துச் சொன்னதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த நிலைமைகளை இந்த அவையில் பேசுகிற நேரத்தில் 1975 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்—இப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது இந்த அவையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த அந்த அவையில் நான் பேசிய உரையை அதற்கு அவர்கள் சான்றாகக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் ஒன்றை மாத்திரம் நான் அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1973 ஆம் ஆண்டில் அன்றையதினம் இருந்த ஆளும் கட்சியின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது என்றால், ஏறத்தாழ நாலைந்து ஆண்டுக் காலம் ஆட்சியை நடத்திய பின்னால் ஐந்து ஆண்டுகள் ஆட்சிக்குப் பின்னாலேயும் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும், அரிசியின் விலையும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இருந்தன என்ற அடிப்படையில் தான் என்னுடைய வாதத்தை அன்று வைத்தேனே தவிர வேறல்ல.

1969-ல் இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற அவர்கள் அன்று முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனேயே ஏன் விலைவாசியைக் கட்டுப்படுத்தவில்லை என்ற

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1978 சனவரி 9

எண்ணத்தில் அந்தப் பிரச்சினைகளைக் கொண்டு வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, ஒரு மாநிலத்தினுடைய நிர்வாகத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்பது உற்பத்தியையும், விற்பனையையும் பொருத்துள்ளது என்பதையும், மத்திய அரசாங்கம் வகுக்கின்ற பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளை பொட்டி இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இன்றையதினம் இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில் உற்பத்தியும் விற்பனையும் தனியார் கையில் இருக்கின்றன. இந்த உற்பத்தியையும் விற்பனையையும் அரசே ஏற்று நடத்துகின்ற நிலைமை ஏற்பட்டால் இந்த விலைகளை நிச்சயமாக நாம் கட்டுப்படுத்த முடியும். ஆனால் உற்பத்தியையும் விற்பனையையும் ஒரே நேரத்தில் அரசு ஏற்றுக்கொள்வது என்பதைச் சொல்லும்போது அவற்றில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையில் அறிவார்கள்.

மேலும் உற்பத்தி எந்த அளவுக்கு நல்ல முறையில் இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். ஆகவே, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் பருவ நிலைகளும் நம்மோடு ஒத்துழைத்து வரவேண்டும். 1975-76-ல் இருந்த உற்பத்தியைவிட 1976-77-ல் விவசாயப் பண்டங்களின் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று புள்ளி விவரங்கள் நமக்கு எடுத்துச் சொல்கின்றன. இதுபோக அண்மையில் வீசிய புயல், அடித்த மழை, வெள்ளத்தின் காரணமாக மேலும் விவசாயப் பண்டங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதன் காரணத்தாலே துவரை, வெங்காயம், காய்கறிகள் போன்ற பண்டங்களின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. என்றாலும், அரிசி, புஞ்சை தானியங்கள், சர்க்கரை, புளி, தனியா, சமையல் எண்ணெய் போன்ற பண்டங்

1978 சனவரி 9] [திரு. க. உரோ. எட்மண்ட்]

களின் விலைகள் ஓரளவு குறையவில்லை என்றாலும், சீராக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொர்ணம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப் போல் ஜனதா கட்சியின் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூட வெளி மார்க்கட்டில் அரிசி விற்பனை செய்கிற விலையை விட பொது விற்பனை விநியோக முறையில் அரிசி விலை கூடுதலாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் நிலைமை அப்படி இல்லை. இன்றையதினம் பொது விநியோக முறையில் வழங்கப் படுகிற அரிசி சூப்பர் ஃபைன் என்று சொல்லுவார்களே அந்த உயர்ந்த ரக அரிசி, கிலோ ரூ. 2.75-க்கு விற்கப்பட வேண்டிய அரிசியை இன்றையதினம் அரசாங்கம் 2 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. சாதாரண நடுத்தர, மோட்டாரக அரிசி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கையிருப்பில் இல்லை.

அது மாத்திரமல்லாமல், 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நடுத்தர புழுங்கல் அரிசியினுடைய விலை கிலோ, ரூ. 1.95 ஆக இருந்தது. புயல், வெள்ளம் காரணமாக அது 2 ரூபாய் முதல் 2.45 ரூபாய் வரைக்கும் உயர்ந்திருக்கிறது. இருந்தாலும் நவம்பர் முதல் இந்த விலை ரூ. 1.70 முதல் ரூ. 2.75 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்னையிலே நடுத்தர புழுங்கல் அரிசி கிலோ ரூ. 2.20-க்கும் வட ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 2.30-க்கும் விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் ஓரளவுக்கு அரிசியின் விலை சீரான அளவிற்கு இருக்கிறது என்பதை தெரிவிக்கிற நேரத்திலே 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு கிலோ அரிசி விலை ரூ. 4.20 ஆக இருந்தது என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக பொது விநியோகத்தின் மூலம் 1977 ஆம் ஆண்டு அக்டோபரில் 46,766 டன் அரிசியும், நவம்பரில் 39,422 டன் அரிசியும் பொது விநியோக முறையின் மூலம் வழங்கப்பட்டிருக்

கிறது. இந்த அளவிற்கு பொது விநியோக முறையிலே விற்கப்படுவதாலே அரிசியின் விலை குறைந்து வருகிறது, அதற்கு வெளிச் சந்தையிலே தரமுள்ள அரிசி குறைந்த விலைக்குக் கிடைப்பது தான் காரணம்.

கடலெண்ணெய் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு கிலோ 10-10 முதல் 11.70 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்சமயம் 7.85 முதல் 8.80 வரைக்கும் வெளிச் சந்தையிலே விற்கப்பட்டு வருகிறது. வெளிச் சந்தையிலே கடலெண்ணெய் அதிகமாக வருகிறது என்ற காரணத்தாலே தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் சில்லரைக் கடைகளின் மூலம் 7-50க்கு விற்பனை செய்துகொண்டு இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் அதற்குச் சொந்தமான கடைகளிலே 7.50-க்கு விற்கப்பட்டு வருகிறது.

நல்லெண்ணெய் கிலோ 9 ரூபாய் முதல் 10 ரூபாய் வரைக்கும் விற்கப்பட்டு வருகிறது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விற்பனை செய்யப்பட்ட விலையை விட மிகவும் குறைந்துவிட்டது. பெரும்பாலும் நல்லெண்ணெயைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு, ஆந்திர மாநிலத்தைத்தான் நம்பியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள்.

தேங்காயெண்ணெய் விலை அதிகமாகக் கூடியிருக்கிறது என்று திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தேங்காய் எண்ணெயைப் பொறுத்தமட்டில் தமிழகம் எப்போதுமே கேரள மாநிலத்தைத் தான் முழுக்க முழுக்க நம்பியிருக்கிறது. அங்கே அதற்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ அந்த விலைக்குத்தான் இந்த மாநிலத்திலே விற்கவேண்டிய கட்டாய நிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றாலும் இன்றைய தினம் அக்மார்க் தேங்காய்யெண்ணெய் கிலோ 15 ரூபாய்க்கும் சாதா எண்ணெய் 14.80 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பருப்புவகைகளைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே விலை கூடிக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்கு இந்த அரசுக்கு எந்த விதமான வெட்கமும் இல்லை. காரணம் உண்மையைச் சொல்வதன் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளக்கூடிய உணர்வுகள் ஏற்படும்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்மை தெரியும். பருப்பு வகைகள் பெரும்பாலும் வெளி மாநிலங்களிலிருந்து வாங்க வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். அங்கே வாங்கி இங்கே விற்பனை செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து வைத்து இருக்கிறார்கள்.

1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு கிலோ துவரம் பருப்பு 3 முதல் 4-50 ஆக இருந்தது இப்போது 4-20 முதல் 5-40 வரையில் கூடியிருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் தெரிந்து வைத்திருக்கிறது.

விலை கூடுதலுக்குக் காரணம் உற்பத்தி செய்யப்படுகிற மாநிலங்களில் அதனுடைய விலை அதிகமாகியிருக்கிறது. உத்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து பருப்புவகைகள் இந்த மாநிலத்திற்கு வர ஆரம்பித்து இருக்கிறது. முழுமையாக வந்து சேர்கிறபோது அதனுடைய விலை குறையும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

[மாலை 6.00]

மிளகாயைப் பொறுத்தவரையில் விலை கூடியிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலே மிளகாய் விளைகிறது, இதுபோக தேவையான மிளகாயை ஆந்திர மாநிலத்திலேயிருந்து நாம் எப்போதுமே தருவித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றையதினம் இயற்கையின் சீற்றம் ஏற்பட்ட கோளாறுகளின் காரணமாக தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் மிளகாய்ச் செடிகள் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், ஆந்திர மாநிலத்திலும்கூட மிளகாய்ச் செடிகள் புயலால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் இன்றையதினம் இந்த மிளகாயின் விலை ஏறியிருக்கிறது என்பதை

நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும் மார்ச் மாதம் மிளகாய் அறுவடைக்குப் பிறகு நிச்சயமாக மிளகாயின் விலை இறங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தனியாவைப் பொறுத்தவரையில் கிலோ ரூபாய் 6 முதல் 8 ரூபாய் வரையில் விற்பனையாகியிருக்கிறது. ஆனால் இதன் விலை கடந்த ஜனவரி மாதத்தில் 9½ ரூபாய் முதல் 13 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ஏறத்தாழ 6 ரூபாய் முதல் 8 ரூபாய் அளவிற்குத் தனியாவின் விலை குறைந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லுகின்ற நேரத்தில் சென்ற ஆண்டைவிடக் குறைந்திருக்கிறது என்றாலும் வழக்கமான விலையை விடக் கூடியிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தில் ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புளியைப் பொறுத்தவரையில் தற்பொழுது 2 ரூபாய் 40 காசு முதல் 4 ரூபாய் 50 காசு வரையில் ஒரு கிலோவிற்கு இருக்கிறது. 1974 ஜனவரி மாதத்தில் இது 3 ரூபாய் 20 காசு முதல் 6 ரூபாய் 50 காசு வரையில் விற்றுக்கொண்டிருந்தது. ஆகவே இது கொஞ்சம் குறைந்த விலையிலே விற்பனை செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, காய்கறிகளின் விலை கூடியிருக்கிறது. வெங்காயம் 1 ரூபாய் முதல் 1 ரூபாய் 40 காசுவரையில் விற்பனை செய்யப்படுகிறது. ஜூன் மாதத்தில் 1 ரூபாய் 10 காசு முதல் 1 ரூபாய் 50 காசுவரையில் விற்பனை செய்யப்பட்டது.

தக்காளிப்பழம் 2 ரூபாய் முதல் 4 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

அதைப்போல கத்தரிக்காயின் விலை கிலோவிற்கு 1 ரூபாய் 40 காசு முதல் 3 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, நமது உணவு அமைச்சரவர்கள் பட்டியலைப் படிக்கிறார்கள். இன்றைக்குக் கத்தரிக்காயின் விலை 4 ரூபாய்க்கு விற்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைச்

சொல்லும் நேரத்தில் நான்கூட இதில் பேசுவதாக இருந்தேன். இன்றைக்கு 1 ரூபாய் கொடுத்து அனுப்பினால் கால் கிலோ கத்தரிக்காய் மட்டும்தான் வாங்கியிருக்கிறார்கள். என் வீட்டிலேயே அப்படி நடந்திருக்கிறது. தயவு செய்து நீங்கள் விசாரித்துப் பாருங்கள். தவறாகத் தகவலைச் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினரவர்கள் 4 கிலோ கத்தரிக்காய் ஒரு ரூபாய்க்குக் கிடைப்பதாகச் சொல்லுகிறார்களா?

திரு. தீ. சு. நல்லதம்பி: கால் கிலோ கத்தரிக்காய் ஒரு ரூபாய்க்கு விற்கிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் கடந்த வார விலையைச் சொல்கிறார்கள். போன வாரம் வாங்கிய கத்தரிக்காயை இந்த வாரம் உபயோகிக்கக் கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது உள்ள விலை கத்தரிக்காய் ஒரு கிலோ 1 ரூபாய் 40 காசு முதல் 3 ரூபாய் வரையில் விற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் எந்தக் கடையில் வாங்கச் சொல்கிறார்கள்? அந்த விலைக்கு வாங்கலாம் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாகக் காய்கறிகளின் விலைகளைப் பொறுத்தவரையில் அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் இயல்பாகவே கொஞ்சம் விலையேற்றமாகத்தான் இருக்கும். பொதுவாக விவசாயிகள் ஆடி மாதத்திலேதான் காய்கறிகளை விளைச்சல் செய்வார்கள். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற பழமொழிகூட உண்டு. அந்த அடிப்படையிலே ஆடி மாதத்திலே பயிரிடுவார்கள். ஆகவே, அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் கொஞ்சம் விலையேற்றம் இருக்கும். ஆகவே இப்பொழுது உள்ள விலை குறைந்த விலை என்று சொல்லத் தயாராக

இல்லை. இருக்கின்ற விலையை விலையேற்றம் என்பதை இந்த அரசு உணர்கிறது. எனினும், பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் கொஞ்சம் குறைவான விலை இருக்கும். ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் காய்கறிகளின் விலை நிதானமாக இருக்கும். ஆகவே, இனிமேல் காய்கறிகளின் விலை குறையலாம் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

பல்வேறு பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் மாநிலங்களிலிருந்து இங்கே வந்து விற்பனை செய்யப்படுகின்ற நிலைமை ஏற்படுவதால் இங்கே விலைவாசிகள் ஏறுகிறது ஒருபக்கம் இருந்தாலும்கூட நம்முடைய மாநிலத்தில் ஒருசில அத்தியாவசியப் பண்டங்கள் நமக்கும் தேவையாக இருக்கும்பொழுது, போதுமான தேவைகளுக்குப் போக மீதியுள்ள பண்டங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுகின்ற நிலைமைகள் ஏற்பட்டால் ஓரளவிற்கு அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால், இன்றையதினம் நாட்டிலேயிருக்கிற நிலைமை உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமென்றால் வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் நம்முடைய மாநிலத்திலே விளைச்சல் செய்யப்பட்டாலும் உற்பத்தி செய்யப்பட்டாலும் அவைகள் இந்த நாட்டினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னால் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற நிலைமையிருக்கிறது. ஆகவே, அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலே ஈடுபாடு கொண்டுள்ள வியாபாரிகள் அதிகமான விலை கொடுத்து இந்தப் பண்டங்களை வாங்கி, ஏற்றுமதி செய்துவிடுகிற காரணத்தாலே, உள்நாட்டிலே அதை உபயோகிக்கிறவர்கள் கூடுதலான விலையைக் கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது என்பதோடு, இங்கே பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதை மத்திய அரசு எடுத்துக் கூறி, அத்தியாவசியப் பண்டங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க ஓரளவு முயற்சி செய்ய வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதன் பேரில், இன்றையதினம்

சிறு வெங்காயம் நமது நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய இருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரையைப் பொறுத்தவரையில் வெளிச் சந்தையிலே ரூ. 6-க்கு விற்ற சர்க்கரை, இன்றையதினம் கிலோ ஒன்றுக்கு ரூ. 4-க்கு விற்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவுச் சங்கங்களிலே ரூ. 3-75 காசுக்கு இன்றையதினம் விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே, இந்த நிலைமை இன்றையதினம் நாட்டிலே இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள், அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்கிற முறையை, அரசாங்கமே ஓரளவு ஏற்று நடத்துவதன் மூலம், அல்லது கொள் முதல் செய்வதன்மூலம், இந்த விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று சொன்னார்கள்.

அதற்கான சட்டம் இருக்கிறது. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்கூடப் பேசும்போது, எசன்சியல் கமாடிட்டீஸ் ஆக்ட்—அத்தியாவசியப் பொருள்கள் சட்டம்—இருக்கிறது. அதன் மூலம் அத்தியாவசியப் பண்டங்களைக் கட்டுப்படுத்தினால் என்ன என்று கேட்டார்கள். இந்த அரசாங்கம் எந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டுமோ, அந்த அளவுக்குப் பயன்படுத்தினாலும், சில நேரங்களிலே சில சிக்கல்கள் ஏற்பட்டு விடுகின்றன. நாம் விலையைக் கட்டுப்பாடு செய்தால், வியாபாரிகள், ஆர்ட்டிஃபிஷியல் ஸ்கேர்சிட்டி—செயற்கை முறையிலே பற்றாக்குறை—உருவாக்குகிறார்கள். எப்படியென்றால், எந்த அத்தியாவசியப் பண்டத்திற்கு விலை நிர்ணயம் செய்து பட்டியலை, நாட்டு மக்களுக்கு வாங்குகிறவர்களுக்குத் தெரிவிக்கின்ற அளவு எழுதி வைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றோமோ, அந்தப் பண்டங்களை அப்பொழுது வியாபாரிகள் பதுக்குகின்ற நிலைமையும் நாட்டிலே ஏற்படுகிறது.

ஆகவே, இவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமானால், இன்றைய வியாபாரிகள் செய்கின்ற வியாபாரத்திற்குப் போட்டியாக அரசும் வியாபாரத்திலே ஈடுபட வேண்டிய நிலைமை

ஏற்பட்டிருப்பதை இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. இது ஆறு மாத காலத்திலே முடிகிற காரியம் அல்ல. அதற்கான நடவடிக்கைகளை அரசும் எடுத்து வருகிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற வகையில், இந்த மாநிலத்திலே, எந்தெந்த பகுதிகளில், என்னென்ன விளைச்சல் ஆகிறதோ, உற்பத்தியாகிறதோ, அவற்றை அறுவடை நேரங்களில், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவோ, அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ அவற்றை வாங்கிச் சேகரித்து வைத்து, பற்றாக்குறை ஏற்படுகிற காலத்தில், அவற்றை இந்த நாட்டிலே பொது விநியோக முறையின் மூலம் குறைந்த விலையிலே நாட்டு மக்களுக்கு விநியோகம் செய்கிற முயற்சி அரசாங்கத்திடம் இருக்கிறது. அப்படி ஒரு திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது.

அந்தத் திட்டத்தைப்போல், ஒருசில அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், பருப்பு போன்ற பண்டங்களை விநியோகிக்க ஒரு திட்டம். சீரகத்தினுடைய விலை கூட ஏறியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொர்ணம் அவர்கள் சொன்னார்கள். விலை ஏறியிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அது இங்கே விளையவில்லை. அது வட மாநிலங்களிலே விளைகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவோ, கூட்டுறவுத் துறைகளின் மூலமாகவோ, அறுவடை செய்கிற நேரத்தில், அந்தந்த மாநிலங்களிலே மொத்தமாக வாங்கி, இங்கே சேமித்து வைத்து, பற்றாக்குறை நேரங்களிலே விலை ஏறும் போது, நியாயமான விலையிலே பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் சரியான முறையிலே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் அரசாங்கம் செயல்படுத்த இருக்கிறது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அத்தியாவசியப் பண்டங்களின் விலையை அரசு நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும்; கட்டுப்படுத்தக்கூடிய முறையில், நியாயமான விலையில், இவற்றை விநியோகம் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே, மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக அரசின் சார்பிலே எனது நன்றியைத் தெரிவிக்கிற நேரத்தில், அவர் கொண்டு வந்திருக்கிற தீர்மானம், அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்ற உத்தேசித்துள்ள நல்ல திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்ற உற்சாகம் காட்டுவதாகவும், ஆக்கபூர்வமான தூண்டுகோலைத் தருவதாகவும் இருப்பதாகத் தெரிவித்து, அமர்கிறேன்.

[மாலை 6-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உணவமைச்சர் அவர்களுக்கு நானும் ஒரு கோரிக்கை வைக்கிறேன். இந்த இறைச்சி, மீன் போன்றவைகளுக்கும் விலையைக் கட்டுப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

திரு. ஏ. ரகுமான்கான்: With your consent மன்றத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக உணவு அமைச்சர் அவர்கள் இடத்தில் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது போதுமான அவகாசம் கொடுத்தோம். நேரம் இருந்தது. ஆகவே கொண்டு வந்தோம், விலைவாசி ஏற்றத்தைக் காரணம் என்று சொன்னோம். ஆனால் எங்களுக்கு அவகாசம் கொடுக்காமல் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியுமா என்று கேட்டார்கள். நான் கேட்கிறேன், விலைவாசியைக் கட்டுப்படுத்த ஏதேனும் கால வரையறை இருக்கிறதா. நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு எத்தனை பதுக்கல்காரர்களைப் பிடித்திருக்கிறீர்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள், என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு, கத்திரிக்காய் அதிக விலையில் விற்கப்படுகிறது அதை நியாய விலையில் கொடுக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்களே அப்படியானால் கருவாட்டின் விலையும் கூட இருக்கிறதே, அப்படி என்றால் அதையும் குறைக்கச் செய்யுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே சுப்பு அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் அதை முடித்துவிட்டால், ...

[1978 ஜனவரி 9

திரு. க. சுப்பு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

(13) அரைமணி நேர விவாதம்.

(அ) தெளிப்பு முறைப் பாசனத் திட்டம் தொடர்ந்து செயல் படுத்துவது குறித்து.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், புகளூர் வட்டாரத்தில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதி சம்பந்தமான ஒரு குளறுபடியைப் பற்றித்தான் இன்றையதினம் பிரச்சினை உள்ளது. இது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தின் போது நடந்த இருக்கக் கூடிய தர்பாராக எனக்குத் தெரிந்தது. ஆனாலும் பைல் இன்றைய அரசாங்கத்திடம் வந்திருப்பதாலே இது சம்பந்தமான விளக்கம் அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த விஷயத்தை நான் கிளப்புகிறேன். புகளூரிலே "ஸ்பிரிங்களர்" நீர்ப் பாசனத் திட்டம்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் எனக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. ஒரு கோடியே 28 இலட்சம் செலவு செய்யப்பட்டபிறகு, அந்த ஸ்பிரிங்ளர் மேலே தொடர வேண்டுமா, வேண்டாமா என்று அறிவதற்காக ஒரு கமிட்டி போட்டு இருப்பதாகவும், அந்த ஆராய்ச்சி நடத்தப்படுவதாகவும், பதில் சொன்னார்கள்.

எனக்கு ஏன் அதிர்ச்சி ஏற்பட்டது என்று சொன்னால், ஒரு கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவு செய்த பின்னால் இந்த ஆராய்ச்சி ஏன்? வேண்டுமா வேண்டாமா என்று பார்ப்பதற்கு ஆரம்பிக்கிறபோதே யோசிக்கவில்லையா? ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்த பின்னால், இந்த சிஸ்டம் வேண்டுமா, வேண்டாமா? என்பதற்கு என்ன காரணம்? எவ்வளவு சீரியசான நிலைமை ஏற்பட்டது என்று நினைக்கும்போது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஆகவே, இதிலே ஒரு பிரச்சினை. அந்தத் திட்டத்தை, இனிமேல் தொடர வேண்டுமா, வேண்டாமா என்று சொன்னால், ஒரு கோடியே 28 இலட்சம் செலவு செய்தது என்ன ஆயிற்று? goes down the drain புகளூர் ஸ்பிரிங்ளிங் சிஸ்டத்திலே செலவிடப்பட்ட பணம், விவசாயிகள் வாங்கிய கடன் எல்லாம் மரெயினிலே போகப் போகிறது. எவ்வளவு சீரியசான பிரச்சினையாக இருக்கிறது. இதிலே 1968-ஆம் ஆண்டு

அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் புகளூர் காவிரி ஆற்றுப் பாசன பம்பிங் கூட்டுறவு சங்கம் என்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 11 யூனிட்டுகள் அது செயல்படும். அந்த 11 யூனிட்டு களில் அந்தத் திட்டம் செயல்பட்டு இருந்தால் 2,212 ஏக்கர் பயிரிடப்படும் என்பது அவர்களுடைய கணக்கு. அதற்கு 72 இலட்சம் ரூபாய் செலவாகும். அதன் மூலதனச் செலவும், அது செயல்படுவதற்கான செலவும் விவசாயிகள் கொடுக்க வேண்டுமென்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, அதற்கே விவசாயிகளிடமிருந்து எதிர்ப்பு வந்தது. இருந்தாலும் நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படி எதிர்ப்பு இருந்தாலும் அதை அனுமதித்து இருந்தால், அந்த ஸ்கீம் வொர்க் செய்து இருந்தால் அட்லீஸ்ட் அது 2,212 ஏக்கர் பாசனம் பெற்று இருக்கும். ஆனால் நடந்தது வேறு.

1969-ல் அன்றைய அரசு ஒரு குழு—போர்டை அமைத்தது. அதிலே எர்லியர் ஸ்கீம் ஸ்பான்சர் செய்தவர்களை விட்டுவிட்டு, அதை ஒரு சொசைடி நிறுவனமாகச் செய்து, அந்த போர்டை நியமனம் செய்தார்கள். தி ஹோல் போர்ட் ஈஸ் நாமினேடேட். அதனுடைய மெம்பர்கள் நாமினேட் செய்யப்பட்டவர்கள். அதனுடைய தலைவராக அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டார். ஏழு ஆண்டுக் காலத்திற்கு அந்த போர்டு இருந்தது. ஒரு ஆண்டல்ல, இரண்டாண்டு அல்ல, ஏழு ஆண்டுக் காலம் இருந்தது. தலைவரும் அப்படியே.

ஆனால் திடீரென்று 1972-ல் என்ன ஆயிற்று என்று சொன்னால், அரசு அந்த தெளிப்பான் முறையை, அதுவரையில் பம்பிங் சிஸ்டம் என்று இருந்ததை, திணித்தது. விவசாயிகள் அதை எதிர்த்தார்கள். எதிர்த்த உடனே ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அந்த சொசைட்டிகள் கலைக்கப்படும் என்று நிர்ப்பந்தம் செய்தார்கள். விவசாயிகள் மெமோராண்டம் கொடுத்து இருக்கிறார்கள், அதிலே சொல்லியிருக்கிறார்கள், படித்துப் பார்த்தேன். இந்த சொசைட்டி கலைக்கப்பட்டால் கொஞ்ச நஞ்சம் கிடைப்பதும் போய்விடும் என்று சொல்லி, அவர்கள் ஏற்க மறுத்த பின்னரும், அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்தார்கள். காரணம், ஸ்பிரிங்கின் சிஸ்டம் வந்தால் பயிரிடக் கூடிய நிலத்தினுடைய பாசனம் 7,000 ஏக்கர் வரும் என்று

[திரு. ரா. உமாநாத்] [1978 சனவரி 9

சொன்னார்கள். திட்டம் என்னவென்றால், 11 யூனிட்டுகளில் முதலில் 5 யூனிட்டுகள் முடிப்பது. அந்த வில்லேஜ்களுக்கு யூனிட் என்று பெயர். 5 யூனிட்டுகள் முதல் பேசில் முடிப்பது என்று முடிவு எடுத்தார்கள். இதிலே இரண்டாவது விஷயம், அந்த 5 யூனிட்டுகளுக்கான சிவில் வொர்க்ஸ் முடிவதற்கு முன்னதாகவே, அதற்கான கருவிகளை அவர்கள் ஹோல்சேலாக வாங்கிவிட்டார்கள். அதற்கான செலவு ரூபாய் 50 இலட்சம். மேலும், சிவில் ஓர்க்ஸ் முடியாததற்கு முன்னாலேயே, எல்லா யூனிட் சிவில் ஓர்க்ஸ்க்கும் பொருள்களை அட்வான்சாக வாங்கி முடித்துவிட்டார்கள். அதற்கான செலவு ரூபாய் 1,25,00,000.

கனம் அமைச்சர் சொன்னமாதிரி, இதன் அடிப்படையில் எத்தனை ஏக்கர் விவசாயத்திற்கு வந்து இருக்கிறது என்றால்— 11 யூனிட்டுகளில் 5 யூனிட் முதலில் கம்ப்ளீட் செய்வது என்று சொன்னாலும், அந்த 5-ல் மூன்று கம்ப்ளீட் செய்தார்கள். எத்தனை ஏக்கர் கவராகி இருக்கிறது என்றால் 7,000 ஏக்கர் அல்ல, 3,000 ஏக்கர் அல்ல. ஏறத்தாழ 2,000 ஏக்கர் கூட அல்ல, வெறும் 200 ஏக்கர்தான். 'இட் ஈஸ் எ டெரிபிள் திங்'. இந்த 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் வெறும் 200 ஏக்கர் பயன் அடைவதற்காகச் செலவழித்தது. இது ரொம்ப சீரியசான விஷயம். ஆகவே இந்த எட்டு ஆண்டுகளில் இந்த 200 ஏக்கர் கவராவது ரொம்ப வருந்தத்தக்கது. இந்தப் பிரச்னையில் என்னுடைய கோரிக்கை என்னவென்றால், இதிலே ஒரு என்கொயரி நான் டிமாண்ட் பண்ணுகிறேன். அந்த என்கொயரி, நீங்கள் இப்போது நடத்தும் என்கொயரியை விட வேறுபட்டது.

I distinguish it from the present enquiry.

அதனுடைய 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' நோக்கம் நான் தருகிறேன். அந்த ஸ்பரிங்களர் சிஸ்டம் தொடர வேண்டுமா வேண்டாமா என்பது மட்டும்தான் இப்போது நடந்து இருக்கும் என்கொயரி.

விவசாயிகள் அந்தத் திட்டம் நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று கூறியபோது, அதைக் கட்டாயமாக விவசாயிகளின் பேரில் திணித்தது யார்? விவசாயிகள் நடைமுறைப்படுத்த முடியாது என்று தெரிந்து சொல்கிறபோது, அது விவசாயத்

1978 சனவரி 9] [திரு. ரா. உமாநாத்]

துறையில் இருக்கும் டாப் அபிஷியல்ஸ். உயர்மட்ட அதிகாரிகளுக்கு தெரியவில்லையா? விவசாயிகளுக்குத் தெரிந்த ஒன்று, அரசுக்குத் தெரியவில்லையா? ஆகவே, ஒன்று அந்த விவசாயிகள் சாத்தியம் இல்லை என்று கூறிய பிறகும் அந்தத் திட்டத்தை அவர்கள்மீது அன்றைய அரசாங்கம் ஏன் திணித்தது? இரண்டாவதாக, அப்படி திணிப்பதற்கு என்ன காரணம், அவர்கள் அதை ஒப்புக்கொள்ளாவிட்டால் சொசைடியைக் கலைப்போம் என்று ஏன் மிரட்டினார்கள். மூன்றாவதாக, நாமினேடெட் போர்ட் ஏன் வைத்துக் கொண்டார்கள்? சொசைட்டி மெம்பர்கள் இருக்கும் போது ஏன் எலெக்ஷன் நடத்தவில்லை. ஏழு ஆண்டுகள் நாமினேட் போர்ட் எதற்காக நியமிக்கப்பட்டது. அதுவும் 7 ஆண்டுகாலம் தொடர்வதற்கு ஏன் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அந்த போர்டில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை அவர்கள் நாமினேஷன் செய்வதற்கான காரணம் என்ன?

சிவில் ஓர்க்ஸ் ஆரம்பிப்பதற்கு முன்னால் அட்வான்சாக 50 இலட்ச ரூபாய்க்கு ஹோல்சேலாக ஸ்டாக் வாங்கப்பட்டு அது ஐடிலாக கிடக்கிறது. இந்த மாதிரி பணம் இன்வெஸ்ட் செய்யக் காரணம் என்ன? எந்த நோக்கத்துடன் யார் இதைச் செய்தார்கள்? இதில் ஏதாவது ஊழல் நோக்கம் யாருக்காவது இருந்ததா?—இருந்தது என்று சொல்லவில்லை நான்—ஐ ஆம் ஆஸ்கிங் அன் என்குயரி ஆன் திஸ்.

இந்த மாதிரி செபரேட் என்குயரி கமிட்டி, இந்த டர்ம்ஸிலோ, இது தவிர மற்ற டர்ம்ஸ் கவர்மண்ட் சஜெஸ்ட் பண்ணினாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை—ஆக இந்த டர்ம்ஸ் உள்பட கமிட்டி அமைக்க வேண்டும். உடனடியாக விவசாயிகளுக்கு ரிலீப் தேவை. ஏனென்றால் இப்போது இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறார்கள். அதுவும் இல்லை, இதுவும் இல்லை. கமிட்டி தான் நடந்துகொண்டிருக்கிறது. இப்படியே இருந்தால் அவர்கள் விவசாயம் செய்ய வேண்டாமா? ஆகவே பம்பிங் சிஸ்டம் ஏற்கனவே இருப்பது இரண்டாயிரத்து சொச்சம், அதை உடனடியாக ரெஸ்யூம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒரு கோடியே இருபத்தைந்து இலட்ச ரூபாய், நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளியோ, அவர்களிடத்திலிருந்து இந்தப்

பணத்தை வசூல் செய்ய வேண்டும். "நாட் தி ஆர்டினரி புவர்-பர்சன்—ஜஸ்ட் பிகாஸ் தே ஆர் விக்டிம்ஸ்." உடனடியாக நிவாரணம் என்ன வேண்டுமென்று சொன்னால், பண வசதியும் இல்லாமல், விவசாயத்தையும் ஆரம்பிக்காமல் இருக்கிறபோது, அவர்களிடமிருந்து கடனையும், வட்டியையும் இப்போது வசூலிக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படி வசூலிப்பது என்ன நியாயம்? நீங்களே நியாயமில்லை என்று சொல்லுவீர்கள் என்று நம்புகிறேன். 'ஆப்டர் ஆல் தே ஆர் ஹ்யூமன் பீயிங்ஸ்' அவர்கள் அக்ரிகல்சரல் ஆபரேஷன் ஆரம்பிக்கவில்லை. அவர்களுக்கு இம்மீடியட் ரிலீப், உடனடியாக செய்ய வேண்டியது தண்ணீர் விஷயம். இரண்டாவது கடன் விஷயம். கடனை வசூல் செய்வதும் வட்டி வசூல் செய்வதும் அதற்கு ஜப்தி செய்வதும் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது அதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய வாழ்க்கை அழிந்துவிடும். தயவு செய்து என்குயரி கமிட்டி போட்டு, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை கிளியர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, புகளூர் கூட்டுறவு சங்கத்தைப் பற்றிய முழு விவரமும், தகவலும் எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னதை வைத்துக்கொண்டு சில கருத்துக்கள் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி தவறு இருக்கும் என்று கண்டு பிடிப்பீர்களேயானால், எந்த நடவடிக்கை எடுப்பதையும் நான் ஆட்சேபிக்க மாட்டேன். இதில் உள்ள ஒன்று, நாமினேடெட் போர்டு என்று சொன்னார்கள். எந்த ஒரு கூட்டுறவு சங்கத்தையும் புதிதாக ஆரம்பித்தால், அதற்கு அரசாங்கம் முதலில் நாமினேடெட் போர்டு போடுவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்படி செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எப்போதும் எந்த ஒரு கூட்டுறவு சங்கமோ, வீட்டு அடமான பாங்கோ, நில அடமான பாங்கோ புதிதாக ஏற்படுத்தும்போது நாமினேடெட் போர்டு போடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த மாதிரி செய்திருக்கக்கூடும்.

திரு. ரா. உமாநாத்: ஏற்கனவே போர்டு இருந்தது ஸ்பான்சார்ஸ் உள்பட. அதைக் கலைத்துவிட்டார்கள். அதுவும் 'ஆப்டர் செவன் இயர்ஸ்'.

திரு. ப. உ. சண்முகம்: ஸ்பிரிங்கிளர் இர்ரிகேஷனைப் பற்றி எனக்கு அனுபவம் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் செங்கோடன் இருக்கிறார்கள், சேலம் மாவட்டத்தில். மொடக்குறிச்சி பகுதியில் சகோதரி சுப்புலட்சுமி இருக்கிறார்கள். அங்கெல்லாம் என்ன நடக்கிறது என்று தெரியும். வெளிப்படையாக பேச முடியாது. ஏனென்றால் காவேரிப் பிரச்னை இதில் அடங்கியிருக்கிறது. வேறு சில பேர் ஸ்பிரிங்கிளர் இர்ரிகேஷன் வைத்துக் கொண்டு, கூட்டுறவு சங்கம் என்று வைத்துக்கொண்டு ஒருவர் இருந்தார். அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் காலமாகி விட்டார். கூட்டுறவு சங்கத்திற்கு பணத்தை வசூலிக்கிறேன் என்று 13 இலட்ச ரூபாய் பணத்தை வசூலித்து, தண்ணீர் கொடுக்கிறேன் என்று சொல்லி, பம்பிங் ஸ்கீம் மூலமாக கொண்டு வருகிறேன் என்று சொல்லி, அந்தப் பணத்தையும் அரசாங்கத்திடம் கட்டாமல், ஒன்றும் செய்யாமல் என்னிடத்தில் அனுமதிக்காக வந்தபோது—நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது வந்தபோது—இப்படி பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரிய வந்தது. உடனே சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டதற்கு, ஆமாம், வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னவுடன், அனுமதி மறுக்கப்பட்டு, அதன் காரணமாக பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. இப்படி சில தவறுகள், சில பேர் செய்கிறார்கள் என்று ஏற்பட்டவுடன், அரசாங்கமே பம்பிங் ஸ்கீம், ஸ்பிரிங்கிளர் இர்ரிகேஷன் வைத்து தண்ணீரைக் குறைவாகப் பயன்படுத்தி விவசாயத்திற்கு பயன்படுத்த முடியுமா என்று யோசனை செய்ததுதான் எனக்குத் தெரியும். அதற்கு மேல் புகளூர் சொசைட்டியைப்பற்றித் தெரியாது. இதில் என்ன தவறு நடந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னார்கள். 50 இலட்ச ரூபாய்க்கு சாமான் வாங்கி வைத்தார்கள் சிவில் ஒர்க்ஸ் முடிவதற்குள் என்று சொன்னார்கள். அப்படி வாங்கி வைத்திருந்தால், அந்த சாமான்கள் இப்போதும் இருக்கும். ஐடிலாக இருந்தால் வட்டி நஷ்டமாகப் போகும். ஆனால் சாமான்களின் விலை ஏறியிருப்பதால், அந்த நஷ்டமும் சரியாகப் போய்விடும் என்று நினைக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] 1978 ஜனவரி 9]

விவசாயிகள் வட்டி கட்டத் தேவையில்லை. சொசைட்டியையே லிக்விடேட் செய்து விடலாம். அப்படி லிக்விடேட் செய்யும்போது வருகிற நஷ்டத்தைப்பற்றி அரசாங்கமே முடிவு செய்து கொள்ளலாம். தவறுகள் நடந்திருந்தால் அதைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஸ்ப்ரிங்கிளர் இரிகேஷன் டம்பிங் ஸ்கீம் இவற்றைப்பற்றி டீட்டெயிலாகப் பேசி தமிழ் நாட்டை அது பாதிக்கக்கூடாது என்பதால் இடையில் இதைச் சொல்லி அமர்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறிய இத்திட்டத்தில் பரிபூர்ணமாக அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஸ்ப்ரிங்க்ளர் முறையில் இந்தத் திட்டம் 1962-ல் நம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம். இதுபற்றி உமாநாத் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்போது இத்திட்டம் சரியாக இருக்கிறதா என்று பரிசீலிக்க குழு போட்டிருப்பதை வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை அமலாக்கும்போது அவர்கள் இதுவரை செலவு செய்திருக்கக்கூடிய தொகை அந்த விவசாயிகளின் நிலத்தின் மதிப்பை விட அதிகமாக ஆகிவிட்டது, அந்த அளவிற்கு இத்திட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதுபோல் ஸ்ப்ரிங்க்ளர் சிஸ்டத்திற்கும் கூட்டுறவு நீர்ப்பாசனத் திட்ட சொசைட்டிக்கும் சம்பந்தமே கிடையாது. சேலம் மாவட்டத்தில் போட்ட திட்டத்திற்கும் இங்கு அமைக்கப்பட்டிருக்கும் திட்டத்திற்கும் மாறுபட்ட காரியங்கள் பல இருக்கின்றன. அவர்கள் பேசும்போது இப்போதா ஹைலெவல் கமிட்டி போட்டிருப்பதாக, அதை மாற்றியமைக்க திட்டம் வகுத்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதை விரைவில் செய்தது அவர்கள் கூறியதுபோல், அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பளுவின் காரணமாக, அத்திட்டத்தின் அடிப்படையில் இன்று மூன்று திட்டங்கள்தான் செயல்படுகின்றன. மீதம் உள்ள எட்டு திட்டங்களையும் அமல்படுத்தி அவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய உரிமை பாதிக்காத அளவில் அந்த விவசாயிகள் செய்திருக்கக்கூடிய முதலீட்டிற்கு

1978 ஜனவரி 9] [திரு. செ. சதாசிவம்]

அத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தெளிப்பான் முறையில் ஏற்பட்டிருக்கிற பல்வேறு சிக்கல்கள் பற்றி இந்த அவையில் விவாதத்திற்கு கொண்டு வந்தற்காக அவருக்கு நான் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், அதேபோல் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் சதாசிவம் அவர்களும் அரிய கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லியுள்ள கருத்துக்கள் அநேகவற்றை நான் இப்போது மறுக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிற நேரத்தில் ஏற்கனவே இதுபற்றிய பல்வேறு பரிசீலனைகள் அதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. பொறுப்பு வாய்ந்தவர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகித்து இந்தத் திட்டம் இதுவரையில் ஏறத்தாழ 125 இலட்ச ரூபாய் இதற்காக செலவழிக்கப் பட்டாலும்கூட ஆரம்பத்தில் திட்டமிட்டபோது திட்டமிட்டதின் நோக்கத்தின் ஒரு பகுதியைக்கூட இது அடையவில்லை என்ற உண்மையை இந்த அவையில் இந்த நேரத்தில் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

ஆனால் ஆரம்பத்தில் ஒரு நல்ல நோக்கோடு இதை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட முறைகள் எல்லாம் ஜப்பான் நாட்டில் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு இவை அங்கிருக்கிற விவசாயிகளால் வரவேற்கப்படுகிற சூழ்நிலையில் ஜப்பான் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானில் ஏற்பட்டிருப்பதைப்போல் இந்த நாட்டிலும் நாம் ஏன் செயல்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தில்தான் அவர்கள் அதை ஆரம்பித்திருந்தாலும் திட்டம் ஒழுங்கான முறையில் பரிசீலனை செய்யப்படாத காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை இன்றையதினம் இவ்வளவு

[திரு. ப. உ. சண்முகம்] 1978 ஜனவரி 9]

விவசாயிகள் வட்டி கட்டத் தேவையில்லை. சொசைட்டிகளிலேயே ரிக்விடேட் செய்து விடலாம். அப்படி லிக்விடேட் செய்யும் போது வருகிற நஷ்டத்தைப்பற்றி அரசாங்கமே முடிவு செய்து கொள்ளலாம். தவறுகள் நடந்திருந்தால் அதைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஸ்ப்ரிங்கிளர் இரிகேஷன் பம்பிங் ஸ்கீம் இவற்றைப்பற்றி டீட்டெயிலாகப் பேசி தமிழ் நாட்டை அது பாதிக்கக்கூடாது என்பதால் இடையில் இதைச் சொல்லி அமர்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறிய இத்திட்டத்தில் பரிபூர்ணமாக அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஸ்ப்ரிங்க்ளர் முறையில் இந்தத் திட்டம் 1962-ல் நம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம். இதுபற்றி உமாநாத் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்போது இத்திட்டம் சரியாக இருக்கிறதா என்று பரிசீலிக்க குழு போட்டிருப்பதை வரவேற்கிறேன். அந்தத் திட்டத்தை அமலாக்கும்போது அவர்கள் இதுவரை செலவு செய்திருக்கக்கூடிய தொகை அந்த விவசாயிகளின் நிலத்தின் மதிப்பை விட அதிகமாக ஆகிவிட்டது, அந்த அளவிற்கு இத்திட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதுபோல் ஸ்ப்ரிங்க்ளர் சிஸ்டத்திற்கும் கூட்டுறவு நீர்ப்பாசனத் திட்ட சொசைட்டிக்கும் சம்பந்தமே கிடையாது. சேலம் மாவட்டத்தில் போட்ட திட்டத்திற்கும் இங்கு அமைக்கப்பட்டிருக்கும் திட்டத்திற்கும் மாறுபட்ட காரியங்கள் பல இருக்கின்றன. அவர்கள் பேசும் போது இப்போது ஹைலெவல் கமிட்டி போட்டிருப்பதாக, அதை மாற்றியமைக்க திட்டம் வகுத்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதை விரைவில் செய்தால் அவர்கள் கூறியதுபோல், அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பளுவின் காரணமாக, அத்திட்டத்தின் அடிப்படையில் இன்று மூன்று திட்டங்கள்தான் செயல்படுகின்றன. மீதம் உள்ள எட்டு திட்டங்களையும் அமல்படுத்தி அவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய உரிமை பாதிக்காத அளவில் அந்த விவசாயிகள் செய்திருக்கக்கூடிய முதலீட்டிற்கு

1978 ஜனவரி 9] [திரு. செ. சதாசிவம்]

அத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தெளிப்பான் முறையில் ஏற்பட்டிருக்கிற பல்வேறு சிக்கல்கள் பற்றி இந்த அவையில் விவாதத்திற்கு கொண்டு வந்தற்காக அவருக்கு நான் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், அதேபோல் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் சதாசிவம் அவர்களும் அரிய கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லியுள்ள கருத்துக்கள் அநேகவற்றை நான் இப்போது மறுக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிற நேரத்தில் ஏற்கனவே இதுபற்றிய பல்வேறு பரிசீலனைகள் அதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. பொறுப்பு வாய்ந்தவர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகித்து இந்தத் திட்டம் இதுவரையில் ஏறத்தாழ 125 இலட்ச ரூபாய் இதற்காக செலவழிக்கப் பட்டாலும்கூட ஆரம்பத்தில் திட்டமிட்டபோது திட்டமிட்டதின் நோக்கத்தின் ஒரு பகுதியைக்கூட இது அடையவில்லை என்ற உண்மையை இந்த அவையில் இந்த நேரத்தில் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

ஆனால் ஆரம்பத்தில் ஒரு நல்ல நோக்கோடு இதை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட முறைகள் எல்லாம் ஜப்பான் நாட்டில் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு இவை அங்கிருக்கிற விவசாயிகளால் வரவேற்கப்படுகிற சூழ்நிலையில் ஜப்பான் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஜப்பானில் ஏற்பட்டிருப்பதைப்போல் இந்த நாட்டிலும் நாம் ஏன் செயல்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தில்தான் அவர்கள் அதை ஆரம்பித்திருந்தாலும் திட்டம் ஒழுங்கான முறையில் பரிசீலனை செய்யப்படாத காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை இன்றையதினம் இவ்வளவு

தொகை செலவழிக்கப்பட்ட பின்னால் அப்பகுதியில் இருக்கிற விவசாயிகள், யார் பயன் அடைய வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்களோ அந்த விவசாயிகள் இன்றைய தினம் இந்தத் திட்டத்திற்கு ஆதரவாக இல்லை.

[மாலை 6-30]

ஆகையினால் அவர்கள் எதிர்க்கின்ற காரணத்தினால் இன்றைய தினம் இத்தனை இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்ட பிறகு இதை தொடர்ந்து நடத்துவதா, அல்லது இதில் ஒரு முடிவு எடுத்து இதை விட்டுவிட்டு வேறு முறையை கையாளலாமா என்பதை பரிசீலனை செய்து தன்னுடைய அறிக்கையைத் தர வேண்டும் என்று ஒரு குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

அந்தக் குழு தங்களுடைய அறிக்கையை ஒரு வார காலத்திற்குள் அரசாங்கத்திற்கு அனுப்ப இருக்கிறது, அதை அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அறிக்கை வருகின்ற நேரத்தில் குழு என்ன ஆலோசனை தருகிறதோ அதன் அடிப்படையில் அரசு செயல்படும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், மாண்புமிகு உமாநாத் அவர்கள் முக்கியமான பிரச்னை, சிக்கலான பிரச்னை ஒன்றையும் சொன்னார்கள். 125 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டும், விவசாயிகளுக்கு பலன் இல்லாத திட்டமாக இருக்கிறது. இதற்காக விவசாயிகளுடைய தலையில் கை வைக்கக் கூடாது என்று சொன்ன நேரத்தில், இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதாவது ஊழல் ஏற்பட்டிருக்கிறதா என்கிற ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள்.

அக்கிரமமல்ல, அரசு சார்பில் செலவழிக்கப்பட்ட 125 லட்சத்தையும் யாரிடமிருந்து வசூலிப்பது? அந்தத் திட்டத்தைக் கீழ் நிலையில் ஈடுபட்டவர்களின் தலையில் கட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு உமாநாத் அவர்கள் தங்களுடைய கருத்தை சொல்லியிருக்கிறார்கள். என்ன முடிவை இதற்காக நியமிக்கப்பட்ட குழு எடுக்கிறதோ அதைப் பொறுத்துத்தான்

நடவடிக்கை எடுக்க முடியும். இந்தக் குழுவின் அறிக்கையில் இந்தத் திட்டம் ஒத்துக் கொள்ளக் கூடிய திட்டம் என்றோ அல்லது இந்தத் திட்டத்தினால் அறவே எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை, ஆரம்பத்திலேயே இதை நழுவவிட்டிருக்கலாம் என்று ஒருவேளை அறிக்கையில் கொடுத்தால் ஒருவேளை உங்களுடைய ஆலோசனையின்படி, அதாவது அவற்றை மேற்கொண்டு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்பதையும், அதன்பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டிவருமா என்பதையும் அப்போதுதான் தெரிவிக்க இயலும்.

இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்வதற்கில்லை, அதைப்பற்றி எதுவும் இப்போது சொல்வதற்கு அரசு தயாராக இல்லை. குழு தன்னுடைய அறிக்கையை கொடுக்கும் போது, அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவிக்கும் என்பதை மட்டும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நியாயவிலைக் கடைகளில் மட்டரக அரிசியே தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருவது குறித்தும்: குடும்பப் பங்கீடு அட்டைகளுக்கு விநியோகம் செய்யப்படும் அரிசியின் விலை அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக உள்ளது குறித்தும்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் இந்த விவாதத்தை துவக்கி வைப்பார்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாற்றமான அரிசி சம்பந்தமான கேள்வியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள். அவர் என்னென்ன நடவடிக்கைகளை எடுப்போம் என்றும், நாற்றமுள்ள அரிசி ஜனங்களுக்கு வாராத நிலையில் நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை சீர்திருந்தவில்லை. அப்படியே தான் இருக்கிறது. இதை நான் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். 9—8—1977-ல் உங்களுடைய கிராண்ட் விவாதத்தின் போது இந்தப் பிரச்னை வந்தது. அப்போது நமது அமைச்சர் அவர்கள் விரிவாக இரண்டு, மூன்று பாரகிராப்—ப்ரொஸீடிங்ஸ்

[திரு. ரா. உமாநாத்] [1978 சனவரி 9

சைப்பார்த்தால் நல்லா தெரியும்—விரிவாக இதை தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம், அதற்கு என்னென்ன உத்தரவுகள் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் அன்றைக்கு கேள்வி வந்தபோது சொல்லியிருக்கிறார்கள். இதற்கான டிமான்ட்ஸ் ஆப் கிரான்ட்ஸ் வந்தபோது விரிவாக இரண்டு இடத்தில் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்....
"மோசமான அரிசியோ அல்லது தரக்குறைவான அரிசியோ கிடைக்க இனி இடம் இருக்காது என்பதை கனம் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் ...." இது பாசிட்டிவ் ஸ்டேட்மெண்ட். . . .

இதைப்பற்றி பின்னால் பேசும்போது.. "உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. . . . ." என்றெல்லாம் கூறிவிட்டு, "அந்த அடிப்படையில் இப்போர்ப்பட்ட தவறுகள் இந்த அரசில் நடைபெறாது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" . . . " இது பாசிட்டிவ் கமிட்மெண்ட். . . இது நடந்து ஐந்து மாதங்கள் ஆகிவிட்டது, ஆனால் இந்த ஐந்து மாதங்களுக்குப் பிறகும் இன்றைக்கு நாம் எங்கே நிற்கிறோம்? அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி சீரியசாக யோசித்து ஏதாவது செய்ய வேண்டும்.

5 மாதங்களுக்குப் பிறகு, திருச்சியிலே இந்த அரிசியைச் சாப்பிட்ட பெண்கள் எனக்கு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் நான்கைந்து பாயின்ட்கள் சொல்லியிருக்கிறார்கள். நாற்றமாக உள்ளது, அதைச் சூபர்-பைன் அரிசி என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள், சோறு கொதிக்கும் போது மூக்கைப் பொத்திக் கொள்ள வேண்டும், பெண்கள் எழுதியதைத்தான் நான் சொல்கிறேனே தவிர, நான் சொல்லவில்லை. பிறகு, அப்படிச் சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவினாலும் அப்படியே நாற்றம், இட்டிலி, தோசைக்கும் அது பிரயோஜனப் படுவதில்லை என்றெல்லாம் அந்தப் பெண்கள் பெடிஷனிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சாப்பிட்டுவிட்டு, இதைச்

1978 சனவரி 9] [திரு. ரா. உமாநாத்]

சொல்கிறேன் என்ற நோக்கத்தோடு இதை நான் சொல்லவில்லை. பெண்களிடமிருந்து பெடிஷன் வந்திருக்கிறது; அதைத்தான் சொல்கிறேன்.

அடுத்து, எனக்கு இதிலே ஒரு நேரடியான அனுபவம் ஏற்பட்டது. நாகப்பட்டினம் புயலின்போது, அங்கே 'குருயல் சென்டர்' களிலே அரிசி விநியோகிக்கப்பட்டது. அந்த குருயல் சென்டர்களுக்கு நானும், தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்களும் சென்றிருந்தோம். அங்கு என்ன அரிசி சாப்பாட்டிற்காக விநியோகிக்கப்படுகின்றது என்பதைப் பார்த்தபோது, சொத்தை அரிசி, மிகவும் படுமோசமான அரிசி உபயோகிக்கப்பட்டதைப் பார்த்தேன். சரியான தமிழ் வார்த்தை எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சொத்தை அரிசியை அங்கே விநியோகிக்கிறார்கள் என்று அங்குள்ள மக்கள் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புளுத்துப்போன அரிசி.

திரு. ரா. உமாநாத்: ஆம். புளுத்துப்போன அரிசி. இதைப் பார்த்துக்கொண்டு, மக்கள் திட்டுவதைக் கேட்டுக்கொண்டிருந்த நேரத்திலேதான், திரு. ராகவானந்தம் அவர்களும் வந்து இறங்கினார். அவர் உள்ளே சென்று பார்த்தபோது, அங்கே இந்த மாதிரியான அரிசியும் நிறைய இருந்தது, அதோடு நல்ல அரிசியும் நிறைய இருந்தது. இந்த இரண்டையும் பார்த்தவுடனே, அவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டபோது, அவர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டு தான் இப்படி இந்த இரண்டு அரிசிகளையும் கலந்து போடும்படி சொன்னார்கள் என்று குறிப்பிட்டார்கள். உடனே அமைச்சர் அவர்கள் அந்த ஸ்டாக்கை அப்புறப்படுத்தும்படி உத்தரவிட்டார்கள். இப்படி இலவசமாக அங்குள்ள மக்களுக்கு போடப்பட்ட உணவு அரிசியின் தரம் இருந்தது. உடனே, அந்த அரிசியை ரி-லீஸ் பண்ணுங்கள் என்று உத்தரவிட்டார். 'ஓர்ஸ்ட் அபெக்டட் பீபுளுக்கு', இப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரிசியைப் போட்டார்கள் என்றால்,

மற்றவர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நீங்களே புரிந்து கொள்ளலாம். There is something serious about this.

தவிர, இந்த அரசியின் விலை கிலோ ரூ. 1-60, ரூ. 1-80 என்று கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக, திருச்சியிலே கிலோ ரூபாய் 2-00 என்றுதான் அரிசி கொடுக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் செய்தார்கள் என்று சொன்னாலாவது பரவாயில்லை, இந்தக் கூட்டுறவு இலாகாவே இப்படிச் செய்கிறார்கள். அங்குள்ள சூப்பர் மார்க்கெட்டிலே இப்படிச் செய்கிறார்கள். You will have to go down with heavy hand on them. அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்றால், வெளியிலே இருந்து அரிசியை வாங்குகின்றார்கள். வெளியிலே உள்ள வியாபாரிகளிடம் உள்ள அரிசியை வாங்கி, இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளிலே பேர்-பிரைஸ் அரிசி என்று சொல்லி, அந்த மூட்டைகளை இங்கே விற்கின்றார்கள். இந்த அரிசியை அங்குள்ள மக்கள் கால்கடுக்க நின்று வாங்குகின்றார்கள். அதிலும் இந்த அரிசியை கிலோ ரூபாய் 2 என்று போடுகின்றார்கள். இந்த மாதிரியான ஒரு விஷயம் அங்கே நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

இப்படி ஜனங்களிடமே கமிஷன் வாங்கக்கூடிய நிலைமை அங்கே இருக்கிறது. எனவே, அங்கேயிருந்த மாதர் சங்க தூது கோஷ்டி கலெக்டரிடம் நேரில் போய், இப்படி அரிசி ரூ. -.60, ரூ. 1.80 என்றிருக்கும்போது, இங்கே மட்டும் ரூபாய் 2-க்கு அரிசி விற்கப்படுகின்றதே, அதுவும் இந்தமாதிரியான அரிசி என்று கேட்டார்கள். உடனே, கலெக்டர் அவர்கள் அங்குள்ள டி.எஸ்.ஓ-வைக் கூப்பிட்டு, என்னையா இது என்று கேட்டார்கள். அதற்கு அவர், அங்கே சூப்பர்-பைன் அரிசி போடப்படுகின்றது என்று சொன்னார். இதுவா அந்த சூப்பர்-பைன் அரிசி என்று அவர்கள் கொண்டு வந்த பொட்டலத்தைக் காட்டினார். உடனே அந்த டி.எஸ்.ஓ. பத்மாசினி டாக்கீசுக்கு அருகாமையில் உள்ள அந்த சூப்பர் மார்க்கெட்டுக்குப் போய் பார்த்தபோது, இந்த மாதிரியான அரிசியை அங்கே விற்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்களை வார்ன் பண்ணினார். அது டிபார்ட்மெண்டின்

(மாலை 6-40)

ஐந்து கூட்டுறவு சூப்பர் மார்க்கட்டில் அவ்வாறு பிடிக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் ஐந்து மாதத்திற்கு முன்னால் போட்டிருக்கும் உத்தரவுக்குப் பிறகும் கூட இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று சொன்னால்—நீங்கள் சில விளக்கங்களைச் சொன்னீர்கள் அல்லவா? உலருவது என்ற அந்தப் பிரச்சினை அல்ல—சீரியசான பிரச்சினை; இந்தக் கடைகளும் கூட்டுறவுகளும் சேர்ந்து இன்றைக்கு நான் சொன்னால் கோபித்துக் கொள்ளக்கூடாது—அது ஊழலின் கூடாரமாக மாறியிருக்கிறது. You re-organise it. I want you to re-organise it. சில வியாபாரிகள், ஊழியர்கள், அதிகாரிகள் சேர்ந்து இது நடைபெறுகிறது. திருச்சி ஹெட்குவார்ட்டர்சில்—டவுனில் நடைபெற்றிருக்கிறது. The co-operative senior officials are there. The Officers are there to check up. What are the Officials doing there? அந்த ஸ்டாஃப் செக் பண்ணப் போகவேண்டுமென்று சொன்னீர்கள். what are they doing? சில அதிகாரிகளும், சிப்பந்திகளும், வியாபாரிகளும் சேர்ந்து அந்த மாதிரி நடத்துகிறார்கள். வேண்டுமென்றே நாற்றமான அரிசி. விலை அதிகமான அரிசி, எடை குறைந்த அரிசி மலிவு விலைக் கடைகளில் விற்கப்படுகிறது.

இந்த ஊழல் கூட்டை உடைக்காமல், இதை உடைக்க நடவடிக்கை எடுக்காமல், இந்தக் கூடாரங்களை—சொசைடிகளை அல்ல—உடைக்க நடவடிக்கை எடுக்காமல், கூட்டுறவு அமைப்பைத் திருத்தி அமைக்காமல், ரி-ஆர்கனைஸ் பண்ணாமல் இதைச் சீர்திருத்த முடியாது. It should be free from corruption. அதைச் செய்யாமல் எந்த நடவடிக்கைகளை எடுத்தாலும் அது அமல் நடக்காது. It will continue. அன்றைக்கே சொன்னேன். It is for you to do it. இந்த பாக் கிரவுண்டை உணர்ந்து ஜனங்களுக்கு நல்ல அரிசி கொடுக்க, ரூ. 1.60, ரூ. 1.80 'வாட்டெவர் இட் இஸ்'—என்ன செய்யலாம் என்று யோசித்துச் சொல்லுங்கள் என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன். That is all I want.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன் இதே அவையில் அமைச்சரிடத்தில் நான் ஒரு உப கேள்வி கேட்ட நேரத்தில் இந்த நாற்றம் பிடித்த அரிசி குறைந்த விலைக்குக் கூட இல்லாமல் அதிக விலைக்குக் கொடுக்கப்படுகிறதே, இதற்கு என்ன காரணம், இதை அரசு கண்டு பிடித்து மாற்ற வேண்டும் என்று சொன்னேன். இந்த அரிசியின் தரத்தைக் குறைப்பதில் அரிசி ஆலைகளில் இருக்கும் ஆலைச் சொந்தக்காரர்கள் அரிசியின் எடை அதிகமாக ஆகவேண்டும், அரிசியின் அவுட் டர்ன் அதிகமாக வேண்டுமென்பதற்காக நெல்லை ஊறப்போடுவது, அரவை செய்து ஆகியவற்றில் எல்லாம் சில முறைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்கிற முறைகள் நிச்சயமாக இந்த அரிசியின் தரத்தைக் கெடுத்து விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும்.

அங்கே கொடுக்கப்படுவது சூப்பர் ஃபைன் அரிசி என்று சொல்லுகிறார்கள். அந்த அரிசி ஃபைன் அரிசியே இல்லை. தரம் கெட்டு வந்த அரிசி. அதை மனிதன் சாப்பிட முடியாது என்பது மட்டுமல்ல; இன்னொரு விஷயத்தையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் சொன்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அந்த நாற்றம் பிடித்த அரிசியைக் குடும்பங்களில் இருக்கும் பெரியவர்கள், வாங்க சக்தியற்றவர்கள், சம்பாத்தியம் அதிகம் இல்லாத பெரியவர்கள் எப்படியோ சாப்பிட்டு விடுகிறார்கள். ஆனால் குழந்தைகள் சாப்பிட மறுக்கிறார்கள். அதைக் குழந்தைகள் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் வருகின்றன. பெண்களும் வருத்தப்படுகிறார்கள். அந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அரிசி வியாபாரிகளும், அரிசி ஆலைச் சொந்தக்காரர்களும்—ஒரு கூடாரம் என்று சொன்னார்களே—அது போன்று ஒரு கூடாரமாகச் சேர்ந்து இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனுடைய ஓரிஜினேட்டர்கள் அரிசி ஆலையிலிருந்துதான் புறப்படுகிறார்கள். ஆகவே, அந்த அரிசி ஆலைகளிலே கடுமையான கண்காணிப்புச் செய்து தரக் குறைவு வந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்பதுபற்றி அரசு பரிசீலித்துப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறிய கருத்துக்களை நான் அப்படியே ஒப்புக்கொண்டு எனது அனுபவத்திலே கண்டறிந்த சில உண்மைகளை இந்த மன்றத்திலே கூறலாமென்று ஆசைப்படுகிறேன். கூட்டுறவு சங்கத்தின் வழியாக அரசாங்கம் மக்களுக்கு அரிசியை விநியோகம் செய்கிறது.

மோட்டா ரகம், பைன் வெரைட்டி என்றெல்லாம் சொல்லி அவ்வப்போது கொடுக்கிறார்கள். உணவுக் கார்ப்பரேஷன் வழியாக விற்பனையாகிற அரிசியைப் பொதுமக்கள் கையிலே தரும்போது கூட்டுறவு சங்கங்கள்தான் அதை விற்பனை செய்கிறது. அந்த மூட்டையைப் பிரித்துப் பார்க்கிற போதுதான் அந்த அரிசியின் உண்மையான நிலையை அறிய முடிகிறது. ஆகவே கீழ்நிலையிலே அரிசி பாழாக்கப்படவில்லை. மூட்டையைப் பிரித்துப் பார்க்கிறபோதுதான் அரிசியின் தரம் குறைந்ததாக. கல், மண் கலந்ததாக, எங்கள் பக்கத்தில் சொல்வதைப்போல் ஆட்டாம் புழுக்கை கலந்ததாக இருக்கிறது.

எல்லாவற்றையும் மொத்தமாக அப்படியே கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அரிசி எங்கே உற்பத்தியாகிறதோ ஆலைகளிலே எடை போடுகிறபோது தவிடு, உமி எல்லாம் போக, 6 மாதம் கோடவுனில் வைத்தால் அது சாம்பலாகத்தான் போகும், அந்த அரிசியைத்தான் மக்களுக்குக் கொடுக்கிறோம்.

இப்படி இல்லாமல் உற்பத்தி செய்கிற இடத்திலேயே தரமான அரிசியைப் பெறுவதற்கு நல்ல முறையிலே சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். அந்த வேலையை அரசாங்க அதிகாரிகளிடத்திலே கொடுக்கிறோம். அரசாங்க அதிகாரிகள் என்ன செய்கிறபோது 6 மாதம் இருக்கிறார்கள், 1 வருடம், 2 வருடம் இருக்கிறார்கள். அதற்குப் பிறகு மாறிவிடுகிறார்கள். இதன் காரணமாக தொடர்ந்து அந்த வேலையை அவர்கள் கையில் கொடுக்க முடியாது.

அரசாங்க அதிகாரிகளை எல்லாம் வியாபாரிகளாக மாற்றினால் சிக்கல்கள் ஏற்படும். அதற்குத் தனியாக அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுத்து நிரந்தரமாக அவர்களை பணியாற்றச் செய்யலாம். அப்படிச் செய்தால் அவர்கள் கண்காணித்து நல்ல முறையில் கொடுக்கமுடியும்.

100 கிலோ நீங்கள் கொடுத்தீர்கள் என்றால் வாங்கும்போது 100 கிலோ இருப்பதில்லை. மேல் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையில் ஊழல் நடக்கிறது. அரசாங்கத் துறையில் வெய்ட்ஸ் அன்ட் மெஷர்ஸ் இன்ஸ்பெக்டர்கள் போட்டிருக்கிறோம். அவர்கள் கீழ் மட்டத்திலேதான் போய்ப் பார்க்கிறார்கள், மேலே பார்க்கவில்லை. அவர்கள் வரக்கூடாது என்று சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் சத்தம் போட்ட பிறகு போனார்கள், மேல்மட்டத்திலே ஆர்.டி.ஓ. லெவலில் இருக்கிறவர்கள் தான் அதிகாரிகளாக இருக்கிறார்கள். வெய்ட்ஸ் அன்ட் மெஷர்ஸ் அங்கே போய்ப் பார்ப்பது கஷ்டம். காரணம் இவர்கள் கீழ்நிலையிலே உள்ளவர்கள். இதையெல்லாம் செய்வது சிரமம் தான். அதை மாற்றியமைத்து அட்மினிஸ்ட்ரேட்டிவ் மெஷினரியையும் மாற்றியமைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் மக்களுக்கு அரிசி விநியோகம் செய்வதற்கு நியாய விலைக்கடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் நியாயவிலைக் கடைகளிலே வேலை செய்கிறவர்கள் செய்கிற தவறுகள் அரசுக்கு கெட்ட பெயரை உருவாக்கிவிடுகிறது. குறிப்பாக, எடையைப் பற்றி இங்கே சொன்னார்கள். எடையை உற்பத்திசெய்வது தனிப்பட்டவர்களிடத்தில் கொடுக்கப்பட்டு அரசாங்கத்திலே உள்ள ஸ்டாம்ப் போடுகிறவர்களின் உதவியோடு குறைவான எடைக்கு முத்திரை போட்டுத் தரக்கூடிய நிலைமை இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்திலே ஆற்காடு பகுதியில் வியாபாரிகள் வைத்திருக்கிற எடைகளைப்பற்றி மாவட்ட அளவிலே இருக்கின்ற அதிகாரிகளிடம் ரிப்போர்ட் செய்தார்கள். மாவட்ட அள

(மாலை 6-50)

விலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்தபொழுது அவர்கள் ஒருசில இடங்களை சோதனை செய்து எடைகளை எடுத்துப்

பரிசீலித்துப் பார்க்கின்றபொழுது கொடுத்திருக்கின்ற ஸ்டாம்புக்கும், ஆக்சுவல் எடைக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, அரசே எடைகளை உற்பத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்குரிய ஸ்டாம்பையும் செய்வதன் மூலம் சரியான எடை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே அந்த ஊழியர்களின்மீது, எடை குறைந்து விட்டது என்று சார்சார்ஜ் போடுகிறார்கள். சில நேரத்தில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அப்படி நடவடிக்கை எடுப்பது என்பது குறிப்பாக 150 ரூபாய் 200 ரூபாய் என்று மாதத்திற்கு சம்பளம் கொடுத்து விட்டு அவர்களை வேலைக்கு வைக்கிறார்கள், அதிலே மேல் மட்ட அதிகாரிகள், சேல்ஸ்மேன் என்று இருக்கிறார்களே அவர்களை எடுபிடி ஆட்களாக வைத்துக்கொண்டு, ஒப்படைக்கப்படுகின்ற மொத்த எடை அளவினை அந்த அதிகாரிகள் ஏதோ செய்து விடுகிறார்கள்.

ஆனால் பிறகு அங்கே இருக்கின்ற சேல்ஸ்மேன் தலையிலே இரண்டாயிரம் மூவாயிரம் என்று அமௌண்ட் பாஸ் செய்து, நிரந்தரமாகவே வேலையைவிட்டு அவர்களைத் துரத்துகின்ற அளவிற்கு நிலைமைகள் ஏற்படுகின்றன. அவர்கள் நான்கு மாதங்கள் வேலை செய்திருந்தால், மாதத்திற்கு 200 ரூபாய் சம்பளம் வீதம் நான்கு மாதங்களுக்கு 800 ரூபாய் வாங்கினால், எடை குறைந்துவிட்டது என்று சொல்லி, 4,000 ரூபாய் 5,000 ரூபாய் என்று வசூல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, வேலையைவிட்டுக்கூட அனுப்புகிறார்கள்.

குடும்பப் பங்கீடு அட்டை விநியோகம் என்று சொல்கிறார்கள். அரிசிக்கு மட்டுமல்லாமல் மற்றும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் சர்க்கரை முதலியவைகளையும் விநியோகம் செய்ய நியாய விலைக் கடைகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளின் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் சில தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு அவ்வப்பொழுது வருகிறது. ஆகவே, இதையெல்லாம் கவனத்திற்கொண்டு—நியாய விலைக் கடைகளை ஆரம்பிப்பது

பெரிதல்ல—இவைகளைக் கண்காணிப்பதில் சிறிது அக்கறை காட்டினால் அது நல்லமுறையில் செயல்படும், அரசாங்கத்திற்கு நல்ல பெயரை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, பொது விநியோக முறையில் நியாய விலைக் கடைகளிலே மட்டரக அரிசியை அரசு நிர்ணயம் செய்த விலைக்கும் அதிகமான விலைக்கு விற்பதாக இங்கே ஒரு பிரச்சினையை விவாதத்திற்கு எழுப்பியதன் மூலம் நாட்டிலே நடைபெறுகின்ற ஒரு சில தவறுகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். ஆகவே, அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்பொழுதுமே அரசாங்கம் செய்கின்ற எல்லாக் காரியங்களும் நூற்றுக்கு நூறு நல்ல முறையிலே நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் விரும்பினாலும் சில நேரங்களிலே சிலவிடங்களில் தவறு ஏற்படுவது இயற்கை என்பதையும், இப்படிப்பட்ட தவறுகள் ஒருசில நேரங்களில் அரசினுடைய நேரடி கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது என்பதையும், இந்த நல்ல முயற்சியிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஈடுபாடு கொண்டு இதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்ததற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியறிதலை மீண்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்திலே பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ரமணி அவர்களும், ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைத்ததற்காக அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல உழைப்பாளர் கட்சியின் தலைவர் திரு. மார்க்கபந்து அவர்களும் அவையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதற்காக அரசின் சார்பில் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்றையதினம் பொது விநியோக முறையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் மூலமாகவும், கூட்டுறவுத் துறையினுடைய கடைகள் மூலமாகவும் வழங்கப்படுகின்ற அரிசி மத்திய அரசாங்கத்தினுடைய நிர்ணயிக்கப்பட்ட சராசரி தர அளவிற்கு, 'fair average quality' அந்தத் தரத்திற்கு உள்ளது என்று தான் இன்றையதினம் அந்த அரிசியையெல்லாம் பொது விநியோக முறையிலே வழங்கப்படுகிறது. ஆனால், விலைகளைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. தனிப்பட்ட முறையில் எங்காவது தவறுகள் நடக்கலாம். ஆனால், அரசாங்கம் ஒரு விலையை நிர்ணயித்திருக்கிறது. மிகச் சன்ன ரகத்திற்கு ரூ. 2.20 காசு. அதை இப்பொழுது ரூ. 2-க்கு விற்கவேண்டும். சன்ன ரக அரிசி ரூ. 1.85-க்கு விற்கவேண்டும். நடுத்தர மோட்டா ரக அரிசி ரூ. 1.65-க்கு விற்கப்படவேண்டும். இவ்வாறு அரசாங்கம் பொதுவாக உத்தரவிட்டிருக்கிறது.

சில இடங்களிலே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறலாம். இல்லையென்று சொல்வதற்கில்லை. நான் கூடச் சுற்றுப்பயணம் செல்லும்போது, கிராமங்களுக்குப் போகும்போது, கிராமத்திலே உள்ளவர்கள் இப்படிப்பட்ட குறைபாடுகளைச் சொல்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்திக்கப்படுகிறது.

நண்பர் உமாநாத் அவர்கள் சொன்னதைப் போல், கூட்டுறவுத் துறை மூலமாகத்தான் பெரும்பாலான தவறுகள் நடைபெறுகின்றனவே தவிர, நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே, அநேகமாக இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. உமாநாத் சென்று பார்த்ததைப் பற்றிச் சொன்னார்கள். நான் கூடப் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுப் பயணம் செல்கிறபொழுது, மோசமான அரிசியைத் தருகிறார்கள் என்று என்னிடத்திலே புகார் சொன்னார்கள். நான் நேரில் பார்த்தேன். சாம்பிராணிபோல் அரிசி ஒட்டிக்கொண்டிருக்கிறது. இல்லை

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1978 சனவரி 9

யென்று மறுக்கவில்லை. புழுக்கள் நெளியக் கூடிய அரிசி பொது விநியோகத்தில் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படுகிற கடைக்கு நானே நேரில் போயிருக்கிறேன். புகார் கொடுக்கிறவர்களுடன் நான் நேரில் போனால், கூட்டுறவுத் துறையிலேதான் இவ்வாறு வழங்குகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்த அரசுக்குக் கெட்ட பெயர் கொண்டு வரவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு, அவர்கள் இப்பேர்ப்பட்ட கெட்ட அரிசியைத் தருகிறார்கள்.

ஒருவேளை அவர்கள் அரிசியைப் பெறுகிற கிடங்குகளிலே தவறு நடக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காக நான் சுற்றுப் பயணம் செய்கிற நேரத்திலே, எங்கே அவர்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது என்று கேட்டு, அந்தக் கிடங்குகளுக்கே போய் பார்த்தால், அங்கே ஓரளவு நல்ல அரிசி இருக்கிறது. ஆகவே, தவறு எங்கே நடக்கிறதென்றால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னதைப் போல், கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த அரிசியைப் பொது விநியோக முறையிலே கொடுக்கிறபோது அங்கேதான் தவறு நடக்கிறது.

அரசாங்கக் கிடங்கிலே தரமான அரிசியைக் கொடுத்தாலும் (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். இப்படித்தான் நடக்கிறது என்று வாதிடத் தயாராக இல்லை. இப்பேர்பட்ட கடைக்காரர்கள் அரசாங்கக் கிடங்குகளிலே நல்ல அரிசியை வாங்கி, தனியாருக்குக் கொடுத்துவிட்டு, மோசமான அரிசியை விற்கிற நிலை ஏற்படுகிறது. அதற்காக, அவ்வப்போது பரிசீலித்து, ஒருசில உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பொது விநியோக முறையை, கூட்டுறவுத் துறை மூலமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கொடுப்போம். நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், கூட்டுறவு துறையின் மூலமாகவும் கொடுக்கும்போது, தவறுகள் நடந்தால், பழியை இருவரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒருவர் மேல் ஒருவர் பழியைப் போடக் கூடிய நிலைமையிருக்கிறது.

ஆகவே. எங்கே தவறு நடக்கிறது என்று கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகவே. பொது விநியோகத்தில், அரிசி, சர்க்கரை போன்ற உணவுப்பண்டங்களை, தானியங்களையெல்லாம், நுகர்பொருள்

1978 சனவரி 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

வாணிபக் கழகத்தின் மூலம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும். அரிசி, சீனி, போன்ற அத்தியாவசியப் பொருள்களை, கூட்டுறவுத் துறை மூலமாகக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வேண்டுமென்றால், தரமுள்ள பொருள்களை, அவர்களே, வெளிச்சந்தையிலே வாங்கி நியாயமான இலாபத்திற்கு விற்றுக்கொள்ளட்டும். தரமுள்ள அரிசி போன்றவைகளை . . .

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, 16,000 கடைகளில் ஏற்கனவே உள்ள 9,000 கூட்டுறவுக் கடைகளும் சேரும் என்று நேற்றைய தினம் உணவு அமைச்சரவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக நியாய விலைக் கடைகள் நிச்சயமாக இருக்காது. தவறுகள் நடப்பதால் என்று சொன்னார்கள். ஆகவே, இப்பொழுது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது ஆரம்பிப்பதாக இருக்கிற 442 மாத்திரம்தானா? ஏற்கனவே இருப்பதாகச் சொன்னார்களே, அவற்றையும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் தவறுகள் இப்படி நடப்பதாக நான் சொல்லவில்லை. தவறு செய்கின்ற கூட்டுறவுச்சங்கங்கள் உடனுக்குடன் தண்டிக்கப் படவேண்டும். மக்களுக்குக் கிடைக்கிற உணவுப்பண்டங்கள், நியாயமான விலையிலே கிடைக்கவேண்டுமென்ற வகையில் அவர்களிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் தவறு செய்கிற நேரத்தில், அந்தப் பொறுப்பை அவர்களிடத்திலிருந்து எடுத்துவிட்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் விட வேண்டியிருக்கிறது. எல்லா சொசைட்டிகளும் தவறு செய்வதாக நான் சொல்லவில்லை.

திரு. மு. கருணாநிதி: உமாநாத் பேசியதை அறையிலிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அதிலே, அவர்கள் நாகப்பட்டிணத்திலே நடந்த தவறு, அரிசி விநியோகம், கூட்டுறவுச் சங்கத்திலே நடந்ததாகச் சொல்லவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில்தான் அப்படி விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் அமைச்சர் இராகவானந்தத்திடத்திலே அறிவித்து நடவடிக்கை எடுத்ததாக நண்பர் உமாநாத் இங்கே கூறினார்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பொதுவாக நான் சொல்வது, புயல் வெள்ள நிவாரணப் பணியிலே, கொடுக்கப்பட்ட அரிசியிலே தவறுகள் நடந்ததாக அவர் சொன்னார்.

[இரவு 7-00]

ஆனால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் விநியோக முறையில் தவறுகள் நடக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இதிலே தவறுகள் நடக்குமானால் அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. ஆகவே தான் நான் சொன்னேன் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் அரசினுடைய அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஏதாவது தவறு செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நடவடிக்கை எடுக்க இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கூட்டுறவு சொசைட்டிகளிலே தவறுகள் நடந்தால் அவர்களை நாம் தண்டிக்க முடியாது. ஏனென்றால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களே நியமித்த செயலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே நேரடியாக அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: கூட்டுறவுத் துறையிலே தவறு நடந்தால் கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்க முடியும், நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா சொசைட்டிகளிலும் தவறு நடக்கிறது. தரமான அரிசி போடவில்லை என்றாலும். சர்க்கரை விநியோகத்தில் ஊழல் நடந்தாலும், கூட்டுறவுத் துறையில் ஊழல் நடந்தால் சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். கலெக்டர் வந்து நடவடிக்கை எடுக்கிறார், கூட்டுறவுத் துறையில் நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா தரப்பினருக்கும் பொறுப்பிருக்கிறது. ஆனால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அப்படி இல்லை. அந்தத் துறையில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவே அமைச்சர் கொடுத்த பதில் சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் நான் சொல்வது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் நியமனம் செய்யப்படுகிற பணியாளர்கள்

ஒரு வழியிலே 'குவாசி கவர்ன்மென்ட் சர்வண்ட்ஸ்' ஆவார்கள். அரசாங்கத்தினுடைய நேரடிப் பொறுப்பிலே இல்லாவிட்டாலும் சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் பொறுப்பிலே இருப்பவர்கள். ஆகவே அவர்கள் தவறு செய்தால் நிச்சயமாக நடவடிக்கை அரசாங்கத்தால் எடுக்க முடியும். தற்காலிக வேலை நீக்கமும் செய்ய முடியும். ஆனால் கூட்டுறவு சொசைட்டிகளில் பணியாற்றுகிறவர்கள் தவறு செய்தால் யார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் அந்த நிர்வாகம் தான், அந்த சொசைட்டியின் தலைவர் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: அரசாங்கமே நேரடி நடவடிக்கை எடுக்க முடியும். இதுபற்றித் தனியாக விவாதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இன்னும் 2 நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கூட்டுறவுத் துறையிலே நமது அரசாங்கம் இரண்டு வழியிலே நடவடிக்கை எடுக்கலாம். ஒன்று பொது விநியோகத்திற்குக் கொடுக்கின்ற உணவுப் பொருள்களை, அவர்கள் தவறு செய்தால், நிறுத்த முடியும். நீங்கள் கொடுத்தது போதும் நாங்கள் வேறு எங்காவது கொடுத்து விநியோகித்துக் கொள்கிறோம் என்று சொல்லலாம். அடுத்து நோட்டிஸ் கொடுத்து அந்த சொசைட்டியை கலைக்க முடியும். சட்டப்படி வேறு நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த நிலைமைகள் தான் பிரதானமாக இருக்கிறது. உண்மையிலேயே ஓரளவு தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றைத் திருத்தி அமைக்க இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சில நேரங்களில் அரிசி மிக மோசமான வாடை அடிக்கிறது. ஆந்திர அரிசி மிகவும் மோசமாக வாடை அடிக்கிறது. அவர்கள் நெல்லை அவிப்பதற்கு முன்னாலே ஊறல் போடுவார்கள். அப்படி

போடும்போது அவர்கள் அந்தத் தண்ணீரை மாற்றுவது இல்லை. தொட்டியிலே இருக்கின்ற தண்ணீரை மாற்றாமல் அதே தண்ணீரில் திரும்பத் திரும்ப நெல்லை ஊறவைப்பதால் வாடை அதிகமாக இருக்கிறது. ஆனால் நமக்கு வேறு வழியில்லை.

சிவில் சப்ளைஸ் கார்பரேஷன் பல்வேறு இடங்களில் விநியோகம் செய்யவேண்டி இருக்கிறது. ஆகவே, நாம் நீண்ட நாட்களாக மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

ஆந்திர மாநிலத்தில் இருந்து நெல்லாகவே கொண்டு வர வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். இந்தியா ஒரே உணவு மண்டலமாக இருக்கிற காரணத்தாலே ஆந்திராவிடம் இருந்து நெல் கொண்டு வர முடியவில்லை. அரிசிதான் கொண்டு போகவேண்டுமென்று கட்டுப்பாடு விதித்து இருக்கிறார்கள். அரிசியாக கொண்டு போகாமல் நெல்லாகக் கொண்டு போக அனுமதி தரவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அப்படி நெல்லாகக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்படுமானால், அந்த நெல்லை இங்கே அவித்து நல்ல முறையில் அரிசியாக்கி, நல்ல முறையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் என்று தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு குறைகளை எல்லாம் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சியில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவை முன் வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கான திருத்தங்கள்" நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு: தலைவர்அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை அது. ஏற்கனவே அவர்கள் தான் பேரவை செல்ல வேண்டியிருப்பதால்

உணவுத் துறை அமைச்சர் பதில் அளிப்பார் என்று சொன்னார்கள் அமைச்சரவை கூட்டுப்பொறுப்பு என்று இருந்தாலும், இதிலே அவரே நேரடியாக சம்பந்தப்பட்டு இருப்பதால் அவரிடமே இந்தச் சொல்லிச் சொல்லலாம் என்ற முறையில் அதை நாளைக்கு எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 9 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வருகின்றன. அவை அத்தனையும் படித்து, பிறகு கேள்வி கேட்க நேரம் ஆகும். ஆகவே, அப்படிச் செய்யாமல் அவை அச்சடித்து மேசைமேல் வைக்கப்படும். அவர்கள் படித்துவிட்டு கேள்வியை மட்டும் கேட்பது நல்லது. நாளைக்காலையும் இதைச் சொல்கிறேன். இங்கே அவையில் இல்லாத உறுப்பினர்களுக்கு மற்ற உறுப்பினர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை மாலை 7-07 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

14. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

'Nil'

B. Reports, Notifications and other papers.

*46. Annexure to the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 6 of 1978).

47. List of unstarred questions and answers from Nos. 71 to 120.

*Despatched to Members on 1-5-1978.

இணைப்பு I

[874-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 164-க்கான விடையைக் காண்க.]

விடை

(அ), (ஆ) மற்றும் (இ).—ஒரு குறிப்பிட்ட நகர்ப்புற காலி நிலம் அல்லது கட்டிடத்தை அதனுடைய உரிமையாளர் விற்பனை செய்ய முன்வந்தால் அவைகளை அரசு தன் சுய உபயோகத்திற்கு வாங்க விரும்பினால் அந்த விருப்பத்தை முன்னுரிமையாக நிவர்த்தி செய்துகொள்ள நில உச்சவரம்புச் சட்டத்தில் இடமுள்ளது. இதன்பொருட்டு உரிமையாளர் உரிய அதிகாரிகளிடம் விற்பனை செய்வதற்கு மனு செய்துகொள்ள வேண்டும். மேற்படி நிலமோ, கட்டிடமோ அரசுத் துறைகளுக்கு தேவைப்படவில்லை என்றாலும் அல்லது மனு செய்துக்கொண்ட 60 தினங்களுக்குள் உரிய அதிகாரி முடிவு எடுக்கத் தவறினாலும் உரிமையாளர் தன் விருப்பம்போல் பத்திரத்தை பதிவு செய்து கொள்ளலாம்; ஆனால் இங்கு காலி நிலங்கள் என்று குறிப்பிடுவது சட்ட வரம்புக்கு மீறிய நிலங்களுக்குப் பொருந்தாது. இந்தச் சட்டத்தின் சில நோக்கங்கள், அது அமுலில் இருக்கும் பகுதிகளில் வரம்புக்கு மீறி ஒரு சிலரிடம் பெரும் நிலப்பகுதிகள் குவிந்துகிடப்பதைத் தடுப்பதும், அதிக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து அந்நிலத்தைக் கைப்பற்றி அத்தியாவசியமாக தேவையுள்ளோர்களுக்குக் கொடுப்பதும், சமூக நன்மைக்கு உபயோகப்படுத்துவதும் ஆகும். இந் நோக்கங்களால் உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களை அவர்கள் அந்த நிலங்களை வீடு கட்ட விரும்புவோருக்கு விற்பனை செய்யவோ வேறு எந்தக் காரணத்திற்காகவும் பரிவர்த்தனை செய்யவோ அனுமதிக்கச் சட்டத்தில் இடமில்லை. ஆனாலும், இந்தச் சட்டம் அமுலில் வந்த 3—8—1976-க்கு முன் தேதிகளில் பெரும் அளவில் நகர்ப்புற நிலம் வைத்திருப்போர் (Real Estate Dealers) அவைகளை அதிக பண வசதி இல்லாதவர்களுக்கு வீடு கட்டுவதற்காக சிறு சிறு மனைகள் விற்க முறையான ஒப்பந்தத்தைப் பெற்றிருந்தாலும் அந்த அதிக வசதியில்லாதவர் அந்த மனைக்காக முன்பணம் ஏதாவது செலுத்தியிருந்தாலும் பின்னவர்களுடைய நிலைமை அனுதாபத்துடன் நோக்கி அந்த மனைகளை பொருத்தமட்டில் பரிவர்த்தனை பூர்த்தியடைய அரசு வழி வகுத்திருக்கிறது.

மேற்சொன்ன சலுகையைத் தவிர வீடுகட்டும் வரைபடங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி, நகராட்சி அலுவலகங்களில் ஒருவர் சமர்ப்பித்திருப்பாரானால் அது சம்பந்தப்பட்ட நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்துவதாயிருப்பினும் அந்த நிலத்திற்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவும் உத்தரவாகியுள்ளது. மேலும் ஒருவருடைய நிலம் வரம்புக்கு மேல் சுமார் 50 சதுர மீட்டர் அதிகமாக இருப்பின் அது சம்பந்தப்பட்ட வீட்டு வரை படங்களை ஊராட்சிகளும், நகராட்சிகளும் அங்கீகரிக்கலாம். மிகுந்த அளவு நிலப்பரப்பினை ஒருவர் பெற்றிருந்து அதில் அவர் வீடு கட்ட விரும்பினால் வரம்பிற்குட்பட்ட ஒரு பகுதியில் அவர் வீடு கட்டிக்கொள்வதாகவும், மற்றப் பகுதியை அரசு சட்டப்படி கைப்பற்றிக் கொள்ளுவதற்கு ஏற்றவகையில் வழி வகுத்துக் கொடுப்பதாகவும் ஒரு பிரமாண வாக்குமூலம் கொடுத்தால், அந்த இனங்களிலும் வரைபடங்கள் அங்கீகரிக்கப்படும். மற்றும் பெரும் கட்டிடங்களை கட்ட விரும்பும் தொழில் ஸ்தாபனங்களுக்கு அவர்களுக்கு எவ்வளவு பரப்பு தேவை என்றாலும் அந்த அளவுக்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளினால் கட்டிட அமைப்பு வேலைகளை துரிதப்படுத்த வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

இணைப்பு II.

[721-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 97-க்கான விடையைக் காண்க.]

கல்வித்துறை.

தமிழ் நாடு ஆவணக்காப்பகத்தில் வரலாற்று ஆராய்ச்சிக் குழு என்ற ஒரு பிரிவு, இயங்குகின்றது. அதில் தென்னிந்திய வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக தனியே நிதி ஒதுக்கப்படுகிறது, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் தென்னிந்தியாவின் வரலாற்றை ஆராய்ச்சி செய்து கட்டுரைகள் எழுதுவதற்காக ஆண்டு தோறும் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு அரசு கல்வித் துறை

இணைப்பு I

[874-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 164-க்கான விடையைக் காண்க.]

விடை

(அ), (ஆ) மற்றும் (இ).—ஒரு குறிப்பிட்ட நகர்ப்புற காலி நிலம் அல்லது கட்டிடத்தை அதனுடைய உரிமையாளர் விற்பனை செய்ய முன்வந்தால் அவைகளை அரசு தன் சுய உபயோகத்திற்கு வாங்க விரும்பினால் அந்த விருப்பத்தை முன்னுரிமையாக நிவர்த்தி செய்துகொள்ள நில உச்சவரம்புச் சட்டத்தில் இடமுள்ளது. இதன்பொருட்டு உரிமையாளர் உரிய அதிகாரிகளிடம் விற்பனை செய்வதற்கு மனு செய்துகொள்ள வேண்டும். மேற்படி நிலமோ, கட்டிடமோ அரசுத் துறைகளுக்கு தேவைப்படவில்லை என்றாலும் அல்லது மனு செய்துக்கொண்ட 60 தினங்களுக்குள் உரிய அதிகாரி முடிவு எடுக்கத் தவறினாலும் உரிமையாளர் தன் விரும்பம்போல் பத்திரத்தை பதிவு செய்து கொள்ளலாம்; ஆனால் இங்கு காலி நிலங்கள் என்று குறிப்பிடுவது சட்ட வரம்புக்கு மீறிய நிலங்களுக்குப் பொருந்தாது. இந்தச் சட்டத்தின் சில நோக்கங்கள், அது அமுலில் இருக்கும் பகுதிகளில் வரம்புக்கு மீறி ஒரு சிலரிடம் பெரும் நிலப்பகுதிகள் குவிந்துகிடப்பதைத் தடுப்பதும், அதிக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து அந்நிலத்தைக் கைப்பற்றி அத்தியாவசியமாக தேவையுள்ளோர்களுக்குக் கொடுப்பதும், சமூக நன்மைக்கு உபயோகப்படுத்துவதும் ஆகும். இந்நோக்கங்களால் உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களை அவர்கள் அந்த நிலங்களை வீடு கட்ட விரும்புவோருக்கு விற்பனை செய்யவோ வேறு எந்தக் காரணத்திற்காகவும் பரிவர்த்தனை செய்யவோ அனுமதிக்கச் சட்டத்தில் இடமில்லை. ஆனாலும், இந்தச் சட்டம் அமுலில் வந்த 3—8—1976-க்கு முன் தேதிகளில் பெரும் அளவில் நகர்ப்புற நிலம் வைத்திருப்போர் (Real Estate Dealers) அவைகளை அதிக பண வசதி இல்லாதவர்களுக்கு வீடு கட்டுவதற்காக சிறு சிறு மனைகள் விற்க முறையான ஒப்பந்தத்தைப் பெற்றிருந்தாலும் அந்த அதிக வசதியில்லாதவர் அந்த மனைக்காக முன்பணம் ஏதாவது செலுத்தியிருந்தாலும் பின்னவர்களுடைய நிலைமை அனுதாபத்துடன் நோக்கி அந்த மனைகளை பொருத்தமட்டில் பரிவர்த்தனை பூர்த்தியடைய அரசு வழி வகுத்திருக்கிறது.

மேற்சொன்ன சலுகையைத் தவிர வீடுகட்டும் வரைபடங்களை சம்பந்தப்பட்ட ஊராட்சி, நகராட்சி அலுவலகங்களில் ஒருவர் சமர்ப்பித்திருப்பாரானால் அது சம்பந்தப்பட்ட நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்துவதாயிருப்பினும் அந்த நிலத்திற்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவும் உத்தரவாகியுள்ளது. மேலும் ஒருவருடைய நிலம் வரம்புக்கு மேல் சுமார் 50 சதுர மீட்டர் அதிகமாக இருப்பின் அது சம்பந்தப்பட்ட வீட்டு வரை படங்களை ஊராட்சிகளும், நகராட்சிகளும் அங்கீகரிக்கலாம். மிகுந்த அளவு நிலப்பரப்பினை ஒருவர் பெற்றிருந்து அதில் அவர் வீடு கட்ட விரும்பினால் வரம்பிற்குட்பட்ட ஒரு பகுதியில் அவர் வீடு கட்டிக்கொள்வதாகவும், மற்றப் பகுதியை அரசு சட்டப்படி கைப்பற்றிக் கொள்ளுவதற்கு ஏற்றவகையில் வழி வகுத்துக் கொடுப்பதாகவும் ஒரு பிரமாண வாக்குமூலம் கொடுத்தால், அந்த இனங்களிலும் வரைபடங்கள் அங்கீகரிக்கப்படும். மற்றும் பெரும் கட்டிடங்களை கட்ட விரும்பும் தொழில் ஸ்தாபனங்களுக்கு அவர்களுக்கு எவ்வளவு பரப்பு தேவை என்றாலும் அந்த அளவுக்கு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளினால் கட்டிட அமைப்பு வேலைகளை துரிதப்படுத்த வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

இணைப்பு II.

[721-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 97-க்கான விடையைக் காண்க.]

கல்வித்துறை.

தமிழ் நாடு ஆவணக்காப்பகத்தில் வரலாற்று ஆராய்ச்சிக் குழு என்ற ஒரு பிரிவு இயங்குகின்றது. அதில் தென்னிந்திய வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக தனியே நிதி ஒதுக்கப்படுகிறது, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் தென்னிந்தியாவின் வரலாற்றை ஆராய்ச்சி செய்து கட்டுரைகள் எழுதுவதற்காக ஆண்டு தோறும் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு அரசு கல்வித் துறை

செயலாளரையும், தமிழ் நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையாளரையும் இதர அலுவல் சார்பற்ற மூன்று உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 750-க்கு குறையாமலும், ஆனல் ரூ. 1,000-க்கு மிகாமலும் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. மேலும் ஆராய்ச்சிக் காலமான ஈராண்டுகளில், ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் எழுதுபொருள், ஆய்வு தொடர்பான போக்குவரத்து, மற்றும் குறிப்புதவிப் புத்தகங்கள் வாங்குவதற்குமாக ரூ. 5,000 வழங்கப்படுகின்றது. இச்செலவுகளுக்கும், ஆராய்ச்சியாளரைத் தேர்ந்தெடுப்பது பற்றிய செலவுகளுக்கும் மற்றும் இப்பிரிவு வேலைகளைச் செய்யும் ஒரு உதவியாளர் மற்றும் ஒரு தட்டச்சர் ஆகியோரின் ஊதியத்திற்காகவும், 1977-78 ஆம் ஆண்டிற்காக ரூ. 1,40,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் ஆய்வுத்துறையில் பாதுகாப்புப் பணி மற்றும் அகழ்வாய்வு, ஆராய்ச்சி செய்ய கல்வெட்டுப் பிரிவு நியமனம் முதலிய செலவினங்களுக்காக கீழ்கண்ட நிதி ஒதுக்கீடு ஆண்டு வாரியாக செய்யப்பட்டுள்ளது:—

ஆண்டு.	பாதுகாப்புப் பணி மற்றும் அகழ்வாய்வுக்கு ஒதுக்கப்பட்டது.	மதுரை திருமலை நாயக்கர் அரண்மனைக்கு ஒதுக்கப்பட்டது.	தமிழ் இலக்கியம் கலை வரலாறு தொல்பொருள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ய கல்வெட்டு பிரிவு நியமனம் ஒதுக்கப்பட்டது.	கல்வெட்டுக்களைப் படியெடுத்து புத்தகங்களாக வெளியிட ஒதுக்கப்பட்டது.	ஆலயங்களில் உள்ள தொல்பொருட் கலை சார்ந்த பதிவு செய்யும் பொருட்டு ஒதுக்கப்பட்டது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1968—69	40,000	..	..	25,000	..
1969—70	63,000	..	..	15,000	..
1970—71	65,000	..	..	15,000	..
1971—72	1,00,000	..	..	20,000	..
1972—73	1,00,000	60,000	..	30,000	..
1973—74	50,000	60,000	20,000	30,000	4,000
1974—75	58,000	47,000	20,000	31,000	58,000
1975—76	3,00,000	20,000	21,000	25,000	19,000
1976—77	1,00,000	80,000	30,000	30,000	20,000
1977—78	75,000	70,000	33,000	30,000	25,000

இணைப்பு III

கல்வித் துறை

[924-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 102-க்கான விடையைக் காண்க.]

தென் இந்தியாவில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள அரசுக் கட்டடங்களில் செஞ்சிக் கோட்டையும் ஒன்றாகும். அது உயர்ந்த சுவர்களையும், கொத்தளங்களையும், தம்மைச் சூழ்ந்து ஒரு அகழியையும் கொண்டு மிக அழகாக விளங்குகிறது. குன்றுகளை இணைத்து நிற்கும் கோட்டைச் சுவர்கள், இராஜகிரி, கிருஷ்ணகிரி ஆகியவை வலுவான தடுப்பு முறையின் அங்கங்களாகத் திகழ்கின்றன. கோட்டையினுள் அரண்மனை, உடற்பயிற்சி செய்யும் கட்டடம், கிடங்குகள், கருவூலம், யானை, குதிரை ஆகியவைகளின் லாயங்கள், வெடிமருந்து வைக்கப்படும் இடம், அரசியர் அந்தப்புரம், குளம், நீர் செல்லும் குழாய்கள், வெங்கடாமணர் கோயில், வேணுகோபாலர் கோயில், அரங்கநாதர் கோயில் ஆகிய கட்டடங்கள் உள்ளன.

சென்னையிலுள்ள மத்திய அரசின் தென் வட்ட தொல் பொருள், ஆய்வுத் துறையானது 1973 ஆம் ஆண்டில் அரண்மனைப் பகுதியில் அகழ்வாய்வு செய்தபோது 41 அடி நீளம் 33 அடி அகலம் உள்ள ஒரு கட்டடப் பகுதி இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. இக்கட்டடத்தின் நடுவில் ஒரு பெரிய அறை 19×10 என்ற அளவில் காணப்படுகிறது.

திடீரென பீரங்கி குண்டுகளால் தாக்கப்பட்டு அழிக்கப் பட்டதாகக் காணப்பெறும் இக்கட்டடம் இரு அடுக்குகளை உடையதாக இருந்திருக்கும், அந்த அறைக்கு முன்பாக சில மனித எலும்புகளும், குதிரைகளின் எலும்புகளும் கண்டெடுக்கப் பட்டன. கட்டடத்தைச் சுற்றிலும் சில எலும்புகள் காணப் பட்டன. இவைகளில் ஒரு பெண்ணின் எலும்புகளும், மைய அறையின் சுவர் மீது காணப்பட்ட வெள்ளியால் ஆன இரு தண்டைகளும், மணமான பெண்கள் அணியக்கூடிய மெட்டிகளும் மிக முக்கியமானவை. இப்பொருட்கள் கிடைத்திருப்பதும், தூண்கள் சில எரிந்து காணப்படுவது ஆகியவை. அரசர்கள் உடன்கட்டை ஏறி தங்களை மாய்த்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

சில சுதைச் சிற்பங்கள், உருது எழுத்துப் பொறித்த இரு செம்புக் காசுகள், இரும்பாலும் கல்லாலும் செய்யப்பெற்ற பீரங்கிக் குண்டுகள் ஆகியவைகளும் கிடைக்கப்பெற்றன. சுண்ணாம்புக் கலவையை பயன்படுத்திப் பெருங்கற்களைக் கொண்டு இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

குதிரை லாயங்களுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடப் பகுதிகள் மரத்தூண்களால் தாங்கப் பெற்ற அரசவையாக திகழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

உண்மையான அரண்மனைப் பகுதி கல்யாண மஹாலுக்கு முன்பாக அமைந்திருக்க வேண்டும் போல தோன்றுகிறது. சென்ற ஆண்டு கல்யாண மஹாலுக்கு முன்பாக உள்ள மேடு அகழப் பெற்றது. பணி மேலும் தொடர்ந்து நடைபெறுகிறது. குதிரை லாயங்களுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடப் பகுதிகள் சீர் செய்யப்படுவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றுள்ளன.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 சனவரி, 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

இராமநாதபுரம் மாவட்ட தலைநகரம்.

* 181. வினா— திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம், திரு. ச. கூத்தகுடி சண்முகம், திரு. செ. சிவசாமி, திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட தலைநகரை மதுரையிலிருந்து மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்;

(அ) ஆம்.

(ஆ) பரிசிலனையில் உள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, அனேகமாக இந்தியாவிலேயே இந்த ஒரு மாவட்டத்தின் தலைநகரம் தான் அதன் எல்லையில் இல்லை என்பதை அரசாங்கம் அறியும். ஆகவே அதைப் பரிசிலனை செய்வது பற்றி மகிழ்ச்சி. முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்யும்போது, சீக்கிரமாக மாவட்டத்தின் மையமான ஒரு இடத்தில் தலைநகரத்தை உருவாக்குவதாகச் சொன்னது அங்கு ஒரு வரவேற்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதிலே சிரமங்கள் அதிகமாக வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. அங்கே மேற்கு இராமநாதபுரம், கிழக்கு இராமநாதபுரம் என்று இரண்டு

அமைப்புகள் இருக்கின்றன. அந்த மாதிரியாக டெவலப்மெண்டு கவுன்சில் இருக்கிறது. ஆகவே தலைநகரத்தை உருவாக்கும் போது, இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இருந்தாலும், அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். தலைநகரத்தை உருவாக்குவதில் சிரமம் இருந்தால், அவசியமானால் இரண்டு மாவட்டங்களாக உருவாக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் சண்முகம் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க உத்தேசம் உண்டா என்று கேட்டார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். ஏற்கனவே அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் அளித்த பரிந்துரையில், அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றும், ஒன்று விருதுநகர் மாவட்டம் என்றும், மற்றொன்று இராமேஸ்வரம் மாவட்டம் என்ற பெயருக்கு பின்னணி இருக்கின்ற காரணத்தால், இராமநாதபுரம் மாவட்டம் என்பதற்குப் பதிலாக, இராமேஸ்வரம் மாவட்டம் என்று அதற்குப் பெயர் தருவது என்றும், அப்படி இரண்டாகப் பிரிக்கப்பட்டால், இராமேஸ்வரம் மாவட்டத்திற்கு பின்தங்கிய பகுதிகளாக இருக்கிற மானாமதுரை அல்லது சிவகங்கையை தலைநகரமாக வைக்கலாம் என்றும் அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, இராமநாதபுரம் என்ற பெயரே இல்லாமல் எடுத்துவிட்டு, பிரிக்கும் போது வேறு பெயர்களை வைப்பதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, எந்த முடிவையும் இந்த அரசாங்கம் இதுவரையில் எடுக்கவில்லை. பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே இரண்டு கமிட்டிகளை எல்லாக் கட்சிகளும் வைத்திருக்கின்றன. கலெக்டர் ஆலோசனைக் குழு என்று போடும் போது விவகாரம் வருகிறது. அந்தப் பக்கத்திலிருந்து ஒருவரையும், இந்தப் பக்கத்திலிருந்து ஒருவரையும் வைத்துக் கொள்ள அரசாங்கம் உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தங்களது இந்த யோசனையையும் அரசாங்கம் நிச்சயமாக பரிசீலிக்கும்.

திரு. கரு. ராம. சூரியமாணிக்கம் அம்பலம்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் அதிகமான விஸ்தீரணம் உள்ள பிராந்தியம். அதிலும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் தெற்கு கடைசியாகப் போய்விடுகிறது. மையமாக சிவகெங்கைதான் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயரில் உள்ள மாவட்டத்திற்கு தலைநகரம் சிவகங்கையில் இருந்தால் பொருத்தமாக இருக்கும். அங்கே மாவட்டத்தின் தலைநகரை ஏற்படுத்த மானாமதுரை சிவகங்கைக்கு இடையில் காடு இருக்கிறது. அதில் இந்த மாவட்டத்தின் தலைநகரத்தை ஏற்படுத்தலாம். ஆகவே, அதை மனதில் கொண்டு விரைவில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல, இராமநாதபுரம் மாவட்டம் எவ்வளவு பெரிய மாவட்டம் என்று எனக்குத் தெரியும். 1918 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் மொத்த சதுர கிலோமீட்டர் 12,559. 1971 சென்சஸ் கணக்குப்படி மொத்த ஜனத்தொகை 28,60,207. அதுவும் புரிகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயர் இருக்கட்டும் என்றும், தலைநகரத்தை சிவகெங்கைக்கு மாற்றினால் நன்றாக இருக்கும் என்றும் யோசனை தெரிவிக்கிறார். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பத்தைத் தெரிந்து செய்யவேண்டிய காரியம் என்பதில் கனம் உறுப்பினர் அவர்களுக்கு அபிப்பிராயபேதம் இருக்காது என்று நான் நம்புகிறேன். அவசரப்பட்டு இந்தக் காரியத்தில் ஆட்சி ஈடுபட முடியாது. ஏற்கனவே இராமநாதபுரம் என்றுதான் இருக்க வேண்டும் என்றும் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரம் இராமநாதபுரத்தில்தான் இருக்கவேண்டும் என்றும் கிளர்ச்சி இருப்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆக, பல கோணங்களில் நின்றுகொண்டு இந்தப் பிரச்னைகளை அணுகியாகவேண்டும். இது உணர்ச்சி பூர்வமான தொரு பிரச்னை. ஆகவே இதில் சிவகங்கையா அல்லது மானாமதுரையா அல்லது இராமநாதபுரமா என்றெல்லாம் அனைத்துக் கட்சிகளையும், அங்கிருக்கிற அனைத்துக் கட்சிகளையும் கலந்து ஆலோசித்து பொதுமக்களின் எண்ணங்களையும் தெரிந்து கொண்ட பிறகுதான் ஒரு முடிவு எடுப்பது சாலச்சிறந்ததாக இருக்குமே தவிர திடீரென்று முடிவு எடுத்தால் கிளர்ச்சிகளின் கதவுகளை நாம் திறந்துவிட்டோம் என்றுதான் அதற்கு பொருளாகும் என்பதை நான் நம் அருமை பெரியவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இதை அரசு தீவிரமாக பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. செ. சிவசாமி : இந்தக் கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்துகொண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கூட தலைநகரை மாற்றவேண்டும் என்று வந்தது, வந்து இருபது ஆண்டுகள் கடந்து விட்டன. பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஏழரை ஆண்டுகள் ஆண்டபோதும் கூட இப்பிரச்னையை அவசியம் கவனிக்கிறோம் என்று சொல்லிவிட்டு கடப்பிலே போட்டுவிட்டது. இப்போது புதிதாக வந்திருக்கிற மக்களது உண்மையான அரசாங்கம் இதை கணக்கில் எடுத்துக்கொண்டு அவசியம் செய்யவேண்டும். அவசரமாக இல்லாவிட்டாலும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இவ்வளவு ஆண்டு காலம் பொறுமையோடு காத்திருந்த சிவசாமி அவர்கள் கொஞ்சம் நாள் கூட காத்திருக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு ~~திதி~~ அமைச்சர் அவர்கள், சிவகங்கையா, மானாமதுரையா என்று ஒரு குறிப்பு சொன்னார்கள். நான் மானாமதுரைத் தொகுதியைச் சார்ந்தவன் என்ற முறையில் சொல்லவில்லை. மானாமதுரை கிழக்கு இராமநாதபுரத்தின் நடுமத்தியிலிருக்கிறது. வைகை ஆறு ஓடுகிறது. தண்ணீர் வசதி இருக்கிறது. யாரும் வந்து தங்குவதற்கு வசதியாக இருக்கிறது. அலுவலர்கள் மதுரையில் தங்க விரும்புகிறார்களே தவிர மற்றயிடங்களில் தங்க விரும்புவதில்லை. இந்த தலைநகரை மாற்றும் பிரச்னை தாமதப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே கூடிய விரைவில் ஆழ்ந்து பரிசீலித்து மானாமதுரையையே தலைநகராக ஆக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தால் நலமாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையை நான் குறிப்பில் எடுத்துக்கொள்வேன்.

திரு. கே. கந்தசாமி : அரசாங்கம் நிதானத்தோடு, ஆலோசனைக்குழுவின் அறிவுரைகளையும் பரிசீலித்து நிதானமாக முடிவு எடுக்கும் என்பதில் மகிழ்ச்சி. ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது விருதுநகரா இராமேஸ்வரமா என்ற குறிப்பையும் சுட்டிக்காட்டி இராமேஸ்வரம் என்று பெயர் கொடுப்பது என்பதில் ஹிஸ்டாரிக்கல் பாக்ரவுண்ட் இருப்பதாகச் சொன்னார்கள். முக்கியமாக இராமநாதபுரம் என்ற பெயர் இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் பெயர் ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை நிலைபெற்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லோருக்கும் தெரியும், கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே கந்தசாமி : முக்கியமான காரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் சேதுபதி அவர்கள் காசியிலிருந்து இராமேஸ்வரம் வரையில் இந்துக்கள் பிரயாணம் செய்தால், யாத்திரை செய்தால், யாத்திரை முடிவுறும்போது இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் பாதத்தைத் தொட்டு ஆசி பெறவேண்டும் என்று இந்துக்கள் கருதுகிற அளவிற்கு அப்படி சரித்திரப் பிரசித்திபெற்ற இராமநாதபுரம் என்ற பெயர் நிலைக்குமாறு கருத்தில்கொண்டு இந்த ஏற்பாட்டை செய்தால் நலமாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : கனம் உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களின் சரித்திரபூர்வமான விளக்கத்தைக் கேட்டு நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். இராமநாதபுரத்திற்கு இராமேஸ்வரம் என்று பெயர் வைக்கவேண்டும் என்பது என் கருத்து அல்ல. அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷனின் கருத்து. நீங்கள் அது இராமநாதபுரமாகத்தான் இருக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறீர்கள். அதற்கு சில காரணங்களைக் காட்டியிருக்கிறீர்கள். அதையும் நான் கருத்தில் கொண்டேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நில வாடகை பாக்கி.

*182. வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையில் உள்ள உணவு சிற்றுண்டி விடுதி நிர்வாகம் நிலவாடகையாக அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி ஏதேனும் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஆண்டுகளாக, எவ்வளவு பாக்கியுள்ளது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) ஆம்.

(ஆ) புகாரி அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்னும் உணவு சிற்றுண்டி விடுதி நிர்வாகம் 1961 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய திருவல்லிக்கேணி R. S. No. 3374/1-ல் அரசுக்குச் சொந்தமான சுமார் 8 கிரவுண்டு 1920 சதுர அடி நிலத்தை வேலிபோட்டு ஆக்கிரமிப்பு செய்திருந்தது. இந்த ஆக்கிரமிப்புக்கு உரிய குத்தகைத் தொகை (Full Competitive

Rent) ஒரு பசலிக்கு ரூ. 9,011.20 விதம் ஆறு பசலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன தொகை விதிக்கப்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியரின் ஆணையை எதிர்த்து சிற்றுண்டி விடுதி நிர்வாகம் வருவாய் வாரியத்திற்கு (Board of Revenue) மேல்முறையீடு மனு தாக்கல் செய்திருக்கிறது. அது இன்னும் பைசல் செய்யப்படாமல் இருப்பதால் மேற்சொன்ன தொகை வசூலிக்கப்படவில்லை.

தும்போடு கிராமத்தில் நில ஒப்படை.

* 183. வினா—திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலூக்கா தும்போடு கிராமத்திலுள்ள அரசுக்கு பயனில்லாத புறம்போக்கு நிலத்தை 53 ஏழை குடி. மக்களுக்கு பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9-10]

திரு. ஜே. ஜேம்ஸ்; தலைவர் அவர்களே, இப்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும், அந்தப் பகுதிகளில் ஏழைகள் புறம்போக்கு நிலங்களில் வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களில் அப்படி குடிசைகள் அமைத்திருப்பதோடு அல்லாமல், தனியார் நிலங்களிலும் குடிசைகள் அமைத்திருக்கிறார்கள். ஆக, இம்மாதிரி நிலமற்ற குடிசையிலே வாழக்கூடிய ஏழைகளுக்கு 5 செண்ட் வீதம் ஏற்கனவே உள்ள அரசாங்கத்தின் திட்டப்படி வீட்டு மனை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தும்பக்கோடு கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தைப் பற்றி கொஞ்சம் விளக்கமாகவே தெரிவிக்கிறேன். அரசின் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மனை கட்டி 63 வீடற்ற ஏழை மக்கள் ஆக்கிரமித்திருக்கின்றனர். அதற்கான விவரங்கள் எல்லாம்

இங்கே குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட நிலங்கள் பொதுப் பணித் துறையினரின் பராமரிப்பில் உள்ளவை. பொதுவாக கால்வாய், வாய்க்கால் முதலான புறம்போக்கிலுள்ள ஆக்கிரமிப்புகள் முதல் நோக்கில் (Prima facie) ஆட்சேபணை உள்ளதாகக் கருதி, அவற்றை காலி செய்வதுதான் விதி முறைக்குட்பட்ட வழக்கம். திருவட்டார் காங்கிரஸ் குழு செயலாளரான திரு. ஏ. கே. ராஜா என்பவர் மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்துள்ள மனுவில், மேற்கண்ட சர்வே எண்ணுள்ள நிலங்களின் மீது குடியிருப்பு மனை கட்டுவதற்காக ஆக்கிரமித்துள்ள ஏழை மக்களுக்கு பட்டா வழங்கக் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கையின் பயனாக, மேல்கண்ட நிலங்களை குடியிருப்பு மனைக்காக பட்டா வழங்கலாமா, கூடாதா என்பது குறித்து மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியாளர் நாகர்கோயிலுள்ள பொதுப்பணித் துறையினரின் ஆக்கப் பொறியாளரையும், தும்பக்கோடு நகர பஞ்சாயத்து ஆக்க அலுவலரையும் குறிப்புரை கேட்டுள்ளார். அவர்களது கருத்துக்களை அறிந்த பின்னர் பொதுப் பணித் துறையினரின் பொறுப்பிலுள்ள புறம்போக்கு நிலங்களின் பாகுபாட்டை, தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சைத் தரிசு நிலமாக பாகுபாடு மாற்றியமைக்க, மாவட்ட ஆட்சியாளரால் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு பாகுபாடை மாற்றிய பின்னரே, ஆக்கிரமிப்புதாரரின் தகுதியை ஆய்ந்து அடமான விதிமுறைக்குட்பட்டு குடியிருப்பு மனைக்கான பட்டா வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சியாளரால் மேல்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சாதாரணமாக பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நிலங்களை குடியிருப்புகளுக்கு அவர்கள் அனுமதி வழங்குவதில்லை. ஒரு வேளை அவர்கள் அப்படி அனுமதி வழங்க முடியாது என்று சொன்னாலும்கூட, ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த புறம்போக்கு நிலங்கள் அங்கே அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு அந்த நிலங்களையாவது பட்டா செய்து கொடுக்க இந்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இப்படிக் கற்பனை செய்து கொண்டு கேள்விகள் கேட்பது ஜேம்ஸ் அவர்களின் வழக்கம். அப்படி கற்பனை செய்து கொண்டு பதில் சொல்லும் வழக்கம் எனக்கில்லை.

கடானு நதி இராமா நதி இணைப்பு.

* 184. வின— திரு. சு. முத்துசாமி கரையாளர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள கடானு நதி இராமா நதி இணைப்புக் கால்வாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இந்த திட்டம் எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இத்திட்டத்திற்கான முன்னேடி மதிப்பீடு தயாராகி வருகிறது.

(ஆ) விரிவான ஆய்வு முடிந்து திட்டம் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் இக்கேள்விக்கு விடையளிக்க இயலும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பயனுக்கு வருவதால் எந்தெந்த கிராமங்கள் பயன்பெறும்? இதனால் எத்தனை ஏக்கராக்கள் பயன் பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்கான முதல் நிலை ஆய்வு மதிப்பீடு 9½ கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தெந்த பகுதிகள் பயன் பெறும் என்கின்ற செயற் குறிப்பு இப்போது என்னிடம் இல்லை.

குதிரையாறு அணைத் திட்டம்.

* 185. வின— திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் குதிரையாறு அணைக்கட்டு திட்டம் அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் என்ன நிலையில் இருக்கிறது?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(ஆ) தலைமைப் பொறியாளர் (பாசனம்) தயாரித்துள்ள இத்திட்டமானது பொருளாதார அனுகூலமற்றது என்று தெரிந்ததினால் அத்திட்டச் செலவைக் குறைப்பதற்கு மறு புலனாய்வு நடத்தப்படுகிறது.

(இ) இத்திட்டத்தின் திருந்திய மதிப்பீடு தயாரித்து பரிசீலனை செய்தபின் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசு முடிவெடுக்கும்.

[முற்பகல் 9-20]

திரு. நா. பழனிவேலு: மதுரை மாவட்டத்தில் குதிரையாறு திட்டம் பழனி தொகுதியில் அங்குள்ள மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது. ஏற்கனவே இருந்த தி.மு.க. அரசு இதற்கான திட்டத்தை தீட்டி கட்டப்போவதாக இருந்தது. பின்னல் என்ன காரணத்தினலோ நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போதுள்ள அரசின் பட்ஜெட்டில் கொடுத்த ஒரு குறிப்பில் இந்த அணை சேர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனல் இப்போது மறுபரிசீலனை செய்யப்படுகிறது என்று சொல்வது பெரிய ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தருவதாக இருக்கிறது. இந்த மறுபரிசீலனை செய்ய வேண்டியதின் நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டில் சில திட்டங்களை கொள்கையளவில் ஒப்புக்கொள்வதாக சொல்லி சில திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி விரிவாக ஆய்வு செய்கிறபோது, சில ஆதாயமற்றவை என்றும், சில சிக்கனமற்றவை என்றும் தெரிகிறது. ஆகவே, செலவை கருதியும், நிறைவேற்றுகின்ற வகையிலும் ஏதாவது வழி செய்வதற்காக இப்போது அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

நிலநீர்ப் பிரிவு வேலை நிதி ஊழியர் சம்பளம்.

* 186. வின— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி பொதுப் பணித் துறை நிலநீர் பிரிவு வேலை நிதி ஊழியர்களில் பலருக்கு கடந்த 24—11—70 முதல் அடிப்படை சம்பளம் அறிவிக்கப்படாமல் காலம் தாழ்த்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு ஆணை எண் 1632, பொதுப் பணித்துறை, நாள் 26—10—77-ல் பொதுப் பணித்துறை நிலநீர் பிரிவு மாநில சேவையாக்கப்பட்ட பதினொரு வகை ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை 24—11—70 முதல் அரசு அங்கீகரித்துள்ளது. இந்த ஆணை அமுல் படுத்தப்பட்டு வருகிறது. ஏனைய ஏழு வகை ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட சம்பள விகிதங்களை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே இதனால் பயன் அடைந்த ஊழியர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கிரௌண்ட் வாட்டர் துறையிலுள்ள—வொர்க் சார்ஜ்டு எம்ப்ளாயீஸ் அத்தனை பேரும் பயன் அடைகிறார்கள்.

இடிந்தகரையிலுள்ள மீன் பதனிடும் நிலையம்.

*187. வினா— திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள இடிந்தகரையில் அமைக்கப்பட்ட மீன் பதனிடும் குளிர்சாதன நிலையம் பயனின்றி முடங்கியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய காரணங்கள் யாவை?

(இ) இந்த நிலையத்தை மீண்டும் இயங்க வைக்க அரசிடம் என்ன செயல் திட்டம் உள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) மற்றும் (ஆ) ஆம். 1974 ஆம் ஆண்டு மார்ச்சில் கன்னியாகுமரி பனிக்கட்டி நிலையம் அதன் ஷெல் மற்றும் கன்டென்ஸர் பழுதுற்றமையால் இயங்காநிலையை அடைந்தது. கன்னியாகுமரி பனிக்கட்டி நிலையம் நீண்டகாலம் இயங்காமலிருந்தால் ஏற்படும் நட்டத்தைக் கருத்தில் கொண்டும் அவ்வமயம் இடிந்தகரை பனிக்கட்டி நிலையம் தொடர்ச்சியாக மின்சாரம் இன்மையால் சரிவர இயங்காமல் இருந்தமையாலும் இடிந்தகரை பனிக்கட்டி நிலையத்தின் ஷெல் மற்றும் டியூப் கன்டென்சரை கன்னியாகுமரியில் உள்ள பனிக்கட்டி நிலையத்தில் பொருத்தப்பட்டது. இதனால் ஏப்ரல் 1974 முதல் இடிந்தகரை மீன் பதனிடும் குளிர்சாதன மற்றும் பனிக்கட்டி நிலையம் இயங்காத நிலையில் உள்ளது.

(இ) புதிய கன்டென்ஸர் வாங்கிப் பொருத்துவதில் ஏற்படும் நடைமுறைகால விரயத்தைத் தவிர்க்கச் சமீபத்தில் மூடப்பட்ட நீலங்கரை பனிக்கட்டி நிலையத்தின் இயற்சூழ்நிலை கன்டென்ஸரை இடிந்தகரையில் பொருத்துவதற்கு ஓர் நீர்த் தொட்டி அவசியம். இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கும்படி நாங்குநேரி பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளரும் கோரப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மதிப்பீடுகள் வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இடிந்தகரை பகுதி வெளிநாட்டு செலாவணியைத் தரக்கூடிய வகையில் விரால் மீன்கள் கிடைக்கக் கூடிய வகையில் மீன்பிடி இடமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் இருக்கின்ற குளிர் பதனிடும் சாதனங்களை நிரந்தரமாக இயக்குகின்ற வகையில் அந்த இடிந்தகரையில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றாமல் அங்கேயே நிரந்தரமாக, ஒழுங்காக செயல்படக்கூடிய வகையில் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கான விடையிலேயே இதற்கான விடையும் இருக்கிறது.

கிண்டி பகுதியில் குத்தகைக்கு விடப்பட்ட நிலம்.

*188. வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி பார்க்கில் தனியாருக்கு இடம் குத்தகைக்கு (Lease) கொடுக்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) 0.4 ஹெக்டேர் (ஒரு ஏக்கர்) பாம்புப்பண்ணை வைப்பதற்காக திரு. ரோமுலஸ் விட்டேகர் என்பவருக்கு குத்தகைக்கு 26—7—1971 முதல் 5 வருட காலத்திற்கு ஆண்டுக்கு ரூ. 120 குத்தகைத் தொகைக்கு விடப்பட்டது. குத்தகையை புதுப்பிக்கும் போது 0.4 ஹெக்டேர் கூடுதல் நிலத்துடன் திரு. ரோமுலஸ் விட்டேகரை கௌரவ இயக்குநராகக் கொண்டு தற்போது

இயங்கிவரும் சென்னை பாம்புப் பண்ணை நிறுவனத்திற்கு 26—7—1976 முதல் 25 வருடங்களுக்கு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 120 வீதத் தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. கொடுக்கப்பட இருந்த கூடுதல் நிலம் இன்னமும் பாம்புப்பண்ணை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

பொறியியல் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு.

* 189. விஞ:—திரு. கே. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் பொறியியல் கல்லூரிகளுக்கான மாணவர் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த மாணவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள், பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் முறையே எத்தனை பேர்?

(இ) தேர்விற்கான குறைந்த பட்ச மார்க்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) 1,328.

(ஆ) தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 244.

பின்தங்கிய மாணவர்கள் 707.

(இ) பொறியியல் கல்லூரியில் சேர்வதற்காகக் குறிப்பிடப் பட்டிருக்கும் தகுதிப் படிப்புக்கான தேர்வில், கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதிகம்-இராசாயனம் இரண்டிற்கும் சேர்த்து 100 மார்க்கும் வைத்து, இந்த 200 மார்க்கும், நேர்முகத் தேர்விற்கு 75 மார்க்கும் எனக் கொண்டு, இந்த 275 மார்க் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு இடங்கள் ஒதுக்கப்படுகின்றனவா? அப்படியானல் ஏதாவது சதவிகிதம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்று இல்லை. பின்தங்கிய வகுப்பினர் என்பதிலேயே எல்லாம் அடங்கும்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பொறியியல் கல்லூரி, மருத்துவக்கல்லூரி ஆகிய இடங்களில் ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தை அவர்களிலேயே வாய்ப்பு வசதி அதிகமாக உள்ள வீட்டுக் குழந்தைகளுக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள், கிராமத்தில் இருக்கும் ஏழைகள் என்றும் மற்றவர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து கிராமப் புறத்தில் இருப்பவர்களுக்கு வாய்ப்பளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இத்தனை ஆண்டு காலம் இல்லாத ஒரு நிலைமை இந்த ஆண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் அத்தனையிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இடம் பெற்றிருக்கிருர்கள். பொதுவான இடங்களில் கூட மூன்று இடங்களை அவர்கள் கைப்பற்றி இருக்கிருர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 244 என்றும், பின்தங்கிய மாணவர்களுக்கு 707 என்றும் தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ரூரல் ரெப்ரசன்டேஷன், அர்பன் ரெப்ரசன்டேஷன் என்று இரண்டாகப் பிரித்து கிராமப் பகுதிகளிலிருந்து வருகிறவர்களுக்கு பிரத்தியேகமான சலுகைகள் தரப்பட்டு அந்த மாணவர்களுக்கு அதிக வாய்ப்புத் தர செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா ? அதை அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நகர்ப்புற மாணவர்களுக்கு அதிகமான இடங்கள் கிடைக்கின்றன. அதைப் போல் கிராமப்புற மாணவர்களுக்கு இடங்கள் கிடைப்பதில்லை என்ற குறை இருந்து வருகிறது. அதற்குத் தீர்வுசெய்வதற்கான வழிமுறைகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி அரசு நிச்சயமாக ஆராயும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதிகம்-இராசாயனம் இரண்டிற்கும் சேர்த்து 100 மார்க்கும், நேர்முகத் தேர்வுக்கு 75 மார்க்கும் வைத்திருப்பதாகக் கூறினர்கள். நேர்முகத் தேர்வு எந்தெந்த வகைக்காகப் போடப்பட்டிருக்கிறது ? அதன் காரணமாக வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு வருகிறது என்பதை அரசு அறியுமா? அந்த 75 மார்க்கில் கிராமப் புறங்களில் இருந்து வருகிற மாணவர்களுக்கு இவ்வளவு மார்க் போடவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு இடம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நேர்முகத் தேர்வில் தவறுதல் நடைபெறுகிறது என்ற புகார்கள் நேர்முகத் தேர்வு இருக்கிற ஒவ்வொரு சமயத்திலும் சொல்லப்பட்டு வருகிறது. என்றாலும் அரசு அது குறித்துப் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் என்று இருக்கக்கூடிய இந்த சூழ்நிலை மாநில அளவிற்கு இருக்கின்ற கணக்குகளை மாற்றி மாவட்ட அளவிலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பேக்வர்ட் எவ்வளவு, பார்வர்டு எவ்வளவு என்று ஒதுக்கி அந்த அடிப்படையிலே சீட்கள் ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட ஒரு முறை பின்பற்றப்பட்டு அது வழக்கு மன்றத்திற்குச் சென்று அது தவறு என்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் காரணமாக மறுபடியும் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பின்தங்கியோர் பட்டியலில் எந்த எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இடம்பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தப்பட்டியல் விவரமாக சர்க்கார் கெஜட்டிலே வெளியிடப்பட்டு இருக்கிறது. நண்பர் அதைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயம் வன்னியர் சமுதாயத்திற்கு அதில் இடம் உண்டு.

திரு. சி. ஆறுமுகம் : நாயுடுகளுக்கு இருக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இப்போது பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்படுகிற மாணவர்கள் கம்யூனல் ஜி. ஓ. என்ற அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்களா ? இல்லாவிட்டால் அவர்கள் எடுக்கிற மார்க், தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கம்யூனல் ஜி. ஓ. 1948 ஆம் ஆண்டிலேயே போய்விட்டது. இப்போது பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் என்ற முறையிலே தான் பின்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவீதமும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கு 18 சதவீதமும் பொதுவாக உள்ளவர்களுக்கு 51 சதவீதமும் என்ற நிலைமையில் ஒதுக்கப்படுகிறது. அந்த அந்த விகிதாச்சாரத்தின்படி அதிலே மார்க்குகளைப் பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள்.

அவசரகால நிலையின்போது பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

*190. வினா—திரு ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது அரசுப் பள்ளி ஆசிரியர் பலர் பணியிலிருந்து நீக்கப்பட்டார்களா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

(இ) அவசரக் காலச் சட்டம் நீக்கப்பட்டதற்குப் பின்னர் அவர்களுள் எத்தனை பேர் மீண்டும் பணியில் அமர்த்திக் கொள்ளப்பட்டுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தஞ்சை மாவட்டம், ஆதியாக்கமங்கலம் அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றி வந்த திரு. டி. சரவணன் என்ற ஒருவர் மட்டும் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.

(ஆ) திரு. சரவணன் ஆசிரியராக இருந்து நடத்தும் நல்ல தமிழோசை என்ற தமிழ் நாளேட்டில் அவர் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரை இந்திய பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாவல் விதிகள், 1971, 36 (6) மற்றும் (இ) மற்றும் 36 (7) விதிகளின்படி தவறான எண்ணமுள்ள கருத்துக்களைக் கொண்டிருந்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) அதுபற்றிய கோரிக்கை ஆசிரியர் கழகத்தினால் அரசுக்கு அனுப்பப்பட்டது. அது ஆலோசனையில் இருந்து வருகிறது.

வேலூர் அரசினர் கலைக் கல்லூரி.

*191. வினா—திரு. அ. க. அரங்கநாதன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரில் உள்ள முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.காம். போன்ற முதுநிலை பட்ட வகுப்புகள் துவங்கும் உத்தேசம் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான குழாய்கள்.

192. வினு—திரு. கே. பன்னை சேதுராம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு தேவைப்படும் இரும்பு குழாய்கள் எந்தத் தொழிற்சாலையிலிருந்து வரவழைக்கப்படுகின்றன ?

(ஆ) தனியார் நிறுவனங்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான இரும்புக் குழாய்கள் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றன:—

(1) திருவாளர்கள் இந்தியன் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி, கல்கத்தா;

(2) திருவாளர்கள் சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை; மற்றும்

(3) திருவாளர்கள் எலெக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட், கல்கத்தா.

(ஆ) ஆம்.

(இ) மேற்கூறியவற்றில் எலக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட், கல்கத்தா மட்டும் தனியார் நிறுவனம். இந்த நிறுவனம் 125 மிலி மீட்டர் முதல் 600 மிலி மீட்டர் வரை விட்டம் உள்ள இரும்புக் குழாய்கள் தயாரிக்கின்றது. இந்த நிறுவனம் D.G.S. and D.-யுடன், இரும்புக் குழாய்கள் சப்ளை செய்வதற்கான ரேட் காண்ட்ராக்ட் பெற்றிருக்கிறது.

திரு. கே. பன்னை சேதுராம்: தலைவர் அவர்களே, டான்சி நிறுவனங்களிலே மொத்தம் எத்தனை இரும்பு வார்ப்பட தொழிற்சாலைகள் உள்ளன ? அவைகளிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு எவ்வளவு இரும்பு வார்ப்பட குழாய்கள் வாங்கப்படுகின்றன? தஞ்சாவூரிலே உள்ள அந்தத் தொழிற்சாலையிலிருந்து குழாய்கள் வாங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளுக்கு எல்லாம் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராசன் : இந்த குடிநீர் வாரியத்தில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் குழாய்கள் சரிவர வேலைசெய்யவில்லையென்பதை அரசு அறியுமா? இனிமேல் பிளாஸ்டிக் குழாய்களை வாங்காமல் இரும்புக் குழாய்களை மட்டும் வாங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது பற்றிய தகவலைக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சேலத்திற்குப் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

*193. வினு—திரு. ரா. நாராயணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சேலம் நகருக்கான பாதாள சாக்கடை அமைப்புத் திட்டத்தை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடனுதவியுடன் உடனடியாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

இந்திய நிர்வாகப்பணி பயிற்சி நிலையம், சென்னை.

*194. வினு—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

I.A.S. பயிற்சிக்கெனச் சென்னையில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் ஆண்டுதோறும் எத்தனை அரிசன மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : I.A.S. பயிற்சிக்கென சென்னையில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் 1974-75, 1975-76 மற்றும் 1976-77 ஆம் ஆண்டுகளில் முறையே 37, 45 மற்றும் 37 அரிசன மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள்,

[1978 சனவரி 10

[முற்பகல் 9.30]

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, சென்னையிலே ஐ.ஏ.எஸ். பயிற்சிக்கென அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது? இங்கே பயிற்சி பெற்ற மாணவர்களில் இந்தியாவில் மத்திய அரசாங்கத்தில் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கிறது? அவர்கள் எந்தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே ஒவ்வொரு ஆண்டும் எத்தனை மாணவர்கள் என்கின்ற பட்டியலில் ஒரு குறிப்பைத் தான் சொல்லியிருக்கிறேன். 1966–67ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் 42 முதல் 37 க்குக் குறையாமல் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதுவரையில் 379 மாணவர்கள் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்களில் தேர்வு பெற்றவர்கள் அதிகமாக இருந்தாலும் இறுதியாக வேலைக்குத் அமர்த்தப்பட்டவர்கள் 31 பேர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே இந்த ஐ.ஏ.எஸ். ட்ரெயினிங் சென்டரில் ஷெட்யூல்ட் காஸ்ட் மாணவர்கள் மட்டும்தான் சேர்க்கப்படுகிறார்களா? அல்லது பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் சேர்க்கப்படுகிறார்களா? அப்படி ஒருவேளை பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்படவில்லையென்றால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்கு இப்படிப்பட்ட ட்ரெய்னிங் சென்டர்களை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்பொழுது சென்னையிலே பயிற்சி தருகின்ற இந்த ஐ.ஏ.எஸ். பயிற்சிக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களும், மலை ஜாதி மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இதில் அகில இந்திய அளவில் எல்லா மாநிலங்களிலிருந்தும் வருகின்ற மாணவர்கள் இடம் பெறுகிறார்கள். பின்தங்கிய மாணவர்களுக்கென தனியாக "சிறப்புப் பயற்சி நிலையம்" 12—12—71 முதல் சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அரிசன மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ். பயிற்சி அளிக்கப்படுகின்ற நிலையிலே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் யாவை? ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பொருளாதார ரீதியில் எவ்வளவு செலவாகிறது?

1978 சனவரி 10]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்பொழுது அவர்களுக்கு உணவும், உறைவிடமும் இலவசமாக அளிக்கப்படுகிறது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு அவர்கள் வேலை பெறுகின்ற நேரத்தில் ஆயிரம் ரூபாய் இனமாக மற்ற பயிற்சி செலவுகளுக்குத் தருவதற்கும் அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி நிலையத்தில் நான் படித்தவன் என்ற காரணத்தால் கேட்கிறேன். அதில் நான் தோல்வி அடைந்தவன் என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தப் பயிற்சி நிலையத்தில் தக்க பயிற்சி அளிப்பதில்லை. விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் சரியாகப் போதிப்பதில்லை. கட்டிடமும் பாழடைந்து தகர்ந்து கொண்டு இருக்கிறது. அதனால் மாணவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். அலகாபாத்தில் இருப்பதுபோல் இங்கும் செய்தால் நூலக வசதி, மற்ற வசதிகள் எல்லாம் கிடைத்து, தரமாக கல்வி கொடுக்க ஏதுவாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தோல்வி அடைந்ததற்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல, அவர்தான் பொறுப்பு. இப்பொழுது அந்தப் பயிற்சிப் பள்ளியில் நல்ல அனுபவமுள்ள ஆசிரியர்களை வைத்துத்தான் பாடம் சொல்லித்தருகிறார்கள். சொல்லித் தருகின்ற பாடத்தை ஏற்று படித்து வெற்றிபெற வேண்டிய கடமையும், பொறுப்பும் மாணவர்களுக்குத்தான் இருக்கிறதேயொழிய ஆசிரியர்களுக்கு இல்லை அல்லது அரசாங்கத்தின் கையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரிசன மாணவர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. அந்த உறுப்பினர்கள் கேட்டால் நலமாக இருக்கும். அடுத்து கேள்வி எண் 195.

திரு. ரா. மார்க்கபந்து : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, மன்றத்திலே போடப்படும் கேள்விகள் ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பொறுத்துப் போடப்படுவதில்லை. அப்படிப் போட்டாலும் பல செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேள்வி கேட்பதற்கு உரிமை உண்டு. எனவே, நீங்கள் அப்படித் தள்ளிவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் அறிவுரைக்கு என் நன்றி.

மனவெளித்தெரு அரிசனக் குடியிருப்பு.

*195. வினா—திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் குத்தாலம் ஒன்றியம் கடலங்குடி ஊராட்சி மனவெளித்தெரு அரிசனங்கள் வசிக்கும் இடம் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி குடிசைகள் பாதிக்கும்படி உள்ளதால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

அண்ணாசாலையிலுள்ள ரயில்வே அலுவலகம்.

*196. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சா தயவு செயது கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணாசாலையிலுள்ள தென்னிந்திய ரயில்வே பயணச் சீட்டு வழங்கும அலுவலகத்திற்கு Mount Road Booking Station என்பதற்குப் பதிலாக Anna Salai Booking Station என்று மாற்றி அமைத்திடுமாறு மத்திய அரசினை நமது அரசு கோரியுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னையிலுள்ள மவுண்ட் ரோடு என்று வழங்கப்பட்ட இடத்தை அண்ணாசாலை என்று மாற்றி நீண்ட நாட்களாகியிருக்கிறது. அங்கேயுள்ள மவுண்ட் ரோடு காவல் நிலையம், அண்ணா சாலை காவல் நிலையம் என்றும் மவுண்ட் ரோடு அஞ்சல் நிலையம் என்பது—அது மத்திய சர்க்காரது தொடர்புள்ள துறை—அண்ணா சாலை அஞ்சல் நிலையம் என்றும் மாற்றப்பட்டிருந்தும் அங்குள்ள மவுண்ட் ரோடு புக்கிங் ஸ்டேஷன், அண்ணாசாலை புக்கிங் ஸ்டேஷன் என்று மாற்றப்படாமலிருக்கிறதே, அதை விரைந்து மாற்றுகின்ற வகையில் செயல்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மவுண்ட் ரோடு என்பதை அண்ணாசாலை என்று மாற்ற வேண்டுமென இரயில்வேக்கு மாநில அரசு எழுதியிருக்கிறது. மீண்டும் இதை நினைவுபடுத்தி விரைவில் இதைச் செய்ய ஆவன செய்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில்பட்டி—பசுவந்தனை சாலை.

*197. வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி—பசுவந்தனை சாலை நீண்ட காலமாக சீர் செய்யப்படாமலும் பாலங்கள் அமைக்காமலும் உள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், இந்த சாலை செம்மையாக அமைய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (ஆ) கோவில்பட்டி—பசுவந்தனை சாலையின் ஒரு பகுதி அதாவது கி.மீ. 0.0 முதல் 12.8 வரை ஊரகச்சாலைத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டு, 14—9—1974 முதல் அரசின் பராமரிப்பில் உள்ளது. மீதமுள்ள சாலையை (கி.மீ. 12.8 முதல் 22.8 வரை) மேம்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சாலை ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்னால்போடப்பட்ட சாலை. அது 30 மைலைச் சுற்றுவதற்குப் பதிலாக, 10, 12 மைல் சுற்றளவிலேயே சுருக்குகிற முறையில் அமைந்திருக்கிற மிக முக்கியமான இணைப்புச் சாலை. இவ்வளவு காலதாமதமாகியும் அதைச் செப்பனிடும் உத்தேசம் இல்லையென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதேபோல், கோட்டூர் உத்தலாபுரம், கருவப்பட்டி மேழிச்சாலை, பல கிராமங்களை இணைக்கின்ற சாலை. அது மிக முக்கியமான சாலை என்பதால், அந்த மூன்று சாலைகளையும், உடனடியாகச் செப்பனிட்டு, துரிதமாகப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய சாலைகளின் முக்கியத்துவம் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. அவற்றில் முக்கியத்

துவம் உண்டு என்பதையும் அரசு உணருகிறது. இதர சாலைகளின் முக்கியத்துவத்திற்கேற்ப, அரசின் நிதிநிலைக்கேற்ப இத்திட்டத்தை அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலைகளை அகலப்படுத்த மரங்களை அகற்றுதல்.

*198. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலையை அகலப்படுத்தும்போது வெட்டப்படும் மரங்களுக்குப் பதிலாக புதிதாக மரங்களை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சாலைப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவோ அல்லது சாலை அபிவிருத்திப் பணிகளுக்கு குறுக்கீடாக இருந்தால் மட்டுமே, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளை முன்னிட்டு, சில மரங்கள் வெட்டப்படுகின்றன. அவ்வாறு வெட்டப்பட்ட மரங்களுக்குப் பதிலாக புதியமரங்களை நடுவதற்கு போக்குவரத்து சூழ்நிலைகளை அனுசரித்தும், நிதி ஒதுக்கீடு வசதியைக் கொண்டும் தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அப்படி சாலைகளை அகலப்படுத்தும்போது, ஒருசிலருடைய பூமியை அதிகமாக இழக்க வேண்டி இருக்கிறது. அப்படி இழக்கும் பூமிகளுக்கு இழப்புத் தொகையாக, ஈட்டுத் தொகையாகக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மரங்களை வெட்டுவதைப் பற்றியதாகும். நிலத்தை எடுப்பதைப் பற்றியதல்ல. ஆகவே, உறுப்பினர் தனிக் கேள்வியாக கேட்டால், விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, சாலைப் பாக்குவரத்துக்கு இடைஞ்சல் இருப்பதற்காக மட்டும் மரங்களை வெட்ட வேண்டியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், மதுரையிலே இருக்கிற ரெயில் ஸ்டேஷன் பக்கத்தில், மங்கம்மாள் சத்திரத்திற்கு அருகில் மிக அகலமான சாலைகள் இருந்தும் அங்கேயிருந்த மரங்கள் அத்தனையும் வெட்டப்பட்டிருக்கின்றன. அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வினாவைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் சாலைகளில் குறுக்கிடாத ஒழிய மரங்களை வெட்டக் கூடாது என்பதில் கண்டிப்பாகவுள்ளது. அதிக மரங்களை நடவேண்டுமென்று அரசு உத்திரவிட்டுள்ளது. சாலை ஓரங்களில் அதிக மரங்களை நட்டு வளர்ப்பதில் இந்த அரசு கருத்தோடு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, திருச்சி புதுக்கோட்டை சாலையிலே மரங்கள் நிறைய இருக்கின்றன. சில மரங்களின் மேல் பக்கத்திலே இருக்கிற கிளைகள் எல்லாம் வெட்டப்பட்டு மொட்டையாக இருக்கிறது. ஆனால் அவைகள் அப்புறப்படுத்தப்படவில்லை. ஆகவே அந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி, சாலைகளை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலையை அகலப் படுத்துவது நிதி நிலைமையைப் பொறுத்தது. ஆனால் மரங்களை அப்புறப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் இருக்கும் மரங்கள் திருடு போய்க் கொண்டு இருக்கின்றன. அந்த மரங்கள் திருடப்படுவதற்கு பொதுப் பணித்துறையின் அதிகாரிகளே உடந்தையாக இருக்கிறார்கள். ஆகவே அந்த மரங்களை பொதுப்பணித்துறை நிர்வாகத்தின் கீழ் இருந்து எடுத்து, வன இலாகாவினர் பொறுப்பில் வைத்தால், திருட்டுப் போவதைத் தடுக்க முடியும். எனவே, அந்த மரங்களை வன இலாகாவின் பொறுப்பிலே வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும். எந்தத் துறையிலே அதிகாரிகள் மரங்களைத் திருடுவதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால், கண்டிப்பாக அதிகாரிகள் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கக் கூடிய மரங்களை வெட்டுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே சமயத்திலே என்னுடைய தொகுதியான ஒட்டன்சத்திரம் என்ற ஊரில், பெரிய பெரிய மரங்கள் எல்லாம் ஊருக்குள் இருக்கின்றன.

அவைகளை எல்லாம் வெட்டுவதற்கு முயற்சி எடுக்காமல், அங்கே உள்ள கட்டடங்களை இடித்துவிட வேண்டும் என்று ஹைவேஸ் டிப்பார்ட்மென்டில் இருந்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கட்டடங்களை இடிக்காமல், மரங்களை வெட்டுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே, சாலையிலே தனியார்கள், ஏழை எளியவர்கள் நிலங்களை, ஆக்கிரமித்து இருக்கிற காரணத்தினால், அங்கே கட்டியிருக்கிற கடைகளை அப்புறப்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. அதோடு அந்தப் பகுதி நிலங்களை ஆக்கிரமித்து ஏழை எளியவர்களிடம் இருந்து பணக்காரர்கள் அந்தக் கடைகளைப் பெற்று பெரும் லாபம் சம்பாதிப்பதாக தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் பரிசீலித்து வருகிறோம். பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. (திருச்சி) ஆர். செளந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளில் புதிய மரங்கள் நடப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் அப்படி நடப்படுகிற செடிகள் ஓரளவுக்கு வளர்ந்து வருகிற வரையில் தக்கப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பாதிக்கப்படுகின்றது. வளர்ச்சி இல்லாமல் போகிறது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மரங்களை நடுவதோடு மட்டுமல்ல, நட்ட மரங்களை நல்ல முறையில் பாதுகாக்க சில திட்டங்களை செயலாக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வனத் துறை இலாகாவிடம் ஒப்படைப்பதைப் பரிசீலிப்பதாக சொன்னார்கள். மிக அபாயகரமான ஆலோசனை என்பதும், அதற்குப் பதிலாக அந்தந்த சாலைக்கு அருகாமையில் இருக்கிற கிராம மக்களிடம் குத்தகைக்கு விட்டால்—சாதாரணமாக விடுகிறார்கள்—நல்லது. ஏனென்றால் மக்கள் பாதுகாக்கிற முறையில் வேறு யாரும் பாதுகாக்க முடியாது. எனவே இதைக் குறித்து அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் மரங்களைப் பொதுப்பணித் துறையில் விடுவதால் ஊழல் நடப்பதாகத் தெரிவித்தார்கள். வனத்துறை இலாகாவிலும் ஊழல் நடப்ப

தாக கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொல்லுகிறார்கள். இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. பொதுமக்களிடம் பொறுப்பினை விட முடியுமா என்பதனை அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, சர்க்கார் கருத்தை தெரிவிக்கிற வரையிலே, சாலை ஓரங்களில் தென்னை, மா, புளியம் போன்ற மரங்களை நடுவதில் இந்த அரசு ஈடுபாடுகொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் மா மரங்களை நடுவது என்பது கூடாது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. காரணம் சாலைப் போக்குவரத்துக்கு இது இடையூறாக இருக்கும். புளிய மரங்களை வைப்பதைப் பற்றி அரசு ஆய்ந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூர் பகுதியில் அகதிகளுக்கு நிலப்பட்டா.

*199. வினா—திரு. கே. உச்சி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கை அகதிகளாக கூடலூர்ப் பகுதியில் குடியேறிய மக்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : ஆம்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அப்படி பட்டா வழங்கப்படுமானால், அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற, இதுவரை பட்டா வழங்கப்படாதவர்களுக்கு முன்னுரிமை அளித்து பட்டா வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, இதுபற்றி அரசு தீவிரமாக கவனித்து முடிவெடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ரா. செளந்தரராஜன்: தலைவரவர்களே, இலங்கையிலிருந்து அகதிகளாக வந்திருப்பவர்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசுமுன் வருமா ?

<u>மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, கேள்வி கூடலூரைப் பற்றியது. தனிக் கேள்வி போடுவார்களானால் தகவல் சேகரித்து பதிலைத் தெரிவிக்கிறேன்.

<u>திரு. கே. உச்சி:</u> தலைவரவர்களே, அகதிகளுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ஒருவர் என்ற வீதத்தில் வேலை கொடுக்கப்படுகிறது. சில குடும்பங்களில், 7, 8 பேர்கள் இருந்தால், ஒருவருக்கு மட்டும் வேலை கொடுத்தால் போதாது. அப்படிப்பட்ட குடும்பங்களில் 2, 3 பேர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, இந்த அரசின் நோக்கமெல்லாம், ஒரு அகதி குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்பதாகும். ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் அல்ல, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> தலைவரவர்களே, அகதிகளாக இருக்கிறவர்களுக்கு நிலப்பட்டா தருவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பது கேள்வி. அதே நேரத்தில் ஏற்கனவே இந்த நாட்டிலேயே அகதிகளாக இருக்கிறவர்கள்...........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வி கூடலூர் பகுதியைப் பற்றியது. கூடலூர் பகுதியை ஒட்டியதாக இருந்தால் துணைக் கேள்வி கேட்கலாம். பொதுப்படையாகக் கேட்பது சரியல்ல.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> அதே நேரத்தில் ஏற்கனவே தமிழகத்தில் அகதிகளாக இருக்கிறவர்கள் புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களது நிலங்களைப் பிடுங்கிக் கொடுக்காமல், இவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற துறை, அகதிகள் மறுவாழ்வுத் துறை. அதைப் பற்றி மட்டும் கேள்விகள் கேட்டால் தகவல் அளிக்க வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவரவர்களே, இப்படி அகதிகளுக்கு வீட்டு மனைகளைக் கொடுக்கும்போது, அந்த புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள், ரெவின்யூ போர்டில் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். அந்த நிலங்களை மீண்டும் பெறுவதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இதில் கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்து, ரெவின்யூ போர்டின் தலையீடு இல்லாமல் செய்தால், நன்றாக இருக்கும்.

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, அகதிகளுக்கு மனைப்பட்டாக்கள் கொடுக்கும் விஷயத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் பரிசீலனை செய்து தகவல் தருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. அம்பிகாபதி எழுந்தார்......)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வி கூடலூர் பகுதியைப் பற்றியது. அப்பகுதியைப் பற்றி மட்டும் கேள்வி கேட்க வேண்டும். தமிழகம் பூராவும் இருக்கிறவற்றைப் பற்றி கேட்டால் அமைச்சரிடத்தில் எப்படி தகவல் இருக்க முடியும்?

<u>திரு மு. அம்பிகாபதி :</u> தலைவரவர்களே, இந்தக் கேள்வியை ஒட்டித்தான் கேட்கிறேன். அகதிகள் என்பவர்கள் கூடலூரிலும் இருக்கிறார்கள். மன்னார்குடியிலும் இருக்கிறார்கள். பர்மா சிலோன்—அகதிகளுக்குக் கொடுக்கப்பட்ட வீடுகள் புயல் வெள்ளத்தால் மன்னார்குடியில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, அகதிகளைப் பொறுத்தவரையில். தமிழ்நாட்டில், மல்லாங்கிணறு பகுதியில் புயல் வெள்ளத்தால் அகதிகளின் வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. வேறெங்கும் அகதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை. அப்படித் தகவல் தெரிந்தால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கு. ராமணி :</u> தலைவரவர்களே, சிலோனிலிருந்து வந்திருக்கும்படியான அகதிகளுக்கு நீலகிரி மாவட்டத்தில் வேலை கொடுப்பதற்காக நீலகிரி மலையில் தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று முன்பே இங்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். அந்த அகதிகளுக்கு, சொந்தமாகவே, 2, 3 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து, அவர்களை சிறு உற்பத்தியாளர்கள் என்ற நிலையை ஏற்படுத்தினால் அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு அப்படி நிலத்தை பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

<u>மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :</u> தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை கவனிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை பகுதியில் அகதிகளுக்கு வீடுகள்.

*200. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரிலும், நகரைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழும் சிலோன் அகதிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்குமாறு, கோவை அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் 10-7-1977-ல் ஒரு கோரிக்கை அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 10-7-77 அன்று மகஜர் அனுப்பி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி அனுப்பாவிட்டாலும் கூட, இப்போது எழுப்பப்பட்டிருக்கிற அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, இது பற்றி பரிசீலித்து ஆய்ந்து முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9.50]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை நகரமும், அதன் சுற்றுப்புறமும் சேர்ந்து பெரிய நகரமாகி, அங்கே தென் கிழக்கு ஆசியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் வந்திருக்கின்ற அகதிகளின் மறுவாழ்வுப் பிரச்னை மிகவும் முக்கியமானதாக ஆகி, மத்திய அரசும், மாநில அரசும் கவனித்துச் செய்கிறார்கள். அந்த மக்களில் மிக ஏழைகளாக உள்ளவர்களுக்கு, அவர்கள் குடியேற வீடுகள் கட்டிக்கொடுத்து, காலனி என்ற முறையில் நூற்றுக்கணக்கான காலனிகளில் வீடு கட்டி, சகல வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன் வருமா? அதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க பல்வேறு நடவடிக்கைகள் இந்த அரசு எடுத்து வருகிறது. மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மாதிரி திட்டங்களின்படி, இலங்கை அகதிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. கிராமப் புறங்களில் அகதிகளுக்கு 3,000 ரூபாயும், நகர்புறங்களில் 6,000 ரூபாயும் அளிக்கப்படுகிறது. இந்தக் கடன் அகதி குடும்பங்களுக்குத் தனித்தனியாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் அகதிகளின் வீட்டு வசதிக்கு நிதி ஒதுக்கீட்டில், தொகை ஒதுக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் கோவை மாவட்டத்தில் வீடு கட்ட ரூ. 7,10,000 அகதிகளுக்கு வீடு கட்ட ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் உதவி கோரி வந்துள்ள மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலனை செய்து, கடன் பெறத் தகுதியுள்ளவர்கள் கடன் வழங்கப் பெறுவர். பல்வேறு வேலை வாய்ப்புத் திட்டங்களில் வேலையும், வீடு கட்டிக்கொள்ள கடன் உதவியும் கொடுக்கப்படுகிறது.

திரு எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, கோவை பகுதியிலே இந்த அகதிகளுக்கு வீடுகட்டித் தரும் அதே நேரத்தில், அங்கே நிறைந்திருக்கிற தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புக் கொடுத்து, அந்த வேலை வாய்ப்பை ஒட்டி அவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவரவர்களே, இது பற்றி அரசு கவனித்து, பரிசீலித்து முடிவெடுக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

இடைநிலைப் பள்ளிகளில் கட்டணங்கள்.

121. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆங்கில போதனா மொழிக்காக அதிகக் கட்டணங்கள் வசூலிக்கும் நடுத்தர ஹையர் செகண்டரி பள்ளிகளை கட்டுப்படுத்துவது குறித்து ''தமிழ்நாடு ஆசிரியர் நல மன்றம்'' அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1978 சனவரி 10

எண்ணெய் வித்துக்கள் பயிரிடல்.

122. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணெய் வித்துக்களை பயிரிடும் நிலப்பரப்பை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் , விவரம் யாது?

விடை—(அ) அண்ட் (ஆ) * விவர அறிக்கை ஒன்று சபையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

அரசிதழ் பதிவு பெற்ற பதவிகள்.

123. வினா — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசில் கெசட் பதவி என்னும் தகுதி நிலையை நீக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) இதன் மூலம் ஏற்படவிருக்கும் பலன்கள் யாவை?

விடை—(அ) ஆம்.

(ஆ) புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் இப்படிப்பட்ட பாகுபாடுகள் தவிர்க்கப்பட வேண்டியவை.

சென்னை பச்சையப்பன் கல்லூரி அறங்காவலர் குழு.

124. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பச்சையப்பன் கல்லூரி அறங்காவலர் குழு கலைக்கப்பட்டுப் புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளதா?

விடை—ஆம்.

வள்ளுவர் கோட்டம்.

125. வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1365-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

1978 சனவரி 10]

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நுழைவுக் கட்டணத்தை நீக்கிவிட அரசு எண்ணியுள்ளதா?

விடை— இல்லை.

கோவை மாவட்டம் பஞ்சாலைத் தொழிலாளர்கள்.

126 வினா—திரு கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சனை சில வருடங்களாக இறுதி தீர்வு காணாமல் தொழில் தகராறு இருந்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அத்தகராறுகளைத் துரிதமாக தீர்த்து வைக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?

விடை—(அ) கோவை மாவட்ட தொழிலாளர்களுக்கான 1972-73, 1973-74 மற்றும் 1975-76 ஆண்டுகளுக்கான போனஸ் தகராறுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

(ஆ) கோவை மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1972-73 மற்றும் 1973-74 ஆம் ஆண்டுகளுக்குரிய போனஸ் தகராறுகளை தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு அனுப்புவதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த ஆணைகளின் மீது சில தொழிற் சங்கங்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அரசு ஆணைகளின் மேல் தொழில் நீதிமன்றம் எடுக்கும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. பேராணை மனுக்களின் மீது உயர் நீதிமன்றத்தின் முடிவுகள் எதிர்நோக்கப்படுகிறது.

1974-75ஆம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சனை ஒரு தொழில் தகராறாக உருவெடுக்கவில்லை.

1975-76 ஆம் ஆண்டுக்கான போனஸ் சென்னை பிரச்சனை தனித்துணை தொழிலாளர் துறை ஆணையரின் முன்பு பேச்சு வார்த்தையில் உள்ளது. அப்பேச்சுவார்த்தைகளின் முடிவு எதிர்நோக்கப்படுகிறது.

பகுதி முறையில் பள்ளியிறுதித் தேர்வு.

127 வினா— திரு கரு. இராம. சுரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 மார்ச் மாதத்திலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தோற்ற பாடங்களில் மட்டும் தேர்வு எழுதி தேறி கல்லூரிகளில் சேரும் புதுமுறையை அமுலுக்கு கொண்டு வரலாம் என்று தமிழக அரசுக்கு உயர்நிலைக் கல்வி கழகம் சிபாரிசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால் விவரம் என்ன?

விடை (அ) ஆம்.

(ஆ) தற்போது பள்ளி இறுதித் தேர்வு எழுதும் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் குறிப்பிட்ட குறைந்த அளவு மதிப்பெண்கள் ஒரே தேர்வில் பெற்றால்தான் கல்லூரிப் படிப்பிற்குத் தகுதியுள்ளவர்களாவார்கள். ஒரு மாணவன் ஒரு தேர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் தேர்வு பெறுவதற்கு உரிய குறைந்த அளவு மதிப்பெண் பெறத் தவறினால் எல்லா பாடத்திற்கும் அவர் மறு தேர்வு எழுதி நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்கள் பெற்றால் கல்லூரிப் படிப்பிற்குத் தகுதியுடையவராகக் கருதப்படுவார். மேற்கண்ட நடைமுறை கொள்கையளவில் சீரியதன்று எனக்கருதியதால் பகுதி முறையில் பள்ளியிறுதித் தேர்வினை எழுத அனுமதிக்கும் முறையைப் பற்றிய (மார்ச் 1978 முதல் அமுல்படுத்தும்) கருத்துருவினை அரசுத் தேர்வு நெறியாளர் சமர்ப்பித்துள்ளார். இம்முறையில் ஒரு மாணவன் பள்ளியிறுதித் தேர்வில் ஓரிரு பாடங்களில் தேர்ச்சி பெறவில்லையென்றால் அவன் மீண்டும் எந்த பாடங்களில் தேர்ச்சி பெறவில்லையோ அப்பாடங்களுக்கு மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு அவற்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்கள் பெற்றாலும் மேற் கல்விக்குந் தகுதியுடையவராக அறிவிக்கப்படும். மேற் கூறப்பட்ட கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

கோவை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூல்.

128. வினா— திரு கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் 1977-ல் விவசாயிகள் கடன் வசூல் செய்ய ஜப்தி செய்வதற்கான வழக்குகளை பிரைமரி நில அபிவிருத்தி பாங்கு (L. D. B.) தாக்கல் செய்திருக்கிறதா?

(ஆ) ஆம் என்றால், விவரம் என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 21 நிலவள வங்கிகளில் கடன்தாரர்களிடமிருந்து கடன் வசூல் செய்ய 3,449 நில வருவாய் ஜப்தி மனுக்கள் ரூ. 87.54 இலட்சத்திற்கு 1-1-1977 முதல் 15-11-1977 முடிய தொடரப்பட்டன. ஆனால் அவைகளில் உடுமலைப்பேட்டை நிலவள வங்கியில் 11 கடன்களிலும் அம்மாபேட்டை நிலவள வங்கியில் 4 கடன்

களிலும் ஜங்கம சொத்து ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவை தவிர, பெரியநாயக்கன்பாளையம், சிணத்துக்கடவு ஆகிய நிலவள வங்கிகளில் முறையே ஒவ்வொரு கடனில் அடமான சொத்தின் மீது ஏல நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 17 கடன்தாரர்களும் பெரும் விவசாயிகள்.

விவசாயப் பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு.

129 வினா— திரு கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு வாய்ப்பளிக்க வேண்டுமென பட்டதாரிகள் சங்கம் 1977 ஜுலையில் தமிழக அரசிடம் கோரிக்கை ஏதேனும் கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

நில உச்சவரம்பு சட்டம்.

130 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுக்கரை ஒன்றியத்தில் நில உச்ச வரம்பு சட்ட மூலம் இதுவரை கிடைத்த நிலம் எவ்வளவு?

(ஆ) அந்நிலங்கள் நிலமில்லாதோருக்கு வழங்கப்பட்டுள்ளனவா?

விடை—(அ) மதுக்கரை ஒன்றியத்தில் நில உச்ச வரம்பு சட்ட மூலம் இதுவரை கிடைத்த நிலம் 77.32 சாதாரண ஏக்கர்.

(ஆ) ஆம்.

131 வினா—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உச்ச வரம்பு சட்டத்தில் எடுத்த நிலத்தை கொடுக்க மறுத்தது குறித்து நீதிமன்றத்தில் போடப்பட்டுள்ள வழக்குகள் எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—(அ) அண்ட் (ஆ) நிலத் தீர்ப்பாயத்தில் 65 வழக்கு களும், உயர்நீதிமன்றத்தில் சிவில் மறு பரிசீலனை வழக்குகள் மனுதாரர்களால் 168-ம் அரசால் 122-ம் போடப்பட்டுள்ளன. அது தவிர உயர்நீதி மன்றத்தில் 188 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சுப்ரீம் கோர்ட்டில் மனுதாரர்களால் 16 வழக்குகளும் அரசால் 13 வழக்குகளும் தாக்கல் செய்யப் பட்டன.

அண்ணா சமாதி.

132 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேரறிஞர் அண்ணா சமாதியைப் பராமரிக்கும் பொறுப்பு தற்போது யாரிடத்தில் இருந்து வருகிறது ?

விடை—பேரறிஞர் அண்ணா சமாதியை பராமரிக்கும் பொறுப்பு பொதுப் பணித்துறையிடம் இருந்து வருகிறது.

133 வினா—திரு நா. புருஷோத்தமன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சமாதியின் பராமரிப்புச் செலவு ஆண்டுக்கு எவ்வளவு ஆகிறது?

விடை—அண்ணா சமாதியின் பராமரிப்புக்காக 1975-76-ம் ஆண்டு ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தாறாயிரத்து நூற்று இருபத்து ஆறும், 1976--77-ம் ஆண்டு ஒரு லட்சத்து தொண் ணூற்று ஒன்பதாயிரத்து முன்னூற்று எழுபத்து எட்டும், நடப்பு நிதி ஆண்டில் 30-9-1977 முடிய ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து நாலாயிரத்து பதினொன்றும் செலவிடப்பட்டுள்ளது

விருப்ப அடிப்படையில் ஹிந்தி மொழி.

134 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள சில தனியார் பள்ளி களில் இந்தி மொழியை விருப்ப அடிப்படையில் சொல்லிக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

ஆம் எனில், எத்தனை பள்ளிகளில்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளோர்.

135. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நமது மாநிலத்தில் உள்ள வேலை தேடித்தரும் நிலையங் களில் பதிவு செய்து கொண்டவர்களில் மூன்றாண்டுக் காலத்துக்கு மேலாகியும் வேலை கிடைக்காமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

விடை—31—10—1977 தேதிய நிலவரப்படி மூன்று லட்சத்து முப்பத்தி மூவாயிரத்து ஐம்பத்தெட்டு பேர்கள்.

சாத்தனூர் அணை நீர்.

136. வினா—திரு. துரை. முத்துசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்துக்கு, சாத்தனூர் அணை யின் தெற்கு கால்வாய் மூலம் தண்ணீர் விடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

விடை—(அ) இவ்வாண்டு இது இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்தல்.

137. வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து விதிமுறை ஏதேனும் அரசு விதித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த விதி முறைகளை மீறுகிற கல்லூரி கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கட்டிட தொழிலாளர் ஊதியம்.

138. வினா—திரு.என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கட்டிட தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

விடை—இல்லை.

கிள்ளை கூட்டுறவு சங்கம்.

139. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தாலூகா கிள்ளை கூட்டுறவு சங்கத்தில், அன்னவாரிச் சான்றிதழ் கொடுத்தவர்களுடைய பழைய கடன்களை நீண்டகாலக் கடனாக மாற்றி புதிய கடன்கள் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—மத்திய கூட்டுறவு வங்கியின் களப்பணியாளர்கள் இரண்டு பயிர்களின் மகசூல் 37 பைசாவுக்கும் அதிகமாக உள்ளது என்று தவறுதலாக அறிவித்தபடியால் கிள்ளை கூட்டுறவு சங்கத்தில் 29 உறுப்பினர்களுக்கு மாற்று வசதி முதலில் அனுமதிக்கப்படவில்லை. பிறகு இரண்டு பயிர்களின் மகசூலும் 37 பைசா அல்லது அதற்கும் குறைவானதாகக் கண்டறிந்து தென்னாற்காடு கூட்டுறவு மத்திய வங்கி சம்பந்தப்பட்ட 29 உறுப்பினர்களுக்குத் தற்போது வங்கியின் சொந்த நிதியிலிருந்து மாற்று வசதிக் கடன் அளித்துள்ளது. உடனே அவர்களுக்குப் புதிய கடன்கள் அளிக்குமாறும் வங்கிக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

விவசாயத் திட்டங்கள்.

140. வினா—திரு.எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எதிர்காலக் கொள்கைகளை உருவாக்க வசதியாக விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் அபிவிருத்தி ஸ்தாபன திட்டங்கள் ஆராய்வை மேற்கொள்ளும்படி மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

விடை—ஆம்.

சிலப்பதிகார ஆராய்ச்சி.

141. வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிலப்பதிகாரம் குறித்து ஆராய்ச்சி செய்ய விரும்பும் மேற்படிப்பு மாணவர்களுக்கு உதவும் வகையில் பூம்புகாரில் நூலகமும் ஆராய்ச்சி நிலையமும் (Library and Research Centre) அமைக்கும் உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—இல்லை.

கந்தகுமாரன் ஊராட்சி.

142. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா கீரபாளையம் ஒன்றியம் கந்தகுமாரன் பஞ்சாயத்தை இரண்டாக பிரிக்கக் கோரி மனு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில்: அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—(அ) அண்ட் (ஆ) சிதம்பரம் தாலுக்கா கீரபாளையம் ஒன்றியத்தில் கந்தகுமாரன் என்ற ஊராட்சி இல்லை. கலியமலை என்ற ஊராட்சியை கலியமலை, கந்தகுமாரன் என இரு ஊராட்சிகளாக பிரிவினை செய்ய கருத்துரு பெறப்பட்டு அவ்விதம் இரு ஊராட்சிகளாக பிரித்து 25—10—77-ல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்திருக்கிறார்.

(a) and (b) There is no Panchayat by name Kandakumaran in Keerapalayam Union in Chidambaram Taluk.

However, proposals were received by the Director of Rural Development, Madras for bifurcation of Kalyamalai Panchayat into two Panchayats namely Kalyamalai and Kandakumaran and the Director of Rural Development has issued orders in this regard on 25th October 1977.

பூச்சி மருந்துகள் விற்பனை.

143. வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகளுக்கு விற்கப் படும் பூச்சி மருந்துகள் தனியார் கடைகளைவிட விலைகள் அதிகமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கை கள் யாவை?

விடை—(அ) ஆம். இவ்வேறுபாடு ஒரு சில இடங்களில் இருக்கலாம். இருப்பினும் இவ்விலைகளின் வேறுபாடு மிகவும் குறைவானதாகவே இருக்கும்.

(ஆ) வேளாண்மைத்துறை அடிக்கடி உள்ளூர் மார்க்கெட் விலைகளோடு ஒப்பிட்டு அவ்வப்போது அதற்கேற்ப விலைகளை குறைத்து நிர்ணயிக்கிறது. இவ்வாறு நடப் பாண்டில் ஏழு பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலையை உள்ளூர் மார்க்கெட் விலைகளுக்கேற்ப குறைத்திருக்கிறது.

சுந்தராபுரம் நாச்சி பாளையம் நெடுஞ்சாலை.

144. வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரை நகரியக் குழு பகுதியில் உள்ள ஆற்றிற்கு அருகிலுள்ள சுந்தராபுரம் நாச்சிபாளையம் நெடுஞ்சாலையை விரிவு படுத்த வறட்சி பணி களின் கீழ் கட்டப்பட்ட தடுப்புச் சுவர் இடிந்து விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதை மீண்டும் கட்டும் உத்தேசம் உண்டா?

விடை—(அ) அண்டு (ஆ) ஆம். தடுப்புச் சுவர் வேலையைத் துவங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பேரூர் தொகுதியில் குடிநீர் வசதி.

145. வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் குனிய முத்தூர், குறிச்சி, தெலுங்குபாளையம், குமாரபாளையம் ஆகிய பேரூராட்சிகளில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—(அ) அண்டு (ஆ) குனியமுத்தூர், குறிச்சி, குமார பாளையம், பேரூராட்சியில் அடங்கிய தெலுங்குபாளையம், ஆகிய ஊர்களில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினை நிரந்தர மாகப் போக்கும் வகையாகவே இவ்வூர்கள் கோவை சிறுவாணி குடிநீர்ப் பெருக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன, மேற் கூறியத் திட்டம் 1980 ஆம் ஆண்டு மத்தியில் முடிவடையும் போது இவ்வூர்களுக்குப் போதிய அளவு குடிநீர் கிடைக்கும்.

(*a*) and (b) In order to tide over the water scarcity condition prevailing in Kuniamuthur, Kurichi and Telugupalayam village of Kumarapalayam Town Panchayat on a permanent basis these villages have been included in Coimbatore Water Supply Augmentation Scheme with Siruvani as source. These villages will get adequate water supply when the Siruvani Scheme is completed by the middle of 1980.

கேளிக்கை வரி குறித்த அறிக்கை.

146. வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கேளிக்கை வரியைப் பற்றி ஆராய்ந்து அரசுக்கு கொடுக்கப்பட்ட அறிக்கையின் முக்கிய பரிந்துரைகள் என்ன?

விடை—1975 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திரைப்படத் தொழில் விசாரணைக் குழுவின் முக்கிய பரிந்துரைகளாவன :—

''கிராம ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் கேளிக்கை வரி ஏய்ப்பினை கருத்திற்கொண்டு ஊராட்சி மட்டத் தில் கிராம, ஊராட்சி பகுதிகளில் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தர திரையரங்குகள் அளவில் காட்சி வரியினை அரசு விதிக்கலாம் என்று குழு சிபாரிசு செய்கிறது. அவ்வாறு விதிக்கப்பெறும் காட்சி வரி பல்வேறு கேளிக்கை வரிகளுக்குப் பதிலானதாக இருக்கும், அது விருப்பத்திற்கிணங்க அல்லாமல் கட்டாயமானதாக இருக்கும். மற்றப் பகுதிகளிலுள்ள பகுதி நிலை மற்றும் நிலை திரையரங்குகளைப் பொறுத்த வரையில் கட்டாயமில்லாத வகையில் விருப்பத்தினை பொறுத்து காட்சி வரி விதிக்கலாம்.

தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் விதிக்கப்பட்ட ஆறு வெவ்வேறு வரிகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த கேளிக்கை வரி; ஒருங்கிணைந்த காட்சி வரி என்று இரண்டு வரிகளாக விதிக்கப் படலாம் என்று குழு சிபாரிசு செய்கிறது''.

கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி.

147. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சியின் காரணமாக விவசாயிகள் வாங்கும் கடன்களை அடுத்த பசலிக்கு தள்ளி வைக்கப்படும்போது அந்த காலத்திற்கு வட்டியில்லாமல் வசூலிக்கப்படுமா?

விடை—இது இயலாது.

சென்னை—திருவண்ணாமலை பேருந்துகள்.

148. வினா—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திண்டிவனம் செஞ்சி வழியாக திருவண்ணாமலை செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழக எண் 122 குறிப்பிட்ட இடங்களில் நிற்கும் பேருந்துகளை (லிமிடெட் ஸ்டாப்பிங்) சாதாரணப் பேருந்துகளாக மாற்றப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) இவைகளை மீண்டும் குறிப்பிட்ட இடங்களில் நிற்கும் மார்க்கமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—(அ) ஆம்.

(ஆ) குறிப்பிட்ட இடங்களில் நிற்கும் பேருந்துகளாக ஓட்டுவதற்கு மோட்டார் வாகன சட்டங்கள் இடமளிக்க வில்லை. ஆதலால் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது.

(இ) இல்லை.

திருமலையம்பாளையம் ஊராட்சி.

149. வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி திருமலையம்பாளையம் ஊராட்சி மன்றத்தை இரு ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) திருமலையம்பாளையம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க கோரிக்கை ஒன்றும் வரவில்லை. ஆனால் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயற்குறிப்பினை ஆய்ந்து அவ்வூராட்சியை பேரூராட்சியாக 1-10-1977 முதல் மாற்றியமைத்து ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாணவர் விடுதிகள்.

150. வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு மூலமாக பிற்பட்டோர் மாணவர் விடுதி, தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி என்று இரண்டாக இல்லாமல் ஒரே மாணவர் விடுதியாக ஆக்கும் உத்தேசம் உண்டா?

விடை—இல்லை.

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள்.

151. வினா—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு விவசாயக்கடன் சங்கங்களை ஒரு ஊராட்சிக்கு ஒன்று விதம் மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை—தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் தனித்தியங்கும் தன்மையுடையவையாக இருக்க வேண்டும் என்பதற்காக, பாசன வசதியுள்ள 2,000 ஏக்கர் நிலம் அல்லது பாசன வசதியில்லாத 3,000 ஏக்கர் நிலம் ஒவ்வொரு சங்கத்தின் விவகார எல்லையிலும் இருக்கின்ற முறையில் மாற்றி அமைக்கப்படுகின்றன. ஊராட்சிக்கு ஒன்று விதம் மாற்றி அமைக்கும் உத்தேசமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் தற்காலிக கிராம உத்தியோகஸ்தர்கள்.

152. வினா—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தற்காலிக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு 4 மாதங்களாக சம்பளம் அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சம்பளம் வழங்க எடுக்கப் பட்ட நடவடிக்கை யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) அரசாணை (பலவகை) எண் 1437, வருவாய்த்துறை, நாள் 14-7-1977-ல் சம்மந்தப்பட்ட தற்காலிக கிராம உத்தியோகஸ்தர்களின் பணி இடங்கள் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டதற்கிணங்க அவர்களுக்கு 15-7-1977-க்கு முன்பு மதிப்பூதியம் வழங்கப்பட்டுவிட்டது. தற்சமயம் அவர்களுக்கு மாதந்தோறும் தாமதமின்றி மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

சங்கரன்கோவில் வட்டத்தில் மின் இணைப்பு.

153. வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி சங்கரன் கோவில் தாலுக்காக்களில் நிலத்தடி நீர் ஆய்வு மறுப்பின் காரணமாக கிணற்று பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அறவே நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில் இத்தடையை நீக்கி இப்போதுள்ள கிணறுகளுக்கு உடனடியாக பம்புசெட் மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—(அ) இல்லை.

(ஆ) நிலுவையிலுள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஒரு முன்னுரிமை பட்டியல் தயாரித்திருக்கிறது. இந்த வழிமுறைக்கு ஏற்ப இணைப்பு வழங்கப்படும்.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்திக் கழகம்.

154. வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி விநியோகக் கூட்டுக் கழகத்தில் நிர்வாகத்திற்கும் தொழிலாளருக்கும் இடையே 25-3-1975-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிர்வாகம் அமுல் செய்யாதிருப்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி மற்றும் விற்பனை கூட்டுக் கழகத்தின் தொழிலாளர்கள் நிர்வாகத்தினர் முன்பு இரண்டு கோரிக்கைகளை வலியுறுத்தினர். அவைகளில் ஒன்று ஊதிய உயர்வும், மற்றொன்று கடந்த ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது குறித்ததும் ஆகும். ஊதிய உயர்வு 1-3-1975 முதல் வழங்கப்பட்டு விட்டது. தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் கோரிக்கைக் குறித்து நிர்வாகம் சாதகமான முடிவு செய்யும் என்று தீர்மானித்த போதிலும் கழகத்தின் நிதி நிலைமை சீராகும் பொழுது இக்கோரிக்கையும் செயல்படுத்தப்படும். தற்போது தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையில் சுமுக உறவு நிலை ஏற்பட்டுள்ளது.

Funds for Drought Prone Areas Programme.

*155. Q.—THIRU N. RAMACHANDRA REDDY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the funds specially granted to Animal Husbandry under the Drought Prone Areas Programme have been diverted to Tamil Nadu Dairy Development Corporation; and

(*b*) if so, the reasons therefor?

Ans.—(*a*) No.

(*b*) Does not arise.

155 வினா—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Branch Press in Secretariat.

156. Q.—THIRU K. KANDASWAMY:—Will the Hon. the Minister for Harijan Welfare be pleased state whether there is any proposal to establish a Branch Press in the Secretariat premises to attend to the urgent and immediate work of the departments of Secretariat?

Ans.—: No.

வினா இல்லை.

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்.

157. வினா—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

158. வினா—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலவள வங்கிகளின் மூலம் கிணறு வெட்டவும், மின்சார மோட்டார் போடவும் கடன் அனுமதிக்கப்பட்டு மோட்டாருக்கான தொகை பிடித்தம் செய்துகொண்டு கடன் வழங்கப்படுகிறது. மோட்டார் வழங்குமாறு கேட்டால் மின்சார லைன் போட்ட பிறகு மோட்டார் தருவதாகக் கூறுகிறார்கள். மின்சார இலாகாவினர் மோட்டார் வைத்த பிறகு மின்சார லைன் போடுவதாகக் கூறுகிறார்கள். இதனால் விவசாயிகள் மின்சார இணைப்பு பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

விடை—மின்விசையேற்றங்கள் பொருத்தியவர்களுக்கு அல்லது மின் விசையேற்றங்கள் வாங்கிவிட்டதற்கான அத்தாட்சியையாவது காட்டுபவர்களுக்கு மட்டுமே மின்னிணைப்புத் தருவது என்பது மின்சார வாரியத்தின் ஒரு வரைமுறையாக இருந்து வருகிறது. எனவே மின்சார லைன் போட்ட பிறகுதான் மின் விசையேற்றங்கள் பொருத்தப்படும் என்று வலியுறுத்தாமல், வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து மின்சார இணைப்புத் தர முடியும் என்பதை உறுதி செய்து கொண்டவுடனேயே மின் விசையேற்றங்களுக்கான கடன்களை அளிக்கும்படி அனைத்து நிலவள வங்கிகளுக்கும் தாக்கீது அனுப்பப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு ஆயுள் காப்பீட்டு வசதி.

159. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர்களின் பாதுகாப்புக்காக குறைந்த கட்டணத்தில் இன்சூரன்ஸ் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

சின்ன சேலம் மகளிர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

160. வினா—திரு. எம். சுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்ன சேலம் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—சின்ன சேலம் மகளிர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

தொழுநோய் பிச்சைக்காரர்கள்.

161. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை ஒழிக்க பிச்சை எடுக்க தடைச்சட்டம் கொண்டு வரப்படுமா?

(ஆ) புதிய திட்டங்கள் அரசு செயற் குறிப்பில் உள்ளதா?

விடை—(அ) தமிழ்நாட்டில் பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டம், 1945 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருந்து வருகின்றது. இச்சட்ட விதி (3)-ன்படி பிச்சை எடுப்பது குற்றம். இது தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கும் பொருந்தும்.

(ஆ) தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குணப்படுத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக தமிழ்நாட்டில் 10 மறுவாழ்வு இல்லங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர வேறு புதிய திட்டம் எதுவும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

Pay of Tutors and Demonstrators.

162. Q—Thiru S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Tutors and Demonstrators working in colleges have made representations to the Government to upgrade their conditions of service in conformity with the recommerdatiors of the University Grants Commission; and

(b) if so, the steps proposed to be taken thereon?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1-11-1977 அன்று 5 ஆண்டுகளும் அதற்கு மேலும் பணியாற்றியுள்ள பட்ட மேற்படிப்பு பயிற்றுநர்கள் மற்றும் விளக்குநர்களை உதவிப் பேராசிரியர்களாக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

தனியார் கல்லூரிகள்.

163. வினா—திரு கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் நிர்வாகத்தில் எத்தனை கலைக் கல்லூரிகள் இயங்குகின்றன?

(ஆ) ஆண், பெண் கல்லூரிகள் முறையே எத்தனை?

விடை—(அ) 137 தனியார் கலைக் கல்லூரிகள் இயங்குகின்றன.

(ஆ) ஆண்கள் கல்லூரி .. 98

பெண்கள் கல்லூரி .. 39

விழுப்புரம் கலைக் கல்லூரி.

164 வினா—திரு. யா.சை மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968 ஆம் ஆண்டில் விழுப்புரத்தில் ஒரு கலைக்கல்லூரி நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் தற்பொழுது கல்லூரி நிறுவும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—(அ) 1969 ஆம் ஆண்டில் நாட்டப்பட்டது.

(ஆ) கல்லூரி 1968 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இக்கல்லூரி 1973 முதல் நிரந்தர கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர், சிறைகளைப் பார்வையிடல்.

165. வினா—திரு வீ. கே. கோதண்டராமன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறைச்சாலைகளை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) சிறைச்சாலைகளை பார்வையிட விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னதாகவே அரசு அனுமதி பெற வேண்டும். இது அரசாணை எண் 655, உள்துறை, நாள் 8-3-1973-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண் உறுப்பினர்கள் மட்டுமே வேலூர் மாநில பெண்கள் சிறையை பார்வையிடலாம்.

(a) Yes.

(b) Members of Parliament and Members of Legislature who intend to visit the Prisons should obtain prior permission of the Government as per G.O. Ms. No. 655, Home Department, dated 8th March 1973. Lady Members alone may visit the State Prison for Women, Vellore.

விருத்தாசலம் நகராட்சி.

166. வினா—திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் தனி அதிகாரி பதவி எத்தனை மாதம் காலியாக இருக்கிறது?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

[1978 சனவரி 10

விடை—(அ) காலியாக இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தமிழக வரலாறு.

167 வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வரலாறு எழுதும் பணி இடையில் நிறுத்தப் பட்டதா?

(ஆ) நிறுத்தப்பட்டதற்கு காரணம் என்ன?

(இ) தொடர அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—(அ); இல்லை.

(ஆ): அண்டு (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

நிலநீர்க் கணக்கீடு.

168. வினா—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலநீர்க் கோட்டத்திலிருந்து தற்போது கணக்கிடும் நிலத்தடி நீர்க் கணக்கு (ஸ்டேசிங்) ஒன்றிய அளவில் கணக்கிடப்படுவதை கிராம அளவில் தனித்தனியாக கவனிக்கும் வகை செயல் முறைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இல்லையெனில் தற்போதைய முறையினால் மிக அதிக அளவு விவசாயிகள் அரசின் கடன் உதவி, மின் வழங்குதல் போன்ற வசதிகள் கிடைக்கும் வகையில் மேற்படி முறையைமாற்றி அமைக்கும் செயற் குறிப்பை அரசு சீலிக்குமா?

(இ) ஆம் எனில், எந்த வகையில் மாற்றி அமைக்கப் படும்?

விடை—(அ); தற்போது நிலநீர்துறை வட்டம் மற்றும் ஒன்றிய அளவில் நிலநீர் கணக்கீடு செய்து, அவ்வகையில் நிலநீர் பற்றுமல் போனால் கிராம அளவில் நிலநீர் ஆய்வு செய்து நிலநீர் அனுமதி வழங்குகிறது.

(ஆ); அண்டு (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

1978 சனவரி 10]

ஏரிகள் சீரமைப்பு.

169. வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்து ஏரிகளில் உள்ள நிலங்களில் மண்மேடிட்டு நீர் கொள் அளவு குறைவதால் நீர்த்தேக்கம் குறைவதை சீர்படுத்த அரசு செயல் திட்டம் எடுத்துள்ளதா?

விடை—ஆம்.

காவிரி நீர் பங்கீடு.

170. வினாதிரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரி நீர் பிரச்சினைக்கு தீர்வு காணவும், 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் அமுல் செய்யப்படவும் மத்திய அரசை வலியுறுத்தும் முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்துக்கட்சி தலைவர்களை அழைத்துப் பேச அரசு ஆவன செய்யுமா?

விடை—தக்க சமயத்தில் அனைத்துக் கட்சி தலைவர்களை அழைத்துப் பேச முயற்சி மேற்கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் சமுதாய வடிமுனைக் குழாய்க் கிணறுகள்.

171. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ''சமுதாய நல வடிமுனைக் குழாய்க் கிணறுகள்'' அமைத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) மாயூரம் பஞ்சாயத்து யூனியனில் கீழ்க்கண்ட 10 இடங்களில் 13 சமுதாய வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. தலைஞாயர்	..	1
2. ஆனைதாண்டவபுரம்	..	2
3. பாண்டூர்	..	1
4. சேநூர்	..	1
5. முறையூர்	..	1
6. பொன்னூர்	..	1
7. மகாராஜபுரம்	..	2
8. கங்கணப்புத்தூர்	..	1
9. கீழமாந்தண்டநல்லூர்	..	2
10. காளி	..	1

இந்த திட்டத்தினால் 200.92 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதிக் கிடைக்கும். 124 விவசாயிகள் பயன் பெறுவர். ஒவ்வொரு கிணற்றுக்கும் சுமார் ரூ. 15,000 செலவாகும்.

ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவச் சலுகை.

172 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல இலவச மருத்துவ உதவி வழங்கப்படுகின்றதா?

விடை—ஆம். அரசு தனது ஆணை எண் 2060/ஊ.வ.உ. துறை/நாள் 24-12-77-ல் அரசு ஊழியர்கள் பெறும் எல்லாவித மருத்துவ சலுகைகளையும் அனைத்து ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் நீடித்துள்ளது.

Yes. The Government in G.O. Ms. No. 2060/RDLA, dated 24th December 1977 have extended all the medical concessions enjoyed by the Government Servants to all the employees of Local Bodies.

உப்பனாற்றின் குறுக்கே பாலம்.

173 வினா—திரு. கா. சுப்பிரவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலூகாவில் திருநகரி திருமுல்லைவாசல் கிராமங்களுக்கு இடையில் ஓடும் உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

சுற்றுலா சொகுசு பேருந்துகள்.

174 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திற்கு சொந்தமான சுற்றுலா சொகுசுப் பேருந்துகள் எத்தனை?

(ஆ) மினி பேருந்துகள் எத்தனை?

விடை—(அ) சொகுசு பேருந்துகள்—எட்டு.

(ஆ) மினி பேருந்து—ஒன்று.

சென்னை நகரில் சுரங்கப் பாதைகள்.

175 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1962 முதல் 1977 வரை எத்தனை சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன ?

(ஆ) ஒரு சுரங்கப் பாதைக்கு எவ்வளவு செலவு ஆனது?

(இ) நகரத்தில் மேலும் சுரங்கப் பாதைகள் அமைக்கும் உத்தேசமுண்டா?

விடை—(அ) & (ஆ) சென்னை நகரில் 1962 முதல் 1977 வரை அமைக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் ஒன்பதாகும். ஒவ்வொரு சுரங்கப் பாதைக்கும் ஆன செலவு *பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பொதுப்பணித் துறை நிதி.

176 வினா—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து காரியங்களுக்கு—

1. regular.
2. Modernisation.
3. Project investigation.

இவைகளுக்கு 1976-77-ல் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அவற்றுள் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—(அ) வரவு-செலவு திட்டத்தில் இறுதியாக ஒதுக்கப்பட்ட தொகை—

	(ரூபாய் லட்சத்தில்)
1. சாதாரண பராமரிப்பு பணி (வணிகம் சார்ந்தவை வணிகம் சாராதவை).	1,60.30
2. பழுது பார்த்தல் விரைவு படுத்தும் திட்டம் (காவிரி கழிமுகத் திட்டம்).	1,51.78
3. விரைவு படுத்தப்பட்ட பழுது பார்த்தல் (சிறு பாசனத் திட்டம்).	15.69
மொத்தம் ..	3,27.72

*1366-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(ஆ) செலவு செய்யப்பட்டது—

	(ரூபாய் இலட்சத்தில்)
1. சாதாரண பராமரிப்பு பணி (வணிகம் சார்ந்தவை வணிகம் சாராதவை).	1,62.62
2. பழுது பார்த்தல் விரைவு படுத்தும் திட்டம் (காவிரி கழிமுக திட்டம்).	1,51.53
3. விரைவு படுத்தப்பட்ட சிறு பாசன திட்டம்	8.29
மொத்தம் ..	3,22.44

தீயணைப்பு நிலயங்கள்.

177வினா—திருசெ. இராமலிங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் ஓர் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

178வினா—திரு இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூரில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—இல்லை.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தச்சுப்பட்டறைகள்.

179வினா—திரு எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை தச்சு கொல்லுப் பட்டறைகள் இயங்கி வருகின்றன?

விடை—நமது மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் 90 தச்சுப்பட்டறைகளும், 21 கொல்லுப் பட்டறைகளும், 38 தச்சு மற்றும் கொல்லுப்பட்டறைகளும் இயங்கி வருகின்றன.

சத்தியமங்கலம் மருத்துவ மனை.

180 வினா—திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனையை விரிவு படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—இல்லை.

குடி நீர் திட்டம்.

181 வினா—திரு கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் கொடிவேரி குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படுமா?

விடை—கோவை மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள பெரிய கொடிவேரி, வாணிபுத்தூர் ஆகிய இரு பேரூராட்சிகளுக்கும், புள்ளப்ப நாயக்கன்பாளையம், அரக்கன்கோட்டை கொங்கர்பாளையம், புஞ்சைத்துறையம்பாளையம், தொண்டையம்பாளையம் கணக்க பாளையம், பெருமுகை ஆகிய ஏழு ஊராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் 'கூட்டுக் குடிநீர்த் திட்டம்' ஒன்றைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 71,49,000 மதிப்பீட்டில் தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்கு அரசு 29—10—77 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஆணை எண் 1781-ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

The combined Water Supply Scheme formulated by the Tamil Nadu Water Supply and Drainage Board at an estimated cost of Rs. 71,49,000 for provision of protected water supply to the Periyakodiveri and Vaniputhur Town Panchayats and Pullappanaickenpalayam, Arakkankottai, Kongarpalayam, Punjaithuraiyampalayam, Kondayampalayam, Kanakkampalayam and Perumugai Panchayat in Thookanaickenpalayam Panchayat Union, Coimbatore District, has been approved by the Government in G.O. Ms. No. 1781, Rural Development and Local Administration dated 29th October 1977. The Scheme will be implemented expeditiously.

பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள ஆரம்பப்பள்ளிகள்.

182. வினா—திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் உயர் துவக்கப்பள்ளிகள் எத்தனை?

(ஆ) எத்தனை பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லை?

விடை—(அ) & (ஆ) சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 75 ஆரம்பப் பள்ளிகளும் 6 உயர் துவக்கப்பள்ளிகளும் உள்ளன. இவைகளில் 48 பள்ளிகளுக்கு கட்டடங்கள் உள்ளன. மீதி 33 பள்ளிகள் கொட்டகைகளில் உள்ளன.

சிறுவாணித் திட்டத்தின்கீழ் பயன் பெறும் கிராமங்கள்.

183. வினா—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை குடி தண்ணீர் மேம்பாட்டுக்கென சிறுவாணியின் குறுக்கே கட்டப்பட்டுவரும் அணை தற்போது எந்த நிலையிலுள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் கீழ் வழியிலுள்ள எந்தெந்த ஊர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது?

விடை—(அ) கேரள மாநில எல்லைக்குள் கட்டப்பட்டு வரும் சிறுவாணி குடிநீர் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட வேலைகள் யாவும் திட்டமிட்டபடி விரைவாக நடந்து வருகின்றன. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நாளொன்றுக்கு எட்டுமில்லியன் காலன் தண்ணீர் வழங்கும் வகையில் அணைக்கட்டின் உயரம் அமைந்துவிடும். இத்திட்டத்தின் அனைத்து வேலைகளும், 1980-ம் ஆண்டு மத்தியில் முடிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 22.30 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் வழியிலுள்ள பின்வரும் கிராமங்களுக்கும் சுற்றுப்புற நகரங்களுக்கும் குடிநீர் வழங்கப் பட உள்ளது :

கிராமங்கள்.	சுற்றுப்புற நகரங்கள்.
(1)	(2)
1. தொம்பிலிபாளையம்.	1. உப்பிலிபாளையம்.
2. ஆலந்துறை.	2. கணபதி.
3. புலுவம்பட்டி.	3. சிங்காநல்லூர்.
4. மாதம்பட்டி.	4. பீளமேடு.
5. கல்லம்பாளையம்.	5. சௌரிபாளையம்.
6. பச்சபாளையம்.	6. குனியமுத்தூர்
7. செட்டிபாளையம்.	7. தெலுங்குபாளையம்.
8. பேரூர்	8. குறிச்சி.
9. தெலுங்குபாளையம்.	9. சங்கனூர்.
	10. கவுண்டன்பாளையம்.
	11. கிருஷ்ணராயபுரம்.
	12. ராமநாதபுரம்.
	13. புளியகுளம்.
	14. அனுப்பாரபாளையம்.
	15. சுண்டக்காமுத்தூர்.
	16. ஆத்துப்பாளையம்.
	17. சூலூர்.
	18. சூலூர் விமானதளம்.

(*a*) The work on Siruvani dam within Kerala territory is in good progress and as per schedule, the dam is expected to be raised to the required level to maintain the normal water supply of 8 MGD by June 1978. The full supply of 22.30 MGD under this project can be made available by the middle of 1980 when the project is expected to be completed in all respects.

(*b*) It is proposed to supply water under this scheme to the following wayside villages and satellite towns :

Villages.	*Satellite towns.*
(1)	(2)
1. Thombilipalayam.	1. Uppilipalayam.
2. Alandurai.	2. Ganapathy.
3. Puluvampatti.	3. Singanallur.
4. Madampatti.	4. Peelamedu.
5. Kallampalayam.	5. Sowripalayam.
6. Patchapalayam.	6. Kuniamuthur.
7. Chettipalayam.	7. Telungupalayam.
8. Perur.	8. Kurichi.
9. Telungupalayam.	9. Sanganur.
	10. Kavundampalayam.
	11. Krishnarayapuram.
	12. Ramanathapuram.
	13. Puliakulam.
	14. Anupparapalayam.
	15. Sundakkamuthur.
	16. Attupalam.
	17. Sulur.
	18. Sulur Airforce Station.

அரக்குத் தொழிற்சாலை.

184 வினா—திரு வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நடத்தும் அரக்கு தயாரிக்கும் தொழிற்சாலையில் ஆண்டுக்கு எவ்வளவு அரக்கு உற்பத்தி ஆகிறது?

(ஆ) அது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆண்டுக்கு எவ்வளவு ?

விடை—(அ) மதுரையில் உள்ள அரசு அரக்கு தொழிற்சாலையில் அரக்கு தயாரிக்கப்படுவதில்லை. ஆனால் கீழ்க்கண்ட அரக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயார் செய்யப்படுகின்றன :

1. வர்ண மற்றும் வர்ணமில்லா பிரெஞ்சுபாலிஷ்.
2. அரக்கு வார்னிஷ்.
3. இன்சுலேடிங் வார்னிஷ்.
4. ஷெல்லாக் காம்பவுண்ட் மற்றும்.
5. சீலிங் வாக்ஸ்.

(ஆ) & (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

கால்நடைகள் செயற்கை முறை இனவிருத்திப் பணி.

185 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை இலாகாவில் செயற்கை முறை இனவிருத்திக்கு இரண்டு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் விவசாயிகளிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) இது எந்த ஆண்டு முதல் வசூலிக்கப்படுகிறது?

(இ) இதற்கான காரணம் என்ன?

(ஈ) இதை ரத்து செய்யும் உத்தேசம் உள்ளதா?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1976-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் கால்நடை இலாகாவில் செயற்கை முறை இனவிருத்திக்கு நகராட்சி எல்லைக்குள் ரூ. 5-ம் மற்ற இடங்களில் ரூ. 2-ம் வசூலிக்கப்படுகிறது.

(இ) செயற்கை முறைக்கு பயன்படுத்தப்படும் காளைகளின் செலவுக்கு பயன்படுத்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஈ) கட்டணங்களை திருத்தியமைப்பது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

கதர் கிராம தொழில் அங்காடிகள்.

186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராமத் தொழில் அங்காடிகள் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் உள்ளன?

(ஆ) அவை இலாபத்தில் இயங்குகின்றனவா? நஷ்டத்தில் இயங்குகின்றனவா ?

விடை—(அ) தமிழ்நாட்டில் தற்போது 156 இடங்களில் கதர் கிராமத்தொழில் அங்காடிகள் இயங்கி வருகின்றன. அவை தவிர 10 கிராமோதய விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) இவற்றுள் 127 கதர் கிராம தொழில் அங்காடிகளும் 10 கிராமப் பொருள்கள் விற்பனை நிலையங்களும் லாபத்தில் இயங்கி வருகின்றன. 29 கதர் கிராமத் தொழில் அங்காடிகள் லாபகரமாகச் செயல்படவில்லை. இவைகளை அண்மையிலுள்ள கதர் அங்காடிகளுடன் இணைத்து செயல்படுத்த் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1978 சனவரி 10

சித்த மருத்துவத்துக்கான மூலிகைகள்.

187. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவத்துக்கான மூலிகைப் பண்ணைகள் எங்கெங்கே உள்ளன?

(ஆ) அவற்றிற்காக இவ்வாண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—(அ) சித்த மருத்துவத்திற்கான மூலிகைப் பண்ணைகள் கீழ்க்காணும் மூன்றிடங்களில் உள்ளன.—

1. சென்னை அரும்பாக்கத்தில் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையின் எதிரில் 9.6 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

2. பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் 40 சென்ட் பரப்பளவில் மாதிரி மூலிகைப்பூங்கா அமைக்கபபட்டுள்ளது.

3. இது தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அழகிய பாண்டியபுரத்தில், வீரப்புலி என்னும் ஒதுக்கக் காட்டுப்பகுதியில், 5 ஹெக்டார் நிலப்பரப்பளவில் ஒரு மூலிகைப் புண்ணை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) (1) அரும்பாக்கத்தில் உள்ள மூலிகைப் பண்ணைக்கெனத் தனியாக செலவினங்கள் கணக்கிடப்பட்டு தொகை ஒதுக்கப்படுவதில்லை. இம்மூலிகைப் பண்ணைக்கான செலவினங்கள், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையின் மொத்த செலவினங்களில் அடங்கும். எனினும் இம்மூலிகைப் பண்ணையில் பணி புரியும் தோட்டக்காரர்கள் சம்பளம் முதலியவற்றிற்கான இவ்வாண்டில் செலவினங்கள் தோராயமாக ரூ. 32,000 (ரூபாய் முப்பத்திரண்டாயிரம்).

2. அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் உள்ள மூலிகைப் பூங்காவில் செலவினங்கள் கல்லூரியின் மொத்த செலவினங்களில் அடங்கும்.

3. வீரப்புலி மூலிகைப் பண்ணையின் செலவினங்களுக்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 18,000.

பார்வதிபுரத்தில் குட்டை அமைப்புத் திட்டம்.

188 வினா—திரு ஆ. நடராசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குனியமுத்தூர் கிராமம் (க.ச. 691) பார்வதிபுரத்தில் குட்டை கட்டும் திட்டம் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 28,000.

வடலூரில் இரண்டாம் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம்.

189 வினா—திரு. செஞ்சி நா. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், வடலூரில் இரண்டாம் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம் ஒன்று நிறுவ செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மருத்துவப் படிப்புக்கு மாணவர்கள் அனுமதி.

190 வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ கல்லூரியில் (பி.டி.எஸ்.) பல் மருத்துவப் படிப்புக்கு இவ்வாண்டு எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்?

(ஆ) அவர்களில் பெண்கள் எத்தனை பேர்?

விடை(அ) 35.

(ஆ) 9.

1978 சனவரி 10]

'பி' பிரிவு ஆசிரியர்கள்.

191 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உயர்நிலைப்பள்ளியில் 'பி' பிரிவில் பணிபுரியும் ஆசிரியர்கள் பட்டமேற்படிப்பு தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு கல்லூரிகளில் நியமனம் பெற்று அந்தந்த மாவட்ட அளவில் பணிக்கால அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்படாமல் பணிக்கால அடிப்படையை புறக்கணித்து நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில் காரணம் யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) 'பி' பிரிவில் பணிபுரிந்து, பட்ட மேற்படிப்பில் தேர்வு பெற்ற ஆசிரியர்கள் அந்தந்த மாவட்ட அளவில் பணிக் கால அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்-பயிற்றுநர் பதவிக்கு பரிந்துரைக்கப்படவில்லை. மேலும் கல்லூரிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்த காலத்தைக் கணக்கிட்டு மாநில அளவில் பணிக்கால அடிப்படை வகுக்கப்படுகின்றதே ஒழிய அந்தந்த மாவட்ட அளவில் பணிக்கால அடிப்படை பிரிக்கப்படுவதில்லை.

காவலர் பயிற்சிக் கல்லூரி.

192 வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் இருந்து வந்த போலீஸ் பயிற்சிக் கல்லூரி இப்போது சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளதா?

விடை—ஆம். 1—7—1976 முதல் சென்னை அசோக் நகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

சந்தவாசலில் உள்ள ஒன்றிய மருந்தகம்.

193. வினா—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி சந்தவாசலில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு மேற்கொள்ளும் யோசனை உண்டா?

விடை—இல்லை.

1978 சனவரி 10]

பட்டு உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு.

194. வினா—டாக்டர் கோ. சமரசம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் பட்டு உற்பத்தி திட்டத்திற்கு மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியுள்ளது ?

(ஆ) அதில் தருமபுரி மாவட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) மாநில அரசின் உதவித் தொகை எவ்வளவு ?

(ஈ) இத்திட்டம் எப்போதிலிருந்து அமுலுக்கு வரும் ?

விடை—(அ) நான்கு ஆண்டுகளில் அமுல்படுத்த வேண்டிய பட்டுத் தொழில் தீவிர அபிவிருத்தித் திட்டங்களுக்கென 1977-78 மற்றும்1978-79 ஆகிய முதல் இரு ஆண்டுகளுக்காக 52.63 இலட்ச ரூபாய்கள் மத்திய அரசு அளிக்க முன்வந்துள்ளது. இதை தமிழ்நாடு அரசு ஒப்புக்கொண்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டிற்காக ரூ. 16.47 இலட்சங்கள் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ. 8 இலட்சங்களை தமிழ்நாடு அரசிற்கு மத்திய அரசு சமீபத்தில் வழங்கியுள்ளது.

(ஆ) 25 இலட்சம்.

(இ) 2.50 இலட்சம்.

(ஈ) இந்தத் திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசு ஆணை அண்மையில் பிறப்பிக்கப்பட்டது.

(*a*) For implementation of the Schemes for the intensive development of sericulture in the State over a period of 4 years, the Government of India have sanctioned a sum of Rs. 52.63 lakhs for the first 2 years (1977-78 and 1978-79). The allocation for 1977-78 is Rs. 16.47 lakhs. Rs. 8 lakhs have been recently placed at the disposal of the Government of Tamil Nadu as the first initial payment under the scheme.

(*b*) 25 lakhs.

(*c*) 2.50 lakhs.

(*d*) Orders approving the scheme have been recently issued by Government in this regard.

சென்னை—பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பாலம்.

195. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை பட்ரோடு—பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் ராமாபுரம் அருகேயுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) No
(*b*) Does not arise.

தண்டராம்பட்டு கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

196. வினா—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தண்டராம்பட்டு ஊராட்சியின் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் கடந்த 10 ஆண்டுகளாக செயல்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

விடை—(அ) & (ஆ) தண்டராம்பட்டு கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் இயக்குநர் குழு, சங்கத்தின் பணிகளில் ஊக்கம் செலுத்தாமையினால் சங்கம் செயல்படாத நிலையில் உள்ளது. சங்கத்தினை மறுபடியும் ஊக்குவிக்க சங்கத்தின் இயக்குனர் குழுவோ அல்லது அதனுடைய அங்கத்தினர்களோ சங்கத்தின் பணிகளில் ஊக்கம் எடுத்துக்கொண்டாலன்றி தற்போதைய நிலையில் சங்கத்தை ஊக்குவிக்க ஏதும் செய்வதற்கில்லை.

குந்தா மின் திட்டம்.

197. வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா மின் திட்டத்தில் பாணி 3-வது பவர் ஹவுஸ்களில் புது ஜெனரேட்டர் பொருத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

(ஆ) இதன் மூலம் எவ்வளவு மின் உற்பத்தி அதிகரிக்கும் ?

விடை—(அ) ஜனவரி 1978-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு 42 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தியும் 60 மெகா வாட் உச்ச தேவை உற்பத்தித் திறனும் அதிகரிக்கும்.

கடையல் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

198. வினா—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தாலூகா கடையல் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக் கொண்டு எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது குறித்து ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. எனவே, இவ்வாண்டு இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் எதுவுமில்லை.

கள்ளக்குறிச்சியில் காகிதஆலை.

199. வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உள்ளதா ?

விடை—இல்லை.

திருக்களம்பூரில் பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதி.

200. வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலூகாவில் உள்ள திருக்களம்பூரில் ஒரு பின்தங்கிய மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

விடை—(அ) & (ஆ) இது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகள்.

201. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் தமிழ் நாட்டில் மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவ அரசு மேற்கொண்டுள்ள திட்டம் என்ன ?

விடை—அரசு தரப்பில் மீன் பதனப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவ திட்டமேதுமில்லை. ஆனால் அரசு பொது நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தூத்துக்குடியில் 300 டன் கொள்திறன் கொண்ட ஒரு கருவாட்டுக் கிடங்கினைத் துவக்க திட்டமிட்டுள்ளது. மண்டபத்தில் தினம் அரை டன்னும் ஆண்டுதோறும் 100 டன்களும் இறால் மீன்களை பதனப்படுத்தும் வசதிகளைபெருக்க திட்டமிட்டுள்ளது.

எடமச்சி கால்வாய்த் திட்டம்.

202. வினா—திரு. எஸ். சுப்பிரமணியம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தொகுதியில் 'எடமச்சி' கால்வாய் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை விரைவில் ஏற்று நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளதா ?

விடை—(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் முதல் கட்ட ஆய்வில் உள்ளது. ஆய்வின் அடிப்படையில் இத்திட்டம் மேற்கொள்வதற்கு தகுதி உள்ளதாக தெரிந்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்

வேலூர் நகருக்கு அருகில் தொழிற்பேட்டை.

203. வினா—திரு. அ. க. அரங்கநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்துகீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் நகருக்கு அருகில் தொழிற்பேட்டை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

விடை.—இல்லை.

காவலர் கடமை.

204. வினா—திரு. வி.கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவலருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்த ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ள காவலருக்குள்ள 22 கடமைகள் என்ற சுவரொட்டியை வைத்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது ?

(ஆ) அதனால் ஏற்பட்டுள்ள பலன்கள் யாவை ?

விடை—(அ) ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிறது.

(ஆ) பொதுமக்கள் தங்கள் உரிமைகளை தெரிந்து கொள்கிறார்கள். தங்கள் குறைகளை களையும் பொருட்டு காவல்துறையினரை மனதில் அச்சம் ஏதுமின்றி அணுக உதவுகிறது.

பொதுமக்களின் புகார் முதலியவைகளை கவனிப்பதில் காவல்துறையினருககுள்ள பொறுப்புகளும், சிரமங்களை பொருட்படுத்தாது குடிமக்களுக்கு பணி செய்ய எப்போதும் தயாராக இருக்கும் தன்மையும், வலியுறுத்தப்படுகிறது.

சமுதாய ஏற்றத்தாழ்வை கருத்தில் கொள்ளாமல் பொது மக்களுக்கு எவ்வாறு நல்லமுறையில் மதிப்பளிக்க வேண்டும் என்பதை காவலர்களுக்கு உணர்த்தி; அவர்களை பணிவுடன் வரவேற்று, பிரச்சினைகளை தீர்க்க சட்டப்படி, உண்மையுடன் நடவடிக்கை எடுக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு.

205. வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) துப்பறியும் நாய்ப்படை எத்தனை உள்ளது ?

(ஆ) ஒவ்வொரு படையிலும் எத்தனை நாய்கள் ?

(இ) அவைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது ?

விடை—(அ) தமிழகத்தில் மூன்று துப்பறியும் நாய்ப்படைகள் உள்ளன. அவை, முறையே சென்னை நகரம், மதுரை தெற்கு மாவட்டம், கோயம்புத்தூர் நகரம் ஆகிய இடங்களில் உள்ளன.

(ஆ) சென்னையிலுள்ள துப்பறியும் நாய்ப்படையில் 7 நாய்களும், மதுரையிலுள்ள நாய்ப்படையில் 5 நாய்களும், கோயம்புத்தூரில் உள்ள நாய்ப்படையில் 3 நாய்களும் உள்ளன.

(இ) சென்னையிலுள்ள நாய்ப்படைக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 87,000-மும், மதுரையிலுள்ள நாய்ப்படைக்கு ரூ. 43,000-மும், கோயம்புத்தூரிலுள்ள நாய்ப்படைக்கு ரூ. 25,000-மும் செலவாகிறது.

சாலைகள் பராமரிப்பு.

206. வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இதுவரை ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருந்து பெரும் பாட்டைத்துறை பராமரிப்பின் கீழ் எடுத்துள்ள மொத்த சாலைகளின் எண்ணிக்கையும் நீளமும் எவ்வளவு ?

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழ் உள்ள சாலைகளின் எண்ணிக்கையும் நீளமும் எவ்வளவு ?

(இ) ஊராட்சிகளின் கீழ் உள்ள சாலைகள் எவ்வளவு ?

விடை—(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளின் பராமரிப்பில் இருந்த சாலைகளை நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறையின் பராமரிப்பிற்கு 31—3—1976 வரை 16,131 கி.மீ. நீளச் சாலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழுள்ள சாலைகளின் நீளம் 29,399 கி.மீ.

(இ) ஊராட்சிகளின் பராமரிப்பின் கீழ் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 33,681 கி.மீ.

கல்லணைப் பகுதியில் சுற்றுலா மாளிகை.

207. வினா—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கல்லணைப் பகுதியில் சுற்றுலா மாளிகை ஒன்றினை அமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா ?

விடை—அத்தகைய உத்தேசம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள்

208. வினா—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம்—ஆண்டுக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடத்திற்காக அரசு மானியம் கோரி நெல்லை மாவட்டத்திலிருந்து மனு செய்துள்ள பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) எந்த அடிப்படையில் இதற்கென பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

விடை—(அ) 109.

(ஆ) பள்ளி திறந்த ஆண்டு, பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, பள்ளியில் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான இடம் உள்ளதா என்பது, பள்ளியில் உள்ள பிற வசதிகள், ஆகியவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பேருந்து விபத்துக்கள்

209. வினா—திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77-ல் பாண்டியன் ரோடுவேஸ் கார்ப்பரேஷனில் எத்தனை பஸ்கள் விபத்துக்குள்ளானது ?

(ஆ) அதன் காரணமாக உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை எத்தனை ?

விடை—(அ) 1—4—1976 முதல் 31—3—1977 முடிய பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்பட்ட பேருந்து விபத்துக்களின் எண்ணிக்கை 214 ஆகும். அவற்றில் 56 விபத்துக்களில் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ) அதன் காரணமாக உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 72 ஆகும்.

வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஏரிகள்.

210. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஏரிகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் தூர் எடுக்கும் உத்தேசம் உண்டா? எப்போது ?

விடை—(அ) வடாற்காடு மாவட்டத்தில் மொத்தம் 3,189 ஏரிகள் உள்ளன. இவற்றில் 1,115 ஏரிகள் பொதுப்பணித்துறையின் பராமரிப்பிலும், மீதமுள்ள 2,074 ஏரிகள் பஞ்சாயத்து ஒன்றியங்களின் பராமரிப்பிலும் உள்ளன.

(ஆ) தற்போது 3 ஏரிகளில் தூர் எடுக்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் 20 ஏரிகளுக்கு தூர் எடுக்கும் திட்டம் தற்போது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

உடன்குடியில் மின்சார துணை நிலையம்.

211. வினா—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடன்குடியில் மின்சார துணை நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமையும் ?

விடை—(அ) ஆம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குலசேகரன் பட்டணத்தில் மீன்பிடி துறைமுகம்.

212. வினா—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குலசேகரன் பட்டணத்தில் சிறு மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை—இல்லை.

கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்கள்.

213. வினா—திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்கள் எத்தனை பேர் உள்ளனர் ?

(ஆ) அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர் உள்ளனரா ? அப்படியில்லையாயின் அதற்குரிய காரணம் என்ன?

விடை—(அ) தமிழகத்தில் உள்ள ஏழு அரசுப் பயிற்சிக் கல்லூரிகளில் கீழ்க்குறிப்பிட்ட 2 பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் பேராசிரியர் உள்ளனர்.

1. ஆசிரியர் கல்லூரி, சைதை	1
2. அரசு பயிற்சிக் கல்லூரி (மகளிர்), கோயம்புத்தூர்.	1

(ஆ) 51 அரசினர் கலைக் கல்லூரிகளில், 40 அரசினர் கலைக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்கள் பணிபுரிகின்றனர். 11 அரசினர் கலைக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்கள் இல்லை. பல்கலைக்கழக விதிமுறைப்படி பகுதி 12 (Branch XII) தமிழ் பாடமாக கற்பித்தால் பேராசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். இப்பாடப்பகுதி இல்லாத கல்லூரிகளுக்கு தமிழ்ப் பேராசிரியர் அமர்த்த விதிமுறையில்லை.

கோவை நகரசபை மின்பிரிவு ஊழியர் விபத்து.

214. வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபையின் கீழ் பணிபுரிந்து வந்த இரண்டு என்.எம்.ஆர். தொழிலாளிகள் சென்ற ஜூலை மாதத்தில் வேலை செய்யுமிடத்தில் மின்சாரம் தாக்கி இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு அரசு விசேஷ உதவி செய்தது உண்டா—

(ஆ) ஆம் எனில், என்ன உதவி அளிக்கப்பட்டது ?

(இ) சட்டப்படி நட்ட ஈடு ஏதாவது கொடுக்க ஏற்பாடுள்ளதா ?

விடை—(அ) மேற்படி இறந்த என்.எம்.ஆர். தொழிலாளிகள் தற்காலிகமானவர்கள், ஆதலால் அரசு விசேஷ உதவி ஏதும் அளிக்க இயலவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) கோவை தொழிலாளர் நல கூடுதல் ஆணையாளரிடம் வாரிசுதாரர்கள் உதவித் தொகை கோரி, முறையீடு செய்துள்ளனர். அதன் பேரில் எடுக்கப்படும் முடிவையொட்டி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(*a*) The deceased N.M.R. Workers were temporary hands. So, the Government could not give any help to their families.

(*b*) Does not arise.

(*c*) The legal heirs have moved the Court of Additional Commissioner for Workmen's Compensation, Coimbatore-12 for compensation. Necessary action will be taken on receipt of the decision of the Court.

கல்லூரிகளில் பாடமொழிகள்.

215. வினா—திரு.எஸ். ஜே.சாதிக்பாட்சா: மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உருது, அரபி, பாரசீக மொழிகளைப் பாட மொழிகளாக எத்தனை கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகிறது ?

(ஆ) சிறுபான்மை சமூகத்தின் மொழிகள் என்று நமது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிகள் யாவை ?

(இ) அந்த மொழிகளைக் கற்றுக்கொள்ள அரசு செய்துள்ள ஏற்பாடுகள் யாவை ?

விடை—(அ) தமிழ்நாட்டில் உருது, அரபி மற்றும் பாரசீக மொழிகளைப் பாடமொழிகளாகக் கற்பிக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

உருது கற்பிக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கை ..	14
அரபி கற்பிக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கை ..	10
பாரசீகம் கற்பிக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கை ..	1
உருது கற்பிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை	228
அரபி கற்பிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை ..	7
பாரசீகம்	..

(ஆ) தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம், இந்தி, குஜராத்தி.

(இ) சிறுபான்மை மொழிகள் வளர, அரசு எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறது. சிறுபான்மை மொழிகள் கற்பிக்கவேண்டி கல்லூரிகளில் இருந்து தகுந்த பிரேரணைகள் வந்தால் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை நகரில் இரவுப் பேருந்துகள்.

216. வினா—திரு.என்.கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் இரவு நேரப் பேருந்துகள் எந்தெந்த வழித் தடங்களில் விடப்படுகின்றன ?

விடை—சென்னை நகரில் இரவு நேரப் பேருந்துகள் இரவு 11.00 மணி முதல் விடியற்காலை 4.00 மணிவரை கீழ்க்கண்ட தடங்களில் விடப்படுகின்றன:—

வரிசை எண்.	தடம் எண்.	செல்லும் இடங்கள்.
(1)	(2)	(3)
1.	1	அண்ணா சாலை தபால் அலுவலகம் — தண்டையார்பேட்டை.
2.	5ஏ	அண்ணா சாலை தபால் அலுவலகம்—அடையாறு

[1978 சனவரி 10

மதுரை பஸ் நிலையம்.

218. வினா—திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை பஸ்நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம் போடப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) திட்டம் பற்றிய விவரங்கள் மதுரை மாநகராட்சியின் ஆய்விலுள்ளன.

219. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் கடல்பாசி வளர்க்கும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

விடை—*பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

Pension for former Legislators.

220 *Q.*—Thiru C. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the number of ex-Legislators getting pensions as on date; and

(*b*) the expenditure incurred on this account?

Answer—(*a*) The number of Ex-Legislators getting pensions as on 31st October is 187.

(*b*) The expenditre incurred on this account upto 31st October 1977 is Rs. 9,14,810-25.

(அ) 31—10—1977 ஆம் தேதியின்படி 187 முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள்.

(ஆ) 31—10—1977 ஆம் தேதி வரையில் இதன் வகையில் ஆன செலவு ரூ. 9,14,810.25 ஆகும்.

---

*[1367-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1978 சனவரி 10]

கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள்.

221. வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975, 1976 ஆம் ஆண்டுகளில் எத்தனை பெண்கள் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர் ?

விடை—1975-ம் ஆண்டில் 347 பெண்களும், 1976-ம் ஆண்டில் 324 பெண்களும் சீர்திருத்தப்பணித்துறையின் கீழ் இயங்கும் ஒழுக்கக்கண்காணிப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டனர்.

வடாற்காடு மாவட்டத்தில் கசிவு நீர்க் குளங்கள்.

222. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை இடங்களில் காடு மலையடிவாரங்களில் (Percolation Tanks) கட்டப்பட்டுள்ளன ?

(ஆ) இப்போது எங்கெங்கே கட்டப்பட்டு வருகிறது ?

விடை—(அ) ஆறு இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) தற்போது கீழ்க்கண்ட 7 இடங்களில் (Percolation Tanks) கட்டப்பட்டு வருகின்றன:—

1. வாணியம்பாடி தாலுக்காவில் மல்லகுண்டா கிராமத்தில்;
2. குடியாத்தம் தாலுக்காவில் சேதுவண்டை கிராமத்தில்;
3. வாணியம்பாடி தாலுக்காவில் சுட்டகுண்டா கிராமத்தில்;
4. வாணியம்பாடி தாலுக்காவில் வெள்ளகுட்டை கிராமத்தில்;
5. வேலூர் தாலுக்காவில் கம்மியம்பட்டு கிராமத்தில்;
6. வாணியம்பாடி தாலுக்காவில் அருங்கல்துர்கம் கிராமத்தில்;
7. வேலூர் தாலுக்காவில் செம்பேடு கிராமத்தில்.

தனியார் மின் வழங்கு நிறுவனங்கள்.

223. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மின்சார நிறுவனங்கள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன ?

(ஆ) அவை யாவை ?

விடை—(அ) & (ஆ) தற்போது தமிழ்நாட்டில் தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் எதுவும் இல்லை. ஆனால் தற்போது 1910 இந்திய மின்னியல் சட்டம் பிரிவு, 3-ன் கீழ் மின் உரிமம் வழங்கப்பட்ட ஐந்து நகராட்சி மின் வழங்கு நிறுவனங்களும் மேற்கூறிய சட்டம் பிரிவு 28-ன் கீழ் மின் வழங்க ஒப்பளிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றும் இயங்குகின்றன. அவையாவன :—

(1) மதுரை
(2) கோயம்புத்தூர்
(3) தஞ்சாவூர்
(4) பொள்ளாச்சி
(5) கரூர்

ஒப்பளிக்கப்பட்டவர் : நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், நெய்வலி.

கோதுமை விலை.

224. வினா—திரு. எஸ். ஜே. சர்திக் பாட்சா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக்கடைகளில் 1 கிலோ கோதுமை என்ன விலைக்கு விற்கப்படுகிறது ?

(ஆ) மேற்படி விலையில் கோதுமை விநியோகச் செலவு—Distribution Cost—எவ்வளவு சேர்க்கலாம் என்று அரசு நிர்ணயித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) 1 கிலோ கோதுமையின் விலை ரூ. 1.40 என விற்கப்படுகிறது.

(ஆ) & (இ) மத்திய அரசு கிலோவுக்கு ரூ. 1.25 என்ற விலையில் நமக்குக் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. குவின்டாலுக்கு ரூபாய் 15 விநியோகச் செலவுக்காக சேர்க்கலாம் என்று அரசு நிர்ணயித்துள்ளது.

கோழிப் பண்ணைகள்.

225. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசாங்கம் நடத்தும் கோழிப்பண்ணைகள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அந்தக் கோழிப்பண்ணைகளில் ஒரு நாள் உற்பத்தி எவ்வளவு ?

விடை—(அ) & (ஆ) கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் உள்ள 31 கோழிப்பண்ணைகளில் ஒரு நாள் உற்பத்தியாகும்—

முட்டைகள்	10,175
கோழிக்குஞ்சுகள்	799

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கீழ் உள்ள 8 கோழிப் பண்ணைகளில் ஒரு நாள் உற்பத்தியாகும்—

முட்டைகள்	5,088
கோழிக் குஞ்சுகள்	1,641

வட ஆண்டாபட்டு கிராமத்தில் குடிநீர்த் தேக்கத் தொட்டி.

226. வினா—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம், வட ஆண்டாபட்டு கிராமத்தில் குடிநீர்த் தேக்க தொட்டி கட்டும் வேலை நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) வேலை எப்போது முடிவடையும் ?

விடை—(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம், கிளியப்பட்டு பஞ்சாயத்து மதுரா வட ஆண்டாபட்டு கிராமத்தில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை நடைபெற்று வருகிறது.

(ஆ) மேற்படி வேலையில் குழாய்களைப் பொருத்துவது தவிர மற்ற வேலைகள் முடிவுற்றுள்ளன. அதன் மதிப்பீடு ரூ. 49,900.

(இ) மின் இலாகாவிலிருந்து மின் இணைப்பு கிடைத்தவுடன் வேலை விரைவில் முடிக்கப்படும்.

[1978 சனவரி 10

சிதம்பரம் வட்டத்தில் மனைப் பட்டாக்கள்.

227. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—2—1976 முதல் 30—6—1977 வரை சிதம்பரம் வட்டத்தில் கொடுக்கப்பட்ட மனைப்பட்டாக்கள் எத்தனை?

(ஆ) இன்று வரை அளந்து மனைக்கு கல் போடாமல் உள்ளது எத்தனை?

விடை—(அ) 2,466.

(ஆ) ஏதுமில்லை.

பாசன நிலங்கள்.

228. வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1947 முதல் 1967 மார்ச் முடிய புதிய பாசனத்திற்கு வந்த விவசாய நிலங்கள் எவ்வளவு?

(ஆ) 1967 ஏப்ரல் முதல் 1976 ஜனவரி முடிய விவசாய நிலங்கள் எவ்வளவு?

விடை—(அ) 5,22,250 ஹெக்டேர்.

(ஆ) வருடம்.	ஹெக்டேர்.
1967—68	60,82,656
1968—69	58,90,921
1969—70	60,69,226
1970—71	61,69,173
1971—72	63,47,545
1972—73	63,31,786
1973—74	61,75,343
1974—75	56,53,446
1975—76	59,89,228

மேற்காணும் புள்ளி விவரங்கள் பசலி ஆண்டுக்குரியவை (ஜூலை முதல் ஜூன் வரை).

1978 சனவரி 10]

பரவனூர் வடிகால் திட்டம்.

229 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், பரவனூர் வடிகால் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—(அ) & (ஆ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் இருக்கிறது. ஆய்வு முடிந்த பின் அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

Boron Contents of Soil.

230 Q.—Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) the details of the boron contents in the soil in Tamil Nadu Districtwise; and

(b) the steps taken to improve its content in the soil?

Answer—(a) No systematic work has been undertaken by the Agricultural Department or by the Tamil Nadu Agricultural University to assess the boron content of soils in Tamil Nadu. Districtwise data is not, therefore, available. However a limited number of soil samples analysed revealed deficiency of Boron in certain soils.

(b) It has been found by field experiments that crops like groundnut, cotton and paddy respond favourably to Boron application. Hence, special micronutrient mixtures using Boron as one of the constituents, have been prepared for distribution to farmers.

During 1976-77, 200 M.T. of micronutrient mixtures were distributed and during 1977-78, out of 700 M.T. mixture prepared about 400 M.T. have already been distributed, to farmers for application to groundnut and cotton crops.

[1978 சனவரி 10

(அ) தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலுள்ள நிலங்களில் 'போரான்' என்ற நுண் சத்தின் அளவு பற்றி, தமிழ்நாடு வேளாண்மைத் துறையோ, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமோ முறையான ஆய்வு நடத்தவில்லை. எனவே மாவட்டவாரியான விபரங்கள் இல்லை. எனினும் சோதனைக்கு வந்த மண் மாதிரிகளைப் பரிசோதித்ததிலிருந்து. ஒரு சில இடங்களில் போரான் பற்றுக்குறையாக உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

(ஆ) வேளாண்மைத் துறை நடத்திய ஆய்வுகளிலிருந்து, நெல், நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களுக்கு, 'போரான்' நுண் சத்து இட்டால் நல்ல பலன் கிடைக்கிறது எனத் தெரிய வந்துள்ளது. எனவே விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக, வேளாண்மைத் துறை, போரான் நுண் சத்து அடங்கிய தனி நுண் சத்துக் கலவைகளைத் தயாரித்துள்ளது.

1976--77-ல் 200 மெட்ரிக் டன்கள் அளவுள்ள நுண் சத்துக் கலவைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1977—78ஆம் ஆண்டில் 700 மெட்ரிக் டன்கள் அளவுள்ள நுண் சத்துக் கலவைகள் தயாரிக்கப்பட்டு, இதுவரை சுமார் 400 மெட்ரிக் டன்கள் அளவுள்ள கலவைகள், பருத்தி, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்குப் பயன்படுத்துவதற்காக, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

நியாய விலைக் கடைகள்.

231 வினா.—திரு. எம். செல்வராஜ்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 30—9—1977 முடிய எத்தனை ரெவின்யூ கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன?

விடை.—இப்பொழுது கிராமங்களில் 9,287 நியாய விலைக் கடைகள் நடந்து வருகின்றன. இவை அரிசி, கோதுமை லெவி-சர்க்கரை போன்ற பொருட்களை மட்டுமே விற்று வருகின்றன. இவை தவிர பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், மிளகாய், புளி போன்ற இன்றியமையாப் பொருட்களையும் விற்கும் நோக்கத்துடன் ஏற்கனவே நடந்துவரும் கடைகளைப் பல பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றும் முதல் கட்ட வேலை தொடங்கியுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகின்ற 800-க்கு மேற்பட்ட கடைகள் இவ்வாறு பல பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டு சென்ற ஒரு மாதமாக இயங்கி வருகின்றன. இவை தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் 440 புதிய நியாய

1978 சனவரி 10]

விலைக்கடைகள் ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்பட்டுவிடும். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிவடையும் கட்டத்தில் இருக்கின்றன. 1978-ம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

232. வினா.—திரு. ஆர் உமாநாத், திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 16,000 நியாய விலைக் கடைகள் திறப்பது குறித்த அரசாங்க அறிவிப்பின் கீழ் இதுவரை எத்தனை கடைகள் திறக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவை எங்கெங்கு உள்ளன?

(இ) அவைகளில் விற்கப்படும் பொருட்களும், அவற்றின் அளவும் யாது?

விடை.—இப்பொழுது கிராமங்களில் 9,287 நியாய விலைக் கடைகள் நடந்து வருகின்றன. இவை அரிசி, கோதுமை, லெவி-சர்க்கரை போன்ற பொருட்களை மட்டுமே விற்று வருகின்றன. இவை தவிர பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், மிளகாய், புளி போன்ற இன்றியமையாப் பொருட்களையும் விற்கும் நோக்கத்துடனும் ஏற்கனவே நடந்துவரும் கடைகளைப் பல பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றும் முதல் கட்ட வேலை தொடங்கியுள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகின்ற 800-க்கு மேற்பட்ட கடைகள் இவ்வாறு பல பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டு சென்ற ஒரு மாதமாக இயங்கி வருகின்றன. இவை தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் 440 புதிய நியாய விலைக் கடைகள் ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்பட்டுவிடும். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிவடையும் கட்டத்தில் இருக்கின்றன. 1978-ம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

அரசு தரப்பில் உள்ள நெல், அரிசி.

233 வினா.—திரு. எம். செல்வராஜ்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

30—9—1977 வரை தமிழ்நாட்டில் அரசின் பொறுப்பில் நெல், அரிசி எவ்வளவு இருப்பு உள்ளது?

விடை.—பொது விநியோகத்திற்குப் போதுமான அரிசி அரசின் கைவசம் உள்ளது.

வெள்ளாற்று மதகு.

234 வினா.—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், சேத்தியாதோப்பு வெள்ளாற்றின் ஷட்டர் உயரத்தை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை.—இல்லை.

சிறைக் காவலர் ஊதியம்.

235 வினா.—திரு. கு. ரமணி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறை வார்டர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய விகிதம் போலீசாருக்குக் கொடுப்பதை விடக் குறைவா?

(ஆ) ஜெயிலர், அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் ஊதிய விகிதங்கள் என்ன?

(இ) சிறை வார்டர்களிடம் எத்தனை மணி நேரம் வேலை வாங்கப்படுகிறது?

விடை.—*விவர அறிக்கை சட்டப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[* 1368ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

(2) தகவல் கோரல்.

(அ) போக்குவரத்துத்துறை அளித்த பாஸில் உள்ள தேதிக்கும் செயலாளர் கொடுத்துள்ள அடையாள அட்டையில் கொடுத்துள்ள தேதிக்கும் உள்ள முரண்பாடு குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, நேற்றைய
தினம் எங்களுக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்
திலிருந்து ஒரு பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் பாஸை
புதுப்பிக்கும் நாள் என்று போட்டிருக்கின்ற இடத்தில்
30-6-82 என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் செயலாளர்
அவர்கள் கொடுத்திருக்கின்ற உறுப்பினர் ஐடென்டிபிகேஷன்
கார்டில் 29-6-1983 என்று போடப்பட்டிருக்கிறது. இதை
நம்புவதா, அதை நம்புவதா என்று தெரியவில்லை. 29-6-83
என்று செயலாளர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்
போக்குவரத்துக் கழகம் 30-6-82-ஓடு முடித்துவிட்டார்கள்.
நாங்கள் 82-ஓடு போவதா அல்லது 83 வரையில் இருப்பதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர்
இராதா அவர்கள் யூகமாகக் கண்டுபிடித்துக் கொள்வார்கள்
என்று நம்பினேன். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட
சட்டத்தையொட்டி, அதிகாரபூர்வமான உத்திரவு இன்னும்
நமக்கு வரவில்லை. ஆகவே நம்முடைய பதவி காலம் 6
ஆண்டுகாலம் என்று நம்பியிருக்கிறோம். போக்குவரத்து இலாக்
காவில் எப்போதும் ஐந்து ஆண்டுகளுக்குத்தான் வாலிடிடி
தந்து வருகிறார்கள். வாலிடிடி 6 ஆண்டுகளாக இருக்க வேண்
டும் என்று நாம் அவர்களுக்கு அறிவுரை தரவில்லை. இது
பெரிய ஒழுங்குப் பிரச்னையல்ல.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்
களுக்கு எதிராக நான் ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பினேன்.
மின்சார ஊழியர்கள் மாநகராட்சியில் வேலை செய்து வருகிறார்
கள். தாற்காலிகமாக வேலை செய்கிற.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்போது எந்த விளக்கமும் தரக்கூடாது. வேண்டுமானால் நான் எழுப்பிய உரிமைப் பிரச்னை என்னவாயிற்று என்று கேளுங்கள். நான் அதற்கு விளக்கம் தந்த பிறகு........

திரு. ஏ. ரகுமான்கான்: பேரவைத் தலைவரவர்களே, எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாராளமாகத் தருகிறேன். ஆனால் இப்போது இருப்பதை வைத்துச் சொல்கிறேன். நீங்கள் இப்போது, 'நான் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மீது கொடுத்த உரிமை மீறல் பிரச்னை என்னவாயிற்று' என்று கேட்பதுதான் முறை. அதைச் சொல்லிவிட்ட பிறகு, நான் அதற்கான விளக்கத்தைத் தரவேண்டும். அதில் இன்னும் ஏதாவது விளக்கம் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தால், கேள்வி கேட்கலாம். அதுதான் முறை.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, தாங்கள் சொல்லியதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில், நான் என்ன உரிமைப் பிரச்னை கொண்டு வந்தேன் என்பதை சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்லக்கூடாது. தாங்கள் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்னையை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அனுப்பியிருக்கிறார். இலாக்காவிலிருந்து பதில் வந்தவுடன் உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒரு உரிமைப் பிரச்னையை இங்கே எழுப்பியிருக்கிறேன், அண்ணா நாளேட்டுக்கு எதிராக. அந்த அண்ணா நாளேட்டில்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணா நாளேட்டின் மீது நான் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்னை என்னவாயிற்று என்று கேளுங்கள், அது தான் முறை.

திரு. மு. அரங்கநாதன்: நானும் ஒன்று கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பிரச்னையை முடிக்கட்டும், பிறகு நீங்கள் பேசுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கொடுத்த உரிமைப் பிரச்னை மறுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிற காரணம் விதி 83(3)-ஐ மீறுவதாக இருக்கிறது. அதை நீங்கள் விளக்கிச் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம், மரபை காப்பாற்ற ஒத்துழைக்கவேண்டும். அது மறுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது குறித்து என் அறையில் வந்து கேட்கவேண்டும். உரிமைப் பிரச்னை என்னவாயிற்று அது உங்களுக்குத் தெரியும். அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது என்று கேட்டார்கள். அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். முடிவைத் தங்களுக்கு அனுப்பியதுபற்றி மறுபடியும் கிளப்பக்கூடாது, அது மரபு அல்ல.

திரு. ஏ. ரகுமான்கான்: விளக்கம் கேட்கிறேன். விதியில் சொல்லப்பட்டிருப்பதை வாசிக்கிறேன். விதி 83-ல் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால்................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னும் ஒத்துழைக்கத் தயார், இது ஒரு பெரிய பிரச்னையல்ல. ஆனால் மரபு கெட்டுவிடும். இது என் அறையில் வந்து விவாதிக்க வேண்டியது.

திரு. ஏ. ரகுமான்கான்: விதி தெளிவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தவறுதலாகக் கொடுத்திருந்தாலும் என்னைத் திருத்த வேண்டிய இடம் அறை, இங்கு அல்ல. தயவுசெய்து அறையில் வந்து சந்தித்துப் பேசுங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: இதில் இன்ஜஸ்டிஸ் நடந்திருக்கிறது. அது, சபைக்குத் தெரியவேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தெரிய வேண்டியதில்லை.

திரு. ஏ. ரகுமான்கான்: விதி 83 தெளிவாகச் சொல்கிறது. விதி தெளிவாக இருக்கிறது. எனக்கு [அதைச்] சொல்ல உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையில் வந்து சொல்ல வேண்டும்.

திரு. ஏ. ரகுமான்கான்: அப்படி விதியில் இல்லை.

[1978 சனவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் முடிவு. அமருங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எனக்கு வழி காட்டட்டும்.

திரு. ரா. உமாநாத்: என்ஜினியர்கள் விஷயமான உரிமைப் பிரச்சினையில், மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் மீது, தீர்ப்பு கூறவேண்டியது பாக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வருகிறது. மூன்று நான்கு உரிமைப் பிரச்சினைகள் பற்றி எடுத்துச்சொல்ல இருக்கிறேன். ஏதாவது விடப்பட்டு விட்டால் பிறகு கேளுங்கள்.

(இ) ரத்து செய்யப்பட்ட ரயில்வே கூப்பன்களை திரும்ப தராதது பற்றி.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: ரெயில்வே கூப்பன்கள் கொடுத்து, டிக்கட் எடுத்து, கான்சல் செய்த கூப்பன்களை திரும்பத் தரமாட்டேன் என்று சொல்கிறார்கள். விவரம் புரியவில்லை. காசு கொடுக்காமல் இருப்பது சரிதான். கான்ஸல் செய்த கூப்பன்கள் திரும்பக் கிடைக்காத நிலை இருக்கிறது, என்னிடமே 1,500-க்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டால் அல்லது கடிதம் மூலம் எழுதிக்கேட்டும் அதிலும் உங்களால் முடியவில்லை என்றால்தான் கடைசி இடம் இந்த அவை. இந்தச் சின்ன பிரச்சினையை அதிகாரிகளை வைத்தே தீர்த்துக் கொள்ளலாம்.

(ஈ) மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அமெரிக்க சுற்றுப் பயணம் மேற்கொள்ள விருப்பது குறித்து வந்துள்ள பத்திரிகை செய்தி குறித்து.

திரு. கே. கந்தசாமி : இன்றைய செய்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்கு அமெரிக்கா செல்ல அழைப்பு வந்திருப்பதாகவும் ஒரு மாதச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள போவதாகவும் தெரிய வருகிறது. அப்படியானால் அதன் முழு விவரங்களையும் தெரிவித்தால் அவை உறுப்பினர்களும், நாட்டுமக்களும் அது குறித்து அறிவதற்கு உதவிகரமாகயிருக்கும், நாம் வாழ்த்துச் சொல்ல அதைக் கொஞ்சம் அறிவிப்பார்களா?

1978 சனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களின் சுற்றுப்பயண விவரங்கள் அவர்கள் முடிவு எடுத்து போகிற நேரத்தில் நிச்சயம் எல்லா உறுப்பினர்களுக்கும் அந்தத் தகவல் அனுப்பப்படும். இது மரபு கூட. அனுப்பாமல் இருப்பது கிடையாது. நிச்சயமாக அது பின்னால் உறுப்பினர்களுக்கு வந்து சேரும்.

(3) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) 'யார்-எவர்' என்ற வெளியீட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தவறாக குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த 'ஹூ ஈஸ் ஹூ'-ல், யார் யார் என்ற இந்தப் புத்தகத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எங்களைப் பற்றிப்போடும்போது அம்பிகாபதி கம்யூ-வ, கூத்தகுடி சண்முகம் கம்யூ-வ, என்று கம்யூ-வ, கம்யூ-வ. என்று போடப்பட்டிருக்கிறது. இது என்னவென்று விளக்கவேண்டும். ஏன் இப்படிப் போட்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு இருக்கின்ற அனுபவம். கம்யூனிஸ்டு (வலது) என்றும் கம்யூனிஸ்டு (இடது) என்றும் சொல்வதுண்டு. கம்யூனிஸ்டு (வலது) என்று சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா?

திரு. மு. அம்பிகாபதி : இல்லை, அப்படியிருப்பதை நான் விரும்பவில்லை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நீங்கள் திருத்த வேண்டும் என்று விரும்பினால், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி என்று சொல்லி திருத்திக் கொடுங்கள் அதை திருத்திவிடலாம்.. (சிரிப்பு)

திரு. மு. அம்பிகாபதி : மார்க்ஸிஸ்ட் கமியூனிஸ்ட் அல்ல..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்கவேண்டும்.. இதில் என்ன பிரச்சினை என்றால், சிவப்புத்துண்டை நீங்களும் போட்டிருப்பதால், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டை சேர்ந்தவர்கள் என்று நான் நினைத்தேன், தவறு இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்..........

திரு. மு. கருணாநிதி : இனிமேலும் இன்னொரு தவறு ஏற்பட்டுவிடக்கூடாது, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் என்று சொல்வது வலது என்று அர்த்தமல்ல. சாதாரணமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை, வலது என்றும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை, இடது என்றும் சொல்வது வழக்கமாக இருந்தது. சரியாக சொல்வது என்றால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் சொல்ல வேண்டும். ஆகவே வலது கம்யூனிஸ்ட் என்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் என்று சொல்வது மறுக்கப்படத்தக்க ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இருப்பதை வேண்டுமென்றால் திருத்திக்கொள்ளலாம்.........

திரு. மு. அம்பிகாபதி : எப்படி திருத்த முடியும், இந்தப் புத்தகம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டாகிவிட்டது, இந்தப் புத்தகத்தை யெல்லாம் திரும்ப வாங்க வேண்டும், வலது கம்யூனிஸ்ட் என்று சட்டமன்றத்திலே இருந்து வெளியிடுகின்ற புத்தகத்தில் இருப்பது மிகவும் சரியற்றதாக இருக்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுமென்றால் கரக்ஷன் செய்து தனியாக தெரிவிக்கலாம். வழக்கம் போல் கம்யூனிஸ்ட் வலது என்று வந்திருக்கலாம். கரக்ஷன் வேண்டுமென்றால் இஷ்யூ பண்ணலாம். இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : நமது நிதி அமைச்சர் அவர்கள் எங்களுடைய சிவப்புத்துண்டை அவமதிக்கின்ற வகையில், அவர்களுடைய கழுத்திலிருந்து கீழே ஏன் எடுத்து வைத்துவிட்டார் என்று தெரியவில்லை. (சிரிப்பு)

(மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமது இருக்கையில் வைத்திருந்த தமது சிவப்பு நிற சால்வையை எடுத்துப் போட்டுக் கொண்டார்கள்.)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் 'எங்களுடைய சிவப்புத்துண்டை' நிதி அமைச்சர் ஏன் எடுத்து விட்டார் என்று கேட்கிறார்கள்...... அப்படியென்றால், நிதி அமைச்சர் அவர்கள் போட்டிருக்கின்ற சிவப்புத்துண்டு உமாநாத் அவர்களுடையதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

(ஆ) 'யார் எவர்' என்ற வெளியீட்டில் ஓர் உறுப்பினர் தந்தையின் பெயரை ஜாதிப்பெயர் சேர்த்து குறிப்பிட்டிருப்பது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இந்தப் புத்தகத்தில் கட்சியினுடைய பெயரைப்பற்றி தவறாகப் போடப் பட்டிருப்பதாக சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய தந்தையாருடைய பெயரில் ஜாதிப் பெயரையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். நான் சாதாரணமாக ஜாதிப் பெயரை உபயோகிப்பதில்லை, என்னுடைய தந்தையாருடைய பெயரைக் குறிப்பிடும்போது 'ராமையா' என்று தான் குறிப்பிடுவேன். ஆனால் இதில் ஜாதிப் பெயரையும் சேர்த்து 'ராமையர்' என்று 'அய்யர்' போடப்பட்டிருக்கிறது, நான் 'அய்யர்' என்று போட்டுக்கொள்வதில்லை, இந்தத் தவறையும் நீக்க வேண்டும்......

(இ) பயணச் சீட்டுடன் அடையாளச் சீட்டையும் காண்பிக்க வேண்டியிருப்பது குறித்து.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, எங்களுக்குப் பயணச் சீட்டு தந்திருக்கிறார்கள். இதிலே இரண்டாவது விதியில் இந்த உரிமைச் சீட்டோடு, அடையாளச் சீட்டையும் சேர்த்து காண்பித்தல் வேண்டும் என்று குறிப்பிட்டு தந்திருக்கிறார்கள். இது சாதாரணமாக மாணவர்களிடம் காட்டச் சொல்வது போல் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் பயணம் செய்யும்போது இப்படி பயணச் சீட்டோடு அடையாளச் சீட்டையும் காட்ட வேண்டும் என்று சொல்வது எங்களை அவமானப் படுத்துவது போல் இருக்கிறது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் மார்க்கபந்து என்பது இந்த அவைக்குத் தெரியும், ஆனால் தாங்கள் தான் மார்க்கபந்து என்று நாட்டுக்கு எப்படித் தெரியும்? அதற்கு இன்னும் காலம் வரவில்லை. தங்களைப் பார்க்கும்போதே நாங்கள் தான் மார்க்கபந்து என்று எப்படி தொழிலாளர்களுக்குத் தெரியும்?.......

(திரு. சி. ஆறுமுகம், திரு. எம். ஆறுமுகம் அவர்களும் எழுந்து நின்றனர்..........)

இரண்டு ஆறுமுகங்கள் எழுந்து நின்றால் என்ன செய்வது? ஒரு ஆறுமுகம் பேசட்டும், இன்னொரு ஆறுமுகம் அமரட்டும்,

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நான் தான் முதலில் பேச எழுந்தேன்.

திரு. எம். ஆறுமுகம்: நானும் தான் எழுந்தேன், தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற பாஸில் எங்களுக்கு ஏற்கனவே தந்திருக்கும் ஐடென்டிபிக்கேஷன் கார்டை சேர்த்து காண்பிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது அவசியமாகது தேவை தானா, இதை நீங்கள் தயவு செய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடைமுறையில் அப்படி வருவதில்லை, இதைப்பற்றி பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப்பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பற்றிக் கொடுத்திருந்தேன். அது இன்னும் எடுத்துக் கொள்ளபடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உரிமை மீறல் பிரச்னை; பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம். அப்போது பேசலாம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 41-ன் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில், மதுராந்தகம் தாலுகாவிலே, சித்தனுபுரம் கிராமத்திலே அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இது 4-12-1977-ல் நடக்கப்பட்டிருக்கிறது என்றும், நான் 29 ஆம் தேதி கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உரிமை மீறல் பிரச்னை. பின்னர் ஒத்திவைப்பு, அதற்குப்பின் கவன ஈர்ப்புத் தீர்மானம் வரும். அப்போது எழுப்புங்கள் உங்கள் பிரச்னையை. இப்போது அமருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இது கொடுத்து ரொம்ப நாள் ஆயிற்று. இதுபற்றி நேற்றுகூட கேட்கப்பட்டது, இன்றைக்கு வருவதாகச் சொன்னீர்கள். இது முக்கியமானது. இங்கே அரிசனங்கள் தொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதை கேட்கமாட்டேன் என்கிறீர்களே. கண்டிப்பாகச் சொல்கிறேன். அதைக்கேளுங்கள். இப்போது உரிமை மீறல் பிரச்னை, பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானம், அதற்குப் பின்னர் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகின்றது. அப்போது உங்கள் பிரச்னையை எழுப்புங்கள்.

இந்த அவையின் உரிமை மீறல் குறித்து, திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் 'அலை ஓசை' பத்திரிகை மீது........

(3) ஒழுங்குப் பிரச்னைகள் —தொடர்ச்சி.

(ஈ) ஓர் உறுப்பினர் தமது மனைவியையும் உடன் அழைத்துச் செல்ல இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிற பாஸ் செல்லாது என ரயில்வே அதிகாரிகள் கூறுவது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, இங்கே பேசியவர்கள் பஸ் பாசைப் பற்றிப் பேசினார்கள். ரயில்வே பாசில், மனைவியை உடன் அழைத்துச் செல்லலாம் என்றிருக்கிறது. அந்த பாசில் அப்படி ஒரு விதி இருக்கிறது. ஆனால், ரயில்வே அதிகாரிகள் எங்களுக்கு தனியாக சர்க்காரிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதன்படி, மனைவியை அழைத்துச் செல்ல இந்த பாஸ் செல்லாது என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த விதியைப் பொறுத்தவரையில் அதிகாரிகளுக்குச் சொல்லி, அதற்கான ஒரு சுற்றறிக்கை அனுப்பும்படித் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரயில்வே பாசை நான் கண்ணால்கூடப் பார்க்கவில்லை. எனவே, இதைப்பற்றி கவனித்து, அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் 'அலைஓசை' நாளிதழின்மீது ஒரு அவை உரிமை மீறல்குறித்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

(4) உரிமைப் பிரச்னைகள்.

(அ) 'அலை ஓசை' நாளிதழ் அவை நிகழ்ச்சிகளை தவறாக வெளியிட்டுள்ளது குறித்து.

திரு. மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, 7-1-1978 ஆம் தேதியிட்ட 'அலை ஓசை' நாளிதழில் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்

துறை அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் இந்தஅரசின் மீது கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் 5-1-1978 அன்று உறுப்பினர்கள் கலந்து கொண்டு கூறிய குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அளித்த பதில் வெளியிடப்பட்டுள்ளது. "நெல்லுக்கு அதிக விலை தர முடியாது. எட்மண்ட் அறிவிப்பு" என்ற தலைப்பில் இது வெளி வந்துள்ளது. இது அமைச்சரின் மீதும், இந்த அரசின் மீதும் வேண்டுமென்றே தவறான கருத்தை வெளியிட்டு விவசாயிகளின் மத்தியில் கெட்ட பெயர் ஏற்படுத்தும் விதத்தில் வெளியிடப்பட்டுள்ளதால், இது அவை உரிமை மீறல் செயலாகும். எனவே, இது குறித்து சட்டமன்ற பேரவை விதி 184-ன் கீழ் உரிமை பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அலை ஓசை நாளிதழில், மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இளைஞர் ... குறிந்து திரு. ப. உ. சண்முகம் அவர்களின் கேள்விக்கான பதிலையும், நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்துச் சொன்ன தகவலையும் சேர்த்து வெளியிட்டு இருப்பது ஒரு தவறான கருத்தைப் படிப்பவர்களுக்குக் கொடுக்கும் விதத்தில் இருக்கிறது. இது குறித்து அந்தப் பத்திரிகையின் ஆசிரியருக்கு எழுதிக்கேட்டு பின் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>(ஆ) பொதுப்பணித்துறை அமைச்சர் மீது எழுப்பப்பட்ட பிரச்னை.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, 31-12-1977 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேரவை நடைமுறை விதி 184-ன் கீழ் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பினார். அன்றே உறுப்பினரது கருத்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களது விளக்கமும் அளிக்கப்பட்டு, இப்பிரச்சினையில் எனது தீர்ப்பை அவைக்கு பின்பு அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

உறுப்பினர் எழுப்பிய வாதம் அவையில் 41-வது விதியின் கீழ் ஒரு பொருள் இருக்கும்போது அமைச்சர் அவர்கள் அந்த பிரச்னையில் தகவல் ஒன்றை பேரவையில் இன்றி வெளியே கூறலாமா என்பது பற்றியது. இது பொதுவாக ஒரு பாராளுமன்ற முறை என்று எடுத்துக்கொண்டாலும், அதை நாம் மிகவும் கண்டிப்பாக கடைப்பிடிக்க முடியாது. சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு பொதுமுறைகளை விதிவிலக்குகளுடன்

கடைப்பிடிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல அன்று 'டிப்ளோமா' என்ஜினியர்கள் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறி, அவ்வாறு இருந்த அவர்களது உயிர் ஊசலாடிக் கொண்டு இருந்ததினாலும், எடுத்த முடிவுகள் உடனடியாக மாநிலம் முழுவதும் தெரிவிக்கப்படாவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் அல்லது தொடர் நிகழ்ச்சிகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்ததாலும் அடுத்த நாள் அவையில் இதைப்பற்றி அறிவிப்பு கொடுப்பதாக இருந்தால் காலதாமதம் ஆகிவிடும் என்பதனாலும் இதைப்பற்றிய முடிவுகளை ஒரு 'பிரஸ் ரிலீஸ்' செய்தார்கள் என்றும் கூறினார்கள்.

[முற்பகல் 10-10]

நான் மேற்கொண்டு விசாரித்ததில் Press Release Co-ordination Committee மூலமாகத்தான் வெளியிடப்பட்டுள்ளது. அரசுத் தரப்பிலிருந்து எதுவும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

இதில் உறுப்பினர் அவர்களுக்கு 'கிரெடிட்' கிடைக்காமல் போகவேண்டுமென்று செய்யவில்லை என்றும் கூறினார்கள்.

இப்பிரச்சினையில் நல்லெண்ணத்தோடு, போராட்டம் நடத்துபவர்கள் அப்போராட்டத்தை நிறுத்தி வேறு விளைவுகள் ஏற்படாவண்ணம் இருப்பதற்காகவே, அவர்களே அறிவித்துள்ளதால் இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை என்றும் முடிவு கூறுகிறேன்.

மேலும் இது குறித்து உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டு அமைச்சர் அவர்களும் விரிவான விளக்கமான பதில் அளித்துள்ளார்கள். எனவே, இதில் உறுப்பினர் அவர்களின் 'கிரெடிட்' எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும் அவர்களுக்கு மன நிறைவும் கொடுத்து இருக்கும் என்றும் நினைக்கிறேன்.

<u>(இ) 'அண்ணா' நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளை தவறாக வெளியிட்டது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u>—7—1—1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அரங்கநாதன் அவர்கள் 'அண்ணா' நாளிதழ் மீது இப்பேரவையில் ஒரு அவை உரிமை மீறல் குறித்த அறிக்கையை எழுப்பினார். அந்த நாளிதழில் "தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கருணாநிதி துரோகம், பண்ருட்டி அம்பலப்படுத்தினார். கருணாநிதி ப.உ.ச. ஒப்புதல்" என்ற தலைப்பிட்டு முதல் பக்கத்தில் செய்தி வந்துள்ளது என்றும், அந்தத் தலைப்பிற்கும் உள்ளே கொடுக்கப்பட்டிருக்கும் செய்திக்கும் சம்பந்தம் இல்லை என்றும், மக்களுக்கு தி.மு.க. தலைவர்கள்மீது

தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் குறிப்பிட்டார்.

இது குறித்து விளக்கம் கேட்டு, ''அண்ணா'' நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதப்பட்டது. அவரிடமிருந்து வந்த பதிலைப் பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

''வணக்கம். தங்கள் 7—1—1978 நாள் கடிதம் கிடைக்கப் பெற்றோம்.

அண்ணா நாளிதழ், சென்னை 31—12—1977 வெளியூர் —1—1978 சட்டமன்ற நிகழ்ச்சியினை வெளியிட்டிருக்கிறது. சட்டமன்ற நிகழ்ச்சியினைப் பிரசுரிக்கும்போது அவை நிகழ்ச்சிகளை அப்படியே பிரசுரித்து விட்டு ஒவ்வொரு நாளிதழும் அதன் கண்ணோட்டத்திறகு ஏற்ப தலைப்புகள் போடுவது மரபாக இருந்து வருகிறது. அந்த முறையில் 31—12—1977—தேதி மன்றத்தில் நடந்த விவாதத்திற்குத் தலைப்பிட்டிருந்தோம்.

அப்படி நாங்கள் தலைப்பிட்டது எந்த உறுப்பினரின் உள்ளத்தையாவது புண்படுத்தியிருக்குமானால் அதற்காக வருந்துகிறோம்.''

வெளியிடப்பட்ட தலைப்பிற்கு வருத்தம் தெரிவித்துவிட்ட காரணத்தால் மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் தேவையில்லை என்று கருதி இத்துடன் முடித்துவிடுகிறேன். பேரவையின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்கும்போது இம்மாதிரி தலைப்பிடாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தாங்கள் இப்போது படித்த அந்த உரிமைப் பரச்சினையைப் பற்றித் தங்களுடைய முடிவை, எந்த விதத்திலும் மறுக்க நான் முன் வரவில்லை. ஆனால் எழுதப்பட்ட கடிதத்தில் அவர்கள் தெரிவிக்கிற கருத்தை அவைத் தலைவர் அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருந்தால் உரிமைப் பிரச்சினை தேவையில்லை என்று கருதினாலும் கூட, கடிதத்திலே வருகிற வாசகம் 'அதன் கண்ணோட்டத்திற்கு ஏற்ப தலைப்புகள் போடுவது மரபாக இருந்து வருகிறது' என்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் திரும்பத் திரும்ப இது போன்ற உரிமைப் பிரச்சினைகள் வரக்கூடிய வகையில் எல்லாப் பத்திரிகைகளும் தவறான தலைப்பைத் தந்துவிட்டு 'உறுப்பினர்கள் மனத்தைப் புண்படுத்துவதாக இருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்' என்று சொல்லிவிடக்கூடும். ஆகவே, தலைப்புத் தருகிறவர்கள் தங்கள் கண்ணோட்டத்தில் தலைப்புத் தந்தால் அது உறுப்பினர்களின் பேச்சின் நோக்கத்தை, விவாதத்தின் அடிப்படையை மாற்றக்கூடிய நிலைமை ஏற்படும். அந்த உரிமை

பத்திரிகை ஆசிரியர்களுக்கு இருப்பதாக இந்த அவை ஏற்றுக் கொள்ளுகிறது என்ற நிலைமை ஏற்படாமல் தாங்கள் அறிவுறுத்துகிற முறையில் தங்கள் தீர்ப்பு அமையுமானால் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நிகழ்ச்சிகளை அப்படியே பிரசுரித்து விட்டு ஒவ்வொரு நாளிதழும் தங்கள் கண்ணோட்டத்தில் தலைப்புகள் கொடுத்தால் அது பல கோணங்களில் கொண்டு சென்று விடும். மொத்தத்தில் வருத்தம் தெரிவித்துள்ளதால் இப்போது விடப்படுகிறது. எதிர்காலத்தில் பேராசிரியர் சொன்னதுபோல் தங்கள் கண்ணோட்டத்தில் தலைப்புக் கொடுப்பதை நீக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் அது குறித்து முடிவு செய்யலாம்.

திரு. க. சுப்பு: நேற்று தங்களைச் சந்தித்தபோது பத்திரிகைகள் மீது அடிக்கடி சிறிய விவகாரங்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வரவேண்டாம் என்று சொன்னீர்கள். நான் தன்னிலை விளக்கம் அளித்த செய்தியை நான் மன்னிப்புக் கேட்டதாக, ஒன்று போல் அண்ணா நாளிதழ், தினத்தந்தி, மக்கள் குரல் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. நாங்கள் பேசினால் வருத்தம், மன்னிப்பு, மற்றவர்கள் பேசினால் ஆவேசப் பேச்சு என்று போடுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நேற்றைக்கு நானும் எதிர்க்கட்சித் தலைவரும் பேசும்போது கூட பத்திரிகைகளுக்கு அதிகமாக இப்படி இக்கட்டான நிலைமைகளை உண்டாக்கக் கூடாது ஓரளவிற்கு சுமுகமான உரிமை பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் இப்படி இரு தரப்பிலிருந்தும் உரிமைப் பிரச்சினைகள் கொடுக்கப்படுவதை நான் அவர்களைக்கொடுக்க வேண்டாம் என்று சொல்ல முடியாது. முதலிலே அவைத் தலைவரைச் சந்தித்து அதற்குப் பிறகு கொடுங்கள், எதற்கெடுத்தாலும் கொண்டுவருவது என்பது கூடாது என்று எதிர்க்கட்சியில் இருந்தும் ஆளுங்கட்சியிலிருந்தும் சொன்னால் எனக்குக் கூட கொஞ்சம் பளு இருக்காது. ஆனால் இப்படி கொண்டுவருவோம் என்று சொல்லுகிறார்கள் என்றால் நான் வேண்டாம் என்று சொல்ல முடியாது, அதைக் தடுக்க முடியாது. தலைவர்கள் எல்லாம் கூடி ஒரு முடிவு எடுத்து, இப்படி களங்கம் கற்பிக்கிற முறையில் குற்றம் சாட்டுகிற முறையில் செய்திகள் வந்தால் முதலிலே கட்சித் தலைவரைக் கலந்துகொண்டு பிறகு பேரவைத் தலைவரைக் கலந்து கொண்டு கொடுக்கலாம் என்றால் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) அலை ஓசை நாளிதழில் ஓர் உறுப்பினர் பேசிய பகுதியை வேண்டுமென்றே வெளியிடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 7—1—1978 அன்று மாண்புமிகு உறுப்பினர், திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'அலை ஓசை' நாளிதழ் மீது இப்பேரவையில் ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்னையை எழுப்பினார்கள்

''மந்திரி பொன்னையனின் சகோதரர்களுக்கு கான்டிராக்ட்—சுப்பு புகார்'' என்ற தலைப்பில் வந்த செய்தியில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களின் சட்டமன்றப் பேரவைப் பேச்சை வெளியிடுகையில் அவர் கூறிய ''நான் கொடுக்கும் தகவல் தவறாகக் கூட இருக்கலாம்'' என்ற பகுதி வேண்டுமென்றே வெளியிடப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு சேதுராம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதுகுறித்து விளக்கம் கேட்டு ''அலை ஓசை நாளிதழ்'' ஆசிரியர் வெளியிடுவோருக்குக் கடிதம் பேரவைத் துறையிலிருந்து 7—1—1978 அன்றே அனுப்பப்பட்டது. இன்றுவரை அவரிடமிருந்து எந்தவிதத் தகவலும் இல்லை. விளக்கம் வந்திருந்தால் நாளிதழில் வெளியிடப்பட்டதற்கான காரணங்களைத் தெரிந்து அதன்படி முடிவுசெய்ய எனக்கு வசதியாக இருக்கும் என்பதால் தான் ஆசிரியருக்குக் கடிதம் எழுதப்பட்டது பதில் வராத காரணத்தால், இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினை மீது என் தீர்ப்பை அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு அவர்கள் பேசும்போது சொன்ன கருத்துக்கள் முழுவதும், குற்றச்சாட்டு சம்பந்தமாக வெளியிடப்படாமல், அவர் கூறிய ''நான் சொல்லும் தகவல் தவறாகக் கூட இருக்கலாம்'' என்ற பகுதி விடப்பட்டு, குற்றச்சாட்டு மட்டும் வெளியிடப்பட்டு இருப்பது, இப்பேரவையின் நிகழ்ச்சிகளை வேண்டுமென்றே திரித்து வெளியிடப்பட்ட குற்றத்திற்கு உள்ளாகிறது. எனவே இதில் அவை உரிமை மீறல் குற்றம் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஏற்பட்டுள்ளது என்பதால் இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன். காரணம், இதுவரையில் இரண்டு கடிதங்கள் எழுதியும் பதில் வரவில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பிரிவ்லேஜ் கமிட்டி ஒன்று இருக்கிறது. அதிலே நானும் ஒரு உறுப்பினர். ஆனால் இதுவரையில் அது கூட்டப்படவில்லை. ஏற்கனவே சில பிரச்சினைகள் பென்டிங் ஆக இருக்கின்றன. இப்போது இதுவேறு வருகிறது. இவைகளைப் பற்றி கூட்டத்தில் பேசி முடிவு செய்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் துணைத் தலைவர் கூட்டியிருக்கவேண்டும். எல்லோரும் பல வட மாநிலங்களுக்குச் சென்று வந்த நேரம், அதற்குப் பிறகு வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று வந்த நேரம் போய்விட்டது. கூடிய சீக்கிரத்தில் கூட்டுவார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் 42-வது விதியின் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியிலே ஒத்திவைப்பு தீர்மானங்கள் வரும்போது உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் வரவில்லை என்றால் எழுப்பலாம். எடுத்துக்கொள்ளப்படும் ஒரு வேளை அது கூட வந்திருந்தால். வராவிட்டால் கடைசியிலே எழுப்புங்கள். அதற்கு அப்போது விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

(5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இன்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் கே. உச்சி கவுண்டர், திரு. கே. ரங்கசாமி, திரு. ரமணி அவர்கள் நீலகிரி மாவட்டம் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டில் உள்ள தொழிலாளர்களின் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க சட்டமன்றப் பேரவை விதிகளின் 42-வது விதியின் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது எப்படி விவாதிக்கத் தக்கது என்பதை சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கேத்தியில் உள்ள நீடில் இண்டஸ்ட்ரியில் மின்சாரத் தடை என்ற காரணம் காட்டி பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அப்படி வேலையிழந்தவர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருந்து பல நாட்கள் இது சம்பந்தமாக முறையீடு செய்தார்கள். முடிவு எடுக்கப்படவில்லை. கடந்த 8 நாட்களாக, பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து இருக்கிறார்கள். கடந்த ஒரு வாரம் உண்ணாவிரதம் இருந்ததால் 7 பேர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்

கப்பட்டார்கள். போலீசாரால் பலாத்காரமாக குளுகோஸ் இன்ஜெக்ஷன் கொடுக்கப்படுகிறது. அவர்கள் சாகக் கிடக்கும் தறுவாயில் இருக்கிறார்கள். அதனால் அங்குள்ள டாக்டர்கள் கூட அவர்களுடைய உடல்நிலையில் உயிருக்குக்கூட ஆபத்து இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆக, அந்தப் பிரச்சினையைப்பற்றி அந்தப் பகுதியில் பெரியதொரு பதட்ட நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அந்தப் பதட்ட நிலையைப் பற்றியும் வேலையில்லாமல் இருக்கின்ற பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வது பற்றியும் விவாதிப்பதற்காக இந்த அவையின் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரியிலுள்ள கேத்தியிலுள்ள ஊசி தொழிற்சாலையில் 1973ஆம் வருஷத்திலேயே தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடிய காலத்தில் 187 தற்காலிகத் தொழிலாளர்களும், 14 நிரந்தரத் தொழிலாளர்களும் பழி வாங்கப்பட்டு வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். கரண்ட் இல்லாத காரணம் என்று சொன்னார்கள். அது உண்மையான காரணம் அல்ல. ஜெனரேட்டர் வைத்து வேலை செய்து கொண்டிருக்கும் கம்பெனி அது. அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். சுமார் ஐந்து வருடங்கள் ஆகின்றன. இதைத் தொழிலாளர் இலாக்கா வழியாக இந்தப் பிரச்சினை தொழிற் சங்கத்தால் எழுப்பப்பட்டு லேபர் ஆபீசர் தலையிட்டு கன்சிலியேஷன் நடத்தி, கரண்ட் இல்லாததால் வெளியேற்றப்பட்டார்கள் என்று நிர்வாகம் கூறியது உண்மையானால் கரண்ட் இருக்கிற இப்பொழுது அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நிலைமைக்குப் பேசப்பட்டு, அதற்கு விட்டுக் கொடுக்காமல் அந்த நிர்வாகம் பிடிவாதமாக இருந்தது. எனவே, வேறு எந்த வழியும் இல்லை என்ற நிலை அவர்களுக்கு ஐந்து வருஷங்களாக ஏற்பட்டது என்ற நிலையை இங்கே நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தத் தொழிற்சாலையைச் சுற்றிலும் இருக்கும் கிராமங்களில் பிரதானமாக வடுக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு வேலை செய்து வந்தார்கள். அதிலும் இளம் பெண்மணிகள் ஏராளமானவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள் பழி வாங்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு, அவர்கள் இன்றைக்கு வேறுகதி இ லாமல் தாங்களாகவே உண்ணாவிரதம் இருந்து இந்தப் பிரச்சினையை மக்கள் மத்தியில் கொண்டு வந்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற நிலையில் இரண்டாம் தேதியன்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள்.

ஐந்தாம் தேதியன்றைக்கு முதல் இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். மூன்று நாட்களுக்குள்ளே ஒருவருடைய உயிர் போய்விடாது. போலீஸ் அதிகாரிகள் இந்தக் கைதைச் செய்தது, உண்மையிலேயே போராட்டத்தை உடைக்கும் அந்த இடத்திற்குக் கொண்டு செல்லுமே தவிர அது நியாயமானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினை எழுந்தபொழுதே இது உண்ணாவிரதத்திற்குக் கொண்டு வரலாம் என்ற நிலைமைகள் இங்கே வந்தபொழுது கனம் தொழிலாளர் அமைச்சரிடம் சொன்னேன், இப்படி இருக்கிறது என்று. அவர்களும் உடனே தலையிட்டு இதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்று ஒத்துக்கொண்டார்கள்.

அதற்குப் பிறகு இரண்டாவது குரூப் கைது செய்யப்பட்டு ஊட்டி ஆஸ்பத்திரியிலே இருக்கும் நிலைமை இருக்கிறது. அங்கும் அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார்கள். அது சம்பந்தமாக இரண்டு தந்திகள் இன்றைக்கு எனக்கு வந்திருக்கின்றன. அதையெல்லாம் நான் சொல்லப்போவதில்லை. டாக்டர்களே அதைப்பற்றி நம்பிக்கையைக் கைவிட்ட மாதிரி இருக்கிறது. படுமோசமான நிலைமையில் இன்றைக்கு அவர்கள் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன். உண்ணாவிரதம் இருந்தவர்களைக் கைது செய்து ஆஸ்பத்திரியிலே வைத்தாலும் அவர்கள் உறுதியான மனம் படைத்தவர்களாக இருந்ததால் உண்ணாவிரதத்தை டாக்டர்களே கூட உடைக்க முடியாது. அப்படி உடைக்கப்பட்டால் உயிர்ச் சேதம்தான் ஏற்படும் என்பதை அரசுக்குத் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது பரிகாரம் ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது குரூப் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கு. ரமணி : சீக்கிரம் முடித்து விடுகிறேன். அது அரசுக்குச் சொந்தமான இடம். ஹைவேஸுக்குச் சொந்தமான இடம். அந்த இடத்தைத் தவிர ஊட்டி மலையில் பொது இடம் கிடையாது. அங்கே போட்டிருந்த கூரையைப் பிரித்துவிட்டார்கள். உண்ணாவிரதம் இருந்து தங்களை வருத்திக்கொண்டு தங்கள் பிரச்சினைகளை உலகத்திற்குச் சொல்வதற்குக் கூட இடம் இல்லாமல் போகிறதே என்று அவர்கள் வேதனைப்படுகிறார்கள்.

அந்த நிலைமைகள் ஏற்பட்டு பரபரப்பான நிலைமைகள் அங்கே இருந்து வருகிறது. நிர்வாகம் பிடிவாதமாக இருந்து வருகிறது. எந்த நியாயத்தையும் அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். ஆஸ்பத்திரியில் பாதிக்கப்பட்டவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார்கள். உயிருக்கு ஆபத்து இருக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. கூட்டம் போடக்கூட அனுமதி இல்லை. அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டம் போடலாம் என்று கேட்டால் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் மிகமுக்கியமான இந்தப் பிரச்சினையை இன்றைக்கு இந்தச் சபையிலே விவாதிப்பதற்காக மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதுதான் சரியாக இருக்கும். இந்த விஷயத்தைத் தெளிவாக விவாதித்தால் அரசு முடிவெடுக்கவும் உதவிகரமாக இருக்கும். எனவே அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி 1973 ஆம் ஆண்டு நடந்தது. There is no subsisting industrial dispute today இன்றைக்குத் தொழிலாளர் தகராறு எதுவும் இல்லை.

நீலகிரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர் யூனியனும், நீலகிரி மாவட்டப் பொதுத் தொழிலாளர் யூனியனும் சேர்ந்து குன்னூர் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு பிப்ரவரி 1978-ல் கேத்தியிலுள்ள நீடில் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்டின் 187 தொழிலாளர்களின் வேலை நீக்கம் பற்றி ஒரு தொழில் தகராறினை எழுப்பின. இத்தொழிலாளர்கள் தற்காலிகமானவர்கள் என்றும் அன்றாட வேலையாட்கள் என்றும் அவர்களுக்கு வேலை கொடுக்காதது மின்வெட்டு காரணமாகவே என்றும் நிர்வாகம் கூறியது. 19-2-1973 இல் பிரிவு 12 (3)இன் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி மின்வெட்டு நீக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் தொழிலாளர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்வதாக நிர்வாகம் ஒப்புக் கொண்டது. 24—2—1973 அன்று அல்லது அதற்கு முன்பாகவோ ஒருமாத சம்பளம் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதாகவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டது. அவர்களுள் 75 தொழிலாளர்கள் தங்களது கணக்குகளை நிர்வாகத்திடம் முடித்துக்கொண்டனர். ஆயினும் அவர்களுக்கு நிர்வாகம் வேலை கொடுக்காததால் மேற்சொன்ன 75 பேர் உள்பட 168 தொழிலாளர்கள் தொழிற் தகராறு சட்டம் 2-ஏ-ன் கீழ் ஒரு தொழிற் தகராறு எழுப்பினர். தொழிலாளர் துறை அலுவலர் சமரசப் பேச்சு நடத்தி தம்முடைய அறிக்கையை படிப்படியாக அனுப்பி வைத்தார்.

தொழிலாளர் நல அலுவலர் அறிக்கையையும், தொழிலாளர் நல ஆணையரின் பரிந்துரையையும் அரசு பரிசீலித்தது. இத்தொழிலாளர்கள் தற்காலிகமானவர்கள் என்றும், கடும் மின்வெட்டு காரணமாகவும், அதனையொட்டி ஏற்பட்ட வேலையின்மை காரணமாகவும் அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார்கள் என்றும், அவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென நிர்வாகத்தை வற்புறுத்த இயலாதென்றும் காரணம் காட்டி இத்தாவாவினைத் தீர்ப்புக்குவிட அரசு 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு-அக்டோபர் மாதங்களில் இசைவளிக்கவில்லை. மேலே குறிப்பிட்ட தற்காலிக தொழிலாளர்களைத் தவிர பிற தொழிலாளர்களை அச்சுறுத்தல், திட்டுதல், தாக்குதல் போன்ற குற்றங்களுக்காக நிர்வாகத்தினர் 1973 ஆகஸ்டில் ஒன்பது நிரந்தரத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தனர்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட இத்தொழிலாளர்கள் குன்னூர் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு தொழிற் தகராறு சட்டத்தின் பிரிவு 2-ஏ-ன் கீழ் மனுக்களைத் தாக்கல் செய்தனர். தொழிலாளர் துறை அலுவலர் சமரசப் பேச்சு நடத்தினார். சுமுகமான உடன்பாடு ஏற்பட இயலாததால், தொழிலாளர் துறை அலுவலர் இத்தொழிலாளர்களின் வேலை நீக்கம் பற்றிய தாவாவினை தீர்ப்புக்கு அனுப்பப் பரிந்துரை செய்தார். 1975ஆம் ஆண்டு மே மாதத்தில் இத்தொழிலாளர்களில் ஏழு தொழிலாளர்களை ஒட்டிய தாவாவினை அரசு தொழில் கோர்ட்டுத் தீர்ப்புக்கு விட்டது.

இதனை விசாரித்த தொழில் நீதிமன்றம் நிர்வாகத்திற்குச் சாதகமான தீர்ப்பு ஒன்றை வழங்கியதால், தொழிலாளர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஆதரித்து திருவாளர்கள் பி. அஜ்ஜன் மற்றும் சிம்சன்ராஜ் ஆகியோர் தொழிற்சாலையின் நுழைவாயிலில் 2—1—1978 முதல் உண்ணாவிரதம் தொடங்கினர். அவர்கள் 5—1—1978 அன்று கைது செய்யப்பட்டு, அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டனர். திருவாளர்கள் காலன், இராமன் ஆகியோர் 5—1—1978இல் உண்ணாவிரதம் மேற்கொண்டதால் இவர்களும் 9—1—1978இல் கைது செய்யப்பட்டு சிகிச்சைக்காக மருந்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். திரு. ஆரி என்பவர் 9—1—1978 முதல் உண்ணாவிரதம் தொடங்கினார். ஒரு போராட்டத்தை உடைப்பது என்பது ஒன்று. ஒரு போராட்டத்தை நிறுத்துவது என்பது வேறு. உண்ணாவிரதம் இருப்பவர்களை 3 நாளிலே மருத்துவ மனைக்குக் கொண்டு போக வேண்டியதற்குக் காரணம் we are abundantly cautious.

புரட்சித் தலைவர் மிக எச்சரிக்கையாக இருக்கிற காரணத்தால், மூன்றே நாளில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக, 5—1—1978 இல் உறுப்பினர் திரு. கு. ரமணி அவர்கள் இதுகுறித்து நான் தலையிடுமாறு விண்ணப்பித்துக் கொண்டார். என்னுடைய அறிவுரையின்படி ஸ்தல அலுவலர்கள் தகராறினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் பயனாக 9—1—1978 மாலை 6 மணி முதல் இக்கிளர்ச்சி வாபஸ் பெறப்பட்டது. இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு நாளை 11—1—1978 இல் சென்னைக்கு வருமாறு நான் அழைத்துள்ளேன். எனவே, அவையை இதற்காக ஒத்தி வைக்கத் தேவையில்லையென அறிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லையென்று கருதுவதால் இதற்கு அனுமதி தர மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10-30]

6. அலை ஓசை நாளேடு ஓர் உறுப்பினர் பேசியதைத் தவறாக வெளியிட்டது குறித்து வருத்தம் தெரிவித்து திருத்தம் வெளியிட்டது குறித்த விளக்கம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டாம் என்றும், தங்களுக்கும் உதவியாக இருக்கும் என்றவகையிலும், இந்தப் பிரச்சினையைக் கொண்டுவருகிறேன். கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அலை ஓசை நாளிதழ் பற்றிய பிரச்சினை உரிமை மீறல் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வெளியூர் 9—1—1978 உள்ளூர் 8—1—1978 அன்றைய பத்திரிக்கையிலே ஒரு திருத்தம் வெளியிடப்பட்டது.

"சென்னை 5—1—1978 அலைஓசை இதழில் வெளியான 'மந்திரி பொன்னையனின் சகோதரர்களுக்குக் காண்ட்ராக்ட்—சுப்பு புகார்' என்ற சட்டசபை செய்தியில், 'நான் கொடுக்கும் தகவல் தவறாகக் கூட இருக்கலாம்' என்று சுப்பு குறிப்பிட்ட வாக்கியம் விடுபட்டதற்காக வருந்துகிறோம். அந்த வாக்கியம் வேண்டுமென்றே விடப்பட்டது அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்"

என்று ஏற்கனவே அவர்கள் திருத்தம் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் திருத்தம் வெளியிட்ட செய்தி உரிமைப் பிரச்சினை கொண்டுவந்த உறுப்பினருக்குத் தெரிந்திருக்காமல் இருக்கலாம். அப்படி அவர்களுடைய கவனத்திற்கு வந்திருந்தாலும், அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுக்காமல் இருந்தால் அவரே அந்த உரிமை மீறல் பிரச்சினையில் வருகிறார். எனவே திருத்தம் வெளியிடப்பட்டுவிட்ட காரணத்தால் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிட்டு மேலும் தொடரவேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் எழுதிய கடிதத்திற்குப் பதில் கொடுக்கவில்லையே ?

திரு. க. சுப்பு : அதே நேரத்தில் பேரவைத் தலைவருடைய கடிதத்திற்கு அந்தப் பத்திரிகை பதில் அனுப்பி இருக்கவேண்டும். அனுப்பாதது தவறு என்றால் அதை நான் ஒப்புக்கொள்கிறேன். இனிமேல் அவர்கள் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்று கருதி இந்த நடவடிக்கையை மேலே தொடரவேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : I am sorry, the hon Member Thiru Suppu cannot defend the case.

சபாநாயகர் அவர்கள் தெரிவித்தது போல, இரண்டு முறை கடிதம் எழுதியதற்குப் பிறகும் துளிக்கூட மரியாதை இல்லாமல் பதில் அனுப்பாதது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். அது ஒன்று. இரண்டாவது, வெளியூர் பதிப்பில் வந்ததாக சொல்லுகிறார். நான் பார்க்கவில்லை. இந்த அவையிலே உள்ள யாரும் பார்க்கவில்லை பார்த்திருக்க நியாயம் இல்லை. திரும்பவும் நான் கேட்கிறேன், திரு. சுப்பு அவர்கள் ஒரு வழக்கறிஞர். உள்ளூர் பதிப்பில் ஏன் வரவில்லை ?

திரு. க. சுப்பு : உள்ளூர் பதிப்பிலும் வந்திருக்கிறது. வெளியூர் பதிப்பிலும் வந்திருக்கிறது. We must take note of it.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திருத்தம் இந்தப் பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறதே தவிர, சபாநாயகர் எழுதிய கடிதத்திற்கு அந்தப் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் நியாயம் தானா என்பதை அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த உரிமை மீறல் பிரச்சினையை, பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பியதை அனுப்பியதாக ஏற்றுக்கொண்டு, தயவுசெய்து அப்போது வாதத்தினை வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இது ஒரு வேண்டுகோள்தானே தவிர வேறல்ல. அவர்கள் ஒரு தவறு செய்கிறார்கள் என்று சொல்லும் போது நாமும் ஒரு தவறு செய்கிறோம் என்று வந்துவிடக்கூடாது என்பதால் சொல்கிறேன். வெளியூர் பதிப்பு, உள்ளூர் பதிப்பு, இரண்டிலும் வந்திருக்கிறது. அவர்களே செய்தி வெளியிட்டு, பகிரங்கமாக திருத்தம் வெளியிட்டதற்குப் பிறகு உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருப்பதை தொடர வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஏற்கனவே பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. இப்போது திரு. சுப்பு அவர்கள் எழுப்பியிருக்கிற இந்தப் பிரச்சினையையும் குழு பரிசீலிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொல்ல இருந்தேன். உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட காரணத்தினால், திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினை உரிமைக் குழுவிற்கு உதவியாக இருக்கும். நீங்கள் சொன்ன கருத்துக்களையும் பரிசீலனை செய்து அந்தக் குழு முடிவு செய்யும்.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) தியாகராசசாலை அரிசன மாணவர் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து தியாகராச சாலை அரிசன மாணவர் விடுதியைச் சேர்ந்த மாணவர்கள் உண்ணாவிரதம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று, திரு. இரா. ஏ. சந்திரன்ஜெய்பால், திரு. ஏ. ரகுமான்கான், திரு. த. ராமச்சந்திரன், திரு. கே. கந்தசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. இரா. ஏ. சந்திரன்ஜெயபால்: தலைவர் அவர்களே, சென்னை தியாகராய நகர் தியாகராய சாலை என்று அழைக்கப்படும் பாண்டி பஜார் சாலை நெம்பர் 6-வது கதவெண்ணுள்ள இடத்திலே, அரிசன மாணவர் இல்லம் பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கென்றிருக்கிறது. அதில் சுமார் 105 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு இலவச மானியமாக ரூ. 65 மட்டும் அவர்கள் உணவுச் செலவுக்காக வழங்கிக் கொண்டு வருகிறது. அவர்களுக்கு இலவசமாக உணவு அங்கே சமைத்துக் கொடுக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், மாலையில் அவர்களுக்கு தேனீரும் வாரம் இருமுறை இறைச்சியும் சப்பாத்தியும் உணவாக அளிக்கப்பட்டு வந்தது. அவசர காலப் பிரகடனம் செய்யப்பட்ட பிறகு, இந்த இரண்டு சலுகைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. அதை எதிர்த்து அந்த மாணவர்கள் சென்ற செப்டம்பர் மாதம் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து சென்னை நந்தனத்திலேயுள்ள அரசினர் மாணவர் விடுதியில் சிறு குழப்பம் ஏற்பட்டு அவர்களும் அனுதாப வேலை நிறுத்தம் செய்ததால், அங்கே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது.

இந்தச்சம்பவத்தை மாணவர் தலைவர், திரு. அமைச்சர் சௌந்தர பாண்டியனைச் சந்தித்து விளக்கி இருக்கிறார்கள். அதன் விளைவாக ரூ. 15 கூட்டிக் கொடுத்ததாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் அது அமலாக்கப்படவில்லை. மாணவர்களிடமிருந்து பறிக் கப்பட்ட சலுகைகள் மீண்டும் கொடுக்கப்படாததால், 7—1—1978 ஆம் தேதியிலிருந்து மாணவர்கள் மீண்டும் உண்ணா விரதப் போரை இந்த விடுதியில் நடத்தி வருகிறார்கள். மீண்டும், கடந்த செப்டம்பர் 1977இல் நடந்தமாதிரி, துப்பாக்கிப் பிரயோ கமோ, வேறெந்த சட்ட ஒழுங்குப் பிரச்சினையோ ஏற்பட்டு விடுமோ என்ற பதட்டநிலை இருந்து கொண்டிருக்கிறது. 7—1—1978 அன்று மாவட்ட வெல்பேர் ஆபீசர் இந்த மாணவர் களைச் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் இது வரையில் எந்த நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருப்பதால் மாணவர்களின் உயி ருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால் இந்த அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, அவை நேரத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, அவைத்தலைவரின் கட்டளைக் கிணங்க, நான் என் கருத்தைச் சுருக்கிச் சொல்கிறேன்.

சென்னை தியாகராயநகர் நகரிலுள்ள பிற்பட்டோர் மாணவர் விடுதியிலுள்ள மாணவர்களுக்கு, மட்டன், பால் போன்ற பண்டங்கள்—முன்னால் வழங்கப்பட்டவை—நிறுத்தப்பட்டிருப்பதைக் குறித்து ரெப்ரசன்டேஷன் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. மாணவர்களுடைய போராட்டங்கள் ஓய்ந்து அமைதி நிலவுகிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட சிறு சம்பவங்களாக இருந்தாலும் இவற்றில் அரசு உடனடியாகத் தலையிட்டால் இவற்றிற்கான காரணங்களை முளையிலேயே கிள்ளி எறிய வாய்ப்பாக இருக்கும்.

ரூ. 65-க்கும் அதிகமாக ரூ. 15 வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, பால் போன்ற சலுகைகளை வழங்க இயலும். அப்படி இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் என்ன காரணம்? அதிகாரிகள் ஒத்துழைப்பு கம்மியாக இருக்கிறதா? வேறு எதாவது சிக்கல் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து தீர்க்கமாக முடிவெடுப்பதின் மூலம் மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் நிகழா வண்ணம் தடுக்க முடியும் என்று கருதி அரசு இதில் முடிவெடுத்து பிரச்சினையைத் தீர்க்க உதவிகரமாக இருக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சென்னை தி. நகரிலுள்ள பிற்பட்டோர் மாணவர் விடுதி, கோடம்பாக்கம் பிற்பட்டோர் மாணவர் விடுதி ஆகிய மாணவர்களிடமிருந்து சமீபத்தில் எந்தக் கோரிக்கையும் அரசுக்கு வரவில்லை. சென்னை மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலாளர், உண்ணாவிரதம் இருக்கிற மாணவர்களை அணுகி அவர்கள் கோரிக்கை என்ன என்பதை எழுத்து மூலம் தரும்படி கேட்டுக்கொண்டபோது கூட, எந்தக் கோரிக்கையையும் தர மறுத்துவிட்டனர். ஆனால் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 7—1—1978 அன்று அனுப்பிய அறிக்கையில் இந்த இரண்டு விடுதி மாணவர்களும், உணவுக்காக வழங்கப்படும் தொகையை மாதம் ரூ. 65-லிருந்து ரூ. 80 ஆக சமீபத்தில் உயர்த்தப்பட்டிருப்பதால், வாரம் ஒரு முறை, ஆட்டுக்கறி, முட்டை வழங்க வேண்டுமென்று கோரிக்கையை முன்வைத்து, 7—1—1978 முதல் உண்ணாவிரதம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசினர் கல்லூரி மாணவர்கள் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் உணவு செலவுக்காக வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ. 65 போதுமானதாக இல்லை என்றும், அவர்களுக்குத் தரமான உணவு வழங்கப்படுவதற்காக அந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்றும், குறிப்பாக, சென்னை நகரிலுள்ள கல்லூரி விடுதி மாணவர்கள் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து கோரிக்கைகளை எழுப்பி வந்துள்ளனர். அந்தக் கோரிக்கைகளை நன்கு பரிசீலித்து 28—11—1977 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட சமூக நலத் துறையின் ஆணையின்படி, சென்னை நகரில் இருக்கும் அரசினர் கல்லூரி மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உணவுச் செலவுக்காக கொடுக்கப்பட்டு வந்த தொகையாகிய ரூ. 65-ஐ மாதம் ரூ. 80 என்றும் இதரப் பகுதியில் தங்கிப் படிக்கும் விடுதி மாணவர்களுக்கு ரூ. 55-லிருந்து ரூ. 65-க்கு உயர்த்துவது என்றும் அந்த உத்தரவு 1—12—1977 ஆம் தேதி முதல் அமலுக்கு வர வேண்டுமென்றும் ஆணை இடப்பட்டுள்ளது.

இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ. 7.58 இலட்சம் கூடுதல் செலவாகும். மாணவர் விடுதிகளில், காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் என்னென்ன உணவுகள் வழங்கப்பட வேண்டும் என்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயம் செய்து அரசு தரும் தொகைக்குள்ளாக விடுதியின் செலவைக் கட்டுப்படுத்தி வருகிறோம்.

[முற்பகல் 10-40]

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், காலையில் இட்லி, வடை, பொங்கல், ஊத்தப்பம் போன்றவைகளும் மதியமும் இரவும் சாம்பார் காய்கறியுடன் கூடிய அரிசிச் சாதம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவனுக்கு ஒவ்வொரு நாள்

எவ்வளவு அளவு வழங்கப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட அளவு உணவை அனுமதிக்கப்பட்டுள்ள தொகைக்குள்ளே விடுதி அலுவலர்கள் வாங்கிப் போட வேண்டும். எனினும் ; ஒவ்வொரு மாதமும் இந்தத் தொகை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பைத் தாண்டியிருக்கிறதே அன்றி நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குள் அடங்கவில்லை.

உதாரணமாக அக்டோபர் 1977 இல் ரூ. 235-ம், நவம்பர் 1977-ல் ரூ. 400-ம், இப்போது மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் தியாகராயநகர் விடுதியிலே அதிகச் செலவாகி உள்ளது. எனினும் 1—12—1977 முதல் ஒரு மாணவனுக்கு ரூ. 15 வீதம் கூடுதலாக வழங்கப்பட்டிருப்பதால், மாணவர்கள் கோரிக்கைக்கு இணங்க வாரத்திற்கு ஒருநாள் இரவில் அரிசி உணவுக்குப் பதிலாக சப்பாத்தியும், காய்கறி குருமாவும், தேனீரும் வழங்கப்பட்டு வருகிறது.

நவம்பர் மாதம் வரை கிலோவுக்கு ரூ. 1.60 வீதம் விற்கும் இரண்டாந்தர அரிசி தமிழ்நாடு நுகர் போருள் விநியோகக் கழகத்திடம் வாங்கி வழங்கப்பட்டு வந்தது. டிசம்பர் மாதம் முதல் இரண்டாம்தர அரிசிக்குப் பதிலாக கிலோ ரூ. 1.85-க்கு விற்கும் முதல் ரக அரிசி வழங்கப்பட்டுவருகிறது. வாரத்திற்கு ஒரு முறை சப்பாத்தியை இரவு உணவாக வழங்கும் நாட்களில் தேனீர் வழங்குவதற்குப் பதிலாக, தினமும் மாலையில் தேனீர் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்திரவு பிறப்பித்துள்ளார். வாரம் ஒரு நாள் இரவில் சப்பாத்தியும், குருமாவும் வழங்குவதிலும் கூடுதல் செலவாகிறது.

மாணவர்கள் ஆட்டுக் கறி வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆட்டுக்கறி வாங்கி சமைத்து வழங்குவது, உயர்த்தப்பட்டுள்ள ரூ. 15-க்குள் அடங்காது என்பதோடு, அப்படி வழங்குவதில் ஏற்படக்கூடிய பல நடைமுறை சங்கடங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்டுக்கறி விலை கிலோ 12 ரூபாயிலிருந்து 14 ரூபாய் வரை இருக்கிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வாங்கி அளித்தாலும், அது மாணவர்களுக்கு மனநிறைவை அளிக்கக்கூடியதாக இருக்காது.

மேலும், அளிக்கப்படும் மாமிசம், எலும்புக்கொழுப்பு நிறைந்ததாகவும், தரம் குறைந்ததாகவும் இருக்கிறது என்றும் மாணவர்கள் குறைபட்டுக் கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே உயர்த்தப்பட்ட இந்த ருபாய் 15-ல் மாணவர்கள் கோருகின்றபடி, வாரம் ஒரு முறை புலால் உணவு வழங்க வேண்டும் என்பது சாத்தியமில்லை என்பதோடு, மேற்கொண்டும் புகார்களுக்கே வழிவகுக்கும் என்பதால் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

மேற்கூறிய காரணங்களாலும், 1—12—1977 முதல் உயர்த்தப்பட்ட ரூ. 15-க்குக் கூடுதலாக தேனீர், உயர்ந்த ரக அரிசி முதலியன வழங்கப்பட்டு வருவதாலும், மேற்கொண்டு ஆட்டுக் கறி அளிப்பது என்பது தற்போது சாத்தியமில்லை என்று அரசு கருதுவதாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த ஒரு விடுதிப் பிரச்சினை தமிழ்நாடு முழுவதும் பரவக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும், இது சிந்தித்து, ஆராய்ந்து பார்த்து, செயல்பட வேண்டிய ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லாத காரணத்தால், அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) வேப்பேரி கால்நடை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தமும் கல்லூரி மூடப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்வது, கல்லூரி மூடிக்கிடப்பது குறித்தும் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று திருவாளர்கள் ஏ. ரகுமான்கான், பொ. விஜயராகவன், ஏ. சுவாமிதாஸ், ஓ. சுப்பிரமணியம், ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரில் வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற துயரச் செய்தியை தமிழ்நாடு இன்றைக்கு தெரிந்துகொண்டிருக்கிறது என்று உங்கள் மூலம் நான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியானதற்குப் பிறகு இன்றைக்கு நாட்டில் எங்கு பார்த்தாலும் கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் கல்வி கற்பதற்குப் பதிலாக இன்று போராட்டக் களமாக ஆகிக் கொண்டிருக்கிற ஒரு துயர நிலைதான் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது இது போன்ற போராட்டங்கள் இல்லையா என்று காரணங் காட்டி, ஆகையால் இப்போது போராட்டங்கள் இருப்பது நியாயந்தானே என்று பேசுவது பிரச்சினைக்கு பரிகாரமாகாது. ஏனெ

 [திரு. ஏ. ரகுமான்கான்]

னில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தவறு செய்துவிட்டார்கள். ஆகவே நாங்கள் வந்தால் அந்தத் தவறுகள் நடக்காது என்று சொல்லிவிட்டு அதே தவறைச் செய்வது எந்த விதத்திலும் பிரச்சினைக்கு தீர்வாக இருக்கமுடியாது.

ஆனால், இன்று எங்கு பார்த்தாலும் கல்லூரி மாணவர்கள் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குப் போகாமல், தேர்வு எழுதாமல், அவர்கள் விளையாட்டுத்தனமாக இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பொறுப்பான இடங்களில் அமர்ந்திருக்கக்கூடிய யாரும் நிச்சயமாகச் சொல்லமுடியாது.

இன்று மாணவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தித்தீர வேண்டிய அளவிற்கு பிரச்னைகள் இருக்கின்றன. வாதாடுவதை வாதிட்டு வாதிட்ட காரியங்களில் வெற்றிபெற முடியவில்லையென்றால் அவர்கள் போராட்டத்திற்குப் போகவேண்டிய நிலை ஏற்படுகிறது.

நமது முதல் அமைச்சர் அவர்கள் மாணவர்கள் போராட்டங்கள் எவ்வளவு நடைபெற்றன என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு பதில்சொல்கிறபோது போராட்டங்களின் எண்ணிக்கையை கோடிட்டுக் காட்டினார்கள்.

இதற்கெல்லாம் உச்ச கட்டமாக, வேப்பேரி கல்லூரி மாணவர்கள் போராட்டம் இருக்கிறது. எதற்காக அவர்கள் போராடுகிறார்கள் ? அவர்கள் தெளிவாக கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். தேர்வு முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்வு முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லும்போது அவர்கள் அந்தக் கோரிக்கையை அங்குள்ள கல்லூரி முதல்வர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறார்கள்.

கல்வி இலாகா என்று ஒரு இலாகா இருக்கிறது. அதற்கு ஒரு அமைச்சர் இருக்கிறார். இவ்வளவு காலம் வரை, இந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு கண்டிருக்கிறார்கள். மாணவர்களை அழைத்துப் பேசினார்களா ? உங்கள் கோரிக்கை என்ன என்று கேட்டார்களா? கோரிக்கைகள் நியாயம் பற்றி விளக்கினார்களா? என்று கேட்டால் இல்லை.

அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களைப் பார்த்துத்தான் இங்கே வரவேண்டியிருக்கிறது. எங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை, எங்கள் விவாதங்கள் குறித்து கேட்பதில்லை, சட்டமன்றத்தின் மூலம் நீங்கள் மக்கள் பிரதிநிதிகள் அதைக் கேட்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் வைக்கப்படுகிறபோது விடுமுறை நாட்களில் கல்விச் சுற்றுலா வேண்டும். தேர்வு

முறை மாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். இதுவரை இப்பிரச்னை தீர்க்கப்படவில்லை. கல்லூரி மூடிக்கிடக்கிறது. மாணவர்கள் படிக்க வந்திருக்கிறார்களா அல்லது போராட்டம் நடத்த வந்திருக்கிறார்களா? அவர்களை போராட்டத்திற்கு தூண்டிவிடுகிற அரசாக இந்த அரசு இருக்கிறது. இது முக்கிய விஷயம். கல்லூரி மாணவர்கள் படிப்பதற்குப் பதிலாக போராட வேண்டிய துயர நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்லூரி மூடப்பட்டுக் கிடக்கிறது. மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை. ஆகவே அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

<u>திரு. பொ. விஜயராகவன்:</u> தலைவர் அவர்களே, இன்றைக்கு வேப்பேரியில் உள்ள கால்நடை மருந்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தை முன்னிட்டு அந்தக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகள் இதுகாறும் கவனிக்கப்படாத நிலையில் அவர்கள் இந்த வகையில் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு அந்தக் கல்லூரியை இன்று காலவரையறையின்றி மூடியிருக்கிறார்கள்.

அவர்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகள் நியாயமானவை என்பதை எல்லோரும் உணர்வார்கள். தேர்வுமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். கோடை விடுமுறையின்போது கல்வி சுற்றுலா செல்ல வழிவகை செய்தல் வேண்டும். கல்லூரிக் கட்டடத்திலேயுள்ள வங்கியில் மாணவர்கள் கடன் வாங்க வழிவகை செய்ய வேண்டும் என்று பல கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்கிறபோது அந்தக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்படுவது என்பது இன்றைக்கு தமிழ்நாட்டில் மிக சகஜமான ஒரு நிகழ்ச்சியாகப் போய்விட்டது.

[முற்பகல் 10-50]

பாளையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி பல மாதங்களாக மூடிக்கிடப்பதைப்போல் இந்த கால்நடை மருத்துவக் கல்லூரியும் மூடப்பட்டுவிடுமோ என்று மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும் கவலைப்படுகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவே கல்லூரிப் பிரச்னை வருகின்ற போது, அல்லது மாணவர்கள் பிரச்னை வருகின்ற போது அவற்றை அணுகுகின்ற முறை அரசிடம் திட்டவட்டமாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட போராட்டங்கள் ஆங்காங்கு வெடிக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றோம்.

இந்த நிலைமை இருப்பது தமிழ்நாட்டுக்கு நல்லது அல்ல. அரசின் அணுகுமுறை தவறாக இருக்கிறது. தமிழ்நாட்டில் இதற்கென்று ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. ஆகவே இதை ஒரு முக்கியமான பிரச்னையாகக் கருதி, இதைப்பற்றி அரசு ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டியிருப்பதால். இதைப் பற்றி விவாதிப்பதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இவற்றை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஓ. சுப்பிரமணியம்:</u> பேரவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னால் பேசிய இரு நண்பர்களும் இந்தப் பிரச்னையைப் பற்றி விரிவாகப் பேசிவிட்டார்கள். மக்களுக்கு சிகிச்சை செய்வதற்கு மருத்துவ மனை இருப்பதுபோல் கால்நடைகள் சிகிச்சை பெறுவதற்கு என்றும் அதற்கான பயிற்சி பெறுகின்ற கல்லூரி இது ஒன்றுதான் இருக்கிறது. இதில் படிக்கின்ற மாணவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பாட திட்டங்களில் இருக்கின்ற சில முறைகள் மாற்றப்பட வேண்டும். கல்லூரிக்குள் இருக்கும் வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு வசதியிருக்கவேண்டும் என்ற கோரிக்கைகளைக் கேட்டிருக்கிறார்கள்.

வேறு மருத்துவக் கல்லூரி அல்லது வேறு ஸ்தாபனங்கள் என்றால் அதனால் மனிதர்கள் பாதிக்கப்படுவார்கள். இதில் வாயில்லா ஜீவன்களுக்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது. ஆகவே மனிதர்களைப் போன்று வாயில்லா இந்த ஜீவன்கள் தங்கள் குறைகளைச் சொல்ல முடியாது. ஆகவே இந்த வாயில்லா ஜீவன்களுக்கு அவைகளுக்கு மருத்துவம் கிடைக்கின்ற அளவில் அவைகளுக்கு உதவி செய்கின்ற வகையில் இந்தக் கல்லூரிப் பிரச்னையைப்பற்றி நாம் கவனிக்க வேண்டும், இல்லையென்றால் இந்த வாயில்லா ஜீவன்களுக்கு நியாயம் செய்வது ஆகாது. ஆகவே இதைப்பற்றி உடனடியாக விவாதம் செய்து முடிவு எடுப்பதற்கு சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:</u> மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ந் தேதியிலிருந்து 5 ஆம் தேதி வரை வகுப்புகளுக்குச் செல்லாமல் 'ஸ்டிரைக்' செய்தார்கள். 2—8—77 ஆம் நாளன்று தங்களுடைய கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்று துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அவர்களிடம் கொடுத்தார்கள். முதலமைச்சருடைய உத்தரவுக்கிணங்க பல்கலைக் கழகத் துணைவேந்தர் கால்நடைக் கல்லூரி மாணவர்களை சந்தித்து அவர்களுடைய அபிப்பிராயங்களை பரிமாறிக்கொண்டு விரிவானதொரு பேச்சு வார்த்தை நடத்தினார்.

அதன் விளைவாக மாணவர்களுடைய கோரிக்கைகள் அதிக பட்சம் நிவர்த்தி செய்யப்பட்டன. அதன் பிறகு கல்லூரி முறையாக இயங்கி வந்தது.

கிருஸ்துமஸ் விடுமுறைக்குப்பின்னுல் கல்லூரி 2—1—1978ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. 4—1—1978-ம் நாளன்று கல்லூரி மாணவர்கள் மறுபடியும் முதலாண்டும். இறுதி யாண்டும் முதல் பகுதித் தேர்வில் தோல்வியுறும் மாணவர்களை இரண்டாவது பகுதித் தேர்வுடன் முதல் பகுதி தேர்வையும் எழுத அனுமதிக்க வேண்டும். அனைத்திந்திய கல்விச் சுற்றுலா விற்குச் செல்வதற்காக ஆகும் செலவை பல்கலைக் கழகமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இப்படிப்பட்ட 13 கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றினை முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி அதனுடைய நகலை கல்லூரி முதல்வரிடத்தில் சமர்ப்பித்து அந்தக் கோரிக்கைகளுக்குப் பலன் கிடைக்கும் வரையிலும் தொடர்ந்து கால வரையின்றி 'ஸ்டிரைக்' செய்ய முடிவு எடுத்து இருப்பதாகக் கூறி அன்றிலிருந்து மாணவர்கள் கல்லூரிக்கு வருவதை நிறுத்திக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை கூடிய சீக்கிரம் பரிசீலனை செய்து தக்க முடிவு எடுப்பதாகவும், மாணவர்கள் 'ஸ்டிரைக்கை' திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறும் கல்லூரி முதல்வர் அவர்கள் மாணவர்களை கேட்டுக்கொண்டார்கள். ஆனாலும் மாணவர்கள் தங்களுடைய 'ஸ்டிரைக்கை' தொடர்ந்து நடத்தினார்கள்.

6—1—1978ஆம் நாளன்று மாணவர்கள் கல்லூரி எல்லைக்குள் காலை 11 மணியளவில் கூடி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கல்லூரி நுழைவாயில் கதவுகளை அவர்களாகவே சாந்தி பூட்டை போட்டுப் பூட்டி விட்டார்கள். இதனால் உள்ளே இருப்பவர்கள் வெளியே போக முடியாமலும், வெளியே உள்ளவர்கள் உள்ளே வர முடியாமலும் தடுத்து விட்டார்கள். நுழைவாயில் அருகிலிருந்த 'தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்' என்ற பெயர்பலகையை உடைத்து அகற்றிவிட்டார்கள். பிறகு கல்லூரி முதல்வர் அவர்கள் மாணவர்களிடையே சென்று அவர்களை அமைதிப் படுத்தி அவர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்தோடு கவனிப்பதாக உறுதி கூறிய பின்னர் பகல் 1½ மணியளவில் மாணவர்கள் கலைந்து சென்றார்கள். 4—1—1978-ம் நாளன்று கொடுத்த மனுவை, கல்லூரி முதல்வர் அவர்கள் குறிப்புரைகளோடு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு 7—1—1978ஆம் நாளன்று அனுப்பியிருக்கிறார்கள்.

பல்கலைக் கழகத்திலிருந்து அதற்கான உத்தரவுகள் எதிர் பார்க்கப்படுகின்றன. எனினும், மாணவர்கள் தொடர்ந்து 'ஸ்டிரைக்' நடத்தி வருகின்றார்கள்.

வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை மாணவர்களுடைய பிரதிநிதிகள் சந்தித்துப் பேசிய போது அமைச்சர் அவர்கள் மாணவர்களுடைய கோரிக்கைகளை கல்லூரி முதல்வர் அவர்களையும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களையும் கலந்து ஆலோசித்து தக்க முடிவு எடுப்பதாக உறுதியளித்ததோடு, மாணவர்கள் பிரதிநிதிகளை கல்லூரி முதல்வரோடு பேச்சு வார்த்தைகள் நடத்துமாறும், அப்படி அந்தப் பேச்சு வார்த்தைகளின் மூலம் அவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லையென்றால் துணைவேந்தரைச் சந்திக்குமாறும் அறிவுரை கூறியுள்ளார். மாணவர்களுக்கு மேற்சொன்னவைகளில் திருப்தி ஏற்படவில்லையென்றால் அரசு, துணைவேந்தருடனும் கல்லூரி முதல்வருடனும் அவர்களுடைய கோரிக்கைகளை கவனிக்கும் என்று சொல்லி, இந்த அளவிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் ஏற்பாடுகள் நடந்து வருகின்ற காரணத்தினால், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லையென்ற காரணத்தினால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(7) அரசினர் தீர்மானம்.

(அ) விதி '1(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. ம[illegible]ைகரன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவ[illegible]ளே,

> "பேரவையின் 1(3) ஆவது விதியின்கீழ், இரண்டுக்கு மேற்பட்ட [illegible]நாள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை [illegible]ன்று தளர்த்த வேண்டும்",

என்ற தீர்மானத்தை [illegible]மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தோடு அதற்கான அறிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே, உறுப்பினர்கள் அதிலே கேள்வியை மட்டும் கேளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(2) தகவல் கோரல் — தொடர்ச்சி.

(உ) சித்தனாபுரம் கிராமத்திலே அரிசனங்கள் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை பற்றிய தீர்மானம் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை, சபையின் நடவடிக்கைகளை யொட்டி எழுப்ப விரும்புகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள், செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகாவிலே, சித்தனாபுரம் கிராமத்திலே அரிசனங்கள் தாக்கப்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்று, அதுபற்றி ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நேற்றுகூட தாங்கள் அது இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். அப்படியிருந்தும்கூட, அது இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதை........................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உத்திராபதியினுடைய தீர்மானம்பற்றிய தகவல் இன்னும் வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பெரிய கட்சியிலிருந்து சொன்னால் அல்லது வலுவானவர்கள் சொன்னால்தான் தாங்கள் எடுத்துக்கொள்வீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டே இருக்கிறார். ஆனால், அது இன்னும் வரவில்லை. இது உறுப்பினரின் உரிமையை பாதிப்பதாக இருக்கிறது. எனவே, இது சம்பந்தமாக தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு கூற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்டநாள் அனுபவம் உங்களுக்கு இருக்கிறது. தாங்கள் இப்படி சொல்லக் கூடாது. என்னுடைய கடமையெல்லாம், சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு அனுப்பி, சீக்கிரமாகத் தகவல் வந்தால், அவைகளை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதுதான். ஆக, தாங்களே இப்படி சின்னக் கட்சி, பெரிய கட்சி என்று பேசக் கூடாது. அந்தக் கண்ணோட்டத்தோடு இந்த அவை எப்போதும் நடந்தது இல்லை. அந்தக் கண்ணோட்டத்தோடு நான் சொல்லவில்லை. இப்போது முதல் அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர் வேறு அலுவலாக டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். இன்னும் தகவல் வரவில்லை. நான் எப்படி அறிக்கை கொடுக்க முடியும்? ஆகவே, இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. அதற்கான பதில் இன்னும் அரசுத் தரப்பிலே இருந்து வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தாங்கள் முதல் அமைச்சர் இல்லையென்று சொல்கிறீர்கள். ஆனால் சபை இன்றோடு முடிகிறது.

அதனால், இந்தப் பிரச்னையும் இன்றோடு போய்விடும். இது பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானம். முதல் அமைச்சர் அவர்கள் இல்லாவிட்டால், அடுத்த ஒரு அமைச்சர் இது சம்பந்தமாக பதில் சொல்லக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அழகர்சாமி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். கொடுக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கவன ஈர்ப்பில் தகவல் வந்துவிடாது. பல பேர்களுக்கு அப்படி வராமல் போகலாம். சில நேரங்களில் நானேகூட தள்ளிவிடலாம். ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கை தயாரித்து வைத்திருந்தால், மற்ற அமைச்சர்களைப் படிக்கச் சொல்லலாம். ஆனால் அவர்கள் அப்படித் தயாரித்து வைத்திருக்கிறார்களா, இல்லையா என்பது யாருக்குத் தெரியும்? இன்னும் அவர்களிடமிருந்து எனக்குத் தகவல் வரவில்லை. வேண்டுமென்றே தரக்கூடாது என்ற நிலை இல்லை. இதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தோடு இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் துவக்குகிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. சோ. அழகர்சாமி: இன்று எடுத்துக்கொள்வதாக நேற்றே சொன்னீர்கள்......

திரு. பொ. உத்திராபதி: இன்றைக்கு அங்கே உள்ளேயே நுழைய முடியவில்லை. அந்த நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அவர் பேசட்டும்; இல்லாவிட்டால் நீங்கள் பேசுங்கள். இரண்டு பேரும் பேசினால் எப்படி? அவர் சொல்லுகிறாரா? நீங்கள் சொல்லுகிறீர்களா? அது உத்திராபதியைச் சார்ந்தது.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புகிறேன். நேற்றே நான் இது பற்றிக் கேட்டதற்கு இன்று எடுத்துக் கொள்வதாகக் கூறினீர்கள். இன்று சபையில் எடுத்துக் கொள்வதாக வாக்குறுதி அளித்தீர்கள். மதுராந்தகத்திற்கு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அவைத் தலைவரைப் பற்றி அவ்வாறு கூற வேண்டாம். எதற்கும் எப்போதும் நான் ஏமாந்து வாக்குறுதி தரமாட்டேன். விவரங்கள் வேண்டுமானால் அறைக்கு வந்து கேட்கவேண்டும். என்னிடம் விவரங்கள் இல்லாமல் இருக்கும் போது நாளைக்கு தருகிறேன் என்று நான் சொன்னதாகச் சொல்லக்கூடாது.

திரு. பொ. உத்திராபதி : நான் சொல்லுவது சிக்கனும் குப்பத்தில் 138 குடும்பங்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விஷயத்திற்குள்ளே போகக் கூடாது. அது என்ன ஆயிற்று. நான் கொடுத்தது என்ன ஆயிற்று என்று கேளுங்கள். தயவுசெய்து அந்தப் பிரச்சினையைப் பற்றி அறையில் வந்து கேளுங்கள். அமருங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : எங்கள் கட்சியின் சார்பில் நானும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. துரை. முத்துசாமி அவர்களும் ரூல் 41-ன் கீழ் இதே பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறோம். இது மிக முக்கியமான பிரச்சினை. சென்னைக்குப் பக்கத்திலே 30, 40 மைல் தூரத்திற்குள்ளாக அரிசனங்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்ட பிரச்சினை. பத்து நாட்களாக சபை நடந்து வந்திருக்கிறது. இதையெல்லாம் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகர்சாமி அவர்கள் பெரிய கட்சி, சின்னக் கட்சி என்றார்கள், பெரிய கட்சியே இப்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். என்னுடைய கடமை என்ன என்பதை உணர்ந்து, கேட்கிற கேள்வி இருக்க வேண்டும். அதற்கு மேல் உள்ளே போகக்கூடாது. நான் கொடுத்த தீர்மானம் என்னவாயிற்று? அது வராததற்குக் காரணம் என்ன? இப்படிக் கேட்பதுதான் மரபு. அதற்கு மாறாக பிரச்சினைக்குள்ளே நுழைந்து விவாதிக்கிற முறையில் செல்லுவதாக இருந்தால் அதற்கு நேரமும் இல்லை, அது மரபும் இல்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : விதி 41-ன்கீழ் கொடுக்கப் படுகிற தீர்மானங்களுக்கு இவ்வளவு நாட்களுக்குள்ளாக பதில் கொடுக்கவேண்டுமென்று அரசைத் தலைவரவர்கள் வற்புறுத்த வேண்டும். அவர்கள் அந்த முறையில் அறிவுரை வழங்கி சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்தி லிருந்து பதில் வரவில்லை என்று சொல்லி அது காலாவதி ஆக விடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல்ஸ் கமிட்டியில் தலைவர் மாரிமுத்து அவர்கள் இருக்கிறாரா இல்லையா என்று தெரியாது. ரூல்ஸ் கமிட்டியில் இப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப்பி முடிவு செய்தால் எனக்கு பேருதவியாக இருக்கும். விதிகளில் இத்தனை நாட்களுக்குள் பதில் கொடுக்கவேண்டுமென்று கண்டிப்பாக இல்லை. தாங்கள் இப்போதுள்ள தர்மசங்கடமான நிலைமையை உணரவேண்டும். நான் பல அமைச்சர்களுக்கும், பல இலாகாக்களுக்கும் உடனடியாகப் பதில்களைத் தர வேண்டு

மென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். விவரங்கள் சேகரிக்கப்பட்டு எனக்கு வராமல் இருப்பதற்கு நான் பொறுப்பாளி அல்ல. மேலும், ஒரே நேரத்தில் இரண்டு தீர்மானங்களைத்தான் எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. அந்த விதியைத் தளர்த்தி ஏறத்தாழ 10 கவன ஈர்ப்புத் தீர்மானங் களை எடுத்துக்கொள்ளுகிற நிலைமை இருக்கிறது. இது மற்ற நிகழ்ச்சிகளைக் கூடப் பாதிக்கிறது. விதிகள் குழுவில் கருத்துக் கள், யோசனைகளைச் சொல்லி எனக்கு வேலைப் பளுவைக் குறைத்தால் நலமாக இருக்கும் என்று கூறி இதோடு இதனை விட்டு விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(திருவாளர்கள் பொ. உத்திராபதி, சோ. அழகர்சாமி, துரை முத்துசாமி ஆகியவர்கள் நின்று கொண்டிருந்தனர்.)

திரு. மாரிமுத்து அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொன்னேன். திரு. அழகர்சாமி அவர்கள் உட்கார வேண்டும். ஒன்று நீங்கள் நில்லுங்கள் அல்லது. . .

(திரு. பொ. உத்திராபதியும் திரு. சோ. அழகர்சாமியும் நின்று கொண்டு பேசிக்கொண்டிருந்தனர்.)

அவர் பேசுகிறாரா? நீங்கள் பேசுகிறீர்களா? காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் பேசியதற்கு நான் பதில் சொன்னேன்.

திரு. துரை முத்துசாமி : பதில் கொடுக்கவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே பதில் விளக்கமாகச் சொல்லிவிட்டேன். நீங்கள் வேறு கேட்கிறீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தாங்கள் விளக்கமாகச் சொன்னதாகச் சொல்கிறீர்கள். இது அவசரமும் அவசியமுமான விஷயம், இதனால் பதட்ட நிலைமை ஏற்பட்டு அதைத் தடுக்கக்கூடிய முறைகளைப் பற்றி விவாதிக்க வேண்டிய நிலைமை இருப்பதால் கொண்டு வந்திருக்கிறோம். முதலமைச்சர் இல்லாவிட்டால் வேறு அமைச்சரையாவது தாங்கள் கொண்டுவரசொல்லி இருக்கலாம். உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்றுவது பேரவைத் தலைவரின் கடமை. இன்றோடு கூட்டம் முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதைப் புரிந்துகொண்டேன். 235 உறுப்பினர்களும் தீர்மானத்தை ஒரே நாளில் கொண்டு வந்தாலும் அதற்கான பதில் வரவில்லை யென்றால் நான் என்ன செய்யமுடியும்? அவைத் தலைவர் என்ற

முறையில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்புகிறோம். தகவல் வந்தால் உடனே வைக்கிறோம். அடுத்த அமைச்சர் தாலாம் என்று சொல்வது என்றால் நான் அதற்குள்ளே எல்லாம் போகமுடியாது. எனக்கு தகவல் வந்துவிட்டால் உடனே வைத்துவிடுவேன்.

திரு. பொ. உத்திராபதி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உத்திராபதி கூறியவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன். இங்கே அதைப்பற்றி எழுப்பவே கூடாது. போகிறது என்று அனுமதித்தேன். அறையிலேதான் இந்தப் பிரச்சினைகளை கேட்க முடியும், அவையில் அல்ல.

திரு. சோ. அழகர்சாமி : சபையிலே கேட்டால் தகவல் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையிலே எழுப்புவதற்கு அனுமதி கிடையாது.

(8) கவன ஈர்ப்பு.

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் ஆலை உரிமையாளர்கள் புதிய லெவி முறையின் காரணமாக நெல் அரைக்க தயங்குவதால் பொதுமக்களின் பாதிப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

''வடஆற்காடு மாவட்டத்தில் நடுத்தர மற்றும் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்கள் புதிய லெவி முறையின் காரணமாக நெல் அரைக்கத் தயங்குவதால், பொது மக்கள் பாதிக்கப்படுவதையும், ஆலை உரிமையாளர்கள் நட்டமடைவதைத் தவிர்க்கவும், அரசு உரிய நடவடிக்கை உடன் மேற்கொள்ள வேண்டியது பற்றி''.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

உணவு-கூட்டுறவு அமைச்சரின் அறிக்கை.

1977ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல், நெல், அரிசி மீதான போக்குவரத்து மண்டலக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கி நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக்கி மத்திய அரசு ஆணையிட்டது. அதைத் தொடர்ந்து, நம் மாநிலத்தின் பொது விநியோகத் தேவைக்கான அரிசியைக் கொள்முதல் செய்ய, அரவை ஆலைகள் மீதும், வர்த்தகர்கள் மீதும் லெவி விதிக்கப்பட்டது.

2. ஆலை லெவித் திட்டத்திலுள்ள சில நடைமுறை சிக்கல்கள் குறித்து ஆலை அதிபர்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் பரிசீலித்து ஆலை லெவித் திட்ட முறையில் சில மாறுதல்களைச் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொழுதுள்ள முறையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

3. எந்த அரிசி அரவை ஆலையும் கூலிக்காக விவசாயியின் நெல்லையோ, சில்லரை வியாபாரியினுடைய நெல்லையோ அரவை செய்யலாம். அதற்கு லெவி தரவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கூலிக்காக செய்யப்படும் அரவைக்கு தனியாக கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் தங்கள் நெல்லை ஆலைகளுக்கு அரவைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அவர்களுக்கு எந்தவிதமான இடர்ப்பாடும், இடைஞ்சலும் இருக்கக் கூடாது என்ற கவலையில் அரசு இந்தச் சலுகையை அளித்துள்ளது. கூலி அரவைக்கு லெவியினின்றும் விலக்கு அளித்துள்ள காரணத்தினால் அரவை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து பெறும் கூலிக் கட்டணத்தை உயர்த்தமாட்டார்கள் என்று அரசு நம்புகிறது.

4. நெல், அரிசி வியாபாரம் செய்ய மொத்த வியாபாரம் உரிமம் பெற்றுள்ளவர்கள் நடத்தும் அரவை ஆலைகளில் தங்கள் வியாபாரத்திற்கென அரவை செய்யும் அரிசியில் 20 சதவிகிதத்தை லெவிக்குக் கொடுத்துவிட வேண்டும். ஆலை வசதியில்லாத மொத்த வியாபார உரிமை பெற்றுள்ள வியாபாரிகள் தங்கள் நெல்லை ஆலைகளுக்கு அரவைக்கு எடுத்துச் செல்லும்போது அந்த அரவைக்குண்டான 20 சதவீத லெவியை அரைவை செய்கின்ற ஆலையின் மூலமாக அரசுக்குச் செலுத்திவிட வேண்டும். அரவைக்குக் கொண்டுவரும் மொத்த வியாபாரிகளிடமிருந்து வரவேண்டிய 20 சதவிகித லெவியை அரசின் சார்பில் பெற்று அரசுக்கு லெவியாகச் செலுத்துவதற்கு அரவை ஆலை அதிபர்களுக்குச் சட்டப்படி உரிமையளித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வரும் நெல்லைப் பொருத்த வரையில் அந்த நெல்லுக்கு ஆலைகள் லெவி செலுத்தவேண்டாம் என்று விலக்கு அளித்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6. அரசு அளித்துள்ள சலுகைகளை வரவேற்று ஆலைகள் லெவித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆலை அதிபர்கள் முழு மனதுடன் ஒத்துழைப்பார்களென்று அரசு நம்புகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகள் லெவித் திட்டத்தில் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுவதைப்பற்றி நான் ஒரு கவன ஈர்ப்பு மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் அறிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஏற்கனவே முதலாவதாக லெவி வருகிற போது சிறிய ஆலை அதிபர்கள் எல்லாம் கணக்கிட்டு அனுப்பவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு தீபாவளிப் பண்டிகை வந்தது. சிறிய ஆலைகள் அப்போது அரைத்ததற்கும் லெவியைக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது லெவி கொடுக்கின்ற முறையை மாற்றிவிட்ட காரணத்தால் அவைகளை ரத்து செய்து சிறிய ஆலைக்காரர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய புகார் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பூம்புகார் தொகுதி செம்பனார்கோவில் ஒன்றியத்தில் துவக்க பள்ளிகளுக்கு மதிய உணவு பங்குத்தொகை வழங்காததால் மாணவர்கள் பட்டினி கிடப்பது குறித்து.

திரு. எஸ். கணேசன் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

''பூம்புகார் தொகுதியைச் சேர்ந்த செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உள்ள 59 உதவிபெறும் துவக்கப் பள்ளிகளுக்கு மதிய உணவிற்காக ஒன்றியப் பங்குத் தொகை ரூ. 22,125 கடந்த 9 மாதங்களாக வழங்காததன் காரணமாக ஏறத்தாழ 3,000 ஏழை மாணவர்களுக்கு 1—1—1978 ஆம் தேதி முதல் மதிய உணவு வழங்காமல் மாணவர்கள் பட்டினி கிடப்பது குறித்து.''

கல்வி அமைச்சரின் அறிக்கை.

உள்ளாட்சி மன்றங்கள் தத்தம் எல்லைக்குள் செயல்படும் உள்ளாட்சி மன்றப் பள்ளியல்லாத பிற பள்ளிகளுக்கு (தனியார் மற்றும் அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு) மதிய உணவுப்

பங்குத் தொகையாகிய 5 காசை கொடுக்க வேண்டுமா என்பது குறித்து இதுவரை திட்டவட்டமான அரசாணை வெளியிடப்படவில்லை. பொதுவாக பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் நிதிநிலை நல்லபடி இல்லையாகையால் தனியார் பள்ளிகளுக்கும் அவை 5 காசு மதிய உணவு பங்குத் தொகை கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த தேவையில்லை என்று ஊரக வளர்ச்சி இயக்குநரும் நகராட்சி ஆய்வாளரும் தெரிவித்தனர். இருந்தாலும் எந்தெந்த உள்ளாட்சி மன்றங்களின் நிதிநிலை நன்றாக இருக்கிறதோ அவற்றையாவது (அவ்வாறு தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கும் 5 காசு மதிய உணவுப் பங்குத்தொகை கொடுக்க வேண்டும் என்று) கட்டாயப்படுத்த வழிவகைகளைக் காணலாமா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இது குறித்து முடிவு எடுக்கும்வரை செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை தனியார் பள்ளிகளுக்கு 5 காசு மதிய உணவு பங்குத் தொகை கொடுக்க வேண்டுமென கட்டாயப்படுத்துவதற்கில்லை.

ஐந்து காசு உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகை வரா விட்டாலும் கேர் இலவச உணவையும் அரசின் 10 காசு மானியத்தையும் வைத்துக் கொண்டு இந்த தனியார் பள்ளிகள் மதிய உணவை இயன்ற அளவுக்கு வழங்கி வர யாதொரு தடையும் இல்லை. அவ்வாறு செய்யாமல் மதிய உணவே வழங்காமல் நிறுத்தியிருப்பது சரியான போக்கு அல்ல.

*திரு. எஸ். கணேசன்: உள்ளாட்சி மன்றங்கள் பள்ளியல்லாத பிற பள்ளிகளுக்கு தனியார் பள்ளிகளுக்கு 5 காசை மதிய உணவுப் பங்குத் தொகையாக கொடுக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்த தேவையில்லை என்று ஊரக வளர்ச்சி இயக்குநரும் நகராட்சி ஆய்வாளரும் தெரிவித்தனர் என்று அமைச்சர் சொல்லி இருக்கிறார்கள். இப்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு 5 பைசா கொடுத்து வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் அரசு பங்குத் தொகை 10 பைசா போதாது என்றும் அதை அதிகப் படுத்தலாமா என்று யோசிப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசு கொடுத்துவரும் 10 பைசாவை போதாது என முதல்வர் குறிப்பிட்டுள்ளபோது 10 பைசாவுடன் கேர் நிறுவனப் பொருட்களைக் கொண்டு எப்படி உணவு வழங்க முடியும்? செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் நல்ல நிதிநிலையில் தான் இருக்கிறது. அங்கே 60 ஒன்றியப் பள்ளிகளில் உணவு வழங்குகிறார்கள். ஒரே ஊரில் உள்ள ஒன்றியப் பள்ளியில் மதிய உணவு வழங்குவதும் அதே ஊரில் உள்ள தனியார் பள்ளியிலே உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப் படாமல் பட்டினி கிடக்கக்கூடிய நிலைமை ஏற்படுவதால்

அரசுக்கு அவப்பெயர்தான் வரும். ஆகவே அரசு தனியார் பள்ளி களுக்கு பங்குத் தொகையாக 5 பைசா ஒன்றியங்கள் கொடுக்க வேண்டுமென்று ஆணையிடுமா?

(முற்பகல் 11.10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய எல்லைக்
குட்பட்ட தனியார் பள்ளிகளுக்கு மதிய உணவு திட்டத்தை
நடத்த 5 காசு தர வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்து வரு
கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதி வசதி சரி
யில்லை என்பதால் அவற்றைத் தர மறுத்து வருகின்றன. அவர்
களைக் கட்டாயப்படுத்தக்கூடிய நிலைமை இன்றைக்கு நமக்கு
இல்லை. ஆனால் எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மூன்றாவது கவன
ஈர்ப்புத் தீர்மானம் கனம் உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேட்க
வேண்டும். இதை மேஜை மீது வைத்ததற்குக் காரணமே
நேரத்தைச் சுருக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்.
எனவே, அதையே படித்து திருப்பிக் கேள்வி கேட்டால் நேரம்
ஆகும். எனவே, சுருக்கமாகக் கேட்க வேண்டுமென்ற யோசனை
யைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. உமாநாத் அவர்கள்.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, ஒரு முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவருடைய பெய ரைக் கூப்பிட்டு விட்டேன்.

(இ) டி.வி.எஸ். ஹூகாஸ் கம்பெனி நிர்வாகத்திற்கும் தொழிலாளர் தலைவருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டை நிர்வாகம் மீறியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. ரா. உமாநாத் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

''சென்னை பாடியிலுள்ள டி.வி.எஸ். ஹூகாஸ் கம்பெனி நிர்வாகத்திற்கும் தொழிலாளர் பிரதிநிதி திரு. வி. பி. சித்தன் அவர்களுக்கும் 29—10—1977 தேதியில் தொழிலாளர் நலத்

துறை அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட மூன்று அம்ச உடன் பாட்டை டி.வி.எஸ். நிர்வாகம் ஒருதலைப்பட்சமாகவும், முழுமை யாக மீறியதன் விளைவாகவும் தொழிலாளர் மத்தியில் ஏற்பட் டுள்ள பதட்ட நிலை குறித்து.''

தொழிலாளர் நல அமைச்சரின் அறிக்கை.

29—8—1977 முதல் கதவடைப்பு செய்யப்பட்ட சுந்தரம்
கிளேட்டன் ஹூகாஸ் டி.வி.எஸ். நிறுவனங்களில் ஏற்பட்ட
தொழிற் தகராறுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டன. இதற்கிடையில் பெரும்பான்மையான தொழிலாளர்
கள், தொழிற்சாலை கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க ஒப்புக்
கொண்டு நிர்வாகத்தினரை, தொழிற்சாலைகளை திறக்க வேண்டு
மென்று அணுகினர். அதன்படி தனித்தனியாக தொழிலாளர்
களிடமிருந்து தொழிற்சாலை கட்டுப்பாடு, 1976 உற்பத்தி அளவு,
பொருட்களின் போக்குவரத்து ஆகியவை பற்றி உத்திரவாதம்
பெற்றுக்கொண்டு, நிர்வாகத்தினர் 29—9—1977 முதல் கதவ
டைப்பை நீக்கி தொழிலாளர்களை வேலைக்கு அனுமதித்தனர்.
அதன்படி பல தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றார்கள். உத்திர
வாதம் கொடுப்பதற்கு மறுத்து, அதனால் வேலைக்கு அனுமதிக்கப்
படாமல் இருந்த சில தொழிலாளர்களின் பிரச்சினை தீர்க்கப்படா
மல் இருந்தது. இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழக முதல
மைச்சர் முன்பும், தொழிலாளர் நல அமைச்சர் முன்பும் பேச்சு
வார்த்தைகள் நடைபெற்றன. அதன் காரணமாக தொழிலாளர்
களுக்கும் நிர்வாகங்களுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்
வுடன்பாட்டின்படி நிர்வாகத்தினர் தற்காலிக வேலை நீக்கம்
செய்யப்பட்டிருக்கும் 128 தொழிலாளர்களின் மேல் உள்ள குற்றச்
சாட்டுகளின் மீது விசாரணை நடத்தி அதன்மீது உத்திரவுகள்
பிறப்பிப்பார்கள். ஆனால் நிர்வாகத்தினர்களின் உத்திரவுகளை
அரசு பரிசீலனை செய்து அரசின் முடிவு இறுதியாக ஏற்றுக்கொள்
ளப்படும். மேலும் தனித்தனியாக நிர்வாகத்தினருக்கு உத்திர
வாதம் கொடுப்பதற்குப் பதிலாக வேலைக்கு செல்லாமல் இருக்கும்
தொழிலாளர்கள் நிர்வாகத்தினருக்குக் கொடுக்க வேண்டிய
உத்திரவாத படிவங்களில் உள்ள வார்த்தைகளில் சிறிது மாற்றத்
துடன் ஒரு உத்திரவாதத்தை தமிழக முதலமைச்சரிடம் கொடுத்
தார்கள். இந்த மாறுபட்ட உத்திரவாதம் சுந்தரம் கிளேட்டனின்
பிரதிநிதியால் 26—10—1977 அன்றும், மாதிரி உடன்படிக்கை
ஹூகாஸ் டி.வி.எஸ். நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரால்
30—10—1977 அன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்
திடப்பட்டது. மேலும் ஐ.என்.டி.யு.சி. தொழிற் சங்கத்தைச்
சேர்ந்த திரு. பி.என். சுப்பையன் அவர்களால் நடத்திச் செல்லப்
பட்ட வேலைக்கு ஆஜரான தொழிலாளர்களைச் சார்ந்த 10 பிரதி
நிதிகளும் (ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 5 தொழிலாளர்கள்
வீதம்) 29—10—1977 அன்று தமிழக முதலமைச்சரை சந்தித்து
அவரது முடிவை ஏற்றுக்கொள்வதாக எழுத்து மூலமாக உறுதி

கொடுத்தனர். வேலைக்குச் செல்லாமலிருக்கும் தொழிலாளர்களின் சார்பாக சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தைச் சார்ந்த திரு. வி. பி. சிந்தன் மேற்கண்டவாறு முதலமைச்சருக்கு உறுதி கொடுத்து 2 நிறுவனங்களுக்கு உண்டான உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

இதற்கிடையில் 27—10—1977 அன்று வேலைக்கு ஆட்களை அழைத்து வந்து கொண்டிருந்த பேருந்தின் மீது கல்லெறிதல், கம்பு கொண்டு தாக்குதல் போன்ற வன்முறைச் செயல்கள் நடந்ததாகவும், 30—10—1977 அன்று சுந்தரம் கிளேட்டனைச் சேர்ந்த ஒரு தொழிலாளி கொல்லப்பட்டதாகவும் காட்டி நிர்வாகத்தினர் தங்களது மேற்சொன்ன உடன்பாடுதனை ஏற்றுக் கொண்ட இசைவினை வாபஸ் பெற்றனர். மேலும் மேற்கூறிய காரணங்களினால் அங்கு பதட்ட நிலை இருப்பதாகக் கூறி இந்நிறுவனங்களுக்கு 31—10—1977 முதல் 4—11—1977 முடிய ஊதியத்துடன் விடுமுறை என அறிவித்தனர் (5—11—1977 மற்றும் 6—11—1977 அன்று வார விடுமுறை). மறுபடியும் 7—11—1977 முதல் இந்நிறுவனங்களை மீண்டும் திறந்தனர். பின்னர் தற்காலிக வேலைநீக்கத்திலிருக்கும் தொழிலாளர்கள் தவிர, வேலைக்குச் செல்லாமலிருக்கும் பிற தொழிலாளர்கள் தனித்தனியாக நிர்வாகம் கேட்ட உத்திரவாதத்தைக் கொடுத்து விட்டு வேலைக்குத் திரும்பினர். தற்பொழுது இந்நிறுவனங்களில் வேலை அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : ஷார்ப்பாக சில விஷயங்களை மட்டும் அமைச்சரிடத்தில் கேட்கிறேன். இதுவொரு பிரிட்டிஷ் கொலாபரேஷன் கம்பெனி. அந்த பிரிட்டிஷ் முதலாளியினுடைய தைரியத்தை வைத்துக் கொண்டு டி.வி.எஸ். முதலாளி அவர்கள் இந்த நாட்டிற்கே உண்மையிலேயே கெடுதலை, He is doing disservice to the Nation as well as to the Citizens. பத்து நாட்களுக்கு முன்னதாக அந்தத் தொழிலாளர்கள் போட்ட கொட்டகைக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். It is nothing short of incendiarism. போலீசுக்குத் தகவல் கொடுத்து, கம்ப்ளெய்ன்ட் கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அமைச்சரவர்களின் அறிக்கையிலிருந்து ஒரு உடன்பாடு ஏற்பட்டதாக நான் பார்த்தேன். அதிலே ஐ.என்.டி.யு.சி. உள்பட உடன்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று நான் பார்த்தேன். பிரிட்டிஷ் முதலாளியின் தைரியத்தை வைத்துக்

கொண்டு மீறியிருக்கிறார்கள். அதில் இந்த நேஷனுடைய ஹானர் இன்வால்வ் ஆகியிருக்கிறது. இந்த அரசாங்கம், லேபர் மினிஸ்டர் இவர்களுடைய ஹானரும் அடங்கியிருக்கிறது. ஆகவே, நான் ஷார்ப்பாகக் கேட்கிறேன். ஒன்று, சி.ஐ.டி.யு. ஒருவரைக் கொலை செய்ததாகச் சொல்லி இந்த ஒப்பந்தத்திலிருந்து இந்த முதலாளி பேக் - அவுட் செய்ததாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அனுபவம் உள்ளவர்கள். நீங்கள் கேள்வியாகப் போடாமல் சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டு போனால் என்ன ஆவது? நான் கூடக் கொஞ்சம் நேரம் பார்த்தேன். நீங்கள் பிரிட்டிஷ் கொலாபரேஷன், கொலை என்றெல்லாம் வரலாற்றைச் சொன்னால் நேரம் ஆகும்.

திரு. ரா. உமாநாத் : நான் முடித்துவிட்டேன். ஒப்பந்தம் தான் பிரச்சினை. ரினெளன்ஸ் செய்யப்பட்டு முதலாளி காரணம் சொன்னார், அது உண்மையா? I am straight away on that point. ஆகவே, அது உண்மையா? இரண்டாவதாக, ஒப்பந்தப்படி வேலை நிர்ணயக் கமிட்டி அமைக்கப்படும், சஸ்பென்ஷன் செய்யப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரசாங்கத்திடம் கொடுத்து அரசாங்கத்தின் முடிவுதான் இறுதி என்பதையும், இருப்பதை அமல் நடத்த என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது, எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், சம்பள உயர்வு, போனஸ் போன்றவைகளுக்கு மேலும் கன்சிலியேஷன் நடத்தி எடுக்கிறீர்களா என்பதையும், அந்தக் கொட்டகை எரித்தது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க என்ன செய்கிறார்கள் என்பதையும், டிஃபென்ஸ் பொருள் சம்பந்தமாக இருப்பதால் இது தேசிய மயமாக்கப்படுமா என்பதையும், லேபர் மினிஸ்டர் அவர்கள் சிபாரிசு செய்வார்களா என்பதையும் பற்றி நான் கேள்வி எழுப்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஒப்பந்தம் என்பதற்கும், டிராஃப்ட் ப்ரபோசல்ஸ் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை சிறந்த தொழிற்சங்கத் தொழிலில் ஒருவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் அறிவார்கள். எனக்கு முன்னால் நிர்வாகத்தின் சார்பாகவும், தொழிலாளர்களின் சார்பாகவும் இனிஷியல் செய்யப்பட்ட ஒன்று. அந்த நகல் உடன்படிக்கை It is only a draft proposal and not an agreement or settlement. மாதிரி ஒப்பந்தம் கையெழுத்து போட்டது உண்மை. பின்வாங்கப்பட்டதும் உண்மை.

மிக வேகமாகப் போக வேண்டுமென்று திரு. உமாநாத் அவர்கள் சொல்கிறார்கள். தொழிலாளர் பிரச்சினையை அணுகும் பொழுது முள் வேலியின் மீது காய வைக்கப்பட்ட புடவையை எடுப்பது போல எடுக்க வேண்டும். புடவை என்று நான் சொல்வதற்குக் காரணம் அதுதான் 16 முழம், 18 முழம், 19 முழம் இருக்கும். அதை எடுக்கும்பொழுது டெலிகேட்டாக ஹேண்டில் செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்று புடவை கிழிந்து விடும், இல்லையென்றால் வேலி போய்விடும். தொழிலாளர் பிரச்சினையை அணுகும்பொழுது டெலிகேட்டாக ஹேண்டில் பண்ண வேண்டும். வேகமாகப் போக முடியாது. முதலாளி, அந்த டிராஃப்ட் ப்ரப்போசலில் கையெழுத்துப் போட்டுவிட்டு பின் வாங்கியது உண்மை. இறந்துவிட்ட தொழிலாளியைக் காண்பித்து தொழிற்சாலையைத் திறக்கமாட்டேன் என்று சொன்னது சரியல்ல. அந்தத் தொழிலாளி, பாடியில் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்தது உண்மை. ஆனால், அவர் கொல்லப்பட்டதற்குக் காரணம் 'ஃபாமிலி டிஸ்பியூட்', குடும்பத் தகராறு. இன்னும் ஒரு 'அடிஷனல் இன்ஃபர்மேஷன்'—செத்தவர் எங்களது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினர். இந்தப் பிணத்தை தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு அவர்கள் காப்பிட்டலைஸ் செய்தது உண்மை. அந்த முழு உண்மைகளையும், நான் டெல்லி சென்ற பொழுது, முதலமைச்சர் அனுமதியோடு, மத்திய தொழிலாளர் நல மந்திரி இரவீந்திர வர்மா அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், யார் பக்கம் நியாயம் இருக்கிறதோ, அவர்கள் பக்கம் இருக்கும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

கொட்டகை எரிந்ததைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி தகவல் தந்தால் அரசு அதைக் கவனிக்கும்.

தொழிலாளர் பிரச்சினையில் விரைந்து போக வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள் We hasten slowly. We do not run. We do not walk. அதில், நிதானமாக, விரைந்து காரியங்களைச் செயல்படுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது அங்கே அமைதி நிலவுகிறது.

திரு. ரா. உமாநாத் : ஒரே ஒரு பாய்ன்ட். அது ஒரு டிராஃப்ட் ப்ரப்போசல். அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மென்ட்டிலே அது இருக்கிறது. அதன் காரணமாக, தொழிலாளிகளுக்கும், நிர்வாகத்திற்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அவருடைய ஸ்டேட்மென்ட்டை நான் படிக்கிறேன். ஆகவே, அந்த உடன்பாட்டினுடைய ஷரத்துக்களை அமுல் நடத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்று கேட்டேன். போனஸ் இஷ்யூவிலே ஒரு கன்சிலியேஷன் இருக்கிறது. ஆக், இரண்டையும் பற்றிச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இரண்டாவது பக்கத்தில், இரண்டாவது வரியில் 'மாதிரி உடன்படிக்கை' என்றிருக்கிறது. கடைசியிலே தான் தவறாக உடன்படிக்கை என்று போட்டிருக்கிறார்கள். நான் திருத்திப் படித்துவிட்டேன். இரண்டாவது பக்கத்தில், இரண்டாவது வார்த்தையே 'மாதிரி உடன்பாடு' என்பது.

I do not entirely go by the statement given by the Department of the Secretariat. I have got a right to alter it and I have altered it and this is for the information of the hon. Member.

இலாகா கொடுத்த அறிக்கையில் மாதிரி உடன்படிக்கை என்று இரண்டாவது பக்கத்தில், இரண்டாவது வரியில் இருக்கிறது. கடைசி வரியில் உடன்படிக்கை என்றிருக்கிறது. அது தவறு.

I cannot, by law, enforce this. The action of the Management is not illeagl but it is improper, immoral, unethical and anti-labour. As it is not illegal, I cannot take any action against them.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். நம்முடைய லேபர் மினிஸ்டர் பேசும் பொழுது, முள்ளிலே புடவையைப் போட்டதை எடுக்கவேண்டுமென்பது போல் என்று சொன்னார். It is not in good taste.

புடவை என்பதற்கு பதில், துணியை என்று சொன்னால் நலமாக இருக்கும்.

(ஈ) தியாகதுர்க்கம் யூனியன் பகுதியில் பல கிராமங்களில் மக்கள் ஆற்றுப்பாலங்கள் இன்றி அவதியுறுவதால் துரித நடவடிக்கை எடுப்பது குறித்து.

திரு. வி. துலுக்காணம் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

" உளுந்தூர்பேட்டைத் தொகுதி கள்ளக்குறிச்சி தாலுக்காவைச் சேர்ந்த தியாகதுர்க்கம் யூனியன் பகுதி, விரஞ்சரம் கிராமம்

[1978 சனவரி 10

சித்தலூர்பாளையம், கூத்தகுடி, ஆதியூர், உச்சிமேடு, உடைய நாச்சி, அட்ரிகளத்தூர், மரூர், சேதுவராயன் குப்பம் ஆகிய கிராம மக்கள் யாவரும் ஆற்றுப் பாலங்கள் இன்றி ஒருமாத கால மாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டு கஷ்டப்படுவதால் அது குறித்து துரிதமாக நடவடிக்கை எடுப்பது பற்றி.

போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

உளுந்தூர்பேட்டைத் தொகுதி கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுர்க்கம் ஊராட்சி ஒன்றியத்தில் மணிமுத்தா நதி, கோமுகி நதி, மாயூரா நதி ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஒன்றியத்தில் எந்தச் சாலை, எந்த ஆற்றில் எந்த இடத்தில் பாலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று குறிப்பாகக் கோரவில்லை. ஆனால் இந்த தியாகதுர்க்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அடரி அசகளத்தூர் சாலையில் கி.மீ. 3/6-ல் மாயூரா நதியும், கி.மீ. 17/9-ல் மணி முத்தா நதியும் குறுக்கிடும் இடங்களில் ரூ. 8 லட்சம் மதிப்பில் தாம்போகி அமைத்திடும் பணியினை பிற சாலைகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண் 1362, பொதுப்பணித்துறை, நாள் 6—9—1976 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு தற்போது தாம் போகிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அடுத்து இவ்வூராட்சி ஒன்றியத்தில் உள்ள வரஞ்சரம் ஊராட்சி சாலையில் கி.மீ. 1/4-ல் கோமுகி நதி 70 மீட்டர் அகலத் துடன் குறுக்கிடுகின்றது. இவ்விடத்தில் கண் அமைப்பு கொண்ட தாம்போகி (Vented causeway) ஒன்று அமைத்திட ரூ. 5.00 லட்சம் தேவைப்படும்.

வரஞ்சரம் சாலையானது கள்ளக்குறிச்சி கூத்தகுடி அரசு மாவட்ட பெருஞ்சாலையில் கி.மீ. 3/6-ல் பிரிந்து செல்கின்றது. இச்சாலையின் நீளம் 2.00 கி.மீ. இச்சாலையில் கி.மீ. 1/4-ல் குறுக்கிடும் கோமுகி நதியில் தாம்போகி அமைக்கும் பணியினை ''பிற சாலைகள்'' திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டும். அரசின் நிதி ஒதுக்கீடு குறைவின் காரணமாகவும், இப்பணி எவ் விதமான ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களில் இடம் பெறாமை யாலும், இப்பணியினை உடனடியாக மேற்கொள்ள இயலாது. எனவே, இத்தாம்போகி அமைக்கும் பணியினை இனிவரும் திட்டக் காலங்களில் அரசின் நிதிவளம், வேலையின் முக்கியத்துவம் கருதி, மேற்கொள்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

கோரிக்கையில் கண்டுள்ள கூத்தகுடி கிராமமானது கள்ளக் குறிச்சி - விருத்தாசலம் அரசு மாவட்ட பெருஞ்சாலையில் கி.மீ. 21/4-ல் அமைந்துள்ளது. மேலும் உதயநாச்சி, உச்சிமேடு, மரூர் சேதுவராயன், கும்பம் போன்ற கிராமங்களுக்கும் மேற்சொன்ன அரசு சாலைக்கு வடபுறமும் தென்புறமுமாக அமைந்துள்ளன.

[illegible] வரி 10]

[illegible]களுக்கருகில் ஓடும் ஆறுகளின் குறுக்கே பாலம் [illegible] பற்றி தேவையின் அடிப்படையில் முக்கியத்துவம் [illegible] அரசின் நிதி நிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும்.

திரு. வ. துலுக்கானம்: தலைவர் அவர்களே, உளுந்தூர் பேட்டை தொகுதியைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி தாலுக்காவைச் சேர்ந்த தியாகதுர்க்கம் யூனியன் பகுதியில் வாஞ்சரம் கிராமம், சித்தலூர், பாளையங்கால், கூத்தகுடி, ஆதியூர், உச்சிமேடு, உடையாநாச்சி, அடரிகளத்தூர், மரூர், சேதுவராயன் குப்பம் இன்னும் மற்றும் உள்ள பல கிராமப் பகுதிகளில் கோமுகி நதி, மயூரா நதி, மணிமுக்தா நதி இன்னும் பல ஆறுகள் ஓடு கின்றன. அவைகளில் மழைக் காலங்களில், வெள்ளம் வரும் போது இந்தக் கிராம மக்கள் தங்கள் கிராமத்தை விட்டு வெளி இடங்களுக்குப் போக முடியாமல் ஒவ்வொரு மாதமும் கஷ்டப் படுகின்றார்கள். ஆகவே, அங்கே குறுக்கிடும் ஆறுகளில் சிறு, சிறு, ஆற்றுப்பாலங்கள் அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து ஏற்பட்டு மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே, பாலங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, பாலங்கள் உடன் கட்டிக்கொடுத்து பலகாலம் கஷ்டப்படும் அக்கிராம மக்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டு மென்று இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இக்கிராமங்கள் பகுதியிலே இருக்கிற ஆறுகளினிடையே குறுக்குப் பாலம் அமைப்பது பற்றியும், நிதி நிலைமை இடம் கொடுக்குமா என்று பரிசீலித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வ. துலுக்கானம்: பல காலமாக அவர்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: உறுப்பினர் அவர்களே, பலகாலமாக கவனிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். அரசு நிதிநிலைக்கேற்ப அவைகளை பரிசீலித்து நட வடிக்கை எடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

"மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் கொடுக்காததும், அரசினர் மானியத்தை கல்லூரி நிர்வாகம் தவறாகப் பயன்படுத்தியதும் குறித்து".

கல்வி அமைச்சரின் அறிக்கை

ஹாஜி கருத்தராவுத்தர் ஹௌடியா கல்லூரி, உத்தமபாளையம் 1956-ம் ஆண்டு கருத்தராவுத்தர் அவர்களால் தொடங்கப்பட்டது. அவர் கல்லூரிக்கு சுமார் ரூ. 6.00 இலட்சம் (3 இலட்சம் ரொக்கமாகவும், 3 இலட்சம் நிலம் மற்றும் விடுதி வருமானம்) அறக்கட்டளை (என்டௌமெண்ட்) ஏற்படுத்தினார். நிலத்தை கல்லூரிக்கு பதிவு செய்வதற்கு முன் இறந்து விட்டார். அவர் மறைவுக்குப் பிறகு அவருடைய மூத்த புதல்வர் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். நிர்வாகம் கல்லூரிக்குச் சேர வேண்டிய வருமானம் வந்தவுடன் திருப்பித் தரலாம் என்ற எண்ணத்தில் சுமார் ரூ. 7.00 இலட்சத்திற்கு கனரா வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளது. ஆனால் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்திலிருந்து கிடைத்த வருமானம் கல்லூரிக்குச் சேரவில்லை. கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்களில் சிலர் நில வருமானத்தைப் பெற வேண்டி நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். நீதி மன்றமும், நிலம் கல்லூரிக்குச் சொந்தம் என்று தீர்ப்பு வழங்கியது. ஆனால் இதற்குப் பிறகும் பிரச்சினை தீரவில்லை. 1976-ம் ஆண்டின் முதல் பாதி மாதங்கள் வரை கல்லூரியின் நிலைமை ஓரளவு திருப்திகரமாக இருந்தது. ஆனால் பின்னர் வங்கியும் கடன் தர மறுக்கவே நிலைமை மோசமாகியது. ஆசிரியர்களுக்கு ஊதியம் மே 1976 முதல் வழங்கப்படாமலிருந்தது. அரசு இதில் தலையிட்டு சுமார் 3 இலட்சம் ரூபாய் மான்யமாக (ad hoc advance grant) வழங்கியது. ஆசிரியர்களுக்கு இதைக் கொண்டு நவம்பர் 1976 வரை சம்பளம் கொடுக்கப்பட்டது. தற்போது டிசம்பர் 1976 முதல் மே 1977 வரை ஊதிய நிலுவை உள்ளது. கல்லூரியின் நிலைமையைச் சரி செய்யும் பொருட்டு நிர்வாகத்தில் உள்ள தாளாளர் மற்றும் உறுப்பினர்களை அரசு மற்றும் பல்கலைக் கழகம் அழைத்தபோது எல்லோரும் வராததால் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

கல்லூரியின் ஆசிரியர்களுக்கு அரசே நேரிடையாக ஊதியம் வழங்க வேண்டுமென்றும், ஒரு தணிக்கைக் குழுவை கல்லூரிக்கு அனுப்பி ஏதாவது முறைகேடுகள் நடந்துள்ளன

என்று கண்டறிய வேண்டும் என்று மதுரை பல்கலைக் கழக துணைவேந்தர் அரசைக் கேட்டுக் கொண்டார். இது தவிர அரசே கல்லூரியை எடுத்து நடத்தலாம் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் கருத்துத் தெரிவித்தார்.

இது சிறுபான்மையோரால் நடத்தப்படும் கல்லூரி; ஆகையால் அரசு கல்லூரியை எடுத்துக் கொள்வதற்கு சட்டப் பிரச்சினைகள் உள்ளது. இக் கல்லூரியின் நிலங்கள் 'வக்ப்' சொத்து என்பதால், 'வக்ப் போர்டு' இக்கல்லூரியை எடுத்து நடத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. அதன்படி வக்ப் போர்டு ஒரு குழுவை அமைத்து கல்லூரியை நிர்வகித்து வருகிறது. ஜூன் 1977 முதல் இக்கல்லூரி ஊழியர்களுக்கு ஆகும் முழு ஊதியச் செலவையும் அரசு மானியமாக வழங்கும். இவர்களுக்கு டிசம்பர் 1976 முதல் மே 1977 முடிய, 6 மாதங்களுக்கு உண்டான ஊதிய நிலுவைக்கு சுமார் ரூ 2½ லட்சம் தேவைப்படும். இத் தொகையை மானியமாக வழங்க முடியுமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இக் கல்லூரியின் நிதிநிலை கணக்குகளில் முறை கேடுகள் நடந்திருப்பதாக கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்தார். நிர்வாகக் குழுவுடன் கலந்து இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உத்தமபாளையத்திலே இருக்கிற கருத்தராவுத்தர் கல்லூரி, அங்கே வக்ப் போர்டு நிர்வாகம் எடுத்துக் கொண்டதா என்ற விவரத்தையும் அல்லது அங்கே அந்த நிர்வாகத்தை நிர்வகிப்பதற்குக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டிருக்கிறதா, யாரைக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, சர்வ கட்சியினரையும் கொண்ட குழுவா என்கின்ற விவரங்களை அமைச்சர் அவர்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்டேட்மெண்டை வாசிக்க வேண்டாம். அது ஏற்கனவே சர்குலேட் செய்யப்பட்டுவிட்டது. அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள்.

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் இரகுமான்கான் அவர்கள் உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரி வக்ப் போர்டினால் நிர்வகிக்கப்படுகிறதா என்றும், அங்கே அமைக்கப் பட்டிருக்கிற குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்

என்றும் கேட்டார்கள். வக்ப் சட்ட விதிகளின்படி, ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியும், அந்தக் கல்லூரிக்காக அவர்களால் எழுதி வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களும் வக்ப் ஆக கருதப்பட்டு, அந்தச் சொத்துக்கள் அனைத்தும் கல்லூரிக்குச் சொந்தம் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதன் காரணமாகவும், அங்கே நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை என்ற காரணத்தாலும் நிர்வாகத்தை மட்டுமே நாங்கள் மாற்றி அமைத்திருக்கிறோம். Governing body of the college has been changed கருத்தராவுத்தர் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேர்களும், வழக்கறிஞர்களும், சமூகப் பணியாளர்களும் ஆகிய அத்தனை பேர்களும் அந்தக் கல்லூரி சார்பாக இன்றைக்கு அந்தக் கமிட்டியில் இருக்க நிர்வாகம் நடத்தப்படுகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் கேட்ட கேள்விக்கு, எல்லா கட்சிகளிலும் உள்ள சமூக ஊழியர்கள் உட்படுத்தப்பட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கு ஒரு குற்றச்சாட்டாகவே கொண்டு வர விரும்புகிறேன். இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்களும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும், முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்களும் தான் அதிலே இருக்கிறார்களே தவிர, வேறு மக்கள், பிரதிநிதிகளும், மற்றக் கட்சிக்காரர்களும் போடப்படவில்லை என்று இந்த சபையில் பொறுப்பேற்று நான் குற்றம் சாட்டுகிறேன். தவறான தகவலை அமைச்சர் தருகிறார் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் தருகிறேனே தவிர, தவறான தகவல் என்று ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இருப்பதைச் சொல்லுங்கள். அவர் தெரிவிக்கிற கருத்துக்களுக்கு எல்லாம் விளக்கம் சொல்லத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அந்த அடிப்படையிலே வழக்கறிஞர்கள், சமூகப் பணியிலே ஈடுபட்டவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இதற்குப் பொறுப்பாக அரசாங்கமும், வக்ப் போர்டும் இருக்கின்றன. யார் பொறுப்பானவர்களோ அவர்களை நியமித்து இருக்கிறோம்.

திரு ஆர். உமாநாத் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

"திருச்சிராப்பள்ளி புத்தூரிலிருக்கும் பிஷப் ஹிபர் உயர் நிலைப் பள்ளி தொடர்ந்து மூடப்பட்டதனால் 1,500 பள்ளி மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது பற்றி".

கல்வி அமைச்சரின் அறிக்கை

திருச்சிராப்பள்ளி புத்தூரிலுள்ள பிஷப் ஹிபர் உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் வன்முறை காரணமாக அப்பள்ளி 31—10—1977-லிருந்து மூடப்பட்டுள்ளது. இவ்வன்முறையின் அடிப்படை, பள்ளியில் பணிபுரிந்த ஒரு இடைநிலை ஆசிரியரை அரியலூருக்கு மாற்றியது என்பது தெரிய வருகிறது. பள்ளியில் பணிபுரியும் சில ஆசிரியர்களும் மாணவர்களை இவ் வன்முறைக்கு ஈடுபடுத்த விழைந்திருக்கலாமென்று பள்ளி நிர்வாகம் கருதிற்று. எனினும், பள்ளியை திறந்தால் வன்முறை மீண்டும் செயல்படும் எனப் பள்ளி நிர்வாகம் கருதியதாலும், ஏற்கனவே பள்ளியின் சொத்துக்களுக்கு மாணவர்கள் வன்முறையால் ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை இழப்பு ஏற்பட்டிருப்பதாலும், பள்ளி ஆவணங்கள் மற்றும் கோப்புகள் மாணவர்களால் வெளியே எடுத்து வரப்பட்டு எரிக்கப்பட்டமையாலும் பள்ளியை திறப்பதற்கு நிர்வாகம் அஞ்சிற்று. தவிரவும், இப்பள்ளி மூடிய உடனேயே எதிர்பாராத வெள்ளம் காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு புகலிடம் அளிக்க இப்பள்ளிக் கட்டிடத்தையும் உபயோகிக்க வேண்டியதாயிற்று. கல்வி அதிகாரிகள் பலமுறை முயற்சித்து இப்பள்ளியை நடத்தும் குழுவின் தலைமையாளரான, திருச்சி பிஷப்பை 1—1—1978 அன்று மாவட்ட ஆட்சியாளர் முன்னிலையில் சந்தித்து பள்ளியை 9—1—1978க்கு முன் திறக்க முடிவெடுத்துள்ளனர்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, திருச்சியிலே இருக்கிற இந்தப் பள்ளிக்கூடம் மூடப்பட்டதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தவாறு, 9 ஆம் தேதி திறக்கப்பட்டிருக்க வேண்டும். 9 ஆம் தேதி திறக்கப்படும் என்று அறிக்கையில் இருக்கிறது. ஆனால் 9 ஆம் தேதி திறக்கப்படவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும். இது ஒன்று.

இரண்டாவது, பள்ளிக்கூடம் 2 மாதமாக மூடப்பட்டிருக்கிறது. 1,500 மாணவர்கள் படிக்க முடியாமல் இருக்கிறது. மேலும் வன்முறைச் சம்பவங்கள் கூட இருப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு நடக்கிற போது சம்பந்தப்பட்ட அதிகாரி இதைப் பற்றி அமைச்சருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். இது ஒரு முக்கியமான விஷயம். இதை அமைச்சருக்குத் தெரியப்

படுத்தவில்லை என்றால் ஏன் தெரிவிக்கப்படவில்லை? அதற்குப் பொறுப்பான அந்த மாவட்ட அதிகாரி யார்? எக்ஸ்ப்ளனேஷன் கேட்கப்பட்டதா? அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர வர்களே, இந்த மாதம் 9-ம் தேதி அந்த உயர்நிலைப் பள்ளி திறப்பதாக இருந்தது. மாணவர்கள் மத்தியில் இன்னும் சில பிரச்சினைகளைப் பேசி முடிவெடுக்க வேண்டிய காரணத்தால், 14 ஆம் தேதி பொங்கல் விடுமுறைக்குப் பிறகு திறப்பதாக இருக்கிறது.

எந்த அதிகாரி தகவல் கொடுக்க வேண்டும்? குறிப்பிட்ட காலத்தில் அறிக்கை கொடுத்தாரா என்று கேட்டார்கள். அதைப்பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இதைப் பற்றி கல்வி அமைச்சர் அறிக்கை தருவார்.

(எ) யூனியன் கார்பைட் கம்பெனி தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து:

திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

''சென்னை திருவொற்றியூர் புதுவண்ணை, கிண்டி இம்மூன்று இடங்களிலுள்ள யூனியன் கார்பைட் கம்பெனியைச் சேர்ந்த சுமார் 1,200 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி 2—11—1977 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருவதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.''

தொழிலாளர் நல அமைச்சர் அறிக்கை.

யூனியன் கார்பைட் இந்தியா லிமிடெட்டின் பிரிவான நேஷனல் கார்பன் கம்பெனி, திருவொற்றியூர், கிண்டி மற்றும் புது வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள கிளைகள் அடங்கியதாகும். அவற்றின் தொழிலாளர்களின் பல கோரிக்கைகள் பற்றி தொழிற் சங்கங்கள் 27—3—1975 அன்று தொழிலாளர் நல அலுவலர் முன் ஒரு தொழில் தகராறு எழுப்பினர். இம் மூன்று கிளைகள் தொடர்பாகவும் நெடுநாட்களாகவே கோரிக்கை சாசனம் பற்றி இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடந்திருக்கின்றன. இப்பேச்சு வார்த்தைகளால் திருப்திகரமான தீர்வு எதுவும் காண இயலாத காரணத்தால் தொழிலாளர் துறை சமரசப் பேச்சு வார்த்தையை மேற்கொண்டது.

சமரச முயற்சிகள் நடந்து வந்தபோதே நிர்வாகத்தினரின் போக்கு தீர்வுக்கு வழி வகுக்காது என்று தொழிலாளர்கள் கருதி 2—11—1977 அன்று முதல் வேலை நிறுத்தம் செய்தனர். திருவொற்றியூர் நேஷனல் கார்பன் கம்பெனியைப் பொறுத்த வரையில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டால் 30—7—1977 அன்று பிரச்சனைகளின் மீது ஒரு உடன்பாடு ஏற்பட ஒப்புக்கொள்ளப்பட்டது. முதல் கிளையில் ஏற்பட்ட விரிவான உடன்பாட்டின் அடிப்படையில் மற்ற இரு கிளைகளில் எழுந்த பிரச்சனைகள் பற்றி ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு தொழிலாளர் நல அமைச்சர் இரு தரப்பினருக்கும் ஆலோசனை கூறினார். இதையொட்டி மற்ற இரு கிளைகளில் தீர்வு ஏற்படா திருந்த பிரச்சினைகள் தொடர்பாக நிலவிய சிறு வேறுபாடுகளை நீக்கி சென்னை 1-வது வட்ட தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

*திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் கார்பைட் கம்பெனி அந்நிய முதலாளியால் நடத்தப்படுவது. இக்கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர்கள் 26—3—75-யிலேயே கோரிக்கைப் போட்டார்கள். 2 ஆண்டு 8 மாதம் பூர்த்தி ஆகிவிட்டது. இரு தரப்புப் பேச்சு வார்த்தை பயனற்றுப் போகவே வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 70 நாட்களை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் தொழிலாளர் நல அமைச்சரின் தலையீட்டின் பேரில், திருவொற்றியூரில் இருக்கக் கூடிய அந்த யூனிட்டுக்கு ரூ. 50 சம்பள உயர்வு கொடுக்கும்படி சொல்லி இருப்பதாகத் தகவல். ஒரே கம்பெனி, ஒரே முதலாளி, ஒரே மூலதனம் என்று இருந்தாலும் முதலாளி கொடுக்க மாட்டேன் என்கிறார். ஆண்டு தவறினாலும், இந்தக் கம்பெனி ரூ. 10 கோடிக்கு மேல் ஆண்டுதோறும்லாபம் சம்பாதிக்கத் தவறுவதில்லை என்ற நிலையில் தொழிலாளர்கள் கோருவது குறைந்த பட்சம் ரூ. 75 சம்பள உயர்வுவேண்டுமென்று. அமைச்சரின் தலையீட்டின் பேரில் கன்சிலியேஷன் நடந்த பிறகும்கூட முதலாளி தொடர்ந்து பிடிவாதமாக இருக்கிறார். 2 வருஷம் 8 மாதம் பொறுமையாக இருந்திருக்கிறார்கள் தொழிலாளர்கள். தவறேதும் நடக்கவில்லை. முதலாளிக்கு கோடிக் கணக்கில் லாபம் வருகிறது. தொழிலாளி கேட்பது குறைந்த பட்சம் ரூ. 75 மூன்று பிரிவுகளிலும் கிடைக்கக் கூடிய முறையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இதில் ஒரு விளக்கமான பதிலைச் சொல்ல அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். திடீரென்று நிறுத்தச் சொல்லி விடாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

27—3—1975 இல் கோரிக்கை வைத்தார்கள் தொழிலாளர்கள். ஏறத்தாழ 2-1-2 ஆண்டுகளுக்கு முன்னால். இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்கு 30—7—1977 இல் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. திருவொற்றியூர் பகுதித் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், ஒரு ஒப்பந்தம் தயாராகிவிட்டது. இந்த அரசின் முயற்சியால், என் முன்னிலையில். தொழிற்சங்கம் கையெழுத்து போட்டிருக்க வேண்டும். மாறாக, கிண்டியிலுள்ள தொழிற்சாலைக்கும், புது வண்ணாரப்பேட்டையிலுள்ள தொழிற்சாலைக்கும், சேர்த்து, ஒரே ஊதியமாகக் கொடுத்தால் தான் நாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட மாட்டோம் என்று சொல்லி ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு 2—11—1977-லிருந்து தொடர்ந்து வேலைநிறுத்தம் நடந்து வருகிறது.

இதில் என்னுடைய ஆலோசனை என்னவென்றால், திருவொற்றியூரில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு. ரூ. 1,400 அர்ரியர்ஸ் வாங்கி, ஆளுக்கு ரூ. 400 நன்கொடை கொடுத்து மற்ற இரண்டு தொழிற்சாலைகளில் போராட்டத்தை நடத்தினால் கூட நான் வரவேற்பேன். ஒப்பந்தத்தில் தொழிற்சங்கம் கையெழுத்துப் போடாமல், மற்ற தொழிற்சாலைகளில் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பது சரியல்ல. தொழிலாளர்களின் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது.

[முற்பகல் 11.30.]

ஒரு ஸ்லைட் அட்ஜஸ்ட்மெண்ட் நடந்துவிட்டால் ஒப்பந்தம் வந்துவிடும். இந்த மாதிரி பிரச்சினைகளில் இந்த அரசு முதிர்ச்சி அடைந்திருக்கின்ற காரணத்தால், அரசின் ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர், தொழிற்சங்கத் தலைவர் கேட்டு நடப்பது நல்லது. நாங்கள் கையாளும் கொள்கையின் விளைவாக தமிழகத்தில் 9,958 நிறுவனங்கள் இருக்கின்றன; அவற்றில் 6,42,436 பேர் வேலை செய்கிறார்கள், இதில் இன்றைய தினம் 11 தொழிற்சாலைகளில்தான் போராட்டம், லாக் அவுட், லே ஆப் நடக்கின்றன. 4,783 பேர்கள் தான் இதில் தற்காலிகமாக வேலை செய்யாமல் இருக்கிறார்கள். It is a marvellous and wonderful achievement of this 'Revolutionary Leader's Government. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது 1,25,000 பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், லாக் அவுட்டில் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். இன்றைய தினம் 4,763 பேர் தான் இருக்கிறார்கள். There is no parallel for this any where in India. Therefore, I would request the hon. Member to take the advice of this Government which has gone all out to settle the dispute.

திரு சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சிறந்த தொழிற்சங்க வாதி என்பதை அனைவரும்

அறிவார்கள். ஒரே நிறுவனம், ஒரே கம்பெனி, அதற்கு 3 கிளைகள் இருக்கின்றன. ஒரு பகுதியில் ஏற்றுக்கொண்ட சம்பளத்தை, இதர பகுதிகளுக்கு எக்ஸ்டெண்டு செய்ய வேண்டியது, அடிப்படையிலே எல்லா இடத்திலும் நடைபெறக் கூடிய விஷயம். ஒரு இடத்தில் ஒத்துக் கொண்டு, அங்கே வாங்குகிற அரியர்ஸை மற்றொரு இடத்தில் உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுத்து வேலை நிறுத்தம் செய்ய வைப்பது எப்படி சாத்தியம்? செய்துகொண்ட ஒப்பந்தத்தை முதலாளிகள் மீறுவதில்லையா? அரசாங்கம் பெரிய சாதனைகளைச் செய்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார் அமைச்சர் அவர்கள். ஒரே நிர்வாகம், ஒரே மூலதனம், ஒரே லாபம். அந்த அடிப்படையில் இதர கிளைகளுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும் என்று அரசு சொல்வதற்குப் பதிலாக, வேலைநிறுத்தம் நடைபெறுகின்ற மற்றொரு கிளையில், இங்கே கிடைத்த பணத்தைக் கொண்டு போய் கொடுத்து வேலை நிறுத்தம் நடைபெறாமல் செய்வது என்பது எப்படி சாத்தியம்? ஆகவே சொல்ல வேண்டிய முறையில் நிர்வாகத்திற்கு எடுத்துச் சொல்லி, போராட்டத்தை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ரூல் 41-ன்படி ஒரு கேள்விதான் போடலாம் என்று எனக்கு ஞாபகம். இருந்தாலும் சொல்கிறேன். 3 தொழிற்சாலைகளில், ஒன்றில் ஒப்பந்தமாகி விட்டது. அதே வேஜ் ஸ்கேல், ஃப்ரிஞ் பெனிபிட்ஸ் மற்றவற்றிற்கும் கொடுக்க வேண்டும் என்பதில் அரசிற்கு உடன்பாடு உண்டு. அதைப் பெற்றுத் தருவதில் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். There is slight difference of opinion between workers and management அதை செட்டில் செய்யும் வரையில், ஒப்பந்தம் ஆன தொழிற்சாலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டுமா? நடைபெற வேண்டாம் என்பது அரசின் கருத்து. 30—7—77-ல் ஒப்பந்தம் கையெழுத்து ஆகியிருக்க வேண்டும்.

I personally feel (I hope you will excuse me for saying this) it is not a right tactical move to continue the strike.

மற்ற இரண்டு தொழிற்சாலைகளுக்கும் பெற்றுத்தர எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் தொழிற்சாலையில் வேலை நிறுத்தத்தை நீட்டிக்கொண்டு போகிறீர்கள். சென்னையில் உள்ள சி.ஐ.டி.யூ. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு நான் விடுக்கின்ற வேண்டுகோள் இதுதான். போராட்டத்தை ஆரம்பிக்கலாம். வரவேற்கிறோம். வேலைநிறுத்த உரிமையை மதிக்கிறது இந்த அரசு. ஆனால் வேலை நிறுத்தம் செய்த பிறகு எப்போது நிறுத்த

வேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். Fight and compromise, fight and compromise அதைச் செய்யும் படியாக தயவு செய்து கேட்டுக் கொண்டு Do not go on fighting which is against Marx's political philosophy. என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பர்சனல் எக்ஸ்பிளனேஷனாக இருந்தால் கேட்கலாம்.

திரு. கு. ரமணி : பர்சனல் எக்ஸ்பிளனேஷன் தான். அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்கு சந்தோஷம். ஆனால் மார்க்ஸ் போன்ற மாபெரும் தலைவர்களை குறிப்பிட்டுfight and compromise, fight and compromise This is the philosophy of M : என்று சொல்வதை ஏற்க முடியாது. இது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டரோ, பர்சனல் எக்ஸ்பிளனேஷனோ இல்லை.

திரு. ரா. உமாநாத் : ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன். மார்க்ஸிசத்திற்கு எதிராகப் போராடுகிறோம் என்று அமைச்சர் சொல்கிறார். This is absolutely baseless. Let this also go on record.

(ஏ) சிவகங்கை நகரில் குழாய் பைப்புகள் உடைந்து தண்ணீர் தேங்கி சுகாதார கேடு விளைவிப்பதாக இருப்பதும் நகரசபை நடவடிக்கை எடுக்கத் தவறியதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு ஓ. சுப்பிரமணியம் அவையில் இல்லை. அவர் கீழ்க்கண்ட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி குறித்து அறிக்கை கொடுத்திருந்தார்.

"சிவகங்கை நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள குழாய் நீர் செல்லும் பைப்புகள் உடைபட்டு பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய் பைப்புகள் உடைந்து தண்ணீர் ஆங்காங்கே குட்டைகளாகத் தேங்கி சுகாதார நிலைக்குக் கேடு விளைவிப்பதாக இருப்பதால் மேற்படி நகரசபை இது குறித்து நடவடிக்கை எடுக்கத் தவறியது பற்றி".

உள்ளாட்சிதுறை அமைச்சரின் அறிக்கை.

வைகையாற்றில் இடைக்காட்டூர் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று தலைமை நிலையத்திலிருந்து சிவகங்கை நகராட்சிக்கு குடிநீர் கொண்டு வரப்படுகிறது. இந்த நீரேற்று தலைமை நிலையம் வைகையாற்றில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டிருந்தமையால் சிவகெங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 30-10-77 முதல் 6-12-1977 வரை குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படவில்லை. இந்த நாட்களில் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஊரணிகளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. இதே சமயத்தில் குடிநீர் வாரியத்தினரால் ஆற்றங்கரையில் தயாராக வைக்கப்பட்டுள்ள, 100 குதிரை திறன் கொண்ட மோட்டாரைக் கொண்டு குடிநீர்த் தேக்கத் தொட்டிக்கு குடிநீரை ஏற்ற முயற்சிக்கப்பட்டது. இடைப்பட்ட கிராமங்களின் வழியாக பொருத்தப்பட்டுள்ள குடிநீர் கொண்டு வரும் குழாய்களில் நீர் அழுத்தம் தாங்காது (Pressure) பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டது. ஆதலால் நீரைத் தேக்கத் தொட்டிக்கு எடுத்துச் செல்லாமல் நேரடியாக குழாய்கள் மூலம் நகரத்துக்கு குடிநீர் வழங்கப்பட்டது.

குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்கெனவே மழையினால் சேதம் ஏற்பட்டதின் காரணமாகவும் இக்குழாய்களில் நீர் கசிவு ஏற்பட்டது. மேலும் இந்தக் குழாய்களின் புறப்பகுதியின் மேற்பரப்பின் மீதான மண்ணில், வாகனங்களின் போக்குவரத்தினால் அழுத்தப்பட்டு பள்ளங்கள் ஏற்பட்டன. இதுவும் குழாய்களில் ஏற்பட்ட கசிவுக்கு ஒரு காரணமாகும். ஒரு மாத காலமாக இக்குழாய்களில் குடிநீர் வழங்கப்படாமையால் இக்குறைபாடுகளைக் கவனிக்க வாய்ப்பு இல்லாமல் இருந்தது. குடிநீர் விநியோகம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டவுடன் உடனடியாக இக்குறைபாடுகள் கவனிக்கப்பட்டு நகராட்சி ஆணையரின் நேரடி மேற்பார்வையில் நிவர்த்தி செய்யப்பட்டன. இதன் காரணமாக நகராட்சியின் எந்தப் பகுதியிலும், தண்ணீர் தேக்கம் ஏற்படவில்லை. ஆகையால், உறுப்பினர் அவர்கள் கூறியது போல் சிவகங்கை நகராட்சிப் பகுதிகளில் நீர்த் தேக்கம் அல்லது கொசுப் பெருக்கம் போன்ற சுகாதார குறைபாடுகள் எதுவும் இல்லை எனத் தெரியவருகிறது.

(ஐ) சென்னை மாநகராட்சி மின்சார ஊழியர்கள் தங்களை நிரந்தரமாக்கக் கோரி சாகும் வரை உண்ணாவிரதம் துவக்கி இருப்பது குறித்து :

திரு. ஏ. இரகுமான்கான் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

''3-1-1978 முதல் சென்னை மாநகராட்சி மின்சார ஊழியர்கள் ரிப்பன் மாளிகை முன்பு தற்காலிக ஊழியர்களாக இருக்கும் தங்களை நிரந்தர ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று கோரி சாகும் வரை உண்ணாவிரதம் போராட்டம் துவக்கி இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''

உள்ளாட்சி அமைச்சரின் அறிக்கை.

சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்கள் சில காலமாக தங்கள் பணியை வரன் முறைப்படுத்துமாறு கோரி வருகிறார்கள்.

2. சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தற்போது 533 தற்காலிக ஊழியர்கள் மின்சாரத் துறையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் அவர்களின் பணிக்கு ஏற்ப ரூ. 4.25 முதல் ரூ. 4.50 வரை தினக் கூலி பெறுகிறார்கள் என்றும் கூறியுள்ளார். இவர்களில் 14 நபர்களைத் தவிர மற்ற 519 ஊழியர்கள் 1—10—1977-ல் ஐந்து வருடங்களுக்கு மேல் பதவியில் இருந்து வருபவர்கள். எனவே மாநகராட்சி ஆணையாளர் நகராட்சி மின்சாரத் துறையில் ரூ. 130—3—160—4—180—5—195 சம்பள விகிதத்திலும் மற்றும் வழக்கமான இதர படிகளும் உள்ள 533 கூடுதல் பணி இடங்களை 1—10—1977 முதல் நிரந்தர தொழிலாளர் பணி அமைப்பாக மாற்றக் கோரினார்.

3. ஐந்து வருடங்களுக்கு மேல் தினக்கூலி பெறும் தற்காலிக ஊழியர்களின் பதவிகளை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று கடைப்பிடித்து வரும் அரசின் கொள்கைக்கு ஏற்ப, சென்னை மாநகராட்சி ஆணையரின் பரிந்துரையை அரசாங்கம் நன்கு பரிசீலித்தது. 1—10—1977-ல் மின்சாரத் துறையின் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியிலிருந்த 519 தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்ற அரசு முடிவு செய்தது.

4. மாநகராட்சி மின்சாரத் துறையில் 3—1—1978 முதல் 519 கூடுதல் பணியிடங்களை (Supplementary Posts) நிரந்தரமாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய நிரந்தரப் பதவிகள் ரூபாய் 130—3—160—4—180—5—195 சம்பள விகிதத்துடன் ஏனைய படிகளும் கொண்டதாயிருக்கும். இதனால், மாநகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 8.8 இலட்சம் கூடுதல் செலவாகும்.

5. 1-10-1977-ல் மின்சாரத் துறையில் ஐந்து வருடங்களுக்கு மேல் பணிபுரிந்து வந்த தற்காலிக ஊழியர்களை அவர்கள் ஏற்கனவே வேலையில் நியமிக்கப்பட்ட நாளை அடிப்படையாகக் கொண்டு முறையாக நிரந்தர ஊழியர்களாக மாற்றும்படியும் ஆணையாளருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

6. மேற்கூறிய அரசாணை பிறப்பித்தவுடன் 4-1-1978-ம் நாள் இரவிலிருந்து ஊழியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்த மின்சார ஊழியர்களின் பணி நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் 300-க்கு மேற்பட்ட மின்சார ஊழியர்கள் தற்காலிக ஊழியர்களாக இருந்தார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையின் அடிப்படையில்................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள். விளக்கிப் பேசிக்கொண்டிருக்க முடியாது.

திரு. ஏ. ரகுமான்கான்: எவ்வளவு ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் வைத்த கோரிக்கைகள் என்ன? எந்தக் கோரிக்கையை மட்டும் நிறைவேற்றியிருக்கிறீர்கள்? இந்தக் கோரிக்கைகளை அவைக்குத் தெரிவிக்காமல் நீங்கள் தனியாக ஆணை பிறப்பிக்க வேண்டிய அவசியம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வைக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையை சகோதரர் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். 519 கூடுதல் பணியிடங்கள் நிரந்தரமாக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சிக்கு 8·8 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். அவர்கள் கோரிக்கை நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. அவைக்கு தெரிவிக்காமல் ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் என்ற வகையில் நான் எந்தயிடத்திலும் அறிவிப்பு வெளியிடவில்லை. இப்போதுதான் இந்த அவையில் இதுபற்றிச் சொல்கிறேன். அரசின் சார்பில் ஏதாவது அறிவிப்பு வந்திருக்குமானால் விசாரித்து உறுதியான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடுகள் செய்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: 1973-ம் ஆண்டிலிருந்து இந்த நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் தரவேண்டும் என்று கேட்டிருந்தோம். அது குறித்து தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பரிசீலிப்போம்.

(ஒ) புகளூர் சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தின் பிடிவாதத்தினால் விவசாயிகள் கரும்பை ஆலைக்கு அனுப்புவது இல்லை என்று முடிவு செய்து இருக்கும் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. வடிவேலு, திரு. செ. சதாசிவம், திரு. டி. இராமசாமி இவர்களில் ஒருவர் மட்டும் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவாளர்கள் கே. வடிவேல், எம்.எல்.ஏ., எஸ். சதாசிவம், எம்.எல்.ஏ., டி. ராமசாமி, எம்.எல்.ஏ. ஆகியோர் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

" தமிழ்நாட்டில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 125.00 கொடுக்கும்பொழுது புகளூர் சர்க்கரை ஆலையின் நிர்வாகம் மட்டும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 115.00 தருவதாக உறுதி அளித்து விட்டு இப்பொழுது டன் ஒன்றுக்கு ரூபாய் 90.00 தான் தருவோம் என்று பிடிவாதம் பிடிப்பதால், இது குறித்து விவசாயிகள் ரூபாய் 115.00 தராவிட்டால் கரும்பை ஆலைக்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்திருக்கும் நிலை குறித்து ".

வேளாண்மை அமைச்சரின் அறிக்கை.

உள்ள நிலைமை கீழே விளக்கப்படுகிறது.

1977-78 ஆம் ஆண்டில் டெக்கான் சர்க்கரை ஆலைக்குத் தரப்படும் கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூ. 115 தருவதற்கு ஆலை ஒப்புக்கொண்டது. ஆனால் தற்போது சட்ட பூர்வமான அடிப்படை விலையான ரூ. 90 மட்டுமே கொடுத்து மீதமுள்ள பணத்தை பிறகு தருவதாகச் சொல்வதால் உடனடியாக ஒப்புக்கொண்ட ரூ. 115ஐயும் கொடுக்காவிடில் 16—1—1978 முதல் ஆலைக்கு கரும்புத்தருவது நிறுத்தப்படுமென கரும்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

5—1—1978 அன்று இதுபற்றி தகவல் கிடைத்ததும், ஆலை நிர்வாகத்தினரையும், கரும்பு விவசாயிகளையும் அரசு 9-1-1978 அன்று பேச்சு வார்த்தை நடத்த அழைப்பு விடுத்திருந்தது. ஆனால்கரும்பு விவசாயிகள் காலம் மிகக் குறுகியதாக இருப்பதால் கூட்டத்திற்கு வர இயலவில்லை என்றும் வேறு ஒரு தேதி குறிப்பிட்டு பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி தந்தி மூலம் 9—1—1978-ல் தெரிவித்துள்ளனர். இந்த ஆலைக்கு நடப்பு ஆண்டுக்கு இந்திய அரசு நிர்ணயித்துள்ள அடிப்படை விலை ரூ. 90 ஆகும். சென்ற ஆண்டு நிர்ணயித்த விலை ரூ. 94 ஆகும்.

நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்குமேல் அதிக விலை ஆலை கொடுக்க முன்வரலாம். அடிப்படை விலை கொடுக்கப்படாவிட்டால் தான் மாநில அரசு தலையிட்டு மேற்படி விலையை வாங்கிக் கொடுக்கமுடியும். சென்ற ஆண்டில் கொடுக்கப்பட்ட விலையாகிய ரூ. 110-க்கு மேல் டன் ஒன்றுக்கு ரூ. 5 கூட்டி ரூ. 115 கொடுப்பதாக இந்த ஆலை ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால் முதலில் சட்ட பூர்வமான விலையைக் கொடுத்துவிட்டு, பிறகு அதிகப்படி விலையைக் கொடுப்பதாக கூறுகிறது. தவிர டெக்கான் ஆலை மட்டுமின்றி வேறு சில தனியார் ஆலைகள் கூட மத்திய அரசின் அடிப்படை விலையைத்தான் முதல் தவணையாகக் கொடுத்து வருகின்றன. அதிகப்படி விலையைக் கொடுப்பது, சம்பந்தப்பட்ட ஆலையின் நிதிநிலையைப் பொறுத்தது. எனினும், இப்பிரச்சனையை நல்லெண்ண அடிப்படையில் விவசாயிகளுக்கும் ஆலை நிர்வாகத்தினருக்கும் இடையே தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—1—1978 அன்று டெக்கான் சர்க்கரை ஆலையினரைச் சந்தித்துப் பேசியதில், டன் ஒன்றுக்கு ரூ.90 வீதம் கரும்புக்குக் கிரயம் கொடுப்பதற்கே நிதி நிலைமை இடம் கொடுக்கும் என்றும், இதற்கே ஸ்டேட் பாங்கு மூலம் காசுக் கடன் (கேஷ் கிரடிட்) கிடைப்பது கடினமாய் இருக்கிறது என்றும் கூறப்பட்டது. ஆகவே பருவ இறுதியில் கூடுதல் விலையைக் கொடுத்து விடுவதாக கூறுகிறார்கள்.

சென்ற ஆண்டில் சட்ட ரீதியான அடிப்படை விலை ரூ. 94 ஆக இருந்தபொழுது டெக்கான் சர்க்கரை ஆலை முதல் தவணையாக ரூ. 100 அளித்துவிட்டு இரண்டாம் தவணையாக ரூ. 10 அளித்தது. ஆக ஒப்புக்கொண்ட விலையான ரூ. 110 கொடுக்கப்பட்டது.

இதைத்தவிர, அருணா, பாரி, சவுத் இந்தியா முதலிய சர்க்கரை ஆலைகள் கடந்த ஆண்டில் முதல் தவணையாக சட்ட ரீதியான அடிப்படை விலையை முதல் தவணையாக அளித்துவிட்டு பிறகு பாக்கியை இரண்டாம் தவணையாக அளித்தன. ஆகவே, இந்த ஆண்டும் டெக்கான் ஆலை அவ்வாறே ரூ. 115-ஐ இரண்டு தவணைகளில் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்க ஆதாரமிருக்கிறது.

[1978 சனவரி 10

திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பதிலில் இது சம்பந்தமாக சில கொள்கை விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த டெக்கான் ஷுகர்ஸ் அன்ட் அப்காரி கம்பெனி லிமிடெட், இவர்கள் முன்பே ரூ. 115 கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அவர்கள் நடவு செய்வதற்கு முன்பாகவே வேண்டிய உறுதிகளை கொடுத்திருந்தார்கள். ஆனுல் இப்போது அந்தத் தொகையை கொடுப்பதற்குப் பதிலாக ரூ. 90 தான் கொடுப்பேன் என்று பிடிவாதம் செய்கிருர்கள். ஆனுல் காவிரியின் வடபகுதியில் இருக்கக்கூடிய மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 125 இன்று கொடுக்கப்படுகிறது. இந்நிலை இருந்தும், இப்போது அவர்கள் மறுப்பதன் காரணமாக அங்கிருக்கிற வலிமைமிகுந்த கரும்பு விவசாயிகள் சங்கத்தார் அந்தத் தொகையைக் கொடுக்காவிட்டால் நாங்கள் 16-ம் தேதியிலிருந்து கரும்பு வெட்டுவதை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் நடவையும் நிறுத்திவிடுவதாகச் சொல்கிருர்கள் என்ற நிலை ஏற்படும்போது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. செ. சதாசிவம்: ஆகவே, கரும்பு விவசாயிகளுக்கு மட்டும் கெடுதல் இல்லை. அங்குள்ள பல்வேறு தொழிலாளர்கள் விவசாயக் கூலிகள், வண்டி வைத்திருப்பவர்கள், ஏனைய தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட இருப்பதால் உடனடியாக அவர்களை அழைத்து இந்த ரூ. 115 கொடுப்பதற்குள்ள வழி வகையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது போல், சென்ற ஆண்டும், அரசாங்கம் சட்டபூர்வமான விலையை ரூ. 94 என்று நிர்ணயம் செய்து முதலில் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டு பிறகுதான் மீதமுள்ள தொகையைக் கொடுத்திருக்கிறுர்கள். அதேபோல் இந்த ஆண்டும் ரூ. 115 என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். அரசாங்கம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ரூ. 90-ஐ முதலில் கொடுத்திருக்கிறுர்கள். மீதித் தொகையை சென்ற ஆண்டு செய்தது போல் இந்த ஆண்டும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் விவசாயிகளை வரவழைத்திருக்கிருேம். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தும் கால அவகாசம் இல்லை. இரண்டு நாட்களில் வருகிருேம் என்று சொல்லியிருக்கிறுர்கள். அவர்களுடன் பேசி நிச்சயமாக ரூ. 115 கிடைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 சனவரி 10]

[முற்பகல் 11-40]

திரு. கே. வடிவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலை தனியார் சர்க்கரை ஆலையாக இருந்தாலும், அதைச் சுற்றியுள்ள ஐந்து மைல் இடத்தில் தான் மோகனூர் சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த ஆலையில் 125 ரூபாய் கொடுக்கிருர்கள். அடுத்த நாளைக்கே கணக்கும் தீர்த்துவிடுகிருர்கள். இந்த ஆலையில் ஒரு மாதம் ஆகிறது. அதோடு கொடுக்க வேண்டிய 115 ரூபாயும் சரியாக கொடுப்பதில்லை. 90 ரூபாய் தான் கொடுக்கிருர்கள். ஒரு டன்னுக்கு 90 ரூபாய் கொடுப்பது என்றிருந்தால் விவசாயி செலவு செய்த செலவுக்குக்கூட இந்த 90 ரூபாய் வராது. போன தடவை 110 ரூபாய் கொடுத்தார்கள். உடனடியாக கணக்கும் தீர்த்தார்கள். இப்போது டைம் இல்லை என்று சொல்லி கணக்கும் தீர்ப்பதில்லை. அதோடு 90 ரூபாய் தான் கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே இதில் அரசாங்கம் தலையிட்டு ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சாதாரணமாக கரும்பு வெட்டுவது என்பது 12 மாத காலத்தில் வெட்டவேண்டும். இல்லையென்ருல் கரும்பு எல்லாம் காய்ந்துவிடும். ஆகவே இந்த ஆலை கரும்பை எடுத்துக் கொள்ளவில்லையென்ருல், அரசாங்கமே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இந்தக் கரும்பை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதைப்பற்றியெல்லாம் விரிவாகப் பேசி முடிவு எடுப்பதற்காக கரும்பு உற்பத்தியாளர்களை வரும்படி தந்தி மூலம் கேட்டிருந்தோம். அவர்கள் கால அவகாசம் கேட்டிருக்கிறுர்கள். அப்படி சேர்ந்து இருந்து பேசி, ஆலை அதிபர்களோடும் பேசி, 115 ரூபாய் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(9) அறிக்கை அளித்தல்.

அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினர் உறுதிமொழிக் குழுவின் முதல் அறிக்கையை ஆறுவது சட்டமன்றப் பேரவையில் அளிக்கின்றேன். அச்சிடப்பெற்ற அறிக்கை பின்னுல் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(10) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

1978-ம் ஆண்டு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல்—கழிவுநீர் அகற்றுதல் சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1978-ம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல்-கழிவுநீர் அகற்றுதல் சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1978).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1978) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

*திரு. தி. சு. நல்லதம்பி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது நிதி அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவந்திருக்கின்ற நிதி ஒதுக்கீட்டினிலே, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற நிதி ஒதுக்கீட்டினைப் பார்க்கையில், இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற வார்த்தைகளைப் பார்க்கின்ற நேரத்தில், ஏதோ பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே தவிர, நாம் இந்த நேரத்திலே எதிர்பார்க்கின்ற விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பகுதியிலே இருந்து வந்திருக்கின்ற நான், அதைப்பற்றி ஏதாவது சொல்லியிருப்பாரா என்று பார்த்தால், அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

நமது நிதி அமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் மட்டுமல்ல; இந்த அவையின் முன்னவரும்கூட. இந்த நிலைமையில் அவர் நேற்றைய தினம் இங்கே ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு விலைவாசி ஏற்றத்தால், அடித்தட்டில்

இருக்கக்கூடிய மக்கள் மட்டுமல்ல ; மத்தியதர வகுப்பினர் என்று சொல்லக்கூடிய அந்தப் பிரிவினரும்கூட, விலைவாசி ஏற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால்தான், சில மாணவர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம் அல்லது தொழிலாளர் போராட்டமானாலும் சரி, அப்பேர்ப்பட்ட குமுறல்களின் காரணமாகத்தான் வருகின்றது. காரணம், விலைவாசி ஏற்றத்தால் அவர்களுக்கு பற்றுக்குறை ஏற்படுகின்றது. அதைக் களைவதற்கு, போக்குவதற்கு நமது அரசு, இந்த அரசு, நமது நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே எங்காவது சுட்டிக்காட்டி இருக்கின்றார்களா என்று பார்த்தால் அல்லது ஏதாவது அனுதாப வார்த்தையாவது இருக்கின்றதா என்று பார்த்தால், உள்ளபடியே இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட நேரத்திலே, நேவையைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்திலே, நாங்கள் எதிர்க் கட்சியிலே இருந்து சுட்டிக் காட்டுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நிதி ஒதுக்கிடு செய்கின்ற நேரத்தில், இதிலே மாற்றுந்தாய் மனப்பான்மை இருக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் சொல்வதற்குக் காரணம், நேற்றைய தினம் நமது போக்குவரத்து அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில், சென்னை, மயிலைப் பகுதியிலே ராமகிருஷ்ண மடம் சாலையிலே ஒரு பாலம் கட்டுவதற்கு டெண்டர் கோரியதாகவும், அந்த குத்தகைதாரர் 20 சதவிகிதம் அதிகமாக அந்த டெண்டரில் குறிப்பிட்டுள்ளதால், அது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மீண்டும் அது டெண்டருக்கு விடப்பட்டு, அதிலும் அதிகமாக வரவே, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள்.

ஆனால், அதே நேரத்திலே நான் ஒன்றைக் கேள்விப்பட்டேன். இப்படி மற்றொரு பிரிவினருக்கு அதாவது ஆளுங் கட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக்கு அதாவது ஒரு கோடியே 95 லட்சம் அல்லது ஒன்றே முக்கால் கோடி ரூபாய்க்கான டெண்டர் ஒன்றை, ஏறக்குறைய 2 கோடியே 37 லட்சத்திற்கு விடக்கூடிய நிலைமையும் இருந்திருக்கிறது. எனவேதான் இந்தமாதிரியான மாற்றுந்தாய் மனப்பான்மை இருக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்திலேசொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னைக்கு இப்படிப்பட்ட ஒரு பாரபட்சம் வரக்கூடாது என்று பழைய பாசத்தால் கேட்டுக் கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள பாலத்திற்கு செலவு ஏறக்குறைய 2 லட்சம்தான். ஆனால், அதே சமயத்தில் 2 கோடியே 37 லட்சத்திற்கான ஒரு டெண்டரை இங்கே தமிழக அரசு வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை நான் இந்த நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக பேசும்போது குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், இன்னும் சற்று விரிவாகச் சொல்ல வேண்டுமானால், நமது இந்த தமிழக அரசை நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் இருந்தபோது, எந்த அளவுக்கு அப்போது குறை கூறினீர்களோ, அந்தக் குறைகளையெல்லாம் நீங்கள் களைந்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் அப்படிச் செய்யவில்லை என்று நாங்கள் சொல்கிறோம்.

நீங்கள் இந்த நிர்வாகத்திலே எந்த அளவுக்கு குறுக்கீடு செய்திருக்கிறீர்கள் என்பதைக் கூற விரும்புகிறேன். அப்படி நிர்வாகத்திலே குறுக்கீடு மட்டுமல்ல. என்.ஜி.ஓ.-க்கள் அவர்களுடைய பற்றாக்குறை கோரிக்கையை வைத்தால், இது குறித்து இன்றைக்கு ஆளுங்கட்சி பத்திரிகையிலே ஒரு சான்றைத் தர விரும்புகிறேன். 19—12—1977 தேதிப் பத்திரிகை என்று நினைக்கிறேன். அதிலே என்.ஜி.ஓ.-க்களை எச்சரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலம் இதைப் படிக்க வேண்டுமென்று சொன்னால், படிக்கப் பிரியப்படுகிறேன்.

[முற்பகல் 11-50]

நீதியின் குரல் பத்திரிகை. சொல்லக்கூடாது என்றால் விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லக்கூடாது. முதலில் என்னிடம் காட்டிவிட்டுத்தான் சொல்லவேண்டும்.

திரு. தி. சு. நல்லதம்பி: சொல்லக் கூடப் பிரியப்படவில்லை. அந்த வார்த்தையைப் புனிதமான இந்த மாமன்றத்தில் சொல்லக் கூடாது என்று நினைக்கிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் நம்முடைய பழைய சகாக்கள் அந்தப் பத்திரிக்கையை ஆரம்பித்து வைத்தார்கள். என்.ஜி.ஓ.-க்கள் தங்கள் வயிற்றுக் கொடுமையைப் போக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால் நீங்கள் அப்படி வைக்கக் கூடாது என்று கடுமையான வார்த்தைகளைச் சொல்லி பயமுறுத்தக்கூடிய நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது. இந்த நிலைமையில் சட்டம் ஒழுங்கு இந்த நாட்டில் எப்படி காக்கப் படும் என்று கேட்க விரும்புகிறேன்.

பொதுவாக, ஆளும் கட்சித் தோழர்கள் போலீசில் தலையிட்டு அராஜக முறையைக் கையாண்டு வன்முறையைத் தூண்டுகிறார்கள். இதனால் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அரசு அந்தக் கடமையிலிருந்து தவறி விடுகிறது. நான் இதுபற்றி இரண்டொரு சான்றுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் ஒரு சம்பவம் நடந்தது. 47-வது வட்டம் புளியந்தோப்பு பகுதியில் இரண்டு தோழர்கள் தவறு செய்தவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபட்டவர்கள் — இரண்டு பேரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்; இரண்டு பேருக்குமிடையே பகைமை காரணமாக

கொலையில் போய் முடிந்து விட்டது. கொலையுண்ட மறுநாள் சாவிற்குக்கூட ஒரு அம்மையார் எம்.பி. அவர்கள் வணக்கத்தைத் தெரிவித்தார்கள். அது மனித சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படுவது. சாவு ஊர்வலத்தின்போது போலீஸ் ஸ்டேஷனை வன்முறையாகத் தாக்கினார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதைக் குறித்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இதுபற்றி அன்றைய தினமே நான் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டு வந்தேன். ஆனால் இது அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்று கூறி தள்ளி விட்டார்கள்.

அந்தக் கொலை நடந்த அன்று எல்லாப் பத்திரிகைகளிலும் கள்ளச் சாராயத்தில் தகராறு என்று அனைத்துக்கட்சி பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டது. ஆனால் ஒரு அறிக்கையை ஒரு வட்டத்திலே இருந்து கொடுக்கிறார்கள். கொலையுண்ட ராதா அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ராதா அவர்கள் எப்படிப்பட்ட மாவீரர்; அவருடைய சவ ஊர்வலத்திற்கு அனைவரும் வரவேண்டும் என்று 47-வது வட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் அறிக்கை விடுகிறார். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால்— சமீபத்தில் போலீசார் நடந்து கொண்ட முறை தவறு என்ற காரணத்திற்காக மட்டும் வழக்குக்குச் சொல்லவில்லை: அந்தப்பகுதியில் பதட்டமான நிலை இருந்தது. சவ ஊர்வலம் எடுத்து அந்தப் பகுதிக்கு வரும்போது ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் செய்த ரகளை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் வேலையை விட்டு வரும் நேரம். அப்போது போலீஸாருக்கே இக்கதி என்றால் பொதுமக்களுக்கு உயிருக்கும் உடைமைக்கும் எந்த அளவுக்குப் பாதுகாப்பு இருக்குமென்று அஞ்சக்கூடிய நிலைமை இருக்கிறது என்று பேசிக் கொண்டார்கள். இதைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதை மாற்ற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

நான் நேற்றைய தினம் அதிகம் பேசவில்லை. 20 நிமிஷம் தருவதாகப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசவில்லை என்றால் உங்கள் கட்சியில் பேசியிருப்பார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. தி. சு. நல்லதம்பி: சென்னையிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். இன்று சென்னை நகரம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நமது நிதியமைச்சர் அவர்கள் கூற்றுப்படி மழையால் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில்

இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது போதுமா என்று பார்க்க வேண்டும். சென்னையில் 20 அங்குலம் மழை பெய்து ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; பாதாளச் சாக்கடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; கொசுத் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன; சுகாதார முறை கேடாக இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்ற ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறுவதை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியும்? அவர்களுடைய நிதி அறிக்கையில் 200 கோடி ரூபாயாவது ஒதுக்கி இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். 94 கோடி ரூபாயில் நின்றிருக்கிறார்கள். தமிழகத்திற்கு 94 கோடி ரூபாய்; சென்னைக்கு ஒரு கோடி ரூபாய் எந்த அளவுக்கு போதுமானது என்று ஏற்றுக் கொள்ள முடியும்? இங்கேதான் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிகமாக வந்த காரணத்தால் நீங்கள் இப்படி நடக்கிறீர்களோ என்ற எனது உள்ளக் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே சென்னை, சிங்காரச் சென்னையிலே ஆனுங்காட்டினர் மூர் அங்காடியிலே அந்தப் பகுதியிலே நடைபாதையில் மக்கள் செல்வதற்கு இடையூறாக சிறிய கடை வைத்துக் கொண்டு தகாத வார்த்தைகளைக் கூறி போகிற வருகிறவர்களையெல்லாம், மதிக்காத அளவுக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு சம்பவம் நடந்தது. முக்கியமாக சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. தி. சு. நல்லதம்பி: இது நம்முடைய மாநிலத்தினுடைய கௌரவத்தை பாதிக்கக் கூடியது. ஏற்கனவே உள்ளாட்சித் துறை அமைச்சரிடமும் சொல்லி இருக்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்னால் ஒரு சம்பவம் நடந்தது. 2 தம்பதிகள் அங்கே வந்தார்கள். அங்கேயுள்ளவர்கள் அவர்கள் வாங்காத பொருட்களை என்னமோ வாங்கியதாக நினைத்து வசை புராணம் பாடியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு அந்த வெளிநாட்டுப் பயணிகள் சென்றிருக்கிறார்கள். மூர் அங்காடி எந்த நிலைமையில் இருந்ததோ அது இல்லாமல் இன்றைக்கு வழிப்பறிக் கொள்ளையடிக்கும் இடமாக இருக்கிறது. ஆகவே உள்ளாட்சித் துறை அமைச்சரும் சுற்றுலாத் துறை அமைச்சரும் பழைய நிலைமைக்கு அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப் போலவே நான் ஏற்கனவே சொன்னதைப் போல் 2 கோடியே 37 லட்சம் ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு ஊழல் நடந்திருக்கிறது. ஒரு கோடியே சொச்சத்திற்கு விடப்பட வேண்டியது 2 கோடியே 37 லட்சத்திற்கு விட்டு இருக்கிறார்கள்.

இதிலே பெரிய ஊழல் நடந்திருக்கிறது. அதைக் களைவதற்கு, அதைக்கண்டுபிடிப்பதற்கு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும். அந்த ஜி. ஓ. என்னிடத்தில் இருக்கிறது. நேரம் இல்லாததால் அதிகமாகச் சொல்லவில்லை. இங்கே திரு. ராதா அவர்கள் கலைஞரைப் பற்றிச் சொன்னார்கள். அந்த அளவிற்கு நாங்கள் நிதியமைச்சரைப்பற்றியும் மற்ற அமைச்சர்களைப் பற்றியும் சொல்லப் பிரியப்படவில்லை. காரணம், அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் எந்த அளவுக்குக் கண்ணியமாகப் பேசக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதன்படிதான் கண்ணியமான முறையில் பேசுகிறேன். அதிலே பல அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். எப்போதும் நான் அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த ஊழல் காரியத்திற்கு காரண கர்த்தா யார்? ஜி.ஓ. நம்பரைச் சொல்கிறேன். ஜி.ஓ. 1544, ஆர்.டி.எல்.ஏ., Sewrge Treatment Plant. அந்த டெண்டரைப் பற்றிய பைலை விசாரிப்பதற்கு, ஊழலை நடத்தியவர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் 94½ கோடி ரூபாய்க்கு ஒரு இடைக்கால பட்ஜெட்டைக் கொடுத்திருக்கிறார்கள். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 கோடி ரூபாய் செலவழிக்க அரசு முன்வந்திருக்கிறது. அப்படி ஒதுக்கியதை எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள், நாங்களும் சேர்ந்து பாராட்டியிருக்கிறோம். அதிலே தவறு இல்லை. இவ்வளவு தாராள மனதோடு உதவி செய்ய முன்வந்ததை எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் பணத்திற்கு என்ன பண்ணுவது?

முன்னாலேயே 24 கோடி ரூபாய் துண்டு பட்ஜெட்டிலே விழுந்து இருக்கிறது. இப்போது 100 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவழிக்கிறோம் என்றால் அடுத்த பட்ஜெட்டிலே எதைக் குறைக்கப் போகிறோம் என்ற பிரச்சினை இருக்கிறது கிராம அபிவிருத்தித் திட்டங்கள், கிராம வளர்ச்சி, கிராம இணைப்புச் சாலைகள் அதிகமாக கைவிடப்பட்டுவிட்டன, அதைக் குறைத்தோம். வளர்ச்சித் திட்டங்கள் குறைக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் மத்திய அரசிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்றாக வேண்டும். வேறு வழியே கிடையாது.

மத்திய சர்க்கார் பிளான் அட்வான்ஸ் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். மானியமாகக் கொடுக்கிறார்களா, கடனாகக் கொடுக்கிறார்களா என்று நமக்குத் தெரியவில்லை.

[திரு. ஏ.ஆர். மாரிமுத்து] [1978 சனவரி 10

[நண்பகல் 12-00]

ஆனால் ப்ளான் அட்வான்ஸ் என்று கொடுத்து விட்டு, நாளைக்கு அபிவிருத்தித் திட்டத்தை பாதிக்கும் அளவில் இருக்கும் என்றால் நம்முடைய வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டுவிடும், பொருளாதார சிரமங்கள் ரொம்ப அதிகரிக்கும் என்பதைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

50 கோடி ரூபாய் மூலதனத்திற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். அதிலே மத்திய அரசு கொடுத்திருந்தால் அதை ரெவின்யூ சைடில் வரவு வைப்பதா என்று தெரியவில்லை. ரெவின்யூ சைடிலே வரவு வைப்பதா, கடனாக வைப்பதா என்பது தெரியவில்லை. அவர்கள் கொடுத்ததற்கு மேல் 12 கோடிக்குமேல் செலவு என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த 44 கோடி ரூபாய், அந்த 24 கோடி ரூபாய், மொத்தம் 68 கோடி ரூபாய். இதை மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெற்றிருக்கிறீர்களா? இதைக் கடனாகக் கொடுத்தால் போதாது. ரெவின்யூ தரப்பிலே நாம் செலவு செய்யும் ரூபாயை மத்திய அரசாங்கத்திலேயிருந்து பெறுவதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை.

அப்படி இல்லையென்றால் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு நம்முடைய அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்பட்டு விடும். அப்படிப் பாதிக்கப்படாமல் இருக்க மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புயல் அடிக்கடி வருகிறது. இம்மாதிரி பொருளாதாரச் சிரமங்கள் வருகிறபொழுது நம்முடைய பொருளாதார நிலைமை பாதிக்கப்படுகிறது. அப்படி பொருளாதார நிலை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் நிரந்தரமாக ரிசர்வ் நிதி என்று வைத்து, புயல் வெள்ளம் போன்றவை வரும்பொழுது செலவு செய்வதற்கு, பொருளாதாரச் சிரமங்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் முறையில் செய்ய வேண்டும். இதேபோன்ற ரிசர்வ் பண்டை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டுமென்று ஏதோ சொல்லப்படுகிறது. மத்தியிலே அம்மாதிரி ஏற்படுத்த இருக்கிறார்கள். அதிலேயிருந்து கிடைக்கும் ஒரு நிதி இருந்தாலும், மாநிலத்திலேயும் பொருளாதாரத்தைச் சிதைக்காமல் இருக்கும் வகையில் ரிசர்வ் நிதியை ஏற்படுத்த வேண்டும். அம்மாதிரி ரிசர்வ் நிதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியை அரசு கைக்கொள்ள வேண்டும். அது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு ஆண்டுதோறும் ஒரு தொகை ஒதுக்கி அதில் ஏற்படுத்த வேண்டும்.

1978 சனவரி 10] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

திடீரென்று புயல் அடித்தது என்றால் என்ன செய்வது என்று அதிகாரிகளுக்குப் புரியவில்லை. நாகபட்டினத்தைப் பொறுத்த வரையில் அங்கே உள்ளே செல்வதற்கே இரண்டு நாட்கள் அதிகாரிகளுக்கு ஆகிவிட்டது. என்ன செய்ய வேண்டுமென்று லோகல் அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. எனவே, நிரந்தர மாக ஒரு உத்தரவைப் போட்டாக வேண்டும். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்படும்பொழுது அங்கே உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்து, இப்படியிப்படி செயல்பட வேண்டுமென்ற நிரந்தர உத்தரவைப் போட்டு விடுவோமேயானால் அங்கே அவர்கள் உடனடியாகச் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும். அவ்வாறு இல்லாததால் அவர்கள் நாளைக்கு அரசு நடவடிக்கை எடுப்பார்களோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் அரிசி இருக்கிறது, ஆனால் அதை எடுத்து விநியோகம் செய்வதற்கு அதிகாரிகள் பயப்பட்டார்கள். நாளைக்கு என்ன சொல்வார்களோ ஏது சொல்வார்களோ என்ற பயத்தில் அரிசி பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்ய முடியாமல் போய் விட்டது.

ஆகவே, இது சம்பந்தமாக நிரந்தரமான உத்தரவைப் போட வேண்டும். அங்கங்கே கமிட்டி போட வேண்டும், யார் யார் எப்படி எப்படி இருக்க வேண்டும், புயல் அடித்தது என்றால் இயற்கைப் பாதிப்பு வந்தால் பொது மக்களுடைய ஒத்துழைப்பை எப்படிப் பெறுவது என்பதற்கு நிரந்தரமான உத்தரவு இருக்க வேண்டும். அது உடனடியாகச் செய்யப்பட வேண்டும். நாம் கமிட்டி அமைக்கிறோமா இல்லையா என்று ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால் இருக்கக்கூடிய நிலைமை, முதலிலே இடிந்த வீடுகளைக் கணக்கெடுக்க வேண்டுமென்ற நேரத்தில் நான்கு நாட்களிலே எடுக்க வேண்டிய நிலைமையில் அதிகாரிகள் ஊர் முழுவதும் போக முடியாத காரணத்தால் பல பேர்கள் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். விடுபட்டுப் போனவர்கள் மனு கொடுக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே 31 ஆம் தேதி வரையில் வந்த மனுக்களைத்தான் பரிசீலிக்கிறார்கள். அதற்குப் பிறகு வந்த மனுக்கள் பரிசீலிக்கப்படாது என்ற நிலைமை இருக்கிறது. அவ்வாறில்லாமல் எல்லா மனுக்களையும் பரிசீலிக்க வேண்டும். பாதிக்கப்படாதவர்கள்கூட கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவ்வாறு கொடுத்திருப்பார்கள். 200 ரூபாய் வருகிறது என்று சொன்னவுடன் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கொடுத்திருக்கலாம். ஆனால் எந்த வகையிலும் பாதிக்கப்பட்டவர்கள் விடுபட்டுப் போய் விடக் கூடாது. எத்தனை தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று அறிவிப்பு கொடுக்கவில்லை. அவர்களாகக் கொடுத்தார்கள். அப்படிக் காலந்தாழ்ந்து கொடுக்கின்றவர்களுக்கு நிவாரணம் இல்லை என்று சொல்லுவது நியாயம் இல்லை.

இம்மாதிரி விடுபட்டவர்கள் என்னுடைய தொகுதியிலே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நான் என்னுடைய தொகுதிக்குள் போக முடியாது. 100 பேர், 200 பேர் தினமும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் அங்கே. எனக்கே என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், விடுபட்டுப் போகாமல் நிதி உதவி அளிக்க வேண்டும். எவ்வளவு சேதமாக இருந்தாலும் அவர்களுக்கு டெஃபனட்டாக டைரக்ஷன் இல்லாததால் செய்ய வேண்டியதைச் சரியாக செய்ய முடியவில்லை.

முதலிலே கொடுத்ததை விடக் குறைச்சலாக இருக்கவேண்டுமென்று சில அதிகாரிகள் நினைத்துக்கொண்டு, பர்சன்டேஜைக் குறைத்து, குறுக்கி, சில கிராமங்களிலே கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி சில சங்கடங்கள் இருப்பதாலே, உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இம்மாதிரி கொடுக்கக் கூடிய நிவாரணம் முழுமையாகப் போய்ச் சேருகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அதிகப் பணம் செலவாகிறது என்று நினைக்கக் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் நமக்குப் பணம் கிடைக்கவில்லையென்று நினைக்கக் கூடாது என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

அடுத்தது, வாழை, கரும்பு, வெற்றிலைகொடிக்கால், இவைகளெல்லாம் இந்தப் புயல், வெள்ளத்தால் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் முழுமையாக நட்ட ஈடு கொடுப்பது சாத்தியமில்லை. ஆகவே, வேறு வழி காண வேண்டும்.

நாம் விவசாயத்திற்கு இன்ஷூரன்ஸ் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதை, பிராக்டிகலாக, யதார்த்தமாக, நடைமுறைப்படுத்தக்கூடிய நிலைமைகளை மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இதிலே என்ன சிரமம் இருக்கிறது என்பதைப் பார்க்கிற நேரத்தில், எல்லா பொதுமக்களுக்கும் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

நான் சொல்வது, வாழை, கரும்பு, தென்னந் தோட்டங்கள், வெற்றிலைக்கொடிக்கால், இவைகள் எல்லாம் மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வெற்றிலைகொடிக்கால் ஒரு ஏக்கர் நிலத்தில் பயிரிட ரூ. 1,000 செலவு செய்வதாகச் சொல்கிறார்கள். 4 ஏக்கர் நிலத்திற்கு ரூ. 4,000 செலவு செய்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கும் என்பதை யோசிக்க வேண்டும். வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால், தென்னந்தோட்டம் இவை

வைத்திருப்பவர்களுக்கு, பயிர் செய்பவர்களுக்கு நிரந்தரமாக அதிகத் தொகை நட்ட ஈடு கொடுக்க வாய்ப்பிருக்கும் என்ற முறையிலே நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியான பயிர்களைக் கட்டாயமாக இன்ஷூர் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, முக்கியமாக ஒன்று. கடற்கரைப் பகுதிகளிலேயுள்ள வீடுகள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள், இவைகளெல்லாம் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, கடற்கரைப் பகுதிகளிலே, அரசு அலுவலகங்களையோ, பள்ளிக் கூடங்களையோ, வீடுகளையோ கட்டும்போது, பலமாகக் கட்ட வேண்டும். ஏன் நான் இதைச் சொல்கிறேனென்றால், ஆந்திராவிலே அடித்த புயலைப் பார்த்தால், 15 மைல் தூரத்திற்கு உள்ளே கடல் நீர் வந்து, ஊரையே அழித்து விட்டது. 15 அடி உயரத்திற்குக் கடல் நீர் எழும்பி உள்ளே வந்திருக்கிறது. ஆகவே, கடற்கரையிலேயிருந்து குறைந்தது 15 மைல் தூரத்திற்குப் பக்கா கட்டிடம் கட்ட வேண்டும். மண்டபம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். மண்டபம் கட்டிச் சும்மா போட்டால் வீணாகப் போய்விடும். ஆகவே, பள்ளிக்கூடங்களாக இருக்கும் வகையில் கட்ட வேண்டும். ஆகவே, பக்காவாக அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் மட்டும் அல்ல, தமிழ்நாடே பாதிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டிலே அதிகப்படியான பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. புன்செய் பயிர் அழிந்து போய் விட்டது. நஞ்சையும் கெட்டு, புஞ்சையும் கெட்டு, எல்லாம் கெட்ட நிலையிலே இருக்கிறார்கள். அதனாலே, விளைச்சலே இல்லையென்று சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. ஆனால், நஞ்சையும், புஞ்சையும் கெட்ட நிலையில், இந்த ஆண்டு தமிழ் நாடு பூராவும் வரி வஜா செய்ய வேண்டும். இதில், ஏதோ ஒரு பகுதியில் விளைச்சல் இருக்கிறது, ஒரு பகுதியில் விளைச்சல் இல்லையென்று பார்க்கக் கூடாது. எனக்கு ஒரு ஏக்கர் விளைந்திருக்கும். 4 ஏக்கர் கெட்டிருக்கும். ஏதோ நிவாரணம் கொடுக்க வேண்டுமென்றால், அதற்காகக் கடன் கொடுக்கிறோமே தவிர, வேறு உதவி இல்லை. ஆகவே, அரசு நில வரியை வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்வான பகுதிகளிலே, திருச்சி ஜில்லா, மதுரை ஜில்லா போன்ற பகுதிகளிலே, கரை ஓரப் பகுதிகளிலேதான் ஆபத்து அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேடசெந்தூர் பகுதியிலே ஆற்றுக் கரை ஓரங்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. 100 வருஷத்திற்குள்ளே இதுமாதிரி வெள்ளம் வந்ததில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் கரை ஓரங்

களில் குடியிருப்பது குற்றம், அங்கே குடியிருக்கக் கூடாது என்று சொல்ல வேண்டும். ஆற்றுக் கரை ஓரங்களில், கிட்டத் தட்ட 100 கெஜம் தூரமாவது யாரும் குடியிருக்கக் கூடாது என்று தடை செய்வதன் மூலம் தான் நாம் காப்பாற்ற முடியும். உயிர்ச் சேதங்களைத் தவிர்க்க முடியும் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, செங்கற்பட்டு மாவட்டத்திலே, சிக்கணுங் குப்பம் கிராமத்தில் அரிசனங்கள் அடித்துத் துன்புறுத்தப்பட் டிருக்கிறார்கள். அவர்களுடைய சொத்துக்களெல்லாம் சூறை யாடப்பட்டிருக்கின்றன. இருந்தும் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். இப்படி எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும். செங்கல்பட்டு மாவட்டத்தில் பரவலாக இந்த மாதிரி இருக்கிறது. அந்த அரிசன விவசாயிகளுக்குப் போதிய ஊதியம் கொடுக்கவில்லை. அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியமாவது கிடைக்க வழி செய்ய வேண்டும். அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் இல்லாத நிலையில், அவர்கள் அதைக் கேட்டால், அவர்கள் பேரில் வம்புச் சண்டை வருகிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, சிக்கணுங்குப்பத்திலே மட்டுமல்ல, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும், உண்மையாக நியாய மாகக் கிடைக்க வேண்டிய கூலி கிடைக்க அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கடுத்து இன்னொரு சட்ட முன்வடிவு இருக்கிறது. அதிலும் விவாதம் இருக்கிறது. பேசுகிற உறுப்பினர்கள் தயவுசெய்து 5 நிமிடங் களில் முடித்தால்தான் இரண்டையும் $1\frac{1}{2}$ மணிக்குள் முடிக்க முடியும்.

[பிற்பகல் 12-10]

*திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கூறிய மாதிரி புயல் நிவாரணப் பணிகள் பல ஊர்களுக்குச் சரியான முறையில் செல்லவில்லை. நான் இந்த அவைக்கு வருவதற்கு முன்பாக எனக்குப் பெருகவாழ்ந்தான் என்ற கிராமத்தில் இருந்து வந்த தந்தியில் அங்கே இருக்கிற 200 குடும்பங்களுக்கு நிவாரண உதவி போய்ச் சேரவில்லை என்று வந்திருக்கிறது. ஆகவே, அமைக்கப் படவிருக்கும் சர்வ கட்சி குழு பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொள்ள நிவாரணம் கிடைக்க உடனடியாக இந்த அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும். மரணம் அடைந்தவர்களுடைய குடும் பத்தினர் அனைவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் அளிக்க வேண்டும். புயல் சம்பந்தமாக நிவாரணப் பணிகளுக்கு நிதி ஆதாரம் இல்லை

என்று நிதி அமைச்சர் அவர்கள் கூறலாம். பள்ளிக் கூடங்கள் தனி யார் பள்ளிகள், விடுதிகள், சாலைகள், தொழிற்சாலைகள் சகலத்தை யும் செப்பனிடுவதற்கு நிதி ஆதாரங்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறலாம். ஆகவே மத்திய அரசு 200 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இந்த சட்ட மன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அதிகாரிகள் செயல், புதிய அரசுக்குக் கெட்ட பெய ரையும், அவப் பெயரையும் சேர்ப்பதாக இருக்கிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப் பில் இருப்பதையே மறந்து விட்டார்கள். உதாரணமாக, கோவை மாவட்டம் ஈரோடு தாலுகா செவ்லூருக்கு அருகில் நடுப்பகுதியில் உள்ள லோயர் பவானி அருகில் ஜீப் ரோட்டில், செல்வி திரை அரங்கு கட்டப்பட்டிருக்கிறது. அதை ஆட்சேபித் திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அதிகாரிகள் எந்தவித நட வடிக்கையும் எடுக்கவில்லை. உண்ணாவிரதம் துவக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சிக்கணுங்குப்பம் என்னும் கிராமத்தில் 4-12-1977 அன்று அரிசனங்கள் தாக்கப்பட் டுள்ளார்கள். அந்த அரிசனங்கள் டிராக்டரில் இழுத்துச் செல்லப்பட்டு அடிக்கப்பட்டு, 2 மைல், 4 மைல், 10 மைல் என்று தூரத்தில் விடப்பட்டிருக்கிறார்கள். அந்த அரிசனங் களுக்கு எதிராக நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாக, செய்யூர் சப்-இன்ஸ்பெக்டர், மிராஸ்தார் வீட்டிலே விருந்து சாப்பிட்டு விட்டு, ஏழை எளிய விவசாயிகள் தாக்கப்படுவதற்கு உடந்தை யாக அவர்களுக்கு ஏழைகளுக்கு எதிராக இருந்து இருக்கிறார். இந்த நிகழ்ச்சி கீழ்வெண்மணிக்கு அடுத்த அநியாயமாக இருக் கிறது. தமிழகத்தில் அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி இருக்கிறது என்கின்ற நினைப்பு கூட இல்லாமல் அதிகாரிகள் நடந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே செய்யூர் சப்-இன்ஸ்பெக்டரை உடனடியாக சஸ்பெண்டு செய்து விசாரிக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடி அருகில் உள்ள லட்சுமாங்குடி பக்கத்தில் இருக்கக் கூடிய, வேளுக்குடி என்ற கிராமத்தில், அரிசனங்கள் தாக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த அரிசனங்கள் மீது லட்சுமாங்குடி சப்-இன்ஸ்பெக்டர் 144, 147, 148, 326 போன்ற பல செக் ஷன்களை போட்டு 7 பொய் வழக்குகளை பதிவு செய்திருக்கிறார்கள்.

அதே போல் திருச்சிற்றிமுத்தம் கிராமத்தில் புயலில் வீழ்ந்த வீடுகளைக் கட்டப்போன அரிசனங்கள் மீது பொய்யான வழக்கு களைப் போட்டு, போலீஸ் அவர்களை கைது செய்து அழைத்துச்

சென்றிருக்கிறது. இதற்கும் இந்த லட்சுமாங்குடி சப்-இன்ஸ்பெக்டர்தான் காரணம். கூத்தாநல்லூர் பகுதியிலே இருக்கிற லட்சுமாங்குடி சப்-இன்ஸ்பெக்டர் எந்த லோகத்தில் இருக்கிறார் என்றே தெரியவில்லை.

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் எஸ். ஐ., சிவகாசி சப் இன்ஸ்பெக்டர், தஞ்சை மாவட்டம் லட்சுமாங்குடி சப் இன்ஸ்பெக்டர், நன்னிலம் சப் இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்லாம் மிராஸ்தாரர்களுக்கும் வசதியானவர்கட்கும் ஆதரவாக இருந்து ஏழை எளியவர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே இதன்மீது அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதால் நம்முடைய புதிய அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தட்டிக் கேட்டுக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், சில அதிகாரிகளை வீட்டுக்கே அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு சிக்கலான நிலைமை இருக்கிறது. சம்பாவுக்கு என்று கடன் பெற்று குறுவை நட்டிருக்கிறார்கள். இதனால் இப்போது விவசாயிகள் புயலால் பாதிக்கப்பட்டு, நட்ட பயிர்களை எல்லாம் இழந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது நடவுக்கு கடன் கேட்டால், நீ ஏற்கனவே சம்பாவுக்கு கடன் பெற்று குறுவை நட்டுவிட்டாய், ஆகவே உனக்கு சம்பாவுக்கு கடன் கிடையாது என்று கூட்டுறவு நிறுவனங்கள் மறுக்கின்றன. எனவே அரசாங்கம் இதனைப் பரிசீலித்து, சம்பாவுக்குக் கடன் பெற்றிருந்தாலும், குறுவைக்குக் கடன் பெற்றிருந்தாலும், சம்பாக் கடன் பெற்றுக் குறுவை நட்டிருந்தாலும், குறுவையை நம்பியிருந்த விவசாயிகளுக்கு தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவையிலே லட்சுமி மில்ஸ் தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகள் வாபஸ் பெற வேண்டும். புதுக்கோட்டையிலே கோட்டப் பட்டிணம் மீனவர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

அதே போல, சென்னை மாணவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்; சேலம் கண்ணாடித் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; யூனியன் கார்பைட் தொழிலாளர்கள் 67 நாட்களாக உண்ணாவிரதம் இருப்பதற்குக் காரணமான பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; ராயல் என்பீல்ட் தொழிலாளர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினைகளைப் பரிசீலித்து, பரிவுணர்வோடு அரசு நடவடிக்கை

எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் அதே சமயம், இந்த அவை, புயல்-வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காக, விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அரசு மற்றும் தனியார் பள்ளிக்கூடங்களை சீர்படுத்துவதற்காக, மத்திய அரசிடம், ''ரூ. 200 கோடி கொடுங்கள்'' என்று ஒன்றுபட்டுக் குரலெழுப்பிக் கேட்க வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பில் 30ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு முன்பெல்லாம் ஆர்ப்பாட்டம்—ரூ. 200 கோடி கொடுக்க வேண்டும் என்பதற்காக—மத்திய அரசை வலியுறுத்துவதற்காக—நடத்தப் போகிறோம். அடுத்த கட்டமாக, மறியலில் ஈடுபட்டு, பல்லாயிரக் கணக்கானோர் சிறை செல்லத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> தலைவரவர்களே, நிதியமைச்சருடைய மசோதா என்ற காரணத்தால் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

தலைவரவர்களே, மாண்புமிகு, இந்திய கம்யூனிஸ்ட் நண்பர் பேசுகின்ற போது, ஏதோ, கலெக்டர் அலுவலகங்களுக்கு—முன்னால் மறியல், மத்திய அரசிடமிருந்து அதிக நிதியைக் கேட்டு வாங்க என்றெல்லாம் கூறினார். மத்திய அரசிடமிருந்து அதிக நிதியை வாங்க வேண்டும். அதற்கு நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் ஆதரவைத் தருகின்றோம்.

ஆனால், நண்பர் அம்பிகாபதி இங்கே இவ்வளவு தூரம் செய்வது, நிதி வாங்குவதற்காகவா, அல்லது கட்சியை வளர்ப்பதற்காகவா என்று தெரியவில்லை. காரணம், நிதியை வாங்க வேண்டுமென்றால், அந்தக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கேட்டிருக்கலாம். ஆனால் இதுவரையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த யாரும் பாராளுமன்றத்தில் இது சம்பந்தமாகக் கேட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்தப் புயலை, கட்சியை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தத் தேவையில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி:</u> பாயின்ட் ஆப் ஆர்டர். கட்சியைப் பற்றி சொன்னதால்............

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> உங்கள் கட்சியைப் பற்றிக் கூறியதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது. உறுப்பினர் பேசும்போது தவறாகப் பேசினால், விதிகளுக்கு மாறாகப் பேசினால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பிரச்சினையை பாராளுமன்றத்தில் எழுப்பவில்லை என்று தவறாகக் கூறினார். 200 கோடி கொடுக்க வேண்டுமென்று எங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் பாராளுமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதா மீது சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்பாக ஏற்கனவே இங்கே நடைபெற்ற துணை மதிப்பீட்டு விவாதத்தின் போது சில கருத்துக்களைக் கூறியிருக்கிறேன். அதில் பல்வேறு கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் கூட, சில காரியங்களுக்கு இசைவு தந்து நல்ல அறிவிப்புகளை இங்கே கொடுத்தமைக்காக எனது நன்றியை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நிதி ஒதுக்கீடு செய்கிறபோது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்தந்த மாவட்ட ஜனத்தொகையின் அடிப்படையில் இது செய்யப்பட வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக சில மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, என்பதை இந்த அரசுக்கு ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனிச் சிறப்புக்கள் உள்ளன. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அதை நெற்களஞ்சியம் என்று கூறுகிறோம். கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அது தொழிற்துறையில் சிறப்புப் பெற்றிருக்கிறது, குமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், காட்சிக்கு பச்சைப் பசேலென்று இருக்கிறதே தவிர, அந்த மாவட்டம், வறுமையின் இருப்பிடமாக இருக்கிறது என்பது, ஒரு வேளை வேறு அமைச்சர்களுக்கு தெரியாமல் இருக்கலாம், ஆனால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், மாண்புமிகு நிதியமைச்சருக்கு, நான் கூறாமலே தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

[பிற்பகல் 12-20]

ஆக இதுவரையிலும் புறக்கணிக்கப்பட்ட மாவட்டத்திற்கு, இனி மேலாவது நிதி வழங்க வேண்டும், ஜனத் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புயல் நிவாரணத்திற்காக நாம் அதிகமாக நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். பல்வேறு குறைபாடுகள் இதில் இருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றை அரசாங்

கத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் புகார்கள் நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இம்மாதிரி தவறுகள் ஏற்படாத வண்ணம், ஆங்காங்கு மக்கள் கமிட்டி அமைத்தாக வேண்டும். எந்தெந்தப் பகுதிகளில் புயல் நிவாரண வேலைகள் நடைபெறுகின்றனவோ, அந்த வேலைகளைக் கண்காணிக்க மக்கள் கமிட்டி, மீண்டும் இம்மாதிரியான புகார்கள் இல்லாத முறையில் பணம் செலவழிக்கப்பட வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய அளவில் புயல் நிவாரணத்திற்காக செலவழிக்கப்படும் பணத்தை செலவழிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஏற்கனவே நான் பல முறை கூறியிருக்கிறேன். பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மில்கள், கூட்டுறவு வங்கிகள், இவைகளுக்கெல்லாம் இப்போது தேர்தல் நடைபெறாத நிலையில், தனி அதிகாரிகளால் நடத்தப்படுகின்றன. சில கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் போர்டு நாமினேட் செய்த, அந்த நாமினேட்டெட் போர்டால் நடைபெற்று வருகிறது. இப்படி போர்டுகளுக்கு நாமினேஷன் செய்யும்போது அரசியல் கண்ணோட்டத்தோடு செய்யாமல், பொதுவாக இந்தத் துறையில் அக்கறை கொண்டவர்களைக் கொண்ட போர்டாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சாதாரணமாக நாம் ஒதுக்குகின்ற பணம் ஆண்டு இறுதியில் லாப்ஸ் ஆகும் வழக்கம் உண்டு. ஒரு வேளை கணக்கில் அதிகப்பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அது செலவழிக்கப்படுகிறதா என்று கவனிக்கவேண்டும். ஒதுக்கப்பட்ட பணம் லாப்ஸ் ஆகாமல் கவனித்துச் செலவழிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. குறிப்பாக பொதுப் பணித் துறை இலாக்காவில், ஆண்டின் கடைசி மாதத்தில் தான் ஒதுக்கப்பட்ட பணத்தை முழுதும் செலவு செய்ய முனைவது உண்டு. அதனால் என்ன ஏற்படுகிறது என்றால், ஊழல் அதிகமாக ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அதே நேரத்தில் செய்யப்படும் வேலையும் நல்ல முறையில் செய்யப்பட வாய்ப்பு இல்லாமல் போகும். இவற்றை எல்லாம் அரசு தவிர்க்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து பார்ட் 2 ஸ்கீமில் பல்வேறு திட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நிதி நிலை ஒருவேளை சரியில்லை என்று சொல்லி, பல்வேறு திட்டங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்தாலும் கூட முக்கியமான திட்டங்கள் விட்டுப்போகாமல் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும். நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டே முடிக்கப்படவேண்டும். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக்கூடங்கள், பாலங்கள் ஆகியவற்றிற்கு பணம்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 [illegible]

ஒதுக்கியிருக்கிறோம். மக்களை ஏமாற்றுவதற்காக இப்பணத்தை ஒதுக்கி வேலைகள் நடைபெறவில்லை என்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. ஆகவே, எந்தெந்த வேலைக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறோமோ, அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் டாக்சேஷன் பாலிசி தவறான முறையில் செய்யப்பட்டிருக்கிறது. பல மடங்குகள் அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யவேண்டும். இல்லையென்றால் மக்களால் அதைக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

புயல் நிவாரணத்திற்கு ஏற்பாடுகள் செய்யும்போது, சென்னையை அடுத்துள்ள காமராசர் புதுநகர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 300 குடிசைகளுக்கு அதிகமாக இருக்கின்றன. அங்கே வசிக்கின்ற மக்களுக்கு அடிப்படை தேவைகள் செய்து கொடுக்கப்படவில்லை. குறிப்பாக குடிதண்ணீர் இல்லை, கக்கூஸ்கள் இல்லை, ரோடு வசதி இல்லை. அதனால் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் கவனித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்றோர்க்கு அரசு பிரத்தியேக கவனம் செலுத்தி, அவர்களுக்காக திட்டங்கள் வகுக்க வேண்டும். விசேடமாக அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் செய்யவேண்டும். எந்த அரசாங்கமாக இருந்தாலும், அதிகாரிகள் நிச்சயமாக ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்பு அளிப்பதில்லை. ஆகவே ஊனமுற்றோர் கவனிப்பாரற்று இருக்கின்றனர் என்று குறிப்பிட்டு, கடைசியாக ஒன்றை கூறுகிறேன்.

கடைசியாக, பல்வேறு வழக்குகள், ஏற்கனவே ஏற்பட்ட மாணவர்கள் கிளர்ச்சி, ஆசிரியர்கள் போராட்டம், மின்சாரத் தொழிலாளர்கள் போராட்டம், இன்னும் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தல்கள், சட்டமன்றத் தேர்தல்கள் இவற்றின் போது ஏற்பட்ட வழக்குகள், இவற்றில் பல வழக்குகளை அரசாங்கம் வித்ட்ரா செய்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த வழக்குகள் வித்ட்ரா செய்யப்படவில்லை. ஒட்டுமொத்தமாக இப்படிப்பட்ட போராட்டங்கள் மூலம் ஏற்பட்ட அத்தனை வழக்குகளையும்—அதேபோல் இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பகுதிக்கு வந்தபோது ஜனதா பார்ட்டி தொண்டர்கள் மீது கூட பல பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆக அத்தனை வழக்குகளையும் வித்ட்ரா செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு இந்த நிதி ஒதுக்கீடு மசோதா மீது பேச வாய்ப்பளித்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

1978 சனவரி 10]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது பேசும்போது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில விவரங்களை கூற விழைகிறேன். விலைவாசி அளவு கடந்து ஏறிக்கொண்டு வருகிறது. தினசரி ஏறிக்கொண்டு வருகிறது. தாங்கமுடியாத அளவிற்கு போய்க்கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் மாநில அரசும் உடனடியாக சேர்ந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடந்த 5, 6, 7 தேதிகளில் ஒரு அடையாள அறிவிப்பாக ஒரு உண்ணாவிரதம் இந்த விலைவாசியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரி தமிழ்நாடு பூராவும் நடத்தப்பட்டது. விலைவாசியேற்றத்தை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைக்குப்போனால் நாட்டு மக்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய அதிருப்தி மேலோங்கும்.

ஆகவே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இரண்டு அரசுகளும் சேர்ந்து விலைவாசியேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு விரைவில் முயர்ச்சிக்க வேண்டும். விலைவாசியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பல இருக்கின்றன. அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரை ஊதிய உயர்வு இல்லாவிட்டாலும் அண்மையில் ரூ. 10 கொடுக்கப்பட்டது. அது அவர்களுக்கு மாதம் ரூ. 200 குறைவாக ஊதியம் பெறும் கடைநிலை ஊழியர்களுக்கு கொடுக்கப்படாத நிலையில் அவர்கள் மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல. அந்தப் பாகுபாடு தேவையில்லை. 7,000-க்கு மேல் அவர்கள் அணி திரண்டு ஊர்வலமாக வந்தார்கள். இருந்தும் அவர்கள்பால் எந்தவிதமான மாற்றமும் இல்லை. எனவே அந்த ஊழியர்களுக்கும் ரூ. 10 உடனடியாக தர மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புயல் வெள்ளம் குறித்து இங்கே ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். இப்போது எனக்குமுன்னால் பேசிய உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். இறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 கொடுக்கப்பட வேண்டும் என்ற எங்கள் கட்சி நிலையை ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறோம். இன்று அவர்கள் சம்பாதித்துக்கொண்டிருந்தவர்களாக இருந்தால் அல்லது வருமானம் உள்ளவர்களாக இருந்தால் என்றிருக்கிற நிலையை நீக்கி இறந்தவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் சம்பாதிப்பவர்களாக இருந்தார்களா என்பதை கணக்கில் எடுக்காமல் கொடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கக் கணக்குப்படி 5,44,000 வீடுகள் அல்லது குடிசைகள்தான் பாழடைந்திருப்பதாக கணக்கு கூறுகிறது. ஆனால் இதற்கு மேலும் இன்று இருக்கிறது. அவசர அவசரமாகத்

சென்றூர்களை தவிர பல கிராமங்களில் பல வீடுகள் விடுபட்டிருக்கின்றன. ஜனவரி 2-ம் தேதி வரையில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய பணம் 4,93,000 வீடுகளுக்குத்தான் கொடுக்கப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அன்றுதேதிவரை ரூ. 9,26,00,000 கொடுத்திருக்கிறூர்கள். எனவே, இந்த 5,44,000 வீடுகளுக்குமேல் என்பது இன்னும் அதிகமாககொடுக்கவேண்டி வரும். அது குறித்து கொஞ்சம்கூட கவலைப்படாமல் மீண்டும் கணக்கு எடுத்து அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இதில் அதிகாரிகளுக்கு சில கருத்துக்கள் இருக்கின்றன. நிதித் தொகை ரூ. 80 என்பது ரூ. 100 ஆகி, ரூ. 100, ரூ. 200 ஆன பிறகு அத்தனை பேர்களும் கேட்கிறூர்கள் என்ற கருத்து இருக்கிறது. அதே சமயத்தில் உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்கள் விடுபட்டிருக்கிறூர்கள். ஆகவே பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட வேண்டும். பாதி பகுதி பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதாவது பார்ஷ்யலி டாமேஜ்ட், வீடுகளுக்கும் என்ற வகையில் கொடுக்கவேண்டும் என்று அரசு சொல்லியிருந்தும் பலயிடங்களில் கொடுக்கப்படவில்லை. தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நெல்லிகுப்பம் போன்றயிடங்களில் இந்த நிலை இருக்கிறது. அவர்களுக்கும் கொடுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

[பிற்பகல் 12-30]

விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் சிதம்பரம் தாலூகா வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடம் என்று பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அது போல் கடலூர் தாலுக்காவும் பண்ருட்டி தாலூகாவும் பிரகடனப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் நெல்லிக்குப்பம் பகுதியில் இப்போது ஏற்பட்ட வெள்ளத்துடன் புகையான் நோய் ஏற்பட்டு அதன் விளைவாக பயிர்கள் பாதிக்கப்பட்டு நாசமாகி விட்டது. இந்த மகசூலே பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதே போன்று பண்ருட்டி தாலூகா, நெல்லிக்குப்பம் சிதம்பரம் தாலூகா இந்த இடங்களில் எல்லாம் இப்படிப்பட்ட நோய் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஏக்கருக்கு 500 ரூபாய் வீதம் கொடுக்க ஏற்பாடு செய்ய வெண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் அங்குள்ள விவசாயிகள் நிலவள வங்கியிலிருந்து வாங்கியிருந்த கடன்களை எல்லாம் மத்திய கால கடன்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றூல் இப்போது பல இடங்களிலும் கடன்களுக்கான தவணை கட்டவில்லை என்பதற்காக தட்டுமுட்டு சாமான்களை எல்லாம் எடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்காக ஒரு குழு போடப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதையும் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனுடைய அறிக்கையைப் பெற்று விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, அரசியல் கைதிகளை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல சிறைகளிலும், அரசியல் கைதிகள், ஆயுள் தண்டனை கைதிகளாக இருக்கிறூர்கள். மதுரையில் லெனின் என்ற ரெங்கசாமி என்பவரும், சேலத்தில் தியாகராஜன் என்பவரும் கடந்த டிசம்பர் 28-ம் தேதியிலிருந்து உண்ணு விரதம் ஆரம்பித்திருக்கிறூர்கள். இவர்கள் எல்லாம் அரசியல் கைதிகள்—ஆயுள் தண்டனை பெற்றவர்கள்—இவர்களுடைய விடுதலைப்பற்றி அரசு கவனிக்க வேண்டும்.

அதுவரை இடைக்காலத்தில், நீண்ட நாள் பரோல் கொடுப்பதற்கு, மேற்கு வங்காள அரசு செய்திருப்பது போல் இப்படிப்பட்டவர்களுக்கு நீண்டகால பரோல் ஆவது கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) ஒரு முக்கியமான கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இந்த நாட்டு மக்கள் போராடி இழந்த ஜனநாயக உரிமைகளை மீண்டும் பெற்றுள்ளார்கள். இந்நிலையில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் அந்தக் கூட்டத்திற்கு வாருங்கள் என்று ஒலி பெருக்கி மூலம் சொல்லுவதற்கு உரிமை இல்லாமல் இருக்கிறது.

கடலூரில் நடைபெற்ற எங்கள் கட்சியின் மாவட்ட மாநாட்டை யொட்டி ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தபோது, பொதுக்கூட்டத்திற்கு உரிமை தரப்பட்டது. ஆனால் அந்தப் பொதுக்கூட்டத்திற்கு வாருங்கள் என்று ஒலி பெருக்கிமூலம் சொல்வதற்கு அனுமதிமறுக்கப்படுகிறது. இதைப் பற்றி அங்கேயுள்ளவர்கள் எனக்கு எழுதினூர்கள். நான் இங்கேயுள்ள உள்துறை செயலாளர் அவர்களிடம் சந்தித்து கேட்டபோது இப்படிப்பட்ட சில தடைகள் சென்னையில்தான் இருக்கிறதே தவிர வேறு எங்கும் அனுமதி மறுக்கப்படுவதில்லை அப்படி எந்த விதமான உத்தரவும் கிடையாது என்று சொன்னூர்கள். இப்படி பொதுக்கூட்டத்திற்கு வாருங்கள் என்று ஜனங்களை அழைப்பதற்கு இந்த நாட்டில் உரிமை இல்லை என்று சொன்னூல் அது மிக கஷ்டமான நிலைமை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பல நகரங்களிலும், கடலூர், விழுப்புரம், சிதம்பரம் போன்ற நகரங்களில் எல்லாம் இது போன்ற நிலைமையிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முடிவு கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த உரிமைகளை வழங்குவதற்கு உடனடிநடவடிக்கை வேண்டும் என்று கூறிக் கொண்டு அமருகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் மறுவாழ்வுத் திட்டங்களுக்காக 46 கோடி 32 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அர்சாங்கத்தில் போடப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் ஒவ்வொரு மனிதனுக்கும் நேரடியாகப் போய்ச் சேருவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. சில திட்டங்களை அமல் நடத்தும் போது, தனிப்பட்ட நபர்கள் அல்லது மனிதர்கள் பலன் அடைகின்ற வகையில் அமைகின்றன. அப்படிப்பட்ட திட்டங்களும் அமைகின்றன.

அதே நேரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு திட்டம் இடுகிறோம் என்றால் அதில் பலருக்கு பலன் இருக்கலாம். அந்த நிலையில் சில குறிப்பிட்ட வட்டாரத்தில் அல்லது குறிப்பிட்ட மாவட்டத்தில் சில திட்டங்களை ஆரம்பிக்கலாம். குறிப்பாக 'ஷீப் ரீயரிங் சொசைடி' பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்று மனுக்கள் கொடுக்கிறார்கள். இப்படி ஆடுகள், மாடுகள் வளர்க்கின்ற சொசைட்டி ஏற்படுத்துவதன் மூலமாக பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உதவி செய்யும். அதே போன்று மாடுகள் வளர்க்கும் திட்டம், அந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் நடத்துவதற்கு அனுமதிப்பதின் மூலம் விவசாய மக்கள் பயன்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதே போன்று தான் பால் பண்ணைகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாக வசதி வாய்ப்பை பெருக்கிக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். நான் கிராமங்களுக்குச் செல்லும் போது ஏராளமான பெண்கள் பால் பண்ணைகளை அமைக்க வேண்டும் என்று ஏராளமான மனுக்களைக் கொடுக்கிறார்கள். எங்களுக்கு மாடுகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள். இதற்கான வசதி செய்து தராததினால் எங்களால் பால் சொஸைட்டி ஏற்படுத்த முடியவில்லை. கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போது பால் என்பது சத்துணவு என்பதை இருக்கின்ற நாம் அனைவரும் அறிவோம். அது மட்டுமல்ல. பால் உற்பத்தியின் மூலமாக பதப்படுத்தப்பட்ட பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும், வேலை வாய்ப்பையும் பெருக்க முடியும். ஆகவே, எங்கெங்கு இப்படிப்பட்ட சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று மனுக்கள் வருகின்றனவோ அந்தப் பகுதிகளில் எல்லாம் என்கரேஜ்மெண்ட் தரக் கூடிய வகையில், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வகையில் இது அமையும்.

அதே போல், பின்தங்கிய மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமையை, இந்த அரசாங்கம் அரிசன மக்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறதே. அதைப்போல் பின்தங்கிய மக்களுக்கும், பொருளாதாரத்திலே குன்றி இருக்கின்ற

அந்தச் சமுதாய மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக சிலர், சப்-இன்ஸ்பெக்டர்களைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே நானும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். வந்தவாசி இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் அவர்களைப் பற்றியது. அந்த வந்தவாசித் தொகுதியிலே இருக்கின்ற எம்.எல்.ஏ. அந்தப் பகுதியிலே சாராயம் காய்ச்சும் நபர்களைப் பற்றி ஒரு புகார்ப் பட்டியலை அந்த இன்ஸ்பெக்டரிடத்திலே கொடுத்தார். அப்படிக் கொடுத்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனால், அங்குள்ள இன்ஸ்பெக்டர் என்ன செய்தார்? எம்.எல்.ஏ.-வின் மனுவிலே குறிப்பிட்டுள்ள பெயர்களில் உள்ள நபர்களிடம், இப்படி உங்கள் பேரிலே எம்.எல்.ஏ. ஒரு மனுக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியதால், இப்போது அந்த எம்.எல்.ஏ. தனியாகப் போவதற்கே, இரவிலே வெளியே செல்வதற்கே பயப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு சட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு அதிகாரியே ஆன்டி-சோஷியலாக மாறி தீமை செய்யக் கூடிய நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இப்படி இன்னும் இதுமாதிரி பரவலாக இருக்கின்ற காரணத்தினால், இதையும் சீர்திருத்த வேண்டுமென்று, நீங்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, உழவர்களை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து மார்க்கபந்து அவர்கள் எப்போதும் சுருக்கமாக முடித்துக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். இல்லையென்றால், கோபித்துக் கொள்கிறீர்கள். ஏற்கனவே 8 நிமிடங்கள் ஆகிவிட்டது. தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: நான் கோபித்துக் கொள்ளவில்லை. செய்யாறு பகுதியிலே உள்ள நிலைமைகளைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக, விளைச்சல் உற்பத்தி குறைந்திருக்கிறது. ஏற்கனவே 50 மூட்டைகள் விளையக்கூடிய பகுதிகளிலே 10 மூட்டை அல்லது 15 மூட்டைகள்தான் விளைந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம், வட ஆற்காடு மாவட்டத்திலே பரவலாக ஏற்பட்டிருக்கிறது என்று பேசுகின்ற நேரத்திலே பலரும் எடுத்துக் காட்டினார்கள். அப்படி எடுத்துக் காட்டியபோது, நேற்றைய

தினம் அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் தந்திருக்கிறார்கள். எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில், இப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம்கூட கணக்கில் எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும்.

Sound mind in a sound body........

(அடுத்து திரு. இரா. ஏ. சந்திரன் ஜெயபால் அவர்கள் பேச அழைக்கப்பட்டார்.)

THIRU R. E. CHANDRAN JAYAPAL : Hon. Speaker, Sir, in the Demand No. XVII under the Head 'Education,' a further sum of Rs. 6 lakhs has been allotted by the Government to be spent on the activities of sports through Sports Councils in various districts. In total the Government have so far spent for the year 1977-78 a sum of Rs. 16 lakhs. There are 15 districts in the Tamil Nadu State and each district has its own Sports Council. In addition, there is one governing body, viz., the Tamil Nadu State Sports Council situated at Madras.

All these Sports Councils are employing on an average about 6 coaches to train youngsters in Athletics, Volley ball, Basket ball, Foot ball, Hockey, Gymnastics and Cricket. There are no coaches for Kabadi and Go Go the indigenous games and Tennis and Table Tennis in the district level. Only the Tamil Nadu State Sports Council employs coaches for Tennis and Table Tennis.

The coaches are graded into three categories, and are paid by the District Sports Councils and the Tamil Nadu State Sports Council. Their salary scale ranges from Rs. 400 to 600 for the first category, Rs. 350 to 600 for the second category and Rs. 350 to 500 for the third category. The coaches are permanently appointed to train Athletic and players of Volley ball, Basket ball, Foot ball, Hockey and Gymnasts. On an average a sum of Rs. 9,40,000 is being paid out as wages and salaries to the coaches.

There is very little money left with the Sports Council to buy equipment and to train youngsters in the districts. The coaches are not able to work in the remote villages. They are not able to go over to the remote villages and conduct coaching clinics and coaching camps. So much so, the coaches are not able to utilise their services for the development of sports in Tamil Nadu.

I submit that the grant which is now being given to the Sports Council is hardly sufficient to meet out the needs of the Sports Councils. The Sports Councils are also not in a position to allot funds for the State

Associations for Foot-ball, Hockey and Volley-ball. I may make a mention here that only Lawn Tennis and Cricket Associations are financially affluent.

I am the Secretary of the Tamil Nadu Hockey Association. We have two bank accounts. In one account we have hardly Rs. 100 and in the other account we have about Rs. 200. We are running short of funds and we are in debts by conducting the recent 41st National Hockey Tournament for juniors and seniors in Madras. We have incurred a loss of more than Rs. 75,000.

In fact, the Tamil Nadu Hockey Association has got to pay large sums of money to the Legislative Assembly Department for having utilised the M.L.A. Hostel and also to the Madras University for having utilised the University Union for housing the participants of the 41st National Hockey Tournament. We are not in a position to settle our accounts.

I had the misfortune of conducting the Forth Hockey Test match betwoen India and Holland on 18th December 1977 at Madras. We have lost about Rs. 35,000. The present trend of the general public is not to buy tickets and attend matches. Mostly the officials are hankering and pestering for complimentary passes— '*osi*' Passes. We are forced to suffer loss.

[பிற்பகல் 12-40]

I request the Government to pass an Order prohibiting the issue of complimentary passes to the Government officials and after the passing of that Order, stringent disciplinary action should be taken against the erring officials.

I also state that the districts of Madras, Dharmapuri, Pudukottai, Thanjavur and Ramanathapuram do not have Sports Stadia exclusively for the use of the Sports Council. I now understand that in Madras the Tamil Nadu Sports Council has recently been allotted a playing field behind Nehru Park on the Poonamallee High Road for the construction of a Stadium. This ground has been encroached by hut-dwellers and there have been a lot of huts there. So, immediate steps should be taken by the Government to remove these huts, and possession of the ground should be given to the Tamil Nadu Sports Council. In addition, a sum of Rs. 30 lakhs should be given to the Tamil Nadu Sports Council for the construction of a pucca Stadium with a multi-purpose track and lodging facilities for both men and women teams.

[திரு. இரா. ர. சந்திரன்ஜெயபால்] [1978 சனவரி 10

Pongal Sports are to be conducted throughout Tamil Nadu. Now the Government have given a sum of about Rs. 80,000. This means that each District–there are 15 Districts, will get about Rs. 5,000 and this sum is inadequate. Out of this Rs. 5,000, the District Sports Council is not able to meet travelling, lodging and halting expenses. So, I request that the Government should be considerate enough to give a further grant of Rs. 3.5 lakhs so that each District may get about Rs. 30,000 to form a District Sports Council.

Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் ஹாக்கி மாட்சிலே இலவச பாஸ் கொடுக்கப்பட வேண்டிய விஷயம் பற்றிச் சொன்னார்கள். எங்களுக்கே இலவச பாஸ் இல்லையே.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிதியமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிற நிதி ஒதுக்கீடு மசோதாவிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள தமிழ்நாட்டிற்கு மத்திய அரசாங்கம் கொடுத்த உதவி போதாது. இரு நூறு கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட தீர்மானம் இங்கே கொண்டுவரப்படுமானால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மனப்பூர்வமாக ஆதரவு தெரிவிக்கப்படும் என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

முதலமைச்சர் இங்கே பேசுகின்ற நேரத்திலே வெள்ளத்திலே உதவி செய்த பரமதயாளன் குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதைச் செய்ததாகத் தெரியவில்லை. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மது குடிக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதாக சொன்னபோது அதைப் பற்றி இந்த அவையில் அறிக்கை வைப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. அதையும் கவனிக்கவேண்டும்.

புயலால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த உதவி ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும்.

1978 சனவரி 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாதம் ரூ. 200-க்கும் குறைவாக சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் 10 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் எல்லாம் ஊர்வலம் நடத்தினார்கள். அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகத்திலே சொல்லும்போது, திருவொற்றியூரிலே ஒரு கொலை நடந்திருக்கிறது. 28—11—1977 அன்று எம்.டி.ஒய். 2888 என்ற லாரி தாக்கப்பட்டு இறந்திருக்கிறார். அதைப்பற்றி புகார் கொண்டுவரப்பட்டும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே பதில் கொடுக்கிறபோது கேளிக்கை வரி சலுகையை ரத்து செய்தது பற்றிச் சொன்னார்கள். அவன் ஒரு சரித்திரம் என்ற படத்திற்கு கேளிக்கை வரி சலுகை ரத்து செய்யப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ரத்து எந்த அடிப்படையிலே செய்யப்பட்டது என்று கலைஞர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு நிதியமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற போது கால வரையறை இருக்கிறது, காலவரையறை முடிந்துவிட்டால் அது அந்த அடிப்படையிலே ரத்து செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், ஜி.ஓ. 180-7—8—1977-ஐப் பார்க்கிறபோது

"The Government exempt with effect from the date of this Order the film show entitled 'Avan oru Sarithram' from the liability of Entertainments Tax, Surcharge and revised surcharge on Entertainments Tax, subject to the condition that the Film is not screened along with any other feature film but is exhibited independently...."

என்று இருக்கிறது. இதிலே எந்தவிதமான காலவரையறையும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, தவறான கருத்திலே சொல்லியிருப்பார்களானால் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும். கால வரையறை இல்லையென்றால் மீண்டும் அந்தப் படத்திற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மிகவும் முக்கியமான பிரச்சினை பற்றிச் சொல்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். பட்டினப்பாக்கத்திலே சீனிவாசபுரத்திலே வீட்டு எண் 140/16 இல் பாட்சா பீவி என்ற அம்மையார், அவர்கள் கேரள முஸ்லீம், வசித்து வருகிறார். அவருடைய கணவன் கப்பலிலே கூலி வேலை செய்கிறார். வீட்டிலே ஆண் இல்லாதபோது 2—1—1978 தேதியன்று அந்த வீட்டிற்குச் சில சமூக விரோதிகள் சென்று கதவைத் தட்டி உள்ளே புகுந்து—அவர்கள் குடி போதையிலே இருந்ததாகச் சொல்லப்படுகிறது—

அந்தப் பெண்ணைக் கடித்துக் குதறி மானபங்கம் செய்து செய்யக் கூடாததை எல்லாம் செய்து இருக்கிறார்கள். பிறகு அந்த அம்மையார் பயந்துபோய் ஃபோர்ஷோர் எஸ்டேட் மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். யாரும் உதவிசெய்ய வில்லை. வீட்டிலே ஆண் யாரும் இல்லை. யாருமே உதவி செய்யாமல் அந்த அம்மையார் கடுமையாக மானபங்கம் செய்யப் பட்டிருக்கிறார். அவருடைய உடம்பைக் கடித்து குதறி காயப் படுத்தியிருக்கிறார்கள். பிறகு அங்கே இருந்த 2 பேர்கள் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். கமிஷனருக்கு புகார் கொடுத்து அவர் டெபுடி கமிஷனரிடம் சொல்லி, அவர் ஏ.சி.க்கு சொல்லி அங்கிருந்து 4—1—1978 அன்று மயிலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் கேஸ் பதிவாகியுள்ளது. ராயப்பேட்டை மருத்துவமனையிலே அந்த அம்மையார் அனுமதிக் கப்பட்டார்.

[பிற்பகல் 12-50]

இந்த வழக்கு பயங்கரமான வழக்கு. ஒரு பெண் மானபங்கப் படுத்தப்பட்டிருக்கின்ற நிலைமை, பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது. அங்கே போலீசார் வந்து ஸ்தலத்திலே விசாரித்திருக்கிறார்கள். நிலைமை என்னவென்றால், பயங்கரமான சூழ்நிலை, யாரும் சாட்சி சொல்லத் தயாராக இல்லை என்ற நிலைமை. நான் கூட அங்கேதான் இருக்கிறேன். எனக்குக்கூட பாதுகாப்பு வேண்டுமென்று நிதியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அன்றைக்கு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், எல்லோருக்கும் பாதுகாப்பு தர வேண்டுமென்று. இப்படிப் பட்ட நிலைமை இருக்கிறது. 4—1—1978 தேதியன்று மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கமிஷனர் உத்தரவாதம் கொடுத்தார். டெப்டி கமிஷனர் உத்தரவாதம் கொடுத்தார். அசிஸ்டெண்ட் கமிஷனர் உத்தரவாதம் கொடுத்தார். போலீஸ் அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் யாருடைய தலையீடு என்று தெரியவில்லை. இப்பொழுது செக்ஷன் 75, சிட்டி போலீஸ் ஆக்டில் தொடரப்பட்டிருக்கிறது. இது சரியா என்று சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சட்ட அமைச்சரவர்கள் நீதிபதியாக இருந்திருக்கிறார்கள். இது பயங்கரமான வழக்கு. எனவே இந்த வழக்கை ஸ்பெஷல் போலீஸ், கிரைம் பிராஞ்ச், சி.ஐ.டி. இலாக்காவிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றால் நம்மீது உள்ள நம்பிக்கை மக்களுக்குப் போய்விடும். மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை உருவாகிவிடும்.

அடுத்து, தமிழ்நாட்டில், காவியம் என்ற புத்தகத்தை வெளியீடு செய்திருக்கிறார்கள். காவியம் என்ற புத்தகம் அரசாங்க விழாவிலே அமைச்சருடைய ஆசியைப்பெற்று வெளிவந்திருக்கிறது

ஒருவேளை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் காவியம் என்ற புத்தகம் இஸ்லாமிய மத உணர்வுகளுக்குப் புறம்பான கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. அதனால் முஸ்லீம்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

காவியம் என்ற அந்தப் புத்தகத்தில் இஸ்லாமியக் கொள்கைகளுக்குப் புறம்பான, இஸ்லாமிய மார்க்கத்திற்குப் புறம்பான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்தப் புத்தகம் அரசாங்க விழாவிலே மதிப்பிற்குரிய நிதியமைச்சருடைய ஆசியைப் பெற்று வந்திருக்கிறது. நிதியமைச்சருக்கு அது தெரியாமல் இருந்திருக்கலாம். அவர்களுக்குத் தெரிந்திருந்தால் நிச்சயமாக அதைச் செய்திருக்க மாட்டார்கள். அப்படி ஒரு வெளியீடு வந்திருக்கிறது. அந்தப் புத்தகத்தைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று முஸ்லீம் சமுதாயத்திடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் காவியம் என்ற புத்தகத்தைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இஸ்லாமிய மார்க்கத்திற்குப் புறம்பான கருத்துக்கள் இருப்பதால் முஸ்லீம்கள் மனம் புண்படுவதாகக் கூறுகிறார்கள். குறிப்பாக, ஒரு முஸ்லீமாக இருப்பவர் ஆண்டவன் உண்டு என்று நம்பக்கூடியவர் ஆண்டவனுடைய திருத்தூதராக ஏற்றுக் கொள்வது நபிகள் நாயகத்தைத்தான், அப்படி நபிகள் நாயகத்திற்குப் பதிலாக யாரோ ஒருவர் தானே நபிகள் நாயகம் என்று சொல்வதான கருத்துக்கள் வந்திருக்கிறது. ஆகவே, இதைக் கவனித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, காவியம் என்ற புத்தகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அது தமிழ் மொழியில் வந்திருக்கிறதா அல்லது உருது மொழியில் வந்திருக்கிறதா ? அரசாங்க விழாவில் வெளியிடப் பட்டது என்று சொல்கிறார்கள். எந்த விழாவிலே வெளியிடப் பட்டது ? எந்த அமைச்சர் கலந்துகொண்டு வெளியிடப்பட்டது என்ற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> காவியம் என்ற புத்தகம் உருதுமொழியில் வந்திருக்கிறது. என்னுடைய நண்பர் திரு. லத்தீப் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசாங்க விழாவிலே நிதியமைச்சர் கலந்துகொண்டு, இக்பால் பர்த் டே சென்டினரி விழாவில் நடைபெற்றிருக்கிறது. உருது மொழியிலே அந்தக் காவியம் என்ற புத்தகம் இருக்கிறது. அப்படி உருது மொழியிலே இருப்பதால் அமைச்சரவர்களுக்குத் தெரியாமல், அந்தக் கருத்து தெரியாமல் தவறாக வந்திருக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்ட கேள்வியிலேயே அவர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

நேரடியாகச் சொல்லாவிட்டாலும் மறைமுகமாகக் கேள்வி கேட்டு இந்தக் கருத்துக்கு ஆதரவாக ஒத்துக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர் உருது படித்திருக்கிறார். தவறுகள் தெரிந்ததால்தான் சொல்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : உருது எனக்குத் தெரியும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். குறிப்பிட்ட அந்த விழாவிலே வெளியிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அதையும் நான் அறிவேன். ஆனால் அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று நான் படிக்கவில்லை. நான் அதைப் படித்தேன் என்று சொல்வது தவறு. தவறான கருத்துக்கள் இருந்தால் நம்முடைய மார்க்க எண்ணங்களுக்கு விரோதமாக இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்துக்கு என்னுடைய ஆதரவு எப்பொழுதுமே உண்டு. ஆனால் இருக்கிறதா என்பதுதான் பிரச்னை. அதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் நிதியமைச்சர் கலந்துகொண்ட விழா என்று சொல்கிறார்கள். அது ஒரு நாளெல்லாம் நடந்த நிகழ்ச்சி என்று நான் நினைக்கிறேன். அவர் சொல்லுகின்ற விவாதித்தின்படி, அவரே வெளியிட்டார் என்ற செய்தி வருகிறமாதிரி தொனியிலே வந்திருக்கிறது.

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இப்பொழுது காவியம் என்ற புத்தகத்தைப்பற்றிமுக்கியமான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. உருது மொழியிலே உள்ள அந்தப் புத்தகத்தில் இஸ்லாமியக் கொள்கைக்கு விரோதமான, அன்-இஸ்லாமிக் கொள்கைகள் உருதுவிலே காவியம் என்ற அந்தப் புத்தகத்திலே வந்திருக்கிறது. நிதியமைச்சரவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். இக்பாலுடைய காவியத்தைப் பற்றியும் பேசிவிட்டு, இஸ்லாமிய கொள்கையையும் பேசிவிட்டு, நான் கைலி கட்டாத முஸ்லீமாக இருப்பேன் என்றும் சொல்லிவிட்டு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகின்ற உறுப்பினர் சாதிக் பாட்சா விளக்கம் கேட்க வேண்டுமே தவிர, அவருக்கு வாரிசாக நீங்கள் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாபெரும் கவிஞன் இக்பால் அவர்களின் விழா ஒன்றை உருது மொழி பேசுகின்ற, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தியது உண்மை. அதற்கு

என்னை அவர்கள் அழைத்து 'காவியம்' என்ற ஒரு புத்தகத்தை நான் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது உண்மை. இன்னும் சற்று அடக்கத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். இக்பால் அவர்களின் கவிதையில் எனக்கு அதிகமான ஈடுபாடுகூட உண்டு. நான் அந்த இக்பால் அவர்களின் காவியத்தை ஆங்கிலத்திலே தான் படித்தேன்.

காவியம் என்ற புத்தகத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆகவே, எனக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி நான் தெரிவிப்பேன் என்று எப்படி அனுமானிக்க முடியும் என்பதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. தேவையில்லாத பிரச்சினையில் என்னை இழுக்கக்கூடாது, இழுக்கத் தேவையில்லை. இழுத்த இழுப்புக்கு நான் வரவில்லை.

(திரு. ரகுமான்கான் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயது செய்து திரு. ரகுமான்கான், உங்களுக்கு சம்பந்தமேயில்லை. பேசுகின்ற உறுப்பினரும், அமைச்சர் அவர்களும் , ... (ஒரு உறுப்பினர்: அவர் ரகுமான்கான் ஆயிற்றே ?) ரகுமான்கானே பேசியிருக்கலாமே, சாதிக் பாட்சா உட்கார்ந்திருக்கலாமே. பேசுவது சாதிக் பாட்சா—ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, if the grievance of the hon. Member is justified because of his statement that 'Kavyam' released on that occasion when the Hon. Finance Minister participated on that occasion. contains certain sentiments which are offensive to Islamic religion. certainly a memorandum can be submitted to the Government and it will be examined and necessary action will be taken certainly by this Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சாதிக் பாட்சா— நீங்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள். நேரமாயிற்று.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அடுத்து, பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப்பற்றிய ஒரு பிரச்னை. அவசரகாலச் சட்ட நேரத்திலே ஜனாதிபதி ஆட்சி இருக்கும்போது, பாக்வார்ட் கிளாஸஸுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பர்சன்டேஜ் கோட்டா தவிர ஓப்பன் காம்படீஷனில் அவர்களுக்கு இடம் தரவில்லை. அரசு நியமனங்களில், அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் கோட்டா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி ஆட்சியின்போது, இங்கிருந்த சில அதிகாரிகள் போட்ட உத்தரவின் காரணமாக, பாக்வார்ட் கிளாஸஸுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டாவைத்

தவிர, ஒப்பன் காம்படீஷனுக்கு அவர்கள் வரக்கூடாது என்று உத்தரவு போட்டார்கள். முன்னால், பாக்வார்ட் கிளாஸஸ் ஒப்பன் காம்படீஷனிலும் பங்கேற்று பாஸ் பண்ணலாம். அதிலேயும் அவர்களுக்கு வாய்ப்பிருந்தது. அதை நீக்கி விட்டார்கள். இப்பொழுது கூட அந்த உத்தரவு இருக்கிறது. எனவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது—மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களிடம் ஒரு தூதுக்குழு இது பற்றிச் சொல்லியிருக்கிறது—அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்று, அது இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. இன்றைக்கு கடைசி நாள். இன்றைக்கு இந்த விவாதத்திலே கலந்து கொண்டவர்கள் நல்லதம்பி, ஏ. ஆர். மாரிமுத்து, அம்பிகாபதி, ஜேம்ஸ், கோவிந்தராஜன், மார்க்கபந்து, சந்திரன் ஜெயபால், சாதிக் பாட்சா, ஆக 8 பேர்கள் இன்றைக்கு இந்த விவாதத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். முதலிலே கருத்து தெரிவித்தவர் நமது அருமை நண்பர் நல்லதம்பி அவர்கள் ஆவார்கள். அவர்களுடைய பேச்சில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இந்தத் தலைநகரத்தை இந்த அரசு கவனிக்கிறது என்றும் . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்னும் ஒரு மசோதா இருக்கிறது. தயவுசெய்து நிதி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சுருக்கமாக முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இந்த அரசு இருக்கிறது என்று குறிப்பிடும்போது அவர் தெரிவித்த கருத்து, இந்தச் சென்னை நகரத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், சட்டமன்றத்திற்கு அதிகப்படியான உறுப்பினர்கள், தி.மு.க.வை சேர்ந்தவர்கள் என்றும், அந்தக் காரணத்தினாலே இந்த அரசு வஞ்சிக்கக் கூடாது என்றும் அந்தவிதமான கருத்துக்களை அவர் சொல்லியிருக்கிறார். நான் நல்லதம்பி அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், அப்படிப்பட்ட அடிப்படை இல்லாத எண்ணத்தோடு தயவுசெய்து பிரச்சினையை அணுகவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிகப்படியான உறுப்பினர்களை, தலைநகரத்தில் இருந்து சட்டமன்றத்திற்கு தி.மு.க.வின் சார்பில் தேர்ந்தெடுத்து விட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்த மக்களைப் பழிவாங்குகின்ற

உணர்ச்சி ஒரு அரசுக்கு இருக்கும் என்ற எண்ணம் யாருக்கும் வரக் கூடாது, வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியோ தலைநகரமே தி.மு.க.வுக்குச் சொந்தம் கொண்டாடுகிற எண்ணத்தோடு பேசினார்கள். நான் அதிலே குறுக்கிட்டுப் பேச விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்வேன், இந்தப் பகுதியிலே இருப்பவர்கள் தலைநகரத்திலே ஆட்சி நடக்கின்ற நேரத்தில், வெளிநாட்டிலிருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமான பேர்கள் வருகிறார்கள். அப்படி இருப்பவர்கள் இந்தச் சாலைகளைப் பார்த்து, பழுதடைந்த அந்தப் பாதைகளைப் பார்த்து, இவ்வளவு கேவலமாக இருக்கின்றது என்று சொல்லுகிறபோது அதனால் ஏற்படுகிற அவமானம் இந்த அரசுக்கு இருக்காதா, அதைப் பற்றி நாங்கள் கவலைப்படமாட்டோமா என்பதைப் பற்றி நண்பர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ ஒரு கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டதாக சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மாநகராட்சிக்குச் சாலைகளை செப்பனிடுவதற்காக பணம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. 1976இல் நாட்டிலே பெய்த பெரு மழைக்குப் பிறகு 1976-77, 1977-78இல் 2 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். இதற்கு மேல் இப்போது 1977-78-க்கு வரும் 3 மாதங்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு முதற் கட்டமாக ஒரு கோடி ஒதுக்கப்படும். மேலும் தேவையானால் அதை அதிகரிப்பதற்குச் சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

அதற்குப் பிறகு பேசிய மாரிமுத்து அவர்கள் குறிப்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இயற்கையின் சீற்றத்தை, எப்போது இயற்கை சீறும், எப்போது இயற்கை அமைதியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதற்கும் நாம் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது இதற்காக ஒரு நிரந்தர ரிசர்வ் நிதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு நிதி இருக்கிறது. ஆண்டு தோறும் 1 கோடியே 52 லட்சம் ரூபாயை இந்த நிதியில் போட்டு வருகிறோம். 7-வது நிதிக் கமிஷன் அறிவுரைப்படி இந்தத் தொகை வேண்டிய அளவுக்கு உயர்த்தப்படும் என்பதை மாரிமுத்து அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்குப் பிறகு மாரிமுத்து அவர்கள் இங்கே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறதே, எப்படித்தான் சரிக்கட்டப் போகிறீர்கள் என்று மிகுந்த வேதனை

வேதனையோடு கேட்டார்கள். உண்மையிலேயே முடியுமா என்றும் கேட்டார்கள். அப்படிக் கேட்டு பல கோரிக்கைகளையும் வைத்தார்கள். அதிலே பல கோடிக்கணக்கான பணம் அடங்கி இருக்கிறது. அதற்காக நான் கவலைப்படவில்லை. ஆனால் மாரிமுத்து அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், மூன்று மாதத்திற்கு அங்கீகாரம் கேட்பதற்காக நான் வந்திருப்பது மொத்த தொகை ரூ. 94.35 கோடி ரூபாயாகும். அதிலே மத்திய சர்க்கார் மூலம் 33.91 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, மத்திய சர்க்காரிடமிருந்து தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு 3.78 கோடி ரூபாய் தரப்பட்டிருக்கிறது. ஷேர் கேப்பிடல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு, அதற்கு தேவையில்லாத செலவினங்கள் இல்லை என்றாலும் 4.5 கோடி ரூபாய் (வேஸ் அண்டு மீன்ஸ்) இருக்கிறது. அடுத்த ஆண்டு நிச்சயம் அதை நாம் கைப்பற்றிக் கொள்ள முடியும். அது 33 கோடி ரூபாயாகும். ஆக, 75.19 கோடி என்ற அளவுக்கு இருக்கிறது. மீதி இருக்கிற, மொத்த படப்பிடிப்பை, அல்லது மொத்த சூழ்நிலையை, அல்லது மொத்த நிலைமையை பற்றி அடுத்த பட்ஜட் வரும்போது நாம் கவனிக்கலாம்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : தலைவரவர்களே, '' வேஸ் அண்டு மீன்ஸ் '' பட்ஜெட்டில் ஒதுக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜெட்டை உபயோகப்படுத்துவது, ஓவர் டிராப்ட் கடன் தொகைக்குத் தான். அதை ரெவின்யூ சப்ஜெக்டுக்கு எப்படி மாற்றமுடியும் என்று தெரியவில்லை. ஓவர் டிராப்ட், ரெவின்யூ சைடில் வரமுடியாது.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : தலைவரவர்களே, '' வேஸ் அண்டு மீன்ஸ் '' என்னும்போது, '' வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் ''-ஐ குறிப்பிடுகிறேன். அடுத்த ஆண்டு ரெகவர் செய்ய முடியும் என்று கருதுகின்றேன்.

அதற்குப் பிறகு பேசிய நண்பர் அம்பிகாபதி அவர்கள் எல்லோரும் பேசிய கருத்துக்களைச் சொல்லிவிட்டு, ஒரு போராட்ட அறிவிப்பை விடுத்துச் சென்றிருக்கிறார்கள். ரூ. 200 கோடியை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கி ஆகவேண்டும். வாங்காவிட்டால், மாவட்ட ஆட்சி அதிகாரிகள் அலுவலகங்களுக்கு முன்பும், வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு முன்பும் ஒரு பெரிய போராட்டம் ஒன்றை நாங்கள் நடத்துவதாக இருக்கிறோம் என்று பயங்கரமாக இங்கே அறிவிப்புச் செய்திருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழக வரலாற்றிலேயே, ஒரு நிதியமைச்சரின் கரத்தை வலுப்படுத்துவதற்காக ஒரு போராட்டத்தை நடத்துவோம் என்று ஒரு கட்சி சொல்லி இருக்கிறது

என்றால் அது கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால், போராடுவதற்கு முன்பு வாதாடிக் கொண்டிருக்கிற எங்களுக்குக் கொஞ்சம் வழி விடுங்கள் என்று மட்டும் நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறபோது, தயவு செய்து, போராட்டம், போராட்டம், போராட்டம் என்று பேசி, பெறக்கூடிய சூழ்நிலையை தடுத்துவிட வேண்டாம் என்று அருள் கூர்ந்து, அதற்கு வழிவகை செய்துவிட வேண்டாம் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய அருமை நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசும்போது, இது பிளானுக்கு அப்பாற்பட்டது. பிளானில் இன்க்ளூட் செய்வார்களா, அல்லது தனியாகத் தருவார்களா, என்றெல்லாம் கேட்டார்கள்.

நேற்று, எச். எம். பட்டேல் தெளிவாகச் சொன்னார்கள். டெவலப்மென்ட் ஆக்டிவிடீசுக்குக் குந்தகம் அமையும் வகையில் இராது என்று எச். எம். பட்டேல் பேசிய கருத்தை இங்கே தெரிவிக்கின்றேன். '' நீங்கள் உங்களது பணியைத் தொடருங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், டெவலப்மென்ட் ஆக்டிவிடீசுக்குக் குந்தகமாக, மத்திய சர்க்கார் இருக்காது '' என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிப்பதன் மூலம், எந்த நோக்கத்தோடு அவர் இதைச் சொல்லி இருக்கக்கூடும் என்று அனுமானிக்கின்ற உரிமையை மாண்புமிகு மாரிமுத்து அவர்களுக்கே விட்டுவிடுகின்றேன்.

மற்றவர்கள் பேசியபோது, சிக்கணுங்குப்பம் பகுதியில் அரிசனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள் நான் பத்து நாட்களுக்கு முன்பு இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அங்குள்ள கலெக்டரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இவைகளை எல்லாம் உடனடியாகக் கவனியுங்கள், என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அரசுக்கு நீங்கள் எழுதி அனுப்புங்கள், என்று கேட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களில் இரண்டு பேர் அந்தப் பகுதிக்குச் சென்று அவைகளைக் கவனித்து வந்திருக்கிறார்கள். இப்போது அங்கே எந்தவிதமான தகராறும் இல்லை. மேற்கொண்டு தகராறுகள் மூளாவண்ணம் நடவடிக்கைகளை மாவட்டக் கலெக்டர் உடனடியாக எடுத்திருக்கிறார். ஆக, இனிமேல் இந்தத் தகராறு தொடராது என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, திரு. சாதிக் பாட்சா அவர்கள் நல்ல பல குறிப்புகளை எல்லாம் சொல்லிவிட்டு, வேதனை மூட்டுகின்ற செய்தியைச் சொன்னார்கள். ஒரு பெண்மணி கற்பழிக்கப்பட்ட செய்தியைச் சொல்லி, 2ஆம் தேதி அந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது, இன்று தேதி 10 ஆகிறது. 75ஆவது செக்ஷனில் மட்டும் தான் இந்தத் தகாத, பாதகமான காரியத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இது, எவ்வளவு பெரிய பயங்கரமான குற்றம் என்பதை இந்தச் சர்க்கார் உணருகிறது என்ற காரணத்தாலே, சட்ட அமைச்சரைக் கேட்டேன். அதன் பயங்கரத் தன்மையைப் பற்றி அவர் வேதனைப்படச் சொன்னார்கள். நான் சாதிக் பாட்சா அவர்களுக்கு நிச்சயமாக, உறுதியாகக் கூறுகிறேன். இந்தக் காரியத்தைச் செய்ய அனுகூலமாக இருந்த சமூக விரோதிகள்* யாராக இருந்தாலும், அவர் மீது எந்தச் சட்டத்தின்கீழ் வழக்கு தொடர வேண்டுமோ, அந்தச் சட்டத்தின்கீழ் அவர் மீது வழக்கு போடப்படும். அந்தத் தண்டனையை அவர் அனுபவிக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை சாதிக் பாட்சா அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றபடி, சந்திரன் ஜெயபால் காம்பிளிமெண்டரி டிக்கட்டைப் பற்றிச் சொன்னார்கள். அது, அங்கே இருக்கின்ற ரேஸில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் பல இடங்களிலிருந்து வற்புறுத்தலின் காரணமாக, காம்பிளிமெண்டரி டிக்கட் வாங்குவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயம் சர்க்கார் இதைப் பரிசீலித்து, நிர்ப்பந்தமாக பறிமுதல் செய்கின்ற இந்தப் போக்கை இந்தச் சர்க்கார் தடுக்கும் என்று சந்திரன் ஜெயபால் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் பேச்சை இன்றைக்குத்தான் கேட்கிறேன். அவர் ஸ்போர்ட்ஸில் ஈடுபாடு உள்ளவர் என்று கேள்விப்பட்டேன். இந்த நேரத்தில் அவர் பேசிய பேச்சு அனைத்தும் ஸ்போர்ட்ஸ் பற்றியதாக அமைந்தது என்று நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

[முற்பகல் 1 10]

அதற்குப் பிறகு இங்கே பேசிய உறுப்பினர்—யார் பேசினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை—பரமதயாளன் பற்றி குறிப்பிட்டார்கள். (எதிர் வரிசையில் இருந்த ஒரு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா என்று தெரிவித்தார்.) சாதிக் பாட்சா பரமதயாளன் பற்றி குறிப்பிட்டார்கள். நான் சாதிக் பாட்சாவுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு மேல் நான் பேச்சை நீடிக்க விரும்பவில்லை அடுத்து ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

* பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க திருத்தப்பெற்றது.

கோவிந்தராசன் அவர்கள்—அவருக்கு மைக்கே வேண்டியதில்லை, குரல் நன்றாக இருக்கிறது, என்றாலும்—பல செய்திகளைத் தெரிவிக்க மைக் போட்டுக் கொண்டு அனௌன்சு செய்ய உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு, உள்துறை செயலாளரைச் சந்தித்துக் கேட்டபோது, அப்படிப்பட்ட எந்த விதமான சட்டமும் இல்லை, ஜி.ஓ. இல்லை என்று தெரிவித்ததாகச் சொன்னார்கள்.

ஆக, அங்கே நடப்பது ஏதோ குறும்புசெய்கிறவர் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்று கருதுகிறேன். அந்தக் குறும்பு அடிப்படையிலேயே கிள்ளி எறியப்படும் என்பதை கோவிந்தராசன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக ஒரு போராட்டத்தை நடத்த வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது 'இந்தக் காரியத்தைச் செய்கிற*** என்று குறிப்பிட்டார்கள். *** என்ற வார்த்தை அன்பார்லிமெண்டரியாக தெரிகிறது. அவர் அனுமதியோடு *** என்பதை 'சமூக விரோதிகள்' என்று மாற்றிக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> தலைவரவர்களே, கற்பழிப்பவர்களை *** என்று சொல்வது குற்றமில்லை. வள்ளுவர் கூட *** என்று சொல்லியிருக்கிறார். ஆகவே *** என்றிருந்தால் பரவாயில்லை என்று கருதுகிறேன். ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள் *** என்பது அன்பார்லிமென்லிடரி என்று கருதுவதாக இருந்தால், 'சமூக விரோதிகள்' என்று திருத்திக் கொள்ளலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> *** என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, 'சமூக விரோதிகள்' என்று திருத்திக் கொள்ள உத்தரவிடுகிறேன்

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு, 1978ஆம்ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10;78) '' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்றன.

*** பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க திருத்தப் பெற்றது.

பிரிவு 1, முகவுரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 10/78) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்" என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(இ) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/78).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/78)-க்கு திரு. சுப்பு தன்னுடைய தீர்மானத்தை முன்மொழிவார்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு முன்பு, நான் ஏற்கனவே கொடுத்த 2 நோட்டிபிகேஷன்களுக்கான திருத்தங்கள் இருக்கின்றன. அதற்கிடையில் இந்த மசோதாவை எடுத்து விவாதிப்பது என்பது சாத்தியமில்லை. முதலில் நோட்டிபிகேஷனை எடுத்துக் கொள்ளலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையாக இப்படிப் பட்டவற்றை அதிகம் விவாதிப்பதில்லை. தீர்மானத்தின் பேரில் ஒன்றிரண்டு பேர் பேசிவிட்டு முடிப்பது தான் வழக்கம். இன்றைக்கே எல்லாவற்றையும் முடிக்கவேண்டும். ஆகவே முதலில் இந்தத் தீர்மானத்தை முன்மொழியுங்கள்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, "2-12-1977 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1977ஆம் ஆண்டுகேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) அவசர சட்டத்திற்கு (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/77) இப்பேரவை ஏற்பளிக்க மறுக்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. செல்வராஜ்: தலைவரவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த அவசரச் சட்டத்தை இந்தப் பேரவை ஏற்கக்கூடாது என்பதற்காக சிலகருத்துக்களை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்ன பிறகு நீங்கள் பேசலாம்.

திரு. க. சுப்பு: முதலில் ஆர்டினன்ஸ் வருகிறது. அதை ரீப்ளேஸ் செய்யத்தான் பில் வருகிறது. என் தீர்மானம் இந்த ஆர்டினன்ஸ்க்கு ஏற்பளிக்கக் கூடாது என்பதாகும். ஆகவே, அது முதலில் நிறைவேறினால் பில்லிற்கே அவசியம் இல்லாமல் போகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் விளக்கத்தை முதலில் சொல்லட்டும். வோட்டு எடுக்கும்போது அப்படிச் செய்யலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. சுப்புவின் அவசரம் எனக்குப் புரிகிறது. தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், நான் ஏற்கனவே அந்த மசோதாவைத் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த மசோதா மீது உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது என்னென்ன கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமோ, எதைத் தெரிவிக்க விரும்புகிறார்களோ, அத்தனை கருத்துக்களையும் தெரிவிக்க வாய்ப்பு அதிலே இருக்கிறது என்ற காரணத்தால் நண்பர் சுப்பு அவர்கள் நேரத்தைக் கருதியும், நன்மையைக் கருதியும், எனக்கு உதவுவார் என்ற நம்பிக்கையோடு இதை கொஞ்சம் வாபஸ் பெறுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இது இரண்டு பேர்கள் பிரச்சினை அல்ல. இது ப்ரொஸீஜர் கொஸ்டின். இதை டிஸ் அப்ரூவ் செய்யும் முறையில் கொண்டுவந்திருக்கிறேன். விதிமுறைகளை மீறுகிறோம் என்ற நிலை ஏற்படக்கூடாது. மீறினால் இனி வருகிறவர்கள் தப்பாகப் பேசுவார்கள். இரண்டையும் சேர்த்துப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. க. சுப்பு : இரத்தினச் சுருக்கமாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தீர்மானம் கொடுத்திருப்பதால் அதிக நேரம் எடுத்துக்கொண்டால் மற்றவர்களுக்கு நேரம் இருக்காது.

திரு. க. சுப்பு : எவ்வளவு சுருக்கமாகப் பேசமுடியுமோ அவ்வளவு சுருக்கமாகப் பேசுகிறேன். முதலில் இந்த பில்லின் மெரிட்ஸ், டீமெரிட்ஸ் இவற்றைப் பார்த்து நான் இதை கொடுக்கவில்லை. இந்த அவசரச் சட்டம் தேவையா ? கவர்னர் அவர்கள் இதைப் பிறப்பித்திருக்கிறார்கள். அவசரச் சட்டம் அமைச்சரவையின் ஆலோசனையின் மேல்தான் பிறப்பிக்கப் படுகிறது. இவர்கள் ஆலோசனை இல்லாமல் பிறப்பிக்கப்பட்டதல்ல. அவசரச் சட்டம் என்பது எதற்காகப் பிறப்பிக்கப்பட வேண்டும் என்பதை அரசியல் சட்டமே வரையறுத்து கொடுத்திருக்கிறது. சட்ட மன்றம் கூடாத நேரத்தில் அவசரச் சட்டம் கொண்டுவருவது என்பது ஒன்று.

இரண்டாவதாக, உடனடியாக பிறப்பிக்கப்படாவிட்டால் எந்த வேலையும் நடைபெறாது என்று சொல்லக்கூடிய அளவிற்கு ரொம்ப அவசரத் தேவை இருந்தால்தான் அவசரச் சட்டம் கொண்டுவர முடியும். அது அரசியல் சட்டத்தில் இருக்கிறது. நமது சட்ட மன்ற விதிமுறைகளிலும் இருக்கின்றன. அது அவை முன்னவர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே, எக்ஸ்ப்ளனேட்டரி நோட் கொடுத்திருக்கிறார்கள்.

Rule 91A—

Whenever a Bill seeking to replace an Ordinance with or without modification is introduced in the House, there shall be placed before the House along with the Bill a statement explaining the circumstances which had necessitated immediate legislation by Ordinance.

இது ஒரு மான்டேட்டரி ப்ரொவிஷன். ஆர்டினன்ஸ் போடுகிறளவிற்கு என்ன சந்தர்ப்ப சூழ்நிலை இருந்தன என்று விளக்குவது 91-வது விதியின்கீழ் அவர்கள் கடமை என்று

அரசியல் சட்டம் அதைத்தான் கூறுகிறது. குடியரசுத் தலைவராக இருந்தாலும், ஆளுநராக இருந்தாலும் அரசியல் சட்டத்தில் உள்ள விதிகள் கறாராக கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று விதிகள் உள்ளன. இந்த விதிகளை மீறுவது சரியா? இந்த அவையின் விதிகளை மீறி, விதிமுறைகள் மீறப்பட்டிருப்பதற்கு ஒப்புதல் கொடுப்பது என்பதை ஒத்துக்கொள்வதா என்று கேட்கிறேன். அவசரம் என்றால் என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது? அரசியல் சட்டத்தையும் பார்த்தேன், எக்ஸ்ப்ளனேட்டரி நோட்டையும் பார்த்தேன். இந்த நோட்டில் அவசரம் என்பதற்கு எந்தவித காரணமும் சொல்லப்படவில்லை. பிலிம் இன்டஸ்ட்ரி என்குயரி கமிட்டி சிபார்சின் அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர வேறு எதுவும் இல்லை. அந்தக் கமிட்டி 75-ல் போடப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை சாதாரணமாக இந்த அவையில் கொண்டுவருவதுதானே, அவசரப்படவேண்டிய தேவை இல்லை. இந்த எக்ஸ்ப்ளனேட்டரி நோட் கூட லேட்டாகக் கொடுத்திருக்கிறார்கள். எக்ஸ்ப்ளனேட்டரி நோட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதேதான் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்தான் எக்ஸ்ப்ளனேட்டரி நோட் என்றால் அதற்கு என்று ஒரு தனிப்ரொவிஷன் தேவையில்லை. 91(எ)-யின் கீழ் நமது முன்னவர் அவர்கள் கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 1.20]

அதிலே என்ன சொல்லுகிறார்கள் என்றால் அவசரம் என்ன என்பதற்கு ஒன்றுமே சொல்லவில்லை. இந்த மசோதாவில் ஒரே ஒரு வாக்கியத்தை மட்டும் நீக்கிவிட்டு எக்ஸ்ப்ளனேட்டரி நோட் கொடுத்திருக்கிறார்கள் . . .

'This is gross abuse of power entrusted with the Government'

இது அரசியல் சட்டத்தால் வழங்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை வரம்புமீறி தவறாகப் பயன்படுத்திக்கொள்வதாக இருக்கிறது. உடனடியாக இது கொண்டு வருவதற்கு என்ன காரணம் என்பதற்கு இதற்கென்று இருக்கின்ற விதிமுறைகளை கையாள வேண்டும். ஆர்டினன்ஸ் என்பது எதற்காக கொண்டு வரப்பட்டது என்பதற்கு ஒரே ஒரு காரணத்தைத் தான் சொல்லியிருக்கிறார்கள்......

'It is coming into force on such a date as the State Government may by notification appoint.'

[திரு. க. சுப்பு] [1978 சனவரி 10

அதுவும் உடனடியாக அமுலுக்கு கொண்டு வரவில்லை. உடனடியாக அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்றால்தான் அவசரச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கம் 2-ம் தேதி அவசரச் சட்டத்தைப் போடுகிறார்கள். ஆனால் இது அமுலுக்கு வருவது 26-ம் தேதி முதல்—அதாவது சட்ட மன்றம் கூடப் போகிற நேரத்தில்—நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்படுகிறது.—இப்படி அதிகாரங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எது வேண்டுமானாலும் கொண்டு வரலாம். பின்னால் சில வாக்கியங்களை மட்டும் எடுத்துவிடலாம், என்று அவை உறுப்பினர்களைப்பற்றி அரசு நினைக்கக்கூடாது. அந்த அடிப்படையில் இந்த அவசரச் சட்டத்திற்கு அவசியமே இல்லை. ஆகவே இதை சாதாரணமாக...... Shall Come into force at once என்ற அளவில் கொண்டு வந்திருக்கலாம். நான் இதைப் பற்றி விளக்கமாக பேசுவதற்கு நேரமில்லை. நான் கூறியதை கவனித்தால் அமைச்சர் அவர்கள் இதை உண்மை என்று ஒத்துக்கொள்வார் என்று நம்புகிறேன்.

அடுத்து, கேளிக்கை வரி சம்பந்தமானது. இதை காம்பவுண்டு செய்து கொள்ளலாம் என்பது. இந்தக் கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வந்திருக்கிறது. இதைப் பற்றி பிலிம் இன்டஸ்ட்ரீஸ் என்கொயரி கமிட்டி பரிந்துரைக்கிறது, அந்த அடிப்படையில் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக இரண்டு நோக்கங்களைக் கூறியிருக்கிறோம். ஒன்று வரி ஏய்ப்பதை தடுக்க வேண்டும் என்பது. இன்னொன்று, இந்த இன்டஸ்ட்ரீஸை வளர்ப்பது என்பது. இதில் ஒரு முறையை நாம் கொண்டு வந்திருக்கிறோம், அதாவது வரி ஏய்ப்பை தடுப்பது என்பது, அதற்காக இந்த 'பீஸ் ஆஃப் லெஜிஸ்லேஷன்' கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால் இந்த இன்டஸ்ட்ரீஸை வளர்ப்பது எப்படி? 1974-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது. என்கொயரி கமிட்டி பல ஆலோசனைகளை சொல்லியிருக்கிறது. அதையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆனால் இப்போது என்ன செய்திருக்கிறார்கள் ? இப்போது வசூல் ஆவதை கம்பவுண்டிங் முறை மூலம் வசூல் செய்ய வகை செய்திருக்கிறோம். ஆரம்பத்தில் இந்த என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் என்று 1926-ல் கொண்டு வந்த போது, இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்காக இலாகாவுக்கு என்று 10 சதவீதமும் மீதி 90 சதவீதத்தை லோக்கல் அத்தாரிட்டிக்கும்—அதாவது உள்ளாட்சித் துறைக்குக் கொடுப்பது

1978 சனவரி 10] [திரு. க. சுப்பு]

என்கின்ற அளவில்தான் ஆரம்பத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பின்னால் இதில் அதிகமான அளவில் வருமானம் வருகிறது என்று தெரிந்த பின்னால் அரசாங்கம் இதில் சர்சார்ஜ், ஷோடாக்ஸ் என்று பல சார்ஜ்களை போட்டது. இதனால் என்ன ஏற்பட்டது என்றால் எந்த விதத்தில் எல்லாம் கணக்குகளை மாற்றி எழுதி அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருந்தார்கள் இதனால் இந்த இன்டஸ்ட்ரீஸ் நசுங்கிப்போய்விடக் கூடிய நிலைமை இருக்கிறது என்றும் கூறப்பட்டது, சட்ட சபையில் கூட முன்பு சொல்லப்பட்டது, இது பொன்முட்டையிடும் வாத்து என்பதற்காக இதனுடைய கழுத்தையே நெரித்துவிடக்கூடாது என்று பலர் இங்கே வாதாடினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் திரு எட்மண்ட் அவர்கள் அப்போது இங்கே குறிப்பிட்டார்கள். அதிகமான வாடகை நகரிலுள்ள தியேட்டர்களில் வசூல் செய்கிறார்கள். வீட்டு வாடகைக்கு கட்டுப்பாடுச் சட்டம் இருப்பது போல். இதற்கும் ஏன் ஒரு கட்டுப்பாடுச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்டார்கள். அப்படி கேட்டவர்கள் இன்றைக்கு இங்கே ஆட்சியில் இருக்கிறார்கள். அவர் ஆணையிட்டால் அது நடந்துவிடும். அந்த முறையில் ஒரு சட்டத்தைக் கூட கொண்டு வந்துவிடலாம்.

இப்போது காம்பவுண்டு செய்திருக்கின்ற முறையைப் பார்த்தாலும், ஏரியாக்கள் வாரியாக நிர்ணயித்திருக்கிறார்கள். Gross Collection Capacity of the Theatre சில ஏரியாக்களுக்கு 20 முதல் 27 சதவீதம் என்றும் சில ஏரியாக்களுக்கு 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் என்றும், டெம்பரரி தியேட்டராக இருந்தால் 21 சதவீதம் என்றும், கிராமங்களாக இருந்தால் 14 ஷோக்கள் என்றும் காம்பவுண்டு செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் கிராமங்களில் உள்ள தியேட்டர்களுக்கு 10 ஷோக்கள் என்று வைத்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதை இப்போது 14 ஷோக்கள் என்று ஆக்கிவிட்டால் கிராமப்புறங்களில் உள்ள தியேட்டர்கள் வளர்ச்சி அடைய முடியாது.

கிராமங்களிலே உள்ள தியேட்டர்களினால் இப்போது உள்ளாட்சியினருக்கு வருமானம் வருவது கிடையாது. வரிப் பணத்தை இப்போது அதிகாரிகள் தான் எடுத்துக் கொள்கிறார்கள். இப்படி டாக்ஸ் இவேஷனுக்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு வரக்கூடிய பணமும் போகிறது; மக்களுக்கு கிடைக்கக்கூடிய வசதியும் இல்லாமல் போகிறது. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

ஆனால் இன்றைக்கு இப்படிப்பட்ட மோசமான நிலைதான்
இருக்கிறது. ஊழல் நடக்கக்கூடாது, தவறுகள் நடக்கக்
கூடாது என்ற அடிப்படையிலே, அதைத் தடுப்பது என்றுதான்
இது கொண்டு வரப்பட்டது. ஆனால், இப்போது மேலும்
தியேட்டர்காரர்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். இப்போது
வருமானம் எங்கே வருகிறது ? இன்றைக்கு புகழ்பெற்ற
நடிகர்கள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் போன்ற
வர்கள் நடிக்கின்ற படங்களுக்குத்தான் மூன்று ஷோவும்
ஓடுகிறது, அவைகளில்தான் கிராஸ் கலெக்ஷன் கபாசிடிக்கு
படங்கள் ஓடுகின்றன. ஆனால், இப்போது முதல் அமைச்சர்
அவர்கள் நடிக்க மாட்டார்கள். முன்னாலே, அவர்கள்
நடித்ததைத் தான் நான் சொல்கிறேன். இவையெல்லாம்
அவையின் முன்னவர் அவர்களுக்குத் தெரியும், நான்
சொல்ல வேண்டியதில்லை. சாதாரணமாக ஒரு தியேட்டர்
புல் கபாசிடிக்கு ஓடினால் 25 சதவீதம், 20 சதவீதம் போடு
என்றால் முடியுமா? 10 சதவீதத்துக்கு கீழே வர வேண்டும்.
14 சதவீதம் என்று சொல்வதுகூட சரியல்ல. அதற்குமேலே
என்றால் முடியாது. இந்த வருமானத்தை வைத்துக்கொண்டு
தான் பஞ்சாயத்துக்களும், முனிசிபாலிடிகளும் ஆட்சி
நடத்த வேண்டியிருக்கிறது. இப்போது அவர்களால் சம்பளம்
கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆசிரியர்கள் போன்ற
சிப்பந்திகளுக்குகூட அவர்களால் சம்பளம் கொடுக்கமுடியவில்லை.
உள்ளாட்சித் துறையிலே வருமானம் வந்தால்தான், அவர்
களால் சம்பளம் கொடுக்க முடியும்; நிர்வாகத்தை நடத்த
முடியும். இதையெல்லாம் மாற்றியமைப்பதற்காகத்தான்,
இது கொண்டு வரப்பட்டது.

அதே சமயத்தில் அதிகாரிகள் தொல்லை இருக்கக் கூடாது,
டாக்ஸ் இவேஷன் இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டு
வரப்பட்டது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால்,
அதே நேரத்திலே இப்போது 1939 ஆம் ஆக்டின் பிரகாரம்,
புதிதாக ரூல்ஸ் போட்டிருக்கிறார்கள். அதிலே, கிராஸ்
கலெக்ஷன் கபாசிடி என்ன என்று போட்டுவிட்டு, இப்படி
ஏன பார்க்க வேண்டுமென்று தெரியவில்லை. இப்படி போட்டு
விட்ட பிறகு, அவர்கள் யாரை உட்கார வைத்தால் என்ன?
வேண்டுமானால், ஒரு ஹெல்த் ஆபீசரை அனுப்பி அது நல்ல
முறையிலே இருக்கின்றதா என்பதை வேண்டுமானால் பார்க்க
லாம். ஆனால், இந்த ஏ.சி.டி.ஓ. அல்லது டி.சி.டி.ஓ.
எல்லாம் போய் ஏன் பார்க்கவேண்டும் ? இப்படி இரண்டு
தரப்பிலே அதிகாரிகள் போவதால் அவர்கள் இரண்டு பேர்களை
யும் கவனித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது அது
நல்லதல்ல. அப்படிச் செய்தால் இந்த பிலிம் இண்டஸ்ட்ரியே
மூடிவிட வேண்டி வரும். தியேட்டர்கள் மூடப்பட்டால்,
அதனால் வருவாய் வருகின்ற வாயிலும் மூடப்பட்டு விடும்.

எனவே, இந்த மாதிரி போட்டது முறையா என்பதை அரசாங்
கம் பரிசிலனை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

இந்த பில்லுக்கு திருத்தத்தைக் கொடுந்தவனுக்குகூட
இப்படிப்பட்ட ஒரு பாடா? நானே பம்பாய் மெயில் வேகத்
தில் போகிறேன். அனுமதி இல்லையென்று சொன்னால்
நிறுத்திக்கொள்கிறேன். பில்லில் நிறைய பேசக் கூடாது
என்பது முறையும் அல்ல; மரபும் அல்ல. இதெல்லாம்
செயலாளர் அவர்கள் சொல்லியிருப்பாரே? ஏன் சொல்ல
வில்லை. தெரியவில்லை. இதற்கு ஒரு டைம் லிமிட் கிடை
யாது. விரிவாகப் பேச அனுமதிக்க வேண்டும். இருந்தா
லும் பரவாயில்லை. சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். எக்ஸ்
பிளைன் பண்ணி பேச வேண்டாமா? எத்தனையோ விட்டுப்
போய்விட்டது, இருந்தாலும் $1\frac{1}{2}$ மணிக்குள் முடித்தாக
வேண்டும்.

கடைசியாக இந்த இண்டஸ்ட்ரியிலே உள்ளவர்களுக்கு வரிச்
சுமையைக் குறைக்கின்ற வகையிலே இந்த பில்லைக் கொண்டு
வரவேண்டும். டூரிங் டாக்கீஸ் படுகின்ற பாட்டைப் பற்றிச்
சொன்னார்கள். மாட்னி ஷோவுக்கு அவர்களை அனுமதிப்ப
தில்லை என்று சொன்னார்கள். அவர்கள் வேண்டுமென்று
கேட்டால் அலவ் பண்ணலாம். சிடியிலே மாத்திரம்,
இங்கிருக்கின்ற தியேட்டர்களிலே மட்டும் மாட்டினியும்
நடக்கிறது, இன்னும் கன்டினிவஸ் ஷோவும் நடைபெறு
கின்றது. அதை நடத்தலாம் என்று சொல்கிறார்கள்.
என்வே கிராமங்களிலே எல்லாம் அப்படி ஷோ நடத்தக்
கூடாது என்று சொன்னால், அவர்கள் எல்லாம் தொழிலை விட்டு
ஓடக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமைகளை
யெல்லாம் போக்கி, வரிச் சுமையையும் குறைக்கின்ற அளவிலே
நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR:
Mr. Deputy Speaker, Sir, I raise to reply to the points.................

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இன்னும் இரண்டு
பேர்கள் பேச வேண்டியிருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. கே. நாராயணசுவாமி முதலியார் :</u>
''கான்ஸ்டிடியூஷன் அப்ஜெக்ஷன்'' பற்றி ஏதோ சொன்னார்கள்.
அதற்கு மட்டும் 'ரிப்ளை' சொல்லி விடுகிறேன்.

Sir, I rise to speak on the principle and constitutional objections raised
by the hon. Member, Thiru Suppu, namely, that these Ordinary
powers should not have been resorted to for want of urgency in this

matter. Urgency, what is the urgency, in this matter ? This legislation was actually enacted on the 2nd December 1977 and it was brought into force on the 26th December 1977.

I answer so far as these two allied objections raised by the hon. Member, Thiru Suppu are concerned. So far as the criticism of merits is concerned, the Hon. the Finance Minister will reply in his own characteristic and effective manner.

I would like to draw the attention of the Hon. Members to article 213 of the Constitution in regard to powers of the Governor to promulgate Ordinances during the recess of the Legislature. Article 213 says —

213(1) If at any time, except when the Legislative Assembly of a State is in session, or where there is a Legislative Council in a State, except when both Houses of the Legislature are in session, the Governor is satisfied that circumstances exist which render it necessary for him to take immediate action, he may promulgate such Ordinances as the circumstances appear to him to require".

Provided that the Governor shall not, without instructions from the President, promulgate any such Ordinance.

[பிற்பகல் 1-30]

This is the general power where the Governor can enact in this context. The only other requirement is under clause (2) of Article 213. " An Ordinance promulgated under this article shall have the same force and effect as an Act of the Legislature of the State assented to by the Governor, but every such Ordinance shall be laid before the Legislative Assembly of the State, or where there is a Legislative Council in the State, before both the Houses, and shall cease to operate at the expiration of six weeks from the reassembly of the Legislature or if before the expiration of that period a resolution disapproving it is passed by the Legislative Assembly and agreed to by the Legislative Council, if any upon the passing of the resolution or, as the case may be, on the resolution being agreed to by the Council, and " ....This is the constitutional requirement of placing before the Legislative Assembly. I may bring to the notice of the Hon'ble House the new clause (4) of Article 213.

" Notwithstanding anything in this Constitution, the satisfaction of the Governor mentioned in clause (1) shall be final and conclusive and shall not be questioned in any court on any ground ".

Clause (4) has been brought into operation by Section 3 of the Constitution Thirty eigth Amendment Act, 1975. So from 1975 it is not open

even to a Court to scrutinise the reasons for what might be called the Governor's satisfaction for promulgating an Ordinance. Therefore, it is entirely a matter for the satisfaction of the Governor, and they need not be set out in any great detail.

The preamble says: "WHEREAS the Legislature of the State is not in session and the Governor of Tamil Nadu is satisfied that circumstances exist which render it necessary for him to take immediate action for the purposes hereinafter appearing". So, the preamble is there. The Governor is satisfied and the circumstances need not be catalogued in the form of an Ordinance. So, there is the self-evident imprint of the satisfaction of the Governor that there are circumstances which exist, which render it necessary for him to take immediate action for the purposes hereinafter appearing. 'Now, THEREFORE in exercise of the powers conferred by clause (1) of Article 213 of the Constitution, the Governor hereby promulgates the following Ordinance. "—

This is how the Ordinance has come into effect under the constitutional provisions. The Governor has promulgated it in accordance with the provisions of the Constitution—Article 213 (1) and (4) There is the mention of the circumstances which exist and which gives satisfaction to the Governor who promulgated the Ordinance.

So far as the second part of the criticism is concerned, the Ordinance was promulgated on the 2nd December 1977. But it was no doubt brought into force only on the 26th December 1977. But the necessity for bringing it into force on 26th December was brought about, was occasioned by this reason viz., that Rules had to be provided for, and had to be legislated under the rule making power. The Rules under the Tamil Nadu Entertainments Tax Act 1939 (Tamil Nadu Act X of 1939) to give effect to the provisions of the Ordinance, were published on the 19th December, 1977. Under Rule 32(1)(I) of the said Rules " Every proprietor who opts to pay tax under the compound rate has to apply to the Entertainment Tax Officer in form III (B) at least 7 days prior to the commencement of the week from which he has decided to make payment ".

[Consequently the Ordinance is published.] Because the rules were published on the 19th December, again 7 days had to be necessarily put through. Because there was the provision of one week for payment, the Ordinance was brought into force a week after the 19th December 1977, i.e., on the 26th December 1977. So, the cataloguing of the dates and the reasons for these dates would certainly justify the issue of the Rules which have come into effect on the 26th December 1977.

[திரு. கே. நாராயணசுவாமி முதலியார்] [1978 சனவரி 10

My friend also made a passing mention that the reasons have not been elaborately set out. I request hon. Member Thiru Suppu to read the statement under Rule 21(A) of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which had necessitated the promulgation of the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Ordinance 1977, promulgated as Tamil Nadu Ordinance (No.) 5 of 1977. I want to read the Statement under rule 91A of the Tamil Nadu Legislative Assembly Rules.

"The Film Industry Enquiry Committee, constituted by the Government in the year 1975, recommended as a measure of preventing evasion of tax by proprietors of cinematograph exhibitions, the compulsory levy of a fixed tax per show in lieu of the existing taxes levied under the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) The film industry has also repeatedly represented for the introduction of a scheme for the composition of taxes. The Government examined the question and announced their intention to introduce a consolidated levy in lieu of the entertainment tax and show tax accordingly. "The Government decided to introduce a gross levy per show based on the gross collection capacity of the theatres for the temporary (touring) theatres and the permanent and semi-permanent theatres in Municipalities, Grades II and III, in Selection Grade and other Panchayat Towns and in Panchayat Villages.

The Government also decided to provide for an option to the proprietors of cinematograph exhibitions to compound the above tax by paying at a different percentage of the gross collection capacity of the theatres for a fixed number of shows per week, irrespective of the number of shows conducted in a week."

The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Ordinance TNO. 5 of 1977 was accordingly promulgated. As the Legislature was not in session the Ordinance was promulgated. It was published in an Extraordinary Gazette of the Tamil Nadu Government, dated 2nd December 1977 the Ordinance has come into force on the 26th December 1977."

So, all the reasons for the promulgation of the Ordinance have been set out in great detail. " The Governor has satisfied himself It is final and conclusive. There is no authority contemplated under the Constitution of India to question the legality and validity of the satisfaction of the Governor. Thank you.

திரு. க. சுப்பு: காரணங்களை எக்ஸ்பிளெய்ன் பண்ண வேண்டும்.

1978 சனவரி 10]

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir.............

Mr. DEPUTY SPEAKER : The Hon'ble Member may please sit down.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir, if you have got any objection I do not want insist that I should speak. What I submit is this. The explanation given by the Hon'ble Law Minister has given rise to many a constitutional issue. The Members must be given their right to explain, because the promulgatory rights of the Governor to issue an Ordinance has been brought for discussion. There are certain basic constitutional issues which have been laid before the House. Therefore, every Member must have a right to explain. But the Hon'ble Law Minister has cited Article 213. Article 213 is a Constitutional provision which deals with extra legislative right which might be invoked against the Constitutional powers exercised by the Governor under Article 213, but not the inter-legislative rights. We are exercising our rights as Members of the Legislature. It is only by way of exercising the right of a Member of this House, the Hon'ble Member has raised some issues. I beg to differ from the Minister.

[பிற்பகல் 1-40]

That Article is relevant only to the persons outside the House. A member of the society can move the Court against the Ordinance issued by the Governor but a Member of the House has got every right to question it. Let the record be straight.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Sir, on a point of clarification. As regards the point raised by the hon. Member, Thiru Latheef, I would refer to the Preamble of the Ordinance itself. It says:—

"Whereas the Legislature of the State is not in session and the Governor of Tamil Nadu is satisfied that circumstances exist which render it necessary for him to take immediate action for the purpose hereinafter appearing ;

(This is the language contained in sub-clause (1) of Article 213.)

"Now therefore, in exercise of the powers conferred by clause (1) of Article 213 of the Constitution, the Governor hereby promulgates the following Ordinance ....

I am only quoting from the Ordinance.

Thiru M. A. LATHEEF: I am not questioning the mental attitude of His Excellency the Governor and his satisfaction about the necessity of issuing the Ordinance during the intervening session. That is not the point. My point is that a Member of this House has got every right to question the way in which the Ordinance was issued.

[1978 சனவரி 10

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கிற மசோதா, கவர்னரால் பிறப்பிக்கப்பட்ட ஆர்டினன்ஸை ரீப்ளேஸ் செய்வதற்காக. ஆக அது குறித்துத்தான் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆர்டினன்ஸ் பிறப்பிப்பதற்கான உரிமை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைப்பற்றி சட்ட அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லியாயிற்று. ஆகவே, அவருக்கு இருக்கிற உரிமையைப்பற்றி இந்த மன்றம் கேள்வி கேட்கப் போவதில்லை, உள்ளேயும் கேள்வி கேட்கப் போவதில்லை, வெளியேயும் கேள்வி கேட்கப் போவதில்லை.

ஆர்டினன்ஸ் என்ற முறையில் இருப்பதை மாற்றி மசோதா என்ற முறையில் கொண்டு வர வேண்டுமென்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. சிக்கலைக் கிளப்ப வேண்டுமென்றால் ஆயிரம் சிக்கல்களைக் கிளப்ப முடியும். நேரம் அதிகமாகிவிட்டது. ஆகவே, சுப்பு அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இரத்தினச் சுருக்கமாகப் பேசுவதில் கெட்டிக்காரர். ஆகவே, இரத்தினச் சுருக்கமாக விளக்கத்தைத் தருவதன் மூலம் சபைக்கு உதவ கேட்டுக் கொள்கிறேன், எனக்கும் உதவக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: இது முக்கியமான அரசியல் சட்டப் பிரச்னை. இந்தப் பிரச்னையில் நமக்குள்ள அதிகாரம் வேறு இடத்திற்கு வந்து விடுவதற்கு இந்த ஆர்குமெண்ட் உதவ வேண்டாம். கவர்னர் அவர்கள் ஆர்டினன்ஸ் இஷ்யூ செய்திருக்கிறார்கள்.

That is only on the advice of the Cabinet.

கேபினட்டினுடைய அட்வைசின்மேல்தான் செய்ய முடியும். ஒரு பிரச்னையை அவையில் உறுப்பினர்கள் எழுப்புகிறார்கள் என்றால், இந்த அவையில் உறுப்பினர்கள் அல்லாதவர்கள் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய அரசியல் சட்ட விதியை சொல்லி, உரிமை இல்லை என்று வாதிடுவது அரசியல் சிக்கலை உருவாக்கிவிடும், அவைக்கு இருக்கின்ற உரிமையை வேறு ஒருவருக்குத் தந்து விடும் என்ற காரணத்தால்தான் சொல்கிறேன்.

1978 சனவரி 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

My submission is that the Article quoted by the Hon. Minister for Law is not relevant to the Members of this House. The Members have got every right to question the Ordinance. We should not be hamstrung by that Article and the rights of the Members of this Honourable House should not infringed. We have got every right to question the Executive.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமையில்லை யென்று சொல்லவில்லை. அதன்மீது பேசக்கூடாது என்றோ, கருத்துக்களைச் சொல்லக்கூடாது என்றோ சொல்லவில்லை. The hon. Member has the right....

திரு. எம்.ஏ. லத்தீப்: அதை சைட் பண்ண வேண்டிய அவசியமே இல்லை. அந்த ஆர்ட்டிக்கில் நமக்கு நாட் ரெலவண்ட்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, நமது லத்தீப் அவர்கள் தெரிவித்தப்படி, அது நமக்கு இங்கு தேவையில்லை.

We are a sovereign body and we can legislate on anything within purview and no power on earth can question it and on this point I do agree with him. But the point is that the intention of the Bill which has been introduced by me is to replace the Ordinance.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றிய பிரச்சனையோ, நடைமுறை பற்றிய பிரச்சனையோ அல்ல. எப்படிப்பட்ட பிரச்சனை என்றால், நீங்கள் ஒத்துக்கொண்டு தவறு நடந்திருக்கிறது. நாங்கள் திருத்திக்கொள்கிறோம். இனி அப்படி நடைபெறாமல் பார்த்துக்கொள்வோம் என்று சொன்னால், நாங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். சட்ட இலாகா வைத்திருக்கிறோம். அதில் தவறு நடந்திருக்கிறது என்று சொல்லுங்கள். சட்டத்தை எப்படிக் கொண்டு வரவேண்டும் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாமா? நீங்கள் Non-justiciable Ordinance issue பண்ணியிருக்கிறீர்கள். அதனால் கோர்ட்டுக்கே போக முடியாது. Satisfaction of the Governor என்றால் what does it mean? Satisfaction என்றால் qualified satisfaction வேண்டாமா?

It is also stated inBasu's Commentary on the Constitution of India—

" But though the Ordinance-making power is thus legally unfettered, there has been a move in Parliament to ensure that the Ordinance-making power of the President is not abused by the Executive to secure the passage of an ordinary measure by resorting to the Ordinance-making power, simply to avoid a vote......"

அதற்கு நான் வரவில்லை. ஓட்டை அவாய்ட் பண்ணுவதற்காக, நீங்கள் கொண்டு வருகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. 'or debate in Parliament'

அது இல்லாமலேயே குளோஸ் பண்ண வேண்டுமென்று கொண்டு வருகிறீர்கள். அதற்குத்தான் நான் வருகிறேன். இப்பொழுது நேரம் இல்லை, நேரம் இல்லையென்று சொல்லி, குளோஸ் பண்ணக்கூடாது.

'Rule 71 of the Rules of the House of the People now seeks to achieve the object by making the Government liable to account before Parliament if any such questionable use of the Ordinance-making power is made by Government. The rule provides—

(1) Whenever a Bill seeking to replace an Ordinance with or without modification is introduced in the House, there shall be placed before the House along with the Bill a statement explaining the circumstances which necessitated immediate legislation by Ordinance........

அதைத்தான் நான் இப்பொழுது சொல்கிறேன்.

Which necessitated immediate legislation by Ordinance ?

என்பதற்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் ரூல் 91-ஐ வாசித்தார்கள். அது உங்களையே மிஸ்லீட் பண்ணுகிற மாதிரி இருக்கிறது. அது எக்ஸ்பிளனேட்டரி ஸ்டேட்மென்ட்டாக வரக்கூடாது. ரூல்ஸ் அனுமதிக்கும்படியான நிலைமையை அதிலே வளர்க்கக்கூடாது.

(Mr. Speaker in the Chair.)

ஆர்டினன்சிலே இருக்கக்கூடிய ஒரு சென்டன்ஸை இதிலே எடுத்து விட்டார்கள். பிரிண்ட் ஆகும்போது, அந்த பாராவில் ஒரு சென்டன்ஸை எடுத்துவிட்டார்கள். அந்த சென்டன்ஸை மட்டும் டெலிட் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அது எரர். ஏனென்றால், பின்னால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால்,

'The tax payable was proposed to be fixed as a percentage ranging from 20 per cent to 27½ per cent of the gross collection capacity of the theatre for every show conducted........'

எக்ஸ்பிளனேட்டரி நோட்டிஸிலே அது விட்டுப் போனதால்,

'The Government have also decided to provide for an option to the proprietors of cinematograph exhibitions to compound the above tax....'

It is a mere reproduction of the explanatory statement embodied in the Ordinance and the Statement of Objects and Reasons embodied in the Bill.

இந்த இரண்டையும் ரீப்ரொட்யூஸ் பண்ணுவது கிராஸ் அப்யூஸ் ஆப் பவர். நீங்கள் அதைச் சொல்ல வேண்டாமா ? லெஜிஸ்லேச்சுர் செஷனிலே இல்லாதது. அது பல காரணங்களில் ஒரு காரணம்.

What is the necessity and what is the compelling situation ?

சட்டத் துறையிலே இருப்பவர்கள் சோம்பேறித்தனமாக இருக்கக்கூடாது. நான் வரிக்கு வரி கம்பேர் பண்ணிப் பார்த்தேன். சட்டத் துறையிலே இருப்பவர்கள் ரொம்ப சோம்பல் காரணமாக, ஒரே ஒரு சென்டன்ஸை மட்டு பிரின்டிங் எரரில் நீக்கிவிட்டு, இதைக் கொண்டு வந் விட்டார்களே தவிர, இனிமேலாவது கவனமாக இரு வேண்டும்.

What is the necessity to promulgate the Ordinance"? In disregard of the provisions, how can you bring forward legisla It is a gross misuse of the power conferred upon the Government the Constitution and the Rules—

வேறொன்றும் இல்லை. தவறு என்று சொல்லி விடுங்க நாங்கள் விட்டு விடுகிறோம். லா மினிஸ்டர் எல்லாவற்றை பார்க்க முடியாது. இது தவறுதலாக விடு பெற்று விட் என்று சொல்லுங்கள், விட்டு விடுகிறேன்.

[1978 சனவரி 10

[பிற்பகல் 1.50]

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிவிதிப்பின் மீது பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவிப்பதோடு, இங்கே கேளிக்கைவரி விதிப்பின் மூலமாக, பொன் முட்டையிடும் வாத்து என்பதற்காக, அதை ஒரே நாளில் கொல்லக்கூடாது என்பதைப் போல, இந்த வரிவிதிப்பின் மூலம் வரியை ஏமாற்ற முடியாது என்று செய்யப்பட்டிருந்த போதிலும் இதனால் பாதிப்பு என்னவென்று சொன்னால், கிராமப் புறங்களிலே இருக்கிற சினிமா கொட்டகைகள் மூடப்படு கின்ற அவல நிலை இருக்கிறது. காரணம் அங்கே நகரங்களைப் போல மேட்டனி ஷோ கிடையாது, நடைபெறுவதில்லை.

திரு. துரைமுருகன் : மிகவும் முக்கியமான பில். இதிலே பேச எங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரதான எதிர்கட்சி உறுப்பினர்கள் நிறைய பேர்கள் எல்லோரும் பேச வேண்டும் என்றால் இந்த அவையில் உள்ள எல்லோருக்கும் சம பங்கு கொடுத்துத்தான் முடிக்க வேண்டும். உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் ½ மணி நேரம் பேசி விளக்கம் அளித்துவிட்டார். மற்ற உறுப்பினர்களும் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றால் 4 மணி ஆனாலும் அவையின் அலுவல்களை முடிக்க முடியாது. எதிர்கட்சிக்கு இப்போது நேரம் இல்லை.

திரு. துரைமுருகன் : எங்கள் கட்சியைச் சேர்ந்த சுப்பு அவர்கள், ஆர்டினன்சு கொண்டு வந்தது சரிதானா என்பதைப் பற்றித்தான் பேசினார். இந்த விவாதத்தின் மெரிட்ஸ் அண்டு டிமெரிட்ஸ் பற்றி பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்த மசோதா கொண்டு வந்தது சரிதானா இல்லையா என்பதற்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால், இன்னும் மசோதாவின் மீது நீங்கள் எல்லாம் பேசி, மற்ற கட்சிக்காரர்கள் எல்லாம் பேசி முடிக்க 4 மணி ஆகும். நான் எப்படித்தான் இந்த அவை யைக் கன்ட்ரோல் பண்ணுவது? நீங்கள் எல்லாம் பேசி பிறகு ஆளும் கட்சியிலே ஒரு 5 பேர்கள் பேசவேண்டுமென்று சொன்னால் அவையை எப்போது முடிப்பது? இதற்கு அலுவல் ஆய்வுக் குழுவிலே மாலையிலும் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கலாம். ஆகவே என்மீது தவறாக கருதக் கூடாது.

திரு. துரைமுருகன் : பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்த பில்லில் மெரிட்ஸ், டிமெரிட்ஸ் பற்றி பேச முடிய வில்லை. வேறு யாரையும் விடாவிட்டாலும் கணேசனையாவது பேச அனுமதியுங்கள்.

1978 சனவரி 10]

திரு. எஸ். கணேசன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாய்ன்ட் ஆப் ஆர்டர். இந்த அவையிலே நீங்கள் மட்டும்தான் உறுப் பினரா. மற்ற யாரும் உறுப்பினர்கள் இல்லையா? ஒரு நியாயத்தைக் கற்பிக்க வேண்டாமா நீங்கள்? தயவு செய்து நியாயத்தைப் பாருங்கள். சுப்பு அவர்களே நிறைய சொல்லி விட்டார் மற்ற கட்சிக்காரர்களுக்கு நேரம் கொடுப்பது தான் நியாயம்.

திரு. க. சுப்பு : பில்லிலே யாரும் பேசவில்லை. நான் திருத்த சட்டத்திலே பேசினேன் என்று சொன்னால் ஒத்துக்கொள்ளுகி கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தில் பேசு வதற்கு அரை மணி நேரம், இன்னும் மசோதாவில் பேச வேண்டுமானால் எவ்வளவு நேரம் ஆகும். அவையை எப் போதுதான் முடிப்பது?

திரு. எஸ். கணேசன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆப் ஆர்டர். பில்லிலே பேசலாம், திருத்தத்தையும் ஒட்டிப் பேசலாம். நான் சொல்லும்போது திருத்தத்தின் மீதும் மசோதாவின் மீதும் பேசுங்கள் என்றுதான் சொன்னேன். அவர் பில்லிலே பேசினாரா, இல்லை திருத்தத்தின் மீது பேசினாரா என்று ஆராயத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, சுப்பு அவர்கள் பேசும்போது திருத்தத்தின் மீதும் பேசினார், மசோதாவின் மீதும் பேசினார், என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. க. சுப்பு: நான் ஆர்டினன்சை டிஸ்-அப்ரூவ் பண்ணு வதற்காகத்தான் சொன்னேனே தவிர, பில்லிலே நான் டீடெயி லாக பேச முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்புவையே கேட்கிறேன். இந்த அவையினுடைய நேரத்தை நான் பகிர்ந்தளிக்க வேண்டா மா? அல்லது எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நீங்கள் பேச லாம், மற்ற உறுப்பினர்கள் பேசாவிட்டாலும் கவலை இல்லை என்ற நிலையிலே இருக்கிறீர்களா. விளக்கம் நிறைய சொன்னீர் கள். இன்னும் அரை மணி நேரம் கூட நீங்கள் பேசுவீர்கள், பில்லிலே என்பது எனக்குத் தெரியும். ஆனால் பகிர்ந்து கொடுக்கும் பொறுப்பு என்னுடையது. நீங்கள் பேசினால், மற்ற உறுப்பினர்களும் பேசவேண்டும். தயவு செய்து ஒத் துழையுங்கள்.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்த கேளிக்கை வரியில் 'கம்பௌண்டிங் சிஸ்டம்' கொண்டு வரப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது, பாராட்டு தற்குரியது. ஆனால் அதே நேரத்தில் கிராமங்களில் இருக்கின்ற சினிமாக் கொட்டகைகள் இந்த முறையினால் பாதிக்கப்படு கின்றன. வாரத்திற்கு 14 ஷோக்கள் மட்டும் தான் நடத்த முடியும் என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால், பல சினிமா கொட்டகைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சேலம் ஆத்தூர் ராமச்சந்திரா தியேட்டர் ஒரு வருஷ காலமாக குளோஸ் ஆகி நடைபெறாமல் இருக்கிறது. வரி ஏய்ப்பை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டு வந்திருக்கும்படி யான இந்தத் திட்டத்தால் சினிமாக் கொட்டகைகளின் வரு மானம் பாதிக்கப்படுவதால், நகராட்சிகள், டவுன் பஞ்சாயத்து போன்றவைகள் எல்லாம் சினிமாக் கொட்டகைகளிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்து நிர்வாகத்தை நடத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, இவைகளும் பாதிக் கப்படுகின்றன. வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத் தகைய வரி ஏய்ப்பிற்கு தற்போது அபராதம் தான் விதிக்கப்படு கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் கூறிக்கொள்வேன், கேளிக்கை வரியானாலும் சரி, வேறெந்த வரியானாலும் சரி, வரி ஏய்ப்பவர்களை அரசாங்கம் கடுமையாக தண்டிக்க வேண்டும். ஆயுள் தண்டனை கூட விதிக்கலாம். இப்படிப்பட்ட வரி ஏய்ப் பவர்களுக்கு சாதாரண, சாராய வழக்குகளில் கொடுக்கப்படு கிற தண்டனையைப் போல வழங்காமல், இவர்களைப் பொது மக்களின் பார்வைக்குக் கொண்டுவர, அவர்களை நடுத்தெருவில் ஊர்வலமாகக் கொண்டு வந்தால் தான் இத்தகைய வரி ஏய்ப்பு களைத் தடுக்க முடியும்.

இந்த கம்பௌண்டிங் சிஸ்டம் கிராமங்களிலுள்ள சினிமாக் கொட்டகைகளை பாதிக்கிறது. மாட்டினி ஷோ நடத்த முடி யாத நிலை இருக்கிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து விதித்திருக்கிற வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் கிராம பஞ்சாயத்து போன்றவை வருமானக் குறைவு ஏற்படாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. வத்தீப் : தலைவரவர்களே, இந்த அவசரச் சட்டம் இங்கே சட்ட முன்வடிவாகக் கொண்டுவரப்பட்டிருக் கிறது. இந்த சட்ட முன்வடிவின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, ஆர்டினன்ஸ் இஷ்யூ செய்வது என்றால், அது சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லது சட்டமன்றம் அழைக்கப்படுவதற்கு நோட்டீஸ் அனுப்பப்படு

வதற்கு முன்பு தான் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல், சட்டமன்றம் கூடுகிறது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்ட உடனே, டெக்னிகலாக

Technica'ly, the House is brought into Session

என்பது தான் அதன் பொருள். சட்டமன்றம் கூட்ட அறிவிப்புத் தந்து விட்டு, பிறகு ஒரு ஆர்டினன்ஸ் இஷ்யூ செய்வது சாதாரணமாக நடைபெறக் கூடிய ஒன்று அல்ல. நோட்டீஸ் கொடுப்பது, சட்டமன்றம் கூட்டப்பட்டு விட்டது என்பது தவிர, குறிப்பிட்ட நாளில் கூட்டுகிறோம் என்பதற்கும் நாள் குறிப்பிடப் படுகிறது. அப்படி எப்போது நோடிபிகேஷன் செய்து விடு கிறார்களோ, அன்றைய தேதியிலிருந்து சட்டமன்றம் கூட்டப் படுகிறது என்பது தான் அரசியல் சட்ட விதி. அதை கவனத் தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

28-ஆம் தேதி சட்டமன்றம் கூட்டப்படுகிறது. இந்தச் சட்டம், 26 ஆம் தேதியிலிருந்து அமலாக்கப்படுகிறது— எஃபெக்ட் கொடுக்கப்படுகிறது. இரண்டு நாளில் இடையில் ஒரே நாள்—27-ஆம் தேதி—தான் இருக்கிறது. 28-ஆம் தேதி சட்ட மன்றம் என்றால், பொதுவாக, ஒரு நாளைக்கு முந்தியே சட்ட மன்ற உறுப்பினர்கள் வந்து விடுகிறார்கள். அப்போது தான் இதற்கு எஃபெக்ட் கொடுக்கப்படுகிறது என்றால், இது சரியா என்பதை யோசிக்க வேண்டும். நாம் செய்வது நமக்குத் தேவையாக இருக்கிறது, அவசரமாக இருக்கிறது என்ற காரணம் இருந்தாலும், அது சட்டப்படி செய்யப்படுகிறது என்ற உணர்வையும் உறுப்பினர்கள் பெற வேண்டும்.

[பிற்பகல் 2-00]

அது சட்டப்படி கான்ஸ்டிடியூஷனலைஸ் செய்யப்பட வேண் டும் என்பதுதான் என்னுடைய வாதம். இந்த விவகாரத்தில் செய்யப்பட்ட முறை, இனிமேலும் நடக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது என்பது என்னுடைய கோரிக்கையாக இருக் கிறது. குறிப்பாக இந்த அவையின் உரிமைகளும், மற்ற மரபு களும் பறிக்கப்படாத அளவுக்கு பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர, அது ஏதோ நாம் இன்றைக்கு இருக்கிறோம், நமக்குத் தேவைப்படுகிறது என்பதற்காக வாதப் பிரதிவாதங்களில் முறை யற்றது என்று சொல்லப்படுகின்ற நெறிகளை, சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது நல்ல முறையாக அமையாது. நாம் இருப்போம், செல்லுவோம். ஆனால் சட்டமன்றம் நிரந்தரமாக இருக்கும். சட்டமன்றத்தின் மரபுகளும் நிரந்தரமாக இருக் கும்.

ஆகவே, அவைகளைக் காக்கின்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். உறுப்பினர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு விட்ட பிறகு, 10 நாட்களுக்குப் பிறகு ஆர்டினன்ஸ் பாஸ் செய்து, அதற்கு 26-ஆம் தேதி இபெக்ட் கொடுக்கப்படுகிறது

என்றால் டெக்னிகலி அவுஸ் செஷனில் இருக்கும்போது அவுஸுக்கு சப்மிட் செய்யப்படுவதற்கு முன்னால் இபெக்ட் கொடுக்கப்படுகிறது என்றால், அது முறையற்றது என்று சொல்லிக்கொள்கிறேன். இதை யாரோ வேண்டுமென்று செய்தார்கள், இந்த அவையை மதிக்கக்கூடாது என்று செய்தார்கள் என்று சொல்லவில்லை. ஏதோ நடைபெற்று விட்டது. இனிமேலாவது சட்டத்துறை குறிப்பாக இதில் கவனம் செலுத்தி, சபாநாயகர் அவர்களும் இதில் கொஞ்சம் அக்கறை காட்டி பேரவையின் உரிமையையும், மரபுகளையும் காத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் வரவேற்கக் கூடியது. வரவேற்கக் கூடிய சட்டத்தில் இப்படி தவறு நடந்திருப்பது வருந்தக்கூடியது. கம்பௌண்டங் சிஸ்டம் இன்றைக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில், நல்ல முறையில் யோசித்து இந்த மாசோதாவைக் கொண்டு வந்திருப்பதன் மூலம், குறிப்பாக உள்ளாட்சித் துறையில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருமானத்திற்கு வழிவகை செய்யும் வகையில் அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் டூரிங் டாக்கீஸ்கள் இருக்கின்றன. அதன் வாயிலாகத் தான் கிராமத்தில் இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் கிடைக்கிறது. என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் மூலம் தான் பஞ்சாயத்துக்களுக்கு 90% வருமானம் கிடைக்கிறது. அப்படியிருக்கும்போது, கலெக்ஷனில் 15% அரசாங்கத்திற்கு என்று குறித்திருப்பது, சினிமா பார்க்கின்றவர்களின் எண்ணிக்கையை குறைக்குமோ, கலெக்ஷன் குறையக் கூடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதாக விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆகவே பழையபடி 10% என்று குறைத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாற்று திட்டத்தைக் கொண்டு வந்தால், அது அவர்களுக்கு நல்லதாக இருக்கும். ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருமானத்தை அதிகமாக்கும் சூழ்நிலையை உருவாக்கும் என்று சொல்லி என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : தலைவரவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பரிசீலனைக்கு எடுத்து முடிக்க வேண்டும் என்று நான் கேட்டேன். அதைக் குறித்து கனம் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நான் அவை பற்றி சுருக்கமாக சில செய்திகளை அவையின் கவனத்திற்கு வைத்துவிட்டு அமர விரும்புகிறேன்.

அரசின் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி மன்றங்களின் வருவாய்க்கு கேளிக்கை வரியும், அதனுள்ளடங்கிய பிற வரிகளுமே ஒரு முக்கிய ஆதாரமாக இருந்து வருகிறது. இம்மாநிலத்தில் கேளிக்கை வரிவிதிப்பு விகிதம் அதிகமாயிருப்

பதற்கான காரணங்களை அறிய முற்படும்போது, அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதியைப் பெருக்கவும், ஒரு வகையில் மது விலக்கினை மீண்டும் அமுல்படுத்துவதால் ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடு செய்யும் வகையிலும், மற்றொரு வகையில் அத்தியாவசியப் பண்டங்களின் மீது அதிகமாக வரி விதிப்பு செய்ய இயலாததாலும் மற்றும் மாநில அரசுக்கு வரிவிதிக்கக் கூடிய வழிவகைகள் குறைவாக இருப்பதுமே என்பது எல்லோருக்கும் தெரியும். திரைப்படத் தொழிலின் மீதான அதிக அளவிலான கேளிக்கை வரி விதிப்பினை கணக்கிடும்போது, குறிப்பிடத்தக்க வகையில் வரி ஏய்ப்பு இருந்து வருகிறது.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒன்று வரி ஏய்ப்பு என்பதை உறுப்பினர்கள் அறிவர். கேளிக்கை வரி ஏய்ப்பானது குறிப்பாக ஊராட்சி பகுதிகளிலுள்ள தற்காலிகமான மற்றும் நிலையான திரையரங்குகளில்தான் அதிக அளவில் நடைபெற்றுவருகிறது என்பது தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாலும் மற்றும் அதிகாரிகளாலும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது.

கேளிக்கைவரி விதிப்பினைப்பற்றி ஆராய்ந்தபோது இப்பிரச்சினை குறித்து பரிசீலித்த திரைப்படத் தொழில் விசாரணைக் குழு தனது முடிவுரைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருக்கிறது. அதிலே அனைத்தையும் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. குறிப்பாக, அவையின் கவனத்திற்கு வைக்கவேண்டிய ஒன்றை மட்டும் வைக்க விரும்புகிறேன். அந்த விசாரணைக் குழு தெரிவிப்பது:

“தமிழ்நாட்டில் திரைப்படத்தொழில் சீரிய முறையில் நடைபெற வேண்டுமானால் அத்தொழில் தற்போதைய கேளிக்கை வரி அமைப்பினால் பாதிக்கப்படக்கூடாது என்னும் கருத்தை இக்குழு ஏற்கிறது. பெரும் அளவில் கேளிக்கை வரி ஏய்ப்பை நாடெங்கிலுமுள்ள தற்காலிக திரையரங்குகள் பொதுவாக செய்து வருகின்றன என்ற உண்மையையும் இக்குழு ஏற்கிறது.”

கேளிக்கை வரியை குறைப்பதால் மட்டும் தானாக திரைப்படம் பார்க்க வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்க இயலாது என்கிற முடிவினை ஏற்றுக்கொண்ட இக்குழு மேலும் கூறுகையில், “கேளிக்கை வரி ஏய்ப்பினை முழு அளவில் தடுக்கப்பட முடியாவிட்டாலும் வரி ஏய்ப்பினை குறைக்க கடுமையான நடவடிக்கை திட்டம் ஒன்றினை பரிந்துரைப்பதுதான் தற்போது ஒரு முக்கிய அம்சமாகும்” என்றும் அவ்வாறு வரி ஏய்ப்பு தடுத்து நிறுத்தப்படுமாயின் ஓரளவு வரி விகிதத்தினைக் குறைக்கக்கூடும் என்னும் கருத்து ஒருவிதத்தில் நியாயமானதாக தோன்றும் என்றும் தெரிவித்துள்ளது.

''வரி ஏய்ப்பைக் குறைப்பதற்கு மிகவும் பொருத்தமான முறையில் கேளிக்கை வரிக்குப் பதிலாக காட்சி வரி (இது காட்சி ஒன்றுக்கு என்று விதிக்கப்படலாம்) விதிக்கலாம் என்றும், அரசுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பைத் தடுக்க வேண்டுமாயின், காட்சிவரி கட்டாயவரியாக விதிக்கப்படவேண்டும்'' என்றும் இக்குழு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறது.

இந்த வரிவிதிப்பு விருப்பப்படி (ஆப்ஷனல்) கட்டுவதாக ஆக்கினால் வரி இழப்பு ஏற்படும். இதனால் படம் காட்டுபவர்கள் பலனடைவார்கள். கிராம ஊராட்சி பகுதிகளிலுள்ள தற்காலிக (டூரிங்) மற்றும் நிலையான திரையரங்குகள் ஆகியவைகள் கடைப்பிடிக்கும் பெருவாரியான கேளிக்கை வரி ஏய்ப்பினையும் குறுகிய காலத்தில் அவைகளை பார்வையிடுவதில் அதிகாரிகள் அடையும் சிரமங்களையும் கணக்கில்கொண்டு கிராமப்புற பஞ்சாயத்து மட்ட அளவிலுள்ள தற்காலிக (டூரிங்) மற்றும் நிலையான திரையரங்குகள் சம்பந்தப்பட்ட வகையிலாவது ஒரு படக்காட்சி வரியினை விதிப்பதற்கான ஒரு ஆரம்பத்தை அரசு பயனுள்ள வகையில் உண்டாக்கவேண்டுமென இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த வரியானது, பலவகையான கேளிக்கை வரிகளுக்கு பதிலாகும். மற்றும் இது விருப்பத்திற்குப் பதிலாக கட்டாயமாகும். மற்ற இடங்களிலுள்ள பகுதி நிலையான மற்றும் நிலையான திரையரங்குகள் சம்பந்தமாக ஒரு காட்சி வரியையும் நிர்ணயிக்கலாம். ஆனால் இது விருப்பத்திற்கு இணங்கியதாக அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று இக்குழு மேலும் பரிந்துரைத்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள தற்காலிக (டூரிங்) நிலையான திரையரங்குகள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள வரி ஏய்ப்பினை இதனுடன் ஒப்பிடும்போது இந்த திரையரங்குகளில் வரி ஏய்ப்பு அவ்வளவு அதிகமானதல்ல என்றும் இக்குழு கருதியது.

இந்த அரசு பதவியேற்ற காலந்தொட்டு படத் தொழில் துறையிலிருந்து கேளிக்கை வரிகளிலிருந்து விடுவிப்புகள் கோரியும் கேளிக்கைகள் மற்றும் படக் காட்சிகள் சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட வரியை வரியாக விதிக்க வேண்டுமென்ற படத் தொழில் துறை விசாரணைக் குழுவின் பரிந்துரையினை அமுலாக்கவும் வேண்டுமென அடிக்கடி கோரிக்கைகள் வந்தவண்ணமுள்ளன.

1977—78 ஆண்டில் நிதிநிலை அறிக்கையை அரசு சமர்ப்பித்த போது, குறைந்த விலையிலுள்ள டிக்கெட்டுகள் மீதான வரியினை குறைக்கும்பொருட்டு கேளிக்கை வரி மீதிருந்த கூடுதல் உபரி வரியை குறைத்து இத்துறைக்கு ஒரு நிவாரணம் அரசு கொடுத்தது. திரையரங்குகள் மொத்த வருமானத்தின் அடிப்படையில் ஒரு காட்சிக்கு ஒரு குறிப்பிட்ட வரியை விதிக்க வேண்டும் என்ற

படத்தொழில் துறை விசாரணைக் குழுவின் பரிந்துரையை அரசு விரைவில் அமுலுக்கு கொண்டுவருமென அப்போது உறுதியளிக்கப்பட்டது.

அதன்படி கடந்த மாதம் ஒரு அவசரச் சட்டத்தை அரசு வெளியிட்டது, அதன் சரத்துக்கள் 26—12—1977 முதல் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டன.

நங்கள் முன் வைக்கப்பட்டுள்ள மசோதாவானது அந்த அவசரச் சட்டத்தை சட்டமாக இயற்ற வகை செய்கிறது. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகள் எல்லா வகை நகர பஞ்சாயத்துக்கள், மற்றும் எல்லா கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளிலுள்ள தற்காலிக (டூரிங்) நிலையான மற்றும் பகுதி நிலையான திரையரங்குகள் ஒவ்வொன்றின் மொத்த இருக்கைகளின் மேல் மொத்தமாக வசூலாகக்கூடிய வருவாயின் அடிப்படையில் ஒரு காட்சிக்கு ஒரு குறிப்பிட்ட வரியையே விதிக்க வேண்டுமென்ற முறையினை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திரையரங்குகளின் உரிமைதாரர்களுக்கு வாரத்திற்கு ஒரு குறிப்பிட்ட காட்சிக்களுக்கான வரியை குறைந்த விகிதத்தில் இணக்கம் செய்து கொள்ள வழி செய்யப் பட்டுள்ளது.

[பிற்பகல் 2-10]

இந்த வரிவிகிதமானது, பல வகையான திரையரங்குகளின் மொத்த வருவாயை வைத்து பரிசீலித்துப் பின்னர்தான் முடிவு எடுக்கப்பட்டது. 1974—75, 1976—77 ஆகிய முழு ஆண்டுகளிலும் 1975—76 ஆம் ஆண்டில் ஒரு பகுதிக்கும் மாநிலத்திலுள்ள அனைத்து திரையரங்குகளும் அரசுக்கு செலுத்திய வரி பற்றிய ஒரு புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. இப்புள்ளி விவரங்களை பரிசீலித்தே வரி விகிதங்களைப் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

மேற்கண்டவற்றை நிறைவேற்றவும் கேளிக்கை வரி ஏய்ப்பினை தடுக்கும் நோக்கத்தோடும் வரிச் சட்டத்தின் தண்டனை ஷரத்துக்களை மாற்றி அமைக்கவும் இம்மசோதா வகை செய்கிறது.

ஆகவே இம்மாமன்றத்தின் ஒப்புதலுக்கு இந்த மசோதாவினை வைக்கிறேன்.

டூரிங் சினிமாவைப் பொறுத்தவரையில் திரு. சுப்பு அவர்கள் சில கருத்தை தெரிவித்தார்கள், வேறு சிலரும் கருத்து தெரிவித்தார்கள். மாட்டினி ஷோவை டூரிங் தியேட்டர்களில் அனுமதிக்க முடியுமா என்பதைப்பற்றி கேட்டார்கள். அப்படி

அனுமதிக்கலாமா என்பதைப்பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். வேறு இப்படிப்பட்ட ஆர்டினன்ஸ் தேவையா என்பதைப்பற்றி சில சட்ட நுணுக்கங்களைப்பற்றி நண்பர் சுப்பு அவர்களும், அருமை லத்தீப் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இது முறையாக கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

ஏற்கனவே நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது, கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் அப்போது அறிவித்தது நினைவில் இருக்கும் என்று நம்புகிறேன். ஆளுநர் அவர்கள் அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இதைச் செய்தார் என்று சொல்லி, சபைக்கு இருக்கின்ற அதிகாரங்களை ஆளுநர் அவர்களுக்கு தந்து விடக்கூடாது என்று லத்தீப் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆளுநர் அவர்கள் இந்த ப்ரொமல்கேஷன் ஆஃப் ஆர்டினன்ஸ் ஏன் கொண்டு வந்தார் என்பதை என் பேச்சின் ஆரம்பத்திலேயே சொன்னேன்.

சுமார் 25 கோடி ரூபாய் புத்தகத்தில் வராத அளவுக்கு வரி ஏய்ப்பு கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு இருக்கின்றன.

குறிப்பாக இரண்டாம் கிரேட் முனிசிபாலிட்டி, மூன்றும் கிரேட் முனிசிபாலிட்டி இவைகளில்தான் வரி ஏய்ப்பின் மொத்த குத்தகைதாரர்கள் உட்கார்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏய்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்காகவே இந்த மசோதா கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த மசோதாவின் உள்ளே நுழைந்து விவகாரங்களை தெரிந்து கொண்டதற்குப் பிறகு நண்பர் லத்தீப் அவர்கள் இந்த மசோதாவை வரவேற்று பேசினார், அதற்காக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் சுப்பு அவர்களும் இதை கடுமையாக விமர்சிக்கவில்லை.

இந்த மசோதா கொண்டு வருவதன் மூலமாக, திரும்பவும் பழையபடி அதிகாரிகள் வரத்தான் போகிறார்கள், தொல்லைகளும் இருந்து கொண்டுதான் இருக்கும், திடீரென்று சர்ச் செய்வது போன்றவைகள் இல்லாமல் இருக்குமா, இவற்றையெல்லாம் ரெகுலேட் செய்வதற்கு இடமிருக்கிறதா என்றெல்லாம் கேட்டார்கள். முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, வரி ஏய்ப்பு செய்கின்றவர்களை எப்படி சந்திப்பது, எப்படி இவர்களையெல்லாம் திருத்துவது என்பதற்கு இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே வரி ஏய்ப்பது தெரிந்து கண்டுபிடித்தால் 500 ரூபாய் அபராதம் என்றிருந்தது, இப்போது 1,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும்

Continuous habitual offender

வரி ஏய்ப்பதே பிறவிக்கடன் என்று நினைத்துக்கொண்டு அரசாங்கத்தை ஏய்ப்பது என்றிருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் ஆறு மாதம் முதல் ஓராண்டு வரை தண்டனை அளிக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த மசோதாவையும் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> கேளிக்கை வரி ஏய்ப்பு என்று சொல்லும் போது, பல இடங்களில்—டிராமாக்கள், எக்ஸிபிஷன்ஸ், ஸ்போர்ட்ஸ் ஈவன்ட்ஸ், சர்க்கஸ் ஷோ இவைகள் எல்லாம் நடைபெறுகின்றன, இவைகளுக்கு 1958-ம் வருஷ சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று இப்போதும் விதிவிலக்கு அளிக்கப்படுமா? இப்படிப்பட்ட பல இடங்களில் எவ்வளவோ வரி ஏய்ப்பு நடக்கிறது, இதற்கெல்லாம் விதிவிலக்கு இருக்கிறது. அது இப்போதும் இருக்கிறதா என்பதைத்தான் கேட்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> பொதுக்கூட்டங்கள் மாதிரி இப்படி ஏராளமாக நடந்து கொண்டிருக்கிறது..........

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> மன்னிக்க வேண்டும். பொதுக் கூட்டங்களை நாங்கள் கேளிக்கைகளில் ஒன்றாகக் கருதுவதில்லை. நான் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் பேசுகின்ற கூட்டங்களை கேளிக் கைகளில் ஒன்றாக மாற்றி விடாதீர்கள்.

ஏழைகளுக்கு எல்லாம் வரி போடுகின்றார்களே? இப்படிப் பட்ட சர்க்கஸ் போன்றவற்றிற்கு வரி போடக் கூடாதா? என்று சுப்பு அவர்கள் கேட்டார்கள். ஏற்கனவே அவர்களுக் கெல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது, போட்டுக் கொண்டும் வருகிறார்கள். இதெல்லாம் சுப்பு அவர்களுக்கே தெரிந்திருக்கு மென்று நம்புகிறேன். பொருட்காட்சியாக இருந்தாலும், சர்க் கசாக இருந்தாலும் இப்படி வரி போடப்பட்டு, அதற்கான கட் டணங்களை அவர்கள் அரசுக்கு கொடுக்கிறார்கள். அதிகமாகப் போட வேண்டுமென்று சொன்னால், அது பரிசீலிக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> நான் சொல்ல வந்தது. 1958 நோடிபி கேஷன்படி என்டர்டைன்மென்ட் டாக்ஸ் போடப்பட்டது. அதை எடுத்து விட்டார்கள். இப்போது ஏதாவது கட்டணம் என்கின்ற முறையில் வரி கொடுப்பார்கள் என்றால், அந்த முறையிலே இது பரிசீலிக்கப்படும் என்று சொன்னால் சரி.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> நாடகத்தைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள் கிறேன். நாடகம் இப்போது நசிந்துக் கொண்டிருக்கிறது. எனவே, அதற்கும் சுப்பு வரி போடவேண்டுமென்று விரும்புகின் றார்களா? எங்கே வரியைப் போடுவது என்ற ஒரு இலக்கணம் இருக்கிறது. அந்த இலக்கணத்தை இந்த அரசு பின்பற்றுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் கேட்பது, 'ஆர்டினன்சை' இஷ்யூ செய்யலாமா, இல்லையா என்பதல்ல. அசெம்பிளி 'கன்வீன்' செய்யப்படுகிறபோது, இப்படி ஒரு ஆர்டினன்ஸ் இஷ்யூ பண்ணலாமா என்பது, இது ஒரு பேசிக் கேள்வி. இரண்டாவது, ஒரு நாளைக்கு முந்தி இந்த ஆர்டினன்சைப் போடலாமா? லெஜிஸ்லேடிவ் பிசினசுக்கு நாம் பிரபரன்ஸ் கொடுக்கிறபடி, முதலில் ஆர்டினன்ஸ் போடப்பட்டு, பில்களை எடுத்துக்கொண்ட பிறகுதான், மற்ற பில்களை எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற பில்களை எல்லாம் எடுத்துவிட்டு கடைசியாக இந்த பில்லை இப்படி விவாதிப்பது சரியில்லை. எனவே, அசெம்பிளி கன்வீன் பண்ணுகிறபோது, ஆர்டினன்ஸ் போடலாமா என்பது ஒரு கேள்வி. மெம்பர்கள் இரண்டு நாட்களுக்கு முந்தி டியர்னஸ் அலவன்ஸ் பெறலாம் என்றிருக்கிறது...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் ஏற்கனவே சொல்லி விட்டீர்கள். என்ன ஆயிற்று என்று கேளுங்கள் ஏற்கனவேயே சொன்னதைத் திருப்பிச் சொல்கிறீர்கள். நேரம் அதிகமாகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ரெகார்டிலே ஏற வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதையெல்லாம் சொல்கிறேன். அசெம்பிளி கன்வீன் பண்ணுகிறதற்கு இரண்டு நாட்கள் முந்தியே டியர்னஸ் அலவன்சு மெம்பர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அப்படியானால், ஒரு நாளைக்கு முன்பே மெம்பர்கள் இங்கே இருப்பதாக அர்த்தம். எனவே, அன்றைக்கு ஒரு ஆர்டினன்ஸ் இஷ்யூ பண்ணலாமா, அது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : இப்படிப்பட்ட கேள்விகள் எல்லாம் ஏற்கனவே எழுப்பப்பட்டு, மேலவையும், இந்த அவையும் கூடிக்கொண்டிருக்கின்ற நேரத்திலேகூட ஆர்டினன்ஸ் இஷ்யூ பண்ணலாம் என்று தீர்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. அதனால் தான் நாங்கள் இதை எழுப்பவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போது ஒரு புதிய குழப்பமே உருவாக்கப்படுகிறது என்று எண்ணுகிறேன். அப்படி இந்த ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டது டிசம்பர் 26 ஆம் தேதி. இது நண்பர் லத்தீப் அவர்களுக்கு தெரியும். அதற்குப் பிறகுதான் அறிவிப்பு வருகிறது. அதற்குப்பிறகு இந்த சபை கூடுகிறது. ஆனால், சுப்பு அவர்கள் இப்போது பேசியது லத்தீப் அவர்களுக்கு உடன்பட்டதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆனால், சபை நடந்து-கொண்டிருக்கும்போது ஆர்டினன்ஸ் போடலாம் என்ற தத்துவத்தில் சுப்புவோடு நான் இணையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மரபு இருக்கிறது. எனவே, சபாநாயகர் அவர்கள் தான் எங்களுக்கு அதைப்பற்றித் தெரிவிக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : 'பாசு' புத்தகத்தில் இப்படிப்பட்ட தீர்ப்பு இருப்பதை நான் படித்திருக்கிறேன்.

[பிற்பகல் 2-20]

திரு. சுப்பு அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி 'தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/78) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்"

என்று முன் மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

11. பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைகளுக்கா… திருத்தங்கள்.

(அ) தமிழ்நா… 1959-ம் ஆண்டு பொது விற்பனை வ… விதிகளின் கீழ் தி… செய்வது பற்றி வெளியாகிய அ… விப்பில் செய்யப்ப[illegible]ண்டிய திருத்தம் குறித்து.

திரு. க. சுப்பு : நான் கீழ்க்கண்ட திருத்தத் தீர்மானத்… முன்மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரி விதிகளின் 26-வது விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து 19—10—1977 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 22—9—1977 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 1464 ஆம் எண் அரசாணையில் வெளியாகி 2—12—1977 ஆம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப் பெற்ற அறிவிப்பில் கீழ்க்கண்ட திருத்தம் செய்யப் பெறவேண்டும் ;—

திருத்தம்.

In the Tamil Nadu General Sales Tax Rules, 1959, in the proviso to sub-rule (10) after the expression " Cash Memorandum " and before the expression " in respect of " the expression " approved or supplied by the Government " shall be inserted.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன். அரசாங்கம் கமர்ஷியல் டாக்ஸ் பற்றி ஏற்கனவே போட்டிருக்கக்கூடிய திருத்தம் முழுமையாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்—

Evasion of sales tax is done by Catering Establishments, Hotels and Restaurants by issuing bills but destroying the duplicates.

இப்படிப்பட்ட முறைகளில் ஹோட்டல்கள், ரெஸ்டாரண்டுகள் ஆகியவற்றில் சாப்பிடக் கூடியவர்களிடமிருந்து வாங்குகின்ற வரியைக் கட்டாமல் ஏமாற்றக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் திருத்தவேண்டும் என்பதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. தற்போது பில் கொடுக்கப்படுகிறது. கொடுக்கிற பில்லை ஒரு கம்பியில் குத்துகிறான். பிறகு அந்த பில்களை அடுப்பில் போட்டு விடுகிறான். அவர்கள் அந்த வரியைக் கட்டுவதே கிடையாது. உண்மையிலேயே டாக்ஸ் எவேட் செய்வதைத் தடுக்க வேண்டுமென்றால் அவர்கள் இஷ்யூ பண்ணக்கூடிய பில்களை சர்க்காரே அச்சடித்துக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு அவர்கள் ஜனங்களிடமிருந்து டாக்சை வசூலிக்கிறார்களே தவிர, அதைச் சர்க்காருக்குக் கட்டாமல் அவர்களே சாப்பிட்டு விடுகிறார்கள். ஹோட்டல்காரனும் அதிகாரிகளும் சேர்ந்து சாப்பிடுகிறார்கள். ஆகவே, காஷ் மெமோரண்டத்தை சர்க்கார் இஷ்யூ பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நண்பர் சுப்பு அவர்கள் இந்தப்பிரச்னையை நேற்றைக்கே இங்கு கொண்டு வந்தார்கள். அதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒத்துக் கொண்டு இன்றைக்கு இந்தப் பிரச்னையை கிளப்பினார்கள். நான் அவருக்குச் சுருக்கமாகத்

தெரிவிக்க விரும்புவது—உங்களது நோக்கம் நல்லதாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துவதில் இருக்கும் சிரமங்களையும், சிக்கல்களையும் அருள்கூர்ந்து புரிந்துகொள்ள வேண்டும். சர்க்காரே பில் அச்சடித்து, சீரியல் நம்பர் போட்டு வியாபாரிகளுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்வதானால்—கிட்டத்தட்ட இரண்டு லட்சம் டீலர்ஸ் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் இதை அச்சடித்துக் கொடுக்கிற வேலையில்தான் அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அது தேவையென்று வற்புறுத்த மாட்டார்கள் என்று நம்பி, வரியை முழுமையாக வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஓட்டலில் விற்கக்கூடிய உணவுப் பண்டங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் போடுவதில்லை என்று உத்தரவு போடப் பட்டிருக்கிறது என்று போன செஷனில் கனம் எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அப்போது ரயில்வே காரட்டரிங்கில் போடுவதாகச் சொன்னேன். இப்போது பார்த்தால் ஓட்டல்களிலும் அதைப் போட்டு வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள் ? என்ன டைரக்ஷன் ? என்ன முறை ? கேள்வி முறை இல்லையா ?

திரு. க. சுப்பு : மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னது போல் அவர்கள் வசூல் செய்கிறார்கள், ஆனால் சர்க்காருக்கு வருவதில்லை. அதிகாரிகளும் அவர்களும் சேர்ந்து எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். அந்த சேல்ஸ் டாக்சையே எடுத்துவிட்டால் கூட சாப்பிடுகிறவர்களுக்காவது உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; உணவுப் பண்டங்களுக்கு வரி இருக்கிறது என்று யார் சொன்னார்கள் ?

The Catering Restaurants, Hotels and Restaurants collect the taxes but they do not pay to Government.

திரு. க. சுப்பு : நான் சுட்டிக்காட்டுவது இதுதான்—

சாப்பிடுகிறவர்களிடமிருந்து வாங்குகிற வரியை அவர்கள் கட்டுவதே இல்லை.

திரு. சுப்பு அவர்களுடைய திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

(ஆ) 1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி பணிவிதிகளைச் செய்வது பற்றி வெளியான அறிவிப்பில் செய்ய வேண்டிய திருத்தம் குறித்து.

திரு. க. சுப்பு : 1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிப் பணிவிதிகளைச் செய்வதுபற்றி 22—9—1975 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 27—8—1975 ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1460 ஆம் எண் அரசாணையில் வெளியாகி 2—12—1977 ஆம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பெற்ற அறிவிப்பில் கீழ்க் கண்ட திருத்தங்கள் செய்யப்பெற வேண்டும்.

திருத்தங்கள்.

In the rules issued in G.O. (P) No. 1460. R. D. & L.A., dated 27th August 1975,

(i) the proviso to rule 4 shall be deleted ;

(ii) In sub-rule (a) of rule 8, after the expression "may appoint any person" and before the expression "temporarily" the following expression shall be inserted, viz., "from the list of approved candidates".

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்டது இது. மதுரை மாநகராட்சிப் பணி விதிகள் சம்பந்தப்பட்டது. அந்த மாமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது, அப்பாய்ண்ட்மெண்ட் கமிட்டிக்கு அதிகாரம் இருக்க கிறது. ஆனால் அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் கொடுக்க படுகிறபோது தான் அந்த விதி ஆபத்தான விதியாக இருக்கிறது. 6 மாதத்திற்கு உட்பட்ட காலத்திற்கு பணியாளர்களை அந்த அதிகாரிகளே போட்டுக் கொள்ளலாம் என்று போடப்பட்டிருக் கிறது. இது ஆபத்து, எப்படி ரெவின்யூ போர்டிலே அதிகாரிகள் அவ்வப்போது தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுத் துக்கொள்கிறார்களோ அதைப் போன்று இடையிலே பிரேக் விட்டு......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் பேசும்போது ஓட்டல் பொருள்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை உணவுப் பண்டங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று பேசியதாக எனக்கு நினைவு. நான் தெரிவித்துக் கொள்கிறேன் அவைகளுக்கு மல்டிபாய்ண்ட் டாக்சிலே வரி இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : கூவம் சீரமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களிலே எஞ்சினியர்களை 6 மாதத்திற்குப் போடுவது, பிறகு பிரேக் கொடுத்து நீக்கிவிடுவது, மறுபடியும் வேண்டிய

வர்களைச் சேர்த்துக் கொள்வது, அவர்களை நிரந்தரமாக்குவதும் இல்லை. இப்படிச் செய்தால் அந்த கார்ப்பரேஷன் அதிகாரிகளே அதிகாரத்தை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அமைச் சருக்கு அந்த அதிகாரம் இருந்தால் கூட பரவாயில்லை, அதுவும் கிடையாது. ரெவின்யூ போர்டிலே நடக்கக்கூடிய பல தவறு களை இங்கேயும் நடக்கவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல் கிறேன். அவர்கள் தங்கள் இஷ்டம் போல் போடலாம், கவுன்சிலோ அல்லது அப்பாய்ன்ட்மென்ட் கமிட்டிக்கோ இன் பார்ம் பண்ணிவிட்டால் போதும் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சைக் கேட்டு ஆட்களை எடுத்து ஒரு அப்ரூவ்ட் லிஸ்டை வைத்துக்கொண்டு அதிலிருந்து தான் போடவேண்டுமென்ற முறையைக் கொண்டு வரவேண்டும். அப்பாய்ன்ட்மென்ட் கமிட்டியின் சிபாரிசின் பேரில் அவர் களுடைய ஒப்புதலின் பேரில் தான் நியமிக்கவேண்டும். அதிகாரிகள் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்ற நிலைமை இருக்கக் கூடாது. இதனால் உங்களுக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படும், ஆகவே இதையெல்லம் கவனித்து இந்த விதியை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ இந்த சைடிலிருந்து திருத்தம் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைத்தால் சரியாக இருக்காது. தொலை நோக்கத்திலே பார்த்து அந்த அதிகாரத்தை ஒன்று ஸ்பெஷல் ஆபீசருக்கு கொடுங்கள் அல்லது கவுன்சிலுக்குக் கொடுங்கள், ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் அதிகாரிகளுக்குக் கொடுத்தால் உங்களுக்குத்தான் கெட்ட பெயர். அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைப் போட்டுவிட்டு, ஏதோ நாம் ரூபாய் வாங்கிக் கொண்டோம் என்று சொல்வார்கள். அப்படி கெட்ட பெயர் வந்தால் பரவா யில்லை என்று சொன்னால் நான் என்ன சொல்லப் போகிறேன், உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். இப்படித் தவறுகள் நடக்காது என்ற வாக்குறுதியையாவது கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மக்களின் பிரதிநிதிகளுக்குத்தான் இப்படி நியமிக்கும் அதிகாரம் இருக்க வேண்டும் என்ற முறையிலே திரு. சுப்பு அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வது எல்லாச் சட்டங்களைப் பொறுத்தவரையிலும் இருக்கிற முறைதான். காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக இந்த அதி காரிகள் நியமனம் செய்யக் கூடிய முறை இருக்கிறது. அந்த அதிகாரங்கள் கொடுக்கப்படுவதால் தவறுகள் நடக்கும் என்று சொல்கிறார்கள், அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் நடவடிக்கை எடுக்கப்படும், தவறுகளுக்காக அந்த விதியையே திருத்தவேண்டுமென்று அவர்கள் சொல்வது சரியில்லை. அந்த அதிகாரத்தையும் அதிகாரியிடமிருந்து எடுத்துவிட்டால் மைனஸ்

செய்துவிட்டால் பிறகு அந்தப் பதவியே எதற்காக என்ற கேள்வி வரும். தவறுகள் நடக்காமல் இருக்கவேண்டும். ஆகவே இந்தத் திருத்தம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அதிகாரிகளிடத்தில் அந்த அதிகாரம் இருந்தாலும் அவர்கள் போடுவது அப்ரூவ்ட் லிஸ்டிலிருந்துதான் போட வேண்டுமென்ற முறையையாவது கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் உங்களுக்குத்தான் கெட்டபெயர். இதையெல்லாம் கவனித்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்பளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து தான் போடப்படுகிறது என்று தெரிகிறது.

திரு. க. சுப்பு : பட்டியலே கிடையாது அங்கே.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவசரமான நிலைமைகளிலே அப்படிப் போடுவதற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது, ஆகவே திருத்தம் தேவையில்லை.

திரு. சுப்பு அவர்களுடைய திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

12. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப் பெற்ற சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பேரவைக்கு ஓர் அறிவிப்பு'.

9—1—1978 ஆம் தேதியன்று சட்டமன்ற மேலவையில், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஏற்பளிக்கப் பெற்றுள்ளன என்று மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி மன்ற (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 15/77).

2. 1978 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்ற (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 16/77).

3. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/77).

[பிற்பகல் 2.30]

4. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/77).

5. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/77).

6. 1978 ஆம் ஆண்டு கோயம்புத் தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/77).

7. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 21/77).

8. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/78).

9. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/78).

(7) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திக்வைக்கப் பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, மெத்த மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் கீழ்க் காணும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'' அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால் பேரவையை இன்றையிலிருந்து கால வரம்பின்றி ஒத்தி வைக்கலாம். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுகிறது, வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

15. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

254. Notification issued in G.O. Ms. No. 896, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 20th July 1977 in regard to certain amendments to the Tamil Nadu Public Service Commission Administrative Reforms (Personnel—M), dated 20th July 1977 in regard to Tamil Nadu Public Service Commisssion Regulations, 1954 for inclusion of the post of Assistant Inspector of Labour and Statistical Inspector in the Tamil Nadu Labour Subordinate Service within the Commission's purview. (Laid on the Table of the House under Article 320(5) of the Constitution of India.)

255. Notification issued in G.O. Ms. No. 958, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 30th July 1977 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Foreman Instructor (Electronics), Government College of Engineering and Technology under the control of the Director of Technical Education wihthin the Commission's purview. (Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.)

256. Notification issued in G.O. Ms. No. 2681, Revenue, dated 12th December 1977 in regard to certain amendments to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules 1976, [Laid on the Table of the House under Section 45 (3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation Act, 1976 (President's Act 34 of 1976).]

257. Notification issued in G.O. Ms. No. 1716, Rural Development and Local Administration, dated 17th October 1977 inregard to division of wards in Arantangi Municipality and reservation of one seat for the members of Scheduled Castes and one seat for women in Arantangi Municipal Council. (Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

258 The Tamil Nadu Government's Review and the Eleventh Annual Report of the Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI) for the year 1975-76. [Laid on the Table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. *Reports, Notifications and other papers.*

48. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Bill, 1978 (L.A. Bill No. 5 of 1978).

49. Annexure to the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 9 of 1978.)

50. The Tamil Nadu Entertainments Tax and Local Authorties Finance (Amendment) Bill, 1978 (L.A. Bill No. 6/78).

51. List of Unstarred Questions and Answers from Nos. 121 to 170.

52. Supplemental List of Unstarred Questions and Answers from Nos. 171 to 235.

53. Returns of Assets of the following members of the Tamil Nadu Legislative Assembly as on 31st March 1977/16—1977/309—1977 placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

1. Thiru R. Jebamani.
2. Thiru Eswaramurthy alias Sornam.
3. Thiru N. Sankariah.
4. Thiru R. Rajamanickam.
5. Thiru R. Umanath.
6. Thiru V. K. Kothandaraman.
7. Thiru M. Sundaram.
8. Thiru K. J. Subramaniam.
9. Thiru A. Baluchamy.
10. Thiru N. Palanivel.
11. Thiru K. Ramani.
12. Thiru Ethiraj.
13. Thiru K. Balaji.
14. Thiru K. Nachimuthu.
15. Hon. Thiru K. Manoharan.
16. Thiru K. Rangaswamy.
17. Thiru P. K. C. Muthusamy.
18. Thiru K. S. Murugesan.

19. Thiru S. J. Ramaswamy.
20. ~~Thiru R. E. Chandran Jeyapal.~~
21. ~~Thiru M. Annamalai.~~
22. ~~Thiru P. E. Srinivasa Reddiar.~~
23. Thiru K. Appunu Gounder.
24. Thiru R. Amirtharaj.
25. Thiru K. R. Chinnarasu.
26. Thiru N. Perumal.
27. Thiru S. M. Raju.
28. Thiru P. Venga Gounder.
29. Pulavar K. Govindan.
30. Thiru P. Munusamy.
31. Thiru H. G. Arumugam.
32. Thiru P. Dhanapal.
33. Thiru S. Ganesan.
34. Thiru N. Varadarajan.
35. Thiru K. Abdul Latheef.
36. Thiru R. Ayyachamy.
37. Thiru R. Venkudu alias Venkatasamy (as on 30th Sepr. 1977).
38. Thiru Isarivelan.
39. Thiru Durai Muthusamy.
40. Thiru M. R. Govindan.
41. Hon. Thiru C. Ponnaiyan.
42. Thiru N. Dhanasekharan.
43. Thiru M. Sivaperuman.
44. Thiru R. Narayanan.
45. Thiru B. M. Krishnan.
46. Thiru C. Ramanathan.
47. Thiru S. N. Palanisamy.
48. Thiru N. Kittappa.
49. Hon. Thiru S. Ramachandran.
50. Thiru N. Krishnan.
51. Thiru M. R. Soundararajan.
52. Hon. Thiru Munu Adhi (as on 16-6-977).
53. Thiru R. Kaliappan.

54. Returns of Assets of the following members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1977 placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

1. Thiru Ku. Ma. Balasubramaniam.
2. Thiru S. Ramakrishna Thevar.
3. Thiru R. Sakthi Mohan.

4. Tmt. C. Thamizharasi.
5. Thiru A. Balasubramaniam.

@ Laid on the Table of the House on 9th January 1978.
† Despatched to Members on 8th January 1978.
* Despatched to Members on 9th January 1978.
% Kept in the Legislature Library.

இணைப்பு I.

(1174-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 122-க்கான விடையைக் காண்க.)

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) நிலக்கடலை.—ஆண்டுதோறும் சராசரி 10.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை தமிழ்நாட்டில் மானாவாரியாகவும் இறவைப் பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது. இவ்வாண்டில் இறவையில் 15,000 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவில் நிலக்கடலை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

இறவைக் காலத்தில் பயிர் செய்தால் உற்பத்தி கட்டாயம் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் உற்பத்திக்கு வேண்டிய வழிமுறைகளை மிக ஆர்வத்தோடு பின்பற்றுகிறார்கள். எனவே இறவைக் காலத்தில் நிலக்கடலை சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(2) சூரியகாந்தி.—இவ்வாண்டு சூரியகாந்திப் பயிர் 25,000 ஹெக்டேர் கூடுதலாக பயிர் செய்யப்படும். இதன் மூலம் சூரியகாந்தியின் மொத்தப் பரப்பளவு 1.75 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு உயரும். சமீப காலத்தில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட இவ்வெண்ணெய் வித்துப் பயிர் இம்மாநிலத்தில் விவசாயிகளிடையே முக்கியத்துவம் பெற்று வருகிறது. இது வறட்சியைத் தாங்கவல்லது. வளம் மிகுதியற்ற நிலத்திலும் இது திருப்திகரமாக பலனளிக்கிறது. எனவே இதனை வறட்சி மிகுந்த பகுதிகளிலும் வளம் மிகுதியற்ற நிலத்திலும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(3) எள்.—இவ்வாண்டு 10,000 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவில் எள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 1.3 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இவ்வாண்டு எள் சாகுபடி செய்யப்படும்.

இக்கூடுதல் பரப்பளவு, தகுந்த இடங்களில் இருபோக சாகுபடித் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும்.

(4) தென்னை.—இவ்வாண்டு 5,000 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் பூராவிலும் உள்ள அரசுக்குச் சொந்தமான 23 நாற்றங்கால்களில் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு அவைகள் கன்று ஒன்று ரூ. 2.50 விதம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இணைப்பு II.

[1196-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 175க்கான விடையைக் காண்க.]

வரிசை எண். (1)	சுரங்கப் பாதை விவரம். (2)	செலவு. (3) (ரூபாய் லட்சத்தில்)
1	உயர்நீதி மன்றத்திற்கு அருகில் உள்ள பாதை போக்குவரத்துச் சுரங்கப் பாதை.	69.30
2	அண்ணா சாலையில் உள்ள ரவுண்டானா நடைவழி சுரங்கப் பாதை.	13.75
3	மூர் அங்காடி எதிரிலுள்ள நடை வழி சுரங்கப் பாதை.	11.50
4	காமராஜர் சாலையிலுள்ள கண்ணகி சிலைக்கெதிரில் நடை வழி சுரங்கப் பாதை.	12.00
5	பூந்தமல்லி சாலையில் பொது மருத்துவமனை எதிரில் நடைவழி சுரங்கப் பாதை.	4.40
6	அண்ணா சாலையில் சாந்தி திரையரங்கிற்கு எதிரில் நடைவழி சுரங்கப் பாதை.	12.60
7	அண்ணா சாலையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் நடைவழி சுரங்கப் பாதை.	12.00
8	மாம்பலம் துரைசாமி சாலை போக்குவரத்துச் சுரங்கப் பாதை.	32.64
9	சைதாப்பேட்டை குன்னம்மாபேட்டை சி.ஐ.டி. போக்குவரத்து சுரங்கப் பாதை	31.79

இணைப்பு III.

[1220-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 219-க்கான விடையைக் காண்க.]

விடை.—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கடல்பாசி வளர்க்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

நீலப்பச்சை பாசியினால் உண்டாக்கப்படும் தழைச் சத்தைப் பெற தமிழ்நாடு அரசால் 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நீலப்பச்சைப் பாசிப் பெருக்கத் திட்டத்தைப் பற்றிய குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நீலப்பச்சைப் பாசி இனங்கள் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றில் சில விவசாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்கின்றன. அதாவது நெல் சாகுபடியில் காற்றிலுள்ள நைட்ரஜன் சத்தை, தழைச் சத்தாக மாற்றி நிலத்திற்குக் கொடுத்து பயிருக்கு உதவுகிறது. இப்பாசிகள் தங்கள் சக்தியினால் ஒரு பயிர் பருவத்தில், ஒரு ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்தைக் கொடுத்து உதவுகிறது. இது குறித்து டில்லியிலுள்ள இந்திய விவசாயப் பிரிவில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து, நாஸ்டாக் அநபினா, அலோசிரா, டாலிபோதிரிக்ஸ் போன்றவையே நம் நாட்டில் மிக முக்கிய இனங்களாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள நெல் சாகுபடி நிலங்களில் நீலப் பச்சைப் பாசி இனங்கள் மிகக் குறைவாக இருப்பதால் (10 சதவீதத்திற்கும் குறைவு) இவ்வினப் பாசிகளை உற்பத்தி செய்து வயலில் இட்டு வளம் பெருக்குதல் பயனுள்ளதாக இருக்கும். எல்லா விரிவாக்கப் பணியாளர்களுக்கும் தேவையான அளவு பாசியை எந்த ஒரு தனிப் பண்ணையிலும் தயாரிக்க இயலாது என்பதால் போதுமான அளவு விதைப் பாசியை ஆடுதுறை, அம்பாசமுத்திரம், திரூர்குப்பம் ஆகிய நெல் ஆராய்ச்சி நிலையங்களில் வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து நீலப் பாசியை வளர்க்கும் முறையைப் பயின்றுவர மூன்று நபர்கள் (முறையே நிலையத்திற்கு ஒருவராக) புதுடில்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பாசி வளர்ப்புக்காக 1975 ஆம் ஆண்டுக்கு ரூ. 4,500 அரசாங்கம் செலவழிக்க அனுமதித்தது. இப்பண்ணைக்கு 1976 ஆம் ஆண்டு பாசி வளர்ப்புக்காக தமிழக அரசு ரூ. 7,000 செலவழிக்க அனுமதி கொடுத்தது.

1977 ஆம் ஆண்டும் ரூ. 7,000 பாசி வளர்ப்பு செலவுக்காக தமிழக அரசு அனுமதியளித்துள்ளது.

இப்பண்ணையின் பாசி உற்பத்தியும், விநியோகமும்.

		உற்பத்தி. (கிலோ)	விநியோகம். (கிலோ)
1975	..	70.0	20.0
1976 ..	..	673.5	255.4
1977 ..	..	1,140.0	950.0

நீலப் பச்சைப் பாசியின் பலனையறிய 1975 குறுவைப் பருவம் முதல் வயல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இப் பரிசோதனையில் ஏக்கருக்கு கிலோ 4 விதம் நட்ட ஒரு வாரத்தில் நீலப் பச்சைப் பாசி இடப்பட்டது. நீலப் பச்சைப் பாசி இடுவதால் குறுவையில் மட்டும் நல்ல பலன் இருப்பதாக முடிவுகள் தெரிவிக்கின்றன.

நீலப் பச்சைப் பாசி கிலோ ரூ. 10 என்ற விகிதத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்விலை இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம், புதுடெல்லியில் உள்ள விலையையொட்டி நிர்ணயிக்கப்பட்டது.

இணைப்பு IV.

[1328-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 235-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு சட்டப்பேரவையில் வைக்கப்பட்ட
விவர அறிக்கை.

(திரு. கு. ரமணி எம். எல். ஏ. அவர்களால் கேட்கப்பட்ட உடுக்குறியிடாத வினா எண். 3606-க்கான பதிலைக் காண்க.)

பதில்.—

(அ) சிறைத்துறையிலும் காவல்துறையிலும் உள்ள பல வகைப்பட்ட காவலர்களின் ஊதிய விகிதங்கள்.

பதவியின் பெயர்.	சிறைத்துறை.	காவல்துறை.
1. இரண்டாம் நிலைக் காவலர்கள்.	ரூ. 150—4—170—5—225.	ரூ. 150—4—170—5—225.
2. முதனிலைக் காவலர்கள்.	ரூ. 170—5—255	ரூ. 200—5—250—10—300.

பதவியின் பெயர்	சிறைத்துறை	காவல் துறை
தலைமைக் காவலர்கள்.	ரூ. 210—5—245—10—325.	ரூ. 210—5—245—10—325.

சிறை அலுவலர் ..	ரூ. 425—20—525—25—700.
துணைச் சிறை அலுவலர்	ரூ. 300—10—350—15—500.
உதவிச் சிறை அலுவலர்	ரூ. 250—10—400.
தலைமைக் காவலர் ..	ரூ. 210—5—245—10—325.
முதனிலைக் காவலர் ..	ரூ. 170—5—255.
இரண்டாம் நிலைக் காவலர்	ரூ. 150—4—170—5—225.

(இ) சிறைக்காவலர்கள் தினம் 10 மணியிலிருந்து 12 மணி வரை கால அளவு வேலை செய்கிறார்கள்.

D V 2(1,3)(N73 N79-1)

ANSWER.

(a) *Scale of Pay*.—
Warder, II Grade—Rs. 150-4-170-5-225.

Police Constable, II Grade—Rs. 150-4-170-5-225.

Warder, I Grade—Rs. 170-5-225.

Police Constable, I Grade—Rs. 200-5-250-10-300.

Chief Head Warder—Rs. 210-5-245-10-325.

Head Constable—Rs. 210-5-245-10-325.

(b) *Scale of Pay*.—
Jailor (Gazetted Post)—Rs. 425-20-525-25-700.

Deputy Jailor—Rs. 300-10-350-15-500.

Assistant Jailor—Rs. 250-10-400.

Chief Head Warder—Rs. 210-45-245-10-325.

Warder, I Grade—Rs. 170-5-225

Warder, II Grade—Rs. 150-4-170-5-225.

(c) Warders are working about 10 to 12 hours daily.

12205